# வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி மூன்று



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு

அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu03unse

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி மூன்று

இசைக்கணிப்பொறி — இராசமாணிக்கனார்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 53-3
திருவள்ளுவராண்டு 2017 மார்கழி-சனவரி 1987

| | | |
|---|---|---|
| நூல் | : | **வாழ்வியற் களஞ்சியம் தொகுதி மூன்று** |
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | முனைவர் நா.பாலுசாமி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | களஞ்சியம் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு 1987<br>மறுபதிப்பு 2002, **2009** |
| பக்கம் | : | (20+1004) 1024 |
| தாள் | : | டி.என்.பி.எல்.சூப்பர் பிரிண்டிங் 16Kg |
| அளவு | : | 1/4 டெம்மி |
| நூற்கட்டுமானம் | : | காலிகோ |
| விலை | : | உரூ. **800/-** |
| படிகள் | : | 500 |
| அச்சு | : | **நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்<br>சிவகாசி.** |

# வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

**மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்**

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

**மேதகு திரு. எஸ். எல். குரானா**

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**

சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

**பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்**

முதன்மைப் பதிப்பாசிரியர்

**பேரா. டாக்டர் நா. பாலுசாமி**

பொறுப்பாசிரியர்கள்

**பேரா. டாக்டர் அ. மா. பரிமணம்**

**திரு. வீ. சேகர்**

# பதிப்புக்குழு

*முதன்மைப் பதிப்பாசிரியர்:*

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.
(4.4.84)

*பதிப்பாசிரியர்:*

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம்
எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83) — பொருளியல், வணிகவியல்.

2. டாக்டர் அ.மா., பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
(20.9.84) — மொழி, மொழியியல்.

3. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை
எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85) — தத்துவம்.

4. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ. (வரலாறு),
எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி.
(1.12.85) — அரசியல்.

5. திரு. புலமை வெங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.
(25.7.86) — சட்டம்.

6. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு),
எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்) , (எப்.ஐ.எச்)
(5.8.86) — வரலாறு, அகழாய்வு.

*செய்தி திரட்டுவோர்:*

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்.
(25.4.84) — வரலாறு, அகழாய்வு.

2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட்.
( 1.8.84) — மொழி, மொழியியல்.

3. டாக்டர் சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
(7.1.85) — கல்வியியல்.

4. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்.

5. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்.

6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி.
(1.8.86) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தித் திரட்டுவோர்

*மொழிவல்லுநர் — மெய்ப்புத் திருத்துநர்:*

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

# மூன்றாம் தொகுதி: கட்டுரையாளர்கள்


அ.அ.

டாக்டர் அ. அனந்தகிருட்டிணன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
குறிஞ்சித்தெரு
ஆர்.வி.புரம்
நாகர்கோவில் 629 001.

அ.இரா.

பேரா. அ. இராமசுவாமி
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
முசிறி.

அ.உ.

டாக்டர் அகமது உசேன்
இந்திப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608 002.

அ.கா.

டாக்டர் அ. காமாட்சிநாதன், எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608 002.

அ.கே.

பேரா. அ. கேசவன்
3, மேட்டுக் கம்மாளத் தெரு
காஞ்சிபுரம்.

அ.ப.

பேரா. அ. பன்னீர்செல்வம்
அரசு கல்வியியற் கல்லூரி
சைதாப்பேட்டை
சென்னை.

அ.ரா.

டாக்டர் அப்பன் ராமானுசம், எம். ஏ., பிஎச். டி.
துணைப்பேராசிரியர்
தத்துவத் துறை
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை-4.

அ.வெ.சு.

திரு.அ.வெ. சுப்பிரமணியம்
பொது மேலாளர் (ஓய்வு)
இந்திய இரயில்வே
அலமேலுமங்காபுரம்
மைலாப்பூர்
சென்னை-600 004.

ஆ.ஆ.

டாக்டர் ஆ. ஆனந்தராசன்
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை-9.

ஆ.ச.

பேராசிரியர் ஆ. சந்திரசேகரன், எம். ஏ., எம். எல்.
துணைமுதல்வர்
சட்டக்கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திரு ஆ. செல்லபெருமாள், எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5

ஆ.ஞா.

திரு. ஆ. ஞானவேலு
26, சின்னபாபுதெரு
நம்மாழ்வார்பேட்டை
சென்னை-600 012.

ஆர்.இ.

டாக்டர் ஆர். இளங்கோ, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

ஆர்.கி.

திரு. ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,எல்.டி.
பதிப்பாசிரியர்
கலைக்களஞ்சியம் - அறிவியல்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆறு.அ.

டாக்டர் ஆறு. அழகப்பன், எம். ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பேராசிரியர்-தலைவர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608 002.

ஆ.ஜா.

டாக்டர் ஆல்பர்ட்டு ஜான்சன்
அரசியல் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

இர.ஆ

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
பதிவாளர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.அ.

திரு. இரா. அரசு, எம்ஏ., எம்.பில்.
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.இ.

புலவர். இரா. இளங்குமரன்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தல்லாகுளம்
மதுரை-625 002

இரா.இரா.

இரா. இராசலெட்சுமி,எம்.ஏ.
வரலாற்றுத் துறைப் பேராசிரியை
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

இரா.இரா.

பேரா.இரா. இராசேசுவரி
முதல்வர்
கா.மி. அரசினர் மகளிர் கல்லூரி
அண்ணாசாலை
சென்னை.

இரா.கி.

திரு. ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
ஏ.வி.வி.எம்.புட்பம் கல்லூரி
பூண்டி,தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.ச.

வித்துவான் இரா. சங்கரன்
பேரகராதித்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சி.

டாக்டர் இராம. சிதம்பரம், எம். காம்., எம். பில்.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

இரா.செ.

திருமதி. இராசலெட்சுமி செல்வமுத்து, எம். ஏ., எம். பில்.
உதவிப் பேராசிரியை
பொருளியல் துறை
இராணி மேரிக் கல்லூரி
சென்னை-600 004.

இராம.சு.

டாக்டர். இராம. சுந்தரம், எம். ஏ., பிஎச். டி.
இயக்குநர்
திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இராம.பெ.

டாக்டர். இராம. பெரியகருப்பன், எம்.ஏ., பிஎச். டி.
பேராசிரியர், தலைவர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

இரா.மா.

திரு. இரா. மாணிக்கம், பி.எஸ்சி.,பி.எல்.
தலைமைப் பெருநகர் குற்றத்துறை நடுவர்
எழும்பூர்
சென்னை-8.

ஈ.ப.

பேராசிரியர் ஈ. பரிபூரணம், எம்.ஏ.,எம்.எல்.
சட்டக் கல்லூரி
மதுரை-20.

எச்.சி.

டாக்டர் எச். சித்திரபுத்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தொகுப்பியல்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசிலா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.
சிதம்பரம்.

எம்.சு.

திரு. எம். சுப்பிரமணியன்
துணைப்பேராசிரியர்
நூலகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

எம்.சே.

டாக்டர் எம். சேதுராமன், எம்.எஸ்சி.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

எம்.தே.

திரு. எம். தேவதாசு, எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

எல்.கு.

டாக்டர் எல். குளோரியா சுந்தரமதி
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்
திருவனந்தபுரம்.

எல்.மு.

திரு. எல். முத்துக்குமாரசுவாமி எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத்துறைப் பேராசிரியர்
பூம்புகார்ப் பண்பாட்டுக் கல்லூரி
மேலையூர்-609 107
தஞ்சாவூர் மாவட்டம்.

என்.அ.

திரு. என். அரிநாராயணா, எம்.எஸ்சி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

என்.எஸ்.ச.

திரு. என். எஸ். சத்தியநாதன்
அரசியல் துறை, அஞ்சல் வழிக்கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

என்.எஸ்.பா.

டாக்டர் என். எஸ். பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ.,பி.எச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை-625 019.

என்.த.

டாக்டர். என். தர்மாரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் இணைப்பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி-517 502.

என்.பா.

டாக்டர் என். பார்வதி
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ். ஆரோக்கியநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.ஆர்.சு.

டாக்டர் எஸ்.ஆர். சுப்பிரமணியன், எம். ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்.

எஸ்.இரா.

திரு.எஸ். இராமச்சந்திரன்
காப்பாளர்
தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத் துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

எஸ்.கோ.

திரு. எஸ். கோபாலகிருட்டிணன்
39, பட்டேல் சாலை
சென்னை-600 011.

எஸ்.ச.

திரு.எஸ். சந்தானம்
44, இரண்டாவது மேற்குக்குறுக்குத் தெரு
காந்திநகர்
வேலூர்-6.

எஸ்.நீ.

டாக்டர் எஸ். நீலகண்டன், எம்.ஏ.,பி.எல்.,எம்.ஏ.,
பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

எஸ்.பி.அ.

எஸ்.பி. அகர்வால்
இயக்குநர்
இந்திய சமூக அறிவியல் ஆய்வுக்கழகம்
35, பெரோசா சாலை
புதுடில்லி-110 001.

எஸ்.பி.ம.

மேஜர் ஜெனரல் எஸ். பி. மகாதேவன்
114, பாதுகாவலர் குடியிருப்பு
நந்தம்பாக்கம்
சென்னை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன்
கல்வியியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

ஏ.எஸ்.பி.

டாக்டர் ஏ. எஸ். பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.

ஏ.கி.

டாக்டர் ஏ. கிருட்டிணசாமி
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
7-ஏ, புகையிலைத் தோட்டம்
அண்ணாமலைநகர்-608 002.

க.இரா.

டாக்டர் க. இராமையன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

க.சொ.

செல்வி கஸ்தூரி சொக்கையா, எம். ஏ.,எம்.லிட்.
பொருளியல் துறைத் தலைவர்
மீனாட்சி மகளிர் கல்லூரி
மதுரை.

க.நா.

திரு.க. நாராயணன் எம்.ஏ.
விரிவுரையாளர்
தாகூர் கலைக் கல்லூரி
பாண்டிச்சேரி-605 008

க.ப.அ.

டாக்டர் க.ப. அறவாணன்
தமிழ்க்கோட்டம்
15, முனிரத்தினம் தெரு
அய்யாவு காலனி
சென்னை-600 029.

க.ம.

புலவர் க.மருதமுத்து
ஆசிரியர் (ஓய்வு)
புதுக்கோட்டை கிராமம்
திருமலைப்படி அஞ்சல்
திருச்சி.

கி.நி.

செல்வி கி. நிர்மலா, எம்.ஏ.,எம்.பில்.
கல்வியியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

கி.பி

பேரா.கி. பிரகதாம்பாள்
64,பி. நாச்சியார் அம்மாள் இல்லம்
வெளிப்பட்டினம்
கேவிக்கரை
இராமநாதபுரம் மாவட்டம்.

குரு.கோ.

பேரா. குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப்பேராசிரியர்
எ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

கே.இரா.

திரு.கே. இராஜன், எம்.ஏ., டிப்-இன்-ஆர்க்.
கல்வெட்டுத் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுசம், எம்.காம்., எம்.லிட்., பிஎச்.டி.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.

கே.கே.சு.

திரு.கே.கே. சுவாமிராவ், எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை-625 020.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்த ரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.மு.

டாக்டர் கே. முருகையன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.
சிதம்பரம்.

கே.வி.இரா.

பேரா. டாக்டர் கே.வி. இராமன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
தொல்லியல் துறைத் தலைவர்
பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

கே.வி.கா.

டாக்டர் கே.வி. காளியப்பன்
31, கிளிப் சாலை
சேத்துப்பட்டு
சென்னை-31.

கோ.க.

திரு.கோ. கருணாநிதி, எம்.ஏ.,எம்.பில்.
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
புனித சேவியர் கல்லூரி
பாளையங்கோட்டை.

கோ.சு.

டாக்டர்.கோ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
சமசுகிருதத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21.

ச.அ.

டாக்டர். ச. அகத்தியலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

ச.கு.

திரு. சம்பத் குமார், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை-4.

சா.டே.

டாக்டர். சாம் டேனியல், எம்.ஏ.,பிஎச்.டி.
1015, மிஷன் மேட்டுத் தெரு
தஞ்சாவூர்-613 001.

சா.ர.

சாந்தி ரங்கநாதன்
91, சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை 600 028.

சி.என்.ந.

டாக்டர். சி.என். நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல்துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.கே.சி.

சி.கே. சிவப்பிரகாசம்
வரலாற்றுத்துறை
எ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

சி.சி.

சி. சின்னையன், எம்.ஏ.
வரலாற்றுத் துணைப்பேராசிரியர்
எ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

சி.ஞா.

டாக்டர். சி. ஞானப்பிரகாசம்
அரசியல் துறை, அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

சி.ந.

டாக்டர். சி. நயினார்முகமது, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
ஜமால் முகமது கல்லூரி
திருச்சி.

சி.ப.

பேரா. சி. பரமார்த்தலிங்கம்
7, ரெட்டியார் மாளிகை
ஜவகர் சாலை
எஸ்.எஸ். காலனி
மதுரை-16.

சி.பா.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.
பேராசிரியர்-தலைவர்
தமிழ்மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

சீ.சே.தே.

டாக்டர். சீ.சே. தேக்கமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சீ.சௌ.

திரு. சீ. சௌமியநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத்தலைவர்
மதுரைக் கல்லூரி
மதுரை-625 011.

சு.ச.

டாக்டர். சு. சக்திவேல், எம். ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு. வே.

டாக்டர். சு. வேங்கட்ராமன், எம். ஏ., பிஎச். டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

சு. ஜெ.

டாக்டர் சு. ஜெகதீசன்
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ். எஸ். காலனி
மதுரை–16.

சூ. இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம். ஏ., பிஎச். டி.
கிறித்தவ இலக்கியப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை–5.

செ. வை.

பேரா. செ. வைத்தியலிங்கன், எம். ஏ., எம். லிட்.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்–608 002.

செ. வை. ச.

டாக்டர் செ. வை. சண்முகம், எம். ஏ., பிஎச். டி.
இயக்குநர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்–608 002.

செ. ஜோ.

திரு செ. ஜோசப்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்–639 005.

சே. இரா.

பேரா. சே. இராமானுசம்
நாடகத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி. எஸ். க.

திருமதி டி. எஸ். கல்யாணி, எம். ஏ., எம். பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் – 608 002.

டி. கா.

திருமதி. டி. காந்திமதி, எம். ஏ., எம். பில்.
பொருளியல் துறைப் பேராசிரியர்
இராணி மேரிக் கல்லூரி
சென்னை–600 004.

டி. த.

திரு டி. தயாளன், எம். ஏ., டிப்–இன்–ஆர்க்.
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை
தெற்குச் சரகம்
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை.

டி. ஜா. ச.

திரு டி. ஜான் சகாயம் செல்லையா
அரசியல் துறை, அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.

டி. ஜெ.

திரு.டி.ஜெயதிலகர், எம். ஏ., எம். பி. ஏ., பி. லிப். சயி.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா. எ.

டாக்டர் தா. எட்மண்ட்சு
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
கலைக் கல்லூரி
பொறையாறு.

தி. அர. இரா.

பேரா. தி. அர. இராமச்சந்திரன், எம். ஏ., எம். லிட்.
முதல்வர் (ஓய்வு)
செனாய் நகர்
சென்னை–30.

தி.க.

டாக்டர் செல்வி தி.கல்யாணி
அரசியல் விரிவுரையாளர்
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.

தி.சு.மோ.

டாக்டர் தி.சு. மோகன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி
பொருளியல் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்–608 002.

தி.நா.வா.

பேரா.தி.நா.வாசுதேவராவ்
32, முதல் குறுக்குத் தெரு
பெசன்ட் நகர்
சென்னை.

தெ.பா.

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்,எம்,ஏ.,எம்.ஏ.,
(விசுகான்சின்)
வரலாற்றுத்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

தி.வீ.

திரு.தி.வீரப்பன்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
குறளகம்
சென்னை-108.

ந.க.

டாக்டர் ந. கங்காதரன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமசுகிருதத் துறை
சென்னைப் பல்கலைக்கழக இணைவகம்
சென்னை-5.

ந.கா.

திரு. நடன காசிநாதன்
துணை இயக்குநர்
தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்த வெளிப்பாக்கம்
சென்னை.

ந.கு.நா.

பேரா.ந.கு.நாராயணன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
வரலாற்றுத் துறைத் தலைவர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

ந.து.

டாக்டர் ந. துரைராசு, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

ந.மா.

டாக்டர் ந. மாணிக்கம்,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை-9.

ந.மெ.

திரு.ந.மெய்ப்பொருள், எம்.ஏ.,எம்.பில்.
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ந.வ.கே

பேரா.ந.வ.கேசவன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.சு.

டாக்டர் நா. சுப்பிரமணியம்
'பிரபு ராஜ் பவன்'
30, கல்யாணி அம்மாள் லே அவுட்
காந்தி நகர்
உடுமலைப்பேட்டை.

நா.ஜெ.

பேரா.நா.ஜெயபாலன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசுக் கல்லூரி
கரூர்.

ப.ச.ஏ.

டாக்டர். ப.ச.ஏசுதாசன்,எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி
தமிழ்த்துறைத் தலைவர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சி-620 017.

பா.இரா.

டாக்டர். பா.இராதாசெல்லப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி
மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பா.ம.

டாக்டர். பா.மல்லிகா, எம்,ஏ.,பிஎச்.டி.
துணைப்பேராசிரியை
தமிழ்த்துறை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி
பெரியகுளம்
மதுரை மாவட்டம்.

பா.ரா.க.

திரு.பா.ரா.கந்தசாமி, எம்.ஏ.
10–சி, வெங்கமேடு
வேலூர்–638 182
சேலம் மாவட்டம்.

பா.ஜ.

திரு.பா.ஜவகர்,எம்.ஏ.
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பா.ஜோ.

திரு.பா.ஜோசப் சத்தியராஜ், எம்.ஏ.
துணைப்பேராசிரியர்
கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை–49.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர்.நரசிம்மன் எம்.ஏ.,பிஎச்.டி.
இந்தியப் பண்பாட்டுத்துறைப் பேராசிரியர்,
அருள்மிகு பழனியாண்டவர் கல்லூரி
பழனி–624 602.

பி.இரா.

திரு.பி. இராஜகோபாலன். எம்.ஏ.,எம்.லிட்.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
அண்ணாமலைநகர்–608 002.

பி.எஸ்.வே.

பேரா.பி.எஸ்.வேதவல்லி, எம்.ஏ.
'ரேவதி'
1, ஸ்ரீபுரம் 2–வது தெரு
சென்னை–600 014.

பி.கே.மி.

டாக்டர் பி.கே.மிஸ்ரா,எம்.ஏ.,பிஎச்,டி.
பேராசிரியர்
மானிடவியல் துறை
வடகிழக்கு மலைப் பல்கலைக்கழகம்
சில்லாங்கு.

பி.ச.

திரு.பி.சபாபதி. எம்.ஏ.
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

பு.வே.

திருமதி புஷ்பவேணி
இந்திய தேசிய நூலகம்
கல்கத்தா.

பூ.அ.

பேரா. பூ.அமிர்தலிங்கம், எம்.ஏ.
துணைப்பேராசிரியர்
5, சர்ச்சு இரண்டாம் வீதி
புதுநகர்
காரைக்குடி–623 001.

பெ.சு.

டாக்டர் பெ.சுப்பிரமணியன், எம்.ஏ..பிஎச்.டி.
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பெ.தி.

திரு.பெ.திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.
இயக்குநர்
மரபுப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை–5.

பொ.க.

திரு.பொ. கண்ணன்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசுக் கலைக் கல்லூரி
கரூர்.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியம்
இராசேசுவரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி
செங்கற்பட்டு
செங்கற்பட்டு மாவட்டம்.

ம.இரா.

பேரா. ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுப் பேராசிரியர்
அரசுக் கல்லூரி
கரூர்.

ம.சு.

திரு. ம. சுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஏ.
6–ஏ, 3–வது சாலை
அண்ணா நகர்
பம்மல்
சென்னை–75.

ம.ந.பு.

திருமதி ம. ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ம.பு.

திரு. ம. புகழேந்தி
கருணைகுளத்துப்பட்டி
சிந்தாமணிப்பட்டி (வழி)
திருச்சி.

ம.பொ.சி.

டாக்டர். ம. பொ. சிவஞானம்
மேலவைத் தலைவர்
சட்டமன்ற மேலவை
தமிழ்நாடு தலைமைச் செயலகம்
சென்னை–9.

மா.இரா.

டாக்டர். மா. இராமலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்–தலைவர்
தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

மு.சி.

டாக்டர் மு. சிதம்பரம்
பேராசிரியர், அரசியல் கலைத்துறை
சிக்கையா நாயக்கர் கல்லூரி
ஈரோடு, பெரியார் மாவட்டம்.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன் எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை–600 005.

வ.இரா.

திரு. வ. இராசாராமன்
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
தனிப் பயிற்சி நிலையம்
மேற்கு சி.ஐ.டி. நகர்
நந்தனம்
சென்னை–35.

வ.சி.ச.

பேரா.வ. சி. சந்திரசேகரன், பி.எஸ்சி.,பி.எல்.
சட்டக் கல்லூரி
மதுரை–20.

வி.எஸ்.ரி.

டாக்டர். வி. எஸ். ரிஷி
இந்திய சமூக சுகாதார நிறுவனம்
187, கச்சேரி சாலை
சென்னை–4.

வி.பி.ஆர்.க.

திரு. வி. பி. ஆர். கங்காராம் துரைராஜ்
9, இரத்தினசாமி நாடார் சாலை
சொக்கிகுளம்
மதுரை–2.

வீ.இ.

புலவர். வீ. இளங்கண்ணனார்
2, 16–வது தெரு
தில்லைகங்கா நகர்
சென்னை–61.

வீ.சொ.

புலவர். வீ. சொக்கலிங்கம்
861, தத்தோஜியப்பா சந்து
தஞ்சாவூர்–613 001.

வீ.ப.கா.சு.

டாக்டர் வீ.ப.கா. சுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை–2.

வெ.பா.

டாக்டர் வெ. பாலம்மாள்
இணைப் பேராசிரியை
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வே.இரா.

செல்வி. வே. இராசேசுவரி எம்.ஏ.,எம்.பில்.
கல்வியியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஜி.க.

திரு.ஜி. கனகசபை, எம்.ஏ.,பி.டி.
கிரீன்லாந்து
லால்குடி-621 601
திருச்சி மாவட்டம்

ஜி.ச.நா.

டாக்டர் ஜி. சங்கரநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
இந்திய மொழிகளின் மைய நிறுவனம்
மைசூர்-570 006.

ஜி.வி.

திரு.ஜி. விநாயகம், எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002.

ஜெ.கோ.பி.

டாக்டர் ஜெயா கோதைப்பிள்ளை
நெறியாளர்
அஞ்சல்வழித் தொடர்கல்வி நிறுவனம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | — | அகநானூறு |
| அடியார். | — | அடியார்க்கு நல்லார் |
| அரங். | — | அரங்கேற்று காதை |
| இ.ஆ.ப. | — | இந்திய ஆட்சிப்பணி |
| இ.கா.ப. | — | இயேசு காவியப் பகுதி |
| இ.வி. | — | இலக்கண விளக்கம் |
| உரி. | — | உரியியல் |
| உரூ. | — | உரூபாய் |
| எ.டு. | — | எடுத்துக்காட்டு |
| ஐ.நா. | — | ஐக்கிய நாடுகள் (சபை) |
| கடலாடு. | — | கடலாடு காதை |
| கி.பி. | — | கிறித்துவுக்குப் பின் |
| கி.மீ. | — | கிலோமீட்டர் |
| கி.மு. | — | கிறித்துவுக்கு முன் |
| குறுந். | — | குறுந்தொகை |
| ச.கி.மீ. | — | சதுரக் கிலோ மீட்டர் |
| ச.மீ. | — | சதுர மீட்டர் |
| சிலப். | — | சிலப்பதிகாரம் |
| சிறு. | — | சிறுபாணாற்றுப்படை |
| செ.மீ. | — | செண்டிமீட்டர் |
| செய்யுள். | — | செய்யுளியல் |
| சொல். | — | சொல்லதிகாரம் |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நற். | — | நற்றிணை |
| நூ. | — | நூற்றாண்டு |
| நெடு. | — | நெடுநல்வாடை |
| பதிற். | — | பதிற்றுப்பத்து |
| ப.ர். | — | பதிப்பாசிரியர் |
| பரி. | — | பரிபாடல் |
| பரி. யோவான் | — | பரிசுத்த யோவான் |
| புறப். வெண்பா | — | புறப்பொருள் வெண்பாமாலை |
| புறம். | — | புறநானூறு |
| பொருந. | — | பொருநராற்றுப்படை |
| பொருள். | — | பொருளதிகாரம் |
| மணி. | — | மணிமேகலை |
| மதுரைக். | — | மதுரைக்காஞ்சி |
| மரபு. | — | மரபியல் |
| மலைபடு. | — | மலைபடுகடாம் |
| மீ. | — | மீட்டர் |

# நன்றியுரை

## மூன்றாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

The Encyclopedia Americana, Encyclopaedia Britannica, The World Book Encyclopaedia, Compton's Encyclopaedia, The New Book of Knowledge, Lands and People, The Art of India By Sivarama Murti, Indian Architecture by Percy Brown, Archaeological Remains Monuments & Museums Part I & II. Coins by P.L. Gupta, இந்திய ஓவியம். க.சிவராம மூர்த்தி, பரதக்கலை— டாக்டர் பத்மாசுப்ரமணியம்.

## ஒளிப்படங்கள் வழங்கிய பொது நிறுவனங்கள் மற்றும் தனியார்

சங்கீத நாடக அகதமி, புது தில்லி; தேசிய நாடகப் பள்ளி, புது தில்லி; அரசு அருங்காட்சியகம், சென்னை; கலைக்காவிரி நாட்டியப் பள்ளி, திருச்சி; தமிழ்ப்பல்கலைக்கழக நாடகத்துறை, அருங்காட்சியகம், தஞ்சாவூர்; திரு. இரா.அரசு, கரந்தை; திரு. கிம்சி சீனிவாசன், மதுரை; டாக்டர் மா. இராமலிங்கம், திருச்சி.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட பெருமக்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொகுதியின் பணி குறித்த காலத்தில் நிறைவெய்த ஊக்கிய முன்னாள் துணைவேந்தர் பேரா. டாக்டர். வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கும் தொடர்ந்து நல்வழிப்படுத்தும் இந்நாள் துணைவேந்தர் பேரா. டாக்டர்.ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும்,அயராது உழைத்துவரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர், பேரா.இர. ஆலாலசுந்தரம் அவர்களுக்கும்,துணைப்பதிவாளர் திரு.இரா. சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு.சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், பதிப்புத்துறைத் துணை இயக்குநர் திரு. கோவை. இளஞ்சேரன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
2-12-86

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்.

# வாழ்வியற் களஞ்சியம்

***இசைக் கணிப்பொறி*** என்பது, இசையின் குறியீடுகளைக் கணிப்பொறியில் பல வண்ண முக் கோணங்களாகப் பதிவு செய்து அவற்றை மீண்டும் இசையொலிகளாக மாற்றி இசைக்கும் கருவி ஆகும். இசைக்கணிப்பொறி (Musical Computer) யைக் கலிபோர்னியாவில் உள்ள எலக்டிரானிக்சு ஆர்ட்சு என்னும் நிறுவனம் 1985–ஆம் ஆண்டு அமைத்தது. இதனையொட்டிப் பல அமெரிக்க நிறுவனங்கள் இத் தகைய கணிப்பொறிகளை அமைத்துள்ளன. இப் பொறியில் ஒவ்வொரு நிறமும் ஒரு குறிப்பிட்ட சுரத்தைக் குறிக்கிறது. பொறியில் காணப்படும் முக் கோணத்தின் குறுக்களவு அந்தக் குறிப்பிட்ட சுரம் எவ்வளவு நேரம் ஒலிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இசை ஆசிரியர்கள் தாம் இயற்றிய பாடல்களை இப்பொறியில் பல நிறங்களில் அமைத்து விட்டால், உடனுக்குடன் அவைகளை இப்பொறி இசைக்கிறது. இப்பொறி ஒரு சிறு கம்பியின் உதவி யால் ஒலிக்குறியீடுகளை மாற்றிப் பதிவு செய்கிறது. இசை ஆசிரியர்கள் இதனால் தம் இசையமைப்பு களைப் பல முறை கேட்கமுடிகிறது. இக்கருவி புதி தாக இசை கற்போருக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளது. நீண்டநேரம் பாடப்படும் பாடல் களைப் பதிவுசெய்து, இப்பொறியில் அவைகளைத் தம் விருப்பம் போல் மாற்றி அமைத்துப் பல புதிய இசைப்பாடல்களையும் உருவாக்கலாம். எடுத்துக் காட்டாக, மோசார்ட்டின் (Mozart) புளூ தான்யுபு (Blue Danube), பீதோவனின் (Beethovan) ஐந் தாம் பல்லியம் (Fifth Symphony) போன்ற புகழ் பெற்ற இசையமைப்புகளில் பல மாற்றங்களைப் புகுத்தி அமைத்து, இப்பொறியின் உதவியால் புதிய இசை அமைப்புகளை உருவாக்க முடியும்.

கணிப்பொறி அமைப்பின் உதவியால் பல புதிய இசைக் கருவிகளையும் உருவாக்க முடியும். மேலும், இசைக்கருவியில் ஏதேனும் ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டவுடன், கணிப்பொறி அமைப்பு முறை மாற்றங்களைக் கொண்டு வேறோர் இசைக்கருவி ஒலியில், அதே பாடலை இசைக்கச் செய்யவும் முடியும்.

**இசைக் கல்வி:** பள்ளிக் கல்வித் திட்டத்தி லுள்ள பிறபாடங்களைக் கற்பிப்பது போல், பள்ளி களில் மாணவர்களுக்கு இசையை ஒரு பாடமாகக் கற்பிக்கும் முறையே இசைக்கல்வி (Music Education) எனச் சொல்லப்படும். தனியார் நிறுவனங்கள் மூல மாகவோ பொதுமக்கள் தொடர்புச் சாதனங்கள் (Mass Media) வாயிலாகவோ தனிப்பட்ட ஆசிரியர் களால் வணிகநோக்கில் கற்பிக்கப்படும் அல்லது கற்கப்படும் இசைத் தொடர்பான பயிற்சி எதுவும் ‘இசைக் கல்வி என்னும் வரையறையில் வாராது.

மார்க்சிய-இலெனினிய அழகுணர்ச்சிக் கோட் பாட்டின்படி, கலையானது மக்களது சமுதாய, அரசியல் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. எனவே, இசைக் கல்வியானது மக்களின் உணர்வு

களையும், மதிப்புகளையும், வேறுபடுத்தியறியும் பழக்கவழக்கங்களையும் செம்மைப் படுத்தும் கருவியாகச் செயற்படக் கூடியது. சோவியத்து நாட்டில், இசையானது இளைஞர்களின் வளர்ச்சிக்கு உதவும் கருவியாக எண்ணப்படுவதால், அந்நாட்டுப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை இசைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுக் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பத்தாம் வகுப்புககு மேல் இசை விருப்பப்பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இசைத்திறம் மிகுந்த மாணவர்களுக்கு இசை கற்பிப்பதற்கென்று சிறப்புத் தொடக்கப் பள்ளிகள் இங்கு உள்ளன. எடுத்துக்காட்டாக, மாசுகோ (Moscow) நகரிலுள்ள மைய இசைத் தொடக்கப்பள்ளியில் (Central Elementary Music School) மாணவர்கள் ஆறு வயதிலேயே சேர்ந்து இசை பயில்கின்றனர். குரற் பயிற்சி, செவிப் பயிற்சி, தாளப் பயிற்சி, கேட்டற் பயிற்சி, இசைக் கொள்கை, இசைக் கருவிகளை எளிமைப் படுத்துதல், இசைக்கருவிப் பயிற்சி, இசைக்கருவிகளை இசைத்தல், இன்னிசைக்குழுப் பயிற்சி ஆகியவற்றில் கல்வியும் பயிற்சியும் பெறுகின்றனர். நாட்டுப்புற மக்களின் இசைக்கு (Folk Music) இப்பள்ளியில் முதலிடம் தந்து கற்பிக்கப் படுகிறது.

இந்தியப் பள்ளிப் பாடத்திட்டத்தில் இசை சேர்க்கப்பட்டுள்ளது. இசைக்காகத் தனிப் பாட வேளைகளும் இசையாசிரியர்களும் உள்ளனர். இசை வகுப்புகளில் பொதுவாக இந்நாட்டுப் பாடல்களுக்கே முதலிடம் தரப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் பாடற் பயிற்சியும், மேல்வகுப்புகளில் இசையே ஒரு விருப்பப்பாடமாகவும் உள்ளது. தாளம், இராகம், குரற்பயிற்சி போன்றவை இசை வகுப்பில் கற்பிக்கப் படுகின்றன. தம்புரா, சிதார் (Sitar) அல்லது சுருதிப் பெட்டி, ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர். இசைக் கல்லூரிகள் பல இந்தியாவில் உள்ளன. அவை இசைத்திறனையும், இசை வரலாறு, இசையின் தத்துவம், இசைக் கொள்கை ஆகியவற்றையும் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன.

பிலிப்பைன்சு நாட்டுப் பள்ளிகளில், 1967–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இசைச் சட்டத்தின்படி (Music Law) அங்குள்ள தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் வாரத்திற்கு ஒரு முறை ஒரு மணி நேரம் மாணவர்களுக்கு அந்நாட்டுப் பண்பாட்டையொட்டிய இசை கற்பிக்கப்படுகிறது. பள்ளிகளில் இசை பயிலும் மாணவர்கள், பள்ளிப்படிப்பு முடியும் போது இனிய, எளிய இசைகளை உருவாக்கும் திறனையும், இசை வெளிப்பாட்டுத் திறனையும், இசை முதிர்ச்சியையும் பெற்றவர்களாக வெளி வருகின்றனர்.

செருமானியக் கூட்டாட்சிக் குடியரசில் (Federal Republic of Germany) உள்ள தொடக்கப் பள்ளிகளில் (வயது 6–இலிருந்து 10–வரை) இசைக்கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கு மாணவர்கள் நாள்தோறும் இசைப்பயிற்சி கட்டாயம் பெறுதல் வேண்டும். ஐந்தாம், ஆறாம் வகுப்புகளில் வாரம் ஒருமுறை ஒன்றிலிருந்து இரண்டு மணி நேரம் வரை இசைப்பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏழாம் வகுப்பிற்குப் பின், இசைக்கல்வி மாணவர்களுக்கு விருப்பப்பாடம் என்ற வகையில் கற்பிக்கப்படுகிறது. இசைக் கல்வி பயிலும் மாணவர்கள் இசையறிவு (Musical Literacy), இசைத்திறன் (Musical Skills), இசை நுகர்வுணர்வு (Musical Appreciation) ஆகிய பண்புகளைப் பெறுகின்றனர். இசை கற்பிக்கும் முறையில் இசைக் கோட்பாடுகள், தத்துவங்கள், பயிற்சிகள் ஆகியன முதன்மையாக வலியுறுத்தப் படுகின்றன. இவை மாணவர் இசையறிவையும் திறனையும் வளர்த்திடும் வகையில் கற்பிக்கப் படுகின்றன.

இசை கற்பிப்பதற்கென்றே சில சிறப்பான கல்வி முறைகள் உள்ளன. அவை: 1. இசைக் குறியீடுகளைப் படித்து எழுதுதற்குச் சிறப்பிடம் தரும் முறை. இது கொடேலி முறை (Kodaly Method) எனப்படுகிறது. 2. படைப்பாற்றல், பேச்சு, எளிமைப்படுத்துதல், அசைவு ஆகியவற்றுக்குச் சிறப்பிடம் தரும் ஆர்பு சுல்வெர்க்கு (Orff Schulwerk) முறை. 3. புலனியக்க அடிப்படையில் இசையைக் கற்கும் முறை. இது கரபோ-கோன் (Carabo-Cone) முறை எனப்படுகிறது. 4. இளமையிலேயே இசையை மனப்பாடம் செய்வதை வலியுறுத்தும் முறை. இது ‘சுசுகி திறமைக் கல்வி முறை’ (Suzuki Talent Education) எனப் படுகிறது. 5. இசைக்கும் தாளத்திற்கும் இயைபு கொண்ட உடலசைவுகளைக் கொண்ட தால்குரோ யுரித்துமிக்சு (Dalcroie Eurhythmics) முறை. 6. இயக்குகள் (Tones), தாளங்கள் ஆகிய இவ்விரண்டின் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட முறை. இது கார்டன் இசைக் கல்விக் கோட்பாடு (Gorden Theory of Learning) எனப்படும். 7. பயில்வோரே தேடித் துருவிக் கண்டறிந்து இசை கற்கும் முறை. இது மானட்டன்விலே இசைக்கல்வி முறை (Manhattanville Music Curriculam Approach) எனப் படும்.

இக்கால இசை பயிலும் முறையாக, ‘நிகழ்கால இசைத் திட்டம்’ (Contemporary Music Project)

பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் இசையாக்கம், இசைப்பகுப்பு, இசையின் அடிப்படைக் கருத்துகளை அமைத்தல், இசை கற்போர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே இசை கற்பித்தல் ஆகியன வலியுறுத்தப் படுகின்றன.

அடிப்படையான இசைக்கல்வியினை அனைத்து மாணவர்களும் பெறுதல் வேண்டும் என உலகக் கல்வியாளர் பலரும் கருதுகின்றனர். பண்பாடு, மரபு, நாகரிகம் ஆகியவற்றோடு இசை பின்னிப் பிணைந் திருப்பதே இவ்வாறு அவர்கள் கருதக் காரணமாகும். பள்ளிப்பாடத்திட்டத்தில் இசைக் கல்வியைப் புகுத்து வதன் மூலம் மாணவர்களுக்கு அழகியல் நுகர்வுணர்வு மதிப்பு (Aesthetic Value), பாட்டின் உணர்ச்சி வெளிப்படுமாறு பாடும் பாங்கு (Expressive Value), பண்பாட்டு மதிப்பு (Cultural Value), தனியொருவர் மதிப்பு (Personal Value), சமுதாய மதிப்பு (Social Value), நோய் நீக்கும் மருத்துவ மதிப்பு (Therapeutic Value), வாழ்க்கைத் தொழில் மதிப்பு (Vocational Value) ஆகிய மதிப்புகளை மாணவர்களிடம் உண்டாக்க இயலும்.

துணை நூல்கள்:

**Beer A.S., Hoffman ME.**, Teaching Music: What How Why, New Jersey, 1973.

**Gorden, E.**, Learning Sequences in Music: Skill Content and Patterns, Chicago, 1980.

**Hoffer. C.**, Teaching Music in the Secondary Schools, California, 1973.

**Metz, D.**, Teaching General Music in Grades 6–9, Ohio, 1980.

**இசைக்கவை** என்பது, இசைக்கருவிகளில் ஒலி இயைபு உண்டாக்குவதற்கு உதவியாகப் பயன்படுத் தக்கூடிய ஒரு சிறு கருவியாகும். இது எஃகினால் செய்யப்படுகிறது. இதில் இருக்கும் இரு உலோகக் கிளைகளுள் ஏதேனும் ஒன்றைத் தட்டினாலும் இரண்டும் அதிர்வு அடைகின்றன. இரு கிளைகளும் அதிர்வுகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு இணைந்த ஒலியை எழுப்புகின்றன. இக்கருவியில் ஒரே அளவுடைய இரு உலோகக் கிளைகள் இருக் கின்றன. ஒலியியல் (Acoustics) பற்றிய விளக்கங் களைக் கொடுப்பதற்கும் நீண்ட கவையைப் பயன் படுத்துகின்றனர். வயலின் இசைக்கருவியில் பயன் படுத்தப்படுவதைப் போன்ற வில்லினால் இதில் ஒலி யெழுப்பலாம். இக்கருவியைக் கி.பி. 1711–ஆம் ஆண்டு சான்சோர் (John Shore) என்வர் கண்டுபிடித்தார்.

**இசைச்சன்** என்பவன் பெருங்கதையின் காப் பிய மாந்தருள் ஒருவன். அக்காப்பியத் தலைவனான உதயணனுக்குத் தோழன்; அந்தண மரபினன்; இள மையில் பெற்றோரை இழந்தவன்; வேதக் கல்வி மிக்கவன்; கேள்விச் செல்வம் மிக உடையவன். அத னால் இவன் 'அருமறை நாவின் அந்தணாளன்', 'மயக்கமில் கேள்வி இசைச்சன்' என்று கொங்குவேளி ரால் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளான். உதயணன் வாசவதத்தையையும் யூகியையும் இழந்த பின்னர்க் கவலை மிகுந்து மெலிந்து காணப்பட்டான். அதனை உணர்ந்த இசைச்சன், உதயணனுக்கு ஆறுதல் கூறித் தளர்ச்சி நீங்கிச் செயற்படுமாறு செய்தான். இறந் தோரைப் பழைய உடம்பொடு தருதற்குரிய ஆற்றல் வாய்ந்தவர் இராசகிரிய நகரில் இருப்பதாகவும் அவரைச் சார்ந்து வேண்டினால், வாசவதத்தையை யும் யூகியையும் பெறலாம் என்பதாகவும் அறிவுறுத்தி அதற்காக உதயணனையும் அவன் தோழர்களையும் மாற்றுருக் கொள்ளச் செய்து இராசகிரியத்திற்கு இவன் அழைத்துச் சென்றான். சென்றவிடத்தே, காமன் கோட்டத்தில் கண்ட பதுமாபதி, தன்னைக் காதலித்தாள் எனக்கொண்டு உதயணன் அவள்பால் வேட்கை கொண்டபோது, அந்நாட்டுப் பெண்டிர் களின் கற்பியல்பு கூறி இசைச்சன், அவனது காம வேட்கையைத் தணிவித்தான். இசைச்சன் வேறு வடிவங்கொண்டு, பதுமாவதியின் கன்னிமாடத்தில் வேற்றுருக்கொண்டு மறைந்திருந்த உதயணனைக் காத்து வந்தான். இவன் போரில் உதயணனுக்குத் துணையாகச் சென்றான். தன் தங்கையான பதுமா பதியை மணந்துகொள்ளுமாறு தருசகன் உதயணனை வேண்டியபோது, இவன் தன் நண்பனான இசைச் சனுக்குத் தக்கதொரு அந்தணப் பெண்ணை மணஞ் செய்வித்த பின்னரே தான் மணப்பதாகக் கூறி, அவ்வாறே செய்தான். உதயணன் செய்த உதவி யால் இசைச்சன் ஆப்பியாயினி என்னும் அந்தணப் பெண்ணை மணந்தான்; வளமிக்க பல ஊர்களை உதயணனிடமிருந்து கொடையாகப் பெற்றான். 'இழுக்கா இயல்பின் இசைச்சன்' என்னும் கொங்கு வேளிர் வாக்கு இவனுடைய பொய்யா ஒழுக்கத்தின் மாட்சியினைக் காட்டுவதாக உள்ளது.

**இசைஞானியார்** அறுபத்து மூன்று நாயன் மார்களுள் ஒருவர்; சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தாயும், சடையனாருக்கு மனைவியுமாவார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களைப் போற்றிப் பரவிய திருத்தொண்டத் தொகையின், இறுதிச் செய்யுளில் தம் பெற்றோராகிய சடையனார், இசை ஞானியார் ஆகிய இருவர் பெயரையும் குறிப்பிட்டுப் பாடி அப்பதிகத்தை நிறைவு செய்துள்ளார். இத் தொகைக் குறிப்பினை உளங்கொண்டு இவ்விருவரை யும் தனியடியார்களாகப் போற்றும் வகையில்,

வகைநூல் செய்த நம்பியாண்டார் நம்பி தம் திருத் தொண்டர் திருவந்தாதியிலும், விரிநூல்பாடிய சேக்கிழாரடிகள் தம் திருத்தொண்டர் புராணத்திலும் இவ்விருவரையும் பற்றித் தனித்தனியே செய்யுள மைத்துப் பாடியுள்ளனர். ஒழியாத பெருமை சான்ற சடையனாரின் உரிமைச் செல்வத் திருமனையார் என்றும், புரங்கள் எய்து அழித்தாரால் ஆட்கொள் ளப் பெற்ற ஆளுடைய நம்பியினைப் பெற்றவர் என் றும், இழியாக் குலத்தின் இசைஞானியர் என்றும் இவரைச் சேக்கிழார் குறிப்பிட்டு, இவருடைய புகழை என் சிறு புன்னாவால் புகலுதல் இயலாது என்று கூறிப் பரவியுள்ளார். ஆதிசைவ மரபில் வந்த இவர் வீடுபேறெய்திய நாள் சித்திரைத் திங்கள் சித்திரை விண்மீனாகும்.

**இசைத்தமிழ்:** இசை என்னும் சொல் இயை என்னும் வேர்ச்சொல்லினின்றும் பிறந்தது. இசைதல் என்பது சேருதல், பொருந்துதல், ஒன்றாதல் எனப் பொருள்படுவது. இயை என்பதும் இசை என்பதும் ஒரு பொருள்படுவன். 'இயைபே புணர்ச்சி' - (தொல்.உரி.12) என்னும் தொல்காப்பிய நூற்பா வால் இயைதல் என்பதன் பொருள் அறியலாகும்.

எவை எவை பொருந்துவது இசையாகும்? சுருதி, பண், தாளம், பாடற்பொருள், பாடற்சொல், பண் ணின் சுவை முதலியன ஒன்றுடன் ஒன்றும், ஒன்று டன் பலவும் பொருந்துவது 'இசை' எனப்பட்டது. இது பொருள் பொதிந்த சிறந்த சொல்.

'இசைத்தமிழ்' என்பது முத்தமிழுள் ஒன்று; முத்தமிழ் என்பதுஇயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பனவற்றைக் குறிக்கும். இசைத் தமிழ் என்பது இசையிலக்கணத்தைக் குறிக்கும். இதில், பண், தாளம், அலகு முதலியவற்றின் இலக்கணங் களும், இசைப்பாடல் வகைகளின் இலக்கணமும், இசைநூல் வரலாறும், இசைப் பெரியார்களின் வரலாறும் பிறவும் அடங்கும்.

இசையியலைப் பண்ணியல், தாளவியல் என இரு பெரும் பிரிவாக்குவர். பண்ணியலில் நரம்பு இயல், (சுர இயல்), ஒத்து இயல் (சுருதியியல்), ஒலியியல், மிடற்றியல், பாலையியல் (பண்களின் வகைகள்), ஆளத்தியியல் (இராக ஆலாபனை) பொருந்து இசை யியல் (வாதி சம்வாதி முதலியன), பண்களைத் தோற்றுவித்த பழம் பெரும் முறைகள் ஆகிய ஏழு பிரிவுகளும் அடங்கும்.

இனி, தாளவியலில் தாளத்தின் உறுப்புகள்; தாள வகைகள்:- எண்ணிக்கைத் தாளம், சொல் சீர்த் தாளம் அல்லது சந்தத் தாளம்; கொட்டு முழக்கியல் - தனி ஆவர்த்தன முறைகள் - கோவை கள், முத்தாய்ப்பு, மோரா, தீர்மானம், அறுதிகள்; கதிமாற்றம்; நடைவகைகள்; யதிகள் (முழக்குக் கோலங்கள்) முதலிய பிரிவுகள் உள்ளன.

பண்ணியல் கருவிகளாகிய யாழ், குழல், கின்னரி முதலியன பற்றிய அமைதியும் தாளவியல் கருவிக ளாகிய மத்தளம், குடமுழா, கஞ்சிரா முதலியன பற்றிய அமைதியும் இசைத்தமிழில் இடம்பெறு வனவே. பண்டைக் கால இசை நூல்களில் இவற்றை அமைத்துள்ளனர். சிலப்பதிகாரம் அதன் உரைகள் பஞ்ச மரபு நிகண்டுகள் ஆகியவற்றில் இந்த இசைத் தமிழ்ச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

முதற்சங்க காலத்தில் பெருங்குருகு, பெருநாரை என்னும் நூல்கள் இருந்தன. பெருநாரை என்பது நரம்பு இசை பற்றிய நூல் (நரம்பு→நார்→நாரை). பெருங்குருகு என்பது துணைக் கருவிகள் பற்றிய இசைநூல். இந்நூல்கள் மறைந்தன. ஆனால் துளை, தோல், நரம்புக் கருவிகள் படிப்படியாய் வளர்ந்து இன்று நம்மிடையே உள்ளன.

இடைச்சங்க காலத்தில் பேரிசை, சிற்றிசை என் னும் இருநூல்கள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந் தன. பேரிசை என்பது விரிவான இசையிலக்கணம் என்றும், சிற்றிசை என்பது சுருக்கமான இசையிலக் கணம் என்றும் பொருள்படும்.

கடைச்சங்க காலத்தில் இசை மரபு, இசை நுணுக்கம், ஐந்தொகை அல்லது பஞ்சமரபு என்னும் இசைத்தமிழ் நூல்கள் திகழ்ந்தன. இருநூல்கள் இறந்து விட்டன. ஆயினும் இசை, அழியாமல் மரபாக நடை முறையில் வளர்ந்து வரும் ஒரு கலையாக விளங்கு கிறது. இந்திய நாட்டில் எல்லாக் கலைகளைக் காட்டிலும் மிகுதியாக, இசைக்கலை மட்டும் மர பாகத் தொடர்ந்தும் வழிவழியாக வளர்ந்தும் வரும் ஒருகலையாகும் என்று முனைவர் எசு. சீதா அம்மை யார் கூறுவார். பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல் களிலும் அவற்றின் உரைகளிலும் இசையிலக்கணச் செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தொல் காப்பியம் தொடங்கிப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும் அதன் ஆழமான இரு பெரும் பழைய உரைகளிலும், நிகண்டுகளிலும், சைவ சமயத் திருநூல்களாகிய பன்னிரு திருமுறை நூல்களிலும், வைணவப் பக்தி நூல்களாகிய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திலும், காப்பியங்களிலும், புராணங்களிலும் ஏராளமான இசைச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. இக் குறிப்புகளைத் திரட்டி வகுத்து அமைத்த இசை நூல்கள் இன்று தமிழில் காணப்படுகின்றன. பஞ்ச மரபும் சிலப்பதிகாரமும் தென்னக இசைக்கு அடிப் படையான நூல்கள்.

தென்னக இசையின் நரம்புவகைகள்

| பெயர் | குறியீடு | வடமொழிப் பெயர் | குறியீடு | ஆங்கிலக் குறியீடு |
|---|---|---|---|---|
| 1. குரல் | கு | சட்சம் | ச | C |
| 2. மென்துத்தம் | மெ.து | சுத்தரிடபம் | சு.ரி | Df |
| 3. வன்துத்தம் | வ.து | சதுருதி ரிடபம் | ச.ரி | D |
| 4. மென்கைக்கிளை | மெ.கை | சாதாரண காந்தாரம் | சா.கா. | E.f |
| 5. வன்கைக்கிளை | வ.கை | அந்தர காந்தாரம் | அ.கா. | E |
| 6. மெல்லுழை | மெ.உ | சுத்த மத்திமம் | சு.ம | F |
| 7. வல்லுழை | வ.உ | பிரதி மத்திமம் | பி.ம | F.S |
| 8. இளி | இ | பஞ்சமம் | ப | G |
| 9. மெல்விளரி | மெ.வி | சுத்த தைவதம் | சு.த | A.f |
| 10. வல்விளரி | வ.வி | சதுசுருதி தைவதம் | ச.த | A |
| 11. மென்தாரம் | மெ.தா | கைசகி நிடாதம் | கை.நி | B.f |
| 12. வன்தாரம் | வ.தா | காகலிநிடாதம் | கா.நி | B |

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் பண்டைய இசை நூல்களின் பெயர்களைச் சுட்டி அவற்றினின்றும் ஓரிரு பாடல்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி விளக்கங்கள் தருவதினின்றும் பண்டைய இசையிலக்கண நூல்களின் பரப்பையும் தொன்மையையும் அறியலாம்.

| நூல் | இயற்றியோர் | சிலம்பில் இடம் |
|---|---|---|
| 1. பஞ்சபாரதீயம் | நாரதர் | சிலப்: 8:29 (உரை.) |
| 2. பரதசேனாபதீயம் | ஆதிவாயிலார் | சிலப்: 3:11 |
| 3. மதிவாணர் நாடகத்தமிழ் | பாண்டியன் மதிவாணன் | சிலப்: 6:35 |
| 4. இசைநுணுக்கம் | சிகண்டியார் | சிலப்: 3:26-6;35 |
| 5. பஞ்சமரபு | அறிவனார் | சிலப்: 6-35, உரை, அடியார். |
| 6. தாளவகை ஒத்து | | சிலப்: 3:26, உரை, அடியார். |

எனவே, இந்நூல்கள் அடியார்க்கு நல்லார் கால மாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டுவரை இருந் துள்ளன. அவர் உரை எழுதுவதற்கு இந்நூல்கள் பயன்பட்டன.

இந்நூல்களுள் பஞ்சமரபு என்னும் நூல் 400 வெண்பாக்கள் கொண்டது; இந்நூல் இன்று அச்சாகி யுள்ளது. இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள தாள நூற்பா மரபும், தாண்டவப் பொதுவியலும் பிற் காலத்தில் பஞ்சமரபுடன் சேர்க்கப்பட்ட வேறு நூல்கள் ஆகும். இவை பஞ்சமரபு நூலின் பகுதிகள் ஆகா. பஞ்ச மரபுக்கு உரிய முதற்பெயர் 'ஐந்தொகை மரபு' எனப் பஞ்சமரபு வெண்பா ஒன்று கூறுகிறது.

தொல்காப்பியம் நிலத்தை நான்கு வகையாகப் பகுத்து, அவற்றிற்கு உரிய கருப்பொருள் வகை களைக் கூறுங்கால், யாழும் யாழின் பகுதியும் பற்றிக் குறித்துள்ளது. அடியார்க்கு நல்லார் – சிலப்பதிகாரப் பதிகவுரையில் ஐந்து நிலங்கட்கும் உரிய ஐந்து பெரும்பண்களையும், ஐந்து கிளைப் பண்களையும் சுட்டி, அவை சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ள இடங்களையும் குறிப்பிட்டு விரித்துரைத்துள்ளார். இவை தென்னக இசையின் தொன்மையைத் தெள்ளத் தெளிவாய் நிலைநாட்டுகின்றன.

கீழ்க்காணும் பட்டியல் சிலப்பதிகாரத்தில் அடி யார்க்கு நல்லார் பதிகவுரையில் தந்துள்ள குறிப்பு களை அடியொற்றி அமைந்தது. பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி நாலு பாலைகட்கும் உரிய இராகங் களைப் பண்ணுப் பெயர்ப்பின் வழியாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இளங்கோவடிகள், முல்லையாழ், குறிஞ்சியாழ், நெய்தல்யாழ், மருதயாழ் என்னும் பெரும்பண்களுக்குரிய ஏழ்நரம்புகளைப் பல்வேறு காதைகளில் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். உலகக் காப்பியங்களுக்குள்ளே இசையிலக்கண அமைதி களைக் காப்பியக் கதையோடு பின்னிப் பிணைத்து அமைத்த முறையில், சிலப்பதிகாரத்திற்கு நிகரான ஒரு காப்பியம் இல்லை எனலாம்.

தென்னக இசை வரலாற்றிலே ஆதிமுதற்பண், 'முல்லையாழ்' என்பதாகும். பல பழம்பாடல்களில் இதற்குரிய ஏழு நரம்புகளின் அலகுகளை – 4.4.3.2. 4.3.2. (22) என்று குறித்துப் பண்டை இசையியலார் மிகத் தெளிவுபடுத்தியுள்ளனர். மேலும் முல்லை யாழின் 7 நரம்புகட்குரிய தான நிலைகளை விளக்க 12 இராசி வீடுகளுள்ளே 12 சுரங்களை நிறுத்தி, அவற்றுள் 7 இராசி வீடுகளில் நிற்கும் 7 சுரங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. முல்லையாழ் | செம்பாலை | அரிகாம்போதி (ஆய்ச்சியர்குரவை) |
| 2. குறிஞ்சியாழ் | படுமலைப்பாலை | நடபைரவி (நடுகற்காதை) |
| 3. நெய்தல்யாழ் | செவ்வழிப்பாலை<br>விளரிப்பாலை | இருமத்திமத்தோடி (கானல்வரி)<br>தோடி |
| 4. மருதயாழ் | கோடிப்பாலை | கரகரப்பிரியா (வேனிற்காதை) |
| 5. சுடுசுரப்பாலையாழ் | அரும்பாலை | சங்கராபரணம் (புறஞ்சேரி இறுத்தகாதை) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1<br>துலாம்<br>குரல் | 2<br>விரிச்சிகம்<br>துத்தம் | 3<br>தனு<br>துத்தம் | 4<br>மகரம்<br>கைக்கிளை | 5<br>கும்பம்<br>கைக்கிளை | 6<br>மீனம்<br>உழை |
| 7<br>மேடம்<br>உழை | 8<br>இடபம்<br>இளி | 9<br>மிதுனம்<br>விளரி | 10<br>கடகம்<br>விளரி | 11<br>சிம்மம்<br>தாரம் | 12<br>கன்னி<br>தாரம் |

கீழ்க்கோடிட்ட நரம்புகளே முல்லையாழுக்கு உரியன என்று பண்டை இசையோர் கூறுவதால் முல்லையாழ் என்பது இன்றைய அரிகாம்போதி ( ச ரி$^2$ க$^2$ ம$^1$ ப த$^2$ ச்) என்று மிகத் தெளிவாய் அறியலாம். தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னிருந்தே முல்லையாழ் தமிழகத்தின் ஆதி முதற் பண் என இருந்து வந்துள்ளது. சாமவேதம் ஓதிய வட இந்திய இசைப்பண் வேறு; முல்லையாழ் வேறு. சிலப்பதிகாரத்தில் இளங்கோவும் அதன் இரு உரையாசிரியர்களும் முல்லைப் பெரும்பண்ணை விளக்கியுள்ளது போன்று, தமிழ் இலக்கியப் பரப்பில் வேறு ஒரு பண்ணை வேறு எவரும் விளக்கவில்லை. ஆய்ச்சியர் குரவையுள் முல்லையாழ் விளக்கப்பட்டுள்ளது.

தென்னக இசையில் நரம்புகள் ஒன்றோடொன்று பொருந்தி இசைப்பதை மிகத் தொன்மைக் காலத்தில் கண்டறிந்தனர். பொருந்தி இசைக்கும் நரம்புகளைப் பொருந்திசை நரம்புகள் என்றனர். இளங்கோவடிகள் ‘இணை கிளை பகைநட்பு என்று இந்நான்கின், இசை புணர் குறிநிலை எய்த நோக்கி’ – (சிலப். 7:35, 34) என்று மரபாகக் கூறிவரும் பகுப்பினைக் குறிப்பிடுகிறார். நின்ற நரம்பிற்கு மேல் ஏழாம் நரம்பு – இணை நரம்பு; நின்ற நரம்பிற்கு மேல் ஐந்தாம் நரம்பு – கிளைநரம்பு; நின்ற நரம்பிற்கு மேல் நான்காம் நரம்பு – நட்புநரம்பு ஆகும்.

என்று நூற்பாவாக அமைத்துள்ளார். இங்குப் பாலையாழ் என்றது சிறப்புச் சுட்டு ஆகிச். செம்பாலையாழைக் குறித்தது. இணை, கிளை, நட்பு அல்லாத நரம்புகள் யாவும் பகை நரம்புகள் ஆகும்.

தென்னக இசையியலில் பலப்பல பண் உண்டாக்கும் முறைகள் தோன்றி நெடுக வளர்ந்து வந்துள்ளன. வலமுறைத் திரிபு, இடமுறைத் திரிபு, தாரத்தாக்கம், பெய்தல் முறை, அகநிலைப்பண் காணுதல், புறநிலைப் பண்காணுதல், அருகியற்பண் காணுதல், பெருகியல்பண் காணுதல், நேர் நிலைப்பண் காணுதல் முதலிய பண்ணுப் பெயர்ப்பு முறைகள் தென்னக இசைக்கே உரியன. இசை சீரிய செல்வாக்குப் பெற்றுப் பண் ஆக்கும் முறையில் பெரிதும் பயன்பட்டது. இடமுறைத் திரிபு என்னும் புதிய மரபு முறை, உலக இசை வரலாற்றில் தமிழிசைக்கே தனித்து உரியது; தமிழர் கண்டுபிடித்தது. ஏழ் பெரும் பாலைகளைச் செம்பாலையினின்றும் வல முறைத் திரிபால் முதலில் தோற்றுவித்த பின்னர், பெய்தல் முறையால் பல பண்களைத் தமிழர்கள் உண்டாக்கி அமைத்தனர்.

பண்டு தொட்டு இன்றுவரை தமிழிசையில் பண்கள் எண்ணிக்கையில் படிப்படியாய் வளர்ந்து வந்துள்

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | உறவு நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| கு | து | து | கை | கை | உ | உ | இ | |
| ச × | ரி | ரி | க | க | ம | ம | ப × | (ச. ப. இணை) |
| ச × | ரி | ரி | க | க | ம × | — | — | (ச ம. கிளை) |
| ச × | ரி | ரி | க | க × | — | — | — | (ச. க. நட்பு) |

இனி, வடமொழி இசையியலில் கூறப்படும் வாதி, சம்வாதி, விவாதி முதலிய பகுப்பும் முறையும் நெறியும் வேறு. தென்னக இசையின் உயிரும்மூச்சும்பொருந்திசைஇலக்கணமே; அது தென்னகத்திற்கே உரியது. இணை, கிளை நரம்புகளைத் தொடுத்துப் பண்களைத் தோற்றுவித்தனர். மென்தாரமுதல் இணை நரம்புகளை மேலும்மேலும் தொடர்ந்து தொடுத்துத் தொகுக்கத் தோன்றிய பண்ணே – ஆதி முதற் பண்ணாகிய முல்லையாழ். இதனைப் பஞ்சமரபு அறிவனார், ‘தாரத்து உழை தோன்றப் பாலையாழ்’

ளன. இன்று 32 பண்கள் பெரும் வழக்குப் பெற்று இணை கிளை நட்பு என்னும் பொருந்து இசை நரம்பு அடிப்படையில் இனிமையுற்று விளங்குகின்றன. இவை பெய்தல் முறையில் தோன்றியவை. இவற்றின் எளிமை கருதி இன்றைய சுரங்களில் குறிக்கலாம். பெய்தல் முறை என்பது பண்ணிற்குரிய ஒரு சுரத்தையோ இரு சுரத்தையோ நீக்கி வேறு சுரத்தைப் பெய்து கொள்வது.(எ–டு ) ஒரு பண்ணின் சதுசுருதி ரிடபத்தை நீக்கிச் சுத்த ரிடபத்தைப் பெய்து கொள்ளுவது (ரிடபம் என்பது துத்த நரம்பு).

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ச | (ரி$^2$) | க$^2$ | ம$^1$ | ப | த$^2$ | நி$^1$ | ச் | செம்பாலை (அரிகாம் போதி) |
| ச | (ரி$^1$) | க$^2$ | ம$^1$ | ப | த$^2$ | நி | ச் | இது துத்தம் பெய்த செம்பாலை |

துத்தம் பெய்தசெம்பாலை என்றோ துத்தச் செம்பாலை என்றோ சுருக்கமாய்க் குறித்தல் வேண்டும். இது இன்றைய சக்கரவாள இராகம் ஆகும். பெய்தல் முறை பற்றி அடியார்க்கு நல்லார் துத்தம் பெய்து, கைக்கிளை பெய்து என்பன போன்ற தொடர்களால் விளக்கியுள்ளார் (சிலப்.3;90 அடியார். உரை); அரும்பாலை என்பது சங்கராபரணம். சங்கராபரணத்திற்குரிய 'ரி' 'த' நீக்கி, அவற்றின் வகையைப் பெய்ய மாயாமாளவ கௌளைப் பண் கிடைக்கும். இது துத்தம் விளரி பெய் அரும்பாலை:-

செவ்வழியில் இரு மத்திமம் வருவதாலும் அது விளரியோடு ஒப்புமை உடையதாலும் அதனை நீக்கிவிட, ஐந்து சுத்த மத்திமப் பண்கள் கிடைக்கும். அந்த ஐந்திலேயும் பிரதிமத்திமம் பெய்ய ஐந்து பிரதிமத்திமப் பண்கள் ஆயின. மேற்செம்பாலை இறுதியில் நிற்பது,-அது வல்லுழைப் (பிரதிமத்திமப்) பண் ஆக நிற்பது - பிற வல்லுழைப் பண்களைத் தோற்றுவிக்கத் தூண்டியது. இவ்வாறு ஐந்து மெல்லுழைப் பண்களினின்றும் ஐந்து வல்லுழைப்பண்கள் தோன்றின. இவற்றை (1) அந்தரச் செம்பாலை,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரும்பாலை | ச | ரி$^2$ | க$^2$ | ம$^1$ | ப | த$^2$ | நி$^2$ | ச் | சங்கராபரணம் |
| து.வி.பெய் அரும். | ச | ரி$^1$ | க$^2$ | ம$^1$ | ப | த$^1$ | நி$^2$ | ச் | மாயாமாளவ கௌளை |

ஏழ் பெரும்பாலைகளும் ஒருவரிசை மாறாமல் நிற்றற்குரியன. அவையே அனைத்துப் பண்வளர்ச்சிகட்கும் அடிப்படை ஆனவை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. செம்பாலை | அரிகாம்போதி | ச | ரி$^2$ | க$^2$ | ம$^1$ | ப | த$^2$ | நி$^1$ | ச் |
| 2. படுமலைப்பாலை | நடபைரவி | ச | ரி$^2$ | க$^1$ | ம$^1$ | ப | த$^1$ | நி$^1$ | ச் |
| 3. செவ்வழிப்பாலை | இருமத்திமைத் தோடி | ச | ரி$^1$ | க$^1$ | ம$^1$ | ம$^2$ | த$^1$ | நி$^1$ | ச் |
| 4. அரும்பாலை | சங்கராபரணம் | ச | ரி$^2$ | க$^2$ | ம$^1$ | ப | த$^2$ | நி$^2$ | ச் |
| 5. கோடிப்பாலை | கரகரப்பிரியா | ச | ரி$^2$ | க$^1$ | ம$^1$ | ப | த$^2$ | நி$^1$ | ச் |
| 6. விளரிப்பாலை | தோடி | ச | ரி$^1$ | க$^1$ | ம$^1$ | ப | த$^1$ | நி$^1$ | ச் |
| 7. மேற்செம்பாலை | கல்யாணி | ச | ரி$^2$ | க$^2$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^2$ | ச் |

இந்த ஏழ்பெரும்பாலைகளின் இறுதியில் நிற்கும் பண்ணில் மட்டிலுமே பிரதி மத்திமம் (வல்லுழை) வரப்பெற்றுள்ளது. பெய்தல் முறையில் இந்தப் பிரதிமத்திமத்தை மற்றப் பண்களில் பெய்தனர்.

(2) அந்தரப்படுமலை, (3) அந்தர அரும்பாலை, (4) அந்தரக் கோடிப்பாலை, (5) அந்தர விளரிப்பாலை எனக் குறித்துள்ளார்கள்.

இனி இந்த (5-5) 10 பெரும் பண்களினின்றும் பெய்தல் முறையால் 32 பண்கள் பிறந்தன.

ஏழ் நரம்புகள் தொடுத்த பண்ணைப் பெரும் பண் என்றும், 'யாழ்' என்றும் பண்டைக் காலத்தில் தொகுத்தனர். இதனை

'எழுமதி வாழி ஏழின் கிழவ' (பொருந. 63)

'ஏழ்புணர் சிறப்பின் இன்தொடைச் சீறியாழ்
தாழ்பெயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்
பெயர்த்து' (மதுரைக். 559-60)

'பண்ணுப் பெயர்த் தாங்கு' (பதிற். 65:15)

'நல்லியாழ்ப் பண்ணுப் பெயர்த்தன்ன காவும்
பள்ளியும்' (மலைபடு. 450-1)

என்னும் சங்கச் செய்யுட் பகுதியால் அறியலாம். பல்வேறு பகட்டுமிக்க சோலைகளைப் போலவும் சோலை சூழ்ந்த பள்ளிகளைப் போலவும் பல்வேறு பண்களைப் பண்ணுப் பெயர்த்து உண்டாக்குதற்கும் ஏழ் பெரும் பாலைகளைத் தோற்றுவித்தற்கும் 12 நரம்புவீடுகள் (12 சுரத்தானங்கள்) தேவை. அவற்றைச் சங்க காலத்திற்கு முன்பே அறிந்திருந்தனர் என்பதைத் தெளிவாய்ப் பழம் நூல்கள் அறிவிக்கின்றன.

'புரிநரம் பின்கொளைப் புகல்பாலை ஏழும்' (பரிபா. 7:7)என்றதால் ஏழ்பாலைகளின் எண்ணிக்கை அறியலாகும். பண்களைப் பெரும் பண்கள் என்றும் திறப்பண்கள் என்றும் இருபெரும் பிரிவாகப் பிரித்திருந்தனர். திறப்பண் என்பன - கிளைப்பண்கள். (வரிசஇராகம்). இந்தத் திறப்பண்களையும், ஆறு நரம்புடைய பண்ணியல் என்றும், ஐந்து நரம்புடைய திறப்பண் என்றும், நாலு நரம்புடைய திறத்திறப் பண் என்றும் மூன்று பிரிவாகப் பிரித்திருந்தனர். ஏறு நிரல் என்பது ஆரோகணம்; இறங்கு நிரல் என்பது அவரோகணம்.

வழித்திறன் காட்டல் என்பது ஒரு பண்ணை இசைத்த பின்னர் அதன் திறப்பண்களை இசைத்துக் காட்டும் மரபு முறையாகும். இதிலே வல்லமை உடையோனைப் பெரும்பாணன் என்றனர். இதனைச் சிலம்பு தெளிவுறுத்துகிறது (சிலப். புறஞ்சேரி. 13: 106 அடியார்க் ...உரை). பாணர்கள் கூடி வாழ்ந்த ஊர்ப்பகுதிகளைப் ''பெரும்பாண் இருக்கை'' என்றனர். இசைத் துறையில் சிலப்பதிகாரம் நல்கும் செவ்விய விளக்கங்களின் வழியாகப் பாட்டிலும் தொகையிலும் உள்ள இசைக்குறிப்புகளை அறிந்து கொள்ளல் வேண்டும்.

பண்ணியல் என்னும் 6 நரம்புடைய பண்கள் ஒரு பெரும் பண்ணில் கிடைக்கும்; ஏழு நரம்புகளின் வரிசை-து.கை.உ., இ.வி.தா. இவற்றுள் ஒன்றொன்று நீக்கப் பண்ணியல்கள் ஆறு கிடைக்கும்.

திறப்பண்கள் ஒரு பண்ணில் எத்தனை கிடைக்கும்? ஏழு நரம்புடைய பண்ணில் எவையேனும் இரு சுரம் நீக்க 5 நரம்புப் பண்கள் கிடைக்கும். (பக்.10.) எனவே, 15 + 6 = 21 திறப்பண்களை நடைமுறையில் பெரிதும் வழங்கினர். நான்கு நரம்புடைய திறத்திறத்தை விரிவாக ஆக்க இயலாமையால் அவற்றை விட்டு விட்டனர்.

ஆளத்திபாடுதல் என்பது இராக ஆலாபனை செய்தல் ஆகும். ஒரு பண்ணிற்குரிய ஏறு இறங்கு நிரலின் நரம்புகளைப் பல்வேறு வகையில் பின்னியும் பிணைத்தும் பிறழ்ந்தும் அடுக்கியும் பாடுவதே ஆளத்தி பாடுவது ஆகும். இவ்வாறு பாடுங்கால் பண்ணின் நீர்மைகளும் நிறங்களும் உணர்வு ததும்ப வெளிப்படுத்துதல் வேண்டும். முதல், முறை, முடிவு, நிறைவு, குறைவு, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை ஆகிய பதினொன்றும் ஆளத்தி நெறி முறைகளாகும். (சிலப்.3:41 உரை).

| தமிழ்ப் பெயர் | வடமொழிப் பெயர் | ஆங்கிலப் பெயர் | ஏ.நி. | இ.நி. |
|---|---|---|---|---|
| 1. பெரும்பண் | சம்பூரண இராகம் | Heptatonic | 7 | 7 |
| 2. பண்ணியல் | சாடவ இராகம் | Hexatonic | 6 | 6 |
| 3. திறப்பண் | ஔடவ இராகம் | Pentatonic | 5 | 5 |
| 4. திறத்திறம் | சதுர்த்த இராகம் | Quartertonic | 4 | 4 |

| | | |
|---|---|---|
| து — கை; து — உ; து — இ; து — வி; து — தா | — 5 | |
| கை — உ; கை— இ; கை— வி; கை— தா; | — 4 | |
| உ — இ; உ — வி; உ— தா; | — 3 | 15 |
| இ — வி; இ — தா; | — 2 | |
| வி — தா; | — 1 | |

சங்கீத இரத்தினாகரம் என்னும் நூல் (கி.பி.13. நூற்றாண்டு) சிலம்பின் உரையாசிரியர்களாகிய அரும்பதவுரைகாரர் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) அடியார்க்கு நல்லார் (கி.பி. 12-ஆம் நூற்.) ஆகியோர் காலத்திற்குப் பிந்திய நூல். இது வடமொழி இசையிலக்கணம் கூறுவது. இதில் தென்னக இசையியல் கூறுபாடுகள் மிகச் சிலவே காணப்படுகின்றன. பழந்தமிழிசை நூல்களுள் கூறப்பட்டுள்ள இணை, கிளை, நரம்பு முறைக்கும், சங்கீத இரத்தினாகரம் முதலிய வடநூல்கள் கூறும் வாதி சம்வாதி விவாதி சுர முறைகட்கும் பல வேறுபாடுகள் உண்டு. இராகப் பகுப்புகளிலும், ஆளத்தி பாடும் முறைகளிலும் தாளப் பகுப்புகளிலும், கொட்டு முழக்கு இயல்களிலும்-தென்னக இசைக்கும் வடஇந்திய இசைக்கும் வேறுபாடுகள் உண்டு. ஒற்றுமைக் கூறுபாடுகள் சில உண்டு. 'இந்திய இசை' என்னும் தலைப்பில் ஆங்கில மொழியில் எழுதப் பட்டுள்ள நூல்கள் பலவும் வட இந்திய தென்னிந்திய இசை முறைகட்கு இடையேயுள்ள பல வேறுபாடு களைத் தெளிவாய் விளக்காமல் தவறான கருத்து களைத் தருகின்றன. சங்கீத இரத்தினாகரத்திற்கு எழுதிய உரைகள், தம்முள் பெரிதும் வேறுபடுகின்றன.

வீ.ப.கா.சு.

துணை நூல்கள்:

ஆபிரகாம் பண்டிதர். மு., கருணாமிர்தசாகரம் தஞ்சாவூர், 1917.

விபுலானந்த அடிகள்., யாழ்நூல், கரந்தைத்தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1974.

பெருமாள்.ஏ.என்., தமிழர் இசை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை, 1984.

**இசைத்திறன் சோதனை**: இசையின் ஒலி எல்லைகளைப் பிரித்தறிதல், அதிர்வு, ஒலி ஒருங்கிணைவு பற்றிய துல்லியமான உணர்வு ஆகிய திறன்களை உளவியல் நுட்பமுறையில் மதிப்பீடு செய்யும் சோதனை இசைத்திறன் சோதனை (Test of Musical Ability) எனப்படும். சீசோர் (Seashore) என்பவர் இத்தகைய சோதனையை 1919-ஆம் ஆண்டு முதன்முதல் முறைப்படி அமைத்தார். இவர் அயோவா (Iowa) பல்கலைக்கழகத்தில் இசைத் திறன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். இசைத்திறன் சோதனை, அடுக்குச் சோதனையாக (Test Battery) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அடுக்கில் பல கிளைச் சோதனைகள் அடங்கியுள்ளன. முதல் சோதனையில் ஒரு சுரம் ஏதேனும் இசைக்கருவி ஒன்றில் இசைக்கப் படுகிறது. அதனை அடுத்து வேறோரு சுரம் இசைக்கப்படுகிறது. ஆட்படுநர் இவ்விரண்டு சுரங் களுள் எது மற்றதைக் காட்டிலும் உயர் எல்லைச் சுரம் என்று கூறவேண்டும். அடுத்த சோதனையில் ஆட்படுநர், இரு சுர வரிசைகள் இசைக்கருவியில் இசைக்கப்படும்பொழுது ஒப்பு நோக்குகிறார். முதலில் ஒரு சுர வரிசையும் அதன் பிறகு அடுத்த சுர வரிசையும் இசைக்கப்படுகின்றன. ஆட்படுநர் இவற்றைக் கேட்டு ஒப்பிடுகின்றார். இவற்றுள் எந் தச் சுர வரிசை மற்றதைக் காட்டிலும் அதிர்வுகள் மிகுதியாகத் தரக்கூடியது என்று அவர் கூறவேண்டும். ஒலி எல்லை, ஒப்புமைச் சோதனையில் ஒரே வகை. ஐந்து அல்லது ஆறு சுர வரிசைகள் இசைக்கருவியில் இசைக்கப்படுகின்றன. மற்றொருமுறை இச்சுர வரி சைகளே திரும்பவும் இசைக்கப்படுகின்றன. இம்முறை ஏதேனும் ஒரு சுரவரிசையில் ஒரு சிறிய சுர மாற்றம் இருக்கும். இம்மாற்றத்தை ஆட்படுநர் கண்டுபிடித்துக் குறிப்பிடவேண்டும்.

உளவியல் வல்லுநர்கள் இச்சோதனைகளை ஆயிரக் கணக்கான ஆட்படுநர்களுக்கு அளித்து, அவர்களிட மிருந்து பெறப்பட்ட விடைகளை மதிப்பீடு செய்து, தரப்படுத்தப்பட்ட இசைத்திறன் சோதனைகளை அமைத்துள்ளனர். இச்சோதனைகளின் உதவியால் இசை நாட்டம் உடையவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு இளமைப் பருவத்திலேயே இசைப் பயிற்சி அளிக்க முடியும். இசைத்திறனில்லாதவர் களுக்கு இசைப்பயிற்சியளித்துக் காலத்தையும் பொருளையும் வீணாக்குவதைத் தடுக்க இத்தகைய சோதனைகளைப் பயன்படுத்தலாம்.

**இசை நாடகம்** என்பது இசை, கவிதை, நடிப்பு நாடகம், கண்ணுக்கினிய காட்சி, அரங்கமைப்பு ஆகியவை இயைபுற நிகழ்த்தப்படும் நிகழ்ச்சியாகும். பண்டைய கிரேக்க நாட்டில் துன்பியல் நாடகங்களைத் தயாரிக்கும்பொழுது இசையும் ஆடலும் இணைந்த பகுதிகள் பல இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. இடைக்காலத்தில் ஐரோப்பிய மாதா கோவில் நாடகங்களில் இசையுடன் இணைந்த நடிப்பு இடம் பெற்றது. இத்தாலியில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் இசை நாடகத்தின் (Opera) முன்னோடிகளான இருவகை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அவை பாலே, இண்டர்மெசோ(Indermesso) என்பன. பிரான்சு நகரத்து இசை வல்லுநர்கள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் இறுதியில் இசை நாடகத்தைத் திறம்பட நிகழ்த்தி வெற்றிகண்டார்கள். இசை நாடகத்தினிடையே கதை பற்றிய தொடர்ச்சிக் குறிப்புகள் கூறப்பட்டன. பெரி(Peri) என்பவரால் கி.பி.1597–இல் இயற்றப்பட்ட 'யூரிடைசி' (Euridice) என்னும் நிகழ்ச்சியே முதன் முதலாக நடத்தப்பட்ட முழுநீள இசை நாடகம் ஆகும். மாண்டிவெர்டி (Mondeverdi) என்பவரால் கி.பி.1607–இல் இயற்றப்பட்ட ஆர்பியோ (Orfeo) என்னும் இசை நாடகத்தில் பலவகைப்பட்ட இசை முறைகள் சேர்க்கப்பட்டிருந்தன. வெனிசு (Venice) நகரத்தில் கி.பி. 1637–இல் கட்டப்பட்ட சான் காசியானோ (San Cassiano) அரங்குதான் இசை நாடகத்திற்கென முதன் முதலில் அமைக்கப்பட்ட பொது இசை நாடக அரங்காகும். பிரான்சில் கி.பி. 1671–இல் இசைநாடக அரங்கு அமைக்கப்பட்டு இசைநாடகங்கள் நிகழ்த்தப்பட்டு வந்தன. காலப்போக்கில் இசைநாடக அமைப்பாளர்கள், இசைநாடகங்களுக்குப் பல்வேறு விதிகளை ஏற்படுத்தினர். இசைநாடகக் கதைகளில் வரும் துன்பியல் பாத்திரங்கள், நீண்டநேரம் சிறப்பாக அமைக்கப்பட்ட இசைக் கருவியமைப்புப் பின்னணியுடன் இணைந்து பாடுவதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டு வந்தன. இத்தகைய காட்சிகளில் மக்கள் காண்பதற்காகவும் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் அரங்கு அமைப்புகளும் வியக்கத்தக்கனவாக அமைக்கப்பட்டன. இங்கிலாந்தில் சேக்சுபியரின் நாடகங்களுடன் இசைநாடகப் பகுதியைச்சேர்த்து நடித்தனர். நகைச்சுவைக் கதைப் பகுதிகளை இணைத்து அமைக்கப்பட்ட இசைநாடகங்கள் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இடையில் புகழ் பெற்று விளங்கின. இத்தகைய நகைச்சுவை இசை நாடகங்களை நையாண்டி செய்யும் முறையில் 'வாட்வில்' (Vaudeville) என்னும் இசைநாடகம் நிகழ்த்தப்பட்டு வந்தது. இத்தாலி நாட்டில் புகழ்பெற்ற இசைநாடகங்களை இயற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக உரோசினி (Rossini, கி.பி. 1792–1868), பெல்லினி (Bellini, கி.பி. 1801–1835), புயுசினி (Puccini, கி.பி. 1858–1924), வெர்டி (Verdi, கி.பி.1813–1901) ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் வெர்டியின் இசை நாடகங்களான ஒதெல்லோ (Othello). இரிகோலெட்டோ (Rigoletto) போன்றவை ஐரோப்பிய மக்களிடையே மாபெரும் புகழ் பெற்று விளங்கின.

ஐரோப்பாவில் இசை நாடகத்திற்கு முழுமையான இலக்கணம் வகுத்தவர் என்று கருதப்பட்டவர், செருமனி நாட்டைச் சேர்ந்த இரிச்சர்டு வாக்னர் (Richard Wagner, கி.பி.–1813–1883) ஆவர். இவர் தாமே நாடகங்களை எழுதி அவற்றிற்குரிய இசையினையும் அமைத்து அரங்கமைப்பும் செய்து மக்கள் கண்டு வியக்கத்தக்க முறையில் இசைநாடங்களை நிகழ்த்தி வந்தார். இவருடைய இசை நாடகங்களுள் புகழ் பெற்றதாகத் திரிசுடன் (Tristan) என்பதைக் குறிப்பிடலாம். புருக்னர் (Bruckner), இரிச்சர்டு இசுட்டிராசு (Richard Strauss), இயுகோ உல்பு (Hugo Wolf), ஆர்னால்டு சோன்பர்கு (Arnold Shoenberg) போன்ற இசை நாடக வல்லுநர்கள் வாக்னரின் முறையைப் பின்பற்றினர்.

இசை நாடகம் கதைச்சுருக்கம் (Libretto), இசை என்னும் இரு பகுதிகள் இணையப் பெற்றதாகும். குரல்வழி இசையும், இசைக்கருவிகளில் இசைக்கப்படும் இசையும் சேர்ந்தது இசை நாடகத்தின் இசை ஆகும். இசைநாடகத்தைப் பார்ப்பதற்கு முன் அதன் கதைச் சுருக்கத்தைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இசைநாடகம் நிகழ்த்துபவர்கள் கதைச் சுருக்கங்களை அவையினருக்கு வழங்குகின்றனர். இசைநாடகத்தில் கதைக்குச் சிறப்பிடம் தரப்படுவதில்லை. கதையின் இயல்பைக் காட்டிலும் இசை நாடகத்தில் பாடப்படும் இனிய பாடல்களைக் கேட்பதற்காகவே மக்கள் இந்நிகழ்ச்சிகளுக்கு வருகின்றனர். இரிச்சர்டு இசுட்டிராசு (Richard Strauss) போன்ற புகழ்பெற்ற இசைநாடக வல்லுநர்கள் இயற்றிய இசைநாடகங்களில் இசையும் கதையமைப்பும் ஒருங்கே சிறப்பாக அமைந்திருக்கின்றன. கதையமைப்புகள் காலத்திற்கு ஏற்றவாறு அமைகின்றன. ஆதலின், கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இசை நாடகக் கதைகள் 19,20, ஆம் நூற்றாண்டுகளில் மக்களின் மனத்தைக் கவருவதில்லை. அவை பழைமையானவையாக மக்களால் கருதப்படுகின்றன. கதையின் முக்கியமான பகுதியில் நாடகத்தின் பாத்திரங்கள் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குக் கிராமிய நாடகங்களில் காணப்படுவது போல் பாடல்களைப் பாடுகின்றனர். இசை நாடகத்தில் பாடல் மூலமே நாடகத்தின் உரையாடல்கள் நிகழ்த்தப்படும். இவை மொத்த ஒத்திசைவு (Ensembles) எனப்படும்.

இசை நாடகத்தில் இசையே மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும். பல்வேறு வகையான குரல் வளங்களைப் பெற்றவர்கள் இத்தகைய பாடல்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி பெற்றுப் பாடி வந்தனர். மேல்தாயி(Tenor), இடைத்தாயி(Baritone),கீழ்த்தாயி (Bass) ஆகிய மூவகைக்குரல்களும், அவற்றின் உட்பிரிவுகளும், மேல் தாயிப் பெண்குரலும் (Soprano) வாக்னர் போன்ற வல்லுநர்களின் இசை நாடகங்களுக்குத் தேவைப்பட்டன. இவற்றைத் தவிரப் பெரும்பாலான இசை நாடகங்களில் குழு இசை இடம் பெற்றது. இத்தகைய இசையினைக் கதைப் பாத்திரங்களே பாடவேண்டும். இதற்குக் கடுமையான பயிற்சி இருந்தால்தான் பாடிய வண்ணம் சிறப்பாக நடிக்க முடியும். உடல் அசைவுகளுக்கும் அபிநயங்களுக்கும் ஏற்றவாறு தம் குரலையும் மாற்றிப் பாட வேண்டும். இசை நடத்துநர், அரங்கின் ஒரு பகுதியில் இசைக் கருவிக் குழுவினருடன் அமர்ந்து, நிகழ்ச்சி முழுவதும் இசையைத் திறம்பட இயக்க வேண்டும். பாடல்களின் பொருளுக்கு ஏற்ப இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. சான்றாக, பாடுவோர் என் இதயம் துடிக்கின்றது என்னும் பொருள்படப் பாடினால் இசைக் கருவிகளினால் இதயத் துடிப்பினை உணர்த்தும் ஒலியை எழுப்ப வேண்டும். காட்சி மாறும்பொழுது அவையினருக்குச் சலிப்புத் தட்டாமல் இருப்பதற்குச் சிறு இசை மெட்டுகள் இசைக் கருவிகளால் இசைக்கப்படுகின்றன. இது இடைக்காட்சி இசை (Interludes) எனப்படும். இத்தகைய இசை பெரும்பாலும் இன்னிசை முறையில் (Melody) அமையும். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை அல்லது காட்சியை உணர்த்துவதற்கும் இடைக்காட்சி இசை பயன்படுகிறது. வாக்னரின் (Wagner) சீக்பிரீடு (Siegfried) என்னும் இசைநாடகத்தில், கானகத்தின் ஒலிகளை அவையினருக்கு உணர்த்தும்வகையில் இடைக்காட்சி இசை அடிக்கடி இசைக்கப்பட்டன. இசை நாடகங்கள் பெரும்பாலும் இசைக் குழுவினரின் தொடக்க இசை (Overture) என்னும் பகுதியுடன் தொடங்குகின்றன.

இசைநாடகத்தை உருவாக்குவதில் சிறப்பான பங்குகொள்ளும் வல்லுநர்களுள் பொதுமேலாளர் நிகழ்ச்சி அமைப்பு, கலைஞர்களைத் தேர்ந்தெடுத்தல், நிகழ்ச்சியின் ஆதாய இழப்புகள் போன்றவற்றிற்குப் பொறுப்பு ஏற்கிறார். மேடை இயக்குநர் காட்சி அமைப்பு, இசையுடன் கதைப்பகுதிகளின் பொருத்தம், கலைஞர்களின் பங்கு, காட்சிகளின் ஒளி அமைப்பு ஆகியவற்றைக் கவனிக்கிறார். கலைஞர்கள் குழு இசையாகச் சேர்ந்து பாடும்பொழுது இசை இயக்குநரைப் பார்க்காமல் தாமே இயல்பாகப் பாடி நடிப்பது நிகழ்ச்சிக்கு மிகவும் தேவையாகும். கலைஞர்கள் இயக்குநரைப் பார்த்துக் கொண்டே பாடினால் நடிப்புப் பகுதி மறக்கப்பட்டு விடும். இசை நாடகத்தில் பெரும்பாலும் கதையின் முக்கியமான கட்டத்தில் பாடல்கள் அமைகின்றன. இவற்றை இயற்கையாக அமைப்பதும் மேடை இயக்குநரின் பொறுப்பாகும். வாக்னர் இயற்றிய நூரம்பர்குப் பாடகர்கள் (Master Singers of Nuremberg) என்னும் இசைநாடகத்தில், சினம் கொண்ட நகரத்து மக்களின் உணர்ச்சிகளைக் காட்டும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. இக்காட்சியில் கலைஞர்கள் இசை இயக்குநரைப் பார்க்காமல் தாமே இயல்பாகப் பாடிய வண்ணம் நடிக்க வேண்டும். உடை அமைப்பாளர் கதைக்கேற்ற உடைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் கலைஞர்கள் அணிந்து கொள்ள உதவி புரியவேண்டும். இவர்களைத் தவிர ஒளி, ஒலி அமைப்பாளர்களும் ஒப்பனையாளரும் காட்சி மாற்றுவோரும் இசைநாடகத்திற்கு இன்றியமையாதவர்கள். தொழில்நுட்ப வல்லுநர்களின் பொறுப்புகளைக் கவனிப்பதும், கலைஞர்களுக்குத் தேவையான ஒப்பனை அறைகளை அமைத்துக் கொடுப்பதும், அவர்களைத் தக்க நேரத்தில் மேடைக்கு அழைப்பதும் ஆகிய கடமைகள் மேடை மேலாளரைச் சேர்ந்தனவாகும்.

இக்காலத்தில் நிகழ்த்தப்படும் இசை நாடகங்களுள் மிகவும் புகழ் பெற்றனவாக வெர்டி இயற்றிய எயிடா (Aida), பியுசினி இயற்றிய பொகிமியர்கள் (Bohemians), முசார்க்கி (Mussorgsky) இயற்றிய போரிசு காடுனோவு (Boris Godunov) என்னும் உருசிய இசைநாடகங்கள் பிசே (Bizet) இயற்றிய கார்மென் (Carmen) சார்லசு கௌனாடு (Charles Gounod) இயற்றிய பாசுட்டு (Faust), பியுசினி இயற்றிய பட்டுப்பூச்சி மங்கை (Madame Butterfly), மோசார்ட்டின் மாயக்குழல் (Magic Flute), பிகாரோவின் திருமணம் (Marriage of Figaro) வெர்டியின் இரிகோலெட்டோ (Rigoletto), இரிச்சர்டு இசுடிராசு (Richard Strauss) இயற்றிய உரோசா மலர் உடையோன் (Der Rosenkavalier), 'சலோமி' (Salome),வெர்டியின் இல் திராவடோர் (Il Travat-ore), அலையும் உள்ளம் கொண்டவள் (La Traviata) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இசை நாடகங்களுள் மிகச்சிறந்ததாகக் கருதப்படுவது மோசார்ட்டு (Mozart) இயற்றிய 'தான் கியோவன்னி' (Don Giovanni) என்னும் இன்பியல் இசை நாடகமாகும்.

**இசை நுணுக்கம்** என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினால் அறியலாகும் நூல்களுள் ஒன்று. இசைத்தமிழின் இலக்கண நுட்பங் கூறும் இந்நூல் வெண்பாயாப்பில் அமைந்துள்ளது.

இதன் ஆசிரியர், அகத்திய முனிவர் மாணவர் பன்னிருவருள் ஒருவர் என்று கூறப்படும் சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் ஆவார். அவர், அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியனுக்கும் திலோத்தமை என்னும் தேவ மகளுக்கும் பிறந்த சாரகுமாரன் அல்லது சயந்தகுமாரன் என்பவன் இசைப்புலமை எய்துவதற்காக, இந்த இசைத் தமிழ்நூலை இயற்றினார். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் உரை வகுப்பதற்கு உதவியாக விளங்கிய ஐந்து இலக்கண நூல்களுள் இதுவும் ஒன்றாகும். இந்நூல், இடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டது என்று அடியார்க்கு நல்லாரும், அச்சங்கப் புலவர்க்கு இலக்கண நூலாகத் திகழ்ந்தது என்று இறையனார் களவியலுரையாசிரியரும் குறிப்பிட்டுள்ளனர். அடியார்க்கு நல்லார் தம் உரையின் ஓரிடத்தில் மேற்கோளாக இரண்டு வெண்பாக்களைக் குறிப்பிட்டு, "எனவும் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரும் கூறினாராக கலின்", என்று (அரங். 26) குறிப்பிட்டுள்ளார். பிறிதோரிடத்தில் 'என்றார் இசை நுணுக்கமுடைய சிகண்டியார்' (கடலாடு. 35) என்று கூறியுள்ளார். மேலும், தமிழ் வழக்கினைச் சுட்டுவதாக, 'வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று, இந்நான்கு எல்லை தமிழது வழக்கே' என்னும் அடிகளைக் காட்டி, 'என்றார் சிகண்டியாருமாகலின்' என முடித்துள்ளார். மேலும், பெயர் குறிப்பிடாமல் 12க்கும் மேற்பட்ட வெண்பாக்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளையும், அமைந்துள்ள நடையினையும் ஆராய்ந்தவர்கள் இவ்வெண்பாக்களும் இசை நுணுக்கத்தினைச் சேர்ந்தனவாகலாம் என்று கருதுகின்றனர். அடியார்க்கு நல்லார் உரையினால் வெளிப்படையாகவும் உய்த்துணர்ந்தும் அறியக்கூடிய இவற்றைத் தவிர இந்நூலின் ஏனைய பகுதிகள் இதுகாறும் கிடைத்தில. அடியார்க்கு நல்லாரால் எடுத்துக்காட்டாக ஆளப்பெற்றுப் பின்னர் மறைந்தது என்று கருதப்பெறும் இவ்விசைத் தமிழ் நூலின் காலம் அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முற்பட்டதாகும். இந்நூலாசிரியர் அகத்திய முனிவர் மாணவர் பன்னிருவருள் ஒருவர் எனக்கூறப்பட்ட போதிலும், இவர் பெயர் தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் பன்னிரு பெயர்களுள் ஒன்றாக இடம் பெறாமை ஆராயத்தக்கது.

**இசைப்பேருரை** என்பது இறைவனைப் பற்றிய விளக்கங்களையும் கதைகளையும் இசையுடன் அவையினருக்கு எடுத்துரைக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும். ஆந்திர நாட்டில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வீதிபாகவதம் என்னும் இயலிசை நாடகம் நடத்தப்பட்டு வந்தது. அக்காலத்தில் செயதேவர் இயற்றிய கீதகோவிந்தப் பாடல்களும் பாகவத்தத்திலிருந்து கண்ணன் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்களும் வீதிபாகவதத்தில் இடம்பெற்றன. காலப்போக்கில் வீதிபாகவத நிகழ்ச்சிகளைப் போல் சில மாறுதல்களுடன் ஒருவர் மட்டும் இசையுடன் பக்திப்பாடல்களுக்கு நடனம் ஆடியவண்ணம் சமய கதைகளை அவையினருக்கு விளக்கிக் கூறும் முறை உருவாயிற்று. இந்த நிழ்ச்சிகளில் பாகவதக் கதைகளும் விட்டுணு பற்றிய கதைகளும் பெரும்பாலும் இடம் பெற்றன. ஆதலின் இவை அரிகதை என்று குறிப்பிடப்பட்டன. அரிகதை நிகழ்ச்சிகள், இரவில் தொடங்கி நீண்ட நேரம் நள்ளிரவு அல்லது விடியற்காலை வரையில் நிகழ்த்தப்படும். ஆதலின் இவை காலட்சேபம் என்று குறிப்பிடப்பட்டன. அரிகதை நிகழ்த்தும் முறை தமிழ் நாட்டிலும் பரவலாயிற்று. பாடல்களைப் பாடுவோர் பாகவதர் என்று வழங்கப்பட்டனர். ஏனெனில், இவர்கள் தொடக்கக்காலத்தில் பாகவதத்தின் பாடல்களையே பாடினர். இப்பெயரே பிற்காலத்தில் இசைப் புலவர்களையும் பொதுவாகக் குறிப்பதற்கு ஏற்பட்டது. அரிகதை நிகழ்த்திய பாகவதர்கள் விட்டுணு, கிருட்டிணன் ஆகியவர்களின் கதைகளைத் தவிர, சிவன், முருகன் போன்றவர்களின் கதைகளையும், பக்தர்களின் கதைகளையும் தம் உரை நிகழ்ச்சிகளில் எடுத்துரைக்கத் தொடங்கினர். பண்டைக் காலத்து அரிகதை நிகழ்ச்சியாளர்கள் இடையிடையே நடனம் ஆடி வந்தனர். இப்போது உரைகளுக்கு இடையிடையே பாடல்களை மட்டும் பாடுகின்றனர். இந்நிகழ்ச்சியில் ஆர்மோனியம், வயலின், சாலரா போன்ற இசைக் கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன.

இக்காலத்தில் அரிகதை இசைப் பேருரை என வழங்கப்படுகிறது. கோவில்களில் விழாக்காலங்களிலும் கலை மன்றங்களிலும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இசைப் பேருரைகள் நிகழ்த்தப்படுகின்றன. காண்க. அரிகதைக் காலட்சேபம்

**இசை மரபு**: அறிவனார் இயற்றிய பஞ்ச மரபு என்னும் இசை நூலில் இசை, முழவு, கூத்து, தாளம், அபிநயம் ஆகிய ஐந்து உறுப்புகளைப் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இசை மரபு என்பது முதலாம் பகுதியாகும். இசை மரபு என்னும் பகுதி நரம்புக் கருவிகளுள் யாழ் பற்றியும், வட்டப் பாலை, ஆயப்பாலை, சதுரப்பாலை திரிகோணப்பாலை என்னும் நான்கு வகை ஏழிசை அமைப்புபற்றியும் விளக்கும் பிரிவாகும். நரம்புகளின் மாத்திரை, பாலைகள் திரியும் முறை, பாலைகளில் பண்கள் பிறக்கும் முறை, அவற்றின் அகம், புறம், அருகு, பெருகு என்னும் வகைகள், பண்களின் பெயர்

கள், பண்ணியற்றிறம் போன்ற கூறுபாடுகளை இசை மரபு என்னும் பகுதியில் அறிவனார் விளக்குகிறார். வங்கியம் (குழல்) செய்வதற்குரிய மரங்களைப் பற்றியும் குழலின் அமைப்புப் பற்றியும், தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள், துளைக்கருவிகள் பற்றியும் இசை மரபு என்னும் பகுதியில் விளக்கந் தரப்பட்டுள்ளது. காண்க: பஞ்சமரபு.

**இசைவழி உளவியல்** என்பது மனிதர்கள் இசைக்கு எவ்வாறு துலங்குகிறார்கள், இசையோடு எத்தகைய நடத்தைமுறைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பனவற்றை ஆராயும் இயலாகும். மனிதர்கள் இசையை எவ்வாறு புலன்காண்கின்றனர் என்பதையும், இசைத் தொடர்புள்ள நிகழ்ச்சிகள் அல்லது அனுபவங்கள் அவர்களிடம் எத்தகைய நடத்தையைத் தோற்றுவிக்கின்றன என்பதையும் பிரித்தறிதல் வேண்டும். இசைப்புலன்காணல் (Perception of Music) என்பது, ஒலி வேறுபாடுகளை அறிதல், இசையின் பல்வேறு வகைகளான அதிர்வுகளை அறிதல், தனித்த இசைச்சுரங்களினின்றும் சுரக் கோவைகளினின்றும் முழுமைநிலை விளைவுகளைப் (Gestalt Effects) பெறுதல் போன்றவற்றைக் குறிக்கும்.

இசை வேறுபாடுகளை அறிவதற்கு நினைவு முதன்மையான தேவையாகும். இசைப்பகுதிகளையோ சுரங்களையோ நினைவுகூர்தல் உலகில் மற்றச் செயல்களையும் காட்சிகளையும் நினைவுகூர்தலினின்றும் வேறுபட்டதாகும். ஏனெனில், இசை மனிதர்களின் உள்ளத்தின் அகவுணர்வுகளோடு தொடர்பு கொண்டுள்ளது. இக்காலத்தில் இசைத்திறன் சோதனைகள், உளவியல் சோதனையின் பகுதியாக அமைந்துள்ளன. சூடர் (Shuter), பெண்டிலி (Bentley), பெர்லைன் (Berlyne) போன்ற உளவியல் அறிஞர்கள், இசைத்திறன் மனிதர்களிடம் இயற்கையாகப் பிறக்கும் பொழுதே பரம்பரையியல் கூறுகளினால் ஏற்படும் நாட்டமா? சூழமைவு காரணமாகத் தோற்றுவிக்கப்படக்கூடிய திறனா என்பது பற்றிய ஆய்வுகளைச் செய்துள்ளனர். இத்தகைய ஆய்வுகளுக்கு இயலிசைப் புலவர்களின் அக அனுபவங்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டியுள்ளனர். இதன் பயனாக இசையில் ஒரு பொதுவான உட்கருத்து அமைந்திருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இசைத் திறன் சோதனைகள் செயற்சோதனைகளாக அமைக்கப்பட்டு, இசைக்கணிப்பொறியின் (Musical Computer) மூலமும் அளிக்கப்படுகின்றன. தொழிலகங்களில் எத்தகைய இசையை இசைப்பதன் மூலம் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் கூடும் என்பது இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே இருந்து வருகிறது. சில தனியார் தொழில் நிறுவனங்கள் தொழில் நேரத்தில் மென்மையான இசையைத் தொழிற் கூடங்களில் இசைக்கச் செய்துள்ளனர். இதன் விளைவுகள் இன்னும் முறையான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

உளநோய்களுக்கு இசைவழி மருத்துவமுறை (Music Therapy) செய்யப்படுகிறது. இத்துறையில் பல ஆய்வுகள் செய்யப்பட்டு உறுதியான முடிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இசையின் மருத்துவப் பயன்களும், இசையின்மூலம் பயிர்களை நன்கு வளரச் செய்து பயன்பெறும் முறைகளும் இசைக்கு விலங்குகள் எவ்வாறு துலங்குகின்றன என்பதும் விரிவான ஆராய்ச்சிக்கு ஏற்ற துறைகளாக இன்னும் இருந்து வருகின்றன.

துணை நூல்:

**Davies J.B.**, The Psychology of Music, Standford University Press, London, 1978.

**இசைவிணைவு உண்மைக் கோட்பாடு:** மரபு வழி வந்த இரண்டு உண்மைக் கொள்கைகளுள் ஒன்று இசைவிணைவு (Coherence); மற்றொன்று, இயைபுடன்பாட்டுக் கொள்கை (Correspondence). சிறந்த பகுத்தறிவுக் கொள்கையினரான இலைபினிட்சு (Leibnitz), இசுப்பினோசா (Spinoza), எகல் (Hegel), பிராட்லி (Bradley) முதலியவர்களுக்கேற்ற கொள்கை இசைவிணைவுக் கொள்கை. நேர் காட்சி வாதக் கொள்கையினரான நியுராத்து (Neurath), எம்பெல் (Hempel) முதலியோர் இக்கொள்கையினை மதித்தனர். ஓர் அறிக்கையானது (Statement) உண்மை என்று சொல்வதற்கு, மற்ற ஒழுங்கமைப்பு அறிக்கைகளோடு இசைவாக அமைவது அல்லது ஓர் ஒழுங்கமைப்பில் பங்கேற்று ஒன்றுக்கொன்று தொடர்பாக அமைவது என்பது பொருள். இந்தக் கொள்கையின் ஆதரவாளர்கள், ஓர் அறிக்கை உண்மையாக அமையவேண்டுமானால், இந்த உலகில் உள்ள உண்மையான நிகழ்ச்சிகளோடு அது ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

நடைமுறையில் ஒரு மனிதனுடைய அறிக்கை – எடுத்துக்காட்டாக, 'நான் பேயைப் பார்த்தேன்' -என்று கூறுவது பொய் என்று சொல்லப்படுகிறது. அதுபோல ஓர் அறிவியலறிஞன் புலன்களுக்கு அப்பாற்பட்ட கண்டுபிடிப்புகளை நம்புவதில்லை. ஏனென்றால், அவை இணைந்து போகவில்லை.

அளவையியல் முறைப்படி, உண்மையை அறிவதும், மற்ற உரைகளோடு ஒத்துப் போவதும் முரண்படாமல் இருக்க வேண்டும்.

உண்மையின் படிகள் (நிலைகள்): தனியார் அறிக்கைகளில் (Individual Statements) சில சமயங்களில் ஒரு பகுதி உண்மையாக இருக்கும்; மற்றொரு பகுதி உண்மையில்லாமல் இருக்கும். பிராட்லி (Bradley) கூறியது போல உண்மை எப்பொழுதும் விரிந்து கொடுக்கும் தன்மையதாயும் (Expansion), தன்னகத்தே கொள்ளும் (All inclusiveness) தன்மையதாயும் அமைந்திருக்கும்.

உண்மையின் கட்டளை விதி: இசைவிணைவு உண்மைக் கொள்கையினர் (Coherence Theory of Truth), அவர்களுடைய வாதங்கள் காரணகாரிய முறையான பகுத்தறிவிலிருந்து எடுக்கப்பட்டதை ஒத்துக் கொள்கின்றனர். அனுபவத்திற்குப் பின்னணியிலுள்ள அறிவிலிருந்தும் உண்மையின் பொருளை உணரலாம்.

பழைய அறிக்கைகள் உண்மை என்று நிலை நாட்ட இசைவிணைவுக்கொள்கை பயன்படுகிறது. ஏசுடிங்சுப் (Hastings) போர் கி.பி. 1066-ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்று வரலாற்று நூல்கள் வாயிலாக அறிந்துகொள்கிறார்கள். இக்காலத்தில் நிகழ்வதை இதற்கு எதிராகக் கூறுகிறார்கள். அதாவது, பாயின் மேல் ஒரு பூனை உட்கார்ந்திருக்கிறது என்பது எப்படி உனக்குத் தெரியும் என்று கேட்டால், 'நான் பார்த்துத் தெரிந்து கொண்டேன்' என்று கூறலாம். ஒருவன் பார்த்தது, இப்பொழுது அவன் கூறுவதோடு ஒத்திருந்தால், அது உண்மையாகும் என்றும் கூறலாம்.

இசைவிணைவுக் கொள்கையின் ஆதரவாளர்கள் கூறிய வாதங்கள் பெரும்பாலும் அதன் பொருளிலும் கட்டுரைகளிலும் நீதியிலும் அமைந்திருக்கின்றன.

காரணகாரிய முறையான கட்டளைப் படிவ வாய்ப்பாட்டு உண்மை: நுண்பொருள் ஆராய்ச்சி நூல் பரம்பரையாகச் செயலறிவு சார்ந்ததாக இல்லை. அதன் முடிவுகள் அநுபவமில்லாமலே எடுக்கப்பட்டவை. எவை எல்லாம் மெய்ப்பிக்கப்படவில்லை என்பதும் தெரிந்து கொள்ள முடியாது. எது நடக்கப் போகிறது என்பதும் தெரியாது. பிளேட்டோ, கணிதம் ஒரு புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி இயல் என்றார். இலைபினிசின் (Leibnitz) முறை, சில விதிகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இசுபினோசா (Spinoza) அற இயல் நூலின் தலைப்பானது, நிலக்கணக்கியல் (Geometry) ஒழுங்குப்படி மெய்ப்பிக்கப்படுகிறது.

சில அளவைஇயல் நேர்காட்சி வாதத்தினர் (Logical Positivists), கணிதத்திலும் 'இயற்பியலிலும் ஏற்பட்ட பயிற்சியின் காரணமாக எல்லா அறிவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்கிறார்கள். அத்தகைய அமைப்பு உண்மையாயின், அது அடிப்படையான இசைவிணைவுக் கோட்பாட்டை ஒத்திருக்கும்.

கருத்துரை: ஓர் அறிக்கைக்கும் மற்ற அறிக்கைகளுக்குமுள்ள இணைவு இசை, இணைவு உண்மைக் கொள்கையை மெய்ப்பிக்கப் போதுமானதன்று. முதலாவதாக, காரண காரிய முறைப்படி கூறப்படும் கணித இயல் தொடர்பான அறிக்கைகள், உலகிலுள்ள பொருள்களின் தன்மையைக் கூறவில்லை; ஆனால், அவைகளை இயக்குகின்ற விதிகளின் அடிப்படை மெய்ம்மைகளின் முடிவுகளைக் கூறுகின்றன. ஓர் அறிக்கை உண்மையானது என்று மெய்ப்பிக்க, இன்னொரு அறிக்கையோடு ஒத்திருப்பது மட்டுமல்லாமல், இரண்டாம் அறிக்கை எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருப்பதும் காரணமாகும். இரண்டாவதாக, காரண காரிய முறையால் கூறுகின்ற அறிக்கைகளில், உண்மைக்கும் அதன் பொருளுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. நன்றாக நாம் அறிந்தவைகள் பொய்யாக மாட்டா. மேலும், அவைகளைப்பற்றிக் கூறுகின்ற சொற்களிலுள்ள பொருள்கள் ஒன்றோடொன்று தொடர்புடையன. மூன்றாவதாக, கணிதத்தில் இசைவிணைவு, அளவுக் கருவியைக் குறிப்பிடுமேயல்லாது உண்மையின் உட்கருத்தைக் குறிப்பிடாது. நான்காவதாக, கணிதத்தில் இசைவிணைவு படிப்படியாக உள்ள உண்மை நிலையில் நிலைக்கக் கூடியதன்று.

உண்மையின் படிநிலையில் இருபொருள் மயக்கம்: உண்மையின் பல்வேறு நிலைகள் (Degrees of Truth) இருபொருள் மயக்கத்தில் (Ambiquities) அடங்கியிருக்கின்றன. உண்மையை ஒத்துக்கொள்ள மூன்று வழிகள் இருக்கின்றன. முதலாவதாக, சில எப்படி உண்மையாக இருக்கின்றன? அதாவது எவ்வளவு உண்மை அவற்றில் இருக்கின்றன? இதற்குப் பதில் பகுதி உண்மையாக இருக்கிறது அல்லது முழுவதும் உண்மையாக இருக்கிறது என்பதாகும். எடுத்துக்காட்டாக அலபாமா (Alabama) வில் உள்ள நீக்கிரோக்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படவில்லை என்று கூறுவது உண்மையன்று. பெண்களுக்கு மட்டும் அந்த வாய்ப்பில்லை. இரண்டாவதாக, ஒரு பொருளில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று கேட்பதைவிட, உண்மையின் எவ்வளவு பங்கு அதில் இருக்கிறதென்று கேட்பது நல்லது. எவ்வளவு உண்மை இருக்கிறது என்று கேட்பதின் பொருள், எவ்வளவுஉண்மையல்லாததுஅதில்அடங்கியிருக்கிறது என்று எண்ணவும் வாய்ப்புண்டு. ஆனால், உண்மையில்எவ்வளவு பங்கு அதில் இருக்கிறதென்றால், எவ்வளவு உண்மை அதில் சேர்க்கப்படவில்லை என்ற

கருத்தும் புலனாகும். ஓர் அறிக்கையில் முழு உண்மையின் (Whole Truth) ஒரு சிறிதளவை வைத்துக் கொண்டு முழுமையான உண்மையென்று கூற இயலும். மூன்றாவதாக, பொது அறிக்கைகளில் எடுத்துக்காட்டாகத் தண்ணீர் 100° கொதிக்கிறது என்று கூறினால், என்ன சூழ்நிலையில் இக்கருத்து உண்மை என்றறிய வேண்டும். கடல் மட்டத்தில் உண்மையாக இருக்கலாம். ஆனால், உயர்மட்டத்தில் உண்மையாக முடியாது. இசைவு இணைவுக் கொள்கை ஒவ்வோர் அறிக்கையும் பகுதி உண்மைதான். அதாவது, உண்மையின் ஒரு பகுதியைத்தான் குறிப்பிடுகிறது.

பிலான்சார்டு (Blanshard) 'ஓர் உரையின் உண்மை அதில் அடங்கியிருக்கும் உண்மையின் அளவிலிருந்து பிரித்துணர முடியாது' என்று கூறுகிறார். உண்மையின் வெவ்வேறு நிலை (Degrees of Truth) என்பதன் பொருள் சூழ்நிலைக்கேற்ப அமைந்திருக்கிறது. இரண்டும் இரண்டும் நான்கு என்பது பகுதி உண்மை. கணிதத்தில் உண்மையாக இருக்கலாம். மற்றும் பிற பயன்படுத்துகிற துறைகளில் (Applied Fields) சரியாக வாராது.

இசைவு இணைவுக் கோட்பாட்டினர் உண்மையில் பல்வேறு நிலைகளைக் கூறுவதன் காரணம், உள்ளே அமைந்த சில இணைப்புக் கொள்கையின் அடிப்படையில் எழுந்த கருத்தேயாகும். அறிவு பற்றிய ஆராய்ச்சியில் (Epistemology) அமைந்த மேற்கோள்: ஒரு பூனை பாயின் மேல் இருக்கிறதென்று கூறினால், அதன்படி ஒரு பூனை பாயின் மேல் இருப்பதைப் பார்க்கலாம். ஆகையினால் உண்மையாகிறது. இது ஒரு சரியான முடிவன்று. ஏனென்றால், ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு விளைவைக் கூறமுடியாது.

கருத்தியல் கொள்கை உடையவர்கள் உண்மை நிகழ்ச்சியையும் அனுபவத்தையும் ஒத்துப்பார்ப்பார்கள். பாயின் மேல் ஒரு பூனை இருக்கிறதென்று கூறினால் பார்த்தால் அப்படியே இருக்க வேண்டும்.

இசைவு இணைவுக் கொள்கை ஓர் அனுபவத்திற்கு முன்னால் உள்ள அறிக்கைகளுக்கு ஓர் அளவு கருவி அளிக்கிறது. இரண்டுவிதக் குற்றங்கள் இந்த இசைவிணைவுக் கொள்கையில் காணலாம். முதலாவது, அனுபவத்திற்கு முன்னால் ஏற்படுகின்ற அறிக்கைகளை அளப்பதற்குரிய அளவுக்கருவியை எல்லா அறிக்கைகளுக்கும் பயன்படுத்தலாம் என்பது. இரண்டாவது, புலன்கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியாளர், எல்லா அறிக்கைகளும் காரண காரிய முறையில் அனுபவத்திற்கு முன்னால் ஏற்படுகின்றன என்று கூறுகிறார்கள். அது ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகிறது. அதாவது, ஓர் அறிக்கை உண்மையானது என்று கூறுவதற்கு உள்ள காரணங்களை அது உண்மையின் பொருளோடு சம்பந்தப் படுத்துகிறது. உண்மையின் அளவுகோலைப் பொறுத்தமட்டில், கூறப்படுவது அனுபவத்திற்கு முன்னால் உள்ள அறிக்கைகளாகும். ஏனென்றால், அவை ஒன்றிற்கொன்று ஒத்துப் போகின்றன. செயலறிவு சார்ந்த அறிக்கைகள் உண்மையானவை. உலகத்தைப் பார்த்தால் போதுமானது. உண்மையின் பொருளை ஆராயுமிடத்து, காரண காரிய முறைப்படி ஏற்படுகின்ற அறிக்கைகள் அந்த அமைப்பில் உள்ள மற்ற அறிக்கைகளுடன் ஒத்துப்போகும். சில சமயம் உலோபாசெவ்சுகியான் (Lobachevskian) முக்கோணம் (Triangle) இரண்டு வலக் கோணங்களை விடக் குறைவானது என்கிறார். வாட்டர்லூ களம் (Field of Waterloo) ஒரு மைல் சதுரம் உடையது. இரண்டு வகை அறிக்கைகளும் உண்மையாக இருந்தால், உண்மையைக் கூறுங்கள். பொருள்கள் எப்படி அமைந்திருக்கின்றன? இரண்டு நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவை. உலோபாசெவ்சுகியான் முக்கோணத்தின் அளவானது வாட்டர்லூவின் தளத்தின் அளவைப் போன்றதன்று என்கிறார்.

துணை நூல்கள்:


Blahnhard Brand, The Nature of Thought, London, 1939.

**Bradley F.H.**, Essays on Truth and Reality, Oxford, 1914.

**Ewing A.C.**, Idealism, A Critical Survey, London, 1934.

**Joachim H.H.**, The Nature of Truth, Oxford, 1906.

**Khatchadourianhaig**, The Coherence Theory of Truth, A Critical Evaluation, Beirut, 1961.


**இசைவில் தவறு**: வணிகச் சட்டத்தில் சிறப்புமிக்க சட்டமாகக் கருதப்படுவது ஒப்பந்தச் சட்டமாகும். ஓர் ஒப்பந்தத்திற்கு வழங்கப்படும் இசைவு தடையற்றதாயிருக்க வேண்டும்; தவறுகள், தவறாகத் திரித்துக் காட்டுதல், மோசடிகள், தகாத வழியில் செல்வாக்குச் செலுத்துதல், வலுக்கட்டாயம் போன்றவற்றிலிருந்து அது விடுபட்டிருக்க வேண்டும். இசைவில் தவறு (Error in Consent) என்பது ஒப்பந்த இசைவினைத் தவறான வழியில் ஊக்குவிப்பதாகும். அது சட்டத் தவறாகவோ, பொருண்மைத் (Facts) தவறாகவோ இருக்கலாம். உள்நாட்டுச் சட்டம், அயல்நாட்டுச் சட்டம், தனி மனிதன் சொத்துரிமைச் சட்டம் போன்றவற்றில் குற்றம் ஏற்படுவது சட்டத்தவறாகும். சட்டத்தைப் பற்றிய

அறியாமையினாலும் தவறுதல்கள் ஏற்படலாம். ஆனால், சட்ட அறியாமை மன்னிக்கக் கூடியதன்று (Ignosrantia Juris hand excusat). ஒவ்வொருவரும் அவரவர் நாட்டுச் சட்டத்தை அறிந்திருக்க வேண்டும். அயல்நாட்டுச் சட்டத்தைத் தெரிந்திருக்க வேண்டிய தேவையில்லை. தவறுகள், மனிதனைப் பற்றிய தவறுகள், ஒப்பந்தச் செய்தி பற்றிய தவறுகள் என இருவகைப்படும்.

**திரித்துக் காட்டல்:** ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும்போதோ, அதற்குமுன்போ, ஒருவரை அவ்வொப்பந்தத்தில் சேரும்படி செய்யும் கருத்துடன் நிகழ்கால அல்லது இறந்தகாலப் பொருண்மை குறித்துப் பொய்யான செய்தியால் அவரை மற்றொருவர் தூண்டி இசைய வைத்தல் திரித்துக் காட்டல் (Misrepresentation) எனப்படும். இப்பொய்ம்மை, செயலாலோ சொல்லாலோ முக்கியக் கூற்றினை மறைப்பதாலோ தோன்றலாம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 18-ஆம் பிரிவு திரித்துக் காட்டலை விளக்குகிறது. ஒப்பந்தம் செய்துகொள்ளும்போதோ அதற்கு முன்னரோ ஒப்பந்தச் செய்தி பற்றி உரைப்பது, எடுத்துக்கூறல் (Representation) எனப்படும். ஒருவர் தவறாக எடுத்துரைத்த திரித்துக் காட்டலை ஒருவர் உண்மையில் நம்பியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் திரித்துக் காட்டலில் பயன் ஏற்படும். எடுத்துரைத்தல் ஒரு செய்தியின் முக்கிய உண்மையைப் பற்றியதாக இருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தம் செய்யத் தூண்டும் முக்கியச் சூழ்நிலையில் அது உரைக்கப்பட வேண்டும். எனவேதான் கூட்டுப் பங்குக் கம்பெனியின் தகவலறிக்கையில் தவறான கூற்றுகள் கூறப்பட்டிருந்தால், பங்குதாரர்கள் ஒப்பந்தங்களை நீக்கம் செய்துவிடலாம் என நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன.

**மோசடி:** வேண்டுமென்றே கூறப்படும் பொய்க் கூற்றை மோசடி (Fraud) என்பர். அது வஞ்சனை கலந்த பொய்க்கூற்று; ஏமாற்றும் நோக்கத்தோடு கூறப்படுவது. மோசடியில் குற்ற நோக்கு இருக்கவேண்டும். குற்றமில்லாத பொய்க் கூற்றிற்கும் மோசடிக்கும் வேறுபாடு உண்டு. ஒப்பந்தம் செய்யும் மற்றொருவரின் இசைவைப் பெறுவதற்காக உண்மை என்னவென்று தெரியாமல் கூறும் கூற்றால், அவ்வொப்பந்தம் மோசடியாக மாறிவிடும். இதேபோல் ஏமாற்றும் நோக்கத்தோடு அது பொய்யென்று தெரிந்தும் கூறப்படும் கூற்றும் மோசடியாகும். ஒருவர் மீது மோசடிக்குற்றத்தைச் சுமத்தும்போது உண்மையை நன்றாக அலசிப் பார்ப்பது மிகவும் இன்றியமையாதது. வேண்டுமென்றே பொய் கூறுவது; உண்மை என்னவென்று தெரிந்தும் வேண்டுமென்றே அதை மறைப்பது; அல்லது பொய்யானதை உண்மை என்றே நம்பி விடுவது; சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கூடாதென்றே. வாக்குறுதி வழங்குவது; சட்டப்படி வெளியிட வேண்டிய முக்கிய விவரங்களை வெளியிடாதது; ஏமாற்றக்கூடிய ஏனைய செயல் போன்றவைகளை மோசடி என ஒப்பந்தச் சட்டத்தின் 17-ஆம் பிரிவு கூறுகிறது. மோசடி மூலம் செய்யும் ஒப்பந்தம் செல்லுபடியாகாது.

**தகாநிலை வற்புறுத்தல்:** தகாத வற்புறுத்தலின் பேரில் ஒருவன் ஓர் உடன்பாட்டிற்கு மற்றொருவனை இணங்கவைத்தால் அந்த உடன்பாடு செல்லாது. அதாவது, யார் மீது அந்தச் செல்வாக்குப் பயன்படுத்தப்படுகிறதோ, அவர் அவ்வுடன்பாட்டை ஏற்க வேண்டும். அவ்வுடன்பாட்டை நீக்குதல் செய்வதற்கு முன் சில சூழ்நிலைகள் தோன்றுகின்றன. அதாவது, ஒருவர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். தன் அதிகாரத் தகுதியைப் பயன்படுத்தி மற்றொருவர் மீது தகாத வழியில் வற்புறுத்தல் செய்ய வேண்டும். அவருடைய செயல் தகாத முறையில் மனச்சாட்சிக்கு மாறாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்துகிறார் என்றால், அவர் உண்மையாகவும் புறத்தோற்றத்திலும் அவர்மீது அதிகாரம் செலுத்துவோராகவும் திகழ வேண்டும். அச்சூழலில் ஏற்படும் இசைவு தன் விருப்ப இசைவாக இராது. ஒருவனுடைய மனநிலை சரியில்லாதபோது அவனுடைய பலக் குறைவைப் பயன்படுத்தித் தனக்குச் சாதகமாக ஒருவன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இவ்வகையைச் சார்ந்ததாகும். எடுத்துக்காட்டாக, ஒருவன் நோய்வாய்ப் பட்டிருக்கும் போது, ஒரு மருத்துவன் அவன் மீது ஆதிக்கம் செலுத்தி, மருத்துவம் செய்வதாகச் சொல்லி அதற்கு மிக அதிகமான தொகை கேட்கிறான். நோயாளியும் அதற்கு இசைகிறான். இங்கு மருத்துவன் நோயாளி மீது தகாத வற்புறுத்தலைச் செலுத்துகிறான் என்பது பொருள். தகாத நிலை வற்புறுத்தலால் (Undue Influence) ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால் அதைச் செல்லாது என மெய்ப்பிக்கும் பொறுப்பு பாதிக்கப்பட்டவரைத்தான் சாரும்.

**வலுக்கட்டாயம்:** ஒப்பந்தச் சட்டத்தின் 15-ஆம் பிரிவின்படி, ஓர் உடன்பாட்டில் ஒருவரைச் சேரும்படி செய்யும் கருத்துடன், குற்றவியல் சட்டத்தின் மூலம் விலக்கப்பட்ட செயல்களைச் செய்தல், செய்யப் போவதாக அச்சுறுத்தல், மற்றவரது சொத்தை அவருக்குப் பாதகம் விளையும் வகையில் நிறுத்தி வைத்தல், நிறுத்தி வைப்பதாக அச்சுறுத்தல் போன்றவை வலுக்கட்டாயங்களாகும் (Coercion).

ஒப்பந்தம் செய்வதற்கு ஒருவர் யாரையாவது வற்புறுத்தினாலோ கட்டாயப்படுத்தினாலோ பயமுறுத்தினாலோ அவ்வொப்பந்தம் செல்லாது; நீடித்து நிற்காது; ஒரு தன்னிச்சை ஒப்பந்தமாகாது.

மேற்கூறிய தவறுகளோடு இசைவு ஏற்படின் அதனை இசைவில் தவறு என்கிறார்கள். இசைவில் தவறுடன் ஏற்படும் ஒப்பந்தம் செல்லத்தக்கதன்று.

கே.என்.இரா.

**இசைவு** ஒருவர் மற்றொருவரின் கருத்துக்கு அல்லது விருப்பத்திற்கு விருப்பத்தோடு உடன்படுதல் அல்லது இணங்குதல் இசைவு (Consent) எனப்படும்.

ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் ஒன்றிய மனம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் ஒப்பந்தத்திற்கு வழங்குகின்ற இசைவு, தன் விருப்பமானதாகவும் உண்மையானதாகவும் இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் செய்து கொள்பவர்களுள் ஒருவர் தவற்றினாலோ (Mistake) திரித்துக் காட்டலினாலோ (Misrepresentation) வலுக்கட்டாயத்தினாலோ, தகாநிலை வற்புறுத்தலினாலோ (Undue influence) உடற் கட்டாயத்தினாலோ (Duress) ஒப்பந்தத்திற்கு இணைந்திருந்தால், அத்தகைய ஒப்பந்தம் சட்டப்படி வலியுறுத்தப்படுவதற்கு உள்ளாகாது. மேற்கூறிய காரணங்களினால் ஏற்படாத இசைவு தன் விருப்பத்தோடு கூடியது என்று எண்ணப்படும்.

ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் தம் விருப்பத்தோடு கூடிய இசைவினால் மேற்கொள்ளும் உடன்பாடுகள் ஒப்பந்தங்களாகும் என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10-ஆம் பிரிவு கூறுகின்றது. விருப்பத்தோடு கூடிய இசைவிற்கு (Free consent) விளக்கத்தினை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 14-ஆம் பிரிவு கூறுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட வலுக்கட்டாயம், தகாநிலை வற்புறுத்தல், மோசடி, திரித்துக் காட்டல், தவறு ஆகிய காரணங்களினால் இசைவு கிடைத்திருப்பின் இசைவு உண்டாக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டும். எனவே, இந்திய ஒப்பந்தச் சட்டமானது, ஓர் ஒப்பந்தத்தில் மேற் காட்டிய செல்லாநிலை ஆகக்கூடிய கூறுகள் காணின், அது இசைவில் குறைபாடுடையது (Flaw in consent) என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

இந்துத் திருமணச் சட்டத்தின் (1955-ஆம் ஆண்டு) பிரிவு 13-இன்படி திருமண முறிவு வேண்டுகின்ற கணவனும் மனைவியும் தங்களின் முழு இசைவுடன், தங்களின் திருமணத்தை நீக்குதல் செய்ய வேண்டுமென்று நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம்.

இசைவு பெற்ற செயல்கள் (Acts done with consent): இசைந்து இடர்கள் பலவற்றை மக்கள் ஏற்கிறார்கள். இடர் மிகுந்த, ஆபத்தான சில விளையாட்டுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்கள். இந்தச் சூழ்நிலைகளில் ஒருவரால் பிறருக்கு விளையும் தீங்குகளைக் குற்றமாகச் சட்டம் கொள்வதில்லை. ஏனெனில், தீங்கு யாருக்குச் சேருகிறதோ அது அவர் இசைவுடன் செய்யப்படுகிறது. ஆனால் இவ்விதத்தில் செய்யப்படும் தீங்குகள் இறப்பு, கொடுங்காயம் (Grievous hurt) ஆகிய இவற்றை விளைவிப்பனவாக இருத்தல் கூடாது. இருவர் விளையாட்டுப் போட்டியில் குத்துச் சண்டை (Boxing) இடுகின்றனர். இச்சண்டையில் ஒருவர் குத்துவதால் மற்றவருக்குக் காயம் ஏற்படலாம். இக்காயத்திற்குக் குத்தியவர் பொறுப்பாவதில்லை. இந்த விளையாட்டில் ஈடுபடும் இருவருக்கும் காயங்கள் ஏற்படலாம் என்பது தெரிந்தே, அதற்கு இசைந்தே இந்த விளையாட்டில் இறங்குகின்றனர். எனவே, இதனால் விளையும் காயங்கள் இசைவு பெற்றனவாதலால், காயத்தை விளைவித்தவர் குற்றவாளியாவதில்லை. இசைவினை அளிப்பவர் உரிய வயதினை அடைந்தவராக, 18 வயதினைத் தாண்டியவராக இருக்க வேண்டும். உரிய வயது அடையாத சிறுவர்களும் குழந்தைகளும் அளிக்கும் இசைவினை வைத்துக் கொண்டு அவர்களுக்குக் காயத்தை விளைவித்தல் கூடாது. ஒருவரின் இசைவினைப் பெற்றிருந்த போதிலும், அவருக்கு இறப்பினையோ கொடுங்காயத்தையோ விளைவிப்பது கூடாது. உரிய வயது அடைந்தவரின் இசைவினைப் பெற்றுச் செய்யப்படும் செயல், இறப்பு, கொடுங்காயம் இவற்றை விளைவிக்கக்கூடியது அல்லது விளைவிக்கலாம் என்று தெரியாமலிருந்து, இறப்போ கொடுங்காயமோ ஏற்பட்டால் அது குற்றமாவதில்லை.

சில வேளைகளில் ஒருவரின் நன்மைக்காக அவருடைய இசைவுடன் ஆற்றப்படும் செயல்களால் தீங்கு விளையலாம். கொடிய வயிற்று நோயினால் ஒருவர் துன்புறுகிறார். அதற்கு அறுவை மருத்துவம் செய்ய வேண்டிய தவிர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. இந்த அறுவை மருத்துவத்தால் நோயாளிக்கு ஒருவேளை இறப்பு நேர்ந்தாலும் நேரலாம் என்பது மருத்துவருக்கு நன்கு தெரியும். இதை நோயாளியிடம் மருத்துவர் அறிவிக்கின்றார். நோயாளி இத்துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதால், இந்த ஆபத்தான அறுவை மருத்துவத்தைச் செய்துகொள்ள இசைகின்றார். மருத்துவர் செய்த அறுவை மருத்துவத்தால் நோயாளி இறந்துவிட்டால் அந்த நோயாளியின் இறப்புக்கு மருத்துவர் பொறுப்பாவது இல்லை.

ஏனெனில், மருத்துவர்நோயாளி இறக்க வேண்டுமென்று அறுவை மருத்துவம் செய்யவில்லை. நோயாளியை அத்துன்பத்திலிருந்து குணப்படுத்தும் நல்லெண்ணத்துடன்தான் செய்தார். அதற்கு நோயாளியும் இசைவு வழங்கினார். எனவே இறப்பு ஏற்படலாம் என்பதைத் தெரிந்தும் அறுவை மருத்துவம் செய்ததைச் சட்டம் குற்றமாகக் கொள்வதில்லை. இவ்வாறு, ஒருவருடைய நன்மையின் பொருட்டு, அவருடைய இசைவினைப் பெற்று, இறப்பு நேரிடலாம் என்று தெரிந்தும்கூட ஒரு செயலைச் செய்தல் குற்றமாவதில்லை. ஒருவரின் உடல் நலனுக்கான உயிரைக் காப்பதற்குரிய நன்மையையே தலையாயதாகக் கொள்ள வேண்டும். பணம் அல்லது பொருள் பெறலாம் என்ற நோக்கத்தோடு செய்யக்கூடாது.

சில சூழ்நிலைகளில், எவருடைய நன்மைக்காக ஒரு செயல் செய்யப்படுகிறதோ, அவருடைய இசைவினைப் பெறுவது இயலாததாகி விடலாம். இந்நிலையில் என்ன செய்வது? எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு உந்து வண்டி விபத்தில் அகப்பட்ட ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுகின்றார். அவருக்கு ஏற்பட்ட காயத்தினால், அவரது நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அவர் நினைவிழந்த நிலையில் இருக்கின்றார். உடனடியாக ஓர் அறுவை மருத்துவம் செய்தால்தான் அவர் உயிர் பிழைக்க இயலும். அந்த அறுவை மருத்துவத்தினால் அவர் ஒரு வேளை இறந்தாலும் இறக்கலாம். தம் நினைவின்றி மயக்க நிலையில் இருப்பவரிடம் இதற்குரிய இசைவினைப் எப்படிப் பெறுவது? எனவே, அவருடைய இசைவினைப் பெறாமலே மருத்துவர் அறுவை மருத்துவம் செய்கின்றார். இச்செயல் குற்றமாகாது. அறுவை மருத்துவத்தால் இறப்பு ஏற்பட்டாலும் அது குற்றமாகாது.

இதே போன்ற சூழ்நிலையில் மயக்கமாக இருக்கும் ஒருவரின் காலை வெட்டி எடுத்தால்தான் அவர் பிழைப்பார் என்ற நிலை ஏற்படும்போது, மருத்துவர் அந்நோயாளியின் காலை அறுவை மருத்துவத்தின் மூலம் அகற்றுகிறார். இவ்வாறு, நோயாளியின் இசைவின்றிக் காலை வெட்டி அகற்றிய செயலும் குற்றமாவதில்லை.

காட்டில் வேட்டையாட இருவர் செல்லுகின்றனர். அதில் ஒருவர் புலியிடம் எதிர்பாராத வகையில் அகப்பட்டு விடுகிறார். புலி அவரைத் தூக்கிச் செல்கிறது. அடுத்தவர் புலியினைப் பார்த்துச் சுடுகிறார். அவ்வாறு சுடுவது தவறி, நண்பரின் மீது பட்டு, அவருக்கு இறப்பை விளைவிக்கலாம் என்பதை அவர் அறிவார். இருந்தபோதிலும், நண்பரைக் காப்பாற்ற வேறுவழி இல்லாததால் புலியைநோக்கிச் சுடுகிறார். புலிக்கு வைத்த குறி தவறி புலியிடம் அகப்பட்டிருந்த நண்பர் மீது பட்டு அவருக்கு இறப்பை விளைவிக்கிறது. இப்பொழுது, சுட்டது குற்றச் செயலாவதில்லை. நண்பர் சுட்டது நண்பரைக் காப்பாற்றும் கருத்துடன், நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட செயலாகும். நண்பரின் இசைவினை அவர் பெறவில்லை என்பதால் அச்செயல் குற்றமாவதில்லை. ஏனெனில் அச்சூழ்நிலையில் அக் கொடிய விலங்கின் வாயில் அகப்பட்டுத் தவிப்பவரின் இசைவினைப் பெற இயலாது.

நெருப்புப் பற்றி எரியும் மாடியிலிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றும் நோக்குடன் ஒருவர் மாடிக்குச் செல்கிறார். குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு படி வழியாக இறங்குவதற்கு இயலவில்லை. எனவே, கீழே நிற்பவர்களை ஒரு முரட்டு விரிப்பினைப் பிடித்து விரித்து நிற்கும்படி சொல்லி, அந்த விரித்த விரிப்பின் மீது குழந்தை விழும்படிச் குழந்தையைத் தூக்கியெறிகிறார். ஆனால், குழந்தை விரித்துப் பிடிக்கப்பட்ட விரிப்பின்மீது விழாமல், விலகித் தரையில் விழுந்ததால் இறந்துவிட்டது. அவர் மீது குழந்தையைக் கொலை செய்ததாகக் கொலைக் குற்றம் சாட்ட இயலாது. ஏன்? குழந்தை ஒருவேளை தரையில் விழுந்து இறந்துவிடலாம் என்பதை அவர் தெரிந்துதான் அவ்வாறு செய்தார். எனினும் அவர் அக் குழந்தையைக் காப்பாற்றுவதற்கு வேறு வழியின்றி அவ்வாறு மாடியிலிருந்து எறிந்தார். எனவே இச்செயல் குற்றமாவதில்லை.

ஒருவரின் இசைவின்றிச் செய்யப்படும் செயல் வேண்டுமென்றே இறப்பினை விளைவிக்கும் செயலாக இருக்கக்கூடாது. இறப்பினையோ கொடுங்காயத்தையோ தவிர்க்கும் நோக்கத்தாலோ அல்லது கொடுங்காயத்தையும் உடல் ஊனத்தையும் குணப்படுத்தும் நோக்கத்தாலோ, இறப்பு ஏற்படலாம் என்று தெரிந்த செயலையும் ஒருவர் செய்யலாம். இது குற்றமாவதில்லை.

பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள், மனநோயாளிகள் ஆகிய இவர்களுடைய நன்மைக்காக ஒன்றைச் செய்ய வேண்டுமெனில் யாருடைய இசைவினைப் பெறுவது? இவர்கள் வழங்கும் இசைவினைச் சட்டம் ஏற்பதில்லை. எனவே, இவர்கள் யாருடைய பாதுகாப்பில் இருக்கின்றனரோ அவருடைய இசைவினைப் பெறவேண்டும்.

இசைவு பெற்றுச் செய்யப்படும் செயல்கள் குற்றம் ஆவதில்லை. தீங்கை அடைபவர் அளித்த

இசைவு, தீங்கின் தன்மையை அவர் நன்கு உணர்ந்த பின் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தாம் இசைவதால் தமக்கு நேரவிருக்கும் ஆபத்து என்ன, அதன் விளைவு யாது என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். அச்சுறுத்தலாலோ தவறான கருத்தைக் கூறியோ, ஒருவரது இசைவு பெற்று அவருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களைச் செய்தல் கூடாது. குடிமயக்கத்தில் இருப்பவரிடமோ உள நோய் உள்ளவரிடமோ இசைவு பெறுவதில் பய னில்லை.

இசைந்து ஒருவர் ஒரு தீங்கை ஏற்றுக் கொள்ள லாம். அவருக்கு விளையும் தீங்கு ஒரு புறமிருக்க, அச்செயல் சில வேளைகளில் ஒரு தனிப்பட்ட குற்ற மாகிறது.

**இசைவுத் தீர்ப்பு முறை:** இரு சாராரிடையே எழும் அல்லது எழக்கூடிய மாறுபாடு அல்லது தக ராற்றை நீதிமன்றத்தின் முடிவுக்கு ஒப்புக்கொள் வதற்குப் பதிலாக இருசாரராலும் ஒப்புக் கொள்ளப் பட்ட நடுவர் முடிவுக்கு விடுவது இசைவுத் தீர்ப்பு முறை (Arbitration) என்று சொல்லப்படுகிறது. நடுவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் இசைவுத் தீர்ப் பாளர் (Arbitrator) என்று அழைக்கப்படுகிறார்.

இந்தியாவில் எழும் உரிமையியல் தகராறுகளை (Civil Disputes) இசைவுத் தீர்ப்பு முறையில் முடிவு செய்வதற்காக இந்திய அரசு 1940 – ஆம் ஆண்டில் இசைவுத் தீர்ப்பு முறைச் சட்டத்தை (The Arbitration Act 1940) இயற்றியுள்ளது. இச் சட்டம், 1940 – ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதியில் செயல்முறைக்கு வந்தது. சம்மு காசுமீர் பகுதியைத் தவிர்த்து ஏனைய இந்தியா முழுவதும் இச்சட்டம் செல்லத்தக்கது. இச்சட்டத்தில் மூன்று வகையான இசைவுத் தீர்ப்பு முறை கூறப்பட்டுள்ளது.

நீதி மன்றத்தின் தலையீடு இல்லாத நிலையில் இசைவுத் தீர்ப்புக்கு ஒரு தகராற்றை விடுவது முதல் வகையாகும். அதாவது தகராறு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தொடராமல் தொடர் புடையவர்களுக்குள் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையில் தகராற்றை இசைவுத் தீர்ப்பாளர் முடிவுக்கு விடுவது இவ்வகையாகும். அவ்வுடன்பாட் டின்படி இசைவுத் தீர்ப்பாளர் (Arbitrator) அல்லது நடுவர் (Umpire) பணியமர்த்தப்படலாம். அவ்வாறு பணியமர்த்தப்படும் இசைவுத் தீர்ப்பாளர் அல்லது நடுவரது பதவியானது, தகராற்றில் தொடர்புடைய வர்களின் எவருடைய இறப்பினாலும் பாதிக்கப் படாது. மேலும் பொதுவாக நீதிமன்றத்தின் அனுமதி யில்லாமல் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய முடி யாது. ஆனால் தகராற்றில் தொடர்புடையவர்களுக் குள் ஏற்பட்ட உடன்பாட்டில் பதவி நீக்கம் செய்ய வகை செய்யப்பட்டிருந்தால் உடன்பாட்டை யொட்டிப்பதவி நீக்கம் செய்யலாம்.

உடன்பாட்டின்படி பணியமர்த்தப்பட வேண்டிய இசைவுத் தீர்ப்பாளர்களின் எண்ணிக்கை சம அளவி லிருந்தால், இசைவுத் தீர்ப்பாளர்களில் கடைசியான வர் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் அவ்வாறான இசைவுத் தீர்ப்பாளர்கள் ஒரு நடுவரைப் பணியமர்த்த வேண்டும். தகராற்றில் சம்பந்தப்பட்டவர்கள் இருவராயிருந்து அவர்களில் ஆளுக்கொரு இசைவுத் தீர்ப்பாளர் வீதம் மொத்தம் இரண்டு இசைவுத் தீர்ப்பாளர்களைப் பணியமர்த்தல் செய்ய வேண்டிய நிலையில் ஒருவர் மட்டும் பணிய மர்த்தல் செய்து மற்றொருவர் பணியமர்த்தல் செய் யாமலிருந்தால், பணியமர்த்தியவர், பணியமர்த்தாத வருக்கு ஓர் இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்து மாறு கோரி அறிவிப்பு விடலாம். அவ்வாறு அறிவிப்பு விட்ட நிலையிலும் இரண்டாம் இசைவுத் தீர்ப்பா ளர் பணியமர்த்தப்படாத நிலையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட இசைவுத் தீர்ப்பாளர் தனி(Sole) இசைவுத் தீர்ப்பாளராகப் பணி செய்ய நேரிடும். அவரது நடுநிலைத் தீர்ப்பு (Award) இருவரையும் கட்டுப்படுத்தும். ஆனால் போதிய காரணம் காட்டி னால், நீதிமன்றமானது இரண்டாம் இசைவுத் தீர்ப் பாளரைப் பணியமர்த்துவதற்கு அவ்வாறு செய்யத் தவறியவருக்கு அனுமதி வழங்கலாம். மேற்கூறிய இரண்டு இசைவுத் தீர்ப்பாளர்கள் பணியமர்த்தப் பட்ட நிலையில் அவர்களுள் ஒருவர் இறந்து விட்டா லோ செயற்பட மறுத்தாலோ அவர் செயற்படத் தகுதியில்லாதவராக இருந்தாலோ, அவரைப் பணியமர்த்தியவர் அவருக்குப் பதிலாக வேறொரு இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்தலாம்.

இசைவுத் தீர்வுக்கு விட ஒப்புக்கொண்ட ஒருவர் நொடிந்தவராகத் (Insolvent) தீர்மானிக்கப்பட்ட நிலையில் அவ்வாறு தீர்மானித்த நீதிமன்றம் அனுமதி வழங்கினால் தொடர்புடைய தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு விடலாம். இருவருக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் (Contract) தகராறு ஏதும் ஏற்பட் டால், அது இசைவுத் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும் என வாசகம் அமைந்திருந்தால், அவர் களில் ஒருவர் நொடிந்தவராகத் தீர்மானிக்கப்படும் நிலையில், ஏற்படக்கூடிய தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு விட வேண்டுமானால் அதற்கு மேற்கூறிய ஒப்பந்தம் முழுவதையும், நொடிந்தவரின் உடைமை யைச் செயலாட்சிபுரிய நீதிமன்றத்தால் நியமிக்கப்

பட்டவர் (Receiver) ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய முதல்வகை இசைவுத் தீர்ப்பு முறையில் கீழ்க்காணும் கட்டத்தில்இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்த நீதிமன்றம் தலையிடும். 1. தகராற்றில் தொடர்புடையவர்களின் இசைவுடன் இசைவுத் தீர்ப்பாளர் பணியமர்த்தப்பட வேண்டிய நிலையில், அவ்வாறு இசைவு ஏற்படாவிட்டால், நீதிமன்றம் இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்தம் செய்யும். 2. பணியமர்த்தப்பட்ட இசைவுத் தீர்ப்பாளர் அல்லது நடுவர் இறந்துவிட்டாலோ ஏற்ற பணிசெய்ய மறுத்தாலோ ஏற்ற பணி செய்ய இயலாதவராக இருந்தாலோ, அவருக்குப்பதில் மற்றொருவர் பணியமர்த்தப்படாத நிலையில் நீதிமன்றம் இசைவுத் தீர்ப்பாளர்ப் பணியமர்த்தம் செய்யும். 3. தகராற்றில் தொடர்புடையவர்கள் அல்லது இசைவுத் தீர்ப்பாளர்கள் ஒரு நடுவரைப் பணியமர்த்த வேண்டிய நிலையில் அவ்வாறு நடுவரைப் பணியமர்த்தாமலிருக்கும் நிலையில் தொடர்புடையவர்களுள் ஒருவர் சம்பந்தப்பட்டவருக்குப் பணியமர்த்துவதற்கு இசைவு தருமாறு கோரி அறிவிப்பு (Notice) அனுப்பலாம். அந்த நிலையிலும் 15 நாட்களுக்குள் பணியமர்த்தல் நடைபெறாவிட்டால், அவ்வாறு அறிவிப்பு அனுப்பியவர் தாக்கல் செய்யும் மனுவின் அடிப்படையில் தொடர்புடையவர்களை விசாரித்து நீதிமன்றமானது, இசைவுத் தீர்ப்பாளரையோ நடுவரையோ நியமிக்கலாம்.

செயற்படுவதில் மந்தமாக உள்ள அல்லது முறைகேடாக நடந்த இசைவுத் தீர்ப்பாளரையும் நடுவரையும் நீதிமன்றம் நீக்கிவிடலாம். செயற்படத் தொடங்காத நடுவரை நீக்கினால் அவருக்குப் பதில் மற்றொருவரை நீதிமன்றம் நியமிக்கலாம். இசைவுத் தீர்ப்பாளர்களில் சிலரைப் பதவி நீக்கம் செய்தால் அவர்களுக்குப் பதில் மற்றவரை நீதிமன்றம் நியமிக்கலாம். செயற்படத் தொடங்கிய நடுவர் நீக்கப்பட்டாலோ நியமித்த எல்லா இசைவுத் தீர்ப்பாளர்களும் அல்லது ஓர் இசைவுத் தீர்ப்பாளர் மட்டும் இருக்கும் நிலையில் அவரும் நீக்கப்பட்டாலோ நீதிமன்றமானது செயற்பட ஓர் இசைவுத் தீர்ப்பாளரை மட்டும் நியமிக்கலாம்; அல்லது இசைவுத் தீர்ப்புக்கான உடன்பாடு பலன் இல்லாததாகி விட்டதாக அறிவிக்கலாம்.

வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில் இசைவுத் தீர்ப்புக்கான உடன்பாட்டையே நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது இரண்டாம் வகையாகும். அந்நிலையில் தொடர்புடையவர்களை விசாரித்துத் தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு நீதிமன்றம் அனுப்பலாம். தகராற்றில் தொடர்புடையவர்கள் இசைவு:டன் இசைவுத் தீர்ப்பாளர் நியமிக்கப்படலாம். அவ்வாறான இசைவு ஏற்படாவிட்டால் இசைவுத் தீர்ப்பாளரை நீதிமன்றம் நியமிக்கலாம். ஏற்கனவே கூறிய வகையில் அவ்வாறான இசைவுத் தீர்ப்பாளர் நீக்கப்படலாம். அவருக்குப் பதில் மற்றொருவர் நியமிக்கப்படலாம்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தொடர்புடையவர்கள் இசைவுடன் தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு நீதிமன்றம் விடுவது மூன்றாம் வகையாகும். தொடர்புடையவர்களின் இசைவுக்கு ஏற்ப இசைவுத் தீர்ப்பாளர் நியமிக்கப்படுவார்.

மேற்கூறிய மூன்று நிலைகளில் பணியமர்த்தப்படும் இசைவுத் தீர்ப்பாளர் மற்றும் நடுவரின் அதிகாரம் ஒன்று பட்டதாகும். இசைவுத் தீர்ப்பாளர்கள் முன் விசாரணைக்காகத் தோன்றும் சாட்சிகள் மற்றும் தகராற்றில் தொடர்புடையவர்களுக்குச் சத்தியப் பிரமாணம் அளிக்கலாம். இசைவுத் தீர்ப்பாளர்கள் முன் நடக்கும் விசாரணைக்கு இந்திய சாட்சிச் சட்டம் செல்லாது. சில குறிப்பிட்ட விவரங்கள் குறித்து நீதிமன்றத்தின் கருத்தை இசைவுத் தீர்ப்பாளர்கள் பெறலாம். பொதுவாக, பெரும்பான்மையான இசைவுத் தீர்ப்பாளர்களின் கருத்துப்படி முடிவு எடுக்கப்படும். அவர்களுக்குள் சம அளவில் கருத்து வேறுபாடு இருந்தால் நடுவரின் கருத்துப்படி முடிவு எடுக்கப்படும்.

மேற்கூறிய வகையில் எடுக்கப்படும் முடிவு எழுதப்பட்டு அதில் இசைவுத் தீர்ப்பாளர்கள் மற்றும் நடுவர் கையெழுத்திட வேண்டும். அது நடுநிலைத் தீர்ப்பு (Award) என்று சொல்லப்படும். நடுநிலைத் தீர்ப்பு தயாரிக்கப்பட்டுள்ளது குறித்துத் தொடர்புடையவர்களுக்கு அறிவிப்புச் செய்யப்பட வேண்டும். கட்ட வேண்டிய தொகை குறித்தும் அதில் குறிப்பிட வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்டவுடன் நடுநிலைத் தீர்ப்பைப் தொடர்புடைய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். தொடர்புடையவர்களை விசாரித்து நடுநிலைத் தீர்ப்பு அடிப்படையில் நீதிமன்றமானது தகுந்த தீர்ப்பும் ஆணையும் வழங்கும். அவை தகராற்றில் தொடர்புடையவர்களைக் கட்டுப்படுத்தும். அவ்வாறான ஆணையை (Decree) எதிர்த்துப் பொதுவாக மேன்முறையீடு தாக்கல் செய்ய முடியாது. ஆனால் அவ்வாணை நடுநிலைத் தீர்ப்பை ஒட்டி அமையாதிருந்தாலோ அல்லது நடுநிலைத் தீர்ப்புக்குக் கூடுதலாக இருந்தாலோ மேன்முறையீடு செய்யலாம். தேவைப்பட்டால் நடுநிலைத் தீர்ப்பைத் திருத்தவும்

மாற்றியமைக்கவும், இசைவுத் தீர்ப்பாளரின் மறு பரிசீலனைக்கு அனுப்பவும் நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

இசைவுத் தீர்ப்புக்கு விடாத விவரம் குறித்து முடிவு எழுதப்பட்ட நிலையில், அப்பகுதியை இசைவுத் தீர்ப்பாளரின் முடிவைப் பாதிக்காத வகையில் நடுநிலைத் தீர்ப்பிலிருந்து நீக்க முடியுமானால், அந்த வேண்டாத பகுதியை நீதிமன்றம் நீக்கிவிடலாம். நடுநிலைத் தீர்ப்பின் வடிவமைப்பில் உள்ள குறைபாட்டை நீதிமன்றம் சரிப்படுத்தலாம். முடிவைப் பாதிக்காத ஆனால் தெளிவாகத் தெரியக்கூடிப் பிழைகளையும் எழுத்துப் பிழைகளையும் நீதிமன்றம் திருத்தலாம்.

இசைவுத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராற்றில் முக்கிய விவரம் குறித்து முடிவு எடுக்கப்படாத நிலையிலும்; இசைவுத் தீர்ப்புக்கு விடாத பொருள் குறித்து இசைவுத் தீர்ப்பாளர்கள் முடிவு எழுதி, அதை நடுநிலைத் தீர்ப்பிலிருந்து பிரிக்க முடியாத நிலையிலும்; நடுநிலைத் தீர்ப்பானது தெளிவற்ற தன்மையுடையதாயிருந்து, அக்காரணத்தால் அது நிறைவேற்ற முடியாத தன்மையுடையதாயுள்ள நிலையிலும்; நடுநிலைத் தீர்ப்பானது தெளிவாகச் சட்ட விரோதமானதாக இருக்கக்கூடிய நிலையிலும், விவகாரம், இசைவுத்தீர்ப்பாளர்களின் மறுபரிசீலனைக்கு நீதிமன்றத்தால் அனுப்பப்படலாம்.

இசைவுத் தீர்ப்பாளர் அல்லது நடுவர் முறைகேடாக நடந்து கொண்ட நிலையிலும், நடுநிலைத் தீர்ப்பானது முறைகேடான முறையில் கொடுக்கப்பட்ட நிலையிலும், தொடர்புள்ள தகராறு சம்பந்தமான நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கி அது குறித்து இசைவுத் தீர்ப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தியும், அதை மதிக்காமல் இசைவுத் தீர்ப்பாளர்கள் அளிக்கும் நடுநிலைத் தீர்ப்பையும் நீதிமன்றம் நீக்குதல் செய்யலாம்.

இச்சட்டமானது எல்லாவிதமான இசைவுத் தீர்ப்புகளுக்கும் பொருந்தும். ஏனைய சட்டங்களில் குறிப்பிட்டுள்ள இசைவுத் தீர்ப்புக்கும் பொருந்தும். ஆனால், அவ்விசைவுத் தீர்ப்புகளுக்கு இச்சட்டத்தின் சில பிரிவுகள் மட்டும் பொருந்தா.

நாடுகளுக்கிடையே பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்காக நடைபெறும் செயல்களினால் குறிப்பாக ஒரு நாட்டில் மற்றொரு நாட்டுக் குடிமகன் முதலீடு செய்வதில் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக் குடிமகனுக்கும் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு 1965-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ஆம் தேதியில் வாசிங்டன் நகரத்தில் ஓர் அவை கூட்டுகை (Convention) நடைபெற்றது. அதில் கையெழுத்திட்டுள்ள தேசங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை இசைவுத் தீர்ப்பு முறையில் தீர்ப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதற்கென்று 1966-ஆம் ஆண்டில் பன்னாட்டு முதலீட்டுத் தகராறுகளைத் தீர்க்கும் இசைவுத் தீர்ப்புச் சட்டம் (Arbitration (International Disputes) Act 1966) இயற்றப்பட்டுள்ளது.

ஓர் இந்தியக் குடிமகனுக்கும் அயல் நாட்டவனுக்கும் வணிகரீதியில் ஏற்படும் தகராறு குறித்து அயல் நாட்டில் பிறப்பிக்கப்படும் நடுநிலைத் தீர்ப்பை இந்தியாவில் செயற்படத்தக்கதாகும் வகையில் 1937-ஆம் ஆண்டில் கூட்டு ஒப்பந்தப்படியான இசைவுத் தீர்ப்புச் சட்டம் (The Arbitration (Protocol and Convention) Act 1937) இந்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. அந்த அயல் நாட்டில் ஏற்பட்ட நடுநிலைத் தீர்ப்பு இந்தியாவில் செயற்படத்தக்கதாக இருக்க வேண்டுமானால் அந்த அயல் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உடன்படிக்கை இருக்க வேண்டும். அவ்வாறு இந்தியாவுடன் உடன்படிக்கை செய்துள்ள நாடுகளின் பட்டியலில், சப்பான், செருமனி, இங்கிலாந்து, பர்மா, இலங்கை, இத்தாலி ஆகிய நாடுகளும் உள்ளன.

மேலும் அந்த நடுநிலைத் தீர்ப்பானது தொடர்புடைய அயல் நாட்டின் சட்டங்களை ஒட்டிப் பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இந்திய நாட்டுச் சட்டப்படி இசைவுத் தீர்ப்புக்கு விடப்படக் கூடியதாக இருந்தால்தான் அது இந்நாட்டில் செல்லத்தக்கது ஆகும். எவர் மீது இந்நாட்டில் அயல் நாட்டில் பிறந்த நடுநிலைத் தீர்ப்பானது நிறைவேற்றப்பட வேண்டும் என கோரப்படுகிறதோ அவருக்கு இசைவுத் தீர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்ள அவகாசம் அளிக்கும் வகையில் அறிவிப்புக் கொடுக்காத நிலையிலும், அவருக்குச் சட்டப்படியான குறைபாடிருந்து அதனால் இசைவுத் தீர்ப்பு நடவடிக்கைகளில் முறையாகப் பங்கு கொள்ள முடியாத நிலையிலும், இசைவுத் தீர்ப்பாளர் அளித்த அயல் நாட்டு நடுநிலைத் தீர்ப்பானது, இசைவுத் தீர்ப்பு உடன்பாட்டுக்கு மீறியதாக உள்ள நிலையிலும் இந்நாட்டில் அது நிறைவேற்றப்பட மாட்டாது.

இந்தியாவில் ஏற்படும் தொழில் தகராறுகளை இசைவுத் தீர்ப்பு முறையில் முடிவு செய்வதற்கு 1947-ஆம் ஆண்டில் இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட இந்தியத் தொழில் தகராறுகள் சட்டத்தில் (The Industrial Disputes Act 1947) வகை செய்யப்

பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவ்வாறான இசைவுத் தீர்ப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள 1940–ஆம் ஆண்டைய இசைவுத் தீர்ப்பு முறை சட்டப்படி நடைபெற வேண்டும்.

**இஞ்சு வில்லியம் இரால்பு (கி.பி. 1860–1954):** இவர் ஆங்கிலேய திருச்சபையைச் சார்ந்த தத்துவ ஞானியாவார்; கிரேய்கி, யார்க்சையர் (Crayke, Yarkshire) என்ற ஊரில் பிறந்தார்; ஈட்டனிலும் (Eton), கேம்பிரிட்சிலும் படித்தார். இவர் எர்ட்போர்டு (HertFord) கல்லூரியில் கி.பி. 1889 முதல் 1905 வரை கல்விக்கழக உறுப்பினராயிருந்தார்; கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் 1907 முதல் 1911 வரை பேராசிரியராகப் பணியாற்றினார். இவர். வாழ்க்கை முழுவதும் தத்துவத்தையும் மறை ஞானத்தையும் (Mysticism) ஊன்றிப் படித்தார். இவருடைய காலத்திலுள்ள நாகரிகத்தின் குறைபாடுகளை இவர் வன்மையாகக் கண்டித்தார். ஆகையினால் இவரைக் குறை கூறும் தலைவராகக் கருதினார்கள்.

இஞ்சு வில்லியம் இரால்பு (Inge William Ralph) 1934–ஆம் ஆண்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்று, பிரைட்டு வெல் மானர் பெர்க்சையர் (Bright Well Manar Berkshire) என்ற இடத்தில் இருபது ஆண்டுகள் சிந்தனையிலும் செயலிலும் ஈடுபட்டார்.

இவர் தம் காலப் பண்பாட்டைக் குறை கூறுவதன் காரணம் மக்கள் பருப்பொருள் கோட்பாட்டில் அதிக நேரத்தைச் செலவு செய்து கொண்டிருந்தது தான். இதை எதிர்த்து, நிகழ்ச்சிக்கும் அதன் மதிப்பிற்கும் பிரிவு (Facts, Value) இருக்கக் கூடாது என்று கூறினார். பிளேட்டோ கூறிய உண்மை புலனறிவுக் கப்பாற்பட்டது என்ற உண்மையைக் கூறினார். உண்மை, அழகு, நேர்மையின் அடிப்படையில் அமைந்த பண்பாடு ஆகியவை நிலையானவை. இத்தகைய ஒரு சிறந்த நிலை இறைத்தன்மையுடையது; கடவுளிடம் அடங்கி இருக்கிறது. சமயச்சார்புள்ள வாழ்க்கை நெறி இவருடைய குறிக்கோள். இத்தகைய நெறியான வாழ்க்கையை, மறைஞானி கொடுக்கிறார். இவர் வாழ்க்கையிலுள்ள சிறந்த பண்புகளை எடுத்துக் கொண்டு, இறைவனை அடைய ஆன்மா செல்லுகிறது என்று கூறுகிறார்.

மறைஞானம் தப்புவதற்குரிய வழி என்று கருதக் கூடாது. மேலும் புலன்கள் உண்மையை உலகறிய மறைக்கின்றன என்றும் கருதக் கூடாது. இஞ்சு தம்மை ஒரு புற வாய்மையாளர் (Realist) என்றும், புற உலகில் தோன்றுவதெல்லாம் கருத்தறிவே யாகுமென்னும் கொள்கை சார்ந்தவர் (Idealist) அல்லர் என்றும் கூறியுள்ளார்.

ஒரு சிறந்த தத்துவம், இயற்கையான அறிவியலின் கண்டு பிடிப்புகளைக் கொண்டதாக அமைந்திருத்தக வேண்டும். மறைஞானம், மனவெழுச்சிவயப்பட்டதன்மைக் கோட்பாட்டையோ, பகுத்தறிவுக்கு மாறான கோட்பாட்டையோ ஒத்துக் கொள்வதில்லை. மறைஞானம் (Myticism) ஓர் ஆன்மிகத் தத்துவம். உண்மைப் பொருளை அறிய முற்படும்போது பகுத்தறிவுக் கொள்கைக்கும் மத சம்பந்தமான உண்மைப் பொருளைக் கண்டு பிடிக்க எண்ணும் ஆராய்ச்சிக்கும் முரண்பாடு ஏற்படுகிறதென்றால், அது இக்காலப் பகுத்தறிவுக் கொள்கை மிகவும் குறுகிய நோக்குடையதாக அமைந்திருப்பதனால் என்று கூறலாம். உண்மையான பகுத்தறிவுக் கொள்கை தகுதியையும், உண்மை நிலையையும் பெரிதும் எடுத்துக் காட்டும். இத்தகைய பகுத்தறிவுக் கொள்கை, மேல் நாட்டுத் தத்துவத்தில் முதல் பரம்பரையில் சிறந்து விளங்கினதோடல்லாமல், மத சம்பந்தமான மறை ஞானத்திற்கும் பொருத்தமான பலன்களோடு ஒத்திருந்தது. இரண்டும் ஒரு முழு நிறைவைத் தெரிந்து கொள்ளும் நிறைந்த அறிவின்பாற்படும்.

இஞ்சு பகுத்தறிவு மறைஞான சம்பந்தமான எண்ணங்கள் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபட்டார். பிளாட்டினசின் (Plotinus) புதிய பிளேட்டோனிசம் (Neoplatonism) என்ற கொள்கையில் பகுத்தறிவும் மறைஞான சம்பந்தமான கொள்கைகளும் ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம். இஞ்சு பிளாட்டினசை மிகவும் உயர்வாக மதித்தார். இவர் ஒரு சிறந்த அறிஞர் மட்டுமல்லாமல், ஆன்மிக இயக்குநருமாவார். இவர் மேல் நாட்டுப் பண்பாட்டைச் சிறப்பித்தார். பிளேட்டோனிசம், கிறித்துவம், மேல்நாட்டு நாகரிகம் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. பிளாட்டினசின் தத்துவத்தைத் திரும்பக் கூறும் பொழுது, சிறந்த அறிவாற்றலுக்கு அடிப்படையாக அமைவதோடல்லாமல், கிறித்துவக் கொள்கையோடு தொடர்புபடுத்தும் பொழுது, மேல் நாட்டினருக்கு ஒரு புதிய ஊக்கம் அளிப்பதாய் அமைகிறது என்றும் இஞ்சு கூறுகிறார்.

**இட்சிங்கு** இந்தியாவுக்கு வருகை புரிந்த சீனப் பயணிகளுள் ஒருவர். இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்தார்; தம் வருகையைப்பற்றிய சிறப்பான குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளார். இட்சிங்கு (I–tsing) பான்யாங்கு (Fan–yang) என்னுமிடத்தில் கி.பி. 634–இல் பிறந்தார். அப்போது சீனாவைத் தாங்கு (Tang) மரபினைச் சார்ந்த தாய்–கங்கு என்பார் ஆட்சி செய்தார். இட்சிங்கு தம் ஏழாம் வயதிலேயே மடாலயமொன்றில் சேர்ந்தார். இவருக்குப் பன்னிரண்டு வயது ஆனபொழுது இவர்

ஆசிரியர் காலமானார்; பின் 14–ஆம் வயதில் புத்த சமய குருவாக இவர் அமர்த்தப்பெற்றார். தமக்கு முப்பத்தேழு வயதாகும் வரை இவரால் இந்தியப் பயணத்தை மேற்கொள்ள இயலவில்லை. இவர் யாங்க–சௌ என்னும் ஊருக்குப் பாரசீகக் கப்பல் ஒன்றில் பயணமாகி, இருபத்தேழு நாட்களுக்குப் பின்னர்ச் சுமத்திரா வந்தடைந்தார். அங்கு இவர் எட்டு மாதங்கள் தங்கினார்; பின்னர்ச் சிரீவிசயா எனப்படும் பலம்பாங்கிற்குச் சென்று அங்கு ஆறு மாதங்கள் தங்கினார். பின்னர் இரண்டு மாதங்கள் இவர் மலாயாவில் வாழ்ந்தார். பின் இந்தியாவுக்குச் செல்லும் கப்பலொன்றில் பயணம் செய்து தாம்ர லிப்தி (இக்காலத் தாம்லுக்கு) என்னும் ஊருக்குக் கி.பி. 673–இல் வந்தடைந்தார். அங்கு ஓராண்டுக் காலம் தங்கி,தமக்கிருந்த வடமொழிஅறிவை வளர்த்துக்கொண்டு,இந்தியாவின் உட்பகுதிகளைப் பார்க்கச் சென்றார்.

இவர் தாம்ரலிப்தியிலிருந்து கயா நகருக்கு முதலில் புறப்பட்டுச் சென்றார்; அங்கிருந்து குசி நகரத்திற்கும் பின்னர் நாலந்தாவிற்கும் சென்றார். நாலந்தாவில் பத்தாண்டுகள் கல்வி கற்று, நானூறு வடமொழி நூல்களைத் திரட்டினார். பின்னர் இவர் சீனாவிற்குத் திரும்பினார். திரும்பும் வழியில் இவர் நான்கு ஆண்டுகள் சிரீவிசயாவில் தங்கி வடமொழியிலும், பாலி மொழியிலும் இருந்த பௌத்த இலக்கியங்களைச் சீனமொழியில் மொழி பெயர்த்தார். இப்பெரும் பணியை ஒருவரால் மட்டும் செய்ய இயலாதென அறிந்த இட்சிங்கு சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். காண்டன் துறைமுகத்தில் இறங்கிய இவருக்கு உதவ நான்கு மாணவர்கள் முன்வந்தனர். அவர்களுடன் இட்சிங்கு முதலில் சுமத்திராவிற்கும், பின்னர்ச் சிரீவிசயாவிற்கும் திரும்பி வந்தார். அங்கு ஐந்தாண்டுகள் தங்கிக் குறிப்புகளெடுத்தும், மூல நூல்களை மொழி பெயர்த்தும் பாலி நூல்களைக் கற்றும் காலத்தைப் பயன்படுத்தினார். இறுதியாக, இவர் கி.பி. 695–ஆம் ஆண்டில் சீனாவிற்குத் திரும்பிச் சென்று லோ–யான் என்னும் நகரிலிருந்த "பெரும் மகிழ்ச்சி" (Great Happiness) என்னும் பெயர் கொண்ட மடாலயத்தில் வாழ்ந்தார். பின்னர் இவர் சாங்கு–ஆன் (Chang-an) என்னுமிடத்திலிருந்து 'மேற்கு ஒளியில்லம்' என்னும் பெயர் கொண்ட பிறிதொரு மடாலயத்திற்குச் சென்று வாழ்ந்தார். சாங்கு–ஆன் என்னும் நகரம் தான் பேரரசர்களின் (Tan-Emperors) தலைநகரமாகும். வடமொழியிலிருந்தும் பாலிமொழியிலிருந்தும் 56 நூல்களை மொழிபெயர்த்தார். அவை 230 தொகுதிகளாயின. இவர் காலத்தில் வாழ்ந்த பெரியவர்களும் சுன்–சுங்கு (Chun-tsung)என்னும் பேரரசரும் இவரைப் பெரிதும் பாராட்டினர். 'திரிபிடகத் தொகுப்பு' (Tripitaka Catalogue) என்னும் நூலின் தோற்றுவாயில் இச்செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இட்சிங்கு கி.பி. 713–ஆம் ஆண்டில் தம் 79–ஆண்டில் காலமானார்.

**இட்சுவாகு** மனுவின் மகனாகவும், ஓர் இளவரசராகவும், புரூரவர்களின் மரபினை நிலை நாட்டியவராகவும் குறிப்பிடப்பெற்றுள்ளார்.

வைவசுவத மனுவின் பத்துப் பிள்ளைகளுள் ஒருவர் இட்சுவாகு. இவருக்கு நூறு பிள்ளைகள் பிறந்தார்களென்றும் இவரே சூரிய வமிசம் என்னும் மரபினை நிலைநாட்டியவரென்றும் கருதுவர். இந்தியர்கள் வகுத்துள்ள நான்கு ஊழிகளில் இரண்டாம் ஊழியாகிய திரேதா ஊழியின் தொடக்கத்தில் அயோத்தியை இவர் ஆண்டார். இவர் மக்களுள் நிமியும் விக்சுகியும் மற்றவர்களும் அடங்குவர். இவர் மக்களுள் இருபத்தைந்துபேர் ஆரியவர்த்தத்தையும், மற்றும் இருபத்தைந்து பேர் மேற்கு நாட்டையும், மூவர் மத்திய நாட்டையும், எஞ்சியோர் ஏனைய மாநிலங்களையும் ஆண்டனர். இவர்களுள் விக்சுகியைப் பற்றியும் நிமியைப் பற்றியும் பல கதைகள் உண்டு. பசி வந்தபோது இறைச்சி வேண்டுமெனக் கோரிய விக்சுகிக்கு முயலின் இறைச்சி சிறிது கிடைத்தது. இம்முயலின் எஞ்சிய இறைச்சி பூசாரி ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே ஒருவருக்கு முயலின் இறைச்சி கொடுக்கப்பெற்றமையால் தீட்டுப்பட்டுவிட்டதெனக் கூறி அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

இட்சுவாகு தம் குடிமக்களைக் கண்ணும் கருத்துமாகக் காத்தவர் என்று பெயரும் புகழும் பெற்றார். இவரைப் பரீட்சித்து அரசருடன் ஒப்பிட்டுப் பேசுவர். இவர் அசுவமேத வேள்வி செய்தவர்.

விக்சுகியின் தம்பி நிமி மிதிலையின் அரச மரபை நிலைநாட்டியவர். இவர் பெயர் இருக்கு வேதத்தில் ஓரிடத்தில்மட்டும் கூறப்பட்டுள்ளதால் இவர் மிகத்தொன்மையான காலத்தே வாழ்ந்தவராகலாம். இவர் வடக்குக் கங்கையாற்றால் நீர்ப்பாசன வசதிபெற்ற பசேரதா (Bhajeratha) பகுதியை ஆண்டவராகக் கருதப்படுகிறார். அந்நகர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ளது.


இட்சுவாகு என்னும் பெயர்கொண்ட இளவரசர் புரு மரபினை உருவாக்கினார் என்பர். இவருடைய அரசு மேல்கங்கைப் பகுதியிலோ அதற்கும் கிழக்கிலோ இருந்திருக்கக் கூடும். அதையே பின்னர் அயோத்தி என்றனர்.

இட்சுவாகு என்பது ஒரு மரபின்பெயர். இம்மரபினர் வட இந்தியாவையும் தென் இந்தியாவையும் ஆண்டவர்கள். வட இந்தியாவில் இட்சுவாகு என்னும் பெயர் கொண்டவர், கோசல அரச குடும்பத்தை நிலை நாட்டியவர் என்று இராமாயணம் கூறும். வேதங்களும் சாதகக்கதைகளும் புராணங்களும் இச் செய்தியைக் கூறுகின்றன. இருக்கு வேதத்தில் இட்சுவாகு என்னும் பெயர்கொண்ட இளவரசர் குறிப்பிடப்பட்டுள்ளார். பஞ்ச வமிச பிரமாணத்தில் கூறப்பட்டுள்ள திராயாருனர் என்பவர் இட்சுவாகு எனப் படுகிறார்.

இராமாயணத்தில் இட்சுவாகு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இருபத்துநான்கு பேர் குறிப்பிடப் பட்டுள்ளனர். புராணங்களில், பிம்பிசாரரின் உடன் காலத்தவரான பிரசேனசித்து அத்தகைய அரசர் களின் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளார். புத்த சமய நூல்களான சாதகக் கதைகளிலும் மகா வசுத்துவிலும் ஏனைய தொன்மையான நூல்களிலும் பல்வேறு கிளைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இட்சுவாகு குடும்பம், இட்சுவாகு என்னும் பெயர் கொண்ட இளவரசருடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

தென்பகுதியில் வாழ்ந்த இட்சுவாகுகளைத் தொடர்ந்து,சாதவாகனர்கள் கிருட்டிணா, குண்டூர், பெல்லாரி மாவட்டங்களில் பல்லவர்களுடன் இணைத்துப் பேசப்படுகிறார்கள் இம்மரபினைச் சார்ந்த இட்சுவாகுவினரைக் கிருட்டிணா, குண்டூர் மாவட்டங்களிலும், நாகார்ச்சுனகொண்டாவிலும் கிடைத்துள்ள கல்வெட்டுச் சாசனங்கள் குறிப்பிடு கின்றன.

**இட்டகி** கருநாடக மாநிலத்தில் இரெய்ச்சூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர். பெல்லாரி–கதகு (Cadag) இருப்புப்பாதைச் சாலையில் பானி கோப்பு(Banikop) இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 4.8 கி.மீ தொலைவில் தெற்காக இவ்வூர் அமைந்துள் ளது. இட்டகியிலுள்ள (Ittagi) மகாதேவர் கோயில், சாளுக்கியப் பேரரசன் ஆறாம் விக்கிரமாதித்தனின் படைத்தலைவர் மாகதேவர் என்பவரால் கி.பி. 1112-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கோயில் ''கோயில் களின் பேரரசன்'' என்று (Devalaya Chakravarti) கல்வெட்டில் புகழப்பெற்றுள்ளது. சாளுக்கியர்களின் கோயிற் கட்டிடத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மகாதேவர் கோயில் விளங்குகிறது. இக் கோயில் 120 அடி நீளமும் 60 அடி அகலமும் உடையது; கருவறை, இடைக்கழி, நவரங்க மண்டபம் போன்றவற்றைக் கொண்டுள்ளது. கருவறையின் மேலமைந்துள்ள விமானம், செவ்வக அமைப்பைக் கொண்டது. சிகரத்தின் மேல் பகுதி காலத்தால் சிதைவடைந்து இடிந்து காணப்படுகின்றது. விமானம் 40 அடி உயரம் உள்ளது; 3 நிலைகளைக் கொண்டுள்ளது.



மகாதேவர் கோயில்—இட்டகி.

விமானத்தின் ஒவ்வொரு நிலையிலும் அழகுடன் அமைக்கப்பட்ட மாடக்குழிகளும் சிற்பங்களும் காணப்படுகின்றன. இக்கோயிலின் பெரிய மண்டபம் 68 தூண்களை உடையது. அவற்றுள் 26 தூண்கள் வடிவில் பெரியவை. இவை மண்டபத்தின் நடுவில் அமைக்கப்பட்டு, மண்டபக் கூரையினைத் தாங்கியுள்ளன. பிற சிறிய தூண்கள் இப்பெரிய தூண் களைச் சுற்றி உள்ளன. இவை சாய்வான கூரை யினைத் தாங்குகின்றன. தூண்களில் சிற்பங்கள் மிக நுட்பமான முறையில் நன்றாகச் செதுக்கப்பட்டு அழகுபட அமைந்துள்ளன. இக்கோயிலின் இடிபாடு களை ஐதராபாத்துத் தொல்லியல் துறையினர் புதுப்பித்துள்ளனர்.

**இட்டலிங்க அகவல்** என்னும் நூல் சிவப் பிரகாச சுவாமிகளின் தம்பி கருணைப் பிரகாசரால் இயற்றப் பெற்றது. இது 196 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவால் இயன்ற நூல். வீரசைவர் அங்கத்திலேயே இலிங்கத்தை அணிந்துகொள்ளும் மரபினராவர். அவர்கள் நாட் கடமைகளைச் செம் மையாய் ஆற்றியதும், தாம் அணிந்திருக்கும் இட்ட லிங்கத்திற்கு வழிபாடாற்றிய பின்னரே நீர் அருந்து வதனையும் மேற்கொள்ளும் இயல்பினராவர்;

அந்நீரையும் முதலில் இட்டலிங்கத்திற்குப் படைத்தே பருகும் வழக்கமுடையவர்கள். அவர்கள் இட்டலிங் கத்தை வழிபடும் போது தோத்திரமாய்க் கூறத் தக்க சிறந்த நூல் 'இட்டலிங்க அகவல்' எனப் பெறும் இந்நூலாகும்.

இந்நூலில் திருமாலும் பிரமனும் சிவபிரான் திருவடியையும் திருமுடியையும் காண நினைந்து முறையே பன்றியுருவும் அன்னவுருவும் எடுத்துப் பூமியைத் தோண்டியும் விண்ணில் பறந்தும் சென்று காண இயலாது இளைத்த நிலையில் அவர்கள் துதிக்கச் சோதிப் பிழம்பாய்க் காட்சி அளித்தவன், முப்புரம் அழித்தவன், மன்மதனை எரித்தவன், செஞ் சடையுடையவன் ஆகிய சிவபெருமான் என்று அவன் பெருமைகளைப் பலவாறு விரித்து இந்நூலின் ஆசி ரியர் முதல் 75 அடிகளில் போற்றுகிறார். ''சங்கரன் அமலன் தாணு சதாசிவன், முழுது ஒருங்கு உணர்ந் தோன் முன்னோன் தலைவன்'' என அப்பெரு மானைப் போற்றுவதுடன் அமையாது, அவன் இனிது அமர்ந்திருக்கும் பதிகளையும் அவற்றின் பெருமை களையும் இந்நூலின் பிற்பகுதியில் 96 அடிகளில் விரித்துரைக்கிறார். பெருமான் இனிதுறைந்து அருள் பாலிக்கும் பதிகளாகக் காசி, சிதம்பரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மல்லிகார்ச்சுனம், திருக்காளத்தி, திருவாரூர், திருமுதுகுன்றம், மதுரை, திருநெல் வேலியாகிய பதிகள் போற்றப் பெறுகின்றன.

அவ்விடங்களிலெல்லாம் தம்மை வழிபட்டோ ருக்கு அருள்பாலிக்கின்ற பெருமான் எளியேனையும் ஒரு பொருளாக எண்ணி என்தூல உடம்பில் இட்ட லிங்கமாகவும், காரண உடம்பில் பாவலிங்கமாக வும் விளங்கி, 'தன்னை எனக்குத்தான் ஈந்து அருள்புரிந்து, என்னிடத்து ஒழிவின்றி இருந் தனன்' அவன் பெருமையை என்னென்று புகழ்வது என வியந்தேத்தி இன்புறுவதுடன் இந்நூல் முடி வுறுகிறது.

இந்நூலாசிரியராகிய கருணைப் பிரகாசர், சிவப் பிரகாச சுவாமிகளின் தம்பியாய வேலையருக்கு இளையவர்; கி.பி.17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வர். முதலில் இட்டலிங்க அகவல்பாடி முடித்ததும் திருக்காளத்திப்புராணம் பாடத் தொடங்கினார். சீகாளத்திச் சருக்கம் வரை பாடியதும் தம் பதி னெட்டாம் வயதில் திருவெங்கை மாநகரில் சமாதி யடைந்தார். கருணைப் பிரகாசர் இயற்றிய ஒரே முழுநூல் இந்த இட்டலிங்க அகவலாய தோத்திர வழிபாட்டு நூலாகும். இரா. ச.

**இட்டலிங்கக் கைத்தலமாலை:** இந்நூல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேலையர் என்னும் வீரசைவப் பெரியாரால் இயற்றப்பெற்ற ஒரு பிரபந்தமாகும். இந்நூலாசிரியர், தமிழுலகில் கற்பனைக் களஞ்சியம் என்று பாராட்டப்பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இளவ லாவார். வீரசைவர்கள் தம் அங்கத்திலேயே இலிங் கத்தினைத் தரித்துக் கொள்ளும் இயல்பினர். மேலும் அவர்கள் எப்பொருளையும், தம் அங்கலிங்கத்திற்கு நிவேதனம் செய்தபின்னரே உட்கொள்ளும் கோட் பாடுடையவர்கள். அவர்கள் நாள்தோறும் காலைக் கடன்களை முடித்து, நீராடிய பின்னர்த் தம் அங்க லிங்கத்தினை இடக்கையில் எடுத்து வைத்து அபிடே கம் முதலியன செய்து பூவும் பொட்டும் இட்டு, அருச் சித்து வழிபட்ட பின்னரே பிற பணிகளைத் தொடங்கும் பழக்கமுடையவர்கள். கைத்தலத்தே அமர்த்தி வழிபட்டு அங்கத்தில் (கழுத்தில்) தரித்துக் கொள்ளும் இலிங்கம் இட்டலிங்கம் எனப்படும். வீர சைவப்பெருமக்கள் தங்கள் இட்டலிங்கப்பெருமானை வழிபடுவதற்கு வாய்ப்பாக வேலையர், ''இட்டலிங்கக் கைத்தலமாலை'' என்னும் வழிபாட்டுநூலை இயற் றினார். ஆனால் அந்நூல் இக்காலத்துக் கிடைப்ப தரிது.

சிவப்பிரகாச சுவாமிகளும் இட்டலிங்க வழி பாட்டுப் பிரபந்தமாக இட்டலிங்க அபிடேகமாலை முதலிய சில சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று கைத்தலமாலை என்பதாகும். இந் நூலினை 'இட்டலிங்கக் கைத்தலமாலை' என்றும் குறிப்பிடுவதுண்டு. இந்நூலில் பத்துப் பாக்களே உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியும் ''என்ன மாதவம் செய்ததோ எனது கைத்தலமே'' என்று முடிகிறது. இதனால் இந்நூல் கைத்தலமாலை என் னும் பெயர் பெற்றது. முன்னம் மால் அயன் இந்திரன் முதலிய தேவர்கள் பலரும் தேடித் தேடொ ணாத் தேவன், கூற்றினை உதைத்தவன், காசி, கயிலை, திருக்கேதாரம் முதலிய திருத்தலங்கள் யாவற்றிலும் வீற்றிருப்பவன், பிறவிப் பிணிக்கு மருந் தாயுள்ளவன், அன்னையாகி இன்னுயிர்க்கு அருள் பாலிப்பவனுமாய்ப் பொன்னும் முத்தும் இரத்தின மும் அமுதமும் போன்றவன், மழுவேந்திய வீரன், தமிழ் பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஆடை, அணி முதலியவற்றை அருளியவன், பிறவிக்கடலில் வீழ்ந்து தவிக்கும்போது தெப்பம்போன்று வந்து துணைசெய்பவன். அவனை வழிபட ஆலயங்களுள்ள இடங்களுக்குத் தேடிச் செல்லாமல் அவனே என் கைத்தலத்து வந்து அமர்ந்து இனிதிருக்க என்ன மாத வம் செய்ததோ எனது கைத்தலம் என்று இப்பத்துப் பாக்களிலும் சிவப்பிரகாசர் பாடி முடித்துள்ளார்.

இரா.ச.

**இட்டாநகர்:** இந்திய நேராட்சிப் பகுதி களுள் ஒன்றான அருணாசலப் பிரதேசத்தின் புதிய

தலைநகரமாகும். இந்தியக் குடியரசுத் தலைவரான வி.வி. கிரி இந்நகரை 1974–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20–ஆம் நாள் தொடங்கி வைத்தார். அப்போது அருணாசலப் பிரதேசத்துப் பழங்குடிகள் அவரை வரவேற்றுப் புதிய தலைநகர் உருவாக்கப் பெற்றமைக்கு மகிழ்ச்சி கொண்டனர். சுபான்சிரி மாவட்டத்தில் மலையடிவாரத்தில் 12 கோடி உருபாய் செலவில் இட்டாநகர் (Itanagar) அமைக்கப் பட்டுள்ளது. அருணாசலப்பிரதேசத்தின் இடைக் காலத் தலைநகர் மேகாலயாவின் தலைநகரான சில்லாங்காக இருந்தது. சில்லாங்கிலிருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ள இட்டாநகர், அருணாசலப் பிர தேசத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் அமைக்கப் பட்ட புதிய நகரமாகும்.

**இட்டார்சி** என்பது இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ளதோர் ஊர். இவ்வூர் ஒரு சிறப்பான இருப்புப்பாதைச் சந்திப்பு மையமாகும். இட்டார்சி (Itarsi) ஓசங்காபாத்து (Hoshangabad) மாவட்டத்தில் போபால் பகுதியில் அமைந்துள்ளது. இவ்வூர் செழுமையான நருமதை ஆற்றுப் பள்ளத் தாக்கில் உள்ளது. இங்குள்ள இருப்புப்பாதைச் சந்திப்பிலிருந்து புகைவண்டிகள் போபால், இந் தோர், குவாலியர் முதலான பகுதிகளுக்குச் செல்லு கின்றன. இங்கிருந்து சபல்பூருக்கும் (Jabalpur) அர்தா (Harda), காண்ட்வா (Khandwa), தூலியா (Dulia) வழியாகப் பம்பாய்க்கும் இருப்புப்பாதைத் தொடர்பு கள் உள்ளன. இங்கு மிகப்பெரும் தொழிற்கூடம் (Workshop) உள்ளது. ஓசங்காபாத்து, பேதுல் (Betul) போன்ற மாவட்டங்களின் வணிக மையமான இவ் வூருக்கு, சாத்பூரா (Satpura) மலைத்தொடரில் உற் பத்தியாகும் காட்டுப் பொருள்கள் முதலியன கொணரப்பட்டு, இங்கிருந்து தென் பகுதிகளுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. இங்கு வாரம் ஒரு முறை பெரிய மாட்டுச் சந்தை நடைபெறுகிறது. சாகர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரியொன்றும் இட்டார்சியில் இயங்குகிறது. இவ்வூரின் மக்கள் தொகை 63,456 (1981).

**இட்டார்பு சாக்குவிசு இக்னேசு (கி.பி. 1792–1867)** என்பார் பிரான்சு நாட்டைச் சார்ந்த புத்துலகக் கட்டடக்கலைச் சிற்பியாவார். இவர் செருமனியைச் சார்ந்த கோலோன் (Cologne) என் னும் ஊரில் கி.பி.1792–ஆம் ஆண்டு பிறந்தார். இவர் கி.பி. 1810–ஆம் ஆண்டு பாரிசு (Paris) மாநகருக்குக் குடிபெயர்ந்து, சார்லசு பெர்சியர் (Charles Percier), பிராங்காய் சோசப்பு பெலாங்கர் (Francois Joseph Belanger) போன்றவர்களிடம் கட்டடக் கலையைக் கற்றறிந்தார். பின்னர் இட் டார்பு (Hittorff Jacques Ignace) புகழ்பெற்ற தொல்லியல் வல்லுநராக மாறினார். சிசிலி (Sicily) யிலிருந்த கிரேக்கக் கோயில்களை இவர் ஆய்வு செய்து, பண்டைய கிரேக்கர்கள் தம் கோயில் களைப் பல்வண்ணக் கலவைகளால் அழகுபடுத்தி யிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தினார். தம் ஆய்வுகளை இட்டார்ப்பு ஒரு நூலாகக் கி.பி.1830-இல் வெளியிட்டார்.

பிரான்சு, இட்டார்பை அரசுக் கட்டடக் கலைச் சிற்பியாகக் கி.பி. 1833–இல் அமர்த்தியபோது, இவர் சார்லசு இலெப்ரே (Charles Lepere) என்ற கலைஞ ருடன் இணைந்து, புனித வின்செண்ட்டு தெ பால்(St. Vincent de Paul) என்னும் திருச்சபைக் கட்டடத் தில் கி.பி. 1824–1844–ஆம் ஆண்டுகளில் மறுமலர்ச்சி யுற்றுவந்த கிரேக்கப் பாணியில் சிற்பம் தீட்டி னார். மீண்டும் இவர் கி.பி.1861 முதல் 1865 வரை யிலான ஆண்டுகளில் கேர்–டு–நார்டு (Gare du Nord) என்னும் கட்டடத்திலும் சிற்பம் தீட்டினார். பின்னர்ப் பாரிசு மாநகரத்தின் சில பகுதிகளை அழகுபடுத்தும் பொறுப்பையும் மேற்கொண்டார். சாம்ப்சு எலிசீசு (Champs Elysees) என்னும் பகுதி யும், பிளாசு தெ லா கான்கார்டு (Place de la Concorde) என்னும் பகுதியும் இதனுள் அடங்கும். இவர் கி.பி.1867–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

**இட்டிசு மொழி** செருமன் நாட்டில் உள்ள இரைன் நதிப் பள்ளத்தாக்கிற் குடியேறி வாழ்ந்து வந்த இசுரேல் நாட்டு யூதர்கள் (Jews) தமது ஈபுரு (Hebrew) மொழிச் சாயலுடன் பேசிய செருமன் மொழிக்குத்தான் இட்டிசு( Yiddish) மொழி என்பது பெயர். அவர்கள் பேசிய செருமன் மொழியை சீடிச்சு டீட்ச்சு (Jiidish deutsch) அதாவது யூதசெருமன் என்று செருமானியர் குறித்தனர். சீடிச்சு(Jiidisch) என்ற செருமன் மொழிச் சொல்லை ஆங்கிலேயர்கள் இட்டிசு அல்லது இடிசு (Yiddish or Yidis) என்றுவழங் கினர். இந்த ஆங்கிலச் சொல்லைச் செருமானி யர்கள் சீடிச்சு (Jiddisch) என்று மறுபெயர்ப்புச் செய்து கொண்டனர்.

இட்டிசு மொழியின் வரலாற்றை நான்கு காலப் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை வருமாறு: 1. உருப் பெற்ற காலம், 2. பழங்காலம், 3. இடைக்காலம், 4. இக்காலம். இட்டிசு மொழியானது செருமன் மொழியிலிருந்து பிரியத்தொடங்கித்தனி மொழியாக உருப்பெறத் தொடங்கிய காலம் கி.பி.11–14ஆம்நூற் றாண்டுகளுக்கு இடைப்பட்டதாகும். இட்டிசு மொழி யின் பழங்காலம் கி.பி. 14–16–ஆம் நூற்றாண்டுகள் ஆம். இக்காலத்தில் இட்டிசு மொழியானது, செருமன் மொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டுத் தனிச் சாயலும் வளர்ச்சியும் கொண்ட ஒரு செம்மொழியாக

விளங்கத் தலைப்பட்டது. எல்லா மொழிகளையும் போல இட்டிசு மொழியிலும் கி.பி. 16–18நூற்றாண்டு களுக்கு உட்பட்ட இடைக்காலத்தில் பலவிதமான மொழியியல் மாற்றங்கள் தோன்றலாயின. ஒலி யழுத்தம் இழந்த உயிர்கள் மறையத் தொடங்கின; சிக்கலான இலக்கண இறுதி நிலைகளும் இலக்கணக் கூறுகளும் மறைந்து மொழியில் எளிமை தோன்றியது. இட்டிசு மொழியின் இக்காலம் என்பது கி.பி. 18–ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டதாகும். இக்கால இட் டிசு மொழியானது இலிதுவேனியா, உக்ரைன், உரு மேனியா ஆகிய நாடுகளில் வழங்கும் கிழக்கு இட் டிசுக் கிளை மொழியினை அடிப்படையாகக் கொண் டதாகும். இத்தகு இட்டிசு மொழிதான் ஐரோப்பா எங்கணும் யூதமக்களின் பொது மொழியாகவும் இலக்கிய ஆசிரியர்களாற் பெரிதும் கையாளப்பட்டு வரும் இலக்கிய மொழியாகவும் விளங்கி வருகிறது. மேலும், இந்த மொழியில்தான் இட்டிசு மொழியின் பிற கிளை மொழியிற் காணப்படும் கூறுகளும் கலந்து காணப்படுகின்றன. ஐரோப்பாவில் வழங்கும் இட்டிசு மொழியில் நான்கு வகையான கிளை மொழிகள் உள்ளன. அவை மேற்குக் கிளைமொழி (நெதர்லாந்து முதல் வட அங்கேரி வரை வழங்கு வது); நடுக் கிளைமொழி (மத்திய மற்றும் தென் கிழக்குப் போலந்தில் வழங்குவது); வடகிழக்குக் கிளைமொழி(இலிதுவேனியாவில் வழங்குவது); தென் கிழக்குக் கிளைமொழி (உக்ரைன், உருமேனியாவில் வழங்குவது). இக்கால இட்டிசு மொழியில் மூவகைப் பால் பிரிவும், சில வேற்றுமைகளும், மூன்று காலங்களும், ஒரு பெயரடையும், ஒரு செயின் என்ற வினையெச்ச வகையும் காணப்படுகின்றன. ஈபுரு மொழி எழுத்துகளை ஒருசில மாற்றங் களுடன் இட்டிசு மொழிச் சொற்களை எழுதப் பயன்படுத்தி வருகின்றனர்.

இட்டிசு மொழி உருப்பெறத் தொடங்கியது கி.பி.11–ஆம் நூற்றாண்டில்தான் என்றாலும், அதில் இலக்கியங்கள் தோன்றத் தொடங்கியது கி.பி.16– ஆம் நூற்றாண்டளவிலேயாகும். தொடக்கக் காலத் தில் இட்டிசு மொழியில் தோன்றியவை பெரும் பாலும் மொழிபெயர்ப்பிலக்கியங்களே ஆகும். விவிலியக் கதைகளும் ஈபுரு மொழியின் துதிப்பாடல் களும் கி.பி.16–ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இட்டிசு மொழியில் பெயர்க்கப்பட்டன. இட்டிசு மொழியில் முதன்முதல் அச்சிடப்பட்ட நூல் விவி லியச் சொல்லகராதி ஆகும். அது தோன்றிய ஆண்டு கி.பி. 1534. அதற்குப் பின்னரே மார்ட்டின் லூதர் செருமன் மொழியில் விவிலிய நூலை மொழிபெயர்த் தார். இதேகாலப் பகுதியில் யூதர்களின் வரலாறு ஒன்றும் இட்டிசு மொழியில் மொழி பெயர்க்கப்பட் டது. பிறகு உரோமானிய இலக்கியத்தின் செல்வாக் கால் பல காதல் கதைகளும், நாடோடிப் பாடல் களும், கதைகளும், பல நாடகங்களும் இட்டிசு மொழியில் தோன்றலாயின. கிழக்கு ஐரோப்பாவில் வாழ்ந்து வந்த நாடோடிக் கலைஞர்களின் முயற்சி யால் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் உருமேனியாவில் இட்டிசு நாடகக் கலையரங்கம் ஒன்று தோன்றிற்று. இது தவிர, கி.பி. 18, 19–ஆம் நூற்றாண்டுகளில் ஒரு மாபெரும் மெய்ஞ்ஞான இயக்கம் தோன்றி, இட்டிசு மொழி இலக்கியத்துக்கு ஒரு பொற்காலத்தை உண் டாக்கியது. இந்த இயக்கத்தின் செல்வாக்கால் பெரெட்சு (Peretz) போன்ற உலக இலக்கிய மன் னர்கள் தோன்றி, இட்டிசு மொழியை வளப்படுத் தினர். இத்தகைய இலக்கிய வளர்ச்சியை அடைந்து கொண்டு வந்த இட்டிசு மொழிக்கு இரண்டாம் உலகப் பெரும்போரின்போது இட்லரும், பிறகு இசு டாலினும் நடத்திய யூதர் படுகொலையினால் இருண்டகாலம் தோன்றியது. இதனால் மிகப்பல இட்டிசு மொழிக் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத் தாளர்கள் மாண்டனர் என்றாலும், கி.பி.19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இட்டிசு மொழி யாளர்கள் பெரும் அளவில் ஐரோப்பாவிலிருந்து கனடா, அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிற்குக் குடிபெயர்ந்து போயிருந்தமையால், அந்த நாடுகளில் பல பேரறிஞர்கள் தோன்றி, இட்டிசு மொழியை வளர்த்துவந்தனர். சோவியத்து ஒன்றியத்திற் கூட இசுடாலின் மறைந்த பிறகு இட்டிசு மொழிக்கு மீண்டும் செல்வாக்கு ஏற்பட்டது.

இசுரேல் என்ற ஒரு நாட்டை 1948–ஆம் ஆண் டில் தங்களுக்கென யூதர்கள் அமைத்துக் கொண் டதும், பல இட்டிசு எழுத்தாளர்கள் அங்கே போய்க் குடியேறினர். இசுரேலில் உள்ள ஈபுரு பல்கலைக் கழகத்தில் இட்டிசு மொழி வளர்ச்சிக்காகப் பேரா சிரியர் பதவி ஏற்படுத்தப்பட்டது. இதேபோலப் பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் இட்டிசு மொழிக்குப் பல பதவிகள் உருவாக்கப்பட்டன. யூத ஆராய்ச்சிக்கான இவோ கலைக் கூடம் (Yivo Institute for Jewish Research) என்ற பெயர் கொண்ட ஒரு நிறுவனம், இட்டிசு மொழிக்கு ஆக்க மும் ஊக்கமும் நல்கிக் கொண்டு 1940 முதல் நியூ யார்க்கில் இயங்கி வருகிறது. இசுரேலில் மட்டும் இப்போது ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இட்டிசு மொழி பேசி வருகின்றனர். சோவியத்து ஒன்றியத்திலும் இதே தொகையினர் இட்டிசு மொழி பேசி வருகின்றனர். ஆங்கிலம் பேசுகின்ற அமெரிக்கா போன்ற நாடுகளில் இட்டிசுமொழி பேசு கின்ற மக்களின் தொகை நாளுக்குநாள் குறைந்து வந்தாலும், அமெரிக்க நாடுகளில் இட்டிசு மொழி யில் எழுதப்படும் நூல்களும், வெளியிடப்படும் பத்தி

ரிகைகளும் ஓரளவுக்குச் செல்வாக்குடன் விளங்கு கின்றன எனலாம். நியூயார்க்கில் மட்டும் இட்டிசு மொழியில் மூன்று நாளிதழ்கள் வெளிவருகின்றன. அவற்றில் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மதிப்புரைகள் ஆகியவை ஒழுங்காக வெளிவந்து இட்டிசு மொழிக்கு ஆக்கம் தந்துகொண்டிருக்கின் றன. ஆங்கிலம் பேசும் யூதர்களுள் மிகப்பலர் இட்டிசு மொழியையும் நன்றாகப் பேசுவதால், இரு மொழிக் கொள்கைக்கு மிகுந்த ஆதரவு உண்டு. இன்னும் யூதர்களுள் சிலர் ஈபுரு மொழியையும் சேர்த்து மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவு தரு கின்றனர். அ.கா.

**இட்டூரியா** பாலசுத்தீனத்தின் வடஎல்லையில் உள்ள தொன்மையான நாடாகும், இந்நாட்டின் எல்லைகளைக் குறித்துப் பண்டைக்கால நில நூலா ரிடம் ஒருமித்த கருத்து நிலவவில்லை. இட்டூரியா (Ituraea) வில் வாழ்ந்தவர்கள் அராபியர்கள். கால்சிசு (Chalchis) என்னும் ஊரே இதன் தலைநகராகும். இவர்களின் சமய மையம் எலியோபாலிசு(Heliopolis) என்பதாகும். இட்டூரியாவை யூதேயா (Judaea) வின் அரசரான அரிசுடோபுலசு (Aristobulus) என் பார், கி.மு. 105-ஆம் ஆண்டில் வெற்றிகண்டார். இதை வென்று யூதேயாவுடன் இவர் இணைத்து விட்டார். அங்கு வாழ்ந்த மக்களுள் பெரும் பாலோரை யூதேய சமயத்திற்கு (Judaism) மாற்றி விட்டார். பின்னர் இம்மக்கள் சுதந்திரம் பெற்று வாழ்ந்தார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு உரோ மானியப் படைத்தலைவரான பாம்பே (Pompey) என்பவர் இட்டூரியாவைக் கைப்பற்றிக் கொண்டார். இதற்குப் பின்னர் இப்பகுதி உரோமானியரின் கைவசமே இருந்தது. உரோமானியரின் மாநிலமான சிரியாவுடன் இது கி.பி. 50-ஆம் ஆண்டளவில் இணைக்கப்பட்டுவிட்டது.

**இட்டைட்டுகள்** இந்தோ-ஐரோப்பிய மக் களுள் ஒரு பிரிவினர். இவர்கள் கி.மு. 2000-ஆம் ஆண்டளவில் மத்திய கிழக்கு நாடுகளில் தங்களின் ஆளுகையை ஏற்படுத்திச் சிறந்த நாகரிகத்தை உரு வாக்கினர். இவர்கள் கிறித்தவரின் விவிலிய நூலில் எத்து (Heth) எனக் குறிக்கப்படுகின்றனர். இட்டைட் டுகள் (Hittites) காத்தி (Khatti) எனவும் கூறப்படுவர். எகிப்தியர்கள் இவர்களைக் கேடா (Kheta) என்று அழைத்தனர். இட்டைட்டுகளின் தலைநகரம் ஆட்டு- சாசு (Hattusas) அல்லது ஆட்டுசா (Hattushah) எனப்படும். இந்நகரம் மத்திய அனடோலியாவில் (Anatolia) இன்றைய துருக்கி நாட்டிலுள்ள போகசு காய் (Boghaz Kyoi) என்னும் சிற்றூருக்கு வெகு அருகில் அமைந்துள்ளது.



ஆட்டுசாவிலுள்ள புடைப்புச் சிற்பம்.

வரலாறு: இட்டைட்டுகள் கி.மு. 2500-ஆம் ஆண்டளவில் பால்கன் முந்நீரகப் பகுதியில் இருந்து வடமேற்கு அனடோலியாவில் குடியேறத் தொடங் கினர். அங்கிருந்து படிப்படியாக மேற்கிலும் தெற்கி லும் குடியேறித் தங்களின் ஆட்சிப் பகுதியை விரிவு படுத்திக் கொண்டனர். அனடோலியாவின் மையப் பகுதியில் கி.மு. 2000-ஆம் ஆண்டில் குடியேற்றங் களை இட்டைட்டுகள் ஏற்படுத்தினர். இவர்கள் அங் கிருந்த ஆட்டியன் (Hattian) என்னும் பழங்குடிகளு டன் இரண்டறக் கலந்து வாழத் தலைப்பட்டனர்.

பழைய அரசு: மத்திய அனடோலியாவில் இருந்த நகர அரசுகளைக் கி.மு. 1650-ஆம் ஆண்டு முதலாம் ஆட்டுசிலிசு (Hattusilis I) என்னும் இட்டைட்டு அரசர் தாக்கி, ஆட்டுசாசு என்னுமிடத்தில் தம் தலைநகரை உருவாக்கினார். இவரே இட்டைட்டுப் பேரரசை அமைத்தவராவார். இவரது ஆட்சியி லிருந்து ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் ஆட்சி

செய்த அரசினைப் பழைய அரசு (Old Kingdom) எனக் கூறுவர். இட்டைட்டுகள் வாணிக வழிகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போராடினர். இதில் வெற்றி பெற்ற அவர்கள் உலோகங்களைக் கண்டுபிடிப்பதில் தீவிர ஆர்வம் காட்டினர். இவ்விரண்டிலுந்தான் தங்களின் அரசு ஒளிமயமாக அமைய இயலும் என இவர்கள் நம்பினர். அசிரியாவுடன் இருந்த வாணிகத் தொடர்பு, ஊரியன்சு (Hurrians) என்னும் இனத்தவரின் குடியேற்றத்தால் துண்டிக்கப்பட்டது. எனவே இட்டைட்டுகள் புதிய வாணிக வழியினை அசிரியாவுடன் அமைத்துக் கொண்டனர். இப்புதிய வணிகவழி யூப்ரட்டிசு ஆற்றினையொட்டி வடக்குச் சிரியாவரை சென்றது. அலிப்போ (Aleppo)விடமிருந்து யூப்ரட்டிசின் வடக்குக் கோடிப் பகுதியைக் கைப்பற்ற முயன்று ஆட்டுசிலிசு தோல்வியடைந்தார். இவருக்கு அடுத்துவந்த முதலாம் முர்சிலிசு (Mursilis I) அலிப்போவைக் கைப்பற்றியதுடன் யூப்ரட்டிசைக் கடந்து, பாபிலோனைக் கி.மு. 1595–இல் கைப்பற்றினார். பாபிலோன் வெற்றிக்குப்பின், தாய்கம் திரும்பும் வழியில் இவர் கொலை செய்யப்பட்டார். அதனால், நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது.

இடை அரசு: தெலிபினசு (Telibinus) என்ற அரசரால் மீண்டும் இட்டைட்டுப் பேரரசு புதுப்பிக்கப்பட்டது. இடை அரசின் காலம் கி.மு. 1500 முதல் கி.மு. 1450 வரையாகும். இக்காலத்தில் இட்டைட்டுகள் அழியும் நிலைக்குள்ளாயினர். ஊரியன்கள், மிடான்னி (Mitanni) அரசை இக்காலத்தில் நிலைநாட்டினர். இட்டைட்டுகளிடமிருந்து வடக்குச் சிரியாவை ஊரியன்கள் கைப்பற்றினர்; எகிப்தியர்களும் மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

புதிய பேரரசு: முதலாம் துட்கலியாசு (Tudhaliyas I), இட்டைட்டுகளின் புதிய அரசை அல்லது பேரரசைக் கி.மு. 1450–இல் உருவாக்கினார். இக்காலத்தில்தான் இட்டைட்டுகளின் புகழ் உச்ச நிலையை எய்தியது. இவ்வரசர் மீண்டும் வட சிரியாவைக் கைப்பற்றியதுடன் மேற்கு, வடமேற்குஅனடோலியாவையும் வென்றார். கிழக்கில் எலாசிகுப் (Elazig) பகுதியிலிருந்த இசுவா (Esuwa) என்னும் பகுதியையும் முதலாம் துட்கலியாசு கைப்பற்றினர். இப்பகுதி செம்புச் சுரங்கங்கள் மிகுதியாயுள்ள பகுதியாகும். இட்டைட்டுகளின் தலைநகரான ஆட்டுசாசை அர்சவா (Arzawa) என்னும் பகுதியின் அரசர் தாக்கினார். இதனால் இட்டைட்டுகள் மீண்டும் பகைவர்களால் அழியும் நிலைக்குள்ளாயினர். அர்சவா அரசர் தமது வலிமையைப் பெருக்கிக் கொள்ள எகிப்துடன் திருமணத் தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்.




இட்டைட்டுப் பேரரசு

இட்டைட்டு அரசர்களுள் தலைசிறந்த அரசரான சுப்பிலுலியுமாசு (Suppiluliumas) கி.மு. 1380–இல் இசுவாவைக் கைப்பற்றினார். மிடான்னியை அழித்ததுடன் வடசிரியாவை ஒருங்கிணைத்துத் தமது அரசுப் பகுதிகளாக்கச் சார்சிமிசு (Carchemish) வை அதன் தலைமைப் பகுதியாக்கினார். எகிப்திலும் இட்டைட்டுகளின் செல்வாக்குப் பெருகியது. துதங்கமன் (Tutankhamen) என்னும் அரசரின் விதவையின் வேண்டுகோளைச் சுப்பிலுலியுமாசு ஏற்றுத் தம் ஆண்மக்களுள் ஒருவரை அவளுக்குக் கணவனாக அனுப்பினார். ஆனால், இவர் கொலை செய்யப்படவே திருமணத்தின் மூலம் ஏற்பட்ட உறவு முறிந்தது.

இரண்டாம் முர்சிலிசு (Mursillis II) என்பவர், கி.மு. 1345 முதல் கி.மு. 1300 வரை ஆட்சி செய்தார். இவர் காலத்தில் மேற்கு அனடோலியா கைப்பற்றப்பட்டது. அர்சாவா (Arzawa) இட்டைட்டுகளின் ஆளுகைக்குக் கட்டுப்பட்ட நாடாக்கப்பட்டது. அதனைச் சுற்றி இருந்த இடைநாடுகள், அர்சாவா மத்திய ஐரோப்பிய நாடுகளுடனும் வடமேற்கு அனடோலியாவுடனும் கொண்டிருந்த வாணிகத் தொடர்பைத் துண்டித்தன. இரண்டாம் முர்சிலிசு சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். இவர் காலத்தில் நாட்டில் அமைதியும் கட்டுப்பாடும் நிலவின. எகிப்தியருக்கும் இட்டைட்டுகளுக்கும் இடையே



கார்கமிசுவில் கண்டெடுக்கப்பட்ட புடைப்புச் சிற்பம்


பகைமை முவதல்லிசு (Muwatallis) என்னும் இட்டைட்டு அரசர் காலத்தில் மூண்டது. இரு படைகளும் காதேசு (Kadesh) என்னும் இடத்தில் சந்தித்தன. காதேசு, ஒரண்டசு (Orontes) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இட்டைட்டுகளின் தீவிர முயற்சியால் எகிப்தியர் பின்வாங்கினர். இப்போரின் விளைவாகத் தாழ்நிலையிலிருந்த அசீரியா யூப்ரடிசை நோக்கி முன்னேறும் வாய்ப்பைப் பெற்றது.

மூன்றாம் ஆட்டுசிலிசு காலத்தில் (கி.மு. 1287 முதல் 1265 வரை இட்டைட்டுப் பேரரசு சிறிது சிறிதாகத் தன் பெருமையை இழக்கத் தொடங்கியது. இட்டைட்டுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த அர்சாவாவும் பிற சிறு அரசுகளும் சுதந்திரம் பெற்று விளங்கத் தொடங்கின. இட்டைட்டுகளுக்கு வடமேற்கு வாணிக வழித்தலப்பகுதி மட்டும் எஞ்சி இருந்தது. கிழக்கிலும் மேற்கிலும் பகைவர்களின் அச்சுறுத்தல் ஓங்கவே, மூன்றாம் ஆட்டுசிலிசு எகிப்துடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். நான்காம் துட்கலியாசு காலத்தில் (Tudhaliyas IV) கி.மு.1265 முதல் 1240 வரை பகைவர்களின் பலம் உச்சநிலையை அடைந்தது. இவர் காலத்தில் செம்புச் சுரங்கங்கள் நிறைந்த இசுவா என்னும் பகுதியை அசிரியா கைப்பற்றிக் கொண்டது. மூன்றாம் சுப்பிலுலுயுமசு (Suppiluliumas) என்னும் இட்டைட்டுப் பேரரசை அழிவிலிருந்து மீட்க இயலவில்லை. அசிரியர்களின் படையெடுப்பு மட்டுமன்றி இட்டைட்டுகளுக்குப் புதியதாக வடமேற்கிலிருந்த மக்களும் இடையூறுகள் செய்தனர். இவர்கள் இட்டைட்டுப் பேரரசுப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் அர்சாவாவையும் அழித்தனர். இட்டைட்டுப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்த வாணிக வழிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் இட்டைட்டுப் பேரரசு அழிந்தது. இட்டைட்டுகளின் தலைநகரான ஆட்டுசாசு நகரம் வடக்கு மலைகளிலிருந்த பகைவர்களால் அழிக்கப்பட்டது. இட்டைட்டுகளின் பண்பாடும் நாகரிகமும் மேலும் 500 ஆண்டுகள் மத்திய, தென்கிழக்கு அனடோலியா, வடசிரியா போன்ற பகுதிகளில் வாழும் மக்களிடம் ஓரளவு காணப்பட்டன. அனடோலியாவிலிருந்த இந்தோ-ஐரோப்பிய மொழிகள், இட்டைட்டுகளின் அழிவிற்குப் பின்னரும் நீண்ட காலம் இலிடியா (Lydia), இலைசியா (Lycia), சிலிசியா (Cilicia) போன்ற பகுதிகளில் பேசப்பட்டு வந்தன. அனடோலியாவிற்குத் தெற்கிலும் இசௌரியா (Isauria) விலும் வாழ்ந்த இட்டைட்டுகளின் வழிவந்தவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை இம்மொழிகளைப் பேசிவந்தனர்.

ஆட்சிமுறை: பழைய அரசிலிருந்த ஆட்சியின் நெறிமுறைகளே இட்டைட்டுப் பேரரசில் பின்பற்றப்பட்டன. இட்டைட்டுகளின் அரசர் தொடக்கத்தில் ஆட்சி செய்வோர் பிரிவினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசரின் அதிகாரங்கள் பிற்காலத்தில் பன்மடங்காயின. அரசர் கடவுளின் சார்பாக ஆட்சி நடத்தினார். அரசரின் இறப்பிற்குப்பின் அவர் மனைவி அரசு அலுவல்களைக் கவனித்து வந்தார். அரசு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அம்மாவட்டங்களை அரச குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் ஆட்சி செய்து வந்தனர். இவ்வுறுப்பினர்களும், நில உரிமையாளர்களும் அரசருக்குக் கடமைப்பட்டவர்களாவர். பேரரசின் உள்துறை அலுவலர்கள், மாநில ஆளுநர்கள், பேரரசருக்குக் கீழ்ப்படிந்த நாடுகளின் அரசர்கள், குடிபுகுந்தவர்களின் காப்பாளர்கள் போன்றவர்கள் அரசருக்குப் பேருதவிகள் புரிந்துவந்தனர்.

இராணுவம்: இட்டைட்டுகள் போரிடுவதில் திறம் பெற்றவர்கள். இவர்களது வலிமை மிக்க இராணுவமே இவர்களின் வெற்றிக்குக் காரணம். இராணுவத்தில் இக்காலத்தில் பயன்படுத்தப்படும் போர்க்கருவிகளை ஒத்த வலிமை மிக்க இரும்பாலான தேர்களை இவர்கள் பயன்படுத்தினர். இவற்றைக் குதிரைகள் இழுத்தன. காலாட் படைகளுக்குச் சிறந்தமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டது. வீரர்கள் கட்டுப்பாட்டுடனும் தீரத்துடனும் போரிடும் திறம் பெற்றவர்களாக விளங்கினர்.

**கலை, கட்டடக்கலை:** தலைநகரிலும் பிற இடங்களிலும் இருந்த அரண்களும் கோயில்களும் இட்டைட்டுகளின் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்குவனவாகும். தலைநகரான ஆட்டுசாசுவைச் சுற்றி உயர்ந்த கோட்டை மதில் 5. கி.மீ. சுற்றளவிற்குக் கட்டப்பட்டது. மெர்சின் (Mercin) அலகா யூக்கு (Alaca Huyuk) போன்ற இடங்களிலும் இவர்கள் கட்டிய கட்டடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. சிற்பங்கள் சுவர்களிலும் நுழைவாயில்களின் முகப்புகளிலும் செதுக்கப்பட்டுள்ளன. அனடோலியாவிலுள்ள சிற்பங்களும் ஆட்டுசாசுவிற்கு அருகிலுள்ள யசிலிகயா (Yazilikaya) விலுள்ள திறந்த வெளி ஆலயத்தின் சிற்பங்களும் குறிப்பிடத்தக்கன. இச் சிற்பங்கள் மிகச் சிறந்த முறையில் செதுக்கப்பட்டு அழகு மிக்கனவாக விளங்குகின்றன. இட்டைட்டுகளின் கலைத்திறன் இவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களிலும் முத்திரைகளிலும் காணப்படுகின்றது. இவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் அணிவேலைப்பாடு அற்ற மெருகூட்டப்பட்ட சிவப்பு நிற மட்பாண்டங்களாகும். அக்ழாய்வுகளில் குடுவைகள் பெருமளவு கிடைத்துள்ளன. எருது வடிவம் போன்ற உருவமுள்ள பாத்திரங்கள் மிகச்சிறந்த கலைவண்ணம் உடையனவாக விளங்குகின்றன. சில பாத்திரங்கள் 1 மீ. உயரம் உடையனவாக விளங்குகின்றன.



இட்டைட்டு சிங்கச் சிற்பங்கள்

இட்டைட்டுகளின் செல்வ நிலையை இவர்கள் அறிந்திருந்த கனிமங்களின் மூலம் அறியலாம். செம்பு, வெள்ளி, ஈயம், இரும்பு போன்ற கனிமங்களை நிலத்திலிருந்து வெட்டி எடுத்தனர். சலிபசு (Chalybes) என்னும் பகுதியில் மிகுதியான சுரங்கங்களை இட்டைட்டுகள் கண்டுபிடித்தனர். வாணிகம் இதனால் பெருமளவு வளர்ந்தது. இரும்பைப் பயன்படுத்தியது மட்டுமன்றி இட்டைட்டுப் பேரரசரே இரும்பு உற்பத்தியின் முற்றுரிமையைப் பெற்றவராகவும் அக்காலத்தில் திகழ்ந்தார்.

**சமயம்:** இட்டைட்டுகளின் முதன்மைக் கடவுள் தாய்த் தெய்வமாகும். இவர் மா (Ma) எனப்பட்டார். சூரியனாகிய கடவுள் அட்டிசு (Attis) எனக் கூறப்பட்டார். தெய்வங்களுக்குப் பெரும் பரப்பளவில் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களில் பூசை செய்பவர் காலி (Gali) எனப்பட்டார். பெரும்பாலும் அலிகளே (Eunuch) பூசாரிகளாக இருந்தனர். மேற்குறிப்பிடப்பட்ட கடவுள்களை அடுத்து 'மித்ரா' (Mithra) என்னும் சூரியனாகிய கடவுளையும் (வேதகால ஆசிரியர்களின் மித்ரா என்னும் தெய்வம்), மென் (Men) என்ற நிலவுக் கடவுளையும் இவர்கள் வழிபட்டனர். இக்கடவுளரே பின்னர் வேதகால ஆரியர்களால் இந்திரன், வருணன் என்று அழைக்கப்பட்ட தெய்வங்களாவர். இத் தெய்வங்களைப் பற்றிப் போகசுகாய்க் (Boghaz Kyoi) கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

**இலக்கியம்:** இட்டைட்டுகளின் சமயத் தொடர்பாகப் பல புராணக் கதைகள் உள்ளன. பல இலக்கியங்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. இட்டைட்டு அரசர்களின் மரபு வரலாறு, இட்டைட்டு இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கதாகும். அவை இட்டைட்டுகளின் வரலாற்றைப் பெரிதும் அறிய உதவிபுரிகின்றன. இட்டைட்டுகள் விட்டுச் சென்ற பல எழுத்துகள் உள்ள களிமண் பலகைகள் போகசுகாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இட்டைட்டுகள் பயன்படுத்திய எழுத்துகள் ஆப்பு வடிவ எழுத்துகளாகும். அவற்றைப் படித்த அறிஞர்கள் இட்டைட்டுகளின் மொழி இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் ஒரு பிரிவே என்பதைக் கண்டுபிடித்தனர். இட்டைட்டு நாகரிகத்தைப் பற்றி முழுதும் ஆய்ந்து உலகுக்கு 1933–இல் எடுத்துக் கூறியவர் செருமனி நாட்டைச்சார்ந்த எ.கோட்சு (A. Gotze) என்பவராவார்.

துணை நூல்:

**Bhagwat Saran Upadhyaya,** The Ancient World, S. Chand & Co., Private Ltd., New Delhi, 1976.

**இட்ரிசி (கி.பி.1100–1167)** என்பார் அராபிய நிலநூல் வல்லுநர். இவர் தாலமியின் அண்ட அமைப்பியலை (Cosmography) அடிப்படையாகக் கொண்டு ஒரு நூல் எழுதினார். பிற்காலத்தில் சில அறிவியல் மூலக்கூறுகளையும் இட்ரிசி (Idrisi) ஏற்றுக் கொண்டார். இவர் நார்மானியப் புரவலர் இரோசரின் (Roger) அரண்மனையில் சில காலம் வாழ்ந்தார். ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த பயணிகள் பலர் இவ்வரண்மனைக்கு வந்து சென்றதால், அவர்கள் மூலம் அரிய செய்திகள் பல இவருக்குக் கிடைத்

... நூல்நிலையங்களில் தாம் திரட்டிய செய்திகளுடன் அங்கு வந்த மாலுமிகள் சிலர்தம் அனுபவங்களையும் இவர் கேட்டறியும் வாய்ப்பும் பெற்றார். மொராக்கோ நாட்டில் பிறந்த இவர் தமது அறிவுத் திறனால் உலகப் புகழ் பெற்றார்.

**இட்லர், அடால்பு (கி.பி. 1889–1945):** இரண்டாம் உலகப்போர் மூள்வதற்குக் காரணமாக அமைந்து உலகில் அழிவுச் சக்திக்கு வித்திட்டவர். அடால்பு இட்லர் கி.பி. 1889–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 20–ஆம் நாள், ஆசுத்திரிய–அங்கேரிய (Austria–Hungary) நாட்டு எல்லைப் பகுதியிலுள்ள பிரானாவ்–அம்–இன் (Braunau-am- Inn) என்னுமிடத்தில் பிறந்தார். அலாய் இட்லர் (Alois Hitler) என்னும் பெயர் கொண்ட, இவர் தந்தை முறை தவறிப் பிறந்தவராகையால், (Illegitimate son) இவர் சிலகாலம் தம் தாயாரின் பெயரான சிக்கல் குரபர் (Schicklgruber) என்பதைக் கொண்டிருந்தார். இவர் கி.பி.1876–ஆம் ஆண்டில் இட்லர் என்னும் தம் குடும்பப் பெயரைச் சூட்டிக் கொண்டார்.



இட்லர்

இட்லரின் தந்தை ஆப்சுபர்கில் (Hapsburg) சுங்க அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். எனவே, இட்லரும் தம் குழந்தைப் பருவத்தை ஆசுத்திரிய மேல் பகுதியின் தலைநகரான இலின்சு (Linz) என்னும் நகரில் கழித்தார். இவர் பள்ளியில் சிறந்த மாணவர் என்று பெயர் எடுக்கவில்லை. எனினும், வரலாற்றில் இவருக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது. தம் பதினாறாம் வயதில் பள்ளிப்படிப்பை முடித்த இவர், இரண்டாண்டுகள் இலின்சு நகரில் ஓவியக் கலைஞராகவும், நெடுஞ்சாலையைத் துப்புரவு செய்யும் பணியாளராகவும், கூலியாளாகவும், வீடுகளுக்கு வண்ணம் பூசுபவராகவும் பணிபுரிந்தார். இக்காலத்தில்தான் இவர் அரசியல் கொள்கைகள் உருவாயின. இவர் செருமானிய மக்களின் இனப் பெருமையையும், யூதர்களின் இனத்தாழ்வையும் வற்புறுத்தினார். அதைப் போன்று, போலந்தியரையும் செக்கோசுலோவாக்கியரையும் வெறுத்தார். சமுதாயத்தில் சமத்துவத்தை எதிர்த்த இவர், ஏழை எளிய மக்களை விடத் தாம் உயர்ந்தவர் என்றே கருதினார்.

இவர் 1913–ஆம் ஆண்டு ஆசுத்திரியப் பேரரசுக்கு இராணுவத் தொண்டு செய்வதைத் தவிர்க்கும் பொருட்டு மியூனிச்சு (Munich) நகரம் சென்றார். இவர் 1914–ஆம் ஆண்டு பவேரிய மன்னர் மூன்றாம் இலட்விக்கு (Ludwig III) காலத்தில் செருமானிய இராணுவத்தில் சேர்ந்தார்.

முதல் உலகப் போர் 1914- இல் மூண்டபோது, இவர் செருமனியின் சார்பாகப் போரிட்டார். படைத்துறைச் சிற்றலுவலராகப் (Corporal) பணியாற்றிய இவர் போரில் விழுப்புண்களைப் பெற்றுப் பல வீரப்பரிசுகள் பெற்றார்.

செருமானிய மன்னர் இரண்டாம் வில்லியம் (William II) 1918–ஆம் ஆண்டு போரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது குறித்து இட்லர் ஏமாற்றம் அடைந்தார். நாடு திரும்பியதும் இராணுவத் தொண்டில் ஈடுபட்டுச் செருமானிய மக்களின் கருத்துகளை ஆராய்வதற்கான பணியில் ஈடுபட்டார். இவர் 1919–ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்கள் செருமானியத் தொழிலாளர் கட்சி (German Workers' Party) யில் சேர்ந்தார்; அடுத்த ஆண்டு அக்கட்சியின் கொள்கைப் பரப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1920–ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் அக்கட்சி, செருமானியத் தேசிய சமதருமத் தொழிலாளர் கட்சி (National Socialist German Worker's Party) என்று பெயர் பெற்றது. இதுவே நாசிக் கட்சி (**Nazi Party**) ஆகும். இட்லர் தம் கட்சியின் பெயரில் சமதருமம் என்னும் சொல்லைச் சேர்த்திருந்தாலும், இவர் ஒரு சமதருமவாதி அல்லர். அக்கட்சிக்குப் பழுப்பு நிற உடையும் சுவசுதிக்கா (Swastika) சின்னமும் அடையாளங்களாக அமைந்தன. இவர் அக்கட்சிக்கு இருபத்தொரு கூறுகளைக் கொண்ட திட்டத்தையும் வகுத்துக் கொடுத்தார். அக்கட்சி பொதுவுடைமையை (Communism) ஒழித்துக்கட்டவும், செருமனியின் பெருமையைக் குன்றச் செய்த வெர்சே உடன்பாட்டினைக் (Treaty of Versailles) கிழித்தெறியவும் முற்பட்டது. வெர்சே ஒப்பந்தத்தால் மனக்

குறை பெற்றிருந்த செருமானிய மக்கள் அக்கட்சியில் சேர்ந்தனர். அவர்களுள் எசு (Hess), கொயரிங்கு (Goering), கொயபல்சு (Goebbels) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பிரெஞ்சியர் 1923-ஆம் ஆண்டு உரூர் ஆற்றுப் பள்ளத்தாக்கைக் (Rhur Valley) கைப்பற்றியபோது செருமானியர் கோபமுற்றனர். நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இட்லர், செருமானிய வீமர் குடியரசைக் (Weimar Republic) கவிழ்க்க முயன்றார். இம்முயற்சியில் இவருக்கு எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. இட்பவேரியாவும் இவருக்கு ஆதரவு நல்கவில்லை. இட்லரின் இச்செயலை அரசு வன்மையாகக் கண்டித்தது. அதன் காரணமாக இவர்சிறையிலடைக்கப் பட்டார். சிறையில் வாடியபோதுதான் இவர் 'மெயின் காம்ப்' (Mein Kamp) அல்லது 'எனது போராட்டம்' என்னும் நூலை எழுதினார். இந்நூலில் இவர் நாசிக் கட்சியின் திட்டங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். இதுவே நாசிக் கட்சியின் வேதமாயிற்று.

இவர் விடுதலை பெற்ற பின்னர், அரசியலமைப்பு முறைகளில் ஆட்சியைக் கைப்பற்றிப் பின் வல்லாட்சியாளராக முனைந்தார். இவர் நர்சிப் படையினர்தம் கட்சிக் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளித்ததோடு, ஏனைய கட்சிக் கூட்டங்களில் குழப்பங்களையும் விளைவித்தார். இவர் 1932-ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவருக்கான (President) தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். எனினும் இவர் கட்சியினர், மக்கள் அவையில் (Reichstag) 230 இடங்களைப் பெற்றனர். எனினும் இவரது கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே இவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்த ஏற்பாடு செய்தார். தேர்தல்கள் நடக்கு முன்னர் மக்கள் அவைக் கட்டடத்தைத் தீக்கிரையாக்கி விட்டு, அப்பழியைப் பொதுவுடைமைக் கட்சியினர்மீது சுமத்தினார். இத்தேர்தலிலும் நாசிக் கட்சியினருக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே, 1933-இல் இவர் சமதருமக் கட்சியினருடனும் பொதுவுடைமைக் கட்சியினருடனும் இணைந்து கூட்டரசமைத்தார். இவர் முதலமைச்சராகப் (Chancellor) பொறுப்பேற்றார். எனினும் சில மாதங்களில் மக்கள் அவையைக் கலைத்து விட்டு மறுதேர்தலுக்கு ஏற்பாடு செய்தார். அரசியலமைப்புச் சட்டம் செயற்படவில்லை. நாசிக் கட்சியினர் மட்டும் தேர்தலில் நிற்க அனுமதிக்கப்பட்டனர். குடியரசுத் தலைவர் இண்டன்பர்கு (Hindenburg) 1934-இல் காலமாகவே, இவர் தம்மைச் செருமனியின் தலைவராகவும் (Fuhrer) முதலமைச்சராகவும் அறிவித்துக்கொண்டார். பதவியிலமர்ந்ததும் இவர் வல்லாட்சியாளரானார். நாசிக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் தடை செய்யப்பட்டன. மாற்றுக் கட்சிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. புதிய கட்சிகள் உருவாவது தடை செய்யப்பட்டது. நாசிக் கட்சியினரே அனைத்துப் பதவிகளிலும் அமர்த்தப்பட்டனர். மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. தம் ஆட்சியைக் குறை கூறுபவர்களைக் கண்டிபிடிக்க ஒற்றர் படை அமைத்தார். மறுப்புரையாளர் சமயத்தை (Protestant Religion) அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார். போப்பாண்டவருடன் இவர் உடன்பாடு செய்துகொண்டு, கத்தோலிக்கர்கள் நாசிகளுக்கு எதிராகச் செயற்படுவதைத் தடை செய்தார். கத்தோலிக்கர்கள் அரசியலில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டி அவர்கள் சொத்துகளைப் பறிமுதல் செய்தார். யூதர்களுக்கும் (Jews) இவர் தொல்லைகள் கொடுத்தார்.

பொருளாதாரத் துறையைத் தம் கட்சியினர் கருத்துக்கேற்றவாறு திருத்தி அமைத்தார். செருமனி நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய போர் இழப்பீட்டுத் தொகை நீக்கப்பட்டது; வேலை நிறுத்தங்களையும் (Strikes) கதவடைப்புகளையும் (Hartals) தடைசெய்தார். தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகத் தொழில் முன்னணிகள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களின் குறையைப் போக்கத் தனி அலுவலர்களை இவர் நியமித்தார்; உணவு உற்பத்தியைப் பெருக்க அறிவியல் முறையை ஊக்குவித்தார். உருளைக்கிழங்கிலிருந்து மாவு செய்யவும், இரசாயன முறையில் துணி உற்பத்தி செய்யவும், மரத்தூளிலிருந்து சர்க்கரை செய்யவும், நிலக்கரி, சுண்ணாம்பு போன்றவற்றிலிருந்து இரப்பர் செய்யவும் இவர் ஏற்பாடு செய்தார்; சிறுவர்கள் வேலை நேரத்தைக் குறைத்துப் பெண்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதன் மூலமும், தொழிற்சாலைகள் கட்டுவதன்மூலமும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கினார்; பணத்தின் மதிப்பை மீண்டும் நிலைநிறுத்தினார்.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த அளவில் இவர் வெர்சே உடன்படிக்கையை மீற முனைந்தார். இதன் காரணமாக ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டார். செருமனியை வல்லரசாக்க வேண்டும் என்று விரும்பிய இவர், அதற்குப் பன்னாட்டுச் சங்கம் (The League of Nations) தடையாக இருக்கவே அதிலிருந்து விலகினார்; பன்னாட்டு விதிமுறைகளுக்கு எதிராகத் தம் படையைப் பெருக்கினார்.

ஆசுத்திரிய நாட்டுத் தலைவர் டாக்டர் தோல்பசை (Dr. Dollfuss) 1933-இல் நாசிகள் கொன்றனர். செக்கோசுலோவாக்கிய நாட்டைச் சார்ந்த சுடேண் டன்லாந்துப் (Sudentenland) பகுதியைக் கைப்பற் றும் பொருட்டு இவர்அந்நாட்டின் மீது படையெடுத் தார். செருமனியின் கீழ்ப்பகுதிக்குச் செல்லும் பொருட்டுப் போலந்துத் தாழ்வாரம் என்னும் பகுதி யைக் (Polish Corridor) கைப்பற்றக் கருதி அந்நாட் டைப் பிடித்தார். இங்கிலாந்தும் பிரான்சும் முன் னரே போலந்துக்குக் கொடுத்திருந்த வாக்குறு தியை மீறுவதாக இது அமைந்தது. இந்நிலையில் செருமனி போலந்தைத் தாக்கவே, இங்கிலாந்தும் பிரான்சும் செருமனியைத் தாக்கின. இரண்டாம் உலகப் போர் மூண்டது.

போலந்தின் தலைநகரான வார்சாவைச் செரு மானியப் படைகள் தாக்கிக் கைப்பற்றின. இட்லர் இசுடாலினுடன் (Stalin) செய்துகொண்ட ஒப்பந்தப் படி போலந்தை இரு நாடுகளும் பங்கிட்டுக்கொண் டன. சிறிது காலத்திற்குள் இவர் தென்மார்க்கு (Denmark), நார்வே, ஆலந்து (Holland) பெல்சியம் ஆகிய நாடுகளைக் கைப்பற்றினார். இவர் 1940-ஆம் ஆண்டு மே திங்களில் பெல்சியத்திலிருந்து பிரான்சைத் தாக்கினார். பிரான்சு செருமனியிடம் சரணடைந்தது.

பிரான்சின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இட்லர் பிரிட்டனைத் தாக்க விழைந்தார். அதனை விமான மூலமும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலமும் தாக்கினார். 'பிரிட்டன் போர்' (Battle of Britain) தொடங் கியது. பிரிட்டிசு பிரதமர் வின்சுடன் சர்ச்சில் தம் பெருமுயற்சியினால்இங்கிலாந்தைக்காப்பாற்றினார். பிரான்சு சரணடைந்தவுடன் இத்தாலி, நேசநாடு களுக்கெதிராகப் போரில் இறங்கியது. இட்லர் 1941-இல் இசுடாலினுடன் செய்துகொண்ட உடன்படிக் கையை மீறி, உருசியாவைத் தாக்கினார். இதனால் உருசியா நேச நாடுகளுடன் இணைந்தது.

சப்பான் 1941-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7-ஆம் நாள் அமெரிக்கத் துறைமுகமான பெர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கியது. அத னால், அமெரிக்காவும் இரண்டாம் உலகப்போரில் குதித்தது. அமெரிக்கா 1945-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-ஆம் நாளில் இரோசிமா (Hiroshima) மீதும் 9-ஆம் நாளில் நாகசாகி (Nagasaki) மீதும் அணுக்குண்டு வீசி அவ்விருநகரங்களையும் அழித்தது. இதற்குள் நேசநாட்டுப் படைகள் பிரான்சைக் காப் பாற்றி, அதினின்றும் செருமானியப் படைகளைத் துரத்தின. உருசியாவும் செருமானியைத் தாக்கத் தொடங்கியது. இதைக் கண்ணுற்ற இட்லர் 1945-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30-ஆம் நாள் தம் துணைவியாருடன் தற்கொலை செய்துகொண்டார். இவர்கள் தோட்டத்திலேயே அவ்வுடல்கள் எரி யூட்டப்பட்டன. அப்போது இட்லருக்கு வயது ஐம் பத்தேழு. இவர் தோழர்கள் இவர் போரில் வீர மரணம் அடைந்தார் என்று பொய்ச் செய்தியைப் பரப்பினர்.

சி.ப.

துணை நூல்கள்:

இராமச்சந்திரன், டி. ஆர்., உலக வரலாறு (கி.பி. 1789 முதல் இன்று வரை), தமிழ் வெளியீட்டுக் கழகம், 1969.

சீனியப்பன், எம்., தற்கால உலக வரலாறு, வெற்றி வேல் பிரசுரம், மதுரை, 1975.

**இட அமைப்புக் கோட்பாடு**: ஓரிடத்தில் வாழும் மக்களின் செறிவு, பொருளாதார, சமூக நடவடிக்கைகள், ஆதார வளங்கள், சுற்றுப்புற நில அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில், இயற்கை யாகவும் திட்டமிட்டும் அவ்விடத்திற்குத் தகுதியான இட அமைப்பை உருவாக்குவதில் பின்பற்ற எழுந்த கோட்பாடுகள் இட அமைப்புக் கோட்பாடுகள் (Location theory) எனப்படும். பொதுவாக ஒரு நகரத்தின் இட அமைப்பு, அந்நகரத்தைச் சுற்றி யுள்ள பகுதிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வழிகளில் சார்ந்திருக்கும். எனவே இட அமைப் புக் கோட்பாடுகள், நகரங்களை மையமாகக் கொண்டிருந்தாலும், புறநகர்ப் பகுதிகளையும் (Sub-urban areas), தொடர்பான பிற நகரங்களையும் நாட்டுப் புறங்களையும் இறுதியாக முழுமையான பரப்பெல்லையுடன் அவ்வட்டாரத்தின் (Regions) நலத்தையும் தழுவியன. நகரத்தின் நிலம், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள், அகக் கட்டுமான வசதிகள் யாவும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்தவை. சமூகப் பண்பாடு, பொருளாதார நிலை போன்ற வற்றில் ஒத்த குடும்பங்கள் ஒத்ததன்மையுள்ள இடங் களில் கூட்டம் கூட்டமாக ஒத்த இயல்பில் வாழ் வதைக் கால வரலாறும் நிருவாக முறையும் சமூகப் பொருளாதாரச் சூழலும் முடிவு செய்கின்றன. இவை இட அமைப்பில் அடுக்கடுக்கான படிநிலையை (Stratification) நகரங்களில் உருவாக்கி, கால மாறு பாடுகளுக்குட்பட்டு மாறும் ஆற்றல் வாய்ந்த நகரங் கள் வளர வழி வகுக்கின்றன.

இட ஒதுக்கீடு: மூன்று வகையான நகர இட ஒதுக்கீடுகளை, மாதிரி இட ஒதுக்கீட்டுப் படிவங் களாகப் பர்கசு (Burgess, 1928), கோயட்டு (Hoyt, 1939), ஆரிசு, உலாமன் (Harris & Ullaman, 1945) ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர். இவை மூன்றையும்

ஒரே அமைப்பு ஆய்வாக, சோபெர்கு (Sjoberg) என்ற நகரியல் அறிஞர் விளக்கியுள்ளார். அவரது கருத்துப் படி தொழில் மயமாவதற்கு முன், நகரங்களின் மையம் செல்வர்களின் குடியிருப்பாகவும் அதைச் சுற்றிய புற நகரம் ஏழைகளின் குடியிருப்பாகவும் அமையும். பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வை மட்டும் அடிப்படையாகக் கொண்டு குடும்பங்கள் தங்கள் குடியிருப்பைத் தேர்ந்தெடுப்பதால், இவ்வித இட ஒதுக்கீட்டு நிலை தனிப்பட்ட உயர்ந்த செல் வாக்குடன் வாழும் சூழ்நிலையுடைய மையத்துடன் அமைகிறது. செல்வம் சூழ்ந்த ஒரு மையத்தைச் சுற்றிப் படிப்படியாக ஏழ்மையும் வறுமையும் பரவிக் கிடப்பதை இவ்வகை நகரமைப்புகளில் காணலாம் குடியேற்றக் கால நகரமைப்புகளில் 'இரட்டை அமைப்புக் குடியேற்ற நகரங்கள்' (Dual Structured Colonial City Model) வளர்ந்தன. இவை இந்தியா விலும் பிற முன்னேற்றமடைந்து வரும் விடுதலை பெற்ற நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இவைகளில் அங்காடியும் வேளாண்மையைச் சார்ந்த துறையும் ஒரு பக்கமும், தொழிற் கூடமும் முதலாளித் துவமும் சார்ந்த துறை மறுபக்கமும் இணைந்து அதற்கேற்றபடி ஒருவகைக் கலப்பு அமைப்பு விளங் கும். ஆங்காங்கே வளமும் வசதியும் உயர்ந்த கட் டடங்களும் ஊடாக வறுமையும் பட்டினியும் குடிசை வாழ் மக்களின் குறுகிய இல்லங்களும் ஒன்றோடு ஒன்று பிரிக்கஇயலாத வண்ணம் அமைந்துவிடும். இந்திய இரட்டை அமைப்புக் குடியேற்ற நகரங்களில் காலம் காலமாக மரபு வழி வளர்ந்த குடியிருப்புகள், பெரும் பாலும் பெரிய கோயில்களைச் சுற்றியவையாகவும், நகரின் மையமாகவும் (Core) அமைந்துள்ளன. இம்மையத்தைத் தொட்டு நான்கு புறங்களிலும் தொழில்துறையும் பணித்துறையும் போக்குவரத்து வசதிகளும், பெருஞ்சாலைகளை நோக்கி வளர்ந்து பரவிக் கிடக்கின்றன. இவ்வித நகரங்களில் உள் நாட்டுப் பண்பாடும் பிறநாட்டுப் பண்பாடும், நிலப் பயன்பாட்டிலும் குடியிருப்பு அமைப்பிலும் முன் னேற்றத்திலும் ஒருங்கிணைந்து கிடப்பதைக் காண லாம்.

இரட்டை அமைப்புக் குடியேற்ற நகர அமைப்பை விட இந்திய நகரங்கள் சிக்கலான பல கூறுகளை யுடையன. வரலாற்றில் புகழ்பெற்ற மதுரை, வார ணாசி (Varanasi), ஐதராபாத்து (Hyderabad), தில்லி (Delhi) போன்ற நகரங்கள், பல வல்லரசுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்ததால், தொடர்புகள் விடுபட்ட பற்பல அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டு முறைகளினால் பாதிக்கப்பட்டு, சிக்கலான அமைப்பு களை உடையனவாகக் காணப்படுகின்றன. கின்சு பெர்கு (Ginsberg, 1969) என்ற அறிஞரின் கருத்துப் படி, இந்நகரங்கள் இப்போது தொழில் மயமான நகரங்களாக (Post Industrial City) விளங்கினாலும், உண்மை நிலையில் தொழில் மயமாவதற்கு முந்தைய நகர நிலை வரையறையில்தான் (Pre Industrial City) இவை காணப்படுகின்றன. இவை குடியேற்றக் காலக் கூறுகளும் தொழில் மயமாவதற்கு முந்திய காலக் கூறுகளும் இந்திய மரபியல் பண்பாடுகளும் ஒன்றாகிக் காலத்தால் பிளவுபட்டு நினைவு கூர்ந்து பார்க்கும் பழைமைப் பாங்குள்ளவையாக (Reminiscent of past) விளங்குகின்றன. இந்திய நகரங்கள் தொழில் மயமாவதற்கு முன் வளச்செறிவு நிறைந்த தாகவும், தொழில் மயமானபின் மிகுந்த இறப்பு (Post Industrial Mortality) விகிதம் உள்ளவை யாகவும் கருதப்பட்டன. இப்போது நகரங்களின் உயிரிழப்பு ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டு மக்கள் தொகை அமைப்பு மாறி வருகிறது. எனினும் பொருளாதார, சமூக நிலையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள இந்திய நகரங்கள், தொழில் மயமாவதற்கு முன்னான நகரப் படிவத்தை ஒத்துள் ளன. எடுத்துக்காட்டாகப் பொள்ளாச்சி (தமிழ்நாடு), விசயவாடா (ஆந்திரா) போன்ற நகரங்கள் வாணி கத்தைத் தலைமையாகக் கொண்டு நகரங்களாக வளர்ந்தவை. இவற்றின் மையம் செழிப்பு மிக்கதாக விளங்க, அதன் சுற்றுப் புறம் மட்டில் மிகவும் ஏழ்மை நிலையிலும் தொழில் மயமாவதற்கு முன்னான நகரப் படிவத்தை ஒத்துள்ள நிலையிலும் உள்ளது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் (தமிழ்நாடு), பெங்களூர் (Bangalore) முதலிய நகரங்களின் மையம் செழித்து வளமுடையதாயிருத்தலின், இப்போது சுற்று வட்டாரமும் புறநகரங்களும் பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேறி வரு கின்றன; புதிய பலமாடிக் கட்டடங்களும் குடி யிருப்புகளும் தோன்றிச் சமூகப் பொருளாதார முன்னேற்றம் பெறுகின்றன.

புதிய தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் Neo Classical Economists) இட ஒதுக்கீட்டுக் கோட் பாட்டிற்குச் சிறப்பிடம் அளிக்கவில்லை. நுண்ணினப் பொருளியல் (Micro Economics) ஆய்விற்கு அடிப் படையாக விளங்கும் தூய போட்டிக் (Pure Competition) கோட்பாடு, மிகுந்த எண்ணிக்கையுடைய உற் பத்தியாளர்கள், ஒரே வகையான பொருள்களை ஒரே விலையில், ஒரே இடத்தில் விற்பனை செய்வதாக நடைமுறைக்குப் பொருந்தாத எடுகோள்களைக் (Assumptions) கொண்டு உருவாக்கப்பட்டதனிமித் தம், இட ஒதுக்கீடு போன்ற பொருளியற் கூறுகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டன. செருமன் நாட்டவரான சான் கென்ரிச்சு வான் தூனன் (Johann Heinrich Von Thenun) என்பார். கி.பி. 1840-இல்

முதல் முறையாக இடஅமைப்புக் கோட்பாட்டை வெளியிட்டார். வேளாண்மைத் தொழிலைக் கொண்ட இவர், தம் ஆய்வில் தனியாக ஒதுக்கப் பட்ட ஒரு நகரச் சமுதாயத்தை எடுகோளாகக் கொண்டு, போக்குவரத்துச் செலவைக் குறைக்கும் வகையில் ஓர் ஊரக நிலத்தை ஒதுக்கீடு செய்து, அக் காலப் போக்குவரத்து வசதிகளின் அடிப்படையில், அவ்வூரகத்தின் நிலங்களை உயர் உகந்த அளவு ஆதாயம்பெறும் (Optimum pattern of rural land use) வகையில் எவ்வாறு உற்பத்திக்குட்படுத்தலாம் என்பதை வெளிப்படுத்தினார். இக்கோட்பாடு 50 ஆண்டுகள் வரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதே நாட்டைச் சேர்ந்த ஆல்பிரடு வீபர் (Alfred Weber) 1909-இல், செலவுகள் குறைவதை முற்கோளாகக் கொண்டு, நிறைவற்ற சமநிலை (Partial equilibrium) அணுகுமுறையில், தனிப்பட்ட தொழிற்கூடங்கள் நிறுவுவதற்கான இட அமைப்பு முடிவுகளைத் தெரிந் தெடுக்கும் முறைகளைக் காட்டினார். மேலும் இவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூட்டமாகப் பல தொழில்களும் வாணிகமும் பிற பொருளா தார நடவடிக்கைகளும் பெருகினால், அங்கு அள வுச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் (Economies of scale and External Economies) தாமாகப் பெருகி, இட இணைப்புகளினால் (Agglomeration) எவ்வாறு பொருளாதாரச் சிக்கனங்கள் விளைகின் றன என்பதை விரிவான ஆராய்ச்சி மூலம் விளக்கி னார்.

செருமன் நாட்டு ஆகசுட்டு இலாசுச்சு (August Losch) என்பவரின் இட அமைப்புக் கோட்பாடு, முதன் முறையாக 1944-இல் பொருளியலில் முழுமை யாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவரது பொதுச் சமநிலை இட அமைப்புக் கோட்பாடு, அங்காடி சார்ந்த தொழில்களின் இட அமைப்பைக் கொண்டது. இலாசுச்சு, எதற்காக எங்கே நகரங்கள் வளருகின்றன என்பதை விளக்கியுள்ளார். வேளாண்மை பரந்த நிலத்தையுடையதாக இருத் தலின், ஊரக வளர்ச்சிக்குக் காரணமாகிறது. தொழில்கள் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்களுடன் ஒரே இடத்தில் குவிகின்றன. அவ்விடங் களில் பேரளவு உற்பத்தியும் செறிந்த தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டு நகரங்கள் வளருகின்றன. நகரங்களில் தொழில் முனைவோருக்கும் வேளாண்மை தவிரப் பிறதுறைப் பணியாளர்களுக் கும் தங்கள் தொழிலை முன்னேற்றமடையச்செய்யப் பல அளவுச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் கிடைக்கின்றன. வேளாண்மைப் பொருள்களை உற் பத்தி செய்வதோடு, தொழிற்பொருள்களையும் நுகர் வோர் பொருள்களையும் வாங்கும் அங்காடியாக வும் விளங்குவது ஊரகங்களாகும். வேளாண்மைப் பொருள்களை நுகர்ந்து, தொழிற்பொருள்களையும் நுகரும் பொருள்களையும் உற்பத்தி செய்வது நகரங் களாகும்.

இலாசுச்சின் ஆய்வின்படி இடம் என்பது, முழு மையான அங்காடியின் ஒரு பங்கு. இவர் இடத்தை அங்காடிப் பகுதி, வட்டாரத்தோடு இணைந்த பகுதி கள், வட்டாரம் என மூன்று வகையாகப் பிரித் திருக்கிறார். ஒவ்வொரு வட்டாரத்தின் நடுவிலும் ஒரு பெரிய நகரம் இருக்கும். ஆனால், எல்லாப் பெரிய நகரங்களும் வட்டாரத்தின் நடுவில்தான் அமைய வேண்டும் என்பதன்று. இட அமைப்பிலும் சமநிலை ஏற்படும். பலமுகப்பட்ட அங்காடி, போக்கு வரத்துச் செலவுகளைக் குறைப்பதால், நகரங்கள் வட்டார மையங்களில் வளர வழி வகுக்கின்றன. இலாசுச்சின் ஆய்வுகள், நடைமுறைக்குப் பொருந்தாத ஒரே சீரான மக்கள்தொகைப் பங்கீடு, முற்றுரிமைத் தொழில்கள், அங்காடியின் நீண்டகாலச் சமநிலையில் முற்றுரிமை ஆதாயமின்றிச் செயற்படுவது, குறைந்த மொத்தப் போக்குவரத்துச் செலவில் பேரளவு உற்பத்தி செய்தல், பன்முகப்பட்ட அங்காடி ஆகிய எடுகோள்களின் அடிப்படையில் பொதுச் சம நிலைக் கோட்பாட்டை விளக்குவது செயல்முறைக்குப் பொருந்தவில்லை. எனினும், இவை பிற்காலத்தில் தெளிவான கோட்பாடுகள் வெளிவர அடிப்படைக் கருத்துகளை வழங்கியுள்ளன.

பிற்கால இட அமைப்பு ஆய்வுகள், அங்காடி அமைப்பு, நிலம் அளிப்போரின் செலவு வளைகோடு கள், இடத்திற்கான தேவை மூன்றையும் அடிப்படை யாகக் கொண்டு வெளிவந்தன. இடங்களை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றின் விலையை வரையறை செய்வதற்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. சான் தின் பெர்சன் (John Tinbergen), கெச்.சி.பாசு (H.C. Bose) ஆகிய இருவரும் 1962- இல் ஆதாயத்தை விடச் செலவு குறைக்கப்படவேண்டும் என்னும் உயரும் அடுக்குப் பொதுச் சமநிலைக் (Hierarchical general equalibrium) கோட்பாட்டை வெளியிட்டனர். இக் கோட்பாட்டில் குறிப்பிட்ட வேளாண்மை சார்ந்த உழைக்கும் திறன் வாய்ந்த மக்கள்தொகை, குறிப் பிடத்தக்க தொழில்கள், தொழிற்கூடங்கள் உயர்ந்த அடுக்கு நிலையில் அமைக்கப்பட்டு நகரமயமாதல் ஆகியவை எடு கோள்களாகும். இவற்றின் உள்ளீடு கள், வெளியீடுகள் வணிக ஆதாயம், மொத்த வரு மானங்கள் ஆகியவற்றைக் கணக்கிட்டுச்செலவையும் ஆதாயத்தையும் கணக்கிட்டனர். எம்.செ.வீபர் 1972- இல் இட அமைப்பில் பரவலாகக் காணப்படும் உறுதி யற்ற காரணிகளை வலியுறுத்தி, ஆட்டத்தந்திரக் கோட்பாட்டின் (Game theory) கருத்துகளை, இத

னோடு இணைத்து ஆராய்ந்தார். நிலையற்ற சூழ்நிலை, பல எதிர் பார்ப்புகளுக்கும் ஊகங்களுக்கும் இடம் அளித்து, ஒரே இடத்தில் தொழில்களும் பொருளாதார நடவடிக்கைகளும் நடைபெற ஊக்குவித்து, நகரங்கள் வளர இடம் வகுக்கிறது.

விரைவாக நகரங்கள் வளர்ச்சியடைவதால் கடந்த 25 ஆண்டுகளாகக் குடியிருப்பு மையங்கள், நகரங்களில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. போக்குவரத்துக்காகும் கால நேரத்தையும் செலவையும் கணக்கிட்டுப் பணியாளர்கள் அலுவலகங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அருகில் குடியிருப்புகளை அமைத்துக்கொள்ள விரும்புவதால், இக் காரணிகள் நகர இட அமைப்பிலும் மதிப்பீட்டிலும் பல மாறுதல்களைக் கொண்டு வருகின்றன. இட அமைப்புக் கோட்பாடுகள், அங்காடிகள் பரவலாக அமைக்கப் படுவதற்கும் தொழிற்சாலைகள், பொருளாதார நடவடிக்கைகளின் இட அமைப்பைத் தெரிந்தெடுப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன. தொழில் இயக்குநர்களுக்கும் வட்டாரப் பொருளாதாரத் திட்டவல்லுநர்களுக்கும் இட அமைப்பின் ஆழ்ந்த கூறுகள் வழிகாட்டிகளாகும். வளரும் நாடுகளுக்குப் பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தவும் மக்கள் தொகையைப் பங்கீடு செய்யவும் புதிய தொழிற்சாலைகள், நகரங்கள் அமைக்கவும் இட அமைப்புக் கோட்பாடுகள் உதவுகின்றன. எனினும் இட அமைப்புக் கோட்பாட்டில் பல ஆய்வுகள் தேவைப் படுகின்றன. பெரும்பாலான கோட்பாடுகள் கருத்தியல் அளவிலும் நிலையான சமநிலை அடிப்படையிலும் மட்டுமே ஆராயப்பட்டுள்ளன. இவை நடைமுறைக்குப் பொருந்தாதவை. வட்டாரத்தின், நீண்ட காலப் போக்கின் விளைவுகளாக (Long term trends) மக்களின் இடப்பெயர்வு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நிகழ்வது (to and fro) எவ்வாறு பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது என்பது நகரியல் ஆய்விற்கும் இட அமைப்பு முடிவுகளுக்கும் சிறப்பான தேவையாகும். பா.செ.

**இடக்கை** ஒரு பழமையான தோற்கருவி ஆகும். இது மரத்தினால் ஆன இரண்டு இடைப் பகுதிகளைக் கொண்டது. இப்பகுதிகள் உறுதியான கயிறுகளினால் இழுத்துக் கட்டப்பட்டு இருக்கும். இக்கயிறுகளைக் கெட்டியாக இழுத்துப் பாகங்களில் இருக்கும் தோற் பகுதியின்மீது சிறு குச்சியின் உதவியினால் தட்டி ஒலி எழுப்ப முடியும். கயிறுகளை மென்மையாக அல்லது வலிமையாக இழுப்பதன் மூலம் ஒலி வேறுபாடுகளை இந்த இசைக் கருவியில் கொண்டு வர முடியும். இக்கருவி பெரும்பாலும் கேரள நாட்டில் உள்ள கோவில்களில் பழக்கத்தில் இருந்து வருகிறது. கேரள நாட்டில் இது இடக்கா என்னும் பெயரினால் குறிப்பிடப்படுகிறது.

**இடக்கைப் பழக்கம்** என்பது மனிதர்களிடம் காணப்படும் ஓர் இயக்க வேறுபாட்டினைக் குறிக்கும். மனிதர்கள் பெரும்பாலும் வலக்கையினாலேயே எல்லாச் செயல்களையும் செய்கின்றனர். மிகத் தொன்மையான காலத்தைச் சேர்ந்த குகைச் சித்திரங்களும் ஓவியங்களும், உணவுக்காகக் கொல்லப்பட்ட மிருகங்களின் மண்டை ஓடுகளும் ஆதிமனிதன் வலக்கையையே பயன்படுத்தி வந்தான் என்பதைத் தெரிவிக்கின்றன. மிகப் பழைய காலம் முதற்கொண்டே இடக்கைப் பழக்கம் மக்களால் ஏற்கப்படவில்லை.

மக்களுள் சிலர் முழுமையாக வலக்கையினையே பயன்படுத்துபவராகவும் வேறு சிலர் முழுமையாக இடக்கையினையே பயன்படுத்துபவராகவும் இன்னும் சிலர் இருகைகளையும் பயன்படுத்தும் திறன் பெற்றவராகவும் (Ambodex lerous) உள்ளனர். ஆனெட்டு (Anneett) என்பவர் 2,000 பேர்களிடம் அவர்கள் எந்தக் கையைச் சில குறிப்பிட்ட வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்பதைப் பின்வருமாறு பட்டியல் படுத்தினார்.

இடக்கைப் பழக்கத்தினரை இரண்டு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். 1. இடக்கைப் பழக்கத்தினரின் பரம்பரையில் தோன்றியோர். 2. பரம்பரைக் காரணமின்றித் தாம் மட்டும் இடக்கைப் பழக்கத்தினராக இருப்போர். இந்தப் பாகுபாடு மிகவும் முக்கியமானது. இரண்டாம் வகைப்பட்டோரின் பெருமூளை அமைப்பு வலக்கைப் பழக்கத்தில் உள்ளோர் பெருமூளை அமைப்பினைப் போன்றே உள்ளது. ஆனால், முதல்வகைப்பட்டோர் பெருமூளையின் இரு பக்கங்களிலும் சொல்திறன், செயல்திறன் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட பரப்புகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாட்டினை இகேன் (Hecaen), சாகுட்டு (Saugeut) ஆகிய இரு நரம்பியல் சோதனையாளர்கள், இடக்கைப் பழக்கத்தினரைக் கொண்டு நடத்திய சோதனைகளின் வழியே அறிந்தனர். இச்சோதனையில் வலக்கைப் பழக்கத்தினரும் பங்கு கொண்டனர். பெருமூளையின் வலப்புறம் அல்லது இடப்புறத்தில் காயம் அடைந்தவர்கள் மட்டுமே இச்சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களின் வெவ்வேறு வகைப்பட்ட 50 நடத்தைகள் ஆய்வு செய்யப்பட்டன. வலக்கைப் பழக்கத்தினருக்குக் கொடுக்கப்பட்ட 50 சோதனைகளுள் 47-இல் வெவ்வேறு சோதனை முடிவுகள் கிடைத்தன. பரம்பரைத் தொடர்பிலாத இடக்கைப் பழக்கத்தினருக்கு ஒன்றுபோலச் சோதனை முடிவுகள்

| | இடக்கை | வலக்கை | இரண்டு கைகளுள் எந்தக் கையும் |
|---|---|---|---|
| சீட்டு, நுழைவுச் சீட்டு அனுமதிச் சீட்டு போன்றவற்றை எடுத்தல் | 17.02% | 79.66% | 3.32% |
| குடுவைகளைத் திறத்தல் | 16.50% | 66.01% | 17.49% |
| மண்வெட்டியால் வேலை செய்தல் | 13.53% | 74.58% | 11.89% |
| பெருக்குதல் (துப்புரவு செய்தல்) | 13.49% | 69.62% | 16.89% |
| ஊசியில் நூல் கோத்தல் | 13.10% | 77.16% | 9.74% |
| எழுதுதல் | 10.60% | 89.06% | 0.34% |
| நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்தல் | 9.46% | 81.31% | 8.74% |
| பந்து எறிதல் | 9.44% | 89.47% | 1.29% |
| சுத்தியால் அடித்தல் | 9.22% | 88.24% | 2.54% |
| பல்துரிசு பயன்படுத்தல் | 9.18% | 82.33% | 8.49% |
| விளையாட்டு மட்டை பிடித்தல் | 8.10% | 89.31% | 2.59% |
| கத்தரிக்கோல் பிடித்தல் | 6.20% | 86.99% | 6.81% |

விடையளித்தோரின் மொத்த எண்ணிக்கை 2321.

கிடைத்தன. பரம்பரைத் தொடர்புடைய இடக்கைப் பழக்கத்தினரிடமிருந்து 50 சோதனைகளுள் நான்கு சோதனைகளுக்கு வேறுபட்ட முடிவுகள் கிடைத்தன. மூளையின் இரு பக்கங்களுள் எதில் ஊறு ஏற்பட்டாலும் அது நடத்தையைப் பாதிக்கின்றது. பரம்பரைத் தொடர்புடைய இடக்கைப் பழக்கத்தினரிடம் பெருமூளைச் சமநிலையின்மை குறைவாகவே காணப்பட்டது. இடக்கைப் பழக்கத்தினர், வலக்கைப் பழக்கத்தினரைக் காட்டிலும் ஆற்றலில் குறைந்தோராகக் காணப்படுதலில்லை. ஆனால், நரம்பியல் கோளாறுகளும் உளக் கோளாறுகளுமுடைய குழந்தைகளுள் பெரும்பான்மையானவர்கள், இடக்கைப் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். மேலும் பெருமூளையின் இடப்பக்கம் குறைபாடுகளுடைய குழந்தை, வலக்கைப் பழக்கத்திலிருந்து இடக்கையினனாக மாறுவான். ஆனால், வலப்பக்கம் குறைபாடு உடையவர்கள் வலக்கைப் பக்கத்தினராக மாறுதலில்லை. பெருமூளையின் இடப்பக்கம் உடலின் வலப்புற இயக்கங்களையும், வலப்பக்கம் உடலின் இடப்புற இயக்கங்களையும் கட்டுப்படுத்துகின்றன.

காலின்சு (Collins) என்பவர் எலிகளைக் கொண்டு நிகழ்த்திய சோதனைகளின் பயனாகச் சில முடிவுகளைக் கண்டறிந்தார். எலிகள் தம் இடக்கால் வலக்கால் இரண்டையும் பயன்படுத்தித் தத்தம் கூண்டுகளின் சுவர்களையடுத்து வைக்கப்பட்டிருந்த குழாயில் இருக்கும் உணவுத் துண்டுகளை அடையுமாறு சோதனை அமைக்கப்பட்டது. அவை இடக்கால் அல்லது வலக்கால்களைப் பயன்படுத்துதல் அவற்றின் சூழமைவுக்கு ஏற்ப அமைந்தது. இச்சோதனையின் முடிவாகக் காலின்சு இடக்கை அல்லது வலக்கைப் பழக்கம் சூழ்நிலைகளினாலேயே ஏற்படுகிறது என்று கூறினார். இம்முடிவை அறிவியல் வல்லுநர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

பிறப்புக் கால உளத்தாக்குதல்கள் குழந்தையின் பெருமூளையைப் பாதிக்கக் கூடியவை. இடக்கைப் பழக்கமுடைய குழந்தைகளுள் பெரும்பாலான குழந்தைகள் பிறப்புக் கால உளத்தாக்குதல்களுக்கு (Birth Trauma) உட்பட்டவர்கள் என்று பகன் (Bakan) என்னும் நரம்பியல் ஆய்வாளர் கூறுகிறார்.

ஆஞ்சியோகிராம் (Angiogram) எனப்படும் கருவியினால் மூளையின் உள் அமைப்புகளைக் கண்டுபிடித்து, இடக்கைப் பழக்கத்திற்கும் மூளைப் பகுதிகளில் காணப்படக்கூடிய சமநிலையின்மைக்கும்

தொடர்புகள் உள்ளனவா என்பது ஆராயப்பட்டது. இத்தகைய ஆராய்ச்சிகள் மக்ரே (McRae) என்பவரால் செய்யப்பட்டன. வலக்கைப் பழக்கத்தினரின் மூளையின் வலப்பக்கச் சிறுகிளைகள் (Occipital Horns) பக்கவாட்டு இரத்தக் குழாய்கள் ஆகியவை இடப்பக்கத்திலிருப்பனவற்றைக் காட்டிலும் ஐந்து பங்கு நீளமானவையாக இருக்கின்றன. இடக்கைப் பழக்கத்தினரின் மூளையில் இந்த அமைப்பு நேர் மாறாக இருக்கிறது.

மரபணுக்களின் அமைப்பில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக இடக்கைப் பழக்கம் ஏற்படுகிறது என்று பலர் கருதுகின்றனர்.

**இடங்கழி நாயனார்** அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் அடியார் (சங்கம்) வழிபாடு செய்து திருவடிப் பேறு எய்தினார். கோனாட்டினைச் சேர்ந்த கொடும்பாளூரில், இருக்குவேளிர் என்னும் குறுநில மன்னர் மரபினர் ஆண்டுவந்தனர். இன்று இக்கொடும்பாளூர், திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறையிலிருந்து புதுக்கோட்டை செல்லும் வழியில் ஒரு சிற்றூராக உள்ளது. இருக்குவேளிர் குடும்பத்தில் வந்த ஆதித்த சோழன் மரபில் தோன்றியவர் இடங்கழியார். இவர் சிவநெறி தவறாது ஒழுகி, சிவன்கோயில்கள் அனைத்திலும் வழிபாடு, அருச்சனை முதலியன முட்டுப்படாது சிவாகம முறைப்படி நடப்பதற்கு வேண்டியவற்றைச் செய்து காத்து வந்தார். அந்நாளில் சிவனடியார்க்கு நாளும் உணவு படைக்கும் அடியாரொருவர் உணவு சமைத்தற்குப் பொருளில்லாமையால் அரசப் பண்டாரத்தில் யாரும் அறியாது புகுந்து நெல்லினை எடுத்த போது, காவலரால் பிடிக்கப்பெற்று இடங்கழியார் முன் நிறுத்தப் பெற்றார். சிவனடியார்களுக்கு உணவு படைப்பதற்காக இச்செயலைத் தாம் செய்ததாக அவ்வன்பர் கூறக்கேட்டு இடங்கழியார் உண்மை உணர்ந்து, அவர்பால் இரக்கமும் அன்பும் கொண்டு அவரை விடுதலை செய்தார். மேலும், அவ்வடியார் செயலால் மெய்ஞ்ஞானம் மீதூரப் பெற்று, 'இவர்தாம் நமக்கு உண்மையான பண்டாரம் (சேமிப்புக் கருவூலம்)' எனக் கூறித் தம்மிடமிருந்த நெல் பண்டாரத்தையும் ஏனைய நிதிப் பண்டாரத்தையும் திறந்துவிட்டு, 'சிவனடியார் யாவரும் வந்து முகந்து செல்வாராக' என்று பறையறையுமாறு ஆணையிட்டார். இவ்வாறு, பல காலம் தம் அரசக் கருவூலங்களைச் சிவனடியார் அனைவரும் முகந்துண்டு வாழுமாறு செய்தும், நாட்டில் எங்கும் திருநீற்றின் நெறி தழைக்கச் செய்தும் விளங்கிய இடங்கழியார், இறுதியில் சிவபெருமான் திருவடி நீழல் எய்தி இன்புற்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை, 'மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் அடியேன்' என்று போற்றியுள்ளார். நம்பியாண்டார் நம்பிகள் இவரை, 'கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன், திங்கட்சடையார் தமரது என் செல்வம் எனப் பறைபோக்கு எங்கட்கிறைவன் இருக்குவேளிர் மன் இடங்கழியே' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார். இடங்கழிநாயனார் வீடுபேறுற்ற நாள் ஐப்பசித் திங்கள் கார்த்திகையாகும்.

**இடங்கை-வலங்கை** என்ற சாதியினர் தென்னிந்தியாவில் இடைக்காலத்தில் வாழ்ந்த மக்கள். இவர்களைப் பற்றிய குறிப்புச் சங்க நூல்களில் காணப்படவில்லை. ஆனால், இடைக்காலத் தென்னிந்தியச் சமுதாயத்தில் வலங்கைச் சாதிகள் 98 இடங்கைச் சாதிகள் 98 இருந்தன என்றும், அவற்றுள் வலங்கைச் சாதிகளே இடங்கைச் சாதிகளை விட உயர்ந்தவை என்றும் கருதப்பட்டன. அவ்விரு வகைச் சாதியினரும், தத்தமக்கே உரியவை எனப் பல சிறப்புரிமைகளைக் கொண்டாடினர். ஒரு பிரிவினர்க்குரிய சலுகைகளில் மற்றொரு பிரிவினர் தவறித் தலையிட்டுவிட்டால், உடனே அவ்வகுப்பாரிடையே சண்டையும் சச்சரவும் நிகழும். அவற்றைத் தீர்த்து வைக்க மன்னர்களே சில சமயம் வரவேண்டியிருந்தது. அவ்வப்போது ஏற்படும் பொதுச் சிக்கல்களைத் தீர்க்க, அவ்விரு வகுப்பாரும் தமக்குள் உடன்பாடுகளைச் செய்து கொள்வதும் உண்டு.

பொதுவாக, வலங்கையர் இடங்கையரை விட மிகுதியான சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தனர். நிலபுலங்களுக்குச் சொந்தக்காரராயும், நிலையாக ஓரிடத்தில் வாழ்ந்து அரசர்களின் ஆதரவைப் பெற்றவராயும் வாழ்ந்த பார்ப்பனரும் வேளாளரும், தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் வலங்கையர் என்று கூறிக் கொண்டனர். ஆனால், கைவினைத் தொழிலில் ஈடுபட்டு, இடம்விட்டு இடம் பெயர்ந்த கம்மாளர்களும் வணிகர்களும் பல்வேறு சிறுதொழிலாளிகளும் இடங்கையரெனச் சொல்லப்பட்டனர். சலுகைகள் அவர்களுக்குக் குறைவாகவே வழங்கப்பட்டன. இதை எதிர்த்து அத்தொழிலாளர் தாங்களே சமுதாயத்தில் மிகுதியாகச் சிறப்புரிமைகள் பெறத் தகுதியுடையவர்கள் எனக் கூறிக் கொண்டு அவ்வப்போது சச்சரவுகளில் ஈடுபட்டனர்.

இவ்வாறு இடைக்காலச் சமுதாயத்தில், தம் உரிமைகள் மறுக்கப்படுவதை மிக வன்மையாக எதிர்த்தவர்கள் கம்மாளர்களே. தங்களது உயர்வை நிலைநாட்ட அவர்கள் பல வாதங்களை எடுத்துரைத்தனர். வழிவழியாகத் தாங்களே சோழ அரசர்களின் புரோகிதர்களாயிருந்ததாயும், பரிமள சோழனது ஆட்சிக்காலத்தில் தென்னாடு போந்த

வேதவியாசர் என்னும் வேதியர், அதைக் கண்டு பொறாமைகொண்டு, பரிமள சோழனைக் கொன்று, அவன் கூத்தியர் மகன் ஒருவனை அரியணையிலமர்த்தியதாயும், அப்புதிய அரசன் தன்னை ஆதரித்த வேதியரையும் அவர்களைச் சார்ந்தோரையும் இடங்கையரென்று அறிவித்துவிட்டதாயும் கூறினர். முதலில் இருந்த வேதங்கள் ஐந்து என்றும், அவற்றுள் ஒன்று தமக்கு மட்டுமே உரியதென்றும், தமக்குப் போட்டியாகப் புரோகிதத் தொழிலுக்குள் புகுந்த வியாசர், அவ்வேதத்தை அழித்துவிட்டாரென்றும் அவர்கள் கூறினர். விசுவகர்மா என்ற பிரமனின் புதல்வர்கள் தாங்களே என்றும், பிரமனின் முகத்திலிருந்து தோன்றிய 'பிராமணர்கள்' தங்களை விடத் தாழ்ந்தவர்களே என்றும் கூறிக்கொண்ட அவர்கள், பூணூலை அணிந்து கொண்டு, ஆசாரி (ஆசார்யா) என்ற பட்டத்தையும் மேற்கொண்டனர். தம் வீட்டுச் சடங்குகளை முடிக்கப் பார்ப்பனர்களை அவர்கள் அழைக்க மறுத்துத் தமது சாதியிலேயே புரோகிதர்களை அமர்த்திக் கொண்டனர். கம்மாளரின் இவ்வுரிமையை எதிர்த்துக் கி.பி.1814-இல் பிராமணர்கள் தொடுத்த வழக்கில் கம்மாளர்களே வெற்றிபெற்றனர். காஞ்சி காமாட்சியின் அருளைப் பெற்றவர்களென்றும், அவ்வம்மனின் இடப்பக்கத்தில் வீற்றிருக்கும் பெருமையைப் பெற்றவர்களென்றும், அதனால்தான் தாங்கள் இடங்கையரென்று சொல்லப்படுவதாயும், தங்களுக்கெனப் பல சலுகைகளைக் காமாட்சி அம்மன் ஒரு செப்புப் பட்டயத்தில் பொறித்துக் காஞ்சி கோயினுள் வைத்துள்ளதாயும் கூறினர். கம்மாளர்கள் கி.பி. 1098-ஆம் ஆண்டில் ஒரு பொய்யான செப்புப் பட்டயத்தைத் தயாரித்துக் காஞ்சி காமாட்சி கோயிலில் வைத்தனர். அதில் இடங்கையரே சமுதாயத்தில் முதலிடம் பெறத்தக்கவர் என்று கூறப்பட்டுப் பல சிறப்புரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒரு சமயம் காமாட்சி அம்மனின் தேர் திடீரென்று நின்றுவிட்டதாயும், வலங்கையர் எவ்வளவோ முயன்றும் நகராத அத்தேரைத் தாங்கள் கேரளநாட்டுக் கம்பளத்தார் துணைகொண்டு நகர்த்திவிட்டதாயும், அதனால் தாங்களே வலங்கையரைவிட உயர்ந்தவர்களென்றும் அவர்கள் கூறிக்கொண்டனர். கோயில் எழுப்புதல், கோயிற் சிலைகளைச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டதாலேயே கம்மாளர்கள் தனிப்பட்ட சிறப்புரிமைகளைப் பெற முயன்றனர். கோயில்கள் பெருமளவில் கட்டப்பட்ட கருநாடகத்தில் அவர்கள் வலங்கையராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். கோயில்கள் ஓரளவு கட்டப்பட்ட சோழநாட்டில் அவர்கள் இடங்கையராக மதிக்கப்பட்டனர். கோயில்களே கட்டப்பெறாத கேரளாவில் அவர்கள் ஏறக்குறைய தீண்டத்தகாதவர்களாகவே கருதப்பட்டனர். கோயில் கட்டும்பணி குறையக் குறைய, அவர்கள் சோழநாட்டிலும் தீண்டத் தகாதவராக மாறினர். கம்மாளர் வீட்டில் தண்ணீர் குடிப்பது கூடத் தீட்டு எனப் பலரும் கருதலாயினர்.

சோழர்கள் காலத்தில் கம்மாளர்கள் தங்களது உயர்வை நிலைநாட்டும்படி அரசரிடம் முறையிட்டனர். அரசரது ஆணைப்படி ஆகமங்களும் புராணங்களும் ஆராயப்பட்டன. காஞ்சியிலிருந்த அன்னாரின் செப்புப் பட்டயமும் ஆராயப்பட்ட பின் அவர்கள் அநுலோமர்களாக (உயர் சாதி ஆணுக்கும் தாழ் சாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்களாக) அறிவிக்கப்பட்டு, பூணூல் அணிந்துகொள்ளும் உரிமையைப் பெற்றனர். ஆனால், மந்திர தீட்சை பெற அநுமதிக்கப்படவில்லை எனச் சோழர் காலக் கல்வெட்டொன்று கூறுகிறது. 'கோனேரின்மை கொண்டான்' என்ற மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 13-ஆம் நூற்.) பொற்கொல்லர்களுக்குச் சிறப்பு நிகழ்ச்சிகளில் மேளம் கொட்டவும், இரட்டைச் சங்கினை ஊதவும், பயணத்தின் போது மிதியடிகளை அணிந்துகொள்ளவும், தம் வீடுகளை வெள்ளையடித்துக் கொள்ளவும் உரிமைகள் வழங்கப்பட்டதாக மற்றுமொரு கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வாறு பார்ப்பனர்களாலும், வேளாளர்களாலும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்ட கம்மாளர்கள், அரசர்களின் ஆதரவைக் கொண்டு பல சிறப்புரிமைகளைச் சோழர்கள் காலத்தில் பெற்றார்களெனத் தெரிகிறது.

கரிகாற் சோழன் காலத்தில் செட்டிகள், கைக்கோள முதலிகள், வேளாளர் போன்ற வலங்கைச் சாதியினர் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்டனர் எனச் 'சோழன் பூர்வ பட்டயம்' என்ற கல்வெட்டுக் கூறுகிறது. அதில் பள்ளிகள் என்போர் காசியபமுனிவரின் யாக குண்டத்திலிருந்து தோன்றியவர்கள் என்ற கதை காணப்படுகிறது. காசியப முனிவர் தேரிலிருந்து இறங்கியபோது, இடப்பக்கமாக அவரைத் தாங்கிக் கீழிறக்கிய பள்ளிகளும் மற்றையோரும் இடங்கையரென்றும், ஏனைய சாதியார் வலங்கையரென்றும் சொல்லப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. மற்றும் 98 சாதிகள் எப்படி ஏற்பட்டன என்றும் அது விளக்குகிறது. நான்கு வருணங்கள் ஒவ்வொன்றும் நான்கு சாதிகளாயும், நான்கு சாதிகள் ஒவ்வொன்றும் ஆறு கிளைச்சாதிகளாயும் பிரிந்து, 96 சாதிகளேற்பட்டன என்றும், பறையர், பள்ளர் போன்ற தாழ்த்தப்பட்ட சாதிகள் சேர்ந்து 98 சாதிகளாயின என்றும் அது கூறுகிறது. இரு தரப்பிலும் 98 சாதிகள் எவ்வாறு தோன்றின என அது கூறவில்லை.

கரிகாற் சோழன் என்ற பட்டம் பூண்ட மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில்தான் வலங்கை, இடங்கைச் சாதிகள் பற்றிப் பலமுறை பேசப்படுகிறது. இவ்விரு வகைச் சாதிகளும் தம்முள் எழுந்த வழக்கை அவரிடம் எடுத்துச் சென்றதாயும், அப்போது அவ்வரசர் தமது வலக்கைப் புறமாகச் சில சாதியினரையும், இடக்கைப் புறமாகச் சில சாதியினரையும் நிற்க வைத்து, வலக்கைப் புறம் நின்ற சாதிகளுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கினார் என்றும், அதன்படி வலங்கைச் சாதிகள் தனிப்பட்ட கொடிகளையும், இன்னிசைக் கருவிகளைப் பயன்படுத்தும் உரிமையையும் பெற்றனர் என்றும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இக்காலத்தில் கூடப் புதுச்சேரி, காரைக்கால் போன்ற இடங்களில் தேச ஆயச் செட்டிகள் வழக்குகளை விசாரிக்கும் போது கோயில் மணியையும் மீனாட்சியம்மன் முத்திரையையும் நடுவில் வைத்து, அதன் வலப்புறம்வேளாளர், பறையர் போன்ற வலங்கைச் சாதியினரையும், இடப்புறம் கம்மாளர், சக்கிலியர், கோமுட்டிகள் போன்ற இடங்கைச் சாதியினரையும் நிற்க வைத்துத்தான் விசாரிப்பது வழக்கமாம். காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் வலங்கை, இடங்கைச் சாதியினர்க்கெனத் தனித்தனி மண்டபங்கள் இருந்தன எனத் தெரிகிறது.

இச் சாதிப்பாகுபாட்டு முறை எப்போது எந்நாட்டில் தோன்றியது என்பது திண்ணமாய்த் தெரியவில்லை. முதன்முதலாக இவர்களைப் பற்றிய குறிப்பு, கங்க மன்னன் கொங்கணிராசாவால் கி.பி. 459-இல் வெளியிடப்பட்ட செப்புப் பட்டயத்தில் காணப்படுகிறது. பின்னர் மேலைச் சாளுக்கிய மன்னன் சோமேசுவரன் காலத்தில் (கி.பி. 1043) வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டு, இடங்கை, வலங்கைச் சாதி நடனமாதர்கள், தார்வார் மாவட்டத்திலிருந்த ச்ண்டிகோயிலில் பணிபுரிந்ததாகக் கூறுகிறது. முதலாம் இராசராச சோழன் காலத்து 14 வலங்கைப் பழம் படைகள் இருந்ததாகத் தெரிகிறது. முதலாம் இராசேந்திரன் காலத்துக் காட்டூர்க் கல்வெட்டில் நானாதேசிகன் என்னும் இடங்கைச் சாதியார், தம்மிடம் வருத்தி வரிவசூல் செய்; அரசு அதிகாரிகளுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாதென்று தம்முள் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்து, இவ்விரு வகையாரிடையே ஏற்பட்ட சச்சரவின் விளைவாக, இராசமகேந்திர சதுர்வேதி மங்கலத்திலிருந்த ஒரு கோயிலின் கருவூலம் கொள்ளையடிக்கப்பட்டதாயும், அதனால் அக்கோயிலுக்கு நட்ட ஈடாகப் பொருள் வழங்கப்பட்டதாயும் தெரிகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி.1218) உற்றத்தூரை சேர்ந்த 98 இடங்கைச் சாதியினரும் கோயில் மண்டபத்தில் கூடி ஒற்றுமையாகச் செயற்படத் தம்முள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இதேபோன்று மூன்றாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1277) இடங்கைச் சாதியினர் நன்மை தீமைகளில் ஒன்றாக நின்று செயலாற்ற வேண்டித் தம்முள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டதாகத் தெரிகிறது. பேரூர்க் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு விக்கிரம சோழன் காலத்துக் கொங்கு நாட்டு மன்னன் ஒருவன், இடங்கை-நாயகர் என்னும் தெய்வத்துக்கு நன்கொடை வழங்கியதாகக் கூறுகிறது. வீரபாண்டிய தேவன் காலத்தில் (கி.பி.1376) பறையர்கள் என்னும் வலங்கைச் சாதியார், சில உரிமைகளைப் பெறவேண்டி 24 கிராம மக்களோடு போரிட்டுக் கலகம் செய்ததாகவும், கங்கையரையன் என்ற தளபதி வந்து வழக்கைத் தீர்த்தானென்றும், அதன்படி பறையர்கள் ஏனைய சாதியாருக்குப் பறையடிக்க வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக ஒரு கோழியையும் ஒரு பதக்கு நெல்லையும் கூலியாகப் பெறவேண்டுமென்றும், நிலத்தில் வேலை செய்வதற்காக ஒரு கலம் நெல் பெறவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தானென்றும் அறியப்படுகிறது. சீவில்லிபுத்தூரில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின்படி பள்ளர்கள் என்னும் தேவேந்திர குலத்தவர்களுக்கும், பறையர்களுக்கும் அவரவர் உரிமை பற்றி ஒரு சச்சரவு ஏற்பட்டது (கி.பி. 1665). அவ்வழக்கை விசாரித்த அரசர், பள்ளர்களுக்குப் பல சலுகைகளையும், பறையர்களுக்கு ஒரு சில சலுகைகளையுமே அளித்தார் என்றும் தெரிகிறது. பள்ளர்கள் வெள்ளைக் குதிரை, வெள்ளைப் பாவாடை, பகலில் பந்தம் பிடித்தல், 16 தூண்கொண்ட பந்தல் போட்டுக்கொளல் போன்ற பல சலுகைகளைப் பெற்றனர். பறையருக்கும் பள்ளருக்கும் இச்சலுகைகள் பற்றி அடிக்கடி சண்டை வருவதுண்டு.

விசயநகர மன்னன் இராமராயன் காலத்தில் இடங்கை வகுப்பைச் சேர்ந்த தனிப்புலித் தேவன், வலங்கை வகுப்பைச் சேர்ந்த ஒருக்கைப் புலியுடையானை அடக்கி அமைதியை நிலைநாட்டியதற்காக வீரப்ப நாயக்கன் என்ற தளபதியால் பல சிறப்புரிமைகளைப் பெற்றான் என அறியப்படுகிறது. காவிரியின் வடகரையில் வாழ்ந்த இவ்விருவகைச் சாதியாரின் போராட்டம் கி.பி. 1440-இல் உச்சநிலையை அடைந்ததென்றும், அதன்பின் அவர்கள் ஒரு கோயில் மண்டபத்தில் கூடித் தங்கள் பூசலைச் சமாதான முறையில் தீர்த்துக்கொண்டனரென்றும் கல்வெட்டொன்று கூறுகிறது. வெள்ளாளரும் பாஞ்சால

ரும் (ஐந்து கம்மாளர்) சதாசிவராயர் காலத்தில் (கி.பி. 1555) தம் வழக்குகளைத் தீர்த்துக்கொண்டன ரென்றும் மற்றுமொரு கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு போரிட்டுக் கொண்ட இச்சாதியார், சில சமயங்களில் ஒன்று சேர்ந்து தம்முள் சில உடன் பாடுகளும் செய்துகொண்டனர். விசயராசேந்திர-தேவன் காலத்தில் (கி.பி.16-ஆம் நூற்றாண்டு) நிலக் கிழார்களான வேளாளரையும் பார்ப்பனரையும் எதிர்க்க, வலுதிலம்பட்டி உசாவடியைச் சேர்ந்த வலங்கை இடங்கைச் சாதியினர், தம்முள் ஓர் ஒப்பந் தம் செய்துகொண்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. பார்ப்பனர், வேளாளர், சீவிதக்காரர் (அரசு அதி காரிகள்) ஆகியோரிடம் கணக்கர்களாக வேலை பார்க்கக் கூடாதென்றும், நியாயமற்ற முறையில் வசூலிக்கப்படும் வரியைச் செலுத்தக் கூடாதென்றும், அவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண் டனர். அரசு காணியாளருக்கு எதிராக இதேபோன்று இருசாதிப் பிரிவினரும் பிரதாபதேவராயர் காலத் தில் தம்முள் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன ரெனக் கி.பி. 1429-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல் வெட்டு ஒன்று கூறுகிறது. அதே ஆண்டில் உழவர் களிடமிருந்து எவ்வளவு பணத்தை நியாயமாக அரசு அதிகாரிகள் வசூலிக்கலாம் என்பதை இரு வகைச் சாதியாரும் சேர்ந்து முடிவுசெய்தனரெனத் தெரிகிறது. இவ்விருவகைச் சாதியாரும் கி.பி. 1446-இல் வரிச்சுமையைத் தாங்கமாட்டாமல் வேறிடங் களுக்கு ஓடத்தொடங்கினர் என்றும், அதைக் கேட்ட மன்னர், நாகராச உடையார் என்பவரை அனுப்பி, வரிகளை நீக்கி, அவர்களை மீண்டும் ஊர் திரும்பு மாறு செய்தார் என்றும் அறியப்படுகிறது.

இடைக்காலத்தே கொடிகட்டிப் பறந்த இவ் வலங்கை இடங்கைச் சாதிப் பூசல்கள், ஆங்கில ஆட்சி வந்த பின்னரும் நின்றபாடில்லை. சக்கிலிகள் என்ற இடங்கையினர், சிவப்புப் பூவைத் தலைப்பா கையில் அணிந்ததை எதிர்த்து, வலங்கையரான பறையர்கள் அவர்களுடன் போரிட்டதாகக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பே தூபே (Abbe Duboui) என்ற பாதிரியார் கூறுகிறார். போர் நடக்கும்போது சக்கிலிப் பெண்கள் வலங்கை யரோடு சேர்ந்துகொண்டதையும் அவர் வியப் போடு குறிப்பிடுகிறார். விழாக்காலங்களில் சந் தனம், தாம்பூலம் முதலியன யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது பற்றியும், மாரியம்மன் திருவிழா வில் யார் முதலில் வழிபாடு செய்வது, யார் தேர் வடம் பிடிப்பது என்பன பற்றியும் சேலம் மாவட் டத்தில் பறையரும் சக்கிலியரும் அடிக்கடி சண்டை யிட்டுக் கொண்டதாகச் சேலம் மாவட்ட அரசிதழ் (Gazetteer) கூறுகிறது. மதுரை மாவட்டத்திலும் இப்படியே பல்லக்கில் சவாரி செய்தல், குதிரை மீது சவாரி செய்தல், துத்தேரி ஊதல், குறிப்பிட்ட கொடியைப் பிடித்தல், சிலைகளை எடுத்தல் போன்ற சில்லரை உரிமைகளுக்காக இடங்கையரும் வலங்கையரும் போரிட்டதாக மதுரைக் கையேடு (Madura Manual) கூறுகிறது.

சென்னையில் ஆரன்பேக்கர் (Aaron Baker) ஆளுநராயிருந்த போதும் (கி.பி. 1652), வில்லியம் பிட்டு (William Pitt) ஆளுநராயிருந்த போதும், இடங்கை, வலங்கைச் சாதிகளுக்கிடையே பெரிய மோதல்கள் ஏற்பட்டு, நாட்கணக்கில் அவை நீடித்த தாகத் தர்சடன் (Thurston) என்ற அறிஞர் கூறு கிறார். ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள், மற்றொரு வகுப்பைச் சேர்ந்தவர்களது திருமண ஊர்வலம் தங்களுடைய வீதிகளில் செல்லக்கூடாது எனத் தடுத் ததால் ஏற்பட்டதே இக்கலவரமாகும். இறுதியில் ஆளுநர் பிட்டின் தலையீட்டால்தான் அது ஓய்ந்தது. இரு வகுப்பினரையும் சேர்ந்த பன்னிரண்டு தலை வர்களை அவர் வரவழைத்து, ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டி வைத்து, தமக்குள் ஓர் ஒப்பந்தத் துக்கு வரும்வரை வெளியே விடவில்லை. இறுதியில் சென்னையின் மேற்குப் பகுதியான பெத்த நாயக் கன் பேட்டையில் வலங்கைச் சாதியினரும், கிழக்குப் பகுதியான முத்தியால் பேட்டையில் இடங்கைச் சாதியினரும் குடியேற வேண்டுமென அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

சென்னைக் கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூலகத்தில் இடங்கை -வலங்கைச் சாதியார் வர லாறு, வலங்கைச் சாதி வரலாறு என்ற இரு தமிழ் கைப்பிரதிகள் உள்ளன. அவை கி.பி. 1792-ஆம் ஆண்டில் எழுதப்பெற்றவை. வலங்கை, இடங்கைச் சாதி உரிமைகள், சச்சரவுகள் பற்றி விரிவாக அவற் றில் கூறப்பட்டுள்ளன. வலங்கை என்பது வேளாள ரையும், அவர்களைச் சார்ந்தோரையும் குறிக்கும் என்றும், இடங்கை என்பது கம்மாளர்களையும், அவர் களைச் சார்ந்தோரனைவரையும் குறிக்கும் என்றும் அச்சுவடி திட்டவட்டமாகக் கூறுகிறது. மேலும், யார் யார் அரண்மனையில் செல்வாக்குப் பெற்றவர் களாகவும், சமுதாயத்தில் வல்லவர்களாயுமிருந்த னரோ, அவர்களெல்லாம் வலங்கை வகுப்பினராகக் கருதப்பட்டனர் என்றும் அது கூறுகிறது. கருடக் கொடி யாருக்குரியது என்பது பற்றிச்சைவப் பார்ப் னர்களுக்கும், வைணவப் பார்ப்பனர்களுக்குமிடையே ஒரு வழக்கு ஏற்பட்டது என்றும், விக்கிரம சோழ-தேவர் என்ற மன்னர் அதில் தலையிட்டுக் காஞ்சி புரத்துச் செப்புப் பட்டயத்தில் கூறியிருந்தபடி கருடக் கொடி இடங்கையரான சைவப் பார்ப்பனருக்கே உரிய தெனத் தீர்ப்புக் கூறினர்ரெனவும் அறியப்படுகிறது.

இதில் வைணவப் பார்ப்பனர்கள்,சாணார்(கள் எடுப்பவர்), சாலியர் (நெய்தல் தொழில் செய்வோர்), கோமுட்டிகள் (வணிகர்), வேளாளர் (நிலக்கிழார்), பறையர் (உழுதொழில் செய்வோர்), கம்மாளர்கள் (கைவினைஞர்கள்), சக்கிலிகள் (தோல் வினைஞர்கள்) ஆகியோர் இடங்கையரெனவும் பேசப்படுகின்றனர். நால் வருண முறைக்கு மாறாக, உயர்சாதிப் பார்ப்பனரும், தாழ்ந்தசாதிப் பறையர், பள்ளர், சக்கிலிகள் போன்றோரும் ஒரே வகுப்பில் இடம் பெற்றிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

தம்மோடு சமத்துவம் கொண்டாடிய கம்மாளரை அடக்க வேண்டியே பார்ப்பனர்களும், வேளாளரும், பறையரை வலங்கை மாற்றாரென (நண்பர்கள்) ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் அரசபதவியில் இருந்த நந்தன் என்ற பறையனையும், அவன் உறவினரையும் வேளாளர், கம்மாளர் உதவியுடன் கல் பந்தல் போட்டுக் கொன்று விட்டதாகப் பறையர் நம்பினர். எனவே, கம்மாளர் வலங்கையருக்குரிய வெள்ளைக் குதிரை, வெண்குடை, வெண்பாவாடை, பல்லக்கு இவற்றைப் பட்டினப்பிரவேசத்தில் பயன்படுத்தியபோதெல்லாம் பறையர் பெரிதும் கூக்குரலிட்டு அவரைத் தடுத்தனர். கம்மாளரைப் போன்றே வள்ளுவர்களும் பூணூல் அணிந்துகொண்டு பஞ்சாங்கம் படித்து, பார்ப்பனரோடு போட்டி போட்டனர். ஆனால், அவர் தம் முயற்சி பலிக்கவில்லை. வலங்கைப் பறையர்க்கும், இடங்கைப் பள்ளர், சக்கிலியர் போன்றோர்க்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இவ்வாறு, சமுதாயத்தில் பல சூழ்நிலைகளால் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்ட இடங்கைச் சாதிகள், தமது நிலையினை உயர்த்திக்கொள்ளவும், சில சிறப்புரிமைகளைப் பெறவும், வலங்கைச் சாதிகளோடு எப்போதும் போரிடுவதையும், வலங்கைச் சாதிகள் தம் நிலையைக் காத்துக்கொள்ள ஓயாது பாடுபடுவதையும் இடைக்காலத் தென்னிந்திய வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. கி.இர.அ.

துணை நூல்கள்:

**Mahalingam, T.V.**, Administration and Social life under Vijayanagar, University of Madras Madras, 1940.

**Nilakanta Sastri, K.A.**, The Colas, University of Madras, Madras, 1984.

**Saletore, B.A.**, Social and Political Life in the Vijayanagar Empire, Madras, 1934.


**இடத்திறன் சோதனை:** இடத்திறன் என்பது, பொருள்களைக் கண்டவுடன் அவற்றின் பரிமாணங்களை உணர்ந்து கொள்ளும் திறனைக் குறிக்கும். எத்தகைய பொருள்கள் செய்யப்பட்டால் அவை கவனத்தை ஈர்ப்பனவாக அமையும் அல்லது கவர்ச்சியான தோற்றமளிக்கும் என்பது போன்ற அறிதல் திறன்களும், பொருள்கள் எந்த முறையில் வைக்கப்பட்டால் குறைவான இடத்தை நிரப்பும் அல்லது மிகுதியான பொருள்கள் இருப்பன போன்ற உணர்வினைத் தரும் என்பது பற்றிய அறிவும் இடத்திறன் சோதனை போன்ற சில குறிப்பிட்ட பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு இன்றியமையாதனவாகும். வேறு சில தொழில்களுக்குச் சில பொருள்களைச் சுழல வைத்தால் அவை எத்தகைய தோற்றமளிக்கும் என்பது பற்றிய அறிதிறன் தேவைப்படுகிறது. இவற்றைச் செய்து பார்க்காமல் பார்வை வழி உளத்திறன் உதவியால் அறிதல் இடத்திறன் (Spatial Ability) எனப்படும். எழுத்தர் பணியில் குறிப்பிட்ட பக்கத்தில் எவ்வாறு வரிகளை அமைத்து எழுதுதல் வேண்டும் என்ற அறிவுக்கு இடத்திறன் தேவைப்படுகிறது. இதைப்போன்று உடை அமைப்பாளருக்கும் எத்தகைய உடை அமைப்புகள் எவ்வாறு தோற்றமளிக்கும், அவை எவ்வாறு மக்களால் புலனுணரப்படும் என்னும் அறிவு தேவைப்படுகிறது. கட்டடக்கலை வல்லுநர், எந்திர அச்சுச் செய்பவர், கட்டட அழகுக் கலைஞர் போன்றவர்களுக்கு இடத்திறன் அறிவு இன்றியமையாததாகும். இத்தகைய தொழில்களுக்கு வல்லுநரைத் தேர்ந்தெடுக்கும் பொழுது சில உளவியல் சோதனைகளின் மூலம் விண்ணப்பித்துள்ளவர்களிடம் இடத்திறன் அல்லது இடத்தொடர்பு நாட்டம் (Spatial Relationship) அமைந்துள்ளதா என்பதைக் கண்டுபிடிக்கலாம். வேறுபட்ட நாட்டச்சோதனைகள் (Differential Aptitude Tests) என்று குறிப்பிடப்படும் திறனறி சோதனைகளுள் (Ability Tests) இடத்திறன் சோதனை சிறப்பான இடம் பெறுகிறது. குறிப்பிட்ட பணிகளில் பல ஆண்டுகள் அனுபவம் பெற்றவருக்கு இடத்திறனறிவு ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. ஆயினும் இத்தகைய சோதனைகள், கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்குத் தம் மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு ஆகியவற்றை அவ்வப்பொழுது மதிப்பீடு செய்வதற்குப் பேருதவியாக இருக்கின்றன. இத்தகைய சோதனைகளை வயது வந்தோருக்குக் கொடுத்து, அவர்களின் இடத்திறனை மதிப்பீடு செய்வதற்காகப் பொது நாட்டச் சோதனை அடுக்கு (General Aptitude Test Battery) என்னும் உளவியல் சோதனைத் தொகுதி, அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே அமைக்கப்பட்டுள்ளது. இச்சோதனைகளின் அடிப்படையில் பல நாடுகளிலும் நாட்டச் சோதனைகளும் இடத்திறன் சோதனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சில குறிப்பிட்ட தொழில்

களுக்குப் பல்வேறு திறன்களுடன் இடத்திறனும் தேவைப்படுகிறது. அத்தகைய தொழில்களுக்குப் பொது நாட்டச் சோதனை அடுக்கு (GATB) பயன் படுத்தப்படுகிறது. வேறுபட்ட நாட்டச்சோதனையில் சொல்திறன், எழுத்துப் பிழையின்மை, இலக்கணம், எண்திறன், அனுமானத்திறன், இடத்திறன், எந்திர இயக்கம், எழுத்தர் திறன் ஆகிய திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பொதுநாட்டச் சோதனைகளில் பின்வரும் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| பொது (G) | — (சொல், இடத்தின் மூன்று பரி மாணங்கள், கணித அனுமானம் ஆகிய திறன்களை ஒருங்கே மதிப்பீடு செய்வதற்கான சோதனை) |
| சொல் (V) | — (VERBAL) சொல் தொகுதி |
| எண்மானம் (N) | — (NUMERICAL) (கணித்தல், கணித அனுமானம்) |
| இடம் (S) | — முப்பரிமாணங்கள் (Three Dimensional Space) |
| உருப்புலன் காட்சி (P) | — கருவிகளையும் உதிரிகளையும் இடத்தொடு பொருத்துதல் |
| எழுத்தர் புலன்காட்சி (Q) | — பெயர் ஒப்புமை காணல் |
| இயக்க ஒருங் கமைவு (K) | — குறியிடுதல் |
| விரல் திறன் (F) | — உதிரிகளைச் சேர்த்தல், பிரித்தல் |
| வேலைத்திறன் (M) | — வைத்தல்–திருப்புதல் |

இச்சோதனைகளுள் இடத்திறன் சோதனைக்கு எடுத்துக்காட்டு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள் ளது.

இடத் தொடர்பு.




இடத்தொடர்பு நாட்டத்தை மதிப்பீடு செய் வதற்கு ஓ' கானரின் வளைவுக் கட்டைச் சோதனை யின் (O' Connor Wiggly Block Test) அடிப்படையில், இக்காலத்தில் தொழிலகங்களில் சோதனை அடுக்கு கள் அமைக்கப்படுகின்றன. வளைவுக்கட்டைச் சோதனையில் 9 வளைவுக்கட்டைகள் ஆட்படுநரின் முன் முறையின்றித் தாறுமாறாகப் பரப்பப்படுகின் றன. சோதனையின் முதற்பகுதி ஆட்படுநர் இக் கட்டைகளை எவ்வாறு ஒன்று சேர்க்கிறார் என்ப தைக் கவனித்து மதிப்பிடுதலாகும். சிலர் கட்டைக ளின் உருவங்களை உற்றுநோக்கிப் புலனறிந்து ஆரா யாமல் உடனே அவற்றை ஒன்று சேர்க்கத் தொடங்கு வர். ஏனெனில் இச்சோதனை மற்ற உளவியல் சோதனைகளைப் போல் குறிப்பிட்ட கால அளவிற் குள் செய்து முடிக்கப்படவேண்டிய சோதனையாகும். கட்டைகளின் அமைப்பை உற்று நோக்கி ஆராய்ந்து அவற்றை ஒன்று சேர்ப்பவர் மிகுந்த புள்ளிகளைப் (Scores) பெறுவர். ஆட்படுநர்களுள் சிலர் கட்டை களை ஒன்று சேர்க்க முயன்று தம் முயற்சி பயன ளிக்காவிடில் ஆத்திரமடைவதும் உண்டு. இத்தகைய வர்கள் அடையும் புள்ளிகள் குறையும். சோதனை யின் மதிப்பீட்டு அட்டையில் (Scoring card) பின்வரும் பகுதிகள் காணப்படும். (பக். 46 )

பொதுநாட்டச்சோதனையில் பல்வேறு நாட்டங் களுக்கான சோதனைகளுடன், இடத்தொடர்பும் (Spatial Relation) நுண்ணறிவும் ஒருங்கே மதிப்பீடு செய்யப்படும் சோதனைகளும் இடம் பெறுகின்றன, இத்தகைய சோதனைகளும் இக்காலத்தில் தொழில் நுட்ப வல்லுநர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது தொழிலகங்களில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின் றன. வெக்சுலர் (Wechsler) என்பார் அமைத்த சோதனை அடுக்குகளின் அடிப்படையில் அமைக்கப் பட்ட பின்வரும் சோதனைகளை, இத்தகைய செயற் சோதனைக்கு (Performance Test) எடுத்துக்காட் டாகக் கூறலாம்.

கட்டைக் கோலச் சோதனையில் (Block Pattern Test) பல நிறங்களைக் கொண்ட ஓரங்குலக் கனக் கட்டைகளைக் (Cubes), கொடுக்கப்பட்டுள்ள 17 வகை களான கோலங்களின் (Patterns) அமைப்பில் அடுக்க வேண்டும். முதல் 5 கோலங்கள் ஒவ்வொன்றுக்கும் 2 நிமிடங்களும் மற்றக் கோலங்கள் ஒவ்வொன்றுக் கும் 3 நிமிடங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். குறிப் பிட்ட காலத்திற்குள் குறைவான பிழைகளுடன் முடிக்கப்பட்ட ஒவ்வொரு கோலத்திற்கும் புள்ளி கள் அல்லது மதிப்பெண்கள் கொடுக்கப்படுகின் றன. இச்சோதனை நுண்ணறிவையும் இடத் தொடர்புத் திறனையும் ஒருங்கே சோதிக்கிறது.


| | முயற்சி எண் | முயற்சிகளில் காணப் பட்ட குறைகள் | காலம் |
|---|---|---|---|
| 1. | முதல்முறையாகக் கட்டையை எடுத்து அடுக்க முயற்சி செய்தல் | ஆராயாது எடுத்தல், கட்டையின் அமைப் பும் நிரப்பும் இடமும் பொருந்தாமை, ஆத்திரப்படுதல், சலிப்படைதல், எம்முறையிலேனும் அடுக்கிவிட்டால் போதும் என விரைவுபடுதல் போன்றவை. | குறிப்பிட்ட கால அளவிற் குள் சோதனை முடிக்கப் பட்டதா? அவ்வாறு முடிக்கப்படாவிடில் கால அளவிற்குள் எந்த அள விற்குச் சோதனை முடிக்கப்பட்டது? |
| 2. | இரண்டாம் ,, | | |
| 3. | மூன்றாம் ,, | | |
| 4. | நான்காம் ,, | | |
| 5. | ஐந்தாம் ,, | | |

இடத்திறனை மதிப்பீடு செய்வதற்குப் பயன் படுத்தப்படும் சோதனைகளுள், அலெக்சாந்தர் நகர்த்தல் சோதனை (Alexander Pass Along Test) என்னும் சோதனையின் அடிப்படையில் அமைக்கப் பட்ட வேறு ஒரு சோதனையையும் இங்குக் குறிப் பிடலாம். இச்சோதனையில் ஒரு பெட்டியினுள் சிவப்பு, நீலநிறக் கட்டைகள் இருக்கும். இக்கட்டை கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதற் கான படங்கள் பெட்டியின் அருகில் வைக்கப்பட் டிருக்கும். பெட்டியின் உட்புறம் இணை எதிர்ப்பக் கங்கள் இரண்டு சிவப்பு நிறத்திலும் அடுத்த இணை எதிர்ப்பக்கங்கள் நீல நிறத்திலும் இருக்கும். கட்டை கள் பெட்டியினுள் ஒருபுறமாகப் பரப்பி வைக்கப் பட்டிருக்கும். ஆட்படுநர் கட்டைகளை நகர்த்திச் சிவப்புக் கட்டைகள் சிவப்புப் பகுதியிலும் நீலக் கட்டைகள் நீலப் பகுதியிலும் வருமாறு அமைக்க வேண்டும். கட்டைகள் எடுக்கப்பட முடியாதவாறும் மேல், கீழ் வலப்பக்கமும் இடப்பக்கமும் மட் டுமே நகர்த்தப்பட முடியுமாறும் வைக்கப்பட் டிருக்கும். இச்சோதனையில் குறைந்தது நான்கு படங்களாவது ஒன்றன்பின் ஒன்றாக ஆட்படுநருக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு படத்தையும் முடிப்ப தற்கு இரண்டு நிமிட நேரம் கொடுக்கப்படும். ஆட் படுநர் இச்சோதனையைக் குறிப்பிட்ட காலத்திற் குள் முடித்தால் 5 மதிப்பெண்கள் கொடுக்கப்படும். சிவப்புக் கட்டைகளை மட்டும் தவறின்றி நகர்த்தி, நீலக்கட்டைகளை முறையாக அமைக்காவிட்டால், ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும். பெட்டியினுள் இருக்கும் கட்டைகளுள் இருகட்டைகளை ஒரே நேரத்தில் நகர்த்துவது ஒரு நகர்த்தலாக (Pass) எடுத்துக்கொள்ளப்படும். ஒருமுறை ஒரு கட்டை எப் பக்கம் நகர்த்தப்பட்டாலும் அது ஒரு நகர்த்த லாகும். இறுதிக் கட்டையை நகர்த்துவது நகர்த்த லாக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இச்சோதனையில் ஆட்படுநர் திட்டமிட்டுக் கட்டைகளை நகர்த்துகிறாரா, திட்டமிடாமல் முயன்று தவறிச் (Trial & Error) செயற்படுகிறாரா என்பது தெளிவுபடும். இச்சோதனையின் மதிப்பீட்டு அட்டை பின்வருமாறு அமைக்கப்பட்டிருக்கும்.

| சோதனை எண் | நகர்த்தல்கள் | ஒரு சோதனையை முடிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலம் | ஒவ்வொரு நகர்த்தலுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட விநாடிகள் |
|---|---|---|---|
| | | | |

இடத் தொடர்புச்சோதனை — மினிசோட்டா காகித உருப்பலகை.




முதல் கட்டத்திலிருக்கும் துண்டுகளை ஒன்றுபடுத்தினால் கிடைக்கும் உருவத்தினை, அ – விலிருந்து உ – வரையிலான உருவங்களுள் எது எனக் கண்டுபிடிக்க வேண்டும். (விடை: 1–இ, 2–அ).

**இடதுசாரிகள்:** 'இடதுசாரிகள்' என்ற பதத்திற்கு ஆங்கில அகராதியில் தீவிரப்போக்கினர் (Radical), தாராளப்போக்கினர் (Liberal) என்னும் இருபொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அப்பொருள் விளக்கங்களின் வழி நோக்குங்கால் இடதுசாரிகள் என்னும் சொல், தீவிர முன்னேற்றவாதிகளைக் குறிக்கும்.

பொதுவாக இடதுசாரிகள் குறுகிய நோக்கமற்ற முற்போக்கானவராவர். அடிப்படை மாற்றங்களை விழைவது இவர்களது நோக்கமாகும். முற்போக்கு எண்ணங் கொண்ட பரந்த கொள்கைகளின் அடிப்படையில் மாற்றங்களைக் கொணர இவர்கள் முனைவர். இடதுசாரிகள் பறை சாற்றும் மாற்றங்கள், தனித்துறை சாராத பொதுப்பாங்கான மாற்றங்களாகும். மேலும், இவர்கள் கூறும் மாற்றங்கள் குடியாட்சி சார்புள்ளனவாகவும், மக்களுரிமை நோக்குடையனவாகவும் அமைகின்றன.

மேற்கூறிய எண்ணங்கொண்ட முழு மாற்றம் விரும்புவோர் அரசியலில் இடதுசாரிகள் என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் முற்போக்குக் கட்சிகள் என்று கருதப்படுகின்றன. அடிப்படை மாற்றங்களுக்கான செயற்பாட்டிற்கு இவர்கள் தீவிர திட்டங்களை எடுத்தியம்புகின்றனர்.

பாட்டாளி வர்க்கத்தினருக்கு அரசியல் அறிவு புகட்டலும், நாட்டை ஆள்வதற்கு அவர்களிடையே திறமையுடையவரைத் தேர்ந்தெடுத்தலும் இடதுசாரிகளின் குறிக்கோள்களில் அடங்கும். உலகிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகள் பலவும், ஐரோப்பாவிலுள்ள சமதருமக் கட்சிகளும், இந்தியாவிலுள்ள முற்போக்குக் கொள்கைகளும், சமதருமக் கொள்கைகளும் கொண்ட சில அரசியல் கட்சிகளும் இங்கிலாந்திலுள்ள தொழிற்கட்சியும் இடதுசாரிக் கட்சிகளாகக் கருதப்படுகின்றன.

அரசியல் கட்சிகளின் தாயகமாக விளங்குவது இங்கிலாந்து. அங்கு இரண்டாம் சார்லசு மன்னரது ஆட்சிக் காலத்தில்தான் அரசியல் கட்சிகள் தோன்றலாயின. இங்கிலாந்தில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் அரசை ஆதரித்தோர் தோரிகள் (Tories) எனவும், அரசை எதிர்த்தோர் விக்குகள் (Whigs) எனவும் அழைக்கப்பட்டனர். ஆனால், அப்பொழுது அரசியல் கட்சிகள் வரலாற்றாலும் குடும்ப உறவுகளினாலும் பிணைக்கப்பட்டிருந்தன. அவ்வமயம் அரசியல் கருத்துகளால் அரசியல் கட்சிகள் செயற்படவில்லை. அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு, கி. பி. 1832–ஆம் ஆண்டைய சீர்திருத்தச் சட்டம்தான் வித்திட்டது. நாளடைவில் தோரிகளும், விக்குகளும் பழைமைப் பற்றாளர்,

தாராளப் போக்கினர் என அழைக்கப்படலாயினர். தொழிற்கட்சி 1900–ஆம் ஆண்டில் தோன்றியதால் தாராளப்போக்குக் கட்சி மறையத் தொடங்கியது. இன்று அது வலிமை வாய்ந்த ஒன்றன்று. 'கன்சர் வேட்டிவ் கட்சி' பழைமை விரும்பிகள் அடங்கிய ஓர் அமைப்பு. இன்று இங்கிலாந்தில் மாற்றம் காண விழை யும் ஓர் அமைப்பாகத் தொழிற்கட்சி விளங்குகிறது. எனவே அது இங்கிலாந்தில் செயற்படும் இடது சாரிகளின் அமைப்பாகக் கருதப்படுகிறது.

தொழிற் கட்சியில் தொழிலாளிகளும் வேளாண்மை செய்பவர்களும் அதிகமாக உள்ளனர். நாட்டின் செல்வமானது சமுதாயத்தின் எல்லா வகுப் பினரிடையேயும் நியாயமான முறையிலே பகிர்ந்தளிக் கப்பட வேண்டும் என்ற கொள்கையை உடையது இந் தக் கட்சி. பொதுவுடைமை போன்ற ஒரு பொருளா தாரக் கொள்கையை இக்கட்சி கொண்டிருந்தாலும் இதைச் சோவியத்து ஒன்றியத்திலுள்ள பொதுவுடை மைக் கட்சிக்குச் சமமாகச் சொல்ல முடியாது. இது அடிப்படை மாற்றங்கள் ஏற்பட வன்முறையை விரும்புவதில்லை. பாராளுமன்ற முறை அரசாங்க அமைப்பில் இக்கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது. உழைக்கும் வருக்கத்திற்கு எல்லா நன்மைகளையும் அளித்தல், உற்பத்திக்கான மூலதனத்தைப் பகிர்ந் தளித்தல், தொழில்கள் மீதும் தொழிற்சாலைகள் மீதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை ஏற்படுத்து தல் போன்றவை இக்கட்சியின் முக்கியக் கொள்கை களாகும். இக்கட்சி முதலாளித்துவத்திற்கு எதிரா னது. இவ்வகையான முற்போக்கு எண்ணங் கொண்ட, குறுகிய நோக்கமற்ற, பரந்த கொள் கையை உடைய ஒரு கட்சியாகத் திகழ்வதால், இதை இடது சாரிகளின் அமைப்பு என்று கூறலாம்.

இந்தியாவில் இயங்கும் அரசியல் கட்சிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகைப் பிரிவு, அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை ஆதாரமா கக் கொண்டு தோன்றியது. இரண்டாம் வகைப் பிரிவு, மதம், இனம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது. முதல் வகைப் பிரிவில் வலது சாரிகள், இடது சாரிகள் ஆகிய இருசாராரும் அடங்குவர்.

இந்தியாவில் கொள்கையின் அடிப்படையில் நோக்குங்கால், இந்தியத் தேசிய காங்கிரசு இடதுசாரி அமைப்பாகத்தான் காட்சியளிக்கின்றது. நாட்டு மக்களுடைய வறுமையைப் போக்கிச் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தைப் பேணுவதைக் குறிக்கோளாகக் கொண்டது இக்கட்சி. சமதருமச் சமுதாயம் படைப்பது இக்கட்சியின் முக்கிய நோக் கம் ஆகும். பொருளாதாரத்துறையில் சமதருமம், மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய் தல், வன்முறையை எதிர்த்தல், மதச் சார்பற்ற மக்களாட்சியைப் பலப்படுத்துதல் ஆகியவை இக்கட் சியின் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். நாட்டில் உள்ள பல்வேறு நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அரசியலமைப்பில் திருத்தங்களை இக்கட்சி ஏற்படுத்தியுள்ளது. சிலரிடம் செல்வம் குவிவதைத் தடுத்துப் பலர் செல்வத்தின் பயனை அடையும் பொருட்டு, நிலம், உடைமைகள் ஆகியவைகளுக்கு உச்ச வரம்பு கொண்டுவர இக்கட்சி விரும்பிச் செயற்படுகிறது. தொழில், வாணிகம் ஆகிய துறை களில் அரசாங்கம் நன்கு ஈடுபட வேண்டும் என்பது இக்கட்சியின் முக்கியக் கொள்கையாகும். அதற்காக இக்கட்சி வங்கிகள், பொதுக் காப்பீடு ஆகியவற் றைத் தேசிய உடைமை ஆக்கியுள்ளது. இவ்வகை யான முற்போக்குக் கருத்துகளையும் செயற்பாட் டினையும் கொண்டுள்ள இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சியை இடதுசாரி அமைப்பு என்பதே சாலச் சிறந்தது.

முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட 1952–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் சமதருமக் கட்சியும், 1964–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சம் யுக்த சமதருமக் கட்சியும், இந்தியாவில் 1976–ஆம் ஆண்டிற்கு முன் தீவிரமாகச் செயற்பட்ட இடதுசாரி இயக்கங்களாகும். இக்கட்சிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதைத் தங்கள் முக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தன. நாட்டு மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்; எல்லோருக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டும்; வறுமையை ஒழிக்க வேண்டும்; தொழில் களைத் தேசிய மயமாக்க வேண்டும்; உழுபவர்க்கே நிலம் சொந்தம் ஆக்கப்பட வேண்டும் என்பன போன்ற கொள்கைகளைக் கொண்டிருந்தன இக்கட்சி கள். மக்களாட்சி முறை வாயிலாக இவற்றை அடைவதை இக்கட்சிகள் எடுத்தியம்பின. ஆனால், இக்கட்சிகள் 1976–ஆம் ஆண்டு இசுதாபன காங்கிரசு, சனசங்கம் ஆகிய கட்சிகளோடு இணைந்து, சனதாக் கட்சி அமைப்பை உருவாக்கியதன் மூலம் இடது சாரி நிலையை இழந்தன. எவ்வாறாயினும் சனதாக் கட்சியிலிருந்து வலதுசாரிப் பிரிவினர் பிரிந்து பார–தீய சனதாக் கட்சி தொடங்கிய பிறகு, சனதாக் கட்சி மீண்டும் இடதுசாரி அமைப்பாக இயங்குகிறது.

இந்தியாவில் இயங்கி வரும் பொதுவுடைமைக் கட்சிகள் இடதுசாரி இயக்கங்களாகும். பொதுவுடை மைக் கட்சி 1924–ஆம் ஆண்டில் இந்தியாவில் தொடங்கப்பட்டது. இக்கட்சி தொழிலாளர்களுக்கு அதிகாரம் அளித்துத் தொழிலாளர்களின் வல்லாட்சி

அமைவதை எடுத்தியம்புகிறது. எல்லாத் துறைகளிலும் அரசு ஈடுபட வேண்டும் என்பது இதன் கொள்கையாகும். வங்கிகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள் போன்றவை தேசிய மயமாக்கப்படுவதை இக்கட்சி ஆதரிக்கின்றது. இது இன்று இடது பொதுவுடைமைக் கட்சி, வலது பொதுவுடைமைக் கட்சி என இரண்டாகப் பிரிந்துள்ளது. இடது பொதுவுடைமைக் கட்சி தீவிரவாதிகளைக் கொண்டது. இப்போதுள்ள அரசியலமைப்பை ஒழித்து, மக்களுக்கு அதிக அதிகாரமளித்து, வேறு அரசியலமைப்பை உருவாக்க விரும்பும் இவர்கள் பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் தேசவுடைமை ஆக்கும் கொள்கையினை வரவேற்கிறார்கள்; மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டுமெனக் கூறுகின்றனர். வலது பொதுவுடைமைக் கட்சி இந்தியப் பாராளுமன்றத்தின் உயரிய நிலையை உறுதி செய்யும் வண்ணம் அரசியலமைப்பைத் திருத்துதல், தீண்டாமையை ஒழித்தல், பெண்களுக்கு அரசியல், பொருளாதார, சமூகப் பிரிவுகளில் சம நிலையை அளித்தல் போன்றவற்றைத் தனது கொள்கைகளாகக் கொண்டுள்ளது. இவ்வாறான முற்போக்கு எண்ணங்கொண்ட பொதுவுடைமை இயக்கங்கள் இடதுசாரி இயக்கங்கள் என்பதில் ஐயமில்லை.

சோவியத்து ஒன்றியத்தில் இயங்கிவரும் பொதுவுடைமைக் கட்சி சோவியத்துச் சமுதாயத்தின் வழிகாட்டியாகவும், அதன் அரசியல் முறையின் மையமாகவும் திகழ்கிறது. இக்கட்சி மக்களுக்காக இருக்கிறது. இது குடியரசு மையமாக்கம் (Democratic Centralism) என்னும் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. மார்க்சு சொன்ன அறிவியல் சோசலிசத்தை நோக்கி விரைகின்ற வகையில் அரசு அமைப்பை ஏற்படுத்தித் தங்கள் குறிக்கோளில் வெற்றி பெற இக்கட்சி உழைத்து வருகிறது. இதுவே உலகில் இயங்கும் மாபெரும் இடதுசாரி இயக்கமாகக் கருதப்படுகிறது.

சுவிட்சர்லாந்தில் சமதருமக் குடியரசுக் கட்சி இடதுசாரி அமைப்பாகச் செயற்படுகிறது. ஆண் பெண் ஆகியோர்க்குச் சமஉரிமை அளித்தல், அரசு ஊழியரின் ஊதியத்தை உயர்த்துதல், வேலையற்றோர்க்கு அரசு உதவியளித்தல், வங்கிகளைத் தேசிய மயமாக்குதல் போன்ற தீவிர முற்போக்குக் கொள்கைகளை இக்கட்சி வலியுறுத்துகிறது.

பிரான்சு நாட்டில் கட்சிகள் பல நிலவுவதால் பல இடதுசாரி அமைப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் பொதுவுடைமைக் கட்சியும், கி.பி.1879-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சமதருமக் கட்சியும் இன்று செல்வாக்கிழந்து விட்டன.

இவ்வாறு உலக நாடுகளில் முற்போக்கு எண்ணங்கொண்ட பல்வேறு இடது சாரி இயக்கங்கள் பொதுப்பாங்கான மாற்றங்களுக்காகத் தீவிர திட்டங்களுடன் இயங்கி வருகின்றன. டி. ஜா.ச

**இட-நேரக் கோட்பாடு**: இட-நேரக் கோட்பாடு மேலை நாட்டு மெய்ப் பொருளியலின் ஒரு பிரிவு ஆகும். இதனைப் பற்றிப் புலன் கடந்த மெய்ப் பொருளியலில் (Metaphysics) தெளிவாகச் சில தத்துவ அறிஞர்கள் கூறியுள்ளனர். இதனைப் பற்றி ஒவ்வொன்றாக விளக்குமிடத்து இட-நேரக் கோட்பாட்டின் தன்மை வெளிப்படும்.

இவ்வுலகில் இடம் (Space) என்பது முடிவில்லாதது (Infinite). அதுபோலவே காலம் (Time) என்பதும் முடிவில்லாதது. இவை இரண்டையுமே தனித்தனியாக மனித அறிவினால் அறிய இயலாது. ஆனால், இவ்வுலகத்தினைப் பற்றிய ஆராய்ச்சியின் வாயிலாக இடம்-நேரம் (Space-Time) ஆகிய இரண்டையுமே சேர்த்தால்தான் ஒரு முழுமையான உண்மை வெளிப்படுகிறது. ஒரு பொருள் இவ்வுலகத்தில் தோன்றியது என்றால், அது எந்த இடத்தில் (Location) தோன்றியது, அது எந்தக் காலத்தில் தோன்றியது என இவை இரண்டினால் அப்பொருளைப் பற்றி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. நேரம் என்பது ஒரு வழிப்பாதை போன்றது (One way traffic). இதனை வேறு வழியால் சொல்ல இயலாது. காலம் ஒரு முறை சென்றால் அச் சென்ற காலத்தைத் திரும்பப் பெற முடியாது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும். இடமும் (இவ்வுலகமும்) எவராலும் முழுவதும் காண இயலாததொன்றாகும்.

புலன் கடந்த மெய்ப்பொருளியல் கருத்தைக் கொண்ட அறிஞர்கள் நேரமும் காலமும் ஆகிய இரண்டுமே முடிவான உண்மை அல்ல என்று வாதாடினார்கள். இடமும் காலமும் உண்மையானவை அல்ல. இவை புறஉலகில் தோன்றும் வெறும் தோற்றம். கிரேக்க நாட்டில் இடமும் நேரமும் சார்ந்த கோட்பாட்டிற்கான மூல காரணத்தைப் பிளேட்டோ (Plato) என்னும் தத்துவ அறிஞரும் அவருக்கு முன்பு இருந்த பெர்மெனிடிசு (Paremenides), சீனோ (Zeno) ஆகிய தத்துவ அறிஞர்களும் ஆராய்ந்தனர். அவர்கள் சிந்தனைகளில் பல முரண்பாடுகள் தோன்றின.

பிளேட்டோவின் கற்பனைக் கருத்துகள் முடிவற்றனவாயிருந்தன. கிறித்தவத் தத்துவ அறிஞர்கள் இறைவன் எக்காலத்திலும் உலகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் நிரம்பியுள்ளான் எனக் கூறினர்.

இட-நேரக் கோட்பாட்டின் மூல ஆதாரத்திற்

குக் கடவுட் கொள்கை பெருந்துணை செய்வதாக இல்லை. இட-நேரக் கோட்பாட்டிற்கு உட்பட்டு எந்த ஒரு பொருள் வந்தாலும், அது இன்ன பொருள், இந்த இடத்தில், இந்த நேரத்தில் வந்த பொருள் என்று இட-நேரக் கோட்பாட்டின் வாயிலாக வரையறை செய்ய முடியும். அதையே தனித் தனியாக ஓர் இடத்தோடும் மற்றோர் இடத்தோடும் சேர்க்க முடியாது. ஏனெனில், அது இடத்திற்கு இடம் வேறுபடும் தன்மை உடையது. அதுபோலவே கடந்த காலத்தையும் இக்காலத்தையும் ஒன்று சேர்த்துக் கணக்கிட முடியாது.

கடவுள் முடிவில்லாத ஒருவர்; காலங்கடந்தவர் அவர் இவ்வுலகில் இருந்து கொண்டேயிருக்கிறார்.

செருமன் நாட்டுத் தத்துவ அறிஞரான இமானுவேல் காண்ட்டு (Immanuel Kant) பின் வருமாறு கூறுகிறார். இட-காலக் கோட்பாட்டிற்கும் மனித உணர்வுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்த நெருங்கிய தொடர்பின் வழியாகத்தான் ஒரு பொருளைப் பற்றி மனம் அறிய முடிகிறது. ஒரு பொருளை எந்த இடத்தில், எந்த நேரத்தில் ஒருவன் பார்க்கிறான் எனப் பகுத்தறிவு வேலை செய்வதன் வாயிலாக, அப்பொருளை இடம்-நேரத்தோடு மனம் அறிய, அதனால் அவன் அறிய முடிகிறது. மேலும் இட, நேரக் கோட்பாடு என்பது ஒரு 'உள்ளுணர்வு தான்' (Intuition).

காண்ட்டின் உள்ளுணர்வுக் கருத்து ஐயத்திற்குரியது. எவ்வாறு எனில், இடமும் காலமும் சேர்ந்த இக்கோட்பாடு மனிதப் புலனுக்கு உட்பட்டுக் காணப்பட்டாலும், அவ்வுணர்வு போதுமான அளவு தொட்டறியக் கூடியதாக இல்லை. பொதுவாக இடமும் காலமும் சட்ட வரையறைக்கு உட்பட்டுச் செயற்படக் கூடியன. ஆனால், அவற்றைப் பொதுவாக ஒன்றுமில்லை என்பது உண்மையானதன்று. ஒரு பொருள் அதனுடைய காலமும் இடமும் சேர்ந்த சட்ட வரையறைக்கு உட்பட்டுச் செயற்பட்டால் தான் அது உண்மையாகும்.

எப்.எச். பிராட்லி, இமானுவேல் காண்ட்டின் இட-நேரக் கோட்பாட்டுக் கருத்தில் முரண்பட்டவராக விளங்கினார். பிராட்லியின் இடமும் காலமும் சார்ந்த கோட்பாடு, அவை இரண்டும் வேறுபட்டன என்பது. எடுத்துக்காட்டாக இடமும் காலமும் தனித் தனியானவை. காலத்தை 1962 சனவரி 4-ஆம் நாள் காலை 10 மணி என்று கூற முடிகிறது. ஓரிடத்தைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து 75 அடி வடக்குத் தள்ளி உள்ளது என்றால், அதைக் கணக்கிட முடிகிறது. அவரது கருத்துப்படி, இடமும் காலமும் சார்ந்த கோட்பாடானது கருத்தமைவில் உள்ளது. ஆனால், அவற்றைப் பற்றிக் கருத்து முரண்பாடுகள் தோன்றுகின்றன.

காலம் என்பது தொடர்ந்து செல்வது. இது இடத்தோடு சேர்ந்தது. காலம் என்பதைக் கடிகாரத்தினால் கணக்கிட முடிகிறது (நிமிடம், மணி, நாள், வாரம், முதலியன). நம் நலன்களுக்காக நாம் காலத்தைக் கடிகாரத்தினால் நிமிடம், மணி, நாள், வாரம் மாதம் என இப்படியே கணக்கிட்டுக் கொள்ளலாம். அதுபோலவே இடம் (Space) என்பது முடிவில்லாதது. அதனை மக்கள் தம் வசதிக்கேற்பப் பகுதி பகுதியாகப் பிரித்து அதற்குப் பெயரிட்டு வழங்குகலாம். ஆனால், இவை இரண்டும் உண்மையில் இல்லாதவை. ஆயினும் புற உலகில் தோற்றத்தை அளிக்கின்றன.

காலம் என்பது நம் நடைமுறையில் இருக்கின்ற காலத்தைக் குறிப்பிடுகிறது.

சி.இ. மூர்(G.E.Moore) என்பவர் இடமும் காலமும் என்ற கோட்பாடு, புலன் கடந்த மெய்ப் பொருளியலின் கருத்தாகும் என்றார்.

அடுத்து, முதற்கொள்கைவாதிகளின் கருத்து இடமும் காலமும் ஒரு புறஉலகுத் தோற்றமே; உண்மையல்ல; ஆயினும் அவை மனித வசதிக்கேற்ப நடைமுறையில் கையாளப்படுகின்றன என்பதே.

இவ்வுலகில் கடவுள் முடிவில்லாதவர். அவர் எல்லையில்லாக் குணத்தைக் கொண்டுள்ளவர். இருப்பினும் இவர் உலக மக்களின் மனத்தில் ஓர் உயர்ந்த அமைப்பைப் பெற்றிருக்கிறார். அவர் காலத்திற்கு முரண்பட்டவர். கருத்தமைவு, இடமும் காலமும் கடந்தவர்தாம் கடவுள் என்பதை உணர்த்துகின்றது.

துணை நூல்கள்

**Hari Mohan Bhattacharya**, The Principles of Philosophy, University of Calcutta, 1948.

**Smart, J.J.C.**, Ed., Problems of Space and Time, New York, 1964.

**இடப்பெயர்கள்**: பெயர்ச் சொற்களைப் பொதுவாகப் பெயர் (Substantive), இடப்பெயர்கள் (Pronouns) என்று இரு பிரிவாகப் பகுப்பர். அமைச்சர், ஆசிரியர், மாணவன், மாணவி, மான், மரம் போன்றவற்றைப் பெயர் என்கிறோம். அமைச்சர் வந்தார் என்ற வாக்கியத்தில் அமைச்சர் என்ற பெயர் எழுவாயாக வருகிறது. இவ் வாக்கியத்தை அடுத்து அமைச்சர் பேசினார்; அமைச்சர் சென்றார்

என்று எழுவாயாக அமைச்சர் என்ற பெயரைத் தொடர்ச்சியாகக் கொண்டு வாக்கியங்கள் அமைந்து எழுதின் படிப்பதற்குச் சுவை குன்றும். அதனால் அமைச்சர் என்ற சொல் திரும்ப வாராமல், அச் சொல் வரவேண்டிய இடங்களிலெல்லாம் அவர் என்ற சொல் ஆளப்படுகிறது. இவ்வாறு ஒரு பெயருக்குப்பதிலாக அதனுடைய இடத்தில் ஆளப்படும் சொல்லை இடப் பெயர் என்பர் தமிழ் இலக்கண ஆசிரியர்கள். இதனையே, இக்கால இலக்கண மொழியியல் அறிஞர்கள் மாற்றுப் பெயர், பதிற் பெயர், பெயர்ப்பதிலி, பதிலீட்டுப் பெயர், பிரதி பெயர் போன்ற பெயர்களாற் சுட்டுவர்.

மொழியின் அடிப்படைச் சொற்களுள் ஒன்றாகக் கருதப்படும் இடப்பெயர், பெயர் போன்று மொழியில் காணப்பெறும் (பால்), எண் பகுப்புகளைப் பெற்றும் வேற்றுமை ஏற்றும் வரும். எனினும், சிற்சில பண்புகளில் இது பெயரின் பண்புகளினின்றும் மாறுபட்டு விளங்குகிறது. நல்ல மாணவன் என்ற பெயர், 'நல்ல' போன்ற பெயரடைகளைத் தம்முன் ஏற்று வருவது போன்று நல்ல நீ, நல்ல நான் என்று இடப் பெயர் ஏற்று வருவதில்லை. பழந்தமிழ் இலக்கியத்தில் 'தான்' 'தாம்' என்னும் பெயர்களின் முன்னர் எண்ணுப் பெயரடை வந்துள்ளது. எ-டு. 'ஒரு தாம் ஆகிய பெருமையோடும்' (புறம்:366), 'ஒரு நின் பாணன்' (குறுந்.127). 'நான் ஒருவன்', 'நீ ஒருத்தி' என்று இடப்பெயருக்குப் பின்னால் எண்ணுப் பெயர் வருவது ஏற்புடையதாகும். எண்ணுப் பெயரை முன்னால் ஏற்று வந்ததை ஒப்புமையாக்கத்தால் வந்த வழுவமைதியாகக் கொள்வர். மேலும், இடப் பெயர், பெயர் போன்று பொருட்டன்மைகளைச் சுட்டுவதில்லை. 'யானை' என்று சொல்லும்போது அதன் பொருள், பண்பு நம் உளக்கண்முன் தோன்றும். ஆனால் இடப்பெயரான 'அது' என்ற சொல்லால் இத்தகைய எண்ணங்களை நம் உள்ளத்தே உருவாக்க முடிவதில்லை. இதேபோன்று 'அவன்' என்ற சொல்லைக் கேட்கும்போது ஒருமை, ஆண்மை என்ற பண்புகளைத்தாம் நம்மால் உணரமுடிகிறதே தவிர, குறிப்பிட்ட ஓர் ஆண் மகனின் சிறப்புக் கூறுகளை அறிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால், பெயரில் அமைந்திராத ஒரு பண்பாக, எப்பொருளையும் சுட்டிக் குறிக்கும் தன்மையினை இடப்பெயர் கொண்டு விளங்குகிறது.


உரையாடல் என்று நிகழும்பொழுது, பேசுவோர், அதனைக் கேட்போர் என்று கூற்று மாந்தர் அமைவர். பேசுவோர் தம்மைச் சுட்டும்போது 'நான்' என்ற சொல்லால் சுட்டுவார். நான் கடிதம் எழுதுகிறேன்; நீ என்ன எழுகிறாய்? என்ற சொற்றொடர்களில் 'நான்' என்ற சொல் பேசுவோரைக் குறிக்கிறது. அதாவது, பேசுவோர் தம்மைக் குறிக்க 'நான்' என்ற சொல்லை ஆளுகிறார். இவ்வாறு பேசுவோர் தம்மைக் குறிப்பது தன்மை இடமாகும். தன்மையில் வரும் வினைகளும் (எழுதுகிறேன்) தன்மை இடத்திற்கு உரியவை. அடுத்து, 'நீ' என்ற சொல் பேசுவோர் முன்னின்று கேட்பவரைக் குறிக்கிறது. பேசுவோர் முன் நிற்பவரை இது குறிப்பதால், இது முன்னிலை இடம் எனப்படும். முன்னிலையில் வரும் வினைகளும் முன்னிலை இடத்திற்கே உரியன. 'நான்', 'நீ' என்ற சொற்கள் முறையே பேசுவோர் ஒருவரையும் கேட்போர் ஒருவரையும் குறிப்பன. மேற்சுட்டிய உரையாடலில் பங்கேற்காத மற்றொருவனை/ஒருத்தியை/ஒருவரைக் குறிக்கும்போது (பேசுவோர்) முறையே 'அவன்', 'அவள்', 'அவர்' என்ற சொல்லொன்றினால் குறிப்பர். அதாவது, பேசுவோர் தம்மையும் முன்நிற்பவரையும் குறிக்காது வேறு யாரையேனும் குறிப்பின், அது படர்க்கை இடமாகும். எ-டு. அவன் பேசினான், அவள் பாடினாள் அவர் எழுதினார். (இவ்வாக்கியங்களிலுள்ள அவன் அவள், அவர் என்றும் சொற்கள் பேசுவோனையும் முன்னிற்பவனையும் குறிக்கவில்லை). படர்க்கையில் வரும் வினைகளும் படர்க்கை இடத்திற்கே உரியன.

இவ்வாறு இடம், ''தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் அம்மூவிடத்தான்'' அமையும். மூவிடங்களும் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடு பெற்று விளங்கும். இவற்றில் படர்க்கை மட்டும் எண் வேறுபாட்டுடன் திணைபால் வேறுபாட்டையும் காட்டிநிற்கும்.

'நாம்', 'நாங்கள்' ஆகியன தன்மைப் பன்மையே; ஆயினும், பொருள்வகையால் இரண்டும் வேறுபடுகின்றன. 'நாம்' என்ற சொல் யாருடன் பேசுகின்றோமோ அவர்களையும் உளப்படுத்திக் கூறுவதாகும்; 'நாங்கள்' உளப்படுத்தாமல் கூறுவது. தன்மையும் (பேசுவோரும்) முன்னிலையும் (கேட்போரும்) ஒருவர் அல்லது பலராக உளப்பட்ட சொல் 'நாம்' என்பதாகும். எ-டு. நாம் போகலாம் – இங்கு 'நாம்' தன்மையோடு முன்னிலையாரையும் உளப்படுத்துகிறது.

நாங்கள் போகிறோம் – இங்கு 'நாங்கள்' முன்னிலையாரை விலக்கிப் பேசுகிறது. கேட்போரை உளப்படுத்துதல், புறப்படுத்துதல் என்ற அடிப்படையில் 'நாம்', 'நாங்கள்' பிரிந்தியல்கின்றன. முன்னதை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்றும் பின்னதை உளப்படாத தன்மைப் பன்மை என்றும் குறிப்பர். தமிழ், மலையாளம் தவிர்த்த ஏனைய திராவிட மொழிகளிலும், ஈழத்தமிழிலும் இவ்வேறுபாடு மறைந்துவிட்டது.

 இடப்பெயர்கள்




வினைமுற்றுகள் இடம், எண், பால் அறிகிளவிகள் ஏற்று வருதல் தமிழ் மரபு. தமிழோடு நெருங்கிய தொடர்புடைய திராவிட மொழியான மலையாளத்தில் இவ்வியைபு காணப்படுவதில்லை. மூவிடப் பெயர்களின் வரலாறு நோக்கின் அவற்றின் வடிவத்திலும் எண்ணிக்கையிலும் தன்மையிலும் பல மாறுபாடுகள் நிகழ்ந்துள்ளமை அறியலாம். தொல்காப்பியர் காலத்தில் தன்மைப்பெயர் உயர்திணைக்கு மட்டும் உரியது; முன்னிலையும் படர்க்கையும் இருதிணைக்கும் பொதுவாக (விரவுத் திணையாக) வருவன; நன்னூலார் தன்மையையும் இருதிணைக்கும் பொது என்று குறிப்பர்.

| தொல்காப்பியம் | | நன்னூல் | |
|---|---|---|---|
| தன்மை | ஒருமை | யான் | யான், நான் |
| தன்மை | பன்மை | யாம், நாம் | யாம், நாம். |
| முன்னிலை | ஒருமை | நீ | நீ |
| | பன்மை | நீயிர் | நீயிர், நீவிர், நீர் |
| படர்க்கை | ஒருமை | தான் | தான் |
| | பன்மை | தாம் | தாம் |

விரவுத் திணைக்குச் சான்றாக,

தான்வந்தான்; தான் வந்தாள்; தான் வந்தது
தாம்வந்தார்; தாம் வந்தன.

என உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகள் தருவர். சங்க இலக்கியத்திலும் இவ் வழக்குகள் காணப்படுகின்றன. இவை வினைச்சொல்லாலேயே பால் விளக்கம் பெறுகின்றன.

முற்காலத்தில் படர்க்கையில் இடப்பெயர், சுட்டுப்பெயர் என்று வேறுபடுத்தி அறியப்பட்டிருப்பதைக் காணலாம். சுட்டுப் பெயர்களோடு பால்விகுதிகளைப் பெற்று அமையும் அவன், அவள், அவர், அது முதலிய பெயர்கள் படர்க்கையைச் சுட்டும். இவை ஒரு திணைக்கே உரியவாய் வரும். முன்னமே குறிக்கப்பட்ட பொருளையே சுட்டிப் படர்க்கையாக வரும். இயற்பெயர் குறித்த பின்பு இச்சுட்டுப்பெயர் பின் கிளக்கப்படும். எ-டு. சாத்தன் வந்தான்; அவற்குச் சோறு இடுக.

தான், தாம் என்பன நீ, நான் என்பனபோன்று சுட்டுக் கலவாமல் வருவன. அவன், அவள் என்பன பால் தெரியநின்று சுட்டாக ஒரு திணைக்கே உரிமையாகி வருவன. சுட்டின் அடியாகப் பிறந்து பால் தெளிய நிற்கும் சொற்களாகிய அவன், அவள், அவர், அது என்பன மொழியில் வழக்கு மிகுதி பெறவே, தான், தாம் என்பன தம் இயல்பான படர்க்கைப் பொருளை இழந்துவிட்டன. தான், தாம் என்பவற்றைத் தொல்திராவிடச் சொற்களாகக் குறிப்பர்.

அண்மை, சேய்மைச் சுட்டுகளான இவன், அவன், இவள், அவள், இது, அது என்பவற்றோடு உவன், உவள் என்ற இடைப்பட்ட சுட்டும் பழைய வழக்கில் காணப்படுகிறது. இது இன்றைய ஈழத் தமிழிலும் நிலைபெற்றுள்ளது.

சமுதாயத்தின் அங்கமான மொழியில் அதன் எதிரொலிப்பைக் காணலாம் என்பர் இக்காலச் சமுதாய மொழியியலார். இன்றைய மூவிடப் பெயர்களின் வெவ்வேறு வடிவங்களும் பயன்பாடும் இதற்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றன. இவற்றின் தேர்வுகளின் அடிப்படை, சமுதாய நிலைகளின் தன்மையாலேயே வரையறுக்கப்படுகின்றது. பின் வரும் சான்றுகள் இதனைப் புலப்படுத்தும்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | நான் | நாம் (உளப்பாடு)<br>நாங்கள் (உளப்படா) |
| முன்னிலை | நீ (உயர்வின்மை)<br>நீர் (உயர்வு) | நீங்கள் |

சமுதாயத்தலைவர்கள், அரசர்கள் போன்றோர் தாம் பெற்றுள்ள உயர்ந்த நிலை காரணமாகத் தம்மைத்தாமே குறிப்பிடும்போது தன்மைப் பன்மையான 'நாம்' (Royal We) என்ற சொல்லை ஆளுவர். இதனால் இந்தப் பன்மையை 'ஒருவரைக் கூறும் உயர்சொற் கிளவி' அல்லது 'உயர்வு சிறப்புப் பன்மை' என்று குறிப்பர். இதுபோன்ற ஒரு நிலையை இரட்டைப் பன்மைகளையும், மூன்று பன்மைகளையும் பெயரோடு இணைத்துப் பயன்படுத்துவதில் காணலாம். அமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமகனார் அவர்கள், இராமசாமி முதலியார் அவர்கள் என்று ஒருவருடைய உயர் நிலைக்கு மரியாதை தரும் வகையில் பெயருக்குப் பின் படர்க்கை இரட்டைப் பன்மை சேர்த்து அழைப்பது சமுதாயத்தில் நிலைத்துவிட்ட முறையாகிவிட்டது.

சமுதாயத்தின் ஏற்ற இறக்கங்களைச் சிறப்பாக எதிரொலிப்பது முன்னிலை இடப்பெயராகும். நீ, நீர், நீங்கள் என்பவை முறையே ஆண்டில் இளையோரை அல்லது கீழ்நிலையில் உள்ளோரை, மூத்தோரை அல்லது உயர்நிலையில் உள்ளோரைக் குறித்து வருவனவாகும். அதிக உயர்வு/மரியாதையைக் காட்டப் பழைய படர்க்கையான 'தானி'' லிருந்து பிறந்த 'தாங்கள்' ஆளப்படுகிறது. 'நீங்களின்' வேற்றுமை ஏற்கும் வடிவான 'உங்கள்' வினையோடு சேர்ந்து செய்யுங்கள், வாருங்கள் என்று மாயாதை ஏவலாகப் பயன்படுவதையும் காணலாம். இந்த 'உங்கள்' ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இணைக்கப்பட்டு, 'ஆமாங்க' 'செய்றேனுங்க' என்று வழங்கப்படுவதும் மரியாதை மதிப்பைப் புலப்படுத்தும் முறையாக அமைகிறது. இவ்வாறு முன்னிலையில் காணப்பெறும் நான்கடுக்கு நிலை (Four Tier System) சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை எதிரொலிப்பதாக அமைகிறது.

நடைமுறை வழக்கில் 'அவர்' என்ற படர்க்கை இடப்பெயர் உயர்வு ஆண்பால் ஒருமையாகவும் 'அவர்கள்' என்ற படர்க்கை இடப்பெயர் மிக உயர்வு ஆண்பால், உயர்வுப் பெண்பால் (ஆண் பெண் உயர்வு ஒருமை) ஆகவும் வழங்கிவருகின்றன.

இக்கால வழக்கில் காணும் மூவிடப் பெயர்கள் பின்வருமாறு அமைகின்றன.

| | | |
|---|---|---|
| | நீங்கள் (மிக உயர்வு)<br>தாங்கள் (மிகுந்த உயர்வு) | |
| படர்க்கை | அவன் (உயர்வில்லா ஆண்பால்)<br>அவள் (உயர்வில்லாப் பெண்பால்)<br>அவர் (உயர்வு ஆண்பால் ஒருமை)<br>அவர்கள் (மிக உயர்வு ஆண்பால்,<br>மிக உயர்வுப் பெண்பால்) | அவர்கள்<br>(உயர்திணை) |
| | அது (அஃறிணை) | அவைகள் (அஃறிணை) |


துணை நூல்கள்:

சீனிவாசன், ரா., மொழியியல், அணியகம், சென்னை, 1972.

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை, கழகப்பதிப்பு, சென்னை, 1973.

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1962.

தொல்காப்பியம் – சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1963.

நன்னூல் — சிவஞான முனிவர் விருத்தியுரை. கழகப் பதிப்பு, சென்னை, 1974.

வரதராசன், மு., மொழியியற் கட்டுரைகள், பாரி நிலையம், சென்னை, 1954.

**Meenakshisundaran, T.P.**, A History of Tamil Language, Deccan College, Poona, 1965.


ஜி.ச.நா.

**இடப்பெயர்வு**: தனி மனிதனோ சிறு கூட்டம் ஒன்றோ தம் இருப்பிடத்தை நிலையான ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிச் செல்வதை இடப்பெயர்வு (Migration) என்பர். ஒரு நாடு விட்டுப் பிற நாட்டிற்குக் குடிபெயர்வது, நிலையான நோக்கத்துடன் குடிபெயர்வது (Permanent Movement), உள்நாட்டில் இடம்பெயர்வது, குறிப்பிடத்தக்க தொலைவு (Significant Distance) இடம்பெயர்வது ஆகியவை யாவும் இடம்பெயர்வில் அடங்கும்.

பன்னாட்டு இடப்பெயர்வில் வெளிநாடொன்றுக்குச் செல்லுமொருவன் தன் வாழ்நாட்களை அந்நாட்டிலேயே செலவழிப்பானெனின், அவனைக் குடிபெயர்ந்தோன் (Emigrant) எனக் குறிப்பர். பன்னாட்டு இடப்பெயர்வுப் புள்ளி விவரத்தில் இடம்பெயர்ந்து சென்ற ஒருவன், தான் நுழைந்த நாட்டில் தொழில், கல்வி, பொதுப்பணி போன்ற நோக்குடன் ஒப்பந்தக் காலம் மட்டுமே தங்குவதற்கான தன் விருப்பத்தைத் தெரிவித்தால் அவனைக் குடியமர்ந்தோன் எனக் குறிப்பர்.

இடப்பெயர்வு என்பதற்கான இலக்கணம், நாடுகளுக்குத் தக்கவாறு பலராலும் பலவகைகளில் எடுத்தாளப்படுகிறது. இவற்றுக்கும் மேலான சில வரையறைகளும் உண்டு. குறிப்பாகக் கட்டாயத்தின்பேரில் ஏற்படும் நகர்வை (Move) இடப்பெயர்விலிருந்து நீக்க வேண்டுமென்று வரையறை செய்யப்படுகிறது. ஏனெனில், குடியிருப்பை மாற்றுவது என்பது கட்டாயத்தின் காரணமாகவும் கட்டாயமின்றியும் இருக்கலாம். ஒரு சமுதாய அமைப்பிலிருந்து வேறொரு அமைப்பிற்குப் பெயர்ந்து செல்வதை இடப்பெயர்வாகக் கொள்ளலாம் என்பது, ஒரு சில சமூக அறிஞர்களின் கருத்தாய் உள்ளது. ஆனால், இப்போதைய மனிதன் பல சமுதாய அமைப்புகளுடன் கலந்தும் அவற்றில் பங்குகொண்டும் வருவதால், இவ்வரையறை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இடப்பெயர்வு என்ற சொல்லின் விளக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடுவதால், உள்நாட்டு இடப்பெயர்வுத் தொடர்புடைய புள்ளி விவரங்களைக் கொண்டு, பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது இயலாது போகும்.

பெயர்ந்து செல்லுகின்ற தொலைவை நில அளவில் பொதுவாகக் கணக்கிட முடிந்தாலும், சமூகக் கூறுகளின் அடிப்படையில் இதனை உறுதிசெய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. எனவே, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும் தூரம் குறைவாகவே இருப்பினும், ஒரு சமுதாய அமைப்பிலிருந்து நிலையாகப் பிரிந்து வேற்றுச் சமுதாயம் ஒன்றுக்கு இடம்பெயர்ந்து செல்லுதலை இடப்பெயர்வு எனலாம்.

இயல்பான இருப்பிட மாற்றம் இடப்பெயர்வாகக் கருதப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, நாடோடி மக்கள் நிலையானதொரு இருப்பிடமின்றி அலைவதையும் பண்ணைத் தொழிலாளர் பருவத்திற்

கேற்ப இடம் மாறிச் செல்வதையும் கூறலாம். சுற்றுலாவும் வழக்கமான பயணங்களும் இடப்பெயர்வில் அடங்குவதில்லை.

**காரணிகள்:** ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவன், அச் சமுதாயத்தின் மீது வெறுப்புற்றோ வேறொரு சமுதாயத்தின் மீது ஈடுபாடு கொண்டோ இடம்பெயர்ந்து செல்ல நேரலாம். முதல் வகையில் ஓரிடத்தில் வேலையில் அமர்ந்தவன் அவ்வேலையை இழக்கும் நேரத்தில் வேறு வேலையைத் தேடி இடம் மாறிச் செல்வான். இயற்கைச் செல்வங்கள் அழிந்து போகும் நிலையில், வேற்றிடம் ஒன்றிற்குப் பெயர்ந்து செல்லக் கூடிய நிலையும் ஏற்படலாம். இவற்றை இடப்பெயர்வுக்கான உந்து காரணிகள் (Push Factors) என்கின்றனர். ஊரகங்களில் கல்வி கற்றபின் வேலையின்மை என்ற நிலை ஏற்படுவதால், நகர்ப்புறத்திற்கு இடம்பெயர உந்தப்படுவதுண்டு. வேளாண்மையில் மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) யாலும், தேவைக்கதிகமான மக்கள்தொகை, வறட்சி, பஞ்சம் போன்ற காரணங்களாலும் ஊரகத் தொழிலாளர் இடம்பெயர உந்தப்படுகின்றனர்.

இதற்கு மாறாக வீட்டு வசதிகள், உயர்ந்த வாழ்க்கைத் தரம், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றையுடைய புதிய சமுதாயம் ஒன்றைத் தேர்வு செய்தும் இடம் பெயரலாம். ஓரிடத்தில் தங்கம் கண்டெடுக்கப்படுகிறதெனவும், பேரளவில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகிறதெனவும், ஒரு பெருங்கூட்டமோ சிறு கூட்டமோ தொலைவான பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்லலாம். இவை ஈர்ப்புக் காரணிகள் (Pull Factors) எனப்படுகின்றன. நகர்ப்புறங்களில் காணப்படும் கல்வி வாய்ப்புகள், வேலைவாய்ப்புகள், ஆடம்பர வாழ்க்கை நிலை, முன்னேற்றத்திற்கான பலவகையான வாய்ப்புகள், வாணிக வளர்ச்சி, பன்னாட்டுத் தொடர்புகள், பல சமுதாயக் கலப்பு உறவுகள் ஆகியவை இவற்றை நாடும் மக்களை நகர்ப்புற இடப்பெயர்வுக்கு ஈர்த்துவிடுகின்றன.

மக்கள்தொகைப் பெருக்கமுடையதாய் நிலம் கிடைப்பருமையாகவுள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளில், உந்து காரணிகளே பெரும்பாலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. நாட்டுப் புறங்களில் வாழும் மக்கள் வேலையின் இன்றியமையாத் தேவையைக் கருத்தில் கொண்டு, நகர்ப் புறங்களுக்கு இடம்பெயர்ந்து செல்வர். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலைவாய்ப்பும் வீட்டு வசதிகளும் மிகுந்து காணப்படுவதாலும், பிற சமுதாயங்களைப் பற்றிய அறிவு பொதுவாக அனைவருக்கும் இருப்பதாலும், இவ்விரு காரணிகளும் ஒத்த நிலையில் செயற்படுகின்றன.

செல்வாக்குள்ள இடம்பெயர்வோன், புறப்படுமிடம் சேருமிடம் (Destination) ஆகியவற்றை நன்குணர்ந்து அதன்படி செயற்படுகிறான்.

உள்ளூர் இடப்பெயர்வுகள் பொதுவாக வீட்டு வசதி, பள்ளிச் சூழல் ஆகியவற்றைச் சார்ந்தே நிகழ்கின்றன. ஆனால், நெடுந்தொலைவுக்கு இடம்பெயர்ந்து செல்லுதல் வேலைவாய்ப்பைப் பொறுத்தே அமைகிறது. அதே நேரத்தில் சூழ்நிலை, குடியிருப்பு வசதி ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகளைக் கொண்டே முதியோர்களின் இடப்பெயர்வு நிகழும். பொதுவாக இடப்பெயர்வின் அளவுக்கும் தொலைவுக்கும் தலைகீழ்த் தகவுப் பொருத்தமே (Reciprocal Proportion) இருக்கும். ஏனெனில், அடுத்துள்ள சமுதாயத்தின் பண்புகள் முழுவதும் உணரப்படுவதால், இடப்பெயர்வு மிகுதியான அளவுக்கும் ஏற்படும் வாய்ப்புண்டு. இதன் காரணமாகவே பன்னாட்டு இடப்பெயர்வு, உள்நாட்டு இடப்பெயர்வைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும்.

தொலைவு இடப்பெயர்வுக்குப் பெருந்தடையாக இருப்பினும், தங்க மிகுதி (Gold Rush), பஞ்சம், மதத்தின் பேரால் நிகழும் கொடுமைகள் (Religious Persecution) போன்றவை தொலைவான, புதிய இடமொன்றுக்கு இடப்பெயர்வைத் தோற்றுவிக்கும். கலிபோர்னியாவில் கி.பி. 1848–1852–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தங்க மிகுதியின் காரணத்தாலும், அடிப்படை இயற்கைவளங்கள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றின் பெருக்கத்தாலும் தொடர்ச்சியான அளவில் இடப்பெயர்வு ஏற்பட்டது.

நாட்டுப்பற்று, மொழி வரம்புகள் ஆகியவை பன்னாட்டு இடப்பெயர்வுக்குச் சமூகத் தடைகளாய் விளங்குகின்றன. பண்பாட்டு வரம்புகளும் உள்நாட்டில் இடப்பெயர்வுக்குத் தடையாய் அமையலாம். சான்றாகப் பெல்சியத்தில் பிளமிசு–பிரஞ்சு (Flemish French) மொழி பேசுவோரிடையே இடப்பெயர்வுகள் நிகழாமலிருந்ததைக் கூறலாம். ஆயினும், இரு நாடுகளுக்கிடையே மொழி ஒன்றே என்ற நிலையில் இடப்பெயர்வு நிகழுமெனில், சமூகத் தடைகள் அங்கு இல்லை என்றே கூறவேண்டும். அயர்லாந்திலிருந்து (Ireland) பிரிட்டனுக்கு ஏற்பட்ட இடப்பெயர்வு இவ்வகையில் அடங்கும்.

குடும்பம், நண்பர்கள், சொத்து, சமூகம் ஆகியவற்றோடு உள்ள பற்றுதலினால் இடம்பெயர்ந்து செல்லும் மனப்பாங்கு இல்லாமல் போகலாம். இதையும் ஒரு சமூகத் தடையெனக் கூறலாம். இதன் காரணமாகவே வயது முதிர்ந்த மக்களின் இடப்பெயர்வு வீதம் இளைய மக்களின் இடப்பெயர்வு வீதத்தைக் காட்டிலும் குறைவாயிருக்கும். போக்கு

வரத்துச் செலவுகள் மிகுதியாய் இருப்பதும் இடப் பெயர்வைத் தவிர்க்கலாம். அதனால்தான் குடி யிறக்கத்தை விரும்பும் சில நாடுகளும் தனியார் நிறு வனங்களும் இடம்பெயர்ந்து வரும் மக்களுக்குப் போக்குவரத்துச் செலவுகளை ஊக்கத் தொகையாக அளிக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இடப்பெயர்வுக்கென ஏற்படுத்தப்பட்ட சில கட்டுப்பாடுகள், பன்னாட்டு இடப்பெயர்வில் மிகுதியான இடையூறுகளை ஏற் படுத்தியுள்ளன. இடப்பெயர்வுக்கு ஊக்கம் அளிப்பது அல்லது இடப்பெயர்வைத் தடுப்பது ஆகிய செயல் களை மேற்கொள்வதன் மூலம் அரசுகள் இடப் பெயர்வின் அளவு, அதன் திசை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

இடப்பெயர்வுத்தேர்வு: இடம் பெயர்வோன் பிற மக்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட் டும் முறையினை இடப்பெயர்வுத் தேர்வு (Migratory Selection) என்பர்.

தொலைதூர இடப்பெயர்வுக்கு வேலைவாய்ப்பு களே முதன்மைக் காரணியாய் அமைவதால், தனி மனிதன் தன் தகுதிக்கேற்ற வேலையைத்தேடும் பொருட்டு அதில் மிக்க கவனம் செலுத்துவான். இத் தொழில் தேர்வு (Occupation Selection) பொதுவாக இடம்பெயர்ந்து சென்ற தொலைவுடன் தொடர்பு படுத்தப்படும் (Distance Relation). உயர் பதவியைத் தேடிச் செல்பவன், தொலைதூரத்திற்குப் பயணம் மேற்கொள்ள நேரிடும். மாறாக, திறமை குறைந்த தொழிலாளர் இவ்வாறு தொலைதூரத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல நேராது. ஒருசில சமூகக் காரணங் களும் இடப்பெயர்வைத் தோற்றுவிக்கின்றன. இவ் வகையில் அமெரிக்க நீக்கிரோ (Negro) இனத்தைச் சேர்ந்தவர்களின் இடப்பெயர்வு அடங்கும். வெள்ளை யர்களைப் போன்ற தகுதிமிக்க வேலைகளைத் தாமும் பெறும் நோக்கில் அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலிருந்த மக்கள் வடக்காகவும் மேற்காகவும் தொலைதூரங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கின்ற னர். மனித உரிமைத் தேர்வுகள் (Human Rights Selection), பண்பாட்டு வழக்கு (Cultural Tradition), வேற்றுமை காட்டல் (Discrimination) ஆகியவற்றின் வேறுபாடுகளைக் கொண்டு அமையலாம். வயது, பால் வேறுபாடு போன்றவைகளும் இடப்பெயர்வுடன் தொடர்புடையவைகளே.

பொதுவாக இடம்பெயரும் மக்களில் இளைய, நடுத்தர வயதுடைய மக்களே பெருந்தொகையில் இருப்பர். இவ்வயதிலேயே கல்வி, திருமணம், வேலை அமர்வு ஆகியவற்றின் காரணமாகத் தம் வீட்டாரை விட்டுப் பிரிந்து செல்லும் நிலை ஏற்படும். அதன் பின்னரும் குழந்தைகளின் தேவை, வேலைமாற்றம் ஆகியவற்றின் தொடர்பாக இடம் மாறிச் செல்லும் வாய்ப்புண்டு. ஒருசில நாடுகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைந்து காணப்படுவதால், ஆண்கள் செல்வாக்குப் பெற்று இடப்பெயர்வில் பெரும் மாற்றத்தை உண்டாக்குவர். மாறாக ஆண் களுக்கும் பெண்களுக்கும் சமமான அளவு வேலை வாய்ப்புகள் இருப்பின், இடப்பெயர்வில் பெருமள வான மாறுதல்கள் ஏற்படுவதில்லை.

வரலாற்று இடப்பெயர்வுகள்: வரலாற்று இடப் பெயர்வுகள் உள்நாட்டு இடப்பெயர்வென்றும், பன் னாட்டு இடப்பெயர்வென்றும் அவற்றின் ஆற்றலின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

வரலாற்றுக்கு முந்தைய காலப் பதிவேடுகள் கிடைக்கப் பெறாததன் காரணமாக, அக்கால இடப் பெயர்வுகளையும் அவற்றின் அளவுகளையும் அறுதி யிட்டுக் கூறுவதற்கில்லை. இருப்பினும் மக்கள் இடம் விட்டு இடம் நகர்ந்தும், ஒரு நாட்டிலிருந்து மற் றொரு நாட்டிற்குக் குடிபெயர்ந்துமுள்ளனர் என்று உறுதியாகச் சொல்லப்படுகிறது. இவ்விடப்பெயர்வு கள் காலநிலை, நிலத்தின் வளம், சமூகப் பொருளா தாரச் சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து நிகழ்ந் துள்ளன. நீர்நிலைகள் நிறைந்த சமவெளிப் பகுதி களில் போக்குவரத்து வசதிகள் பெருகியதாலும், இடப்பெயர்வுகள் ஏற்பட்டிருக்கலாம். பழங்குடி மக்களிடையே ஏற்பட்ட மோதல்களும் உள்நாட்டுப் போர்களும், மக்கள்தொகைப் பரவலுக்கு ஆற்றல் மிக்க காரணிகளாய்த் திகழ்ந்தன. இடம்பெயர்ந்து செல்லும் மக்கள் போர்க் காலங்களில் கொல்லப் பட்டதன் விளைவாக, இடப்பெயர்வின் ஆற்றல் குறைந்து, புதுப்புது இடங்களில் குடியேற்றங்கள் உருவாயின. மத்திய ஐரோப்பாவின் மீதான அட் டிலா, செங்கிசுகான் படையெடுப்புகள், கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இடம் பெயர்ந்து சென்ற மக்களைக் கொன்று, இடப் பெயர்வைக் குறைத்தன. இடப்பெயர்வுகளும் பொதுவாகச் சிறு குழுக்களாக உறவு முறைகளின் பாற்பட்டு நிகழ்ந்துள்ளன. அவ்வாறன்றி மக்கள் இடம்பெயர்ந்து சென்றது அரிதாகவே இருந்துள்ளது.

தொடக்கக்கால இடப்பெயர்வு: இயற்கை வளப் பற்றாக்குறை, பஞ்சம், போர் ஆகியவற்றால் ஏற் பட்ட இடப்பெயர்வைத் தொடக்கக்கால இடப் பெயர்வு (Primitive Migration) எனலாம். இவ்வகை இடப்பெயர்வுகளின் காரணங்களாலேயே உலகில் அண்டார்க்டிகா தவிர்த்த அனைத்து இடங்களிலும் மக்கள் குடியேறினர். தொடக்கக் கால இடப்பெயர் வில் மொத்த மக்களும் இடம்பெயர்ந்து சென்றது,

வரலாற்றில் பல விளைவுகளை ஏற்படுத்தியது. சான்றாக, கி.பி. 4-5ஆம் நூற்றாண்டுகளில் உரோமானியப் பேரரசின்மீது காட்டுமிராண்டிகள் (Barbarians) அடுத்தடுத்துத் தொடர்ச்சியான வகையில் படையெடுத்த நிகழ்ச்சிகளைக் கூறலாம். அயர்லாந்தில் உருளைக்கிழங்கின் விளைச்சலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, கி.பி. 1846–1855–ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பஞ்சம் உருவானதால், 10 இலட்சம் மக்கள் அந்நாட்டை விட்டு வெளியேறினர். இந்நிகழ்ச்சியைப் புதிய காலச் சான்றாகக் கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

**கட்டாய இடப்பெயர்வு:** அரசினாலோ செல்வாக்கு மிக்க சில நிறுவனங்களாலோ இடம்பெயர்ந்து செல்லத் தூண்டப்பட்டு இடப்பெயர்வு நிகழுமெனில், அதனைக் கட்டாய இடப்பெயர்வு என்பர். இது இடம் பெயர்ந்து செல்லும் மக்களின் விருப்பத் தேர்வைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாகக் குற்றவாளிகள் நாடு கடத்துப்படுதல், அரசியல் காரணங்களுக்காக மக்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுதல், சிறுபான்மை மக்கள், கட்டுப்பாடுகளில் அடங்கிய தொழிலாளர்கள் ஆகியோரின் இடப்பெயர்வுகள் ஆகியவற்றைக் கூறலாம். அடிமை வாணிகம் ஒழிக்கப்படுவதற்கு முன் 2 கோடி ஆப்பிரிக்க மக்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இலைபீரியாவில் (Liberia) வாழும் மக்களுள் பெரும்பாலோர் அமெரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்தோராவர். நாசிகளின் கட்டுப்பாடுகளில் அடங்கிய தொழிலாளர் கொள்கையின் காரணமாக, 80 இலட்சம் ஐரோப்பியர்கள் இரண்டாம் உலகப் போரின்போது வெளியேற்றப்பட்டனர். ஒரு சில அகதி இயக்கங்களும் மக்கள் தொகைப் பரிமாற்றங்களும்கூடக் கட்டாய இடப்பெயர்வில் அடங்குகின்றன. இராணுவ வீரர்களின் பணியிட மாற்றங்களும் இவ்வகை இடப்பெயர்வுகளைத்தோற்றுவித்தன.

**தடையற்ற தொடர்ச்சியான பரும இடப்பெயர்வுகள்:** துணிவு மிக்க முனைப்புள்ள ஒருவனோ தனிக் கூட்டம் ஒன்றோ தனித்துத் தாமே இடம் பெயர்ந்து செல்வதை தடையற்ற இடப்பெயர்வென்பர் (Uninterupted Migration). தொடக்கத்தில் ஒரு சிலரே இவ்வாறு செயற்படினும் இதைத் தொடர்ந்து பின்னர் பலரும் இடம்பெயர நேரிடும். இடம் பெயர்ந்தவன் தன் இல்லத்திற்குத் தொடர்பு கொள்ளுவதாலும் பின்னர் ஏற்படும் நேரடித் தொடர்புகளாலும் உறவினர், நண்பர் ஆகியோர் ஊக்குவிக்கப்படுவர். இம் முறையில் புதிதாக இடம் பெயருமொருவர், மற்றவரை ஊக்கப்படுத்துவதன் விளைவாகத் தொடர் இடப்பெயர்வு (Continuous Migration) நிகழ்ந்து, ஆயிரக் கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து செல்ல நேரலாம். இவ்வகையில் தொடர் இடப்பெயர்வே, பரும இடப்பெர்வுக்கு வழிகோலுவதாய் அமைகிறது. இருநிலப்பகுதிகளுக்கிடையே செய்தித் தொடர்பு வசதிகள் பெருகி வரும் வேளையில், மரபு வழி இடப்பெயர்வு தோற்றுவிக்கப்பட்டு அதன் அளவு பெருகுகிறது. பரும இடப்பெயர்வு (Mass Migration) ஒருவகையில் கூட்டு நடத்தையெனவும் கருதப்படும்.

அட்லாண்டிக்கு இடப்பெயர்வு கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் முதலில் தடையற்றதாகவும், பின்னர்த் தொடர் இடப்பெயர்வாகவும் மாறி, 4.5 கோடிக்கும் மிகையான ஐரோப்பிய மக்கள் அமெரிக்க நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். சிறிய அளவினதான இடப்பெயர்வுகள் ஐரோப்பாவிலிருந்து ஆசிய உருசியாவிற்கும், சீனம், இந்தியா முதலான நாடுகளிலிருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குமாக ஏற்பட்டன.

**இக்கால இடப்பெயர்வுகள்:** முற்காலத்தில் இடப்பெயர்வு தனி மனிதனையோ ஒரு குடும்பத்தையோ பொறுத்து நிகழ்ந்து வந்தது. இடம்பெயர்ந்து சென்ற மக்கள், அரசாங்கத்திடமிருந்து எவ்வித உதவிகளையும் பெற்றதில்லை. மக்கள் தங்கள் பொருளாதாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு தம் விருப்பப்படி புதிய இடங்களைத் தேர்வு செய்து அவற்றில் குடியேறினர். ஆனால், காலங்கள் செல்லச் செல்ல உலக நாடுகள் இடப்பெயர்வு முறைகளில் தனி அக்கறை கொண்டு குடிபெயர்ந்து செல்லும் மக்களுக்குப் பல உதவிகளைச் செய்ய முற்படுகின்றன. சான்றாக வட அமெரிக்கர் குடிபெயர்ந்து வருவோருக்குத் தம் நாட்டில் பெருமளவில் நிலங்களைக் கொடுத்துக் குடிப்பெயர்வுக்கான ஊக்கத்தை அளிக்கின்றனர். இன்றும் இத்தகைய நோக்குடன் கொலம்பியா, பெரு, பிரேசில் போன்ற நாடுகள் அளிக்கும் விளம்பரங்களைப் பன்னாட்டுக் கால இதழ்களில் காணலாம்.

மக்கள்தொகை வளர்ச்சியின் வேறுபாடுகள், அலுவலகக் கட்டுப்பாடுகள், பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்படும் மாறுதல்கள்ஆகியவற்றால் 20–ஆம் நூற்றாண்டில் புதுவகை இடப்பெயர்வுகள் தோன்றலாயின. நாடுகளுக்கிடையே மக்கள்தொடர்பு வழிமுறைகள், குடியிறக்க அலுவலகங்கள், வேலை வாய்ப்பகங்கள் ஆகியவற்றோடுபுதுவகைத்தொடர்பு முறைகள் பெருக்கமடைந்துள்ளன. இதன் காரணமாகப் பன்னாட்டுப் பரும இடப்பெயர்வு நாளடைவில் ஒரியக்கமாகவே மாறி, வளர்ச்சி குறைந்த நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத்

திறனற்றதொழிலாளர் பெருமளவில் இடம்பெயர்ந்து செல்கின்றனர். இது பெரும்பாலும் ஒரு கண்டத்தினுள்ளே நிகழும் நிகழ்ச்சியாகும். நிலநடுக் கோட்டுப் பகுதியிலிருந்து (Equator) வடமேற்கு ஐரோப்பாவிற்கும், கரிபியன், மெக்சிகோ நாடுகளிலிருந்து தென் ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளுக்குமாக இடப்பெயர்வுகள் ஏற்படுகின்றன. இதில் பெரும்பகுதி நிலையற்ற தொழிலாளர் மாற்றமாகவே உள்ளது. இவ்வகைத் தொழிலாளர் இடம்பெயர்ந்து, தாம் வந்தடைந்த நாட்டில் பல ஆண்டுகள் தங்கினாலும் அவர்களை நிலையான தொழிலாளர்கள் என்று வகைப்படுத்துவதில்லை.

இருபதாம் நூற்றாண்டில் நிகழும் பன்னாட்டு இடப்பெயர்வின் மற்றொரு சிறப்புத் தன்மை, அகதிகள் இடப்பெயர்வாகும். ஐரோப்பாவில் 1945-க்கும் 1955-க்குமிடையே பலர் அகதிகளாக்கப்பட்டுக் குடிபெயர்ந்த நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஊரக, நகர்ப்புற இடப்பெயர்வுகள் உலகெங்கிலும் பெருவாரியாக நிகழ்ந்துள்ளன. தொழிலியமாக்கப்பட்ட நாடுகளில் (Industrialised Nations) மாநகர்களிலிருந்து புறநகர்களுக்கு (Sub Urban) இடப்பெயர்வுகள் வளரத் தொடங்கின.

விளைவுகள்: இக்காலத்தில் இடப்பெயர்வுகள் பல சமூகப் பொருளாதாரச் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன. ஒவ்வோர் இடப்பெயர்வும் பல்வேறு முன்னேற்றம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. இவ் எதிர்பார்ப்புகளில் சில உண்மையாகவும், சில பொய்யாகவும், சில அடையஇயலாமை உடையனவாகவும் இருக்கலாம். எதிர்பார்ப்பில் ஏமாற்றமும் தோல்வியும் முற்றிலும் ஏற்படுமாயின் சொந்த நாட்டிற்கோ, சொந்த ஊருக்கோ இடம்பெயர்ந்து செல்ல நேரிடும். இல்லையேல் உற்சாகம் இழந்து, மன நொடிப்புடனும், உளச் சோர்வுடனும் வாழ்க்கையில் ஊக்கமின்றியும் வாழ்க்கையைத் தொடர நேரிடும். இவ்வகையான மக்கள் இடம்பெயர்ந்த இடத்திலும் மகிழ்ச்சியின்றி, தங்கள் சொந்த நாட்டிற்கும் ஊருக்கும் திரும்பிச் செல்லவும் வழியின்றி, நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்வர். நடைமுறையில் இடம்பெயர்வோர் தாம் சென்ற இடத்துச் சூழலுக்கு ஒத்து வாழ்வதென்பது கடினமானதொன்றே. இடம்பெயர்ந்து குடியமர்ந்த அப்பகுதியின் மக்கள்தொகையில் நெருக்கம் உண்டாவதால் நலவழி, பொது அகக்கட்டுமான வசதிகள் பாதிக்கப்படுவதுடன், அங்காடியில் பொருள்களின் விலையில் ஏற்றமும் ஏற்படலாம். நிலம், சொத்து ஆகியவற்றின் மதிப்பும் கூடலாம். அப்பகுதி மக்களின் இறப்புத் தன்மை (Mortality), கருவளத் தன்மை (Fertility) ஆகியவற்றில் பல மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

இடம்பெயர்ந்து வந்தோரைக் கொண்ட பகுதி, தன்னிடம் வந்து சேர்ந்த உழைப்பாளரையும் அவரின் அறிவையும் கூடுதல் செலவின்றிப் பெறுகிறது. ஆனால், அவ் உழைப்பாளரை இழந்த நாடும் ஊரும் ஒரு புறம் அறிவாற்றலையும் மறுபுறம் உழைப்பின் ஆற்றலையும் இழந்து நிற்கின்றன. இதையே அறிவுப் புடைபெயர்ச்சி (Brain Drain) எனவும் கூறுவர். வளர்ந்து வரும் நாடுகளில் ஊரக, நகர்ப்புற இடப்பெயர்வுகளால் நகரியமும் மக்கள்தொகைப் பரவலும் ஏற்படுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கி அறிஞரும், திறன்மிக்க தொழிலாளரும் இடம் பெயர்ந்து செல்வதால் அறிஞர் இடப்பெயர்வு ஏற்படும். இதன் காரணமாகவே இக்கால அரசுகள் பொருளாதார முன்னேற்றம், நிலச் சீர்த்திருத்த நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுகின்றன.

மக்கள்தொகை குறைவாக உள்ள பகுதிக்கு இடப்பெயர்வு நிகழுமெனில், அப்பகுதியின் நிகர உள்ளிடப்பெயர்வு (Net in Migration) பல வாணிகச் சிக்கனங்களைப் (Economies of Business) பெற்றுத்தரும். அப்பகுதியில் உற்பத்தியின் அளவு பெருகி, வாணிகம் உயர்ந்து, பொருள்களின் உற்பத்திச் செலவு குறையும்; மறுபுறம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். தேவிடு ஈடு (David Heed) என்பவர் கருத்தின்படி நிகர இடப் பெயர்வால் மக்கள் தொகையில் பலவகைப் பண்பாடுகளுடைய இளைய மக்களின் வீதம் கூடி, மக்கள்தொகையில் வேறுபட்ட பண்புகள் மிகுந்து காணப்படும்.

இடப்பெயர்வால் ஏற்படும் மக்கள்தொகை மாற்றத்தை மதிப்பிடுவது சிக்கலுடையதாகும். எடுத்துக்காட்டாக 'அ' என்ற நாட்டிலிருந்து 'க' எண்ணிக்கை கொண்ட மக்கள் 'ஆ' என்ற நாட்டிற்கு இடம் பெயர்ந்து செல்வார்களெனில் 'அ' வின் மக்கள்தொகை குறைந்தும் 'ஆ' வின் மக்கள் தொகை அதே அளவுக்கு மிகுந்தும் காணப்படும். ஆனால், நீண்ட காலத்தில் இதுவே வேறு வகையில் காணப்படும். இடம்பெயர்ந்து செல்லும் மக்கள் குறிப்பாக இளைய வயதுடையோராகையால் 'அ' நாட்டின் கருவள வீதம் குறைந்தும், 'ஆ' நாட்டில் மிகுதியாகவும் இருக்கும். குடிப்பெயர்வின் காரணமாகப் பொதுவாகத் திருமணம், கருவுறுதல் ஆகியவற்றில் தாமதப் படுத்தல் ஏற்பட்டு, மக்கள் நெருக்கம் குறைந்து பிறப்பு வீதம் குறையும். குடியமர்வு, நகரியத்தையும் எந்திரவியத்தையும் துரிதப்படுத்தி மக்களிடையே மேல்நிலைச் சமூக முன்

னேற்ற இயக்கத்தை ஏற்படுத்தும். இதன் விளைவாகச் சராசரிக் குடும்ப அளவு குறையும்.

இடம்பெயர்ந்து வரும் மக்கள் மிகுதியாகவும் ஒரே பண்பாட்டுப் பின்னணியிலும் இருக்கும்போது அவர்தம் பண்பாட்டைக் குடியமர்ந்த இடத்தில் புகுத்த விரும்புவர். ஆனால், இந்நிலையில் பொதுவாகப் பண்பாட்டுக் கலப்பு (Cultural Fusion) ஏற்பட்டுப் பண்பாட்டுப் பன்மை (Cultural Pluralism) நிலைபெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. காண்க: உள் இடப்பெயர்வு.

**இடபதீர்த்தங்கரர்:** தீர்த்தங்கரர் என்ற பெயருக்குப் 'பிறவிப் பெருங்கடலை' நீந்திக் கடந்தவர், என்பது பொருளாகும். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றிச் சைன தத்துவத்தைப் பரப்பினர்; இனியும் மேலும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றுவர் என்பது சைன மக்களின் நம்பிக்கை. இன்று வரை தோன்றிய இருபத்து நால்வருள் முதலாம் தீர்த்தங்கரரே இடபதேவர் எனப்படுவார். இவரே, சைன சமயத்தைப் போதித்த முதலாமவர். எனவே இவர், 'ஆதிபகவன்' எனக் குறிக்கப்படுவார். தொன்மை வேத நூலான இருக்கு வேதத்தில் இடபதேவரைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. இயசுர் வேதமும் பாகவத புராணமும் இவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

தமிழிலக்கியங்கள் இவரை, 'ஆதிபகவன்' என்றும் 'ஆதிநாதன்' என்றும் சுட்டுகின்றன. பொதுவாகத் தீர்த்தங்கரர்களும் பிற சமணத் துறவிகளும் தலை மழித்த தோற்றத்தினர். தலை மயிர் அவ்வப் போது கைகளால் பறித்து எறியப்படுவது சைன சமயச் சடங்காகும். ஆனால், ஆதிபகவ்ன், 'தாழ்சடை முடிக்கடவுளாக'த்திருக்கலம்பகத்தில் போற்றப்படுகிறார். ஆதிநாதர் மற்றவரைப் போலத் தம் தலை மயிரைக் களையமுற்பட்ட போது இந்திரன், ''அழகிய முடியைக் களைய வேண்டா'' என்று வேண்டிக் கொண்டதற்கிணங்க, முடிகளைதலை நிறுத்திக் கொண்டார் என்பது வரலாறு.

தீர்த்தங்கரருக்குரிய அடையாளம்: ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் ஒவ்வோர் அடையாளக் குறியீடு உண்டு. இதன்படி, இடபதேவர்தம் அடையாளச் சின்னம் ஏறு (இடபம்) ஆகும். இடபதேவர்தம் சிலையின் அடிப்புறம் காளைச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். காளைச் சின்னத்தை அறத்தின் வடிவமாகவும் வழிபாட்டின் மறுவுருவமாகவும் கருதுதல் சமண மரபு.

பசுவின் முகமும் மனித உடலும் வாய்ந்த கோமுகயட்சன், இடபதேவரின் பரிவாரத் தெய்வங்களுள் முதலாமவனாகக் கருதப்படுகிறான்.

இடபதேவர் வாழ்ந்த காலம்: ஒவ்வொரு தீர்த்தங்கரர்தம் வாழ்நாள், உயரம் ஆகியன முறையே பூர்வ ஆண்டுகளாகவும் வில்லாகவும் சைன நூல்களில் விவரிக்கப்படுகின்றன. அவ்விவரப்படி, இடபதேவரின் வாழ்நாள் 84 இலட்சம் பூர்வ ஆண்டு (80 இலட்சம் ஆண்டுகள்); உயரம் 500 வில் (ஏறத்தாழ 3000 அடி). உயரமானவர்தம் உயிர் மிகப் பெரியதாக இருக்கும் என்பது சைன சமயக் கொள்கை. 'பெரியதன் ஆவி பெரிது' என்பது பழமொழி. இதற்கேற்பச் சைன சமய முதல்வரின் 'உயிர்பெரிது, உடல்பெரிது' என்ற கருத்தில் மேற்கூண்ட காலப் பகுப்புத் தரப்பட்டது போலும்.

ஆதிநாதர் பிறந்த இடம்: அயோத்தியில் இவர் பிறந்தார் என்று சைன நூல்கள் கூறுகின்றன.

இடபதீர்த்தங்கரர் வீடுபேறு அடைந்த இடம்: இடப தீர்த்தங்கரர் வீடுபேறு அடைந்த இடம் திருக்கயிலாய மலை ஆகும்.

திருச்செந்தூர் வட்டத்தில் 'ஆதிநாதபுரம்' என்ற ஊர் இடபதேவர்தம் நினைவை ஊட்டுவதாகும். கோவை மாவட்டத்தில் வெள்ளோடு என்ற ஊரில் ஆதிநாதர்க்குக் கோயில் உள்ளது. ஆதீசுவரர் என்னும் பெரிய கோயில்களுக்கும் ஆதிநாதர்க்கும் உறுதியான தொடர்புகள் உண்டு.

இவர் பெயரில் 'ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்' என்ற சிற்றிலக்கியம் தமிழில் படைக்கப்பட்டுள்ளது, 'ஆதீசுவர புராணம்' என்ற நூலும் வேறு மொழியில் உள்ளது. க. ப. அ.

துணை நூல்கள்:

வேங்கடசாமி, சீனி. மயிலை., சமணமும் தமிழும், தி. தெ. சை. நூ. கழகம், சென்னை, **1959**.

**Kalghatigi. T.G., Jainism, University of Madras, Madras, 1978.**

**இடபம்:** வானில் பூமி சூரியனைச்சுற்றிச் செல்லும் வட்டப்பாதைக்கு (Ecliptic) நேராகச் சூரியன் விண்ணிற் செல்லும் பாதை சூரிய வட்டப்பாதை (Zodia ) எனப்படும் இதன்கண் இராசிமண்டலம் அமைந்துள்ளது. இதில் அசுவனி முதல் 27 விண்மீன்களும் அமைந்துள்ளன. சூரியவட்டப் பாதை 30 பாகைகள் கொண்ட 12 இராசிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் இராசியிலும் $2\frac{1}{4}$ விண்மீன்கள் அடங்கும். பன்னிரண்டு இராசிகளுள் இரண்டாவ

தாக அமைவது இடபம் ஆகும். இடபராசியில் கார்த்திகையின் பின் முக்கால் கூறும், உரோகிணியும், மிருக சீரிடத்தில் முன் அரைக் கூறும் ஆகிய விண்மீன்களின் தொகுதி அடங்கும். இடபம் என்பது எருதினைக் குறிக்கும். இப்பெயர் இவ்விராசிக்கு வடிவ ஒப்பினால் அமைந்ததாகும். இது ஆங்கிலத்தில் 'தாரசு' (Tauras) எனப்படும்.

விண்மீன்கள், கோள்கள் முதலியன பற்றிச் சிறந்த புலமை பெற்றிருந்த சங்க காலத் தமிழ் மக்கள் தங்கள் இலக்கியங்களில் இராசி பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். 'உருகெழு வெள்ளி வந்து ஏற்றியல் சேர' என்னும் பரிபாடல் பகுதியில் (பரி.11-4) இடம்பெறும் ஏறு என்பது இடபத்தையும், இயல் என்பது இராசியையும் குறித்து நிற்கின்றன என்று அறிஞர்கள் விளக்குகின்றனர். மேலும், 'திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக' எனவரும் நெடுநல் வாடைத் (நெடு. 160) தொடரில் அமைந்த ஆடு - மேடராசியைக் குறிப்பதாகவும் விளக்கியுள்ளனர்.

இடபத்தினை உணர்த்தும் ஏறு, குண்டை, நந்தி புல்லம், மாடு, ஊர்தி, விடை, காளை, ஈசனார் வாகனம், கோவிடை முதலிய பெயர்களாலும் இந்த இராசி குறிக்கப்படும் என்பதனை நிகண்டுகள் கூறுகின்றன. சோதிட நூல்களும் இந்தப் பல பெயர்களாலும் இவ்விராசியினைக் குறிப்பிட்டுள்ளன. காணப்படும் வடிவ ஒப்புமையால் மட்டுமன்றித் தொழில், செல்வம், அழகு, பருமன், உடற்கட்டு, கடும் எதிர்ப்பு, சலியாத ஊக்கம் போன்ற பண்புகளின் ஒப்புமையாலும் இராசிக்கு ஏறு என்று பெயரிட்டனர் என்பது கூறப்படுகிறது. இடபராசியினைக் குறிக்கப் பின்வரும் குறியினைப் பயன்படுத்துகின்றனர். 'O' இக்குறியில் அமைந்துள்ள வட்டம் மாட்டின் தலையினையும், மேற்பகுதியிலமைந்துள்ள இருவளைவுகள் இரண்டு கொம்புகளையும் உணர்த்துவனவாகக் கருதப்படுகின்றன. தலையிலும் கால்களின் குளம்புகளிலும் கொம்புகளையுடைய எருதாக இடபத்தின் உருவத்தினை மேல்நாட்டவர் கொண்டுள்ளனர். இந்த உருவம், தன் சினத்தைத் தூண்டுபவரைச் சினம்மிக்குக் கடுமையாக எதிர்க்கும் இயல்பினைச் சுட்டுவதாக உள்ளது.

இடபம் ஐம்பூத இயல்புகளுள் மண்ணின் (பிருதிவி) இயல்புடையது; நிலைத்தன்மையுடையது; பெண்மையுடையது; ஈரஇயல்பு கொண்டது; பாதிக் கருப்பேறு உடையது. இது இரட்டைப்படை எண்ணில் அமைந்த இராசியாகும்; குறுகிய காலத்தில் தோன்றும் இராசிகளுள் ஒன்று. மேலும், இது நாற்கால் இராசியாகும்; இடுப்புப் பகுதியில் உதிக்கும்.

வெள்ளி என்னும் சுக்கிரன் இடபராசிக்குரியவன். அவன் இவன் தலைவனாவான். இந்த இராசிக்குரிய நிறம் வெண்மை. இதற்குப் பசுமையும் கத்தரிப் பூ நிறமும் உகந்தனவாகும். இதற்குரிய திசை தெற்கு. சூரியன் இடபராசியில் இயங்கும் காலம் வைகாசி மாதம் ஆகும்.

இடபம்[2] என்பது காளைமாடு. இது சிவபெருமானுடைய ஊர்தியாகக் கூறப்பட்டுள்ளது. 'ஊர்தி வால்வெள்ளேறே' என்று புறநானூறு இதனைக் குறிப்பிடுகிறது (புறம். 1). சிவன் ஊர்தியாகக் கூறப்படும் இடபத்தினை, அறவடிவத்தின் உருவகமாகச் சைவ சமயத்தவர் விளக்கம் செய்வர். பா.ரா.க.

**இடபாந்திக மூர்த்தி** என்பது சிவபெருமான் மேற்கொண்ட திருக்கோலங்களில் ஒன்றினைக் குறிக்கும். அவர் எல்லாவற்றையும் சம்காரம் (அழிப்பு) செய்து நின்றபோது, எக்காலத்தும் அழிதலில்லாது விளங்கும் அறம், இடப வடிவு கொண்டு அவரை அடைய, அதற்கு அடைக்கலம் அளித்து ஆதரித்தருளுதற்கு மேற்கொண்ட கோலம் இடபாந்திக மூர்த்தி என்று வழங்கப் பெறுகிறது. இத்திருக்கோலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் பல்லவர்களால் கட்டப்பட்ட திருக்கோயில் கட்டடங்களில் இடம் பெற்றுள்ளது. பல்லவ நரசிம்மவர்மன் காலச் சிற்பி, மகாபலிபுரத்தில் அமைத்த, அருச்சுன இரதம் என்று கூறப்படும் ஒரு கற்கோயிற் சுவரில் (Monolithic Temple) இம்மூர்த்தியின் திருவுருவத்தினை வடித்துள்ளான். இதன்கண் சிவமூர்த்திக்குப் பின்புறம் அவர் வலப்பக்கத்தில் இடபம் நிற்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. சோழர்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டளவில் அமைத்த திருக்கோயில் சுவர்களிலும் இம்மூர்த்தியின் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. திருவாலீசுவரம் கோயிலில் விளங்கும் பல்வேறு சிவமூர்த்த வடிவங்களுள் இடபாந்திக மூர்த்தி வடிவமும் ஒன்றாகும். இச்சிவமூர்த்தியின் அருகே இடப்பக்கத்தில் பார்வதிதேவியின் திருமேனி செதுக்கப்பட்டுள்ளது. சாளுக்கியர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்தவர்கள். அவர்கள் அய்கொளே (Aihole) என்னுமிடத்தில் அமைத்த துர்க்கை கோயிலில் இம்மூர்த்தியின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்கண் சிவபெருமான் திருமேனி இடபத்தின்மேல் சாய்ந்திருப்பது போல அமைந்திருப்பதோடு, இடக்கை அவ்விடபத்தின் தலையின்மேல் ஊன்றியிருப்பது போலவும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பட்டடக்கல் என்னுமிடத்திலுள்ள கோயிலிலும் இம்மூர்த்தியின் வடிவம் உள்ளது. சோழ மன்னர்களால் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பெற்ற இம்மூர்த்தியின் வெண்

கலச் சிலை, இலங்கையிலுள்ள கொழும்புத் தேசிய அருங்காட்சியகத்தில் (Columbo National Musuem) பாதுகாக்கப்பட்டு வருகிறது. இங்கே உள்ள இந்த இடபாந்திக மூர்த்தத்தில் இடபம் இடம் பெற வில்லை. மூர்த்தியின் இடக்கை அமைப்பு இடபத்தின் மேல் வைத்திருக்கும் தோற்றத்தில் அமைக்கப் பட்டுள்ளது. திருவெண்காட்டில் கிடைத்துள்ள இட பாந்திக மூர்த்தியின் அழகிய வெண்கலத் திருமேனி, கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் விளங்கிய சோழர் காலத்தைச் சேர்ந்ததெனக் கருதப்படுகிறது. இது அழகுமிக்க பதும பீடத்தில் நிற்கும் நிலையில் உள் ளது; அருகே இடப்புறத்தில் பார்வதியின் வெண்கலத் திருமேனியும் பதுமபீடத்தில் விளங்குகிறது. இங்கு இடபத்தின் படிவம் இல்லை. எனினும், சிவமூர்த்தி யின் வலக்கை இடபத்தின் மேல் வைத்திருக்கும் அமைப்பில் உள்ளது. இங்குள்ள சிவமூர்த்தி இரு கைகளோடு அமைக்கப்பட்டுள்ளது. வெண்கலத்தி லும் கல்லிலும் அமைக்கப்பட்டுள்ள இடபாந்திக மூர்த்தியின் திருமேனிகளைக் காணுங்கால், இம் மூர்த்தம் தன் இடப்புறத்தில் பார்வதி தேவித் திரு மேனியுடனும் அது இல்லாமலும் அமையலாம் என் றும், இடபத்தோடும் இடபம் இன்றியும் அமைய லாம் என்றும், இடபம் அமையுங்கால் அது மூர்த்தி யின் இடம் அல்லது வலப் பக்கத்தில் இடம்பெறும் என்றும் தெரிகிறது.

**இடபாரூட மூர்த்தி:** வடமொழியில் இதனை விருட பாரூட மூர்த்தி என வழங்குவர். சிவனின் திருக்கோலங்களுள், முக்கியமான மூர்த்தங்களுள் ஒன்றாக இத்திருவுருவம் உள்ளது. இடபம் எனப் படும் காளையை ஊர்தியாகக் கொண்ட திருவுருவம் என்பது இதன்பொருள்.

பல வடமொழிப் புராணங்கள், உத்தரகாமிகா கமம், பூர்வகாமிகாகமம், உத்தர காரணாகமம், சகளாதிகாரம், காசிப சில்பசாத்திரம், சிரீசாரசுவதீய சித்திர கர்ம சாத்திரம், சில்பரத்தினம் போன்ற நூல் களில் இத்திருவுருவம் பற்றிய குறிப்புகள் நிறைய இடம் பெறுகின்றன. இந்நூல்களுள் சில இத்திருவுரு வைப் பற்றித் தனி அத்தியாயங்களில் விவரித்து எழுதுகின்றன.

தமிழகத்தில் சைவ நாயன்மார்களுள் ஒருவரான திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முதன்முதலில் காட்சியளித்த திருவுருவம் இந்த விடையூர்திப் பெருமான்தான்.

இத்திருவுருவம் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறிப்பிடும்போது மேற்குறிப்பிட்ட நூல் கள் தங்களுக்குள் கருத்து மாறுபாடு கொள்கின்றன. சிவனுக்குரிய நான்கு கைகளுள் பின் வலக்கை மழுவையும், பின் இடக்கை மானையும் தாங்குவன. முன்வலக் கையில் தண்டம் (தடி) ஒன்று இருக்கும். முன் இடக்கை சற்று வளைந்த நிலையில் இடபத்தின் தலையில் வைக்கப்பட்டதாக இருக்கும். தலை சடா மகுடமாக இருக்கும். முக்கண்ணுடன் கூடிய உருவத்தில் அணிகலன்கள் விளங்கும். தேவி எல்லா வித இலக்கணங்களுடன் கூடியவளாகச் சிவனது இடப்பாகத்தில் காணப்படுவாள். சில கோலங்களில் சிவனும் தேவியும் ஒருசேர இடபத்தின் மீது அமர்ந்தவர்களாகவும் காணப்படுவர்.

சோழர்காலச் சிற்பங்களுள் பல இடபாரூட மூர்த்தத்தைக் கொண்டுள்ளன. இலங்கையில் சோழராட்சிக்குட்பட்ட பொலனருவை என்னும் பகுதியிலும் இச்சிற்பங்கள் காணப்படுகின்றன. சிதம்பரம் நடராசர் கோவில், மதுரைக்கம்பத்தடி மண்டபம் ஆகியவற்றில் இத்திருவுருவம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. கோ. சு.

**இடர்தாங்கு பொருளியல்:** இக்கருத்து பொருளியல் கோட்பாடுகளின் ஆதாயக் கோட் பாட்டைச் சார்ந்ததாகும். தொழில்முனைவோன் தன் தொழிலில் எதிர்ப்படும் தவிர்க்கவியலாத இடர்ப்பாடுகளை (Risks and Uncertainties) மேற் கொள்ளலும் அதன் காரண விளைவுகளும், இடர் தாங்கு பொருளியல் (Risk Economics) எனப்படும். பொருளியல் வல்லுநர்கள் ஆதாயத்தின் இன்றியமை யாமையை ஆராய்ச்சி செய்ததன் பயனாகத் தொழில்முனைவோனுக்குத்தான் ஆதாயம் உரிய தென்றும், அத்தகைய உரிமையை அவன் பெறக் காரணம் பிற உற்பத்திக் காரணிகள் (Factors of Production) செய்யாத, செய்யவியலாததோர் இணையற்ற இடர் தாங்கல் கடமையை அவன் செய்வதுதான் என்றும் உறுதியாகக் கூறியுள்ளனர். கூலிக்கு வேலை செய்பவரும் ஒப்பந்த முறையில் வருவாய் பெறுபவரும் தாங்கள் ஏற்க மறுப்பதும் ஏற்கவியலாததுமாகிய இடர்களைத் தாங்குதல் தான் தொழில்முனைவோரின் சிறப்பான பொறுப்பு (Unique Function) என்பதும் புலனாகிறது.

இடர்தாங்குதலைப் புரிந்துகொள்ள, ஆதாயத் தைப் பற்றிய விளக்கம் இன்றியமையாததாகும். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஆதாயம் முதன்மையான இயக்கச் சக்தியாகச் செயற்படுகிறது. ஆதாயம் ஈட்டும் வாய்ப்பு உள்ள மையால்தான் முதலாளித்துவ அமைப்பில் தொழில் முனைவோரால் (Entrepreneurs) பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முத லாளித்துவ அமைப்பையுடைய பொருளாதாரம்

முன்னேற்றமடைவதற்கு ஆதாயமே அச்சாணியாக இருக்கிறது. உற்பத்தி நிறுவனங்களும் பல்வேறு தொழில் நிறுவனங்களும் வணிக நிறுவனங்களும் வளர்ச்சியடைவதற்கும் விரிவடைவதற்கும் ஆதாயமே தூண்டுதலாக அமைகிறது. தொழில் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளும் புதியது-புனைதல்களும் (Innovations) ஆதாய நோக்கத்தால் தூண்டப்பட்டு விளைபவையேயாகும். மாறாக, ஆதாயக் குறைவு ஏற்பட்டாலோ அது மறைந்தொழிந்தாலோ இழப்பு (Loss) ஏற்பட்டாலோ மேற் கூறிய பொருளாதார நடவடிக்கைகள் யாவும் சுணக்கமாகிவிடும்; குறைந்து படும்; நின்றுவிடவும் கூடும்

பல நாடுகளையும் பாதித்து 1930-ஆம் ஆண்டளவில் நிகழ்ந்த உலகப் பொருளாதார மந்தமும் அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அழிவுகளும் ஏற்பட்டமைக்குப் பங்கு ஆவண அங்காடியிலும் பிற அங்காடிகளிலும் ஆதாயங்கள் ஒழிந்து இழப்புகள் ஏற்பட்டதே காரணம் என்று பொருளியல் வரலாறு கூறுகிறது. ஆதாயங்கள் சரிந்தால் முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார நடவடிக்கைகள் சரிகின்றன; ஆகவே வருவாய்கள் சரிகின்றன; வருவாய்கள் குறையும்போது தேவைகள் சரிவதால் உற்பத்திகள் குறைகின்றன அல்லது நிறுத்தப்படுகின்றன; உற்பத்தி நிறுத்தங்கள் தொழிலாளர்களை வேலையிழக்கச் செய்கின்றன. வேலையில்லாத மக்கள் வருவாயின்றி அல்லற்படுகின்றனர்; பொருளாதாரம் நிலைகுலைந்து விடுகிறது. இவை அனைத்திற்கும் ஆதாய இழப்பே அடிப்படைக் காரணமாக அமைகிறது. ஆதாய முறிவுதான் பொருளாதார முறிவில் முடிகின்றது என்பதைக் காணும்போது ஆதாயத்தின் முக்கியத்துவம் தெளிவாகிறது. உண்மையான ஆதாயம் அல்லது தூய ஆதாயம் (Pure Profit) என்பதுதான், பொருளியலில் ஆதாயம் என்று குறிப்பிடப்படுகிறது. தொழில்முனைவோன் தொழிலின் முழுப் பொறுப்பையும், அதன் ஆதாய, இழப்பு விளைவுகளையும் ஏற்பதன் விளைவாகக் கிடைப்பது தான் அவன் பெறும் ஆதாய வரவாகும். தொழிலில் பல்வேறு மட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர் யாவரும் கூலிக்குப் பணி செய்பவரேயாவர். அவர்கள் ஆதாய, இழப்புப் பொறுப்பை ஏற்பதில்லை. தொழில்முனைவோனுக்கு மட்டுமே ஆதாயத்தை மட்டுமன்றி, இழப்பையும் ஏற்க வேண்டிய நிலையுள்ளது.

உற்பத்தி செய்த பண்டங்களை அல்லது பணிகளை விற்றுப் பெறும் வரவிலிருந்து அவற்றை உற்பத்தி செய்வதற்குக் கொடுக்கப்பட்ட எல்லாக் கூலிகள், வட்டிகள், நில (இட) வாரங்கள் (Rent), பிற செலவினங்கள் ஆகியவற்றைக் கழித்த பின்னர் எஞ்சி நிற்கும் தொகையே ஆதாயமெனப்படும். இதுவே பொருளாதார ஆதாயம் (Economic Profit) ஆகும்.

மிகுந்த ஆதாயத்தைப் பெறுவதற்கு வேறு சில காரணிகளும் சூழ்நிலைகளும் துணைபுரியக்கூடும். அங்காடியில் ஒரே ஒரு உற்பத்தியாளன் மட்டுமே ஒரு பொருளை உற்பத்தி செய்தால் அப்பொருளுக்கான அங்காடியின் முற்றுரிமை அவனுக்கு இருக்கும். அவன் இத்தகைய போட்டியற்ற அங்காடியைப் பயன்படுத்தி விலைகளை உயர்த்தித் தனக்கு மிகுந்த ஆதாய்த்தை ஈட்டிக்கொள்ள இயலும். தவிரவும் மாறிக் கொண்டேயிருக்கும் பொருளாதாரச் சூழ்நிலையில் தவிர்க்க இயலாததும் எதிர்பாராததுமான இடர்கள் அவ்வப்போது எழுந்து கொண்டும் மறைந்து கொண்டும் இருப்பது இயல்பாகும். தொழில்முனைவோன் தனக்குத் தானே தன் தொழிலில் புனைந்து கொள்ளும் புத்தாக்கங்களும் புதுமைப் படைப்புகளும் புற உலகில் நிகழ்ந்துவரும் தொடர் மாற்றங்களும், தொழிலில் ஆதாயம் ஈட்டும் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. ஆதாயத்திற்குக் காரணமாகிய காரணிகளே பேரிழப்புகளுக்கும் காரணமாகின்றன. எதிர்பாராத இழப்புகளால் இடர்கள் தோன்றுவதும் மறைவதும் தொழில் உலகின் இன்றியமையாத நிகழ்ச்சியாக ஆகிவிட்ட காரணத்தால், இத்தகைய இடர்களைத் தாங்க வேண்டியது தொழில்முனைவோனின் தவிர்க்க இயலாத தனிப் பொறுப்பாக ஆகிவிடுகிறது. தொழிலில் இடர்தாங்கும் பொறுப்புத்தான் தொழில்முனைவோனின் தனிச்சிறப்பான பொறுப்பு என்பதும் தெளிவாகிறது.

அடிப்படைப் பொருளாதாரச் சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் பொருள்களின் அளிப்பையும் தேவையையும் வரையறுக்கின்றன. இதன் விளைவாக, எதிர்பாராத வகைகளில் அளிப்பின் அளவோ அல்லது தேவையின் அளவோ மாறுபாடு அடைதல் இயல்பாகும். இத்தகைய மாற்றங்களை முன் கூட்டியே தொழில்முனைவோன் முழுமையாக அறிவதியலாது. திட்டமிட்டு உற்பத்தியைத் தொடங்குவதற்கும் உற்பத்தி செய்த பொருள் அங்காடியில் விற்பனை செய்யும் காலத்திற்கும் இடையேயுள்ள கால இடைவெளியில், புற உலகில் மாற்றங்கள் பற்பல நிகழ்ந்துவிடக் கூடும். இம்மாற்றங்களின் விளைவுகளிலிருந்து தொழில்முனைவோன் ஒருபோதும் தப்பிக்க இயலாது. உற்பத்தி செய்யத் தொடங்கியபின் ஏற்படும் திடீர் மாற்றங்களைத் தொழில்முனைவோன் எதிர்பார்க்கவோ அதற்கேற்பத் தன் உற்பத்தியை மாற்றிக்கொள்ளவோ இயலாது. ஆகவே இத்திடீர் மாற்றங்களால் விளையும் இடர்களை அவன் தாங்கிக்

கொள்ள வேண்டியதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.

போர், வெள்ளம், பருவகாலப் போக்கில் திடீர் மாற்றம், திடீர்ப் பற்றாக்குறைகள், பாணி மாற்றம் **(Change of Fashion)**, அரசின் திடீர்க்கொள்கை மாற்றம் முதலியன முன்னரே அறியக்கூடாத மாற்றங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். மக்கட்டொகை வளர்ச்சி, மூலதனக் குவிப்பு ஆகியவை இயல்பான விதிமுறைகளுக்குட்பட்டு நிகழ்கின்றவை; சராசரி நிகழ்ச்சித் தன்மையுடையவை; எதிர்பார்க்கக்கூடிய மாற்றங்கள் ஆகும். இத்தகைய மாற்றங்கள் விளைவிக்கும் இடர்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பும் தொழில்முனைவோன் எவனும் ஒரு காப்புறுதித் திட்டத்தைப் **(Insurance against risks)** பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் காப்புறுதித் திட்டப் பாதுகாப்பிற்குள்ளும் வாரா வகையைச் சார்ந்த எதிர் பாராத திடீர் மாற்றங்களைத் தொழில்முனைவோன்தான் தாங்கியாக வேண்டும். இத்தகைய நிச்சயமற்ற இடர்களைத் **(Uncertainties)** தாங்கிக் கொள்வது மிகவும் கடினமானதும் கசப்பானதும் ஆபத்தானதும் ஆகிய பொறுப்பாகும். இத்தகைய நிச்சயமற்ற இடரைத்தாங்கப் பெரும்பாலானவர்கள் முன்வருவதில்லை. ஆகவே இத்தகைய இடரைத் தாங்க முன் வருபவர்கள் துணிச்சல் கொண்ட மிகச் சிலரேயாவர். ஆதலின் எந்த ஒரு சமூகத்திற்கும் அதன் பொருளாதார வாழ்வு சீராக இயங்கவும், அப்பொருளாதாரம் முன்னேற்றம் அடையவும் இடர்தாங்கத் துணியும் தொழில்முனைவோர்கள் மிக மிகத் தேவைப்படுகின்றனர்.

காப்புறுதிப் பாதுகாப்பிற்கு அப்பாற்பட்ட வகையான தொழிற்றுறை இடர்களைத் தாங்கத் தேவைப்படும் தொழில்முனைவோர்களைக் கவர்ந்திழுக்க வேண்டி, அவர்கள் இடர்தாங்கத் துணிந்து முன்வருவதற்குப் பரிசாக, அவர்களுக்கு உயர் ஆதாயங்கள் ஈட்டும் வாய்ப்புகளை அளிப்பதற்குச் சமூகம் துணையாக நிற்கின்றது. இதுவே ஆதாயத்தின் காரணமும் விளைவும் ஆகும்.

ஆதாயக் கோட்பாட்டைச் சார்ந்த இடர்தாங்கு பொருளியல் இப்போது விரிவடைந்து, நுகர்வோர் செய்யும் முடிவுகள், உற்பத்தியாளர்கள் செய்யும் முடிவுகள், சந்தையில் போட்டியிடுவோர் தெரிந்தெடுக்கும் ஆட்டத்தந்திர முடிவுகள், விற்பனையாளரின் முடிவுகள் போன்ற கோட்பாடுகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் வகுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்பாராத நிச்சயமற்ற சூழல்களில் **(Choice under uncertainty)** பொருளாதார முடிவுகளை எவ்வாறு தெரிவு செய்கின்றனர் என்பதை விளக்கும் கோட்பாடுகள் பலவும் தோன்றியுள்ளன. இவற்றை எளிய வகையில் விளக்கும் நூல்கள் பலவும் வெளி வந்துள்ளன. தி.சு.மோ.

துணை நூல்கள்:

**Bober, M.M.,** Intermediate Price and Income Theory, W.W. Norton and Company, New-York, 1955.

**Knight, F.H.,** Risk, Uncertainty and Profit, Haughton Mifflin, Boston, 1921.

**இடவெந்தை** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற வைணவத் தலங்களுள் ஒன்று. இத்தலம் தொண்டை நாட்டில் வண்டலூர் என்னுமிடத்திலிருந்து 16 கல் தொலைவில் உள்ளது. திருவிடவெந்தை என்னும் இத்தலம் இன்று, திருவடந்தை என வழங்கப்படுகிறது. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள வராகப் பெருமாள், தம் தேவியை இடப் பக்கத்தில் கொண்டிருத்தலால் இத்தலம் இடவெந்தை என்னும் பெயர் பெற்றது. மார்க்கண்டேயர், 3460 முனிவர்கள், காலவ மகரிசியின் பெண்கள் ஆகியோர் இத்தலத்தினை வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று பிள்ளைப் பெருமாளையங்கார் தம் 'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி'யில் குறிப்பிட்டுள்ளார். திருக்கோயிலில் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பெருமாள் நின்ற கோலத்திலுள்ளார். இங்கு வராக தீர்த்தம் இருக்கிறது. திருக்கோயில் விமானம் கலியாண வீமானம் எனப்படும். இறைவன் பெயர் நித்திய கலியாணர். பிராட்டி பெயர் கோமளவல்லி நாச்சியார். மூலவர் திருவுருவம் வராக சொரூபங் கொண்டது. இத்தலம் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

**இடவைப் போர்** கி.பி. 880 க்கும் 895க்குமிடைப்பட்ட ஓர் ஆண்டில் சடையவர்மன் இரண்டாம் வரகுண பாண்டியனுக்கும் ஆதித்த சோழனுக்கும் நடைபெற்றதாகும். இப்போர்க்களமான இடவை மண்ணி நாட்டில் காவிரியின் வடகரையிலிருந்த ஒரு நகரமாகும். திருப்பனந்தாளில் காணப்பெறும் கி.பி. 1447–ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று, 'பாண்டியனை வென்றுகொண்ட இடவையான சோழ சதுர்வேதி மங்கலம்' என்று இதன் பெயர் மாற்றத்தைக் குறிக்கின்றது. எனினும், இடவைப் போரில் ஆதித்த சோழனை வரகுண பாண்டியன் இறுதியில் வெற்றி கொண்டான் என்றே தெரிகிறது. திருப்புறம்பியப் போருக்குச் சிறிது முந்தியது இடவைப் போர். இடவை என்ற ஊரின் இக்காலப் பெயர் முடிவு செய்ய இயலாததாயுள்ளது.

**இடாகோ பால்சு** என்பது ஓர் ஊரின் பெயர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான இதாகோவின் மூன்றாம் பெருநகரம். இசுநேக்கு ஆற்றங்கரை நகரமான இவ்வூர் போக டெலோ என்னும் ஊரிலிருந்து 80 கிலோ மீட்டர் வட கிழக்கில் அமைந்துள்ளது. இடாகோ பால்சு (Idaho Falls) நகரம் இசுநேக்கு ஆற்றுப்பள்ளத் தாக்கில் உள்ள பண்ணைகளில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில் களின் மையமாகும். இந்நகரத்தில் உருளைக் கிழங் கைப் பதப்படுத்தும் பெரும் ஆலைகளும் மிகப் பெரிய கால்நடைக் காப்பகங்களும் உள்ளன.

சேம்சு மாடிசன் தெய்லர் (James Madison Taylor) என்பார் கி.பி. 1865-ஆம் ஆண்டில் இன்றைய இடாகோ பால்சு இருக்குமிடத்தில் சுங்கம் வாங்கும் பாலம் ஒன்றைக் கட்டினார். இப்பாலத்தைப் பயன்படுத்தித் தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் அருகிலிருந்த தங்க வயல்களுக் குச் சென்று வந்தனர். வணிகர்கள் சுரங்கத் தொழி லாளர்களுக்குப் பயன்படும் அங்காடிகளை அமைத் தனர். இங்குக் குடியேறியவர்கள் கி.பி. 1890-இல் இதற்கு இடாகோ பால்சு என்று பெயரிட்டனர். ஏனெனில், இசுநேக்கு ஆற்றில் வெள்ளப்பெருக் கெடுத்து விழும்போது, அது நீர்வீழ்ச்சி போன்று காட்சி கொடுத்தமையால்அதனை இடாகோ பால்சு என்றனர். இங்கு 1900-ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாவரைக்கும் ஆலைகளும் சர்க்கரை ஆலைகளும் கட்டப்படவே, இதாகோ பால்சின் மக்கள்தொகை பெருகி வளரலாயிற்று.

அணுச்சக்திக்குழு 1949-இல் அணு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை இடாகோ பால்சுக்கு 48 கி.மீ. மேற்கில் நிறுவிற்று. இதனால் இடாகோ பால்சு மக்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகிற்று. இந்நகரத் தில் 1950-இல் 19000 ஆக இருந்த மக்கள்தொகை அணுச்சக்தி நிலைய வேலை வாய்ப்பினால் மேலும் பெருகி வளர்ந்தது. இடாகோ பால்சின் மக்கள் தொகை 39,734 (1980).

**இடால்கோ** என்பது மெக்சிகோ நாட்டின் நடுவில் அமைந்துள்ள மாநிலங்களுள் ஒன்று. இதன் வடக்கில் வெப்ப மண்டலத் தாழ்நிலங்களும், வடக் கிலும் கிழக்கிலும் சீரா மாத்திரி ஓரியண்டல் (Sierra Madre Oriental) என்னும் பிரிவின் ஒரு பகுதியும், தெற்கிலும் மேற்கிலும் நடு மேட்டு நிலத்தின் பகுதி யொன்றும் எல்லைகளாய் அமைந்துள்ளன. இதன் பரப்பு 20,987 ச.கி.மீ. இப்பகுதியில் மொக்டீசுமா (Moctezuma) என்னும் பெயர் கொண்ட ஆறு பாய் கிறது. இங்குப் பல வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. அமெரிக்கக் கண்டங்களை இணைக்கும் நெடுஞ் சாலை, இடால்கோ வழியாக ஏறத்தாழ 2400 மீ. உயரத்தில் செல்கிறது.

இடால்கோ (Hidalgo) வேளாண்மையை நம்பி யுள்ள பகுதியாகும். இங்குத் தானியவகைகள், பார்லி, பீன்சு, மணப்புல்வகை (Alfalfa) யுடன் ஏனைய உணவுப் பொருள்களும் விளைந்தாலும், இம்மாநிலம் சுரங்கப் பொருள்களுக்குப் பெயர்பெற்ற தாகவே பலராலும் அறியப்படுகிறது. இங்கு வெள்ளி, தங்கம், ஈயம், துத்தநாகம் போன்றவை மிகுதியாகக் கிடைக்கின்றன. இங்கு மாங்கனீசும் சிமெண்டும் பெரு மளவில் உற்பத்தியாகின்றன. இவற்றுடன் துணிமணி கள், இருப்புப்பாதைப் பெட்டிப் பேருந்துகள் (Rail-road boxcars), பாரஉந்துகள் (Trucks) போன்றவை யும் உற்பத்தியாகின்றன.

இப்பகுதியின் தலைநகரம் பச்சுகா (Pachuca) என் னும் நகரமாகும். இதுவே மக்கள் தொகை பெருகிய நகரம். இங்கு இம்மாநிலத்தின் பல்கலைக் கழகமும் துலான்சின்கோ (Tulancingo) என்னும் தொழிற் சாலை நகரமும் அமைந்துள்ளன. இப்பகுதியில் பல தொல்லியல் சிறப்புப் பெற்ற கோட்டைகளும் வர லாற்றுச் சிறப்புமிக்க சுரங்கங்களும் உள்ளன. இம் மாநிலம் மெக்சிகோவின் இருபதாம் மாநிலமாகக் கி.பி. 1869-இல் இணைந்தது. இடால்கோவின் மக் கள் தொகை 15,16,511 (1980).

இடால்கோ[2] என்னும் சொல், இசுபானிய பிரபு வகையினருள் இரண்டாம் தரக்குடிமகனைக் குறிப் பிடுகிறது. நிலம், வீடு போன்ற சொத்துகளை உடையவர் என்றும் இடால்கோ கருதப்படுவதால், இச்சொல் சமூக நிலையைக் (Social Status) குறிக் கிறது என்றும் கூறுவர். இடைக்காலத்தில் இடால் கோக்களின் எண்ணிக்கை மிகுதியாக உயர்ந்திருந் தது. பின்னர், கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் இடால் கோக்கள் மக்கள்தொகையில் 4 விழுக்காட்டினர் ஆயினர். இவர்களுக்கு வரிச்சலுகைகள் உண்டு. இவர்களுள் பலர் ஏழைகளாக இருந்தாலும், பிரபுக் கள் பட்டத்தைவிடாமல் காத்துக் கொண்டனர்.

**இடீசா** பண்டைய மெசபடோமியாவில் இருந்த ஒரு நகரம். இக்காலத்தில் இந்த நகரம் துருக்கியில் உர்பா (Urfa) என்னும் பெயரில் வழங்கு கிறது. ஒசுரோன் (Osroene) என்னும் சுதந்திர முடி யாட்சி நாட்டின் தலைநகராக, இது கி.மு. 137-ஆம் ஆண்டில் விளங்கியது. பின்னர் இது உரோமானிய ரின் நகரமாயிற்று. இது கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமய மையமாயிற்று. இந்நகரத்தை அராபியர் கி.பி. 639-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். சிலுவைப் போராட்ட வீரர்கள் கி.பி. 1097-இல்

கைப்பற்றும் வரை இந்நகரம் இசுலாமியர் கைவசமே இருந்தது. பால்டுவின் (Baldwin) என்பார், இடீசாவின் (Edessa) அரசரானார். அவர் எருசலத்தின் (Jerusalem) அரசரானபோது அவர்தம் உறவினருள் ஒருவர் இதனை ஆட்சி செய்தார். மீண்டும் இந்நகரம் கி.பி. 1144-இல் இசுலாமியரால் கைப்பற்றப் பட்டது. துருக்கியர் கி.பி. 1637-இல் இதனைப் பிடித்துக் கொண்டனர்.

**இடுக்கி** என்பது கேரள மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டத்தின் பெயர். இடுக்கி (Idukki) என்னும் பெயரில் ஓர் ஊருமுண்டு. இடுக்கி நீர்மின் திட்டம் கேரளத்திற்குப் பெரிதும் பயன்படும் பன்னோக்குத் திட்டங்களுள் ஒன்றாகும். இடுக்கி அணைக்கட்டு நடுக்கேரளாவில் மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலில் அமைந்துள்ளது. இதன் உயரம் ஏறத்தாழ 185மீ. ஆகும். இவ்வணை 22மீ. அகலமுள்ள அடித்தளத்தின் மீது கட்டப்பட்டு, 1976-ஆம் ஆண்டு பிப்பிரவரி 12-ஆம் நாள் அன்றைய இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையாரால் தொடங்கி வைக்கப்பட்டது.

இடுக்கி மாவட்டத்தில்தான் அமைதிப் பள்ளத் தாக்கு (Silent Valley) அமைந்துள்ளது. இப்பள்ளத் தாக்கை அழித்துப் பெரிய நீர் மின் திட்டம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருந்தனர். அத்தகைய திட்டம் எழுமானால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படக்கூடும் என்றும், அதனைச் செயற்படுத்தக்கூடாதென்றும் எழுந்த போராட்டத்தின் விளைவாக இத்திட்டம் கைவிடப்பட்டது.

இடுக்கி மாவட்டத்தின் மக்கள்தொகை 9,71,193 ஆகும் (1981). இடுக்கி என்னும் ஊரின் மக்கள் தொகை 8,892 ஆகும் (1981).

**இடுகாடு**: அடக்கம் செய்தலும் ஈமச் சடங்குகள் செய்தலும் உலகத்திலுள்ள பல்வேறு சமுதாய மக்களிடையே முதன்மையான செயல்களாகக் காணப்படுகின்றன. இறப்பு என்பது மனித வாழ்க்கையின் முடிவென மக்கள் கருதாததே இதற்குக் காரணம் எனலாம். வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதன், தான் வாழும் சுற்றுப்புறத்திற்கேற்றவாறு இறந்தவர்களின் சடலங்களைத் தம் வாழ்விடத்தின் அகப் பகுதியிலோ புறப்பகுதியிலோ



*கற்பதுக்கைக் கல்லறை*

மலைப் பகுதியிலோ வனத்திலோ ஆற்றிலோ எறிந்து விடும் பழக்கத்தினைக் கொண்டிருந்தான். காலப் போக்கில் பிணங்களை அடக்கம் செய்யும் முறை தோன்றியது. பழைய கற்காலம், புதிய கற்காலங் களின் போது 'இடுகாடு' இருந்ததற்கான எவ்விதச் சான்றுகளும் இல்லை. ஈமத்தாழிகளிலிருந்து கிடைத்த பொருள்களை நோக்குமிடத்து பெருங்கற்காலத்தி லிருந்து புதைக்கும் வழக்கம் தொடங்கியிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. இவற்றைக் கொண்டே பிண அடக்கத்துடன் தொடர்புடைய பழக்க வழக்கங்களை அறிய இயலுகிறது. வேதங்க ளிலும் 'புதைத்தல்' பற்றிய செய்திகள் மிகக் குறை வாகவேயுள்ளன. புதைக்கும் பழக்கங்களும் ஈமச் சடங்குகள் செய்யும் முறைகளும் பல்வேறு இடங் களில் மாறுபட்டிருக்கின்றன. இனத்தாலும் பண் பாட்டாலும் ஒன்று பட்ட சமுதாயத்தினரிடையே யும் இறந்தாரைப் புதைத்தலில் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. ஈமச்சடங்குகள் சமய அடிப்படை யில் மட்டுமன்றி, சமுதாய வாழ்க்கையினை மேம் படுத்துவதற்காகவும் செய்யப்பட்டு வருகின்றன.

இறந்தோரை அடக்கம் செய்தலில் பல்வேறு முறை இருப்பினும், அதன் அடிப்படை கீழ்க்காணும் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.


1. முழுச்சடலப் புதைப்பு: இது 'முதன்மையான அடக்கம்' (Primary Burial) எனப்படும். இங்கு இறந்தவர்களின் பிணம் முழுமையாக நீட்டப்பட்டுப் புதைக்கப்படும். இது 'நீள்நிலைப் புதையல்' (Extended Burial) எனப்படும். சடலத்தின் முட்டியினை மடக்கி அடக்கம் செய்யும் முறையும் காணப்படு கிறது. இது 'மடக்கிய நிலைப் புதைப்பு' (Flexed or Crouched Burial), எனப்படும். சில இடங்களில் சடலங்கள், கருப்பையுள் கரு உள்ளது போன்ற நிலையிலும், அமர்ந்த, சாய்ந்த அல்லது நிற்கும் நிலையிலும் புதைக்கப்படுகின்றன. இடுகாட்டில் புதைக்கப்பட்டிருக்கும் பிணங்களின் எண்ணிக்கை யினையொட்டி இவை தனிச்சடல அடக்கம் (Single Burial) இருசடல அடக்கம் (Double Burial) அல்லது பலசடல அடக்கம் (Multiple Burial) என்று கூறப்படுகின்றன. இரு சடல அடக்கங்களில் சில சமயங்களில், பிணங்கள் ஒன்றையொன்று தழு விய வண்ணம் புதைக்கப்பட்டிருக்கும். இவை 'சதி' (Sati) வகைப் புதைப்பாகும்.

2. எஞ்சியவற்றின் புதைப்பு (Fractional Burial) இது இரண்டாம் புதைப்பு அல்லது பிணைப்பற்ற புதைப்பு (Disarticulate Burial) அல்லது துண்டான புதைப்பு (Fragmentary Burial) எனப் பல வற்றின் புதைப்பு வாறு சொல்லப்படுகிறது. இது பின்னிலை வெளிக் காட்டல், (Post-exposure) அல்லது வெளிப்படுத்தப் பட்ட புதைப்பு (Exposure Burial) எனவும் கூறப் படுகிறது. இவ்வடக்கத்தில் இறந்தோர் சடலத்தைத் துண்டுகளாக்குதல் அல்லது அப்படியே இயற்கைச் சக்திகளால் அழிக்கப்பட விடுதல் அல்லது பறவை கள் மற்றும் கொடிய விலங்குகள் உண்ணும் வகை யில் ஒரு மேடையின் மேல் வைத்தல் முதலான முறைகளும் காணப்படுகின்றன. இதன் பின்னர் எலும்புத் துண்டுகளைச் சேகரித்து ஓர் ஒழுங்கில்லா மல் தோன்றியபடி புதைத்தனர். ஆனால், சிலபோது அவற்றை முறைப்படி புதைக்க முயற்சி செய்தனர். இது பொய்யான நீளநிலைப் புதைப்பு (False-extended Burial) ஆகும். இவ்வடக்கத்தினையும் தனிச்சடல அடக்கம், இருசடல அடக்கம், பல சடல அடக்கம், என மூவகைப்படுத்தலாம்.

3. தோண்டியெடுத்துப் புதைத்தல்: இம் முறை யில் சடலம் முதலில் ஒரு குழியில் புதைக்கப்பட்டுப் பின்னர் அது முழுமையாகவோ ஒரு பகுதியாகவோ தோண்டியெடுக்கப்பட்டு மீண்டும் புதைக்கப்படு கிறது. பெரும்பாலும் மண்டையோட்டை மட்டும் தோண்டியெடுத்து மீண்டும் புதைக்கின்றனர். கேரளத்தில் அட்டபாடி மலைகளில் வசிக்கும் 'முது கர்' பழங்குடியினர், இறந்தோரைச் 'சுடலை' என் னும் இடுகாட்டில் அடக்கம் செய்து ஒரு கல்லினை நடுகின்றனர். ஐந்தாண்டிற்கொருமுறை அல்லது இருபது ஆண்டுகளுக்கொருமுறை நீத்தார் வழிபாடு செய்யும்போது, முன்னரே அடக்கம் செய்யப்பட்ட பிணங்களின் வலத் தாடை எலும்பு அல்லது வலக் காரை எலும்பினை எடுத்து, 'மாளிகை' அல்லது 'மச்சு' என்னும் கல்லறையில் வைக்கின்றனர். ஒரிசாவி லுள்ள போண்டோக்கள், அசாமின் நாகர்கள், ஆந்திரப்பிரதேச கோயர்கள், கதபர்கள் ஆகியோ ரிடையும் இவ்வழக்கம் காணப்படுகிறது. இறந்தவரின் மண்டையோட்டினைப் பாதுகாத்துப் புதைத்தலென் பது அவரது வீரத்தைக் காட்டும் சின்னமாகக் கருதப் படுகிறது. இக்காலப் பழங்குடியினரிடை மட்டுமன்றி, தொல் பழங்குடியினரிடையேயும் இப்பழக்கம் நிலவி வந்துள்ளது.

இறந்த மனிதனின் மாமிசத்தை உண்ணுதல் என்பதும் சில பழங்குடியினரிடையே சடங்கு விருந் தாகக் கொள்ளப்படுகிறது. இதற்கு அடிப்படையாக அமைந்தது இறந்தவர்களின் உடலை உண்ணுதல் வழியாக அவர்களின் சிறப்புத் தன்மையினைப் பெற இயலும் என்பதே.

தென் இந்தியாவில் காணப்படும் கல்லறைகள்: கல் திட்டை (Dolmen), கற்பதுக்கை (Cist), கற்குத்துத் தாழிப்புதையல் (Urn Burials), ஈமப்பேழை (Sarco-



ஈமப் பேழை


phagus) முதலிய அடக்கங்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவில் காணப்படுகின்றன. திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரில் தாழிப் புதையல்களும், தென்னார்க்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் கல்திட்டைகளும், மைசூரில் வட்டக் கல்லறைகளும், கேரளாவில் தொப்பிக்கல் குடைக்கல் (Hat stones and Umbrella stones) கல்லறைகளும் காணப்படுகின்றன.

கல்லறை வகைகள்:

1. கல்திட்டை: இது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடினக் கற்களால் கட்டப்பட்டு, மேசை அல்லது பெட்டி போன்ற அறையின் அமைப்பினைக் கொண்டதாகும்.

2. கற்பதுக்கை: இது கற்பலகைகளால் முழுமையாக அல்லது ஒரு பகுதியாகப் பூமிக்கடியில் அமைந்த பெட்டி போன்ற வடிவமைப்பினைக் கொண்டதாகும்.

3. கற்பலகையோடு கூடிய திட்டை: பெட்டி போன்ற அறை அமைப்பினை உடையதாய் முழுமையான அல்லது சற்றே கடினமான கற்களால் நிலத்திற்கு மேலாகவோ கீழாகவோ கட்டப்படுவதாகும். கற்பதுக்கையோடு கூடிய திட்டைகள், வட்டக் கற்களால் சூழப்பட்டுக் கிழக்குப் பக்கத்தில் சிறு துளை அல்லது அதற்குப் பதிலாக, மூடப்பட்ட அல்லது திறந்த வெளிப் பாதையினைக் கொண்டுள்ளன. இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டு, தமிழ்நாட்டின் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இறந்தோர் நினைவுச் சின்னங்களாகும்.



கல்திட்டை அமைப்பு—வரைபடம்

4. கற்பலகையிட்ட கற்குவை: இது கருங்கல், சரளைக் கல் (Laterite) முதலான கற்குவைகளைக் குறித்தற்குரிய ஒரு பொதுச் சொல்லாகும். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்பலகைகளால் சூழப்பட்டு வட்டக் கல்லறைக் கற்களால் (Cairn-stones) முழுமையாகவோ பகுதியாகவோ மூடப் பட்டிருக்கும். எலும்புத்துண்டுகள், காணிக்கைகள் ஆகியவற்றை உள்ளே வைப்பதற்காக, மேற்புறத்தில் கிழக்குத்திசையில் 'இருதுளை கற்குவை' (Port-hole cist) அமைப்பைக் கட்டுவர். மைசூரிலுள்ள பிரமகிரி யில் காணப்படும் கல் பதுக்கை சுவசுதிக்கு அமைப்பி லுள்ளது. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள முதன்மையான கற்பதுக்கைகளில் (Main cist) உள்ளது போன்றே, இரு துளைக் கற் பதுக்கையினிடத்தே பெரிய பலகை வழி அமைக்கப் பட்டுள்ளது. இது பிரிசுவர்க் கற்பதுக்கைகள் (Trans-cepted cist) எனப்படும். அந்தந்த இடத்திற்குரிய முறைகளுக்கேற்றவாறு அல்லது பூமியடி மண்ணின் தன்மையினைப் பொறுத்து, கற்பதுக்கைகள் மண் ணின் மேற்பரப்பில் அல்லது உட்புறத்தில் முழுமை யாகவோ பகுதியாகவோ அமைக்கப்பட்டன.

கேரளாவின் நடுகல் வகைகள்:

1. தொப்பிக்கல்: இது உட்புறம் சாய்ந்த 4 அடி உயரமுள்ள நான்கு கூம்பான கற்கள் மீது, இலேட்டி ரைட்டாலான வட்டமான தலைப்பாகை போன்ற கற்களால் அமைந்த குவிந்த கூரை வடிவமுடையது. இதன் அடித்தள வரிசைகள், தொப்பிக்கல்லின் குறுக்



தொப்பிக்கல்

களவினை அணுகும் மூலை விட்டத்தினைக் கொண்ட சதுரங்களை உண்டாக்குகின்றன. இது காளான், குடை ஆகியவற்றின் வடிவினை ஒத்திருப்பதால் 'குடைக்கல்' என்று சொல்லப்படுகிறது. பழங்குடி யினர் காளான்களை உண்டு வந்தனர். பின்னர், காளான்களுள் 'அமானிட்டா' போன்ற வகைகளைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினர். இதனை யொட்டியே நடுகற்களும் காளான் வடிவத்தில் கட் டப்பட்டதென மானிடவியலாரிடையே கருத்து நிலவி வருகிறது.

2. கைப்பிடியற்ற குடை வடிவக் கற்கள்

குண்டன் குடைக்கல்: இதுவும் தொப்பிக்கல் வடிவத்தினை ஒத்துள்ளது. ஆனால், இது நிலத்தின் மேற்புறத்திலேயே அமைந்துள்ளது. இது குழிப்புதைப் புகளை மூடுவதற்கென வடிவமைக்கப்பட்டதாகும்.

3. ஒன்றிற்கு மேற்பட்ட தொப்பிக்கற்கள்: இவை மேற்கூறிய இருவகைகளுக்கும் இடைப்பட்டன. சர ளைக் கற்களாலான இவை மூன்று அடி உயர முடைய, ஐந்திலிருந்து பன்னிரண்டு செங்குத்துக் கம் பங்களால் ஆனவை.

நடுகற்களும் கற்பலகையிட்ட கற்பதுக்கைகளும் கேரளா, கருநாடகம், ஆந்திரப்பிரதேசம் முதலிய மாநிலங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. கருநாடகத்திலும் ஆந்திரப்பிரதேசத்திலும் இவை கலைச் செயற்பாடுகளுடன் கட்டப்பட்டிருக்கின்றன.

கற்குடைவுக் கல்லறைகள்: இவை பூமிக்கடியி லமைந்துள்ள குழிகளாகும். இக்கற்குகைகள் சதுர வடிவப் பாறைகளில் குடைந்து உருவாக்கப்படுகின் றன. இக்குழிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பக்கங்களில் கதவுகளைக் கொண்டுள்ளன. கதவு களுக்கு அப்பால், பாறையால் செதுக்கப்பட்ட அரைக் கோள வடிவ, செவ்வக வடிவ அமைப்புகளில், நடு வில் கூரை வரை உயர்ந்த தூண்களுள்ளன. இவ் வமைப்பின் பக்கவாட்டில் கற்குடைவு இருக்கை களுள்ளன. சில சமயங்களில் அரைக்கோள வடிவக் குகையின் மையத்தில் ஒரு வழி அமைந்துள்ளது. மேற் பரப்பில் இவ்வழிகள் வட்டவடிவ அல்லது சதுர வடிவக் கற்களால் மூடப்பட்டுள்ளன.

திருநெல்வேலி முதுமக்கள் தாழி: திருநெல்வேலி யின் தென்கிழக்கே தாமிரபரணி ஆற்றிற்குத் தெற்கே 12 மைல் தொலைவில் 114 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ள இடுகாடே, உலகத்தின் மிகப் பெரியபரப்பள வுடைய இடுகாடாகும். இங்குக் கண்டெடுக்கப் பட்ட முதுமக்கள் தாழிகள் அகன்ற வாயும், குறுகிய அடிப்பாகமும் முட்டை வடிவமும் கொண்டுள்ளன.

இங்கு அலங்கரித்த பொன்நெற்றிப் பட்டங்கள், பல்வேறு வகையான இரும்புப் பொருள்கள், போர்க் கருவிகள், உழவுச் சாமான்கள் ஆகியவை சடலத்தைச் சுற்றிலும் கீழ்நோக்கிய நிலையில் காணப்பட்டன.



ஈமத்தாழி

செங்கற்பட்டு ஈமத்தாழிகள்: இங்குப் பெரிய கற்பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்வட்டங்களின் நடுவே முதுமக்கள் தாழியும் ஈமத்தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தாழிகள், அடிப்பகுதியில் கூம்பாக இரண்டு அல்லது மூன்று வரிசைக் கால்களைக் கொண்டுள்ளன. ஈமத்தாழிகளின் மேற்புறம் மண்ணால் மூடப்பட்டு, உட்புறங்களில் எலும்புத் துண்டுகள், இரும்புப் பொருள்கள், சங்கு, சிறு பானைகள் போன்றவை காணப்பட்டன. இந்த ஈமத்தாழிகளில் காணப்படும் சிறு துளைகள் இறந்தவரின் ஆவி வெளியேறுவதற்கும் உட்புகுவதற்குமான வழியாகக் கருதப்படுகின்றன.

செம்மறியாட்டுருவ ஈமத்தாழி: இது கடப்பை மாவட்டத்தில் சங்கவரம் என்ற இடத்திலிருந்து கிடைக்கப்பட்டதாகும். இது செம்மறியாட்டின் உருவினையும் ஆறு கால்களையும் கொண்டுள்ளது. இதன் மேல்மூடி பல இணைப்புகளுடன் தலையினைத் தனியே பிரித்தெடுக்கும் முறையோடு காணப்படுகிறது.

நீலமலை கற்குத்துகள்: இவை தொதுவர் வசிக்கும் இடங்களில் காணப்படுகின்றன. ஒவ்வொரு கற்குத்தும் சுற்றிலும் ஆழ்கிணறு போன்ற கற்குவியலைக் கொண்டுள்ளது. இதில் புதைக்கப்பட்டிருந்த பானைகள் நீண்ட வடிவத்துடனும் குவளைகள் அழகான மிருகங்கள், மனித உருவங்கள் பதித்த மூடிகளுடனும் காணப்பட்டன.

பிரமகிரிக் கல்லறைகள்: இங்குக் கற்பதுக்கை வட்டங்கள், குழி வட்டங்கள் எனப்படும் இருவகைக் கல்லறைகள் காணப்படுகின்றன.

கற்பதுக்கை வட்டங்கள்: இவை பூமிக்கடியிலுள்ள கருங்கல் பலகைகளிலான கற்பதுக்கைகளைச் சுற்றிலுமுள்ள கல்வட்டங்களாகும். இவை ‘சுவசுதிக்கு’ வடிவில் அமைக்கப்பட்டுத் தம்மைத்தாமே தாங்கிக்கொள்ளும் தன்மையன. இதன் தரைப் பகுதி ஒன்று அல்லது பல கற்பலகையாலும் மேற் பகுதி தொப்பிக்கல் எனப்படும் மற்றுமொரு பலகையாலும் மூடப்பட்டுள்ளன. இதன் கிழக்குத் திசையில் உள்ள துளையுடைக் கற்குவை, பெரிய கற்குவைகளுடனும் பல சிறிய கற்குவைகளுடனும் காணப்படுகின்றது. பெரிய கற்குவைகள் கிராமத்தின் சிறப்பு வாய்ந்த குடும்பத்தினரையும், சிறிய கற்குவைகள் மற்றோரையும் குறிப்பதாகக் கருதப்படுகின்றன. இவ்வமைப்பு அக்காலத்தில் வாழ்ந்தோரின் சமுதாயப்பிரிவினையைக் காட்டும் வகையிலுள்ளது. இரும்பிலான பொருள்கள், கல் மணிகள், காணிக்கைப் பானைகள் ஆகிய பொருள்களும் இவற்றுள் காணப்பட்டன. இப்பொருள்களின் மேல் மண்பரப்பப்பட்ட நிலையில், இரண்டாம் முறை அடக்கம் செய்யப்பட்ட பிணங்களின் நீண்ட எலும்புகளும் மண்டை ஓடுகளும் சில பானைகளும் இருந்தன. இக்கல்லறைகளைச் சுற்றிஒன்று அல்லது இரு வட்டங்களாகக் கருங்கற்சுவர் காணப்பட்டது. இக்கற்களின் பாதி பாகம் பூமியினடியிலும் மற்றப் பாதி வெளியிலும் உள்ளமையால், இக்கல் வட்டத்தின் நடுவில் கல்லறை உள்ளதென அறிய முடிகிறது.

குழி வட்டங்கள்: இவை ஒன்று அல்லது இரண்டு கல்வட்டத்தால் சூழப்பட்ட ஆழமான குழிகளாகும். இவை வட்டத்தின் நடுவிலமைந்து வட்டக் கல்லறைகளால் மூடப்பட்டுள்ளன. இக்குழிகளில் எலும்புத் துண்டுகள், இரும்பு வேளாண்மைக் கருவிகள், போர்க்கருவிகள் ஆகியவை கிடைத்தன.

தமிழ் நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குழிவட்டங்கள், வட்டக் கல்லறையினைச் சுற்றி ஒழுங்கற்ற பெரிய பாறைகளாலான கல்வட்டங்களைக் கொண்டுள்ளன.

மலபார் கற்குடைவுகள்: இங்குச் சரளைப் பாறைகளில் செவ்வகச் செங்குத்துப் பள்ளங்கள் வெட்டப்பட்டு, அவற்றின் நேர் எதிரில் நீண்ட சதுரமான ஒரு நுழைவாயில் தரைமட்டத்திற்கு மேலே அமைக்கப்பட்டுள்ளது. இக்கற்குடைவுகள் அரைக்கோள வடிவமாக அமைக்கப்பட்டு, இவற்றைச் சுற்றி உயர்ந்த மேடைகளைக் கொண்டுள்ளன. இதன் மேற்புறம் மூடப்பட்டு, பக்கவாட்டில் கீழ்த் தளம் வரை செல்லப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன.

புதை குழிப் பொருள்கள்: எலும்புகளைச் சேகரித்து வைக்கும் பலவகை மண்பாண்டங்கள், சங்காலான பொருள்கள், கல், சுட்ட களி மண்ணிலான பொருள்கள், வெண்கலம், தங்கம், வெள்ளியிலான பொருள்கள் ஆகியவை உள்ளன. அம்புமுனைகள், சூலங்கள், நீண்ட கத்திகள், ஈட்டி முனைகள், எறியீட்டிகள், அரிவாள்கள், மண்வெட்டிகள், குதிரை இலாடங்கள் முதலிய இரும்புப் பொருள்களும் குறிப்பிடத்தக்கன. இவை மத்திய இந்தியாவின் நாக்பூரிலிருந்து தென் இந்தியாவின் திருநெல்வேலி வரை காணப்படுகின்றன.

கருப்பு, சிவப்பு, கருஞ்சிவப்பு முதலான பல வண்ணப் பானைகள் பல்வேறு வடிவங்களிலுள்ளன. மொட்டுகள் நிறைந்த பூங்கொத்துகள், சிறிய பறவைகள், விலங்குகளின் வடிவங்கள், வெண்கலத்தாலான கண்மைக்குப்பி, மை தீட்டும் குச்சு, அரைக்கும் கல், சங்கு மணிகள், வெண்கலம், கிளிஞ்சல், எலும்பு போன்றவற்றாலான மணிகள் ஆகியவையும் காணப்பட்டன.

இந்தியாவிலுள்ள பல்வேறு கல்லறைகளையும் அவற்றின் பொருள்களையும் நோக்குமிடத்து, ஆதிச்சநல்லூர், கோயம்புத்தூர் ஆகிய சில இடங்களைத் தவிர்த்துப் பிற இடங்களில் இறந்தாரின் ஈமச் சடங்குகளுக்கு வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள் பயன்படுத்தப்படவில்லை என்பது புலப்படுகிறது.

நினைவுச் சின்னங்கள், சிறிய கற்குவைகளிலிருந்து பெரிய கூர்நுனிக்கோபுரங்கள் வரையிலும், பண்படாத நடுகல் கல்லறைகளிலிருந்து வேலைப்பாடு மிக்க தாசுமகால் வரையிலுமாக வேறுபடுகின்றன. சமாதிகள், தூபிகள், கல்வட்டக் கல்லறைகள் ஆகியவைகளும் காணக் கிடக்கின்றன.

தென்னிந்தியாவில் பின்னிலை வெளிக் காட்டல், பெருங் கற்காலக் கல்லறை அடக்கம் ஆகியவை படிப்படியாக எரித்தல் வழி மாற்றப்பட்டது, பண்பாட்டுத் தொடர்புடைமைக்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும். பொதுவாகக் கல்லறைகளின் வாயிலாகக் கற்காலம் தொடங்கி வரலாற்றுக்காலம் வரையிலான பண்பாட்டுத் தொடர்பான செய்திகள் தெளிவாகின்றன. ம. ந. பு.

துணை நூல்கள்:

**Banerjee.N.R.**, The Iron Age in India, Oriental Publishers & Book Sellers, Delhi, 1965.

**Gupta.S.P.**, Disposal of the dead and Physical types in Ancient India, Oriental Publishers, Delhi, 1972.

**Sundara,A.**, The Early Chamber Tombs of South India, University Publishers, Delhi, 1945.

**இடும்பன்** ஓர் அரக்கன். அரக்கு மாளிகையினின்றும் உயிர் பிழைத்த பஞ்ச பாண்டவர், இடும்பவனத்தில் புகுந்தபோது, இவன் வீமனுடன் போர் புரிந்து மாண்டான். இது பாரதக் கதையிலுள்ளது.

இடும்பன்[2] அசுரர்களின் அரசனாகிய சூரபன்மனுக்குப் போர்முறைகளைக் கற்பித்தவன். சூரபன்மன் தேவர்களுக்குக் கொடுக்கும் தொல்லைகளைக் காணப்பொறாத இடும்பன், அவனை விட்டு அகன்று, அகத்திய முனிவரிடம் மாணவனாக அமர்ந்தான். அம்முனிவர் ஆணைப்படி, இவன் கயிலைக்குச் சென்று, சிவகிரி, சக்திகிரி என்னும் இரு குன்றுகளையும் காவடிபோல் தூக்கிவந்தான். இவ்வாறு, தூக்கிப் பொதியமலைக்கு வரும் வழியில், வழி தெரியாமல் தடுமாறித் திருவாவினன்குடியை அடைந்தான். அப்போது அரசவுருவில் வந்த முருகன், தன் இருப்பிடத்தில் தங்கிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டான். அவ்வாறு இளைப்பாறியபின், இவன் இரு குன்றுகளையும் தூக்க இயலாமல் தவித்தான். அது வரை அரசக் கோலத்தில் இருந்த முருகன், கோவணாண்டியாய்க் கையில் தண்டுடன் சிவகிரியின் உச்சியில் தோன்றினான்.

இடும்பன் முருகனைப் பார்த்துச் சினங்கொண்டான். முருகனின் கடைக்கண் பார்வையால் இடும்பன் மலையிலிருந்து உருண்டு விழுந்து மாண்டான். பின்னர், முருகன் தன் அருளால் அவனை உயிர் பெற்றெழச்செய்து அத்தலத்தில் காவலனாய்ப் பணிசெய்ய அருள்புரிந்தான். இது பழனித் தல வரலாற்றில் காணப்படுகிறது.

**இடும்பன்**[3] விநாயகர் அவதரித்த இடத்தில் மலையுருக் கொண்டிருந்து விநாயகர் பெருமூச்சால் இறந்தான். இது விநாயக புராணத்திலுள்ளது

**இடும்பன்**[4] கரடிகளுக்குத் தலைவன்; இராமனுக்குத் துணையாய் அமர்ந்தவன். இது இராமாயணத்திற் காணப்படுகிறது. வீ.இ.

**இடும்பாவனம்** என்பது ஒரு காடு. இதில் இடும்பன்–இடும்பி என்ற அரக்கர் இருவர் வசித்து வந்ததால் இப்பெயர் பெற்றது. பாரதத்திலுள்ள வேத்தரகீயச் சருக்கத்தில் இடும்பாவனத்தில் பாண்டவரும் குந்தியும் தங்கியதாக வரலாறு உள்ளது. அவ்வனத்தில் இடும்பி வீமனைக் காதலித்தாள். இடும்பன் வீமனுடன் போரிட்டான். அப்போரில் இடும்பன் இறந்தான். இடும்பி வீமனைக் காதலித்து, அதன் பயனாய்க் கடோற்கசனைப் பெற்றெடுத்தாள். வீ.இ.

**இடும்பி** ஓர் அரக்கி; இடும்பன் என்ற அரக்கனின் தங்கை. பாரதக் கதையில் அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவரும் குந்தியும் இடும்பாவனம் அடைந்தனர். அங்கு இடும்பி என்ற அரக்கி வீமன்முன் தோன்றி, அவன்மேல் காதல் கொண்டாள். வீமன அவளை யார் என்று வினாவிய போது தான் இடும்பனின் தங்கை என்று கூறித் தன் காதல் நோயை நீக்கினால் தான் மன்மதனிடமிருந்தும், வீமன் இடும்பனிடமிருந்தும் உயிர் தப்பலாம் என்றுரைத்தாள். இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே இடும்பன் தோன்றி, வீமனுடன் போரிட்டு மாண்டான். இடும்பி அவன் மாண்டதற்கு வருந்தாமல், வீமனைத் தன் காதல் நோயைத் தணிக்கும்படி வற்புறுத்தினாள். இதைக் கண்ட குந்தி அவளை மணந்து கொள்ளுமாறு வீமனிடம் கூறினாள். இவர்கள் காதலில் கடோற்கசன் தோன்றினான் அரக்கிக்குப் பிறந்த கடோற்கசன் என்ற குழந்தை தாயின் அளவினதாய வளர்ச்சியைப் பெறுமாறு சிவபெருமான் வரம் அளித்தார். இடும்பி கடோற்கசனைப் பெற்றபின், வீமனைப் பிரிந்து, அவள் வாழ்ந்த இடும்பாவனத்திற்குச் சென்றாள். வீ.இ.

**இடைக்கருவி** என்பது பண்டைத் தமிழ் நாட்டில் விளங்கி வந்த தோற்கருவிகளுள் ஒன்றாகும். அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் நூலினால், இசைக்கருவிகள் அக்காலத்தில் ஏழுவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்பது அறியக்கிடக்கிறது. இவற்றுள் இடைக்கருவிகள் மிகுதியான ஒலி எழுப்பாமல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒலியை எழுப்பவல்லன. இடைக்கருவிகள் தன்னுமை, தக்கை, உடுக்கை, தகுணிச்சம், கண்விடு தூம்பு, விரலேறு, தமருகம், தடாரி, துடி, உபாங்கி, அமுதகுண்டலி, அந்தரிமுழவு எனப் பன்னிரண்டு வகைப்படும்.

**இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்** பத்துப்பாட்டில் ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படையினை இயற்றிய சங்கப்புலவர். இடைக்கழி நாடு செங்கற்பட்டு மாவட்டத்து மதுராந்தக வட்டத்திலுள்ளதாகும். உப்பங்கழிகளுக்கு இடைப்பட்ட பகுதியாதலின், இது இடைக்கழி நாடு எனப்பட்டது. இப்பகுதியிலுள்ள நல்லூர் இவரது சொந்த ஊராகலாம். நந்தத்தனார் என்பதில் 'ந' சிறப்புணர்த்தும் முன்னடையாகும் என்று கருதப்படுகிறது. நத்தத்தனார் என்பதே இயற்பெயராக இருந்திருத்தலும் கூடும். இவர் ஓய்மா நாட்டு நல்லியக் கோடன்பால் சிறுபாணனை ஆற்றுப்படுத்தும் வகையில் சிறுபாணாற்றுப்படையினைப் படைத்துள்ளார். ஓய்மா நாடு தென்னார்க்காடு மாவட்டத்தே திண்டிவனம் வட்டத்திலுள்ளதாகும்.

சிறுபாணாற்றுப்படையில் வழி இயல்பு கூறுங்கால் இடையிலுள்ள ஐந்திணை வளங்களை அவற்றின் நலந்தோன்றச் சிறப்பித்துள்ளார். தொண்டை நாட்டினராகிய இவர் மதுரையைத், ''தமிழ் நிலை பெற்றதாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை'' என்று குறிப்பிட்டுள்ளார். கடையெழு வள்ளல் என்று கூறப்படும் ஏழு வள்ளல்களையும், அவரவர் பெருமையோடு ஒருங்கே சுட்டித் தொகுத்துக் கூறிய சிறப்பு இவருக்குண்டு. நல்லியக் கோடனின் கொடைப் பண்பினை விளக்குங்கால், ''ஏழு வள்ளல்களையும் சுட்டி, அவ்வெழுவரும் சுமந்த கொடையாகிய செவ்வியபாரத்தை இவன் சுமக்கின்றான் என்று குறிப்பிட்டுள்ளார். 'எழுவர் பூண்ட ஈகைச் செந்துகம், விரிகடல் வேலி வியலகம் விளங்க, ஒருதான் தாங்கிய உரனுடை நோன்றாள் (நல்லியக் கோடன்)'' என்பது இவர் வாக்கு (சிறு. 113–115). இதனால், இவர் சிறுபாணாற்றுப் படையினைக் கடை எழுவள்ளல்களும் மாய்ந்த பின்னர் இயற்றினார் என்பது புலனாகிறது. 'பொன்னுந் துகிரும்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலாசிரியர் (புறம். 218) பெயருக்கு'' நத்தத்தனார்'' என்று ஒரு பாடபேதம் உள்ளது. திருவள்ளுவமாலையிலுள்ள 'ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்' எனத் தொடங்கும் வெண்பா நத்தத்தனார் இயற்றியதாகும். சிறுபாணாற்றுப்படை பாடிய நத்தத்தனார் இவர்களுள் ஒருவராகார் என்பதனை முன்னவர் பெயரிலமைந்துள்ள அடைமொழிகளே நன்கு விளக்கி நிற்கின்றன.

**இடைக் கற்காலம்** கற்காலத்தின் இரண்டாம் பகுதி. இதற்கு முன் இருந்த காலத்தைப் பழங்கற்காலத் தொடக்கக் கற்காலம் எனவும், இதற்குப் பிற்பட்ட காலத்தைக் கடைக்கற்காலம் எனவும் குறிப்பர். உலகக் கற்கால வரலாற்றில் இடைக் கற்

காலம் நான்காம் பனியாற்றுக் காலத்திலிருந்து (4th Glacial) தொடங்குகிறது. இக் காலத்தில் பழங்கற்காலக் கருவிகளைவிடத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திச் சிறப்புமிக்க கருவிகள் கற்கால மனிதனால் செய்யப்பட்டன. இத்தொழில் நுட்பம் ஐரோப்பாவில் மௌசுட்டிரியன் (Mousterian) என்றும் மேற்காசிய நாடுகளில் இலெவலாசியோ-மௌசுட்டிரியன் (Levalloiso-Mousterian) என்றும் கூறப்படுகிறது. இலெவலாசியன் தொழில் நுட்பத்தின் உயர்ந்த நிலையே மௌசுட்டிரியன் தொழில் நுட்பம் ஆகும். இக்காலத்தில் மனிதன் குகைகளில் நிலையான இடத்தில் வசிக்கத் தலைப்பட்டான். பழங்கற்காலத்தைவிடக் கூர்மைமிக்க கற்கருவிகளை இக்காலத்தில் செய்தான். சில்லுக் கருவிகளையும் (Flake), கூர்மையான கருவிகளையும் கைக்கோடரிகளையும் இடைக் கற்கால மனிதன் பயன்படுத்தினான். கருவிகளைச் செய்வதிலும் மிக்க முன்னேற்றத்தை மனிதன் இக்காலத்தில் கண்டான். பல புதிய நுட்பங்களைக் கருவிகள் செய்வதற்குப் பயன்படுத்தினான். இக்காலத்தில் கற்களைத் தவிர மரத்தாலும் எலும்பாலும் கருவிகள் செய்யப்பட்டன.

மௌசுட்டிரியன் தொழில் நுட்பக் காலத்தில் தான் நியாண்டர்தால் மனிதனும் வாழ்ந்தான். இவன் குட்டையான உருவ அமைப்பையும் வலிமை மிக்க கைகளையும் கொண்டு விளங்கினான். நான்காம் பனியாற்று இறுதிக் காலத்தில் நியாண்டர்தால் மனிதன் அழிந்து விட்டான் என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவுகிறது. இசுரேலில் கார்மல் மலைகளில் (Mt. Carmel) உள்ள குகைகளில் நியாண்டர்தால் மனிதனின் எலும்புக் கூடுகள் கிடைத்தன. சில்லுக் கருவிகள் செய்வதில் நியாண்டர்தால் மனிதர்களே சிறந்து விளங்கினர்.

இக்காலம் இந்தியாவில் 50,000 ஆண்டு முதல் 10,000 ஆண்டு வரையிலும் இருந்தது. இக்கற்காலக் கருவிகள், உயர் மண் படிவுகளின் (Aggradation) இரண்டாம் அடுக்கில் கிடைக்கின்றன. நிலப் பொதியியலின் காலக் கணக்கின்படி இடைக் கற்காலம் கடைசிப் பனிப்படர்வுக் காலமாகிய உர்ம் (Wurm) காலப்பகுதியைச் சார்ந்தது.

கோதாவரி ஆற்றின் துணை ஆறான முலா ஆற்றின் கரையிலமைந்துள்ள முலாநகர் (Mulanagar) என்னும் இடத்தில் ஏறக்குறைய 100 அடிகளுக்குக் கீழ்த் தோண்டியபோது ஓர் இடைக் கற்காலக் கருவியுடன் தெர்மினாளியா அர்சுனா (Terminalia Arjuna) என்ற இனமரத்தின் கரியும் கிடைத்தது. கரிமம் 14 (Carbon 14) காலக் கணிப்பின்படி இக் கரியின் காலம் 17,000 ஆண்டுகளுக்கும் 39,000 ஆண்டுகளுக்கும்இடைப்பட்டதாக இருத்தல் வேண்டுமெனக் கணக்கிடப்பட்டது.

இடைக் கற்காலக் கருவிகளின் மூலப்பொருள்கள் கிரப்டோ - கிரிசுட்டலைன் சிலிகா (Crypto-Crystalline Silica) பாறை வகையைச் சார்ந்தவையான இரத்தினக்கல் (Agate), சிவப்பு - மஞ்சள் அல்லது பழுப்பு நிறமுடைய மணிக்கல் (Jaspor), நீலச் சாயலுடைய வெண்ணிற மணிக்கல் (Chalcedony) போன்றவையாகும்.

**கருவிகளின் பொதுத்தன்மை:** கருவிகள் செய்யும் வகையில் முதற் காலத்துக்கும் இடைக் கற்காலத்துக்கும் ஒரு பெரிய வேறுபாடு இருந்தது. பழைய கற்காலத்தில் பயன்படுத்திய கல்லைப் போல் அல்லாமல் இக்கல் வகைகள், கருவிகளை நேர்த்தியாகச் செய்வதற்கு ஏற்றவை. முதற் கற்காலத்தைவிட இக்காலக் கருவிகள் வடிவில் சிறியனவாகச் செய்யப்பட்டன. கருவிகளின் வகைகளிலும் மிகுந்த மாற்றங்கள் உள்ளன. இக்காலக் கருவிகள் சில்லுக் கருவிகளாகவே (Flake Tools) இருந்தன.

இக்கருவிகள் இலெவலாசியன் நுட்பப்படி செய்யப்பட்டன என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. அதாவது, மூலக் கல்லிலிருந்து சில சில்லுகளைக் கருவிகளைப் போன்றே நேர்த்தியாகப் பெயர்த்தெடுத்தனர். சில்லு எதுவாயினும் அதனைக் கருவியாகப் பயன்படுத்தினார்கள் என்று சொல்லலாம். சில்லுகளின் வெட்டு விளிம்பில் நுணுக்கமான தொழிலால் வெட்டு முனை சீராக்கப்பட்டது. சில வேளைகளில் சில்லுகளைத் தவிரத் தட்டையான கற்களும் பயன்படுத்தப்பட்டன.

**கருவிகள்:** 1. ஒரு பக்கம் குழியான சுரண்டிகள், 2. இருபக்கம் குழியான சுரண்டிகள், 3. நேரான பக்கங்களையுடைய சுரண்டிகள், 4. சுரண்டியுடன் கூடிய துளைக்கருவி, 5. சுரண்டியுடன் கூடிய முனை, 6. முனைகள், 7. தும்பு முனைகள், 8. துளையிடும் முனைகள், 9. மிகச்சிறிய கைக்கோடரிகள் எனக் கருவிகள் பலவகைப்பட்டன.

**கிடைத்த இடங்கள்:** எச். டி. சங்காலியா என்பவர், 1954-இல் கோதாவரியின் துணை ஆறான பர்வாரா ஆற்றுப் பள்ளத்தாக்கில், மகாராட்டிர மாநிலத்தில் அகமத்நகர் மாவட்டத்தில் நிவாசா என்ற இடத்தில், இடைக் கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்தார். பின்னர், கே.டி. பானர்சி (K. D. Banerjee) கோதாவரியோடு இணையும் ஆறுகளான கடப்பிரபா (Ghataprabha), மலப்பிரபா (Mala Prabha) ஆற்றுப் படுகைகளில் இக்காலக் கருவிகளைக்

கண்டுபிடித்தார். ஆ.வி. சோசி, எம். எல். கே. மூர்த்தி, ரெட்டி போன்றவர்களும் பல ஊர்களில் இக்கருவிகளைக் கண்டுபிடித்தனர். மகாராட்டிரத்தில் கோதாவரி ஆற்றுப்படுகைகளில் நிவாசா, பால் பந்தாரி, காலேகான், மகேசுவர் ஆகிய இடங்களிலும், கர்நாடகத்தில் மலப்பிரபா ஆற்றுப்படுகையில் தமின்கால், ஆந்திராவில் கர்நூல் என்ற இடங்களிலும், ஒரிசாவில் காட்கை ஆற்றுப்படுகையில் பிசிதல, கதா போன்ற இடங்களிலும், மத்தியபிரதேசத்தில் சிவ்னா ஆற்றுப்படுகையில் மாண்டேசர், நகர்காத்து ஆகிய இடங்களிலும், சோகிலா ஆற்றுப்படுகையில் பர்செண்டா என்ற இடத்திலும், இராசசுத்தான் மாநிலத்தில் இலூனி ஆற்றுப்படுகையில் சிரீகிருட்டிணாபுரம், காரி, துண்டுதரா ஆகிய இடங்களிலும் இடைக்கற்காலக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

காலேகான் என்ற இடத்தில் இடைக்கற்காலக் கருவிகளுடன் அழிந்து விட்ட எருதின் (Ox) மண்டை ஓடும் கிடைத்தது. இவ்வெருது வகை பிலெய்சுடோசின் (Mid-Pleistocence) இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும்.

**தமிழகத்தில் இடைக்கற்காலக் கருவிகள்:** தமிழகத்தில் இக்காலக் கருவிகள், பழைய கற்காலக் கருவிகள் கிடைத்த இடங்களிலேயே கிடைக்கின்றன. குறிப்பாக வடமதுரை (பொன்னேரி வட்டம்), ஆரம்பாக்கம், கிருட்டிணாபுரம், அரங்கபுரம், அத்திரம்பாக்கம் (திருவள்ளூர் வட்டம்), பரத்தூர், வரியூர் (காஞ்சிபுரம் வட்டம்) ஆகிய இடங்களிலும், திருமங்கலம் வட்டத்தில் சிவாரக் கோட்டை, டி. புதுப்பட்டி போன்ற இடங்களிலும் கிடைக்கின்றன.

**வாழ்க்கை நிலை:** முதற் கற்காலத்தைப் போலவே இக்கால மக்களின் வாழ்க்கை நிலையை இக்கருவிகளை வைத்துக்கொண்டே அறிய வேண்டியிருக்கிறது. வடக்கே சில இடங்களில் இக்கால மக்கள் வேட்டையாடிய விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் இத்தகைய எலும்புகள் கிடைக்கவில்லை. வாழ்க்கை முறைகளில் இரு காலங்களிலும் வேறுபாடு இருந்தது. முதல் கற்காலக் கருவிகள், அளவில் பெரியனவாகக் கூர் நுனியைக் கொண்டு விலங்குகளை நேரடியாகத் தாக்குவதற்குப் பயன்படுவனவாக இருந்தன. இடைக்கற்காலக் கருவிகள், சிறியனவாக இருந்ததால் அப்படிப் பயன்படா. மாறாக இவைகளை வைத்துக் கொண்டு உறுதியான மரக்கிளைகளைக் கூரிய நுனி உடையனவாகச் சீவி, அவைகளை வேல்களாகப் பயன் படுத்தியிருக்க வேண்டும். இதனால் முதற் கற்கால மக்களைவிட இக்கால மக்கள் வேட்டையாடும் இடங்கள் பரப்பில் விரிந்தனவாக இருந்தன எனலாம். இவர்கள் சூரியமுனை போன்ற கருவிகளை மரக் கொம்புகளின் நுனியில் பொருத்தி வேல்களாகப் பயன்படுத்தியிருக்க முடியும். அளவிறந்து காணப்படும் சுரண்டிகள், மரக்கிளைகளின் தோல்களையும் சீவப் பயன்பட்டன. ஆகவே இவர்கள் தோல்களை உடையாகவும் வேறு வகைகளிலும் பயன்படுத்தியிருக்கலாம்; நீண்ட பட்டைக் கத்திகள் முதலான கருவிகளை நன்றாக அறுக்கப் பயன் படுத்தினர்.

பழைய கற்கால மனிதர்களைப் போலவே இவர்கள் ஆற்று ஓரங்களிலும் மலை அடிவாரங்களிலும் வாழ்ந்தார்கள் என்பது, கருவிகள் கிடைக்கும் இடங்களை வைத்துக் கொண்டு உய்த்துணர வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் இவர்களுடைய வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாகவே இருந்தது. நிலையான இருப்பிடங்கள் இருந்ததற்கான அடையாளங்களாக மிகச் சிலவே கிடைத்துள்ளன. கே.இரா.

துணை நூல்கள்:


**Sankalia, H.D.,** – Pre-history Proto-history in India & Pakistan, Poona, 1974.

**Subburao, B.,** – The Personality of India, Baroda, 1958.

**Allchin, F. R. B.,** – The Birth of Indian Civilization, Penguine Bookhouse, London, 1968.

**இடைக்காட்டுச் சித்தர்** தமிழகத்தில் இடைக்காலத்தே வாழ்ந்த சித்தர்களுள் ஒருவர். இவர் திருவண்ணாமலையில் இடையர் குடியில் தோன்றியவர் என்றும், தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டில் வாழ்ந்த இடையர் என்றும், இப்போதைய கேரள நாட்டிலுள்ள இடைக்காடு என்னும் ஊரினர் என்றும் பலவாறாகச் சொல்லப்படுகிறார். சித்தர்கள் பன்னெடுங்காலம் வாழும் இயல்பினர் எனச் சொல்லப்படுவதால் அவர்கள் பலவிடங்களிலும் உறைந்திருக்கலாம். இவ்வகையில் இடைக்காட்டுச்சித்தரும் தொண்டைநாடு, கேரளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இவர் கொங்கணச் சித்தரின் மாணவர் என்று கூறப்படுகிறார். இவரியற்றிய 130 செய்யுட்கள் 'ஞானக்கோவை' என வழங்கும் சித்தர் நூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அவை இடைக்காட்டுச் சித்தர் பாடல் என்று வழங்கப்படுகின்றன. இவரைச் சிலர் சங்கப்புலவர்களுள் ஒருவராகிய இடைக்காடனார் என்பவரோடு இணைத்துக் கூறுவர். பாடல்களின் பொருள் இயல்பு, நடை முதலியவற்றை நோக்கும்போது இருவரும் வேறு பட்டவராவர் என்பது புலனாகிறது.

இவருடைய பாடல்கள் தாண்டவக்கோனார், நாராயணக் கோனார் ஆகிய இரு இடையர்களுக் கிடையே நடக்கும் உரையாடலாக அமைந்துள்ளன. 'முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது முத்திக் குறுதிகள் செய்யாக்கால், சித்தியும் பத்தியுஞ்சக்தியு முத்தியுஞ், சேராவாகுமே கோனாரே', என்று தாண்டவக் கோனார் சொல்ல, அதற்கு மறுமொழி யாக நராயணக் கோனார், 'பற்றே பிறப்புண்டாக் குந் தாண்டவக் கோனே,- அதைப் பற்றாதறுத்து விடு தாண்டவக்கோனே' எனக் கூறியதாக இவர் அமைத்துள்ளார்.



இடைக்காட்டுச் சித்தர்

**இடைக்காடர்:** சங்கப் புலவர்களுள் ஒருவர்; முல்லைத்திணை பாடிய புலவர்களுள் குறிப்பிடத் தக்கவர். இவர் பாடியனவாக அகநானூற்றில் ஆறு பாடல்களும் (139, 194, 274, 284, 304, 374), குறுந்-தொகையில் ஒன்றும் (251), நற்றிணையில் இரண்டும் (142, 316), புறநானூற்றில் ஒன்றும் (42) ஆகப் பத்துப் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. நற்றிணைப் பதிப்பாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அதன் 221-ஆம் பாடலை இளவேட்டனார் பெயரில் பதிப்பித்திருந்தபோதிலும், பாடினோர் வரலாற்றில் அதுபற்றிக் குறிப்பிடும்போது அப்பாடல் இடைக்காடனார் பாடல் என்றே குறிப்பிட்டுள்ளார். அங்ஙனமாயின் இவருடைய பாடல் தொகை பதினொன்று ஆகும். இவர் இயற்றிய அகத்திணைப் பாடல்கள் அனைத்தும் முல்லைத் திணையின்பாற் பட்டவையே. சங்க இலக்கியத் திணைப் பாகுபாட்டின்படி, இவர் பாடிய அகம். 139, நற். 316 ஆகிய இரு பாடல்களும் பாலைத் திணையைச் சார்ந்தனவாக அமைந்துள்ளன.

முல்லைப் பாடல்களில் இடம்பெறும் ஆநிரை, நிரை காக்கும் கோவலர் குறித்த வருணனைக்கு மாறாக, ஆடுகளைக் காக்கும் இடையனைப் பற்றிய வருணனை இவர் பாடல்களில் இடம் பெறுகிறது. அவன் நள்ளிரவில் தண்டே காலாக ஊன்றித் தனியனாக நிற்கும் நிலையும், அவன் எழுப்பும் வீணை ஒலியால் ஆடுகள் பாதுகாப்புணர்வுடன் அமைவதும், மறிகளைப் பிடிக்க வரும் நரிகள் இவ்வொலி கேட்டு அஞ்சி ஓடுவதும் ஆகிய காட்சிகள் இவர் பாடல்களில் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. அகம். 274, நற். 142 ஆகிய இரு பாடல்களிலும் இடம்பெறும் இடையன் வருணனை இவருக்கே தனிச் சிறப்பாக அமைவது.

இவர் பாடல்களில் அமையும் மழை வருணனை நயம் மிக்கது. கார் மழையின் பல நிலைகளையும் அடைகள் வாயிலாகவும் தக்க உவமைகள் வாயிலாகவும் வழங்கும் இப்புலவர், சங்க இலக்கியத்தில் 'மழை பாடிய புலவர்' எனக் குறிக்கத்தக்க சிறப்புடையவர். எடுத்துக்காட்டு; தூங்குவது போல வானம் இருக்கிறது; அது கண் இமைப்பது போல மின்னுகிறது; நிலம் அதிர முழங்குகிறது; அது தாழ்ந்து வருவது போல அணுகி வருகிறது; சோர்ந்தது போலச் சொரிகிறது; நீர் நிறைந்த நுங்கின் கண் சிதறியது போலத் துளி சிதறுகிறது; இடியும் முழக்கும் இன்றி, யாழ் இசைக்கப்படுவது போல மழை இன்குரலுடன் பொழிகிறது. மழை பெய்தபின் செந்நிலம் செய்து வைத்ததுபோல அழகுடன் திகழ்கிறது. தெளிந்த நீர் ஆங்காங்குத் தேங்கி நிற்கிறது.

முல்லைக்குரிய கார்கால மாலையைப் படைப்பதற்கு வேறாக இப்புலவர், கார்மழை பொழிந்த பெரும்புலர் வைகறையைப் படைத்துள்ளார். உணவருந்தி, நீர் பருகித் துணையுடன் வதியும் விலங்குகளையும், மணிமிடைபவளம்போன்று காயா மலர் வாடலின் இடையே ஊர்ந்து செல்லும் ஈயல் மூதாயின் எழிலையும் தம் பாடல்களில் காட்டியுள்ளார்.

முல்லைத் திணையில் சில கூற்றுகளே மிகுதியான பாடல்களைப் பெறுகின்றன. இடைக்காடனார் அத்தகைய கூற்றுகளையே பாடற் பொருளாகத் தேர்ந்தெடுத்துள்ளார். பருவம் கண்டு அழியும் தலைவி கூற்று (2 பாடல்கள்), பருவம் அன்று என வற்புறுத்தும் தோழி கூற்று (2), பாகனுக்குரைக்கும் தலைவன் கூற்று (4), தலைவனது பாசறைக் கூற்று (1) ஆகியவை இவரால் பாடப் பெற்றுள்ளன.

இவர் பாடிய புறப்பாடல் வாகைத் திணையின் அரசவாகைத் துறையைச் சார்ந்தது. இப்பாடலின்

தலைவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி-வளவன். இடைக்காடு என்ற ஊர்ப் பெயரை ஒட்டி இப்புலவர் பெயர் அமைந்தது என்பது கருதப்படுகிறது. எல். கு.

**இடைக்காடர்**[2] இப்பெயரிலமைந்த சங்கப் புலவரின் வேறாகப் பிற்காலத்தில் வாழ்ந்த ஒரு புலவர். இவர் ஊசிமுறி, மூவடி முப்பது, அறுபது வருட வெண்பா முதலிய நூல்களை இயற்றினார் என்பது கூறப்படுகிறது. இவர் பெயர் யாப்பருங்கல விருத்தி உரையில் இடம் பெற்றுள்ளது. 'ஒழிந்தன இடைக்காடனார் பாடிய ஊசிமுறியுள் கண்டு கொள்க', என்னும் இவ்வுரைப் பகுதியில் இடைக்காடனார் பெயரும், இவர் இயற்றிய ஊசிமுறி என்னும் நூற்பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. ''எழுத்து அல்லாத முற்கு, வீளை, இலதை, அநுகரணம் முதலாக உடையன செய்யுளகத்து வந்தால், அவற்றைச் செய்யுள் நடை அழியாமல் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் பிழையாமைக் கொண்டு'' வழங்க வேண்டும் என்னும் யாப்பருங்கல உரைப்பகுதிக்கு மேற்கோளாக, இப்புலவர் இயற்றிய 'மன்றலங் கொன்றை' எனத் தொடங்கும் ஊசிமுறிப் பாடல் காட்டப்பட்டுள்ளது. மேலும், விட்டிசை மோனைக்கு எடுத்துக்காட்டாக அவ்வுரை, இப்புலவரின் 'அ உ அறியா அறிவில் இடைமகனே' எனத் தொடங்கும் வெண்பாப் பகுதியினைத் தந்துள்ளது.

**இடைக்காடர்**[3] திருவிளையாடற் புராணத்தில் இடம் பெற்றுள்ள ஒரு புலவர். இப்புலவருக்காக மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஒரு திருவிளையாடல் புரிந்தார் என்று புராணங் கூறுகிறது. இடைக்காடர் என்னும் புலவர் பாண்டிய மன்னன் மீது பாடல்கள் சில இயற்றிச் சென்று அவன் முன்னிலையிற் கூறினார். மன்னன் அவரை மதியாமல் இருந்தமை கண்டு, உளம் வருந்திய புலவர், சொக்கநாதப் பெருமான் திருக்கோயிலுக்குச் சென்று இறைவன்பால் நிகழ்ந்தது கூறிக் குறையிரந்து வேண்டிக் கொண்டு, புறம்போந்து வடக்குப் பக்கத்தே ஓரிடத்தில் இருந்தார். இறைவனும் சங்கப் புலவர்களும் தொடர்ந்து சென்று புலவரோடிருந்தனர். இச்செய்தியினை அறிந்த பாண்டியன் மனம் வருந்திப் புலவரை அடைந்து வேண்டி, அவரது பிணக்கினைத் தீர்த்து அழைத்து வந்து சிறப்புச் செய்தான். 'இகழ்ந்த தென்னவனை முனிந்து, தன்னைத் தொழுது போன, இடைக்காடன் உடன்போய்ப் பின்பு எழுந்தருளிப் பிணக்கறுத்த இயல்பு' என்று பரஞ்சோதி முனிவர் தம் புராணத்துள் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இச் செய்தி வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத்திலும் திருவிளையாடற் பயகர மாலை, கடம்பவன புராணம் போன்ற பிற நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. காண்க: இடைக்காடர் – இடைக்காட்டுச் சித்தர்.

**இடைக்கால அரசாங்கம்**: இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தபோது இந்தியாவில் விடுதலைப் போராட்டம் மிக்க உச்ச நிலையடைந்தது. எனவே இந்தியாவிற்கு விடுதலை வழங்கத் தீர்மானித்த இங்கிலாந்து அரசாங்கம், அதற்கு முன்னதாக இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளின் பேராளர்களைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் (Interim Government) ஒன்றை அமைக்க முடிவு செய்தது. அதன்படி 1946–ஆம் ஆண்டு செப்டம்பர் 2–ஆம் நாள் பண்டித சவகர்லால் நேரு தலைமையில், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்த காங்கிரசுக்கும் முசுலிம் லீக்கிற்கும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் தோன்றினாலும், இந்தியா விடுதலை பெறும் வரையில் இடைக்கால அரசாங்கம் நீடித்தது.

**அமைச்சரவைத் தூதுக்குழு**: இங்கிலாந்தில் தொழிற் கட்சி 1945–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 10–ஆம் நாள் ஆட்சிக்கு வந்தது. கிளமெண்ட்டு அட்லி இங்கிலாந்தின் தலைமை அமைச்சராகவும் பெதிக்கு லாரன்சு பிரபு இந்தியாவிற்கான அரசுச் செயலராகவும் பதவி ஏற்றனர். பழைமைப் பற்றாளர் கட்சியைவிடத் தொழிற்கட்சி, இந்தியாவின் மீது இரக்கமும் அக்கறையும் கொண்டிருந்தது. எனவே, ஆட்சிக்கு வந்ததும் தொழிற்கட்சி இந்திய விடுதலைக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. முதல் நடவடிக்கையாக இந்தியாவில் ஒத்திவைக்கப்பட்டிருந்த தேர்தல்கள் 1945–ஆம் ஆண்டு திசம்பரில் நடத்தப்பட்டன. இந்திய வைசிராயான வேவல் பிரபு, அரசியல் கட்சித் தலைவர்களைக் கொண்ட புதிய நிருவாகக் குழு ஒன்றை அமைக்கப் போவதாகவும், கூடிய விரைவில் ஓர் அரசியல் அமைப்பு மன்றத்தை ஏற்படுத்தப்போவதாகவும், 1946 சனவரி 28-ஆம் நாள் அறிவித்தார். இந்தச் சமயத்தில் ஆங்கில அரசாங்கம், பெதிக்கு லாரன்சு பிரபு, சர் இசுடாபோர்டு கிரிப்சு, ஏ. வி. அலெக்சாண்டர் ஆகிய அமைச்சர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்புவது என்ற முடிவை வெளியிட்டது. அதன்படி அமைச்சரவைக் குழு மார்ச்சு 24–ஆம் நாள் புது தில்லி வந்து சேர்ந்தது; மே 16–ஆம் நாள் தன்னுடைய திட்டத்தை வெளியிட்டது.

**தூதுக்குழுவின் திட்டம்**: அமைச்சரவைக் குழுவின் திட்டத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். முதற் பிரிவு, பாகிசுத்தான் கோரிக்கையை ஏற்றுக்

கொள்ள மறுத்தது. இரண்டாம் பிரிவு, மிகுதியான அதிகாரங்களையுடைய மாநிலங்களைக் கொண்ட இந்திய யூனியன் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறியது. மூன்றாம் பிரிவு, புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும் வரையில் இடைக்கால அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று பரிந் துரைத்தது. அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் உருவாக்கப்படும் இந்த இடைக்கால அரசாங்கத்தில் இராணுவம் உட்பட எல்லாத்துறை களுமே மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்ற இந்தியப் பேராளர்களிடமே இருக்கு மென்றும், இந்திய நிருவாகத்தை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கும் விரைவில் ஆட்சி மாற்றத் திற்கு வழி செய்வதற்கும் இடைக்கால அரசாங் கத்திற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தரப் படுமென்றும் இங்கிலாந்து அரசாங்கம் உறுதி கூறியது.

காங்கிரசின் மறுப்பு: அமைச்சரவைக் குழுவின் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துச் சூன் 6- ஆம் நாள் முசுலிம் லீகு தீர்மானம் நிறைவேற்றியது. சூன் 25-ஆம் நாள் காங்கிரசும் தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தது. எனினும் இடைக்கால அரசாங்கம் அமைப்பதில் காங்கிரசுக்கும் முசுலிம் லீகுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. இந் நிலையில் ஆங்கில அரசாங்கம், பதினான்கு உறுப் பினர்களைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தப்போவதாகச் சூன் 16-ஆம் நாள் அறிவித்தது. அது காங்கிரசுக் கட்சியின் சார்பில் தாழ்த்தப்பட்ட பேராளர் ஒருவரைச் சேர்த்து ஆறு பேரும், முசுலிம் லீகு சார்பில் ஐவரும், சீக் கியர் சார்பில் ஒருவரும் பார்சிகள் சார்பில் ஒருவரும் ஆகப் பதினான்கு உறுப்பினர்கள் இடம்பெறுவர் என அறிவித்தது. இடைக்கால அரசாங்கத்தில் இடம்பெறும் உறுப்பினர் பெயர்களும் அறிவிக்கப் பட்டன. அந்தப் பட்டியலில் நேருவும் சின்னாவும் இடம் பெற்றிருந்தனர். இந்தப் பட்டியலில் தேசிய முசுலிம் யாரும் இடம் பெறாததனால், காங்கிரசுக் கட்சி அதைச் சுட்டிக்காட்டி அரசப் பேராளருக்குப் (Viceroy) கடிதம் எழுதியது.ஆனால் அரசப்பேராளர் கங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த முசுலிம் ஒருவரை இடைக்கால அரசாங்கத்தில் சேர்ப்பதற்கு மறுத்து விட்டார். எனவே காங்கிரசு இடைக்கால அரசாங் கத்தை மறுத்துவிட்டது.

முசுலீம் லீகு எதிர்ப்பு: முசுலிம் லீக்கு இடைக் கால அரசாங்கத்தில் சேருவதற்கு ஒப்புதல் அளித் தது. ஆயினும் அமைச்சரவைக்குழு அரசியலமைப் பவைக்குத் தேர்தல் முடியும் வரையில், இடைக் கால அரசாங்கம் அமைப்பதை ஒத்தி வைக்கும்படி கூறியது. சின்னா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இடைக்கால அரசாங்கம் அமைப்பது ஒத்திவைக்கப் பட்டால், அரசியலமைப்பு அவைக்கான தேர்தலும் ஒத்திவைக்கப்படவேண்டும் எனக் கூறினார்.ஆனால் அரசப்பேராளர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியலமைப்பு அவைக்குத் தேர்தல் 1946 சூலையில் நடைபெற்றது. காங்கிரசு மிகப் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது. அரசியலமைப்பவையில் காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த மிகப் பெரும்பான் மையான வலுவைக் கண்டு சின்னா அதிர்ச்சி அடைந் தார். எனவே முசுலிம் லீகு அமைச்சரவைக் குழுவின் திட்டத்திற்குத் தந்த ஆதரவைத் திரும்பப் பெற்ற தாகச் சூலை 29 – ஆம் நாள் அறிவித்தது. மேலும், பாகிசுத்தான் என்ற தனி நாட்டை அடைவதற்காக 1946 ஆகசுட்டு 16–ஆம் நாள் முசுலிம் லீகு நேரடி நடவடிக்கையில் இறங்கியது. நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து கல்கத்தாவில் பயங்கரப் படுகொலைகள் நடைபெற்றன. ஒன்றும் அறியாத மக்கள் ஐயாயிரம் பேர் உயிரிழந்தார்கள்; பதினைந்தாயிரம் பேர் படுகாயம் அடைந்தனர். வங்காளத்திலிருந்த முசுலிம் லீகு அரசாங்கம், நேரடி நடவடிக்கை நாளை விடுமுறை நாளாக அறிவித்துக் கலகத்தைத் தூண்டிவிட்டது.

இடைக்கால அரசாங்கம் பதவியேற்பு: அரசப்பேராளர் 12–8–1946–இல் இடைக்கால அரசாங்கம் அமைக்கும்படி நேருவிற்கு அழைப்பு விடுத்தார். தேசிய முசுலிம் ஒருவரை இடைக்கால அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள அரசப்பேராளர் அனுமதித்ததால் நேரு அவர் அழைப்பை ஏற்றுக் கொண்டதுடன், இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெறும் பதினான்கு பேர்களுள் சின்னா குறிப்பிடும் ஐவருக்கும் இடம் தரவும் ஒப்புதல் தெரிவித்தார். ஆனால் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தேசிய முசுலிம் ஒருவருக்கு இடம்தரப்படுவதை எதிர்த்து, சின்னா இடைக்கால அரசாங்கத்தில் சேர மறுப்புத் தெரிவித்துவிட்டார். ஆயினும் சவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல், டாக்டர் இரா சேந்திர பிரசாத்து, ஆசப்அலி, இராசாசி, சரத் சந் திரபோசு, டாக்டர் சான் மத்தாய், சர்தார் பல் தேவ்சிங்கு, சர் சபாத் அகமத்கான், செகசீவன்ராம், சையத் அலி சாகிர், சி.எச்.பாபா ஆகியோரைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படுவ தாக அரசப்பேராளர் மாளிகையில் இருந்து 24–8–1946–இல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.மேலும் இரண்டு முசுலிம் உறுப்பினர்கள் பின்னர் நியமிக்கப் படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. அதே நாளில் வானொலியில் பேசிய அரசப்பேராளர் முசுலிம்லீகிற்கு

இடைக்கால அரசாங்கத்தில் சேருவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பு அப்படியே இருக்கிறதென்றும், முசுலிம் லீகு சேர விரும்பினால் அடுத்த நாளே அதையும் சேர்த்துக்கொண்டு இடைக்கால அரசாங்கம் மாற்றி அமைக்கப்படும் என்றும் அறிவித்தார். குறிப்பிட்டபடி 2-9-1946-இல் இடைக்கால அரசாங்கம் பதவியேற்றது.

**முசுலிம் லீகும் சேர்ந்தது:** முசுலிம் லீகும் இடைக்கால அரசாங்கத்தில் சேருவதற்கு அரசப்பேராளர் தொடர்ந்து முயற்சிகள் செய்து வந்தார். அந்த முயற்சியின் இறுதியில் அவர் வெற்றியும் பெற்றார். ஆனால் இடைக்கால அரசாங்கத்தின் நோக்கம் தோற்றுவிட்டது. முசுலிம் லீகு 1946 அக்டோபர் 13-ஆம் நாள் இடைக்கால அரசாங்கத்தில் சேர உடன்பட்டது. எனவே அக்டோபர் 25-ஆம் நாள் இடைக்கால அரசாங்கம் திருத்தி அமைக்கப்பட்டது. முசுலிம் லீகு உறுப்பினர்களுக்கு இடம் தருவதற்காக முன்பே அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்த, சரத் சந்திரபோசு, சர். சபாத் அகமத்கான், சையத் அலி சாகிர் ஆகியோர் பதவி விலகினர். இலியாகத் அலி கான், சந்திரிகர், சர்தார் அப்துல்ராப் நிசுதார், இராசா காசாண்பர் அலிகான் ஆகிய முசுலிம்களும், சோகிந்தர் மண்டல் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரும் முசுலிம்லீகு சார்பில் இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெற்றனர்.

**இடைக்கால அரசாங்கம் செயலிழத்தல்:** அன்று முசுலிம் லீகு இடைக்கால அரசாங்கத்தில் இருந்து கொண்டே அதற்கு எதிராகச் செயற்பட்டது. இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்கள் ஓர் இணைந்த குழுவாகச் செயற்படவில்லை. நேருவின் தலைமையை முசுலிம் லீகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையில் இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரசுக் கட்சியினர் தனிக் குழுவாகவும் முசுலிம் லீகு உறுப்பினர்கள் மற்றொரு தனிக் குழுவாகவும் செயற்பட்டனர். சர்தார் வல்லபாய் படேல் மத்திய அரசாங்கம் செயலிழந்த நிலையில் உள்ளதாக 1946-ஆம் ஆண்டு நவம்பரில் அறிவித்தார். மாறுபாடாகச் செயற்படும் முசுலிம் லீகு உறுப்பினர்களை இடைக்கால அரசாங்கத்தில் இருந்து பதவி விலகச் செய்யுமாறு காங்கிரசு கேட்டுக்கொண்டதை அரசப் பேராளர் ஏற்கவில்லை.

1947 ஆகசுட்டு 14-ஆம் நாள் பாகிசுத்தான் உருவாக்கப்படும் வரையில் இடைக்கால அரசாங்கம் நீடித்தது. அதுவரையில் முசுலிம் லீகும் இடைக்கால அரசாங்கத்தில் நீடித்திருந்தது. அ. இரா.

துணை நூல்கள்:

**Roberts, P.E.**, History of British India,- Oxford University Press, Delhi, 1983.

Spear,Percival, The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976

**இடைக்கால ஏற்பாடுகள்** என்னும் தொடர் சிறிதுகாலத்துக்கு மட்டுமே நடைமுறையிலிருக்கக் கூடியதும், சட்டத்தின் வாயிலாகச் செய்யப்படுவதுமான ஒரு நிலையை அல்லது ஏற்பாட்டைக் குறிப்பிடுவதாகும். இடைக்கால ஏற்பாடுகள் (Transitory Provisions) என்னும் தொடர் சட்டத்தில் கையாளப்படும்போது, அது எப்போதும் நிலையாக இல்லாத, ஒரு சிறிது காலத்துக்கு மட்டுமே நடைமுறையிலிருக்கக்கூடிய (Transient, Evanescent, Temporary) அமைப்பை அல்லது விதிகளையே குறிப்பிடுகிறது. எந்தச் சட்டமும் நாட்டின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமுன் வரைவு அல்லது மசோதா என்ற வடிவத்தில் (Bill) தாக்கல் செய்யப்படுகிறது. இந்த வரைவு இந்தியா போன்ற குடியாட்சி அரசாங்க முறையுடைய நாட்டின் பாராளுமன்றத்தில் வாசிப்புநிலைகளைக் (Readings) கடந்து, நாட்டின் தலைவருடைய கையழுத்தைப் பெற்ற பின்னர்ச் சட்டமாகிறது. அந்தச் சட்டம் எந்த நாளில் நடைமுறைக்கு வருதல்வேண்டுமென்று அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அந்த நாளில் அது நடைமுறைக்கு வரும். சில சட்டங்கள் நடைமுறைக்கு வருமுன்னதாகவே அவை குறிப்பிடும் ஒரு பொருளைப் பற்றி உடனே நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், அந்தச் சட்டம் செயல்முறைக்கு வரும் நாள் வரையிலும், அப்பொருளைப் பற்றிய நடவடிக்கையை இடைக்காலத்தில் எடுக்கும்பொருட்டு அரசாங்கமோ சட்டமன்றமோ ஓர் ஆணையை விடுக்குமாயின், அந்த ஆணை நிலையான சட்டம் நடைமுறைக்கு வருமளவு மட்டுமே செயற்படுமாகையால், அந்த ஆணை ஓர் இடைக்கால ஏற்பாடு எனக் கூறப்படுகிறது. சில சட்டங்களிலேயே, அவை நடைமுறைக்கு வரும் காலம் வரையிலும் செயற்பட வேண்டிய இடைக்கால ஏற்பாடும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக,1947-ஆம் ஆண்டில் இந்தியா என்றும் பாகிசுத்தான் என்றும் இரண்டு தன்னாட்சியுடைய நாடுகளைப் பிரிவினையின் வாயிலாக இந்தியாவில் தோற்றுவித்த ஆங்கிலப் பாராளுமன்றத்தால், நிறைவேற்றப்பட்ட இந்திய விடுதலைச்சட்டத்தில், ஓர் இடைக்கால ஏற்பாடு பற்றிய பிரிவு காணப்படுகிறது. இப்பிரிவு இந்தியாவுக்கு ஆங்கில அர

சாங்கம் அதிகாரத்தை மாற்றிய 1947–ஆம் ஆண்டு ஆகசுட்டு 15–ஆம் நாளிலிருந்து, இந்திய அரசியல மைப்பு அவையானது (Constituent Assembly of India) ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்து, நிறைவேற்றி, அதன்படி புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பாராளுமன்றமும் அமைச்சரவை யும் கூடிச் செயற்படத் தொடங்கும் காலம் வரை யிலும் (இந்த இடைக்காலத்தில்), அரசியல் அமைப்பு அவையே இந்தியாவுக்குச் சட்டம் இயற்றும் அதிகா ரங்களைக் கையாளுதல் வேண்டுமென்றும், இந்த இடைப்பட்ட காலத்தில் 1946–ஆம் ஆண்டு பதவி ஏற்ற அமைச்சரவையினாலேயே 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச்சட்டத்தின்படியும், அதற்கு அவ் வப்போது அரசப்பேராளர் தமது நிருவாகக் குழுவில் செய்யும் மாறுதல்களின்படியும் இந்திய அரசாங்க மானது நடத்தப்படுதல் வேண்டுமென்றும் கூறிற்று. இவ்வாறு கூறும் இந்திய விடுதலைச் சட்டத்தின் பகுதி, ஓர் இடைக்கால ஏற்பாடு ஆகும். புதிய இந் திய அரசியலமைப்பு 1950–ஆம் ஆண்டு சனவரி 26. ஆம் நாள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதும்– அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் இறுதியில் கூறப், பட்டுள்ளபடி, 1935–ஆம்ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டமும், 1947–ஆம் ஆண்டின் இந்திய விடுதலைச் சட்டமும் தள்ளுபடி செய்யப்பட்டு (Repealed) நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. இடைக் கால ஏற்பாடுகள் சட்டப்பிரிவுகளில் மட்டுமல்லாமல் நீதிமன்ற ஆய்வுகளின் வாயிலாகவும் பெறப்பட லாம். இதற்கும் சட்டம் வகை செய்கிறது.

**இடைக்காலத் தணிக்கை:** பொதுவாக நிறுவனங்களில் ஓராண்டு முடிந்தவுடன் கணக்குகள் தணிக்கை செய்யப்படும். இரண்டு ஆண்டுத் தணிக் கைகளுக்கிடையே நிறுவனத்தின் நிதி நிலைமை அறிந்து கொள்ளும் பொருட்டு நடத்தப்படும் தணிக் கையே இடைக்காலத் தணிக்கை (Interim Audit) எனப்படும்.

பொதுவாக ஆண்டு முடிந்தவுடன் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு ஆதாயம் எவ்வளவு என்று கணக்கிடப்பட்டு, அந்த ஆதாயத்தில் எவ்வளவு பங்காதாயமாக வழங்கலாம் என் முடிவு செய்யப் பட்டு வழங்கப்படும். பங்குதாரர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை தான் பங்காதாயம் கிடைக்கும். ஆனால், சில வேலைகளில் நிறுவனம் மிகுந்த ஆதாயம் பெறும்படி செயற்படும். அந்த ஆதாயம் ஆண்டு இறுதி வரையிலும் இருக்கும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இயக்குநர் குழு, பங்குதாரர்களுக்குக் கணக்கிட்டிருக்கும் பங்காதாயத்தில் ஒரு பகுதியை, ஆண்டு முடிவதற்கு முன்பே வழங்க முடிவு செய்ய லாம். அவ்வாறு முடிவு செய்தால், முதல் ஆறு மாதத்திற்கான கணக்குகளைத் தணிக்கையர் மூலம் தணிக்கைசெய்து, நிறுவனம் ஆதாயம் ஈட்டியிருப் பதை உறுதிசெய்து கொள்வர். பிறகு குறிப்பிட்ட பங்காதாயத்தைப் பங்குதாரர்களுக்கு வழங்குவர். இதனை இடைக்காலப் பங்காதாயம் (Interim Dividend) எனக் கூறுவர். ஆகையால் இயக்குநர்கள், இடைக்காலப் பங்காதாயம் அல்லது ஊக்க ஊதியப் பங்குகளை (Bonus Shares) வழங்க முடிவு செய்யும் போது, இடைக்காலத் தணிக்கையை மேற் கொள்வர். இரண்டு இருப்பு நிலைக் குறிப்புத் தணிக்கைகளுக்கு (Balance Sheet Audit) இடையில் இது மேற்கொள்ளப்படுகிறது.

நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய சில முக் கியக் குறிப்புகளை அவ்வப்போது அறிய, இத் தணிக்கை மிகவும் உதவுகிறது. இடைக்காலத் தணிக்கை முறையைச் செயற்படுத்தும் நிறுவனம் தன்னுடைய இறுதித் தணிக்கையை எளிதாகவும் விரைவாகவும் முடித்துக்கொள்ள இயலும். இதனால், கணக்கிலுள்ள பிழைகளும் மோசடிகளும் ஆண்டு முடிவதற்கு முன் கண்டுபிடிக்கப்படுகின்றன. மேலும், எந்தநேரத்திலும் தணிக்கை மேற்கொள்ளப்படும் என்ற நிலையில் அலுவலர்கள் விழிப்புடன் நியாய மாக வேலை செய்ய முனைவர்.

இடைக்காலத் தணிக்கையை மேற்கொள்வதில் சில குறைபாடுகளும் உள்ளன. தணிக்கை நடந்து முடிந்தபின் மோசடியாகக் கணக்குகளை மாற்றி எழுத வாய்ப்புகள் உண்டு. இதனைத் தவிர்க்க, தணிக்கை அலுவலர்கள் தணிக்கை செய்து முடித்த கணக்குக் குறிப்புகளைத் தனியாகக் குறித்து வைத் துக்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் இது அவர்களது வேலைப் பளுவைப் பெருக்கி, பொறுப்புகளையும் வலியுறுத்துகிறது.

தொடர்ச்சித் தணிக்கை (Continuous Audit) முறையிலும் இடைக்காலத் தணிக்கை முறையிலும் வேறுபாடுகள் உள்ளன. தணிக்கையருடைய வசதிக் கேற்றதான கால வரையறைக்குத் தொடர்ச்சித் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், இடைக் காலத் தணிக்கை வாடிக்கையாளர் குறிப்பிடும் கால வரையறைக்கு ஏற்றதாகச் செய்யப்படுகிறது. சொத்துகளும் பொறுப்புகளும் இருப்புநிலைக் குறிப்பு உருவாக்கினபின்னர், தொடர்ச்சித் தணிக்கை முறையால் சீர்தூக்கப்படுகின்றன. ஆனால், இடைக் காலத் தணிக்கையில் சொத்துகளும் பொறுப்புகளும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படுவதற்கு முன் சீர்தூக்கப்படுகின்றன. தொடர்ச்சித் தணிக்கை முறையில், நிறுவனம் ஈட்டியுள்ள ஆதாய இழப்பு

கணக்கிடப்படுவதில்லை. ஆனால், இடைக்காலத் தணிக்கையின் நோக்கமே ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் நிறுவனம் எவ்வளவு ஆதாயம் ஈட்டியிருக்கிறது என்பதைக் கண்டறிவதுதான். தொடர்ச்சித் தணிக்கையில் இருப்புப் படிவம் (Trial Balance) உருவாக்கப்படுவதில்லை. ஆனால், இடைக்காலத் தணிக்கையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருப்புப் படிவம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இடைக்காலக் கணக்குகள் உருவாக்கப்படுகின்றன.

பி.இரா.

துணைநூல்கள்:

**Tandon B.N**, A Hand Book of Practical Auditing S. Chand & Company, New Delhi, 1970.

**Kamal Gupta**, Contemporary Auditing, Tata McGraw-Hill Publishing Company Limited, New Delhi, 1977.

**இடைக்காலத் தத்துவம்**: உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக் காலமான கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்கும் மறுமலர்ச்சிக் காலமான கி.பி. 15-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலக் கட்டத்தில் மேலை ஐரோப்பிய நாடுகளில் நிலவிய தத்துவம், இடைக்காலத் தத்துவம் எனப்படும். ''இடைக்காலம் அறியாமையும் குருட்டு நம்பிக்கைகளும் மண்டிக் கிடந்த இருண்ட காலம்; உலகியலிலிருந்தும் நரக வேதனையிலிருந்தும் விடுபடுவதே இடைக்கால மனித வாழ்வின் குறிக்கோள்'' என்று இடைக்காலம் பற்றிக் கணிக்கப்படும் பொதுவான கணிப்பு முற்றிலும் சரியானதன்று. இடைக்காலச் சிந்தனையாளர்களின் பல கருத்துகள் புத்துலகத் தூண்களாக இருக்கின்றன.

இக்கால நாகரிகத்தில் இடைக்காலக் கூறுகள்: இக்கால நாகரிகம், பண்பாடு, தத்துவம் ஆகியவற்றுள் மூவகைக் கூறுகள் கலந்திருப்பதைக் காணலாம். அவை, கிரேக்கரின் தத்துவம், உரோமானியரின் சட்டமும் ஒழுங்கும், கிறித்தவத்தின் தனிமனித உணர்வு ஆகியவை. தத்துவத்தின் பொதுவடிவும் பயன்படுத்தப்படும் பெரும்பாலான கருத்துகளும் கிரேக்கத்திலிருந்து வந்தவை. தத்துவார்த்தச் சிந்தனையை ஊக்கிய கிரேக்கர்கள் அன்றாட வாழ்க்கையை அணுகவில்லை. கிரேக்கர்களின் தத்துவத்தில் உள்ள இக்குறைபாடு உரோமானியர்களால் நிறைவு செய்யப்படுகிறது. அதிகார வருக்கச் சிந்தனை உரோமானியர் வாழ்வில் இழைந்தோடியது. அதிகாரத்தின் விளைவு கொடுமையானதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் இருப்பினும், உலகில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தக் கத்தியும் குருதியும் சிறந்த வழிகளாகக் கருதப்பட்டன. ஆன்மிக, நாகரிக வளர்ச்சிகளுக்கு வேண்டிய அமைதியும் ஒழுங்கும் நிறைந்த அரசியல் சமுதாய அமைப்புகளை உருவாக்கிய பெருமை உரோமானியர்களைச் சேரும். உரோமானியர்களின் சட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டே தற்காலச் சட்டங்கள் அமைந்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. தனிமனிதச் சிந்தனையும் சுதந்திரமும் உரோமானியச் சட்டத்தின் இரும்புப் பிடியில் சிக்கித் தவித்தன. சமுதாயத்தின் பாதுகாப்பிற்கும் நிலைத்த தன்மைக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையான தனிமனித வாழ்க்கையின் சிறப்பைக் கிறித்தவம் உணர்த்தியது. சொல்லப்பட்ட இம்மூன்று கூறுகளும் ஒருங்கிணைந்த காலம் இடைக்காலம். எனவே, புத்துலக மாளிகையின் அடிக்கல்லும் தூண்களும் இடைக்காலத்தில் ஏற்பட்டன எனலாம்.

இடைக்காலத் தொடக்கம்: பண்டைய கிரேக்கத் தத்துவச் சங்கிலியின் கடைசி வளையமாகவும் கிறித்தவத் தத்துவச் சங்கிலியின் முதல் வளையமாகவும் விளங்கியவர் புளோட்டினசு (Plotinus- கி.பி. 204/205-269) என்னும் தத்துவப் பேரறிஞர். புளோட்டினசின் தத்துவத்தில் கீழ்த்திசை நாடுகளின் ஆழ்ந்த மதக்கருத்துகள் இடம்பெற்றன. அக்கருத்துகள் பலவும் கிறித்தவ மதக்கருத்துகளோடு ஒத்திருந்ததால், புளோட்டினசின் மதத்தத்துவம் இடைக்காலத் தத்துவமாகத் தொடர்ந்து வளர்ந்தது.

புளோட்டினசுக்குப் பின் கிரேக்கத் தத்துவம் தன் செல்வாக்கிழந்தது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின் அம்புரோசு (Ambrose), விக்டோரினசு (Victorinus), புனிதர் அகசுதின் (St. Augustine) போன்றோர் பிளேட்டோவின் தத்துவத்திற்குப் புதிய விளக்கம் கண்டனர். இவர்களுடைய தத்துவம் புதிய பிளேட்டோனிசம் (Neo Platonism) என்ற பெயரில் செல்வாக்குற்றது. புதிய பிளேட்டோனிசத்தை மதக் கோட்பாடுகளில் கலந்து, கிறித்தவ மதநம்பிக்கைகளுக்கு அறிவு வழியில் விளக்கந்தர முனைந்தனர். எனவே இடைக்காலத் தத்துவம் என்பது, கிரேக்கத் தத்துவம், கிறித்தவ மதம் என்ற இரண்டின் கலப்பு எனலாம்.

உரோமானியப் பேரரசின் வீழ்ச்சி: செருமனியின் தொடர் படையெடுப்பால் உரோமானியப் பேரரசு அலைக்கழிக்கப்பட்டுக் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சிக்குப் பின், பண்டைய கிரேக்க உரோமானிய நாகரிகங்களும் தத்துவங்களும் அடிச்சுவடின்றி மறைந்துபோயின. மதக் கோட்டையான கோயிலுக்கு வெளியே தத்துவச் சிந்தனை தேவையற்றுப் போயிற்று. கோயிலுக்குள்ளே தத்துவ விசாரணைக்கு எவரும் முன்வர

வில்லை. கோயிலுக்குள்ளே வானுலகம் பற்றியும் முக்திநிலை பற்றியும் பேசப்பட்டதே தவிர, உலகியல் அறிவு பற்றிய ஆராய்ச்சி அறவே இல்லை. கிரேக்கத் தத்துவமும் கல்வியும் பயனற்றவை எனக் கருதப்பட்டன. கிரேக்கக் கலையும் பண்பாடும் கிறித்தவத்திற்குப் புறம்பானவை என்று வெறுக்கப் பட்டன.

கிறித்தவ மடாலயங்களின் எழுச்சி: உரோமானியப் பேரரசின் சிதைவால் அமைதியும் ஒழுக்கமும் குலைந்தன. இத்தகைய சூழ்நிலையிலும் கிறித்தவ மத மடாலயங்களில் அறிவாராய்ச்சி ஓரளவு ஒளி வீசிக்கொண்டிருந்தது. பிளேட்டோ, அரிசுடாட்டில் போன்ற கிரேக்க அறிஞர்தம் நூல்களின் சில பகுதிகள் மட்டும் மதகுருமார்களால் மொழிபெயர்க்கப்பட்டு மக்களிடம் பரவின. மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க நூல்கள் இடைக்காலச் சிந்தனையாளர்களின் தத்துவ விசாரணைக்கு ஊக்கம் தந்தன.

உரோமானியப் பேரரசை வெற்றி கொண்ட செருமானியர்கள் கிறித்தவ மதக் கோயில்களை வெறுக்கவில்லை. காரணம், கோயில்கள் அரசியல் சார்பின்றி இருந்தன. மேலும், கோயிலின் புனிதத் தன்மையும் புறக்கவர்ச்சியும் நாகரிக வளர்ச்சியில்லா தியூட்டன் (Teuton) இனத்தவர் நெஞ்சில் அச்சத்தையே விளைத்தன. செருமானியரும் தங்கள் இனமதங்களை விட்டுக் கிறித்துவத்தைத் தழுவினர்.

இடைக்கால முற்பகுதி, புதிய பிளேட்டோனிசம்: கிறித்தவ மதத் தோற்றமும் வளர்ச்சியும் தத்துவத் துறைக்குப் புதிய பணிகளைத் தந்தன. தத்துவ அறிஞரும் மதகுருவுமான அகசுதின் இடைக்காலத் தொடக்கத்தின் இணையற்ற சிந்தனையாளராக விளங்கினார். அகசுதினும் பிற பாதிரியார்களும் கிரேக்கத் தத்துவங்களைப் பொதுவாகவும், பிளேட்டோவின் தத்துவத்தைச் சிறப்பாகவும் கொண்டு பிரபஞ்ச உற்பத்தி, நம்பிக்கை, காரணந் தெரிதல், உண்மை என்பன பற்றி ஆராய்ந்தனர். பிளேட்டோனிசு தொடங்கிய புதிய பிளேட்டோனிசம் இடைக்காலத் தொடக்கத்தில் செல்வாக்குப் பெறப் பெரிதும் காரணமாக இருந்தவர் அகசுதின். பேரறிஞன் சிசிரோவின் கருத்துகள் அவரைத் தட்டியெழுப்பின; புதிய பிளேட்டோனிசம் அவருடைய தத்துவ ஆய்வுகளையும் கருத்துகளையும் உருவாக்கின.

பருவுலகும் ஆன்ம உலகும்: புலன்களால் நுகரப்படும் இப்பருவுலகிற்கப்பால் ஆன்மிக நுண்ணுலகம் உண்டென்றும், அவ்வான்மிக உலகமே அழியாத உலகென்றும், மனித முயற்சிகள் யாவும் அதனை அடைதற்கே என்றும் புனிதர் அகசுதின் கூறுகின்றார். இவ்வுண்மையுலகைக்கிறித்தவ மதம் சுட்டும் ‘கடவுள்’ என்ற கருத்துடன் ஒப்பிடுகிறது. உண்மையும் அழகும் நீக்கமற நிறைந்திருக்கும் இவ்வான்மிக உலகைப் புலன்களால் புறம் நோக்கி அறிய முடியாது. உள்ளுணர்வால் மட்டுமே அறிய முடியும். தத்துவம், மாறாமல் அழியாமல் நிலைத்திருக்கும் உண்மையைப் பேருண்மை என்கிறது. மதம் கடவுள் என்கிறது. ‘கடவுள் உண்டு’ என்பதற்கு அகசுதின் தரும் விளக்கங்களும் நிரூபணங்களும் பேருண்மைக்குத் தரப்படும் தத்துவ விளக்கங்களும் நிரூபணங்களும் போன்றே உள்ளன. கணக்கியல், அறிவியல் உண்மைகளெல்லாம் பேருண்மையிலிருந்து பிறப்பவை; அழியக்கூடிய, மாறக்கூடிய, நிலையில்லா இப்புற உலகிலிருந்து திரட்டப்படுபவை அல்ல. பேருண்மையின் ஒருகூறு மனித மனத்தில் இருப்பதால்தான், இவ்வுண்மைகள் மனிதனுக்குத் தோன்றுகின்றன.

உயிரும் உடலும்: கடவுளை மூலமாகக் கொண்டு உயிர், உலகம், பொருள் என்பன அனைத்தும் தொடர் ஓட்டமாகத் தோன்றின. மனிதனின் உயிர் இறைவனின் ஒரு கூறு. ‘‘உயிர் ஓர் உடலில் சிறைப்பட்டவுடன் இறைவனின் தொடர்பு அறுந்து விடுகிறது. உடலைப் பெற்றதற்காக மனிதன் வெட்கப்படவேண்டும்; அது வளர்வது கண்டு வேதனைப்பட வேண்டும். உடலிலிருந்து உயிரை விடுவித்து இறைவனுடன் ஐக்கியப்படுத்துவதே மனிதனின் முயற்சிகளுள் சிறந்தது’’. அறிவுக்குப் புறம்பானதாகத் தோன்றினும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டுகளில் இக் கோட்பாடு செல்வாக்கில் இருந்தது. அகசுதின் இக்கோட்பாட்டைச் சற்றே மாற்றிக் கிறித்தவம் ஏற்குமாறு செய்தார்.

உடல், உயிர் என்ற இரண்டின் கூட்டமே மனிதன். இவ்விரண்டில் உயிர் மேலானது. பேருண்மையுடன் தொடர்புள்ளதென்பதால் உயிர் அழிவில்லாதது. அழிந்துவிடும் என்பதால் உடலை ஒதுக்கிவிட முடியாது; வெறுக்க வேண்டிய தேவையுமில்லை. ‘இறந்தவர் மீண்டும் உயிர்த்தெழுவர்’ என்ற கிறித்தவ நம்பிக்கை உடலின் முக்கியத்துவத்தைச் சுட்டுகின்றது. அகசுதின் எழுதிய ‘தெய்வத்திரு நகரம்’ (The City of God) என்ற நூல், மனித வாழ்க்கையென்னும் நாடகத்தின் படப்பிடிப்பு. இறைவனை நோக்கும் முன்னேற்றப் பாதையில்மானுட இனத்தின் இயக்கத்தை இந்நூல் தெளிவாகக் காட்டுகிறது. அகசுதின் விரித்துரைக்கும் புதிய பிளேட்டோனிசத்தில் கீழ்த்திசை நாடுகளின்ஆன்மிக அறிவும் அனுபவமும் நெருங்கி இழையோடுவதைக் காணலாம். மண்ணின் மேல் மக்கள் ஏற்படுத்தும் அரசுகளும்

நாடு நகரங்களும் அழியும் இயல்பின. இறைவனின் புனித அரசு என்றும் அழியாது. அகசுதினின் இக் கோட்பாடு கிறித்தவ மதச்செல்வாக்கை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது.

அரசு மத – அதிகாரப் போட்டி: அகசுதின் சமகாலத்தவரான மதகுரு அம்புரோசு மதத்தின் முதன்மையை நிலைநாட்டப் பெரும்பாடுபட்டவர். மதங்களின் தனித்துவத்திலும் போக்கிலும் அரசு தலையிடவே கூடாது என்னும் கொள்கையுடையவர் மட்டுமல்லர்; பல பேரரசர்களோடு மோதிப் பகையும் கொண்டார்; வெற்றியும் கண்டார். அகசுதினின் தத்துவம் அம்புரோசின் கோட்பாட்டுக்கு விளக்கமாக அமைகிறது. மதச் சார்பற்ற செயல்களில் மன்னர் அரசுக்கு மதம் அடக்கம்; மதச்சார்பான செயல்களில் மதத்திற்கு மன்னர் அரசு அடக்கம். மன்னர்கள் மதகுருக்களுக்குத் தலை தாழ்த்தி வணங்க வேண்டும். அகசுதினைப் பின்பற்றியோர் மேலும் ஒருபடி சென்று, ஆன்மிக அரசே உயர்ந்தது என்று வலியுறுத்தினர். ஒரு நூற்றாண்டுக்குள், பெரியார் போப்பு கிரகரி (Pope Gregory the Great) காலத்தில் தெய்வப் பேரரசு என்பது, கிறித்தவ மதக்கோயில் எனக் கருதப்பட்டது. போப்பாண்டவர் தெய்வப் பேரரசாளும் இறைவனின் பேராளர் எனக் கருதப்பட்டார்.

அசுகதின் உருவாக்கிய கோட்பாடு மதத்தின் செல்வாக்கை உயர்த்தியது. அரசின் செல்வாக்கை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது. அதன் விளைவாக அரசும் மதமும் மோதிக் கொண்டன. மத குருக்களை நியமிக்கும் அதிகாரம் மன்னனுக்கா மதத்தலைவர் போப்பாண்டவருக்கா என்றெழுந்த வினா பெரும் விபரீதமாய் முடிந்தது. அரசை எதிர்க்கும் அளவுக்கு மதத்தின் செல்வாக்கிருந்ததால், மதத்தின் கட்டளைக்குப் பணிய மறுத்த மன்னர்கள் மதநீக்கம் செய்யப்பட்டனர். நான்காம் என்றி (Henry IV) மதநீக்கம் செய்யப்பட்ட போது பெரும் கொந்தளிப்பேற்பட்டது. அரசு அங்கீகாரம் பெறாத குருமார்கள் நியமனம் செல்லாதென்று இங்கிலாந்து மன்னர்கள் அறிவித்தனர். இந்தப் போராட்டம் இடைக்காலத் தத்துவ வரலாற்றில் ஒரு தொடர் கதையாயிற்று.

பிளேட்டோவின் கருத்துலகம் – ஒரு விவாதம்: பொருள் உலகிற்கப்பால் கருத்துலகம் ஒன்று உண்டு என்ற கோட்பாடு பிதாகோரசு காலத்திலே உருவாயிற்று. இக்கோட்பாடு பிளேட்டோவின் சிந்தனையில் வளர்ந்து வலிமை பெற்றது; இடைக்காலத் தொடக்கத்தில் புதிய பிளேட்டோனிச அறிஞர்களால் செல்வாக்குப் பெற்றது. பிளேட்டோவின் கருத்துலகம் பற்றி முடிவுக்கு வரமுடியால் பண்டைய கிரேக்க அறிஞர்கள் விட்டுச்சென்ற வாதங்கள் இடைக்காலத் தத்துவ அறிஞர்களால் புதிய வேகத்துடன் தொடரப்பட்டன. தொடக்கக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பிளேட்டோனிசம், இடைக்காலத்தின் பிற்பகுதியில் செல்வாக்கிழந்தது; அரிசுடாட்டிலின் தத்துவம் சிந்தனையாளர்களிடையே செல்வாக்குப் பெற்றது. பொதுவாக, இடைக்காலத்தில் புதிய தத்துவங்கள் எதுவும் பிறக்கவில்லை; பிளேட்டோ, அரிசுடாட்டில் தத்துவங்களுக்கு விளக்கவுரைகள் எழுந்தன. அந்த விளக்கவுரைகள் விவாதிக்கப்பட்டன. பிளேட்டோ அரிசுடாட்டில் தத்துவங்கள், தொடர்ந்து போரிடவசதியான போர்க்களமாக இடைக்காலம் அமைந்தது எனலாம்.

கருத்துலகும் பரலோகமும்: ஐம்புலன் நுகர்ச்சிக்கான பருப்பொருள்கள் நிறைந்தது இப்பொருள் உலகம். ஐம்புலன் அனுபவத்திற்கப்பால் கருத்துகள் நிறைந்தது 'கருத்துலகம்'. உலகில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான பருப்பொருள்கள் கருத்துலகில் உள்ள ஒரு பொதுக்கருத்தின் கீழ்வரும் தனிப்பொருள்கள் ஆகும். 'கட்டில்' என்பது கருத்துலகில் உள்ள ஒருபொதுக் கருத்து.இக்கருத்தின் கீழ்க் 'கட்டில்' என்ற பெயரில் பல கோடிப் பொருள்களை உலகில் காண்கிறோம். பருவுலகில் உள்ள தனிப் பொருள்கள் யாவும் ஒரே நிலையில் நிலைத்தில்லாமல் வளர்ச்சி, அழிவு என்றபெயரில் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் இப்பொருள்களுக்கெல்லாம் தோற்றுவாயாக இருக்கும் கருத்துலகம், என்றும் ஒரே நிலையில் மாறாதிருக்கிறது. பொருள்களைப் புலன்களால் அறியலாம்; கருத்துகளைக் காரணப் படுத்துதல் என்னும் ஆற்றலால் அறியலாம். பிளேட்டோவின் கருத்துலகக் கோட்பாடு, கிறித்தவ மதப் 'பரலோக'க் கோட்பாட்டிற்கு ஏற்புடையதாகக் கருதப்பட்டது.

கருத்துலகம் ஒரு கற்பனை: பொருள்களுக்கு வேறான கருத்துலகொன்றில்லை என்பது அரிசுடாட்டிலைப் பின்பற்றியோர் வாதம். ஒரு வடிவத்திற்குட்படும் பொருளுண்மை, காட்சிக்குரிய பருப்பொருளாகிறது. பொருளுண்மையும் வடிவமும் வெவ்வேறு வகையைச் சேர்ந்தவைஅல்ல. தனித்தனிப் பொருள்களில் பொருளுண்மை இருப்பது போன்றே வடிவமும் இருக்கிறது. தனிப்பொருள்களிலிருந்து பிரித்து வேறுபடுத்தப்படும் 'கருத்து' என்ற நுண்பொருள் ஏதுமில்லை. எனவே, தனிப்பொருள்களெல்லாம் பொதுக்கருத்தோடு தொடர்பு கொண்டவை என்ற வாதம் பொருளற்ற புனைந்துரையாகும்.

பொதுமைக் கருத்து: தனிப்பொருள்கள் பல வற்றுக்கும் பொருந்தும் ஒரு கருத்தைப் 'பொதுக் கருத்து' என்றனர். இப்பொதுக் கருத்து பற்றிய வாதங்கள் இடைக்காலத்தில் முதன்மை பெற்றன. பொதுக் கருத்து என்பது பொருளைக் குறிக்கிறதா? பொருளின் பெயரைக் குறிக்கிறதா? பிளேட்டோனிச அறிஞர்கள் பொருளையே குறிக்கிறதென்றனர். ஆனால் அரிசுடாட்டிலிய அறிஞர்கள் பொருள்களின் பெயரைக் குறிக்கிறதென்றனர். பிளேட்டோவின் 'பொதுமை' என்னும் தத்துவக் கருத்து இடைக்காலச் சிந்தனையாளரிடையே மிகப் பெரும் தத்துவ விசாரணையை எழுப்பியது. எரிசீனா (Erigena 800-877) போன்றோர், பொதுமை மட்டுமே உள்பொருள் என்றும் தனிப் பொருள்கள் உள்பொருள் அல்லவென்றும் கூறினர். கோபால் என்ற பெயருள்ள தனிமனிதனுக்கு 'இருப்புநிலை' இல்லை; 'மனிதன்' என்ற பொதுமைக்கே 'இருப்புநிலை'யுண்டு என்றனர். ஆனால் உரோசலினசு (Roscell-inus) போன்றோர் இதற்கு மாறான கருத்தைச் சொன்னார்கள். "தனிப்பொருள்கள் மட்டுமே உள்பொருள்கள்; அவைகட்கு மட்டுமே 'இருப்புநிலையுண்டு. 'பொதுமை' என்பது கற்பனை; உள்பொருள் அன்று" என்று கூறினர்.

பொதுமைக் கருத்தும் கிறித்தவமும்: கிறித்தவ மதத்திற்குச் சரியானதொரு பீடம் அமைத்த பெருமை எரிசீனாவின் 'பொதுமைக்' கோட்பாட்டிற்குண்டு. பிரபஞ்சத்தில் உள்ளவை எல்லாவற்றையும் வரிசைப்படுத்தி அடுக்கி வைக்கும் அமைப்பு கிறித்தவ மதத்திற்குப் பெரிதும் பொருந்தியது. தனிப்பொருள்கள் அதன் இனத்திலும், சிறிய இனம் பெரிய இனத்திலும் ஒடுங்குவது போல எல்லாக் கருத்துகளும் 'கடவுள்' என்ற கருத்திலும், தனி மனிதர்கள் போப்பாண்டவரிலும் ஒடுங்குவர். கடவுளுக்கும் போப்பாண்டவருக்கும் முதன்மை இடமும் அதிகாரமும் கிடைப்பதால், கிறித்தவமதம் எரிசீனாவின் 'பொதுமை' விளக்கத்தை ஏற்றுக் கொண்டது.

'மதமும் தத்துவமும் முரண்பட்டவையல்ல; அவையிரண்டும் ஒரே நாணயத்தின் இருபுறங்கள்' – என்றார் எரிசீனா. 'இயற்கைக் கூறுகள்' (On the division of Nature) என்ற நூலில் தம் தத்துவ விளக்கத்தைத் தருகின்றார். இவர் இயற்கையைப் பின்வருமாறு நான்கு கூறுகளாகப் பிரிக்கின்றார். 1. எல்லாவற்றுக்கும் முதன்மையாக, மேலாக இருப்பவர் கடவுள். அவர் தமக்கொரு கருத்தாவின்றித் தாமே உருவாகிப் பிறவற்றையெல்லாம் உருவாக்கும் கருத்தாவாய் இருப்பவர். 2. கடவுளால் உருவாக்கப்பட்டது கருத்துலகம். 3. இக்கருத்துலகம் தனித்தனிப் பருப்பொருள்களை உருவாக்குகின்றது. இத்தனிப் பொருள்கள் பிறவற்றைத் தன்னிச்சையாகத் தோற்றுவிக்கும் ஆற்றலற்றவை. 4. உண்டாக்கப் பட்டவையெல்லாம் உண்டாக்கிய இறைவனைச் சேர எடுத்துக் கொள்ளும் முயற்சிகள். 'தம் திட்டத்திற்குத் தாமே முதலும் முடிவுமாக இருப்பவர் கடவுள்' என்பது இவருடைய தத்துவத்தின் சாரம்.

பிரபஞ்சம் அறிவு வழிப்பட்ட ஒருங்கிணைந்த அமைப்பென எரிசீனா எடுத்துக் காட்டினார். பொருள்களுக்குள்ள இருப்பு, ஒழுங்கு, இயக்கம் என்னும் முக்குணங்களும் இருப்பு, பேரறிவு, செயலாற்றல் என்ற இறைவனின் முக்குணங்களாக விளங்குகின்றன. இக்குணங்களுக்கேற்ப 'முப்படித்' திட்டம் அமைகின்றது. 'முப்படித்' திட்டம் முறையே தந்தை, மகன், புனித ஆவி என்ற கிறித்தவ மதக் கருத்துகளுக்கு ஆதாரமாயிற்று.

இடைக்காலப் பிற்பகுதி: இடைக்கால முற்பகுதியில் வாழ்ந்த சிந்தனையாளர்கள், பிளேட்டோவின் 'பொதுமை' குறித்துத் தங்கள் காலத்தையும் சக்தியையும் வீணே செலவிட்டனர். கிரேக்கச் சிந்தனையாளர்கள் கொட்டி வைத்த சொற்குவியலில் மேலும் சில சொற்களைச் சேர்த்தனர். தத்துவ விசாரணையும் விளக்கமும் வெற்றுச் சொல்லடுக்காகி விட்டன. இலக்கண, இலக்கிய மொழிக்கல்வி கற்றுச் சொல்லாட வல்லவர்களெல்லாம் தத்துவ அறிஞர்களெனப் பாராட்டப்பட்டனர். பண்டைய கிரேக்கத் தத்துவக் கோட்பாடுகளை வளைத்துத் திரித்துக் கிறித்தவ மதத்திற்கு ஏற்புடையனவாக எவ்வகையிலேனும் செய்ய வேண்டுமென்பதே அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது.

இடைக்காலத் தொடக்கத்தில் நாகரிகத்திற்கு உயிரூட்டும் வகையிலிருந்த கிறித்தவ மடாலயங்கள், காலப்போக்கில் சிந்தனையோட்டத்திற்குத் தடுப்புச் சுவர்களாகிவிட்டன. புற உலகும் உலகியல் வாழ்வும் குறைபாடுடையன வென்றும் அகவுலகும் ஆன்மிக வாழ்வும் நிறைவானவை யென்றும் கருதியதால், மனிதனின் சிந்தனை புற உலகை வெறுத்துப் புறக்கணித்து ஆன்மிக வாழ்வில் சென்றது. தொடக்கத்தில் வரவேற்கப்பட்ட இத்தத்துவம் நாளடைவில் மனிதனின் சிந்தனையாற்றலை அழித்து விட்டது. புறஉலகு பற்றிய அறிவியல் வளர்ச்சி, தேக்கம் கண்டது. சமுதாய முன்னேற்றமும் பொருளாதார நல்வாழ்வும் புறக்கணிக்கப்பட்டன.

புலமைத்துவம்: ஏறத்தாழ, கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் அறிவாராய்ச்சியில் ஒரு புது வேகம் ஏற்பட்டது. மடாலயக்கல்வி முறை மறைந்து பல்கலைக் கழகங்கள் தோன்றின. அவற்றுள் ஆக்சுபோர்டு (Oxford), பாரிசுப் (Paris) பல்கலைக் கழகங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இப்பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஏற்படுத்திய தத்துவ அமைப்புகள் 'புலமைத்துவம்' (Scholasticism) என்ற பொதுப் பெயரால் குறிக்கப்பட்டன. 'இதுதான் புலமைக் கோட்பாடு' என்று எந்தப்பொருட் கோட்பாட்டையும் தனித்துச் சுட்டிக் காட்ட முடியாது. சிந்தனையாளர்களின் எண்ணிக்கைக்கேற்பக் கோட்பாடுகள் பல்கின; விளைவாகக் குழப்பங்கள் மலிந்தன. இப்பல்கலைக் கழக அறிஞர்கள் பிளேட்டோ, அரிசுடாட்டில், போயதியசு போன்ற பண்டைய தத்துவப் பேரறிஞர்களைப் போற்றினர். விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இப்பல்கலைக்கழகங்கள் கையாண்ட கல்வி முறைகள் ஆகும்.

சிந்தனைச் சுதந்திரம்: புலமைத்துவம் மதச் சார்புடைய தத்துவமாகவே தொடங்கியது. சிந்தனைச் சுதந்திரம் இருந்ததென்றாலும், வரையறுக்கப்பட்ட எல்லைக்குட்பட்டு மட்டுமே சிந்திக்க உரிமை தரப்பட்டது. எல்லையைக் கடந்து வினாத் தொடுக்கவோ விசாரணை செய்யவோ ஐயுறவோ சிந்தனைக்கு உரிமையில்லை. 'எல்லைக்குட்பட்ட சிந்தனையுரிமை' என்பதே காலப்போக்கில் மதத்தின் அதிகாரத்தை அப்புறப் படுத்திவிடும் என்ற ஐயமும் அச்சமும் இருந்தாலும், மதத்தலைமையால் அச்சிந்தனை உரிமையைத் தடுக்க முடியவில்லை. மதக் கோட்பாடுகளுக்கு அறிவாதாரம் தேட முனைந்த புலமைக் கோட்பாட்டாளர்கள், வாத முறையில் வல்லுநராயினர். அளவையியலின் விவாத முறைகளைக் கொண்டு விளக்கங்களை நீட்டினர். கருப்பொருளில்லா வெற்றுக் கருத்துகள், சொற்குவியல்கள், வேறுபட்ட வாத வடிவமைப்புகள் என்பன இவர்களுடைய விளக்கங்களில் காணக்கிடந்தன.

அரிசுடாட்டிலிய எழுச்சி: இடைக்காலத் தத்துவ வரலாற்றின் போக்கினைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற பண்பாட்டுப் புரட்சி மாற்றியது. இலக்கண இலக்கியக் கல்விக்கு முதன்மை தந்த பழைய கல்வி முறை கைவிடப்பட்டது. அளவையியல், அறிவியல், தருக்கமுறை ஆகியவற்றுக்கு முதன்மை தரும் கல்வி வளர்ந்தது. பண்டைய கிரேக்கத் தத்துவ நூல்கள் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டன. தத்துவ உலகில் பிளேட்டோனிசத்திற்கிருந்த செல்வாக்குக் குறையக்குறைய, அரிசுடாட்டிலின் தத்துவம் செல்வாக்குப் பெற்றது. பொருள்களை வகைப்படுத்துவதிலும் பெயரிடுவதிலும் சொற்களுக்குப் பொருள் வரையறை செய்வதிலும் கருத்துகளைச் செம்மையாக வெளியிடுவதிலும் ஈடுபாடு காட்டிய அரிசுடாட்டிலின் நூல்கள், இடைக்காலப் பிற்பகுதிச் சிந்தனையாளர்கட்குப் பெரு விருந்தாய் இருந்தன.

பல்கலைக்கழகக் கல்விமுறை: பாரிசுப் பல்கலைக் கழகத்திலிருந்த அறிஞர்கள் சிலர் அரிசுடாட்டிலின் தத்துவத்தை வரவேற்றனர். கிறித்தவ மதக் கோட்பாட்டிற்கு மாறாக இருப்பினும் அரிசுடாட்டிலின் அளவையியல் கோட்பாடுகளையும் அறிவியல் உண்மைகளையும் போற்றினர். மதவாதிகளாக இருந்து வீடுபேறு பெறுவதைக் காட்டிலும் தத்துவவாதிகளாக இருந்து ஆராய்ச்சி செய்யவே அவர்கள் விரும்பினர் தத்துவவாதிகளாக இருக்க, அரிசுடாட்டிலின் அளவையியல் கோட்பாடுகள் அடிப்படைத்தேவை என்றுணர்ந்தனர். மதக்கருத்துகளுக்கு மாறானதாக இருப்பினும் மனிதச் சிந்தனையின் இயல்பான முடிவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறிய இத்தத்துவவாதிகளை மதவாதிகள் ஐயுறத் தொடங்கினர்.

பலரும் பன்முறை பயின்ற காரணத்தால் அளவையியல் நோக்கு ஆழமாக வேரூன்றியது. சிந்தனையும் அறிவும், கடவுட் கோட்பாடுகளால் கட்டப்பட்ட மதமெனும் கோட்டையை உடைத்து வெளியேறின. மதத்திற்கு அடிமைப்பட்டுக் குற்றேவல் செய்த அறிவு, தன் அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்தது. மதக்குருக்கள் வகுத்த எல்லைக்குள் சிந்தனையைச் சிறைப்படுத்தியும், மதக்குருக்களின் அதிகாரத்திற்குத் தலைதாழ்த்தியும் வாழ்ந்த கடவுட் கொள்கையாளர்கள் (Theologicians) ஒருபுறம்; கடவுட் கோட்பாட்டிலிருந்து சிந்தனையை வேறுபடுத்தி அளவையியல் ஆற்றலுக்கும் வாதநுட்பத்திற்கும் முதன்மை தந்த சிந்தனையாளர் மறுபுறம்; இவ்விரு இறுதிநிலைகட்கு இடையே நின்று புதிய பிளேட்டோனிசத்தையும் ஆன்ம அனுபவத்தையும் (Mysticism) ஒப்புக் கொண்டோர் மற்றொரு புறம். இவ்வாறு சிந்தனையாளர்கள் பல கோணங்களில் தம் சிந்தனையைச் செலுத்தினர்.

அரிசுடாட்டிலியமும் கிறித்தவமும்: அரிசுடாட்டிலின் அளவையியலுக் கேற்பட்ட வளர்ச்சி, பிளேட்டோவின் 'கருத்துல' கைப் புதைகுழிக்கனுப்பியது. உரோசலின் (Roselin, கி.பி. 1050–1125) என்பவர் பிளேட்டோவின் கோட்பாடுகளை ஆணித்தரமாக மறுத்தார். 'கருத்துலகம் என்பது வெறுங்கற்பனை; அதுபற்றிய விளக்கங்கள் வெறும் சொல்லடுக்கு; 'கருத்துகள்' என்பவை ஒலியெழுப்பும்போது வெளிப்

பட்டு மறைந்து போகும் மூச்சுக் காற்றுப் போன்றவை. தனித்தனிப் பொருள்களே இருப்புநிலை உடையவை' உரோசலின் கருத்து கிறித்தவத்தின் அடிப்படையை ஆட்டங்காண வைத்தது. 'தந்தை, மகன், புனித ஆவி என்னும் முப்பொருளும் ஒரே பொருளாக இருக்க இயலாது; ஒரே பொருளின் மூன்று பகுதிகளாகவும் இருக்க முடியாது. எனவே முப்பொருள்களும் மூன்று கடவுள்களைக் குறிக்கின்றன. அவற்றுள் ஒன்றே உடல் பெற்று வந்தது.' இக்கோட்பாட்டைக் கிறித்தவப் பாரம்பரியம் வன்மையாகக் கண்டித்தது.

உரோசலின் விட்டுச் சென்ற பணியை அவருடைய மாணவராக விளங்கிய அபெலார்டு (Abelard, கி.பி. 1079–1142) தொடர்ந்தார். பிளேட்டோ குறிப்பிடும் பொதுக் கருத்துக்குத் தனித்த இருப்புநிலை கிடையாது. தனிப்பட்ட பொருள்களும் பொதுக் குணங்களும் பொதுக்கருத்தை உருவாக்குகின்றன. சிவப்பு நிறமுள்ள பொருள்கள் 'சிவப்பு' என்ற பொதுக்கருத்தைத் தருகின்றன. 'சிவப்பு' என்பதற்குத் தனிப் பொருள் தன்மையோ இருப்பு நிலையோ இல்லை. கிறித்தவ மதத்தின் அடிப்படை, அறிவு வழியில் அமைய வேண்டுமென அபெலார்டு விரும்பினார். மனிதர்களால் நிருவகிக்கப்படும் மதமும் தவறு செய்யக்கூடுமென்பதால், மதக் கருத்துகளும் ஆராய்ச்சிக்கு உட்படவேண்டுமெனக் கருதினார். இத்தகைய ஆராய்ச்சிப் போக்கு மதக் கோட்பாட்டிற்கும் கட்டுக்கோப்பிற்கும் உலைவைக்கும் என்பதை மதக்குருமார்கள் உணர்ந்தனர்; எனவே பகைமை கொண்டனர். இவருடைய ஆராய்ச்சி நுட்பம் மாணவர்களைக் கவர்ந்தது.

அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஓர் இயைபு காண முற்பட்டோருள் ஆன்செம் (Anselm, கி.பி. 1033–1109) முதன்மையானவர். பழமையான மதக்கோட்பாடுகளை ஒப்புக்கொண்ட இவர், அறிவும் தெய்வ நற்காட்சியும் (Revelation) மதத்தின் முழுமுதற் பொருளை நோக்கியே மனிதனை அழைத்துச் செல்கின்றன; அவற்றுள் முரண்பாடில்லை என்றார். என்றாலும் கிறித்தவமதம் கூறுவதுபோல நம்பிக்கைக்கு முதலிடமும் அறிவுக்கு இரண்டாமிடமும் தந்தார். ''நம்புவதற்காக நாம் சிந்திக்கவில்லை; சிந்திப்பதற்காக நாம் நம்புகின்றோம். நம்பிக்கையின் மூலம் உண்மையைப் பார்க்காதவன் உண்மையை அறியமாட்டான். எனவே மதத்தின் கருத்துகளை நாம் முழுமையாக நம்பிப் பின்னர் அவற்றை அறிய முயல வேண்டும்'' என்றார் அவர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் அரிசுடாட்டில் தத்துவத்திற்கு வலிவும் பொலிவும் தந்து பரப்பிய இடைக்காலப் பிற்பகுதிச் சிந்தனையாளருள் புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas, கி.பி. 1225–1274) முதன்மையானவர். மதமும் தத்துவமும் இருவேறு பரப்புடையவை. அவற்றை இயைந்து போகச் செய்தலோ ஒன்றிணைப்பதோ இயலாத செயல். என்றாலும் கிறித்தவத்திற்கு அரிசுடாட்டிலின் தத்துவப் பின்னணியை அவர் விரும்பினார். காரணப்படுத்தும் சிந்தனையும் தெய்வ நற்காட்சியும் முரணானவையல்ல; ஒரே முடிவை வெவ்வேறு கோணங்களில் அடைகின்றன. 'கடவுள் உண்டு'; 'ஆன்மா அழிவில்லாதது'. 'முப்பொருளுண்மை' போன்ற மதக்கருத்துகள் முழுக்கமுழுக்க நம்பிக்கைக்கு உரியன. இவற்றை அளவையியல் வாதமுறைகளால் அறியமுடியாது'.

'கடவுள் உண்டு' – நிரூபணங்கள்: அரிசுடாட்டிலின் 'பொருண்மை-வடிவம்' என்ற கோட்பாட்டை அக்கினாசு ஏற்றுக் கொண்டார். தனிப் பொருள்களின் இருப்பு நிலைக்கு ஆதாரம் எது என்ற வினாவை எழுப்பி விளக்கந் தேட முனைந்தார். வரையறைக்குட்பட்ட எந்தப் பொருளும் தன் 'இருப்புநிலை'க்கு ஏதெனுமொன்றைப் பற்றுக்கோடாகக் கொள்ளவேண்டும். வரம்பிலியான கடவுள் மட்டுமே பற்றுக் கோடேதுமின்றித் தமக்குத் தாமே இருப்புநிலை உடையவராக இருக்க முடியும். எல்லாப் பொருள்களின் இருப்பு நிலைக்கும் 'கடவுள்' ஆதாரமாகின்றார். 'கடவுள் உண்டு' என்பதற்கு இவ்விளக்கத்தை ஒரு நிரூபணமாக்குகின்றார் அக்கினாசு.

இயக்கம் எல்லாப் பொருள்களிலும் உண்டு. ஒரு பொருள் மற்றொரு பொருளால் இயக்கப்படுகிறது. எல்லாப் பொருள்களையும் இயக்குபவர் கடவுள். தாம் பிறிதொன்றால் இயக்கப்படாமல், பிறவற்றை இயக்கிக் கொண்டிருக்கும் கடவுளைத் தாமியங்கி எனலாம். காரண–காரிய முறையிலும் 'கடவுள் உண்டு' என நிரூபிக்கலாம். எந்த ஒரு பொருளின் தோற்றத்திற்கும் மாற்றத்திற்கும் காரணம் உண்டு. பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களும் நடைபெறும் நிகழ்ச்சிகளும் காரண – காரியத் தொடர்ச் சங்கிலியின் வளையங்களாக அமைகின்றன. தமக்கொரு காரணமின்றிக் காரண – காரியச் சங்கிலியின் தொடக்கமாகவும் முதற்காரணமாகவும் இருப்பவர் கடவுள். கடவுள் ஒரு காரணமிலி.

கடவுள் உண்டென்பதற்கு அக்கினாசு தரும் நிரூபணங்கள் யாவும் அரிசுடாட்டிலின் அளவை இயல் முறைகளைப் பின்பற்றியவை. எனினும் ஒரு வேறுபாடுண்டு. காரண – காரியங்களைக் காலமென்

னும் தொடர் ஓட்டத்தின் கட்டங்களாகக் கருதா மல் படி முறைகளாகக் கருதினார். மேல்நிலையில் இருந்து பிறக்கும் ஆணைக்கேற்பக் கீழ்நிலைகள் செயற்படுகின்றன. இம்முறையில் முதன்மையில் இருப்பவர் கடவுள். அவருக்கு ஆணையிட மேல் நிலையில் எவருமில்லை. எல்லாவற்றுக்கும் ஆணை யிடும் தலைமையானவராகக் கடவுள் இருக்கிறார்.

இப்பிரபஞ்சத்தின் அமைப்பும் ஒழுங்கும் கடவுள் உண்டென்பதற்குச் சிறப்பான நிரூபணமாகும். பிரபஞ்சத்தின் வடிவமைப்பும் செயற்படும் ஒழுங்கும் அது திட்டமிடப்பட்ட ஒன்று என்பதைத் தெளிவா கக் காட்டுகின்றன. குறையறிவும் தவறக்கூடிய இயல்பும் கொண்டவர்களால் இப்பிரபஞ்சத்தை அமைத்தியக்க முடியாது. எனவே நிறையறிவும் தவறாவியல்பும் உடைய கடவுள் தாம் இப்பிர பஞ்சத்தின் கருத்தாவாக இருக்க முடியும்.

'மானிட வாழ்வின் முடிந்த பயன் இறைவனுடன் ஒன்றுவதே' என்னுங் கோட்பாடுடையவர் அக் கினாசு. இறைவன் அருளால்தான் இந்நிலை கிட் டும். ஒவ்வொரு மனிதனும் தன் குறைகளைக் களைந்து நிறைவு பெற முயல வேண்டும். தனக்குக் கிட்டியுள்ள சமுதாய அமைப்பைக் கொண்டும் வாய்ப்பைக் கொண்டும் பொது நன்மையின் பொருட்டு ஒழுங்கைக் காக்க வேண்டும். இத்தலை யாய பணி செய்தால் இறைவனருள் தானே கிட்டும்.

இடைக்கால இறுதி: பிற்காலப் புலமைக் கோட்பாட்டாளருள் முக்கியமானவர் ஒக்க நகர வில்லியம் (William of Ockam: கி.பி. 1295-1349) என்பவர். இவர் காரணப்படுத்தும் சிந்தனையும் நம்பிக்கையும் வேறானவை என்றார். கடவுளைப் பற்றிய அறிவும் கருத்துகளும் நம்பிக்கையின் பாற் பட்டவை; காரணப் படுத்தும் சிந்தனைக்கு அங்கே இடமில்லை என்றார். கிரேக்கச் சிந்தனையாளர்கள் குவித்துவைத்த நுண்பொருள் கருத்துகளைத் தேவையற்றவை என ஒதுக்கிவிட்டார். சில கருத்து களைக் கொண்டு ஒன்றை விளக்க முடியும்போது பல கருத்துகளை நாடுவதும் தேடுவதும் வீண்வேலை. குறைந்த கருத்துகளைக் கொண்டு தெளிவான விளக் கம் தருவதே சிறப்பு. தேவையற்ற முறையில் கருத் துகளின் எண்ணிக்கையைக் கூட்டக்கூடாது என்பது இவர்தம் மிக அழுத்தமான கோட்பாடு. இக்கோட் பாட்டைக் கொண்டு தத்துவக் கருத்துகள் பலவற் றைத் தேவையற்றவை என ஒதுக்கிவிட்டார். இவ ருடைய இக்கோட்பாட்டுக்கு 'ஒக்கமின் வெட்டு' என்பது பெயர். இவ்வெட்டுக் கருவியை இடையறாது பயன்படுத்தியதால், தனித்தனிப் பொருள்களுக்கப் பால் அறிவு தரக்கூடியது வேறொன்றுமில்லை என்ற இறுதி நிலைக்குத் தள்ளப்பட்டார்.

முடிவுரை: இடைக்காலத் தொடக்கத்தில் தத் துவமும் இறையியலும், இரண்டறக் கலந்து தத்துவம் இறையியலாகவும், இறையியல் தத்துவமாகவும் மாறின. இடைக்கால இறுதியில் இவையிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பிலாத் துறைகளாயின. தேசியப் பேரரசுகள் தோன்றி வளர்ந்து வலிமை பெற்றதால், மதத்தின் செல்வாக்குக் குறைந்தது. அரசுகள் மதச்சார்பற்றுச் செயற்பட்டன. மறு மலர்ச்சிக் காலம் புதிய ஒளிவீசத் தொடங்கியது.

க. நா

துணை நூல்கள்:

**Copleston Frederick**, A History of Philosophy, New York, 1962.

**Knowles David**, Evolution of Medieval Thought, New York, 1964.

**இடைக்காலப் பொருளியற் சிந்தனை கள்**: உரோம அரசு சிதைந்த கி.மு.476-ஆம் ஆண் டிற்கும் கான்சுடாண்டிநோபிள் வீழ்ச்சியுற்ற கி.பி. 1453-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் இடைக் காலம் எனக் கருதப்படுகிறது. இக்காலத்திற்கு முந் தைய காலங்களில் முறைகேடு, கொடுமை, கொடுங் கோன்மை ஆகியவற்றால் மக்கள் பெருந்துயருற்று வறுமையாலும் ஏற்றத்தாழ்வினாலும் ஒடுக்கப்பட்டு வாழ்ந்ததால் இக்காலம், ஓர் இருண்டகாலம் எனப் பல வரலாற்றுப் பொருளியல் ஆய்வாளர் களால் கூறப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட வாழ்க்கை யிலிருந்த மக்களுக்கு விடுதலை, செழிப்பு, மத நம் பிக்கை, வழிபாடு, பக்தியின் மூலம் கலை அழகுடன் கூடிய பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை உருவாக்கிய காலம் இடைக்காலமாகும். இக்காலத் தில் வாணிகமும் பொருள் ஆக்கமும் வளர்ச்சி யடைந்து பல ஊரகங்கள் நகரங்களாக மாறின. நகர மக்கள் தனி உரிமைகள் பெற்றனர். மக்களுக்கும் அரசனுக்கும் நிலக்கிழாருக்கும் உள்ள தொடர்பு களிலும், அரசனுக்கும் கோயில்களுக்கும் உள்ள உற விலும் போக்கிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுப் பொருளாதார வாழ்க்கை சீரடையத் தொடங் கியது. உலகநாடுகளில் மக்கள்தொகையும் பெருகி யது. இக்காலப் பொருளியற் சிந்தனைகள், கிரேக்க நாட்டு மத, அரசியல் அறத் தத்துவங்களை அடிப் படையாகக் கொண்டவையாயிருந்தன. ஆயினும் முதன்முறையாகப் பொருளியலின் நேரடிக் கோட் பாடுகளான பணம், வட்டி, விலை போன்றவை ஆராயப்பட்டன. இக் கருத்துகளைப் படைத் தவர்களுள் சிறப்பானவர்கள் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த தத்துவ அறிஞர் புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas, கி.பி. 1225-1274) நிக்கலசு

ஒர்சுமி (Nicholas Oresme, கி.பி. 1320-82), இரிச்சர்டு பாக்சுட்டர் (Richard Baxter, கி.பி. 1973) ஆகியோராவர்.

பொருளியற் சிந்தனை வளர்ச்சிக்குச் சமூகச் சூழ்நிலை காரணமாகிறது. இடைக்காலச் சமூகச் சூழ்நிலை படைமானிய முறையைக் (Feudal System) கொண்டிருந்தது. அது ஒருவர் தேவையை மற்றவர் நிறைவு செய்து தானாக இயங்கும் பொருளாதார அமைப்பாக விளங்கியது. சமுதாயத்தில் மக்களிடையே படிநிலைகள் (Status-Rank) காணப்பட்டன. அவரவர் நிலைக்கும் வசதிகளுக்கும் ஏற்ப அவர்கள் மதிக்கப்பட்டனர். பொதுவாக இனக் கூட்டு வாழ்க்கையில் காணப்படும் தன்மைகள் பரவலாகக் காணப்பட்டன. புதுமைகளுடன் வளர்ந்த நகரங்கள் இடைக்காலத்தின் சிறப்புக் கூறு ஆகும். நகரங்களிலிருந்து புதிய முறையிலான உற்பத்திக் கூறுகளும் பண்பாடும் வாணிகமும் தோன்றிப் பரவின.

இடைக்கால வ்ணிகக் குழுக்கள் (Guilds): இடைக்காலத்தில் நகரங்களின் சிறப்பு நிறுவனங்கள் குழுக்களாக விளங்கின. அவை சமூக, மதக் கூட்டுக் குழு எனவும் கைவினைக் குழு எனவும் வணிகக் குழு எனவும் மூவகைப்பட்டன. அவற்றுள் சமூக, மதக் கூட்டுக் குழு உறுப்பினர்கள் கூட்டமாகக் கூடிச் சிற்றுண்டி அருந்துவதிலும் மது அருந்துவதிலும் இறைவனை வழிபடுவதிலும் ஒன்றுபட்டனர். சமூக மதக் கூட்டுக்குழு இப்போது காணப்படும் அரிமா சங்கம், சுழல் கழகம் (Lions Club, Rotary Club) போன்றவற்றை ஒத்ததாயிருந்திருக்கும் எனக் கருதப்படுகிறது. உற்பத்தியையும் வாணிகத்தையும் கைவினைக் குழுக்களும் வாணிகக் குழுக்களும் (Crafts Guilds & Merchant Guilds) நெறிப்படுத்தின. உற்பத்தியில் ஈடுபட்டவர்களும் வாணிகம் செய்பவர்களும் இக் குழுக்களில் உறுப்பினராகித் தங்கள் நலம் பாதிக்காத வண்ணம் உற்பத்தியும் வாணிகமும் சிறக்கப் பணியாற்றினர். உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாப்பதே இக் குழுக்களின் நோக்கமாயிருந்தது.

கைவினைஞர்களால் பொருளாக்கம், சிறு தொழிற் கூடங்களில் வளம்பெற்றது. கைவினைஞர்கள் தங்களுக்குள்ளே உற்பத்திக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். அவை உற்பத்தியாகும் பொருள்கள் அல்லது கைவினைஞர்களின் திறமையின்பேரில், நெசவாளர் குழு (Weavers' Guild), தச்சர் குழு (Carpenters' Guild), கருமான் குழு (Smits' Guild) எனப் பலவாறாகக் குறிக்கப்பட்டன. உற்பத்தி செய்தவர்களே விற்பனையும் செய்ததால் வாணிகக் குழுவிலும் உறுப்பினராயிருந்தனர். குழுக்களின் உறுப்பினர்கள் தங்கள் நலன்களை மட்டும் பாதுகாத்துக் கொள்ளாமல், நுகர்வோரின் பயன்பாடு, தேவை, வாங்கும் திறன் போன்றவற்றையும் கருத்தில் கொண்டு, உற்பத்தியிலும் வாணிகக் கட்டுப்பாட்டிலும் விலை வரையறையிலும் முடிவுகள் செய்தனர். குழுக்கள் தங்கள் தொழிலில் ஒருவித முற்றுரிமைச் சூழ்நிலையை(Monopoly) உருவாக்கிப் போட்டியைத் தவிர்த்தன. வெளிநாட்டுப் பொருள்களுடன் உள்நாட்டுப் பொருள்களுக்கு ஏற்படக்கூடிய போட்டி நிலை குழுக்களின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் உண்டாயிற்று. இடைக்காலத்தில் பின்பற்றப்பட்ட மத அறநெறிகள், முற்றுரிமையினால் எழும் தீமைகள் நடைபெறாமல் தடுக்கவும், ஆதாயம் ஈட்டல் மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமலும் நுகர்வோரைச் சுரண்டாமலும் செயற்படவும் உதவியாயிருந்தன.

குழு நெறிகள் ஊக வாணிகத்தையும் (Speculation) தனியுரிமை வழங்கப்படுவதையும் (Engrossing) தடை செய்தன. முற்றுரிமைக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஒரு குழு ஒரு பொருளின் விற்பனை முற்றுரிமையைப் பெற்று வாணிகம் செய்தாலும், அக்குழு உறுப்பினர்கள் யாவருக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டதால், தனிப்பட்ட வணிகர் பொருள்களைப் பதுக்கவோ, மிகையான விலையில் விற்கவோ இயலாது. மேலும், வணிகர்கள் ஏமாற்றாமலும் பொருள்களின் தரத்தில் எவ்விதக் கலப்படமோ மோசடியோ செய்யாமலும், உடன் வணிகர்களின் போக்குடன் ஒத்துத் தன்னலத்திற்கு இடம் கொடாமல் வாணிகத்தில் முன்னேற வேண்டும். குழுவின் நெறிகளுக்கு மாறாக நடந்து இழுக்கு ஏற்படுத்தியவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

மதத்தின் செல்வாக்கும் ஈடுபாடும்: இடைக்காலத்தில் பெரும்பாலும் இயற்கைப் பொருளாதார நடவடிக்கைகளே காணப்பட்டன. பொருளாக்கம் குறைவாக இருந்தது. மக்கள் சிறு சிறு குழுமங்களாகத் தன்னிறைவுடைய சூழ்நிலையைப் படைத்துப் பெரும்பாலும் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். பணச்சுழற்சியும் போக்குவரத்து வசதிகளும் மிகக் குறைவாகவே வளர்ச்சியடைந்திருந்தன. படைமானியத் தலைவர்களும் நிலக்கிழார்களும் மிகையான நிலங்களை அரசனின் ஆணைப்படி சொந்தமாகக்கொண்டு, சாமானிய மக்களை நிலத்தில் பாடுபட வைத்தனர். இவர்கள் சிற்றரசர்களைப் போல் முழு அதிகாரங்களுடனும் படைவலிமையுடனுமிருந்ததால் மக்கள் இவர்களைச் சார்ந்தே வாழ்ந்தனர். கிறித்தவ மதமும் கோயிலும் மக்களின் வாழ்க்கையில் மிகுந்த செல்வாக்குச்

செலுத்தி வந்தன. உரோம வல்லரசின் வீழ்ச்சிக்குப் பின் கோயில் வலிமைமிக்க நிறுவனமாகவும் நிருவாகமாகவும் விளங்கியது, அது மனித வாழ்க்கை நடவடிக்கைகளை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி மத நெறிப்படி வாழும்படி வலியுறுத்தியது.

உலகளாவிய சகோதரத்துவமும் மனிதர் யாவரும் ஒரே தந்தையின் குழந்தைகள் என்ற சமத்துவப் போதனைகளும் கிரேக்க உரோம அடிமைத்தனத்தை வேரோடு அழிக்கத் தகுந்த புரட்சி உணர்வை ஏற்படுத்தின. அடிமைத்தனம் எந்த நிலையிலும் பாவம், தண்டனைக்குரியது என்ற எண்ணம் சமூக நிலையில் பெரும் மாறுதல்கள் ஏற்படக் காரணமாயிற்று. முடிவற்ற இரட்சிப்புக்காக இவ்வுலக வாழ்வை மறுவாழ்வுக்கான ஆயத்தமாகக் கருதி வாழ்தல், மறுவாழ்வில் இறைவனோடு வாழலாம் என்ற கருத்து ஆகியவை பொருளாக்கம், வாணிகம் ஆகிய இவற்றில் கட்டுப்பாடுகளை விதித்துச் செல்வம் பெருக்கும் நாட்டத்தைப் பின்தங்கச் செய்தன. எனினும் கிறித்தவ மதம் மனித உழைப்பை ஊக்குவித்தது; உடலுழைப்பு அடிமைகளுக்குரியது என ஒதுக்கப்பட்டிருந்த நிலை மாற உதவியது.

**புனித தாமசு அக்கினாசு:** இடைக்காலத்தில் தலைதூக்கிய சமய நுணுக்கமுறைக் கருத்துத் தொகுப்பிற்கு இளவரசராக (Prince of Scholastics) வருணிக்கப்பட்டவர் புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas) என்பவராவர். அவர் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களின் வாயிலாகவும் இலண்டன், பாரிசு, உரோம், நேபிள்சு போன்ற மாநகரங்களில் ஆற்றிய சொற்பொழிவு வாயிலாகவும் தம் கருத்துகளை வெளியிட்டார். இவர்தம் கோட்பாடுகள் கிறித்தவத்திருமறை நூலையும், அரிசுடாட்டிலின் கருத்துகளையும் கிறித்தவ மடத் தலைவர்களின் போதனைகளையும் தழுவியவை. இவர் பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்து மக்களிடையே சமத்துவமும் சகோதரத்துவமும் வளரவும் அடிமைத்தனத்தை அடியோடு ஒழியவும் பாடுபட்டார். அடிமைகளுக்கு விடுதலை, அவர்களுக்கு இறைவனிடத்தில் சம உரிமை ஆகியன உண்டு என வலியுறுத்திய கருத்துகள் அரிசுடாட்டிலின் கொள்கைகளுக்கு மாறுபாடானவையாகும். இடைக்காலத்தில் வளர்ந்த தனியார் சொத்துரிமை, வாணிகம், தக்கவிலை (The Just Price), உழைப்புப் பகுப்பு (Division of Labour), தகா வட்டிமுறை (Usuary) ஆகியவற்றிற்கு இவர் சிறந்த மூல ஆய்வுக் கருத்துகளை வழங்கினார்.

**தனியார்சொத்துரிமை:** இயற்கையாகவே மனிதன் தனக்கென உரிமையுடன் வைத்துக்கொள்ளக் கூடிய சொத்துகளையே நாடுகின்றான். இது பொருள் ஆக்கத்திற்கும், தனி மனிதனின் திறமை ஊக்கத்திற்கும் அடிகோலும். ஆனால் அளவுக்கு மிஞ்சிச் சொத்துகளைச் சேர்ப்பதும், தகாத வழியில் அவற்றைப் பெறுவதும் செய்யக் கூடாதவை. அரசு அவற்றை நெறிப்படுத்த வேண்டும். தனியார் சொத்துகளானாலும் சமுதாய நலனுக்காக அவை பயன்படுத்தப்படவேண்டும். பயன்கள் தேவையின் அடிப்படையில் பங்கிடப்பட வேண்டும். சொத்துகளை மனிதன் பெற நாடும் நாட்டம் தவறு எனப் போதித்த மடாலயக் கருத்துகளிலிருந்து தாமசு அக்கினாசு மாறுபட்டார். படிப்படியாகக் கிறித்தவக் கருத்துகளும் மாறுபடலாயின. இல்லாமை என்ற நிலை ஏற்பட வழி வகுத்தால், பிறர் பொருளை எடுப்பதும், களவும் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளும் பண்பாகி விடும். எனவே சமுதாயத் தேவையை செல்வம் மிக்கவரும் பிறரும் பெருந்தன்மையுடனும் தியாகத் தன்மையுடனும் நிறைவு செய்ய வேண்டும் என வலியுறுததினார். அரிசுடாட்டிலின் கருத்துப்படி தனியார் தம் சொத்துகளுக்குப் பெயரளவிலும், பொது நிருவாக அளவிலுமே உரிமையுடையவராவர். தாமசு அக்கினாசின் கொள்கைகள் பொருள் உற்பத்திப் பெருக்கிற்கும் மக்களின் திறன் வளரும் பிற்கால முதலாளித்துவத்திற்கும் வித்திட்டது எனக் கூறலாம்.

**வாணிகம்:** வாணிக நடைமுறைகளைப் பற்றிய தாமசு அக்கினாசின் கருத்துகள், மடாலய நெறிகளைச் சார்ந்திருந்தன. குறைந்த ஆதாயத்திற்கும், குடும்பப் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்வதற்கும், பொதுப் பணிக்காகவும் மட்டுமே வாணிகம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். தகா நடவடிக்கைகள், தனி உரிமை பெறுதல், கலப்படம் செய்தல் போன்ற மோசடிகளைத் தவிர்க்க வணிகக் குழுக்களின் தலையீடு வேண்டும். வணிகக் குழுக்களின் மூலமே ஊரகங்களிலும் நகரங்களிலும் வாணிகம் நடைபெற வேண்டும் என்றும் கருதினார்.

**தக்கவிலை:** தனியார் சொத்துரிமையும் வாணிகமும் அனுமதிக்கப்படுவதால் அங்கு எழும் பரிமாற்ற மதிப்பீட்டுச் (Exchange value) சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்பதைத் தாமசு அக்கினாசு விளக்கினார். மனித உறவுகளும் பண்பாடும் நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு பொருளின் மதிப்பை அதன் விலை வெளிப்படுத்தும். அதன் மதிப்புக்குக் குறைவான விலையிலோ உயர்ந்த விலையிலோ விற்பது நீதிக்கு மாறாகும். தக்கவிலை (Just Price) ஒரு பொருள் விற்பனையாகும் இடம் காலம், சூழநிலையைப் பொறுத்து முடிவு செய்யப்படும். அரிசுடாட்டிலின் கருத்துப்படி, பொருளின்

தக்கவிலையை மதிப்பீடு செய்யும்போது அப் பொருளை வாங்குவோரின் நலனையும் விற்பவரின் நலனையும் கருத்திற் கொண்டு இருவருக்கும் பாது காப்பளிக்க வேண்டும். ஒருசில சூழ்நிலையில் தக்க விலை, பொருளின் மதிப்பைவிடச் சிறிது மிகுதியா யிருக்கலாம்; பொருளை விற்பதால் விற்பவர் கூடுத லான இழப்பை விட்டுக் கொடுப்பாரானால் (Sacrifice) அவ்விழப்பு கூடுதல் விலையினால் ஈடுசெய்யப் பட வேண்டும். தக்கவிலை நிருணயத்தில் தேவை சிறப்பிடம் பெறுகிறது. பண்டமாற்றமும் வாணி கமும் தடையிலாமல் நடைபெறப் பரிமாற்றக் கருவி யாகப் பணம் கண்டுபிடிக்கப்பட்டது. பணம், பொருள் களின் மதிப்பைக் கணக்கிட உதவுகிறது. பணத்தின் மூலம் பொருளின் மதிப்பைக் கணக்கிடும்போது, உற் பத்திச் செலவும் அளிப்பும் தேவையும் அதனுள் அடங்குகின்றன. அங்காடியின் கூறுகள், போக்கு வரத்துச் செலவுகள் போன்றவற்றால் ஏற்படக் கூடிய இழப்புகள், ஆதாயங்கள், இடர்தாங்கிகள் (Risks) ஆகிய யாவும் முழுமையாக இல்லாவிட் டாலும், அடிப்படை அளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டன. அவை பிற்கால ஆய்வுக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின. தாமசு அக்கினா சின் தக்கவிலை அடிப்படையில், இடைக் காலத் தில் அரசுகளால் பொருள்கள் மதிப்பீடு செய்யப் பட்டு விலைகள் கட்டுப்படுத்தப்பட்டன. பெரும் பாலான பொருள்களுக்கு அரசு விலைகளை முடிவு செய்து வாணிகம் சிறக்க அடிகோலியது. தக்கவிலை அடிப்படையில் உழைப்புக்கு ஊதியம் முடிவு செய்யப்பட்டது. ஒருவனுடைய உழைப்புக்குக் கிடைக்கின்ற ஊதியம், அவனுடைய வாழ்க்கைத் தேவைகளை நிறைவுசெய்யப் போதுமானதாக இருக்க வேண்டும். தொழிற்கூடங்களில் வேலை செய்பவர்களானாலும் வேறு பணித்துறையிலுள்ள வர்களானாலும், பாகுபாடின்றிப் பணிக்கேற்ற ஊதி யம் வழங்கப்பட வேண்டும் என்பது தாமசு அக்கினா சின் கருத்து.

தகாவட்டி: புனித தாமசு அக்கினாசின் தகா வட்டிக் (Usury) கருத்துகள், திருமறையையும் அரிசு டாட்டிலையும் தொடர்ந்து வளர்த்தன. ‘எதிர்பார்ப் புகளும் ஆதாயமுமின்றிக் கடன் வழங்குங்கள்’ எனத் திருமறையில் கூறியிருப்பதை வலியுறுத்தி வட்டிக்குக் கடன் கொடுப்பதை வன்மையாகக் கண்டித்தார். பணத்திற்கு வட்டி பெறுவதும், பணத்தை மூலமாக வைத்துப் பணம் சம்பாதிப்பதும் சமுதாய நலத்திற்கு விரோதமான பாவச் செயல். தகாவட்டி கொடுப்ப தாகக் கடன் வாங்குபவரும் கொடுப்பவரும் இசைந்து ஒப்புக் கொண்டாலும், கடன் வாங்கியாக வேண்டும் என்ற கட்டாயத் தேவையின் காரணமாக இசைவு அளிப்பதால் அது, தம் விருப்பத்தோடு கொடுப்பது அன்று. அதைக் கடனுடன் அதன் மதிப்புக்குக் கூடுத லாகப் பெறுவதும் கொடுப்பதும் தடை செய்யப்பட வேண்டும். அது அற ஒழுக்கத்திற்கும் சமய நெறிக் கும் புறம்பானது. பொருள் வாங்குபவர் சிறிது கால இடைவெளிக்குப் பின் அப்பொருளின் விலையைக் கொடுப்பது கருதி, விற்பவர் அப்பொருளை அதிக மான விலைக்கு விற்றால் அதுவும் தகாவட்டிக்கு ஒத்ததே என்று கூறியிருக்கிறார். தகா வட்டி மூலம் ஒருவன் நிலமோ வீடோ வேறு எவ்விதமான செல்வமோ சேர்த்தால் அவை யாவற்றையும் திரும் பக் கொடுத்தாக வேண்டும். பணம் தீமையான விளைவுகளை அளிக்குமாதலால், பரிமாற்றுக் கருவி யாகவும் பொருள்களின் மதிப்பைக் கணக்கிடவும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில் குறைந்த வட்டி அனுமதிக் கப்படலாம் எனத் தாமசு அக்கினாசு குறிப்பிட்டிருக் கிறார். கடன் கொடுப்பவர் அதனால் ஏதாவது இழப்பை அனுபவித்தால் அதை ஈடு செய்வதாக இருக்கவேண்டும் அந்தக் குறைந்த வட்டி என்கிறார். கடன் வழங்குவதில் இடர்தாங்கலும் கடனை மீட்டுப் பெறுவதில் கூடுதல் கால தாமதமும் ஏற்பட்டுக் கடன் அளித்தவர் இன்னல்களுக்குட்பட்டாலும் வட்டி அனுமதிக்கப்படலாம். இக்கருத்துகள் பிற் காலத்தில் பெரும் ஆதரவு பெற்று, பணமே பொரு ளாக்கத்திற்கு மூலதனமாகவும், ஆதாயம் ஈட்டும் கருவியாகவும் பல கோட்பாடுகள் வெளிவரக் காரணமாயிருந்தன. எனினும் பொருளாதார வளர்ச் சிக்குக் குறைந்த வட்டி விகிதமே கீன்சு போன்ற மேதைகளாலும், இக்காலத்திலும் விரும்பத்தக்கதாக வலியுறுத்தப்பட்டு வருவது, இடைக்காலக் கோட் பாடுகளுக்குச் சிறந்த பெருமையை அளிக்கிறது. தாமசு அக்கினாசு தம் கருத்துகளை ‘இறையியல் தொகுப்பு’ (Summa Theologica) என்ற நூலில் விளக்கமாகக் கொடுத்துள்ளார்.

நிக்கலசு ஓர்சுமி: இடைக்காலப் பொருளியற் சிந்தனைகளுக்கு வலுவூட்டியவர்களுள் இவரும் புகழ் பெற்றவர். இவர் கி.பி. 1360-ஆம் ஆண்டில் பணக் கண்டுபிடிப்பும் அதன் விவரங்களும் (Treatise de la Premier Invention des Monnies) என்ற நூலின் மூல மாக அக்கால மடாலய அணுகு முறைக்கு மாறான பணக் கோட்பாட்டை வெளிப்படுத்தினார். பணக்கரு விக்குத் தேவையான தகுதிகளை ஆராய்ந்து, தங்கமும் வெள்ளியும் காசுகளாகப் பயன்படுத்தப்படலாம் என அவற்றின் வேறுபாடுகளை விளக்கினார். இரட்டை உலோக நாணய முறையை (Bimetalism) ஆதரித்து, இரண்டு உலோகங்களின் அங்காடி மதிப்பு, அவற்றுக்கிடையிலுள்ள பரிமாற்ற மதிப்பை

(Exchange value) முடிவு செய்ய வேண்டும் எனக் கூறினார். பிற்காலச் செலாவணிக் கோட்பாடுகள் நிக்கலசு ஓர்சுமியின் (Nicholas Oresme) கருத்துகளை மையமாகக் கொண்டு வளர்ந்தன. பணக் காசுகளை முத்திரையிட்டு அச்சிடும் உரிமை அரசனுடைய தாயிருந்தாலும், அரசன் அதன் புழக்கத்தின் மேல் தன் அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் செலுத்துதல் கூடாது. இயற்கை வளத்தைப் பயன்படுத்திச் செல்வத்தைப் பெருக்குபவர்களிடத்தில் பணம் பெருகும். அரசன் பணக் காசுகளின் (Coins) அளவையோ மதிப்பையோ குறைத்தோ கூட்டியோ எவ்வகையிலும் மக்களின் செல்வத்தில் தலையிடக் கூடாது. அவ்வாறு செய்வது தகாவட்டியிலும் மோசடியான பாவ நடவடிக்கையாகும். பணத்தின் இயற்கைச் செயல்முறையில் குறுக்கிட்டு மாற்றங்கள் உண்டுபண்ணுதல், மக்கள் அரசன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், வாணிகம், உற்பத்தி, பொருளாதார முன்னேற்றங்களுக்கும் கேடு விளைவிக்கும், வாணிகத் துறையின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் சிறப்பிடம் அளித்த ஓர்சுமியின் கொள்கை, மத ஈடுபாடுகளிலிருந்து பொருளியல் தனியாகப் பிரிக்கப்படுவதற்கான தொடக்கநிலையை உண்டாக்கிற்று. அரசன் வணிகர்களின் மேல் அதிகாரம் செலுத்துவதையும் வாணிகத்தைக் கட்டுபடுத்துவதையும் ஓர்சுமின் கண்டித்தார்.

இரிச்சர்டு பாக்சுட்டர் என்பவர் செல்வம் மிக்கவர்கள் அதிகம் உழைப்பவர்களாயிருக்க வேண்டும் எனவும், கிறித்தவ அறநெறியைப் பின்பற்றுகிற ஒவ்வொருவனும் தனக்கென ஒரு தொழிலைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் கூறினார். இடைக்கால இறுதியில் வந்த மேதைகளுள் சிறப்பானவர்கள் தன்சு இசுகாட்சு (Duns Scouts), ஆல்பெர்ட்டசு மேக்னசு (Albertus Magnus), கேபிரியல் பியல் (Gabrial Biel), புனித அந்தோணியோ (St. Antonio) முதலானோர் ஆவர். ஆல்பர்ட் மேக்னசு, உற்பத்திக்கு ஆகும் உழைப்புச் செலவு பிற செலவுகள் ஆகியவற்றைக் கொண்டு மதிப்புக் கோட்பாட்டை வெளியிட்டார். கேபிரியல் பியல் என்பவர், ஈகா வட்டிக்கு மாறாகக், கூட்டு நிறுவனங்களில் பங்குதாரர்கள் தங்கள் முதலீட்டினால் பெறும் ஆதாயத்தின் அடிப்படையில் வட்டி பெறலாம் எனக் கூறினார். அத்தகைய நிறுவனங்களில் ஒரு பங்குதாரர் உழைப்பும், பிறர் மூலதனமும் அளித்தால், உழைப்பின் மதிப்பு பணத்தின் மூலம் கணக்கிடப்பட வேண்டும் எனக் கூறினரர். புனித அந்தோணியோ தக்கவிலை, தகாவட்டி விதிகளைத் திருத்தி விளக்கினார். அவரது கருத்துப்படி விற்பவர் தக்கவிலையைவிட 50 விழுக்காடு அதிகமான விலையில் விற்றால், வாங்கினவர் அதை மீளப் பெறலாம். 50 விழுக்காட்டுக்கும் குறைவான விலையில் என்றால், இரவலர்க்கு வழங்கிக் கழுவாய் தேடிக்கொள்ளலாம். எனவே சட்டப்படி விலைகள் தக்கவிலையில் இருந்து மாறுபடுவதின் எல்லை ஓரளவுக்கு அனுமதிக்கப்பட்டது. புனித அந்தோணியோ, ஒருவித சிக்கலான அங்காடிப் பரிமாற்ற அமைப்பு முறையைக் குறிப்பிட்டுள்ளார். தகாவட்டியை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட்டு நிறுவனங்களில் பங்குதாரர் தம்முடைய உழைப்புக்கு ஊதியமாக ஆதாயத்திலிருந்து பங்கு பெறலாம் எனவும், கடன் வாங்கியவர் குறிப்பிட்ட காலத்திற்குப்பின் கடனைத் தீர்ப்பாரானால், அதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யக் கடன் கொடுத்தவர் வட்டியாகவோ ஆண்டுத்தொகையாகவோ (Annuity) ஒரு தொகை பெறலாம் எனவும் கூறியவை, இடைக்கால இறுதியில் கிரேக்க மடாலய ஈடுபாடுகள் அழிந்து முதலாளித்துவம் தோன்றுவதற்கான அறிகுறிகள் வளர்ந்ததற்குரிய சான்றுகளாகக் கொள்ளலாம்.

இடைக்காலக் கருத்துகளும் ஈடுபாடுகளும் பின் வந்த வணிகக் கோட்பாட்டுக் காலத்திலும், முதலாளித்துவத்திலும் தொடர்ந்து காணப்பட்டு, நீண்ட காலத்திற்குப் பின்பு, தம் தனித் தன்மையை இழந்து விட்டன. நீதியின் அடிப்படையில் எழுந்த தகாவட்டியும் தக்கவிலையும், பணவியலும் கூலியும் பொருளியலிலும் வரலாற்றிலும் நீங்கா இடம்பெற்று விட்டன. அறநெறிகளும் அரசியலும், பொருளியலில் இணைந்து இயங்க இயலாதுஎன்பதையும், பொருளாதார வளர்ச்சிக்கு அவை இடையூறாக இருக்கும் என்பதையும் இடைக்காலக் கோட்பாடுகள் தெளிவாகக் காட்டின. சிறப்பாக மடாலயங்களின் ஈடுபாடுகள் வெறுத்து ஒதுக்கப்பட்டன.

துணை நூல்:

**Robert Lekachman**, A History of Economic Ideas, Harper & Row Publishers, New York, 1959.

**இடைக்காலம்**: வரலாற்று அறிஞர்கள் ஐரோப்பிய வரலாற்றைப் பண்டைக்காலம், இடைக்காலம் (Middle Ages), இக்காலம் என மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர். இந்தப் பிரிவுகள் வரலாற்றைப் படிப்பதற்கு வசதியாகப் பிரிக்கப்பட்டவை ஆகும். எனினும் இவை இறுதியாக வரையறுத்துக் கூறப்பட்டவை அல்ல.

கால எல்லை: இடைக்காலம் எப்பொழுதுதொடங்குகிறது, எப்பொழுது முடிகிறது என்பது குறித்து வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இடைக்காலம் எப்பொழுது தொடங்கியது என்பதைத் தெளிவாகக் கூற முடியவில்லை. குறிப்

பிட்ட ஓர் ஆண்டில் எடுத்துக்காட்டாகக் கி.பி. 250அல்லது 410 அல்லது 475-இல் இடைக்காலம் தொடங்கியது என்று கூற முடியாது. முசுலிம்கள் நடுநிலக் கடற் பகுதிகளைக் கைப்பற்றும் வரையில் கூடப் பண்டைக்காலம் தொடர்ந்ததாகச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால் உரோமானியப் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து இடைக்காலம் தொடங்கியதாகப் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இடைக்காலம் எப்பொழுது முடிந்தது என்பது குறித்தும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பொதுவாக மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கியபோதுதான் இடைக்காலம் முடிவடைந்ததாகக் கூறப்படுகிறது. எனவே இடைக்காலம் என்பது பண்டைய உரோமானியப் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து மறுமலர்ச்சி இயக்கம் வரையிலான (ஏறக்குறைய கி.பி.5-ஆம் நூற்றாண்டிலிருந்து 15-ஆம் நூற்றாண்டு வரையிலான) காலமாகும்.

அரசியல்: சார்லமேனின் (Charlemagne, கி.பி. 779-814) மறைவிற்குப் பின் உரோமப் பேரரசு சிதைந்தது. செருமானிய அரசர் முதலாம் ஆட்டோ (Otto-கி பி.936-975) போப்பாண்டவருக்கு உதவியதால், கி.பி. 962-இல் 12-ஆம் சான் என்ற போப்பு பால், புனித உரோமப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். செருமனியும் இத்தாலியும் மட்டுமே ஆட்டோவால் ஆளப்பட்டன. பிறகு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இத்தாலி தனியாகப் பிரிந்தது. அதன் பின்னர்ச் செருமனி மட்டுமே புனித உரோமப் பேரரசாக விளங்கியது. ஆப்சுபர்க்கு பரம்பரை அரசர்கள் கி.பி. 1273 முதல் புனித உரோமப் பேரரசர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவர்கள் நாடுகளாகிய ஆசுத்திரியா, நெதர்லாந்து ஆகியவையும் செருமனியோடு சேர்த்து ஆளப்பட்டன. தேர்வாளர்கள் (Electors) புனித உரோமப் பேரரசர்களைத் தேர்ந்தெடுத்தனர். செருமானியச் சிற்றரசர்கள் அனைவரும் உறுப்பினர்களாயிருந்த தயட்டு (Diet) அவை, பேரரசரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியது. இங்கிலாந்தில் வில்லியம் நிறுவிய நார்மானிய (Norman) பரம்பரையும், அதற்குப்பின் ஆண்ட பிளாண்டாசெனட்டு (Plantagenet) பரம்பரையும், ஏறக்குறைய 100 ஆண்டுக்காலம் மிகச் சிறந்த மன்னர்களைத் தோற்றுவித்தன. ஆனால் கி.பி.1189-இல் இரண்டாம் என்றியின் இறப்பிற்குப் பிறகு வந்த மன்னர்கள், திறமையற்றிருந்ததால் நிலமானியப் பிரபுக்கள் மீண்டும் தலை யெடுத்தனர். பிரபுக்களின் அச்சுறுத்தலினால் கி.பி. 1215-இல் சான் மன்னர் மகா சாசனத்தில் கையொப்பமிட வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலமானியப் பிரபுக்களடங்கிய பாராளு மன்றம் வளர்ந்ததும் இக்காலத்தில் தான். பிரான்சுடன் நடத்திய நூற்றாண்டுப் போர்களில் இங்கிலாந்து தோற்றபின், ஏற்கனவே தங்கள் வலுவைப் பெருக்கியிருந்த பிரபுக்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டனர். அதுவே 'உரோசாப்பூப் போர்' என்று குறிக்கப்படுகிறது. பிரான்சின் மன்னரான இயூகேப்பட்டு (Hugh Capet) கி.பி.987-இல் நிறுவிய மரபு ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள்வரை பிரான்சை ஆண்டது. பிரான்சிலும் நிலமானியப் பிரபுக்கள் அதிக அதிகாரங்களுடன் விளங்கினர். மன்னர்கள் தம் அதிகாரங்களை வளர்த்துக் கொண்டு பிரபுக்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். இசுபெயினில் கிறித்தவர்களுக்கும் முசுலிம்களுக்கு மிடையே ஆதிக்கப் போர்கள் நடைபெற்றன. போர்ச்சுகல் முழுவதும் கி.பி.1253க்குள் மூர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

சமயம்: இடைக்கால ஐரோப்பாவில் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தின் ஆதிக்கம் முழுமையாக இருந்தது. அது மத்திய, மேற்கு ஐரோப்பியப் பகுதிக் கிறித்தவ உலகம் (Christendom) என்றே சொல்லப்பட்டது. இடைக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த திருச்சபை மிகவும் வலிமையுள்ள நிறுவனமாக இருந்தது. அந்தத் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர், ஆண்டவனின் பேராளர் என்றும் அனைத்து ஆற்றல்களும் பெற்றவர் என்றும் கருதப் பெற்றார். அவர் இடும் ஆணைகளே சட்டங்களாக மதிக்கப்பெற்றன. அவருடைய கட்டளைகளை ஐரோப்பாவில் உள்ள எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டன. நாளடைவில் போப்பாண்டவர்கள் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். முதன் முதலாக அரசியலில் தலையிடத் தொடங்கிய போப்பாண்டவர்களுள் இல்டிபிராண்டு (Hildebrand) என்பவர் முக்கியமானவராவர். அவருடைய அனுமதியையும் வாழ்த்தினையும் பெற்றுத்தான் வில்லியம் கி.பி. 1066 -இல் இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் சென்று, அதைக் கைப்பற்றிக்கொண்டு 'இங்கிலாந்தை வென்றவர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். போப்பாண்டவர்கள் அரசியலில் தலையிட்டதால் அவர்களுக்கும் அரசர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

திருச்சபையில் பணியாற்றிய மதக் குருமார்கள் பலர் பிற்காலத்தில் தங்கள் பணியை மறந்தனர்; 'மது, மாது, மாமிசம்' என்று மயங்கிக் கிடந்தனர். இதனால் மக்களின் வெறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் ஆளாயினர். திருச்சபையில் ஊழலும் வீண் செலவுகளும் ஏற்பட்டன. தீமைகளைத் தீயிட்டுப் பொசுக்கவும் திருச்சபையைத் திருத்தவும் இங்கிலாந்தைச் சேர்ந்த சான் விக்ளிப்பு (John Wycliffe), பொகீமியாவைச் சேர்ந்த சான் அசு (John Huss),

போன்றவர்கள் முயன்றனர். ஆனால் திருச்சபையில் குறைகள் காண்பதையும், அதனைத் திருந்தச் செய்யும் திறனாய்வுகளையும் போப்பாண்டவர்மீது குறை சொல்வதையும் திருச்சபை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அப்படி முயன்றவர்களைச் சமயத் துரோகிகள் என்று திருச்சபை தண்டித்தது. சான் அசு உயிரோடு தீ வைத்துக் கொளுத்தப் பட்டார்.

சமுதாயம்: மதக் குருமார்கள் மரபுகளைப் போற்றினர். மக்கள் அவற்றையே பின்பற்றினர். மரபு மீறல் மாபெரும் குற்றமாகக் கருதப்பட்டது, அது அனுமதிக்கப்படவுமில்லை. பழைமையை அழிக்க முயலும் எந்த இயக்கமும், மக்களின் ஆதரவையும் மதக்குருமார்களின் ஆதரவையும் பெறவில்லை. பரம்பரையாகப் பழக்கத்திலிருந்த வழக்காறுகளை மாற்றத் துணிந்தவர்கள், மதக் குருமார்களின் கோபத்திற்கும், அவர்களுடைய தண்டனைகளுக்கும் ஆளாயினர். உரோசர் பேக்கன் (Roger Bacon), கோபர்னிக்கசு (Copernicus), கலிலியோ (Galilio), ஆகிய அறிஞர்கள் பல இன்னல்களுக்குள்ளானார்கள்.

நிலமானிய முறை: இது படைமானிய முறை என்றும் சொல்லப்படுகிறது. இடைக்காலத்தில் ஐரோப்பியச் சமுதாயம், நிலமானிய முறையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அக்காலத்திய அரசியலும் பொருளாதாரமும்கூட அதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அரசர்களைவிட நிலமானியப் பிரபுக்களே அதிக அதிகாரங்களுடன் விளங்கினர். நிலமானிய முறை ஒரு 'பிரமிடு' போன்றது. எடுத்துக்காட்டாகப் பிரான்சில் மன்னரிடமிருந்து நேரடியாக நிலத்தைப் பெற்ற பெரும் பிரபு தியூக்கு (Duke) எனப்பட்டார். தியூக்குகள் தமது நிலங்களைக் கௌண்ட்டுகளுக்கும் (Counts), கௌண்ட்டுகள் தமது நிலங்களை வைக்கௌண்ட்டுகளுக்கும் (Vicounts), வைக்கௌண்ட்டுகள் சீனர்களுக்கும் பிரித்துக்கொடுத்தனர். இந்தச் சீனர்களின் நிலம் மேனர்ப்பண்ணை எனப்பட்டது. இந்த பண்ணைகளை உழுது பயிரிட்டவர்கள் 'செர்புகள்' (Serfs) அல்லது 'வில்லன்கள்' (Villeins) எனப்பட்ட நில அடிமைகள் ஆவர். தம் பண்ணையாரை அல்லது பண்ணையை விட்டு இவர்கள் என்றென்றைக்கும் பிரிந்து செல்லவே முடியாது. தலைமுறை தலைமுறையாக இவர்கள் குடும்பமே அடிமைதான். இவர்கள் வறுமையில் வாடினர்.

கலை: இலக்கியம், ஓவியம், சிற்பக்கலை அறிவியல் ஆகிய கலைகள் வளர்ச்சி பெற நல்ல சூழ்நிலை நிலவவில்லை. வழக்கமாகப் பின்பற்றி வரும் கிறித்தவ வேதப்பாடங்களைத் தவிர மற்ற எந்த இலக்கியமும் மக்களுடைய மனத்தைக் கெடுத்துவிடும் என்று மத குருமார்கள் கருதினர். அழகைச் சுவைப்பதும் போற்றுவதுங்கூட பாவம் என்று கருதப்பட்டன. கலை உணர்வும் முன்னேற்றமும் இல்லாத மந்தமான காலக்கட்டமாக இடைக் காலத்தைக் கருதிய சிலர், அக்காலத்தை இருண்டகாலம் என்றும் குறித்தனர். ஒருவகையில் இக்கூற்று உண்மையானதாக இருந்தாலும், இது மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகும். சிலுவைப் போர்களில் பங்கு பெற்ற பிரபுக்களின் வீரச் செயல்களைப் பற்றிப் பல கவிதைகள் புனையப் பெற்றிருக்கின்றன. ஆயினும் பல கட்டுப்பாடுகள் இருந்தமையால், அப்பொழுது தோன்றிய கலைகளில் ஓர் அழகில்லை. குறிப்பாகக் கடவுளின் ஓவியங்களை வரையும் பொழுது, அழகைப் பெரிதுபடுத்துவது பாவம் என்று கருதப்பெற்றது. கிறித்துவை அழகான முறையில் ஓவியமாக்கக்கூடாது. இயற்கை அழகைச் சிறப்பித்துக் காட்டக்கூடாது என்ற பல கருத்துகள் மக்கள் மனத்தில் வேரூன்றியிருந்தன.பைசாவில் (Pisa) உள்ள கேம்போ சேண்டோவில் (Campo Cento) தீட்டப் பெற்றிருக்கும் வண்ண ஓவியங்களும், இங்கிலாந்துக் கோயில்களில் தீட்டப் பெற்ற ஓவியங்களும் அழகைக் காட்டிலும் துயரத்தையே மிகுதியாக எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், கலைக்கண்கொண்டு நோக்கினால் அந்த ஓவியங்கள் நன்கு தீட்டப்பெற்றிருக்கின்றன. இவற்றை அக்காலத்திய கலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம் அ.இரா.

துணை நூல்:

**Leon**, **Joseph**, **M**., World Civilization, Lincoln, Nebraska, 1970.

**இடைக்குன்றூர்கிழார்**: சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; வேளாள மரபினர். இவர் ஊர் மதுரைக்கருகில் இருக்கலாம் என்றும், குன்றுகளுக்கிடைப்பட்ட ஊர் இடைக்குன்றூர் என்று கொண்டால் பழநி மலைத்தொடர்களைச் சார்ந்தோ திருப்பரங்குன்றத்துக் குன்றுகளைச் சார்ந்தோ இருக்கலாம் என்றும் கருதுகின்றனர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடியுள்ள பாட்டுகள் புறநானூற்றில் (76, 77, 78, 79) இடம்பெற்றுள்ளன. நக்கீரர், ஆலம்பேரி சாத்தனார், கல்லாடனார் முதலிய சான்றோர்கள் புகழ்ந்திருப்பினும் அவருள் இடைக்குன்றூர்கிழார் ஒருவரே அவனது வெற்றிக் காலத்தில் இருந்தவர். இவர் தாம் பாடிய நான்கு பாடல்களிலும் நெடுஞ்செழியன் துடிப்புமிக்க இளைஞனாக இருந்ததையும் பகைவர்களை வென்ற செய்தியையும் புகழ்ந்து பாடியுள்ளார்.ஒருசமயம் தலையாலங்கானத்துச் செருவில்

முடிவேந்தர் இருவரும குறுநில மன்னர் ஐவருமாகஎழு வர் போர்செய்ய வந்தனர். அவர்களை நெடுஞ்செழி யன் ஒருவனே எதிர்த்ததிறத்தைப் 'பீடுஞ்செம்மலுமறி யார் கூடிப், பொருதுமென்று தன்றலை வந்த, புனை கழலெழுவர் நல்வல மடங்க, ஒருதானாகிப் பொருது களத் தடலே' என்று பாராட்டியுள்ளார். அவன் இளமைப்பருவம் இப்போதுதான் கழிந்தது என்ப தனைக் 'குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி' என்பதனால் காட்டுகிறார். நெடுஞ்செழியன் போர்க் களத்தில் பகைவர்களை வென்று அவர்களை நிலத் தில் வீழ்த்திக் கொன்றபோது மகிழ்ச்சியோ தருக்கோ இல்லாமல் இருந்தனன் என்பதை இடைக்குன்றூர் கிழார் வியந்து பாராட்டியுள்ளார்.

**இடைச்சங்கம்** என்பது, பழந்தமிழகத்தில் விளங்கியனவாகக் கருதப்படும் மூன்று தமிழ்ச் சங்கங்களுள் இடைப்பட்டதாக விளங்கிய இரண்டாம் சங்கத்தினைக் குறிக்கும். முச்சங்க வரலாறு பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களின் காலத்தினை உறுதி செய்வதற்குப் பெரிதும் பயன்படு வதாக உள்ளன. சங்கம் பற்றியகுறிப்பு, முதன்முதலில் இறையனார் அகப்பொருள் உரையிலும் பின்னர்ச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையிலும் இடம்பெற்றுள்ளது.

மதுரையில் இருந்த தமிழ்ச்சங்கம் கடல் கோளால் அழிவுற்ற பின்னர், கபாடபுரத்தில் அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் இடைச் சங்க மாகும். அகத்தியனார், தொல்காப்பியனார், இருந் தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன் துவரைக் கோமான், கீரந்தைபோன்ற 51 புலவர்கள் இச்சங்கத்தி லிருந்து தமிழாராய்ச்சி செய்து வந்தனர். இவர்களை உள்ளிட்டு, 3700 புலவர்கள் கவிஞர்களாய்ச் செய்யு ளியற்றினர். இப்புலவர்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை. அகவல் முதலிய பல நூல்களை யாத்த னர். இச்சங்கத்தார்க்கு அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் ஆகியன இலக்கண நூல்களாகத் திகழ்ந்தன. இச்சங்கம் 3700 ஆண்டுகள் தமிழ்ப் பணி புரிந்து வந்துள்ளது. வெண்தேர்ச் செழியன் தொடங்கி முட த்திருமாறன் வரையில் விளங்கிய 51 அரசர்கள், இப்புலவர்களைச் சங்கமிருக்கச் செய்து காத்துவந்தனர். இவ்வரசர் களுள் 5 மன்னர்கள் கவிஞர்களாய்க் கவியரங்கேறி னர். கடல்கோளினால் இச்சங்கம் அழிவுற்றது. இவ்வாறு இறையனார் களவியல் உரையாசிரிய ராகிய நக்கீரர் கூறியுள்ளார். இரண்டாம் ஊழியில் கபாடபுரத்தில், மாகீர்த்தி எனப்படும் நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தில் இடைச்சங்கம் தோன்றிச் செயற்பட்டது என்று அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இதில் பாண்டியன் மாகீர்த்தி, தொல்காப்பிய நூலைப் புலப்படுத்தினான் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விரு உரையாசிரியர் களாலும் குறிப்பிடப்படும் இடைச்சங்கம் பற்றிய இச்செய்திகள், ஏனைய இருசங்கங்கள் பற்றிய செய்திகளோடு, பாண்டி நாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிலிருந்த பழைய ஏட்டுப் புத்தகமொன்றில் கவிதை வடிவில் எழுதப் பட்டிருந்தது என்று கூறி, டாக்டர் உ.வே.சா. ஐயரவர் கள், அந்தச் செய்யுட்பகுதியையும் தம் சிலப் பதிகாரப் பதிப்பில் வெளியிட்டுள்ளார்கள். கடல் கோளால் இடைச்சங்கம் அழிந்தபின்னர், உத்தர மதுரையில் மூன்றாம் சங்கமாகிய கடைச்சங்கம் தோன்றியது.

**இடைச்சுரம்** தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெறற தலங்களுள் ஒன்று. இது செங்கற்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் வழி யில் அமைந்துள்ளது. இத்தல இறைவனைத் திரு ஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரவியுள்ளார். இறை வன் பெயர் இடைச்சுரநாதன்; இறைவி பெயர் இமயமடக்கொடி. இத்திருக்கோயிலிலுள்ள இலிங்கத் திருமேனி, மரகதத்தாலானது என்றும் ஒளிமயமாக விளங்குகிறது என்றும் கூறப்படுகிறது. இத்திருக் கோயிலை எய்திய திருஞானசம்பந்தர், இதனை வலம்வந்து இறைவன் திருமுன்னர் அடைந்து பெரு மானைக் கண்டபோது பெருமகிழ்ச்சியும் வியப்பும் எய்தி விளங்கிய தன்மையினைச் சேக்கிழார், 'மண் டிய பேர் அன்புருகி மயிர் முகிழ்ப்ப வணங்கியெழுந்து அண்டர்பிரான் திருமேனி வண்ணங்கண்டு அதிசயித் தார்' என்று குறிப்பிட்டுள்ளார். திருஞானசம்பந் தரும் தம் பதிகப் பாடல்தோறும் 'இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே' என்று வியந்து போற்றியுள்ளார்.

**இடைச்செருகல்** என்பதற்கு இடையே சேர்க்கப்பட்டது என்பது பொருளாகும். ஒரு நூலா சிரியருக்குத் தெரியாமல் அவருடைய நூலின் இடையே சில பாடல்களைப் பிறர் இயற்றிச் சேர்ப் பது இடைச் செருகல் எனப்படும். தொல்காப்பியம் போன்ற பண்டை நூல்கள் சிலவற்றில் சில இடைச் செருகல்கள் அமைந்துள்ளன என்பது கூறப்படுகிறது. பொருட்பொருத்தமின்மை, வேண்டா கூறல், முன் பின் தொடர்பின்மை, நடை வேறுபாடு போன்ற காரணங்களால் இடைச் செருகல்களை இனம் கண்டு கொள்ளக்கூடும்.

ஒரு நூலில் இடைச் செருகல் நிகழ்வதற்குப் பல காரணங்கள் உள. புகழ்மிக்க நூலில் தன்னுடைய

பாடலும் இடம் பெறுவதறிந்து தானே மகிழும் விருப்பம், தானாக ஒரு நூலைப் படைத்துப் புகழ் எய்துவதில் நம்பிக்கையின்மை, நூலாசிரியருக்குக் கருத்தின்றாயினும் தன் கருத்தினை ஒரு நூலிடைப் புகுத்த விரும்பும் வேட்கை போன்ற காரணங் களால் இது நிகழும். இடைச்செருகல் செய்ய விரும்பு வோர் புலமைக் கலப்படம் செய்யுமளவிற்குக் கவிதைத் திறம் உடையவர்களாக இருத்தல் வேண் டும்.

ஒரு பாடலை இடைச்செருகல் என்று முடிவு செய்யுமுன், விருப்பு வெறுப்பின்றி அதனைப் பல நிலைகளிலும் இருந்து ஆராய்தல் வேண்டும், இல்லையேல் உண்மையான பாடலை இடைச்செரு கல் எனவும், இடைச்செருகலான பாடலை உண்மை யான பாடல் எனவும் பிழைபட உணரும் நிலை உண்டாகிவிடும்.

தேவாரம், பெரிய புராணம் போன்ற சைவப் பனுவல்களின் இடையே அமைந்த பொருட்செறி வற்ற, நடைவேறுபாடுடைய பாடல்களை இடைச் செருகல் எனக் கூறுகின்றனர். அவற்றை வெள்ளிப் பாடல் என்று குறிப்பிடுவது வழக்கம். இப்பாடல் களைத் தருமபுர ஆதீனத்து அடியார்களில் ஒருவரா கிய கமலை வெள்ளியம்பலவாணர் இயற்றி ஏடு களின் இடையே செருகிச் சேர்த்தார் என்று ஒரு செவிவழிச் செய்தி வழங்குகிறது. அதனால் அப் பாடல் வெள்ளிப்பாடல் எனப்பட்டது என்பர். நல்ல புலமையும் சமய ஈடுபாடும் கொண்ட இவர், இவ் வாறு செய்திருக்கமாட்டார் என்ற கருத்தும் உள் ளது.

பொன்னிடை விளங்கும் வெள்ளியைப் போல, உண்மைப் பாடலிடை இடைச் செருகற் பாடல் மாற்றுக் குறைந்து தோன்றுவதால், வெள்ளிப் பாடல் எனப்பட்டது என்றும் கொள்ளலாம்.

சீவக சிந்தாமணிப் பாடல்களின் இடையே மாற் றுக் குறைந்து வெளிற்றுப்பாடலாக அமைந்துள்ள சில இடைச்செருகற் பாடல்களைக் 'கந்தியார் பாடல்' என்று வழங்குவது மரபு. கந்தியார் என்னு மொரு சமணப் பெண் துறவி இவற்றைப் பாடி இடைச் செருகல் செய்தார் எனக் கருதப்படுகிறது. இவ்வாறு போலிப் பாடல்களை இயற்றி இடையே செருகும் பழக்கத்தைக் 'கந்தியார் பிழைப்பு' என்று பரிபாடல் உரைச் சிறப்புப் பாயிரம் குறிப்பிட்டுள் ளது.

சிலப்பதிகாரக் காதைகள் சிலவற்றின் இறுதியில் அமைந்த சில வெண்பாக்கள் இவ்வாறமைந்தன என்பதனை 'ஓர் இளம் புலவரால் எழுதப்பட்டது, என்று உரையாசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட் டார் குறிப்பிட்டு, உரை எழுதாமல் அவற்றை விடுத் துள்ளார். காண்க: கந்தியார்; வெள்ளிப்பாடல்.

**இடைச்சொல்** என்பது தனித்து இயலாது, பெயர் வினைச் சொற்களை இடமாகக் கொண்டு அமையும் பொருளுடைய சொல் எனப்படும். 'பூனை பாலைக் குடித்தது' என்னும் வாக்கியத்தில் 'பாலை' என்பதனைப் பால்+ஐ (பெயர்ச்சொல்+வேற்றுமை உருபு) என்றும், குடித்தது என்பதனைக் குடி + த்த + அ + து (வினைச்சொல் + இறந்தகால இடை நிலை + படர்க்கை + ஒன்றன்பால் விகுதி) என்றும் பிரிக்கலாம். 'கிளி போன்ற பெண்' என்பதில் 'போன்ற' என்பது உவமஉருபு. இவ்வாறு பெயர், வினைச் சொற்களோடு சேர்ந்து வருகின்ற வேற் றுமை உருபு, கால இடைநிலை, விகுதி, உவம உருபு ஆகியவை இடைச்சொற்கள் ஆகும்.

வீரசோழியம், இலக்கணக் கொத்து ஆகிய இரண்டினையும் தவிர்த்து, எஞ்சிய இலக்கண நூல் களுள் ஆறு நூல்களே இடைச்சொற்களை விரிவாகக் கூறியுள்ளன.

இடைசொற் பாகுபாடு: (அட்டவணை பக்.94)

சொல்லிற்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பாலும் இடையே வருதலின் இடைச்சொல் லாயிற்று என்பர் உரையாசிரியர்கள். வினைவிகுதி, வேற்றுமை உருபு ஆகியவை இறுதியிலும், சாரியை, ஒப்புருபு ஆகியவை சொல்லின் இடையிலும், அசை நிலை, இசைநிறை ஆகியவை தனிச்சொல் போன்று மொழிக்குமுதலிலும் வருகின்றன. 'தத்தம் பொருள' சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருகின்றன.

| | | |
|---|---|---|
| எ.டு. | வா + ந்த் + ஆன் | —விகுதி |
| | இராமன் + ஐ | —வேற்றுமை உருபு |
| | மரம் + அத்து + ஐ | —சாரியை |
| | புலி போலப் பாய்ந்தான் | –ஒப்பு உருபு |
| | ஏ என் சொல்லுக | —அசை நிலை |
| | ஏஎ இஃதொத்தன் | —இசைநிறை |
| | கொன்னூர், மயில்கொல் | —தத்தம்பொருள. |

இடைச்சொல் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்திலும் வருதலால், இடையில் வருவது என்னும் காரணம் பொருத்தமுடையதாகத் தெரிய வில்லை; பெயர், வினையை இடமாகக் கொண்டு வருதலின் இப்பெயர் பெற்றது என்று கூறலாம். இடச்சொல் என்பது போலியால் இடைச்சொல்

| எண் | வகை | தொல்காப்பியம் நூ. 250 | நேமிநாதம் நூ. 75 | நன்னூல் நூ. 420 | இலக்கண நூ. 251 | தொன்னூல் நூ. 130 | முத்து வீரியம் நூ. 644 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சாரியை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 2. | விகுதி | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 3. | வேற்றுமை உருபு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 4. | அசை நிலை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 5. | இசை நிறை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 6. | தத்தம் பொருள | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | × |
| 7. | ஒப்புருபு | ✓ | × | ✓ | ✓ | ✓ | ✓ |
| 8. | குறிப்பு | × | × | ✓ | × | ✓ | × |
| | | 7 | 6 | 8 | 7 | 8 | 6 |

என்றாயிற்று. இலக்கண ஆசிரியர்களும் இக்கருத்தைக் கொண்டிருந்தனர் என்பதனை, 'மருங்கில் தோன் றும்' (தொல். சொல். 159), 'தமக்கியல் பிலவே' (தொல். சொல். 249), 'தனித்தியலின்றி ………… வந்தொன்றுவ திடைச்சொல்' (நன். 420), 'ஒன்றுவது இடைச்சொல்' (இ.வி. 251), 'தனித்தியலின்றி …… வினைப்பெயர் சேர்ந்து' (தொ.வி.130), 'பெயர் வினையிடத்துப் பிறப்ப திடைச்சொல்' (மு.வீ.643), என வரும் இலக்கணப் பகுதிகள் கொண்டறிதல் கூடும்.

இலக்கணிகள் இடைச்சொல்லைச் 'சொல்'என்று குறிப்பிட்டாலும் பெயர், வினை போன்று அவற் றிற்கொப்பான இடத்தைக் கொடுக்கவில்லை; இடைச்சொற்கள் தனித்து இயங்காதவை என்று கூறியுள்ளனர்.

தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகியவை இடைச்சொற்கள் சொல்லிற்கு முன் அல்லது பின் வரலாம் என்று கூறி யுள்ளன. எ-டு. 1. எல்வளை, 2. கேட்ட ன்.

தொல்காப்பியந்தான் இடைச்சொற்கள் வடிவ மாற்றம் பெற்று வரலாம் என்று கூறியுள்ளது. 1. ஆசிரியற்கு > ஆசிரியற்க.

தொல்காப்பியம், நன்னூல் ஆகியவை இடைச் சொற்கள் இணைந்து வரலாம் என்று கூறியுள்ளன. எ-டு.அது மற்றம்ம.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல். சொல். 155), 'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' (தொல். சொல். 455) என் னும் நூற்பாக்களால் இடைச்சொல்லிற்குப் பொருள் உண்டு என்கிறார் தொல்காப்பியர். ஏனைய இலக் கண ஆசிரியர்கள் இன்னின்ன பொருளில் இடைச் சொல் வரும் என்று குறிப்பிட்டுள்ளதால் இடைச் சொற்கள் பொருள் வேறுபாட்டைத் தருமென அறியலாம். சாரியை பொருள் தருமென்பதனை, 'புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவு' (தொல். சொல். 250) என்னும் தொல்காப்பிய நூற்பா உணர்த்தும். எல்லாச் சாரியைகளும் சந்திப் பொருள் அல்லது தனிப்பொருள் தரும். எ-டு. வா+ ந்த் + அன்+ அன் - (சந்திப்பொருள்), ஆடி+க்கு+ கொண்டான்- (ஏழாம் வேற்றுமைப் பொருள்). வினையில் வரும் சாரியையினைப் பிரித்து நன்னூ லும் இலக்கண விளக்கமும் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியர் 'வினைசெயல மருங்கின் கால மொடு வருந' (தொல். சொல். 245) என்பதனால், கால இடைநிலையும் இப்பிரிவில் அடங்கும். கால இடைநிலைகள் காலப் பொருளையும், வினைமுற்று விகுதிகள் இடம், எண் ஆகியவற்றையும் உணர்த்தும்.

வேற்றுமை உருபுகள் உணர்த்தும் பொருளை இலக்கண ஆசிரியர்கள் கூறியுள்ளதால் இவையும் பொருள் உணர்த்துவனவே. எ-டு. முதல் வேற்றுமை எழுவாய்.

இலக்கண ஆசிரியர்கள் கூறும் பிரிவிலசைகள், தாம் சார்ந்த சொற்களின் பொருள்களைப் பிரிதலின்றி உணர்த்தும். முன்னிலை அசைகள் ஏவலை அன்போடு உணர்த்தப் பயன்படுகின்றன. மேலும், தொல்காப்பியர் 'அம்மகேட்பிக்கும்' – (தொல். சொல். 276) என்ற நூற்பாவால் அசைநிலைக்குப் பொருள் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.

இசையை நிறைக்க வருவன 'இசைநிறை' என உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். எனினும் 'பெறலருங் குரைத்தே' என்பதில் 'குரை' என்பது வியப்புப் பொருளைத் தந்து நிற்கிறது. தத்தம்பொருள் என்னும் பிரிவில் அடங்குவன பொருள் உணர்த்தும் என்பது சொல்லாமலே விளங்கும். ஒப்புருபுகள் ஒப்புப் பொருண்மையைத் தரவல்லன. நன்னூல், தொன்னூல் விளக்கம் ஆகிய இரண்டும் ஒப்புருபு பற்றிக் கூறியுள்ள போதிலும் விளக்கம் தரவில்லை. உரையாசிரியர்கள் இதற்கு ஒலிக்குறிப்புச் சொற்களை (Onomatopoeia Words) எடுத்துக்காட்டியுள்ளார்கள். மொழியியலார் இடைச்சொற்களை ஒட்டுகள் (Affixes) ஏற்காதவை என்ற பகுப்பில் அடக்குவர். இப்பிரிவில் சில உரிச்சொற்களும் அடங்குவதால் இப்பாகுபாடு தெளிவற்றதாக உள்ளது. பி. எசு. சுப்பிரமணிய சாத்திரியார் இடைச்சொற்களை வேற்றுமை உருபுகள் (Case Suffixes), ஒருநிலைச் சொற்கள் (Particles) என்று பிரிக்கிறார். ஆனால், சில இடைச்சொற்கள் ஒட்டுகளாகவும் அமையும். தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இடைச்சொற்களை வேரல் உருபன் என்பார். ஒருநிலைச் சொற்கள் வேர்ச்சொற்கள் உடையன. டாக்டர் மோ. இசரயேல் இடைச்சொற்களை ஒட்டுகள், ஒருநிலைச் சொற்கள் எனப் பிரித்து, ஒருநிலைச்சொற்களில் ஒட்டிகள் (Clitics), இணைப்புச் சொல் (Connectors), விளிச்சொல் (Vocative), வியப்பிடைச்சொல் (Interjection), உவம உருபுகள் (Particles of Comparison) என்பவற்றை அடக்குவார். பா.ம.

**இடைசுருங்கு பறை** என்பது பழந்தமிழ் நாட்டுத் தோற்கருவிகளுள் ஒன்றாகும். நேரமானியின் வடிவில் அமைந்துள்ள இக்கருவியின் இரு பகுதிகளும் உறுதியான கயிறுகளால் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். குறுகலான இடைப்பாகத்தில் இருக்கும் கெட்டியான கயிறு இக்கருவியில் இரு பகுதிகளையும் இழுக்கவும் தளர்த்தவும் கூடிய வகையில் அமைந்திருக்கும். இக்கருவியை இடக்கையால் பிடித்து வலக்கை விரல்களால் இசைக்க வேண்டும். இது தமிழ்நாட்டில் மாரியம்மன் கோவில்களிலும் ஊரகக் கோவில்களிலும் பழக்கத்தில் உள்ளது. வில்லுப்பாட்டிற்குத் துணை இசையாகவும் இது இசைக்கப்படுகிறது.

**இடைத்தேர்தல்:** குடியாட்சி முறையின் முதன்மையான கருவி தேர்தல் ஆகும். அதன்மூலம் மக்கள் தங்களின் உரிமையைத் தங்களின் பேராளர்களுக்கு அளித்து நாட்டை நிருவாகம் செய்யுமாறு பணிக்கின்றனர். இவ்வாறு நாடு முழுவதற்கும் நடைபெறும் தேர்தல் பொதுத்தேர்தல் எனப்படும். பொதுத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அந்தந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களின் விதிகளுக்கு ஏற்பக் குறிப்பிட்ட காலத்திற்குத் தம் பதவியை வகிப்பர்.

இந்திய அரசு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் ஒன்றை 1951–இல் உருவாக்கியது; தேர்தல் நடவடிக்கை விதிகளை 1961–இல் அமைத்தது. மேற்கூறிய விதிகள், சட்டங்கள் ஆகியவற்றிற்கேற்ப இந்திய வாக்காளர்கள் மைய அரசின் நாடாளுமன்றத்திற்கும், மாநில அரசின் சட்டப் பேரவைக்கும் தங்கள் பேராளர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

இவ்விடைத்தேர்தல்கள் நாடாளுமன்றத்திலோ சட்டமன்றப் பேரவையிலோ ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்காக நடைபெறுகின்றன. அக்காலியிடங்கள் பின்வரும் காரணங்களால் உருவாகலாம்.

1. மேற்கூறிய அவைகளில் எவரேனும் ஓர் உறுப்பினரின் மறைவு.
2. உறுப்பினரின் பதவி விலகல்.
3. ஓர் அவை உறுப்பினர் பிறிதொரு அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படல்.
4. அவை அனுமதியில்லாமல் ஓர் உறுப்பினர் தொடர்ந்து 60 நாட்களுக்குமேல் அவையின் கூட்டங்களில் கலந்துகொள்ளாதிருத்தல்.
5. தேர்தல் தொடர்பான வழக்குகளின் காரணமாக ஓர் உறுப்பினர் தம் பதவியை இழத்தல்.
6. இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகள் எண் 102 அல்லது 191–இல் கூறப்பட்டிருக்கும் தகுதியின்மைகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்றதனால் உறுப்பினர்கள் தம் பதவியை இழத்தல்.

மேற்கூறியவற்றுடன் முதல் காரணம் தவிர, பிற காரணங்களால் ஏற்படும் காலியிடங்கள் பற்றி அந்தந்த அவைத் தலைவர்கள் உடனடியாகத் தெரிந்துகொள்வர். ஆனால் முதல் காரணமான உறுப்பினரின் சாவு பற்றி அச்சாவு நடைபெற்ற மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அறிந்து, உரியோருக்குத் தெரிவித்திட இயலும். அத்தகைய தகவலைத் தெரிவித்திடப் பின்வரும் முறைகளை ஆட்சித்தலைவர் பின்பற்றிட வேண்டும்.

ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் இறந்தால், அந்தத் தொகுதியின் மாவட்ட ஆட்சித் தலைவர் மாநில அரசின் தேர்தல் துறைக்கு ஒரு 'விரைவுத்' தந்திமூலம் அத்தகவலைத் தெரிவித்திட வேண்டும். அதேபோல், இறந்த உறுப்பினரின் அவைச் செயலருக்கும் தந்திமூலம் தகவல் அளிப்ப தோடு, அச்செய்தியினைத் தபால் மூலமும் அனுப்பி அதனை உறுதி செய்யவேண்டும். மேலும், இச்செய்தி யினை இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தெரி விக்க வேண்டும். அதற்குத் தந்தி தேவையில்லை; கடிதத்தின் வாயிலாகவே தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய தகவலின் அடிப்படை யில் முதன்மைத் தேர்தல் அலுவலர் இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அச்செய்தியினைத் தெரி விப்பார். எந்த வகையிலேனும், அவையில் ஏற்பட்ட காலியிடம் பற்றிய தகவல் ஏழு நாட்களுக்குள் தெரி விக்கப்பட வேண்டும்.

இவ்விதம் காலியிடம் ஒன்று ஏற்பட்டவுடன், இடைத் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைக்க வேண்டும். இதன் காரணமாகத் தேர்தல் சாவடிகளின் எண்ணிக்கை, இதற்கு முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலின் எண்ணிக்கைக்குச் சமமானதாக அமைத்திட வேண்டுமா? அல்லது கூடு தலாகச் சாவடிகள் அமைத்திட வேண்டுமா அல்லது சாவடிகளின் அமைவிடங்களை மாற்றி அமைத்திட வேண்டுமா என்பவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்திடல் வேண்டும். சாவடிகளில் மாற்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சாவடிகளின் பட்டி யலை முதன்மைத் தேர்தல் அலுவலர் மூலம், இந்தி யத் தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி விடவேண்டும். ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், அத் தொகுதியின் வாக்காளருக்கு அதனை வெளியிட வேண்டும்.

மாநிலச் சட்டப் பேரவைகளிலும் நாடாளுமன் றங்களிலும் தோன்றிடும் காலி இடங்களை நிரப்பிட இடைத்தேர்தலுக்கான தேர்தல் அறிவிப்பைப் பாகம் IX மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-இன்படி, இந்தியத் தேர்தல் ஆணைக்குழு விடுக்கின்றது. அதே நாளில் அவ்வாணைக்குழு, தேர்தலுக்கான பல்வேறு கட்டங்கள் அல்லது நிலைகள் பற்றிய அறிவிப்பையும் கொடுக்கும். இத்தகைய அறிவிப்புகள் நாடாளுமன் றத்திற்குரிய தேர்தல் என்றால், இந்திய அரசு இதழி லும் (கெசட்டு) மாநில அரசு இதழிலும், சட்டமன்றப் பேரவைத் தேர்தல் என்றால், அந்தக் குறிப்பிட்ட மாநில அரசின் இதழிலும் வெளியிடப்படும்.

இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதியின் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தேர்தல் நடத் தும் அலுவலர், இடைத் தேர்தல் தொடர்பான பல் வேறு கட்ட நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் பற்றி முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருப்பார். அதன்படி தேர்தல் நடத்தும் அலுவலர் (Returning Officer) தேர்தல்களை நடத்துவதற்கான செயல்முறைகளைத் தொடங்கிடுவார்.

பின்னர் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர் பான நிகழ்ச்சிகள் அனைத்தும், பொதுத் தேர்தலின் போது பின்பற்றப்படுவனவேயாகும். அவையாவன: தேர்தல் அறிவிப்பு, வேட்பாளர் மனுதாக்கல், மனுக்களின் ஆய்வு, மனுக்கள் திரும்பப் பெறப்படல், போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடுதல், சின்னம் ஒதுக்குதல், தேர்தல் நடத்து தல், வாக்குச் சீட்டுகளை எண்ணுதல், தேர்தல் முடிவுகளை அறிவித்தல், வெளியிடுதல் ஆகியன.

இடைத்தேர்தல் விடுமுறை: இடைத்தேர்தல் நாளன்று மாற்ற இயலும் பத்திரங்கள் சட்டம் 1881-இன் படி (Negotiable Instruments Act) பொதுவிடு முறை அறிவிக்க வேண்டியதில்லை. தேர்வு நடக்கும் தொகுதியைச் சார்ந்த பகுதிகளில் மட்டும் உள்ளூர் விடுமுறை அறிவித்தால் போதுமானது. அந்நாளில் அரசு அலுவலகங்கள் தேர்தல் பணிக்காக அமர்த்தப் படாதவர்களால் நடத்தப்படவேண்டும். அதேசமயம் அவர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திட வாய்ப்பும் நல்கிட வேண்டும்.

பதவிக்காலம்: இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர் தாம் யாருக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ அவரது எஞ்சிய பதவிக்காலத்துக்கு மட்டுமே பதவியில் இருக்க இயலும். செ.ஜோ.

**இடைநிலை மயக்கம்:** தமிழ்மொழி அமைப்புப்படி மொழி முதலில் மெய்மயக்கங்கள் இடம் பெறுவதில்லை. இலக்கண ஆசிரியர்கள் மொழி யிடையிலும் மொழியிறுதியிலும் இடம்பெறும் மெய் மயக்கங்களை விளக்கியுள்ளார்கள். மொழியிறுதி என்ற நிலையிலும் செய்யுளில் அமைகிற, 'போன்ம்' என்னும் ஒரே ஒரு மெய்மயக்கத்தைத்தான் தொல் காப்பியர் சுட்டியுள்ளார். நன்னூலாசிரியரும் இலக் கண விளக்க ஆசிரியரும் இச்சொல்லோடு 'மருண்ம்' என்னும் சொல்லையும் கூறினர் (நன்.எழு.120;இ. வி.34). மொழியிடையே நிற்கும் எழுத்துகளான உயிர், மெய், உயிர்மெய் ஆகிய மூன்றுமே மயங்கும் தன்மையன. எனினும், தொல்காப்பியர் தனிமெய் யொடு தனிமெய் மயங்குதலை மட்டுமே கூறியுள் ளார். இதற்கு இளம்பூரணரும், 'தனிமெய்யோடு தனிமெய்மயக்கம் ஒன்றே கூறியது என்னவெனின்,

மற்றவற்றிற்கு வரையறையின்மையின் வரையறையுடைய தனிமெய்மயக்கமே கூறியொழிந்தாரென உணர்க. மெய்யென்றதனால், தனிமெய்யொடு உயிர்மெய் மயக்கமின்றி, தனி மெய்யொடு தனிமெய் மயக்கமாதல் கொள்க' என்றனர். தொல்காப்பியரும் நன்னூலாரும் இம்மயக்கங்களை மெய்மயக்கு, உடனிலை என்று இருவகைப்படுத்தினர். இவ்விருவரும் கூறிய 'மெய்மயக்கு' என்பதனைப் பிற்கால உரையாசிரியர்கள் வேற்றுநிலை மெய்மயக்கம் எனவும், உடனிலையை உடனிலை மெய்மயக்கம் எனவும் வழங்கினர்.

மெய்மயக்கங்களைப் பொறுத்தவரையில் தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. கூறும் முறையில்தான் அவர்கள் வேறுபடுகின்றனர். தொல்காப்பியர் பின்னிற்கும் மெய்களைத் தொகுத்து இவை இவற்றின் முன் மயங்குமெனக் கூறினார். நன்னூலார் முன்னிற்கும் மெய்களைத் தொகுத்து அவற்றோடு இன்னின்ன மெய்கள் வந்து மயங்குமெனக் கூறினார்.

தொல்காப்பியர் கூறும் மெய்மயக்கங்கள் ஒரு மொழிக்கு உரியனவா, ஒரு மொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவானவையா என்பதில் உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. நச்சினார்க்கினியர் இம்மெய்மயக்கத்தை ஒரு மொழிக்கண்ணேயே கொள்வர். ஆனால், சில ஒற்றிணைகளுக்கு அவர் தொடர் மொழிகளையே சான்றுகளாகக் காட்டியுள்ளார். இளம்பூரணர் முதலானோர் ஒருமொழிக் கண்ணும் தொடர்மொழிக் கண்ணும் கொள்வர். நன்னூலாரும் ஒரு மொழியிலும் தொடர் மொழியிலுமே கூறினார் என்பது பிரயோக விவேக உரை. தொல்காப்பியர் தனிமொழி, இருமொழி என்ற பாகுபாடில்லாது, புணர்ச்சியில் மாற்றமில்லாது இயல்பாய் நிற்கும் ஒற்றிணைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகிறார் என்பது மா. இளையபெருமாள் போன்றோர் கருத்து.

தமிழ் மொழியில் 18×18 மெய்கள் உறழ்ந்தால் 324 மெய்மயக்கங்கள் இடம்பெற வாய்ப்புண்டெனினும், 86 மெய்மயக்கங்களையே தொல்காப்பியம், நன்னூல், முத்துவீரியம் ஆகியன குறிப்பிடுகின்றன. க, ச, த, ப ஆகிய நான்கு மெய்களும் தம்மொடு தாம் மட்டுமே மயங்கும். இவை பிற மெய்களோடு மயங்குவதில்லை. ர, ழ ஆகியவை உடனிலை மெய்மயக்கத்தையும் பெறுவதில்லை. இவை தம்மொடு பிற மெய்களே மயங்கும். எனவே, க, ச, த, ப, ர, ழ ஒழிந்த 12 மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும். (எ-டு): க்க் – காக்கை; ங்ங் – எங்ஙனம்; ச்ச் – பச்சை; ஞ்ஞ் – மஞ்ஞை; ட்ட் – பட்டை; ண்ண் – அண்ணம்; த்த் – தத்தை; ந்ந் – அந்நீர்; ப்ப் – அப்பை; ம்ம் – அம்மி; ய்ய் – அய்யம்; வ்வ் – எவ்வி; ல்ல் – எல்லி; ள்ள் – கொள்ளி; ற்ற் – கொற்றி; ன்ன் – கன்னி.

மெல்லின மெய்களான ங், ஞ், ண், ந், ம், ன் ஆறும் முறையே தமக்கு இனங்களான க், ச், ட், த், ப், ற் ஆகிய வல்லின மெய்களோடு சேர்ந்து மயங்கும். (எ-டு.): ங்க் – தெங்கு; ஞ்ச் – மஞ்சு; ண்ட் – வண்டு; ந்த் – பந்து; ம்ப் – கம்பு; ன்ற் – கன்று.

ட், ற் ஆகியவை க, ச, ப மூன்றோடு மயங்கும். (எ-டு): ட்க் – கட்கம்; ட்ச் – கட்சி; ட்ப் – கட்ப; ற்க – கற்க; ற்ச் – கற்சிறார்; ற்ப் – கற்ப.

ல், ள் என்பன க, ச, ப, ய, வ இவற்றோடு மயங்கும். (எ-டு): ல்க் – செல்க; ல்ச் – செல்சிறார்; ல்ப் – செல்ப; ல்ய் – கொல்யானை; ல்வ் – கோல்வளை; ள்க் – கொள்க; ள்ச் – கொள்சிறார்; ள்ப் – கொள்ப; ள்ய் – வாள்யாது; ள்வ் – வாள்வலிது.

ஞ், ந், வ், மூன்றும் 'ய' வுடன் மயங்கும். (எ-டு): ஞ்ய் – உரிஞ்யாது; ந்ய் – பொருந்யாது; வ்ய் – தெவ்யாது.

ம், 'ய' வுடனும் 'வ' வுடனும் மயங்கும். (எ-டு): ம்ய் – திரும்யாது; ம்வ் – நிலம் வலிது.

ண், ன் என்பன க, ச, ஞ, ப, ம, ய, வ ஏழனுடன் மயங்கும். (எ-டு): ண்க் – வெண்கலம்; ண்ச் – வெண்சாந்து; ண்ஞ் – வெண்ஞமலி; ண்ப் – வெண்பலி; ண்ம் - வெண்மாலை; ண்ய் – மண்யாது; ண்வ் – மண்வலிது; ன்க் – புன்கண்; ன்ச் – புன்செய்; ன்ஞ் – பொன்ஞான்; ன்ப் – பொன்பெரிது; ன்ம் – பொன்மலர்; ன்ய் – பொன்யாது; ன்வ் – பொன்வலிது.

ய், ர், ழ் ஆகியன க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய, ங வுடன் மயங்கும். (எ-டு): ய்க் – வேய்கடிது; ய்ச் – வேய்சிறிது; ய்த் – வேய்தீது; ய்ப் – வேய்பெரிது; ய்ஞ் – வேய் ஞான்றது; ய்ந் – வேய் நீண்டது; ய்ம் – வேய் மாண்டது; ய்வ் – வேய்வலிது; ய்ய் – வேய் யாது; ய்ங் – வேய்ஙனம்; ர்க் – வேர்கடிது; ர்ச் – வேர்சிறிது; ர்த் – வேர்தீது; ர்ப் – வேர்பெரிது; ர்ஞ் – வேர்ஞான்றது; ர்ந் - வேர்நீண்டது; ர்ம் – வேர்மாண்டது; ர்வ் – வேர்வலிது; ர்ய் – வேர்யாது; ர்ங் – வேர்ஙனம்; ழ்க் – வீழ்கடிது; ழ்ச் – வீழ்சிறிது; ழ்த் – வீழ்தீது; ழ்ப் – வீழ்பெரிது; ழ்ஞ் – வீழ்ஞான்றது; ழ்ந் – வீழ்நீண்டது; ழ்ம் - வீழ்மாண்டது; ழ்வ் – வீழ்வலிது; ழ்ய் – வீழ்யாது; ழ்ங் – வீழ்ஙனம்.

ஈரொற்று உடனிலை: மொழியிடையில் மூன்று மெய்கள் மயங்கும் நிலையையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ய, ர, ழ என்னும் மெய்களையடுத்து க, ச, த, ப, ங, ஞ, ந, ம சேர்ந்து ஈறொற்றாக நிற்கும். ஏனைய இடங்களில் ஈரொற்றுகள் இணைந்து நிற்கும் நிலை இல்லை. இவற்றுள் ரகரமும் ழகரமும் குறிலிணைகள் அல்லது நெட்டெழுத்தை அடுத்தே ஈரொற்றாக அமையும். பார்க்க, வாழ்க்கை என நெடிலையடுத்தே ரகர ழகரங்கள் மெய்யெழுத்துக ளாக வந்தன. (எ-டு): ய்க்க் – வேய்க்குறை; ய்ச்ச் – வேய்ச்சிறை; ய்த்த் – வேய்த்தலை; ய்ப்ப் – வேய்ப் புறம்; ய்ங்க் – வேய்ங்குறை; ய்ஞ்ச் – வேய்ஞ்சிறை; ய்ந்த் – வேய்ந்தலை; ய்ம்ப் – வேய்ம்புறம்; ர்க்க் – வேர்க்குறை; ர்ச்ச் – வேர்ச்சிறை; ர்த்த் – வேர்த் தலை; ர்ப்ப் – வேர்ப்புறம்; ர்ங்க் – வேர்ங்குறை; ர்ஞ்ச் – வேர்ஞ்சிறை; ர்ந்த் – நேர்ந்தனம்; ர்ம்ப் – வேர்ம்புறம்; ழ்க்க் – வீழ்க்குறை; ழ்ச்ச் – வீழ்ச் சிறை; ழ்த்த் – வீழ்த்தலை; ழ்ப்ப் – வீழ்ப்புறம்; ழ்ங்க் – வீழ்ங்குறை; ழ்ஞ்ச் வீழ்ஞ்சிறை; ழ்ந்த் – வாழ்ந்தனம்; ழ்ம்ப் – வீழ்ம்புறம்.

ரகர ழகரங்கள் தனிக்குறிலையடுத்து வருத லில்லை. உய்த்தல், எய்தல் என்பவற்றில் யகரம் உ, எ ஆகிய குறிலையடுத்து வருதல் போல ர்கரமும் ழகரமும் வருதல் இல்லை.

வடமொழிக்குரிய சில மெய்ம்மயக்கங்களைத் தமிழில் எழுதும்போது செய்ய வேண்டும் மாறுதல் களைச் சுட்டும் நன்னூலார், வீரசோழியர், முத்து வீரியர் முதலியோர் அம்மெய்களுக்கிடையே உயி ரைப் புகுத்திப் பிரிக்கும் முறையைச் சுட்டுகின்றனர். க,ச, த,ப பிற மெய்களுடன் மயங்குவதில்லை. வட மொழிமெய்களான க்ய், ச்ய் போன்றவற்றிற்கு இடையே உயிரைப் புகுத்தி க்கிய, ச்சிய எனத் தமி ழில் ஏற்கவேண்டும். வடமொழியில் ந/ன, ய, ர, ல இவற்றை இரண்டாம் மெய்யாக உடைய, தமிழ் அமைப்பில் இல்லாத மயக்கங்களுக்கிடையேயும் இகர உயிரைப் புகுத்த வேண்டும். இவ்விடங்களில் வல்லெழுத்தாக வரும் முன்னெழுத்து இரட்டித்து வரும். (எ-டு): க்ன – க்கின; –விக்கினம்; க்ய - க்கிய – வாக்கியம்; ச்ய் – ச்சிய – வாச்சியம்; ட்ய் – ட்டிய – நாட்டியம்; க்ர் – க்கிர – வக்கிரம்; ச்ர் – ச்சிர – வச்சிரம்; த்ர் – த்திர கோத்திரம்; ப்ர் - ப்பிர – சுப்பிரம்; க்ல் – க்கில – சுக்கிலம்; ம்ல் – மில – ஆமிலம்.

மகர வகரங்களில் உகரம் வரும். மகர நகரங்கள் இரண்டாம் மெய்யாக வரும்போது, முன்னெழுத்து இரட்டிப்பதில்லை. (எ-டு): த்ம – தும – பதுமம்; க்வ – க்குவ – பக்குவம்.

இரண்டாம் மெய்யான நகரத்தின் முன்னர் அக ரம் வரும். (எ-டு): த்ந் – தந் – அரதனம்.

ரகரம் பிற மெய்களுடன் மயங்கும். தமிழ் மொழியமைப்பில் இல்லாத மெய்ம்மயக்கங்களில் ரகரத்திற்குப் பின்னர் உகரம் வரும்.

(எ-டு) ர்த் – ருத்த – அருத்தம்; ர்க் – ருக்க – சருக் கம்; ர்ப் – ருப்ப – சருப்பம்: ர்ம் – ரும – தருமம்.

மொழி முதலில் வரும் மெய்மயக்கங்களையும் தமிழில் உயிர் புகுத்தி எழுதுதல் மரபு. (எ-டு): த்ய- திய – தியாகம்; ப்ர – பிர – பிரபந்தம்; க்ர – கிர- கிரமம்; க்லே – கிலே – கிலேசம்; த்வ் – துவ – துவாரம்.

பா.இரா.

**இடைநிலை மேலாண்மை:** எந்த ஒரு துறையின் அல்லது நிறுவனத்தின் அமைப்பையும் உயர் மேலாண்மை (Top Management), இடைநிலை மேலாண்மை (Middle Management), கீழ்நிலைப் பணியாளர் தொகுதி (Rank and file) என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இப்பிரிவுகளை நிருவாகப் பணியாளர் தொகுதி (Administrative Personnel), செயலாட்சிப் பணியாளர் தொகுதி (Executive Personnel), அடிமட்ட எழுத்தாளர்களின் தொகுதி (Clerical Personnel) என்றும் பிரிக்கின்றனர்.

அரசியல் தலைமை (Political Head) யிலும் நிரு வாகத்திலும் செயலர் முதல் உதவிச் செயலர் வரையில் உயர் மேலாண்மை எனவும், சார்புச் செய லரிலிருந்து கூட்டு நிறுவனங்களின் மேலாளர்கள் வரையில் இடைநிலை மேலாண்மை எனவும் சொல்லப்படுகிறது. கீழ்நிலைப் பணியாளர் தொகுதி அனைத்துச் செயல்களையும் செய்கிறது.

உயர் மேலாண்மை நிருவாகக் கொள்கைகளை வரையறுக்கிறது. இம்மேலாண்மை ஒரு துறையின் மேல்நிலை அதிகாரிகளைக் கொண்டியங்குகிறது. இவ்வுயர்நிலை மேலாண்மை அமைப்பின் உறுப்பினர் கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். இது அமைப் பின் (Organisation) மூன்று பிரிவுகளுள் மிகச் சிறிய தாகும்.

இடைநிலை மேலாண்மை பரவலானதும் பணி யாட்கள் நிறைந்ததுமாகும். வரவு செலவுத் திட்ட மிடலையும் கட்டுப்பாடு மேற்கொள்வதையும் ஆட்சித்துறைத் தலைமையுடன் இணைத்ததால் தான், இன்றைய இடைநிலை மேலாண்மை தோன்ற லாயிற்று. இது படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் (Department) வளர்ந்துவிட்டது. ஒரு நிறுவனத்தின் அல்லது துறையின் கொள்கை உருவாக்கும் பணியைச் செய்யும் மேற்பகுதியையும் கீழ்நிலைப் பணியாளர்

அலுவலர்களையும் இணைக்கும் அமைப்பாய் இடைநிலை மேலாண்மை அமைந்துள்ளது. இடைநிலை மேலாண்மையாளர் நிருவாகத்திற்குத் தலைவராவார். இவர்தாம் நிருவாகத்திற்குப் பொறுப்பாளி. நிருவாகத்தை வெற்றியுற நடத்துவது இவர்தம் பொறுப்பு.

**இடைநிலை நிருவாகத்தின் அதிகாரிகள்:** இடைநிலை நிருவாகத்தில் பின்வருவோர் முக்கியமாக அடங்குவர்.

1. துறைக் கிளைகளின் அதிகாரிகள் (Under Secretaries)
2. பிரிவு அதிகாரிகள் (Section Officers)
3. துணையானதும் இணைந்ததுமான அலுவலகங் கங்களின் தலைவர்கள் (Heads of Atached and Subordinate Officers)
4. களநிறுவன அதிகாரிகள் (Officers of Field Organisation)
5. துணைத் துறைத் தலைவர்கள் (Heads of Departmental Auxiliary Agencies)
6. வரவு-செலவுத் திட்டமும் கணக்கும் பற்றிய அதிகாரிகள் (Budget and Accounting Officers)
7. பொருள்கள் வாங்கும் அதிகாரிகள் (Purchasing Officers)
8. செயல்முறை வல்லுநர்கள் (Procedure Experts)
9. பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகள் (Public Relation Officers)
10. தொடர்பு அதிகாரிகள்
11. கூட்டு நிறுவனங்களின் மேலாளர்கள் (Managers of Public Corporations).

இடைநிலை மேலாண்மையைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோருள் பெரும்பாலானவர்கள் பொதுப்பணித் தேர்வுக் குழுவின் மூலம் அரசின் ஆட்சி விதிகளுக்கொப்பத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அடிமட்டத்தில் இருப்போர் (Rank and file) இடைநிலை மேலாண்மை அமைப்பிற்குப் பதவி உயர்வு பெறுகின்றனர்.

**இடைநிலை மேலாண்மையின் பணிகள்(Functions):** நிருவாகம் நடத்த இறுதி முடிவுகளை எடுப்பதும் முக்கியமான சிக்கல்களை முடிவு செய்வதும் நிருவாகத்தின் உயர் நிலை அமைப்பின் பணியாகும். இந்த உயர்நிலை அமைப்புச் செயல்களை விடுத்து நிருவாகம் செய்வது இடைநிலை மேலாண்மையாகும். ஒரு துறையின் மேலாண்மையையும் கீழ்நிலைச் செயற்பாட்டு அலுவலர்களையும் இணைக்கும் இந்த இடைநிலை மேலாண்மை, தன் பணிகளில் இரு முக்கிய தன்மைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, உயர் மேலாண்மையிலிருந்து வரும் கொள்கைகளையும் திட்டங்களையும் ஆணைகளையும் செயலாக்கம் செய்வது இடைநிலை மேலாண்மை ஆகும். இடைநிலை மேலாண்மை அதிகாரிகள் இவற்றைச் செயலாக்கும்போது தமக்களிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டுத் தேவையான கட்டளைகளையும் ஆணைகளையும் சுற்றறிக்கைகளையும் பிறப்பித்து, அவற்றின் மூலம் தம் ஆளுகைக்குட்பட்ட செயற்பாட்டு அலுவலர்களிடமிருந்து நிருவாக வேலைகளை வாங்குகின்றனர். இரண்டாவதாக, மேற்கூறிய செயல்களைச் செய்வதில் தக்க மேற்பார்வை செய்வது அவர்களுடைய பணியாகும்.

நிருவாகக் கொள்கைகளை உருவாக்குவது உயர் மேலாண்மையானாலும், உருவாக்கிய கொள்கைகள் தெளிவற்றுக் காணப்படும்போது அவைகளுக்குத் தக்க பொருள் வரையறை, செயல் வடிவம் ஆகியவைகளைத் தம் அதிகார எல்லைக்குட்பட்டு இடைநிலை மேலாண்மை அதிகாரிகள் கொடுக்கிறார்கள். இச்செயலால் கொள்கைத் தீர்மானிப்புச் செயலில் இவர்கள் மறைமுகமாகச் செல்வாக்கைப் பெற முடிகிறது.

அமைப்பின் கொள்கை யாதெனில் இயன்றவரை அனைத்துக் காரியங்களும் இடைமட்டத்தில் தீர்க்கப்படவேண்டும் என்பதே ஆகும். எனவே, சட்டம், ஒழுங்குமுறை ஆகியவற்றின் அடிப்படையில் இறுதியான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட பல முடிவுகளுக்கு இடைநிலை மேலாண்மை பொறுப்பாகிறது. அத்துடன் கீழ்நிலைப் பணியாளர்களுடனும் (Rank and file) இடைநிலை மேலாண்மையுடனும் பொதுமக்கள் அதிகத் தொடர்பு கொள்கின்றனர். இந்த இடைநிலை மேலாண்மையில்தான் அலுவலர்கள் பல முடிவுகளைச் செய்கின்றனர்.

கண்காணித்தல் (Supervision) இடைநிலை மேலாண்மையின் மிக முக்கியப் பணியாகும். துறையிலோ நிறுவனத்திலோ பொதுக் கண்காணிப்பு உயர் மேலாண்மையின் பணியாக இருந்தபோதிலும், இடைநிலை மேலாண்மையானது, அமைப்பின் கீழ் மட்டத்தில் கவனமாகக் கண்காணிக்கிறது.

இடைநிலை மேலாண்மை அதிகாரிகள் அன்றாடம் தோன்றும் நிருவாகச் சிக்கல்களை அலசி ஆராய்ந்து கூடுமானவரை பெரும்பாலானவற்றில் தாமே முடிவுகளை எடுக்கின்றனர். தமக்கு மேல் நிலையிலுள்ள அதிகாரிகளின் கவனத்திற்குத் தேவையான மிக முக்கிய செய்திகளையும் அனுப்புகின்றனர்.

எனவே, பெரும்பாலான சிக்கல்களில் முடிவெடுப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இம் மேலாண்மை, பணியாளர்களின் ஒழுங்குணர்வைப் பாதுகாக்கிறது. அதனுடன் இது, பணியாளர்களின் ஊக்குவிப்புகள், விருப்பங்கள், காரணங்கள் ஆகியவைகளை அறிந்து, கீழ்மட்டத்திற்கு வழிகாட்டல்களைச் செய்கின்றது.

இம்மேலாண்மையில்தான் பொதுச் சேவையின் புனிதத் தன்மை வெளிப்படுகிறது. இங்குத்தான் அச்சேவையின் உறுதியும் ஊக்கமும் புகழும் உருவாகின்றன. ஆக, இம் மேலாண்மையைப் பொறுத்த மட்டில் இது ஒரு வாழ்க்கைத் தொழில் சான்ற பணியாகும். பெருமளவு உயர் மேலாண்மையின் பயிற்சிக் களமாகவும் இடைநிலை மேலாண்மை இருக்கிறது.

ஆக, இடைநிலை மேலாண்மை என்பது, ஒவ்வோர் அமைப்பிலும் ஆணிவேராக உள்ளது. இதனால் நிருவாகத் துறை தன் குறிக்கோள், நிருவாகச் சக்தி ஆகியவற்றுக்கு ஒப்ப நிமிர்ந்தும் நெளிந்தும் வளைந்தும் நல்லமுறையில் செயற்பட முடிகிறது. இம்மேலாண்மை அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் அளிக்கும் பங்கை உயர்த்தும் வகையில் இதை அமைத்துக் காப்பது சிறப்பாகும். சி.சி.

துணை நூல்கள்:

செயபாலன். ந. & சோசப். எசு., பொதுத்துறை ஆட்சியியல், பண்ணைப் பதிப்பகம், மதுரை, 1983.

இரமண ராவ். பி.வி., பொதுத்துறை நிருவாகம் (Public Administration), நவோதயா பிரிண்டர்சு, குண்டூர், 1974.

சச்சிதேவா & குப்தா, பொதுத்துறை நிருவாகம் (Public Administration), அசந்தபிரகாசம், தில்லி, 1977.

விட்டுணு பகவான்(Vishnu Bhahavan)&வித்தியபூசன், பொதுத்துறை ஆட்சி (Public Administration), எசு. சாந்தன் கம்பெனி, இராம் நகர், தில்லி, 1983.

**இடைப்பாத்தியவழக்கு**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் எதிராக, வேறு மூன்றாம் ஆளிடமிருந்து வரவேண்டிய கடன் அல்லது பணம் குறித்தோ, அந்த மூன்றாம் ஆளின் கைவசமுள்ள அசையும் அல்லது அசையாத பொருள் குறித்தோ, தமக்குத்தான் பாத்தியப்பட்டது என்று மாறுபட்ட உரிமை கொண்டாடினால், மேற்படி மூன்றாமவர் அந்த மாறுபட்ட உரிமையாளர்கள் (Rival Claimants) மீது யார் உண்மையான உரிமையாளர் என்று முடிவு காணும் நோக்கத்துடன், நீதி மன்றத்தில் உரிமை இயல் வழக்குத் தொடர உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு (Civil Procedure Code) பிரிவு 88 வழி செய்கிறது, அவ்வாறான வழக்கு 'இடைப்பாத்திய வழக்கு' (Inter Pleader Suit) என்று கூறப்படுகிறது.

(2) அவ்வாறு வழக்குத் தொடர்பவர் வாதி என்றும், வழக்குத் தொடரப்படும் மாறுபட்ட உரிமையாளர்கள் பிரதிவாதிகள் என்றும் சொல்லப்படுவார்கள்.

(3) எந்த நிலையில் அவ்வாறான வழக்கைத் தொடரலாம், அந்த வழக்குச் சம்பந்தமான சிறப்புக் குறிப்புகள் யாவை என்பன, அவ்வுரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு 88-ஆம் பிரிவிலும், அத்தொகுப்பின் கட்டளை 35-இல் அடங்கியுள்ள 1 முதல் 6 விதிகளிலும் காணப்படுகின்றன.

(4) தன் கைவசம் உள்ள பொருளைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் ஏற்படும் செலவைக் கேட்கும் உரிமையைத் தவிர, வழக்கு சம்பந்தப்பட்ட பணத்திலோ, பொருள் மீதோ வாதி எவ்வித உரிமையும் கொண்டாடக் கூடாது. பிரதிவாதிகளுள் யார் உண்மையான உரிமையாளர் என்று வாதிக்குத் தெரியாதிருக்க வேண்டும். அவ்வாறான வழக்குத் தொடர்வதில் வாதிக்குப் பிரதிவாதிகளில் எவருடனும் கூட்டு (Collusion) இருக்கக்கூடாது. பிரதிவாதிகளுள் யார் உண்மையான உரிமையாளர் என்று நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுபவரிடம், வழக்குத் தொடர்புடைய பணத்தைச் செலுத்தவும், பொருளை ஒப்புவித்து விடவும் வாதி தயாராக இருக்க வேண்டும்.

(5) அவ்வாறான வழக்கு நடைபெறுவதில் வாதி தீவிரப்பங்கு எடுத்துக் கொள்ளமாட்டார். ஒரு பார்வையாளர் (Observer) போன்று அவரது நடவடிக்கை இருக்கும். பிரதிவாதிகள்தாம் தங்களுக்குள் யார் உண்மையான உரிமையாளர் என்பதை மெய்ப்பித்தற்கு முயற்சி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இறுதியாக நீதிமன்றத்தின் முடிவையொட்டி வாதி நடந்து கொள்ள வேண்டும்.

**இடைமருதூர்**: சோழ நாட்டில் காவிரியின் தென்பால் விளங்கும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது கும்பகோணத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையிலமைந்துள்ள புகைவண்டி நிலையம் அமைந்த ஊராகும். இவ்விரு

நகரங்களிருந்தும் பேருந்தில் சென்றும் இதனை அடையலாம். இடைமருது எனவும் சொல்லப்படும் இவ்வூருக்கு மத்தியார்ச்சுனம் என்னுமொரு வட மொழிப் பெயரும் உண்டு. ஆந்திரமாநிலத்திலுள்ள சீர்சைலம் எனப்படும் மல்லிகார்ச்சுனத்திற்கும் நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள புடார்ச்சுனத்திற்கும் இடையில் இருப்பதால் இப்பெயர் பெற்றது என்று கூறப்படும். இவ்வூர் இறைவன் பெயர் மகாலிங்கேசுவரர். இவர் மருத வாணர் எனவும் அழைக்கப்படுவார். இறைவி பெயர் பெருநலமாமுலை நாயகி; நன்முலைநாயகி என்றும் வழங்கப் பெறும். தீர்த்தம் காவிரியாகும். மருது தல மரமாகும். தேவார முதலிகள் மூவரும் இந்தல இறைவனைப் பதிகங்கள் பாடிப் பரவியுள்ளனர் மாணிக்கவாசகரும் தம் திருவாசகத்தில் இத்தலத் திறைவனைப் பாடிப் போற்றியுள்ளார். கருவூர்த் தேவர் தம் திருவிசைப்பாவில் இத்தலத்தினைப் பாடியுள்ளார், பட்டினத்தடிகள் பாடியுள்ள திரு விடை மருதூர் மும்மணிக் கோவை பதினோராந்திரு முறையில் இடம் பெற்றுள்ளது. இங்குள்ள திருக் கோயில் மிகவும் பெரியது; பெருமை வாய்ந்தது. இத் திருக்கோயில் திருவாவடுதுறைத் திருமடத்தின் அரு ளாட்சிக்கு உட்பட்டுத் திகழ்கிறது. தைப்பூச நாளன்று இங்குள்ள காவிரித்துறையில் நீராடுவது புனிதமானதாகக் கருதப்படுகிறது. இதனை ஞானசம் பந்தர், 'பொருந்திய தைப்பூச மாடி உலகம் பொலி வெய்த' என்று குறிப்பிட்டுள்ளார்.

வரகுணபாண்டியன் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பிரமகத்திதோடம் நீங்கப்பெற்றான் என்பதும், உருத்திர உமையம்மை, விநாயகர், முருகன், பிரமன், திருமால் ஆகியோரும் இங்கு வழிபட்டனர் என்பதும் கூறப்படுகின்றன. கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர் இவ்வூருக்கு ஒரு தலபுராணம் பாடியுள்ளார். பட்டினத்தாரும் பத்திரகிரியாரும் இத்தலத்திலிருந்து வழி பட்டமையால், அவர்களுக்கு முறையே கிழக்கு மேற்கு வாயில்களில் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தலம் – மகாலிங்கத்தலம்– ஒரு பெருங்கோயிலாகவும், அதனுள் விளங்கும் ஏனைய தெய்வச் சந்நிதிகள் போல, தில்லை, ஆலங் குடி, சூரியனார் கோயில், வலஞ்சுழி, சுவாமிமலை, சீர்காழி, சேய்ஞலூர் ஆகிய தலங்களை முறையே நடராசர், ஆலமர் செல்வன், நவக்கோள்,விநாயகர், முருகன், வைரவர், சண்டேசர் ஆகியோருக்குரிய சந்நிதிகளாகவும் கருதிப் போற்றும் மரபு இருந்து வருகிறது.

**இடை மெய் இணை** என்பது இரு உச்சங் களுக்கிடையில் (Peaks) அமையும் இரு மெய்களைக் (Consonant cluster) குறிக்கும். மொழியில் சொற் கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளைக் கொண்டு அமைகின்றன. ஓர் அசையில் ஓர் உயிரும் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மெய்களும் இருக்கும். மெய்கள் இன்றியும் அசை அமையும். ஆனால், உயிரெழுத்துகள் இன்றி அசை அமையாது. ஓர் அசையில் ஓர் உயிர் மட்டுமே இருக்கும். இரண்டு உயிர்கள் வரின் இரண்டு அசையாகக் கொள்ளப்படும். ஆகவே, அசையின் அமைப்பு உயிர் (ஆ), மெய் + உயிர் + மெய் (வான்), உயிர் + மெய் (ஆல்), மெய் + உயிர் (மா) என நான்கு வகைப்படும். வாழ்க்கை, ஆய்ச்சி போன்ற சில சொற்களில் மெய் + உயிர் + மெய் + மெய் என மெய் இணைகளும் அசையில் வருதல் காணலாம். இவ்வகை அசைகள் வெவ்வேறு வகையில் இணைந்து (Different Combination) சொற்களில் வரும். ஆர்வம், ஆர் + வம் (உயிர் + மெய், மெய் + உயிர் + மெய்), அரசர், அ + ர + சர் (உயிர், மெய் + உயிர், மெய் + உயிர் + மெய்), வாழ்வு (மெய் + உயிர் + மெய், மெய் + உயிர்) போன்று அசைகள் சொற்களில் அமையும். மெய் + உயிர் + மெய் என்றும் அமைப்புக் கொண்ட அசைகளில் அசையின் தொடக்கத்தில் உள்ள மெய் தொடக்கம் (Onset) எனவும், இடையில் உள்ள உயிர் உச்சம் (Peak) எனவும், இறுதியில் உள்ள மெய் கடை (Coda) எனவும் சொல்லப்படும். அசைகள் தொடக்கம் இன்றியும் (Zero onset) கடை இன்றியும் (Zero coda) வருதலையும் காணலாம். மேலே கண்ட நான்கு வகை அசைகளில் முதல்வகை அசையும் மூன்றாம் வகை அசையும் தொடக்கம் இன்றியும், நன்காம் வகை அசை கடை இன்றியும் உள்ளமை தெளிவு. இரண்டு உச்சங்களுக்கிடையில் தோன்றும் மெய் இணை, 'இடை மெய் இணை' (Interlude) எனப்படும். அதாவது, முதல் அசையின் கடை மெய்யும், இரண்டாம் அசையின் தொடக்க மெய் யும் தெளிவாகப் பிரிக்க இயலாதபடி இணைந்து 'இடை மெய் இணை' உண்டாகிறது. தமிழில் துன்பம், வட்டம் போன்ற சொற்களில் இடை மெய் இணை வரக் காணலாம்.இவற்றை உயிர், மெய் எனத் தனித் தனியாகப் பிரிக்கின், த் + உ + ன் + ப் + அ + ம் எனவும், வ் + அ + ட் + ட் + அ + ம் எனவும் பிரிபடும். ன் + ப், ட் + ட் இணைகள் இடை மெய் இணைகள். இவ்விணைகளைத் தொடக்கம் என்றோ கடை என்றோ கூற இயலாது. முதல் அசை உயிரின் கடை என்றோ அடுத்த அசை உயிரின் தொடக்கம் என்றோ பிரித்துக் கூற இயலாதபடி இவை இணைந் துள்ளன. ஆகவே, அமைப்பில் இவை முதல் அசை, இரண்டாம் அசை ஆகிய இரண்டிற்கும் உரியதாய் அமைகின்றன.

எம்.சு.

**இடையன் சேந்தன் கொற்றனார்** சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். சேந்தன் கொற்றனார் என்னும் பெயரைக் காணும்போது இவர் இயற்பெயர் கொற்றன் என்றும், தந்தையார் பெயர் சேந்தன் என்றும் அறிதல் கூடும். இடையன் என்பது இவரது மரபினைச் சுட்டுவதாகும். இவர் பெயர் இடையன் செங்கொற்றனார் என்றும் காணப்படுகிறது. இவர் பாடியது அகநானூற்றில் 375-ஆம் பாடலாகவுள்ளது. பாலைத்திணையில் தலைமகள் கூற்றாக அமைந்த இப்பாடலில் 'கல்லா இளையர் கலித்த கவலைக், கணநரி இனனொடு குழிஇ நிணன் அருந்தும்' என்று பாலை நிலவழியின் கொடுமையைக் காட்டியுள்ளார். மேலும், இப்பாட லில் சோழன் இளம்பெருஞ்சென்னி பாழி என்னும் அரணை அழித்து வம்பவடுகரை வென்ற வரலாற்றுச் செய்தியினைக் குறிப்பிட்டுள்ளார்.

**இடையன் நெடுங்கீரனார்** சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் கீரன். இடையர் மரபினைச் சேர்ந்தவர். கீரன் என்னும் பெயர்த் தொடர்புடைய சங்கப் புல வர்கள் இருபத்து நால்வர் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. அவர்களுள் குறுங்கீரனார் என்ற பெய ரில் ஒருவர் இருந்ததால், இவர் நெடுங்கீரனார் என அழைக்கப்பட்டார் போலும். நெடுங்கீரனார் என் பதே இயற்பெயர் என்ற கருத்தும் உண்டு. இவர் பாடியுள்ள பாட்டொன்று அகநானூற்றில் (166) காணப்படுகிறது. மருதத் திணையிலமைந்த இப் பாடலில் பரத்தையோடு புனலாடிப் பின்னர்த் தலைவிபால் வந்த தலைவன், அவள் ஊடல் தணிக்க வேண்டி, யான் பரத்தையொடு புனலாடியிருந்தால், 'உயர்பலிபெறூஉம் உருகெழு தெய்வம்' என்னை அணங்குக என்று சூளுற்றதனை அறிந்த பரத்தை, 'காவிரியில் நேற்று நம்மொடு ஆடியவர் யாரோ' என்று சினந்து தம் அருகிலுள்ளார்பால் கூறுவது நயமிக்கதாக உள்ளது.

**இடையார்ப்பாக்கம்** வரலாற்றுச் சிறப்பு மிக்க சிற்றூர். இது சென்னையிலிருந்து 55 கி.மீ. தொலைவில் திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ளது. இவ்வூரிலுள்ள இரண்டாம் இராசாதிராச னின் கல்வெட்டு இதனை 'இடையாற்றுப்பாக்கம்' எனச் சுட்டுகிறது. இங்கு, கி.பி.12,13-ஆம் நூற்றாண் டைச் சார்ந்த துர்க்கை, நந்தி, திருமால், பைரவர், தட்சிணாமூர்த்தி, சூரியன் முதலான உடைந்த சிற் பங்கள் பல காணப்படுகின்றன. சிவன் மேடு என்னும் இடத்திற்கு அருகில் உள்ள வயலில் சப்தமாதர் கோயில் ஒன்றுள்ளது. இங்குள்ள சப்தமாதர்களின் கீழ் வாகனங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்வூருக்கு மேற்கே ஏரிக்கரையில் கோயில் ஒன்றுள்ளது. இது பாழடைந்துள்ளது. இதன் விமானம் தூங்கானை மாட வடிவில் இரு தளத்தைக் கொண்டுள்ளது. முதலாம் குலோத்துங்க சோழனது (கி.பி.1070-1120) காலத்தில் இக்கோயில் கட்டப் பட்டதாகத் தெரிகிறது. இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள. இறைவர் 'திருப்பாதகாடுடை யார்' என அழைக்கப்படுகிறார். இக்கோயிலைச் சந்திரசேகரன் ரவி என்ற சோழேந்திர சிம்ம ஆசாரி யார் கட்டினார். சோழர் காலப் பெருமையை உணர்த்திக் கொண்டிருப்பது இவ்வூர் என்பது குறிப் பிடத்தக்கது. இராசவித்தியாதரச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயராலும் இது முன்பு குறிக்கப்பட்டது. இவ்வூர்க் கோயில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பாதுகாப்பில் உள்ளது.

**இடையாற்று நாடு** பழந்தமிழ் நாட்டு அரசியல் பிரிவுகளுள் ஒன்று. இந்நாட்டின் தலைமை யிடம் இலால்குடிக்கு அருகில் உள்ள இடையாற்றூர் ஆகும். முத்தரையர் நாட்டின் ஒரு பகுதியான விழா நாட்டின் மேற்குப் பகுதியில், கி.பி. 8,9-ஆம் நூற் றாண்டுகளில் இடையாற்றுநாடு அமைந்திருந்தது. இந்நாடு காவிரியின் வடகரையில் கொள்ளிடத்தின் இருமருங்கும் உள்ள ஊர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இதில் இன்றைய திருச்சி மாவட் டத்திலுள்ள இலால்குடி வட்டத்தின் பெரும்பகுதி அடங்கியிருந்தது. இடையாற்று நாடு தென்கரை (கொள்ளிடத்தின் தென்பகுதியும் காவிரியின் வட கரையும்), வடகரை என இரு பெரும்பிரிவுகளைக் கொண்டிருந்தது. தென்கரை நாட்டில் இலால்குடி வட்டத்தில் அடங்கிய கூகூர், பெருவங்கூர், மும்முடிச் சோழச் சதுர்வேதிமங்கலம் முதலான விழா நாட்டுப் பகுதிகள் இடையாற்று நாட்டில் அடங்கியிருந்தன.

வடகரை இடையாற்று நாட்டில் இடையாற்று மங்கலம், தாளக்குடி, சிறுதையூர், கவிர போர்க் கட்டியூர், இருக்கை, சவனந்திராதபுரம், திருமண மேடு, முட்டியூர், நன்னிமங்கலம், மும்முடி சோழமங் கலம், சாத்தமங்கலம்,கீழன்பில், சென்னிவாய்க்கால், பெரியவர்சீலி முதலிய ஊர்களும் அடங்கியிருந்தன. இடையாற்று நாடு முத்தரையர் நாட்டின் மேல் பகுதி யில் (மீகூறு) இருந்த சிறப்பு மிக்க நாடு. ம.இரா.

**இடையாறு** பாடல் பெற்ற திருத்தலம். தென்னார்க்காடு மாவட்டம், திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வடமேற்கே ஏறத்தாழ ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சுகர் இத்தலத்தை வணங்கியதாகக் கூறப்படுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார்

இத்தலத்திற்குச் சென்று பாடல்கள் பாடியுள்ளார். இங்குச் சிவன் கோயில் ஒன்றுள்ளது. இறைவனின் பெயர் இடையாற்றீசர். அம்மையின் பெயர் சிற்றிடை நாயகி. இக்கோயிலின் புனிததீர்த்தம் பெண்ணையாறு.

இடையாறு[2] சேலம் மாவட்டம் வேலூருக்கு அருகில் இடையாறு ஒன்று உள்ளது. இது நன்செய் இடையாறு எனச் சொல்லப்பெறுகிறது. இங்குச் சிவன்கோயில் ஒன்றும் மாரியம்மன் கோயில் ஒன்றும் உள்ளன. இங்குள்ள இராசாகோயில் என்ற கவுண்டர்களின் குலதெய்வக் கோயிலில் இராச வாய்க்கால் வெட்டிய வேட்டுவ மாவீரன் அல்லாளன் இம்முடித் திருமலை இளையானுக்கு உருவச்சிலை வைக்கப் பட்டுள்ளது. இது காவிரியினின்றும் வெட்டப்பட்ட முதல் கால்வாய் என்பது குறிப்பிடத்தக்கது. க.ம.

**இடையெழு வள்ளல்கள்** என்பது, தமிழ்ப் புலவர்கள் வகுத்துக் கூறியுள்ள மூவகை வள்ளல்களுள் இடைப்பட்ட ஏழு வள்ளல்களைக் குறிக்கிறது. தம்மிடமுள்ளவற்றை வரையாது வழங்கும் வண்மையுடையோர் வள்ளல் எனப்படுவர். சங்க காலத்தில் வாழ்ந்தவர்களும் இதிகாச புராணங்களில் இடம்பெற்றுள்ளவர்களுமாகிய பெருங்கொடையாளிகள் 21 பேர்களைத் தேர்ந்து அவர்களைத் தலையெழு வள்ளல், இடையெழுவள்ளல், கடையெழு வள்ளல் என்று வகைப்படுத்திக் கூறும் வழக்கு, தமிழ் இலக்கியத்தில் பண்டுதொட்டே இருந்து வருகிறது. தலை, இடை, கடை என்று பிரித்துச் சுட்டுவது அவர்களின் வள்ளன்மை நோக்கியன்று எனவும் கால அடைவு கருதியதாகலாம் எனவும் கூறப்படுகிறது. இம்மூவகையினருள், தலை, இடை ஆகிய இரு வகையினரும் இதிகாச புராண மாந்தர்களாகக் காணப்படுகின்றனர். கடையெழுவள்ளல்கள் சங்க காலத்தில் வாழ்ந்த அரசரும் வீரருமாகிய கொடையாளிகளாவர்.

இடையெழு வள்ளல்கள் அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், கன்னன், சந்தன் ஆகியோராவர். இப்பெயர்களுள் சில பாரதத்தில் இடம்பெற்றுள்ளன. கன்னன், பாரதக் கதை மாந்தருள் ஒருவனான கர்ணனைக் குறிக்கும். அவன் தான் இயற்றி ஈட்டிய அறத்தின் பயனையும் பிறர்க்கு உவந்து வழங்கும் பெருவீரனாகத் திகழ்ந்தான். ஆனால், சிசுபாலன் போன்றோரின் கொடைத் தன்மையை அறிய இயலவில்லை. அக்குரனின் கொடை பற்றியும் அறிய முடியவில்லை.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய கொடைப் பண்பினை விளக்குங்கால், குமட்டூர்க் கண்ணனார் அக்குரனின் கொடைப் பண்பினை உவமையாக்கி, 'அக்குரன் அனைய கைவண்மையையே' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார் (பதி.14-7). ''அக்குரன் பாரதத்தில் கூறப்படுபவனும் தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய அக்குரன் போலும்; கர்ணன் என்று நினைத்தற்கும் இடமுண்டு; ஆதாரம் கிடைக்கவில்லை' என்று டாக்டர்.உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பில் அக்குரனைத் தலையெழுவள்ளல்களுள் ஒருவனாகச் சுட்டியிருப்பது ஏற்புடையதாகத் தெரியவில்லை. தலையெழுவள்ளல்கள் பெயரில் அக்குரன் என்னும் பெயர் இடம்பெறவில்லை.

**இடைவினை**: இது சமூக இடைவினையால் அமைந்ததாகும். இது இருவருக்கு அல்லது இருவருக்கு மேற்பட்ட மக்களுக்கிடையில் நிகழக் கூடிய தொடர்பாகும். மனிதனின் நடத்தை அல்லது செயல் மற்றவர்களை நோக்கியதாக இருக்கிறது. இந்நடத்தை அல்லது செயல் தனக்கென ஒரு விளக்கத்தைக் கொண்டு மற்றவர்களின்மேல் தன் செல்வாக்கைச் செலுத்தி, மற்றவர்களைச் செயற்படத் தூண்டும் பொழுது இவ்விடைவினை (Interaction) சமூகத்தன்மை பெறுகிறது. ஒருவர் செயலை மற்றவர் தெரிந்துகொண்டு அதற்கு மறுவினை செய்வதன் மூலம் இருவருக்குமிடையில் இடைவினை நிகழ்கிறது.

குறியீட்டு இடைவினைக் கோட்பாடு: சமூக இடைவினைக் கோட்பாட்டின் சிறந்த விளக்கம், குறியீட்டு இடைவினை (Symbolic Interaction)யாகும். இதைப்பற்றிய கருத்தை மிகுதியாக ஆய்ந்தவர்கள் சார்லசு ஆர்ட்டன் கூலேயும் (Charles Horton Cooley) சியார்சு எர்பெர்ட்டு மீடும் (George Herbert Mead) ஆவர். ஆனால் முதன்முதலாகக் குறியீட்டு இடை வினைக் கருத்தைக் குறிப்பிட்டவர் பிளம்பர் என்பவராவார். பிற சமூகவியல் அறிஞர்கள் இதைச் சமூக இடைவினை என்று குறிப்பிட்டனர்.

மக்கள் குறியீடுகளால் மிகுதியாகத் தங்களுக்கிடையில் இடைவினை புரிகின்றனர். அவர்கள் குறிப்பாகச் சைகைகள், அங்க அசைவுகள், எழுத்து, வாய்ச்சொல் ஆகியவை மூலமாக இடைவினை புரிகின்றனர். பொதுவாகச் சொற்களுக்கு இயல்பான பொருள் எதுவும் இல்லை. சொல் உள்ளிருந்து எழும் ஒருவகை ஒலியாகும். இவ்வொலிக்கு மனிதர்கள் தங்களுக்குள் ஒரு பொதுவான விளக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும்பொழுது இந்த ஒலி புது விளக்கத்தைப் பெறுகிறது. ஆகவே வா, போ, நட, பார், கேள் போன்ற ஒலிகள் அதற்குரிய விளக்கத்தைப் பெற்ற குறியீடுகளாகின்றன. சில செயல்களில்

சொற்களற்ற சில குறியீடுகள் சில குறிப்பிட்ட பொருளை உணர்த்துகின்றன. குறிப்பாகச் சாலை விதிகளைப் பின்பற்றப் பல குறியீடுகள், கைகாட்டிகள் ஆகியவை குறிப்பிட்ட விளக்கங்களைக் கொடுக்கின்றன. அதன்படி நாம் மறுவினை செய்கிறோம்.

கூலே, 'தான்' (Self) என்பது மற்றவர்களுடன் இடைவினை புரியும் பொழுது வளர்ச்சியடைகிறது என்று கூறுகிறார். சியார்சு எர்பர்ட்டு மீடு மனிதனை ஒரு பொருளாகவும் ஆளப்படுபவனாகவும் ஆளிடைவினை அமைப்பில் சித்திரிக்கிறார். மீடு கூலேயின் கூற்றுக்கு ஒருபடி மேலே சென்று மனிதனின் ஆளுமை வளர்ச்சி என்பது, மனிதன் பொருளாகவும் ஆளப்படுபவனாகவும் இருக்கும் இரு தன்மைகளுக்கிடையில் நடக்கக் கூடிய செயலின் விளைவாகும் என்று கருதுகிறார். மீடின் மற்றுமொரு முக்கியமான கருத்துப்படி, மனிதன் குறியீட்டு இடைவினையின் மூலம் பொதுவான குறியீடுகளை உருவாக்குகிறான். அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட குறியீடு எல்லோருக்கும் பொதுவாக விளங்கக் கூடிய ஒன்றாக மாறுவதால், அது பொதுமைப்படுகிறது. இதுவே சமூகமயமாதலின் அடிப்படையாகும். குறியீட்டு இடைவினையில் சொற்களைச் சேர்க்கும் பொழுது நெருக்கம் உண்டாகிறது. இடைவினை ஒழுங்குபடுத்தப்படும்பொழுது அது மனிதர்களிடையே கட்டுப்பாட்டை வளர்க்கிறது. சில நேரங்களில் இக்கட்டுப்பாடு மிகுதியாக இருக்கும்பொழுது மனிதன் அதை மீறிச் செல்ல முயற்சி செய்கிறான். இடைவினை சிறப்பானதாக நிகழவேண்டுமானால், தாமசு (W.I. Thomas)என்ற சமூகவியல் அறிஞர் கூறுவது போலச் சூழ்நிலையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்து கொள்ளாவிட்டால் இடைவினையில் குழப்பமேற்பட்டு முரண்பாடுகள் எழக்கூடும்.

இடைவினை ஆய்வு முறை: ஒரு சமூகச் சூழ்நிலையை விளக்குவதற்கும் அதை நன்றாக விளங்கிக் கொண்டு செயற்படுவதற்கும் கையாளக்கூடிய விதிமுறைகள் பற்றியது 'இடைவினை ஆய்வுமுறை' (Ethnomethodology) ஆகும். அதாவது, எவ்வாறு விளக்கங்கள் சமூக இடைவினையின்போது பரிமாற்றிக்கொள்ளப்படுகின்றன என்பது பற்றி விளக்குவதாகும். மனிதர்கள் ஒரு செயலுக்கோ சொல்லிற்கோ ஒரு பொதுவான விளக்கத்தைத் தம்முள் கொண்டிருக்கிறார்கள். இதுவே அவர்களைப் பொதுவான நடைமுறைக்குக் கொண்டு செல்கிறது. ஒரு செயலுக்கோ சொல்லுக்கோ தமக்குள் கொண்டுள்ள விளக்கத்தில் தவறு ஏற்பட்டால் அல்லது மற்றவர்கள் அதைப் புரிந்து கொள்வதில் தவறு செய்தால் குழப்பம் ஏற்பட்டு, இடைவினை பாதிக்கப்படுகிறது.

இடைவினை பற்றிய ஆய்வு அனுபவங்கள் இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு சிறு குழுக்களைப் பற்றிப் பல ஆய்வுகள் செய்யப்பட்டன. இவ்வாய்வுகள் இடைவினை பற்றி அறிய உதவியாக இருந்தன. அவற்றுள் சிறப்பானவை:

1. குர்ட்டு இலெவினும் (Kurt Lewin) மற்றவர்களும் 'குழு இயங்கியல்' (Group dynamics) பற்றி நடத்திய ஆய்வுகள்.

2. பேல்சும் (Bales) அவருடைய கூட்டாளிகளும் மேற்கொண்ட இடைவினை பற்றிய சோதனைசார் ஆய்வுக்கூட ஆய்வுகள்.

3. ஓமான்சு (Homans), எல்டன் மேயோ (Elton Mayo) போன்றோர் நிகழ்த்திய தொழிலகத்தில் உள்ள அமைப்பிலாக் குழுக்கள் பற்றிய ஆய்வு. (இதில் சமூக நடத்தைகளின் அடிப்படைக் காரணங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.)

சமூக இடைவினை வகைகள்: ஐந்து வகையாகச் சமூக இடைவினையைப் பிரித்து அறியலாம். அவை எல்லா மனித இனத்திற்கும் பொதுவானதாகும்.

1. **கூட்டுறவு:** எல்லோருக்கும் பொதுவான தேவைகளை அல்லது குறிக்கோள்களை அடையும் பொருட்டு மனிதர்களோ குழுக்களோ ஒருங்கிணைந்து இடைவினை புரிவது கூட்டுறவாகும். இவ்விதக் கூட்டு இடைவினையின் மூலமே எந்தவிதக் குறிக்கோள்களையும் மனிதன் அடையமுடியும். அதாவது, சமூக வாழ்க்கை கூட்டுவினையின் மூலமே நிகழக் கூடியதாகும். சூழலுக்கு ஏற்றவாறு மனிதர்கள் குழுக்களாகவோ சமூகங்களாகவோ இணைந்து எதிர்வரக்கூடிய துன்பங்களை எதிர்க்கின்றனர். ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருக்கின்றனர். பிற சமூகங்களிலிருந்து வரக்கூடிய எதிர்ப்புகளை இவ்வாறே இணைந்து எதிர்க்கின்றனர். கூட்டுறவுச் செயலின்றிச் சமூகம் உருவாவதில்லை.

இராபர்ட்டு நிசுபெட்டு என்ற சமூகவியல் அறிஞர் பின்வரும் நான்கு வகையான கூட்டுறவுகளைக் குறிப்பிடுகிறார்.

அ. **தானாக எழக்கூடிய கூட்டுறவு:** இது மிகவும் பழைமை வாய்ந்த, எல்லோருக்கும் பொதுவான கூட்டுறவாகும். தேவை எழும்பொழுது இவ்வகைக் கூட்டுறவு உருவாகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு விபத்து ஏற்படும் பொழுது மக்கள் ஒன்றுசேர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்றனர்.

ஆ. **பரம்பரைசார் கூட்டுறவு:** கூட்டுறவு சமூகத்தை ஆண்டாண்டுக் காலமாக இணைத்துச் செயற்பட

வைத்திருக்கும். இவ்வகைக் கூட்டுறவுத் தன்மை, அச்சமூகத்தின் பண்பாடாகவும் பரம்பரைத் தன்மையாகவும் மாற்றப்பட்டுத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும். இதற்கு எடுத்துக்காட்டாகச் சீனக் குடும்பங்களையும் ஆதிக்குடிகளையும் கூறலாம்.

இ. **கட்டாயப்படுத்தப்பட்ட கூட்டுறவு:** தற்காலச் சமூகங்கள் பெரும்பாலும் கட்டாயப்படுத்தப்பட்ட சமூகங்களாக மாறி வருகின்றன. ஒருவருக்கொருவர் கூட்டுறவுடன் செயற்பட மூன்றாமவரின் கட்டுப்பாடு தேவையாக இருக்கிறது. இம்மூன்றாமவர் ஒருவரை வேலைக்கு அமர்த்துபவராகவோ ஒருவர்மேல் அதிகாரம் செலுத்தும் தன்மையுடையவராகவோ இருப்பார்.

ஈ. **ஒப்பந்தக் கூட்டுறவு:** ஒருவருக்கொருவர் சில ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டு அதன் அடிப்படையில் கட்டுப்பட்டுக் கூட்டுறவாகச் செயற்படுவர். இக்காலச் சமூகம் மிகுதியாக இவ்வகைக் கூட்டுறவின் அடிப்படையிலேயே இயங்குகிறது. குழுக்களுக்கிடையே நிலவக் கூடிய கூட்டுறவு பெரும்பாலும் ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.

2. **போட்டி:** போட்டியில் மனிதர்களோ குழுக்களோ ஒரு குறிக்கோளை அடைய முயற்சி செய்வர். இதில் குறிக்கோளை அடைவதுதான் முதன்மை நோக்கமாக இருக்கும். போட்டி சில நேரங்களில் சண்டைகளை ஏற்படுத்திவிடுவதுண்டு. இதைத் தவிர்ப்பதற்காகப் பல விதிமுறைகளை வகுத்துக் கொண்டு செயற்படுவர். இவ்விதி முறைகளை மீறுபவர் போட்டிக்குத் தகுதியற்றவர் என்று கருதப்படுவர்.

3. **முரண்பாடு:** குறிப்பிட்ட ஒரு குறிக்கோளை அடைவதற்கோ ஒரு பொருளை அடைவதற்கோ ஒருவருடன் மற்றவர் போராடுவது முரண்பாடாகும். இது சமூகக் கூட்டு இடைவினையின் எதிர்ச்செயலாகும். இதில் ஒருவர் மற்றவரை அல்லது எதிரியை வெற்றி கொள்வதே முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. அவ்வாறு எதிரியை வீழ்த்துவதே வெற்றியை அல்லது குறிக்கோளை அடைவதன் முக்கிய அறிகுறியாகும். இது போன்ற முரண்பாடு இலாபத்தையோ சமூக வெகுமதியையோ காரணமாகக் கொண்டு எழுகிறது. இதன் காரணமாக ஒருவரின் ஆர்வம் மற்றவரின் ஆர்வத்துடன் மோத வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

சியார்சு சிம்மல் (George Simmel) என்ற சமூக வியல் அறிஞர் பின்வரும் நான்கு விதமான முரண்பாடுகளைக் குறிப்பிடுகிறார்:

அ. குழுக்களுக்கிடையிலுள்ள போராட்டம்

ஆ. குழுக்களுக்கிடையே தன்னலம் கொண்ட உட்பூசல்

இ. சட்டத்தின் மூலமாகத் தீர்த்துக்கொள்ளக் கூடிய முரண்பாடுகள்

ஈ. பொதுவான கொள்கைகளினால் ஏற்படக் கூடிய சண்டைகள்

முரண்பாடுகள் தவறான சமூக நிறுவன அமைப்பின் காரணமாக உருவாகக் கூடியன என்றும் தூய்மையான சமூகத்தில் முரண்பாடுகள் எழா என்றும் தத்துவ அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். இருப்பினும் இவ்வகைச் சமுதாயம் அமைவது இயலாததொன்றாகும். இவ்வாறு எழக்கூடிய முரண்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சில காரணிகளை வகுத்து முரண்பாடுகளை இன்முகமாகத் தீர்க்கும் சமூகமே நிலையான சமூகமாகும்.

முரண்பாடுகளால் அடிக்கடி துன்பமும் அழிவும் கொடுமைகளும் சாவும் நிகழ்வதால், முரண்பாடுகள் அழிவுத்தன்மை கொண்டவை என்று கருதப்படும். இருப்பினும் பல சமூகவியலாளர்கள் குறிப்பாகச் சியார்சு சிம்மல் போன்றோர் முரண்பாடுகளுக்கு ஆக்கத்தன்மையும் உள்ளது என்று கருதுகின்றனர். அதாவது, முரண்பாடுகள் மக்களைப் பல சூழல்களில் சிக்கலுக்கு எதிராக ஒருங்கிணைந்து நின்று எதிர்க்கச் செய்கின்றன. இவ்வகைச் செயல் சமூக மாற்றத்திற்கு வழி வகுக்கிறது என்று அவர்கள் கருதுகின்றனர். முரண்பாடு அற்ற சமூகம் உயிரில்லாதது என்றும் கருதுகின்றனர்.

4. **கட்டாயப் படுத்துதல்:** ஒருவரோ குழுவோ மற்றவர்கள் மீது தம் விருப்பங்களை வலுக்கட்டாயமாகத் திணிப்பது கட்டாயப்படுத்துதல் ஆகும். கட்டாயப்படுத்துதல் என்பது உயிருக்கோ உடைமைக்கோ சிதைவை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை உண்டாக்குவதன் மூலமாகவே செயற்படுத்த நினைத்தல்.

கட்டாயப்படுத்துவதன் மூலம் சில கொடுமையான செயல்களைச் செய்வதால் கட்டாயப்படுத்துதல் என்பது தவறானது, அழிவைத்தரக்கூடியது என்று கருதும் சூழ்நிலையை உருவாக்கும். ஆனால், கட்டாயப்படுத்துதல் சில சமூக ஆக்கச் செயல்களுக்கும் வழிவகுக்கும். சமூக ஒழுங்கு நடைமுறைகளையும் நன்மை தீமைகளையும் கற்றுத் தருவதற்கும் கட்டாயப்படுத்தும் முறை பயனுள்ளதாக இருக்கிறது.

5. **பகிர்ந்து கொள்ளுதல்:** ஒருவர் ஒரு பரிசைப் பெறுவதற்கோ கொடுப்பதற்கோ குறிப்பிட்ட

விதத்தில் செயற்படவேண்டியிருக்கிறது. பெரும் பாலும் தொழிலகங்களில் பணியாளருக்கும் அவரைப் பணியில் அமர்த்துபவருக்கும் இடையில் நிகழும் இடைவினை இத்தகைய பகிர்ந்துகொள்ளும் நோக் குடையதாக இருக்கிறது. பணியாள் தனது அதிகாரி யின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடக்க வேண்டியிருக் கிறது. பரிசு என்பது பணத்தையோ பொருளையோ சாராத சமூகத்தன்மை கொண்டதாகவும் இருக்க லாம்; அதாவது, உணர்வு சார்ந்த பரிசு, சமூக உறவு போன்றதாகவும் இருக்கலாம். எடுத்துக்காட் டாக, நண்பருக்கு வாழ்த்தாக அனுப்பக்கூடிய பொருள்கள் சில நெருக்கடி நேரங்களில் அவருக்கு உதவி செய்வனவாகவும் அமையலாம்.

தற்செயலாக மிகவும் நெருக்கமானவர்களுடன் கொள்ளும் இடைவினையிலும் பகிர்ந்து கொள்ளும் தன்மை கொண்ட உறவுகள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. ஒருவர்மேல் மற்றவர் கொள்ளும்அன்பு மற்றவர் தம்மேல் திரும்பவும் அன்பு கொள்ள வேண் டும் அல்லது தாம் செய்த செயலுக்கு அவர் நன்றி யுடையவராக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த் தலின் அடிப்படையில் நிகழ்வதில்லை. இருப்பினும் அவ்வாறு எழும் எதிர்பார்ப்பு உறவின் ஒரு கூறா கும். அன்பைப் பெறுபவர் தாம் அன்பு செலுத்தா விட்டால் முன்னவரின் அன்பு நிலைத்திருப்பதில்லை.

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஒருவன் ஒரு செயலைச் செய்யும்பொழுது, அதற்கொரு விளக்கம் தருகிறான். மற்றவர்களும் தன்னைப் போலவே அச்செயலுக்கு அந்த விளக்கத்தையே தந்து அச்செயலுக்கேற்ப எதிர்வினை ஆற்றுவர் என்று எதிர்பார்க்கிறான். இதே போன்று பரிமாறிக் கொள்ளும் அனைத்து விளக்கங்களும் அவர்களை அறியாமலேயே அவர்களது நனவிலியில் உருவாக்கப் பட்டுள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடை வினைச் சூழலிலும் தாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எண்ணத்தில் வைத்துக்கொண் டுள்ளனர். அதே போல மற்றவர்களும் எவ்வாறு எதிர் வினையாற்றவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் செயற்படுகின்றனர். இவ்வாறு ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளக் கூடிய சமூக இடைவினையின் நிகழ்வால் மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுகிறது.

துணை நூல்கள்:

**David Popenoe**, Sociology, Prentice-Hall, New Jersey, 1977.

**Paul B. Horton and Chester L. Hunt**, Sociology, Mebraw-Hill, Tokyo, 1980.

**இண்டன்பர்கு (கி.பி. 1847 - 1934):** செருமானிய வரலாற்றின் சிறந்த காலத்தில் வாழ்ந்து பணியாற்றிப் பெருமித நிலை எய்தியவர் பால்பன் இண்டன்பர்கு என்பவராவர். இவர் முதல் உலகப் பெரும்போரின்போது பீல்டு மார்சல் (Field Marshall) பதவி பெற்றுச் செருமனியின் பெருந் தானைத் தலைவராக விளங்கினார். போரில் செரு மனி தோல்வியுற்ற போது, தோல்வி கண்டு சோர் வடைந்த படைகளைச் செருமனிக்குக் கொணர்ந் தார்; அதே படைகளைக் கொண்டு செருமனியின் மக்களாட்சி அரசினைக் காப்பாற்றினார். இவர் 1925-ஆம் ஆண்டில் பெருவாரியான வாக்குகள் பெற் றுக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். இரண்டாம் முறையும் குடியரசுத் தலைவரா கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், அடால்பு இட்ல ரைச் செருமனியின் சான்சலராகப் பதவியமர்த்தி னார்.



இண்டன்பர்கு

இண்டன்பர்கு (Hindenberg, Paul Von) கி. பி. 1847-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் இராணுவப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில், போலந்து நாட்டின் போசன் (Posen) நகரில் பிறந் தார். தான்சிகு (Danzig) நகரில் கி.பி.1866-ஆம் ஆண்டில் இராணுவ அதிகாரியாகத் தமது வாழ் வினைத் தொடங்கினார். இராணுவ அதிகாரியாகப் பணியேற்றவுடனே தொடங்கிய ஆசுத்திரிய-பிர சியப் போரில் (Austro-Prussian War, கி.பி.1866) பங்கேற்று வீர விருதினைப் பெற்றார். பின்னர், கி. பி. 1870-71-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பிரெஞ்சு-பிரசியப் போரிலும் (Franco-Prussian War) வீர விருதினைப் பெற்றுச் சிறப்பெய்தினார். பிரான்சின் தலைநகரில் வரலாற்றுப் புகழ்மிக்க வெர்சாய் மாளிகையில் உதயமான செருமானியப் பேரரசினை வாழ்த்தி வரவேற்றார்.

செருமானியப் பேரரசின் வளர்ச்சிப் பணிகளில் இவர் முழு மூச்சுடன் ஈடுபட்டார்; படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுப் படைத்தலைவராக (General) உயர்ந்தார். 'போர் ஏற்பட இனி வாய்ப்பு இல்லையே' என மனம் வெதும்பிய இவர் 1911-ஆம் ஆண்டில் பதவி விலகி, அனோவர் (Hanover) நகரில் குடியேறினார்.

முதல் உலகப் பெரும்போர் தொடங்கியபோது இவர் கிழக்குப் பிரசியாவிலிருந்த செருமானிய எட்டாம் படையின் தலைவராக மீண்டும் அமர்த்தப்பட்டார். இவருக்கு உதவியாக மேசர் செனரல் உலுதன்தார்பு (Maj. General Ludendorff) என்பவர் தலைமைப் படையதிகாரியாக (Chief of staff) அமர்த்தப்பட்டார். போர் முடிவுறும் வரையிலும் இவ்விருவரும் இணை பிரியாது தொடர்ந்து பணியாற்றிச் செருமனியையே கட்டியாளும் அளவிற்கு உயர்ந்தனர்.

தங்கள் புதிய பதவியினை ஏற்க இண்டன்பர்கும் உலுதன்தார்பும் கிழக்குப் பிரசியாவிற்குச் சென்றபோது, செருமானியப் படைகள் தோல்வியுறும் நிலையிலிருந்தன. அலெக்சாண்டர் சாம்சனோவ் (Alexander Samsonov), பால் ரெனன்காம்பு (Paul Rennenkamp) என்ற உருசியப்படைத் தலைவர்களின் தலைமையிலான உருசியப் படைகள் விரைந்து முன்னேறியவண்ணம் இருந்தன. ஆனால் இண்டன்பர்கு பதவியேற்ற ஒரு வாரத்திற்குள் உருசியப் படைகளை முறியடித்துக் கிழக்குப் பிரசியாவிலிருந்தே விரட்டினார். அவ்வெற்றியின் மூலம் இண்டன்பர்கின் வீரப்புகழ் செருமனி எங்கணும் பரவியது.

வெற்றியும் விருதுகளும் நாடு தழுவிய புகழும் தம்மை நாடி வந்தபோதும் இவர் தம்நிலை மறந்தாரில்லை. தோல்வியோ துன்பமோ இவரை அசைக்கவும் இல்லை என இவர் வரலாறு கூறுகின்றது. இவரின் இணைபிரியாத உதவியாளர் உலுதன் தார்பு சிரித்து மகிழ்ந்தறியாதவர் எனக் குறிப்பிடப்படுகின்றார். ஆக, 'தளர்வு என்பதையே அறியாதவரும், சிரிப்பையே அறியாதவரும்' இணைந்து செருமனியையே ஆட்டிப் படைத்தனர்.

இவர் படைத்துறை உயர்தரப் பணியாளராக (Field Marshall) 1914-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் பதவி உயர்வு பெற்று, கிழக்குப் போர்ப்பகுதிகளில் செர்மானியப் படைகளின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். செருமானியப் படைகளின் பெருந்தானைத் தலைவரான எரிச்சு வான் பால்கனாயன் (Erich Von Falkenhayen) என்பவருக்கும் இண்டன்பர்குக்கு மிடையே போர் முறை குறித்துக் கருத்து வேறுபாடுகள் மிகுந்திருந்தன. மேலைப் போர்க்கள வெற்றிதான் போரின் முடிவினையே உறுதியாக்கும் என்று கருதிய பால்கனாயன், இண்டன்பர்கு விரும்பியவாறு கீழைப் போர்க்களத்திற்கு உதவியளிக்க மறுத்தார். இண்டன்பர்கு பேரரசருக்கு முறையீடு செய்தும் வேண்டிய பயன் கிடைக்கவில்லை. மேலைப் போர்க் களத்தில் (Western Front) செருமனிப் படைகள் தோல்வியடைந்தபோது பால்கனாயன் பதவி விலகினார். பின்னர் இண்டன்பர்க்கு செருமானியப் படைகளின் பெருந்தானைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார்.

தலைமைப் பொறுப்பினை இவர் ஏற்றவுடனேயே செருமானியப் படைகள் புத்துணர்வுடன் போரிடத் தொடங்கின. புதிய போர்க்காலப் பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டன. போலந்து நாடு மீண்டும் உருவாக்கப்பட்டது. அத்தகு செயல்கள் 'இண்டன்பர்கு நடவடிக்கைகள்' (Hindenburg Pro-gramme) எனப் பெயர் பெற்றன. தடையற்ற நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலும் தொடங்கப்பட்டது. மேலைப் போர்க்களங்களைப் பார்வையிட்ட இவர் ஆங்கே தற்காப்பு அமைப்புகள் சரிவர இல்லாதது கண்டு, தமது படைகளைச் சற்றே பின்னடையச் செய்து, காப்பு அரண்களை உறுதிப்படுத்தச் செய்தார். அம்முயற்சிகள் அனைத்தும் உலுதன்தார்பின் செயல்களே என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

போரின் போக்கினைக் கண்ட செருமன் நாடாளுமன்றம், போர் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டபோது இண்டன்பர்கும் உலுதன்தார்பும் அம்முயற்சிகளைத் தடுத்து, அரசு அதிகாரங்கள் அனைத்தையும் படைத் தலைமையே ஏற்றுக் கொள்ளச் செய்துவிட்டனர்.

இதற்கிடையே உருசியாவில் 1917-இல் மாபெரும் புரட்சி ஏற்பட்டது. உருசியப் போல்சுவிக்குகளின் தலைவரான இலெனின் சுவிட்சர்லாந்திலிருந்து செருமனி வழியாகப் பெட்ரோகிராடு நகர் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. உருசியாவில் போல்சுவிக்குகள் ஆட்சியினைக் கைப்பற்றியவுடனேயே, அவ்வரசு போர் நிறுத்த ஒப்பந்தம் வேண்டியது. அதன் விளைவாகப் பிரசுட்டு இலிடோசுக்கு (Brest Litovsk) உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின் கடுமையான விதிகளை உருவாக்கி அவற்றை ஏற்கச்செய்த பெருமை இண்டன்பர்கு, உலுதன்தார்பு ஆகியோரையே சாரும்.

உருசியாவைப் பணியச் செய்துவிட்டாலும் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளைத் தோற் கடிப்பது என்பது மிகவும் கடினமான காரியம் ஆகும். அதுவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முழு உதவி கிட்டுமுன் செய்தாக வேண்டும் என்பதை உணர்ந்த இண்டன்பர்கு 1918-ஆம்ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21-ஆம் நாள் மிகவும் கடுமையான தாக்கு தல்களை மேலைப் போர்க்களமெங்கணும் தொடங் கினார். 'பேரரசரின் பெரும்போர்' (The Emperor's Battle) என அத்தாக்குதல்கள் குறிப்பிடப்பட்டன. செருமனியின் அதிவேகத் தாக்குதல்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் நேசநாட்டுப் படைகள் சற்றுப் பின்னடைந்தனவே தவிரச் சிதறியோடவில்லை. போர் மிகவும் கடுமையாக இருந்த அத்தருணத்தில் அமெரிக்கப் படைகள் புது வெள்ளமென ஆர்ப்பரித்து நுழைந்தன.

செருமானிய அதிகாரிகளின் ஆலோசனைகளைப் புறக்கணித்த இண்டன்பர்கு போரினைத் தீவிர மாக்கினார். நேசநாட்டுப்படைகள் 1918-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 18-ஆம் நாள், தங்கள் எதிர்த்தாக்குதல்களைப் பல முறைகளில் மிகவும் கடுமையாகத் தொடங்கின. களைத்துப் போன செருமானியப் படைகள் பின்வாங்கத் தொடங்கின. இந்நிலையில் செருமனியின் போர்க்கால உயர்நிலைக் குழு சமாதானம் கோரும் முடிவினை அறிவித்தது. செருமனியின் நிருவாக அமைப்புகள் சீர்குலையத் தொடங்கிவிட்ட அந்நேரத்தில் சமாதானக் கோரிக் கைகள் கேட்பாரற்றுக் கிடந்தன. அதேநேரத்தில் செருமனியின் கூட்டு நாடான பல்கேரியா போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டு போர்க்களத்தி னின்றும் வெளியேறியது.

உலுதன்தார்பும் எதிர்ப்புகளை எதிர்த்துக் கொண்டு சமாதானம் வேண்டினார். அவரது வேண் டுதல் மறுக்கப்பட்டபோது அவரும் பதவி விலகி னார். பின்னர்த் தோல்விகள் தொடர்ந்தபோது இண்டன்பர்கு செருமானிய மாமன்னரைப் பதவி விலகும்படி வேண்டினார். மாமன்னர் மறுத்தபோது, செருமானியப் படைகள் மாமன்னரின் கட்டளை களை ஏற்கா என்பதை இவர் தெளிவாக்கினார். தனித்துவிடப்பட்ட மாமன்னர் இவரை எதிர்க்க இயலாது, பதவி விலகிச் செருமனியினின்றும் வெளி யேறினார். செருமனி தோல்வியினைத் தழுவியது. நான்கு ஆண்டுகளாக உலகினை அலைக்கழித்த போர் ஓய்ந்தது. தற்காலிகப் போர்நிறுத்த உடன் பாடு 1918, நவம்பர் 11-இல் கையெழுத்தாகியது.

தோல்வியில் துவண்டு கிடந்த செருமானியப் படைகளை ஒன்றுசேர்த்து, அவற்றின் உதவிகொண்டு இவர் வளரத் தொடங்கிய பொதுவுடைமையினரை நசுக்கிச் செருமனியில் அமைதி நிலவ ஆவன செய் தார். 'மனித இனத்திற்கெதிராக மாபெரும் குற்றம் இழைத்து விட்டாரெனக் குற்றம் சாட்டிப் பதவி விலகிய மாமன்னரைக் கைது செய்ய நேசநாடுகள் முயன்றபோது, இவர் மாமன்னரின் மீது சுமத்தப் படும் குற்றங்களுக்குத்தாமே பொறுப்பேற்றுக் கொள்வதாக அறிவித்துச் செருமானிய மக்களின் ஒருமித்த ஆதரவினைத் தேடிக்கொண்டார்.

மேலும், 'செருமானியப் படைகள் போரில் தோற் கடிக்கப்படவில்லை. மாறாகப் புரட்சியாளர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு வீழ்ந்தனர்' என்ற தம் கருத்தினை வெளியிட்டு மக்களிடையே தமது ஆதர வினை வளர்த்துக்கொண்டார்.

செருமன் பேரரசர் 1918-இல் முடிதுறந்ததை அடுத்துச் செருமனி குடியரசாக மாறியது. அக்குடி யரசின் முதல் தலைவர் பிரிடரிச்சு எபர்ட்டு (Fried rich Ebert) ஆவார். அவர் 1925-இல் இறந்தார். அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் தேசிய கட்சி யின் சார்பில் போட்டியிட்ட இண்டன்பர்கு பெரு வாரியான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். குடியரசுத் தலைவராகப் பணியேற்ற இவர், செரு மனியில் குடியாட்சியினை நிலைநிறுத்த அயராது பாடுபட்டார்.

பொருளாதாரப் பெருமந்தம் 1930-ஆம் ஆண்டில் செருமனியை மிகவும் அதிகமாகப் பாதித்தது. இக் கட்டான அந்நிலையினைச் சமாளிக்க இயன்ரிச்சு புருனிங்கு (Hienrich bruning) என்ற கத்தோலிக்கர் களின் தலைவரை வேந்தராக அமர்த்தினார். அவர் நாடாளுமன்றத்தின் துணையின்றி, அரசிய லமைப்பின் 48-ஆம் விதியினைப் பயன்படுத்தி அரசாணைகள் மூலமாகவே ஆட்சியினைத் தொடர்ந் தார். பின்னர் 1932-ஆம் ஆண்டில் இண்டன்பர்கின் குடியரசுத் தலைமைப் பதவி முடிவுற்றபோது, இவ ரது மறு தேர்தலுக்காகப் புருனிங்கு அரும்பாடு பட்டு வெற்றி பெறச் செய்தார். புருனிங்கின் அயராத உழைப்பின் காரணமாக 53 விழுக்காடு வாக்குகளைப் பெற்று, இண்டன்பர்கு இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைமைப் பதவியினை ஏற்றார்.

புருனிங்கிற்குப் பின்னர்ப் பிரான்சு வான்பாப்பன் (Franz Von Papen) என்பாரும், அடுத்துக் குர்த்வான் சீசர் (Gen. Kurt Von Scheicher) என்பவரும் ஒருவர் பின் ஒருவராக வேந்தர்ப் பதவியேற்றனர். அவ்விருவருமே சந்தர்ப்பவாதிகள். நாசிக் (Nazis) கட்சியினர் 1933-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்களின்போது மிகுதியான இடங்களைக்

கைப்பற்றியிருந்தனர். வான்பாப்பனின் ஆலோசனையின்படி இண்டன்பர்கு நாசிகளின் தலைவரான அடால்பு இட்லரைச் செருமனியின் ேவேந்தராக (Chancellor) அமர்த்தினார். இண்டன்பர்கு அரசியல் சூழ்ச்சியினை உணரும் திறமையின்றி, இட்லரின் கைகளில் வெறும் பொம்மையாகக் காணப்பட்டார். சூழ்ச்சியின்மூலம் இட்லர் 1934--ஆம் ஆண்டில் தமது எதிர்க்கட்சியினரை அழித்தபோது, அந்நிகழ்ச்சியினைப் பாராட்டி வாழ்த்துத் தந்தி ஒன்று இண்டன்பர்க்கின் கையொப்பமிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. அத்தகு தந்தியை இவர் அனுப்பியிருப்பாரா என்பது ஐயமே. நோய்வாய்ப்பட்டிருந்த இவர் 1934–ஆம் ஆண்டு ஆகசுட்டு 2–ஆம் நாள் நியுடெக்கு (Nudeck) நகரில் காலமானார்.

செருமனியின் வரலாற்றின் மிகவும் சிக்கலான காலத்தில் பொறுப்பான பதவிகளிலிருந்து திறம்படச் செயலாற்றியவர் இண்டன்பர்கு. இவர் பிறருடைய உழைப்பில் தமது புகழை வளர்ப்பவர் எனவும் இக்கட்டான குழ்நிலைகளில் முடிவெடுக்க இயலாதவர் எனவும் தனித்து நின்று செயலாற்றும் திறமையற்றவர் எனவும் பலவாறாக மதிப்பிடப்பட்டுள்ளார். இயலாத நிலையிலும் பதவி விலக மனமில்லாது இறக்கும்வரை பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பேராசைக்காரர் என்றும் இவர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இவர் தவறுகள் புல இழைத்திருந்தாலும், நாட்டுப்பற்று மிக்கவராய்ச் செருமனியின் வளர்ச்சியிலும் உயர்விலும் அக்கறை கொண்டு, அரும்பாடுபட்டார் என்பது மறுக்க இயலாதது.

வ.இரா.

**இண்டால்** என்பவர் மொகலாயப் பேரரசர் பாபரின் மூன்றாம் மகன்; உமாயூனின் தம்பி. காம்ரான் (Kamran), அசுகாரி (Askari) ஆகியோர் ஏனைய தம்பியர். பாபர் காலமான மூன்று நாள்களுக்குப் பின்னர் உமாயூன் அரியணை ஏறினார். அவருக்குப் பல தொல்லைகள் வந்தன. அவற்றுள் ஒன்று அவருக்கு அவர் தம்பியரால் ஏற்பட்ட தொல்லையாகும். முதல் மகனே அரசுக் கட்டிலுக்குரியவன் என்னும் மரபினை மொகலாய மன்னர்கள் பின்பற்றாத காரணத்தால், உமாயூனின் மூன்று தம்பிகளும் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தனர்.

உமாயூன் தம்பியர் மீது இரக்கம் காட்டி, ஒவ்வொருவருக்கும் நாட்டின் பகுதிகள் சிலவற்றை அளித்து அவற்றை அவர்கள் ஆட்சிக்குட்படுத்தினார். அதன்படி ஆள்வார் (Alwar) பகுதி இண்டாலுக்குக் (Hindal) கிடைத்தது. அதன் விளைவாகப் பேரரசு ஒன்றுபட முடியாமல் நலிந்தது.

**இண்டிகா:** பாரத நாட்டின் பண்டைய வரலாற்றை அறிய உதவும் பல்வேறு ஆதாரங்களுள் மெகசுதனீசு என்பார் எழுதிய இண்டிகா என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவர் கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் மௌரியப்பேரரசுக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த அயல் நாட்டவர் ஆவார். மகா அலெக்சாந்தருக்குப் பிறகு, பாரசீகம், பாபிலோன் நாடுகளை ஆண்ட செலூகசு நிகேடார், இவரைக்கிரேக்கத் துதராக மௌரியரின் பேரவைக்கு அனுப்பியிருந்தார். இத்தூதர் சந்திரகுப்தப் பேரரசனுடன் (ஆட்சிக் காலம் ஏறத்தாழ கி.மு. 325–301) அவன் தலைநகராகிய பாடலிபுத்திரத்தில் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். இவர் ஆக்கிய நூல் இண்டிகாவாகும். அந்நூல் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. இவர் கூறிய செய்திகள் பிற நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. சே. டபிள்யூ. மெக்ரிண்டல் ((J.W. Magrintal) என்ற அறிஞர்தாம் முதலில் இதைக் கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவியவர். பேரறிஞர் இசுவான்பெகுக் (கி.பி. 1846) என்ற செருமானியர், சிதறிக் கிடந்த மெகசுதனீசின் குறிப்புகளைத் தொகுத்து ஒழுங்குபடுத்தினார். இந்தியாவைப்பற்றி மேனாட்டினர்க்கு மிகுதியாகத் தெரியாத பண்டைக் காலத்தில், இந்நாட்டைப் பற்றிப் பல தவறான கருத்துகளையும் அவர்கள் கொண்டிருந்தனர். ஓரளவு அக்குறையை நீக்க இண்டிகா உதவியது.

கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற இந்நூல் நான்கு பகுதிகளையுடையது. ஆனால் இது அட்டிகா மொழிப்பிரிவைச் சேர்ந்ததா அயோனிய மொழிப்பிரிவைச் சேர்ந்ததா என்பது விளக்கமாக அறியப்படவில்லை.

இண்டிகாவில் காணப்பெறும் பின்வரும் குறிப்புகள் நம் சிந்தனைக்குரியன. 'இந்திய நாடு கிழக்கு மேற்கில் 28,000 இசுடாடியா, தெற்கு வடக்கில் 32,000 இசுடாடியா (15 இசுடாடியா $1\frac{3}{4}$ கல்லுக்கு இணையானது). நீளமும் அகலமும் கொண்ட பரந்த நாடு. காலந்தவறாமல் இங்கே மழை பெய்வதால் பஞ்சம் ஏற்பட்டதில்லை. மலைகளுக்கும் ஆறுகளுக்கும் இந்நாட்டில் குறைவில்லை. போர்க்காலத்தில் கூட, இந்தியர்கள் தமது கடமையான வேளாண்மைத் தொழிலை விட்டுவிடாமல் ஊக்கமுடன் மேற்கொள்ளுகின்றனர். போர் புரிவதில் அறக் கொள்கை பின்பற்றப்படுகிறது. சிறந்த யானைகள் இங்கே மிகுதி. இதன்காரணமாகவே அயலவர் பலர் இங்கே படையெடுக்க அஞ்சினர்'. அலெக்சாந்தர் வடமேற்கு இந்தியாவிலிருந்து கங்கைப் பகுதிக்குப் படையெடுத்துச் செல்லாததற்கு மெகசுதனீசு கூறும்

காரணம், 'பயிற்சிபெற்ற 4000 யானைகளை யுடைய படை அங்கே இருந்தது என அவர் கேள்விப்பட்டதுதான்'. 'சிந்துநதி இந்தியாவின் வட மேற்கு எல்லையாக உள்ளது' ...... 'சில்லாசு என்ற பெயருடைய இந்திய நதி தனிச்சிறப்பைப் பெற்றுள் ளது. அது சில்லாசு என்ற பெயரையுடைய ஒரு ஊற்றிலிருந்து தோன்றுகிறது. அதில் எதைப் போட் டாலும் அது மிதக்காமல் ஆற்றின் அடிமட்டத்திற் குச் சென்று ஆழ்ந்து விடுகிறது.'

'இந்திய மக்கள் யாவரும் உள்நாட்டுக்கே உரிய வர்களே அல்லாமல் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அல்லர். குடியேறாத இம்மக்கள் குடியேற்றம் எதை யும் பெறவில்லை ......' மெகசுதனீசின் குறிப்புகளில் பின்வரும் செய்திகள் நமக்கு வியப்பை அளிக்கின் றன. அதாவது ஒரே காலை உடைய மக்கள், கொம் புள்ள குதிரைகள், இறகு முளைத்த பாம்புகள், பாதங்களைத் தொடக் கூடிய அளவுக்கு நீண்டகாது களை உடையோர், வாயில்லாதவர்கள், மூக்கில்லாத வர்கள், ஏழு வயதிலேயே மகப்பேறு பெற்ற தாய் மார்கள் (பாண்டிய நாட்டில்) முதலியோர் இந் நாட் டில் இருந்தனரென இண்டிகா தரும் செய்தி நம்பத் தக்கதாக இல்லை. இதன் காரணமாக, இவர் வழக்க மாகப் பொய் பேசுபவர் என்று இசுட்ராபோ (Strabo) என்னுமறிஞர் குற்றஞ்சாட்டுகிறார். ஆனால் வேறு சில அறிஞர்கள் கூறும் சமாதானமாவது, 'மெகசு தனீசு மிக எளிதில் பிறர் கூறுவதை நம்பி விடும் தன்மையராகத் தெரிகிறது. இவரிடம் சிலர் தவ றான செய்திகளைக் கூறியிருக்கக்கூடும். மேலும், இவர் கூற்றுகளாக நாம் பிற ஆசிரியர்களிடமிருந்து அறியும் செய்திகளை ஆராயுமிடத்து, அவை எந்த அளவுக்கு இவரால் கூறப்பட்டவை என்பதையும் கூர்ந்து நோக்கவேண்டும்; தவிர, இவர் தம் சொந்த நாட்டில் நிலவி வந்த நிறுவனங்களின் அடிப்படை யில் இந்திய நாட்டு நிலைமைகளை நோக்கியிருக்க வும் கூடும். பொதுவாக இவர் கூறுவன எல்லாம் பொய் என்றும் கூறமுடியாது.

இந்து சமூகத்தில் தத்துவ ஞானிகள், வேளாளர், இடையர், கைத்தொழில் வினைஞர்கள், போர் வீரர் கள், உளவாளிகள், அமைச்சர்கள் என ஏழு பிரிவுகள் இருந்தன என இண்டிகா குறிப்பிடுகிறது. இவர் தாம் அறிந்திருந்த எகிப்து நாட்டு சமூகப் பிரிவுகளை மனத்தில் கொண்டு இதை எழுதியிருக்கலாம். எனி னும், இவ்வேழையும் நான்காகவும் நாம் பிரித்து விடலாம். இந்தியாவில் அடிமைகள் இல்லை; பஞ்சம் இல்லை; பொய் பேசுபவர்கள் இல்லை; திருட்டு மிக அருமை எனவும் இவர் குறிப்பிடுகிறார். இந்திய மொழியை இவர் தெளிவாக அறிந்திராத காரணத்தாலும் கருத்துத் தவறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். எப்படி இருப்பினும், கிரேக்க நாட்டு அரசியல் தூதர் என்ற முறையினாலும் பல ஆண்டுகள் பாடலி புரத்தில் வசித்தவர் என்ற காரணத்தாலும் இவர் குறிப்புகள் புறக்கணிக்கப்படுவன அல்ல. வேறு சில ஆசிரியர்கள் இவர் குறிப்புகளாக மேற்கோள் காட் டியிருப்பதும் இண்டிகாவில் அடங்கும்.

மௌரியப் பேரரசுத் தலைநகர் பற்றிய விவரங்களையும் அப்பேரரசின் ஆட்சிமுறை அமைப் பையும் பற்றி இண்டிகா தரும் செய்திகளை யாரும் மறுப்பதற்கில்லை. அக்காலச் சமூக அமைப்பைப்பற் றிய இவரின் கூற்றுகள் சில, வேறு சில ஆதார வழிச் செய்திகளை உறுதிப்படுத்துவனவாக உள்ளன. சிற் சில செய்திகளில் இவர் பிறர் கூறியவற்றைத் திற னாய்வு செய்யாமலும், தாம் நேரில் பார்க்காத வற்றைக் கூடப் பிறர் சொன்னதை நம்பியும் எழுதி விட்டார் எனத் தோன்றுகிறது. அவை நமக்கு நகைப்பை உண்டாக்குகின்றன. எனினும் இவர் தரும் வேறு பல செய்திகள் பயனுள்ளவை என்பதில் ஐயமில்லை. பாடலிபுத்திரம் பற்றி இண்டிகா பின் வருமாறு கூறுகிறது.

'இது (பாடலிபுத்திரம்) இந்தியாவிலேயே மிகப் பெரிய நகரம். இரண்டு ஆறுகள் இங்கே கூடுகின்றன. இது 80 இசுடாடியா ($9\frac{1}{2}$ கல்) $\times$ 15 இசுடாடியா $1\frac{3}{4}$ கல்) நீள-அகலமுள்ள பரப்பில் விளங்குகிறது. இதற்கு அரண்களாக மரச்சுவரும் நீண்டபள்ளமும் அமைந்துள்ளன. போர்க்கோலத்தில் படைக்கலன் ஏந்திய பெண்டிர் அரசனுக்கு மெய்க்காப்பாளர் களாக இருக்கின்றனர். அவன் வேட்டைக்குச் செல் லும்போதும் அவர்கள் அவனுடன் செல்கின்றனர். பகைவரின் சூழ்ச்சிகளைத் தடுக்க வேந்தனின் படுக்கை அறை அடிக்கடி மாற்றப்படுகிறது. பாடலி. புரத்தைப் பாதுகாக்க முப்பது பேர் அடங்கிய ஓர் ஆணைக்குழு உள்ளது. ஒவ்வொன்றிலும் ஐந்து உறுப் பினர்கள் அடங்கிய ஆறு சிறு குழுக்கள் இதில் அடங் கியுள்ளன. நீர்ப்பாசனக் கால்வாய்களைக் கவனிக் கவும் சாலைகள், ஆறுகள், நிலங்கள் முதலியவற் றைக் கவனிக்கவும் வரிவசூல் செய்யவும், அக்குழுக் கள் அதிகாரம் பெற்றிருந்தன. படை அமைப்பு முறை மிகவும் ஒழுங்காக உள்ளது. எச்சமயத்திலும் போருக்கு ஆயத்தமாகவே அது அமைந்திருந்தது. அதற்கான செலவுகளை மக்களே ஏற்றனர். படையை நிருவகிக்க முப்பதின்மர் கொண்ட பிறி தோர் ஆணைக்குழு உண்டு. அதில் ஆறு உட்பிரிவு கள் உள்ளன. அவ்வுட்பிரிவு ஒவ்வொன்றும் முறையே தேர், யானை, குதிரை, காலாள், கடற்படை, படை யினர் உணவுப் பொறுப்பு ஆகிய 6 இராணுவப் பிரிவுகளைக் கண்காணித்தன. நாட்டில் குற்றஇயல் சட்டம் மிகக் கடுமையாக உள்ளது.' மெகசுதனீசு

பஞ்சாயத்து ஆட்சி முறையைச் சிறப்பாக வருணிக்கிறார். அம்முறை இராணுவத் துறையிலும் இருந்தது என்று இவர் கூறுவது வியப்புக்குரியது.

அக்காலத்திய குடியானவர்கள், மிகவும் உழைப்பாளிகளாகவும் அறிவுக் கூர்மை வாய்ந்தவர்களாகவும் சிக்கன வாழ்க்கையை உடையவர்களாகவும் நேர்மையாளராகவும் இருந்தனர்என்பதுகுறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டுக்கட்டுக்கதைகளும் இண்டிகாவில் இடம் பெறுகின்றன. அரசமாதேவியாரும் சிறப்பிக்கப்படுகிறார். பாண்டியப்படை 500 யானைகளையும், 4000 குதிரைகளையும், 1,30,000 காலாட்களையும் கொண்டது எனக் கூறுகிறார் ஆசிரியர். இவர் முத்துக்குளிக்கும் தொழிலையும் விவரித்துள்ளார். இந்தியத் தத்துவ அறிஞர்கள் ஆன்மாவின் அழிவின்மைப்பற்றி, பிளேட்டோவைப் போலச் சொற்பெருக்காற்றினர் என்றுள்ள இண்டிகா குறிப்பு, இந்தியத் தத்துவ அறிவு எவ்வாறு அயல் நாட்டவரையும் கவர்ந்தது என்பதை வலியுறுத்துகிறது.

இவர் ஒரே ஒருமுறை மட்டும்தான் இந்தியாவுக்கு வந்தவர். இவர் பாடலிபுரத்தைத் தவிர வேறு இடங்களை நேரில் பார்த்ததாகத் தெரியவில்லை. ஆதலால் இவர் தரும் குறிப்புகள் வரலாற்றுக்குப் பயன் அற்றவை என்பது,வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் என்ற வரலாற்றறிஞரின் கருத்தாகும். இண்டிகா கூறுவதைக் கௌடில்யரின் அருத்தசாத்திரம் ஏற்றுக்கொள்வதைக் காணலாம். அருத்தசாத்திரம் கூறாத சில செய்திகளையும் இண்டிகா கூறுகிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த தயதோரசு, இசுடிராபோ என்பவர்களும் பிளினி என்ற கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க ஆசிரியரும் அறியன் என்ற கி.பி. இரண்டாம் நூற்றாண்டினரான கிரேக்கரும் மெகசுதனீசின் குறிப்புகளை மேற்கோள்களாகக் காட்டியிருப்பதும் இண்டிகாவின் பெருமைக்குச் சான்றாகும். மௌரியப் பேரரசுக் காலத்திய மக்கள் வாழ்க்கை நிலையை அறிய இந்நூல் உதவுகிறது. முடிவாக, இண்டிகாவை, மற்ற ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளை உறுதிப்படுத்தும் ஒரு துணை நூலாகக் கருதலாம்.

கிரேக்கப் பழங்கதைகளுக்கும் இந்தியப் பழங்கதைகளுக்குமிடையே நிலவும் ஒற்றுமைப் பண்புகள் இண்டிகாவில் இடம் பெறுகின்றன. இந்தியாவில் அடிமை முறை இல்லை என்பதை இவர் வியந்து போற்றியுள்ளார். சமமாகச் சொத்துகள் பிரிக்கப்பட்டுள்ள ஒரு சமூகமாக இல்லாத போதிலும், சமத்துவ அடிப்படையில் அமைந்த சட்டங்கள் இந்திய மக்களிடையே நிலவின என்றும் கூறுகிறார்;

இண்டிகா சிறப்பிக்கும் ஏழுவகை மக்கட்பிரிவினருள் ஒவ்வொரு பிரிவினரைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியச் செய்திகள் பின்வருவன:

முதற் பிரிவினரான தத்துவ ஞானிகள் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும், தகுதி திறமைகளில் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள். பொதுக்கடமைகளிலிருந்து இவர்கள் விதிவிலக்குப் பெறுகின்றனர். இவர்கள் யாருக்கும் தலைவர்களும் அல்லர். யாருக்கும் ஊழியம் செய்வாருமல்லர். இவர்கள் கடவுளின் அன்பைப் பெற்றவர்களாகக் கருதப்பட்டு, தனி மனிதர்கள் இவர்களைத் தம் இல்லங்களில் சமயச் சடங்குகளை நிறைவேற்றிவைப்பதற்கு அழைப்பதுண்டு; கைம்மாறாகப் பல பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் இவர்கள் கொடுக்கப்பெற்றனர். இவர்கள் சில பொதுத் தொண்டுகளையும் செய்தனர். ஆண்டின் தொடக்கத்தில் மக்கள் கூட்டங்களில் எவ்வெப்பொழுது இயற்கை இன்னல்களை விளைவிக்கக் கூடுமென்று முன்னறிவித்ததோடு, எந்த எந்தக் காரியங்களை எவ்வெப்போது செய்தல் தலைசிறந்தது என்றும் முன்னெச்சரிக்கையாக அறிவித்து வந்தனர். தத்துவ ஞானி கூறியது உண்மையில் நடக்காவிட்டால், அவருக்கு வசைச்சொல் கிடைக்கும். அவரைச் சமூகம் புறக்கணிக்கும். இதைத் தவிர அவர் வேறு எந்தத் தண்டனையையும் பெறுவதில்லை. அதன்பிறகு அவர் எந்த எச்சரிக்கையையும் செய்யமாட்டார்.

இரண்டாம் பிரிவினரான வேளாளர், எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தனர். நிலத்தைப் பண்படுத்துவதைத் தவிரப் போர்த்தொழில் முதலிய எந்தப் பொது வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுவதில்லை. பகைவர் நாட்டில் புகும்பொழுது கூட இவர்களைத் துன்புறுத்துவதில்லை. இவர்கள் தங்கள் ஊர்ப்பகுதிகளில் வாழ்வதையே விரும்பினர்; நகரங்களுக்குச் செல்வதில்லை. நிலங்கள் யாவும் அரசனுடைய உடைமை என்ற சட்டமுறை இருந்ததால், வேளாளர் அரசர்களுக்குக் குறிப்பிட்ட திறையைச் செலுத்தினர். நிலத்திறை தவிர, விளைச்சலில் நான்கில் ஒரு பங்கையும் அரசுக் கருவூலத்திற்கு இவர்கள் செலுத்த வேண்டும்.

இடையர்கள் நாட்டுப்புறவாசிகளாகவோ நகரவாசிகளாகவோ இல்லாமல், கூடாரவாசிகளாக இருந்தனர். வேட்டையாடுதல் மூலம் இவர்கள் கொடிய விலங்கினங்களிடமிருந்து நாட்டைக் காத்து வந்தனர். இன்னல்தரும் பறவைகளைப் பிடிப்பதும் இவர்தம் தொழில். இதனால் வேளாளர் மிக்க பயன்பெற்றனர்.

கைத்தொழில் வினைஞர்கள் தாம் தயாரிக்கும் பொருள்கள் மூலம், போர் வீரர்களுக்கும் வேளாளர்களுக்கும் உதவினர். இவர்கள் அரசுக்கு வரி செலுத்த வேண்டியதில்லை. மேலும், அரசின் நிதி உதவியும் இவர்களுக்குக் கிடைத்தது.

இராணுவப் பிரிவினர் மக்கள் எண்ணிக்கை வரிசையில் இரண்டாம் இடத்தைப் பெறுவர். எப்பொழுதும் போருக்குத் தயாராக உள்ள இவர்கள், அமைதிக்காலத்தில் வேலையின்றி மனமகிழ் கேளிக்கைகளில் ஈடுபடுவர். அரசன் தான் பெறும் வரிப்பணத்திலிருந்து இவர்களுக்கு ஊதியம் கொடுத்து வந்தான்.

உளவாளிகள் நாட்டில் நடக்கும் எல்லாச் செய்திகளையும் அறிந்து, அவற்றை அரசனுக்கோ அவன் அதிகாரம் பெற்ற பேராளர்களுக்கோ அவ்வப்போது அறிவித்தனர்.

அமைச்சர்கள் எண்ணிக்கை அளவில் குறைந்தவர்கள்; ஆனால் யாவராலும் பெரிதும் மதிக்கப் பெற்றவர்கள். அதற்குக் காரணம் அவர்களின் மதிநுட்பமே. அவர்கள் இனத்திலிருந்தே அரசனால் நாட்டின் நிதிநிருவாகிகள், குற்ற நடுவர்கள் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படைத் தலைவர்கள் கூட அவர்களிலிருந்து தாம் அமர்த்தப் பெற்றனர்.

இத்தகைய சமூகப் பிரிவுகள் தளர்த்தப்படாமல் உறுதியாக இருந்தன. ஒரு பிரிவினர் மற்றப் பிரிவினரின் தொழிலைச் செய்வதில்லை. ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது இனத்திலேயே திருமணம் செய்துகொள்ள வேண்டும். கலப்புமணம் ஆதரிக்கப் படவில்லை.

அயல்நாட்டவர் அரசின் பாதுகாப்பைப் பெற்றிருந்தனர். அவர்களுக்கு எவ்வித ஊறும் ஏற்படாமல் கண்காணிக்கத் தனி இந்திய அலுவலர்கள் அமர்த்தப்பெற்றிருந்தனர். இந்தியாவில் இறக்கும் அயலவரின் உடல் புதைக்கப்பட்டது. அவர்களுக்கு உரிய பொருள்கள் யாவும் இறந்தோரின் உறவினருக்குச் சேர்க்கப்பட வேண்டும் என்பது சட்டம். நடுவர்கள், இதுபற்றி மிகவும் கவனமாகத் தீர்ப்பு வழங்கினர்.

ஆண்டுதோறும் நடைபெற்ற இரு போகச் சாகுபடி காரணமாக (முதலில் தானியம், பிறகு பழங்கள்) நாட்டில் செழிப்பு நிலவியது. நிலவளம் போற்றத்தக்கது. மெகசுதனீசு நாட்டில் காணப்பட்ட பல வகை விலங்குகளைப்பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். விலங்குகளைக் கூட விழுங்கக் கூடிய பெரிய பாம்புகள் மிகுதியாக இருந்தனவாம். இந்தியக்கடலில் மரங்கள் வளர்ந்திருந்தன என்ற குறிப்பும் நோக்கத்தக்கது.

இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் வழக்கம் இந்தியர்களிடம் இல்லை என்று இண்டிகா கூறுகிறது. இறந்தோரின் நற்செயல்களும், அவர்களைப் பராட்டும் பாடல்களும்தாம் தக்க நினைவுச் சின்னமாகும் என்பது இவர்கள் கருத்து. இந்தியர்கள் குறிப்பாக வெளியிடங்களுக்குச் செல்லும் போது மிகவும் சிக்கனமாக இருந்தனர். வேள்விக் காலங்களைத் தவிர மற்ற நாட்களில் இவர்களிடம் குடிப்பழக்கம் கிடையாது. இவர்களுடைய எளிய வாழ்க்கை காரணமாக, நீதிமன்றங்களுக்குச் சென்று அடிக்கடி முறையிடும் பழக்கத்தை வெறுத்தனர். தனித்தனியாக உண்பதையே இவர்கள் விரும்பினர்; கூட்டமாக உணவு உண்பதை விரும்பவில்லை. உணவுக்கு என்று குறிப்பிட்ட காலத்தையும் வரையறுத்துக் கொள்ளவில்லை. அணிகலன்கள்மீது இவர்களுக்கு விருப்பமுண்டு. விலைஉயர்ந்த நிறக்கற்களையும், மெல்லிய ஆடைகளையும் இவர்கள் மனம் நாடியது. அதுபோலவே, உண்மையையும் அறத்தையும் இவர்கள் விரும்பினர். தம் வேலையாட்கள் தமக்குக் குடை பிடித்து வருவதையும் இவர்கள் ஏற்றனர். முதியோர்கள் அறிவுக் கூர்மையுடன் இருந்ததால்தான் அவர்களுக்குச் சமூகத்தில் மதிப்பு இருந்தது. வயதில் மட்டும் முதியோராக இருந்து பெருமை பெற முடியாது. பல மனைவியரை மணக்கும் பழக்கம் நிலவியது. மாடுகளைக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பெண்களை வாங்கி மணம் புரியும் வழக்கமிருந்தது. சமூகத்தில் கற்புடைய மாதரும் கற்பில்லாதவரும் இருந்தனர். கடவுளுக்கு உயிர்ப்பலி தரும் வழக்கமிருந்தது. பொய்ச் சான்று சொல்பவர்களுக்குச் சித்திரவதைத் தண்டனை அளிக்கப்பட்டது. தொழில் வினைஞருக்கு ஊனமேற்படுத்துபவர்களுக்கு மரண தண்டனையும் வழங்கப்பட்டது. ஓர் அரசனை அவன் குடிபோதையில் இருக்கும்பொழுது கொன்றுவிட்ட மனைவி, அவனுக்குப்பின் வாரிசாக வருபவனை மணந்து கொள்ள வேண்டுமாம். ஆனால் அரசனுக்குத் தக்க பாதுகாப்பு உண்டு. அவன் வீதியில் செல்லும்போது, வீதியின் இருபுறங்களிலும் கட்டப்பட்ட கயிறுகளைத் தாண்டி எவரும் உள்ளே போகக் கூடாது. அப்படிச் செல்பவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். அரசனுக்குரிய முக்கிய கடமைகள் போர் புரிதல், நீதி வழங்குதல், வேட்டையாடுதல் ஆகியவையாம். அரசனைத் தவிர வேறு யாரும் யானையையோ குதிரையையோ தமக்கென வைத்துக்கொள்ளக் கூடாது.

அக்கால இந்தியர்கள் வட்டிக்குக் கடன்

கொடுக்கும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. கடன் பெற்றவர்கள் கடனைத் திருப்பித் தராவிட்டால், சட்டப்படி அவர்களை எதுவும் செய்ய முடியாது. கடன் கொடுத்தவன் வயிறெரிய வேண்டியதுதான் என்று இண்டிகா கூறுகிறது. ஒருவனை மான பங்கம் செய்ய, அவனுடைய மயிரை மழிக்கச் செய்யும்படி அரசன் ஆணையிடுவது வழக்கமாகும். யானைகளை எவ்வாறு பிடித்தனர் என்பது பற்றியும் அவைகளுக்கு மருத்துவ உதவி எவ்வாறு செய்யப்பட்டது என்பதைப் பற்றியும் மெகசுதனீசு விரிவாக விவரித்துள்ளார். அதுபோலவே, சமூகத்தின் தலையாய பிரிவினராகிய தத்துவ ஞானிகளிடையே காணப்பட்ட இரு பிரிவுகளைப் பற்றியும் அவர்களின் அன்றாட வாழ்க்கை முறை பற்றியும் பல பக்கங்களில் வருணித்துள்ளார். இந்தியாவுக்கு அப்பாலுள்ள சில நாடுகளின் மன்னர்களைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கையைப் பற்றியும் பல குறிப்புகள் இண்டிகாவில் இடம் பெறுகின்றன. மெகசுதனீசு தரும் குறிப்புகளைத்தவிர, எரதோசுதனீசு, நியார்கசு முதலியவர்கள் எழுதியுள்ள வருணனைகளும் இந்நூலில் காணக்கிடக்கின்றன. மேலும் உலகின் தெற்குப் பகுதிகள் வெப்ப மிகுதி காரணமாக, மனித வாழ்க்கைக்கு ஏற்றனவாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பல சான்றுகள் அதன் இறுதிப் பகுதியில் விவரிக்கப்படுகின்றன. அறியன் என்ற கிரேக்கர் தரும் குறிப்புகளும் இண்டிகாவில் அடங்கும். டி.பா.

துணை நூல்:

**Sathianathier, R., and Balasubramanian, D.,** இந்திய வரலாறு: முதல் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1960.

**இணக்க ஏற்பாடு:** ஒரு வழக்கில் தொடர்புடைய இருநாடுகள் தங்களுக்கு இடையேயுள்ள வழக்குகளை அல்லது முரண்பாடுகளை நடுவர் தீர்ப்புக்கு (Arbitration) விடுவதென்று கூறி, அதனை ஏற்றுக் கொள்ளுவதற்கான கட்டுப்பாடுகளையும், நடுவராகச் செயற்படும் நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், செயன்முறைகளையும் வரையறை செய்து, தங்களுக்கு இடையே செய்துகொள்ளும் முறையான ஒப்பந்தம் (Agreement) இணக்க ஏற்பாடு எனப்படும். இந்த ஒப்பந்தத்தைக் குறிக்கும் இணக்க ஏற்பாடு நாடுகளுக்கிடையே மட்டுமல்லாமல், தனி ஆட்களுக்கிடையே மேற்கண்ட நோக்கத்திற்காகச் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தையும் குறிப்பதாகும். பண்டைய உரோமானியக் குடியுரிமைச் சட்டத்தில் (Roman Civil Law), தனி ஆட்கள் தங்களிடையே எழும் ஏதேனும் ஒருவழக்கைத் தங்களால் குறிப்பிடப்படும் மூன்றாம் ஆளின் தீர்ப்புக்காக விடுவதென்று தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன்படிக்கையைக் குறிப்பிடுதற்கு 'இணக்க ஏற்பாடு' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. மேலும் இப்பொருளைக் குறிப்பிடும் 'இணக்க ஏற்பாடு' என்ற கலைச்சொல்லுக்குத் தாங்கள் தங்களுடைய வழக்கிலே நடுவர் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுவதாக, வழக்கிலீடுபட்டுள்ள இருவரும் அல்லது இரு கட்சியாரும் ஒருவருக்கொருவர் தரும் வாக்குறுதி (Promise) என்பதுதான் நேரான பொருள் ஆகும்; எனவேதான், இணக்க ஏற்பாடு என்னும் இத்தொடர், ஒரு வழக்கினை நடுவர் தீர்ப்புக்கு விடுவதென்று வழக்கிலீடுபட்டவர்கள் ஒத்துக்கொண்டு செய்யும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்ற விரிந்த பொருளில் கையாளப்படுகிறது. மேலும், இத்தொடர் நடுவரின் உதவியின் வாயிலாக ஒரு வழக்கைத் தீர்க்கும் முறையை மட்டுமல்லாமல், நடுவர் தீர்ப்பின் வாயிலாகவோ வழக்காளிகள் ஒருவருக்கொருவர் சில சலுகைகளை விட்டுக் கொடுப்பதற்கு ஒத்துக்கொள்ளுவதன் வாயிலாகவோ ஒரு வழக்கைத் தீர்க்கும் முறையையும் உணர்த்துகிறது. பெரும்பாலும் பன்னாட்டு உறவுகளில் எழும் வழக்குகளில் தொடர்புடைய நாடுகள் வழக்கில் ஒன்றுக்கொன்று சிறிது விட்டுக்கொடுக்குமாறு செய்து, அந்தவகையில் அவற்றுக்கிடையே மோதலைத் தவிர்த்து, நல்லிணக்கத்தை உண்டாக்கும் முறையே கையாளப்படுகிறது. ஆகையால் இத்தொடர், வழக்கிடும் நாடுகள் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து, மோதலைத் தவிர்த்து, நட்புறவோடிருக்கும்படி செய்யும் உடன்படிக்கையையே பெரும்பாலும் உணர்த்துகிறது. வழக்காளிகள் தங்களுடைய தீவிரமான கோரிக்கைகளையோ உரிமைகளையோ ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்குமாறு செய்து, அவ்வகையில் ஒரு வழக்கிற்குத் தீர்வு காணுதல் தான் இணக்க ஏற்பாடு (Compromise) என்ற முறையின் நோக்கமாகும். ஆனால் விட்டுக்கொடுத்தல் என்பது வழக்காளிகள் எவரும் தமது அடிப்படை உரிமையை அல்லது நிலையை அழிக்கக்கூடிய அல்லது ஆதாரக்கொள்கைகளை விட்டுவிடக்கூடிய அளவுக்கு ஒத்துப்போகுமாறு அல்லது ஒப்பந்தம் செய்யுமாறு தீர்ப்பு இருக்குமானால், அத்தகைய இணக்க ஏற்பாடு தாழ்ச்சியை உண்டாக்கும் இணக்க ஏற்பாடு என்றும் பொருள்படும்.

இந்த நூற்றாண்டில் முதலாம் உலகப்போருக்குப் பின்னர் (1914–18), போரை நீக்கி, நாடுகளுக்கிடையே அமைதியையும் நல்லுறவையும் பாதுகாப்பையும் நிலவச்செய்யும் நோக்கங்களுடன் நிறுவப்பட்ட பன்னாட்டுச் சங்கத்தில் (League of Nations) இணக்க ஏற்பாட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருந்தது. இச்சங்கத்திற்கு ஆதாரமான ஒப்பந்தத்

தின் (League Covenant) பிரிவுகளுள் 11-இலிருந்து 15 வரை உள்ள பிரிவுகள், நாடுகளுக்கிடையே எழும் வழக்குகள் (Disputes) போரைத் தோற்றுவித்து விடாமல் தடுப்பதற்குரிய சில செயன்முறைகளை விதித்தன; உலகத்தில் எப்பகுதியிலேனும் போர் மூளக்கூடிய அச்சநிலை தோன்றுமாயின், அத்தகைய நிலை சங்க உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் பொதுவான கவலைக்குரிய, கவனத்துக்குரிய ஒரு பொருளாகக் கருதப்படுதல் வேண்டும்; ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட உறுப்பு நாடுகள் எல்லாம், மோதலைத் தோற்றுவிக்கக்கூடிய எத்தகைய வழக்கையும் நடுவர் தீர்ப்புக்கு (Arbitration by a third power), நீதிமன்றத்தீர்ப்புக்கு (Judicial Settlement), சங்கக் குழுவின் (League Council) ஆய்வுக்கு (Enquiry) விடுவதென்றும், வழக்குக்குத் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின் 3 மாதகாலத்துக்குப் போர்முறையைக் கையாளாமலிருப்பதென்றும், மேலும் சங்கம் அளிக்கும் தீர்ப்பை அல்லது முடிவை அல்லது அறிக்கையை ஏற்றுக்கொள்ளச் சங்க உறுப்பு நாடு ஏதேனும் இசைந்தால், அவ்வாறு இசைவளிக்கும் சங்க உறுப்பு நாட்டிற்கு எதிராக மற்றச் சங்க உறுப்பு நாடு எதுவும் போர் தொடுத்தல் கூடாது என்றும் சங்க உறுப்பு நாடுகள் எல்லாம் ஒப்புக்கொண்டன. இவ்வொப்பந்தத்தை மீறும் எந்தச் சங்க உறுப்பு நாட்டிற்கும் எதிராகப் பொருளாதாரத் தடைகளை மற்ற உறுப்புநாடுகள் கடைப்பிடித்தல் வேண்டுமென்றும், மேலும் ஒப்பந்தத்தை மீறும் உறுப்பு நாட்டிற்கெதிராகப் போர்நடவடிக்கைகளைச் சங்கம் எடுக்கும் பொருட்டுச் சங்கத்துக்கு உறுப்புநாடுகள் தரை, கடல், வான்படைகளை வழங்கி உதவுதல் வேண்டுமென்றும் ஒப்பந்தத்தின் 16-ஆம் பிரிவு கூறிற்று. அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்தும்பொருட்டு, நடுவர் தீர்ப்பினடிப்படையில் இணக்க ஏற்பாட்டுமுறையைச் சங்க ஒப்பந்தம் விதித்தது போல், படைக்குறைப்பு, தொழிலாளர் நலன்பாதுகாப்பு, முதலிய பல்வேறு வழிகளும் கூறப்பட்டிருந்தன.

பன்னாட்டுச் சங்கம், இவ்விதிமுறைகளின் துணைகொண்டு துருக்கிக்கும் ஈராக்குக்குமிடையேயும், கொலம்பியாவுக்கும் பெருவுக்குமிடையேயும் தோன்றிய சிறிய வழக்குகளை இணக்க ஏற்பாடுகளின் வாயிலாகத் தீர்த்து வைத்துப் போரை நீக்கிற்று. ஆனால் வல்லரசாகிய சப்பான் சீனாவை 1931-ஆம் ஆண்டு தாக்கி அதன் வடமாகாணமாகிய மஞ்சூரியாவைக் கைப்பற்றியபோது, சீனாவின் முறையீட்டின்பேரில் சங்கம் சப்பானின் செயலைக் கண்டிக்க, சப்பான் மஞ்சூரியாவை வென்று கைக்கொண்ட பின் சங்கத்தினின்றும் விலகிற்று. பிரிட்டன் ஆசியாவில் தன் கீழைப் பேரரசு பாதுகாப்பாக இருக்கும் பொருட்டுச் சப்பானைப் பகைத்துக் கொள்ள விரும்பாமல், அதற்கெதிராகத் தடைகளைக் கையாளவில்லை. இதுபோலவே இத்தாலி நாடு எத்தியோப்பிய நாட்டைத் தாக்கியபோது, பிரான்சு நாடு இத்தாலிக்கெதிராகப் பொருளாதாரத் தடைகளைக் கையாளாமல் ஒதுங்கி இருக்க, பிரிட்டன் தான் மட்டும் இத்தாலிக்கெதிராக எந்த நடவடிக்கையையும் தனியாக எடுத்தல் இயலாதென்று கூறிவிட்டது. இத்தாலி எத்தியோப்பியாவை வென்று இணைத்தபின் சங்கத்தை விட்டு விலகிற்று. இவ்வாறு 'இணக்க ஏற்பாட்டையும்' 'கூட்டுப் பாதுகாப்பையும்' (Collective Security) ஏற்ற சங்க உறுப்பு நாடுகளே அவற்றின் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டமையால், சங்கம் பயனற்றுப் போயிற்று.

இணக்க ஏற்பாட்டுக்கும் அதை அடிப்படையாகக் கொண்ட கூட்டுப் பாதுகாப்புக்கும் (Collective Security) இக்காலப் பன்னாட்டுக் கழகப் பட்டயத்தில் (Charter of the United Nations Organisation) பிரிவு 51-இல் வழிசெய்யப்பட்டிருக்கிறது. அமைதியை அழிக்கக்கூடிய அச்சநிலை, அமைதியை மீறும் செயல், வலியத்தாக்குதல் (Aggression) முதலியவைகளை நீக்குதற்காகத் தடுப்புநடவடிக்கைகளை (Preventive Action) எடுப்பதற்குப் பாதுகாப்புக் குழுவுக்கு (Security Council) முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதோடு, அமைதியான முறையில் தீர்வுகாணலுக்கு (Pacific Settlement) உகந்த அனைத்தையும் செய்வதற்கும் பாதுகாப்புக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வழக்கிடும் நாடுகள் தங்கள் வழக்குகளை நடுவர்தீர்ப்புக்கோ நீதிமன்றத் தீர்ப்புக்கோ பேச்சுவார்த்தைக்கோ (Negotiation) ஆய்வுக்கோ (Enquiry) இடையீட்டாளர் பணிக்கோ (Mediation) இணக்கம் ஏற்படுத்தலுக்கோ (Concil-ation) விட்டுப் போர்முறையைக் கையாளாதிருத்தல் வேண்டும். இவை பயனளிக்காவிட்டால் பாதுகாப்புக்குழு தனது தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வழக்கிடும் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். இத்தகைய முறைகளெல்லாம் (இணக்க ஏற்பாடு முதலியவையெல்லாம்), சட்டத்தின் வாயிலாகச் செயற்படுத்தக் கூடியவை அல்ல; எவ்வாறெனில் வழக்கிடும் நாடுகள் ஒன்றுக்கொன்று சிறிது விட்டுக் கொடுத்துப் போர்முறையைத் தவிர்ப்பதென்று தமக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன்படி நடந்தால்தான் இணக்க ஏற்பாட்டின் தீர்ப்புகள் செல்லுபடியாகும்; வழக்கிடும் நாடுகள் இணக்க ஏற்பாட்டை ஒப்புக் கொள்ளாவிடில், இவ்வேற்பாட்டின்படி நடுவர் அளிக்கும் தீர்ப்புகள் செல்லுபடியாக

மாட்டா. ஆகையால் பன்னாட்டு உறவுகளைப் பொறுத்தமட்டில் நாடு ஒவ்வொன்றும் இறைமை அல்லது தன்னாட்சி உரிமையுடைய நாடாகையால், அவை தாமாக விரும்பிப் பன்னாட்டு ஒப்பந்தங் களையும், இணக்க ஏற்பாடுகளையும் செயற்படுத்தி-னால்தான் அவை செல்லுபடியாகும். இறைமை யுடைய வலுவற்ற நாடுகளும் வல்லரசுகளின் ஆத ரவை நாடியே தம் பன்னாட்டு உறவுகளை அமைத்துக்கொள்ளும்படி தற்கால அரசியல் நிலை இருக்கிறது.

**இணக்கம்:** சமூக இடைவினை (Social-Interaction) பல்வேறு படிவங்களில் நிகழ்கிறது. அவற்றுள் முக்கியமானவை கூட்டுறவு (Co-operation), போட்டி (Competetion), பூசல் (Conflict), இணக்கம் (Accommodation), ஒருங்கிணைவு (Assimilation) என்பனவாகும். மனிதன் தன் அறிவுத் திறனால், தான் வாழ நேரிடும் புதிய சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்வதுடன் அதைத் தனக்கு ஏற்றதா கவும் ஆக்கிக்கொள்கிறான். இவ்வாறு அவன் சூழ் நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வதை இணக்கம் எனலாம். அந்தச் சூழ்நிலை இயற்பியல் சூழ்நிலையாகவோ (Physical Environment) சமூகச் சூழ்நிலையாகவோ (Social Environment) இருக் கலாம். மாறிவரும் இந்தச் சூழ்நிலைகளுடன் அவன் தன்னை இணக்கமாக்கி வாழப் பழகிக் கொள்கிறான். சூழ்நிலையோடு தன்னை இணக்கப்படுத்திக் கொள்ளத் தவறினால் அவன் அழிவது உறுதி என் பதை உணர்ந்து கொள்கிறான். உயிரினங்கள் சூழ் நிலைக்கேற்ற வகையில் தம்மை மாற்றிக்கொண்டு வாழ வழி செய்து கொள்கின்றன. இதை உலக வாழ்வின் இயல்பு என்றே குறிப்பிடலாம். மெக்ஈவர் (MacIver), 'மனிதன் தன்னுடைய சுற்றுப்புறச் சூழலுடன் இசைந்து போதலே இணக்கம்' என்று வரையறை செய்கிறார்.

மனிதச் சமுதாயத்தில் இருவரிடையே அல்லது இரு பிரிவினரிடையே ஏற்படும் பூசலுக்கு விரைவிலோ காலங்கடந்தோ ஓர் உடன்பாடு (Compromise) ஏற் படுதல் இயல்பானதே. இதையே சமூகவியலறிஞர் கள் 'இணக்கம்' என்று குறிப்பிடுகிறார்கள். இரு குழுக் களிடையே வேற்றுமைகளும் மறைவான பகையும் அமைந்து, பூசல் ஏற்பட்டிருந்தாலும் அக்குழுக்களைச் சேர்ந்த தனி மனிதர்கள் ஒன்றுபட்டு வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனை இணக்கம் என்று ஆக்பர்ன் (Ogburn), நிம்காபு (Nimkoff) ஆகிய சமூகவியலறிஞர்கள் விளக்குகிறார்கள். இதிலிருந்து பிணக்கின் அடிப்படையில்தான் இணக்கம் ஏற்பட முடியும் என்பதை உணரலாம்.

பிணக்குத் தீர்ந்து இணக்கம் ஏற்பட்டாலும், ஒரு நேரத்தில் மறைந்திருக்கும் பகைமை மீண்டும் வெளிப்பட்டுப் பிணக்கை ஏற்படுத்தக் கூடும். ஆகவே இணக்கத்தின் பின் பிணக்கு புகைந்து கொண்டிருக்க வாய்ப்புண்டு. இதனால்தான் சம்னர் (Sumner) என்ற சமூகவியலறிஞர் இணக்கத்தை, 'எதிர்ப்பான அல்லது பகைமுகக் கூட்டுறவு' (Antagmistic Corper-ation) என்று கூறுகிறார்.

உடன்பாடு என்னும் சொல் இணக்கத்துடன் தொடர்புடையதாகும். இருவருக்கிடையிலோ இரு குடும்பங்களுக்கிடையிலோ இரு குழுக்களுக்கிடை யிலோ இரு நாடுகளுக்கிடையிலோ பிணக்கு ஏற்பட் டால், பின்னால் வரப்போகும் அழிவைக் கருதி உடன்பாடு செய்து கொள்வதனால் பிணக்கைத் தவிர்க்கலாம். ஆனால் இரு சமயக் குழுவினரிடையே ஏற்படும் பிணக்கை உடன்பாடு செய்து கொள்வதன் மூலம் தவிர்ப்பது எளிதன்று. இரு பிரிவினரும் தங் கள் சமயக் கொள்கையினை விட்டுக் கொடுக்க முடி யாத காரணத்தால் உடன்பாடு ஏற்படுவதே இயலா மற் போகலாம். இது போன்ற காலங்களில் ஒரு மதத்தினரை மற்றொரு மதத்தவர் பொறுத்துக் கொண்டு போகும் வழியைப் பின்பற்றலாம்.

சமரசம் (Conciliation), நடுவர் தீர்ப்பு (Arbitra-tion) ஆகியவற்றுடன் இணக்கம் தொடர்புடையதாக இருக்கிறது. தொழிற்கூடங்களில் நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் பிணக்கு கள், மாநிலங்களுக்கிடையே ஏற்படும் ஆற்றுநீர்த் தகராறுகள் போன்றவை மேற்குறித்த வழிகளால் தீர்த்து வைக்கப்படுவதால் இணக்கம் ஏற்படுகிறது.

இணக்கத்தை ஏற்றுக்கொள்வதும் தவிர்ப்பதும் அவரவர் பண்பாட்டைப் பொறுத்தே அமைகிறதென ஆக்பர்னும் நிம்காபும் குறிப்பிடுகின்றனர். சில பண் பாட்டுக் குழுவினர் சமரசம் அல்லது உடன்பாடு செய்து கொள்வதை விரும்பமாட்டார்கள். உடன் பாடு செய்து கொள்வது ஒருவரின் வலிமையின் மையையே காட்டுகிறதென்று பெரும்பாலோர் கருதுவதால் அதை விரும்புவதில்லை. ஆனால் இரு சீனர்கள் தெருவில் சண்டையிட்டுக் கொண்டால் உடனே அதைப் பார்க்க ஒரு கூட்டம் கூடும்; பிறகு கூட்டத்தினர் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு அருகேயுள்ள தேநீர் விடுதிக்குச் செல்வர்; அங்கு வந் தோர் அனைவர்க்கும் தேநீர் வழங்கப்படும்; அப்போது சண்டையிட்டுக் கொண்டோர் ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொள்வர்; இதைக் கேட்டுக்கொண்டிருக் கும் கூட்டத்தினரே நடுவர்களாக இருந்து தீர்ப்புச் சொல்வர்; இருவரில் எவரிடம் குறையுள்ளதோ

அவரே எல்லோர்க்கும் வழங்கப்பட்ட தேநீர்ச் செலவை ஏற்றுக்கொள்வார்; அத்துடன் அச்சிக்கல் முடிவுற்று அவர்களிடையே இணக்கம் ஏற்படும்.

சில நேரங்களில் அலுவலர்கள் தாம் வேலை செய்யும் அலுவலகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளால் சிலரிடம் இணங்கிச் செல்ல வேண்டியவர்களாகவுள்ளனர். மேல் அதிகாரிகளுக்கு மற்ற அலுவலர்கள் கீழ்ப்படிந்து வேலை செய்கிறார்கள். ஓர் அலுவலருக்குத் தலைமை அதிகாரியிடம் தனிப்பட்ட முறையில் பகை இருந்தாலும், அவர் தமக்கும் தலைவருக்குமுள்ள தகுதி, அதிகார எல்லைஆகியவற்றைக் கருதிச் செயற்பட வேண்டி இருப்பதால் தாம் அவருடன் இணங்கிச் செயற்படுகிறார். இது போலவே சமூகத்தில் வசதி படைத்த செல்வர்களுடனும் செல்வாக்குடையோருடனும் ஏழைகள் தம் தகுதியை நினைத்து இணங்கிப் போவதைக் காணலாம்.

சமூகத்தில் பல்வேறு அடிப்படைகளில் உண்டாகும் பிணக்குகளை அப்படியே விட்டுவிட்டால் அவை சமூக ஒழுங்கையே குலைத்துவிடும். இதனால் பல சமூகச் சிக்கல்கள் உருவாகி அவை மக்களிடையே ஒற்றுமையைச் சீரழித்து விடும். ஆகவே சமூகத்தில் இணக்கம் எப்போதும் வலியுறுத்தப்படுகிறது. இதைத் தவிர்த்தால் சமூகம் பல சிக்கல்களுக்குள்ளாகி, நிலையற்றதாக மாறி முடிவில் அழிவுற நேரிடும்.

கோ.க.

துணை நூல்:

MacIver, R.M. & Page, CH., Society: An Introductory Analysis, New York: Holt, 1961.

**இணங்காதார்**: கிறித்தவ சமயத்தாரிடையே கோட்பாட்டினடிப்படையிலும் வழிபாட்டு முறையினடிப்படையிலும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே பல பிரிவுகள் தோன்றின. அவர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவரெனவும் (Catholic Christians) மறுப்புரைக் கிறித்தவரெனவும் (Protestant Christians)இரு பெரும் பிரிவினராகப் பிரிந்தனர். மறுப்புரையாளர்களும் வைதிக நெறியாளர் (Orthodox Protestants)எனவும், அவர்களுடைய கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளாதவர் தீவிர சீர்திருத்தவாதிகள் (Radical Reformers) அல்லது இணங்காதார் (Dissenters) எனவும் இரு பிரிவினராகப் பிரிந்தனர். ஆகையால் இணங்காதார் என்ற பெயர், மிதவாத மறுப்புரைக் கிறித்தவர் அல்லாத, தீவிர சீர்திருத்த வாதிகளடங்கிய எல்லாக் கிறித்தவப் பிரிவினரையும் குறிக்கும். கத்தோலிக்கக் கிறித்தவர்கள் கடவுள் (தந்தை), கிறித்து மகன்), தூய ஆவி (Holy Ghost) என்ற மூன்று புனிதப் பொருள்களையும்(Holy Trinity), கிறித்தவத் திருச்சபையின் தலைவராகிய போப்பையும்(Pope), கிறித்தவ வேத நூலாகிய விவிலியத்தினையும் (Bible), திருச்சபைக் குருமார்களையும், சில வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் ஒப்புக்கொள்ள, மூன்று புனிதப் பொருள்களையும், விவிலிய நூலையுமே மார்ட்டின் உலூதரால் தோற்றுவிக்கப்பட்ட மறுப்புரைக் கிறித்தவர்கள் ஒப்புக்கொண்டனர். கத்தோலிக்கர் ஏற்றுக் கொண்ட போப்பின் தலைமையை மறுத்த கிறித்தவரே மறுப்புரையாளர் எனக் குறிக்கப்பட்டனர். இவர்களே சீர்திருத்தக் கிறித்தவரெனவும் ( Reformers) கூறப்பட்டனர். எடுத்துக்காட்டாகச் செருமனியில் இந்த இயக்கத்தைத் தொடங்கிய மார்ட்டின் உலூதரும் (Martin Luther), சுவிட்சர்லாந்திலிருந்த சீர்திருத்த இயக்கத் தலைவர் சுவிங்கிலி (Zwingli) என்பவரும் பிரஞ்சு சீர்திருத்த இயக்கத் தலைவர் சான் கால்வினும் (John Calvin) போப்பின் தலைமையை ஒப்புக்கொள்ளாத மறுப்புரையாளர்களே ஆயினும், சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையிலும் அவர்களிடையே வேறுபாடுகள் உண்டு.பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பரவிய மறுப்புரைச் சீர்திருத்த இயக்கம் பெருமளவில் கால்வின் என்பவருடைய கருத்துகளை ஒப்புக்கொண்டதேயாகும். ஆங்கிலக் கிறித்தவத் திருச்சபையில் இருந்து வந்த போப்பின் தலைமையை நீக்கிவிட்டு, அரசருடைய (அல்லது அரசின்) தலைமையை ஏற்படுத்திய பாராளுமன்றம் , தீவிர மறுப்புரையாளர் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய மறுத்தது. ஆங்கிலத் தீவிர மறுப்புரையாளர், தூய்மையாளர் (Puritans) அல்லது ஆங்கில மறுப்புரையாளர் திருச்சபையை (Anglican Protestant Church) ஏற்காதவர்கள் (Nonconformists) இணங்காதார் எனப்பட்டனர். இணங்காதார் கடவுள் ஒருவரே என்றும், மூன்று புனிதப் பொருள் இல்லையென்றும், கிறித்து இறைவன் அல்லர் என்றும், அவர் கடவுளால் படைக்கப்பட்டவரே என்றும், விவிலியம் ஒன்றே மக்களுக்கு உண்மையான வழிகாட்டி என்றும் கூறிச் சடங்குகளைப் புறக்கணித்தனர். அவர்களுள் சிலர், கால்வின் கூறிய மக்களையெல்லாம் இயக்கும் இறைவனின் சட்ட உண்மையையும், சான் இலாக்கு (John Locke) கூறிய பகுத்தறிவுக் கோட்பாட்டையும், சோசப்பு பிரீசுட்டிலி (Joseph Priestly) என்ற அறிவியலார் கூறும் கிறித்துவின் உயிர் மீட்பையும் (Resurrection), வியத்தகு நிகழ்ச்சிகளையும் (Miracles) கடவுளின் அனைத்து ஆற்றலையும், பகுத்தறிவு, ஒழுக்க வாழ்வு ஆகியவற்றின் மேம்பாட்டையும், அரசியல் சீர்திருத்தத்தையும் ஒப்புக்கொண்டனர். இவர்களிடையே கோட்பாட்டினடிப்படையில் வேறுபாடுகளும் உண்டு. பண்டைக்காலத்திலிருந்து

கிறித்தவத் திருச்சபை தீவினையாளர்களுக்கு நரகமும் நல்வினையாளருக்கு வானுலகமும் கிடைக்குமென்னும் கருத்தைக் கூறிவரவும், ஓரிசென் (Origen) என்ற கி.பி. 3-ஆம் நூற்றாண்டைய துறவி, இறுதித் தீர்ப்பு நாளில் (Last Day) இறைவன் எல்லாரையும் தம்மிடம் அழைத்துக்கொள்ளுவாரெனவும் கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட இணங்காதார், யாவருக்கும் மீட்சி என்ற கொள்கையாளர்(Universalists)எனவும், புனித முப்பொருள்களை மறுத்துக் கடவுள் ஒருவரேஎன்றகொள்கையைவற்புறுத்தும்ஒருமைக்கோட்பாட்டாளர்(Unitarans)எனவும் குறிப்பிடப்பட்டனர். இருசாராரும் இணங்காதார் என்ற பெரிய பிரிவில் அடங்குவர். ஒருமைக் கோட்பாட்டாளராகிய இணங்காதார் ஆங்கில மறுப்புரைக் கிறித்தவத் திருச்சபையினால் நிறுவப்பட்ட கொள்கைகளை மறுத்தமையால், அவர்கள் முரண்கோட்பாட்டாளர் (Heretics) எனக் கருதப்பட்டுப் பாராளுமன்றச் சட்டங்களின்படி தண்டிக்கப்பட்டனர். ஆகையால் ஆங்கிலக் குற்றஇயல் சட்டங்கள் திருத்தப்படவேண்டுமென்று இணங்காதார் கூறி, பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் அமைப்புகளை நிறுவி, இயக்கங்களை நடத்தினர். அவர்கள் சமயக் கோட்பாடுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் கடுமையான முறைகளை விடுத்து, எளிய, தாராள முறைகளை ஆதரித்தமையால், அவர்களுக்குப் பொதுமக்களுடைய ஆதரவு இருந்தது. பாராளுமன்றத்திலும் உள்ளாட்சி மன்றங்களிலும் தாராள இயல்புடைய தொழில்களிலும் (அதாவது சமய விரிவுரையாளர், பள்ளி ஆசிரியர் தொழில்களிலும்) அவர்கள் செல்வாக்குப் பெற்றும், தாராளச் சமூகச் சீர்திருத்தங்களை (Liberal Social Reforms) (அதாவது யாவருக்கும் வாக்குரிமை, தொழிலாளர் நலன்கள், பெண்கல்வி, சிறைக்கூடங்கள் சீர்திருத்தம், குற்ற இயல் சட்டச் சீர்திருத்தம், சமய உரிமைகள் முதலியவைகளை) ஆதரித்தும் வந்தமையால், கி.பி. 1844-ஆம் ஆண்டின் இணங்காதார் தொழுகை இல்லங்களின் சட்டத்தின்படி (Dissenters Chapels, Act. 1844) இணங்காதார் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளெல்லாம் நீக்கப்பட்டு, அவர்கள் ஆங்கில மறுப்புரைக் கிறித்தவர்களைப் போன்று எல்லா உரிமைகளும் பெற்ற முழுக் குடிமக்கள் ஆயினர். கடவுளின் தந்தை நிலையையும், மக்களின் உடன்பிறந்தோர் நிலையையும், இயேசுவின் ஒழுக்க இயலான அதிகாரத்தையும், அவர்கள் வலியுறுத்தியமையாலும், என்றும் நிலைத்திருக்கும் நரகம் என்ற கருத்தை (The Idea of Eternal Hell) அவர்கள் மறுத்தமையாலும் சாதாரண எளிய மக்களெல்லாம் இணங்காதாருடைய நெறியை வரவேற்றனர். பல சமூகச் சீர்திருத்தங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டிலும் ஆங்கிலப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன. இதனால் இணங்காதார் பொதுவாழ்வு சீராக அமைவதற்குத் தொண்டாற்றினர் என்று தெரிகிறது.

**இணுவையந்தாதி** அம்பிகை பாகர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் ஈழ நாட்டில் யாழ்ப்பாணத்து இணுவில் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது காலம் கி.பி. 1884 முதல் 1904 வரை ஆகும். இவர் தணிகைப் புராணத்தில் உள்ள நகரப் படலம் வரை உரை எழுதியவர். சூளாமணியை உரைநடையில் எழுதிப் பதிப்பித்தவர்.

'அந்தாதி' என்பது தொண்ணூற்றாறு வகைச்(பிரபந்தங்கள்) சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். நூலிலுள்ள ஒவ்வொரு பாடலிலுமுள்ள ஈற்று எழுத்து, அசை, சீர், அடி ஆகியவற்றுள் ஒன்றினை, அடுத்து வரும் பாடலின் முதலில் அமைத்தும், நூலின் இறுதிச் செய்யுளின் ஈறும் முதற்பாடலின் முதலும் ஒன்றாக இருக்குமாறு மண்டலித்து அமைத்தும் பாடுவதாகும்.

இணுவை என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாடப்பட்டது போலும் இவ்விணுவை அந்தாதி. இப்போது இந்நூல் கிடைத்தற்கரிதாயுளது. வீ.சொ.

**இணை உச்சரிப்பு:** **தனியொலிகள்:** பேச்சொலிகளுள் பெரும்பான்மையானவை வாயறையில் பிறப்பவையே. வாயறையில் உள்ள இயங்குறுப்பு தன் நிலையில் இருந்து எழுந்து நிலையுறுப்பை அணுகுவதால், மூச்சுக்காற்றின் போக்கில் மாற்றம் விளைகின்றது. இதுவே பேச்சொலி பிறப்பிற்குக் காரணமாக அமைகின்றது. இவ்வாறு பிறப்பிக்கப்படும் ஒலிகள் தனியொலிகள் (Simple Sounds) எனப்படும். இவ்வகை ஒலிகள், ஓர் இயங்குறுப்பு ஒரு நிலையுறுப்பை அணுகி, ஒரே வகைத் தடையை உண்டாக்குவதால் பிறப்பவை. அதாவது, இயங்குறுப்பும் நிலையுறுப்பும் நெருங்கி உண்டாக்கும் தடையால் பிறப்பிக்கப்படும் ஒலிகள் தனியொலிகளாகும்.

இணை உச்சரிப்பு: ஒரே சமயத்தில் இரண்டிற்கு மேற்பட்ட ஒலியுறுப்புகள் செயற்படுவதாலோ ஒன்றிற்கு மேற்பட்ட தடைகள் விளைவிக்கப்படுவதாலோ பிறப்பிக்கப்படும்ஒலிகள் கூட்டொலிகள் (Complex sounds) எனப்படும். இவ்வகை உச்சரிப்பு முறை இணை உச்சரிப்பு (Co-articulation) எனப்படும்.

இணை உச்சரிப்பு முறையால் பிறப்பிக்கப்படும் மெய்யொலிகள் இருவகைப்படும். இவை சார்பொலிகள்(Co-articulated sounds), இணையொலிகள் (Double articulation sounds) என்பனவாகும்.

சார்பொலி: மெய்யொலிகள் இதழ், நுனிநா, இடைநா, கடைநா, மேற்றொண்டை, குரல்வளை ஆகியவற்றை இயங்குறுப்புகளாகக் கொண்டு பிறப்பவை. இவற்றில் ஏதேனும் ஓர் உறுப்பு இயங்கி ஒலியை உண்டாக்கும்போது வேறு ஓர் உறுப்பும் ஒலியை உண்டாக்கும் நிலையில் அமையுமாயின், இவ்விரு அமைப்பு முறையையும் கொண்டு ஒருவகைக் கூட்டொலி பிறக்கும். இவ்வகைக் கூட்டொலி ஓர் ஒலியும் வேறோர் ஒலியும் இணைந்து அமைந்து அதில் முன்னது முழுமையாகவும் பின்னது முன்னதை மாற்றி அமைக்கும் ஒலியாகவும் அமையும். இதனைப் பின்னதன் சார்புடைய ஒலி என்று கூறுவர். எடுத்துக் காட்டாக வாய்க்கால் என்ற சொல்லை ஒலிக்கும் போது அச்சொல்லில் உள்ள ககரம், பின்நா பின் அண்ண அடைப்பு முழுதாக நிகழ்ந்து, அதனுடன் இடைநா இடையண்ண அடைப்பும் நிகழ்ந்து முன்னதைப் பின்னதன் சார்புடன் ஒலிக்கச் செய்வதைக் காணலாம். இக்ககரம் அண்ணச்சார்புடைய ஒலியாகும்.

இதழ், நுனிநா, இடைநா, கடைநா, மேற்றொண்டை, குரல்வளை ஆகிய ஆறு இயங்குறுப்புகளும், தனித்தனியே ஏனைய ஐந்து உறுப்புகளும் உண்டாக்கும் ஒலிகளை மாற்றித் தத்தம் சார்புடைய கூட்டொலிகளாக மாற்றியமைக்கும். இச்சார்புடை ஒலிகள் இணை உச்சரிப்பு ஒலிகளாகும். இவற்றை முறையே இதழ்ச்சார்பமைப்பு (Labialization), நுனிநாச் சார்பமைப்பு (Apicalization), வல்லண்ணச் சார்பமைப்பு (Palatalization), மெல்லண்ணச் சார்பமைப்பு (Velarization), மேற்றொண்டைச் சார்பமைப்பு (Pharyngealization), தொண்டைச் சார்பமைப்பு (Laryngealization) எனக் குறிப்பர். அடியிற் காணும் அட்டவணை பெயரையும் குறியீட்டையும் பொருத்திக் காட்டுகிறது.

இணையொலி: இணை உச்சரிப்பின்போது பிறக்கும் இரு ஒலிகளுக்கும் முயற்சி அதாவது பிறப்பாக்கம் வேறு வேறாக அமையும். இவ்வாறு பிறப்பாக்கத்தில் வேறுபாடின்றி ஒரே வகையான பிறப்பாக்கத்தோடு இரு இயங்குறுப்புகள் செயற்பட்டு ஒலிகளைப் பிறப்பிக்குமாயின், அவை இணையொலிகளாகும். எடுத்துக்காட்டாகக் கீழிதழும் கடைநாவும் முறையே மேலிதழ் மெல்லண்ணம் ஆகியவற்றை நெருங்கி ஒரேசமயத்தில் அடைப்பினை விளைவிப்பதால் உண்டாகும் கூட்டொலி இதழண்ண இணையாகும். இதனை $\widehat{pk}$ என்று குறியீடு செய்து இதழ் மெல்லண்ண இணை எனக் குறிப்பர். இணை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இதழ்ச்சார்பு | $t^w$ | $c^w$ | $k^w$ | $s^w$ | |
| நுனிநாச்சார்பு | $V^r$ | $C^r$ | $K^r$ | $C^r$ | |
| இடைநாச்சார்பு | $P^y$ | $G^y$ | $S^y$ | $\gamma^y$ | $/^y$ |
| கடைநாச்சார்பு | $P^r$ | $K^r$ | $Z^r$ | $r^r$ | $l^r$ |
| மேற்றொண்டைச்சார்பு | P | **t** | r | l | |
| தொண்டைச்சார்பு | P | d | g | m | |

ஒலிகளை உண்டாக்கும்போது முயற்சி ஒரேதன்மையாக இருக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும்.

| | |
|---|---|
| k͡p, g͡d, b͡j | இணை அடைப்பிகள் |
| p͡s x͡j, e͡x | இணை உரசிகள் |
| r͡R | இணை அதிரி |
| m͡n, n͡n | இணை மூக்கொலி. |

மூக்குச் சார்பொலி (Nasalized sound)களையும் சிலர் இணை உச்சரிப்பு ஒலிகளில் அடக்குவர். இது தவறு. ஏனெனில், இணை உச்சரிப்பில் இரு இயங்குறுப்புகள் செயற்பட வேண்டும். மூக்குச்சார்பு ஒலி பிறக்கும் போது ஒரே இயங்குறுப்புத்தான் செயற்படுகிறது. ஆனால் மூச்சுக்காற்று, வாய், மூக்கு ஆகிய இரு அறைகளின் வழியாகவும் வெளியேறுகிறது. இதனால் வாயறையில் உண்டாகும் ஒலி மூக்கறையில் ஒலியூக்கம் (Resonance) பெற்று மூக்குச் சார்புடைய ஒலியாகத் தோன்றுகிறது. எனவே இது இணை உச்சரிப்பால் பிறப்பதன்று.

எ-டு:

ã, ĩ, ẽ, ũ, z̃, r̃, l̃

கூட்டுயிர்: மெய்யொலிகளேயன்றி உயிரொலிகளும் இணை உச்சரிப்புப் பெற்றுவரும். இவற்றை ஈருயிர் என்பர். நா,வாயறையில் மேற்கொள்ளும் அமைப்புமுறையை அடிப்படையாகக் கொண்டு பல்வகை உயிரொலிகளும் பிறப்பிக்கப்படுகின்றன. நா ஓர் உயிரை உண்டாக்க மேற்கொள்ளும் அமைப்பு முறையிலிருந்து வரைந்து விடுபடாமல் மெதுவாக இயங்கி, அடுத்து ஓர் உயிரொலியை உண்டாக்க மேற்கொள்ளும் அமைப்புமுறையை அடையுமாயின் ஓர் உயிரொலி தொடங்கி வேறு ஓர் உயிரொலியாக இறுவதை உணரலாம். இவ்வகைக் கூட்டுயிர்கள், ஈருயிர்கள் (Dipthongs) எனப்படும். இவ்வகை ஒலிப்பு முறையால் இரண்டிற்கும் மேற்பட்ட உயிரொலிகளும்கூட இணைந்து அமையலாம். ஆனால் இவை அனைத்தும் ஒரே அசையின் உறுப்புகளாகவே அமையும். இவற்றில் அதிக முழக்கம் (Sonority) உள்ள உயிர் அசையுயிர் (Syllabic vowel) ஆக நின்று அசையின் கருவாகச் செயற்படும். மற்றவை பிறப்பைப் பொறுத்தவரை உயிரொலிகளாக இருப்பினும் மொழியமைப்பின் அடிப்படையில் நோக்கும்போது மெய்யொலிகளாகவே கொள்ளப்படும். கய், காய், விய், வீய், உய், ஊய், எய், ஏய், கொய், கோய் போன்ற சொற்களில் உள்ள யகரங்கள் அவற்றின் முன்னுயிர்களுடன் கூடிய ஈருயிர் அமைப்பின் பகுதியாகும். எனினும் தமிழ் மொழியின் அமைப்பின்படி இவை உயிர், மெய் ஆகிய இரண்டின் கூட்டமைப்பாகவே கொள்ளப்பட வேண்டியவையாகும். கே.மு.

துணை நூல்கள்:

**Abercrombie**, **D.**, Elements of General Phonetics, Edinburgh University Press, 1967.

**Haffner**, **R.M.S.**, General Phonetics, University of Wisconsin Press, U.S.A., 1949.

**இணைக்குறளாசிரியப்பா** ஆசிரியப்பாவின் வகைநான்கனுள் ஒன்றினைக் குறிக்கும். அகவல் ஓசை பெற்று, அளவடிகொண்டதாய், இயற்சீர் மிக்கும் அயற்சீர் கலந்தும், ஆசிரியத்தளை கொண்டும், பிறதளை வரப்பெற்றும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் மட்டும் வரப்பெறாமல் அமைவது ஆசிரியப்பாவாகும். இது நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்று நால்வகைப்படும். இவற்றுள் இணைக்குறள் ஆசிரியப்பா, முதலடியும் ஈற்றடியும் நாற்சீர் கொண்ட அளவடியாக அமைய, இடையிலுள்ள அடிகள் இருசீரடியாகவும், முச்சீரடியாகவும் அமைத்துப் பாடப்படும். அரிதாகச் சில இணைக்குறளாசிரியப்பாக்களின் இடையே ஐந்து சீரும் ஆறு சீரும் கொண்ட அடி இடம் பெறுதலும் உண்டு. 'அருகிக் கலியோடு அகவல் மருங்கின் ஐஞ்சீரடியும் வருதற்குரித்து என்பர் வான்தமிழ் நாவலர்' என்று யாப்பருங்கலக் காரிகையாசிரியர் ஒழிபியயலில்விதி வகுத்துக் காட்டியுள்ளார். 'வெண்டளை விரவியும், ஆசிரியம் விரவியும் ஐஞ்சீரடியும் உளவெனமொழிப' (தொல். பொருள். செய்யுள். 63) என்பது தொல்காப்பியம்.

பண்டை இலக்கண உரையாசிரியர் பலரும் இப்பாவிற்குச் 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே என்னும் புறநானூற்றுப் பாடலை (235) மேற்கோளாகக் காட்டியுள்ளனர். இப்பாடலின் இடையிலுள்ள சில அடிகளைச் சீர் வரையறுத்தலில் உரையாசிரியர்கள் மாறுபடுகின்றனர். ஆசிரியப்பாவின் இடையே இரண்டு சீர், மூன்று சீர் அடிகள் வந்தமைக்கும், ஐந்து சீர், ஆறு சீர் அடிகள் அருகிவந்தமைக்கும் இப்பாடலின் இடையே அமைந்துள்ள அடிகளை ஏற்றவாறு சீர் பிரித்துக் காட்டியுள்ளனர். இதனால் இப்பாடல் அடிகளின் எண்ணிக்கையிலும் வேறுபாடு காணப்படுகிறது. இளம்பூரணர் கருத்துப்படி 17 அடிகளாக அமையும் இப்பாடலை, டாக்டர். உ.வே.

சாமிநாதையர் அவர்கள் 20 அடிகளாகப் பதிப்பித்துள்ளார். எவ்வாறாயினும், இணைக்குறளாசிரியப் பாவின் இடையடிகள் நாற்சீரின் குறைந்தும் மிக்கும் வரும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இப்பாடல் அமைந்து விளங்குகிறது.

**இணைத்தமைத்தல்** என்னும் கோட்பாடு நிருவாகத்திற்குச் சுதந்திரம் கொடுத்து, நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்காக உருவான ஒரு கோட்பாடு ஆகும். ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஒரே தன்மையாக ஓரேவகையான அமைப்பின் மூலம் செய்ய முடியாதென்பதற்காக ஏற்பட்ட கோட்பாடு இணைத்தமைத்தல் (Incorporation) என்பது ஆகும். உலகநாடுகள் அனைத்தும் மக்களுக்குப் பணியாற்றுவதற்காகத் தங்கள் அரசாங்கங்களில் துறைகளை (Departments)ஏற்படுத்திப் பணியாற்றுகின்றன. துறைகள் சில வரையறுக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்குட்பட்டுச் செயற்படக் கூடியவையாகும். இவ்வொழுங்கு விதிகள் அரசாங்கம் புதிதாக மேற்கொள்ளக் கூடிய வணிக, பொருளாதார நடவடிக்கைகளைச் செய்வதற்குத் தொல்லை கொடுக்கின்ற காரணத்தினால், இணைத்தமைத்தல் கோட்பாட்டிற்கிணங்க அரசாங்கங்கள் இணையங்களை (Corporations) ஏற்படுத்தி வணிக, பொருளாதாரச் செயல்களைச் செயற்படுத்துகின்றன.

அரசாங்கம் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றி, மக்களது வாழ்வை வளம்பெறச் செய்யும் கடமையைக் கொண்டுள்ளது. இதற்காக அரசாங்கமே சில செயல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு மேற்கொள்ளும் செயல்களுள் ஒன்று வணிகப்பணி. மக்களது பொருள்வளங்களைப் பெருக்கும் எண்ணத்தோடு இப்பணியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வணிகப்பணியைச் செயற்படுத்துவதற்கு நிருவாக அமைப்புகள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். ஆனால் அதே வேளையில் பொது மக்களுக்குப் பொறுப்பாகவும் இயங்கவேண்டும். இவ்வித நிருவாக அமைப்புகள் மக்களின் பொருளாதார நிலைக்கேற்பவும் நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரத் தன்மைக்கேற்பவும் தம்மை மாற்றிக் கொண்டு, சூழ்நிலைக்கேற்ப நெகிழும் தன்மையோடு இயங்கவேண்டும். மாறுகின்ற சூழ்நிலைக்கேற்ப மாறாமல் இந்த நிருவாக அமைப்புகள் செயற்பட்டால், குறுகிய காலத்திற்குள்ளாக இந்த அமைப்புகள் இல்லாமல் போய்விடும். நிலைபேறாக நிலைத்து இவை இயங்க முடியாது. எனவே இணைத்தமைத்தற் கோட்பாட்டிற்கிணங்க அரசாங்கம் வணிக இணையங்களை உருவாக்கி, வணிகப் பணிகளை மேற்கொள்கின்றது.

அரசாங்க நோக்கங்களைச் செயற்படுத்தும் அமைப்புகளில் வணிக இணையங்களும் இடம்பெறுகின்றன. அரசாங்கம் தன் பணிகளைச் செயற்படுத்துவதற்கு இணைத்தமைத்தனதாம் வணிக இணையங்கள். வணிக இணையங்களுக்கென்று தனியான கொள்கையோ நோக்கமோ இல்லை. இவை அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளையும் நோக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியனவும் அல்ல. இக்கொள்கைகளையும் நோக்கங்களையும் விரைவில் நிறைவேற்றக் கூடிய அமைப்புகள் வணிக இணையங்கள். நிருவாகச் சுதந்திரம், நிதிச் சுதந்திரம் வணிக முறைக் கணக்கெடுப்பு ஆகிய மூன்று சுதந்திரங்கள் வணிக இணையங்களுக்குக்கொடுக்கப்பட்டுள்ளன. வணிக இணையங்கள் தம் பணியாளர் குழாங்களை உருவாக்குகின்றன. வணிகத்தின் தன்மைக்கேற்ப இவற்றின் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றனர். பணியாளர்கள் ஊதியம், பதவி உயர்வு. பிற பணிக்கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இவை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதே நேரத்தில் அரசாங்கத்தின் பணியாளர் குழாம் கொள்கைகளுக்கு எதிராக அமையக்கூடாது. அரசாங்கம் நிருணயித்துள்ள குறைந்தபட்சத் தகுதிகளைப் பின்பற்றித்தான் வணிக இணையங்களின் பணியாளர் குழாத்தின் கொள்கை அமையும். ஒரு பணி செம்மையாக நடைபெற வேண்டுமாயின், குறுக்கீடுகள் மிகுதியாக இருக்கக்கூடாது. அவ்வாறு குறுக்கீடுகளை மேலதிகாரத்திலுள்ள அரசாங்கம் வணிக இணையங்களுக்குக் கொடுத்தால், வணிக இணையங்கள அக்குறுக்கீடுகளுக்குப் பதிலிறுக்கும் பணியில்தான் முதலில் இறங்கும். அவை செய்யக்கூடிய பணியில் கவனம் செலுத்த முடியாது. இதனால் பணி பாதிப்பிற்குள்ளாகிவிடும். எனவேதான் நிருவாகச் சுதந்திரத்தை அரசாங்கம் வணிக இணையங்களுக்குக் கொடுத்துள்ளது.

வணிக இணையங்கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்களை உருவாக்க அதிகாரம் பெற்றுள்ளன. வரவு செலவுத் திட்டங்களை உருவாக்கி, அதன் மேல் நிருவாகப் பிரிவில் கொடுத்துச் செயற்படுத்துகின்றன. அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் வழங்குகின்ற மொத்த நிதியைப் பெற்றுக் கொண்டு வணிக இணையங்கள் இயங்குகின்றன. இவை தங்கள் செயல்களில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து நிதியைச் சேமிக்கின்றன. இணையங்கள் சேமிக்கின்ற நிதியை அவை தங்களுடைய சொந்த நிதியாக வைத்துக் கொள்ள அரசாங்கம் உரிமை கொடுத்துள்ளது. அரசாங்கத் துறைகள் ஒவ்வோராண்டும் அவை தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவழிக்கவில்லையேல், அந்த மீதமுள்ள நிதித்தொகை பொது நிதியாக மாறிவிடுமென்பதால் அவை திட்டமில்லா

மல் கூடச் சில செலவுகளைச் செய்கின்றன. ஆனால், வணிக இணையங்கள் தங்கள் செயல்களைத் திட்டமிட்டு, செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, செலவழிக்காத நிதியைத் தங்கள் எதிர்காலத் திட்டங்களுக்குப் பயன்படுத்துகின்றன. இது அரசாங்கம் வழங்கியுள்ள நிதிச் சுதந்திரத்தால் ஏற்பட்டதாகும்.

வணிக இணையங்கள் வியாபார முறைக்கொத்த அமைப்புகள் ஆகும். பேராசிரியர் வேடு (Wade) என்பவர் வணிக இணையங்களின் தன்மைகளைத் தெளிவாகக் கூறுகின்றார். அரசுத் துறையின் சில தன்மைகளையும் வணிகக்கழகத்தின் சில தன்மைகளையும் கொண்டு, மத்திய, உள்ளாட்சிகளுக்கு வெளியே நின்று செயற்படக் கூடிய கலப்பு இன அமைப்பே வணிக இணையங்களாகும். இவை நிறையா அரசாங்கத் தன்மையுடன் (Quasi Government) தன்னிச்சையாக இயங்கக்கூடியன. துறைகளின் மூலம் பொதுவாகச் செய்யப்படக்கூடிய அரசாங்கச் செயல்களைத் தவிர்த்துப் பிற பொதுப் பயன்பாட்டுச் செயல்களை இவை செய்து வருகின்றன. அரசுத்துறை நிறுவனங்களை இயக்கும் சாதனமாக, அரசுமயமாக்கப்பட்ட நிறுவனங்களை மேல் நிருவாகம் செய்பவை இணையங்களாகும். எனவே, அரசாங்கத்தின் பணிச்சுமையைக் குறைக்கும் செயலாண்மைகளாக, அரசாங்க நோக்கங்களை விரைவாகச் செய்யும் அமைப்புகளாக இவை இயங்கி வருகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மக்களின் நல்வாழ்வுப் பணிகளுக்கு எல்லா நாடுகளும் முன்னுரிமை வழங்கின. நலிந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய முயற்சியின் வெளிப்பாடே வணிக இணையங்களாகும். தனியார் துறையின் அளவிறந்த உரிமைகளையும் அவர்களின் தவறுகளையும் கண்டிக்கும்வண்ணம், அரசாங்கமே சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டது. பொருள்கள் உற்பத்தி, பகிர்வு ஆகிய இரண்டு பணிகளையும் செய்யக்கூடிய பொறுப்புப் பெற்றன இவை. இன்றைய இணையங்கள் தேசியமயமாக்கப்பட்ட தொழிலுக்கும் தனியார் தொழிலுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஓர் இணக்கம் என்றால் அது சாலவும் பொருந்தும்.

இந்தியாவில் வணிக இணையங்களின் வளர்ச்சி, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு ஏற்பட்ட முன்னேற்றம் என்று சொல்லலாம். இங்கிலாந்தில் ஏற்கனவே இயங்கி வந்த தொழில்களைத் தேசிய உடைமை செய்ததால் இணையங்கள் உருவானதைப் போல, இந்தியாவில் முதன்முதலாக அரசு வங்கி உயிர் காப்பீட்டு இணையம், இரு ஆகாய விண்வெளி (Indian Airlines and Air India) இணையங்கள் எல்லாம் புதிதாக அமைந்த தொழில்மீது அமைக்கப்பட்டவையாகும். இணையங்கள், அரசாங்கத்தால் தனித்தனிச் சட்டங்களால் உருவாக்கப்படுகின்றன. மாநிலத் தொழிலாளர் காப்பீட்டு இணையமும் இவ்வாறு உருவாக்கப்பட்டதேயாகும்.

மாநிலத் தொழிலாளர் காப்பீட்டு இணையம் (Employees State Insurance Corporation) 1948-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்டது. மத்தியதொழிலாளர் நல அமைச்சர் இதன் தலைவர். மத்திய நல்வாழ்வு அமைச்சர் இதன் உதவித்தலைவர். இவர்களைத் தவிர, பல்வேறு பிரிவுகளிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஐந்துபேர்களுக்குக் குறையாமல் மத்திய அரசாங்கம் நியமனம் செய்கின்றது. ஒவ்வொரு மாநிலமும் ஓர் உறுப்பினரை நியமிக்கின்றது. யூனியன் பிரதேசப் பேராளர், தொழிலாளர் சங்கப் பேராளர்கள், மருத்துவப் பிரிவிலிருந்து சில உறுப்பினர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். இந்த உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து நிலைக்குழுக்களை உருவாக்கிச் செயற்படுகின்றனர். மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், தொழிலாளர் சங்கப் பேராளர்கள், மருத்துவப் பிரிவிலுள்ளோர் ஆகியோர் அனைவரும் சேர்ந்து ஒன்றாகச் செயற்படக்கூடிய இணையம் இது. இது தொழிலாளர் நலன் பேணுகின்றது. அவர்களது பொருளாதார நிலை பாதிக்காதவாறு பார்த்துக் கொள்கின்றது இது. அரசாங்கம் தொழிற்சாலைத் தொழிலாளர் நலன் பேணுவதில் அக்கறை காட்டியதால் ஏற்பட்டது இது.

அரசாங்கம் இணைத்தமைத்தல் கோட்பாட்டின்படி தன் நோக்கங்களையும் பணிகளையும் செய்ய உதவுகின்ற வகையில் வணிக இணையங்களை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் தான் இவை இயங்கவேண்டும். அங்ஙனம் இயங்கினால்தான் இணைத்தமைத்தல் என்று கூறுவது பொருந்தும். இணைத்தமைத்தலுக்கு எதிராக, வணிக இணையங்கள் சுதந்திரமாக, தான்தோன்றித்தனமாக உரிமையோடு கட்டுப்பாடில்லாமல் செயற்பட்டால் அரசாங்கம் அவற்றை நீக்கவும் உரிமை கொண்டுள்ளது. வணிக இணையங்களில் உள்ள உறுப்பினர்களை நீக்கிவிட்டு, புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் பெற்றது அரசாங்கம். எனவே அரசாங்கப் பணியும், ஒரு பெரிய அமைப்பிற்குள்ளாக இயங்கக் கூடிய தன்னிச்சை அதிகாரம்

வாய்ந்த அமைப்புகளும், இணைத்தமைத்தல் கோட்பாட்டிற்கிணங்க இயங்கக்கூடியனவாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயங்கக்கூடிய தன்னிச்சையாக ஒழுங்குபடுத்தும் ஆணையங்களும் (Independent Regulatory Commissions) இணைத்தமைத்தல் கோட்பாட்டிற்கிணங்க அரசாங்கப் பணியைச் செய்யக் கூடியவையாகும். எனவே இணைத்தமைத்தற் கோட்பாடு நிருவாகத்திற்கு இன்றியமையாத ஒன்று.

சி.ஞா.

**இணைத்தற் சோதனைகள்** கல்வி நிலையங்களின் தேர்வில் கொடுக்கப்படும் வினாத்தாளின் ஒரு பகுதியாக அமைந்திருப்பவை. இக்காலத்தில் இணைத்தற்சோதனைகளை (Matching Tests) உளவியல் முறையில் அமைக்கிறார்கள். இவை கல்வி நிலையங்களில் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும். சோதனையின் ஒரு பகுதியில் சில கருத்துகள் கொடுக்கப்பட்டிருக்கும். இக்கருத்துகளுடன் இயைபு கொண்ட அல்லது நேர் எதிர்மாறான கருத்துகள் மறுபுறத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு மாணவர் இவற்றை எவ்வளவு விரைவாகவும் பொருத்தமாகவும் தடுமாற்றங்கள் இன்றியும் இணைக்கின்றார் என்பது மதிப்பீடு செய்யப்படுகின்றது. இத்தகைய சோதனைகளில் சிக்கலான கருத்துகளும் கொடுக்கப் பட்டிருக்கும். பொறுப்புகள் மிகுதியாக உள்ள வேலைகளுக்கு அதிகாரிகளைத் தேர்வு செய்யும் பொழுது நிகழ்த்தப்படும் தேர்வுகளிலும், இந்திய ஆட்சிப்பணித் தேர்வு போன்ற கடினமான தேர்வுகளிலும் இத்தகைய சோதனைகள் பல்வேறு வகைகளில் அமைக்கப்படுகின்றன. இணைத்தற் சோதனைகள் நுண்ணறிவுச் சோதனைகளாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. கட்டைப் பகுதிகளை இணைக்கும் செயற்சோதனையாகவும் இணைத்தற் சோதனையைக் கொடுக்கலாம். இவை பொருள் உருவாக்கச் சோதனைகள் (Object Assembly Tests) என்று குறிப்பிடப்படுகின்றன. இச் செயற்சோதனைகளை நுண்ணறிவுச் சோதனையாகப் பயன்படுத்தக் கூடாது. கல்வி நிலையங்களில் உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளில் சாதனைச் சோதனைகளின் (Achievement Tests) ஒரு பகுதியாகவும் இணைத்தற் சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இணைத்தற் சோதனைகள் எவ்விதத்தேர்வுகளிலும் தனித்துக் கொடுக்கப்படுவனவல்ல; சாதனைச் சோதனைகளின் ஒரு பகுதியாகவே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர் பயிற்சிப் பட்டப் படிப்பு (B.Ed.) மாணவர்களுக்கும் இத்தகைய சோதனைகளை உருவாக்கும் பயிற்சி தரப்படுகின்றது.

**இணைதல்:** பால் உணர்வுகளை நிறைவு செய்து கொள்ளவும் தன் குடியின் மரபினைத் தொடரச் செய்யவும் ஆணும் பெண்ணும் கூடி வாழ்தலே இணைதல் (Matting) ஆகும். உலகின் அனைத்துச் சமூகங்களிலும் இனணந்து வாழும் வாழ்க்கை, பல்வேறு முறைகளிலும் நிலைகளிலும் காணப்படுகிறது. ஒரு சில சமூகங்களில் திருமணத்திற்கு முன்பு மணமாகாதவர்கள் இணைந்து வாழும் முறையினை அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்பது அறிவுறுத்தப்படுகிறது. இவ்வித இணைதலில் பங்கேற்பவர்கள், குடும்ப அமைப்பை ஏற்காமல் நிலையற்ற முறையில் தற்செயலாக இச்செயலில் ஈடுபடுவதுண்டு.

திருமணம் பால் உணர்வை நிறைவு செய்து கொள்வதை மட்டும் கொண்டிராமல், பல்வேறு சமூகச் செயற்பாடுகளையும் தன்னுள் கொண்டுள்ளது. தம் சமூகத்தினரால் ஒத்துக் கொள்ளப் பட்ட திருமண வாழ்வில் மணமானோர் ஒன்று கூடித் தம் மரபின் தொடர்ச்சிக்காகச் சந்ததியினரைத் தோற்றுவித்தலும், அவர்களுக்குத் தம் சமூகத்தின் பண்பாட்டு முறைமைகள், குணநலன்கள் ஆகியவற்றைக் கற்பித்தலும், பொருளாதாரச் செயற்பாடுகளில் ஒருங்கிணைந்து பொருளீட்டுதலும், பண்பாட்டால் விதிக்கப்பட்ட மரபுகளைக் குடும்ப அமைப்பில் ஏற்றுச் செயற்படுதலும் இவர்களின் கடமைகளாகின்றன.

இணைதல் ஓர் உயிர்சார் செயலாகும். இது இனப்பெருக்க மக்கட்டொகையில் (Breeding Population) முதன்மையான நிகழ்வாவதுடன், மக்கட்டொகையின் படிமுறை வளர்ச்சியின் (Evolution) இயக்கத்தையும் சீராகக் கொண்டு செல்கிறது. இனப்பெருக்கக் கொள்கையின்படி இனப்பெருக்க மக்கள் தொகையில் ஒவ்வொருவரும் கருவளமுள்ள எதிர்பாலாருடன் இணைதல் நிகழ்வில் சமபங்கு கொள்ளலாம். இந்த நிலையிலேயே மரபுச் சமநிலையினை (Genetic Equilibirium) மக்கள் தொகை கொண்டிருக்கிறது எனலாம். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்போது கல்வி, தகுதி, செல்வம், உயரம் முதலான காரணிகளை நோக்காமல் மணஞ் செய்துகொள்ளும் மக்கட்குழு, 'தேர்வுக்கு உட்படாதவர்களுடன் இணையும் மக்கள் தொகை' (Random Mating Population) எனப்படும்.

செயல் முறையில் 'தேர்வுக்குட்படாதவருடன் இணையும் மக்கள் தொகை' காண்பதரிது. வாழ்க்கைத் துணையினைத் தேர்வு செய்யும்போது புறத்தோற்றம், கல்வி, சமூக, பொருளாதாரத் தகுதி சமயம், மொழி, சாதி, வாழிடப் புவியமைப்பு முத

லான சில தேர்வுக் காரணிகளை ஒவ்வொரு குழுவினரும் கையாளுகின்றனர்.

இவ்வகையான காரணிகளுக்கு உட்படும் மக்கள் தொகை 'தேர்வுக்குட்பட்டவர்களுடன் இணையும் மக்கள் தொகை' (Non-random Mating Population) எனப்படும். ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகையிலிருந்து வேறொரு மக்கள் தொகை மாறுபடுமானால், அதனைக் கொண்டே அக்குழுவின் மரபணு அடுக்கு நிகழ்வு (Gene Frequency) அல்லது மரபுத்தோற்றத்தின் (Genotype) படிமுறை வளர்ச்சியினை அளவிட முடியும். குறிப்பிட்ட மக்கள் தொகையின் சமநிலையில் (Population Equilibrium) இடர்ப்பாடு ஏற்படும் போதே வேறொரு மக்கள் குழு உண்டாகிறது. சமநிலையை இடையூறு செய்யும் காரணிகள் தேர்வுக்குட்பட்டவர்களுடன் இணைதல் (Non-random Mating), உடனிகழ்வு (Mutation), மரபுப் பெயர்ச்சி (Genetic Drift), இடப் பெயர்ச்சி (Migration) இயற்கைத் தேர்வு (Natural Selection) ஆகியன.

இரத்த உறவுடையோருடன் (Consanguineous) இணைதல், வகைபாடமைந்த தொகுதியருடன் இணைதல் (Assortative Mating) ஆகிய இரண்டு வகைகள், நேரடி இணைதலுக்கு ஒவ்வா நிலையில் உள்ளன. இவ்வகையில் எதிர் பாலாரைத் தேர்ந்தெடுப்பதில் உருவத்தோற்றம், சமூகக் காரணங்களின் அடிப்படையில் அமையும்.

**இரத்த உறவுடையோருடன் இணைதல்:** தென்னிந்தியச் சமூகத்தில் உறவுடையோருடன் இணைதலே பெரும்பான்மையான வழக்காகவும் விருப்பமுற்று ஏற்றுக்கொள்கின்ற முறையாகவும் காணப்படுகிறது. இருப்பினும் இரத்த உறவுடையோருடன் மணம் கொள்ளுதல் தடுக்கப்படுகிறது. பெரும்பாலான சமூகங்களில் தத்தம் பண்பாட்டின் முறைகளைத் திருமண அமைப்பில் கையாளுகின்றனர். அத்தை-மாமன் சேய்களுடன் திருமணம் (Cross-cousin Marriage) பெரும்பான்மையாக விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதாவது, அம்மாவின் அண்ணன், தம்பி ஆகியோரின் சேய்களுடனோ அப்பாவின் தங்கை, தமக்கை ஆகியோரின் சேய்களுடனோ திருமணம் செய்து கொள்ளுதல் நிகழ்கிறது. இவர்கள் உறவுமுறைச் (Kinship) சொல்வழக்கில் பொதுப்படையாக முதல் முறையினர் எனக் கூறப்படுபவர்.

பின்வரும் அட்டவணை பல்வேறு சமூகத்தில் பெற்றோர்களோடு உடன்பிறந்தோரின் ஒன்றுவிட்ட சேய்களுடன் (First Cousin) மண நிகழ்வினைக் காட்டுகிறது.

| மக்கள் தொகை | காலம் | திருமணங்களின் எண்ணிக்கை (எடுக்கப்பட்ட மாதிரிகள்) | பெற்றோர்களோடு உடன்பிறந்தோரின் சேய்களுடன் மணம் விழுக்காட்டில் |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா (நகர்ப் பகுதி) | 1935—1950 | 8,000 | 0.05 |
| பிரேசில் நகரப் பகுதி | 1946—1956 | 1,172 | 0.42 |
| இசுபெயின் (Spain) நகரப் பகுதி | 1920—1957 | 12,570 | 0.59 |
| நாட்டுப்புறம் | 1951—1958 | 814 | 4.67 |
| சப்பான் (Japan) நகரப் பகுதி: | 1953 | 16,681 | 5.03 |
| நாட்டுப்புறம்: | 1950 | 414 | 16.40 |
| இந்தியா: நாட்டுப்புறம் | 1957—1958 | 6,945 | 33.30 |

பெற்றோரோடு நேர் உடன் பிறந்தாரின் இரண்டு, மூன்று விட்ட சேய்களுடன் (Second and Third cousins) மணம் கொள்ளும் முறையும், மாமன், அண்ணன் குழந்தைகளுடன் மணம் கொள்ளும்முறையும் காணப்படுகின்றன. அரசக்குடிச் சமூகங்களில் சகோதரர்-சகோதரியர்களுக்கிடையே மணம் முடிக்கும் முறையும் காணப்படுகிறது. பண்டை எகிப்தியர்களும் அவாய் மக்களும் (Hawai) இம்முறையைக் கொண்டிருந்தார்கள். கிளியோ பாட்ரா (Cleopatra) சகோதர-சகோதரி மண முறையை ஏற்றுக் கொண்டவர்களுக்குப் பிறந்தவள் என அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். கிளியோ பாட்ராவும் ஒரு நேரத்தில் தன் சகோதரனை மணந்து கொண்டவள்.

இரத்த உறவுடையவருடன் இணைதல் முறை யால் இனப்பெருக்க மக்கள் தொகையின் மரபணுச் சேர்மத்தில் (Gene pool) ஏற்படும் விளைவுகளைக் காண வேண்டும். இதன் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட எல்.சி.தன் (L.C. Dunn) என்பாரின் கருத்துப்படி, சுவீடனில் தே-சாக்சு (Tay-Sachs) நோயால் பாதிக்கப்பட்டவர்களின் ஒடுங்கு இனக்க லப்பின் (RecessiveAllele) அடுக்கு நிகழ்வு (Frequency) 0·005 ஆக இருந்தது. இது மொத்த மக்கள் தொகையில் ஒவ்வாக் கருமுட்டைப் (Heterozygous) பண்புள்ளவர்களின் எண்ணிக்கை 1 விழுக்காடாகும். இதனால் மரபுவழித் தொடரும் நோயினையுடைய இருவரின் இனப்பெருக்க நிகழ்தன்மையின் (Probability) அளவு 0.01 அல்லது 0.0001 ஆகும். இத் தன்மையில் உருவான குழந்தைகள் நான்கில் ஒரு பகுதி ஒடுங்கு அல்லீல் பண்பினைப் பெற்றிருக் கும். இதைப் போன்றே தேர்வுக்குட்படாதவருடன் இணைந்த இருவருக்குப் பிறக்கும் குழந்தையின் இயல்பிறழ்வு (Abnormality) 0.000025 அல்லது 1/40,000 ஆக இருக்கும்.

ஒன்றுவிட்ட உடன்பிறந்தோர் சேய்களின் (Two first cousins) பொதுவான பாட்டனார் (Common grand father) மரபு சார்ந்த நோயினைக் கொண்டுள்ளவராக (Carrier) இருக்கும் போது, இவர் ஒத்த கருமுட்டையுடைய (Homozygous) இயல் பினவருடன் இணையும் போது பிறக்கும் குழந்தை, மரபுசார்ந்த நோயினைக் கொண்டிருக்கும் நிகழ் தன்மை (Probability) $\frac{1}{2}$ ஆகும். இத்தன்மை மூன் றாம் தலைமுறையில் $\frac{1}{2}\times\frac{1}{2}$ அல்லது $\frac{1}{4}$ ஆக இருக் கும். இத்தன்மை நிகழ்வதன் காரணம், மரபணுப் பண்புகளுடைய சேய்களைப் பெறும் நிகழ்தன்மை $\frac{1}{2}$ ஆகும். ஆனால் இணைதலில் ஈடுபடும் தோழமைக் கூட்டத்தைச் (Cousins) சேர்ந்தவர்கள் மரபுசார்ந்த நோயினைக் கொண்டிருப்பார்களேயானால், இந் நோயினைச் சேய்கள் பெறும் நிகழ்தன்மை $\frac{1}{4}\times\frac{1}{4}$ அல்லது 1/16 ஆகும். இவ்வகையான முறையில் பிறக்கும் குழந்தைகளிடையே காணப்படும் தே-சாக்சு (Tay-Sachs) நோய் 1/16 $\times$ $\frac{1}{4}$ அல்லது 1/64 ஆகும்.

மேற்கண்ட இணைதலில் ஒன்றுவிட்ட உடன் பிறந்தாரின் சேய்களின் பாட்டனார் மரபுசார்ந்த நோயினைக் கொண்டு செல்பவராவர். இவ்வாறல் லாமல், ஒருவர் மூதாதையர் மரபுசார் நோயினைக் கொண்டு செல்பவரா அல்லரா என்பதில் தெளி வற்ற நிலை ஏற்படும்போது, மரபணு அடுக்கு நிகழ் வின் (Gene Frequency) தரவினைக் (Data) கொண்டு அறியலாம். இது போன்ற நிலையில் உடன்பிறந் தோரின் ஒன்றுவிட்ட பிள்ளைகளுக்குப் (First Cousin) பிறக்கும் குறைபாடுகளையுடைய குழந்தை யின் நிகழ்தன்மை (Probability) 1/3200 ஆகும். இதுவே தேர்வுக்குட்படாத் தொகுதியருடன் இணைதலில் (Random Mating) பிறக்கும் குழந்தை யின் நிகழ்தன்மை 1/40,000 ஆகும்.

இரத்த உறவுடையோருடன் இணையும் போது (Consanguineous Mating) ஒத்த கருமுட்டையுடைய ஒடுங்கிய மரபுத்தோற்றத்தின் (Homozygous Recessive Genotype) நிகழ்தன்மை மிகுதியாகும். இரத்த உறவுடையோருடன் இணைதலால், இனப் பெருக்க மக்கள் தொகையில் கலப்புக் கருமுட்டை யுடைய (Heterozygous) பேர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வரும்.

**வகைபாடமைந்த இணைதல் (Assortative mating)** இந்தியாவின் வடபகுதிகளிலும் இரத்த உறவுடை யோருடன் இணைதல் முறை காணப்படவில்லை. இம்முறை அமெரிக்கா, கனடா முதலான நாடுக ளிலும் வழக்கத்திலிருந்து வருகிறது. இருப்பினும் இணைதலுக்கு ஒப்புறும் கருவளமுற்ற இருவரைச் சேர்ப்பதில் பல காரணிகள் முன்நிற்கின்றன. பொதுவாக, தாய், தந்தையர், உறவினர், நண்பர் கள், விளம்பரச் செய்திகள் ஆகியவற்றின் மூலம் திருமணம் செய்து கொள்பவர்கள் பல பண்பாட்டு, வாழ்க்கைச் சூழலின் பின்னணியில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இம்முறையில் சமூகத்திலிருக்கும் பல தகுதியுடைய இணைவாளர்களுள் (Mates) ஒரு சிலரே கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றனர். வகைபாடமைந்த தொகுதியருடன் இணைதல் என்பது, ஒருசில குறிப்பிட்ட புறத்தோற்ற (Phenotype) அமைப்புடைய ஆணையும் பெண்ணையும் மிகுதியான எண்ணிக்கையில் இணைத்து வைக்கப்படு தலாகும். இணைதலுக்கு உட்படும், ஆண் பெண்

களின் உயரம், முதன்மையான காரணிகளுள் ஒன்றாகிறது. பொதுவாக உலகின் அனைத்துச் சமூகங்களிலுமே கணவர், மனைவியைவிட உயரம் மிகுதியாக இருக்க விரும்புவர். இதுவே மாறி அமையின் அம்மணமக்களை வேடிக்கை உறவு முறையில் (Joking Relationship) அழைக்க விரும்புவர். மரபணுப் பொதுச் சேர்மத்தில் இவ்வகையான மணமுறை, எந்த முறையான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனைத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். 165 செ.மீ. 180 செ.மீ. உயரமுள்ள இரு ஆடவர்கள், தங்கள் துணைவியைத் தேர்ந்தெடுக்கும் போது முன்னவர் 165 செ.மீ. அல்லது அதற்கும் குறைவான உயரமுள்ள பெண்களையே தேர்ந்தெடுக்க விரும்புவர். பின்னவர் 180 செ.மீ. அல்லது அதற்கும் குறைவான உயரமுள்ள பெண்களையே தேர்வு செய்ய விரும்புவர். 180 செ.மீ. உயரமுள்ள ஆடவருக்கு மிகுதியான எண்ணிக்கையில் பெண்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இதைப் போன்றே 180 செ.மீ. உயரமுள்ள பெண்கள் தம் ஆடவரை தேர்ந்தெடுக்க முற்படும்போது குறைந்த எண்ணிக்கையிலான ஆடவரே கிடைப்பர். இதனால் இவருக்குக் கிடைக்கும் துணைவனுடன் குறைந்த காலமுடைய இன உற்பத்திக்கால வாழ்க்கை ஏற்பட ஏதுவாகிறது. இது தவிர்த்துத் துணைவர், துணைவியர்களைத் தேர்ந்தெடுப்பதில் வேறு பல காரணிகளும் உண்டு. இவற்றுள் முதன்மையானவை வாழிடமும் கல்வியுமாகும்.

கிசரின் (Kiser) ஆய்வுப்படி, கல்லூரிக் கல்வி பெற்ற பெண்களும் ஆண்களும் சமகல்வி பெற்ற துணையையே தேடுவதாகவும், இவ்வகையான திருமணங்களின் விழுக்காடு 59.9 ஆக இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் துணைகளை விரும்பித் தேடும் நிலையிலும் ஒரு சிலரை விலக்குதலுமுண்டு. மனவளமிக்க துணைகளை ஏற்க விரும்புவதுபோல் மனவளர்ச்சி குன்றியவர்களைத் தத்தம் வாழ்க்கைத்துணையாக ஏற்க முற்படுவதில்லை.

## இணைதலும் மாறுபட்ட கருவுறும் விகிதமும்: (Mating and differential fertility rates)

மரபணுச் சமநிலை மாதிரியின் அமைப்பு முறைப்படி அனைத்துக் கலவிகொள்பவர்களும் சமநிலையில் கருவளமிக்கவராவர். ஆனால் செயல்முறையில் இவ்வாறு நிகழ்வதில்லை. பலர் மூன்று குழந்தைகளுக்கு மேலும் சிலர் இரண்டும் மற்றும் சிலர் ஒரு குழந்தையயும் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம், ஒவ்வொரு தம்பதியினருக்கும் தம் பின்வரும் சந்ததியினரின் மரபணுப் பொதுச் சேர்மத்திற்கான பங்கீடு வேறுபடுவதேயாகும். வி.எ. மக்கூசிக்கு (V.A. Mckusick) தம் ஆய்வு மூலம் இதன் தன்மையினை விளக்குகிறார். பாதிக்கும் மேற்பட்ட கருமுட்டைகள் (Zygote) இனப்பெருக்கமாவதில்லை. பிறக்கும் குழந்தைகளுள் 15 விழுக்காடு பிறப்பதற்கு முன்னரே அழிந்துவிடுகின்றன; 3 விழுக்காடு இறந்து பிறக்கின்றன (Still born); 2 விழுக்காடு இளங்குழவிப் (Neonatal) பருவத்திலேயே இறந்துவிடுகின்றன; 3 விழுக்காட்டினர் வயது வாராமுன்பே இறந்துவிடுகின்றனர். மக்களுள் 20விழுக்காட்டினர் திருமணம் செய்து கொள்வதில்லை, 10 விழுக்காட்டினர் திருமணம் செய்து குழந்தையில்லாமலேயே இருக்கின்றனர்.

ஒவ்வொரு கருமுட்டையும் மரபுத்தோற்றத்தால் (Genotype) தனித் தன்மையுடையதாகும். ஒவ்வொன்றும் தனித்தன்மையுடைய அல்லீல்களின் கூட்டாகும். இக் கூட்டமைப்பு (Combination) அவ்வுயிரியின் எதிர்காலத்தில் மறுபடி நிகழாது பல நிலைகளில் பல்வேறு எண்ணிக்கையில் உயிரிகள் இறப்பதற்குக் காரணம் மரபுரிமையின் இயல்பிறழ்வு (Inherited Abnormality) ஆகும். சமூகத்தில் பலர் இனப் பெருக்க நிகழ்வில் பங்கேற்பதில்லை. காரணம், சிலர் விபத்தில் இறத்தலும் பலர் போரில் இறத்தலும் சிலர் மன நோயுற்றுள்ளதும் ஆகும். இதைப் பற்றிய ஆய்வுகளை மரபியலார் மேற்கொண்டபோது சிலர் ஒரு குழந்தையினையும் சிலர் 12 குழந்தைகள் வரையிலும் கொண்டுள்ள வேறுபாடமைந்த இனப்பெருக்க வீதத்தினைக் காண நேரிட்டது. இந்நிகழ்வுக்குக் காரணமாக நிற்கும் காரணிகள் மருத்துவம், இரத்த வகை ஒவ்வாமை (Blood type incompatibility), பண்பாடு முதலியனவாகும். இவையனைத்தும் இயற்கைத் தேர்வின் (Natural Selection) வரன்முறைக்குட்பட்டவையே. 'தகுதியாயின பிழைத்தல்' (Survival of the Fittest) என்பது மட்டும் இந்த வரன்முறையிலடங்காது. சில உயிரிகள் மிகுதியான எண்ணிக்கையிலும் சில குறைந்த எண்ணிக்கையிலும் இனச் சந்ததிகளைக் கொண்டுள்ளன. மிகுதியான எண்ணிக்கையில் இனச் சந்ததிகளைக் கொண்ட உயிரிகளே, எதிர்வரும் தலைமுறையின் மரபணுப் பொதுச் சேர்மத்தில் மிகுதியான இனப்பெருக்க வீதத்தினைக் கொண்டிருக்கும்.

கே. நி.

துணை நூல்கள்:

**Dunn, L.C.,** Heredity and Evolution of Human Populations, Antheneum, New York, 1965.

**Mckusick, V.A.,** Human Genetics, Prentice Hall, Englewood Cliffs, N.J., 1969.


Stern, C., Principles of Genetics, W.H. Freeman and Company, San Francisco, 1973.

**இணைப்படி மலர்ச்சி**: காலத்தினூடே மரபு வழியில் நிகழ்ந்துவரும் தொடர்ச்சியான உயிர் சார் மாற்றமே படிமலர்ச்சியாகும். இவ்வுலகில் உயிர் வாழும் அனைத்து உயிர்களிடத்தும் இவ்வினை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்வினைக்கு உட்பட்ட அனைத்து உயிரிகளும் (Organisms) தத்தம் உயிர்ப் பண்புகளின் அடிப்படையில் பல சிற்றினமாக (Species) விலங்குப் பேரினத்தில் (Animal Kingdom) வகைபடுகின்றன. பல உயிரிகளின் தொகுப்பான சிற்றினத்தில் அதன் உயிரிகள் அனைத்தும், பாகுபாடின்றிச் சுதந்திரமாக இனப்பெருக்க வினையில் ஈடுபடும்.

விலங்கினக் குழுக்கள் தம் இன நிலைபேற்றிற் காகத் தம்மை ஒத்த இனங்களுடன் சேர்ந்து இனப் பெருக்கம் செய்கின்றன. மரபுவழியில் உயிரிகள், தம் வாழ்க்கைத் தேவைகளை அடையத் தம் சூழ்நிலை யோடும் வாழிடக் காரணிகளோடும் தகவமைந்தோ போட்டியிட்டோ சார்ந்தோ வாழ முற்படுகின்றன. மேற்கூறிய பல்வேறு அமைப்புகளுடன் உயிரினக் குழுக்கள் வாழும்போது, அவை தம் உருவம், உடற் கூறு, மரபுப் பண்பு, வாழ்க்கை முறை முதலான பண்புகளில் தம் மூதாதையர்களை முற்றிலும் ஒத்தோ மாறுபட்டோ திரிந்த நிலையிலோ காணப் பெறும். இந்த இயல் நிகழ்ச்சிகள், இணைப்படி மலர்ச்சி (Parallel Evolution), குவியும் படிமலர்ச்சி (Convergent Evolution), விரியும் படிமலர்ச்சி (Divergent Evolution) ஆகிய பல நிலைகளில் அமைந்திருக் கும். இணைப்படிமலர்ச்சி, குவியும் படிமலர்ச்சி, விரியும் படிமலர்ச்சி ஆகிய இம்மூன்று நிலைகளிலும் அடிப்படையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்படு கின்றன. ஒரே மூதாதையரைக் கொண்ட தொடர் புடைய இரு குழுக்கள் தகவமைந்த மலர்ச்சியி னூடே (Adaptive Radiation) வேறுபட்ட சூழிடப் பரப்பிற்கேற்ப வெவ்வேறு பிரிவாக மலர்ந்து, பின் னர் ஒத்த சூழ்நிலைகளில் வாழ முற்படும்போது, வாழ்க்கை அமைப்பிலும் புறத்தோற்ற அமைப் பிலும் ஒத்துக் காணப்படும் மலர்ச்சி முறையே இணைப் படிமலர்ச்சியாகும்.

தொடர்பற்ற இரு குழுக்களின் கூறுகளும் தகவ மைப்பும் ஒன்றையொன்று ஒத்துக்காணப்படும் நிலையே குவிதல் படிமலர்ச்சியாகும். இதற்கு நேர் மாறாகத் தம் உண்மை நிலையிலிருந்து பல்வேறு வாழிடச் சூழ்நிலைகளை ஏற்று வேறுபட்ட குழுக்க ளாகப் பிரியும் நிலை விரிதல் படிமலர்ச்சியாகும்.

இரண்டு உயிரிகளின் உடலமைப்பில் நெருக்க மான ஒற்றுமை காணப்படுமாயின், இவ்விரு உயிரிகள் தொகுதி வழி அமைப்பிலும் ஒன்றுபட்டுக் காணப் படும் வாய்ப்புண்டு என்பதே படி மலர்ச்சியியலின் அடிப்படைக் கருத்தாகும். உயிரினத் தொகுதிகளுக் கிடையே காணப்படும் ஒற்றுமையை முன்வைத்து, குவிதல் படிமலர்ச்சி, விரிதல் படிமலர்ச்சி ஆகியவற் றுள் இணைப்படிமலர்ச்சி எதனோடு தொடர்பு கொண்டது என்பதும் உற்றுநோக்கவேண்டியதாகும்.




அ. விரியும் படிமலர்ச்சி ஆ. குவியும் படிமலர்ச்சி இ. இணைப்படிமலர்ச்சி

படிமலர்ச்சியியலின் கோட்பாடுகளை விவரிக்கும் போது சிம்சன் (Simpson) இதன் பண்பினைச் சில எடுத்துக் காட்டுகளுடன் விளக்குகிறார். தகவமைப்பிலும் அமைப்பு முறையிலும் ஒன்றுபட்ட குழுக்கள், தனித்தனியே ஒரே வழியில் தம் மரபுப் பண்புகளுடன் ஒன்றி, மாற்றத்தினை ஏற்றுக் கொண்டே செல்லும். இம் மாற்றம் இரு குழுக்களிலும் சம அளவினதாகக் காணப்பெறுமாதலால், ஒன்றை ஒன்று பெருமளவு ஒத்துக் காணப்படும். இணைப்படிமலர்ச்சி வரைபடத்தில் காணும்போது உண்மையான நிலையினைக் கொண்டிருந்த உயிரினத் தொகுதி விரிந்து, பல்வேறு சூழலில் பல குழுக்களாக வாழும் போது, ஒத்த சூழ்நிலை அமைப்புகள் அவ்வனைத்துக் குழுக்களையும் ஒரு திசையில் ஒத்த வாழ்க்கையுடனும் உடலமைப்புப் பண்புகளுடனும் கொண்டு செல்கின்றன. இதையே சிம்சன், அமைப்பொற்றுமை (Homologous), செயலொற்றுமை (Analogous) என்னும் கோட்பாட்டின்வழி நின்று மொழிவார். குவிதல் படிமலர்ச்சியில் தொடர்புற்றஉயிரினக் குழுக்கள், வாழ்க்கை முறையிலிருந்து உடலமைப்பு வரை ஒத்துக் காணப்படுகின்றன. இக் குழுக்களின் செயல்முறைகளில் காணப்படும் குவிந்த தன்மை, அமைப்பொத்தமுறை அல்லது செயலமைப்பில் ஒத்த பண்பு, இக்குழுக்களின் ஒருநோக்குடைய தகவமைப்பு முறையை வெளிக்காட்டுகிறது. இதனையே அமைப்பொற்றுமைமுறையில் சிம்சன் விளக்குகிறார். தொடர்புடைய குழுக்களின் பண்புகள் அமைப்பொற்றுமை என்றும் இவை இணைப்படிமலர்ச்சிக்கு ஒத்த பண்பு என்றும் கொள்ளலாம். எடுத்துக்காட்டாகப் பறவைகளின் இறக்கையும் வண்ணத்துப்பூச்சியின் இறக்கையும் அமைப்பில் ஒற்றுமையுடையவை. இரு உயிரினத் தொகுதிகளும் வேறுபட்டிருந்தும் அதன் தகவமைப்பு முறைகள் ஒத்தசூழ்நிலையால் அமையப் பெற்றவை. இதுவே குவிதல் படிமலர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கடல் பாலூட்டிகளின் படகு போன்ற உடலமைப்பு நன்னீர் மீன்கள், கடல் மீன்கள் முதலானவற்றின் உடலமைப்பிற்கு ஒத்தவையாகும். மேற்கூறியது போன்றே இவ்விரு உயிரினக் குழுக்களும், வெவ்வேறு மரபுப் பண்புகளைக் கொண்டிருந்தும் சூழிடப் பரப்பில் (Econiche) ஒத்த தகவமைப்பைக் கொண்டுள்ளதால், குவிதல் படிமலர்ச்சியை ஏற்றுக் கொண்டுள்ளன. இவை போன்ற எடுத்துக்காட்டுகளின் வழியில் இருவேறு குழுக்களின் அடிப்படையான ஒற்றுமைகளை மேலோட்டமாக அறிதல் இயலாது. ஏனெனில், உடற்கூற்று அமைப்பு, வளர்சிதைமாற்றம், பல்லமைப்பு, இரத்தச் சிவப்பணு முதலான பண்புகள் ஆகியவற்றைத் தாம் தோன்றுதற்குக் காரணமான இனத்திலிருந்து மாற்றம் பெறாமல்கொண்டிருக்கும். அமைப்பொற்றுமை, செயலொற்றுமை இரண்டுமே படிமலர்ச்சி இயலில் விலங்குகளின் அமைப்பு முறையினை விளக்குவனவாகும். அமைப்பொற்றுமைப் பண்புகள் ஒரே படிமலர்ச்சி வழியில் தொடர்ந்து வருவனவாகும். வௌவாலின் இறக்கையும் குரங்கின் முன்காலும் அமைப்பு முறையில் ஒற்றுமையுடையன. இதைப் போலன்றி வௌவாலின் இறக்கையும் வண்ணத்துப் பூச்சியின் இறக்கையும் செயல் ஒற்றுமை சார்ந்தனவாகும். இவ்விரண்டின் இறக்கைகள் செயல்முறையில் மட்டுமே ஒன்றுபட்டனவாகும். ஆனால் வௌவாலும் வண்ணத்துப்பூச்சியும் படிமலர்ச்சி வழியில் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவையாகும். இணைப்படிமலர்ச்சியினை அமைப்பொற்றுமைப் படிமலர்ச்சி எனவும் (Homologous Evolution) குவிதல் படிமுறை வளர்ச்சி, செயல்ஒற்றுமைப் படிமலர்ச்சி எனவும் நினைவிற் கொண்டு, இவ்விரு உயிரியல்சார் விளைவுகளையும் வேறுபடுத்திப் பார்க்கலாம். கே. நி.

துணை நூல்கள்:

**Dobzhansky T.**, Genetics of the Evolutionary Process, Columbia University Press, New York, 1970.

**Hanson E.D.**, Animal Diversity, Prentice Hall, Englewood cliffs, 1964.

**Simpson G.G.**, The Meaning of Evolution, Yale University Press, New Haven, 1967.

**இணைப்பு** என்பது இக்கால ஆட்சி அமைப்பில் பல்வேறு ஆட்சித்துறைப் பிரிவுகளுக்கு இடையே தொடர்பில்லாத நிலை தோன்றுதலைத் தவிர்த்தலுக்காகக் கையாளப்படும் ஒரு செயல் முறையைக் குறிப்பதாகும். இதன் இன்றியமையாமை இக்கால நிருவாக அமைப்பிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இக்கால நிருவாகத் துறை அமைப்பானது (Departmental System of Organisation) பெருமளவில் படை அமைப்பை(Army Organisation) எடுத்துக்காட்டாகக் கொண்டு, பணிப்பாகுபாடு (Division of Labour) என்ற கொள்கையையும் அடுக்காட்சி முறையையும் (Hierarchical System or Organisation) பின்பற்றி அமைக்கப்பட்டது. ஓர் ஆட்சித் துறை செய்ய வேண்டிய பணியைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் துறையின் ஒரு பிரிவில் (Section) உள்ள பணியாளர் செய்கின்றனர். படை அமைப்பின் மேல் நிலையில் படைத்தலைவர் (General or Commander) என்னும் அதிகாரி இருந்து, படை வீரர்களனைவரும் அணிவகுத்துச் செல்ல வேண்டிய முறையைத் தீர்மானித்தல், படை முன்னேறிச் செல்ல வேண்டிய முறையைத் தீர்மானித்தல், படை முன்னேறிச் செல்ல

வேண்டிய காலத்தையும் இடத்தையும், பதுங்கி இருக்கவேண்டிய காலத்தையும் இடத்தையும் தீர்மானித்தல், கருவிகளைக் கையாண்டு தாக்குதலுக்குரிய காலத்தையும் இடத்தையும் அறிந்து தாக்குதற்கு ஆணை விடுத்தல் முதலிய பணிகளைச் செய்கிறார். அவருடைய ஆணைகளை அவருக்குக் கீழ்ப்பட்ட நிலையிலுள்ள பல அதிகாரிகள் தம் படைவீரருக் களித்து, அவற்றை நிறைவேற்றுமாறு பார்த்துக் கொள்கின்றனர். படை வீரர்கள்தாம் போர் ஆணைகளைச் செயற்படுத்துகின்றனர். ஒவ்வொரு படைப் பிரிவின் செயலும், மற்றப் பிரிவின் செயலுக்கு முரணாகப் போகாமல் அதனோடு இணைந்து செயற்படுமாறு பார்த்துக் கொள்ளுதற்கு இணைப்பு அதிகாரிகள் (Liaison Officers) இருக்கிறார்கள்.

வாழ்க்கையின் மற்றத் துறைகளிலும் இணைப்புப் பணி தேவைப்படுகிறது. வேளாண் தொழிலாளரும் ஆலைத் தொழிலாளரும் தங்களுக்கிடையே எந்த விதமான இணைப்பும் இல்லாமல் (தனிக்குழுக்களாக நின்று) ஒருவரையே ஆதரித்து நின்றனர் என்று ஒரு குறிப்பிட்ட நிலை இரு குழுக்களிடையே தோன்றியதைச் சுட்டிக்காட்டி, தில்போர்டு டட்லி (Tilford Dudley) என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். இளஞ் சிறுவரும் சிறுமியரும் கல்விக் கூடங்களில் பயிலும் காலத்திலும், அவர்களுடைய மாணவப் பருவத்தில் பள்ளிக்கூடத்துக்குப் புறம்பேயும் பல சூழ்நிலைச் செயல்களிலிருந்து பலவித செயலறிவுகளைப் பெறுகின்றனர்; அவர்களுடைய அறிவையும் ஒழுக்கத்தையும் திறமைகளையும் வளரச் செய்தற்கு, அவர்கள் பள்ளிக்கூடப் படிப்பில் பெறுகின்ற சிறந்த குறிக்கோள்களுக்கேற்ற நல்ல புறச் சூழ்நிலைச் செயலறிவையே அவர்கள் பெறுதல் வேண்டும். இவ்வாறு அவர்கள் பெறுதல் வேண்டுமானால், அவர்களுடைய பள்ளிக்கூடப் படிப்புக்கும் புறச் சூழ்நிலைக்கும் இடையே ஒரு நல்ல இணைப்பு (அதாவது முழு வளர்ச்சிக்கு ஏற்ற செயலறிவுத் தொடர்பு) இருத்தல் வேண்டுமென்று கல்வி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வாணிகத் துறையிலும் இணைப்பின் அல்லது தொடர்பு முறையின் இன்றியமையாமை உணரப்படுகிறது. எந்தத் தொழிலிலும் அல்லது வாணிகத்திலும், அத்தொழிலை அல்லது வாணிகத்தை நடத்துகின்ற உயர்நிலை அதிகாரிகளோடு (Top Man) இணைப்பு அல்லது தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்பது இக்காலத்தில் வலியுறுத்தப்படுகின்றது. எந்தப் பெரிய தொழில் நிறுவனத்திலும் அல்லது வாணிக நிறுவனத்திலும் எங்காவது ஒரு தவறு நடக்குமாயின், அத்தவற்றினால் பாதிப்புக்கு உள்ளானவர் அதை நிறுவனத்தின் கீழ்நிலைப் பணியாளர்களின் கவனத்துக்குக் கொண்டுவராமல், மேல்நிலை அதிகாரிகளின் ஆய்வுக்குத்தான் கொண்டுவருதல் வேண்டுமென்ற விதி இக்காலத்தில் பரவலாகக் கையாளப்படுகிறது. இவ்விதி இணைப்புப் பணியின் (Liaison Service) சிறப்பை நன்கு காட்டுகிறது. இணைப்புச் செயலின் இன்றியமையாமை படைத்துறையில் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது. நாட்டின் தரைப்படைக்கு உதவி செய்யும் அலகுகளாகப் பீரங்கிப் படையும் (Artillery), வானப்படையும் (Air Force) இயங்குகின்றன. ஒவ்வொன்றின் செயலையும் மற்ற ஒவ்வொன்றும் நன்றாக அறிந்து கொண்டால்தான் (Mutual Understanding), அவைகளுக்கிடையே ஒருமைப்பாடான செயல் (Unity of Action) இருத்தல் கூடும். மூன்றுக்குமிடையே நல்லிணக்கம் இருந்தால்தான் தரைப்படைக்கு மற்ற இரு அலகுகளினுடைய விரைவான, திறமான உதவி தக்க காலத்தில் கிடைக்கும். எனவே தரைப்படையின் முன்னணியில் இணைப்புப் பணியைச் செய்வதற்கு (Liaison Work) இணைப்பு அதிகாரி(Liaison Officer) அமர்த்தப்படுகிறார். ஆகையால் எந்த இரண்டு நிலைகளும் அல்லது அலகுகளும் ஒன்றுக்கொன்று இணக்கத்தோடிருப்பதற்கு உதவி செய்கின்ற செய்தித் தொடர்பும் (Intercommunication) இணைப்பு என்றே சொல்லப்படும்.

குடிமை இயல் ஆட்சித்துறையில் இணைப்புப் பணியின் இன்றியமையாமை இக்காலத்தில் நன்கு உணரப்படுகிறது. பல்வேறு ஆட்சித் துறைகளின் பணிகளும் சமுதாயத்துக்கு நற்பயனளித்தல் வேண்டுமாயின், அவை ஒவ்வொன்றின் பணியும் மற்றதன் பணிக்கு முரண்படாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்; ஒருங்கிணைத்தல் (Co-ordination) என்னும் பணியின் பொருள், பல்வேறு நிலைப் பணியாளர்களுக்கிடையே தோன்றக்கூடிய முரண்பாடுகளை (Conflicts) நீக்குதலும், அவர்களுக்கிடையே ஒற்றுமையையும் (Co-operation) கூட்டான செயலையும் (Team Work) தோற்றுவித்தலும் ஆகும். எவ்வாறு ஒரு மனிதவுடம்பின் பல்வேறு உறுப்புகள் செய்கின்ற பல்வேறு தொழில்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகப் போகாமல் தடுத்து, அவற்றை மனித மூளை ஒருங்கிணைத்து, அவ்வொருங்கிணைப்புச் செயலை நடுநாயகமான ஒரு நரம்பு அமைப்பின் வழியாக (Central Nervous System)நிறைவேற்றுகிறதோ, அதேபோல ஆட்சித்துறையை இயக்குகின்ற தலைமைச் செயலகமே, கிளைநிலையங்களுடன் நெருக்கமான செய்தித் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன் வாயிலாக முரண்பாடுகளை நீக்கி, இணக்கமான செயன்முறையை உண்டாக்குகிறது. இந்திய அரசாங்கத்தில் ஒருங்கிணைக்கும் பணியைச் செய்வதற்கு, அமைச்சரவைச் செயலகமும் (Cabinet Secre-

tariat) மாநில அரசாங்கத்தின் அமைப்பும் வழியும் என்ற நிறுவனமும் (Organisation and Methods) இருக்கின்றன.

**இணைப்பு விளைவுகள்:** குறிப்பிட்ட சில பொருளாதார நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகள் மேலும் பல பொருளாதார நடவடிக்கை களுக்குக் காரணியாக விளங்கித் தொடர் விளைவு களை உண்டாக்குமாயின் அதனை இணைப்பு விளைவுகள் (Linkage Effects) எனக் கூறுவர். பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கான கோட் பாடுகளை வகுத்து அவற்றைச் செயற்படுத்தும் முறைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பொருளியல் வல்லுநர்களுக்கு இப் பகுத்தாய்வு முறை ஒரு கருவியாக விளங்குகிறது. சிறப்பாக, ஒரு பொருளாதார நிலையை ஆராய்ந்து அதன் முன்னேற்றத்திற்கு முதலில் எத்துறைக்குத் தலை யாய இடம் கொடுக்க வேண்டும்? முதலீடு, உற்பத்தி, பங்கீடு (Investment, Production, Distribution) ஆகியவற்றிற்கு எவ்வகையான முன்னுரிமை (Priority) அளிக்க வேண்டும் என்பன போன்றவற்றைப் பற்றிய முடிவுகளை எடுக்கவும் இது உதவுகிறது.

ஒரு தொழிலின் அமைப்பும் திறமையும் பிற தொழில்கள் நிறுவப்படுவதற்கும் அவற்றின் வளர்ச் சிக்கும் தூண்டுகோலாயிருக்கலாம். எஃகுத் தொழிற் சாலை (Steel Industry) நிலக்கரி, சுண்ணாம்புக்கல், இரும்புக் கனிமம் (Iron Ore) போன்ற பொருள் களின் தேவையைப் பெருக்குவதுடன் போக்குவரத்து, சுரங்கம், கட்டடம், எந்திர உற்பத்தி முதலிய துறை களின் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாயிருக்கிறது. இத்தகைய தொழிற்சாலை அதற்குத் தேவையான பொருள்களை அளிக்கும் துறைகளில் (Suppliers' Side) உண்டாக்கும் பொருளாதார நடவடிக்கைகள் பின்னோக்கிய இணைப்பு விளைவுகள் (Backward Linkage Effects) எனப்படும். மாறாக, உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட பணிகள், பொருள்கள் வாயி லாகப் பல வகையில் நுகர்வோர் வழியில் (Consumers' side) உண்டாக்கப்படும் பொருளாதார நடவடிக்கை கள் முன்னோக்கிய இணைப்பு விளைவுகள் (Forward Linkage Effects) எனப்படும். உற்பத்தி செய்யப்பட்ட எஃகினால் பிற தொழில்கள் நிறுவப்பட்டு, உள் நாட்டுத் தொழிற்றுறை, போக்குவரத்துத் துறை, வேளாண்மைத்துறை ஆகியவை வளம் பெறுகின்றன. இவை வளம் பெறும் நடவடிக்கைகள் முன்னோக்கிய இணைப்பு விளைவுகளாகும். எஃகு பின்னோக்கிய இணைப்பு விளைவுகளுக்கும் முன்னோக்கிய இணைப்பு விளைவுகளுக்கும் காரணியாகப் பொருந் தும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொருளியலின் உள்ளீடு – வெளியீடு ஆய்வின் (Input–Output Analysis) அளவுகோலில் இணைப்பு விளைவுகள் பயன்படுத்தப்படுகின்றன. பொருளா தார நடவடிக்கைகளின் ஆதாய விளைவுகளை அறிந்து செயற்பட முன்னேற்றமடைந்த நாடுகள் இவ் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடு கின்றன. அந்நாட்டு முதலீடுகள் பல துறைகளின் வளர்ச்சிக்கும் ஆதாயத்திற்கும் எவ்வகையில் தூண்டு கோலாயிருக்கின்றன என்பதை அறியவும் இணைப்பு விளைவுகள் பயன்படுகின்றன. உள்ளீடு-வெளியீடு ஆய்வுப் பட்டியலுடன் (Input–Output Analysis Schedule) முன்னோக்கிய, பின்னோக்கிய இணைப்பு விளைவுகள் ஒப்பிடப்பட்டு அவற்றிற்கிடையேயுள்ள இணைப்புக் கெழு (Correlation co-efficient) கண்ட றியப்படுகிறது. வளர்ச்சிகுன்றிய பின்தங்கிய நாடு களில் எத்தகைய முதலீடும் பொருளாதார நட வடிக்கையை ஊக்குவிக்குமாகையால் இணைப்பு விளைவுகளை அளவிடும் தேவை எப்போதும் இருக் காது.

துணை நூல்:

**Kindleberger, P.C., & Herrick, B.,** Economic Development, Mc Graw-Hill Kogakusha Limited, Tokyo, 1977.

***இணைமணிமாலை*** தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று கூறப்பெறும் சிற்றிலக் கிய வகைகளுள் ஒன்று. வெண்பாவும் கலித்துறை யும் மாறிமாறி அமைய, அந்தாதியாகத் தொகுக்கப் பட்ட நூறு பாடல்கள் கொண்ட நூல் இரட்டை மணிமாலை எனப்படும். கலித்துறைக்கு மாறாக அகவல் அமைய, வெண்பாவும் அகவலுமாக மாறி மாறி நூறு பாடல்கள் கொண்டமைவதும் இப்பெயர் பெறும். அகவற்பாவிற்கு மாறாக அகவல் விருத்தம் இடம் பெறுவதும் உண்டு. இதன் இலக்கணம் பன் னிரு பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட் டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல் களில் கூறப்பட்டுள்ளது. இதன் இலக்கணத்தை, 'இணை மணிமாலை தணிவில் அந்தாதியாய், மறைய வர் பாவும் வணிகர் தம் பாவின், துறையும் இயைந்து ஈரைம்பது வருமே' (66) என்று பன்னிரு பாட்டியல் இயம்புகிறது. இப்பிரபந்தம் இன்ன பொருள் பற்றி அமைய வேண்டும் என்னும் வரை யறை கூறப்படவில்லை. பிரபந்த மரபியலின் குறிப் புரையாசிரியர் 'இப்பிரபுந்தம் எதுவும் இப்போது இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

**இணையுறவுக்கெழு:** இரண்டு மாறிகளின் (Variables) தொடர்பினைக் குறிக்கும் எண் இணை

யுறவுக் கெழு (Correlation Co-efficient) ஆகும். இது "r" என்ற எழுத்தால் குறிக்கப்படும். பிரான்சிசு கால்டன் (Sir Francis Galton), கார்ல் பியர்சன் (Karl Pearson) ஆகியோர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக இரண்டு மாறிகளின் தொடர்பினைக் கணித முறையில் ஆராய்ந்தனர். பியர்சன் கண்டறிந்த கணிதமுறை, பெருக்கல் உந்தம் இணையுறவு (Product-Moment Correlation) என்று சொல்லப்படும்.

ஒரு மாறியின் மதிப்புக் கூடும்போது அல்லது குறையும்போது, அதனோடு தொடர்பு கொண்ட இன்னொரு மாறியின் மதிப்பும் கூடும் அல்லது குறையும். இது நேர் இணையுறவுக் கெழு (Positive Correlation Co-efficient) எனப்படும். ஒரு குழந்தையின் உயரம் கூடும்போது அதன் எடையும் கூடுதல் இவ்வகை இணையுறவுக் கெழுவுக்குச் சான்று.

ஒரு மாறியின் மதிப்புக் கூடும் போது, இன்னொரு மாறியின் மதிப்புக் குறைதல் எதிர் இணையுறவுக் கெழு (Negative Correlation Co-efficient) எனப்படும். நெல் விளைச்சல் கூடும்போது அரிசி விலை குறைதல் எதிர் இணையுறவுக் கெழுவுக்குச் சான்றாகும்.

ஒரு மாறியின் மதிப்புக் கூடும்போது, இன்னொரு மாறியின் மதிப்புக் கூடவோ குறையவோ இல்லையென்றால், அவ்விரு மாறிகளும் தொடர்புடையன அல்ல எனலாம். உடல் எடைக்கும் அறிவுக்கும் தொடர்பு இல்லை. இவ்விரண்டும் தொடர்பு ஏதுமற்ற மாறிகள் ஆகும்.

இணையுறவுக் கெழுவின் மதிப்பு -1 இல் இருந்து +1 வரைக்கும் இருக்கும். இதில் + என்ற குறியீடு நேர் இணையுறவுக் கெழுவைக் குறிக்கும். அதே போல் - என்ற குறியீடு எதிர் இணையுறவுக் கெழுவைக் குறிக்கும். r=0 என்பது இரண்டு மாறிகளுக்கும் இடையே தொடர்பற்ற நிலையைக் குறிக்கும்.

பியர்சன் முறையில், இணையுறவுக் கெழுவைக் காணக் கீழ்க்காணும் வாய்பாடு பயன்படுகிறது.

$$r = \frac{N\Sigma XY - \Sigma X \Sigma Y}{\sqrt{[N\Sigma X^2 - (\Sigma X)^2][N\Sigma Y^2 - (\Sigma Y)^2]}}$$

மேலே உள்ள வாய்பாட்டில் r = இணையுறவுக் கெழு ஆகும். N என்பது இரண்டு மாறிகளில் உள்ள கூறுகளின் (Sample) எண்ணிக்கையைக் குறிக்கும். XY என்பன இரண்டு மாறிகளின் மதிப்புகள் ஆகும். Σ = கூட்டு மதிப்பு ஆகும்.

"0" விலிருந்து 0.20க்கு உட்பட்ட இணையுறவுக் கெழு வலுவற்றதாகும். 0.70 விலிருந்து 0.90க்கு உட்பட்ட இணையுறவுக் கெழு வலுவுள்ளதாகும். பொதுவாக +1, -1 அல்லது "0" மதிப்புள்ள இணையுறவுக் கெழு கிடைப்பதரிது. வலுவுள்ள இணையுறவுக் கெழு, இரண்டு மாறிகளுக்குள்ள தொடர்பைக் குறிக்கும். காகம் கரைவதற்கும் சூரியன் உதிப்பதற்கும் நிறைய தொடர்பு இருந்தாலும், காகம் கரைவதன் காரணமாக சூரியன் உதித்தது என்று கூறிவிட முடியாது. இணையுறவுக் கெழு வலுவாக இருந்து, ஒரு மாறியின் மதிப்புத் தெரியுமானால், அடுத்த மாறியின் மதிப்பை முன்கூட்டியே கணக்கிட (Prediction) இயலும்.

துணை நூல்கள்:

**Turney, B.L., and Robb, G.P.,** Statistical Methods for Behavioral Science, Intext Educational Publishers, New York, 1973.

**Best, J.W.,** Research in Education, Printice-Hall of India, New Delhi, 1977.

**இத்-உல்-பிதிர்** என்பது இசுலாமியர்களின் சிறப்பான பண்டிகைகளுள் ஒன்று. இதனை இரம்சான் என்றும் கூறுவர். இப்பண்டிகை இரம்சான் மாதத்தின் இறுதிநாளில் வருகிறது. அமாவாசையை அடுத்த நாள் புதிய பிறை தோன்றும்போது இம்மாதம் தொடங்குகிறது. இத்திருநாளில் இசுலாமியர்கள் புத்தாடை உடுத்துக் கொண்டு பள்ளிவாசலுக்குச் சென்று நமாசு என்னும் தொழுகையை நடத்துகிறார்கள். இந்த நாளில் நண்பர்களுக்கிடையே இரம்சான் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வர். வறியவர்களுக்கும் வசதி குறைந்தோர்க்கும் இசுலாமியர்கள் ஐயம் இடுவர். இந்த நன்னாளை இசுலாமியர்கள் உலகெங்கும் மகிழ்ச்சித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

**இத்தாலி** தென் ஐரோப்பாவின் மத்தியில் அமைந்துள்ள தொன்மையான தீபகற்ப நாடு. சார்டீனியா, சிசிலி என்னும் இரு பெரும் தீவுகளை இத்தாலி கொண்டுள்ளது. வடக்கில் ஆல்ப்சு மலைத் தொடர் அதன் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. ஆல்ப்சு மலைத்தொடர் இத்தாலியை அதன் வடமேற்கில் பிரான்சிலிருந்தும், அதன் வடக்கில்

சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா போன்ற நாடுகளிலிருந்தும் பிரிக்கிறது. இத்தாலியின் வடகிழக்கில் யூகோசுலாவியா அமைந்துள்ளது.

இத்தாலி என்னும் பெயரை இந்நாட்டிற்குச் சூட்டியவர்கள் பழைய உரோமானியர்களே. இத்தீப கற்பத்தின் தென்பகுதியை அவர்கள் 'இத்தாலியா' (Italia) என்றார்கள். இத்தாலிய என்ற சொல்லுக்குக் காளைமாடுகளின் நிலம் என்பது பொருள். நிலம் என்பது மேய்ச்சல் நிலத்தைக் குறிக்கும். இத்தாலோ (Italo) என்னும் புராண அரசரின் பெயரால் அதனை இத்தாலி என்றனர் என்பது, வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும்.

பரப்பு: இத்தாலியின் பரப்பு 3,01,253 ச.கி.மீ. ஆகும்.

**மக்கள்தொகை:** இதன் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி 5,80,43,000 ஆகும்.

**இயற்கைப்பிரிவுகள்:** இத்தாலியை எட்டு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. ஆல்ப்சு மலைத்தொடர்ச்சரிவு, 2. போ ஆற்றுப் பள்ளத்தாக்கு, 3. ஏட்ரியாடிக்கு சமவெளி, 4. அபினைன் மலைத்தொடர், 5. அப்பூலியாவும் தென்கிழக்குச் சமவெளிகளும்,6. மேற்கு மேட்டுநிலங்களும் சமவெளிகளும். 7. சிசிலி, 8. சார்டீனியா என்பனவாம்.




இத்தாலி

ஆல்ப்சு மலைத்தொடர்ச்சரிவு: ஆல்ப்சு மலைத் தொடரின் தென் சரிவுகள் மிகச் செங்குத்தானவை. அங்குக் காடுகளையும் மேய்ச்சல் தரைகளையும் காணலாம். இத்தாலியின் மிக உயர்ந்த மலையுச்சி யான மவுண்ட்டு பிளாங்கு இப்பகுதியில்தான் உள் ளது. அதன் உயரம் 4731 மீட்டர்களாகும். மலைச் சரிவுகளில் உள்ள சமநிலப் பகுதியில் திராட்சையும் ஏனைய உணவுப் பொருள்களும் விளைகின்றன. சம நிலப் பகுதிகளுக்கு மேல் காடுகளும் காடுகளுக்கு மேலுள்ள மலைச் சரிவுகளில் பசும்புல்வெளிகளும் உள்ளன. இங்குள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்து உண்டாக் கப்படும் நீர்மின் ஆற்றல், போ ஆற்றுப் பள்ளத்தாக் கில் அமைந்துள்ள தொழிற்சாலை நகரங்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

போ ஆற்றுப் பள்ளத்தாக்கு: இத்தாலியின் சிறப் பான இயற்கைப் பிரிவு இதுவே எனலாம். இப்பிரி வில்தான் இத்தாலியின் பெரும்பாலான மக்கள் வாழ் கிறார்கள். மக்கள் நெருக்கமும் இப்பிரிவில்தான் மிகுதி. நகரங்களும் இப்பிரிவில்தான் மிகுதியாக உள் ளன. சிறந்த இருப்புப்பாதைத் தொடர்கள், சாலை அமைப்புகள், பெரும்பாலான வேளாண்மைத் தொழிற்சாலைகள் போன்றவை இப்பள்ளத்தாக்கில் தான் அமைந்துள்ளன. போ ஆற்றுப் பள்ளத்தாக் கின் பெரும்பகுதி செழுமைமிக்கது. ஒருசில இடங் களில் மலையிலிருந்து அடித்து வரப்பட்ட கூழாங்கற் கள் மண்ணை மூடியிருப்பதும் உண்டு. கோடைக் காலத்தில் ஆல்ப்சு மலையின் உறைபனி உருகுவதால் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டுள்ளது. இங்குத்தான் இலம்பார்டிச் சமவெளி உள்ளது. இச்சமவெளி தொழிற்சாலை மையமாகும்.

ஏட்ரியாடிக்குச்சமவெளி: ஏட்ரியாடிக்குச் கடலின் வடமுனையில் உள்ள சிறு பகுதியே ஏட்ரியாடிக்குச்சம வெளியாகும். இச்சமவெளியின் கிழக்குப் பாதியைக் கார்சோ மேட்டுநிலம் என்பர். இது சுண்ணாம்புக் கல் நிறைந்த பகுதியாதலால் பண்ணைத் தொழிலுக் கேற்றதன்று.

அபினைன் மலைகள்: வடக்கில் இம்மலைத் தொடர் கரடுமுரடானது; மிகுதியான காடுகளைக் கொண்டுள்ளது. இதன் நடுப்பகுதி உயரம் மிகுந்தது; இங்கு நல்ல மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. தென் அபினைன் பகுதி வறண்டது. இங்கு நில நடுக்கங் களும் நிலச்சரிவுகளும் சில வேளைகளில் ஏற்படுவ துண்டு.

ஆப்பூலியாவும் தென்கிழக்குச் சமவெளிகளும்: இத்தாலியின் தென்கோடியில் பில்பெர்னா ஆற்றின் தெற்கிலிருந்து சின்னி ஆறுவரை அமைந்துள்ள இப்பகுதியை அப்பூலியா என்பர். இது வறண்ட சுண்ணாம்புக்கல் மேட்டு நிலங்களையும் நிலத்தடி நீர்ப்பாசனத்தையும் கொண்டுள்ளது. இதைச் சுற்றி லும் காபித நாடா, ஏட்ரியாடிக்குக் கடற்கரை, தாரண்டோ (Toronto) சமவெளி என்று கூறப்படும் மூன்று சமவெளிகள் உள்ளன. இச்சமவெளியிலுள்ள நகரங்களும் நீர்வரத்தினை அப்பூலியக் கட்டுக் கால் வாயினால் நிறையப் பெறுகின்றன. அப்பூலியப் பகுதி யில் திராட்சைத் தோட்டங்களும் ஒலிவத் தோட் டங்களும் காணப்படுகின்றன.

மேற்கு மேட்டுநிலங்களும் சமவெளிகளும்: அபினைன் மலைத்தொடரின் வளைவில் வரும் இலா இசுபீசியா முதல் தெற்கில் சாலர்னோ வரை இந் நிலப்பிரிவு அமைந்துள்ளது. பொருளாதாரத் துறை யில் இப்பகுதி போ ஆற்றுப்பகுதிக்கு அடுத்தபடியா கக் கருதப்படுகிறது. இப்பிரிவின் வடபாதியில் குன்று களும், அம்பிரியாச் சமவெளியும், தசுகனியும் (Tuscany) அமைந்துள்ளன. இங்குள்ள பண்ணை நிலம் வளமானது. மற்றும் ஒலிவத் தோட்டங்கள், தானிய வகைகள், கால்நடைகள் போன்றவை சிறப் பாக வளருகின்றன. தென்பாதியின் பெரும் பகுதி தாழ்ந்த கடற்கரைச் சமவெளியாகும். இங்குப் பாண்டைன் சதுப்புநிலம் பயன்படும் வகையாக உரு மாற்றப்பட்டுள்ளது. இப்பகுதியில்தான் உரோமாபுரி யும் நேபில்சு மாநகரும் அமைந்துள்ளன.

சிசிலி: முக்கோண வடிவமானதொரு தீவு. இத்தாலியின் தென்கோடியில் மத்தியதரைக்கடலில் அமைந்துள்ளது. இப்பகுதி பெரும்பாலும் கரடு முரடான மேட்டு நிலங்களைக் கொண்டுள்ளது. மவுண்ட்டு எட்னா என்னும் எரிமலை சிசிலியில்தான் உள்ளது. இவ்வெரிமலை இன்றும் எரிவதுண்டு.

சார்டீனியா: மத்தியதரைக் கடலிலுள்ள மற் றொரு தீவு. சார்டீனியாவின் 90 விழுக்காட்டுப் பகுதி மலைகளால் சூழப்பட்டுள்ளது. இத்தீவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள தாழ்நிலமே பயன் படும் நிலமாகும்.

வசந்த காலத்தில் வட ஆப்பிரிக்காவின் சகாரா பாலை நிலத்திலிருந்து சூடான வறண்ட காற்று வீசுகிறது. கோடைக்காலம் வெப்ப மிகுதியால் வறண்டுள்ளது. அவ்வப்போது மலைப்புயல்கள் வீசும். ஏட்ரியாடிக்குக்கடலிலிருந்து வீசும் ஈரப்பத மான காற்று, கிழக்குத் திசையிலிருந்து இத்தாலியின் மீது வீசுகிறது. குளிர்காலத்தில் ஆல்ப்சு, அபினைன் மலைப் பகுதிகளில் மேலைச் சரிவுகளில் குளிர்ச்சியும் பனிமூட்டமும் ஏற்படுகின்றன. மத்தியதரைக் கடலை அடுத்துள்ள பகுதிகளில் பகல் நேரம் வழக்க மாக வெதுவெதுப்பாக இருக்கிறது. இத்தாலி ஏறத் தாழ 1100 கிலோமீட்டர் நீளமுள்ளதாய் இருந்தா

லும், அதன் தட்பவெப்பநிலையில் பெரும் ஏற்றத் தாழ்வுகள் தென்படுவதில்லை. வட இத்தாலியில் கடுங்குளிர் ஏற்படாதவாறு ஆல்ப்சு மலை காக்கிறது.



வெனிசு நகரம்

இத்தாலியின் வட பகுதியில் ஆண்டுக்கு 75 செ. மீட்டருக்கு மேல் மழை பொழிகிறது. ஆனால், தென் பகுதியில் வறட்சி மிகுந்துள்ளது. தென் சிசிலியில் 35 செ.மீ. மழைதான் பெய்கிறது.

**மக்கள் வாழ்க்கை:** வட இத்தாலி செல்வச் செழிப்புள்ளது. இங்கே தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன. எனவே, இங்கு வாழும் மக்களுள் பெரும்பாலோர் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகின்றனர். தென் இத்தாலி செல்வ வளம் குறைந்தது. இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் உழவர்கள். வட இத்தாலியரின் வருவாயில் ஏறத்தாழப் பாதியளவைத்தான் தென் இத்தாலியர் பெறுகின்றனர்.

மலைத்தொடர்கள் இத்தாலியைப் பல பகுதிகளாகப் பிரித்துள்ளன. ஒரு பகுதியில் வாழும் மக்களுக்குப் பிற பகுதி மக்களுடன் தொடர்பு அருமை. இன்றைய போக்குவரத்து வசதிகளால் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் பேச்சு மொழியிலும் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன.

மக்கள் தொகையில் 59 விழுக்காட்டினர் மாநகரங்களிலும் நகரங்களிலும் வாழ்கிறார்கள். இலட்சம் பேருக்குமேல் மக்கள் தொகை கொண்ட இத்தாலிய நகரங்கள் 44 உள்ளனஎன்பதுகணக்கிடப்பட்டுள்ளது. நான்கு மாநகரங்கள் பத்து இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்டவை. அவை உரோமாபுரி, மிலான், நேபில்சு, தூரின் என்பனவாம்.

இத்தாலி, மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு. இந்நாட்டின் நாலில் ஒரு பங்கு நிலத்தில் மூன்றிலிரண்டு பங்கு மக்கள் வாழ்கிறார்கள். போ ஆற்றுப் பள்ளத்தாக்கு 16 விழுக்காடு நிலத்தைக் கொண்டது. எனினும், இப்பகுதியில் 40 விழுக்காடு மக்கள் வாழ்கிறார்கள்.

**மொழி:** இத்தாலிய மொழி இலத்தீன் மொழியைச் சார்ந்தது. இத்தாலிய மொழி கி.பி. 1000 ஆண்டிலிருந்து தனிமொழியாக வளரத் தொடங்கியது. தாந்தே என்பார் கி.பி. 1300க்கும் 1321க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதிய தெய்வீக இன்பியல் (Divine Comedy) என்னும் நீண்ட காவியத்தை இத்தாலிய மொழியில்தான் எழுதினார். அம்மொழியைத் தசுகனி மக்கள் பேசினார்கள். இன்றும் தசுகன் வடிவிலுள்ள இத்தாலிய மொழியே இந்நாட்டின் பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. இத்தாலியின் ஒவ்வொரு பகுதியும் அதனதன் சொந்தப் பேச்சுமொழியைக் கொண்டுள்ளது.

**சமயம்:** மக்கள் தொகையில் 95 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள். இங்குள்ள பொதுவுடைமைக் கட்சி, சமயத்தை மறைமுகமாகத் தடைசெய்திருந்தாலும், இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியினர் திருச்சபைக்குச் செல்கின்றார்கள். உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை இத்தாலிய அரசிடமிருந்து ஓரளவு பொருளுதவி பெறுகிறது. பெரும்பாலான நகரங்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் மிகப்பெரிய திருச்சபைக் கட்டிடங்களைக் காணலாம்.

உரோமாபுரியின் ஒரு பகுதியாக உள்ள வத்திகன் நகரமே உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆன்மிக மையமும் அரசு மையமுமாகும். இது உலகக் கத்தோலிக்கர்களின் தலைநகரமாகும். இது 1929-ஆம் ஆண்டில் சுதந்தர நாடாக அறிவிக்கப்பட்டது.

**உணவு:** மாவையும் நீரையும் இணைத்துச் செய்யப்படும் பாசுட்டா (Pasta) என்பது இத்தாலியரின் அடிப்படை உணவாகும். பிசா (Pizza) என்பது மற்றொரு வகை உணவுப்பண்டம். இது மக்களால் பெரிதும் விரும்பி உண்ணப்படுகிறது. வெண்ணெய், ஒலிவ எண்ணெய், தக்காளி போன்றவற்றை


இத்தாலியர்கள் உணவில் பயன்படுத்துகின்றனர். இத்தாலியின் பகுதிகள் ஒவ்வொன்றும் தத்தமக்குச் சொந்தமான சிறப்புணவைத் தயாரிக்கிறது. போலக்னா நகரத்துக் காரப்பணியாரம், பர்மா நகரத்து உப்பிட்ட பன்றித் தொடை இறைச்சி, மிலான் நகரத்துக் காய்கறிக் குழம்பு (மினிசுட்ரான்) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பொழுதுபோக்கு: இத்தாலிய நகரங்களில் இசை நாடகம் மக்களால் பெரிதும் விரும்பப்படும் பொழுது போக்காகும். மிலான் நகர்த்து இலா இசுகேலா இசைநாடகம் மிக்க புகழ்பெற்றது. கோடைக்காலத்தில் இசைநாடகங்கள் திறந்தவெளி அரங்குகளில் நடைபெறும். விதவிதமான இசைகளையும் இத்தாலியர் கேட்டு மகிழ்வர். கால்பந்தாட்டம், மிதிவண்டிப் போட்டி, தானியங்கி வண்டிப் போட்டி போன்ற விளையாட்டுகளை அவர்கள் விரும்புகிறார்கள்.

**இத்தாலியக் கலைகள்:** இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டே கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், ஏனைய நுண்கலைகள் போன்றவற்றில் இத்தாலிய மக்கள் சிறந்து விளங்கியுள்ளனர். மைக்கேலாஞ்சலோ, இலியோ நார்டோ-டா-வின்சி, இராபல் போன்றவர்கள் இத்தாலி நாட்டுக் கலைஞர்கள். அதேபோல் இசையிலும் குறிப்பாக இசை நாடகத்திலும் இத்தாலியில் தலைசிறந்த இசைப் பேரறிஞர்கள் தோன்றினர்.

பொருளாதாரம்: இக்காலத் தொழிற்சாலைகளின் அடிப்படையில் எழுந்த பொருளாதார நிலைக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் இன்மையால் இத்தாலி தத்தளிக்கிறது. அண்மைக்காலத்தில் வேளாண்மையின் அடிப்படையில் இயங்கிய பொருளாதாரம், தொழிற்சாலை அடிப்படைப் பொருளாதாரமாக உருமாறி வருகிறது. நீர்மின் ஆற்றல் தொழிற்சாலைகளுக்கு உயிர்நாடி. ஆல்ப்சு மலையிலிருந்து வேகமாகப் பாயும் ஆறுகளின் நீர்ப் பெருக்கைப் பயன்படுத்தி மிகுதியான நீர்மின்சக்தியை இத்தாலி பெறுகிறது. பெட்ரோலும், இயற்கை வாயுவும் ஏட்ரியாடிக்கு கடற்கரையில் இரவன்னாவிற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிசிலியிலும், பெட்ரோலும் இயற்கை வாயுவும் கிடைக்கின்றன. உயர்ந்த வெப்பத்தால் உருவாகும் நீராவியைப் பயன்படுத்தியும் மின் ஆற்றலை இத்தாலியர் பெறுவர். இத்தாலியர் மதிநுட்பத்தோடு இயற்கையைப் பயன்படுத்தி மின்ஆற்றலைப் பெற்று மகிழ்கிறார்கள்.

பாதரசம், சல்பர், பளிங்கு போன்ற மூன்று கனிமங்கள் அளவுக்கு மீறிக் கிட்டுவதால் அவை




இத்தாலி–வேளாண்மைத் தொழில் வளங்கள்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தாலி நாடுதான் பளிங்குக் கற்களை ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே முதலிடம் பெற்றுள்ளது.

நகரங்கள்: இத்தாலியின் முப்பெரும் நகரங்களாக உரோமாபுரி, மிலான், தூரின் (Turin) ஆகிய



மிலான் நகரிலுள்ள இசைநாடக மாளிகை

மூன்று மாநகரங்களையும் குறிப்பிடுவர். இம்மூன்றும் முத்துறைகளின் தலைநகரங்களாகக் கருதப்படுகின்றன. அதனால்தான் இத்தாலிக்கு மூன்று தலைநகரங்கள் என்று கூறுவர். உரோமாபுரி அரசியல் தலைநகரென்றும், மிலான் நிதித் தலைநகர் என்றும், தூரின் தொழிற்சாலைத் தலைநகரென்றும் கூறுவர். நேபில்சு நகரைச் சுற்றுலாப் பயணிகளின் தலைநகர் என்று கூறலாம். அதேபோல் சினோவாவை மாலுமிகளின் தலைநகராகவும் பிளாரன்சு மாநகரைப் பண்பாட்டுத் தலைநகராகவும் கருதலாம். வெனிசு மாநகரமும் பயணிகளின் மையம்.




போர் டோ பைனோ சிற்றூர்

சிசிலித்தீவின் தலைநகரான பாலர்மோவும் ஒரு சீரிய நகரம். இதனால்தான் இத்தாலியை 'மாநகரங்களைக் கொண்ட நாடு' என்று குறிப்பிடுகிறார்கள்.

வரலாறு: இத்தாலியின் தொடக்கக் கால வரலாற்றை அறியப் போதுமான சான்றுகள் கிடைத்தில. அதுபோல் முதன்முதலாகக் குடியேறியவர்கள் பற்றியும் விவரங்கள் கிடைத்தில. எனினும் தொடக்கக் காலத்திலிருந்தே இத்தாலிமீது படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன என்பது உண்மையே. கிரேக்கர்கள் தம் குடியேற்றங்களை முதன்முதலாகச் சிசிலியிலும் தென் இத்தாலியிலும் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நிலைநாட்டினார்கள்.

இத்தாலியில் கி.மு. 800–ஆம் ஆண்டளவில் எட்ரசுக்கர்கள் என்னும் மக்கள் வாழ்ந்தனர். இம்மக்களின் மொழி முழுவதும் படித்தறியப்படவில்லை. ஆயினும் இவர்கள் சீரிய பண்பாட்டைப் பெற்றவர்கள் என்பது மட்டில் தெரிகிறது. இத்தாலியில் முதன்முதலாகத் திராட்சையிலிருந்து சாராயம் இறக்கும் தொழிலை இவர்கள்தாம் தொடங்கியிருக்க வேண்டும். ஒலிவமரத்தை இவர்களே நட்டு வளர்த்திருக்கக்கூடும். இரும்பு, வெண்கலம், பொன் போன்ற உலோகங்களைப் பயன்படுத்தத் தெரிந்திருந்த இவர்கள் அவற்றை வணிகத்துறையிலும் பயன்படுத்தினர். இவர்களே முதன்முதலாகத் தேரினையும் அமைத்தனர்.




இத்தாலி–கி.பி. 1249–இல்

வடபாலிலிருந்து வந்த காலியர்களும், தென்பாலிலிருந்து வந்த உரோமானியரும் எட்ரசுக்கர்களை வென்றனர். அவர்களின் வலிமை வாய்ந்த தலைநகரம் கி.மு. 396–ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றது. வடவர்களான காலியர்கள் தொடர்ந்து படையெடுக்கக்கூடும் என்னும் அச்சுறுத்தலைப் பயன்படுத்தி, உரோமானியர்கள் இத்தாலியத் தீபகற்பத்தைத் தம்மாட்சியின் கீழ் ஒன்றாக இணைத்தனர். இதனை அடித்தளமாகக் கொண்டு உரோமானியர் தம் அதிகாரத்தைப் பெருக்கி ஐரோப்பாவின் பெரும்பகுதிகளிலும் மேற்கு ஆசியாவிலும் தம் பேரரசை விரிவுபடுத்திக் கொண்டனர். உரோமானியப் பேரரசு கி.பி.476–இல் வீழ்ச்சியுற்றது. எனினும் ஐரோப்பாவின் பெரும்பகுதியை ஓர் ஆட்சியின்கீழ் கொண்டு வந்ததும், அங்குப் பொதுவானதொரு, சட்டத்தை ஏற்படுத்தியதும் இலத்தீன் மொழியைப்

பொதுமொழியாக்கியதும் உரோமானிய ஆட்சியின் சாதனைகளாகும்.

இருண்டகாலம்: இலம்பார்டுகள் என்னும் செருமானிய இனமக்கள் கி.பி. 5,6-ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியின் வடபகுதியையும் நடுப்பகுதியையும் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால், போப்பாண்டவர்களின் சிறப்பான முயற்சியால் அவர்கள் உரோமாபுரியைத் தாக்காது விட்டனர். பிராங்குகளின் தலைவரான பெப்பின் என்பாரும், அவர் மகன் சார்லிமேன் என்பாரும் இலம்பார்டுகளை இறுதியாகத் தோற்கடித்தனர். சார்லிமேன் ஆற்றிய அருந்தொண்டிற்குப் பரிசாகவும், திருச்சபையின் அதிகாரத்தைப் பரப்பியதற்காகவும் போப் மூன்றாம் லியோ, கி.பி. 800-ஆம் ஆண்டில் கிறித்துமசு நாளில் சார்லமேனை உரோமானியப் பேரரசராக முடிசூட்டினார்.

சார்லமேன் காலமானபிறகு, அவர் கட்டிக்காத்த பேரரசு பல பிரிவுகளாகப் பிரிந்தது. அதிகாரம் தொடர்ந்து போப்பாண்டவர்களின் வசமே நீடித்தது. இத்தாலி பல்லாயிரம் துண்டுகளாகச் சிதறுண்ட சீர்கேடான அரசுகளால் ஆளப்பட்டது. இத்தாலியை அயலார்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்கினர்.

இத்தாலியத் தீபகற்பத்தில் பல்வேறு பிரபுக்கள் தங்களை அரசரெனக் கூறிக்கொண்டு ஆண்டனர். அங்ஙனம் அரசரெனக் கூறிக் கொண்டு ஆண்டவர்களுள் பீட்மாண்டை ஆட்சிசெய்த இரண்டாம் பெரங்கர் (Berengar II) குறிப்பிடத்தக்கவர். இத்தாலிய மக்கள் அனைவரையும் பெரங்கர் ஒன்றுபடுத்தப் பெருமுயற்சி செய்தார். எனினும் இவர் வெற்றி பெறவில்லை. மனந்தளர்ந்த இவர் தம் அரசைச் செருமானிய அரசர் முதலாம் ஆட்டோ என்பாருக்குக் கொடையாக அளித்துவிட்டார். முதலாம் ஆட்டோ கி.பி. 962-ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசரென முடிசூட்டப்பட்டார். அவராண்ட பரந்து விரிந்த இப்பேரரசு, ஏதானுமோர் உருவில் செருமானிய அரசர்களாலும், செருமானியத் தொடர்புடைய ஆப்சுபர்கு அரசர்களாலும் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கக்காலம் வரை நீடித்தது.

கட்டுக்கோப்பற்ற நிலையில் பேரரசு இருந்தமையால் இத்தாலியர்களை ஆள்வது அவ்வளவு எளிதாக இல்லை. கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டிருந்த வடக்கு நகரங்கள், போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதி, தெற்கிலிருந்த இரு சிசிலி அரசுகள் போன்றவை தனி நாடுகள் போல் காட்சியளித்தன. நகரங்கள் சுதந்தரம் பெற முயற்சி செய்தன. தென்பாகத்திலிருந்த பகுதிகளில் அரசாண்ட பிரெஞ்சு, இசுபானிய, நிலமானிய பிரபுக்களும் செம்மையாக ஆட்சி நடத்தவில்லை.

**நகர அரசுகளின் எழுச்சி:** வட இத்தாலி கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சிலுவைப் போர்களுடன் தொடர்ந்த வாணிகப் பெருக்கத்தின் பயனாகச் செல்வச் செழிப்பில் மிதக்கலாயிற்று. வெனிசு, பிளாரன்சு, சினோவா, பைசா, மிலான் போன்ற நகரங்கள் வலிமை மிக்க சுதந்தர நகர அரசுகளாக வளர்ச்சியுற்றன. இந்நகரங்கள், வட ஐரோப்பாவோடும் கீழ்த்திசை நாடுகளோடும் செய்த வளமான வாணிகத்தாலும், ஆடைகள் நெய்தல், உலோகத்தைப் பதப்படுத்தல், கப்பற் கட்டுதல் போன்ற தொழில்களாலும் செல்வம் பெருகி வளர்ந்தது. வாணிகமும் தொழில்களும் வங்கிகளை ஊக்குவித்தன. தம்மிடம் சேர்ந்திருந்த மிகுதியான செல்வத்தைத் தகுந்த இடத்தில் முதலீடு செய்ய இப்புதிய செல்வர்கள் விழைந்தனர். பணத்தைப் பெரும் வட்டித் தொகைக்குக் கடன் கொடுத்தனர். இதனால், செல்வர்கள் பெருஞ் செல்வர்களாகவும் வல்லமை பெற்றோராகவும் ஆயினர். எடுத்துக்காட்டாக, பிளாரன்சு நகரில் வாழ்ந்த மெடிசி குடும்பத்தைக் கூறலாம். அக் குடும்பத்தினர் வங்கித் தொழிலில் தலைசிறந்து விளங்கினர். அதனால், அக்குடும்பத்தவர்கள் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரை பிளாரன்சு நகரத்தை அரசர்கள்போல் ஆண்டனர்.

நகர அரசுகளில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த செல்வர்கள் பெரும் செல்வத்தை மட்டும் பெற்றிருக்கவில்லை. அவர்களுக்கு நிறைய ஓய்வுநேரமும் இருந்தது. பண்டைய கிரேக்க உரோமானிய இலக்கியத்திலும் கலைகளிலும் மறுமலர்ச்சி தோன்றியதால் இத்தாலியில் அறிவியல் வளர்ச்சியும் பெருகியது.

பேரும் புகழும் பெற்ற பெருநகரங்கள், ஆதிக்க நிலைகுறித்துத் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டன. நகரங்களில் இரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றப் போட்டியிட்டுக்கொண்டனர். ஒரு கட்சி போப்பாண்டவரையும் மற்றொரு கட்சி பேரரசரையும் ஆதரித்தன. தொடர்ந்து நிகழ்ந்த இவ்வுள்நாட்டுப் போர்களின் விளைவாக நாளடைவில் நகரங்கள் நலிவடைந்து, அயல்நாட்டுப் படையெடுப்பாளர்களுக்கு இரையாயின.

இத்தாலியைக் கி.பி. 1559-ஆம் ஆண்டில் முடிவுற்ற இத்தாலியப் போர்கள், இசுபானியரின் ஆதிக்கத்திற்குள்ளாக்கின. ஆனால், கி.பி.18-ஆம்

நூற்றாண்டில் இசுபானிய ஆட்சி நலிந்தபோது, ஆசுத்திரியர் இத்தாலியின் பெரும் பகுதிகளைக் கட்டுப்படுத்தலாயிற்று.

பிரெஞ்சுப் புரட்சி (கி.பி. 1789), இத்தாலியைப் பெருமளவிற்குத் தாக்கியது. பிரெஞ்சுக் குடியரசு நிலைநாட்டப்பட்டதையடுத்து இத்தாலிய மக்களும் தேசிய ஒருமைப்பாட்டைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கலாயினர். நெப்போலியன் போனபார்ட்டு கி.பி. 1796-இல் தம் படைகளை இத்தாலியில் நடத்திச் சென்றபோது, தங்களை விடுவிக்க வந்த வித்தகர் என்று அவரை இத்தாலிய மக்கள் வரவேற்றனர்.

நெப்போலியன் கி.பி.1815-ஆம் ஆண்டில் தோற்றபோது, மீண்டும் இத்தாலி ஆசுத்திரியாவின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டது. சார்டீனியா அரசு, போப்பின் ஆளுகைக்குட்பட்டிருந்த பகுதிகள் போன்றவை நீங்கலாக உள்ள ஏனைய பகுதிகளை அயலார் ஆண்டனர்.

எனினும், இத்தாலி ஒன்றுபட வேண்டும் என்ற குறிக்கோள் உயிர்த் துடிப்புடன் விளங்கியது. ஆயினும் இத்தாலியை ஒன்றுபடுத்த ஈடுபட்டவர்களிடையே கருத்து ஒற்றுமை தோன்றவில்லை. ஒரு சிலர் போப்பாண்டவரின் தலைமையில் இத்தாலியை ஒன்றுபடுத்த வேண்டுமெனக் கூறினர். மற்றும் சிலர் சார்டீனியாவை ஆண்ட சவாய் அரசக் குடும்பத்தின் தலைமையில் இத்தாலியை ஒன்றுபடுத்த வேண்டும் எனக் கூறி அதன் பொருட்டு முயற்சி செய்தனர். சார்டீனியாவின் மன்னர் இரண்டாம் விக்டர் இமானுவேலுவின் தலைமையில் இத்தாலியை ஒற்றுமைப்படுத்திய பெருமை கவூரைச் சாரும். சார்டீனிய அரசரின் தலைமை அமைச்சராய்ப் பணியாற்றிய கவூர் வலிமைவாய்ந்தபடையை உருவாக்கினார். கிரிமியப் போரில் (கி.பி. 1854), பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் படை உதவி செய்து சார்டீனியாவின் பெருமையை ஐரோப்பிய அரசுகள் அறியும் வண்ணம் செய்தார். கவூர் கி.பி. 1858-இல் பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியனுடன் உடன்படிக்கை செய்துகொண்டு ஆசுத்திரியர்களை இத்தாலியிலிருந்து விரட்டியடிக்கப் பிரெஞ்சுப்படை உதவியைப் பெற்றார்.

இத்தாலியப் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் கூட்டாக, கி.பி. 1859-இல் ஆசுத்திரியாவை மெசண்டா, சல்பெரினோ என்னுமிடங்களில் நடைபெற்ற போர்களில் எதிர்த்து வெற்றிபெற்றன. இதனால், இத்தாலியில் ஆசுத்திரியாவின் ஆதிக்கம் பெருமளவு ஒழிந்தது. வெனிசியாவைத் தவிர ஏனைய வட இத்தாலியப் பகுதிகள் கி.பி. 1860-ஆம் ஆண்டளவில்



கரிபால்டி

சார்டீனியா அரசின் பகுதிகளாயின. நடுப்பகுதியில் இருந்த பல அரசுகள் சார்டீனியாவுடன் இணைந்தன. அதேயாண்டில் கரிபால்டி என்னும் இத்தாலியப் படைத்தலைவர், தென் அமெரிக்காவிலிருந்து ஆயிரம் பேர் கொண்ட செம்படையினருடன் சிசிலியில் கரையிறங்கி, நேபில்சு அரசின் படைகளைத் தோற்கடித்துத் தென் இத்தாலியில் நுழைந்து அதனையும் வெற்றிகண்டார். உரோமாபுரியும் வெனிசுந் தவிர இத்தாலியின் அனைத்துப் பகுதிகளும் இணைந்தன. விக்டர் இமானுவல் கி.பி. 1861-ஆம் ஆண்டில் இத்தாலியின் அரசராக அறிவிக்கப்பட்டார்.

இத்தாலியில் முடியாட்சி: அடுத்த பத்தாண்டுகளில் இத்தாலிய ஐக்கியத்திற்கான இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேறின. வெனிசு கி.பி. 1866-ஆம் ஆண்டு இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. போப்பாண்டவரிடமிருந்து கி.பி. 1870-இல் உரோமாபுரி கைப்பற்றப்பட்டது. அதுவே இத்தாலியின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டது. போப்பாண்டவர் வத்திகனை மட்டுமே தம்வசம் கொண்டிருக்க நேர்ந்தது. இந்நகரம் 1929 இல் தனித்ததொரு சுதந்தர நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்தாலியில் ஏற்பட்ட புதிய முடியரசினால், காலங்காலமாக வந்த இத்தாலியின் சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை. இரும்பு, நிலக்கரி போன்ற மூலப்பொருள்கள் கிடைக்காமையால், அங்குத் தொழில் முன்னேற்றம் ஏற்படவில்லை. நாட்டில் பெருகிவளர்ந்த மக்கள்தொகைக்குப் போதுமான உணவுப் பொருள்களும் கிடைக்கவில்லை. நீண்ட காலம் அந்நாடு அயல்நாட்டவரின் ஆட்சியில் இருந்தமையால் மக்களுக்குத் தன்னாட்சி செய்யும் திறமையும் வளர்ந்திருக்கவில்லை. எனினும், புதிய அரசாங்கம் அந்நாட்டை 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாடாக்குவதில் விரைந்து செயற்பட்டு வெற்றியுற்றது. நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன. இத்தாலியக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு வணிகக் கப்பல்கள் உலகெங்கும் சென்று வரலாயின. அதன் பொருளாதாரமும் நன்னிலையில் இருந்தது. நாட்டின் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க ஆயிரக்கணக்கானவர்கள் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறினர். இத்தாலிய அரசு மேலும் பலவற்றைச் செய்துமுடிக்கவிழைந்தது. ஐரோப்பாவிலிருந்த ஏனைய அரசுகளைப் போல் இத்தாலியும் பேரரசாகக் கருதப்படவேண்டும் என்று அந்நாட்டவர் பெரிதும் விழைந்தனர். அவர்கட்கும் ஆப்பிரிக்காவில் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றும் ஆசை பிறந்தது. தன் நாட்டில் பெருகி வளர்ந்த மக்கள் தொகையை வட ஆப்பிரிக்காவில் எரிட்ரியா, சோமாலிலாந்து போன்ற பகுதிகளில் குடியேற்றிக் கட்டுப்படுத்தலாம் என்று இத்தாலியர் விரும்பினர். அம்முயற்சியினால் மிகுதியான பொருட்செலவும் படைவீரர்கள் அழிவுமே ஏற்பட்டன. இத்தாலியப் படை வீரர்கள் கி.பி. 1896-ஆம் ஆண்டில் அடுவாப் (Aduwa) போரில் படுதோல்வியுற்றனர்.

இரண்டாம் விக்டர் இமானுவேலுக்குப் பிறகு கி.பி. 1878-ஆம் ஆண்டில் பட்டமெய்திய அம்பர்ட்டு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொலையுண்டார். அவரையடுத்து அவர் மகன் மூன்றாம் விக்டர் இமானுவல் பட்டத்திற்கு வந்தார். கியோவன்னி கியோலிட்டி என்பாரின் அரசியல் தலைமையால் நாட்டின் நிலைமை சீர்பட்டு வரலாயிற்று. அவர் இத்தாலியில் மக்களாட்சி அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்கும் முயற்சியைத் தொடங்கினார். எனினும் 1911-ஆம் ஆண்டில் வட ஆப்பிரிக்காவில் திரிப்போலி (Tripoli) யைக் கைப்பற்ற, இத்தாலி துருக்கியுடன் போரிட்டது. இப்போரே பால்கன் போர்களுக்கு வழிவகுத்தது என்றும், பின்னர் முதல் உலகப் பெரும்போரில் முடிவுற்றது என்றும் கருதுவர்.

முதல் உலகப் போரின் தொடக்கத்தில் இத்தாலி மூவரசுகள் கூட்டணியில் சேர்ந்திருந்தபோதிலும் போரில் பங்கு பெறாமல் நடுநிலை வகித்தது. ஆனால், 1915-ஆம் ஆண்டில் நேசநாடுகளுடன் அது பியூமி, திரியசுடே (Trieste) திரெண்ட்டு (Trent) போன்ற பகுதிகளையும் இன்று யூகோசுலேவியா அமைந்துள்ள கடற்கரைப் பகுதியையும் பெறும் நோக்கத்துடன் போரில் சேர்ந்தது. இத்தாலியர்கள் முதலில் படுதோல்விகளை அடைந்தனர். இருப்பினும் 1918-இல் விக்டர் வெனிசு என்னுமிடத்தில் அவர்கள் பெற்ற வெற்றி, ஆசுத்திரியா-அங்கேரியைச் சரணடையச் செய்தது.

இத்தாலியில் பாசிசம்: முதல் உலகப் பெரும் போருக்குப் பின்னர்க் கூடிய பாரிசு அமைதி மாநாடு இத்தாலிக்கு திரெண்ட்டு (Trent), திரியசுடே (Trieste), பயூமி, இசுட்ரியா, யூகோசுலேவியா கடற்கரையை அடுத்துள்ள சில தீவுகள் ஆகியவற்றை வழங்கியது. எனினும், இத்தாலியில் குழப்பமான சூழ்நிலையே நிலவியது. தொழில்வளர்ச்சி குன்றியதால் தொழிலாளர்களிடையே அரசியல் கொந்தளிப்பு மூண்டது. அரசாங்கத்தால் இந்நிலையை அடக்க இயலவில்லை. விலைவாசி ஏற்றத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் நாட்டை ஆட்சி செய்வது முடியாததாயிற்று. புரட்சி ஏற்படுவது உறுதியாயிற்று.

இந்நிலையில் இத்தாலியில் பெனிட்டோ முசோலினி (Mussolini) என்பார் தலையெடுத்தார். அவருடைய கருஞ்சட்டை வீரர்கள் பாசிசக் கட்சியைச் சார்ந்தவர்கள். கருஞ்சட்டை வீரர்கள் 1922-அக்டோபரில் உரோமாபுரியை நோக்கிப் பயணம் செய்தனர். அரசர் முசோலினியைத் தலைமையமைச்சராக்கினார்கள். அது வல்லாட்சிக்கு வழி வகுத்தது. பாசிசக் கட்சியும், பாசிசப் படை வீரர்களும் நாட்டைக் கட்டுப்படுத்தலாயினர்.

பாசிச ஆட்சியில் எதிர்க் கட்சி ஒழிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்தரம் பறிபோயிற்று. பள்ளிகளில் பாசிசக் கொள்கைகளே மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன. தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணரப் பெற்றுக் கூட்டுறவு முறையிலான அரசாங்கம் நிலை நாட்டப்பட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு, சதுப்பு நிலங்களை வடித்து மலேரியாக் காய்ச்சலை ஒழித்தல், சுற்றுலாப் பயணத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் போன்றவை முசோலினியின் அரும் பெருஞ்சாதனைகளாகும்.

முசோலினியின் அயல்நாட்டுக் கொள்கையும்



முசோலினியும் இட்லரும் (இடமிருந்து வலம்)

இத்தாலியைப் பெரும் புகழுக்குக் கொண்டு செல்லும் கனவும் நனவாகாமல் கனவாகவே கழிந்தன. எனினும், இந்த அடிப்படையில் 1935–36–ஆம் ஆண்டில் இத்தாலியர் எத்தியோப்பியாமீது படையெடுத்து வென்றார்கள். அல்பேனியாவும் 1939–இல் கைப்பற்றப்பட்டது. இதனிடையில் இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்டது. அச்சு நாடுகளுடன் இணைந்துகொண்டால் விரைவில் வெற்றிகிட்டும் என்ற ஆசையினால் இத்தாலி, செருமனியுடன் இணைந்து கொண்டு பிரிட்டன், பிரான்சு போன்ற நேசநாடுகளை எதிர்த்தது. அது 1941–இல் உருசியா மீதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மீதும் போர் தொடுத்தது. அது 1943–ஆம் ஆண்டளவில் தான் கைப்பற்றிய ஆப்பிரிக்கப் பகுதிகள் அனைத்தையும் இழந்தது. அந்நாட்டுப் படைகளும் பெரும்பாலும் அழிவுற்றன. நேசப் படையினர் சிசிலியில் கரையிறங்கினர். அத்தீவு வெற்றிகொள்ளப்பட்டது. பின்னர் அன்சியோ, சாலர்னோ போன்ற இத்தாலியத் தீபகற்ப இடங்களும் கைப்பற்றப்பட்டன. இத்தாலியத் துறைமுகங்களும் மாநகரங்களும் தாக்கப்பட்டன. முசோலினியின் இருபத்தோராண்டு பாசிச ஆட்சி தூக்கியெறியப்பட்டதுடன், முசோலினியும் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும், 1945–ஆம் ஆண்டுவரை இத்தாலியில் போர் நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. நேசப்படைகள் அங்கிருந்த செருமானியப்படைகளை முறியடித்து இறுதியில் வெற்றிபெற்றன.

இத்தாலியக் குடியரசு: இத்தாலியில் 1945க்கும் 1948க்கும் இடையில் புதிய இத்தாலி பிறப்பதற்கான அறிகுறிகள் தோன்றின. மூன்றாம் விக்டர் இமானுவல் 1946–ஆம் ஆண்டு மே மாதம் 9–ஆம் நாள் முடிதுறந்தார். அவர் மகன் இரண்டாம் அம்பர்ட்டு (Humbert) முடிமன்னரானார். இத்தாலியில் 1946–ஆம் ஆண்டு சூன் 2–ஆம் நாள் முதல் முறையாகச் சுதந்தரமான தேர்தல் நடைபெற்றது. முடியாட்சியை நீக்கிவிட்டுக் குடியாட்சி முறையை இத்தாலியர்கள் நிலைநாட்ட விரும்பினர். இரண்டாம் அம்பர்ட்டு 1946–ஆம் ஆண்டு சூன் 13–ஆம் நாள் அரியணையை விட்டு இறங்கினார். புதிய அரசியல் அமைப்புச் சபைக்கான தேர்தல் நடைபெற்றது. மக்களாட்சி முறையின் அடிப்படையில் 1947–இல் அரசியலமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இத்தாலி குடியரசானபோது, கிறித்தவ மக்களாட்சிக் கட்சி, சமதருமக் கட்சி, பொதுவுடைமைக் கட்சி ஆகிய மூன்று கட்சிகள் வலிமைபெற்றிருந்தன. அந்நாட்டில் 1948–ஆம் ஆண்டிலிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட அரசாங்கங்கள் வந்தன. அவை அனைத்தும் கிறித்தவ மக்களாட்சி கட்சி அரசுகளேயாகும்.

இத்தாலி ஐக்கிய நாடுகளின் அவையில் 1955–ஆம் ஆண்டில் உறுப்பு நாடாயிற்று. சோசியலிசுட்டுகள் கிறித்தவ மக்களாட்சிக் கட்சியுடன் 1962–இல் கூட்டுச்சேர்ந்து, 1976– வரை ஆட்சி நடத்தினர். இதனிடையில் பொதுவுடைமைக் கட்சியும் பெருகி வளர்ந்தது. இருப்பினும் அவர்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை.

இத்தாலியின் இன்றைய நிலை: பணவீக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், நிலையற்ற அரசாங்கங்கள் போன்றவற்றால் இத்தாலியில் பல சிக்கல்கள் நீடித்து வருகின்றன. பொதுவுடைமைக் கட்சியினரின் ஆதரவையிழந்த கிறித்தவ மக்களாட்சிக் கட்சி, சமதருமக் கட்சியின் ஆதரவில் 1980–இல் கூட ஆட்சியைக் கைப்பற்றிக் கூட்டாட்சி அரசினை உருவாக்கியது.

**இத்தாலி நாட்டில் கல்வி**: ஒரே சீரான தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிக் கல்வியும், ஆனால் ஒரே குழப்பமான திருக்குமுறுக்கான மேல்நிலைப் பள்ளிக் கல்வியும் இத்தாலி நாட்டுக் கல்வி

அமைப்பில் மிகவும் கருத்தைக் கவரும் தன்மையன வாக உள்ளன.

மழலையர் பள்ளிகளில் (Kindergarten) மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரை ஏறத்தாழ 77.8 விழுக்காடு குழந்தைகள் பயிலுகின்றனர்.

தொடக்கப் பள்ளிகளில் (Elementary School) ஆறு வயதில் மாணவர்கள் சேருவர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு மொத்தம் ஐந்து ஆண்டுகள். இக்கல்வி அனைவருக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கற்பிக்கப்படுகின்றது. நடுநிலைப் பள்ளிக் கல்வி (Lower Secondary or Middle School) யின் கால அளவு மூன்றாண்டுகள். பதினான்கு வயது வரை மாணவர்கள் இப்பள்ளிகளில் பொதுக் கல்வியே பயிலுகின்றனர். நடுநிலைப் பள்ளிக் கல்வியும் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றது.



இடைநிலைப் பள்ளியில் ஓவியம் கற்கும் மாணவன்

இங்கு அரசுப் பள்ளிகளும் தனியார் பள்ளிகளும் உண்டு. ஆனால், மாணவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே, தனியார் பள்ளிகளில் போய்ப் பயிலுகின்றனர்.

மேல் நிலைப் பள்ளிக் கல்வி (Upper Secondary Education), இந்நாட்டில் சிக்கலான முறையில் பல பள்ளி அமைப்புகளில் அமைந்துள்ளது. மொழிப் பள்ளி (Classic Lyceum), அறிவியல் பள்ளி (Scientific Lyceum), வணிகத் தொழில் பள்ளி(Commercial Technical Institute), அளவாயர் தொழில் நுட்பப் பள்ளி (Technical Institute for Surveyors), தொழிற்பயிற்சி, தொழில் நுட்பப் பள்ளி (Industrial Technical Institute), வாழ்க்கைத் தொழில் பள்ளி (Vocational Institute), மழலையர், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி (Schools for Elementary and Kindergarten Teachers), கலைப் பள்ளி Artistic lyceum and Art institutes) போன்ற பள்ளி முறைகள் நிறைய உள்ளன. அது மட்டுமன்றி, ஒவ்வொரு பள்ளி முறையிலும் பாட வழிகளுக்கான பல பயிற்சிகள் நிறைந்துள்ளன. சான்றாக, தொழிற் பயிற்சி, தொழில் நுட்பப் பள்ளி முறையில் மட்டும் 31 பாட வழிகளுக்கான பயிற்சிகள் உள்ளன. இவற்றில் ஐந்து ஆண்டுகள் பயிற்சி பெற்ற அனைவரும் பல்கலைக்கழகக் கல்வியில் நுழையமுடியும்.



மழலையர் பள்ளி வகுப்பறையில் விளையாடும் குழந்தைகள்

வயது வந்தோர் கல்வி: இத்தாலியில் 1980–ஆம் ஆண்டுக் கணக்கின்படி, கல்வி வாசனையற்றவர்கள் 4.5 விழுக்காடு மட்டுமே. இங்கு 67 விழுக்காடு மக்கள் நடுநிலைக் கல்வியை முடிக்காதவர்களே. இவர்களில் 25 விழுக்காடு மக்கள் தொடக்கப் பள்ளிக் கல்வியைப் பாதியில் நிறுத்தியவர்கள்.

இத்தாலியில், வயது வந்தோருக்கான தொடக்கப் பள்ளிக் கல்வி (Primary-education Adult courses) வழங்கப்படுகிறது. இக்கல்வியில் 1980–ஆம் ஆண்டின் கணக்கின்படி, 50,000 பேர் சேர்ந்து பயின்றனர். வயது வந்தோருக்கான நடுநிலைக் கல்வி (Middle-School Adult Courses) யில் 140,000 பேர் சேர்ந்து பயின்றனர். இப்பயிற்சியில் பங்கு பெற்ற அனைவரும் தொழிலாளர்களே. இப்பயிற்சியில் தொழிலாளர்கள் பங்கு பெற்ற காலத்தில் அவர்களுக்கு ஊதியமிழப்பு ஏதும் இல்லாமல், மொத்த ஊதியமும் வழங்கப்பட்டது.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: ஆசிரியர் பயிற்சியிலும் மற்ற நாட்டுக் கல்வி அமைப்பிலிருந்து இத்தாலி நாடு முரண்பாடான நிலையில் உள்ளது. மழலையர் பள்ளி தொடக்கப் பள்ளி, ஆகியவற்றில் ஆசிரியர்களாக வேண்டும் என்றால், ஒருவர் நடுநிலைப் பள்ளிக் கல்வி முடித்த பின்பு முறையே மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சியும் (Scuola Magistral) நான்காண்டு ஆசிரியர் பயிற்சியும் (Institute Magistral) பெற்றாக வேண்டும். உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக வேண்டுமென்றால், ஒருவர் நான்காண்டுகளும் ஐந்தாண்டுகளும் பல்கலைக் கழகப் படிப்பும் தகுதித் தேர்வில் வெற்றியும் பெற்றிருக்க வேண்டும். இப் பயிற்சிகளில் கல்வி உளவியல் குறைவான அளவே இடம்பெறுகிறது.

மழலையர் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 93 விழுக்காடு தனியார் பள்ளிகளே. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 55 விழுக்காடு தனியார் பள்ளிகளே.

உயர் கல்வி: இத்தாலிய உயர் நிலைக் கல்வி பழைய நிலையிலிருந்து மாறிக் கொண்டு வருகிறது. இப்பொழுது 44 நகரங்களில் 70 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இருப்பினும், உரோம் (Rome), பொலக்னா (Bologna), நேப்பிள்சு (Naples), பாரி (Bari), பாலர்மோ (Palermo) ஆகிய ஐந்து அரசுப் பல்கலைக் கழகங்களில் மட்டுமே மிகுதியான மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்.

பிற வளர்ந்த நாடுகளில் உள்ள அளவுக்கு, இத்தாலிய உயர் கல்வி பற்பல துறைகளைக் கொண்டதன்று. இத்தாலியக் கல்வி சில துறைகளுடன் ஒரே சீரான (Monolithic) தன்மை கொண்டதாக உள்ளது.

மேல்நிலைப் பள்ளிக்குப்பின், பல்கலைக் கழகக் கல்வியைத் தவிர வேறு வகையான கல்வி முறைகள் இங்கு இல்லை. குறுகிய காலச் சான்றிதழ், பட்டய வகுப்புகளில் (Certificate and Diploma Courses) இரண்டு விழுக்காடு மாணவர்களே சேர்ந்து பயிலுகின்றனர். பழைய கற்பித்தல் முறைகளையே ஆசிரியர் வகுப்பறைகளில் பயன்படுத்துகின்றனர். மாலை நேரக் கல்வி இன்னும் இத்தாலியில் பெரிய அளவில் இல்லை. தொலை தூரக்கல்வி (Distance Education) என்ற கருத்தும் இந்நாட்டில் இல்லை.

இத்தாலியப் பல்கலைக்கழகங்களில் மாணவரது வருகைப் பதிவு (Daily Attendance) குறிப்பிடத் தக்கதாகும். மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பெயர்களைப் பதிவு மட்டுமே செய்து கொள்கின்றனர்; ஆனால், வகுப்பறைக்கு வருவதில்லை; பிற இடங்களில் பகுதி நேர வேலை பார்ப்பவர்களாக மாணவர்கள் உள்ளனர். அவர்கள் தேர்வு எழுத மட்டும் பல்கலைக் கழகத்திற்கு வருகின்றனர். இம் முறையினை 70-இலிருந்து 80 விழுக்காடு மாணவர்கள் மேற்கொள்ளுகின்றனர்.

உயர் கல்வி அளவில், தனியார் பல்கலைக் கழகங்கள் மிகக்குறைவே. அரசு ஒப்புதலுடன் நான்கு கத்தோலிக்கப் பல்கலைக் கழகங்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருகின்றன. இப் பயிற்சி பெற்றவர்கள் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களாகவோ உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாகவோ ஆகலாம்.

இத்தாலியக் கல்வியில் 1979-ஆம் ஆண்டிலிருந்து சில புதிய போக்குகள் காணப்படுகின்றன. பல்கலைக் கழகத்திலுள்ள ஆசிரியர்கள் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் என்ற புதிய அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளனர். டாக்டர் பட்டத்திற்குஇணையான பட்ட மேற்படிப்பு (Doctorato di Ricerca) அண்மையில்தான் உயர் கல்வியில் கொண்டுவரப்பட்டது. இது மூன்றாண்டு ஆய்வுப் படிப்பாகும். புதிய கற்றல், கற்பித்தல் முறைகளை வகுப்பறையில் ஆசிரியர்கள் முயன்று பார்க்கின்றனர். பல்துறைகளையும் வளர்க்கும் வகையில் புதிய பாடத் திட்டம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**இத்தாலிய அரசியலமைப்பு**: இக்கால இத்தாலிநாடு கி.பி. 1859-ஆம் ஆண்டு முதல் 1871-ஆம் ஆண்டுவரை, இரண்டாம் விக்டர் இம்மானுவல் (King Victor Immanuel II) என்ற கார்டினிய இத்தாலிய அரசர், கவுண்ட்டுகவூர் (Count Cavour) என்ற அரசியலறிஞர், கரிபால்டி (Garibaldi) என்ற போர் வீரர், சோசப்பு மாசினி (Joseph Mazzini) என்ற சிந்தனையாளர் ஆகியோருடைய நன்முயற்சிகளின் விளைவினாலும் வெற்றியான போர்களினாலும் அரசியல் சூழ்வலியாலும் பலசிறு தனிநாடுகளை ஒரே அரசாங்கத்தின்கீழ் இணைத்ததனாலும் தோன்றியதாகும். இந்நால்வரும் நடத்திய இத்தாலி இணைப்பு இயக்கமே (Risorgimento) இத்தாலி என்ற ஒரு நாடு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென் ஐரோப்பாவில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. இந்த இணைப்பு ஏற்படுவதற்கு முன்னரே இத்தாலியின் ஒரு பகுதியாகிய பீட்மாண்ட்டு-சர்டினியாவின் (Piedmont-Sardinia) அரசராகிய சார்லசு ஆல்பர்ட்டு (Charles Albert) என்பவர், கி.பி. 1848-ஆம் ஆண்டில் தம் நாட்டில் ஓர் அரசியலமைப்பை (Constitution) நிறுவும்

பொருட்டு, ஈரவை மன்ற அமைப்புடைய ஒரு பாராளுமன்றத்தையும் அரசரால் அமர்த்தப்பட்டு அவருக்கே பொறுப்போடிருக்கக்கூடிய ஒரு முற்றுரிமை அமைச்சரவையையும் (Cabinet) அமைத்தார். இந்த அமைப்பே அடுத்த ஒரு 100 ஆண்டுக்காலத்திற்கு இத்தாலிக்கு ஓர் அடிப்படைச் சட்டமாக இருந்தது. நாளாவட்டத்தில் அரசருடைய அதிகாரம் குறைந்து, அமைச்சர்கள் அவருக்குப் பொறுப்போடில்லாமல் பாராளுமன்றத்துக்கே பொறுப்போடிருக்கும் முறை தோன்றிற்று. பாசிசக் கட்சித் தலைவர் முசோலினி 1922–ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றியபின்னரும் இவ்வரசியலமைப்பு பெயரளவுக்கு நடைமுறையிலிருந்து வந்தது. அச்சு நாடுகளில் (Axis powers) ஒன்றான இத்தாலி இரண்டாம்உலகப் போரில் தோல்வியுற்று, அதனுடைய பாசிச அரசாங்கமும் வீழவே, 1946–ஆம் ஆண்டு சூன் மாதம் ஒரு குடி ஒப்பத்தின் மூலம் (Referendum) இத்தாலிய மக்கள் முடியாட்சியை (Monarchy) நீக்கிவிட்டு, இத்தாலியை ஒரு குடியரசு (Republic) நாடாக்கினர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சபை (Constituent Assembly) கூடி ஒரு புதிய அரசியலமைப்பை வரைய, இவ்வரசியலமைப்புச் சட்டம், 1948–ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

இவ்வரசியலமைப்பை எவரும் எளிதில் மாற்ற இயலாதபடி தடுத்தற்கும், ஒரு சருவாதிகார ஆட்சி தோன்றாதபடி தடுத்தற்கும், அரசியலமைப்புச் சட்டத்தின்படி அரசாங்கம் இயங்குகிறதா என்று கண்காணித்தற்கும் ஓர் அரசியலமைப்பு நீதிமன்றம் (Constitutional Court) இருக்கிறது. குடியரசு வடிவத்திலுள்ள அரசாங்கத்தை எவராலும் மாற்ற இயலாது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இத்தாலி ஒரு குடியாட்சிக் குடியரசு நாடு (Democratic Republic) ஆகும். மக்களின் உழைப்பே அதற்கு ஆதாரமாகும். நாட்டின் இறைமை அல்லது தலைமை அதிகாரம் (Sovereignty)இத்தாலிய மக்களிடம் உள்ளது. அரசியலமைப்பில் குடிமக்களுடைய மீறப்படாத (ஆதார) உரிமைகள் (Inviolable Rights) கூறப்படுகின்றன. அவையாவன, சட்டத்தின் முன் யாவருக்கும் சமத்துவ நிலை; தனியார் திறன்களையும் வளர்ச்சியையும் தடுக்கின்ற சமூக, பொருளாதாரத் தடைகளை நீக்குதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம்; மக்களுடைய கடிதப்போக்குவரத்துக்குப் பாதுகாப்பு; மக்களுக்கு உள், அயல்நாடுகளில் பயணம் செய்ய உரிமை; சட்டத்துக்குட்பட்ட நோக்கங்களுக்காகக் கூட்டம் அல்லது கழகம் அமைக்கும் உரிமை; பொது ஒழுக்க நிலையை அழிக்காத பேச்சுரிமை; சமய உரிமை; போப்போடு 1929–ஆம் ஆண்டு செய்யப்பட்ட இலேட்டரன் உடன்படிக்கையின்படி (Lateran Treaty) இத்தாலிய அரசும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையும் தத்தமக்குரிய எல்லைகளில் (Spheres) முழு அதிகாரத்தோடிருத்தல் முதலியவையாம்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி இத்தாலி பல கட்சி அமைப்பையுடைய ஒரு பாராளுமன்றக் குடியரசாகும். அதன் தலைமை அதிகாரம் பாராளுமன்றத்தில் இருக்கிறது. பாராளுமன்றத்தின் சார்பாளர் மன்றத்திற்கு (Chamber of Deputies) 630 உறுப்பினர்களும் செனட்டு மன்றத்திற்கு (Senate) 322 உறுப்பினர்களும் நாட்டில் வயது வந்தோர் யாவராலும் 5 ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு மன்றங்களுக்கும் சமமான சட்டமியற்றும் அதிகாரங்கள் இருப்பது இவ்வரசியலமைப்பின் ஒரு சிறப்பியல்பு ஆகும். இவை தமது அமர்வுக் காலம் முடிவதற்கு முன்னரே குடியரசுத் தலைவரால் கலைக்கப்படுதல் கூடும். குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், மற்ற அமைச்சர்கள் ஆகியோர் மீது குற்றம் சாட்டுதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டம் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்புக்கு உட்பட்டது. சாதாரணச் சட்ட முன்வரைவுகளை (Bills) அரசாங்கமும் தனி உறுப்பினரும், தேசிய தொழில் பொருளியல் குழுக்களும், உள்நாட்டுக் குழுக்களும் (Regional Councils) கொண்டு வந்து தாக்கல் செய்யலாம். நிறைவேற்றப்படும் சட்ட முன்வரைவை ஒரே ஒருமுறைதான் குடியரசுத் தலைவர் தன் கையொப்பமிடாமல் திருப்பி அனுப்பலாம். குடியரசுத் தலைவர் 7 ஆண்டுக் காலத்துக்கு, இரு பாராளுமன்ற சபை உறுப்பினர்களாலும், ஒவ்வொரு உள்நாட்டுப் பிரிவிலிருந்து அனுப்பப்படும் 3 உறுப்பினர்களாலும், 2/3 பெரும்பான்மை ஆதரவாளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் அரசியலமைப்பைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆய்வு செய்து நீக்கப்படலாம். அவர் விடுக்கும் ஒவ்வொரு ஆணையும் அரசாங்கத்தின் (அதாவது அமைச்சரின்) எதிர்க்கையெழுத்துக்கு உரியது. தலைமை அமைச்சரையும் அவருடைய பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் குடியரசுத்தலைவர் அமர்த்துகிறார். தலைமை அமைச்சர் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். அமைச்சர்களெல்லாரும் அரசாங்கத்தின் பொதுக் கொள்கையைப் பொறுத்தவரை கூட்டுப் பொறுப்பும் (Collective Responsibility) தத்தம் ஆட்சித் துறைகளின் திறமைக்குத் தனிப்பொறுப்பும் (Individual Responsibility) உடையவர்கள்.

அரசியலமைப்பு நீதிமன்றத்தில் (Constitutional

Court) 15 நீதிபதிகள் 9 ஆண்டுக் காலத்துக்கு அலுவல் செய்கின்றனர். இந்த நீதிமன்றத்துக்கு அரசாங்கச் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒத்தவையா என்று ஆராயவும், நடுவண, உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே அதிகார எல்லை பற்றித் தோன்றும் வழக்குகளை ஆராயவும், பாராளுமன்றம் கொண்டுவரும் குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்யவும், குடியொப்பத்துக்கு விடப்படவேண்டிய கேள்விகளைத் தீர்மானிக்கவும் அதிகாரங்கள் இருக்கின்றன. இத்தாலி நாட்டில் தேர்தல்கள் பாராளுமன்றத்துக்கும் உள்நாட்டுக் குழுக்களுக்கும் உள்ளூர்மன்றங்களுக்கும் (Communes) நடைபெறுகின்றன. அரசியல் கட்சிகளை அமைப்பதற்கு எல்லாக் குடிமக்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் உரிமை வழங்கப்பட்டிருக்கிறபடியால், இத்தாலி நாட்டில் கிறித்தவக் குடியாட்சி கட்சிக் (DC), இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி (PCI), இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (PST), இத்தாலியச் சமூகக் குடியாட்சிக் கட்சி (Social Democratic Party), இத்தாலியத் தாராளக் கட்சி (PLI), இத்தாலியக் குடியரசுக்கட்சி (PRI) முதலிய அரசியற் கட்சிகள் தோன்றியுள்ளன. அரசாங்கமும் பல கட்சிகளின் உறுப்பினரையுடைய கூட்டு அரசாங்கமாகவே பெரும்பாலும் இருக்கிறது.

**இத்தாலியக் குடியரசுக் கட்சி** என்னும் அரசியல் கட்சி இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இத்தாலியில் தோன்றிய பல அரசியல் கட்சிகளுள் ஒன்று ஆகும். இரண்டாம் உலகப்போரில் இத்தாலிய பாசிசச் சருவாதிகார அரசாங்கம், நாசிசச் செருமனியோடு சேர்ந்து போரிட்டு நேசநாடுகளால் தோல்வியடைய, அதனால் போரிலிருந்து விலகி, பாசிச அரசாங்கத்தை நீக்கிவிட்டு, ஒரு குடியரசாகத் (Republic) தன்னை நிறுவிற்று. பின்னர் முற்போக்குக் குடியாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு ஓர் அரசியலமைப்புச் சட்டம் அந்நாட்டிற்கு 1946–ஆம் ஆண்டில் வரையப்பட்டது; இவ்வரசியலமைப்பு 1948–ஆம் ஆண்டு முதல் நாளிலிருந்து செயற்பட்டு வருகிறது. இவ்வரசியலமைப்பில் குடிமக்களுக்குத் தங்களை அரசியல் கட்சிகளாக அமைத்துக்கொள்ளுகின்ற அரசியலுரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வுரிமையின் பயனாகப் பல அரசியற் கட்சிகள் இத்தாலியில் தோன்றின. இத்தாலியக் குடியரசுக் கட்சி (PRI என்னும் Italian Republican Party) என்பது, உண்மையில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் இத்தாலிய விடுதலைக்கும் இணைப்புக்கும் (Unification) பாடுபட்ட ஓர் இயக்கத்தினின்றும் தோன்றிய அரசியற் கட்சி ஆகும். இடதுசாரிக் குடியாட்சிக் கட்சியினருடைய அரசியல் கருத்துகளையும் செயல் திட்டங்களையும் இக்கட்சியினர் ஏற்றுக்கொள்ளுகின்றனர். இக்கட்சி தோன்றிய ஆண்டு கி.பி. 1895 ஆகும். இதில் தீவிரவாதக் கொள்கையாளரே செல்வாக்குடனிருந்தனர். அரசியலமைப்பு குடியரசாக (Republic) இருத்தல் வேண்டுமென்பது இவர்களுடைய நோக்கங்களுள் ஒன்று. மேலும், இக்கட்சி சமயக் குருமார் ஆதிக்கத்தை எதிர்த்தும் சமூகச் சீர்திருத்தங்களை ஆதரித்தும் வருகிறது. முசோலினியின் பாசிச ஆட்சிக்காலத்தில் ஒடுக்கப்பட்டிருந்த இந்தக் கட்சி, 1943–ஆம் ஆண்டில் மீண்டும் தோன்றிற்று. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், இத்தாலியர்கள் மன்னராட்சிக்கு எதிராக வாக்களித்தால்தான், புதிதாக அமைக்கப்படும் அரசாங்கங்களில் தாம் பங்கு கொள்ள இயலுமென்றும், அவ்வாறு முடியாட்சி நீக்கப்படாவிட்டால் தாம் பங்கு கொள்ள இயலாதென்றும் இது உறுதியாகக் கூறிவிட்டது. இதனுடைய உறுதிப்பாட்டின் விளைவாக 1946–ஆம் ஆண்டில் நடைபெற்ற ஓர் அரசியலமைப்புக் குடியொப்பத்தில் (Constitutional Referendum) பெரும்பாலான இத்தாலிய வாக்காளர்கள், முடியாட்சியை நீக்கிக் குடியரசை நிறுவுதற்கு ஒப்புதல் அளித்தனர். போருக்குப் பிந்திய காலத்தில் இந்தக் கட்சிக்குப் பெருமளவு ஆதரவாளர் நாட்டில் இல்லை என்றாலும், இது இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக்கட்சி, இத்தாலியப் பொதுவுடைமைக்கட்சி, கிறித்தவக் குடியாட்சிக் கட்சி ஆகியவற்றினின்றும் தனித்தியங்கி, இத்தாலிய அரசியல் அரங்கில் நடு இடத்தில் இருந்தமையால், இதனுடைய ஆதரவு பல கூட்டணி அரசாங்கங்களுக்குத் தேவைப்பட்ட காரணத்தால், இது பல கூட்டணி அரசாங்கங்களில் இடம் பெற்றது. இவ்வாறு இது 1947–ஆம் ஆண்டிலிருந்து 1953–ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்த நான்கு கட்சி ‘நடுத்தன்மை’ அரசாங்கங்களில் (Four Party ‘Centre’ Governments) பங்கு பெற்றது. இது 1953–ஆம் ஆண்டில் அரசாங்கத்திலிருந்து விலகிற்று. பின்னர், 1963–ஆம் ஆண்டில் வலுவான, நடுத்தன்மையுள்ள (அதாவது தீவிரமான வலது, இடது நிலைக்குச் செல்லாத) கட்சியாகக் கிறித்தவக் குடியாட்சிக் கட்சி வந்து இத்தாலியச் சமூகச் சமநிலைக் கட்சிகளோடும் இத்தாலியக் குடியரசுக் கட்சியோடும் இணைந்து அரசாங்கத்தை அமைக்க முன்வந்தபோது, இத்தாலியக் குடியரசுக் கட்சி மீண்டும் அவற்றோடிணைந்து கூட்டு அரசாங்கம் உருவாவதற்கு உதவிசெய்தது. இக்கட்சி சேர்ந்ததனால் அரசாங்கம் இடதுசாரி இயல்புடைய, நடுத்தன்மை உடைய கூட்டு அரசாங்கமாக (Centre Left Coalition) ஆயிற்று.

**இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக்கட்சி** என்ற இத்தாலிய அரசியற்கட்சி (Italian Democratic Socialist Party, PSDI), இக்கால

இத்தாலிய அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக இத்தாலியக் குடிமக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் விளைவாகத் தோன்றிய பல அரசியற்கட்சிகளுள் ஒன்று ஆகும். இத்தாலியை ஒரு குடியரசுநாடாக நிறுவிய அதனுடைய 1946-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில், எல்லா இத்தாலியக் குடிமக்களுக்கும் அரசியல் கட்சிகளை அமைத்தற்கும், அரசியற் கட்சிகளை அமைத்துத் தேசியக் கொள்கையைக் குடியாட்சி முறையில் உருவாக்கி அரசியலில் பங்கு கொள்ளுதற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய தாராள இயல்புடைய இக்கால இத்தாலிய அரசியலமைப்புச் சட்டம், இரண்டாம் உலகப்போரில் இத்தாலியைச் சேர்த்துவிட்ட பாசிசத் தலைவர் முசோலினி நடத்திய சருவாதிகார ஆட்சிக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்படி (Proportional Representation) நாட்டின் பாராளுமன்றத்துக்கும் உட்பிரிவுகளுக்கும் (Communes) சிறுநகரங்களுக்கும் (Regions) தேர்தல்கள் நடைபெறுவதற்கு வழிசெய்துள்ளபடியால், இரண்டாம் உலகப்போருக்குப் பின் பல பெரிய, சிறிய அரசியற்கட்சிகள் தோன்றுதற்கு வாய்ப்பேற்பட்டது. ஆளும் கட்சிக்கு எதிராகப் பல அரசியற்கட்சிகளிருந்து செயற்படுதலுக்கு வாய்ப்பு இருத்தல்தான் குடியாட்சியின் சிறப்பான இயல்பு ஆகும். இவ்வாறு தோன்றிய இத்தாலிய அரசியற் கட்சிகளுள் சில பின்வருவன: (1) கிறித்தவக் குடியாட்சிக்கட்சி (Italian Christian Democratic Party, DC), (2) இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி(PCI), (3) இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (PSI), (4) இத்தாலியச் சமூகக்குடியாட்சிக் கட்சி (Social Democratic Party), (5) இத்தாலியத் தாராளக்கட்சி (PLI), (6) இத்தாலியக் குடியரசுக் கட்சி (PRI). இவற்றுள் கிறித்தவக் குடியாட்சிக் கட்சிக்குக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவு இருக்கிறது. இதனுடைய நோக்கம் எல்லா இத்தாலியக் கத்தோலிக்கரையும் ஒரே அரசியல் குழுவில் இணைத்தலே ஆகும்; இதனைப்பழைமையாளர்களும் முற்போக்காளர்களும் ஆதரிக்கின்றனர்; எனவே இக்கட்சியில் ஒருமித்த கொள்கை உருவாதல் சிறிது கடினமாக இருக்கிறது. அடுத்த நிலையிலுள்ளது சோவியத்து ஒன்றியத்துக்கு வெளியே ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய பொதுவுடைமைக் கட்சியாகிய இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி (PCI). இத்தாலியச் சமநிலைச் சமுதாயக்கட்சி (PSI) என்பது, பன்னாட்டுச் சமநிலைச் சமுதாய அமைப்பினின்று 1967-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு, இத்தாலியச் சமூகக் குடியரசுக் கட்சியோடு இணைந்தது; இதன் தலைவர் பெட்ரோ நென்னி என்பவர் ஆவர். இருகட்சிகளும் 1969-ஆம் ஆண்டில் மீண்டும் பிரிந்தன. இத்தாலியத் தாராளக்கட்சியும் (PLI) இன் தாலியக் குடியரசுக் கட்சியும் சிறிது செல்வாக்குடன் இருக்கின்றன. சமூகச் சமநிலை இயக்கம், கத்தோலிக்க இயக்கம் என இரு இயக்கங்கள் 1870, 1890-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றின. பன்னாட்டுத் தொழிலாளர்களின் கூட்டமைப்பு 1872-ஆம் ஆண்டில் தோன்றிற்று. இதற்குக் குடியரசு ஆதரவாளர், அரசு வேண்டாதவர் (Anarchists), சமூக உடைமை ஆதரவாளர், நகரியத் தொழிலாளர்கள், இளம் சிந்தனையாளர், வேளாண் தொழிலாளர் ஆகியோர் ஆதரவு தரவில்லை. மிலான் நகரத்தில் இத்தாலியத் தொழிலாளர் கட்சி தோன்றிற்று; சமூகச் சமநிலைக் கொள்கைகளை ஏற்ற தொழிற்சங்கங்கள் 1906-ஆம் ஆண்டில் இணைந்தன; இவை போர் முறையையும் குடியேற்ற நாட்டுக்கொள்கையையும் (Policy of Colonisation) எதிர்த்தன. முதலாம் உலகப் போரில் இத்தாலி நேச நாடுகள் பக்கம் (Allied States) சேர்ந்தது; போரின் இறுதியில் இத்தாலிக்கு திரெண்ட்டு (Trent) முதலிய சில இடங்களே கிடைத்தன. அது எதிர்பார்த்த தால்மேசியக் (Dalmatia) கடற்கரைப் பகுதி கிடைக்கவில்லை; இதனால் இத்தாலிக்கு ஏமாற்றம் ஏற்பட்டது; அமைதி உடன்படிக்கைக்கு எதிர்ப்பு ஏற்பட்டது; நாணயமதிப்புக் குறைவும் பணப்பெருக்கமும் சமூகச் சமநிலைக் கோட்பாடு வேரூன்றுதற்கு ஏற்ற சூழ்நிலையை (Socialism) உண்டாக்கின. ஆனால் நடுத்தர வகுப்பினர் புரட்சியை அஞ்சி வெறுத்தனர். நிட்டி (Nitti), சியோலிட்டி (Giolitti) முதலியோருடைய ஆட்சிக்காலத்தில் தொழிலாளர் நடத்திய கிளர்ச்சியைக் கண்டு குடியானவரும் தொழிலதிபரும் (Industrialists) அஞ்சினர்; தொழிலாளர் ஆலைகளையும் நில் உழைப்பாளர் நிலங்களையும் கைப்பற்றினர். இச்சூழ்நிலையில் முசோலினியின் தலைமையில் பாசிசக் கட்சி செயற்பட்டுத் தொழிற்சங்கங்களையும் சமூகச் சமநிலை இயக்கத்தையும் ஒடுக்கிற்று. பின் அது 1922-ஆம் ஆண்டு அக்டோபர் இறுதியில் ஆட்சியைக் கைப்பற்றி, சமூகச் சமநிலைக் கட்சியை ஒடுக்கவே, இதன் இருபிரிவுகளான இத்தாலியச் சமூகச் சமநிலைக் கட்சியும் (PSI) சமூகச் சமநிலை ஒன்றியம் (PSU) என்ற அமைப்பும் நாட்டைவிட்டு வெளியேறி, 1930-ஆம் ஆண்டில் ஒன்றாக இணைந்தன. இரண்டாம் உலகப்போரில் (1935-1945) பாசிசம் வீழ, மீண்டும் இத்தாலியில் சமூகச் சமநிலைக்கட்சி தோன்றிற்று கிறித்தவக் குடியாட்சிக் கட்சியின் தலைவர் திகாசுபெரி என்பவர் அரசாங்கத்தை அமைத்துப் புதிய அரசியலமைப்பை வரைந்தார். சமூகக் குடியாட்சித் தொழிற்சங்கங்களும் (Social Democratic Trade



ஆல்சைடு தி. காசுபெரி

Unions) குடியரசுத்தொழிற்சங்கங்களும் (Republican Trade Unions) சேர்ந்து இத்தாலியத் தொழிற்சங் கங்களின் கூட்டமைப்பை உருவாக்கின. இத்தாலியச் சமூகச் சமநிலையாளர்கள் (Socialists), இத்தாலியச் சமூகச்சமநிலைக்கட்சி இத்தாலியப் பொதுவுடை மைக் கட்சியோடு ஒத்துழைத்ததை எதிர்த்து, இத் தாலியத் தொழிலாளர்களின் சமூகச்சமநிலைக் கட் சியை (Socialist Party of Italian Workers - PSLI), நிறுவினர். கிறித்தவக் குடியாட்சிக்கட்சியின் தலை வர் ஆல்சைடு தி. காசுபெரி (Alcide de Gasperi) தாம் அமைத்த அரசாங்கத்தினின்றும் பொதுவுடை மையாளர்களையும் (PCI), இத்தாலியச் சமூகச்சம நிலைக் கட்சியைச் சேர்ந்தோரையும் (PST) 1947-இல் நீக்கினார். இத்தாலியத் தொழிலாளர்களின் சமூகச்சமநிலைக்கட்சி கிறித்தவக் குடியாட்சியின் அரசாங்கத்தில் பங்கு கொண்டு, அதற்குப் பாராளு மன்றத்தில் (PSLI) ஆதரவளித்தது. இந்த இத்தாலி யத் தொழிலாளர்களின்சமூகச்சமநிலைக்கட்சியுடன், பொதுவுடைமையரை எதிர்த்த சமநிலைச் சமுதா யக்குழுவினர் (Socialists) 1952-ஆம் ஆண்டில் இணைந்தனர். இதுவே இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக்கட்சி (Italian Democratic Socialist Party,- PSDI) எனப்பட்டது. இது 1954-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப்பல இத்தாலிய அரசாங்கங் களில் பங்கு கொண்டது. பொதுவுடைமையாளருக்கு 1968-ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலில் சிறிது கூடுதலான இடங்கள் கிடைக்கவே, அவர்களை அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளும் முயற்சியும் தோன்றிற்று. அப்போது சமநிலைச் சமுதாயக் கட்சி யினர் கூட்டு அரசாங்கத்தினின்று விலகியதோடு, ஒன்றிய சமநிலைச் சமுதாயக் கட்சியை (Unitary Socialist Party,-PSU) அமைத்தனர். இவர்கள் தங்க ளுடைய சமநிலைச் சமுதாயக் குடியாட்சியாளர் (Social Democrats) என்ற பழைய பெயரையும் (PSDI) 1970-ஆம் ஆண்டு வைத்துக்கொண்டனர். இவர்கள் மீண்டும் கிறித்தவக் குடியாட்சி அரசாங் கத்துக்கு ஆதரவளித்து வருகின்றனர். பொதுவுடை மையரை எதிர்ப்பதும் பொருளாதாரத் திட்டமிடுவ தும் (Economic Planning), சில தொழில்களை நாட் டுடைமை ஆக்குவதும் (Nationalization) ஆதரிப்ப தும் இவர்களுடைய கொள்கைகளாகும். இத்தாலியில் பல அரசியற்கட்சிகளிருப்பதால், அங்குப் பெரும்பா லும் கூட்டு அரசாங்கங்களே அமைக்கப்படுகின்றன. வலதுசாரியினரையும் இடதுசாரியினரையும் சாராத நடுநிலைப் போக்குடைய கட்சியாக (Centre Party) இது இருப்பதால் இதற்கு எல்லாக்கூட்டு அரசாங் கங்களிலும் (Coalition Governments) இடம் இருக் கிறது.

**இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி**, கி.பி. 1892-ஆம் ஆண்டு, ஆகசுட்டு மாதத் தில் தோற்றுவிக்கப்பட்டது. பன்னாட்டுச் சமநிலைச் சமுதாய அமைப்பு (Socialist International) என்ற ஓர் அமைப்பினின்றும் சமநிலைச் சமுதாய அமைப் புக் ( Socialist Party ) கட்சி 1967-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இக்கட்சி உருவாவதற்கு பியட்ரோ நென்னி (Pietro Nenni) என்பவருடைய தலைமையிலிருந்த இத்தாலியச் சமநிலைச் சமுதா யக் கட்சி (Italian Socialist Party,-PSI) யும், இத்தா லியச் சமுதாயக் குடியாட்சியாளர்களுடைய அமைப் பும் (Italian Social Democrats) இணைந்து உதவி செய்தன. இரண்டு அமைப்புகளும் மீண்டும் 1969-ஆம் ஆண்டில் பிரிந்தன. சமநிலைச் சமுதாயக் கட் சியிடமிருந்து 1963-ஆம் ஆண்டில் இடதுசாரிக் கூட் டத்தவர் பிரிந்து, பொதுவுடைமையாளருடன் 1972-ஆம் ஆண்டில் இணைந்தனர். இத்தாலியச் சம நிலைச் சமுதாய இயக்கத்துக்கு(Socialist Movement) ஓர் அமைப்பு 1872-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் தோன்றிற்று. அப்போது பன்னாட்டுத் தொழிலா ளர் கழகத்தின் கூட்டமைப்பு (Federation of the International Working men's Association) ஏற்படுத் தப்பட்டது. அதற்குரிய அமைப்பு விதிகள் மிக்கெ யல் பக்குனின் (Mikhail Bakunin) என்ற உருசிய நாட்டு அரசு வேண்டாக் கொள்கையாளருடைய (Anarchist) கருத்துகளினின்று எடுக்கப்பட்டன. அத னுடைய முதலாம் பன்னாட்டு அமைப்பில் (First International) அதிகார அமைப்புகளை எதிர்த்தல்

(Anti-authoritarian), அரசு என்ற அமைப்பை எதிர்த்தல் (Anarchist), நாட்டுடைமைக்கு அல்லது கூட்டாண்மைக்கு (Collectivism) ஆதரவு தருதல் முதலிய நோக்கங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவ்வியக்கத்துக்கு நகரிய ஆலைத் தொழிலாளரும் இளம் சிந்தனையாளரும் ஆதரவளித்தார்கள். தென் இத்தாலியிலுள்ள வேளாண் தொழிலாளருடைய ஆதரவைப் பெறுதற்காகப் பன்னாட்டுச் சமநிலைச் சமுதாயத்தவர் (International Socialists) தோற்றுவித்த கலகங்கள், கி.பி.1877–ஆம் ஆண்டில் பயனற்றுப் போயின; ஆகையால் பல தலைவர்கள் இவ்வியக்கத்தினின்றும் விலகிப் பலவகைப்பட்ட சமநிலைச் சமுதாயக் கட்சிகளை நிறுவினர். சமநிலைச் சமுதாயத்தவருள்ளும் மார்க்சியக் கருத்துகளை ஏற்றுக் கொண்டோரும் மறுத்தவரும் இருந்தனர். தலைமை அமைச்சர் சியோலிட்டி குறைந்த வருமானமுடைய வகுப்பாரின் வரிச்சுமையைக் குறைப்பதற்காகவும், அவர்களுக்குத் தொழிற்சங்க அமைப்பிலும் அரசியலிலும் கூடுதலுரிமை கிடைப்பதற்காகவும் ஏற்ற ஒரு நிதிக்கொள்கையை (Financial policy) வகுத்தார். இந்தச் சூழ்நிலையில்தான் இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (PSI), அரசு வேண்டாக் கொள்கையாளரிடமிருந்து விடுபட்ட தனித்த ஓர் அரசியற் கட்சியாகக் கி.பி. 1892–இல் அமைக்கப்பட்டது. ஆயினும் சியோலிட்டி பதவியைத் துறந்துவிட, இக்கட்சியும் அரசு வேண்டாக்கட்சியாளரும் சிசிலியில் நடந்த கலகத்துக்கு ஆதரவளிக்கவே, புதிய தலைமை அமைச்சர் கிரிசிப்பி (Crispi) விரிவாக அடக்குமுறைச் சட்டங்களைக் கையாண்டு, இக்கட்சியை 1894–ஆம் ஆண்டு அக்டோபரில் கலைத்தார். பின்னர், இக்கட்சியினர் பல்வேறு கட்சிகளுடன் இணைந்திருந்தனர். இவர்கள் புரட்சி முறையையும் தொழிலாளரின் சருவாதிகார ஆட்சி முறையையும் (Dictatorship of the Proletariat) ஆதரித்தனர். ஆனால், இவர்களுக்குப் பொதுமக்களிடையே பரவலான ஆதரவு இல்லை. இவர்களிடமிருந்து பிரிந்து, சிலர் 1921–ஆம் ஆண்டில் இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியை அமைத்தனர். பாசிசக் கட்சி, ஆட்சியைக் கைப்பற்றியவுடன், முசோலினியின் சருவாதிகாரம் நிறுவப்பட்டதும், இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சியும் (PSI), அதனுடைய மற்றொரு பிரிவும் (PSU) இத்தாலி நாட்டிற்கு வெளியிற் சென்று 1930–ஆம் ஆண்டில் இணைந்தன. இவர்கள் 1927–ஆம் ஆண்டில் பொதுவுடைமையாளர்களுடன் சேர்ந்து, பாசிச எதிர்ப்புக் கூட்டணியை (Anti Fascist Action Coalition) அமைத்தனர். நாடு கடத்தப்பட்ட இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சியினரும் பொதுவுடைமையாளரும் ஒரு கூட்டுச் செயல் ஒப்பந்தத்தை (United Action Agreement) 1934–ஆம் ஆண்டில் செய்தனர். முசோலினி ஆட்சி வீழும் காலத்தில் நடந்த இத்தாலிய விடுதலைப் போரில், பல்வேறு வகையான சமநிலைச் சமுதாயக் கட்சியுடன் சேர்ந்து இவர்கள் பணிசெய்தனர். பாசிசத்துக்கு எதிரான கட்சிகள் இத்தாலிய விடுதலையை அடைவதில் காட்டிய ஒற்றுமை, விடுதலைக்குப் பின் நீடித்திருக்கவில்லை. பல அரசியற்கட்சிகளுள்ளும் கிறித்தவக் குடியாட்சிக் கட்சிக்கே பெருமளவு மக்களுடைய ஆதரவு இருந்தமையால், 1946–ஆம் ஆண்டிற்குப் பின் அதுவே பல அரசாங்கங்களை அமைக்கக் கூடிய ஆளுங்கட்சியாக இருந்தது. தொழிலாளர் ஒற்றுமை கொண்ட சமநிலைச் சமுதாயக் கட்சி (Socialist Party of Proletarian Unity – PSIUP), சமநிலைச் சமுதாயக் கட்சியும் (PSI) 1943–ஆம் ஆண்டில் இலெவியோபாசோ (Levio Passo) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட உழைப்பாளர் ஒற்றுமை இயக்கம் (Proletarian Unity Movement) என்ற அமைப்பும் இணைந்ததனால் தோன்றிய ஒரு கட்சியாகும். இத்தாலியும் ஒரு குடியரசு நாடாயிற்று. பின்னர் இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி தனித்த ஓர் அரசியற் கட்சியாக இயங்குவதற்குப் போதிய அளவு மக்களுடைய ஆதரவு இல்லாமையால், அது மற்றக் கட்சிகளோடு இணைந்தே கூட்டு அரசாங்கங்களில் பங்கு பெற்று வருகிறது.

**இத்தாலியத் தத்துவம்**: தாந்தே என்ற கவிஞர் அறவியல் சார்ந்த கிறித்தவத் தத்துவத்தை ஆராய முற்பட்டார். ஏனெனில், அது மனிதனுக்கு மிகவும் தேவையாக இருந்தது. அத்தத்துவம் வாழ்க்கைக்குத் துணையாவதன்றி, முத்தியடைவதற்கும் வழிவகுத்தது. தாந்தேயின் (Dante) கருத்துகள் தாமசு அக்குவினசு (Thomas Aquinas) இடமிருந்து பெறப்பட்டவையாகும். இவரது புகழ் பெற்ற நூலாகிய தெய்விக இன்பியலில் (Divine Comedy) இத்தாலியத் தத்துவத்தின் குழப்பநிலை தெளிவாகப் புலப்படுகிறது. போப்பிற்கும் அரசருக்கும் ஏற்பட்ட தகராறு, சமூகத்தில் வாழும் மனிதனுக்கும் தனித்து வாழ்கின்ற துறவிக்கும் ஏற்பட்ட வேறுபாடு ஆகியவை இவர் பாடல்களில் காணப்படுகின்றன.

சமூக வாழ்வு, மனித விடுதலை, அமைதியை நோக்கித் தனிமையாகவும் உயர்ந்த நோக்குடனும் செய்கின்ற முயற்சி ஆகியவற்றுள் எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான் இத்தாலியத் தத்துவத்திற்குத் தாந்தே கொடுத்த சிந்தனைகள்.

பிசினோவும் பிக்கோவும் (Ficino & Pico) பிளேட்டோவின் கொள்கையைப் பின்பற்றிக் கிறித்தவ சமயத்தை ஆதரித்தனர்; ஆன்மாவின் விடுதலையைப் பற்றியும் சிந்தித்தனர். அதே சமயத்தில், இவர்கள் சுதந்திரமான எண்ணத்திற்கும் மனித சக்திக்

கும் முதன்மையிடங் கொடுக்கும் பழைய போக்கிற்கு மாறுபட்ட கருத்தினைக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

பொம்பொனாசி (Pomponazzi, கி.பி. 1462–1525) என்பவர் ஆன்மாவானது அழியாமைக்கும் அழிவுக்கும் இடைப்பட்டது என்றும் ஆனால் அவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கும்பொழுது ஆன்மா அழியாதது என்றும் கூறினார்.

மாக்கியவல்லி (Machiavelli, கி.பி. 1469–1527) என்பவர் உண்மையான படிப்பு மனிதனைப் பற்றியது என்றும், நேரில் கண்ட பகுத்தறிவுக்குப் பொருத்தமான பொருள்களைப் பற்றிய அறிவு உண்மையானது என்றும், அதன் துணையால் மனிதத்தன்மை பொருந்திய அறிவியலை உண்டாக்க முடியும் என்றும், மனித வாழ்க்கையானது அதிகாரத்தை நோக்கிச் செய்கின்ற முடிவில்லாத போராட்டம் என்றும் கூறினார்.

சாபெரல்லா (Zabarella,கி.பி. 1532–1584) என்பவர் சேர்த்து வைத்தல் (Composition), பகுதிகளாகப் பிரித்தல் (Resolution) முதலிய துறைகள் பற்றிய சொல் தொகுதிகளைச் சீர்படுத்தினார். அறவியல் ஆய்வு செய்வதற்கும் காட்சிப் பொருள்களைச் சேர்த்து வைப்பதற்குமிடையே உள்ள வேறுபாட்டை இவர் தெளிவுபடுத்தினார்.

பெர்னார்டினோ தெலிசியோ (Bernardino Telesio, கி.பி. 1509–1588) என்பவர் பாடுவாப் பல்கலைக்கழக (Padua University) ஆசிரியர்களை எதிர்த்தார். ஏனெனில், அவர்கள் தம் நூல்களிலும் கொள்கைகளிலுமே பற்று உடையவர்களாயிருந்தார்கள். இயற்கைப் பொருள்களைக் கண்டுணர்வதில் அவர்கள் கவலை கொள்ளவில்லை. இவர் நேப்பிள்சில் கி.பி. 1560–ஆம் ஆண்டில் முதல் அறிவியற் கல்விக் கழகத்தை அமைத்தார்; இயற்கைத் தத்துவத்திற்கு வழி வகுத்தார். மனிதன் சமநிலை ஆற்றல் வாய்ந்த உடலைக் கொண்டவன்; அறிவானது உணர்வுகளின் அநுபவநிலையைச் சார்ந்தது; தன்னைக் காப்பதில் அவன் செயல்கள் பயன்படுகின்றன; இறைவன் மனிதனுக்கு அழியாத ஆன்மாவைக் கொடுத்திருக்கிறான்; இவையே இவர்தம் கருத்துகள்.

புருனோ (Bruno, கி.பி 1548–1600): இவர் கோப்பர்னீகசின் கொள்கையில் பெரிதும் ஈடுபட்டவர். அறிவு பற்றிய இவரது கொள்கை பிளேட்டோவின் கொள்கையை ஒத்திருந்தது. அக்கொள்கை அளவியல் சார்ந்ததாக இல்லாமல், பகுத்தறிவையும் ஆராய்ச்சியையும் சார்ந்திருந்தது. இவரது கொள்கை, மனிதன் ஐம்பொறிகளின் வாயிலாகப் பெறும் அறிவு நிறைவுடையதன்று; மனிதனிடம் அடங்கியுள்ள தெய்விக அடிப்படையை உய்த்துணர்வதே உண்மையான அறிவு என்பதாகும்.

பொதுவாக, உயிரினங்கள் தத்தம் புலன்களின் வழியாகவே செயற்படுகின்றன. மனிதன் ஒருவனே தன்னையறிந்து கொள்ளும் மெய்யறிவு பெற்றவன். ஒழுக்கமும் கட்டுப்பாடும் மனிதனுக்கே அமைந்த உயர் பண்புகளாகும். புருனோவின் ஒழுக்க நெறி (Ethics) இருவகைப்படும். முதலாவது, தன்னைத் தான் அறிந்து கொள்வது; யான், எனது என்ற செருக்கினை வெல்வது. நன்மை, தீமைகளைப் பகுத்துணர்வதும் இதன் பாற்படும். இரண்டாவது, தன்னுள் குடிகொண்டிருக்கும் இறைவனுடன் ஒன்றுவது; அதாவது, மெய்யறிவின் வழியாகக் கடவுட் காதல் கொள்வது. இவையே புருனோவின் அடிப்படையான சிந்தனைகளாகும்.

கேம்பநெல்லா (Campanella, கி.பி. 1568-1639): இவர் சிறையிலிருந்து எழுதிய 'பகலவன் நகரம்' (City of the sun) என்ற புகழ் மிக்க நூலில் சில வளமான கருத்துகளை வெளியிட்டுள்ளார். பேரறிஞர் பேகனின் (Bacon) அறிவியற் சிந்தனையும் மூர் (More) என்பவரின் அரசியல் சிந்தனையும் இவரது நூலுள் இடம் பெற்றுள்ளன. பிளேட்டோவின் கொள்கையை இவர் முற்றிலும் ஏற்றுக் கொண்டார். குடும்பம், சொத்துரிமை முதலிய சமுதாய அடிப்படைகளை இவர் ஒத்துக் கொள்ளவில்லை. இவர் கனவு கண்ட நகரம் அருளியல் என்ற ஞானகுருவால் ஆளப்படுவது. அந்த ஞானகுருவிற்கு ஆட்சித் துணைவர் மூவர். அம்மூவரும் முப்பெரும் பண்புகளின் உருவகங்கள். ஆற்றல், அறிவு, அன்பு என்பன அம்முப்பெரும் பண்புகளாம். 'ஆற்றல்' வெளியுறவு, போர் ஆகிய துறைகளின் அமைச்சர். 'அறிவு' தொழில், விஞ்ஞானம் ஆகியவற்றின் அமைச்சர். 'அன்பு' குடும்ப நலத் திட்டத்துறையின் அமைச்சர். இவ்வாறு கேம்பநெல்லா உருவகம் செய்து கொண்டது வெறும் கற்பனையன்று. ஓர் அரசியல் செயல் திட்டமாகவே கருதினார். இவர் புரட்சிக் கருத்துகளை வெளியிட்டமையால் அடிக்கடி ஆட்சியாளரால் சிறைவைக்கப் பட்டார்.

விக்கோ (Vico, கி.பி. 1668–1744): இவர் சிறந்த தத்துவ ஞானி. பேகன், கிரோட்டியசு (Grotius), ஆப்சு (Hobbes) ஆகியோருடைய நூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. உரோமாபுரியின் வரலாறும் இவரை ஈர்த்தது. உண்மையும் மெய்ம்மையும் (Truth & Fact) ஒன்றே என்றும், தத்துவ அறிஞர்கள் இயற்கையைப் பற்றிப் போதிக்காமல் மனிதனைப் பற்றிப் போதிக்கிறார்கள் என்றும், பண்டைக் காலத்து ஞானிகளின்

வழியைப் பின்பற்றினால் முன்னேறலாம் என்றும் இவர் கூறினார்.

மார்க்சின் கொள்கை: இத்தாலிய நாட்டில் மார்க்சின் கொள்கை (Marxism) ஒரு சிறந்த தத்துவக் கொள்கையாக மக்களால் கருதப்பட்டது. இதற்குக் காரணம், மார்க்சின் முன்னோடியான எகலின் கொள்கை முன்பே மக்களைப் பெரிதும் கவர்ந்திருந்ததே. அண்டோனியோ இலாபிரியோலா (Antonio Labriola) என்பவர் மார்க்சிடம் தாம் அறிந்து கொண்ட வரலாற்றுப் பருப்பொருட்கோட்பாடு (Historical Materialism ) சிந்தனைக்குரிய சிறந்த தத்துவக் கொள்கை என்று கருதினார். இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனரான அண்டோனியோ கிராம்சி (Antonio Gramsci) என்பவர் குரோசி (Croce) என்பவர் எழுதிய நூலைச் சிறையில் நன்றாகப் படித்தார்.

வரலாற்றுக் கருத்தியல் (Historical Idealism) என்பது பெனிடெட்டோ குரோசி (Benedetto Croce) என்பவரால் கடைப்பிடிக்கப்பட்டது. இவரைக் கவர்ந்தவர்கள் தி சாங்டிசு (De Sanctis), விக்கோ (Vico)இலாபிரியோலா (Labriola) முதலானோராவர். இவர்கள் தத்துவக் கொள்கைகளை வரலாறு, பொருளாதாரம், இலக்கியம் முதலியவற்றிலுள்ள சிக்கல்களைத் தவிர்க்கப் பயன்படுத்தினர். கொள்கையின் அடிப்படையில் குரோசி, உள்ளுணர்விற்கும் (Intution) வரலாற்று அடிப்படையில் புரிந்து கொள்வதற்கும் வேறுபாடு கண்டார். ஆனால், செயற்கை அளவில் உயிருள்ள பொருள்களின் அடிப்படைத் தேவைகள் சில நிறுவனங்களையும் செயற்பாடுகளையும் மனித சமூக வாழ்வின் அடிப்படையில் ஏற்படுத்தின. இவற்றின் துணைக்கொண்டு மக்கள் தங்கள் திறமைகளையும் ஒழுக்க இயல்புகளையும் அறிந்து கொண்டார்கள். செண்டைல் (Gentile) என்பவர் ஒரு சிறந்த தத்துவஞானி. குரோசின் கொள்கை ஓர் ஒழுங்குமுறை (Methodology) என்றால், செண்டைலின் கொள்கை ஓர் உயர்ந்த மதிப்பீடு (Value) ஆகும். செண்டைல் என்பவர் எகலின் (Hegel) முழுமையான கருத்தில் ஏற்பட்ட உளதாந்தன்மைக்கும் (Existence) உள்ளுறைத் தன்மைக்கும் (Essence) இடையில் ஏற்பட்ட சிக்கலைமாற்றி, தனி மனிதனின் உணர்வினை முழுமையான உணர்வுடன் ஒன்று படுத்தினார். மனித அனுபவங்கள் எல்லாம் நாகரிகம் குறைந்த காலத்திலிருந்தே தொடங்கி வளர்ச்சியடைந்த ஆன்மிக உணர்வுகளேயாகும்.

இருத்தல் கொள்கையும் பகுப்பாய்வும்: 1950-ஆம் ஆண்டில் இருத்தல் கொள்கை (Existentialism) யில் பல கூறுகள் காணப்பட்டன. இலேம்பார்டி (Lambardi) என்பவர் கியர்க்கார்டின் (Kierkegaard) நூல்களை இத்தாலிய நாட்டில் கி.பி. 1936-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திளார். கார்லோ மைக்கேல் இசுடோட்டெர் (Garlo Michaelsstaedter) என்பவரது 'சொல்லாட்சிச் சிக்கலும் இணங்குவித்தலும்' (Rhetoric and Persuasion) என்ற கட்டுரை மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. இத்தாலியின் சிறந்த இருத்தல் கொள்கையினர் நிக்கோலா அப்பாகுநானோ (Nicola Abbagnano) என்பவர். இருத்தல் கொள்கையின் சிறப்பியல்புகள் தனித்தன்மை (Individuality), ஒழுங்கமைப்பு (System), உள்ளுணர்வு (Intution), பொருந்தாத் தன்மை (Absurdity), தெரிவு செய்தலின் இயல்பும் உட்பொருளும் முதலியனவாகும்.

**இத்தாலியத் தாராளக் கட்சி**: இதன் தோற்றம், பல்வேறு சிறிய நாடுகளாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் வெவ்வேறு அயல்நாட்டினால் ஆளப்பட்டுவந்த இத்தாலிய நாடுகளை ஒரே இத்தாலிய அரசாங்கத்தின்கீழ்த் தன்னுரிமை நாடாகக் கொண்டுவந்த இத்தாலிய இணைப்பு இயக்கத்தின் வரலாற்றில் (Italian Unification Movement) காணப்படுவதாகும். இத்தாலியத் தாராளக்கட்சியும் (Italian Liberal Party - PLI) இத்தாலியக் குடியரசுக் கட்சியும் (Italian Republican Party) இத்தாலிய இணைப்புக்குப் பேருதவி செய்த இரு அரசியல் இயக்கங்களினின்றும் தோன்றின. தாராளக் கட்சியின் நோக்கம் குடிமக்கள் ஒவ்வொருவருடைய தன் முயற்சியையும் (Initiative) தன்னுரிமையையும் (Freedom) வலியுறுத்துதலாகும். தொடக்கத்தில் இந்தப் பெயரோடு ஓர் அரசியற் கட்சி எதுவும் இத்தாலியில் இல்லை. மேற்கூறிய நோக்கங்களையுடைய சில கட்சியினரும் பாராளுமன்ற உறுப்பினரும் தங்களைத் 'தாராள இயல்புடையோர்' (Liberal) என்று கூறிக் கொண்டனர். உண்மையில் இத்தாலியத் தாராள அரசியற் கருத்துகளுக்குத் தம் அரிய கருத்துகளாகிய இத்தாலிய ஒற்றுமை (Italian Unity), தன்னுரிமை முயற்சி (Free Enterprise) ஆகியவைகளை வழங்கியவர் கவுண்டுகாமில்லோதி கவூர் (Count Camillo di Cavour) என்ற அரசியலறிஞராவர். அவர் தொடங்கிவைத்த தாராள அரசியல் மரபு இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து இருந்தது. முசோலினியின் சருவாதிகார ஆட்சியில் பாசிசக் கட்சி ஒன்றைத் தவிர மற்ற அரசியற் கட்சிகளெல்லாம் ஒடுக்கப்பட்டு மறையவே, 1942-ஆம் ஆண்டில் தாராளக் கட்சியினர் பாசிச அரசாங்கத்துக்குத் தெரியாமல் செயற்படலாயினர். இவர்கள் 1944-ஆம் ஆண்டில் மறைவாகவே தங்களுடைய முதல் மாநாட்டுக் கூட்டத்தை (Congress) நடத்தினர். கவூர் பரப்பிய தாராளக்கருத்துகளை இருபதாம் நூற்றாண்

டில் பெனிடெட்டோ குரோசி (Benedetto Croce), இலுகி எய்நாடி (Luigi Einaudi) முதலிய இத்தாலியத் தாராள அரசியிற் சிந்தனையாளர்கள் வரவேற்றுப் பரப்பி மக்களைத் தாராளக் குடியாட்சி முறைக்கு ஆயத்தம் செய்தனர். இத்தாலியில் 1946-ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட புதிய குடியரசு, குடியாட்சி அரசியலமைப்பின்படி, குடிகளுக்கு அரசியற் கட்சிகளை அமைப்பதற்கு உரிமைகள் வழங்கப் பட்டபடியால், பல அரசியற் கட்சிகள் தோன்றின; இத்தாலியத் தாராளக் கட்சியும் தோன்றிற்று. இது பொருளியலில் முதலாளித்துவத்தையும் (Capitalism), அரசியலில் சமயச் சார்பற்ற போக்கையும் (Laicism), அயல்நாட்டுக் கொள்கையில் பொதுவுடைமை அணிக்கு எதிராக அமெரிக்காவினால் அமைக்கப்பட்டுள்ள வட அட்லாண்டிக்கு இராணுவ ஒப்பந்தக் கூட்டமைப்பையும் (N.A.T.O.) ஆதரிக்கின்றது. இதற்கு ஆதரவாளர்கள் சிறு வணிகர்களே ஆவர். ஆயினும், இக் கட்சி இதுவரை ஒரு சிறுபான்மைக் கட்சியாகவே (Minority Party) இத்தாலிய அரசியலில் இருந்து வந்திருக்கிறது. அவ்வப்போது நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல்களில் பதிவாகும் மொத்த வாக்குகளில் ஆறு சதவிகிதத்துக்கு மேல் இதற்கு வாக்குகள் கிடைத்ததில்லை. ஆயினும், இது கடைப்பிடித்துவரும் தாராளக் கொள்கைகளுக்குப் பரவலாக மக்களுடைய ஆதரவு இருப்பதால், இது 1944-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்த கிறித்தவக் குடியாட்சிக் கட்சி அமைத்துள்ள பல கூட்டு அரசாங்கங்களிலும் ஒரு சிறு பங்காளியாகக் கலந்து கொண்டு வந்துள்ளது. இதனுடைய தாராள அரசியற் கோட்பாடு, இத்தாலியில் பாசிசம் போன்றதொரு சருவாதிகார அரசாங்கம் மீண்டும் தலையெடுக்காதபடி மக்களை விழிப்புடனிருக்கச் செய்வதற்கும், இத்தாலியில் குடியாட்சி மரபு தழைத்து வருவதற்கும் பெரிதும் உதவி செய்கிறது.

**இத்தாலியத் தொழிற் கட்சி:** வட இத்தாலிய நகரமான மிலானில் கி.பி. 1882-ஆம் ஆண்டில் இத்தாலியத் தொழிற் கட்சி (The Italian Labour Party) தோன்றிற்று. இங்கிலாந்தில் தொழிற் கட்சி தோன்றியதைப் போல, இத்தாலியிலும் ஆலைத் தொழிலாளர்களுடைய தொழிற் சங்கங்களைத் தோற்றுவாயாகக் கொண்டுதான் தொழிற் கட்சி என்னும் அரசியற் கட்சி தோன்றிற்று. வட இத்தாலிய மாநிலமாகிய இலாம்பர்டியில் (Lombardy) உள்ள ஆலைத் தொழிலாளர்களை யெல்லாம் தொழிற்சங்கங்களிலிணைத்து விடுதலும் தொழிலாளர் நலனுக்குகந்த ஒரு திட்டத்தை வைத்து அதன் வாயிலாகத் தொழிற் சங்கத்தை ஆளுங்கட்சிக்கு எதிரான ஓர் எதிர்க் கட்சியாகச் செயற்பட ஆக்குதலும் இதன் குறிக்கோள்களாகும். வட இத்தாலியில் ஆலைத் தொழிலாளர்களும் நடு தென் இத்தாலியில் வேளாண் தொழிலாளர்களும் இருந்தனர். தொழில்களும் வேளாண்மையும் தனியார் வசமே இருந்தன. சமநிலைச் சமுதாயக் கருத்துகள் பரவின. தொழிலாளர்களுள் சிறிது வளம் படைத்தவர்களுக்கு ஏற்ற பல சீர் திருத்தங்களைச் சியோலிட்டியின் அரசாங்கம் (1903 முதல் 1911 வரை) கொண்டுவந்தது. குழந்தைகளையும் பெண்களையும் தொழிலாளர்களாக அமர்த்துதல் தடை செய்யப்பட்டது. ஆலைத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் 24 மணி நேர ஓய்வும் நெல்வயல்களில் வேலை செய்பவருக்குப் பல வசதிகளும் வழங்கப் பட்டன. தொழிலாளர் இயக்கத்தை ஒடுக்கும் கொள்கை கைவிடப்பட்டது. தொழிலாளர் சங்கம் அமைக்கவும் வேலை நிறுத்தம் செய்யவும் உரிமை பெற்றனர். இதனால் தொழிலாளர் இயக்கம் விரைவாக வளர்ந்தது. நில உழைப்பாளர் கழகங்களும் வளர்ந்து பரவின. பண்ணைத் தொழிலாளர்கள், குறைந்த கூலியையும் கடுமையான வேலை முறைகளையும் எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து, தேசிய வேளாண் தொழிலாளர் கூட்டமைப்பை நிறுவினர். இவர்கள், நிலம் நாட்டுடைமையாக்கப்படுதல் வேண்டுமென்று கூறினர். சிறிய நில உடைமையாளர்கள் நாட்டுடைமைக் கொள்கையை ஆதரிக்கவில்லை. சமநிலைச் சமுதாயக் கருத்துகளை ஏற்ற தொழிற் சங்கங்கள் 1906-ஆம் ஆண்டில் தொழிலாளரின் பொது இணைப்பமைப்பை (General Confederation of Labour) அமைத்துக் கொண்டன. பண்ணைத் தொழிலும் ஆலைத் தொழிலும் வளர்ச்சி அடைந்தன. முதலாம் உலகப் போர்க் காலத்திலும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட பாசிச ஆட்சியிலும் தொழிலாளர் வகுப்பு ஆட்சியாளருடைய கட்டுப்பாட்டிலிருந்து வந்தது. பாசிச ஆட்சி மறைந்தபின் இத்தாலியத் தொழிலாளரின் பொது இணைப்பமைப்பு (CGIL) 1944-ஆம் ஆண்டு மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது. ஆனால், இது சோவியத்து நாட்டோடு சார்புடைய உலகத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பாக (Soviet - Oriented World Federation of Trade Unions) இருந்ததால், கத்தோலிக்கத் தொழிற் சங்கங்கள் இதனின்றும் பிரிந்து விடுதலை பெற்று இணைப்பமைப்பு (Free Confederation) ஏற்படுத்திக் கொண்டன. ஆயினும், தொழிற்கட்சி ஒரு தனி அரசியற் கட்சியாக இயங்கி, வாக்காளர்களுடைய பெரும் ஆதரவைப் பெற்று அரசாங்கத்தை அமைக்க இயலாமல் இருக்கிறது. இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி, மற்ற அரசியற்கட்சிகளோடு ஒத்துழைக்கும் கொள்கையையும், பொதுவுடைமைக் கோட்பாடுகளை நாட்

டின் இயல்புகளுக்கேற்றவாறு மாற்றிக் கொண்டு, ஐரோப்பியப் பொதுவுடைமை (Euro Communism) என்ற தாராள இயல்புடைய பொதுவுடைமைக் கொள்கையை வளர்ப்பதனால், இதற்கு இத்தாலியில் வரவேற்பு இருக்கிறது.

**இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி:** இது இத்தாலியச் சமூகச் சமநிலைக் கட்சி நடத்திய இலெகான் (Legon) காங்கிரசில் அக்கட்சி உடைந்த பிறகு, 1921-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி (Partio Communista Italiano – P C I). மேற்கு ஐரோப்பாவின் பொதுவுடைமைக் கட்சிகளுள் இது மாபெரும் கட்சி ஆகும். பாசிசச் சர்வாதிகாரத்தின் போது (1926-43), இக்கட்சி தலை மறைவாகித் தன் பணிகளைச் செய்து வந்தது. பால்மிரோ தோக்லியாத்தி (Togliatti) போன்ற சில தலைவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். அந்தோனியோ, கிராம்சி(Cromsi) பேரன்ற தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். கட்சியின் பொதுச்செயலர் கிராம்சி நோய்வாய்ப்பட்டு மறைந்தார். முதலில் பாரிசு நகரிலிருந்தும் பின்னர், 1930-இல் மாசுகோவிலிருந்தும் இது குறிப்பாகத் தனிப்பட்டோர் உரிமைகளுக்காகப் பணி புரிந்தது. முசோலினியின் வீழ்ச்சிக்குப்பின், சர்வாதிகார ஆதிக்கத்திற்குப் பிறகு, இக்கட்சி சமூக சமநிலைக் கட்சி, கிறித்தவ மக்களாட்சிக் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து, முக்கூட்டு அரசாங்கத்தில் பங்கேற்றது. எனினும், கெடுபிடிப்போர் நிலைமையையொட்டி இக்கூட்டுறவு முற்றுப் பெற்று இக்கட்சி எதிர்ப்பு நிலைக்குப் போயிற்று. மாசுகோவிலிருந்து திரும்பிய தோக்லியாத்தி கட்சித் தலைமையை ஏற்றார். உலகப் பொதுவுடைமை இயக்கத்தினின்றும் ஒதுங்கிய இக்கட்சி,இசுடாலினின் முறையற்ற செயல்களுக்கு நியாயம் கற்பிக்க முற்படாமல் ஓரளவு தானியங்கியாகச் செயற்பட்டது. இதையொட்டி தோக்லியாத்தி, ‘சமதருமத்திற்கு இத்தாலியப் பாதை’ என்ற கொள்கையை 1956-இல் வெளியிட்டார். தனித்து இயங்கிய இக்கட்சியோடு முதலில் சமதருமவாதிகள் 1948-இல் தேர்தல் உறவு கொண்டு, சில ஆண்டுகட்குப் பின்னர் விலகிக் கிறித்தவக் கட்சியுடன் சேர்ந்தனர். சமதருமவாதிகளுடன் ஏற்பட்ட உறவினால் கட்சியின் மதிப்பும் வலுவும் உயர்ந்தன. இது இடதுசாரியின் முக்கிய குரலாக விளங்கியது. பின்னர், 1973-இல் ‘வரலாறு தழுவிய உடன்பாடு’ என்ற புதிய கொள்கைப்படி, நாட்டின் பொருளாதார, சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் புதிய உத்தியைக் கையாண்டு, ஏனைய மக்களாட்சி கட்சிகளுடன் உறவு கொண்டது. கட்சியின் வாக்குகள் 1976-ஆம் ஆண்டுத் தேர்தலில் 27.6 சதவீதத்திலிருந்து 34.4 ஆக உயர்ந்தன. இது கூட்டு மந்திரி சபையில் சேர்ந்தது. இந்தத் தொடர்பு 1979-இல் முடிந்தது. அவ்வாண்டுத் தேர்தலில் கட்சியின் வாக்கு 30.4 சதமாகக் குறைந்தது. அது முதற்கொண்டு கட்சி தலைமை எதிர்க்கட்சியாக, கட்சிகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்று வந்துள்ளது.

அமைப்பு:ஏனையபொதுவுடைமைக் கட்சிகளைப் போன்று, இத்தாலியக் கட்சி உட்கட்சி வேறுபாடுகளின்றி, மக்களாட்சிச் சம உரிமை மையக் கொள்கைக்கு ஏற்பக் கட்டுப்பாட்டுடன் செயற்படுகிறது. நாட்டில் நான்கு மட்டங்களில் உள்ள கட்சியமைப்பின் உச்ச நிலையில் உள்ள காங்கிரசு நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை கூடி, பொதுவான மேனிலைக் கொள்கைகளை விவாதிப்பதுடன் கட்சியின் மையக்குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இது 32 உறுப்பினர் கொண்ட அரசியல் பணி அரங்கத்தைத் (Political Bureau) தேர்ந்தெடுக்கிறது. இதினின்றும் பொதுச் செயலரைத் தலைவராகக் கொண்ட 7 பேர் அடங்கிய செயற்குழு அமைகிறது. கட்சியின் அன்றாடப் பணிகளை இச்செயற்குழு கவனிக்கிறது. பன்னாட்டுப் பொதுவுடைமை இயக்கத்தின் உறுப்பினராக இருந்தும் இத்தாலியக் கட்சி கிழக்கு ஐரோப்பியக் கட்சி, பிரெஞ்சுக் கட்சி ஆகியவற்றினின்றும் வேறுபாடு கொண்டது. இது ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் பொதுவுடைமைத் தொகுதியில் உறுப்பினராயுள்ளது. இது தனது சொந்த அச்சுக் கூடத்திலிருந்து ஒரு நாள் செய்தித்தாளையும் (L’Unita) ஒரு வாரவெளியீட்டையும் (Renascita) இரண்டு இருமாத வெளியீடுகளையும் வெளியிடுகிறது.

இத்தாலியின் மிகப்பெரிய தொழிற்சங்கம், இத்தாலியப் பொதுத் தொழிலாளர் கூட்டுக்குழு ஆகியவை தவிர, இளைஞர், பெண்கள் பகுதிகள், கூட்டுறவுச் சங்கங்கள், உழவர் சங்கங்கள் ஆகியவற்றுடன் இது கூடி இயங்குகிறது. கட்சியின் தலைமைச் செயலகம் உரோம் நகரில் உள்ளது.

கொள்கை: கட்சியின் கொள்கை தனி உடைமையையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்தல். அண்மைக் காலத்தில் திறம்பட்ட அரசு முறை, சமாதானம், பொதுநலத் திட்டங்களுக்கான அதிக ஒதுக்கீடு, மனித உரிமைப் பாதுகாப்பு ஆகியவற்றை வற்புறுத்தி, இடது சாரி அரசு அமைவதற்காக விளம்பரம் செய்கிறது.

உறுப்பினர் நிலை: கட்சியில் 15 இலட்சம், அதாவது, வாக்காளர்களில் ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கட்சியின்

ஆதரவு மூன்றில் இரண்டுபங்கு தொழிலாளி வகுப்பினுடையது. நடு இத்தாலியின் சிவப்பு மண்டலம் எனப்படும் பகுதியில், கட்சி பெரும்பான்மை ஆதரவு பெற்றுள்ளது. உறுப்பினருள் ஆண்கள் மிகுதி.

வருவாய்: கட்சியின் வருவாயில் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர் கட்டணத்திலிருந்து கிடைக்கிறது. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தில் பாதி கட்சியைச் சேர்ந்தது. தேர்தல் செலவுக்காகக் கட்சிக்குப் பொது நிதியிலிருந்து பொருள் வழங்கப்படுகிறது. கட்சிக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் தமக்குக் கிடைக்கும் ஆதாயத்தைத் தேர்தல் செலவுக்காக வழங்குகின்றன.

பெரும்பான்மை நடுத்தர வகுப்பையுடைய உழைக்கும் தொழிலாளர் கட்சியான பொதுவுடைமைக் கட்சி (PCI) அரசாங்கத்தைப் பிடிக்கும் வாய்ப்பின்றி, ஆளும் கட்சிக்கு அடுத்தபடி முக்கியமான எதிர்க்கட்சியாகத் தன் மக்கள் பலத்தைக் கட்டிக் காத்து வருகிறது. தி.க.

## இத்தாலிய மொழியும் இலக்கியமும்:

இத்தாலியமொழி இத்தாலிய நாட்டில் மட்டும் அன்றிப் பிரான்சு, அர்செண்டினா, பிரேசில், சென்மாரினா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் பேசப்படும் இலக்கியச் செறிவுடைய ஒரு மொழியாகும். சுவிட்சர்லாந்தில் பேசப்படும் நான்கு முதன்மையான மொழிகளுள் இதுவும் ஒன்றாகும்.

இம்மொழி கிழக்கு உரொமான்சு (Romance) மொழிகளுள் மிகவும் சிறப்பானதாகும். உரொமான்சு மொழிகள் என்று கூறப்படும் இனமொழிகளில் போர்ச்சுகீசு, பிரஞ்சு, உரொமான்சு, உருமேனியன், இத்தாலியம் ஆகிய மொழிகளும் இன்னும் சில சிறிய மொழிகளும் அடங்கும். இத்தாலிய மொழியோடு மிக நெருங்கிய தொடர்புடன் காணப்படுவது உருமேனியன் மொழியாகும்.

இத்தாலிய மொழியில் பல்வேறு கிளைமொழிகள் காணப்படுகின்றன. ஆறுக்கும் மிகுதியாகக் காணப்படும் இக்கிளைமொழிகள், பிற கிளைமொழிகளைப் போலன்றித் தம்முள் மிகுந்த வேற்றுமை உடையன என்றும், இத்தாலியின் வடபகுதியில் வாழும் ஒருவனும் தென் பகுதியில் வாழும் ஒருவனும் சந்தித்து அவர்கள் பேசும் மொழிகளிலேயே உரையாடினால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் மிகக் கடினம் என்றும் கூறுவர்.

இத்தாலியக் கிளைமொழிகளில் தசுகன் பகுதியில் வழங்கிய கிளைமொழியே இன்றைய செம்மையான மொழியாக (Standard Language) உருவெடுத்துள்ளது. இதுவே இன்று இத்தாலியின் அரசியல் மொழியாகவும், வானொலி, பள்ளிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் மொழியாகவும் விளங்குகிறது. உரோமன் எழுத்து முறையால் இம்மொழி எழுதப்படினும், ஆங்கிலத்தைப் போலல்லாமல், உச்சரிப்பிற்கு ஏற்பவே இவ்வெழுத்துமுறை அமைந்துள்ளது என்று கூறுவர். இம்மொழி கி.பி.13-ஆம் நூற்றாண்டு முதல் எந்தவிதச் சிறந்த மாற்றத்தையும் அடையாமல் இருப்பதால், இலத்தீனுடன் மிகத் தொடர்பு கொண்டு காணப்படுகிறது என்று கூறுவர் மொழிநூல் அறிஞர்கள்.

பிற உரொமான்சு மொழிகளைப் போலவே இதுவும் உரோமப் பேரரசுக் காலத்தில் உரோமானியாவில் வழக்கிலிருந்த இலத்தீன் பேச்சுமொழியிலிருந்து உருவாயிற்று. எப்பொழுது இலத்தீன் பேச்சு வழக்கிழந்தது, அதிலிருந்து எந்தக் காலத்தில் இத்தாலியன் உருவாயிற்று எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. என்றாலும், கி.பி. பத்தாம் நூற்றாண்டிலேயே இதனுடைய ஆக்கத்தைக் காணமுடிகிறது. இம்மொழியில் காணக்கிடக்கும் முதல் எழுத்துச் சான்று வெரானிசு புதிர் (Veronese riddle) எனச் சிலர் கருதினாலும், 1960–63-இல் நடைபெற்ற வழக்கொன்றில் சாட்சியம் அளித்த ஒருவனின் பேச்சே அது என்பதே அறிஞர்களின் எண்ணம். இக்காலத்திற்கு முன்பே இத்தாலி பேச்சு மொழியாகச் சிறிது காலமாவது இருந்திருக்கவேண்டும் என்று கருத முடிகிறது.

இலத்தீன் மொழியினின்றும் இத்தாலி பல கிளைமொழிகளாக உருவெடுத்தது. இத்தாலி நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கிளைமொழி வழக்கிலிருந்தது. இந்த நிலையில்தான் தங்கள் பகுதியில் குறிப்பாகப் பிளாரென்சு நகரில் வழங்கிய கிளைமொழியே செம்மையான மொழியாக மாறியது. பல சமயங்களில் பல்வேறு படையெடுப்புகளுக்கும் கி.பி. 1167-இல் பிளேக்கு நோய்க்கும் கி.பி. 1230-இல் பெருவெள்ளப் பெருக்கிற்கும் இலக்கான உரோம், தன்னுடைய சிறப்பை இழந்து நின்றது. மக்கள் அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழத் தகுந்த நிலையில் உரோம் அன்று இல்லை.

இந்நிலையில்தான் பிரான்சு வளர்ந்து நின்றது. கலை, வாணிகம் போன்ற பல துறைகளில் இதுவரை இங்குப் பேசப்பட்ட கிளைமொழியும் செம்மையான மொழியாக உருவெடுத்தது. இந்தக் கிளைமொழியிலேயே தாந்தே (Dante - கி.பி. 1265–1321), பெத்ரார்க்கு (Betrarchke–13–1374), பக்கோச்சியா (Baccaccio–கி.பி. 1313–1375) என்போர் எழுதி

யுள்ளனர். இங்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இலக்கியக் கழகமும் செம்மையான மொழி வளர்ச்சிக்குத் துணை செய்தது.

அக்கழகத்தின் துணையால் கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு முதல் இத்தாலிய இலக்கியத்தில் வளர்ச்சியைக் காணமுடிகிறது. முதல் முதலாகச் சமயத்தை அடியொற்றிய பல்வேறு பாடல்களும் கவிதைகளும் உருவாயின. எனினும், இவற்றோடு சமயச் சார்பற்ற இலக்கியங்களும் குறிப்பாக, அரசர்களின் வாழ்வை அடியொற்றிய காதற் கவிதைகளும் உணர்ச்சிப் பாடல்களும் வளர்ந்து வந்தன. இவற்றைப் போன்ற உரைநடை நூல்களும் சில உருவாயின. எனினும், கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாந்தேயின் நூல்களுக்குப் பின்னரே இத்தாலிய இலக்கியங்கள் சிறப்பாகக்கருதப்பட்டன. முன்னர்க் குறிப்பிட்டபடி இவரை அடியொற்றிப் பெத்ரார்க்கு, பக்கோச்சியா போன்ற பலர் கவிதை, கதைகள் போன்ற பல்வேறு துறைகளில் இத்தாலிய இலக்கியத்திற்கு உரம் ஊட்டி வந்துள்ளனர். கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த புத்துணர்ச்சி இயக்கம், இத்தாலிய இலக்கியத்தில் சிறந்த திருப்புமையமாகக் கருதப்படுகிறது. கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புல்சி (Bulci–கி.பி. 1432–1484), பயர்டோ (Matteo Maria Boierdo–கி.பி. 1432–1484), அரியாசுடோ (Ariosta–கி.பி. 1474–1535) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைப் போன்றே கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளிலும் பல கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும் இத்தாலிய மொழிக்கு உரமிட்டு வளர்த்தனர். 19, 20-ஆம் நூற்றாண்டுகளிலும் பல்வேறு துறைகளில் இத்தாலிய இலக்கியங்கள் வளர்ந்தன. இக்காலப் பகுதியில் வாழ்ந்தகவிஞர்களுள் யுகோதோசுகுலோ (Ugotoscolo – கி.பி. 1778–1827), இலெப்பார்டி (Giacomo Leopardi – கி.பி. 1798–1837), கார்டிச்சி (Garducci-1935–1907), பாசுகோலி (Pascoli– கி.பி. 1855–1912), மாரினோ மோர்ட்டி (Marinomortti) போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இத்தாலிய மொழி: இத்தாலிய மொழியின்கண் ஏழு உயிர்களும் இருபது மெய்களும் உள்ளன. இம்மொழியில் உயிர்கள் குறில், நெடில் வேற்றுமை காட்டுவதில்லை.

ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போலவே இம்மொழியிலும் பொது, சிறப்புச் சுட்டுகள் உள்ளன. ஆனால், இம்மொழிச் சுட்டுகள் ஆண், பெண் பால்களுக்கு ஏற்பவும் ஒருமை, பன்மை எண்களுக்கு ஏற்பவும் மாறும் தன்மையன.

இம்மொழியின்கண் ஆண்பால், பெண்பால். என்பதாகிய பால் பிரிவினை காணப்படுகிறது. பொதுவாக ஆணைச் சுட்டுவது ஆணாகவும் பெண்ணைச் சுட்டுவது பெண்ணாகவும் உள்ளன. ஆனால், அஃறிணையாகக் கருதப்படும் சொற்கள் சில ஆண்பாலாகவும் சில பெண்பாலாகவும் உள்ளன. சொற்கள் முடிகின்ற எழுத்தினை வைத்துப் பால் உறுதி செய்துவிடலாம். சுட்டுகள் மட்டுமன்றிப் பெயரடைகளும் வருகின்ற பெயர்களுக்கு ஏற்ப ஆண், பெண் வேற்றுமையைக் காட்டி நிற்கும். பிற மொழிகளைப் போல் அல்லாமல் இம்மொழியில் காணப்படும் சில பெயரடைகள் (அளவு, தன்மையைக் குறிப்பன) பெயர்களுக்கு முன்னால் வருதலும், வேறு சில (உருவம், நாடு குறிப்பன) பின்னால் வருதலும் குறிப்பிடத்தக்க பண்பாகும்.

பல ஆப்பிரிக்க, அமெரிக்க மொழிகளைப் போன்று இதன் கண்ணும் சிறுபொருள், பெரும்பொருள் காட்டும் ஒட்டுகள் உள்ளன. இம்மொழியில் இத்தன்மை காணப்படுமாயினும், பெயரடைகளிலும் வினையெச்சங்களிலும் இப்பண்பு இல்லை. ஆனால் இத்தாலிய மொழியோ இவற்றிலும் இப்பண்புகளைப் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| இலார்கோ | (Largo ) | விரிவான |
| இலார்சிசிமோ | (Largissimo ) | மிகவிரிவான |
| கிராந்தே | (Grande ) | மிகப் பெரிய |
| கிராந்திசிமோ | (Grandissimo ) | மிகப் பெரிய |
| உன்லிப்ரொனெ | (Unlibro-ne ) | பெரிய புத்தகம் |
| சொரெல்லினா | (Sorell-ina ) | தங்கை (இளைய சகோதரி) |
| உரோபச்சியா | (Rob-accia ) | பயனற்றபொருள் |

போன்ற சொற்களில் இப்பண்பைக் காணலாம்.

இம்மொழியின் வினைச் சொற்கள் எண், பால், காலம், இடம் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. ஒருமை, பன்மை, எண்களையும் ஆண், பெண் பால்களையும் முன்னிலை, படர்க்கை இடங்களையும் எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலம் போன்ற காலங்களையும் இவை காட்டும். இவை அனைத்தும் பல்வேறு ஒட்டுகளாலும் உயிர் மாற்றத்தாலும் காட்டப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பார்லொ | ( parl – ϕ – 0 ) | பேசுகிறேன் |
| பார்லி | ( parl – ϕ – i ) | பேசுகிறாய் |
| பார்லா | ( parl – ϕ – a ) | பேசுகிறான் |
| பார்லியாமொ | ( parl – ϕ – iamo ) | பேசுகிறோம் |

| | | |
|---|---|---|
| பர்லாதெ | ( parl – ϕ – ate ) | பேசுகிறீர்கள் |
| பர்லானொ | ( parl – ϕ – ano ) | பேசுகிறார்கள் |
| பர்லாவ | ( parl – av – a ) | பேசினேன். |
| பர்லவி | ( parl – av – i ) | பேசினாய் |
| பர்லரொ | ( parl – er – o ) | பேசுவேன் |

போன்ற வாய்ப்பாடுகள் இப்பண்பைக் காட்டும்

ச.அ.

இத்தாலிய இலக்கியம்: ஒரு மொழி என்ற வடிவத்தில் பழக்கத்துக்கு வந்த இத்தாலிய மொழியில் கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட நூல்களின் தொகுதிகள் இத்தாலிய இலக்கியம் எனப் பெயர் பெறும். இத்தாலிய மக்களுக்கு ஒருநாடு என்ற அமைப்போ ஆட்சி முறையோ நெடுங்கால மாக இல்லாததால், இத்தாலியர் எல்லோருக்கும் பொதுவான ஒருமொழி தோன்றாத காலத்தில், இத்தாலிய மக்களிடையே புரவன்கல் (Provencal), சிசிலியன் (Sicilian) முதலிய பல்வேறு செம்மைப் படுத்தப்படாத மொழிகள் அந்நாட்டில் பேசப்பட்டு வந்தன. அவையே பண்டைய இலத்தீன் (Latin) மொழிக்கு மாற்றான அலுவல் மொழிகளாகவும் இருந்தன. இவ்வகையில் சிறந்த தொண்டாற்றித் தமது தசுக்கன் மொழியில் (Tuscan Language) தெய்விக இன்பியல் நாடகம் என்ற ஒப்பரிய இலக் கியத்தைப் படைத்து (The Divine Comedy), அதனை இலக்கிய மொழி என்ற நிலைக்கு உயர்த்தியவர் தாந்தே அலிகியர் (Dante Alighier) என்ற புலவர் ஆவார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1265-ஆம் ஆண்டிற்கும் 1321-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட தாகும். இவர் தோற்றுவித்த புதியதொரு இனிய இலக்கிய நடையைப் பின் பற்றிச் செம்மைப்படுத்திச் சியோவன்னி பொக்கேசியோ (Giovanni Boccacio), பிரான்சிசுகோ பெட்ரார்க்கு (Francesceo Patrarch) முதலிய ஆசிரியர்கள் உலகியல் சார்ந்த போக்கை எடுத்துக் காட்டும் நூல்களை எழுதினர். மானிட வாழ்வுப்பற்றை (Humanis) எடுத்துக்காட்டும் எழுத் தாளர்களுள் இலியோன் பட்டீசுட்டா ஆல்பெர்ட்டி (Leon Bathista Albert's) என்பவரும் புகழ்மிக்கவர். தாந்தே இலத்தீன் மொழியைவிட எவ்வகையிலும் தசுக்கன் மொழி தாழ்ந்ததன்று என்று வலி யுறுத்தினார்; இவர் இருந்த பிளாரன்சு நகரம் (Florence) இத்தாலிய அறிவு வளர்ச்சி இயக் கத்துக்குத் தலைமை ஏற்றது. வெனிசு நாட்டைச் சேர்ந்த பியட்ரோ பெம்போ (Piatro Bembo) என் பவர் இத்தாலிய மொழிக்கு முதல் இலக்கண நூலை வகுத்தார். மானிட வாழ்வுப்பற்றைப் பின்பற்றி நூல்கள் எழுதிய ஆசிரியர்களுள் உலுடோவிக்கோ அரியோசுட்டோ (Ludovico Ariosto), நிக்கோலோ மாக்கியவெல்லி (Niccolo Machiavelli), பிரான்சு சுகோ கைசியார்டினி (Francescó Guicciardini), தார்குவாட்டோ தாசோ (Torquato Tasso) முதலி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். அரியோசுட்டோ முப்பதாண்டுகள் உழைத்து கி.பி. 1516-ஆம் ஆண்டில் ஓர்லாண்டோ பிரியூசோ (Orlando Furioso) என்ற வரலாற்றுப் பாடலையும் மாக்கியவெல்லி இளவ ரசன் (The Prince) என்ற நூலையும் எழுதினர். மாக்கியவெல்லியும் கைசியார்டினியும் இத்தாலிய தசுகன் மொழியைத் தங்களுடைய வரலாற்று, அரசியல் நூல்களை எழுதுதற்குப் பயன்படுத்திக் காட்டினர். கத்தோலிக்கத் திருச்சபை தொடங்கிய எதிர்ச் சமயச்சீர்திருத்தம் (Counter Reformation) தொடங்கிய காலத்திலிருந்து நெடுங் காலமாகப் பாராட்டப்படும் நூல், தார்க்கியூட்டோ தாசோ எழுதிய மீட்கப்பட்ட எருசலேம் (Jerusalem Delivered) என்ற கி.பி. 1581-ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்ட அழகிய கவிதை நூலாகும். இது முத லாம் சிலுவைப்போரின் நிகழ்ச்சிகளால் உருவாக் கப்பட்ட நூல் ஆகும். கலை மறு மலர்ச்சிக் காலத்தில் (Age of Renaissance) தசுக்கன் இத்தாலிய மொழியா னது, இலக்கிய ஆசிரியர்களால் சில வரையறை களுக்குட்பட்ட நடைகளில் கையாளப்பட்டது. ஆனால், இத்தாலிய மக்கள் பேச்சு மொழியை ஒத்த ஓர் இலக்கிய மொழியைக் கல்விப் பயிற் சிக்காகப் பயன்படுத்த விரும்பினர். பாரினி (Parini) என்ற கவிஞரும் ஆல்பியரி (Alfieri) என்ற நாடகா சிரியரும் உயரிய இலக்கிய நடைகளைப் பின்பற்ற பெக்காரியா (Beccaria) என்ற பொருளியலாசிரியரும் சியோர்டானி (Giordani) என்ற செய்தித்தாளா சிரியரும் இக்காலத் தேவைகளுக்குக் கையாளத் தக்கதாகத் தாய்மொழியை ஆக்கும் பொருட்டுப் பல சிற்றிலக்கியங்களை எழுதினர். மிலான் நகரத்தில் தோன்றிய கி.பி. 18- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மான்சோனி என்பவர் நடுத்தர மக்கள் பெரும் பாலும் பேசும் பிளாரண்டைன் மொழியில் பல புதினங்களை (Novels)எழுதினார். உள்நாட்டுப்பகுதி மொழிகளிலும் பல நூல்கள் எழுதப்பட்டன. வெர்கா (Verga) என்பவர் சிசிலிய மொழியிலும் மார்ச்சி என்பவர் (Marchi) மிலானிய மொழியிலும் நூல்கள் எழுதினர்.சார்டினியப் பகுதியின் (Sardinia) நாட்டுப் புற வாழ்க்கையைத் தெலட்டா (Deledda) என்ப வரும், ஒதுக்கப்பட்டுக் கிடந்த கலபிரியா (Calabria) மக்களுடைய வாழ்க்கையை அல்வரோ (Alvaro) என் பவரும், அபுரூசி (Abruzzi) மக்களுடைய வாழ்க் கையைச் சைலோன் (Silone) என்பவரும் மொலய்சு (Molise) மக்களுடைய வாழ்க்கையைச் சோவைன்

(Jovine) என்பவரும், பிளாரன்சு மக்களுடைய எழுச்சியைப் பாலசெசியும் (Palazzeschi), பிரதோலினியும் (Pratolini) விவரிக்கின்றனர். பவேசே (Pavese), பெனோக்லியோ(Fenoglio), விட்டோரினி (Vittorini) முதலியோர் ஆங்கில, அமெரிக்க ஆசிரியர்களுடைய நூல்களைத் தத்தம் மொழிகளில் எழுதினர். இக்கால இத்தாலிய ஆசிரியர்கள் படிப்போரின் பல்வேறு சுவைகளுக்கு ஏற்ற விருந்தாகப் பல நூல்களும் எழுதியுள்ளனர். வரலாற்று நூல்களும் புதினங்களும் உளவியல் நாடக நூல்களும் எழுதப்பட்டுள்ளன. போசுகோலோ (Foscolo), இலியோபார்டி (Leopardi), குவாரிமோடோ (Quarimodo), உம்பர்ட்டோ சாபா (Umberto Saba), உங்கரட்டி (Ungaretti), மோண்டேல் (Montale) முதலியோர் புதிய கருத்துகளை வளரும் தலைமுறையினருக்கு வழங்கிய இக்காலத்தில் வாழ்ந்த, குறிப்பிடத்தக்க கவிஞர்கள் ஆவர்.

**இதயதுல்லா, சர் குலாம் உசேன்** சிந்து மாநிலத்தின் நிலக்கிழார்களுள் ஒருவர். சிந்து மாநிலம் இந்தியப் பிரிவினைக்குமுன் பம்பாயுடன் இணைந்திருந்தது. அங்கு இசுலாமியர் 71 விழுக்காட்டினராகவும் இந்துக்கள் 27 விழுக்காட்டினராகவும் இருந்தனர். இது தனி மாநிலமாக்கப்பட்டுவிட்டால், இசுலாமிய மாநிலமாகிவிடும் என்னும் நோக்குடன் தான் ஆங்கிலேயர்களால் பிரிக்கப்பட்டது. மக்கள் எண்ணிக்கையை விடுத்து நோக்கினால், இந்துக்கள் பெரும் செல்வாக்குடன் வாழ்ந்தார்கள் என்பதையும் உள்நாட்டு வெளிநாட்டு வாணிகம் இந்துக்களின் கையிலிருந்தது என்பதையும் உணரலாம். சிந்து மாநிலத்தில் பல்வேறு கட்சிகளும் செயலாற்றின. இசுலாமியரிடையேயும் பல கட்சிகள் இருந்தன. அனைத்து இசுலாமியக் கட்சிகளையும் இணைக்கப் பாடுபட்டவர் சர் குலாம் உசேன் இதயதுல்லா (Hidayathulla, Sir Gulam Hussain) ஆவார். 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்ட அடிப்படையில் நடைபெற்ற தேர்தலில், சிந்து மாநிலத்தில் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. அதனால் இவர் இசுலாமியரை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அம்முயற்சி தோல்வியுறவே, இந்து-இசுலாமியர் கூட்டு அமைச்சரவை யொன்றை இவர் அமைத்தார். இந்த அமைச்சரவையில் இவருக்குத் துணையாக இந்து ஒருவரும் இசுலாமியர் ஒருவரும் பொறுப்பேற்றனர். காங்கிரசு (Congress Party) எதிர்க்கட்சியில் இருந்தது. அதன் ஆர்ப்பாட்டத்தால் இதயதுல்லாவின் அமைச்சரவை 1938-ஆம் ஆண்டில் பதவியை இழந்தது. பின்னர், அல்லா பக்சு (Allah Baksh) என்பவர் பதவியேற்றார். ஆனால், அவரும் நீண்ட நாட்கள் பதவியில் இருக்கவில்லை.

ஆளுநர் மீண்டும் இதயதுல்லாவை அழைத்து அமைச்சரவை அமைக்கக் கேட்டுக்கொண்டார். இவர் 1942-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முசுலிம் லீகு (Muslim League) உறுப்பினர் இருவரையும் இந்து உறுப்பினர் இருவரையும் கொண்ட அமைச்சரவையை அமைத்தார். காங்கிரசுப் பேரவையினர் இந்து அமைச்சர்களின் வீடுகளுக் கெதிரில் மறியல் செய்தனர். அவர்களுள் ஒருவர் வீட்டில் குண்டு ஒன்றும் வெடித்தது. அதனால், இதயதுல்லாவும் சுயேச்சை இசுலாமிய உறுப்பினரும் முசுலிம் லீகிலேயே சேர்ந்துவிட்டனர். இதயதுல்லாவின் ஆட்சி முடிவுற்றது.


**இதாக்கா** மேற்குக் கிரீசு நாட்டிலுள்ள தீவு. இது அயோனியத் தீவுகளுள் ஒன்று. இதன் பரப்பளவு 96 ச.கி.மீ. இது மலைப்பாங்கான பகுதிகளைக் கொண்டது. எனவே, உழுது பயிரிடத்தக்க நிலங்கள் இங்கு மிகக் குறைவு. ஒலிவ எண்ணெய், உலர்ந்த முந்திரிப்பழங்கள், தேறல் போன்றவை இங்கு உற்பத்தியாகும் சிறப்புப் பொருள்கள். இதாக்கா (Ithaca) ஒடிசியசு (Odysseus) என்ற கிரேக்க வீரரின் தாயகம் என்பது மரபுவழியான நம்பிக்கையாகும். இங்குத் தொன்மையான நினைவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

இதாக்கா² என்பது அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு நகரம். இது வேளாண்மைக்கும் கல்விக்கும் பெயர் பெற்ற நகரம். கோடைக் காலத்தில் இங்கு உல்லாசப் பயணிகள் கூடுவர். இங்கு எல்லாத் துறைகளும் கொண்ட கார்னல் (Cornell) பல்கலைக்கழகம் கி.பி. 1865-இல் நிறுவப்பட்டது. பல வேளாண்மைப் பயிற்சி நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன. மா.சு.

**இதாகோ** அமெரிக்க ஐக்கிய நாட்டு மாநிலங்களுள் ஒன்று. இது இராக்கி மலைத்தொடரில் அமைந்துள்ளது. இது இயற்கைச் செல்வங்கள் நிறைந்த ஒரு மாநிலம்.

எல்லைகள்: இதாகோ (Idaho) மாநிலத்தின் வடக்கில் கனடாவும், கிழக்கில் இராக்கி மலைத் தொடர்களைக் கொண்டுள்ள வோமிங்கு (Wymong) மோண்டானா மாநிலங்களும், தெற்கில் நிவாடா, உட்டா (Utah) மாநிலங்களும், மேற்கில் ஓரிகான் (Ooregon), வாசிங்டன் மாநிலங்களும் எல்லைகளாக உள்ளன.

பரப்பு: இம்மாநிலத்தின் மொத்தப் பரப்பு 2,16,412 ச.கி.மீ. ஆகும். இப்பரப்பளவில் 2279 ச.கி.மீ. உள்நாட்டு நீர்நிலைகளாகும். இம்மாநிலத்தின் மக்கள் தொகை 9,43, 935 (1980).




இதாகோ


**இயற்கைப் பிரிவுகள்:** வடக்கு, தெற்காக இம் மாநிலத்தை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (1) இராக்கி மலைத்தொடர்ப் பகுதி (2) கொலம்பியா மேட்டுநிலம் (3) வடிகால் மலைத்தொடர்ப் பகுதி என்பனவாம்.

இராக்கி மலைத்தொடரே இம்மாநிலத்தின் மிகப் பெரிய நிலப்பகுதியாகும். இப்பகுதியில் பெரு

மளவு மரங்கள் கிடைக்கின்றன; பல சுரங்கங்களும் உள்ளன.

கொலம்பியா மேட்டுநிலம் இசுநேக்கு ஆற்றுப் (Snake River) போக்குடன் ஒன்றியுள்ளது. இப் பிரிவில். இலெவீசு, நெசுபெர்சு, மேலை இலதா ஆகிய மாநிலங்கள் அடங்கும். அவை மிகவும் செழிப்பானவை. மேட்டு நிலத்தின் இடையில் இசுநேக்கு ஆற்றுச் சமவெளி உள்ளது. வடிகாலும் மலைத்தொடர்ப் பகுதியும் கொலம்பியா மேட்டு நிலத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ளன. மலைப் பகுதியில் ஆழமான பள்ளத் தாக்குகளும் புல்தரை மேடுகளும் அமைந்து அழகு செய்கின்றன.

இதாகோவில் ஏறத்தாழ 3000 மீட்டர் உயரமுள்ள மலையுச்சிகள் 50 உள்ளன. போரா மலையுச்சி (Borah Peak) இம்மாநிலத்தின் மிக உயர்ந்த மலையுச்சியாகும். இதன் உயரம் 3859 மீ. பிட்டர் ரூட்டு மலைத்தொடர், செவன் தெவில்சு மலைத்தொடர், குவார்டி அலினசு மலைத்தொடர், கிளியர்வாட்டர் மலைத்தொடர், சாடூத்து மலைத்தொடர் போன்றவை ஏனைய மலைத்தொடர்களாகும்.




இயற்கைப் பிரிவுகள்

இதாகோவில் பெரும் ஆறுகள் பலவும் சிற்றாறுகள் நூற்றுக் கணக்கிலும் உள்ளன. இசுநேக்கு ஆறு 1671 கி.மீ. நீளமுள்ளது. கொலம்பியா ஆறு மற்றொன்று. பெண்டுஒரில் ஆறு (Pend Oreille) மூன்றாவதாகும்.

சோசோன் நீர்விழ்ச்சி இசுநேக்கு ஆற்றின் குறுக்கே விழுகிறது. மெசோ நீர்வீழ்ச்சி பிறிதொன்று. மோயீ நீர்வீழ்ச்சி, ஆகர் நீர்வீழ்ச்சி என்பவை பிற நீர்வீழ்ச்சிகளாகும்.

இதாகோவில் நூற்றுக்கணக்கான நில உப்புக் கரைந்த ஊற்றுகள் உள்ளன. அவற்றுள் சில வெந்நீர் ஊற்றுகள்; சில தண்ணீர் ஊற்றுகள். இங்கு இரண்டாயிரத்துக்கும் மிகுதியான ஏரிகள் உள்ளன. அவற்றுள் பெண்ட்டு ஓரில் ஏரி மிகப் பெரியது.

**தட்பவெப்பம்:** இதாகோ மிதமான தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளது. பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து வீசும் காற்று வெது வெதுப்பான கடல்காற்றாக வருகிறது. இம்மாநிலத்தில் ஆண்டொன்றுக்கு 41 செ.மீ. மழையும் 152 செ.மீ. பனியும் பெய்கின்றன.

**பொருளாதாரம்:** வளமான மண், கனிப்பொருள் படிவங்கள், பெரும் நீர்மின்சக்தி, அடர்ந்த காடுகள், பல்வேறு விலங்கு வகைகள் ஆகியவை இதாகோவின் இயற்கைச் செல்வங்கள்.

இதாகோவின் நீர்வளம் சிறப்பானது. சாலமன் ஆறு இம்மாநிலத்தில் மட்டும் பாயும் ஆறாகும். ஐந்து பெரும் ஆறுகள் இந்நீர்வளச் சிறப்பிற்குக் காரணமானவை.

காடுகள் இதாகோவின் நிலப்பரப்பில் 40 விழுக்காடாகும். வணிகப்பொருள் காடுகள் 55 இலட்சம் எக்டேர் (Hectare) பரப்பில் அமைந்துள்ளன. உலகிலேயே மிகப்பெரிய ஊசியிலை மரக்காடுகளை இம்மாநிலம் கொண்டுள்ளது. இலையுதிர் காடுகளும் இங்குள்ளன.

மரக்கட்டைகள், மரத்திலிருந்து செய்யப்படும் பலவகைப் பொருள்கள் முதலியன இதாகோவின் வருவாய்க்கு வழிவகை செய்கின்றன. இலீவிசுடன் (Lewiston) என்னும் நகரம் மர வாணிக மையம். உலகிலேயே மிகப் பெரிய மரமறுக்கும் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.

உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல் இங்குச் சிறப்பான தொழிலாகும். உருளைக் கிழங்கு உற்பத்தி, சர்க்கரை ஆலைகள், குளிர்சாதனப் பெட்டி

களில் உணவுப் பொருள்களை அடைக்கும் தொழில்கள், பால்பண்ணைப் பொருள்கள் தயாரித்தல் போன்றவை இங்கு நடைபெறுகின்றன. நம்பா என்னும் ஊரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரண்டாம் பெரும் சர்க்கரை ஆலையுள்ளது. இரசாயனப் பொருள் உற்பத்தி இதாகோவின் மூன்றாம் இடத்தைப் பெறும் தொழிலாகும். செயற்கை உரங்கள், பாசுபேட்டுத் தொழிற்சாலைகள் போன்றவை பொகாடெலோ நகரில் மிகுதி.



மாநிலச் சட்டமன்றம் – பாய்சு

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வெள்ளியை மிகுதியாக உற்பத்தி செய்யும் மாநிலங்களுள் இதாகோ முதலிடம் பெறுகின்றது. இங்குள்ள சன்சைன் சுரங்கம் உலகப் புகழ்பெற்றது.

வரலாறு: செவ்விந்தியர்கள் இம்மாநிலத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்தனர். இதாகோ பகுதியைக் கி.பி. 1805–ஆம் ஆண்டில் கண்டறிந்தவர்கள் மெரிவீதர் இலெவீசு (Meriwether Lewis), வில்லியம் கிளார்க்கு (William Clark) என்னும் இரு வெள்ளையர்களாவர். தாவீது தாம்சன் (David Thompson) என்னும் கனடா நாட்டுக் கண்டுபிடிப்பாளர் கி.பி. 1809–இல் மென்மயிர் வாணிக மையத்தை பெண்டுஓரில் ஏரிக்கரையில் நிலைநாட்டினார். என்றி எச். இசுபால்டிங்கு (Spalding) என்பாரும் அவருடைய மனைவியாருமே இதாகோவில் குடியேறிய முதல் வெள்ளைக்காரர்கள்.

இதாகோவில் கி.பி. 1860-ஆம் ஆண்டில் முதல் முதலாக மக்கள் குடியேறினர். இங்கு, கி.பி. 1862-இல் பொன் கண்டுபிடிக்கப்பட்டது. இதாகோ நிலப் பகுதி என்ற அமைப்பு, கி.பி. 1863 மார்ச்சு 4-ஆம் நாளில் இலெவீசுடன் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதாகோ கி.பி. 1890 சூலை 3-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 43–ஆம் மாநிலமாக இணைந்தது.

இதாகோவின் தலைநகர் பாய்சு (Boise) என்னும் நகரமாகும். இதன் மக்கள்தொகை 1,02,160 (1680).

**இதிகாசங்கள்**: பண்டைக்காலத்தில் மக்கள், அரசர், தேவர் எப்படி இருந்தனர், அவர்களிடையே நடந்த நிகழ்ச்சிகள் யாவை என்பனவற்றைக் கதைகளாகக் கூறும் நூல்களே இதிகாசங்கள். இதிகாசம் என்பது 'இப்படி முன் இருந்தது' என்று பொருள் படும். வேதங்களின் முடிவாகவும் பிழிவாகவும் அமைந்தவை உபநிடதங்கள். உபநிடதங்களை அடுத்துத் தோன்றியவை இதிகாசங்கள். வேதங்களிலுள்ள பல மந்திரங்களுக்கு இதிகாசங்களைக் கொண்டே பொருள் சொல்ல வேண்டியுள்ளது. எனவேதான், வேதத்தைச் சார்ந்த பிராமணப் பகுதிகளில், இதிகாச வேதம் என்றே சொல்லப்பட்டுள்ளது. அரசர் முன்னிலையிலும் வேள்விக் காலத்திலும் பிற சமயங்களிலும் இதிகாசங்கள் பாடப்பட்டு வந்தன. அரசனுடைய அவைக்களங்களில் அரசனை வாழ்த்திப் பாடிப் பரிசுபெற்றவர் 'சூதர்' என்று அழைக்கப்பட்டனர். பேரிடர்களால் துன்புறுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும் இதிகாசங்கள் படிக்கப்படுவதுண்டு.

வால்மீகி இயற்றிய இராமாயணமும் வியாசர் எழுதிய மகாபாரதமும் இதிகாசங்கள் ஆகும். இராமாயணம் சூரியவமிசத்தில் தோன்றிய இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. சூரியவமிசக் கதையினைச் சொல்வது இராமாயணம். குரு வமிசக் கதையினைக் கூறுவது மகாபாரதம். இதிகாசங்களில் பண்டை இந்தியாவின் வரலாற்றுச் சாரம் உள்ளது என்று கூறுவர் வால்மீகியின் இராமாயணம் அறத்தை அடிநாதமாகக் கொண்டது. வியாசரின் மகாபாரதம் அறிவை அடிநாதமாகக் கொண்டது. இவை இரண்டும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களை மக்களுக்கு எடுத்துரைப்பன. வீடு பற்றிய செய்திகள் இடையிடையே ஊடும் பாவுமாய்ப் பின்னிவர, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் இவை வலியுறுத்தி நிற்கின்றன. உண்மையைப் பேசு, அறத்தைப் பின்பற்றி நட என்று இவை போதிக்கின்றன. மகாபாரதத்தின் இறுதியில் கூறப்படும் 'அகிம்சையே மேலான அறம்' என்ற கோட்

பாடு, வியாசன் கண்ட உயர்ந்த வாழ்க்கைத் தத்துவ மாகும். கவிதைகளின் பல்வேறு இயல்புகளையும் இதிகாசங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றமையால் அவை காலங்கடந்து விளங்குகின்றன.

இதிகாசங்களின் தொடக்கம் வேதங்களில் காணப்படும் உரையாடல்களும் (சம்வாதங்களும்) பிராமணங்களில் உள்ள கதைகளும் (ஆக்கியானங்களும்) ஆகும். வேதங்களில் காணப்படும் மந்திரங் களை ஓதிச் செய்யப்படும் வேள்விச் சடங்குகளை விளக்குவன பிராமணங்கள். வேத காலத்தை அடுத்து எழுந்தவை இவை. இவை உரைநடையில் அமைந்தவை. இவற்றில் பல புராணக் கதைகளும் புனைகதைகளும்உண்டு.சான்றாக,சதபதபிராமணத் தில் குருவமிச அரசனான சனமேசயன் பற்றியும் சனக மன்னன் பற்றியும் குறிப்புகள் உள்ளன. நீண்ட வேள்வி செய்யும் காலங்களில் செய்யப்பட்ட நீண்ட வேதபாராயணம், இதிகாசக் கதைகளுக்கான பொருளையும் உருவத்தையும் வழங்கியிருக்கவேண் டும். வேதத்திலே புருரவசுக்கும் ஊர்வசிக்குமிடையி லான உரையாடல், இயமனுக்கும் இயமிக்குமிடையி லான சொற்போர் ஆகியவை உள்ளன. வேதங்களில் உள்ள இந்த உரையாடற்பாங்கும் வேத இலக்கியக் கருத்துகளும் பிராமணங்களில் உள்ள கதைகளும் இணைந்து இதிகாசங்களை உருவாக்கின.

இராமாயணம்: இராமாயணத்தை இதிகாசம் என்றும் காவியம் என்றும் குறிப்பர். இதிகாசங்கள் இரண்டுமே சுலோகம் என்ற பாவினால் ஆக்கப்பட் டுள்ளன. இராமாயணம் பிற்காலக் காவியங்களுக்கு வழிகாட்டியாகவும், மகாபாரதம் பிற்காலப் புரா ணங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தன. இரா மாயணம் உருவத்திலும் அமைப்பிலும் ஒருமைப் பாடுடையது. அது 24,000 சுலோகங்களையும் ஏழு காண்டங்களையும் ஐந்நூறு சருக்கங்களையும் உடையதாக விளங்குகிறது. ஏழாவதாகிய உத்தர காண்டம் பிற்காலத்தில் பாடிச் சேர்க்கப்பட்டது எனவும் கூறுவர். பழைய காலத்தில் இராமன் ஒரு மனிதனாகக் கருதப்பட்டான் என்பதை இதன் பழைய பகுதிகள் காட்டுகின்றன. முதலாம் காண்ட மும் ஏழாம் காண்டமும் இராமனைத் திருமாலின் தோற்றமாகக் காட்டுகின்றன. மனிதனான இராமன் தேசிய வீரனாக, அவதாரபுருடனாக உருப் பெறப் பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கும். வால்மீகி இராமன் காலத்தவராக முதல் கடைசிக் காண்டங் களில் காட்டப்படுவது, இவை இரண்டுமே பிற்காலத் தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை என்ற கருத்தை வலி யுறுத்தும். இராமாயணம் காலத்தால் முற்பட்டது. மகாபாரதத்தில் இராமகதை கூறப்படுகிறது. வால்மீகியை 'மகரிசி' என்று பல இடங்களில் வியாசர் குறிப்பிடுகிறார். சுந்தரகாண்டத்தின் சுலோகம் ஒன்று, பாரதத்தின் மூன்றாம் பருவத்தில் இராம மோபாக்கியானம் என்ற பெயருடன் ஒரு கதை உள்ளதைக் குறிப்பிடுகிறது. வால்மீகி இராமாயணத் தின் பல சுலோகங்கள் பாரதத்தில் உள்ளன. இரா மாயண மொழிநடை பாணினிக்கு முற்பட்ட காலத் தது என்பர். இராமாயணத்தில் காவியச் சிறப்பு மிகுதி. உவமை, உருவகம் முதலிய அணிகளையும் பிற்காலக் காவிய ஆசிரியர் விதந்து ஆண்ட பிற அணிவகைகளையும் வருணனைகளையும் வால்மீகி திறம்பட ஆண்டுள்ளார். இராமாயணத்திலும் பார தத்தில் காணப்படுவது போன்ற கிளைக்கதைகள் (கங்கை உலகிற்கு வந்த கதை, விசுவாமித்திரர், வசிட்டர் இருவருக்கும் ஏற்பட்ட பிணக்கு போல்வன) பல உள்ளன. வால்மீகி இராமாணத்திற்குத் திலகம், இராமாயணசிரோமணி, பூடணம் போன்ற பல பழமையான உரைகள் உள்ளன.

இராமாயணத்திற்கு மூன்று பாடவேறுபாடுகள் (பாடாந்திரங்கள்) உண்டு என்பர். அவை வடமேற்கு இந்தியாவில் தோன்றியவை என்றும், வங்காளத்தி லும் ஏனைய பகுதியிலும் உருப்பெற்றவை என்றும், தென்னாட்டில் வழக்கிலிருந்தவை என்றும் மூவகைப் படும். இவற்றுள், ஒன்றிற்கும் மூன்றிற்கும் இடையில் ஒற்றுமைக் கூறுகள் மிகுதி என்பதால், பெரும்பாலும் கதைப்போக்கு, பாட உறுதிப்படுத்தல் என்பவற் றிற்கு இவற்றைக் கொள்வர். வால்மீகிக்குப் பின்வந்த பலரும் இராமகாதையில் பெரிதும் ஈடுபட்டனர். அதன் சிறுபகுதியையாவது பாட விழைந்தனர். காளி தாசனின் இரகுவம்சம் இவ்வகையில் சிறப்பான இடம்பெறுவது. சமண, புத்த இராமாயணங்களும், இந்திய மொழிகள் பலவற்றிலும் பல்வேறு இரா மாயண வடிவங்களும் தோன்றின. இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் பல்வேறு இலக்கியவடிவங் களில் இராமகாதை வெளிப்பட்டு வந்துள்ளது. தமிழ கத்தில் மக்கள் நாவில் நடமாடும் நாட்டுப்புறக் கதை வடிவங்களையும் இராமகாதை பெற்றுள்ளது. பழைய காலத்தில் கிராமக் கோயில்களில் இராமாய ணமும் பாரதமும் படிக்கப்பெற்றுவந்தன. அவற்றைப் படிப்பதற்கு மன்னர்கள் நிலக்கொடை அளித்தனர். இன்றளவும் மக்கள் மத்தியில் இந்து சமயம், வாழ்க் கைமுறை, பண்பாடு, நாகரிகம் ஆகியவை நிலைத் திருக்கச் செய்யும் முயற்சியில் இராமாயணம், மகா பாரதம் ஆகிய இரண்டும் பெரும்பங்கு வகிக்கின்றன.

மகாபாரதம்: இதனைத் தந்தவர் வியாசர். வியாசர் என்ற சொல்லுக்குத் தொகுத்தவர் என்பது பொருள். மகாபாரதம் ஒரு இலட்சம் சுலோகங்களா

லும் பதினெட்டுப் பருவங்களாலும் ஆனது. உலகிலே மிகப்பெரும் நூல் என்னும் சிறப்பினை உடையது. நூலின் ஐந்திலொரு பங்கில் மையக்கதை அமைய ஏனையவற்றில் கிளைக்கதைகளும் அறவுரைகளும் அடங்கியுள்ளன. நான்கு வேதங்களில் உள்ள கருத்து கள் கதைகளின்வழி இதன்கண் விளக்கப்படுகின்றமை யால் இந்நூல் 'ஐந்தாம்வேதம்' எனவும்படும். கி.பி. நான்காம் நூற்றாண்டு அளவில், மகாபாரதம் இன்றி ருக்கும் நிலையைப் பெற்றது என்பர். பாரதத்தில் வரும் சில தனிப்பட்ட கதைகளும் வியாக்கியானங் களும் வேதகாலத்திலே காணப்படுகின்றன. எனவே, பாரதம் படிப்படியாகக் காலந்தோறும் வளர்ந்து இன்றைய வடிவைப் பெற்றது என்பர்.

மகாபாரதம் தன்னுள் அரிவம்சம், பகவத்கீதை ஆகிய இரண்டையும் உடையது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை வலி யுறுத்துகிறது. இது நீண்ட அறவுரைகளை உடைய இதிகாசம். பன்னிரண்டாம் பருவம் பதினாலாயிரம் சுலோகங்களை உடைய நீண்ட பருவமாகவும், பதி னேழாம் பருவம் முந்நூற்றுப் பன்னிரண்டு சுலோ கங்களை உடைய மிகச் சிறிய பருவமாகவும் உள் ளன. அரிவம்சம் கண்ணன் அவதார சரிதத்தைக் கூறுவது. இந்நூல் கதைக்களஞ்சியம் என்று சொல் லத்தக்கது. சகுந்தலைக்கதை முதற்பருவத்தில் உள் ளது. இதனைப் பின்னாளில் காளிதாசன் சாகுந் தலம் என்னும் உலகப்புகழ் பெற்ற காவியம் ஆக்கி னார். மூன்றாம் பருவத்தில் பாண்டவர்களிடம் பொழுதுபோக்கிற்காகச் சொல்லப்பட்ட பல கதை கள் உள்ளன. இராமாயணக் கதை, கங்கை பூமிக்கு வந்தகதை, கலைக்கோட்டு முனிவர்கதை, சிபி மன் னன்கதை, சாவித்திரி கதை, நளன்கதை, பரதசாவித் திரி கதை என்னும் பல்வேறு கதைகள் உள்ளன. பாரதம் படைத்த வியாசர் தம் கால நடப்பு வாழ்க்கை முறைகளை வைத்துக்கொண்டு, எதிர் காலம் மிகச் சிறப்புடையதாக மலருமென்ற நம்பிக் கையுடன் படைத்துத் தந்துள்ளார். பாண்டவர் களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்த பதினெட்டு நாள் போரைப்பற்றி இருபதாயிரம் சுலோகங்களில் வியாசர் கூறியுள்ளார். தத்துவம், சமயம், அரசநீதி, சத்திரிய தருமம், சட்டம் ஆகிய பல்வேறு அறவுரை களைத் தன்னகத்தே கொண்டு, தேவர், அசுரர், முனிவர், மனிதர் பற்றிய பல கதைகள் சங்கிலித் தொடர்போலக் கதைக்குள் கதையாக வருகின்றன. ஓர் அற வாக்கியத்திற்கு எடுத்துக்காட்டுத் தரும் முகத்தான் பல கதைகள் கூறப்பட்டுள்ளன. ஐந்தாம் வேதம் எனப்படும் மகாபாரதத்துள் 'கிருட்டிண வேதம்' எனப்படும் பதினெட்டு அத்தியாயங்களிலான பகவத்கீதை உள்ளது. இதனை 'வைணவ சுமிருதி' என்றும் கூறுவர்.

தரும சேத்திரமாகிய குருசேத்திரத்தில், பாரதப் போர் தொடங்க உள்ள நெருக்கடியான நிலையில், தன் உற்றார் உறவினர்களுடன் போர்புரிவதா என்று சஞ்சலமுற்ற அருச்சுனனுக்கும் (அடியார்) கண்ணனுக்கும் (இறைவன்) நடைபெற்ற உரை யாடல் பகவத்கீதை. போர்செய்வது சத்திரியனின் தருமம்-கருமம்; கருமம்செய்; ஆனால் கருமபலத்தை (வினை செய்வதால் ஏற்படக்கூடிய பலாபலன்களில் ஆசைவைப்பதைக்) கைவிட்டுவிடவேண்டும் என்று கீதை வலியுறுத்தியது. கருமபலத்தைத் தியாகஞ் செய்யக் கீதை வழிகாட்டுகிறது. அருச்சுனனுடைய மயக்கமுற்ற மனநிலையை மாற்றித் தன் கடமை களைச் செய்யுமாறு அவனுக்குப் பகவான் அறிவுரை கூறினார் என்பதை அடியாகக் கொண்டு, பிரம வித்தையான இந்தக் கீதோபநிடதம், பலருக்கும் பயனுள்ள பல செய்திகளைக் கூறுகிறது. பக்குவப் பட்டவர்களுக்கு இது யோக சாத்திரமாகவும் விளங்குகிறது. இந்து சமயத்தின் சமரச மனோ பாவம் கீதையில் உள்ளது. எக்காலத்திற்கும் பொருத் தமான பேருண்மைகளை இக்கால மொழியில் கீதை கூறுகிறது. 'கருமம் செய்' என்றே கீதை தொடர்ந்து போதிக்கிறது. வேதகாலம், உபநிடத காலம் ஆகியவற்றில் காணப்பட்ட இந்தியச் சமூகச் சிந்தனையின் வளர்ச்சியைக் கீதையில் காண லாம்.

மகாபாரதம் பல்வேறு கதைவடிவங்களையும் பல்வேறு இலக்கிய வெளிப்பாட்டு வடிவங்களையும் பெற்றுள்ளது. தமிழில் செவ்வியல் (Classical) வடி வங்களாக (பாரதவெண்பா, வில்லிபாரதம்) மட்டுமே யன்றி, நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் (Folk Form) கதைப்பாடல்களாகவும் (Folk Ballads) கூத்து இலக்கியங்களாகவும் பாரதக்கதை வளர்ந்துள்ளது. தமிழகக் கிராமங்களில் பாஞ்சாலியம்மன், திரௌ பதையம்மன் கோயில்கள் பல்கின. அங்கெல்லாம் திருவிழாக்களில் பாரதம் படிக்கப்பட்டும் நடிக்கப் பட்டும் வருகின்றது. பகவத்கீதை மொழிபெயர்ப்பு களும் உரைகளும் பலவாக வெளிவந்துள்ளன. இந்து சமயத் தத்துவச் சிந்தனையாளர்களுக்கு இது அரும் பெருங்கருவூலமாக உள்ளது. இன்றளவும் இந்திய மண்ணில் இவ்விரு இதிகாசங்களும் பல்வேறு கலை, இலக்கிய வடிவங்களில் வெளிப்பட்டு வாழ்ந்து வரு கின்றன.

சு.வே.

**இதிகாச பாகவதம்** வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பெற்றுச் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்ட நூல். கண்ணன் வரலாறு கூறுவன வாக வடமொழியில் ஏழு பாகவதங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றன் தமிழாக்கமே இந்நூல். பகவான்

என்னுஞ் சொல் வைணவத்தில் சிறப்பாகக் கண்ணனைக் குறிப்பதால், அவனது வரலாற்றினைக் கூறும் நூல் பாகவதம் எனப்பட்டது. வியாசர் வடமொழியில் 18,000 சுலோகங்களால் அமைத்த இந்தப் பாகவதத்தினைச் செவ்வைச் சூடுவார் தமிழில் அமைத்துள்ளார். இவர் வேம்பத்தூர், நிம்பை நகர் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கப்படும் வேப்பற்றூரில் அந்தணர் மரபில் தோன்றினார். இச்செய்தியினைத் 'தென் நிம்பை நகரமதில் வாழும் அந்தணரில், சிறந்த செவ்வைச் சூடுவார், சுருதி புகழ் பாகவத பௌராணம் ஓதினர்' என்று ஒரு பழம்பாடற் பகுதி குறிப்பிடுகிறது. இவ்வாசிரியருக்கு மாதவ பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரும் உள்ளது. 'வடமொழியில் பாகவதம் பாடிய வியாசரே, செவ்வைச் சூடுவார் எனத் தோன்றித் தமிழில்இப்பாகவதத்தினைஇயற்றினார்' என்னும் கருத்தில், 'வியாத முனிவரனே மீள, உதிக்கும் நிம்பை மாதவ பண்டிதச் செவ்வைச் சூடி என உலகுபோற்ற, விதிக்கு மறையவர் குலத்தில் தோன்றி அருந்தமிழாலும் விளம்பினானே' என வரும் செய்யுட்பகுதி இவர் சிறப்பினைக் குறிப்பிடுகிறது.

இந்நூல் 12 கந்தங்களையும், 155 அத்தியாயங்களையும் கொண்டு, 4973 பாடல்களால் அமைந்துள்ளது. இது 'விண்டு பாகவதம்' எனவும் வழங்கப்படும். நூலாசிரியர் வைணவராயினும், சைவ வைணவ வேறுபாடு கொள்ளாமல் பாடும் நெறியினர் என்பதனைச் சிவபெருமான், முருகன் முதலியோரைச் சிறப்பித்துப் பாடும் பகுதிகளால் அறியமுடிகிறது. நூலின் தொடக்கம் கடவுள் வாழ்த்து, கலைமகள் வணக்கம், அவையடக்கம் முதலியவற்றோடு, புராண அமைப்பில் கால உலக அளவுகள் பற்றியும் கூறுவதாக உள்ளது. வியாசர் தம் புதல்வர் சுகருக்கும் அவர் பரீட்சித்துக்கும் கூறப், பின்னர்ச் சூத முனிவர் நைமிசாரணிய முனிவருக்குச் சொல்லுவதாக நூல் அமைந்துள்ளது. முதல் கந்தம் திருமால் அவதாரங்கள் பலவற்றையும் சிறப்பித்துக் கூறுகிறது. இரண்டாம், மூன்றாம் கந்தங்களில் தத்துவங்கள் தோற்றம் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. நான்காம் கந்தம் சிவபெருமான் தக்கன் யாகத்தினை அழித்த சிறப்பு, முருகன் பிறப்பு முதலியனவற்றைச் சிறப்பிக்கிறது. ஆறாம் கந்தத்தில் 'நாராயண கவசம்' சிறப்பாக அமைந்துள்ளது. இராமாயணச் செய்திகள் ஒன்பதாம் கந்தத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன. மிக நீண்ட பத்தாம் கந்தம் 1682 செய்யுள்களைக் கொண்டுள்ளது. இதில் கண்ணன் அவதாரக் கதை மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பலராமனின் புனிதநீராடற் பயணங்கூறும் பகுதியில் தமிழகத்திலுள்ள பல தலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாகவதத்தினைக் கி.பி. 1881-ஆம் ஆண்டில் கோமளவல்லிபுரம் இராசகோபால் பிள்ளை அச்சில் பதிப்பித்தார். அவர் பதிப்பில் நூலாசிரியர் பெயர் திருக்குடந்தை ஆரியப்பப்புலவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நூலாசிரியர் பெயர் 'செவ்வைச் சூடுவார்' என்பது பின்னர் ஆராய்ச்சியால் தெளிவு பெற்றது. இந்நூலிற்கு டாக்டர் உ.வே. சாமிநாதையர் அரும்பதவுரையும் ஆராய்ச்சிக்குறிப்பும் வரைந்துள்ளார். ஐயரவருக்குப் பின் அவர் மகன் இந்நூலின் முதல் ஒன்பது கந்தங்கள் கொண்ட முதல் பாகத்தினை 1949-ஆம் ஆண்டிலும் எஞ்சிய மூன்று கந்தங்கள் கொண்ட இரண்டாம் பாகத்தினை 1953-ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளார். இந்நூலின் இரண்டு பகுதிகளும் திருப்பதி திருமலை தேவத்தானத்தின் ஆதரவில் வெளியிடப்பட்டுள்ளன.

**இதிமத்-உத்-தௌலா** என்பவர் சகாங்கீரின் மனைவி நூர்சகானின் தந்தையார். இவரது இயற்பெயர் கியாசு பெகு (Ghiyas Beg). இவர் பாரசீகத்திலிருந்து வேலைதேடி இந்தியாவுக்கு அக்பரின் ஆட்சிக் காலத்தில் வந்தவர். பெகின் நண்பர் ஒருவர் மூலம் இவர் பேரரசர் அக்பரிடம் அறிமுகமானார். தம் திறமையாலும் மதிநுட்பத்தாலும் கியாசுபெகு பதவி உயர்வு பெற்று, அரண்மனையை நிருவகிக்கும் பொறுப்பை ஏற்றார். இவர்தம் பல்வேறு திறமைகளைப் பாராட்டிப் பேரரசர் அக்பர் இவருக்கு இதிமத் – உத் தௌலா (Itmad-ud-Daulah) என்னும் பட்டம் வழங்கினார். இவரது மறைவுக்குப்பின், இவர் மகள் நூர்சகான் கி.பி. 1626-ஆம் ஆண்டில் ஆக்ராவில் இவருக்கு ஒரு கல்லறை கட்டினாள். இக்கல்லறை இந்தியப் பாணியும் பாரசீகக் கலைப்பாணியும் பொருந்தக் கட்டப்பெற்றது. இதனைச் சுற்றிலும் 180மீ. நீளமுள்ள மதிற்சுவர் ஒன்று கட்டப்பட்டுள்ளது. கல்லறையைச் சுற்றிலும் புல்வெளிகள், மலர்ப்பாத்திகள், மென்மையான பாதைகள், குளங்கள், நீரூற்றுகள், கட்டடம், தூய வெண்ணிறப் பளிங்குக் கற்கள் முதலியவை அழகுடன் மிளிர்கின்றன. இது சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் விட்டம் 24மீ. இக்கல்லறைத் தோட்டத்தின் நடுவில் எட்டுக் கோணத் தூபிகளும் மேல்மாடத் தளமும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வளைவுகளைக் கொண்ட திறப்புகள் காணப்படுகின்றன.

உட்புறம் பல அறைகள் உள்ளன. நடுவில் இதிமத்-உத்-தௌலாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. வெண்ணிறப் பளிங்குக் கற்களுக்கிடையில் பல வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இக்கல்லறைதான் முழுவதும்



இதிமத்–உத்–தௌலா கல்லறை

வெண்ணிறப் பளிங்குக் கற்களாலேயே கட்டப்பட்ட மொகலாயரின் முதற் கட்டடமாகும்.

**இதோபதேசம்** என்பது மக்களைப் பக்குவப் படுத்த நல்ல அறிவுரைகளை நீதிக்கதைகள் மூலம் புகட்டுவதாகும். பக்குவப்பட்டவர்கள் பக்குவப் படாதவர்களுக்கு நீதியையும் வாழ்க்கை நெறிமுறை களையும் நன்னடத்தையையும் கதைகள் மூலமாக எடுத்துக்கூறுவது என்றும் கூறலாம்.

பஞ்சதந்திரக் கதைகளிலிருந்து நீதி புகட்டும் கதைகள் பலவற்றைத் தொகுத்து இதோபதேசம் என்ற பெயரில் ஒரு நூலை நாராயணன் வடமொழி யில் வெளியிட்டார். விட்டுணுசர்மன் அரசனின் பிள்ளைகளுக்கு நீதியை எடுத்துக்காட்டுவதற்காகப் பல கதைகள் கூறுகின்றான். ஒரு கதையிலிருந்து மற்றொரு கதை பிறக்கும். தொடக்கத்திலோ முடிவிலோ ஒவ்வொரு கதைக்கும் ஒரு நீதி சொல்லப் படும். எடுத்துக்காட்டாக, வலையில் வீழ்ந்த சிங்கத் திற்குச் சுண்டெலி உதவி புரிந்து தப்பிக்கவைத்த கதையைச் சொல்லலாம். இதனால் சிறியவர்களும் பெரியவர்களுக்கு உதவி செய்யமுடியும் என்ற நீதி எடுத்துச் சொல்லப்படுகிறது.

மேலும், மன்னர்கள் தங்களுடைய ஆட்சியைச் செம்மையாக நடத்துவதற்கு ஏற்ற ஐந்து நல்ல அறிவுரைகளும் அரசதந்திரங்களும் இதில் சொல்லப் பட்டுள்ளன. அவற்றுள் முதல் நான்கு மித்திரபேதம், மித்திரலாபம், காகோ உலூகியம், அபரீசீட்தகாரம் ஆகும். இவற்றை விளக்கப் பல நீதிக் கதைகள் சொல்லப்படுகின்றன. நட்பாகவுள்ள மன்னர்களைப் பிரித்து, அவர்கள் பலத்தைக் குறைத்துத் தன் ஆட்சியை வலுப்பெறச் செய்தல் மித்திரபேதம் ஆகும். மன்னர்கள் நட்புடன் இருந்தால் என்ன நன்மை பயக்கும் என்பதைக் கதை மூலமாகத் தெரிவித்தல் மித்திரலாபம் எனப்படும். இரண்டு மன்னர்கள் காகமும் கோட்டானும்போல் தீராப் பகைவர்களாக இருந்தால், நாட்டில் எவ்வாறு ஆட்சி செய்வது என்பதைத் தெரிவிப்பது காகோ உலூகியம் எனப்படும். அபரீசீட்தகாரம் என்பது, எக்காரியத்தைப் பற்றியும் நன்கு ஆலோசனை செய்து செயலில் இறங்குவது எனப் பொருள்படும். இதோபதேசத்தில் கூறப்பட்ட கருத்துகள் யாவும் மன்னர்களின் அரசதந்திரத்திற்குத் துணைபுரி கின்றன.

இந்நூலில் பேச்சுவழக்கில் இருக்கும் பழமொழி களுக்கு விளக்கம் தருவதற்காகப் பல நீதிக்கதைகள் சொல்லப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்', 'பசுத்தோல் போர்த்திய புலி' போன்ற பழமொழிகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கதைகளில் விலங்குகள், பறவைகள், கடவுள் போன்ற பொதுப்பெயர்களே வருகின்றன. இதில் சொல்லப்பட்ட நீதிகள் எல்லாம் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியன.

**இந்தளூர்** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற வைணவத் தலங்களுள் ஒன்று. இத் தலம் சோழ நாட்டிலுள்ள மயிலாடுதுறைக்கு ஒரு கல் தொலைவிலுள்ளது. சந்திரன் வழிபட்டுச் சாப நீக்கம் பெற்ற தலமாதலால், 'திருஇந்தளூர்' என இவ்வூர் பெயர் பெற்றது என்று கூறப்படுகிறது. இவ்வூர் வடமொழியில் 'சுகந்தவனம்' என்று வழங்கப்பெறும். இங்கு 'இந்துபுட்கரணி' என்னும் தீர்த்தம் உள்ளது. இங்குள்ள திருக்கோயில் விமானம் வேதாமோத விமானமாகும். பெருமாள் பெயர் 'மருவினிய மைந்தன்' என்பதாகும். 'பரிமள ரங்கன், என்றும் இவர் அழைக்கப்படுவார். இவர் இங்கு வீர சயன கோலத்தில் விளங்குகிறார். தாயார் பெயர் புண்டரீகவல்லி நாச்சியார் என்பதாகும். இத்தலம் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளது.

**இந்தாப்பூர் போர்** பீசப்பூரை ஆண்ட ஏதில் சா (Adil shah) என்பானுக்கும் மொகலாயப் பேரரசர் சாசகானுக்கும் (Shahjahan) தக்காணத்தில் நடைபெற்ற போராகும். ஏதில்சாவைக் கீழ்ப்படியும் படி சாசகான் வற்புறுத்தினார். ஆனால், ஏதில்சா தன் உரிமையை விட்டுக் கொடுக்க உடன்படவில்லை. எனவே, அவனுடைய அரசை மூன்று பக்கங்களி லிருந்து மூன்று மொகலாயப் படைகள் தாக்கின. முதல் படை கான்–இ–தௌரானின் (Khan-i-Dauran) தலைமையில் வடகிழக்கில் பீடாரிலிருந்து

(Bidar) தாக்கியது. இரண்டாம் படை கான் சகானின் (Khan Jahan) தலைமையில் மேற்கில் சோலாப்பூரிலிருந்து (Sholapur) தாக்கியது. மூன்றாம் படை கான்–இ–சமானின் (Khan–i–Zaman) தலைமையில் வடமேற்கில் இந்தாப்பூரிலிருந்து (Hindapur) தாக்கியது. இதனையே இந்தாப்பூர்ப் போர் என்பர். இப்போரில் பீசப்பூர் வீரர்கள் தலைநகரைக் காத்த போதிலும், அரசின் ஏனைய பகுதிகள் மொகலாயப் படைகளால் கடும் தாக்குதலுக்கும் அழிவிற்கும் ஆளாயின. பீசப்பூர் (Bijapur) சுல்தான் கி.பி 1636-ஆம் ஆண்டு மே மாதத்தில் மொகலாயப் பேரரசருடன் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ள வற்புறுத்தப்பட்டார். அதன்படி, பீசப்பூர் சுல்தான் மொகலாயப் பேரரசரின் ஆளுமையை ஒப்புக்கொண்டார்.

**இந்திமொழி**: மொழியியல் வல்லுநர்கள் உலகில் வழங்கிவரும் மொழிகள் 2746 என்றும், இவற்றுள் 1200 மொழிகள் வட, தென் அமெரிக்காவிலும் 500 மொழிகள் ஆசுத்திரேலியாவிலும் பிற தீவுகளிலும் பேசப்படுகின்றன என்றும் கூறுகின்றனர். உலகில் பேசப்படும் பல்வேறு மொழிகளும் பல மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கப்படுகின்றன. புவியியல் அமைப்பு, சொற்களில் காணப்படும் ஒற்றுமை, ஒலி–ஒற்றுமை, இலக்கண அமைப்பு முறை முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டே மொழிக் குடும்பங்கள் பிரிக்கப்படுகின்றன.

மொழிக் குடும்பம்: காசுமீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை இந்தியாவில் பல்வேறுபட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இங்குப் பேசப்படும் மொழிகளுள் முக்கியமானவை திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் ஆகும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவை திராவிட மொழிகளாகக் கருதப்படுகின்றன. ஆங்கிலம், உருசிய நாட்டு மொழி, இசுபெயின் நாட்டு மொழி, செருமன், பிரெஞ்சு, சமசுகிருதம், போர்ச்சுகீசியம், இத்தாலி ஆகிய மொழிகள் இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாகும். இந்தி, வங்காளம் முதலியன இந்தோ ஆரியன் குடும்பத்தைச் சேர்ந்தவை. இக்குடும்பம் இந்தோ ஐரோப்பியக் குடும்பத்தின் இனப்பிரிவாகும்.

இந்தோ—ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் 'கேந்தம்'(Centum) பிரிவுஎன்றும்'சதம்'' (Satem) பிரிவு என்றும் இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்தோ–ஆரிய மொழிக் குடும்பம் 'ஒலி'யை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படுகிறது. 'நூறு' என்ற சொல்லிற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான சொற்களை அடிப்படையாகக் கொண்டு, கேந்தும், கேந்த, கேக்தோன், கேத், கந்த் என வழங்கும் சொற்களையுடைய மொழிகளான கிரேக்கம், இத்தாலி, கேல்டி, செருமனி, இத்தி, துகாரி முதலிய மொழிகள் 'கேந்தம்' பிரிவில் அடக்கப்படுகின்றன. அதுபோலவே சதம், சிப்தசு, இசுதோ மற்றும் சித்ச என்ற சொற்களைப் பயன்படுத்தும் ஆர்மினி, அல்பானி, பாரத்து, ஈரானி போன்ற மொழிகள் ''சதம்'' பிரிவில் அடக்கப்படுகின்றன. பாரத்து, ஈரான் ஆகியவற்றின் துணைப் பிரிவுகளுள் ஒன்று ஆரிய மொழி.

வளர்ச்சி: பண்டைக்கால வடமொழியும் இடைக் காலப் பாலி மொழியும் இக்காலத்தில் வழங்கி வரும் இந்தி, வங்காளம், குசராத்தி, மராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளும் ஆரிய மொழிகளாகும். இந்தி வட இந்தியாவின் பெரும் பகுதியில் பேசப்படும் மொழி.

இந்தி என்னும் சொல் சிந்தி என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது. வட மொழியின்'ச'என்னும் எழுத்து பாரசீகத்தில் 'ஹ' வாக மாறுகிறது. இந்தியாவில் பாரசீக மக்களின் தொடர்பு ஏற்பட்டபோது அவர்கள் சிந்தியை 'ஹிந்தி'யாக ஒலித்தனர்.

வரலாற்று நோக்கில் இந்தி அபப்பிரம்ச மொழியினின்றும் மலர்ந்தது எனலாம். இந்தி கி.பி 10–ஆம் நூற்றாண்டில் அபப்பிரம்ச மக்கள் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம் மொழி கி.பி. 16–ஆம் நூற்றாண்டு வரை படிப்படியாக வளர்ச்சியுற்றது. இடைப்பட்ட காலத்தில் 'வச்சிர' மொழியும் இலக்கிய மொழியாக ஆட்சி பீடத்தில் ஏறியது. கடிபோலி எனப்படும் இக்கால இந்தி, கி.பி.18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் உரைநடை இலக்கியத்திலும் பின்பு செய்யுள் இலக்கியத்திலும் இடம் பெறலாயிற்று.

இந்திமொழிப் பகுதி: வரலாற்று நோக்கில் இந்தி இடைப்பட்ட இந்தியாவின் மொழிகளான வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளின் வழித் தோன்றலாகக் கருதப்படுகிறது. மேற்கில் இராசசுத்தானம் முதல் கிழக்கில் பீகார் வரையிலும் வடக்கில் மலைப் பகுதிகள் முதல் தெற்கில் தப்தி நதி வரையிலும் உள்ள ஏறக்குறைய 2310 கி.மீ. நீளமும் 1320 கி.மீ. அகலமும் கொண்ட பரந்த நிலப்பரப்பு, இந்தி மொழி பேசப்படும் பகுதியாகக் கருதப்படுகிறது.

பிரச, இராசசுத்தானி, மேவாடி, மாலவி, செயபுரி, மார்வாடி, கடிபோலி, பாங்கரு, கன்னோசி, புந்தேல்கண்டி, அவதி, பகேலி, அத்தீசுகடி, மைதிலி, மகதி, போசுபுரி முதலியன இந்தியின் கிளைமொழி

கள். இம்மொழிகள் அனைத்தும் கடிபோலி எனப் படும். இவை இந்தியையே இலக்கிய மொழியாகக் கொண்டவை.

இந்தியில் வழக்கத்திலிருக்கும் உயிர் எழுத்துகள் 11.

மெய்யெழுத்துகள் 33.

நாட்டில் ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின், அவர்கள் தங்கள் அலுவலகவேலைக்காக இந்துசுத்தானி என அப்போது சொல்லப்பட்ட இந்தியைக் கற்பிக்கப் போர்ட்டுவில்லியம் கல்லூரியைத் திறந்தார்கள். அதன்பிறகு கடிபோலி எனப்படும் இக்கால இந்தி விரைவாகப் பரவத் தொடங்கியது.

உலகில் மிகுதியான மக்களால் பேசப்படும் மொழி என்ற நிலையில் பார்க்கும்போது சீனம், ஆங்கிலம் ஆகியவற்றுக்கு அடுத்த இடத்தை இந்தி மொழி பெறுகிறது. ஒரு நாட்டில் பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழி அந்நாட்டின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அம் முறையில், இந்தி இந்தியாவின்ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொருள்களுக்கு உரிய ஒலி வடிவான குறியீடுகள் கொண்டது பேச்சுமொழி ஆகும். வரி வடிவான குறியீடுகள் கொண்டது எழுத்து மொழி ஆகும். பேச்சு மொழி, எழுத்து மொழி என்ற பாகுபாட்டையும் கடந்து ஒரு மொழியில் தொன்று தொட்டு இருந்துவருவது இலக்கணமாம். இலக்கியத்தில் இருந்து இலக்கணம் தோன்றியது என்பர் மொழியியல் வல்லுநர். ஒவ்வொரு மொழியும் சிறந்த இலக்கண அமைப்புகளையே கொண்டு உள்ளது. இந்தி இலக்கணத்தில் உயிரற்ற பொருள்களும் ஆண்பால், பெண்பால் எனப் பிரிக்கப்படுவதையும், உரிச்சொற்கள் பெயர்ச் சொல்லின் எண்ணையும் பாலையும் தழுவி வருவதையும், இறந்தகாலமும் செயப்படுபொருளும் உள்ள வாக்கியத்தில் நே ( नै ) என்ற முதல் வேற்றுமையுருபைப் பயன்படுத்துவதையும் குறிப்பிடத்தக்க தன்மைகளாகக் கூறலாம்.

இந்தியாவில் வழக்கிலிருக்கும் இந்தியின் கிளை மொழிகள் யாவும் தேவநாகரி என்னும் எழுத்து வடிவத்தையே கொண்டுள்ளன.

நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மக்கள் எண்ணங்கள் மாறுவதை இந்தி இலக்கியத்தில் தொடக்கக் காலத்திலிருந்தே காணலாம். சமூகச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்தி இலக்கியத்தையும் தாக்கின. இந்தி இலக்கியம் நான்கு காலப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. வீரகாப்பியங்கள்
   – கி.பி. 845 முதல் 1315 வரை
2. பக்திக்காப்பியங்கள்
   – கி.பி. 1315 முதல் 1645 வரை
3. காதல் காப்பியுங்கள்
   – கி.பி. 1645 முதல் 1845 வரை
4. இக்காலம்
   – கி.பி. 1845 முதல் இன்றுவரை.

**வீரகாப்பிய காலம்:** இசுலாமியர் ஆதிக்கமும் இசுலாம் சமயத் தோற்றமும் ஏற்பட்டு நாட்டில் அமைதியின்மை சூழ்ந்திருந்த காலத்தில் இந்தியில் வீரகாப்பியங்கள் தோன்றின. இக்காப்பிய காலத்தில் 'அபப்பிரம்ச' இலக்கியமும் 'இடிங்கல்' இலக்கியமும் கிடைக்கின்றன. அபப்பிரம்ச இலக்கியத்தில் ஏமச்சந்தரின் 'குமாரபால் சரித', சரகப்பாவின் 'தோக கோசு'' ஆகியனவும், கோரக்நாத்து என்பாரின் 'கோரக் போத்' என்னும் படைப்பும் சிறப்பாகக் கருதப்படுகின்றன. இடிங்கல் இலக்கியத்தில் பிரம்ம பட்டரின் 'குமான் ராசோ', சந்து பரதாயிவி என்பவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'பிருதிவிராச ராசோ' என்பன முக்கியமானவை. தனிப் பாடல்களுள் அமீர்குசுருவின் பாடல்கள் புகழ்பெற்றவை.

**பக்திக்காப்பிய காலம்:** நிலையற்ற, திறமையற்ற ஆட்சி ஏற்பட்டு இந்துக்கள் துன்புறுத்தப்பட்ட காலத்தில்தான் பக்தி இலக்கியம் தோன்றியது. மக்களுக்கு நல்வழி காட்டவும் கடவுள் பக்தி ஏற்படுத்தவும் துளசிதாசர் கபீர்தாசர், சூர்தாசர், குருநானக்கு, மீராபாய் போன்றோர் தோன்றித் தங்கள் போதனைகளை இலக்கியமாகப் படைத்தனர். புகழ்பெற்ற துளசி இராமாயணம் இக்காலத்தில்தான் இயற்றப்பட்டது. சூர்தாசரின் கிருட்டிண லீலைகள் 'சூர் சாகரி' யில் வருணிக்கப்பட்டன. கபீர்தாசரின்'பீசக்' என்னும் தனிப்பாடல் திரட்டில் பல தத்துவ போதனைகள் அடங்கியுள்ளன. மீராபாயின் வழி பாட்டுப்பாடல்கள் புகழ்பெற்றவை. இந்தி இலக்கியத்தில் பக்திக் காப்பிய காலம் குறிப்பிடத்தக்க அளவில் இந்தி மொழி வளர்ச்சிக்கு உதவியது என்று கூறினால் அது மிகையாகாது.

**காதல் காப்பிய காலம்:** அமைதி சூழ்ந்த நிலையில், மொழி வளர்ச்சி அடைந்த நிலையில், அதனை அலங்கரிக்க உதவும் இலக்கிய மரபுகளைப் பின்பற்றிய காப்பியங்களும், அரசர்களை மகிழ்விக்கும்

நோக்குடன் காதல் காப்பியங்களும் தோன்றலாயின. இக்காலத்தில்தான் 'விரச' என்பது இலக்கிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்காலப் படைப்புகளில் கேசவதாசர் என்பாரின் கவிப்பிரியா, இரசிக்பிரியா, இராமச்சந்திரிகா என்பனவும் பிகாரிலாவின் 'சத்சயி' யும் குறிப்பிடத்தக்கன.

**இக்காலம்:** மீண்டும் அபப்பிரம்ச மொழியில் இலக்கியம் தோன்றியதும், அதிலிருந்து கடிபோலி எனப்படும் இக்கால இந்தி வளர்ச்சியடைந்ததும் இக்காலப் பகுதியில்தான். ஆங்கிலேயரின் ஆட்சி இந்தி மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது எனலாம். இலக்கியத்தின் பல்வேறு வகைகளையும் இக்கால இலக்கியத்தில் காணலாம். புதினம், சிறுகதை, நாடகம் போன்ற பலவகைப் பிரிவுகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

'சாகேத்' என்னும் நூலை இயற்றிய மைதிலி சரண் குப்தாவும் சாகித்திய அகாதமிப் பரிசு பெற்ற மகாதேவி வர்மா போன்ற கவிஞர்களும், பல வரலாற்று நாடகங்களை உருவாக்கிய சயகர், கர்பிரசாத்துசமூக நாடகங்களை எழுதிய இலட்சுமி நாராயண் மிசுரா போன்ற நாடக ஆசிரியர்களும், நாவல் இலக்கியச் சக்கரவர்த்தி எனப் போற்றப்படும் பிரேம்சந்து, யசுபால் போன்ற புதின ஆசிரியர்களும், இராமச்சந்திர சுக்கில் போன்ற திறனாய்வு ஆசிரியர்களும் தோன்றி இந்தி இலக்கியத்திற்குத் தொண்டு செய்து, அதன் வளர்ச்சிக்கு உதவினர்.

அ. உ.

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்:

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு, 1935-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டப்படி (Government of India Act 1935) இந்திய அரசியல் அமைப்புச் செயற்பட்டு வந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தவுடன் அப்போது இந்தியாவை ஆண்டு வந்த ஆங்கில நாட்டில் தொழிற்கட்சி ஆட்சி உரிமையைக் கைப்பற்றியதும் கிளமண்ட்டு அட்லி (Clement Atlee) பிரதமரானார். அவர் காலத்தில் இந்தியா விடுதலை அடைந்தது. இந்தியாவின் அரசியல் அமைப்பை ஓர் அரசியல் நிருணய சபை மூலம் உருவாக்க வேண்டும் என்று ஆங்கிலப் பிரதமர் அட்லி ஆங்கிலேய நாடாளுமன்றத்தில் 1946-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் நாளில், இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் அறிவித்தார். அதை இந்தியாவிலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொண்டன.

எனவே ஓர் அரசியல் நிருணய சபையை அமைப்பதற்குத் தேர்தல் நடத்தப்பட்டது. அந்த அரசியல் நிருணய சபையில் பணிபுரியக்கூடிய உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறாக அரசியல் நிருணய சபையின் உறுப்பினர்கள் மாநிலச் சட்டசபைகளினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முன்னரே குறிப்பிடப்பட்டுள்ள 1935-ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டப்படி, மாநிலச் சட்டசபைகளுக்குத் தேர்வு நடத்தப்பட்டது. 10 இலட்சம் மக்களுக்கு ஒரு பேராளர் என்ற விகிதப்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரசியல் நிருணய சபையில் எத்தனை உறுப்பினர்கள் உண்டு என்பது தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள், அந்தந்த மாநிலங்களில் உள்ள மூன்று சமூகங்களுக்கு அவர்கள் மக்கள் தொகை அடிப்படையில் பங்கு போட்டுக் கொடுக்கப்பட்டன. பொதுவானவர், இசுலாமியர், சீக்கியர் என்பவர்களே அந்த மூன்று சமூகத்தினர் ஆவார்கள். ஒரு சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத்தொடர்புடைய மாநிலச்சட்டசபையிலுள்ள அந்தச் சமூக உறுப்பினர்கள் பேராளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இம்முறையில் அரசியல் நிருணய சபைக்குப் பேராளர்களைத் தேர்வு செய்யும் முறையானது 1946-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் முடிவு பெற்றது. இதில் மொத்தம் 296 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தலைவராக இராசேந்திர பிரசாத்து தேர்ந்தெடுக்கப்பட்டார் (பின்னர் இவர் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்).

இந்தியாவிலிருந்து பாகிசுத்தான் என்ற தனி நாடு 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் பிரிக்கப்பட்டது. பாகிசுத்தான் 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம் நாளில் சுதந்திரம் பெற்ற தனி நாடாகச் செயற்படத் தொடங்கியது. பாகிசுத்தானுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியைத் தவிர்த்து, ஏனைய பகுதியைக் கொண்டு இந்தியா ஒரு சுதந்திர நாடாக அதே ஆகசுட்டு மாதம் 15-ஆம் தேதியிலிருந்து செயற்படத் தொடங்கியது. அவ்வாறு இரு நாடுகளும் சுதந்திரம் அடைவதற்கு 1947-ஆம் ஆண்டுச் சுதந்திரச் சட்டம் (The Indian Independence Act 1947) ஆங்கிலேய நாடாளுமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி, புதிய அரசியல் அமைப்பு உருவாகும் வரை 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டமானது தேவையான மாறுதல்களுடன் சுதந்திர இந்தியாவுக்குச் செயற்படத்தக்கதாக ஆக்கப்பட்டது. பாகிசுத்தான் பிரிவினைக்குப்பின், எஞ்சியுள்ள பகுதிகளுக்குப் பேராளர்களாக இருந்தவர்கள் தொடர்ந்து இந்திய அரசியல் நிருணய சபையில் பணியாற்றினார்கள். மேற் குறிப்பிட்ட அரசியல் நிரு

ணய சபையானது 15.8.1947 – ஆம் நாளிலிருந்து இந்தியச் சட்டசபையாகவும் பணியாற்றியது.

அரசியல் நிருணய சபைக்கு ஆலோசகராகப் பணியாற்றிய பி.என். இராவ் ஒருதன்மையான அரசியல் சட்டத்தை உருவாக்கினார். அதை மறு ஆய்வு செய்வதற்கு அரசியல் நிருணய சபையானது ஒரு முன்வரைவுக் குழுவை (Drafting Committee) அமர்த்தியது. அதற்கு டாக்டர் அம்பேத்கர் தலைவராக அமர்த்தப்பட்டார். அக்குழுவில் பல சட்ட வல்லுநர்கள் இடம் பெற்றார்கள். அக்குழு தனது பணியை 1948–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் முடித்தது. அக்குழு தயாரித்த அரசியலமைப்புச் சட்டத்தை அரசியல் நிருணய சபையானது 1949–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ஆம் நாளன்று ஏற்றுக் கொண்டது. இதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிறந்த வரலாறு ஆகும். இச்சட்டத்தின் சில பிரிவுகள் 26.11.1949–ஆம் நாளில் செயன்முறைக்கு வந்தன. ஏனைய பிரிவுகள் 26.1.1950–ஆம் நாள் செயன்முறைக்கு வந்தன. இந்த அரசியல் அமைப்புச் சட்டம் செயன்முறைக்கு வந்த பின்னர், இவ்வமைப்பின் 395–ஆம் பிரிவின்படி, 1935–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் நீக்கம் செய்யப்பட்டு விட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்நாள் வரை 46 தடவைகள் திருத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிறநாட்டு அரசியல் அமைப்புச் சட்டங்களைவிடக் காலத்தால் பிந்திய அரசியலமைப்புச் சட்டமாகும். இச்சட்டம் இருபதாம் நூற்றாண்டின் நடுவில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாக இருப்பதால், பிறநாட்டு அரசியலமைப்புகளில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள், தடைகள் முதலிய அனுபவங்களின் நன்மை, தீமைகளைக் கருத்தில் கொண்டு இயற்றப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சட்டமாகும். பிறநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படும் சில கருத்துகள், கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவை இந்திய நாட்டு அரசியல்,சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றிக் கையாளப் பெற்றிருக்கின்றன. ஆகையால், இது ஒரு புதுமையான அமைப்பாகத் தோன்றுகிறது. அமெரிக்க நாட்டு அரசியல் சட்டக் கருத்துகளை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஆங்காங்கே எடுத்துக் கையாண்டுள்ளது. அமெரிக்க அரசியல் சட்டக் கோட்பாடுகள் இந்தியாவின் பல்வேறு நிலைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுக் கையாளப்பட்டிருக்கின்றன. அமெரிக்க அரசியல் சட்டத்தில் காணப்படும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இடம்பெற்றுள்ளன. மேலும் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்ற அரசியலமைப்பைத் திருத்தும் முறையும், நாடாளுமன்றத்தின் தனியுரிமைகளும், அதிகாரங்களும், காப்புரிமைகளும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்படவில்லை. ஆனால், நாட்டுப் பாராளுமன்றத்திற்கு இங்கிலாந்தில் என்ன தனியுரிமைகள், அதிகாரங்கள், காப்புரிமைகள் மரபுப்படியும் வழக்காற்று முறைப்படியும் உரியனவோ அவையெல்லாம் இந்தியப் பாராளுமன்றத்திற்கும் உரியனவாக ஆக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்து நாட்டின் அரசியல் சட்ட மரபை அடியொற்றியே இந்திய நாடு தனது அரசியல் சட்டத்தை வகுத்துள்ளது. பாராளுமன்றம் கூடும் கால இடைவெளி போன்ற மரபுகள் எழுதப்பட்டும் மற்றவை எழுதப்படாமலும் பின்பற்றப்படுகின்றன.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற ஆணை அதிகாரங்களைக் கூட (Writ Jurisdiction) இங்கிலாந்து நாட்டு நீதிமன்ற ஆணைகள் அனுப்பும் முறையிலிருந்து தான் இந்தியா பெற்றுள்ளது. கூட்டுறவுக் கூட்டாட்சி (Co-Operative Federalism) ஆசுத்திரேலிய நாட்டு அரசியற் கோட்பாடாகும். சமூகப் பொருளாதார வளர்ச்சியின் ஆதார அறநெறி வழிகாட்டிக் கொள்கைகளாக விளங்கும் அரசின் கொள்கைகள் (Directive Principles of State Policies) அயர்லாந்து நாட்டு அரசியல் சட்ட அமைப்பினின்றும் பெறப்பட்டு, அரசியல் சட்டத்தில் கையாளப்பட்டுள்ளன. நெருக்கடிக்கால அறிவிப்பு அதிகாரங்கள் செருமனி நாட்டு அரசியல் சட்டத்தினின்றும் பெறப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சட்டம் முழுமை பெற்றுச் செயற்படுவதற்கு 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமே வழிகாட்டியாக இருந்தது. அச்சட்டத்தின் சுவடுகள் பல இடங்களில் காணப்படுகின்றன. அச்சட்டம் இந்தியக் கூட்டாட்சித் தத்துவம் நிருவாக முறையில் செயற்படத் தேவையான சட்டக் கருத்துகளை மட்டுமன்றி, மற்றும் பல கருத்துகளையும் இந்திய அரசியல் சட்டத்தின் ஒவ்வொரு விதியிலும் புகுத்தி, இந்திய அரசியல் சட்டம் அமைப்பளவிலும் செயலளவிலும் முழுமை அடையுமாறு உதவியுள்ளது.

பல நாடுகளின் அரசியல் சட்ட அமைப்புகளினின்று பல சட்டக் கொள்கைகளைப் பெற்றுத் தேவைக்குத் தக்கவாறு ஒருங்கிணைத்துக் கொண்டதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்று ஆய்வாளர்கள் கூறுவர். ஆனால், அவர்களின் கூற்றில் உண்மை இல்லை என்பதைக் கற்றவர்கள் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 395 பிரிவுகளையும், 22 அத்தியாயங்களையும், 9 அட்டவணை

களையும் (Schedules) உள்ளடக்கியுள்ளது. உலகத்தில் மிகப்பெரியதும் நீண்டதுமான அரசியல் அமைப்புச் சட்டம் இந்திய அரசியல் சட்டந்தான் என்னும் புகழ் படைத்தது. இதில் ஆட்சி, நிருவாகம் முதலிய அனைத்துச் செய்திகளும் தெளிவாக விளக்கி எழுதப்பட்டு, ஆணைகளைப் பிறப்பிக்கும் முயற்சியும் செய்யப்பட்டமையால்தான், இச்சட்டம் இத்துணை நீண்டு விட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டம் மிகச் சுருங்கியதாக, சில கூறுகளையே தன்னகத்துக் கொண்டு விளங்குகின்றது. ஆயினும், அது கடந்த இருநூறு ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பினும், சில திருத்தங்களையே மேற்கொண்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிட்டன், கனடா ஆகிய அரசியல் அமைப்பு மரபுகள் இரண்டையும் கொண்டது. அவ்விரண்டு அரசியல் அமைப்புகளும் வெவ்வேறு அரசியல் தத்துவங்களின் அடிப்படையில் எழுந்தவை ஆகும். இந்திய அரசியலமைப்பு ஒன்றிய, எழுதப்படாத, நெகிழ்ச்சியுடைய ஆட்சியின் மரபுகளையும், கூட்டாட்சி மரபுகளையும், எழுதப்பட்ட விரைப்பான ஆட்சியின் மரபுகளையும் தன்னிடத்தே கொண்டதாகும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதலாம் பகுதி இந்திய நாட்டின் ஆட்சிப்பரப்பு, பெயர் முதலிய வற்றைப் பற்றிக் கூறுகின்றது. இந்தியா அதாவது 'பாரத்' என்பது பல மாநிலங்களைக்கொண்ட ஒன்றியம் (Union of States) என வருணிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே புதிய மாநிலங்களை உருவாக்கவும், முன்னமே உருவாக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பரப்பைக் கூட்டவும் குறைக்கவும், பெயர்களை மாற்றவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அளவில் அதாவது, மத்தியில் வலுவான அரசு அமைய அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிருவாகம் குடியரசுத் தலைவர் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆலோசனை கூறுவதற்கு மக்களின் பேராளர்களைக் கொண்ட மந்திரிசபை அமைக்கப்படுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

மாநிலங்களுள் சில மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியவை. ஏனைய மாநிலங்களில் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்டு ஓரளவு அதிகாரத்துடன் செயற்படத்தக்க அரசு அமைய வகை செய்யப்பட்டுள்ளது. சட்டமியற்றுவதற்கு மத்திய அளவில் நாடாளுமன்றத்துக்கும், மாநில அளவில் சட்டமன்றத்துக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சில பொருள்கள் குறித்துச் சட்டமியற்ற நாடாளுமன்றத்துக்கு மட்டிலும், சில பொருள்கள் குறித்துச் சட்டமியற்ற சட்ட மன்றத்துக்கு மட்டிலும், சில பொருள்கள் குறித்துச் சட்டமியற்ற இரண்டு மன்றங்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் இரண்டாம் பகுதி குடிமையைப் பற்றிக் கூறுகின்றது. இந்திய அரசியல் சட்டத்தில் 5 முதல் 11 வரையிலுள்ள பிரிவுகள், அதன் தொடக்க நிலையிலிருந்து இன்றுவரை யார் யாரெல்லாம் இந்தியக் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்படலாம் எனக் கூறுகின்றன.

இப்பகுதியின் 5-ஆம் பிரிவில் யார் யாரெல்லாம் குடிமக்களாவர் என்பது கூறப்பட்டுள்ளது. இச்சட்டம் தொடங்கிய காலத்தில் இந்தியாவை வாழ்விடமாகக் (Domicile) கொண்டு கீழ்வரும் நிலையில் இருக்கின்றவர்கள் குடிமக்களாகக் கருதப்படுவார்கள்.

1. இந்தியாவில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. அல்லது அவர்களுடைய பெற்றோர்களுள் யாரேனும் (தாய் அல்லது தந்தை) ஒருவர் இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்.
3. அல்லது இந்திய அரசியல் சட்டம் தொடங்கப்பெற்ற ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் இந்தியாவில் வாழ்ந்து வந்துள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவிலிருந்து பாகிசுத்தான் பிரிந்தது. இரு பகுதிகளிலும் வாழ்ந்த இசுலாமியர்களும் இந்துக்களும் குடிபெயர்ந்து சென்றனர். அதனை ஒழுங்கு செய்யும் பொருட்டு அரசியல் சட்டம் 6-ஆம் பிரிவினை ஏற்படுத்திப் பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வருகின்றவர்களுக்குக் குடியுரிமையளிக்க வழிவகை செய்தது. இப்பிரிவின்படி, பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களின் பெற்றோர்கள் அல்லது பெற்றோர்களின் பெற்றோர்கள் இந்தியாவில் பிறந்திருப்பார்களேயானால், அவ்வாறு வந்தவர்கள் இந்தியக் குடிமக்களாகத் தகுதியுடையவர்களாவார்கள். அவர்கள் 19. 7. 1949-ஆம் நாளுக்குமுன் வந்திருப்பின், அவர்கள் சாதாரணமாக இந்தியாவிலேயே குடியிருப்புப் பெற்று வாழ்ந்து வந்திருக்க வேண்டும். பின்னர்க் குடிபெயர்ந்திருந்தால், அவர்கள் இந்தியக் குடிகளாவதற்குரிய பதிவினைச் செய்திருக்க வேண்டும். அப்பதிவைச் செய்து கொள்வதற்கு முன்னர், அவர்கள் இந்தியாவில் ஆறுமாதங்

கள் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் குடிபெயர்வது, அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இருக்க வேண்டும்; அதற்குப் பின்னால் இருத்தல் கூடாது.

ஒருவரின் பெற்றோர் அல்லது பெற்றோர்களைப் பெற்றவர்களில் யாரேனும் ஒருவர் இந்தியாவிலே சுதந்திரம் பெறுவதற்கு முன்னர்ப் பிறந்து, இந்தியாவிற்கு வெளியில் அதாவது பாகிசுத்தானில் வாழ்ந்து, அங்குள்ள இந்தியத் தூதரகத்தில் குடிமகனாகப் பதிவு செய்துகொண்டிருந்தால், அவர் இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுடையவராவார்.

பாகிசுத்தானுக்குக் குடிபெயர்ந்தவர்களின் குடியுரிமைகள் எவ்வாறு நிறைவுறுகின்றன என்பது 7–ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் இந்தியக் குடிமகனுக்குரிய உரிமைகள் பற்றியன 8–ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளன. ஒருவர் வேறு நாட்டின் குடியுரிமையைத் தன்விருப்பமாகப் பெறுவாராயின், அவர் தம் இந்தியக் குடியுரிமையை 5, 6, 8–ஆம் பிரிவுகளின் பாதுகாப்பிலிருந்து இழந்துவிடுவார் என்று 9–ஆம் பிரிவு கூறுகின்றது. குடியுரிமை தொடர்வது பற்றி 10–ஆம் பிரிவும், பாராளுமன்றச் சட்டப்படி குடியுரிமைகளை முறைப்படுத்துதல் பற்றி 11–ஆம் பிரிவும் கூறுகின்றன.

அடிப்படை உரிமைகள் (Fundamental Rights): பகுதி III–இல் இவை விளக்கப்பட்டிருக்கின்றன. "அரசாங்க அமைப்பின் ஆணிவேராக உரிமைகள் விளங்குகின்றன. அர்சாங்கத்தின் அதிகாரச் செயற்பாட்டிற்கு ஓர் அறப்பண்பை அவை அளிக்கின்றன.அதனோடு, நல்வாழ்வுக்கு இன்றியமையாதனவாக இருப்பவை என்ற முறையில் அவற்றை இயற்கையுரிமைகள் என்றும் கொள்ளலாம்". ஒரு நாட்டின் அரசியல் சட்டத்தில் உரிமைகள் இடம்பெற்றுவிட்டால் அவற்றை யாரும் மீறமுடியாது. அரசாங்கம், மக்கள் என்ற இரு பிரிவினரும் அவற்றைச் சிறப்பாகக் கருதுவர். ஒவ்வொரு குடிமகனும் அடிப்படையாக உள்ள உரிமைகளை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

அடிப்படை உரிமைகள் தவிர, வேறு சில உரிமைகளும் அரசியல் சட்டத்தில் உண்டு. அவற்றை நிலைநாட்டுவதற்கு நீதிமன்ற உதவியை நாட இயலாது என்றாலும், அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள காரணத்தால் அவற்றுக்கும் சிறப்பிடம் ஏற்படுகின்றது. அவற்றைப் புறக்கணிக்க முடியாது. இந்த உரிமைகள் மக்களின் அறிவை விரிவுபடுத்தி அவர்கள் சிறந்த குடிமக்களாக ஆவதற்குப் பயிற்சியளிக்கின்றன.

அடிப்படை உரிமைகளை உறுதி செய்திருப்பதால் அரசு அதிகாரத்திற்கு வரம்பு ஏற்படுகிறது. அரசோ சட்ட சபையோ வல்லாட்சிமுறையை மேற்கொள்ளாதபடி தடுப்பதே இதன் நோக்கம். இதன் பயனாக ஒருவர் தங்குதடையின்றி முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆயினும், அடிப்படை உரிமைகள் வரன்முறை யற்றவை அல்ல. தனி ஒருவரின் நலனை மட்டும் அன்றி, எல்லோருடைய உரிமைகளையும் சமுதாயத்தின் நலனையும், அரசாங்கத்தின் நலனையும், சமூகம் திட்டமிட்டு முன்னேறுவதையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவிற்கு அடிப்படை உரிமைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியும். இதையும் அரசியல் சட்டம் நிருணயித்திருக்கிறது.

அரசியல் சட்டத்தின் மூன்றாம் பகுதியில் இடம்பெற்றுள்ள இந்த அடிப்படை உரிமைகள் விரிவானவை. இவ்வுரிமைகளுக்கு முரணாகவோ இவற்றைப் பறிக்கும் விதத்திலோ குறைக்கும் விதத்திலோ இயற்றப்படும் சட்டங்கள் எவையும் செல்லுபடியாக மாட்டா. அரசியல் சட்டமே விதித்துள்ள வரையறைகள் தவிர, வேறு எந்த விதத்திலும் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த முடியாது. மக்கள் ஆட்சியின் மிகச் சிறந்த நன்மைகளை ஒவ்வொரு குடிமகனுக்கும் இந்திய அரசியல் சட்டம் வழங்குகிறது. வாழ்க்கைக்குப் பொருளும் வளப்பமும் வழங்குகின்ற அடிப்படை உரிமைகளை அது மக்களுக்கு அளித்திருக்கிறது.

அடுத்து வரும் III-ஆம் பகுதியில் 12 முதல் 35 வரையிலுள்ள பிரிவுகளில் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் அட்டவணைப்படுத்தப்பட்டு, விளக்கப் பெற்று நிறுவப்பட்டுள்ளன. இதில் சமயம், இனம், சாதி, பால், பிறப்பிடம் என்னும் காரணங்களுக்காகக் குடிமக்களிடையே வேறுபாடுகள் தோன்றக் கூடா என்பது கூறப்பட்டுள்ளது; பொதுத்தொழில் அல்லது வேலைவாய்ப்புகளில் சம வாய்ப்பு அளித்தல், பேச்சு, கூட்டம், கலை, இடப்பெயர்ச்சி, சொத்து, தொழில் என்பன பறறிய அடிப்படைச் சுதந்திரங்களைப் பற்றி ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உறுதியளித்தல் காணப்படுகிறது.

இந்திய அரசியல் சட்டம் சட்ட அடிப்படையான சமத்துவம் அனைவருக்கும் வழங்கப்படவேண்டும் என எண்ணி, அதன் 14–ஆம் பிரிவு, இந்தியாவில் சட்டத்தின் முன்பு சமமாக நடந்து கொள்வதற்கும் நடத்தப்படுவதற்கும் அளிக்கப்பட்டுள்ள சம உரிமை யாருக்கும் மறுக்கப்படக்கூடாது என்று கூறுகின்றது.

அரசியல் சட்டம் அனைவரையும் ஒத்த நிலையில் கருதவேண்டும் என்றும், ஒரே தன்மையாக

நடத்த வேண்டுமென்றும் கூறினாலும் நாட்டில் ஒரு சில அடிப்படைக் காரணங்களின் பேரில் ஒருதன்மை யான போக்கும் நோக்கமும் சமுதாயத்தில் நிலவு கின்றன என்பதை அறிந்து, அவ்வடிப்படையில் குடி மக்கள் வேறுபாட்டுடனும், ஒருதலை அன்புடனும் நடத்தப்படக்கூடாது என்பதை வெளிப்படையாக வும் கூறுகின்றது. அரசியல் சட்டப்படி, குடிமக்கள் யாவரும் சமயம், இனம், சாதி, பாலினம், பிறப் பிடம் ஆகியவற்றால் ஒத்தநிலையினராவர்; ஆத லின், மேற்கூறப்பட்டவற்றை அடிப்படையாக வைத்து அரசு ஒருதலை அன்புடன் யாரையும் நடத் தக்கூடாது என்று 15-ஆம் பிரிவு தெளிவாகக் கூறு கிறது.

அரசியல் சட்டம் 16-ஆம் பிரிவு பொதுப்பணி களில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டு மெனவும், இந்தியாவில் எப்பகுதியில் வாழ்ந்து வரு பவர்களுக்கும் வேலைவாய்ப்புகளில் அரசு சமவாய்ப்பு வழங்க மறுக்கக்கூடாது எனவும் கூறுகிறது.

குடிமக்களிடையே நிலவுகின்ற வேற்றுமைகளை யும் உயர்வு தாழ்வுகளையும் உருவாக்கும் எல்லாப் பட்டங்களையும் விருதுகளையும் அரசியல் சட்டத் தின் சமத்துவ நோக்கங்களுக்கு எதிரானது எனக் கருதி, அவற்றை அரசு யாருக்கும் வழங்கக்கூடாது என்று 18-ஆம் பிரிவு கூறுகின்றது.

மத, இன, சாதி, பால், பிறப்பிடம் காரணமாக வேறுபாடு காட்டாமை, பொதுப்பணிகளைப் பெறு வதற்குச் சமவாய்ப்பு, பேச்சு-எழுததுச் சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை, சங்கம் சேரும் சுதந்திரம், கல்வி-பண்பாட்டு உரிமைகள் என்பன போன்ற அடிப் படை உரிமைகள் இந்தியக் குடிகளுக்கு மட்டுமே உறுதியளிக்கப்பட்டிருக்கின்றன. இவை நீங்கலாக உள்ள அடிப்படை உரிமைகள் இந்தியப் பகுதியில் வாழும் அயலார்களுக்கும் கூட உண்டு.

ஒரு வகை அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மீறினால் அதற்குரிய தீர்வு அரசியல் சட்டத் திலேயே நிருணயிக்கப்பட்டிருக்கிறது. மற்றொருவகை அடிப்படை உரிமைகளைத் தனிப்பட்டோர் மீறினால் நாட்டின் சாதாரணச் சட்டங்கள் மூலமே அதற்குத் தீர்வு தேடலாம். சட்டத்தின்முன் சமத்துவம், மதம், இனம் போன்ற காரணங்களால் வேறுபாடு காட் டாமை; அலுவல் பெறச் சம வாய்ப்பு; பட்டங்களை ஒழித்தல்; பேச்சு-எழுத்துச் சுதந்திரம்; குற்ற விசார ணைத் தொடர்பான பாதுகாப்பு; தனிப்பட்டவர் சுதந் திரத்துக்கும் உயிருக்கும் பாதுகாப்பு; கைது செய்வது அல்லது காவலில் வைக்கப்படுவது தொடர்பான பாது காப்பு; சொத்துரிமை முதலியவை முதல் வகையைச் சேர்ந்த அடிப்படை உரிமைகள். கடைகள், கிணறுகள், தேசிய நெடுஞ்சாலைகள் முதலியவற்றைப் பயன் படுத்துவது தொடர்பாக மக்களிடையே வேறுபாடு காட்டுதல், தீண்டாமை, உடல் வேறுபாடு, கட்டாயப் படுத்தி வேலை வாங்குதல் முதலியவற்றைத் தடுக்கும் அடிப்படை உரிமைகள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை.

அடிப்படை உரிமைகளைக் கீழ்க்காணுமாறு பிரிக்க கலாம். அவையாவன:

(1) சட்டத்தின் முன்னிலையில் சமத்துவம்,

(2) சம வாய்ப்பு,

(3) தீண்டாமை ஒழிப்பு.

(4) பேச்சு எழுத்து, சங்கம் சேர்தல், விருப்ப மான தொழில் செய்தல் முதலிய சுதந் திரங்கள்.

(5) உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு.

(6) சுரண்டலை எதிர்க்கும் உரிமை.

(7) எந்த மதத்தையும் பின்பற்றவும் தழுவவும் பரப்பவும் சுதந்திரம்.

(8) கல்வி, பண்பாட்டு உரிமைகள்.

(9) சொத்துரிமை.

(10) குறைகளுக்கு அரசியல் சட்ட வழியாகத் தீர்வு காணும் உரிமை.

19-ஆம் பிரிவு ஆறுவகையான சுதந்திரங்களை இந்தியக்குடிமகன் ஒவ்வொருவனுக்கும் உறுதிப்பட வழங்குகின்றது. அவையாவன:

1. பேச்சையும் எண்ணங்களையும் வெளியிடும் உரிமை.
2. படைக்கலமின்றி அமைதியாகக் கூடுவதற் குரிய உரிமை.
3. கழகங்களும் அமைப்புகளும் அமைப்பதற் குரிய உரிமை.
4. இந்தியா முழுவதும் சென்று வருவதற்குரிய உரிமை.
5. இந்தியாவின் எந்தப் பகுதியிலாவது சென்று உறைவதற்குரிய உரிமை.
6. எந்தத் தொழிலையும் வணிகத்தினையும் செய்வதற்குரிய உரிமைகள்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 20-ஆம் பிரிவு, அரசு தான் விரும்பியபடி யாரையும் கைது செய்வதிலிருந்தும் அவர்களுக்கு அளவுக்கு அதிக

மான தண்டனையளிக்கும் போக்கிலிருந்தும் அனைவரையும் பாதுகாக்கின்றது.

உயிர்வாழ உரிமையும் தன்னுரிமையும் பற்றி 21-ஆம் பிரிவு கூறுகிறது. இப்பிரிவின்படி ஒரு மனிதனின் உயிரையும் தன்னுரிமையையும் இழக்கும்படி அரசு செய்யுமானால், அது அவ்வாறு செய்வதற்கு ஏற்பட்ட சட்டமுறைகளைப் பின்பற்றித்தான் செய்யமுடியும்; வேறு வழியில் முடியாது.

அரசியல் சட்டம் 22-ஆம் பிரிவு, கைதுசெய்யப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் ஏன் கைது செய்யப்பட்டான் என்பதற்குரிய காரணங்களை உரிய காலத்திற்குள் அறிவிப்புச் செய்யவேண்டும் என்று கூறுகின்றது.

மக்களை முறைகேடான பணிகளுக்காக விற்பனைப்பொருளாகப் பயன்படுத்தும் வணிக நோக்கச் செயல்களையும், மனிதர்களைக் கொத்தடிமைகளாகவும் பரம்பரை அடிமைகளாகவும் நடத்தும் முறையையும் தடை செய்கின்றது அரசியல் சட்டத்தின் 23-ஆம் பிரிவு.

அரசியல் சட்டம் 24-ஆம் பிரிவு 14 வயதிற்குட்பட்ட இளம் சிறுவர்களை உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றில் பணிக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.

பொது அமைதி, ஒழுங்கு, சுகாதாரம், அறநெறி ஆகியவற்றுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் உட்பட்டு, அனைவரும் தங்கள் உளநெறிக்கு உகந்ததெனப்படும் சமய நம்பிக்கையைக் கொள்ளவும், சுதந்திரமாக அதைப் பின்பற்றவும், மற்றவர்களுக்கு அதன் உண்மையை உணர்த்திப் பரப்பவும், அரசியல் சட்ட உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள் என்று 25-ஆம் பிரிவு கூறுகிறது.

அரசியல் சட்டம் 26-ஆம் பிரிவு பொது அமைதி, ஒழுங்கு முதலியவற்றின் நலனுக்குட்பட்டுப் பின்வரும் உரிமைகளைப் பெற்றுள்ளது எனக் கூறுகிறது. அவையாவன:

1. ஒவ்வொரு சமயமும் அதற்கென நிறுவனங்களையும் அதற்குரிய அறநோக்கங்களையும் ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை பெற்றிருத்தல்.
2. சமயத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேலாண்மை செய்து கொள்ளும் உரிமை பெற்றிருத்தல்.
3. அசையும் சொத்துகளையும், அசையாச் சொத்துகளையும் சேர்த்துக் கொள்ளவும் அவற்றை உரிமையாக்கிக் கொள்ளவும் உரிமை பெற்றிருத்தல்.
4. அவ்வாறு சேர்த்துச் சமயக் கூடங்களுக்கு உரிமையாக்கிக் கொண்ட சொத்துகளைச் சட்டங்கள் கட்டுப்படுத்தும் முறையில் நிருவகித்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருத்தல்.

சமயச் சார்பற்ற அரசியலமைப்பில் பொது நிதியைச் சமய வளர்ச்சிக்காகப் பயன்படுத்தக் கூடாது. எச்சமயமாயினும் உட்பிரிவாயினும் அரசின் வரிப்பணத்தைச் செலவு செய்யக்கூடாது. எந்தச் சமயமும் அதன் உட்பிரிவும் வரி விதித்து, அவ்வரியின் வருவாயைச் சமய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செலவு செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் எந்த ஒரு குடிமகனையும் வரிப்பணம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்துதல் கூடாது என்று 27-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசின் நிதியுதவியை முழுமையாகப் பெற்றுக் கல்வித்தொண்டு புரியும் நிறுவனங்களில் மத போதனை செய்யக்கூடாது. அரசினால் நிருவகிக்கப்பட்டு வரும் கல்விக்கூடமாக இருப்பினும், அது அறக்கட்டளை அல்லது அறவாரியத்தின் கீழ்த்தோற்றுவிக்கப்பட்டுச் சமய போதனை செய்யவேண்டுமென்ற நிலையில் சமயத் தொடர்பான பாடங்கள் போதிக்கப்படுமாயின், அக்கல்விக் கூடங்கள் அரசியல் சட்டத்திற்கு முரணாகக் கருதப்படமாட்டா என்று 28-ஆம் பிரிவு கூறுகின்றது.

சிறுபான்மையினரின் உரிமைகளை அரசியல் சட்டம் 29-ஆம் பிரிவு கூறுகின்றது. சிறுபான்மையினர் இந்தியாவில் எப்பகுதியில் வாழ்பவராக இருந்தபோதிலும், தனிமொழி ஒன்றை அல்லது எழுத்து முறையை அல்லது தனிப்பண்பாடு ஒன்றைப் பெற்றிருக்கும் அச்சமூகத்தினர் அம்மொழி, எழுத்து, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் அரசியல் சட்ட உரிமையைப் பெற்றுள்ளார்கள். அரசு அதன் கல்விக் கூடங்களிலும் அரசினால் உதவி பெற்று நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்களிலும் எந்தவொரு குடிமகனும் சமயம், இனம், சாதி, மொழி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றினால் கல்வி பெறும் வாய்ப்பை இழக்க முடியாதபடி அரசியல் சட்டம் கல்வி, பண்பாட்டுரிமைகளை வழங்கியுள்ளது.

மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறுபான்மையினராக இருப்பவர்கள் கல்விக் கூடங்களை ஏற்படுத்தி, அவற்றை நிருவகித்துக் கொள்ளக் கூடிய உரிமையும்; அக்கல்வி நிறுவனங்களுக்குச் சிறுபான்மையினர் கல்விக்கூடங்களென வேறுபாடு

காட்டி அரசு நிதி உதவி வழங்குதலில் வேறுபாடு காட்டக்கூடாது என்று 30-ஆம் பிரிவு கூறுகிறது.

31-ஆம் பிரிவு 44-ஆம் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பெற்று அப்பிரிவில் கூறப்பட்ட சொத்து களைச் சேர்த்தல், அனுபவித்தல், அவற்றை விற்றல் ஆகிய உரிமைகள் 300-A என்ற புதிய பிரிவில் இணைக்கப்பட்டுள்ளன.

நீதி மறுஆய்வு அதிகாரத்தினால் நிலச் சீர் திருத்தச் சட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை மனத்தில் கொண்டு, அரசியல் சட்டத்தைத் தகுந்த வழியில் திருத்த முயற்சி செய்யப்பட்டது. அதன் பயனாக 31A, 31B பிரிவுகள் அரசியல் அமைப்பில் புதியதாகச் சேர்க்கப் பட்டன.

அரசியல் சட்டப்படியான தீர்வுகள்: மக்கள் அரசியல் சட்டப்படியான தீர்வுகளைப் பெறு வது தொடர்பான ஏற்பாட்டை நமது அரசியல் சட்டத்தின் உயிர்நாடி என்று காலஞ்சென்ற அறிஞர் அம்பேத்கர் குறிப்பிட்டார். சட்டப்படியாக உறுதி அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் உரிமைகள் தாம் உண்மையான உரிமைகள். அடிப்படை உரிமை களைக் காத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு குடிமக னும் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற் றின் தலையீட்டை நாடமுடியும். இந்த உரிமை களைப் பாதுகாக்கும் 'பொது' அதிகாரம், உச்சநீதி மன்றத்துக்கும் (Supreme Court) உயர்நீதி மன்றத் துக்கும் (High Court) வழங்கப்பட்டிருக்கிறது. தவிர, நீதிப் பேராணைகளைப் பிறப்பித்து, குறிப்பிட்ட தீர்வு களை அளிப்பதற்கும் உச்சநீதிமன்றத்துக்கு அதி காரம் உண்டு. சட்டமுறையின்றிக் காவலில் வைக் கப்படும் ஒருவருக்குத் தீர்வுஅளிக்கிறது 'ஆட்கொணர் விக்கும் நீதிப்பேராணை' காவற் கைதியை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு காவலில் வைத்தவருக்கு அது கட்டளை இடுகிறது. காவ லுக்குப் போதிய காரணம் இல்லையெனில் கைதியை உடனே விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் ஆணை யிடும்.

அரசியல் சட்டத்திலேயே இந்தப் 'பேராணை கள்' அதிகாரத்தைச் சேர்த்திருப்பது தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது. முன்பெல் லாம் இத்தகைய பேராணைகளின் அதிகாரத்தைச் சட்டசபை விருப்பம்போல் நீக்குதல் செய்ய முடிந் தது. ஆனால், இப்போது நாட்டின் அடிப்படைச் சட்டமாகிய அரசியல் சட்டத்திலேயே அது இடம் பெற்றுவிட்டது. அதனால் அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இந்த அதிகாரத்தை மாற்ற முடியாது. எனினும், எந்த நீதிமன்றமும் தனது அதிகார வரம் புக்குள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் பாராளுமன்றம் அனுமதிக்க முடியும். 'நெருக்கடி நிலைமை' அறிவிப்புச் செய்யப்பட்ட வேளையில் தவிர மற்றப்படி, அரசியல் சட்டப்படியான தீர்வு கள் தேடும் உரிமையை நிறுத்தி வைக்க முடியாது. நெருக்கடி நிலையில் கூட, நாடு முழுவதிலும் இந்த உரிமையை நிறுத்தி வைக்க வேண்டியதில்லை. தவிர, இவ்வாறு நிறுத்தி வைக்கும் அதிகாரத்திற்கும் வரம்பு உண்டு. அதாவது, இந்திய யூனியனின் நிரு வாக அதிகாரி இந்த உரிமையை நிறுத்தி வைப்ப தற்குப் பிறப்பிக்கும் ஆணை பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும். அதை ஏற்றுக்கொள்ளப் பாராளுமன்றம் மறுக்கலாம். தவிர, 'நெருக்கடிக் காலம்' முடிந்தவுடன் உரிமைகள் மீண்டும் அமலுக்கு வந்துவிடும்.

நீதிப்பேராணைகள் (Writs): குறிப்பிட்ட ஒன்றைச் செய்யுமாறோ செய்யாதிருக்குமாறோ ஒருவருக்கு எழுத்து மூலம் உத்தரவிடும் உயர்நீதி மன்ற, உச்ச நீதிமன்ற ஆணைதான் நீதிப்பேராணை என்பதாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 225-ஆம் பிரிவின்படி இந்திய உயர்நீதிமன்றங்கள் இவ் வாணை பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த லாம். உச்ச நீதிமன்றமும் 32-ஆம் பிரிவின்படி இந்தப் பேராணையை வழங்கலாம். அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட அல்லது பறிபோன ஒருவர் இவ் வாணை அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம். சிறப்பாக இந்த நீதிப்பேராணைகள் நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணைகள் (Writ of Certiorari), ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus), தடையுறுத்தும் நீதிப்பேராணை, (Writ of Prohibition), செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus), தகுதி முறை வினவும் நீதிப் பேராணை (Writ of Quo warranto) என நீதிப் பேராணைகள் ஐந்து வகைப்படும். இவ்வாணை களைக் கொண்டு பாதிக்கப்பட்ட அல் லது பறிக்கப்பட்ட உரிமைகளை உயர்நீதிமன்றத் தின் மூலம் நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

தம் விருப்பத்திற்கு எதிராகச் சிறைப்படுத்தப் பட்டவரை நீதிமன்றத்தின்முன் கொண்டுவந்து, சிறைப்படுத்தியதற்கான காரணத்தை விளக்கும்படி சிறைப்படுத்தியவருக்கு இடப்படும் ஆணையே ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணையாகும். 'கேபியசு கார்ப்பசு' என்ற சொல்லுக்கு உடம்பைக் கொண்டு வா (Bring the Body) என்பது பொருள். ஒருவரை

மற்றொருவர் சிறைப்பிடித்து வைத்திருந்தால், முன்னவரை, சிறைப்படுத்தியவர் நீதிமன்றத்தின் முன்னர்க் கொண்டுவந்து காட்டி, என்ன காரணங்களுக்காகச் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றார் என்பதை நீதிமன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும். சிறைப்படுத்தியிருப்பதற்கான காரணம் பொருத்தமற்றதாக இருந்தால் நீதிமன்றம் அவரை விடுவிக்கும். அவ்வாறு விடுவிக்கச் செலுத்தப்படும் நீதிப்பேராணையே ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை எனப்படும். இந்த நீதிப்பேராணையை நடைமுறைப்படுத்துவதில் குறித்தவகை வழக்குகளில் பின்பற்றப்படும் குறுகிய சுருக்கமான நடைமுறையான குறுகு நடைமுறை (Summary Procedure) பின்பற்றப்படும். இப்பேராணை குற்றமிழைத்தவரைத் தண்டிப்பதில்லை. முறையின்றிச் சிறைப்பிடிக்கப்பட்டவரைச் சிறைப்பிடித்தோரின் பிடியிலிருத்தி நீதிமன்றம் வெளிக்கொண்டு வந்துவிடுகிறது. இந்த நீதிப்பேராணை தவறு இழைக்கும் அரசாங்கத்திற்கும் தனிப்பட்டவர்களுக்கும் எதிராகவும் செலுத்தப்படும்.

சிறையில் இருப்பவர் சார்பில் அவருடைய உறவினரோ நண்பரோ அவரை விடுவிக்கக்கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம். அவ்வாறு செய்யும்போது, சிறையில் இருப்பவர் விண்ணப்பஞ் செய்ய இயலாமைக்குரிய காரணங்களைக் கூறவேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களின் சட்டமுறையிலமைந்த காப்பாளர்களே இந்த நீதிப்பேராணைக்காக விண்ணப்பம் செய்யலாம். அவர் அவ்வாறு விண்ணப்பம் செய்ய இயலாதவராக இருந்தால், குழந்தையின் உறவினர்கள் உரிய காரணங்களுடன் விண்ணப்பம் செய்யலாம்.

இந்த நீதிப்பேராணை பற்றிய விண்ணப்பம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கின் தகுதிகள் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டு தள்ளப்பட்டுவிட்டால், அதே காரணங்களுக்கான ஆதாரத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர இயலாது. மேல்முறையீடு மட்டுமே உண்டு. ஆனால், ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையைப் பொறுத்தவரை இந்த விதி ஏற்புடையதாக இல்லை என்று குலாம் சார்வார் எதிர் இந்திய யூனியன் (AIR 1967 S.C. 1335) என்ற வழக்கில், மறுதீர்ப்புத் தடை ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணைகள் எழும் வழக்கில் பொருந்தாது என்றும் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கும் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு அதே வழக்கிற்கான ஆதாரத்தின் அடிப்படையில் வழக்குத் தொடரலாம் என்றும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சட்டத்திற்கு மாறாக, அரசாங்கத்தைத் தவிர வேறு ஒருவரால் ஒருவர் சிறைப்படுத்தப்பட்டாலோ பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தாலோ, உச்சநீதிமன்றத்தின்முன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32-ஆம் பிரிவின்கீழ் நேராக விண்ணப்பம் செய்து ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை கேட்க இயலாது. ஒருவர் சட்டப்படி பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தாலோ சட்டப்படி தண்டிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்தாலோ, இந்த நீதிப்பேராணை எழாது. வழக்குத் தொடரப்பட்ட தேதியில் உள்ள நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நீதிப்பேராணை வழங்கப்படுவதன்று; நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும் தேதியில் உள்ள நிலையைக் கருத்திற் கொண்டே கொடுக்கப்படுவதாகும்.

ஒரு சட்டம் நிருவாக முறையில் செயற்படுத்தப்படும்பொழுது ஏற்படும் குறைகளை நிறைவு செய்து கொள்ளும் தீர்வழியினை அச்சட்டத்தில் குறிப்பிடின், பாதிக்கப்பட்டவர் அவைகளை நாடியே குறைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டுமேயன்றி, 226-ஆம் பிரிவுன்கீழ் தீர்வழியினைத் தேடலாகாது. இவ்வகையில் உயர்நீதிமன்றத்தை நாடினால், அது ஆணை பிறப்பிக்கத் தயங்கவே செய்யும்.

உயர்நீதிமன்றம் இராணுவ நீதிமன்றங்களின் தீர்ப்பு நடவடிக்கைகளில் காணப்படும் ஒருசில நடைமுறை ஒழுங்கீனங்களைப் பற்றிக் கண்டுகொள்ளாது. ஆயினும், இராணுவ நீதிமன்றத்தின் அதிகார ஆட்சி எல்லைகள் வரம்பு மீறாமலிருக்கின்றனவா என்று முறையிட்டுக்கொண்ட இவ்வாணையின் வேண்டுகோளினை விசாரணை செய்யலாம்.

செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus): பொதுக் கடமைக்கேற்பச் சட்டப்படி செய்யப்படவேண்டிய ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு அரசாங்கத்திற்கோ நீதிமன்றத்திற்கோ அல்லது கூட்டு நிறுவனங்களுக்கோ பொது அதிகாரமுடையவருக்கோ இடப்படும் ஆணைதான் செயலுறுத்தும் நீதிப்பேராணை ஆகும்.

நீதிமன்றமோ தீர்ப்பாயமோ கூட்டு நிறுவனமோ நிருவாகத்துறை முகவர் நிலையோ அல்லது தனிப்பட்டவரோ சட்டப்படி ஒரு குறிப்பிட்ட கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தவறினால், நீதிமன்றங்கள் செயலுறுத்தும் நீதிப்பேராணையைச் செலுத்தி அக்கடமையை நிறைவேற்றலாம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 32-ஆம் பிரிவில் கண்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு ஊறு நேர்ந்தபோது உச்ச நீதிமன்றமும், 226-இன் பிரிவுப்

படி அடிப்படை உரிமைகளுக்கு ஊறு நேர்ந்தபொழுதும் சட்டப்படியான உரிமைகளுக்கு ஊறு நேர்ந்த பொழுதும் உயர்நீதிமன்றங்களும், இந்தியாவில் இந்தச் செயலுறுத்தும் நீதிப்பேராணையைச் செலுத்தும் அதிகாரம் பெற்றுள்ளன. நீதி மறுக்கப்பட்டபோதும், நீதி வழங்குவதில் காலம் தாழ்த்தப்பட்டபோதும், பாதிக்கப்பட்டவர் வேறு தீர்வு இல்லாத போதும்செயலுறுத்தும் நீதிப்பேராணை மூலமாக நீதிபெறமுடியும்.

தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition): கீழ் நீதிமன்றம் அல்லது ஆட்சி அதிகாரி, தம் அதிகார வரம்பை மீறியோ நாட்டின் பொதுச் சட்ட முறைக்கு முரணாகவோ, குறித்த ஒரு நடவடிக்கையை எடுக்காதவாறு அவைகளைத் தடை செய்யும் ஆணையே தடையுறுத்தும் நீதிப்பேராணை யாகும்.

இயற்கை நீதியை மீறிச் செயற்படுவதை இது தடைசெய்கிறது.

நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை (Writ of Certiorari): சட்டத்தை அல்லது அதிகார வரம்பினைப் பின்பற்றுவதில் தவறு ஏதேனுமிருக்குமானால், அதை மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்கென அந்த நடவடிக்கை ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு கீழ் நீதிமன்றத்திற்கோ தீர்ப்பாயத்திற்கோ இடப்படும் ஆணை.

இந்த ஆணை கீழ்நிலை நீதிமன்றத்தின் விசாரணையிலிருக்கின்ற வழக்கை மேல் நீதிமன்றத்திற்கு நடவடிக்கைகளுக்குரிய அனைத்து ஆவணங்களுடனும் அனுப்பி வைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப் பயன்படுத்தப்படும். கீழ்நிலை நீதிமன்றங்கள் தங்களின் ஆட்சி, அதிகார எல்லையை மீறித் தவறான வழிகளில் ஆதிக்கம் செலுத்திவிடாமலிருப்பதற்காக இவ்வாணை பயன்படுத்தப்படுகிறது. கீழ்நிலை நீதிமன்றம் ஆட்சியெல்லையை மீறி அல்லது இயற்கை நீதியை மீறிச் செயற்பட்டுத் தீர்ப்பு வழங்கியபின்னர்க்கூட இவ்வாணை பிறப்பித்தலால் அத்தீர்ப்பினை நீக்குதல் செய்யலாம். இவ்வாணையினை நீதிவழங்கும் மன்றங்களைப்போல் செயற்படும் அமைப்புக்களுக்கெதிராகவும் பிறப்பிக்கலாம். சட்ட அதிகாரமற்ற பொது அமைப்புகளுக்கும் நிருவாக அமைப்புகளுக்கும் இவ்வாணை அனுப்பப்படமாட்டாது. சட்டசபைக்கெதிராக இவ்வாணை அனுப்பப் படமாட்டாது. உரிமை பாதிக்கப்பட்டவர் இவ்வாணையை உயர்நீதிமன்றம் பிறப்பிக்கும்படி வேண்டிக் கொள்வார். இவ்வாணையை உச்ச நீதிமன்றம் உயர்நீதிமன்றம் தவறாக வழங்கிய தீர்ப்பை நீக்குவதற்காக அனுப்ப இயலாது.

சட்ட அதிகார எல்லைக்குட்படாமை, அதிகார வரம்பு கடந்த மிகையளவு, அதிகாரவரம்பைத் தவறான வகையில் பயன்படுத்துதல், அதிகார வரம்பில்லாமை, போலித் தோற்றமளிக்கும் வகையில் அதிகார வரம்பைப் பயன்படுத்துதல், அரசியலமைப்புச் சட்டத்தில் தனிப்பட்டவருக்கும் குடிமக்களுக்கும் உறுதி அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறியமை, இயற்கை நீதியைப் புறக்கணித்தமை, மோசடிக்குற்றம், ஆவணத்தைப் பார்த்த உடனேயே எளிதில் உணரத்தக்க வகையில் சட்டம் பிழைபட்ட நிலைமை முதலிய காரணங்களுக்காக இந்த நீதிப் பேராணை செலுத்தப்படும்.

இந்த நீதிப் பேராணையைச் செலுத்துகையில் உச்ச நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களாகச் செயற்படுவதில்லை; மாறாகக் கண்காணிப்பு நீதிமன்றங்களாகவே செயற்படுகின்றன.

பாதிக்கப்பட்ட எவரும் கீழ் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், நிருவாக முறை நீதிமன்றங்கள். முதலியவைகளின் தீர்ப்புகள் மீது நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை செலுத்தக் கோரலாம்.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo warranto): பொது அதிகாரப் பதவி அல்லது பொது உரிமை அல்லது சுதந்திரம் இவற்றில் ஒன்றை உடையவரிடம் அல்லது கைப்பற்றியிருப்பவரிடம் அவர் எந்த உரிமையின் அடிப்படையில் அந்த உரிமையைக் கொண்டாடுகிறார் என்று வினவும் ஆணைதான் தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகும்.

இவ்வாணையின்மூலம் பதவி ஏற்றுக்கொண்ட ஒருவரை அவருக்கு அப்பதவியை ஏற்றுச் செயற்பட என்ன அதிகாரம் உளது என நீதிமன்றத்தின்மூலம் வினவலாம். இதன் மூலம் பதவி ஏற்றுச் செயற்படும் ஒருவரை அவருக்கு அப்பதவியில் நீடிப்பதற்கு அதிகாரம் கிடையாது என்று அறிவிக்கவும், அவ்வலுவலரின் பதவி காலியாக இருக்கின்றது என அறிவிக்கவும் செய்யலாம். இவ்வாணை மூலம் அவர் அலுவல் செய்வதற்குத் தடை விதிக்க முடிகின்றது. இதனால் பொது அலுவல் செய்வதற்குத் தடை விதிக்க முடிகின்றது. இவ்வாணையை பொது அலுவல் தொடர்புடையவர்களுக்கு மட்டுமே அனுப்ப முடியும். தனியார் பள்ளி மேலாண்மைக்குழு அல்லது நிருவாகக் குழுக்களுக்கு அனுப்ப முடியாது. இவ்வாணை மூலம் ஆட்சித்துறை, சட்ட அதிகாரம் பெற்ற பதவிகளுக்குப் பணியமர்த்தம் செய்வதைக் கட்டுப்படுத்த முடியும். இந்த நீதிப்பேராணையைச் செலுத்துவது இன்னல் கொடுக்கக்கூடியதாகவோ பயனற்றதொன்றா

கவோ இருக்கும் என்று நீதிமன்றம் கருதினால், இந்த நீதிப்பேராணையைச் செலுத்த மறுத்துவிடும்.

மக்களின் அடிப்படை உரிமைகள் நிலைநிறுத்தப் படுவதற்கும் ஆட்சித் துறைகளில் நீதிமுறையினை நிலவச் செய்வதற்கும் உரிய அதிகாரமும் பொறுப்பும் உச்ச நீதிமன்றத்தையும் உயர்நீதிமன்றங்களையும் சார்ந்துள்ளன. மேலே கூறப்பட்ட நீதிப்பேராணை களைப் பிறப்பித்து, நீதிமன்றங்கள் இக்கடமைகளை நிறைவேற்றுகின்றன. நீதிமுறையும் அறமுறையும் இதனால் நிலைநிறுத்தப்படுகின்றன.

அரசை நெறி செய்யும் நியதிகள் (அல்லது) நெறிகள் (Directive Principles of State Policy): இந்திய அரசியல் சட்டம் தனது 4-ஆம் பகுதியில் நெறிப் படுத்தும் விதிமுறைகளை அரசுக்கு வழங்கி யுள்ளது. இந்த விதிமுறைகள் 36-ஆம் பிரிவிலிருந்து 51-ஆம் பிரிவுவரை உள்ள பகுதியில் கூறப்பட்டிருக் கின்றன.

மாநில அரசுக் கொள்கை பற்றிய நெறிப்படுத் தும் விதிமுறைகள் என்ற பகுதி இந்திய அரசியல் சட்டத்துக்குத் தனிச்சிறப்பு அளிக்கிறது. இந்த நெறிப்படுத்தும் விதிமுறைகள் அயர்லாந்து நாட்டின் அரசியல் சட்டத்தினை அடியொற்றியவையாகும். அயர்லாந்துக் குடியரசைத் தவிர, வேறு எந்த நாட் டின் அரசியல் சட்டத்திலும் இத்தகைய அரசை நெறி செய்யும் விதிமுறைகள் இடம்பெறவில்லை. மாநிலச் சட்டசபைக்கும் அரசுக்கும் வழிகாட்டும் நெறிமுறைகள் இவை. மாநிலச் சட்டசபையும் அரசும் இந்த நெறிமுறைகளுக்குஏற்ற முறையில் தங் கள் அதிகாரங்களைச் செலுத்தவேண்டும். இந் நெறிமுறைகளைச் செயற்படுத்துமாறு நீதிமன்றங் கள் கட்டளையிட முடியாது. ஆயினும், இவற்றை நீதி மன்றங்கள் அடியோடு புறக்கணிக்கவும் முடியாது. மாநிலக் கொள்கைக்கு ஆதாரமாகஇருக்கும் நெறிகள் இவை. அரசு சட்டங்களை இயற்றும்போது இக்கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அரசியல் சட்டம் விதிக்கிறது. சமதருமச் சமுதாயத் தைத் தனது குறிக்கோளாக இந்தியா இப்போது கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் அரசியல் சட்ட நெறி செய்யும் ஒழுங்குமுறைகளின் முக்கியத்துவம் மிகுகின்றது. அடிப்படை உரிமைகள் கூட இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன் படுதல் இன்றியமையாதன என்று தலைமை அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

'அரசாங்கம்' என்ற சொல்லிற்கு இரு பொருள் உண்டு. ஒரு பொருளின்படி இந்தியஅரசையும் பாராளுமன்றத்தையும், மாநில அரசினையும்மாநிலச் சட்டசபையையும் அது குறிக்கிறது. மற்றொரு விரிவான பொருளின்படி அது கிராமப் பஞ்சாயத்து களையும், மாவட்டக் கழகங்களையும் உள்ளாட்சிக் கழகங்களையும் குறிக்கும்.

அரசியல், பொருளாதாரம் என்ற இரு துறை களிலும் மக்களாட்சி நிலவவேண்டும். அப்போது தான் அது பயனுள்ள உண்மையான மக்களாட்சி யாக இருக்கும். அதாவது, 'எல்லோரும் ஒரு நிலை' என்ற நிலைமை ஏற்படவேண்டும். இந்த நிலை மையை ஏற்படுத்துவதற்குக் குறிப்பிட்ட வழி எதை யும் அரசியல் அமைப்புச் சட்டம் நிருணயிக்கவில்லை; எனினும், குடியரசுப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும் என்று அது வலியுறுத்தியிருக்கிறது. காலஞ் சென்ற டாக்டர். அம்பேத்கர் கூறியது போல, (சந்தர்ப்பங்கள்) சூழ்நிலைகள் எவ்வளவு கேடாக இருந்தபோதிலும் இந்தக் கொள்கையை நிறை வேற்றுவதற்கு அரசு எப்பொழுதும் முயற்சி செய்ய வேண்டும்.

மக்களுக்குப் பொருளாதார, சமூகப் பாதுகாப்பு அளிப்பதற்காக அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளை அரசியல் சட்டம் குறிப்பிட்டிருக் கிறது. அவற்றுள் இன்றியமையாதன சில பின்வரு வன: (1) போதிய வாழ்க்கை வசதி, (2) நியாய மான செல்வம் பலரிடமுமிருத்தல்,(3)சமவேலைக்குச் சம ஊதியம், (4) தொழிலாளர் நலனையும் குழந் தைகளின் நலனையும் பாதுகாத்தல், (5) வேலை வாய்ப்பு, (6) 14-வயதுவரை குழந்தைகளுக்குக் கட் டாய இலவசக்கல்வி, (7) வேலையின்மை, முதுமை, நோய், ஊனமுற்றல் போன்ற காரணங்களால் துன் புறுவோருக்கு அரசாங்க உதவி, (8) வாழ்க்கைக்குப் போதிய ஊதியம், (9) கண்ணியமான வாழ்க்கைத் தரம், ஓய்வு நேரத்தை முழுமையாக அனுபவிக்கும் வசதி, சமூக- பண்பாட்டு வசதிகள் ஆகியவற்றுக்கு ஏற்ற வேலைச் சூழ்நிலைகளை ஏற்படுத்துதல், (10) மக்களின் நலனையும் நல்வழியையும் உயர்த்துதல்.

பழங்குடியினர், ஆதிவாசிகள் போன்ற பின் தங்கிய மக்களின் கல்வி, பொருளாதார நலன் களைப் பேணுவதை அரசியல் சட்டத்தின் தத்துவப் பிரிவு சிறப்பாக வலியுறுத்தி இருக்கிறது. இந்தியா வின் முற்போக்குவாதிகள் நெடுங்காலமாகக் கோரி வந்த வேறு செய்திகளும் இவ்வழிகாட்டி விதிமுறை களில் அடங்கியுள்ளன. அவற்றுள் சில பின்வருவன: (1) கிராமப் பஞ்சாயத்துகளை நிறுவுதல், (2) அனைத்துக் குடிமக்களுக்கும் ஒரே தன்மையான உரிமையியல் சட்டத் தொகுப்பு, (3) மதுவிலக்கு, (4) வேளாண்மையையும் கால்நடைச் செல்வத்தை

யும் வளர்த்தல் - பசுக்கள், கன்றுகள், பால்தரும் ஏனைய கால்நடைகள், உழைப்புக் கால்நடைகள் ஆகியவற்றின் வதையைத் தடுத்தல், (5) நினைவுச் சின்னங்களையும் தேசிய முதன்மைத் தன்மை வாய்ந்த சின்னங்களையும் பாதுகாத்தல், (6) நீதி நிருவாகப் பிரிவுகளைத் தனித்தனியே பிரித்தல்.

பாரதம் எப்பொழுதுமே உன்னதமான அற நெறிக்கோட்பாடுகளைப் பின்பற்றி உலக சமாதா னத்தைப் பேணி வந்திருக்கிறது. அரசியல் சட்டத் தத்துவங்கள் இப்பண்பை உறுதி செய்கின்றன. உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் வளர்ப்பதற் கும், நாடுகளிடையே ஒழுங்கான கண்ணியம் நிறைந்த உறவு நிலவுவதற்கும், சர்வதேசச் சட்டம், நாடுகளிடையே ஒப்பந்தங்கள் ஆகியவற்றை மதித்து நடப்பதற்கும், சர்வதேசத் தகராறுகளை நடுவர் முறையில் தீர்ப்பதற்கும் இந்தியாவின் அயல் நாட் டுக் கொள்கை பாகுபாடுபடவேண்டும் என்று விதி முறைகள் குறிப்பிடுகின்றன.

அரசு கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை ஏற் படுத்தி, அவை தன்னாட்சி அமைப்புகளாகச் செயற் படுவதற்குத் தேவையான அதிகாரங்களை வழங்கு தல் பற்றி 40-ஆம் பிரிவு கூறுகிறது. அரசு தனது பொருளாதாரத் திறமைக்கும் தன்மைக்கும் உட் பட்டு அனைத்துக் குடிமக்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கவும் கல்வியளிக்கவும் வேண்டுமென்றும், வேலையில்லாத் திண்டாட்டக் காலத்திலும் மக்க ளின் வயதான காலத்திலும் அவர்கள் நோய்வாய்ப் பட்ட காலத்திலும் இயலாத நிலையிலும் உதவி அளித்துக் காத்தல் வேண்டுமென்றும் 41-ஆம் பிரிவு கூறுகிறது.

பெண்களின் தாய்மைப் பேறு காலத்தில் அவர் களுக்கு வேண்டிய விதி முறைப்பட்ட ஓய்வும் ஊதி யமும் கிடைக்கும் வகையில் அரசு சட்டங்களை இயற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று 42-ஆம் பிரிவு கூறுகிறது.

அரசு தகுந்த சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அல்லது பொருளாதார வளர்ச்சி நிறுவனங்களை அமைத்து அல்லது வேறு எவ்வழியையாவது அமைத்து, வேளாண்மையிலும் வேறு துறைகளிலு முள்ள எல்லா உழைப்பாளர்களும் வாழ்வதற்குரிய ஊதியத்தை அளித்துக் காப்பாற்ற முயலவேண்டும். ஓய்வுமிகுந்த முழுவேலை வாய்ப்பளித்து அவர்கள் சமூகப் பண்பாட்டு வாய்ப்புகளைப் பெறவும் வழி வகைகள் செய்யப்படவேண்டும். குறிப்பாக, அரசு குடிசைத் தொழில்களைத் தனி ஆள் அடிப்படையில் அல்லது கூட்டுறவு அடிப்படையில் கிராமப்புறங் களில் அமைத்து, வளர்ச்சி பெறும் வகையினைக் கையாளவேண்டும் என்று 43-ஆம் பிரிவு கூறுகின்றது.

தொழிற்சாலைகளின் மேலாண்மை நடைமுறை களில் தொழிலாளர்களும் பங்குபெறும் வகையில் அந்நிறுவனங்களின் விதிமுறைகள் சட்டப்படி திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று 43-ஆம் பிரிவு கூறுகிறது.

இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பு ஒன்றை ஏற்படுத்தி, இந்தியக் குடிமக்களுக்கு அளிக்க முயல வேண்டும் என்று 44-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசியல் சட்டம் செயற்படத் தொடங்கிய காலத்திலிருந்து 10 ஆண்டுக்குள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க முயலவேண்டும் என்று 45-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு, சமூகத்தில் பின்தங்கிய மக்களின் கல்வி, பொருளாதார நிலைகளில் தனி அக்கறை செலுத்த வேண்டும். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மலைவாழ்மக்கள் ஆகியவர்களின் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தி, அவர்களை மற்றச் சமுதாய மக்களின் நீதியற்ற முறைகளிலிருந்து காக்கவேண்டும் என்று 46-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு பொதுமக்களின் உணவூட்டத்தை உயர்த்தி, நலத்துடன் வாழ்வதற்கு வழிசெய்யவேண் டும். முதல் கடமையாக மருத்துவக் காரணங்களுக் கும் வாசனைத் திரவிய ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புக்கும் தவிர, மற்ற வழிகளில் போதைப் பொருள்களையும் உடல் நலத்திற்கு ஊறு விளை விக்கும் மருந்து வகைகளையும் சட்டத்தின் வாயிலா கத் தடைசெய்ய வகை செய்ய வேண்டும் என்று 47-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு வேளாண்மை, கால்நடைப் பராமரிப்புப் போன்ற தொழில்களைப் புதிய அடிப்படையிலும் அறிவியலடிப்படையிலும் அமைக்க வேண்டும். குறிப் பாக, இனம்பெருக்கும் கால்நடைகளை வளர்ச்சியடை யச் செய்யவும், பசு வதையைத் தடுத்து நிறுத்தவும், பால் வழங்கும் ஆநிரைகளையும், சுமை மாடுகளை யும் கொல்லுவதைத் தடுக்கவும் தகுந்த நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்று 48-ஆம்பிரிவு கூறுகின் றது. தேசிய முதன்மை வாய்ந்த கலைப் பொருள்கள், காட்சிப் பொருள்கள், பழமைப் பொருள்கள், வர லாற்றுச் சிறப்புடைய சின்னங்கள் என்று பாராளு

மன்றச் சட்டத்தால் அறிவிக்கப்பட்ட சின்னங்களை அழிக்காமலும் உருக்குலைக்காமலும், திருடிச் செல்லவொட்டாமலும், வெளிநாட்டிற்குக் கடத்திச் செல்லவொட்டாமலும் பாதுகாக்கும் பணியைச் செய்யவேண்டும் என்று 49-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு, பொது ஆட்சித்துறைப் பணிகளில் நீதி நிருவாகத்தை ஆட்சிப் பணியிலிருந்து இயன்றவரை பிரித்துச் செயற்படுமாறு முயற்சிகள் செய்யவேண்டும் என்று 50-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு உலக நாடுகளிடையே அமைதியையும் பாது காப்பையும் பாதுகாத்துப் பேணுமாறு நடவடிக்கை எடுக்கவேண்டும்; பலநாட்டு உறவுகளில் நேர்மையைக் கடைப்பிடிக்கவேண்டும்; அரசியல் நிலையில் நல்ல அமைப்புகளை அமைத்துச் செயற்படுகின்ற பிற நாட்டு மக்களுடன் உறவுகொள்ளும்பொழுது, சர்வ தேசச் சட்டத்திற்கு மதிப்புத்தந்து, சர்வதேச உறவு அடிப்படையில் செய்து கொண்ட ஒப்பந்தங்களை யும் மதித்து நடந்து, உறவைச் செம்மைப்படுத்த முயலவேண்டும்; சர்வதேச நாடுகளிடையே ஏற் படும் பிணக்குகளை இந்திய அரசு நடுவர்களுடைய தீர்ப்பின்பேரில் தீர்த்துக்கொள்வதற்கு முயலுதல் வேண்டும் என்றும் 51-ஆம் பிரிவு கூறுகின்றது.

பகுதி IV A, 42-ஆம் திருத்தச் சட்டத்தினால் 1976-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. அடிப்படைக் கடமைகளாக (Fundamental Duties) பத்துக் கட மைகளை 51-A பிரிவு கூறுகின்றது.

இப்பிரிவில் கூறப்பட்டுள்ள பத்து அடிப்படைக் கடமைகள்: (அ) இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுச் செயற்படவும் அதன் நோக்கங்களையும், அதன்படி உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகளையும் தேசிய கொடியையும், தேசிய பாடலையும் மதிக்கவும்;

(ஆ) நமது தேசிய விடுதலைப் போராட்டத் துக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ள புனிதமான கொள்கைகளைப் போற்றவும் பின்பற்றவும்;

(இ) இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் ஒப்புயர்வற்ற தன்மையையும் நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும்;

(ஈ) நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுப் பாது காப்பின் பொருட்டு அழைக்கப்படும்போது நாட் டுக்குச் சேவை செய்ய முன்வரவும்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், அல்லது குறு கிய பிரிவுகளைக் கடந்து, இந்திய மக்களிடையே உடன்பிறப்புத் தத்துவத்தையும் ஒன்றுபட்ட உணர் வையும் ஏற்படுத்தவும், மகளிர் கண்ணியத்தைக் களங்கப்படுத்தும் பழக்க வழக்கங்களைத் தவிர்க்க வும்;

(ஊ) விலைமதிப்பற்றதும் பல்வகைப்பட்டதும் தொன்றுதொட்டு வருவதுமான நம் பண்பாடு களை மதிக்கவும் காக்கவும்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டு விலங் குகள் மற்ற உயிரினங்கள் உட்பட உள்ள இயற்கைச் சுற்றுச்சார்புகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் உயிரினங்களிடத்தில் அன்பு செலுத்தவும்;

(ஏ) அறிவியல் அணுகுமுறை, மனிதாபிமானம், ஆய்வு ஊக்கம், சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்க் கவும் பாதுகாக்கவும்;

(ஐ) பொதுச் சொத்துகளைப் பாதுகாக்கவும், வன்முறை கண்டு அஞ்சி விலகவும்;

(ஒ) முன்னேற்றப் பாதையில் நாடு முனைந்து வெற்றிபெறத் துறைகள் அனைத்திலும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சிறப்புடைய முயற்சி செய்யவும் ஆவன செய்யவும் முன்வருதலைத் தமது கடமையாகக் கொள்ள வேண்டும்.

## இந்தியக் குடியரசுத் தலைவர் (The President of India):

இந்தியக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக் கும் முறை: குடியரசுத் தலைவர் தேர்தல் முறை இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. அரசியல் அமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு இரு அடிப்படைக் கொள்கைகளை வகுத்துள்ளது. ஒன்று, நாட்டின்அனைத்து மாநிலங்களுக்கும் இயன்ற வரை ஒரே சீரான பேராள் தன்மை கொடுப்பதன் மூலம் அனைத்து மாநிலங்களும் ஒரே மாதிரியான தகுதியைப் பெற்றிருக்கின்றன என்பதைக் கூறுவது. மற்றொன்று, அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே சமத்துவநிலையை ஏற்படுத்தி நெருக்கமானதும் சிறப்பானதுமான உணர்வினை வளர்ப்பது.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் மாநிலச் சட்டசபைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் ஒரு தேர்வுக் குழுவாக அமை கிறார்கள். இந்தக் குழு குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. விகிதப்படியமைந்த பிரதிநிதித் துவ முறையில், ஒற்றை மாற்று ஓட்டு மூலம் தேர் தல் நடைபெறுகிறது. நாடாளுமன்ற ஆட்சி முறை யில் குடியரசுத் தலைவருக்கு நேரடி நிருவாகப் பொறுப்புகள் இல்லை. அதனால் அவரை மக்கள் நேரடியாக,தேர்ந்தெடுப்பது தேவை இல்லை என்று எண்ணப்பட்டது. தவிர, வயது வந்த வாக்களிக்க

வல்ல அனைத்துக் குடிமக்களும் கலந்து கொள்வதற்கு ஏற்ற தேர்தல் முறையை வகுப்பது கடினமான செயலாகும்.

மாநிலங்களுக்கிடையே ஒரே சீரான பிரதிநிதித்துவ அளவைப் பெறுவதற்கு, மாநிலச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள், மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையைச் சட்டசபை உறுப்பினர்கள் எண்ணிக்கையால் வகுத்தால், வரும் ஈவை 1000-த்தால் வகுத்தால் என்ன கிடைக்கிறதோ, அத்தனை வாக்குகளைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போடலாம். மிகுதி உள்ளது 500க்கு அல்லது அதற்குமேல் இருந்தால் இன்னும் ஒரு வாக்குக் கிடைக்கும்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் மாநில நாடாளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவர், எத்தனை வாக்குகளை அளிக்கலாம் என்பதைக் கணக்கிடப் பின்வரும் எடுத்துக்காட்டு உதவும்:– உத்தரப் பிரதேச மாநிலத்தின் மக்கள்தொகை 632 இலட்சம். உ.பி. நாடாளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 430 என்று வைத்துக் கொண்டால், மக்கள் தொகையை (அதாவது 632 இலட்சத்தை)உறுப்பினர் தொகையால்(அதாவது430–ஆல்) முதலில் வகுக்க வேண்டும். இவ்வாறு வகுத்தலில் 1,46,976 ஈவு வருகிறது.இந்த ஈவை மீண்டும் ஆயிரத்தால் வகுக்க வேண்டும். இவ்வாறு வகுத்தலில் 147 ஈவு வரும் (146–ம் மீதமும் துல்லியமான ஈவு அந்த மீதம் 500–க்கு மேல் இருப்பதால் அதை 1-ஆக எண்ணி, 147 என்று கொள்ளலாம்). அதாவது ஒவ்வோர் உறுப்பினரும் 147 வாக்குகளை அளிக்கலாம்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் எத்தனை வாக்குகள் அளிக்கலாம் என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. மாநிலச் சட்டசபைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கும் ஓட்டுகளின் தொகையை, நாடாளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இருசபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்க வேண்டும்.இவ்வாறு வரும் ஈவே நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவருக்கு உரிய வாக்குகளின் தொகை. (இவ்வாறு வகுப்பதில் பாதிக்குமேல் வரும் பின்னங்களை 1–ஆகக் கொள்ளலாம். பாதிக்குக் குறைவாக வரும் பின்னங்களை விட்டுவிடலாம்).

விகிதப் பிரதிநிதித்துவம்: (Proportional Representation)அரசியல் அமைப்புச் சட்டம் 55 (3) உட்பிரிவின்படி விகிதப்பிரதிநிதித்துவ ஒழுங்குமுறையில் ஒற்றை மாற்று வாக்குமூலம் குடியரசுத் தலைவர் தேர்தல் அமைய வேண்டும்.

விகிதப் பிரதிநிதித்துவ முறையைக் கடைப்பிடிப்பதினால் அனைத்துக் கட்சிகளுக்கும்,அனைத்து அரசியல் எண்ணங்கள் அல்லது கொள்கைகளுக்கும், வாக்காளர்களுக்கிடையே அவரவருக்குள்ள பலத்தின் அல்லது ஆதரவின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட அவையில் இடம் கிடைக்கும் விகிதப் பிரதிநிதித்துவ முறையின் மிகச் சிறந்த சிறப்புக்கூறு, ஒற்றை மாற்று வாக்குமுறையாகும்.

**சில அடிப்படைத் தகுதிகள்:** இந்தியக் குடியரசுத் தலைவராக வருவதற்குச் சில அடிப்படைத் தகுதிகளை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துள்ளது (பிரிவு 58) அவையாவன.

1. அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்;
2. 35 வயது நிறைவு பெற்றவராக இருக் வேண்டும்;
3. மக்கள் சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தக்க தகுதி இருக்க வேண்டும்.

மேலும், மத்திய அரசு, மாநில அரசு, அல்லது இவற்றின் கட்டுப்பாட்டுக்குள் செயற்பட்டு வரும் உள்ளூராட்சியமைப்புகள் ஆகியவற்றில் ஊதியம் பெறும் பணி எதையும் செய்து கொண்டிருப்பவராக இருக்கக் கூடாது.

**பதவிக் காலம்:** பதவிப் பிரமாணம் எடுத்துப் பதவியில் பொறுப்பேற்ற நாளிலிருந்து 5 ஆண்டுக் காலத்திற்குக்குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பதவி வகிக்கலாம். அவருடைய பதவிக் காலம் முடியுமுன் பதவி விலகக் குடியரசுத் தலைவர் தீர்மானித்தால்,குடியரசுத் துணைத் தலைவருக்குத் தம் கைப்பட விலகுதல் கடிதம் எழுதி, குடியரசுத் தலைர் பதவியிலிருந்து விலகலாம். அவ்வாறு பதவி விலகிய செய்தி குடியரசுத் துணைத்தலைவரால் நாடாளுமன்ற மக்கள் சபைத் தலைவருக்கு (Speaker) உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும். குடியரசுத் தலைவர் பதவிக் காலம் முடியும்முன் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 61–ஆம் பிரிவின்படி, துரோகக் குற்றம் சாட்டப்பட்டுப் (Impeachment) பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதவிக் காலம் முடிந்த பின்னரும், அடுத்துவரும் குடியரசுத் தலைவர் பதவி ஏற்கும் காலம் வரை பழைய குடியரசுத் தலைவர் பதவியில் இருக்கலாம்.

குடியரசுத் தலைவர் தம் தொடர்ந்த உடல் நலப் பாதிப்பினாலும் பதவி விலகலாம்; அல்லது

அமைச்சரவைக்கும் குடியரசுத் தலைவருக்கும் நல்ல உறவு இல்லையெனில், தம் பதவியினின்றும் விலகி அரசியல் நெருக்கடி ஏற்படாமல் தவிர்க்கலாம். குடியரசுத் தலைவர் மீது குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தால், தாமாகவே பதவி விலகிக் கொள்ளலாம். மேலும், குடியரசுத் தலைவர் தம் பதவி விலகலை, தேவைப்படும் பொழுது அமைச்சரவைக்கு எதிராகப் பயன்படுத்தும் ஒரு கருவியாகவும் குடியரசுத் தலைவர் செயற்படுத்தலாம்.

ஊதியம்: குடியரசுத் தலைவர் இலவசமான உறையுள் வசதியும், வேறு பல ஊதியங்களையும் சில தனி உரிமைகளையும் பாராளுமன்றச் சட்டங்களினால் தீர்மானிக்கப்பட்டுப் பெறுவார். (பிரிவு 59 (3)) அவரது அலுவல் கால இடைவெளியில் அவர் ஊதியமும் மற்ற சலுகைகளும் குறைக்கப்படமாட்டா.

சிறப்பு உரிமைகள்: இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, அப்பதவியின் சிறப்பிற்காக உரிய சிறப்பும் சலுகைகளும் உரிமைகளும் சட்டப்படி கொடுக்கப்பட்டுள்ளன. குடியரசுத் தலைவரைப் பதவி விலக்கம் செய்யும் முறையைத் (Impeachment) தவிர, அலுவல் முறையில் செய்த எச்செயலுக்காகவும், அவர்மேல் வழக்கோ நீதி விசாரணையோ செய்ய முடியாது (பிரிவு 361). நீதிமன்றங்கள் கொடுக்கும் உத்தரவுகளுக்கோ ஆணைகளுக்கோ குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவர் அல்லர். அவர் பதவிக் காலத்தில் யாரும் அவர்மீது வழக்குப் போட முடியாது. எந்த நீதி மன்றத்திற்கும் அப்படிப்பட்ட வழக்குகளை அனுமதிக்க அதிகாரம் இல்லை. அவரைக் கைது செய்யவோ சிறையில் அடைக்கவோ சட்டம் இடம் கொடுக்கவில்லை. குடியரசுத் தலைவர் தனிப்பட்ட முறையில் குற்றம் செய்யினும் அவர் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது. அவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்மாயின், பாதிக்கப்பட்டவர் முன்னறிவிப்பை இரண்டு மாதத்திற்கு முன்பே எழுத்து மூலம் கொடுத்து, நடவடிக்கையின் தன்மை, காரணம், விளக்கம், நடவடிக்கை எடுப்பவரின் வாழ்விடம், வேண்டிக் கொண்ட இழப்பீட்டுத் தொகை போன்றவற்றைக் குறிப்பிட வேண்டும். உரிமையியல் வழக்கில், குடியரசுத் தலைவரின் செயல்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று, தனிப்பட்ட முறையில் உரிமையியல் சட்ட உரிமைச் செயல்களில் பங்கு கொள்வது, மற்றொன்று, தம் பதவி வழித் தொடர்பின் மூலம் உரிமையியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது. இரண்டாம் வகையில் அவருக்கு முழுக்காப்புரிமை அளிக்கப்படுகின்றது. எந்த நீதிமன்றமும் அவர்மேல் நடவடிக்கை எடுக்க முடியாது. முதலாம் வகை உரிமைச் சிக்கலில் குடியரசுத் தலைவருக்கு முழுக் காப்புரிமை கிடையாது. பகுதிக் காப்புரிமை மட்டுமே அளிக்கப்படும். இந்த வகை வழக்குகள் தொடருமுன் இரண்டு மாதம் முன்னதாகவே அவருக்கு அறிவிப்பு அளிக்கப்பட வேண்டும்.

குற்ற விசாரணை: குடியரசுத் தலைவர் அரசியலமைப்பிற்கு உண்மையாக நடந்து கொள்வதாக உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டாலும், அவர் அரசியலமைப்பிற்கு எதிராக நடந்து கொண்டாலோ அரசியலமைப்பு விதிகளை மீறினாலோ அக்குற்றத்திற்காக அவருக்குத் தண்டனை வழங்கவும் இந்திய அரசியலமைப்பு வழி செய்கிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 61-ஆம் பிரிவு, குற்றச்சாட்டைத் தொடங்குவதற்கான செயல்முறைகளை வரையறை செய்துள்ளது. அவை பின்வருவன:-

(1) குற்றச்சாட்டுத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் மக்கள் சபையிலோ, மாநிலங்களின் மேலவையிலோ எதிலும் கொண்டு வரலாம்.

(2) எச்சபையில் கொண்டு வரப்படுகிறதோ அச்சபையின் நான்கில் ஒரு பகுதிக்குக் குறையாத உறுப்பினர்கள், 14 நாட்கள் முன்னறிவிப்புடன் தீர்மானத்தில் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

(3) அத்தகைய தீர்மானங்கள், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்.

(4) எந்தச் சபையில் குற்றச்சாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ அச்சபை விசாரணையை மேற்கொள்ளக் கூடாது. தீர்மானங்கள் கொண்டு வரப்படாத சபை குற்றச்சாட்டுகளைப் பரிசீலனை செய்ய ஒரு தீர்ப்பாயத்தினை அமர்த்தலாம், அல்லது ஒரு தனி நீதிமன்றத்தை ஏற்படுத்தி விசாரணை செய்யலாம். குற்றச்சாட்டு விசாரணைக் காலத்தில் தொடர்ந்து குடியரசுத் தலைவர் பதவி வகிப்பார்.

(5) விசாரணையை நடத்தும் அவை அல்லது விசாரணைக்கு அனுப்பிவைக்கும் அவை தன் மொத்த உறுப்பினர்களின் 3-இல் 2-பங்கு உறுப்பினர்கள் குற்றச்சாட்டு உண்மை என்று முடிவு செய்த பிறகு (அல்லது மெய்ப்பிக்கப்பட்ட பிறகு), குற்றச்சாட்டை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.

(6) இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதற்குக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து விலக்கும் ஆற்றல் வந்துவிடுகிறது. குடியரசுத் தலைவரைப் பதவி விலக்கம் செய்ததாகச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், அதற்கு மேல் வேறு தனி உத்தரவுகளுக்கு இடமில்லை. குடியரசுத்

தலைவர் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கப் படுவார்.

அதிகாரங்கள்: இந்தியக் குடியரசின் தலைவர் என்ற முறையில் மற்ற எல்லா அலுவலர்களுக்கும் மேலாக அரசில் முதலிடம் பெறுகிறார் குடியரசுத் தலைவர். இந்திய அரசின் தீர்மானங்களைச் செயற் படுத்தும் செயற்குழுவின் தலைவர் என்ற முறையி லும், முப்படைகளின் தளபதி என்ற முறையிலும், நேரிடையாகவோ அவர்க்குக்கீழ் உள்ள அதிகாரிகள் மூலமாகவோ அவர் செயற்படலாம். இவ்வாறான அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர் தம்விருப்பமாக எச்செயலினையும் செய்ய முடி யாது. அரசியல் அமைப்பு விதிகளின்படிதான் அவர் செயலாற்ற வேண்டும். தீர்மானங்களை நிறைவேற் றும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உண்டு. ஆகவே அவரே நேரிடையாகச் செய்ய வேண் டும் அல்லது தமக்குக்கீழே உள்ள அலுவலர்களைக் கொண்டு செய்ய வேண்டும். குடியரசுத் தலைவருக் குக் கீழ் உள்ள அலுவலர்களைத் தவிர வேறு எவரும் அரசு செயல்களைச் செய்யமுடியாது.

குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை நாடாளு மன்றம் குறைக்கவோ கூட்டவோ மாற்றி அமைக் கவோ அரசியல் அமைப்பில் திருத்தங்கள் கொண்டு வராமல், சட்டம் செய்ய முடியாது (பிரிவு 53). ஆனால், அரசியலமைப்பின்படி நாடாளுமன்றம் குடி யரசுத் தலைவருடைய கடமைகளை, மற்ற அலுவ லர்களுக்குச் சட்டத்தின் மூலம் செயலாக்க அதிகாரம் கொடுத்திருக்கிறது. பிரிவு 53 (3)-இன் கீழ் நாடாளு மன்றம் குடியரசுத் தலைவருடைய கடமைகளை, மற்ற அலுவலர்களுக்குச் சட்டமூலம். செயலாக்க அதிகாரம் வழங்கியிருக்கிறது. இந்திய அரசைச் செயற்படுத்தும் அதிகாரத்தைக் (Executive Powers) குடியரசுத் தலைவரிடமிருந்து குறைக்கவோ எடுக் கவோ அரசியல் சட்டத்தில் இடம் இல்லை.

செயற்குழு அதிகாரங்கள் (Executive Powers):

நிருவாகத்துறை அதிகாரங்கள்: (Administrative Powers) சட்டங்களை நிறை வேற்றி நடைமுறைப் படுத்துவது, அன்றாட அரசாங்க நிருவாகத்தைக் கவனிப்பது தொடர்பானதாகும்.

இராணுவ அதிகாரங்கள் (Military Powers): இராணுவ அமைப்பைக் குறித்தும் போர் நடத்தும் விதத்தையும் பற்றியது.

சட்ட மன்றத்துறை அதிகாரங்கள் (Legislative Powers): சட்ட முன் வரைவுகளைத் தயாரிப் பதும் அவற்றைச் சட்டமாக்க உத்தரவு பிறப்பிப் பதும் பறறியவை.

வெளிநாட்டு உறவுகள் பற்றிய அதிகாரங்கள் (Diplomatic Powers): வெளிநாடுகளின் உறவு தொடர்பான செய்திகள்.

நீதித்துறை அதிகாரங்கள் (Judicial Powers): குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளித்தல், தண்டனை யைக்குறைத்தல் (Pardon), மரண தண்டனையைத் தள்ளி வைத்தல் (Reprieves) தொடர்புடையவை.

வேலை கொடுக்கும் அதிகாரம் (The Power of Appointment): இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் படி குடியரசுத் தலைவர் தாம், பிரதமரையும், அமைச்சர்களையும், இந்தியக் குடியரசின் தலைமை வழக்கறிஞரையும், தலைமைத் தணிக்கை அதிகாரி யையும், தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி யையும் மற்ற நீதிபதிகளையும், மாநில உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகளையும் ஆளுநர்களையும் பதவிகளுக்கு நியமனம் செய்கிறார். நீதிபதி கள் பணி அமர்த்தங்களில் குடியரசுத் தலைவ ரிடமிருந்து உத்தரவு வந்தாலும், உண்மை யில் உள்நாட்டுத் துறை அமைச்சரே இந்தப் பணி அமர்த்தங்களைச் செய்கிறார். தேர்தல் குழுக் கள், நிதிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரையும், அட்டவணைப் பகுதிகளின் நிருவாகம், பழங்குடியின ரின் நலன், சமூக-கல்வித் துறைகளில் பின்தங்கிய வகுப்பினர்களின் நிலைமை ஆகியவற்றைப் பற்றி விசாரிக்கும் குழுக்களையும் குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார்.

சட்டம் இயற்றும் துறையின் அதிகாரம்: சட்டம் இயற்றும் துறையில் குடியரசுத் தலைவரின் அதி காரங்கள் பின்வருவன: நாடாளுமன்றக் கூட்டம் முடிவு செய்யப்பட்ட பிறகு உள்ள இடைக் காலத் தில் அவசரச் சட்டங்களை – ஆணைச் சட்டங்களை அவர் பிறப்பிக்கலாம். அந்தமான், நிக்கோபார்த்தீவு கள், இட்சத் தீவுகள், மினிக்காய், அமினித் தீவுகள் என்ற 'யூனியன் பிரதேசங்களின்' அமைதி, முன் னேற்றம், நல்லாட்சிக்கான ஒழுங்குமுறை விதிகளை அவர் இயற்றலாம். நிதித் தொடர்பான சட்ட முன் வரைவுகள் தவிர மற்ற சட்டமுன் வரைவுகளை மறு ஆலோசனை செய்யுமாறு நாடாளுமன்றத்திற்கு அவர் திருப்பி அனுப்பலாம். நாடாளுமன்றத்தின் இருசபைகளை அல்லது ஒரு சபையைக் கூட்டலாம்; கூட்டத்தை நிறைவு செய்யலாம், மக்கள்சபையைக் கலைக்கலாம், இரு சபைகளையும் கூடக் கலைக்க லாம், இரு சபைகளில் எதற்கும் செய்தி அனுப்ப

லாம், ஒரு சபையின் கூட்டத்தில் அல்லது இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தலாம். குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் நிதி எதையும் நாடாளுமன்றம் செலவு செய்ய முடியாது. நிதி மசோதாக்களை அல்லது நிதித் தொடர்பான பிரிவுகள் அடங்கிய சட்ட முன் வரைவுகளை அவர் இசைவு இல்லாமல் நாடாளுமன்றத்தில் முன் மொழிய முடியாது.

நெருக்கடிக் கால அதிகாரங்கள்: போர் அல்லது கலக நெருக்கடிக் காலத்தில் விரிவான அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் செலுத்துவதற்கு அரசியல் சட்டம் வழி செய்திருக்கிறது. மூன்று வகையான அறிவிப்புகளைக் குடியரசுத் தலைவர் பிறப்பிக்க முடியும். முதலாவதாக, போர் அல்லது அயலார் படையெடுப்பு அல்லது உள்நாட்டுக் கலகம் காரணமாக இந்தியாவின் அல்லது அதன் ஒரு பகுதியின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டால், குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலைமையை அறிவித்து, அறிவிப்பு ஒன்றை வெளியிடலாம். சில சமயங்களில் போர் அல்லது படையெடுப்பு அல்லது உள்நாட்டுக் கலகம் ஆகியவற்றை முன்கூட்டியே எதிர்பார்த்தும் இத்தகைய அறிவிப்பை அவர் பிறப்பிக்கலாம்.

எனினும், இவ்வாறு அறிவிப்புச் செய்யக் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரமானது நாடாளுமன்றத்திற்கு உட்பட்டதே. நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு சபையிலும் இவ்வறிவிப்பு முன்வைக்கப்பட வேண்டும். இரண்டுமாத காலத்திற்குள் நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் உடன்பாட்டை அது பெற வேண்டும். இல்லையெனில் இரண்டு மாதத்துடன் அந்த அறிவிப்பின் ஆயுள் முடிந்துவிடும். இவ்விதமான அறிவிப்பு மக்கள் சபை கலைக்கப்பட்ட பிறகு செய்யலாம்; அல்லது அறிவிப்புச் செய்து 2 மாத காலத்திற்குள் மக்கள் சபையைக் கலைத்துவிடலாம். இந்தத் தருணத்தில் மாநிலங்களின் அவை (Rajya Sabha) அறிவிப்புத் தொடங்கிய முதல் 2 மாதத்திற்குள் அது நீடிக்கத் தீர்மானிக்க வேண்டும். இதைப் புதிய மக்கள் சபை தொடங்கிய 30 நாட்களுக்குள் உறுதிசெய்ய வேண்டும். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபை அவசரநிலை அறிவிப்பிற்கு இசைவு கொடுக்காவிட்டால், அந்தச் சபை தொடங்கிய 30நாள்கள் சென்றவுடன் அந்த அறிவிப்பு செல்லுபடியாகாது.யூனியன் பாராளுமன்றத்தின் ஒவ்வொருதீர்மானமும் அவசரச்சட்டத்திற்கு 6 மாதகால உயிரைக் கொடுக்கிறது. 6 மாதத்திற்கொருமுறை 3 ஆண்டுகள் வரை பாராளுமன்றத்தின் இரு சபைகளும் தீர்மானங்கள் போட்டு அவசரச் சட்டம் அமுலில் இருக்கும் காலத்தைநீட்டிக்கலாம்.3 ஆண்டுகளுக்குப் பிறகு அரசியல் சட்டப்படி, பாராளுமன்றத்திற்கோ குடியரசுத் தலைவருக்கோ அவசரச் சட்ட நீட்டிப்புக்கு அதிகாரமில்லை.

இத்தகைய நெருக்கடியின்போது மாநில அரசாங்கத்தின் சட்டம் இயற்றும் அதிகாரங்களை எல்லாம் மத்திய அரசே செலுத்த முடியும். நெருக்கடிக் காலம் முழுவதிலுமோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ, அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக நீதிமன்ற உதவியை நாடும் உரிமையைக் குடியரசுத் தலைவர் நிறுத்தி வைக்கலாம். தவிர, நாட்டின் வருவாயினைப் பங்கிடுவது தொடர்பான மாமூல் ஏற்பாட்டையும் அந்த நிதி ஆண்டில் அவர் மாற்றலாம்.

மாநிலத்தில் ஆட்சி சீர்குலைவு: அரசியல் சட்டத்துக்கு உகந்த முறையில் ஒரு மாநிலத்தின் அரசை நடத்த முடியாது என்று குடியரசுத் தலைவர் கருதினால், அந்த மாநில அரசின் அனைத்து அலுவல்களையுமோ ஏதாவது ஓர் அலுவலையோ தாமே மேற்கொள்வதாக அறிவிப்புச் செய்யலாம்.

ஒவ்வொரு மாநிலத்திலும், அரசியல் சட்டத்தின் விதிகளின்படி நிருவாகம் நடக்கவும், அயலார்படையெடுப்பிலிருந்து மாநிலத்தைப் பாதுகாக்கவும், 'உள்நாட்டுக் கலகம்' வன்முறைச் செயல்கள் நிகழாமல் பாதுகாத்துக் கொள்ளவும், அரசியல் அமைப்புச் சட்டம் (பிரிவு 355) மாநில அரசுக்கு அதிகாரம் கொடுத்துள்ளது.இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்356-ஆம் பிரிவின் கீழ்க் குடியரசுத் தலைவர், மேற் குறிப்பிட்டசெயல்கள் தொடர்பாகத் தம் கடமையைச் செவ்வனே செய்யச் சிறப்புஅதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அறிக்கையிலிருந்தோ, வேறுவழிகளிலோ, ஒரு மாநிலத்தின் அன்றாட நிருவாகத்தை ஒழுங்காக அரசியல் சட்ட விதிகளுக்கேற்ப நடத்த முடியாதபடிச் சூழ்நிலை உருவாகியுள்ளது என்று தோன்றினால், உடனே குடியரசுத் தலைவர் அறிவிப்பு மூலம் கீழ்க்காணும் அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்.

1. மாநில அரசின் அனைத்து அல்லது தேவைப்படும் கடமைகளையும் ஆளுநரின் அதிகாரங்களையும் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம்.

2. மாநிலச் சட்டசபையின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டுச் செயற்படும் என்று அறிவிக்கலாம்.

3. அறிவிப்பின் குறிக்கோளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதில் மாநில திட்டங்களைத் தேவைக்கேற்றபடி அப்போதைக்கு நிறுத்தி வைக்கலாம்.

மாநில ஆளுநரின் அதிகாரங்கள் அல்லது மற்ற நிறுவனங்களின் அதிகாரங்கள் ஆகியவற்றையெல்லாம் குடியரசுத் தலைவர் இவ்வாறு நடைமுறைப் படுத்தலாம். மாநிலச் சட்டசபைத் தொடர்பான அதன் அதிகாரங்களை நாடாளுமன்றமோ நாடாளுமன்றம் குறிப்பிடும் அமைப்போ நிறுவனமோ மேற்கொள்ளலாம் என்று குடியரசுத் தலைவர் அறிவிக்க முடியும். தவிர, மாநிலத்தின் எந்த ஓர் அதிகார அமைப்புத் தொடர்பாகவுமுள்ள அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவுகளின் செயற்பாட்டினை அவர் நிறுத்தி வைக்கலாம். ஆனால், உயர்நீதி மன்றத்திற்குரிய அல்லது உயர்நீதிமன்றம் பயன்படுத்தக்கூடிய அதிகாரம் எதனையும் குடியரசுத் தலைவர் மேற்கொள்ள முடியாது. மேலும், உயர்நீதி மன்றம் தொடர்பாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள பிரிவுகளின் செயற்பாட்டினையும் அவர் நிறுத்தி வைக்க முடியாது.

சட்டம் இயற்றுவது தொடர்பாக மாநிலச் சட்டசபைக்குரிய அதிகாரங்களைக் குடியரசுத் தலைவரிடம் பாராளுமன்றம் விட்டு வைக்கலாம், அல்லது அந்த அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் குறிப்பிடும் ஓர் அமைப்பிடம் விட்டுவைப்பதற்கு அவருக்குப் பாராளுமன்றம் உடன்பாடு அளிக்கலாம். அப்போது மக்கள்சபை கூடியிராவிட்டால் மாநில அரசாங்க ‘‘மொத்த நிதி’’ யிலிருந்து செலவுகளை நடத்த அவர் இசைவு அளிக்கலாம். ஆனால், இதற்குப் பாராளுமன்றத்தின் உடன்பாட்டைப் பின்னர்ப் பெறவேண்டும்.

நிதிநெருக்கடி: இந்தியாவின் அல்லது அதன் ஒரு பகுதியின் நிதி உறுதிப் பாட்டுக்கோ நாணயத் தன்மைக்கோ பேரிடர் இருப்பதாகக் குடியரசுத் தலைவர் கருதினால், ‘‘நிதி நெருக்கடி’’ அவசர அறிவிப்பு ஒன்றை அவர் வெளியிடலாம். இவ்வறிவிப்பைத் திரும்ப ஓர் அறிவிப்பின் மூலம்தான் நீக்குதல் இயலும். இவ்வறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் வைக்கப்பட வேண்டும். அது நீடிக்க வேண்டுமானால் பாராளுமன்றம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அறிவிப்புத் தேதியிலிருந்து 2 மாத முடிவில் தானாகவே அது நீக்கப்பட்டதாகிவிடும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலோ அறிவிப்புச் செய்து 2 மாதங்களுக்குள் மக்கள்சபை கலைக்கப்பட்டாலோ மாநிலங்களின் அவையால் இசைவு வழங்கப்பட வேண்டும். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தால் அது செயற்படத் தொடங்கி 30 நாட்களுக்குள் இசைவு அளிக்கப்பட வேண்டும். இவ்வறிவிப்பு அதிகப்படியாக 6 மாதக் காலத்திற்குப் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் நடைமுறையில் இருக்கலாம். இவ்விதம் 6 மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்றத்தின் ஆதரவுடன் மொத்தம் 3 ஆண்டுகளுக்கு இவ்வறிவிப்பைச் செயற்படுத்தலாம்.

இவ்வறிவிப்பின் விளைவுகள்: 1. இவ்வறிவிப்பு நடைமுறையில் உள்ள காலத்தில், மாநிலங்கள் எவ்வாறு தங்கள் வருவாயினைப் பயன்படுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவர் நெறிப்படுத்தும் வழிமுறைகளைப் பயன்படுத்தலாம்.

2. இவ்வுத்தரவுகளின் மீது மாநில அரசு ஊழியர்களின் சம்பளம், வருமானம் ஆகியவை எந்த அளவுக்குக் குறைக்கப் படவேண்டும் என்று கூறலாம்.

3. சட்டசபை தீர்மானித்த அனைத்து நீதிச் சட்டமுன் வரைவுகளையும் குடியரசுத் தலைவர் ஆய்வு செய்ய உத்தரவிடலாம்.

4. இவ்வறிவிப்புக் காலத்தில் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் உட்பட்ட மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தைக் குறைக்க உத்தரவு பிறப்பிக்கலாம்.

போர், அயலார் படையெடுப்பு, உள்நாட்டுக் கலகம் தொடர்பான நெருக்கடி நிலைமை அறிவிப்பின் நடைமுறையும் காலவரம்பும், மாநில அரசின் ஆட்சிச் சீர்குலைவு, நீதி நெருக்கடி ஆகியவை தொடர்பான அறிவிப்புகளுக்கும் பொருந்தும். ஆனால், மாநில ஆட்சிச் சீர் குலைவு தொடர்பாக, நெருக்கடி அறிவிப்புக் காலத்தை, ஒவ்வோர் ஆறு மாதத்திற்குப் பின்னரும், பாராளுமன்றத்தின்மூலமே நீட்டிக்கலாம். தவிர, மூன்று ஆண்டுகளுக்கு மேல் இந்த நெருக்கடிக் காலத்தை நீட்டிக்க முடியாது.

இத்தகைய அதிகாரங்கள் எல்லாம் குடியரசுத் தலைவருக்கு இருந்தபோதிலும் அவர் இவற்றைத் தம் விருப்பம்போல் பயன்படுத்தமுடியாது. இந்தியக் குடியரசின் மரபு முறையில் வந்த தலைவரே அவர். உண்மையான நிருவாகத் தலைமை, பிரதம மந்திரியிடமும் அவர் மந்திரிசபையிடமுந்தான் இருக்கும். தலைமையையும் மேலாண்மையையும் மத்திரிசபை வகிப்பதற்கு அரசியல் சட்டம் வழி செய்திருக்கிறது. ஆனால், அதன் செயல்களைப் பாராளுமன்றமும் நீதி மன்றங்களும் மக்களும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அமைச்சர்களின் அறிவுரைப்படிதான் குடியரசுத் தலைவர் செயலாற்ற வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே உள்ள உறவுமுறை மரபுவழிப்பட்ட

தாகவே அமைந்திருக்கிறது. இச்செய்திகளில் பிரிட்டனில் உள்ள நடைமுறையை நமது அரசியல் அமைப்புச் சட்டம் பின்பற்றுகிறது.

அமைச்சரவை: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 74, 75 பிரிவுகள் அமைச்சரவையின் அமைப்பு, தன்மை, தகுதி போன்றவற்றை விரிவாகக் கூறுகின்றன. தலைமை அமைச்சர் தலைமையில் ஓர் அமைச்சரவை அமைந்திருக்கிறது. குடியரசுத் தலைவர் தம் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை கூறுவதும், உதவிசெய்வதும் அமைச்சரவையின் பொறுப்பு. தலைமை அமைச்சருக்கே தலைமைநிலை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தலைமை அமைச்சரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார் மற்ற அமைச்சர்களைத் தலைமை அமைச்சரின் ஆலோசனையின்பேரில், குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அமைச்சரவைக்கும் குடியரசுத் தலைவருக்கும் இடையே இணைப்புப் பாலமாகத் தலைமை அமைச்சர் பணியாற்றுகிறார். அமைச்சரவையின் முடிவுகள் அனைத்தினையும் குடியரசுத் தலைவருக்கு அவர் அறிவிக்கிறார். குடியரசுத் தலைவர் கேட்கும் விளக்கங்களையும் மற்றச் செய்திகளையும் விவரங்களையும் அவர் தெரிவிக்கிறார்.

குடியரசுத் தலைவர் ஒப்புதலளிக்கும் காலம் வரை அமைச்சர்கள் பதவி வகிப்பர். இது தவிர, அமைச்சர்கள் மக்கள் சபைக்குக் கூட்டுப் பொறுப்பு வாய்ந்தவர்கள். இந்த ஏற்பாட்டின்படி இருவகைக் காரணங்களால் ஓர் அமைச்சர் பதவி இழக்கக்கூடும். அதாவது, அவர் மேல் மக்கள் சபைக்கு நம்பிக்கை இல்லை என்றால் அவர் பதவியை' இழப்பார்; அல்லது அவர் நிருவாகம் தூய்மையுடையதாக இல்லையெனினும் அவர் பதவி நீக்கப்படுவார். ஒவ்வோர் அமைச்சரும் பதவி உறுதிமொழியும் (Oath) அலுவலக இரகசிய உறுதிமொழியும் எடுத்த பிறகே பதவி ஏற்க முடியும் ஊதியமும் படிகளும் உதவிப் பணச் சட்டத்தின்படி (Salaries and Allowances of Ministers Act, 1952) அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**குடியரசுத் துணைத் தவைர்** (Vice-President): இந்தியக் கூட்டாட்சிக்கு உதவிக் குடியரசுத் தலைவர் ஒருவர் உண்டு. குடியரசுத் தலைவருக்கு அடுத்தாற்போல் குடியரசுத் துணைத் தலைவர் பதவியை அரசியல் சட்டம் ஏற்படுத்தி உள்ளது. இவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தேர்தல் உரிமைக் குழு ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப் பதவியை வகிப்பவர் மாநிலச் சபையின் தலைவராகவும் இருப்பார். இதில் இவர் அமெரிக்கக் குடியரசுத் துணைத் தலைவரை ஒத்திருக்கிறார். நோய் காரணமாகவோ குடியரசுத்தலைவர் நாட்டில் இல்லாமையாலோ வேறு காரணங்களாலோ அவர் தம் அலுவல்களைக் கவனிக்க இயலாவிட்டால், அவர் மீண்டும் பொறுப்பு ஏற்கும்வரை, அந்த அலுவல்களைத் குடியரசுத் துணைத் தலைவர் கவனிப்பார். குடியரசுத் தலைவர் பதவி விலகினால், புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை குடியரசுத் தலைவர் பதவியை இடைக்காலத்தில் துணைக் குடியரசுத் தலைவர் வகிப்பார். ஆனால், அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் இறந்தால் அல்லது பதவி விலகினால், உதவிக் குடியரசுத் தலைவர் உடனே குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றுக்கொண்டு, முழுக்காலக் கட்டத்துக்கும் அப் பதவியை வகிப்பார்.

நாடாளுமன்றத்தின் இரு சபை உறுப்பினர் களின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். விகிதப் பிரதிநிதித்துவ முறைப்படி, ஒற்றைமாற்று ஓட்டு மூலம் தேர்தல் நடைபெறுகிறது. குடியரசுத் துணைத் தலைவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். வயது 35 நிறைவு பெற்று, மாநிலங்கள் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். துணைக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகிக்கின்றவர், அப் பதவி காரணமாக (Ex-Officio) மாநிலங்கள் சபையின் தலைவராகப் பதவி வகிப்பார் (பிரிவு 64).

குடியரசுத் துணைத் தலைவரின் பதவிக் காலம், அவர் பதவியேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆயினும், குடியரசுத் தலைவருக்கு எழுதிப் பதவியைத் துறக்கலாம். பாராளுமன்ற மேல்சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அத்தீர்மானம் மக்கள் சபையால் ஒப்புதல் அளிக்கப்பட்டால் குடியரசுத் துணைத் தலைவரைப் பதவிநீக்கம் செய்யலாம். அவ்வாறு செய்வதற்கு முன்னர் 14 நாள் முன்னறிவிப்பு அளித்துத்தான் பதவிநீக்கம் செய்யமுடியும். நாடாளுமன்ற மேல்சபைத் தீர்மானம் மொத்த உறுப்பினர்களின் முழுப் பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட வேண்டும். இரு சபைகளின் தீர்மானங்கள் மூலம் பதவி நீக்கம் செய்ய இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் வழிவகை செய்கிறது.

துணைக் குடியரசுத் தலைவரின் தேர்தல், நடப்புக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிவடையும் முன்னரே நடத்தப்பட வேண்டும். துணைக் குடியரசுத் தலைவர், அவர்பின்வருவோர் (Successor) பதவி ஏற்கும்வரை தொடர்ந்து பதவியில் இருப்பார். குடியரசுத் துணைத் தலைவரின்

பதவி அவரது இறப்பினாலோ பதவி துறப்பினாலோ பதவி நீக்கத்தினாலோ அல்லது வேறு வழியினாலோ வெறுமையாக இருக்கும் நிலையில், வெறுமையான சிறிது நேரத்திற்குள்ளே தேர்தல் நடத்தி, அவ் வெறுமையிடம் நிரப்பப்பட வேண்டும்.

நாடாளுமன்றம்: இந்தியாவுக்கு ஒரு நாடாளு மன்றம் செயற்பட வேண்டும் என அரசியல் சட்டத் தில் சொல்லப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் என்பது குடியரசுத் தலைவரையும், மேலவை (Council of States), மக்களவை (House of the People) என்ற இரு அவைகளையும் கொண்ட அமைப்பாகும். நாட்டின் நிருவாக அமைப்பில் நாடாளுமன்றத்துக்கு, அதிலும் குறிப்பாக மக்கள் அவைக்கு முக்கிய பங்கு உண்டு. குடியரசுத் தலைவர் மைய அமைச்சரவை யின் ஆலோசனையை ஒட்டிச் செயற் பட வேண்டும். அவ்வாறான அமைச்சரவையினர் கூட்டாக மக்கள் அவைக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். ஓர் அமைச்சர் பதவி ஏற்ற ஆறு மாத காலத்துக்குள் நாடாளு மன்ற உறுப்பினர் ஆகாவிட்டால் அமைச்சர்ப் பதவியை இழப்பார். ஒரு மசோதா (பணம் தொடர்பு படாத நிலையில்) சட்டமாவதற்கு இரு அவைக ளாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஓர் அவை ஏற்றுக் கொண்ட மசோதாவை மற்றோர் அவை ஏற்றுக் கொள்ளாத நிலையில், இரு அவைகளும் ஒன்றாகக் கூடி அது குறித்து ஆலோசனை செய்யும். அந்த இரு அவைகளின் கூட்டத்திலுள்ள உறுப்பினர் களின் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்ளும் மசோதா சட்டமாகிவிடும். மக்கள் அவையின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இயற்கையாகவே, நடைமுறையில் மக்களவையின் கை ஓங்கியிருக்கும்.

வரியை விதிப்பது, நீக்குவது, மாற்றுவது, ஒழுங்கு படுத்துவது தொடர்புடைய மசோதாவும், இந்திய அரசு கடன் வாங்குவதையும், பொறுப்புறுதி (Guarantee) வழங்குவதையும் ஒழுங்குபடுத்துவது தொடர்புடைய மசோதாவும், பல்வேறு வரிகளின் இணைப்பு நிதித் (Consolidated Fund) தொடர்பான மசோதாவும் பணத் தொடர்புடைய மசோதாக்கள் (Money Bills) என்று சொல்லப்படும். இவ்வகை மசோதாக்களைத் தவிர்த்து, ஏனைய மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் தாக்கல் செய்யப்படலாம். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி அந்த ஏனைய மசோதாக்கள் குறித்து இரு அவை களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படும் நிலையில், இரு அவைகளும் ஒன்றாகக்கூடி, அம்மசோதாக்கள் குறித்து முடிவு எடுக்க வேண்டும். ஆனால், பணத் தொடர்புடைய மசோதாக்கள் மக்களவையில் மட்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறான மசோதாக்களுள் ஒன்று மக்களவையால் நிறை வேற்றப்பட்டவுடன் மேலவைக்கு அனுப்பப்பட வேண்டும். அது மேலவைக்கு வந்து சேர்ந்த 14 நாட்களுக்குள் அந்த அவையானது தன் பரிந்துரை களுடன் மசோதாவை மக்களவைக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அம் மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாகக் கருதப்படும். மேற்கூறிய 14 நாட்களுக்குள் மேலவையின் பரிந் துரைகளுடன் மக்களவைக்கு அம்மசோதா அனுப்பப் பட்டால், மேலவையின் பரிந்துரைகள் மக்களவை யால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அப்பரிந்துரை களை இணைத்தும், அப்பரிந்துரைகள் மக்களவை யால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அப்பரிந் துரைகளை நீக்கிவிட்டும், அம்மசோதா இரு அவை களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாகக் கருதப்படும்.

மாநிலங்களுக்கும், மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து அவற்றின் பேராளர்கள் மொத்தம் 238 என்ற எண்ணிக் கையைத் தாண்டாத வகையில், மேலவையில் உறுப் பினர்களாகப் பதவி வகிப்பர். மாநிலங்களுக்கான பேராளர்கள் மேலவையில் பணி புரிவதற்காக அந்தந்த மாநிலச் சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப் படுவர். மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான பேராளர்கள் நாடாளுமன்றம் தீர் மானிக்கும் வகையில், மேலவை உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்படுபவர். மேற்குறிப்பிட்ட பேராளர் கள் நீங்கலாக, 12 உறுப்பினர்களை மேலவைக்குக் குடியரசுத் தலைவர் அமர்த்துவார். கலை, அறிவியல் சமூக சேவை, இலக்கியம் ஆகியவற்றில் சிறப்பு அறிவு அல்லது பட்டறிவு பெற்றவர்கள் அவ்வாறு குடியரசுத் தலைவரால் அமர்த்தப் படுவர். மேலவை கலைக்கப்படத் தக்கதன்று. இரண்டாண்டு களுக்குஒருமுறை மேலவை உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர். இந்தியக் குடியரசின் உதவித்தலைவர் அவர் வகிக்கும் அப் பதவியின் காரணமாக மேலவையின் தலைவராகப் பணியாற்றுவார். மேலவை உறுப்பினர்கள் தங்களுள் ஒருவரை உதவித் தலைவராகத் தேர்ந்தெடுப்பர்.

மாநிலங்களில் உள்ள தொகுதிகளிலிருந்து மக்களவைக்கு 525 என்ற எண்ணிக்கையைத் தாண் டாத அளவில், உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். நாடாளு மன்றம் முடிவு செய்யும் வகையில், மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான பேராளர்

கள் மக்களவை உறுப்பினர்களாகச் செயற்படத் தேர்வு செய்யப்படுபவர். அவ்வாறான உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 க்கு மேல் இருக்கக்கூடாது. தங்கள் உறுப்பினர்களுள் ஒருவரைச் சபாநாயகராகவும் மற்றொருவரை உதவிச் சபாநாயகராகவும் மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். முதல் கூட்ட நாளிலிருந்து மக்களவை ஐந்தாண்டுக் காலம் செயற்படத்தக்கது. அவசர நிலை ஏற்பட்டால் ஒரு தடவைக்கு ஓராண்டுக்காலத்துக்கு மேற்படாத வகையில், மக்களவையின் ஆயுளை நாடாளு மன்றம் சட்டம் இயற்றுவதன் மூலம் நீட்டிக்கலாம். எக்காரணத்தைக் கொண்டும் அவசரநிலை அறிவிப்பு முடிந்து ஆறு மாத காலத்திற்குமேல் மக்களவையின் ஆயுள் நீடிக்கப்படக் கூடாது. அதன் ஆயுட்காலம் முடிவடைவதற்குள் மக்களவையைக் கலைப்பதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலவை உறுப்பினராவதற்கு 35 வயதுக்குக் குறைந்தவராக இருக்கக்கூடாது. மக்களவை உறுப்பினராவதற்கு 25 வயதுக்குக் குறைந்தவராக இருக்கக்கூடாது. மத்திய அல்லது மாநில அரசின் கீழ் வருவாய் அளிக்கக் கூடிய பதவி வகித்தால் நாடாளுமன்ற உறுப்பினர் தனது பதவியை இழப்பார். நீதிமன்றத்தால் பித்துப்பிடித்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டாலும் அவருக்குப் பதவி இழப்பு ஏற்படும். நொடித்தவராக முடிவு செய்யப்பட்டு, அந்நிலையிலிருந்து விடுபடாமலிருந்தாலும் பதவி இழப்பு நேரிடும். தாமாக உவந்து அந்நிய நாட்டுக்குடிமகன் உரிமையைப் பெற்றாலும் நாடாளுமன்ற உறுப்பினரது பதவி பறிக்கப்படும். நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தகுதி இழப்பு நேரிட்டாலும் பதவி இழப்பு நேரிடும்.

ஒரே வேளையில் ஒருவர் நாடாளுமன்ற மேலவையிலும் மக்களவையிலும் உறுப்பினராக இருக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினராகவும் மாநிலச் சட்டமன்ற (State Legislature) உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்ட ஒருவர் குறிப்பிட்ட காலத்துக்குள் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்காவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பார்.

உச்ச நீதிமன்றம்: இந்தியாவில் உள்ள எல்லா நீதிமன்றங்களுக்கும் தலையானதாக உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி இயங்கி வருகிறது. ஒரு தலைமை நீதிபதியும், 17 நீதிபதிகளும் உச்ச நீதிமன்றத்தில் பணிபுரிய வேண்டும். இந்த நீதிபதிகளைக் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார். தம் விருப்பம் போல் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளின் அறிவுரைகளைக் குடியரசுத் தலைவர் அவ்வாறு நியமனம் செய்வதற்குமுன் நாடவேண்டும். இந்நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65 ஆகும். உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியமர்த்தப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலும், ஓர் உயர் நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் நீதிபதியாகப் பணியாற்றியவராக இருக்க வேண்டும்; உயர் நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து 10 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியவராக அல்லது சட்ட வல்லுநராக இருக்க வேண்டும். முறைதவறிய நடத்தை அல்லது செயலாற்றும் திறமையின்மை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவையும் ஆதரவு அளிக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யலாம். அதாவது ஒவ்வோர் அவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பதவி நீக்கல் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும். மேலும் அவ்வாறு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த அவைக்கு வாக்களிக்க வந்திருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு என்ற விழுக்காட்டுக்குக் குறையாமலிருக்க வேண்டும்.

மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஏற்படும் தகராறையும், மாநில அரசுகளுக்குள் ஏற்படும் தகராறையும் விசாரிக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. சட்டம் அல்லது ஒரு பொருள் குறித்து ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகள், பொது மக்களின் கவனத்தைக் கவரக்கூடிய முக்கியத்துவம் படைத்தனவாக இருந்தால், அவை குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அறியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. மேலும் பேராணைகள் பிறப்பிப்பதற்கும் உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்வாணைக்குழு: மத்திய அரசில் பணி செய்வதற்கென ஊழியர்களைத் தேர்வு செய்ய மத்தியத் தேர்வு ஆணைக்குழு அரசியல் சட்டப்படி அமைக்கப்படவேண்டும். இதில் தலைவர் ஒருவரும், உறுப்பினர்களும் பணி புரிவர். அவர்களைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். பொதுவாக அவர்களது பணிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். ஆனால், அதற்குள் 65 வயது நிறைவடைந்து விட்டால் பதவி

ஒப்புதல் பெற வேண்டும். பொதுவாக மத்திய அரசு ஊழியர்களைத் தேர்வு செய்யும் முறை, மற்றும் அவர்கள்மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து இத்தேர்வாணைக்குழு கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும்.

இத்தேர்வாணைக்குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் முறைகேடாக நடந்து கொண்டால் அது குறித்து உச்ச நீதிமன்றத்தின் உதவியைக் குடியரசுத் தலைவர் நாடுவார். அக்குற்றச்சாட்டுக் குறித்து உச்ச நீதிமன்றம் விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கும். குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தால், தொடர்புள்ள தேர்வாணைக்குழுவின் தலைவர் அல்லது உறுப்பினரைக் குடியரசுத் தலைவர் பதவிநீக்கம் செய்யலாம். மேலும் கீழ்க்காணும் நிலைகளில், உச்ச நீதிமன்றத்தின் உதவியை நாடாமலேயே, தேர்வாணைக்குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரைக் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யலாம். அந்நிலைகளாவன: 1. நொடித்த நிலையை அடைந்தவராக நீதிமன்றம் முடிவு செய்யும் நிலை. 2. தேர்வாணைக் குழுவின் பணிகளைத் தவிர்த்து வேறு பணிகளில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டும் நிலை. 3. உடல் அல்லது மனநிலையில் ஏற்படும் சீர்குலைவினால் பணி செய்ய முடியாத நிலை.

**மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் (The Attorney-General of India):** இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக ஒருவரைப் பணியமர்த்தலாம். இவர் உச்ச நீதி மன்றத்திற்கு நீதிபதியாகப் பணியமர்த்தத் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும் (பிரிவு 76 (1)). இவர் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்கு இணங்க (During the pleasure of the president) இப்பதவியை வகிக்கின்றார். தலைமை வழக்கறிஞரின் பதவிக்காலம் குடியரசுத் தலைவரின் விருப்பப்படி இருக்கும். இவருடைய ஊதியத்தைக் குடியரசுத் தலைவர் உறுதி செய்யலாம் (76 (4)). இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர், சட்டத் தொடர்பான சிக்கல்கள் பற்றி இந்திய அரசுக்கு அறிவுரை கூறுவதும் குடியரசுத் தலைவரால் அவ்வப்போது இவருக்கு ஒதுக்கப்படும் சிக்கல்கள் பற்றி அத்தகைய சட்ட முறையிலமைந்த கடமைகளை ஆற்றுவதும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அல்லது நடைமுறையிலுள்ள வேறு சட்டப்படி இவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றுவதும் இவரது கடமையாகும் (பிரிவு 76 (2)). குடியரசுத் தலைவர் சட்டதிட்டங்கள், விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, இந்திய அரசின் அனைத்து வழக்குகளுக்கும் இவர் தலைமை நீதிமன்றத்திற்குச் சென்று செயலாற்றுகின்றார். இந்தியக் குடியரசுத் தலைவர், அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 143-இன்படித் தலைமை மன்றத்திற்கு எடுத்துக் காட்டி ஆலோசனை கேட்கும் வழக்குகளுக்கு அரசின் பேராளராகச் சென்று செயலாற்றுகின்றார். மத்திய அரசு, இவ் வழக்கறிஞரை இந்திய அரசின் வழக்குகள் நடக்கின்ற உயர்நீதி மன்றங்களுக்கு அதன் சார்பாக அனுப்பி வைக்கிறது. இப்பணியினை நிறைவேற்றும் பொருட்டு இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களுக்கும் சென்று வழக்குரைக்கும் உரிமை இவருக்கு உண்டு (பிரிவு 76 (3)). மேலும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சென்று பேசும் உரிமை பெற்றுள்ளார். இவ் அவைகளின் இணைப்புக் கூட்டங்களிலும், அவற்றின் நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளலாம். ஆனால், அவர் அச்சபைகளின் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ள முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் உரிமைகள், சலுகைகள், காப்புரிமைகள் எல்லாம் அதே அளவில் இவருக்கும் அளிக்கப்படும்.

**நிதியும் கணக்கும்:** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 5-ஆம் இயலின் 148 முதல் 151 வரையில் உள்ள பிரிவுகள் இந்தியத் தலைமைத் தணிக்கையாளரின் பணிகளைப் பற்றிக் கூறுகின்றன.

மத்திய அரசு, மாநில அரசுகளின் நிதிகளையும் கணக்குகளையும் 'இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் (Comptroller)' என்ற அலுவலர் மிகவும் கவனமாகக் கண்காணித்து வருகிறார். இவரை இந்தியக் குடியரசுத் தலைவர் அமர்த்துகிறார். இவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு, உச்ச நீதிமன்றத்திலுள்ள நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இவர் மூன்றாம் அட்டவணையில்-பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில், குடியரசுத் தலைவர் அல்லது அவரால் அதற்கெனப் பணியமர்த்தப்பட்டவர் முன்னிலையில், பதவி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். இவருடைய ஊதியம், பணி பற்றிய வரையறைகளைச் சட்டத்தின்வழி, நாடாளுமன்றம் உறுதி செய்யும். அவ்வாறு உறுதி செய்யப்படும் வரையில் இரண்டாம் பின்னிணைப்பில் கண்டுள்ள படி இருக்க வேண்டும். இவர் பதவியிலிருந்து விலகிய பின்னர், மத்திய அல்லது மாநில அரசின்கீழ் எத்தகைய பதவியும் வகிப்பதற்குத் தகுதி இல்லை.

இந்தியத் தணிக்கையிலும் கணக்குத் துறையிலும் பணியாற்றுவோரின் பணிவரையறைகள், தலைமைத் தணிக்கையாளரின் அதிகாரங்கள் ஆகியவற்றைப் பற்றிய விதிமுறைகளை, அரசியல் அமைப்புச் சட்டத்

திற்குக் கட்டுப்பட்டும், நாடாளுமன்றச் சட்டங்களுக்கு உட்பட்டும், தலைமைத் தணிக்கையாளரைக் கலந்து ஆலோசித்துக் குடியரசுத் தலைவர் உருவாக்க வேண்டும். இத்துறையினரின் ஊதியம், படிகள், ஓய்வூதியங்கள் ஆகியவை அனைத்தும் இந்திய அரசுத் தொகுநிதியிலிருந்து (Consolidated Fund of India) வழங்கப்பட வேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றின் வரவு செலவுக் கணக்குகள் தொடர்பான அனைத்துக் கடமைகளையும் இந்தியத் தலைமைக் கணக்காளர் ஆற்ற வேண்டும். மேலும் நாடாளுமன்றம் சட்ட முறையில் விதித்துள்ள அனைத்துப் பணிகளையும் கணக்குகளையும் இவர் கவனித்துக்கொள்ள வேண்டும். மத்திய மாநில அரசுகளின் கணக்குகள் அனைத்தும், தலைமைத் தணிக்கையாளரைக் கலந்து ஆலோசித்துக் குடியரசுத் தலைவரால் விதிக்கப்பட்டுள்ள படிவங்களில் வைக்கப்பட வேண்டும்.

மத்திய அரசின் வரவு செலவுக் கணக்குகள் பற்றிய அறிக்கையைத் தலைமைத் தணிக்கையாளர், குடியரசுத் தலைவருக்கு அளிக்க வேண்டும். அவர் அதனை நாடாளுமன்றத்தின் அவையின் முன்னர் வைக்க வேண்டும்.

மாநில அரசின் வரவு செலவுக் கணக்குகள் தொடர்பான அறிக்கையைத் தலைமைத் தணிக்கையாளர் அந்த மாநிலத்தின் ஆளுநருக்கு அளிக்க வேண்டும். அதனை ஆளுநர் அந்த மாநிலத்தின் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

அரசாங்கச் செலவுக் கணக்குகளை இவர் சரிபார்க்கிறார். பணக் கையாடல் தொடர்பான குற்றச்சாட்டுகள் அனைத்தினையும் ஆராய்கிறார். மற்றும் சட்டமன்றங்கள் ஏற்றுக்கொண்ட இனங்களுக்குப் பணம் முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதையும் இவர் கண்காணிக்கிறார். மாநில அரசுகள் மத்திய அரசு ஆகியவற்றின் கணக்குகள் தொடர்பாக இவர் ஆண்டுதோறும் தயாரிக்கும் அறிக்கைகள் அந்தந்தச் சட்ட மன்றத்தில் அளிக்கப்படுகின்றன.

மாநிலங்கள்: (மத்திய அரசின் நேரடி நிருவாகத்துக்குட்படாதவை).

நிருவாகப் பிரிவு: மாநிலங்களின் அரசாங்க அமைப்பு, மத்தியஅரசின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கிறது. மாநில நிருவாக அதிகாரத்தின் உறைவிடமாக ஆளுநர்(Governor) இருக்கிறார்.

இந்திய அரசியல் சட்டம் பிரிவு 153 முதல் 162 ஆம் பிரிவு வரையில் உள்ள பத்துப் பிரிவுகள், ஆளுநரின் நியமனம் முதலியன பற்றிக் கூறுகின்றன. மாநில அரசின் தலைவர் ஆளுநர். வடகிழக்கு மாநிலங்களான அசாம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா மாநிலங்கள் நீங்கலாக மற்ற ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வோர் ஆளுநர் உண்டு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் ஒரே ஆளுநரை நியமிக்கலாம். குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரைத் தம் கையாலே அவர் நியமனம் பற்றிய ஆணையினை எழுதி அவர் முத்திரையினைப் பதித்து நியமிக்கிறார். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள முதலமைச்சரின் கருத்துகளைக் கேட்டறிந்து, மாநில ஆளுநரை நியமிப்பது மரபாக உள்ளது. ஆளுநராக நியமிக்கப்படுபவர் இந்தியக் குடிமகனாகவும், 35-வயது நிறைவு பெற்றவராகவும் இருக்க வேண்டும். இந்தியக் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்குட்பட்டு ஆளுநர் ஐந்து ஆண்டுகள் பொறுப்பு வகிப்பார். பதவிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்பும், புதியதாக நியமனம் செய்யப்படுபவர் பொறுப்பினை ஏற்கும் வரையிலும் இவர் பதவியில் தொடர்ந்து நீடிப்பார். ஆளுநர் பாராளுமன்றத்திலோ மாநிலச் சட்ட சபைகளிலோ உறுப்பினராக இருக்க இயலாது. அவ்வாறு இருப்பின், ஆளுநர் பொறுப்பேற்றவுடன் அவ்வுறுப்பினர் பதவியைத் துறந்ததாக எண்ணப்படும். இவர் ஊதியம் பெறும் எந்தவொரு பொறுப்பினையும் வகிக்கக் கூடாது. இவர் இலவசமான உறைவிடமும், பாராளுமன்றத்தினால் உறுதி செய்யப்படுகின்ற ஊதியமும், அவ்வூதியம் சார்ந்த உதவித் தொகையும் மற்றும் பிற தனி உரிமைகள் போன்றவற்றையும் பெறுவார். இவர் அம்மாநில உயர்நீதிமன்றத்தின் அனுபவம் முதிர்ந்த நீதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுத்தபின்னர்ப் பதவியை ஏற்றுக்கொள்வார். இவர் இல்லாத சமயத்தில் இவருக்குப் பதிலாகப் பணியாற்றுவதற்குரிய ஒருவரை அரசியல் சட்டம் குறிப்பிடவில்லை; எனினும் குடியரசுத் தலைவர் அப்பணியினை நிறைவேற்றுவதற்குரிய ஒருவரை நியமிக்க வழிவகை செய்வார். மரபுப்படி ஓய்வு பெற்ற ஆளுநர் ஒருவரோ அம்மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியோ அப்பணியை ஆற்றுவர். இவர், மாநில நிருவாக அதிகார எல்லைக்குள் நிலவிவரும் சட்டங்களுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்களின் குற்றங்களை மன்னிக்கவும், தண்டனைகளைத் தள்ளிப்போடவும், குறைக்கவும், மாற்றவும் அரசியல் சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ளார். ஆளுநரின் இவ்வதிகாரம் தொடர்பான சட்ட முறையிலமைந்த நிலைபற்றிப் பம்பாய் மாநில வழக்கொன்றில் தலைமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (கே.எம். தானாவதி எதிர் பம்பாய் மாநிலம்) இந்திய அரசியல் சட்டத்

தின் 161–ஆம் பிரிவின்படி இவர் அதிகாரத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. இவர் அதிகாரம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது.

இவர் தேவையில்லையானால் குடியரசுத் தலைவராலே நியமன நீக்கம் செய்யப்பட்டுத் திருப்பி அழைத்துக் கொள்ளப்படுவார். இவரை நீக்க மாநிலச் சட்டசபைகளால் இயலாது. அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக இவர் செல்வதாகக் குற்றம் சாட்டிப் பதவி நீக்கம் செய்தலும் இயலாது. அவ்வாறு அரசியல் சட்டம் அமைந்துள்ளது. இவரைத் திரும்பப் பெறும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உண்டு.

இவர் அரசியல் சட்டத்தின்கீழ் இருவகையான பணிகளைச் செய்யக்கடமைப்பட்டுள்ளார். அப்பணிகளாவன: 1. மாநில அரசின் தலைவர், 2. இவர் மத்திய அரசின் பேராளராகவும், பணியாளராகவும் செயற்படுகின்றார். மாநில அரசின் தலைவர் என்ற முறையில் இவர் முதலமைச்சரையும், பிற அமைச்சர்களையும் நியமிக்கிறார். இவர் சட்டசபையைக் கூட்டவும் முடித்து வைக்கவும், கலைக்கவும், சில சட்ட முன்வடிவங்களைக் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு ஒதுக்கி வைக்கவும் செய்கிறார். இவர் சட்டசபை நடைபெறாத போது பேராணை அவசரச் சட்டங்கள் (Ordinance) பிறப்பிக்கிறார். இப்பணிகளை இவர், அமைச்சரவையின் அறிவுரை பெற்றுச் செய்கிறார். இவர் மத்திய அரசின் பணியாளராகவே பணியாற்றுகின்றார். மாநிலம் ஒன்றில் அரசியல் சட்டப்படி ஆட்சி செய்யமுடியாத ஒரு சூழ்நிலை உருவானால், குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வரலாம்.

அமைச்சரவை: மத்திய அரசினைப் போலவே மாநிலங்களிலும் அமைச்சரவை மூலம் ஆட்சி நடைபெறுகிறது. ஆளுநர் தம் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை கூறவும் உதவிசெய்யவும் அமைச்சரவை உள்ளது. மாநிலத்தின் தலைவர் என்ற முறையில் ஆளுநர் செயலாற்றுவதற்குத் தேவையான விவரங்களை அவருக்கு முதல் அமைச்சர் அறிவிக்க வேண்டும். நிருவாகத் தொடர்பாகவும் சட்டம் இயற்றுவது தொடர்பாகவும் அமைச்சரவை வகுக்கும் முடிவுகளை ஆளுநருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆளுநர் இவை தொடர்பாகக் கேட்கும் மற்றைய விவரங்களையும் முதலமைச்சர் தெரிவிக்கவேண்டும். ஆய்வு செய்யும்படி ஆளுநர் குறிப்பிடுகிற எந்த ஒரு செய்தியையும் முதலமைச்சர், அமைச்சரவையின் முன் வைக்கவேண்டும்.

ஆதிக்குடிகளின் நலனைக் கவனிப்பதற்காகப் பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் ஒரு தனிஅமைச்சர் இருக்கவேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகின்றது.

மத்திய அரசின் நேரடி நிருவாகத்துக்குட்படாத மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் சட்டமன்றம் அமைய வேண்டும். அவ்வாறான மாநிலங்களில், ஆந்திரப் பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், தமிழ்நாடு, மகாராட்டிரம், கர்நாடகம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களில் இரண்டு அவைகள் இருக்க வேண்டும். இவ்விரண்டு அவைகள், சட்டமேலவை, சட்டப்பேரவை எனப்படும். ஏனைய மாநிலங்களில் ஓரவை மட்டுமே உண்டு. அது சட்டப்பேரவை எனப்படும். ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தையொட்டி, நாடாளுமன்றமானது ஒரு மாநிலத்தில் சட்ட மேலவையை ஒழிக்கலாம் அல்லது உருவாக்கலாம். அவ்வாறு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குச் சட்டப் பேரவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் துணையாக இருக்கவேண்டும். மேலும் சட்டப் பேரவையில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தீர்மானத்துக்குத் துணையாக இருக்க வேண்டும்.

மாநிலச் சட்டப்பேரவையின் உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களின் எண்ணிக்கை ஐந்நூற்றுக்கு மேற்படாமலும் அறுபதுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மேற்படக் கூடாது. ஆனால், நாற்பதுக்குக் குறையக் கூடாது.

சட்ட மேலவை உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கு அளவினர், உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கடந்த மூன்றாண்டுக் காலம் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவோ சட்டப்படி அதற்குச் சமமான தகுதியுடையவர்களாகவோ இருந்து, அந்த மாநிலத்தில் வாழ்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கீழ்ப்படாத நிலையில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சட்டப் பேரவையின் உறுப்பினர்கள், சட்டப் பேரவையின் உறுப்பினர் அல்லாத கட்சிக்காரர்களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களை மேலவைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். எஞ்சியுள்ள உறுப்பினர்களை இலக்கியம், அறிவியல், கலை, கூட்

டுறவு இயக்கம், சமூகசேவை ஆகியவற்றில் சிறந்த அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ளவர்களி லிருந்து மாநில ஆளுநர் நியமிக்க வேண்டும்.

முதல் கூட்டத்திலிருந்து சட்டப்பேரவையின் ஆயுள் பொதுவாக ஐந்து ஆண்டுகள் நீடிக்கும். ஆனால், அவசர நிலையிலிருந்தால் அதன் ஆயுட்காலம் ஒவ்வொரு தடவையும் ஓராண்டுக் காலத்துக்கு மேற் படாத வகையில் நாடாளுமன்றத்தால் சட்டத்தின் மூலம் நீட்டிக்கப்படலாம். அவசரநிலை முடிந்து ஆறு மாத காலத்துக்குமேல் அதன் ஆயுட்காலத்தை நீட் டிக்க முடியாது. சட்ட அவையின் ஆயுட்காலம் முடி வடைவதற்குள் அதை ஆளுநர் கலைத்து விடலாம். சட்ட மேலவை கலைக்கப்பட மாட்டாது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சட்ட மேலவை யின் மொத்த உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கு விகிதத்தினர் ஓய்வு பெற வேண்டும்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை சபாநாயகராகவும் மற்றொருவரை உதவிச் சபாநாய கராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுபோல் சட்ட மேலவை உறுப்பினர்கள் தங்களில் ஒருவரைத் தலை வராகவும் மற்றொருவரை உதவித் தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தி யக் குடிமகனாக இருக்க வேண்டும். சட்டப்பேரவை உறுப்பினராவதற்கு 25 வயதுக்குக் குறையாதவராக வும் சட்ட மேலவை உறுப்பினராவதற்கு 30 வயதுக் குக் குறையாதவராகவும் இருக்கவேண்டும். ஒரு சட்ட மன்றத்தின் இரு அவைகளிலும் ஒரே சமயத்தில் ஒரு வர் உறுப்பினராக இருக்க முடியாது. ஒரே சமயத் தில் ஒருவர் ஒரு சட்டமன்றத்தின் இரு அவைகளுக் கும் தேர்ந்தெடுக்கப்பட்டால், சட்டமன்றம் முடிவு எடுத்திருக்கும் வகையில் ஓர் அவையின் உறுப்பினர் பதவியை அவர் இழக்க நேரிடும். ஒரே காலத்தில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களின் உறுப்பினராக நேர்ந்தால் குறிப் பிட்ட காலத்துக்குள் ஒரு மன்றத்தின் உறுப்பினர் பதவியைத் தவிர்த்து, ஏனைய மன்றங்களின் உறுப் பினர் பதவியை அவர் துறக்காவிட்டால், எல்லா மன்றங்களின் உறுப்பினர் பதவியையும் அவர் இழந் தவர் ஆவார். வருமானம் கிடைக்கக் கூடிய பத வியை மத்திய அல்லது மாநில அரசின் கீழ் வகிக்கும் நிலையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது பத வியை இழப்பார். மேலும், பித்து நிலையில் உள்ள வர் என்று நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும் நிலையிலும், நொடித்த நிலையிலிருந்து மீளாத நிலையிலும் (Undischarged insolvent), அயல் நாட் டின் குடிமகன் உரிமையைத் தாமாக உவந்து பெற் றுக் கொண்ட நிலையிலும் சட்டமன்ற உறுப்பினர் தமது பதவியை இழக்கநேரிடும். மேலும் அவையின் அனுமதியில்லாமல் ஓர் உறுப்பினர் அறுபது நாட் களுக்கு அவைக்கு வராமலிருந்தால், அவர் பதவி இழந்துவிட்டார் என அவை அறிவிக்கலாம்.

பணம் தொடர்புடைய மசோதா (Money Bills) சட்டப்பேரவையில் மட்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அம்மசோதா சட்டப்பேரவையால் நிறை வேற்றப்பட்டவுடன் சட்ட மேலவைக்கு அனுப்பப் படும். அது மேலவைக்குக் கிடைக்கப் பெற்ற 14 நாட் களுக்குள் தன் பரிந்துரைகளுடன் அதை மேலவை யானது சட்டப்பேரவைக்குத் திருப்பி அனுப்ப வேண் டும். அவ்வாறு செய்யத் தவறினால் அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கரு தப்படும். மேற்கூறிய 14 நாட்களுக்குள் மேலவை யானது தன் பரிந்துரைகளுடன் சட்டப்பேரவைக்கு அம்மசோதாவைத் திருப்பி அனுப்பிவிட்டால், அப் பரிந்துரைகள் சட்டப்பேரவையால் ஏற்றுக்கொள்ளப் பட்டால் அவைகளை இணைத்தும், சட்டப்பேரவை யால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அவைகளை நீக்கிவிட்டும், அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

ஏனைய மசோதா எநத அவையிலும் தாக்கல் செய்யப்படலாம். சட்டப்பேரவையால் நிறைவேற் றப்பட்ட அவ்வகையான மசோதாவைச் சட்ட மேலவை ஒத்துக் கொள்ளா விட்டாலோ மூன்று மாதக் காலமாக அது மேலவையால் நிறைவேற்றப் படாமலிருந்தாலோ மேலவை நிறைவேற்றும் மசோ தாவுக்கான திருத்தங்களைச் சட்டப்பேரவை ஒப்புக் கொள்ளாவிட்டாலோ அம்மசோதா மறுபடியும் சட் டப் பேரவையால் நிறைவேற்றப்பட வேண்டும். அவ் வாறு இரண்டாம் தடவை சட்டப்பேரவையால் நிறை வேற்றப்படும் மசோதாவை, மேலவை ஒத்துக்கொள் ளாவிட்டாலோ ஒருமாத காலத்துக்குள் அம்மசோ தாவை மேலவை நிறைவேற்றாமலிருந்தாலோ மேலவை கூறும் திருத்தங்கள் சட்டப்பேரவையால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலோ அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

மாநில அளவில் உயர் நீதிமன்றங்கள் செயற்பட அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகளை (தலைமை நீதிபதி உட் பட) குடியரசுத் தலைவர் பணியமர்த்துவார். அவ் வாறு பணியமர்த்துவதற்கு முன்னர், உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி, தொடர்புடைய மாநில ஆளுநர், தொடர்புடைய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரைக் குடியரசுத் தலைவர் கலந்தா லோசிக்க வேண்டும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின்

(தலைமை நீதிபதி உட்பட) ஓய்வு பெறும் வயது 62 ஆகும். உயர்நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கு உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதவிநீக்கம் செய்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறையே கடைப்பிடிக்கத் தக்கதாகும். தன்கீழ்ப் பணிபுரியும் நீதித்துறையைக் கண்காணிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு. மேலும் தன் கீழ்ப் பணிபுரியும் நீதித்துறையின் ஆணைகளை மேன்முறையீட்டின் அடிப்படையில் ஆய்வு செய்யவும் மறு ஆய்வு செய்யவும் உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. பேராணைகள் (Writs) பிறப்பிக்கும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலும் இந்தியாவில் நீதித்துறை அதிகாரியாக 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும். அல்லது இந்திய உயர்நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து 10 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

மாநில அளவில் தேர்வாணைக் குழு இயங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதன் தலைவரையும் உறுப்பினர்களையும் மாநில ஆளுநர் பணியமர்த்துவார். அவர்கள் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும். ஆனால், அதற்குள் 62 வயது முடிந்துவிட்டால் ஓய்வு பெற வேண்டும். மத்திய தேர்வாணைக் குழுவின் தலைவர், உறுப்பினர் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை, மாநிலத் தேர்வாணைக் குழுவுக்கும் பொருந்தும்.

இந்திய அரசின் நேரடி நிருவாகத்துக்குட்பட்ட மாநிலங்களை ஒரு நிருவாகிமூலம் நிருவாகம் செய்யக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அத்தகைய மாநிலங்களான கோவா, தாமன், தையூ, புதுச்சேரி, மிசோராம், அருணாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றம் அமைக்கவும் அமைச்சரவை அமைக்கவும் அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசின் நேரடி நிருவாகத்தில் உள்ள மாநிலங்களில் உயர்நீதிமன்றங்கள் செயற்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய, மாநில உறவு முறைகள்: மத்திய, மாநில உறவு முறைகள் XV-ஆம் பகுதியில், 245 முதல் 255 முடிய உள்ள பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளன.

சட்டமியற்றுதல்: சட்டமியற்றும் அதிகாரம் பற்றிய கருத்துகளை மூன்று பட்டியல்களாக அரசியல் சட்டம் பிரித்திருக்கிறது. அவையாவன: (1) மத்திய அரசுப் பட்டியல், (2) மாநில அரசுப் பட்டியல், (3) பொதுப்பட்டியல். மாநிலங்கள், மத்திய அரசு ஆகியவற்றின் அதிகார வரம்புகளும் ஒன்றோடு ஒன்றிற்குள்ள உறவு நிலையும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. பொதுப் பட்டியலில் உள்ள ஒரு செய்தித் தொடர்பான மாநிலச் சட்டத்தைவிட, மத்திய அரசின் சட்டத்துக்கே முதன்மை உண்டு. அதிகாரப் பட்டியல்களில் சேராமல் எஞ்சியுள்ள கருத்துகள் அனைத்தும், மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவையே. கனடா நாட்டிலும் இவ்வாறுதான்; ஆனால், அமெரிக்க நாட்டில் இவ்வாறு இல்லை.

மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் தொடர்பாகத் தவிர மற்றப்படி, மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள ஒரு செய்தி குறித்து, சாதாரணமாக, மத்திய அரசு சட்டம் இயற்ற இயலாது. ஆயினும் பின்வரும் சூழ்நிலைகளில் நாடாளுமன்றம் அவ்வாறு சட்டம் இயற்ற முடியும். அச்சூழ்நிலைகளாவன (1) இவ்வாறு சட்டம் இயற்றுவது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று மாநிலச் சட்டசபை (நாடாளுமன்றத்தின் மேல் சபை) மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையுடன் பரிந்துரை செய்தால்; (2) தங்களுக்காக இவ்வாறு சட்டம் இயற்றுவது இன்றியமையாதது என்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் தங்களுக்குள் ஒப்புக் கொண்டால்; (3) ஒப்பந்தங்கள், பன்னாட்டு உடன்பாடுகள் அல்லது நிலையாவணங்கள் (சாசனங்கள்) நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தால் என்பன.

நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களையோ பின்னிணைப்பிலுள்ள விவகாரங்களைப் பற்றியோ செம்மையாகச் செயற்படுத்தும் பொருட்டுக் கூடுதலான நீதிமன்றங்களை அமைப்பதற்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருக்கும்போது, இந்தியா முழுவதற்கும் அல்லது அதன் எப்பகுதிக்கும் மாநிலப்பட்டியலில் கூறப்பட்டுள்ளவை பற்றிச் சட்டம் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இந்த நிலையில் மட்டுமே ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால், அத்தகைய நெருக்கடி நிலை நீங்கிய நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் அதனைச் செயற்படுத்த இயலாது. அச்சட்டப்படி செய்யப்பட்டவைகளும் செய்யாது விடுபட்டவைகளும் பாதிக்கப்படுவதில்லை.

நாடாளுமன்றத்தால் அல்லது மாநிலச் சட்டசபையால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்துக்கு இந்திய அரசியல் அமைப்புப்படி முன்னரே வழங்கப்பட

வேண்டிய ஏற்பு அல்லது பரிந்துரை இல்லை என்று காரணம் கூறி அச்சட்டம் செல்லத்தக்கதன்று எனப் பின்வரும் சூழ்நிலைகளில் கூற இயலாது. அச்சூழ் நிலைகளாவன:

1) அத்தகைய சட்டத்துக்குரிய பரிந்துரை ஆளுநரால் வழங்கப்பட வேண்டி இருக்கும்போது, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் அதற்குரிய ஒப்புதலைக் கொடுத்திருத்தல்;

2) ஓர் இராசப்பிரமுகரின் (Rajapramukh) பரிந் துரை தேவைப்பட்டிருக்கும்போது, அத்தகைய ஒப்பு தலை அவர் அல்லது குடியரசுத் தலைவர் கொடுத் திருத்தல்;

3) இந்தியக் குடியரசுத்தலைவர் அத்தகைய பரிந்துரை அல்லது முன்னரே வழங்கப்பட வேண்டிய ஏற்பினைக் கொடுக்க வேண்டி இருக்கும்போது அதற் குரிய ஒப்புதலைக் குடியரசுத் தலைவர் வழங்கியிருத் தல்.

**நிருவாக உறவுகள், பொது:** மத்திய மாநில அரசுகளுக்கு இடையே நல்ல உறவு நிலவுவதற்கு அரசியல் சட்டம் வழி செய்கிறது. மத்திய அரசின் சட்டங்களுக்கு இணங்கவே ஒரு மாநிலம் தன் நிரு வாக அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும். தேசிய முக்கியத்துவம் அல்லது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துச் சாதனங்களை நிருவகித் துப் பாதுகாக்கும்படி ஒரு மாநிலத்திற்கு மத்திய அரசு அறிவிப்புக் கொடுக்க முடியும். சாதாரணமாக மாநில அரசுகளின் வரம்புக்கும் அவர்கள் அதிகாரி களின் வரம்புக்கும் அப்பாற்பட்ட அதிகாரங்களை யும் கடமைகளையும் அவர்களுக்குக் குடியரசுத் தலைவர், மாநில அரசின் இசைவுடன் வழங்க முடியும். அத்தகைய சூழ்நிலைகளில் இந்த அதிகப்படி கடமைகள் அல்லது அதிகாரங்கள் தொடர்பாக ஏற் படக்கூடிய அதிகப்படியான செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மாநிலத் தொடர்பான அலுவல் களை மத்திய அரசிடமோ அதன் அலுவலர்களி டமோ மத்திய அரசின் இசைவுடன், ஒரு மாநில ஆளுநர் ஒப்படைக்க முடியும்.

**தண்ணீர் பற்றித் தகராறுகள்:** மாநிலங்களுக்கி டையே செல்லும் நதிகள், நதிப் பள்ளத்தாக்குகள் பற்றிய தண்ணீரைக் கட்டுப்படுத்தலும் பகிர்ந்து கொள்ளலும் தொடர்பான முறையீடு அல்லது தகராறு ஏற்பட்டால், அதனைத் தீர்த்து உடன்பாடு செய்து கொள்வதற்குரிய சட்டத்தை நாடாளுமன் றம் நிறைவேற்றலாம். தண்ணீர் பற்றிய தகராறு அல்லது முறையீடு பற்றி உச்ச நீதிமன்றம் தனது அதிகார வரம்பைச் செயற்படுத்தக் கூடாது என்பது பற்றிய சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றலாம்.

**மாநிலங்களிடையே நல்லுறவு:** மாநிலங்களி டையே இணைப்பான உறவு நிலவச் செய்வதற்கான பல மாநிலக் குழு ஒன்றினைக் குடியரசுத் தலைவர் நியமிக்கலாம். அந்தக் குழுவின் அலுவல்கள் பின் வருவன: 1. மாநிலங்களுக்கிடையே உள்ள தகராறு களை விசாரித்து ஆலோசனை கூறுதல்; 2. மாநிலங் களுக்கோ மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் பொதுவாகவோ அக்கறை உள்ள ஒரு செய்தி குறித்து இணைப்பான கொள்கையையும் செயல் முறையை யும் வகுப்பதற்கு வழி செய்தல்.

**மாநிலங்களிடை வணிகத் தொடர்புகள்:** இயல் 13-இல் பிரிவுகள் 301-307 வரையுள்ள பிரிவுகள் மாநிலங்களிடையேயுள்ள வணிகத் தொடர்புகள் பற்றிக் கூறுகின்றன.

இந்திய அரசியல் சட்ட வாசகங்களுக்குட்பட்டு, வணிகத் தொடர்புகள் தங்குதடையற்றவையாகும். மாநிலங்களிடையே நடைபெறுகின்ற உள்நாட்டு வாகன வணிகமாயினும், கடல் வணிகமாயினும் சீரான ஒரே போக்கான சுங்க வரிவிதிப்புக்கு உட் பட்டுத் தங்குதடையின்றி நடைபெறக் கூடியவை யாகும்.

பொதுநலன் கருதி, ஒரு மாநிலத்துக்கும் மற் றொரு மாநிலத்துக்கும் அல்லது இந்தியாவுக்குள்ளே இருக்கும் ஒரு பகுதிக்குள் நடைபெறும் வணிகம், மற்றும் அத்தகைய தொடர்புகள் பற்றிய சுதந் திரத்தை வரையறுக்கக் கூடிய கட்டுப்பாடுகள் உள்ள சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றலாம்.

ஒரு மாநிலத்தைக் காட்டிலும் மற்றொரு மாநிலத்துக்குச் சலுகை வழங்கக் கூடியதும் அல்லது மிகுதியான அதிகாரம் வழங்கக் கூடியதும் அல்லது ஒரு மாநிலத்தை மற்றொரு மாநிலத்தினின்றும் பாகுபாடு காட்டக் கூடியதும் ஆகிய சட்டத்தை இயற்றுவதற்குச் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன் றத்திற்கும் அதிகாரம் கிடையாது. ஏழாம் அட்ட வணையில் உள்ள எந்தப் பட்டியலிலாவது காணப் படும் வணிகம் பற்றியும் ஒரு சட்டத்தை இயற்றுவ தற்கு எந்த மாநிலச் சட்டமன்றத்திற்கும் நாடாளு மன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது.

நெருக்கடிக் காலத்தில் மேலே கூறப்பட்டவை களுக்கு எதிராக, நாடாளுமன்றம் சட்டம் இயற்ற லாம்.

மற்ற மாநிலங்களிலிருந்து அல்லது யூனியன் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்கு

களின்மீது, அந்த மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கும் இடையில் பாகுபாடு பாராட்டாத வகையில் வரி விதிப்பதற்கும், மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, அந்த மாநிலத்துடன் அல்லது அந்த மாநிலத்துக்குள் செய்யப்படும் வாணிகம், மற்றும் அத்தகைய தொடர்புகள் ஆகியவற்றின் சுதந்திரத்தை நியாயமான அளவில் கட்டுப்படுத்துவதற்குரிய நடைமுறை விதிகளை உருவாக்குவதற்கும் சட்டம் இயற்றலாம்.

ஆயினும் மேற்கூறிய காரணங்களுக்காக ஒரு சட்ட முன்வரைவு அல்லது ஒரு திருத்தத்தைக் குடியரசுத் தலைவரின் இசைவினை முன்னதாகப் பெறாமல், ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் முன் மொழியக் கூடாது.

புதியதாக இயற்றப்படும் சட்டங்கள் எவையும் பிரிவு 301 மற்றும் 303-ஆம் பிரிவுகளில் உள்ளவை எவையும் நடைமுறையிலுள்ள எச்சட்டத்தையும் பாதித்தல் கூடா. அவ்வாறு செய்வதானால் அதுபற்றி வேறுவிதமான உத்தரவினைக் குடியரசுத் தலைவர் பிறப்பித்திருக்க வேண்டும்.

இவ்வணிகச் சுதந்திரம், 302, 303, 304, 305 ஆம் பிரிவுகள் ஏற்படுத்தும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, மற்ற வழிகளில் நாடு முழுவதும் தங்குதடையின்றிச் செயற்படும் வகையில் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இறுதியாக வணிகச் சுதந்திரம் பற்றி அரசியல் அமைப்புச் சட்டத்தின் 307-ஆம் பிரிவு பின்வருமாறு விளக்கிக் கூறுகிறது.

'நாடாளுமன்றம், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 301, 302, 303, 304-ஆம் பிரிவுகளின் நோக்கங்களை நிறைவேற்றி வைப்பதற்குத் தகுந்தது எனத் தான் நினைக்கின்ற ஓர் அதிகாரக் குழுவை நியமனம் செய்து, அதற்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் அதற்கு அளிக்கும் மேற்கூறிய விதி, அமெரிக்க ஆசுத்திரேலிய நாடுகளின் அரசியல் சட்டத்தினைப் போல், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.''

தீர்ப்பாயங்கள்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 14-ஆம் இயல், தீர்ப்பாயங்கள் ஏற்படுத்துவது பற்றி விவரித்துக் கூறுகின்றது.

மைய அல்லது மாநில அரசுத் தொடர்பான பணிகளில் அல்லது இந்தியாவிலுள்ள உள்ளாட்சித் துறை அல்லது வேறு அதிகார அமைப்புத் தொடர்பான பணிகளில் அல்லது மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது அரசுக்குச் சொந்தமான அல்லது அரசால் ஏற்படுத்தப்பட்ட வாரியம் தொடர்பான பணிகளில் கட்டுப்பாடுகள், அதற்குரிய தேர்வு, அது தொடர்பான முறையீடுகள் மற்றும் தகராறுகள் ஆகியவற்றை ஆராய்ந்து, விசாரணை செய்து முடிவு சொல்லத்தக்க தீர்ப்பாயங்களை நாடாளுமன்றம் ஏற்படுத்தலாம்.

இவ்வாறு ஏற்படுத்தப்படும் சட்டத்தின்படி, மத்திய அரசுக்கு ஒரு நிருவாகத் தீர்ப்பாயமும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நிருவாகத் தீர்ப்பாயமும் ஏற்படுத்தப்படலாம். அத்தகைய் தீர்ப்பாயங்களின் வரம்பு, அதன் அதிகார எல்லை முதலியனபற்றியும், அத்தீர்ப்பாயங்கள் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் விதிமுறைகளை ஏற்படுத்தலாம்.

323 A (1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகராறுகள் அல்லது முறையீடுகள் பற்றிய அதிகார வரம்பு, உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே உரியது ஆகும். பிற நீதிமன்றங்களுக்கு இல்லை.

இத்தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், ஒரு நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள அத்தகைய வழக்குகள், தீர்ப்பாயங்களின் அதிகார வரம்புக்குள் வரக்கூடியனவாக இருக்கும்போது, அவற்றை அத்தீர்ப்பாயங்களுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

தீர்ப்பாயங்கள் தம் அலுவல்களைச் செம்மையாகச் செய்வதற்கும் வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணுதற்கும், ஆணைகளை வலியுறுத்துவதற்கும் ஏற்ற வகையில், நாடாளுமன்றம், துணையான, நேர்முகமான பின்விளைவுகள் தொடர்பாகவும் வழிவகை காணலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அல்லது நடைமுறையிலுள்ள வேறு சட்டத்தில், மாறாகக் கூறப்பட்டிருப்பினும், இந்தக் கோட்பாட்டில் கூறப்பட்ட விதிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

சட்ட மன்றம் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் உள்ள வழக்குகள் தொடர்பாக ஏற்படும் தகராறுகள், முறையீடுகள் அல்லது குற்றங்கள் தொடர்பாகத் தீர்வு காண்பதற்கும் விசாரிப்பதற்கும் உரிய தீர்ப்பாயங்களை ஏற்படுத்துவதற்குரிய சட்டத்தைத் தொடர்புடைய சட்டமன்றம் இயற்றலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் பின்வருவன:

அ) ஒரு வரியை விதிப்பது; உறுதி செய்வது; வசூலிப்பது மற்றும் வலியுறுத்துவது.

ஆ) அயற் செலாவணி, சுங்க எல்லைகளுக்கு மிகுந்து நடத்தப்படும் ஏற்றுமதி, இறக்குமதி.

இ) தொழில் மற்றும் தொழிலாளர் தொடர்பான தகராறுகள்.

ஈ) சமீன் நிலங்களை அரசு எடுத்துக் கொள்வது, நிலச் சீர்திருத்தங்கள் முதலிய தொடர்பான உரிமைகளை மாற்றியமைத்தல் அல்லது நீக்குதல் அல்லது வேளாண்மை நிலங்களுக்கு உச்ச வரம்பு நிருணயிப்பது அல்லது வேறு வகையான நிலச் சீர்த்திருத்தங்கள்.

உ) நகர்ப்புறச் சொத்துகளுக்கு உச்ச வரம்பு நிருணயித்தல்.

ஊ) நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள்.

எ) இன்றியமையாத உணவுப் பண்டங்கள். அவற்றை உற்பத்தி செய்தல், நேரடிக் கொள்முதல், பங்கீடு, விலையைக் கட்டுப்படுத்துதல்.

ஏ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளைப் பற்றிய சட்டங்களை மீறிச் செய்யப்படும் குற்றங்கள் மற்றும் அந்த வழக்குகளுக்குரிய கட்டணங்கள் முதலியவையாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்குப் பல தீர்ப்பாயங்களை நிறுவுதல்; அவற்றிற்குரிய அதிகாரம், அதன் அமைப்புப் பற்றிய விளக்கம் (சான்றுகளை ஏற்பதற்கான விதிமுறைகள் உட்பட), தீர்ப்பாயங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழக்கு முறைகளை நெறிப்படுத்துதல், மேல்முறையீட்டிற்கு உரிய அதிகார வரம்பு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி நடைமுறையில் உள்ள சட்டத்தில் யாது கூறப்பட்டிருப்பினும், இக்கோட்பாட்டில் உள்ளவற்றைச் செயற்படுத்துதல் ஆகிய பணிகளைத் தீர்ப்பாயங்கள் நடைமுறைப்படுத்தும்.

தகுதியுடைய வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதை முறைப்படுத்துவது, கட்டுப்படுத்துவது, கண்காணிப்பது, நாடாளுமன்ற, மாநிலச் சட்ட மன்றங்களின் தேர்தல்களை நடத்துவது, குடியரசுத் தலைவர், துணைத்தலைவர் முதலிய பதவிகளுக்குரிய தேர்தல்களை நடத்துவது போன்ற பணிகள். இந்திய அரசியல் அமைப்புச்சட்டப்படி தேர்தல் ஆணையக்குழு (Election Commission) எனப்படும் ஓர் ஆணையக்குழுவின் பொறுப்பில் இருக்கும்.

தேர்தலில் சில அடிப்படைக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவை பின் வருவன:

1) ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் பொது வான தேர்தல் பட்டியல் ஒன்று மட்டுமே உண்டு.

2) சாதி, சமயம், இனம், பால் ஆகியவை, அல்லது இவற்றில் ஏதேனுமொன்றின் அடிப்படையில் எவரும் வாக்காளர்ப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு மறுப்பு அளிக்கக்கூடாது.

3) மக்கள் சபைக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. வாக்காளர்கள் (1) இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்; (2) 21 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும்; (3) மக்கள் சபை, மாநிலச் சட்டசபை ஆகியவற்றினால் தேர்தல் பற்றி இயற்றப்பட்ட சட்டங்களினால் (People's Representation Act, 1950) தகுதியற்றவராகக் கருதப்படக்கூடாது.

4) அரசியல் சட்ட விதிகளின்படி ஓட்டுரிமைக்குத் தகுதி அற்றவர்களும், குடியிருப்பு உரிமை அற்றவர்களும், சித்த சுவாதீனம் இல்லாதவர்களும், குற்றம் புரிந்து, ஊழல் புரிந்து சட்ட விரோதமாக நடந்த காரணங்களால் சட்டப்படி விலக்கப்பட்டவர்களும் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியாது.

தேர்தல் ஆணையர்களின் பணியமர்த்தம், அவர்களின் அதிகார எல்லை, பணி முதலியவை பற்றித் தெளிவாக இந்திய அரசியல் சட்டம் கூறுகின்றது. சட்டமன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் முதலியன பற்றிய விதிமுறைகளையும் கூறுகிறது.

தேர்தல் தொடர்பான சட்டங்கள் இயற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தையும், தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்திற்கு வாக்காளர் பட்டியல் போன்றவற்றின் தொடர்பாக உள்ள அதிகார வரம்பினையும் இந்திய அரசியல் சட்டம் வரையறை செய்கிறது.

**தேர்தல்கள்:** இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 15-ஆம் இயலில் 324 முதல் 329 முடிய உள்ள பிரிவுகளில், தேர்தல்கள் பற்றி விளக்கிக்கூறுகிறது.

அவை பின் வருவன:

1. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் பொதுவான தேர்தல் பட்டியல் ஒன்று மட்டுமே உண்டு.

2. சாதி, சமயம், இனம்; பால் ஆகியவை அல்லது இவற்றில் ஏதாவதொன்றின் அடிப்படையில், யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கு மறுப்பு அளிக்கப்படக் கூடாது.

3. சாதி, சமயம், இனம், பால் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தேர்தல் பட்டியல் தயாரிக்கவோ அதில் இடம்பெறுவதற்குரிய கோரிக்கையை எழுப்பவோ கூடாது.

4. மக்கள் சபைக்கும், மாநிலச் சட்டமன்றங்களுக்கும் வாக்களிக்கும் தகுதியைப் பெறுபவர்கள் கீழ்க்காணும் மற்ற தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(அ) இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.

(ஆ) 21 வயது நிறைவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(இ) மக்கள் அவை, மாநில அவை ஆகியவற்றினால் தேர்தல் பற்றி இயற்றப்பட்ட சட்டங்களினால் (People's Representation Act, 1950) தகுதியற்றவராகக் கருதப்படக்கூடாது.

**தேர்தல் ஆணைக்குழு (Election Commission):** அரசியல் சட்டத் தகுதி பெற்றதும், சுயேச்சையும் சுதந்திரமும் கொண்டதுமாகிய தேர்தல் ஆணைக்குழு ஒன்று 324-ஆம் பிரிவின் படி நிறுவப்பட்டுள்ளது. இவ்வாணைக்குழு அனைத்து இந்தியாவிற்கும், பொதுவான குழுவாகும். இக்குழு குடியரசுத் தலைவர், உதவிக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் தேர்தலையும் பாராளுமன்றம் மாநிலச் சட்டசபை ஆகியவற்றின் தேர்தலையும் நடத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.

அட்டவணையிடப்பட்ட சாதியினருக்கும் பழங்குடிமக்களுக்கும் மக்கள் சபையிலும் சட்டப்பேரவையிலும் இட ஒதுக்கீடு செய்யவும், அம்மக்களுக்கு மத்திய மாநில அரசுகளில் வேலை வாய்ப்பு அளிக்கவும் அரசியல் சட்டம் வகை செய்துள்ளது. ஆங்கிலேய-இந்திய வகுப்பினரைச் சேர்ந்த இருவரை மக்கள் சபைக்குக் குடியரசுத் தலைவர் நியமிப்பதற்கும், அவ்வகுப்பைச் சேர்ந்த ஒருவரை சட்டப்பேரவைக்கு மாநில ஆளுநர் நியமிப்பதற்கும் அரசியல் சட்டம் வகை செய்துள்ளது.

இந்திய ஒன்றியத்தின் (Indian Union) ஆட்சி மொழி இந்தி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டம் செயல்முறைக்கு வந்த நாளிலிருந்து 15 ஆண்டுக் காலத்திற்கு ஆங்கிலமும் இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகத் திகழும் என்பதும் கூறப்பட்டுள்ளது. மாநிலச் சட்டமன்றம் தன் விருப்பம்போல் அம்மாநிலத்தின் நடைமுறையிலிருக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ அல்லது இந்தி மொழியையோ அம்மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளலாம். இப்போது இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகத் திகழும் மொழி, மாநிலங்களுக்குள் நடைபெறும் செய்தித் தொடர்புக்குப் பயன்படுத்தப்படவேண்டும். இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மாநிலங்கள் ஒப்புக் கொண்டால், அம்மாநிலங்களுக்குள் நடைபெறும் செய்தித் தொடர்புக்கு இந்திமொழி பயன்படுத்தப் படலாம்.

இதற்கு மாறாக நாடாளுமன்றம் சட்டமியற்றும் வரையிலும் உச்ச நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றங்களிலும் ஏற்படும் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். ஆனால், ஓர் உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தி மொழியிலோ அம்மாநிலத்தின் ஆட்சி மொழியிலோ நடைபெற, அம்மாநில ஆளுநர், குடியரசுத்தலைவரின் முன்னிசைவுடன் அதிகாரம் வழங்கலாம். ஆனால், அவ்வாறான ஆளுநரின் அதிகாரம் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கும் ஆணைக்கும் பொருந்தாது. மத்திய மாநிலச் சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மசோதாக்களும், அவற்றால் இயற்றப்படும் சட்டங்களும், குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் பிறப்பிக்கும் அவசரச் சட்டங்களும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும். மசோதாக்கள், சட்டம், அவசரச் சட்டம் ஆகியவற்றை உருவாக்க ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியைப் பயன்படுத்த மாநிலச் சட்டமன்றம் வழி வகுத்திருந்தால், அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு அரசு இதழில் (Official Gazette) வெளியிடப்பட வேண்டும்.

தொடக்கக் கல்வி தாய்மொழியில் போதிக்கப்படுவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு இச்சட்டத்தின் 368-ஆம் பிரிவு வகை செய்துள்ளது. திருத்தம் நாடாளுமன்றத்தில் இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேலும் ஒவ்வோரவையிலும் குழுமியிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக்குறையாத அளவில் உறுப்பினர்கள் திருத்தத்துக்குத் துணையாக இருக்க வேண்டும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் தேவை. மேலும் இந்த 368-ஆம் பிரிவையும் இன்னும் ஏனைய சில பிரிவுகளையும் திருத்த வேண்டுமானால், மாநிலச் சட்டமன்றங்களின் எண்ணிக்கையில் சரிபாதிக்குக் குறையாத அளவில் சட்ட மன்றங்கள் திருத்தத்துக்குத் துணையாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டியது தேவையாகும்.

மாநிலங்கள்

1. ஆந்திரப் பிரதேசம்
2. அசாம்
3. பீகார்
4. குசராத்து

5. கேரளம்
6. மத்திய பிரதேசம்
7. தமிழ் நாடு
8. மகாராட்டிரம்
9. கர்நாடகம்
10. ஒரிசா
11. பஞ்சாபு
12. இராசசுத்தான்
13. உத்தரப் பிரதேசம்
14. மேற்கு வங்காளம்
15. சம்முவும் காசுமீரமும்
16. நாகாலாந்து
17. அரியானா
18. இமாசலப் பிரதேசம்
19. மணிப்பூர்
20. திரிபுரா
21. மேகாலயா
22. சிக்கிம்

மைய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள்

1. தில்லி
2. அந்தமான், நிக்கோபார்த்தீவுகள்
3. இலட்சத் தீவுகள்
4. தாத்ரா நகரும் அவேலியும்
5. கோவா, தாமன், தையூ
6. பாண்டிச்சேரி
7. சந்திகார்
8. மிசோராம்
9. அருணாசலப் பிரதேசம்

மொழிகள்

1. அசாம்
2. வங்காளம்
3. குசராத்தி
4. இந்தி
5. கன்னடம்
6. மலையாளம்
7. காசுமீரம்
8. மராத்தி
9. ஒரியா
10. பஞ்சாபி
11. சமசுகிருதம்.
12. சிந்தி
13. தமிழ்
14. தெலுங்கு
15. உருது

**இந்திய அரசு விருதுகள்:** பல்வேறு துறைகளில் பொதுநலனுக்காகச் சிறப்பான பணியாற்றுபவர்களுக்கு இந்திய அரசு ஆண்டுதோறும் விருதுகளை வழங்கி வருகிறது. பெரும்பாலான விருதுகள் குடியரசு நாளன்று கொடுக்கப்படுகின்றன. இத்தகைய விருதுகளுள் சிறப்பானவை பின்வருவனவாம்.

1. **அருச்சுன விருது:** விளையாட்டுத் துறையில் தன்னிகரற்று விளங்கும் வீரர்களுக்கு 1961–ஆம் ஆண்டுமுதல் இவ்விருது வழங்கப்படுகிறது. சிறப்பான வீரர்களுக்கு வெண்கலச் சிலை வழங்கப்படுகிறது. பணம் வழங்கப்படுவதில்லை. இதற்கான பரிந்துரைகளைத் தேசிய விளையாட்டுக் கழகம் செய்கிறது. இப்பரிந்துரைகளை ஏற்று அனைத்திந்திய விளையாட்டு ஆலோசனைக் குழு ஆராய்கிறது. இறுதியாக முடிவு செய்யும் பொறுப்பு மைய அரசைச் சேர்ந்ததாகும். இவ்விருது பற்றிய இறுதி முடிவுகள் ஒவ்வோராண்டும், ஏப்பிரல் அல்லது மே மாதத்தில் அறிவிக்கப்படுகின்றன. இம்முடிவுகள் விளையாட்டுக் கால இதழ்களிலும் நாளேடுகளிலும் வெளியிடப்படுகின்றன. விருதுகள் பற்றிய விவரங்கள் அடங்கிய சிறு நூலொன்றை மையக் கல்வி அமைச்சு வெளியிடுகிறது.

2. **சிறப்பு ஏற்றுமதியாளர் விருது:** இது 1964–ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதை மத்திய வணிக அமைச்சு வழங்குகிறது. தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள், மத்திய அரசுப் பொறுப்பில் உள்ள நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகியவர்களுள் ஏற்றுமதி வணிகத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் 15 விருதுகள் வழங்கப்படுகின்றன. வெள்ளிச் சுழல் கேடயமும் நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

3. **இந்திமொழிச் சட்டநூல் விருது:** இது 1965 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வோராண்டும் போட்டிக்காக வரும் பல்வேறு சட்ட நூல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்

படும். ஆகையால் விருதுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுக் கூற இயலாது. பரிசுத் தொகையாக உரு. 10,000 வழங்கப்படுகிறது.

இந்த விருதுக்காக எழுத்தாளர், நூல் வெளியிடுவோர் ஆகியோரிடமிருந்து, வெளியிடப்பட்ட நூலின் 6 படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. இதனையொட்டிய விளம்பரங்கள் இந்தியாவில் உள்ள எல்லா முன்னணி நாளேடுகளிலும் கொடுக்கப்படுகின்றன. இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் ஒவ்வோராண்டும் சனவரி மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். விருதுக்கான மத்திய சட்ட அமைச்சினால் நியமிக்கப்பட்ட சட்ட வல்லுநர்களைக் கொண்ட தேர்வுக் குழுவினர் இப்போட்டியில் பங்கு கொள்ளும் நூல்களுள் சிறந்தனவற்றை ஆராய்ந்து தேர்வு செய்கிறார்கள். இதன் முடிவு தலைமை நீதிமன்ற அறிக்கை மூலமாகவும் சட்டத் தொடர்பான கால இதழ்களின் மூலமாகவும் அறிவிக்கப்படுகின்றது.

4. இந்திய மொழி நூல்கள் விருது: இது 1969-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு வழங்கும் இவ்விருது, எந்தத் தழுவலும் இன்றிச் சொந்தமாக எழுதப்பட்ட சிறந்த படைப்புகளுக்கும் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட படைப்புகளுக்கும் வழங்கப்படுகிறது. இந்த நூல்கள் கையெழுத்துப் படிவங்களாகவும் இருக்கலாம். ஆனால், இவை இந்தியிலோ வடமொழியிலோ எழுத்தாளரின் தாய் மொழியிலோ இருக்கக் கூடாது. ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் வேறு இந்திய மொழியில் எழுதுவதன் வழியே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுத்துதலும், தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்தலும், இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளை வளமாக்குதலும் இதன் தலையாய குறிக்கோள்களாகும். பரிசுத் தொகை உரு. 2,000 வழங்கப்படுகிறது. இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் நூல்களோ கையெழுத்துப் படிகளோ 1. இலக்கியம், 2. அழகுக்கலை, 3. அறிவியல் துறை, 4. சமூக அறிவியல் 5. தொழில் நுட்பத் துறை ஆகிய ஐந்து துறைகளில் அடங்க வேண்டும்.

விருது வழங்குவதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் நாளிலிருந்து அந்த நூல் ஐந்து ஆண்டுகளுக்கு உட்பட்டு வெளியிடப்பட்டிருக்க வேண்டும்; கையெழுத்துப் படியாக இருந்தாலும் அது ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

இவ்விருதுக்கான போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் 5 படிகளைக், கேட்கப்பட்ட விவரங்களின் அச்சடிக்கப்பட்ட தாளோடு ஒவ்வோராண்டும் மார்ச்சு மாத இறுதிக்குள் அனுப்பி வைத்தல் வேண்டும். இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் நூல்களை ஆய்வுக்குழு நன்கு ஆராய்ந்து முடிவுகளை வெளியிடும்.

5. பாரத இரத்தினம்: இந்த விருது 1954-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மத்திய உள் நாட்டு அமைச்சு இவ்விருதை வழங்குகிறது. இவ்விருது சமூகத்தில் சாதி, மதம், ஏற்புநிலை, தொழில், ஆண், பெண் என்ற வேறுபாடுகள் பாராமல் நாட்டு மக்களுக்குத் தன்னலமற்ற பணிபுரிந்து வருபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதுக்கான பெயர்களைச் சமூகத்தில் சிறப்பிடம் கொண்ட இந்தியக் குடிமக்கள் பரிந்துரை செய்கிறார்கள். இவர்களுள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர். இந்த விருதுக்கான பரிந்துரைகள், மாநில அரசாங்கத்திடம் இருக்கும் நாளேடுகள் மூலமாக மக்களின் கருத்துகளிலிருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த விருது பற்றிய விவரங்கள் குடியரசு நாளன்று இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகின்றன.

6. கோபால் இரத்தினம் விருது: இந்தப் போட்டியில் பங்கு கொள்பவர்களை உயர்நிலை அதிகாரிகள் ஆராய்கிறார்கள். பால் உற்பத்தியைப் பெருக்கப் போட்டியில் பங்கு பெறுவோர் ஆற்றிய பங்கு, பால் உற்பத்தி வளம்பெறக் கையாண்ட குறிப்பிடத்தக்க முறைகள், மிகுதியாகப் பால் தரும் மாடுகளை வளர்த்த முறை ஆகியவற்றை ஆராய்ந்து இந்த விருது வழங்கப்படுகிறது. முதல் பரிசுத் தொகை உரு. 2.000. இரண்டாம் பரிசுத் தொகை உரு.1,000 மூன்றாம் பரிசுத் தொகை உரு. 500. இந்தப் போட்டிக்கான தேர்வுகள் ஒவ்வொரு மாநில அரசாங்கத்திடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன. பால் உற்பத்திப் பெருக்கில் சிறப்பாகப் பணியாற்றியவரின் பெயர்கள், மாநில-அரசாங்கம் செய்யும் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசால் நியமிக்கப்பட்ட அனைத்திந்தியத் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்படுகின்றன. இதன் முடிவுகள் ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் இந்தியாவில் முன்னணியில் உள்ள எல்லா நாளேடுகளிலும் வெளியிடப்படுகின்றன.

7. இந்தி மொழி பேசாத மாநிலங்களின் இந்தி எழுத்தாளர்களுக்கு விருது: இது 1961-முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது இந்தியை முக்கிய மொழியாகக் கொண்டு பேசாத மாநிலங்களில் இருக்கும் இந்தி எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்பிற்கு வழங்கப்படுகிறது. மொத்தம் 16 விருதுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத்தொகை உரு. 1,500. சிறந்த இந்தி இலக்கியப் படைப்புகள் மத்திய அரசுக் குழுவினரால் தேர்வ செய்யப்படுகின்றன.

8. சீவன் இரட்சைப் பதக்கம்: இது 1961-முதலாக வழங்கப்படுகிறது. இது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் இன்னல் மிகுந்த சூழ்நிலையிலிருந்து தம் உயிரையும் பொருட்படுத்தாது மற்றவர்களைக் காப்பாற்றியவர்களைப் பாராட்டி வழங்கப்படும் விருதாகும். தீ விபத்திலிருந்தோ சுரங்கங்களில் ஏற்படும் விபத்திலிருந்தோ தம் உயிரைப் பொருட்படுத்தாது பிறரைக் காப்பாற்றியவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இது பின்வரும் மூன்று பிரிவுகளாக வழங்கப்படுகிறது. 1. சர்வோத்தம் இரட்சைப் பதக்கம், 2. உத்தம் சீவன் இரட்சைப் பதக்கம், 3. சீவன் இரட்சைப் பதக்கம். இது பொற் பதக்கமாக வழங்கப்படுகிறது. மாநில அரசுகளிடமிருந்து பரிந்துரைகள் முறையாக வரவேற்கப்படுகின்றன. இந்தியக் குடியரசுத்தலைரின் அலுவலகத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

9. கிருசி பண்டித விருது: இவ்விருது 1949 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது வேளாண்மைத் துறையில் சிறந்த அறிவியல் முறையைப் பயன்படுத்தி மிகுந்த அளவு விளைச்சல் பெறும் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் பரிசாக உரூ. 5,000-உம் 'கிருசி பண்டிதர்' என்ற நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இரண்டாம் பரிசாக உரூ. 3.000-உம் அதனுடன் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. மூன்றாம் பரிசாக உரூ.2,000-உம் அதனுடன் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் உழவர்களுக்குக் குறைந்தது 0.2 எக்டேர் நிலம் இருத்தல் வேண்டும். இந்த நிலம் அங்கங்கே துண்டுதுண்டாக இல்லாமல் ஒரே நிலமாக இருத்தல் வேண்டும்.

இந்தப் போட்டிக்கு மாநில அரசாங்கம் தங்கள் மாநிலத்தில் பயிர் விளைச்சலில் கடந்த ஆண்டு பங்கு கொண்டு முதல் 6 இடம் பெற்ற உழவர்களின் பெயரைப் பரிந்துரை செய்ய உரிமை உண்டு. மாநில அரசாங்கம் பரிந்துரை செய்யாத உழவர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இந்தப் போட்டியில் பங்குகொள்ள நுழைவுக் கட்டணம் உரூ. 100 செலுத்தவேண்டும். மாநில அரசாங்கத்தால் பரிந்துரை செய்யப்பட்ட உழவர் இக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இந்தப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர்களைப் பிப்பிரவரி மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ளவேண்டும். இந்தப் போட்டியை நடத்த மத்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழு போட்டியில் பங்கு கொண்டோரின் விளைச்சலையும் அறுவடையையும் நேரடியாகச் சென்று பார்வையிடுகிறது.

10. அச்சுத் தொழிலுக்கும் நூல் வெளியீட்டிற்குமான தேசிய விருது: இது 1955 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது அச்சுத் தொழிலில் திறமை மிக்க நல்ல அழகான அச்சுத் தொழில் படைப்பைச் செய்தவருக்கும் சிறப்பாக நூல்களைப் புதிய முறையில் வடிவமைத்தவருக்கும் வழங்கப்படுகிறது. முதலாம், இரண்டாம் பரிசுகளைப் பெறுபவர்களுக்குத் தாமிரப் பத்திரமும் அதனுடன் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இந்தப் போட்டியில் பங்கு கொண்டவர்களை ஆராய்ந்து விருதுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க நீதிபதிகள் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்திருக்கிறது.

11. தேசிய திரைப்பட விருது: இது 1953-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறையில் அழகிய கலை உணர்வை வெளிப்படுத்துவதாகவும் தொழில்நுட்பம் மிக்கதாகவும், அறிவைப் போதிக்கக் கூடியதாகவும், இந்தியப் பண்பாட்டின் புகழை உயர்த்தக் கூடியதாகவும் உள்ள திரைப்படங்களுக்காக இவ்விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் தங்கத் தாமரை, வெள்ளித் தாமரை, வெண்கலத் தாமரை விருதுகள் திரைப்படக் கலையின் வெவ்வேறு துறைகளுக்கு வழங்கப்படுகின்றன.

12. ஆசிரியர்களுக்கான தேசிய விருது: ஒவ்வோராண்டும் 100-க்கு மேற்பட்ட விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதைப் பெறும் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகை உரூ. 1,000 -உம் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர் தொழிலில் 20 ஆண்டு அனுபவம் பெற்றிருப்பவர்களே இவ்விருதைப் பெறத் தகுதி உடையவர்களாவர். மேலும், சமுதாயத்தில் கண்ணியமானவராகவும் புகழ்மிக்கவராகவும் இருத்தல் வேண்டும். கற்பிக்கும் முறையில் திறமை மிக்கவராகவும் அதை மேன்மேலும் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களிடம் அன்பு கொள்வதில் ஆர்வ மிக்கவராக இருத்தல் வேண்டும். சமுதாயத்தின் பொதுவாழ்வில் பங்கு கொள்பவராக இருத்தல் வேண்டும். மாநில அரசாங்கம் நல்லாசிரியர் பட்டியலைத் தேர்வு செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கிறது. இறுதியாக விருதுக்குரியவர்களைத் தேர்வு செய்வது மத்திய கல்வி அமைச்சு ஆகும். இந்த விருதின் முடிவு ஆசிரியர்கள் நாளன்று (செப்டம்பர் 5-ஆம் தேதி) ஒவ்வோராண்டும் அறிவிக்கப்படுகிறது.

13. கைவினைஞர்களுக்கான தேசிய விருது: இது 1965-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வரு

கிறது. திறமைமிக்க இந்தியக்கைவினைஞர்கள் உருவாக்கிய சிறந்த கைவினைப் பொருள்களுக்காக அவர்களைப் பாராட்டி ஒவ்வோராண்டும் 10 விருதுகள் அனைத்திந்திய அளவில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விருதிற்கும் பரிசுப் பணமாக உரூ.2,500 – உம் அதனுடன் தாமிரப் பத்திரமும் கொடுக்கப்பட்டுப் பட்டாடையும் போர்த்தப்படுகிறது. இந்த விருதுக்கான போட்டியில் பங்கு கொள்ளக் கைவினைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்துடன் அவர்கள் உருவாக்கிய கைவினைப் பொருளின் படிவத்தையும் அனுப்ப வேண்டும்.

14. கனிம உலோகக் கலைஞர் தேசிய விருது: கனிமங்களிலிருந்து உலோகங்களைத் தயாரிக்கும் வேலையில் சிறந்த சாதனை புரிந்து இத்துறையில் முன்னேற்றம் காணச் சிறந்த ஆராய்ச்சி மேற்கொண்டவர்களுக்கும், புதிய வடிவமைத்துக் கொடுத்தவர்களுக்கும் இயக்குதலில் பயனுள்ள எளிய முறையைக் கையாண்டதோடு தக்க வேளையில் இத்துறையை நன்கு முன்னேற்றும் நோக்குடன் அதன் நுணுக்கங்களைக் கல்வித்துறைக்கு அறிமுகப்படுத்த உதவி புரிந்தவர்களுக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது.

ஆறு விருதுகள் வழங்கப்படுகின்றன. முதல் விருது உரூ. 15,000 –; இரண்டுமுதல் ஆறாம் விருது வரையில் பெறுபவர் ஒவ்வொருவருக்கும் உரூ. 3,000 -வழங்கப்படுகிறது. இதற்கான போட்டியில் பங்குகொள்வதற்கு இத்துறையின் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், தனிப்பட்டவர் ஆகியோரிடமிருந்து நாளேடு விளம்பரங்களின் மூலமாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த விருதுக்கான போட்டியில் பங்கு கொள்பவர் இந்தியக் குடிமகனாக இருத்தலோடு 45-வயதுக்குக் குறைவான வயது உடையவராகவும் இருத்தல் வேண்டும். போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் ஒவ்வோராண்டும் ஆகசுட்டு மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். விருதுக்குரியவரைத் தேர்ந்தேடுக்க மத்திய அமைச்சகத்தினரால் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒவ்வோராண்டிலும் நவம்பர் மாதம் 14–ஆம் நாள் அறிவிக்கப்படும். இதன் முடிவுகள் 'பொறியியல் செய்தி' என்ற வெளியீட்டிலும், புகழ் பெற்ற அனைத்து அறிவியல் கால இதழ்களிலும் அறிவிக்கப்படும்.

15. பால்கே விருது: இது 1970–முதல் வழங்கப்படுகிறது. இந்தியத் திரைப்படத் துறையைத் தொடங்கிய பால்கேயின் நினைவாக இது வழங்கப்படுகிறது. இது இந்தியத் திரைப்படத் துறையில் தன்னிகரற்று விளங்குபவர்களுக்கு வழங்கப்படுவதாகும்.

அனைத்திந்திய அளவில் ஒரே ஒரு பரிசு வழங்கப்படுகிறது. இந்த விருதைப் பெறுபவர்களுக்கு உரூ. 20,000 பணமாக வழங்கப்படுகிறது.

16. பத்ம விபூசன், பத்மபூசன், பத்மசிரீ விருதுகள்: இவை 1954 முதல் ஒவ்வொரு துறையிலும் சிறந்த பணிபுரிந்தவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசாங்கத்தில் பணிபுரியும் சிறந்த பணியாளர்களும் தங்கள் சிறந்த சேவைக்காக இவ்விருதுகளைப் பெறத் தகுதியுள்ளவர்களாவர். இவ்விருதுகளைப் பெறுபவர்களின் பெயர்கள் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாளன்று (சனவரி 26–ஆம் தேதி) அறிவிக்கப்படுகின்றன.

17. பரமவீரசக்கரம்: இது 1981–ஆம் ஆண்டு முதல் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகிறது. துணிச்சலாகப் பல வீரச்செயல்கள் புரிந்த போர்க்கள வீரர்களைப் பாராட்டிக் குடியரசுத் தலைவரால் இது வழங்கப்படுகிறது மேலும்1. அசோகச் சக்கரம், 2. கீர்த்திச் சக்கரம், 3. சௌரிய சக்கரம், 4. சேனாப் பதக்கம், 5. வாயு சேனாப் பதக்கம் என்னும் ஐந்துவிருதுகள்வழங்கப்படுகின்றன.

18. புதிய இலக்கியங்களுக்கான விருதுகள்: புதுமையான இலக்கிய நூல்களுக்கும் கைப்படிகளுக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது. புதிய இலக்கியங்களைப் படைத்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்ந்து இலக்கியங்களை இயற்றுவதில் முதலிடம் பெற்ற குடும்பத்தில் பிறந்தவரா, கல்வி அறிவின்மூலம் புதுமையான இலக்கியம் இயற்றும் ஆற்றல் உடையவரா, இயற்றியவரின் இலக்கியத் தரம் படிப்பதற்குத் தொடக்கக் கல்வியின் குறிக்கோள்களுடன் இணைந்து இருக்கிறதா என்பவற்றை ஆராய்கின்றனர். மொத்தம் 65 பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பரிசுக்கும் பணமாக உரூ 1,000 வழங்கப்படுகிறது. இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் ஒவ்வோராண்டும் சூலை மாத இறுதிக்குள் அவர்கள் இயற்றிய புதுமையான இலக்கிய நூல்களோ கையெழுத்துப் படிகளோ நான்குடன் கேட்கப்பட்ட விவரங்களடங்கிய விண்ணப்பத்தை நிறைவு செய்து அனுப்ப வேண்டும்.

19. சிறப்புமிக்க ஊரகத்திற்கும், கிராமசேவகர் சேவகியர்களுக்குமான விருதுகள்: இவை 1959 முதல் வழங்கப்படுகின்றன. பொது வாழ்க்கையிலும் பொருளாதாரத் துறைகளிலும், சிறப்பு மிக்க சாதனைபுரிந்து வரும் கிராம சேவகர்–சேவகியர்களை ஊக்குவிப்பதற்காக இவ்விருதுகள் வழங்கப்

படுகின்றன. இவை மூன்றாகப் பிரிக்கப்பட்டு (கிராம சேவகர், சேவகியர், கிராமங்கள்) ஒவ்வொன்றிலும் மூன்று பரிசுகள் வீதம் வழங்கப்படுகின்றன.

1. அனைத்திந்திய அளவில் முதல் பரிசு உரூ.5,000-உம், இரண்டாம் பரிசு உரூ. 3,000-உம், மூன்றாம்-பரிசு உரூ. 2,000-உம் வழங்கப்படுகின்றன. 2. மாநில அளவில், முதற்பரிசு உரூ. 1,500-உம், இரண்டாம் பரிசு உரூ. 1,000-உம், மூன்றாம் பரிசு உரூ. 750-உம் வழங்கப்படுகின்றன. மைய அரசின்கீழ் இருக்கும் மாநிலங்களின் முதலாம் பரிசு உரூ. 1,500-உம், இரண்டாம் பரிசு உரூ. 1,000-உம். மூன்றாம் பரிசு உரூ. 500-உம் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவிலான போட்டிகளில் ஒரேபரிசு உரூ. 500/- கைப்பணமாக வழங்கப்படுகிறது. இந்தப் போட்டித் தொடர்பாக மத்திய அரசு,ஒரு சுற்றறிக்கையை ஊராட்சி மன்றம், சமூக நல இயக்குநர் அலுவலகம், மாநிலங்கள் அளவிலான கிராம முன்னேற்ற இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கிறது. இங்கிருந்து போட்டி பற்றிய செய்திகள் பரவலாக அறிவிக்கப் படும்.

இந்தப் போட்டியில் பங்கு கொள்வோரின் திறமையையும் அவர்கள் ஆற்றிய சாதனைகளையும் ஒவ்வொரு பிரிவுகளிலும் தனித்தனியே மதிப்பிடு கிறார்கள். இதில் பங்கு கொள்ள விரும்புவோர் விண்ணப்பத்தினை ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் முதல் தேதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

20. உதயன் பண்டித விருது: இது 1968-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. பழ விளைச்சலில் சிறப்பாகப் பணியாற்றிச் சிறந்து விளங்குபவர்களுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. மாம்பழம், வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம் திராட்சை, ஆப்பிள், அன்னாசிப்பழம் ஆகிய பழங்களின் சிறப்பான விளைச்சலை ஊக்குவிப்பதற்காக இந்த விருதை வழங்குகிறார்கள். இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக உரூ. 5,000/-உம் வெண்கலப் பதக்கமும் இவற்றுடன் உதயன் பண்டிதச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இரண்டாம் பரிசு பெறுபவர்களுக்கு உரூ. 2,000/-உம் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. பழவிளைச்சல் செய்வோர் இப் போட்டியில் கலந்து கொள்ள அறிவிப்புகள் செய்யப் படுகின்றன. இந்த விருதிற்கான போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு வகைப் பழத்திற்கும் குறைந்தபட்சம் ஓர் ஏக்கர் நிலத்தில் பழத்தோட்டம் வைத்திருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு அரசு வழங்கும் விருதுகள்: 1. அண்ணா வீரப் பதக்கம்: இந்த விருது, துணிச்சலான பல வீரச் செயல்களைப் புரிந்தவர்களுக்காக வழங்கப் படுகிறது. தன் உயிரைப் பொருட்படுத்தாது விபத்தில் இருந்து மற்றவர்களைக் காப்பாற்றிய சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது. வெள்ளத்தில் சிக்கி உயிர் துறக்க இருந்தவர்களையும், தீயில் அகப்பட்டு உயிருக்காகப் போராடியவர்களையும் காப்பாற்றுதல் போன்ற வீரச் செயல்கள் இதில் அடங்கும். ஒவ்வோராண்டும் (சனவரி 26-ஆம் நாள்) குடியரசு நாளன்று தமிழக அரசு முதல்வரால் இது வழங்கப்படுகிறது. பரிசாக உரூ. 1,000 - கைப்பணமும், உரூ. 1,000 -மதிப்புள்ள பதக்கமும் வழங்கப்படுகின்றன.

2. கலைமாமணி விருது: திரைப்படத் துறையில் சிறப்புமிக்க சேவையாற்றிய பழம்பெரும் நடிகர், நடிகையர்கள், திரைப்படத்துறை தொடர்பான சிறந்த கலைஞர்கள் ஆகியோருக்கு இது வழங்கப்படுகிறது. திரைப்படக் கலைஞர்களின் சிறப்புமிக்க சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது, அச்சமயம் திரைப்படத் துறையின் பழைய கலைஞர்களுக்கும், வறுமையால் நலிவுற்று வாடும் கலைஞர்களுக்கும் பொன்னாடை போர்த்திப் பணமுடிப்பும் வழங்கப் படுகிறது.

3. திரைப்பட விருது: தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள சிறந்த திரைப்படங்கள், செய்திப்படங்கள், குழந்தைகளுக்கான திரைப்படங்கள் ஆகியவற்றிற்கும் கலைஞர்களுக்கும் இது வழங்கப்படும். திரைப்படத் தணிக்கைக் குழுவினரால் முந்தைய நிதி ஆண்டுக் காலவரையறைக்குள் தணிக்கைச் சான்றிதழைப் பெற்றுத் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள 3000 மீட்டர் அளவுக்குக் குறைவில்லாத 35 மி.மீ. முழு நீளத் திரைப்படங்களும் குழந்தைகளுக்கான முழுநீளத் திரைப்படங்களும் இந்தத் தேர்வில் அனுமதிக்கப்படும். ஒவ்வோராண்டும் நிதி ஆண்டு முடிவிற்குள் போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பங்கள் வரவேற்கப்படும்.

தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள திரைப்படங்களும் பிறமொழித் திரைப்படங்களின் தழுவல்களும், மறுபதிப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படங்களும் இந்தத் தேர்வில் அனுமதிக்கப்படமாட்டா. இதற்கான தனி விண்ணப்பப் படிவங்களை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம். அவரிடம் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரூ. 100/- நுழைவுக் கட்டணத்துடன் ஒவ்வோராண்டும் ஏப்பிரல் 30-ஆம் நாளுக்குள் சேர்ப்பித்தல் வேண்டும்.

சிறந்த நடிகர், நடிகை, இயக்குநர், ஒளிப்பதி

வாளர், படத்தொகுப்பாளர், கதாசிரியர், உரையாடல் ஆசிரியர், இசையமைப்பாளர், பாடல் ஆசிரியர், பின்னணிப் பாடகர், பின்னணிப் பாடகி, நகைச்சுவை நடிகை, சண்டைக்காட்சி இயக்குநர் ஆகியோர் தேர்வுக்கான விண்ணப்பங்களைத் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகர் சங்கம் அல்லது தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் மூலமாக அனுப்பலாம். இதற்கு நுழைவுக் கட்டணம் இல்லை. ஆ.ஞா.

**இந்திய அருங்காட்சியகம்:** இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களுள் மிகப் பழமையானது கல்கத்தாவிலுள்ளது. இது கி.பி. 1814-ஆம் ஆண்டில் ஆசியச் சங்கத்தினரால் (Asiatic Society) கல்கத்தாவில் நிறுவப்பட்டது. இதனை நிறுவியவர் டாக்டர் நதானியல் வாலித்து என்னும் தென்மார்க்குத் (Denmark) தாவரவியலார் ஆவர். ஆசியச் சங்கம் கி.பி.1856-ஆம் ஆண்டில் அருங்காட்சியகங்களின் பெருகிவரும் சேகரிப்புகளை மாட்சிமையுள்ள அருங்காட்சியகத்தில் (Imperial Museum) சேமித்து வைக்க வேண்டி, இந்திய அரசுக்குக் குறிப்பாணை ஒன்றை அனுப்பியது. இதன் விளைவாகக் கி.பி.1866-இல் இயற்றப்பட்டதே இந்திய அருங்காட்சியகச் சட்டம். இச்சட்டம் இந்திய அருங்காட்சியகத்தின் நோக்கம், வடிவமைப்பு ஆகியவற்றை வரையறுத்துள்ளது. அருங்காட்சியகத்தை நிருவகிப்பதற்கென அறங்காவலர் குழுவொன்று (Board of Trustees) அமைக்கப்பட்டுப் புதிய கட்டிடமொன்றும் வழங்கப்பட்டது. இதன் பின்னர்க் கி.பி. 1875-ஆம் ஆண்டு கட்டப்பட்ட புதிய கட்டடத்தில் அருங்காட்சியகக் கூடங்கள் மாற்றப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டு; கி.பி. 1878-ஆம் ஆண்டு பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டன. ஒவ்வொரு கூடமும் அந்தந்தத் துறையின் இந்திய அரசுப் பரப்பாய்வின் (Survery of the Government of India) மேற்பார்வையிலிருந்தது. தொடக்கத்தில் இந்த அருங்காட்சியகம்



இந்திய அருங்காட்சியகத்தின் முகப்புத் தோற்றம் நன்றி: இந்திய அருங்காட்சியகம் – கல்கத்தா

தொல்லியல், இனக் குழு ஒப்பாய்வியல் (Ethnology), பொறியியல் ஆகியவை அடங்கிய ஒரு பிரிவையும், புவியியல், விலங்கியல் ஆகியவை அடங்கிய மற்றொரு பிரிவையும் மட்டுமே கொண்டிருந்தது. நிருவாக அமைப்பில் 1960-ஆம் ஆண்டு மிகப் பெரிய மாற்றம் செய்யப்பட்டது. கலை, தொல்லியல், மானிடவியல் ஆகிய பிரிவுகள் இணைக்கப் பட்டு, ஓர் இயக்குநர் தலைமையின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஆனால், இயற்கையியல் பிரிவுகள் முன் பிருந்தது போலவே அந்தந்தப் பரப்பாய்வு நிருவா கத்தின்கீழ்ச் செயற்பட்டு வருகின்றன. இப்போது இந்திய அருங்காட்சியகத்தில் கலை, தொல்லியல், மானிடவியல், புவியியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய ஆறு பிரிவுகள் உள்ளன.

கலைப் பிரிவு: இப்பிரிவில் துணிகள், சந்தன மர வேலைப்பாடுகள், தந்தங்கள், கோவில் விளக்குகள், நகைகள், கண்ணாடிப் பொருள்கள், மேற்புறம் மெரு கேற்றப்பட்ட மட்பாண்டங்கள், பச்சை மண்கலப் பொருள்கள் (Jade objects), உலோகப் பொருள்கள் நுணுக்க ஓவியங்கள் (Miniature paintings), திபேத் தியத்தங்காசு (Thankas), தென்கிழக்கு ஆசியக்கலைப் பொருள்கள் ஆகியவை உள்ளன. இவ்வருங்காட்சிய கம் துணிச் சேகரிப்புகளில் மிகச் சிறந்து விளங்கு கின்றது. துணிச் சேகரிப்புப் பகுதி இந்தியா முழுமை யிலுமுள்ள சிறந்த மாதிரிகளைக் கொண்டுவிளங்குகி றது. தங்கம் வெள்ளிச் சரிகைகளிலான கிம்காபுத் துணி, தாக்காவின் (Dhaka) மசுலின் துணி, மூர்சிதா பாத்தின் பாலூச்சேர் (Balucher) துணி, குசராத்தின் படாலாசு (Patalas) துணி, இராசசுத்தானின் பந்தி னித்துணி(Bandhini),மசூலிப்பட்டினத்தின் ‘காலிகோ’ (Calico) துணி ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற் றுடன் இரத்தினக்கம்பளங்கள், தரிக்கள் (Dharis) புல்விரிப்புகள் (Grass Mats) ஆகியவையும் உள்ளன. இப்பொருள்கள் அவை செய்யப்படும் புகழ்பெற்ற இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்றவையாகும்.

கைவினைப் பொருள்கள் கூடத்தில் இந்திய உலோக வேலைப்பாட்டின் சிறந்த வகைகள் அமைக் கப்பட்டுள்ளன. வெள்ளி, பிலிகிரி (Piligree) வேலைப் பாடமைந்த பொருள்களும் தஞ்சாவூரில் சமயச் சடங்குகளிலும் பிற சடங்குகளிலும் பயன்படுத்தப் படும் பாத்திரங்களும் (Ceremonial Vessel) செய்ப்பூர், இலக்குனோ ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப் பட்ட பீங்கான் பொருள்களும் (Porcelin Ware) பிட் ரியிலிருந்து வந்த பித்திரிப் பொருள்களும் (Bidri-ware) தென்னாட்டின் படிமங்களும் கைவினைப் பொருட் கூடத்தில் உள்ளன.

மொகலாய நுணுக்க ஓவியங்கள், குறிப்பாக அரசவை, அரண்மனை வாழ்க்கை ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஓவியங்கள் இந்த அருங்காட்சியகத் தின் ஓவியக்கூடத்தில் சிறப்பாகத் திகழ்கின்றன. இந்த ஓவியங்கள் கி.மு. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓலைச் சுவடிகளில் உள்ளன. தக்கான் மால்வா (Deccan Malwa) இராசசுத்தானி பகாடி வகைகளைச் (Pahadi Schools) சேர்ந்த நுணுக்க ஓவியங்களும் இங்குக் காட்சியில் வைக்கப்பட்டுள் ளன. கள்ளிக்கோட்டைப் படங்களும் கம்பெனி ஓவியங்களும் உள்ளன. வங்காள மறுமலர்ச்சி இயக்க ஓவியர்களான இரவீந்திரநாத தாகூர், நந்திலால் போசு (Nandilal Bose), அசித்குமார் (AjitKumar), அலிதார் (Alidar) போன்றவர்களின் ஓவியங்கள் அண் மைக் காலக் கலையினை விளக்குகின்றன.

சீனா, சப்பான், பர்மா, நேபாளம், திபேத்து போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற அலங் காரப் பொருள்கள் தென்கிழக்கு ஆசியக் கலைக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. ‘தங்காசு’ எனப்படும் நேபாளம், திபேத்து ஆகிய நாடுகளின் ‘சுருளொப் பனை ஓவியங்கள்’ (Scroll Paintings) கலைக்கூடத் தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் பிரிவு: வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய பல்வேறு கற்கருவிகளையும் சேகரிப்பு களையும் மிகப் பெருமளவில் இந்த அருங்காட்சியகம் கொண்டுள்ளது. இவை தவிரப் புகழ்வாய்ந்த பல சிற்பங்களையும் கொண்டுள்ளது. மௌரியர், சுங்கர், குப்தர், பாலா, சேனா ஆகியோர் காலச் சிற்பங் களும் மதுரா அமராவதிச் சிற்பங்களும் அவற்றுள் ஒரு சிலவாகும். கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் இராம் புர்வாவில் காணப்பட்ட சிங்கத்தூண் தலைப்பு (Lion Capital), கி.மு. 2–ஆம் நூற்றாண்டின் பார்குட்டுத் தூபத்தின் (Bharhut Stupa) கீழ்ப் புறத்தில் அமைந் துள்ள பெரிய தோரணம் (Torana), புத்தகயாவி லுள்ள கி.பி.4–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அமர்ந்த நிலையிலுள்ள மிகப் பெரிய போதிசத்துவர் போன் றவை தொல்லியல் கூடங்களிலுள்ள நன்கறியப்பட்ட ஒரு சில பொருள்களாகும். இப்பிரிவில் கிழக்கிந்திய, தென்னிந்தியப் படிமங்களும் உள்ளன. சுடுமண் கலைப்பொருள்கள் (Terracotta), சிறு கலைக்கூடம் (Minor Art Gallery), வரலாற்றுக் காலத்திற்கு முந் தைய காலக் கூடம், இடைப்பட்ட வரலாற்றுக் (Proto History) கூடம், நாணயக்கூடம் ஆகிய கூடங் களையும் தொல்லியற் பிரிவு கொண்டுள்ளது. இங்கு அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்கள், ஆதிச்சநல்லூர், பெரும் பேயர் (Perumbair) ஆகிய இடங்களின் மட்பாண் டங்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவையும்

உள்ளன. பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நாணயங்கள், இந்திய நாணயங்களின் வரலாற்றினைக் காட்டும் வண்ணம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மானிடவியல் பிரிவு: பண்பாட்டு மானிடவியல் கூடம், இசைக்கருவிகள் கூடம் ஆகிய இரண்டையும் மானிடவியல் பிரிவு கொண்டுள்ளது. பண்பாட்டு மானிடவியல் கூடத்தில் அழகாக அமைக்கப்பட்டுள்ள 'தயோரமா' (Diorama) வாயிலாகப் பழங்குடியினர் பண்பாடு, நாட்டுப்புறப் பண்பாடு ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. அந்தமான் தீவுகள், ஆந்திரப் பிரதேசம், கேரளா, பீகார், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து உள்ளிட்ட பன்னிரெண்டு இந்தியப் பழங்குடியினரின் மாதிரிகளும், மேற்குவங்காளம், குசராத்து, உத்தரப்பிரதேசம், ஒரிசா, கேரளம் ஆகிய இடங்களின் நாட்டுப்புறப் பண்பாட்டைக் குறிக்கும் பொருள்களும் இக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள அந்தந்த மாநிலங்களுக்குரிய ஆடைகளும் இங்குக் காட்சியில் உள்ளன.

இந்த அருங்காட்சியகத்தில் ஆர்வத்தைத் தூண்டும் மற்றொரு கூடம் இசைக்கருவிகளின் கூடமாகும். இக்கூடத்தில் பெரும்பாலும் கிழக்கிந்திய இசைக்கருவிகள் உள்ளன. பண்பாட்டு அமைப்பினைப் பொறுத்த இந்த இசைக்கருவிகள், மரபு (Classical), நாட்டுப்புறம் (Folk), பழங்குடி (Tribal) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இசைக் கருவிகளின் வடிவமைப்பினைக் கொண்டு இவை நரம்பிசைக் கருவி, காற்றிசைக்கருவி, அடித்து ஒலி எழுப்பும் இசைக்கருவி என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விலங்கியல் பிரிவு: பன்னோக்கு அருங்காட்சியகமாகத் திகழும் கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகம், மூன்று இயற்கையியலுக்கும் தொடர்புற்ற பொருள்களின் மிகப் பெரும் சேகரிப்புகளைக் கொண்டுள்ளது. அருங்காட்சியகத்தின் தலைமைக் கட்டடத்தின் முதல் தளத்தில் ஐந்து விலங்கியல் கூடங்கள் அமைந்துள்ளன. நமது நாடு அயல் நாடு ஆகியவற்றைச் சார்ந்த சிறு பூச்சிகள், மீன்கள், நிலநீர்வாழ் உயிரிகள் (Amphibia) ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காட்சிக்கூடம் கல்வி புகட்டுவதாகவும் கவர்ச்சியாகவும் அமைய மூலப் பொருள்களுடன் வரைபடங்களும் எடுத்துக்காட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

பொருளாதார தாவரவியல் பிரிவு: இப்பிரிவு மற்றுமொரு பெரிய பிரிவாகும். இப்பிரிவில் தாவரங்களும் விளைபொருள்களும் அவற்றின் பயன்பாட்டிற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஏறக்குறைய 15,000 இந்தியத் தாவர விளைபொருள்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. மரம், உணவு, கால்நடைத்தீவனம், மருந்துச் செடிகள், நார்கள், சாயம், பதனிடும் பொருள்கள், எண்ணெய்வித்துகள், பிசின்கள், புகையிலை முதலான பொருள்களின் பல்வேறு வகைகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்குத் தாவரப் பொருள்களும், அவற்றிலிருந்து கிடைக்கும் விளைபொருள்களும் அருகருகே வைக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் மனிதன் இயற்கைப் பொருள்களைத் தன் பயன்பாட்டிற்கு ஏற்ப எங்ஙனம் மாற்றிக் கொண்டான் என்பதைக் காட்டும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

புவியியல் பிரிவு: இவ்வருங்காட்சியகத்தின் புவியியல் சேகரிப்புகள் மிக்க வளமானதாகும். இவை அருங்காட்சியகத்தின் முகப்புக்கூடத்தின் முதல் தளத்தில் இரு கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பாறைகள், தாதுப்பொருள்கள், விலையுயர்ந்த மணிகள், அவற்றிற்கு அடுத்த நிலையிலுள்ள (Semi-precious) கற்கள், எரிகற்கள் (Meteorite) போன்ற ஒப்பற்ற பல பொருள்கள் இக்கூடத்திலுள்ளன. இக்கூடத்திலுள்ள எரிகற்களின் வகைகளும் எண்ணிக்கையும் அருங்காட்சியகப் பொருள்களுள் முதலிடத்தைப் பெறுகின்றன. இவற்றைப்போன்றே முதன்மை வாய்ந்தது சிவாலிக்குக்கூடம். இதன்கண் முதுகெலும்பற்ற விலங்குகளின் புதைபடிவங்கள் (Fossils) உள்ளன. இமயமலையின் அடிவாரத்திலமைந்துள்ள சிவாலிக்கு மலையிலிருந்து (Siwalik hills) சேகரிக்கப்பட்ட புதைவடிவங்களைக் கொண்டு சிவாலிக்குக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. தொல்லுயிர்ப் படிவக் கூடத்தில், நண்டு, மெல்லுடலிகள் (Molluscs) போன்ற முதுகெலும்பற்றவைகளையும் தாவரங்களின் தொல்லுயிர்ப் படிவங்களையும்(Palaeontological remains) மனத்தில் பதியும் வண்ணம் வைத்துள்ளனர். இந்தத் தொல்லுயிர்ப் படிவங்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்தும் கிடைத்துள்ளன. தொல்லூழிக் காலத்தைச் சார்ந்த முதுகெலும்புள்ள விலங்கின் முட்டையோடு கூடிய புதைபடிவமொன்று இங்குக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. கிடைத்தற்கரிய இம்முட்டையின் புதைபடிவம் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றதாகும்.

பாறை, தாதுப் பொருள்கள் முதலானவற்றைப் பெருமளவில் கொண்ட கூடமொன்றும் இங்கு அமைந்துள்ளது. இதில் அமைந்துள்ள பொருள்களின் மிக அதிக எண்ணிக்கையால் இக்கூடமும் முக்கியமானதாகத் திகழ்கிறது. இக்கூடத்தில் மாநில வாரியாகக் காணப்படும் பாறைகள், இந்தியாவிலுள்ள தாதுப்

பொருள்கள், இந்தியத் தாதுப்பொருள்களின் மண்ணடுக்காய்வுகள் (Stratigraphy), தாதுப்பொருள்களின் தொழில்பண்புகள், வகைப்பாட்டுப் புவியியல் இவற்றைக் கொண்ட நான்கு பிரிவுகள் உள்ளன.

கல்கத்தாவிலுள்ள 'இந்திய அருங்காட்சியகம்' பொருள்களின் சேகரிப்பில் மிகப் பெரிய 'பொருட் கலைக் களஞ்சிய'மாகத் திகழ்கிறது. இவ்வருங் காட்சியகம் இயற்கையின் மேன்மையினையும் இந்தியாவின் கலை, பண்பாடு ஆகியவற்றையும் சிறப்புற எடுத்துரைக்கிறது. என்.அ.

துணை நூல்:

Indian Museum, General Guide Book, Published by Indian Museum, Calcutta, 1916.

**இந்திய அலுவலகம்** என்பது, இந்தியா விடுதலை பெறுவதற்கு முற்பட்ட காலத்தில் ஆங்கில அரசாங்கம் இந்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏற்படுத்தியிருந்த ஒன்றாகும். இந்த இந்திய அலுவலகம் (India Office) ஆங்கில அரசாங்கத்தின் ஒரு பாகமாகவே கி.பி. 1858-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்தது. இந்தியா முழுவதற்கும் ஒரு தலைமை அரசாங்கம் தலைநகரத்தில் இருக்கவும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்திய அரசாங்கத்துக்குத் தலைமையாக இங்கிலாந்தில் ஓர் அரசாங்கம் இருந்தது; இதுவே இந்திய அரசாங்கம் (Home Government) எனப்பட்டது.

ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் (English East India Company) இந்தியாவில் வாணிகம் செய்து, பெரும்பொருளீட்டி, ஒரு பேரரசையும் இங்கு (Empire) நிறுவிய காலத்திலிருந்து கி.பி. 1858-ஆம் ஆண்டுவரை, ஆங்கில இந்தியப் பேரரசை அவ்வாணிகக்கழகத்தின் இயக்குநர் மன்றமும் (Court of Directors) பங்குதாரர் கழகமும் (Court of Proprietors), கி.பி. 1784-ஆம் ஆண்டின் பிட்டு இந்தியச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட கட்டுப்பாட்டுக் கழகமும் (Board of Control), அதற்குத் துணை செய்த இரகசியக் குழுவும் (Committee of Secret) ஆட்சி செய்தன. இந் நிறுவனங்களின் பரிணாம வளர்ச்சியே இங்கிலாந்திலுள்ள இந்திய அரசாங்கமாக ஆயிற்று. கிழக்கிந்திய வாணிகக்கழகம் இந்திய அரசாங்கத்தைத் தனது இயக்குநர் மன்றத்தின் வாயிலாகக் கட்டுப்படுத்த அதிகாரம் பெற்றது. அவ்வாறே ஆங்கில அரசாங்கம் இந்தியாவின் குடிமை அரசாங்கத்தையும் (Civil Government), இராணுவ அரசாங்கத்தையும் (Military Administration), வரி வருமானங்களையும் (Revenues) கட்டுப்பாட்டுக் கழகத்தின் மூலமாகக் கட்டுப்படுத்தவும் இயக்கவும் முழு அதிகாரம் பெற்றது. இவ்வாறு இந்திய அரசாங்கமானது வாணிகக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், ஆங்கில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் கி.பி. 1858-ஆம் ஆண்டு வரை இருந்த அமைப்பு இரு கட்டுப்பாட்டு முறை (Dual Control) எனப்படும்.

இந்திய சிப்பாய்ப் போர் கி.பி. 1857-58-ஆம் ஆண்டுகளில் நடந்துமுடிந்த பின்னர், கி.பி. 1858-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, மேற்படி இரு கட்டுப்பாட்டு முறை நீக்கப்பட்டு, கிழக்கிந்திய வாணிகக் கழகத்தாரிடமிருந்த இந்தியப் பேரரசு நாடு அக்கழகத்தாரிடமிருந்து எடுக்கப்பட்டு, ஆங்கில அரசரிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டுப்பாட்டுக் கழகமும், இயக்குநர் கழகமும் இந்திய வரி வருமானங்களின்மீதும் இந்திய அரசாங்கத்தின்மீதும் செலுத்திவந்த உயர்தர அதிகாரங்களெல்லாம் ஓர் இந்தியச் செயலரிடம் (Secretary of State for India) கொடுக்கப்பட்டன. இதற்கு முன்னரே கட்டுப்பாட்டுக் கழக உறுப்பினருடைய எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துவிட, அக்கழகத்தினருடைய அதிகாரங்களெல்லாம் அக்கழகத்தின் தலைவரையே வந்தடைந்தன; கட்டுப்பாட்டுக் கழகத்தின் தலைவரே நாளடைவில் இந்தியச் செயலராக ஆனார்.

இந்தியச் செயலரே இந்தியாவைப் பற்றிய எல்லாப் பொருள்களையும் பற்றி ஆங்கில அரசருக்கு ஆலோசனை வழங்குதற்பொருட்டு, கி.பி. 1858-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட அரசியல் ஆலோசகர் (Constitutional Adviser) ஆனார். அவர் பழைய கட்டுப்பாட்டுக் கழகம், இயக்குநர் கழகம், கிழக்கிந்திய வாணிகக் கழகம், இரகசியக் குழு ஆகியவற்றுக்கு இந்திய அரசாங்கத்தின் மீதும், நிதிகள் மீதும் இருந்த முழுக்கட்டுப்பாட்டு அதிகாரங்களைப் பெற்றிருந்த காரணத்தினால், அவருக்கு இந்தியாவிலுள்ள அரசப் பேராளர் (Viceroy and Governor-general) உள்பட எந்த ஆங்கில இந்திய அதிகாரிக்கும் ஆணைகள் (Orders) விடுப்பதற்கு முழு அதிகாரம் இருந்தது. இந்தியச் செயலருக்கு உதவியாக ஓர் இந்திய மன்றமும் (Council of India), ஒரு புதிய ஆட்சித் துறையும் (A New Department) கி.பி. 1858-ஆம் ஆண்டுச் சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்டன. இந்தியச் செயலருக்கு இருந்த விரிவான அதிகாரங்களுள்ளும் பெரும் பொறுப்புகளுள்ளும் பல அவருடைய நேர்முகப் பொறுப்புகள் (Personal Responsibilities) ஆகும். மற்றப் பொறுப்புகளை அவர் தமது ஆலோசனைக்

குழுவுடன் கலந்து கொண்டுதான் நிறைவேற்ற இயலும். இத்தகைய பொறுப்புகளுக்கு மேற்கூறப் பட்ட குழுவின் பெரும்பான்மை ஒப்புதலிருத்தல் வேண்டும். எந்தெந்தப் பொருள்களில் 'ஆலோசனைக் குழுவின் செயலர்' (Secretary of State in Council) என்ற நிலையில் அவர் பணிசெய்தல் வேண்டுவ தில்லை என்று கி.பி. 1858, 1861, 1892-ஆம் ஆண்டுச் சட்டங்கள் விதித்தனவோ, அவற்றிலெல்லாம் அவர் ஆலோசனைக் குழுவைக் கலந்து கொள்ளாமலேயே செயலாற்றுதல் கூடும். செயலரின் ஆலோசனையின் அடிப்படையில் அரசர் இவ்வலுவலகப் பணியாளர் களை அமர்த்தினார். இந்தியாவுக்கு விடுக்கப்படும் ஒவ்வொரு அலுவலகச் செய்தியும் (Official Communication) ஆலோசனை மன்றத்தின்முன் வைக்கப்படுதல் வேண்டும். போர், அமைதி உடன் படிக்கை, அயல் நாட்டுறவுகள், இந்திய அரசுகளுடன் உறவுகள் முதலியவையெல்லாம் இரகசியச் (Secret) செய்திகள் ஆகும். இவையும் செயலரால் அவசரம் (Urgent) எனக் கருதப்பட்டவையும் ஆலோசனை மன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டுவதில்லை. உண்மையில், இவ்விதிவிலக்குகளெல்லாம் செயல ருக்கு மிக விரிவான தம்விருப்ப அதிகாரங்களை (Discretionary Powers) வழங்கின. இவ்வதிகாரங்கள் அவர் இந்திய அரசாங்கத்தில் தலையிடுவதற்கு வழிவகுத்தன. நிதி பற்றிய செயல்களை எல்லாம் செயலரும் மன்றமும் சேர்ந்துதான் நிறைவேற்றுதல் வேண்டும்.

இந்திய ஆலோசனை மன்றத்தில் தொடக்கத்தில் 15 உறுப்பினர் இருந்தனர். செயலருடைய விருப் பத்துக்குத் தக்கபடி உறுப்பினர் எண்ணிக்கை பத்துக்குக் குறையாமலும் பதினான்கிற்கு மேற் படாமலும் இருத்தல் வேண்டுமென்றும், அவர் களுடைய பதவிக்காலம் 9 ஆண்டுகளென்றும், 1907-ஆம் ஆண்டுச் சட்டம் விதித்தது. உறுப்பினருள் ஒன்பதுபேர் 10 ஆண்டுகளேனும் இந்தியாவில் வாழ்ந்தோ பணி செய்தோ இருத்தல் வேண்டும். அவருள் பலர் இந்தியக் குடிமையியல் பணித்துறை யைச் (Indian Civil Service) சேர்ந்தவர்களாகவும் சிறு மாகாணங்களில் உதவி ஆளுநர்களாகவும் (Lieutenant Governors) வைசிராயின் நிருவாகக் குழு உறுப்பினர்களாகவும் இருந்தவர்கள்; மற்றவர்கள் போர்வீரர்கள், வங்கித் தொழிலதிபர், கல்வித்துறை வல்லுநர் முதலியோராவர். இந்திய ஆட்சியின் நுட்பங்களை எல்லாம் இந்தியச் செயலர் நன்கறிய மாட்டாதவராகையால், அவருக்கு வல்லுநர்களின் உதவி கிடைத்தற்பொருட்டே இவ்வாறு ஆலோ சனைக் குழு அமைக்கப்பட்டது. இம்மன்றத்தில் 1907-ஆம் ஆண்டில் இரண்டு இந்தியர்கள் (ஒருவர் இந்து, மற்றொருவர் முசுலீம்) உறுப்பினராக அமர்த்தப்பட்டனர்.

இந்தியச் செயலருக்கு இந்திய அரசாங்கங் களின் மீதிருந்த விரிவான கட்டுப்பாட்டு அதி காரத்தை 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டமானது (Government of India Act, 1919) சிறிது குறைத்து, இந்தியாவுக்கு ஓர் உயராணையர் அலுவலகத்தை இலண்டனில் (Office of the High Commissioner for India in London) நிறுவிற்று. இதுவரை இந்தியாவிலிருந்த உயர் அதிகாரிகளின் சார்பாக இங்கிலாந்திலுள்ள இந்திய அலுவலகத்தால் நிறைவேற்றப்பட்ட முகவர் பணிகளெல்லாம் (Agency Business) உயராணையர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன; உயராணையர் அலுவலகம் இந்திய மாளிகை (India House) எனக் குறிக்கப் படுகிறது. இப்பொழுது இந்தியச் செயலர் அலு வலகம் மறைந்துவிட்டாலும், இந்திய உயராணையர் அலுவலகமும் பதவியும் இருக்கின்றன. இந்தியச் செயலர், இந்திய அலுவலகப் பணியாளர் ஆகி யோருக்கு அளிக்கப்பட்ட ஊதியங்களும் அவ்வலுவல கத்தின் மற்றச் செலவுகளும் இந்திய அரசாங்கத்தின் வரி வருமானங்களிலிருந்தே எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தன. ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம், ஆங்கில இந்திய மாகாணங்களுக்குத் தன்னாட்சி வழங்கி, இந்தியச் செயலருக்கு இருந்த கட்டுப் பாட்டு அதிகாரங்களை மிகவும் குறைத்து, இந்திய மன்றத்தையும் நீக்கி, குறைந்த எண்ணிக்கையுடைய ஆலோசகர் குழுவை (Advisers) அமர்த்திற்று.

இந்தியச் செயலரும் இந்திய மன்றமும் (அல்லது ஆலோசனை மன்றமும்) அவர்களுக்கு உதவியாக இருந்த ஒரு செயலகமும் (Secretariat) சேர்ந்த அலு வலகமே இந்திய அலுவலகம் (India Office) என்று கூறப்பட்டது. செயலகம் இருந்த கட்டடப் பகுதி வெள்ளை மண்டபம் (White Hall) என்று சொல்லப் பட்டது. இதில் உள்ள அலுவலர்கள் (1916-ஆம் ஆண்டில்) தலைமையிலிருந்து கீழ்நிலைவரை பின் வருமாறு அமைக்கப்பட்டிருந்தனர்

மேல் நிலை: இந்தியச் செயலர்.

கீழ்நிலைகள்: 1. இரண்டு கீழ்நிலைச் செயலர்கள் (Under Secretaries). ஒருவர் நிலையான (Permanent) செயலர்; மற்றவர் பாராளுமன்றச் (Parliamentary) செயலர். இவர்களுக்குச் செயலருடைய சில சிறிய பணிகள் ஒப்படைக் கப்பட்டன. 2. துணைக் கீழ்நிலைச் செயலர் (Assistant Under Secretary).

இந்நிறுவனத்துக்குத் தேவையான அதிகாரிகளை ஆலோசனை மன்றத்தில் செயலர் அமர்த்தினார்; சிறிய பதவிகளுக்கு இங்கிலாந்தின் குடிமையியல் பணி விதிகளுக்கேற்ப ஆட்கள் அமர்த்தப்பட்டனர். இவ் வலுவலகத்தின் ஒவ்வொரு துறைக்கும் நடைபெறும் கடிதப்போக்குவரத்துகளை நடத்துவதற்கு ஒரு செயலர் இருந்தார். இவ்வலுவலகத்தில் குறிப்பிடத் தக்கவர் நிதிச் செயலர் (Financial Secretary), நீதி, பொதுச் செயலர் (Judicial and Public Secretary), இராணுவச் செயலர்(Military Secretary), அரசியல் இரகசியச் செயலர் (Political and Secret Secretary), பொதுப் பணிகள் (Public works); வரி வருமானம், புள்ளி விவரம் (Revenue and Statistics); இந்திய ஐரோப்பிய தந்தி முறை இயக்குநர் (Director of Indo-European Telegraph), கணக்கதிகாரி, (Accountant General), பொருள்கள் துறை இயக்குநர் (Director, Store Department), பதிவு - பதிவேடுகள் (Registry and Records Department) பற்றிய அதிகாரி முதலியோராவர். மற்ற அலுவலர் இரயில்வே கழகங்களுக்கான அரசாங்க இயக்குநர், நூலகர், இந்திய மாணவர்களுக்கான செயலர், மருத்துவ அதிகாரிகள், சட்ட ஆலோசகர், இராணுவ உடைகள் ஆய்வாளர், பொதுப் பணிகளின் அளவையாளர், ஆங்கிலப் போர் அலுவலகத்தோடு இணைக்கப்பட்ட இந்தியப் படை அதிகாரிகள், தணிக்கை அதிகாரி முதலியோர் ஆவர்.

இத்தகைய விரிவான தலைமை அதிகாரமும் பரந்த அலுவலக அமைப்புமுடைய இந்தியச் செயலர் அலுவலகமானது, 1947-ஆம் ஆண்டின் இந்திய விடுதலைச் சட்டத்தின்படி இந்தியா என்றும், பாகிசுத்தான் என்றும் இரு இறைமை நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்ட பின்னர், 1947 ஆகசுட்டு 14-ஆம் நாளிலிருந்து மறைந்து விட்டது அச்செயலர் அலுவலகம் நீக்கப்படுதல் வேண்டுமென்று அச்சட்டத்தில் கூறப்பட்டது. இந்தியாவுடனும் பாகிசுத்தானுடனும் ஆங்கில அரசாங்கத்துக்கு உள்ள உறவுகளை நடத்தும் பொறுப்பு, பொது அரசு (Commonwealth) எனப்படும் தன்னாட்சி உரிமை நாடுகளுடன் ஆங்கில நாட்டு உறவுகளை நடத்தும் அலுவலகத்திடம் (Office of the Secretary of the Commonwealth Relations)ஒப்படைக்கப்பட்டது. இப்பொழுது பழைய இந்திய அலுவலகத்தின் சின்னங்களாக இருப்பவை இந்திய உயராணையர் அலுவலகமும் இந்திய அலுவலக நூல்நிலையமும் (India Office Library) ஆகும். பண்டைய இந்திய வரலாற்று ஏடுகளையும், அறிவியல், கலைகள், தொழில்கள், அரசாங்க முறைகள் முதலியவை பற்றிய ஏடுகளையும், ஆங்கில இந்திய அரசாங்கங்களுக்கிடையே நடைபெற்ற கடிதங்களையும், மற்ற எண்ணிறந்த பதிவேடுகளையும் இந்நூலகத்தார் திரட்டிப் பாதுகாத்து, ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுமாறு செய்து வருகின்றனர்; இது ஒரு பெருந்தொண்டு ஆகும்.

துணை நூல்கள்:

**Morriott, J.A.R.**, English Political Institutions, Oxford, 1938.

**Lowell, S.**, The Government of England, Macmillan, 1938.

*இந்திய அழகியல்*: அழகு: அழகு என்பது உலகப் பொருள்களிடையே காணப்படும் ஒத்த தன்மை, இணக்க அமைப்பு, முரண், ஒழுங்கு, அருமை, தோய்வு, மோனம் என்பவற்றால் ஏற்படுவதாய உயிரால் உணரப்படும் சிறந்த தெய்விகப் பொருளாகும் என்பர் அறிஞர்.

அழகே வடிவமானது என்று ஒருவரால் மதிக்கப்படும் பொருள் மற்றொருவரால் அழகற்றது என்று கூறப்படுவதைக் காணலாம். அவ்வாறாயின், அழகென்பது பொருளினிடத்து இல்லை; காண்பான் மனத்திடமே உள்ளது என்றாவது கூறிவிடலாமா எனில், அதுவும் இயலுவதாக இல்லை. காண்பான் மனத்திடத்தேதான் அழகு இருக்கிறதெனில், பொருள் இல்லாமலும் அவன் அழகை அநுபவிக்க வேண்டும். அதுவும் இயலாத காரியம். எனவே, 'அழகென்பது பொருளிடத்தும் காண்பான் மனத்தும் ஒரு சேரத் தோன்றுகின்ற ஒன்றுதான் என நினைக்க வேண்டியுள்ளது' என்று அ.ச. ஞானசம்பந்தனார் கூறுவர்.

அழகு என்பது ஒத்த தன்மையாலும் ஏற்படலாம். பச்சைப் பசேலென்று பாங்குடன் வளர்ந்த நெற்பயிர்த் தோற்றம் கண்ணுக்கு அழகளிக்கிறது. ஒத்த அறிஞர்கள் கூடிய அவை அறிவிற்கு அழகளிக்கிறது.

அழகு என்பது இணக்க அமைப்பாலும் ஏற்படலாம். பசுஞ்சோலையிலே ஆண்மயில் பெட்டை மயிலோடு இணக்கமாகத் தோகையை விரித்தாடும் காட்சி அழகு பயக்கும்.

அழகு என்பதுமுரணாலும் ஏற்படலாம். உலகமே வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) உடையதென்பர். சிவந்த மேனியுடையவர்கள் கருங்கூந்தல் கொண்டிருந்தால்தான் அழகு மிகுகிறது. வெள்ளை விழியிடையே கருமணியிருத்தலால் தானே விழிக்கே அழகு உண்டாகிறது. கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவிலும் நிழலிலும் அழகு இருக்கத்தானே செய்கிறது.

அழகு என்பது ஒழுங்காலும் ஏற்படலாம். சீருடை யணிந்த பள்ளிச் சிறார்கள் ஒழுங்காக அணிவகுத்து நடப்பதாலும், அமர்வதாலும், பயில்வதாலும் அழகு மிளிர்வதைக் காணலாம். கொற்றவன் வெற்றி ஒழுங்கான அணிவகுப்பில் பயின்ற ஒத்த வீரமுடைய படையாளர்களால்தாம் உருவாகிறது. படையணியே வெற்றியழகு தருகிறது.

அழகு என்பது ஒன்றுணர்ச்சி (Empathy) யாலும் ஏற்படுகிறது. கவின் பொருள்கள் மனத்திலெழுப்பும் உணர்ச்சிகளை அவற்றிற்கே உரியனவாக உணர்ந்து மகிழ்தலால் – ஈடுபாட்டுடன் மெய்ம்மறந்து நிற்ற லால் இதனை மக்கள் அநுபவிக்கின்றனர். இத்தகைய மனநிலையை உணர்ச்சி மிக்க நாடகங்களையும், திரைப்படங்களையும் பார்க்கின்ற மக்களிடம் நிரம் பக் காணலாம். கலைமலிசீர் கண்ணப்பநாயனார் திருக்காளத்தியப்பரிடம் கண்ட அழகுணர்ச்சிக்கு ஒன்றுணர்ச்சியே காரணமெனலாம்.

அழகு என்பது சில வேளைகளில் மௌனத்தா லும் ஏற்படலாம். புறவுலகுத் தூண்டுதல்களின்றி மனமும் உரையும் செயலும் புறத்திலே மௌனம் கொண்டுவிடும்போது, முகத்திலே அரும்பி மலரும் அழகினைச் சொல்லால் சுட்ட முடியாது. இது அகத்தால் பெற்ற அழகாகும். புத்தரிடத்துக் கண்ட இந்த அழகு இந்திய மக்களையும் பிற நாட்டினரை யும் கவர்ந்திழுத்தது. சிறந்த சில நடிகர்கள் சில கட்டங்களில் மௌனத்தாலேயே தம் கருத்தைக் காட்டும் அழகுக் கலைமெருகினை இன்றும் காண லாம்.

இன்றைய புத்துலகத்திலே அறிவியல் துணை யினால் எத்தனையோ அழகு வண்ண நறும் பொருள் கள் (Toilet Products) கண்டுபிடிக்கப்படுகின்றன. அவையெல்லாம் மேனியழகை மெருகேற்றிப் போற் றத் துணையாகவும் உள்ளன. என்றாலும், காலக் கடவுளால் பிடரிபிடித்துத் தள்ளப்பட்டு, மனிதன் முதுமையை அடைந்ததும், உடற்பொலிவு என்பது கற்பனைக் கெட்டாத கனவு போலாகிவிடுகின்றது. தான் கண்ட வண்ண நறும் பொருள்களால் நரை யையும் திரையையும் சோர்வையும் மாற்ற வழி யில்லை; மாற்ற முயன்றாலும் கோமாளிக் கூத்தாகப் பிறரால் எள்ளி நகையாடப்படுகிறது. இந்நிலையில் தான், மனிதன் விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்த அநுபவத்தை எண்ணிப் பார்க்கிறான். எது நிலைத்த அழகு, எது நிலையாத அழகு என்றெல்லாம் நன்கு பகுத்துணர்ந்து அறிகிறான். அதாவது, தன்னை யொத்த வயதானவர்கள் சிலர் தம் ஆன்மவொளி யில் நன்னெறியால் அகத்தூய்மை கொண்டு பொலி தலைக் காண்கிறான். 'ஒழுக்கத்தழகு' என ஆன் றோர் கூறியது இதுதானே என்று இனங்கண்டு கொள்கிறான்.

இயற்கையிலும் செயற்கையிலும் காணக் கிடைக் கிற அழகினை உலகியலில் குழந்தைப் பருவம் முதல் அநுபவித்த மனிதன், அதனை நிலைபேறாக ஆக்கிக் கொள்ள ஆன்மிகத் தொடர்பை நாடுகிறான். இந் நிலையில் ஒவ்வொருவனும் சிறந்த கலைஞனாகவே மாறிவிடுகிறான். அவனுடைய உள்ளுணர்வுத் தூண்டு தலால் பொருளின் புறக்கோலத்தை ஊடுருவி அகத் தழகைக் காண்கிறான். இந்த அநுபவத்தினாலே அழகு என்பது ஒரு பொருள் அல்லது வடிவத்தைச் சார்ந்தது அன்று; அது அப்பொருள் அல்லது வடி வத்தின் அகத்திலுள்ள சேதனத்தையே சார்ந்ததா கும். இந்த அகவழகை அகவிழியினாலேயே காண இயலும்.

இவ்வண்ணம் காணாமல் ஒரு பொருளின் அழகை அப்பொருளின் தோற்றத்தில் கண்டுபிடிக்க முயல்வ தானது, ஒரு முரசை மூடியுள்ள தோலைக் கிழித்து முரசொலி எங்கிருந்து வருகிறதெனப் பார்ப்பதை யொக்கும். ஆதலின், கலைஞர்கள் ஒருபொருளின் அழகை அதன் புறத்திலே காண முயலாமல் அதன் அகத்திலேயே தங்கள் அகமொழியில் காணவேண்டும். தெய்விக இசையில் ஊன்றியுள்ள அவர்களின் உள்ளம் அவ்வழகை ஈர்த்து அதை வெளிப்படுத்த வேண்டும் என்று ப. கோதண்டராமன் கூறியுள்ளார்.

**அழகின் இருப்பிடம் இறைவன்:** ஆன்மிக அடிப் படையில் இயற்கையிலும் செயற்கையிலும் அழ கினைக் கண்டு சுவைப்பதைத் தமிழர்கள் பண்டு தொட்டே வளர்த்து வருகின்றனர்; அழகு வழிபாடே புரிந்து வருகின்றனர். அழகின் இருப்பிடமே ஆண்ட வன் இருப்பிடமாகக் கொண்டு பாடியும் ஆடியும் பரவுகின்றனர். அழகினைத் 'திரு' எனக் கொண்டு, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் எனப் பொருள் கொண்டனர். அதனை 'முருகு' என்று அழைத்து மகிழ்கின்றனர். தமிழ்த் தெய்வமாகிய முருகனை அழகுத் தெய்வமாகக் கொண்டு, அவன் இயல்புகளாக இளமை, மணம், கடவுட்டன்மை ஆகியவற்றை 'மணங்கமழ் தெய்வத்திள நலம்' என்ற நக்கீரர் வாக்கோடு பொருத்தி மகிழ்கின்றனர்.

**கலையும் அழகும்:** தன் இயல்பாகத் தோன்றிய பொருளை இயற்கையென்றும், கைத்திறனால் படைக்கப்பட்டதை அல்லது செயற்கையாக உரு வாக்கப்பட்ட பொருளைக் கலையென்றும் பொது வாகக் கூறலாம். கலையானது நில அமைப்பு, தட்ப வெப்பம், மக்களின் உள்ளப்போக்கு, சமுதாயச்

சூழல், சமயச் சார்பு, முதலியவற்றைப் பொறுத்து இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மையுடையது. கலை என்பதை இன்னதுதான் என்று வரையறுத்து இலக்கணமோ விளக்கமோ கூற முடியாதென்பர் அறிஞர்கள். பொதுவாகக் கலையென்பது உணர்ச்சிக்கு விளக்கமாக அமைந்து அழகுத் தன்மையால் உள்ளத்தைக் கவர வல்லது என்று கூறலாம்.

கலை என்பதை அநுபவத்தின் திறமென்றும், அழகநுபவத்தின் புறவடிவமென்றும், உள்ளுணர்வுக் காட்சி யென்றும், உண்மையின் வடிவ வெளிப்பாடென்றும், செய்கின்ற செயல் எதுவோ அதனை ஒரு முறையில் செய்வதென்றும் மெய்க்கலைஞனுடைய சிறந்த உண்மைகளை மக்களுக்குக் கற்பிக்கப் பயன்படும் வளர்த்தியென்றும் ஆண்டவனருளின் ஒருவகை வடிவமென்றும் அறிஞர்கள் பலரும் பலவாறு விளக்கம் கூறுவர்.

அழகநுபவத்தில் பெரிதும் ஈடுபடுகின்ற மக்கள் பலர் கலைக்கும் அழகுக்கும் வேறுபாடு காட்டுவதில்லை. கலையே அழகென்றும், அழகே கலையென்றும் ஆர்வம் காரணமாக ஒன்றிய நிலையில் கூறிவிடுகின்றனர். உண்மையில் அழகு என்பது கலையின் இன்றியமையாமைக் கூறேயாகும். கலையில் அமைந்த வினைத்திறனிலும் அவ்வழியாய்அமைந்த உணர்ச்சியொழுங்கிலுமே அழகு உணரப்படுகிறது.

கலைகளுக்கு உயிராகத் திகழ்வது அழகு. அழகு பொறிகட்குப் புலனாகுந் தன்மையுடையது. அழகினைப் பற்றி உணர்ச்சிகளை ஓர் ஒழுங்குட்படுத்தி அழகான பொருள்களிடம் தெளிவான நிலையில் வைத்து உணரும்போதுதான் அழகின் தோற்றம் நன்கு அமைகின்றது. பேராசிரியர் காட்ரிங்டன், 'எது அழகினை' வெளிப்படுத்தச் செய்கிறதோ அதுதான் கலை, எது மகிழ்விக்கிறதோ அதுவே அழகு' என்று இயம்புவர்.

**தத்துவத்தைக் காட்டும் இந்திய அழகு:** இந்தியர் தம் கலைகளை 64 வகைப்படுத்தினர். 'ஆய கலைகள் அறுபத்துநான்கினையும்' என்ற சான்றோர் வாக்கினால் இதை உணர முடிகிறது. இந்த 64 வகை அழகுக் கலைகளுள் ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் ஆகியவை முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இந்தியக் கலைகள் அழகை மட்டும் வெளிப்படுத்தவில்லை. இவை தத்துவத்தையும் தம் மகத்தே கொண்டு விளங்குகின்றன. இந்தியக் கலைகளுக்குப் பெருஞ் சிறப்பைக் கொடுத்துவரும் நடராசத் திருவுருவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

**நடராசத் திருவுருவத் தத்துவம்:** உயிர் வருக்கங்கள் இறைவனது அசுத்த மாயாகாரியத்தினால் படைக்கப்பட்டு, உலகினில் பல்வகையாலும் காக்கப் பட்டு, பிறகு ஒடுங்கும் தன்மையை அடைந்து, அதன் பின் பக்குவநிலையில் இறைவனது திருவடியை அடைந்து, பிறவாத பேரானந்தம் எய்துகின்றன. ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை உணர்த்துவதாக நடராசத் திருவுருவம் விளங்குகிறது. மனவாசங்கடந்தார்,

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பா தத்தேஉற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பாதத்தே நாடு"

என்று அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

**திருக்கூத்தின் உட்கிடை:** 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்ற வாக்கிற்கிணங்க, இறைவன் தான் ஆடியவண்ணம் ஆட்டுவிக்க, அனைத்தும் ஆடுகின்ற குறிப்பினைத்,

தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே'

என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

உலகத்துயிர்கள் அகப்புற அழுக்குகளினின்றும் நீங்கவும், பிறவிப் பெருங்கடலை எளிதில் நீந்திக் கரையேறவும் வாய்ப்பாக இறைவன் திருக்கூத்தினை அல்லும் பகலும் ஆடிக்கொண்டிருக்கிறான். 'பேரூழிக் காலத்திலே பெருமான் எல்லாவற்றையும் தம்முள்ளடக்கி, உயிர்கள் அனைத்திற்கும் ஓய்வு கொடுத்துவிட்டோம், பிறவிக் கடலிலே துன்பச் சூழலிலே கவலைப் புயல் தாக்க ஓயாது வருந்திய உயிர்கள் யாவும் ஓய்வு எடுத்துக் கொள்கின்றன என எண்ணுகிறார்' என்பார் மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் எனவே, இந்திய அழகுக்கலையானது அழகினைமட்டும் வெளிப்படுத்தாது தத்துவத்தினையும் உணர்த்திப் பேரானந்தம் எய்த வழி வகுக்கிறது.

நடனக்கலையில் மட்டும் அல்லாமல் கட்டடக் கலையிலும் இந்தியா சிறப்பிடம் பெறுகிறது. தாசுமகால் உலகின் அதிசயங்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது; இந்தியக் கலைகள் தத்துவத்திற்குக் கொடுக்கின்ற மதிப்பினைக் காதலுக்கும் கொடுக்கின்றன என்பதனை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

உலகக் கலைவரலாற்றில் இந்தியக் கலை: இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலைஞர்கள், பொறிபுலன் கடந்த கடவுள் தன்மைக்கு அழகு வடிவம் தந்து நாட்டு ஒருமைப்பாட்டை வளர்த்துள்ளனர். இந்த ஆன்மிகச் சிறப்பினை உலகக் கலைக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து பார்த்தால், நம்நாடு பன்னெடுங்காலமாகப் பிற நாடுகளுக்கு ஆன்மிக விழிப்புணர்வை நல்கி வந்துள்ளதை உணரலாம்

மேனாட்டிலே கோதிக்கலை (Gothic Art) யிலுள்ள ஆன்மிக நிலைகளுக்குக் காரணம் கீழை நாடுகளின் ஆன்மிக விளக்கமே என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வணிகம் காரணமாகக் கடல் வழியாகவும் வடமேற்கெல்லை வழியாகவும் இந்தியாவிற்கு வந்த கிரேக்கர்கள் இங்குக் கலந்து வாழ்ந்து, கலை வாழ்விலே பிணைப்புக் கொண்டிருந்தனர். யவனர்களாகிய அவர்கள் இங்கிருந்து பல கலை நுட்பங்களை அங்குக் கொண்டு சென்றும் தம் நாட்டிலிருந்து சிலவற்றைக் கொணர்ந்து இங்குக் கொடுத்தும் கலையாக்கம் புரிந்து அழகுக்கு அணி செய்தனர்.

தென்அமெரிக்காவிற்கு அருகிலுள்ள தீவுகளில் இந்தியக் கலைக் கூறுகள் தென்படுகின்றன என்று டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர் கூறுகிறார். ஆக, இந்தியக் கலையன்னை தன் ஆன்மிக அழகாற்றலால் உலகெங்கிலும் உலாவந்து தன் அடிச்சுவட்டைப் பதித்திருக்கின்றாள். இதனை விளக்கமாகக் கவனிக்கும்பொழுது தென் நாட்டிலுள்ள சிதம்பரம், தஞ்சை, காஞ்சி, வடநாட்டிலுள்ள சாஞ்சி ஆகிய இடங்களிலுள்ள கோபுரங்களின் அமைப்புக் கூறுகளைக் கிரேக்கத்திலுள்ள பார்த்தனன் கோயிலில் காணலாமென்றும், மணிமேகலையில் வரும் கந்திற் பாவையையும் கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்தின் குடவயின் அமைத்த நெடுநிலை வாயில் என்ற முதியான் கோட்டத்தையும் நினைவுபடுத்துகின்ற வகையில் எரெக்கியம் என்ற சிறுகோயில் அமைந்துள்ளதையும் இரா. நாகசாமி குறிப்பிடுகிறார்.

சாவாவிலுள்ள போரோபுதூர் முதலிய இடங்களிலும் கம்போடியாவில் அங்கோர்வாட்டு (Angkorwat), பிரம்பானாம் (Prambanam), அங்கோர் தோம் (Angkorthom) என்னுமிடங்களிலும் பர்மாவில் பாகன் (Pagan)என்னுமிடத்திலும் அமைந்துள்ள இந்து, பௌத்தக் கோயில்கள் இந்தியாவின் ஆன்மிக வளத்தினையும் கட்டடக் கலை நுட்பத்தினையும் கொண்டு விளங்குகின்றன என்று இராதா கமல் முகர்சி குறிப்பிடுகிறார். சிறப்பாகக் கம்போடியாவிலே அங்கோர்வாட்டிலுள்ள சிற்பம் திருப்பாற் கடலைக் கடைகின்ற காட்சியினைச் சித்திரித்தல் நம் கலை மாண்பைப் போற்றுதலாகும்.

இலங்கையில் பொலனருவை, அநுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள சிற்பமாட்சியும் சிகிரியாவிலுள்ள ஓவியமாட்சியும் இந்தியாவிடமிருந்து கற்ற கலைத்திறனுக்கு நற்சான்றுகளாக விளங்குகின்றன.

முடிவுரை: கலையைப் படைப்பவன் மட்டும் அழகநுபவம் (Aesthetic Experience) கொண்டு விட்டால் கலையின் பயனைப் பெற இயலாது. எந்த நோக்கத்துடன் கலை படைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தினைச் சுவைஞனும் புரிந்து கொண்டு, அதனை அழகனுபவத்துடன் சுவைத்தால்தான் கலையின் பயனை நுகர வாய்ப்பேற்படும்.

'ஓர் உணர்ச்சியோடு இயைந்து நுண்ணுணர்வால் எய்தும் அநுபவமே அழகியலநுபவம்' (The aesthetic experience is the experience of intellectul joy accompanied by an emotion) என்று கூறுகிறார் தெகார்டே (Descartes). எனவே இந்தியக் கலையினில் ஒன்றுபட்டு இயைந்து ஆன்மிக வளத்தினையெய்திக் கலைக்கு உயிரெனத் திகழும் அழகினை (இந்திய அழகியலை) விளக்கமுறச் செய்யலாம்.

ஏ.எஸ்.பி.

துணை நூல்கள்:

Gnana Sambandam, A.S., Ilakkiyak Kalai, Kazhaga Publication, Madras, 1960.

Venkataswami, Mayilaisieeni., Thamilar Valartha Azhagu Kalaigal, Pari Nilayam, Madras 1969.

Reid, L.A., A Study in Aesthetics, The Macmillan & Co., New York, 1931.

Schiller, F., On the Aesthetic Education of man, Routledge & Keganpaul, 1954.

**இந்திய அளவையியல்**: சிந்தனை என்பது அறிவு மலரத் தொடங்கும்போதே தொடங்கும் ஒரு பண்பாகும். இது கல்வி அறிவு அற்றோரிடத்தும் ஏதுமறியாப் பிராணிகளிடத்தும் காணக்கிடப்பதாகும். 'பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி முட்டை கொண்டு வற்புலஞ் சேரும் சிறு நுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்ப' (புறம்.173) போன்ற வழக்குகள் இக்கருத்தை நன்கு தெளிவுபடுத்துகின்றன. ஆனால் இந்தச் சிந்தனையைச் சீரிய வகையில் செம்மையுற அமைத்து நடத்திச் செல்வது அளவையியலாகும். ஆகவே அறிஞரும்,

''பண்ணிலார்க் கில்லாத பாட்டின் பயன்போலும்
கண்ணிலார்க் கில்லாத கவின்போன்று-மெண்ணிலா

வஞ்சொல் லளவை யறியாத வர்க்கில்லை
செஞ்சொ லளவின் சிறப்பு'' என்பர்.

பெயர்க் காரணம்: இந்தச் சாத்திரம் எண்ணி யுணருந்திறனை வளர்க்கும் காரணத்தால் எண் என்றும், ஏர் (அழகு) பெற எண்ணுதற்குத் துணை புரிதலான் ஏரணம் என்றும் வழங்கப்படும். சிறப்பு என்னும் பொருளைத் தருகிற பிர என்ற முன் னொட்டுடன் அளவிடப்படுதல் என்ற பொருளில் வழங்குகிற மாணம் என்ற சொல் சேர்ந்து வரும் பிரமாணம் என்னும் வடசொல்லின் நேர்த்தமிழ்ச் சொல் அளவை என்பதாகும். உலகப் பொருள்களை மனத்தில் எண்ணி மாசற அளந்துணர்ந்து கொள்ளு தற்குக் கருவியாதல் பற்றி அளவைநூல் எனவும் படும். பிரமாணம் என்பது 'அறிவு', 'அறிவின் கருவி' என்ற இரு பொருள்களிலும் வருமாயினும் கருவி என்னும் பொருளிலேயே மிகுதியும் வழங்கப்பெறு கிறது. இந்த அளவையை முதன்மையாகக் கொண்டு பிரமாணசாத்திரம் என்றே வழங்கப்படுகிற அளவை யியல் என்னும் ஒரு துறையும் உண்டு.

இலக்கிய வரலாறு: அக்கபாதரின் நியாயசூத் திரம், வாத்சயாயனரின் பாடியம், உத்யோதகரரின் வார்த்திகம் (கி.பி. 6-ஆம் நூ.), வாசசுபதிமிசிரரின் தாத்பரியதீபிகை (கி.பி. 841), உதயனரின் பரிசுத்தி (கி.பி. 10-ஆம் நூ.) ஆகிய பஞ்சக்கிரந்தீ (ஐம்பெரு நூல்கள்) என்று சொல்லப்படுவனவும், பண்டைய அளவையியலில் குறிப்பிடத்தக்கனவும், அளவையியல் நூல்களாம். பிந்தைய நான்கும் உரைநூல்களாய் அமைந்தன. உதயனரின் குசிமாஞ்சலியும் சயந்தபட் டரின் நியாயமஞ்சரியும் (கி.பி. 910) குறிப்பிடத்தக்க னவே. பௌத்த, சமண அளவையியலில் திங்நாகரின் (கி.பி. 400) நியாயப்பிரவேசம், பிரமாணசமுச்சயம் (திபேத்திலிருந்து மொழி பெயர்க்கப் பெற்றது), தர்ம கீர்த்தியின்பிரமாணபிந்து (கி.பி. 650), சித்தசேனவா கரரின் (கி.பி. 480-550) நியாயாவதாரம் என்பன்வை முக்கியமானவை.

பிந்தைய நாட்களில் கங்கேச உபாத்தியாயரின் தத்துவ சிந்தாமணி (கி.பி. 13-ஆம் நூ.),அதன் உரை யான இரகுநாத சிரோமணியின் (கி.பி. 1475-1550) தீதிதி, சுதாதரர் (கி.பி. 17-ஆம் நூ.), என்பாரும் சகதீசர் (1635 கி.பி.) என்பாரும் இயற்றிய அதன் உரைகளான அமான பிரகாசிகைகள் ஆகியவை சிறந்து விளங்கின. நியாயம், வைசேடிகம் ஆகிய இருதுறைகளையும் இணைத்து எழுதப்பட்ட நூல் களில் விசுவநாதர் என்பாரின் காரிகாவளியும் (கி.பி. 1634) மிகவும் பரவலாக அறியப்பட்டதும் பல மொழி பெயர்ப்புகளும் உரைகளும் உடையதுமான அன்னம்பட்டரின் (கி.பி. 17-ஆம் நூ.) தருக்க சங்கி ரகமும் குறிப்பிடத் தகுந்தவை.

தமிழ்நாட்டில் பண்டைய கால அளவையியலை அறிந்து கொள்ள மணிமேகலை, நீலகேசி, குண்டல கேசி போன்ற காப்பியங்களிலுள்ள குறிப்புகள்தாம் ஆதாரங்களாக விளங்குகின்றன. சிவஞானசித்தி யாரிலுள்ள (கி.பி. 14-ஆம் நூ.) ஏறக்குறைய 14 அளவையியற் செய்யுட்கள் பிந்தைய அளவையியலறி விற்குச் சற்று விரிவான குறிப்புகள் எனலாம். தருக்கசங்கிரகமும் தருக்க பரிபாடையும் முறையே மாதவச் சிவஞான யோகிகளாலும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாலும் மொழி பெயர்க்கப் பெற்றன.

தோற்றமும் வளர்ச்சியும்: அளவையியல் துறை மிகப் பண்டை நாட்களிலிருந்தே இந்தியாவிலும் கிரேக்கத்திலுமே முறையாகப் போற்றிப் பேணி வளர்க்கப்பட்டது. கிறித்துவிற்கு முந்தைய நூற் றாண்டுகளில் இத்துறை ஆன்வீசிகி (தேடுதல்) என்று குறிக்கப்பட்டது. இது ஆன்மாவை அறிய முயற்சி செய்யும் துறைகளுள் ஒன்றாகவே இருந்தது. வாத்சயாயனர், 'இத்துறை தன் தருக்க மேம்பாட் டால் ஆத்மவித்தையினின்றும் வேறுபட்டு நிற்கிறது' என்பார்.

கௌதமர் காலத்தில் புதுக்கருத்துகள் உருவா தல் வீறுடன் திகழ்ந்தது. இக்காலங்களில் அளவை யியல் என்பது பிற துறை அறிஞர்களுடன் கருத்து மோதலில் ஈடுபடுவதற்கான ஒரு கருவியாகவே பயன்பட்டது. ஒரு பிரதிவாதியை மேலே தொடர முடியாமல் செய்வது அல்லது அவருக்கே தாம் எடுத்த நிலையின் முரண்பாட்டைப் புலப்படச் செய்வது என்பது இம்முறையின் நோக்கம். பிற இயல் வல்லுநர்களைத் தோற்கடிக்கப் பயன்படும் உத்திகளைத் தந்திரஉத்திகள் என்பார்கள். ஒரு பொருள் அறியப்பட முடியாமல் ஐயத்திற்கு இட மாகுமானால் அளவையியல் முறைகள் மூலம் ஐயந் தெளிவதே நியாயம் என்று சொல்லப்படும். ஐயந் தெளிவிக்க உதவும் முக்கூற்று முடிவுகளுக்கும் (Syllogism) நியாயம் என்றே பெயர். ஆகவே அள வையியலின் இந்தத் தொடக்கக் காலத்தை நியாய சாத்திரம் (Science of right judgement of true reasoning) தோன்றிய காலமெனலாம்.

கிறித்துவின் முதல் ஆயிரம் ஆண்டுகளில் அள வையியற் கருத்துகள் காலத்திற்கும் அதன் மாறி வரும் வேகத்திற்கும் ஏற்ப விரிவாக்கப் பெற்றன. வெளிப்படுத்தப்படும் விகிதம், முழுமை (Fulness of details) ஆகியவை முதன்மையிடம் பெறத் தொடங்

கின. நியாய, சமண, பௌத்த அறிஞர்களின் கருத்து மோதல்கள் அவர்களைத் தங்கள் ஆராய்ச்சிக் கருவிகளைச் செம்மைப் படுத்துவதுடனில்லாமல், சீரிய கருத்துகளையும் உருவாக்கும்படி செய்தன. இக்காலமே இந்திய அளவையியலின் பொற்காலமாம். இக்காலத்துடன் புதுமையும் வீறும் மறைந்து விட்டன எனலாம். இக்காலத்தில் பிரமாணங்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டமையால் இதனைப் பிரமாண சாத்திரக் காலம் எனத் தகும்.

அடுத்த காலப் பகுதியில் பொருளைக் காட்டிலும் அதனைப் பற்றிய அறிவு, அதன் வரையறை (Definition) ஆகியவற்றைச் செம்மைபடுத்துவதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. இது தருக்க அறிவு (Dialectical skill) வளரக் காரணமாக இருந்தது. இது இத்துறையின் வீழ்ச்சிக்கு ஒருவகையில் காரணமானாலும், மற்றைய அனைத்துத் துறையினருக்கும் உறுதுணையான அளவையியலைக் கற்பிக்கும் வல்லமை பெற்றதாக அமைந்து விட்டது. அதுவே இன்று இத்துறை நிலைபெற்று நிற்கவும் காரணம் எனலாம்.

இத்துறை புதிய அளவையியல் எனப்பட்டது. இக்காலத்தில் அவர்கள் குறியீடுகளைப் பயன்படுத்தவில்லை. ஆனால் அவற்றிற்கு இணையாகச் சில சொற்களை வகுத்துக் கொண்டார்கள். அவச்சேதகம், பர்யாப்தி, நிரூபகம், வியாப்யம் போன்று வழக்கிலிருக்கும் சில சொற்களையே சில குறியீடுகளின் இடத்தில் பயன்படுத்திச் சிறந்த வெற்றி கண்டனர். இந்தச் சொற்களினால் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துகள் இன்று யாராலும் அக் குறியீடுகளின்றித் தெரிவிக்கப்பட முடியாதவைகளாகும். குறியீடுகளின் அளவிற்கு இச் சொற்கள் இணையாவிட்டாலும், வழக்கு மொழியைவிடப் பல மடங்கு உயர்ந்தன என்பதில் ஐயமேதுமிருக்க முடியாது. இக்கால்த்தின் தன்மையைக் கருத்தில் கொண்டால் இதைத் தருக்க சாத்திரக் காலம் எனலாம்.

நோக்கமும் வலியுறுத்தலும் மாறியமை ஒன்றே புதிய அளவையியலின் பயன் எனக் கூறமுடியாது. பொருள்களைப் பற்றிய இவர்களின் கருத்துகளும் அவ்வப்போது மாறி வந்தன. சிற்சில இடங்களில், குறிப்பாக இரகுநாத சிரோமணி என்பாரின் கருத்துகளில் பெருமாற்றத்தைக் காணலாம். ஆனால் அவை புதிய முறைத் தருக்கத்தின் முன் தாம் பெறவேண்டிய பெருமையைப் பெறாமல் வலுவிழந்தன. அதன் காரணமாக மிகுதியாக உணரப்படாதவையாகவும் ஆயின.

தமிழ்நாட்டில் அளவையியல்: தொல்காப்பியத்தில் அளவையியற் கருத்துகள் காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்களில் (குறிப்பாக மலைபடுகடாம், பட்டினப்பாலை) வாதப் போர்கள் நிகழ்ந்தமையும் நாவலோ நாவல் என்று வெற்றிக்கொடி நாட்டப்பட்ட செய்திகளும் அளவையியல் மிகவும் பயின்று வந்ததெனத் தெரிவிக்கின்றன. அளவையியலறிஞர்களின் நடவடிக்கைகள் காப்பியங்களில் உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து, அவர்கள் பரவியிருந்தமையும் அறிய முடிகிறது. திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர் ஆகியோரின் பாக்களிலிருந்து தருக்க அறிவை மட்டுமே தலையானதாகக் கொண்டுள்ளவரைப் பற்றியும் அறிய முடிகிறது. பௌத்த, சமண சமயங்கள் இங்கு நன்கு வேரூன்றிய பின்பே அளவையியல் பரவலான அளவில் ஆதரிக்கப்பட்டது எனலாம். அளவையியலின் தந்தை எனப்படும் திங்நாகரும் தருமபாலரும் முரண்படு தர்க்கஇயல் பேராசிரியர் எனக் குறிக்கப்படத் தகுந்தவருமான வியாசராயரும் சான்றோருடைய காஞ்சியில் பயின்றவர்களே.

அளவை: எந்தத்துறையிலும் அளவைகள் எனப்படும் ஆராய்ச்சிக் கருவிகள் செம்மையாக அமைத்துக் கொள்ளப்பட்ட பிறகே ஆராய்ச்சி தொடங்கப் பெறும். 'மானாதீனாமேயசித்தி' (அறியப்படும் பொருள் அளவைகளுக்குட்பட்டது) என்பர் சுலோக வார்த்திகமுடையார். இந்தியாவில் ஏறக்குறையப் பத்து அளவைகள் அனைவருக்கும் தெரிந்தவையாகவும் ஏற்கப்பட்டவையாகவும் உள்ளன. அவையாவன: 1. காண்டல் (பிரத்தியட்சம் – Perception) 2. கருதல் (அனுமானம் – Inference) 3. உரை (சப்தம் Verbal testimony) 4. இன்மை (அபாவம் – Non-Apprehension) 5. பொருட்பேறு (அருத்தாபத்தி – Presumption) 6. ஒப்பு (உவமை – Comparison) 7. ஒழிபு (பாரிசேடம்) 8. உண்மை (சம்பவம்.) 9. உலகுரை (ஐதிகம் – Tradition) 10. இயல்பு (சகசம் – Natural) என்பர் சிலர். இயல்புக்குப் பதில் சேட்டையைக் (Gestures) கொள்வர்.

இவற்றுள் உலகாயதர்கள் எனப்படும் நாத்திகர்கள் — கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னுங் கருத்தினர் — முதலளவையினை மட்டிலும், பௌத்தர்களும் வைசேடிகர்களும் முதலிரண்டையும், சமண, துவைத, விசிட்டாத்வைதிகளும் சைவர்களும் முதல் மூன்றையும், நையாயிகர்கள் முதல் நான்கையும், மீமாம்சகருள் ஒரு பகுதியினர் முதல் ஐந்தையும், பாட்டாமீமாம்சகரும் அத்துவித வேதாந்திகளும் முதல் ஆறையும், பௌராணிகர்களும் ஏனையோரும் எல்லாவற்றையும் கொள்வர். ஈண்டுப் பிரமாணங்கள் என்பன கூற்றுகளைக் காட்டிலும் ஏற்புடைத்தாயின், உள்ள ஒரு பொருளை உள்ளவாறு காட்டுகின்ற அறிவினையே குறிக்கும்.

இவ்வழியில் அனைவருக்கும் முன்னோடியாகத்

திகழும் அக்கபாத கௌதமரின் கருத்துகள், புதிய ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு முற்றிலும் புறம் பானவை அல்ல. தம் துறையினரால் அறியப்பட வேண்டிய அடிப்படைப் பொருள்களாக அளவை யியற் கருத்துகளை இவர் வகைப்படுத்தினார். அவையாவன: பிரமாணம் (அளவையியல்), பிரமேயம் (அறியப்படுபொருள்), ஐயம், பயன், எடுத்துக்காட்டு, சித்தாந்தம், உறுப்பு, தருக்கம், முடிவு, வாதம், சல் பம் (Wrangling), விதண்டை (Cavil), ஏதுப்போலி, சலம் (Quibbling), பயனின்மை, தோல்வித்தானம் என்பன. இவற்றுள் முதல் பத்து ஏற்புடைய அளவை யியல் முறைகளையும் பிற்பட்ட ஆறு அளவையியற் போலிகளையும் குறிக்கும்.

மேலும், இவர்கள் சிக்கல்களைச் சமன் செய்ய ஒரு குறிப்பிட்ட முறையில் அதிகக் கருத்துகளை உருவாக்க வேண்டிய தேவை இல்லாமலிருந்தால் அம்முறையையே ஏற்றனர். ஆகவே திரிபில்-திரியக் கோடல் – (Error) பிறிதோர் இடத்தில் இருக்கும் வெள்ளி விசேட முறையில் ஒருவரால் உணரப்படு கிறது என்னும் 'அன்யதாக்யாதி' முறை உருவாக்கப் பட்டது.

ஒரு கருத்தை நிலைநாட்டப் பெரும்பாலானோர் முதல் மூன்று முறைகளையே ஏற்றனர். அவற்றை ஈண்டுக் காணலாம்.

**காண்டலளவை:** இது புலன் வழி அறிவாகும். பொருள்களுடன் (புலன்களுக்கு) பொறிகளுக்கு ஏற் படும் தொடர்பு, அவற்றை மனத்துடன் தொடர்பு கொள்ளத் தூண்டுகிறது. மனத்திற்கும் ஆன்மாவிற் கும் ஏற்படும் தொடர்பு ஆன்மாவினிடத்தே அறிவை உண்டாக்குகிறது. ஆன்மாவைப் பற்றிய கொள்கை யினைப் பொறுத்து ஆன்மாவுடன் இத்தொடர்பு விளக்கப் பெறும். இவ்வறிவு கவனத்தை (Observation) அடிப்படையாகக் கொண்டதாயினும் அதனி னும் சற்று அதிகமாகும். பொருளின் வடிவு, உருவம், நிறம் முதலியவற்றைக் கட்பொறியும் மற்றைய தன் மைகளை ஏனைய பொறிகளும் இன நிறைவுகளையும் (Generics) இன்மையையும் அவ்வப் பொறிகளுமே ஏற்றுச் செலுத்தும் தன்மை படைத்தன. பொறி களுக்கும் பொருள்களுக்குமிடையே ஆறுவகைத் தொடர்புகள் இருந்தன.

இக்காண்டலை வாயிற்காட்சி எனவும் வெளி முறைக் காண்டல் எனவும் வழங்குவர். உள்முறைக் காண்டலாவது புலன்களால் அறிய முடியாதவற்றை அறிவிப்பதாகும். இக்காட்சிகளைப் பற்றிக் கருத்து வேறுபாடுகளும் மிகவுண்டு. இனநிறைவுரை (சாதி-Universals), கன்மம், பெயர் எனப் பகுத்துரைக்கப் படுகிறதான பகுத்துணர்வுக் காட்சியை (சவிகற்பப் பிரத்தியட்சம்) மானதக் காட்சி என்பாரும் உளர். இன்பம், துன்பம், விருப்பு வெறுப்பு முதலியவற்றை உணர்வது தன்வேதனைக் காட்சி எனப்படும். இவற்றை மானதக் காட்சி என்பர் இந்திய அளவை யியலறிஞர்கள். இப்படித் தெளிவாக அறியப்படா தது எழுவாய்க் காட்சி (நிர்விகற்பம்) எனப்படும்.

இவற்றைத் தவிர விசேடக் காண்டல் (Extraordinary perception–பிரத்தியாசத்தி) என்னும் ஒரு காட்சியையும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். 1. மனிதர்கள் ஆறறிவு படைத்தவர்கள்; இறப் பவர்கள் என்னும்போது காணப்படுகிற பொதுமைப் பண்பு; 2. அம்மலர் மிக மிருதுவாகக் காணப்படு கிறது, பனி குளிர்ச்சியாகக் காணப்படுகிறது என்னும் போது கண்ணால் காணவியலாத தன்மையைக் கண்டதாக அறிதல்; 3. உள்ளுணர்ச்சியால் அல்லது விசேட ஆற்றலால் கடந்த, நிகழ், எதிர் காலங்களை அறிவதும் கண்ணுக் கெட்டாதனவற்றை, தொலை தூரத்தில் இருப்பனவற்றை அறிவதும் ஆகிய மூவகை விசேட முறைக்காண்டலை அவர்கள் ஏற்றிருந்தனர்.

**கருதலளவை:** குறிகளால் உய்த்துணருவது அனு மானம். காண்டற் பொருளால் கண்டிலதுணர்தல் அல்லது அவினாபாவம் பேசுறும் ஏதுக் கொண்டு மறைபொருள் பெறுவதாகும், (அவினாபாவம் பிரி வின்றி அதனோடு உடனாய் நிகழ்தன்மை).

இது காண்டலளவையைப் பின்பற்றி வருதலா னும் வியாத்தி ஞானத்தை முதன்மையாகக் கொண்டு நிகழ்தலானும் வழியளவை எனவும் படும் இது முதல், எச்சம், பொது என மூவகைப்படும்.

'முதல் (பூர்வத்து) என்பப்படுவது கருக்கொள் முகில் கண்டு இதுமழை பெய்யும் என இயம்பிடுதல். எச்சம் (சேசவத்து) என்பது வெள்ள ஏதுவினால் நிச்சயித்து அத்தலை மழை நிகழ்வுரைத்தல். பொது (சாமானியதோத்ருட்டம்) எனப்படுவது சாதன சாத்தியம். இவை அன்வயம் இன்றாய் இருந்தும், 'கடந்திகழ் யானைக்கான ஒலி கேட்டோன் உடங் கெழில் யானை அங்குண்டென உணர்தல்' (மணி மேகலை). சூரியனின் போக்குவரவை வைத்து சூரி யன் பூமியைச் சுற்றுகிறது என்பதும் மூன்றாவதற்கு எடுத்துக்காட்டு என்பார்கள். ஆனால் உத்யோதகரர் என்பவர் வானஇயல் முறையில் இக்கூற்றுச் சரி யானது என எடுத்துக்காட்ட இயலாது என்பார்.

இக் கருதலளவை தன்னளவு என்றும் பிறனளவு என்றும் இரு வகைப்படும். தன்னளவு அனு மானங்களுக்கு இலிங்கபராமர்ச அறிவு போது

மானது. பிறனளவு அனுமானங்களில் இது முக்கூற்று வடிவமாக (Syllogism) அமைக்கப்பட வேண்டும். இவ் வடிவை நியாயம் என்றும் ஒவ்வோர் உறுப்பையும் அவயவம் என்றும் கூறுவர்.

குறியான் உய்த்துணர்தல்: இம் முடிவுரைகள் (Conclusion) ஏற்புடைத்தாய் (Valid) அமைய, குறி யும் (ஏது-Probans) துணியற் பாலதாய பொருளும் (சாத்தியம் - Probandum) சேர்ந்தியங்குவன (Saha - caryaniyama - invariably concomittant) என்ற வியாத்தி அறிவு வேண்டும்; 2. எங்கு இம்முடிவுரை துணியப்படுகிறதோ, அது துணியற்பாலதாய பொரு ளுள்ள இடமாகவும் (Subject-Paksadharmatajnanam) அறியப்பட வேண்டும். இவ்விரு அறிவுகளும் சேர்ந்து அமைவதே இலிங்கபராமர்ச ஞானம் எனப்படும்.

வியாத்தி: வியாத்தி அறிவு ஏது, சாத்தியம் இரண்டும் இருத்தல் (Copresence), இன்மை (Co-absence) என்ற இருநிலைகளிலும் ஒன்றுபட்டு (Method of Agreement) இருப்பது அதிகமாக உற்று நோக்கப்பட்டிருக்க (Bhugodarsanam - frequent observation) வேண்டும். எதிர்மறையும் (அதாவது புகையிருந்து நெருப்பில்லாத இடம் போல்) அனுபவிக் கப்படாமல் இருக்க வேண்டும். இன்றேல் இது உபாதி (Adventitious conditioning factors) என்னும் தவற் றுக்காட்பட்டுவிடும். இவ்வெதிர்மறை தருக்கம் என்னும் சிந்தனை முறையால் நீக்கப்படும். இது விதி வருவழிமுறை (Inductive Process) சார்ந்தது என லாம்.

வியாத்திவரையறை: ஏது, சாத்தியம் இரண்டின் அவினாபாமானதுசாத்தியம் ஏதுவைப்பரவியிருப்பது என்ற அறிவேயாகும். சிற்சில இடங்களைத் தவிர ஏது, சாத்தியம் இரண்டும் ஒன்றையொன்று பரவி யிருப்பது என்பது நடைமுறையில் இல்லாததாகும். எனவே இந்த நிலைமைகளைத் தவிர்க்க 'அவினா பாவம்' மேலும் வரையறுக்கப்பட்டது.

ஏதுவானது தன்னில் உள்ள இன்மைக்குக் (Absolute non-existence) காரணமில்லாத(Non-counter-correlate)ஒன்றிற்கு இடமளிப்பது(Co-substratum) என்று இது துணியற்பாலதாய பொருளைத் தவிர்த்து வேறெதற்கும் ஏலாது. மேலும், இது ஏது சாத்தியத் தினால் பரவப்பட்டு இருப்பது என்ற கருத்தையும் தருவதாகும். பரவியிருக்கப்பட்ட பொருளின் வரை யறையான இது பரவுதலின் தன்மையையும் (Vyaptehscarirpam Vyapyasyalaksanam) தெரிவிக்கிறது. வியாத்தியைவரையறை செய்ய ஏறக்குறைய 23 வரன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றி லேயே உண்மையான உளவியற்றுறைகள் தோன்றின எனலாம்.

அவ்வுறுப்புகளாவன: இம்மலை நெருப்புடைத் (மேற்கோள் - Statement); புகையுடைத்தாதல (ஏது-Reason); அடுக்களை போல் (எடுத்துக்காட்டு-Illustration); மலையும் புகையுடைத்து (ஏற்றல் - Application); மலைநெருப்புடைத்து - (முடித்தல் - Conclusion). எங்கெங்கு புகையிருக்குமோ அங்கங்கு நெருப்பு இருக்க வேண்டும் அடுக்களை போல்; நெருப்பில்லாவிடத்துப் புகை இருக்காது மடுப்போல் என்று உடன்பாடு எதிர்மறை எடுத்துக்காட்டுகள் இரண்டும் தேவையாம். இம் மூன்றாம் நிலையான எடுத்துக்காட்டு மிகத் தேவையானதாகும். இம் முறையை 'அன்னுவய வியதிரேகி' என்பர். உடன் பாட்டு எடுத்துக்காட்டு மட்டும் அல்லது எதிர்மறை எடுத்துக்காட்டு மட்டும் அமையப் பெற்றது முறையே உடன்பாட்டு அனுமானமென்றும் எதிர்மறை அனு மானமென்றும் வழங்கப் பெறும்.

கிறித்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் 10 உறுப்புகளுடைய அனுமானங்கள் பயின்று வந்ததாகத் தெரிகிறது. மற்றைய துறையினர் தங்களுக்கேற்ற விதத்தில் இக்கூற்றுகளை மாற்றி அமைத்துக் கொண் டனர். பொதுவாக முதல் மூன்று அல்லது பின் மூன்று கூற்றுகள் எல்லோராலும் ஏற்கப்பட்டன.

மேற்கோளாவது பக்கம்; ஐயுற்றுத் துணிதற் பாலதாய பொருளுள்ள இடமும் (மலை) துணியற் பாலதாய பொருளும் (நெருப்புடைமை) உள்ளதாம். சபக்கம் என்பது அடுக்களையும் விபக்கம் என்பது மடுவுமாம். அதாவது, துணியப்பட்ட பொருள் முறையே உள்ள இடமும் இல்லாத இடமுமாம். சில துறைகளில் முற்பிறப்பு, கன்மா, துறக்கம் முதலிய வற்றை ஏற்பது உரையனுமானம் எனப்படும் போது நாற்றமுடைத்து என்பது காண்டலனுமான மாகவும் மனிதரின் இயல்பறிதல் கருதல் அனுமானத் தின் கீழும் வகைப்படுத்தப்படும்.

ஆனால் சமணர் பொருளின் தன்மை இன்னதென இறுதியாகக் கூறப்பட இயலாது என்னும் அநேகாந்த வாதத்தை ஏற்றவர்கள். எனவே அவர்களால் சியாத்துவாதம் என்னும் ஏழு உறுப்புகள் ஏற்கப் பட்டன. ஏனெனில் ஒரு பொருள், இன்மை அல்லது இருப்பு என்னும் இரு கோட்பாடுகளின் கீழ் அடங்கி விடாது. ஆகவே ஒரு பொருள் 1. அதாக இருக்க லாம் 2. வேறாக இல்லாமலிருக்கலாம். 3. ஒரு தன்மையில் உள்ளது வேறொரு தன்மையில் இல்லை. 4. அதன் உண்மைத் தன்மை இன்ன தென வரையறுத்துக் கூற இயலாது. 5. அது

இருக்கும்; ஆனால் வரையறுக்கப்பட இயலாது. 6. இல்லாதது; ஆனால் அப்படி வரையறுத்துக் கூறப்பட இயலாதது. 7. உள்ளது, இல்லது இரண்டும்; ஆனால் வரையறுத்துக் கூறப்பட இயலாதன என்கின்றனர். இப்படி ஏழு கோட்பாடுகளின் கீழ் வரக்கூடியவை யால் இதை ஒரு அளவையியல் ஒப்புமைத் தத்துவம் என்பர். இது சியாத்துவாதம் அல்லது சப்தபங்கி எனப்படும். ஒரு பொருளைப் பலகோணங்களில் கண்டு அறிவதை நயப் பிரகாரம் என்பர். இதுவும் ஏழு கூறுகள் அடங்கியதே.

பௌத்த தருக்கத்தில் திங்நாகர் ஓர் அனுமானம், பக்கம், சாத்தியம், ஏது, இரு எடுத்துக்காட்டுகள் ஆகியன உடையதாக இருத்தல் போதுமானது என்றார். இவர் கருத்தில் மலையின்கண் உள்ள நெருப்போ நெருப்புக்கும் புகைக்கும் உள்ள தொடர்போ அனுமானத்தினால் அறியப்படுவது அன்று. நெருப்புடன் கூடிய மலை என்பதே அனுமானத்தினால் பெறப்படுவதாகும். இவர்கள் முரண்படு தர்க்க வாதத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்தியவர்கள் ஆவர். பிற்காலத்தில் சங்கரர், சிரீஅர்சர் என்போருக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தனர்.

**ஏதுப்போலிகள்:** அனுமானத்துடன் தொடர்புடைய மற்றொரு பொருள் போலிகளாகும். தவறான ஏதுக்களினால் பெரும்பாலும் இது நிகழ்வதால் ஏதுப் போலிகள் எனப்படும். ஏதுக்களில் போலி என்பதாக இது விளக்கப்படுவதால் ஒரே ஏது பல வழிகளில் தவறாக இருப்பினும் அவற்றின் கூட்டு (Combination) ஒரு தனிப் போலியாக ஆவதில்லை. பக்கப் போலி, உவமைப் போலி என்ற பிரிவுகளும் இங்கு ஏற்கப்பட்டனவே. அனுமானத்தின் ஒவ்வொரு பகுதியும் நுணுகி ஆராயப்பட்டு எல்லா நிலைகளுக்கும் இடமளித்துத் தயாரிக்கப்பட்ட ஒரு சிறந்த பகுதியாகும் இது. சிவஞான சித்தியாரில் ஏறக்குறைய அறுபத்தைந்து போலிகள் விளக்கப்படுகின்றன. ஏற்புடை அறிவு ஒரே வழியில் பெறப்படுவது. ஆனால் ஏற்பின்மை எவ்வழியிலும் பெறப்படும்.

முதன்மையாக ஐந்து போலிகள் ஏற்கப்பட்டுள்ளன. மற்றவை அவற்றின் விரிவேயாகும். இவை வியாத்தி, இலிங்பராமர்சம், முடிவுரை ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பாதிப்பதாக இருக்கலாம்.

1. ஒருதலைப்படாதது (Anaikantikam)- மலை நெருப்புடைத்து அறியப்படுதலான்.
2. மறுதலைக்காட்படுவது (Viruddham) - ஒலி நிலைபேறுடையது; உருவாக்கப்படுதலான் என்னில், உருவாக்கப்படுதல் நிலைபேறற்றமைக்குக் காரணமாகும்.
3. மாற்றேதுடைமை (Satpratipaksa)- ஒலி நிலைபேறுடையது கேட்கப் படுதலான் என்னில், உருவாக்கப்படுதலான் நிலைபேறற்றது எனவும் துணிய முடியும்.
4. துணியப்படாதது (Asiddham) – மலை புகையுடைத்து – நெருப்புடைமையால். நன்கு காய்ச்சப்பட்ட உலோகத்தில் புகை–சாத்தியம் இருக்காது. இதனை உபாதி (Advantitious conditioning factor) என்பர்.
5. அழிவு (Badha)–வேறோர் அளவையான் அழிவுடைத்து. நெருப்பு குளிர்ச்சியானது நீர்போல் என்னில், காண்டலளவையால் இது பயனற்றுப்போம்.

இதைத் தவிர்த்து புதிய முறைத் தருக்கத்தில் ஏற்கப்பட்ட முடிவின்மை (Reductio adabsuradum), தொடர்நிலை (Viscious circle), ஒன்றிற்கொன்று தொடர்பு (Mutual Dependence) முதலியனவும் ஏற்கப்பட்டன.

உணர்ந்ததையுணர்தல் (Siddhasadhanam), மேற்கோள் அழிவு (Pratijnahani), கொள்கைப்போலி (Apasiddhanta) முதலியன தோல்வித் தானங்களின் கீழ் வருவனவாம்.

**உவமை:** முன்பே அறிந்துள்ள தன்மைகளுடன் அதன் பெயரையும் அறிந்தவன், அந்தப் பொருளைப் பார்க்கும்போது தான் அறிந்த தன்மைகளுடன் அதை ஒப்பிட்டு அறிந்து கொள்வதே உவமையாகும். ஒப்பிடுதல் என்ற தனித்தன்மை காரணமாக இருப்பதால், இவ்வறிவைத் தனி முறையாகக் கருதுவர் சிலர்.

**உரை:** இது சத்தம் எனவும் ஆகமம் எனவும் வழங்கப் பெறும். 'ஆகம அளவை அறிவின் நூலாற் போகபுவனம் உண்டெனப் புலங்கொளல்' என்பார் சாத்தனார். தொல்காப்பியத்துள்ளும், 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதனூல் ஆகும்' என்று கூறப்பட்டுள்ளது. புலனறிவிற்கு எட்டாதவற்றை அல்லது அறிய இயலாதவற்றை நம்பத் தகுந்தவர்களின் சொற்கள் மூலம் அறிவது உரையளவை ஆகும். இறைவன் அனைவர்க்கும் கேள்வன் ஆதலின் அவன் கண்டது ஏற்கத்தக்கது என்பர் அறிஞர்கள். இவ்வுரையளவை பயனுடைத்து ஆக, அவாய் நிலை, தகுதி, அண்மை, கருத்து என்

னும் நான்கு பொருளும் அமையப்பட்டிருக்க வேண்டும்.

**மொழிவழிக் கொள்கை:** தத்துவ இயல் வழியான் மொழிவழி ஆராய்ச்சிமிகப் புதுமையானது எனத் தவறாக எண்ணுவார் மிகப் பலர்உள்ளனர். ஆனால் இந்திய அளவையியலறிஞர்களால் இத்துறையில் மிகுந்த ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. ஒரு வாக்கியம் உண்மையில் எதில் கருத்துடையது, அது தெரிவிக்குமாறு எவ்விதம், தொகுதி, விகுதிகளின் பொருள், பேசுபவரின் கருத்துக்கு இணங்க ஆனால் இயல்புக்கு மாறாக வழங்கும் வழக்குகளின் தன்மைகள், பொருட்பிடிப்பு, பொருள் மாற்றம், பொருள் திரிபு, பிறிதொரு பொருளேற்றல் முதலிய பற்பல நிலைகள் மிகவும் வன்மையாகவும் திறமையாகவும் ஆராயப்பட்டன. திரியக் கோடலிலும் கூற்றுகளின் தன்மைகளும் அவை தெரிவிக்கும் கருத்துகளும் மிகுந்த ஆய்வுக்குள்ளாயின.

திரியக் கோடலில் (கயிற்றில் தோன்றும் பாம்பு) 'இங்குப் பாம்பு இல்லை', 'இது பாம்பு அன்று' என்பன எவற்றைக் குறிக்கின்றன என்பது குறித்து முக்கியக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் நையாயிகர்கள் – இல்பொருள் தோன்றாது என்னும் கருத்தின் காரணமாகவும், கருத்துச் சுருக்கம் கருதியும் வெளிப்பொருளுக்கு இங்குள்ள தொடர்பு மறுக்கப்படுகிறது என்பர். இவர்கள் கருத்தாவே (Agent) வாக்கிய அமைப்புகளின் கருத்தை ஏற்பவன் என்னுங் கருத்தினர்.

மற்ற அளவைகள்: (அ) அறம் செய்தான் துறக்கம் புகும் என்றால் மறம் செய்தான் துறக்கம் புகான் என்று இங்ஙனமன்றாயின் இது கூடாதென உணரும் பொருட்பேறும் (அருத்தாபத்தியும்), மீட்சியும், உண்மைக்கு மாறான இன்மையும், சேட்டையும், உலகுரையும் ஆகியவை அனுமானம், கரண்டல், உரையளவையில் அடங்குமென்பர்.

தவறான அறிவுகளாவன: கயிற்றைப் பாம்பாகக் காணுதலும் (திரியக்கோடல்), தூணோ மனிதனோ என்னும் ஐயமும், தூணை மனிதன் எனத் துணிதலும் (தேராது தெளிதல்) ஆம். முயற்கோடு போன்றவை இல்வழக்குகளாகும் (விகல்பம்).

ஏற்புடைமை (Validity): இவ்வளவையியல் முறைகளாற் பெறப்படும் அறிவு தன்னில் ஏற்புடைத்தா அல்லது வேறொரு கருவியின் மூலம் ஏற்புடைத்தாகிறதா என்ற கருத்திலும் மிகுந்த சர்ச்சை காணப்படுகிறது. நியாய நூல் வல்லாரும் பௌத்தரும் இவை தாமே ஏற்புடையவல்ல; ஒருவருடைய செய்கை அவர் பெற்ற அறிவுடன் ஒத்துப்போனால் (Correspondence Theory) அவ்வொற்றுமையை ஏதுவாக வைத்துப் பெறப்படும் ஓர் அனுமானம் (அனுவ்யவசாயஞானம்) இந்த அறிவை ஏற்புடைத்தாக்குகின்றது என்றும் கருதினர். ஆனால் மீமாம்சகரும் வேதாந்திகளும் அறிவு தம்மில் தாமே ஏற்புடைத்து என்றும் கருதினர். ஆனால் நியாய நூல் வல்லாரும் மீமாம்சகரும் தவறு, பிறிதின் வகையான் மட்டுமே அறியப்பட வேண்டும் என்ற கருத்தில் வேறுபடுவதில்லை.

**பொருள்:** அளவையியலின் கூறுகளே அடிப்படையான பதினாறு பொருள்களாக ஏற்கப்பட்டன. உலகமும் உலகியற்பொருள்களைப் பற்றிய கருத்தும் பல தொடர்பான விளக்கங்களில் தரப்படுகின்றனவேயல்லாமல் (Digressions), தனியே எடுத்து விளக்கப்படுவதில்லை.

விளக்கப்படவேண்டிய ஒவ்வொரு கருத்தும் பொருளும் அவற்றைப் பற்றிய குறிப்பு (பெயர் மாத்திரையாற் பொருள் புலப்படச் சொல்லுதல்), இலக்கணம் (சிறப்பு வகையான் பொருளின் தன்மையை வரைந்து சுட்டுதல்), சோதனை (தான் விளக்க மேற்கொண்ட பொருளில் அதற்குரிய இலக்கணத் தன்மை உண்டா இல்லையா என ஆராய்ந்து காட்டுதல்) என மூவகைப்படும். இலக்கணத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு படியும் சீரிய முறையில் கூட்டிக் கழிக்கப்பட்டு, மிகைபடக் கூறல் (அதிவியாப்தி), குன்றக் கூறல் (அவ்வியாப்தி), இல்லது கூறல் (அசம்பவம்) என்ற மூவகைக் குற்றமும் இல்லையென்று தெளிந்த பின்னரே ஏற்கப்பட்டது (தனபிரயோசன சிந்தை). இவ்வாராய்ச்சிக்குப் பொருளைப் பற்றிய நேரடி அறிவும் சிற்சில நேரங்களில் செயல் முறை அறிவும் துணை புரிந்தன.

அறியப்படும் பொருள்களாவன ஆன்மா, உடல், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி (ஈடுபாடு), தோடம், பிரேத்திய பாவம் (இறப்பு), பலன், தூக்கம், அபவருக்கம் (விடுதலை) எனப் பன்னிரண்டு வகைப்படும். பண்பு (உருவம், நிறம், சுவை, ஒலி, நாற்றம், தொடு உணர்ச்சி போன்றன), செயல், பொதுமை (இன நிறை உரை), விசேடம், பிரிவாற்றாத் தொடர்பும் இன்மையும் பிறவாகும்.

இவற்றுள் ஆன்மா எங்கும் பரவியதாயும், பலவாயும் என்று முளதாயும், பகுதிகளற்றதாயும், 'நான்' என்ற உணர்ச்சிக்கு ஆதாரமாயும், அறிவிற்குப் பிரிவாற்றாத் தொடர்புடையதாயும், இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு முதலிய உணர்ச்சிகளுக்கு நிலைக்களனாயும், செயலாற்றுந்திறன் வாய்ந்ததாயும் ஏற்கப்பட்டது. பண்புகள் இருபத்து நான்காம். அவற்றுள் ஒன்றான எண்களைப் பற்றிய இவர்தம்

கொள்கை புதிய கொள்கைக்கு மிக அண்மை யானதே.

விசேடமாவது ஓர் அணுவை மற்றதினின்றும் பிரித்தறிய உதவும் தனிமைப் பண்பு ஆகும். பிரிவாற்றாத் தொடர்பாவது பொருளுக்கும் நிறம், சுவை போன்றவற்றிற்கும் உள்ள தொடர்பு ஆகும். இவர்கள் கருத்தில் காரியம் காரணத்தைக் காட்டிலும் வேறானதும் முன்பு இல்லாததும் காரியத்தில் இயல்வதுமாகும். இவர்களை அசத்காரியவாதிகள் என்பர். இவர்கள் இரு பரமாணுக்கள் ஓர் இரட்டையணுவையும், அவை மூன்று ஓர்பேரணுவையும் உருவாக்குகின்றன என்பர். அவை காணப்படும் இவ்வுலகை உருவாக்கியுள்ளன. பரமாணு கருதலளவையினாலேயே அறியத் தக்கது. காரணம் பொருட்காரணம் (Material cause), வடிவக் காரணம் (Formal cause), கருவி (Instrumental cause), என மூவகைப்படும். உலகின்கண் உணரப்படும் பொருள்கள் மேற்கூறியவற்றுள் ஏதேனும் ஒன்றன்கீழ் அமைக்கப்படக் கூடியதே.

அறன்: பொதுவாக வைதிக சமயமும் அதன் கண் காணப்படத் தக்க அற வழியும் இவர்கள் ஏற்றதே. இவர்கள் பெரும்பாலும் சைவர்களாவர். வேதங்கள் இறைவன் அளித்தவை என்று நம்பினார்கள். கருமம், மறுபிறப்பு முதலியன இவர்களால் ஏற்கப்பட்டன. கடவுள் உண்டு என்ற கருத்து இவர்களால் மிக வலுவான வாதங்களுடன் நிறுவப்பட்டது. படைப்பு, அழிவுகளை நிகழ்த்தவும், அணுக்களை இயக்கவும், பலன்தருவோனாகவும், வேதத்தைக் காண்பவனாகவும் இறைவன் காணப்பட்டான். இவ்வடிப்படைப் பொருள்களைப் பற்றிய தவறான அறிவை நீக்கி, சரியான அறிவு பெற்று இருத்தலே தொடர்பை நீக்கும் வழியாகவும் விடுதலைக்கு வித்தாகவும் கருதப்பட்டது.

அளவையியல் கோட்பாடுகள் மெய்ப்பொருட் கோட்பாடுகளுடன் கலந்து நிற்றல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அக்கருத்துகள் வளரும்போது காலப்போக்கில் சிக்கல் மிகும் காலங்களில் (When becomes complex), அவை மெய்ப்பொருள் கருத்துகளுக்குத் துணை (Subordinate) யாகிவிடுகின்றன. இவர்கள் காலத்திற்கேற்பக் கருத்துகள் மாற்றம் பெறலாம் என்பதை உணர்ந்தவர்களாக உள்ளனர். இத்துறை எத்துறையினருக்கும் எந்நாட்டவர்க்கும் பின்தங்கியது அன்று யாவரும் கருத்துச் சிக்கனத்தையும் தெளிவையும் (Precision of Thought) பெற இவர்கள் வழி வகுத்துத் தந்தனர். ஆகவே தான் 'ஆற்றின் அளவு அறிந்து கற்க அவையஞ்சா, மாற்றங் கொடுத்தற் பொருட்டு' எனவும், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' எனவும் அறிஞர் பெருமக்கள் அளவையியலின் இன்றியமையாமையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அ.ரா.

துணை நூல்கள்:

**Devasenapathi, V.A.**, Saiva Siddhanta as expounded in the Sivagnana Siddhiyar and its Six Commentaries, University of Madras, 1974.

**Ingalls, D.H.H.**, Materials for the Study of the Navya-Nyaya Logic, Cambridge, Mass., 1951.

**இந்திய அறிவாராய்ச்சியியல்**: அறிவு என்பது ஆன்மாவின் அறியும் தன்மை. அது இரண்டு வகைப்படும். ஒன்று ஞாபகம் (Remembrance); மற்றொன்று அனுபவம் (Experience).

அனுபவம்: அனுபவம் உண்மையான அனுபவம், பொய்யான தோற்றம் என இருவகைப்படும். உண்மையான அனுபவம் பொருள்களின் குணங்களை அறிதல். பொய்யான அனுபவம் அல்லது தோற்றம் என்பது சிப்பியில் வெள்ளி (Conch Shell - Silver) யைப் பார்ப்பது.

அனுபவத்தின் வகைகள் (Kinds of Experience): உண்மையான அனுபவம் நான்கு வகைப்படும். அவை புலன்களால் அறிகின்ற அறிவு (Perceptual Knowledge), அனுமானம் (Inference), பொருள்களை ஒத்துப் பார்ப்பதில் (Comparison) கிடைக்கிற அறிவு, வேதங்களில் கிடைக்கிற அறிவு (Verbal Testimony) என்பன.

புலனறிவு (Perception): புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன) பொருள்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஏற்படுகின்ற அறிவு. இது இரண்டு வகைப்படும்; ஒன்று தீர்மானிக்க முடியாதது (Indeterminate); மற்றொன்று தீர்மானிக்கக் கூடியது (Determinate).

பொருள்கள் தன்மையை அல்லது குணங்களைத் தீர்மானிக்க முடியாமலிருந்தால், அது தீர்மானிக்க முடியாத புலனறிவு எடுத்துக்காட்டு: இது ஒரு பொருள் (This is Something). பொருள்களின் தன்மையைத் தீர்மானிக்க முடிந்தால், அது தீர்மானிக்க முடிகிற (Determinate) புலனறிவு; எடுத்துக்காட்டு: இவன் நிறம் கறுப்பு. இவன் ஓர் அந்தணன்.

புலனறிவு மேலும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அதாவது, அழியாதது (Eternal) என்றும் அழிவது (Transitory) என்றும் பிரிக்கப்படுகிறது. முதலாம் பிரிவில் கடவுள் சேர்க்கப்படுகிறார். இரண்டாம் பிரிவில் மனிதனும் மற்ற உயிரினங்களும்

சேர்க்கப்படுகின்றன. இரண்டாம் பிரிவு முன்பு போல் சவிகல்பகா (Savikalpaha)-தீர்மானிக்கக்கூடிய புலனறிவு என்றும் நிர்விகல்பக (Nirvihalpaka) -தீர்மானிக்க முடியாத புலனறிவு என்றும் பிரிக்கப்படும்.

தீர்மானிக்க முடிகிற புலனறிவு, இலௌகீகம் (Lauhiha) - சாதாரணமான (Normal) என்றும், அலௌகீகம் (Alauhiha)-அசாதாரணமான (Abnormal) என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இலௌகீகப் பிரத்தியட்சம் (Lauhiha Pratyaksha)ஆறு வகைப்படும். அவை மூக்கின் வழியாக அறிகிற அறிவு (Olfactory), நாவின் வழியாக அறிகிற அறிவு (Gustatory), கண்களால் தெரிந்து கொள்ளுகிற அறிவு (Visual), உணர்வினால் ஏற்படுகின்ற அறிவு (Sparsa), காதுகளால் அறிந்து கொள்கிற அறிவு, மனத்தினால் அறிகின்ற அறிவு எனப்படும்.

மூக்கின் வழியாக மணமும், நாவின் வழியாகச் சுவையும், கண்களின் வழியாக நிறங்களும் உருவங்களும், காதின் வழியாக ஒலியும், மெய்(உணர்வு) வழியாகப் பருமனான தன்மையும் மெல்லிய தன்மையோடு சூடு, குளிர்ச்சி ஆகிய நிலையும் அறியலாம். மனத்தின் வழியாக இன்பம், துன்பம், ஆசை, பகை முதலியவற்றை அறியலாம். இவை உணர்கூருவிகள் எனப்படும்.

அசாதாரணமான புலனறிவைச் சாமானிய இலட்சணம் (Samanya laksana), ஞான இலட்சணம், யோகசா (Yogasa) என மூவகையாகப் பிரிக்கலாம். சாமானிய இலட்சணம் என்பது பலவகைக் கிளையாயுள்ள பொருள்களின் தொகுதியை அறிவது. அதாவது ஒரு பசுவைப் பார்க்கும் பொழுது அதனைப் பற்றிய விவரங்களைப் பொதுவாக அறிவது. ஞானஇலட்சணப் பிரத்தியட்சம் (Gnana Laksana Pratyaksa) என்பது ஒரு பொருளின் தன்மையைத் தூரத்தில் கண்டபொழுதே அறிவது. அதாவது, பனிக்கட்டியைப் பார்த்தவுடனே அதன் குளிர்ச்சியை உணர்வது. குளிர்ச்சியை உணரும் தன்மை கண்களுக்குக் கிடையாது. ஆகையினால் இது ஒரு சாதாரண பொது நிலை கடந்த அறிவு. யோகசா பிரத்தியட்சம் என்பது பொதுநிலை கடந்ததும் அசாதாரணமானதுமான யோகிகளின் புலன் கடந்த அறிவு.

அனுமானம் (Inference): அனுமானம் என்பது உய்த்தறியக் கூடிய அறிவு. பராமார்சா என்பது (Pramarsa) எண்ணிப்பார்த்தல் அல்லது சலுகை (Consideration). வியாப்தி என்பது ஒன்றிற்கும் மற்றொன்றிற்குமுள்ள தொடர்பு. ஒன்றிருந்தாலும் மற்றொன்றும் இருக்கும். ஒரு மனிதன் தூரத்தில் ஒரு மலையிலிருந்து புகை வருவதைப் பார்க்கிறான். பார்த்தவுடன் அவனுக்குப் புகையிருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் என்ற எண்ணம் வருகிறது. உண்மையாக நெருப்பைப் பார்க்காவிட்டாலும், புகையிருக்குமிடத்தில் நெருப்பு இருக்கிறது என்று கூறுகிறான். வியாப்தி என்பது புகையிருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் என்பது. புகை இலிங்கம், சாதனா அல்லது வியாபா எனப்படும். நெருப்பு, இலிங்கி, சாத்தியா அல்லது வியாபகா எனப்படும். அனுமானம் என்பது நேராகப் புலன்களுக்கெட்டாத அறிவை, மறைமுகமாக (Indirect) அறிதல். எல்லா மனிதர்களும் இறந்து விடுவார்கள். இராமனும் மனிதன். ஆகையினால் இராமனும் இறந்து விடுவான். இதை முக்கூற்று (Syllogism) முறை என்பார்கள். இறந்து விடுவார்கள் என்பது சாத்தியா; மனிதன் என்பது ஏது (Middle Term); இராமன் என்பது பக்சா (Paksa). இதுவே முக்கூற்று முறை.

அனுமானம் இரண்டு வகைப்படும். சுவார்த்தனுமானம் (Svarthanumana) தனக்காக உய்த்து அறிதல்; பரார்த்தனுமானம் (Parathanumana) பிறருக்காக உய்த்தறிதல் (Inference for others). பரார்த்தனுமானம் ஐந்து வகைப்படும். அவை பிரதிக்ஞை (Pratigna), ஏது (Hetu), எடுத்துக்காட்டு (Udahrana), உபநயம் (Upanaya), நிகமனம் (Nigamana) என்பன. மலையில் நெருப்பு இருக்கிறது (பிரதிக்ஞை), ஏனென்றால் புகை மலையில் இருக்கிறது (ஏது). புகை இருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் சமயலறையைப் போல (எடுத்துக்காட்டு). மலையில் இருக்கும் புகை, நெருப்பு பின்தொடரும் புகை போல (உபநயம்). ஆகையினால் நெருப்பு மலைமேலிருக்கிறது (நிகமனம்).

பூர்வவாத்து (Purvavat), சேசவாத்து (Sesavat), சாமானிய தோதிரசுடா (Samanyatodrasta) என அனுமானம் பிறிதொரு வகையில் மூவகைப்படும்.

பூர்வவாத்து அனுமானம் (Purvavat Anumana) காரணத்திலிருந்து காரியத்தை உய்த்துணர்தல்; கருமேகங்களைப் பார்த்தவுடன் மழை பெய்யும் என்று கூறல். அதே போல் புகையைப் பார்த்தவுடன் நெருப்பு இருப்பதாகக் கூறல்.

சேசவாத்து அனுமானம்: ஆற்றில் ஓடும் தண்ணீரிலிருந்து மழை பெய்திருக்க வேண்டும் என்று உய்த்துணர்தல். காரியத்திலிருந்து காரணத்தைக் கூறல்.

சாமானிய தோதிரசுடா அனுமானம்: சூரியன் இயங்குவதைக் காலையில் சூரியனைக் கீழ்த்திசையில் பார்ப்பதாலும் மாலையில் மேற்றிசையில் பார்ப்பதாலும் அறிந்து கொள்ளுதல் இது சாமானியதோதிரசுடா அனுமானம்.

வியாப்தி (Vyapti): ஓர் அனுமானத்தில் ஏதுவிற்கும் சாத்தியாவிற்கும் (Sadhya) மாறாத ஒரு தொடர்பு இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அனுமானம் ஆகாது. பொது விதி கூறுமிடத்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதற்கு விதி விலக்கு இருக்கக் கூடாது. இலிங்கத்திற்கும் (Hetu) சாத்தியாவிற்கும் தொடர்பு ஏற்படுத்தலாம். அன்வய-வியதிரேகி (Anvaya-Viyatirehi) இலிங்கமும் சாத்தியாவும் தொடர்புடையனவாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: புகையும் நெருப்பும்.

உவமானம்: நியாயம், மீமாம்சை, வேதாந்தம் ஆகியவை உவமானத்தை ஒத்துக் கொள்கின்றன. வைசேடிகம், சாங்கியம், யோகம், பௌத்தம், சமணம் ஆகியவை உவமானத்தைத் தனிக் கொள்கையாக ஒத்துக் கொள்ளவில்லை. உவமானத்தை விளக்கக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டைக் கூறுகின்றனர். கவயா (Gavaya) என்ற மிருகத்தைப் பார்க்காதவனிடம் அதைப்பற்றி எப்படிக் கூறுவது? அல்லது எப்படிப் புரிய வைப்பது? கவயா என்னும் மிருகம் பசுப்போல இருக்கும் என்று கூறினால், ஓரளவு அவனுக்குப் புரியும். அதன் பிறகு காட்டிற்குப் போய் அத்தகைய மிருகத்தைப் பார்த்தால் புரிந்து கொள்வான்.

சப்தா (Sabda): சப்தா என்பது ஒரு நம்பிக்கைக்குரிய மனிதன் பேசும் சொற்கள் அல்லது உரைகள் என்று கூறலாம். வைசேடிகர்கள், சமணர்கள், புத்தர்கள் ஆகியோர் இதனை ஒத்துக் கொள்ளவில்லை. சாங்கியர்களும் யோகம், மீமாம்சா, வேதாந்தப் பிரிவினரும் இதனை ஒத்துக் கொள்கின்றனர்.

சட்டப்படி செல்லக்கூடாத அறிவு (Non Valid Knowledge): இதனை அன்னம்பட்டர் (Annambhatta) என்பவர் தர்க்கசங்கிரகா என்ற நூலில் (Tarkasan graha) கீழ்க்காணும் மூன்று தலைப்புகளில் விளக்குகிறார். அவை ஒன்று சம்சயம் (Samsaya – ஐயம் – Doubt); மற்றொன்று விபரியாயா (Viparyaya- பொய்த் தோற்றம்); பிறிதொன்று தருக்கம் (Tarka- பொய்யான கொள்கையின் மேல் வாதம் செய்தல்).

சம்சயம் (Samsaya): ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது தூணா (Post), மனிதனா (Man) என்ற ஐயம் எழுந்தால் அது சம்சயம் எனப்படும்.

விபரியாயா: ஒரு பொருளை மற்றொன்றாகப் பார்ப்பது. அதாவது, கீழே இருளில் கிடக்கும் கயிற்றைப் பாம்பு என்று எண்ணுதல்.

தருக்கம் (Tarka): மலையில் நெருப்பு இருக்கிறது. ஏனென்றால், அங்கே புகை இருக்கிறது. மலையில் நெருப்பு இருக்கிறது என்ற முடிவை எதிராளி நம்ப மறுக்கும்போது, எதிராளியின் முடிவு சரியன்று என்று கூறுவதற்கு, அவனிடம் நீ மலையில் நெருப்பில்லை என்று வைத்துக் கொள். நெருப்பில்லாவிட்டால் புகையில்லை என்பது பொது விதி. இதை யாரும் ஐயுற முடியாது. ஆனால், நீ மலையில் புகையைப் பார்க்கிறாய். ஆதலின், மலையில் நெருப்பில்லை என்று கூறுவது சரியன்று என்று சொல்லி மலையில் நெருப்பிருப்பதை உணரவைப்பது தருக்க நெறியாகும்.

தருக்கத்தையும் அனுமானத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளல் வேண்டும். இந்தியத் தத்துவத்தில் சாருவாகர் (Charvaka) புலனறிவை மட்டில் ஒத்துக் கொள்கின்றனர். அனுமானத்தை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஏனென்றால் அனுமானம் உறுதியாக எதையும் கூறமுடியாது. மேலும் அவர்கள் சுருதி புலனறிவுக்கெட்டாத பொருள்களைக் கூறுகிறது என்றும் சொந்த நலன்களைக் கருதிச் சில புரோகிதர்கள் கடவுள் இருக்கிறார் என்று கூறி அறிவற்றவர்களை ஏமாற்றுகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

சமணர்கள் கருத்துப்படி அறிவு பிரமாணம் (Pramana) என்றும் நயம் (Naya) என்றும் இருவகைப்படும். பிரமாணம் என்பது பொருள்களை அப்படியே ஒத்துக் கொள்வது. மீமாம்சைக் கொள்கையினர் அருத்தாபத்தி (Arthapatti), அனுபலப்தி (Anupal-abadhi) என்னும் இரண்டு கொள்கைகளையும் புலனறிவு, உவமானம், சான்றுரை (Testimony) ஆகியவற்றுடன் சேர்த்துக் கூறுகின்றனர். அருத்தாபத்திக்கு எடுத்துக்காட்டு தேவதத்தன் என்பவர் பகலில் உண்ணமாட்டார்; ஆனால் பருத்திருக்கிறார் என்பது. இந்தஇரண்டு கூற்றுகளும் முரண்பட்டன. இவைகளை முரண்படாமலமைக்க, தேவதத்தன் இரவில் நன்றாக உண்பார் என்று கூறினால் சரியாகும். அவர் உண்பதை ஒருவரும் பார்க்கவில்லை. ஆகையினால் புலனறிவு என்று சொல்லமுடியாது. இத்தகைய அறிவு சான்றுரையாகவும் (Testimony) கருத முடியாது. மேலும், இதனை அனுமானத்திலும் சேர்க்க முடியாது. ஆதலின் இது அருந்தாபத்தி (பொருட்பேறு) ஆகும்.

அனுபலப்தி அல்லது புலனறிவுக்குட்படாதது (Non Perception) என்றால் அந்தப் பொருள் இல்லை என்பது பொருள். எடுத்துக்காட்டு: முயற்கொம்பு. நயம் என்பது அறியப்படும் பொருள். இது அறிகிறவனைப் பொறுத்திருக்கிறது. இது புலனறிவையும் அனுமானத்தையும் ஒத்துக் கொள்கிறது. நியாயக் கொள்கை (Nyaya Theory) புலனறிவையும் அனுமானத்தையும் ஒப்பிடுதலையும் (Comparison) சுருதி

யையும் ஒத்துக் கொள்கிறது. மீமாம்சை புலனறிவு, உவமை, சுருதி (Testimony), அருத்தாபத்தி (Poptulation); அனுபலாப்தி (Non-perception) ஆகியவற்றை ஒத்துக்கொள்கிறது.

அத்துவித வேதாந்தம், புலனறிவையும் அனுமானத்தையும் சுருதியையும் அறிவியற் கொள்கைகளாக ஒத்துக் கொள்கிறது. வேதங்கள் உலகம் தொடங்கிய நாள் முதலாக இருக்கின்றன. உலகம் அழிந்துவிட்டாலும் இறைவன் உள்ளத்தில் வேதக் கருத்துகள் அமைந்திருக்கும். மீண்டும் இறைவனால் உலகம் படைக்கப்படும் பொழுது அவை உலகத்தோடு தோற்றுவிக்கப்படும் என்று கருதுகின்றனர்.

துணை நூல்கள்:

**Datta & Chatterjee**, An Introduction to Indian Philosophy, University of Calcutta, 1968.

**Devasenapathi, V.A.**, Saiva Siddhanta, University of Madras, 1960.

**Piet, J.H.**, A Logical Presentation of the Saiva Siddhanta Philosophy, Diocesan Press, Madras, 1952.

**Ponniah, V.**, The Siva Siddhanta Theory of knowledge, Annamalai University, 1952.

**Ramnath Sharma**, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

**இந்திய அறிவியற் கழகம்**: பம்பாயைச் சேர்ந்த சே.என். தாட்டா (J.N. Tata) என்பவரால் பெங்களூரில் (கர்நாடக மாநிலத்தில்) தோற்றுவிக்கப் பெற்றது. இந்தியாவின் தொழில் வளத்தை முன்னேற்ற உதவும் பாடத் துறைகளில் உயர்கல்வி அளிப்பதும் உயர்நிலை ஆய்வு நடத்துவதும் இக் கழகத்தின் தலையாய குறிக்கோளாகும். இந்திய அறிவியற் கழகம் (Indian Institute of Science) தொடங்கப்படும் போது, மூன்று துறைகளையும் இருபத்து நான்கு மாணவர்களையும் ஆறு கல்வியாளர்களையும் கொண்ட சிறிய கழகமாகத்தான் இருந்தது. ஆனால், இன்று இக்கழகத்தில் உள்ள அறிவியல், பொறியியல் ஆகிய துறைகள் இருபதுக்கு மேல் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. மேலும், இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களும் இக்கழகத்தில் படிப்பையும் ஆய்வையும் மேற்கொண்டுள்ளனர். இக்கழகத்தில் அறிவியல், பொறியியல் ஆகிய பாடத் துறைகளில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியன உள்ளன. இங்கு ஏறத்தாழ இரண்டரை இலட்சம் நூல்களைக் கொண்ட பெரிய நூலகம் ஒன்றும் உள்ளது. இங்கு 2350 ஆராய்ச்சி இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. இக் கழகத்தின் கல்வி, ஆராய்ச்சிப் பணிகளுக்காக மைய அரசு பல்கலைக்கழக நிலையினை (Deemed University) இதற்கு வழங்கியுள்ளது. இக்கழகம் தில்லியில் உள்ள இந்திய தேசிய அறிவியல் கழகம் (Indian National Science Adademy), கல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் கூட்டுக் கழகம் (Indian Science Congress Association) ஆகியவை போன்று, இந்திய அறிவியல் வளர்ச்சிக்குப் பாடுபடுகிறது. இக்கழகத்தின் வளாகம் 391 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

**இந்திய ஆட்சிச் சட்டம்** (1935): இந்திய ஆட்சிச் சட்டம் 1935-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு இரண்டாம் நாள் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் இந்திய அரசியலுக்கு ஒரு கூட்டாட்சி அமைப்பினை வழங்கியது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிருவாக அதிகாரங்கள், அரசியலமைப்புச் சட்டத்திலேயே மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. மாகாணங்களுக்கான அதிகாரங்கள், அசாம், வங்காளம், ஒரிசா, பீகார், மத்திய மாகாணங்கள், பஞ்சாபு, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, பம்பாய், சென்னை, ஐக்கிய மாகாணங்கள் ஆகிய பதினொரு மாகாணங்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன.

சுதேச அரசுகள்: இந்தியக் கூட்டாட்சி ஏற்பாட்டின்படி 1935-ஆம் ஆண்டு சுதேச அரசுகள் தங்களுக்கு முன்பிருந்த சுயேச்சையில் பெரிய பங்கினை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. கூட்டாட்சி மத்திய அரசு (Central Government) எல்லா உறுப்பு மாநிலங்கள்மீதும் ஒரே அளவு ஆதிக்கம் செலுத்த வேண்டுவதே முறையாயினும், சுதேச அரசுகளைப் பொறுத்தவரையில் ஒவ்வோர் அரசு மீதும் ஒவ்வொரு வகை ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று ஆட்சிச் சட்டமே குறித்தது. கூட்டாட்சி மத்திய அரசு செலுத்தக்கூடிய அதிகாரங்களுள் சிலவற்றை அச்சுதேச அரசுகளின் இசைவின்றிச் செலுத்த முடியாது; ஆனால், மாநிலங்களைப் பொறுத்த வரையில் அவை ஒவ்வொன்றின் மீதும் ஒரே வகை ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. மேலும், கூட்டாட்சி அமைப்பில் சேர வேண்டியது மாநிலங்களைப் பொறுத்தவரையில் கட்டாயமானது. சுதேச அரசுகள் தங்கள் விருப்பத்தின்பேரில் கூட்டாட்சியில் சேருபவை. அன்றியும், சுதேச அரசுகளின் இராச்சியங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று மிகவும் வேறுபட்டவை. ஐதராபாத்திலிருந்து மிகச்

சிறிய சுதேச இராச்சியம் வரை அவற்றின் எண்ணிக்கை 562 ஆகும்.

**மாகாண அரசாங்கங்கள்:** ஒரு மாகாணத்தின் நிருவாக அதிகாரம் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் மாகாணத்தில் ஆங்கில முடியரசின் பேராளராக இருக்குமாறு அமர்த்தப் பெற்றவர். மாகாண விவகாரங்களின் நிருவாகம் பொதுவாக ஓர் அமைச்சரவையினால் செயற்படுத்தப்பட்டது. அவர்கள் மாகாணச் சட்டசபையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையே இருந்து ஆளுநரால் அமர்த்தப்பட்டனர். அந்த அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஆளுநர் தலைமை தாங்குவார். ஆளுநரின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில்தான் அமைச்சர்கள் பதவியில் இருப்பார்கள். ஆளுநர் மட்டில் தனியே மாகாண அரசாங்கத்தில் முழு நிருவாகத்துடனும் தொடர்பு கொண்டிருந்தார். பல சூழ்நிலைகளில் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் அவர் சொந்த விருப்பு வெறுப்புகளின்படி செயற்பட ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. பிற வேளைகளில் அமைச்சர்கள் வழங்கும் ஆலோசனைகளை ஆராய்ந்தபின்அவர் தம் முடிவைக் கூறுவார்.

அமைச்சர்கள் மாகாணத்தின் நிருவாகத்தை இரட்டைப் பொறுப்பாகச் செயற்படுத்தினார்கள்; ஒரு புறம் ஆளுநர், அவர்களைப் பதவியிலிருந்துவிலக்க முடியும்; மறுபுறம் சட்டசபையினர் கொண்டுவரும் சட்ட முன்வரைவுகளையோ (மசோதாக்களையோ) மானியக் கோரிக்கைகளையோ தள்ளிவிடவும் முடியும்.

**மாகாணச் சட்டசபைகள்:** ஐக்கிய மாகாணங்கள் வங்காளம், சென்னை, பம்பாய், பீகார், அசாம் ஆகிய மாகாணங்களில் இரு சபைகளைக் கொண்ட சட்டப்பேரவை இருந்தது. பஞ்சாபு, ஒரிசா, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, மத்திய மாகாணங்கள் ஆகியவற்றில் ஒரு சபைதான் இருந்தது. மக்கள் சபைக்கு 'சட்டப்பேரவை' (Legislative Assembly) என்றும், ஆறு மாகாணங்களில் உள்ள மேல் சபைகளுக்குச் சட்டமேலவை (Legislative Council) என்றும் பெயர்கள் உண்டாயின. மக்கள் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். ஆனால், அமைச்சர் ஒருவர் சட்டசபையின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் அதில் உரை நிகழ்த்தலாம். சட்டப் பேரவையின் ஒரு சபையையோ இரு சபைகளையோ ஒன்றாக அல்லது தனித்தனியாகக் கூட்டி ஆளுநர் உரை நிகழ்த்த முடியும். மாகாணச் சட்டசபைகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் மிகுதியாக்கப்பட்டது. பிரதேசவாரி அல்லது சிறப்பான அலுவல்களுக்கான தொகுதிகளின் சார்பில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரதேசவாரித் தொகுதிகள் தம் பேராளர்களைத் தனியான வகுப்புவாரி வாக்காளர்களின்மூலம் தேர்ந்தெடுத்தன. இந்த வகுப்புகள் ஒவ்வொன்றிலும் குறிப்பிட்ட மதம் இனம் அல்லது ஆண், பெண்பாலர்களுக்கான உறுப்பினர்கள் இருந்தனர். வாக்குரிமை கணிசமான அளவில் குறைக்கப்பட்டிருந்தது.

ஒரு சட்டசபையானது தன் அவைத்தலைவரைத் தேர்ந்தெடுத்ததோடு, அதன் நடைமுறைகளுக்கான ஒழுக்க விதிகளையும் வகுத்துக்கொண்டது. சட்ட முன்வரைவுகள் நிறைவேற்றப்படும்போது ஆளுநரின் ஒப்புதலைப் பெறவேண்டும். ஆண்டுக்குரிய வரவு செலவுக் கணக்கு சட்டசபையின் முன்னர் அளிக்கப்படும்பொழுது, மானியக் கோரிக்கைகளை மக்கள் சபையாகிய கீழ்ச்சபைதான் வாக்களித்து வழங்கும். இப்பொழுது சட்டசபையானது அரசாங்கத்தை உருவாக்குகின்ற அமைப்பாக மாறிவிட்டது. அமைச்சர்கள் தங்களுடைய நிருவாகத் துறைகள் தொடர்பான இன்றியமையாத சட்டங்களையும் மானியத் தொகைகளையும் சட்டசபையினரிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆளுநர்:** ஆளுநருக்குப் பெரும் அளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் அவர் தம் சொந்தச் சட்டங்கள், மாகாணம் முழுவதற்குமான இடைக்கால ஆணைகள், விலக்கப்பட்ட பகுதிகளுக்கான விதிமுறைகள், அவர் தம் சிறப்புப் பொறுப்புகளை நிறைவேற்றுதல் தேவையானது என்று அவர் எப்பொழுது கருதுகிறாரோ, அப்பொழுது அரசாங்க ஊழியர்கள் பணத்தைச் செலவிட அதிகாரம் வழங்குதல் முதலியன யாவும் அடங்கும்.

சில பிற்பட்ட பகுதிகள் 'விலக்கப்பட்ட' வட்டாரங்களாக இருந்தன. அவற்றின் நிருவாகம் ஆளுநரின் சிறப்பான பொறுப்பாக இருந்தது. அந்தப் பகுதிகளில் அமைதியும் நல்லாட்சியும் நிலவ அவர் விதிமுறைகளை வகுத்தார். கூட்டாட்சி அரசினுடையதும் மாகாண அரசினுடையதும் ஆகிய சட்டங்களை அப்பகுதிகளில் தேவையான மாற்றங்களுடன் இயங்கச் செய்ய வேண்டியது இயக்குநரின் பொறுப்பாகும்.

சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் இயல்பான விதிகளுக்கு ஏற்ப மாகாணத்தின் அரசாங்கத்தை நடத்துவது முடியாது என்று எப்பொழுது ஆளுநர் கருதுவாரோ, அப்பொழுது பேரறிக்கையின் மூலம் அவர் மாகாண அரசாங்கம் முழுவதையோ ஒரு பகுதியையோ தம் பொறுப்பில் வைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய பேரறிக்கைகள் தொடக்கத்தில் ஆறு மாத காலத்திற்கு அமுலில்-நடைமுறையில் இருக்கும். இந்தக் காலவரை ஒரே நேரத்தில் ஓராண்டுக் காலம் வரைக்கும், மொத்தத்தில் மூன்றாண்டுகளுக்கும் நீடிக்கப்படலாம். அதற்குப் பாராளுமன்றத்தின் உடன்பாடு இன்றியமையாததாகும். சட்டத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு போர்க்காலத் திருத்தத்தின் படி, போர் முடிவுற்று ஆறு மாத காலம் வரைக்கும் ஒரு மாகாணத்தின் அவசர கால நிருவாகத்தை நீடிக்க ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிதி வருவாய்களைப் பகிர்ந்து கொள்ளுதல்: அரசியலமைப்புச் சட்டத்தில் மாகாணங்களைச் சேர்ந்த வருவாய்களின் மூலங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருந்தது. வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, ஒரிசா ஆகிய மாகாணங்களுக்கு மேற்கூறிய வருவாய்களுடன் மைய அரசு, சட்டப்படி அமைந்த மானியத் தொகைகளை மேலதிகாரமாக வழங்கியது. வருமான வரியின் ஒரு பகுதியும் மத்திய அரசு வசூலித்த சணல் வரிகளும் மாகாணங் களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதப்படி, மைய அரசி னால் பகிர்ந்தளிக்கப்பட்டன. தங்களுடைய சொந்த வருவாய்களின் உறுதியீட்டின்மேல் கடன் வாங்கிக் கொள்ள மாகாண அரசாங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மாகாணங்களின் கணக்குகள் மைய அரசினால் அமர்த்தப்பட்ட அரசாங்கத் தலைமைக் கணக்காய்வாளரால் எழுதவும் தணிக்கை செய்யவும்பட்டன. அவர் தணிக்கை அறிக்கை மாநிலச் சட்டசபையின் அரசினர் கணக்கை ஆரா யும் சட்டமன்றக் குழுவினாலும் இறுதியாகச் சட்டப் பேரவையினாலும் ஆராயப்பட்டது.

நீதித்துறை: பல்வேறு மாநிலங்களின் நீதி நிரு வாகமானது உயர்நீதி மன்றங்கள் அல்லது அவற் றிற்குச் சமநிலையிலுள்ள நீதிமன்றங்களின் பொறுப் பில் இருந்தது. இச் சட்டத்தின்படி இந்தியர் ஒருவர் உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி ஆக முடி யும்.

அரசாங்க ஊழியர்கள்: அரசியலமைப்புச் சட்ட மானது மாநில அரசு ஊழியர்களின் நலன்களைப் பெரும் அளவில் பாதுகாத்தது. அவர்களின் பாது காப்பு ஆளுநரின் சிறப்பான பொறுப்பாக இருந்தது. அனைத்திந்தியப் பொதுப்பணித் துறையின் உறுப் பினர்கள் தங்களைப் பாதிக்கும் எந்த உத்தரவு களுக்கும் எதிராகத் தீர்வு பெறவேண்டுமானால், இந்தியச் செயலருக்கும் அவர் ஆலோசகர்களுக்கும் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் அல்லது பல மாநிலங் கள் சேர்ந்த தொகுதிகளுக்கும் அரசினர் பணியாளர் தேர்வுக் கழகங்கள் (Public Service Commissions) நிறுவப்பட்டன. மாநிலப் பொதுப் பணிகளுக்குத் தேவையான அனைத்துப் பொது ஊழியர்களையும் தேர்வு செய்யும் பணி இக்கழகங்களைச் சார்ந்த தாகும்.

உள்நாட்டு அரசாங்கம்: இச்சட்டத்தின்படி இந்தியக் குழுவிற்குப் பதிலாக இந்தியச் செயலருக்கு ஆலோசகர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை அப்பொழுது மூவர் முதல் அறுவர் வரையிலும் உறுதி செய்யப்பட்டது. பொதுப்பணித் துறைகளைப் பாதிக்கின்ற சிக்கல்களைப் பற்றி முடிவுகளைக் கூற வேண்டியது மட்டிலுமே சட்டப்படி அமைந்த அவர்களின் ஒரே பொறுப்பாகும். இந்தியச் செயலாளர் தாம் விரும்பினால் எந்தச் சிக்கலைப் பற்றியும் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்க லாம். இந்தியப் பணிமன்றத்தின் நிருவாகத்திற் கான செலவுத் தொகைகளின் பொறுப்பை ஆங்கி லேய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இதில் இந்தியச் செயலர், அவர் ஆலோசகர்கள், அவர் பணியாட்கள் ஆகியோரின் ஊதியங்கள் ஆகியன அடங்கும். இந்தியச் செயலரின் ஆலோசகர்கள் ஐந்து ஆண்டுகள் பதவி வகிக்கும்படி அமர்த்தப்பட்ட னர். அவர்களுக்குச் சில வரையறைகள் செய்யப்பட் டன. இந்தியச் செயலர் இந்திய அரசாங்கத்தை இயக்குவது, மேற்பார்வையிடுவது, கண்காணிப்பது போன்ற பொறுப்புகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தார். மாநிலங்களில் ஆளுநர் தம் விருப்பம் போலத் தம் முடிவுகளின்படி நடந்து கொள்ளும் போது மட்டிலுமே இந்தியச் செயலர் அவற்றை மேற் பார்வையிடவும் இயக்கவும் அதிகாரத்தைப் பெற்றி ருந்தார். ஆளுநர் தம் சிறப்பான பொறுப்புகளைச் செயற்படுத்தும் அதிகாரமும், இந்தியச் செயலரின் கட்டளையைப் பொறுத்துத்தான் செயற்பட வேண் டும் என்ற வரையறை இருந்தது. மாநிலங்களில் பணிபுரியும் பொது ஊழியர்களின் முறையீடுகளை இந்தியச் செயலர் தம் ஆலோசகர்களுடன் சேர்ந்து விசாரிப்பதோடு அவர்களின் நியமனம், ஒழுக்கம், நடத்தை முதலியன பற்றிய விதிகளையும் அங்கீகரிப் பார். மாநில அவசரக்கால அரசாங்கம் 93-ஆம் விதியின்படி அமைவது இந்தியச் செயலரின் அதி காரத்திற்குட்பட்டிருந்தது.

இந்திய மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங் களும் எத்தகைய பிரதிநிதித்துவப் பொறுப்புகளை ஏற்று நடத்துமோ அவற்றை இங்கிலாந்திலிருந்த 'இந்தியத் தூதர்' தொடர்ந்து ஆற்றிவந்தார்.

கூட்டாட்சி நீதிமன்றம்: அரசியலமைப்பிற்கு விளக்கம் கூறுவதற்காக உச்ச மேல்முறையீட்டு நீதி

மன்றமாக, 1937-இல் ஒரு கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவப்பட்டது.

மைய அரசாங்கத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்: மைய அரசாங்கம் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி எவ்வாறு அமைக்கப் பட்டிருந்ததோ, அந்த முறையில் பெரும்பாலும் தொடர்ந்து இயங்கி வந்தது. அரசியல் துறையை மட்டில் ஆங்கிலேய அரசின் பேராளர்கள் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டனர். அவர்கள் சுதேச சமசுதானங்களுடன் ஆங்கில அரசின் உறவுகளை நடத்திக் கொள்வதற்காக ஆங்கிலேய அரசால் அமர்த்தப்பட்டவர்கள். நாணயமாற்று, செலாவணி, அவற்றின் அன்றாட நிருவாகம் ஆகியவை தனியார் நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டிருந்த இந்த இருப்பு வங்கியிடம் (Reserve Bank) ஒப்படைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் புதிய சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. இவ்வாறு அமைச்சரவையினால் நடத்தப்பட்ட மாநில அரசுகள் அரசப் பேராளருடன் (Viceroy) கூடிய அமைச்சர் குழுவுக்குப் பொறுப்புடையனவல்ல என்று ஏற்கப்பட்டன. தம் சிறப்பதிகாரங்களைச் செயற்படுத்தும்போதும், தம் இச்சையாகத் தம் முடிவுகளின்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் போதும், ஆளுநர், அரசப் பேராளரின் நேரடியான மேற்பார்வைக்குக் கட்டுப் பட்டவராவார். மாநிலங்களின் அவசர நெருக்கடி அறிவிப்பு அரசப் பேராளரால் அறிக்கையிடப்பட வேண்டும்; அவசரக்கால அரசாங்கமும் அரசப் பேராளருக்கே பொறுப்புடையதாகும். இந்திய ஆறுகளின் தண்ணீரைப்பயன்படுத்த மாநிலங்களுக்குள் போட்டி ஏற்படுகின்றபோது, அதுபற்றித் தீர்ப்புக் கூற அரசப்பேராளர் தனி வழக்குத் தீர்ப்பு நீதிமன்றங்களை நிறுவ வேண்டும். இந்தியா முழுவதிலுமோ நாட்டின் எந்த ஒரு பகுதியிலோ அமைதிக்குப் பங்கம் வருகின்ற ஆபத்து நிலை இருந்தால் அரசப்பேராளர் நடவடிக்கை எடுப்பார். இதனால் மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அவருக்கு அக்கறை ஏற்பட்டதோடு நிலைமை மிகவும் சீர்குலையும் என்று கருதினால் மாநில அரசாங்கத்தில் அவர் தலையிடவும் வாய்ப்புகள் உண்டாயின. இந்தியா 15-8-1947-இல் ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அதன் பின்பும் இச்சட்டம் தேவையான மாறுதலுடன் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 26-1-1950-இல் செயல்முறைக்கு வந்தது. இப்புதிய சட்டத்தின் 395-ஆம் பிரிவின்படி 1935-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிச்சட்டம் நீக்கம் செய்யப் பட்டுவிட்டது.

**இந்திய ஆட்சிப்பணி**: மாவட்ட ஆட்சியர்கள், இணை ஆட்சியர்கள், சார் ஆட்சியர்கள் பல்வேறு அரசாங்க இலாக்காக்களின் தலைமைப் பொறுப்பேற்கும் செயலர்கள், இயக்குநர்கள், தலைமைச் செயலர்கள் ஆகியோருள் பெரும்பாலோர் இந்திய ஆட்சிப்பணியைச் (Indian Administrative Service) சார்ந்தவர்கள், இவர்கள் தங்கள் பெயரோடு வேறு எந்தப் பட்டத்தையும் சேர்த்துக் கொள்ளாது இ.ஆ.ப. என்னும் சுருக்கக் குறியீட்டை மட்டில் சேர்த்துக் கொள்வர். இந்தியாவின் எப் பகுதியிலும் பணிபுரியும் உரிமையும் கடமையும் கொண்டவர்கள் இவர்கள். இது போன்றே காவல் துறைப் பணிக்கும் அனைத்திந்திய அளவில் பணியாளர்கள் அமர்த்தப்படுகிறார்கள். இவர்களை மத்திய அரசும் மாநில அரசுகளும் தேவையான வகையில் பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் இருந்த போது அவர்கள் இந்தியாவெங்கிலும் பணிபுரிய அலுவலர்களை அமர்த்தினர். இது தொடர்பாக, கி. பி. 1854-ஆம் ஆண்டு மெக்காலே (Macaulay) ஓர் அறிக்கை அளித்தார். அவ்வறிக்கை இந்தியச் சீரியல் பணி (Indian Civil Service) என்னும் அமைப்பைப் பரிந்துரை செய்தது. இப்போதைய இ.ஆ.ப. அமைப்பிற்கு முன்னோடியாக இந்தியச் சீரியல் பணி (ஐ.சி.எசு) அமைந்தது. அதைத் தொடர்ந்து பல்வேறு துறைகளிலும் இந்திய அளவிலான பணி முறை நடைமுறைக்கு வந்தது. அதன்படி இந்தியக் காவற்பணி (I.P.S.), இந்திய வனத்துறைப் பணி (I.F.S.), இந்தியக் கல்விப் பணி (Indian Educational Service), இந்திய வேளாண்மைப் பணி (Indian Agricultural Service), இந்தியச் சீரியல் விலங்கின மருத்துவப்பணி (Indian Civil Veterinary Service), இந்திய வனத்துறைப் பொறியாளர் பணி (Indian Forest Engineering Service), இந்திய மருத்துவப் பணி (Indian Medical Service), இந்தியப் பொறியாளர் பணி (Indian Service of Engineers) ஆகிய அமைப்புகள் செயற்பட்டன. மேற்குறிப்பிட்ட அமைப்புகள் 1906-ஆம் ஆண்டளவில் திட்டமிடப் பட்டு, 1919-ஆம் ஆண்டு சட்டப்படி முழுமையாகச் செயற்படத் தொங்கின. மாண்டெகு செம்சுபோர்டு (Montague Chelms Ford) 1921-ஆம் ஆண்டு பரிந்துரைத்தபடி இரட்டையர் ஆட்சி நடைமுறைக்கு வந்தபோது, மாநில அளவில் சில அதிகாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவற்றை அவர்கள் அம்மாநில ஆளுநரின்கீழ்ச் செயற்படுத்தினர். அந்நிலையில் அனைத்திந்திய ஆட்சிப்பணி முறையை எதிர்த்துத் தங்கள் மாநிலத்திற்குத் தேவையான பணியாளர்

களைத் தாங்களே அமர்த்தி நிருவாகம் செய்யும் உரிமையைக் கோரினர். நியாயமான இக்கோரிக்கையைக் குறித்து ஆங்கிலேய அரசாங்கம் கவனிக்கத் தொடங்கியது.

இந்திய உயர்நிலைப் பணிகள் பற்றி ஆய்ந்தறிய 1923-இல் இலீ (Viscount Lee of Fareham) தலைமையில் அரசு குழு (Royal Commission) அமைக்கப்பட்டது. அக்குழு இந்தியக் கல்விப் பணி, இந்திய வேளாண்மைப்பணி, இந்திய விலங்கின மருத்துவப் பணி, இந்திய வனத்துறைப் பணி ஆகிய பிரிவுகளுக்கு மேற்கொண்டு பணியாளர்களைச் சேர்ப்பதை நிறுத்திவிடலாம் எனப் பரிந்துரைத்தது. அப் பணிகளுக்கான அலுவலர்களை மாநிலங்களே அமர்த்திக் கொள்ளலாம் என்னும் பரிந்துரை ஆங்கிலேய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மோதிலால் நேரு தலைமையில் ஓர் அனைத்துக் கட்சிக்குழு 1928-இல் இச்சிக்கல் குறித்தும் கருத்துத் தெரிவித்தது. அக்குழு சுதந்திர இந்தியாவில் ஆங்கிலேயர் அறிமுகம் செய்த அனைத்திந்தியப் பணிமுறை தேவையில்லை எனவும் மத்திய மாநில அரசாங்கங்களுக்குத் தனித்தனி அமைப்புகள் வேண்டும் எனவும் வலியுறுத்தியது. தொடர்ந்து 1928-ஆம் ஆண்டுச் சட்டப்படி உருவாக்கப்பட்ட குழு (Indian Statutory Commission), 1929-இல் தனது பரிந்துரையில், மாநில அளவில் பணியாளர்களை அமர்த்தும் அதிகாரத்தை மாநிலங்களுக்கே கொடுக்க வேண்டிய தேவையை எடுத்துரைத்தது. இந்திய வட்டமேசை மாநாடு (1930-31) இச்சிக்கலில் தெளிவுபெறச் சர் வில்லியம் சோவிட்டு (Sir William Jowitt) தலைமையில் ஒரு துணைக் குழுவை (Sub Committee) அமர்த்தியது. அக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள், அனைத்திந்திய அளவில் இரண்டு பிரிவுகளை மட்டும் (இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி) தொடர்ந்து வைத்துக் கொண்டு ஏனைய பணிகளை மாநிலங்களிடம் ஒப்படைக்க ஒப்புதல் தெரிவித்தனர். இந்தியச் சட்டத்தின் 244-ஆம் விதி, 1935-ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட இரண்டு அனைத்து இந்தியப்பணிகளோடு இந்திய (சீரியல்) மருத்துவப் பணியையும் உடன்பட்டது. இந்திய மத்திய இடைக்கால அரசாங்கம் 1946-ஆம் ஆண்டு இச்சிக்கல் குறித்து இறுதி முடிவெடுக்க வல்லபாய் பட்டேல் தலைமையில் மாநில முதல்வர்கள் அடங்கிய மாநாட்டைக் கூட்டியது. அனைத்திந்தியப் பணிமுறையைத் தவிர்க்க இயலாது என்னும் கருத்தை வலியுறுத்தி எல்லோரும் ஒத்துப்போகும் முறையில் சுதந்திர இந்தியாவில் முதல் ஐந்தாண்டுகளுக்கு அனைத்திந்திய ஆட்சிப் பணியையும் இந்தியக் காவல் பணியையும் அனுமதிப்பதெனப் பொதுவாக முடிவு செய்யப்பட்டது. வல்லபாய் பட்டேலின் தனிப்பட்ட முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே இப்பொது ஒப்புதல். இந்திய ஆட்சிப் பணியையும் பிற அனைத்திந்திய அளவிலான பணி முறைகளையும் நிலை நிறுத்திய பெருமை பட்டேலையே சாரும். எனவே இப்பணிமுறைகளின் தந்தை என அவர் கருதப்படுகிறார். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே ஏற்பட்ட கருத்து வேறுபாடு இன்றளவும் உள்ளது. அனைத்திந்திய ஆட்சிப் பணி முறை தேவை இல்லை. அதற்குத் துணையாகச் சொல்லப்பட்ட கருத்துகள் யாவும் நடைமுறையில் ஏட்டளவில் நின்றுவிட்டன என்னும் குறைபாடு இன்னும் சுட்டிக்காட்டப்படுகிறது.

**ஆட்சிப்பணி விதிகள்**: இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத் தொகுப்பை உருவாக்கக் கூட்டப்பட்ட அரசியல் அமைப்பு நிருணய சபையின் வரைவுக்குழு (Drafting Committee) அனைத்திந்தியப் பணிகளுக்கு அரசியல் அமைப்பின் மூலமாக உடன்பாடு அளிக்கவேண்டும் என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சுதந்திர இந்தியாவின் மத்திய சட்டமன்றம் அதற்குரிய விதிமுறைகளை ஏற்படுத்திக் கொள்வது போதுமானது என அக்குழு கருத்துத் தெரிவித்தது. ஆனால் அனைத்திந்தியப் பணிகளுக்கு அரசியல் அமைப்பு மூலமாகப் பாதுகாப்பும் நிலைத்த தன்மையும் உறுதி செய்யப் படவேண்டும் என்னும்வேண்டுகோள் வலியுறுத்தப்பட்டு, அது அரசியல் அமைப்பில் 282-சி விதி முறையாக எழுதப்பட்டது. அன்றைய இடைக்கால மத்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகம் இச்செயலை விடாப்பிடியாகச் செய்து முடித்தது. மேலும், அரசியல் அமைப்பு விதிமுறைகளில் 312-ஆ பிரிவு தேவைப்படும்போது, அனைத்திந்திய அளவிலான பணி முறைகளை வேறு துறைகளிலும் அறிமுகம் செய்து செயற்படத் தேவையான சட்டங்களை இயற்ற, மத்திய சட்டமன்றத்திற்கு அதிகாரம் வழங்குகிறது. மத்திய சட்ட மன்றத்தின் இரண்டாம் அவையான மாநிலங்களின் அவை (Rajya Sabha), அவைக்கு வருகைதந்து வாக்களிப்போரில் மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் ஒப்புதலோடு இது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றி, அதை முதலவை ஏற்றுக்கொண்டால் புதிய அனைத்திந்திய பணிகளைச் செயற்படுத்தலாம் எனக் கூறியது. இந்திய ஆட்சிப் பணி (I.A.S.), இந்தியக் காவற் பணி (I.P.S.) ஆகியவற்றுடன் 1967-இல் இந்திய வனத்துறைப் பணியும் (I.F.S) அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய ஆட்சிப்பணி, இப்போது மத்திய மாநில

அரசாங்கங்களின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குகிறது. இவ்வமைப்பில் பணிபுரிபவரை மாநில வாரியாகப் பிரித்துப் பணியில் அமர்த்துகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அனுபவம் பெற்ற இ.ஆ.ப. அலுவலர்களின் ஒரு பகுதியினரை மத்திய அரசாங்கப் பணிகளில் நியமிப்பதற்காக ஒதுக்கி வைக்கின்றனர். அனுபவம் பெற்ற இ.ஆ.ப. அலுவலர்களை மத்திய செயலகத்தின் உயர் பதவிகளுக்கு மாநிலங்கள் அனுப்புகின்றன. மத்திய செயலகத்தின் இ.ஆ.ப. அலுவலர்கள் நிலையாக ஒரு பிரிவிலோ அல்லது ஒரு துறையிலோ பணியாற்ற இயலாது. மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் பணிபுரிந்த அலுவலர்களைத் திரும்பவும் அவர்கள் மாநிலங்களுக்கே அனுப்பி வைக்கும் முறை செயற்படுகிறது. குறைந்த அளவு அவர்களை வேறு துறைகளுக்காவது மாற்றம் செய்கிறார்கள். இதனைக் குறிப்பிட்ட காலக்கெடு முறை (Tenure System) எனச் சொல்கின்றனர். இ.ஆ.ப. அலுவலர்கள் மாநிலங்களின் உடனடி நேரடிக் கட்டுப்பாட்டிற்கும் மத்திய அரசாங்கத்தின் இறுதிக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவர்கள். அனைத்திந்திய ஆட்சிப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 1948-ஆம் ஆண்டில் 800. இப்போது இந்திய ஆட்சிப் பணியில் ஏறக்குறைய 5000 அலுவலர்கள் செயற்படுகிறார்கள். ஒவ்வோராண்டும் 150 இ.ஆ.ப. அலுவலர்கள் இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்த்தப் படுகிறார்கள். இந்தியாவின் 22 மாநிலங்களுக்கும் அம்மாநிலங்களின் உயர்நிலை அலுவலர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாநில அரசாங்கத்தின் கோரிக்கைகளைக் கவனித்து மத்திய அரசாங்கம் 150 மொத்தப் பணியிடங்களைப் பகிர்ந்தளிக்கிறது.

இந்திய ஆட்சிப்பணி அலுவலர் சேர்ப்பு முறை: இப்பணிக்குரிய அலுவலர்கள் மூன்று வகையாக அமர்த்தப்படுகிறார்கள். 1. மேலே குறிப்பிட்டபடி 150 இடங்களுக்கு நேரடியாகப் போட்டித் தேர்வு முறையில் தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். 2. மாநிலங்களிலுள்ள சீரியல் பணியாளர்கள் (Civil Servants) பதவி உயர்வு மூலமாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை இந்திய ஆட்சிப் பணிப் பிரிவில் அமர்த்தப்படுகிறார்கள். 3. மாநிலங்களிலுள்ள சீரியல் அலுவலர் அல்லாத ஏனைய அலுவலர்களிலிருந்து மிகச் சிறப்பான அலுவலர்களுள் மிகச் சிலருக்கு இந்திய ஆட்சிப்பணியில் இடமளிக்கப் படுகிறது. நேரடிப் போட்டித்தேர்வை மத்திய பணியாளர் தேர்வாணைக்குழு (U.P.S.C) ஆண்டுதோறும் நடத்துகிறது.

நம்நாடு விடுதலை பெற்ற பிறகு பின்பற்றப்பட்ட தேர்வுமுறை 1979-ஆம் ஆண்டில் கோத்தாரி குழு (Gottari Commission) அளித்த பரிந்துரைப்படி மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மத்திய பணியாளர் தேர்வாணைக்குழு எழுத்துத் தேர்வையும் நேர்முகத் தேர்வையும் முறைப்படி முடித்து, அதில் வெற்றி பெற்றவர்களின் பட்டியலை மத்திய செயலகத்தின் அலுவலகப் பணியாளர் துறைக்கு (Department of personnel) அனுப்புகிறது. மத்திய அரசாங்கம் அப்பட்டியலின் அடிப்படையில் பணி அமர்த்தம் பற்றிய கடிதங்களை அனுப்பி அப்பணியாளர்களை வேலையில் அமர்த்துகிறது. இப்போது இப்போட்டித் தேர்வை (1979-ஆம் ஆண்டு முதல்) ஆங்கிலத்தில் மட்டுமல்லாது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 8-ஆம் பகுதியில் இடம்பெற்றுள்ள 15 இந்திய மொழிகளிலும் எழுதலாம். ஆங்கில ஆர்வம் குறையாத காரணத்தால் இந்திய மொழிகளில் இத்தேர்வை எழுதுவோரின் எண்ணிக்கை குறைவே. இந்திமொழி மூலம் எழுதுவோரின் எண்ணிக்கை மட்டுமே சென்ற சில ஆண்டுகளாக உற்சாகமூட்டும் வகையில் கூடி வருகிறது. தமிழில் இத்தேர்வை எழுதும் தன்னம்பிக்கையும் உணர்வும் ஒரு சில தமிழ் இளைஞர்களுக்கே ஏற்பட்டுள்ளது.

இத்தேர்வில் வெற்றி பெற்றவர்களின் மொத்த மதிப்பெண்களின் வரிசைப்படி பணி அமர்த்தம் பற்றிய பட்டியல் தயாரிக்கப்படுகிறது. கூடுதலான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு அவர்கள் விரும்பும் மாநிலத்தில் பணி புரியும் உரிமை வழங்கப்படுகிறது. மற்றவர்கள் மத்திய அரசு அமர்த்தும் மாநிலங்களில் பணி புரிய வேண்டும். இப்பணியாளர்கள் பதவியில் அமர்த்தப்படுவதற்கு முன்னதாகப் பயிற்சி பெறுகிறார்கள். இப்பயிற்சி முசோரியிலுள்ள (Mussoorie) இலால்பகதூர் சாசுதிரி ஆட்சியியல் நிறுவனத்தில் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முறையில் 1969-ஆம் ஆண்டு சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி இப்பணியாளர்கள் தங்களது பயிற்சிக் காலத்தில் முதல் ஆறு மாத காலம் அடிப்படைப் பயிற்சி என்னும் முறையில் கல்விஅறிவு பெறுகிறார்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டங்கள், அந்நோக்கில் பொருளாதார, சமூக அமைப்பு முறையில் நிருவாகச் செயல்முறைகள், பொது நிருவாக முறையின் அடிப்படைக் கொள்கைகள், சீரியல் பணியாளர்களின் உரிமைகள், கடமைகள், பணியாளர்களின் ஒழுங்கு முறைகள், விசுவாசக் கடமைகள் போன்றவற்றைக் கற்றறிகிறார்கள். இப்பயிற்சி முடிந்தபின்னர் அவர்கள் எந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறார்களோ அப்பகுதியின் மாவட்ட நிருவாகப் பயிற்சியைப் பெற வேண்டும். அதற்கு முன்னதாகத் தங்களது ஆறு மாதப் பயிற்சியின்போது மாவட்ட அடிப்படையிலான பல்வேறு சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து முறைப்படி அறிக்கைகள் தருகின்றனர். மாவட்டப்

பயிற்சிக்குப் போகும் முன்னர் அம்மாநிலத்தின் தலைமைச் செயலகத்தில் சில நாள் பயிற்சி பெறுகின்றனர். அம்மாநிலத்தில் அரசாங்க அலுவலர்களுக்கான நிருவாகப் பயிற்சி நிறுவனம் இருக்குமெனில் அங்குப் பயிற்சி பெறுகின்றனர். மாவட்ட அளவில் பயிற்சி பெறும்போது கீழ் மட்டத்திலிருந்து பல்வேறு நிலைகளில் நிருவாகப் பயிற்சி பெறுகிறார்கள். பெரும்பாலும் பல்வகைச் சிக்கல்களையும் கொண்ட மாவட்டங்களிலேயே இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். அம்மாவட்ட ஆட்சியருக்கு இப்பயிற்சியாளர்களைத் தனிப்பட்ட அக்கறையோடு கவனிக்க வேண்டிய பொறுப்பும் உண்டு. மக்களோடு தொடர்புடைய இப்பயிற்சியை முடித்துக்கொண்டு அம்மாநிலத்தின் தலைமைச் செயலகத்தில் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் மாவட்ட அளவில் பயிற்சியைத் தொடங்கியது முதல் உயர் நிலைச்செயல்களைத் தலைமைச் செயலக அளவில் கற்றறியும் வரை, ஒவ்வொரு கட்டத்திலும் முசோரியிலுள்ள தலைமைப் பயிற்சி நிலையத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட ஆலோசகரோடு தொடர்பு வைத்துக் கொண்டு அறிவுரைகள் பெறுகிறார்கள். பயிற்சி பெறும் இப்பணியாளர்கள் அவ்வப்போது தாங்கள் தொடர்பு கொண்ட சிக்கல்கள் குறித்து அறிக்கைகள் தயார் செய்து தங்கள் தலைமை நிறுவனத்திற்கு அனுப்புகிறார்கள். இச்சிக்கல்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பாக முதல் ஆறுமாதக்காலப் பயிற்சியின் போதே மாவட்ட நிருவாகம் குறித்த பல்வேறு சிக்கல்களைக் குறித்து இவர்கள் அறிக்கைகள் அளிக்க வேண்டும். இவ்வறிக்கைகள் அவ்வப்போது மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி மதிப்பீட்டிற்கு உதவுகின்றன.

இவர்களது ஆறு மாதக்கால மாவட்டப் பயிற்சி அனுபவம், தலைமை நிறுவனத்தில் இவர்கள் பெறும் அடுத்த கட்டமான ஏழு மாதக் காலப் பயிற்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது. இறுதியில் மத்திய பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் இவர்கள் பங்குகொண்டு தேறவேண்டும். அவ்வாறு தேர்ச்சியுற்றவர்கள் பயிற்சியாளர் என்னும் நிலையைக் கடந்து, அதிகாரி என்னும் தகுதியோடு இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். மாநில அளவில் இ.ஆ.ப. அலுவலர் ஒரு கோட்டத்தின் நிருவாகத் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். மாவட்ட ஆட்சியர் என்னும் பதவிக்குப் போவதற்கு முன்னதாக இவர் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரிந்து தலைமைச் செயலகத்தில் ஏதாவது ஒரு துறையில் துணைச் செயலரின்கீழ்ப் பணிபுரிந்து, தம் நிருவாக அனுபவத்தை விரிவாக்கிக் கொள்ளவேண்டும்.

மு.சி.

துணை நூல்கள்:

**Maheswari Shriram,** Indian Administration, Orient Longmans, New Delhi, 1984.

**Shukla, V.N.,** Constitution of India, Eastern Book Company, Lucknow, 1950.

**Quraishi, M.A.,** Indian Administration, Pre and Post Independence, Ashish Publishing House, New Delhi, 1985.

**இந்திய ஆட்சிமுறை:** சட்டமன்றத்தால் சட்ட வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்ட நாட்டவர் விருப்பத்தைச் செயற்படுத்துதல்தான் ஆட்சிமுறை அல்லது நிருவாகம் (Administration) என்று கூறப்படும். இக்காலத்தில் காணப்படுகிற இந்திய ஆட்சிமுறையின் அடித்தளங்களாக (Bases of Indian Administration) மனு, யாக்ஞவல்கிய உரிமை, குற்றஇயல் சட்டங்கள், எடேயா (Hedaya) என்னும் இசுலாமியச் சட்டம், ஆங்கிலக் குடிமை இயல், குற்ற இயல் சட்ட முறைகள், செர்சா என்ற ஆப்கானிய மன்னனாலும் (Sher - Shah) முகலாயப் பேரரசர் அக்பராலும் (Mughal Emperor Akbar) ஏற்படுத்தப்பட்ட நேரடித் தொடர்புடைய நிலவரிமுறை, சோழ மன்னர்களால் வளர்க்கப்பட்ட ஊராட்சிமுறை, அடுக்காக அமைந்த அதிகாரிகளாட்சிமுறை, ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக்கழகத்தாலும் ஆங்கிலப் பாராளுமன்றத்தாலும் நிறுவப்பட்ட அடுக்காட்சி முறை, மாவட்ட ஆட்சியர்கள் அலுவல் அமைப்பு, பாராளுமன்றக் குடியாட்சி முறை ஆகியவை இருக்கின்றன. ஆங்கில ஆட்சிக் காலத்தில் (கி.பி.1757 முதல் 1947 வரையில்) இக்கால ஆட்சிமுறைக்குரிய கொள்கைகளை ஒட்டிப் பல புதிய ஆட்சித்துறைகள் நிறுவப்பட்டன. சட்டம் செய்தற்குரிய அதிகாரங்களையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் என்ற ஒரு தனியான அமைப்பையும், ஆட்சித்துறைகளையெல்லாம் சட்டங்களைச் செய்யுமாறு நடத்திக் கண்காணிக்கின்ற சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவையையும், உரிமைஇயல், குற்றஇயல் சட்டங்களை விளக்கி, உரிமைகளைப் பாதுகாத்து, நீதி வழங்குதற்கு நீதிமன்றங்களையும் இந்தியாவில் நிறுவியவர்கள் ஆங்கில ஆட்சியாளர்கள். ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய ஒழுங்குமுறைச் சட்டம் (1773), இந்தியச் சட்டம் (1784), பட்டயச் சட்டங்கள் (Charter Acts, 1793, 1813, 1833, 1853) இந்திய அரசாங்கச் சட்டம் (1858), இந்தியச் சட்டமன்றங்களின் சட்டங்கள், (Indian Councils Acts, 1861, 1892, 1909), இந்திய அரசாங்கச் சட்டங்கள்

(Government of India Acts, 1919, 1935) முதலிய சட்டங்களின் வாயிலாக, இந்திய ஆட்சி முறை உருவாயிற்று. பெரும்பாலும் ஆங்கிலேயர் நிறுவிய ஆட்சிமுறைகளை அப்படியே நீடித்து வைத்தும், இக்காலச் சமவுடைமைச் சமுதாயக் கோட்பாடுகளுக்கிணங்கச் சில புதிய மாறுதல்களை ஏற்படுத்தியும், 1950-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டமானது (Constitution of India, 1950), இந்திய ஆட்சிமுறையை ஏற்படுத்தியுள்ளது.

மேல்நிலையில் நடுவண ஆட்சி அமைப்பு: இந்திய நாடு, அமைப்பில் ஒரு கூட்டாட்சி நாட்டின் இயல்புகளைப் பெற்றிருப்பதால், நாடு முழுவதற்குமான தலைமை அல்லது நடுவண அரசாங்கமானது, நாட்டின் எல்லா மாநிலங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய எல்லா அதிகாரங்களையும் (சட்டமியற்றல், நிருவாகம் செய்தல், நிதி உதவி வழங்குதல் முதலியவற்றை) முழுமையாகப் பெற்றுள்ளது; இத்தகைய அதிகாரங்களைக் கையாளுவதற்குப் பணியாற்றுகின்ற அலுவலக அமைப்புகள் மிகவும் பரந்துள்ளன. நாட்டின் உயர்நிலையில் (புதுதில்லியில்) நடுவண செயலகமே (Central Secretariat) இந்திய ஒன்றியத்தின் அல்லது பேரிணையத்தின் ஆட்சியில் உச்சநிலையாக (Apex) இருக்கிறது. இது ஏறத்தாழ முப்பது அமைச்சகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; ஒவ்வோர் அமைச்சகமும் இந்திய அரசாங்கத்தின் ஓர் ஆட்கிக்கூறு, அல்லது ஆட்சி அலகாக (Unit of Administration) அமைந்து, அது ஓர் அமைச்சருடைய பொறுப்பில் உள்ளது. ஓர் அமைச்சகமோ ஒன்றுக்கு மேற்பட்டவையோ ஓர் அமைச்சருடைய பொறுப்பின்கீழ் இயங்குதலும் கூடும். இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் கட்டுப்பாட்டிலுள்ள இந்தியத் தணிக்கைக் கணக்குத்துறை, தேர்தல் ஆணையம் (Election Commission), அமைச்சர் குழுச் செயலகம் (Cabinet Secretariat), தலைமை அமைச்சர் செயலகம், குடியரசுத் தலைவர் செயலகம், ஒன்றிய பொதுப் பணி ஆணையம், திட்ட ஆணையம் (Planning Commission) முதலியவை, எந்த ஓர் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலுமில்லாமல் இயங்குகின்றன. வேளாண்மை, அணு ஆற்றல், வாணிகம், அஞ்சல், தந்தித்துறை, பாதுகாப்பு, கல்வி, அயல்உறவு, நிதி, உடல்நலம், தொழில், செய்தி-வானொலி, நீர்ப்பாசனம், மின்சக்தி, தொழில், சட்டமும் நீதியும் முதலிய பல்வேறு வகைப்பட்ட அமைச்சகங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அமைச்சகமும் ஒரு பணியை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஓர் அமைச்சகத்தின் அரசியல் தலைவராக (Political Head), பாராளுமன்றத்துக்குப் பொறுப்புள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமைச்சரும், ஆட்சித் தலைவராக (Administrative Head) ஒரு செயலரும் (Secretary) அவருக்குக் கீழ்ப்பட்ட அலுவலகங்களில் கூட்டுச் செயலர்களும் ((Joint Secretaries), அலுவலர் வகை இணைச்செயலர்களும் (Ex-officio Joint Secretaries), துணைச் செயலர்களும், கீழ்நிலைச் செயலர்களும் (Deputy, Under Secretaries), பிரிவு அதிகாரிகளும் (Section Officers), அவர்களுடைய உதவியாளர்களும் (Assistants) உள்ளனர். ஒவ்வோர் அமைச்சகமும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சில அமைச்சகங்களுக்கு இணைக்கப்பட்ட அலுவலகங்களும் (Attached Offices) (எடுத்துக்காட்டு: தொழில் வளர்ச்சி அமைச்சகம்) அவற்றில் ஆணையாளர்களும் (Commissioners) உள்ளனர். கீழ்நிலை அலுவலகங்களில் (Subordinate Offices) அந்தந்த அமைச்சகத்துக்குரிய தொழில்நுட்ப வல்லுநர்கள் அதிகாரிகளாக இருக்கின்றனர். ஒவ்வோர் அமைச்சகமும் செயற்படும்போது அது பின்பற்ற வேண்டிய செயலக விதிகள் (Secretariat Procedures) வகுக்கப்பட்டுள்ளன. ஓர் அமைச்சகம் செய்யும் பணி, குறிப்பு (Note), நிகழ்ச்சிக் குறிப்பு (Minutes), அறிக்கை (Report) முதலியவற்றில் காணப்படும்; இவை அடங்கிய தொகுப்பே கட்டுக்கோப்பு (File) என்று சொல்லப்படும். ஓர் அமைச்சகம் செய்யவேண்டிய பணியைக் கூறும் கடிதம் அதில் வந்து சேர்ந்தவுடன், அது ஒரு பதிவேட்டில் வரிசை எண் கொடுக்கப் பெற்று, பிரிவிலுள்ள உதவியாளர்களுக்கு அனுப்பப்படுகிறது; உதவியாளர்கள் அக்கடிதத்தைப் படித்து, அது கூறும் பொருள்களுக்குரிய விதிகளையும், முற்சான்றுகளையும் (Precedents) வைத்து ஆராய்ந்து, அது பற்றிய ஆலோசனைக் குறிப்புகளைக் குறித்து, பிரிவின் தலைவர் வழியாகக் கீழ்நிலைச்செயலர், துணைச் செயலர், இணைச் செயலர், செயலர் முதலிய மேல்நிலை அதிகாரிகளுக்கு அனுப்புகின்றனர். இவர்கள் கீழோர் தரும் குறிப்புகளை ஆராய்ந்து, தீர்ப்புகளை எழுதி விடுக்கின்றனர். ஏதேனுமொரு கடிதத்தின்மீது ஆணை பிறப்பிப்பது அதிகாரியின் பணியே தவிர, உதவியாளருடையது அன்று முக்கியமல்லாதபொருள்களின் மீது கீழ்நிலை அலுவலர்களே தீர்ப்பு அளித்தல் கூடும். அதிகாரிகள் அமைச்சரால் விதிக்கப்பட்ட கொள்ளையினடிப்படையில் பொருள்களுக்குத் தீர்ப்பு அளித்தலும், உதவியாளர்கள் பொருளைப் படித்துத் தீர்ப்புக்கேற்ற ஆலோசனைகளை எழுதுதலுமே 'குறித்து வைத்தல்' (Noting) எனப்படும். இம்முறையில்(குறிக்கும் முறை) ஒவ்வொரு பொருளும் விதிகளையும் முற்சான்றுகளையும் ஒட்டி ஆராயப்படுவதால், பழுது இல்லாத தீர்ப்பு வழங்க வழி இருக்கிறது; ஆனால், இந்த முறையில் காலம் தாழ்த்தல் ஏற்படவும் வழி இருக்கிறது. இக்குறையைப் போக்குதற்குக் கொள்கைத்

தொடர்பான பொருள்களையும், தன் விருப்பு முடிவு களெடுக்கப்பட வேண்டிய பொருள்களையும் (Discretionary matters), பயிற்சி பெற்ற அதிகாரிகள் நேரடியாக ஆய்ந்து தீர்ப்பு அளிக்கும் ஆங்கில ஆட்சிச் செயல்முறை இப்பொழுது சிறிது சிறிதாகக் கொண்டுவரப்படுகிறது. இதற்குப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.

பொது அல்லது அரசாங்கப் பணிகள் (Public Services): இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 311-ஆம் பிரிவு, அரசாங்கத்தின் குடிமை இயல், இராணுவ இயல் ஆகியவற்றில் பணிசெய்கின்ற பணியாளர்களை (Personnel), (1) இணையத்தின் (Union) குடிமைப் பணியில் (Civil Service) உள்ளவர் என்றும்; (2) அனைத்திந்தியப் பணியில் உள்ளவர் என்றும்; (3) மாநிலக் குடிமைப் பணியிலுள்ளவ ரென்றும், (4) இணையத்தில் குடிமை இயல் பதவி யில் (Post) உள்ளவர் என்றும், (5) மாநிலக் குடிமை இயல் பதவியிலுள்ளவரென்றும் வகைப்படுத்துகிறது. இணையத்துக்கும் மாநிலங்களுக்கும் பொதுவான, சீரான செயல்திறமுடைய அனைத்திந்தியப் பணி களும் (எடுத்துக்காட்டு இந்திய ஆட்சிப்பணித்துறை, I.A.S., இந்திய காவற் பணித்துறை I.P.S. முதலி யவை) இருக்கின்றன; இவற்றோடு இராச்சிய சபை யானது தனது தனிப்பட்ட தீர்மானத்தின் வாயி லாகப் புதிய அனைத்திந்தியப் பணிகளைத் தோற்று வித்தலும் கூடும். இந்திய இணையத்தின் சட்டமன் றத்தின்(பாராளுமன்றத்தின்)கட்டுப்பாட்டிலுள்ளவை 1) அனைத்திந்தியப் பணிகள், (2) இந்திய அயல் நாட்டு உறவுப்பணி (I.F.S.), இந்தியச் சுங்கத்துறைப் பணி (I.C.S.), இந்தியத் தணிக்கைக் கணக்குப்பணி, (I.A.A.S.), நடுவண செயலகப் பணி (Central Secretariat Service) முதலிய இணையத்திலுள்ள குடிமைப் பணிகள், (3) பாதுகாப்புப் பணிகளிலுள்ள தரை, கடல், வானப் படைகளிலுள்ள பணிகள் ஆகியவையாகும்.

அரசியலமைப்புச் சட்டம் குடிமைஇயல் பணி களுக்கு ஆள்சேர்ப்பு முறைகளையும், பணிநிலை களையும் ஒழுங்கு செய்வதற்கு உரிய அதிகாரங்களை நடுவண பாராளுமன்றத்துக்கும் மாநிலச் சட்டமன் றங்களுக்கும் வழங்குகிறது. தனித்து இயங்குகின்ற பேரிணையப் பொதுப்பணி ஆணையம் பேரிணைய குடிமைஇயல் பணிகளுக்கும் மாநிலப் பொதுப்பணி ஆணையம் மாநிலக்குடிமைஇயல் பணிகளுக்கும் ஆட் களின் திறமையைப் போட்டித் தேர்வுமுறையின் வழி யாகக் (Examination System) கணித்தறிந்து, சிறந்த வர்களைப் பணிகளில் அமர்த்துகின்றன. குடிமை இயல் பணிகளுக்கும், பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு முறையைப் பொறுத்தவரையில் (Recruitment) இவ் வாணையங்களைஅரசாங்கங்கள் கலந்து ஆலோசனை பெறுதல் வேண்டும். ஆட்சேர்ப்பு முறையில் மட்டுமல் லாமல், கட்டுப்பாடு முறைகளிலும் இவற்றின் ஆலோ சனை தேவைப்படுகிறது. இந்த ஆணையங்கள் தனித் தியங்குதல் வேண்டுமென்பதற்காக அவற்றின் உறுப் பினர்களுடைய பதவிக்காலத்தை வரையறுத்தும் அவர்களுடைய பதவி நீக்கத்துக்குக் கட்டுப்பாடுகளை விதித்தும், அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டுள் ளது.ஆணையங்களின் தலைவர்களை முறையே குடிய ரசுத் தலைவரும் மாநில ஆளுநரும் அமர்த்துகிறார்; அவற்றின் உறுப்பினருள் பாதிப்பேர் இந்திய, மாநில அரசாங்கங்களில் குறைந்தது 10 ஆண்டுகளாவது பணி செய்திருத்தல் வேண்டும். நடுவண ஆணைய உறுப்பினர்கள் 65 வயதடையும் வரையிலோ, ஆறு ஆண்டுகளோ இவற்றுள் எது முதலாவதோ அது வரையிலும், மாநில ஆணைய உறுப்பினர்கள் ஆறாண்டுகளோ, 60 வயதடையும் வரையிலோ இவற்றுள் எது முந்தியதோ அது வரையிலும் பணி செய்வர். ஆணையத் தலைவரையும் உறுப்பினர்களை யும் ஒழுங்கீனக் குற்ற ஆய்வு செய்து தலைமை நீதி மன்றம் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அளித் தால், தலைவர் ஆணையத் தலைவரையும் உறுப்பின ரையும் பதவியிலிருந்து நீக்குகிறார். பதவியிலிருந்து விலகியபின் உறுப்பினர் நடுவண, மாநில அரசாங்கங் களில் பதவி ஏற்கத் தகுதி உடையவர் அல்லர். நடு வண, மாநில அரசாங்கங்களின் பதவி ஏற்றுள்ள பணியாளர் எவரும் எந்த அதிகாரியால் பதவியில் அமர்த்தப்படுகிறாரோ அவருக்குக் கீழ்நிலையிலுள்ள அதிகாரியால் பதவிநீக்கம் செய்யப்படுதல் கூடாது. மேலும், ஒரு பணியாளரைப் பதவி நீக்கம் செய்யுமுன் அவர்மீது ஏன் நடவடிக்கை சில காரணங்களுக்காக எடுக்கப்படக்கூடாதென்று காரணங்காட்டுமாறு அவ ருக்கு வாய்ப்பளித்தல் வேண்டும். குற்றஇயல் சட்டப் படி நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்மானிக் கப்பட்டவருக்கும், நாட்டுப் பாதுகாப்புப் பற்றிய காரணங்களுக்காகவும், இத்தகைய வாய்ப்பு பொதுப் பணியாளருக்கு மறுக்கப்படுதல் கூடும். பணிக்கட்டுப் பாடுகளெல்லாம் அரசாங்கப் பணியாளர் நடத்தை விதிகளினால் (Government Servants' Conduct Rules, framed under the Government of India Act 1919) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பணியில் சேர்க் கப்பட்ட ஒருவர் நன்னடத்தையோடும் திறமை யோடும் பணிசெய்கிறவரையில், ஓய்வு வயதை அடையும் வரை பதவி உயர்வு முதலிய நலன் களைப் பெற வாய்ப்பு உண்டு. அவர் கட்சி அரசியல் செயல்களிலீடுபடாமல், தம் உயர் அதிகாரிகளுடைய ஆணைகளை நிறைவேற்றுதல் வேண்டும்; எந்த இயக்கத்திலும் அவர் உதவி செய்தலோ தேர்தல் களில் வேட்பாளர்களுக்குச் சார்பாக ஆதரவு தேடு

தலோ தேர்தல்களில் வேட்பாளராகப் போட்டியிடு தலோ கூடாது.

**மாநில அரசாங்கங்களும், உள்ளாட்சி அரசாங்கங்களும்:** ஒவ்வொரு மாநிலத்திலும் நடுவிலுள்ளதைப் போன்றே ஆளுநருடைய தலைமையில் அமைச்சரவையும் சட்டமன்றமும் உயர்நீதிமன்றமும் ஒவ்வொரு அமைச்சருடைய தலைமையின்கீழ் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சித்துறைகளும், மாநிலத் தலைமை நகரத்தில் மாநிலத் தலைமைச் செயலகமும் ஆட்சிசெய்கின்றன.மாநிலத்தின் உட்பிரிவாகிய மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரும், நிலவருமான அதிகாரியும், துணை ஆட்சியர்களும், கோட்டத்தில் கோட்ட அதிகாரியும், வட்டத்தில் வட்ட ஆட்சியரும், ஆட்சி செலுத்துகின்றனர். ஊர்தொறும் ஊராட்சிமன்றமும், ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றமும், மாநகரங்களிலும் நகரங்களிலும் மாநகராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் ஆட்சி செய்கின்றன. மாவட்ட, உள்ளாட்சி அதிகாரிகளின் செயல்களைக் கட்டுப்படுத்தி (Control) ஒருங்கிணைப்பதற்காக ஒவ்வோர் ஆட்சித் துறைக்கும் தலைமை அதிகாரி உள்ளார். மாநில நிலையில் செயலகமும் உள்ளது. செயலகத்தில் அமைச்சர்களுக்கு அலுவலகங்கள்இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் பெருமளவில் எழுத்தர்களும் அதிகாரங்களும், நடுவண தலைமைச் செயலகத்தில் செய்வதுபோலக் கடிதங்களைப் பெற்று நிகழ்ச்சி நடவடிக்கைகளும் குறிப்பும் அறிக்கையும் எழுதித் தேவைப்படும் செய்திகளை மேலதிகாரிகளுக்கு அளித்தும், ஆலோசனை வழங்கித் தீர்ப்புச் செய்ய உதவியும், கட்டுக்கோப்புகளை முறையாகப் பலநிலைகளிலுள்ள மேலதிகாரிகளுக்கனுப்பித் திரும்பப்பெற்றும், மாநில அரசாங்கத்தால் தீர்க்கப்படவேண்டிய கேள்விகளை ஆயத்தம் செய்தும் பணி செய்கின்றனர். செயலகத்தில் உள்துறை (Home), நிதி, நிலவரிவருமானம், வளர்ச்சி, உள்ளாட்சி, காவல், கல்வி, தொழில் முதலிய பல்வேறு துறைகள் இருக்கின்றன. இங்கும் செயலர், இணை, துணை, உதவிச் செயலர்கள், உதவியாளர்கள் முதலிய அதிகாரிகளிருக்கின்றனர். ஒவ்வொரு துறையின் தலைமைச் செயலரும் பல்வேறு துறைகளின் தலைமை அதிகாரிகளிடமிருந்து செய்திகளைப் பெறுகின்றார். துறைத்தலைவர்கள் தத்தம் துறைகளுக்குமுரிய பொறுப்புகளும் கடமைகளும் ஒழுங்காகச் செய்யப்படுமாறு பார்த்துக் கொள்ளுகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முக்கிய நிருவாக அதிகாரி மாவட்ட ஆட்சியராவார் (District Collector). இப்பதவியின் வரலாறு செர்சாவின் காலத்திலிருந்தும் கி.பி. 1772–ஆம் ஆண்டிலிருந்தும் தொடங்குவதாகும். மாவட்ட ஆட்சியாளர் பணி மாவட்ட அளவில் எல்லாத் துறைகளையும்(நிலவரி வருமானம், காவல், சட்டம், ஒழுங்கு, பொதுப்பணி, உள்ளாட்சி, உடல்நலம், கல்வி, தொழில், வாணிகம், வேளாண்மை, நீதி முதலிய எல்லாத்துறைகளின் செயல்களையும்) கண்காணித்தல் ஆகும். இந்தியாவில் முன்பு நீதி நிருவாகத் துறைகள் துல்லியமாகப் பிரிக்கப்படாமலிருந்த காலத்தில் மாவட்ட ஆட்சியருக்கு மாவட்டக் குற்றஇயல் நீதி அதிகாரமும் (District Magistrate) இருந்தது. இப்பொழுதும் மாவட்டத்தில் ஒழுங்கை நிலைநாட்டி, மக்களுக்குப் பாதுகாப்பளித்து, தொழில்களையெல்லாம் முட்டுப்பாடின்றி நடைபெறுமாறு செய்தற்குரிய இறுதிப் பொறுப்பு இவ்வதிகாரியையே சாரும். எனவேதான் பொதுமக்களிடையே நெடுங்காலமாக இப்பதவிக்கு மதிப்பும் புகழும் பாராட்டும் வளர்ந்து வந்துள்ளன. இவ்வுயரிய பதவியிலுள்ளவர்கள் இந்திய ஆட்சிப்பணித்துறையைச் (I.A.S.) சேர்ந்தவர்கள். இப்பதவியைப்பற்றி, 1919–ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்திலும், 1930–ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டக்குழுவின் (சைமன் குழுவின்) அறிக்கையிலும் மேன்மையான மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. தம் பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு மாவட்ட அளவில் ஆட்சியர் எல்லாத்துறை அதிகாரிகளையும் கட்டுப்படுத்துகிறார். மாவட்ட மக்களுக்கும் மாநில அரசாங்கத்துக்கும் இடையே இவ்வதிகாரியே உறவு ஏற்படுத்துகிறார். எல்லாத் துறைத் தலைவர்களும் அவர் கேட்கும் பொருள் பற்றி முழுச் செய்திகளையும் அவருக்களித்தல் வேண்டும். கோட்டம் ஒவ்வொன்றிலும் கீழ்நிலை, உதவி, துணை ஆட்சியரும், வட்டத்தில் (Taluk) வட்டாட்சியரும் (Tahsildar), ஊர் ஒவ்வொன்றிலும் (Village) ஊர்த் தலைவரும் (Village Munsif) கணக்கதிகாரியும் ஊர்க்காவலரும் (Talyari) இருக்கின்றனர். இவர்கள் நில வருமான வரிப்பணிகளோடு இதர பணிகளையும் செய்து மாவட்ட ஆட்சியருக்குப் பொறுப்பாக இருக்கின்றனர். மாவட்டக் கழகம் என்ற பழைய அமைப்புக்கு மாறாக (District Board), இப்பொழுது மாவட்ட வளர்ச்சி மன்றமும் ஊராட்சி ஒன்றிய மன்றமும் (Panchayat Union Council) ஊராட்சி மன்றமும் (Village Panchayats) இருக்கின்றன; இவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்; இவற்றுக்கு முன்பிருந்த சிறிய பணிகளுடன் இப்பொழுது ஊரக வளர்ச்சிப் பணிகளும் ஒப்படைக்கப்பட்டு அவற்றுக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. மாநகரங்களிலும் நகரங்களிலும் மாநகராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உடையனவாய்

மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, கல்வி, துப்புரவு, குடிநீர் வழங்குதல், பொதுப்பணி கள், சாலை அமைப்பு, பாதுகாப்பு முதலிய பணி களை மக்களுடைய நலனுக்காக நிறைவேற்றி வரு கின்றன.

**இந்திய ஆடலாசிரியர்கள்**: இந்திய நடனங் களில் ஆடலாசிரியருக்குச் சிறப்பான இடம் கொடுக் கப்பட்டுள்ளது. பரத நாட்டியத்தில் ஆடல் ஆசிரியர் ஆடல் கலைஞர்களால் வணங்கப்படுகிறார். தமிழகத் தில் தஞ்சையிலும் தஞ்சையை அடுத்துள்ள பல ஊர்களிலும் புகழ்பெற்ற இசை நாட்டிய அறிஞர் கள் பல நூற்றாண்டுகளாகவே இருந்து வந்துள்ள னர். இந்த ஆடலாசிரியர்கள் நட்டுவனார்கள் என் றும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் இசை, இலக் கியம், நடனம் ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சி பெற்றி ருந்தனர்.

தஞ்சையை ஆண்டு வந்த இரண்டாம் சரபோசி என்னும் மராத்திய மன்னரின் அரசவையில் இசை வல்லுநர்களாகவும் ஆடலாசிரியர்களாகவும் புகழ் பெற்று விளங்கிய சின்னையா, பொன்னையா, சிவா னந்தம், வடிவேலு ஆகியோரால் பரதநாட்டியத்தின் இந்த ஆடல் வரிசை முறை அமைக்கப்பட்டது என்று கருதப்படுகிறது. இவர்கள் அக்காலத்தில் இயலிசைப் புலவராக விளங்கிய முத்துசாமி தீட்சிதர் என்பவரின் மாணாக்கர்கள் ஆவர். அக்காலத்தில் பரத நாட்டி யம் சதிர் நாட்டியம் என்றும் சதிர் என்றும் குறிப் பிடப்பட்டு வந்தது. அலாரிப்பு முதல் தில்லானா வரையிலான இந்த நடன முறை, 'சதிர் நாட்டியம்' என்று கி. பி. 17, 18 - ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிடப்பட்டது.

அக்காலத்தில் ஒரு பொருள் பற்றிய ஆடல்முறை (ஏகார்த்த பிரயோகம்) என்னும் பரதநாட்டிய முறை பழக்கத்தில் இருந்து வந்தது. இம்முறையில் ஒரே கருப்பொருள் பற்றிய பாடல்களுக்கு ஒரே முறையில் நீண்ட நேரம் ஆடல் கலைஞர்கள் நடனம் ஆடி வந் தனர். இம்முறையில் ஆடலைக் காண்பவருக்கு ஆடல் எத்தகைய சிறப்புற அமைந்து இருந்தாலும் சலிப்பு ஏற்பட வாய்ப்புகள் இருந்தன. ஆதலின் இம் முறையில் 'தஞ்சை நால்வர்' என்று புகழ் பெற்ற இந்த ஆடலாசிரியர்கள் வருணம், பதம், தில்லானா போன்ற பலவகைப்பட்ட மாறுபாடு கொண்ட ஆடல்களைப் பரதநாட்டியத்தில் புகுத்தி அதனைக் காண்போருக்குச் சலிப்பு ஏற்படாவண்ணம் செய்யப் படும் நடனமாக அமைத்தனர். இந்நால்வரின் வழி வந்தோர் பரத நாட்டியத்தில் மேலும் பல மாற்றங் களை ஏற்படுத்தினர். தஞ்சைநால்வரே இக்காலத்தில் விளங்கி வரும் 'ஆடலாசிரியர் மாணவர் பரம்பரைக்கு அடிகோலினர். இத்தகைய ஆடலாசிரியர்கள் நட்டு வனார்கள் எனப் பிற்காலத்தில் குறிப்பிடப்பட்டனர். தமிழ்நாட்டில் புகழ்பெற்ற நட்டுவனார்களுள் சில ரைப் பற்றிய செய்திகளை இங்குச் சுருக்கமாகக் காணலாம்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை: இவர் கும்ப கோணத்தை அடுத்த பந்தநல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவருடைய நட்டுவாங்க முறை பரத நாட்டிய உலகில் தனிச்சிறப்பைத் தேடித்தந்தது. இவருடைய நட்டுவாங்க முறையில் பரதநாட்டியத் தினைப் பயின்று புகழ்பெற்ற ஆடல் கலைஞர்களுள் ஈ. கிருட்டிண அய்யர், இராமகோபால், சாந்தா ராவ், மிருணாளினி சாராபாய், தாரா சௌதுரி ஆகியோரைச் சிறந்தவர்களாகக் குறிப்பிடலாம். 'பந்தநல்லூர் முறை' உலகெங்கிலும் புகழ்பெற்றது. மீனாட்சி சுந்தரம்பிள்ளை இசையிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். (காண்க: குடும்பவிளக்க அட்டவணைக்குறிப்புகள்). பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பரம்பரையினரும், மாணாக் கர்களும் தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்தியாவெங் கணுமுள்ள அனைத்துலகப் புகழ் பெற்ற ஆடல் கலைஞர்களுக்கு நட்டுவனார்களாக இருந்து வந்துள் ளனர்; இன்றும் இருந்து வருகின்றனர். இத்தகைய ஒரு சிலரைப் பற்றி மட்டும் இங்குக் குறிப்பிடப் பட்டுள்ளது.

முத்துக்குமாரப்பிள்ளை: இவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் காலத்தில் வாழ்ந்தவர். சிதம் பரத்திற்கு அருகில் உள்ள காட்டு மன்னார் கோவில் என்னும் ஊரில் கி.பி.1874-ஆம் ஆண்டு பிறந்தார். அக்காலத்தில் தேவதாசிகள் மட்டுமே பரதநாட் டியம் ஆடி வந்தனர். முத்துக்குமாரப் பிள்ளை தாமே பல வேடங்கள் தரித்து ஆடல் கலைஞராகத் திகழ்ந்தார். இவர் தாய் யோகம் அம்மாள் என்பவரும் ஆடல் கலையில் சிறந்து விளங்கினார். முத்துக்குமாரர் பந்தநல்லூர் மகராசப்பிள்ளை, இராசமன்னார்குடி சபாபதி போன்றோரிடம் நடனம் பயின்றார். இவருடைய 9-ஆம் வயதில் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. இவர் பல ஆடல்கலைஞர்களிடமிருந்து அபிநயம் பயின்றார். இவர் இசையிலும் தேர்ச்சி பெற்றார். சங்கீத சுர ஞானபோதினி என்னும் இசை நூலைத் தமிழில் இயற்றியுள்ளார். இவர் சென்னையில் அடையாறு கலாச்சேத்திரம் என்னும் இசைக்கூடத்தில் 1939-ஆம் ஆண்டு முதல் ஆசிரியரானார். இவர் உருக்குமணி தேவிக்கு ஆசிரியராக இருந்து ஆடல் பயிற்றுவித்த வர்களுள் ஒருவர். பந்தநல்லூர் முறைக்கும் முத்துக் குமாரர் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை

## பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

- கங்கமுத்து (கி.பி. 1760)
  - சுப்பராய நட்டுவனார்
    - சின்னய்யா
      - பந்தநல்லூர் முத்தையா
        - மகள்
          - குமாரசாமி
            - அருணாசலம்
          - விசுவநாதன்
    - பொன்னய்யா
      - மகள்
        - சூரியமூர்த்தி
          - *பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
            - முத்தையா பிள்ளை
              - கோபாலகிருட்டிணன்
      - மகள்
        - நெல்லையப்ப நட்டுவனார்
          - கந்தப்பா
            - கணேசன்
    - சிவானந்தம்
      - சபாபதி
        - வடிவேலு
        - குமாரசாமி
          - பொன்னய்யா பிள்ளை
            - கிட்டப்பா
      - மகாதேவ நட்டுவனா..
    - வடிவேலு

## *பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1952-ஆம் ஆண்டு மறைந்தார்)

- முத்தையா
  - கோபாலகிருட்டிணன் (பெங்களூரில் ஆடலாசிரியராக உள்ளார்)
- மகள் சொக்கலிங்கம் பிள்ளையை மணந்தார்
  - சுப்பராயன்
- மகள் தஞ்சை பிச்சையா பிள்ளையை மணந்தார்
- மகள் தஞ்சை பொன்னையா பிள்ளையை மணந்தார்
- மைத்துனி மகள் பாபநாசம் வடிவேலுவை மணந்தார்


உருக்குமணிதேவி குறிப்பிட்டுள்ளார். இராம கோபால், மிருணாளினி சாராபாய், இராபர்ட்டு இரிவியரா (Robert Riviera) என்னும் ஐரோப்பியர் போன்றவர்கள் இவர் மாணாக்கர்களுள் சிலரா வர். இவர் மிருணாளினி சாராபாய் அகமதா பாதில் ஏற்படுத்தியுள்ள தருப்பணா (Darpana) என்னும் கலைக் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராக இருந்தார்.

சொக்கலிங்கப் பிள்ளை: இவர் பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பரம்பரையைச் சேர்ந்த குமாரசாமி நட்டுவனாரின் பேரன். இவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் நட்டுவாங்கமும் இசையும் பயின்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மகள் சங்கம்மாவை மணந்து தம் ஆசிரியருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருந்தார். இவர் அடையாறு கலாச்சேத்திரத்தில் 1943-ஆம் ஆண்டு ஆசிரியரானார். இராதா கிரிராம், அஞ்சலி மெர், மினடி மிச்சிரா, உரோசன் வசிப்தர், நாநா கசர், காஞ்சனமாலா, ஆன்புருன் (Ann Brunn) என்னும் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த கலை ஞர், கினபிலா (Gina Blau) கினா மார்க்கு (Gina Mark) ஆகிய இரு அமெரிக்கக் கலைஞர்கள் போன்ற அனைத்துலகப் புகழ்பெற்ற ஆடல் கலைஞர்கள் இவர் மாணாக்கர்கள் ஆவர். இவர் 'நாட்டிய விசாரதன்' 'நாட்டிய கலாநிதி' போன்ற பல விருது களைப் பெற்றார். அடவுகளுக்கும் தீர்மானங்களுக் கும் இவர் சிறந்த வரையறைகளைச் செய்துள்ளார். இவர் 1968-ஆம் ஆண்டு காலமானார்.

திருவாளப்புத்தூர்ச் சாமிநாதப்பிள்ளை, கல்யாணி அம்மா என்னும் நடனக் கலைஞரின் மகன். இவர் கி.பி. 1893-ஆம் ஆண்டு தஞ்சையில் பிறந்தார். இவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் நடனம் பயின்றார். இவர் உடன்பிறந்தவர்கள் இராசலட்சுமியும் சீவரத்தினமும் புகழ்பெற்ற நடனக் கலைஞர்கள். இவர்கள் 1968-ஆம் ஆண்டு சங்கீத நாடகக் கழகத் தின் கலைமாமணி விருது பெற்றார்கள். திருவிடை மருதூர்க் குப்பையா பிள்ளை, சரபோசி மன்னன் காலத்தில் நட்டுவனாராக இருந்தார். வேங்கட கிருட்டிண நட்டுவனாரின் வழி வந்தவர் இவர். இக்குடும்பத்தில் பஞ்சாபகேச நட்டுவனாரும் ஒருவர். இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர். பஞ்சாபகேச நட்டுவனார் கோவில்களில் ஆடும் கலைஞர்களுக்கு நடனப் பயிற்சி அளித்தார். இவர் பரோடா மன்னர் அவை யில் இருந்த நடனக் கலைஞர்களுக்கு நடனம் கற் றுக் கொடுத்தார். தஞ்சை அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைப் பரோடா மன்னன் சயாசிராவ் III (கெயிக்வாது) கி.பி. 1880-இல் மணந்து கொண் டார். தஞ்சை மன்னன் திருமணச்சீருடன் ஒரு நட னக் குழுவினரையும் சில இசைக் கலைஞர்களையும் பரோடாவுக்கு அனுப்பினான். அந்தக் குழுவில் கௌரா, சாரதா ஆகிய இரு பெண்களும் இருந்தனர். கௌரா தஞ்சைக் கோவிலில் நடனம் ஆடி வந்த காமு அம்மாளின் மகள். சாரதா கும்பகோணத் தைச் சேர்ந்தவர். வடிவேலு, சபாபதி ஆகிய இரு நட்டுவனார்களும் இவர்களுடன் சென்றனர். கௌரா 32 ஆண்டுகளும் இவருடன் சென்ற காந்திமதி 35 ஆண்டுகளும் பரோடாவில் வாழ்ந்தனர். இவர்களின் மாணாக்கர்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களில் சென்று தங்கி பரதநாட்டியக் கலையை வளர்த்து வருகின்றனர். குபேரிநாத தஞ்சோர்கர் என்பவர் காந்திமதியின் மகன். இவர் பரோடாப் பல்கலைக் கழகத்தின் நடனத்துறையில் சேர்ந்து பல ஆராய்ச் சிகளைச் செய்துள்ளார். திருவிடைமருதூர்க் குப்பை யாபிள்ளை தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரின் காலத்தில் விளங்கிய வேங்கட கிருட்டிண நட்டு வனார் என்பவரின் வழி வந்த ஆடலாசிரியராவர். வேங்கட கிருட்டிண நட்டுவனாரின் குடும்பத்தைச் சேர்ந்த வீராசாமி என்பவரும் சிறந்த ஆடலாசிரிய ராகத் திகழ்ந்தார். பஞ்சாபகேச நட்டுவனாரும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவரே. இவர் வடமொழி, தெலுங்கு, ஆகிய மொழிகளில் வல்லுநராக இருந் தார். இவர் அபிநய நவநீதம் என்னும் நடன நூலை இயற்றியுள்ளார். பஞ்சாபகேச நட்டுவனார், அக் காலத்தில் வாழ்ந்த கோவில் ஆடல்கலைஞர்களுக்கு நடனப்பயிற்சி அளித்தார். இவரிடம் பயின்றவர்களுள் தோவூர்ச் சுப்புலட்சுமி, பெங்களூர்ச் சீதை, புதுக் கோட்டை அம்மலு, பரோடா அரசவைக் கலைஞர் களான கௌரா, காந்திமதி ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். பரோடா, மைசூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களின் அரசவைகளில் பஞ்சாபகேச நட்டுவனார் சிறப்பிக்கப்பட்டார். இவர் தஞ்சை அரசவை ஆடலாசிரியராக இருந்து பிரகதீசுவரர் கோவிலில் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதற்குப் பொறுப்பாளராக இருந்தார். அக்காலத்துக் கலைஞர் கள் பல ஊர்களினின்றும் வந்து இவரிடம் பயிற்சி பெற்றனர். பஞ்சாபகேச நட்டுவனாரின் மகன் குப் பையாபிள்ளை தம் பதினைந்தாம் வயதிலேயே நல்ல நட்டுவாங்கப் பயிற்சி அடைந்திருந்தார். இப் பொழுது பஞ்சாபகேச நட்டுவனார் காலமானார். குப்பையா பிள்ளை தஞ்சை கன்னையாவிடம் நட னத்தின் நுட்பங்களைக் கற்றார். இவர் திருவிடை மருதூரில் தங்கிப் பல மாணவர்களுக்கு நடனப் பயிற்சி அளித்தார். இவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மகாலிங்கம், கலியாணசுந்தரம், கோவிந்த ராச பிள்ளை ஆகியோர் இக்காலத்தில் பம்பாயில்

புகழ்பெற்ற ஆடலாசிரியர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் யாவரும் குப்பையா பிள்ளையிடம் நட்டுவாங்கமும் பந்தநல்லூர் ஞானிப்பிள்ளையிடம் இசையும் பயின்றவர்கள். இவர்கள் கடந்த முப்பது ஆண்டுக்காலமாகப் பம்பாயில் இராசேசுவரி பரத நாட்டியக் கலாமந்திரம் என்னும் நடனப் பயிற்சிக் கழகத்தை நடத்தி வருகின்றனர். இக்கழகத்தில் பயின்ற நடனக் கலைஞர்கள் பலர் புகழ்பெற்ற நடனக்கலைஞர்களாகத் திகழ்கின்றனர். திருவாங்கூர்ச் சகோதரிகள் என்று குறிப்பிடப்பட்ட இலவிதா, பத, இராகினி ஆகிய மூவரும் இப்பயிற்சிக் கூடத்தில் சிலகாலம் பயிற்சி பெற்றவராவர். சிதாரா தேவி என்னும் புகழ்பெற்ற கதக்கு நடனக் கலைஞர், தமயந்தி சோசி, உரோசன் குமாரி, கோபி கிருட்டிணா போன்ற அனைத்துலகப் புகழ்பெற்ற நடனக்கலைஞர்கள் இங்குச் சிலகாலம் நடனப் பயிற்சி பெற்றனர். இங்குப் பயிற்சிப் பெற்ற சுதா சந்திரசேகர், கனடாவிலும், விசி பிரகாசு என்பவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இந்திய நடனக் கலைஞர்களாகத் திகழ்கின்றனர். சயம், வாணி, மீரா, அனிதா, இலதா நீலகண்டன், சுனிதா, விசயநகரச் சகோதரிகள் போன்ற புகழ்பெற்ற நடனக்கலைஞர்களை இப்பயிற்சி மன்றம் உருவாக்கியுள்ளது. இந்த ஆடலாசிரியர்கள் மரபு வழுவாமல் பரதக்கலையை வளர்த்து வருகின்றனர். கோவிந்தராசப்பிள்ளையின் மகன் வசந்தகுமாரும் மகாலிங்கம்பிள்ளையின் மகன் விசுவநாதனும் ஆடலாசிரியர்களாக விளங்குகின்றனர்.

திருவிடைமருதூர்க் குப்பையா பிள்ளை



அண்மைக் காலத்தில் தென்னிந்தியாவில் பரதக் கலை புத்துயிர் பெற்றுவந்த காலத்தில், முன்னர் நடனத்தில் வல்லுநர்களாக விளங்கித் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தினால் நலிவுற்ற ஆடற் கலைஞர் களைத் தேடி, மறைந்து கொண்டிருந்த கலையைக் கற்றுக்கொள்வதில் பலர் ஆர்வம் கொண்டனர். இத்தகைய கலைஞர்களுள் மயிலாப்பூர்க்கௌரியம்மா மிகச் சிறந்தவராக இருந்தார். இவர் இருபதாம் நூற்றாண்டில் கோவில் ஆடற் கலையின் மிகச்சிறந்த கலைஞராகக் கருதப்பட்டார். கௌரியம்மா சிறந்த நடன்பரம்பரையில் தோன்றியவர் இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இசையில் சிறந்து விளங்கிய மயிலாப்பூர் தனம் என்பவரின் வழிவந்தவரும் துரைக் கண்ணம்மா என்னும் ஆடல்கலைஞரின் மகளும் ஆவார். துரைக்கண்ணம்மா தஞ்சைக் கிருட்டிண நட்டுவனாரிடம் நட.னப்பயிற்சி பெற்றார். கௌரி யம்மா சிறுவயதிலேயே நல்லூர் முனுசாமி நட்டுவ னாரிடம் நடனப்பயிற்சி பெற்றார். பின்னர்த் தம் தாய் துரைக்கண்ணமாவிடம் சிறந்த அபிநயங்களை யும் நிருத்தங்களையும் கற்றுக்கொண்டார். இவர் தாமே பாடிக் கொண்டு நடனமாடுவார். காலஞ் சென்ற பாலசரசுவதிக்குப் பின் நடனக்கலைஞர் எவரும் நடனமாடும் பொழுது பாடுவதில்லை. கௌரியம்மாவின் மாணாக்கர்களாகப் பயிற்சிபெற்ற பலர் அனைத்துலகப் புகழ்பெற்றனர். இவர்களுள் பாலசரசுவதியையும் உருக்குமணி தேவியையும் குறிப்பிடலாம். கௌரியம்மா வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் மிகச் சிறந்த புலமை பெற்றிருந்தார். சின்னய்ய நாயுடு என்னும் ஆடலா சிரியரிடமும் இவர் அபிநய நுட்பங்களைக் கற்றார்; அரியக்குடி இராமானுச அய்யங்கார் என்னும் இசைப்பேரறிஞரிடம் இசைப்பயிற்சி பெற்றார். அக் காலத்தில் சிறந்த நடனக் கலைஞர்களாகத் திகழ்ந்த தஞ்சை வீணாபாசினியம்மா, காரைக்கால் சகோதரி கள், ஆண்டாள், சீவரத்தினம், மதுராந்தகம் சகதாம்பாள், கும்பகோணம் பட்டு, கும்பகோணம் சாரநாயகி, பெரியநாயகி போன்றவர்களுள் கௌரி யம்மா மிகச் சிறந்தவராகக் கருதப்பட்டார். கௌரி யம்மா அக்காலத்தில் பதங்களைப் பயிற்றுவிப்பதில் மிகச்சிறந்து விளங்கிய மதுரை பொன்னுசாமிப் பிள்ளையிடம் பதங்களைக் கற்றார். இவர் நட்டு வாங்கமும் பயின்றார். இவர் பிறவிக் கலைஞராகத் திகழ்ந்தார் என்று இவர் காலத்தவரால் கருதப் பட்டார். இறுதிக் காலத்தில் இவர் கண்பார்வை யிழந்து வறுமையில் வாடினார். அப்பொழுது உருக்கு மணிதேவி கலாச்சேத்திரத்தில் இவரை ஆசிரியராக அமர்த்தினார். இவருக்குத் தமிழக அரசின் சங்கீத நாடகமன்ற விருது வழங்கப்பட்டது. இவர் 1970-ஆம் ஆண்டு மறைந்தார்.

இராமையாப் பிளளை: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்டுவந்த இரண்டாம் சரபோசி மன்னன் காலத்திற்கு முன்பே, பரத நாட்டிய நட்டுவாங்கத்தில் புகழ்பெற்று விளங்கிய நாகப்ப நட்டுவனாரின் பரம்பரையில் தோன்றி யவர். இவர் மயிலாடுதுறையை அடுத்து வழுவூர் என்னும் இடத்தில் பிறந்தார். இராமையாப்பிள்ளை யின் முன்னோர்களுள் ஒருவரான வீரப்ப நட்டுவ னார், தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர் ஒரு வரின் அழைப்பை ஏற்க மறுத்துச் சுதந்திரமாக நட்டுவாங்கம் செய்து வந்தார். வீரப்ப நட்டுவனார் இசையிலும் நடனத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றி ருந்தார். இவருடைய வழிவந்த சாமு நட்டுவனார், பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் காலத் தில் வாழ்ந்தவர். சாமு நட்டுவனாரின் மாணவர் களுள் அலமேலு, நாகம்மா, உருக்குமணி, மதுராந்த கம் சகதாம்பாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். மதுராந்தகம் சகதாம்பாளிடம் நடனம் பயின் றவர்களுள் ஈ. கிருட்டிண அய்யர் என்னும் கலைஞ ரும் ஒருவராவர். இவர் பெண்வேடம் பூண்டு பல நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும் மாளவிகாக்கினி மித்திரம் என்னும் இயலிசை நாடகத்தில் மாளவிகா என்னும் பாட்டுடைத் தலைவியின் வேடம் ஏற்றுத் தம் ஆடலாசிரியருக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்தார். இராமையாப் பிள்ளையும் மதுராந்தகம் சகதாம்பாளிடம் நடனம் பயின்றார். சாமு நட்டுவ னாரின் மகன் மாணிக்க நட்டுவனாரும் மகள் பாக் கியம்மாளும் இராமய்யா பிள்ளைக்கு நடனம் பயிற்றுவித்தனர். இராமையாப் பிள்ளை பாக்கியம்மா ளின் குடும்பத்தில் அவர்களின் வளர்ப்புப் பிள்ளை போல் வளர்ந்து நடனப் பயிற்சி பெற்றார். இவர் நடனத்திற்கு அழகிய சொல்லுக்கட்டுகள் அமைத் தார். பரத நாட்டியத்தில் மென்மையையும் அழ கையும் ஒருங்கே இணைத்ததோடு நடனம் பயில்ப வர்களுக்கு ஏற்ற உடற்பயிற்சிகளையும் அமைத்தார். பல குறவஞ்சி நாட்டிய நாடகங்களுக்கு இவர் இசை யும் நடனமும் அமைத்திருக்கிறார். இவர் மாணவர் களாகப் பெரும்புகழ்பெற்ற பலருள் கமலா, இலலிதா, பத்மினி, இராகினி போன்றவர்கள் சிலராவர். இவ ருடைய நட்டுவாங்கமுறை வழுவூர்ப் பத்ததி என்று புகழ்பெற்று விளங்கிற்று. இவர் மகன் சாம ராசு தம் தந்தையின் நடனப் பயிற்சி முறையில் சிறந்த ஆடலாசிரியராகத் திகழ்கிறார்.

காஞ்சிபுரம் ஏலப்பப்பிள்ளை, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அசுவதாதி பச்சமுத்து முதலியார் என்னும் ஆடலாசிரியரின் வழிவந்தவர். ஏலப்பர் ஐந்து வயதானவுடன் தம் பாட்டனார் பரசுராம முதலி யாரிடம் இசை பயிலத் தொடங்கினார். ஒன்பது வயதில் நடனம் பயில்வதற்காகத் தம் தாய்மாமன்

திருவேங்கட முதலியாரிடம் சென்றார். திருவேங்கட முதலியார் நடனத்திலும் இசையிலும் தேர்ச்சி பெற்றவர். ஏலப்பர் நடனமும் நட்டுவாங்கமும் பயின்றார். தம்முடைய பதினேழாம் வயதிலேயே ஏலப்பர் நடனப்பயிற்சிகள் கற்றுக்கொடுக்கத் தொடங்கினார். தஞ்சையைச் சேர்ந்த கந்தப்பப் பிள்ளையின் நட்பு ஏலப்பருக்குக் கிடைத்தது. அக்காலத்தில் 'கந்தப்பர் பாலசரசுவதிக்கு நடனப்பயிற்சி கற்றுத் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏலப்பருக்கு இனிமையான குரல் இருந்தது. ஏலப்பரும் கந்தப்பரின் நட்டுவாங்கக் குழுவில் சேர்ந்து நடனத்தின் நுட்பங்களைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தார். ஏலப்பரின் மகன் கியான் பிரகாசு என்பவர், உதயசங்கர் கலைக் கூடத்தில் நடன ஆசிரியராக இருந்தார்.

தண்டாயுதபாணி பிள்ளை, பார்வதி குமார், அடையாறு இலக்குமணன், குபேர்நாத தஞ்சோர்கர் போன்றோர் பரத நாட்டியத்தை நாடெங்கிலும் உள்ள மாணாக்கர்களுக்குப் பயிற்றுவித்துக் கலைப் பணி செய்து வருகின்றனர். தஞ்சைப்பரத நாட்டிய முறை இந்தியா முழுவதும் பல்வேறு கலைமன்றங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது. சிறந்த நடனக் கலைஞர்களும் தனித்தனியே நடனப்பயிற்சிக் கூடங்களை அமைத்துக் கலைப் பணி செய்து வருகின்றனர். இத்தகையவர்களுள் பந்தநல்லூர் சுப்பராயன் பிள்ளை, வழுவூர்ச் சாமராசு, கமலா, பதுமா சுப்பிரமணியன், கலாநிதி நாராயணன், கும்பகோணம் சண்முக சுந்தரம்பிள்ளை, பந்தநல்லூர் கோபாலகிருட்டிணன், தஞ்சைக்கிட்டப்பா போன்றவர்களைக் குறிப்பிடலாம். பல்வேறு பல்கலைக்கழகங்களில் இந்திய நடனத்துறை ஏற்படுத்தப்பட்டு நடன ஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மைசூர், பரோடா, கல்கத்தா, ஐதராபாத்து, பம்பாய் போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் நடனத்துறையை வளர்த்து வருகின்றன. எஸ்.கோ.

துணை நூல்கள்:

**Kothari, Sunil**, Bharata Natyam–Indian Classical Dance Art, Marg Publications, Bombay, 1982.

**Valsyayan, Kapila**, Classical Indian Dance in Literature & Arts, Sangeetha Nataka Academy, New Delhi, 1968.

## இந்திய-இசுலாமியக் கட்டடக்கலை

இந்தியாவில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை நிலவிய கட்டடக் கலையாகும். இக்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் இசுலாமியர்கள் ஆட்சிபுரிந்துவந்தார்கள். இந்தியாவிற்கும் அரேபியாவிற்கும் பழங்காலத்திலேயே வாணிகத்தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் இருந்தனவெனினும், இந்தியாவில் இசுலாமியர்களின் ஆதிக்கம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில்தான் நிலைநாட்டப்பட்டது. அதற்கு முன்னரே இந்தியாவின் கலை, இலக்கியம், கட்டடக்கலை ஆகியவற்றின் கூறுபாடுகள் மேலை நாடுகளில், குறிப்பாக அரேபியாவில் பரவியிருந்தன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கசினி மாமூதுவின் தொடர்ச்சியான படையெடுப்புகள், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கோரி முகம்மதுவின் படையெடுப்பு ஆகியவற்றின் விளைவாகத் தில்லியில் நிலையான சுல்தானிய ஆட்சி அமைக்கப்பட்டது.

கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகள்: இசுலாமியர்களின் ஆட்சியின் விளைவாக இந்தியாவில் ஒரு புதிய பண்பாடும் கலையும் தோன்றின எனலாம். அரேபியாவில் இந்தியக் கட்டடங்களின் பாணியை வைத்துப் பழங்காலத்திலிருந்தே பல கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் சில மாறுதல்களைச் செய்து இந்தியக் கலையைத் தமது நாட்டில் புகுத்திய இசுலாமியர்கள், இந்தியக் கலைப்பாணி அழியாதபடியும் அதே காலத்தில் தங்களின் கலைப்பாணியைப் புகுத்தியும் இந்தியாவில் பல்வேறு இடங்களில் பள்ளி வாசல்களையும், மசூதிகளையும், கோட்டைகளையும், கல்லறைகளையும், வெற்றிக் கம்பங்களையும் அமைத்தனர். இக்காலக் கட்டடங்கள், பல அணிவகைகளையும் அலங்கார அமைப்புகளையும் இயற்கைக் காட்சிகளையும் பெற்றுத் திகழ்ந்தன. புத்தரின் பிறப்புக் கதைகள், இந்தியத் தத்துவங்கள், சமணத் தத்துவங்கள் ஆகிய யாவும் இக்காலக்கட்டடங்களில் கலைவடிவில் தோற்றமளித்தன. ஆனால், இக்கட்டடங்களில் நபிகள் நாயகத்தின் உருவமோ வாழ்க்கை வரலாறோ காணப்படவில்லை. இசுலாமியக் கட்டடங்களில் மேல் வளைவுகளும் (Arch), பட்டைக் கூம்பு வடிவுடைய கூரைகளும் (Pyramidal roof), கவிகைமாட (Dome) வடிவங்களும் காணப்படுகின்றன. சுவர்களில் மாடி முகப்புகள் சூரிய ஒளியைத் தடுக்கும்வண்ணம் அமைக்கப்பட்டன. எளிய கட்டமைப்புடைய திறந்த அரண்களும் (Kiosks), உயர்ந்த மினார்களும் (Minars) இக்காலத்தில் கட்டப்பட்டன. அணிவகைகள் சிறந்த முறையில் தரைகளிலும் சுவர்களிலும் செய்யப்பட்டன. பூவேலைப்பாடுகளும் வடிவியல் வளைகோடுகளும் (Geometrical Patterns) கட்டடங்களில் நிறைந்து காணப்பட்டன.

இசுலாமியர்களுக்கு முன்பே இந்தியாவில் கட்டடங்கள் கட்டச் சிறிதளவு சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டது. ஆனால், இக்காலத்தில் சுண்ணாம்பு

பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இது கற்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பயன்படுத்தப்பட்ட தோடு மேற்பூச்சுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

இந்திய-இசுலாமியக் கட்டடக்கலையை இடம், காலம், பாணி (Style) ஆகியவற்றைக் கொண்டு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை தில்லிச் சுல்தானியர் காலக் கட்டடங்கள், மண்டலப் பாணிக் கட்டடங்கள், மொகலாயர் காலக் கட்டடங் கள் என்பப்படும்.

தில்லிச் சுல்தானியர் நினைவுச் சின்னங்கள்: தில்லியை அடிமை வம்சத்தைச் சார்ந்த குத்புதீன் அய்பக்கு கி.பி. 1206 முதல், ஐந்து மரபினர் தொடர்ச்சியாகக் கி.பி. 1526 வரை ஆட்சி செய்தனர். இவர்கள் பல கட்டடங்கள் கட்டி, இசுலாமியக் கட்டடக் கலைக்கு மெருகூட்டினர்.

அடிமை மரபு (கி.பி. 1206-1290): குத்புதீன் அய்பக்குதில்லியிலும், ஆசுமீரிலும் (Ajmer) கட்டிய பள்ளிவாயில்களே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் பள்ளி வாயில்களாகும். தில்லியில் இராசபுத்திரர் களின் இலால்கோட்டுக் (Lalkot) கோட்டை அரணை இடித்து, அதனை விரிவுபடுத்தித் தமது இருப்பிட மாக்கிக் கொண்ட குத்புதீன், அங்கிருந்த இந்துக் கோயிலையும் இடித்துப் பள்ளிவாசலைக் கட்டினார். இப்பள்ளிவாசல் 71 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் கொண்ட நீண்டசதுர வடிவமுள்ளது. பள்ளிவாயிலின் எதிரிலுள்ள முற்றம் 37 மீட்டர் நீளமும் 35 மீட்டர் அகலமும் உடையது. இதன் மூன்று பக்கங்களிலும் தூண்களுடைய பக்கச் சிறை கள் உள்ளன. இப்பள்ளிவாசலின் எதிரில் புகழ்பெற்ற தில்லி இரும்புத்தூண் உள்ளது. இப்பள்ளிவாசலின் வாயில் மேற்கு நோக்கி உள்ளது. இந்நுழைவாயிலின் மேலே ஐந்து வளைமுகப்புகள் உள்ளன. நடுவளை முகப்பு 7 மீட்டர் குறுக்களவும் 15 மீட்டர் உயரமும் உடையது. இரு பக்கத்திலும் உள்ள வளைவுகள் ஏறத்தாழ 8 மீட்டர் உயரமுள்ளவை. வளைவுகளின் சுவர்களில் திரைச் சீலைகள் உள்ளதுபோல் செதுக்கு வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இதன்மேல் அழகிய பளிங்குக் கற்கள் புதைக்கப்பட்டுள்ளன. திருக்குரானின் வாசகங்களும் காணப்படுகின்றன. இப்பள்ளிவாயில் இன்று இடிந்த நிலையிலுள்ளது.

பள்ளிவாசலின் எதிரிலுள்ள இரும்புத்தூண் இன்றும் துருப்பிடிக்காத நிலையில் உள்ளது. இதன் மேலுள்ள எழுத்துகளின் காலம், கி.பி.4-ஆம் நூற் றாண்டு என்று கருதுகின்றனர். இவ்விரும்புத் தூண்



ஆர்காய்-தின்-கா-சோன்பரா-ஆசுமீர்

இரண்டாம் சந்திரகுப்தருடையது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.

குத்புதீன் அய்பக்கு கி.பி. 1206-இல் இராசுத்தானிலுள்ள ஆசுமீரில் அழகுமிக்கதொரு பள்ளிவாசலைக் கட்டத் தொடங்கினார். இப்பள்ளிவாசல் அய்பக்கிற்குப் பின்வந்த இல்துத்மிசு (Iltutmish) என்பவரால் கட்டி முடிக்கப் பெற்றது. இப்பள்ளிவாசல் ஆர்காய்-தின்-கா-சோன்பரா (Arahi-Din-ka-Jhon-para) என்று கூறப்படுகிறது. இதன் பொருள் இரண்டரை நாட்களுக்குள் கட்டப்பட்ட குடில் என்பது. இப்பள்ளி வாசல் தனித்தனியான கல்தூண்களை நன்கு இழைத்துக் கட்டப்பட்டுள்ளது. முற்றமும் அதன் எதிரிலுள்ள பகுதியும் தொழுகை நடத்தும் இடங்களாகும்; முற்றத்தின் எதிரே நுழைவாயிலும் பக்கவாயில்களும் உள்ளன. நுழைவாயிலின் பக்கச் சுவர்களில் கொடி, இலை, வளைகோடுகள் போன்ற அணிவகைகள் அழகுற அமைந்துள்ளன. இப்பள்ளி வாயிலில் உள்ள தூண்கள் மிக்க உயரமுடையவை.

தில்லியிலுள்ள குதுப்மினாரைக் குத்புதீன் தமது இறுதிக்காலத்தில் கட்டத் தொடங்கினார். இதனையும் இல்துத்மிசுவே கட்டிமுடித்தார். குதுப்மினார் வெற்றிச் சின்னம் போன்றும் மினார் போன்றும் கட்டப்பட்டது. இது 4 தளங்களையுடையது. முதலில் 83 மீட்டர் இருந்த குதுப்மினார் இன்று 81 மீட்டர் உயரமே உள்ளது. இக்கட்டடம் கி.பி. 1326-இலும் கி.பி. 1368-இலும் இருமுறை இடியினால் தாக்கப்பட்டு மேற்பகுதி இடிந்தது. குதுப்மினாரைக் கி.பி.1230-31-ஆம் ஆண்டளவில் இல்துத்மிசு கட்டிமுடித்தார். குத்புதீன் என்னும் துறவியின் நினைவாக இது கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் அடித்தளம் தொழுகை நடத்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டுப் பள்ளிவாசலாகவும் செயற்பட்டது என்று கருதுகின்றனர். இதன் முதல் தளத்தின் உயரம் ஏறத்தாழ 32 மீட்டர்; இரண்டாம் தளம் 39 மீட்டர்; மூன்றாம் தளம் 63 மீட்டர்; நான்காம் தளம் ஏறத்தாழ 71 மீட்டர். குதுப்மினாரின் கோபுரம் அடியிலிருந்து நான்காம் தளம் வரை வெண்சலவைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. குதுப்மினாரின் அடிச் சுற்றளவு பெருத்து, மேலே செல்லச் செல்லக் குறைந்து கொண்டே செல்கிறது. ஒவ்வொரு தளத்தின் வெளிப்புறத்திலும் சாளரங்கள் உள்ளன. குதுப்மினாரின் வெளித் தோற்றம் மிக்க வனப்புடையது. நீண்ட மூங்கிற் கழிகளை ஒருங்கிணைத்து நிற்க வைத்தது போன்ற அமைப்பை இக்கட்டடம் கொண்டுள்ளது. இடைவெளிகள் விட்டுச் சுற்றிலும் பட்டைகள் தீட்டியது போன்ற அழகிய வேலைப்பாடுகள் வெளிப்பக்கம் செய்யப்பட்டுள்ளன. குதுப்மினாரின் கீழ்ப்பகுதி ஏறத்தாழ $14\frac{1}{2}$ மீட்டர் விட்டமும் மேற்பகுதி $2\frac{3}{4}$ மீட்டர் விட்டமும் உடையது. இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த கட்டடங்களில் குதுப்மினாரே முதன்மையானதாகத் திகழ்கின்றது. இதன் உட்பகுதியில் உள்ள படிக்கட்டுகளின் எண்ணிக்கை 379 ஆகும். உட்புற ஏணிகளும் உள்ளன. குதுப்மினாரின் அருகில் முழுவதும் கட்டப்படாத பள்ளிவாசலொன்றும் கல்லறையும் உள்ளன.

குத்புதீனுக்கு அடுத்துப் பட்டமேற்ற இல்துத்மிசுவாலும் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. குதுப்மினாரை முழுமை பெறச் செய்தவர் இவரே. குவாவதுல் இசுலாம் மசூதியை இவர் விரிவுபடுத்தினார். இந்துக் கோயில்கள் பலவற்றை இடித்துக் கட்டப்பட்ட இம்மசூதி சாரசானியக் கலைப்பாணியை உடையது. இந்தியாவின் பழமையான மசூதி இதுவேயாகும். ஆர்காய்-தின்-கா-சோன்பரா மசூதியும் இல்துத்மிசுவால் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இந்தியாவிலுள்ள இசுலாமியக் கல்லறைக் கட்டடங்களுள் மிகப் பழமையான கல்லறை சுல்தான் காரிக் கல்லறை (Sultan Ghari's Tomb). இது தில்லியில் குதுப் பகுதியிலிருந்து 6 கி.மீ. தொலைவிலமைந்துள்ளது. இதனை இல்துத்மிசு கி.பி. 1231-ஆம் ஆண்டு தம் மூத்த மகன் நாசுருதின் முகமதுவின் (Nasuruddin Muhammad) நினைவாக அவரைப் புதைத்த இடத்திற்கு மேல் கட்டினார். எண்கோண வடிவுடைய இக்கல்லறையின் அடியில் நிலவறை ஒன்றும் உள்ளது. எனவே இதனை மக்கள் சுல்தான் குகை (Sultan Ghari) எனக் கூறுகின்றனர். இது கோட்டைபோன்று கட்டப்பட்டுள்ளது. உட்கூரைகளைத் தூண்கள் தாங்கியுள்ளன. இத்தூண்கள் இந்துக் கோயிலிலிருந்து எடுக்கப்பட்டவை. சுவரின்



சுல்தான் காரிக்குக் கல்லறை - தில்லி

மேற்பகுதியில் காவலரண் போன்று கட்டப்பட்ட பகுதி உள்ளது. பெரோசா துக்ளக்கால் பிற்காலத்தில் இக்கல்லறை பழுதுபார்க்கப்பட்டது. இல்துத்மிசு மேலும் பதுவன் (Baduan) என்னுமிடத்தில் அவுசி சாம்சி (Hauzi-Shamsi), சாம்சி இத்கா (Shamsi Idgah), சும்மா மசூதி (Jami-Mosjid) போன்ற கட்டடங்களையும் கட்டினார்.

குதுப் பகுதிக்கு அருகில் மெகருலி சாலையில் இந்திய இசுலாமியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் கட்டடமாக விளங்குவது கியாசுதின் பால்பனின் கல்லறையாகும். இக்கல்லறையின் வளைவுகள் ஒன்றின்மேல் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. சதுர வடிவமான இக்கல்லறையின் அறையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் திறந்த வளைவுகள் உள்ளன. இந்தியாவில் இத்தகைய வளைவுகள் இடம்பெற்ற முதல் கட்டடம் இதுவேயாகும்.

கில்சியின் அவையிலும் இடம் பெற்றனர். இக்கலைஞர்கள் இந்தியாவில் இக்காலத்தில்புகுத்திய கட்டடக் கலை, செல்சுக்குக் கட்டடக்கலை(Saljuqian Architecture) எனப்படுகிறது. கில்சி காலக் கட்டடங்கள், வளைவுகளின் அடிப்பரப்பில் அம்புமுனை நுட்பங்களைக் கொண்ட விளிம்புகளையும் கவான் முக்குகளில் (Spandrels) அழகாக அமைக்கப்பட்ட குமிழ்போன்ற அணிகலன்களையும் பெற்றுத் திகழ்கின்றன. வளைவுகள் கூர்முனைகளுடைய இலாட வடிவ அமைப்பைப் பெற்ற வளைவுகளாக மாறின. இக்காலக் கட்டடங்கள் பரந்த கவிகை மாடங்களையும் உள் வளைவு (Squinew) பகுதிகளினுள் மாடக்குழி வளைவுகளையும் (Recessed Arches) துளைச் சாளரங்களையும் கொண்டு விளங்கின. சிவப்புக் கற்களுக்குப் பதில் சலவைக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. இவை கில்சி கட்டடக் கலைப்பாணியின் சிறந்த கூறுகளாம். இக்காலத்தில் இந்திய-இசுலாமியக் கலை பெரிதும் வளர்ச்சி அடைந்தது எனலாம். அலாவுதீன் கில்சி



பால்பன் கல்லறை – தில்லி

**கில்சி மரபு (கி.பி. 1290–1321):** அடிமை மரபிற்குப் பின் தில்லியை ஆட்சி புரிந்தவர்கள் கில்சி மரபினர். இம்மரபின் மூன்றாம் அரசரான அலாவுதீன் கில்சியின் காலத்தில், பேரரசு விரிவடைந்ததுடன் கலைகளும் வளர்ந்தன. கலைஞர்கள் பேராதரவு பெற்றனர். மங்கோலியர் மேற்கு ஆசியாவிலிருந்த செல்சுக்கு மரபினரை (Saljuqs) வென்றதால், அங்கிருந்த பல்துறைக் கலைஞர்களும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றனர்; அவர்களுள் பலர் அலாவுதீன்

தில்லியிலுள்ள குவாவதுல் இசுலாம் (Quwawutul Islam) பள்ளிவாசலை விரிவுபடுத்தினார். இப்பள்ளிவாசலின் கிழக்கே இரண்டு நுழைவாயில்களையும் வடக்கே ஒரு நுழைவாயிலையும் தெற்கே பிறிதொன்றையும் கட்டினார். அவற்றுள் வடக்கே யுள்ள அலாவுதின் நுழைவாயில் சிவப்பு மணற் கல்லால் கட்டப்பட்டது. இந்நுழைவாயிலின் நான்கு பக்கமும் வளைவுகள் உள்ளன. இது கி.பி. 1310-1311-இல் கட்டப்பட்டது. இந்நுழைவாயிலின்

மூன்று வளைவுகள் கூர்முனை இலாட வடிவ அமைப்புகளை உடையவை. வடக்கே உள்ள வளைவு வேறுபாடானது. நுழைவாயிலின் உள்ளே சதுரக் கூடம் ஒன்று உள்ளது. இதன் கூரை வளைகூண்டு வடிவுடையது. இந்நுழைவாயில் அணிசெய்யப்பட்ட அமைப்புகளை உடையது. வெண்சலவைக் கற்களினால் இந்நுழைவாயிலின் தலை அழகு செய்யப்பட்டுள்ளது. சலவைக் கற்களில் சித்திர எழுத்துகளும் பல்வகை அணிகளும் உள்ளன. வளைவுகளின் விளிம்புகளில் தாமரை மொட்டுகள் போன்ற அமைப்பு உள்ளது. கில்சியின் காலக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இந்நுழைவாயில் விளங்குகிறது.

அலாவுதீன் கில்சி குதுப்மினாருக்கு வடக்கே தில்லியில் இரண்டாம் பெருநகரமான சிரீநகரத்தைக் (Siri) கி.பி. 1303–இல் கட்டினார். இன்று இது அழிந்த நிலையில் உள்ளது. அலாவுதினின் மகன் கிசர்கான் (Khizrkhan) சமாத்கான் பள்ளிவாசலைக் கட்டினார். அசரத் நிசாமுதின் அவுலியா (Hazrat Nizamud-din-Auliya) என்னும் ஞானியின் கல்லறைக்கு அருகில் இது உள்ளது. மாடக்குழி வளைவுகளையும் அம்புத்தலை விளிம்புகளுடைய வளைவுகளையும் கொண்டு இக்கட்டடம் திகழ்கிறது. செஞ்சந்தனக் கற்களால் கட்டப்பட்ட இப்பள்ளிவாயில் ஒன்றுக்குள் ஒன்றான மூன்று அறைகளை உடையது. நடுவிலுள்ள அறை சதுர வடிவமும் மற்றவை நீள் சதுர வடிவமும் கொண்டவை.

**துக்ளக்கு மரபு (கி.பி. 1321–1414):** கில்சி மரபிற்குப் பின் ஆட்சிக்கு வந்த துக்ளக்கு மரபில் 11 அரசர்கள் தொடர்ந்து ஆட்சி செய்தார்கள். அவர்களுள் முதல் மூன்று அரசர்களே கட்டடக் கலைக்குச் சிறப்பிடமளித்தார்கள். இவர்கள் தில்லியை ஒரு சிறந்த தலைநகரமாக அமைத்தார்கள். இவர்கள் காலத்திய கட்டடங்கள் எளிமையும் வனப்பும் மிக்கவை. சாம்பல் நிறக் கற்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டன. பெரிய கட்டடங்களின் மேல் ஒன்றுக்கொன்று குறுக்காக உள்ள கவிகைகளினால் (Dome) அமைந்த இணைக் கவிகைகள் இக்காலத்தில் கட்டப்பட்டன. கோட்டைகள் முகப்புகளைக் கொண்டு விளங்கின. கற்களுக்குப் பதில் களிமண்ணோ செங்கல்லோ கொண்டு தடித்த சுவர்கள் எழுப்பப்பட்டன. இக்காலத்தில் நீர்ப்பாசனக் குளங்களும் கரைகளும் கட்டப்பட்டன. இவை இன்றளவும் பயன்படுகின்றன.

கியாசுதீன் துக்ளக்கு, துக்ளகாபாத்து (Tughlug-abad) என்னும் அரண்கொண்டநகரை அமைத்தார். இது தில்லியைச் சார்ந்த ஏழு நகரங்களுள் மூன்றாவதாகும். இந்நகரம் குதுப்மினாருக்குக் கிழக்கே



துக்ளகாபாத்து – தில்லி

8 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்டது. இந்நகரைச் சுற்றிலும் 6½ கி.மீ. நீளமுள்ள பெருஞ் சுவர் அமைக்கப்பட்டது. இந்நகருக்கு இயற்கை அரண்களாக இங்குள்ள குன்றுகள் அமைந்தன. நாற்கர வடிவிலமைக்கப்பட்ட பெருஞ்சுவரின் உயரம் 10 மீட்டரிலிருந்து 15 மீட்டர் வரை உள்ளது. இவ்வரணுக்கு நடுவில் காவற் கோட்டை, அரண்மனை, பாதுகாப்பு அரண் போன்றவை உள்ளன. இந்நகரத்தின் உள்ளே செல்ல 52 நுழைவாயில்கள் இருந்திருக்கலாமென்று பெர்சி பிரவுன் (Percy Brown) கருதுகிறார். இந்நகரம் பாறைகளின் மேல் கட்டப்பட்டதால் விரைவில் அழியக் காரணமாக அமைந்தது.

கள் உள்ளன. இக்கட்டடத்தின் மேற்பக்கம் வெற்றிடமே இல்லாத வளைகூண்டு ஒன்று வெண்சலவைக் கற்கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற வளைகூண்டு அமைப்பு இங்குத்தான் முதன் முதலில் அமைக்கப்பட்டது. இத்தகைய வளைகூண்டைத் தார்த்தாரிய வடிவு (Tartar Shape) என்கின்றனர். இவ்வளைகூண்டு 18 மீட்டர் உயரமுள்ளது. இதன் உச்சியில் அமலகம் (Amalaka) என்ற அமைப்புள்ளது.

கியாசுதீன் துக்ளக்கிற்கு அடுத்து வந்த முகம்மது பின் துக்ளக்கு (கி.பி. 1325-51) துக்ளகாபாத்திற்குத் தெற்கே உள்ள குன்றில் அமைந்துள்ள அதிலாபாத்



கியாசுதின் துக்ளக்குக் கல்லறை – தில்லி

துக்ளகாபாத்தையடுத்துச் சிறிது தொலைவில் கியாசுதின் துக்ளக்குக் கல்லறை, ஓர் ஏரியின் நடுவில் உள்ளது. இது இன்றளவும் பழுதடையாமல் உள்ளது. இக்கல்லறைக்கும் துக்ளகாபாத்திலுள்ள காவற் கோட்டைக்கும் இடையில் 250 மீட்டர் நீளமுள்ள சுரங்கப்பாதை உள்ளது. கோட்டையைப் போன்று காட்சி தரும் இக்கல்லறை, செஞ்சந்தனக் கற்களாலும் வெண்சலவைக் கற்களாலும் கட்டப்பட்டது. இதன் மேற்பகுதியில் கூம்பு வடிவ அமைப்புகள் பல அமைந்துள்ளன. 10மீட்டர் பக்கமுள்ள சதுரக்கூடம் ஒன்று கல்லறையின் உட்புறம் உள்ளது. இக்கூடத்திற்கு வெளிச்சம் வர மூன்று வளைவுச் சாளரங்

துக் கோட்டையின் ஒரு பகுதியைக் கட்டினார். முகம்மது பின் துக்ளக்கு தில்லியின் நான்காம் நகரை அமைத்தார். முதலிரண்டு நகரங்களை இணைத்து ஒரு பெருஞ்சுவரைக் கட்டினார். இது சகான் பன்னா (Jahan Pannah) எனக் கூறப்படுகிறது. இச்சுவர் 10 மீட்டர் அகலமுள்ளது. இன்று இச்சுவரின் சில பகுதிகளே எஞ்சியுள்ளன. இப்பெருஞ்சுவரின் ஒரு பகுதியாக உள்ள சாத்புலா (Satpula) என்னும் ஏழு கண் பாலம், ஏழு மதகுகளைக் கொண்டும் இரு முனைகளிலும் கோபுரங்களைக் கொண்டும் இன்றளவும் நிலைத்துள்ளது. முகம்மது பின் துக்ளக்கு, தாம் அமைத்த நான்காம் நகரில் பாராகும்பா(BaraKumba)

என்ற அரணையும், பிசாய் மண்டல் (Bijai Mandal) என்ற கட்டடத்தையும் கட்டினார். இவை இன்றும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர் தில்லியிலிருந்து தம் தலைநகரைத் தௌலதாபாத் திற்கு (தேவகிரி) மாற்றியதால் தில்லியின் கட்டடங்கள் கவனிப்பாரற்றுப்போயின. இவரது காலத்தில் குதுப்மினாரின் மீது இடி விழுந்ததால் பழுதடைந்த குதுப்மினாரை முகம்மது பின் துக்ளக்கு சீர் செய்தார்.

பிரோசா துக்ளக்கின் காலத்திலும் இரண்டாம் முறையாகக் குதுப்மினார் இடியால் தாக்கப்பட்டது, அதனை அவர் பழுதுபார்த்தார். அவர் தில்லியைச் சுற்றிப் பல நகரங்களை அமைத்தார். பிரோசாபாது (Firuzabad) தில்லியில் இவரால் அமைக்கப்பட்ட ஐந்தாம் நகரமாகும். இவர் உருவாக்கிய பிற நகரங்கள் இசார் (Hissar), பத்தாபாது (Fatehabad), சான்பூர் (Jaunpur), பிரோசுப்பூர் (Firuzpur) ஆகியவையாகும். பல பழைய கட்டடங்களை உருவாக்கியதுடன் அசோகரின் கற்றூண்களைத் தில்லிக்குக் கொண்டுவந்து தாம் அமைத்த நகரில் நிலைநாட்டினார். இக்கற்றூண்கள் தோப்ரா (Topra) விலிருந்தும் மீரட்டிலிருந்தும் கொண்டுவரப்பட்டன.

இவர் அமைத்த பிரோசாபாது நகரம் இன்று பிரோசாகோட்லா (Fizushah Kotla) என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள அரண்மனை சிறந்த அரணாகவும் விளங்குகிறது. இயமுனை ஆற்றங்கரையில் கட்டப்பட்டுள்ள இக்கோட்டையின் மதில் மேல் ஆங்காங்கே முகடுகள் காணப்படுகின்றன இக்கோட்டையின் நுழைவாயிலை அடுத்து ஒரு காவலறை உள்ளது. அதனை அடுத்துப் பல பாதுகாப்பு அறைகள் உள்ளன. இக்கோட்டையினுள் மக்கள் வழிபாட்டிற்கான சும்மா மசூதி (Jammi Masjid) உள்ளது. இதனை அடுத்துப் பிரமிடு வடிவில் ஒரு கட்டடமும் அதனைச் சுற்றி அசோகரின் கற்றூண்கள் இரண்டும் உள்ளன. சும்மா மசூதி இரண்டு அடுக்குகளைக் கொண்டுள்ளது. கீழ் அடுக்கில் பல அறைகளும் பக்கச் சிறைகளும், மூன்று சுற்று மதில்களும் உள்ளன. வேட்டையில் நாட்டமுள்ள பிரோசா துக்ளக்கு தில்லியைச் சுற்றிப் பல இடங்களில் தங்கும் விடுதிகளைக் கட்டினார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை மால்சா மகால் (Malcha Mahal), பூலி-பாட்டியாரி-கா-மகால் (Bhuli-Bhatiyari-Ka-Mahal), பீர் கைபு (Pir-Ghaib) போன்றவையாகும். பிரோசா துக்ளக்கு, அலாவுதின் கில்சி கட்டிய அவுசி அலாய் என்னும் (Hauz-I-Alai) நீர்த்தேக்கத்தைப் புதுப்பித்தார். இதனருகிலுள்ள ஒரு கல்லூரியையும் இவர் புதுப்பித்தார். இக்கல்லூரி இரண்டு அடுக்குகளையுடையது. இப்பகுதியிலேயே பிரோசாவின் கல்லறையும் உள்ளது, இது சமசதுர வடிவமானது. பிரோசாவின் தலைமை அமைச்சர் தில்லியில் ஏழு பள்ளி வாசல்களைக் கட்டினார். இவையனைத்தும் இறவாணங்கள் (Fqves), மினார், சிறிய கவிகை மாடங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளன.

பிரோசாவின் அரசவையிலிருந்த கானி சகான் திலங்கானி (Khan-i-Jahan Tilangani) என்பவரின் கல்லறை நிசாமுதினில் (Nizamuddin) உள்ளது. இக்கல்லறை எட்டுப்பக்கங்களை உடையது. கோட்டைச்சுவர் போன்று தடிப்பாக இச்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே இதனைக் கோட்டைக் கல்லறை என மக்கள் கூறுகின்றனர். இதன் கூரை வளைகூண்டு வடிவுடையது. இக்கல்லறையில் 24 வளைவுகள் உள்ளன. ஒவ்வொரு வளைவின் மேல் பக்கத்திலும் வளைகூண்டு முகடுகள் உள்ளன. இந்த முகடுகளின் நடுவிலுள்ள வளைகூண்டுக் கூரை முகடுகளைவிடப் பெரியதாக உள்ளது. இக்கல்லறைக் கட்டடப் பாணியைப் பின்பற்றிப் பின்னர் வந்த சையது, உலோடி மரபினர், (Sayyid and Lodi)தங்கள் கட்டடங்களை அமைத்தனர்.

சையது மரபினர் (கி.பி. 1414-44): சையது மரபினர் காலத்தில் புதிய கட்டடங்கள் மிகுதியாகக் கட்டப்பெறவில்லை. சில கல்லறைகள் மட்டிலுமே கட்டப்பட்டன. கல்லறைகள் எண்கோண வடிவமும் சதுர வடிவமும் கொண்டிருந்தன. இவை யாருடையவை என்று அறிய முடியாத நிலை இன்றும் நீடிக்கிறது. இக்கல்லறைகளில் பெரும்பாலானவற்றுள் ஒருவருடைய பெயரும் குறித்து வைக்கப்படவில்லை. மூபாரக் கான் கல்லறை ஒன்றில் மட்டும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது காலே-கான்-காகும்பாது (Kale Khan-Ka Gumbad) என்று சொல்லப்படுகிறது. சையது மரபு சுல்தானான முபாரக் சா (Mubarak Shah) இயமுனை ஆற்றங்கரையில் முபாரகாபாது (Mubarakabad) என்னும். நகரை அமைத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இவற்றின் சின்னங்கள் காணப்படவில்லை. இவரது கல்லறை கோட்லா முபாரக்பூரில் (Kotla-Mubarakpur) உள்ளது. இக்கல்லறை எண்கோண வடிவமுடையது. அடுத்து வந்த சுல்தான் முகம்மது சா (Muhammad Shah) என்பவரின் கல்லறை உலோடி பூந்தோட்டத்தில் உள்ளது. இக்கல்லறையும் எண்கோண அமைப்புடையது. முபாரக் சா கல்லறையை விட இது அழகு மிக்கதாக உள்ளது.

உலோடி மரபு (கி.பி. 1451-1526): உலோடி மரபினரின் காலத்திலும் கல்லறைகளே மிகுதியாகக் கட்டப்பட்டன. கல்லறைகள், சையது மரபினர் கட்டிய கல்லறைகள் போன்றே என்கோண வடிவமும்

சதுர வடிவமும் உடையனவாகத் திகழ்ந்தன. எண் கோண வடிவக் கல்லறைகள் ஒற்றைத் தளங்களைக் கொண்டும் சுற்றிலும் நடைபாதை போன்ற இறவாணங்கள் உள்ள முற்றங்களைக் கொண்டும் விளங்கின. கல்லறைகளுள் முபாரக் சையது கல்லறை, முகமது சையது கல்லறை, சிகந்தர் உலோடி கல்லறை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றைத் தவிரப் பிரபுக்கள் கல்லறைகள் யாவும் இக்காலத்தைச் சார்ந்தவை. உலோடி மரபினர் காலத்தில் பாரா கும்பாது மசூதியும் (Bara Gumbad) மோத்தி கி-மசூதியும் (Moti-ki-masjid) கட்டப்பட்டன.



சா ரூக்னி-ஆலம் கல்லறை – மூல்தான்

மண்டலப் பாணிக் கட்டடங்கள்: தில்லிச் சுல்தானியர்களின் கீழிருந்த மாநிலங்களை ஆளுநர்கள் ஆண்டுவந்தனர். இவர்கள் தங்களுக்குட்பட்ட பகுதிகளில் பல இந்திய இசுலாமியப் பாணிக் கட்டடங்களைக் கட்டினர். இவற்றுள் எட்டு மண்டலங்களில் காணப்படும் கட்டடக் கலைப்பாணிகள் குறிப்பிடத்தக்கவை.

பஞ்சாபு: இந்தியாவிற்கு வந்த அயலார்களுள் பெரும்பாலோர் பஞ்சாபின் வழியாகத்தான் இந்தியாவிற்குள் நுழைந்தனர். எனவே, பஞ்சாபு அயலார் பண்பாட்டின் தாக்கத்திற்கு ஆளானது. பஞ்சாபில் குறிப்பாக மூல்தான், இலாகூர் ஆகிய இரு நகரங்கள் இசுலாமியரின் கட்டடக் கலையில் சிறந்துவிளங்கின. பஞ்சாபில் உள்ள இவ்விரு நகரங்களிலும் பிற நகரங்களிலும் காணப்பெறும் கட்டடங்கள், செங்கற்கள், வண்ண ஓடுகள், மரங்கள் ஆகியவை கொண்டே கட்டப்பட்டன. செல்சுக்கியர்களின் கலைப்பாணி கொண்டும் கட்டடங்கள் கட்டப்பட்டன. மூல்தானில் ஐந்து கல்லறைகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்கும் 14-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டன. இவை பெரும்பாலும் இசுலாமியப் பெரியார்களுடையவை. இவற்றுள் குறிப்பிடத்தக்கது சா ரூக்னி-ஆலம் (Shah Rukn i-Alam) கல்லறை ஆகும். எண்கோண அமைப்புடைய இது கியாசுதீன் துக்ளக்கு ஆணையின் பேரில் கட்டப்பட்டது. செதுக்கு வேலைப்பாடுகள் கொண்ட செங்கற்களும் வண்ண ஓடுகளும் கொண்டு இக்கல்லறை கட்டப்பட்டது. சிறுத்த தூபிகளையும் மூலைகளில் அதை விடச் சிறிய தூபிகளையும் கொண்டு இக்கல்லறை விளங்குகிறது.

வங்காளம்: முகமது பின் பக்தியார் என்னும் இசுலாமியப் படைவீரரால் முதன் முதல் வங்காளத்தில் இசுலாமியர் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. இங்கு இக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் பெரும்பாலும் செங்கற்களைக் கொண்டே கட்டப்பட்டன. குட்டையான தூண்களின்மீது அமைக்கப்பட்ட கூர்மையான வளைவுகளும், இந்தியக் கலைப்பாணியில் அமைக்கப்பட்ட பலகைகளும் தாமரை மலர்ப் போதிகைகளும் கட்டடங்களில் காணப்படுகின்றன. பெரும்பாலான கட்டடங்கள் இந்துக் கோயில்களை இடித்தே கட்டப்பட்டன. வங்காளத்தின் இந்திய-இசுலாமியக் கட்டடக்கலையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு கி.பி.1200க்கும் கி.பி. 1340க்கும் இடைப்பட்ட காலத்திலும் இரண்டாம் பிரிவு கி.பி. 1340க்கும் 1430க்கும் இடைப்பட்ட காலத்திலும் மூன்றாம் பிரிவு கி.பி. 1442–1576க்கும் இடைப்பட்ட காலத்திலும் உருவாக்கப்பட்டன.

முதல் கட்டத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுள் சிறப்பு வாய்ந்தது பாண்டுவாவில் (Pandua) உள்ள பள்ளி வாசலாகும். இது இந்துக்கோயிலை இடித்துக் கட்டப்பட்டது. செவ்வக வடிவுடைய இப்பள்ளி வாசல், செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. தூண்கள் கருங்கல்லினாலானவை. இப்பள்ளி வாசலுக்கு அருகில் செங்கற்களால் கட்டப்பட்ட வெற்றிக் கம்பம் ஒன்று உள்ளது. இதன் உயரம் 36½ மீ. இது கி.பி. 1340-இல் கட்டப்பட்டது. பல அடுக்குகளை உடைய இது, தில்லி குதுப்மினாரின் தோற்றப் பொலிவை விடச் சிறந்த அழகைப் பெற்று விளங்குகிறது.



அதனா மசூதி – பாண்டுவா

இரண்டாம் கட்டத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுள் சிறப்பு வாய்ந்தது அதினா (Athina) மசூதியாகும். இது இந்தியாவிலுள்ள பெரிய மசூதிகளுள் ஒன்றாகும். இதனைச் சிக்கந்தர் சா (Sikandar Shah) என்பவர் கி.பி. 1364-இல் கட்டினார். இதன் நீளம் 154½ மீ; அகலம் 87 மீ. நீள்சதுர வடிவுடைய இம்மசூதியில் 88 வளைவு முகப்புகள் உள்ளன. இவற்றையொட்டி 7 மீ. உயரமுள்ள கைப்பிடிச் சுவர் உள்ளது. இதற்கு மேலே ஒன்றன்பின் ஒன்றாக 306 வளை கூண்டுகள் உள்ளன. இம்மசூதியில், மேற்கில் மூன்று நுழைவாயில்களும் தென்கிழக்கு மூலையில் மூன்று நுழைவாயில்களும் உள்ளன. இம்மசூதியில் உள்ள தூண்கள், தாமரை மலர்த் தலைப்புகள் கொண்டு விளங்குகின்றன; தாமரை இதழ்கள் கீழ் விரிந்தும் மேல் நோக்கியும் செல்கின்றன. இந்துக் கோயிலிலிருந்து எடுத்துவரப்பட்ட தூண்களே இம் மசூதியில் உள்ளவை. குடம்-வுல்-ரவுசல் (Qadam-ul -Rasul) என்ற பள்ளிவாசல் கார் (Gaur) என்னுமிடத்தில் இக்காலத்தில் கட்டப்பட்டது. இப்பள்ளி வாசல் மிகப் பெரியதாகவும் கலை அழகு மிக்கதாகவும் காணப்படுகிறது. இரு தளங்களுள்ள இப்பள்ளி வாசலில் 386 வளைகூண்டுகள் உள்ளன. அரசர் அமரும் அரியணை (King's Throne) ஒன்று ஒரு தளத்தில் உள்ளது. தென்னகக் கோயில்களில் காணப்படும் ஆயிரக்கால் மண்டபங்களைப் போன்று இரண்டாம் கட்டத்தில், வங்காளத்தின் கட்டடங்கள் மிகுதியான தூண்களைப் பெற்று விளங்கின. சேம்சு பர்கூசன் (James Fergusson) என்ற அறிஞர், இக்காலத்தைச் சார்ந்த கட்டடங்கள் வங்காளத்தில் வாழ்ந்த தமிழர்களைக் கொண்டு கட்டப்பட்டன என்று கூறுகிறார்.

மூன்றாம் கட்டம்: இக்காலத்தில் (கி.பி. 1442 முதல் 1576 வரை) கட்டப்பட்ட கட்டடங்கள் மிக வளர்ச்சி அடைந்து காணப்பட்டன. சுல்தான் சலாலுதீன் முகமது சா (Jalalud-din-Muhammed Shah) என்பவருக்காகப் பாண்டுவா என்னுமிடத்தில் கட்டப்பட்ட ஏக்லாகிக் (Eklakhi tomb) கல்லறை மூன்றா



சோட்டா சோனா மசூதி - கவுர்


வது கட்டக் கட்டடங்களுள் புகழ்பெற்றது. சம சதுர வடிவமான இக்கல்லறையின் பக்க அளவு 25 மீட்டர், உயரம் 8 மீட்டர், கல்லறையிலுள்ள வளை கூண்டின் குறுக்களவு 16 மீட்டர். எண்கோண வடிவுடைய இக்கல்லறையின் மேற்புறம் இரண்டு மாடிகளைக் கொண்டது. ஒவ்வொரு பக்கத்திலும் வாயில்களைக் கொண்ட இக்கல்லறையின் வளைமுகப்புகள் மிக நுண்ணிய வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளன. தக்ளி தர்வாசா (Dakli Darwaza) என்னும் கட்டடம், வங்காளத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட, முதன்மையான கட்டடமாகும். இது பார் பக் சா (Bar bak shah) என்பவரால் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் நீளம் 38 மீட்டர் அகலம் 8 மீட்டர். வங்காளத்தில் தொடர்ந்து 75 ஆண்டுகள் பல பள்ளிவாசல்களும் கல்லறைகளும் கட்டப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, தந்திபரா(Tantipara) சாம்கான் மசூதி (Chamkati or Chamkan), தரசுபாரி (Darasbari), இலோடன் (Lotan), குன்மாண்ட்டு (Gunmant), சோட்டாசோனா (Chota - sona), பாரா-சோனா (Bara-sona) கதம்-இரசூல் (Qadam-Rasul) ஆகிய மசூதிகளாகும். கார் (gaur) என்னுமிடத்திலுள்ள 26 மீ. உயரமுள்ள பிரோசு மினார் (Firuz-Minar) என்னும் கட்டடம் மிக்க அழகுடையது. இதன் முதன் மூன்று மாடிகள் 12 பக்கங்களை உடையனவாகவும் மேல் இரண்டு அடுக்குகள் வட்ட வடிவமாகவும் உள்ளன. இக்கட்டடம் வளைவான செங்கற்களாலும் பளபளப்பும் வண்ணமும் மிக்க ஓடுகளாலும் கட்டப்பட்டது.

சான்பூர்: பிரோசா துக்ளக்கு மறைவிற்குப்பின், தில்லிச் சுல்தானியர் ஆட்சியிலிருந்து சில மாநிலங்கள் தன்னாட்சி பெற்று விளங்கின. அவற்றுள் சான்பூர் (Jaunpur) ஒன்றாகும். சான்பூரைப் பிரோசா துக்ளக்கு, தம் உறவினர் சானாகான் (Jannakhan) என்பவரின் நினைவாக உருவாக்கினார். தைமூர் தில்லியின் மீது படையெடுத்தபொழுது, இந்நகரம் சார்கி (Shargi) என்ற ஆளுநரால் ஆளப்பட்டது. இவர் வழிவந்தோர் சார்கி அரசர்கள் (Shargi kings) என்று பட்டம் ஏற்று, இந்நகரை ஆண்டனர். சார்கி அரசர் இப்ராகிம் சா (Ibrahim Shah) என்பவர், சான்பூரின் கட்டடக் கலை வளர்ச்சிக்கு வித்திட்டார். இந்நகரம் கலைகளில் சிறந்து விளங்கியமையால் 'இந்தியாவின் சிராசு' (Shiraz of India) என்று கூறப்படுகிறது. சான்பூரில் இந்துக் கோயில்கள் பல இருந்தன. அவற்றை அழித்துப் பல இசுலாமியக் கட்டடங்கள் கட்டப்பட்டன. இக்கட்டடங்களின் கலைப்பாணி சார்கி பாணி (Shargi Style) எனக் கூறப்படுகிறது. இங்குள்ள மசூதிகள் சதுரத் தூண்கள், அறைகள், சிறு களரிகள் ஆகியவற்றைக் கொண்டு வேலைப்பாடுடன் விளங்குகின்றன.

சான்பூரில் உள்ள அதாலா மசூதிக்குப் (Atala-Masjid) பிரோசா துக்ளக்கால் கி.பி.1377-இல் அடிக்கல் நாட்டப்பட்டது. அதாலாதேவி என்னும் இந்து தேவதையின் கோயிலை இடித்து அங்கிருந்த பொருள்களைக் கொண்டே இம்மசூதி கட்டப் பட்டது. எனவே, இம்மசூதி அதாலா மசூதி எனப் பெயர்பெற்றது. இம்மசூதி இப்ராகிம்சா என்பவரால் கி.பி. 1408-இல் கட்டிமுடிக்கப்பட்டது. இம்மசூதி, ஐந்து தாழ்வாரங்களையும் இரண்டு மாடிகளையும் உடையது. இதன் முற்றம் 59 மீட்டர் குறுக்களவு கொண்டு சதுர வடிவில் அமைந்துள்ளது. இரண்டு தாழ்வாரங்களிலும் பல அறைகள் உள்ளன. மேற்கில் தொழுகையிடத்தைக் கொண்ட இம்மசூதியின் மூன்று பக்கங்களும் சுவர்களால் மூடப்பட்டுள்ளன. அறைகள் தூண்கள் பல பெற்றுக் காணப்படுகின்றன. இம்மசூதியின் நடுவில் 19 மீட்டர் அகலமும் 25 மீட்டர் உயரமும் உடைய சரிவான ஒரு கட்டடம் உள்ளது. இம்மசூதியின் சிறந்த கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது தொழுகை நடத்தும் இடத்திற்கு எதிரில் கட்டப்பட்டுள்ள குவிந்த இடமும் அதற்குப் பின்னுள்ள சுவர்ப் பகுதியும் ஆகும். இச்சுவரில் உள்ள வேலைப்பாடும் வளைகூண்டும் வளைமுகப்பும் சிறு கோபுரங்களும் கட்டடக் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் வண்ணம் அமைந்துள்ளன.

அதாலா மசூதியைப் போன்றே இங்குக் காலிசு-முக்கிலீசு (Khalis-Mukhlis Masjid) மசூதியும், சான்சுகிரி மசூதியும் (Jhanjhri-Masjid) குறிப்பிடத்தக்கவை. சான்சுகிரி மசூதி உசேன் சா என்னும் கடைசி சார்கி அரசரால் கி.பி.1470-இல் கட்டப்பட்டது. இம்மசூதி உயர்ந்த மேடை ஒன்றின் மீது கட்டப்பட்டுள்ளது. சான்கிரி என்பதற்குத் திரை (Screen) என்பது பொருள். இம்மசூதியின் சுவர்கள் திரைகள் போன்று அணிசெய்யப்பட்டுள்ளமையால் இம்மசூதிக்கு இப் பெயர் வந்தது. இதே அரசரால் கட்டப்பட்ட மற்றொரு மசூதி சாமி மசூதியாகும் (Jami Masjid). சான்பூரில் உள்ள மிகப் பெரிய மசூதி இதுவே ஆகும். இம்மசூதியின் தோரணவாயில் மிகப்பெரியது. இது 28 மீட்டர் உயரமும் 26 மீட்டர் அகலமும் உடையது. இங்குள்ள அரண்மனையின் ஒரு பகுதியில், 'மகம்மது சா என்பவரின் அரசி பீபி இராசா (Bibi Raja) என்பவரால், இலால் தர்வாசா-மசூதி (Lal-Darwaza Masjid) கட்டப்பட்டது.

குசராத்து (Gujarat): இந்திய இசுலாமியக்கட்டடக் கலைப்பாணியில், குசராத்து மண்டலக்கலைப்பாணி, ஏற்றமிக்க கலைப்பாணியாகும். குசராத்தில் உள்ள கட்டடங்களில்பொதுவாக இம்மண்ணிற்கே உரித்தான கலைநுட்பங்கள் மிகுந்துள்ளன. குசராத்துக் கட்டடங் களின் வளர்ச்சியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.




அதாலா மசூதி - சான்பூர்

தல் பிரிவு கி.பி.1297-முதல் 1411 வரையிலான காலத்தில் எழுந்தவை. குசராத்தில் அலாவுதீன் ல்சியின் ஆட்சி கி.பி. 1297-இல் தான் நிலை நாட்டப்பட்டது. முதற்பிரிவில் உள்ள கட்டடங்கள் பெரும்பாலும் இந்துக் கோயில்களை இடித்தோ அவற்றின் பொருள்களைப் பயன்படுத்தியோ கட்டப்பட்டன. புத்த சமணக் கோயில்களும் இவற்றுள் அடங்கும். இவ்விசுலாமியக் கட்டடங்களின் வனப்பும் அழகும், அணிவகைகளும் குசராத்தில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட கலை நுணுக்கங்களைக் கொண்டே அமைக்கப்பட்டன. குறிப்பாக, இவை உள்நாட்டுக் கட்டடக் கலைஞர்களால் கட்டப்பட்டன. இத்தொடக்கக் காலக் கட்டடங்கள், குசராத்தில் பாட்டன் (Patan), புரோச்சு (Broach), காம்பே (Cambay), தோல்கா (Dholka), மங்க்ரோல் (Mangrol), பெட்லாடு (Petlad) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. பாட்டனில் சோலங்கி அரசர்களால் கட்டப்பட்ட பல கோயில்கள் இடிக்கப்பட்டு இசுலாமியக் கட்டடமாகக் கட்டப்பட்டன.

புரோச்சிலுள்ள சும்மா மசூதி கி.பி.14-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் கட்டப்பட்டது. இம்மசூதியில் உள்ள வழிபாட்டிடம் பல தூண்களைக்கொண்டு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட திறந்த மண்டபம் போன்றது. இம்மசூதி முகுச் சுவரில் கூர்முனைகளையுடைய வளைவுகளையும் வளைவாக உள்ள மாடங்களையும் கொண்டு விளங்குகிறது.

காம்பேயிலுள்ள சும்மா மசூதி கி.பி.1325-இல் கட்டப்பட்டது. அதில் திறந்த மண்டபம் போன்ற அமைப்புக் காணப்படவில்லை. அது சுவர்களால் மூடப்பட்டுச் சுவர்களில் திறந்த வளைவுகள் வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற அமைப்பு ஆசுமீரிலுள்ள ஆர்காய்-தின்-கா-சோன்பரா மசூதியிலும் தில்லியில் உள்ள குவாவதுல்-இசுலாம் மசூதியிலும் (Quwwa-tul Islam) உள்ளன. தோல்காவில் உள்ள இலால் காசியினுடைய மசூதி (Hilal Qazi's Mosque) யும் தாங்க மசூதியும்(Tanka Masjid)குறிப்பிடத்தக்கவை. இலால் காசியினுடைய மசூதி சிறியதாக இருப்பினும், நடு வளைவின் இருபக்கமும் உள்ள தூபிகள் மிக அழகுடையனவாகக் கட்டப்பட்டுள்ளன. மங்க்ரோலில் உள்ள சும்மா மசூதி வளைவு வழிகளும் முகப்புச் சாளரங்களும் கொண்டுள்ளது.

குசராத்தின் இரண்டாம் பிரிவில் (கி.பி.1411-1458) கட்டடங்கள் வளர்ச்சி பெற்று விளங்கின. அகமது சா அகமதாபாதைச் சுதந்திரம் பெற்ற நாடாகவும் சிறந்த கட்டடங்கள் கொண்ட நகரமாகவும் மாற்றினார். இவரே அகமதாபாது நகரையும் அமைத்தார். இக்காலத்தில் கட்டடங்கள் ஒரு முழுமையான அமைப்புத் திட்டங்களுடன் கட்டப்பட்டன.



சபர்மதி ஆற்றங்கரையில் அகமது சாவினால் கட்டப்பட்ட அரண் இன்று நுழைவாயிலை மட்டும் பெற்றுத் திகழ்கிறது. இந்நுழைவாயில் பாத்ரா நுழைவாயில் (Bhadra Gateway) எனக் கூறப்படுகிறது. இவ்வரணினுள் இவரால் கட்டப்பட்ட மசூதி இரண்டு வரிசைத் தளங்களைக் கொண்டும் ஐந்து வளைகூண்டுகளைக் கொண்டும் விளங்குகிறது. ஐந்து முகப்பு வளைவுகள் (Facade Arches) இம்மசூதியில் உள்ளன. அய்பத்கான் என்பவருடைய மசூதியின் (Haibat Khan's Mosque) மேல் மூன்று வளைகூண்டுகள் (Dome) உள்ளன. சையது ஆலம் கி.பி.1412-இல் கட்டிய மசூதி ஐந்து வளைகூண்டுகள் கொண்ட மசூதியாகும். இம்மசூதியின் தூபிகள் (Minarets) தூண்களைக் கொண்டவை.

அகமதாபாதிலுள்ள சாமி மசூதி (Jami Masjid) கி.பி.1423-இல் கட்டப்பட்டது. இம்மசூதியின் நுட்பமிக்க அமைப்புகள் போற்றத் தக்கவையாகும். இம்மசூதியின் வழிபாட்டு இடம் 64 மீ. நீளமும் 29 மீ. அகலமும் உடையது. இவ்வறை 300 தூண்களைக் கொண்டுள்ளது. இக்கற்றூண்கள் மிக அழகான முறையில் இடைவெளிவிட்டு ஒரே சீராக அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள், இப்பெரிய அறையை 15 சதுரமான சிறிய இடைவெளிகளாகப் பிரிக்கின்றன. வளைகூண்டுகள் 15 இடைவெளிகளின் மேல் கட்டப்பட்டுள்ளன. இச்சிறிய வளை கூண்டுகள் பெரிய வளைகூண்டுகளைச் சுற்றி அமைந்துள்ளன. நடுவிலுள்ள வளைவான பகுதியின் மேற்பகுதி மூன்று அடுக்குகளை உடையது. இவற்றில் கலை அமைப்புடைய அரங்குகள் உள்ளன. இம்மசூதியில் உள்ள அரங்குகளும் இவற்றுக்கிடையில் வெளிச்சமும், காற்றும் உட்புகும் வண்ணம் அமைக்கப்பட்ட சாளரங்களும் மிகச் சிறப்புடையவை. இதுபோன்ற அமைப்பு, கட்டடத்தின் மேற்பகுதியிலும் காணப்படுகிறது. இது காண்பதற்குப் பிரமிடுகளின் அடுக்குப் போல் காட்சியளிக்கிறது. மேற்பகுதியிலுள்ள தூண்களின் உச்சியிலிருந்து வெளிப்புறம் சரிந்த இறவாணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'சும்மா மசூதி இந்தியாவிலுள்ள கட்டடங்களுள் மிகச் சிறந்த கட்டடக்கலைத் திறனை உடையது' எனப் பெர்சி



தீன் தர்வாசா – அகமதாபாது

பிரவுன் என்னும் அறிஞர் கூறுகிறார். தீன்தர்வாசா என்னும் கட்டடம் அகமது சா காலத்தில் கட்டப் பட்டது. தீன் தர்வாசா (Tin-Darwaza) என்பதற்கு மூன்று வாசல் கொண்ட கட்டடம் என்பது பொருள். இது அகமது சா அரண்மனையையும் சும்மா மசூதியையும் இணைத்துக் கட்டப்பட்டது. இம் மூன்று நுழைவாயில்களும் ஒரே உயரம் உடையன வாக இருப்பினும் நடுவிலுள்ள நுழைவாயில் சிறிது அகலமானது. அரசர் வலம் வருவதற்கென இந் நுழைவாயில்கள் கட்டப்பட்டன. இம்மூன்று வாயில்களின் முகப்புகளும் விளிம்பை ஒட்டிக் கிளிக் கூண்டுச் சாளரங்கள் (Oriel Windows) உள்ளன. தீன் தர்வாசாவின் அருகில் 'அகமது சா'வின் கல்லறை உள்ளது. அகமதாபாதிலுள்ள கல்லறைக் கட்டடங் களுள் சிறப்பான கல்லறைகள் இராணி-கா-அசிரா (Rani-ka-Hazira) எனக் கூறப்படும் அரசியர்களின் கல்லறைகள் ஆகும். இங்கு அரசியார் பலரைப் புதைத்துள்ளனர். இக்கல்லறைகள் உள்ள பகுதி, திரைச்சீலை அணிகலன்களும் மாடங்களும் பெற்றுத் திகழ்கிறது.

முகம்மது சா (Muhammad Shah) என்னும் சுல்தான், கி.பி.1446-இல் சேக் அகமது கத்து(Shaikh Ahmad Khattu) என்னும் துறவியின் நினைவாக மசூதி ஒன்றை அகமதாபாதிலிருந்து தென்மேற்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள சர்க்கேசி (Sarkhej) என்னுமிடத்தில் கட்டினார். இவ்விடம் பின்னர் இசுலாமிய அரசர்களின் ஓய்விடமாகவும் புனிதத் தலமாகவும் விளங்கியது. இங்குப் பிற்காலத்தில் பல மசூதிகளும் கல்லறைகளும் அரண்மனைகளும் எழுந்தன. சேக் அகமது கத்து மசூதியின் உட்புற நீளம் 85 மீட்டர் அகலம் 52 மீட்டர்; இதன் நடுவே சதுர வடிவக் கூடமும் அதனைச் சுற்றித் தூண்களும் உள்ளன. தூண்களின் மேலுள்ள கூரை ஒரு தனி வளை கூண்டைக் கொண்டுள்ளது. சர்க்கேசியிலுள்ள கல்லறைகளுள் குறிப்பிடத்தக்கது தாரியாகான் கல்லறையாகும். இது முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டது. இதன் அருகில் ஒரு மசூதி உள்ளது.

குத்புதின் அகமது சா என்னும் அரசர் மசூதி ஒன்றையும் கல்லறையையும் கட்டினார். இவர் காலத்தில் தோல்கா (Dolka) என்னுமிடத்தில் கட்டப்பட்ட அலிப்கான் (Alif Khan) மசூதி இன்று பாழடைந்து காணப்படுகிறது. இதன் உட்பகுதி மூன்று சதுரங்களாகப் பிரிக்கப்பட்டு, மூன்று சதுரங் களின் மேற்பகுதி மூன்று வளைகூண்டுகளைப் பெற்றுத் திகழ்கிறது. இம்மூன்று கூடத்தையும் இணைக்க வளைவான நுழைவுகள் உள்ளன. கூடங் களின் இரு முனைகளிலும் வளைவு முகப்புகள் உள்ளன. இதன் மேல் சிறு தூபிகள் (Turrets) செவ்வக வடிவில் காணப்படுகின்றன.

குசராத்தில் கட்டடக்கலை சிறப்புடன் வளர்ந்த காலம் மூன்றாம் காலமாகும். இசுலாமியக் கட்ட டக் கலை இப்பகுதியில் உச்ச நிலையை அடைந்தது. இதன் காலம் கி.பி. 1458-க்கும் கி.பி. 1572-க்கும் இடைப்பட்ட காலமாகும். மகமூது பெகராவின் (Mahmud Begarha) காலத்தில் நாடு முழுவதும் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. இவர் கட்டடக் கலை யில் பெரிதும் ஆர்வம் கொண்டிலங்கினார். இவர் முசதாபாபாது என்னும் நகரைச் சுனாகத்திலும் (Mustafabad at Junagadh) மகமூதாபாது (Mahmudabad) என்னும் நகரை அகமதாபாதிலி ருந்து 27 கி.மீ. தொலைவிலும் முகம்மதாபாது என்னும் நகரைச் சாம்பனேரிலும்(Muhammadabad at Champaner) அமைத்தார். இந்நகரங்களிலுள்ள இசு லாமியக் கட்டடங்கள் சிறப்பு வாய்ந்தவை.

அகமதாபாதிலும் இவர் காலத்தில் பல கட்ட டங்கள் கட்டப்பட்டன. இங்குள்ள முகாபிசுகான் (Muhafizkhan) மசூதி இவர் காலத்தில் கட்டப்பட் டதாகும். இம்மசூதி மிகச் சிறிய மசூதி. இங்குள்ள மற்றொரு மசூதியாகிய இராணி சிப்ரி (Rani Sipri) கி.பி. 1514-இல் கட்டப்பட்டது. இதன் கட்டடக் கலை போற்றற்குரியது. நேர்த்தியான உயர்ந்த தூபி கள், தூண் முகப்புகளின் மேல் கட்டப்பட்டுள்ளன. தூபிகளின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இத் தூபிகளின் அமைப்பு உள்ளது. சித்தி சையது மசூதி யின் சுவர்கள் கி.பி. 1572-இல் கட்டப்பட்டன. இம் மசூதியின் துளைத் திரைகள் (Perforated Screens) உலகப் புகழ் பெற்றவை. இவை மெல்லிய இழை களால் ஆக்கப்பட்டுள்ளன. இங்குள்ள திரைகள் போன்று வங்காளத்திலுள்ள தாரசபாரி-மசூதியில் திரைகள் காணப்படுகின்றன. இத்திரைகள் நுண் ணிய பூவேலைப்பாடு (Filigree-work) கொண்டவை. இத்திரைகளில் பனைஅல்லது தென்னை மரத்தினைப் பற்றிக் கொடிகள் வளர்ந்துள்ளது போன்ற அமைப் புக் காணப்படுகிறது.

அகமதாபாதிற்கு அருகிலுள்ள உத்மன்பூர் (Uthmanpur) என்னுமிடத்தில் சில கட்டடங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள மசூதி, குட்டையான வளைகூண்டுகளையும் முடுக்குகளில் தூண்கள் கொண்ட முகப்புகளையும் அதன் மேல் ஆளு தளங் கள் உள்ள தூபிகளையும் உடையது. ஆசிபூரில் (Hajipur) கி.பி. 1465-இல் கட்டப்பட்ட மியான் கான் சிசுடி (Miyan Khan Chishti) மசூதியும் கி.பி. 1472-இல் பீபீ அசூத் கூகி மசூதியும் (Bibi Achut Kuki) குறிப்பிடத்தக்க மசூதிகளாகும். அகமதாபா



திலிருந்து 2½ கி.மீ. தொலைவிலுள்ள உரோசுலா பாதில் (Rosulabad) உள்ள சா-இ-ஆலம் (Shah-I-Alam) கட்டடம் மிகப்புகழ்பெற்ற கட்டடமாகும். இக்காலத்தில் அகமதாபாதைச் சுற்றிப் பல கல்லறைகள் உள்ளன.

சாம்பனேரில் கி.பி. 1485-இல் முகம்மதாபாது என்னும் புதிய தலைநகரம் கட்டப்பட்டது. இது அரண்மனையையும் நகரப் பெருஞ்சுவரையும் கொண்டு விளங்கியது. இங்குள்ள சாமி மசூதி (Jami Masjid) கி.பி. 1523-இல் கட்டப்பட்டது. இது அமைப்பில் அகமதாபாத்து சும்மா மசூதி போன்றது. எளிய முறையில் அழகிய தோற்றத்துடன் கூடிய முகப்பை இம்மசூதி பெற்றுத் திகழ்கிறது. மிக நுட்பமான கலைத்திறனைக் கொண்டு விளங்கும் மசூதி, நகினா மசூதி (Nagina Masjid) ஆகும். இது மிகச் சிறிய மசூதியாகும். இவற்றைத் தவிர, குசராத்து இசுலாமியக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை, அகமதாபாதிலுள்ள கன்கரியா நீர்த்தேக்கத்தின் மடைவாய்களும் சர்க்கேசியிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டியும் படிக்கட்டுகள் உள்ளகிணறுகளும் ஆகும்.

மாளவம்: மாளவத்தில் உள்ள இசுலாமியக் கட்டடங்கள் தில்லியில் உள்ள இசுலாமியக் கட்டடங்களின் அமைப்பைப் பெற்று விளங்கின. கில்சி துக்ளக்கின் காலத்தில் தில்லியில் கட்டப்பட்ட கட்டடப் பாணியின் அமைப்பைப் போன்றே இக்கட்டடங்கள் விளங்கின. கூர்முனையுடைய வளைவுகளும் (Pointed Arch)அவற்றுடன் கூடிய அம்புமுனை புற ஓரங்களையும் கொண்டு விளங்கின. பிரமிடு அமைப்பையுடைய வளைகூண்டுகள் (Pyramidal Domes) இக்கட்டடங்களில் உள்ளன.

மாளவக் கட்டடங்களும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவு இந்துக் கோயில்களை இடித்து அதிலிருந்த தூண்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடங்கள். இத்தூண்கள் ஒவ்வொன்றையும் இணைத்து மேற்பகுதியில் வளைவுகள் கட்டப்பட்டன. பரமார (Paramara) அரசர்களின் தலைநகரமாக விளங்கிய தார் (Dhar) நகரம், முசுலீம் ஆளுநர்கள் காலத்திலும் கி.பி. 1405 வரை தலைநகரமாகவே விளங்கியது. உசாங் சா (Hushang Shah) கி.பி. 1405-இல் தலைநகரை மாண்டுவிற்கு (Mandu) மாற்றினார். தாரில் இரண்டு மசூதிகள் உள்ளன. இவை மாளவக் கட்டடக் கலையின் முதற்பிரிவைச் சார்ந்தவை. கமால் மௌலா மசூதியும் (Kamal Maula) இலாத்து மசூதியும் (Lat Masjid) தாரில் உள்ள மசூதிகளாகும். கமால் மௌலா மசூதி போச

சாலை (Bhoja Sala) என்றும் கூறப்படுகிறது. இம் மசூதி முதலில் ஓர் இந்துக் கோயிலையும் வட மொழிக் கல்லூரியையும் இணைத்துக் கட்டப்பட்டி ருந்தது. பின்னர் இதனை இசுலாமியர் இடித்துச் சிறிது மாற்றம் செய்து பள்ளி வாசலாக மாற்றினர். இலாத்து மசூதி கி.பி. 1405-இல் திலாவர்கான் (Dila warkhan) என்பவரால் கட்டப்பட்டது.

மாண்டு நகரம் தாரிலிருந்து தென்கிழக்கில் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குப் பல மசூதிகளும் கல்லறைகளும் ஓர் அரண்மனையும் உள் ளன. இங்கு முதற் பிரிவுக் கட்டடங்கள் அனைத்தும் இந்துக் கோயில்களிலிருந்து சிதைத்து எடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டே கட்டப்பட்டன. திலாவர் கானுடைய மசூதி, கி.பி. 1405-இல் கட்டப்பட்டது. மாலிக்முகித்து மசூதி (Malik mughith's mosque) கி.பி. 1452-இல் கட்டப்பட்டது.

மாண்டுவிலுள்ள கோட்டை இந்தியாவிலுள்ள கோட்டைகளுள் மிகச் சிறந்த அமைப்பை உடையது. இக்கோட்டையின் வடக்கு வாயிலான தில்லி வாயி லும் தென்மேற்கு வாயிலான தாராபூர் வாயிலும் மிக்க அழகுடையவை. மாண்டுவிலுள்ள சும்மா மசூதியை உசாங் சா (Hushang Shah) கட்டத் தொடங்கினார். முதலாம் மகமூதுவால் (Mahmud I) கி.பி. 1440-இல் இம்மசூதி கட்டிமுடிக்கப்பட்டது. இக்கட்டடம் 96மீட்டர் நீளமும் 90 மீட்டர் அகல மும் உடையது. இம்மசூதியிலுள்ள சதுரவடிவமான முற்றத்தில் வளைவுகள் உள்ளன. இம்மசூதியில் துறவி கள் நுழைவதற்கென்றும் பெண்கள் நுழைவதற் கென்றும் தனித்தனியாக இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. சும்மா மசூதியின் மேற்குச் சுவரை ஒட்டிக் கட்டப்பட்டுள்ள கல்லறை சொங் சா கல்லறையா கும். இது 'உசாங் சா' வினாலேயே தொடங்கப்பட்டு முதலாம் மகமூதுவால் கட்டி முடிக்கப்பட்டது. வடக் கேயுள்ள மூடுமுன்றிலுள் (Domed Porch) நுழைந்து இக்கல்லறையை அடைதல் வேண்டும். இதன் மேற்கே ஒரு தூண் மாடம் உள்ளது. நாற் சதுர வடிவமான இக்கல்லறையின் நான்கு முனைகளிலும் உருண்டை வடிவச் சிகரங்கள் உள்ளன. இவற்றிற்கு நடுவில் பெரிய வளைகூண்டு உள்ளது.

சும்மா மசூதியின் எதிரில் அசுரபி மகால் (Ashr-afi Mahal) என்ற கட்டடம் உள்ளது. இதனை முதலாம் மகமூது கட்டினார். இது சதுரமான பெரிய முற்றத்தையும் சுற்றிலும் சிறிய அறைகளையும் கொண்டது. இரண்டு வளைமுகப்புகள் அறைகளின் வெளிப்பகுதியில் உள்ளன. இம்மகாலின் மூலையில் வெற்றிச் சின்னமொன்றும் உள்ளது. பின்னர் இதன் ஒரு பகுதியில் மகமூதுவின் கல்லறை கட்டப்பட்டது.



சும்மா மசூதி – மாண்டு

சும்மா மசூதியின் தில்லி நுழைவாயிலின் பக்கத்தில் பல கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது சகாசு மகால் (Jahaz-Mahal). இது கபூர்தலா, முங்சுதலா என்னும் இரண்டு ஏரிகளுக்கு நடுவில் கட்டப்பட்டுள்ளது. இதனை முதலாம் மகமூது, அரச மாளிகையாகக் கட்டினார். மழைக் காலங்களில் இவ்வேரிகள் நிரம்புவதால் இக்கட்டடம் ஒரு மிதக்கும் கப்பலைப் போல் காட்சி அளிக்கும். எனவே இது சகாசு மகால் எனப் பெயர் பெற்றது. இதற்குக் கப்பல் அரண்மனை (Ship palace) என்பது பொருள். இம்மாளிகையின் நீளம் 120 மீட்டர்; அகலம்17 மீட்டர் மாளிகையின் கோபுரப் பகுதியில் அழகிய வளைமுகப்புகள் உள்ளன. கிழக்கே உள்ள வாயிலிலும் வரிசையாக வளைமுகப்புகள் உள்ளன. இவற்றின் இருபக்கங்களிலும் சலவைக்கல்லினால் ஆன சுவர்க்கம்பங்கள் உள்ளன. இவற்றிற்கு மேலே பிரமிடுக் கூரையுடைய அழகிய அரங்கு உள்ளது. சகாங்கீரின் மனைவி நூர்சகான் (Nurjahan) இம் மாளிகையின் அழகைக்கண்டு பேரவாக் கொண்டாள். இங்கு அவ்விருவரும் தங்கிப் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர்.

இந்தோலா மகால் (Hindola Mahal): ஆங்கில எழுத்தான T வடிவில் அமைக்கப்பட்ட கட்டடம். இம்மாளிகை கியாதுத்தீன் (Ghiyathud-din) காலத்தில் கட்டப்பட்டது. T வடிவ அமைப்பில் செங்குத்தான பகுதியின் மையத்தில் நீளமான அறை ஒன்று உள்ளது. அதன் இரு முனைகளின் பக்கங்களிலும் உயர்ந்த வளைவுகள் உள்ளன. பிற்காலத்தில் இப் பகுதியின் இருபக்கங்களிலும் கட்டடங்கள் கட்டப் பட்டிருக்க வேண்டும். இக்கட்டடம் இரண்டு அடுக்கு களை உடையது. மேல்மாடியில் குறுக்கு நெடுக்காக இரண்டு வடங்கள் உள்ளன. இதேபோன்ற அமைப்புக் கீழ்த் தளத்திலும் காணப்படுகிறது.

மாளவத்தின் இறுதிக்காலக் கட்டடங்களின் கலைப்பாணியில் மிகுந்த மாற்றம் எதுவும் காணப் பெறவில்லை. இக்காலத்தில் குறிப்பிடத்தக்க கட்டடங்கள் பாசுபகதூர் அரண்மனை (Baz Bahadur Palace) உரூபமதி அரங்கு, (Rupamati's Pavilions), நீலகந்தா அரண்மனை (Nilakantha Palace) இலால் மகால் (Lal Mahal), சிசுத்திகான் அரண்மனை (Chisti khan's Palace) போன்றவை யாம். பாசு பகதூர் அரண்மனை, சுல்தான் நாசுருதீன் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப் படுகிறது. இப்பகுதியிலுள்ள மக்கள் இவ்வரண்மனை பாசுபகதூர் என்பவனுக்கும் உரூபமதி என்பவளுக்கும் இடையே நிகழ்ந்த காதலின் சின்னமாகக் கட்டப்



தாலா மகால் — மாண்டு

பட்டதாகக் கூறுகின்றனர். கன்னி மாடம் போன்று அறைகளைக் கொண்ட இவ்வரண்மனை இரண்டு நீள்சதுரங்கள் ஒன்றிணைந்தது போன்ற அமைப்பை உடையது. பாசுபகதுார் அரண்மனையை அடுத்துக் குறிப்பிடத்தக்க பிறிதொரு கட்டடம் உருபமதி அரங்காகும். படைவீடு போன்று இரு பக்கங்களிலும் வலுவான பாதுகாப்புச் சுவர்களையும் தட்டையான கூரையையும் உடையது இக்கட்டடம். இதன் உட்புறத்தின் மேற்கே ஒரு நீர்த்தேக்கம் உள்ளது.

மாளவத்தின்ஒரு பகுதியாகச் சந்தேரி (Chanderi) விளங்கி வந்தது. இங்கு மாளவக் கட்டட அமைப்பில் பல கட்டடங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சிறப்பானது குசுகு மகால் (Kushk Mahal). இது ஏழு அடுக்காக இருந்தது. இன்று நான்கு அடுக்குகளே உள்ளன. இதனை முதலாம் மகமூது கி.பி. 1445-இல் கட்டினார். மற்றும் இங்குச் சும்மா மசூதி காசாதி-கா-இரவுசா (Shazadi-ka-Rauza) பாதல்-மகால் (Badal Mahal) போன்ற கட்டடங்கள் உள்ளன.

**தக்காணம்:** நருமதை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள இந்திய இசுலாமிய மண்டலக் கலைப்பாணிக் கட்டடங்கள் தக்காணத்தில் அடங்கும். இவற்றைத் தென்மண்டலக் கட்டடங்கள் என்றும் கூறலாம். தக்காணத்தைக் கைப்பற்றிய இசுலாமியர்கள் முதலில் குல்பர்காவையும் பின்னர்ப் பீடாரையும் அடுத்துக் கோல்கொண்டாவையும் தலைநகரமாகக் கொண்டு பாமினி அரசு என்ற அரசைக் கி.பி.1347-இல் எற்படுத்தி ஆண்டனர். குல்பர்கா கி.பி.1347-இலிருந்து 1425 வரை தலைநகரமாக இருந்தது. அக்காலத்தில் இங்குக் கட்டடங்கள் பல கட்டப்பட்டன. பீடார் கி.பி.1425-இல் தலைநகரமாக மாற்றப்பட்டது. பீடாரில் எழுந்த கட்டடங்கள் இக்காலத்தைச் சாரும். கோல்கொண்டா கி.பி.1512-முதல் 1687 வரை பாமினி சுல்தான்களின் தலைநகரமாக விளங்கியது. இக்காலத்தில் கோல்கொண்டாவில் கட்டடங்கள் வளர்ச்சி அடைந்தன.

**குல்பர்கா கட்டடங்கள்:** பாமினிச் சுல்தானியம் தக்காணத்தில்ஏற்படுவதற்கு முன்பு தில்லிச் சுல்தானியர்களின் கீழிருந்த தக்காண ஆளுநர்கள், பல கட்டடங்களைக் கட்டினார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்கது தௌலதாபாதில் உள்ள சாமி மசூதியும், ஐதராபாதிலுள்ள தேவல் பள்ளிவாசலும் ஆகும். பாமினிச் சுல்தான்கள் குல்பர்காவில் கோட்டை ஒன்றையும் கட்டினார்கள். எதிரிகள் எளிதில் தாக்காவண்ணம் இக்கோட்டை கட்டப்படது. குல்பர்காவில் பல அரசர்களின் கல்லறைகளும் சாமி மசூதியும் பாமினி அரசர்களால் கட்டப்பட்டன. குல்பர்காவில் 190மீட்டர் நீளமும் 20மீட்டர் அகலமுமுள்ள கடைவீதி ஒன்றுள்ளது. பக்கத்திற்கு 61 வளைவுகளாக இதன் இருபக்கங்களிலும் 122 வளைவுகள் உள்ளன. இத்தகைய கடைவீதி இந்தியாவில் வேறெங்கும் காணவில்லை எனச் சேம்சு பர்கூசன் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். நேரான நுழைவாயிலுடன் சரிவான சுவர்கள் உள்ள பல கல்லறை




சாமி மசூதி – குல்பர்கா

கள் குல்பர்காவில் உள்ளன. இக்கல்லறைகளுள் சிறந்த கல்லறையாகக் கருதத்தக்கது ஏழு அரசர் (Haft-Gumbad-Seven Domes) கல்லறையாகும்.

**பீடார்க் கட்டடங்கள்**: பீடார் கி.பி. 1425-இல் பாமினி அரசின் தலைநகரமாக மாற்றப்பட்டது. இது குல்பர்காவிலிருந்து 96 கி.மீ. வடகிழக்காக அமைந்துள்ளது. இங்குள்ள கட்டடங்களில் பாரசீகக் கட்டடக்கலையின் கூறுபாடுகள் காணப்படுகின்றன. பீடாரில் உள்ள கட்டடங்கள் இன்று பல அழிந்து கிடக்கின்றன. ஆயினும், கோட்டை, அரண்மனைகள், அவற்றினுள்ளே உள்ள இரண்டு பள்ளிவாசல்கள், ஒரு கல்லூரி, அரசர்களின் கல்லறைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். முகமது கவான் என்ற அமைச்சனால் பீடாரில் கட்டப்பட்ட கட்டடங்கள் பல இன்று அழிந்து காணப்படுகின்றன. இவனால் கட்டப்பட்ட கல்லூரியும் அவுரங்கசீபின் படையெடுப்பின்போது வெடிமருந்து விபத்துக்குள்ளாயிற்று.

**கோல்கொண்டாக்கட்டடங்கள்**: கோல்கொண்டா கி.பி. 1512-இலிருந்து 1687 வரை பாமினிச் சுல்தான்களின் தலைநகரமாக விளங்கியது. இக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் கோல்கொண்டாவிலும் ஐதராபாதிலும் உள்ளன. இன்று அழிந்த நிலையில் இருப்பினும் இவற்றின் கலைப்பாணி போற்றற்குரியது. கோல்கொண்டா கோட்டை, குல்பர்கா பீடார் கோட்டைகளைப் போன்ற அமைப்புடையது. இக்கோட்டையில் உள்ள அரசக் கல்லறைகள் எண் கோணம் அல்லது சதுர அமைப்பை உடையன. இக்கல்லறைகளில் இரண்டடுக்கு மாளிகைகளும் உள்ளன. கூம்பு வடிவச் சிறு கோபுரங்கள், விரிந்த வளைமுகப்புகள் போன்றவை பெற்று இக்கல்லறைகள் விளங்குவதுடன் சிறப்பான அணிகளும் பெற்றுத் திகழ்கின்றன. இதனைக் கோல்கொண்டா பாணி அல்லது குதுப்சாகி பாணி (Golkonda or Qutubshahi Style) எனக் கூறுகின்றனர்.

பீசப்பூரிலும் (Bijapur) கோட்டையும் அரணும் இக்காலத்தில் கட்டப்பட்டன. இங்கு மசூதிகள் பல உள்ளன. இங்குள்ள சும்மா பள்ளிவாசல் அலி அதில் சா என்பவரால் தொடங்கப்பட்டு, அவருக்குப் பின் வந்தவரால் கட்டிமுடிக்கப்பட்டது. இது மிகப் பெரிய பரப்பளவில் அமைந்துள்ள மசூதியாகும். நீள் சதுர அமைப்பை இம்மசூதி பெற்றுள்ளது. அலி அதில்சா தமக்காகக் கல்லறை ஒன்றைக் கட்டினார். அவர் இறந்தபின் அக்கல்லறை முழுமையாக எவராலும் கட்டப்படவில்லை. பீசப்பூரிலுள்ள கல்லறைகளுள்



கோல்கும்பா – பீசப்பூர்

மகமூதின் கல்லறையும் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள மித்தர் மகால் (Mihtar-Mahal), கோல்கும்பா (Gol-Gumbad) போன்றவை புகழ்பெற்றவை. கோல் கும்பா என்பதற்கு உருண்டைக் கவிகை (Round Dome) என்பது பொருள். இதன் உருண்டை வடிவக் கவிகை, உலகத்திலேயே மிகப் பெரியதாய் 1600 ச.மீ. உட்பக்க மட்ட அளவை உடையதாயிருக்கிறது.

வாரங்கல்லிலும் இசுலாமியக் கட்டடங்கள் பல இக்காலத்தில் கட்டப்பட்டன. ஐதராபாதைச் சுற்றிப் பல பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. இங்குள்ள மசூதிகளில் சாமி மசூதி, மெக்காப் பள்ளி வாசல், முசிராபர்துப் பள்ளிவாசல், தோலி மசூதி ஆகியன சிறப்புடையன. குதுப்சாயிகளின் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது சார்மினார் (Char-minar) என்னும் கட்டடம் ஆகும். இது இன்றளவும் ஐதராபாதின் அழகிற்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. சார்மினார் என்பது நான்கு கோபுரங்கள் (Four Minar) எனப் பொருள்படும். இது கி.பி. 1591-இல் கட்டப்பட்டது. நாற்சதுரப் பரப்பில் கட்டப்பட்ட இக்கட்டடத்தின் மேற்பகுதிகள் நான்கு மூலைகளிலும் உயர்ந்து நிற்கும் மினார்களின் உயரம் 62 மீட்டர். அடித்தளத்தில் நான்கு பக்கமும் நுழை வாயில்கள் உள்ளன. மேல்தளத்தில் ஒரு பக்கத்திற்கு எட்டு வளைமுகப்புகள் வீதம் நான்கு பக்கமும் வளைமுகப்புகள் அமைந்துள்ளன. அவற்றிற்குமேல் இரண்டாம் மாடியின் கூரை உள்ளது. அதனை அடுத்து வளைமுகப்புகளுக்கு மேல் சிறிய வளை முகப்புகளும் புறக்கூடு போன்ற அமைப்புகளும் உள்ளன. சிறந்த அணி வகைகளைப் பெற்றுச் சார் மினார் திகழ்கிறது.



பீபி-கி-மசூதி - பர்கான்பூர்

காந்தேசம் (Khandesh): தில்லிச் சுல்தானிய மாலிக்கு அகமது என்பவர், தபதி பள்ளத்தாக்கின் தில்லிச் சுல்தானிய ஆளுநராக விளங்கிப் பாமினி சுல்தான்களுடன் அடிக்கடி சண்டை செய்தார். இவர் பிரோசா துக்ளக்கு இறப்பிற்குப் பின் காந்தேசத்தைக் கி.பி. 1388 முதல் சுதந்திர நாடாக அறிவித்துத் தாமே ஆட்சி செய்தார். இவர் வழிவந்தோர் கான் (Khan) என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். இதனால், ஆண்ட பகுதி காந்தேசம் எனப்பட்டது. இவ்வரசர்கள் பாருகி மரபினர் எனத் தங்களைக் கூறிக் கொண்டனர். இவர்கள் முதலில் தால்னர் (Thalner) என்னுமிடத்திலிருந்தும், பின்னர்ப் பர்கான் பூரிலிருந்தும் ஆட்சி செய்தனர். தால்னரில் பல கல்லறைகள் இவர்களால் கட்டப்பட்டன. பர்கான்பூர் கி.பி. 1400-இல் அமைக்கப்பட்டது. இங்குள்ள கோட்டை பாத்சாகி குலா (Bad shahi Gula) எனப்படுகிறது. இங்குள்ள கட்டடங்களும் சாமி மசூதியும் பீபி-கி-மசூதியும் (Bibi-ki-Masjid) குறிப்பிடத்தக்கவை. சாமி மசூதியில் 15 வளைமுகப்புகள் உள்ளன பீபி-கி-மசூதி, சாமி மசூதியைவிட எழுச்சியும் அழகும் மிக்கது.

காசுமீரம்: சா மிர்சா (Shah Mirza) என்னும் இசுலாமியர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் காசுமீர இந்து அரசர் சிம்மதேவரின் (Simhadeva) அவையிலும் அவருக்குப்பின் வந்த உதயணதேவர் அவையிலும் அமைச்சராக இருந்தார். உதயணதேவர் கி.பி. 1346-இல் இறந்த பின், விதவையாகிவிட்ட இராணியைச் சா மிர்சா மணந்து, காசுமீரத்தின் அரசரானார். இவருக்குப்பின் வந்தவர்கள் கி.பி. 1561 வரை ஆட்சிபுரிந்தனர். பின்னர் மொகலாயர் பேரரசுடன் காசுமீரம் இணைக்கப்பட்டது.

காசுமீர இந்துக் கோயில்களில் கருங்கற்களே பயன்படுத்தப்பட்டன. கோயில்களைத் தவிர்த்துப் பிற கட்டடங்கள் கட்ட மரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இசுலாமியர் செங்கற்களைப் பயன்

படுத்திக் காசுமீரத்தில் கட்டடங்கள் கட்டினர். எனினும், பின்னர் வந்த மொகலாயர்கள் கருங்கற்களைப் பயன்படுத்தினர். காசுமீரத்தை ஆண்ட இசுலாமிய அரசர்கள் இந்துக் கோயில்கள் பலவற்றை இடித்தார்கள். சிக்கந்தர் என்பவன் புகழ்பெற்ற மார்த்தாண்டன் கோயிலை இடித்தான். மார்த்தாண்டன் கோயில் காசுமீரத்தில் மட்டம் என்னுமிடத்தில் உள்ளது. இதனால், இவனுக்குப் பூட்சிகான் (Butshi-kan) அல்லது உருவச்சிலை உடைப்போன் என்ற பெயர் ஏற்பட்டது. இவனுக்குப் பின்வந்த செயின்-உல்-ஆபிதீன் (Zain-ul-Abidin) என்பவன், காசுமீரத்தின் அக்பர் எனப்படுகிறான். இவன் காலத்தில் கலைகள் பெரிதும் வளர்ச்சி அடைந்தன.

இசுலாமியக் கட்டடங்களில் மரங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. கூரிய சிகரங்களும் சரிவான கூரைகளும் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னப்பட்ட பகுதிகள் செங்கற்களாலும் மரத்தாலும் இணைத்துக் கட்டப்பட்டன.

இங்குள்ள கல்லறைகள் சையாரத்து (Ziarat) எனக் கூறப்படுகிறது. செயின்-உல்-ஆபிதீன் தம்தாய்க்குச் சிரீநகரத்தில் (Srinagar) ஒரு கல்லறை எழுப்பினான். இந்துக் கோயிலை இடித்து ஒரு மசூதி கி.பி. 1444-இல் கட்டப்பட்டது. இது ஒரு கல்லறையையும் இணைத்துக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் ஓடுகளின் அமைப்பும் அவற்றின் பல வண்ண நிறமும் அழகுடன் விளங்குகின்றன.



சா அமாதான் பள்ளி வாசல்

இங்குள்ள கல்லறைகள், மூங்கில்களைக் கொண்டு கட்டப்பட்டன. இவை சதுரமான அமைப்பையும் அவற்றுள்ளிருக்கும் அறைகள் கனசதுர வடிவத்தையும் அதன்மேலே பட்டைக் கூம்புருவக் கூரையையும் கொண்டு விளங்குகின்றன. சா அமாதான் (Shah Hamadan) என்னும் பள்ளிவாசல், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பள்ளி வாசல்களிலேயே புகழ்பெற்றது. இது சீலம் (Jhelum) நதிக்கரையில் இருந்த இந்துக் கோயில்களின் கட்டடப் பொருளைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. இது இரு தளங்களை உடையது; தளங்கள் சாளரங்கள் உடையனவாய் மரத்தால் அமைக்கப்பட்டுள்ளன. பட்டைக் கூம்புருவக் கூரையை உடைய இப்பள்ளி வாசலின் மர உத்திரங்கள் வெளியில் தெரியும்படி அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. இப்பள்ளி வாசலின் கீழ்க்கூடம் கலையழகு மிக்கதாக அமைக்கப்பட்டுள்ளது. சிரீ நகரத்திலுள்ள சாமி மசூதி கி.பி. 1394-இல் சிக்கந்தர் என்பவரால் தொடங்கப்பட்டுச் செயினுலாப்தீன் என்பவரால் முழுமை பெற்றது. இம் மசூதி பலமுறை தீயினால் அழிந்ததாயினும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அவுரங்கசீபு காலத்தில் இது முழுவதும் பழுதுபார்க்கப்பட்டது. இம்மசூதி செங்கற்களால் கட்டப்பட்டது.

**செர்சா காலக் கட்டடங்கள்:** இந்தியாவில் மொகலாயப் பேரரசு கி.பி. 1526-இல் பாபரால் நிறுவப்பட்டது. இப்பேரரசு வேரூன்றுவதற்கு முன் செர்சா என்பவர் சூர் மரபை இந்தியாவில் நிலைநாட்டினார். செர்சா (Sher Shah), சசாரம் (Sasaram) என்னுமிடத்தில் பல கட்டடங்கள் கட்டினார். தில்லியின் ஆட்சியைக் கைப்பற்றியபின் தில்லியிலும் பல கட்டடங்கள் கட்டினார். இவரது காலத்தில் கலைகள் பல வளர்ந்தன. இவர் பல்வேறு நகரங்களை இணைத்துச் சாலைகளை அமைத்தார். இச்சாலைகளுள் குறிப்பிடத்தக்கது வங்காளத்திலுள்ள சோனார்கான் (Sonargaon) என்னுமிடத்திற்கும் சிந்துப் பகுதிக்கும் போடப்பட்ட பெருஞ்சாலை ஆகும். இச்சாலை ஆக்ரா, தில்லி, இலாகூர் போன்ற நகரங்களையும் இணைக்கிறது. பல கோட்டைகள் இவரால் கட்டப்பட்டன. இந்து இசுலாமியக் கட்டடக் கலை, இவர் காலத்தில் வரலாற்றில் ஓர் உயரிய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

இவர் காலத்திய கல்லறைகள் எண்கோண அமைப்புடையவை. சசாரமில் உள்ள நான்கு கல்லறைகள் புகழ்பெற்றவை. இவை மூன்று அரச குடும்பத்தைச் சார்ந்தவை, நான்காம் கல்லறை, கல்லறைகளைக் கட்டிய கட்டடக் கலைஞனுடையது. இக்கல்லறைகளில் முற்றமும் வளைவுகளும் கவிகைகளும் உள்ளன. இவை உலோடி காலக் கல்லறைகளின் அமைப்பை உடையவை. தில்லியில் மிகப் பெரிய பரப்பளவில் செர்சாவால் கட்டப்பட்டது

புராணகிலா (Purana-Quila)என்னும் கோட்டையாகும். இது தில்லியின் ஆறாம் நகரமாகும். பாண்டவர்களின் தலைநகரமான இந்திரப்பிரத்தம் என்னும் பகுதி இதுவேயாகும். இக்கோட்டை பின்னர் வந்த உமாயூனால் (Humayun) முழுமைபெற்ற கோட்டையாக ஆக்கப் பெற்றது. இப்பொழுது இக்கோட்டை அழிந்து காணப்படுகிறது. ஒழுங்கற்ற அமைப்பைக் கொண்ட இக்கோட்டை 2 கி.மீ. சுற்றளவை உடையது. இதன் நீள் பகுதி கிழக்கு மேற்காக உள்ளது. இக்கோட்டைச் சுவரின் கனம் 4 மீ. உயரம் 21 மீ. பாதுகாப்பு அரண்களும் அம்பு எறிகூடங்களும் பெற்று இக்கோட்டை விளங்குகிறது. இக்கோட்டையின் நான்கு மூலைகளிலும் முகப்புக் காப்பரண்கள் உள்ளன. இவற்றைத் தவிர ஐந்து முகப்புக் காப்பரண்கள் மேற்குச் சுவரின் மேல் அமைந்துள்ளன. இக்கோட்டை மூன்று நுழைவாயில்களைப் பெற்றுள்ளது. கிழக்குப் பக்கம் நுழைவாயில் இல்லை. நுழைவாயில்களின் பக்கச் சுவர்கள் சிவப்பு மணற்கற்களால் கட்டப்பட்டுள்ளன. அணி வேலைப்பாடுகள் இவற்றில் உள்ளன. வெள்ளை, கறுப்பு பளிங்குக் கற்களும் வண்ண ஓடுகளும் இவற்றின்மேல் பதிக்கப்பட்டுள்ளன.

சூர் மரபு அரசர்களின் வழிபாட்டு இடமாகப்பயன்பட்டது குலா-இ-குக்னா-மசூதி (Gula-I-Kuhna-Masjid) ஆகும். இது 'செர்சா' வினால் புராணகிலா கோட்டையின் உள்ளே கட்டப்பட்டது. ஐந்து வளை முகப்பு வாயில்களை உடைய இம்மசூதியின் உள்ளே முற்றம் உள்ளது. இம்மசூதியில் கிளிக்கூண்டுச் சாளரங்கள், பலகணிகள் ஆகியவை உள்ளன. மேல் தளத்தில் சிறு கோபுரங்கள் காணப்படுகின்றன. வடக்கிலும் தெற்கிலும் அரச குடும்பத்தினர் செல்வதற்கான வாயில்கள் உள்ளன.


இம்மசூதியின் தெற்கே இரண்டு அடுக்குகளை உடைய கட்டடம் ஒன்று உள்ளது. செர் மண்டல் (Sher Mandal) எனப்படும் இது எண்கோண அமைப்பை உடையது. சிவப்புக் கற்களால் கட்டப்பட்ட இக்கட்டடத்தில் ஆங்காங்கே பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடத்தைப் பிற்காலத்தில் வந்த மொகலாயப் பேரரசர் உமாயூன் நூலகமாகப் பயன்படுத்தினார் என்னும் செய்தி கூறப்படுகிறது. இக்கட்டடத்தின் படிக்கட்டுகளிலிருந்து விழுந்தே அவர் இறந்ததாகவும் சொல்லப்படுகிறது. செர்சாவால் பல காவற் கோட்டைகளும் சத்திரங்களும் கட்டப்பட்டன. அவன் அமைத்த சாலையில் பல சத்திரங்கள் வழிப்போக்கர் தங்குவதற்காகக் கட்டப்பட்டன.

**மொகலாயப் பேரரசர்களின் காலக் கட்டடக் கலை:**

பாபர்: இப்ராகிம் உலோடியைக் கி.பி. 1526-இல் பானிப்பட்டு என்னும் இடத்தில் தோற்கடித்த பாபர், இந்தியாவில் மொகலாயப் பேரரசை நிலைநாட்டினார். பாபர் பூங்காக்கள் அமைப்பதில் பேரார்வம் காட்டினார். ஆக்ரா, பானிப்பட்டு ஆகிய நகரங்களில் இவர் பூங்காக்கள் அமைத்தார். இவர் காபூலி-பாக்-மசூதியைக் (Kabuli-Bagh-Masjid) கட்டினார். பாபரின் குறிப்புகள் (Memoirs) பாபர் ஆக்ராவிலுள்ள உலோடி கோட்டையில் மசூதி ஒன்றைக் கட்டினார் எனக் குறிப்பிடுகின்றன. மூராதாபாது மாவட்டத்தில் (Moradabad Dist.) உள்ள சாம்பல் (Sambhal) நகரிலும் இவர் ஒரு மசூதியைக் கட்டினார். பாபர் காலத்தில் தில்லியிலுள்ள பாலம் (Palam) என்னுமிடத்தில் ஒரு மசூதி கட்டப்பட்டது. இது மூன்று வளைவுகளை உடையது. நான்கு மூலைகளிலும் தூபிகளையும் நடுவில் கவிகையையும் கொண்டுள்ளது.

**உமாயூன் காலம்:** உமாயூன் கி.பி. 1530-இல் பட்டமேற்றார். ஆனால், செர்சாவால் இவர் கி.பி. 1538-இல் ஆட்சியைவிட்டு விரட்டப்பட்டார். இவர் தில்லிப் பேரரசைக் கைப்பற்றவும் ஆளுநர்களுடன் சண்டையிடவுமே எட்டு ஆண்டுகளைக் கழித்தார். தில்லிப் பேரரசைக் கி.பி. 1555-இல் மீண்டும் கைப்பற்றிய இவர் கி.பி. 1556-இல் இறந்தார். இதனால் இவர் காலத்தில் கட்டடக்கலை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடையவில்லை. இருப்பினும், இவர் கி.பி. 1533-இல் தில்லியில் இயமுனை ஆற்றங்கரையில் தின்பனா (Dinpanah) என்னும் நகரை அமைத்தார். இந்நகரம் மிகக் குறுகிய காலத்திலே கட்டப்பட்டது. பெருஞ்சுவர்களும் காப்பு அரண்களும் நுழைவாயில்களும் கொண்டு இந்நகரம் திகழ்ந்தது. ஆனால், இவர் கட்டிய கட்டடங்களின் சுவடு இன்று இங்குக் காணப்படவில்லை. உமாயூன் செர்சா கட்டிய புராண கிலாக் கோட்டையைக் கட்டிமுடித்தார்.

உமாயூன் இறந்து 14 ஆண்டுகள் கழித்து அவர் மனைவி அமிநா பானுபேகம் கி.பி. 1569-இல் உமாயூன் கல்லறையைக் கட்டினார். இக்கல்லறையே மொகலாயரின் தொடக்கக் காலக்கட்டடக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. பாரசீகக் கட்டடக் கலைப்பாணியில் இக்கல்லறை அமைந்துள்ளது. இக்கல்லறை சிவப்பு மணற் கல்லினால் கட்டப்பட்டுள்ளது. கல்லறையின் மேற்பகுதியில் வளைமுகப்புகள் உள்ளன. இதன் மேலுள்ள வளைகூண்டு சலவைக் கல்லினால் ஆனது. கல்லறையின் உட்புறம் பல அறைகள் உள்ளன. அறைகள் ஒவ்வொன்றும் எண்கோண வடிவத்தையுடையது. இக்கட்டடத்திலுள்ள இரட்டை வளைகூண்டு ஒன்றின் மீது ஒன்றாக இடைவெளி விட்டுக் கட்டப்பட்டுள்




உமாயூன் கல்லறை – தில்லி

ளது. இக்கல்லறை ஒரு பூங்காவின் நடுவில் அமைந்துள்ளது.

அக்பர்: உமாயூன் இறந்தபொழுது அவர் மூத்த மகனான அக்பர் 13 வயதுடைய சிறுவனாகவே இருந்தார். அக்பரின் ஆட்சி மொகலாயப் பேரரசு ஆட்சியில் தனி இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. அக்பரின் காலத்தில் கலைஞர்களும் அறிஞர்களும் போற்றப்பட்டனர். இந்துக்களுக்கும் உயர் பதவிகள் வழங்கப்பட்டன. கட்டடக்கலை வளர்ச்சியில் இந்தியக் கட்டடக் கலையும் பாரசீக நுணுக்கங்களும் கையாளப்பட்டன.

அக்பரின் காலத்தில் தில்லி தனது பெருமையை இழந்தது. ஆக்ராவே தலைமையிடமாக மாறியது. ஆக்ராவில் உலோடிக் கோட்டையை இடித்து ஒரு புதிய நகரத்தை இயமுனை ஆற்றங்கரையில் அக்பர் உருவாக்கினார். அவர் இங்குக் கட்டிய கோட்டை மிகப் புகழ்பெற்றது. இக்கோட்டை கி.பி. 1565–ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றுக் கி.பி. 1574–இல் கட்டி முடிக்கப்பட்டது. முதன்முதலில் வழவழப்பாகச் செதுக்கப்பட்ட கற்கள் கோட்டைச் சுவர் கட்டப் பயன்படுத்தப்பட்டது இக்கோட்டையில்தான். இக் கற்கள் இதற்கு முன்பு அரண்மனைகள் கட்டவே பயன்படுத்தப்பட்டு வந்தன. இக்கோட்டை அரை வட்ட வடிவமானது. இயமுனை ஆற்றங்கரையின் வலப்பக்கத்தில் இக்கோட்டை அமைந்துள்ளது. கோட்டைச் சுவரின் ஒவ்வொரு கல்லையும் உட்பக்கத்தில் இரும்பு வளையங்கள் இணைத்து நிற்கின்றன கோட்டையின் உள்ளே மசூதிகளும் அங்காடிகளும் குளிக்கும் அறைகளும் தோட்டங்களும் அரச மாளிகைகளும் காணப்படுகின்றன. இக்கோட்டையினுள்ளே உள்ள அக்பரி மகாலும் (Akbari Mahal) மீனா அங்காடிகள் (Mina Bazaars) இரண்டும் குறிப்பிடத்தக்கவை. அக்பர் காலக் கட்டடங்கள் யாவும் சிவப்பு மணற்கல்லினால் கட்டப்பட்டன. இன்று இக் கட்டடங்கள் பெரிதும் அழிந்து காணப்படுகின்றன, அக்பரி மகால் பல அறைகளை உடையது. சகாங்கிரி மகாலை (Jahangiri-Mahal) அக்பர் தம் மகன் சகாங்கீரின் பெயரால் கட்டத் தொடங்கினார். எனினும், இது சகாங்கிராலேயே கட்டிமுடிக்கப் பட்டது. இம்மகாலின் நடுவில் முற்றமும் அதனைச் சுற்றி இரண்டு அடுக்குகளை உடைய அறைகளும் பெரும் அறைகளும் உள்ளன. இவ்வறைகள் அக்பர், சகாங்கீர் போன்றோரின் மனைவியர் தங்கும் அறைகளாக இருந்திருக்கவேண்டும். பல சிற்ப வேலைப் பாடுகளை ஒவ்வொரு அறையும் பெற்றுத் திகழ்

கிறது. ஆக்ராக் கோட்டையின் தில்லி வாயில் அருகே ஒரு மீனா அங்காடி உள்ளது. மற்றொன்று சிறிய அங்காடி.



சகாங்கிரி மகால் ஆக்ரா

அக்பர் பதேபூர் சிக்ரி (Fatehpur Sikri) என்னும் நகரை ஆக்ராவின் மேற்கே 35 கி.மீ. தொலைவில் அமைத்தார். இந்நகரம் கி.பி. 1569-இல் தொடங்கப் பட்டுக் கி.பி. 1574-இல் கட்டி முடிக்கப்பட்டது. இந் நகரம் பாறைகளின் நடுவில் அமைந்துள்ளது. சிவப்பு மணற்கல்லைக் கொண்டு கோட்டைச் சுவர் இங்குக் கட்டப்பட்டது. ஒழுங்கற்ற அமைப்புடைய இக்கோட்டையினுள் மசூதிகளும் அலுவலகங்களும் பூங்காக்களும் இளைப்பாறும் இல்லங்களும் குளியல் இடங்களும் கல்லறைகளும் கட்டப்பட்டன. இக் கட்டடங்கள் யாவும் அக்பரின் காலத்திலேயே கட் டப்பட்டன.

திவானி ஆம் (பொதுமக்கள் காட்சி மண்டபம்) (Diwani-Am), திவானி-காசு (Diwan-i-Khass) என் னும் கட்டடங்கள் பதேபூர் சிக்ரியில் உள்ள சிறந்த கட்டடங்கள். திவானி ஆம் மண்டபத்தில் பொது மக்கள் அமருவதற்கான வசதிகளும் அரசர் அமரும் இடமும் உள்ளன. மேலும், அரச மகளிர்கள் அமரு வதற்கான தனியிடத்தை இம்மண்டபம் கொண்டுள் ளது. திவானி காசு சதுர வடிவமான மிகப் பெரிய மண்டபம் ஆகும். இதன் நடுவில் வட்ட வடிவில் உயர்ந்த கல் மேடை உள்ளது. இதைச் சுற்றித் தூண் கள் பல உள்ளன. அரசர் இக்கல்மேடையின் மீது அமர்ந்து மக்களின் குறைகளைக் கேட்டறிவார்.



புலந்து தர்வாசா-பதேபூர்சிக்ரி

பதேபூர் சிக்ரியிலுள்ள வேறுசில கட்டடங்களும் புகழ்பெற்றவை. புலந்து தர்வாசா என்னும் நுழை வாயிலும் சோதிபாய் அரண்மனை (Jodh Bai's Palace), மாரியம் இல்லம் (Maryam's House), சுல் தானா அரண்மனை, பீர்பால் இல்லம் (Birbal's House) போன்றவையும் குறிப்பிடத்தக்கவை. இங் குள்ள கல்லறைகளுள் சிறப்பானவை சலீம் சிசுட்டிக் கல்லறையும் இசுலாம் கான் கல்லறையும் ஆகும். மேலும், பதேபூர் சிக்ரியில் பாஞ்சுமகால் (Panch-Mahal - ஐந்தடுக்குமாளிகை), குவாப்கா (Khwabgah-கனவு மாளிகை), நிமித்திகன் இருக்கை போன்ற கட்டடங்களும் கட்டப்பட்டன.

பதேபூர் சிக்ரியில் காணப்படும் சிறப்பான கட்டடங்களுள் ஒன்று சும்மா மசூதி ஆகும். இம்மசூதி வழிபடும் இடம், சுற்றுவழிப்பாதை ஆகியன அமையக் கட்டப்பட்டது. வளைவுகளும் கூரைகளின் மேல் தூண்கள் கொண்ட கூடாரங் களும் (Kiosk) அதற்கடுத்துப் பெரிய கவிகைகளும் இம்மசூதியில் உள்ளன. இம்மசூதியில் நுழைவதற்குப் பாத்சாகி தர்வாசா (Badshahi-Darwaza) என்னும் நுழைவு வாயில் வழியாக வரவேண்டும்.



பீர்பால் இல்லம் - பதேபூர் சிக்ரி


இலாகூர்க் கோட்டை, அலகாபாதுக் கோட்டை, ஆசுமீர்க் கோட்டை ஆகியன அக்பரால் கட்டப்பட்ட பிற கோட்டைகளாம். இலாகூர்க் கோட்டை, ஆக்ராக் கோட்டையைக் கட்டும் காலத்திலேயே கட்டப்பட்டது. ஆக்ராக் கோட்டை போன்ற அமைப்பையே இக்கோட்டையும் பெற்றுத் திகழ்கிறது. எனினும் கலையழகுக் குறைவுடன் இக்கோட்டை காணப்படுகிறது. அலகாபாதுக் கோட்டை கங்கையும் இயமுனையும் சேருமிடத்தில் கி.பி. 1583-இல் கட்டப்பட்டது. அக்பர் கட்டிய கோட்டைகளுள் இதுவே மிகப் பெரிய கோட்டையாகும். இக்கோட்டையில் சினானா அரண்மனை என்னும் அழகிய அரங்கே இன்று எஞ்சியுள்ளது. ஆசுமீர்க் கோட்டை கி.பி. 1570-இல் கட்டப்பட்டது. பிற கோட்டைகளைவிடச் சிறியதாக இருப்பினும் இரு சுவர்களை உடையதாக இக்கோட்டை விளங்குகிறது. இரண்டு சுவர்களுக்கு இடையில் உள்ள தூண்மண்டபம் ஈரடுக்குகளை உடையது. மேற்குறிப்பிட்ட கட்டடங்களைத் தவிர, அக்பர் காலத்தில் ஆம்பர், பிக்கானிர், சோதிபுரம், ஓர்க்கா, தாட்டியா ஆகிய இடங்களில் அரண்மனைகளும் சத்திரங்களும் கட்டப்பட்டன. சிக்கந்தரா என்னும் பூங்கா அக்பரால் அமைக்கப்பட்டது. அக்பர் காலக் கட்டடங்கள் சிவப்பு மணற்கல்லினாலும் வெண்சலவைக் கல்லாலும் கட்டப்பட்டுத் தரையும் சுவர்களும் வண்ணங்கள் தீட்டப்பட்டு, வழவழப்பு மிக்கனவாக அழகு செய்யப்பட்டன. இக்காலத்தில் இந்துக் கோயில்களின் கட்டடக்கலைப் பாணி இசுலாமியர் கட்டடங்களிலும் இசுலாமியர் கலைப்பாணி இந்துக் கோயில்களிலும் இடம்பெற்றன.

சகாங்கீர்: அக்பருக்குப் பின் அவர் மகன் சகாங்கீர் ஆக்ராக் கோட்டையில் கி.பி. 1605-இல் மொகலாயப் பேரரசரானார். இவர் கலைகளிலும் இயற்கை அழகிலும் தீராக் காதல் கொண்டவர். நுண்ணிய வண்ண ஓவியக் கலைகளில் பெரிதும் ஈடுபாடு உடையவர். இவரது காலத்தில் மொகலாய ஓவியக் கலை வளர்ச்சி அடைந்தது. இவர் தனது பெருங்காலத்தை இலாகூரிலும் காபூலிலுமே கழித்தார். இவர் செய்தித் தொடர்புகள் பெருகவும் சாலைகள் அமைக்கவும் பாடுபட்டார். தில்லியிலுள்ள 'பாரபுலா' என்னும் பாலம் இவரது காலத்தைச் சாரும். தம் தந்தையான அக்பரின் கல்லறையை இவர் மாற்றியமைத்தார். சிக்கந்தராவில் உள்ள இக்கல்லறை புகழ்பெற்றது. சதுரமான அமைப்பை உடைய இக்கல்லறை 33மீட்டர் உயரமுடையது. 107 மீட்டர் பக்கமுள்ளது. இக்கல்லறையைச் சுற்றிலும் பூங்கா உள்ளது. கல்லறை மூன்று மாடிகளை உடையது. இரண்டாம் மாடியில் அழகிய அறைகள், சிவப்பு மணற்கல்லினால் கட்டப்பட்டுள்ளன கீழ்த்தளத்தில் கூடம் ஒன்று உள்ளது. இதன் நான்கு பக்கங்களிலும் வளைவுகள் உள்ளன.

ஆக்ராக் கோட்டையின் உள்ளுள்ள முதம்மன் புர்சு (Muthamman-Burj) என்னும் இரண்டு மாடிக் கட்டடம் சகாங்கீர் காலத்தைச் சாரும். இவன் மனைவி நூர்சகான் தன் தந்தையான இதிமத்-உத்-தௌலா (Itimad-ud Daula) விற்குக் கல்லறை ஒன்றைக் கட்டினாள். இது கி.பி.1622-இல் தொடங்கப்பட்டு, 1628-இல் கட்டிமுடிக்கப்பட்டது. இக்கல்லறை ஆக்ராவிலுள்ளது.

ஓவியங்களும் அழகுடன் தீட்டப்பட்டன. பாரசீகக் கட்டட அமைப்புகள் பல இக்காலத்தில் இடம் பெற்றன.

சாசகான் ஆக்ராக் கோட்டையையும் இலாகூர்க் கோட்டையையும் மாற்றியமைத்தார். இக்கோட்டைகளின் உள்ளே பல கட்டடங்கள் மேலும் கட்டப் பட்டன. ஆக்ராவில் சிவப்பு மணற் கல்லினால்



இதிமத் - உத்-தௌலா கல்லறை - ஆக்ரா

சகாங்கீர் காலத்தில் தில்லியில் சில கட்டடங்கள் கட்டப்பட்டன. 'சௌன்சாத்கம்பா' (64 தூண்கள்) என்னும் கட்டடம் தில்லியில் நிசாமுதீன் பகுதியில் உள்ளது. இது ஒரு கல்லறைக் கட்டடம் ஆகும். நூர்சகான் காசுமீரத்திலுள்ள சிரீநகரில் (Srinagar) பதர்மசூதி (Pathar masjid) யைக் கட்டினார்.

சாசகான்: சகாங்கீர் கி.பி.1627-இல் காலமானார். சாசகான் (Shahjahan) கி.பி.1628-இல் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். இவர் கட்டடக்கலைக்குப் பெரிதும் ஆக்கமளித்தார்; சலவைக் கற்களால் கட்டடங்களைக் கட்டினார். இக்கட்டடங்கள் அலங்காரத் தோற்றத்துடனும் மனத்தைக் கவரும் வண்ணத்துடனும் அமைந்துள்ளன. நுண்ணிய வேலைப்பாடுகள் சலவைக்கற்களில் செய்யப்பட்டன. வண்ண

கட்டப்பட்ட கட்டடங்கள் பல இடிக்கப்பட்டுச் சலவைக்கற்களால் கட்டடங்கள் இவர் காலத்தில் கட்டப்பட்டன. ஆக்ராக் கோட்டையில் காசு மகால் (Khass-Mahal), மச்சி-பவன் (Machchi-Bhawan), திவானி-ஆம்(Diwan-i-Am), திவானி-காசு (Diwan-i-Khass), மோதி மசூதி (Moti-Masjid) போன்ற கட்டடங்கள் இவரால் கட்டப்பட்டன. இவையாவும் சலவைக் கற்கள் கொண்டு கட்டப்பட்டன.

காசு மகால் (Khass-Mahal) கி.பி.1636-இல் கட்டப்பட்டது. காசுமகால் என்பதற்குத் தனியார் அரண்மனை (Private Palace) என்பது பொருள். திவானி-ஆம் செவ்வக வடிவிலான முற்றத்தையும் வடக்கிலும் தெற்கிலும் நுழைவாயில்களையும் உடையது. இது மூன்று பக்கங்களிலும் சிறு அறைகளையும் மேற்குப்பக்கம் தூண்கள் அமைந்த ஒரு

பெரிய அறையையும் கொண்டுள்ளது. கி.பி. 1634–37–ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட திவானி காசு, ஒரு வெளிமுற்றத்தையும் உள்முற்றத்தையும் கொண்டது. இதன் இடையில் மற்றோர் இடை முற்றம் உள்ளது. இம்மூன்றிற்கும் வளைவு வழிகள் உள்ளன. மோதி மசூதி (முத்து மசூதி) யைக் கட்ட 7 ஆண்டுகளும் 3 இலட்சம் ரூபாயும் செலவாயிற்று. சாசகானால் ஆக்ராவில் கட்டப்பட்ட கட்டடங்களி லேயே முத்து மசூதி புகழ்பெற்றது. இம்மசூதியின் வழிபாட்டு இடம் சலவைக்கல்லால் கட்டப்பட்டது. சாசகான் தில்லியிலும் ஆக்ராவிலும் சாமி மசூதி களைக் கட்டினார்.

**தாசுமகால் (Taj Mahal):** உலகப் புகழ்பெற்ற தாசுமகால் சாசகானால் தன் அன்பு மனைவி அர்சு மத் பானுபேகத்தின் நினைவாகக் கட்டப்பட்ட கல் லறையாகும். இவள் மும்தாசு மகால் என்று பிற் காலத்தில் அழைக்கப்பட்டாள். மும்தாசு கி.பி. 1631–இல் பர்கான்பூரில் இறந்தாள். அந்நேரத்தில் சாசகான் தக்காணத்தின்மீது படையெடுப்பை மேற் கொண்டிருந்தார். மும்தாசின் சடலம் பர்கான்பூரி லிருந்து ஆக்ராவிற்குக் கொண்டுவரப்பட்டது. இக் கல்லறையைக் கட்ட சாசகான் பல கட்டடக் கலைஞர்களின் வரைபடங்களைப் பார்வையிட்டு, இறுதியில் உசுத்தாத் இசா (Ustad Isa) என்னும் பாரசீகக் கட்டடக்கலை வல்லுநரின் வரைபடத்தை ஏற்று அதன்படி மும்தாசைப் புதைத்த இயமுனை ஆற்றங்கரையில் தாசுமகாலைக் கட்டினார். இக்கட் டடத்தின் பணி கி.பி. 1632–ஆம் ஆண்டு தொடங் கியது. இவ்வழகிய கல்லறையைக் கட்ட 14 ஆண்டு கள் ஆயின என்று சிலரும் இருபத்திரண்டு ஆண்டு கள் ஆயின என்று சிலரும் கூறுகின்றனர். தாசு மகால் ஒரு பூங்காவில் அமைந்த கல்லறை. இக்கல் லறை தில்லியிலுள்ள சிக்கந்தர் லோடி கல்லறை போன்றும் உமாயூன் கல்லறை போன்றும் வளர்ச்சி பெற்றும், அவற்றை விட மிக அழகாகவும் காட்சி யளிக்கிறது. இது இயமுனை ஆற்றங்கரையில் தெற்கு வடக்காகச் செவ்வக வடிவத்தில் அமைந்துள்ளது. இதற்குத் தெற்கே பாதைகளும் பணியாளர் இல் லங்களும் உள்ளன. வடக்கே ஆற்றை நோக்கி வெண்சலவைக் கல்லால் கட்டப்பட்ட ஓர் உயர்ந்த மாடி உள்ளது. இக்கட்டடமும் பூங்காவும் சுற்றுச் சுவர் ஒன்றால் சூழப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு மூலையிலும் சிற்றரங்குகள் உள்ளன. இக்கட்டடத் தின்நடுவில் தெற்கே அழகிய வாயில் உள்ளது. நுழை வாயிலிலிருந்துதொலைவில் முற்றங்களும் கொட்டில் களும் கடைத்தெருக்களும் வெளி மனைகளும் உள்ளன. இக்கல்லறையின் உள்ளே செல்ல இரண்டு வழிகள் உள்ளன. ஆற்றின் வழியாகவும் தரையின் வழியாகவும் தாசுமகாலுக்குச் செல்லமுடியும். தாசுமகாலின் வடக்கு மூலையில் மேன்மாடியின் நடுவில் கல்லறைக் கட்டடம் உள்ளது. இக்கட்டடம் இதன் இரு பக்கத்திலும் உள்ள துணைக் கட்டடங் களிலிருந்து தனித்துக் காணப்படுகிறது. கல்லறைக் கட்டடம் 7மீட்டர் உயரமுள்ள மேடையில் அமைந் துள்ளது. இதன் கிழக்கில் சவாபு (Jawab) எனக் கூறப்படும் கட்டடம் உள்ளது. மேற்கில் ஒரு மசூதி உள்ளது. சவாபு விருந்தினர் தங்கும் விடுதியாக இருந்திருக்கவேண்டும். கல்லறை சதுர வடிவமுடை யது. கல்லறையின் மேல் உயர்ந்த தூபிகள் உள்ளன. இவை நான்கு மூலைகளில் அமைந்துள்ளன. கல்ல றையின் அடிப்பகுதியில் மும்தாசு மகாலும் சாச கானும் புதைக்கப்பட்டுள்ளனர்.



தாசுமகால் – ஆக்ரா

தாசுமகால் பலவண்ணக் கற்களாலும் விலை மிக்க கற்களாலும் கட்டப்பட்டது. பூவேலைப்பாடு களும் கறுப்புக் கற்களின் மேல் வெட்டப்பட்டுள்ள எழுத்துகளும் வெண்மையான சலவைக்கற்களும் இதன் அழகை உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

 இந்திய-இசுலாமியக் கட்டடக்கலை

சாசகான் கி.பி.1638-ஆம் ஆண்டு தனது தலை நகரை ஆக்ராவிலிருந்து தில்லிக்கு மாற்றினார். தில்லியின் ஏழாம் நகரான சாசகானாபாத்தை சாசகான் கட்டினார். இந்நகரைச் சுற்றிப் பெருஞ் சுவர் எழுப்பி 14 நுழைவாயில்களை அமைத்தார். இந்நுழைவாயில்களுள் குறிப்பிடத்தக்கவை மோரி (Mori), இலாகோரி (Lahori), ஆசுமீரி (Ajmeri) துர்க்மான் (Turkman), காசுமீரி (Kashmiri), தில்லி (Delhi) ஆகிய நுழைவாயில்களாகும்.

தில்லியின் வடக்காக இயமுனை ஆற்றங்கரையின் வலக்கரையில் இன்றும் புகழ்பெற்று விளங்கும் செங் கோட்டை சாசகானால் கட்டப்பட்டது. இக் கோட்டை கி.பி. 1639-இல் தொடங்கப்பெற்று ஒன்பது ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்டது. இக் கோட்டை நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட கோட்டை ஆகும். இக்கோட்டை ஒழுங்கற்ற எண் கோண அமைப்பையும் இரண்டு நீளமான பக்கங் களையும் கிழக்கிலும் மேற்கிலும் கொண்டது. இக் கோட்டைக்கு இரண்டு தலைவாயில்கள் உள்ளன. ஒன்று மேற்கே இருக்கும் இலாகூரி நுழைவாயில்; பிறிதொன்று தில்லி நுழைவாயில். இது தெற்கில் உள்ளது. கோட்டையின் சுவர்களும் நுழைவாயில் களும் சில கட்டடங்களும் சிவப்பு மணற்கல்லால் கட்டப்பட்டன. இக்கோட்டையின் உள்ளே படை வீரர் முகாம்கள், பணியாளர் இல்லங்கள், அரண் மனைகள், அரங்கங்கள், பூங்காக்கள், திறந்தவெளி முற்றங்கள் திவானி-ஆம் கட்டடம், அரங்க மகால் (Rangmahal - வண்ண மாளிகை), குளியலறைகள், திவானி காசு போன்ற கட்டடங்கள் உள்ளன. இவற்றுள் அரங்க மகாலும் திவானி காசும் சிறப்பு வாய்ந்தவை. திவானி காசு கட்டடம் சிறந்த அணி வேலைப்பாடுகளுடன் அழகிய வண்ணக் கற்களைப் பதித்துக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தைச் சாச கான், 'விண்ணுலகமே இதுதான்' எனப் போற்றி யுள்ளார். இக்கோட்டையின் உள்ளே உள்ள அரண் மனைகளுக்கும் குளியலறைகளுக்கும் பூங்காக்களுக் கும் நீர் வர நகாரி பாகிசுட்டு என்ற மதகுக் கட்டடம் உள்ளது. இதில் நீர் தானாகவே வந்து பிற கட்ட டங்களுக்குப் பாய்கிறது. இக்கோட்டைக்குள் சாச கான் மிகச் சிறந்த முத்து மசூதியைக் கட்டினார்.

இந்தியாவிலேயே மிகப்பெரிய மசூதியான சாமி மசூதியைச் (Jami Masjid) சாசகான் கி.பி. 1644-இல் கட்டத் தொடங்கினார். இம்மசூதி கி.பி. 1650-இல் கட்டிமுடிக்கப்பட்டது. மிக உயரமான மேடைமீது கட்டப்பட்ட இம்மசூதியின் முப்புறங்களிலும் தலை வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மசூதியின்



செங்கோட்டை - தில்லி

சுவர்களும் தரைப்பகுதியும் வெண்சலவைக் கற்களாலும் கருஞ்சலவைக் கற்களாலும் அமைக்கப்பட்டன. இம்மசூதியின் வழிபாட்டு இடம் பதினோரு வளைவுகள் உள்ள முன்புறப் பகுதியையும் அதன் இரு மருங்கிலும் நான்கு அடுக்குத் தூபிகளையும் கொண்டுள்ளது. இதனைச் சுற்றி மூன்று பெரிய குமிழ் வடிவிலான வளைகூண்டுகள் உள்ளன. இவை கறுப்பு, வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ளன.

தில்லியில் சாசகான், தம் இரு மகன்களுக்கும் கல்லறைகள் கட்டியுள்ளான். பூங்காக் கல்லறை என்பது அவற்றுள் ஒன்று. சாசகானின் மனைவியருள் ஒருத்தியான பட்க்பூரி பேகம் (Fatchpuri Begum) கி.பி. 1650-இல் தில்லியில் பட்காபூரி மசூதியைக் கட்டினாள்.

அவுரங்கசீபு (Aurangazeb) தம் தந்தை சாசகானைச் சிறையிலடைத்துத் தில்லியின் பேரரசரானார். இவரே மொகலாயப் பேரரசின் இறுதி அரசர். இவரது காலத்தில் பேரரசு அழிவை நோக்கிச்சென்றுகொண்டிருந்தது. இவர் சிறிய கட்டடங்களே கட்டியுள்ளார். அவற்றுள் ஒன்று செங்கோட்டையில் உள்ள முத்து மசூதி. ஆக்ராவில் உள்ள நசினா மசூதியும் (Nagina Masjid) இவரால் கட்டப்பட்டதென்பர். அவுரங்கசீபின் மகள் அழகுமிக்க ஒரு கட்டடத்தைத் தில்லியில் கட்டினாள். அவுரங்கசீபு அவுரங்காபாது என்னும் நகரை உருவாக்கித் தக்காணத்தின் மீது தமது கவனத்தைச் செலுத்தியதால் தில்லி தனது செல்வாக்கை இவரது காலத்தில் இழந்தது. இங்கு அவுரங்கசீபு மனைவியின் கல்லறை உள்ளது. இதனைப் பீபிகா முக்பாரா (Bibi-ka-Muqbara) என்பர். இக்கல்லறை தாசுமகால் போன்ற அமைப்பு உடையது. அவுரங்கசீபு கி.பி. 1707-இல் இறந்தபின் அவருக்கு அடுத்துவந்த அரசர்கள் வலிமையற்றவர்களாக இருந்தனர்.

**அயோத்தி நவாபுகளின் கட்டடங்கள்:** அயோத்தி நவாபுகள் இலக்னோவைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சுதந்திரமாக ஆட்சிசெய்தனர். இவர்கள் பல கட்டடங்களைக் கட்டினர். மொகலாயர் கட்டடங்களின் அமைப்புப் போன்றும் ஐரோப்பியக் கட்டடங்களின் அமைப்புப் போன்றும் இக்காலத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டன. கட்டடங்களுக்குச் செங்கற்களே பெரிதும் பயன்பட்டன. மொகலாயக் கட்டட அமைப்புகளைப் பெற்ற கட்டடம் இமாம்பார (Imambara) கட்டடமாகும். இது மசூதி, முற்றங்கள், நுழைவாயில்கள் போன்றவற்றைக் கொண்டது.



உதயபூர் அரண்மனை

நவாபின் படையில் தளபதியாக இருந்த கிளாட் அசுதின் (General Claude Hastin) என்ற பிரான்சு நாட்டு வீரன், ஐரோப்பியப் பாணியில் அமைந்த கட்டடத்தின் வரைபடத்தை உருவாக்கினான். இவனுக்காகக் கட்டப்பட்ட இக்கட்டடத்தின் பெயர் கான்சுடாண்டியா. இது இலக்னோவில் உள்ளது. நவாபு நசிருதின் ஐதரின் இரண்டு அரண்மனைகளும் சத்தார் மன்சில் (Chattar-Manzils) என்ற கட்டடமும் ஐரோப்பியக் கட்டடக் கலைப் பாணியிலமைந்த கட்டடங்களாகும். இக்கட்டடங்கள் முக்கோண வடிவிலான அடித்தளத்தையும் காரிந்தியன் தலைப்பையும் (Corinthian Capital) உரோமானிய வளைவுகளையும் ஒருங்கே கொண்டவை.

தென்னகத்தில் மைசூரில் திப்பு சுல்தான் பல கட்டடங்கள் கட்டினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது தார்யா-தெளலத்-பாகு (Darya-Daulat-Bagh). ஐதர் அலி, திப்பு சுல்தான், திப்புசுல்தான் தாய் ஆகியோரின் ஒருங்கிணைந்த கல்லறை கும்பா (Gumbaz) எனச் சொல்லப்படுகிறது. இது சதுர அமைப்பை உடையது.



திருமலை நாயக்கர் அரண்மனை - மதுரை

பிற கோட்டைகளும் அரண்மனைகளும்: இந்தியாவில் இக்காலத்தில் இருந்த இந்து அரசர்களும் தங்கள் பகுதிகளில் இந்திய இசுலாமியக் கலைப் பாணியில் பல கோட்டைகளையும் அரண்மனைகளையும் கட்டினார்கள். இராசசுத்தானில் இக்காலத்தில் பல அரண்மனைகள் கட்டப்பட்டன. மான்மந்திர் (Man mandir) என்ற அரண்மனையைக் குவாலியர் கோட்டையினுள் இராசா மான்சிங் கட்டினார். இம் மாளிகை மிக அழகாகக் கட்டப்பட்டது. இவ்வரண்மனையைத் தவிர ஆம்பர், செய்ப்பூர், பிகானீர், சோத்பூர் (Jodhpur), உதயபூர் (Udaipur), செய்சால்மர் (Jaisalmer), ஈர்க்சா (Orchha), தாடியா (Datia) போன்ற இடங்களில் உள்ள அரண்மனைகள் இக்காலத்தில் எழுந்தவையாம்.

தென்னகத்தில் இசுலாமியக் கட்டடக் கலைப் பாணியைப் பின்பற்றி விசய நகர அரசர்கள் அம்பியில் தாமரை மன்றத்தையும் (Lotus-Magal) ஐரோப்பியக் கலைப்பாணியைப் பின்பற்றி மதுரையில் திருமலைநாயக்கர் அரண்மனையையும் கட்டினர். இக் கட்டடங்கள் யாவும் பெரிதும் அழகும் கலைநுணுக்கங்களும் உள்ளனவாகக் காட்சி அளிக்கின்றன.

துணை நூல்கள்:

**Percy Brown**, Indian Architecture (Islamic Period) D.P. Taraporevala Sons & Co. Pvt. Ltd, Bombay, 1981.

**Sharma, Y.D.**, Delhi and its Neighbourhood, Published by the Director General, Archaeological Survey of India, New Delhi, 1974.

**இந்திய இணையங்கள்**: அரசாங்கப் பணிகளைச் செய்யும் ஆலோசனை நிறுவனங்கள் (Staff Agencies), துணை நிறுவனங்கள் (Auxiliary Agencies), பணி நிறுவனங்கள் (Line Agencies)ஆகியவற்றுள் பணிநிறுவனங்களின் ஒருவகையே இணையங்கள் (Corporations) எனவும், இந்திய அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டு அதனால் நடத்தப்படும் இணையம் இந்திய அரசு இணையம் (Indian State Corporations) எனவும் சொல்லப்படுகின்றன. பணி நிறுவனங்களில் மற்ற இரு வகைகளில் ஒன்றான ஆட்சித்துறைவகைப் பணிநிறுவனம்தான் (Departmental type of line agency) பொதுவாக ஆட்சி அமைப்பில் காணப்படுகிறது. இரண்டாம் வகையான சுதந்திர அல்லது தன்னுரிமை ஒழுங்குமுறைக்குழு என்பது Independent Regulatory Commission), அமெரிக்காவிலும் சில நாடுகளிலும் காணப்படுகிறது. மூன்றாம் வகையான இணைய வகைப்பணி நிறுவனங்கள் (Corporation type of line agencies), உலகப் போர்

களுக்குப் பிற்பட்ட காலத்தில் பரவலாகப் பின்பற்றப்படுகின்றன. இணையம் (Corporation) என்பதற்குச் சட்டவகையான கருத்து யாதெனில், அது ஒரே ஆளாகச் செயற்படுதற்குத் தக்கதாகச் சட்டத்தால் தோற்றுவிக்கப்பட்ட பலரடங்கிய ஒரு குழு என்பதாகும்; மேலும் அக்குழுவுக்கு நிலையான வரன்முறையும் (Permanent succession) பொதுவான முத்திரையும்(A common seal), சொத்துகளை வாங்கவும் விற்கவும் பயன்படுத்தவும், ஒப்பந்தங்களைச் செய்யவும் வழக்குத் தொடரவும்,வழக்குத் தொடரப்படவும் அதிகாரங்கள் உண்டு. அரசாங்க ஆட்சித்துறைக்கு இல்லாத ஆட்சி அதிகாரங்களும், நிதி அதிகாரங்களும் இணையங்களுக்கு உண்டு. தொழில், வாணிகத் துறைகளில் அரசாங்கம் தலையிடுதல் வேண்டும் என்ற சமநிலைச் சமுதாயக் கொள்கையின் விளைவாகத் (Policy of Socialism) தோன்றியவையே அரசு இணையங்கள் ஆகும்.

அரசாங்கத் தொழில், அல்லது வாணிக இணையங்கள் (State or Government Corporations) ஒரு சட்டமன்றத்தின் சட்டத்தினால் தோற்றுவிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மருத்துவ ஆய்வுக் கழகம் (Medical Research Council – தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1928), அரச நிலங்களின் ஆணையாளர் (Commissioners for Crown Lands, 1927), பிரிட்டிசு கடல்கடந்த வான்வழிப் போக்குக் கழகம் (British Overseas Airways Corporation, 1946) முதலியவை எல்லாம் பிரிட்டிசுப் பாராளுமன்றச் சட்டங்களினால் தோற்றம் பெற்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஐக்கிய அமெரிக்க வீட்டுவசதி இணையம் (U.S. Housing Corporation) தென்னசிப் பள்ளத்தாக்கு இணையம் (Tennessee Valley Corporation, 1933), பாதுகாப்புக்குப் பொருள் வழங்கும் இணையம் (Defence Supplies Corporation, 1940) முதலியவை அமெரிக்கப் பாராளுமன்றமாகிய காங்கிரசின் சட்டங்களால் தோற்றுவிக்கப்பட்டன. இந்திய இணையங்கள், இந்திய இருப்பு வங்கி (Reserve Bank of India, 1934), மறுகுடியிருப்பு நிதி இணையம் (Rehabilitation Finance Corporation, 1948), தாமோதரப் பள்ளத்தாக்கு இணையம் (Damodar Valley Corporation, 1948),தொழில் நிதி இணையம் (Industrial Finance Corporation,1984),தொழிலாளர் அரசு உயிர் காப்புறுதி இணையம் (Industrial Employees' State Insurance Corporation, 1948), வானூர்தி இந்தியப் பன்னாட்டு இணையம் (Air India International, 1953), இந்திய அரசு வங்கி (State Bank of India), இந்திய உயிர் காப்புறுதி இணையம் (Life Insurance Corporation of India) நடுவண பொருள்சேமிப்பு இணையம் (Central Warehousing Corporation) முதலியவையெல்லாம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏழாம் அட்டவணையின்படி, பாராளுமன்றச் சட்டங்களினால் நிறுவப்பட்டும் கட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன. மேற்படி அட்டவணையில் தொழில் இணையங்களை நிறுவுவதற்கும் கட்டுப்படுத்துதற்குமுரிய அதிகாரங்கள் நடுவண அரசாங்கத்துக்கு உரியனவாக ஒன்றியப்பட்டியலில் (Union List) கூறப்பட்டுள்ளன. மேற்கூறிய இந்திய இணையங்களுக்கிடையே மூலதனப் பங்குதாரர்களின் எண்ணிக்கை, இயக்குநர் குழுவின் அளவு, நிருவாகக் குழுவின் அமைப்பு, அதன் அதிகாரங்கள், ஆலோசனைக் குழுவின் பங்கு முதலியவற்றில் வேறுபாடுகள் உண்டு.

தொழில்நுட்பத் திறமையும், தொழிலை நடத்தும் திறமையும் பெற்று, மூலதன வசதி பெற்றிராதவர்களுக்குக் கடன்வசதி வழங்குதலை எளிதாக்கவும், சிலவகைப்பட்ட தொழில்களையும் வாணிகத்தையும் மேலாண்மை செய்யவும் ஏதேனுமொரு குறிப்பிட்ட நிலப்பகுதியைப் பலநோக்கு முறையில் (Multipurpose) தொழில்வளம் பெறச் செய்யவும் அரசு இணையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

இணையகங்களில் பலவகைகள் இருக்கின்றன. அரசாங்கத்தால் போடப்பட்ட பெரும்பங்கு மூலதனத்தையும், பெரும் எண்ணிக்கையில் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களடங்கிய இயக்குநர் குழுவையும் (Board of Directors) உடைய இணையங்கள் ஒருவகை; மூலதனத்தில் சிறிதளவு பங்கும், இயக்குநர் குழுவில் சில உறுப்பினர்களும் அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்பட்டும் அமர்த்தப்பட்டும் நடைபெறும் இணையங்கள் மற்றொரு வகை; சில இணையங்கள் மூலதனமும், இயக்குநர் குழு உறுப்பினர்களும் தனியார் சார்பாக இருக்க, இணையச் சட்டத்துக்கேற்ப அரசாங்க மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்குதல் பிறிதொருவகை.

இணையம் அரசாங்க ஆட்சித்துறை போலல்லாமல்(Government department) இணையச் சட்டத்தின்படி (Incorporating law) தன் உள்துறைச் செயல்களில் (Internal Matters), வெளியிலுள்ள வேறெந்த அதிகாரியின் ஆணைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல், தானாகவே தன் தொழில் நோக்குகளைத் தீர்மானித்துச் செயற்படக் கூடிய தன்னுரிமை (Autonomy) பெற்றுள்ளது; இத்தகைய தன்னுரிமை ஆட்சித்துறைக்கு இல்லை; அது ஆட்சித்துறைத் தலைமை அதிகாரியும் (அவர் ஓர் அமைச்சர்), சட்டமன்றமும் விதிக்கும் விதிகளுக்குச் சிறிதும் பிறழாமல், பொறுப்போடு பணிசெய்தல் வேண்டும்.

எனவே, ஆட்சித் துறைகள சட்டமன்றத்தின் முழுக் கட்டுப்பாட்டிலிருக்க, இணையங்கள், சட்டத்தின்படி ஓரளவேனும் தன்னுரிமையோடிருக்கின்றன. நாட்டு அரசாங்கத் தலைவருக்கு அல்லது நிருவாகத் தலைவருக்கு (Executive head) இணைய இயக்குநர்களை, அமர்த்தவும் நீக்கவும் கூடிய அதிகாரமும் இணையகத்தின் பொதுக் கோட்பாட்டைச் செயற்படுத்துவதற்குத் தக்க ஆணைகளை இணையத்துக்கு வழங்கும் உரிமையும், இணையம் செயற்படும் முறையைப் பற்றிய செய்திகளையும் அறிக்கைகளையும் அதனிடமிருந்து பெறும் உரிமையும் ஆகிய மூவகை உரிமைகள் இருக்கின்றன. ஆகையால் இணையங்கள், அரசாங்கத்தினுடைய அல்லது அமைச்சருடைய ஓரளவு கட்டுப்பாட்டுக்கே (limited control) உட்பட்டவை. இணையங்களின் உள்துறை மேலாண்மை (Management of Internal affairs), உள்துறை ஆட்சிமுறை முதலியவற்றில் அரசாங்கம் தலையிடுதல் இல்லை ஆட்சித் துறையானது, பாராளுமன்றம் தனது வரவு செலவுச் சட்டத்தில் (Budget) செய்துள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டுத்தான் செலவு செய்தல் வேண்டுமே தவிர, பாராளுமன்றத்தின் உடன்பாடு இன்றி எத்தொகையையும் திரட்டவோ, செலவழிக்கவோ இயலாது. ஆட்சித்துறைகள் இவ்வாறு நிதித்துறையைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இணையங்கள் அவை தொடங்கப்படும் காலத்தில் தான் சிறிதளவு நிதி பாராளுமன்றத்தால் வழங்கப்படுகிறது. பின்னர் அவை தங்களுக்கு வேண்டிய வரவுசெலவுத் திட்டத்தைத் தாங்களே வரைந்து கொள்ளவும், தங்களுடைய வரவுகளையும் (Earnings) ஊதியங்களையும் தாங்களே நிருவாகம் செய்து கொள்ளவும், தங்களுக்குத் தேவைப்படும் கடன்களைத் தாங்களே எழுப்பிக் கொள்ளவும் கூடிய முழு உரிமைகளைப் பெற்றுள்ளன; தமக்கு மேலும் பணம் தேவைப்படும்போது, அவை பண உதவிக்காகச் சட்டமன்றத்தை அணுகினால்தான் சட்டமன்றம் அவற்றின் நிதித்துறையில் தலையிடுகிறது. அவைகளுக்குத் தேவையான பணம் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்பின்மூலம் வழங்கப்படுவதில்லை. இணையத்தின் செயற்பாடு பற்றிப் பாராளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர் விடைகூறும்போது, வரம்புக்குட்பட்ட 3 துறைகளைப் பற்றி மட்டுமே விடை அளிப்பார். இணையத்தில் பணிசெய்வோர், அரசுப் பொதுப்பணிக் கழகத்தாரால் (Public Service Commission) ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதில்லை; பணிமுதுமையினடிப்படையிலல்லாமல் (Seniority of Service) தகுதியினடிப்படையில்தான் இணையங்களில் பதவி உயர்வு, பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. மேலும் அரசாங்க ஆட்சித் துறையானது, செயற்படும்போது அரசாங்கத்தின் விதிகளுக்கேற்ப நெகிழ்ச்சியற்ற முறையில், (Rigid) செயற்படுகின்றது. தொழிலிணையங்களும் வாணிக இணையங்களும் தங்களுடைய நோக்கங்களுக்கேற்பப் பொருள்களை வாங்குதல், விற்றல், ஒப்பந்தக்காரர்களுக்குப் பணிகளை அளித்தல் முதலிய வற்றில் வளைந்து கொடுக்கும் இயல்போடு (Flexible) விதிகளைப் பின்பற்றுகின்றன. ஆட்சித் துறைகளைப் போன்று, இணையங்களின் கணக்குகள் அரசாங்கத் தணிக்கைக்கு (Governmental Audit) உட்பட்டவை அல்ல; மாறாக அவை (தனியார் வாணிக இணையங்களின் கணக்குகளைப் போன்று), வாணிகத் தணிக்கைக்கு (Commercial Audit) உட்பட்டவை. இவ்வகைத் தணிக்கையில் இணையத்துக்குக் கிடைக்கும் ஊதியம், நட்டம், வீண்செலவு, நிதிவசதி முதலியவையெல்லாம்ஆராயப்படுகின்றன. இணையம் ஒரு தனியார் தொழிற்கழகத்தைப் போலச் (Private business concern) செயற்பட்டாலும், இரண்டுக்குமிடையே ஒரு வேறுபாடு உண்டு; அரசாங்க இணையம் தனியார் இணையத்தைப் போல ஊதியம் பெறும் நோக்கத்துக்காக மட்டும் நடத்தப்படவில்லை; இதனால், அது நட்டமடையும்படி செயற்படுதல் வேண்டுமென்பது பொருளன்று; அது பொது நலன்களைக் காப்பாற்றும் நோக்கத்துடனேதான் நடத்தப்படுகிறபடியால், ஊதியம் பெறுதல் மட்டும் அதனுடைய முதல் நோக்கம் அன்று; அது நாளாவட்டத்தில் ஊதியமோ நட்டமோ இன்றித் தன் முயற்சியில் பணிசெய்யுமாறு திறன்பெறுதல் வேண்டும்.

பொதுவாக இவ்விதிகளை ஒட்டியே அமெரிக்க, பிரிட்டிசு, இந்திய அரசு இணையங்கள் பணிசெய்யுமாறு அமைக்கப்பட்டுள்ளன. இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றிய 1956-ஆம் ஆண்டின் இந்திய அரசு வங்கிச் சட்டத்தின்படி (State Bank of India Act 1956), ஓர் அரசாங்க வணிக இணையம் நிறுவப்பட்டது. அதற்கு மேலே குறிப்பிடப்பட்ட எல்லா இணையங்களின் உரிமைகளும் உண்டு. இவ்வங்கியின் தொழில்களையும் செயல்களையும் பொதுவாக மேலாண்மை செய்து இயக்கும் அதிகாரம், ஒரு நடுவண இயக்குநர் குழுவிடம் (Central Board of Directors) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் 15 உறுப்பினர்களுள் ஒருவர் ஆளுநர் (Governor), மூவர் துணை ஆளுநர்கள் (Deputy Governors), ஒருவர் அரசாங்க அதிகாரி, நால்வர் மேற்படி சட்டத்தின் வழிவகுக்கப்பட்ட நான்கு உட்பிரிவுக் கழகங்களின் (Local Boards) சார்பாளர்கள்; இவர்கள் யாவரும் நடுவண அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டவர்களேயாவர். ஆளுநரும் இரு துணை ஆளுநரும்

முழு நேர ஊதியம் பெறுகிற 5 ஆண்டுகளுக்கு அமர்த்தப்பட்ட, மறுமுறையும் பதவியிலமர்த்தப்படு தற்குத் தகுதியுடைய உறுப்பினர்கள் ஆவர்; அவர் கள் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளவும் பேச வும் செய்யலாம்; ஆனால் வாக்களித்தல் இயலாது. மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 முதல் 6 ஆண்டுகள் வரை ஆகும். ஆனால் அவர்களும் பதவி நீட்டிப்புக்கு உரியவரே. நடுவண குழுவின் விதிகளுக்கு இணங்க, ஆளுநர் அதன் பணிகளையும் அதிகாரங் களையும் கையாளுதல் கூடும். நாட்டின் மேற்குப் பகுதிக்கான உட்பிரிவுக் கழகம் பம்பாயிலும், கிழக்குப் பகுதியின் உட்பிரிவுக் கழகம் கல்கத்தாவிலும், வட பகுதி உட்பிரிவுக் கழகம் கான்பூரிலும், தென்பகுதி உட்பிரிவுக் கழகம் புதுதில்லியிலும் நடுவண அரசாங் கத்தால், உட்பிரிவுக் கழகம் ஒன்றுக்கு 5 உறுப்பினர் வீதம் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுறுப்பினர்கள், அந் தந்த நிலப் பகுதியின் சார்பாளராகவும், அவற்றின் பொருளாதார நலனுக்குகந்த சார்பாளராகவும், அவற்றிலுள்ள மற்ற வங்கிகளின் சார்பாளராகவும் இருக்கின்றனர். நடுவண, உட்பிரிவுக் கழகங்களின் உறுப்பினர்கள் நடுவண, மாநில அரசாங்கங்களில் ஊதியம் பெறும் பணியாளராகவோ, திருப்பிச் செலுத்த இயலாத கடனாளிகளாகவோ (Insolvent debtors), சித்த சுவாதீனமற்றவராகவோ, யாதானும் ஒரு வங்கியில் இயக்குநராகவோ இருப்பின் அவர் களை நடுவண அரசாங்கம் உறுப்பினர் பதவியி லிருந்து நீக்கும்.

இந்திய அரசின் மற்றொரு முக்கியமான இணைய மாகிய தாமோதர ஆற்றுவெளி இணையம், பாராளு மன்றத்தின் 1948-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அமைக் கப்பட்டது. அதனுடைய நோக்கம், தாமோதர ஆறு பாயும் பீகார், மேற்கு வங்காள மாநிலங்களின் நிலப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் அளித்தல், மின்சாரம் உண்டாக்குதல், அதன்மூலம், தொழில்களை நிறுவு தல் முதலியவற்றின் வாயிலாகத் தொழில்வளம் பெருகச் செய்தல் ஆகும். இக்கழகத்தின் ஆட்சி யாளராகிய குழுவில் ஒரு தலைவரும் இரண்டு உறுப் பினர்களும் உள்ளனர். இந்த ஆறு பாயும் இரு மாநிலங்களின் அரசாங்கங்களைக் கலந்துகொண்டு நடுவண அரசாங்கம் இவர்களை அமர்த்துகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், இவ்விணையத்தின் ஒப் பந்தங்களோடு தொடர்புடையவர்கள் முதலியோர் உறுப்பினராகும் தகுதி உடையவரல்லர். நடுவண அரசாங்கம் இந்த இணையத்துக்கு ஒருமுதன்மைச் செயலாளரையும் (Chief Secretary) நிதி அறிவுரை யாளரையும் (Financial Adviser) அமர்த்துகிறது. செயலாளர்தாம், இணையத்தின் முக்கிய நிருவாக அதிகாரியாவர். இணையமானது தனக்குத் தேவைப் படும் ஆலோசனைக் குழுக்களை அமைத்துக் கொள் ளுதல் இயலும். இந்த இணையத்துக்குத் தனியான நிதி (Fund) உண்டு. அதில்தான் இதற்குரிய வரவு களெல்லாம் செலுத்தப்பட்டும், அதிலிருந்துதான் இணையம் செய்யும் செலவுகளுக்கெல்லாம் பணம் எடுக்கப்பட்டும் வருகின்றன. இந்த இணையத்துக்குத் தேவைப்படும் மூலதனத்தை, இணையத்தில் பங்கு கொள்ளும் நடுவண அரசாங்கமும், பீகார், மேற்கு வங்காள மாநில அரசாங்கங்களும் சில விகிதங்களில் அளிக்கின்றன; இணையம் நிறைவேற்ற வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் இவ்விணையத்தைத் தோற்று வித்த பாராளுமன்றச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன; இணையம் பொதுவாகப் பாசனம், மின் ஆற்றல், வெள்ளக்கட்டுப்பாடு முதலிய திட்டங்களை நிறை வேற்றுதல் வேண்டும். இது நடுவண அரசாங்கத் தின் ஒப்புதலுடன் வெளியில் கடன் வாங்கலாம். இது, தான் நிறைவேற்றும் திட்டங்களிலிருந்து ஊதி யம் தேடுதல் வேண்டும். அதனுடைய ஊதியங்கள் தனியார் இணையங்களின் ஊதியங்களைப் போல வருமான வரி விதிப்புக்கு உட்பட்டவை. தேய்வுக் கும் (Depreciation) ஒதுக்கீட்டுக்கும் (Reserve), மற்ற இனங்களுக்கும் ஊதியத்திலிருந்து செலுத்தப்பட்ட பின்னர், வளர்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைக்கும் மிச்ச ஊதியம் (Net profits), ஒவ்வொரு திட்டத்துக் கும் ஆன செலவுக்கு மூன்று பங்காளிகளும் அளித் துள்ள மூலதனப் பங்குக்கு ஏற்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. இதுபோலவே ஏற்படும் நட்டத் துக்கும் பங்காளிகள் ஈடுசெய்தல் வேண்டும். ஒவ் வோராண்டிலும் அக்டோபர் மாதத்தில் இணையத் தின் நிதி ஆலோசனையாளர், சட்டப்படி விதிக்கப் பட்ட ஒரு படிவத்தில் இணையத்துக்கு அடுத்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை வரைதல் வேண்டும். இத்திட்டம் மூன்று அரசாங்கங்களின் சட்ட மன்றங்களின் ஆய்வுக்கு அளிக்கப்படுதல் வேண் டும். இணையத்தின் எல்லா உறுப்பினர்களையும், நிதி ஆலோசகரையும், செயலாளரையும் அமர்த்துவதற் கும் இதனுடைய வளர்ச்சிக் கொள்கையைப் பற்றி இணையத்துக்குத் தேவைப்படும் ஆணைகளை விடுப் பதற்கும், இதற்குத் தேவைப்படும் மூலதனத்தை வழங்குதற்கும் இது எழுப்பும் கடனுக்கு ஒப்புதல் அளித்தற்கும் மூன்று அரசாங்கங்களின் சட்டமன்றங் களும் உதவி செய்ய வேண்டும். இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியைக் (Auditor-General of India) கலந்து கொண்டுதான் இவ்விணையம் தன் கணக்கு முறைகளை வைத்தல் வேண்டும். இவ்விணையத் தோடு தொடர்புடைய மாநில அரசாங்கங்களின் ஒப்புதலுடன்தான் இது கால்வாய்களையும் கிளைக் கால்வாய்களையும் அமைத்தல் வேண்டும். இணை யம் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவுற்ற ஆறு மாத காலத்துக்குள், தான் முந்தைய ஆண்டில் நிறை

வேற்றிய பாசனம், நீர் வழங்குதல், மின் ஆற்றல், வெள்ளக்கட்டுப்பாடு, நீர்வழிப்போக்கு, காடுவளர்ப்பு, மண் அரிப்பு, நிலங்களைப் பயன்படுத்தல், குடி பெயர்ந்தோருக்கு மறுகுடியிருப்பு, துப்புரவு, மக்களுடைய பொருளாதார, சமூக நல்வாழ்வு ஆகிய 11 வகைத் திட்டங்களைப் பற்றிய உண்மையான ஆண்டறிக்கையை வரைந்தளித்தல் வேண்டும். அதே போல இணையம் ஓராண்டில் தேடிய வருமானம், செய்த செலவு, மூலதனச் செலவு (Capital Cost) முதலியவற்றைக் காட்டும் அறிக்கையை அரசாங்கத்துக்கு அனுப்புதல் வேண்டும். இவ்வகையில் அரசாங்கம் இணையத்தின்மீது தனது கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது. நடுவண அரசாங்கத்தின் நீர்ப்பாசன, மின் ஆற்றல் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இது இருக்கிறது. இவ்விணையம் தனது திட்டங்களைச் சரிவர நிறைவேற்றவில்லை என்றும், பெருமளவில் அதனுடைய நிதி வீண்செலவு செய்யப்பட்டுள்ளது என்றும், பாராளுமன்றத்தின் மதிப்பீட்டுக்குழு (Estimates Committee) தன் ஐந்தாம் அறிக்கையில் சுட்டிக்காட்ட, அவற்றை ஆராயப் பாராளுமன்றம் ஒரு குழுவை அமர்த்திற்று. குழு ஆராய்ந்து சில குறைபாடுகளை உண்மையென்று கூறியும், மற்றவற்றிலிருந்து இணையத்தை விடுவித்தும் அறிக்கை அளித்தது. இணையங்கள் திறம்படச் செயலாற்றுதற்கு அவற்றுக்கு மேலாண்மைத் துறையில் (Sphere of Management) கூடுதலளவு தன்னுரிமை இருத்தல் வேண்டுமென்ற கருத்துப் பரவலாக இருக்கிறது.

துணை நூல்கள்:

**Robson, W.A.**, Nationalized Industry and Public Ownership, George Allen & Unwin Limited, London, 1960.

**Gorwala, A.D.**, Report on the Efficient Conduct of State Enterprises, Planning Commission, New Delhi, 1951.

**இந்திய இரயில்வேக்கள்** ஆசியாவிலேயே மிகப் பெரிய அமைப்புடையதாகவும், உலகிலேயே நான்காவது பெரிய அமைப்புடையதாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு நாளும் இந்திய இரயில்வேக்கள் ஒரு கோடிப் பயணிகளையும், 6,55,000 கண்டி (Tonnes)பொருள்களையும் 11000 இரயில்களில், நாட்டின் பல பகுதிகளுக்கும் சுமந்து செல்கின்றன. இவை நாள்தோறும் 13இலட்சம் கிலோ மீட்டர் பாதையைக் கடக்கின்றன. மொத்தப் பொருள்கள் சுமப்பில் 80 சதவீதம் பொருள்களையும், மொத்தப் பயணிகளுள் 60 சதவீதம் பயணிகளையும் இரயில் போக்குவரத்துச் சுமந்து செல்கிறது. நாட்டுடைமை ஆக்கப்பட்டவற்றுள் மிகப் பெரிய நிறுவனமாக இது அமைந்துள்ளது. இந்திய இரயில்வேக்களில் 5896 கோடி உரூபாய் மூலதனமிடப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் சராசரி 2138 கோடி உரூபாயாகும். இந்திய இரயில்வேக்கள்தாம் நாட்டின் மிகப்பெரிய வேலை வாய்ப்பை அளிப்பனவாகும். இரயில்வேக்களில் பணிபுரிவோரின் எண்ணிக்கை 17 இலட்சம் ஆகும். இந்தியா விடுதலை பெற்ற பிறகு இரயில்வேக்கள் மிகவும் முன்னேறி உள்ளன.

**இரயில்வேக்களின் தோற்றமும் வளர்ச்சியும்:** இந்தியாவில் முதல் இரயில் பாதை, பம்பாய்க்கும் தானாவிற்குமிடையே 22 கல்கள்தூரம் அமைக்கப்பட்டது. முதல் இரயில் போக்குவரத்து, கி.பி. 1853-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள், 16-ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்த இரயில் 14 இரயில் பெட்டிகளில் 400 பயணிகளைச் சுமந்து 33.6.கி.மீ. தொலைவு சென்றது. ஆனால், கி.பி. 1858-ஆம் ஆண்டிற்குப் பிறகே இரயில் போக்குவரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இரயில் போக்குவரத்துப் பற்றிப் பம்பாயைச் சுற்றிச் சில கல்கள் தொலைவில் வசித்த மக்களைத் தவிர, கி.பி.1857-ஆம் ஆண்டுவரை நாட்டின் பிற பகுதிகளில் இருந்த மக்கள் அறிந்திருக்கவில்லை. விடுதலைப் போராட்டம் நாட்டின் போக்குவரத்து வளர வேண்டிய இன்றியமையாமையை உணர்த்தியது. அதனால், கி.பி.1871-ஆம் ஆண்டு நாட்டின் பல பகுதிகளையும் இணைத்துப் போக்குவரத்து வசதி செய்யப்பட்டது. ஆங்கிலேயத் தனியார் நிறுவனங்கள், இங்கு இரயில் போக்குவரத்தில் முதலீடு செய்தன. சில பகுதிகளில் அரசே போக்குவரத்தை நிருவகித்தது. அக்வொர்த்துக் குழு 1921-இல் படிப்படியாக இரயில் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கக் கோரியது. கிழக்கு இரயில்வே 1925-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலும், பர்மா இரயில்வே 1929-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலும், கிழக்குப் பஞ்சாபு இரயில்வே 1930-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலும் நாட்டுடைமை யாக்கப்பட்டன. மேலும் அக்வொர்த்துக் குழு, இரயில்வே நிதியைப் பொது நிதியிலிருந்து பிரிக்கும் படி பரிந்துரை செய்தது.

இந்திய இரயில்வேக்கள் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை, இரயில் மண்டலங்களின் பெயர்கள், தலைமையிடம், தண்டவாள நீளம் ஆகியவற்றை விளக்கும்.

அமைப்பு: இரயில் அமைச்சகந்தான், இரயில் நிருவாகத்தின் தலைமையிடம் ஆகும். ஆனால், நிருவாகம் 'இரயில்வே குழு' என்று சொல்லப்படும் ஐவர்

| மண்டலம் | தலைமையிடம் | தண்டவாள நீளம் (கி.மீ.) |
|---|---|---|
| மத்திய இரயில்வே | பம்பாய் | 6684.01 |
| கிழக்கு இரயில்வே | கல்கத்தா | 4201.94 |
| வடக்கு இரயில்வே | தில்லி | 10971.76 |
| வடகிழக்கு இரயில்வே | கோரக்பூர் | 5163.31 |
| வடகிழக்கெல்லை இரயில்வே | கௌகாத்தி | 3628.13 |
| தெற்கு இரயில்வே | சென்னை | 6702.53 |
| மத்திய தெற்கு இரயில்வே | செகந்திராபாத்து | 6552.16 |
| தென்கிழக்கு இரயில்வே | கல்கத்தா | 7039.37 |
| மேற்கு இரயில்வே | பம்பாய் (சர்ச்சு கேட்டு) | 10296.46 |

குழுவால் நிருவகிக்கப்படுகிறது. இந்தக் குழுவில் தலைமை அதிகாரி, இரயில்வே நிதிகளைக் கட்டுப் படுத்தும் ஆணையர், மேலும் மூன்று உயர் அதிகாரி கள் இருப்பர்.

**பயணிகள் வகுப்பு:** முன்பு, பயணிகள் பயணம்செய்ய 4 வகுப்புகள் இரயில் பெட்டிகளில் இருந்தன. அவை முறையே முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, இடைப் பட்டவகுப்பு, மூன்றாம் வகுப்பு ஆகும். இப்போது பழைய இரண்டாம் வகுப்பும், இடைப்பட்ட வகுப்பும் நீக்கப்பட்டு, பழைய மூன்றாம் வகுப்பு 1974 ஏப்பிரல் திங்களிலிருந்து இரண்டாம் வகுப்பு எனக் கூறப்படு கிறது. இரண்டாம் வகுப்பில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதால் இவர்களுக்கு வேண்டிய வசதிகளை இரயில்வே நிரு வாகத்தினர் செய்து கொடுக்கின்றனர். இரண் டடுக்கு, மூன்றடுக்குத் தூங்கும் வசதியுடைய பெட்டி கள் இவர்களுக்காக முக்கிய இரயில்களில் இணைக்கப் படுகின்றன.

**நிதி:** இரயில் போக்குவரத்து, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை ஆதாயம் பயப்பதாய் நடைபெறவில்லை. நீண்டகாலமாக இரயில்வே நிதி பொது நிதியோடு இணைக்கப்பட்டிருந்தது. இரயில்வே நிதி 1925-26-இல் பொது நிதியினின்று பிரிக்கப்பட்டது. ஆதாயத்தில் 1/5 பகுதியையும், மூலதனத்தில் 1 விழுக்காட்டினையும் இரயில்வே நிதியிலிருந்து பொது நிதியில் சேர்ப்பிக்க வேண்டு மென முடிவு செய்யப்பட்டது. பொது நிதிக்கு முத லீட்டில் 4 விழுக்காடு அளிக்க வேண்டுமென 1949-இல் முடிவு செய்தனர். ஆண்டுதோறும் 15 கோடி உரூபாய் தேய்மான நிதியாக ஒதுக்கி, இரயில்வே முன்னேற்ற நிதியை ஏற்படுத்தி, வருவாயில்லாத ஆனால் தேவையான இடங்களில் ஏற்படும் ஆதாயக் குறைவை ஈடுகட்ட வழிவகை செய்யப்பட்டது. பயணிகளுக்கு வசதிகள் செய்துகொடுக்கவும் தொழி லாளிகள் நலனுக்குச் செலவிடவும் இரயில் பாதை களைப் புதுப்பிக்கவும் இதனால் நிதி கிடைத்தது. இரயில்வே மரபுக் குழு (Railway Convention Committee) 1954-இல், 1960 வரை பொது நிதிக்கு இரயில்வே நிதியிலிருந்து அளிக்கும் தொகையில் மாற்றம் தேவையில்லை எனப் பரிந்துரை செய்தது. மேலும் தேய்மான நிதிக்கு 35 கோடி உரூபாய் ஒதுக்க வேண்டும் எனவும், வருவாயில்லாத பாதை களுக்கும் ஊழியர்களின் வீட்டு வசதிக்கும் பயணி களின் வசதிகளைப் பெருக்குதற்கும், வளர்ச்சி நிதியி லிருந்து செலவிட வேண்டுமெனவும் பரிந்துரை செய்தது. மரபுக் குழு 1960-இல் பொது நிதிக்கு ஆதாயத்தில் $4\frac{1}{2}$ விழுக்காடு அளிக்கவும், இரயில் பாதைகளின் பாதுகாப்புப் பணிகளில் ஏற்படும் இழப்பைப் பொது நிதி ஏற்கவும், தேய்மான நிதிக்கு 70 கோடி உரூபாய் ஒதுக்கவும் பரிந்துரைகளை வழங்கிற்று. இப்போது பொது நிதிக்காக முதலீட்டில் $4\frac{1}{2}$ விழுக்காடு இரயில் நிதியிலிருந்து பெறப்படுகிறது. இரயில்வே நிதியில் கிடைக்கும் உபரி ஆதாயத்தை இரு நிதிகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். ஒன்று முன்னேற்ற நிதி (Development Fund) ஆகும். இதனைப் பயணிகள் வசதிகளுக்காகவும் ஆதாய

நோக்கோடு அமையாத திட்டங்களுக்காகவும் பயன் படுத்துவர். மற்றொரு நிதியைத் தேய்மானச் சேமிப்பு நிதி (Depreciation Reserve Fund) என்பர். முன்னேற்றத் திட்டங்களுக்கும் சீரமைப்பிற்கும் இதனைச் செலவிடுவர். இதுவே முக்கிய நிதியாகும். சீரமைப்பிற்குப் பெருந்தொகை செலவிட வேண்டி இருப்பதால், இப்போது இந்நிதியின் அளவை உயர்த்தி வருகின்றனர். இந்நிதி 95 கோடி உருபாயாக 1969–70–இல் இருந்ததை, 1970–71– இல் 100 கோடி உருபாயாக உயர்த்தி உள்ளனர்.

இந்திய இரயில் போக்குவரத்தின் நிதி நிலைமை, நாட்டின் வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிகளைப் பொறுத்தே அமையும். மூன்று நிதி யாண்டுகள் (1966–67 முதல் 1968–69 வரை) வறட்சி யினாலும் தொழில் வளர்ச்சி குன்றியமையாலும் பற்றாக்குறை ஆண்டுகளாயின. போக்குவரத்து வரவினம்1950–51–இலிருந்து 1969–70 வரை 3½மடங்கு உயர்ந்தது. பயணிகள் போக்குவரத்து வரவினம், பொருள்கள் போக்குவரத்து வரவினத்தை விடக் குறைவாகவே இருந்தது. இவை முறையே 2½ மடங்கும் 4 மடங்குமாக இருந்தன. மேலும் குறைந்த அளவு வருவாய் தரும் நிலக்கரி, சிமெண்டு, உணவுப் பொருள்கள், உரம், உப்புப் போன்ற பொருள்களின் போக்குவரத்தே பெருகியது. சாலைப் போக்குவரத்தின் முன்னேற்றம் இரயில் போக்குவரத்தைப் பாதித்தது எனலாம். செலவினம் 1950–51 முதல் மிகவும் பெருகியது. நிருவாகச் செல வும், எரிபொருள் செலவும் மிகுதியாயின. பொது நிதிக்குத் தன் பங்கைச் செலுத்திய பின் 1950–51–இல் உபரி ஆதாயம் 15 .1 கோடி உருபாயாகவும் 1955–56 –இல் 14.2 கோடி உருபாயாகவும் இருந்தது. இது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் 32 கோடி உருபாயாகவும், மூன்றாம் திட்டக் கால இறுதியில் 18 .5 கோடி உருபாயாகவும் ஆயிற்று. பற்றாக்குறை 1969 – 70 – இல் 12 .55 கோடி உருபா யாகும். வரவு செலவுத் திட்டத்தில் 1971–72–இல் நிகர வருவாய் 167 கோடி உருபாயாகவும், பொது நிதிக்குக் கொடுப்பது 174 கோடி உருபாயாகவும், நிகர பற்றாக்குறை 6. 87 கோடி உருபாயாகவும் இருந்தன. இதனால் 1966–67 முதல், கடன்பட வேண்டியதாயிற்று. கடனளவு 1971–72–இல் 153.60 கோடி உருபாயாகவும் உயர்ந்தது. உபரி 1972–73 –இல் 12.40 கோடி உருபாயாகும். 8 கோடி உருபாய் 1973–74–இல் துண்டு விழுந்தது. இதனால், பயணக் கட்டணமும் சரக்குக் கட்டணமும் மேலும் உயர்ந்தன.

**ஐந்தாண்டுத்திட்டங்களும் போக்குவரத்தும்:** நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்படி யாக, ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் இரயில் போக்குவரத்தை மிகுதிப்படுத்துவதற்கு முதன்மை அளிக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தில் இரயில்வே பொருள்களைச் செப்பனிடுவதற்கும் புதுமைப்படுத்துவதற்கும் முதன்மையிடம் அளிக்கப் பட்டது. பயணிகளுக்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுக்கவும் இரயில்வே தொழிலாளர்களுக்கு வீடும் வேறு பல வசதிகளும் அமைத்துக் கொடுக்க வும் வழி செய்தனர். இத்திட்டக் காலத்தில் 425 கோடி உருபாய் செலவு செய்யப்பட்டது. புதுமைப் படுத்துவதற்கும் பழுது பார்ப்பதற்கும் எஞ்சின்கள், பெட்டிகள் முதலியவற்றின் எண்ணிக்கையை மிகுதிப் படுத்துவதற்கும், 810 மைல்கள் பாதை அமைத்தற் கும், பயணிகள் வசதியைப் பெருக்குதற்கும் இந்தத்

இரயில்வேக்களின் வரவு–செலவு

| ஆண்டு | வரவு (கோடி உருபாய்) | செலவு (கோடி உருபாய்) | நிகர வருமானம் | பொது நிதிப் பங்கு | நிகர ஆதாயம்/ ஆதாயக் குறைவு |
|---|---|---|---|---|---|
| 1950–51 | 263 | 215 | 48 | 33 | 15 |
| 1960–61 | 457 | 369 | 88 | 56 | 32 |
| 1970–71 | 1,007 | 862 | 145 | 165 | –20 |
| 1980–81 | 2,624 | 2,497 | 127 | 325 | ·198 |
| 1983–84 | 4,986 | 3,628 | 1358 | 378 | –20 |

தொகை செலவிடப்பட்டது. இதனால் இரயில் போக்குவரத்து 16 விழுக்காடு மிகுந்தது. இம்மிகுதியால் 1000 எஞ்சின்கள், 4,300 பெட்டிகள், 4,200 சரக்கு வண்டிகள் ஆகியவை மிகுந்தன. பழைய பாதைகள் செப்பனிடப்பட்டன. இதனால் சரக்குப் போக்குவரத்து, 1950-51-இல், 93 மிலியன் கண்டிகளிலிருந்து 1955-56-இல் 115.9 மிலியன் கண்டிகளாக உயர்ந்தது.

இரண்டாம் திட்டக் காலத்தில் வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் உற்பத்தி பெருகியதால் போக்குவரத்துத் தேவை மிகுந்தது. எனவே விரிவுபடுத்தும் கொள்கையே இத்திட்டக் காலத்தில் பின்பற்றப்பட்டது. பொருள்களைச் செப்பனிடவும் பெரும் பணம் செலவிடப்பட்டது. இத்திட்டக்காலத்தில் 1,004 கோடி உரூபாயை மொத்தமாகச் செலவிட்டனர். ஒற்றைப் பாதையை 1907 கல்களுக்கு இரட்டைப் பாதையாக்கவும், 265 மீட்டர் அளவு அகலப்பாதை அமைக்கவும், 1300 கல்களுக்கு தீசல் (Diesal) வண்டிகள் செல்லவும், 825 கல்களுக்கு மின் இணைப்புப் பாதைகள் அமைக்கவும், 850 கல்கள் புதிய இரயில் பாதைகள் அமைக்கவும், 8000 கல்கள் பழைய பாதைகளைப் புதுப்பிக்கவும், 2250 எஞ்சின்கள், 1,14,000 இரயில் வண்டிகள், 1,07,000 பார வண்டிகள் வாங்கவும் நிதி செலவிடப்பட்டது. இதன் விளைவாகப் பொருள்களின் போக்குவரத்து 26 விழுக்காடும் பயணிகளின் போக்குவரத்து 27 விழுக்காடும் கூடியது. சரக்குப் போக்குவரத்து 115.9 மிலியன் கண்டியிலிருந்து 156.2 மிலியன் கண்டிக்கு உயர்ந்தது.

மூன்றாம் திட்டக் காலத்தில் 1581 கோடி உரூபாய் இரயில் போக்குவரத்திற்குச் செலவிடப்பட்டது. இதனால் 5,023 புதிய இரயில் வண்டிகளும் 1,150 எஞ்சின்களும் 90,447 பார வண்டிகளும் உருவாக்கப்பட்டன. மின்மயமாக 1750 கி.மீ. ஆக்கப்பட்டது. புதிய பாதை 1800 கி.மீ. போடப்பட்டது. ஒற்றைப்பாதையாக 3,230 கி.மீ. தூரம் இருந்ததை இரட்டைப் பாதையாக்கினர். பழைய பாதைகளை 5,000 மைல்கள் தூரம் புதுப்பித்தனர். சரக்குப் போக்குவரத்து 203 மிலியன் கண்டிக்கு உயர்ந்தது.

நான்காம் திட்டக் காலத்தில் 1050 கோடி உரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டது. புதிய பாதை 1,020 கி.மீ. அமைப்பதும் 1,700 கி.மீ. மின்மயமாக்குதலும், 2,800 கி.மீ. தீசல் (Diesal) எஞ்சின்கள் பொருந்திய வண்டிகள் செல்லச் செய்தலும், 6,500 இரயில் பெட்டிகள், 1,00,000 பார வண்டிகள், 1260 எஞ்சின்கள் தயாரித்தலும் இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அகலப்பாதையாக 750 கி.மீ. பாதையை 60 மிலியன் உரூபாய் செலவில் அமைத்தற்குத் திட்டமிடப்பட்டது.

ஐந்தாம் திட்டக் காலத்தில் 2,350 கோடி உரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டது. இந்திய இரயில்வேக்களின் மொத்தத் தடநீளம் 1981-ஆம் ஆண்டு இறுதியில் -61,23,967 கி.மீ. மின்மயமான பாதைகள்:

| | | |
|---|---|---|
| மீட்டர் பாதை | .. | 166.44 கி.மீ. |
| இரட்டை அகலப் பாதை | .. | 5178.42 கி.மீ. |
| மின்மயம் அல்லாத பாதைகளின் நீளம் | .. | 55894.81 கி.மீ. |

| ஐந்தாண்டுத் திட்டங்களும் இரயில் போக்குவரத்து வளர்ச்சியும் | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1950-51 | 1960-61 | 1970-71 | 31.3. 1982 வரை |
| 1. | மொத்தத் தட நீளம் | 53,600 | 56,200 | 59,800 | 61,230 |
| | மின் இணைத் தட நீளம் | 390 | 750 | 3,700 | 5,470 |
| 2. | புறப்பாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை (மிலியனில்) | 1,290 | 1,600 | 2,430 | 3,700 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | சரக்குப் போக்கு வரத்து (மிலியன் கண்டியில்) | 931 | 156 | 197 | 246 |
| 4. | மொத்த இரயில் வண்டிகள் | 8,210 | 10,620 | 11,160 | 10,920 |
| 5. | டீசல் வண்டிகள் மட்டும் | 17 | 180 | 1,170 | 2,520 |
| | மின் வண்டிகள் மட்டும் | 72 | 130 | 600 | 1,100 |
| 6. | மொத்த இரயில் பெட்டிகள் | 19,360 | 28,440 | 35,150 | 37,980 |
| 7. | சரக்கு இரயில் பெட்டிகள் | 2,05,600 | 3,07,900 | 3,84,000 | 3,92,350 |

இந்தியா விடுதலை பெற்ற காலத்திலிருந்து கடந்த 38 ஆண்டுகளாக இந்திய இரயில்வேக்கள் மிகவும் முன்னேறி உள்ளன. இரயில்வே நாட்டின் பல பாகங்களையும் இணைக்கும் ஆற்றலாக உள்ளது; நாட்டில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மிக்க அளவில் பயணிகளைச் சுமந்து செல்கிறது. இரயில்வேயின் மூலம்தான் ஆங்கில அரசு நாட்டின் பல பகுதிகளையும் இணைத்து, ஒரு தலைமையின் கீழ்ச் செயற்படச் செய்தது. நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் பகுதிகளில் இரயில்வேயின் உதவியால் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட முடிகிறது. சிறப்பாகக் கடற்கரையோரமாக உள்ள பகுதிகளில் அமைந்த தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு இரயில்வே பெருமளவில் துணைபுரிந்துள்ளது. பம்பாயில் பருத்தி ஆலைகள், கல்கத்தாவில் சணல் தொழிற்சாலைகள், பீகாரில் நிலக்கரித் தொழில், அசாமில் தேயிலைத் தோட்டத் தொழில் போன்றவை இரயில்வேயினால் வளர்ச்சி பெற்றன. தேயிலை, உப்பு, சணல் முதலிய பொருள்களுள் பெரும் பகுதி, இரயில்வேயால் கொண்டு செல்லப்படுகின்றன. இரயில்வேயின் உதவியால் இந்திய வெளிநாட்டு வாணிகம் மிகவும் முன்னேறியது. முக்கியமாகச் சாதிப்பாகுபாடற்ற சமுதாய மாற்றத்திற்கு இரயில்வே உதவி செய்தது. சாதி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாக இரயில்களில் பயணம் செய்வதால் சாதிப் பாகுபாடு குறைய வழி ஏற்பட்டது.

இப்போது இந்திய இரயில்வேக்கள் இரயில்களின் உழைப்புச் சக்தியை மிகுக்கும் நோக்கத்துடன், இரயில்களுக்குத் தேவையான கருவிகளை இந்தியாவில் உற்பத்தி செய்ய உதவும் வகையில் ஆய்வு நிறுவனத்தை (Research and Development) அரசாங்கம் நிறுவியுள்ளது. இன்றைய நிலையில் மேலைநாடுகளைப் போல் சிறந்த கருவிகளைத்தானே உற்பத்தி செய்யும் அளவிற்கு இந்தியா முன்னேறியுள்ளது. இந்திய இரயில்வேக்கள் அயல் நாடுகளிலிருந்து கருவிகளைத் தருவிப்பது 6 விழுக்காடு அளவில் குறைந்து விட்டது.

வளர்ச்சி: முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே இரயில்வேக்கள் புதுப்பிக்கப்பட்டு, மிக வேகமாக முன்னேறி வருகின்றன. இரயிலில் பயணம் செய்யும் மக்களின் எண்ணிக்கை 1950–51–இல் 1290 மிலியனிலிருந்து 1982-இல் 3,700 மிலியனுக்கு மிகுந்துள்ளது. இரயில்வேக்களின் மூலம் 1981–82இல் கொண்டு சென்ற சரக்குகளின் மொத்த மதிப்பு 1,55,09,341 உருபாய். இந்திய இரயில்வேக்களின் மொத்தச் சொத்து மதிப்பு 1981 மார்ச்சு 31–ஆம் தேதி வரை 7448.4 கோடி உருபாயாகும். இந்திய இரயில்வேக்கள் 2.65 இலட்சம் நிலையான பணியாளர்களைப் பெற்றிருக்கின்றன. டீசல் வண்டிகள் முன்பிருந்ததைவிட 141 மடங்கு மிகுதியாக உள்ளன. மின் இணைப்பு இரயில் பாதைகள் 1950–51–இலிருந்து 14 மடங்கு மிகுந்துள்ளன. நீராவி வண்டிகள், மின் வண்டிகளாகவும் டீசல் வண்டிகளாகவும் மாற்றம் செய்யப்படுகின்றன. இராசதானி விரைவு வண்டி, தில்லிக்கும் ஔராவிற்கும், தில்லிக்கும் பம்பாய்க்கும் மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் விடப்படுகிறது. இதைத் தவிர, மணிக்கு 100-இலிருந்து 110 கி.மீ. வேகத்தில் செல்லும் விரைவு வண்டிகள் பலவுண்டு. இரயில்வேக்கள் சரக்குகளைத் துரிதமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்ல

உதவுகின்றன. இப்போது இரயில்கள், தொலை தூரங்களில் சுமை மிகுந்த பொருள்களைக் கொண்டு சேர்ப்பதற்கு மட்டும் பயன்படும் வகையில் திட்டமிடப்பட்டு வருகின்றன. குறுகிய தொலைவுகளில் சரக்குகளைக் கொண்டு செல்லச் சாலைப் போக்கு வரத்து பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுமை மிகுந்த பொருள்களான உரங்கள், உணவுத் தானியங்கள், பெட்ரோலியப் பொருள்கள், இரும்பு, பல வகைக் கனி வளங்கள், சிமெண்டு, நிலக்கரி முதலிய வற்றில் 84 விழுக்காடு இரயில்வேக்களால் பற்பல இடங்களுக்கும் கொண்டுசெல்லப்படுகின்றன. மிக வேகமாகச்சரக்குகளைக் கொண்டு செல்ல விரைவு சரக்கு வண்டிகள், மிக முக்கியமான வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. மிகவேகப் போக்குவரத்துச் சேவையினால் (Quick Transit Service) முக்கியமான பொருள்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு வேகமாகச் சேர்க்கப்படுகின்றன.

பயணிகளுக்கு வசதிகள்: இன்றைய நாட்களில் பயணிகளுக்கு மிகுந்த வசதிகள் அளிக்கும் நோக்கத்துடன் இரயிலின் வேகம், போக்குவரத்து எண்ணிக்கை ஆகியவற்றை மிகுதிப்படுத்தும் வகையில் பெருத்த நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தால் செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் வகுப்புப் பயணப் பெட்டிகளில் கூட இப்போது சொகுசு சாய்மான வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட இரயில்களும் நடைமுறைக்கு வந்துள்ளன. இரயில் பயணத்தின் போதே உணவுண்ணும் வகையில் உணவுச் சாலை இணைக்கப்பட்ட இரயில் பெட்டிகளும் உள்ளன.

ஏற்றுமதிச் சக்தி: இந்திய இரயில்வேக்களின் தொழில்நுட்ப முன்னேற்றம், சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில், உள்ள இரயில்வேக்களை முன்னேற்றுவதற்கு உதவி செய்கிறது. இந்தியாவில் உற்பத்தி செய்த பல கருவிகள், பிற நாட்டு இரயில்வேக்களில் குறிப்பாக, பர்மா, இலங்கை, தாய்லாந்து, கொரியா, நைசீரியா, சௌதி அரேபியா, கிழக்கு ஆப்பிரிக்கா, இரான், இராக்கு, நியூசிலாந்து, போலந்து, துருக்கி, கனடா, பிரான்சு, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளால் பயன்படுத்தப்படுகின்றன.

சில இரயில்வே அமைப்புகள்:

1) இந்திய இரயில் தொழில்நுட்ப, பொருளாதாரச் சேவை அமைப்பு, புதுதில்லி: இந்த அமைப்பு, இந்திய இரயில்வே அமைச்சகத்தினால் கட்டுப்படுத்தப்படும். இது இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள இரயில்வே அமைப்புகளைப் பற்றித் தேவையான தொழில்நுட்பக் கருத்துகளை வழங்கும். இந்த இந்திய இரயில் தொழில்நுட்ப, பொருளாதாரச் சேவை அமைப்பு (RITES-Rail India Technical and Economic Services) முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்குத் தன்னுடைய பணியை அளிக்கிறது. இதனால் ஆப்பிரிக்க நாடுகள் பெரும் பயன்பெறுகின்றன.

2) இந்திய இரயில்வே கட்டுமானத் தொழிலகம், புதுதில்லி: நாட்டின் பல இடங்களில் இரயில் பாதை அமைப்புகள் இதனால் நிறுவப்படுகின்றன. அயல்நாடுகளுக்கும் இந்த இந்திய இரயில்வே கட்டுமானத் தொழிலகம் (Indian Railway Construction Company) தன்னுடைய சேவையை வழங்குகிறது.

3) இந்திய இரயில் பயன்படுத்துவோர் கருத்துப் பரிமாற்றக் கழகம், புதுதில்லி: இந்த அமைப்பு, இரயில்வே சேவையை நுகர்வோருக்கும் இரயில்வே நிருவாகத்தினருக்கும் இடையில் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு நிறுவனமாகும். இதுதவிர மண்டல அளவில் இரயில் பணியை நுகர்வோர் அமைப்புகளும் உள்ளன. இவ் இந்திய இரயில் பயன்படுத்துவோர் கருத்துப் பரிமாற்றக் கழகத்தில் (National Railway Users' Consultative Council) வாணிகப் பொதுமக்களும் கல்வி, சமுதாய நலத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பொதுமக்களும் இடம் பெற்றுள்ளனர்.

4) ஆராய்ச்சி, வடிவமைப்புக் கழகம், இலக்னோவு: இது 1957-இல் இரயில் போக்கு வரத்துக் கருவிகள் உற்பத்தியில் தன்னிறைவு பெற அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்த ஆராய்ச்சி, வடிவமைப்புக் கழகம் மூலம் (Research Designs Standards Organisation) இப்போது இந்திய இரயில்வேக்களால் உற்பத்தி செய்யப்பட்ட கருவிகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

5) இரயில்வே பணியாளர் கல்லூரி: வதோதரா என்னுமிடத்தில் இரயில்வே பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான இரயில்வே பணியாளர் கல்லூரி (Railway Staff College) நிறுவப்பட்டுள்ளது.

6) இந்திய இரயில்வே தொழில்நுட்ப முன்னேற்ற இரயில் பாதைக் கழகம், பூனே (Indian Railways Institute of Advanced Track Technology, Pune): இது இரயில்வே பொறியியல் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அமைப்பாகும்.

7. இந்திய இரயில்வே சிக்னல் மற்றும் தொலைபேசி இணைப்புப் பொறியியல் கழகம் (சமல்பூர்) (Indian Railways Institute of Signal Engineering and Telecommunications, Indian Railways Institute of Mechanical and Electrical Engineering, Jamalpur): இந்த அமைப்பு, இந்திய நாட்டிலும் வெளிநாட்டிலும்

உள்ள பொறியியல் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அமைப்பாகும்.

இரயில் வண்டிகளையும், அவற்றின் உதிரிப் பாகங்களையும் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சித்தரஞ்சன், வாரணாசி, பெரம்பூர், பெங்களூர், பாட்டியாலா ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

டி.எஸ்.க.

துணை நூல்கள்:

Indian Railways, Year Books 1976, 1977, 1978, 1980, 1981, 1982, 1983, Rail Bhawan, New Delhi, 1984-85.

Explanatory Memorandum on Indian Railway Budget, Rail Bhawan, New Delhi, 1984-85.

**இந்திய இராணுவம்:** உலக நாடுகள் அனைத்திலும் அவற்றிற்கான பாதுகாப்பிற்குத் தனித்தனியே பல்வேறு படைகள் உள்ளன. ஒரு நாட்டின் பாதுகாப்பில் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளும் முதலிடம் வகிப்பனவாகும். இந்தியநாட்டில் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். ஒவ்வொரு படையும் தனித்தனிப் படைத்தலைவரின் கீழ் இயங்கி வருகிறது. இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம், முப்படைகளின் ஒருங்கிணைந்த செயலுக்கு அடித்தளமாக விளங்குகிறது.

இராணுவம் என்பது பொதுவாகத் தரைப்படையைக் குறிக்கும். முப்படைகளுள் தரைப்படையே தலையாயதாகும். இந்தியாவை வேற்று நாடுகளின் படையெடுப்பினின்று பாதுகாக்கவும், உள்நாட்டில் அமைதியைப் பேணவும் எந்நேரமும் விழிப்புடன் செயற்படுவது இராணுவத்தின் கடமை ஆகும்.

உலகில் உள்ள மிகச் சிறந்த படைகளுள் ஒன்றாக இந்திய இராணுவம் கருதப்படுகிறது. இந்திய இராணுவத்தில் 8.5 இலட்சம் பேர் பணியாற்றுகின்றனர். உலகத்திலுள்ள பெரிய இராணுவங்களில் இந்திய இராணுவம் நான்காவதாகும். இந்திய இராணுவத்தில் பணி புரியும் போர் வீரன் முதலாகப் படைத்தலைவர் வரை அனைவரும் இந்தியரே ஆவர். குறிப்பிட்ட வயது, உடல், கல்வித்தகுதி உடையவர் யாவராயினும் இராணுவத்தில் சேர உரிமையுடையவராவர்.

இந்திய இராணுவம் தெற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, மையம் (Southern, Eastern, Western, Northern and Central) என ஐந்து கட்டளைகளாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கட்டளையும் (Command) ஒரு படைத்தலைவர் (Lieutenant-General) நிலையிலுள்ள அதிகாரியின் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயற்படுகிறது. ஒவ்வொரு கட்டளைப் பகுதியும் (Command) பிரதேசம் (Area) தற்சார்புச் சார் நிலைப் பிரதேசம், சார்நிலைப் பிரதேசம், (Independent Sub-Area and Sub-Area) எனப் பிரிந்து அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரதேசப் பகுதியும் படைத்துறைப் பணித்தலைவர் செனரல் தகுதியிலுள்ள அதிகாரியின் கீழ் அடங்கும். தற்சார்புச்சார்நிலைப் பிரதேசம், சார்நிலைப் பிரதேசம் ஆகியன படைப்பகுதி உயர்தலைவர் (Brigadier) தகுதியிலுள்ள அதிகாரியின் கீழ் அடங்கும்.

இந்திய இராணுவத்தில் பல்வேறு பிரிவுகளும் பணிப்பிரிவுகளும் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கன பின்வருவன: குடியரசுத் தலைவரின் மெய்காவற்படை (President's Body Guard), படைக்கலப் படைப்பிரிவு (Armoured Corps), பொறியாளர் படைப்பிரிவு (Corps of Engineers), அடையாளக் குறிப் படைப்பிரிவு (Corps of Signals), இளநிலை இராணுவப் படை (Infantry), இராணுவப் பணிப் பாதுகாப்புக் காவற்படைப் பிரிவு, இராணுவ அஞ்சல் பணிப் படைப்பிரிவு, இராணுவச் செவிலிப் பணிப் படைப்பிரிவு (Military Nursing Service), இராணுவ மருத்துவப் பணிப் படைப்பிரிவு (Army Medical Corps), இராணுவப் போர்த் தளவாடப் படைப்பிரிவு (Army Ordinance Corps), மின் மற்றும் இயந்திரப் பொறியாளர் படைப்பிரிவு (Corps of Electrical and Mechanical Engineers), இராணுவக் காவற் படைப்பிரிவு (Corps of Military Police), இராணுவ உடற்பயிற்சிப் படைப்பிரிவு (Army Physical Training Corps) புலனாய்வுப் படைப்பிரிவு (Intelligence Corps), இராணுவக் கல்விப் படைப் பிரிவு (Army Education Corps).

இந்திய இராணுவத்தில் படைத்துறைப் பணி ஆணை பெற்றவர்கள் (Commissioned rank Officers) பின்வரும் தகுதியினை உடையவர்கள். ஒருவரே இரண்டாம் நிலை படைத்துணைத்தலைவர் பதவியிலிருந்து படைத்துறைப் பணித்தலைவர் பதவி வரை உயரக்கூடும்.

(பதவி நிரலை அடுத்த பக்கத்திற் காண்க.)

இந்திய இராணுவத்தின் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. நாட்டின் பாதுகாப்புப் பற்றிய இன்றியமையாதனவெல்லாம், அரசியல் அலுவல்கள் பற்றிய அமைச்சகக் குழுவினால் முடிவெடுக்கப்படுகின்றன. அரசியல் அலுவல்கள் குறித்த அமைச்சகக் குழுவிற்குப் பிரதம மந்திரி தலைவராவார். பாதுகாப்பு அமைச்சகம், படைகளின் நிருவாகம், இயங்குமுறை ஆகியவற்றை முறைப்படுத்தி

| | |
|---|---|
| இரண்டாம் நிலைப் படைத்துணைத்தலைவர் | Second Lieutenant |
| படைத்துணைத் தலைவர் | Lieutenant |
| படைத்தலைவர் | Captain |
| படைப்பிரிவின் தனித்துறைப் பணித்தலைவர் | Major |
| துணைநிலைப் படைப் பகுதித்தலைவர் | Lieutenant Colonel |
| படைப்பகுதித் தலைவர் | Colonel |
| படைப்பகுதி உயர்தலைவர் | Brigadier |
| படைத்துறைப் பணித்தலைவர் | Major General |
| துணைநிலைத் தலைவர் | Lieutenant General |
| படைப்பெருந்தலைவர் | General |

வழி நடத்துகிறது. அரசின் கொள்கை பற்றிய முடிவுகளை முப்படைகளின் தலைமையகங்களுக்குத் தெரியப்படுத்தி, அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரச் செய்வதும், பாதுகாப்புச் செலவினங்களுக்குப் பாராளுமன்றத்தின் அனுமதியினைப் பெறுவதும் பாதுகாப்பு அமைச்சகத்தின் கடமையாகும்.

இந்தியப் பாதுகாப்பிற்கு இந்தியா செலவிடுவது (உரூபா. 18,000 கோடி) மொத்தத் தேசிய வருவாயில் ஏறக்குறைய 3.5 சதவிகிதமாகும்.

இந்திய இராணுவத்தின் செயல் திறன் வியக்கத்தக்க ஒன்றாகும். இந்திய நாடு விடுதலை அடைந்த காலக்கட்டத்தில் காசுமீர், ஐதராபாது ஆகிய இடங்களில் இராணுவம் ஆற்றிய செயல் வரலாற்றில் இடம் பெறத்தக்கது.

முதலாம் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் இந்திய நாட்டின் இராணுவத்தினர் வீரப் போர் புரிந்து புகழ் பெற்றனர். முக்கியமாக வட ஆப்பிரிக்கா, சிசிலி, இத்தாலியா, ஐரோப்பா, பர்மா ஆகிய நாட்டில் நிகழ்ந்த போர் முனைகளில் அவர்கள் செய்த அரும்பெரும் வீரச் செயல்களை உலகமே மெச்சியது.

கோவா, தமன் (Daman) தியூ (Diu) போன்ற போர்ச்சுகீசியக் குடியிருப்புகள் 1960-இல் இந்தியாவோடு மறுபடியும் சேர இராணுவம் மிகவும் உதவியது.

சீனபபடைகள் இமயமலை எல்லையில் 1962-இல் ஆக்கிரமிப்புச் செய்தபோது இந்திய இராணுவம் இன்னுயிரையும் பொருட்படுத்தாது இடர்ப்பாடுகளை எல்லாம் கடந்து நாட்டைக் காத்தது.

பாகிசுத்தான் படையெடுப்பை 1965-இல் முறியடித்து நாட்டின் புகழ்க் கொடியை உலக அரங்கில் பறக்கவிட்டது இந்திய இராணுவம். பங்களாதேசம் உருவாவதற்கு 1971-இல் உறுதுணையாக நின்று இந்தியக் கண்டத்தின் பூகோளத்தையே திருப்பி வரையஉதவியது இந்திய இராணுவம்.

இந்திய இராணுவம் போர்க்களங்களில்மட்டுமன்றி, இயற்கையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்ட காலங்களில் மக்களின் உயிர் உடைமைகளைக் காக்கவும், சாலைகள் இருப்புப் பாதைகள் ஆகியவற்றை அமைக்கவும் அரும்பாடுபட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 1977-இல் ஆந்திராவும் தமிழ் நாடும் கடும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட காலத்திலும், 1978-இல் தமிழ்நாட்டில் நடந்த விவசாயப் போராட்டக் காலத்திலும், ஆந்திராவில் இனவெறிக் கலவரங்கள் நடந்த காலத்திலும், கடந்த மூன்றாண்டுக் காலமாகப் பஞ்சாபில் நடந்து வந்த மதவெறிப் போராட்டம், தீவிரவாதிகளின் கொடுஞ் செயல்கள் ஆகியன நிகழ்ந்த காலத்திலும் இராணுவத்தினர் தம் உயிரைத் துச்சமாக மதித்து மக்களுக்கும் அரசுக்கும் தக்க உதவி செய்து உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றியது வரலாற்றில் நிலையாக இடம் பெறத் தக்கதாகும்.

இந்தியா படைக்கல உற்பத்தியில் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப முன்னேறி வருகிறது. சுதந்திர நாளின் போதும் குடியரசு நாளின்போதும் நடைபெறும் இராணுவ அணி வகுப்புகள் மலைப்பூட்டத் தக்கன.

இராணுவத்தில் செயற்கரிய செயல் புரிந்த ஆற்றலுடை மறவர்களுக்கு இந்திய அரசு பல்வேறு விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கிறது. இவ்வகை விருதுகளுள் சிறந்தது பரம வீரச்சக்கரம். இது விடுதலைக்கு முன் ஆங்கிலேயர் வழங்கிய விக்டோரியா விருதுக்குச் சமமாகும்.

இவ்விருதுகள் பரமவீரச்சக்கரம், அசோகச் சக்கரம், பரம விசிட்ட சேவா பதக்கம், மகா வீரச் சக்கரம், கீர்த்திச் சக்கரம், வீரச் சக்கரம், விசிட்ட சேவா பதக்கம் எனப் பலதிறப்படும். எஸ்.பி.ம.

**இந்திய இருப்புப்பாதைச் சட்டம்,** இந்திய அரசால் இயற்றப்பட்டு 1890-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் செயல்முறைக்கு வந்தது. இது அனைத்து இந்தியாவிற்கும் செல்லத்தக்கது. இது 1890-ஆம் ஆண்டைய இந்திய இருப்புப்பாதைச் சட்டம் (The Indian Railways Act 1890 - Act 9 of 1890) என்று சொல்லப்படும். இது பல தடவைகளில் திருத்தம் பெற்று இறுதியாக 1983-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது.

இருப்புப்பாதை என்ற சொல்லானது பயணிகள், விலங்குகள் சரக்குகள் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் வாகனங்கள் செல்லக்கூடிய இருப்புப் பாதையைக் குறிக்கும் என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. இருப்புப்பாதையை ஒட்டிய குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் அமைந்த நிலம், தண்டவாளம் மற்றும் அதையொட்டிய துணைக்கருவிகள், இருப்புப்பாதைக்குத் தொடர்புடைய இருப்புப் பாதை நிலையங்கள், அலுவலகங்கள், பண்டசாலை, கப்பல்துறை மேடை, பணிமனை, தொழிற்சாலை, இயந்திரங்கள், இருப்புப்பாதை நிருவாகத்துக்கு உரிமையுடைய அல்லது அந்த நிருவாகத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட, இருப்புப்பாதைப் போக்குவரத்துக்காக உள்நாட்டிலுள்ள நீர்ப்பகுதியில்அமைந்துள்ள கப்பல், தோணி, மிதவை தோணித்துறை ஆகியவைஎல்லாம் மேற்கூறிய இருப்புப்பாதை (Railway) என்றசொல்லின் விளக்கத்தில் அடங்கும்.

ஓர் இருப்புப்பாதை தொடங்கப்படும் வகைமுறை குறித்து இச்சட்டத்தின் நான்காம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியைப் படிக்கும்போது, புதிதாக ஓர் இருப்புப்பாதை அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்து முடிவு எடுப்பது இருப்புப்பாதை நிருவாகத்தின் பொறுப்பாகும் என்று கருத வேண்டியுள்ளது. ஆனால் இருப்புப்பாதை மீது செல்லக்கூடிய தொடர் வண்டிகளை இழுத்துச் செல்லக்கூடிய இயந்திரத்தை இருப்புப்பாதை நிருவாகமானது மத்திய அரசின் அனுமதியின் பேரில்தான் பயன்படுத்த வேண்டும். மேலும் மத்திய அரசால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆய்வாளர் ஆய்வு செய்து, விதி முறைகளின்படி இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், தொடங்கவிருக்கும் இருப்புப்பாதைப் போக்குவரத்தினால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏதுமில்லை என்றும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு வழங்கும் முன்அனுமதியின் அடிப்படையில்தான் இருப்புப் பாதை போக்குவரத்து தொடங்கப்பட வேண்டும். மேற்கூறிய ஆய்வாளரின் ஆய்விலிருந்து குறைபாடுகள் எவையேனும் தெரியவந்தால் அவற்றை நீக்கிய பின்னர்த்தான் இருப்புப்பாதைப் போக்குவரத்து தொடங்கப்படவேண்டும். அவ்வாறு அனுமதி வழங்கும்போது விரும்பினால் மத்திய அரசு கட்டுப்பாடுகள் விதிக்கலாம். அவ்வாறான கட்டுப்பாடுகள் நிறைவேற்றப்படாத நிலையில் மத்திய அரசு வழங்கிய அனுமதி செல்லா நிலையது ஆகும். ஏற்கெனவே இருக்கும் இருப்புப்பாதையைக் கூட்டுவது, மாற்றியமைப்பது ஆகிய செய்கைகளுக்கும் மேற்கூறிய விதி முறைகள் பொருந்தும். பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலை இருக்கிறது என்று ஆய்வாளரின் அறிக்கையிலிருந்து தெரிய வந்தால் முன்பே தொடங்கப்பட்ட இருப்புப்பாதைப் போக்குவரத்தை நிறுத்தி வைக்க மத்திய அரசு உத்தரவிடலாம். அவ்வாறு நிறுத்தப்படும் போக்குவரத்தானது குறைபாடுகளை நீக்கியபின் மறுபடியும் தொடங்கப்படலாம்.

விபத்தினால் இருப்புப்பாதைப் போக்குவரத்து தடைபட்டால் பழையபாதை சீரமைக்கப்படலாம். அல்லது இடைக்காலத்திற்கு மாற்றுப் பாதை அமைக்கப்படலாம். அவ்வாறான சூழ்நிலையில் மத்திய அரசால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆய்வாளரின் ஆய்வுக்குக் காத்திராமல் மேற்படி பாதைகளில் போக்குவரத்தைத் தொடங்கலாம். ஆனால் அவ்வாறான வேலைகளை நிறைவேற்றுவதில் பொறுப்பாக இருந்த இருப்புப்பாதை நிருவாகத்தின் பணியாள், அவ்வாறு போக்குவரத்தைத் தொடங்குவதில் ஆபத்து ஏதுமில்லை என்று எழுத்து மூலமான சான்றிதழ் வழங்கினால்தான் போக்குவரத்தைத் தொடங்கலாம்.

இருப்புப்பாதைத் தொடர்பான வேலைகளைச் செய்தல், செய்து முடிக்கப்பட்ட வேலைகளைப் பாதுகாத்தல் ஆகியவை இச்சட்டத்தின் மூன்றாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இருப்புப்பாதை அமைப்பது, அதையொட்டிய வேலைகளை நிறைவேற்றுவது தொடர்பாகக் கீழ்க்காணும் வேலைகளைச் செய்ய இருப்புப்பாதை நிருவாகத்துக்கு இச்சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வேலைகளைப் பிறருக்கு உரிமையுடைய சொத்துகளிலும் செய்யலாம். நிலம், தெரு, குன்று, பள்ளத்தாக்கு, சாலை, இருப்புப்பாதை, திராம் (Tram) பாதை, ஆறு, கால்வாய், நீரோடைகள், வடிகால், தண்ணீர்க் குழாய், வாயுக்குழாய், தந்திக்கம்பி ஆகியவற்றின் குறுக்கிலோ அடியிலோ மேலாகவோ வளைவுகள், சுரங்கப்பாதைகள், பாலங்கள், கரைகள், பாதைகள், கால்வாய்ப்பாலம், நீர்க்குழாய், தூண்கள், வடிகால்கள் ஆகியவற்றை விருப்பம்போல் இருப்புப்பாதை நிருவாகம் அமைக்கலாம். சுரங்கப் பாதைகள், பாலங்கள், பாதைகள் அமைப்பதற்காகவும் அவற்றைப்பாதுகாப்பதற்காகவும் ஆறுகள்

நீரோடைகள் அவற்றின் போக்கை மாற்றவும் செய்யலாம். அதுபோல் இருப்புப்பாதைக்கு அடியிலோ அதன் மேலாகவோ அதன் பக்கத்திலோ பொருத்தமாக அமைப்பதற்காக, ஆறுகள், நீரோடைகள், சாலைகள், தெருக்கள் ஆகியவற்றின் போக்கை மாற்றவோ அதன் தளமட்டத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். இருப்புப்பாதைக்குத் தண்ணீர் கொண்டு வரவோ அல்லது அங்கிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லவோ வசதியாக இருப்பதற்காக இருப்புப்பாதைக்கருகிலுள்ள நிலத்தில் வடிகால் குழாய்களையும் நீர்க்குழாய்களையும் அமைக்கலாம் இருப்புப்பாதை நிருவாகத்தின் விருப்பம்போல், வீடுகள் அலுவலகங்கள், பண்டசாலை, இயந்திரங்கள் முதலியவற்றை அமைக்கலாம். மேலும் இருப்புப்பாதை அமைப்பதற்காகவும் அதைப் பாதுகாப்பதற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் மாற்றுவதற்காகவும் தேவையான காரியங்களைச் செய்யலாம். மேற்கூறிய செய்கைகளைச் செய்ய இருப்புப்பாதை நிருவாகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கடங்கியது. மேலும் இச்சட்டத்தின் வாசகங்களுக்கும் நிலக்கைப்பற்றுச் சட்டத்தின் (Land Acquisition Act) வாசகங்களுக்கும் இருப்புப்பாதை நிருவாகத்துக்கும் அரசுக்குமிடையே ஒப்பந்தம் ஏதாவது இருந்தால், அதன் வாசகங்களுக்குட்பட்டும் மேற்கூறிய அதிகாரத்தை இருப்புப்பாதை நிருவாகம் பயன்படுத்த வேண்டும்.

நீர், வாயு, வடிதண்ணீர் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் குழாய்களை இருப்புப்பாதை நிருவாகம் மாற்றி அமைக்கலாம். ஆனால் தலைமை வடிநீர்க் குழாயை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றி அமைப்பதற்கு முன்னர் அவ்வாறான குழாய்கள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளனவோ அவருக்கு முன்னறிவிப்புச் செய்யவேண்டும். மேலே குறிப்பிட்ட அதிகாரத்தை, மத்திய மாநிலஅரசுகள் வசம் உள்ள சொத்துகளில் தொடர்புடைய அரசின் அனுமதியின்றிப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு அரசைத் தவிரப் பிறருக்கு உரிமையுடைய சொத்துகளில் அரசின் அனுமதியின்றி அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

இருப்புப்பாதைச் சொத்துக்கு விபத்தினால் ஏற்பட்ட சேதத்தைப் பழுதுபார்க்கவோ விபத்து ஏற்படும் போலிருந்தால் அதைத் தடுக்கவோ இருப்புப்பாதைக்கு அருகிலுள்ள சொத்தில் மத்திய அரசின் அனுமதியுடன் நுழைந்து இருப்புப்பாதை நிருவாகம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். தேவைப்பட்டால் மத்திய அரசிடம் அனுமதிபெறாமலேயே அவ்வாறு நுழையலாம். ஆனால் 72 மணி நேரத்திற்குள் மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டும். மேற்கூறியவாறு இச்சட்டத்தின் மூன்றாம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது, அடுத்தவர் சொத்துக்குச் சேதம் ஏற்பட்டால் நிலக்கைப்பற்றுச் சட்டப்படி (Land Acquisition Act) இழப்பீடு செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

ஒரு நிலத்தில் இருப்புப்பாதை அமைப்பதனால் அந்த நிலமுடையாருக்கு ஏற்படும் வசதிக்குறைவை நீக்குவதற்காகத் தேவையான வளைவு, பாலம், பாதைகள் ஆகியவற்றையும் அந்த நிலத்துக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லவும், அந்த நிலத்திலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், தேவையான கால்வாய்கள், சுரங்கபபாதைகள் முதலியவற்றையும் மாநில அரசு வேண்டும் அளவுக்கு இருப்புப்பாதை நிருவாகம் செய்து தரவேண்டும். இழப்பீட்டுத் தொகை பெற்றவருக்கு அந்த வேலைகளைச் செய்து தரவேண்டியதில்லை. இருப்புப் பாதை அமைத்துப் போக்குவரத்து தொடங்கிப் பத்து ஆண்டு முடிவடைந்த நிலையில், அவ்வாறு செய்யப்படும் வேலைகளுக்கு ஆன செலவை இருப்புப்பாதை நிருவாகம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வேலையைச் செய்யும்போது செலவை இருப்புப்பாதை நிருவாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சாலையையோ நீரோட்டத்தையோ கடப்பதற்குத் தேவையான அமைப்பை இருப்புப்பாதை நிருவாகம் அமைத்துக் கொடுத்திருந்த நிலையில், அந்த அமைப்பின்மீது கட்டுப்பாடுடையவரின் செய்கை அல்லது கவனக் குறைவினால் அந்த நீரோட்டம் அல்லது சாலையின் போக்கு மாறினால் மறுபடியும் அந்த வேலைகளை இருப்புப்பாதை நிருவாகம் செய்யக் கடமைப்பட்டது அன்று. மேற்கூறிய வேலைகளை மாநில அரசு நிருணயித்த காலம் கடந்து 14 நாட்கள் ஆகியும் இருப்புப்பாதை நிருவாகம் தொடங்காமலிருந்தாலோ அல்லது தொடங்கி வேலையைச் சரிவரச் செய்யாதிருந்தாலோ மாநில அரசு அந்த வேலையைச் செய்து அதன் செலவை இருப்புப்பாதை நிருவாகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்கூறியவாறு பாதிக்கப்பட்ட நில உரிமையாளருக்கு இருப்புப்பாதை நிருவாகம் செய்து கொடுத்த வசதி போதாது என்று தோன்றினால், மேலும் கூடுதலான வசதிகளை செய்து தருமாறு அவர் இருப்புப்பாதை நிருவாகத்தைக் கோரலாம். மாநில அரசு அல்லது உள்ளாட்சித்துறை நிருவாகம், பொதுச்சாலையையோ வேறு எந்த வேலையையோ இருப்புப்பாதை நடுவிலோ அடியிலோ மேலாகவோ செய்ய விரும்பினால், மாநில அரசின் செலவில் அதற்குத் தேவையான வேலைகளைச் செய்து தருமாறு இருப்புப்பாதை நிருவாகத்தைக் கோரலாம். அதில் கருத்து வேறுபாடு ஏற்பட்

டால் மத்திய அரசு தகுந்த முடிவு எடுக்க நேரிடும். இருப்புப்பாதை சாலைகளைக் கடக்கும் இடத்தில் தகுந்த பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்துமாறு இருப்புப்பாதை நிருவாகத்துக்கு மத்திய அரசு உத்தரவிடலாம். மேலும் அதுபோன்ற இடங்களில் இருப்புப்பாதைக்கு அடியிலோ மேலாகவோ சாலை அமைக்க வேண்டுமென்று இருப்புப்பாதை நிருவாகத்துக்கு மத்திய அரசு ஆணையிடலாம். அதற்கான செலவைச் சாலையைப் பாதுகாக்கக் கடமைப்பட்ட உள்ளாட்சித்துறை ஏற்க வேண்டும்.

இருப்புப்பாதைக்கருகில் நிற்கும் மரம் விழுந்து இருப்புப்பாதைப் போக்குவரத்தைத் தடுக்கக்கூடிய ஆபத்து இருந்தால், அவ்வாறான மரத்தையும், ஊன்றப்பட்டுள்ள சைகைக் காட்டியை மறைக்கக் கூடிய நிலையில் உள்ள மரத்தையும் குற்றவியல் நடுவர் ஆணையின்மூலம் அகற்றலாம். அவசர நிலை ஏற்பட்டால் குற்றவியல் நடுவர் அனுமதியின்றியே அத்தகைய மரத்தை இருப்புப்பாதை நிருவாகம் அகற்றலாம். அம்மரம் இருப்புப்பாதை அல்லது சைகைகாட்டி அமைக்கப்படுவதற்குமுன்பே அந்த இடத்தில் தோன்றியிருந்தால் குற்றவியல் நடுவர் ஆணையிடும் இழப்பீட்டுத் தொகையை அம்மரத்தின் உரிமையாளருக்கு இருப்புப்பாதை நிருவாகம் செலுத்த வேண்டும்.

இருப்புப்பாதைப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டிய பொருள் குறித்து இச்சட்டத்தின் 5-ஆம் பகுதி விளக்கந் தருகிறது. இருப்புப்பாதைப் போக்குவரத்துக்கான உச்சக் கட்டணம், மிகக் குறைந்த கட்டணம் ஆகியவற்றை மத்திய அரசு நிருணயிக்கும். போக்குவரத்தில் எவருக்கும் தகாத முன்னுரிமை வழங்கப்படக்கூடாது. ஆனால் பொதுமக்களின் நலனைக் கருதிக் குறிப்பிடப்பட்ட சரக்குகளை எடுத்துச் செல்வதில் தனிச் சலுகைகள் காட்ட வேண்டும் என்று ஆணையிடவும், குறிப்பிட்ட சரக்குகளை எடுத்துச் செல்லப்படும் வழி மற்றும் கட்டணம் குறித்து ஆணையிடவும் மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. மற்றொரு நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இருப்புப்பாதை மூலம் வரும் போக்குவரத்து வீணான தடையேதுமின்றித் தனது கட்டுப்பாட்டில் உள்ள இருப்புப்பாதை மூலம் செல்லுவதற்கு ஒரு நிருவாகம் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். தன் போக்குவரத்தை ஏனைய நிருவாகம் அல்லது நிருவாகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள இருப்புப்பாதை மூலம் அனுப்புவதற்கு ஓர் இருப்புப்பாதை நிருவாகம் விரும்பினால், அந்த ஏனைய நிருவாகங்களுக்கு விருப்பமுள்ள நிருவாகம் எழுத்து மூலம் அறிவிப்புச் செய்ய வேண்டும். அதில் பயன்படுத்த எண்ணியுள்ள பாதை மற்றும் கட்டண விகிதம் குறித்துக் குறிப்பிடப்பட வேண்டும். விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் அந்த அறிவிப்புக்கு மறுப்பு ஏதும் வராவிட்டால் மேற்கூறிய விருப்பமுள்ள நிருவாகம் தெரிவிக்கும் கட்டணம் மேற்கூறிய குறிப்பிட்ட காலம் முடிவடைந்தவுடன் செயல்முறைக்கு வரும். மறுப்பு ஏதும் வந்தால் அது குறித்து மத்திய அரசு முடிவு செய்யும். இருப்புப்பாதைப் போக்குவரத்து பல நிருவாகங்களுக்கு உரிமையுடைய பாதையில் செல்லும் நிலையில் நேரடிப் போக்கு வரத்துத் தடங்கல் ஏதுமின்றி நடைபெற மேற்கூறியவாறு வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு ஒன்றுக்கு மேற்பட்ட நிருவாகங்களுக்கு உரிமையுடைய இருப்புப்பாதையில் நேரடிப் போக்குவரத்துக்கு வகைசெய்யும்போது ஒரு நிருவாகம் தன்னுடைய மற்றொரு பாதையில் அதுபோன்ற நேரடிப் போக்குவரத்துக்கு வசூலிக்கும் கட்டணத்தைவிடக் குறைவாக மற்றொரு பாதையில் வசூலிக்குமாறு அந்த நிருவாகத்தை மத்திய அரசு வற்புறுத்தக்கூடாது.

போக்குவரத்தில் தகாத முன்னுரிமை வழங்கப்படுவதாகவோ நியாயமில்லாத கட்டணம் வசூலிக்கப்படுவதாகவோ எழும் முறையீடுகளை விசாரிக்க ஒரு தீர்ப்பு மன்றம் (Railway Rates Tribunal) அமைக்க இந்த 5 -ஆம் பகுதியில் வகை செய்யப்பட்டுள்ளது. அந்த மன்றத்திற்கு ஒரு தலைவரும், இரண்டு உறுப்பினர்களும் மத்திய அரசால் பணியமர்த்தப்பட வேண்டும். உச்ச அல்லது உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய அல்லது பணியாற்றும் நீதிபதிதான் அத்தலைவர் பதவிக்குப் பணியமர்த்தப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார நிலை, தொழில்நிலை அல்லது வணிக முறையில் இருப்புப்பாதை நிருவாகம் செயற்படும் முறை இவற்றில் வல்லுநர்களாக இருப்பவர்கள் உறுப்பினர்களாகப் பணியமர்த்தப்பட வேண்டும். பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். ஒருவரை இரண்டாம் தடவையாகப் பணியமர்த்தல் செய்யக்கூடாது. சரக்குகளைப் பாகுபடுத்துவது, கப்பல்துறை மேடைக்கட்டணம் (Wharfage), சரக்கைச் சரக்கு நிலையத்திலிருந்து உரிமையாளர் எடுத்துச் செல்வதில் ஏற்படும் தாமதத்துக்காக விதிக்கப்படும் கட்டணம், பயணிகள் அவர்கள் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல விதிக்கும் கட்டணம், இராணுவப் போக்குவரத்து மற்றும் இருப்புப்பாதைப் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வது தொடர்பான கட்டணம் ஆகியவை குறித்து விசாரணை செய்ய மேற்கூறிய தீர்ப்பு மன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அந்த விவகாரங்கள் தொடர்பாகவும் மத்திய அரசு விரும்

பினால் அந்தத் தீர்ப்பு மன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பலாம். அந்நிலையில் தீர்ப்பு மன்றம் விசாரணை செய்து தனது அறிக்கையை மத்திய அரசுக்கு அளிக்க வேண்டும்.

மத்திய அரசு அல்லது இருப்புப்பாதை நிருவாகத் திற்குக் கீழ்க்காணும் பொருள்கள் (Matters) குறித்து விதிகள் தயாரிக்க அதிகாரம் உண்டு. அவையாவன: இருப்புப்பாதைப் போக்குவரத்தின் வேகத்தை ஒழுங்கு படுத்துதல், பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல், பயணச் சீட்டுகளை நீக்குதல் செய்தல், ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்வது குறித்து ஒழுங்குபடுத்துதல், தொத்து மற்றும் ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டவர் களுடைய பயணம் குறித்து ஒழுங்கு படுத்துதல், இருப் புப்பாதை ஊழியர்களின் நடத்தை, இருப்புப்பாதைப் பயணம்.

இரண்டு இருப்புப்பாதை நிருவாகங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை மத்திய அரசு முடிவு செய்யும். இருப்புப்பாதை நிருவாகத் தொடர் பாக நிருவாகம் மத்திய அரசுடன் உடன்பாடு செய்து கொள்ளலாம்.

சரக்கு வண்டியில் பொருள்கள் ஏற்றிச் செல்வது குறித்த விதி இச்சட்டத்தில் விளக்கமாகக் கூறப்பட் டுள்ளது. ஒரு சரக்குப் பெட்டியில் ஏற்றிச் செல்லக் கூடிய உச்ச அளவு எடை குறித்து மத்திய அரசு முடிவு செய்யும். சரக்குகளையும் விலங்குகளையும் ஏற்றிச் செல்வது குறித்து இச்சட்டத்திற்கு முரணா காத வகையில், மத்திய அரசின் கட்டுப்பாட்டுக் கிணங்க இருப்புப்பாதை நிருவாகமானது கட்டுப்பாடு களை விதிக்கலாம், தொற்று நோயாலும் ஒட்டு நோயாலும் பீடிக்கப்பட்டுள்ள விலங்குகளை ஏற் றிச் செல்ல இருப்புப்பாதை நிருவாகம் கடமைப்பட் டது அன்று. சரக்குகள் மற்றும் விலங்குகளை ஏற்றிச் சென்றதற்கான கட்டணம் செலுத்தப்படாவிட்டால் அவற்றைப்பொது ஏலத்தில் விற்று நிருவாகத்துக்குச் சேரவேண்டிய கட்டணம், மற்றும் செலவுகளைக் கழித் துக்கொண்டு மீதியைப் பொருளின் உரிமையாளருக் குக் கொடுத்துவிட வகை செய்யப்பட்டுள்ளது. அழி யக்கூடிய பொருளாக இருந்தால் உடனே விற்றுவிட லாம். அழியக்கூடிய பொருளாக இல்லாவிட்டால் சட்டப்படி 15 நாட்கள் முன் அறிவிப்புச் செய்த பின்னர்த்தான் விற்கவேண்டும். பொருள்களை உரி மையுடையவர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லாவிட்டாலும் பொருள்களுக்கு உரிமையுடையவர் எவர் என்று தெரியா நிலையிலும் மேற்கூறியவாறு பொது ஏலத்தில் விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கைக் காரணங்களினாலும், விபத்து மற்றும் ஏனைய காரணங்களினாலும் போக்குவரத் துத் தடைப்பட்டு அதை உடனே சீர்படுத்த முடியாத நிலையில், அழியக்கூடிய பொருள்களை, முடிந்தால் உரிமையாளரிடம் செயல்முறைப் போதனை (Instructions) பெற்று, பொது ஏலத்தில் விற்று, நிரு வாகத்துக்குச் சேர வேண்டிய தொகையை எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

தேவையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட இருப் புப்பாதை நிலையத்திலிருந்து அங்கு வந்து சேரும் சரக்குகள் உடனடியாக எடுத்துச் செல்லப்படவேண் டும் என மத்திய அரசு ஆணையிடலாம். அந்த ஆணை ஆறுமாத காலத்துக்கு மட்டில் நடைமுறை யில் இருக்கத்தக்கது. மத்திய அரசு விரும்பினால் அவ் வாணையை எத்துணைமுறை வேண்டுமானாலும் நீட் டிக்கலாம். ஆனால் ஒவ்வொரு முறையும் ஆறுமாத காலத்திற்கு மேல் நீட்டிக்கக்கூடாது. அவ்வாறு அறி விக்கப்பட்ட நிலையத்திலிருந்து சரக்கு வந்து சேர்ந்த ஏழுநாட்களுக்குள் எடுத்துச் செல்லப்படாவிட்டால் அச்சரக்கைப் பொது ஏலத்தில் விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. விற்கப்பட வேண்டிய பொருள் இன்றியமையாப் பொருளாக இருந்தால், அதைப் பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்குப் பதிலாக மத்திய அல்லது மாநில அரசு அல்லது அவர் கள் பேராளர்களிடம் ஒப்படைக்க வகை செய்யப் பட்டுள்ளது. அந்நிலையில் அச்சரக்குக்குச் செலுத்த வேண்டிய தொகை, இன்றியமையாப் பொருள்கள் சட்டத்திலுள்ள வகைமுறைப்படி தீர்மானிக்கப்பட வேண்டும்.

இருப்புப்பாதை மூலம் எடுத்துச் செல்லப்படும் சரக்குகள் அல்லது விலங்குகளை ஒருவருக்கு மேற் பட்டவர் ஒப்படைக்கும்படி கோரினால், உரிமையுடை யவர் என நிருவாகம் தீர்மானிப்பவருக்கு ஈட்டுறுதி யின் (Indemnity) அடிப்படையில் அப்பொருள்கள் ஒப்படைக்கப்படலாம். ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்ல இருப்புப்பாதை நிருவாகம் கடமைப்பட்டது அன்று. இவ்விதி இராணு வப் பொருள்களுக்குப் பொருந்தாது.

எடுத்துச் செல்வதற்காக இருப்புப்பாதை நிரு வாகத்திடம் ஒப்படைக்கப்படும் சரக்குகள், விலங்கு கள் ஆகியவை முறையாக எடுத்துச் செல்லப்படாத நிலையில் ஏற்படும் விளைவுகள் குறித்து இச்சட்டத் தில் விளக்கப்பட்டுள்ளது. அவைகளில் முக்கியமான விவரங்கள் மட்டும் குறிப்பிடப்படும். ஏற்றிச் செல்லப் படும் பொருள்கள் குறித்து இரண்டு வகைக் கட்ட ணங்கள் வசூலிக்கப்படும். ஒன்று சரக்கின் உரிமை யாளரின் விளைவுக்குரிய பொறுப்பின் (At Owner's

Risk) அடிப்படையில் கட்டணம் செலுத்துவது. மற்றொன்று இருப்புப்பாதை நிருவாகத்தின் பொறுப்பில் எடுத்துச் செல்லக் கட்டணம் செலுத்துவது.

பொதுவாக இருப்புப்பாதை நிருவாகத்திடம் எடுத்துச் செல்வதற்காக ஒப்படைக்கப்படும் சரக்குகள் விலங்குகள் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் நிலையில் ஏற்படும் இழப்பு, சேதம், நட்டம், மதிப்புக் குறைதல், ஒப்படைவு செய்யத் தவறுவது ஆகியவற்றிற்கு நிருவாகம் பொறுப்பாகும். ஆனால் மேற்கூறியவைகள் ஏற்படக் கீழ்க்காணுபவைகளில் ஏதாவது ஒன்று காரணமாக இருந்தால் விதிவிலக்கு உண்டு. அவையாவன: எதிர்பாராமல் வரும் வெள்ளம், புயல் போன்ற காரணங்களினால் ஏற்படும் இழப்பு, போரினால் ஏற்படும் இழப்பு, பொதுமக்களின் எதிரிகளால் இழைக்கப்படும் இழப்பு, சட்டப்படியான நடவடிக்கைகளினால் ஏற்படும் இழப்பு, மத்திய அரசு மாநில அரசுகளினால் விதிக்கப்படும் தடைகளினால் ஏற்படும் இழப்பு, பொருளை அனுப்பியவர் அல்லது பெற்றுக் கொள்பவரின் கவனக்குறைவினால் ஏற்படும் இழப்பு, இயற்கையாகவே ஏற்படக்கூடிய இழப்பு, நெருப்பு, எதிர்பாராத விபத்து ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு. மேற்கூறியவாறு விதிவிலக்கு இருந்த நிலையிலும், பொருள்களை எடுத்துச் செல்வதில் நியாயமான கவனமும், முன்னோக்கும் காட்டியதாக நிருவாகம் மெய்ப்பித்தால்தான் அது தனது பொறுப்பிலிருந்து விடுபட முடியும். ஏற்கனவே கூறியபடி அப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கு நிருவாகத்தைப் பொறுப்பாக்கும் வகையில் கட்டணம் செலுத்தியிருந்தால்தான் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகும்.

மேற்கூறிய பொருள்களை எடுத்துச் செல்வதற்காக உரிமையாளரின்பொறுப்புக்கான (Owner's Risk) கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், ஏற்பட்ட இழப்பானது நிருவாகம் அல்லது அதன் ஊழியர்களின் கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கையினால் ஏற்பட்டது என்று பொருளின் உரிமையாளர் மெய்ப்பித்தால்தான் அந்த இழப்புக்கு நிருவாகம் ஈடு செலுத்தக் கடமைப்பட்டதாகும். ஆனால் அவ்வாறான இழப்பு ஏற்பட, இருப்புப்பாதைப் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம், அல்லது கட்டாயச் சுணக்கம்தான் காரணம் என்று பொருளின் உரிமையாளர் மெய்ப்பித்தபோது, மேற்கூறிய தாமதம் அல்லது சுணக்கம் ஏற்பட நிருவாகம் அல்லது அதன் ஊழியர்களின் கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கை காரணம் அன்று என்று நிருவாகம் மெய்ப்பித்தால்தான், இழப்பீடு செய்யும் பொறுப்பிலிருந்து அது விடுபட முடியும்.

மூடப்பட்ட பெட்டிகளில் அனுப்ப வேண்டிய பொருள்களை, அனுப்புபவரின் வேண்டுகோளின்படி திறந்த பெட்டியில் அனுப்பினால் அதனால் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. ஒரு பயணியின் பயண மூட்டைக்குக் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றிருந்தால்தான் பயணமூட்டையின் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகும். மேலும் பயண மூட்டையைப் பயணி தன் கைவசத்திலேயே எடுத்துச் செல்லும் நிலையில் ஏற்படும் இழப்புக்கு, நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள்மீது கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கை என்ற குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால்தான் நிருவாகம் பொறுப்பாகும்.

நிருவாகக் காரணங்களினால் பொருள்களை வழக்கமான பாதையை விட்டுவிட்டு வேறு பாதையில் எடுத்துச் செல்ல நேரிட்டு அதனால் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. ஏற்றி வந்த சரக்குகளை நன்னம்பிக்கையின் அடிப்படையில் அசல் இரசீதைக் காட்டுபவரிடம் ஒப்படைக்கும் நிலையில், அவ்வாறு சரக்கைப் பெற்றுக் கொண்டவருக்கு உரிமை ஏதுமில்லாத நிலையிலும் நிருவாகம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. ஏற்றிச் செல்ல ஒப்படைக்கப்பட்ட சரக்குகள் சேர வேண்டிய இடத்தை அடைந்து அதாவது பயணம் முடிவடைந்து ஏழுநாட்கள் கழித்துச் சரக்குகளுக்கு ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. ஏழு நாட்களுக்குள் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகும். ஆனால் உரிமையாளரின் பொறுப்பு என்ற கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் மீது கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கை என்று குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால் தான், நிருவாகம் இழப்புக்குப் பொறுப்பாகும். ஆனால் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருள்கள், விலங்குகள், வெடிபொருள்கள், ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருள்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் பயணம் முடிவடைந்த பின் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. பயணம் முடிவடைவது என்பது, சேரவேண்டிய இடத்துக்குச் சென்றடைந்த பின்னர்த் தண்டனைக் கட்டணம் ஏதும் செலுத்தாமல் சரக்குப் பெட்டிகளிலிருந்து பொருட்களை இறக்கக்கூடிய காலம் முடிவடைந்ததைக் குறிக்கும். தண்டனைக் கட்டணம் செலுத்தாமல் இறக்கக் கூடிய காலத்துக்குள் சரக்கு பெட்டியிலிருந்து இறக்கப்பட்டிருந்தால், அச்சரக்கைத் தண்டனைக் கட்டணம் செலுத்தாமல் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லக் கூடிய காலம் முடிவடைந்தவுடன், பயணம் முடிவடைந்ததாகக் கருதப்படும்.

சேதம் விளைவிக்கக்கூடிய குறைபாடுடைய

பொருள், சரியான முறையில் கட்டப்படாத பொருள் ஆகியவற்றின் தன்மையைத்தம்முடைய மேலனுப்புக் குறிப்பில் (Forwarding Note) அனுப்பியவர் குறிப்பிட்டிருந்த நிலையில், அப்பொருள்களை ஏற்றிச் செல்கையில் ஏற்படும் சேதத்துக்கு, நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் மீது கவனக்குறைவு அல்லது தவறான நடத்தை மெய்ப்பிக்கப்பட்டால்தான் நிருவாகம் பொறுப்பாகும். சேர வேண்டிய இடத்தை அடைந்தவுடன் சரக்குகளுக்குச் சேதம் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கு இழப்பீடு செய்யும் பொறுப்பிலிருந்து விடுபட வேண்டுமானால் கீழ்க்காணும் இரண்டு குற்றச்சாட்டுகளை நிருவாகம் மெய்ப்பிக்க வேண்டும். 1. நிருவாகத்திடம் ஒப்படைக்கும்போதே சரக்குகள் குறைபாடான நிலையிலிருந்தன அல்லது சரியான முறையில் கட்டப்படாமலிருந்தன. 2. அந்தக் குறைபாடுகள் நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த இரண்டு குற்றச்சாட்டுகளை நிருவாகம் மெய்ப்பித்தாலும் கூட, நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் மீது கவனக்குறைவு அல்லது தவறான நடத்தை என்ற குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால், நிருவாகம் தனது பொறுப்பிலிருந்து விடுபட முடியாது.

கட்டணம் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட தகவலில் பொய்யான தகவல் இருக்குமேயானால் அதனால் சரக்குக்கு ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. பொறுப்பாக நேரிட்டாலும், பொய்யான தகவல் அடிப்படையில் கணக்கிடும் சரக்கின் மதிப்புக்கு அதிகமாக இழப்பீடு செலுத்த வேண்டியதில்லை. அனுப்பியவர் அல்லது பெறுநர் செய்யும் மோசடியால் சரக்குக்கு ஏற்படும் சேதத்துக்கு நிருவாகம் பொறுப்பாகாது. சரக்கைப் பெட்டியில் ஏற்றுவதும், பெட்டியிலிருந்து இறக்குவதும் சரியான முறையில் செயற்படாமலிருந்து, அதற்குச் சரக்கை அனுப்புபவர் அல்லது பெறுநர் பொறுப்பாயிருந்தால், ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. கலகம், வேலை நிறுத்தம் போன்ற காரணங்களினால் ஏற்படும் இழப்புக்கும் நிருவாகம் பொறுப்பாகாது. மேற்கூறிய வகையில் சரக்குக்கு ஏற்படும் இழப்புக்கு ஈடுகோருபவர், நிருவாகத்திடம் சரக்கு ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் எழுத்து மூலம் நிருவாகத்திடம் ஈடு கோரினால்தான் அவருக்கு ஈடு கிடைக்கும்.

ஒவ்வோர் இருப்புப்பாதைப் பெட்டியிலும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள உச்சநிலைப் (Maximum) பயணிகள் எண்ணிக்கையை நிருவாகம் முடிவு செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும். அந்த எண்ணிக்கை, பயணிகள் பெட்டியில் முக்கியமான இடத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு இருப்புப் பாதைத் தொடர்வண்டியிலும் பெண்களுக்கென்று தனிப்பெட்டி ஒதுக்கப்பட வேண்டும். சரியான கட்டணம் செலுத்தும் பயணிக்குப் பயணச்சீட்டு அளிக்கப்பட வேண்டும். அதில் கட்டணத் தொகை, பயணம் செய்யக்கூடிய வகுப்பு, பயணம் நடைபெற வேண்டிய இடங்கள் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்படவேண்டும். பயணச் சீட்டு வாங்கியவருக்குத் தொடர்புடைய இருப்புப்பாதைத் தொடர் வண்டியில் பயணம் செய்ய இடம் இல்லாத நிலையில், அந்த வண்டி புறப்பட்டுச் சென்ற மூன்று மணி நேரத்திற்குள் வேண்டப்பட்டால் முழுப்பணமும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். மேல் வகுப்பில் பயணம் செய்யப் பயணச்சீட்டு வாங்கியவர் இடமில்லாத காரணத்தால் கீழ் வகுப்பில் பயணம் செய்ய நேரிட்டால், வேறுபடும் பணம் அந்தப் பயணிக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். பயணச்சீட்டு அல்லது அனுமதிச் சீட்டு இல்லாமல் எவரும் பயணம் செய்யக் கூடாது. ஒருவர் வாங்கிய பயணச் சீட்டு அல்லது இருக்கை அல்லது படுக்கை ஒதுக்கீட்டுச் சீட்டு மற்றவருக்கு மாற்றப்படக் கூடாது. ஆனால் அதே வண்டியில் முறையாகப் பயணம் செய்பவர்கள் தங்கள் இருக்கைகள் அல்லது படுக்கைகளை மாற்றிக் கொள்வதில் தடை ஏதுமில்லை. தொத்து மற்றும் ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டுள்ள பயணி, அவருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில்தான் பயணம் செய்ய வேண்டும்.

இருப்புப்பாதைத் தொடர்வண்டிக்கு ஏற்படும் விபத்தினால் பயணிக்கு ஏற்படும் உயிரிழப்பு, காயம் பொருட்சேதம் ஆகியவைகளுக்கு நிருவாகத்தின் மீது தவறு ஏதும் இல்லாத நிலையிலும் இழப்பீடு கொடுக்க வேண்டும். அதை விசாரிப்பதற்கென்று கோரிக்கை ஆணையர்கள் (Claims Commissioners) பணியமர்த்தப்படலாம். அவரிடம் இழப்பீடு கோரும் மனுவானது, விபத்து நடந்த மூன்று மாத காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். தகுந்த காரணமிருந்தால் அக்கெடு நீடிக்கப்படலாம். இச்சட்டத்தின்படி ஒரு பயணிக்கு வழங்கப்பட வேண்டிய உச்சநிலை இழப்பீட்டுத் தொகை ஒரு லட்ச ரூபாயாகும். இவ்வகையில் இழப்பீடு பெற விருப்பமில்லாதவர் நிருவாகத்தின்மீது உரிமையியல் வழக்குத் தொடரலாம். சரக்குகளுக்கு ஏற்படும் இழப்புக்கும் உரிமையியல் வழக்குத் தொடரலாம். பயணம் தொடங்குவதும், முடிவடைவதும் ஆன இடங்கள் ஒரே நிருவாகத்தின் இருப்புப்பாதையிலிருந்தால் அந்த நிருவாகத்தின் மீது வழக்குத் தொடரலாம். அவ்விடங்கள் பல நிருவாகங்களுக்கு உரிமையான நிலையில் பயணம் தொடங்குமிடம் உள்ள நிருவாகத்

தின்மீதோ பயணம் முடிவடையும் இடமுள்ள நிருவாகத்தின் மீதோ, விபத்து நடந்த இடமுள்ள நிருவாகத்தின் மீதோ வழக்குத் தொடரலாம்.

இருப்புப்பாதை வண்டிக்கு ஏற்படும் விபத்துக் குறித்து உடனடியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டும். விபத்துக் குறித்து விசாரணை செய்ய விதிகள் தயாரிக்கப்படலாம். இருப்புப்பாதை நிருவாக ஊழியர்கள் பணித்தொடர்பான விவரங்கள், இச்சட்டத்தின் 6A பகுதியில் அடங்கியுள்ளன. உள்ளாட்சித் துறை விதிக்கும் வரிக்கு, மத்திய அரசு அனுமதியிருந்தால்தான் இருப்புப்பாதை நிருவாகம் செலுத்தக் கடமைப்பட்டது. ஒவ்வோர் இருப்புப்பாதை ஊழியனும் இந்தியத் தண்டனைச் சட்டம் 9-ஆம் பகுதி, 409-ஆம் பிரிவு ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் பொது ஊழியனாகக் கருதப்படுவான். இருப்புப்பாதைப் போக்குவரத்து, பணிமனை, இருப்புப்பாதை நிலையங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், கருவிகள், பொருள்கள் ஆகியவற்றை மத்திய அரசின் அனுமதியின்றி, நீதிமன்ற ஆணையின்படியோ உள்ளாட்சித்துறைக்குச் சேரவேண்டிய பாக்கிக்காகவோ எடுத்துச் செல்வது கூடாது. ஆனால் இருப்புப்பாதையின் வருமானத்தை நீதிமன்ற ஆணையின்படி கைப்பற்றுதல் செய்வதற்குத் தடை ஏதுமில்லை.

தண்டனைகள் குற்றங்கள் ஆகியவை இச்சட்டத்தின் 9-ஆம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. முக்கியமான கூறுகள் மட்டும் குறிக்கப்படும். இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ள தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இருப்புப்பாதை நிருவாகம் செய்யக்கூடிய தவறுகள் முதல் வகையாகும். எடுத்துக்காட்டாக மத்திய அரசின் அனுமதியின்றி, இருப்புப்பாதையைத் தொடங்குவது, வண்டிகளை இழுத்துச் செல்லும் இயந்திரத்தைப் பயன்படுத்துவது போன்ற தவறுகளுக்கு நிருவாகமானது மத்திய அரசுக்குத் தண்டத் தொகை செலுத்த நேரிடும்.

இருப்புப்பாதை ஊழியர்கள் செய்யக்கூடிய குற்றங்கள் இரண்டாம் வகையாகும். கடமையிலிருந்து தவறுவது, கடமையிலிருக்கும்போது குடிபோதையிலிருப்பது, இருப்புப்பாதை வண்டிப் போக்குவரத்துத் தொடர்பான கடமையிலிருப்பவர் தமது பணியைப் புறக்கணிப்பது, இருப்புப்பாதை வண்டி ஓடுவதில் தடை ஏற்படுத்துவது, பணியிலிருக்கும்போது மற்றவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய வகையில் விதிகளை மீறிச் செயல்களைச் செய்வது, ஏற்கனவே இருப்புப்பாதைப் பெட்டியில் உச்ச எண்ணிக்கையளவில் பயணிகள் இருக்கும் நிலையில், மேலும் பயணிகளை அப்பெட்டியில் ஏறச் சொல்வது போன்ற செய்கைகள் தண்டிக்கப்படத்தக்க குற்றங்களாகும்.

பொதுமக்கள் உட்பட எல்லோருக்கும் பொதுவான குற்றங்கள் மூன்றாம் வகையாகும். முறையான பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வது, மற்றவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெட்டி அல்லது இருக்கையில் பயணம் செய்யும் நிலையில் அதை விட்டுச் செல்ல மறுப்பது, உடனுள்ள பயணிகள் ஒப்புதலின்றிப் பெட்டியில் புகைபிடிப்பது, இருப்புப்பாதைச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பது, பயணிகளை வேண்டும் என்றே தாக்குவது, இருப்புப்பாதை வண்டிக்குச் சேதம் விளைவிப்பது, இருப்புப்பாதை ஊழியனைப் பணி செய்ய விடாமல் தடுப்பது ஆகிய செய்கைகள் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும்.

**இந்திய இனங்கள்**: வரலாற்றுத் தொடக்கக் காலத்திலிருந்தே பல்வேறு இனக்குழுக்கள் இந்திய நிலப் பரப்பிற்கு வரத் தொடங்கினர். இவர்கள் இந்தியாவின் மாறுபட்ட பல்வேறு புவியமைப்பில் பன்னெடுங் காலமாக உருவத்தோற்றத்திலும், உடற்கூற்று அமைப்பிலும் தகவமைந்து பல இனக்குழுக்களாகக் காணப்படுகின்றனர். இந்திய மக்கள் தொகையில் காணப்படும் பல்வேறு இனங்களை வகைப்படுத்தப் பலகாலக் கட்டங்களில் மானிடவியலார் முயன்றனர். இவர்களுள் ஏ.சி. ஆடன் (A.C. Haddon), எச்.எச். இரெய்சிலி (H.H. Risely), பி.எசு. குகா (B.S.Guha), எசு.எசு. சர்க்கார் (S.S. Sarkar) ஆகியோர் முதன்மையானவர்கள். இவர்கள் அனைவருமே ஒத்த வகைப்பாட்டினைக் காட்ட முற்படவில்லை.

ஏ.சி.ஆடன் இந்தியப் புவிப்பரப்பை, தக்கணம் (Deccan), இந்துசுத்தான் (Hindustan), இமயமலைப் பகுதி (The Himalayas) என்னும் மூன்று பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களைப் பல இனங்களாகப் பிரித்தார். தக்கணப் பகுதியில் நீக்ரிட்டோ (Negrito), திராவிடரின் முந்தையோர் (Pre-Dravidian), திராவிடர், தென்பகுதிய குறுகி அகன்ற தலையினர் (Southern Brachycephals), மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர் (Western Brachycephals) என்னும் ஐந்து இனங்களைக் காட்டுவார் ஆடன். நீக்ரிட்டோ இனத்தவர் தமிழகத்திலும் கேரளத்தின் திருவாங்கூர் மலைப் பகுதிகளிலும் காணப்படும் காதர் (Kadar) என்னும் தொல்பழங்குடிகள் என ஆடன் கூறுகிறார்.

திராவிடரின் முந்தையோர் இந்தியாவின் தொன்மையான மக்களாவர். இவர்கள் நீண்டு குறுகிய

தலை (Dolichocephalic), குறைந்த உயரம், அகன்ற மூக்கு, கரும் பழுப்பு முதல் கருமை நிறம் வரையுடைய தோல்முதலான உடற்பண்புகளைக் கொண்டவராவர். சந்தால் (Santal) கோண்டு (Gond), பில் (Bhil), ஒரவன் (Oraon) முதலானோர் அவ்வினத்தின் ஒருசிலராவர். திராவிட இனத்தவர்கள் நீண்டு குறுகிய தலையும், நடுத்தர மூக்கும், நடுத்தர உயரமும், பழுப்புக்கலந்த கருமை நிறத் தோலும் கொண்டிருப்பர். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலான மொழிகளைப் பேசுபவர்கள் திராவிட இனக்குழுவினருள் முதன்மையானவர்கள்

தென்பகுதிய குறுகி அகன்ற தலையினர் நடுத்தர மூக்கையும், குறுகி அகன்ற தலையமைப்பு முதல் நடுத்தரத் தலையமைப்பு வரையிலும் கொண்ட உடலமைப்பைப் பெற்றிருப்பர். இக்குழுவினரில் பனியன் (Paniyan) பழங்குடிகளும், பாவரா (Pavara) மீனவர்களும் முதன்மையானவர்களுள் சிலர்.

மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர். குசராத்து மாநிலத்திலிருந்து கூர்க்கு (Coorg) வரையிலான மேற்குக் கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்றனர். இவர்கள் குறுகிய மூக்கையும் மிதமான பழுப்பு நிறத்தையும் நல்ல உயரத்தையும் கொண்டுள்ளனர். குசராத்தின் நாகர் பிராமணர், பிரபு (Prabhu) முதலானவர்கள் இக்குழுவில் அடங்குவர்.

இந்துசுத்தான்: இப்பகுதியில் முதன்மையான வகையினராக இந்திய ஆப்கானியர் காணப்படுகின்றனர். இவர்கள் நீண்டு குறுகிய தலை, நீண்ட மூக்கு, நீண்ட முகம், நடுத்தரம் முதல் நல்ல உயரம் வரையிலான உடலுயரம், மிதமான பழுப்பு நிறத் தோல், வளைவுகளையுடைய கருத்த முடி முதலான உடற் பண்புகளைப் பெற்றிருப்பர். சாட்டுகள் (Jats) இராசபுத்திரர்கள் முதலானோர் இவ்வகையில் அடங்குவர்.

இமய மலைப் பகுதி. இப்பகுதியில் இந்திய-ஆப்கானியர், இந்திய-ஆரியர், மங்கோலியர் ஆகிய இனத்தவர்கள் காணப்படுவதாக ஆடன் கூறுவார்.

இந்திய-ஆப்கானியர் இனத்தின் பேராளிகளாகப் பால்டி (Balti) மக்கள் திகழ்கின்றனர். இந்திய-ஆரியர் இனத்தின் பேராளிகள் கானட்டுகள் (Kannets) ஆவர். இவர்களுள், குளு (Kulu) பள்ளத்தாக்கில் வாழ்பவர்கள் திபேத்திய வகையினரை ஒத்தும் இலாகோல் (Lahoul) பகுதியைச் சேர்ந்தவர்கள் சில மங்கோலியப் பண்புகளைக் கொண்டும் காணப்படுகின்றனர். மங்கோலிய இனத்தவர்கள் நேபாளம், பூட்டான், சிக்கிம் ஆகிய பகுதிகளில் பெருமளவில் காணப்படுகின்றனர்.

எச்.எச். இரைசிலி என்பார் இந்திய மக்கள் தொகையைத் துருக்கிய ஈரானியர், இந்திய-ஆரியர் சித்தியோ - திராவிடர் (Scythio-Dravidian), ஆரிய திராவிடர், மங்கோலிய - திராவிடர், மங்கோலியர், திராவிடர் என ஏழு இனங்களாக வகைப்படுத்துவார். துருக்கிய-ஈரானியர் இனத்தவர்கள் அகன்ற தலையையும் நடுத்தர மூக்கையும் கருமையான கண்களையும் 162-172 செ.மீ. உயரத்தையும் உடையவர்கள். முகத்தில் அடர்ந்த மயிரினைக் கொண்டிருப்பர். இவர்கள் பலுச்சிசுத்தானிலும் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலும் காணப்படுகின்றனர். இவ்விரு பகுதிகளும் இப்போது பாகிசுத்தானில் (Pakistan) உள்ளன. பலுச்சிசு மக்கள் (Baluchis) ஆப்கானியர் ஆகியோர் துருக்கிய ஈரானியர் வகையில் அடங்குவர். இரைசிலியின் கருத்துப்படி இவ்வினத்தவர்கள் பெர்சிய, துருக்கிய மக்களின் கலப்பினத்தவர்கள் ஆவர். இந்திய-ஆரியர் இனத்தவர்கள் துருக்கிய ஈரானியரைப் போலன்றி நீண்ட தலையைக் கொண்டவர்களாவர் இவர்களின் மூக்கு நீண்டது; கண்கள் கருமையானவை; முகம் அடர்ந்த மயிரைக் கொண்டது; இவ்வினத்தவர்கள் உயரமானவர்கள். இவர்கள் இராசபுதனம், பஞ்சாபு, காசுமீர்ப்பள்ளத்தாக்கு முதலான பகுதிகளில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். சாட்டுகள் (Jats), கத்ரிகள் (Khatris) ஆகியோர் இவ்வினத்தவருள் அடங்குவர். சித்திதோ திராவிடர்கள் நடுத்தரம் முதல் அகன்ற தலையினையும் நடுத்தர மூக்கையும் குறைந்த அளவிலான மயிரைக் கொண்ட முகத்தையும் நடுத்தர உயரத்தையும் உடையவர்கள். இந்த இனத்தவர்கள் சித்தியர் (Scythians), திராவிடர்கள் ஆகியோரின் கலப்பில் தோன்றியவர்கள். இவர்கள் கூர்க்குப்(Coorg)பகுதி முதல் குசராத்து வரையில் காணப்படுகின்றனர். ஆரிய-திராவிடர்களின் தலை நீண்டோ நடுத்தரமாகவோ இருக்கும்; மூக்கு நடுத்தரமாகவோ அகன்றோ இருக்கும்; தோலின் நிறம் இளம்பழுப்பு முதல் கருமை நிறம் வரையிலானது; சராசரி 159-166 செ.மீ. உயரமுடையவர்கள். இவ்வினத்தவர்கள் உத்தரப் பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களிலும் இராசபுதனப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள்ஆரியர், திராவிடர் கலப்பினால் தோன்றியவர்களாவர். மங்கோலிய திராவிடர்கள் நடுத்தரம் முதல் அகன்ற அமைப்பு வரையிலான தலையினையும் கருத்த தோலினையும். மயிரடர்ந்த முகத்தையும் நடுத்தர உயரத்தையும் கொண்டவர்களாவர். இவ்வினத்தவர்கள் மேற்கு வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர்.

மங்கோலிய இனத்தவர்கள் பொதுவாக அகன்ற தலையினையும் நடுத்தரம் முதல் அகன்ற அமைப்பு வரையிலான மூக்கையும் நடுத்தரத்திற்கும் கீழான

உயரத்தையும் அகன்ற முகத்தையும் மங்கோலியக் கண்களையும் கொண்டுள்ளனர். தோலின்நிறம் மஞ் சள் கலந்த பழுப்பாகும். உடல், முகம் ஆகியவற்றின் மீது மயிர் குறைவாகக் காணப்படும். இவ்வினத்தவர் கள் அசாமிலும் இமயமலைப் பகுதியைத் தொடர்ந்த நேப்பாளம், பர்மா ஆகிய நாடுகளிலும் காணப்படு கின்றனர். திராவிடர்கள் குறைந்த உடலுயரத்தைக் கொண்டவர்களாவர். இவர்களின் தலை நீண்டது; மூக்கு அகன்றது: தோலின் நிறமும் கண்களும் கரு மையானவை; இவ்வினத்தவர்கள் தென்னிந்திய மாநிலங்கள், சோட்டாநாக்பூர்ப் பகுதி, கங்கைச் சமவெளி ஆகிய பகுதிகளிலும் சிரீலங்காவிலும் பரவி யுள்ளனர். இரைசிலியின் கருத்துப்படி திராவிடர்களே இந்தியாவின் முதுகுடிகளாவர். இவர்கள் ஆரியர். சித்தியர், மங்கோலியர் முதலானவர்களால் கலப்படைந்து விட்டனர். இவரது கருத்திற்கு மானிட வியலாரிடையே வேறுபட்ட கருத்துகளுமுண்டு.

பி.எசு.குகா, இந்திய மக்களினங்களை நீக் ரிட்டோ, தொன்மை ஆசுத்திரேலியர் (Proto -Australoid), மங்கோலியர், நடுக்கடலினத்தவர்கள் (Mediterranean), மேற்பகுதிய குறுகி அகன்ற தலை யினர், நார்டிக்கு இனத்தவர்(Nordic) என ஆறு இனங் களாகப் பிரித்துள்ளார். இந்திய மக்கள் தொகையில் நீக்ரிட்டோ இனக்கூறுகள் இருத்தல் பற்றி மாறுபட்ட கருத்துகள் உள்ளன. நீக்ரிட்டோ இனத்தவரே இந்திய மண்ணிற்கு முதன் முதலில் வந்தவர்க ளென்றும் இவர்களே இந்தியாவின் மண்ணின் மைந் தர்களென்றும் பி.எசு.குகா கருதுகிறார். இவர்கள் நடுத்தரம் முதல் நீண்ட தலையினையும் குமிழ்வடி வான முன் மண்டையையும் அகன்ற, தட்டையான நேரான மூக்கினையும் குட்டையான உடல் உயரத் தையும் கரும்பழுப்பு முதல் கருமை நிறத் தோலினை யும், சுருட்டை மயிரையும் கொண்டவர்களாவர். காதர், கொச்சி, திருவாங்கூர்ப் பகுதிப் புலையர்கள் (Pulayars), இருளர், வயநாட்டுப் (Waynad) பகுதி யில் வாழும் ஆதிக்குடிகள் முதலானோர் இவ் வினத்தில் அடங்குவர். இந்திய நீக்ரிட்டோ வினர் தலை அமைப்பிலும் மயிர் அமைப்பி லும் அந்தமானியரைக் காட்டிலும் மெலனீ சியக் குள்ளர்களைப் பெரிதும் ஒத்துள்ளனர். தொன்மை ஆசுத்திரேலிய இனத்தவர்கள் நீண்டு குறுகிய தலையினையும் பெரும்பான்மையாக அகன்ற மூக்கினையும் கரும்பழுப்பு நிற உடற்றோலையும் குறைந்த உடலுயரத்தையும், பின்நோக்கி அழுந்திய முன்மண்டையையும், வளைவுடைய தலை மயிரையும் கொண்டவர்களாவர். திருவாங்கூர்ப் பகுதியிலுள்ள புலையர், ஊராளிப் (Urali) பழங்குடிகளும் பெய்கா (Baiga) செஞ்சு (Chenchu), காணிக்காரன் (Kanikaran), கந்தர் (Kondh), பில், சந்தால், ஒரவன் முதலிய பழங்குடிகளும் இவ்வினத்தவராவர். மங் கோலிய இனத்தவர்கள் முகத்திலும் உடலிலும் மிகக் குறைவான மயிரினைக் கொண்டிருப்பர். இவர்கள் கண்கள் சாய்வானவை; இரப்பை அடிமடிப்புக் கொண்டது; முகம் தட்டையானது; கன்ன எலும் புகள் எடுப்பானவை; மயிர் நேரானது, முகம் நடுத் தரமானது; தோலின் நிறம் கருமை முதல் இளம் பழுப்பு வரையிலானது.

மங்கோலிய இனத்தவர்கள் வடகிழக்குப் பகுதி வழியாக இந்தியாவிற்குள் குடியேறியவர்களாவர். இமயமலைப் பகுதியிலும் அசாம், பர்மா, சிக்கிம், பூட்டான், திபேத்துப் பகுதி முதலான இடங்களிலும் பெருமளவில் வாழ்கின்றனர். மங்கோலியர்கள், தொல் மங்கோலியர்கள் (Palaeo-Mongoloids), திபேத்து மங்கோலியர்கள் (Tibeto Mongoloids) என இருவகைப்படுவர். தொல் மங்கோலியர்களுள் நீண்ட தலையினர், அகன்ற தலையினர் என இருவகையினர் உண்டு. நீண்ட தலை வகையினருள் இமயமலைத் தாழ்பகுதி, பர்மா, முதலிய பழங்குடிகளும், அசா மின் சீமா நாகர்களும்(Sema Nagas) நேப்பாளத்தின் இலிம்புசு (Limbus) ஆகியோரும் அடங்குவர்.

அகன்ற தலைவகையினருள் கலிம்பொங்குப் (Kalimpong) பகுதி இலெப்சாப் (Lepchas) பழங்குடி யினர், சிட்டகாங்குப் பகுதியிலுள்ள சாக்மாசு (Chakmas), மாகுசு (Maghs) முதலானோர் குறிப் பிடத்தக்கவர்கள். திபேத்து மங்கோலியர்கள், பூட் டான், சிக்கிம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர்.


தொல் நடுநிலக்கடல் இனத்தவர்கள் (Palaeo-Mediterranean), நடுநிலக்கடல் இனத்தவர்கள், கீழ்ப் பகுதியினர் (Oriental) என நடுநிலக்கடல் இனத்தவர் கள் மூன்று வகையினராகப் பிரிக்கப்படுவர். தொல் நடுநிலக் கடலினத்தவர்கள் மிகத்தொன்மையான மக்களாவர்; தொன்மை எகிப்தியரை மிகவும் ஒத்துக் காணப்படுகின்றனர். இவர்கள் குறுகிய நீண்ட தலை யையும் குமிழ்வான முன்நெற்றியையும், வில்வளை வான தலை உச்சியையும் நீண்ட பின் மண்டையை யும் சிறிய, அகன்ற மூக்கையும் குறுகிய முகத்தையும் கருமைநிறத் தோலையும் நடுத்தர உயரத்தையும் கொண்டுள்ளனர். ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப் பட்ட மனித உடல் எலும்புகள் இவ்வகையினவாகும் இவர்களே இந்தியாவில் பெருங் கற்காலப் பண் பாட்டை அறிமுகப்படுத்தியவர்களெனத் தொல்லிய லார் கூறுவர். திராவிட மொழி பேசும் தென்னிந் தியர்களுள் பெரும்பான்மையோர் இவ்வினத்தவர்கள் மதுரைத் தமிழ்ப் பார்ப்பனர்கள், கொச்சிப் பகுதி நாயர்கள், தெலுங்குப் பார்ப்பனர்கள் முதலானோர் இவ்வினத்தின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளாவ

நீக்ரிட்டோ இனத்தவர்

மங்கோலி



அந்தமான் பழங்குடி



தொல் மங்கோலியர்



திபெத்து மங்கோலியர்

★ காக்கேசியர்



★



★



★

தொன்மை ஆசுத்திரேலியர்: திராவிடர்

இந்திய - ஆப்கானிய வகையினர்

நிலநடுக்கடல் இனத்தவர்கள் நீண்ட தலையினையும் வளைந்த முன்நெற்றியையும் நீண்ட முகத்தையும் குறுகிய எடுப்பான மூக்கையும் இளநிறமான தோலையும் கறுத்த தலைமயிரையும் முகத்திலும் உடலிலும் அடர்த்தியான மயிரையும் மெலிந்த உடலையும் நல்ல உயரம் முதல் நடுத்தரமான உயரத்தையும் கொண்டு காணப்படுவர். இவ்வினத் தவர்கள் உத்தரப் பிரதேசம், பம்பாய், மேற்குவங் கம், மலபார் முதலிய பகுதிகளில் பரந்து காணப்படு கின்றனர். கொச்சிப் பகுதி நம்பூதிரிப் பார்ப்பனர் கள், அலகாபாது நகரப் பார்ப்பனர்கள், இந்தூர் நகர மராட்டியப் பெண்கள், வங்கப் பார்ப்பனர்கள் இவ்வினத்தின் பண்புகளைச் சிறப்பாகக் கொண்ட வர்களாவர். கிழக்குப் பகுதியினர் நடுநிலக்கடலினத் தவர்களை மிகவும் ஒத்துக் காணப்படுகின்றனர்.

இவர்களின் மூக்கு நீண்டதும் குவிந்ததுமாகும். பஞ்சாபு, இராசபுதனம் ஆசிய பகுதிகளில் வாழும் கத்திரிகள் (Khattris), பத்தானியர் (Pathans) ஆகி யோர் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள். மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர், ஆல்பீனியர் (Alpenoid), தைனாரிக்கு (Dinaric), ஆர்மீனியர் (Armenoid) ஆகிய மூன்று இனங்களாகப் பகுக்கப்படுவர். ஆல் பினாய்டு இனத்தவர்கள் உருண்டபின்மண்டையையும் எடுப்பான முகத்தையும் வட்ட முகத்தையும் நடுத் தர உயரத்தையும் கொண்டவர்கள். உடலின்மீதும் முகத்தின்மீதும் மயிர் அடர்ந்து காணப்படும்.

இந்திய மக்கள் தொகையில் இந்த இனக்கூறு களைக் கொண்டவர்கள் குசராத்தின் பனியா (Bania), கத்தியவார்ப் பகுதியில் வாழும் காத்தியர்

(Kathias), மேற்குவங்கத்தில் வாழும் கயாசுதாவினர் (Kayasthas) ஆகியோர் ஆவர். தைனாரிக்கு இனத்த வர்களின் தலை பெரியது உருண்டையான பின் மண்டையைக் கொண்டது; மூக்கு மிக நீண்டது; பெரும்பாலும் குவிந்த அமைப்புடையது; தோல், கண் ஆகியவற்றின் நிறம் கருமையானது. இவர்கள் நீண்ட முகத்தினர்; மிக்க உயரமானவர். இவ்வினத்த வர்கள் மேற்குவங்கம், ஒரிசா, கூர்க்கு ஆகிய பகுதி யில் வாழ்கின்றனர். வங்காளப் பார்ப்பனர்கள், மைசூர்ப் பார்ப்பனர்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவர் களாவர்.

ஆல்பினோ-தைனாரிக்கு மக்கள் பலுச்சிசுத்தான், சிந்து, குசராத்து, மகாராட்டிரம் ஆகிய பகுதிகளின் வழியாகக் கர்நாடகம் முதல் சீரலங்கா வரை பரவி விட்டனர். சிந்து சமவெளிப் பகுதிகளிலும், திருநெல் வேலி, ஐதராபாது ஆகிய இடங்களிலும் இவ்வினத்த வர்கள் காணப்படுகின்றனர். ஆர்மினாய்டு இனத்த வர்கள் தைனாரிக்கு இனத்தவர்களை மிகவும் ஒத்துக் காணப்படுவர். ஆர்மினாய்டு மக்களிடையே பின் மண்டை பெரியதாகவும் மூக்கு எடுப்பானதாகவும் இருக்கும். பம்பாய்ப் பகுதி பார்சிய (Parsis) மக்கள் இவ்வினப் பண்புகளைக் கொண்டுள்ளனர். நார்டிக்கு இனத்தவர் பிதுங்கிய பின்மண்டையையும் வளை வுடைய நெற்றியையும் கொண்டிருப்பர். இவர்களின் முகம் நீண்டது; தாடைகள் வலுவானவை; மூக்கு நேரானது; குறுகியது; நல்ல உருவமுடையது; கண் கள் நீலநிறமானவை. நார்டிக்கு இனத்தவர்கள் உயரமானவர்கள். வட இந்தியாவில் இவ்வினத்தவர் கள் பரவலாகக் காணப்படுகின்றனர். சித்ரால் (Chitral) பகுதி கோ (Kho) மக்களும், சிவப்பு கபீர் கள் (Red Kaffirs), கத்தாசுவினர் (Khatash) ஆகியோரும் நார்டிக்கு இனத்தைச் சேர்ந்தவ ராவர். நார்டிக்கு இனத்தவர்கள் தென்கிழக்கு உருசியாவிலிருந்தும் (Russia), தென்மேற்குச் சைபீரி யாவிலிருந்தும் நடுஆசியா வழியாக இந்தியாவை அடைந்தனர் எனக் கருதப்படுகிறது.

எசு.எசு. சர்க்கார் இந்திய மக்களினங்களை ஆசுத்திரேலியர், இந்திய-ஆரியர், ஈரானிய-சித்தியர், முண்டாரி மொழியினர், தூரக் கிழக்குப்பகுதி யினர், மங்கோலியர் என ஆறு இனங்களாகப் பகுப் பார்.

ஆசுத்திரேலிய இனத்தைத் தொன்மை ஆசுத்திரே லியர். திராவிடர்களுக்கு முந்தையோர், நிசாதா (Nisada), வெத்தர் (Veddas) எனப் பலவாறாகக் கூறுவர். உராளி, காணிக்காரன், மலைப்பண்டாரம் (Malapandaram), பணியர் (Paniyan), காடர் முதலிய தென்னிந்தியப் பழங்குடியினர் ஆசுத்திரேலிய இனத் தின் பண்புகளைப் பெற்றவராவர். இவர்கள் இந்தியா முழுமையும் பரவியுள்ளனர் என்றும் இந்திய மக்களினத்தில் தொன்மையானவரென்றும் எசு.எசு. சர்க்கார் கூறுவார். இந்தியாவின் பெரும் பான்மைச் சாதிக் குழுக்களிடையே ஆசுத்திரேலிய இனக்கூறுகள் காணப்படினும், கீழ்ச்சாதியினரிடையே மிகுந்து காணப்படுகின்றன. இவ்வினத்தவர்கள் குறைந்த உயரத்தையும் கருமை நிறத்தையும் நீண்டு குறுகிய தலையையும் அகன்ற மூக்கையும் வளைவ மைப்புடைய மயிரையும் கொண்டவர்களாவர். இந்திய-ஆரியர் மக்களினத்தவர்கள் உடல் தோற்றத் தில் ஆசுத்திரேலிய இனத்தவரைக் காட்டிலும் மாறு பட்டவர்கள். இவர்கள் உயரமானவர்கள். இவர் களின் தோல் மாநிறமானது; தலை தடித்தது, நீண் டது; தலைமயிர் மிகக் கருப்பானதன்று. இவர்கள் கட்டான உடலமைப்புடையவர்கள். இந்துகுசு (Hindukush) மலைப்பகுதியில் வாழும் பால்டி (Balti) மக்கள் இந்திய ஆரிய இனத்தைச் சேர்ந்தவராவர். இந்திய-ஆரிய இனத்தவர்கள் மேற்கு இந்தியாவின் பல பகுதிகளிலும், பீகார், அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் காணப்படுகின்றனர்.

ஈரானிய- சித்தியர் இந்திய ஆரியர் இந்தியா விற்கு வந்த அதே காலத்தில் வடமேற்கு வழியாக இந்தியாவிற்கு வந்தடைந்தனர் எனலாம். இவர்கள் நடுத்தரத் தலையையும் நடுத்தர உயரத்தையும் கொண்டவர்கள். இவர்களது தலை அளவு (Cephalic Index) 77 முதல் 79 வரையானதாகும். ஈரானிய சித்தியர்கள் இந்தியாவில் மகாரட்டிராட்டிர மாநிலங் களுக்கு வந்தடைந்தனர். இவர்கள் தக்கணம், வட மைசூர், ஆகிய பகுதிகளுக்கும் பரவினர். முண்டா மொழி பேசுபவர்கள் நடுகிழக்குக் இந்தியாவில் காணப் படுகின்றனர். சோட்டா நாக்பூர், ஒரிசா, மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளுக்கு வந்தேறிய இவர்கள், சில மங்கோலியப் பண்புகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் தடித்த உடற்கட்டானவர்கள். தோல் மாநிறமானது; தலை நீண்டது; தலை மயிர் நேரா னது; தடித்தது. தூரக் கிழக்குப் பகுதியினர்: தொன் மைக் காலத்தில் இந்தியாவிற்கும் தென் கிழக்கு ஆசியத் தீவுகளுக்கும் தொடர்புகள் இருந்து வந்தி ருக்கின்றன என்பது, பல சான்றுகளின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தியக் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளின் மக்கள் தொகையில் மலாய் பாலினீசியரின் இனக்கூறுகள் காணப் படுகின்றன. தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய கடற்கரைப் பகுதிகள் முதல் கடற்கரைப் பகுதி யிலுள்ள சிட்டகாங்கு மலைப் பகுதிகள் வரை, இந்த இனக்கூறுகள் காணப்படுகின்றன. மங்கோலிய இனத்தவர்கள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்

களில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களின் தோலின் நிறம் மஞ்சள்; முகத்திலும் உடலிலும் மயிர் குறைவாகக் காணப்படும். மங்கோலியக் கண்களைப் பெற்றிருப்பர். காண்க: இனங்கள், மனிதர்.

துணை நூல்கள்:

**Guha**, B.S., An Outline of the Racial Ethnology of India, Indian Science Congress Association, Calcutta, 1937.

**Haddon**, A.C., Races of Man, Cambridge University Press, London,1929.

**Sarkar**, S.S., The Aboriginal Races of India, Bookland, Calcutta, 1954.

**இந்திய உச்சநீதிமன்றம்:** இந்தியாவிற்குத் தலையாய நீதிமன்றமாக உச்ச நீதிமன்றம் (Supreme Court of India) ஒன்று நிறுவுவதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழி செய்துள்ளது இங்கிலாந்திலுள்ள அரசப் பேரவை 1950 சனவரி 26-ஆம் நாள் வரை வகித்துவந்த அதிகாரம் இப்போது உச்ச நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் முதன்மை நீதிபதியையும் ஏழு நீதிபதிகளையும் உடையதாகும். நாடாளுமன்றம் விரும்பினால் இவ்வெண்ணிக்கையை உயர்த்தலாம். முதன்மை நீதிபதியைத் தவிர்த்து இப்போது நீதிபதிகளின் எண்ணிக்கை 17 ஆகக் கூடியுள்ளது. உயர்நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் நீதிபதிகளாக இருந்தவர்களும், உயர்நீதிமன்றத்தில் பத்து ஆண்டுகட்குக் குறையாமல் வழக்கறிஞராக அலுவல் பார்த்தவர்களும், சட்ட நுணுக்கத்தில் சிறந்த வல்லுநர்களாக இருப்பவர்களும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாகப் பணியமர்த்தம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள். அவர்கள் 65 வயது வரை நீதிபதிகளாகப் பணியில் செயற்படுவார்கள். இந்தியாவின் முதன்மை நீதிபதியுடனும் தேவையானால் மற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடனும் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளுடனும் கலந்து கொண்டு குடியரசுத் தலைவர் அவர்களைப் பணியமர்த்தம் செய்வார். நீதி செலுத்துவதில் மிகச் சிறப்பு என்னவென்றால், நீதிபதி அச்சமின்றி, தயவு தாட்சண்யங்களுக்கு உட்படாமல், தன் மனச்சாட்சிப்படி தீர்ப்பு வழங்க வேண்டும். ஆகவே, நீதிபதிகள் வகிக்கும் பதவி, நிருவாக அலுவலரின் மேற்பார்வையின்கீழ்ச் செயற்படுவது முறையன்று. பதவியைப் பற்றிய கவலை நீதிபதிகளுக்கு இருக்கக் கூடாது. இந்தக் கோட்பாடுகளை ஒட்டி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்குவது தொடர்பாகச் சிறப்பு முறை அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. ஒழுங்கற்ற நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக உச்ச நீதிமன்ற நீதிபதியை விலக்க வேண்டுமானால், தகுந்த குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் முன் அளிக்கப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரின் வாதத்தைக்கேட்டுப் பாராளுமன்றம் விசாரணை செய்யவேண்டும். குற்றச்சாட்டை உறுதியானதாக, நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் முடிவு செய்தால், அதை ஏற்றுக்கொண்டு, நீதிபதியைக் குடியரசுத் தலைவர் விலக்க வேண்டும். அப்படிப்பட்ட முடிவுக்கு நாடாளுமன்றத்தின் ஒவ்வோரவையிலும் வாக்களிக்க வந்துள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு என்ற விழுக்காட்டுக்குக் குறையாத அளவில் உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும். மேலும் அவ்வாறு ஆதரவு அளிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்த அவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பெரும்பான்மையதாகவும் இருக்க வேண்டும். நீதிபதிகளைப் பணியமர்த்தம் செய்வது நிருவாகத் தலைவராக இருந்தாலும், விலக்குவது அவரிடம் இல்லை என்பது இதில் சிறப்பாகக் கவனிக்க வேண்டியதாகும். நீதிபதிகளின் ஊதியமும் படிகளும் இவ்வளவு என்று அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்திருக்கிறது. நீதிபதிகளின் ஊதியங்களும் அவற்றுக்குரிய உதவித் தொகைகளும் இந்திய இணைப்பு நிதியினின்று பெறப்படுகின்றன.

உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் பெரும்பாலும் மேல்முறையீடு தொடர்பானதே. ஆயினும் இந்திய அரசினர் மாநில அரசுக்குள்ளோ இரு மாநில அரசுக்குள்ளோ நிகழும் அசல் வழக்குகளை (Original Suits) விசாரிக்கவும் இதற்கு அதிகாரம் உண்டு. உயர் நீதிமன்றங்கள் அனைத்துக்கும் உச்சநீதிமன்றம் மேல்முறையீட்டு மன்றமாகும். எத்தகைய முக்கியமான வழக்குகளை உச்சநீதி மன்ற விசாரணைக்குக் கொண்டு வரலாம் என்பது பற்றி இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி செய்திருக்கிறது. மற்றும் அரசியல் சட்டத்தில் கூறியுள்ள அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கும், குடிகளின் பாதுகாவலையும் உரிமையையும் காப்பதற்கும் இன்றியமையாத பேராணைகளைப் (Writs) பிறப்பிக்கவும் இம்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. (அப்பேராணைகளைப் பற்றி முழு விவரம் அறிய இந்திய அரசியல் சட்டம் என்ற கட்டுரையைக் காண்க.) அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் பொருள் கூற வேண்டிய சூழ்நிலைகளில் இம்மன்றத்தின் ஐந்து நீதிபதிகளுக்குக் குறையாதவர் சேர்ந்து விசாரணை செய்து முடிவு செய்வர்.

**தலைமை நீதிமன்றத்தின் அதிகாரம்** (Jurisdiction of the Supreme Court): இந்தியத் தலைமை நீதி

மன்றம் மிகச் சிறந்த அதிகாரம் கொண்டதாக விளங்குகின்றது. இந்தியத் தலைமை நீதிமன்றம் மூன்று வகையான அதிகாரங்களை அரசியல் அமைப் புச் சட்டத்தின் வழி பெற்றுள்ளது.

1. முதலேற்பு அதிகார வரம்பு (Original Jurisdiction)
2. மேலேற்பு அதிகார வரம்பு (Appellate Jurisdiction)
3. அறிவுரை வழங்கும் அதிகாரம் (Advisory Jurisdiction)

முதலேற்பு அதிகார வரம்பு; 1. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்கிறது. 2. இந்திய அரசுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகள் ஒரு கட்சியாகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றொரு கட்சியாகவும் சேர்ந்து எழுப்பும் வழக்குகளைத் தீர்ப்பது. 3. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைப்பது.

மேலும் தலைமை நீதிமன்றம் தீர்மானிக்கும் இவ்வழக்கில் சட்டம் அல்லது மெய்ம்மை பற்றிய (Law of fact) கேள்விகள் உள்ளடங்கியிருக்க வேண் டும். அச்சட்டம் மெய்ம்மை பற்றிய நிலையைப் பொறுத்துத்தரன் மாநிலங்களின் சட்ட அடிப்படை யான உரிமைகள் தீர்மானிக்கப்படுவதாக இருக்க வேண்டும். முதன்மை அதிகாரம் தலைமை நீதிமன் றத்திற்கு மட்டுமே அளிக்கப்பட்ட ஓர் அதிகார மாகும். வேறு நீதிமன்றங்கள், மத்திய அரசிற்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வழக்கு களைத் தீர்க்க முடியாது.

மேலேற்பு அதிகாரம்: தலைமை நீதிமன்றத்தின் மேலேற்பு முறையீட்டு அதிகாரத்தைப் பின்வரும் தலைப்புகளில் காணலாம்.

1. அரசியல் சட்ட ஐயமுள்ள முறையீடுகள்.

அ. உயர்நீதிமன்றத்தின் சான்று அனுமதியுடன் பிரிவு 132 (1) கூடிய முறையீடு.

ஆ. தலைமை நீதிமன்றத்தின் தனியனுமதியின் பேரில் பிரிவு 132 (2) இன்படி செய்யப்படும் முறை யீடு.

2. அரசியல் சட்ட ஐயங்கள் அல்லாத வழக்கு களிலிருந்து முறையீடு.

அ. உரிமையியல் மேலேற்புச் சட்ட வழக்கு (Civil Appeals Article, 134).

ஆ. குற்றவியல் வழக்கின் முறையீடு (Criminal Appeals Article, 134).

3. மேலே கண்ட 1–ஆம் 2–ஆம் பிரிவுகளில் கண்ட வழக்குகளைத் தவிர, வேறு வழக்குகளில் தலைமை நீதிமன்றம் தனியனுமதி அளிப்பின் முறை யீடு செய்யலாம் (On Special Leave Appeal).

உச்ச நீதிமன்றம் கூறும் தீர்ப்புகளை, விளக்கத் தினை, விளக்கவுரையினை ஏற்றுக் கொள்ள அனைத்து மாநில நீதிமன்றங்களும் கடமைப் பட் டவை. அனைத்து நீதிமன்றங்கள் மீதும் தீர்ப்பா யங்கள் மீதும் உச்ச நீதிமன்றத்துக்கு மறு ஆய்வு (Revision) அதிகாரம் இருக்கிறது. இரா ணுவத் தொடர்பான ஒரு சட்டப்படி அமைக் கப்படும் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் தவிர நாட் டில் உள்ள வேறு எந்த நீதிமன்றமோ தீர்ப்பாயமோ செய்யும் தீர்ப்பையும் எதிர்த்து மேல்முறை செய் வதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதியளிக்க முடியும். அதன் அதிகாரத்தை மேலும் பல துறைகளில் நாடா ளுமன்றம் விரிவாக்கம் செய்யலாம்.

ஆலோசனை கூறும் அலுவல்களும் உச்ச நீதி மன்றத்திற்கு உண்டு. பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டச் சிக்கலை அல்லது ஒரு கருத்தை ஆராய்ந்து கருத்துத் தெரிவிக்குமாறு உச்ச நீதிமன்றத்தைக் குடியரசுத் தலைவர் கேட்கலாம். ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகளில் உச்ச நீதிமன்றத்திற்கு முதலேற்பு அதிகாரம் (Original Jurisdiction) இல் லாவிட்டாலும், அவை பற்றிய கருத்தினைக் கூறும் படி அந்நீதிமன்றத்தினைக் கேட்கலாம்.

சுயேச்சை: உச்ச நீதிமன்றம் தனது செயல் முறை, நடைமுறை தொடர்பான விதிகளைத் தானே இயற்றிக் கொள்ளலாம். ஆனால் இவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவ துடன் நாடாளுமன்றத்தின் சட்டம் எதற்கும் முர ணில்லாமலும் இருக்க வேண்டும். உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்புகளை எல்லாம் வெளிப்படையாக வழங்க வேண்டும். ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுள் பெரும்பான்மையோரின் ஆதரவு பெற்றதாகத் தீர்ப்பு இருக்க வேண்டும். ஆயினும் மற்ற நீதிபதி களின் கருத்தை ஒரு நீதிபதி ஒத்துக்கொள்ளாவிடில் அவர் தனியாகத் தமது சொந்தத் தீர்ப்பை வெளி யிடலாம்.

நாட்டிலேயே மிக உயர்ந்த நீதிமன்றம் உச்ச நீதிமன்றம். இந்தியாவிலுள்ள அனைத்து நீதிமன்றங் களும் அதன் வரம்பிற்குக் கட்டுப்பட்டவை. நாடாளு மன்றத்தின் சட்டத்திற்கும் சட்ட விதிகளுக்கும் உட்பட்டு, உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் மறு ஆய்வு கூடச் செய்யலாம்.

இந்தியாவின் தலைமை நீதிபதியோ அவர் குறிப்பிடும் உச்ச நீதிமன்ற நீதிபதியோ நீதிமன்ற உயர் அலுவலரோ நீதிமன்றத்திற்குத் தேவையான அலுவலர்களைப் பணியமர்த்தம் செய்துகொள்ள லாம். அவ்வலுவலர்களின் வேலை நிலைமை பற்றிய விதிகளையும் அவரே இயற்றிக் கொள்ளலாம். நீதிமன்ற அதிகாரிகளின் அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, ஓய்வூதால ஊதியம் உட்பட உச்ச நீதிமன்றத்தின் நிருவாகச் செலவுகளுக்கெல்லாம். 'இந்திய அரசுத் தொகுநிதி' யிலிருந்து நேரடியாகப் பணம் கொடுக்கப்படும். உச்ச நீதிமன்றம் வசூலிக்கும் கட்டணங்களும் மற்றத் தொகைகளும் அந்த அரசுத் தொகுநிதியில் செலுத்தப்படும். இந்த ஏற்பாடுகள் எல்லாம் உச்ச நீதிமன்றம் விருப்பப்படி செயலாற்று வதற்குத் துணை செய்கின்றன.

**இந்திய உதவி மன்றம்:** இந்தியாவிற்குக் கிடைக்கும் அயல் நாட்டு நிதி உதவி பெரும்பாலும் இந்திய உதவி மன்றம் வாயிலாகவே அளிக்கப்படு கிறது. இந்த மன்றம், 1958-ஆம் ஆண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, செருமனி, கனடா, சப்பான், ஆசுத்தி ரியா, பெல்சியம், தென்மார்க்கு (Danmark), பிரான்சு, இத்தாலி, நெதர்லாந்து, நார்வே, சுவீடன் ஆகிய பதின்மூன்று நாடுகளை உறுப்பினராகக் கொண்டு உலக வங்கியின் மேலாண்மையின் கீழ்த்தொடங்கப் பட்டது. இந்த மன்றம், குறிப்பிட்ட கால இடை வெளியில் கூடி, இந்தியாவிற்குரிய அயல்நாட்டு உத விகளைப் பற்றி ஆய்ந்து முடிவெடுக்கிறது.

ஒவ்வோராண்டும் இந்திய உதவி மன்றம் (Aid-India Club) சூன் மாதத்தில் பாரிசில் கூடுகிறது. இம்மன்றம் இந்தியாவின் பொருளாதார முன்னேற் றம், பொருளியல், நாட்டின் பொதுவான கொள் கைக் கோட்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து, இந்தி யாவிற்கு அந்த நிதியாண்டு-அதாவது சூலை முத லாம் தேதியிலிருந்து கிடைக்கும் நிதி உதவியினை வரையறுக்கிறது. மன்றத்தின் உறுப்பு நாடுகளின் பேராளர்கள் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத் தொடர், உலக வங்கியின் சிறப்பு அலுவலரின் தலை மையில் நடைபெறுகிறது. இந்தியா பெறும் அயல் நாட்டு உதவிகளில், இந்திய உதவி மன்றத்தின் உதவி எண்பத்தெட்டு விழுக்காடாகும். திட்டக் காலங்களில் இந்திய உதவி மன்றம் இந்தியாவிற்கு அளித்துள்ள உதவியினை அட்டவண-1 விளக்குகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றம் குறிப்பிடத் தக்க வகையிலான ஊக்கத்தை அளிக்கவில்லை. முந்திய காலத்தில் அமெரிக்கா மிகுதியான நிதி யுதவியை அளித்துவந்த நாடாகும். உதவி பத்தொன் பது விழுக்காடு அமெரிக்காவினால் வழங்கப்படு கிறது. குடியரசுத் தலைவர் இரீகனின் ஆட்சியில் இந்தியாவிற்குக் கிடைக்கும் நிதியுதவி படிப்படியாகக் குறைந்து வருகிறது. அமெரிக்காவின் இக்கால நிதி உதவிக்கொள்கை இந்தியாவிற்குத் துணையாக இல்லை. உலக வங்கியின் 1984-ஆம் ஆண்டு அறிக்கை, இந்தியா குறைந்த வருவாயுடைய நாடுகளுக்கான சிறப்பு முன்னுரிமைகளைப் பெறலாம் என்று கூறு

அட்டவணை - 1

இந்திய உதவி மன்றத்தின் உதவித் தொகை

| காலம் | உதவித்தொகை | |
|---|---|---|
| | கோடி உருபாயில் | மொத்தத்தில் விழுக்காடு |
| முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் | 4,153 | 92 |
| ஆண்டுத் திட்டக் காலத்தில் (1966-69) | 2,985 | 93 |
| நான்காம் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் | 3,775 | 90 |
| ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் | 4,469 | 74 |
| 1978–79 இலிருந்து 1983–84 வரை | 10,101 | 91 |
| 1950–51 இலிருந்து 1983–84 வரை | | – |

கிறது. இத்தகுதி சராசரி வருவாய் விகிதத்தைக் கொண்டு வரையறுக்கப்படுகிறது. இந்திய மக்களின் சராசரி ஆண்டு வருவாய் 260 உருபாயாகும். எனவே ஏழ்மை நாடுகளுக்குரிய உதவியை இந்தியா பெற லாம் என்பது உலக வங்கியின் கருத்தாகும்.

இந்தியாவின் அயற் செலாவணி 1970-ஆம் ஆண்டுக் காலத்தில் மிகவும் தாழ்வுற்றது. பெட்ரோலின் விலை ஏற்றத்தினால் இறக்குமதிச் செலவு உயர்ந்தது. வெளிநாட்டு உதவியும் குறைந்தது. உலக வங்கியின் கடனளிப்பு முறையிலும் பேரளவில் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியா 1980-81-ஆம் ஆண்டு வரை 80% பன்னாட்டு முன்னேற்றக் கழகக் (IDA) கடனாகவும் 20% உலக வங்கிக் கடனாகவும் பெற்றது. இந்தியா 1982-83- ஆம் ஆண்டில் இவ்வமைப்புகளிலிருந்து 50% கடன் உதவிகளைப் பெற்றது. இக் கடன்களுக்கு வட்டி இல்லை. இந்திய உதவி மன்றத்தின் (Aid India Consortium/ Club) கடன் குறைப்பிற்கான இரண்டு காரணங்களை மன்றத்தின் உறுப்பு நாடுகள் அறிவித்துள்ளன. (1) மன்ற உறுப்பினர்களின் நிதி நிலைமை உறுதியானதாக இல்லை. (2) இந்தியா வாணிக முறையில் கடன்களைப் பெற்று நிருவகிக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டது.

இந்திய மன்றம் இருவகை உதவிகளை அளிக்கிறது. முதல்வகை உதவி சிறப்பாக முதற்கருவிப் பொருள்கள், எந்திரங்கள், எந்திரங்களின் உறுப்புகள், மூலப்பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்யப் பயன்படுகிறது. இரண்டாம் வகை உதவி அண்மைக் காலத்தில் வேளாண்மை, தொழில், நகர்ப்புற வளர்ச்சி, குடிநீர்த் திட்டம், நீர்ப்பாசனம், எரிசக்தி உற்பத்தி ஆகியவற்றுக்காக வழங்கப்படுகிறது. எளிமையான முறையில் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட கடனின் அளவு குறைந்துள்ளது. இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதர் இந்தியாவிற்கு இனி அயல் நாட்டுக் கடன்கள் கிடைப்பது அருமை (Scarcity) என்றும் இந்தியா தனது ஏற்றுமதியைப் பெருக்கி அமெரிக்கச் செலாவணியைப் பெறலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 4 அல்லது 4.5 விழுக்காட்டை 1984-85- ஆம் ஆண்டு அடைய வேண்டும் என்பது இந்தியப் பொருளாதாரத் திட்டத்தின் குறிக்கோள். இது முந்தைய முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட சராசரி 3 விழுக்காட்டு வளர்ச்சியை விட மிகுதியானதாகும். இவ்வாறு நாடு ஒரு வளர்ச்சிச் சூழ்நிலையை அடையவிருக்கும் காலத்தில், அயல்நாட்டு நிதி உதவியில் இடையூறுகள் பல இருக்கின்றன. எளிய வட்டி முறையில் இந்தியா பெற்றுள்ள கடனானது 1980-ஆம் ஆண்டில் 1.5 பிலியன் தாலரிலிருந்து 1984-ஆம் ஆண்டில் 650 மிலியன் தாலராகக் குறைந்துள்ளது.

உலகப் பொருளாதார இயக்கத்தில் இந்தியாவின் பங்கும், உற்பத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும், கடன் குறைப்பின் காரணங்களால் பாதிக்கக்கூடாது என மன்றத்தின் அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன. ஆகையால், ஏற்றுமதியைப் பெருக்கியோ வாணிக முறையில் கடன் பெற்றோ இந்தியா தனது அயல்நாட்டுச் செலுத்துநிலையினைப் பாதகமற்றதாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று கருத்துரைக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு 1985-ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகள் மிகவும் எளிதான விதிமுறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. வரிக் குறைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதியும் 3 விழுக்காடு உயர்ந்துள்ளது. எதிர்காலத்தில் வாணிக முறையில் பெறவிருக்கும் கடன்களைக் கட்டுப்பாட்டிற்குள் நிருவகிக்க வேண்டிய தேவை நிலை எழுகின்றது. ஏனெனில் கடனைத் திருப்பிச் செலுத்தும் விகிதத்தையும் பளுவையும் ஏற்றுக்கொள்ளும் அளவில் வைத்திருத்தல் இன்றியமையாததாகும். இந்தியா தனது உலக வங்கிக்கான கடனைத் திரும்பச் செலுத்தும் தகுதிக் கூறுகளை ஆராய வேண்டும் என்பது இந்த மன்றத்தின் கருத்தாகும். இந்திய உதவி மன்றத்தின் உதவி குறையும் காலத்தில் ஏற்படும் அயற் செலாவணித் தட்டுப்பாடானது இறக்குமதியைக் குறைக்கத் தூண்டி, நாட்டின் உற்பத்தி, முதலீடு, வருவாய் ஆகியவற்றில் ஒரு பின்னோக்கிய சுழற்சியை உருவாக்கும் என உலக வங்கி கருதுகிறது. எனவே இந்தியா வாணிக முறையிலான கடனைப் பெறவேண்டும்.

இப்பொழுது இந்திய உதவி மன்றத்தின் கண்ணோட்டத்தில் இந்தியா ஓரளவு வளர்ச்சியடைந்த நாடாகக் கருதப்பட்டு வழங்கப்படும் கடன் தடைபடாவிட்டாலும், அதன் மூலம் பெறும் சலுகைகளைக் குறைக்கலாம் என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. பன்னாட்டு முன்னேற்றக் கழகம் எளிதான கடன்களை அளிக்கும் நிறுவனமாகும். அதில் சீனாவின் நுழைவானது இந்தியாவைப் பெருமளவில் பாதித்துள்ளது. இந்த நிறுவனத்திலிருந்து இந்தியா பெறும் கடன் குறைவாகவும் பாகிசுத்தான், சீனா ஆகியவற்றின் கடன் மிகுதியாகவும் உள்ளன. அயல் நாட்டிலிருந்து முதலீடு செய்ய விரும்பும் தனியார்களுக்கு நல்ல சூழ்நிலையினை இந்திய அரசு உருவாக்கவேண்டும் என்று மன்ற உறுப்பினர்கள் அண்மைக் காலத்தில் வலியுறுத்தியுள்ளனர். சப்பானின் கருத்தின்படி இந்திய உதவி மன்றமானது இந்தியாவிற்கு மிகுந்த உதவியை வழங்கா

ததற்குக் காரணம் இந்தியா சப்பான் அளிக்கும் தொழில் நுட்பத்தை ஏற்றுக் கொள்ளாமையே யாகும். ஆனால் இந்தியாவின் கொள்கை எளிய முறைக் கடன் என்றாலும் பிற வாணிக முறைக் கடன் என்றாலும் கட்டுப்பாடுகளுடன் அளிக்கப் படும் கடனை ஏற்றுக்கொள்வதில்லை என்பதாகும். ஏனெனில் அக்கடன் நீண்டகாலத்திற்குப்பின் இந்தியாவின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்பது இந்தியாவின் கருத்து.

பொதுவான கண்ணோட்டத்தில் இந்திய உதவி மன்றம் இந்தியாவிற்கு அளித்து வந்துள்ள உதவிகள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் பொருளாதார எழுச்சிக்கும் இந்த நிறுவனம் பேரளவில் உதவி செய்துள்ளது. அண்மைக் காலத்தில் இதன் உதவி குறைந்துள்ளது. மறைந்த திருமதி இந்திராகாந்தி மேலை நாடுகள், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு மிகக் குறைந்த அளவில் தான் உதவி செய்து வருகின்றன என்று பலமுறை அந்நாடுகளின் பொறுப்பை வலியுறுத்தியுள்ளார். இது ஒரு வகையில் உண்மை என்றாலும் இன்று இந்தியா ஓரளவு வளர்ந்து, உணவு, பிற பொருளாதாரச் சூழ்நிலையிலும் ஓரளவிற்குத் தன்னிறைவு அடைந்துள்ளது. இதனால்தான் இந்தியா தன் முயற்சியினாலேயே முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்பது மன்றத்தின் இன்றைய கருத்தாகும்.

இரா. செ.

துணை நூல்கள்:

**Sadan Mukherjee**, Who really aids India, Mc-Graw Hill, New York, 1978.

**Dalip. S. Swamy**, Multinational Corporation and the World Economy, Allied Publishers, Delhi, 1980.

**Goyal, S.K.**, The Impact of Foreign Subsidiaries on India's Balance of Payments, Oxford Publication, 1979.

**இந்திய உள நல நரம்பியல் நிறுவனம்** இந்திய அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மன நலக் காப்பகமாகும். இத்தகைய நிறுவனங்கள் பெங்களூரிலும் இராஞ்சியிலும் உள்ளன. இங்கு உளப்பிணியருக்கு மருத்துவம் செய்யப்படுகிறது. இந்நிறுவனத்தில் உளநோய், உளவியல், நரம்பியல் துறைகளுக்கான உயர் நிலைக்கல்வி அளிக்கப்படுகிறது. உளநோய் நரம்பியல் துறைகளில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களும் இங்குத் தங்கிப் படிக்கிறார்கள். உளநோய்ச் சமூகப் பணியாளருக்கும் உளநோய் நீக்கு உளவியலாருக்கும் இங்குப் பயிற்சி தரப்படுகிறது. உளவியல் நரம்பியல் துறைகளுக்கான சோதனைகள், அமைக்கப்பட்டுத் தரப்படுத்தப்படுகின்றன. உளவழி மருத்துவ முறைகள், நடத்தை மருத்துவ முறைகள், குடும்ப மருத்துவ முறை, குழு மருத்துவ முறை, உளவழிநாடக மருத்துவ முறை போன்ற பல மருந்திலாச் சிகிச்சை முறைகள் இங்குச் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்து இந்நிறுவனங்களில் கல்வி கற்பதற்காகவும் ஆய்வு செய்வதற்காகவும் மாணவர்கள் வருகிறார்கள். இந்நிறுவனம் கடந்த 32 ஆண்டுகளாக உளநலவியல் துறையில் சிறந்த பணியாற்றி வருகிறது.

**இந்திய உளநோய் நீக்கு உளவியலார் சங்கம்**: 1968-ஆம் ஆண்டு உளநோய் நீக்கு உளவியலார்களின் (Clinical Psychologists) நலனுக்காக நிறுவப்பட்டது. உளநோய் நீக்கு உளவியலார்களின் கருத்துப் பரிமாற்றங்களுக்காகவும் உளநோயாளர்களின் சமூக நலனுக்காகவும் இந்நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆண்டுதோறும் உளவியல் தொடர்பான பல கருத்துகளைக் கலந்தாய்வு செய்தற் பொருட்டுக்கருத்தரங்குகளைஇந்திய உளநோய் நீக்கு உளவியலார் சங்கம்(Indian Association of Clinical Psychologists) நடத்துகிறது. இச்சங்கம் இந்திய உளநோய்நீக்கு உளவியல் கால இதழ் ஒன்றையும் நடத்திவருகின்றது. இதன் பொறுப்பாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட்டுப் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இச்சங்கத்தின்உறுப்பினர்கள் வாக்காளர்களாக இருக்கிறார்கள். இந்த ஆய்வு இதழ் உளவியல் தொடர்பான ஆய்வுகளையும் கட்டுரைகளையும் வெளியிடுகின்றது.

**இந்திய ஊரகங்கள்**: குடும்பங்கள் பெருகிய காலத்தில் தங்கள் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு குடும்பங்கள் பல ஒரே இடத்தில் வாழத் தொடங்கின. இதுவே ஊரகங்கள் அமைவதற்குக் காரணமாக இருந்தது. பல ஊரகங்கள் சேர்ந்ததே நாடு எனப்பட்டது. பண்டைக் காலத்தில் நாடு என்பது மிகப் பரந்ததாக அமைந்திருக்கவில்லை. ஊரகங்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையுடையனவாக இருந்தன. ஊரகங்களுக்குப் பின்னர்த் தோன்றியவையே நகரங்கள். மௌரியர்கள், குப்தர்கள் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் ஊரக அரசியல் அமைப்பு முன்னேற்றமடைந்திருந்தது. ஆங்கிலேயர்களின் அரசாட்சியில் இந்தியாவில் ஊரகங்களுக்கு இருந்துவந்த தன்

னாட்சி உரிமை மறைந்தது. ஆங்கிலேயர்கள் அர சாட்சியில் ஊரக அரசியலமைப்பில் புதியமுறை புகுத்தப்பட்டது. நிலம் பண்ணையார் அல்லது சமீன் தாருக்குச் சொந்தமாக்கப்பட்டது. நிலத்தில் உழுத வர்கள் கூலி வேலைக்காரர்களாயினர். ஊரகங்களின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்தது. சுதந்திர இந் தியாவில் ஊரகங்களின் வளர்ச்சிக்குச் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய வருமானத்தில் 51% வரு மானத்தை ஊரகங்கள் கொடுக்கின்றன. இந்த வரு மானத்தில் பெரும்பங்கு வேளாண்மையிலிருந்து பெறப்படுவதாகும். நிலத்தின்மீது விதிக்கப்படும் வரி கள், நீர்ப்பாசனத் தொடர்பான வரிகள், மனை, நிலம், வேளாண்மை மூலப்பொருள்கள் போன்றவை களைப் பதிவு செய்யும்பொழுது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும் பதிவுத்தொகை போன்ற வருமானங் கள் ஆகியவற்றை ஊரகங்களிலிருந்து அரசு பெறும் சில வருமானங்கள் என்று குறிப்பிடலாம். கரும்பு, தேயிலை, புகையிலை, எண்ணெய்வித்துகள் போன்ற வேளாண்மைப் பொருள்களுக்கு ஊரகங்களிலுள்ள மக்களின் உழைப்பே பெரும்பாலும் காரணமாக இருக்கிறது.

இந்திய ஊரகங்கள் இயல்பு அடிப்படையில் கூட்டு ஊரகங்கள் என்றும் பரவலான ஊரகங்கள் என்றும் இரு வகைகளாகப் பிரிந்திருக்கின்றன. கூட்டு ஊரகங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கும். இங்கு வாழும் மக்கள் நெருக்கமாக ஒரே இடத்தில் வாழ்கின்றனர். இவர்களுடைய அன்றாட வாழ்க்கை யும் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட மைய இருப்பிடத்தைச் சுற்றி மற்ற வீடுகள் அமைக்கப்படுகின்றன. பரவலான ஊரகங் களில் குடும்பங்கள் ஒன்றுக்கொன்று நெடுந்தொலை வில் இருக்கின்றன. வீடுகளும் நெருக்கமாக அமைக் கப்படுவதில்லை. இவர்களுக்கிடையே நெருக்கமான தொடர்பு இல்லை.

ஊரகங்களை அவற்றில் வாழும் மக்கள் அங்கு நிலையாக வாழ்கின்றனரா குறைந்த காலத்திற்கு மட்டும் வாழ்கின்றனரா என்பதன் அடிப்படையில் பீக்கு (Peeke) என்னும் சமூகவியலாளர் பின்வரும் மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.

1. இடம்பெயரும் வேளாண்மை ஊரகம் அல் லது இடம் பெயரும் ஊரகச் சமுதாயம்: இத்தகைய ஊரகச் சமுதாயங்களில் மக்கள் நிலையற்ற தொழில் களை மேற்கொள்கின்றனர். பெரும்பாலும் இடம் விட்டு இடம் பெயர்பவர்களாக இருக்கின்றனர். வேளாண்மை செய்பவர்களும் தாங்கள் பயிரிடும் நிலத்தை அடிக்கடி மாற்றுகின்றனர். இவர்கள் பயிரி டும் நிலங்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக் கின்றன. ஓரிடத்தில் இருந்து சிலகாலம் வேளாண்மை செய்த பிறகு வேறொரு இடத்திற்குச் செல்கின்ற னர்.

2. ஓரளவு நிலையான ஊரகங்கள் அல்லது ஓரளவு நிலையான ஊரகச் சமுதாயம்: இத்தகைய சமுதாயத்தில் மக்கள் நிலையாக ஓரிடத்தில் வாழ் கின்றனர். நிலையாக ஓரிடத்தில் வேளாண்மை செய் கின்றனர். அடிக்கடி இடம்பெயர்ந்து செல்வதில்லை. பயிரிடுவதற்காக வெவ்வேறு நிலங்களைத் தேர்ந் தெடுப்பதில்லை. இத்தகைய சமுதாயங்களே இந்தி யாவில் ஊரகங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன.

சோரோகின் (Sorokin), சிம்மர்மான் (Zimmer man), கால்பின் (Galpin) போன்றோர் ஊரகங் களை அவற்றின் மக்கள் தொகை, மக்கள் வாழு மிடம், சொத்துரிமை போன்றவற்றின் அடிப்படை யில் வகைப்படுத்தியுள்ளனர். இச்சமூகவியலாளர் இந்திய ஊரகங்களைப் பின்வரும் ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

1. நிலம் தனிப்பட்டவரின் சொத்தாக அல்லது கூட்டுச்சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

2. நிலம் உழவர்களுக்குப் பொதுச் சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

3. நிலம் தனிப்பட்டவரின் சொத்தாக இருக் கும் ஊரகச் சமுதாயம்.

4. நிலத்தில் உழுபவர்கள் தனிப்பட்டவரின் சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

5. நிலச்சொந்தக்காரர்களின் ஆட்கள் நிறைந்த ஊரகச் சமுதாயம். (இக்காலத்தில் இத்தகைய சமூகங்களைக் காண்பது அரிது). சமீன்தாரி ஒழிப்பு நடைமுறைக்கு வந்தவுடன் இத்தகைய சமுதாயங் கள் மறைந்து விட்டன.

6. நிலத்தில் கூலிக்காகப் பயிரிடும் உழவர்கள் நிறைந்த ஊரகச் சமுதாயம்.

எசு.சி.துபே (S.C.Dubey) என்பார் இந்திய ஊர கங்களை அவற்றின் மக்கள் தொகை, சாதி, இனம், நிலத்தின் மீது உரிமை, அதிகாரம், சலுகைகள், சமூக மரபுகள் ஆகியவற்றின் அடிப்படைகளில் வகைப்படுத்தியுள்ளார்.

இந்திய ஊரகங்களுக்கும் மேனாட்டு ஊரகங் களுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளுள் மிக வும் முக்கியமானது சாதி வேறுபாடாகும். இந்திய ஊரகங்கள் சாதி அடிப்படையில் அமைந்துள்ளன.

மேனாட்டு ஊரகங்கள் பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையிலும், வேறு பல காரணிகளின் அடிப்படையிலும் அமைந்துள்ளன. இந்திய ஊரகங்களில் கூட்டுக்குடும்பங்கள் காணப்படுகின்றன. இக்காரணத்தினால் குடும்பங்களின் அளவு பெரியதாக இருக்கிறது. இக்குடும்பங்கள் தாய், தந்தை, அவர்களின் பிள்ளைகள், மருமகள்பலர், பேரன், பேர்த்திகள் என்று அதிக பேர்களைக் கொண்டு விளங்குகின்றன. தனி மனிதர்களின் மீது குடும்பங்களின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகிறது. மேனாட்டு ஊரகங்களின் கூட்டுக் குடும்பங்களுக்கு மாறாகத் தனிக்குடும்பங்கள் காணப்படுகின்றன. தனிமனிதர்களின் மீது மேனாட்டுக்குடும்பங்களின் செல்வாக்குக் காணப்படுவதில்லை. ஊரகங்களில் மக்கள் அரசியல் விழிப்புணர்வுடன் காணப்படுகின்றனர். ஊரகத்தலைவர்கள் பலர் இருக்கின்றனர். அரசியல் பற்றிய தெளிவான அறிவையும் செய்திகளையும் மக்களுக்குத் தெரிவிப்பதற்குப் பலர் இருக்கின்றனர். தகுதிகளின் அடிப்படையிலேயே தலைவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். இந்திய ஊரகங்களில் மக்களிடையே அரசியல் பற்றிய தெளிவான அறிவும் உணர்வும் காணப்படுவதில்லை. ஊரகத் தலைவர்கள் சாதி அடிப்படையிலேயே அமைகின்றனர். தலைவர்களுக்கு எவ்வகைத் தகுதியும் இருப்பதில்லை. ஊரகச் சமுதாயத்தில் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் மிகுதியாக இருக்கின்றனரோ அந்தச்சாதித் தலைவர் காணப்படுகிறார். தம்முடைய அரசியல் செல்வாக்கினாலும் பொருள் வலிமையினாலும் மற்றவர்களை அடக்கியாள்பவரும் இந்திய ஊரகங்களில் தலைவராகின்றனர். சில ஊரகங்களில் இன்னும் சாதி அடிப்படையிலேயே தொழில்கள் அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பை மேனாட்டு ஊரகங்களில் காணமுடியாது.

**தன்னிறைவும் ஒதுக்கமும்:** இந்திய ஊரகங்கள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் தன்னிறைவுடன் இருந்தன; நகர்ப்புறங்களிலிருந்து ஒதுங்கியிருந்தன. வெளியூர்களில் வாழ்ந்து வந்த மக்களுடன் இவர்களுக்கு மிகக் குறைவான தொடர்பே இருந்தது. காலப்போக்கில் பொருளாதார அரசியல் மாற்றங்களின் காரணமாக இத்தகைய நிலை மாறியது. போக்குவரத்து வசதிகளும் செய்தித் தொடர்புச் சாதனங்களும் ஊரகங்களுக்கும் சமுதாயத்தின் பிற பகுதிகளுக்கும் இடையில் இருந்த தடுப்புகளை அழித்துவிட்டன. இக்காலத்தில் ஊரகங்கள் அவற்றின் அருகில் இருக்கும் நகரங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகள் ஊரகங்களைத் தம் கொள்கை பரப்புதலுக்கு முக்கியமான இடங்களாகக் கொண்டுள்ளன.

**அமைதியும் எளிமையும்:** இந்திய ஊரகங்கள் அமைதிக்கும் எளிமைக்கும் இருப்பிடங்களாக விளங்குகின்றன. மக்களின் வாழ்க்கை சந்தடி மிகுந்ததாகவும் விரைவானதாகவும் இருப்பதில்லை. ஊரகத் தெருக்கள் புழுதி நிறைந்தனவாக இருக்கின்றன. உந்துகள் தெருக்களில் நகர்தலைக் காண்பது அரிது. ஊரக மக்கள் எளிமையாக ஆடைகளை உடுத்துகின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையும் எளிமையானது; வீடுகளும் ஆடம்பரமாகக் காணப்படுவதில்லை. இக்காலத்தில் ஊரகத்தின் இந்த எளிய வாழ்க்கை முறையும் மாறி வருகிறது. நகரங்களில் காணப்படும் வாழ்க்கை முறை ஊரகங்களிலும் ஊடுருவி வருகிறது. வானொலிப் பெட்டிகளும் திரைப் படங்களும் மெல்ல மெல்ல ஊரகங்களின் எளிமையை மாற்றி வருகின்றன.

**பழைமையும் மரபுவழி நம்பிக்கைகளும்:** ஊரக மக்கள் மரபுவழி வந்த பழக்கங்களினின்று வழுவாமல் வாழ்கின்றனர். அவர்களுடைய மனப்பான்மைகளும் பழைமைவழியிலேயே அமைந்துள்ளன. சமூகச் சீர்திருத்தக்காரர்களின் கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் அவர்கள் எளிதில் ஏற்றுக்கொள்வதில்லை. அரசுகள் மாறியபோதிலும் ஊரக வாழ்க்கைகளும் நம்பிக்கைகளும் மாறுவதில்லை.

**வறுமையும் எழுத்தறிவின்மையும்:** இந்திய ஊரக மக்கள் எளிமையான உணவை உட்கொள்கின்றனர். பெரும்பாலானவர்கள் வறுமையின் எல்லைக்கோட்டில் வாழ்கின்றனர். சிறிய வயல்களை உழுதுண்டு வாழும் ஊரக மக்கள் கடுமையான உழைப்பாளிகளாக இருக்கின்னர். தங்களுடைய நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் இவர்களுக்குப் போதியதாக இருப்பதில்லை. இதனால் வறுமையும் எழுத்தறிவின்மையும் இவர்களிடம் காணப்படுகின்றன. இத்தகைய நிலை இக்காலத்தில் அரசு மேற்கொண்டிருக்கும் ஊராக வளர்ச்சித் திட்டங்களால் மாற்றம் அடைந்து வருகின்றது. ஊரகங்களில் பஞ்சாயத்து முறையில் நிருவாகம் நடைபெறுகிறது. இம்முறையில் ஊரகத்து மக்களே தம் நிருவாகப் பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட நல்ல திட்டங்களைச் செயற்படுத்த முடிகிறது.

இந்திய ஊரகச் சமுதாயங்களில் அண்மைக் காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சாதி அமைப்பு முறை மெல்ல மெல்ல மாறி வருகின்றது. தீண்டாமையும் ஒழிந்து வருகின்றது. ஆயினும் பொதுத் தேர்தல் காரணமாகவும் அரசியல் காரணங்களுக்காகவும் சாதி முறை இன்னும் ஓரளவு நீடித்து நிற்கின்றது. கூட்டுக் குடும்பங்களும் அழிந்து வருகின்றன. தனிக் குடும்பங்கள் ஏற்பட்டு

வருகின்றன. தனிக் குடும்பங்களின் வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள், உணவு முறை, திருமண முறை போன்றவையும் மாறுதல் அடைந்து வருகின்றன. ஊரகங்களில் பெண்களும் கல்வி கற்கத் தொடங்கியிருக்கிறார்கள். கலப்புத் திருமணங்கள் மிகவும் குறைவாகவே நடைபெறுகின்றன. ஆயினும் குடும்ப நிலையைக் காட்டிலும் மனிதர்களின் கல்வி, செல்வம், சொத்து, தொழில், பதவி போன்றவை திருமணங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. குழந்தைத் திருமணம் பெரும்பாலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. உணவு முறைகளும் மாற்றம் அடைகின்றன. உடைப்பாணியும் நகரத்து மக்களைப் போல் அமைந்து வருகின்றது. இளைஞர்கள் கால் சட்டையும் மேல் சட்டையும் அணிகின்றனர். ஊரகத்துப் பெண்கள் நகரத்துப் பெண்களைப் போல் உடை அணியத் தொடங்கியிருக்கின்றனர்; அழகுச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். ஊரகங்களில் மின் விளக்குகள் இருக்கின்றன. பெரும்பாலான வீடுகளில் எரி சாணவாயு அமைப்புக் (Gobar Gas Plant) காணப்படுகின்றது. மருத்துவ விடுதிகளும் பெரும்பாலான ஊரகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஊரகப் பொருளாதார அமைப்பும் மாறி வருகின்றது. இளைஞர்கள் நகரங்களில் வேலை தேடிச் செல்கின்றனர். வேளாண்மையில் மின் எந்திரங்களின் தேவையை உணர்ந்திருக்கின்றனர். ஊரகங்களில் வங்கிகள் செயற்படுகின்றன. ஊரகத் தொழில் வளர்ச்சிக்கு அரசு நிதி உதவி செய்கிறது. மக்களிடையே அரசியல் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது. செய்தித்தாள், வானொலி ஆகியனவே அல்லாமல் சில ஊரகங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளும் காணப்படுகின்றன.

இந்திய ஊரகம் மாறிவரும் ஒரு சமுதாய அமைப்பாகக் காணப்படுகிறது. இந்திய ஊரகங்களில் வாழும் மக்கள் தொகை 45 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஊரக மக்களின் வாழ்க்கையில் பெருமளவில் முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. காண்க: ஊரக வளர்ச்சித் திட்டம்.

**இந்திய ஊழியர் சங்கம்:** இதனைக் கோபாலகிருட்டிண கோகலே என்பவர் 1904-5ஆண்டுகளில் நிறுவினார். இவர் மராட்டிய மாநிலத்தவர்; சிறந்த மேதை; உயர்ந்த பண்பாளர். இவர் இந்திய விடுதலைப் போருக்கான அடித்தளத்தை அமைதியான வழியில் அமைத்துக் கொடுத்தவர்: இந்தியரின் நல்வாழ்வில் நாட்டமுள்ளவர்; பொதுப்பணியில் ஈடுபாடு மிக்கவர். இந்தியர் ஒவ்வொருவரும் பொது நன்மைக்காகத் தன்னலம், இன்பவாழ்வு, சொந்த விருப்பு, வெறுப்பு முதலியவற்றுக்கு இடமளிக்காது, பிறருக்காகப் பாடுபடும் உயர்ந்த சீலங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இவர் வலியுறுத்தினார். பொதுத் தொண்டுகள் வாயிலாக மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட சங்கமே இந்திய ஊழியர் சங்கம் (Servants of India Society) ஆகும். இச்சங்கத்தின் வரன்முறைகள், உறுப்பினர், தலைவர் முதலியோர் தகுதிகள், ஆறு கொள்கைகள், ஏழு உறுதிகள் ஆகியனகொண்ட அரசியல் அமைப்பினைக் கோகலே (Gokhale) உருவாக்கிக் கொடுத்தார்.

இவர் இச் சங்கத்தின் வாயிலாக ஊழியர்களைத் திரட்டி, நாட்டு மக்களுக்காகத் தொண்டாற்றச் செய்தார். இந்தியாவின் அரசியல் வரலாற்றை இளைஞர்கள் நன்குணர வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி, தீவிரமான பொதுப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டினார். இச்சங்கத்தின் கொள்கைகள், உறுதிகள், சிறப்புப் பணிகள் பின்வருமாறு:

ஆறு கொள்கைகள்:

1. தொண்டும் தியாகமும் புரியக்கூடிய மக்களை உருவாக்க வேண்டும்.

2. அரசியல் அறிவை மக்களுக்குப் புகட்டி அவர்களை ஒன்று திரட்ட வேண்டும்.

3. பலதரப்பட்ட வகுப்பினர்களை இணைத்து ஒற்றுமையுடன் செயற்படச் செய்தல் வேண்டும்.

4. பெண்கள் கல்வி, பின்தங்கியோர் கல்வி, தொழில் மற்றும் அறிவியற் கல்வி ஆகியவை பரவ முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

5. இந்தியா தொழில் துறையில் முன்னேற்றம் காண ஆவன செய்தல் வேண்டும்.

6. வறுமையில் வாடும் ஏழை, எளியவர்களின் வாழ்வு மேம்பாடு அடைதல் வேண்டும்.

ஏழு உறுதிகள்:

1. இந்தியர்க்குப் பணிபுரிவதனையே சிந்தனையாகக் கொள்ளுதல் வேண்டும். தன்னால் முடிந்த நல்லதொரு சேவையை நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும்.

2. தன்னலத்தைக் கருதிப் பொதுப்பணியில் ஈடுபடக்கூடாது.

3. இந்தியர் ஒவ்வொருவரும் பிறரைத் தம் உடன்பிறந்தோராகக் கருதல் வேண்டும். சேவை புரியும் காலத்தில் இனம், மொழி என்ற குறுகிய

டாகுபாட்டுக்குள் அடைபடாமல் அனைவருக்கும் தொண்டு புரிந்திட வேண்டும்.

4. போதுமென்ற மனம் இருத்தல் வேண்டும்; தனது முழுச் சக்தியின் எந்தவொரு பகுதியையும் தனக்காகப் பயன்படுத்தல் ஆகாது.

5. சங்கத்தின் நோக்கத்திற்காக எப்போதும் உழைத்தல் வேண்டும்.

6. ஐந்து ஆண்டுக் காலம் சிறப்புப் பயிற்சிகள் பெற வேண்டும். அக்காலத்தில் உறுப்பினர் தலைவரின் கட்டுப்பாட்டினுள் இருக்க வேண்டும்.

7. நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் தலைவர் உறுப்பினரை அனுப்பிப் பணிபுரியச் செய்வார். அவரது ஆணைக்கும் அறிவுரைக்கும் கட்டுப்பட்டு உறுப்பினர்கள் நடத்தல் வேண்டும்.

தலைவரிடம் சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டன. சங்கத்திற்கான சட்டதிட்டங்கள் வரையறை செய்யப்பட்டன.

## சிறப்புப் பணிகள்:

இதன் உறுப்பினர்கள் மக்களுக்குக் கருத்துரைகள் வழங்குதல், துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், நாளேடுகளின் மூலமாக நல்ல செய்திகளைக் கட்டுரை வடிவில் தருதல், பொதுமக்களின் கருத்துகளைத் திரட்டுதல் ஆகியவற்றைச் செய்தனர். சமுதாயப் பணிக்காக அமைந்துள்ள பிற சங்கங்களிலும் இணைந்து செயலாற்றினர். பல இனத்தவரும் ஒற்றுமையுடன் இருந்து பணிபுரிந்தனர்; தொண்டு மனப்பான்மையை வளர்த்தனர்; அரசு அலுவலகங்களுடனும் உழைப்பாளர்களுடனும் நட்புணர்வுடன் இருந்து பொதுத் தொண்டாற்றினர். இச்சங்கம் இந்தியத் தேசிய காங்கிரசுக்கும் ஒத்துழைப்பினை நல்கி, தேசிய இயக்கம் வளர்ச்சி பெற உதவியது.

சங்கத்தின் கிளைகள் சென்னை, நாகபுரி, பம்பாய், அலகாபாத்து, அம்பாலா, கட்டாக்கு, கோழிக்கோடு ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுச் சிறப்பான பணிகள் ஆற்றி வந்தன.

கோகலே 1915-இல் மறைந்தார். எனினும் இச்சங்கம் தொடர்ந்து பணியாற்றியது. பின்னர்த் தொடங்கப் பெற்ற 'நிட்காமகர்ம மாதா' என்ற சங்கத்தைக் கார்வே என்பாரும் 'இந்திய சமுதாயத்தின் தொழிலாளர்கள்' என்ற சங்கத்தை இலசபதிராயும் 'இந்தியாவின் மைந்தர்கள்' சங்கத்தை அன்னி பெசண்ட்டு அம்மையாரும் 'சபர்மதி ஆசிரம'த்தைக் காந்தியடிகளும் தொடங்கியதற்கு இந்திய ஊழியர் சங்கமே காரணமாகும். இந்திய ஊழியர் சங்கம் சிறந்த நூலகத்தைக் கொண்டுள்ளது. இதை அமைத்துத் தந்த பெருமை கோகலேயைச் சாரும்.

தி.வீ.

## இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி:

இந்திய நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்கவும் ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இவ்வங்கி 1982-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மைய அரசால் நிறுவப்பட்டது. ஏற்றுமதிக் கடன்கள், பொறுப்புறுதிகள் ஆகியவற்றை 1982-ஆம் ஆண்டு வரையிலும் அளித்து வந்த இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து ஏற்றுமதி, இறக்குமதித் தொடர்பான பொறுப்புகள் யாவும் இவ்வங்கிக்கு மாற்றப்பட்டன.

இவ்வங்கியின் (Export and Import Bank of India) செலுத்தப்பட்ட மூலதனம் 75 கோடி உரூபாயாகும். இந்திய மைய அரசும் இந்திய மைய இருப்பு வங்கியும் (Reserve Bank of India) நீண்டகாலக் கடன்களை இவ்வங்கிக்கு வழங்கியுள்ளன. இக்கடன்களும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மாற்றப்பட்ட ஏற்றுமதிக் கடன் தொகையும் சேர்ந்து மொத்தம் 172 கோடி உரூபாய் மூலவளமாக இவ்வங்கிக்குச் சேர்க்கப்பட்டது. வங்கியின் தொகு பண மூலவளம் (Aggregate resources) 1982-ஆம் ஆண்டில் 360 கோடி உரூபாயாக இருந்தது. இது தவிர ஐரோப்பியத் தாலர் கடன் திட்டம் (Euro-dollar loan) வாயிலாக இவ்வங்கி 25 மிலியன் தாலர் கடனையும் பெற்றது.

பணிகள்: ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த தொழில்களுக்கும் அவை தொடர்பான வாணிக நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி வசதிகளை இந்தியாவிலும் அயல் நாட்டிலும் அளிக்கப் பல திட்டங்களை இவ்வங்கி செயற்படுத்தி வருகிறது. இது நேரடியான நிதி உதவிகளையும் மறைமுகமான நிதி வசதிகளையும் வழங்குகிறது. ஏற்றுமதிக் கடனுறுதிச் சீட்டுகளை மறுகழிவு செய்கிறது. சரக்குகளைக் கப்பலில் ஏற்றுமுன் தேவைப்படும் நிதி உதவிகளையும் (Pre-Shipment Credit) அளிக்கிறது. இவற்றால் மூலதனப் பண்டங்களையும் (Capital Goods) பொறியியல் பொருள்களையும் ஏற்றுமதி செய்வோர் மிகுந்த பயனடைந்து ஏற்றுமதியளவைப் பெருக்கியுள்ளனர். வங்கியின் 77 விழுக்காடு நிதி உதவி போக்குவரத்துப் பொருள்களையும் மின்விசை எந்திரங்களையும் பங்கீட்டு எந்திரங்களையும் (Distribution Equipment) ஏற்றுமதி செய்ய வழங்கப்பெற்றுள்ளது.

அயல்நாட்டு வங்கிகளின் மூலம் நிதி வசதிகளையும் மறுகடன் (Financing & Relending) வசதிகளையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்பவர்கள் பெற இவ் வங்கி உதவுகிறது. மேலும், இவர்கள் தொழில் நுட்ப உதவி

 இந்திய ஓவியக் கலை

களையும் ஆலோசனைப் பணிகளையும் (Consultancy Service) இவ்வங்கியிடமிருந்து பெறுகின்றனர். பல திட்ட உதவிகளுக்காக 1981-ஆம் ஆண்டில் 953கோடி உரூபாய் ஒதுக்கீடு செய்தது. அவ்வாண்டு மார்ச்சு-திசம்பர்த்திங்கள்இடைக்காலத்தில் மட்டும்179 கோடி உரூபாய் நிதிஉதவி வழங்கியது. அயல் நாட்டு இறக்குமதியாளர் சார்பாகவும் இந்திய ஏற்றுமதியாளர் சார்பாகவும் இவ்வங்கி வணிக வங்கிகள்போல் அயற் செலாவணிக்குப் பொறுப்புறுதிகள் அளிக்கிறது. கட்டடத் தொழில்கள் (Construction Industry) இத்தகைய 75 விழுக்காடு பொறுப்புறுதிகளைப் பெற்றுள்ளன.

**இந்திய ஓவியக் கலை**: கலைகளிலேயே தலையாய கலை ஓவியக் கலையாகும். மனித வாழ்க்கையோடு ஒன்றிப் பரிணாம வளர்ச்சியாகத் தோன்றிய கலைகளுள் ஒன்று இக்கலை. இது தொல் பழங்காலம் தொட்டு இன்றுவரை பல்வேறு முறைகளில் வளர்க்கப்பட்டுள்ளது. எழுத்தறிவு பெறுவதற்கு முன்பே ஓவியக்கலையறிவைப்பெற்ற பழங்கால மனிதன் தான் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களைத் தீட்ட முற்பட்டான். பச்சிலைச் சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகிவற்றினைக் கொண்டு வேட்டைக் காட்சிகளையும் விலங்குகளின் உருவங்களையும் இயற்கைக் காட்சிகளையும் தாம் வாழ்ந்த மலைக் குகைகளில் ஓவியங்களாகத் தீட்டினான். மத்திய பிரதேசத்தில் உள்ள சிங்கன்பூர் மலைச்சரிவு, மிர்சாபூர், பாந்தா, விந்திய மலைத்தொடரில் மகாதேவ மலைச்சரிவுகள், ஆந்திராவில் பெல்லாரி, மலபார் வயநாட்டில் ஏதக்கல், தமிழகத்தில் மல்லப்பாடி, கீழ்வாலை, செத்தவரை ஆகிய பகுதிகளில் பழங்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இந்த மலைக் குகை ஓவியங்களுள் சில உலகின் மற்றப் பகுதி ஓவியங்களோடு ஒப்பு நோக்கும் வகையில் உள்ளன. சிந்துவெளி நாகரிக அகழாய்வுப் பொருள்களில் முண்டப் படிமத்திலும் மட்பாண்டங்களிலும் உயிரினங்களின் ஓவியங்களைக் காணலாம்.

ஓவிய நூல்கள்: ஓவியக் கலையைப் பற்றி இந்திய இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. ஆரியர் வேதங்களில் இக்கலையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் புத்த சமண நூல்களிலும் ஓவியத்தைப் பற்றிய விரிவான செய்திகள் காணப்படுகின்றன. விட்டுணுதருமோத்தரத்தில் உள்ள சித்திர சாத்திரமே இந்தியாவின் ஒரே சீர்சான்ற ஓவிய நூல். ஓவியங்களை வகைப்படுத்துதல், ஓவியம் வரைவதற்குரிய மூலப்பொருள்கள், ஓவியத்தில் உள்ள நற்கூறுகள், குறைகள் ஓவியர்களுக்கு நன்கு பயன்படும் அனுபவம் நிறைந்த குறிப்புகள் ஆகியவற்றைப் பற்றிய கருத்துகளை இந்நூல் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் தோன்றிய அபிலாசிதார்த்த சிந்தாமணி, சிவத்துவர்த்தினாகரம், சிற்பரத்தினம், நாரதசிற்பம் ஆகிய நூல்களில் ஓவியத்தைப் பற்றிய சுவைமிக்க பகுதிகள் உண்டு. பண்டைத் தமிழ் இலக்கியங்களும் ஓவியக்கலையைக் குறிப்பிடுகின்றன.

வரலாற்றுக் காலத்திற்குட்பட்ட காலநிலையில் தொன்மையான வண்ண ஓவியங்களைத் தக்காணத்தில் (Deccan) மேம்பட்ட வல்லரசர்களாகிய சாதவாகனர் காலக் குடைவரைகளில் காணலாம். இந்திய ஓவியங்களிலேயே சிறந்து விளங்கும் அசந்தாக் (Ajanta) குகை ஓவியங்களுள் சில இக்காலத்தைச் சார்ந்தவையாம். அசந்தாக் குடைவரைகள் ஒன்பது, பத்து ஆகியவற்றில் சாதவாகனர் கலையில் உருவாகிய ஓவியப் பாணியினைக் காணலாம். பத்தாம் குடைவரை ஓவியங்கள் போதிமர வழிபாட்டையும் புத்தரின் பழம் பிறப்புக் கதைகளையும் சித்திரிக்கின்றன. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தொடங்கிச் சாதவாகனர் ஆட்சிக்காலம் முடியச் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை) சிறப்புற்றிருந்த ஓவியப் பாணி பிற்கால இந்திய ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிற்று. மேற்கே பெத்சா (Bedsa) குகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அழகிய பெண்ணுருவம் போன்ற பெண்ணின் ஓவியத்தைச் சீனத் துருக்கியத்தில் தனிண்டன் ஒலிக்கில் (Danindan Oliq) உள்ள தாமரைக்குள் அமைந்த ஓவியத்தில் காணலாம். இந்தியாவிலிருந்து இத்தகைய பாணியும் பண்பும் கிறித்தவ ஆண்டின் தொடக்கத்திலேயே மிகுதியாக மேலை நாடுகளில் பரவினவென்று க. சிவராமமூர்த்தி கூறுகிறார். சுவர்களையும் விதானங்களையும் நிறைக்கின்ற இக்



நடனமாது
ஓவியம்-சித்தன்னவாசல்

கால ஓவியங்களை அசந்தா, பெட்சா, சுன்னார் ஆகிய குகைகளில் காணலாம்.

குசானர் கால(ஏறத்தாழ கி.பி. 20-335) எழில் ஓவியங்களில் கிரேக்க, உரோம, ஈரானிய அடிப்படைக் கூறுகள் ஒன்றாகச் சேர்ந்து, சீனப்பண்புகளுடன் உறவாடி, இந்தியப் பண்புகளுடன் இணைந்த புதுமையும் சுவையும் மிக்க ஒருகலைப் பாணியினைக் காண முடிகிறது. தில்லித் தேசியப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் ஓவியம் இக் காலத்தின் தலையாய ஓவியமாகும். வேறெங்கிலும் காணப்படாத வகையில் உடலெங்கிலும் பல்வேறு இலச்சினைகள் விளங்க, புத்தர் ஒரு மகாபுருடர் என்பதற்குச்சான்று பகர்கின்றது இவ் ஓவியம்.

குப்தர் காலம் (கி. பி. 300-கி.பி. 600) ஓவியக் கலை வளர்ச்சியின் பொற்காலமாம். பாகு (Bagh), அசந்தா ஆகிய இடங்களில் காணப்படும் இக்கால ஓவியங்கள் கலையில் மறுமலர்ச்சியைக் காட்டுகின்றன. அசந்தாவில் 16, 17, 19-ஆம் குகைகளிலுள்ள ஓவியங்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் தீட்டப்பட்டவையெனக் கருதப்படுகின்றன.

விந்திய மலையின் தென்சரிவில், முந்திய குவாலியர் சமசுதானத்தில், பாகு என்னும் சிற்றூருக் கருகில் குடையப்பட்டுள்ள ஒன்பது குகைகளில் இக் காலத்திய (500 கி.பி.) ஓவியங்களைக் காணலாம். குறிப்பாக இரண்டு, நான்கு, ஐந்தாம் குகை ஓவியங்கள் எல்லோரையும் கவரும் தன்மையன.



புத்தர்-குசானர் ஓவியம்

இவ்வோவியங்கள் புத்தரின் திருவடிகளையும் புத்தத் துறவிகளின் உருவங்களையும் பெருவாரியாகச் சித்திரிக்கின்றன. இவை கி.பி. 1818–இல் தளபதி தேஞ்சர் பீல்டால் கண்டுபிடிக்கப்பட்டு, கர்னல் சி,ஈ. இலுவார்டே, நந்தலால் போசு, அசித்குமார் ஆல்தார் முதலியோர்களால் வெளிக்கொணரப்பட்டன. சிதைந்துவிட்ட நிலையில் இவற்றின் படிகளைக் குவாலியர் அரும்பொருட்காட்சிச் சாலையில் காணலாம். குப்தர் காலத்தில் முழுமைபெற்ற இக்கலை தெற்கே சித்தன்னவாசலிலும் ஈழத்தில் சிகிரியாவிலும் உலகப்புகழ் பெறுமளவு வளர்ந்தது எனவும் இக்கால ஓவியங்கள் மனிதர்களை மட்டுமேயல்லாமல், விலங்குகளையும், பறவைகளையும், செடி கொடிகளையும், அண்டவெளிப் பொருள்களையும் மையக் கருவாகப் படைத்துப் புற அழகையும் ஆன்மிக அழகையும் அறியத் தூண்டின எனவும் வி.எசு. அகர்வால் புகழ்ந்துரைக்கிறார். இந்தியாயின் ஆன்மிக உணர்ச்சியை உள்ளடக்கிய ஓவியங்கள் குப்தர் கால ஆசியா முழுவதும் பரவியிருந்தமையினை ஆனந்த குமாரசாமி கூறுகிறார்.

குப்தர் காலத்தில் வட இந்தியாவில் மறுமலர்ச்சி பெற்ற ஓவியக்கலை தக்கணத்திலும் அதன் தெற்குப் பகுதிகளிலும் பரவ, வாகாடகர்கள் (கி.பி. 400 –600) பெருந்துணைபுரிந்தனர். அசந்தாக் குகைகளில் காணப்படும் இவர்கள் கால ஓவியங்கள் புத்தரின் முற் பிறப்புக் கதைகள், அவதாரங்களின் அடிப்படையிலான புத்தரின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றைச் சித்திரிக்கின்றன. மிக எளிமையான பற்றோவிய (Tempera) முறையில் அசந்தாக் குகை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. முதலில் குடைவரைப் பரப்பில் உமி, பிசின் சேர்ந்த களிமண்ணைக் குழைத்துப் பூசி, அதன்மேல் சுண்ணாம்புப் பூச்சினைக் கொடுத்துப் பளபளப்பாக்கினர். அப்பரப்பில் உருவங்களின் வெளிக்கோடுகளைக் கறுப்பிலும் சிவப்பிலும் வரைந்து, பின்னர்ச் சிவப்பு, நீலம், கறுப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை ஆகிய வண்ணங்களைத் தீட்டினர். புள்ளிகளையும் முக்கியக் கோடுகளையும் கொண்டு எளிதாக வரையப்பட்ட ஓவியத்தில் முழுத்திறனையும் காணலாம்.

சிற்ப நூல்களில் காணப்படும் இலக்கணங்களுக்கேற்ப வரையப்பட்டுள்ள அசந்தா ஓவியங்கள் ஓவியனின் திறனையும், நுகர்வினையும் வெளிப்படுத்துகின்றன. தன்னைக் கவர்ந்த வாழ்க்கைச் சூழல், இயற்கைக் காட்சிகள், தாவரங்கள், விலங்குகளின் வாழ்க்கை ஆகியவற்றைத் தீட்டிய ஓவியனின் கைத்திறமையினையும் தொழில் நுணுக்கத்தினையும் வாகாடகர் கால அசந்தாக் குகை ஓவியங்கள் வெளிப்படுத்துகின்றன. 10–ஆம் குகையில் ஆலமரத்தினடியிலிருக்கும் யானைகள், 17–ஆம் குகையில் அம்சசாதகத்தில் உள்ள அன்னங்கள் உருருசாதகத்திலுள்ள மான் ஆகியன, விலங்குகளையும் பறவைகளையும் எவ்வாறு மிக்க ஈடுபாட்டுடன் ஓவியன் தீட்டியுள்ளான் என்பதைக் காட்டும் சில சான்றுகளாம். 27–ஆம் குகைக் காட்சி பண்டைய இந்தியாவின் வணிக வாழ்க்கையினைச் சித்திரிக்கிறது. 17–ஆம் குகையில் உள்ள 'ஈழத்தில் கரையை அடைதல்' என்னும் ஓவியம், அரசனுக்குரிய உயர்வின் மிகச் சிறந்த ஒரு உருவமைப்பு. அந்தப்புரத்திலோ தோட்டத்திலோ உள்ள அரசனையும் அவன் தேவியையும் கணநேரத்துக்குக் காட்டும் அரண்மனையின் உட்புறம், அரசவை ஓவியனின் பார்வையினின்றும் ஒன்றும் ஒளிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. நேயக்கரம் கழுத்தைப் பின்ன நெருங்கித் தழுவும் நேர்த்தியும் காதற் பெண்ணின் கடைக்கண் வீச்சுகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. 17–ஆம் குகையில் நுழைவாயிலின் மேலே ஒரு வரிசை முழுவதும் காதலிருவரது மனமகிழ் காட்சியினைக் காணலாம்.

மிகச்சிறந்த ஓவியங்களைக் கொண்டிருக்கும் 16–ஆம் குகை வாகாடக மன்னன் அரிசேனரின் அமைச்சன் வராகதேவனால் வெட்டப்பட்டது. முகுல்தேவ் (Mukuldev), ஆர். சத்தியநாதய்யர் ஆகியோர் 16, 17–ஆம் குகைகள் சந்திரகுப்தன் காலத்தில் குடையப்பட்டவை என்கிறார்கள். ஆனால் க.சிவராமமூர்த்தி இவை வாகாடக மன்னன் அரிசேனன் காலத்தவை என்கிறார். 19–ஆம் குகையும், 1,2–ஆம் குகைகளும் இக்காலத்து ஓவியங்களைச் சித்திரிக்கின்றன. அசந்தாவில் காணப்படும் வாகாடக ஓவிய மரபுகள் குப்த வாகாடக காலத்துச் சிறப்பியல்பான முத்துகள், இழைப்பட்டைகள் ஆகியவற்றால் ஆக்கப்பெற்ற அலங்காரக் கூறுகள் ஆகியவை, சாதவாகனரின் எளிய ஆனால் சிறந்த கலையினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

தக்கணத்தில் வாகாடகர்களின் மரபுகளை வாதாபி சாளுக்கியர்கள் (கி.பி. 6–8 நூற்றாண்டுகள்) பின்பற்றினார்கள். மங்களேசனின் அரசவையிலிருந்த ஓவியர்களின் சித்திரங்கள் அந்த மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இந்து சமயத்தின் கோயில்களில் மிகவும் முந்தியதான ஓவியங்களைக் கவிந்த விமானக் கூரையில் கண்டுபிடித்த பெருமை இசுடெல்லா கிராம்ரிட்சையே (Stella Kramristch) சாரும். வாதாபியில் மங்களேசன் கட்டிய அரண்மனையில் ஓர் அழகிய ஓவிய அணிவரிசை காணப்படுகிறது. அரண்மனையின் மற்றொரு பகுதியில் இம்மன்னன் தன் தமையனான கீர்த்திவர்மனைத் தன் அரசியாரோடும் பிற பணி

யாளரோடும் சிறப்புறச் சித்திரித்துள்ளான். வாதாபி குகையில் வராகச் சிற்பத்துக்கருகே காணப்படும் இந்திரன், கீர்த்திவர்மன் ஆகியோரின் சித்திரங்கள், மரபுவழி வந்த புகழ்ச்சிக்கு அப்பால் தமையனுக்குப் புகழை மிகுத்த மங்களேசனைத் தெளிவாக்குகின் றன. இக்குகையில் காணப்படும் வித்தியாதரம் சோழ ஓவியங்கள் தக்கணத்தில் சாளுக்கியர்கள் பெற்றிருந்த கலைவளத்தை உணர்த்துவனவாயுள்ளன.

**தமிழகத்தில் ஓவியக் கலை:** தமிழகத்தில் சங்க காலத்தில் ஓவியக் கலை சிறந்திருந்ததை அக்காலத் தமிழ் நூல்கள் திறம்படக் கூறுகின்றன. தொல் காப்பியம், மதுரைக்காஞ்சி, பரிபாடல், சிலப்பதி காரம், மணிமேகலை ஆகிய நூல்கள் இக்காலத்து ஓவியக் கலை மாட்சியினை எடுத்தியம்புகின்றன. பல்லவ மன்னன் 'தக்கணச்சித்திரம்' என்னும் ஓவிய நூலுக்கு உரையெழுதியுள்ளான். மன்னர்களும் மக்களும் இக்கலையினைப் பெரிதும் போற்றியுள்ள னர். தெய்வத் திருக்கோயில்களின் சுவர்களிலும் அரண்மனை மண்டபங்களிலும் இல்லங்களிலும் திறமை வாய்ந்த ஓவியர்களால் கண்ணைக் கவரு கின்ற முறையில் வெண்சுதை பூசப்பட்ட சுவரில் ஓவியங்கள் வரையப்பட்டதையும், துணியிலும் ஓவியம் தீட்டும் வழக்கமிருந்ததையும் அக்காலத்து இலக்கியங்கள் தெளிவாக்குகின்றன.

மிகச்சிறந்த வண்ணங்களால் தீட்டப்பெற்ற இக் கால ஓவியங்களில் முக்கியக் கோடுகளும், சிறு கீறல் களும், முகத்தோற்றத்தையும் உடலுறுப்பின் அசை வுகளையும் தெளிவாகக் காட்டுகின்றன.

துப்ராய் (Dubreui) காஞ்சி பல்லவக்கோயில்கள், பனைமலைக் கோயில் ஆகியவற்றில் உள்ள ஓவியங் களைக் கண்டுபிடித்தவராவார். பனைமலையில் உள்ள கிரீடமும் கவிகையும் கொண்ட வனப்புமிக்க தேவி, காஞ்சிக் கைலாசநாதர் கோயில் பிரகாரச் சுற்றுப்புறச் சிறு அறைகளில் காணப்படும் ஓர் அரசர், சோமாசுகந்தர் ஆகியோரின் அழகிய ஓவியச் சிதை வுகள் இராசசிம்மன் காலத்து ஓவியத் திறனைக் காட்டுகின்றன. சிவனும் உமையும் அமர்ந்திருக்க, கந்தன் குழந்தையுருவில் அவர்கள் அருகில் காட்சி யளிக்கிறான். சோமனாகிய சிவனும், கந்தனாகிய முருகனும் இணைந்து காணும் முதல் ஓவியம் இதுவே. பற்றுள்ள பெற்றோரின் குணாதிசயங்களை இவ்வோ வியம் வெளிப்படுத்துகிறது. பெண்ணின் அழகை மேம்படுத்தும் உருவத்துக்கு உமையின் உருவம் எடுத்துக்காட்டாகும். இரண்டாம் பரமேசுவரன் காஞ்சியில் கட்டிய வைகுந்தப் பெருமாள் கோயில் விமானத்திலும் ஓவியச் சின்னங்கள் தெரிகின்றன. இதைப்போலவே மாமல்லபுரத்திலுள்ள தருமராசர் தேரின் மேல் தட்டுகளிலும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததற்கான அடையாளங்கள் காணப் படுகின்றன.



அரசனும் அரசியும்-முற்காலப் பாண்டியர் ஓவியம்-சித்தன்னவாசல்

பல்லவர் காலத்தில் தோன்றிய ஆரிய சமய மறு மலர்ச்சியும் பின்னரெழுந்த சைவ சமய எழுச்சியும் அக்காலக் கலைகளுக்கு உயிரூட்டின. பாண்டியர் களும் கலைக்கு உயிரூட்டினர். நெல்லை மாவட்டத் தில் திருமலைபுரம் குடைவரை ஓவியங்களில் பெரும் பான்மை அழிந்துவிட்ட போதிலும் எஞ்சியிருக்கும் பறவை, மலர்ச் சித்திரங்கள் ஆகியவை ஓவியனின் கைத்திறனைக் காட்டுகின்றன. திருநந்திக்கரை குகைக்கோயில் ஓவியங்களும் மேற்கூறிய கூறுகளைப் பெற்றுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள சித்தன்னவாசல் குடைவரை ஓவியங் கள் முதல்தரமான கலை மரபில் உள்ளன. தொடக் கத்தில் இவை பல்லவ ஓவியங்கள் எனக் கருதப் பட்டன. ஆனால் இவை பாண்டியர் கால ஓவியங் கள் என்பதற்கான தெளிவான சான்றுகள் கிடைத் துள்ளன. குகையின் விதானத்தில் தாமரைக்குளச் சித்திரம் அழகுடன் தீட்டப்பட்டுள்ளது. மண்டபத் தின் தூண்களில் அரசன், அரசி, நடனமாதர்கள் ஆகியோரின் உருவங்கள் மிக்க கவனத்துடனும் நயத்துடனும் வரையப்பட்டுள்ளன.

சமகாலத்துத் தக்கணத்தின் ஒப்பற்ற நினைவுச் சின்னமான எல்லோரா, கைலாசநாதர் குகைக்

கோயில் ஆகியவற்றிலுள்ள ஓவியங்கள் இராட்டிர கூடரின் காலத்தைச் (கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டு கள்) சார்ந்தவையாம். அழகிய பூவேலைப்பாடுகள், விலங்குகள், பறவைகள் ஆகிய ஓவியங்கள் இங்கு மண்டபங்களையும் விதானங்களையும் நிறைக்கின் றன. சாளுக்கிய மரபைப் பின்பற்றி வரையப்பட்ட இவ்வோவியங்களில் சில புதிய உத்திகளைக் காண லாம்.

சோழர்கால ஓவியக்கலை: தமிழகத்தைக் கி.பி. 9-13-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட சோழர்கள் ஓவியக்கலையைப் பெரிதும் போற்றினர். நார்த்தா மலை, மலையடிப்பட்டி முதலிய இடங்களில் முற் காலச் சோழ ஓவியங்களைக் காணலாம். முதலாம் இராசராசனால் எடுப்பிக்கப்பட்ட தஞ்சைப் பிரக தீசுவரர் கோயில் முற்காலச் சோழ ஓவியனின் கலைக்குப் பெரிய களஞ்சியமாக விளங்குகிறது. இக் கோயில் கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் எசு.கே. கோவிந்தசுவாமியால் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் தென்னிந்திய ஓவியத்தில் ஒரு புதிய கட்டத்தை, முற்காலச் சோழர் கலையின் ஓர் ஒழுங்கான சித்திர சாலையைக் காட்டின என்றும், முந்திய பல்லவ கட்டத்திலிருந்து பிந்திய விசய நகரக் கட்டம் வரை உள்ள தொடர்ச்சியின் சிறப் பான இணையாக இவ்வோவியங்கள் விளங்குகின் றன என்றும் க. சிவராமமூர்த்தி கூறுகிறார். மேற்குச் சுவரிலுள்ள காட்சிகளில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காட்டும் ஓவியங்கள் வரிசையாக உள்ளன. சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்ட காட்சியும், சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாருடன் கயிலை செல்லும் காட்சியும் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேற்புறத்தில் யோகதட்சிணா மூர்த்தியின் உருவம் அருகில் பூதகணங்களுடனும் நந்தியுடனும் நடனமாடும் தேவமாதர்களுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளது. அரச குடும்பத்தினர் வழி பட நடராசர் வீற்றிருக்கும் முற்காலச் சோழர் கோயிலையும் இங்குக் காணலாம். வடக்குச் சுவர் முழுவதும் சித்திரிக்கப்பட்டுள்ள திரிபுராந்தகப் போர்க் காட்சி சோழர் காலத்து ஓவியக் கலையின் மிகப்பெரும் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு. இந்த ஓவியத்தில் எண் தோள்களிலும் ஆயுதங்கள் விளங்க, அசுரர்களை அழிக்க வன்மைமிக்க வில்லைப் பயன் படுத்தும் போர் வீரரின் நிலையில், நான்முகனால் ஓட்டப்படும் தேரில் முப்புரம் எரிக்கும் திரிபுராந்த கனையும், எரித்தபின் வெற்றிகண்ட அவர் பெரு மிதத்தினையும் காணலாம். எதிரில் போரிடும் அசுரர் களின் முகபாவனைகள் உறுதி மனப்பான்மையையும் கோபத்தையும், நம்பிக்கையிழந்த அவர்கள் பெண் களின் அழுத கண்ணீர்க் கறையுடன் கூடிய முகங் கள் இரக்க உணர்வையும் சுட்டுகின்றன. 'தஞ்சை ஓவியங்கள்' (Tanjore Frescos) எனப் புகழ்ப்பெற்ற இவ்வோவியங்களில் வண்ணங்கள் மேன்மையாகவும், கோடுகள் மிகுந்த திறனுடனும் தீட்டப் பெற் றுள்ளன.

ஒய்சாளர் ஓவியக்கலை: துவாரசமுத்திரம் என் னும் நகரிலிருந்து கி.பி. 11-13-ஆம் நூற்றாண்டுகளில் மேற்கு மைசூர்ப் பகுதியை ஆண்ட ஒய்சாளர்களின் ஆளுகைக்குட்பட்ட மூதுபத்திரி என்னுமிடத்தில் கிடைத்துள்ள பனையோலைகளில் தீட்டப்பட்ட பல வண்ண ஓவியங்கள் சமண சமயச் சார்புடையவை. மூதுபத்திரி மடத்தால் பாதுகாக்கப்பட்ட பனை யோலைச் சுவடிகள் ஒய்சாள ஓவியனின் திறனைக் காட்டும். இவை விட்டுணுவர்த்தன் காலத்தைச் சார்ந்தவை. சுவடிகளில் நூலை உருவாக்கும் எழுத்து களின் அழகுக்கும் அவற்றுடன் சேர்ந்திருக்கும் விளக் கச் சித்திரங்களுக்கும் இந்த ஒய்சாளர் ஓவியங்கள் முதன்மை வாய்ந்தவை.

ஒய்சாளரின் சமகாலத்தில் வாரங்கல்லைத் தலை நகராகக் கொண்டு, ஆண்ட காகதீயரின் வண்ண ஓவியங்களைத் திரிபுராந்தகம் என்னும் குன்றின் உச்சியிலுள்ள கோயிலிலும், பில்லாமறிக் கோயிலி லும் காணலாம். இவர்கால ஓவியங்களுள் சிறப்புடை யது 'அமிர்தமதனக் காட்சி' ஆகும்.

விசயநகரக்கால ஓவியம்: தென்னிந்திய வரலாற் றில் இந்துப்பண்பாட்டின் கடைசிப் பெரியகட்டத்தை உணர்த்தும் விசயநகரப் பேரரசுக் காலம் (கி.பி. 14-16-ஆம் நூற்றாண்டுகள்) ஓவியக் கலையைச் சிறப் புறப் போற்றிய காலமாகும். இவ்வமிச் மன்னர்களுள் கிருட்டிணதேவராயரின் பணி மிகப்பெரிது. விசயநக ரப் பகுதியில் அழகான கோபுரங்களையும் அலங் கார மண்டபங்களையும் எடுப்பித்து அவற்றில் ஓவி யங்களையும் தீட்டினார். அம்பிக்கு (Hampi) அருகே ஆணைகுந்தி (Anegondi), தாட்பத்திரி (Tadpatri), காஞ்சிபுரம், காளத்தி(Kalahasti), திருப்பதி, திரு வண்ணாமலை, சிதம்பரம், கும்பகோணம், திருவரங் கம் ஆகிய இடங்களிலும் பிற இடங்களிலும் விசய நகர ஓவியங்களின் சின்னங்களைக் காணலாம். விசய நகர ஓவியங்களில் ,தலைசிறந்தது கி.பி. 14-ஆம் நூற்றாண்டினதாய பேரரசின் தலைநகரில் உள்ள விருபாட்சர் கோயிலின் பெரிய முன் மண்டபத்துக் கூரையில் வரையப்பட்டிருக்கும் முனிவர் வித்தியார ணியர் ஊர்வலக் காட்சியாகும். அருச்சுனன் வில் வளைத்தல் காட்சியும், இராமர் சீதை திருமணக் காட்சியும் இக்கோயிலில் ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள இலே பாட்சியில் (Lepakshi) பாபநாசேசுவரர் கோயில்

மண்டபக் கூரையில் அச்சுதராயர் காலத்து ஓவியங்களைக் காணலாம். வீரபத்திரனின் மாபெரும் ஓவியம் சிறப்பானது. இங்குள்ள அழகிய உருவங்கள், சிவலீலைக் காட்சிகள், இராமபட்டாபிடேகம் அருச்சுனனும் கிராதனும் போர்செய்வது, ஆலிலையில் கிருட்டிணன் துயில்வது போன்ற ஓவியங்கள், விசயநகர ஓவியர்கள் தூரிகையையும் வண்ணத்தையும் கையாள்வதில் கொண்டிருந்த பெருந்திறமையை விளக்குகின்றன. பிச்சாடனர், காலாரி, கங்காதரர் திரிபுராந்தகர் ஓவியங்களும் சிறப்பானவை.

சமண காஞ்சி திருப்பருத்திக்குன்றத்திலுள்ள வர்த்தமானர் கோயிலின் இசைக்கூடத்திலும், வைணவ காஞ்சி வரதராசர் கோயிலின் ஒரு சிறு மண்டபத்திலும் விசயநகர ஓவியங்களைக் காணலாம். வைணவ காஞ்சியில் இந்தியக் கலைஞர்களின் பெருவிருப்பாக அமைந்த மன்மத உருவம், எளிமையாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் உத்திரவரதப் பெருமாள் கோவிலில் காணும் கல்கி அவதார ஓவியமும் கொண்டவீடு இராகவேசுரர் கோயிலில் காணும் ஓவியச் சின்னங்களும் கிருட்டிணதேவராயர் காலத்தவையாம். இவர் காலத்தில் பிறநாட்டாரின் உருவங்களும் அரண்மனையிலும் அந்தப்புரத்திலும் தீட்டப்பெற்றனவென்றும், அவற்றுள் போர்த்துகீசியரின் உருவங்களுமிருந்தனவென்றும் இத்தகைய வெளிநாட்டாரின் நடை, உடை, அணி, ஆபரணங்களை அந்தப்புரத்தினர் அறியவே இத்தகைய ஓவியங்கள் தீட்டப்பெற்றனவென்றும் பேய்சு (Paes) என்பார் கூறுகிறார்.

தமிழகத்தில் விசயநகர மன்னர்களின் வாரிசுகளாகிய நாயக்கர் அரசர்கள் காலத்து ஓவியங்களைத் திருப்பருத்திக்குன்றம், திருவாரூர், தஞ்சை, திருவலஞ்சுழி, மதுரை, சிதம்பரம், குற்றாலம், கும்பகோணம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களில் காணலாம். நாயக்கர் கலையில் விசயநகர காலத்தில் ஏற்பட்ட மரபுப்படுத்தப்பட்ட வரன்முறை தொடரப்பெற்றது.

தஞ்சை மராட்டிய மன்னர் சரபோசியால் (கி.பி 1798–1832) சேகரிக்கப்பட்ட ஓவியச் செல்வங்களைத் தஞ்சை சரசுவதி மகாலில் காணலாம். பல அரிய வடமொழி நூல்களும் பல நூல்களின் செய்திகளை ஓவியக் காட்சிகளாகக் காட்டும் ஓலைகளும் இங்கு உள்ளன. இவர் காலத்தில் சாதாரண பனை ஓலை முதல் காகிதம், கண்ணாடி, தந்தம் முதலியவற்றின் மீதும் ஓவியங்கள் தீட்டப் பெற்றன. சரசுவதி மகாலில் உள்ள ஓவியங்களுள் சிறந்தது வெண்ணெய் உண்ணும் கிருட்டிணனின் ஓவியமாம்.

கேரளத்தின் ஓவியப்பாணி கி.பி. 16–18–ஆம் நூற்றாண்டுகளில் அக்காலச் சிற்பம், மரச்செதுக்கு வேலையைப் பெரிதும் ஒத்துள்ளது. திருவஞ்சைக்களம், பள்ளிமனை, திருப்பரயாறு, திருச்சூர் வடக்கு நாதர் கோயில், மட்டாஞ்சேரி அரண்மனை ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்கள், கொச்சிப் பரப்பில் கிடைக்கும் வளமிக்க பாரம்பரியச் செல்வத்தைக் காட்டுகின்றன. வைக்கம், ஏற்றுமானூர், சிற்றரல் முதலிய இடங்களிலிருந்து தொடங்கி, பத்மனாபபுரம், கிருட்டிணாபுரம் வரை உள்ள இடங்களில் காணப்படும் உச்சநிலை பெற்ற ஓவியங்கள், திருவிதாங்கூர்ப் பரப்பில் ஓவியக்கலை இருந்த நிலையைக் காட்டுகின்றன. தெய்வ உருவங்கள் உட்பட இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் உள்ள காட்சிகள் ஓவியர்களால் சித்திரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன. இக்காலத்தில் கேரளத்தில்கட்டப்பெற்ற கிறித்தவ ஆலயங்களில் ஏசுநாதரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. இவற்றைச் சேப்பாடு சிரியன் கோயில், மூலந்துருத்தி சாக்கோபைட்டு ஆலயம், கொச்சியிலுள்ள சாந்தா குரூசு ஆலயம் முதலியவற்றில் காணலாம்.

இடைக்காலத்தில் (கி.பி. 9–16–ஆம் நூற்றாண்டுகள்) கிழக்கிந்தியப் பாணியின் சிறந்த சான்றுகளைப் பீகாரிலும் வங்காளத்திலும் காணலாம். பாலர்களின் ஓவியப்பாணி சிற்பத்தின் சிறந்த மரபுகளை வழுவாது பின்பற்றுகிறது. இந்தப் பாணியின் மிகப் பழைய ஓவியங்கள் பனையோலைச் சுவடிகளில் உள்ளன. சித்திரங்கள் முதல்தரமான பழைய மரபில் உருவங்களைக் காட்டுகின்றன. இவ்வோவியங்களின் முக்கியப் பொருள் தெய்வ உருவங்களாகும். சேனர்கள் காலத்திலும் அழகிய வண்ணமெருகிட்ட சுவடிகள் தீட்டப்பெற்றன. இந்த மரபு ஒரிசாவிற்கும் பரவிற்று.

மேற்கிந்தியாவிலும் பனையோலைச் சித்திரச் சுவடிகள் சில நூற்றாண்டுகளுக்குத் (கி.பி. 11–15–ஆம் நூற்றாண்டுகள்) தொடர்ந்தன. வண்ணம், மரபொழுங்குக்குட்பட்ட உருவம், இவற்றின் எளிமை, ஆடம்பரமின்மை தனி இயல்புகள் எல்லாம் முந்திய இராட்டிரகூட மரபினின்றும் வந்த மேற்கிந்திய குசராத்திப் பாணியின் வளர்ச்சியைக் குறிக்கின்றன. இந்தச் சுவடி ஓவியங்கள் பக்திப் பெருக்காலும் தன்னலமற்ற தியாகத்தாலும் உயர் பண்பும் உலக முழுதும் தழுவிய உணர்வும் நிறைந்த கருப்பொருளின் சிந்தனையாலும் உந்தப்பட்ட கலைஞர்களால் தீட்டப்பெற்றன.

கி.பி. 16–17–ஆம் நூற்றாண்டுகளில் தழைத்தோங்கியிருந்த முகலாயர் பாணியிலான இசுலாமிய

ஓவியத்தின் பிறப்பிடம் பாரசீகமாகும். இந்தியாவிற்கு வந்த சீன, துருக்கி, பாரசீகக் கலைகள் உயரிய சூழ்நிலையில் மென்மையும் பக்குவமும் பெற்று, இந்த நாட்டிற்குரிய மரபுகளின் சிறந்த கூறுகளைப் பெற்றுச் சிறந்த கலைகளாக மலர்ந்தன. பெரிய அரசவைக் கலையாகத் தனித்தன்மை வாய்ந்ததாயினும் முகலாய ஓவியம் இந்திய ஓவியமே என்று க. சிவராமமூர்த்தி கருதுகிறார். முகலாய மன்னன் உமாயூனால் ஆதரிக்கப்பட்டு அக்பர் காலத்தும் வாழ்ந்த சிராசிலிருந்து (Shiraz) வந்த குவாசா அப்துல் சமது (Qwaja Abdul Samed) என்பவரால் முகலாய ஓவியம் இந்தியாவில் தொடக்கம் பெற்றது. இக்காலத்தில் கலைஞர்கள் தங்கள் பெயர்களை ஓவியங்களில் தீட்டும் வழக்கம் அக்பர் அரசவையிலிருந்த பல கலைஞர்களின் பெயர்களால் தெரிகின்றது. சித்திரங்கள் தீட்டப்பெற்ற பாபர் நாமா, அக்பர்நாமா, அம்சநாமா, இரசும் நாமா எனப்பெயரிய வேறுபல அக்காலச் சித்திர நூல்கள் ஒரு பெரிய சாதனையாம். இக்காலத்தில் பிற்புலன், இயற்கைக் காட்சி, இவற்றைத் தீட்டும் பாரசீக முறை ஆகியவை தெளிவாகத் தெரிகின்றன. பின் வந்த காலத்தில் இந்த ஆதிக்கம் வரவரக் குறைந்தது.

ஓர் ஓவியக் கலைஞனின் படைப்பை மற்றொரு கலைஞனின் படைப்பினின்றும் தம்மால் வேறுபடுத்தி உணரமுடியும் என்று கருதிய முகலாய மன்னர் சகாங்கீர் (Jahangir) தம் அரசவையில் ஓவியர்களின் குழு ஒன்றைப் புரந்துவந்தார். இவர் காலத்தில்தான் மிகச்சிறந்த இசுலாமிய ஓவியங்கள் தீட்டப்பட்டன. தம்முடைய, தம் அரசியுடைய, தம் குடும்பத்தினருடைய உருவ ஓவியங்களில் பேரரசர் அகமகிழ்வுற்றார். இக்காலத்தில் வனப்பு மிக்க சில விலங்குகளும் மலர்களும் வரையப்பட்டு வண்ணத்தில் சித்திரிக்கப் பெற்றன. உண்மை நிலை பிறழாது சித்திரிக்கப்பட்ட உரு வரைபடங்கள் வளருவதற்குக் காரணமாயிருந்த சகாங்கீரின் ஆர்வத்தைச் சர் தாமேசுரோ பாராட்டிக் குறிப்பிடுகிறார். கட்டடக்கலையில் பேரார்வங்கொண்ட சாசகான் (Shah Jahan) காலத்திலும் ஓவியம் செழித்து வளர்ந்தது. இசுலாமிய சமயக் கொள்கைக்கு எதிராகச் செயற்பட விரும்பாத அவுரங்கசீபு (Aurangzeb) ஓவியக் கலைக்கு ஆதரவளிக்காததால் அவரால் வெளியேற்றப்பட்டு, மனமுறிவுற்ற கலைஞர்கள் அமிர்தசரசு, இலாகூர், இலக்னோ, அவுத், மூர்சிதாபாது ஆகிய நகரங்களிலுள்ள சிற்... கள் பாணிகளுடன் ஒன்றுபட்டனர்.

முகலாயருக்குச் சமகாலத்தில் நீண்டதொரு பாரம்பரியத்துடன் இராசசுத்தானி ஓவியம் ஒரு மரபைத் தொடர்ந்தது. இந்தப் பாணியைச் சார்ந்த சிற்றோவியங்கள் தொடக்கத்தில் சிற்றோவியங்களாக உருவாக்கப் படவில்லை. முக்கியமாக இக்கலை சுவரோவியக்கலைதான் எனக் காட்டும் பல பெரிய அளவில் உள்ள வரிவடிவப் படங்களும், வண்ணப்படம் எழுதுவதற்கு மாதிரியாக எழுதப்படும் வரைபடங்களும் இருக்கின்றன. இதற்குச் சான்றுகள் செய்ப்பூர், உதயப்பூர் அரண்மனைகளில் உள்ளன. இராசலீலையும் இராதாகிருட்டிணக் காதலும் இன்பக் கருப்பொருள்களாக விளங்குகின்றன. உயர்குடி இயல்புடைய, தனிப்பண்புடைய முகலாய ஓவியங்களினின்று முற்றிலும் மாறுபட்ட இராசபுத்திர ஓவியங்கள், சுற்றியுள்ள துடிப்புள்ள வாழ்க்கையோடு இழைந்தும், உழவருக்கும் நாடோடி மக்களுக்கும் புரியும் எளிமையுடனும், பொருளிலே விழுப்பமுடனும், முறையீட்டில் உலக முழுவதும் தழுவியும், ஆழ்ந்த சமயப்பற்றும், ஆன்மிகச் சார்பும் கொண்டும் விளங்குகின்றன. இயற்கைப் பருவங்களின் நிலைகளையும், உயிர் உள்ளனவும் உயிர் இல்லனவும் ஆகியவற்றின் தன்மைகளையும் அவை கொண்டுள்ளன. மேவார், புண்டி, செய்ப்பூர், சோத்பூர் என்று இராசசுத்தானி பாணியின்பல கிளைப் பண்புகளைக் காணமுடிகிறது. இதேமுறையில் பகாரி ஓவியங்களைக் காங்ரா, குலேர், சம்பா, நூர்பா, கர்வா, சம்மு கிளைப்பாணிகளிலும் காணலாம். இராசபுத்திரர் ஓவியங்களின் மற்றொரு தன்மையாவது இசையை ஓவியங்களால் விளக்கும் மரபாம். இதற்கு இசைமாலை (இராக மாலா) ஓவியங்கள் என்று பெயர். காண்க: இராசசுத்தானி ஓவியங்கள்.

தக்காணத்தில் பாமினி (Bahmini) அரசின் சிதைவில் வளர்ந்த தக்கணச் சுல்தானிய அரசர்கள் (Deccan Sultanates) அப்பகுதியில் இசுலாமிய ஓவியங்களை வளர்த்தனர். இவர்கள் காலத்தில் (கி.பி. 16–17–ஆம் நூற்றாண்டுகள்) பாரசீக, துருக்கிய மரபுகளை ஒட்டிய ஓவியங்கள் வளர்ந்தன. இவ்வோவியங்களைப் பிரிட்டன் பொருட் காட்சிச் சாலையிலும் இந்தியப் பொருட்காட்சிச் சாலைகளிலும் காணலாம். இவற்றில் விசயநகரச் சாயலுடன் கூடிய தெற்கத்திய இசுலாமியப் பாணியைக் காணலாம். ஐதராபாத்து, கடப்பை, கர்னூல், ஆர்க்காடு, மைசூர் முதலிய இடங்களிலும் இக்காலத்தில் முகலாய ஓவியங்களைப் பின்பற்றி அதே பாணியில் ஓவியங்கள் வரையப்பட்டன. இக்காலத்தில் மராத்தியத்தை ஆண்ட பேசுவாக்களும் (Peshwas) ஓவியக் கலையை ஆதரித்தனர்.

கி.பி. 18–19–ஆம் நூற்றாண்டுகளின் ஓவியங்களில் ஐரோப்பிய வகையின் பாதிப்பினால் ஆங்கி

லேய-இந்தியப் பாணி ஓவியமுறை என்னும் புதிய பாணி பிறந்தது. திருவிதாங்கூர் அரசக் குடும்பத்தைச் சார்ந்த இராசா இரவிவர்மா ஐரோப்பியக் கலைஞர்களால் பயிற்சியளிக்கப்பட்டுப் புதிய பாணியில் ஓவியங்களைத் தீட்டினார். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரு. ஏவலின் (Havell) அறைகூவலாலும் இரவீந்திரநாத தாகூராலும் தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியாலும் பண்டைய இந்திய ஓவியங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திடப்பட்டது.

சி.கே.சி.

துணை நூல்கள்:

ஏகாம்பரநாதன், ஏ., தமிழகச் சிற்ப ஓவியக் கலைகள், சைவ சித்தாந்தக் கழகம், சென்னை, 1985.

சிவராம மூர்த்தி, க., இந்திய ஓவியம், தேசிய புக் டிரஸ்ட்டு, புதுதில்லி, 1974.

**Champakalakshmi, R.**, New Light on Tanjoor Frescoes, Journal of Indian History, 1972.

**இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம்**: இது இந்திய அரசால் 1933-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அனைத்து இந்தியாவுக்கும் இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம் (The Indian Wireless Telegraph Act 1933) செயற்படத் தக்கது.

குறி, குறிப்பு, எழுத்து, காட்சி, ஒலி போன்ற பல்வேறு இயல்புடைய செய்திகளை மின்சாரம், காந்தம், கதிர் வீச்சு அலை இவற்றால் கம்பியில்லாத வகையில் பரப்புவது அல்லது பெறுவது என்ற செய்கையைக் 'கம்பியில்லாச் செய்தி தொடர்பு முறை' (Wireless Communication) என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

கம்பியில்லாத் தந்தி (தொலைவரி) செய்தித் தொடர்பு முறைக்குப் பயன்படும் அல்லது பயன்படத்தகுந்த கருவி அல்லது இச்சட்டத்தின் 10-ஆம் பிரிவின்கீழ்ப்பிறப்பிக்கப்படும் விதிகளின்படி, குறிப்பிடப்படும் கருவி கம்பியில்லாத் தந்திக் கருவி (Wireless Telegraph Apparatus) எனப்படும். மேற்கூறிய நோக்கத்திற்குச் சிறப்பாக வடிவமைக்கப்படாத கருவிகள் இவ்விளக்கத்தில் உள்ளடங்கா. கம்பியில்லாச் செய்தியைப் பரப்பப் பயன்படுத்தப்படும் கருவி கம்பியில்லாத் தொலைவரி செலுத்தி (Wireless Transmitter) என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தந்திச் சட்டத்தின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி இச்சட்டத்தின்படி உரிமம் வழங்க அதிகாரம் படைத்தவர் ஆவார். உரிமம் இல்லாமல் கம்பியில்லாத் தந்திக் கருவி, கம்பியில்லாத் தொலைவரி செலுத்தி ஆகிய கருவிகளை வைத்திருப்பது தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். மேலும், அக்கருவிகளைப் பறிமுதல் செய்யலாம். உரிமம் இல்லாது வைக்கப்பட்டிருக்கும் அவ்வாறான கருவிகளைக் கண்டுபிடிக்க அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியானவர், கட்டடம், இடம், கப்பல் ஆகியவற்றில் நுழைந்து சோதனையிடலாம். இச்சட்டத்தின்படி உரிமம் வழங்கப்பட்டவர் இந்தியத் தந்திச் சட்டத்தின்கீழ்த் தடைவிதிக்கப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு உரிமை உண்டு என எண்ணக் கூடாது.

**இந்தியக் கல்வி அமைப்பு**: இந்தியா ஒரு புறம் தொழில் நுட்பத் துறையில் வளர்ச்சியுற்றும் மறுபுறம் எழுத்தறிவற்றோர் எண்ணிக்கையில் மிகுந்தும் காணப்பட்டு, இருவேறான தனித்தன்மைகளைக் கொண்டுள்ளது. கல்வி வல்லுநர்கள் இவ்வகையான ஏற்ற இறக்கங்களுக்குக் கல்வித் திட்டமே காரணம் எனத் திட்டத்தைச் சாடுகிறார்கள். ஏனெனில், இவ்வகையான கல்வி அமைப்பு நாட்டு வளர்ச்சிப் போக்கினின்றும் மக்களைப் புறக்கணிக்கின்றது என்பது அவர்கள் கருத்தாகும்.

இந்தியாவில் அனைத்துச்சமயத்தைச் சார்ந்தவர்களும் பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களும் தங்களுக்கென எழுத்துகளையுடைய மொழிகளையுடையோரும் என அனைத்து வகையான மக்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். ஏறக்குறைய 60 விழுக்காடு மக்கட்டொகை 24 வயதுக்குட்பட்டோரைக் கொண்டதாகும். கிராமப்புறங்களில் 80 சதவீத மக்கள் வாழ்கின்றனர். இந்திய நாட்டு வருமானத்தில் 50 விழுக்காடு, வேளாண்மை மூலமும் இந்திய மீன் வளப்பொருள்கள் மூலமும் பெறப்படுவதாகும். நாட்டின் மொத்த வேலையாள் எண்ணிக்கையில் ஏறத்தாழ 75 விழுக்காட்டினர் வேளாண்மைப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சமுதாய நீதிகளைப் பரப்பும் முறையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைந்துள்ளன. கடந்த முப்பது ஆண்டுகளாகத் திட்டங்களை நிறைவேற்றியதன் பலனாகத் தேசிய வருமானம் 3.7% உயர்ந்துள்ளது. எனினும், 48 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ்தான் வாழ்கின்றனர்.

ஆங்கிலேயர் அரசாட்சிக்கு முன்னர் இந்தியக் கல்வி, கல்வி அமைப்பு என்ற ஓர் அமைப்பின்கீழ் இயங்கவில்லை. தொழில்மையம் என்றோ தொழில் மையம் அல்லாதது என்றோ அமையவில்லை. ஆங்கிலேயர் ஊடுருவல் நாட்டின் தொன்மையான கல்வி மரபினை அழித்துவிட்டது. அவர்கள் தம் ஆட்சி நலனுக்கும் செய்திப் பரிமாற்றத்திற்கும் நிருவாக எளிமைக்கும் என ஆங்கில வழிக் கல்வியைப் புகுத்தினர்.

நாடு விடுதலை பெற்றபோது 14 விழுக்காடு மக்களே எழுத்தறிவு பெற்றவர்களாக விளங்கினர். மேலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரவிந்தர், தாகூர், காந்தி ஆகியோர் இந்திய மரபினை மேம்படுத்தவும், சுதந்திர வேட்கையைத் தட்டி எழுப்பவும் எனத் தகுந்த கல்வி முறையை நாடினர். சமுதாய நலனுக்கு என்று இவ்வகைக் கல்வி ஏற்பட வேண்டும் என்பது அவர்கள் அவாவாகும். சிலர் அதற்கு இணையான ஒரு கல்வி அமைப்பையும், வேறு சிலர் இந்திய ஆங்கிலேயக் கூட்டு முறைக் கல்வி அமைப்பையும், சிலர் அடிப்படைக் கல்வி அமைப்பையும் வெளியிட்டனர்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நடுவண் அரசும் மாநில அரசும் கல்வியை உடன்நிகழ்வு முறையில் (Concurrent List)ஏற்றுக் கொண்டுள்ளன. கல்வியைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் அதன் தன்மையை உயர்த்துவதிலும் நிலை நிறுத்துவதிலும் நடுவண் அரசும் மாநில அரசும் பொறுப்புகளை ஏற்று அனைவர்க்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி என்ற கொள்கையை நனவாக்கிக் கொண்டு வருகின்றன. இந்தியா அனைவர்க்கும் கல்வி கற்பதில் சம வாய்ப்புகளையும் மொழி, இனவாரிச் சிறுபான்மையினர்க்குத் தனிப் பாதுகாப்புகளையும் அளிக்கிறது.

இந்திய நாடு விடுதலை அடைந்த பின்னர், குழந்தை முழு ஆளுமை வளர்ச்சி அடைவதற்கு வகைசெய்யும் விதத்தில் காந்தி அடிகள் அடிப்படைக் கல்வித் திட்டத்தைப் பயன்படுத்தினார். தொடக்கக் கல்வி அடிப்படைக் கல்விநிலை அமைப்பில் ஏற்படுத்தப்பட்டது. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி வகைகளில் 1948, 1952-ஆம் ஆண்டுகளில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கென்றே இரு கல்வி ஆணைக் குழுக்கள் 1948, 1952-ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டன.

மூன்றாம் கல்விக் குழுவின் (1964-66) பரிந்துரையான தேசிய கல்விக் கொள்கை மக்களவையின் ஒப்புதலின்படி 1968-ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. மக்களின் வாழ்வோடு, நிறைந்த உறவும் தொடர்பும் கொண்டதாக்க் கல்வி அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும், கல்வி வாய்ப்புகள் தொடர்ந்து விரிவடையவும் கல்வியின் தன்மை அனைத்து நிலைகளிலும் உயர்ந்திடவும் இடைவிடாத ஆழ்ந்த முயற்சிகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், நேரிய சிறந்த அருள் உணர்வுகளை மேம்படுத்த வேண்டும் என்றும் தேசிய கல்விக் கொள்கையின் தொலைநோக்குத் திட்டமிடப்பட்டது.

**தேசிய அளவிலான கல்வி அமைப்பு:** ஐந்து வயது நிறைந்த சிறுவர், சிறுமியர் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகளிலும், பத்து வயது நிறைந்த மாணாக்கர்கள் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகள் வரையிலும், 13 வயது நிறைந்த மாணாக்கர்கள் 2 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிகளிலும், 15 வயது நிறைந்த மாணாக்கர்கள் 2 ஆண்டுகள் மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழில்நுட்ப நிறுவனங்களிலும், 17 வயது நிறைந்த மாணாக்கர்கள் 2 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலோ 4 ஆண்டுகள் பொறியியல்/மருத்துவம்/மருந்தியல் கல்லூரிகளிலோ 3 ஆண்டுகள் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளிலோ பயிலலாம். மேலும், பட்டமேற்படிப்பு வகுப்புகளைப் பட்டமேற்படிப்புக் கல்லூரிகளிலோ பல்கலைக் கழகங்களிலோ பயிலலாம். பட்டமேற்படிப்புக்குப் பின்னர், இக் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி முடித்து ஆராய்ச்சிப் பட்டங்கள் பெறலாம்.

மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்கள் அரசு, அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளின் கீழ் இயங்குகின்றன. அந்தந்த மாநிலங்களில் உள்ள பள்ளிகள் கல்வி அமைப்பின் கீழ் ஒரே பாடத்திட்டத்தை மேற்கொண்டுள்ளன. மத்திய பள்ளிகள் (Central Schools) மைய அரசில் பணிபுரிபவர்கள்தம் குழந்தைகளின் கல்வி நலன்களுக்கென நாடு முழுவதும் உள்ள முக்கிய நகர்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அப்பள்ளிகளில் ஒரே பாடத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எண்ணிக்கை அடிப்படையில் மிகப் பெரிய கல்வி அமைப்பை இந்தியக் கல்வி அமைப்புக் கொண்டுள்ளது. இவ்வமைப்பு 1981-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, ஏறத்தாழ 120 பல்கலைக் கழகங்களையும் 4,500 இணைப்புக் கல்லூரிகளையும் 40 ஆயிரம் உயர்நிலைப் பள்ளிகளையும் 6 இலட்சம் தொடக்கப் பள்ளிகளையும், 35 இலட்சம் ஆசிரியர்களையும், 10 கோடி மாணாக்கர்களையும் கொண்ட அமைப்பாக விளங்குகின்றது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 2,500 கோடி உரூபாய் கல்விப் பணிக்காகச் செலவிடப்படுகின்றது. எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 1951-இல் 16.67 சதவீதம் ஆக இருந்தது 1981-இல் 36.23% ஆக உயர்ந்தது. ஆண்களில் 46.9%-உம் பெண்களில் 24.8%-உம் எழுத்தறிவு பெற்றுள்ளனர். எழுத்தறிவிலேயே கேரளா 70.4% பெற்று முதலிடத்தையும் இராசசுத்தான் மாநிலம் 24.35% பெற்று இறுதி இடத்தையும் பெறுகின்றன.

**முன் தொடக்கக் கல்வி:** பள்ளி முன் தொடக்கக் கல்வியின் இன்றியமையாமை 1944-ஆம் ஆண்டு

அளிக்கப்பட்ட சார்செண்ட்டு அறிக்கையினால் நன்கு உணரப்பட்டது. 3 முதல் 5 வயதுக்குட்பட்ட வயதுப்பிரிவில் 1985–ஆம் ஆண்டுக் கணக்கின் படி 15 கோடி குழந்தைகள் வாழ்கின்றனர். இவர்களுள் 3.5 கோடிக் குழந்தைகள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இத்தகைய இளம்பாலர்கட்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும், பிழையறப் பேசவும், இயற்கையோடு இணைந்து வாழச் செய்யும் வகையிலும், சூழ்நிலையில் உள்ள படங்கள், பொருள்கள் போன்றவற்றைப் பிழையறச் சொல்லவும் எழுதவும் துணை செய்யும் வகையிலும் கல்வி அளிக்கப்படுகின்றது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் சோவியத்து நாட்டிலும் பள்ளி முன் தொடக்கக் கல்வி பயிலும் மாணாக்கர்கள் பற்றி ஆய்வதற்கென்றே தனி நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டு, ஆராய்ச்சி முடிவுகட்கு ஏற்பப் பாடத்திட்டக் கொள்கைகளும் பொருளடக்கமும், குழந்தைகளின் மனநிலைக்கேற்பவும், பெருகிவரும் சமுதாய மாற்றங்கட்கு ஏற்பவும் மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன.

**தொடக்கக் கல்வி:** மாணாக்கர்கள் ஒன்றுமுதல் 8 வரையான வகுப்புகளை இந்நிலையில் பயில்கின்றனர். வருகைப்பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கட்கும் ஆசிரியர்கட்கும் பருவகால விடுமுறைகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வோராண்டிலும் குறைந்தது 200 நாட்கள் பள்ளி நாட்களாகச் செயற்படுகின்றன. தேசிய அளவில் 6-11 வரை வயது வரம்பில் உள்ள குழந்தைகளின் சேர்க்கை விகிதம் 82.1% ஆக உள்ளது. இதில் சிறுவர்கள் 90.1%உம், சிறுமிகள் 66%உம் எனச் சேர்க்கை விகிதம் உள்ளது.

ஒழுங்கான வருகைக்குரிய பரிசுகள், மதிய உணவுத் திட்டம், இலவசச் சீருடை, இலவசப் புத்தகம், அரசுபணஉதவி போன்ற சலுகைகள் நிறைந்த அளவில் அளிக்கப்பட்டும் 100 சதவீத சேர்க்கை விகிதம் பெற இயலவில்லை. மேலும், பள்ளிக் கல்வியை முடிக்காமல் பாதியில் விடுத்துச் செல்வோர் விகிதம் நிறைந்து உள்ளது.ஏறக்குறைய 60சதவீதம் மாணாக்கர்கள் தொடக்கக் கல்வியை முடிக்காமல் விட்டுச் செல்கின்றனர். அவர்களுள் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கல்வித் திட்டத்தின் அடிப்படையாகத் தொடக்கக் கல்வி அமைப்பு உள்ளதால், இதற்குத் திட்ட ஒதுக்கீடுகளில் முன்னுரிமை தரப்படுகின்றது. கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் இவ்வமைப்புக்கான நிதி ஒதுக்கீடுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும், இப்பொழுது அதன் இன்றியமையாமை முழுதும் உணரப்படுகின்றது. அனைவர்க்கும் தொடக்கக் கல்வி என்ற அடிப்படையில் 5–14 என்ற வயது வரம்பில் உள்ள குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்று நிதி ஒதுக்கீடுகளும் கால வரம்புகளும் தொடர்ந்து விதிக்கப்பட்டு வந்தாலும், அக்குறியீட்டை 1985 வரை எட்ட இயலவில்லை. எனினும் அக் குறியீடு நெருங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்கக் கல்வியில் 100 சிறுவர்கட்கு 63 சிறுமியர் என்ற அடிப்படையில் பள்ளிகளில் பயிலுகின்றனர். இப்பொழுது (1985) பள்ளிகளில் அனுமதி பெறும் மாணாக்கரின் சேர்க்கை விகிதம் 93.4% என்று உள்ளது. நாடு முழுதும் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகள் குழந்தைகள் வாழும் பகுதிகளில் இருந்து 1 கி.மீ. தொலைவுக்குள் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிகளுள் 40சதவீதப்பள்ளிகள் உறுதியான கட்டிடங்கள் இன்றி, 39.72% கரும்பலகைகள் இன்றி, 59.50% மாணாக்கர்களுக்குக் குடிநீரும் இன்றி உள்ளன. 35% பள்ளிகள் பல வகுப்புகட்கு ஒரே ஆசிரியரையும் பெற்றுள்ளன (1981–82). கல்வி கற்றலில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் 1950–51-ஆம் ஆண்டில் 26 இலட்சம் மாணாக்கர் பயின்றனர். இப்பொழுது அது 14 7 இலட்சம் என உயர்ந்துள்ளது. பள்ளிகளில் படிப்பதற்கான வயது வரம்பில் உள்ள மாணாக்கர்களுள் 30.6% சிறுமியரும் 56.3% சிறுவர்களும் பயிலுகின்றனர்.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வி:** உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1947–இல் 4,000 ஆக இருந்தது. 1982–இல் 52,279 ஆக உயர்ந்துள்ளது. உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், இளநிலைக் கல்லூரிகள் ஆகியவைகளின் மொத்த எண்ணிக்கை 56,000ஆகும். நூறு மாணவர்களுக்கு 16 மாணாக்கியர் என்று 1951–இல் இருந்த சேர்க்கை விகிதம், 1986–இல் 100-க்கு 42 என உயர்ந்தது. இவ்வுயர்நிலைப் பள்ளி அளவில் நுழைவுச் சேர்க்கையின் வளர்ச்சி விகிதம் 7.8 சதவீதம்என உள்ளது.இந்த ஆறு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் பள்ளிகளின் எண்ணிக்கை 14 மடங்காவும் நுழைவு விகிதம் 20 மடங்காகவும் உயர்ந்துள்ளன. மாணாக்கர்களின் எண்ணிக்கை 1947–இல் 7 இலட்சம் என இருந்தது; 1982–இல் 140 இலட்சம் ஆக உயர்ந்தது. அவ்வாறே இந்நிலையில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 93 ஆயிரத்திலிருந்து 993 ஆயிரமாக அதிகரித்துள்ளது. கோத்தாரிக் கல்விக் குழு அறிக்கை 1968–ஆம் ஆண்டு நாட்டின் கல்வித் திட்டம் 10+2+3 என்ற ஒரே சீரான அடிப்படையில் இயங்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது. ஆனால் தேசிய அளவில் ஒரே சீராக இப்பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு ஆண்டுகளில்

இப்பரிந்துரை, ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக் குட்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 1978-ஆம் ஆண்டு முதல் இம் மேல்நிலைக் கல்வித் திட்டம் நிறைவேற்றப்பட்டுப் பெருமளவில் மாணாக்கரின் நுழைவு விகிதம் அதிகரித்துள்ளது. இந்திய நாடு முழுதும் ஒரே சீரான கல்வித் திட்டம் ஏற்பட வேண்டும்; கல்வியால் மக்கள் நிறைந்த பயனைப் பெற வேண்டும்; இப்பயன்களை நாடு முழுதும் உள்ள மக்கள் குறிப்பாகக் கிராமப்புற மக்கள் துய்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடுவண் அரசு, நாடு முழுதும் மாவட்டந்தோறும் மாதிரிப் பள்ளிகளை (Model Schools) ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பள்ளிகள் 1986-87 கல்வியாண்டிலிருந்து தொடங்கப்படவுள்ளன.

தொழிற்கல்வி: ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னரேயே (1966), வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கென்று திட்டமிடப்பட்ட தொழிற்கல்வி எதிர்பார்த்த மாற்றத்தைத் தரவில்லை. கர்நாடகம், மேற்குவங்கம், தில்லி ஆகிய மாநிலங்களில் 1977-78-இல் தொடங்கப்பட்ட இத் தொழிற்கல்வி, எதிர்பார்த்த பெரிய மாற்றத்தை உடனே தரவில்லை. ஆனால் முனைப்புடன், தொடங்கப்பட்டும் ஏறக்குறைய ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி கற்பிக்கப்பட்டும் வேலைவாய்ப்பு உடனே தரவல்லதாக அமையும் ஒரு மாற்றத்தைத் தமிழ்நாடு பெறவில்லை. இந்தியாவில் உள்ள 14 ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளநிலைக் கல்லூரிகளிலும் 1,500 நிறுவனங்கள் மட்டுமே இக்கல்வியைப் போதிக்கின்றன. மேல்நிலைக் கல்வி பயிலும் மாணாக்கர்களுள் 2.7% பேரே இக்கல்வியைப் பயிலுகின்றனர் என்று காணும்பொழுது, மக்களிடையே இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெளிவு. தேசிய அளவில் இத்தகு தொழிற் கல்வியை மதிப்பிடுவதற்காக டாக்டர் வா.செ. குழந்தைசாமி தலைமையில் கூடிய குழு ஏழாம் திட்டக்காலத்தை அடிப்படையாகக் கொண்டால், 1990-ஆம் ஆண்டிற்குள், 2.4 இலட்சம் மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வி அளிக்கலாம் என்றும், முறைசாராத் தொழிற்கல்வியின் மூலம், . பள்ளியைப் புறக்கணித்தோர், பள்ளியால் புறக்கணிக்கப்பட்டோர் ஆகிய 140 இலட்சம் மாணாக்கர்கள், 1.25 இலட்சம் நடுநிலைப் பள்ளிகள், 5,000 தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பல்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் பயன் பெறலாம் என்றும், மேலும் 1.68 இலட்சம் மாணாக்கர்களைத் தொழிற் பழகுநர் (Apprentice) ஆக ஏற்றுக் கொள்ளலாம் என்றும் திட்டங்களைத் தீட்டியுள்ளது. மேலும், இத்தொழிற்கல்வி தேசிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய கல்விக் கட்டமைப்புத் தொழில் மையஞ் சார்ந்த கல்வித் திட்டமாக அமைந்து விளங்க வேண்டும் என்றும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆந்திர மாநிலத்தில் 1979-80-ஆம் ஆண்டில் 23 இளநிலைக் கல்லூரிகளில் 516 மாணாக்கர்களுக்கு மட்டுமே தொழிற்கல்வி அளிக்கப்பட்டது. ஆனால், அக்கல்வி 1983-84-ஆம் ஆண்டு 107 கல்வி நிறுவனங்களில் 3,310 மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. மகாராட்டிர மாநிலத்தில் (1985) 21 ஆயிரம் மாணாக்கர்கள் தொழிற்கல்வி பயில்கின்றனர். குசராத்து மாநிலத்தில் 70 நிறுவனங்களில் 3,700 மாணாக்கர்கள் பயிலுகின்றனர். இந்தியாவிலேயே அதிக அளவில் தமிழகத்தில் (1985) ஏறத்தாழ 50 ஆயிரம் மாணாக்கர்கள் தொழிற்கல்வி பயில்கின்றனர். அவர்கள் பணியிடைப் பயிற்சி 1600 இடங்களில் பெறுகின்றனர். மேல்நிலைப் பள்ளி அளவில் 9 மாநிலங்களும் 4 யூனியன் மாநிலங்களும் மட்டுமே இம்முறையைப் பின்பற்றுகின்றன. இந்திய தேசிய அளவில் 22 இலட்சம் மாணாக்கர்களுள் கற்கும் மேல்நிலையில் 3 % மட்டுமே தொழிற்கல்வி பயில்கின்றனர். இத்தொழிற் கல்விப் பயிற்சிப் பணியில் ஈடுபடும் மாணாக்கரின் திறனைப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களும் இப்பணியில் இணைந்து ஈடுபட்டால்தான் இதன் தரம் பெருகும்; மேலும் மேலும் மாணாக்கர்கள் இக்கல்விப் பயனை உணர்ந்து ஈடுபடுந்தன்மை பெருகும். இப்பணியில் தொழில் நிறுவனங்கள் மட்டுமல்லாமல் வேளாண்மையும் பல்முனைத் தொழில்களும் ஈடுபடல் வேண்டும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் பயில இடம் கிடைக்காத மாணாக்கர்கள், வெளி மாநிலங்களுக்குச் சென்று நிறைந்த பொருட் செலவு செய்து கற்று வருதலையும், தொலை நோக்குத் திட்டங்களால் தொழில் முன்னேற்றம் காணத் தொழில் நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை நிறைந்த அளவில் வேண்டி இருப்பதையும் கருத்திற் கொண்டு, அரசு நிதிப் பற்றாக்குறைக் காரணத்தால் தொழில்,மருத்துவம்,மருந்தியல் கல்லூரிகளைத் தொடங்கிப் பெருகிவரும் ஆள்வலத் தேவையைப் பெருக்கிடத் தனியார் நிறுவனங்களுக்கு (Self Financing College)இவ்வகைக் கல்லூரிகளைத் தொடங்கிட அனுமதி அளித்தது. இக்கல்லூரிகள் அரசு விதிக்கும் சட்ட விதிகளுக்குட்பட்டு, அரசால் தேர்ந்து எடுத்து அனுப்பப்படும் மாணாக்கர்களுக்கு 50% இட ஒதுக்கீடும், மற்றைய இடங்களில், அரசால் நிருணயம் செய்யப்பட்ட குறைந்த அளவுத் தகுதி அடிப்படையிலும் கல்வி நன்கொடைகள் அடிப்படையிலும் மாணாக்கர்களுக்கு இடம் அளிக்கின்றன இவற்றால் பல்லாயிரம் மாணாக்கர் தொழிற்கல்வி பயில வழி வகுக்கப்பட்டுள்ளது.

**உயர் கல்வி:** கடந்த முப்பதாண்டுகளில் (1950-1980) உயர் கல்வியின் நுழைவு விகிதம் 9.7%ஆக உயர்ந்துள்ளது. ஆனால் ஒவ்வொரு பத்தாண்டுக் காலத்திலும் 12.4, 13.4, 13.8 என்று அதன் வளர்ச்சியை விழுக்காடுகள் தெரிவிக்கின்றன. கலையியல் பாடங்களில் விருப்பமின்மை அதிகமாகவும் வணிகவியல் போன்ற பாடங்களில் விருப்பம் மிகுதியாகவும் ஏற்பட்டு வருகின்றன. பொதுப் பாடங்களில் 4.5%, விருப்பப் பாடங்களில் 2.5%, மருத்துவத் துறையில் 39.1%, பொறியியல் துறையில் 36.6%, வேளாண்மைத் துறையில் 5.4%, ஆசிரியத் துறையில் 2.6%, ஆசிரியத் துறையில் குறிப்பாகப் பெண்கள் 5.1% ஆகவும் வளர்ச்சி விகிதம் உள்ளது. உயர் கல்விப் பணியில் நாடு முழுவதுமாக 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்லூரிகள் ஈடுபட்டு உள்ளன. ஏறக்குறைய ஐந்தில் மூன்று பங்கு கழிவு இருப்பினும், உயர் கல்வி பயில வேண்டிய வயதுநிலை உள்ளோரில் 4.8 சதமே பயில்கின்றனர் என்றால், உயர் கல்வியின் நிலையில் எத்துணை வீழ்ச்சி உள்ளது என்பது அறியற்பாலது. உயர் கல்வியின் நிலையைப் பெருக்கிடவும் நிறைய மாற்றங்கள் உண்டாக்கவும் கல்லூரிகளுக்குப் பாடத்திட்டங்களைத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளவும் தொடர்ந்த இடைவிடாத மதிப்பீடு முறைகளைப் பின்பற்றவும் கல்லூரிகளுக்குத் தன்னாட்சியுரிமை (Autonomous) வழங்கிடத் திட்டமிடப்பட்டது. அவ்வாறே குறிப்பிட்ட சில வரன்முறைகளுக்கு உட்பட்டுத் தன்னாட்சி உரிமை சில கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டது. எனினும் பெரும்பான்மையான கல்லூரிகள் இந்நிலை பெற விழையவில்லை. தன்னாட்சியுரிமை பெற்ற கல்லூரிகளுள் பெரும்பாலானவை தமிழகத்தில்தான் உள்ளன.

கோத்தாரி கல்வி அறிக்கையின்படி (1968) சமுதாயத்தில் ஒரு தொழிற்புரட்சி ஏற்படுத்தப்பட வேண்டும்; கல்வி தொழில் மயமாக வேண்டும் என்ற பரிந்துரையைத் தமிழக அரசு முழுதும் ஏற்றுக்கொண்டு, இந்திய நாட்டிலேயே மிகச் சிறந்த அளவில் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வியைப் பயிற்றுவிக்கின்றது. அதன் முழுப் பயனும் பெறாத நிலையில், தொழிற்கல்வி கல்வி அமைப்பு முழுவதிலும் இரண்டற இணையும் வண்ணம் வாழ்க்கைமையக் கல்வியைத் தொடக்க நிலையில் இருந்து புகுத்த வேண்டும் என்று தமிழகக் கல்வித் துறை திட்டமிட்டது. அவ்வாறே 1984-85-ஆம் ஆண்டு தமிழகம் முழுதும் 200 பள்ளிகளில் அடிப்படை வேலைகள் தொடங்கப்பட்டன. மேலும், உழைப்பின் மேன்மையைப் புகுத்தல் வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் 500 வகையான பயிற்சிகள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பாடத்திட்டம் சமுதாயத் தேவைகளுக்கு இணங்க இருக்க வேண்டும்; மாணாக்கர்கள் உழைப்பின் மேன்மையை உணர வேண்டும்; சமுதாயத்திற்காகத் தங்கள் உழைப்பை நல்க வேண்டும் என்ற ஈசுவர்பாய் பட்டேல் கமிட்டி அறிக்கையின்படி, பள்ளிப் பாடத் திட்டங்களில் தொடக்கப்பள்ளிகளில் 20% காலத்தையும், நடுநிலைப் பள்ளிகளில் பாட வேளைக்கு அப்பாற்பட்ட காலத்தையும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் மாணவர்கள் உழைக்க வேண்டும் என்று பாடத்திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ளது. 'படிக்கும் காலத்திலேயே பணியாற்றி ஊதியம் பெறுதல்'' (Earn while you learn) என்ற திட்டமும் அமைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இத்திட்டத்தால் இதுவரை நிறைந்த பயன்களை மாணாக்கரும் சமுதாயமும் பெறவில்லை.

**ஆசிரியர் கல்வி:** கடந்த முப்பதாண்டுகளில் (1950-80) 7.5 இலட்சமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 32 இலட்சமாக உயர்ந்துள்ளது. ஆசிரியக் கல்வி பெறுவோரின் பெருக்கம் ஆண்டுதோறும் 4.6% என்ற அளவில் பெருகி வருகின்றது. இக்கல்வி அமைப்பில் ஆசிரியைகளின் பெருக்கம் ஆண்களைவிட அதிக அளவில் உள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 56.1% ஆக இருந்தது, 88.4%ஆக உயர்ந்துள்ளது.தொடக்க நிலைக் கல்வியில் ஆசிரியர் மாணவர் விகிதம் அத்துணை அளவு முன்னேறவில்லை. ஆனால் நடுநிலைப் பள்ளி அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆசிரியர்களிடையே மேன்மேலும் படிக்க வேண்டும் என்றும் தங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் விழிப்புணர்வு பெருகி வருகின்றது. நடுநிலை, தொடக்கப் பள்ளி அளவில் பயிலும் மாணாக்கர்களுக்குப் பயிற்றும் ஆசிரியர் பற்றாக் குறையை அகற்றவும், மேல்நிலைக் கல்வி அளவில் தொழில் சார்ந்த கல்வி அமைப்பினைப் பலப்படுத்தவும் 1985-ஆம் ஆண்டு தமிழக அரசின் கல்வித் துறை மேல்நிலைப் பள்ளிகளில் ''ஆசிரியர் பயிற்சி'' என்ற பாடத்திட்டத்தை ஏற்படுத்தி, மாணாக்கர்கள் ஆசிரியப் பயிற்சி பெற வழிவகைகள் செய்துள்ளன. இவற்றின் மூலம் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்கு எளிதில் வேலை வாய்ப்புப் பெற வாய்ப்புகள் உள்ளன.

**முதியோர் கல்வி:** நாடு விடுதலை அடைந்த போழ்து 300 மிலியனாக இருந்த எழுத்தறிவற்றோரின் எண்ணிக்கை 1981-இல் 437 மிலியனாக உயர்ந்துள்ளது. எழுத்தறிவுடையோர் விழுக்காடு 1951 இல் 16.66% ஆக இருந்தது 1981-இல் 36.13% ஆக உயர்ந்துள்ளது. உலக வங்கியின் கூற்றுப்படி கி.பி. 2000-இல் உலகில் உள்ள எழுத்தறிவற்ற மக்கட்டொகையினருள் 54.8% அளவினர் இந்தியா

வில் இருப்பர் என்ற தொலைநோக்கு, எழுத்தறிவின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றது. இந்தியாவில் எழுத்தறிவுள்ளோர் விகிதம் (1981) சிற்றூர்ப் பகுதிகளில் 36.23%-உம் ஆண்களில் 40.8%-உம் பெண்களில் 47.8%-உமாக உள்ளது. அனைவர்க்கும் தொடக்கக் கல்வி என்ற திட்ட இலக்குகள் ஒவ்வொரு திட்ட இறுதியிலும் நிறைவேற்றப்படாமல் 1990-க்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது நிருணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான திட்ட இலக்குகளை அடைய இயலாததால் வயதுவந்தோர் கல்வியில் முழுக் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 68 ஆயிரம் முதியோர் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் 90% மையங்கள் தொடக்கக் கல்விக்கெனவும் 10% மையங்கள் நடுநிலைக்கெனவும் அமைந்தன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 15 முதல் 35 வயது உள்ளிட்டவர்க்கு 2 இலட்சம் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இக்கல்வி மையங்களில் 1985 மார்ச்சு வரை 58 இலட்சம் முதியோர் கல்வி பயின்றனர். இம்முதியோர் கல்வித்திட்டத்தில் மகாராட்டிரம், தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்கள் மிக அதிக அளவிலும் ஆந்திரப் பிரதேசம் அசாம், இமாசலப்பிரதேசம்ஆகிய மாநிலங்கள் குறைந்தஅளவிலும் பயன்பெறுகின்றன. எழுத்தறிவற்ற முதியோர் 8.7 கோடி அளவினராயுள்ளோரை 1990-ஆம் ஆண்டிற்குள் எழுத்தறிவுடையவர்களாக ஆக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகு பெரும்பாலான துணை அமைப்புகளின் மூலம் கல்வி அளிப்பதற்காக அரசு பெருந்தொகை செலவிடுகிறது. அரசால் 1950-51-இல் 114.3 கோடியும், 1976-77-இல் 2304.15 கோடியும், 1982-83-இல் 5185.9 கோடியும் செலவிடப்பட்டன. இந்தியாவின் மாநிலங்கள் தங்கள் திட்ட ஒதுக்கீட்டில் கல்விக்கென முன்னுரிமை அளித்த போதிலும், கல்விக்கு முதலிடம் அளிப்பதில் கேரள மாநிலம் முன்னணியிலும் சிக்கிம் மாநிலம் இறுதி இடத்திலும் உள்ளன. அயல் நாடுகள் தங்கள் மொத்தத் தேசிய உற்பத்தி அளவில் (Gross National Product) 6 முதல் 8 விழுக்காட்டைக் கல்விக்கெனச் செலவிடும் பொழுது இந்தியா தன் தேசிய உற்பத்தி அளவில் 3 விழுக்காடு மட்டுமே செலவிடுகின்றது. கல்வியின் முழுப்பயனை அனைவரும் அடைய இத்தொகையின் அளவை 3-இலிருந்து 6% ஆக உயர்த்த வேண்டும்.

இந்நிலைகளைக் கருத்தில் கொண்டு, புதிய கல்விக் கொள்கையானது சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றும் முறையிலும், கல்வியின் தரத்தை முன்னேற்றும் முறையிலும், அறிவியல் பாடத்திட்டத்தைப் புதுமைப்படுத்தும் முறையிலும், வாய்ப்பினை அளிக்கக் கூடிய முறையிலும், தொழில்முனைப்புடன் கூடிய கல்வி அமைப்பை உருவாக்கும் முறையிலும் நாடுதழுவிய கொள்கையினை உருவாக்க வேண்டும். புதுக் கல்விக் கொளகையானது தேர்வு முறைகளை மாற்றும் அடிப்படைத் தன்மைகளையுடையதாய்ப் புதிய பாடத் திட்டத்தை மேம்படுத்தும் வகையிலும், நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையிலும், கல்வியில் கழிவு தேக்கம் என்ற நிலை சிறிதும் ஏற்படாமல், படித்த அனைவர்க்கும் வேலை என்ற நிலையை உண்டாக்கும் வகையிலும் வல்லமையுடையதாக அமையவேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

**Buch, M.B.**, Second Survey of Research in Education, Centre of Advanced Study in Education M.S. University of Barado, Baroda, 1979.

**Singhr, A. Altoach** P.G., (eds) The Higher Learning, in India, Vikas, New Delhi, 1974.

**இந்தியக் கல்விக் குழு (1964-66):** இந்திய அரசால் 1964-ஆம் ஆண்டு இந்தியக் கல்விக்குழு (Indian Education Commission) அமைக்கப்பட்டது. இதன் தலைவர் பேராசிரியர் டி.எசு. கோத்தாரி ஆவார். எனவே, இது கோத்தாரிக்கல்விக்குழு என்றும் சொல்லப்படுகிறது. இந்தியக் கல்விக் குழுக்களின் வரலாற்றில் இது ஆறாவதாக அமைக்கப்பட்ட ஒன்றாகும். இக்குழுவின் செயலர் திரு. செ. பி. நாயக்கு ஆவார். இந்தியாவைச் சேர்ந்த வல்லுநர்கள் மொத்தம் ஏழு பேர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். சப்பான், பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா ஆகிய நாடுகளைச் சார்ந்த வல்லுநர்கள் நாட்டிற்கு ஒருவராக ஐவர் இக்குழுவில் இடம்பெற்றனர். மேலும், இருபது நாடுகளைச் சார்ந்த அறிவுரையாளர்கள் (Consultants) இக்குழுவில் பங்கேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்குழு 1964-ஆம் ஆண்டு பணியைத் தொடங்கியது. இந்தியக் கல்வியில் செயற்படுத்த வேண்டிய மாற்றங்களுக்கான பரிந்துரைகளை 1966-ஆம் ஆண்டு இக்குழு இந்திய அரசிடம் அளித்தது. அதன் அறிக்கை 'கல்வியும் நாட்டின் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் வெளியாயிற்று. இக்குழுவின் அறிக்கையில் தொடக்கப் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக் கழகக் கல்வி வரையில் பல சிறப்பான பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. 'நாட்டு வளர்ச்சியில், கல்வி மிகவும் ஆற்றல் மிக்க ஒரு கருவியாகும்' என்ற இக்குழுவின் கருத்தின் அடிப்படையில் இவ்வறிக்கையின் பரிந்துரைகள் அமைந்தன.

10 + 2 + 3 கல்வித் திட்டம், அறிவியல் கல்விக்கு முதலிடம், பள்ளியில் தொழில் அனுபவம், மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி, சமுதாய நாட்டுப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், இரண்டாண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிகளில் பாடநூல் வங்கிகள் அமைத்தல், பருவமுறைத் தேர்வு, அகமதிப்பீடு, மீத்திற மாணவர்களைக் கண்டறிதல், அஞ்சல் வழித் தொடர்கல்வி தொடங்குதல் ஊர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்திலிருந்து வரும் மீத்திறக் குழந்தைகளுக்கு வட்டார அளவில் சிறந்த கல்வி அளிக்கும் பொதுப் பள்ளி முறை, ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியும் அதைச் சுற்றியுள்ள நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றுடன் கல்வி வாய்ப்பு வசதிகளில் இணைந்து செயலாற்றும் முறை போன்றவை கோத்தாரி கல்விக் குழுவின் சில தலைசிறந்த பரிந்துரைகள் ஆகும்.

பள்ளி முதல் வகுப்பில் ஒரு குழந்தை சேரும் போது ஆறு வயது நிரம்பியிருத்தல், பத்து ஆண்டுப் பள்ளிக் கல்வி, இறுதியில் முதன் முதலாகப் பொதுத் தேர்வு (Public Examination) நடத்தப்படுதல் பத்தாம் வகுப்பிற்குப் பின்பே மாணவர்களை வெவ்வேறு பாடத்துறைகளில் சேர்த்தல், கல்லூரியில் இணைந்திருந்த புகுமுக வகுப்புகளின் கால அளவை இரண்டு ஆண்டுகள் ஆக்கி, அப்படிப்பை மேல்நிலைப் பள்ளியில் தருதல் போன்றவையும் கோத்தாரிக் குழுவின் வேறு சில பரிந்துரைகளுள் அடங்கும்.

துணை நூல்:

**Agarwal, J.C.**, Development and Planning of Modern Education, Vikas, New Delhi, 1982.

**இந்தியக் கல்வி வரலாறு:** புதிய கால இந்தியக் கல்வி வரலாற்றை கிழக்கிந்தியக் கம்பெனியின்கீழ் இந்தியக் கல்வி, ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இந்தியக் கல்வி, விடுதலைக்குப்பின் இந்தியக் கல்வி என முப்பெரும் பிரிவில் அடக்கலாம். இந்தியாவில் மேலைநாடுகளின் கல்விமுறை ஏற்பட முன்னோடிகளாக இருந்தவர்கள் கிறித்தவ மதத் தூதுக் குழுவினரே. முகமதியர்களின் ஆட்சிக் காலத்திலேயே (சகாங்கீர் ஆட்சியிலேயே)ஐரோப்பியர்கள் வாணிகம் செய்ய இந்தியாவிற்கு வந்தனர். வர்த்தக நோக்குடன் வந்த அத்தூதுக் குழுக்கள், கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்குக் கல்வியைக் கருவியாகப் பயன்படுத்தினர். போர்ச்சுகீசியர்கள் (Portuguese) பல தொடக்கப் பள்ளிகளைத் தையூ (Diu), தாமன், (Daman), கோவா ஆகிய இடங்களில் தொடங்கினர். இக்கல்விக் கூடங்களில் கைத்தொழில், வேளாண்மை, கணிதம் கத்தோலிக்க மதக் கோட்பாடுகள் ஆகியவை கற்பிக்கப்பட்டன. கோவாவில் முதல் போர்ச்சுகீசியக் கல்லூரி கி.பி. 1575-இல் தொடங்கப்பட்டது. இக் கல்லூரியில் இலத்தீன் மொழி, இறையியல், தருக்கம், போர்ச்சுகீசிய இலக்கணம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. முதன் முறையாகக் கி.பி. 1556-இல் அச்சு இயந்திரம் போர்ச்சுகீசியர்களால் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. வாணிக ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்ட ஆங்கிலேயர், போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் (Dutch), பிரெஞ்சுக்காரர் ஆகியோருள் ஆங்கிலேயர் வெற்றி பெற்று, இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். கிழக்கிந்தியக் கம்பெனியார் வாணிகம் மட்டுமன்றி, இந்திய மக்களின் நலன்களில் சிறிது ஆர்வமும் காட்டினர். இதனால் இந்தியக் கல்விமுறை வளர்ச்சி அடையத் தொடங்கியது.

**கி.பி.1813-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம்:** இங்கிலாந்துப்பாராளுமன்றத்தில் கி.பி.1813-ஆம் ஆண்டுச் பாசனச் சட்டம் புதுப்பிக்கப்பட்டபொழுதுதான், இந்திய மக்களின் கல்வி வளர்ச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இருந்த ஆர்வம் வெளிப்பட்டது. அச் சட்டத்தின்படி இந்திய மக்களின் அறிவியல் வளர்ச்சிக்காகவும் ஓரிலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. இச் சட்டம் இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக இருந்தது. ஆனால் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபொழுது பல முரண்பாடுகள் தோன்றின. ஏனெனில் இயக்குநர் அவை எவ்வகையான கல்வி வளர்ச்சிக்கு இத்தொகை செலவிடப்பட வேண்டும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இதனால் இத்தொகை,

1. இந்திய முறையிலான கல்வி வளர்ச்சிக்குக் செலவிடப்படவேண்டுமா? அல்லதுமேனாட்டுமுறைக் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமா?

2. எல்லோருக்கும் அடிப்படைக் கல்வி தர வேண்டுமா? அல்லது குறிப்பிட்ட உயர் வகுப்பினருக்கு மட்டும் உயர்நிலைக் கல்வி அளிக்கப்பயன்படுத்தப்பட வேண்டுமா? 3. தாய்மொழி வழிக் கல்விக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமா? அல்லது ஆங்கில மொழி வழிக் கல்விக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமா? என்ற கேள்விகள் எழுந்தன. கிழக்கிந்தியச் சட்டத்தின் கல்விப் பிரிவிற்குப் பொருள் கூறும் பொறுப்பு, கி.பி. 1813-ஆம் ஆண்டு மெக்காலேயிடம் (MACAULAY) தரப்பட்டது. தொடக்கத்திலிருந்தே மெக்காலே இந்தியக் கல்விப் பற்றிக் கருத்துத் தெரிவித்து வந்தார். ஆங்கில நிருவாகக்குழு கி.பி. 1834-ஆம் ஆண்டு மெக்காலேயிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஆங்கிலக் கல்வி முறைக்கு ஆதரவாகத் தமது அறிக்கையை மெக்காலே கொடுத்தார்.

மேற்குறிப்பிடப் பெற்ற கி.பி. 1813-ஆம்ஆண்டுச் சாசனச் சட்டம் கி.பி. 1823 வரை நடைமுறைப்படுத்தப்பட முடியவில்லை. அதன்பின் கி.பி. 1823 முதல் 1883 வரை சமசுகிருதம், அராபிய மொழி ஆகியவற்றின் வளர்ச்சிக்காகக் கம்பெனி இத்தொகையைச் செலவழித்து வந்தது. இதற்கிடையில் மேனாட்டுக் கல்வி முறையை ஆதரித்த இராசாராம் மோகன்ராய் செய்த வேகமான கொள்கைப் பரப்பினாலும், மெக்காலேயின் ஆணித்தரமான கருத்துகளாலும் கி.பி. 1835-ஆம் ஆண்டு, தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங்கு ஆங்கிலக் கல்வி முறைக்கே அரசுப் பணம் செலவிடப்படும் என அறிவித்தார். ஓரிலட்ச உருபாய் பத்து இலட்ச உருபாயாகக்கி.பி.1833-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின்படி உயர்த்தப்பட்டது. மேலும் ஆங்கிலக் கல்வி கற்றவர்க்கே அரசு அலுவலர்களில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனால், மக்கள் மேனாட்டுக் கல்வியில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். இவ்வாறாக மெக்காலே எண்ணப்படி இந்திய மண்ணில் மேனாட்டுக் கல்வி விதைக்கப்பட்டது.

மேனாட்டுக் கல்வியில் கிறித்தவர்களின் பங்கு: ஆங்கிலக் கல்விப் புகுத்தலை அரசாங்கம் அறிவித்தவுடன் சமயப் பரப்பாளர்கள் பெரும் அளவில் உறுதுணையாக இருந்து, மேனாட்டுக் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலினர். சமயப் பரப்பாளர்கள் பலர் மேனாட்டுக் கல்வியை இந்தியாவில் நிலைநிறுத்துவதில் ஆர்வம் காட்டினர். இதன்பயனாக வில்சன் கல்லூரி, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி ஆகியவை இவர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டன.

இந்தியக் கல்வியின் மகாசாசனம்: சார்லசு உடு (Charles Wood) கி.பி. 1854-இல் கல்வித்துறையில் சீர்திருத்தம் கொண்டுவர எண்ணித் தம் கருத்துகளை விவரமாக எழுதித் தலைமை ஆளுநருக்கு அனுப்பிவைத்தார். இதுவே புகழ் பெற்ற 'உடு அறிக்கை' (Wood Report)என வரலாற்றில் கூறப்படுகிறது. அவருடைய பரிந்துரைகளாவன:

1. இந்தியர்களின் கல்வி, கிழக்கிந்தியக் கம்பெனியின் தலையாய பொறுப்புகளுள் ஒன்று. 2. இலண்டன், கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகங்களைப் போல் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்படும். அதனுடன் பல இணைக்கப்பட்டகல்லூரிகள்இயங்கும். கல்லூரிகளுக்குக் கீழ் உள்ள பள்ளிப் படிப்பானது தொடக்கநிலை, இடைநிலை, உயர்நிலை எனப் பிரிக்கப்படும். 3. தனியார் கல்விநிறுவனங்கள் தொடங்குவதைஊக்குவிக்கும் வண்ணம் அவற்றிற்கு உதவி மானியம் வழங்கப்படும். 4. சட்டம், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, ஆசிரியர் பயிற்சி போன்ற தொழில் முறைக் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்படும். 5. பயிற்று மொழியாக ஆங்கிலத்தைத் தொடக்க நிலைகளில் வலியுறுத்தக்கூடாது. இந்திய மொழிக் கல்வியில் போதிய அளவு கவனம் செலுத்தவேண்டும். 6. ஒவ்வொரு மாநிலத்திலும் கல்வி இயக்குநர் தலைமையில் ஒரு பொதுக் கல்வித்துறை நிறுவப்படும். 7. பெண் கல்விக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

முதல் இந்தியச் சுதந்திரப் போரினாலும் (கி.பி. 1857) இங்கிலாந்து அரசியாரின் நேரடி ஆட்சி முறை (கி.பி.1858) ஏற்படுத்தப்பட்டதாலும் இப்பரிந்துரைகளுள் பலவற்றை நடைமுறையில் கொண்டு வர இயலவில்லை. ஆயினும் சென்னை, பம்பாய், கல்கத்தா (கி.பி.1857) ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. மேலும் ஒரு பொதுக் கல்வித்துறை நிறுவப்பட்டது. தனியார் கல்வி நிறுவனங்களுக்கு உதவிக்கொடை வழங்கும் முறை தொடங்கப்பட்டது.

இங்கிலாந்து நேரடி ஆட்சியின் கீழ் இந்தியக் கல்வி: ஆங்கில அரசியாரின் பேரறிக்கையின் மூலம் கி.பி. 1858-இல் இந்தியா, இங்கிலாந்தின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதனால் ஆங்கில அரசு இந்தியர்களின் அறிவு வளர்ச்சிக்கு மேலும் ஈடுபாடு அளிக்கத் தொடங்கியது. இரிப்பன் பிரபுவின் காலத்தில் அண்ட்டர் (Hunter) பிரபுவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு இந்தியக் கல்வி நிலையை ஆராய்ந்து, சில பரிந்துரைகளை வழங்கியது. அப்பரிந்துரைகள் பின் வருவன:

1. தொடக்கப் பள்ளிக் கல்வி வளர்ச்சியின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. இக்கல்வி வளர்ச்சிக்கு ஆகும் செலவை அவ்வம் மாநில அரசே மேற்கொள்ளும்.
2. தனியார் உள்ளாட்சி நிறுவனம் உயர் கல்விக் கூடங்கள் தொடங்க இயலாத இடங்களில் அரசு உயர் கல்விக்கூடங்களைத் தொடங்கும்.
3. முகமதியர் கல்வி, உடற்பயிற்சி, நல்லொழுக்கப் போதனைகள் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தப்படும்.
4. நிதி, உதவித் தொகை பற்றிய விதிகள் எளிதாக்கப்படும்.

இக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டவுடன் தொடக்கக்கல்விவளர்ச்சிஅடையத்தொடங்கியது. இதன் விளைவாக 1901-ஆம் ஆண்டில் தொடக்கக் கல்வி மாணவர்களின் எண்ணிக்கை 32 இலட்சமாக உயர்ந்தது. கர்சான்(Curzon) பிரபுக் காலத்தில்

சர். தாமசு இராலே என்பவர் தலைமையில், 1902-ஆம் ஆண்டு ஒரு பல்கலைக் கழகக் குழு அமைக்கப் பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளின் பயனாக 1904-ஆம் ஆண்டு, பல்கலைக் கழகச் சட்டம் இயற்றப் பட்டது. அச்சட்ட விதிகள். 1. பல்கலைக் கழகப் பேரவை 50-இல் இருந்து 100 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இப்பேரவை பாடநூல், பாடத் திட்டம், தேர்வுகள், முதலியவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும். 2. ஆட்சிக்குழு ஒப்புதலளிக்கப்பட்டது. அதில் ஆசிரியர்களுக்குப் பேராளர் பொறுப்பு (Representation) வழங்கப்பட்டது. அதன் பணிகளும் வரையறுக்கப்பட்டன. 3. பல்கலைக் கழகத் துணை வேந்தர் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பனவாகும்.

மேற்குறிப்பிடப்பெற்ற 1904-ஆம் ஆண்டுப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி, பல்கலைக் கழகத் தன்னாட்சி முழுதும் ஒழிக்கப்படவில்லை. ஆயினும், இச்சட்டத்தின் விளைவாகப் பல்கலைக்கழகங்கள் அரசாங்கத்தின் முழுக்கட்டுப்பாட்டில் செயற்பட வேண்டியிருந்தன. கல்லூரிகளுக்குஒப்புதல் அளித்தல், அதனைத் திரும்பப் பெறுதல் போன்றவற்றில் பல்கலைக்கழகங்கள் அரசின் உடன்பாட்டைப் பெற வேண்டும். பல்கலைக்கழக ஆட்சிமன்றம் ஏற்படுத்தும் விதிகள் அரசாங்கத்தின் உடன்பாட்டைப் பெற வேண்டும். இவற்றுள் சில விதிகளை மாற்றவோ நீக்கவோ அரசாங்கத்திடம் அதிகாரம் இருந்தது. பல்கலைக்கழகங்கட்குப் பெயரளவில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

**கட்டாயக் கல்வி மசோதா:** ஆங்கில அரசு கி.பி 19-ஆம் நூற்றாண்டில் கல்வியில் பல சீர்திருத்தங்களைச் செய்த போதிலும், இந்தியக் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி முறை அளிக்க வேண்டும் என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தவறி விட்டது. விருப்பப்பட்டவர்களும் வசதி படைத்தவர்களும் மட்டுமே கல்வி கற்கும் நிலை இருந்து வந்தது. இந்நிலையைப் போக்க முதன்முறையாக 1901-ஆம் ஆண்டில் தேச பக்தரான கோபால கிருட்டிண கோகலே மையச் சட்டப் பேரவையில், கட்டாயக் கல்வி கொண்டு வர வேண்டும் என்று குரல் எழுப்பினார். தொடக்கக் கல்வி மசோதா ஒன்றையும் தாக்கல் செய்தார். இதன்பின், ஆங்கில அரசு தொடக்கக்கல்வி வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தத் தொடங்கியது.

**சாட்லர் குழு அறிக்கை (Sadler Commission 1917):** அரசப் பேராளர் செம்சுபோர்டு, 1917-ஆம் ஆண்டு இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி பற்றி ஆராய்ந்தறிய சாட்லர் (Sadler) தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். அக்குழுவின் பரிந்துரைப்படி இண்டர்மீடியட்டு வகுப்புகள் இடைநிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்பட்டன. இடைநிலைக் கல்வியினைக் கண்காணிக்கும் பொறுப்பு, பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றப்பட்டு ஒரு தனிக் கழகத்திடம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. இக்குழுவின் அறிக்கையினால் 1922க்குள் இலக்னோ, அலகாபாது, தாக்கா, (Dhaka) தில்லி ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.

மாண்டேகு செம்சுபோர்டு சட்டம், 1919-ஆம் ஆண்டு இந்தியாவில் இரட்டை ஆட்சியை ஏற்படுத்த வழி வகுத்தது. மாநில அரசின் அதிகாரங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அவை ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் ஆகும். ஒதுக்கப்பட்ட துறைகள் ஆங்கிலேயரிடமும், மாற்றப்பட்ட துறைகள் இந்திய மந்திரிகளின் கீழும் இருந்து வந்தன. நிதித்துறை ஆங்கிலேயர்களின் வசம் இருந்ததனால் இந்திய மந்திரிகள் கல்வியில் பெரிய மாற்றம் ஏதும் செய்ய இயலவில்லை.

**ஆதாரக் கல்வி:** இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கல்வித் திட்டத்தை வகுக்கக் காந்தி அடிகள், ஆதாரக் கல்வி முறையைக் கொண்டு வந்தார். வார்தாவில் 1937-இல் ஒரு மாநாடு கூட்டப்பட்டுக் காந்தியாரின் வார்தாக் கல்வித் திட்டத்தின் கருத்துகள் ஆராயப்பட்டன.

வார்தாத் திட்டத்தின் தலையாய கூறுகளாவன:
1. இலவசக் கட்டாயக் கல்வி தேசிய அளவில் எல்லாக் குழந்தைகளுக்கும் 7 ஆண்டுகள் அளிக்கப்பட வேண்டும். 2. தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும். 3. கல்வி ஏதேனும் ஒரு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். 4. நாளடைவில் இக்கைத்தொழில் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து ஆசிரியர்களின் சம்பளம் அளிக்கப்பட வேண்டும். இம் மாநாட்டினால் நிறுவப்பட்ட சாகீர் உசைன் (Zakir Hussain) குழு ஆதாரக் கல்வி முறைக்கான பாடத் திட்டத்தை உருவாக்கியது.

காங்கிரசு 1937-ஆம் ஆண்டு பதவியிலிருந்து விலகியதால் ஆதாரக்கல்வியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. காங்கிரசார் ஆங்கிலக் கல்விமுறைக்கு மாற்று முறை வேண்டியதாலும், இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கல்வித்திட்டம் இல்லாததாலும் 1946-ஆம் ஆண்டு பதவிக்கு வந்தவுடன் விரைந்து இந்தியப் பள்ளிகளில் ஆதாரக் கல்வி முறையைப் புகுத்தினர். காங்கிரசு அமைச்சரவை 1939-ஆம் ஆண்டு பதவி விலகியதாலும், சுதந்திரப் போராட்டத்தில் முழுதும் ஈடுபட்டதாலும், ஆதாரக் கல்வியின் வளர்ச்சியில்

முழுக்கவனம் செலுத்த இயலவில்லை. மேலும், அலுவலக வழியே இயங்கி வந்த பள்ளிகளும் எவ்வகை ஆதரவும் பெற இயலவில்லை. ஆனால், காங்கிரசு மீண்டும் 1946–ஆம் ஆண்டு பதவியில் அமர்ந்தவுடன் இதன் வளர்ச்சியில் முழுக்கவனம் செலுத்தியது.

**சுதந்திர இந்தியாவில் கல்வி:** இந்தியா, 1947–இல் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்து விடுதலை பெற்றது. சுதந்திர இந்தியாவில்தான் தொடக்க, இடைநிலை, உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் தனித் தனியாகக் கவனம் செலுத்தப்பட்டது. அனைத்து இந்தியக் கல்வி மாநாடு 1948–இல் கூட்டப்பட்டு இந்தியக் கல்வி வளர்ச்சி பற்றி ஆய்வு செய்யப்பட்டது. இம்மாநாட்டில் 16 ஆண்டுகளுக்குள் இலவசக் கட்டாயக் கல்வி கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அரசியல் நிருணயச் சட்டத்தில் 45–ஆம் பிரிவில், 14 வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி 10 ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டது. ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலினால் மேற்கூறியபடி செய்ய இயலவில்லை. எனினும் 1947–இல் இருந்த 1,40,794 தொடக்கப்பள்ளிகள் 1971–இல் 4,04,418 ஆக உயர்ந்ததில் இருந்து, சுதந்திர இந்தியாவில் தொடக்கக் கல்வி நிலையில் ஏற்பட்ட வளர்ச்சியை அறியலாம்.

**டாக்டர் இராதாகிருட்டிணன் குழு:** உயர் கல்வி நிலையைப் பற்றி ஆராய 1948–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டபோதிலும், இது இந்திய வரலாற்றில் முதன் முறையாக இடைநிலைக் கல்வி நிலைக்கு இருந்த அவல நிலையையும் அதனைப் போக்கச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும் வலியுறுத்தியது.

**டாக்டர் இலட்சுமணசாமி கல்விக் குழு:** மத்திய கல்வி அறிவுரை வாரியத்தின்படி 1952–ஆம் ஆண்டு இடைநிலைக் கல்வி நிலையில் சீர்திருத்தம் செய்ய டாக்டர் ஏ.எல். இலட்சுமணசாமி தலைமையில் இடைநிலைக் கல்விக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 12 ஆண்டுக் கல்வித் திட்டத்தை இரண்டு நிலைகளாகப் பிரிக்கப் பரிந்துரைத்தது. ஐந்தாண்டுத் தொடக்கக் கல்வி நிலையையும், ஏழாண்டு இடைநிலைக் கல்வியையும் வலியுறுத்தியது. இக்குழுவின் தலையாய பரிந்துரை பல்நோக்குப் பள்ளிகள் ஏற்படுத்தலாகும். பாடத்திட்டத்திலும் பல மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுவின் பரிந்துரையின் விளைவாக மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெண் கல்வி, அறிவியற் கல்வி, ஆசிரியர் பயிற்சி போன்றவற்றிற்கு முதலிடம் அளிக்கப்பட்டது.

**கோத்தாரி குழு அறிக்கை:** இந்தியக் கல்வித் துறை, பேராசிரியர் டி.எசு. கோத்தாரி தலைமையில் 1964–இல் ஒரு குழு அமைத்து, அனைத்துக் கல்வி நிலைகளிலுமுள்ள கல்வி வளர்ச்சிக்கான திட்டம், கொள்கை பற்றி ஆலோசனை வழங்கப் பணித்தது. அக்குழு தொடக்க நிலைக்கு முந்திய கல்வி, தொடக்க நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழிற்கல்வி ஆய்வு ஆகியவை பற்றியும் அவற்றின் காலம், பாடத்திட்டம், ஆசிரியர் ஊதியம், உதவித்தொகை ஆகியவை பற்றியும் சில கொள்கைகளை வலியுறுத்தியது. அக்குழுவின் பரிந்துரைப்படி இந்தியக் கல்வி, பத்தாண்டுக் காலம் தொடக்க நிலை, இரண்டாண்டுக்காலம் மேல் நிலைக் கல்வி, மூன்றாண்டுக்காலம் பட்டப் படிப்பு, (10+2+3) என வரையறுக்கப்பட்டது. பாடத் திட்டமும், சமூக ஒழுக்க ஆன்மிகப் பண்பாடுகள் வளர்ச்சியடையும் விதத்தில் மாற்றியமைக்கப் பட்டது. பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் நல்ல தொடர்பு ஏற்படுத்தவேண்டும் என்பது அறிவுறுத்தப் பட்டது. இப்பரிந்துரையின் அடிப்படையில் கல்வி அமுலாக்கப்பட்டு, தொடக்க நிலைக் கல்வியில் 1972 73–இல் 8.63 கோடி மாணவர்களும், 1973–74–இல் 8.92 கோடி மாணவர்களும், 1974–75–இல் 10 கோடி மாணவர்களும் பயிலும் பெரிய நிலை உருவாக்கப் பட்டது.

இடைநிலைக் கல்வி வளர்ச்சி பெறச் செய்ய, 5000 மக்கள் தொகையும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் உள்ள ஊர்களில் எல்லாம் உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது. மும்மொழித் திட்டம் கொண்டு வர அரசாங்கம் பரிந்துரை செய்தது. இந்தி பேசும் வட மாநிலங்களில், தாய்மொழியும், இந்திய மொழியாக இந்தியும் கற்றுக்கொள்ளப்பட்டு, உண்மையில் இந்தியும் ஆங்கிலமுமாக இரு மொழிகள் மட்டுமே கற்பிக்கப் பட்டன. கர்நாடகம், ஆந்திரா, கேரளம் போன்ற இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாநிலங்கள், மூன்று மொழிகளையே கற்பித்து வருகின்றன. ஆனால் தமிழ்நாடு மட்டும் 1969–ஆம் ஆண்டு முதல் இந்தி மொழி கற்பிப்பதைத் தவிர்த்து, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை மட்டுமே கற்பித்து வருகின்றது. காண்க: இந்தியப் பழங்கல்வி முறைகள், இந்தியக் கல்வி அமைப்பு. கி.நி.

துணை நூல்கள்;

**Rajgarg, B.,** Indian Education Review & Preview, Amballa Cantt, The Associated Publishers, 1977.

**Thomas, T.M.**, Indian Educational Reforms in Cultural Perspective, Chand & Co., New Delhi, 1970.

**Syed Nurrulla & Naik J.P.**, A History of Education in Indian during the British Period, Macmillan & Co., Bombay, 1951.

## இந்தியக் கலங்கரை விளக்கச் சட்டம்

1927-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப் பட்டது. அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செயற்படத் தக்கது.

ஒளிவீசும் பெரிய படகு அல்லது கப்பல் (Light Vessel), பனிமூட்டம் பற்றி எச்சரிக்கும் சைகை, மிதப்பு அடையாளக் கருவி (Buoy), குன்றின் மேலிட்ட விளக்கு(Beacon), கப்பல்களுக்கு வழிகாட்ட உபயோகப்படுத்தப்படும் எக்கருவியும் கலங்கரை விளக்கம் என்ற விளக்கத்தினுள் அடங்கும். இந்தியக் கலங்கரை விளக்கச் சட்டப்படி (The Indian Light House Act) கலங்கரை விளக்கம் என்பது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பொது வான கலங்கரை விளக்கம் (General Light House), உள்ளூர்க் கலங்கரை விளக்கம் (Local Light House) என்பவையாகும். மத்திய அரசால் பொதுவான கலங்கரை விளக்கம் என அறிவிக்கப்பட்டவை பொது வான கலங்கரை விளக்கம் எனவும் ஏனையவை உள் ளூர்க் கலங்கரை விளக்கம் எனவும் சொல்லப்படும்.

பொதுக் கலங்கரை விளக்கங்களை நிருவகிப்பது, மேற்பார்வையிடுவது ஆகிய பொறுப்புகள் மத்திய அரசிடம் அமையும். ஆனால், உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழுவை (Local Light House Authority) ஒரு பொதுக் கலங்கரை விளக்கத்தை நிருவகிக்க மத்திய அரசு கேட்டுக் கொள்ளலாம். அதற்கான செலவை மத்திய அரசு உள்ளூர்க் கலங் கரை விளக்க அதிகாரக்குழுவுக்குக் கொடுத்துவிட வேண்டும். மாநில அரசு, உள்ளூர் அதிகாரக்குழு அல்லது உள்ளூர்க்கலங்கரை விளக்கத்தை நிருவகிக்கும் அல்லது மேற்பார்வையிடும் பணியில் உள்ளவர் ஆகியோரை உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழு என்ற சொல் குறிக்கும். உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழுவின் வேண்டுகோளின்படி மத்திய அரசு, ஓர் உள்ளூர்க் கலங்கரை விளக்கத்தை நிருவகிக்கும் மற்றும் மேற்பார்வையிடும் பணியில் ஈடுபடலாம். அதற்கான செலவை மத்திய அரசுக்கு உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக்குழு செலுத்த வேண்டும்.

முதன்மை ஆய்வாளர் (Chief Inspector of Light House) எனப்படும் அதிகாரியும், மத்திய அரசரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆய்வாளர் அல்லது கண்காணிப்பாளரும் உள்ளூர்க் கலங்கரை விளக் கத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்யலாம். காணப் படும் குறைகளை நிவர்த்திக்கத் தக்க ஆணைகளை மத்திய அரசு பிறப்பிக்கலாம். ஒரு கலங்கரை விளக் கத்தை அமைப்பது குறித்தும், அதன் உபயோகத்தை மாற்றுவது குறித்தும், வேறு இடத்துக்குக் கலங் கரை விளக்கத்தை மாற்றுவது குறித்தும், கலங்கரை விளக்கத்தைத் தொடர்ந்து செயலாற்றுவதுகுறித்தும் உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழுவிற்கு மத்திய அரசு ஆணையிடலாம். அவ்வாணை நிறை வேற்றப்படாவிட்டால், மத்திய அரசு செயன்முறைப் படுத்தி அதற்கான செலவை உள்ளூர் அதிகாரக் குழு விடம் கைப்பற்றலாம்.

கலங்கரை விளக்கத்தை அமைக்கவோ நீக்கவோ செயற்படுவதை நிறுத்தவோ, உபயோகப்படுத்தும் விதத்தை மாற்றவோ உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக்குழு விரும்பினால் ஒரு மாதத்துக்குக் குறையாத அளவில் மத்திய அரசுக்கு முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவசரநிலை ஏற்பட்டால் உள் ளூர் அதிகாரக்குழு தக்க நடவடிக்கை எடுத்து அதை உடனடியாக மத்திய அரசுக்கும், அப்பகுதியில் நட மாடும் கப்பல் போக்குவரத்துக்கும் முடிந்த அள வில் அறிவிப்புச் செய்ய வேண்டும்.

மேற்கூறிய வகைகளில் கலங்கரை விளக்கங்களை நிருவகிக்கும் செலவைச் சரிக்கட்டுவதற்காகஇந்தியா வில் உள்ள எந்தத் துறைமுகத்துக்கும் வந்து செல் லும் கப்பல்களுக்கு மத்திய அரசு தீர்வை (Dues) விதிக்கலாம். ஒரு கண்டிக்கு 0.50 பைசாவிற்கு மேற் படாத வகையில் இத்தீர்வை விதிக்கப் படலாம். கப்பல்களின் தன்மையைப் பொறுத்தும், உபயோகப் படுத்தப்படும் நோக்கம் குறித்தும் இத்தீர்வையின் விழுக்காடு மாறலாம். சுங்க ஆட்சியரவர்களிடம் இத்தீர்வை செலுத்தப்பட வேண்டும். ஒரு தடவை இத் தீர்வை செலுத்தப்பட்டால், அத்தீர்வை செலுத்தப் பட வேண்டிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மறுபடியும் தீர்வை செலுத்த வேண்டியதில்லை. இத் தீர்வை கப்பலின் உரிமையாளர் அல்லது தலைவரால் (Master) செலுத்தப்படவேண்டும். ஒரு துறைமுகத் தில் செலுத்தப்படவேண்டிய தீர்வையை மற்றொரு துறைமுகம் வசூல் செய்யலாம். அத்தீர்வை செலுத்தப்படாவிட்டால் அக்கப்பல் துறைமுகத்தை விட்டுக் கிளம்ப அனுமதி மறுக்கப்படலாம். அத் தீர்வை குறிப்பிட்ட கப்பலுக்குச் செலுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்தும், தீர்வை விகிதம் குறித்தும் தகராறு எழுந்தால் அதைத் தொடர்புடைய பெருநகர் குற்றவியல் நடுவர்

அல்லது குற்றவியல் முதல் வகுப்பு நடுவர் முடிவு செய்ய வேண்டும்.

அத்தீர்வை செலுத்தப்பட மறுப்புத் தெரிவித்தாலோ, புறக்கணிப்புச் செய்தாலோ, அக்கப்பலைச் சுங்க ஆட்சியர் (Customs Collector) கைப்பற்றலாம். கைப்பற்றிய ஐந்து நாட்களுக்குள் தீர்வை செலுத்தப்படாவிட்டால் அக்கப்பலை விற்றுச் சேரவேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு மீதியைத் தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவரிடம் கொடுத்து விட வேண்டும். அத்தீர்வையைச் செலுத்தாமல் ஏமாற்ற முயல்வது குற்றவியல் நடுவரால் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். செலுத்த வேண்டிய தீர்வையைப் போல் ஐத்துமடங்குவரை ஒறுப்புக் கட்டணம் விதிக்கப்படும்.

அரசுக்கு, அயல் அரசு அல்லது அயல் இளவரசருக்குப் பாத்தியப் பட்டதும் சரக்கோ, பயணிகளோ, வாடகைக்கு ஏற்றிச் செல்ல உபயோகப் படுத்தப்படாததுமான கப்பலுக்கு அத்தீர்வை செலுத்த வேண்டியதில்லை. 50 கண்டிக்குக் குறைந்த எடையுள்ள கப்பலுக்கு இத்தீர்வை கிடையாது. மேலும் மத்திய அரசு எக்கப்பலுக்கும் இத்தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

**இந்தியக் காசியல்:** மனிதனின் பொருளாதார வளர்ச்சியில் சிறப்பான பங்கை இன்றுவரை ஆற்றி வருவன காசுகளாகும். முதன் முதலில் காசுகள் மனிதனால் வெளியிடப்பட்டமை, உலக நாகரிகத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருப்பதோடு அது மனிதனின் நாகரிகத்தினையும் பொருளாதார வளர்ச்சியினையும் சுட்டிக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. உள்நாட்டு வாணிகமும் வெளிநாடுகளுடன் கொண்ட வாணிகமும் காசு அல்லது பணத்தைப் பொதுக் கருவியாகக் கொண்டே மிகப் பழங்காலத்திலிருந்து நடந்து வந்தன. இந்தியாவில் தொன்மைக் காலத்திலிருந்து வளர்ந்த காசியலின் வரலாறு இந்திய வரலாற்றில் ஒரு சிறந்த பங்கை வகிக்கிறது. இந்தியக் காசியலை அறிவதன் மூலம் இந்தியாவின் தொன்மை அரசியல் பொருளாதார வளர்ச்சியினையும் அரசர்களின் பெயர்கள், பட்டங்கள், அவர் பெற்ற வெற்றிகள், ஆட்சிக் காலம், பேரரசு அமைப்பு, சமயம், எழுத்தமைதி, மொழி வளர்ச்சி ஆகியவற்றையும் அறிய இயலும். இந்தியாவின் தொன்மை வரலாற்றை அறிய ஓர் அடிப்படைச் சான்றாக இக்காசியல் அமைந்துள்ளது.

சிந்துவெளி நாகரிக மக்கள் தானியத்தைச் செலாவணிப் பொருளாகப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். அரப்பாவில் பெரிய பெரிய தானியக் களஞ்சியங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை அதை



முத்திரையிட்ட காசுகள்

உறுதி செய்கிறது. வேத காலத்தில் நிட்கம்(Nishka) என்னும் ஓர் அணிகலன் செலாவணிப் பொருளாகப் பயன்பட்டதாகத் தெரிகிறது. கக்சிவத்து (Kakshivat) என்னும் முனிவர், பவ்விய (Bhavya) மன்னனிடமிருந்து பத்துக் குதிரைகளையும், பத்து நிட்கங்களையும் பரிசாகப் பெற்றதை இருக்குவேதப் பாடலொன்றில் விவரிக்கின்றார். அதேபோன்று மற்றொரு புலவர் தாம் நூறு நிட்கம், பத்துக் கழுத்தணிகள், முந்நூறு குதிரைகள், பத்து ஆயிரம் பசுக்கள் ஆகியவற்றைப் பரிசிலாகப் பெற்றதை அதர்வண வேதம் கூறுகிறது. நிட்கம் என்ற அணிகலன் தங்கத்தால் செய்யப்பெற்றது. நாளடைவில் நகைக்குப் பதிலாக அது செய்யப் பயன்படும் உலோகத்தையே செலவாணிப் பொருளாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். இதற்குச் சான்றாகத் திவோதாசன் (Divodasa) என்ற மன்னர், தம் புரோகிதருக்குப் பத்துத் தங்க மூட்டைகள், பத்துக் குதிரைகள், பத்து ஆடைகள், பத்துத் தங்கக் கட்டிகள் ஆகியவற்றை வெகுமதியாக அளித்ததாக இருக்கு வேதம் கூறுவதைக் காட்டலாம்.

உலோகம் விதைகளைக் கொண்டு எடை போடப்பட்டுப் பல அளவுகளில் வழங்கலாயிற்று. இந்த அளவுகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்த அரசு அதிகாரிகள் அவ்வுலோகத்தின் மீது முத்திரைத் துளைகளை இட்டனர். இந்த வகையில்தான் முத்திரையிடப்பட்ட உலோகங்கள் புழக்கத்திற்கு வரலாயின. இவ்வுலோகங்களே முத்திரையிட்ட காசுகள் (Punch Marked Coins) என்று சொல்லப்படுகின்றன. இக்காசுகளைப் பற்றி முதன் முதலாகப் பாணினி (Panini) எழுதிய இலக்கண நூலான அட்டாத்தியாயி (Ashtadhyayi) குறிப்பிடுகிறது. இந்நூலில் நாணயங்களைப் பாணினி விம்சதிக (Vimsatika), திரிம்சதிக (Trimsatika), சானா (Sana), கர்சாபனா (Karshapana) என்னும் பெயர்களால் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் அட்டாத்தியாயி எழுதப்பட்ட காலத்திலேயே இந்திய நாட்டில் நாணயங்கள் மிகுந்த அளவில் புழக்கத்தில் வந்துவிட்டன என்பது தெரிகிறது. சனபதங்கள் (Janapadas) எனப்பட்ட கி.மு.6-ஆம் நூற்றாண்டிலிருந்த சிறிய அரசுகளும், மகாசனபதங்கள் எனப்பட்ட பேரரசுகளும் முத்திரையிட்ட காசுகளை வெளியிட்டிருக்கலாம் என்பது கருதப்படுகிறது. இக்காசுகள், மகதப் பேரரசு தோன்றுவதற்கு முன்பு வரை அதாவது கி.மு.4-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. மகதப் பேரரசு தோன்றியதும் இவற்றின் புழக்கம் குறைந்து விட்டது.



இந்தோ-பாக்டீரியக் காசுகள்

இந்நாணயங்களில் வெறும் சின்னங்கள்தாம் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துகள் அவற்றில்காணப்படவில்லை. குன்று, மரம், பறவை, விலங்கு, மனிதன் போன்ற உருவங்களும், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களும்தாம் இவற்றில் காணப்படுகின்றன. முத்திரை உருவங்கள் பதிக்கப் பெற்றிருக்கிற பகுதி முன்புறம் என்றும், மறுபகுதி பின்புறம் என்றும் கொள்ளப்படுகின்றன. பின்புறத்தில் யாதொரு முத்திரையும் இல்லை. காலப் போக்கில் பின்புறத்திலும் சிறுசிறு முத்திரைகளைப் பதித்திருக்கின்றனர். சில முத்திரைகளை வைத்து இக்காசு எந்தப் பகுதியில் வெளியிடப்பட்டது என்பதைக் கண்டறிய இயலும்.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியை ஆட்சி புரிந்த இந்தோ-பாக்டீரிய மன்னர்கள் வெளியிட்ட காசுகளைக் காணமுடிகிறது. இவர்கள் காலத்தில் தான் தங்க நாணயங்கள் முதன் முதலாக வெளியிடப்பட்டன. இவற்றைத் தியோதாதசு (Diodotus), ஊக்ராட்டைடசு (Eucratides), எத்திடிமசு (Euthydemus) ஆகிய மன்னர்கள் வெளியிட்டனர். இவர்கள் வெள்ளி, செம்பு, நிக்கல் ஆகிய உலோகங்களிலும்

காசுகளை வெளியிட்டுள்ளனர். உலகிலேயே இவர்கள் தாம் முதல் முதலில் நிக்கல் நாணயங்களை வெளியிட்டனர் என்னும் கருத்து நிலவுகிறது.

இவர்கள் காலத்திலிருந்து நாணயம் வெளியிடுதலில் இந்தியா சில புதிய முறைகளைத் தெரிந்து கொண்டது. அம்முறைகளாவன: 1. நாணயங்களின் முன்புறத்தில் மன்னர்களின் உருவங்களை முத்திரையிடும் பழக்கம், 2. நாணயங்களில் தெய்வ உருவங்களைப் பொறிக்கும் பழக்கம், சில காசுகளில் சில தெய்வ உருவங்களின் சின்னங்களைப் பொறிக்கும் பழக்கம், 3. நாணயங்களில் வாசகம் எழுதும் பழக்கம். இவர்கள் நாணயங்களில் கிரேக்கம், பிராகிருதம் ஆகிய இரண்டு மொழிகளில் மன்னனது பெயர் காணப்படுகிறது. பிராகிருத மொழியில் உள்ள வாசகங்கள், சில காசுகளில் கரோத்தி (Kharoshthi) எழுத்திலும் சிலவற்றில் பிராமி எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

இந்தோ பாக்டீரியர்களை அடுத்து ஆட்சிபுரிந்த சக பகலவ மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன. மாயசு (Maues) என்ற மன்னன் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் பின்புறம் ஒரு மனிதன் கால்களை மடக்கிச் சம்மணங்கூட்டி அமர்ந்திருப்பது போன்ற உருவம் காணப்படுகிறது. இவ்வுருவத்தைச் சில அறிஞர்கள் புத்தர் உருவம் என்று கூறுகின்றனர். அதே போன்று இம்மன்னனால் வெளியிடப்பெற்ற வேறு சில நாணயங்களில் ஒரு மனிதன் திரிசூலத்தையும் தடியையும் கையில் கொண்டு வேகமாய் நடப்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுருவத்தைச் சிவன் உருவம் என்று சிலர் கருதுகிறார்கள். இவ்வுருவம் சிவன் உருவம் தான் என்று கொண்டால், இந்தியக் கடவுளுக்கு மனித உருவம் தரும் கலையில் முதலிடம் பெறுவது இதுதான் எனலாம்.

இந்த மரபைச் சார்ந்த ஏசிலிசிசு (Azilises) என்ற மன்னர், தாம் வெளியிட்ட நாணயங்களில் இந்திய மரபையொட்டிப் புது வகையான ஒரு சின்னத்தைப் பொறித்திருக்கிறார். தாமரை மலரை நோக்கி இலக்குமி நின்றுகொண்டிருப்பதுபோலவும், அம்மலரிலுள்ள இரண்டு இலைகளில் இரு யானைகள் நின்றுகொண்டு அவள் தலைமீது நீரைத் தெளிப்பது போலவும் அபிடேக இலக்குமியின் உருவம் காணப்படுகிறது. இவ்வாறு புதிய முறையில் இந்தியப் பண்பாட்டின்படி நாணயங்களை முதன் முறையாக வெளியிட்டவர் ஏசிலிசிசு என்னும் மன்னரேயாவர்.

இவ்வினத்தவர்க்குப் பிறகு இந்தியாவின் வட பகுதியை ஆட்சிசெய்த இந்தோ குசானர்களின் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வினத்



குசானர் நாணயங்கள்

தின் தொடக்கக் கால மன்னர்களின் காசுகள், செம்பினால் மட்டுமே செய்யப்பட்டிருந்தன. இந்நாணயங்களின் ஒருபுறம் காளையின் உருவமும் மறுபுறம் பாக்டீரிய நாட்டு இரட்டைத் திமில் கொண்ட ஒட்டகத்தின் உருவமும் உள்ளன. இச்சின்னங்கள் குசானர்களின் நாடோடித் தன்மையைப் புலப்படுத்துவதாகத் தோன்றுகின்றன. இக்காசுகளின் முன்புறத்தில் கிரேக்க வாசகமும் பின்புறத்தில் கரோத்தி வாசகமும் காணப்படுகின்றன. இம்மரபின் மன்னனான வீமா காட்பீசசு (Wima Kadphises) காலத்தில்தான் இந்தியாவில் முதன் முறையாகத் தங்க நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் விடப்பட்டிருந்தன. இம்மன்னன் வெளியிட்ட தங்க நாணயங்கள் தினாரா (Dinara) இரட்டைத் தினாரா (Double-Dinara) கால் தினாரா (Quarter-Dinara) என மூன்று வகைப்படும். இக்காசுகள் எல்லாவற்றின் பின்புறத்திலும் சிவனது உருவமே காணப்படுகிறது. ஆதலால், இம்மன்னன் சைவ மதத்தைத் தழுவியவனாக இருந்திருக்கலாம் என்பது ஊகிக்கப்படுகிறது. இம்மன்னனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கனிசுகர் (Kanishka) வெளியிட்ட நாணயங்களின் பின்புறத்தில் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இம்

மன்னரே முதன் முதலில் தாம் வெளியிட்ட நாணயங்களில் புத்தரின் உருவத்தைப் பொறித்துள்ளார். பிற்காலக் குசான மன்னர்களின் காசுகளில், சிவன் உமை உருவங்களும் கார்த்திகேயனின் உருவமும் காணப்படுகின்றன.

வட இந்தியாவில் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தபோது தென்னிந்தியாவில் தக்காணம் முழுவதிலும் குறிப்பாகப் பாண்டிய நாட்டிலும் ஆந்திராவிலும் அச்சால் அடித்த நாணயங்களே புழங்கி வந்தன. பாண்டிய நாட்டுச் செப்பு நாணயங்கள் செவ்வக வடிவத்தில் இருக்கின்றன. இவற்றில் யானை மட்டுமோ யானையோடு கூடிய வேறு சில சிறிய அடையாளங்களோ பொறிக்கப்பட்டிருந்தன.



பாண்டியர், சாதவாகனர், சாதவாகனருக்கு முன்பிருந்த தென்னிந்திய நாணயங்கள்

மைசூர், கனராப் பகுதியில் ஆனந்தர் குடும்பத்தினர் ஆட்சி செய்தபோது இம்மன்னர்கள் 'ராஜா' என்ற பட்டத்தைப் பொறித்து நாணயங்கள் வெளியிட்டனர். 'ராஜா' என்ற பட்டத்தைப் பொறித்த முதல் தென்னிந்திய மன்னர்கள் இவர்களே.

கோல்காபூரைச் (Kolhapur) சுற்றிள்ள மராட்டியப் பகுதியில் மகாரதிகர் (Maharathi) என்ற இனத்தார் ஆட்சி புரிந்தனர். இவ்வினத்தைச் சார்ந்த விலிவாயகுரர் (Vilivayakura) என்ற மன்னர், தாம் வெளியிட்ட நாணயத்தில் 'ராஜ்னோவாசிஷ்டீ புதச விலிவாயகுரச' (Rajno vasisht'i putasa vilivayakurasa) என்ற வாசகத்தைப் பொறித்துள்ளார். இந்திய நாணய வரலாற்றில் தாய்வழிப் பெயருடன் வெளிவந்த நாணயங்களுள் இந்நாணயந்தான் முதலாவதாகும்.

ஆந்திர மன்னர்களான சாதவாகனர்கள், தாம் வெளியிட்ட நாணயங்களிலும் தாயின் பெயரையும் சேர்த்து வாசகம் பொறித்துள்ளனர். இவ்வாசகங்கள் பிராமி எழுத்தில், ஒரு பக்கம் பிராகிருத மொழியிலும், மறுபக்கம் தமிழ் மொழியிலுமாக எழுதப்பட்டுள்ளன. இக்காசுகளின் பின்புறத்தில் உச்சயினிச் சின்னமும் ஆறு வளைவுகள் கொண்ட மலையும் காணப்படுகின்றன. இம்மன்னர்கள் கி.பி. முதல், இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளில் தக்கணத்தை ஆட்சி செய்தவர்களாவர். இவர்களைத் தொடர்ந்து இட்சுவாகு வம்சத்தினர் தக்கணத்தை ஆண்டிருக்கின்றனர். இவர்கள் சாதவாகனர்களைப் பின்பற்றியே நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

குப்தர்கள் காலத்தில் நாணயங்களின் வெளியீட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம். இவர்கள் காலத்தில் ஏறக்குறைய (கி.பி. 300 முதல் 550 வரை) பெரும்பாலும் தங்க நாணயங்களே வெளியிடப்பட்டன. இவர்கள் குசானர்களின் காசுகளைப் பின்பற்றியே நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. தொடக்கக் காலக் குப்தர்களின் நாணயங்களில் அரசனது உருவம், குசானர்களின் காசுகளில் உள்ளபடியே காணப்படுகிறது. ஆனால் பிற்காலத்திய நாணயங்களில் அரசரின் உருவங்களில் இந்திய மரபு கடைப்பிடிக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. குப்தர்கள் பதினாறு வகையான நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவை அனைத்தும் சிறந்த கலையம்சம் கொண்டவையாக உள்ளன. குப்தர் நாணயங்கள் சிலவற்றில் அரசனது உருவமும், அரசியாரது உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. முதலாம் சந்திரகுப்தன் வெளியிட்டுள்ள நாணயங்களில் அரசன், அரசி ஆகியோர் பெயர்கள் தரப்பட்டுள்ளன. சமுத்திரகுப்தன், குமாரகுப்தன் ஆகியோரின் காசுகளில் அரசன் கட்டிலில் அமர்ந்து வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. சமுத்திரகுப்தர், குமாரகுப்தர் ஆகியோர் புகழ்பெற்ற அசுவமேத நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இக்காசுகளில் யூபத்திற்கு (யாகத்தூண்) முன்பாகக் குதிரை

இந்தியக் காசியல்

நிற்பதாகக் காட்டப் பெற்றுள்ளது. குப்தர்களுள் சிலர் வெள்ளிக் காசுகளைக் குறைந்த அளவில் வெளியிட்டுள்ளனர். இவர்கள் காலத்திய சில செப்புக் காசுகளும் கிடைக்குள்ளன



சோழர் கால நாணயங்கள்

தமிழகத்தில் மிகப் பழமையான காசு முத்திரை பதித்த காசுகளேயாகும். இவ்வகை நாணயங்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. முதல் நூற்றாண்டு வரை வெளியிடப்பட்டதாக இருக்கலாம். இந்தியாவின் மற்றப் பகுதிகளில் காணப்படும் இவ்வகை நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகளே, தமிழகத்தில் கிடைத்துள்ள முத்திரை பதித்துள்ள நாணயங்களில் காணப்படுகின்றன.

பெரும்பாலும் இதே காலத்தில் தமிழகத்தில் தமிழக மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகளும் கிடைத்துள்ளன. வடார்க்காடு மாவட்டம் ஆண்டிப்பட்டி என்னுமிடத்திலிருந்து சில ஈயக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட வாசகமும் சில படங்களும் காணப்படுகின்றன. இவ்வாசகம் 'திண்ணன் எதிரான் சேந்தன் அ' என்று படிக்கப்பட்டுள்ளது. இக்காசுகள் திண்ணன் என்ற குறுநில மன்னனாலோ சேந்தன் என்ற பாண்டிய மன்னனாலோ வெளியிடப்பட்டிருக்கலாம் என்பது கருதப்படுகிறது. இவை மட்டுமல்லாமல் இதே காலத்தைச் சேர்ந்த சில செப்புக் காசுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் வாசகம் ஒன்றும் காணப்படவில்லை. இவை முன் பக்கம் கெண்டை மீனோ யானையோ புலியோ பொறிக்கப்பட்டும், பின்பக்கம் சில மங்கலச் சின்னங்கள் பொறிக்கப்பட்டும் காணப்படுகின்றன. அண்மையில் மதுரையில் ஒரு செப்புக்காசு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்காசில் 'பெருவழுதி' என்று பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சங்க கால இலக்கியங்கள் கா, பொன், காணம், காசு ஆகிய நாணயங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால், அவற்றின் வடிவம் எவ்வாறு இருந்தது என்பது தெரியவில்லை. மேற்கூறியவற்றில் யாதோ ஒன்று வேப்பம்பழ வடிவில் இருந்ததாகத் தெரிகிறது.

பல்லவர் காலத்தில் வெளியிடப்பெற்ற காசுகளில், சில காசுகளை மட்டுமே அவை, யாரால் வெளியிடப்பட்டிருக்கக் கூடும் என்பது அறுதியிட முடிகிறது. இவர்களின் காசுகள் சிலவற்றில் 'ஸ்ரீநிதி' 'ஸ்ரீபர' 'மானாபர' என்ற வாசகங்கள் உள்ளவை இராசசிம்மனால் வெளியிடப்பட்டவை என்றும், 'மானாபர' என்ற வாசகம் காணப்படும் காசு தெள்ளாறெறிந்த நந்திவர்மனால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

சோழர்கள் வெளியிட்ட நாணயங்களில் உத்தம சோழன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் வெளியிடப்பெற்ற நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. பிற்காலப் பாண்டியர்களான மாறவர்மன் சுந்தரபாண்டியன், சடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர்கள் காலத்தில் வெளியிடப்பெற்ற நாணயங்கள் கிடைத்துள்ளன.

இந்தியாவின் வடபகுதியை ஆண்டுவந்த தில்லிச் சுல்தான்கள் இந்திய நாணய வரலாற்றில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள், தாம் வெளியிட்ட நாணயங்களில் மன்னர்களின் உருவங்களைப் பொறிப்பதை நிறுத்திவிட்டனர். மாறாக நாணயங்களின் இருபக்கங்களிலும் மன்னன் பெயர், விருது, வெளியிட்ட தேதி ஆகியவற்றைப் பொறித்திருக்கிறார்கள். இவர்கள் நாணயங்களில்தான் முதல்முதலாக எந்த இடத்தில் அந்த நாணயம் உருவாக்கப்பட்டது என்ற செய்தியும் காணமுடிகிறது. செர்சா, அக்பர், சகாங்கீர் ஆகியோரும் நாணயங்கள் வெளியிட்டுள்ளனர்.

தென்னகத்தை ஆட்சிபுரிந்த விசயநகர மன்னர்களும், தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். விசய நகர



தில்லிச் சுல்தானியர் நாணயங்கள்

மன்னர்கள் காலத்திய நாணயங்களில் கிருட்டிண தேவராயர் காலத்திய 'வராகர்' 'இராமதங்கா' காசுகள் புகழ்பெற்றவை.

அவர்களை அடுத்துத் தென்னிந்தியாவில் திப்பு சுல்தான் காசுகளும், நாயக்கர் காலத்திய காசுகளும் ஆங்கிலேயரின் காசுகளும் வழங்கலாயின. ந.கா

துணை நூல்கள்:

**Desikachari, T.,** South Indian Coins, St. Joseph's Industrial School Press, Trichinopoly, 1933.

**Gupta, P.L.,** Coins, National Book Trust of India, New Delhi, 1969.

**இந்தியக் காடுகள் சட்டம்:** இந்தியாவில் உள்ள காடுகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கில அரசானது இச்சட்டத்தை 1927–ஆம் ஆண்டில் இயற்றியது. இப்போது இந்தியக் காடுகள் சட்டம் (Indian Forest Act, 1927)பெரும்பாலும் இந்தியா முழுவதும் செல்லத்தக்கது.

இச்சட்டத்தின்படி காடுகள் கீழ்க்காணும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 1. தனி ஒதுக்கீடு செய்யய்பட்ட காடுகள் (Reserved Forest) 2. கிராமக் காடுகள் (Village Forest), 3. பாதுகாக்கப்பட்ட காடுகள் (Protected Forest) எனப்படும்.

இச்சட்டத்தின்படி ஒரு நிலத்தைத் தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடு என்று அறிவிப்புச் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. அவ்வாறு அறிவிப்புச் செய்யப்படத்தக்க நிலம், காடாகவோ தரிசாகவோ இருக்க வேண்டும். அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் விளைச்சல் முழுவதும் அல்லது ஒரு பகுதி அரசுக்குச் சேரக்கூடியதாக இருக்க வேண்டும்.

அம்மாதிரியான நிலங்களைத் தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடாக ஆக்க மாநில அரசு விரும்பினால், அந்த நோக்கம் இருப்பதாக முதலில் அரசு அறிவிப்புச் செய்ய வேண்டும். அந்த அறிவிப்புத் தேதிக்குப்பின் எவருக்கும் அவ்வாறு அறிவிப்புச் செய்யப்பட்ட நிலங்களில் புதிய உரிமை யாதும் ஏற்படாது. அந்தத் தேதிக்குப் பின்பும், எவருக்கும் புதிய உரிமையை ஒப்பந்தம் மூலமோ பட்டயம் (Grant) மூலமோ வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. மேற்படி அறிவிப்பையொட்டி அதற்கென்று நியமிக்கப்பட்ட தனி அதிகாரியானவர் (Settlement Officer) தனியாக ஓர் அறிவிப்புச் (Proclamation) செய்ய வேண்டும். அந்த அதிகாரி வெளியிடும் அறிவிப்புத் தேதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் மேற்படி அறிவிக்கப்பட்ட நிலங்களில் உரிமை யாதும் கொண்டாடுபவர் அந்த அதிகாரி முன் குறிப்பிட்ட தேதியில் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு உரிமை கொண்டாடாவிட்டால் உரிமை யாதானுமிருந்தாலும் அதனை இழக்க நேரிடும்.

மேற்படி அதிகாரி முன்பாக வலியுறுத்தப்படும் உரிமையானது அறிவிக்கப்பட்ட நிலத்தில் மாறி மாறி உழவடை (Shifting Cultivation) செய்யும் உரிமையாக இருந்தால், அது உண்மையாக இருந்தாலும்கூட, அதை முழுமையாகவோ பகுதியாகவோ அரசு தடை செய்யலாம். அந்த உழவடை உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கூட, அதை மாநில அரசு நினைத்தபோது கட்டுப்படுத்தவோ குறைக்கவோ நீக்கவோ செய்யலாம்.

மேற்படி விசாரணையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமையானது நடைபாதை உரிமையாகவோ விளைச்சல் உரிமையாகவோ மேய்ச்சல் உரிமையாகவோ தண்ணீர் எடுத்துச் செல்லப் பாதை வேண்டும் உரிமையாகவோ இருந்தால், அந்த உரிமை சம்பந்தப்பட்ட நிலத்தை அறிவிப்பு நிலத்திலிருந்து மேற்படி அதிகாரி நீக்கி விடலாம்; அன்றி, அந்த

உரிமையை உரிமையாளரை விட்டுக்கொடுக்க வைப்பதற்காக அவருடன் அந்த அதிகாரி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்; அன்றி, நில ஈட்டல் சட்டப் படி (Land Acquisition Act) அந்த உரிமையை ஈட்டு தல் செய்ய அந்த அதிகாரி நடவடிக்கை எடுக்கலாம்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமை, மேய்ச்சல் உரிமையாகவோ விளைச்சலில் உள்ள உரிமை யாகவோ இருந்தால், அதை மேற்படி அதிகாரி விவரங்களுடன் பதிவு செய்ய வேண்டும். அந்த உரிமைகளால் மேற்படி அறிவிக்கப்பட்ட நிலத்தைப் பேணி வருவதில் இடையூறு ஏற்படும் என்று அந்த அதிகாரி நினைத்தால், அந்த உரிமையை ஏற்பதற் குப் பதிலாக உரிமையாளருக்குப் பணம் கொடுத்து விடலாம்; அன்றி, வேறு எந்த விதத்திலாவது அதை ஒழுங்குபடுத்தலாம்.

மேலே கூறியவாறு அந்த அதிகாரி பிறப்பிக்கும் ஆணைகளை எதிர்த்து மேன்முறையீடு தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்கள் முடிவடைந்தபின், சம்பந் தப்பட்ட நிலமானது குறிப்பிட்ட தேதியிலிருந்து தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடாகக் கருதப்படும் என்று அரசு அரசாங்க இதழில் (Gazette) அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவித்த தேதியிலிருந்து சம் பந்தப்பட்ட நிலம் தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடாகிவிடும். பின்னர், அந்தக் காடு தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடு அன்று என்றும் அறிவிக்கும் உரிமை மாநில அரசுக்கு உண்டு.

மேற்படி தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டில் சட்டத்திற்குப் புறம்பாக மரம் வெட்டுதல், காட்டை அழித்தல், ஆடுமாடுகளை விட்டு மேய்த்தல், சேதம் உண்டாக்குதல், மரத்தை எரித்துக் கரி சேகரித்தல், யானை வேட்டையாடுதல் மற்றும் இச்சட்டத்தில் விவரிக்கப்பட்ட காரியங்களைச் செய்தல் ஆகியவை தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும்.

அவ்வாறான தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட் டில் தனிப்பட்ட மனிதருக்கோ பொதுமக்களுக்கோ நடைபாதை உரிமையோ தண்ணீர் எடுத்துச் செல்ல நீர்ப்பாதை (Water Course) உரிமையோ இருந்தால், அதை அரசு தடை செய்யலாம். மாற்று வழி இருந்தால் அல்லது மாற்று வழி ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அவ்வாறு தடை விதிக்கலாம்.

தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டில் தனக்கு உள்ள உரிமையை மாநில அரசானது கிராமச் சமுதா யத்துக்கு அளிக்கலாம். அவ்வாறு கிராமச் சமுதா யத்துக்குக் கொடுக்கப்படும் காடு கிராமச் சமுதாயக் காடு என்று சொல்லப்படும். அவ்வாறு கொடுப் பதைப் பின்னர் மாநில அரசு நீக்கவும் செய்யலாம். தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டுக்குப் பொருந்தக் கூடிய இச்சட்டத்தின் பிரிவுகள் கிராமச் சமுதாயக் காட்டுக்கும் பொருந்தும்.

மேற்படி தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடுகளில் சேராத காட்டையோ தரிசு நிலத்தையோ மாநில அரசு பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கலாம். ஆனால், அந்த நிலமானது அரசுக்கு உரியதாக இருக்க வேண்டும். அதில் அரசுக்கு உடைமை உரிமை யும் (Ownership Right) இருக்க வேண்டும். அதன் விளைச்சலில் முழுதுமோ பகுதியோ அரசுக்குச் சேரக் கூடியதாக இருக்கவேண்டும். அவ்வாறு பாதுகாக்கப் பட்ட காடு என்று அறிவிப்புச் செய்யப்பட்ட நிலத் தில் உரிமை கொண்டாடுபவர்களின் வேண்டல்கள் பற்றி விசாரணை செய்யப்பட வேண்டும். பாதுகாக் கப்பட்ட காட்டில் உள்ள மரங்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட மரங்களாக அரசு அறிவிக்கலாம். அந்தக் காட்டில் கல், மண் வெட்டித் தோண்டுதல், மரக்கரி சேகரித்தல், விளைச்சலை எடுத்துச் செல்லு தல், ஆடுமாடு மேய்த்தல், கட்டடம் கட்டுவதற்கா கவோ வேளாண்மை செய்வதற்காகவோ காட்டை அழித்தல் போன்ற செய்கைகளைச் செய்யக் கூடாது என்று மாநில அரசு தடை விதிக்கலாம்.

மேற்படி பாதுகாக்கப்பட்ட காட்டில் மரம் வெட்டுதல், விளைச்சலைச் சேகரித்தல், ஆடுமாடு மேய்த்தல், வேட்டையாடுதல், இன்னும் இச்சட்டத் தில் கூறப்பட்டுள்ள செய்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் மாநில அரசு விதி களைப் பிறப்பிக்கலாம். அந்த விதிகளை மீறுவது சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

**இந்தியக் கால்நடைச் செல்வம்**: இந் தியா பல்வகை இயற்கை வளங்களையும் தட்ப வெப்ப நிலைகளையும் எண்ணற்ற தாவரங்களையும் கொண்டுள்ளது; ஏறக்குறைய 500 வகை மிருகங் களையும் 3,000 வகைப் பறவைகளையும் கொண் டுள்ளது. கால்நடைகள் என்று குறிப்பிடுவது பொது வாகப் பசு, எருமை, எருது, வெள்ளாடு, செம்மறி யாடு, குதிரை, கழுதை, ஒட்டகம் போன்றவையே யாகும். கால்நடைச் செல்வம் உள்ள உலக நாடுகளில் இந்தியா முதன்மை இடத்தைப் பெறுகிறது. இந்தியா வில் வேளாண்மையும் கால்நடைகளும் ஒன்றை யொன்று சார்ந்துள்ளன. அவற்றைத் தனித்தனியே பிரித்து நோக்கின், பொருளாதார வளர்ச்சியில் கால்நடைகளின் முன்னேற்றமும் வேளாண்மையின் முன்னேற்றமும் இணைந்து செயற்படுவதைக் காண லாம்.

பொதுவாகக் கால்நடைகள் ஒரு நாட்டின் வருவாயைப் பெருக்குகின்றன. கால்நடைச் செல்வம் வேளாண்மை உற்பத்தியைவிட நிறைந்த வருவாயைத் தரவல்லது. சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மொத்த வேளாண்மை உற்பத்தியில், 60 விழுக்காடு முதல் 80 விழுக்காடு வரை உற்பத்தி கால்நடைச் செல்வங்களிலிருந்து பெறப்படுகிறது. இக்காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போலப் பிற நாட்டு மக்களின் அன்றாட உணவில் பால், இறைச்சி, பால் பண்டங்கள் போன்றவை மிகப் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்நாடுகளின் உணவு உட்கொள்ளும்பழக்கத்தில் முதன்மையிடம் பெற்றிருந்த பருப்பு, தானிய வகைகள் ஆகியவை, இறைச்சி, பால், பால் பண்டங்களின் பெரும்பான்மையான நுகர்வால் இரண்டாம் இடத்தை அடைந்துள்ளன. பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகள் வேளாண்மையைச் சீர்தூக்கி அமைப்பதற்கு ஏதுவாக வளமான, முன்னோக்கு நிறைந்த கால்நடைசார் (Live-stock Based) தொழில்களை ஏற்படுத்தியுள்ளன.

கால்நடைகள் சிறந்த செல்வமாகும். உலகக் கால்நடை எண்ணிக்கையில் 11 விழுக்காடு இந்தியாவில் உள்ளது. இவற்றுள் உத்தரப் பிரதேசத்தில் 15 விழுக்காடும், மத்திய பிரதேசத்தில் 14 விழுக்காடும், பீகாரில் 9.2 விழுக்காடும், ஆந்திரப் பிரதேசத்தில் 7.3 விழுக்காடும், மேற்கு வங்காளத்தில் 6.5 விழுக்காடும் காணப்படுகின்றன. எஞ்சிய 48 விழுக்காடு கால்நடைகள் பிற மாநிலங்களில் உள்ளன. வேளாண்மைப் பயிர் நிலப்பரப்பில் உள்ள கால்நடைகளின் நெருக்கம் (Density) பல மாநிலங்களில் உயர்வாக உள்ளது. மகாராட்டிரம், குசராத்து மாநிலங்களில் 100 எக்டேர், நிலப்பரப்பில் கால்நடைகள் 280 ஆகவும், இமாசலப் பிரதேசத்தில் 279 ஆகவும், அசாமில் 267 ஆகவும், சம்மு காசுமீரில் 244 ஆகவும் காணப்படுகின்றன.

கால்நடைகளின் வளர்ச்சிக்கு நிலையான புல்வெளிகள் இன்றியமையாத தேவையாகும். சில ஐரோப்பிய நாடுகளில் மேய்ச்சல் நிலங்கள் கால்நடைகளின் தேவைக்கு மிஞ்சியே உள்ளன. இதற்கு மாறாக இந்தியாவில் மேய்ச்சல் நிலப்பரப்புக்கும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கும் ஒவ்வாத ஒரு நிலை காணப்படுகிறது. இங்குமிகச் சிறிய பரப்பையுடைய மேய்ச்சல் நிலங்களில் மிகுதியான கால்நடைகள் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. இந்தியக் குடிமதிப்புப் (Census) புள்ளிவிவரப்படி 100 மக்களுக்கு 400 கால்நடைகள் உள்ளன. எருமை மாடுகளின் வீதம் 100 மக்களுக்கு 100 எருமை மாடுகள் என்றும், 100 எக்டேர் பயிர்விளை நிலப்பரப்பிற்கு 34 எருமை மாடுகள் என்றும் புள்ளிவிவரம் கூறுகிறது. எருமை மாடுகளின் எண்ணிக்கை மிகுந்துள்ள மாநிலம் பஞ்சாபு ஆகும் (100க்கு 22 என்ற வீதம்). இதற்கு அடுத்ததாக இராசசுத்தானில் 20%, ஆந்திரப் பிரதேசத்தில் 19%, மத்திய பிரதேசத்தில் 17%, உத்தரப் பிரதேசத்தில் 15% எனக் கணக்கிடப்பட்டுள்ளன.

கால்நடைகளை உழைக்கும் இனங்கள் (எருதுகள்), இனவிருத்திக் கால்நடைகள் (Breeding Cattle), ஒன்றுக்கும் பயன்படாதவை என மூவகைப்படுத்தலாம். உத்தரப் பிரதேசம், பீகார், மகாராட்டிரம், குசராத்து, பஞ்சாபு மாநிலங்களில் மிகுதியான அளவு உழைக்கும் எருதுகள் உள்ளன. இந்த மாநிலங்களில் கோதுமை, பருத்தி, கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுவதால் அவற்றையே எருதுகளுக்கு உண்வாகப் பயன்படுத்துகின்றனர். சில மாநிலங்களில் எருதுகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அம்மாநிலங்களில் காணப்படுகின்ற மணல்சாரியான, மலைப்பாங்கான, காடுகள் நிறைந்த நிலங்களில் நெல், சணல், தேயிலை போன்றவை பயிரிடப்படுவதால் மிகுதியான அளவு எருதுகளின் உழைப்பு தேவைப்படுவதில்லை. இந்தியாவில் மொத்தமாக 73.7 மிலியன் உழைக்கும் எருதுகள் உள்ளன.

இனவிருத்திப் பசுக்கள் இந்திய வேளாண்மையில் பெரும் பங்கேற்கின்றன. வேளாண்மையில் கால்நடைகள் நிலத்தினை உழுவதற்கும், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கும், வேளாண் பொருளை நிலத்திலிருந்து அங்காடிகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் பயன்படுகின்றன. இனவிருத்திக் கால்நடைகளில் பால் கொடுக்கும் பசு, எருமை இனங்கள் ஊரகங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றில் 4 விழுக்காடு நகரங்களிலும் 96 விழுக்காடு ஊரகங்களிலும் காணப்படுகின்றன.

பயன்படாத (Unproductive) கால்நடைகளில் மெலிந்த, வயது சென்ற, நோயுற்ற விலங்குகள் உழைக்கவோ இனவிருத்தி செய்யவோ இயலா நிலையில் உள்ளன. மத, பண்பாட்டு அடிப்படையில் அவற்றின் உரிமையாளர்கள் அத்தகைய மிருகங்களைப் பாதுகாத்து வருகின்றனர். அம் மிருகங்களின் எண்ணிக்கை 29 மிலியன் ஆகும்.

பிறவகைக் கால்நடைகளில் பெரும்பாலும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் ஆகியவை அடங்கும். மொத்த ஆடுகளின் எண்ணிக்கையில் 60 விழுக்காடு செம்மறியாடுகள் இராசசுத்தான், மகாராட்டிரம், பீகார், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் எஞ்சிய 40 விழுக்காடு பிற மாநிலங்களிலும் உள்ளன. வெள்ளாடுகளில் 50 விழுக்காட்டுக்கும் கூடு

தலாக மத்திய பிரதேசம், கர்நாடகம், குசராத்து, தமிழ் நாடு போன்ற மாநிலங்களில் உள்ளன.

சாகிவால் (Sahiwal) என்ற சிறந்த இனப் பசுக்கள் பஞ்சாபிலும் கிர் (Gir) குசராத்திலும் உள்ளன. சிறந்த இன எருதுகளில் இசார் (Hissar), ஆன்சி (Hansi) என்பவை பஞ்சாபு, நெல்லூர் ஆகிய வட்டாரங்களிலும் அமிர்தமகல் மைசூரி லும், காசுகீக்கன் குசராத்திலும், காங்கேயம் தமிழகத்திலும் உள்ளன. உயர்ந்த இனத்தைச் சார்ந்த எருமைகளான முத்ரா பஞ்சாபி லும், சபராபடி குசராத்திலும், மேக்சனா சுரபு, பந்தபுரி போன்றவை மகாராட்டிரத்திலும் உள்ளன. பால்பெருக்க இனப்பிரிவைச் சார்ந்தவை கிர், சிந்தி, சாகிவால், தார்பார்க்கர் முதலியவையாகும். இவை பெரிய தோற்றத்துடனும் நீண்ட சுருண்ட கொம்பு களுடனும் காணப்படுகின்றன. மைசூர் வகையைச் சார்ந்த மாடுகள் மிகக் குள்ளமான கொம்புகளை யுடையவை. அவற்றின் பால் பெருக்கமும் மிகக் குறைவு. மிகச் சிறிய வடிவமுள்ள பொன்வான், ஊசரி போன்ற இனப்பிரிவுகள் இமயமலை அடி வாரத்தில் காணப்படுகின்றன. இவற்றின் பால் பெருக்கமும் மிகக்குறைவு.

கால்நடைகளின் இனப்பெருக்கமானது சுற்றுச் சூழ்நிலை, மழை, தட்பவெப்ப நிலை, மண்வளம் போன்ற இயற்கையான இயல்புகளோடு தொடர்பு கொண்டுள்ளது. மழை மிகுந்து காணப்படும் பகுதி கள், கடலோரப் பகுதிகள், மலைப்பாங்கான பகுதி கள் ஆகியவை இனப்பெருக்கத்துக்கு ஏற்றனவாகும். சிறந்த இனப் பிரிவுகள் பம்பாய், தமிழ்நாடு, மைசூர், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் காணப்படுகின்றன. அவற்றின் இனப்பெருக்கமும் விரிவடைந்திருக்கிறது.

கால்நடைகளின் எண்ணிக்கையானது கால நிலை, மேய்ச்சல் வசதிகள், உணவு உற்பத்தி போன்றவற்றின் அடிப்படையில் மாறுகின்றது. வேளாண்மையில் நீர்ப்பாசனம், உற்பத்தி நிலச் சேர்க்கை (Land Reclamation) போன்றவை விரி வாக்கப்படும்போது, மேய்ச்சல் நிலங்களின் பரப்புக் குறைவதால், கால்நடைகளின் தரம் குறைகிறது. பொருளாதாரத்தில் கால்நடையின் பங்கு: இந்தியா ஒரு வேளாண்மை நாடாக இருப்பதால், சிறந்த கால் நடைச் செல்வம் நாட்டின் ஊரக வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் துணையாய் உள்ளது. ஒரு நாட்டின் கால்நடை எண்ணிக்கை வேளாண்மை உற்பத்தியைப் பாதிக்கிறது. முன்னேற் றம் அடைந்த நாடுகளில் கால்நடைகளை இறைச்சி, பால் போன்றவற்றிற்காகவே வைத்துப் பாதுகாக்கின் றனர். ஆனால் இந்தியாவில் கால்நடைகள் நிலங்களை உழுவதற்காகவும் வண்டி இழுப்பதற்காகவும் பயன் படுத்தப்படுகின்றன.

கால்நடை எல்லா வகையான வேளாண்மை வேலைகளுக்கும் உறுதுணையாய் உள்ளது. இந்தியா வில் கால்நடைப் பெருக்கம் மிகையாக இருந்தபோதி லும், சிலவகையான இனங்களே தரமாக உள்ளன. எனவே கால்நடையின் தரமும் (Quality) எண்ணிக் கையும் (Quantity) சமமாக இருந்தால்தான் உழவரின் பொருளாதார, சமுதாய நிலையை உயர்த்தமுடியும். கால்நடைகள் வயல்களை உழுதற்கு இன்றியமை யாதவையாகும். கால்நடைகளிலிருந்து 23.20 இலட் சம் கண்டி (Tonne) பால் உற்பத்தியாகிறது. பால் உற்பத்தி மூலம் உரூ. 6,200 மிலியன் நாட்டு வருவா யில் சேருகிறது. ஒவ்வொரு கறவைப் பசுவும் ஓர் ஆண்டில் சராசரியாக 220 இலிட்டர் பால் தருவ தாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேல் நாடுகளில் ஓர் ஆண்டில் 3000 முதல் 5000 இலிட்டர் வரை ஒவ் வொரு பசுவும் பால் தருகிறது.

இந்தியக் கூட்டுறவு அமைப்புகளின் வாயிலாகப் பால் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள் ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் பால்வள நிறுவனங் கள் நிறுவப்பட்டு அவற்றின் மூலம் மாவட்டங்களி லும் ஊரகங்களிலும் சேகரிப்பு நிலையங்கள் செயற் படுகின்றன. அவற்றின் அருகில் உள்ள குளிர்பதன நிலையங்களுக்குப் பால் எடுத்துச் செல்லப்பட்டு நுகர் வோரின் தேவைக்கேற்பப் பைகளில் விற்பனை செய் யப்படுகிறது. குசராத்து மாநிலத்திலுள்ள ஆனந்து என்கிற இடத்தில் பேரளவில் பால்வள நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுப் பால், பால் பண்டங்கள், கால்நடைகள் முன்னேற்றம் ஆகியவற்றைப் பற்றிய ஆராய்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தரமான கறவைப் பசுக்கள், கால்நடைத் தீவனங்கள் போன்ற வற்றின் மூலம் பால்வளத்தைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கால்நடைகளிலிருந்து இறைச்சி 0.49 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. அதன் மதிப்பு உரூ. 1000 மிலியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஏறக் குறைய 0.9 விழுக்காடு பசுக்களும், 36 விழுக்காடு வெள்ளாடுகளும், 35 விழுக்காடு செம்மறியாடுகளும் ஓர் ஆண்டில் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படுகின் றன.

கால்நடைகள் வயலுக்குத் தேவையான உரம் (சாணம்) தருவதன் வாயிலாக நிலத்தின் வளத்தை யும் உற்பத்தித் திறனையும் உயர்த்துகின்றன. ஓராண் டுக் கால்நடைச் சாணம் 1200 மிலியன் கண்டிஆகும். 400 மிலியன் கண்டிச் சாணம் 46 மிலியன் கண்டி நிலக்கரிக்கு ஈடாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும்,

எரிவாயு (Bio-gas) உற்பத்தி செய்வதற்கும் சாணம் குறைந்த செலவில் பயன்படுகிறது.

கால்நடைகள் வண்டி இழுப்பதற்கு ஊரகங்களில் மிகுதியாகப் பயன்படுகின்றன. உயர் குழுவின் (Royal Commission) அறிக்கையின்படி உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் கால்நடைகள் உணவு, பால் போன்றவற்றிற்காகப் பயன்படுகின்றன. ஆனால் இந்தியாவில் அவற்றின் முதன்மைப் பணி வயல்களை உழுவதும், வண்டிகளை இழுப்பதுமேயாகும். கால்நடைகளின் பணிகளைத் துல்லியமாக மதிப்பிட இயலாது. எனினும் இந்தியாவின் கால்நடைப் பணிகளின் மதிப்பு உரூ. 300 கோடி முதல் உரூ. 500 கோடி வரை எனக் கூறப்படுகிறது.

கால்நடைகள் பலதரப்பட்ட பொருள்கள் உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. அவற்றில் சிறப்பாகத் தோல், பதனிடப்பட்ட தோல் முதலியவை அடங்கும். உலகின் 32 விழுக்காடு தோல் உற்பத்தி இந்தியாவைச் சார்ந்தது. மொத்தத் தோல் உற்பத்தியில் 16 மிலியன் மாட்டுத் தோல், 5 மிலியன் எருமைத் தோல், 21 மிலியன் வெள்ளாட்டுத் தோல், 16 மிலியன் செம்மறியாட்டுத் தோல் ஆகும். ஏறக்குறைய 36 மிலியன் கிலோ கிராம் ஆட்டு உரோமம் கிடைக்கிறது. அதில் 50 விழுக்காட்டுக்கு மேல் கம்பளி உரோமமாக (Wool) ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் நெய், கொழுப்புப்போன்ற பொருள்களின் உற்பத்தி 0.24 மிலியன்கண்டி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கால்நடைகளின் கொழுப்பு, குளம்புகள், கொம்புகள் போன்றவற்றின் மூலம் உரூ.6 மிலியன் அயற் செலாவணி கிடைக்கிறது. ஒவ்வோராண்டும் 3.6 மிலியன் கண்டி எலும்பு கிடைக்கிறது. அதன் மதிப்பு ஏறக்குறைய உரூ. 8, கோடியாகும்.

இந்திய வேளாண்மை வருவாயில் கால்நடைகளிலிருந்து பெறும் வருவாய் 15 விழுக்காடாகும் (1984). கால்நடைகள் எண்ணிக்கையில் மிகுந்து காணப்பட்டாலும், அவற்றின் வருவாய் மிகுதியாக இல்லை. இந்தியாவின் நாட்டு வருவாயில் வேளாண்மைத் துறை வருவாய் 42 விழுக்காடாக (1984) உள்ளது. அதில் மிகக் குறைந்த அளவே கால்நடைகளின் பங்கு எனக் குறிப்பிடப்படுகிறது. தென்மார்க் (Denmark), சுவீடன் (Sweden) போன்ற நாடுகளில் வேளாண்மையில் கால்நடைகளின் பங்கு 80 முதல் 85 விழுக்காடாக (1984) உள்ளது.

புதிய வேளாண்மைக் கருவிகளின் மூலம் கால்நடைகளின் பங்கு பெரிதும் குறைந்துள்ளது. சிறிய சிதறுண்ட நிலங்களினால்தான் வேளாண்மைத்துறை மிகுதியான அளவு கால்நடைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ளது. புள்ளியியல் விவரப்படி இப்போது ஏறக்குறைய 100 மிலியன் கால்நடைகள் உபரியாக (Surplus) உள்ளன. இவற்றிற்காக ஆண்டுதோறும் உரூ. 1,800 கோடி செலவிடப்படுகிறது. 60 விழுக்காடு கால்நடைகளுக்குப் போதுமான உணவே உள்ளது. இதனால் தரக்குறைவான கால்நடைகள் காணப்படுகின்றன. உபரிக் கால்நடைகளின் இறைச்சி, தோல், கொம்பு, எலும்பு போன்றவை பயன்படுத்தப்பட்டால் உரூ. 1000 கோடி அயற் செலாவணி கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வேளாண்மையில் கால்நடையின் பங்கு மிகுதியாக இருந்தாலும் அவற்றின் நிலைமை மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளது. அவற்றிற்கான காரணங்களுள் குறிப்பிடத்தக்கவை: (1) கால்நடைகளுக்குப் போதுமான அளவு உணவு இல்லாமை, (2) மிகவும் மோசமான தரக்குறைவான பாதுகாப்பு, (3) இனவிருத்தி சீரான முறையில் நடைபெறாமை, (4) பெரும்பான்மையான கால்நடைகள் நோயினால் துன்புறுதல்.

இந்தியாவில் சூலை மாதம் முதல் திசம்பர் மாதம் முடிய உணவுப் பற்றாக்குறை கடுமையாக இருப்பதால் கால்நடைகள் யாவும் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கின்றன. இதன் பயனாக இந்திய உழவன் மோசமான கால்நடைகளையே பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஊரகங்களில் தரமான இனவிருத்திக் கால்நடைகள் இல்லாத காரணத்தினால் உழவர்கள் 10 முதல் 12 கிலோ மீட்டர் வரை சென்று தங்கள் கால்நடைகளுக்கு இனவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. பெரும்பாலான ஊரகங்களில் இவ்வசதி இன்னும் செய்து தரப்படவில்லை. கால்நடைகளின் தரக் குறைவிற்கு நோயும் ஒரு காரணமாகும். தொற்று நோய்கள் மிக அதிகமாக உள்ளன. கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் தேவைக்கு ஏற்ப மருத்துவ உதவி கிடைப்பதில்லை. மேலும், புதிய மருத்துவ வசதிகள் பெரும்பாலான இடங்களில் கிடைப்பதில்லை. ஊரகக் கால்நடை மருந்தகங்களில் (Dispensary) நோயைத் தீர்ப்பதற்கான மருந்து வகைகள் சரிவரக் கிடைப்பதில்லை.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கால்நடை முன்னேற்றத்திற்கென மூன்று வகைத் திட்டங்கள் உள்ளன. அவற்றின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், மிகுதியான கால்நடைகளை வேளாண்மையில் ஈடுபடுத்தவும், உரோமம், தோல் போன்ற

| தமிழ்நாட்டில் கால்நடைகள் | | |
|---|---|---|
| கால்நடையின் வகைகள் | 1977 | 1982 |
| பசு | 1, 08, 01, 119 | 1, 02, 46, 744 |
| எருமை | 30, 77, 678 | 32, 07, 082 |
| செம்மறியாடு | 52, 89, 242 | 54, 75, 142 |
| வெள்ளாடு | 42, 02, 093 | 51, 10, 526 |
| பன்றி | 6, 78, 123 | 6, 66, 698 |
| பிற இனங்கள் | 97, 988 | 10, 62, 625 |
| மொத்தம் | 2, 41, 46, 243 | 2, 57, 68, 837 |

பண்டங்களின் உற்பத்தி அளவைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் வேளாண்மைத் துறையில் கால்நடைப் பாதுகாப்பிற்கென்று மிகுந்த அளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடைப் பால்வளப் பெருக்கத்திற்கு ரூ.670 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கால்நடை விரிவாக்கப் பணிகள், கூட்டுறவு அங்காடிகளின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடைகள் இந்தியாவின் பொருளாதார அமைப்பை மாற்றியமைக்கும்படி அவற்றின் நிலை ஒவ்வொரு திட்டத்திலும் முன்னோக்கிய நிலையை அடைய மிகுதியான பண ஒதுக்கீடு செய்வதற்கு மைய மாநில அரசுகள் முடிவுகள் எடுத்துள்ளன. அதன்படி நாட்டில் தரமான கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கால்நடை முன்னேற்றத்திற்கென மூன்று வகைத் திட்டங்கள் உள்ளன. அவற்றின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், மிகுதியான கால்நடைகளை வேளாண்மையில் ஈடுபடுத்தவும், மயிர், தோல் போன்ற பண்டங்களின் உற்பத்தி அளவைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஐந்தாண்டுத்திட்டத்திலும் வேளாண்மைத் துறையில் கால்நடைப் பாதுகாப்பிற்கென மிகுந்த அளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடைப் பால்வளப் பெருக்கத்திற்கு உரூ.670 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் கால்நடை விரிவாக்கப் பணிகள் கூட்டுறவு அங்காடிகளின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைகள் இந்தியாவின் பொருளாதார அமைப்பை மாற்றியமைக்கும்படி அவற்றின் நிலை ஒவ்வொரு திட்டத்திலும் முன்னோக்கிய நிலையை அடைய மிகுதியான பண ஒதுக்கீடு செய்வதற்கு மைய, மாநில அரசுகள் முடிவுகள் எடுத்துள்ளன. தமிழ் நாட்டில் தமிழக அரசு கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகள் எடுத்து வருகிறது. இவை பெரும்பாலும் மாடுகள், செம்மறியாடுகள், பன்றி ஆகிய இனங்களைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டவையாகும்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன், செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களிலுள்ள 125 துணை நிலையங்களில் (Sub-centres) உறை விந்து (Frozen semen) தொழில் நுட்ப முறை மூலம் செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று, உரூ. 15.25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 10 கால் நடை மருந்தகங்களை 1985-86-ஆம் ஆண்டில் உரூ. 19.7 இலட்சம் செலவில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பால் பெருக்குத் திட்டம் தமிழ்நாட்டில் இப்போது 9 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்களுக்கு உரூ. 12.83 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீடிக்கத் திட்டமிடப்

பட்டுள்ளது. இது 5 ஆண்டுக் கால அளவில் செயற்படுத்தப்படும். ஒரு நாளைக்கு 10,000 இலிட்டர் பால் குளிர வைக்கக்கூடிய திறன் கொண்ட ஒரு புதிய நிலையம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறையில் உரூ.19 இலட்சம் செலவில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நலிந்த பால் நிலையங்களை 1985-86 ஆம் ஆண்டில் புதுப்பித்து அவற்றைப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்புகளாக மாற்ற அரசு உரூ. 4.14 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் 1981-ஆம் ஆண்டுப் பால் உற்பத்தி 1,88,54,51,342 கிலோவாகும். தனி மனித நுகர்வுக்குரிய பால் 107 கிராம் ஆகும். இது 1980-81-ஆம் ஆண்டில் இருந்த 99 கிராம் அளவை விடக் கூடுதலாக உள்ளது. மொத்தப் பால் உற்பத்தியில் 4,07,07,73,236 கிலோ எடையுள்ள பால் பசுக்கள் மூலமும் 87,46,78,206 கிலோ பால் எருமைகள் மூலமும் கிடைக்கிறது. தமிழ் நாட்டில் கோயமுத்தூர் மாவட்டத்தில் மிக அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு மாறாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

இறைச்சிக்காக 1981-82-ஆம் ஆண்டில் 22,36,377 கால்நடைகள் விற்பனையாயின. அவற்றின் மொத்த எடை 2,72,02,198 கிலோ கிராம் ஆகும். மொத்த இறைச்சி உற்பத்தியில் 42.52 விழுக்காடு செம்மறியாடு, வெள்ளாடு ஆகியவற்றின் பங்கு எனக் கூறப்படுகிறது.

கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக 1981-82-ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதன்படி தமிழ்நாட்டில் 20 புதிய கால்நடை மருந்தகங்களும் 3 புதிய கால்நடை மருத்துவமனைகளும் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பால் வழங்கும் அமைப்புகள் மூலம் தமிழ்நாட்டின் பால் உற்பத்தி மிகுதியாகப் பெருகியுள்ளது. எனினும் தேவையும் மிகுந்துள்ளதால் தமிழக அரசு தீவிர பால் உற்பத்தி முன்னேற்ற முறைகளையும் திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. க.சொ.

துணை நூல்கள்:

**Memoria, C.B.**, Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1984.

Draft outlines of the Five Year Plans, Publication Division, New Delhi, 4975, 1980.

Annual Report on Integrated Sample Survey for Estimation of Animal Products, Statistical Bulletin IX, 1981-82, Government of Tamil Nadu, 1984.

**இந்தியக் காவல் பணித்துறை**: இந்திய ஆட்சிப்பணியைப் போன்று (Indian Administrative services), இந்தியக்காவல் பணித் துறையும் (Indian Police Service) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு (Article) 312(2) இன் படி தோற்றுவிக்கப்பட்ட அனைத்திந்திய அரசுப் பணிகளுள் (All IndiaServices) ஒன்று ஆகும். இராச்சிய சபையில் (Council of States) கூட்டத்துக்கு வந்திருந்து வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களுடைய ஆதரவுடன் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின்படி, அனைத்திந்திய நீதித்துறைப் பணி (All-India Judicial Service) போன்று, இந்திய ஒன்றியத்துக்கும் (Indian Union) மாநிலங்களுக்கும் பொதுவான ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பணிகளைத் தோற்றுவிப்பதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. பாராளுமன்றமே அத்தகைய பணிகளில் அமர்த்தப்படுபவர்களுக்கு உரிய ஆட்சேர்ப்புமுறை (Recruitment), பணி வரையறைகள் (Condition of Service) ஆகியவற்றை ஒழுங்கு செய்யவும் அதிகாரம் உடையது (இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 312 (1)). இந்த அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும் காலத்தில் செயற்பட்டு வருகின்ற இந்திய ஆட்சிப் பணியும் (I. A. S.), இந்திய காவற் பணியும் (I.P.S.) மேற்படி 312(1) பிரிவின்படி பாராளுமன்றத்தால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்திந்தியப் பணிகளாகவே கருதப்படுதல்வேண்டும் (பிரிவு 312-(2) ஆகையால் இந்தியக் காவற்பணியும் இந்திய ஆட்சிப் பணியைப் போன்று ஓர் அனைத்திந்திய ஆட்சிப் பணியாக (Class of All-India Services) வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் இப்போது இந்தியப் பொறியாளர் பணியும்(IndianService of Engineers),இந்தியக் காட்டுத் துறைப்பணியும்(Indian Forest Service), இந்திய அயல்துறைப்பணியும் (Indian Foreign Service)சேர்க்கப்பட்டுள்ளன. மற்றப்பணிவகைப்பாடுகள்(Class of Services):- (1) முதல் வகுப்பு நடுவண அல்லது ஒன்றிய பணிவகைகள் (Central or Union Services Class I); (2) இரண்டாம் வகுப்பு நடுவண அல்லது ஒன்றிய பணிவகைகள் (Class II); (3) மாகாண அல்லது மாநிலப் பணிகள் (Provincial Service); (4) சிறப்புப் பணியாளர் வகைகள் (The Specialist Services); (5) நடுவண பணிகள் வகுப்பு மூன்று (Class III); (6) நடுவண பணிகள் வகுப்பு நான்கு(Class IV); (7) நடுவண செயல்கப் பணிகள் வகுப்புகள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு (Central Secretariat Services Class I, Class II, Class III, Class IV) முதலியவை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தங்களுடைய உறுதியான கட்டுப்பாட்டின் கீழ் (எஃகு முறையில் - Steelframe)

இந்தியப் பேரரசுமுழுவதையும் வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், மாகாண அரசாங்கங்களிலும்(Provincial Governments) நடுவண அரசாங்கத்திலும் (Central Government) பணி செய்வதற்குத்தக்க கல்வியும் பயிற்சியும் பெற்ற பணியாளர்களைத் திரட்டி வைத்து, அவர்களை மாகாணங்களிலும் நடுவண அரசாங்கத்திலும் பணி செய்யுமாறு அமர்த்திக் கட்டுப்படுத்தினர். விடுதலை பெற்ற இந்திய நாட்டிலும் ஒன்றிய அரசாங்கத்துக்கு மாநிலங்களனைத்திலும் கட்டுப்பாடு இருக்கும் பொருட்டும், மாநில, உள்ளூர் விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடாத திறமையான பணியாளர்களுடைய பணியைப் பெறும் பொருட்டும், மேற்படி அனைத்திந்தியப் பணியாளர் வகை நீடித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வகுப்புப் பணியாளர்கள் நடுவண, மாநில அரசாங்கங்களுக்கிடையே அடிக்கடி மாற்றிக் கொள்ளப்படுவதால் இரண்டுக்குமிடையே ஓர் இணக்கமான இணைப்பு (liason) ஏற்பட வழி உண்டாகிறது. இந்த வகுப்புப் பணியாளர்கள் மிகப்பரந்த அளவிலான விண்ணப்பதாரர்களிடையே இருந்து திரட்டப்பட்டு, அவர்களுக்கு உயர் ஊதியமும், நிலையும் கொடுக்கப்படுவதால், அவர்கள் மாநிலப் பணியாளர்களைவிடத் திறமை மிக்கவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் உயிர் நாடியான பதவிகளிலிருப்பதால், மாநிலப் பணியாளர்களைப் போலன்றி, அச்சமின்றித் தங்களுடைய ஆலோசனைகளை அல்லது கருத்துகளை வழங்க இயலும். சில மாநிலங்களில் மிக உயரிய பதவிகளிலமர்த்தப்படுவதற்குப் போதிய தகுதியுடைய பணியாளர்கள் கிடைக்காத போது, அனைத்திந்தியப் பணி வகுப்பிலிருந்தே ஆட்கள் அமர்த்தப்படுகின்றனர். குடியரசுத் தலைவருடைய நேர்முக ஆட்சி மாநிலங்களில் நடைமுறையிலிருக்கும்பொழுது, அவருடைய ஆட்சிக் கொள்கைகளைச் செயற்படுத்துவோர் அனைத்திந்தியப் பணியாளர்களேயாவர். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் கழகம் தனது நிலவரி அதிகாரங்களைக் கையாளும் பொருட்டும் காவற்பணிகளை நிறைவேற்றும் பொருட்டும் ஆங்கில அதிகாரிகளை அமர்த்தி, அவர்கள் வணிகக் கழகத்தார் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கிணங்கப் பணி செய்தல் வேண்டுமென்று அவர்கள் இருதரப்பாரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த 'ஒப்பந்தப் பணிமுறையே' (Covenanted Service) பிற்காலத்தில் இந்தியக் குடிமையியல் பணியும் (Indian Civil Service) இந்தியக் காவற் பணித்துறையும் அடங்கிய அனைத்திந்திய அரசுப் பணியாக அமைக்கப்பட்டது. இந்தியக் காவற் பணியாளர்களும், இந்திய ஆட்சிப் பணியாளர்களைப் போலவே போட்டித் தேர்வுகளின் வாயிலாகத் தகுதி அடிப்படையில் (Competitive Examination, Merit System) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். காவற்றுறையில் (Police Department) கீழ் நிலைப்பணியாளர் மேல்நிலை இந்தியக் காவற் பணிக்குப் போட்டித் தேர்வு எழுத உடன்பாடு கொடுக்கப்படுவதில்லை. போட்டித் தேர்வுமுறை கி.பி. 1854–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. போட்டித் தேர்வுகளில் (1) ஆங்கிலக் கட்டுரை (மொத்தம் 150 மதிப்பெண்கள்), (2) பொது ஆங்கிலம் (150), (3) பொது அறிவு (150) ஆகிய மூன்றும் எல்லாவகை மாணவர்களுக்கும் கட்டாயத் தாள்கள் ஆகும். காவற் பணித்துறையில் சேர விரும்புவோர் மேற்படி 3 கட்டாயப் பாடங்களோடு, ஒன்றிய பொதுப் பணிக் கழகம் (Union Public Service Commission) விதித்துள்ள 23 விருப்பப் பாடங்களுள் இரண்டு எடுத்து, அவற்றில் தேர்வுகள் எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு பாடத்துக்கும் மொத்த மதிப்பெண்கள் 200 ஆகும். விருப்பப் பாடங்கள் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களின் பட்டியலிலிருந்தே விதிக்கப்படுகின்றன. தேர்வுகள் ஒன்றியப் பொதுப் பணிக் கழகத்தால் நடத்தப்பட்டு, அவற்றில் வெற்றி பெற்றோருக்குநேர்முகத் தேர்வும் (Viva Voce) அக்கழகத்தால் நடத்தப்படுகிறது. காவற்றுறையில் சேர விரும்புவோருக்கு நேரடித் தேர்வுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பு எண்கள் 300. நேர்முகத் தேர்வில் விண்ணப்பதாரர், கூறப்படும் கருத்தை அல்லது பொருளை நன்கு உணரும் திறமுடையவரா என்பதுதான் ஆராயப்படுகிறது. இதில் விண்ணப்பதாரர் பெறும் மதிப்பு எண்கள் அவர் எழுத்துத் தேர்வுகளில் பெறும் மதிப்பு எண்களோடு சேர்க்கப்படுகின்றன. நேர்முகத் தேர்வில் தேர்வாளர்களுடைய (Examiners) விருப்பு வெறுப்புகள் வெளிப்பட வாய்ப்பு உண்டு. இந்தப் பணித்துறைக்கு வேண்டுவன தலைமைப் பண்புகள் (Leadership Traits), காலமும் இடமுமறிந்து செயலாற்றும் திறன் (Force), உறுதிப்பாடு (Forcefulness) முதலியவை. ஆகவே நேரடித்தேர்வில் இவை விண்ணப்பதாரிடம் இருக்கின்றனவா என்று ஆராய்கின்றனர். இதில் வெற்றி பெற்றோர் பயிற்சிக்காக இராசகுத்தானில் ஆபுமலையிலுள்ள காவற்றுறை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் இவர்கள் குற்றங்களைக் கண்டுபிடித்தலிலும் தடுத்தலிலும் பயிற்சி பெறுகின்றனர். தங்களுடைய பணிக்குப் பின்னணியாக உள்ள அரசியல், ஆட்சி பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளையும் கற்கின்றனர். படைத் தலைவர் ஒருவரே காவலர் கல்லூரிக்குத் தலைவராக இருப்பார். குற்ற இயல் சட்டம், அச்சட்டமுறை (Procedure), உடற் பயிற்சி, குதிரை ஏற்றம், சுடுதல் முதலியவற்றில் இவர்கள் பயிற்சி பெற்று, சிறிது காலம் முசோரியிலுள்ள

இந்திய ஆட்சிப் பணியாளர் கல்லூரியிலும் பயின்று, பின்னர், மாவட்டங்களில் காவற்றுறையின் தலைமைக் காவலர் (Head Constable), ஆய்வாளர் (Inspector) முதலிய சிறு பதவிகளில் குறுகிய காலங்கள் பணி செய்யுமாறு அமர்த்தப்படுகின்றனர். பயிற்சிக் காலமுடிவில் இவர்கள் துணைக் காவல் மேலாளராக அமர்த்தப்படுகின்றனர். இவர்களுடைய பணிக்காலம், விடுப்பு, ஊதியங்கள், பணி உயர்வுகள், ஓய்வுமுறை, ஓய்வு ஊதியம் முதலியவையெல்லாம் இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்குரிய விதிகளின்படியே வரையறை செய்யப்பட்டுள்ளன. இவர்களுடைய பணி விதிகளும் கட்டுப்பாடு பற்றிய விதிகளும் 1955–ஆம் ஆண்டின் அனைத்திந்தியப் பணிகள் கட்டுப்பாடும் மேல்முறையீடும் பற்றிய விதிகளில் (All-India Services (Discipline and Appeal) Rules, 1955) கூறப்பட்டுள்ளன. காவற்றுறையின் கீழ்நிலைப் பணியாளர்கள் உயர் அலுவலரால் தேர்ந்தெடுக்கப்பட்டும், மேல்நிலை அலுவலாளர்கள் பதவி உயர்வு முறை மூலமும் (Promotion System)· நேரடித் தேர்வு மூலமும் பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

**இந்தியக் கிராமிய நடனங்கள்**: இந்தியாவில் பல்வேறு மொழிபேசும் மக்களிடையே பல வகையான நடனங்கள் பழங்காலம் முதற்கொண்டே இருந்து வருகின்றன. இத்தகைய நடனங்களுள் சில மரபுவழி நடனங்களாகவும் வேறுசில சிற்றூர் மக்களிடையே தோன்றி வளர்ந்த நடனங்களாகவும் இருக்கின்றன. இந்த நடனங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்பட்டு வெவ்வேறு முறைகளில் நடத்தப்படுகின்றன.

தமிழகத்தில் தொன்றுதொட்டுத் ‘தெருக்கூத்து’ என்ற நாட்டிய நாடகம் புகழ்பெற்ற கலையாக இருந்து வருகிறது. தெருக்கூத்து சிற்றூர் மக்களால் அவர்களுக்காகவே நிகழ்த்தப்படுகிறது. இது பண்டிகை நாள்களிலும் கோவில் திருவிழாக் காலங்களிலும் நடத்தப்படுகிறது. பண்டைக் காலத்தில் ஊர் மக்களின் பொழுதுபோக்காகத் தொடங்கிய இந்நிகழ்ச்சி பிற்காலத்தில் ஒரு கலையாக வளர்ந்துள்ளது. கூத்து நிகழ்த்துவோர் பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்; ஊர்விட்டு ஊர் சென்று கூத்து நிகழ்ச்சிகளை நடத்தினர். தெருக்கூத்து இரவு முழுவதும் நடக்கும் நிகழ்ச்சியாகும். ஊர்ப் பொது இடத்திலோ தெருவின் தொடக்கத்திலோ அறுவடை செய்து நெல்லைக் குவிக்கும் திடலிலோ கூத்து நடைபெறும்.

பழங்காலத்தில் மேடை எதுவுமின்றித் தரையிலேயே கூத்து நிகழ்த்தப்பட்டது. இக்காலத்தில் சில இடங்களில் கூரை போடப்பட்ட தனியிடம் நிகழ்ச்சிக்காக அமைக்கப்படுகிறது. மேடை போடப்படுவதில்லை. அரங்கமைப்பு எதுவும் இல்லை. வெளிச்சத்திற்காக ஒளிவிட்டு எரியும் தீப்பந்தங்கள் இரு பக்கங்களிலும் பிடிக்கப்பட்டன. இக்காலத்தில் மின் விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. நிகழ்ச்சியில் இசையும் உரையாடல்களும் இடம்பெறுகின்றன. நடனம் எளிமையாக இருக்கிறது. எத்தகைய கதையாக இருப்பினும் அதில் கட்டியங்காரனும் கோமாளியும் இருப்பர். கதை பெரும்பாலும் மகாபாரதம், இராமாயணம், பாகவதம் போன்ற புராணங்களினின்று எடுக்கப்பட்டதாக இருக்கும். இக் கதைகள் முடிவில் நல்லவர் வாழ்வதையும் தீயவர் அழிவதையும் எடுத்துரைப்பதால் பெரும்பாலும் இத்தகைய பகுதிகளே தெருக்கூத்துக் கதைகளாக அமைகின்றன. நடனத்திற்கான பின்னணி இசை ஒரு குழுவினரால் இசைக்கப்படுகிறது. இக்குழுவில் நாதசுரத்தைப் போன்றதும் சிறிய அமைப்புள்ளதுமான முகவீணை என்னும் இசைக்கருவியும், துத்தி எனப்படும் இசைக் கருவியும், மிருதங்கமும், சாலரா எனப்படும் தாளமும் இடம்பெறுகின்றன.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் ஓர் இசை மெட்டு, குழுவினரால் இசைக்கப்படுகிறது. இதனையடுத்து இறைவணக்கப்பாடலும் இறுதியில் குரு வணக்கப் பாடலும் பாடப்படுகின்றன. தெருக்கூத்தின் இப்பகுதி சில வேளைகளில் ஒரு மணிநேரம் வரையில் நீடிக்கும். இதற்குப்பின் கட்டியங்காரன் வந்து கதையின் சுருக்கத்தைக் கோமாளியுடன் உரையாடும் முறையில் அவையினருக்கு எடுத்துரைக்கிறான். கதையில் வரும் ஒவ்வொரு நாடக மாந்தரும் வெளியில் வருவதற்குமுன் ஒரு திரைச்சீலையின் பின்னே நிற்கிறார். திரைச்சீலை ஒரு வெள்ளைத் துணி. இதை இருவர் திரைபோல் பிடித்துக் கொண்டு நிற்பர். இயட்சகானம், கதகளி, குறவஞ்சி நாடகம் ஆகியவற்றில் திரை விலகுவது போல் தெருக்கூத்திலும் திரைவிலகுகிறது. கட்டியங்காரன் நாடகமாந்தரை அறிமுகம் செய்தபின், ஒவ்வொருவரும் அரங்கினுள் நுழையும் பொழுது தம் வருகையை நீண்ட பாடல், எளிமையான அபிநயம், நிருத்தம் ஆகியவற்றின் மூலம் தெரிவிக்கிறார். இவர் பாடும் ஒவ்வொரு வரியையும் அரங்கில் இருக்கும் மற்றகலைஞர்களும் இசைக்குழுவினரும் திரும்பவும் பாடுகின்றனர்.

கலைஞர்கள் அரங்கினுள் நுழைந்தவுடன் வட்டமாகச் சுற்றிய வண்ணம் பாடி அபிநயங்கள் செய்கிறார்கள். இதுவே தெருக்கூத்தின் தனி இயல்பு ஆகும். இடையிடையே கலைஞர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவும் அவையினரை மகிழ்விப்பதற்காகவும் கோமாளி அரங்கில் வந்து நகைச்சுவையான

பாடலைப் பாடியும் ஆடியும் உரையாடலை நிகழ்த்தியும் சிரிப்பை உண்டாக்குகிறான்.

கதை இயல்பிற்கு ஏற்ப நாடகமாந்தர் ஒப்பனை செய்து கொள்கின்றனர். ஒப்பனைப்பொருள் அரிதாரம் என்னும் வண்ணப்பொடியாகும். தீயவர்களுக்கு முகத்தில் சிவந்த நிறமும் வீமன் வேடத்திற்கு நீலமும் கறுப்பும் கலந்த நிறமும் கண்ணனுக்கு நீலம் அல்லது பச்சைநிறமும் பூசப்படுகின்றன. வண்ணக் காகிதம், சரிகைத்துணி ஆகியவற்றாலான மகுடம் அணிகலன்கள் யாவும் பளிச்சிடுகின்றன. உடைகளும் அவ்வாறே சரிகைத் துணியால் தைக்கப்பட்டுப் பளிச்சிடுகின்றன. வெல்வெட்டுத்துணியையும் சரிகைவேலைப்பாடு நிறைந்த குட்டையான பாவாடையையும் கால்சட்டையையும் அணிகின்றனர். நரசிம்ம அவதாரம் போன்ற வேடங்களில் நடிகர்கள் முகமூடி அணிகின்றனர்.

தெருக்கூத்துப் பாடல்களில் சில கர்நாடக இராகப் பாடல்களும் கலந்திருக்கின்றன. நாட்டை, தேவகாந்தாரி, செஞ்சுருட்டி, சகானா போன்ற இராகங்களைத் தெருக்கூத்துப் பாடல்களில் கேட்கலாம். கலைஞர்கள் தத்தம் பாடல்களைத்தாமே பாடவேண்டும். பின்னணிப் பாடகரோ குரல் கொடுப்பவரோ இல்லை. இசைக்குழுவினர் அரங்கத்தினுள் ஓர் இருக்கையின் மீது அமர்ந்திருப்பர். கதையில் முக்கியமான கட்டங்களில் வெடிகளை வெடித்தும் கந்தகத்தை ஒரு தட்டில் வைத்து அதை நெருப்புடன் ஊதியும் அவையினரிடையே அச்சம் உண்டாக்குவர்.

அண்மையில் தமிழக அரசு தெருக்கூத்துப் பற்றிக் கணக்கெடுப்புச் செய்தது. அக்கணக்கெடுப்பால் தெருக்கூத்துக் கலைஞர்கள் தம் மரபுத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களை நாடிச் சென்றுவிட்டனர் என்பது தெரிய வந்தது. தமிழக அரசின் சங்கீத நாடகமன்றம் 1961-ஆம் ஆண்டு முதல் தெருக்கூத்துக் கலைஞர்களுக்கு நிதியுதவி செய்து வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தில் புரிசை என்னும் ஊரைச்சேர்ந்த இராகவன் தம்பிரான், நடேசத்தம்பிரான், இராசா தம்பிரான் ஆகியோர் சிறந்த தெருக்கூத்துக் கலைஞர்களாவர்.

துள்ளல் என்பது கேரள நாட்டுக் கிராமிய நடனங்களுள் ஒன்றாகும். சாக்கைக் கூத்து என்னும் பண்டைத் தமிழகத்து ஆடல் வகையினின்று தோன்றியதே கேரளத்துச் சாக்கியார் கூத்து ஆகும். சாக்கியார் கூத்து சில மாறுதல்களுக்கு உட்பட்டுக் கிராமிய நடனமாகச் சிற்றூர் மக்களுக்கு ஏற்ப எளிமையான உருவில் துள்ளல் என்னும் பெயரில் ஆடப்படுகிறது. கேரளத்தில் மூன்று வகைகளான துள்ளல் நடனங்கள் உள்ளன.

ஓட்டந்துள்ளல் நகைச்சுவை பொருந்திய பாடல்களுக்கு ஏற்ப விரைவாக ஆடப்படும் கிராமிய நடனமாகும். துள்ளல் கலைஞரின் முகம் பச்சை நிறத்தில் ஒப்பனை செய்யப்பட்டிருக்கும். அவர் தலையில் பெரிய மகுடமும் உடலில் பளபளக்கும் குட்டையான சட்டையும் கால்களில் பெரிய சலங்கைகளும் சுருக்கம் மிகுதியாக வைத்துத் தைக்கப்பட்ட குட்டைப் பாவாடையும் அணிந்திருப்பார். ஓட்டந்துள்ளலில் முழவு, சாலரா ஆகியவை தாளக் கருவிகளாக இடம் பெறும். கதைப்பகுதிக்கு ஏற்றவாறு பாடலும் அதற்கேற்ப நடனமும் அமைந்துள்ளன. ‘சீதங்கன் துள்ளல்’ என்னும் வகையிலான நடனத்தில் நடனக் கலைஞருக்கு, ஓட்டந்துள்ளல் கலைஞர்களைப்போல் பளிச்சிடும் ஒப்பனை செய்யப்படுவதில்லை. இவர் தென்னைக் குருத்தோலையினாலான மகுடம் அணிகிறார். குருத்தோலையால் செய்யப்படும் குட்டைப் பாவாடையும் அணிகிறார். நடனமும் ஓட்டந்துள்ளலைப்போல் விரைவாக இருப்பதில்லை. ‘பறயந்துள்ளல்’ என்பது மென்மையான நடனத்தைக் கொண்ட கிராமியக் கலையாகும். இதில் அபிநயங்களும் இடம் பெறுகின்றன. கலைஞர் தலையில் அலங்கார மகுடமும் இடையில் சிவப்புத்துணியும் அணிகிறார். கரித்தூளைஉடல் முழுவதும் பூசி ஒப்பனை செய்கின்றார்.

துள்ளல் நடனத்தைத் தனிக்கலையாக அமைத்தவர் கேரளநாட்டுக் கலைஞரான குஞ்சன் நம்பியார் என்பவராவார். இவர் இளமையில் கோவில்களில் சாக்கியார் கூத்து என்னும் இசை நடனத்திற்கு முழவு இசைத்துக்கொண்டிருந்தார். இவர் திருவாங்கூர் மன்னரின் ஆதரவில் ஓட்டந்துள்ளலை ஒரு கிராமிய நடனக்கலையாக அமைத்தார். துள்ளல் கேரளத்தின் அழகிய கிராமிய நடனங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

பண்டைத் தமிழ் நாட்டில் பொம்மலாட்டம் என்னும் நடன நிகழ்ச்சிகளும் நடந்து வந்தன. இவை தோற்பாவைக் கூத்து என வழங்கப்பட்டு வந்தன. இக்காலத்தில் தமிழ்நாட்டுப் பொம்மலாட்டக் குழுவினர் அரிச்சந்திரன் நாடகம், சீதா கலியாணம், பிரகலாதன்போன்ற நாடகங்களை நடத்துகின்றனர். பொம்மலாட்டத்தில் பரதநாட்டியத்தின் சில கூறுகள் அமைந்துள்ளன.

பொம்மலாட்டத்தில் மரம், தோல், துணி ஆகியவற்றினால் செய்யப்பட்ட பொம்மைகள், நிறப் பூச்சு, உடையலங்காரம் ஆகியவை செய்யப்பட்டுக் கதைப் பாத்திரங்களாகத் தோற்றமளிக்கின்றன. திரையின் பின் நின்று இந்தப் பொம்மைகளைக் கறுப்புக் கயிறு

களால் பிணைத்து, அசைத்துக் கதைக்கு ஏற்ப நடனம் ஆட அல்லது நடிக்க வைக்கின்றனர். இவ்வாறு ஆட்டுவிப்பதற்குத் தனிப்பட்ட திறமையும் பயிற்சியும் வேண்டும். பொம்மலாட்டத்தின் பாடல்கள் கருநாடக இசையில் அமைந்துள்ளன பொம்மலாட்டம் இந்தியாவின் பல மாநிலங்களிலும் பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. இக்கலை கி.மு. 300-இல் கிரேக்க நாட்டில் விளங்கி வந்ததாகத் தெரிகிறது. ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இக்கலை சிறந்திருந்தது. அக்பரின் அரசவையில் பொம்மலாட்டம் நிகழ்த்தப்பட்டது. வட இந்தியப் பொம்மலாட்டதில் பெரும்பாலும் வரலாற்றுக் கதைகள் இடம் பெறுகின்றன கருநாடக மாநிலத்தில் பண்டைக் காலத்திலிருந்தே இயட்ச கான நடனத்தையொட்டிப் பொம்மலாட்டா என்னும் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டு வந்தது.

பொய்க்கால் குதிரையாட்டம் என்பது தமிழ் நாட்டுக்கே உரிய கிராமிய நடனமாகும். இது புரவியாட்டம் எனவும் கூறப்படும். இந்த நடனத்தில் குதிரையின் கால்கள் தவிர மற்ற உறுப்புகள் மரம், காகிதம் போன்ற பொருள்களினால் செய்யப்படுகின்றன. இந்தக் குதிரைகள் வண்ணம் பூசப்பெற்று முதுகில் மட்டும் ஒரு பெரிய துளை அமைக்கப்பட்டிருக்கும். இந்த இடத்தில் நடனக் கலைஞர் நின்று நடனமாடுவர். நடனக்கலைஞர்களின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி மட்டுமே வெளியில் தெரியும். குதிரையின் வயிற்றுப் பகுதியிலிருந்து கீழே வண்ணத் துணிகள் சுற்றிக் கட்டப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும். இதனால் நடனக் கலைஞரின் கால்கள் அவையினருக்குத் தெரிவதில்லை. இக்காலத்தில் பொய்க்கால் குதிரையாட்டத்திற்கு நாதசுரம், முழவு போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இந்த நடனக் கலை தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்டது.

கரகம் என்னும் கிராமிய நடனம் இந்தியாவின் பல மாநிலங்களிலும் இறைவழிபாட்டுடன் தொடர்புடைய நடனமாக ஆடப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் கரக நடனக் கலைஞர்கள் மண்ணாலாகிய பானைகளைத் தம் தலை மீது வைத்து நடனமாடுகின்றனர். இந்தப் பானைகளில் நீர் நிறைந்திருக்கும். குடம் வேப்பிலைகள் செருகப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். திருவிழா நடக்கும் காலங்களில் இக்குடத்தைத் தலை மீது வைத்து ஆடுவர். கருநாடக மாநிலத்தில் உலோகத்தாலான கரகங்களைத் தலைமீது வைத்துக்கொண்டு ஆடுகின்றனர். பெரும்பாலும் ஐயனார், மாரியம்மன், கங்கையம்மன் போன்ற கிராமத்தேவதைகளின் விழாக்களில் கரகம் எடுத்து ஆடுகின்றனர். கரக நடனத்திற்கு நாதசுரம், தவுல், முழவு, சாலரா, போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இதனை நையாண்டிமேளம் என்று குறிப்பிடுவர். கரகம் என்னும் சொல் கமண்டலம் அல்லது இறைவழிபாட்டிற்காக எடுக்கப்படும் பூங்குடம் என்னும் பொருள்படும். தொற்றுநோய்கள் வராமலிருப்பதற்காகவும் மழைபெய்வதற்காகவும் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காகவும் கரக ஆட்டம் நடைபெறுகிறது.

கரக ஆட்டத்தினைப் போன்ற மற்றொரு இறை வழிபாட்டு நடனம் காவடி என்று குறிப்பிடப்படுகிறது. மரத்தால் செய்யப்பட்டு மயில் பீலிகளால் அலங்கரிக்கப்பட்ட காவடிகளைத் தம் தோள்கள் மீது சுமந்து ஆடுவர். காவடியாட்டத்திற்கு நாதசுரம், மேளம், சாலரா ஆகிய இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. காவடியாட்டத்திற்கென இயற்றப்பட்ட இசைப் பாடல்கள் காவடிச் சிந்து என்னும் யாப்பு வகையினைச் சேர்ந்தனவாகும். முருகனை வழிபடும் முறையாகக் காவடியாட்டம் நடைபெறுகிறது. வேண்டுதல்களை நிறைவேற்றும் பொழுதும் காவடி எடுக்கின்றனர்.

குசராத்து மாநிலத்தில் கரூபா, கரிகி, இராசம், இரசதம், திப்பினி, பதார் நிருத்தியம், தங்கி நிருத்தியம் போன்ற கிராமிய நடனங்கள் ஆடப்படுகின்றன. பெரும்பாலான கிராமிய நடனங்களில் நடனக் கலைஞர்கள் வட்டமாக நின்று ஆடுகின்றனர். இராசம், இராசகம் போன்ற நடனங்களை ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுகின்றனர். பெண்கள் ஆடும் நடனங்களில் கோலாட்டம் பயன்படுத்தப்படுகிறது. பிருந்தாவனத்தில் கண்ணன் கோபிகைகளுடன் ஆடிய இராச நடனமும் ஆடப்படுகிறது. இம்முறையில் ஆடப்படும் நடனம் கட்சு, சௌராட்டிரம் ஆகிய இடங்களில் மிகுதியாக ஆடப்படுகிறது. பண்டைக் காலத்தில் குசராத்துக் கிராமிய நடனங்களில் சிவனை வழிபடும் பாடல்கள் அமைந்திருந்தன. செயதேவர் கீதகோவிந்தத்தை இயற்றிய காலத்திற்குப் பின்னர், விட்டுணு வழிபாட்டுப் பாடல்களும் கிருட்டிணன் வாழ்க்கைக் கதைகளும் நடனங்களில் இடம் பெற்றன. இராச நடனங்கள் உழவர்களின் நடனமாகச் சரத்து முழுநிலவு நாள், வசந்த பஞ்சமி, நவராத்திரி ஆகிய காலங்களில் ஆடப்படுகின்றன.

கரூபா என்னும் நடனத்தில் பெண்கள் பங்கு கொள்கின்றனர். இந்த நடனத்தில் சிறு துளைகள் இடப்பட்ட ஒரு குடத்தினுள் விளக்கு வைக்கப்பட்டிருக்கும். இக்குடத்தைத் தன் தலைமீது வைத்துக் கொண்டு ஒரு பெண் நடுவில் நின்று ஆடுவாள். இவளைச் சுற்றி நடனக் கலைஞர்கள் வண்ண உடையணிந்து ஆடுவர். இந்த நடனம் நவராத்திரி விழா

வினையொட்டி நடைபெறுகிறது. தயாராமர், பிரேமானந்தர் போன்ற இசைப்புலவர்களின் பாடல்கள் இதில் பாடப்படுகின்றன. நடனம் இரவில் தொடங்கப்பட்டு நீண்ட நேரம்வரையில் நடைபெறுகிறது. குழல், முழவு போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. தங்கி (Dangi) நடனத்தில் ஆண்களும் பெண்களும் கைகோத்து ஆடுகின்றனர். இந்த நடனத்தில் நடனமாடுவோருள் சிலர் தம் தோள்கள் மீது மற்றவர் நின்று கோபுரம் போன்ற அமைப்பை ஏற்படுத்துவர். கோண்டு (Gond) எனப்படும் பழங்குடியினரும் இத்தகைய விரைவு நடனங்களை ஆடுகின்றனர். சைலா, இரினா போன்ற நடனங்களில் ஆண்களும் பெண்களும் தனித்தனியே நடனம் ஆடிக் கோபுரங்களை அமைக்கின்றனர். பசுதர் (Bastar) என்னும் பகுதியைச் சேர்ந்தவர்கள் 'கசுகர்' என்னும் அறுவடை நடனமாடுகின்றனர். இதில் இளம் பெண்களும் ஆண்களும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். ஆண்கள் நீண்ட வெண்ணிற அங்கியை அணிகின்றனர். இந்த நடனத்தில் இளம் பெண்களும் ஆண்களும் சந்தித்துத் தமக்கு ஏற்ற துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இதன்பின் அவர்களின் திருமணம் நடைபெறுகிறது.

இராசசுத்தானத்தில் கெர், கெமூர் ஆகிய நடனங்கள் பில்லர்களால் ஆடப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் பங்குகொள்ளும் இரைகா சோரியா போன்ற நடனங்கள் விழாக்காலங்களில் நடைபெறுகின்றன. கௌரி எனப்படும் வழிபாட்டு நடனமும் பில்லர்களால் ஆடப்படுகிறது. மினா, கரசியர், கமர் போன்ற பழங்குடியினர் பல்வேறு வகையான நடனங்களை ஆடுகின்றனர். நடனம் ஆடுபவர்கள் மடிப்புகள் நிறைந்த பெரிய 'காக்ரா' எனப்படும் பாவாடையும் நீண்ட கை வைத்துத் தைத்த இரவிக்கையும் வண்ண மேலாடையும் அணிகின்றனர் பொன் அணிகலன்களும் வெள்ளியாலான அணிகலன்களும் அணிகின்றனர். போதுலா எனப்படும் நெற்றிச்சுட்டியை நடனம் ஆடுபவர்களும் மற்ற எல்லாப் பெண்களும் அணிகின்றனர்.

மத்திய பிரதேசத்தில் உள்ள பழங்குடியினரின் நடனங்கள் புகழ் பெற்று விளங்குகின்றன. நீண்ட கம்புகளின் மீது ஏறி நின்று ஆடும் குச்சி நடனம் சிறுவர்களால் ஆடப்படுகிறது. வாள், ஈட்டி, கத்தி போன்ற படைக்கலன்களுடன் ஆடப்படும் சைலா எனப்படும் நடனம் இங்குப் புகழ் பெற்றதாகும். இந்த நடனம் ஒலிப்பண்டிகையின் (Holi) போது ஆடப்படுகிறது.

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு ஒரு நடனக் குழுவினர் சென்றதும் அந்த ஊரைச் சேர்ந்த ஒருவரால் வரவேற்கப்பட்டு அவர்கள் விருந்தாளிகளாக நடத்தப்படுகின்றனர். இந்த நடனக்குழுவினர் கிருதா என்னும் குழு நடனத்தை ஆடுகின்றனர். இதுவும் ஒரு விரைவு நடனமாகும். இத்தகைய நடனக்குழுவினர் பல ஊர்களில் இருக்கின்றனர். இந்த நடனத்தில் ஆண்களும் பெண்களும் பங்கு கொள்கின்றனர்.

வங்கத்துக் கிராமங்களில் மார்கழி மாதம் முழுவதும் இளம் பெண்கள் மாலை நேரங்களில் 'தூசு பரபு' (Tusu Parab) எனப்படும் பாடல்களைப் பாடுகின்றனர். தைத்திருநாள் இங்கு மகர சங்கராந்தி என்று குறிப்பிடப்படுகிறது. அந்த நாளன்று பெண்கள் நீராடிப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இத்தகைய வழிபாடுகள் ஆற்றங்கரையில் நடைபெறுகின்றன. ஆண்கள் 'பதூரிய சைலா' எனப்படும் பாடல்களைப் பாடி ஆடுகின்றனர். அறுவடைக் காலங்களில் பாதுரா போன்ற நடனங்கள் ஆடப்படுகின்றன. வேனிற்காலத்தில் சூமர் (Jhumar) என்னும் நடனம் ஆடப்படுகிறது. சூமர் நடனம் மேற்கு வங்காளத்தில் புகழ்பெற்ற கிராமிய நடனமாகும். இதற்கான பாடல்கள் கண்ணன் இராதையின் கதைகளின் அடிப்படையில் பக்திச் சுவை நிரம்பியனவாக இருக்கும்.

மணிபுரியில் 'இலை கரோபா' என்னும் திருவிழா நடனமும் இரத யாத்திரை நடனமும் புகழ்பெற்றவை. இவை பிருந்தாவனத்தில் கண்ணன் கோபிகைகளுடன் ஆடிய நடனத்தையொட்டிய இராசலீலை என்னும் நடனங்களாக அமைந்துள்ளன. இந்த இராசலீலை நடனங்கள் அழகும் மென்மையும் கொண்டு காண்போரை ஈர்ப்பனவாக உள்ளன. இத்தகைய நடனங்கள் தேசிய நிகழ்ச்சிகளில் சிலவேளைகளில் நிகழ்த்தப்படுகின்றன.

விரைவும் விறுவிறுப்பும் மிக்க 'பாங்கரா' நடனம் பஞ்சாபின் புகழ்பெற்ற கிராமிய நடனமாகும். இந்த நடனம் பெரும்பாலும் ஆண்களால் ஆடப்படுகிறது. பாங்கரா பெரும் குழுவினரால் ஆடப்படுகிறது. இது உழவர்களால் ஆடப்படும் அறுவடை நடனமாகும். இந்த நடனப் பாடலில் பலே பலே, ஓய் ஓய், ஊ ஊ போன்ற ஒலிச்சொற்கள் நிறைந்திருக்கும். பாங்கரா நடனம் ஆடுபவர் வண்ண வேட்டியும் நீண்ட அங்கியும் அதன்மீது இடுப்புச் சட்டையும் பலவண்ணங்களில் அமைந்த தலைப் பாகையும் அணிகின்றனர். தோலக்கு எனப்படும் தாளக்கருவியும் சஞ்சு எனப்படும் சாலராவும் மட்டுமே இந்த நடனத்தின்போது இசைக்கப்படும் இசைக் கருவிகளாகும். பாங்கரா வைத்தவி, சுமேர் கர்த்தி, கித்தா ஆகிய கிராமிய நடனங்களும் பஞ்சாபில் ஆடப்படுகின்றன. கித்தா என்னும் நடனம் ஆண்களும் பெண்களும் கைகோத்து ஆடப்படு

வதாகும். இந்த நடனத்தின் இறுதியில் ஆண்களும் பெண்களும் இருவர் இருவராக எதிர் எதிராகக் கைகோத்து ஆடுகின்றனர். இது 'கிகலி' என்று வழங்கப்படுகிறது. இத்தகைய கிகலி நடனமுறை வட இந்தியாவின் பல்வேறு கிராமிய நடனங்களில் காணப்படுகிறது.

அரியானாவில் தமல், கோரியா, பாகு, கூகா, சூமர் போன்ற கிராமிய நடனங்கள் ஆடப்படுகின்றன. கோரியா என்னும் நடனம் திருமணக் காலத்தில் கிராமியப் பெண்களால் ஆடப்படுகிறது.

வட இந்திய மாநிலங்கள் எல்லாவற்றிலும் பங்குனி மாதத் தொடக்கத்தில் ஓலிப் பண்டிகையையொட்டிய பல்வேறு களிப்பு மிக்க நடனங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய ஓலி நடனங்களில் ஆண்களும் பெண்களும் சிறுவரும் எல்லா வயதினரும் வேறுபாடின்றி வண்ணப்பொடிகளைத் தூவியும் வண்ண நீரை ஒருவர் மீது மற்றவர் தெளித்தும் ஆடுகின்றனர். ஓலிப்பண்டிகை நடனம் வசந்தத்தின் வருகையைக் கொண்டாடும் முறையிலும் இராசலீலை முறையிலும் அமைந்துள்ளது. எஸ்.கோ.

துணை நூல்:

**Subhedar**, S., The Critque of Indian Theatre, Unique Publication, New Delhi, 1981.

## இந்தியக் கிலாபத்துத் தூதுக்குழு:

அனைத்துலக இசுலாமிய சமயத் தலைவர் துருக்கிச் சுல்தானின் உரிமைகளைக் காக்க, இந்திய இசுலாமியர்களைக் கொண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தொடங்கிய இயக்கமே கிலாபத்து இயக்கம் (Khilafat Movement). இது ஓர் இசுலாமிய இயக்கமானபோதிலும், மற்றச் சமூகத்தினரும் தங்கள் நல்லாதரவை நல்கி ஆங்கிலேயர்களுக்கு எதிராக இவ்வியக்கத்தில் ஈடுபட்டனர்.

முதல் உலகப் போரின் போது (1914-18) இந்திய அரசப் பேராளரும் (Viceroy), இங்கிலாந்து நாட்டுத் தலைமை அமைச்சர் இலாயிடு சார்சும் (Lloyd George) இந்திய இசுலாமிய மக்களைப் போரில் ஈடுபடச் செய்யக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளைக் கொடுத்தனர்.

முதலாவதாக, துருக்கி சுல்தான் துருக்கி, திரேசு, மெசபடோமியா, அரேபியா, சிரியா, பாலசுத்தீனம் (Palestine) ஆகிய பகுதிகளின் சமயத் தலைவராக இருப்பார். இரண்டாவதாக, அவரே கலீபாகவும் (Caliph) இருப்பார். அவரின் கிலாபத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும் தெளிவாகக் கூறினர். இதனால் இந்திய இசுலாமியர் ஆங்கிலேயரின் உறுதிமொழிகளை நம்பி, தங்கள் இனமக்கள் வாழும் துருக்கிக்கு எதிராகப் போரில் ஈடுபட்டனர்.

போர் முடிந்தபின் ஆங்கிலேயர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளைக் கைவிட்டனர். துருக்கிய நாட்டின் ஆசியப் பகுதிகளைப் பிரிட்டனும் (Britain) பிரான்சும் (France) பங்கு போட்டுக் கொண்டன. இதனால் ஆத்திரமடைந்த இந்திய இசுலாமியர் இவ்வியக்கத்தை வேகப்படுத்தினர். மவுலானா ஆசாது (Maulana Azad), அக்கிம் அச்மல்கான் (Hakeem Ajmalkhan), அசரத் மோகானி (Hasarad Mohani) ஆகியோரின் தலைமையில் 1919-ஆம் ஆண்டு இறுதியில் கிலாபத்துக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆங்கிலேயரின் வல்லாட்சியை விரட்டிச் சமயச் சார்பற்ற இந்தியாவை உருவாக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தி இவ்வியக்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். அனைத்து இன மக்களையும் முழு மனத்துடன் தங்கள் ஆதரவை இவ்வியக்கத்திற்கு நல்கும்படி அவர் வேண்டிக் கொண்டார். காந்தியடிகள் கிலாபத்துத் தலைவராக 1919-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிலாபத்துத் தூதுக்குழு (Khilafat Deputation): இவ்வியக்கம் தீவிரமடையவே, 1919-ஆம் ஆண்டு திசம்பர் மாத இறுதியில் அமிர்தசரசில் (Amritsar) கிலாபத்துக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில், ஒரு கிலாபத்துத் தூதுக் குழு இந்திய அரசப் பேராளர் செம்சுபோர்டைச் (Lord Chelmsford) சந்தித்துத், தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை அவரிடம் கொடுக்க முடிவு செய்தது.

அதன்படி இசுலாமியர்களும், இந்துக்களும் அடங்கிய ஒரு தூதுக்குழு டாக்டர் அன்சாரி (Dr. Ansari) என்பாரின் தலைமையில் 1920-ஆம் ஆண்டு சனவரி மாதம் பத்தொன்பதாம் நாள் அரசப் பேராளரைச் சந்தித்தது. அவர்கள் அரசப் பேராளரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் இசுலாமியர்களைத் தவிர மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, மதன் மோகன் மாளவியா போன்ற இந்துத் தலைவர்களும் கையெழுத்திட்டிருந்தனர், துருக்கிய கிலாபத்திற்கு எவ்விதக் கெடுதியும் ஏற்படாது என்று போரின்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும்படி வேண்டினர். அதற்கு அரசப் பேராளர் இசுலாமியர்கள் மீது இரக்கப்படுவதாகவும், அதே நேரத்தில் இக்குழு வலியுறுத்துமளவிற்குத் துருக்கிச் சுல்தானுக்குச் சிறப்புக் கொடுக்க முடியாது என்றும் கூறிவிட்டார்.

இதனால் 1920-இல் பம்பாயில் நடந்த கிலாபத்துக் கூட்டத்தில் மற்றொரு தூதுக்குழுவை இங்கிலாந்திற்கு அனுப்ப முடிவு செய்தனர். இதன் விளைவாக, 1920-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மௌலான முகமது அலி (Maulana Mohammad Ali) என்பாரின் தலைமையில் ஒரு கிலாபத்துத் தூதுக்குழு இங்கிலாந்திற்குச் சென்றது. அங்கு இக்குழுவை இந்திய அமைச்சர் (Secretary of State for India) பிசர் (Fisher) வரவேற்றார். இக்குழு தலைமை அமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதே நேரத்தில் இக்குழு தங்கள் கோரிக்கைகளைத் தலைமை அவை (Supreme Council) என்னும் குழுவின் முன் வைக்க அனுமதி கேட்டபோது, முற்றிலுமாக மறுக்கப்பட்டது. மேலும், தலைமை அமைச்சரும் மன நிறைவான மறுமொழி கொடுக்கவில்லை. கொள்கைகளைப் பொறுத்தமட்டில், தோல்வியுற்ற கிறித்தவ நாடுகளை நடத்தும் முறையில்தான் துருக்கியையும் நடத்த முடியுமென்று முடிவாகக் கூறிவிட்டார். கிலாபத்துத் தூதுக்குழுவின் பரிந்துரையான, துருக்கிச் சுல்தான்கள் அனைத்துலகச் சமயக் குருவாக இருக்கவேண்டும்; ஏனைய ஆசியப் பகுதிகள் அவர் தம் ஆதிக்கத்திற்குள் இருக்க வேண்டுமென்ற கோரிக்கை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. துருக்கிய நிலப்பரப்பைப் பொறுத்தவரை சுல்தான்கள் அந்நாட்டின் தலைவர். மற்றப் பகுதிகளுக்கும்-குறிப்பாக ஆசியப் பகுதிகளுக்கும், அவருக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்று தெள்ளத் தெளிவாக அந்நாட்டுத் தலைமை அமைச்சர் கூறிவிட்டார்.

இவ்வறிக்கை இசுலாமியர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. சவுகத் அலி (Sauhat Ali), அரசு உறுதியாக இக்கொள்கையை விடாமலிருந்தால் இசுலாமியர்கள் ஆங்கிலேயர்களுடன் கொண்டுள்ள நட்புறவு துண்டிக்கப்படுமென்று எச்சரித்தும் பலனில்லை.

இவ்வியக்கத்தால் இசுலாமிய-இந்துக்களின் ஒற்றுமை இரண்டாண்டுகள் வரை செம்மையாக இருந்தபோதிலும், இரண்டாண்டுகள் கழிந்த பின்னர் அவர்களிடையே வேற்றுமை மிகுதியாகி, தனிநாடே தங்கள் கோரிக்கை என்று முசுலிம் லீகு வலியுறுத்த, அதன் விளைவாக 1947-ஆம் ஆண்டு இந்தியா-பாகிசுத்தான் பிரிந்ததை வரலாறு காட்டும். சி.சி.

துணை நூல்:

**Majumdar, R.C.** (Ed), The Struggle for Freedom, History and Culture of the Indian People, Vol IX, Bharatiya Vidya Bhavan, Bombay, 1969.

**இந்தியக் கிளர்ச்சி (கி.பி. 1857-59):** ஆங்கிலேய வணிகக் குழுவின் ஆதிக்கம் இந்தியாவில் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விரைவாகவும் விரிவாகவும் பெருகலாயிற்று. அவர்கள் மேற்கொண்ட அரசியல், சமூக, நிருவாகச் சீர்திருத்தங்களினால் இந்தியரின் வாழ்வு குழப்பத்திற்கிடமாக அமைந்தது. ஆங்காங்கு இந்தியர்களின் எதிர்ப்புகள் தோன்றியபோதிலும், அவை ஆங்கிலேயரால் அடக்கப்பட்டன. கலகங்கள் கி.பி. 1806-ஆம் ஆண்டில் வேலூரிலும் 1816-இல் பரேலியிலும் 1831-இல் சோட்டா நாகபுரி, பலாமு, பராசட்டுப் போன்ற இடங்களிலும் தோன்றின. பின்னர், 1849, 1851, 1852, 1855 ஆகிய ஆண்டுகளில் மாப்பிள்ளைமார் கலகங்கள் நிகழ்ந்தன. அவையனைத்தும் உடனுக்குடன் நசுக்கப்பட்டன. ஆனால், கி.பி.1857-59-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கலகம் ஏறக்குறைய வடஇந்தியா முழுமையும் நடைபெற்ற ஆங்கிலப் பேரரசின் மேலாதிக்க அடித்தளத்தினை ஆட்டம் காணவைத்தது.

கிளர்ச்சியின் தன்மை: இது தன்னலங் கருதி ஆங்காங்கு நடைபெற்ற எதிர்ப்பு இயக்கமாகும். மேலும், இது எதிரிகளின் ஆற்றலைக் குறைவாக மதிப்பிட்டும் தங்கள் படைபலத்தை உயர்வாக எண்ணிக் கொண்டும் நிகழ்த்திய கிளர்ச்சியாகும். இந்தியர்களிடம் இருந்த ஒற்றுமையின்மை, உயர்ந்த குறிக்கோளின்மை, ஆங்கிலேயரின் அன்றைய போர்த்திறம், அண்மைக் காலச் செய்தித் தொடர்பு மற்றும் மக்கள் தொடர்புக் கருவிகள் ஆகியன ஆங்கிலேயரின் வெற்றிக்குப் பெருந்துணை புரிந்தன. இக்கலகம் 'சிப்பாய்க் கலகம்' என்றும் சொல்லப்பட்டது. சிப்பாய் என்ற சொல் ஓர் ஆங்கிலோ - இந்தியச் சொல் ஆகும். அது இந்தியப் படைவீரரைக் குறிக்கப் பயன்பட்டது. படையில் மிக உயர்வான பதவியில் அமர்த்தப்பட்ட இந்தியர்கள், சாதாரண பயிற்சி பெறும் எளிய ஆங்கிலச் சிப்பாய் வாங்கும் ஊதியத்திற்கும் குறைவாகவே பெற்றனர். பதவி உயர்வு இந்தியர்களுக்கு மிகுதியாகக் கொடுக்கப்படவில்லை. படைப் பிரிவுகளுக்கு ஆங்கிலேயர் பலர் தலைவர்களாக நியமிக்கப்பட்டபோதிலும், அவர்களுள் மிகச் சிலரே சிறந்த போர் வீரர்களாகத் திகழ்ந்தனர். இங்கிலாந்து மிகத் தொலைவில் இருந்ததாலும், அங்கிருந்து படை வீரர்களை இந்தியாவுக்கு அனுப்ப மிகுதியாகச் செலவுசெய்ய வேண்டி இருந்ததாலும், பொருளாதாரம் அரசியல் சமூகக் காரணங்களினாலும் இந்தியர் பலரைப் போர் வீரராக வைத்திருந்தனர். இந்தியர்களுள் பெரும்பாலோர் இந்துக்களாகவும் சிறுபான்மையினர் முகமதியர்களாகவும் இருந்தனர். இந்துச் சிப்பாய்களுள் பலர் பிராமணர்களாக இருந்தமையால் வேத நெறிச

ளைத் தம் குறிக்கோள்களாகக் கொண்டிருந்ததோடு மூடநம்பிக்கைகள் உடையவர்களாகவும் இருந்தனர். ஆயினும், இவர்கள் அனைவரும் வலிமை மிக்கவர்களாகவும் பேராற்றல் உடையவர்களாகவும் உண்மையுடன் நடந்து கொள்பவர்களாகவும் விளங்கினர். இவர்கள் தங்கள் சமயச் சடங்குகளிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிகப்பற்றுக் கொண்டிருந்தமையால் இராணுவக் கட்டுப்பாட்டினையும் மீறிப் படைத் தலைவர்களை எதிர்க்கத் துணிந்தனர்.

### கிளர்ச்சிக்கான காரணங்கள்:

அரசியல்: சதாரா அரசர் இறந்தவுடன் அவருக்கு நேரடி வாரிசு இன்மையால் ஆங்கிலேயர்கள் சதாராவைக் கி.பி. 1848-இல் தங்கள் பேரரசுடன் இணைத்துக் கொண்டனர். இதே காரணத்தால் கி.பி. 1853-இல் நாக்பூரையும் இணைத்தனர். தொடர்ந்து, அதே ஆண்டில் சான்சியையும் பீராரையும் கி.பி. 1856-இல் அயோத்தியையும் இணைத்துக் கொண்டனர். இந்து சமயக் கோட்பாடுகளின்படி அந்நாள்வரை நடைமுறையிலிருந்த தத்து எடுத்துக் கொள்ளும் வழக்கத்திற்குத் தடை விதித்து, ஆங்கிலப் பேரரசு அப்பகுதிகளை இணைத்துக் கொண்டது. இதனால் அப்பகுதிகளில் உள்ளோர் கலகக்காரர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

சமயம்: ஆங்கிலேயர் மேற்கொண்ட சமூகச் சீர்திருத்தங்கள், இந்துக்களைக் கிறித்தவர்களாக்க ஆங்கிலேயர் செய்யும் சூழ்ச்சிகளாகுமென மக்கள் எண்ணினர். உடன்கட்டை ஏறுதலைத் தடுத்தல், விதவைக்கு மறுமணம் செய்வித்தல் ஆகியன சட்டமுறையில் ஆக்கப்பட்டன. படைவீரர்கள் கடல் கடந்து பிற நாடுகளுக்கும் சென்று போர் புரிய வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவை அனைத்தையும் இந்து சமயக் கோட்பாடுகளுக்கு எதிரான செயல்களாக இந்தியர் எண்ணினர்.

புதிய துப்பாக்கி: பழைய அதிக பளுவுள்ள துப்பாக்கியை நீக்கிவிட்டு, புதிய எளிதில் இயக்கக் கூடிய, செயல்திறம் மிக்க என்பீல்டு துப்பாக்கி கிரிமியன் போரில் பயன்படுத்தப்பட்டு நல்ல பலன்களைக் கொடுத்தது. அதனை இந்தியச் சிப்பாய்களுக்கும் கொடுத்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. அந்தத் துப்பாக்கியை இயக்கும்போது கொழுப் பெண்ணையில் தோய்ந்த தோட்டாக்கள் உள்ள சிறிய உறைகளைப் பல்லால் கடித்துக் கிழித்துப் பின்னர்த் துப்பாக்கியுள் ஏற்ற வேண்டும். அந்த உறையில் உள்ள கொழுப்பு எண்ணெய் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பில் இருந்து உருவாக்கப்பட்டது என்ற செய்தி படையினரிடையே பரவிற்று. பசுவைப் புனிதமாக மதிக்கும் பிராமணரும் பன்றியைக் கேடுகளின் சின்னமாகக் கருதும் முகமதியரும் புதிய துப்பாக்கியைப் பயன்படுத்துவதனால் பெரிய பாவ காரியத்தை வலிந்து செய்யவேண்டிய கட்டாயத்திற்குத் தாங்கள் உட்படுத்தப்பட்டுள்ளோம் எனக் கருதினர். ஆங்கிலேயர் மறுத்த போதிலும் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்புப் பற்றிய செய்தி மிக வேகமாகப் படையினரிடையே பரவிற்று. இதனால், உயர் அதிகாரிகள் துப்பாக்கி ஏந்த ஆணைகள் பிறப்பித்த போதிலும், பல்லால் கிழித்து பின்னர்த் தோட்டாக்களை நிரப்பும் வழக்கத்தினைச் செய்ய மறுத்தனர். பெரம்பூர்ப் படைவீரர்கள் கி.பி. 1857-இல் தம் படைப் பிரிவு அதிகாரியின் கட்டளையை மீறித் துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்ததால் கைது செய்யப்பட்டனர். அவ்வாறே கி.பி. 1857 மே மாதம் 9-ஆம் நாள் மீரட்டு நகரில் சிப்பாய்கள் கலகம் செய்து கைது செய்யப்பட்டுப் பின் விடுதலை பெற்றனர். அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இவை கலகக்காரர்களுக்கு முதலில் ஏற்பட்ட வெற்றியாகும். அவர்கள் தொடர்ந்து மீரட்டிலிருந்து தில்லியை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் ஆங்காங்கு உள்ள படைவீரர்களும் கலகக்காரர்களுடன் இணைந்து கொண்டனர். தில்லியை ஆங்கிலேயரிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயர் சிலர் கொல்லப்பட்டனர். கலகக்காரர்கள் முகலாயப் பேரரசின் வாரிசான இரண்டாம் பகதூர்சாவை மீண்டும் அரசராக்கித் தில்லி அரியணையில் ஏற்றினர்.

கான்பூர் என்னுமிடத்தில் பீசுவாவின் வளர்ப்பு மகனான நானா சாகிபு என்பாரின் தலைமையில் கலகம் தோன்றியது. ஆங்கிலேயப் படைகள் தோல்வியுற்றன. ஆங்கிலச் சிப்பாய்களும் அவர்களின் மனைவியர்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இலக்னோ நகரமும் கலகக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது. சர் என்றி இலாரன்சு என்பார் முற்றுகையின் போது கொல்லப்பட்டார். இதனால் சினமுற்ற ஆங்கிலேயர் இந்தியரை ஒடுக்கத் திட்டமிட்டனர். தங்கள் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருவதனை உணர்ந்து அதனை மீண்டும் நிலைநாட்ட முயன்றனர்.

அம்பாலா, மீரட்டு ஆகிய நகரங்களில் இருந்த ஆங்கிலேயப் படைகள் பஞ்சாபில் உள்ள சீக்கியப் படைகளுடன் இணைந்து தில்லியைத் தாக்கின. இதன் விளைவால் தில்லி மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பகதூர்சா நாடுகடத்தப்பட்டார். அவர் மைந்தர்கள் கொல்லப்பட்டார்கள். முகலாய வமிசம் முடிவுற்றது.

'சர் என்றி எவ்லாக்கு' என்பார் கான்பூரைக் கைப் பற்றினார். இலக்னோ நகரம் 'இங்கிலிசு' என்பரால் விடுவிக்கப்பட்டது. பிற இடங்களில் தோன்றிய சிறு கலகங்களும் அடக்கப்பட்டன.

கலகத்தின் விளைவு: பகதூர் சாவுக்கு ஆதரவு தெரிவித்துப் பல இந்திய அரசர்கள் கிளர்ச்சியில் இறங்கிய போதிலும், ஆங்கிலேயருக்குத் தொடர்ந்து தம் ஆதரவை அளித்த இந்திய அரசர்கள் இருந்த மையால் கிளர்ச்சி தோல்வியில் முடிவுற்றது. ஆங்கி லேயரை எதிர்க்கும் எதிர்ப்புக் கொள்கையினைத் தேசிய அளவில் உயர்ந்த குறிக்கோளாகக் கொள்ளா ததாலும் இக்கிளர்ச்சி தோல்வியுற்றது.

அயோத்தி, உரோகில்கண்டு, பண்டேல்கண்டு, தோவாப் பகுதி (Doab), மத்தியபிரதேசம், பீகாரில் பெரும்பகுதி, கிழக்குப் பஞ்சாபு ஆகிய பகுதிகளில் உள்ள அரசர்கள், இராசசுத்தான், மகாராட்டிரம் போன்ற பகுதிகளில் உள்ள குறுநிலத் தலைவர்கள் பலரும் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண் டனர்.

நருமதை ஆற்றின் தெற்குப் பகுதியில் உள்ள அரசர்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் சேராமல் ஒதுங்கி யிருந்தனர். மேற்கில் சிந்து மாகாணம் அமைதியாக இருந்தது. இராசபுதனத்து அரசர்கள் ஆங்கிலேயரு டன் நட்புணர்வுடன் நடந்து கொண்டார்கள். மத் திய, கிழக்கு வங்காளம் கலகத்தினருடன் சேர வில்லை. நேபாளத்தில் உள்ள கூர்க்காக்கள் ஆங்கி லேயருக்கு ஆதரவாகத் திறமையாகப் போர் புரிந் தார்கள். பஞ்சாபு மாநிலமும் ஆங்கிலேயருக்கு ஆதரவாகக் கலகத்தினரை ஒடுக்கித் தில்லியைக் கைப்பற்ற உதவிற்று. இவற்றாலும் ஆங்கிலேயர் தம் வசமிருந்த மக்களாலும், செய்தித் தொடர்புக் கருவிகளாலும் இந்தியரின் கிளர்ச்சியினை எளிதாக அடக்க முடிந்தது.

விக்டோரியாப்பேரரசியின் பேரறிக்கை கி.பி. 1858-இல் வெளியிடப்பட்டது. ஆங்கிலப் பேரரசுடன் இந்திய அரசுப் பகுதிகள் இணைக்கப்படமாட்டா என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆங்கிலேயக் கிழக்கிந் திய வணிகக்குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்து, அரசி யின் நேரடி ஆட்சியின் கீழ் இந்தியா வந்தது. வாரிசு உரிமை, தத்து எடுக்கும் உரிமை ஆகியன மீண்டும் வழங்கப்பட்டன. தி.வீ.

**இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டம், 1872**: இச்சட்டம் கி.பி. 1872-ஆம் ஆண் டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-11-1956 – ஆம் நாள் வரை முன்பு திருவாங்கூர்-கொச்சி, மணிப்பூர், சம்முகாசுமீர் என வழங்கப்பட்டு வந்த மாநிலங் களைத் தவிர்த்து ஏனைய இந்தியா முழுவதும் செல் லத்தக்கது. இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டம் (The Indian Christian Marriage Act, 1872) 1886, 1891, 1903, 1911, 1920, 1928, 1951, 1952, 1978-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டுள்ளது.

கிறித்தவ மதத்துக்கு மாறிய இந்தியர்களும் அவ்வாறு மதம் மாறியவர்களின் கிறித்தவ மரபு வழித் தோன்றல்களும் இந்தியக் கிறித்தவர்கள் என்று இச்சட்டம் கூறுகிறது. இச்சட்டப்படி திரு மணம் செய்து கொள்வதற்கு மணமக்கள் இருவரும் கிறித்தவர்களாயிருக்க வேண்டும்; அல்லது ஒருவரா வது கிறித்தவராயிருக்க வேண்டும்.

இந்தியாவில் இச்சட்டப்படி திருமணம் நடத்தி வைப்பதற்குக் கீழ்க்காணும் ஐவருக்குத் தகுதியுள் ளது. (1) கிறித்தவத் திருச்சபை மாவட்டத்தால் ஆணையிடப்பட்டுள்ள மதகுரு. இவர் எந்தத் தேவா லயப் பிரிவைச் சேர்ந்தவராயுள்ளாரோ அந்தத் தேவாலயத்தின் விதிகள், சமயச் சடங்குகள், மரபி யல் ஆகியவற்றிற்குட்பட்டுத் திருமணத்தை நடத்த வேண்டும். (2) இசுகாட்லாந்து தேவாலயத்தைச் சார்ந்த எந்த மதகுருவும் (Any Clergyman of the Church of Scotland) அந்தத் தேவாலயத்தின் விதி கள், சமயச் சடங்குகள், மரபியல் ஆகியவற்றின்படி திருமணம் நடத்தி வைக்கலாம். (3) மாநில அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ள கிறித்தவ மதகுரு. (4) மாநில அரசு கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவரைத் திருமணப் பதிவாளராகப் பணியமர்த்தலாம். அவர் முன்னரோ அல்லது அவராலோ திருமணம் நடத்தி வைக்கப்படலாம். (5) இச்சட்டப்படி திருமணச் சான் றிதழ் வழங்குவதற்கு ஒரு கிறித்தவருக்கு மாநில அரசு உரிமம் வழங்கலாம். அவ்வாறு உரிமம் வழங் கப்பட்டவர் இரண்டு கிறித்தவர்களுக்கிடையே திருமணம் நடத்தி வைக்கலாம். மணமக்களுள் ஒரு வர் மட்டும் கிறித்தவராயிருந்தால் இவர் திருமணம் நடத்தி வைக்க முடியாது.

மேற்கூறிய ஐவருள் முதலிருவர் அவரவர் தேவாலய விதிமுறைகள், மதச் சடங்குகள், மரபியல் படி திருமணத்தை நடத்தவேண்டும். ஏனைய மூவ வரும் திருமணத்தை நடத்த வேண்டிய விதிமுறை களைப் பற்றி இச்சட்டமே கூறியுள்ளது.

மாநில அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ள மத குரு கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்: திரு மணம் செய்து கொள்ள விரும்புபவர்களுள் ஒருவர் தொடர்புடைய மதகுருவிடம் முறைப்படியான தக வலறிவிப்பு (Notice) கொடுக்க வேண்டும். அதில்

தி[illegible]ணம் செய்து கொள்ள விரும்புபவர்களின் [illegible]ர், குடியிருப்பு, திருமணம் நடக்கவிருக்கும் இடம் போன்ற தகவல்கள் அடங்கியிருக்க வேண்டும். திருமணம் நடக்கவிருக்கும் இடம் ஒரு தேவாலய மாக இருந்தால், அந்தத் தேவாலயத்தில் மேற்படி மதகுரு திருமணம் நடத்திவைக்க அதிகாரமிருந்தால், மேற்படி தகவலறிக்கையானது அந்தத் தேவாலயத் தில் முக்கியமான இடத்தில் ஒட்டப்பட வேண்டும். அந்த மதகுருவுக்கு அந்தத் தேவாலயத்தில் திரு மணம் நடத்த அதிகாரம் இல்லாத நிலையில், அந் தத் தேவாலயத்தில் திருமணம் நடத்த அதிகார முள்ள மதகுருவுக்கு மேற்குறிப்பிடப்பட்ட அறிவிப்பு அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது தகவல் அறிக்கை தாக்கல் செய்தவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

திருமணம் நடக்கவிருக்கும் இடம் தனிப்பட்டவர் வசிக்கும் இடமாக இருந்தால், அந்த இடம் உள்ள மாவட்டத்துக்கான திருமணப் பதிவாளருக்குத் தக வலறிக்கையை அனுப்பவேண்டும். அதை அந்தப் பதி வாளர் தம் அலுவலகத்தின் முக்கிய இடத்தில் ஒட்ட வேண்டும். திருமணம் செய்து கொள்ள விரும்புபவர் களுள் ஒருவர் உரிமை வயது அடையாதவராக (Minor) இருந்தால் தகவலறிக்கையின் நகல் அந்த மாவட்டத்திலுள்ள முதிய திருமணப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையின் படிகள் அம்மாவட்டத்திலுள்ள எல்லாத் திருமணப் பதிவாளர்களின் அலுவலகங்களிலும் முக்கியமான இடத்தில் ஒட்டப்பட வேண்டும்.

பின்பு திருமணம் செய்து கொள்ளவிருப்பவர் களுள் ஒருவர் மேற்குறிப்பிட்ட அதிகாரம் படைத்த மதகுருவின் முன்தோன்றி, மனப்பூர்வமான ஓர்அறிக் கையைத் தாக்கல் செய்ய வேண்டும். திருமணம் நடப் பதற்கு எவ்வகைப்பட்ட சட்டப்படியானதடங்கலும் இல்லையென்றும், திருமணம் செய்து கொள்ளவிருப் பவர்களுள் ஒருவரோ இருவருமோ உரிமை வயது அடையாதவர்களாக இருந்தால், அவர்கள் சார்பில் சட்டப்படியான இசைவு பெறப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் கூறவேண்டும். அவ்வாறு இசைவு கொடுக்கக்கூடிய எவரும் இந்தியாவில் இல்லை என் றால் அந்த விவரமும் மேற்கூறிய அறிக்கையில் சொல்லப்பட வேண்டும். இச்சட்டம் 21 வயது நிரம் பாதவர், உரிமை வயது அடையாதவர் (Minor) என்று கூறுகிறது. அவ்வாறு 21 வயது நிரம்பாவிட் டாலும் விதவையாகவோ மனைவியை இழந்தவரா கவோ இருந்தால் அவர் உரிமை வயதை அடையாத வராகக் கருதப்பட மாட்டார். தகப்பன், அவர் உயி ருடனில்லாவிட்டால் காப்பாளர், அவ்வாறு காப்பா ளர் எவரும் இல்லாவிட்டால் தாய், உரிமை வயது அடையாதவர் சார்பில் திருமணத்துக்கு இசைவு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இசைவு தெரிவிக்கத் தகுதியுள்ளவர் எவரேனும் இந்தியாவிலிருந்தால் தான் அவ்வாறு இசைவு தேவை. அவ்வாறு இசைவு தெரிவிக்கக்கூடிய தகுதியுள்ளவர் இருந்தால், திரு மணம் நடக்கச் சானறிதழ் அளிக்கக் கூடாது என்று தடை செய்யும் அதிகாரம் அவருக்குண்டு. அவ்வாறு தடை செய்யக் கோரிக்கை வந்தால் அது குறித்துத் தொடர்புடைய மதகுரு விசாரணை செய்ய வேண் டும். அந்தக் கோரிக்கையை விடுத்தவர் அதைத் திருப்பிப் பெற்றுக் கொண்டாலும், அவருக்குத் திரு மணத்தைத் தடை செய்ய அதிகாரம் இல்லை என்று முடிவு எடுத்தாலும், அந்த மதகுரு திருமண நட வடிக்கையைத் தொடரலாம். தடை செய்யக் கோரு பவருக்கு அதிகாரம் உண்டு என்றால், அக்கோரிக் கையை அவர் திருப்பிப் பெற்றுக் கொள்ளாத நிலை யில் திருமணம் நடக்கக்கூடாது. அவ்வாறு தடை ஏதுமில்லா விட்டால் அந்த மதகுரு ஒரு சான்றிதழ் வழங்க வேண்டும். திருமணம் செய்து கொள்ளவிருப் பவர்களுள் எவராவது ஒருவர் உரிமை வயதை அடை யாதவராக இருந்து, அந்த உரிமை வயது அடையா தவர் சார்பில் சட்டப்படியான இசைவு பெறவில்லை என்று மதகுரு எண்ணினால், அவருக்கு முதன் முத லில் தகவல் அறிக்கை கிடைத்த தேதியிலிருந்து 14 நாட்கள் கழிவதற்கு முன்னர் அந்த மதகுரு சான்றி தழ் வழங்கக் கூடாது. எக்கட்டத்திலும் முதலில் தகவல் அறிக்கை கிடைத்த தேதியிலிருந்து நான்கு நாட்கள் கழிவதற்குள் அச்சான்றிதழை வழங்கக் கூடாது. அச்சான்றிதழில் திருமணம் செய்து கொள்ள விருப்பவர்களுள் ஒருவர் மதகுருவுக்குத் தகவல் அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும், மதகுருவின் முன்தோன்றி அவர் முழுமனத்துடன் அறிக்கை தாக் கல் செய்துள்ளது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

அவ்வாறு சான்றிதழ் வழங்கிய பின்னர், மேற் கூறிய மதகுரு அவர் விருப்பம்போல் மதச் சடங்கு களைக் கடைபிடித்துத் திருமணத்தை நடத்தி வைக் கலாம். அதற்கு அந்த மதகுருவைத் தவிர்த்து இரண்டு சாட்சிகள் தேவை. அச் சான்றிதழ் வழங் கிய தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் திரு மணம் நடைபெறாவிட்டால் அச்சான்றிதழ் செல் லாதது ஆகிவிடும். அவ்வாறு சான்றிதழ் செல்லாத தாகிவிட்டால் அத்திருமணத்தை எவரும் நடத்தி வைக்கக் கூடாது. மறுபடியும் தொடக்கக் கட்டத்தி லிருந்து நடவடிக்கை எடுக்கப் பட்டால் அத்திருமணம் நடைபெறலாம்.

**திருமணப் பதிவாளர் நடத்திவைக்கும் திருமணம் அல்லது அவர் முன்பு நடக்கும் திருமணம்:** மாநில அரசினால் பணியமர்த்தப்பட்டுள்ள திருமணப்பதி வாளரிடம் திருமணம் நடத்த விரும்பினால் அவர்

ஏறத்தாழ உரிமம் பெற்ற மதகுரு தாம் நடத்தி வைக்கும் திருமணத்தில் என்ன நடைமுறைகளைப் பின்பற்றுவாரோ அந்நடை முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். ஆனால் உரிமைவயது அடையாத மணமகன் அல்லது மணமகள் சார்பில் இசைவு தெரி விக்க வேண்டியவர், போதிய காரணமின்றி இசைவு தெரிவிக்க மறுத்தாலோ மனநோய் உடையவ ராக இருந்தாலோ நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து இசைவு வாங்க வகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் சான்றிதழ் வழங்கத் திருமணப்பதி வாளர் மறுத்தாலும் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. திருமணப் பதி வாளர் திருமணத்தை நடத்தி வைக்கலாம் அல்லது அவர் முன்பு வேறு எவரும் நடத்தி வைக்கலாம். திருமணப் பதிவாளரைத் தவிர இரண்டு நம்பத் தகுந்த சாட்சிகள் தேவை. திருமணம் நடக்க வேண் டிய வகை முறை அல்லது சடங்குகள் பற்றி மண மக்களே முடிவுசெய்து கொள்ளலாம். ஆனால், மணமக்கள் இருவரும் தங்கள் திருமணத்திற்குச் சட்டப்படியான தடையேதுமில்லை என்றும் அவர் கள் ஒருவரையொருவர் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வதாகவும் அதற்கு அங்குக் குழுமி யிருப்பவர்கள் சாட்சிகளாக இருக்க வேண்டும் என் றும் அங்குக் குழுமியிருப்போர் முன்பு வெளிப்படை யாகக் கூறவேண்டும். அத்திருமணம் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். அதில் மணமக்களும் திருமணப் பதிவாளரும் வேறு எவராவது திரு மணத்தை நடத்தி வைத்திருந்தால் அவரும், அவர் களைத் தவிர இரண்டு நம்பத் தகுந்த சாட்சிகளும் கையெழுத்திட வேண்டும்.

திருமணச் சான்றிதழ் வழங்க உரிமம் வழங்கப் பட்டவர் முன்பு நடக்கும் திருமணம்: மணமக்கள் இருவரும் கிறித்தவர்களாக இருக்க வேண்டும். மண மகன் 21 வயதுக்குக் கீழ்ப்பட்டவனாக இருக்கக் கூடாது. மணமகள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவளாக இருக்கக்கூடாது. முன் அறிக்கை (Notice) ஏதுமின்றி அம்மணமக்கள் நேராக மேற்கூறிய அதிகாரம் பெற்றவர்முன் சென்று திருமணம் செய்து கொள்ள லாம். ஆனால் மணமகனுக்கு உயிருடனிருக்கும் வேறு மனைவியும் மணமகளுக்கு உயிருடனிருக்கும் வேறு கணவனும் அப்போது இருக்கக் கூடாது. மேற்கூறிய சான்றிதழ் வழங்க மாநில அரசால் உரிமம் வழங்கப் பட்டவர் மற்றும் குறைந்தது இரண்டு நம்பத்தத்க சாட்சிகள் முன்பாக, மணமகன் மணமகளைப் பார்த்து ஆண்டவன் சன்னிதியில், இயேசு நாதரின் நாமத் தின் பெயரில் சட்டப்படியான மனைவியாக ஏற்றுக் கொள்வதாகக் கூற வேண்டும். அவ்வாறே மண மகளும் மணமகனைப் பார்த்துக் கூற வேண்டும். இவ்வாறு கூறி முடித்தவுடன் திருமணம் நிறைவுறு கிறது. இவ்வாறான திருமணம் உரோமன் கத்தோ லிக்க மதத்தினருக்குப் பொருந்தாது.

இச்சட்டத்தின்படி திருமணம் காலை 6 மணி முதல் 7 மணிக்குள் நடைபெற வேண்டும். ஆனால் ஆங்கில தேவாலயத்தைச் (Church of England) சேர்ந்த மதகுரு அவரது மேலிடத்திலிருந்து சிறப்பு அனுமதியிருந்தால் மேற்கூறிய காலத்தில் அல்லாது வேறு நேரத்தில் திருமணத்தை நடத்தி வைக்கலாம். உரோமன் கத்தோலிக்க மதகுருவுக்கு மேலிடத்தி லிருந்து பொதுவான அல்லது சிறப்பு அனுமதியிருந் தால் அவரும் வேறு நேரத்தில் திருமணம் நடத்தி வைக்கலாம். இசுகாட்லாந்து தேவாலயத்தைச் (Church of Scotland) சேர்ந்த மதகுரு அந்தத் தேவாலயத்தின் விதிமுறைகள், மதச்சடங்குகளின் படி நடத்திவைக்கும் திருமணத்தை எந்த நேரத்தி லும் நடத்தி வைக்கலாம்.

ஆங்கிலத் தேவாலயத்தைச் சேர்ந்த மதகுரு அந்தப் பிரிவைச் சேர்ந்த தேவாலயத்தில் தவிர வேறு இடத்தில் திருமணத்தை நடத்தி வைக்கக் கூடாது. ஆனால் மேலிடத்திலிருந்து அவருக்குச் சிறப்பு அனுமதியிருந்தால் வேறு இடத்திலும் அவர் திருமணத்தை நடத்தி வைக்கலாம். திருமணம் நடக்கவிருக்கும் அவ்வாறான வேறு இடத்திலிருந்து 5 கல் தொலைவுக்குள் தேவாலயம் ஏதும் இல்லா விட்டால் அந்த வேறு இடத்திலும் அந்த மதகுரு திருமணத்தை நடத்தி வைக்கலாம்.

மேற்கூறிய இச்சட்டத்தின்படியல்லாமல் இந்தி யாவில் (கிறித்தவர்களுக்குள் அல்லது மணமக்களுள் ஒருவர் கிறித்தவராயிருந்தாலும்) நடைபெறும் திருமணம் இல்லா நிலையது ஆகும். இச்சட்டத் தின்படி நடைபெறும் திருமணங்கள் குறித்து எவ்வாறு பதிவேடுகள் வைக்கப்பட வேண்டும் என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே இச்சட்டத்தின்படி நடைபெறும் எந்தத் திருமணத்திற்கும் ஆவணச் சாற்றிதழ் கிடைக் கும். சில விதிமுறைகளை மீறுவது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகுமென்று இச்சட்டம் கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, வேண்டுமென்றே சட்டத்துக்குப் புறம்பான நேரத்தில் திருமணம் நடத்துவது, சாட்சி கள் இல்லாமல் திருமணம் நடத்துவது போன்ற செய்கைகள் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். திருமணம் நடத்த அதிகாரம் வழங்கப்பட்டவர், ஆங்கிலேயத்தேவாலயம், இசுகாட்லாந்துத் தேவால யம், கத்தோலிக்கத் தேவாலயம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்திராத நிலையில், அந்தத் தேவாலயங்களின் விதிமுறைகளைத் திருமணத்திற்குக் கடைப்பிடிப்பது

குற்றமாகும். எடுத்துக்காட்டாக, திருமணத்தை நடத்தி வைக்கக் கத்தோலிக்க மதகுருவுக்கு அதிகாரம் உள்ளது. அவர் வேறு தேவாலயத்தின் விதிகளையும் சடங்குகளையும் கடைப்பிடித்துத் திருமணம் நடத்தினால் அது தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

திருமணம் நடைபெறும் இடம், இசைவு, தேவைப் பட்டவர்களின் விவரம் ஆகிய விவரங்கள் குறித்துத் தாக்கல் செய்யும் அறிக்கை, திருமணம் குறித்துக் கொடுக்கும் முதல் அறிவிப்பு, திருமணப்பதிவேடு ஆகியவற்றில் ஏற்படும் தவறுகள் ஒழுங்கற்றவைகளே ஒழியத் திருமணத்தை அத்தவறுகள் எவ்விதத்திலும் பாதிக்கமாட்டா.

**இந்தியக் குடிமுறைப் பதிவு** (Civil Registration System in India): வரலாற்றுப் பின்னணி: இந்தியாவில் இன்றியமையா நிகழ்ச்சிகளைப் பதியும் முறை 100 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதைய ஆட்சியாளர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பட்ட காலத்தில் இதன் சிறப்புத் தன்மையை உணர்ந்து இறப்பினைப் பதிவு செய்வதை மிகவும் வலியுறுத்தினர். பொதுநலச் சீர்கேடுகள் மிகுந்திருந்த அக்காலத்தில் இறப்பு வீதம் உயர்ந்திருந்தது. இச்சூழ்நிலையில் நலவாழ்வின் காரணமாக எடுக்கப் பட்டு வந்த நடவடிக்கைகளுக்கு, நம்பத் தகுந்த இறப்பு மதிப்பீடுகள் தேவைப்பட்டன. அதாவது, எண்ணிக்கையையும் அதற்கான காரணங்களையும் அறியத்தக்க வகையில் மிகத் துல்லியமான, முழுமை மிக்க பதிவு முறை தேவைப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் நல ஆணையர் கி.பி. 1863-ஆம் ஆண்டில் சிற்றூர்களில் ஏற்படும் இறப்புக்கான காரணங்களை அறிய வேண்டியதன் தேவையை எடுத்துரைத்தார். அவர் இறப்பிற்கான காரணங்களை அறியப் போதுமான அறிவைப் பெற்றால் மட்டுமே நலவழிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இயலும் என்பதைத் தெளிவுபடுத்தினார். இக்காலக்கட்டத்தில் பிறப்பினையோ திருமணங்களையோ பதிவு செய்வதற்கான கட்டாயம் ஏற்படவில்லை. இப்பதிவில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்ததே இதற்குக் காரணம். இருப்பினும், பிறப்பு, திருமணம் சார்ந்த விவரப் பதிவுக்கான வரையறைகள் பதிவுக் குறிப்பில் இடம்பெற்றிருந்தன. இந்தியாவின் மைய மாநிலங்களில் மட்டும் பிறப்பைப் பதிவு செய்யும் முறை கி.பி. 1866-ஆம் ஆண்டுக்கு முன்பே இருந்து வந்தது.

வங்காளத்தில் கி.பி. 1873-இல் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் இயற்றப்பட்ட பின், பீகார், ஒரிசா மாநிலங்கள் இதனைப் பின்பற்றின. இப்பதிவு முறை மக்களின் சட்டப்படியான தேவைகளைத் தீர்த்து வைப்பதாக இருந்ததனால் இதன் தேவையை மக்கள் உணரலாயினர். இதுபோன்றே இவ் விவரங்களின் இன்றியமையாமையை அப்போதைய ஆட்சியாளர்களும் உணர வேண்டியதாயிற்று.

பின்னர், கி.பி. 1884-இல் இந்திய அரசாங்கம் பிறப்பு இறப்பு, திருமணப் பதிவுச் சட்டத்தை இயற்றியது. ஆனால், இச்சட்டத்தில் எவ்வகைக் கட்டாயமுமில்லாமல் மக்கள் தம் விருப்பமாகப் பதிவு செய்யும் முறைமை இருந்ததால் இச்சட்டம் போதுமான பலனளிக்கவில்லை. நகர்ப் புறங்களில் இப்பதிவு முறை நகராட்சிகளின் துணைச் சட்ட வரன்முறைக்குட்பட்டிருந்தது. ஊரகங்களில் வருவாய் அலுவலர்களாலும் காவற்றுறையினராலும் இந்நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன.

இப் பதிவு முறையின்கீழ் 1903-ஆம் ஆண்டைய மக்கள்தொகையில் 80 விழுக்காடு அளவு வந்தது. இருப்பினும் இம்முறையின் பரப்பும் தரமும் பயனுடையனவாக அமையவில்லை. ஏனெனில் இறப்பு, அதற்கான காரணங்கள் ஆகியவற்றிற்கு மட்டுமே மிகுதியான சிறப்பிடம் அளித்துத் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இவை. இப்புள்ளி விவரங்கள் அப்போது நாட்டில் பரவலாக இருந்துவந்த நோய் நிலையையும் கொள்ளை நோய்களையும் ஒழிப்பதன் பொருட்டுத் திரட்டப்பட்டன. பின்னர், 1924-இல் வேளாண்மைக்கான உயர்நிலைக் குழு (Royal Commission on Agriculture) வும் 1928-இல் உழைப்பாளருக்கான உயர்நிலைக் குழுவும் இப்புள்ளி விவரங்களின் தரத்தையும் பயன்களையும் பெருக்கும் பொருட்டுப் பல அறிவுரைகளை வழங்கின. இதன் விளைவாக விவரங்கள் முழுமையாகவும் தரமிக்கன வாகவும் உருவாகும் பொருட்டுப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதில் உண்டான வளர்ச்சி பின்னர் ஏற்பட்ட இரண்டாம் உலகப் போரின்போது நிலைத்துப் போனதோடு, போருக்குப்பின் இம் முறை முழுவதும் நடைமுறையில் இல்லாமலும் போயிற்று. புகழ்மிக்க 'போர் குழு' (Bhore Committee) என்று சொல்லப் பட்ட நலவழிக் கணிப்பு முன்னேற்றக் குழு (Health Survey and Development Committee) 1946-இல் தோற்றுவிக்கப்பட்டு, இதன் சீரமைப்புக்கான பயன்மிகு அறிவுரைகளை வழங்கியது.

இந்தியாவில் பிறப்பு இறப்புத் தொடர்பான புள்ளி விவரங்கள் நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களுக்காக மட்டுமே திரட்டப்பட்டன. மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களை அறியவேண்டி இவை சேகரிக்கப்படவில்லை. இம்மாற்றத்தை மக்கள்

தொகைக் கணிப்பின் மூலமே அறியமுடிந்தது. இந்திய மக்கள்தொகையின் வளர்ச்சி வீதம் 1921-ஆம் ஆண்டு வரையில் குறைவாக இருந்ததன் காரணமாக இதன் சிறப்புத்தன்மை உணரப்படவில்லை. பின்னர், 1951-ஆம் ஆண்டு முதல் சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கு மக்கள்தொகைத் தொடர்புடைய விவரங்கள் தேவைப்பட்டன. ஆகவே, இப்புள்ளி விவரமுறை மக்கள்தொகைக் கணிப்பு ஆணையரான தலைமைப் பதிவாளர் (Registrar General) இடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தியா முழுவதும் பிறப்பு இறப்புக்கென 1969 வரையில் சட்டம் இயற்றப்படாமல் இருந்ததனால், இப்புள்ளி விவரங்கள் தரமிக்கவையாக இல்லை. ஆனால், 1969-ஆம் ஆண்டைய பிறப்பு இறப்புப் புதிவுச் சட்டம் இப்பதிவு முறையைக் கட்டாயப்படுத்தியதோடு, பதிவு செய்யத் தவறினால் தண்டனை உண்டென்பதையும் தெளிவுபடுத்தியது.

இப்போதைய நிலை: அடிப்படைப் புள்ளி விவர அமைப்பின் முழு அதிகாரமும் தலைமைப் பதிவாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவரே நாடு முழுவதும் சேகரிக்கப்பட்ட இப்புள்ளி விவரங்களைத் தொகுத்தல், அட்டவணைப்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார். மேலும் அவர் அனைத்து மாநிலங்களுக்கும் நேராட்சிப் (States Union Territories) பகுதிகளுக்குமான விவர முறையை மதிப்பீடு செய்வதோடு, அவற்றின் தரத்தையும் மேம்படுத்துகிறார். ஒவ்வொரு மாநிலத்திலும் முதன்மைப் (Chief Registrar) பதிவாளரே இக்குடியுரிமைப் பதிவின் பொறுப்பை ஏற்கிறார். இவ்விவரங்களின் நேரடிப் பதிவை வருவாய், காவல் மற்றும் நலவழித் துறையினர் மேற்கொள்கின்றனர். ஒவ்வோராண்டும் இந்திய அடிப்படைப் புள்ளி விவரம் (Vital Statistics in India) என்ற தலைப்பில் நூல் தொகுதி ஒன்றினைத் தலைமைப் பதிவாளர் வெளியிடுகிறார். இதில் மாநிலங்கள், நேரடி ஆட்சிப் பகுதிகள் ஆகியவற்றுக்கான பிறப்பு இறப்பு எண்ணிக்கை, பிறப்பு வீதம், இறப்பு வீதம், நோயுற்றோர் வயதுப் பகிர்வு, இளங்குழவி இறப்பு வீதம் (Infant Mortality Rate) மற்றும் இறப்புக்கான காரணங்களோடு பிற செய்திகளும் கொடுக்கப்படுகின்றன.

பதிவில் எழும் சிக்கல்கள்: சட்டத்தில் இந்நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யாவிடில் தண்டனை வழங்கலாம் என்ற விதி இருப்பினும், இந்திய அடிப்படைப்புள்ளி விவரத் தொகுப்பு மன நிறைவளிப்பதாக இல்லை. ஆகவே, இது அனைத்து மக்களையும் உள்ளடக்கிய முழுமை மிக்க ஒரு புள்ளி விவரத் தொகுப்பாக விளங்கவில்லை. இம்முறையில் தொகுக்கப்படும் விவரங்கள் குறைத்துச் சொல்லுதலின் (Under Reporting) விளைவாகத் தரம் குறைந்து காணப்படுகின்றன. இதிலிருந்து கணக்கிடப்படும் வீதங்கள் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதாகவும் இல்லை. மக்கள்தொகைக் கணிப்புத் துறையினால் 1966-இல் சென்னையில் மேற்கொள்ளப்பட்டகள ஆய்வில் 27 விழுக்காட்டிற்கும் மிகுதியான இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை என்பது தெரியவந்தது. ஊர்ப் புறங்களில் மிகுதியான அளவில் இந்நிகழ்ச்சி பதிவு செய்யப்படுவதில்லை எனவும் அறியப்பட்டது.

இந்திய மக்கள்தொகையில் பெரும்பாலோர் எழுத்தறிவில்லாமல் இருப்பதோடு, பிற்போக்குக் கருத்துகளைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. மேலும், இப்பதிவின் இன்றியமையாத் தன்மையை மக்களும் அலுவலர்களும் முழுமையாக இன்னும் உணரவில்லை. பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் ஒரு சிலருக்கு மட்டும் எப்போதாவது சில நேரங்களில் மட்டும் தேவைப்படுவதால் இதன் சிறப்பினை மக்கள் உணராதுள்ளனர். காண்க: அடிப்படைப் புள்ளி விவரம்.

## இந்தியக் குடியரசு

**இந்தியக் குடியரசு** ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. இது தென் ஆசியாவில் வங்காள விரிகுடாவைக் கிழக்கிலும், அரபிக்கடலை மேற்கிலும் இந்தியப் பெருங்கடலைத் தெற்கிலும் கொண்டுள்ளது. வடக்கில் இமயமலையும், சீனா, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளும் வடமேற்கில் பாகிசுத்தானமும், வடகிழக்கில் பர்மாவும் இந்தியக் குடியரசின் எல்லைகளாகும். வங்காளதேசம் 1971-இல் உருவாக்கப்பட்டது. இதனை முன்னர்க் கிழக்குப் பாகிசுத்தான் என்றனர். இதன் முப்பக்கமும் இந்தியக் குடியரசுப் பகுதிகளும் தெற்கில் கடலும் சூழ்ந்துள்ளன.

இந்தியக் குடியரசின் பரப்பு 32,87,782 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள்தொகை 1984-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 74 கோடியாகும்.

இந்தியாவின் தலைநகர் தில்லி மாநகரம். கல்கத்தா, பம்பாய், சென்னை, பெங்களூர், ஐதராபாது, அகமதாபாது, கான்பூர், புனே, நாகபுரி, இலக்னோ, செயப்பூர் போன்றவை பெரு நகரங்களாகும்.

இந்தியத் தேசியக் கொடி மூன்று வண்ணங்களைக் கொண்டு, உள்ளே அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது, நீண்ட சதுரமான இக்கொடி மேற்பகுதியில் காவி நிறத்தையும், கீழ்ப்பகுதியில் பச்சை நிறத்தையும், இடைப்பகுதியில் வெள்ளைநிறத்தை

யும் கொண்டது. நடுவில் அமையும் அசோகச் சக்கரம் நீல நிறத்தாலானது.

இந்தியாவின் பணம் உரூபாய் எனப்படுகிறது. ஓர் உரூபாய் 100 காசுகளைக் கொண்டது.

இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள மொழிகள் 15 ஆகும். அவை 1. தமிழ் 2. மலையாளம் 3. கன்னடம் 4. தெலுங்கு 5. ஒரியா 6. மராத்தி 7. குசராத்தி 8. வங்காளி 9. அசாமி 10. இந்தி 11. உருது 12. காசுமீரி 13. பஞ்சாபி 14. சிந்தி 15. சமசுகிருதம் என்பனவாம். இந்தியும் ஆங்கிலமும் அலுவல் மொழிகளாகும். மேற்கூறப்பட்டுள்ள பதினைந்து மொழிகளையும் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியக் குடியரசில் வாழும் மக்களுள் 83 விழுக்காடு இந்துக்கள்; 11 விழுக்காடு இசுலாமியர்; 3 விழுக்காடு கிறித்தவர்; ஏறத்தாழ 2 விழுக்காடு சீக்கியர்.

இந்தியக் குடியரசு, கூட்டாட்சி முறையைக் கொண்ட நாடு. இதனைப் பாரதம் என்றும் கூறுவர். இந்தியக் குடியரசு இங்கிலாந்துக் கூட்டு நாடுகள் அமைப்பில் (British Commonwealth) உள்ள நாடுகளுள் ஒன்று. இந்தியா 23 மாநிலங்களையும் எட்டு நேராட்சிப் பகுதிகளையும் கொண்டுள்ளது.

மாநிலங்கள்: 1. தமிழ்நாடு 2. கேரளம் 3. கருநாடகம் 4. ஆந்திரப் பிரதேசம் 5. ஒரிசா 6. மகாராட்டிரம் 7. குசராத்து 8. மத்தியப் பிரதேசம் 9. மேற்கு வங்காளம் 10. அசாம் 11. அரியானா 12. பஞ்சாபு 13. நாகாலாந்து 14. மணிப்பூர் 15. திரிபுரா 16. மேகாலயா 17. பீகார் 18. சம்மு-காசுமீரம் 19. உத்தரப்பிரதேசம் 20. இராசசுத்தான் 21. இமாசலப் பிரதேசம் 22. சிக்கிம் 23. மிசோராம் என்பனவாம்.

இந்திய ஒன்றியத்தின் நேராட்சிப் பகுதிகள் பின்வருவன: 1. அந்தமான்-நிக்கோபார்த் தீவுகள் 2. அருணாசலப் பிரதேசம் 3. சண்டிகர் 4. தத்ரா-நகர் அவேலி 5. தில்லி 6. கோவா, தாமன், தியூ 7. இலட்சத்தீவுகள் 8. பாண்டிச்சேரி.

**இந்தியக் குடியேற்றங்கள்:** இந்தியக் குடியேற்ற முறை ஓரளவு கிரேக்கக் குடியேற்ற முறைக்கு ஒப்பானதாகும். இந்தியர்கள் வெளிநாடுகளில் தங்கள் குடியேற்றங்களை அமைத்த போதிலும், அவற்றின்மீது பேரரசுக்குரிய ஆதிக்கத்தைச் செலுத்தவில்லை. அத்துடன் அந்நாடுகளின் நாகரிகத்தையோ பண்பாட்டையோ பாதிக்கும் வகையில் அவற்றிற்கு எவ்வித இடையூறும் செய்யாது, தங்கள் பண்பாடு, சமயம், கலை ஆகியவற்றைப் பரப்பினர். இதனால் இந்திய நாட்டுச் சமயமும் கலைப் பண்புகளும் பிற நாடுகளில் பரவி, பிற இனத்தாருடன் ஒன்று பட, இந்தியப் பண்புகளைச் சிறப்பாகக் கொண்ட ஒரு கலப்பு நாகரிகம் வளர்ந்தது. இதற்கு வணிகர்கள் சிறந்த காரணமானபோதிலும், சமயப் பரப்பாளர்களும் போர்வீரர்களும் அரசியல் அறிஞர்களும் கூடக் காரணமாவர். கீழே கொடுக்கப்பட்டுள்ள நாடுகளில் இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர்.

சுமத்திரா (Sumatra): இந்தியர்கள் கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டில் சுமத்திராவில் குடியேறினர். சுமத்திராவின் வரலாறு இந்தியர்கள் அங்குத் தங்கள் குடியேற்றங்களை அமைத்தபிறகுதான் தொடங்குகிறது. சிரீ விசய அரசு (Sri Vijaya Kingdom) என்ற இந்து அரசு கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட போதிலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அது சிறப்புற்று விளங்கியது. கல்வெட்டுகள் மூலம் சிரீ செயநாசன் (Sri Jayanasan) என்ற பௌத்தனின்கீழ்ச் சிரீ விசயம் பெற்றிருந்த அரசியல் செல்வாக்கை அறிய முடிகிறது. மலாயு (Malayu) என்ற இடத்தையும் பங்கா(Banga) என்ற அண்மையிலுள்ள தீவையும் சிரீ விசய அரசு தன்னுடன் இணைத்துக் கொண்டது.

சிரீவிசயத்தின் அரசியல் பெருமை, வணிகச் சிறப்பு, அங்கிருந்த பண்பாடு ஆகியவற்றை அங்குச் சென்ற சீனப் பயணி இட்சிங்கு (Itsing) குறிப்பிடுகிறார். இவ்வரசு இந்திய நாட்டுடன் கப்பல்கள் மூலம் வணிகத்தில் ஈடுபட்டது என்பதையும் இட்சிங்கு தெளிவுபடுத்துகிறார்.

சாவா (Java): சாவாவில் இந்தியர்களின் குடியேற்றக் காலம்பற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. மகாபாரதக் காலத்திலேயே அங்கு இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டது என ஒரு கருத்து நிலவுகிறது. மற்றொரு கருத்து கலிங்க நாட்டிலிருந்து இருபதாயிரம் குடும்பத்தினர் கலிங்க இளவரசனால் அங்குக் குடியமர்த்தப்பட்டனர் என்பது. இந்தியர்கள் கி.பி. 56-ஆம் ஆண்டு அங்குக் குடியேறினர் என ஒரு கருத்து நிலவுகிறது. வரலாற்று அறிஞர் ஆர்.சி மசும்தார் (R.C. Majundar) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் அங்கு இந்தியக் குடியேற்றங்கள் (Indian Colonies) ஏற்படுத்தப்பட்டன என்பதையும், அதிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை இந்தியப்பண்பாடு அங்குச் சிறப்புற்றிருந்தது என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அத்துடன் கி.பி. 132-ஆம் ஆண்டு சாவாவில் தேவவர்மன் என்ற மன்னன்

வாழ்ந்தான் எனச் சீனக் குறிப்புகள் அறிவிக்கின்றன. இதிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியர்கள் அங்குக் குடியேறியிருந்தனர் என்பது நன்கு புலனாகும். பாகியான் (Fahien) என்றசீனப் பயணி சாவாவில் பிராமணசமயம் சிறப்புற்றிருந்ததையும் புத்த சமயம் மங்கியிருந்ததையும் குறிப்பிடுகிறார்.

சாவாவின் மேற்குப் பகுதியில் முழுமையாக இந்து அரசு நிலவியதை அங்குக் கிடைத்த வடமொழிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. பூர்ணவர்மன் என்ற மன்னனைப் பற்றியும் அவை குறிப்பிடுகின்றன, அம்மன்னன் பார்ப்பனர்களுக்குப் பசுக்களைத் தானம் செய்ததையும், அப்பகுதியில் ஒரு கால்வாய் வெட்டியதையும் அவை குறிப்பிடுகின்றன. அவற்றின் காலம் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டு என்று கணிக்கப்படுகிறது.

சாவாவின் மத்திய பகுதியிலும் பிராமண சமயம் சிறப்புற்றிருந்தது என்பது, கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படும் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. அதுபோலவே கி.பி. 732-ஆம் ஆண்டில் சஞ்சய மன்னன் என்ற இந்து அரசன் மத்திய சாவாவில் ஆட்சி புரிந்தான் என்பதைப் பற்றி ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அம்மன்னன் ஒரு சைவன் என்றும், ஒரு சிவலிங்கம் அவனால் நிறுவப்பட்டது என்றும் அக்கல்வெட்டுக் கூறுகிறது. இந்துக் கடவுள்களாகிய பிரமன், சிவன், விட்டுணு ஆகிய தெய்வங்களை அவன் வழிபட்டுள்ளான். மத்திய சாவாவில் இந்திய நாகரிகம் நிலவியதென்பதற்கு இவை தக்க சான்றாகும்.

போர்னியோ (Borneo): போர்னியோ சாவாவைப்போல் எட்டு மடங்கு பெரியது. வரலாற்றுச் சான்றுகள் மூலம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் இந்தியர் அங்குக் குடியேறினர் என்பது தெரிய வருகிறது. ஒரு குகையில் (Kombeng) மரத்தாலான கோயிலின் சின்னங்களும் புத்தன், சிவன் ஆகியவர்களின் கற்சிலை உருவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என உறுதி செய்யப்படுகின்றன. இந்தியப் பண்பாடுஅங்கு நன்கு செழித்தோங்கியிருந்தது எனச் சீனக் குறிப்பொன்று கூறுகிறது. இப்பகுதி கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சாவாவின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

பாலி (Bali): இத்தீவு சாவாவிற்குக் கிழக்கேயுள்ளது. இப்பகுதியில் இந்தியர்களின் குடியேற்றக் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்பதை அங்குக் கிடைக்கும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. சீனக் குறிப்புகள் ஏறக்குறைய கி.பி.616-ஆம் ஆண்டு சத்திரிய அரசன் அங்கு ஆட்சி புரிந்தான் என்பதால், ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே இத்தீவில் இந்தியப் பண்பாடும் கலையும் பரவியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. மேலும் அங்குக் குடியேறிய இந்தியர்கள் நேராக இந்தியாவிலிருந்து தான்சென்றிருக்க வேண்டுமென்பதையும் அங்குள்ள கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தெளிவுபடுத்துகின்றன.

பாலித்தீவின் மக்கள் இன்றும் நான்கு சாதிகளாகப் (Castes) பிரிக்கப்பட்டு இந்துக்களாக வாழ்கிறார்கள். தாங்கள் பின்பற்றும் இந்தியப் பண்பாட்டின் பெருமைகளை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இந்துக்களின் கடவுள்களான விட்டுணு, சிவன், இந்திரன், கணேசன், நந்தி, கிருட்டிணன் ஆகியோரையும் மகாபாரதக் கதைத் தலைவர்களையும் நன்கு அறிந்து வழிபடுகின்றனர். உயர்குடி மக்கள் (Noble Families) உடன்கட்டை ஏறும் பழக்கத்தை (Sati System) மேற்கொண்டிருந்தார்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. இத்தீவு கி.பி. 1919-ஆம் ஆண்டு தச்சுக் (Dutch) கிழக்கிந்தியத் தீவுகளுடன் இணைக்கப்பட்டது.

மலாயா (Malaya): இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை மலாயாவில் கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்தினர். இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மலாயா வழியாக வாணிகத் தொடர்பு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தது. இந்தியப் பண்பாடு அங்குச் செழித்தோங்கியிருந்தது. அங்குள்ள மக்களைச் சைவமும் வைணவமும் கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் மிகவும் கவர்ந்தன. மன்னர்களும் இச் சமயங்களை ஆதரித்தனர். இச்செய்திகளைக் கல்வெட்டுகளும் பழங்காலச் சின்னங்களும் தெளிவுபடுத்துகின்றன. சோழ மன்னன் முதலாம் இராசேந்திரன் கி.பி. 1025-ஆம் ஆண்டு கடாரத்தின் மீது படையெடுத்து அதனை வென்றான். மலாயா கி.பி. பன்னிரணடாம் நூற்றாண்டில் சாவாவின் ஆட்சிக்குட்பட்டது.

சயாம் (Siam): இந்திய நாகரிகம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இங்குப் பரவியிருந்தபோதும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில்தான் பெருமளவு இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டது. தென்னிந்திய வணிகக் குழு சயாமில் இருந்ததைக் கி.பி. எட்டு அல்லதுஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்தியப் பண்பாடும் நாகரிகமும் இந்தியக் கலையும் சிறிது சிறிதாக மேனாம் சமவெளியில் பரவின.

இந்திராதித்தியன் (Indiradityan) என்ற இந்தியப் பெயரைப் பெற்ற ஒரு தாய்க் குல மரபுத் தலைவனே சையாமின் முதலுரிமை பெற்ற அரசனாவான். சயாமிய மக்கள் தேவர்களை வழிபட்டனர். மேலும் விட்டுணு, சிவன் உருவச் சிலைகளும் அங்குப் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சயாமியர்களின் சட்டப் புத்தகத்தில் இந்து தரும சாத்திரம் (Dharmasastras) முக்கிய இடத்தைப் பெறுகிறது.

பூணான் (Funan): இந்தியர்கள், குறிப்பாகத் தென்னிந்தியர்கள் கி. பி. முதலாம் நூற்றாண்டில் சீனாவில் பூணான் அரசை அமைத்தார்கள். மரபுரிமையின்படி கௌண்டியன் (Kaundiyan) என்ற அந்தணனே முதலரசனாவான். பூணானிலிருந்து ஏறக்குறைய கி. பி.245-இல் முருந்தன் (Murundan) என்ற ஓர் இந்திய அரசனுக்கு ஒருதூதுக்குழு அனுப்பப்பட்டதாம். முருந்தனும் பூணானுக்கு ஒரு தூதுவனைஅனுப்பினான். புத்தமும் வைதிகச் சமயமும் அப்போது செழித்தோங்கின. ஏறக்குறைய 500 ஆண்டுகள் செழிப்புற்றிருந்த அவ்வரசு, கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் கம்போடியாவால் முறியடிக்கப்பட்டது.

கம்போடியா (Combodia): கம்போடியாவிலும் பூணானிலும் இந்தியக் குடியேற்றங்கள் கி. பி. முதல் நூற்றாண்டில் ஏற்பட்டன. அதிலிருந்து அம்மக்கள் சிறிது சிறிதாக இந்தியராயினர். கம்போடியாவில் சைவ, புத்த, வைணவ சமயங்கள் நிலவிய போதிலும், சைவம் மற்றவற்றை விடச் சிறப்பான நிலையிலிருந்தது.கம்போடிய மக்களை இந்தியராக்கச் செய்த முயற்சி முழு வெற்றியைத் தந்தது. இந்தியப் பண்பாடு அங்கு நன்கு பரவியிருந்தது என்பதற்கு அங்குள்ள நகரங்கள் இந்துக்கள் பெயரைக் கொண்டிருப்பதே தக்க சான்றாகும். எடுத்துக்காட்டாக தாம்ரபுரா (Tamrapura), விக்ரம்புரா (Vikrampura), துருவப்புரா (Dhruvapura), ஆதியபுரா (Adhyapura) ஆகியவற்றைக் கூறலாம்.

கம்போடியாவில் இலிங்க வழிபாடு சிறப்புற்றிருந்தது. மக்கள் அரி, அரன், கணபதி, பார்வதி போன்ற தெய்வங்களை வழிபட்டனர். சிவனுக்குரிய பல தென்னிந்திய நூல்கள் கம்போடியாவிலிருந்தன. இவர்கள் இந்தியக் கலை நுணுக்கங்களைப் பயன்படுத்தினர் என்பதற்குக் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் சூரியவர்மனால் (Suryavarman II) கட்டப்பட்ட அங்கோர்வாட்டு (Angkor Vat) என்ற நினைவுச் சின்னமே சான்று. இவ்வாறு, இந்திய அரசியல், சமூகம், கலைப்பண்பு முதலியன பற்றிய கருத்துகள் கம்போடியாவில் பின்பற்றப்பட்டன. சம்பா, சயாம் நாடுகளுடன் ஏற்பட்ட போர்களின் விளைவாகக் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் கம்போடியா வீழ்ச்சியுற்றது.

சம்பா (Champa): கம்போடியாவிற்குக் கிழக்கிலும்,அதற்கும் தென் சீனக் கடலோரத்திற்கும் இடையிலுள்ள கியு (Hue) பட்டணத்திற்குத் தெற்கிலும் உள்ள நிலப்பரப்பே சம்பா என்று குறிக்கப்பட்டது. அப்பகுதியில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தியிருக்கலாமென்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றார்கள். சம்பாவை ஆட்சி செய்த முதல் அரசமரபினர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களே.

சம்பாவில் பன்னிரண்டு இந்தியக் குலங்கள் ஆட்சி புரிந்தன. இவற்றுள், முதற் குலம் இந்திய நாகரிகத்தை அங்குத் தோற்றுவித்தது. இந்திரபுராவைத் (Indirapura) தலைநகராகக் கொண்டு, கி. பி. 190-இல் சிரீ மாறன் (Sri Maran) ஆட்சி செய்தான். இவனே சம்பா வரலாற்றில் அறியப்பட்ட முதல் மன்னன். ஏறக்குறைய ஆயிரமாண்டுக் கால வரலாற்றில் சம்பா நாட்டவர் இந்தியராக்கப்பட்டு, சம்பா சமயம், கலைப்பண்பு ஆகியவற்றில் மட்டுமன்றிப் பழக்க வழக்கங்களிலும் ஓர் இந்து நாடாகியது. சைவ சமயம் செழிப்புற்றிருந்த போதிலும், புத்தமும் வைணவமும் நிலைபெற்றிருந்தன.

பர்மா (Burma): இந்தியர் கி. பி. முதலாம் நூற்றாண்டிலேயே தங்கள் குடியேற்றங்களைப் பர்மாவில் ஏற்படுத்தினர். ஆனால், கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை பர்மாவில் இந்தியப் பண்பாடு ஏற்படவில்லை. இந்தியப் பண்பாடு கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்துதான் பர்மாவில் பரவியது. பர்மாவின் மான்சு (Mons) பகுதிக்குக் கீழ்ப் பகுதியில் இந்தியர் குடியேறி, அங்குள்ள பியூ (Pyu) மக்களுடன் வாழ்ந்தனர். அங்கிருந்து ஐராவதி வழியாகத் தெற்கிலும் குடியேறினர். இப்பகுதிகளில் பியூ மொழியிலும் வடமொழியிலும்அமைந்த (Sansrkit) கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சிரீ தர்மராசானுச வம்ச (Sri Dharmarajanuja Vamsa) என்ற இந்து அரசமரபினர் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரை ஆட்சி செய்ததைப் பற்றிய சான்றுகள் உள்ளன. பர்மாவில் இந்து சமயம் தழைத்தோங்கியிருந்தது. பர்மா நாட்டின் கலையில் இந்தியப் பாணி முழுமையாக இருக்கிறது.

சைலேந்திரப் பேரரசு (The Sailendra Empire): சாவா, சுமத்திரா, மலாயா தீபகற்பத்தை உள்ளடக்கிய இப்பேரரசு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. சைலேந்திரப் பேரரசர்களின்

தொன்மைபற்றி நன்றாகத் தெரியாவிட்டாலும் கலிங்கத்தினராக இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். மற்றொரு கருத்து சுமத்திராவின் சிரீ விசய (Sri Vijaya) அரசே பெரிதாகி, சாவா, மலாயாப்பகுதிகளைத் தன்னுள்ளடக்கிச் சைலேந்திரப் பேரரசாக உருவெடுத்தது என்பதாகும். எனினும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஒவ்வொரு பகுதியும் சைலேந்திரப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

சோழ மன்னன் முதலாம் இராசேந்திரன் கி.பி. 1025–இல் சைலேந்திரப் பேரரசின் மீது படையெடுத்து வெற்றி பெற்று அதனுடைய சில பகுதிகளைக் கைப்பற்றினான். வீரராசேந்திரன் கி.பி. 1063–இல் அப்பேரரசின் மீது படையெடுத்துச் சென்று தன் ஆதிக்கத்தை நிலை நாட்டினாலும், அவனுக்குப்பின் வந்தசோழ மன்னர் அதன்மீது தங்கள் கவனத்தைச் செலுத்தவில்லை. சைலேந்திர மக்கள் மகாயானபுத்த மதக் கொள்கைகளைப் பின்பற்றினர். அவர்கள் நாலந்தாப்பல்கலைக் கழகத்தோடும் நாகப்பட்டினத்திலிருந்த புத்த சமய மடங்களோடும் மிகுந்த தொடர்பு கொண்டிருந்தனர்.

இலங்கை (Sri Lanka): இதிகாச காலத்திலிருந்தே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தொடர்பிருந்ததை இராமாயணம் நமக்குத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது. விசயன் இலங்கை மீது படையெடுத்து வெற்றிகொண்டபின் அங்கு இந்தியர்கள் மிக்க அளவில் குடியேறினர். விசயன் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கை மீது படையெடுத்திருக்கலாம் என்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றார்கள். அசோகன் தன் மகனையும் மகளையும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இலங்கைக்கு அனுப்பிப் புத்தசமயக் கொள்கைகளைப் பரப்பச் செய்தான். அதிலிருந்து புத்த சமயம் விரைவாக வளர்ச்சியடைந்தது.

பிற்காலச் சோழர்களின் காலத்தில் குறிப்பாக இராசராசன், அவன் மகன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் இலங்கையின் வடகிழக்குப் பகுதி முழுவதும் பொலனருவா (Polonnaruva) உட்படச் சோழராட்சியின் கட்டுக்குள்வந்தது. இக்காலத்தில் சோழர்கள் அங்குச் சிவன், விட்டுணு, கோவில்களை மிகுதியாகக் கட்டினர். இந்தியப் பண்பாடும் அங்கு மிகுதியாகப் பரவியது.

அயல் நாடுகளில் இந்தியப் பண்பாடு: மேலை நாடுகளிலும் (Western Countries) மற்ற இடங்களில் இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை அமைக்காவிட்டாலும், இந்தியப் பண்பாடு அங்கு மிகுதியாகப் பரவியது. அவ்வாறு பரவிய இடங்களின் விவரங்கள் பின் வருவனவாம்.

திபேத்து (Tibet): இந்தியத் திபேத்துத் தொடர்பு பற்றிக் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பு ஒன்றும் அறியப்படவில்லை. சிரோன் சான் கம்போ (Sron Tsan Gampo) என்ற மன்னன் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் புத்த சமயத்தைத் திபேத்தில் பரப்பினான். இந்துக் கோயில்களும் மடாலயங்களும் (Monasteries) மிகுதியாகக் கட்டப்பட்டன. தெட்சான் (Detson) என்ற மன்னன் பத்மசாம்பவன் (Padmasambava) என்ற அறிஞரை நாலந்தாப் பல்கலைக்கழகத்திலிருந்து கி.பி.747–இல் திபேத்துக்கு வருமாறு அழைத்தான். இதன் விளைவாகத்தான் இலாமெசம் (Lamaism) என்ற சமயம் திபேத்தில் தோன்றியது. இரால்பசன் (Ralpachan) என்ற மன்னன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் புத்த சமயக் கொள்கைகளைத் திபெத்திய மொழியில் மொழி பெயர்க்கச் செய்யப் பல இந்தியர்களை அமர்த்தினான். திபேத்தின் ‘இந்தியக் கல்வியறிவின் களஞ்சியம்’ என்று புகழப்பட்ட குமாரவிசயனின் தந்தை இந்திய நாட்டைச் சேர்ந்தவர்.

மத்திய ஆசியா (Central Asia): இந்தியப் பண்பாடு மத்திய ஆசியாவில் நன்கு பரவியிருந்தது என்பதற்குப் புத்த சமய ஆகமங்களைப் பற்றிய இலக்கியமும், வடமொழி இலக்கண இலக்கியங்களும் நாடகங்களும் அங்குக் காணப்படுதலே தக்க சான்றாகும். பௌத்தத்துறவிகளின் மடங்கள், சுவரோவியங்களுடன் கூடிய குகைகள், பட்டினால் செய்யப்பட்ட தாள்களில் வரையப்பட்ட ஓவியங்கள் முதலியன இந்தியாவின் செல்வாக்கை (Influence) வெளிப்படுத்துகின்றன. சீனா இந்தியாவுடன் மத்திய ஆசியாவின் வழியாகத் தொடர்பு கொண்டது.

சீனா (China): இந்திய சீனப் பண்பாட்டுறவு மிகவும் பழமை வாய்ந்தது. சீனாவில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே புத்தமதக் கொள்கைகள் பரவிய போதிலும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்புதான் செழிப்புறத் தொடங்கியது. சீனாவின் பேரரசன் கி.பி. 65–இல் ஒரு தூதுவனை இந்தியாவிற்கு அனுப்பி, தர்மரட்சா (Dharmaraksha), காசியப்ப மதங்கா (Kasyapa Matanga) என்ற புத்தத் துறவிகளைத் தன் நாட்டிற்குஅழைத்துச் சென்றான். அத்துறவிகள் புத்த சமயக் கொள்கைகளைச் சீன மொழியில் மொழிபெயர்த்தார்கள். ஊ-தி (Wu-Ti) என்ற சீனப் பேரரசன் தன் புத்த சமயக் கொள்கையால் ‘சீனாவின் அசோகன்’ என்று அழைக்கப்படுகிறான். புத்தசமயக் கோட்பாடுகளுக்கிணங்கவிலங்கு

களைக் கொலை செய்வதைத் தடை செய்து, தானும் புத்தத் துறவி போல் வர்ழ்ந்தான். பரமார்த்தன் என்ற அறிஞர் கி.பி. 639-இல்சீனப் பேரரசரின் வேண்டுகோளுக்கிணங்கச் சீனா சென்றுஅங்குத்தாம் கொண்டு சென்ற நூல்களை இருபது ஆண்டுகளில் சீன மொழியில் மொழி பெயர்த்தான். சங் வமிச ஆட்சியில் (கி.பி. 960-1127) சீனாவின் ஓவியக் கலையில் பௌத்தக் கலைப் பண்பு சிறப்புற்றிருந்தது.

கொரியா (Korea): புத்த சமயம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் கொரியாவில் பரவத் தொடங்கி, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவுக்குள் அந்நாடு முழுவதும் பரவியது. இச்சமயம் பத்தாம் நூற்றாண்டுவரை சிறப்புற்றிருந்தது. கொரிய மன்னன் சப்பான் (Japan) நாட்டு மன்னனின் நட்பைப் பெற அம்மன்னனுக்கு ஒரு புத்த சிலையையும் சில புத்த நூல்களையும் அனுப்பினான். இந்தியப் பண்பாடு அந்நாட்டு மக்களுடன் மிகவும் ஒன்றியிருந்தது.

சப்பான் (Japan): சப்பானில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் புத்த சமயம் செழிப்புற்றிருந்தது. சோட்டகு (Shotoku) என்ற மன்னன் புத்த மதத்தை அரசியல் சமயமாக்கினான். இவன் சப்பானின் கான்சுடான்டைன் (Constantine) என்று புகழப்படுகிறான். கணேசர், திருமால் (Vishnu) உருவங்கள் சப்பான் முழுவதிலும் காணப்படுகின்றன. சப்பானின் கலைகளில் இந்திய நுணுக்கங்களை இன்றும் காணலாம்.

மேலை நாடுகளில் இந்தியப் பண்பாடு (Indian Culture in Western Countries): இந்தியக் குடியேற்றங்கள் மேலை நாடுகளில் ஏற்படவில்லையென்றாலும் இந்தியாவின் பண்பாடு அந்நாடுகளில் நன்கு பரவியிருந்தது. வணிக முறையில் ஏற்பட்ட தொடர்பு பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழி கோலியது. மேலை நாட்டு வணிகர்கள் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து பாரசீகர்களின் இந்தியப் படையெடுப்பு வரை பாரசீக வளைகுடாவிலிருந்து சிந்து நதி வழியாகவும், அரேபியா, பாரசீகம் செங்கடல் வழியாகவும், வடமேற்குக் கணவாய்களின் வழியாகவும் இந்தியாவுடன் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கிரேக்க நாட்டு மருத்துவர்கள் இந்திய மருத்துவ முறையைப் பின்பற்றினர் என்பது வரலாற்றறிஞர்களின் கருத்து. அதனால்தான் இந்தியத் தத்துவம் கிரேக்கத் தத்துவ நூல்களில் மிகுந்த இடம்பெறுகிறது. அலெக்சாண்டர் கிரேக்கத்திலிருந்து இந்தியாவின் மீது படையெடுப்பதற்குமுன் இவ்விரு நாடுகளுக்கும் பண்பாட்டுறவு இருந்தது. இந்தியத் தத்துவஞானிகள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் பயணம் செய்து கிரேக்க மொழியையும் கிரேக்கத் தத்துவத்தையும் நன்கறிந்தனர். இந்திய உபநிடதங்களின் (Upanishads) கருத்துகள் அங்குத் தலைமையிடத்தைப் பெற்றிருந்தன.

பேராசிரியர் பர்னட்டு (Prof. Burnet) சமய நம்பிக்கையில் ஒரே தன்மையான கொள்கைகளைக் கிரேக்கர்களும் இந்தியர்களும் கொண்டிருந்தனர் என்று குறிப்பிடுகிறார். அதில் முக்கியமாக மறுபிறவி (Rebirth), ஆவியின் அழியாத் தன்மை (Immortality of the Soul), பிறவிக் கடலிலிருந்து விடுபடும் முறை, உலக அண்டம் ஆகியவற்றில் கிரேக்கர்கள் நம்பிக்கை கொண்டிருப்பது, இந்தியத் தத்துவக் கருத்துகள் அங்குப் பரவியிருந்தன என்பதற்குத் தக்க சான்றாகும்.

அல்பரூனி (Alberuni) என்ற இசுலாமியப் பயணி புத்த சமயம் பாரசீகம் (Persia), ஈராக்கு (Iraq), மோசல் (Mosul), சிரியாவின் எல்லைவரையுள்ள பகுதி ஆகியவற்றிலெல்லாம் சிறப்புற்றிருந்தது என்பதைக் குறிப்பிடுகிறார்.

அராபிய வரலாற்றின் பொற்காலச் சிற்பி எனப்படுகின்ற அருண்-அல்-ரசீது (Harun-al-Rasid) தம் காலத்தில் இந்திய அறிஞர்களைப் பாக்தாது நகரத்திற்கு வரச் செய்து இந்திய மருத்துவம், தத்துவம், கணிதம், வானசாத்திரம் ஆகியவற்றை அராபியில் மொழி பெயர்க்கச் செய்தார்.

உரோமில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவின் தத்துவக் கருத்துகள் பரவத் தொடங்கின. கிறித்துவ எழுத்தாளர்கள், இந்தியத் தத்துவங்கள், சமயம், இந்தியப் பண்பாடு ஆகியவற்றைத் தம் நூல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்கு ஆசியாவில் பிராமண சமயம் பரவியிருந்தது. செனாபு (Zenob) என்ற சிரிய எழுத்தாளன் இந்தியர்களின் குடியேற்றங்கள் யூப்ரட்டிசு நதியின் மேற் பகுதியிலும் (Upper Euphrates) தாரன் (Taron) பகுதியிலும் அமைந்திருந்ததைக் குறிப்பிடுகிறான். அவர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர். அப்பகுதியில் இந்தியர்கள் இரண்டு கோயில்களைக் கட்டினார்கள். இக்கோயில்களைக் கி.பி. 304-இல் போப்பாண்டவர் கிரிகரி (Pope Gregory) அழிக்க முற்பட்ட போது, இந்தியர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும் அக்கோவில்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

பூச்சியத்தைப் பற்றியும் (Zero) பூச்சியத்தானத்தைப் பற்றியும் (Decimal System) இயற்கணிதம் பற்றியும் (Algebra) இந்தியர்களிடமிருந்து ஐரோப்

பியர்கள் கற்றனர். பஞ்ச தந்திரம் போன்ற சிறப்பு வாய்ந்த சில இந்திய நூல்களை ஐரோப்பியர் தம் மொழிகளில் மொழிபெயர்த்துப் படித்தனர். இந்திய உணவு, உடை, அணிகலன்கள் ஆகியவற்றால் மேலை நாட்டவர்கள் கவரப்பட்டார்கள். வாசனைப் பொருள்களும், மெல்லிய நூலிழைகளும், விலையுயர்ந்த கற்களும் இங்கிருந்து அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஐரோப்பிய நாடுகளில் பரவியதுபோல் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இந்தியப் பண்பாடு நன்கு பரவியது.

சி.சி.

துணை நூல்கள்:

**Majumdar, R.C. & Others**, The Imperial Unity, Vol II, The Classical Age, Vol III, History and Culture of the Indian People, Bharatiya Vidya Bhavan, Bombay, 1970.

குப்புசாமி தி.வி., ஆக்சுபோர்டு இந்திய வரலாறு, (தமிழாக்கம்), தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

**Venkataraman, T.K.**, History of Culture, P. Viswanathan & Co, Madras, 1968.

## இந்தியக் கூட்டுக் குடும்ப அமைப்பு

என்பது சமூகவியலில் ஒரு சிறப்பான பகுதியாகும். ஏனென்றால் உலகின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் இந்தியாவில் காணப்படும் குடும்ப அமைப்பு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இந்தியக் குடும்ப அமைப்பில் கணவன், மனைவி, குழந்தைகள், பேரன், பேர்த்தி ஆகிய இவர்களேயன்றி, சகோதரன், அவன் மனைவி, மக்கள் போன்ற பல்வேறு உறவு முறையினரும் இருக்கின்றனர். இவர்கள் எல்லோருடைய வருமானமும் ஒன்றாக வைக்கப்படுகிறது. குடும்பத்தில் வருமானம் இல்லாதவர்களுக்கும் சம மதிப்பும் நிலையும் கொடுக்கப்படுகின்றன. இந்தியக் குடும்ப அமைப்பு ஒரு சமூக உடைமை அமைப்பாக விளங்குகிறது. இந்தியக் குடும்பங்கள் தந்தை வழிக் குடும்பங்களாகவும் பெரும்பாலும் கூட்டுக் குடும்பங்களாகவும் இருக்கின்றன. கூட்டுக் குடும்பத்தினர் ஒரே வீட்டில் வாழ்கின்றனர். இவர்கள் ஒரே உணவை உட்கொள்கின்றனர். தந்தை, மகன், மகனின் மகன், மணமாகாத பெண்கள், மருமகள்கள் போன்றவர்கள் கூட்டுக்குடும்பங்களில் வாழ்கிறார்கள். குடும்பச் சொத்துப் பொதுவானதாக இருக்கிறது. கூட்டுக் குடும்பங்கள் அளவில் பெரியனவாக இருக்கின்றன. கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் அடிப்படை ஒற்றுமையும் கூட்டுறவும் ஆகும். எல்லாரும் ஒரே சமயத்தினராக இருக்கின்றனர். குடும்ப வழிபாடுகளிலும் சடங்குகளிலும் எல்லோரும் கலந்து கொள்கின்றனர். வேளாண்மைக் கூட்டுக் குடும்பங்களில் இருப்பவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்கின்றனர். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குரிய தனிப்பட்ட கடமைகள் இருக்கின்றன. குடும்பத்திற்காக ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பொறுப்பான கடமைகள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டவைகளாகவும் வரையறுக்கப் பட்டவைகளாகவும் இருக்கின்றன. இந்துக்களின் கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் பொதுவான மூதாதைகளின் வழி வந்தனவாக இருக்கின்றன. கூட்டுக்குடும்பங்கள் இந்தியாவில்தான் முதன்முதலில் காணப்பட்டன என்று அறுதியிட்டுக் கூற முடியாது. உலகெங்கிலும் கூட்டுக் குடும்ப அமைப்புகள் இருக்கின்றன. இந்தியாவில் வேளாண்மைக் கூட்டுக் குடும்பங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டுள்ளன. வேலைப் பாகுபாட்டு அமைப்பின் கீழ்க் குடும்பத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும் வேளாண்மைத் தொடர்பான ஏதேனும் ஒரு வேலையைச் செய்கின்றனர். கூட்டுக் குடும்பங்கள் சிக்கனமான முறையில் செலவு செய்து பொருளீட்டுவதற்கு உதவியாக இருக்கின்றன. குடும்பத்திலுள்ளவர்களுக்கு மிகுதியான ஓய்வு நேரம் கிடைக்கிறது. குடும்பத்தில் உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், முதியவர்கள் போன்றவர்கள் கைவிடப்படுவதில்லை. குடும்பம் இத்தகையவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. சமூகப் பயன்மதிப்புகள் கைவிடப்படுவதில்லை. குற்ற நடத்தைகள் உருவாகாமல் கூட்டுக் குடும்பங்களின் கட்டுப்பாடுகள் தடுக்கின்றன. இளைஞர்களும் சிறுவர்களும் சமூகப் பிறழ்வு நடத்தைகளிலும் குற்ற நடத்தைகளிலும் ஈடுபடாவண்ணம் குடும்பக் கட்டுத் திட்டங்கள் தடுக்கின்றன. நிலம் துண்டுகளாக்கப்படாமல் தடுக்கப்பட்டு ஆதாய வழியில் வேளாண்மை செய்ய வழி ஏற்படுகிறது.

கூட்டுக் குடும்பங்களில் இத்தகைய நன்மைகள் இருந்தபோதிலும் குடும்பத்தில் சிலர் கடின உழைப்பாளிகளாகவும் வேறு சிலர் உழைப்பே இல்லாதவர்களாகவும் இருப்பதற்குக் கூட்டுக் குடும்பம் வழி செய்கிறது. மனிதர்களின் தனித்தன்மையையும் ஆளுமையையும் கூட்டுக்குடும்ப அமைப்பு பாதிக்கின்றது. சில நேரங்களில் கூட்டுக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நிலம், சொத்து, ஆகியவற்றிற்காக வழக்கில் ஈடுபடுவதும் உண்டு. உறுப்பினர்கள் பலர் ஒன்றாக இருப்பதால் பெரும்பாலும் குடும்பச் சண்டைகளும் மனத்தாங்கல்களும் ஏற்படுகின்றன. மாமியார்கள் தம் மருமகள்கட்கு இழைக்கும் கொடுமைகளும் கூட்டுக்

குடும்பத்தில்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. கணவன் மனைவியரிடையே ஏற்படக்கூடிய மன நெருக்கமும் அன்பும் வளர வழியில்லாமல் போகிறது. எல்லோருக்கும் சொத்து பொதுவாக இருப்பதால் சேமித்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் குடும்பத்தினர் அளவுக்கு மீறிச் செலவு செய்யத் தொடங்குகிறார்கள். இதனால் சொத்து அழிவதற்கு வழி ஏற்படுகிறது. இவை கூட்டுக்குடும்பத்தில் காணப்படும் குறைகளாகும்.

இவ்வாறு இந்தியக் கூட்டுக் குடும்பங்களினால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன. இக்காலத்தில் கூட்டுக் குடும்பங்கள் குலைந்து தனிக் குடும்பங்களாக அமைகின்றன. ஊரகங்களில் மட்டுமே கூட்டுக் குடும்பங்கள் காணப்படுகின்றன. மக்கள் தொழில் காரணமாக வேறு இடங்களுக்குச் செல்ல நேரிடுவதால் கூட்டுக் குடும்பங்கள் குலைந்து தனிக் குடும்பங்களாக மாறி வருகின்றன. இந்தியாவில் கூட்டுக் குடும்பங்கள் கலைவதற்கு முக்கியமான காரணங்களாகத் தொழில் வளர்ச்சி, மக்கள் தொடர்புச் சாதன முன்னேற்றம், போக்குவரத்து வசதிகள், தொழிற் சாலைகளின் பெருக்கம், தொழில் காரணமாக மக்கள் இடப் பெயர்வு, மேலை நாட்டுப் பண்பாட்டுத்தாக்கம், சமூக, சட்டச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

துணை நூல்:

**Gore. M.S.**, Urbanisation & Family Change, Popular Publication, Bombay, 1968.

**இந்தியக் கூட்டுறவு இயக்கம்**: ஊரக மக்களுக்குக் கடன் வசதிகளை (Credit Facilities) வழங்கும் நோக்கத்துடன் 1904–ஆம் ஆண்டில் இந்திய அரசால் முதல் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. ஆனால் அதற்கு முந்தைய காலத்திலேயே பல வடிவங்களில் கூட்டுறவு அமைப்புகள் இருந்திருக்கின்றன. தொன்றுதொட்டு வழக்கத்திலிருக்கின்ற கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) சகோதரத்துவத்தையும், குடும்ப உறுப்பினர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக அவர்களிடையே தன்னுதவி, சிக்கனம் ஆகிய நற்பண்புகளையும் உருவாக்குகின்றது. குழுவாகத் தங்கள் தொழிலில் முன்னேற்றத்தை நாடி, நம்பிக்கையுடையவர்கள் நேர்மையுடன் செயற்பட்டுச் சீட்டு நிதிகள் (Chit Funds) போன்றவற்றின் மூலம் மூலதனம், சேமிப்பு ஆகியவற்றைப் பெறும் திட்டங்கள் பரவலாக முற்காலத்திலேயே இருந்திருக்கின்றன. சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட பஞ்சாயத்துத் தன்னாட்சி முறையும் பன்னெடுங்காலமாகவே இருந்து வருகிற ஒன்றாகும்.

இக்காலத்தில் காணப்படும் வகையிலான கூட்டுறவு முறை உருவாவதற்கு வலியவர்கள் எளியவர்களைச் சுரண்டிப் பிழைத்ததே மூலகாரணமாகும். இதன் அடிப்படையிலேயே செருமானிய நாட்டவரான இறெய்பீசன் பிரடெரிக்கு வில்கெம் (Reiffeisen Friedrich Wilhelm) என்பவர், உலகிலேயே முதன் முறையாகச் செயற்பட்ட கூட்டுறவு இயக்கத்தை கி.பி. 1818–ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். இங்கிலாந்தில் இராபர்ட்டு ஓவனின் (Robert Owen) கோட்பாடுகளைப் பின்பற்றி, இராக்டேலைச் (Rochdale) சார்ந்த கம்பளி ஆடைத் தொழிலாளர்கள் சில்லறை வணிகர்களின் சுரண்டலைத் தவிர்க்க, கி.பி. 1844–ஆம் ஆண்டில், ''இராக்டேல் சமூக சம உரிமை முன்னோடி'' (Rockdale Society of Equitable Pioneers) என்ற நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கினர். தொடர்ந்து தென்மார்க்கு (Denmark) போன்ற பிற ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவத்தின் தீமைகளை எதிர்க்கும் இயக்கமாகக் கூட்டுறவு முறை சிறப்புடன் வளர்ச்சி பெற்றது.

சிறப்பியல்புகள்: கூட்டுறவு என்பது மக்களால் நடத்தப்படும் ஓர் அமைப்பாகும். இது ஆதாய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. முதலாளித்துவத்தின் போட்டி, தன்னலம், சுரண்டல் ஆகியவற்றை ஒழிக்க, தனிப்பட்ட பலர் ஒருங்கிணைந்து ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் மூலம் தங்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த முனைவதாகும். இது பல சமூகச் சிக்கல்களையும் பொருளாதார இடையூறுகளையும் மேற்கொள்ள மக்கள் கட்டாயம் ஏதுமின்றித் தாமாகவே முன்வந்து நடத்துகிற இயக்கமாகும். கூட்டுறவு இயக்கம் உறுப்பினர்களிடையே தன்னுதவி (Self help), சிக்கனம் ஆகிய தனிப் பண்புகளை வளர்ப்பதுடன் கூட்டுப் பொறுப்பையும் வலியுறுத்துகிறது. அவ்வப்போதுள்ள பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தாமல் அமைதியான முறையில் நலிவுற்ற எளிய சமூகத்தினரை வளம்பெறச் செய்வது கூட்டுறவின் முக்கிய நோக்கமாகும்.

குறிக்கோள்கள்: கூட்டுறவு இயக்கம் 'அனைவருக்கும் ஒருவர், ஒவ்வொருவருக்கும் அனைவர்' (All for each Each for all) என்ற உயர்ந்த நோக்குடையது. தொழிலில் நீதியை நிலைநாட்டுதல் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் (Production and Distribution) தனி ஒருவரிடம் செல்வம் குவிவதைத் (Accumulation of Wealth) தடுத்தல், இடைத்தரகர்களின் முறையற்ற தலையீடுகளைத் தவிர்த்தல் ஆகியவை கூட்டுறவின் கருப்பொருள்களாகும். கூட்டுறவு மக்களாட்சியின் அடிப்படையில் (Democratic Principles)

அமைக்கப்பட்டு உறுப்பினர்களிடையே சமத்துவத்தையும் ஒற்றுமை உணர்ச்சியையும் வளர்த்துப் பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டுகிறது.

பொருளாதாரப் பயன்கள்: பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவைகளான மூலதனம், ஆக்கத்திறன், தொழில்நுட்பம், தொழிற்றுணிவு போன்றவை பற்றாக்குறையாக உள்ள வளரும் நாடுகளில் இவற்றைத் திரட்டுவதற்கும் பெருக்குவதற்கும் கூட்டுறவு இயக்கம் இன்றியமையாதது. தொழில் திறமையும் தொழிற்றுணிவுமுடையவர்களும் முதலீடு செய்வதற்குரிய நிதியுடையவர்களும் தாங்களாகவே கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்தால், மூலப்பொருள்களையும் பிற உற்பத்திக் காரணிகளையும் மலிவான விலையிலும் எளிதிலும் பெற இயலும். ஒரு சில வாய்ப்புகளையுடையவர்கள் கூட்டாகச் சேர்வதால் பேரளவு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு நிறையப் பயன்பெறுகின்றனர். கூட்டு முயற்சியில் கடன் வசதிகளை வட்டியின்றி அல்லது குறைந்த வட்டிக்குப் பெறவும் வாய்ப்புகள் உண்டு.

கூட்டுறவு முறை தொழிற்றுறைக்கும் வேளாண்மைத் துறைக்கும் ஏற்றதாகும். வேளாண்மைத் துறையில் நிலச் சீர்திருத்தம், மண் பாதுகாப்பு, நீர்ப்பாசனம் போன்ற நீண்டகாலத் திட்டங்களைச் செயற்படுத்தவும் அரசின் திட்டங்களை மட்டும் சார்ந்திராமல் தங்கள் தேவைச் சூழ்நிலைக்கேற்பத் தாங்களே இவற்றைச் செயற்படுத்தவும் கூட்டுறவு பேருதவியாயிருக்கிறது. வேளாண்மைக் கருவிகள், நுட்ப அறிவு, இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் விதைகள் ஆகியவற்றைக் கூட்டுறவு முறையில் பெறுவது, மலிவாகவும் நல்ல தரமானதாகவும் உள்ளது. உரம், மருந்து, விதைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெருக்குவதற்கும் வாய்ப்பேற்படுகிறது. பாதுகாப்பு வசதிகள் பெருகுவதால் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்ய முடிகிறது. மொத்தத்தில் கூட்டுறவு முறையினால் நல்ல தரமான விளைபொருள்கள் குறைந்த செலவில் உற்பத்தியாகி வேளாண்மையினரின் நேரடி வருவாய், சுரண்டல்கள் எவையுமின்றி மிகப் பெருக்கமடைகிறது.

வேளாண்மைத் துணைத் தொழில்களாகிய பால் பண்ணை, கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், குடிசைத் தொழில், கைவினைத் தொழில் போன்ற ஊரகத் தொழில்களின் வளர்ச்சிக்குக் கூட்டுறவு முறை சிறந்ததாகும். வேளாண்மையில் காணப்படும் கால வேலையின்மையை (Seasonal unemployment) ஆக்க வழியில் திருப்பி முழு வேலைவாய்ப்பை உருவாக்கக் கூட்டுறவு முறை உகந்ததாகும். இது ஊரக மக்களின் சேமிப்புத் திறனையும் வருவாயையும் பெருக்கி, சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும் செல்வ வளத்தையும் உண்டாக்குகிறது. பேராசிரியர் மார்சலின் (Marshall) கருத்துக்கிணங்க, 'கூட்டுறவு இயக்கம் மக்களிடையே உயர்ந்த விருப்பங்களை உருவாக்கி அவற்றை அமைதியான உறுதியான முறையில் பெற விழைகிறது. கூட்டுறவு முறையில் உறுப்பினர்கள் மூல வளங்களின் உதவியுடன் கூட்டாகத் தேவைப்படும் தேவைகளைக் கூட்டு முயற்சியில் நிறைவுபெறச் செய்து, தனிப்பட்டவர்கள் தம் ஆற்றல்களைத் தாமாகவே வளர்த்துக் கொள்ள உதவுகின்றனர்'.

இந்திய வேளாண்மையினரை உயர்ந்த வட்டியில் கடன் வழங்கும் வட்டித் தொழிலரின் (Money lenders) பிடியிலிருந்து விடுவிக்கவும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், ஊரகங்களில் முடங்கிக் கிடக்கும் திறமை, முதலீடு, வளம் ஆகியவற்றை ஆக்கவழிக்கு ஒன்று திரட்டவும், சேமிப்பு வழக்கத்தை வளர்க்கவும் வேளாண்மைக்குத் தேவையான நிதி வசதிகளைப் பெருக்கவும் கூட்டுறவு இயக்கமே சிறந்தது என 1904-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டுறவுச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் (Co-operative Credit Societies) நாடு முழுவதும் தொடங்கப்பட்டன. சட்டமுறைப்படி இந்நிறுவனங்கள் ஊரகங்களிலும் நகரங்களிலும் தனித்தனியே அமைக்கப்பட்டு அரசாங்கத்தின் முழு ஆதரவையும் பெற்றன. ஊரக நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டவைகளாகவும் (Limited Company), நகர நிறுவனங்கள் வரையறுக்கப் படாதவைகளாகவும் (Unlimited Company) செயற்பட அனுமதிக்கப்பட்டன. இவை செயற்படும் வட்டார எல்லைகள் தனிச் சமுதாயத்தினருக்கு, சாதியினருக்கு, பழங்குடியினருக்கு (Tribes) என வரையறுக்கப்பட்டன. உறுப்பினர்கள் தங்கள் தனிச் சொத்துகள், அசையும், அசையாப் பிணையங்கள் ஆகியவற்றின் பேரில் கடன்கள் பெறத் தகுதி பெற்றனர்.

ஒரு கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனத்திலிருந்து மற்றொரு கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனம் கடன் பெறக் கூட்டுறவுப் பதிவாளர் (Registrar) அனுமதி வழங்கினால் போதுமானதாகும். ஊரக நிறுவனங்கள் அவற்றின் ஆதாயத்தை உடனடியாக உறுப்பினர்களுக்குப் பங்கிட்டு வழங்குவதை அனுமதிக்கவில்லை. நகர நிறுவன உறுப்பினர்கள் ஆதாயத்தில் 25 விழுக்காட்டை ஆதாயப் பங்காகப் பெற்றனர். பொதுவாக, ஆதாயத்தில் ஒரு பகுதி சட்டப்படியான நிலையான காப்பு இருப்பு நிதியாகப் (Statutory

Reserve Fund) பாதுகாக்கப்பட்டது. நிறுவனச் செயற்பாட்டில் உறுப்பினர்கள் மக்களாட்சியுரிமை பெற்று, ஒருவருக்கு ஒரு வாக்குரிமை (One man one vote) என்ற கோட்பாடு பின்பற்றப்பட்டது. இந்நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இவற்றிற்கு வருவாய் வரி, முத்திரைக்கட்டணம் (Stamp duty), பதிவுக் கட்டணம் (Registration Fee)முதலிய வற்றிலிருந்து விலக்குகள் அளிக்கப்பட்டன. கூட்டுறவு நிறுவனங்களைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் கூட்டுறவுப் பதிவாளருக்கு மிகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் 1904-ஆம் ஆண்டுச் சட்டப்படி கடன் வசதிகளை அளிக்கும் உரிமையை மட்டுமே பெற்றிருந்ததாலும், மையக் கூட்டுறவு நிறுவனம் என்று ஒன்று இல்லாமையாலும் பலவகைகளில் முன்னேற்றமடைய முடியாத நிலையில் கட்டுப்பட்டிருந்தன. இவற்றை மேற்கொள்ளும் நோக்குடனும் 1912-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமுறைப்படி கூட்டுறவு நிறுவனங்கள், கடன் வசதிகள் அளிக்கும் நோக்கம் மட்டுமன்றிப் பிற நோக்கங்களுடனும் அமைக்கப்படலாம். இவை செயற்படும் எல்லைகள் தனிப்பட்ட வட்டாரம், சாதி, பழங்குடி, சமுதாயத்தினருக்கு என வரையறுக்கப்படாமல் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 10 பேருக்குக் குறையாமல் உறுப்பினர்களாய்ச் சேர்ந்தால், கூட்டுறவு நிறுவனத்தை அமைத்துக் கொள்ளலாம் என மாற்றப்பட்டது. ஒருவரின் வரையறுக்கப்பட்ட பங்கு மூலதனம் (Limited Share in Paid up Capital) உரூபாய் 1000 ஆகும். தனி ஒருவர், மொத்தப் பங்கு மூலதனத்தில் (Total Share Capital) 20 விழுக்காட்டிற்கு மேல் செலுத்தலாகாது. உறுப்பினர்களல்லாதவர்களிடமிருந்து நிறுவனம், வைப்புகள் (Deposits), கடன்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். நிகர வருவாயில் 3/4 விழுக்காடு, நிலையான காப்பு இருப்பு நிதிக்குச் செலுத்தப்பட வேண்டும். கூட்டுறவுப் பதிவாளர், கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு, நிதி நிலை, செயன்முறை ஆகியவற்றைக் கண்காணித்து, அவை சீரான முறையில் செயற்படத் தேவையான கட்டுப்பாடுகளை விதிக்கவும், நடவடிக்கைகள் எடுக்கவும் கூடுதலான அதிகாரங்களைப் பெற்றார். இச்சட்டத்திற்குப் பின்னர் கூட்டுறவு நிறுவனங்கள் விரைவாக வளர்ச்சியடைந்தன. பல்நோக்கங்களுடன் கூட்டுறவு அமைப்புகள் நிறுவப்பட்டன. நுகர்வோர் நலன், வாணிகம், சேமிப்பு, விலைக் கட்டுப்பாடு ஆகிய நோக்கத்துடன் பெருகின கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு அரசு 1915-ஆம் ஆண்டில் எட்வர்டு மெக்லகான் (Edward Maclagan) தலைமையில், ஓர் ஆய்வுக் குழுவை அமர்த்தியது. இக்குழு 1916-ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை இன்றும் கூட்டுறவு நிறுவனங்களின் திறமையான செயற்பாட்டிற்கு இன்றியமையாத கருத்துக் கோட்பாடுகளைக் கொண்டது எனப் போற்றப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருகிறது. இவ் அறிக்கையின் சிறப்புக் கூறுகளாவன: (1) கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கும் கடன்கள் உற்பத்தி நோக்கமுடையதாகவும் ஆக்கத் திறன் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆக்க முறையில் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் கடன்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை நிறுவனங்கள் கண்காணித்துக் கடன் தொகையை முன்பணமகாவும் தவணை முறையிலும் வழங்க வேண்டும். (2) கூட்டுறவு நிறுவன உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் வழங்க வேண்டும். (3) நிறுவனங்களின் மேலாண்மைப் பணிகளை ஏற்று நடத்துபவர்கள் உழைப்பூதியமின்றி (Honorary) பணியாற்ற வேண்டும். இவர்களுக்குப் பணமாகவோ பணியாகவோ பொருளாகவோ ஊதியம் அளிக்கப்படலாகாது.(4)நிறுவனத்தில் கடன் பெறுபவர்களும் பணியாற்றுபவர்களும் தங்கள் சொல்லிலும் செயலிலும் நேர்மையாக உண்மைக்கு அடிமைப்பட்டு அறநெறி தவறாதவர்களாயிருக்க வேண்டும். (5) நிறுவனம் செயற்படும் வட்டார எல்லை மிகப் பரந்ததாயிராமல் சிறியதாக, உறுப்பினர்கள் யாவரும் நிறுவனத்தின் பணியில் முழு ஈடுபாடுடன் செயற்படக் கூடியதாயிருக்க வேண்டும். சமூக ஒட்டிணைவாற்றல் (Social Cohesion), நல்வாழ்வுக்கான கூட்டுறவுச் சார்புத் தொடர்பு, ஒத்துணர்வு ஆகியவை உறுப்பினர்களிடையே வேரூன்றி இருக்க வேண்டும். ஊக வாணிக நடவடிக்கையை (Speculative Trading) எக்காரணத்தினாலும் பின்பற்றலாகாது. (7) உறுப்பினர்கள் சிக்கனம், சேமிப்பு ஆகியவற்றின் மூலம் மூலதனத்தைப் பெருக்க வலியுறுத்தப்படவேண்டும். (8) வழங்கப்பட்ட கடன்களைத் திரும்பப் பெறுவதிலும் தவணை முறையில் கடன்களை வழங்குவதிலும் குறிப்பிட்ட ஒப்பந்தக் காலம், விதிகள் ஆகியவற்றில் சிறிதும் தவறாது செயற்பட வேண்டும். (9) கடன் நிதி நிறுவனங்கள் தவிர, பிற கால்நடைக் காப்பு நிறுவனம், நுகர்வோர் நிறுவனம், விற்பனை நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தவேண்டும்.(10)கூட்டுறவுநிறுவனங்களில்நிலையான காப்பு இருப்பு நிதி கட்டாயமாக உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். (11) நிதி நிலை அவ்வப்போது திறமையான தணிக்கையர் மூலம் தணிக்கை செய்யப்பட்டு எப்பொழுதும் பொதுமக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற வேண்டும்.

மெக்லகான் அளித்த அறிக்கையை அரசு ஏற்றுச் செயற்படுத்தியமையால் கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை, 1912-இல் 8117-ஆக இருந்தது 1921-ஆம் ஆண்டில் 52,182 ஆகப் பெருகியது. மைய அரசின் ஆதரவைத் தொடர்ந்து இந் நிறுவனங்கள் பெற்றாலும் நடைமுறையில் இவை தனியார் துறை நிறுவனங்களாக, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்பட்டன. மாநிலங்கள் அவற்றின் தேவைக்கேற்றபடி கூட்டுறவுச் சட்டங்களை இயற்றின. அவற்றில் குறிப்பிடத்தக்கவை, 1925-ஆம் ஆண்டு பம்பாய்க் கூட்டுறவுச் சட்டம், 1932-ஆம் ஆண்டுச் சென்னைக் கூட்டுறவுச் சட்டம், 1935, 1936, 1940-ஆம் ஆண்டுகளில் முறையே தோன்றிய பீகார், ஒரிசா, குடகு (Coorg) வங்காளம், ஆகிய மாநிலங்களின் சட்டம் ஆகியவையாம். தென்னிந்திய மாநிலங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் வேளாண்மையினருக்குப் பேருதவியாயிருந்தன. அதனைத் தனியாகக் குறிப்பிட்டுப் பாராட்டிய அரசு வேளாண்மை ஆணையம் (Royal Commission on Agriculture) 1926-27-இல் தன் அறிக்கையில், "கூட்டுறவு தோல்வியடையுமானால் இந்திய ஊரகங்களின் நம்பிக்கையும் வளர்ச்சியும் தோல்வியடையும்" எனக் கருத்து தெரிவித்தது. கடன் நிதி நிறுவனங்கள் மட்டுமல்லாமல், சிறு தொழில், கைவினைத் தொழில் ஆகியவற்றின் முன்னேற்றத்திலும் கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்து பங்கு வகிக்கலாயின.

உலகப் பெரும் மந்தக் காலமான (Great World Depression) 1930-31-ஆம் ஆண்டுவாக்கில் இந்திய வாணிகமும் வேளாண்மையும் பெரிதும் பாதிக்கப் பட்டுக் கூட்டு நிறுவனங்களும் மந்த நிலையால் இழப்புகளுக்குள்ளாயின. வளர்ச்சி தடைபட்டு கடன்கள் திரும்பச் செலுத்தப்படாத நிலையில் நிதிச் சுமைகள் பெருகின. கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாட்டையும் பொதுப் பொருளாதார நிலைமையையும் ஆராய, மைய அரசு மைய வங்கிக் குழுவை 1931-இல் அமர்த்தியது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1934-ஆம் ஆண்டு இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) உருவானது. அதனைத் தொடர்ந்து இவ்வங்கியின் ஒரு துறையாக வேளாண்மை நிதிப் பிரிவு செயற்படத் தொடங்கியது. இப்பிரிவு கூட்டுறவு நிறுவனங்களின் நடவடிக்கை, மேலாண்மை ஆகிய பொறுப்பை ஏற்று நடத்துகிறது. இதனால் கூட்டுறவுத் துறை மைய இருப்பு வங்கியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்படுகிறது எனலாம்.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (1939-45) கூட்டுறவு நிறுவனங்கள் செழித்தோங்கின. வேளாண்மைப் பொருள்களின் விலைகள் உயர்ந்தமையால் உழவர்களின் வருமானம் உயர்ந்தது. கூட்டுறவு நிறுவனங்கள் பெற வேண்டிய கடன்கள் செலுத்தப்பட்டன. நிறுவனங்களின் நிதி நிலைமை சாதகமான வகையில் உறுதிசெய்யப்பட்டது. கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள், நுகர்வோர் நிறுவனங்கள் மூலமாக அரசு அவசரத் தேவைப் பண்டங்களை மக்களுக்குப் பங்கீடு செய்ய முன்வந்தது. மக்களிடையே தங்கள் நம்பிக்கையையும் செல்வாக்கையும் வளரச் செய்ய கூட்டுறவு நிறுவனங்கள், இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டன. அவசரக் காலத்தில் இவற்றின் பணிகள் அரசுக்கும் மக்களுக்கும் பேருதவியாயிருந்தன. இக்காலத்தில் ஊக வாணிகம், கறுப்பு அங்காடி (Black Market) ஆகியவற்றின் பிடியிலிருந்து கூட்டுறவு இயக்கமே மக்களைப் பாதுகாத்தது.

கூட்டுறவு இயக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்த அரசு, மேலும் அதை வலுப்படுத்த இரண்டு ஆய்வுக் குழுக்களை டி.ஆர். காட்கில் (D.R.Gadgil), சரெய்யா (Saraiya) ஆகிய திட்ட வல்லுநர்களின் தலைமையில் முறையே 1944, 1945-ஆம் ஆண்டுகளில் அமர்த்தியது. காட்கில் குழு கூட்டுறவு நிறுவனங்களினால் மட்டும் இந்திய வேளாண்மையின் நிதித் தேவையை நிறைவு செய்ய இயலாது; மாநில அரசுகளும் நிதி உதவியை இவற்றிற்கு அளிக்க வேண்டும் எனக் கூறியது. மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வட்டாரங்களில் வேளாண்மை நிதிக் கழகங்கள் (Agricultural Credit Corporation) நிறுவப்பட்டு, அவற்றின் கிளைகள் ஊரகங்களில் செயற்பட வேண்டும் எனவும் காட்கில் குழு பரிந்துரைத்தது. இவற்றை உடனடியாகச் செயற்படுத்தக்கூடிய திறமையான மேலாண்மை, நிதி, மனித ஆற்றல் வளம் ஆகியவற்றில் பற்றாக்குறை காணப்பட்டதால் 1947-ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்தியக் கூட்டுறவுப் பதிவாளர்கள் மாநாட்டில் பதிவாளர்கள் சரெய்யாக் குழுவின் பரிந்துரைகளை உடனடியாகத் தங்கள் வட்டாரங்களில் செயற்படுத்துவதற்காக ஏற்றுக்கொண்டனர்.

சரெய்யாக் குழுவின் சிறப்புக் கூறுகளாவன: (1) இந்திய ஊரக வேளாண்மையினரின் வருவாயை உயர்த்தி, உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அளிக்க அவர்களின் எல்லாப் பொருளாதார நடவடிக்கைக்கும் கூட்டுறவு நிறுவனம் மையத் தூண்டுகோலாகச் செயற்பட வேண்டும். (2) அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் 50 விழுக்காடு ஊரகங்களும் கூட்டுறவு இயக்கத்தில் ஒன்றிணைந்தவைகளாக வேண்டும். (3) ஊரக கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களின் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

50. (4) ஊரகங்களில் விற்பனை, கொள்முதல், பிற வாணிக நடவடிக்கைகள் யாவும் கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக நடைபெற வேண்டும்.

இந்திய விடுதலைக்குப் பின் பல்நோக்குப் பணிக் கூட்டுறவுகள் வளர்ச்சி பெற்றன. ஊரக வளர்ச்சியிலும் கடன் நிதி வசதிகள் அளிப்பதிலும் இவற்றின் சிறப்புப் பங்கை நிலைபெறச் செய்ய அரசு முடிவு செய்தது. இதற்கான முயற்சிகள் பல எடுக்கப்பட்டன. ஊரக வங்கி ஆய்வுக் குழு (Rural Banking Enquiry Committee) 1950-ஆம் ஆண்டில் காட்கில் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதினால் மட்டுமே ஊரக நிதித் தேவையை நிறைவு செய்ய முடியும் எனக் கருத்துத் தெரிவித்தது. அதன்படி ஊரகக் கடன் வசதிகளை ஊரக நிதிக் கழகத்தின் மூலம் மாநில நிதி உதவியுடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தும் வழிமுறைகளை ஆராய, இந்திய மைய இருப்பு வங்கி, கூட்டுறவு இயக்கம், வங்கியியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்களைக் கூட்டி மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தி, திட்டக் கருத்துகளைத் திரட்டியது. இவற்றுடன் கூட்டுறவுத் திட்டக் குழுவின் 1949-ஆம் ஆண்டு அறிக்கை, அனைத்திந்திய ஊரகக் கடன் நிதிக் குழுவின் (All India Rural Credit Committee) 1954-ஆம் ஆண்டு அறிக்கை, வைகுந்த லால் மேத்தா (Vaikunth Lal Mehta) குழுவின் 1960-ஆம் ஆண்டு அறிக்கை முதலியவைகளின் ஆய்வுக் கருத்துகளின் அடிப்படையில் ஊரகங்களின் தேவைகள் கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாகவும் பிற வங்கிக் கிளைப் பிரிவுகளின் மூலமாகவும் நிறைவு செய்யப்படுகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தனியிடம் பெற்று முன்னேற்றமடைந்து வருகின்றன. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களின் மறுசீரமைப்பிற்காக உரூ. 34 கோடி செலவிடப்பட்டது. மூன்றாம், நான்காம் திட்டங்களில் முறையே உரூ. 77 கோடி, உரூ. 258 கோடி முன்னேற்றத் திட்டங்களுக்கெனச் செலவிடப்பட்டன. கூட்டுறவு இயக்க வளர்ச்சித் திட்டங்களுக்கென ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உரூ, 376 கோடி செலவிடப்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுத் துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதி உரூ. 475 கோடியாகும். இத்தகைய முதலீட்டால் ஏற்பட்ட கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சியை அட்டவணை 1-இல் காணலாம்.

அமைப்பு: கூட்டுறவு நிறுவனங்கள் ஊரகங்களிலும் நகரங்களிலும் தனித் தனியாக நிறுவப்படுகின்றன. இவை கடன் நிதிஅளிக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் (Credit Societies), பிற கூட்டுறவு நிறுவனங்கள் (Non-Credit Societies) என இரு பெரும் பிரிவின் கீழ்ச் செயற்படுகின்றன. மொத்த நிறுவனங்களுள் 80 விழுக்காடு ஊரகங்களில் காணப்படுகின்றன. இவற்றில் 60 விழுக்காடு கடன் நிதி வசதிகளை அளிக்கும் நிறுவனங்களாகும். கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கான அனுமதியைக் கூட்டுறவுத் துறைப் பதிவாளரிடமிருந்து பெற வேண்டும். இந் நிறுவனங்களின் மூலதனம், உறுப்பினர் கட்டணம், வைப்புகள், பங்குகள் ஆகியவையும் அரசின் நிதி உதவி, நிதி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறும் கடன் வசதிகள் ஆகியவையுமாம்.

கடன் நிதி நிறுவனங்கள் குறுகிய கால, நீண்ட

அட்டவணை-1

கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி

| வ.எண் | ஆண்டு | கூட்டுறவு நிறுவனங்கள் (இலட்சத்தில்) | உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | பங்கு மூலதனம் (கோடி உரூபாயில்) | நடப்பு முதல் (கோடி உரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1) | 1950-51 | 1.0 | 137 | 45 | 276 |
| 2) | 1960-61 | 3.3 | 342 | 222 | 1312 |
| 3) | 1970-71 | 3.2 | 591 | 851 | 6810 |
| 4) | 1973-74 | 3.3 | 734 | 1226 | 9649 |

காலக் கடன்களை வழங்குகின்றன. அவ்வாறு வழங்குவதில் மையக் கூட்டுறவு வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் சிறப்பாகப் பங்கேற்கின்றன. மையக் கூட்டுறவு வங்கி தன் கட்டுப்பாட்டிற்குள் கூட்டுறவு நிறுவனங்கள் செயற்பட அவற்றிற்குத் தேவையான நிதி உதவிகளையும் தொழில்நுட்ப அறிவுரைகளையும் வழங்குகிறது. அது கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பண அங்காடிக்கும் இடையே இணைப்புப் பாதையாகச் செயற்படுவதுடன், தேவைப்படும் எல்லாவகையான வங்கியியல் பணிகளையும் ஆற்றுகிறது. மையக் கூட்டுறவு வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கிகளைக் கண்காணிக்கின்றன; அவற்றைத் தம் கட்டுப்பாட்டிற்குள் செயற்பட வைத்துக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்குத் தலையாய அமைப்பாக விளங்குகின்றன. கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்கும் மைய இருப்பு வங்கிக்கும் இடையே இணைப்புப் பாதையாக மாநிலக் கூட்டுறவு வங்கி செயற்படுகிறது. இதனை மைய இருப்பு வங்கி கண்காணித்துத் தன் கட்டுப் பாட்டு முறைகளுக்குள் செய்ற்பட வைக்கிறது.

மையக் கூட்டுறவு வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி தவிர இத்துறையில் குறிப்பிடத்தக்க சிறப்பு வங்கி நில முன்னேற்ற வங்கியாகும் (Land Development Bank). இவ்வங்கி ஆயுள் காப்பீட்டுக் கழகம், வணிக வங்கிகள், மைய இருப்பு வங்கி, கூட்டுறவு வங்கிகள், மைய மாநில அரசுகள் ஆகியவற்றிடமிருந்து கடன் ஆவணங்களைப் பெற்றுத் தன் மூலதனத்தைப் பிற மூலவளங்களோடு பெருக்கிக் கொள்கிறது. நில முன்னேற்ற வங்கி வேளாண்மையினர் மண் பாதுகாப்பு, சிறிய நீர்ப்பாசனத் திட்டம், தொழில்நுட்ப உழவு எந்திரங்கள்ஆகியவற்றிற்காக நீண்டகாலத் தவணை முறையில் கடன் நிதி வசதிகளைப் பெற உறுதுணையாயிருக்கின்றது. நாகாலாந்து தவிர ஏனைய மாநிலங்களில் 1300 க்கும் மேலாக இவ்வங்கிகள் செயற்படுகின்றன.

ஊரகங்களில் மின்சக்திப் பயன்பாட்டை வளர்ச்சியடையச் செய்ய ஊரக மின் கழகம் (Rural Electrification Corporation) ஊரக மின்சாரக் கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன் நிதி உதவிகளை வழங்குகிறது. வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி, பதப்படுத்தல், பாதுகாத்தல், விற்பனை ஆகிய பல்வேறு கட்டங்களில் இவற்றின் தேவைக்கேற்பக் கூட்டுறவு நிறுவனங்களை அமைத்து அவை வேளாண்மையினரின் நலனைப் பாதுகாக்கும் வண்ணம் செயற்படத் தேசிய கூட்டுறவு முன்னேற்றக் கழகம்(National Co-operative Development Corporation) உதவிகளை வழங்குகிறது. தேசிய, மாநில அளவில் நுகர்வோர் கூட்டுறவுகளும் விற்பனைக் கூட்டுறவுகளும் செயற்படுகின்றன. இந்திய உழவர் இரசாயன உரக் கூட்டுறவு நிறுவனம் (Indian Farmers, Fertilizer Co-operative) உர உற்பத்தியிலும் பங்கீட்டிலும் முன்னேற்றம் காண மைய அரசின் உதவியுடன் உர உற்பத்தி செய்கிறது.

துண்டுபட்டுச் சிதறுண்ட நிலங்களையுடைய உழவர்களும் நிலமற்ற உழவர்களும் கூட்டுறவு முறையில் நிலங்களை ஒருங்கிணைக்கவும் இணைந்து பயிர் செய்யவும் கூட்டுறவுப் பண்ணைகள் உள்ளன. இவற்றின் வெற்றிக்காக மைய அரசும், மைய இருப்பு வங்கியும் அவ்வப்போது உழவர்களுக்குப் பயிற்சியும் அறிவுரையும் வழங்குகின்றன. இதற்கெனத் தேசிய கூட்டுறவுப் பண்ணை ஆலோசனை வாரியம் (National Cooperative Farming Advisory Committee) நிறுவப்பட்டுள்ளது.

நாட்டில் பரவலாகச் சிறு தொழில்கள், பால் பண்ணை, வீடுகட்டுதல், மின்சக்தி, அச்சுத் தொழில், நீர்ப்பாசனம், மீன் வளர்ப்பு, கோழி வளர்த்தல், ஆயுள் காப்புறுதி, போக்குவரத்து போன்ற பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலும் கூட்டுறவு இயக்கம் பரவியுள்ளது. நாட்டின் வருவாயையும் தனி மனிதன் வருவாயையும் பெருக்கக் கூட்டுறவு முறை பெரிதும் வரவேற்கத்தக்கது என்பதற்கு வளம் பெற்று வரும் வேளாண்மைத் துறை சான்று பகர்கின்றது. தொழிற்றுறையிலும் பணித்துறையிலும் நேரிய முறையில் ஆதாயம் ஈட்டவும், பொருளாதாரம் வளம் பெறவும் கூட்டுறவு இயக்கம் மிகச் சிறந்தது எனக் கருதப்படுகிறது.

துணை நூல்கள்:

**Tyagi R.B.**, Recent Trends in the Cooperative Movement in India, Asia Publishing House, Madras, 1968.

**Sami Uddin & Mahfoozur Rahman**, Co-operative Sector in India, S. Chand and Company Limited, New Delhi, 1983.

***இந்தியச் சசானியர் நாணயங்கள்***: பாரசீகத்தை ஆட்சி புரிந்து வந்த சசானியர் தங்கள் ஆதிக்கத்தை இந்தியாவில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வடமேற்குப் பகுதியில் ஏற்படுத்தி ஆட்சி புரியத் தலைப்பட்டனர். இவர்கள் ஆட்சி செய்த பகுதிகளில் தம் பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். இந்தோ சசானியர் நாணயங்கள் (Indo-Sassanian Coins) வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களில் வெளியிடப்பட்டன. முதலாம் ஆர்மைசுடு (Hormizd I) என்னும் அரசர் தங்கநாணயங்களை வெளியிட்

டார். சசானிய நாணயங்களின் ஒரு பக்கம் மார்பளவு உள்ள அரசரின் தலைப்பகுதியும் தீக்குண்டமும் (Altar) அதன் இருமருங்கிலும் ஊழியர்கள் இருவரின் உருவமும் காணப்படுகின்றன. இவ்வகை நாணயங்கள் சாபுர் (Sapur), முதலாம் அர்தாசீர் (Ardashir I) இரண்டாம் அர்தாசீர் ((Ardashir II)), முதலாம் பிரோசு (Firuz I), முதலாம் ஆர்மைசுடு (Hormizd I) போன்ற அரசர்களால் வெளியிடப்பட்டன. இந் நாணயத்தின் அரசர் 'குசான மால்கா' (Kushana Malka) எனக் குறிக்கப்பட்டுள்ளார்; சில நாணயங்களில் குசான சா (Kushana Shah) என்றும் குறிக்கப் பட்டுள்ளார். இந்தோ-சசானியரின் பிறிதொரு நாணயங்களில் அரசரின் உருவம் கூர்முனை உடைய தொப்பி, அங்கி அணிந்த வண்ணம் உள்ளது. அரசர் தீக்குண்டத்தின் அருகே நின்றவாறும் அரசரின் தலைமுடி கழுத்தைத் தொடுமாறும் உள்ளன. அரசர் தளர்ச்சியான கால்சட்டை அணிந்துள்ளார். நாணயத்தில் குசான எழுத்துகள் உள்ளன. இந்நாணயங்கள் குசான அரசர் வாசுதேவர் வெளியிட்ட நாணயங்களின் தோற்றத்தை ஒத்திருக்கின்றன. இந் நாணயங்கள் முதலாம் ஆர்மைசுடு என்னும் மன்னராலும் இரண்டாம் பிரோசு (Firuz II) என்னும் மன்னராலும் வெளியிடப்பட்டன. இந்தோ-சசானிய நாணயங்களில் சிவன், காளை உருவங்கள் நாணயத்தின் ஒரு பக்கம் காணப்படுகின்றன. இந்நாணயங்கள் இந்தியப் பகுதிகளை ஆண்ட சசானியர்களால் வெளியிடப்பட்டவை என்பதை எளிதாக அறியலாம். சசானிய நாணயங்கள் சிலவற்றில் சிவன், காளை காணப்படவில்லை. இவை இந்தியாவில் வெளியிடப் பட்டவை அல்ல; எனினும் இந்தியாவில் அக்காலத்தில் புழக்கத்தில் இருந்திருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தோ-சசானிய நாணயங்கள் சில வற்றில் நாகரி எழுத்துகள் காணப்படுகின்றன.

காண்க: இந்தியக் காசியல். டி.த.

**இந்தியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனம்**: இது சமூக அறிவியல் ஆய்வுக்காக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். இது இந்திய அரசாங்கத்தின் கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டுத் தன் விருப்பப்படி இயங்கும் நிறுவனமாக 1969-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது பொருளியல், வணிகவியல், கல்வியியல், மேலாண்மையியல், வணிக நிருவாகம், உளவியல், அரசியல், பன்னாட்டுறவுகளியல்,சமூகவியல், சமூகப் பணி, குற்றவியல், மானிடவியல், மக்கள் தொகையியல், சட்டவியல், மொழியியல் ஆகிய துறைகளில் பல்வேறு ஆய்வுகளுக்குப் பொருள் உதவி செய்து ஆய்வாளர்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. இந்தியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனத்தில் (Indian Council of Social Science Research) ஒரு தலைவரும் 18 சமூக அறிவியல் அறிஞர்களும் 6 அரசாங்கப் பேராளர்களும் உள்ளனர். இவர்களைத்தவிர இந்திய அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறுவனத்தினால் அமர்த்தப்படும் ஓர் உறுப்புச் செயலரும் (Member Secretary) உள்ளார். நிறுவனத்தின் கொள்கைகளை முடிவு செய்வதற்காகப் பின்வரும் குழுக்கள் உள்ளன. அவையாவன:

1. கொள்கை மற்றும் நிருவாகக்குழு, 2. ஆய்வுக்குழு, 3. ஆய்வு நிறுவனக்குழு, 4. பன்னாட்டு இணை இயக்கக்குழு, 5. ஆய்வு மற்றும் நூலகச் செய்திக் குழு, 6. ஆவணச் சான்று வழக்காட்சி மையம், 7. பயிற்சிக்குழு.

நிறுவனத்தின் செயலகம் இக்குழுக்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மாநில அரசுகளுடன் இணைந்து மாநில ஆய்வு அமைப்புகளைப் பம்பாய், கல்கத்தா, சண்டிகர், தில்லி, ஐதராபாது, சில்லாங்கு ஆகிய 6 இடங்களில் ஏற்படுத்தியுள்ளது.

**நிறுவனத்தின் ஆய்வுத்திட்டங்கள்**: சமூக ஆய்வில் புதுமலர்ச்சியையும் முன்னேற்றத்தினையும் இந் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. ஆய்வுமுறையியல் சமூகச் சிக்கல்கள், சமூக நலக்கோட்பாடுகள், இதுவரையில் ஆய்வு செய்யப்படாத சமூக நல, சமூகவியல் துறைகள் போன்ற ஆராய்ச்சிகளுக்கு இந்நிறுவனம் ஊக்கம் தருகிறது. முன்னேற்றத் திட்டங்கள், பெண்களின் சிக்கல்கள் பற்றிய ஆய்வுகள், மக்கள் தொகையியல் ஆய்வுகள், மக்கள் தொகைக் கணக்கீட்டு ஆய்வுகள் போன்ற துறைகளுக்கு இந்நிறுவனம் பொருளுதவி செய்துள்ளது. சமூகவியல் துறைகளுள் புலத்திடை ஆய்வுக்குச் சிறப்பாக ஊக்கம் தந்துள்ளது. ஆய்வுகளை நூல்வடிவில் வெளியிடுவதற்கான உதவியும் செய்து வருகிறது. ஆய்வுகளின் முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் இதழ்கள் வாயிலாகவும் ஆய்வுத் தொகுப்புரைகளின் வாயிலாகவும் வெளியிடப்பட்டு, கருத்தாய்வு, கலந்துரையாடல், புதிய சமூகநலத்திட்டங்கள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பல அயல்நாடுகளுடன் இணைந்து கூட்டாய்வுகளையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. சிம்லாவில் 1973-ஆம் ஆண்டு நடந்த யுனெசுகோ சமூகவியல் பயிற்சி ஆய்வு மாநாட்டையடுத்து, இந் நிறுவனம் ஆசியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனங்களின் சங்கம் (Association of Asian Social Science Research Councils) என்னும் அமைப்பை உருவாக்கியது.

இந்தியச் சமூகவியல் ஆய்வு நிறுவனம் மேற் கொள்ளும் திட்டங்களுள் தலையானவை இங்குக்

குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: 1. ஆய்வு உதவித் தொகைத் திட்டங்கள்: அ. தேசிய அளவிலான திட்டங்கள், ஆ. மேல்நிலைத் திட்டங்கள், இ. பொதுத் திட்டங்கள். 2. முனைவர் பட்டத்திற்கான உதவித்தொகைத் திட்டங்கள்: அ. ஆராய்ச்சிக் கல்வி நிறுவனம் வழியாகக் கொடுக்கும் உதவித் திட்டங்கள், ஆ. சமூகவியல் ஆய்வு நிறுவனம் மேற்பார்வையிடும் திட்டங்கள், இ. அயல் நாட்டினருக்குக் கொடுக்கப்படும் ஆய்வு உதவித் தொகைத் திட்டங்கள், ஈ. குறுகிய கால உதவித் தொகைத் திட்டங்கள்.

இவற்றைத் தவிர இந்நிறுவனம் ஆய்வாளர்களுக்குத் தனிப்பட்ட உதவித் தொகையும் ஐயாயிரம் உருபாய்களுக்கு மிகாமல் கொடுக்கிறது.

ஆய்வாளர் தம் செய்திகளைத் தொகுத்துவைப்பதற்குத் தேசிய, சமூக அறிவியல் ஆவணச் சான்று வழக்காட்சி மையம் என்னும் ஒரு நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. அதில் சமூக அறிவியல் ஆய்வாளர்க்கு உதவிடும் வகையில் கணிப் பொறிகளும் நூல்களும் ஆய்வேடுகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர்கள் தமக்கு வேண்டிய இரண்டாம் நிலை ஆய்வுச்செய்திகளைச் சேகரிக்கவும் தாம் திரட்டிய முதல் நிலை ஆய்வுச் செய்திகளை ஆய்வமைவு செய்யவும் இந்நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கான பயணச் செலவை இந்நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. எஸ்.பி.ஏ.

**இந்தியச் சமூகச் சுகாதார நிறுவனம்**: சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை எதிர்க்கவும் சமூக ஒழுங்குமுறையை நிலைநாட்டவும் 1928-ஆம் ஆண்டு இந்நிறுவனம் புது தில்லியில் தொடங்கப்பட்டது. டாக்டர் சுசிலா நய்யார் என்னும் அம்மையார் இதற்குத் தலைவராக இருந்தார். சில ஆண்டுகளுக்குப்பின் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் இதன் கிளைகள் தொடங்கப்பட்டன. இந்நிறுவனத்தின் கிளை சென்னையில் 1959-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது அக்காலத்தில் இதன் மத்திய அமைப்பிலும் சென்னை அமைப்பிலும் நெருங்கிய தொடர்பு கொண்ட சமூகப்பணியாளர்களுள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களும் திருமதி துர்க்காபாய் தேசுமுக்கு அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். சென்னைக் கிளை தொடங்குவதற்குப் பாடுபட்டவர்களுள் திருமதி மேரி கிளப்வாலா யாதவ், டாக்டர் திருமதி மாசிலாமணி, டாக்டர் பி.என். அரங்கையா, எசு.ஆர். வேங்கடராமன் ஆகியோரை முதன்மையானவர்களாகக் குறிப்பிடலாம்.

இந்நிறுவனம் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு வாழ்க்கைக் கல்வி தொடர்பான கருத்துரைகள் வழங்குகிறது. திரைப்படங்களில் காட்டப்படும் தரக்குறைவான காட்சிகள், பால் உணர்வைத் தூண்டும் உரையாடல்கள், நடனங்கள், விளம்பரப் பலகைகள் ஆகியவற்றை எதிர்த்து மாணவர் சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. காவல் நிலையங்களில் பெண்களைக் குற்றவாளிகளாக வைத்திருக்கும் பொழுது, அவர்களுக்குத் தக்க பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டும் என்று பரிந்துரைகள் செய்து அவற்றைச் செயற்படுத்துகிறது. பரத்தையர் தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்படும் இளம்பெண்களுக்கு விசாரணைக் காலம் வரையில் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. பரத்தையர் விடுதிகள் நடத்துபவர்களைச் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருகிறது. பால்வினை நோய்களைத் தக்க முறையில் குணப்படுத்துவதற்கு மருத்துவ விடுதிகளில் தனிப்பட்ட பால்வினை நோய்த் துறைகளை ஏற்படுத்த அரசாங்கத்தைத் தூண்டிச் செயற்பட வைக்கிறது. இளங்குற்றவாளிகளின் மறு வாழ்வுக்காகப் பெண்களை நன்னடத்தை அலுவலர்களாக நியமிக்கப் பரிந்துரைகள் செய்கிறது. மருத்துவ இல்லங்களில் மருத்துவச் சமூகப் பணியாளர்களை நியமிக்க ஏற்பாடு செய்கிறது. பால்வினை நோய் பற்றி மக்களுக்கு முறையான செய்திகளை எடுத்துரைப்பதற்கான செய்திப் படங்கள் அரசு தாயாரிக்குமாறு செய்கிறது. அவ்வப்பொழுது கற்பழிப்பு, பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்படும் இன்னல்கள் ஆகியவற்றை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் சமூக இன்னல்கள், கீழ்த்தரமான சுவரொட்டிகள் ஆகியவற்றை எதிர்த்துப் பட்டி மன்றங்கள் நிகழ்த்தி வருகிறது. இவற்றில் கல்லூரி மாணவர்கள் பங்கு கொள்கின்றனர். பெண்களுக்காக மீட்பு இல்லங்களைச் சென்னையிலும் மதுரையிலும் நடத்தி வருகிறது. வி.எஸ்.ரி.

**இந்தியச் சாதி முறை**: பெரும்பாலான சமூகங்களில் மக்கள் பல வகை இனங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வகை இனங்கள் வரிசைப்படி அடுக்கி வைக்கப்படும் அமைப்பு முறை காணப்படுகிறது. மக்களிடையே நிலவுகிற வேறுபாடுகளின் அடிப்படையில் அதாவது, பொருளாதார நிலையில், அரசியல் ஆற்றல் அளவில், கல்வியறிவு நிலையில் செய்தொழில் அளவில் அல்லது இன அடிப்படையில் மக்கள் பல்வேறு வகையினங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்த வகை இனங்களின் வரிசை ஒழுங்கின்படி ஒரு படிநிலையில் முறைப்படுத்தி வைக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் ஒரு சமூக அடுக்கமைப்பு முறை நிலவுகிறது. ஆனால், அது மேற்கூறிய வேறுபாடுகளின் அடிப்படையில் அமையாமல், பிறப்பின் அடிப்படையில் சாதிகள் என்ற பெயரில் பல்வேறு குழுக்களாக-ஏறத்தாழ 3000 குழுக்களாகப் பிரிந்து அமைந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பெயரைத் தாங்கிய குழுவில் பிறந்தவர்கள் ஒரு சாதியாக அமைகின்றனர். இப்படிப் பிறப்பின் அடிப்படையில் அமைகிற சாதிகளே இந்தியச் சமூக அமைப்பிற்கு அடிப்படை அலகுகளாக அமைகின்றன.

பிறப்பின் அடிப்படையில் ஒரு சாதி அமைவதனால் அதில் பிறந்தவர்களுக்கு மட்டுமே அது உரியதாகிறது. பிற குழுக்களில்-சாதிகளில்-பிறந்தவர்களுக்கு அது உரியதாகிறதில்லை. அவர்கள் அதில் நுழைய முடியாது.

ஆரியர்கள் கி.மு. 1500-ஆம் ஆண்டு அளவில் இந்தியாவிற்குள் நுழைந்தபொழுது, அவர்கள் இங்கு முன்பே வாழ்ந்த மக்களை எதிர்கொள்ள நேரிட்டது. இவர்களின் தோற்றம், உடல் நிறம், மொழி, சமயம், செயலாறுகள் அனைத்தும் வந்தேறிய ஆரியர்களுக்கு முற்றிலும் வேறுபாடாக இருந்தன. ஆகவே வந்தேறிய ஆரியர்கள் இந்நாட்டு மக்களோடு கலக்காமல் தனித்து நின்றனர். இந்நாட்டு மக்களைத் தசயூக்கள் அல்லது தாசர்கள் என்று குறித்தனர். இரு சாராரும் தனித்து நின்றதனால், ஆரியர்கள், தசயூக்கள் என்ற இரு பிரிவுகள் அப்போது ஏற்பட்டன.

நாளடைவில் செயற்பாடுகள் பெருகியதன் காரணமாக ஆரியர்கள் தமக்கிடையே ஒரு தொழில் பகுப்பு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டி வந்தது. இருக்கு வேத காலத்தின் தொடக்கத்தில் கி.மு. 1200-இல் ஒரு தொழிற் பகுப்பு முறையாகத் தமக்குள் புரோகிதத் தொழிலைக் கவனிக்கப் 'பிரமா' என்ற பிரிவையும், போர்த் தொழிலைக் கவனிக்கச்'சத்ரா' என்ற பிரிவையும், பிற தொழில்களைக் கவனிக்க 'விசா' என்ற பிரிவையும் ஏற்படுத்திக் கொண்டனர். இந்நாட்டு மக்களைப் போரில் வென்று தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்த பிறகு, இருக்கு வேத காலத்தின் பிற்பகுதியில் அதாவது, கி.மு. 1000-ஆம் ஆண்டளவில் ஆரியர்கள் ஒரு நான்கு பிரிவு அமைப்பை - பிற்காலத்தில் நால் வருண முறை என்று சொல்லப்பட்ட அமைப்பை - ஏற்படுத்தினர். அப்பிரிவுகள் பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்டன. இந்நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனித் தொழில்கள் ஒதுக்கப்பட்டன. பார்ப்பனர்கள் வேதம் கற்பித்தலையும், வேள்வி புரிதலையும்; சத்திரியர்கள் படைக்கலமேந்தி நாட்டைப் பாதுகாத்தலையும்; வைசியர்கள் உழவு, வாணிகம், கால்நடை மேய்த்தல் முதலான தொழில்களையும் தத்தம் செய்தொழிலாக மேற்கொண்டனர். ஆரியர்களால் போரில் வெல்லப்பட்டு அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொணரப்பட்ட தசயூக்கள் சூத்திரர்கள் என்று சொல்லப்பட்டு மேற்கூறிய மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்யப் பணிக்கப்பட்டனர்.

இந்த நால்வருண அமைப்பே இன்றைய சாதி அமைப்பு முறையின் முன்னோடியாகும். தொடக்கத்தில் நால் வருண அமைப்பு முறை கட்டுப்பாடுகள் இல்லாமல் அமைந்திருந்தது. செய்தொழில் பற்றியோ வருணங்களுக்கிடையே மண உறவு வைத்துக் கொள்வது பற்றியோ எந்தவிதக் கட்டுபாடுகளும் விதிக்கப்படவில்லை. ஒரு வருணத்தைச் சேர்ந்தவர் பிறிதொரு வருணத்துக்குரிய தொழிலை மேற்கொள்ளவும் பிறிதொரு வருணத்தில் மணமுடிக்கவும் உடன்பாடு இருந்தது. ஆயினும், ஒரு வருணத்தைச் சேர்ந்தவன் தன்னிலும் கீழான வருணத்தில் பெண் எடுக்கவே (அனுலோம - Anuloma மண முறையே) ஒத்துக்கொள்ளப்பட்டது. தன்னிலும் மேலான வருணத்தில் பெண் எடுக்க (பிரதிலோம மண முறை - Pratiloma ) ஒத்துக்கொள்ளப்படவில்லை.

வேதகாலத்திற்குப் பிற்காலத்தில் கி.மு. 600-க்குப் பிறகு, நால் வருண அமைப்பு முறையில் மேற்கூறிய உடன்பாடுகள் விலக்கப்பட்டு, செய்தொழில், மண உறவு முதலியவை தொடர்பாகக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் ஏற்பட்டன. ஸ்மிருதிகளின் காலத்தில் நால்வருணஅமைப்பு முறை மறைந்து, பல்வேறு சாதிப் பிரிவுகள் அடங்கிய சாதி அமைப்பு முறை தோன்றியது.

வருணங்களுக்கிடையே ஏற்பட்ட கலப்புத்தான் பல்வேறு சாதிப் பிரிவுகள் தோன்றக் காரணமாய் இருந்தது என்று மனு சுமிருதி கூறுகிறது. மண உறவுகள் தொடர்பான தடை இருந்த போதிலும், வருணங்களுக்கிடையே கலப்பு ஏற்பட்டு, அந்தக் கலப்பில் பிறந்தவர்கள் வருணக் கலப்பிற்கு ஏற்பத் தனித் தனிப் பிரிவுகளாய் அமைந்தனர். அந்தக் கலப்புப் பிரிவுகள்வருணங்களுடன்கலந்தபோதும்,தம்முள் கலந்த போதும் அத்தகைய கலப்புகளின் விளைவாகமேலும் பல்வேறு கலப்புப் பிரிவுகள் தோன்றின. கலப்புகள் பெருகப் பெருக, ஒவ்வொரு கலப்பு வகைக்கும் ஒரு தனிப் பிரிவு அமைவதால் எண்ணற்ற பிரிவுகள் உண்டாயின; இக்கலப்புப் பிரிவுகள் அகமணத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கியபோது,

அவை சாதிகளாக உருவெடுத்தன என்பது மனு சுமிருதியின் கருத்து.

ஆனால், பேராசிரியர் குர்ரே (Ghurye) வேறொரு கருத்தைக் கூறுகிறார். வேத காலத்தின் பிற்காலத்தில் பார்ப்பனர்கள் தங்களுடைய தூய்மையைக் கட்டிக் காப்பதில் பெரிதும் கவனம் செலுத்தினார்கள். புரோகிதத் தொழிலைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டும், தங்களுக்குள்ளேயே சமூக உறவுகளை வைத்துக் கொண்டு தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டும் தமது தூய்மையைப் பேணிக் கொண்டார்கள். சத்திரியர்களும் வைசியர்களும் தனித்து விடப்பட்டார்கள். அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடிய வலிமையான அரசியல் அமைப்பு இல்லாத காரணத்தால், சூத்திரர்கள் சத்திரியர்களுடைய தொழிலிலும் வைசியர்களுடைய தொழில்களிலும் ஈடுபடத் தொடங்கினார்கள். இதனால், பார்ப்பன வருணத்துக்கு வெளியே, சத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் கலந்த பல்வேறு செய்தொழில் குழுக்கள் தோன்றின. செய்தொழில்கள் கிளைத்துப் பெருகப் பெருகப் பல்வேறு செய்தொழில் குழுக்கள் தோன்றின. ஒவ்வொரு செய்தொழில் குழுவும் தனது ஒற்றுமையையும் பெருமையையும் பேணுவதற்காகத் தனக்குள்ளேயே மண உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் வைத்துக் கொண்டது. இதன் காரணமாக அவை சாதிகளாக உருவெடுத்தன என்கிறார் பேராசிரியர் குர்ரே.

பேராசிரியர் குர்ரேயுடைய கருத்துக்கு ஏற்ப, இன்றைய சாதி அமைப்பு முறையில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்று இரண்டே பெரும் பிரிவுகள் இருப்பதைக் காணலாம். பார்ப்பனரல்லாதாரிடையே எந்தவிதமான வருண வேறுபாடுகள் இல்லாமலிருப்பதைக் காணும்போது, பேராசிரியர் குர்ரே கூறுவதைப் போல சத்திரியர்களும் வைசியர்களும், சூத்திரர்களும் ஒரே செய்தொழிலில் ஈடுபட்டதால் மண உறவுகள் வாயிலாகக் கலந்து போயிருக்க வேண்டும் என்பது தெளிவு.

ஒரு சாதியில் பிறந்தவர்கள் என்ற அளவில் கிடைக்கிற உறுப்பினர் உரிமையே ஒரு சாதியைச் சேர்ந்தவர்களைப் பிணைக்கிற உறவாக அமைகிறது. இந்த உறவு மட்டுமன்றி, அவர்களுக்கு அவர்களுடைய சாதியே அவர்களுடைய உலகமாக, வாழ்க்கையின் நிலைக்களனாக அமைந்து அவர்களைப் பிணைத்து வைக்கிறது. சாதியே அவர்களுக்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளைக் கொடுத்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையை அதன் பரப்பெல்லைக்குள்ளேயே நடத்திக் கொள்ள உதவுகிறது. பெரும்பாலான சாதிகள், ஒரு குறிப்பிட்ட செய்தொழிலைத் தங்களுடைய குலத்தொழிலாக மேற்கொண்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் தங்களுடைய சாதிக்குரிய குலத்தொழிலைக் கற்றுத் தங்களுடைய பொருளாதார வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றனர். தம் தந்தையாரிடமிருந்து தமது குலத் தொழிலின் நுட்பங்களையும், செய்முறைகளையும் கற்று, அதைத் தம் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாக அமைத்துக் கொள்ளுகின்றனர். தங்கள் குலத் தொழிலின் மீது பற்றும், பிடிப்பும் வைத்து, அதை ஒரு கடமையாகக் கடைப்பிடிக்கின்றனர்.

மேலும் ஒரு சாதி, தனது உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை அமைய வேண்டிய விதம் பற்றிய நெறிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்து, அவற்றிற்கேற்ப அவர்களுடைய வாழ்க்கை முறை அமையச் செய்கிறது. தன் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உணவுப் பழக்கங்கள், ஆடை அணிகலன்கள் அணியும் முறைகள், சமய நெறிமுறைகள், வாழ்க்கைச் சடங்குகள் முதலானவை பற்றிப் பல நெறிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்தவும், அவை மீறப்படாமல் கண்காணிக்கவும், மீறியவர்களைத் தண்டித்து ஒழுங்கை நிலைநாட்டவும் ஓர் அதிகார அமைப்பு – பஞ்சாயத்து செயற்படுகிறது. இவ்வமைப்புகள், சாதி வலுவாகச் செயற்படும் ஊரக மட்டத்திலேயே பெரிதும் செயற்படுகின்றன. வயதிலும், பட்டறிவிலும் மூத்த பெரியவர்களைப் பஞ்சாயத்தார்களாகக் கொண்டு அமையும் இவ்வமைப்புகள், சாதியின் மரபுகள், நெறிமுறைகள், கட்டுப்பாடுகள், ஆதியவற்றைக் கட்டிக்காத்துச் சாதியின் கட்டுக்கோப்பும், ஒழுங்கும் நிலைபெறப் பணிபுரிகின்றன.

பொதுவான வாழ்க்கைத் தொழில், பழக்க வழக்கங்கள் நெறிமுறைகள் ஒழுகலாற்றுப் படிவங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு சாதி, கட்டுக்கோப்பும், ஒழுங்கும் பெறுவதோடு ஒரு தனித்த பண்பாட்டுக் குழு என்னும் தன்மையையும் எய்துகிறது. பொதுவான ஒழுகலாற்றுப் படிவங்களும் வாழ்க்கை முறைகளும், ஒரு சாதியின் மீது தனிப்பண்பாட்டு முத்திரையைப் பதிக்கின்றன. இதனால் ஒவ்வொரு சாதியும், ஒரு தனித்த பண்பாட்டுக் குழுவாகத் தோற்றமளிக்கிறது. இந்தியச் சமூகம், இப்படிப்பட்ட தனித்த பண்பாட்டுக் குழுக்களை – சாதிகளைத் தன்னுடைய கூறுகளாக ஒருங்கிணைத்துக்கொண்டிருப்பதனால், அது ஒரு கதம்பத் திரட்டாக, பன்மைச் சமூகமாகக் காட்சியளிக்கிறது.

இவ்வாறு இந்தியச் சமூகம், பல்வேறுபட்ட சாதிகளைக் கொண்டு பல்வேறு பிரிவுகளாகப்

பிரிந்து நிற்கிறது. ஆயினும் இப்பிரிவுகள் சிதறிக் கிடக்காமல் ஓர் அமைப்பாக ஒருங்கிணைந்து நிற்கின்றன. அவை ஒருபடிநிலையில் வரிசையாக அடுக்கப்பட்டு ஓர் அமைப்பாக ஆக்கப்பட்டிருந்தன. எல்லாச்சாதிகளும் மேலான சாதிகள், உயர்ந்த சாதிகள், கீழான சாதிகள் என்று வகைப்படுத்தப்பட்டு மூன்று அடுக்குகளாக ஒரு படிநிலை வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மேலான சாதிகள் என்ற வரிசை நிலையில் பார்ப்பனர்களும் சத்திரியர்களும் அதற்கடுத்த இடைநிலையில் வணிகர்களும் கீழான சாதிகள் என்ற வரிசை நிலையில் தீண்டத்தகாதவர்களும்(Untouchables) இடம் பெறுகின்றனர்.

உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை கொண்டாடும் பார்ப்பனச் சாதிகள் சாதி அமைப்பு முறையின் தோற்றக்காலந்தொட்டே சாதி அடுக்கமைப்பு முறையின் மேல்தட்டில் இருந்து வருகின்றன. பார்ப்பனச் சாதிகளுக்கு உரிய இந்த முதன்மைதான், இந்தியச் சமூக அடுக்கமைப்பு முறைக்கே அச்சாணியாகும். பார்ப்பனரல்லாத சாதியினர் உயர்ந்தசாதிகள் என்ற நிலையில் சாதி அடுக்கமைப்பு முறையில் இரண்டாம் தட்டில் உள்ளனர். இவர்கள் மூன்றாம் தட்டில் இருக்கிற தாழ்த்தப்பட்ட சாதியினரைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் இருந்தாலும், முதல் நிலையில் இருக்கிற பார்ப்பனர்களுக்கு அடுத்த படியாகவே அதாவது, பார்ப்பனர்களுக்குக் கீழான நிலையில் தான் இருக்கிறார்கள். கடைசித் தட்டிலிருக்கிற தாழ்த்தப்பட்ட சாதியினர் தொடக்கக் காலந்தொட்டே கடைநிலையினராக இருந்து வருகின்றனர்.

இத்தகைய சாதிப் படிநிலையமைப்பு முறைக்கு-அடிப்படையாய் அமைந்திருப்பது தூய்மை (Purity), தீட்டு (Polution) என்ற கருத்தே என்று இலூயிசு தூமாண்ட்டு (Louis Dumont), எச்.என்.சி. இசுடீவன்சன் (H.N.C. Stevenson) ஆகியோர் கூறுகிறார்கள். பார்ப்பனர்கள் ஆசாரத் தூய்மையின் வடிவமாகவும் தாழ்த்தப்பட்டவர்கள் தீட்டின் வடிவமாகவும் சமூக அளவுகோலின் இரு வேறு முனைகளில் நிற்பதால், சாதி வரிசை முறையில் பார்ப்பனர்கள் மேல்தட்டிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் கீழ்த்தட்டிலும் இருக்கிறார்கள். தூய்மையில் குறைந்த, ஆனால் தீட்டைக் கொண்டிராத பார்ப்பனரல்லாதார் சாதி வரிசை முறையில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்கள். இங்கே தூய்மை என்பது உடல் அளவிலான தூய்மையைக் குறிப்பதில்லை. ஆசாரத் தூய்மையைக் குறிக்கும். இந்துமத சாத்திரங்கள் வலியுறுத்துகின்ற வாழ்க்கை முறைகள், ஆசாரங்கள், . செய்தொழில், உணவு, திருமணம் முதலியவை தொடர்பான நெறிமுறைகள் முதலியவற்றைக் கடைப்பிடிப்பதுதான் ஆசாரத் தூய்மையாகும். சமூக சமயத் தலைவர்கள் என்ற அளவில் பார்ப்பனர்கள் தாங்கள் வகுத்த சாத்திர நெறிமுறைகளைக் கடைப்பிடித்ததாலேயே, கடைப்பிடிக்கும் வாய்ப்புக் கொண்டிருந்ததாலேயே, அவர்கள் யாரும் நெருங்க முடியாத அளவில் ஆசாரத் தூய்மை கொண்டு சமூகத்தின் மேல் மட்டத்தில் இருக்கிறார்கள். சாத்திரங்கள் உடன்படாத செயல்களில் ஈடுபட்டிருப்பதாலும் சாத்திர விதிகளுக்குப் புறம்பான போக்குகளைக் கொண்டிருப்பதாலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆசாரத் தூய்மையற்றவர்களாக-தீட்டு உடையவர்களாக இருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள்.

தீட்டின் வடிவமாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் கருதப்படுவதனால் அவர்கள் தீண்டத் தகாதவர்களாகச் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். ஊருக்கு வெளியே வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊர்ப் பொதுக்கிணறுகள், நீர்நிலைகள், சுடுகாடுகள், விளையாட்டுத் திடல்கள், கல்விக்கூடங்கள், கோயில்கள் முதலான இடங்களை அவர்கள் பயன்படுத்தலாகாது என்று தடுக்கப்படுகிறார்கள். உயர்சாதி மக்கள் வசிக்கிற தெருக்களில் செல்லக்கூடாது என்றும், உயர்சாதி மக்களைப் போன்று ஆடை அணிகலன்கள் அணிவதோ பாத்திரங்கள் பயன்படுத்துவதோ செருப்புப் போட்டுக் கொள்வதோ குடைபிடிப்பதோ வீடு கட்டிக் கொள்வதோ கூடாது என்றும் அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன அவர்கள் தொட்டுவிட்டால் தீட்டு ஏற்பட்டுவிடும் என்று கருதி, உயர் சாதியினர் அவர்கள் தம்மைத் தொடவோ தீண்டவோ உடன்படுவதில்லை. தாம் பயன்படுத்தும் பொருள்களைக்கூடத் தொட உடன்படுவதில்லை. தொட்டால் மட்டுமன்று, அவர்கள் அருகில் நெருங்கினாலே தீட்டுப்பட்டுவிடும் என்று கருதி அவர்களை மேல்சாதியினர் தம் அருகில் நெருங்கவும் உடன்படுவதில்லை. கேரளாவில் அண்மைக்காலம் வரை மேல்சாதியினர் தாழ்த்தப்பட்டவர்களை ஒரு குறிப்பிட்ட தொலைவுக்குள் தம்மை நெருங்கவிடாமல் இருக்க விதிமுறைகள் வகுத்து வைத்திருந்தார்கள். கீழ்ச்சாதியினர் 48 அடியும் பறையர்கள் 96அடியும் தள்ளிநிற்க வேண்டும் என்ற சார்பெண்ணங்கொண்ட விதிமுறை வகுத்து வைத்திருந்தார்கள். குறிப்பிட்ட இந்த எல்லைகளைத்தாண்டித் தாழ்த்தப்பட்டவர்கள் வந்துவிட்டால் பார்ப்பனர்கள் தீட்டுப்பட்டு விடுவார்கள் என்பதனாலேயே தாழ்த்தப்பட்டவர்கள் இந்த எல்லைகளைத் தாண்டாதவாறு கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். அது மட்டுமல்லாமல்

சிலபகுதிகளில் எடுத்துக்காட்டாக, நெல்லைச் சீமையில் அண்மைக் காலம் வரை புராத வண்ணார் என்னும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பார்வை பட்டாலே தீட்டு ஏற்பட்டு விடும் என்ற அளவில் காணத்தகாதவராக நடத்தப்பட்டனர்.

சாதி அமைப்பு முறையில் சாதிகள் பொதுவாகப் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டோர் என்று மூன்று வரிசையாக ஒரு படி நிலையில் ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு வரிசையிலும் அதற்குள் ஒரு படிநிலையமைப்பு முறை காணப்படுகிறது. பார்ப்பனரிடையேயும், பார்ப்பனர் அல்லாதாரிடையேயும் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையேயும் உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற தகுதி வேறுபாடுகள் நிலவுகின்றன. மயானச் சடங்குகள் செய்யும் பார்ப்பனர், அசைவ உணவு உண்ணும் பார்ப்பனர் ஆகியோர் பார்ப்பனரல்லாதாரைக் காட்டிலும் ஆசாரத் தூய்மை பெற்று உயர்நிலையில் இருந்தாலும், அவர்கள் தம் செயல் காரணமாக மற்றப் பார்ப்பனர்களை விட ஆசாரத் தூய்மையில் குறைந்தவர்களாக இருப்பதால், மற்றப் பார்ப்பனர்களைக் காட்டிலும் தாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர். இவ்வாறே பார்ப்பனரல்லாதாரிடையேயும் ஆசாரத் தூய்மையில் உள்ள வேறுபாடுகள் காரணமாக உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பிரிவுகள் உண்டு. சாத்திர நெறிமுறைகளை அல்லது பார்ப்பனர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் பார்ப்பனரல்லாதார் மற்றைய பார்ப்பனரல்லாதாரை விட உயர்ந்தவராய் இருக்கின்றனர். அவர்களுக்குள்ளும் பின்பற்றும் அளவில் உள்ள வேறுபாடுகள் காரணமாக ஏற்றநிலை வேறுபாடுகள் எழுகின்றன. ஆசாரத் தூய்மை, சாத்திர நெறிமுறைகள், பார்ப்பனர்களுடைய பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுவதால் மட்டுமன்றி, ஆசாரத் தூய்மையின் வடிவமாக விளங்கும் பார்ப்பனர்களோடு தொடர்பு கொள்ளுவதாலும் அதாவது, அவர்களுக்கு உணவு வழங்குதல், குடிநீர் தருதல் முதலான செயல்களாலும் ஏற்றநிலை வேறுபாடு ஏற்படும். ஆகவே இத்தகைய தொடர்பும் பார்ப்பனரல்லாதாரிடையே உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைகிறது. தொடர்பின் அளவிற்கேற்பவும் தகுதி வேறுபாடுகள் அமைகின்றன. கொண்டிருக்கும் தீட்டின் அளவுக்கேற்பவும் அதாவது, தீட்டுத் தன்மை மிகுதியானதா குறைந்ததா என்பதைப் பொறுத்தும் தாழ்த்தப்பட்டவர்களிடையே உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற தகுதி வேறுபாடுகள் நிலவுகின்றன. தோல் வேலை செய்தல், மாட்டிறைச்சி உண்ணுதல் முதலான தூய்மையற்ற, சாத்திரத்திற்கு மாறுபட்ட செயல்களில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட பிரிவினர், இத்தகைய செயல்களில் ஈடுபடாத தாழ்த்தப்பட்ட பிரிவினரைவிடத் தீட்டுத் தன்மை மிகுதியாக உடைவர்களாகக் கருதப்பட்டு மிகவும் தாழ்வான நிலையில் வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தூய்மை – தீட்டு என்ற கருத்தின் அடிப்படையில், சாதிகள் ஒரு வரிசை முறையில் அடுக்கப்படும் நிலையில், ஒவ்வொரு சாதியும் ஒரு குறிப்பிட்ட வரிசையிலும் வரிசையில் ஒரு குறிப்பிட்ட நிலையிலும் இடம் பெறுகிறது. ஒரு சாதி சமூக வரிசை முறையில் அமையும் இடத்தைப் பொறுத்து அதன் சமூக உயர்நிலை அமைகிறது. அவ்வாறே ஒரே தட்டில் மேல்நிலையில் இடம் பெறும்போது, அதே தட்டில் உள்ள பிற சாதிகளைக் காட்டிலும் மேலான சமூக நிலையைப் பெறுகிறது (கீழ்நிலையில் இடம் பெறும்போது கீழான சமூக நிலையைப் பெறுகிறது). எடுத்துக்காட்டாக தமிழகத்தில் தொண்டை மண்டல முதலியார்கள் சமூக வரிசை முறையில் இரண்டாம் வரிசையில் இடம் பெறுகிறார்கள். ஆயினும் அந்த வரிசையில் அவர்கள் பார்ப்பனரல்லாத பிற சாதியாரைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். பார்ப்பனப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் பார்ப்பனரல்லாத பிற சாதியினரை விட மிகுதியான ஆசாரத் தூய்மை பெற்று, உயர்ந்த நிலை எய்தி, உயர்ந்த சமூகத் தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். இப்படி ஒரு சாதிக்குச் சமூக வரிசை முறையில் அது பெறுகிற இடத்தைப் பொறுத்துச் சமூகத் தகுதி அமைகிறது.

சாதி அமைப்பு முறையில் காணப்படுகிற இந்த வரிசை முறை நிலையானதாக, மாற்ற முடியாததாக அமைந்துள்ளது. மாற்ற முடியாத இந்த அமைப்பு முறையில் ஒரு சாதி பெறுகின்ற இடமும் அந்த இடத்தைப் பொறுத்து அமைகிற சமூகத் தகுதியும் நிலையானவையாக, மாற்ற முடியாதனவாக அமைகின்றன. ஆயினும், 'பண்பாட்டு மேம்பாடு' என்ற முறை மூலமாக இரு பிறப்பாளருடைய குறிப்பாக பார்ப்பனர்களுடைய வாழ்க்கை முறைகளை, பழக்கங்களைக் கடைப்பிடித்து ஒரு கீழ்ச்சாதி, தன்னொத்த நிலையில் உள்ள பிற சாதிகளிலிருந்து வேறுபட்டுச் சமூக வரிசைத் தட்டில் அதற்குள்ள நிலையிலிருந்து மேல்நிலைக்கு உயரக்கூடும். இருப்பினும் அத்தகைய சாதி சமூக வரிசை முறையில் எந்தத் தட்டில் இடம் பெற்றிருக்கிறதோ, அந்த இடம் என்றும் மாறாது; அந்த இடத்தைப் பொறுத்து அமைகிற சமூக நிலையிலும் மாறாது.

இவ்வாறு ஒரு சாதி சமூக வரிசையில் ஓர் இடமும் அதைப் பொறுத்துச் சமூகத்தகுதியும் பெறுகிற போது, அந்தச் சாதியில் பிறந்தவர்கள் அந்தச் சாதியின் சமூகத் தகுதியைப் பெறுகின்றனர். சாதி அமைப்பு முறையில் ஒரு தனி மனிதனுக்குத் தனித்த சமூகத் தகுதி கிடையாது. அவனுடைய சாதிக்குச் சமூகத்தில் எத்தகைய தகுதி உள்ளதோ அதுவே அவனுக்கும் அமைகிறது. அவனுடைய குணநலங்களோ செல்வச் சிறப்போ அருஞ்செயல்களோ அவனுடைய சமூகத் தகுதி நிலை பற்றிய முடிவு எடுக்கப்பயன்படுவதில்லை. அவனுடைய சாதியின் சமூகத் தகுதி அவன் மீது சார்த்தப்படுகிறது. அந்தத் தகுதி அவனுடைய வாழ்நாள் வரை அவனுடன் ஒட்டிக் கொள்கிறது. அவனுடைய பிள்ளைகளுக்கும் போய்ச் சேருகிறது.

தூய்மை–தீட்டு என்ற கருத்தின் அடிப்படையில் உயர்ந்தவை தாழ்ந்தவை என்ற தகுதி வேறுபாடுகளோடு சாதிகள் ஒரு படிநிலையமைப்பில் அமைந்திருப்பதால், அவற்றினிடையே சமூக உறவுகள் நிகழ்வதில்லை. ஒரு சாதி தன்னிலும் பழக்கத் தூய்மை குறைவான, சமூகத் தகுதி குறைந்த சாதிகளோடு எந்தவகையான தொடர்புகளும் வைத்துக் கொள்வதில்லை. குறிப்பாக, மேல்சாதியினர் தம்மிலும் கீழ்ப்பட்ட சாதியினரோடு மணஉறவு வைத்துக் கொள்வதோ சேர்ந்து உண்பதோ சேர்ந்து புகை பிடிப்பதோ கிடையாது. அவர்களிடமிருந்து உணவு பெறுவதோ தண்ணீர் வாங்கிக் குடிப்பதோ கூடக் கிடையாது.அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் தமது ஆசாரத் தூய்மைக்குக் குறைவு வாராத வண்ணம் நடந்து கொள்ளுகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில் தப்பித்தவறி அவர்களுடைய ஆசாரத் தூய்மைக்குக் குறைவு நேரிட்டால் அதாவது, தீட்டுப்பட்டுவிட்டால், அவர்கள் சில கழுவாய் முறைகளைச் (குளித்தல், பஞ்சகவ்வியம் அருந்துதல் போன்ற சடங்குகளைச்) செய்து தீட்டைப் போக்கி, மீண்டும் ஆசாரத் தூய்மை பெறுகிறார்கள்.

ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் தம் சாதியிலேயே சமூக உறவை வைத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் ஒத்த சமமான தகுதி கொண்டிருப்பதனால் அவர்களுக்கிடையே சமூக உறவுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. சமூகத் தகுதி வேறுபாடுகள் காரணமாக அவர்கள் தம்மிலும் கீழான தகுதி உடையவர்களோடு சமூக உறவுகள் வைத்துக் கொள்வதில்லை; தம்மிலும் மேலான சமூகத் தகுதி கொண்டவர்களோடு உறவு வைத்துக் கொள்ளவும் முடிவதில்லை.

இந்தக் காரணத்தாலேயே திருமண உறவெல்லாம் சாதிக்குள்ளேயே வைத்துக் கொள்ளப்படுகிறது. சாதி வட்டத்துக்குள்ளேயே திருமண உறவுகள் நடைபெறுவதால், சாதி ஓர் அகமணக் குழுவாக விளங்குகிறது. இன்றைக்குச் சாதியை இனம் பிரித்துக் காட்டக்கூடிய கூறு இந்த அகமணந்தான்.

இவ்வாறாக இந்தியாவில் சமூக அமைப்பு முறையில் மக்கள் பல்வேறு சாதிகளாகப் பிரிந்துள்ளனர். அந்தச் சாதிப் பிரிவுகள் ஒரு வரிசை முறையில், ஒரு படிநிலையமைப்பில் அடுக்கப்பட்டும், அவற்றுக்கிடையே சமூக உறவுகள், குறிப்பாக மண உறவுகள் தடை செய்யப்பட்டும் இருக்கின்றன. இத்தகைய சமூகக் கூறுகள் முற்காலந் தொட்டே இந்தியாவில் நிலவி வருகின்றன.

நாளடைவில் **செய்தொழில்** குழுக்களோடு, வருண அமைப்பிற்கு **உட்படாது** வெளியே இருந்த தோம், குசார், அகாரியா (Akaria), கோலி (Koli) ஆகிய இனக்குழுக்களும் இந்தியாவிற்குக் குடியேறிய கூணர்களாகிய வேற்றுநாட்டுக் குழுக்களும் சாதி அமைப்பு முறையில் உறுப்புகளாகச் சேர்ந்து கொண்டன. கருநாடகத்தில் வாழும் இலிங்காயத்துகளாகிய புதிய மதப் பிரிவுகளைப் பின்பற்றிய குழுக்களும், வங்காளத்திலிருந்து குடியேறிய காயத்தர்களுக்கும் ஒரிசா வாழ் பந்தாரிப் பெண்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலப்பினால் தோன்றிய ஒரிசா மாநிலத்துச் சாகிர்தபேசா போன்ற சாதிக்கலப்பினால் தோன்றிய புதிய குழுக்களும், அகமணம் வாயிலாகச் சாதிகளாக மாறிச் சாதி அமைப்பில் சேர்ந்து கொண்டன. ஆயினும் இவையெல்லாம் பார்ப்பனரல்லாத பகுதியிலேயே இடம் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு தாக்கங்களின் காரணமாகச் சாதி அமைப்பு முறை இன்று பல கூறுகளில் வலியிழந்து நிற்கிறது. பரந்த சமத்துவ மனப்பான்மைக்கும் அறிவியல் கண்ணோட்டத்துக்கும் வழி வகுக்கும் புதிய கல்விமுறை, சீர்திருத்த இயக்கங்களின் கருத்துப் பரப்பல், சட்டங்கள் ஆகியவற்றின் காரணமாகச் சாதி மனப் பான்மைகளும் செயலாறுகளும் குறைந்திருக்கின்றன. புதிய பொருளாதார முறை, பணத்தின் மதிப்புயர்வு, புதிய திறமைகளுக்கும் உயர் வாழ்க்கைத் தரத்திற்கும் சமூக, பொருளாதாரத் தகுதிக்கும் வழிகோலும் புதிய வேலை வாய்ப்புகள் ஆகியவற்றின் காரணமாகச் சாதித் தொழிலின் மீதுள்ள பற்றும் பிடிப்பும் குறைந்து, மக்கள் புதிய செய்தொழில்களில், அலுவல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இரயில், பேருந்து போன்ற பொதுமக்கள் போக்கு வரத்துச் சாதனங்கள், தொழிலகங்கள், உணவகங்கள், திரையரங்குகள்,

பேரங்காடிகள் முதலியவற்றின் வளர்ச்சியினால் மக்கள் ஒருவருக்கொருவர் ஒட்டி உறவாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆயினும் சில கூறுகளில் சாதி அமைப்பு முறை வலுப்பெற்று விளங்குகிறது. கட்டுப்பாடற்ற வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை, அரசியல் அதிகாரங்களை மக்கள் உரிமை முறையில் பரவலாக்கிடும் உள்ளாட்சி நிறுவன அமைப்புகள், சமூகத்தில் பிற்பட்ட நிலையில் உள்ள சாதிகளுக்குச் சலுகைகளும் உதவிகளும் நல்கிடும் அரசாங்கக் கொள்கை ஆகியவற்றின் காரணமாகச் சாதி உணர்வும், சாதி ஒற்றுமையைப் பேண முயலும் துடிப்பும் வளர்கின்றன. இத்தகைய உணர்வுகளுக்கு உருவம் கொடுத்திடவும் அவற்றைப் பேணிடவும் சாதிச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. செய்தித்தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, அச்சுமுறை, மலிவான அஞ்சல் முறை ஆகியவை சாதிச் சங்கங்களும் சாதி உணர்வை வளர்த்திடும் முயற்சிகளும் பெருகிட உதவுகின்றன. சாதிச் சங்கங்களின் நடவடிக்கைகளினாலும் சாதி உணர்வின் வளர்ச்சியினாலும் சாதிப் பகைகளும் போட்டிப் பூசல்களும் மலிந்து வருகின்றன. அரசியல் போட்டியிலும் தேர்தல்களிலும் சாதிப் பகைகளும் பூசல்களும் ஊடுருவி, நலப்போக்கான ஓர் அரசியல் முறை அமைவதைத் தடுக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு சமன்பாட்டில் சாதி அமைப்பு முறை நிற்கிறது. ஒரு பக்கம் வலுவிழந்தாலும், அதை ஈடு செய்யும் வகையில் மறுபக்கம் வலுவுற்றுச் சாதி அமைப்பு முறை, கீழே விழாதவாறு நிற்கிறது.

சி.என்.ந.

துணை நூல்கள்:

**Ghurye**, G.S., Caste in India, Popular Prakashan, Bombay, 1969.

**Hutton, J.H.**, Caste in India: Its Nature, Function and Origin, Oxford University Press Bombay, 1963.

**Kolenda,** Caste in Contemporary India; Beyond Organic Solidarity, Benjamin Cummings Publishing Company, California, 1978.

**Kuppuswamy**, B., Social Change in India, Vikas Publishing House, New Delhi, 1975.

**O'Malley, L.S.S.**, Indian Caste Customs, Vikas Publishing House, Delhi, 1974.

**இந்தியச் சான்றுச்சட்டம்**, கி.பி. 1872: இச்சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டு, 1872-ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் முதல் நாள் செயல்முறைக்கு வந்தது. சம்மு காசுமீர் பகுதியைத் தவிர ஏனைய இந்தியா முழுமைக்கும் இந்தியச் சான்றுச் சட்டம் (The Indian Evidence Act 1872) செல்லத்தக்கதாகும்.

ஒரு நீதிமன்றத்தில் நடைபெறும் நீதி விசாரணைக்கு இச்சட்டம் செல்லும். நீதிமன்றம் என்ற விளக்கத்தில் இராணுவ நீதிமன்றமும் (Court Martial) அடங்கும். ஆனால் இராணுவச் சட்டம், கடற்படைச் சட்டம், ஆகாயப் படைச் சட்டம், கடற்படை ஒழுங்கு நடவடிக்கைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் இயங்கும் இராணுவ நீதி மன்றங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக இச்சட்டத்தின் 1-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடப்படும் இராணுவ, கடற்படை, ஆகாயப் படைச் சட்டங்கள் எல்லாம் இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு செயல்முறையில் இருந்தவை. விடுதலைக்குப் பின் இயற்றப்பட்ட 1950-ஆம் ஆண்டைய இராணுவச் சட்டத்தின் (Army Act 46 of 50) 133-ஆம் பிரிவின்படியும், 1950-ஆம் ஆண்டைய ஆகாய விமானப் படைச் சட்டத்தின் (Air Force Act 45 of 50) 132-ஆம் பிரிவின்படியும், 1957-ஆம் ஆண்டைய கடற்படைச் சட்டத்தின் (Navy Act 62 of 57) 130-ஆம் பிரிவின்படியும், அம்மூன்று சட்டங்களின்படி இயங்கும் இராணுவ நீதிமன்றங்களுக்கும் அச்சட்டங்களிலுள்ள விதிகளுக்குட்பட்டு இந்தியச் சான்றுச் சட்டம் செல்லத்தக்கதாகும். ஆனால் பிரமாண வாக்கு மூலங்களுக்கும் (Affidavit) இசைவுத் தீர்ப்பாளர் (Arbitrator) முன் நடைபெறும் நடவடிக்கைகளுக்கும் இந்தியச் சான்றுச் சட்டம் பொருந்தாது.

ஒரு நீதிமன்றத்தில் விசாரணை எவ்வாறு நடைபெற வேண்டும் என்று வரையறை செய்ய விசாரணை முறைச் சட்டங்கள் உள்ளன. குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்படி குற்றவியல் வழக்கு விசாரணையும் உரிமையியல் விசாரணை முறைச் சட்டத்தின்படி உரிமையியல் வழக்கு விசாரணையும் நடைபெற வேண்டும். அவ்விசாரணைகளில் எவரெவரால் எவ்வித விவகாரங்கள் குறித்து எவ்விதமான சான்று அளிக்கப்பட வேண்டும் என்று இந்தியச் சான்றுச் சட்டத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. சான்றுச் சட்டமில்லாவிட்டால் முறையற்ற, அனுமதிக்கக்கூடாத சான்று பதிவாகிவிடும். அதனால் நேர்மையான முடிவு எடுப்பது கடினமாகி விடும். ஆங்கில நாட்டுச் சான்றுச் சட்டத்திலுள்ள கருத்துகள் இந்தியச் சான்றுச் சட்டத்தில் அடங்கியுள்ளன.

விசாரணை நடவடிக்கைகளில் (Judicial Proceedings) சான்று ஏதும் அளிக்கப்படாவிட்டால் எவர் ஒருவர்தோல்வி அடைவாரோஅவர்மீதுதான் அவரது வழக்கை மெய்ப்பிக்கச் சான்று அளிக்கும் பொறுப்பு உள்ளது. ஒரு பொருளையோ அல்லது ஒரு கூற்றையோ மெய்ப்பிக்கும் பொறுப்பு எந்தெந்த நிலையில் எவரெவர் மீது உள்ளது என்பது விரிவாகச் சான்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்படும். ஒரு பொருளை (Fact) உண்மையென்று நீதிமன்றம் நம்பவேண்டும் என்று ஒருவர் விரும்பினால், அப்பொருள் உண்மையென்று அவர்தாம் மெய்ப்பிக்க வேண்டும். குற்றவியல் வழக்கு விசாரணையில் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் உள்ள விதிவிலக்குத் தமக்குப் பொருந்தும் என்று குற்றம் சாட்டப்பட்டவர் வழக்காடினால் அவர்தாம் அதை மெய்ப்பிக்க வேண்டும். ஒரு பொருள் அவருக்கு மட்டுந்தான் தெரியும் என்றால் அவர்தாம் அதை மெய்ப்பிப்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, முருகன் என்பவர் இரயிலில் பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்தார் என்பது வழக்கு. பயணச் சீட்டு தம் மிடமிருந்தது என்று முருகன் வழக்காடினால் அவர்தாம் அதை மெய்ப்பிக்க வேண்டும். ஒருவன் இறந்து விட்டானா இல்லையா என்பது வழக்கில் உள்ள விவகாரம் என்றால், அவன் முப்பது ஆண்டுக்குள் உயிருடனிருந்தான் என்று ஏற்பட்டால், அவன் இறந்து விட்டான் என்று கூறுபவர் மீது அதை மெய்ப்பிக்கும் பொறுப்பு உள்ளது. ஆனால், கடந்த ஏழு ஆண்டுகளாக அவனைப் பற்றிக் கேள்விப்படக் கூடியவர்கள் கேள்விப்படவில்லை என்று ஏற்பட்டால், அக்கட்டத்தில் அவன் உயிருடனிருக்கிறான் என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவ்வாறு கூறுபவர் மீது உள்ளது. ஒரு குழந்தையின் தகப்பன் யார் என்பது தான் வழக்கிலுள்ள விவகாரம் என்றால், தம்பதிகளிடையே திருமண உறவு நீடித்திருக்கும்போது அல்லது மணவிலக்கு ஏற்பட்டிருந்தால், மணவிலக்கு ஏற்பட்ட நாளிலிருந்து 280நாட்களுக்குள் பிறந்த குழந்தைக்குக் கணவன்தான் தகப்பன் என்று முடிவாக அனுமானிக்கப்படும். அதைமறுத்தால், அப்பெண் கருவுற்றிருக்கக் கூடிய காலத்தில் கணவன் மனைவிக்கிடையே உடலுறவு ஏற்படச் சாத்தியக்கூறு இல்லை என்று கணவன் மெய்ப்பிக்க வேண்டும்.

ஒரு நீதிமன்றத்தின் நீதிமுறைப்படியான கவனத்துக்குக் கொண்டு வரத்தக்க விவரங்கள் குறித்து மெய்ப்பிக்க வேண்டிய் தேவையில்லை (Facts which a court will take Judicial Notice need not be proved). எடுத்துக்காட்டு நமது நாட்டின் சட்டங்கள். ஆனால், அவை அரசு இதழில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். இருதரப்பினரும் ஒப்புக் கொண்ட பொருள் குறித்து மெய்ப்பிக்க வேண்டியதில்லை.

சாதாரணமாக ஒருவருக்குத் தான் கூறும் கூற்றை மெய்ப்பிக்கச் சான்று அளிக்க உரிமை உண்டு என்றாலும் சில கட்டத்தில் அந்த உரிமை மறுக்கப்படும். ஒருவர் மற்றொருவரை ஒரு பொருளை உண்மை என்று தம் செய்கை, வாய்ச்சொல் போன்றவற்றால் நம்ப வைத்து, அதன் விளைவாக அந்த மற்றொருவர் ஏதாவது செய்கை புரிந்தால், பிறகு அவ்விருவருக்கும் ஏற்படக்கூடிய நடவடிக்கையில் அந்த ஒருவர் தாம் கூறியதை உண்மை இல்லை என்று கூற முடியாது. எடுத்துக் காட்டாக, இராமன் என்பவர் தமக்குச் சொந்தமில்லாத நிலத்தை தம்முடையது என்று பொய் சொல்லி முருகனை நம்பவைத்து அதை முருகனுக்கு விற்று விடுகிறார். பின்னர் அந்த நிலம் உண்மையாகவே இராமனுடையதாகிறது. அக்கட்டத்தில் ஏற்படும் விவகாரத்தில் தாம் விற்ற சமயத்தில் தமக்கு அந்த நிலத்தில் உரிமை ஏதுமில்லை என்று இராமன் கூற முடியாது. அவ்வாறு சான்றும் அளிக்க முடியாது. அதைத் தம் தவற்றால் தடைப்படல் (Estoppel) என்று கூறுவதுண்டு.

சில கட்டத்தில் மானிடத்தனமை, இயல்பான நிகழ்ச்சிப் போக்கு ஆகியவற்றை மனத்தில் கொண்டு சிலவற்றை அனுமானிக்க நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. எடுத்துக்காட்டாக, களவுபோன சொத்து களவுபோன சில காலத்திற்குள் ஒருவன் கைவசம் இருக்குமானால் அவ்வாறு வைத்திருப்பவன் அதைத் திருடியவனாயிருக்க வேண்டும்; அல்லது களவுப் பொருள்என்று தெரிந்தே அதைப்பெற்றுக் கொண்டவனாயிருக்க வேண்டும் என்று கருதப்படும்.

சான்று வாய்மொழிச் சான்று எனவும் ஆவணச் சான்று எனவும் இருவகைப்படும்.

வாய்மொழிச் சான்று: இது நேரடியான சான்றாக இருக்க வேண்டும். ஒரு பொருள் காணக்கூடியதாக இருந்தால் அதைக் கண்டவர் கண்டதாகக் கூற வேண்டும். கேட்கக் கூடிய பொருளாக இருந்தால் கேட்டவர் கேட்டதாகச் சான்று கூற வேண்டும். ஒருவர் மற்றொருவரிடமிருந்து அறிந்து கொண்டது சாட்சியமாகாது. அது கேள்வி ஞானம் (Hearsay) என்பதால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஓர் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்களைத் தவிர வேறு எந்தப் பொருளையும் வாய்மொழிச் சான்றின் மூலம் மெய்ப்பிக்கலாம். ஒரு பொருளை மெய்ப்பிக்க எத்தனைச் சான்றுகள் தேவை என்று இச்சட்டத்தில் கூறப்படவில்லை. சான்றின் தரத்தையும் தன்மையையும் பொறுத்து அது ஏற்றுக் கொள்ளத் தக்கதா இல்லையா என்று நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.

மிகச் சிறு வயது, முதுமை, பிணி போன்ற

காரணங்களால் ஒருவர் கேள்விகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றோ காரண காரியத் தொடர்புடைய மறுமொழிகளைச் சொல்லமுடிய வில்லை என்றோ நீதிமன்றத்தால் முடிவு செய்யப் படுபவர்களைத் தவிர, மற்றையாவரும் வாய்மொழிச் சான்று அளிக்கத் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். ஓர் ஊமையன் சைகை மூலமோ எழுத்து மூலமோ சான்று அளிக்கலாம். ஆனால், அவற்றை நீதிமன்றத் திலேயே செய்ய வேண்டும்.

சில குறிப்பிட்ட உறவு அல்லது வகிக்கும் பதவி அல்லது செய்யும் தொழில் காரணமாக ஒருவருக்குக் கிடைக்கும் தகவல் குறித்து அவர் சான்று கூறக் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்படும். கணவன் மனைவிக்குள் பரிமாறிக்கொள்ளும் தகவல்களைப் பற்றி அவ்விரு வரும் சான்று கூற மறுக்கலாம். ஆனால், இந்த விதி முறை அந்தக் கணவன் மனைவிக்குள் நடக்கும் வழக்குகளுக்குப் பொருந்தாது. அரசுப் பணிகள் தொடர்பான வெளிப்படுத்தப்படாத அதிகாரத் தொடர்புடைய ஆவணங்களிலிருந்து தெரிந்து கொண்ட தகவல்களைப் பற்றித் தொடர்புடைய அலுவலகத் தலைமை அதிகாரியின் அனுமதியின்றிச் சான்று அளிக்கக் கூடாது. ஒரு வழக்கறிஞரிடம் அவர் கட்சிக்காரன் தொழில் முறையில் கொடுத்த தகவல்களை அக்கட்சிக்காரனின் அனுமதியில்லாமல் அந்த வழக்கறிஞர் சான்றாக அளிக்கக்கூடாது. தொழில் முறையில் அந்த வழக்கறிஞர் பார்வைக்கு வந்த ஆவணங்களிலிருந்து தெரிந்து கொண்ட விவரங்களை அவர் கூறுவதற்கில்லை. ஆனால், சட்டத்திற்கு மாறான காரியத்துக்காகக் கொடுக்கப் படும் விவரம் இந்த விதி முறைக்குக் கட்டுப்பட்ட தன்று. தொழில் முறையில் அந்த வழக்கறிஞருக்குத் தெரிய வந்த குற்றம் பற்றிச் சான்று அளிக்கத் தடை கிடையாது.

ஒருவர் தம் வழக்கை மெய்ப்பிப்பதற்காகத் தம் பக்கம் விசாரிக்கப்படும் சாட்சியை முதல் விசாரணை செய்யலாம். அக்கட்டத்தில் பதிலை அடக்கியுள்ள கேள்விகளைக் (Leading Questions)கேட்கக் கூடாது. முதல் விசாரணையில் சாட்சியின் கூற்றை உறுதிப் படுத்த அவர் ஏற்கெனவே தொடர்புடைய பொருள் நிகழ்ந்த சமயத்திலேயே கொடுத்த வாக்கு மூலத்தை அல்லது அப்பொருள் குறித்துச் சட்டப்படி விசா ரணை செய்ய அதிகாரம் படைத்த அதிகாரியிடம் கொடுத்த வாக்கு மூலத்தை அனுமதிக்கலாம். ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சான்று அளிக்கையில் அந் நிகழ்ச்சி நடந்த வேளையிலேயே, அல்லது அந் நிகழ்ச்சி நன்றாக நினைவிலிருக்கும்போதே அச் சாட்சி எழுதி வைத்திருந்தால் அதைப் படித்துப் பார்த்துத் தனது நினைவினைப் புதுப்பித்துக் கொண்டு சான்று அளிக்கலாம். பின் எதிர்த்தரப் பினர் அந்தச் சாட்சியைக் கேள்வி கேட்பது குறுக்கு விசாரணை எனப்படும். அக்கட்டத்தில் பதிலை அடக்கியுள்ள கேள்விகளைத் தொடுக்கலாம். சாட்சியை அவமானப்படுத்தக்கூடிய கேள்விகள், மானபங்கப்படுத்தக்கூடிய கேள்விகள் ஆகிய வற்றைக் கேட்கக்கூடாது. குறுக்கு விசாரணை யில் தொடுக்கப்படும் கேள்விக்குப் பதில் அளித்தால், தான் செய்த குற்றம் வெளியாகிவிடும் என்ற அடிப்படையில் சாட்சி பதில் அளிக்க மறுக்கக் கூடாது. அவ்வாறு பதில் அளிக்க நேர்ந்தால் அந்த அடிப்படையில் மட்டும் அவரைக் கைது செய்யவோ வழக்குத் தொடரவோ கூடாது. சாட்சியின் வாய் மையைப் பொய்ப்பிக்கக்கூடிய கேள்விகளைத் தொடுக்கலாம். ஆனால், அதற்கும் ஒரு வரையறை உண்டு. வழக்கிலுள்ள விவகாரத்துக்குத் தொடர் பில்லாத வகையில் சாட்சியின் நம்பத் தகுந்த தன் மையைத் தாக்கும் நோக்கத்துடன் மட்டும் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சாட்சி பதில் அளிக்க வேண்டியதில்லை என்று சாட்சியை நீதிமன்றம் எச்சரிக்கலாம். அவ்வாறு நீதிமன்றம் முடிவு செய்வதற்குச் சில கோட்பாடுகளும் உள்ளன. தொடுக்கப்படும் கேள்வியில் உள்ள குற்றச் சாட்டு உண்மை என்றால் வழக்கிலுள்ள விவகாரம் குறித் துச் சாட்சி கூறுவதால் நம்ப முடியாத நிலை ஏற் படும் என்றால், அக்கேள்வி அனுமதிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக, ஒரு சாலை விபத்தை ஒரு பெண் தற்செயலாகக் காண நேர்கிறது. அந்த வழக்கில் அவள் சாட்சியாக வரும்போது அவள் ஒரு விபசாரியா என்று கேட்கக் கூடாது. ஏனெனில் வழக்கிலுள்ள விவகாரத்துக்கும் அவள் விபசாரியாக இருப்பதற்கும் தொடர்பு ஏதும் இல்லை. ஆனால், அப்பெண்ணைக் கற்பழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கில் அவள் விபசார வாழ்க்கை வாழ்கிறவள் என்று காட் டக் கேள்விகள் கேட்கலாம். இதற்கு இச்சட்டத்தின் 155-ஆம் பிரிவிலேயே வகை செய்யப்பட்டுள்ளது.

கேள்வியிலுள்ள குற்றச் சாட்டு உண்மை என்றா லும் அது பல காலத்துக்கு முன்னர் நடந்தது என்ப தால், அது வழக்குத் தொடர்பாகச் சாட்சியின் நம்பத்தகுந்த தன்மையை எவ்விதத்திலும் பாதிக் காது என்பதால், அக்கேள்விக்குச் சாட்சி பதில் சொல்ல வேண்டியதில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்யலாம். எடுத்துக்காட்டாக, ஒரு பெண் ணின் பையிலிருந்து ஒருவன் பணத்தைத் திருடிவிட்ட தாக வழக்கு நடைபெறுகிறது. அப்பெண் 10 ஆண்டு களுக்கு முன் கள்ளத்தனமாகக் குழந்தை பெற்றாளா

என்று கேட்கக் கூடாது. அக்குற்றச்சாட்டு உண்மை என்றாலும் அது பல காலத்துக்கு முன்னர் நடந்தது.

குறுக்கு விசாரணையின்போது சாட்சி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கும் சாட்சியின் சாட்சியத்துக்கு உள்ள முக்கியத்துவத்துக்கும் மிக அதிக அளவில் பொருத்தமற்ற தன்மையிருந்தால், அக்கேள்வி பொருந்தாத கேள்வியாகும். எடுத்துக் காட்டாக, ஒரு மருத்துவர் ஒருவரின் காயங்களுக்கு மருத்துவ உதவி அளித்தது தொடர்பாகச் சான்று அளிக்க வந்துள்ளார். அவர் பிறிதொரு காலத்தில் மற்றொருவரைத் தாக்கியதுண்டா என்று அவரைக் கேட்பதில் பொருத்தம் ஏதுமில்லை. ஆனால், அந்த மருத்துவர் வேறொரு வழக்கில் ஒருவரின் காயங்களுக்கு மருத்துவ உதவி அளித்ததாகச் சான்று கூறி, அக்கூற்று பொய் என்று நீதிமன்றம் முடிவு செய்திருந்தால், அது பற்றிக் கேட்பது மிகவும் பொருத்தமானதாகும்.

குறுக்கு விசாரணை முடிந்த பின்னர்ச் சாட்சியை முதலில் விசாரித்தவர் மறு விசாரணை செய்யலாம். முதல் விசாரணையில் சாட்சி சொன்ன கூற்றுக்கும் குறுக்கு விசாரணையில் சாட்சி அளித்த பதிலுக்கும் ஒரு முரண்பாடு இருப்பது போல் தோன்றி ஒரு குழப்பம் ஏற்பட்டால், அதைத் தெளிவுபடுத்த சாட்சிக்கு மறு விசாரணையில் வாய்ப்பு அளிக்கப் படும். மறு விசாரணையில் புதிய விவரங்கள் பற்றிக் கூறக்கூடாது. நீதிமன்றத்தின் அனுமதியிருந்தால் அவ்வாறு கூறலாம். மறுவிசாரணையில் நீதி மன்றத்தின் அனுமதியின்பேரில் சாட்சி புதிய விவரங்கள் பற்றிக் கூறினால் அது குறித்து எதிர்த் தரப்பினர் மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படும். ஒருதரப்பினர் வழக்குக்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்க வந்தவர், அத்தரப்பினர் வழக்குக்கு மாறாகச் சாட்சியம் அளித்தால், அத்தரப்பினர் அச்சாட்சியை நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யலாம். அக்கட்டத்தில் அந்தச் சாட்சி, அவரை அழைத்து வந்த தரப்புக்கு மாறான சாட்சி (Hostile Witness) என்று கருதப் படுவர். அவ்வாறு மாறான சாட்சி என்பதால் மட்டும் அவரது கூற்றை ஒதுக்கித்தள்ளக்கூடாது. அக் கட்டத்திலும் அவரது சாட்சியம் நம்பத்தகுந்ததாக இருந்தால் அதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆவணச்சான்று: ஒரு பொருளை மெய்ப்பிப் பதற்கு ஆவணம் ஏதேனுமிருந்தால் அதன்மூலம் மெய்ப்பிக்கலாம். அவ்வாறான ஆவணங்களில் உள்ள வாசகங்களை மெய்ப்பிக்க மூல ஆவணத்தைத் (Original Document) தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு மூல ஆவணம் தாக்கல் செய்யப்பட்டால் அதை முதல்நிலைச் சான்று (Primary Evidence) என்று கூறுவர். ஓர் ஆவணம் பல பகுதிகளாக எழுதப்பட்டிருந்தால் ஒவ்வொரு பகுதியும் மூல ஆவணம் என்று கருதப்படும். ஓர் ஆவணத்துக்கு மறு படிவமிருந்தால் (Counter Part) அதில் கையெழுத் திட்டவர்களுக்கு எதிராக அம்மறு படிவம் மூல ஆவணமாகக் கருதப்படும். ஒரு மூல ஆவணத்திலிருந்து பல படிகள் அச்சடித்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற வழிகளில் எடுக்கப்பட்டிருந்தால் அவ்வாறான நகல் ஒன்றில் உள்ள வாசகம் ஏனைய நகல்களில் உள்ள வாசகங்களை மெய்ப்பிக்கக் கூடிய முதன்மையான சான்றாகக் கருதப்படும். ஆனால், அவ்வாறான நகல்களில் உள்ள வாசகங்கள் மூல ஆவணத்திலுள்ள வாசகங்களைப் பொறுத்தமட்டில் முதன்மையான சான்றாகக் கருதப்பட மாட்டா.

மூல ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்ட படிகள் உண்மையான படி என்று சான்று அளிக்கப்பட்டால் அவ்வாறான அத்தாட்சி செய்யப்பட்ட படிகள் முதன்மையிற் குறைந்த அல்லது இரண்டாந்தரமான சான்றாகக் (Secondary Evidence) கருதப்படும். மூல ஆவணத்திலிருந்து இயந்திர உதவியுடன் எடுக்கப் படும் படியுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்ட நகல் களும் இரண்டாந்தரமான சான்றாகக் கருதப்படும். மூல ஆவணத்திலிருந்து எடுக்கப்படும் படிகளும் மூல ஆவணத்துடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்ட படி களும் இரண்டாந்தரமான சான்றாகக் கருதப்படும். ஓர் ஆவணத்தின் மறு படிவம் அதில் கையெழுத் திடாதவர்களைப் பொறுத்தமட்டிலும் இரண்டாந் தரமான சான்றாகக் கருதப்படும். மூல ஆவணத்தைப் பார்த்தவர் அதன் வாசகம் குறித்து அளிக் கும் வாய்மொழிச் சான்று இரண்டாந்தரச் சான் றாகக் கருதப்படும்.

பொதுவாக மூல ஆவணத்தையே நீதிமன்றத் தில் தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், கீழ்க்காணும் நிலைகளில் இரண்டாந்தரமான சான்று அளிப்ப தற்குச் சான்றுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள் ளது. மூல ஆவணம் எதிர்த்தரப்பினர் கைவசமிருக் கும்போது அதைத் தாக்கல் செய்யுமாறு அறிவிப்புக் கொடுத்தும் தாக்கல் செய்யாதநிலையில் இரண்டாந் தரச் சாட்சியம் அளிக்கலாம். மூல ஆவணத்தைத் தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று அந்த எதிர்த் தரப்பினருக்கு இயல்பாகவே தெரியும் என்றால், எதிர்த் தரப்பினருக்கு அறிவிப்பு இல்லா மலேயே முதல் தரப்பினர் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். எதிர்த் தரப்பினர் ஏமாற்றி அல்லது பலத்தைப் பயன்படுத்தி மூல ஆவணத்தைக் கைப் பற்றியிருந்தால் எதிர்த்தரப்புக்கு அறிவிப்புக் கொடுக் காமலேயே இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம்.

எவருக்கு எதிராகச் சாட்சியம் அளிக்கப்படவிருக்கிறதோ அவர் மூல ஆவணத்தை எழுதியதையோ, அதில் கையெழுத்திட்டதையோ மெய்ப்பித்திருந்தால் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். மூல ஆவணம் காணாமல் போய்விட்டாலோ அழிந்து விட்டாலோ நியாயமான காலவரம்புக்குள் அதைத் தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டாலோ (இவ்வாறு தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதற்குத் தாக்கல் செய்ய விரும்புபவர் அவர் தவறு கவனக் குறைவு ஆகியவற்றால் பொறுப்பாளியாக இருக்கக் கூடாது.) இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். மேலும், மூல ஆவணத்தை எளிதில் நீதிமன்றத்திற்குக்கொண்டு வர முடியாத நிலையிலும் மூல ஆவணம் மிக அதிகமாக இருக்கும் நிலையிலும் அத்தாட்சி பெற்ற நகலை அனுமதிக்கச் சட்டம் அனுமதித்த நிலையிலும் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். நீதிமன்றத்தின் ஆணைக்குக் கட்டுப்படாதவர் வசம் மூல ஆவணமிருந்தநிலையிலும் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். குறிப்பிட்ட ஆவணச் சான்றுச் சட்டத்தின் 74-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி பொது ஆவணமாக (Public Document) இருந்தால் மூல ஆவணத்தையே தாக்கல் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை.

சில கட்டத்தில் ஒரு பொருள் குறித்து மெய்ப்பிக்க ஆவணச் சான்று மட்டுந்தான் அனுமதிக்கப்படும். வாய்மொழிச் சான்று அனுமதிக்கப்படமாட்டாது. அந்த விவரங்கள் சான்றுச் சட்டத்தின் 91, 92-ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ளன. சிறந்த சான்று கிடைக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில இக்கட்டுரையில் விளக்கப்படும். ஒப்பந்தம், கொடை, வேறு சொத்து மாற்றல் தொடர்பாக ஆவணம் ஏற்பட்டிருந்தால், அந்த ஆவணத்தின் வாசகங்களை மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்று அனுமதிக்கப்பட மாட்டாது. ஒரு பொருள் குறித்து ஆவணம் எழுத வேண்டியது சட்டப்படி இன்றியமையாதது என்ற நிலையில் ஏற்படும் ஆவணத்துக்கும் மேற்கூறிய கோட்பாடு பொருந்தும்.

மேற்கூறிய ஆவணங்களில் தொடர்புடைய தரப்பினர்களுக்கும் அவர்கள் மூலம் உரிமை கொண்டாடுபவர்களுக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அவ்வாறான ஆவணங்களின் வாசகங்களை மாற்றவும் கூட்டவும் குறைக்கவும் கூடிய வகையில் வாய்மொழிச் சான்று அளிக்கக் கூடாது. ஆனால், ஏமாற்றுதல், பயமுறுத்தல், ஏனைய சட்டத்திற்கு மாறான செய்கைகள் போன்றவைகளினால் ஓர் ஆவணம் செல்லத்தக்கது அன்று என்று மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்று அளிக்கலாம். மேலும், ஓர் ஒப்பந்தத் தொடர்பாக ஒரு தரப்பினருக்கு ஒப்பந்தம் செய்யத் தகுதியில்லை என்ற கூற்றை மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்றை அளிக்கலாம். ஒரு பொருள் குறித்து ஓர் ஆவணத்தில் எதுவும் கூறப்படாமலிருந்தால் அப்பொருள் குறித்து மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்று அளிக்கலாம். ஆனால், அந்த வாய்மொழிச் சான்று ஆவணத்தின் வாசகங்களுக்கு மாறாக இருக்கக்கூடாது. ஆவணம் ஏற்படுவதற்கு முன் ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டுப்பாடு குறித்து வாய்மொழிச் சான்று அளிக்கலாம். ஆவணத்திற்குப் பிறகு அந்த ஆவணத்தின் வாசகங்களை மாற்றக்கூடிய வகையில் வாய்மொழி ஒப்பந்தம் ஏற்பட்டால் அது குறித்து வாய்மொழிச் சான்று அளிக்கலாம். ஆனால், இந்த விதி சட்டப்படி கண்டிப்பாக எழுதப்பட வேண்டிய அல்லது பதியப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்துச் செல்லாதது ஆகும்.

இறந்து போனவர் அல்லது காணாமல் போனவர், சான்று அளிக்கத் தகுதியில்லாமற் போனவர், அல்லது சாட்சியை அழைத்து வரத் தாமதமும் மிகப் பொருட்செலவும் ஏற்படக்கூடிய நிலை ஆகிய கட்டங்களில், ஒருவரது வாய்மொழி அல்லது எழுதப்பட்ட வாக்குமூலம் சான்றாக அனுமதிக்கக் கூடிய காரணங்கள் சான்றுச் சட்டத்தின் 32-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில இங்கு விளக்கப்படும். ஒருவர் தம் இறப்புக்குக் காரணமான நிகழ்ச்சி அல்லது செய்கை குறித்துக் கொடுத்த வாக்குமூலம் அவரது இறப்புக் குறித்து நடக்கும் விசாரணையில் சான்றாக அனுமதிக்கப்படும். எடுத்துக் காட்டாக, ஒருவர் குத்தப் படுகிறார். அவர் தம்மை யார் குத்தியது என்ற விவரமெல்லாம் அங்கு வந்தவரிடம் கூறிவிட்டு இறந்து விடுகிறார். அவரது கொலைத் தொடர்பாக நடக்கும் விசாரணையில் கொலையுண்டவர் மேற்கூறியவாறு மற்றவரிடம் கூறிய வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

மேற்கூறிய இறந்துபோன அல்லது காணாமல் போன அல்லது எளிதில் கிடைக்க முடியாதவர் தங்கள் தொழில், வாணிகம் ஆகியவற்றில் எழுதும் பதிவுகள், வாக்கு மூலங்கள் அனுமதிக்கத்தக்கதாகும். அவ்வாறான ஒருவர் எழுதி அல்லது கையெழுத்திட்ட கடிதத்தின் நாள் அனுமதிக்கத்தக்கனவாகும். மேற்கூறிய ஒருவரின் சொத்து, பொருளாதாரம் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் அவர் கொடுத்துள்ள வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. பொது மக்களின் உரிமை, மரபியல் தொடர்பாக அவ்

வாறான ஒருவர் கொடுத்த வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. விவகாரம் ஏற்படுவதற்கு முன்னர் இருவருக்குமிடையே உள்ள உறவு முறை குறித்துச் சொல்லப்பட்ட வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. ஆனால், அந்த உறவு முறை குறித்து வாக்குமூலம் கொடுத்தவர் தெரிந்திருக்கக்கூடிய நிலையிலிருந்திருக்க வேண்டும்.

ஒரு நீதி விசாரனையில் சான்று அளித்த பின்னர் அந்தச் சாட்சி இறந்து விட்டாலோ காணாமல் போய்விட்டாலோ எதிர்த் தரப்பினால் தடுக்கப் பட்டிருந்தாலோ அவரை அழைத்து வர வீண் கால தாமதமும் பண விரயமும் ஏற்படும் என்றாலோ பின்னர் நடைபெறும் நீதி விசாரணையில், மேற்படி முதல் நீதி விசாரணையில் பதிவு செய்யப்பட்ட சான்று அனுமதிக்கத் தக்கது ஆகும். அதற்கு இரு விசாரணைகளிலும் தொடர்புடைய தரப்பினர் முன்பு இருந்தவர்களாகவே இருக்க வேண்டும். மேலும், முதலில் நடந்த விசாரணையில் சாட்சியை எதிர்த் தரப்பினர் குறுக்கு விசாரணை செய்ய உரிமையும் வாய்ப்பும் இருந்திருக்க வேண்டும். மேலும், இரு விசாரணைகளில் உள்ள தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரம் பொதுவாக ஒன்றாக இருக்க வேண்டும்.

சாதாரணமாக ஒரு வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பு அதில் தொடர்புடைய தரப்பினரை மட்டும் கட்டுப் படுத்தும். ஆனால், சிலவகைத் தீர்ப்புகள் அந்த வழக்குகளில் தொடர்பில்லாதவரையும் கட்டுப்படுத்தும். இதுகுறித்து இச்சட்டத்தின் 41-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கணவன் மனைவியரிடையே மணவிலக்கு வழக்கு நடந்து மண விலக்குக்கு ஆணையிடப்படுகிறது. அத்தீர்ப்பு அந்த வழக்கில் தொடர்புறாதவர்களையும் கட்டுப்படுத்தும். அதாவது, குறிப்பிட்ட கணவன் மனைவியிடையே மணவிலக்கு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கும் தீர்ப்பு ஒன்றை உலகத்துக்கே பறை சாற்றுவதாக எடுத்துக் கொள்ள வேண்டும். இச்சட்டத்தில் சொல்லப் பட்டுள்ள சூழ்நிலைகளைத் தவிர்த்து, ஏனைய நிலைகளில் ஒரு வழக்கில் ஏற்படும் தீர்ப்பு மற்றொரு வழக்குக்குப் பொருந்தாது. எடுத்துக்காட்டாக, கோபாலன் என்பவன் கவனக்குறைவாகத் தன் உந்து வண்டியை ஓட்டிச்சென்று தருமன் என்பவன் மீது மோதிக் காயம் ஏற்படுத்தி விடுகிறான். அது குறித்து நடக்கும் வழக்கில் கோபாலன் குற்றவாளி எனக் குற்றவியல் நடுவரால் தண்டிக்கப்படுகிறான். பின்னர்த் தனக்குக் காயம் உண்டாக்கியதற்காகத் தருமன் கோபாலன்மீது நட்ட ஈடு கோரி உரிமை இயல் வழக்குத் தொடர்கிறான். குற்றவியல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு உரிமையியல் வழக்கில் அனுமதிக்கத் தக்கது அன்று. மறுபடியும் உரிமை இயல் வழக்கில் கோபாலன், கவனக் குறைவாகத் தன் உந்து வண்டியை ஓட்டிவந்து தருமன் மீது மோதிக் காயப் படுத்தினான் என்று மெய்ப்பிக்க வேண்டும்.

பொதுவாக விசாரணையில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரத்தையும் அதையொட்டிய பொருத்தமான பொருள்களையும் (Relevent Facts) மெய்ப்பிக்கச் சான்று அளிக்கலாம். பொருத்தமான பொருள்கள் எவை என்று இச்சட்டத்தின் இரண்டாம் பகுதியில், குறிப்பாக 6 முதல் 9 பிரிவுகளில் விளக்கியுள்ளது. அவற்றுள் சில விளக்கப்படும். தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரத்துடன் ஏனைய பொருள்கள் தொடர்பு கொண்டு, ஒரே நிகழ்ச்சியாக மாறினால் அந்த ஏனையபொருள்களும் பொருத்தமான, பொருள்களாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக காவேரி என்ற பெண்ணைக் கடத்திச் செல்லச் சிலர் வருகின்றனர். அப்போது அப்பெண்ணின் தாய் அருகில் வசிக்கும் சாட்சியிடம் ‘சென்ற ஆண்டு காவேரியைக் கடத்திச் சென்ற நடத்தை கெட்டவர்கள் மறுபடியும் கடத்திச் செல்ல வந்திருக்கிறார்கள்’ என்று சொல்லுகிறாள். கடத்திச் செல்ல வந்திருக்கிறார்கள் என்று தாய் கூறியது அனுமதிக்கக்கூடிய சாட்சியமாகும். பழைய சம்பவத்தைப் பற்றித் தாய் கூறியது அனுமதிக்கத்தக்க சாட்சியமன்று. ஏனென்றால் வழக்கில் தீர்மானிக்க வேண்டிய விவகாரம் இரண்டாம் நிகழ்ச்சிதான். ஆதலின் முதல் நிகழ்ச்சிக்கும் இரண்டாம் நிகழ்ச்சிக்கும் தொடர்பு இல்லை.

தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரம், நிகழ்வதற்கான ஆயத்தம், செயல் நோக்கம் என்பவை பொருத்தமான பொருள்களாகக் கருதப்படும். ஒரு வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரத்துடன் தொடர்புடைய ஒருவரின் நடத்தையும் பொருத்தமான பொருளாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக, முருகன் என்பவர் குறிப்பிட்ட உயிலை எழுதினாரா இல்லையா என்பது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரமாக இருந்தால், உயில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் சமயத்தில் உயில் எழுதுவதற்காக முருகன் வழக்கறிஞர்களின் ஆலோசனையை நாடினார் என்பது குறித்துச் சான்று அளிக்கலாம். ஒருவருக்கு எதிராகச் செய்யப்படும் குற்றம் தொடர்பாக நடக்கும் விசாரணையில், அந்நிகழ்ச்சிக்குத் தொடர்புடையதும் அந்நிகழ்ச்சிக்கு முன்னரும் பின்னரும் அந்தப் பலியாளுடைய (Victim) நடத்தை பற்றியதும் பொருத்தமான பொருளாகக் கருதப்படும்.

ஒரு பொருள் குறித்து ஒருவர் ஒப்புக்கொண்டு

கொடுக்கும் வாக்குமூலம் (அது வாய்மொழி அல்லது எழுதியதாக இருக்கலாம்) அவருக்கு எதிராக அனுமதிக்கத்தக்கது. ஆனால், அவ்வாறான ஒப்புதல் வாக்குமூலம், கொடுத்தவர் தரப்பில் கீழ்க் காணும் நிலையில் தவிர வேறு நிலையில் அனுமதிக்கத்தக்கது அன்று. இறந்து போனவரது வாக்குமூலம், இச்சட்டத்தின் 32-ஆம் பிரிவின்படி அனுமதிக்கக் கூடிய நிலைபற்றி, இக்கட்டுரையில் முன்னமே விளக்கப்பட்டுள்ளது. ஒருவரது ஒப்புதல் வாக்குமூலம் அவர் இறந்துவிட்டால், 32-ஆம் பிரிவின்படி அனுமதிக்கக்கூடியதாக இருந்தால், அவ்வாறான வாக்குமூலம் அவர் தரப்பில் அனுமதிக்கப்படத்தக்கது ஆகும். எடுத்துக்காட்டாக, சேகரன் என்பவர் சென்னையில் ஒரு குற்றததைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அதே நாளில் அவர் ஒரு கடிதத்தை மதுரையிலிருந்து நண்பருக்கு எழுதி அஞ்சல் பெட்டியில் சேர்த்துள்ளார். அக்கடிதம் அத்தேதியில் மதுரையில் உள்ள அஞ்சல் பெட்டியில் சேர்க்கப்பட்டது என்பதை மெய்ப்பிக்க அக்கடிதம் அனுமதிக்கத்தக்க சாட்சியமாகும். ஏனெனில், அவர் இறந்து விட்டால் அக்கடிதம் 32-ஆம் பிரிவின்படி அனுமதிக்கத்தக்க சாட்சியமாகும்.

வாக்குமூலம் ஏற்பட்ட சமயத்தில் வாக்குமூலம் கொடுத்தவரின் மனநிலை அல்லது உடல் நிலையைக் காட்டக்கூடியதாக இருந்து அது வழக்குக்குப் பொருத்தமானதாக இருந்தால், அது கொடுத்தவரின் சார்பில் அனுமதிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக முருகன் என்பவர், கள்ள நாணயத்தைக் கள்ள நாணயம் என்று தெரிந்தே தம் வசம் வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார். கள்ள நாணயம் அவர் வசம் வந்த பின்பு அவருக்கு ஐயம் ஏற்பட்டு அது கள்ள நாணயமா இல்லையா என்று தெரிந்து கொள்ளத் தனித்திறமை கொண்டவரை அந்த நாணயத்தைச் சோதனை செய்யச் சொல்லுகிறார். அந்தச் செய்கையை முருகன் தரப்பில் மெய்ப்பிக்கலாம். ஏனெனில் அவ்வாறு சோதனை செய்தது உண்மையென்றால், கள்ள நாணயம் என்று அவருக்குத் தெரிந்திருக்க முடியாது.

ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அந்த அடிப்படையில் இல்லாமல் வேறு அடிப்படையில் அனுமதிக்கக்கூடியதாக இருந்தால், அது அந்த வாக்குமூலம் கொடுத்தவர் சார்பில் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

ஒரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுக்கும் வாக்குமூலத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல்வகை, நீதித்துறைக் குற்றவியல் நடுவர் முன்பு குற்ற விசாரணை முறைச்சட்டத்தின்படி கொடுக்கும் வாக்குமூலம் நீதித்துறை நடுவர் அல்லாதவரிடம் கொடுப்பது மற்றொரு வகை வாக்குமூலம் என்று கூறுவர். நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்கு மூலம் எவரது தூண்டுதலும் பயமுறுத்தலும் இல்லாத நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் தம் விருப்பமாகக் கொடுத்தது என்றால அதன் அடிப்படையில், பின்கட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை மறுத்தால், அவரைத் தண்டிக்கலாம். குற்றவியல் நடுவர் அல்லாதவரிடம் கொடுக்கும் வாக்கு மூலம் காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்பட்டிருந்தால், அது உண்மையாகவும் விருப்பமாகவும் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட அது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அனுமதிக்கத்தக்கது அன்று. (இவ்விதிக்கு ஒரு விதிவிலக்கு உண்டு. அது பிற்பகுதியில் குறிப்பிடப்படும்). ஆனால், ஆங்கில நாட்டுச்சட்டப்படி, காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்படும் வாக்குமூலமும் அனுமதிக்கத்தக்கது ஆகும். சுங்க அதிகாரி, காவல்துறை அதிகாரி பட்டியலில் இல்லை. குற்றவியல் நடுவர், காவல்துறை அதிகாரி ஆகியோர் அல்லாதவரிடம் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. ஆனால், அதுவும் சில கட்டத்தில் அனுமதிக்கத்தகாதது ஆகிவிடும். அதிகாரத்தில் உள்ள ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவரைப் பயமுறுத்துகிறார் அல்லது ஆசை காட்டுகிறார் அதனால், குற்றம் சாட்டப்பட்டவர் தமக்கு ஏதாவது ஆதாயம் உண்டு அல்லது தண்டனையிலிருந்து தப்பிக்க வாய்ப்பு உண்டு என நம்பி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் அது அனுமதிக்கத்தக்கது அன்று. 'அதிகாரத்தில் உள்ளஒருவர்' (Person in Authority) என்ற தொடருக்கு இச்சட்டம் விளக்கமளிக்கவில்லை. நீதிமன்றங்களின் தீர்ப்புகளின்படி, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவர் பற்றிய குற்றத்தைப் புலன் விசாரணை செய்ய, கைது செய்ய, வழக்குத் தொடர அதிகாரம் படைத்தவர் என்னும் பொருளைத்தரும் அதிகாரத்தில் உள்ளவர் என்ற சொற்றொடர். மேலும் தாங்கள் வகிக்கும் பதவியினால் குற்றம் சாட்டப்பட்டவர்மீது செல்வாக்குள்ளவரும் அவ்விளக்கத்தில் அடங்குவார்.

மேற்கூறியவாறு அதிகாரத்தில் உள்ளவர் பயமுறுத்தி, ஆசை காட்டி வாங்கிய வாக்குமூலம், காவல்துறை அதிகாரியிடம் கொடுத்த வாக்கு மூலம், வாக்குமூலம் கொடுத்தவர் மீது நடக்கும் குற்றவியல் வழக்கில் குற்றச்சாட்டை மெய்ப்பிக்க அனுமதிக்கக் கூடாது என்பதேயொழிய, வேறுவிதமான நடவடிக்கைகளில் அனுமதிக்கத் தடையில்லை. எடுத்துக்காட்டாக, வேலன் என்பவன் மாறன் என்பவரின் ஆட்

டைத் திருடியதாகக் குற்றவியல் வழக்கு நடைபெறுகிறது. காவல்துறை அதிகாரியிடம் குற்றம் சாட்டப்பட்ட வேலன், மாறனின் ஆட்டைத் தான் திருடியது உண்மை என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளான். அந்த வாக்குமூலம் குற்றவியல் வழக்கில் வேலன் மீதுள்ள திருட்டுக் குற்றச்சாட்டை மெய்ப்பிக்க அனுமதிக்கப்படக்கூடாது. ஆனால், அந்த ஆட்டை வேலனிடமிருந்து கைப்பற்ற மாறன் தொடரும் உரிமை இயல் வழக்கில் மேற்கூறிய வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

முன்னமே குறிப்பிட்டபடி குற்றம் சாட்டப்பட்டவர், காவல்துறை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலமும், அதிகாரத்தில் உள்ளவர் பயமுறுத்தி அல்லது ஆசைகாட்டிப் பெற்ற வாக்குமூலமும் அனுமதிக்கத்தக்கன அல்ல. ஆனால், அந்த விதிக்கு ஒரு முக்கிய விதிவிலக்கு உண்டு. அவ்வாறான வாக்குமூலத்திலிருந்து ஒரு பொருள் (Fact) கண்டுபிடிக்கப்படுமானால் அவ்வாறு கண்டுபிடிக்கப் பயன்படும் பகுதி வாக்குமூலம் மட்டில் அனுமதிக்கத்தக்கது ஆகும். அதற்கு முக்கியமான வாக்குமூலம் கொடுத்தவர் குற்றம் சாட்டப்பட்டவராயிருக்க வேண்டும். காவல்துறையினர் பாதுகாப்பில் அவர் இருக்க வேண்டும். மேலும் வாக்குமூலத்தில் உள்ள தகவலின் அடிப்படையில் ஒரு பொருள் கண்டுபிடிக்கப் பட்டதாக இருக்க வேண்டும். வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பே அப்பொருள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தால் அந்த வாக்கு மூலம் அனுமதிக்கத் தக்கதன்று.

எடுத்துக்காட்டாக மாறன் என்பவனை வேலன் என்பவன் குத்திக் கொலை செய்ததாகக் குற்றச்சாட்டு ஏற்படுகிறது. வேலனைக் கைது செய்து காவல்துறை அதிகாரி விசாரணை செய்கிறார். அப்போது வேலன் 'என்னைக் கூட்டிச் சென்றால் மாறனைக் குத்துவதற்கு நான் பயன்படுத்திய கத்தியை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டுகிறேன்' என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறான். அதில் 'மாறனைக் குத்துவதற்கு நான் பயன்படுத்திய' என்ற பகுதி அனுமதிக்கத் தக்கது அன்று. 'என்னைக் கூட்டிச் சென்றால் கத்தியை ஒளித்து வைத்திருக்குமிடத்தைக் காட்டுகிறேன்' என்ற பகுதி மட்டும் அனுமதிக்கத்தக்கது. ஏனெனில் குறிப்பிட்ட இடத்தில் கத்தி ஒளித்து வைக்கப்பட்டிருந்தது என்ற பொருள் மட்டும் மேற்படி வாக்குமூலத்திலிருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மாறன் குத்தப்பட்ட விவரம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது அன்று.

துணை நூல்:

**Prabhas C. Sarkar & Sudipto Sarkar**, 'Sarkar on Evidence', S. C. Sarkar & Sons (Private) Ltd., Calcutta 1981.

**இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம்** 1920-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்தால் நிலைநாட்டப்பெற்ற மக்கள் தொண்டு இயக்கங்களுள் ஒன்று. இது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைகளுள் ஒன்றாகும்.

உலக அளவில் செஞ்சிலுவைச் சங்க இயக்கம் மூன்று வகையில் பரவியுள்ளது. அவ்வகையாவன, செஞ்சிலுவை இயக்கத்தின் பன்னாட்டுக் குழு, செஞ்சிலுவைச் சங்க அமைப்புகள், தேசிய அளவில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் என்பனவாம்.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்தின் தலைநகரான செனிவாவில் (Geneva) உள்ளது. இச்சங்கத்தினரால் போரில் காயம் அடைந்தவர்களின் உடல் நலம் பாதுகாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. போரில் கைது செய்யப்பட்டவர்களின் முகாம்களுக்கு இச்சங்கத்தினர்கள் சென்று அவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களை அவர்கள் குடும்பங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். இரண்டாம் உலகப் போரில் இச்சங்கம் அரும்பணியாற்றியது. எதிரணியில் இருக்கும் நாடுகளோடு ஒவ்வொரு நாடும் நேச உறவுகளை உருவாக்க இச்சங்கம் பாடுபடுகிறது. முதல் உலகப்போரின் விளைவால் ஏற்பட்ட 4,50,000 போர்க் கைதிகளுக்கு அரசியல் அடிப்படையில் மறுவாழ்வு அளிக்கப்பட்டது. இப்போரினால் காயமடைந்த பொதுமக்களுக்கு வேண்டிய உணவு, உடை, மருத்துவ வசதிகள் இச்சங்கத்தின்மூலம் கொடுக்கப்பட்டன. இச்சங்கத்தின் அமைதிப் பணிகள் பாராட்டப்பெற்று, இச்சங்கத்திற்கு 1917, 1944-ஆகிய ஆண்டுகளில் நோபிள் அமைதிப் பரிசு அளிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கங்களின் பன்னாட்டு அமைப்பு: இச்சங்கம் 1919-இல் தோற்றுவிக்கப்பட்டது. என்றி தேவின்சன் (Henry Davinson)என்ற அமெரிக்கரால் இது தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன், இத்தாலி, சப்பான் போன்ற நாடுகளால் இச்சங்கம் ஆதரிக்கப்பட்டு மிக விரைவாக வளரத் தொடங்கியது. இச்சங்கத்தில் 112 நாடுகள் இப்போது உறுப்புநாடுகளாக உள்ளன.

இயற்கையினால் ஏற்படுகின்ற இழப்புகளை ஈடு செய்யப் பல்வேறு நாடுகளுக்கு இச்சங்கம் உதவி செய்கிறது. ஐக்கிய நாடுகள் அவையில் பல்வேறு அமைப்புகளோடு, இச்சங்கம் பணிபுரிகின்றது.

இந்தியாவின் பாராளுமன்றம் 'இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம்' பற்றிய சட்டத்தினை 1920-இல்

இயற்றியது. மனிதக்குல நன்மைக்கென்று, இச்சங்கம் செயற்படுகிறது. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இச்சங்கம்உள்ளது. இச்சங்கத்தில் 68 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களாக உள்ளவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், செஞ்சிலுவைச் சங்கங்களின் கோட்பாடுகளை உணர்ந்து, உற்சாகமாகச் செயற்படுகின்றனர். இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சிறப்புக் குறிக்கோள்கள் பின்வருவன:

1. சகோதர மனப்பான்மையுடன் பிறருக்கு உதவி புரிதல். 2. நாட்டிலுள்ள மக்களின் நலவாழ்விற்காகப் பாடுபடுதல். 3. நோய்கள் பரவுதலைத் தடுத்தல். 4. இன்னலுறும் மக்களின் இன்னல்களைப் போக்குதல்.

இந்தியாவில் அவ்வப்பொழுது இயற்கையினால் ஏற்படும் துன்பங்களில் சிக்கித் தவிக்கும் மக்களுக்குத் துன்ப நீக்கம் உண்டாகப் பணியாற்றுவது, வெள்ளத்தினால் ஏற்படும் சேதம், தீயினால் ஏற்படும் இழப்புகள், பூமி அதிர்ச்சியினால் ஏற்படும் துன்பங்கள் முதலிய சூழ்நிலைகளில் சிக்குண்டு தவிக்கும் மக்களுக்குச் செஞ்சிலுவைச் சங்கம் நல்ல உதவிகளை அளிக்கிறது. இந்தியாவில் 1966–1967 இல், ஏற்பட்ட வறட்சியில் 14 மாநிலங்களில் 14 இலட்சம் மக்களுக்கு வறட்சி நீக்கப் பணி உதவிகள், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்கப்பட்டன.

பங்களாதேசப் பிரிவினைக் காலத்தில் ஏற்பட்ட அகதிகள் சிக்கல் தொடர்பாக இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் உதவி செய்ததனால், கிழக்கு இந்தியாவில் மக்கள் இன்னலிலிருந்து விடுபட்டனர்.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம், 'இந்தியாவிலுள்ள ஏறத்தாழ 200 மருத்துவ நிலையங்களுக்கு வேண்டிய மருந்துகளை நன்கொடையாக அளித்து வருகிறது. அதனுடன் சமூக நல நிறுவனங்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து வருகிறது. பிற நாடுகளில் உள்ள மக்கள் துன்புறும்போது அந்த நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் மூலம், இந்தியாவின் செஞ்சிலுவைச் சங்கம் உதவிகளை அளித்து வருகின்றது. குறிப்பாகக் கடந்த நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ 20 நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்களுக்கு இந்தியாவின் செஞ்சிலுவைச் சங்கம் உதவி அளித்தது. ஏறத்தாழ 11 கோடி உரூபாய் அளவிற்குப் பங்களாதேச நாட்டிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 1971–72–இல் இந்தியாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் உதவி அளித்தது.

இந்தியாவிற்கும் பாகிசுத்தானத்திற்கும் 1965, 1971–இல் ஏற்பட்ட போர்களில் காயம் அடைந்த போர் வீரர்களுக்கு இச்சங்கம் மருத்துவ உதவிகளையும் அளித்து மற்ற சிறந்த உதவிகளையும் செய்தது. மருத்துவ நிலையங்களில் சேர்க்கப்பட்டிருந்த போரில் காயம் அடைந்த வீரர்களுக்கு வேண்டிய பஞ்சு, கம்பளி உடைகள், துண்டுகள், கட்டில் விரிப்புகள், சிறிய வானொலிப் பெட்டிகள் முதலியன இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கொடுக்கப்பட்டன. பாகிசுத்தானிலுள்ள இந்தியப் போர்க்கைதிகளுக்கும், இந்தியாவிலுள்ள பாகிசுத்தானியப் போர்க்கைதிகளுக்கும் பல பரிசுப் பொருள்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்கப்பட்டன. பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் மூலம் பாகிசுத்தானில் உள்ள இந்தியப் போர்க்கைதிகளுக்கும், இந்தியாவிலுள்ள பாகிசுத்தானியப் போர்க்கைதிகளுக்கும் கடிதப் போக்குவரத்துக் குறித்த எல்லா உதவிகளையும் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் செய்தது.

மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு 1963, 1673 ஆகிய காலக் கட்டங்களில் ஏறத்தாழ 1 கோடி உரூபாய் அளவிலான உதவிகள் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கமானது போரினால் ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கென்று பெங்களூரில் செஞ்சிலுவைச் சங்க விடுதி ஒன்றினை அமைத்து நடத்தி வருகின்றது. இது ஆசியாவிலேயே முதன்மையானதும் புதுமையானதுமாகும். போரினால் நிலையாக ஊனமுற்றோருக்கு மருத்துவ உதவிகளைத் தொடர்ந்து இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் அளித்து வருகிறது.

இராணுவ மருத்துவ நிலையங்களில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினைச் சார்ந்த 70 சேமநல மருத்துவ வல்லுநர்கள், காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு எல்லா வகையிலும் மருத்துவ உதவிகளை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. நூல்கள், மாத வார இதழ்கள் போன்றவை இராணுவ மருத்துவ நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்கப்பட்டு வருகின்றன.

**இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இரத்தச் சேமிப்பு நிலையம்:** இந்தியாவில் பல மாநிலங்களில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் இரத்தச் சேமிப்பு நிலையம் அமைக்கப்பட்டு 1962–இலிருந்து செயற்பட்டு வருகிறது. சமுதாயத்திலுள்ள பல்வேறு மக்களிடமிருந்து இரத்தம் சேமிப்புச் செய்யப்பட்டு நாட்டிலுள்ள பல்வேறு இராணுவ நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

மகப்பேறு மருததுவ நிலையங்கள்: இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 1931–ஆம் ஆண்டிலிருந்து பெண்கள், குழந்தைகள் நலனுக்கென்று மருத்துவ நிலையங்களில் பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது. கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்கென்று பலவகைப்பட்ட நிலைகளில் உள்ள கிராமச் செவிலியர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு, நாடு முழுவதிலும் உள்ள 300-க்கு மேற்பட்ட தாய்சேய் நல விடுதிகளில் பணிபுரிகிறது.

இளநிலைச் செஞ்சிலுவைச் சங்கம்: இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினர், 1925 முதல் ஏறத்தாழ 60 இலட்சம் சிறுவர், சிறுமிகளைக் கொண்ட இளநிலைச் செஞ்சிலுவைச் சங்கத்தை நடத்தி வருகின்றனர். இந்தியாவிலுள்ள பள்ளி, கல்லூரிகளில் 39,000 மாணவ மாணவியர் இச்சங்கத்தில் பணி புரிகின்றனர்.

நோயாளி ஊர்திப் பணி: புனித சான் நோயாளி ஊர்திப் பணிச் (St. John Ambulance) சங்கம், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஒரு சிறப்பான உறுப்பாகும். முதலுதவி எவ்வாறு அளிப்பது என்பதை மக்களுக்கு இவர்கள் கற்றுத் தருகின்றனர். இவ்வூர்திப் பணியினைப் பொதுமக்களிடம் எவ்வாறு செய்வது, விளையாட்டுப் போட்டி அரங்குகளிலும், அகதிகள் முகாம்களிலும், மிகப்பெரிய அளவில் நடத்தப்படுகின்ற சுற்றுலாக் கண்காட்சிகளிலும் மக்களுக்குத் தேவையான இவ்வூர்திப் பணியினைக் கொடுப்பதற்குச் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுகாறும் 50 இலட்சம் மக்களுக்கு முதலுதவிப் பயிற்சி, இவ்வூர்திப் பணிப் பயிற்சி முதலியன அளிக்கப்பட்டுள்ளன.

மக்கள் நல்வாழ்வுக் கல்வி: நோய்வருமுன் காப்பது எவ்வாறு என்று மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுக் கல்வி அறிவினைச் செஞ்சிலுவைச் சங்கம் அளித்து வருகிறது. மருத்துவக் கருத்துரைகள் அடங்கிய கைப்படிகள், விளம்பரச் சுவரொட்டிகள் ஆகியவற்றின் மூலம் நல்வாழ்வுக் கல்வி புகட்டப்படுகிறது. மக்கள் நல்வாழ்வுக் கல்வித் தொடர்பான திரைப்படங்கள் மக்களுக்குக் காட்டப்படுகின்றன. இதற்கென்று மக்கள் வாழ்வுத் திரைப்பட நூல் நிலையம் செஞ்சிலுவைச் சங்கத்தால் பல்வேறு இடங்களில் உருவாக்கப்பட்டு மக்களிடம் பணிபுரிந்து வருகிறது. இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தால் 'இந்தியச் செஞ்சிலுவைச் சங்க இதழ்', 'இந்திய இளைஞர்'–என்ற இதழ்கள் வெளியிடப்படுகின்றன.

செவிலியர் பணி: செவிலியர்களின் எண்ணிக்கை மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப இந்தியாவில் இல்லாதது கவனிக்கத்தக்கது. எனவே, இந்தியச் செஞ்சிலுவைச் சங்கமானது, வீட்டில் உள்ளவர்களே செவிலியர் பணியினைச் செய்யப் பல இடங்களில் பயிற்சியளிக்கிறது. பயிற்சி பெற்ற செவிலியர்கள் பிறருக்குச் செவிலியர் பணியினைச் சொல்லிக் கொடுக்கின்றனர். அதனால், பெண்கள் பல்வேறு இடங்களில் செவிலியர் பயிற்சியினைப் பெற்று வளமுடன் வாழ்கின்றனர். இவ்வாறு செஞ்சிலுவைச் சங்கம் பல்வகைப் பணிகளை மக்கள் நலனுக்காகச் செய்து வருகிறது. தா.எ.

**இந்தியச் செலாவணி**: பண்டமாற்றுதலில் இடையீட்டுக் கருவியாகப் பணியாற்றுவது செலாவணி. செலாவணியே பண்டமாற்றுதலை எளிதாக்கி விரிவாக்கியது. செலாவணியின் சீரிய பணிகளே பண்டமாற்று முறையின் குறைகளைப் போக்கின; அங்காடியை விரிவடையச் செய்து வணிகம் தழைக்க உதவின. தனிப் பயிற்சி, உழைப்புப் பகுப்பு, பேரளவு உற்பத்தி, இவற்றின் முடிவான தொழிற்புரட்சி, பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்தும் செலாவணியால் விளைந்தனவே. இத்தகு செயற்கரிய செயலாற்றுகிற செலாவணியின் படிமுறை வளர்ச்சியினை அறிந்து கொள்ளுதல் பயனுடையதாகும்.

இந்தியச் செலாவணி: இந்தியச் செலாவணியின் (Indian Currency) வளர்ச்சி பல மாற்றங்களுக்கு உட்பட்டது. இந்தியாவில் நிலையான, முறைப்படுத்தப்பட்ட செலாவணி முறை ஏதும் கி.பி. 19–ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்ப் பின்பற்றப்படவில்லை. வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வெள்ளி, தங்க நாணயங்கள் ஆகியவை புழக்கத்திலிருந்தன என்பதை வரலாறு தெரிவிக்கிறது. எனினும் நாணயங்களை வெளியிட வரையறுக்கப்பட்ட முறைகள் பின்பற்றப் பட்டனவாகவோ, வெள்ளி தங்க நாணயங்களின் மாற்று விகிதம் வரையறுக்கப்பட்டிருந்தது என்பதாகவோ சான்றுகள் இல்லை.

முதல் இந்தியச் செலாவணி கி.பி. 1835: இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்க் கொணரப்பட்டு, கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தின்கீழ் வந்தபோது, வேறுபட்ட எடையும் உலோகத் தூய்மையும் கொண்ட 994 வகையான தங்கம், வெள்ளி நாணயங்கள் இந்தியாவில் நடைமுறையில் இருந்தனவெனக் கிழக்கிந்தியக் கம்பெனியின் குறிப்பொன்று கூறுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையிலான எடையும், உலோகத் தூய்மையும் கொண்ட நாணயங்கள் புழக்கத்திலிருந்த படியால், வரிவிதிப்பதும், வரி வசூல் செய்வதும் சிக்கலாக

இருந்தன. எனவே ஒரே தன்மையான இந்தியா முழுமைக்கும் பயன்படக்கூடிய நாணயத்தினை வெளியிட வேண்டியது இன்றியமையாததாயிற்று.

'இந்தியச் செலாவணிச் சட்டம்' கி.பி. 1835–ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி 180 கிராம் எடையும் 11/12 உலோகத் தூய்மையும் கொண்ட வெள்ளி நாணயம், இந்தியா முழுமைக்கு மான சட்டமுறை நாணயமாக வெளியிடப்பட்டது. இந்த நிலைக்குப் பின்னர், ஆசுத்திரேலியாவிலும் கலிபோர்னியாவிலும் மிகுதியாகத் தங்கம் கண்டு பிடிக்கப் பட்டதால் தங்கத்தின் விலை வெள்ளியின் விலையைவிடக் குறைந்தது. பன்னாட்டு வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட தங்கத்தின் விலை சரிந்ததால், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் தங்கத்தையே எல்லா வகைச் செலாவணிகளுக்கும் பயன்படுத்தத் தொடங்கின. இதனால் வெள்ளியின் மதிப்பு மிகவும் வீழ்ந்தது.

எர்சல் குழு கி.பி. 1892: வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியுற்றதனால் இந்தியாவின் அயல் வணிகம் பெரிதும் சீர்குலைந்தது. இதனால், ஆங்கிலேயருக்குக் கிடைத்துவந்த வருவாயும் பாதிக்கப்பட்டது. இத்தகு மாற்றங்களுக்கு ஏற்ப இந்தியச் செலாவணியில் மாற்றங்களைக் கொணரும் இலக்குடன் கி.பி. 1892–ஆம் ஆண்டில் எர்சல் (Herschell ) என்பவரைத் தலைவராகக் கொண்ட 'எர்சல் குழு' அமைக்கப் பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கேற்ப இந்தியாவில் தடையற்ற நாணய அச்சிடுகை (Free Coinage) நிறுத்தப்பட்டது. நாணய அச்சிடுகை அரசின் கட்டுப் பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்திய உருபாய் 'ஒரு நிலையான நாணயம்' (Standard Coin) என்பது மாறி, அது ஓர் 'ஒப்பு நாணயமாக' (Token Coin) ஆகியது. நாணயத்தின் உள்ளுறை வெள்ளியின் அளவும் குறிப்பிட்ட அளவு குறைக்கப்பட்டது. ஆனால், அதே காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சேர வேண்டிய பணம் தங்க நாணயமாக வசூலிக்கப் பெற்றது.அந்த அளவில் வெள்ளி உள்நாட்டுச் செலாவணியாகவும், தங்க நாணயம் இணைப்பு நாணயமாகவும் பயன்பட்டு வரலாயின. ஒரு உருபாய் என்பது ஒரு சில்லிங்கு நான்கு பென்சு இங்கிலாந்து நாணயத்திற்கு இணை என்ற மாற்று விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந் நடவடிக்கையால் இந்தியாவைச் சிறிது சிறிதாகப் பொன்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பௌலர் குழு கி.பி. 1898: இந்தியாவில் ஆங்கிலேய அரசு, நாணய அச்சிடுகையில் ஒரு மாற்றம் வேண்டும் என அறிவித்தது. இதனால், வெள்ளி நாணய அச்சிடுகை குறைக்கப்பட்டு, வெள்ளி நாணயப் புழக்கம் அரிதாயிற்று. அங்காடியில், தங்கத்தின் அடிப்படையிலான உருபாய் மதிப்பு உயர்ந்தது. இந்தச் சூழலில்தான், பொன்திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்தும் நோக்குடன் பௌலர் குழு அமைக்கப்பட்டது. பௌலர்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப இந்திய உருபாய் தங்கத்துடன் இணைக் கப்பட்டது. இலண்டனில் தங்கச் சேமிப்புத் தொடங் கப்பட்டது. ஆங்கிலேய நாணயமும், இந்திய உருபாயும் சட்டமுறைப் பணங்கள் ஆயின. இதனால் 1900 முதல் 1917–ஆம் ஆண்டு வரை இந்தியா ஒரு முழுமையான பொன்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப் பட்டது. உள்நாட்டில் வெள்ளி நாணயமும், தாள் பணமும் புழக்கத்தில் இருந்தன. இந்திய உருபாயும், ஆங்கில இசுடெர்லிங்கும் நிலையான மாற்று விகிதத்தில் இருப்பதற்கு ஏதுவாக, ஆங்கிலேய வணிகர்கள் இந்தியாவிற்குக் 'குழு உண்டியல்களை' (Council Bills) விற்பனை செய்தனர். இதனால் இந்தியா துணையான வணிகச் சமநிலையை அடைந்தது. ஆயினும், தங்க நாணய அச்சிடுகை மட்டும் தொடர்ந்து நடந்து வந்தது.

சேம்பர்லின் குழுவும் பொன்மாற்றுத் திட்டமும்: இந்நிலையில் இந்தியா, பொன்திட்டத்தைத் தொடர்ந்து பின்பற்றத் தேவையில்லை எனவும், தங்க நாணய அச்சிடுகையும் அதற்குத் தேவையான தங்கத்தின் சேமிப்பும் தேவையில்லை எனவும் சேம்பர்லின் குழு முடிவு செய்தது. ஆயினும், இந்தியா தொடர்ந்து பொன்திட்டத்திற்குப் பதிலாகப் 'பொன் மாற்றுத் திட்டத்தில்' (Gold Exchange Standard) செயற்படத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ்த் தங்க நாணயங்கள், மக்களால் உள்நாட்டுப் புழக்கத்தில் பயன்படுத்தப்படாமல், அயற் செலாவணியில் மட்டும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பயன் படுத்தப்பட்டன. இதனால், வெள்ளியின் விலை உயர்ந்தது. மக்கள் வெள்ளி நாணயங்களை உருக்கி வெள்ளி உலோகமாக மிக்க விலைக்கு விற்க முனைந்தனர். இதனால், வெள்ளி நாணயத்தின் மதிப்பை அரசே நிலைநிறுத்தும் முயற்சி கைவிடப் பட்டு, அங்காடி நிலைமைகளாலேயே இது வரையறுக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டது. இந்திய உருபாய் ஆங்கில நாணயம் ஆகியவற்றுக்கிடையேயான மாற்று விகிதம் 15:1 என நிறுவப்பட்டது.

பாபிங்டன்–இசுமித்துக் குழு, 1919: முதல்உலகப் போருக்குப் பின்னர் 1919-இல் பாபிங்டன் இசுமித்துக் குழு, இந்திய உருபாயின் மதிப்பு உயர்வுக்கான காரணங்களையும் அதுதொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் அரசுக்குப் பரிந்துரைக்க அமைக் கப்பட்டது. இக்குழு, இந்திய நாணயத் திட்டம் வெற்றியுடன் செயற்பட்டாலும், வெள்ளியின் விலையில் தொடர்ந்து ஏற்றத்தாழ்வு உள்ளது என

வும், இதனால் வெளிநாட்டு முதலீடும் உற்பத்தியும் பெருமளவு சீர்குலைவதால் இந்தியா, பொன் திட்டத்தைத் தொடர வேண்டும் எனவும் பரிந்துரை செய்தது. இக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, இந்தியா 'ஒரு வரையறுக்கப்பட்ட அளவிற்குப் பொன் வைப்பு இல்லாமலேயே காகிதப்பணம் வெளியிடும் நம்பிக்கைத் திட்டம்' (Fiduciary System) என்பதனை மேற்கொண்டு, ஒரு குறைந்த அளவு பொன், அயற் பத்திரங்கள் ஆகியவற்றை வைப்பாகக் கொண்டு, தேவைக்கேற்பப் பணத்தை வெளியிடும் விகிதாச்சார வைப்புத் திட்டத்தைக் (Proportional Reserve System) கைக்கொண்டது. ஆனால், இந்திய ஏற்றுமதியில் நிலவிய 'கேடான செலுத்துநிலை' (Unfavourable Balance of Payment) இந்திய உரூபாயின் மதிப்புக் குறையக் காரணமாயிற்று. இதனால், முதல் உலகப் போரில் ஆங்கிலேயர்கள் அடைந்த ஆதாயம், இங்கிலாந்தின் பணமதிப்பின் அடிப்படையில் மிகக் குறைந்த மதிப்பே உடையதாயிற்று. இவ்வாறு உரூபாய்-இசுடர்லிங்கு இணைப்புத் தோல்வியையே தழுவியது.

**இல்டன்யங்குக் குழு (1925)வும் இந்திய மைய இருப்பு வங்கியும்:** இசுடர்லிங்கு இணைப்பின் தோல்வியையும், அதன் விளைவுகளையும், தவிர்க்க 1925-இல் 'இல்டன்யங்'கின் தலைமையிலான இல்டன்-யங்குக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு, இந்தியாவில் தாள்பணம், வெள்ளி நாணயமாகிய இரு ஒப்பு நாணயங்களும், முழுமையான நாணயமான இசுடெர்லிங்குடன் மாற்றிக் கொள்ளும்போது தோன்றிடும் சிக்கல்களையெல்லாம் ஆய்ந்து விளக்கியது. இசுடெர்லிங்கு (Sterling) இந்தியாவில் பயன்படும் நாணயம் அன்று. மேலும் இந்தியா, பொன் திட்ட வைப்பு, தாள் செலாவணிவைப்பு என்ற இருவகை வைப்புகளைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. அவ்வாறு வைப்பது, இந்திய ஒப்பு நாணயத்தின் மதிப்பு ஆகியவற்றை நிலைநிறுத்த இன்றியமையாததாகிறது. இந்த நிலைகளெல்லாம் தேவையற்றவை; 'இடையூறு விளைவிக்கக் கூடியவை. மேலும், இந்தியச் செலாவணி நெகிழ்வற்றது. ஆங்கிலேய அரசும் இந்திய அரசும் நாணயத்தைக் கட்டுப்படுத்துவதால், பணவியல் கைகோள் முறை (Monetary Policy) செவ்வனே செயற்படுவதில்லை என்பது போன்ற பல்வேறு கருத்துகளை இல்டன்-யங்குக் குழு தெரிவித்தது. இல்டன்-யங்குக் குழுவின் பரிந்துரையின் படி 1935 முதல் 'இந்திய இருப்புவங்கி' இந்தியமைய வங்கியாகச் செயற்படத் தொடங்கியது. அரசாங்க வங்கியும் (Imperial Bank) மைய வங்கியின் பணிகளை இருப்பு வங்கியிடம் ஒப்படைத்தது.

**இரண்டாம் உலகப் போருக்குப் பின்:** இரண்டாம் உலகப் போரின்போது இந்தியாவில் தாள் பண வெளியீடு, 1938-39-இல் உரூபாய் 182.36 கோடியாக இருந்தது, 1946-இல் உரூபாய் 1232.73 கோடியாக உயர்ந்தது. இதனால் பணவீக்கம் தோன்றியது. நாணயங்களுக்கான தேவை உயர்ந்ததால், 1940-இல் நாணயங்களும் ஒரு உரூபாய்த் தாள் பணமும் வெளியிடப்பட்டன. இரண்டு உரூபாய்த் தாள் பணம் 1943-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இரண்டு உரூபாயையும் அதற்கு மேற்பட்ட தாள் பணங்களையும் வெளியிடும் முற்றுரிமம் மைய இருப்பு வங்கிக்கு வழங்கப்பட்டது. இந்தியச் செலாவணியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், இந்தியாவிலேயே இருந்திட வகை செய்யப்பட்டது. இருப்பினும், ஐரோப்பிய நாடுகளுடனான அயல் வணிகத்திற்கான தாலர்களைப் (Dollars) பெற்றிடும் வகை செய்திட, இலண்டனில் 'பேரரசு தாலர் தொகுப்பு' (Empire-Dollar Pool) என்ற நிறுவனத்தில், இந்தியா உறுப்பு நாடாயிற்று. அயல் வணிகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இந்தியச் செலாவணியில் மூன்று குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாக, இந்தியா பன்னாட்டுப் பண நிதி அமைப்பில் உறுப்பு நாடாகி, இந்திய நாணயத்தைச் சீர்படுத்தியது. இதனால், இந்திய உரூபாயைப் பல நாட்டு நாணயங்களுடன் மாற்றிக் கொள்ளத்தக்க 'பன்முக மாற்று' (Multilateral Convertibility) நிலை தோன்றியது. இந்திய உரூபாய் தங்கத்துடன் இணைக்கப்பட்டது. இரண்டாவதாக, பாகிசுத்தான் பிரிவினையினால், பாகிசுத்தானின் மைய வங்கிக்கு 133.77 கோடி மதிப்புள்ள சொத்துகள் மாற்றப்பட்டன. இறுதியாக, உலகப் போர் தோற்றுவித்த பணவீக்கம், அதன் விளைவாய் ஏற்பட்ட ஏற்றுமதி வீழ்ச்சி ஆகியவை, இந்திய நாணயத்தின் 'மதிப்புக் குறைப்பை'த் (Devaluation) தவிர்க்க முடியாததாக்கின. எனவே, 1949-இல் இந்திய உரூபாயின் மதிப்பு 30.5 விழுக்காடு குறைக்கப்பட்டது. இதனால் இந்தியாவின் ஏற்றுமதியும் அயற் செலாவணியும் ஓரளவு முன்னேறின.

இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கென 1950 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பற்றாக்குறை நிதியாக்கம் வளரலாயிற்று. தேவைக்கேற்ற நாணய வெளியீட்டை நெகிழ்வுடையதாக்க வேண்டிக் குறைந்த அளவு வைப்புத் திட்டத்தின் (Minimum Reserve System) அடிப்படையில் நாணயங்கள் வெளியிடப்பட்டன. இதனால், நாணய அளிப்பு உயர்ந்து பணவீக்கம் மேலும் உயர்ந்தது. ஏற்றுமதி வீழ்ந்து இறக்குமதி மிகுந்தது. எனவே, இந்நிலைமையைச் சீர்செய்திட 1957 முதல் இந்தியா 'தசம நாணய வெளியிடுகை

யை'ப் (Decimal Coinage) பின்பற்றத் தொடங்கியது. இருப்பினும் பணவீக்கமும், இறக்குமதி உயர்வும், இந்திய உருபாயின் அயற் சந்தை மதிப்புக் குறைவும் தொடர் கதையானதுடன் 'இந்தியாவின் அயற் செலாவணி வைப்பு' (Foreign Exchange Reserve) 1966-இல் அதன் மிகக் குறைந்த அளவான 85 கோடியை எட்டியது. இக்காரணங்களால், 1966-இல் இந்திய உருபாயின் மதிப்பு இரண்டாம் முறையாக 36.5 விழுக்காடு குறைக்கப்பட்டது.

இன்றைய நிலை: இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கான முதலீடுகளின் மிகுதியாலும், பொதுத் துறைச் செலவுகளும் கடன்களும் பல்கிப் பெருகியதாலும் 1970 முதல் இந்தியாவின் பணப்புழக்கம் பன்மடங்கு உயர்ந்தது. பணப்புழக்கம் ஆண்டொன்றுக்குச் சராசரியான 6 விழுக்காட்டிற்குமேல் விரிவடைந்தது. கருப்புப் பணப்பெருக்கம், கடத்தல் பண்டங்கள், அயற் பணங்களின் தலையீடு ஆகியவற்றால் பணவீக்க நிலை மேலும் மிகுதியாயிற்று. இதனைக் கட்டுப்படுத்த இந்திய அரசு, பலவகைப்பட்ட பணவீக்கக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளைக் கைக்கொண்டது. இருப்பினும், இந்தியப் பணவீக்கம் ஓரளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1975-இல் இந்திய உருபாய் ஆங்கில நாணயத்தின் இணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது.

இந்திய உருபாய், 1975 முதல் இசுடெர்லிங்கு தாலர், மார்க்கு, பிராங்கு, என்னும் நாணயங்களடங்கிய 'செலாவணிச் கூடையில்' (Basket of Currencies) தானும் ஒரு நாணயமாயிற்று. இக்கூடை நாணயங்களின் எடையும் மதிப்பும், அந்தந்த நாடுகளின் மைய வங்கியால் மறைபொருளாக வைக்கப்படுகின்றன. பன்னாட்டுச் செலாவணி அங்காடியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அவ்வப்போது கூடை நாணயங்களின் மாற்று விகிதங்களும் மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வேற்பாட்டின்படி, இந்திய உருபாயின் மதிப்பு கூடை நாணயங்களின் மதிப்பு மாற்றங்களுக்கு ஏற்பவும், இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி நிலைகளுக்கு ஏற்பவும் மாற்றியமைக்கப்படும். இந்நடவடிக்கைகள் அனைத்தும் மைய வங்கியால் மறைபொருளாகவே வைக்கப்பட்டுள்ளன. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இந்திய இருப்பு வங்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும், பலவகைப்பட்ட கடன்களின் மிகுதியினால் பணப்புழக்கமும் பண அளிப்பும், வேகமாக உயர்ந்து சென்ற வண்ணமே இன்றும் உள்ளன.

இந்தியச் செலாவணியின் படிமுறை வளர்ச்சியின் தொகுப்பால் பொதுவாகக் காணப்படுகிற கருத்துகள் இரண்டு. முதலாவது, இன்றைய இந்தியச் செலாவணி கி.பி. 1835 முதல் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களின் இறுதி வடிவம். இரண்டாவது, இந்தியாவில் நிலவிய ஆங்கிலேய ஆதிக்கத்தின் வடுக்களை இந்தியச் செலாவணியின் வளர்ச்சியில் காணமுடிகிறது.

ஜி.வி.

துணை நூல்கள்:

Gupta, G.P., The Reserve Bank of India and Monetary Management, Asia Publishing House, Bombay, 1969.

Alamaula, N.K., Operations of the Reserve Bank of India 1934-54, Asia Publishing House, Bombay, 1951.

**இந்தியத் தண்டனைச் சட்டம்**: இந்திய நாடு இந்து இனத்தைச் சார்ந்த பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அதையடுத்து மொகலாய ஆட்சி ஏற்பட்டது. மொகலாய ஆட்சிக் காலத்தில் மொகலாய மன்னரின் அனுமதியுடன் கி.பி.1612-ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள சூரத்து (Surat) நகரில் ஆங்கில நாட்டிலிருந்து வந்த கிழக்கிந்திய வாணிகக் குழு தன் தொழில்நிறுவனத்தைத்தொடங்கியது. படிப்படியாக இந்நாட்டின் பகுதிகளை அந்தக்குழு கைப்பற்றித் தன் ஆதிக்கத்தைப் பெருக்கத் தொடங்கியது. பின்பு, அந்த வாணிகக் குழுவிடமிருந்து ஆதிக்கப் பொறுப்பை, கி.பி. 1858-ஆம் ஆண்டில் ஆங்கில அரசு ஏற்று இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தது.

தொடக்கத்திலிருந்தே மேற்குறிப்பிட்ட கிழக்கிந்திய வாணிகக்குழு ஆங்கில அரசின் கட்டுப்பாட்டில் இருந்துவந்தது. அதாவது, அவ்வப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த அரசர் அல்லது அரசி அளித்து வந்த பட்டயத்தின் (Charter) அடிப்படையில் அந்த வாணிகக் குழு இயங்கி வந்தது. ஆங்கில வாணிகக் குழுவின் ஆதிக்கம் ஏற்பட்ட உடனேயே குற்றவியல் நீதியைச் செலுத்தும் பொறுப்பும் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. மாநில நகரங்கள் (Presidency Towns) என்று சொல்லப்பட்டு வந்த கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று மாநகரங்களில் மட்டும் ஆங்கிலேய நீதியின் அடிப்படையில் குற்றவியல் நீதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், சென்னை, வங்காள மாநிலங்களில் உள்ள நாட்டுப்புறப் பகுதிகளில் (Other than Presidency Towns) இசுலாமியச் சட்டப்படி குற்றவியல் நீதியை ஆங்கிலேயர் வழங்கி வந்தனர். பம்பாய் மாநிலத்தில் உள்ள நாட்டுப்புறப் பகுதிகளில், இந்துக்களுக்கு இந்துக் குற்றவியல் நீதியும், இசுலாமியர்களுக்கு இசுலாமியக் குற்றவியல் நீதியும், பார்சி, கிறித்தவர் போன்றோருக்கு ஆங்கில முறைக் குற்றவியல் நீதியும் ஆங்கிலேயர்

வழங்கி வந்தனர். வரையறை விதி 14 (Regulation XIV) கி.பி. 1827 - ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது. அதன்படி பம்பாயில் எல்லோருக்கும் பொதுவான குற்றவியல் நீதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அதிலும் குறைபாடுகள் இருந்தன.

இசுலாமியக் குற்றவியல் நீதி (Criminal Justice) மொகலாய சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்டது. அதில் குறைபாடுகள் இருந்தன. தண்ட னைகள் மிகக் கொடூரமாக இருந்தன. கொலை போன்ற பெரிய குற்றங்கள் கூடத் தனிப்பட்டவருக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களாகக் கருதப்பட்ட னவேயொழிய, சமூகத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களாகக் கருதப்படவில்லை. ஆனால், மது அருந்துதல் போன்ற சிறிய குற்றங்கள் கூடக் கடவு ளுக்கு எதிராகச் செய்யப்பட்ட பெரிய குற்றங்களா கக் கருதப்பட்டன. மேலும், இந்தியாவில் குற்ற வியல் நீதி வழங்குவதில் அப்போது ஒரே சீரான நிலை (Uniformity) இல்லை. இடத்துக்கு இடம் மாறுபாடு இருந்தது. எனவே, இந்தியா முழுமைக் கும் ஒரே சீரான குற்றவியல் சட்டத்தைத் தொகுக்க (Codify) வேண்டுமென்று ஆங்கில அரசு தீர்மானித்தது.

அந்த நோக்கத்துடன் ஆங்கில நாடாளுமன்றம் உரிமை ஆவணச் சட்டத்தைக் (The Charter Act of 1833) கி.பி.1833-ஆம் ஆண்டில் இயற்றியது. இந்தச் சட்டத்தில் மூன்று முக்கிய வழிவகைகள் (Provisions) செய்யப்பட்டன. அவையாவன: 1) இந்தியா முழு மைக்கும் செல்லுபடியாகக் கூடிய சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம் அரசப் பேராளருக்கு (Governor-General) வழங்கப்பட்டது. 2) இந்திய அரசியல் சட்ட உறுப்பினர் (Law Member) பதவி ஏற்படுத்தப்பட்டது. 3) சட்ட ஆணையம் (Law Commission) நியமிக்க வழிவகை செய்யப்பட்டது. இங்கிலாந்திலிருந்து வந்த மெக்காலே (Macaulay) என்ற சட்டமேதை இந்திய அரசியல் சட்ட உறுப் பினர் பதவியை ஏற்றார். அவர் தலைமையில் முதல் சட்ட ஆணையத்தை இந்திய அரசு நியமித்தது. அந்த ஆணையம், இந்தியத் தண்டனைச் சட்டத் தின் முன்வரைவைத் (Draft) தயாரித்து, கி.பி.1837-ஆம் ஆண்டில் இந்திய அரசுக்கு அளித்தது. இது கி.பி.1860-ஆம் ஆண்டில் சட்டமாக இந்தியச் சட்ட மன்றத்தால் (Indian Legislative Council) இயற்றப் பட்டது. இது 1.1.1862-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதுதான் இந்தியத் தண்டனைச் சட்டத் தின் (Indian Penal Code) வரலாறு ஆகும்.

இந்தச் சட்டம் மெக்காலேயின் மிகச் சிறந்த படைப்பு என்று போற்றப்படுகிறது. இன்றைக்கு 120 ஆண்டுகளுக்கு மேல் ஆனபோதிலும் இந்தச் சட்டத்தில் பெரிய மாறுதல் ஏதும் செய்யப்பட வில்லை. ஆங்கிலக் குற்றவியல் சட்டத்தின் அடிப் படையில் இந்தியத் தண்டனைச் சட்டம் தொகுக் கப்பட்ட போதிலும், ஆங்கிலச் சட்டத்தைவிட இந்தியச் சட்டம் உயர்வானது. ஆங்கிலக் குற்ற வியல் நீதியானது, பொதுச் சட்டக் கொள்கைகளின் (Common Law) அடிப்படையில் இயங்கி வருகிறது. அதாவது, அச்சட்டம் மரபுகள், நீதி மன்றங்களின் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப் பட்டது; இது தொகுக்கப்பட்டது (Codified) அன்று. இந்தியச் சமூகத்துக்குப் பொருந்துமாறு இந்தியத் தண்டனைச் சட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. எடுத் துக்காட்டாக, பிறர் மனை நயத்தல் (Adultery) என்ற குற்றத்துக்கு ஆங்கில நாட்டில் தொடர் புடைய ஆண், பெண் இருவருமே தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆகிறார்கள். ஆனால், இந்தியா வில் பெண் அந்தக் குற்றம் புரிந்தவளாகக் கருதப் படமாட்டாள். இந்தியப் பெண்கள் மட்டமாக நடத்தப்படுகிறார்கள் என்றும், இந்திய ஆண், பெண்கள் பலரை ஒரே காலத்தில் திருமணம் செய்து கொள்ளுகிறான் என்றும், அதனால் இந்தி யப் பெண்ணைப் பிறர் மனை நயத்தல் குற்றத்துக் காகத் தண்டிக்கக் கூடாது என்றும், இந்தியத் தண் டனைச் சட்டத்தைத் தொகுத்த மேற்கூறிய சட்ட ஆணையம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

பெரும்பான்மையான குற்றங்களை நாட்டுக்கு எதிராக, அதாவது, சமூக நலனுக்கு எதிராகச் செய்யப்பட்டவை என்று கருதுவது இந்தியத் தண் டனைச் சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். குற்ற மனம் (Mens Rea) குற்றத்திற்கு அடிப்படை என்று வலியுறுத்தியிருப்பது இச்சட்டத்தின் மற்றொரு சிறப்புச் கூறாகும். ஒரு குற்றம் செய்தவனுக்கு அளிக்கப்படும் தண்டனையானது மற்றவனுக்கு அச் சம் விளைவிக்கக் கூடியதாக (Deterrent) இருக்க வேண்டும். அதாவது, ஒருவன் குற்றம் செய்தால் அவனுக்குத் தண்டனை கிடைக்கும் என்ற அச்சத் தால் மற்றவன் குற்றம் செய்யாமல் இருக்க வேண் டும். கடுமையான தண்டனை அளிப்பதன் மூலம் ஒரு குற்றவாளி மறுபடியும் குற்றம் செய்யாமல் (Preventive) தடுக்கப்பட வேண்டும். அடுத்தவனுக் குத் துன்பம் விளைவித்த குற்றவாளியும் தண்டனை யினால் (Retributory) அவதிப்பட வேண்டும். இவ் வகையில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ்க் குற்றத்தின் தன்மையைப் பொறுத்துத் தண்டனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தில் மொத்தம் 25 பகுதிகள் உள் ளன; 511 பிரிவுகள் உள்ளன. முதல் பகுதி இச்சட்

டம் நடைமுறைப்படுத்த வேண்டிய முறை பற்றிக் கூறுகிறது. சம்மு–காசுமீர் தவிர ஏனைய இந்தியா முழுமைக்கும் இச்சட்டம் செல்லத்தக்கது. ஓர் இந்தியக் குடிமகன் அயல் நாட்டவராயிருந்தாலும்கூட இந்தியாவில் (சம்மு–காசுமீர் தவிர) இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றத்தைச் செய்தால் அந்த அயலவரும் தண்டிக்கப்படத்தக்கவராவர். இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஆகாயவிமானத்திலோ கப்பலிலோ அது எங்கிருந்தாலும், யாராக இருந்தாலும் இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றத்தைச் செய்தால் இச்சட்டத்தின்படி அவரைத் தண்டிக்கலாம்.

இரண்டாம் பகுதி பதங்களுக்கு விளக்கம் அளிக்கிறது. இது பொது எண்ணம் உட்கருத்துப் (Common Intention) பற்றி விளக்கியிருப்பது மிகவும் முக்கியமாகும். பலரது பொது எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் ஒரு குற்றம் நிகழுமாயின், அந்தப் பொது எண்ணம் கொண்ட எல்லோருமே சம அளவில் குற்றவாளியாவார்கள்.

மூன்றாம் பகுதி குற்றங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகளைக் குறிப்பிட்டுள்ளது. அத்தண்டனைகளாவன: 1. தூக்குத் தண்டனை. 2. ஆயுள் தண்டனை. 3. சிறைத் தண்டனை. அது கடுந்தண்டனையாகவோ எளிய அல்லது சிறிய தண்டனையாகவோ இருக்கலாம். 4. சொத்துகளைப் பறிமுதல் செய்தல். 5. ஒறுப்புத் தொகை (அபராதம்) விதித்தல். முன்பு கசையடி கொடுக்கும் தண்டனை இருந்தது. அது பின்னர் நீக்கப்பட்டுவிட்டது. முன்பு நாடுகடத்தும் தண்டனையும் இருந்தது; பின் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பது, கொலைசெய்வது, கொள்ளையடிக்கும்போது கொலை செய்வது ஆகிய குற்றங்களுக்குத் தூக்குத் தண்டனையோ ஆயுள் தண்டனையோ விதிக்கலாம். தூக்குத் தண்டனை விதிப்பதற்குச் சிறப்புக் காரணங்களிருக்க வேண்டும் என்றும், மிக மிக அருமையாகவே தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. ஆயுள் தண்டனை அனுபவிக்கும் கைதியானவன் கொலை செய்தால் கட்டாயம் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று இச்சட்டத்தின் 303-ஆம் பிரிவு கூறுகிறது. அந்தக் குற்றத்துக்கும் சிறப்புக் காரணங்களிருந்தால் ஆயுள் தண்டனை விதிக்கலாம் என்று ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கற்பழித்தல், கொடுமையான கருவி கொண்டு கடுங்காயம் உண்டாக்குதல் போன்ற குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை வரை விதிக்கலாம். ஏனைய தண்டனைகளைக் குற்றங்களுக்குத் தகுந்தாற்போல் விதிக்கலாம்.

தூக்குத் தண்டனையை வேறு தண்டனையாக மாற்றவோ, ஆயுள் தண்டனையை 14 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையாக மாற்றவோ தொடர்புடைய மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு. தண்டனைகளைக் குறைப்பதற்கு அரசுக்குள்ள அதிகாரத்தினைக் குற்ற விசாரணை முறைச் சட்டம் 432, 433, 433 A, 434, 435ஆம் பிரிவுகள் விளக்கிக் கூறுகின்றன. ஆயுள் தண்டனை என்பது ஆயுள் முடியும் வரை அனுபவிக்க வேண்டிய தண்டனையாகும். ஆனால், பொதுவாக அதனை அரசு குறைத்து விடுகிறது.

ஒரு செய்கை பொதுவான நிலையில் குற்றமாக இருந்தாலும், குறிப்பிட்ட நிலையில் அது குற்றமாகாது என்று கூறுவது விதிவிலக்காகும். அவ்வாறான 21 விதிவிலக்குகள் நான்காம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஏழு வயதுக்குக் குறைந்த குழந்தை, மற்றும் மனக்கோளாறு நோய் உள்ளவன் புரியும் செய்கைகள் குற்றமாகா என்பது இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது. குற்றம் செய்யும் மனப்பான்மை அவர்களுக்கு இராது என்பதாலும், அவர்களுடைய செய்கைகளின் விளைவுகள் பற்றி அவர்கள் அறிய மாட்டார்கள் என்பதாலும் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. தற்காப்பு உரிமைதான் மிக முக்கியமான விதிவிலக்காகும். ஒருவன் தன் உடம்பையோ சொத்தையோ மற்றொருவனின் உடம்பையோ சொத்தையோ பாதுகாப்பதற்காகக் குற்றம் செய்ய வருபவனுக்கு எதிராகப் போதிய அளவுக்கு வன்முறையைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, இராமன் என்பவன் மூக்கன் என்பவனைக் கொலை செய்யும் நோக்கத்துடன் துப்பாக்கியால் சுடக் குறி வைக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அங்கு வரும் கோபாலன் என்பவன் கொலை செய்ய முயலும் இராமனைத் தயக்கமின்றிக் கொன்று விடலாம். அது குற்றமாகாது.

ஒரு குற்றம் நிகழ்வதற்கு உடந்தையாக இருப்பவரைப் பற்றி 5–ஆம் பகுதியும் குற்றம் செய்யச் சதியாலோசனை செய்தால் அதன் விளைவுகள் பற்றி 5–ஏ பகுதியும் விரிவாக விளக்கம் தந்துள்ளன. அரசுக்கெதிரான குற்றங்கள் யாவை என்பது 6–ஆம் பகுதியிலும், தரைப்படை, கப்பல்படை, ஆகாயப்படைகளுக்கெதிரான குற்றங்கள் யாவை என்பது 7–ஆம் பகுதியிலும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் குற்றங்கள் யாவை என்பது 8–

ஆம் பகுதியிலும் கூறப்பட்டுள்ளன. சட்டப் புறம்பான செய்கைகளைச் செய்யும் பொதுநோக்குடன் (Common Object) ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்டவர்கள் கூடினால், அது சட்டப் புறம்பான கும்பல் என்று சொல்லப்படும் என்பது இந்த 8-ஆம் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. அந்தக் கும்பலில் உள்ள ஒருவன் செய்யும் செய்கைக்கு அந்தக் கும்பலில் உள்ளோர் அனைவரும் பொறுப்பாளியாவார்கள். 2-ஆம் பகுதியில் சொல்லப்பட்டுள்ள பொதுவான உள்நோக்கு (Common Intention) உள்ள கும்பலில் இருவர் இருந்தாலும் போதும். பொதுவான நோக்குடைய (Common Object) சட்டப் புறம்பான கும்பலாவதற்குக் குறைந்தது 5 பேர் இருக்க வேண்டும்.

பொது ஊழியர்களுக்கு எதிராகச் செய்யக்கூடிய குற்றங்கள் யாவை என்பதும், பொது ஊழியர்கள் செய்யக் கூடிய குற்றங்கள் யாவை என்பதும் 9-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. தேர்தல் பற்றிய குற்றங்களும் 9-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. வாக்குகள் சேகரிக்கக் கையூட்டுக் கொடுப்பது, வாக்களிப்பதற்குக் கையூட்டு வாங்குவது, கள்ள வாக்குப் போடுவது ஆகிய செய்கைகள் குற்றங்களாகும். எந்த நிலையில் பொது ஊழியர்களின் அதிகாரத்தை எதிர்ப்பது குற்றமாகும் என்பது, 10-ஆம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. நீதிக்கு எதிராகச் செய்யக் கூடிய குற்றங்கள் யாவை என்பது 11-ஆம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. பொய்ச் சான்று கூறுவது, பொய்ச் சான்று தயாரிப்பது போன்றவை குற்றங்களாகும். அரசாங்க நாணயம், முத்திரை (Stamps) பற்றிய குற்றங்கள் யாவை என்பது 12-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. எடைகள், அளவுகள் தொடர்பான குற்றங்கள் யாவை என்பது 13-ஆம் பகுதியிலும் பொது சுகாதாரம், பாதுகாப்பு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதிக்கும் குற்றங்கள் யாவை என்பது 14-ஆம் பகுதியிலும் மதங்களுக்கு எதிரான குற்றங்கள் யாவை என்பது 15-ஆம் பகுதியிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

மானிட உடல் தொடர்பாகச் செய்யப்படும் குற்றங்கள் (Offences against person) யாவை என்பது 16-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. கொலை, காயப்படுத்துதல், கருச்சிதைவு செய்தல், ஆட்கடத்துதல், கற்பழித்தல் போன்ற குற்றங்கள் இந்தப் பகுதியில் உள்ளன. இறப்பினை விளைவிக்கும் குற்றம் (Culpable Homicide) எப்போது கொலைக் குற்றமாகும் என்பதும் எப்போது அது கொலைக் குற்றமாகாது என்பதும் விவரித்துக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒருவன் தன் மனைவியுடன் மாற்றான் ஒருவன் உடலுறவு கொள்வதைப் பார்த்துவிட்டு, அந்த மாற்றானையோ தன் மனைவியையோ அவ்வாறு பார்த்த மாத்திரத்தில் கொன்று விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அது கொலையாகாது. ஏனெனில், திடீரென்று ஏற்பட்ட கடுமையான ஆத்திரத்தில் அவன் அவ்வாறு கொன்று விடுகிறான். எனவே, அது கொலைக்கு (Crimes Against Humanity) அடுத்த நிலையிலுள்ள குற்றமாகும்.

சொத்துகளுக்கு எதிராகச் செய்யக் கூடிய குற்றங்கள் யாவை என்பது 17-ஆம் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. அதில் திருடுதல், கொள்ளையடித்தல், ஏமாற்றுதல் போன்ற குற்றங்கள் அடங்கும். ஆவணங்கள், சொத்து அடையாளக் குறிகள் (Property marks), நாணயத்தாள் ஆகியவை தொடர்பான குற்றங்கள் 18-ஆம் பகுதியிலும், சில சூழ்நிலைகளில் ஒப்பந்தத்தை மீறுவது குற்றமாகுமென்பது 19-ஆம் பகுதியிலும், திருமணம் ஆனவர்கள் பற்றிய குற்றங்கள் 20,20-ஏ பகுதிகளிலும் விவரிக்கப்பட்டுள்ளன. இருதுணை மணம் குற்றமாகும் என்பது இந்த 20 ஆம் பகுதியில் தான் கூறப்பட்டுள்ளது. எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் அவதூறு செய்வது குற்றமாகுமென்பது 21-ஆம் பகுதியிலும், அச்சுறுத்தல், அவமதித்தல் போன்ற செய்கைகள் எப்போது குற்றமாகும் என்பது 11-ஆம் பகுதியிலும் கூறப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ள குற்றங்களைச் செய்வதற்கு முயற்சி செய்வதும் குற்றமாகும் என்பது, இறுதிப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு குற்றத்தைச் செய்வதற்கு முயற்சி செய்வதற்கும் (Attempt to Commit an Offence), ஒரு குற்றத்தைச் செய்வதற்குத் தயார் செய்வதற்கும் (Making Preparations to Commit an Offence) வேறுபாடு உண்டு. ஒருவனைக் கொல்வதற்கு மற்றொருவன் கத்தி வாங்கினால் அது குற்றமாவதில்லை. மேலும், கத்தி வாங்குவதைத் தடுக்க எவ்விதச் சட்டமுமில்லை. அது தயார் செய்யும் நிலையில்தான் உள்ளது. ஆனால், கத்தி வைத்திருப்பவன் மற்றவனைக் குத்துவதற்கு அவனை நோக்கிப் பாயும்போது அவ்வாறு குத்தாமல் தடுக்கப்பட்டு விட்டாலும் கூட, அந்தச் செய்கை கொலை செய்ய முயற்சி செய்தான் என்ற குற்றமாகும்.

**இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர்:** இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுக் கணக்குகளையும், மாநில அரசாங்கங்களின் வரவுசெலவுக் கணக்குகளையும் முறையாக வரைதலும் தணிக்கை செய்தலும் ஆகிய அலுவல்களைச் செய்யும் துறையின் அதிகாரி இந்தியத் தணிக்கைத் துறைத்தலை

வர் (Comptroller and Auditor-General of India) ஆவார். ஒரு சிறிய வணிக அல்லது தொழில் நிறுவனத்திற்கு அதனுடைய வரவு, செலவுக் கணக்குகளை முறையாக வரைந்து தணிக்கை செய்தல் என்பது எவ்வளவு இன்றியமையாததோ, அதுபோலவே ஒரு மிகப் பெரிய நிறுவனமாகிய நாட்டின் அரசாங்க வரவு செலவுக் கணக்குகளை வரைதலும், தணிக்கை செய்தலும் மிகவும் இன்றியமையாதனவாகும். எந்த ஒரு நிறுவனத்திற்கும் நிதி இன்றியமையாத தேவையாக இருப்பது போல அரசாங்கத்துக்கும் நிதி இன்றியமையாத தேவையாகும். இங்கிலாந்தின் முன்னாளைய நிதி அமைச்சராகிய இலாயிடு சார்சு என்பவர், அரசாங்கம் என்பதே நிதி தான் என்று குறிப்பிட்டார். குடியாட்சி நாடுகளில் அரசாங்கத்துக்கு வேண்டிய நிதியை வரி விதித்தலின் வாயிலாகத் திரட்டும்படி அரசாங்கத்துக்கு வாக்கெடுப்பின் மூலம் அதிகாரம் (Authorisation) வழங்குவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமே ஆகும். அரசாங்கத்தின் நிதிநிருவாகம் (Financial Administration) (1) ஒரு நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை (Budget) வரைதல், (2) வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடுகளுக்குச் (Estimates) சட்டமன்றத்தின் ஒப்புதல் கிடைக்குமாறு செய்தல், (3) வரவுசெலவுத் திட்டத்தில் கூறப்பட்டவாறு சிறிதும் தவறாமல் வருமானங்களைத் திரட்டி வரவு செலவுகளை ஒழுங்குபடுத்துதல், (4) திரட்டப்பட்ட நிதிகளைக் கருவூலத்தில் காப்பாக வைத்து, அரசாங்கச் செலவுகளுக்கான பணம் அதிலிருந்து வழங்கப்படுமாறு செய்தல், (5) வரவுகளுக்கும் செலவுகளுக்கும் நிருவாகம் (Executive) கணக்கு வைத்தலும், கணக்குகளைத் தணிக்கை செய்தலும் (Audit) என ஐந்து பிரிவுகளை உடையது என்று ஆசிரியர் சர் ஏ.டபிள்யூ. ஆர்ட்டு என்பவர் (Sir A.W. Hart) கூறுகிறார். பிரிட்டன், இந்தியா போன்ற கூட்டமைப்பு நாடுகளில் (Commonwealth Countries) (1) சட்டமன்றம், (2) நாட்டின் நடுவண அரசாங்கத்தில் நிதி நிருவாகத்தைச் செயற்படுத்துகிற நடுவண ஆட்சித் துறை, அதாவது நிதி அமைச்சகம், (3) பல்வேறு ஆட்சித் துறைகளிலுள்ள முக்கிய நிதி அதிகாரிகள் (Financial Officers), (4) தணிக்கை அதிகாரிகள் அமைப்பு, (5) சட்டமன்றத்திலுள்ள மதிப்பீட்டுக்குழு (Estimates Committee), பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) நிறுவகிக்கின்றன. சட்டமன்றம், அரசாங்கச் செலவுகளுக்கு வேண்டிய பொதுப்பணத்தை வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக ஒதுக்கீடு (Appropriation) செய்தும், புதிய வரிகளைத் திரட்டுவதற்கோ நடைமுறையிலிருக்கும் வரிகளின் விகிதத்தை உயர்த்துவதற்கோ நிருவாகத்துக்கு அதிகாரம் அளித்தும், கடன் திரட்டுவதற்கு அதிகாரம் அளித்தும், செலவு செய்யும் அதிகாரிகள் வரையும் கணக்குகளைக் கண்காணித்து, நிதிப்பொறுப்பை (Financial Accountability) நிலை நிறுத்தியும் பணி செய்கிறது. பிரிட்டனிலுள்ள கருவூலத்துறை, அல்லது இந்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சகம், அல்லது மாநில அரசாங்கத்தின் நிதி அமைச்சகம், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை வரைந்தும், சட்டமன்றத்தின் வாயிலாக அதை நிறைவேறச் செய்தும், அத் திட்டத்தைப் பல்வேறு ஆட்சித்துறைகள் பின்பற்றுதலைக் கண்காணித்தும், வரி வருமானங்களைத் திரட்டியும், ஆட்சித் துறைகளுக்கு நிதி அறிவுரைகளை (Financial Advice) வழங்கியும், பொதுவான நிதிக்கட்டுப் பாட்டைக் கையாண்டும் பணி செய்கிறது. ஒவ்வோர் ஆட்சித் துறையின் தலைவரும் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்து (Controlling Officer), தம் துறைக்கு ஆகும் செலவுகளைக் கட்டுப்படுத்துகிறார்; ஆனால், இவருக்குக் கணக்கு வைப்பதற்குப் பொறுப்பு இல்லை; கணக்கு வைக்கும் பொறுப்பு நடுவண தணிக்கை, கணக்கு நிறுவனத்திடம் (Central Audit and Account Agency) கொடுக்கப்பட்டுள்ளது. தணிக்கை நிறுவனத்தின் தலைமை அதிகாரி, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் எனப்படுவார். வரவு செலவுத் திட்டத்துக்கு ஏற்பக் கருவூலத்திலிருந்து பணம் பெறுதலில் கட்டுப்பாட்டைக் கையாளுதலும், சட்ட மன்றம் செய்த ஒதுக்கீடுகளுக்கு மாறாகச் செய்யப்பட்ட செலவுகளையெல்லாம் தவறாமல் கண்டுபிடித்துச் சட்டமன்றத்துக்கு எடுத்துக்காட்டுதலும் இந்த அதிகாரியினுடைய கடமைகள் ஆகும். இந்தியாவில் கணக்கு வைத்தலும் தணிக்கை செய்தலும் ஆகிய இருவகைப் பணிகளும், இணைக்கப்பட்டு இவ்வதிகாரியிடமும் இவருடைய பொறுப்பில் இயங்கும் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. செலவுகளின் மீது கட்டுப்பாடு கையாளுதலும், கணக்கு வைத்தலும் நிருவாகத்திடம் (அல்லது ஆட்சித்துறையிடம்) ஒப்படைக்கப்பட வேண்டிய பணிகளாகும். அவற்றைத் தணிக்கைப் பணிகளோடு இணைத்தல் கூடாது என்பதுதான் நிதி நிருவாக விதி. இவ்விதியைப் பின்பற்றியே பிரிட்டனில் கணக்கு வைத்தலை நிருவாகத் துறைத் தலைவர்களிடமும், கணக்கைத் தணிக்கை செய்தலை வேறு தணிக்கை அதிகாரியிடமும் பிரித்துக் கொடுத்துள்ளனர். இந்தியாவில் நடுவண அரசாங்கத்தின் கணக்குகளையும் மாநில அரசாங்கங்களின் கணக்குகளையும் வரைந்து வைத்துக் கொண்டு, அவற்றைத் தணிக்கை செய்தலையும் தலைமைத் தணிக்கை அதிகாரியே செய்கிறார். செலவுகளைச் செய்கிற நிருவாகத்துறை அதிகாரிகளே அச்செலவுகளுக்கான கணக்குகளை எழுதி

வைப்பதுதான் முறை; அர்கள் எழுதும் கணக்குகளை வேறொரு, தனியான தணிக்கை அதிகாரிதான் தணிக்கை செய்தல் வேண்டும். கணக்கை எழுதுபவரே தணிக்கையும் செய்தல் கூடாது. இவ்விரண்டு வேறு வகையான பணிகளையும் இவ்வாறு ஒரே அதிகாரியிடம் இணைத்துவைத்து இந்தியத் தணிக்கைத் துறையை (Indian Audit Department) உருவாக்கியது பிரிட்டிசாராம். ஆனால், ஒரு நூறாண்டுக் காலத்துக்கு முன் இத்துறையை அவர்கள் உருவாக்கிய காலத்தில், சட்ட மன்றத்திற்கு அரசாங்க நிதியின் மீது கட்டுப்பாடோ சட்டமன்றத்திற்கு நிருவாகம் (Executive) பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்ற விதியோ கிடையாது. நிருவாகத்தின் எச்செயலையும் சட்டமன்றத்தால் கட்டுப் படுத்தவே இயலாது. ஆனால், இப்பொழுது நடைமுறையிலிருக்கிற குடியாட்சி அரசாங்க அமைப்பிலே, பாராளுமன்றத்திற்கு அரசாங்கத்தின் வரவு செலவுகளின் மீது முழுக்கட்டுப்பாட்டு அதிகாரமும் இருக்கும்போது, கணக்குவைப்புப் பணியும், தணிக்கைப் பணியும் ஒரே நிறுவனத்திடம் நீடித்து இணைத்து வைப்பதற்குக் காரணம் இல்லை. இதனை நன்றாகப் பல இந்தியத் தணிக்கை அதிகாரிகளும் வலியுறுத்தி வந்துள்ளனர். ஆகையால், இப்போது இவ்விரண்டு பணிகளையும் இருவேறு தனிநிறுவனங்களிடம் ஒப்படைப்பது என்று இந்திய அரசாங்கம் எண்ணுகிறது. பாராளுமன்றத்தின் மதிப்பீட்டுக் குழுவும், பொதுக் கணக்குக் குழுவும், இந்திய அரசாங்கம் நிதிக்கட்டுப் பாட்டைக் கையாளுதற்கு உதவி செய்கின்றன. எவ்வாறெனில், செலவு செய்யும் ஆட்சித் துறைகளுக்குச் செலவுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைகளில் சிக்கன முறைகளைக் கையாளுதற்குரிய அறிவுரைகளை மதிப்பீட்டுக் குழு வழங்குகிறது. பொதுக் கணக்குக் குழுவானது, தணிக்கை அதிகாரியினுடைய தணிக்கை அறிக்கையை வைத்துச் செலவுக் கணக்குகளை ஆய்வு செய்கிறது. அது செலவுகளிலுள்ள ஒழுங்கற்ற முறைகளைப் பாராளு மன்றத்திற்குச் சுட்டிக் காட்டி, எதிர்காலத்தில் அவற்றைத் தடுப்பதற்குரிய வழிகளையும் கூறுகிறது.

**இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி அமர்த்தப்படுதலும் நீக்கப்படுதலும் அவருடைய தனித்த நிலையும்:** (Independent Status): இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இந்திய மாநிலங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் (Audit) என்பது, நடுவண அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகாரமாகும். (நடுவண அதிகாரப்பட்டியல், பொருள் அல்லது அதிகாரம் எண் 76). இந்தியத் தணிக்கைத் துறைக்குத் தலைவர் இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி ஆவார். அவருடைய அலுவலகம் புதுதில்லியிலிருக்கிறது. அவருடைய நிலை தலைமை நீதிமன்ற நீதிபதிகளுடையதைப்போன்று நிருவாகத்தால் மாற்றப்பட இயலாத ஒன்று ஆகும். எவ்வாறெனில் இவரை இந்தியக் குடியரசுத் தலைவர் தமது கையெழுத்தும் அலுவலக முத்திரையும் இட்ட ஓர் ஆணைக் கடிதத்தின் வாயிலாக அமர்த்துகிறார். ஆனால், அவரைக் குடியரசுத் தலைவராலோ அமைச்சரவையினாலோ நீக்க இயலாது. அவரை நீக்குதற்குப் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு மன்றத்திலும் ஓர் உரையைக் கொண்டு வந்து, அதைக் கூட்டத்துக்கு வந்திருந்து வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளும் உறுப்பினருள் மூன்றில் இரண்டு பங்கினருடைய ஆதரவுடன் நிறைவேற்றுதல் வேண்டும். தலைமை நீதிமன்ற நீதிபதியைப் பதவிநீக்கம் செய்தற்குரிய முறையே இதிலும் பின்பற்றப்படுதல் வேண்டும் (இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 148(1)).

இவ்வாறு அமர்த்தப்படும் அதிகாரி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் கூறப்பட்டுள்ளபடி குடியரசுத் தலைவர் அல்லது அவரால் அமர்த்தப்பட்ட ஓரதிகாரி முன்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்குக் கீழ்ப்படிந்துதமது பணிகளைப் பற்றுறுதியோடு நிறைவேற்றுவதாக வாக்குறுதி (Oath) எடுத்தல் வேண்டும் (பிரிவு 148(2)).

இந்தியத் தலைமைத்தணிக்கை அதிகாரியின் ஊதியமும், மற்றப் பணிக்கட்டுப்பாடுகளும் பாராளுமன்றத்தால் சட்டத்தின் வாயிலாகத் தீர்மானிக்கப் பெறும். ஒருவர் இப்பதவியிலமர்த்தப்பட்ட பின்னர் அவருக்குரிய விடுப்பு உரிமைகள், ஓய்வு ஊதியம், ஓய்வு வயது முதலிய உரிமைகளெல்லாம் அவருடைய நலனை அழிக்கக் கூடியவாறு மாற்றப்படமாட்டா (பிரிவு 148 (3)). ஒருவர் இவ்வுயரிய பதவியினின்று விலகிய பின்னர், இந்திய அரசாங்கத்திலோ மாநில அரசாங்கத்திலோ வேறு எந்தப் பதவியும் ஏற்பதற்குத் தகுதி உடையவர் அல்லர் (பிரிவு 148 (4)).

இந்தியத் தணிக்கை, கணக்குத் துறையில் பணி செய்பவர்களுடைய பணி நிலைகளும் (Conditions of Service), இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் ஆட்சி அதிகாரங்களும், தலைமைத் தணிக்கை அதிகாரியைக் குடியரசுத் தலைவர் கலந்துகொண்ட பின்னர் வகுக்கும் விதிகளின் வாயிலாகத் தீர்மானிக்கப்படுகின்றன (பிரிவு 148 (5)).

இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் அலுவலகச் செலவுகளும், அதன் அலுவலர்கள் எல்லோருடைய ஊதியங்களும், படிகளும் ஓய்வூதியங்

களும் இந்தியத் தொகுப்பு நிதியிலிருந்தே (Consolidated Fund of India) சாட்டி (Charged) எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். (பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் (Voted) வழங்கப்படுதல் கூடாது) பிரிவு 148 (6)).

இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் பணிகள்: அரசாங்கக் கருவூலத்திலிருந்து அதிகாரிகள் வரவு-செலவுத் திட்டத்துக்கு இணங்கப் பணத்தை எடுத்துச் செலவு செய்தலைக் கட்டுப்பாடு செய்தலும், அரசாங்கக் கணக்குகளைப் பரிசோதனை செய்தலும், சட்டமன்றத்தால் செலவுக்கு வழங்கப்பட்ட தொகைகளுக்கு மாறாகச் செய்யப்பட்ட செலவுகளைக் கண்டு பிடித்து, அவற்றைச் சட்டமன்றத்துக்குச் சுட்டிக் காட்டுதலும் ஆகியவை இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் பணிகளாம். கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல் வேண்டுமானால், முதலில் கணக்குகள் எழுதப்படுதல் வேண்டும். பிரிட்டனில் பொதுப்பணத்தைச் செலவு செய்யும் அரசாங்க அதிகாரிகளே, அச்செலவுகளுக்கான கணக்குகளையும் எழுதிவைத்தல் வேண்டுமென்ற விதி 1921-ஆம் ஆண்டின் கருவூலத் தணிக்கைச் சட்டத்தில் (Exchequer and Audit Act 1921) குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலோ செலவு செய்யும் அதிகாரிகள் பணம் எடுத்ததற்குரிய கணக்குகளைக் கருவூலங்கள், மாநிலக் கணக்கதிகாரிக்கு அனுப்ப, அவர் அவற்றைத் தொகுத்து, மேலே தணிக்கை அதிகாரிக்கு அனுப்ப, தணிக்கை அதிகாரியின் ஆணையின்பேரில் அவருடைய அலுவலர்கள், இந்தியா முழுவதற்குமான கணக்குகளை வரைந்து தொகுக்கிறார்கள் (Consolidate). இவ்வாறு செய்த பின்னர்க் கணக்கை எழுதியவர்களே கணக்கைத் தணிக்கையும் செய்கின்றனர். இவ்வாறு இவ்வதிகாரியின் அலுவலர்கள் இரண்டு பணிகளையும் செய்தல் வேண்டுமென்று 1936-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கத் தணிக்கையும் கணக்குகளும் பற்றிய ஆணை (Government of India Audit and Accounts Order, 1936) கூறுகிறது. இவ்வாணை, 1947-ஆம் ஆண்டின் இந்தியத் தற்காலிக அரசியலமைப்பு ஆணையின் (Indian Provisional Constitution Order of 1947) ஒரு பாகமாக அமைந்திருக்கிறது. ஓர் அரசாங்கத்தினுடைய, அல்லது ஒரு தனியார் தொழில் நிறுவனத்தினுடைய அல்லது ஓர் ஆளினுடைய பணவரவு செலவுகளை முறையாகப் பதிவேட்டில் பதிந்து வைத்தல், கணக்கு வைத்தல்(Accounting) எனப்படும். கணக்கு வைத்தல்தான் நிதியின் மீது கட்டுப்பாடு செலுத்துதற்கு ஒரு வழியாக இருக்கிறது; கணக்கு வைத்தலின் வாயிலாக வாங்கவேண்டிய வரவுகளை வாங்குதலும். ஒரே செலவினத்துக்கு இருமுறை பணம் கொடுத்தலைத் தவிர்த்தலும் இயலும்.மேலும் முறையாகவைக்கப்படும் கணக்குகள், நிதிக் கோட்பாட்டையும் பொதுவான கொள்கையையும் வேலைத் திட்டங்களை வகுப்பதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையும் தருகின்றன. அரசாங்கக் கணக்குகள், வாணிகத் தொழில் நிறுவனங்களின் கணக்குகளினின்றும் அமைப்பில் வேறுபட்டுள்ளன. தொழில், வாணிக நிறுவனங்கள் அடையும் ஊதியம், இழப்பு(Profit and Loss) ஆகியவற்றைக் காட்டும் ஐந்தொகையை (Balance Sheet) எழுதுதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, அவற்றின் கணக்குகள் வரையப் படுகின்றன.ஆனால், ஊதியம் பெறும் நோக்கத்துடனல்லாமல், மக்களுக்குப் பணி செய்யும் சிறப்பான நோக்கத்துடன் அரசாங்கம் செலவு செய்வதால் அதனுடைய கணக்கு, செலவுகள் வரவு செலவுத் திட்டவரம்புகளுக்குட்பட்டு இருக்கின்றனவா என்றும், வரவு செலவுத் திட்ட வரம்புகளுக்குட்பட்டு வருமானங்கள் (Revenues) பிரிக்கப்பட்டும் அல்லது வாங்கப்பட்டும் இருக்கின்றனவா என்றும் அறிதற்கு உதவும் விவரங்களைத் தரும் நோக்கத்துடனேயே எழுதப்படுகிறது. ஆகையால், அரசாங்கக் கணக்குகள் வரவு செலவுத் திட்டத்தின் அமைப்பை அப்படியே ஆதாரமாக வைத்து அதிலுள்ள தலைப்புகளின் (Heads) அடிப்படையிலேயே (பெரிய தலைப்பு-Major Head, சிறிய தலைப்பு-Minor Head, துணைத் தலைப்பு-Sub Head, விவரமான துணைத்தலைப்பு-Detailed Sub Head முதலியவை) எழுதப்படுகின்றன. இந்திய அரசாங்க, மாநிலங்களின் அரசாங்கக் கணக்குகள் வைக்கப்படவேண்டிய வடிவத்தைத் தலைவருடைய ஒப்புதலின் பேரில் இந்தியத்தலைமைத் தணிக்கை அதிகாரியே விதிக்கிறார் (இந்திய அரசியலமைப்புப் பிரிவு 150). இரயில்வே பாதுகாப்புத்துறைக் கணக்குகளைத் தவிர, மற்றெல்லாக் கணக்குகளையும், (இந்திய அரசாங்கத்தின், மாநில அரசாங்கங்களின்) இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியே எழுதி வைக்கிறார்.

அரசாங்கக் கணக்கு எழுதும் முறை: அரசாங்கக் கணக்கு வைப்பு முறையானது, நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள கருவூலங்களில் (Treasuries) தொடங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைமை நகரத்திலும், அதன் ஒவ்வோர் உட்பிரிவாகிய வட்டத்திலும் (Taluk) முறையே தலைமைக் கருவூலமும் துணைக் கருவூலமும் (Sub-treasury) இருக்கின்றன. இவை, தத்தம் நில எல்லைக்குள் இந்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசாங்கத்துக்கும் செலுத்தப்படும் வரவுகளையும்(Receipts), அவற்றால் வழங்கப்படும் செலவுகளையும் (Payments), தனித்தனியாகப் பெரிய தலைப்பு, சிறிய தலைப்பு, துணைத்தலைப்பு,

விவரமான துணைத்தலைப்பு ஆகிய தலைப்புகளுக்குப் பொருந்த வகைப்படுத்தி எழுதுகின்றன. இவை இவ்வாறு எழுதும் வரவு விவரமும் செலவு விவரமும் சேர்ந்ததே கணக்கு எனப்படுகிறது. இக்கணக்குக்கு ஆதாரமாக உள்ள பற்றுச் சீட்டுகளோடு (Vouchers) கணக்குகளை ஒவ்வொரு கருவூல அதிகாரியும் மாநிலக் கணக்கதிகாரிக்கு (Accountant General) அனுப்புகிறார். ஒவ்வொரு மாதமும், ஆண்டும் ஒவ்வொரு கருவூலத்திலிருந்து வரும் கணக்குகளை மாநிலக் கணக்கதிகாரி இணைத்துத் தொகுக்கிறார். ஒரு மாநிலத்திலுள்ள ஒரு கருவூலத்தில், வேறொரு மாநில அரசாங்கத்துக்கோ நடுவண அரசாங்கத்துக்கோ பணம் செலுத்தப்பட்டிருந்தாலும், அல்லது அந்தக் கருவூலம் இருக்கிற மாநில அரசாங்கத்துக்குப் பணம் வழங்கப்பட்டிருந்தாலும், அல்லது பல்வேறு ஆட்சித்துறைகள் ஒன்றுக்கொன்று வரவு-செலவு செய்திருந்தாலும், இவ்வரவு, செலவுகளையெல்லாம் முரண்பாடின்றி இணைப்பதும், ஒவ்வொரு வரவு இனத்தையும், செலவு இனத்தையும் அதனதனுக்குரிய சட்ட வருமான, செலவு ஒதுக்கீடுகளில் பொருத்திக் கணக்கைச் சரிசெய்து, தொகுத்து, ஆண்டுக்கணக்கை ஆயத்தம் செய்தலும், மாநிலக் கணக்கதிகாரியின் பணி ஆகும். இப்பணி மிகவும் சிக்கல் நிறைந்ததும் பல நாள் பிடிக்கக்கூடியதும் ஆகும்; ஆகையால்தான் ஒரு நிதியாண்டிற்கான அரசாங்க வரவு செலவுக் கணக்கு, அது முடிவடைவதற்கு முன் பெரும்பாலும் எழுதி முடிக்கப்படாமல் இருக்கிறது. கருவூல அதிகாரிகள் வரவுசெலவுக் கணக்கு எழுதி மாநிலக் கணக்கதிகாரிக்கு அனுப்புவது போல, ஒவ்வொரு ஆட்சித்துறைத் தலைவரும், தாம் செய்யும் அரசாங்கச் செலவுகளையெல்லாம் வரவு செலவுத் திட்ட வருமான வரம்புகளுக்கு உட்பட்டிருக்குமாறு (Within their Budgetary Grants) கட்டுப்படுத்தும் பொருட்டுத் தம் செலவுகளுக்கான கணக்கை எழுதி வைக்கிறார். அவருடைய கட்டுப்பாட்டிலுள்ள கிளை அலுவலகங்களும் (Sub offices) மற்ற அதிகாரிகளும், துறைக்குச் செலுத்திய வரவுகளுக்கும், கருவூலங்களிலிருந்து சட்டப்படியாக எடுத்துச் செய்த செலவுகளுக்கும் உரிய பற்றுச் சீட்டுகளின் படிகளையும் (Vouchers) சான்றுச் சீட்டுகளின் (Receipts) படிகளையும் துறைத்தலைவருக்கு அனுப்புகிறார்கள். துறைத்தலைவர், கீழ்நிலை அதிகாரிகளனுப்பும் கணக்குகளை மாநிலக் கணக்கதிகாரி தொகுக்கும் கணக்குகளோடு அவ்வப்போது நேர் செய்து (Re-Concile) தவறுகளை நீக்குகிறார். இவ்வாறு துறை எழுதி வைக்கும் கணககு, வரும் வரவுகளையும் ஆகும் செலவுகளையும் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் கணக்கதிகாரி அனுப்பும் மாநில, இந்திய அரசாங்கங்களின் கணக்குகளை இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி பெற்று, இந்தியா முழுவதற்குமான கணக்கைச் 'செலவினக் கணக்கு' (Appropriation Account), 'நிதிக்கணக்கு' (Finance Account) என இருவடிவங்களில் எழுதுகிறார். செலவினக் கணக்கு என்பது, பாராளுமன்றத்திற்கு ஒரு நிதி ஆண்டில் குறிப்பிட்ட செலவு இனங்களுக்கு மொத்தமாக வழங்கப்பட்ட தொகைகளையும் (Total Grants) அந்த நிதி ஆண்டில் நடைமுறையில் அவ்வினங்களுக்கு ஆன செலவுகளையும் காட்டுவதாகும். நிதிக்கணக்கு என்பது, மாநில அல்லது இந்திய அரசாங்கத்தின் ஆண்டு முழு வரவுகளையும் செலவுகளையும், வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்திக் காட்டும் கணக்கு ஆகும். செலவினக் கணக்கையே பாராளுமன்றத்திலுள்ள பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) ஆய்வு செய்கிறது. மேற்கூறிய இரு வகைக் கணக்குகளைத் தவிர, ஒரு பொது நிதி அறிக்கையையும் (A General Financial Account) இந்தியத் தணிக்கை-கணக்குத்துறை எழுதுகிறது. இந்தப் பொது நிதி அறிக்கை எல்லா மாநில, இந்திய அரசாங்கங்களின் முந்தைய ஆண்டுக்கான கணக்குகளின் ஒரு சுருக்கம் ஆகும். அது அவற்றுக்கு உள்ள வரவு இருப்பையும் (Balance), செலவுக்கு ஒதுக்கப்பட்டு இன்னும் செலவழிக்கப்படாமலிருக்கும் செலவுத் தொகைகளையும் (Liabilities) காட்டுகிறது.

**தணிக்கை:** கணக்கு வைத்தலைப்போலவே, கணக்குத் தணிக்கையும் எந்த நிறுவனத்துக்கும் இன்றியமையாத ஒரு செயல் ஆகும். கணக்கை எழுதுகிற இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியே அதனைத் தணிக்கையும் செய்கிறார். மாநில, இந்திய அரசாங்கங்களின் வருமானங்களிலிருந்து செய்யப்படும் எல்லாச் செலவுகளையும், அவற்றின் கணக்குகள், நிதிவைப்புகள், செலவுகள் ஆகியவற்றுக்கான கணக்குகளையும், குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருடைய ஆணையின் மீது வரையப்படும் எல்லாத்தொழில், வாணிகக் கணக்குகளையும், ஊதிய நட்டக் கணக்குகளையும், இருப்புக் கணக்குகளையும், அரசாங்கப் பங்குக் கணக்குகளையும், தணிக்கை செய்தல் இந்த அதிகாரியின் பணியாகும். கணக்குகள் தவறு இன்றிச் சரியாக இருக்கின்றனவா என்றும், அவை காட்டுகிற வரவு செலவுகளெல்லாம் ஒழுங்கானவையா என்றும் உறுதி செய்வதற்காகக் கணக்கை ஆய்வு செய்தலே தணிக்கை எனப்படும். சட்டங்களையும் விதிகளையும் ஒழுங்குகளையும் வரவு செலவுகளுக்குரிய அனுமதிகளையும் (Sanctions) ஆதாரமாக வைத்துச் செய்யும் கணக்கு ஆய்வே சட்டவகையான தணிக்கை

(Legality Audit) எனப்படும். எல்லா நாடுகளிலும் அரசாங்கக் கணக்குகள் சட்டவகையான தணிக்கைக்கே உட்படுகின்றன, அதாவது எல்லாச் செலவுகளும், சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஒத்து இருக்கின்றனவா என்றும், அவற்றுக்குப் பற்றுச் சீட்டுகள் இருக்கின்றனவா என்றும் பார்க்கப்படுகின்றன. ஒழுங்கான தணிக்கை முறை என்பது செலவுகளுக்கு மட்டுமன்றி வரவுகளுக்கும் உரியதாகும். இந்தியத் தணிக்கைக் கணக்குகளின் ஆணை கூறுவதாவது: கணக்குகளில் காட்டப்பட்டுள்ள செலவு செய்யப்பட்ட தொகைகள் சட்டப்படியாக அச்செலவுகளுக்கே வழங்கப்பட்டவைதாமா என்றும், அவை எந்த நோக்கத்துக்குச் செலவு செய்யப்பட்டனவோ அந்த நோக்கத்துக்குத்தான் சட்டப்படி கொடுக்கப்பட்டனவா என்றும், செலவு செய்வதற்குரிய அதிகாரிதாம் அவற்றைச் செய்தாரா என்றும் இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். செய்யப்பட்ட செலவுகளெல்லாம் தேவையா, இல்லையா என்றெல்லாம் தணிக்கையாளர் ஆராய்தல் கூடாது; அது சட்டமன்றத்தின் பணி ஆகும். கணக்குகளைத் தணிக்கை செய்தபின் தணிக்கையாளர் தணிக்கை அறிக்கை (Audit Report) எழுதுகிறார். தணிக்கையாளர் கணக்குகளைப் பற்றித் தாம் எழுதும் கருத்துகளுக்கும், மதிப்புரைகளுக்கும் உட்பட்டுக் கணக்குச் சரியானதென்று தரும் சான்றுரையே (Certification) தணிக்கை அறிக்கை எனப்படும். தணிக்கை அறிக்கையில் முக்கியமான நிதி ஒழுங்கற்ற செயல்கள், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை மீறிய செலவுகள், செலவுகளுக்குத் தேவையான இசைவு (Sanction) பெறாமல் செய்த செலவுகள், விதிகளைப் பின்பற்றாமல் செய்த செலவுகள், முறையற்ற, வீணான (பயனற்ற) செலவுகள், கையாடல்கள் முதலியவை சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்தத் தணிக்கை அறிக்கையே பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.

துணை நூல்கள்:

**Wattal, P.K.,** Parliamentary Financial Control in India, Minerva Book Depot, Simla, 1953.

The Constitution of India, 1950.

Government of India Accounts (Audit and Accounts Order), 1936 as adapted under the Indian Provisional (Constitution) Order, 1947.

***இந்தியத் தத்துவம்***: எல்லா உயிரினங்களையும் அடக்கியாளும் சக்தி பெற்றவன் மனிதன். இந்தத் தனித்தன்மையை அவனுக்குக் கொடுப்பவை அவனிடத்தேயுள்ள சிந்தனையாற்றலும் அறிவாற்றலும் ஆகும். இவ்விரண்டுமே மனிதனுடைய சீரிய வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் கால்கோள்களாக அமைகின்றன. வாழ்க்கையில் பல ஏற்றத் தாழ்வுகளையும் இன்ப துன்பங்களையும் காணும் போது அவனிடத்தேயுள்ள சிந்தனையாற்றல் அவற்றைப் பற்றி அறிவார்ந்த நிலையில் சிந்திக்கிறது. அறிவார்ந்த இந்த அவாவிற்கு விடைகாணும் முயற்சியே தத்துவம் எனப்படும்.

'தத்துவம்' என்ற சொல்லுக்கு 'அறிவின் வேட்கை' என்பது பொருள். 'அறிவில் ஆய்வு' என்றும் பொருள் கொள்ளலாம். நேரடியாகவும் காலங்கடந்த நிலையிலும் மனிதனுடன் மிகவும் நெருங்கிய நிலையில் தொடர்பு கொண்டுள்ள பொருள்களைப் பற்றி ஆய்வு செய்வதுதான் தத்துவத்தின் நோக்கம். மனிதனுடைய உண்மைத் தன்மை யாது? இவ்வுலகின் தன்மை என்ன? வாழ்க்கையின் முடிவு எத்தகையது? இவையிரண்டிற்கும் மேற்பட்ட ஒரு சக்தி உண்டா? அப்படியிருப்பின் இவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பு என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண முயல்வதும் தத்துவத்தின் நோக்கம்.

தத்துவம் என்ற சொல் தத் + துவம் என்பதன் சேர்க்கை என்று இந்திய மரபில் கூறுவர். இதன் பொருள் அறியாமையை நீக்கி உண்மையறிவைப் பெறும்போது மனிதனின் நிலையில் கடவுளைக் காணலாம் என்பதாகும். உபநிடதங்களிலேயே 'தத்துவம் அசி' என்ற சொற்றொடர் உள்ளது. எனவே, மெய்ப்பொருளை எப்படியாவது அறிய வேண்டும் என்னும் அவா புதிதன்று. உண்மைப் பொருளைப் பற்றிய அறிவைப் பெறுதலே தத்துவத்தின் நோக்கம் ஆதலால், இதனை மெய்ப்பொருளியல் என்றும் கூறுவர்.

இந்தியத் தத்துவத்தின் வரையறை மிகப் பெரியது. வேதகால அறிவு நிலை கடந்த மெய்யுணர்வாளர்களின் சிந்தனை முதல் இன்றைய தத்துவ அறிஞர் சே. கிருட்டிணமூர்த்தியின் சிந்தனை யீறாக, இயற்கை கடந்த கடவுள் உயிர்த் தொடர்புக் கொள்கை முதல் இறை நம்பிக்கையின்மைக் கொள்கை யீறாக, இந்து சமய மெய்ப்பொருளாய்வு முதல் சமண, சாக்கிய சமயங்களின் மெய்ப்பொருளாய்வு யீறாக, அனைத்துக் கொள்கைகளின் நெடுநீளாய்வை இந்தியத் தத்துவம் தன் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இந்தியத் தத்துவத்தில் எத்தனையோ தனிமுறைக் கொள்கைப் பிரிவுகள் (Schools) இருந்த போதிலும், அவற்றின் கருத்துகள் அதிக அளவில் வேறுபட்ட போதி

லும் ஒவ்வொரு பிரிவும் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி மற்றப் பிரிவுகளின் கருத்துகளை நன்கு தெரிந்து கொண்டு அவற்றைச் சந்தித்த பிறகே தன் கருத்துகளை நிலைநாட்டுகிறது. இத்தகைய ஆர்வ மிக்க கலந்தாராய்ச்சி முறை, கருத்துப் பரிமாற்றத்திற்கும் புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கும் வழி வகுக்கிறது. இப்படி மற்றப் பிரிவுகளின் கருத்துகளை வெளியிடும் முதல் நிலைக்குப் 'பூர்வபக்க நிலை' யென்றும் பிறகு அதனை மறுக்கும் இரண்டாம் நிலைக்குக் 'கண்டன நிலை' யென்றும் இறுதியில் தன் கோட்பாட்டை நிறுவி நிலைநாட்டும் நிலைக்கு 'உத்திர பக்க நிலை' யென்றும் பெயர் கூறப்படுகிறது.

இப் பரந்த மனப்பான்மையுள்ள கலந்தாய்வு முறையை அனுசரிப்பதால் ஒவ்வொரு பிரிவும் தன் தன் கருத்தினுக்குக் குற்றமற்ற முற்றுப் பெற்ற தன்மையைக் கொடுக்க முடிகிறது. மேலை நாடுகளைச் சார்ந்த தத்துவ அறிஞர்கள் இருபதாம் நூற்றாண்டில் விவாதிக்கும் கருத்துகளை இந்தியத் தத்துவ ஞானிகள் பல ஆயிரமாண்டுகளுக்கு முன்பே விவாதித்துள்ளனர் என்பது இந்தியத் தத்துவத்தின் ஒரு சிறப்பியல்பாகும்.

இந்தியத் தத்துவம் வேத காலந் தொட்டே வளர்ந்து வருகிறது. வேதங்களும் உபநிடதங்களும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மறை ஞானிகள் இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கிய பரம்பரைச் சொத்துகளாகும். அறிவு கடந்த இந்த மெய்யுணர்வாளர்கள் மக்களுக்கு வழங்கிய இந்த உண்மைகள் பகுத்தறிவுக்கும், வாதப் பொருத்தத்திற்கும், உய்த்துணரும் இயல்பிற்கும் அப்பாற்பட்ட, பருப்பொருட் சார்பற்ற ஆன்மிக உள்ளுணர்வின் விளைவேயாகும். இவ்வுண்மைகள் ஆய்வாராய்வு இல்லாமலே ஏற்பட்ட நேரடி உணர்வின் மொழி வடிவங்கள் ஆகும். முழுநிலைப் பொருளகற்சி வாய்ந்த உள்ளுருவை உணரும் அளவிற்கு மறை ஞானிகள் தங்கள் உயிராற்றலை மேம்படுத்திக் கொண்டதால்தான் அநாதி உண்மைகளை அவர்களால் உணர முடிந்தது. அவர்களுடைய அருள் வாக்குகள் விரைந்தழியும் இயல்புடைய காட்சிகளின் அடிப்படையில் எழுந்தவையல்ல; அவர்கள் வாழ்க்கையில் அனுபவித்த தொடர்ச்சியுள்ள உண்மைநிலை இணைவுப்பான்மையுள்ள அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, வேதங்கள் அனுபவத்தால் வந்த பேருண்மைகள் ஆகின்றன. அனுபவத்தைச் சமயத்தின் உயிராகக் கொண்டால், மொழி வடிவம் அதன் உடம்பாகிறது. இந்த உடம்பின் மூலம்தான் சமயம் தனது வரம்பைத் தீர்வு செய்து கொள்கிறது.

வேதங்கள் எந்த ஒரு தனிப்பட்ட மறைஞானியாலும் எழுதப்பட்டவையல்ல. இந்திய ஆத்திக மரபினரால் வேதங்கள் முடிந்த ஆணையுரிமையுடையனவாகக் கருதப்படுகின்றன. இவை பல்லாயிரம் ஆண்டுகளாக அறாமல் வந்த குரு சீடப் பரம்பரையினரால் வழிவழியாக நினைவில் நிறுத்தப்பட்டும் (சுமிருதி), கேட்கப்பட்டுச் சொல்லப்பட்டும் (சுருதி) பாதுகாக்கப்பட்டு வந்தவை. இவை, பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கும் மறை நூல்களாகத்தாம் உள்ளன. தத்துவம், சமயம், சடங்குகள் மற்றும் அறிவியல் முதலியவற்றிற்கு மூலத் தோற்றுவாயாகத் திகழ்கின்றன. மேலும், இவை வெறும் தத்துவக் கட்டுரைகளாக மட்டுமன்றி ஆன்மிக மற்றும் இம்மைக்குரிய செய்திகளைக் கூறும் நலமுடையனவாகவும் உள்ளன.

இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என்று வேதங்கள் நான்கு ஆகும். ஒவ்வொரு வேதத்திலும் மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிடதம் என்று நான்கு பிரிவுகள் உள்ளன. மந்திரங்களின் தொகுப்புக்குச்'சம்கிதைகள்' என்பது பெயர். பிராமணங்கள் சடங்குகளைப் பற்றிக் கூறுகின்றன. ஆரணியங்களும் உபநிடதங்களும் தத்துவத்தின் மூலத் தோற்றுவாயாக விளங்குகின்றன. வேதங்களில் பல தெய்வங்களின் புகழ்ச்சியும் வழிபாடுகளும் மிகுந்து காணப்படுகின்றன. பல இடங்களில், பல காலங்களில் வாழ்ந்த மறை ஞானிகளின் தாக்கங்கள் வேதங்களில் விரவிக் கிடக்கின்றன. அதனால், வேதங்களின் கடவுள் கொள்கையைப் பற்றி ஒரு திட்டவட்டமான முடிவெடுக்க முடியாது. பல தெய்வக் கோட்பாடும் ஒரு கடவுட் கோட்பாடும் பல இடங்களில் இணைந்தே காணப்படுகின்றன. வேதங்களிலுள்ள கடவுட் கொள்கை வளர்ச்சியை நோக்கின், பல தெய்வக் கோட்பாட்டிலிருந்து தலைக் கடவுட் கோட்பாடும் அதிலிருந்து ஒரு கடவுட் கோட்பாடும் வளர்ந்திருக்க வேண்டுமென்பதனை ஊகிக்க முடிகிறது. இருந்தாலும் இந்த ஊகத்தை முற்றிலும் ஏற்புடையதெனக் கொள்ள இயலாது.

இந்தியத் தத்துவத்திற்கு வித்தாகவும் பிற்காலத்தில் அது வளர வழிகாட்டியாகவும் இருந்தவை உபநிடதங்கள் ஆகும். இவை வேதங்களின் உட்பிரிவுகளாக இருந்தாலும் வேதங்களைக் காட்டிலும் பல கோணங்களில் சிறப்பு மிக்கவை. சடங்குகளும் வழிபாடுகளும் வேதங்களின் கருப்பொருள்களாக இருக்க, சீரிய ஒரு முகச் சிந்தனையும் தியானமும் உபநிடதங்களின் கருப்பொருள்களாக அமைகின்றன. வேதங்கள் பிரபஞ்சத்தின் ஆற்றலைக் கண்டு வெளியுலக ஈடுபாட்டில் மூழ்க, உபநிடதங்களோ

அக உலகில் கடவுளைக் காணும் பணியைத் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஒரு பொருண்மைச் சிந்தனை உபநிடதத் தத்துவத்தின் மையக் கருத்தாகும். ஆனால், வேதங்களில் இந்தத் திட்டவட்டமான நிலை கிடையாது. உணர்ச்சி வசப்பட்ட, கற்பனையின்பாற்பட்ட, பக்திமை நிறைந்த கருத்துகள் வேதங்களில் மிகுந்து காணப்படுகின்றன. ஆனால், உபநிடதங்களில் சிந்தனையாற்றலைத் தூண்டும் அறிவின் பாற்பட்ட கருத்துகளே மேம்பட்டு நிற்கின்றன. எடுத்துக்காட்டாக, 'எந்த ஒன்றிலிருந்து இந்தப்பிரபஞ்சத்தின் உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் தோன்றியுள்ளனவோ, எதை ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றனவோ, இறுதியில் எதில் இவை ஒன்று சேருகின்றனவோ அதுதான் பிரம்மன் என்ற உயர்ந்த தத்துவத்தை மைத்திரி உபநிடதம் அக்காலத்திலேயே கூறிவிட்டது. உணர்வுள்ள சேதனப் பொருள்களுக்கும் உணர்வற்ற பிரகிருதிப் பொருள்களுக்கும் பின்னால், ஒரு மூலாதாரமான ஆற்றல் உள்ளது. அதுதான் பிரம்மன் என்று கேனோபநிடதம் கூறுகிறது. உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களின் ஒருமித்த இயக்கத்தை எந்தச் சக்தி ஆட்டுவிக்கிறதோ அந்தச் சக்திதான் பிரம்மன் என்று கடோபநிடதம் கூறுகிறது. பிருகதாரணியக உபநிடதம் 'காலத்தாலும் இடத்தாலும் தொடர்புடைய அனைத்துப்பொருள்களும் பிரம்மனுடைய ஆணைப்படியே இயங்குகின்றன' என்கிறது. சுவேதாசுவதர உபநிடதம், 'உயிர்களுக்கெல்லாம் எந்த ஒன்று உயிராக இருக்கிறதோ அந்த ஒன்றுதான் பிரம்மன்' என்கிறது. மேலும், இந்த உபநிடதம் பிரபஞ்சப் பொருள்களில் பிரம்மனின் உள்ளார்ந்த தன்மையினையும் கடந்தநிலை பற்றி உணரமுடியாத தன்மையினையும் வருணிக்கிறது. இது போன்ற உயர்ந்த கருத்துகளைத்தாம் பிற்காலத்தில் வந்த சைவர்கள் சிவபெருமானுக்கும் வைணவர்கள் நாராயணனுக்கும் சாக்தர்கள் சக்திக்கும் ஏற்றிக் கொண்டு தம் தத்துவங்களை வளர்த்துள்ளனர். மேலே கூறிய செய்திகள் சமய குரவர்களின் திருமுறைகளிலும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் செறிந்து காணப்படுதல் பிற்காலத்தில் ஏற்பட்ட உபநிடதங்களின் தாக்கத்தை உறுதிச் செய்கிறது. சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்ற ஆச்சாரியர்களின் விரிவுரைகளிலும் உபநிடதங்களின் தாக்கங்கள் மிகுந்திருப்பது வெள்ளிடை மலை.

உபநிடதங்களுக்கு அடுத்தபடியாக இந்தியத் தத்துவத்தில் சிறப்பிடம் வகிப்பது பகவத் கீதை. பகவத்கீதை உபநிடதங்களின் சாரமாகத்திகழ்கிறது. தத்துவ அறிஞர்கள் உபநிடதங்களைப் பசுவாகவும், கீதையை அதன் பாலாகவும் வருணிப்பர். உபநிடதங்களிலுள்ள பல சுலோகங்கள் கீதையில் அப்படியே காணக்கிடக்கின்றன. மகாபாரதத்தில் கீதை ஓர் உறுப்பாக இருப்பதால் இதுவும் வியாச முனிவரால் எழுதப்பட்டதே. மகாபாரதப் போரில் கடமையின் இன்றியமையாமையை வலியுறுத்தி, அர்ச்சுனனுக்கு அவன் தேர்ச் சாரதியாக விளங்கும் கிருட்டிணன் உபதேசம் செய்வது போல் இது அமைந்துள்ளது. பதினெட்டு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிறித்தவர்களுக்கு விவிலியம் போல இந்துக்களுக்குக் கீதை புனித நூலாகும். கீதை உபதேசத்தைக் கேட்ட பிறகு அர்ச்சுனன் ஒரு துறவியாகவோ ஒரு பரம பக்தனாகவோ ஆகிவிடவில்லை. அவன் ஒரு கடமை வீரனாகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டான். மனத்திட்பமே வினைதிட்பம் என்ற கோட்பாடுத்தான் கீதையின் மையக் கோட்பாடாகும். இதை 'நிட்காம கர்ம யோகா' என்றும் கூறுவர். இங்கு 'நிட்காமம்' என்தற்குத் 'தனிப்பட்ட விருப்பற்ற' என்று பொருள் கொள்வது நலம் ஆகாது. ஏனெனில், தனிப்பட்ட விருப்பம் இல்லாவிடில் வினைத் திட்பம் இருக்காது. தெய்வக் கருத்துக்கு வேறன்மையான வினைத்திட்பம் என்பது இதன் பொருள். இறைமையுணர்வே கீதையின் முடிந்த முடிவாகும். ஒருவன் இறைமை உணர்வைப் பெற்றால் ஆன்ம உணர்வைத்தானாகவே பெறலாம்.

முன்னுரையில் குறிப்பிட்டதுபோல இந்தியத் தத்துவத்தில் பல பிரிவுகள் (Schools) உள்ளன. வேதங்களின் ஆணையுரிமையை ஏற்றுக் கொண்ட பிரிவுகளை 'ஆத்திகப் பிரிவுகள்' என்றும், அவற்றை ஏற்றுக் கொள்ளாத பிரிவுகளை 'நாத்திகப் பிரிவுகள்' என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இறை நம்பிக்கைக்கும் இந்தப் பாகுபாட்டிற்கும் தொடர்பில்லை. ஆத்திகப் பிரிவுத் தொகுதியில் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் முதலிய சமயங்களும், நாத்திகப் பிரிவுத் தொகுதியில் உலோகாயதம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்களும் இடம் பெறுகின்றன. மேலும் ஆத்திகப் பிரிவுத் தொகுதியில், வேதங்களில் வருணிக்கப்படும் சடங்குமுறைகளை வலியுறுத்துவது மீமாம்சையாகும். வேதங்களில் விளக்கப்படும் சீரிய சிந்தனையின்பாற்பட்ட தொலைநீடாய்வை வலியுறுத்துவது வேதாந்தமாகும். ஏனைய நான்கு சமயங்களும், வேதங்களின் ஆணையுரிமையை மறுக்காவிடினும் தற்சார்புள்ள பிரிவுகளாகும். மேற்கூறிய இந்தியத் தத்துவப் பிரிவுகள் பல காலங்களில் தோன்றியவை. அவை பல நூற்றாண்டுகளாக இணைந்தே செயற்படுபவை. இந்தியப் பண்பாட்டில் தத்துவம் பின்னிப் பிணைந்திருப்பதே இதற்குக் காரணம். தத்துவத்தையும் சமயத்தையும் இந்திய மக்கள் பிரித்துப் பார்க்காமல் தங்கள் வாழ்க்கையை

நடத்தி வருகின்றனர். தலைமுறை தலைமுறையாக இப்பண்பாடு தொடர்ந்து வந்துள்ளது. சமயங்கள் மாறிமாறி ஒன்றையொன்று திறனாய்வு செய்து கொள்வதால் இந்தியத் தத்துவத்தில் எந்த ஒரு கோட்பாட்டிலும் தெளிவான நிலை நிலவுகிறது. இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்தல் நன்றாகும்.

1. சாருவாகத் தத்துவம்: இதனை இயற்பொருள் வாதம் என்றும், உலோகாயதம் என்றும் கூறலாம். அறிவைப் பெறப் புலன்காட்சி ஒன்றே ஏற்றுக்கொள்ளக்கூடிய மூலாதாரம் என்பது இதன் வாதம். அனுமானம், வாய்மொழிச் சான்றுரை, உவமானம் முதலிய மூலாதாரங்களை இது நம்புவதில்லை. காற்று, நெருப்பு, நீர், மண் என்ற நான்கு மூலப்பொருள்களால் ஆக்கப்பட்ட இயற்பியல் உலகை மட்டும்தான் புலனுறுப்புகளின் மூலம் புலன்காட்சி உணர்த்துகிறது. மனிதனுள் இயற்பியல்பாற்படாத ஒன்று இருக்கிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. தனிமனிதன் தன் உடம்புடன் முற்றொருமனம் பெற்றவன். வாழ்கிற உடம்புக்கு உணர்வு இயற்குணமாகிறது. உணர்வற்ற மூலப் பொருள்களால் ஆக்கப்பட்ட உடம்புக்கு உணர்வு எப்படி ஏற்பட முடியும் என்ற வினா எழலாம். ஒரே மூலப் பொருள் வெவ்வேறு சூழ்நிலையில் வெவ்வேறு குணங்களைப் பெறலாம். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்றிலும் இல்லாத செந்நிறம் இம் மூன்றையும் ஒன்று சேர்த்து மெல்லும்போது உண்டாகிறது. அது போல இயற்பியல்பாற்பட்ட மூலப் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் ஒன்று சேர்ந்து ஒரு வாழ்கிற உடம்பை உண்டாக்கும்போது அதற்கு உணர்வு நிலை ஏற்படுகிறது. உடல் அழியும் போது உணர்வும் அழிகிறது. உடம்புக்கு வாழத் தகுதியற்ற நிலை ஏற்படுங்கால், அது பின்னால் அனுபவிக்கவோ துய்க்கவோ எதையும் விட்டு விடுவதில்லை. இறந்ததற்குப் பிறகு மனிதன் பின்னரும் பிறப்பான் என்பது நிருபிக்க முடியாது கூற்று. கடவுள் இருக்கிறார் என்பது ஒரு புனைந்துரை. கடவுளைப் புலன் காட்சியால் உணர முடியாது. இவ்வுலகம் மேற்சொன்ன மூலப் பொருள்களின் தன்னிச்சையான சேர்க்கையால் ஏற்பட்டதாகும். கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பது அறியாமையாகும். கடவுள் என்ற இல்லாத ஒன்றுக்குச் சமயச் சடங்குகள் செய்தலும் இம்மைக்குப் பிறகு சுவர்க்கம் புகலாம் என்று நினைத்தலும் மடமையாகும். வேதங்களை நம்புதல் அறிவீனம். கர்மா கோட்பாடு என்பது வீண் பிதற்றல். இம்மையில் துய்க்கப்படுகிற இன்பமே இன்பம். மறுமையில் நம்பிக்கை வைத்து அதற்காக இம்மையில் கிட்டியுள்ள இன்பத்தைச் சமயங்களின் பெயரால் இழப்பது மூடத்தனம். கிடைத்தவரை இன்பத்தைத் துய்ப்பதும், முடிந்தவரை துன்பத்தை விலக்குவதுந்தான் மனிதனின் குறிக்கோள். இதுபோன்ற கோட்பாடுகளை உலோகாயதம் வலியுறுத்துகிறது.

2. சமணத் தத்துவம்: சமண சமயமும் சமணத் தத்துவமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. இதன் தோற்றம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது. தேவர் என்பவரால் தொடங்கப்பட்டது தீர்த்தங்கரர்களால் வழிவழியாகக் கடைபிடிக்கப்பட்டுவந்து, இருபத்து நான்காம் தீர்த்தங்கரரான வர்த்தமானர் என்பவரால் பெருமளவில் பரப்பப்பட்டது. ஐம்புலன்களையும் ஆசாபாசங்களையும் வென்றவர்கள் சினர் என்று சொல்லப்படுகின்றனர். சமணம் கடவுளை நம்புவதில்லை. இங்குக் கடவுளுக்கு உரிய இடம் தீர்த்தங்கரர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

சமணத் தத்துவம் புலன்காட்சி, அனுமானம், வாய் மொழிச் சான்றுரை ஆகிய மூன்றையும் ஏற்புடை அறிவிற்கு மூலாதாரங்களாக ஏற்றுக்கொள்கிறது. அளவை முறையில் இருந்தால் அனுமானமும் நம்பிக்கைக்குரிய ஆணையுரிமை பெற்றிருந்தால் வாய்மொழிச் சான்றுரையும் ஏற்புடையனவாகும். குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட புலன்காட்சியாலும் எளிய மனிதனின் பகுத்தறிவாலும் உயத்துணர முடியாத ஆன்மிகக் கருத்துகளைத் தீர்த்தங்கரர்களின் வாயிலாகப் பெறலாம் என்பதில் சமணம் நம்பிக்கைவைத்துள்ளது.

காற்று, தீ, நீர், மண் ஆகியவற்றைப் புலன் காட்சியின் மூலமும், ஆகாசம், காலம் முதலியவற்றை அனுமானத்தின் மூலமும் உணரலாம். வாழ்கிற உடம்பில் உயிர் இருப்பதைப் புலன் காட்சியும் அனுமானமும் மெய்ப்பிக்கின்றன. உணர்வை இயல்பாகப் பெற்ற உயிர் இருப்பதால்தான் உடம்பும் புலனுறுப்புகளும் தம் பணிகளை ஒழுங்காகச் செய்ய முடிகின்றன. புழுப்பூச்சிகள் முதல் மனிதன் ஈறாக அனைத்திற்கும் உயிர்கள் உண்டு என்ற பல்லுயிர்க் கொள்கையைச் சமணம் வலியுறுத்துகிறது. ஒவ்வோர் உயிரும் அளவிலா உணர்வு, ஆற்றல், ஆனந்தம், அறிவு ஆகியவற்றை அடையத்தகுதி பெற்றதாகும். ஆனால், இத்தகுதியை அந்தந்த உயிர்களின் வினைப் பயன் அல்லது கர்மா தடுக்கிறது. கர்மா ஒவ்வோர் உயிரின் உண்மை இயல்பை மறைப்பதுடன் தளையை ஏற்படுத்திப் பொருளாசையில் அதனை இழிய வைக்கிறது. கர்மாவை நீக்குவதன் மூலம் உயிர் தளையிலிருந்து விடுபட்டுத் தன் இயல்பான முழு நிறைவைத் திரும்பப் பெற முடியும்.

தீர்த்தங்கரர்களின் உபதேசங்களும் வாழ்க்கையும் தளை நீக்கம் பெற முடியும் என்பதை மெய்ப்பிக்கின்றன. தளை நீக்கம் பெற மகாவீரர் வற்புறுத்

திய நெறிகள் மூன்று. அவை தீர்த்தங்கரர்களின் போதனைகளில் நல்லறிவு, நன்னம்பிக்கை, நன்னடத்தை என்பனவாகும். நன்னடத்தையில் இன்னா செய்யாமை, பொய் சொல்லாமை, திருடாமை, புலன் உணர்விற்கு ஆட்படாமை, பற்றறுத்தல் என்பன அடங்கும். இவற்றைக் கடைப்பிடித்தால் பெரு விருப்பங்கள் குறைந்து வினைப்பயனும் நீங்கும். தடைகள் நீங்கி உயிர் முழுநிறைவைப் பெறும். இது தான் தளை நீக்க நிலை அல்லது விடுபட்ட நிலை எனப்படும்.

பொருள்கள் மெய்ம்மைக்குணம் உள்ளவை என்பதால் சமணத் தத்துவத்தை 'மெய்ம்மையியல்' என்றும் பல பொருள்கள் இருப்பது உண்மை என்பதால் 'அனேகான்ம வாதம்' அல்லது 'பன்மை வாதம். என்றும், இறை நம்பிக்கையில்லாததால் 'நாத்திக வாதம்' என்றும் கூறலாம்.

3. பௌத்தத் தத்துவம்: சமணத்தைப் போலவே பௌத்தத்திலும் சமயமும் தத்துவமும் பின்னிப் பிணைந்துள்ளன. இதைத் தோற்றுவித்தவர் கௌதம புத்தராவார். மூப்பு, பிணி, இறப்பு, வறுமை, கவலை என்னும் இவை நிறைந்த இவ்வுலக வாழ்வைக் கண்டு வெறுப்புற்ற கௌதமரின் உள்ளம் துன்பங்களைத் துடைத்து, அந்தமில்லா இன்பத்து அழிவில் நிலையை மக்களுக்கு அளிக்கத்தக்க தூய நெறி ஒன்றை நாட முற்பட்டது. பல ஆண்டுகள் படித்து, தவம் செய்து தியானம் செய்த அவருக்குத் திடீரெனப் பேருணர்வு உதித்தது. அவர் நான்கு பேருண்மைகளை உணர்ந்தார். அவை மக்களுக்குத் துன்பம் உண்டு; அதற்குக் காரணமும் உண்டு; அதற்கு ஒழிவும் உண்டு; அந்த ஒழிவை ஏற்படுத்துவதற்கு வழியும் உண்டு என்பனவாகும். துன்பங்களுக்குக் காரணம் பற்று; பற்றுக்குக் காரணம் அறியாமையும் பக்குவமடையாமையும் ஆகும். உலகப் பொருள்களின் நிலையாமையை மனிதன் புரிந்து கொண்டால் பேரவா நீங்கும். பேரவா நீங்கினால் அதனால் உண்டாகும் துன்பமும் நீங்கும். இந்தத் துன்பத்தை நீக்குதற்கு அவர் எட்டு வகை மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்கிறார். அவையாவன:- நல்லெண்ணம், நன்னம்பிக்கை, நற்செய்கை, நல்வாக்கு, நல்வாழ்வு, நன்முயற்சி, நல்லறிவு, நல்தியானம் என்பனவாகும். தொடக்கத்திலிருந்தே புத்தர் மனிதன் படும் துன்பங்களை ஒழிக்க வழிகாண முயன்றாரேயன்றி இயற்கை கடந்த ஆராய்வில் அதிக நாட்டம் செலுத்தவில்லை. எனினும் 1) எல்லாப் பொருள்களும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவை; தாமாக இயங்கக் கூடியவை எவையுமில்லை. 2) எல்லாம் மாறுதல்களுக்கு உட்பட்டவை; நிலையானவை எவையுமில்லை. 3) நிலையான கடவுள்; நிலையான உயிர் என்று எந்த நிலையான ஒன்றும் கிடையாது. 4) வினைப்பயனின் படி நிகழ்கால வாழ்வே, எதிர்கால வாழ்விற்கு வழி வகுக்கிறது.

புத்த சமயத்தைக் கடைப்பிடித்தவர்கள் பிற்காலத்தில் அவருடைய போதனைகளை விரிவு செய்து புத்த சமயத்திலேயே பல குழாங்களை ஏற்படுத்தினர். அவை:

1) மாத்யாமிகா அல்லது சூனிய வாதக் குழாம்: இது இவ்வுலகம் ஒரு சூன்யம்; உலக நிகழ்வுகள் ஒரு மாயத் தோற்றம்; எதுவும் உண்மையன்று என்கிறது.

2) யோகாச்சார அல்லது விஞ்ஞான வாதக் குழாம்: இது புற உலகப் பொருள்கள் யாவும் பொய் என்கிறது. புற உலகப் பொருள்களாகத் தோன்றுபவை உண்மையிலேயே உள்ளத்தில் உள்ள எண்ணங்கள்தாம். உள்ளம் மட்டுமே உண்மையானது. உள்ளமும் பொய் என்றால், 'உள்ளமும் பொய்' என்று கூறும் வாதமும் பொருளற்றதாகி விடும்.

3) சௌத்ராந்திகக் குழாம்: அகப் பொருள், புறப் பொருள் அனைத்தும் உண்மையானவை என்று கூறுகிறது. புறப் பொருள்களின் பொய்மைக் கூற்றை இது மறுக்கிறது. புறப் பொருள் பற்றிய எண்ணம் உள்ளத்தில் இருப்பதால்தான் மனிதன் புறப் பொருளை உணர்கிறான் என்பது இதன் வாதம்.

4) வைபாடிகக் குழாம்: அகப்பொருள், புறப் பொருள் அனைத்துமே உண்மையே. புறப் பொருள்கள் பற்றிய எண்ணம் உள்ளத்திலிருப்பதால் அவற்றை உணரும் போது அவை புலனாகின்றன என்பதை இது மறுக்கிறது. புறப் பொருள்கள் நேரடியாகவே புலன் காட்சியின் மூலம் உணரப்படுகின்றன என்பது தான் இதன் வாதம்.

சமய முறையில் புத்த சமயத்தில் இரு பிரிவுகள் உள்ளன. அவை ஈனயானம், மகாயானம் எனப்படும். ஒரு தனி மனிதன் தன் துன்பங்களுக்கு முத்தாய்ப்பு வைத்து, நிருவாணம் என்ற தளை நீக்கம் பெற வேண்டும் என்ற கொள்கையுடையது ஈனயான பௌத்தம். நிருவாணம் அடைவதுதான் குறிக்கோள். ஒரு தனிப்பட்ட மனிதன் தன் துன்பங்களுக்கு முத்தாய்ப்பு வைப்பதோடு, துன்பத்தில் உழலும் மற்ற உயிர்களையும் தளை நீக்கம் பெற வைக்க வேண்டித் 'தளைநீக்கம் பெற்றவர்கள் நிறைநிலை அறிவுணர்வைப்' பெறுதலும் வேண்டும் என்ற கொள்கையுடையது மகாயான பௌத்தம்.

4. நியாயத் தத்துவம்: வேதங்களின் ஆணையுரிமையை மறுக்காமலும், அதே சமயத்தில் தற்சார்புற்றும் திகழும் குழாங்கள் நான்கு ஆகும். அவற்றுள்

ஒன்று நியாயத்தத்துவம் (நியாயம் + தத்துவம்). இதனை உருவாக்கியவர் கௌதம முனிவர். இது அளவையை அடிப்படையாகக் கொண்ட மெய்ம்மையியல் ஆகும். இது புலன் காட்சி, அனுமானம், வாய்மொழிச் சான்றுரை, உவமானம் ஆகிய நான்கினையும் உண்மை அறிவைக் கொடுக்கும் மூலாதாரங்களாக ஏற்றுக் கொண்டுள்ளது. பொருள்கள் புலனுறுப்புகளுடன் கொண்டிருக்கிற தொடர்பின் விளைவால் ஏற்படுவது புலன்காட்சி. இது அறிவை நேரடியாகக் கொடுக்கிறது. சில குணங்கள் சில பொருள்களுடன் கொண்டுள்ள மாறாத் தொடர்பை (வியாப்தி) அடிப்படையாகக்கொண்டுஅந்தக் குணங்களை அறிந்தவுடன் சம்பந்தப்பட்ட பொருளை அனுமானிப்பது அனுமானம் எனப்படும். ஒரு அனுமானத்தில் குறைந்தது மூன்று உரைகளும், மூன்று பதங்களும் இருக்கும். பேருரையையும் சிற்றுரையையும் ஆதாரமாகக் கொண்டு அனுமானிக்கப்படுவது முடிவுரையாகும். பெரும் பதத்தையும் சிறுபதத்தையும் இணைப்பது மத்திம பதமாகும். ஒரு புதிய பொருளை ஒரு தெரிந்த பொருளைச் சான்றாக கொண்டு விளக்குவது உவமானம் எனப்படும். ஆணையுரிமையை உடையவர்களின் வாய்மொழிச் சான்றுகள் நான்காம் மூலாதாரம் ஆகும்.

நியாயத் தத்துவத்தின்படி உயிர் என்பது உடம்பு, உள்ளம் ஆகியவற்றினின்று வேறுபட்டது. உடம்பு என்பது வெறும் பருப்பொருள்களின் கூட்டுச் சேர்க்கையாகும். உள்ளம் என்பது பகுக்க முடியாத, அநாதியான ஒரு சூக்குமப் பொருள். இது மன எழுச்சியின்பாற்பட்ட இன்பம், துன்பம், மகிழ்வு சோகம் முதலியவற்றை உணர உயிரின் ஓர் ஒப்பற்ற கருவியாகச் செயற்படுகிறது. எந்த ஒரு பொருளுடன் தொடர்பு கொண்டாலும் அது பற்றிய உணர்வை உயிர் பெறுகிறது. ஆனால், உயிருக்கு உணர்வு அடிப்படை இயல்பன்று. தளைநீக்க அல்லது முக்தி நிலையில் உயிருக்கு உணர்வெனும் இயல்பு இல்லை. உயிர் அநாதியான விபுத்துவப் (எங்கும் வியாபிக்கும்) பொருள். அறியாமையினால் ஏற்பட்ட பாசப் பிடிப்புகளால் உயிர் இறப்பு, பிறப்பிற்கு ஆளாகி இன்ப, துன்பத்தில் இழிகிறது. மெய்ஞ்ஞானம் பெற்று நிலையற்ற இன்ப துன்பங்களிலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலைக்குத் தளைநீக்கம் அல்லது முக்தி என்பது பெயர்.

நியாயத் தத்துவம் கடவுள் இருப்பதை நிரூபிக்கிறது. உலகம் தோன்றி, இருந்து, அழிவதற்குக் காரணம் கடவுளே என்பது இதன் வாதம். சூனியத்திலிருந்து கடவுள் உலகத்தைத் தோற்றுவிக்கவில்லை. ஆக்கமும் அழிவும் இல்லாத அநாதியான அணுக்கள், வெளி, காலம், ஆகாசம், உள்ளம், உயிர் முதலியவற்றிலிருந்து கடவுள் உலகத்தைத் தோற்றுவித்துள்ளார். உயிர்கள் தத்தம் வினைப் பயனுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உலகம் உண்டாக்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட ஆற்றலையும், அறிவையும் கொண்ட உயிர்கள் புலனால் உணர முடியாத சூக்குமத் தன்மையுடைய அணுக்களுக்கும் அவற்றிலான பிரபஞ்சத்திற்கும் கருத்தாவாக இருக்க முடியாது. எல்லையில்லா முழு நலமும், அளவற்ற பேராற்றலும் ஞானமுமுள்ள ஒரு மாபெரும் சக்திதான் இப்பிரபஞ்சத்திற்குக் கருத்தாவாக இருக்க முடியும். ஒவ்வோர் ஆன்மாவிற்கும் சிந்திக்கவும் செயற்படவும் சுதந்திரம் இருப்பதால் அவையவை செய்யும் வினைப்பயனுக்கேற்ப அவையவை இன்ப துன்பத்தில் இழிகின்றன. கருத்தாவின் அன்பு அரவணைப்பாலும் அறிவுள்ள வழிகாட்டலினாலும் உயிர்கள் தம்மைப்பற்றியும், உலகைப் பற்றியும் சரியான அறிவைப் பெற்று, அதன் வழியாக உலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு முக்தியடைகின்றன.

5. **வைசேடிகத் தத்துவம்:** வைசேடிகத் தத்துவம் கணாதர் என்பவரால் உண்டாக்கப்பட்டது. நியாயத்தில் கூறப்பட்ட கடவுள், உயிர், முக்தி போன்ற கோட்பாடுகள் இதற்கும் பொருந்தும்.

இது அறிவிற்குரிய உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் ஏழு வகைகளாகப் பிரிக்கிறது. அவை. திரவியம், குணம், வினை, பொதுத்தன்மை, விசேடத் தன்மை, உள்ளார்ந்த இருக்கைத் தொடர்பு, இருத்தலின்மை என்பனவாகும்.

குணம், வினை ஆகியவற்றிற்கு நிலைக்களனாகவும், இவற்றிலிருந்து வேறுபட்டும் இருப்பது திரவியம் எனப்படும். இது ஒன்பது வகைப்படும். அவை, மண். நீர், தீ, காற்று, ஆகாசம், காலம், வெளி, உயிர், மனம் என்பன. இவற்றுள் முதல்நான்கும் மண்ணணு, நீரணு, தீயணு, காற்றணு ஆகியவற்றால் ஆனவை. இவ்வணுக்களை அழிக்கவும் முடியாது; புலனால் உணரவும் முடியாது. இவை அநாதியானவை. ஆகாசம், காலம், வெளி ஆகிய இம்மூன்று திரவியங்களும் எங்கும் பரந்தவை. ஆதி அந்தம் இல்லாதவை. மனம் அநாதியானது; அணுவைப் போன்று மிகச் சிறியது. சிந்தனை, உணர்வு, விழைவு ஆகியவை மனத்தின் செயல்களாகும். உயிர் அநாதியானது; உணர்வு என்னும் இயல்பிற்கு நிலைக்களனானது. மனம்அக உணர்வால் உயிரை உணருகிறது.

ஒரு பொருளுக்கு இயல்பாக இருப்பதும் தனக்கென ஓர் இயல்பு இல்லாததும் குணம் எனப்படும்.

இந்தியத் தத்துவம்

திரவியத்தைப் போலக்குணமும் தனித்து இருக்க இயலாதது; ஒரு பொருளைச் சார்ந்துதான் இது இருக்கும். குணங்கள் இருபத்து நான்கு வகைப்படும்.

வினை என்பது இயக்கம். குணத்தைப் போல வினையும் ஒரு திரவியத்தைச் சார்ந்தது. வினைகள் ஐந்து வகைப்படும்.

பொதுத் தன்மை என்பது ஒரு வகுப்பைச் சார்ந்த எல்லாப் பொருள்களும் பொதுவாகப் பெற்றிருக்கும் தன்மை. மனிதர்கள் என்ற வகுப்பிற்குப் பொதுவாக இருக்கும் தன்மை மனிதத் தன்மை. ஒருவன் பிறப்பதாலோ ஒருவன் இறப்பதாலோ இந்தப் பொதுத் தன்மை மாறுவதில்லை. இது நிலையானது; அநாதியானது.

விசேடத் தன்மை என்பது பொருள்களுக்கிடையேயுள்ள மூலாதாரமான வேறுபாட்டிற்கு அடிப்படையாகும். ஒரு பொருளை மற்றப் பொருள்களிலிருந்து பிரிப்பதற்குக் காரணியாக இருப்பது அதன் விசேடத் தன்மையாகும். பொருள்கள் தனித்துவம் பெற விசேடத் தன்மை காரணமாகிறது.


உள்ளார்ந்த இருக்கைத் தொடர்பு என்பது ஒரு நிறை பொருளுக்கும் அதன் பகுதிப் பொருளுக்கும் அல்லது ஒரு குணத்திற்கும் அது சார்ந்துள்ள பொருளுக்கும் இடையேயுள்ள நிலையான, அநாதியான தொடர்பாகும். மனிதத் தன்மைக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள தொடர்பைச் சான்று கூறலாம்.

இருத்தலின்மை என்பது எதிர்மறைத் தன்மையைக் குறிப்பது. 'இங்குப் பாம்பு இல்லை' என்னும் கூற்று இதற்கு ஒரு சான்றாகும். இருத்தலின்மை நான்கு வகைப்படும். 1. ஒரு பொருள் உண்டாக்குவதற்கு முன்பு மூலப் பொருளில் அது இல்லை. 2. ஒரு பொருள் அழிந்தபிறகு மிச்சப் பொருள்களில் அது இல்லை. 3. கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்றிலும் ஒரு பொருளில் மற்றது இல்லை. 4. தொடர்பற்ற பொருள்களில் எந்தச் சூழ்நிலையிலும் ஒன்றில் மற்றது இல்லை.

6. சாங்கியத் தத்துவம்: சாங்கியத் தத்துவம் கபிலர் என்ற முனிவரால் ஏற்படுத்தப்பட்டது. புருடன், பிரகிருதி என்னும் தனித்திருக்கக்கூடிய இரண்டு மூலாதாரமான மெய்ப்பொருள்களை இது ஏற்கிறது. புருடன் (புருஷா) என்பது அறிவுத் திறமுள்ள அடிப்படை மெய்ப்பொருள் உணர்வைத் தன் குணமாகக் கொண்டில்லாமல் சத்தாகவே கொண்டுள்ளது. உடம்பு, புலனுறுப்புகள், மனம் ஆகியவற்றினின்று வேறுபட்ட உயிர்தான் இது. உலகப் பொருள்களிலிருந்து இது வேறுபட்டது. உலகப் பொருள்களின் மாற்றங்களையும் செயல் முறைகளையும் இது ஒன்றே காணவல்லது. ஆனால், இதனால் மாற்றம் கொள்ளவோ செயற்படவோ முடியாது. சாங்கியம் பல்லுயிர்க் கோட்பாட்டை ஏற்கிறது.

உலகத்திற்கு மூலாதாரமான காரணி பிரகிருதியாகும். இது அநாதியான உணர்வற்ற சடப்பொருளாகும். உயிர்களின் வசதிக்காக இது எப்போதும் மாற்றத்திற்குட்பட்டது. சத்துவம், இராசசம், தாமசம் என்ற மூன்றையும் இது தன் ஆக்கக் கூறுகளாகக் கொண்டுள்ளது. இம்மூன்று குணங்களுக்கும் இன்பம், துன்பம், தொடர்பின்மை என்னும் பண்புகளுண்டு.

புருடனும் பிரகிருதியும் சேருவதுதான் உலகப் பரிணாமத்திற்கு முதல்படி. இச்சேர்க்கை பிரகிருதியின் மூலச் சமநிலைத் தன்மையை மாற்றி அதனைச் செயற்பட வைக்கிறது. பிரகிருதியிலிருந்து பிரபஞ்சத்தின் மூலவித்தாகிய 'மகத்து' உண்டாகிறது. புருடனின் சத்தாகிய உணர்வு நிலை பிரகிருதியுடன் தொடர்பு கொள்வதால் பிரகிருதியும் உணர்வுடன் தோன்றுகிறது. இச்சேர்க்கையிலிருந்து அகங்காரம், ஐந்து புலனுறுப்புகள், ஐந்து கரும உறுப்புகள், மனம் முதலியவை உண்டாகின்றன. தாமசம் அதிகமாக அகங்காரத்திலிருந்து ஐந்து தன்மாத்திரைகளும், அவற்றிலிருந்து ஐந்து பூதங்களும் ஆகாயம், காற்று, தீ, நீர், மண் என்ற வரிசையில் உண்டாகின்றன.



உயிர் அழியாததாகவும் குற்றமற்றதாகவும் இருந்தாலும், வினைப்பயனால் வந்த அறியாமை யினால் இது தன்னை உடம்பு, மனம், புலனுறுப்புகள் ஆகியவற்றுடன் குழப்பிக் கொள்கிறது. இக் குழப்பம்தான் எல்லாச் செயல்களுக்கும், துன்பத்திற் கும் காரணம். உடம்பையும் உயிரையும் வேறுபடுத்தி அறியத் தவறுவதால் உடம்பிற்கு இன்ப துன்பம் ஏற்படும் போதெல்லாம் உயிர் தனக்கு ஏற்படுவது போல் நினைத்துக் கொள்கிறது. இதுபோல் மனத் தையும் உயிரிலிருந்து வேறுபடுத்தி அறியத் தவறுவ தால் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, கவலை முதலிய வற்றை உயிர் தனக்கு ஏற்படுவது போல் நினைத்துக் கொள்கிறது. இவற்றிலிருந்து வேறுபட்டுத் தன் உண்மைத் தன்மையை உயிர் உணருமானால், அதற்கு இன்ப துன்பமே கிடையாது. விடுபட்ட இந்த நிலைக்குத்தான் கைவல்யம் அல்லது முக்தி என்பது பெயர். இம்மையிலேயே இந்நிலையை அடையலாம். அதற்குச் சீவன் முக்தி என்பது பெயர். இவ்வாழ்க் கைக்குப் பின்னர் அடையும் முக்தி 'விதேக முக்தி' எனப்படும். உயிரின் உண்மைத் தன்மை பற்றிய பொதுவான அறிவு மட்டும் இதற்குப் போதாது. ஆழ்ந்த பக்தி, தியானம் போன்ற நீண்ட நாளைய ஆன்மிகப் பயிற்சி இருந்தால்தான் இந்த உண்மை நிலை கைவரப்பெறும்.

கடவுள் மீது சாங்கியத் தத்துவத்திற்கு நம் பிக்கை கிடையாது. எந்த விதத்திலும் கடவுள் இருக் கிறார் என்பதை நிருபிக்க முடியாது என்பது இதன் வாதம். உலகத்தை விளக்குவதற்குப் பிரகிருதியே போதுமான காரணம் ஆகும். அநாதியான மாறும் தன்மையற்ற ஒன்று உலகத்தின் சிருட்டிக் கருத்தா வாக இருக்க முடியாது.

7. யோகத் தத்துவம்: இது பதஞ்சலி முனிவரால் தோற்றுவிக்கப்பட்டது. சாங்கியத் தத்துவத்தின் எல்லாக்கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்கிறது. கடவுள் இருக்கிறார் என்பதுதான் இதன் அடிப் படைக் கருத்து. இதில் மட்டும்தான் இது சாங்கியத் திலிருந்து வேறுபடுகிறது. முக்தி அடைவதற்குச் சிறந்த வழி உயிரை உடம்பு, மனம் முதலியவற்றி லிருந்து வேறுபடுத்தி அறியும் அறிவு பெறுவதாகும். இந்த அறிவைப் பெறுவதற்கு யோகப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். மனத்தின் செயல்களைக் கட்டுப் படுத்தித் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுதான் யோகத்தின் அடிப்படை. மனத்தின் செயல்கள் ஐந்து நிலைகளாக இருக்கின்றன. ஒரு நிலையில் இல்லாமல் ஒழுக்கக் கேடான நிலையில் இருப்பது முதல் நிலை. தூக்கத்திலிருப்பது போன்ற உணர்வு மழுங்கிய நிலை இரண்டாம் நிலை. கொந்தளிப்பில்லாத அமைதி யான நிலை மூன்றாம் நிலை. இம்மூன்று நிலை களும் யோகத்திற்குத் தகுதி அற்றவை.

ஒரு நிலைப்படுத்தல் (ஏகாக்ரம்), நிருத்தம் என் பன முறையே நான்காம் ஐந்தாம் நிலைகளாகும். இவை இரண்டு மட்டுமே யோகம் செய்வதற்குத் தகுதி உள்ளவையாகும். யோகத்தில் எண்வகைப் படிகள் உள்ளன. 1. இயமம்: இதில் அகிம்சை, சத் தியம், திருடாமை, பிரமசரியம், பிறர் பொருள் வேண்டாமை என்பன அடங்கும். 2. நியமம்: இதில் உடல் தூய்மை, உள்ளத்தூய்மை, போதுமென்ற மனம், தவம், ஞான நூல்களைப் படித்தல், கடவுள் தியானம் என்பன அடங்கும். 3. ஆசனம்: உடல் கட்டுப்பாட்டிற்காகப் பல்வகை ஆசனப் பயிற்சி களைச் செய்தல் இதில் அடங்கும். 4. பிராணா யாமம்: மூச்சுக் கட்டுப்பாடு. 5. பிரத்தியாகாரம் என்பது புலனுறுப்புகளைக் கட்டுப்படுத்துதல். 6. தாரணம் என்பது விரும்பும் பொருளில் உள்ளத்தைச் சேர்த்தல். 7. தியானம் என்பது தொடர்ந்த இடை யீடில்லாத ஆழ்ந்த சிந்தனையாகும். 8. சமாதி என்பது சிந்தித்த பொருளுடன் இரண்டறக் கலத் தல் ஆகும்.

8. மீமாம்சைத் தத்துவம்: இது சைமினி என்ப வரால் தோற்றுவிக்கப்பட்டது. வேதத்தின் சடங்கு முறைகளைச் சரியென்று நிறுவுவதுதான் இதன் தலையான நோக்கம். வேதங்கள் தனிப் பட்ட மனிதர்களால் எழுதப்படாததால் மனித னுக்கேயுரிய குறைபாடுகளும் தவறுகளும் அவற்றில் இல்லை என்பது இதன் வாதம். செய்து தீர வேண்டிய சடங்குகளை அவாவின்பாற்படாமல் செய்தால் அது வினைப் பயனைப் படிப்படியாக அழித்து மறுமையில் முக்தியைத் தரும். உயிர் அநாதி யானது; உடம்புடன் அது இணைவதால்தான் அதற்கு உணர்வு நிலை ஏற்படுகிறது. முக்தி அடைந்த ஆன்மாவிற்கு உணர்வு கிடையாது.

மீமாம்சையில் இரு குழாங்கள் உள்ளன; பிரபா கர் குழாம் என்பது ஒன்று, குமாரில பட்டர் ஏற் படுத்திய குழாம் மற்றொன்று. முதல் குழாம் அறிவைப் பெறுவதற்கு ஐவகை மூலாதாரங்களை ஏற்கிறது. அவை நியாயத்தில் கூறிய நான்குடன் ஆதார ஏற்பு (அருத்தாபத்தி) என்ற ஐந்துமாகும். பகலில் எந்த உணவும் உட்கொள்ளாத ஒருவன் உடம்பின் எடை குறையவில்லை என்றால் அதற்கு ஆதார ஏற்பாக அவன் இரவில் அதிகம் உண்பவனாக இருக்க வேண்டும் என்ற கருத்தை மூலாதார மாகக் கூறலாம். குமாரில பட்டருடைய குழாம் அறிதலின்மை (அனுபலப்தி) என்ற ஆறாவது மூலா

தாரத்தையும் ஏற்கிறது. 'இந்த அறையில் காற்றாடி இல்லை' என்பது இதற்குச் சான்று.

உலகம் உயிரைப் பொறுத்தவரை மீமாம்சை ஒரு மெய்ம்மையியல் ஆகும். 'கடவுள் இன்மை, இதன் அடிப்படைக் கருத்தாகும். உலகத்தின் படைப்பு, சிதைவு ஆகியவற்றை இது நம்புவதில்லை. இப்பொழுது உள்ளபடியேதான் உலகம் எப்பொழுதும் இருக்கும். உயிர்களின் வினைப்பயனுக்கேற்பப் பருப்பொருள்கள் உண்டாகின்றன என்பது இதன் கருத்து. தானாக இயங்கக் கூடிய வினைப்பயன் விதியின்படியே உலகமும் உயிர்களும் இயங்குகின்றன.

9. வேதாந்தத் தத்துவம்: வேதங்களுக்கு அந்தமாக இருப்பவை உபநிடதங்கள். வாதராயணர் என்பவர் உபநிடதங்களின் சாரங்களைப் பிரம்ம சூத்திரம் என்ற நூலில் ஒழுங்குபடுத்தி எழுதியுள்ளார். இந்நூலுக்குப் பிற்காலத்தில் சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்ற ஆச்சாரியர்கள் தத்தம் அறிவுச் சார்புக்கும் சமயச் சார்புக்கும் ஏற்ப விரிவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றின் அடிப்படையில் வேதாந்தத் தத்துவத்தை அத்துவைத தத்துவமென்றும் விசிட்டாத்துவைத தத்துவமென்றும் துவைத தத்துவமென்றும் மூன்றுதலைப்புகளில் விளக்கலாம். அறிஞர் டி.எம்.பி. மகாதேவன் அத்துவைதத்தை ஓர் அனுபவம் என்கிறார். உலகம் வெறும் தோற்றம். மெய்ப்பொருள் ஒன்றுமட்டுமே என்பது அத்துவைதத்தின் அடிப்படை நிலை. அத்துவைதம் என்றால் இரண்டற்றநிலை என்பது பொருள். சங்கரர் மூன்றுவிதமான நோக்குகளில் தம் நிலையை விளக்குகிறார். அவை 1. வியவகாரிக நிலை (சாதாரண அனுபவ நிலை) 2. பிராதிபாசிக நிலை (கனவு, மயக்கம் முதலிய நிலை) 3. பாரமார்த்திக நிலை (மெய்ந்நிலை) என்பனவாகும்.

இராமானுசர் 'ஒரே மெய்ப்பொருள் கடவுள் மட்டுமே' என்கிறார். சங்கரர் கண்டது குணமற்ற மெய்ப்பொருள். இராமானுசர் கூறும் கடவுளுக்கு அசித்து என்னும் இயற்பொருளும் சித்து என்னும் உயிரும் தகுதிகளாக அமைகின்றன. இவருக்கு உலகம் உண்மைப் பொருளாகும். அநாதியான உயிர்களும் உண்மைப் பொருளாகும். இராமானுசர் தமக்கு முன்பே விரிவுரைகள் எழுதிய தங்கர், குகதேவர், தரமிடர், கபர்தின், பாருச்சி முதலியவர்களின் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டே சிரீபாடியம், வேதாந்தசங்கிரகம் முதலிய தத்துவ நூல்களை எழுதியுள்ளார். சிலந்தி தன் எச்சிலைக் கொண்டு வலை பின்னுவதைப் போலக் கடவுள் தம் உள்ளேயிருந்து உலகத்தை வெளிப்படுத்துகிறார் என்பதுதான் படைப்பைப் பற்றி இவர் கூறும் கோட்பாடு.

சங்கரருடைய அத்துவைதத்திற்கு எதிராக எழுந்தது துவைதம். இதை ஏற்படுத்தியவர் மத்துவர் (கி.பி. 1199-1278). விசிட்டாத்து வைதத்தைப் போலவே துவைதமும் இறை நம்பிக்கைக் கோட்பாடுடையது. பரமாத்மா ஒருவரே என்பதும், எல்லா சீவாத்துமாக்களும் தங்களின் எல்லா நிலைகளிலும் கடவுளைச் சார்ந்து நிற்பவை என்பதும் இதன் முக்கியக் கோட்பாடுகள் ஆகும். முக்தி என்பது உயிரானது தன் இயற்கையான ஆனந்த நிலையை உணர்தல் ஆகும். முக்தியை அடைவதற்குப் பக்தியும் இறைவனது அருளும் இன்றியமையாதவை. மற்ற வேதாந்தத் தத்துவங்களிலிருந்து படைப்புக் கொள்கையில் துவைதம் முற்றிலும் வேறுபடுகிறது. கடவுளை நிமித்த காரணம் என்றும் கடவுளிலிருந்து முழுதும் வேறுபட்ட பிரகிருதியைப் பொருட் காரணம் என்றும் கூறுகிறது.

10. சைவ சித்தாந்தத் தத்துவம்: இந்தத் தத்துவம் வேதங்களையும் சைவ ஆகமங்களையும் பிரமாணமாகக் கொள்கிறது. மேலும், பன்னிரு திருமுறைகளும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படை நூல்களாகும். சைவ சித்தாந்தம் மூன்று உண்மைகளை நித்தியப் பொருள்களாகஏற்கிறது. அவை,கடவுள் (பதி), உயிர் (பசு), உயிரைப் பற்றிய தளைகள் (பாசம்) என்பனவாம். இம்மூன்றும் முடிவான உண்மைகளாகவும் நித்தியமாகவும் இருப்பினும், கடவுளே ஏனைய இரண்டுக்கும் மேலாய் நின்று அவற்றை இயக்குகிறார். கடவுள் அன்பு அவன் உயிர்களிடத்துக் கொண்டுள்ள தன்மையில் வெளிப்படுகிறது. அளவு கடந்த அன்பாலும் பரிவாலும் கடவுள் உயிர்களுக்கு ஐந்து பேறுகளை அளித்து முக்தியடையச் செய்கிறார். இப்பேறுகள் பஞ்ச கிருத்தியங்கள் எனப்படும். அவை ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். முக்தியடையத் தேவையான ஒழுக்க முறைகள் நான்கு வகைப்படும். அவை சரியை, கிரியை, யோகம் ஞானம் என்பனவாம்.

பொதுவாக, உலோகாயதம் தவிர அனைத்து இந்தியத் தத்துவங்களும் கருமக் கோட்பாட்டையும், அறியாமையை அகற்றித் தளைநீக்கம் பெறுவதையும் சிறப்பாக வற்புறுத்துகின்றன. எல்.மு.

**இந்தியத் தந்திச்சட்டம்**: இச்சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டு, கி.பி. 1885-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல்நாள் நடைமுறைக்கு வந்தது. அனைத்து இந்தியாவுக்கும் இந்தியத் தந்திச் சட்டம் (The Indian Telegraph Act, 1885) செல்லத் தக்கது ஆகும்.

தந்திப்பொறி (Telegraph) என்பது கம்பி, மின்னலை, காந்த அலை, மின்காந்தக் கதிர்வீச்சு ஆகிய முறைகளுள் ஏதாவதொன்றால் குறி, குறிப்பு, எழுத்து, காட்சி, ஒலி போன்ற பல்வேறு இயல்புடைய செய்திகளைப் பரப்பப் பயன்படும் கருவி அல்லது அமைப்பாகும். எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் இவ்விளக்கத்தில் அடங்கும்.

தந்திப் பொறியை அமைப்பது, பேணிவருவது, செயற்படச் செய்வது ஆகிய செய்கைகள் முழுமையாக மத்திய அரசுக்கு உரியவாகும். ஆனால், அவற்றைச் செய்வதற்கு வேறு எவருக்கும் உரிமம் வழங்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. மேலும், கம்பியில்லாத் தந்திப் பொறியை இந்தியாவுக்குச் சொந்தமான நீர்ப்பகுதியில் செல்லும் கப்பலில் அமைக்கவும் இந்தியாவின் ஆகாயப்பகுதியில் பறக்கும் விமானத்தில் அமைக்கவும் தேவைப்பட்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. கம்பியில்லாத் தந்திப் பொறியைத் தவிர்த்து, வேறு தந்திப் பொறியை இந்தியாவில் எந்த இடத்திலும் அமைப்பதற்கு அனுமதி வழங்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. தந்திப் பொறியை அமைப்பது, பேணிவருவது, செயற்படச் செய்வது தொடர்பாக மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம்.

இரயில்வே நிருவாகம் அதன் சொத்தில் தந்திப் பொறியை அமைப்பதற்கு மத்திய அரசு வேண்டும் போது அனுமதியளிக்க வேண்டும். அதற்குத் தேவையான வசதிகளையும் இரயில்வே நிருவாகம் செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய மறுப்பது தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

எவருடைய அசையாப் பொருளிலும் தந்திக் கம்பம் ஊன்றித் தந்திக் கம்பி அமைப்பதற்குத் தந்தித் துறைக்கு அதிகாரமுண்டு. இந்தஅதிகாரத்தை மத்திய அரசின் சார்பில் அமைக்கப்படும் தந்திப் பொறிக்காக மட்டில் உபயோகப்படுத்தலாம். அவ்வாறு தந்திக் கம்பம் ஊன்றி, தந்திக் கம்பி அமைப்பதற்காக அசையாப் பொருளில் உபயோகப்படுத்தும் உரிமையை மட்டில் மத்திய அரசு பெறலாம். மேலும், அந்த வேலையைச் செய்யும்போது அசையாப் பொருளுக்கு மிகக் குறைவான சேதத்தை உண்டாக்க வேண்டும். அவ்வாறு சேதம் உண்டாக்குவதற்கு அந்த அசையாப் பொருளின் உரிமையாளருக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டும். மேற்கூறிய வேலையைச் செய்வதற்கு அசையாப் பொருளின் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்தால், மாவட்டக் குற்றவியல் நீதிபதி அந்த வேலையைத் தொடர்புடைய அசையாப் பொருளில் செய்வதற்கு தந்தித் துறை நிருவாகத்திற்கு அனுமதி வழங்கலாம். அந்த ஆணையை மீறுவது தண்டிக்கக்கூடிய குற்றமாகும். அசையாப் பொருளின் உரிமையாளருக்குக் கொடுக்கப்பட வேண்டிய நட்ட ஈடு தொடர்பாக ஏற்படும் தகராறு மாவட்ட நீதிமன்ற முடிவுக்கு விடப்படும். ஆனால், உள்ளாட்சித்துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் உள்ளாட்சித் துறையின் அனுமதியின்றி மேற்கூறிய வேலையைத் தந்தித் துறை செய்யக் கூடாது. தந்தித் துறைக்கு உள்ளாட்சித் துறை அனுமதி வழங்கும்போது, அந்த உள்ளாட்சித் துறைக்கு ஏற்படக்கூடிய செலவுகள் தொடர்பான நியாயமான நிபந்தனைகளை விதிக்கலாம். உள்ளாட்சித் துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் மேற்கூறிய வேலையைச் செய்வதற்கு நட்ட ஈடு ஏதும் கொடுக்க வேண்டியதில்லை. தந்தித் துறை நிருவாகத்துக்கும், உள்ளாட்சித் துறைக்கும் தகராறு ஏதும் ஏற்பட்டால் அத்தகராறு மத்திய அரசால் நியமிக்கப்படும் அதிகாரியால் முடிவு செய்யப்படத் தக்கதாகும்.

முன்பே அமைக்கப்பட்டுள்ள தந்திக்கம்பம், தந்திக்கம்பி ஆகியவற்றைப் பரிசோதனை செய்யவோ பழுது பார்க்கவோ நீக்கவோ அவை அமைந்துள்ள அசையாப் பொருளில் நுழைவதற்குத் தந்தித்துறைக்கு உரிமையுண்டு.

உள்ளாட்சித் துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் அமைக்கப்பட்டுள்ள தந்திக் கம்பத்தை நீக்கவோ அதே சொத்தில் வேறு இடத்தில் மாற்றி அமைக்கவோ வேண்டும் என்று அதற்கான தேவை ஏற்படும்போது, உள்ளாட்சித் துறை தந்தித்துறையை வேண்டிக்கொள்ளலாம். உள்ளாட்சித் துறையைத் தவிர்த்து வேறு எவருக்கும் உரிய அசையாப் பொருளாக இருந்தால், தேவை ஏற்படும்போது அந்த அசையாப் பொருளில் உள்ள தந்திக் கம்பியை அந்தச் சொத்திலேயே வேறு இடத்தில் அமைக்கவோ வேறு அளவில் அமைக்கவோ அச்சொத்தின் உரிமையாளர் வேண்டலாம். முதன்முதலாக அச்சொத்தில் தந்திக் கம்பம் அமைப்பதற்குச் சொத்தின் உரிமையாளர் நட்டஈடு பெற்றிருந்தால், தந்திக் கம்பத்தை மாற்றியமைப்பதற்கான செலவை அந்தச் சொத்தின் உரிமையாளர் ஏற்றுக் கொள்ள வேண்டும். சொத்தின் உரிமையாளரின் வேண்டுகோளைத் தந்தித் துறை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சொத்தின் உரிமையாளர்மாவட்டக் குற்றவியல்நீதிபதியை அணுகலாம்.அந்த அதிகாரி தேவையான ஆணையைப் பிறப்பிக்கலாம்.

உள்ளாட்சித் துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் இச்சட்டப்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள செய்கைகளை நிறைவேற்றுவதற்காக அச்சொத்திலுள்ள நீர், எரிவாயு மற்றும் கழிவுநீரை எடுத்துச்செல்லும் குழாய்களை (அவை பிரதான குழாய்களாக இல்லாத நிலையில்) தந்தித்துறை இடமாற்றம் செய்து அமைக்கலாம். ஆனால், அவ்வாறு செய்வதற்கு முன்னர், நியாயமான முன் தகவலை உள்ளாட்சித் துறைக்குத் தந்தித்துறை கொடுக்க வேண்டும்.

தந்திக் கம்பிக்கு அருகில் இருக்கும் மரம் யாருடைய சொத்திலிருந்தாலும், தந்திக்கம்பி செயற்படுவதைத் தடை செய்யக் கூடியதாக இருந்தால் அம்மரத்தை நீக்குமாறு தந்தித்துறை முதல் அல்லது இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிபதியை (I or II class Magistrate) அணுகலாம். அந்த அதிகாரி தேவையான ஆணையைப் பிறப்பிக்கலாம். அம்மரம் தந்திக்கம்பியை அமைப்பதற்கு முன்பே உண்டானதாக இருந்தால் அம்மரத்தின் உரிமையாளருக்கு நட்டஈடு கொடுக்க நேரிடும்.

அவசர நிலை ஏற்பட்டாலோ பொது மக்களின் நலனை உத்தேசித்தோ மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது அவ்வரசுகளால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி இச்சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமத்தின் அடிப்படையில் செயற்படும் தந்திப் பொறியைத் தற்காலிகமாகக் கைவசப்படுத்தலாம். மேலும், இந்திய அரசின் நலனைக் கருதியும், நட்புறவு கொண்ட நாடுகளின் பாதுகாப்பைக் கருதியும் ஒரு குற்றம் நடப்பதற்கான தூண்டுதலைத் தவிர்ப்பது கருதியும் ஒரு தந்திப் பொறியின் மூலம் அனுப்பப்படும் செய்திகளை மத்திய, மாநில அரசுகளோ அவ்வரசுகளால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியோ முடக்குவதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு செய்தியை அனுப்புவதிலும் பெறுவதிலும் தந்தித் துறை அதிகாரி செய்யும் தவற்றினால் ஏற்படும் நட்டத்துக்கு அரசு பொறுப்பாகாது. கவனக் குறைவினாலோ வேண்டுமென்றோ வஞ்சனையான நோக்கத்துடனோ அத்தவற்றை அந்த அதிகாரி செய்தாலொழிய அவரும் மேற்கூறிய நட்டத்துக்குப் பொறுப்பாகமாட்டார்.

அனுமதியில்லாமல் தந்திப் பொறியை இயக்குவதோ தந்திப் பொறியை இயக்குவதற்கு வழங்கப்பட்ட உரிமத்தின் நிபந்தனைகளை மீறுவதோ தந்திப்பொறி அலுவலகத்தில் அத்துமீறி நுழைவதோ பணிநடைபெறுவதில் தடை ஏற்படுத்துவதோ தண்டிக்கக் கூடிய குற்றங்களாகும்.

**இந்தியத் தர வரையறை நிலையம்** (Indian Standards Institution): இது 1947-ஆம் ஆண்டில் இந்திய அரசினால் தொழிலியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் துணையுடன் நிறுவப்பட்டது. இந்திய அரசின் தொழில்துறை அமைச்சரே இதற்குத் தலைவராவார். மத்திய, மாநில அரசுகளின் பேராளர்கள், உற்பத்தித் தொழில்கள், அறிவியல், தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களே இந்நிலையத்தின் துணைப்பகுதிகள். இவற்றின் பேராளர்கள், சந்தாதாரர்களின் பேராளர்கள் ஆகியோர் பொதுக்குழுவின் உறுப்பினராவர். இதன் நிருவாகக் குழு ஒன்று அன்றாட அலுவல்களை நடத்தி வருகிறது.

இந்நிலையத்தின் நோக்கங்களும், குறிக்கோள்களும்: பன்னாட்டுத் தேசிய அடிப்படையில் உற்பத்திப் பொருள்களின் தரத்தை நிருணயித்தல்; உற்பத்தி, வாணிகத் துறைகளில் சீரமைப்பையும் சிக்கனத்தையும் கையாளுதல், உற்பத்தியாளர், நுகர்வோர் இவர்களுக்கிடையே சிறந்த இணக்கமான தொடர்புகளை வளர்த்தல்; கொடுத்திருக்கும் பொருள்களுக்குத் தரச் சான்றிடுதல்; சான்று பெற்ற பொருள்களைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்தளித்தல் ஆகிய பணிகளை ஆற்றி வருகிறது.

உழவு, உணவுப் பண்டங்கள், இரசாயனங்கள், கட்டடப் பொறியியல், நுகர்வோர் சரக்குகள், மின் தொழில் நுட்பம், எந்திர அமைப்பு, கட்டட உலோகங்கள், நெசவுச் சரக்குகள் இவற்றின் ஆராய்ச்சியில் எட்டுத் துணைக்குழுக்கள் ஈடுபட்டுள்ளன. அறிவியல், உற்பத்தி, வழங்குதல் ஆகிய துறைகளில் செயற்படுபவர்களின் பேராளர்களும் தொழில் நுட்பத் துணைக் குழுக்களில் பங்கு கொள்ளுகின்றார்கள். தரக்கட்டுப்பாட்டு விதிகள் யாவும் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் பல கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகே நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இந்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்ட இந்தியத் தர நிருணயச் சட்டம் (1952) இந்த நிலையத்திற்கு வேண்டிய அதிகாரங்களை வழங்கியுள்ளது. தர நிருணயம் செய்யப்பட்டபொருள்களின் மீது படத்தில் காட்டியுள்ள சான்று முத்திரையை உற்பத்தியாளர் பொறித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் ஒவ்வொரு நிலையத்திலும் தர நிருணயக் கண் காணிப்புகள் செய்வதற்கு இந்த நிலையம் பொறுப்பேற்றுள்ளது. இது பன்னாட்டுத் தர நிருணய நிலையங்களுடன் நெருங்

கிய தொடர்பு கொண்டுள்ளது. பல அரிய நூல்களும் புள்ளிவிவரத் தொகுப்புகளும் இந்நிலையத்தால் வெளியிடப் பெற்றுள்ளன.

இந்தியத் தரங்கள் நிலையத்தின் பணிகள் வருமாறு:

1. நாட்டு, பன்னாட்டு அடிப்படையில் தரங்களை வகுத்தலும் அவைகளைப் பரப்புதலும்;

2. தொழிலில் தரப்பாடு, தரக்கட்டுப்பாடு, எளிமையாக்கம் இவைகளைப் பரப்புதல்;

3. பொருள்களின் மேல் இடும் தரப்பாட்டுக் குறிப்புகளைப் பதிவு செய்தல்;

4. பொருள்களைச் சோதிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

இந்தியத் தரங்கள் நிலையம் அக, புற வணிகப் பொருள்களில் பெரும்பான்மையானவைகளுக்கு இந்தியத் தரக் குறிப்புகளை (Standard Specifications) வகுத்துள்ளது.

இந்நிலையம் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடமைகளையாற்றும்;அதிகாரங்களைச் செலுத்தும். குறிப்பாக,

1. எந்தப் பொருள் அல்லது செய்முறைக்கும் குறிப்பிட்ட முறைப்படி இந்தியத் தரத்தை வகுத்து வெளியிடவும்;

2. குறிப்பிட்ட இந்தியத் தரத்தைக் குறிக்கும் இந்தியத் தரங்கள் நிலையச் சான்றுக் குறியின் அமைப்பையும் விவரங்களையும் குறிப்பிடவும்;

3. தரக்குறியைக் கையாளக் குறிப்பிட்ட முறைப்படி உரிமை வழங்கவும் அவ்வுரிமையைப் புதுப்பிக்கவும் நிறுத்தி வைக்கவும் நீக்கவும்;

4. அவ்வுரிமையை வழங்கவும் புதுப்பிக்கவும் குறிப்பிட்ட கட்டணத்தை விதிக்கவும்;

5. இந்தியத் தரக் குறியைக் கையாளும் பொருள் அல்லது செய்முறை இந்தியத் தரத்தின்படி உள்ளதா என்பதைப் பார்க்க அப்பொருள் அல்லது செய்முறையில் பயனாகும் பொருள் அல்லது பண்டத்தை ஆராயவும், இந்தியத் தரக்குறி உரிமை பெறாமல் தவறாகக் கையாளப்படுகிறதா என்று கண்காணிக்கவும்;

6. குறிப்பிடப்படும் பிற செயல்களைச் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.

இந்தியத் தொழிலகங்களின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் வகையில் பயிற்சித் திட்டங்களையும் இந்நிறுவனம் நடத்தி வருகிறது. மேலும், வரி விளக்கத் திட்டத்தின்கீழ்த் தர நிருணயங்களை உயர்த்துவதற்காகத் தொழிலகங்கள், மாநாடுகள், பயிற்சிநிறுவனங்கள் முதலியவற்றை நடத்திச் செயற்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் அனைத்துலகப் பயிற்சித் திட்டத்தின்படி வளர்ந்து வரும் நாடுகளான ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளின் பொறியியல் வல்லுநர்களுக்கு இத்துறையில் பயிற்சி கொடுத்து வருகிறது.

இந்நிறுவனத்தின் மைய ஆராய்ச்சி நிறுவனம் காசியாபாதில் (Ghaziabad) செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனம்'I.S.I' சான்றுக்குறியீடுகளையும்வழங்கி வருகிறது. இதன் மண்டல அலுவலகங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை, சண்டிகார் முதலிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன.

பாட்னா, பெங்களூர் முதலிய இடங்களில் மாநில அரசுகளின் துணையுடன் ஆராய்ச்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனத்தின் சிறப்புப் பணிகளையும், ஆய்வுகளையும் குறித்து அறிந்து கொள்ள விரும்புகிறவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஓர் அமைப்பினை நிறுவியுள்ளது. இதில் ஒரு சிறு தொகையினைச் செலுத்தி உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம். அவர்களின் பணித் தொடர்பான செய்திகளை அமைப்பு உதவுகிறது. இந்த நிறுவனத்தின் வெளியீடுகளை உறுப்பினர்கள் பெறத் தகுதி உடையவர்கள்.

பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இந்நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

**இந்தியத் தாராளக் கூட்டமைப்பு**: இந்திய விடுதலை வரலாற்றில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்ற பல அரசியற்கட்சிகளுள் வலங்கைமான் சங்கரநாராயண சீனிவாச சாத்திரியாரால் நிறுவப்பட்ட இந்தியத் தாராளக் கூட்டமைப்பும் (Indian Liberal Federation) ஒன்று ஆகும். அவர் கி.பி. 1869-ஆம் ஆண்டு முதல் 1946-ஆம் ஆண்டுவரை வாழ்ந்தவர். முதலில் அவர் பள்ளி ஆசிரியராகப் பணி செய்தார். பொதுநலப்பணியில்அவருக்கிருந்த பேரார்வமும் ஆங்கிலத்தில்அவருக்கிருந்த அரிய நாவன்மையும் அவருக்கு இந்தியரிடையேயும் இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயரிடையேயும் பெரும் புகழைத் தந்தன. அவர் 1907-ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களுக்காக உழைத்து வந்து இந்திய ஊழியர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து

1915-ஆம் ஆண்டில் அதன் தலைவரானார். அவர் சென்னைச் சட்டமன்றத்தின் உறுப்பினரானார். பின்னர், 1916-ஆம் ஆண்டில் நடுவண சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் உலகப் போரில் பிரிட்டனும் அதன் நட்பு நாடுகளும் உலகத்தில் தேசிய தன்னுரிமையை நிறுவுவதற்காகவும் (National Self Determination), உலகத்தில் குடியாட்சி முறை பாதுகாப்பாக இருப்பதற்காகவும் போரை நடத்துவதாகக் கூறின. எனவே, போர் முடிந்ததும் இந்தியத் தேசிய காங்கிரசு வேண்டி நின்ற குடியேற்ற நாட்டுத் தன்னாட்சி நிலையும் முழு மாகாணத் தன்னாட்சியும் (Dominion Status and Provincial Autonomy) இந்தியாவிற்கு வழங்கப்படுமென்று நம்பி எதிர்பார்த்து, காந்தியடிகளும் காங்கிரசும் பெருமளவில் பொருளும் போர்வீரர்களும் இந்திய அரசாங்கம் திரட்டியதை ஆதரித்தனர். ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவுக்குத் தன்னாட்சி உரிமையையோ மாகாணத் தன்னாட்சியையோ வழங்காமல், நடுவண அரசாங்கத்தில் ஓரளவு தேர்ந்தெடுக்கப்பட்ட கீழவையையுடைய ஈரவைச் சட்டமன்றத்தை மாகாணத்தில் கல்வி, சுகாதாரம், உள்ளாட்சி அரசாங்கம், பொதுப்பணி முதலிய நான்கு நிருவாகத் துறைகளை மட்டும் மாகாணச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள இந்திய அமைச்சர்களுக்கு மாற்றி வகை செய்தும், நகராட்சிகள், மாவட்ட, ஊராட்சி மன்றங்கள் முதலிய உள்ளாட்சி நிறுவனங்களில் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களே இருக்க வகைசெய்தும் 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தை நிறைவேற்றியது. இந்தியாவில் நடைபெற்ற பஞ்சாபு படுகொலை ஆங்கில அரசாங்கத்துக்கும் இந்தியர்களுக்கும் குறிப்பாக இந்தியத் தேசிய காங்கிரசுக்குமிடையே பிளவை உண்டாக்கிற்று. காங்கிரசில் ஒருசாரார் வன்முறை வழி விடுதலை பெறவேண்டுமென்று விரும்பினர். திலகர் முதலியோர் இவ்வாறு தீவிரமுறை ஆதரவாளராக இருக்க, சீனிவாச சாத்திரியார் தமக்கு முன்னோடியான கோகலே முதலியோரைப்போல மிதவாதியாக(Moderates) இருந்தார். சாத்திரியார் 1919-ஆம் ஆண்டின் சட்டத்தையும் அரசியல் சீர்திருத்தத்தையும் வரவேற்றார். அச்சட்டத்தின்படி புதிதாக நிறுவப்பட்ட புதிய சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால், இதுவரை காங்கிரசில் செல்வாக்குப் பெற்றிருந்த அவர் அதிலுள்ள தேசிய வாதிகளால் புறக்கணித்து ஒதுக்கப்பட்டார்; காங்கிரசு சட்ட மறுப்பு இயக்கம் நடத்தியபோது சாத்திரியார் அதை விட்டு விலகி, 1922-ஆம் ஆண்டில் இந்தியத் தாராளக் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கினார். தீவிர, வன்முறைகளை விடுத்து, அமைதியாகப் படிப்படியான முறையில் இந்தியா விடுதலை பெறுவதற்கு மக்களுக்கு ஆங்கில அரசியலமைப்பு முறையில் பயிற்சியளித்தல் வேண்டுமென்பது அவருடைய அமைப்பின் நோக்கமாகும். ஆனால், காந்தியடிகளின் தலைமையையும் இந்தியத்தேசிய காங்கிரசின் அரசியற் கருத்துகளையும் பின்பற்றியமையால், இந்தியத் தாராளக் கூட்டமைப்பிற்குப் பொதுமக்களிடையே ஆதரவு காணப்படவில்லை. ஆங்கில அரசாங்கம் ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, கனடா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் வாழும் இந்தியர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்து அறிக்கை தரும்படி பணித்து, அவரை 1926-27-இல் அமர்த்திற்று. அவர் இந்தியத் தொழிலாளர் அரசு ஆணையத்தில் உறுப்பினராக 1929-இல் அமர்த்தப்பட்டார். இந்திய அரசாங்கத்தால் மலாயாவிலுள்ள இந்தியத் தொழிலாளர் நிலைமைகளைக் கண்டறிதற்காக அமர்த்தப்பட்டார். சைமன் குழு (Simon Commission) வரைந்த அறிக்கையை ஆராய்வதற்காக இலண்டனில் கூட்டப்பட்ட 1930-31-ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டில் சாத்திரியார் கலந்துகொண்டு, இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான திட்டங்களை ஆராய்ந்து பேசினார். ஆனால், அம்மாநாட்டில் ஒருமித்த கருத்துஅல்லது முடிவு ஏற்படவில்லை. அவருடைய தாராள இயல்புடைய அரசியற் கருத்துகளைப் பல சார்பாளர்கள் ஆதரிக்கவில்லை. அவருடைய தாராள இயல்புடைய அரசியற்கருத்துகளை ஆதரித்தவர்கள் அவர் அமைத்த கூட்டமைப்பிலிருந்தனர். கல்வித் துறையில் வல்லுநர் அவருடைய அமைப்பை ஆதரித்தனர். அரசியல் முறைகளைப் பொறுத்தவரையில் காந்தியடிகளைப் போன்று சாத்தியாரும் ஊறு செய்யாத அமைதி வழியை ஆதரித்தார். அவருடைய அமைப்பு மறைந்துவிட்டபோதிலும், அவர் பின்பற்றி வந்த அமைதி வழியின் சிறப்பை அது யாவருக்கும் எடுத்துக் காட்டிற்று.

துணை நூல்கள்:

**Sathianathaier, R.**, The History and Culture of the Indian People, Viswanathan Publishers, Madras, 1969.

**Banerjee**, S., A Nation in Making, Bombay, 1965.

**Tinker, Huge**, India and Pakistan, A Political Analysis (1920-1947), Delhi, 1967.

**இந்தியத் திட்டநேரம்** என்பது இந்திய அரசு மணியைக் குறிக்க ஏற்படுத்திக் கொண்ட செயற்கை நேரமாகும். இங்கிலாந்திலுள்ள கிரீனிச்சு என்னுமிடத்தில் 0 பாகை நெடுங்கோடு (Longtitude) தொடங்குவதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்திய அரசு கிரீனிச்சிலிருந்து $5\frac{1}{2}$ மணி கூடுதலான நேரத்தை இந்தியத் திட்ட நேரமாக வைத்துள்ளது. இதனை $82\frac{1}{2}^{\circ}$ கிழக்கு நெடுங்கோடு திட்ட நேரத்தைச் சுட்டும் என்று முடிவு செய்துள்ளனர். இக்கோடு சென்னை, காகிநாடா, வாரணாசி போன்ற இடங்களில் செல்வதாகக் குறிக்கப்பட்டுள்ளது. 'கிழக்கே போகப் போக மணி கூடும்' என்ற வாய்ப்பாட்டின்படி 1 பாகைக்கு 4 மணித்துளிகள் வீதம் $82\frac{1}{2}$ பாகைக்கு ($82\frac{1}{2} \times 4 = 330 \div 60 = 5\frac{1}{2}$) 5—30 மணி கூடிய நேரமே இந்தியத் திட்ட நேரமாகும். இம்முறையை இந்தியாவை ஆண்ட ஆங்கில அரசு 1906–ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து நடைமுறைப் படுத்தியது. இரண்டாம் உலகப் போரின்போது இந்தியத் திட்ட நேரத்தை மேலும் ஒரு மணி கூட்டி $6\frac{1}{2}$ மணியாகக் கருதத் தொடங்கினர். போர் முடிவுக்கு வந்ததும் பழைய $5\frac{1}{2}$ மணியையே இந்தியத் திட்ட நேரமாக 1945-ஆம் ஆண்டு அக்டோபர் 15–ஆம் நாளிலிருந்து கணக்கிட்டு வருகிறார்கள். இதனைக் குறிப்பாக இந்திய இருப்புப் பாதைப் போக்குவரத்து நிறுவனமும் அஞ்சல் அலுவலகங்களும் இன்றும் பின்பற்றுகின்றன.

நேரம் என்பது இயற்கையாகக் கடிகாரங்கள் காட்டும் மணியைக் குறிக்கும். ஒரே வகையான மணி காட்டும் முறையைச் செயற்படுத்த வேண்டி, உலகத்தை 24 மண்டலங்களாகப் பிரித்து, ஒரு மண்டலத்தில் ஒரே வகை மணி காட்டப்பட வேண்டும் என்ற அமைப்புக்குத்தக ஏற்படுத்திக் கொண்டதே திட்டநேரம். உலக உருண்டையில் 360 பாகைகள் உள்ளன. இதை 24 மண்டலங்களாகப் பிரித்தால் ஒவ்வொரு மண்டலமும் 15 பாகைக்குள் அடங்கும். நில உருண்டை ஒரு பாகையிலிருந்து மற்றொரு பாகைக்கு நகர்ந்து செல்ல எடுத்துக் கொள்ளும் காலம் 4 மணித்துளிகளாகும்.

திட்ட நேரம் இருப்புப்பாதை அமைப்புகள் பெருகி வளர்ந்த போது தேவையெனக் கருதப்பட்டது. குறிப்பாக, அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் இம்முறை தேவைப்பட்டது. சில இருப்புப் பாதைத் தொடர்கள் தத்தம் திட்ட நேரத்தைக் கி.பி. 1880–ஆம் ஆண்டளவில் கைக்கொண்டன. எனவே, நேரத்தைக் குறித்துக் காட்டுவதில் குழப்பம் ஏற்பட்டது. இக்குழப்பத்தைத் தவிர்க்கக் கி.பி. 1883-ஆம் ஆண்டு உரோமாபுரியில் ஓர் அறிவியல் மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாடு கிரீனிச்சில் செல்லும் 0 பாகை நெடுங்கோட்டை அடிப்படையாகக் கொண்டு நேரத்தைக் கணக்கிடலாம் என்னும் கருத்தை வெளியிட்டது. பன்னாட்டு அரசுகளின் மாநாடொன்று கி.பி.1884–இல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள வாசிங்டனில் (Washington D.C)கூடி, உரோமாபுரி அறிவியல் மாநாட்டுக் கருத்தை ஏற்றுக் கொண்டது. இதன் அடிப்படையில் 24 மண்டல நேரங்கள் பயன்படுத்தப்பெறலாயின. சூரியனை அடிப்படையாகக் கொண்ட இம்முறையினைக் கி.பி.1972–இலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட உலக நேரம் (Co-ordinated Universal Time, UTC) என்னும் முறையில் மாற்றி அமைத்துள்ளனர்.

**இந்தியத் திருமண விலக்குச் சட்டம்:** இச்சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டது. இது கி.பி. 1869–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது. சம்மு காசுமீர் மாநிலம் தவிர ஏனைய இந்தியா முழுவதும் இச்சட்டம் செல்லத்தக்கது. 1909, 1912, 1919, 1923, 1925, 1926, 1927, 1931, 1935, 1949, 1951, 1952-ஆம் ஆண்டுகளில் இச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது. ஆங்கில நாட்டுச் சட்டத்திலுள்ள கருத்துகள் இச்சட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி மாவட்ட நீதிமன்றத்துக்கும் உயர்நீதிமன்றத்துக்கும் பரிகாரங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. முடிந்தவரையில் பரிகாரங்கள் வழங்குவதற்கு ஆங்கில நாட்டு மணவிலக்கு நீதிமன்றங்கள் கடைப்பிடிக்கும் விதிமுறைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை இந்தியத் திருமண விலக்குச் சட்டத்தின்படி (The Indian Divorce Act 1869) அதிகாரம் வழங்கப்பட்டுள்ள இந்திய நீதிமன்றங்களும் கடைப்பிடித்துப் பரிகாரங்கள் வழங்க வேண்டும் என்பது இச்சட்டத்தின் 7–ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

இச்சட்டப்படி வழங்கப்படக்கூடிய நான்கு முக்கியப் பரிகாரங்களாவன: (1) மணவிலக்கு ஆணையிடுதல், (2) திருமணம் செல்லாதது (Nullify) என அறிவித்தல், (3) கணவன் மனைவிக்கிடையே நீதிமுறைப் பிரிவினைக்கு ஆணையிடுதல், (4) தம்பதிகளுக்குள் மறுபடியும் இல்லற உறவு ஏற்பட வேண்டும் என ஆணையிடுதல்.

தம்பதிகளில் எவர் ஒருவரும் இச்சட்டத்தின்படி மாவட்ட நீதி மன்றத்திலோ உயர்நீதிமன்றத்திலோ தம் மனுவைத் தாக்கல் செய்யலாம். அவ்வாறு தாக்கல் செய்யப்படும் மனுவில் உள்ள மனுதார், எதிர் மனுதார் ஆகியவருள் எவரேனும் ஒருவர் கிறித்தவ சமயக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவராக இருந்தால்தான் இச்சட்டத்தின்படி பரிகாரம் வழங்கலாம்.

**மணவிலக்கு:** மணவிலக்குக் கோரி மனுதாக்கல் செய்வதற்குக் கணவனுக்கும் மனைவிக்கும் உரிமை

வழங்கப்பட்டுள்ளது. இம்மனு தாக்கல் செய்யப்படும் போது மனுதார். எதிர்மனுதார் இருவருமே அதாவது, தம்பதிகள் இருவருமே இந்தியாவில் நிலையான மையம் கொண்டு வாழ்பவர்களாக (Domiciled) இருக்க வேண்டும். கணவன் மனுதாக்கல் செய்தால், மனைவி கணவனிடமிருந்து மண விலக்குப் பெறக் காரணம் எதுவுமிருந்தால் அதைத் தன் எதிர் மனுவிலேயே எடுத்துக்கூறிப் பரிகாரம் வேண்டலாம். அதுபோல, மனைவி தாக்கல் செய்யும் மனுவிலும் கணவன் பரிகாரம் வேண்டலாம். அதாவது, கணவன் மனைவி இருவருக்குமே மணவிலக்குப் பெறப் போதிய காரணமிருந்தால் இரண்டு தனித் தனி மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டிய தில்லை. ஒரு மனுவிலேயே இருவர்தம் சிக்கல்களுக்கும் தீர்வு வேண்டலாம்.

மணவிலக்கு வேண்ட கணவனுக்கு ஒரே ஒரு காரணந்தான் உள்ளது. ஆனால், மனைவிக்கு ஆறு காரணங்கள் உள்ளன. திருமணத்திற்குப்பின் மனைவி பிற ஆடவனுடன் உடலுறவு கொண்டாள் என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில் மட்டுமே கணவன் மணவிலக்கு வேண்டலாம். அம்மனுவில் அந்தப் பிற ஆடவனும் எதிர்மனுதாராகச் சேர்க்கப் படவேண்டும். ஆனால், கீழ்க்கண்ட மூன்று காரணங்களில் ஏதாவது ஒன்று இருந்தால் அவ்வாறு பிற ஆடவனை எதிர் மனுதாராகச் சேர்க்கப்பட வேண்டியதில்லை. (1) மனைவி பரத்தையாக வாழ்கிற நிலையில் அந்தப் பிற ஆடவன் எவன் என்று வரையறுத்துக் கூறப்பட முடியாத நிலை. (2) உரிய முயற்சிகள் எடுத்தும் அந்தப் பிற ஆடவனின் பெயரைத் தெரிந்து கொள்ள முடியாத நிலை. (3) அந்தப் பிற ஆடவன் இறந்து போன நிலை.

மனைவி கீழ்க்கண்ட ஆறு காரணங்களில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் மணவிலக்குக் வேண்டி மனுதாக்கல் செய்யலாம். (1) கணவன் கிறித்தவ சமயத்தை விட்டுவிட்டு வேறு சமயத்திற்கு மாறுவதோடன்றி, வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுதல். கணவன் சமயம் மாறினால் மட்டும் போதாது. சமயம் மாறுவதும் வேறு பெண்ணைத் திருமணம் செய்வதும் ஆகிய இரண்டு செய்கைகளும் தேவை. இவற்றுள் ஏதாவது ஒரு செய்கை மட்டும் போதாது. (2) இரத்த உறவு மற்றும் திருமண உறவு அடிப்படையில் தடுக்கப்பட்டுள்ள உறவு நிலையிலுள்ள பெண்ணுடன் கணவன் உடலுறவு கொண்ட செய்கை. (3) சட்டத்துக்குப் புறம்பாக வேறு மனைவியைத் திருமணம் செய்து அந்த இரண்டாம் மனைவியுடன் உடலுறவு கொள்ளும் செய்கை. இந்த இரண்டு செய்கைகளில் ஒன்று மட்டும் போதாது. (4) வேறு மனைவியை இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ திருமணம் செய்து அவளுடன் உடலுறவு கொள்ளும் செய்கை. எடுத்துக்காட்டாக, ஓர் இந்து கிறித்தவப் பெண்ணை மணந்து பின்பு இருதுணை மணத்தைத் (Bigamous Marriage) தடுப்பதற்குச் சட்டம் வருவதற்கு முன்னர் ஓர் இந்துப் பெண்ணைத் திருமணம் செய்கிறான். அத்திருமணம் சட்டப்படி செல்லத்தக்கது ஆகும். இந்து மனைவியுடன் கணவன் உடலுறவு கொள்கிறான். அவ்விரண்டு செய்கைகளும் இருந்தால் முதல் மனைவி அதாவது, கிறித்தவ மனைவி மண விலக்கு வேண்டலாம். (5) வேறு பெண்ணுடன் கணவன் உடலுறவு கொண்டதோடு அல்லாமல் மனைவியைக் கொடுமைப்படுத்துதல். இரண்டு செய்கைகளுமிருந்தால்தான் மணவிலக்குக் வேண்டலாம். (6) கற்பழித்தல்-வேறு ஆடவன் அல்லது மிருகத்துடன் இயற்கைக்கு விரோதமான முறையில் உடலுறவு கொண்ட செய்கை.

குற்றச் சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டால் மண விலக்குக்கு நீதிமன்றம் ஆணையிடலாம். மனுதாரும் எதிர்மனுதாரும் மனுவை நடத்துவதில் கூட்டுச் சேர்ந்திருந்தாலோ அல்லது எதிர் மனுதார் செய்த தவற்றினை மனுதார் மன்னித்திருந்தாலோ மனு தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும். மணவிலக்குக்கு உயர்நீதிமன்றம் ஆணையிட்டிருந்தால் அது தற்காலிகமானதாக (Decree Nisi) இருக்க வேண்டும். குறைந்தது ஆறு மாத காலமாவது கழிந்த பின்னரே அதை உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும். மணவிலக்கு ஆணையை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்தால் அதை உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்.

திருமணம் செல்லாதது என அறிவித்தல்: இப்பரிகாரம் கிடைப்பதற்குச் சம்மந்தப்பட்ட திருமணம் இந்தியாவில் நடைபெற்றதாக இருக்க வேண்டும். மேலும், மனுதாக்கல் செய்யும் சமயத்தில் மனுதார் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும். கீழ்க் காணும் நான்கு காரணங்களில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட திருமணம் செல்லாதது என நீதிமன்றம் ஆணையிடலாம். (1) திருமணச் சமயத்திலும் மனுதாக்கல் செய்த தருணத்திலும் எதிர் மனுதார் உடலுறவு கொள்ள முடியாத வலுவற்ற நிலையில் (Impotency) இருப்பது. திருமணம் செய்வதற்குத் தடுக்கப்பட்ட உறவு நிலையில் கணவன், மனைவி இருக்கும் நிலை. (3) தம்பதிகளில் ஒருவர் திருமணக் காலத்தில் அடி முட்டாளாகவோ அல்லது பயித்தியமாகவோ இருந்த நிலை. (4) தம்பதிகளுள் யாருக்கேனும் ஏற்கனவே திருமணமாகி.

அத்திருமணம் நடைமுறையிலிருந்து சம்பந்தப்பட்ட திருமணக் காலத்தில் முதல் திருமணத்தில் சம்பந்தப் பட்ட கணவன் அல்லது மனைவி உயிருடனிருத்தல்; அதாவது, முதல் மனைவி மணவிலக்கு ஆகாமல் உயிருடனிருக்கும் நிலையில் கணவன் இரண்டாம் திருமணம் செய்தால், அந்த இரண்டாம் திருமணம் செல்லாதது என்று அறிவிக்கப்படத் தக்கது ஆகும். அதுபோல் மனைவிக்கும் முதல் கணவன் உயிருடனி ருந்தால் அதே நிலைதான் ஏற்படும்.

அவ்வாறு திருமணம் செல்லாது என்று மாவட்ட நீதிமன்றம் அறிவித்தால், அந்த ஆணையை உயர் நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும். தம்பதிகளுள் ஒருவர் திருமணக் காலத்தில் பயித்தியமாக இருந் தார் என்ற அடிப்படையில் ஒரு திருமணம் செல்லாது என அறிவிக்கப்பட்டால், அவ்வாறு அறிவிக்கப்படும் நாளுக்கு முன்னர் அத்திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைகள் சட்டப்படியான குழந்தைகளாகக் (Legitimate Children) கருதப்படுவார்கள். அதுபோல் முதல் திருமணத்தில் சம்பந்தப்பட்ட கணவன் அல்லது மனைவி இறந்துவிட்டதாக உண்மையாகவே நம்பிய நிலையில் இரண்டாம் திருமணம் நடந்து, அந்த இரண்டாம் திருமணம் செல்லாதது என அறி விக்கப்பட நேர்ந்தால், அவ்வாறு அறிவிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் மேற்படி இரண்டாம் திருமணத் தில் பிறந்த குழந்தைகள் சட்டப்படியான குழந்தை களாகக் கருதப்படுவார்கள். ஆனால், அக்குழந்தை களின் பெற்றோருள் எவருக்குத் திருமணம் செய்யத் தகுதியிருந்ததோ அவருக்குமட்டும் அக்குழந்தைகள் வாரிசுகளாவார்கள்.

**தம்பதிகள் பிரிந்து வாழ (Judicial Separation) ஆணையிடல்:** கீழ்க்காணும் மூன்று காரணங்களுள் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் தம்பதிகள் பிரிந்து வாழலாம் என்று தம்பதிகளுள் ஒருவர் தாக்கல் செய்யும் மனுவின் அடிப்படையில் நீதிமன்றம் ஆணையிடலாம். (1) எதிர்மனுதார் மனைவியாக இருந்தால் பிற ஆடவனுடன் உடலுறவு கொண்ட செய்கை. எதிர்மனுதார் கணவனாக இருந்தால் வேறு பெண்ணுடன் உடலுறவு கொண்ட செய்கை. (2) மனுதாரை எதிர்மனுதார் கொடுமைப்படுத்திய செய்கை. (3) இரண்டு ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்துக்கு மனுதாரை எதிர்மனுதார் கைவிட்டுவிடுதல் (Desertion).

மேற்கூறியவாறு மனுதாக்கல் செய்யும் போது மனுதார் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும். பிரிந்து வாழ ஆணையுள்ளது என்ற அடிப்படையில் மணவிலக்கு வேண்ட முடியாது. பிரிந்து வாழ மாவட்ட நீதிமன்றம் ஆணையிட்டி ருந்தால் அதை உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டுமென்பதில்லை. நீதிமன்ற ஆணைக்குப்பின் பிரிந்து வாழும் மனைவி சேகரிக்கும் சொத்துகள் அவளுடையனவாகும்; அதாவது, அச்சொத்துகளைப் பொறுத்த மட்டிலும் அப்பெண் திருமணமாகாதவ ளாகக் கருதப்படுவாள். மனுதாரை எதிர் மனுதார் கைவிட்டு விட்டார் என்ற அடிப்படையில் எதிர் மனுதார் நீதிமன்றத்தில் தோன்றாத நிலையில் பிரிந்து வாழ நீதிமன்றம் ஆணையிட்டிருந்தால், மனுதாரைக் கைவிட்டு விட்டதற்குப் போதுமான காரணமிருந்தது என்று எதிர்மனுதார் நீதி மன்றத் தில் தோன்றி மெய்ப்பித்தால் நீதிமன்றம் தன் ஆணையை மாற்றிக் கொள்ளலாம்.

**இல்லற வாழ்வை மீட்டுத் தருமாறு ஆனணயிடு தல்:** கணவன் அல்லது மனைவி போதுமான காரணமின்றி இல்லற வாழ்வைத் தர மறுத்தால், இல்லற வாழ்வு வேண்டும் என்று வேண்டி மறுக்கப் பட்டவர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யலாம். இவ்வாறு மனுதாக்கல் செய்யும் காலத்தில் மனு தார் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும். மனுதாருடன் எதிர்மனுதார் சேர்ந்து வாழ வேண்டும் என நீதிமன்றம் ஆணையிடலாம் இந்த ஆணையை மீறினால் என்ன விளைவு ஏற்படுமென்று இச்சட்டத்தில் விளக்கப்படவில்லை.

**ஏனைய பரிகாரங்கள்:** தன் மனைவியுடன் உடலுறவு கொண்ட பிற ஆடவனிடமிருந்து கணவன் நட்டஈடு பெற இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்ட மனைவி அவ்வாறு கைவிடப்பட்டபின் சம்பாதிக்கும் சொத்துகளில் கணவன், கணவனுக்குக் கடன் கொடுத்தவர்கள், கணவன் மூலம் உரிமை கொண் டாடுபவர்கள் எவருக்கும் எவ்வித உரிமையும் கிடை யாது என நீதிமன்றத்திடமிருந்து பாதுகாப்பு ஆணை பெறுவதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் விசாரணையிலிருக்கும்போது இடைக்காலச் சீவனாம்சத்தொகையைக் கணவன் மனைவிக்குக் கொடுக்குமாறு நீதிமன்றம் உத்தர விடலாம். அவ்வாறு ஆணையிடும் நாளுக்கு முன்னர் உள்ள உடனடியான மூன்று ஆண்டுகளுக்கான கணவனது நிகர வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கு அதிகமாக அத்தொகை எக்கட்டத்திலும் இருக்கக் கூடாது. மணவிலக்கு ஆணை அல்லது திருமணம் செல்லாதது என அறிவிக்கும் ஆணை உறுதிப்

படுத்தும்வரை அத்தொகை மனைவிக்குக் கொடுக்கப் பட வேண்டும்.

மனைவியின் சொத்து மதிப்பு, கணவனின் கொடுக்கும் சக்தி, கணவன் மனைவியின் நடத்தை ஆகியவற்றை மனத்தில் கொண்டு நீதிமன்றம் தனது உசிதம்போல் நிரந்தரமான சீவனாம்சத் தொகையை மொத்தமாகவோ, பகுதிகளாகவோ மனைவிக்குக் கொடுக்க ஆணையிடலாம். கணவன் மனைவி பிரிந்து வாழலாம் என ஆணையிடும்போதும், மணவிலக் குக்குத் தான்பிறப்பித்த ஆணையை உறுதிப்படுத்தும் போதும் உயர்நீதிமன்றம் அவ்வாறு ஆணையிடலாம். கணவன் மனைவி பிரிந்து வாழ ஆணையிடும்போதும மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த மணவிலக்கு உத் தரவை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்திய பின்னரும் மாவட்ட நீதிமன்றம் அவ்வாறு நிரந்தர சீவனாம்சத் தொகை கொடுக்க ஆணையிடலாம்.

மணவிலக்கு, செல்லாததான திருமணம், நீதி முறைப்படி கணவன் மனைவி பிரிந்து வாழ விரும்பு வது சம்பந்தப்பட்ட வழக்குகளில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ, உரிமை வயதினை அடை யாத குழந்தைகளின் (Minor Children) பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றைப் பொறுத்த மட்டிலும் தகுந்த ஆணையிட நீதிமன்றத்திற்கு அதி காரம் வழங்கப்பட்டுள்ளது. தகப்பன் இந்தியனாக இருந்தால் 16 வயது நிறைவடையாத ஆண்குழந்தை யும் 13 வயது நிறைவடையாத பெண்குழந்தையும் உரிமை வயது அடையாத குழந்தைகள் என இச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. 18 வயது நிறை வடையாமலும் திருமணமாகாமலும் உள்ள ஏனைய குழந்தைகள் இச்சட்டப்படி உரிமை வயது அடை யாதவர்களாவார்கள்.

**இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை**: இந்தியாவில் தொல்லியல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முறையாகத் தொடங்கியது. இம் முயற்சியில் இந்திய அறிஞர்களும் ஆங்கிலேய அறி ஞர்களும் ஈடுபட்டனர். தலைமை நீதிமன்றத் துணை நடுவராகப் பணியாற்றி வந்த சர். வில்லியம் சோன்சு (Sir William Jones) என்பவர் கல்கத்தாவில் உயர் ஆசியக் கழகம் (Royal Asiatic Society) என்ற அமைப்பைக் கி.பி. 1784-இல் ஏற்படுத்தினார். இதன் தலையான பணி இந்தியாவின் வரலாற்றுக் காலக் குறிப்புகளையும் கலைப்பொருள்களையும் சேகரித்து அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாகும். இதன் சிறப்பை உலகுக்கு உணர்த்த ஆசிய ஆய்வுகள் (Asiatic Researches) என்ற இதழ் ஒன்று கி.பி. 1788-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

வில்லியம் சோன்சு சந்திரகுப்த மௌரியரும் மகா அலெக்சாந்தரும் சமகாலத்தைச் சார்ந்தவர் கள் என்று ஆய்வுசெய்து வெளியிட்டார். மேலும், இவர் வடமொழிக்கும் பாரசீக மொழிக்கும் உள்ள ஒப்புமைகளை ஆய்வு செய்தார். இவருடன் இக்கழ கத்தில் பணிபுரிந்த சார்லசு வில்கின்சு (Charles Wilkins) என்பவர் குப்தர் கல்வெட்டுகள், குடிலா எழுத்துகள் ஆகியவற்றைப் பற்றி ஆய்ந்து, இந்தியா வில் கல்வெட்டியல் பற்றிய ஆராய்ச்சியை முதன் முதல் தொடங்கி வைத்தார். கல்வெட்டியல் பற்றி மேலும் ஆய்வு செய்யக் கோல்புரூக்கு (Cole Brooke), வில்சன் (Wilson) போன்றோர் அமர்த்தப்பட்டனர். படைத்தலைவர் பெல் (Captain Fell) என்பவர் சாஞ்சித் தூபியைக் கண்டுபிடித்தார். புளுண்ட்டு (Blunt) என்பவர் குதுப்மினாரின் உயரத்தை அளந்து அதைப் பற்றிய குறிப்பு ஒன்றைக் கி.பி. 1795-ஆம் ஆண்டு ஆசிய ஆய்விதழில் வெளியிட்டார். இராச புத்திர அரும்பொருள்களைச் சேம்சுதேடு என்பவர் (James Tod) என்பவர் சேகரித்தார்.

கல்கத்தாவில் இருந்த இக்கழகத்தின் உறுப்பினர் கள் அரும்பொருள்களைச் சேகரித்து இந்திய வர லாற்றில் ஆர்வம் காட்டியது போன்றே, இந்தியா வின் பிற பகுதிகளில் இருந்த ஆங்கிலேயர்களும் இப் பணியில் ஆர்வம் காட்டினர். மேற்கு இந்தியாவில் சர் சார்லசு வேர் மேலட்டு (Sir Charles Warre Malet), சால்ட்டு (Salt), சிடன்காம் (Captain Sydenham), சைக்சு (Colonel Sykes), வில்லியம் எர்சுகின் (William Erskine) போன்றோர் அப்பகுதியைப் பற்றி ஆய்வுகள் செய்தனர். எர்சுகின் முதன்முதலாக அசந்தாக் குகைகளைப் பற்றி (Ajanta Caves) ஆய் வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

தென்னிந்தியாவிலும் அரும்பொருள்களைச் சேக ரிக்கும் பணி வில்லியம்சேம்பர்சு(William Chambers) என்பவரால் தொடங்கப்பட்டது. இவர் கி.பி. 1772-இல் அழிந்த நிலையிலிருந்த மாமல்லபுரத்தைப் பார்வையிட்டார். இதைப் பற்றிக் கி.பி. 1788-இல் ஆசிய இதழில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். தென்னிந்திய அரும்பொருட் சேகரிப்புப் பணியில் தலைசிறந்து விளங்கியவர் காலின் மெக்கன்சி(Colonel Colin Mackenzie) என்னும் படைத்தலைவர் ஆவார். இவரே தென்னிந்தியப் பெருங்கற்காலச் சின்னங் களை முதன்முதலில் ஆய்ந்தவர்.

இக்காலத்தில் தனிப்பட்ட முறையில் இவ்வறிஞர் கள் இப்பணியில் ஆர்வம் செலுத்தினர். இந்தியாவிலி ருந்த ஆங்கில அரசாங்கம் இதற்கு உதவி புரிய வில்லை. ஆனால், கி.பி. 1800-இல் பிரான்சிசு புச் சானன் (Francis Buchanan) என்பவர் வெல்லெசுலி (Wellesley) யின் ஊக்கத்தால் மைசூர்ப் பகுதியினை

ஆய்வுசெய்தார். இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளே முதன்முதலாக ஆங்கில அரசின் உதவியுடன் வெளியிடப்பட்டன. ஆங்கில அரசு, இந்தியாவின் தொல்பொருளாய்வில் ஆக்கமும் ஊக்கமும் செலுத்த முன்வந்தது.

பின்னர், சேம்சு பிரின்சப்பு (James Princep) என்பவர் ஆசியக் கழகத்தின் செயலராக அமர்த்தப்பட்டார். இவர் பிராமி,கரோட்டி ஆகிய எழுத்துகளைப் படித்து அறிந்துகொள்ளும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

தொல்லியல் பரப்பாய்வுத் துறை: தில்லியில் கி.பி. 1847-இல் தற்காலிகமாகத் தொல்லியல் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அலெக்சாந்தர் கன்னிங்காம் என்பவர் இப்பணியில் ஆர்வம் காட்டினார். இவர் தொல்லியல், பழங்காசுகள் ஆகியவை பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். இந்தியத் தொல்லாய்வுத் துறை ஏற்படுத்தும் திட்டம் கி.பி. 1848-ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது. ஆனால், அது ஈடேறவில்லை. பின்னர், கி.பி.1861-ஆம் ஆண்டு கானிங்கு பிரபுவினிடம் கன்னிங்காம் அளித்த கோரிக்கையினால் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவின் முதல் தொல்லியல் பரப்பாய்வாளராக (Archaeological Surveyar) கன்னிங்காம் அமர்த்தப்பட்டார். இவர் சீன அறிஞர் யுவான்சுவாங்கு இந்தியாவிற்கு வருகைபுரிந்த இடங்களைச் சுற்றிப் பார்த்து (கயா முதல் காசி வரை) அவைபற்றிய செய்திகளைச் சேகரித்தார். பின் கி.பி. 1866-ஆம் ஆண்டு தொல்லியல் பரப்பாய்வுத்துறை கைவிடப்பட்டதால் கன்னிங்காம் தம் பணியை நிறுத்த வேண்டியதாயிற்று.

மீண்டும் தொல்லியல் பரப்பாய்வுத்துறை கி.பி. 1870-இல் ஏற்படுத்தப்படவே அதன்மேனிலை இயக்குநராக (Director-General) மறுபடியும் கன்னிங்காம் அமர்த்தப்பட்டார். மேனிலை இயக்குநர்களுக்குத் துணைபுரியச் சில ஐரோப்பியர்கள் அமர்த்தப்பட்டனர். இந்தியர்களைப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும் அவர்களுக்குத் தொல்லியல் துறையில் பயிற்சி தரவும் அனுமதி அளிக்கப்பட்டது.

கன்னிங்காம் தம் பணிக் காலத்தில் தில்லி, ஆக்ரா, இராசபுதனம், பண்டில்கண்டு, மதுரா, புத்தகயா, கவுர் (Gaur) ஆகிய இடங்களை ஆய்வு செய்ததோடு, அலக்சாந்தரோடு தொடர்புடைய தட்சசிலத்தையும் (Taxila) சங்கலா (Sangala) கோட்டையையும் கண்டுபிடித்தார். பின்னர்ப் புத்தரோடு தொடர்புடைய சங்கீசா (Sankisa), சரவசுதி (Saravasti), கௌசாம்பி, பாருத்துத்தூபி (Stupa of Bharhut), அசோகரின் பாறை ஆணைகள் (Rock Edicts) ஆகியவை பற்றியும், தேவ்கர், பிட்டர் கோன் (Bitargaon), பில்சா போன்ற வட இந்தியக் கோயில்களில் உள்ள குப்தர் காலக் கட்டடக் கலைகள் பற்றியும் உலகுக்கு உணர்த்தினார். மேற்கூறிய செய்திகளை 'இந்தியத் தொல்பொருளாராய்ச்சி' (Indian Antiquary) என்ற இதழில் வெளியிடும் வாய்ப்பைத் சேம்சு பர்சசு (James Burgess) என்பவர் கன்னிங்காமிற்கு எற்படுத்தித் தந்தார். கன்னிங்காமின் வேண்டுகோளுக்கிணங்க செ.எப். பிளீட்டு (J.F.Fleet) என்பவர் அரசின் கல்வெட்டாய்வாளராக அமர்த்தப்பட்டார். இவர் முற்காலக் குப்தர்களோடு தொடர்புடைய கல்வெட்டுகளைத் தொகுத்தார.

கலையின் பெருமையை உணர்த்தும் பொருட்டும் அதனைப் பாதுகாக்கும் பொருட்டும் கி.பி. 1878-ஆம் ஆண்டு இந்தியப் புதையல் சட்டம் (Treasure Trove Act) கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் படி, பூமியிலிருந்து எடுக்கப்படும் (ரூ. 10/க்கு மிகுதியான) அனைத்துப் பொருள்களும் அரசுக்குச் சொந்தமானவையாகக் கருதப்பட்டன.

இரிப்பன் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது எச்.எச். கோல் (H.H. Cole) என்பவர் பழைமைச் சின்னங்களின் காப்பாளராக அமர்த்தப்பட்டார். அவர் தம் ஆய்வினை 'இந்தியாவில் பாதுகாக்கப்பட வேண்டிய பழைமைச் சின்னங்கள்' (Preservation of National Monuments in India) என்னும் தலைப்பில் பத்துத் தொகுதிகளாகத் தயாரித்தளித்தார்.

டாக்டர் பர்சசு தலைவராக இருந்தபோது இத்துறை ஐந்து மையங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை, 1. சென்னை, 2. பம்பாய், 3. பஞ்சாபு (சிந்துவும் இராசபுதனமும்), 4. வடமேற்கு மாகாணம் (மத்திய இந்தியா), 5. வங்காளம் (அசாம் சேர்த்து) ஆகும். டாக்டர் ஊல்ட்சு (E.Hultzsch) என்பவர் கி.பி.1886-இல் பாலி, திராவிட மொழிகளில் அமைந்த கல்வெட்டுகளை ஆராயும் ஆய்வாளராக அமர்த்தப்பட்டார்.

சேம்சு பர்சசு மதுராவில் உள்ள சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் உலகறியச் செய்தார். தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் அனுமதியின்றிச் செய்யப்படும் அகழாய்வுகளைத் தடுத்து அதனை நெறிப்படுத்தினார். ஆண்டுக்கு நான்கு இதழ்களாக வெளிவரும் 'இந்தியக் கல்வெட்டுகள்' (Epigraphia Indica) என்ற இதழை வெளிவரச் செய்தார். இதில் கல்வெட்டாய்வாளர்களின் கருத்துரைகள் பல இடம் பெற்றன. இவர்தம் அரிய படைப்புகள் இருபது தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

சேம்சு பர்சசு ஓய்வு பெற்ற பின்னர், இந்தியத் தொல்லியல் துறைக்குக் கடும் சோதனை ஏற்பட்டது. பணியாளர்கள் மிகுதியாகக் குறைக்கப்பட்டனர். பின், கி.பி. 1898-இல் தொல்லியல் பரப்பாய்வுத் துறை மீண்டும் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. கள ஆய்வாளர்கள் பணி அமர்த்தப்பட்டு, அவர்கள் தல அரசின் (Local Government) கட்டுப்பாட்டில் தம் பணியைச் செய்து வந்தனர். பழங்காலத் தமிழ் எழுத்துகளைப் படிக்கத் தெரிந்த டாக்டர் ஊல்ட்சு வின்பணி உறுதி செய்யப்பட்டது. தல அரசு போதிய ஊக்கம் அளிக்காததால் தொல்லியல் ஆய்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையில் கர்சன் பிரபு தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். தொல்லியல் பரப்பாய்வுத் துறை 1900-ஆம் ஆண்டு திசம்பர் 20-ஆம் தேதி மீண்டும் புத்துணர்வு பெற்றது. மேனிலை இயக்குநராகச் சர் சான் மார்சல் (Sir John Marshall) 1902-இல் அமர்த்தப்பட்டார். தொல்லியல் திறன் பெற்ற இவர் கிரேக்கம்(Greece),தென் துருக்கி(South Turkey), கிரீட்டு (Crete) ஆகிய இடங்களில் தொல்லாய்வுப் பணிகளைச் சிறப்புற மேற்கொண்டவராவார்

இவர் கல்வெட்டு, கள ஆய்வு, அகழாய்வு, பழம் காசுகள் போன்றவற்றைப் பற்றிய ஆண்டறிக்கை (Annual Report) ஒன்றை வெளியிட விரும்பினார், பழமைச் சின்னங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்க, 1904-ஆம் ஆண்டு 'பழைமைச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம்'(Ancient Monuments Preservation Act) ஒன்று இயற்றப்பட்டது. பழைமைச் சீர்திருத்தப் பொதுப்பணித் துறையும் பயன்படுத்தப்பட்டது.

இத்துறை 1906-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ஆம் நாள் இந்திய அரசின்கீழ் இயங்கும் ஒரு நிலையான துறையாக மாற்றப்பட்டது. பின்னர், மேனிலை இயக்குநரோடு இணைந்து செயற்பட அரசு மூன்று அலுவலர்களை அமர்த்தியது. இவர்களுள் வட இந்தியக் கல்வெட்டாய்வாளரான டாக்டர் இசுடென் குனோவ் (Dr. Sten Konow) என்பவர் ஒருவர். அரசு 1905-ஆம் ஆண்டு கண்காணிப்பாளர் பதவிகளுக்கு ஆங்கிலேயர்களையும் துணைக் கண்காணிப்பாளர் பதவிகளுக்கு இந்தியர்களையும் அமர்த்துவது எனக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டது. கீழை நாட்டாய்வாளர்கள் மாநாட்டில் (Conference of Orientalists-1911) இந்திய இளைஞர்களுக்குப் பயிற்சி தந்து அவர்களையும் பணியில் அமர்த்த வேண்டும் என்பது கேட்டுக் கொள்ளப்பட்டது. சர் சான் மார்சல் 1915-ஆம் ஆண்டு தொல்லாய்வுப் பணி பற்றிய அறிக்கையை அரசிடம் தந்தார். அதனை அரசு நூலாக வெளியிட்டது.

முதல் உலகப்போரின்போது தொல்லியல் பரப்பாய்வுத் துறை கடுமையான நெருக்கடியைச் சந்தித்தது. இத்துறை1919-ஆம் ஆண்டு அரசுத் துறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆறு புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன. இதற்கிடையில் தொல்லியல் வளர்ச்சியில் அகழாய்வு சிறந்த இடத்தைப் பெற்றது. அரப்பாவை 'தயாராம் சகனி'யும் மொகஞ்சோதாரோவை ஆர்.டி. பானர்சியும் (R.D. Banerjee) அகழாய்வு செய்தனர். பின்னர்ச்சர் சான் மார்சல் மொகஞ்சோதாரோ அகழாய்வை, ஆர்கிரீவ்சு (Hargreaves), தீட்சித்து (K.N. Dikshit) ஆகியோரின் துணையுடன் பெருமளவில் மேற்கொண்டார். இதனால் இங்கு இந்தியாவின் மிகப் பழமையான நாகரிகம் ஒன்று இருந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இத் துறைக்கு 1925-26-ஆம் ஆண்டுக்கான அரசு மானியம் ரூபாய் 92,000/-இலிருந்து இரண்டு இலட்சமாக உயர்ந்தது. மொகஞ்சோதாரோவில் 1931 வரையிலும் அரப்பாவில் 1934 வரையிலும் அகழாய்வு தொடர்ந்து நடைபெற்றது. தட்சசீலம், சாஞ்சி, மாண்டு, தில்லி, ஆக்ரா, மூல்தான் ஆகிய இடங்களைப் பற்றித் தனி நூல்களை எழுதும்படி அரசால் மார்சல் பணிக்கப்பட்டார்.

சர் சான் மார்சலைத் தொடர்ந்து ஆர்கிரீவ்சும் 1931-இல் இராவ்பகதூர் தயாராம் சகனியும் 1937-இல் இராவ்பகதூர் கே.என். தீட்சித்து அவர்களும் மேனிலை இயக்குநர்களாக அமர்த்தப்பட்டனர். சர் இலியோனார்டு உல்லி(Sir Lenonard Wooley) 1938-இல் செய்த பரிந்துரையின் பேரில் அகிச்சத்ரா (Ahichchatra) அகழாய்வு 1940 முதல் 1944 வரை கே.என். தீட்சித்து அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது. இரண்டாம் உலகப் போரின்போது தொல்லியல் பரப்பாய்வுத் துறை மீண்டும் நலிவுற்றது.

மார்டிமர் வீலர் 1944-இல் மேனிலை இயக்குநராக அமர்த்தப்பட்டார். இவர் காலத்தில் தொல்லியல் பரப்பாய்வுத்துறை ஒரு புத்துணர்ச்சியைப் பெற்றது எனலாம். இவர் அகழாய்வுப் பிரிவு, பண்டைய வரலாற்றுப் பிரிவு ஆகிய பிரிவுகளை ஏற்படுத்தினார். நூல் வெளியிடும் பிரிவை 1946-இல் ஏற்படுத்தி அதனை ஒரு கண்காணிப்பாளரின் கீழ் இயங்கும்படி செய்தார். 'மையத் தொல்லியல் ஆலோசனைக் குழு' (A Central Advisary Board of Archaeology) 1945-இல் அமைக்கப்பட்டது. இக்குழுவில் அரசும் பல்கலைக் கழகங்களும் கற்றறிவாளர்களும் ஆலோசகர்களாக அமர்த்தப்பட்டனர். மார்டிமர் வீலர் காலத்தில்தான் அறிவியல் முறையான அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை 1947-இல் (Archaeological Survey of India) மையத் தொல்லியல் துறை (Central Archaeological Depart ment) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. டாக்டர் என்.பி.சக்கரவர்த்தி 1948 ஏப்பிரல் மாதம் இதன் மேனிலை இயக்குநராக அமர்த்தப்பட்டார். 'தேசிய அருங்காட்சியகம்' தில்லி குடியரசுத் தலைவர் இல்லத்தில் 1949-இல் ஏற்படுத்தப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களும் தொல்லியல் சிறப்புவாய்ந்த இடங்களும் மைய அரசின் பொறுப்பில் இயங்கவும், மற்றவை மாநில அரசின் கீழ் இயங்கவும் வகைசெய்யப்பட்டது.

மதோசொரூப வாட்சு (Madho Sarup Vats) 1950-இலும் அமலாநந்த கோசு(Amalanantha Ghosh) 1953-இலும் மேனிலை இயக்குநர்களாக அமர்த்தப் பட்டனர். இக்காலத்தில் தொல்லியல் பரப்பாய்வுத் துறை பத்துச் சரகங்களாகப் பிரிக்கப்பட்டுச் செயற் பட்டு வந்தது. தொல்லியல் மாணவர்களுக்குப் பயிற்சிதரத் 'தொல்லியல் பள்ளி' (School of Archaeology) ஒன்றும் தில்லியில் 1959-இல் தொடங்கப்பட்டது. இத் துறை ஊர்தோறும் களஆய்வுப்பணியைத் (Village to Village Survey) தொடங்கியது. அதன் படி மைசூர், காசுமீர், புதுக்கோட்டை, மயூர்பஞ்சு, (Myurbhanj), கொச்சி, போபால், பரோடா, செய்ப்பூர் ஆகிய பகுதிகளில் ஆய்வுகள் செய்யப் பட்டன.

இத்துறை தன் நூற்றாண்டு விழாவை 1961-ஆம் ஆண்டில் பெருமையோடு கொண்டாடியது. தில்லியில் நடந்த முதலாம் ஆசியத் தொல்லியல் மாநாட்டில் தன் வரலாற்றுச் சின்னங்களைக் காட்சிக்கு வைத்துப் பெருமை கொண்டது.

வரலாற்றுக்கு முந்திய இடங்களை ஆய்வு செய்யத் தொல் பழங்காலத் துறை (Pre-History Branch) ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. பழைய கட்டடங்களின் சுற்றுப்புறங்களை அழகுப்படுத்தித் தோட்டங்கள் அமைக்கத் தோட்டத் துறை (Gardens Branch) ஒன்றும், தொல்லியல் பொருள்களை வேதியல் முறையில் சுத்தம் செய்து பாதுகாக்க வேதியல் துறை (Chemical Branch) ஒன்றும் ஏற் படுத்தப்பட்டுள்ளன. அண்டை நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய ஆய்வாளர்கள் அங்குச் சென்று தொல்லியல் ஆய்வுகளில் உதவிபுரிய வெளிநாட்டு ஆய்வுத் துறையும் தொடங்கப்பட்டுள்ளது. பெகரின், கிரேக்கம் போன்ற நாடுகளுக்கு இந்தியத் தொல்லியல் ஆய்வாளர்கள் சென்று பணிபுரிகின்றனர். கோசு 1968-ஆம் ஆண்டு மேனிலை இயக்குநர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவரை அடுத்துப் பி.பி. இலால் (B.B. Lal) என்பவர் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் மேனிலை இயக்குநராகப் பொறுப்பேற்றார். பின்னர், 1972-இல் தேசுபாண்டே (M.N. Deshpande) என்பவரும் 1978-ஆம் ஆண்டு தாப்பர் (B.K. Thapar)என்பவரும் மேனிலை இயக்குநர்களாகப் பணியாற்றினர். தேசுபாண்டே மேனிலை இயக்குநராக இருந்தபொழுது, 1975-ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் பதினோராம் சரகம் பெங்களூரில் அமைக்கப் பட்டது. இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை தொடர்ந்து இந்தியத் தொல்லியல் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது. இதில் புதிய கண்டுபிடிப்புகள், அகழாய்வுகள், புதிய கற்காலம், பழைய கற்காலம் ஆகியவை பற்றிய கட்டுரைகளும் குறிப்புகளும் இடம் பெறுகின்றன. இந்திய அரசும் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்துறைக்கு 6.50 கோடி உரூபாய் ஒதுக்கி ஊக்கம் அளித்து வருகிறது. இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை இப்பொழுது கடலகழாய்வுகள் நடத்தவும் முயற்சிகள் செய்துவருகிறது. இந்தியக் கல்வெட்டுகளைக் கண்டுபிடிக்கவும் அவற்றைப் படியெடுத்து வெளியிடவும் கல்வெட்டுத் துறையொன்று மைசூரில் உள்ளது. இது இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் உறுப்பாகச் செயற்பட்டு வருகிறது. இதற்குத் தனியாக ஓர் இயக்குநர் உள்ளார். இத்துறை கல்வெட்டு ஆண்டறிக்கைகளையும் தென்னிந்தியக் கல்வெட்டுகளையும் இந்தியக் கல்வெட்டியல் இதழையும் (Epigraphica Indica) வெளியிடுகிறது. இத்துறை இந்தியத் தொன்மை வரலாற்றை அறியத் தன் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. காண்க: அலெக் சாந்தர் கன்னிங்காம். கே.வி. இரா.

**இந்தியத் தொழில்கள்**: தொழில்கள் மனித நாகரிகம் வளர்ச்சிபெறத் தொடங்கிய காலத்திலிருந்து பல படிமுறையில் வளர்ந்து வருகின்றன. மன்னராட்சி முறை தோன்றி வலுப்பெற்ற காலத்திலேயே தொழில்நிலை சிறந்த வளர்ச்சி பெற்று வந்துள்ளது. நகரங்கள் வளர்ச்சி அடைய அடையத் தொழில்கள் மென்மேலும் செழித்தோங்கின. தொழில்கள் கி.பி. 18-ஆம்நூற்றாண்டின் இறுதிவரை பெரும்பாலும் கைத்தொழில்களையே குறித்தன. பருத்தி, கண்ணாடி, இரும்பு கனரகத் தொழில்கள் ஆகியவற்றில் எந்திரங்கள் புகுத்தப்பட்ட பிறகே கைத் தொழில்கள் ஆலைத் தொழில்களாகக் கருதப் பட்டன. சணல், பருத்தி நெசவுத் தொழில்கள் இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை கைத் தொழில்களாகஇருந்த போதிலும், அவற்றால்உருவாகிய பொருள்கள் ஐரோப்பிய அங்காடிகளில் தரம்

மிக்கனவாகவும் மற்றைய நாடுகளின் பொருள்களோடு போட்டியிடக் கூடியனவாகவும் விளங்கின. இந்தியாவிற்குக் கி.பி 13-ஆம் நூற்றாண்டில் வந்த மார்க்கோபோலோ என்பார் இங்குள்ள பருத்தித் துணிகளின் மேம்பாட்டினையும் சிறப்பையும் போற்றி எழுதியுள்ளார். பல்வேறு சிறப்புகளைப் பெற்ற இந்தியப் பொருள்கள் கி.பி 18-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு எந்திரமயமாக்கப்பட்ட ஐரோப்பியப் பொருள்களுடன் போட்டியிட முடியவில்லை. இதனால், இந்தத் தொழில்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நசியத் தொடங்கின.

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியாலும், கிழக்கிந்திய வணிக நிறுவனங்களின் தொடர்புகளாலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பெருந்தொழிலகள் தொடங்கப்பெற்றன. இப்பெருந்தொழில்களைத் தோட்டப்பயிர்த் தொழில்கள் (Plantation Industries) என்றும் பெரும் தொழிற்கூடங்களில் இயங்கிய தொழில்கள் (Factory Industries) என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

பருத்தித் தொழில்: இத்தொழில் பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் கைத்தொழிலாக இயங்கி வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொன்மை பெற்ற தொழில் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. புறநானூற்றில்,

> 'பருத்திப் பெண்டின் பனுவலன்ன' (125)
> 'கோடைப்பருத்தி வீடு நிறைபெய்த மூடை'(393)

போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன. மேலும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நன்னூலில், 'பருத்திக் குண்டிகை' என்றும்,

> ''பஞ்சிதன் சொல்லாப் பனுவல், இழையாகச்
> செஞ்சொற் புலவனே சேயிழையா – எஞ்சாத
> கையே வாயாகக் கதிரே மதியாக
> மையிலா நூல்முடியு மாறு' (நன்னூல்-24)

என்றும் பருத்தி பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றில் பருத்தியிலிருந்து ஆடை செய்யும் தொழில்முறை உருவகமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாகப் பல நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்கையோடு இணைந்து வளர்ந்த பருத்தித் தொழில், கி.பி. 1851-ஆம் ஆண்டிலிருந்து ஆலைத் தொழிலாக மாறியது. பருத்தி ஆடைகள் கி.பி. 1854-ஆம் ஆண்டிலிருந்து தொழிற் கூடங்களில் எந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வியந்திரங்கள் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தினாலும் சில ஐரோப்பிய முதலாளிகளாலும் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. பன்னிரண்டு பருத்தி நெசவாலைகள் கி.பி. 1861-ஆம் ஆண்டு உற்பத்தியை மேற்கொண்டன. அவை 1900-ஆம் ஆண்டில் 194 ஆலைகளாகவும் 1914-ஆம் ஆண்டில் 264 ஆலைகளாகவும் பெருகின. பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு வகைப்பட வளர்ந்த இத்தொழில் இந்தியாவில் இன்று இன்றியமையாத தொழிலாகக் கருதப்படுகிறது. இத்தொழிலைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரை அரசு பல்வேறு சிறப்புரிமைகளை வழங்கியுள்ளது. பருத்தி நெசவாலைத் தொழில் வளர்ச்சி அடைய அடையப் பருத்தி பயிரிடுவதும் இந்தியாவில் பெருகி வருகிறது. உலகிலேயே இந்தியாவில்தான் மிகுந்த அளவு நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்படுகிறது. உலகில் பயிரிடப்படும் பருத்தியில் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் பயிரிடப்படுகிறது. புள்ளி விவரங்கள் 1976-77-இல் 68,85,000 எக்டேர்களிலும் 1977-78-இல் 78,86,000 எக்டேர்களிலும் 1978-79 ஆண்டுகளில் 80,87,000 எக்டேர்களிலும் பருத்தி பயிரிடப்பட்டன என அதன் உற்பத்திப் பெருக்கத்தைப் பறைசாற்றுகின்றன. பருத்தி இந்தியாவில் மிகுதியாகப் பயிரிடப்பட்டாலும் உற்பத்தித் திறன் குறைந்தே காணப்படுகிறது. இந்தியாவின் உற்பத்தி ஓர் எக்டேருக்குச் சராசரி 1 'பேல்' (1 Bale = 170 கிலோ கிராம்). எகிப்தில் 1 எக்டேருக்கு 4 'பேல்'கள் உற்பத்தி செய்யப்படுகின்றன; அமெரிக்காவும் உருசியாவும் முறையே 500 கிலோவும் 840 கிலோவும் உற்பத்தி செய்கின்றன. பருத்தி நெசவுத் தொழிலை (1) நூற்பாலைகள் (Spinning Mills) (2) சாதாரண நடுத்தர உற்பத்தியாலைகள் (Coarse and Meduim Composite Mills) (3) மென்மையான மிக மென்மையான பருத்தித் துணி உற்பத்தி நெசவாலைகள் (Fine and Superfine Composite Mills) என மூவகைப்படுத்தலாம்.

பருத்தி நெசவுத் தொழிலில் தொடக்கக் காலம் தொட்டே பல சிக்கல்கள் இருந்து வருகின்றன. இத்தொழிலில் 1960-ஆம் ஆண்டுமுதல் தளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. மென்மையான துணி உற்பத்தி செய்யும் ஆலைகளுடன் நடுத்தர, சிறிய ஆலைகளால் போட்டியிட முடியவில்லை. இந்திய அரசு 1978-ஆம் ஆண்டு ஆதாயம் ஈட்டமுடியாதென்று கைவிடப்பட்ட (Sick Mills) 111 ஆலைகளைத் தனியாரிடமிருந்து எடுத்து நடத்தத் தொடங்கியது. இந்த நூற்பாலைகள் தேசிய நூற்புத் தொழிற் கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இந்தியாவிலிருந்து பருத்தியும் பருத்தியாடைகளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உற்பத்தித் திறனை வளர்ப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

பம்பாயில் உள்ள மாதுங்காவில் 1924–ஆம் ஆண்டு தொழில்நுட்ப ஆய்வுக் கூடம் நிறுவப்பட்டு, தொழில் நுட்ப வளர்ச்சியையும் தொழில் திறனையும் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்ஆய்வுக்கூடத்தில் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் கோவையில் பருத்தி ஆய்வு வட்டார மையம் ஏற்படுத்தப்பட்டு பல உயர்ரக பருத்திச் செடி வகைகள் ஆய்வு மூலம் உருவாக்கப்பட்டு, பருத்தி உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும் இம் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இந்தியாவில் 1981–ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி 691 ஆலைகள் இயங்கி வருகின்றன. மாநிலங்கள் வாரியாக விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மாநிலம் | நூற்பு நெசவாலைகள் |
|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 32 |
| 2. | அசாம் | 2 |
| 3. | பீகார் | 6 |
| 4. | குசராத்து | 112 |
| 5. | அரியானா | 12 |
| 6. | சம்மு காசுமீர் | 1 |
| 7. | கர்னாடகா | 32 |
| 8. | கேரளம் | 26 |
| 9. | மத்திய பிரதேசம் | 24 |
| 10. | தமிழ் நாடு | 215 |
| 11. | மகாராட்டிரம் | 104 |
| 12. | ஓரிசா | 5 |
| 13. | பஞ்சாபு | 9 |
| 14. | இராசசுத்தான் | 19 |
| 15. | உத்தரப் பிரதேசம் | 41 |
| 16. | மேற்கு வங்காளம் | 41 |
| 17. | தில்லி | 4 |
| 18. | பாண்டிச்சேரி | 5 |
| 19. | கோவா | 1 |
| | மொத்தம் | 691 |

பருத்தி ஏற்றுமதி

| வ.எண். | ஆண்டு | மில்லியன் பேல்களில் |
|---|---|---|
| 1. | 1975–76 | 427 |
| 2. | 1976–77 | 39 |
| 3. | 1977–78 | 10 |
| 4. | 1978–79 | 120 |
| 5. | 1979–80 | 450 |
| 6. | 1980–81 | 697 |

பருத்தி ஏற்றுமதி ஒரே சீரான நிலையில் இல்லை என்பது மேலே உள்ள அட்டவணை மூலம் தெளிவாகிறது. இதற்கு உற்பத்திச் செலவு மிகுதியாதலும் ஐரோப்பிய நாடுகள் பருத்தித் துணிகளின் இறக்கு மதியைக் கட்டுப்படுத்தலும் காரணங்களாகும். இத் தொழிலை நம்பிப் பல இலட்சக் கணக்கான மக்கள் உயிர் வாழ்கின்றனர். எனவே, பருத்தி நெசவுத் தொழில் நல்ல நிலையை அடைய அரசு, பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. மைய அரசு 1978–ஆம் ஆண்டு ஆகசுட்டு 7–ஆம் நாள் பருத்தி நெசவுத் தொழிற் கொள்கையை அறிவித்தது. ஏழை மக்கள் பயனடையத் தக்க வகையில் பருத்தித் துணியைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்வதே இக்கொள்கையின் அடிப்படையாகும். நாடு முழுமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தியான துணிகளைப் பகிர்வு முறைக்குக் கொண்டு வருதல், தொழிலை மேலும் பரவலாக்குதல், பருத்தித் துணித் தொழிலுக்கும் செயற்கை இழைத் துணிக்குமுள்ள போட்டியதைத் தவிர்த்து நல்லுறவை ஏற்படுத்துதல் போன்றவை சிறப்பான குறிக்கோள்களாக அறிவிக்கப்பட்டன.

சணலாலைத் தொழில்: பருத்தி நெசவுத் தொழிலைப் போன்றே சணலாலைத் தொழிலும் இந்தியாவில் கைத்தொழிலாக இயங்கி வந்தது. கோணிப்பைகளையும் சணல் துணிகளையும் உற்பத்தி செய்ய வங்காளத்தில் இருந்த ஒரு கைத்தறித் தொழிலாளரே கி.பி 1830–ஆம் ஆண்டு வரை முற்றுரிமை பெற்றிருந்தார். பின்னர்க் கைத்தறியின் மூலம் கோணிப்பைகள் உற்பத்தியாவது நிறுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டது. எனவே, சணல் தொழில் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. இருந்தபோதிலும், கப்பல்களைத் துறைமுகத்தில் கட்டி நிறுத்தப் பயன்படும் கயிறுகளுக்கும் மற்றும் பல நீண்ட கயிறுகளுக்கும் தேவை இருந்ததால் சணல் தொழில் ஓரளவு உயிரோடிருந்தது. உருசிய நாட்டிலிருந்து சணல் ஏற்றுமதி கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற கிரிமியன் போரால் (Crimean War) பெரிதும் தடைபட்டது. இதன் காரணமாக இந்தியச் சணலாலைத் தொழில் விரைவாக வளர்ந்தது. சிராம்போரில் கி.பி. 1855–ஆம் ஆண்டு ஆக்கிலாந்து (Auckland) சணலாலை தொடங்கப்பட்டது. மேலும் ஒரு சணலாலை கி.பி. 1864–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் பிறகு சணலாலைத் தொழில் சீரான வளர்ச்சியை நோக்கிமுன்னேறியது. இந்தியாவில் 1882–ஆம் ஆண்டு வரை 22 சணலாலைகள் தொடங்கப்பட்டு, 20000 தொழிலாளர்கட்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. இச்சணலாலைகள் பெரும்பாலும் வங்கத்திலேயே அமைந்தன. இத்தொழில் முழுமையும் ஐரோப்பியர் ஆளுகையிலேயே இருந்து வந்தது.

சணலாலைத் தொழிலின் வளர்ச்சியைக் கி.பி. 1895–1900 ஆண்டு ஏற்பட்ட பெரும்பஞ்சம் பாதித்தது. ஆனால், முதல் உலகப் போரினால் ஏற்பட்ட தேவை இத்தொழிலை 1915–ஆம் ஆண்டிற்குப் பிறகு வளர்ச்சியடையச் செய்தது. ஆனால், 1929–ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பெரும் பொருளாதார மந்தம் சணலாலைத் தொழிலையும் விட்டு வைக்கவில்லை. இவ்வாறாகப் பல இடர்ப்பாடுகளையும் கடந்த இத்தொழில் 1940–ஆம் ஆண்டளவில் 110 சணலாலைகளைக் கொண்டிருந்தது. இந்தியா சுதந்திரமடைந்தபொழுது ஏற்பட்ட பிரிவினையால் இத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. வங்காளத்தில் சணல் மிகுதியாகப் பயிரிடப்படும் கிழக்குப்பகுதி பாகிசுத்தானுடன் சேர்ந்ததால், கல்கத்தாவைச் சுற்றியே பெரும்பாலும் அமைந்திருந்த சணலாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை

எனவே, இந்தியா மூலப்பொருள்களை வெளிநாடுகளிலிருந்து மிக்க விலை கொடுத்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. சணல் உற்பத்தியைப் பெருக்கவும் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. சணல் உற்பத்தியாகும் இடங்களில் ஒழுங்கு படுத்தப்பட்ட அங்காடி விற்பனை முறை அமுல் படுத்தப்பட்டது. மேலும், மைய அரசு தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (National Industrial Development Corporation) மூலம் சணலாலைத் தொழிலுக்குப் பல்வேறு உதவிகள் அளித்து வருகின்றது. தொழிற்கூடங்களை விரிவாக்கவும் புதிய முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக உற்பத்தி பெருகியது. இந்தியாவில் 1955-56-ஆம் ஆண்டுகளில் 4.2 கோடி பேல்களாக இருந்த சணல் உற்பத்தி, 1973-74 ஆண்டுகளில் 8.3 கோடி பேல்களாக உயர்ந்தது. சணல் தொழிலில் இருந்த போட்டி 1971-ஆம் ஆண்டில் வங்கதேசம் உருவான பின் பெருமளவிற்குக் குறைந்தது. உலகச் சணல் உற்பத்தியில் இந்தியாவும் வங்கதேசமும் 50 விழுக்காடு அளவினைப் பெற்றுள்ளன. இந்தியா, வங்க தேசம், நேபாளம் ஆகிய மூன்று நாடுகளும் 1976-ஆம் ஆண்டு ஒன்று சேர்ந்து போட்டியைத் தவிர்த்து, ஒருங்கிணைந்த வாணிகத்தை மேற்கொள்ள இசைந்து ஒப்பமிட்டன. சோவியத்து உருசியாவுடன் சணல் ஏற்றுமதி செய்ய இந்தியா நீண்டகால ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்தியாவில் சணலாலைத் தொழில் பெரும்பாலும் தனியார் கையிலேயே இருந்து வருகிறது. மேற்கு வங்காளத்தில் 1981-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி 54 ஆலைகளும், ஆந்திரப் பிரதேசத்தில் 4 ஆலைகளும், பீகாரில் 3 ஆலைகளும், உத்தரப்பிரதேசத்தில் 3 ஆலைகளும், மத்திய பிரதேசம், அசாம், ஒரிசா, திரிபுரா ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன. இவற்றுள் பொதுத் துறையின் கீழ்ப் பீகாரில் ஒரு ஆலையும் அசாமில் ஒரு ஆலையும் அமைக்கப்பட்டன. உரூபாய் 3,000 கோடி மூலதனத்தில் இயங்கும் இத்தொழில் சணல் பயிரிடும் 2 கோடி மக்களுக்கும் சணலாலைகளில் பணிபுரியும் 4 இலட்சம் மக்களுக்கும் வாழ்வளிக்கிறது. மேலும், சணல் பொருள்கள் இந்தியாவிற்குப் பெருமளவில் அந்நியச் செலாவணியை ஏற்றுமதி மூலம் பெற்றுத் தருகிறது. கீழ்க்காணும் அட்டவணை சணல் ஏற்றுமதியை விளக்கும்.

சணல் உற்பத்தியைப் பெருக்கவும் சணலாலைத் தொழிலை வளர்க்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியச் சணலாலைத் தொழில்கள் ஆய்வு மையம் (Indian Jute Industries Research Association), சணல் தொழில் நுட்பக் கழகம் (Institute of Jute Technology) போன்ற மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. இம்மையங்களில் அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுச் சணல் உற்பத்திப் பெருக்கத்திற்கும் சணல் தொழில்களின் வளர்ச்சிக்கும் பல்வேறு புதிய திட்டங்கள் புகுத்தப்படுகின்றன.

தேயிலை: தேயிலை இந்தியாவில் ஒரு பண்ணைத் தொழிலாகத் தொடங்கி வளர்ந்து வருகிறது. உலகிலேயே சீனத்தில்தான் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுது தேயிலை மருத்துவப் பயிராகப் போற்றப் பட்டது. சர் சோசப் பேங்கு (Sir Joseph Panks) என்பவர் 1788-ஆம் ஆண்டில் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் இயக்குநர் கூட்டத்தில், தேயிலை இந்தியாவில் பயிரிடப்பட வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகள் உடனடியாகச் செய்யப்படுதல் வேண்டும் என்றும் கூறினார். அதன்படி சீனாவிற்கு ஒரு வல்லுநர் குழு அனுப்பப்பட்டுத் தேயிலை விதைகளை எடுத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில சீன உழவர்களை இந்தியாவிற்கு அழைத்துவந்து பயிரிடும் முறையைக்கற்றுக் கொடுக்கவும் முயற்சிகள்மேற் கொள்ளப்பட்டன. இம் முயற்சிகள் கி.பி. 1820-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் நேரத்தில், தற்செயலாகத் தேயிலைச் செடிகள் அசாம் காடுகளில் இருந்தமை கண்டறியப்பட்டது. தேயிலை ஐரோப்பிய வாணிகத்தில் பெரும் ஆதாயம் ஈட்டித் தரும் பொருளாக இருந்ததனால், கிழக்கிந்திய வணிக நிறுவனம் தேயிலை பயிரிடுவதில் தொடர்ந்து ஆர்வம் காட்டியது.

| வ.எண். | ஆண்டு | ஏற்றுமதி (டன்களில்) | உரூபாய் மதிப்பு கோடிகளில் |
|---|---|---|---|
| 1. | 1977-78 | 317 | 1,701.8 |
| 2. | 1978-79 | 372 | 2,659.8 |
| 3. | 1979-80 | 598 | 3,991.0 |

கிழக்கிந்திய வணிகநிறுவனம் கி.பி. 1834–ஆம் ஆண்டு முதன் முதலாகத் தேயிலையை இலண்டனுக்குக் கப்பலில் ஏற்றுமதி செய்தது. அசாமில் தேயிலைச் சோதனைக் கூடம் கி.பி. 1835-இல் தொடங்கப்பட்டது. தனியார் தேயிலைத் தோட்டங்கள் கி.பி. 1858–ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தோன்றின. பின்னர்க் கி.பி. 1859–ஆம் ஆண்டு 48 தனியார் தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. தொடர்ந்து வளர்ச்சியுற்றுக் கி.பி. 1871-ஆம் ஆண்டிற்குள் 295 தேயிலைத் தோட்டங்கள் உருவாகின. இக்காலக் கட்டங்களில் தேயிலைத் தோட்டங்களுக்காக அசாம் காடுகள் அழிக்கப்பட்டன. வங்கத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் கூலிகளாகவும் கூலி அடிமைகளாகவும் கொண்டுவரப்பட்டனர். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தேயிலைத் தோட்டங்களின் நிலைமைகளை ஆய்வு செய்யக் கி.பி. 1896-ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கைப்படி, தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் மோசமான முறையில் சுரண்டப்பட்டனர் என்பதும், அடிப்படைத் தேவைகள் இல்லாமல் அடிமை வாழ்வு நடத்தினர் என்பதும் தெரிய வந்தன. ஐரோப்பிய முதலாளிகளே தேயிலைத் தோட்டங்களை நேரடியாக நிருவாகம் செய்தனர். இந்தியத் தேயிலை சீனத் தேயிலையை இங்கிலாந்துச் சந்தைகளிலிருந்து 1895–1914–ஆம் ஆண்டுகளுக்கிடையில் வெளியேற்றி விட்டது என்று கூறினால் மிகையாகாது. இங்கிலாந்து இறக்குமதி செய்த தேயிலையில் இந்தியாவின் பங்கு கி.பி. 1866–ஆம் ஆண்டு அளவில் 4 விழுக்காடுதான் இருந்தது. எஞ்சிய 86 விழுக்காடு தேயிலை சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும். இந்நிலை அடியோடு மாறி இந்தியத் தேயிலை 1903–ஆம் ஆண்டில் 59 விழுக்காடும், இலங்கைத் தேயிலை 31 விழுக்காடும், சீனத் தேயிலை 10 விழுக்காடும் இங்கிலாந்தால் இறக்குமதி செய்யப்பட்டது. முதல் உலகப்போர் தொடங்கியவுடன் தேயிலை விலை உயர்ந்து ஏற்றுமதியும் வளர்ந்து, நல்ல ஆதாயத்தை ஈட்டித் தருவதாகத் தேயிலைத் தொழில் அமைந்தது. இக்காலக் கட்டத்தில் செழித் தோங்கிய இத் தொழில் இந்திய விடுதலைக்குப் பின் மேலும் வளர்ச்சி பெற்றது. ஐரோப்பிய முதலாளிகளிடமிருந்து இந்திய முதலாளிகட்கு இத்தொழில் கைம் மாறியது.

இந்தியாவில் வடகிழக்குப் பகுதியிலும் தென் பகுதியிலும்தான் தேயிலை பயிரிடப்படுகிறது. அசாம், மேற்கு வங்காளம், திரிபுரா, பீகார், உத்தரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மொத்தம் 2,500 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களில் 10,795 தோட்டங்கள் உள்ளன. தேயிலை பயிரிடப்படும் மொத்தப் பரப்பு 3,03,480 எக்டேர்கள் ஆகும். வடக்கு, வடகிழக்கு மாநிலங்களில் 2,32,403 எக்டேர்களிலும் தென் மாநிலங்களில் 70,977 எக்டேர்களிலும் தேயிலை பயிரிடப்படுகிறது. இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களில் நாட்கூலி பெற்று உழைக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 8,41,024 ஆகும். தென் மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் தேயிலை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. அயற் செலாவணியை இந்தியாவிற்கு ஈட்டித் தருவதில் தேயிலை ஏழாம் இடத்தைப் பெறுகிறது. இந்தியா 80 நாடுகளுக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்தாலும் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கினை இங்கிலாந்திற்கே ஏற்றுமதி செய்கிறது.

தேயிலை உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்குப் பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அசாம் மாநிலத்தில் உள்ள தேயிலை ஆய்வு நிலையம் உலகில் உள்ள தேயிலை ஆய்வு நிலயங்களுள் மிகப் பெரியதாகும். தமிழ்நாட்டில் குன்னூரில் உள்ள தேயிலைப் பயிரிடுவோர் கழகமும் தேயிலைத் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தேயிலை வாரியம் (Tea Board) கல்கத்தாவிலிருந்து இயங்கி இந்தியா முழுமைக்கும் தேயிலை வாணிகத்தைச் செய்து வருகிறது. பல மாநில அரசுகளும் தேயிலை வாரியங்களைத் தொடங்கியுள்ளன.

கண்ணாடித் தொழில்: கண்ணாடியைப் பயன் படுத்தும் பழக்கம் தமிழ்நாட்டில் சங்க காலம் தொட்டு இருந்து வருகிறது. கைத்தொழிலாக வளர்ந்து வந்த கண்ணாடித் தொழில் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில்தான் ஆலைத்தொழிலாக மலரத் தொடங்கியது. ஆலையில் எந்திரங்கள் மூலமாக உருவாக்கும் முயற்சிகள் கி.பி. 1870–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள் தோல்வியைத் தழுவின. இதே ஆண்டில் முரீ (Murree) என்பவரால் சீலத்தில் (Jhelam) கண்ணாடி உற்பத்தி செய்யும் ஆலை தொடங்கப்பெற்றது. உற்பத்திச்செலவு மிகுதியானதால் இத்தொழிற்கூடம் மூடப்பட்டது. மீண்டும் கி.பி. 1890–ஆம் ஆண்டில் தித்தாகரில் பயோனியர் கண்ணாடித் தொழில் நிறுவனம் என்ற பெயரில் ஒருநிறுவனம் இந்தியர்களால் தொடங்கப்பெற்றது. தொழில்நுட்ப உதவியில்லாததால் சிறிதுகாலத்தில் இத் தொழிற்சாலையும் மூடப்பட்டது. தொழில் முயல்வோர் சிலர் மிகவும் கடுமையானமுயற்சிகளை மேற்கொண்டு 1900–இல் அம்பாலா போன்ற இடங்களில் கண்ணாடி ஆலைகளைத்தொடங்கினர். திறமையான நிருவாக அமைப்பு, மிகுதியான ஆதாயம்

இல்லாமை, இந்தியத் தொழிலாளர்களின் தொழில் நுட்பக் குறைவு ஆகிய காரணங்களால் இத்தொழில் செழித்தோங்கவில்லை. சப்பானியத் தொழில்நுட்ப உதவியுடன்தான் இந்தியாவில் கண்ணாடித் தொழில் நிலை பெறத் தொடங்கியது. முதல் உலகப் போர் இத்தொழிலுக்குப் புதிய ஊக்கத்தை அளித்தது என லாம். இக்காலக் கட்டத்தில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பல கண்ணாடிப் பொருள்கள் நிறுத்தப்பட்டன. கண்ணாடிக் குவளை, குடிநீர்க் குவளை போன்ற பொருள்கள் இந்தியாவிலேயே உற்பத்தியாயின. போர் நிறுத்தத்திற்குப் பின் இத்தொழிலில் மீண்டும் மந்தம் ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடிப் பொருள்களையே மக்கள் விரும்பினர். இந்தியத் தேசியகாங்கிரசு 1930–ஆம் ஆண்டு தொடங்கிய 'சுதேசி இயக்கத்தின் காரணமாக மீண்டும் கண்ணாடித் தொழில் புத்துயிர் பெற்றது. தொழிற்கூடங்களும் புதிய எந்திரங்களைப் புகுத்தித் தரமான மூலப் பொருள்களைக் கொண்டு உயர் தரக்கண்ணாடிப் பொருள்களைத் தயாரிக்க முற்பட்டன. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் பல சுங்கவரிச் சிறப்புரிமைகளும் அளிக்கப்பட்டன. இந்திய விடுதலைக்குப்பின் இத்தொழில் நிலைபெறத் தொடங்கியது. இப்பொழுது இந்தியாவில் 225 கண்ணாடித் தொழிற்சாலைகள் உள்ளன. 93 தொழிற்சாலைகள் வளையல்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளன, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் இத்தொழில் மிகுதியாக நடைபெறுகிறது.

**இரும்பு கனரகத் தொழில்:** இரும்பு கனரகத் தொழில் பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் இருந்து வருகிறது. சங்க இலக்கியத்தில் இரும்பைப் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. அகநானூற்றில், 'கொல்லன்.....உலை' என்றும் புறநானூற்றில் ''வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே'' என்றும் கூறப்பட்டுள்ளன. தமிழகத்தில் கி.பி. 700 முதல் 900 வரையிலான இடைப்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியமான தேவாரத்தில் ''கரும்பொன் என்று இரும்பு குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீவக சிந்தாமணியில், 'இரும்பின் நீர்மை கெடுத்து' என்றும் (952) 'இரும்புமேல் விடாது நிற்போர்' (752) என்றும் கூறப்பட்டுள்ளன. இவ்வரிகள் அச் சமுதாயத்தில் நிலவிய இரும்பின் பயன் பற்றிய கருத்துகளைப் பறைசாற்றுகின்றன.

தாமசுகசு (Damascus) பயன்படுத்திய கத்திக்கு இந்தியாவிலிருந்து எஃகு தருவிக்கப்பட்டது என்பது செவிவழிச் செய்தியாகும். முதன் முதலில் வணிக முறையில் இரும்பு எஃகுத் தொழில் கி.பி. 1779–ஆம் ஆண்டில் மோட்டியிலும் பராகூரிலும் தொடங்க முயற்சிகள் செய்யப்பட்டன; இம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. சோசய்யா கீத்து (Mr.Josaiah Heath) என்பவர் கி.பி. 1830–ஆம் ஆண்டு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் தமிழ்நாட்டில் உள்ள பரங்கிப்பேட்டையில் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் பண உதவியுடன் இரும்பு எஃகுக் கூடத்தைத் தொடங்க முயற்சி செய்தார். திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்த காரணத்தால் இம்முயற்சிகள் நின்றுபோயின. பராக்கர் இரும்புத் தொழிற்கூடம் கி.பி. 1887–ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் இத்தொழிற்சாலை வங்க இரும்பு எஃகு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1919–ஆம் ஆண்டிலிருந்து வங்க இரும்பு நிறுவனம் என்ற பெயரில் புதிய தொழில்நுட்பத் திறனுடன் முதன் முதலாக இந்தியாவில் இரும்பு உற்பத்தியை மேற்கொண்டது. சே.என். தாட்டாவினால் எம். பெல்டு என்ற தொழில்நுட்ப அறிஞரின் உதவியுடன் 1903-இல் தாட்டா(TATA) இரும்பு எஃகு நிறுவனம் தொடங்கப் பெற்றது. இதனால், பீகாரில் இரும்புத் தாது கண்டுபிடிக்கப்பட்டது. இந் நிறுவனம் 1908–ஆம் ஆண்டு எஃகு உற்பத்தியைத் தொடங்கியது. இத் தொழிற்கூடத்தில் தேனிரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. மேற்கூறிய தொழிற்சாலைகள் தனியாரால் தொடங்கப் பெற்றவையாகும். கர்நாடகத்தில் உள்ள பத்திராவதி நதிக் கரையில் 1921–ஆம் ஆண்டு பொதுத் துறையால் இரும்புத் தொழிற்கூடம் முதன் முதலாக நிறுவப்பட்டது. எஃகு உற்பத்தியும் 1934–ஆம் ஆண்டு இந்நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது பின், மைசூர் இரும்பு எஃகுத் தொழிற்கூடம் என்ற பெயரில் இந்நிறுவனம் (Mysore Iron and Steel-Works) செயற்படத் தொடங்கியது. இத்தொழில் வளர்ச்சியால் இரும்புத்தாது, நிலக்கரி ஆகியன எடுக்கும் தொழில்களின் வளர்ச்சியும் ஏற்பட்டன. இந்தியா விடுதலை பெற்றபின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அயல்நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் மூன்று பெரிய இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா ஆகிய இடங்களில் தொடங்கப் பெற்றன. இந்தியாவின் தொழிலைப் பரவலாக்கும் தொழிற் கொள்கைக்கும் தொழில் மயமாக்கும் திட்டத்திற்கும் பொதுத் துறையில் தொடங்கப்பெற்ற இம் மூன்று தொழிற்கூடங்களும் அடிப்படையாக அமைந்தன. இந்தியா 1981-ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி, கனகரத் தொழிலில் உலகில் 16–ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. சோவியத்து உருசியா முதலாம் இடத்தை

யும், அமெரிக்கா, சப்பான் முறையே இரண்டாம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. இந்தியாவில் தனியார், பொதுத்துறை இரும்பு எஃகு நிறுவனங்களில் 2,90,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இரும்பு எஃகுத் தொழிலை ஒருங்கிணைப்பதற்காக 1973-ஆம் ஆண்டு இந்திய எஃகு ஆணை உரிம நிறுவனம் (Steel Authority of Steel Works) தொடங்கப் பெற்றது. இந்நிறுவனம் உலகிலுள்ள தொழில் நிறுவனங்களிலேயே மிகப்பெரிய தாகும். இந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு 4000 கோடி உரூபா ஆகும். இப் பொதுத் துறை நிறுவனம், எஃகுத் தொழில் வளர்ச்சி பற்றியும் தொழில் நுட்பத் திறனை வளர்த்தல் பற்றியும் மைய அரசுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகிறது. இது இந்தியாவிலுள்ள இரும்பு எஃகுத் தொழில் தொடர்பான எல்லாப் பொதுத் துறை நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துத் திட்டங்கள் தீட்டிச் செயற்பட வைக்கிறது. இந்நிறுவனத்தின் ஆளுகையின் கீழ் இராஞ்சி நிருவாகப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அயல்நாட்டு எஃகு உற்பத்தி

| வ.எண் | நிறுவனம் | ஆண்டு உற்பத்தித் திறன் | உற்பத்தி (மிலியன் டன் கணக்கில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | 1979—80 | 1980—81 | 1981—82 |
| 1) | வார்ப்பு எஃகு | | | | |
| 2) | பிலாய் | 2.500 | 2.108 | 2.041 | 2.115 |
| 3) | துர்க்காப்பூர் | 1.600 | 0.882 | 0.741 | 0.930 |
| 4) | உரூர்கேலா | 1.800 | 1.268 | 1.650 | 1.203 |
| 5) | பொக்காரோ | 2.500 | 1.426 | 0.923 | 1.792 |
| 6) | இந்திய எஃகு நிறுவனம் | 1.000 | 0.565 | 0.609 | 0.600 |
| | பொதுத்துறை மொத்தம் | 9.400 | 6.249 | 5.479 | 6.640 |
| 7) | தாட்டா இரும்பு எஃகு | 2.000 | 1.779 | 1.874 | 1.956 |
| 8) | ஆந்திர இரும்பு நிறுவனம் | 0.1016 | 0.076 | 0.070 | 0.086 |
| 9) | விசாகப்பட்டிணம் எஃகு நிறுவனம் | 0.182 | 0.118 | 0.107 | 0.104 |

| ஏற்றுமதி இறக்குமதி (மிலியன் டன் & உரூபாய்) | | |
|---|---|---|
| இரும்பு எஃகுப் பொருள்கள் | 1979—80 | 1980—81 |
| இறக்குமதி | 1.4 (உரூ. 4489.4) | 1.0 (உரூ. 3582.2) |
| ஏற்றுமதி | 0.105 (உரூ. 184.2) | 0.049 (உரூ. 134) |

ஆதாரம் — இந்திய எஃகு உரிம நிறுவனம் (SAIL)

முறை பற்றிய பயிற்சிகள் இளம் பொறியாளர்களுக்கு இங்குக் கற்றுத்தரப்படுகிறது. பக்கம் - 400 இல் கண்டுள்ள அட்டவணைகள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இரும்பு எஃகு அளவினையும் இறக்குமதி, ஏற்றுமதி பற்றிய விவரங்களையும் அளிக்கின்றன. மு.நா.

துணை நூல்கள்:

**Baditha Srinivasa Rao**, Surveys of Indian Industries, Oxford University Press, London, 1957.

**India at a Glance**, Government of India, New Delhi, 1952.

***இந்தியத் தொழில் நிதிக் கழகம்***: இந்தியத் தொழில்துறை வளர்ச்சியடையும் பொருட்டு இடைக்கால, நீண்டகால நிதி உதவிகளை வழங்குவதற்கென 1948-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் இக்கழகம் உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் தொழில் புரட்சியின் இன்றியமையாமையை உலகமெங்கும் உணர்த்தியது. ஆங்கிலேயர் ஆட்சியால் இந்தியத் தொழில் துறை பின்தங்கிய நிலையில் வளர்ச்சியின்றிக் காணப்பட்டது. நாடு விடுதலை அடைந்தவுடன் புதுத் தொழில்கள் தொடங்கவும், ஏற்கனவே உள்ள தொழிற் கூடங்களைப் புதுமைப்படுத்தவும் விரிவுபடுத்தவும் தேவையான நிதி வசதிகளை அளிக்க இந்திய வணிக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தனியார் துறையும் முன்வர இயலாத நிலையிலிருந்தன. இவற்றின் முதல் இருப்பும் மேலாண்மைத் திறனும் எதிர்நோக்கும் இடர் தாங்கல்களை (Risks) எதிர்கொள்ளும் அளவுக்குத் தேவையான வளமும் ஆற்றலும் பெறவில்லை. இச்சூழலில் இந்திய அரசின் நேரடி ஈடுபாட்டின் விளைவாகத் தொழில் துறைக்கு உற்றுழி உதவும் நிறுவனமாகச் செயற்பட எண்ணி, தொழில் நிதிக் கழகச் (Industrial Finance Corporation of India -1948) சட்டத்தின் மூலம் இக்கழகம் பதிவு செய்யப்பட்டுச் செயற்படத் தொடங்கியது.

அமைப்பு: இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் அனுமதித்த பங்கு முதல் (Authorised Share Capital) 10 கோடி உரூபாய் (இப்போது 20 கோடி உரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது). இம் முதல் ஒவ்வொன்றும் 5000 உரூபாய் மதிப்புள்ள 20,000 செலுத்தப்பட்ட பங்குகளாகப் (Paid up Shares) பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 10,000 பங்குகளை மைய அரசு, இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India), அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள், இந்தியக் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India), கூட்டுறவு வங்கிகள், முதலீட்டு நிறுவனங்கள் (Institutional Investors) ஆகியவை வாங்கிக் கொண்டன. மைய அரசு முதலைத் திரும்ப அளிப்பதற்கும் (Repayment of Capital) ஆண்டுதோறும் குறைந்த அளவு ($2\frac{1}{4}$ விழுக்காடு) ஆதாயப் பங்கு அளிக்கவும் பொறுப்புறுதி அளித்துள்ளது. இந்தியத் தொழில் நிதிக்கழகம் கடனுறுதிச் சீட்டுகளையும் (Bonds) கடன் ஈட்டு ஆவணங்களையும் (Debentures) திறந்த அங்காடியில் வெளியிடவும், உலக வங்கி, பிற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து அயற் செலாவணி பெறவும், பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் (Deposits) பெறவும், இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து 3 கோடி உரூபாய் 18 திங்கள் காலக் கடனாகப் பெறவும் அதிகாரம் பெற்றுள்ளது.

குறிக்கோள்கள்: (1) தொழில் நிறுவனங்கள் புழக்கத்திற்கு விடும் (Floating) கடன் ஈட்டு ஆவணங்களுக்கு முன்பணமும் (Advances) கொடைகளும் (Grants) அளித்து உதவுதல். (2) தொழில் நிறுவனங்கள், முதல் அங்காடியில் (Capital Market) பெறும் கடன்களுக்குப் பொறுப்புறுதி (Guarantee) அளித்தல். (3) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் கடனுறுதிச் சீட்டுகள், கடன் ஈட்டு ஆவணங்கள், பங்குகள், இருப்புகள் ஆகியவற்றிற்கு ஒப்பளித்தல் (Underwriting). ஆனால், இவை பெறப்பட்ட காலத்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் முடிவுறுவதாக இருக்க வேண்டும். (4) தொழில் நிறுவனங்கள் 25 ஆண்டுகளுக்குள் திருப்பித்தரக் கூடிய கடன்களை வழங்குதல். (5) தொழில் நிறுவனங்களுக்கு அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள், பிற ஆவணங்கள், பொன், வெள்ளி, அசையும் சொத்து, அசையாச்சொத்து, அடமானம், ஒற்றி, அடகு ஆகியவற்றின் மேல் கடன் அல்லது பொறுப்புறுதி அளித்தல்.

இந்தியத் தொழில் நிதிக் கழகம் 1960-ஆம் ஆண்டு வரை பொதுத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே நிதி உதவிகளை வழங்கி வந்தது. இப்போது சட்ட முறைப்படி மாறுதல்கள் கொண்டு வரப்பட்டுத் தனியார் துறை சார்ந்த தகுதி வாய்ந்த தொழில் நிறுவனங்களுக்கும் நிதி உதவிகளை வழங்குகிறது. ஒரு நிறுவனத்துக்கு அளிக்கும் நிதி உதவியின் வரையறை 50 இலட்சம் உரூபாயிலிருந்து 1 கோடி உரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய உரூபாயிலும் அயற் செலாவணியிலும் அளிக்கப்படும் கடன்களுக்கு முறையே 11.25 விழுக்காடு, 11.50 விழுக்காடு வட்டி (1974-ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்களிலிருந்து) விதிக்கப்படுகிறது. சுரங்கத் தொழில், கப்பல் துறை, மின்சாரம் உற்பத்தி போன்ற அகக் கட்டுமானத் (Infrastructure) தொழில் வளர்ச்சியில் ஈடுபடும் நிறுவனங்கள் முன்னுரிமை (Priority) அடிப்படையில் நிதி உதவி பெறுகின்றன.

நீண்டகாலக் கடன்களையும் பெருந்தொகையையும் வழங்குவதால், நிதி உதவி கேட்கும் நிறுவனங்களின் தகுதியையும் ஆக்கத் திறமையையும் கடன் வழங்குமுன் இது நன்கு ஆய்வு செய்து மதிப்பீடு செய்கிறது. குறிப்பாக (1) நிதி கேட்கும் நிறுவனங்களின் பொருளாதார முக்கியத்துவம் (2) நிதி உதவி பெறும் திட்டங்களின் செயலெளிமையும் செலவும் (Feasibility&Cost) (3) நிறுவனத்தின் மேலாண்மைத் திறமை (4) பாதுகாப்பு வசதிகள் (5) தொழில்நுட்ப அறிவும் மூலப்பொருள் வளமும் (6) உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரம் (7) இந்தியப் பொருளாதாரத்தில் அதன் இன்றியமையாமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில் நிறுவனங்கள் சீர்தூக்கப்பட்டு நிதிஉதவி பெறும் தகுதி வரையறுக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்களின் நிலையான சொத்து, சொந்தமான நிலம், கட்டிடம், இயந்திரங்கள், தொழில் அமைப்பு ((Plant) ஆகியவற்றைக் கழகம் கடன் வழங்குவதற்குப் பிணையமாக ஏற்றுக் கொள்கிறது. மூலப்பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கடன் வழங்கப்படாவிடினும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்குப் பின் செலுத்தும் (Deferred Payments) முறைப்படி பணம் செலுத்தக் கழகம் பொறுப்புறுதி அளிக்கிறது.

கழகத்திலிருந்து நிதி உதவிபெறும் தொழில் நிறுவனங்களின் இயக்குநர்கள் தனிப்பட்ட முறையில் கடன்களுக்குப் பொறுப்புறுதி அளிக்க வேண்டும். இயக்குநர்களுள் இருவர் கழகத்திலிருந்து நியமிக்கப்படுகின்றனர். பெறப்பட்ட கடன் மனநிறைவளிக்காத அல்லது திறமையற்ற முறையில் செலவு செய்யப்படுவதாகக் கழகம் கருதினால், அத்தகைய நிறுவனத்தின் மேலாண்மைப் பொறுப்பை மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கழகம் பெற்றுள்ளது. கடனையும் வட்டியையும் பெறுவதில் மறுப்போ கால தாமதமோ ஏற்பட்டால் அடைமானப் பொருள்களைப் பறிமுதல் செய்யவும் கழகத்திற்கு அதிகாரம் உண்டு. தொழில் நிறுவனங்கள் கழகத்திற்கு அவ்வப்போது அளிக்கும் காலாந்தரப் பணி அறிக்கை கடன்களின் பயன்பாடு பற்றிய நிலவரத்தை அறியப் பயன்படுகிறது.

கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 1983-ஆம் ஆண்டு வரையில் 1680 கோடி உரூபாய் மதிப்புள்ள நிதி உதவிகளை நாட்டின் பல்வேறு அகக் கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இரசாயன உரம், சிமெண்டு, மின்சாரம், எந்திரம், தாள், சணல், சர்க்கரை ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் குறிப்பிடத்தக்க நிதி உதவிகளைக் கழகத்திடமிருந்து பெற்றுவருகின்றன.

இடர்தாங்கும் முதல் அடிப்படை (Risk Capital Foundation RCF) என்னும் திட்டத்தை 1975-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் கொணர்ந்து, அதன் மூலம் தொழில் முனைவோருக்குத் தொழில்நுட்ப உதவியுடன் வட்டியில்லாக் கடன்களும் அளித்துத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக் கழகம் முயன்று வருகிறது. இத்திட்டத்தினால் 1982-ஆம் ஆண்டு வரை 48 திட்டங்கள் (Projects) 3.6 கோடி உரூபாய் மதிப்புப் பெறும் நிதி உதவிகளைப் பெற்றுள்ளன.

**இந்தியத் தொழில் மறுசீரமைப்புக் கழகம்**: பழைமையான இந்தியத் தொழில்களையும் நலிவுற்ற தொழில்களையும் (Sick Industries) புதுப்பித்து மறுவாழ்வளிப்பதற்கென இக்கழகம் (Industrial Reconstruction Corporation of India) செயற்படுகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் வளர்ச்சி இன்றியமையாத அகக் கட்டுமானம்(Infra-structure) ஆகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியத் தொழில்கள் இங்கிலாந்து நாட்டின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்டிருந்ததால், தொழில் துறை வளர்ச்சி குன்றிப் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. பெரும்பாலான தொழிற்கூடங்கள் பழைமையானவையாயிருந்ததோடு, பழைமையான தொழில் முறைகள் பின்பற்றப்பட்டு உற்பத்தி சிறிய அளவில் செய்யப்பட்டது. நாடு விடுதலையடைந்தவுடன் ஏற்பட்ட விரைவான தொழிற்புரட்சி காரணமாக உற்பத்தி பெருமளவில் பெருகியதால் தொழில் துறை முற்றிலுமாக மறுசீரமைப்பு அடைய வேண்டியதாயிற்று. அதற்கான முதலும் தொழில்நுட்பமும் பல தனியார், பொது நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட்டன. எனினும் தேவைகள் மிகுந்து வளரலாயின. எனவே அவற்றை நிறைவு செய்யும் நோக்குடன் இக்கழகம் ஏப்பிரல் திங்கள் 1971-ஆம் ஆண்டு மைய அரசால் உருவாக்கப்பட்டது.

குறிக்கோள்: புதிய நோக்கின்றி நடத்தப்படும் பழைய காலத் தொழில் முறைகள் ஒழிக்கப்பட்டு எதையும் ஆய்ந்தறிந்து செய்யும் புதுமுறைகளைத் தொழில்நுட்ப வழிமுறைகளில் புகுத்தி அவற்றைச் செயற்படுத்துவதற்கான நிதி வசதிகளைப் பின்தங்கிய, நலிந்த தொழில்களுக்கு வழங்குதல்.

அமைப்பு: இந்திய மறுசீரமைப்புக் கழகத்தின் அனுமதித்த மூலதனம் (Authorised Capital) 25 கோடி உரூபாய்; செலுத்தப்பட்ட மூலதனம் (Paid up Capital)2.5 கோடி உரூபாய்; வெளியிட்ட மூலதனம் (Issued Capital) 10 கோடி உரூபாய். இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI), இந்தியத் தொழில் நிதிக்

கழகம் (IFCI), இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகம் (IICI), பாரத மாநில வங்கி, அட்டவணைப்படுத்தப் பட்ட வங்கிகள் ஆகியன வெளியிட்ட மூலதனத் தொகையைச் (Subscription) செலுத்தியுள்ளன. இவை தவிர மைய அரசு வட்டியில்லாக் கடனாக 10 கோடி உரூபாய் வழங்கியுள்ளது. இக்கழகத்தின் பொது மேலாண்மைப் பொறுப்பை இயக்குநர் குழு (Board of Directors) ஏற்றுள்ளது. அன்றாட மேலாண் மைப் பணிகளைக் கண்காணிப்பதற்கென ஒரு மேலாண்மை இயக்குநர் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியால் அமர்த்தப்பட்டுள்ளார்.

நாட்டின் பல மாநிலங்களிலும் 1970-ஆம் ஆண்டு அளவில் பரவலாகத் தொழிற்சாலைகள் மூடப் பட்டும், ஆதாயமின்றி இழப்பு நிலையில் பல தொழிற்சாலைகள் நலிந்தும், தொழில் முன்னேற்றம் மிக்கஅளவில் பாதிக்கப்பட்டது. இவற்றிற்கு மூலப் பொருள் பற்றாக்குறையும், தொழிலாளர் அமைதி யின்மையும், திறமையற்ற மேலாண்மையும், குறைந்த தேவையுமே காரணங்கள் என்று ஆய்வு முடிவுகள் சுட்டிக் காட்டின. இச்சூழ்நிலை நாட்டுப் பொருளா தாரத்திற்கு நீண்டகாலக் கேடு விளைவிக்குமாகையி னால் அதைத் தவிர்த்துத் தொழிற்சாலைகள் புத் துயிர் (Revitalise) பெற இந்தியத் தொழில் மறு சீரமைப்புக் கழகம் நிதி உதவிகளைப் பல திட்டங்கள் வாயிலாக வழங்குகிறது. இக்கழகம் 1982-ஆம் ஆண்டு வரையில் மட்டும் 185 நலிந்த, மூடப்பட்ட தொழிற்சாலைகளைப் புதுப்பிக்கவும் (Renovation) மீண்டும் ஆதாயம் தரும் வகையில் தொழில் நடத்த வும் 201 கோடி உரூபாய் கடனாகவும் பொறுப்புறுதி களாகவும் வழங்கியுள்ளது. இவற்றின் மூலம் நலிந்த பல நெசவாலைகள் (Textiles), பொறியியல் தொழில் கள் (Engineering Industries), சுரங்கத் தொழில்கள் (Mining Industry), வார்ப்புத் தொழில்கள் (Foundry) ஆகியன குறிப்பிடத்தக்க பயன்களைப் பெற்று மறு வாழ்வடைந்துள்ளன.

அண்மைக் காலத்தில் இக்கழகம் தன் அணுகு முறைகளைப் பன்முகப்படுத்தித் தொழில்களின் மறு சீரமைப்பிற்குத் துணையான (Ancillary) பணித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவுரைகள் பகர்தல், பயிற்சிகள் அளித்தல், வாணிகப் பணிகளை மேற்கொள்ளுதல், எந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக்கொடுத்தல் போன்ற உதவிகள் மூலம் நலிந்த தொழிற்கூடங்கள் புதுமை பெற்றுப் பொலிவுறுகின்றன. கழகத்தின் ஆலோசனைப் பணித் (Consultancy Services) திட்டம், நலிந்த தொழிற்கூடங்களின் இழப்பு, சீர் கேட்டிற்கான காரணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றின் மறுவாழ்வுக்கான தகுதிகளைச் சீர்தூக்கி அதன் அடிப்படையில் வங்கிகளும் நிதி நிறுவனங் களும் நிதி உதவிகள் வழங்க அவற்றிற்கு ஒப்புறுதி, பொறுப்புறுதி (Underwriting and Guarantee) ஆகிய வற்றை அளிக்கின்றன. வாணிகப் பணித் திட்டத்தின் மூலம் சீர் கேடடைந்த தொழில்கள் இணைந்தோ கூட்டாகவோ (Amalgamation and Mergers) புது மையாக்கம் (Modernisation) பெற இது உதவுகிறது.

**இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி**: இந்தியத் தொழில் துறை வளர்ச்சிக்குத் தேவையான நிதி வசதிகளை அளிக்கவும், பல நிதி நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும் 1964-ஆம் ஆண்டு இவ்வங்கி (Industrial Development Bank of India) நிறுவப்பட்டது. முனைப்புடன் விரைவாக முன்னேற்ற மடைந்து வரும் இந்தியத் தொழில் துறையின் பன் முகத் தேவைகளைப் பிற நிதி நிறுவனங்கள் மட்டும் நிறைவு செய்ய இயலாத காரணத்தினால் இத்த கைய வங்கியின் இன்றியமையாமை 1947-ஆம் ஆண் டிலிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்தது.

அமைப்பு: இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) கீழ் அதன் முழுப் பொறுப் பில் அமைக்கப்பட்ட இவ்வங்கி நாட்டின் நிதி நிறு வனங்களுக்குத் தலைமையான அமைப்பாக உருவாக் கப்பட்டது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் (Authorised Capital) 50 கோடி உரூபாயாகும். இந்திய மைய இருப்பு வங்கியின் உயர் நிருவாக இயக்குநர் குழு போன்ற இயக்குநர் குழு ஒன்று இவ் வங்கியின் தலைமை நிருவாகப் பொறுப்பை ஏற்று நடத்துகிறது. மைய இருப்பு வங்கியின் ஆளுநரும் உதவி ஆளுநரும் இவ்வங்கியின் தலைமை, உதவித் தலைமை அலுவலர்களாகச் செயலாற்றுகின்றனர். இவ்வங்கி 1976 ஆம் ஆண்டிலிருந்து இந்திய மைய இருப்பு வங்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பட்டு மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இந்திய மறுநிதிக் கழகத்தின் (Refinance Corporation of India) பொறுப்புகளும் இவ்வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நோக்கங்கள்: (1) பல நிதிநிறுவனங்கள், கழகங்கள் ஆகியவை அளிக்கும் நிதி வசதிகளைக் கண்காணித்து ஒருங்கிணைத்தல். (2) உற்பத்தித் தொழில், சுரங்கத் தொழில் பதப்படுத்தும் தொழில் (Processing Industry), கப்பல் தொழில், போக்குவரத்தைச் சார்ந்த தொழில் உணவு விடுதித் தொழில் (Hotel Industry) ஆகிய வற்றிற்கு நிதி வசதிகள் அளித்தல். (3) இத் தொழில் களுக்குக் கடன்களையும் முன்பணத் தொகையையும் (Advances) அளிப்பதுடன் அவற்றின் இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் (Stocks, Shares & Bonds) ஆகியவற்றிற்குப் பொறுப்புறுதி அளித்தல். (4) இத்தொழில் நிறுவனங்களின் வணிகச் சீட்டு (Com

mercial Bills), வாக்குறுதிச் சீட்டுகள் (Promisory Notes)போன்றவற்றைக் கழிவு செய்தல், மறுகழிவு செய்தல் ஆகியனவாகும்.

**பணிகள்:** மேற்கூறிய நேரடி நிதி உதவிகளை வழங்குதல் மட்டுமன்றி மறை முகமான உதவிகளைப் பிற நிதி நிறுவனங்களின் மூலம் வழங்குதலும் இவ்வங்கியின் சிறப்புத் தன்மையாகும். இந்தியத் தொழில் நிதிக் கழகம் 3 ஆண்டு முதல் 25 ஆண்டுக்காலக் கடன் திட்டங்களைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்க வங்கி மறுநிதி (Refinance) வசதிகளைக் கழகத்திற்கு அளிக்கிறது; அதே வகையில் 3 ஆண்டு முதல் 10 ஆண்டுக்காலக் கடன் வசதிகளை அளிக்க அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் மறுநிதி வசதிகளை வழங்குகிறது. இந்தியத் தொழில் நிதிக் கழகமும் பிற நிதி நிறுவனங்களும் தங்கள் நிதி வளத்தைப் (Resource) பெருக்கும் நோக்கத்துடன் அவற்றின் இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றிற்கு இவ்வங்கி பணம் செலுத்துகிறது. மேலும், இவ்வங்கி 1964-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கிச் சட்ட முறைப்படி, குறைந்த வருவாய் காரணமாகப்பிற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி வசதிகளைப் பெறத் தகுதியற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை அளிக்கும் உரிமையைப் பெற்று, அதற்கெனத் தனிச்சிறப்பு நிதி (Special Fund) ஒன்றை உருவாக்கியது. பிற நிறுவனங்கள் கட்டுப்பாடான பாதுகாப்புப் பிணையங்களைப் பெற்று மட்டுமே கடன்களை வழங்கும். இத்தகைய கட்டுப்பாடுகள் எதுவுமின்றிக் கடன்களை வழங்கும் அதிகாரத்தை இவ்வங்கி பெற்றுச் செயற்படுகிறது.

தொழில் நிறுவனங்களுக்கு நேரடிக் கடன்கள், ஏற்றுமதிக் கடன்கள், கடனுறுதிச் சீட்டுகளை மறுகழிவு செய்தல் போன்ற நிதி நடவடிக்கைகளின் மூலமாக 1983-ஆம் ஆண்டு வரை இந்தியத்தொழில் முன்னேற்ற வங்கி 10320 கோடி உரூபாய் வழங்கியுள்ளது. நிதி உதவிக்கென 1982-83-ஆம் ஆண்டில் மட்டும் 2175 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டு அதில் 1580 கோடி உரூபாய் வழங்கப்பட்டது.

பின்தங்கிய மண்டலங்களின் தொழில் முன்னேற்றத்திற்கென 1969-ஆம் ஆண்டுத் தனித் திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்த இவ்வங்கி நிதி உதவிகளை அளித்து வருகிறது. நடுத்தர, சிறு தொழில்கள் பின்தங்கியமண்டலங்களில் நிறுவுவதற்குத் தேவையான நிதி உதவிகளை மென்மைக் கடன் திட்டத்தின் (Soft Loan Scheme) மூலம் வழங்குகிறது. இத்திட்ட முறையில் கடன்கள் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணை முறையில் திரும்பப் பெறும் வகையில் அளிக்கப்படுகின்றன. இக்கடன்கள் ஒரு கோடி உரூபாய் மதிப்புப் பெறும் தொழில் திட்டங்களுக்குப் (Projects) பெருமளவில் வழங்கப்படுகின்றன. நேரடியாகவும் மறைமுகமாகவும் பிற நிதி நிறுவனங்கள் பின்தங்கிய மண்டலங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு நிதி வசதிகளை அளிக்கக் கட்டுப்பாடுகளை விலக்கி வங்கி செயற்படுகிறது. பின்தங்கிய மண்டலங்களின் தொழில் வளர்ச்சிக்கென 1982-83-ஆம் ஆண்டில் 852 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டு அதில் 675 கோடி உரூபாய் பல நிறுவனங்களுக்கும் இவ்வங்கி வழங்கியது.

சிறு தொழில் வளர்ச்சிக்கெனவும் தனித் திட்டங்களை வகுத்து நிதி வசதிகளை இது அளிக்கிறது; மாநில அளவில் வணிக வங்கிகள் மூலம் போக்குவரத்துத் தொழில்கள் தொடங்கப்பட்டு வளர்ச்சியடைய மறுநிதிக் கடன்களை வழங்குகிறது. இவ்வசதிகளின் மூலம் பெருவாரியான தனியார் துறை சாலைப் போக்குவரத்து முனைவோர்கள் (Entrepreneurs) சரக்குந்துகள் (Lorries), இழுப்புந்துகள் (Trucks) முதலான கருவிகளைப் பெற்றுத் தொழில் நடத்துகின்றனர். இதற்கென இது 1982-83-ஆம் ஆண்டில் 778 கோடி உரூபாய் வழங்கியது. மேலும், பழைய சிமெண்டு, பஞ்சு, துணி, சணல், சர்க்கரை ஆலைகள், எந்திரம் உற்பத்தி செய்யும் ஆலைகள் முதலானவற்றைப் புதுமைப்படுத்துவதற்காகவும் (Renovation) அவற்றில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்துவதற்காகவும் மென்மைக் கடன்களை 15 ஆண்டுக்காலக் கடன்களாக 7.5 விழுக்காடு வட்டிக்கு வழங்குகிறது.

இந்தியத்தொழில் துறை பெறும் நிதி உதவிகளில் 47 விழுக்காடு உதவிகள் இவ்வங்கியின் மூலம் வழங்கப்படுகின்றன. இந்தியத் தொழில் துறையின் தலையாய நிதி நிறுவனமாக இவ்வங்கி செயற்படுகிறது எனக் கூறினால் மிகையாகாது.

**இந்தியத் தொழிலாளர்:** மக்கள் தொகை மிகுந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மனித உழைப்பு (Labour) மூலவளமாக விளங்குகிறது. தொழிலாளர்களின் திறமை, தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் உழைப்பின் தன்மை நாட்டுக்கு நாடு வேறுபட்டுப் பல்வகைப்படும். இந்தியத் தொழிலாளர்கள் (Indian Labour Force) பயிற்சியும் தொழில்நுட்ப அறிவும் வாய்ப்பும் கொடுக்கப்பட்டால் மிகச் சிறந்த ஆற்றலுடன் உழைக்க வல்லவர்களாக விளங்குவர். இக்காரணியைப் பயன்படுத்துகிற தொழில் அமைப்பும்

தொழில் நுட்பமும் உழைப்பின் ஆக்கத் திறனை (Productivity) உயர்த்தி, உற்பத்திப் பெருக்கத்திற்கு இன்றியமையாத் தேவையான ஆள்சார் மூல தனத்தை (Human Capital) அளிக்க வல்லதா யுள்ளன. உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணி களைத் தனித்தனியாகப் பாகுபடுத்துவது பின்னிப் பிணைந்த ஒன்றாகும். உழைப்பையும் மூலதனத் தையும் பெருக்குவதால் மட்டும் ஒரு நாடு முன் னேற்றமடைந்து விடாது. உற்பத்தியை மேன்மேலும் பெருக்கக்கூடிய (Accelerator) ஆற்றல் இந்தியா போன்ற நாட்டு மக்களுக்கு இருக்கலாம்; ஆனால், ஆற்றல் இருந்தால் மட்டும் போதாது. அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளில் பல்வேறு அடிப் படையான மாறுதல்களை ஏற்படுத்தவும் வேண்டும் என்று அண்மைக்காலப் பொருளியல் ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

மரபியல் வழித் தொடர்ச்சியாக இந்திய வேளாண்மையில் உழைப்புச் செறிந்து (Labour Intensive) காணப்படுகிறது. தொழிலாளருள் மிகப்பலர் வேளாண்மையைச் சார்ந்திருப்பதால் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தி (Marginal Physical Product–MPP) வெறுமை (Zero) யாயுள்ளது. இதைத்தான் மிகை உழைப்பு (Surplus Labour) எனக் கூறுவார்கள். இவர்கள் ஈடுபட்டிருக்கும் வேளாண்மை வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டால் விளைச்சல் சிறிது கூடக் குறைந்துவிடாது. இதுவே மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) என்றும் கூறப்படும். தொழிற்றுறை வளர்ச்சியினால் உபரித் தொழிலாளர் உயர்ந்த ஊதியமும் குறைந்த உடல் உழைப்பும் மிக்க தொழிற்றுறைக்கு மிக விரைவாக மாறுகின்றனர். எனினும், மக்கள் தொகை வெடிப்பெருக்கம் (Population Explosion) சமூகப் பொருளாதார, அரசியல் சூழ்நிலை, பின்தங்கிய தொழிற்றுறை ஆகியவற் றின் காரணமாக வேளாண்மைத் தொழிலாளர் களின் இடப்பெயர்ச்சி (Migration) குறிப்பிடத்தக்க தாக்கம் (Impact) உள்ளதாக மாற்றங்களை ஏற் படுத்தவில்லை.

தொழிற்றுறைத் தொழிலாளர் (Industrial Labourer) என்பது பொதுவாகப் பேரளவுத் தொழிற் சாலை, சிற்றளவுத் தொழிற்சாலை, குடிசைத் தொழில் ஆகியவற்றில் வேலைசெய்யும் தொழி லாளர்களைக் குறிக்கும். ஆனால், இந்தியா வில் தொழிற்றுறைத் தொழிலாளர் என்பது தொழிற் கூடச் சட்டத்தில் (Factories Act) அடங்கும் ஒருங்க மைந்த தொழிற்றுறையைச் (Organised Sector) சார்ந்த தொழிலாளர்களை மட்டுமே குறிக்கும்.

வரலாறு: இந்தியத் தொழிலாளர் வரலாறு அடிமைத்தனம் (Slavery) ஒழிக்கப்பட்ட கி.பி. 1883-ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. அவ்வாண்டின் தொழிற்சாலைச் சட்டம் இளங்குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடை செய்தது. முதன் முறையாக, தொழில் முனைவோர் தொழிற் சாலைகள் பணிக்காலத்தையும் தொழிலாளர்கள் உணவு உட்கொள்ளும் நேரத்தையும் வரையறுக்க வேண்டுமென்று இச்சட்டம் வலியுறுத்தியது. இச்சட்ட முறைகள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் நடைமுறையில் சட்டம் செயற்படவில்லை. பத்தாண் டுக்கால இடைவெளிக்குப் பின்னர் விபத்து விளை விக்கக்கூடிய இயந்திரங்களைச் சுற்றி வேலியடைக்க வேண்டுமெனவும் 16 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பணிக்காலம் (Child Labour) நாள் ஒன்றுக்கு $6\frac{1}{2}$ மணி அளவு மட்டுமாகவே இருக்க வேண்டும் எனவும் புதிய சட்டம் கி.பி. 1844-இல் கொண்டு வரப்பட்டது. சட்ட ஒழுங்குகளைச் செயற்படுத்துவதற்கெனத் தனித்துறை நிறுவப்பட் டது. கண்காணிப்பாளர்களும் அமர்த்தப்பட்டனர். திக்கற்ற குழந்தைகளுக்கும் வறுமையுற்றோருக்கும் உதவி வழங்கும் பொருட்டு கி.பி. 1850-ஆம் ஆண்டு தொழிற்பயிற்சிச் சட்டம் (Apprentices Act) இயற் றப்பட்டது. பணியின் இயல்பு காரணமாக உயிர் இழக்கும் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு இழப் பீட்டுத் தொகை (Compensation) அளிக்க வேண்டும் எனக் கி.பி. 1835-ஆம் ஆண்டில் இடரார்ந்த விபத் துச் சட்டம் (Fatal Accidents Act) இயற்றப்பட்டது. கப்பல் தொழிலாளர்களின் சட்டம் கி.பி. 1859-இல் கடலில் பணியாற்றும் கப்பல் தொழிலாளர்களின் உடல்நலன், பணிக்காலம், தங்கும் வசதி ஆகியவற் றைச் சீரமைக்க முற்பட்டது.

பருத்தித் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிலைமை கடினமானதாகவும் மிக மோசமானதாகவும் வருந்தத் தக்கதாகவும் இருந்தது என்று பம்பாய்த் தொழிற்சாலை ஆணை யமும் (Bombay Factory Commission) பம்பாய்த் தொழிலாளர் ஆணையமும் முறையே கி.பி. 1884, கி.பி. 1890-ஆம் ஆண்டுகளில் தங்கள் அறிக்கைகளின் மூலம் வெளியிட்டன. அவற்றின் பரிந்துரைகளின்படி கி.பி. 1891-ஆம் ஆண்டுத் தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 50க்கும் அதற்கு மேலும் வேலைசெய்யும் தொழிலாளர்களைக் கொண்ட தொழில்களுக்கெனத் தனியாக இயற்றப் பட்டது. இத்தகைய தொழிலகங்களில் பணியாற்றும் குழந்தைகளின் குறைந்த வயது 9-இலிருந்து 14 ஆக உயர்த்தப்பட்டது; பணிநேரம் காலை 5 மணியி

லிருந்து இரவு 8 மணிக்குள் நாளொன்றுக்கு 7 மணி அளவென்று வரையறுக்கப்பட்டது. பெண்களின் பணி நேரம் காலை 5 மணிக்கு முன்பும் இரவு 7 மணிக்குப் பின்பும் தடை செய்யப்பட்டு, நாளொன்றுக்கு 11 மணி அளவு என்றும் வரையறுக்கப்பட்டது. தொழிற் சாலைகள் தூய்மையாகவும் காற்றோட்ட வசதிகளுடனும் அமைய வேண்டும் எனவும் தொழிலாளர் நெருக்கடி (Over Crowding) தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஒழுங்குகள் விதிக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில்: இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தனியார் நற்பணி நிறுவனங்கள் (Voluntary Institutions) பல தொழிலாளர்களின் நலன் நாடி, பல பணிகளில் ஈடுபட்டன. இரயில் துறை, அஞ்சல் துறை முதலியன தொழிலாளர்களுக்குத் தனியார் நற்பணி மன்றங்களின் மூலம் காப்பீட்டுத் திட்டங்கள், இரவுப் பள்ளிக்கூடங்கள், கல்வி உதவித்தொகை, ஈமச் சடங்குகளுக்கு உதவித் தொகை போன்றவற்றை வழங்கின. இந்திய அரசும் தொழிலாளர்களின் நிலையை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு ஓர் ஆணையத்தை (Commission) 1907-ஆம் ஆண்டு அமர்த்தியது. அவ் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1911-ஆம் ஆண்டு இந்தியத் தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் பருவகாலத் தொழிலகங்களில்(Seasonal Factories) வேலைசெய்யும் தொழிலாளர்களையும் உள்ளடக்கியது. குழந்தைகளின் வேலை நேரம் நாளொன்றுக்கு 6 மணி அளவு எனக் குறைக்கப்பட்டது. முதன் முறையாக வயது வந்த தொழிலாளர்களின் (Adult Labourer) வேலைநேரம் நாளொன்றுக்கு 12 மணி அளவு என வரையறுக்கப்பட்டது. சட்டமுறைப்படி தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வசதிகளும் அவசர மருத்துவ உதவிகளும் வழங்கத் தொழில் முனைவோர் (Entrepreneur) கடமைப்பட்டனர்.

முதலாம் உலகப்போர் தொடங்கிய 1914-ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் அவர்களின் முன்னேற்ற நடவடிக்கைகளிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. உருசிய நாட்டுப் புரட்சியின் (Russian Revolution) தாக்கமும் இந்தியத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கியது. பண்டங்களின் விலைகள் உயர்ந்த வேகத்திற்கு ஈடாகத் தொழிலாளர்களின் ஊதியம் உயராததால் அமைதியின்மை தொழிற்சாலைகளில் பெருகியது. பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) 1919-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் (All India Trade Union Congress) 1920-ஆம் ஆண்டில் உருவாகியது. இக்காரணங்களால் தொழிலாளர்களிடையே புரட்சியும் அமைதியின்மையும் நாளுக்கு நாள் வலுப்பெற்றுக் கொண்டே வந்தன. எனவே, நிலைமையைத் தணிக்கும் வகையில் 20 தொழிலாளர்களுக்குக் குறைவில்லாமல் ஆற்றலைப் பயன்படுத்தும் (Power) தொழிற்சாலைகளைத் தொழிற் சட்டத்திற்குள் கொண்டுவரத் தக்கதான தொழிற்சாலைச் சட்டம் 1922-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்ட முறைகளின்படி 12 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டது. அதற்கு மேல் 14 வயதுக்குக் குறைந்த குழந்தைத் தொழிலாளர்களின் வேலை நேரம் நாளொன்றுக்கு 6 மணி அளவுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. வயது வந்த தொழிலாளர்களின் பணி நேரம் நாளொன்றுக்கு 11 மணி அளவெனவும் வாரத்திற்கு 60 மணி அளவென்றும் வரையறுக்கப்பட்டது. தொழிலாளர்களின் நிலையைக் கண்காணிக்கத் தொழில்நுட்ப அறிவுபெற்ற முழுநேரக் கண்காணிப்பாளர்கள் மிகுந்த அதிகாரங்களுடன் அமர்த்தப்பட்டனர்.

அரசத் தொழிலாளர் ஆணையம் (The Royal Commission on Labour), தோட்டத் தொழிலாளர்கள் (Plantation Workers) உட்படப் பிற தொழிலாளர்களின் நிலையை ஈராண்டுகள் ஆராய்ந்து தன் அறிக்கையை 1931-ஆம் ஆண்டு அரசிடம் கொடுத்தது. அதன் பரிந்துரைகள் இந்தியத் தொழிலாளர் வரலாற்றில் முக்கிய திருப்பத்தை உண்டாக்கிய 1934-ஆம் ஆண்டுத்தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்படக் காரணமாயிருந்தன. இச்சட்டம் அதற்கு முந்திய சட்டக் கூறுகளில் உள்ள சிலவற்றை மாற்றியமைக்கவும், சிலவற்றை ஒருங்கிணைக்கவும், தொழிலாளர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் காலதாமதமின்றி ஊதியம் வழங்கவும், குறைந்த ஊதியத்தை வரையறுக்கவும், தொழிலாளர் நல வாழ்வுக்கான காப்பீட்டுத் திட்டத்தைச்(Health Insurance Scheme) செயற்படுத்தவும் வழி வகுத்தது. இதன்மூலம் முதன் முறையாகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பருவ காலத் தொழிலாளர்கள், நிலையான தொழிலாளர்கள் ஆகிய இரு வகையினரிடையே காணப்படும் வேறுபாடுகள் வரையறுக்கப்பட்டன. குழந்தைத் தொழிலாளர் வேலைநேரம் 5 மணி அளவென்றும் பெண்களின் வேலை நேரம் 10 மணி அளவென்றும் குறைக்கப்பட்டன. தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் உடல்நிலைக்கு ஏற்ற வசதிகளுடன் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. முதன் முறையாகச் சமூகநலத் திட்டங்கள் செயற்பட சட்ட முறையில் வழிவகைகள் ஏற்பட்டன. தொழிற்சாலை

வளாகத்தில் இளைப்பாறுதலுக்கான அறைகளும் (Rest Sheds) இளங்குழந்தைகள் காப்பகம் (Creches) முதலியனவும் நிறுவப்படத் தொழில்முனைவோர் கடமைப்பட்டனர்.

பம்பாய் ஆடைத் தொழிலாளர் ஆய்வுக் குழு (1937), கான்பூர்த்தொழிலாளர் ஆய்வுக் குழு (1937), மைய மாநில ஆடைத் தொழிலாளர் ஆய்வுக் குழு (1938), பீகார்த்தொழிலாளர் ஆய்வுக் குழு (1938) போன்ற குழுமங்கள் அரசின் சார்பில் நாடெங்கிலுமுள்ள தொழிலாளர்களின் வேலை நிலையையும் வாழ்க்கை நிலையையும் ஆராய்ந்தன. இவற்றின் அறிக்கைகளின் விளைவாகத் தொழிலாளர்களின் சமூக, சுகாதார, வீட்டு வசதிகள் முன்னேற்றமடைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை அரசு உணர்ந்தது. அதற்கென மீண்டும் 1944-ஆம் ஆண்டில் தொழிலாளர் நிலை ஆய்வுக் குழு (Labour Investigation Committee), அமர்த்தப்பட்டது. இக்குழு ஆழ்ந்து பரந்த ஆய்வுக்குப் பின் விரிவான தன் அறிக்கையில் இந்தியத் தொழிலாளர்களின் வருந்தத்தக்க சமூக வாழ்க்கை நிலையையும், நெருக்கடியான வீட்டு வசதிகளையும், கடினமான ஆனால் குறைந்த ஊதியத்துடன் உடல் நலத்தைப் பாதிக்கும் வகையிலான வேலை நிலையையும், தொழிலகங்களின் திட்டமிடப்படாத அமைப்பையும் பற்றித் தெளிவாக வெளியிட்டது. தொழிலாளர்களின் பல சமூகப் பொருளாதாரச் சிக்கல்களும் இன்னல்களும் அரசின் கவனத்திற்கு முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டன.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் (1939-1945) தொழில் துறையில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகவும் உற்பத்திப் பெருக வேண்டும் என்பதற்காகவும் அரசு, தொழிலாளர் நலத் திட்டங்களை நிறைவேற்றியது. வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்றவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டது. தொழிலக வழக்குகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டன. கலந்தாலோசனைகள் மூலம் தீர்வுகள் காணவும் அரசு உதவ முன்வந்தது; ஆய்வுக் குழுக்களின் பரிந்துரைகளைப் படிப்படியாக விரைவில் நிறைவேற்றுவதாக வாக்குறுதிகளை அளித்தது. போரின் காரணமாக இயல்பாகவே தொழிலாளர்களிடையே கூட்டு வாழ்க்கை (Communal Life) மிகுந்தது. தொழிற்சாலை வளாகத்தில் இளைப்பாறுதலுக்கான வசதிகள், பொழுது போக்குக்கான வசதிகள் (Recreation Facilities), மருத்துவ வசதிகள், சிற்றுண்டியகங்கள் (Canteens), இளங்குழந்தைகள் காப்பகம், தண்ணீர் வசதிகள் முதலியற்றை அளிக்குமாறு தொழில் முனைவோரை அரசு வற்புறுத்தியது. போர்க் காலத்தில் தொழில்லாளர்களின் எண்ணிக்கை பெருகியது. பாதுகாப்புத் தேவைப்படும். தொழிற்சாலைகளுக்கு அரசு பாதுகாப்பு அளித்தது. தொழிற்சாலைச் சட்டங்களைச் செயற்படுத்துவதற்கெனத் தனித்துறை அரசாங்கத்தில் நிறுவப்பட்டது.

நாடு விடுதலையடைந்தபின் இந்தியத் தொழிலாளர் வளர்ச்சி ‘தொழிலாளர் இயக்கம்’ (Labour Movements) என்ற புதிய கண்ணோட்டத்தில் முன்னேற்றமடைந்தது. தொழிலாளர்களின் நலனே உற்பத்தியைப் பெருக்கித் தொழிற்றுறை செழித்தோங்க அடிப்படையாக அமையும் என்னும் கருத்து பொதுவாக உணரப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு முறையில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வறுமையை ஒழிக்கவும் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கவும் அரசு திட்டமிட்டுச் செயற்படும் எனத் தன் கொள்கைக் கோட்பாடுகளை அறிவித்துச் செயற்படத் தொடங்கியது. அத்துடன் வேகமாகப் பல மையத் தொழிற்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக, இந்திய நாட்டுத் தொழிற்சங்கக் காங்கிரசு (INTUC) 1947-ஆம் ஆண்டிலும், இந்தியத் தொழிலாளர் சங்கம் (HMS) 1948-ஆம் ஆண்டிலும், ஒருங்கிணைந்த தொழிலாளர் சங்கக் காங்கிரசு (UTUC) 1949-ஆம் ஆண்டிலும், பாரதத் தொழிலாளர் சங்கம் (BMS) 1955-ஆம் ஆண்டிலும், இந்திய மையத் தொழிலாளர் சங்கம் (CITU) 1970-ஆம் ஆண்டிலும் உருவாக்கப்பட்டு, இவை யாவும் பல அரசியல், சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டங்களுடன் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டன.

இரீகுக் குழு (Rege Committee) எனக் கூறப்படும் 1944-ஆம் ஆண்டுத் தொழிலாளர் நிலை ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், விடுதலையடைந்த இந்திய அரசு தன் முதல் தொழிற்சாலைச் சட்டத்தை 1948-ஆம் ஆண்டில் இயற்றியது. இச்சட்டக் கூறுகளின் ஒவ்வொரு திட்டங்களினாலும் தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட உறுதி அளிக்கப்பட்டதால், இச்சட்டம் மிகச் சிறந்ததாக இன்று வரை கருதப்படுகிறது. பத்துத் தொழிலாளர்களுக்குக் குறையாமல் ஆற்றலுடன் செயற்படும் தொழிற்சாலைகளும் 20 தொழிலாளர்களுக்குக் குறையாமல் ஆற்றலின்றிச் செயற்படும் தொழிற்சாலைகளும் தொழிற்சாலைச் சட்ட வரம்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. பருவ காலத் தொழிற்சாலைகளும் இதனுள் அடங்கும். சுரங்கத் தொழில் துறைக்கு மட்டும் தனிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்: (1) விபத்து ஏற்படுத்தக்கூடிய எந்திரங்

களின் பாதுகாப்பு (2) தொழிலாளர் உடல் நலனுக்குகந்த சுத்தமான காற்றோட்ட வசதிகளுடனான தொழிற்சாலை அமைப்பு (3) குடிநீர் வசதி (4) குளியலறை, கழிப்பிட வசதிகள் (5) உணவகம், இளைப்பாறும் அறை (6) இருக்கை வசதிகள் (7) முதல் உதவி மருந்தக விடுதி (Dispensary) (8) இளங்குழந்தைக் காப்பகம் (9) தொழிலாளர் நல அதிகாரி (Welfare Officer) (10) உமிழ் தொட்டிகள் (Spittoons) (11) ஊதியத்துடன் 20 வேலைநாட்களுக்கு ஒரு விடுமுறை நாள் (12) வயது வந்தோரின் வேலை நேரம் வாரத்திற்கு 48 மணி அளவு, குழந்தைகளுக்கு வாரம் ஒன்றுக்கு 27 மணி அளவு (13) குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்துவதில் நெறி முறைகள் (14)கூடுதல் நேர(Over time)ஊதியம் (15) தொடர்ச்சியான 5 மணி அளவு வேலைக்குப் பின் ½ மணி அளவு கட்டாய இளைப்பாறுதல் (16) மொத்த நேர வேலை (17) வார விடுமுறை ஆகியன பற்றியவையாம்.

இந்தியத் தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய எல்லாக் கூறுகளையும் தன்னுள்ளடக்கியுள்ள இச் சட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. மாநில அரசுகள் தங்கள் அரசாங்கக் கண்காணிப்பாளர்கள் மூலம் தொழிலகங்களில் இவற்றைச் செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளன. சட்டம் முழுமையாகச் செயற்படத் தொழில் முனைவோர் தொழிலாளர் ஆகிய இருவரின் ஒத்துழைப்பும் வலியுறுத்தப்படுகிறது. தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்படத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொழிலாளர் நிலையங்களும் (Labour Institutes) பொதுத் தொழிலக அறிவுரைப் பணி இயக்கமும் (The Directorate of General Factory Advice Service) நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் ஆலோசனைகள், அறிக்கைகள், அறிவுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவ்வப்போது தேவையான சட்ட மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மாநிலங்களிலிருந்து மாநிலத் தலைமைத் தொழிலகக் கண்காணிப்பாளர்கள் சட்ட மாறுதல்களுக்கான பரிந்துரைகளை அனுப்புகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டங்கள்: தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படவும் வேலைநிலையில் முன்னேற்றம் காணவும் முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1951-56) தொழிலக வழக்குகளைத் (Industrial Disputes) தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. தொழிலாளர், முதலாளி ஆகியஇருவரிடையே நல்லெண்ணமும் பற்றுணர்வும் ஒப்பந்தமும் ஏற்பட்டு வழக்குகள் தீர்க்கப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இக்காலத்தில் தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951-ஆம் ஆண்டிலும், சுரங்கத் தொழிலாளர் சட்டமும் தொழிலாளர் பாதுகாப்பு நிதிச் சட்டமும் (Empjloyees Provident Fund Act) 1952-ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு 1952-ஆம் ஆண்டிலிருந்து குடியமைப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாநில அரசுகள் தொழிலாளர் நலன்களுக்கெனப் பல சட்டங்களை இயற்றிச் செயற்படுத்துகின்றன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக காலத்திலும் (1956-61) தொழிலாளர்களின் வேலைநிலையில் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழிலகங்களில் ‘மக்களாட்சி முறை’ (Democracy) புகுத்தப்பட்டது.கடல், கப்பல், துறைமுகம் ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் தனிச் சட்டங்கள் 1961-இல் இயற்றப்பட்டன. மாநிலக் காப்பீட்டுத் திட்டம் விரிவாக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்கென்று தனித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு உதவித் தொகையும் கடனும் வழங்கப்பட்டன. பல மாநிலங்கள் தொழிற்சாலைகள் மட்டுமல்லாமல் கடைகள், பிற தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கச் சட்ட முறையில் நடவடிக்கைகள் எடுத்தன. இத்திட்டக் காலத்தில் பல தொழிலகக் குடியிருப்புகள் (Industrial Colonies) தோன்றின.

பல சட்டங்களின் மூலம் வலியுறுத்தப்பட்டும் செயற்படாத தொழிலாளர் நலத் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவது மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் (1961-66) இலக்காகக் குறிக்கப்பட்டது. தொழிலாளர் வேலைநிலையை உயர்த்தி, அவர்களின் திறமையை உயர்த்துவதால் உற்பத்தியைப் பெருக்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மாநில அரசுகள் தொழிற்சாலைக் கண்காணிப்பாளர்களின் மூலம் சட்டங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்பட்டன. தொழிலாளர் கூட்டுறவு அமைப்புகள், நுகர்வோர் அங்காடிகள் முதலியவற்றை அமைத்து அவற்றைத் தொழிலாளர் சங்கங்களும் தனியார் பணி நிறுவனங்களும் நிருவகிக்க ஊக்குவிக்கப்பட்டன. பேறுகால நலச் சட்டமும் பயிற்சிச் சட்டமும் (Apprentices Act) இரும்பு, எஃகுத் தொழிலாளர் நலத் தீர்வைச் சட்டமும் 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்டன. ஊக்க ஊதியச் சட்டம் (Bonus Act) 1961-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969-74) மாநிலத் தொழிலாளர் காப்பீட்டுத் திட்டம் காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்றுக் கொண்ட தொழிலாளர் குடும்பத்தின் மருத்துவச் செலவுக்குக் காப்பீடு அளிக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்தது. இத் திட்டம் கடைகளுக்கும் பிற தொழில் நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. தொழிலாளர் குடும்ப ஓய்வு ஊதியத் திட்டமும் நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர் பணிக்கொடைச் (Gratuity) சட்டம் 1971-ஆம் ஆண்டிலும் ஒப்பந்தத் தொழிலாளர் நிலையை நெறிப்படுத்தும் சட்டம் 1970-ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டன. தொழிலாளர் நல மையங்கள், விடுமுறை இல்லங்கள் (Holiday Homes), பொழுது போக்கு மையங்கள் முதலியன நிறுவப்படுவதற்கான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன தொழிலாளர்நலத் திட்டங்களுக்கென மட்டும் உரு. 36.11 கோடி செலவிடப்பட்டது.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1974-79) உரூ.42.37 கோடி தொழிலாளர் நலத் திட்டங்களுக்காகவும், உரூ. 42.37 கோடி கைவினைஞர்களுக்குப் (Craftsmen) பயிற்சி அளிப்பதற்காகவும் செலவிட்ப்பட்டன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 100 தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் பணிக் குழுக்கள் (Work Committees) அமைக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. இக் குழுக்கள் தொழிலாளருக்கும் நிருவாகத்தினருக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும் தொழிலக வழக்குகளைத் தங்களுக்குள் பேச்சுகளின் மூலம் தீர்த்துக் கொள்ளவும் பாடுபடுகின்றன. நாடெங்கிலுமுள்ள தொழிற்சாலைகளில் 1982-ஆம் ஆண்டில் 788 பணிக் குழுக்கள் செயற்பட்டன. தொழிலாளர் பாதுகாப்பு நிதித்திட்டத்தினால் 1983-ஆம் ஆண்டில் 172 தொழிற்சாலைத் தொழிலாளர்கள் பயனடைந்தனர் எனப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. இத்திட்டத்தினால் தொழிலாளர்களிடையே சேமிப்பு ஆர்வம் வளர்ச்சியடைகிறது. இந்நிதிபிற்காலத் தேவைக்கும் குடும்பம் நலிவுறாமல் பாதுகாக்கப்படுதற்கும் உதவுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 1982-ஆம் ஆண்டில் 11,56,400 ஆகும். அவ்வாண்டில் இந் நிதியில் சேர்க்கப்பட்ட தொகை உரூ. 85,54,26,000 ஆகும்.

இந்தியத் தொழிலாளர்களின் வளர்ச்சி, இக் கால முறையில் 1900-ஆம் ஆண்டில் தொடங்கியது எனலாம். அதன் வளர்ச்சி வீதம் சிறப்பான வகையில் விரைவு பெறவில்லை. அந்த ஆண்டில் 5 இலட்சம் தொழிலாளர்கள் நாட்டில் பல தொழிற் கூடங்களில் பணியிலிருந்தனர். முதலாம் உலகப் போர்க் காலத்திலிருந்து இரண்டாம் உலகப்போர் தொடங்கிய 1914 க்கும் 1939 க்கும் இடைப்பட்ட காலத்தில் தொழிலாளர் எண்ணிக்கை 950,000-இலிருந்து 1,750,000 ஆக உயர்ந்தது. தொழிற் சாலைகள் 2936-இலிருந்து 11,613 ஆக வளர்ச்சி பெற்றன. மதிப்பிடப்பட்ட சராசரித் தொழிலாளர் எண்ணிக்கை 1950-1980-ஆம் ஆண்டுக் காலத்தில் 3 மிலியனிலிருந்து 6.8 மிலியனாக உயர்ந்தது. இது மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் (Working Population) 2.7 விழுக்காடும், பிற தொழிலகங்களில் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 20 விழுக்காடும் ஆகும். இவ்வாறு புள்ளி விவரங்கள் (Statistical Data) மிகக் குறைவான மதிப்பீடுகளை(Estimate) அளித்தாலும், இத் தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்புப் பங்கு கொண்டுள்ளன. மனநிறைவான தொழிற்றுறைத் தொழிலாளர் (Contented Industrial Labour) ஒரு நாட்டின் உண்மைச் சொத்து எனக் கருதப்படுகிறது. மன நிறைவற்ற தொழிலாளர்களின் நடவடிக்கைகள் நாட்டு வருவாயைப் பேரளவில் பாதிக்கும்.

துணை நூல்கள்:

**Allan Flanders**, Trade Unions, Hutchinson & Company Public Limited, London, 1963.

**Malhotra** S.N., Labour Problems in India, S. Chand & Company, New Delhi, 1981.

**Sharma**, M.A., Labour Welfare & Social Security, Himalaya Publishing House, Delhi, 1981.

**இந்தியத் தொழிற் கடன், முதலீட்டுக் கழகம்:** தனியார் துறையில் நடுத்தர, சிறு தொழில்கள் வளர்ச்சியடைவதற்கென உலக வங்கியின் முயற்சியால் இந்திய, இங்கிலாந்து, அமெரிக்க உதவியுடன் 1955-ஆம் ஆண்டு இந்தியத் தொழிற் கடன் முதலீட்டுக் கழகம் (Industrial Credit & Investment Corporaion of India) நிறுவப்பட்டது. இந்திய நிறுவனச் சட்டமுறைப்படி இதன் அனுமதித்த மூலதனம் 60 கோடி உரூபாயாகும். இவற்றில் செலுத்தப்பட்ட 25 கோடி உரூபாய், 100 உரூபாய் மதிப்புள்ள 5,00,000 இயல்புப் பங்குகளாகவும் (Ordinary Shares) 100 உரூபாய் மதிப்புள்ள பாகுபாடு செய்யப்படாத 20,00,000 பங்குகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்திய வங்கிகள், காப்பீட்டுக் கழகம், தனிப்பட்டவர்கள், அமெரிக்காவிலுள்ள தொழிற் கழகங்கள், இங்கிலாந்து வங்கிகள், நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோர் இக்கழகத்தின்

பங்குகளை வாங்கியுள்ளனர். மைய அரசு வட்டியில் லாக் கடனாக $7\frac{1}{2}$ கோடி உரூபாய் வழங்கியதோடு, அமெரிக்க விளைபொருள்களை இந்தியாவில் விற்பதனால் கிடைக்கும் பணத்திலிருந்து10 கோடி உருபாய் கடனையும், உலக வங்கியிடமிருந்து 20 மிலியன் உரூபாய் கடனையும் பெற்று இதற்கு வழங்கியுமுள்ளது.

தனியார் துறையில் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு உதவுவதே இக்கழகத்தின் சிறப்புக் குறிக்கோளாகும். தனியார் துறையில் தொழில்கள் புதிதாகத் தொடங்கவும், ஏற்கெனவே உள்ள தொழில்களைப் புதுமைப்படுத்தவும், அவற்றை விரிவாக்கவும் தேவையான நிதி, தொழில் நுட்ப அறிவு வளத்தை உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெறுவதற்கு இக்கழகம் ஆவன செய்கிறது. தனியார் தொழில்களுக்கு நீண்டகால, இடைக்காலக் கடன்களை இக்கழகம் வழங்குகிறது. தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கழகம் வாங்குவதன் மூலமும் நிறுவனங்களின் கடன்களுக்குப் பொறுப்புறுதிவழங்குவதன் மூலமும் அவற்றின் நிதிச் சிக்கல்களைத் தவிர்க்க உதவுகிறது. நிறுவனங்களுக்குத் தொழில் நுட்ப, மேலாண்மை அறிவுரைகளை வழங்குவதுடன் தொழில்நுட்ப, மேலாண்மைத் தொடர்பான பணிகளை அவை பெறவும் வழி வகுக்கிறது. இவற்றால் நாட்டின் ஆக்கத்திறன், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியன பெருகும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம் 2328 கோடி உருபாய் மதிப்புள்ள கடன்களைத் தனியார் நிறுவனங்கள் பெற 1983-ஆம் ஆண்டு வரையிலும் உதவியுள்ளது. இவற்றில் அயற் செலாவணி வசதிகள், பிற கடன்களுக்குப் பொறுப்புறுதிகள் ஆகியவை அடங்கும். சர்க்கரை, உலோகம், தாள், மின்சார எந்திரங்கள், இரசாயனம், மருந்துகள், ஆடைகள் ஆகியவை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் கழகத்திடமிருந்து உதவி பெற்றுள்ளன. பின்தங்கிய மண்டலங்களில் தொழிற்சாலைகள் நிறுவ முன்வரும் நிறுவனங்கள் கழகத்திடமிருந்து முன்னுரிமை அடிப்படையில் உதவிகள் பெறுகின்றன. பின்தங்கிய மண்டலங்களுக்கு மட்டும் 744 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டு 1983-ஆம் ஆண்டு வரையில் 535 கோடி உரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டு மூலதனம் இந்தியாவில் முதலீடு செய்யப்படவும் அயல்நாட்டுத் தொழில் முனைவோர் இங்குள்ள வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் இக்கழகம் ஒரு சிறந்த வாயிலாக விளங்குகிறது. இந்தியத் தனியார் துறை வெளிநாட்டுத்தொழில் நுட்பம், அயற் செலாவணி, கடன் வசதிகள் ஆகியவற்றை இக்கழகம் மூலம் பெறுகிறது. உலக வங்கி வழங்கும் கடன் வசதிகளைப் பெறுவதற்கும் இக்கழகமே முகவராகப் பணியாற்றுகிறது. கூட்டுறவு முறையில் நாட்டின் குடியிருப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக 1977-ஆம் ஆண்டில் குடியிருப்பு முன்னேற்ற நிதிக் கழகத்தை (Housing Development Finance Corporation – H D F C) இக்கழகம் உருவாக்கியுள்ளது. அதன் மூலம் நாடெங்கிலும் நடுத்தர குறைந்த வருவாய் உள்ள மக்கள் தங்களுக்கே சொந்தமான வீடுகள் கட்டவும் வாங்கவும் நீண்டகாலக் கடன்களை வழங்கி வருகிறது.

**இந்தியத் தொழிற் சங்கச் சட்டம் 1926:** இந்தியத் தொழிற் சங்கங்கள் சட்டம் தொழிற் சங்கங்களைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்வதற்காகவும், சில செய்திகளில் பதிவான தொழிற் சங்கங்கள் பற்றிய சட்டத்தை வரையறுப்பதற்காகவும் 1926-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

சிறப்பாகத் தொழிலாளிகளுக்கும் முதலாளிக்குமிடையே அல்லது தொழிலாளிக்கும் தொழிலாளர்களுக்குமிடையே அல்லது முதலாளிக்கும் முதலாளிக்கும் இடையே உள்ள உறவுகளை முறைப்படுத்தும் பொருட்டு அல்லது யாதொரு வணிகம் அல்லது வாணிகத்தை நடத்துவதுபற்றி வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் விதிக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கழகம் அது தற்காலிகமானதாக இருந்தாலும், நிரந்தரமானதாக இருந்தாலும் தொழிற்சங்கம் எனப்படும்.

தொழிற் சங்கங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும். ஒருதொழிற் சங்கத்தின் எந்த ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அத்தொழிற் சங்க விதிகளுக்குத் தாங்கள் கையெழுத்துச் செய்வதன் மூலமாகவும் பதிவு செய்வது தொடர்பாகவும் இந்தியத் தொழிற்சங்கங்கள் சட்டத்தில் கண்ட விதிகளின்படி, அத் தொழிற் சங்கத்தைப் பதிவு செய்து கொள்ளுமாறு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

தொழிற் சங்கத்தினைப் பதிவு செய்யுமாறு செய்துகொள்ளும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் அதற்கென்று ஏற்பட்ட பதிவாளரிடம் தாக்கல் செய்யப்படவேண்டும். அந்த விண்ணப்பத்துடன் அத் தொழிற் சங்க விதிகளின் நகலொன்றினையும், அங்கத்தினர்களின் பெயர்கள், தொழில்கள், முகவரிகள், அத் தொழிற் சங்கத்தின் பெயர், அதன் தலைமைச் செயலகத்தின் முகவரி மற்றும் ஆட்சிப் பொறுப்பாளர்களின் பெயர்கள், வயது, முகவரிகள், தொழில்கள் முதலியவற்றைக் கொண்ட அட்டவணையையும் இணைக்கவேண்டும்.

ஒரு தொழிற் சங்கம் அதைப் பதிவு செய்து கொள்வதற்கு ஓராண்டுக்கு முன்னர் ஏற்படுத்தப் பட்டிருந்து, பதிவு செய்ய விண்ணப்பித்துக் கொள்வதாயின் அத்தொழிற் சங்கத்தின் சொத்துகள், பொறுப்புகள் ஆகிய அனைத்தும் உரிய நமூனாப்படி தயார் செய்யப்பட்ட அறிக்கையுடன் பதிவாளருக்கு, அவற்றைப் பதிவு செய்து கொள்ளும்படி விண்ணப் பிக்க வேண்டும்.

ஒரு தொழிற் சங்கத்தின் விதிகளில் அத் தொழிற் சங்கத்தின் பெயர், அதன் நோக்கம், அதன் பொது நிதிகளை எவற்றிற்காகப் பயன்படுத்தலாம் என்னும் விளக்கம், அங்கத்தினர் பட்டியல், ஒவ்வோர் உறுப் பினரிடமிருந்தும் ஒவ்வொரு மாதமும் பெறப்படும் சந்தாத் தொகை, விதிகளை மாற்றியமைத்தல் அல் லது நீக்குதல், செயலாட்சிக் குழுவினர்களையும் ஆட்சிப் பொறுப்பாளர்களையும் பணியமர்த்துவதற் கும் நீக்குவதற்கும் உரிய முறை, அந்நிறுவனக் கணக்கு, அச்சங்கம் கலைக்கப்படும் முறை ஆகியன பற்றிய விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

சங்கத்தினைப் பதிவு செய்தல், சான்று வழங்கு தல், பதிவை நீக்குதல் முதலியனவற்றைப்பற்றி இச் சட்டத்தின் 8,9,10 ஆகிய பிரிவுகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

பதிவான தொழிற் சங்கங்களின் பொது நிதி களை 1) அத் தொழிற் சங்கத்தின் அலுவலர்களு டைய ஊதியம், படிகள், செலவுகள் போன்றவற்றை வழங்குவது, 2) கணக்குகளைத் தணிக்கை செய்வதற் குரிய தொகையுடன், அத்தொழிற் சங்கத்தை நிருவ கிக்கப் பிடிக்கும் செலவுகளைச் செய்தல், 3) அத் தொழிற் சங்கத்தின் நடவடிக்கையின்படி ஏற்படும் பிற செலவுகள், 4) அங்கத்தினர்களின் மரணம், முதுமை, நோய், தற்செயலான இடர்கள் அல்லது அவர்கள் வேலையின்றியிருந்தால், அதன்பொருட்டு அந்த உறுப்பினர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந் திருப்பவர்களுக்குப் படிகள் கொடுத்தல், 5) உறுப் பினர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் தொகை செலுத்து வது போன்ற பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது, 6) இயற்கை எய்திய தொழிலாளியின் ஈமச் சடங் கிற்கான செலவினைச் செய்தல், 7) தொழிலாளர் நலன் கருதி வெளியிடப்படும் தொழிலாளர் பருவ இதழ்கள், 8) ஒரு தொழிலாளியின் நன்மைக்குரிய தெனக் கருதப்படும் ஒரு செயலுக்காக உதவித் தொகைகளை வழங்குதல் முதலியனவற்றிற்குச் செலவிடலாம்.

அரசியல் பணிகளுக்காகத் தனிப்பட்ட ஒரு நிதி யினை ஏற்படுத்தலாம். தேர்தல் முன்பணம் செலுத் துதல், தேர்தல் தொடர்பான செலவு முதலிய செலவுகளைக் கொடுத்தல்; ஏதேனும் பிரசுரம் வெளி யிடுவது; அரசியல் அமைப்பின்படி அமைக்கப்பட்ட யாதொரு சட்டசபையின் அல்லது யாதொரு உள் ளூர் அதிகார சபையின் உறுப்பினராகயிருக்கும் ஒரு வரைப் பாதுகாத்து வருதல் சட்டசபைக்கோ; உள் ளூர் அதிகார சபைக்கோ யாதானுமொரு வேட் பாளரைத் தேர்ந்தெடுப்பது அல்லது வாக்காளர் களைப் பதிவு செய்வது; அரசியல் கூட்டங்களை நடத்துவது; அரசியல் தொடர்பான ஆவணங்களை வழங்குவது ஆகியவற்றிற்காக அரசியல் பணிகளுக் காக ஏற்படுத்தப்பட்ட தனி நிதியினைச் செலவிட லாம்.

தொழிற் சங்கத்தின் நடைமுறைபற்றிய பதி வேடுகளும் கணக்குப் புத்தகங்களும் அச்சங்க உறுப் பினர் பட்டியலும் தொழிற் சங்கத்தைச் சார்ந்த ஓர் அலுவலகப் பணியாளரால் அல்லது உறுப்பினரால் அத் தொழிற் சங்கத்தின் விதிகளில் ஏற்பாடு செய் திருக்கக்கூடிய நேரங்களில் பார்வையிடக்கூடியவாறு இருக்க வேண்டும்.

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களும் இந் திய நீதி மன்றத்தினால் தீயொழுக்கத்திற்காகத் தண்டனை அடைந்து விடுதலை பெற்று ஐந்து ஆண்டுகள் ஆகாமல் இருப்பவர்களும் தொழிற் சங் கங்களின் ஆட்சிப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக் கத் தகுதியற்றவர்களாவார்கள். தொழிற் சங்கங் கள் ஒருங்கிணைதல் பற்றிய விளக்கம் இச்சட்டத் தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது (பிரிவு 24).

தொழிற்சங்கத்தின் பெயர் மாற்றம் அல்லது ஒருங்கிணைப்பு, அதனால் ஏற்படும் விளைவுகள், தொழிற் சங்கங்களைக் கலைத்தல் முதலியன பற்றி யும் இச்சட்டம் சில வரைமுறைகளை வகுத்துக் கூறுகிறது. தொழிற் சங்கத்தின் விவரங்களை உரிய அரசு அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லையெனில் அதற்குச் சிறு அபராதத் தண்டனையும் விதிக்கிறது.

## இந்திய தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள்:

ஆங்கிலயே வணிக நிறுவனத்தாலும் ஆங்கில அரசாலும் இந்தியாவின் செல்வம் 300 ஆண்டுகளுக்கு மேல் சுரண்டப்பட்டது. எனவே, இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ஆங்கில அரசின் சுரண்டல் கொள்கையால் ஏற்பட்ட வடுக்கள் இந்தியப் பொருளாதாரத்தில் வேரூன்றிக் காணப் பட்டன. விடுதலையடைவதற்கு முன் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றரசர்களாலும் சமீன்தார்களாலும் இந்தியா ஆளப்பட்டு வந்தது. தொழில் வளம் என்றால் என்னவென்று அறியாத, வேளாண்மையே போதும் என்று நம்பியிருந்த மக்களை விடுதலை என்ற ஒரு மந்திரச் சொல்லால் இந்தியா ஒன்றாகப்

பிணைத்திருந்தது. இதுதான் 1947-இல் இந்தியாவின் நிலை. இந்தியத் தலைவர்களும் அறிவிற் சிறந்த மக்களும் எவ்வாறேனும் இந்தியாவை வேளாண்மை யிலும் தொழிற்துறையிலும் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் என்ற தளராத மன உறுதியைக் கொண்டிருந்தனர். நாட்டின் முன்னேற்றத்துக்குக் கல்வியும் ஆராய்ச்சியும் இரு கண்கள் போன்றன என்பதை உணர்ந்து, வேளாண்மை ஆராய்ச்சியைப் பெருக்குவது இன்றியமையாதது என அதற்குத் தனிச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. விவசாய முறைகளை முன்னேற்றம் செய்வதிலும், உற்பத்தித் திறனைப் பெருக்குவதிலும், வேளாண்மையை ஆதாயம் சார்ந்த தொழிலாக மாற்றம் செய்வதிலும் வேளாண்மை ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது. அவற்றிற்குச் சிறப்பிடம் அளித்து நாடு முழுவதும் பயன்பெறும் வகையில் பரவலாகத் தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

இந்நிறுவனங்களின் ஆராய்ச்சிக்கேற்ற வழிமுறை களாகக் குறிப்பிடத் தக்கன பின்வருவன: (1) தேவை களை நிருணயித்தல், (2) ஆராய்ச்சிப் பணியில் ஈடு படுதல், (3)ஆராய்ச்சியின் முடிவுகளை வெளிஉலகுக்குப் பரப்புதல். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் ஆய்வுக் கூடங்களில் பெறப்படும் முடிவுகள் வேளாண்மை நிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் (Lab to Land Technology) என்பது வலி யுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய நாட்டு முன்னேற்றத்தில் கீழ்க்காணும் பல்வேறு துறையைச் சேர்ந்த தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் பெரிதும் ஈடுபட்டுச் செயலாற்று கின்றன: (1) இந்திய விவசாய ஆரய்ச்சி நிலையம், புதுதில்லி. (2) இந்திய அரிசி ஆராய்ச்சி நிலையம், கட்டாக்கு, (3) நாட்டிலுள்ள பல்வேறுவேளாண்மைப் பல்கலைக்கழகங்கள். (4) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையம், கொச்சி (5)மத்திய நன்னீர் மீன் ஆராய்ச்சி நிலையம், பாரக்பூர், கல்கத்தா. (6)இந்தியச்சமுதாய அறிவியல் ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி. (7) பன் னாட்டு மக்கள்தொகை ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (8) டாடா சமுதாய அறிவியல் ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (9) அறிவியல் தொழில் ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (10) தென்னிந்திய நூற்பாலை ஆராய்ச்சிக் கழகம், கோவை. (11) பொருளாதார வளர்ச்சி நிறுவனம், புதுதில்லி. (12) கோகலே பொருளாதார அரசியல் படிப்பு நிறுவனம், பூனே. (13) சென்னை வளர்ச்சிப் படிப்பு நிறுவனம், சென்னை. (14) வளர்ச்சிப் படிப்பு மையம், திரு வனந்தபுரம். (15) சமுதாய பொருளாதார மாற்ற, படிப்பு நிறுவனம், பெங்களூர். (16) சர்தார் படேல் ஆராய்ச்சி நிறுவனம், அகமதாபாத்து. (17) இந்திய வரலாறு ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி. (18) இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி. (19) அனைத்திந்திய மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிலை யம், புதுதில்லி. (20) தாட்டா அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (21) தேசிய நடை முறைப் பொருளாதார ஆராய்ச்சி நிலையம், புது தில்லி. (22) தேசியக்கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிலை யம், புதுதில்லி. (23) இந்திய அறிவியல் நிலையம், பெங்களூர். (24) இந்தியப்புள்ளியியல் நிலையம், கல் கத்தா, புதுதில்லி, பெங்களூர். (25) இந்திய வானிலை ஆராய்ச்சி அமைப்பு, பூனே.

இந்திய வேளாண்மையைப் புதுமைப்படுத்தி அனைத்துப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களும் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. உணவுப் பொருள்கள் உற்பத்தியில் மிக வும் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தியா இன்று தன்னிறைவு பெற்றுள்ளது.வேளாண்மையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது போல, இந்தியாவில் தொழிற்புரட்சி ஏற்பட அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களும் கழகங்களும் பெரும்பங்கு ஆற்றுகின்றன. இந்திய ஆராயச்சியாளர்கள் உலகி லுள்ள எந்த ஓர் ஆராய்ச்சியாளரோடும் ஒத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்க அளவுக்குத் திறமை படைத்தவர்களாக உள்ளனர். வளர்ச்சி யடைந்த தொழில் வள நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா உலகில் பன்னிரண்டாம் இடத்தைப் பெற் றுள்ளது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இந்தியா உலகில் மூன்றாவது இடத்தைப் பெற் றுள்ளது. இந்திய நாட்டின் விரைவான பொருளா தார முன்னேற்றத்திற்கு இந்திய தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. ந.து.

**இந்திய தேசிய இராணுவம்**: முதல் உலகப்போரின் முடிவில் இந்திய விடுதலை இயக்கம் ஒன்றைத் தூரக் கிழக்கு நாடுகளில் (Far East) தோற்றுவிக்க வேண்டும் என்ற இராசுபிகாரி கோசின் Rashbihari Gosh) எண்ணத்தின் விளைவாக, சப் பானில் இந்திய விடுதலைக் கழகம் (Indian Independence League) தொடங்கப்பட்டது. சப்பான் அரசின் உதவியால் இக்கழகம் மேன்மேலும் வளர்ந்தது. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய போது தூரக் கிழக்கு நாடுகளிடையே இக்கழகம் வல்லமை பொருந்திய படைப்பிரிவாகவும் விளங்கியது.

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிராகச் சப் பான் போரில் குதித்தபோது, சப்பானிலுள்ள இந்திய விடுதலைக் கழகத்தின் ஆதரவில் இந்தியாவை விடு தலை பெறச் செய்வதற்குப் படைக்கலமேந்திப்

போராடுவது உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்திட வேண்டி இராசுபிகாரி போசும், ஏனைய இணை இராணுவக் குழுவினரும் சப்பானிய அரசிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

சப்பானிய அரசு உடனடியாக இக்கழகத்திற்குப் பெரிய அளவில் இராணுவ உதவி அளிக்கவில்லையென்றாலும், 1942-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் சிங்கப்பூரைக் கைப்பற்றிக் கொண்டபோது, படைக்கலமேந்திப் போராடும் இந்திய விடுதலைக் கழகத்திற்கு உதவிட முன்வந்தது. சப்பானின் அப்போதைய தலைமை அமைச்சர் தோசோ (Tojo) சப்பானின் கொள்கையைப் பின்வருமாறு விளக்கினார்: 'பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பும் தலைசிறந்த பண்பாட்டு மரபும் கொண்ட இந்தியா, பிரிட்டனின் ஈவிரக்கமற்ற வல்லாட்சியை வெளியேற்றவும், அகண்ட கிழக்கு ஆசியாவின் முன்னேற்றத்தில் பங்கு பெறவும், 'இந்தியா இந்தியருக்கே' என்னும் நிலையை அது மீட்டுக் கொள்ளவும் சப்பான் அனைத்து உதவிகளையும் செய்திட முன்வருகிறது'.

இதன்பின்னர்த் தூரக்கிழக்கு நாடுகள் பலவற்றில் வாழ்ந்த இந்தியர்களின் கருத்திற் கிணங்க பிரதிநிதிகளின் மாநாடு பாங்காக்கு (Bangkok) நகரில் நடைபெற்றது. இராசுபிகாரி போசு இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இதன் பின் சப்பான் கைப்பற்றிய பல பெரு நகரங்களில் இக்கழகத்தின் கிளைகள் தோன்றின. இதன் அடிப்படையில் இந்திய தேசிய இராணுவம் தோன்றியது. ஆங்கில இராணுவத்தில் பணியாற்றிய கேப்டன் மோகன்சிங்கும் அவர்தம் படை வீரர்களும் வடமலாயாக் காட்டில் சப்பானியரிடம் சரணடைந்தனர். பாங்காக்கில் இந்திய விடுதலைக் கழகம் ஒன்றினை நடத்தி வந்த பீதாம்பர்சிங்கு என்பவர் மோகன்சிங்கை இந்திய விடுதலைக்கான பணிகளில் ஈடுபடுத்தினார்.

சிங்கப்பூர் வீழ்ச்சியுற்றதும் ஆங்கிலப் படையில் இருந்த 40,000 இந்திய வீரர்கள் சப்பானின் போர்க் கைதிகளாயினர். அவர்களுள் பெரும்பாலோரை இந்திய விடுதலைப் படையில் சேர்த்திட மோகன்சிங்கு பெரிதும் உதவினார். இறுதியில் 40,000-க்கும் மேற்பட்ட படைவீரர்கள் மோகன்சிங்கு தலைமையிலான இந்திய தேசியப் படையில் சேர்ந்திட உறுதியளித்தனர். மேலும், பல இளைஞர்களுக்கும் சிங்கப்பூரில் படைப்பயிற்சி அளிக்கப்பட்டது.

விடுதலைப் படையின் தளபதியாக மோகன் சிங்கு இருக்க வேண்டுமென்றும், படைக்கலங்கள், கப்பல்கள், விமானங்கள் ஆகிய தளவாடங்களைத் தந்து உதவுமாறு சப்பானிடம் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் பாங்காக்கு மாநாடு தீர்மானித்தது. இந்திய தேசிய இராணுவம் 1942-ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் முதல் நாள் முறையாக அமைக்கப்பட்டது. அது இந்திய விடுதலைக் கழகத்தின் ஒற்றுமை, நம்பிக்கை, தியாகம் என்னும் மூன்று கொள்கைகளைக் கடைப்பிடித்தது.

ஆயினும், இக்கழகத்தில் வணிகர், தொழிலாளர், அலுவலர் போன்ற பல முரண்பட்ட கருத்துகளை உடையவர்கள் பெருமளவில் இருந்தமையால் உட்பூசல் காரணமாக மிகுந்த முன்னேற்றம் காண இயலவில்லை. முரண்பாடுகளைக் களைந்து, சப்பானியப் படையினரின் துணையுடன் 1943-ஆம் ஆண்டில் விடுதலைப் போரைத் தொடங்கிட இராசுபிகாரி போசு முயற்சி செய்தும் ஒற்றுமையின்மையால் அது செயலிழந்தது.

இதற்கிடையில், இந்தியாவில் காங்கிரசுத் தலைமைப் பதவியைத் துறந்து, பார்வார்டு பிளாக்குக் கட்சியைத் தொடங்கிப் புரட்சிக் கருத்துகளைப் பரப்பி வந்த நேதாசி சுபாசு சந்திர போசு (Nethaji Subash Chandra Bose) அரசுக்கு எதிரான தீவிர நடவடிக்கைகளில் இறங்கும் நோக்குடன் இந்தியாவை விட்டு 1941-இல் வெளியேறிச்செருமனிக்கு வந்து சேர்ந்தார். பின்னர்ப் பிரிட்டனுக்கு எதிரான கொள்கையைப் பரப்பவும் மேலைநாடுகளில் இந்தியப் படைப்பிரிவிற்குத் துணை தேடுவதற்காகவும் 1943-ஆம் ஆண்டில் தோக்கியோ (Tokyo) வந்தடைந்தார்.

தலைமை அமைச்சர் தோசோவைச் சந்தித்து, தற்காலிக இந்திய அரசினை நிறுவவும், இந்திய மக்களின் பகையாக இருக்கிற ஆங்கில சாக்சானியச் செல்வாக்கை அழிக்கவும், இந்தியா முழு விடுதலையை அடையவும் அவரிடம் வேண்டிய உதவிகள் பெறுவதற்கான உறுதியினைப் பெற்றார். பின்னர், இந்திய விடுதலைப் போரைத் தொடங்கும் அறிவிப்பைச் செய்துவிட்டு, சுபாசு சந்திர போசு சிங்கப்பூர் வந்தடைந்தார்.

இராசுபிகாரி போசு 1943–சூலைத்திங்கள் 4-ஆம் நாள், இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினைச் சுபாசு சந்திர போசிடம் ஒப்படைத்தார். இந்திய தேசியப் படையின் தலைமைத் தளபதி (Supreme Commander) பொறுப்பினையும் அவர் ஏற்றுக் கொண்டார். அன்றுமுதல் அவர் 'தனிப்பெருந்தலைவர்' என்னும் பொருள்படும் நேதாசி (Nethaji) என்னும் பட்டப் பெயரினைப் பெற்றார். சுதந்திர இந்தியாவின் தற்காலிக அர

சினை அமைத்தலையும் ஆங்கில வல்லாட்சியின் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் திட்டத்தையும் அவர் அறிவித்தார். ''தில்லி செல்'' (Delhi Chalo), வெல்க இந்தியா (Jai-Hind) போன்ற முழக்கங்கங்களைப் படைப்பிரிவினர்க்கு அளித்தார்.

தலைமைப் பொறுப்பினை ஏற்று, நேதாசி இந்திய தேசிய இராணுவத்தைத் திருத்தியமைத்து விரிவுபடுத்தினார். திறன்வாய்ந்த பிரிவுனருடன் ஒற்றுமை மேற்கொண்டு இவர் விடுதலை இயக்கத்தை வலுவுள்ள அமைப்பாக மாற்றினார். படைப்பிரிவிலும் பல்வேறு மாற்றங்களைக் கொணர்ந்தார். பின்னர்ச் சிங்கப்பூரில் 1943-ஆம் ஆண்டு அக்டோபர் 21-இல் ஆசாத் இந்து (Azad Hind) அல்லது சுதந்திர இந்தியாவின் இடைக்கால அரசினை அமைத்தார். அதன் அமைச்சரவை பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின்மீது போர் தொடுக்க முடிவு செய்தது. உடனடியாக இப்புதிய அரசினைச் சப்பான், செருமனி, இத்தாலி, பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்சு போன்ற ஒன்பது நாடுகள் ஏற்றுக்கொண்டன. மிக விரைவில் அந்தமான்-நிக்கோபார்த் தீவுகள் தற்காலிக இந்திய அரசின் தலைமை இடமாயின.

ஆங்கில இந்தியாவின் மீதான சப்பானியப் படையெடுப்பில் கலந்துகொண்டு சப்பானியருக்கு உதவியாக நின்று ஆங்கில வல்லாட்சியைத் தகர்ப்பதே நேதாசியின் தலைமையிலான தற்காலிக அரசுக்கும், தேசிய இராணுவத்திற்கும் முதற்கடமையாகும் என்று அறிவித்தார்.

தேசியப் படையினரின் ஆற்றலிலும் எதிர்கால நடவடிக்கைகளிலும் ஐயங் கொண்ட சப்பானியத் தளபதி இத்தேசிய இராணுவத்தின் படைப்பிரிவிற்குத்தனிப்பொறுப்பு அளித்திட முன்வரவில்லை. எனவே வெறும் ஐந்தாம் படையினர் (Fifth Columnist) வேலையைத் தம் வீரர்கள் செய்ய இயலாதென்றும், இந்தியர் பங்கு கொள்ளாமல் சப்பானியர்களின் தியாகத்தினால் மட்டுமே கிடைக்கக்கூடிய இந்திய விடுதலை அடிமைத் தனத்திலும் கேவலமானதென்றும் நேதாசி கருதினார். விடுதலைப் போரில் இந்தியர்கள் பங்கு அளவிடற்கரியதாக இருக்க வேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பினார்.

இந்திய தேசிய இராணுவத்தில் சுபாசு படைப்பிரிவு (Subash Brigade) ஒன்று சா நவாசுகானின் (Shah Navas Khan) தலைமையில் இந்தியா-பர்மா எல்லையில் போரிட முற்பட்டது. இப்பிரிவு கலடான் (Caladan) ஆற்றங்கரையோரத்தில் வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து பிரிட்டனை எதிர்த்துப் பெலட்வாவில் இந்தியப் படை வெற்றி பெற்றது. தலட்மேயும் அவர்கள் வசமானது. காகக பசாருக்கு அருகிலுள்ள மோவ்தக்கு (Mowdoc) என்னும் இடத்தில் தண்டு இறங்கியிருந்த ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்து, இந்திய தேசிய இராணுவம் முன்னேறியது. ஆங்கிலேயரின் எதிர்த்தாக்குதல் பின்னர்த் தீவிரமானதால் சப்பானியர் பின்வாங்கத் தொடங்கினர். காப்டன் சுராசுமல்லின் (Capt. Surajmal) தலைமையிலிருந்த இந்தியப் படைப்பிரிவும் சப்பானியச் சிறுபடைப் பிரிவும் காங்குவாவில் மேசர் மானிங்கு (Major Manning) தலைமையிலான ஆங்கிலப் படையை முறியடித்ததும், ஆங்கிலேயரின் வலுக்கோட்டையான கிளாங்கு-கிளாங்கைக்(Klang Klang) கைப்பற்றியதும் பெரும் சாதனைகளாகும்.

சப்பானியரின் உதவியுடன் இந்தியப் படைப் பிரிவினர் கைப்பற்றியிருந்த கொகிமா (Kohima) விற்குச சென்று, பிரம்மபுத்திரா ஆற்றங்கரையில் வெற்றி பெற்று வங்காளத்தை நோக்கி முன்னேறினார்கள். இதற்கிடையில் காந்தி படைப்பிரிவு (Gandhi Brigade) சப்பானியரின் படைத் தாக்குதலுக்குட்பட்டிருந்த இம்பால் (Imphal) நகரினை நோக்கி முன்னேறியது. மிதின்குனாவில் இந்தியப் படை வெற்றி பெற்ற பின்னர், இம்பாலைத் தாக்கிய சாப்பானியருடன் சேர்ந்து மூன்று தேசியப் படைப் பிரிவுகள் இந்திய எல்லையில் நுழைந்து தேசியக் கொடியை ஏற்றின.

அமெரிக்கர்கள் 1944-ஆம் ஆண்டின் இடையில் பெற்ற பல வெற்றிகளின் விளைவாகச் சாப்பானியரின் நிலைமை மேலும் மோசமடைந்தது. நெடுந்தொலைவிலிருந்து இராணுவ வீரர்களையும் உணவுப் பொருட்களையும் பர்மாவிற்கும் இந்தியப் போர் முனைகட்கும் சப்பானால் அனுப்ப இயலவில்லை. எனவே சப்பானியப் படையும் இந்திய தேசியப் படையும் சிந்துவின் (Chindwin) ஆற்றின் கீழ்க்கரைக்குப் பின்வாங்கின. இந்திய இராணுவத்தைப் பொறுத்த அளவில் 1944-ஆம் ஆண்டின் முடிவில் போர் தோல்வியில் முடிவுற்றது. அதே நேரத்தில் ஆங்கிலப் படைகள் பர்மாவில் வெற்றியுடன் முன்னேறின. இரங்கூனில் தண்டு இறங்கியிருந்த இந்தியப் படையினர் ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். பின்னர்ப் படைக்கலங்களை இழந்து ஆங்கிலேயரின் போர்க் கைதிகளாயினர். இவ்வாறு இந்திய விடுதலைக்காகத் தென்கிழக்காசியாவில் எழுந்த இயக்கம் முற்றுப்பெற்றது.

இந்திய தேசிய இராணுவத்தின் தலைவரான நேதாசி சிங்கப்பூரிலிருந்து தப்பிச் சென்று மீண்டும் போராடும் எண்ணத்தில் இருந்தார். அவரது எண்ணம் ஈடேறவில்லை.

பாங்காக்கிலிருந்து தோக்கியோ செல்வதற்காகச் சப்பானியப் படைத் தலைவர்களுடன் நேதாசியும் பயணமானார். பயணத்தின் இடையில் பார்மோசா (Formosa) விலுள்ள தைபேயில் (Taipeh) 1944-ஆம் ஆண்டு ஆகசுட்டு 18-ஆம் நாள் வந்திறங்கிப் பின்னர், விமானம் தளத்தில் இருந்து புறப்பட்டதும் தீப்பிடித்துக் கொண்டதால் நேதாசி உயிரிழந்ததாகச் சப்பானிய அறிக்கை கூறுகிறது.

நேதாசியின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் இறுதியில் வெற்றி பெறாவிட்டாலும், விடுதலை இயக்க வரலாற்றில் சீரிய இடத்தினைப் பெற்றது. அப்படையைச் சார்ந்த பலர் இந்தியரின் புகழினை உலகிற்கு உணர்த்தினர். அவர்கள் இந்திய எல்லைக்குள் ஏறத்தாழ 240 கி.மீ. வரை ஊடுருவினர். இப்போராட்டத்தில் ஏறத்தாழ 4000 வீரர்கள் உயிர் இழந்தனர்.

இந்தியாவின் மீதான தங்கள் பிடியைத் தளர்த்தாமல் வைத்திருக்க இனியும் இந்தியப் படைவீரர்களை நம்பவியலாது என்பதனை இப்படையின் மூலம் ஆங்கிலேயர் அறிந்து கொண்டனர்.

பர்மாவில் கைது செய்யப்பெற்ற தேசியப்படையினரைத் தேசத் துரோகக் குற்றம் சாட்டித் தில்லிச் செங்கோட்டையில் விசாரித்தனர். நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட இவர்கள்மீது நாடு பெரிதும் இரக்கம் காட்டியது. எனவே இந்திய தேசியப்படையினரின் தியாகம் வீண்போகவில்லை. இவர்களின் தலைவர் நேதாசிக்கு இந்திய வரலாற்றில் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது. இந்தியப் படையினர்மீது ஆங்கில அரசு விசாரணை மேற்கொண்டபோது நாடு முழுவதும் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். படை வீரர்களுக்காகத் தலைசிறந்த வழக்கறிஞர்களான சர் தேசு பகதூர் சாப்ரு (Sir Tej Bahadur Sapru), புலாபாய் தேசாய் (Bulabhai Desai), சவகர்லால் நேரு ஆகியோர் கொண்ட குழுவைக் காங்கிரசு அமைத்தது. முசுலிம் லீக்கும் இதனை முழுமையாக ஆதரித்தது. விடுதலைப் படையினருக்கு வாதாட முன்வந்ததனால் காங்கிரசின் புகழ் மேலும் வளர்ந்தது.

வழக்கின்போது தேசியப் படையினரின் அமைப்பும் அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்களும் மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தன. அத்தகைய தேசபக்தர்களைத் தண்டிக்க அரசு முற்பட்டபோது நாடு முழுதும் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். நிலைமை மோசமானதைத் தொடர்ந்து பெரும்பாலான படைவீரர்களை அரசு விடுதலை செய்தது. இதன் தொடர்பாகவே பின்னர் ஆங்கிலேயரான பேராசிரியர் இராபர்ட் ரிச்சர்ட்சு (Robbert Richards) தம் தலைமையில் பாராளுமன்றத் தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பி, இந்திய விடுதலைக்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்திட வழி வகுத்தார். எம். தே.

துணை நூல்கள்:

**Joshi**, P.S. & **Cholkar**, S.V., History of Modern India (from 1800 to 1964 A.D.), S. Chand and Co. Ltd., New Delhi. 1980.

**Grover & Sethi**, New look on Modern Indian History (from 1707 up to date) S. Chand and Co. Ltd., New Delhi. 1983.

**Agarwal**, R.C. – Constitutional History of India and National Movement. S. Chand and Co. Ltd., New Delhi, 1984.

**Mahajan**, W.D., Fifty Five Years of Modern India, S. Chand & Co. Ltd., New Delhi. 1975.

***இந்திய தேசிய காங்கிரசு*** (1885) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இந்தியாவில் தேசிய உணர்வை வளர்ப்பதில் பெரும் பங்கு கொண்ட நிறுவனமாகும்.

இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் உருவாக இருந்த பின்னணி முதலில் அறியத்தக்கது. ஐரோப்பியப் பண்பாட்டின் தாக்கம் இந்திய மக்களைப் பெரிதும் பாதித்தது. இராசா இராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, கேசவ சந்திரர், ஈசுவர சந்திர வித்தியாசாகர், சுவாமி விவேகானந்தர் போன்றவர்களின் அரும்பணி சமயத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் புதிய மறுமலர்ச்சியை நாட்டில் ஏற்படுத்தியிருந்தது. மேலும், கி.பி. 1857-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருங்கிளர்ச்சியும் தேசிய எழுச்சிக்கு உதவியது. இந்தியாவில் வெளியான செய்தித்தாள்களின் வளர்ச்சி மக்களிடையே சுதந்திர வேட்கையை வளர்க்க உறுதுணையாய் இருந்தது.

இந்திய மறுமலர்ச்சிக்கான புரட்சி மனப்பான்மை கற்றறிந்த இந்தியர்களிடையே முதன்முதலில் தோன்றலாயிற்று. வங்காளத்தில் தோன்றிய பிரிட்டிசு கழகம், பம்பாயில் நிலைநாட்டப்பெற்ற பம்பாய்க் கழகம், தென்இந்தியாவில் குறிப்பாகச் சென்னையில் தோன்றிய மகாசன சபை, புனே நகரில் உருவான மகாராட்டிர சருவசன சபை போன்றவை இந்திய மறுமலர்ச்சிக்கு முன்னோடியாக இருந்த ஒருசில நிறுவனங்களாகும். அரசியல் மாநாடு ஒன்று கி.பி. 1883-ஆம் ஆண்டில் அதே நகரில் கூட்டப்பட்

டது. இவ்விரு நிகழ்ச்சிகளும் இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தை உருவாக்க உறுதுணை நின்றன என்பர். சென்னையில் கி.பி. 1884-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அடையாற்றிலுள்ள பிரம்மஞான சங்க மாநாட்டில் (Theosophical Convention) கூடிய பதினேழு பெருமக்களின் கருத்தின் அடிப்படையில் தான் இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தை உருவாக்கும் எண்ணம் பிறந்தது என்பர் சில வரலாற்றாசிரியர்கள்.

அடையாறு பிரம்மஞான சங்கத்தில் கூடிய 17 பேர்கள்: சென்னையைச் சார்ந்த 1. எசு. சுப்பிரமணிய அய்யர், 2. பி. அரங்கைய நாயுடு, 3. அனந்தாச்சார்லு; வங்காளத்தைச் சார்ந்த 4. நரேந்திர நாத்சென், 5. சுரேந்திரநாத் பானர்சி, 6. எம்.கோசு, 7. சரன்சந்திரமித்தர்; பம்பாயைச் சார்ந்த 8. வி. என். மண்டலிக்கு, 9. கே.டி. தேலங்கு, 10. தாதாபாய் நவரோசி; புனேயைச் சார்ந்த 11. சி. விசயரங்க முதலியார், 12. பாண்டுரங்க கோபால்; பஞ்சாபைச் சார்ந்த 13. சர்தார் தயாள்சிங்கு; அலகாபாதைச் சார்ந்த 14. ஆரி சந்திரா; உத்திரப்பிரதேசத்தைச் சார்ந்த 15. காளிபிரசாத்து, 16. இலக்குமி நாராயணன், 17. சிரீராம் என்போரே அப்பதினேழு பேர்கள். இவர்களுள் திரு. எசு. சுப்பிரமணிய அய்யரும் புனே நகரத் தலைவரான திரு. சி. விசயரங்க முதலியாரும் தமிழர்கள். பி. அரங்கைய நாயுடுவும் அனந்தாச்சார்லுவும் சென்னையில் வாழ்ந்தவர்கள்.

இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற சர் ஆலன் ஆக்டேவியன் இயூம் (Sir Allan Octavian Hume) அமைத்த இந்திய ஒன்றியம் (Indian Union) என்னும் அமைப்பே காங்கிரசு தோன்றக் காரணம் என்பது இன்னும் சிலரின் கருத்தாகும். இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தை உருவாக்கக் காரணமாயிருந்தவர்களைத் திட்டவட்டமாகக் கூறுவது எளிதல்ல எனினும் கி.பி. 1885-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இந்திய தேசிய ஒன்றியத்தின் கூட்டம் ஒன்றைப் புனே நகரில் இயூம் கூட்டினார் என்பது மறுக்க முடியாத உண்மை. இக்கூட்டத்தில்தான் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பேராளர்களைக் கி.பி. 1885-ஆம் ஆண்டு திசம்பர் மாத இறுதியில் புனேவில் கூட்ட வேண்டுமென்னும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அந்தச் சமயத்தில் புனே நகரில் தோன்றிய காலராநோயின் விளைவாக இம்மாநாட்டைப் பம்பாய் மாநகரத்தில் கூட்டுவதென முடிவாயிற்று. எனவே, இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தின் முதல் கூட்டம் கி.பி. 1885-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28-ஆம் நாள் பகல் 12-00 மணிக்குக் கோகுல்தாசு தேசுபால் சமசுகிருதக் கல்லூரி மன்றத்தில் (Hall of the Gokuldas Tejpal Sanskrit College) டபிள்யூ.சி.பானர்சி (W.C.Banerji) என்பாரின் தலைமையில் கூடியது.

இந்திய தேசிய காங்கிரசின் கொள்கைகளை முதல் தலைவரான பானர்சி விளக்கினார். அவை 1. இந்தியச் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் உண்மையான ஊழியர்கள் அனைவரிடையேயும் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது; 2. இந்தியச் சுதந்திரத்திற்கு உழைப்போரிடையே இன, சமய, மாநில உணர்வுகளைக் களைந்து தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வலுப்படுத்துவது; 3. சமூகச் சிக்கல்களைத் தீர்க்கத் தலைசிறந்த கல்வியாளர்களின் ஆழ்ந்த கருத்துகளை அறிந்து அக்கருத்துகளின் அதிகார அடிப்படையிலான குறிப்புகளைத் தொகுப்பது; 4. அடுத்த பன்னிரு மாதங்களுக்கான செயல்திட்டத்தை உறுதிப்படுத்துவது என்பனவாம்.

மேற்கூறிய கொள்கைகளை ஆராயின் தொடக்கக் காலத்தில் காங்கிரசு இயக்கம் ஆங்கிலேயருக்கு எதிரானதாக உருவாக்கப்படவில்லை என்பது வெளிப்படும். அதனை உருவாக்குவதில் இயூம், சார்சு யூலே (George Yule), சார்லசு பிராட்லாக்கு (Charles Bradlaugh), என்றி காட்டன் (Henry Cotton), வில்லியம் வெட்டர்பன் போன்ற முற்போக்குச் சிந்தனை கொண்ட ஆங்கிலேயரும், டபிள்யூ. சி. பானர்சி, தாதாபாய் நவுரோசி(Dadabhai Naoroji), சர் பிரோசுசா மேத்தா (Sir Pheroje Shah Mehta) போன்ற தேசபக்திமிக்க இந்தியர்களும் பங்கு கொண்டனர் என்பது நினைவுகூரத்தக்கது. தொடக்கக்காலத்தில் காங்கிரசு மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பணிவானவை. ஆங்கில ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் கோரிக்கையைச் சேராதவை. ஆனால் காலப்போக்கில் இது மாறத் தொடங்கியது. ஆங்கில ஆட்சியின் உண்மை நிலை தெளிவாகக் காங்கிரசுத் தலைவர்களுக்குப் புரியத் தொடங்கியபோது, இந்தியாவின் கோடான கோடி மக்களின் புகலிடமாக அது மாறலாயிற்று.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாம் மாநாடு கி.பி. 1886-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் கல்கத்தா நகரில் கூடியது. இம்மாநாட்டில் 436 பேர் கலந்து கொண்டனர். இம்மாநாட்டின் தலைவர் பம்பாயைச் சார்ந்த தாதாபாய் நவரோசி என்பாராவார்.

காங்கிரசு மகாசபையின் மூன்றாம் மாநாடு கி.பி. 1887-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் சென்னையில் கூடியது. பம்பாயைச் சார்ந்த வணிகர் பக்ருதீன் தயாப்சி இம்மாநாட்டின் தலைவர். இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் 607 பேர்.

ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்ற ஆண்டு மாநாடுகளில் அக்காலத்தில் படித்துப்பட்டம் பெற்ற பெரியோர் தலைமை தாங்கிப் பலவேண்டுகோள் களைத் தீர்மானம் மூலம் அரசுக்கும் நாட்டு மக்களுக் கும் விடுத்தனர்.

வங்காளப் பிரிவினைக்கு எதிராக நாடு முழு தும் பெரும் கிளர்ச்சி மூண்டது. வங்காளத்தில் பிவின் சந்திர பாலரும், பஞ்சாபில் இலாலா இலச பதிராயும், மகாராட்டிரத்தில் உலோகமானிய பால கங்காதர திலகரும், தமிழ்நாட்டில் வ.உ. சிதம்பர னாரும் வங்காளப் பிரிவினைக்கு எதிராக மக்கள் திரளக் காரணமாயிருந்த பெருந்தலைவர்கள். தாதாபாய் நவரோசியின் தலைமையில் 1906-ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில்தான் முதன் முதல் சுயராச்சியம் பெறும் உரிமை பற்றிய கோரிக் கையும், அதற்காக வெள்ளையரின் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டுவதன் அவசியமும் வலியுறுத்தப் பட்டன. இக்கோரிக்கையைச் சர்பிரோசுசா மேத்தா, சுரேந்திரநாத் பானர்சி போன்ற மிதவாதிகள் ஏற்க மறுத்தபோது அவர்களைப் பிச்சைக்காரர்கள் (Mendicant) என்று வருணித்தனர். இலால்பால்பால் (Lal-Bal-Pal), வ.உ. சிதம்பரனார் போன்றோர் இவ்வியக்கத்தின் தீவிரவாதிகளின் தலைவர்களா யினர். மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மூண்ட இக்கருத்து வேறுபாடு இந்திய தேசிய காங்கிரசின் 23-ஆம் மாநாட்டில் வெளிப் படையாகத் தோன்றிப் பிளவில் முடிவுற்றது. இம் மாநாடு குசராத்து மாநிலத்திலிருக்கும் சூரத்தில் கூடியது. சூரத் பிளவு காங்கிரசு இயக்கத்தை இரு குழுக்களாக 1907-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் பிரித்தது.

தீவிரவாதிகள் 1907-ஆம் ஆண்டு காங்கிரசு மாநாட்டில் வெளிநடப்புச் செய்தனர். 1910-ஆம் ஆண்டில் காங்கிரசு இயக்கம் மிதவாதக் கோட்பாடு களைக் கொண்ட இயக்கமாக இருந்தது. முதல் உலகப்போரில் இங்கிலாந்து இறங்கியபோது 1914-ஆம் ஆண்டில் இவ்வியக்கம் விரைவில் தன்னாட்சி உரிமைத் தகுதி (Dominion Status) கிடைக்கும் என நம்பி இங்கிலாந்துக்கு அனைத்து உதவிகளையும் செய்தது. ஆனால், எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்க வில்லை. போருக்குப் பின்னர் ஆங்கில அரசு உரு வாக்கிய இரவுலத்து சட்டம் அதன் நம்பிக்கைகளை முற்றும் தகர்த்தது. அதையடுத்து நடந்த சாலியன் வாலாபாக்குப் படுகொலை (1919) ஆங்கிலேயரின் மீதிருந்த நம்பிக்கைகளைத் தூள்தூளாக்கியது. இத் தருணத்தில்தான் காந்தியடிகள் இந்திய அரசியல் வானில் நுழைந்தார். அவருடைய அகிம்சை, ஒத் துழையாமை, சத்தியாக்கிரகம் என்னும் தத்துவங் கள் இந்திய மக்களைக் கவர்ந்தன.

காந்தியடிகள் தம் சத்தியாக்கிரக இயக்கத்தை 1919-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இரவுலத்துச் சட்டத்திற்கெதிராகத் தொடங்கினார். அதனை அவர் கருப்புச் சட்டம்(Black Bill) என்று சாடினார்.

கல்கத்தாவில் கூடிய காங்கிரசு சிறப்பு மாநாட் டில் 1920-ஆம் ஆண்டில் தம்முடைய ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தை அனைத்துக் காங்கிரசுத் தொண்டர்களும் ஏற்றுக் கொள்ளும்படி காந்தியடி கள் செய்தார். காந்தியடிகளின் விடுதலைப் போராட்டப்பணி இவ்விதம்தான் தொடங்கியது.

இந்தியாவின் சுயராச்சியம் என்னும் பேற்றைப் பெறக் காந்தியடிகள் பல்வேறு இயக்கங்களை நடத்தி னார். 1920-ஆம் ஆண்டில் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரசின் 35-ஆம் மாநாட்டில் காந்தியடிகள் காங் கிரசு இயக்கத்தின் தனிப்பெரும் தலைவராக்கப் பெற் றவுடன், நாடு தழுவிய புறக்கணிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். காந்தியடிகளின் புறக்கணிப்பு வேண்டுகோளுக்கு மக்களின் ஒத்துழைப்புச் சொல்ல வொண்ணாத வகையில் கிட்டியது. கிலாபத்து இயக்கத்திற்கும் காந்தியடிகள் ஆதரவு நல்கினார். காந்தியடிகள் வெற்றிபெறும் சூழ்நிலை தென்பட்ட வேளையில் சௌரி சௌரா (Chauri Chaura) என் னுமிடத்தில் நடைபெற்ற வன்முறையால் 22 காவல் துறையினர் கொல்லப்பட்டனர். அதனால், காந்தி யடிகள் புறக்கணிப்பு இயக்கத்தைக் கைவிட்டார். மகாத்மாவின் முடிவினைக் காங்கிரசுச் செயற்குழு ஏற்றுக்கொண்டது. இக்கூட்டம் பர்தோலி (Bardoli) யில் நடைபெற்றது. காந்தியடிகளின் முடிவினை ஏற்றுக்கொள்ளாத பிரிவினர் தம்மைச் சுயராச்சியக் கட்சியினர் என்று கூறிக் கொண்டதுடன், சட்டமன் றத்தில் நுழைய வேண்டுமென்னும் திட்டத்தை (Council Entry Programme) ஆதரித்தனர். 1923-இல் தில்லியில் கூட்டப்பெற்ற சிறப்பு மாநாட்டொன்றில் சட்டமன்றத்தில் நுழையும் முடிவு ஏற்றுக்கொள்ளப் பட்டது. காங்கிரசு இயக்கப் பிளவும் தவிர்க்கப் பட்டது. பூரண சுயராச்சியக் கோட்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காக்கினாடாவில் கூடிய 39-ஆம் மாநாட்டில் வகுப்புவாரி சிக்கல் குறித்து ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. வடகருநாடகத்திலுள்ள பெல்காம் என்னும் ஊரில் அடுத்த காங்கிரசு 1924-இல் கூடியபோது காந்தியடி கள் நிருமாணத்திட்டம் (Constructive Programme) என்னும் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் சுயராச்சியத்தை வன்முறையின்றி அமைதியான முறையில் அடைய முடியும் என்பதை நாட்டு மக்க

ளுக்குத் தெரிவித்தார். அக்காங்கிரசு மாநாட்டின் தலைவராகவும் காந்தியடிகள் பொறுப்பேற்றிருந்தார்.

கான்பூர் நகரில் கூடிய 1925-ஆம் ஆண்டு காங்கிரசு மாநாட்டிற்குப் பின்னர், சுயராச்சியக் கட்சி சட்டமன்றத்தில் அரசாங்கத்தை எதிர்ப்பது என்று முடிவு செய்தது. ஆனால், 1926-இல் கவுகத்தியில் கூடிய காங்கிரசு மாநாட்டில் காங்கிரசு ஊழியர்கள் அரசுப் பதவி எதையும் ஏற்கக் கூடாதென முடிவு செய்தது. அவ்வாண்டில் அமைக்கப்பட்ட சைமன் குழுவினால் முற்போக்குக் கட்சியுட்பட்ட அனைத்துக் காங்கிரசு ஊழியர்களும் ஏமாற்ற முற்றனர். சைமன் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையான் அனைத்துக் கட்சிகளின் மாநாடொன்று கூட்டப்படவேண்டு மென்றும், இந்திய அரசு செயற்படுத்தும் திட்டமொன்றைப் பரிந்துரைக்க வேண்டுமென்றும் முடிவாயிற்று. பண்டித சவகர்லால் நேருவின் தலைமையில் அமர்த்தப்பட்ட குழு தன் அறிக்கையை வெளியிட்டது. அதன்படி தொமினியத் தகுதியே இந்தியாவின் குறிக்கோள் என்னும் கருத்து 1928-ஆம் ஆண்டு ஆகசுட்டு 14-ஆம் நாள் வெளியானது. இதனை இந்திய மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் வரவேற்றனர். சென்னையில் 1927 திசம்பரில் கூடிய காங்கிரசு மாநாட்டில் பூரண சுதந்திரமே தம் குறிக்கோள் என்னும் கொள்கையை வலியுறுத்தினார் நேரு. இச்சமயத்தில் அனைத்துக் கட்சி மாநாட்டின் அறிக்கையை 1928-இல் இலக்னோவில் கூடிய காங்கிரசு விவாதித்தது. அக்கூட்டத்தில் பண்டித சவகர்லால் நேரு தொமினியத் தகுதி இந்தியாவின் பூரண சுதந்திரக் கோட்பாட்டிற்கு ஒவ்வாதது என்று பறை சாற்றினார். அப்போதிருந்து நேரு இந்திய சுதந்திரப்போராட்டத்தின் முன்னணித் தலைவராக விளங்கினார். ஆனால், 1926 திசம்பர் 23-ஆம் நாள் தொமினியத் தகுதியையே இந்தியாவுக்கு வழங்க இருப்பதையும் பூரண சுதந்திரக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் இர்வின்பிரபு காங்கிரசுத் தலைவர்களுக்குக் கூறியபோது காங்கிரசு இயக்கத்தினர் மனக்கசப்புற்றனர். காங்கிரசு இயக்க மாநாடு 1926 திசம்பர் 31-ஆம் நாள் இலாகூரில் கூடியது. அப்போது முன்னர்க் கல்கத்தா மாநாட்டுத் தீர்மானமான பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என்பதை மீண்டும்இம்மாநாடு வலியுறுத்தியது. அதனுடன் ஒவ்வோராண்டும் சனவரி 29-ஆம் நாளை 'சுதந்திர நாளாகப்' போற்ற வேண்டுமென்றும், பூரண சுதந்திரக் குறிக்கோள் நிறைவேறும்வரை இதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அந்த நாளன்று தேசியக்கொடியைக் ஏற்றி, இந்தியச் சுதந்திரத்தை அடைய நோன்பு நோற்க வேண்டுமென்றும் அம்மாநாடு குறிப்பிட்டது.

காந்தியடிகளின் பதினொன்று அம்ச வேண்டுகோளை ஆங்கில அரசு ஏற்க மறுத்தபோது அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். அதன் பொருட்டுத்தான் காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டு மார்ச்சு 12-ஆம் நாள் தண்டிப் பயணத்தைத் (Dandi March) தொடங்கினார். அப்பயணம் ஆங்கிலேயர் விதித்த உப்பு வரிக்கு எதிராக உப்பு வரிச் சட்டத்தை உடைக்கத் தொடங்கப்பட்டதாகும். சைமன் குழுவின் அறிக்கையை இந்தியா ஏற்க மறுத்துவிடவே, முட்டுக்கட்டையான நிலையை அகற்றும் கவலையால் ஆங்கிலவரசு வட்டமேசை மாநாட்டை இலண்டனில் கூட்டியது. காங்கிரசு இயக்கம் இம்மாநாட்டின் முதல் கூட்டத்தின் போது கலந்து கொள்ளவில்லை. ஆனால், 1931-இல் ஏற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதென முடிவு செய்து காந்தியடிகளை அதன் தனிப் பேராளராக அனுப்பி வைத்தது. அம்மாநாட்டின் முடிவுகள் காந்தியடிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தையளித்தது. அவர் நாடு திரும்பியபோது, காங்கிரசு இயக்கத்தின் பெருந்தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததுடன், காங்கிரசு இயக்கத்தை அடக்கியொடுக்கப் பல அவசரச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டார். மேலும், காந்தியடிகளுடன் அன்றைய அரசியல் சூழலைப் பற்றி விவாதிக்க அரசப் பேராளர் மறுத்துவிட்டார். செய்வதறியாது திகைத்த காங்கிரசுச் செயற்குழு 1932 சனவரி முதல் நாள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். காங்கிரசு செயற்குழு சட்டவிரோதக் குழு என்று அறிவிக்கப்பட்டது. இந்திய மக்களின் விடுதலை வேட்கையை ஆங்கிலேய அரசு ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. வகுப்புவாத சிக்கலைத் தீர்க்கும் நோக்குடன் அவ்வரசு வகுப்பு வாதத் தீர்ப்பை (Communal Award) வெளியிட்டது. இதனை எதிர்த்துக் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாநோன்பை 1932-ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் தொடங்கினார். அதன் விளைவாக 1932 அக்டோபர் 26-ஆம் நாள் புனே ஒப்பந்தம் (Poona Pact) ஏற்படுத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தை ஒரு மாதத்திற்குக் காந்தியடிகள் ஒத்திப்போட்டார். பின்னர் 1933-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் அரிசன மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர் 21-ஆம் நாள் உண்ணாநோன்பினை மேற்கொண்டார்.

சுயராச்சியக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டு,

1933-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் பீகார் மாநிலத்தில் இராஞ்சி (Ranchi) என்னுமிடத்தில் கூடியது. அடுத்து வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடப்பாராளுமன்றக் குழுவொன்றை உருவாக்க முடிவெடுத்தது. பாட்னா நகரில் 1933-இல் கூடிய இந்திய தேசிய காங்கிரசு இயக்க அனைத்திந்திய மாநாடு பாராளுமன்றக் குழு அமர்த்தப்படுவதை ஏற்றுக் கொண்டது. ஆனால், வகுப்பு வாத தீர்ப்பு குறித்த கருத்துக் வேறுபாடுகளின் விளைவாகப் பண்டித மதன்மோகன் மாளவியாவும் எம்.எசு. ஆனேயும் காங்கிரசிலிருந்து விலகினர். அவர்கள் 1934-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் காங்கிரசு தேசிய கட்சி என்னும் புதிய இயக்கத்தை அமைத்தனர்.

பிரிட்டிசு அரசு அரசியலமைப்புத் திட்டச் சிக்கலைத் தீர்க்க 1935-ஆம் ஆண்டு சட்டத்தை அறிவித்தது. எனினும், பூரண சுதந்திரம் என்னும் குறிக்கோளைத் தன் கொள்கையாகக் கொண்டிருந்த காங்கிரசுக்கு மன நிறைவேற்படவில்லை. எனினும், 1937-இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசு போட்டியிட்டு, தேர்தலில் வெற்றிபெற்றது. பதினொரு மாநிலங்களுள் எட்டில் காங்கிரசு அமைச்சரவை அமைத்துப் பதவியேற்றது. ஆனால், இந்தியாவைக் கலக்காமல் இரண்டாம் உலகப் போரில் இறங்கியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வழியாகக் காங்கிரசு அமைச்சரவைகள் பதவிகளைத் துறந்தன. இதன் பின்னர்க் காங்கிரசு 1940-இல் தனியார் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியது. மீண்டும் நாட்டில் தீராத முட்டுக்கட்டை ஏற்பட்ட சூழ்நிலை மூண்டது.

இரண்டாம் உலகப் போர் தீவிரமாக நடைபெற்ற சமயமாதலால் இந்தியாவின் ஒத்துழைப்புப் பெறும் கவலையால் இங்கிலாந்து அமைச்சரவை சர் இசுடாபோர்டு கிரிப்சு (Sir Stafford Gripps) என்பாரின் தலைமையில் தூதுக்குழுவொன்றை அனுப்பி, இந்தியாவில் ஏற்பட்ட முட்டுக்கட்டைச் சூழலைத் தவிர்க்க முயற்சி செய்தது. போர்க் காலத்தில் தேசிய அரசு வேண்டிய கோரிக்கையை ஏற்க மறுத்த அடிப்படைக் கருத்து வேறுபாட்டின் விளைவாகக் கிரிப்சு தூதுக்குழுவின் கருத்துகளும் தோல்வியுற்றன. தேசிய அரசு செயல்திறம் பெற்றதாயிருக்க வேண்டுமென்று காங்கிரசு வலியுறுத்தியதே அதன் தோல்விக்குக் காரணம். கிரிப்சு தூதுக்குழுவின் விளைவாக இந்தியாவின் அரசியல் சிக்கலைத் தீர்க்க இந்தியர்களால் தான் முடியும் என்ற கொள்கையை முதன் முதலாக ஆங்கில அரசு அறிந்து கொண்டது.

கிரிப்சு தூதுக்குழுவின் தோல்வியைக் கண்டு ஏமாற்றமடைந்த காங்கிரசு இயக்கம், 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) என்னும் இயக்கத்தை 1942 ஆகசுட்டு மாதத்தில் தொடங்கியது. இந்தியாவின் நன்மைக்காகவும் ஐக்கியநாடுகளின் வெற்றிக்காகவும் ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவிலிருந்து அகலுவது அவசரத்தேவை என்று அவ்வியக்கத்தின் தீர்மானம் அறை கூவியது. தொடர்ந்து வரும் ஆங்கில ஆட்சி இழிவானதென்றும், தன்னைத்தானே காத்துக்கொள்ளும் தகுதியற்றதென்றும், உலக விடுதலைக்கு ஊறு விளைவிப்பதென்றும் அத்தீர்மானம் இடித்துரைத்தது. இது மக்களின் வெளிப்படையான புரட்சிக்கு வித்திட்டது. இவ்வியக்கம் நாடுதழுவியதாகவும் அனைத்து மக்களின் ஆதரவைப் பெற்றதாகவும் அமைந்தது. அதேசமயம் இவ்வியக்கம் வன்முறைக்கும் வழிகோலியது.

காங்கிரசு இயக்கம் சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டதுடன், அதன் மாபெரும் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பெற்றனர். காங்கிரசை முழுமையாக அழித்துவிட ஆங்கில அரசு முயன்றது. 1945-ஆம் ஆண்டு சூன் மாதம் 16-ஆம் நாள் காங்கிரசு செயற்குழு உறுப்பினர்கள் அகமதாபாது சிறைக்கூடத்திலிருந்து விடுதலை செய்யப் பெற்றனர் உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த மீரட்டு மாநகரில் (Meerut) 1946 நவம்பர் 23-ஆம் நாள் காங்கிரசு இயக்கமாநாடு ஆச்சாரிய கிருபளானி (Acharya J.B. Kripalani) அவர்களின் தலைமையில் கூடியது. 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீரட்டு மாநாடு வரை காங்கிரசு மாநாடு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்து வந்த போராட்டங்களும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் சிறையில் வாடியதுமே இதற்குக் காரணம்.

இதனிடையில் இந்திய இராணுவத்தினர் செய்த கிளர்ச்சி இந்தியாவை நீண்ட நாள் தம்மாட்சியின் கீழ் வைத்திருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தியது. அத்தருணத்தில் இங்கிலாந்தில் தொழிற்கட்சியினர் ஆட்சி புரிந்தனர். இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதே தலைசிறந்ததென்று அக்கட்சியினர் முடிவுசெய்தனர். இதன்பொருட்டு 1946 பிப்பிரவரி 19-ஆம் நாள் இங்கிலாந்து அரசு அமைச்சரவைக் குழுவொன்றை அமர்த்தியது. இந்திய அமைச்சர் பெதிக் இலாரன்சு பிரபு (Lord Pathic Lawrence), சர் இசுடாபோர்டு கிரிப்சு, அலெக்சாந்தர் ஆகியோர் அதன் உறுப்பினர்கள்.

அமைச்சரவைக் குழு இந்தியாவுக்கு அரசியலமைப்பை வகுக்க அரசியல் நிருணயக் குழுவொன்றையும், இடைக்கால அரசு ஒன்றையும் அமைக்கும் கருத்தை அறிவித்தது. இக்கருத்தை 1946 சூலை

6–ஆம் நாள் பம்பாயில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரசு குழு ஏற்றுக்கொண்டது. எனினும், முசுலீம் லீகு தனி முசுலிம் நாடு கேட்டு அக்கருத்தினை ஏற்க மறுத்துவிட்டது. ஆகவே இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டத்தை மவுண்ட்பேட்டன் அறிவித்தார். அதன் அடிப்படையில் 1947–ஆம் ஆண்டைய இந்தியச் சுதந்திரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1947 ஆகசுட்டு மாதம் 15–ஆம் நாள் நள்ளிரவில் இந்திய மக்கள் விடுதலை பெற்றனர்.

இந்தியா 1947 ஆகசுட்டு 15–ஆம் நாள் விடுதலை பெற்றதும் நாட்டை ஆளும் பொறுப்பு காங்கிரசு இயக்கத்தின் மேல் விழுந்தது. காந்தியடிகளுக்குப் பின்னர் நேரு அவர்களின் செல்வாக்கிற்குக் காங்கிரசு ஆட்பட்டது. நேரு அவர்கள் காட்டிய வழியையே காங்கிரசு மேற்கொள்ளலாயிற்று.

காங்கிரசு இயக்கம் 1955–இல் சென்னைக்கருகிலுள்ள ஆவடியில் கூடியபோது திருப்புமுனையாக அமைந்ததொரு தீர்மானத்தை நிறைவேற்றிப் புகழ் பெற்றது. நாட்டில் சோசியலிசப்பாணி சமுதாயத்தை அமைக்கவும், திட்டமிட்டுச் செயலாற்றவேண்டும் என்னும் கருத்தையும் இம்மாநாடு ஏற்றுக் கொண்டு இந்தியாவிற்குப் புதியதொரு வழியைக் காட்டியது இத்தீர்மானங்களைத் தேசிய வளர்ச்சிக் குழுவும் (National Development Council) இந்தியாவின் மைய அமைச்சரவையும் காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியும் மக்கள் அவையும் ஏற்றுக்கொண்டன.

சோசியலிசப் பாணி சமூக அமைப்புப் பற்றிய காங்கிரசின் தீர்மானத்தை நாட்டு மக்கள் வரவேற்றார்கள்.

மக்களாட்சி–சமதருமவாதக் கொள்கைகளைச் செயற்படுத்த, காங்கிரசுச் செயற்குழு 1967 மே மாதத்தில் கீழ்க்காணும் 10 அம்சத் திட்டத்தைப் பரிந்துரைத்தது. அவை 1. வங்கிகளை நாட்டுடைமையாக்கல், 2.பொது ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை நாட்டுடைமையாக்கல்,3.ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தை அரசு மேற்கொண்டு சரக்கு வாரியா.. முன்னேற்றத்திற்கு வழிவகை செய்தல், 4. உணவுப் பொருள்களை அரசே வாணிகம் செய்தல், 5. கூட்டுறவுத் துறைகளைப் பெருக்கி வளர்த்தல், 6. முற்றுரிமைகளைப் படிப்படியாக அகற்றுதல், 7. சமூகத்தின் குறைந்த பட்ச தேவைகளுக்கு வழிவகைக் காணல், 8. நகர்ப்புற நில மதிப்புகளின் மீது ஈட்டுபடியாகாத உயர்வு வீதம் (Unearned increments in urban land values), 9. கிராமப்புறப் பணிகள் திட்டம், 10. முன்னாள் அரசர்களின் சிறப்புரிமைகளை ஒழித்தல் என்பனவாம்.

அகில இந்திய காங்கிரசுக் குழு மேற்கூறிய திட்டத்தை 1968–இல் பனசியில் கூடியபோது ஏற்றுக் கொண்டது. இந்திரா காந்தி அம்மையார் 1969–ஆம் ஆண்டு சூலை மாதம் 19–ஆம் நாள் இந்தியாவின் 14 பெரும் வங்கிகளை நாட்டுடமையாக்கும் அவசரச் சட்டத்தை வெளியிட்டார். தாம் பொதுவுடமைக் வாதியல்லரென்றும், ஆனால் ஏழை மக்களின் காவலர் என்றும் அவர் தம்மைக் கூறிக் கொண்டார். இந்திரா காந்தியின் புரட்சிகரமான சிந்தனை காங்கிரசை இரண்டாகப் பிரிக்க வகை செய்தது. ஒரு பிரிவினருக்கு இந்திரா காந்தி அம்மையாரும் பிறிதொரு பிரிவுக்கு நிசலிங்கப்பா என்பாரும் தலைமை தாங்கவே காங்கிரசு இயக்கம் இரண்டு பட்டது. இந்திராவின்கீழ் இயங்கிய காங்கிரசு 'காங்கிரசு (ஆர்)' (Congress R) என்றும் நிசலிங்கப்பா அவர்களின் கீழ்ச் செயற்பட்ட காங்கிரசு இயக்கம் 'காங்கிரசு (ஓ)' (Congress O) என்றும் அழைக்கப் பட்டன.

காங்கிரசு பிளவுறப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது, இந்திரா காந்தியம்மையார் பொருளாதாரக் கொள்கை குறித்து வெளியிட்ட 1000 சொற்களடங்கிய குறிப்பு; இரண்டாவது காங்கிரசு இயக்கத்தின் தலைமையைக் குறித்தது. மூன்றாவது குடியரசுத் தலைவர் தேர்தல் குறித்துக் காங்கிரசு இயக்கத்தில் பிளவு ஏற்பட்டது. காங்கிரசு. (ஆர்) என்றழைக்கப்பட்ட காங்கிரசு இயக்கம் இந்திய தேசிய காங்கிரசு (ஐ) (இந்திரா காங்கிரசு) என்று பெயர் மாற்றப்பட்டது.

1977–ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு (ஐ) தோல்வியுற்றது. சனதா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. 1980–இல் நடந்த பொதுத் தேர்தலில் மீண்டும் காங்கிரசு (ஐ) வெற்றி கண்டது.

இந்திரா காந்தி அம்மையார் 1984–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ஆம் நாள் சுட்டுக் கொல்லப் பட்டார். அன்றே அவர் மூத்த மகன் இராசீவ் காந்தி தலைமை அமைச்சராகவும் காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய தேசிய காங்கிரசு கி.பி. 1885–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு நூறாண்டுகளைக் கடந்துள்ளது. அதனைக் கொண்டாடும் வகையான் 1985–ஆம் ஆண்டைக் காங்கிரசின் நூற்றாண்டு விழாவாக நாடெங்கிலும் கொண்டாடினர்.

**இந்திய தேசிய கீதம்**: ஒவ்வொரு நாட்டிற்கும் தேசியகீதம் உண்டு. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்மூலம் இரவீந்திரநாததாகூர் 1911–ஆம் ஆண்டு இயற்றிய 'ஜன கண மன' என்னும்

பாடலை இந்தியாவின் தேசிய கீதம் அல்லது நாட்டுப் பண் (National Anthem) என 1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் இந்திய அரசு அறிவித்தது. இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத்து இந்திய நாட்டின் அரசு அலுவல்கள், பொது நிகழ்ச்சிகள் முதலியன முடியும் நேரத்தில் இதனைப் பாடவோ இசைக்கவோ வேண்டும் என்றும், இந்திய மக்கள் அனைவரும் நாட்டுப் பண்ணிற்குத் தக்க மரியாதை செலுத்துதல் வேண்டும் என்றும் கூறினார். இந்திய தேசிய காங்கிரசு கி.பி. 1892-ஆம் ஆண்டுக் கூட்டத்தின் போது பாடப்பட்ட 'வந்தே மாதரம்' என்னும் பாடலுக்கு இணையான மதிப்பு இதற்கு அளித்திட வேண்டும் என அரசு அறிவித்தது. இந்திய தேசிய கீதம் பின்வருமாறு:

''ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய உறிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே''


இதன் பொருள்: இந்தியத் தாயே, மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற நீயே எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப்பெயர் பஞ்சாபையும் சிந்துவையும் கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும் திராவிடத்தையும், ஒரிசாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது. நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; இயமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது. இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரப்புகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற தாயே உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

**இந்திய தேசிய கொடி** பிறந்து வளர்ந்தது ஒரு வரலாறாகும். கல்கத்தாவில் 1906-இல் நடந்த இந்திய தேசிய காங்கிரசுக் கூட்டத்தில்தான் சிவப்பிலும் மஞ்சளிலும் ஆன கோடுகளைக் கொண்டிருந்த இரு வர்ணக் கொடி காங்கிரசுக் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

செருமனியில் இசுடட்காட்டு என்ற நகரில் 1907-ஆம் ஆண்டு நடந்த பன்னாட்டுச் சோசலிச மாநாட்டில் காமா (Gama) என்னும் அம்மையார் ஆங்கிலேய வல்லாட்சியின் பிடியிலிருந்து விலகி, இந்தியா ஒரு சுதந்திர நாடாக வேண்டுமென்று பேசினார். மேலும், இந்தியாவிற்கென்று தனிக்கொடி இல்லாத குறையைப் போக்க, தான் உடுத்தியிருந்த பச்சை நிறத்தில் காவி நிறத் தலைப்புள்ள புடவையைக் கிழித்து இரு நிறமுள்ள கொடியாக அம்மாநாட்டில் அவர் பறக்கவிட்டார்.

திருமதி காமாவின் இரு நிறக்கொடி அவ்வாண்டின் முடிவில் மூவர்ணக் கொடியாகியது. இக்கொடி மேலே காவியும் இடையில் வெண்மையும் கீழே பச்சைநிறமும் கொண்டிருந்தது. இடையிலுள்ள வெண்பகுதியில் வந்தேமாதரம் என்று எழுதப்பட்டிருந்தது.



இந்திய தேசிய கொடி

சுயாட்சி இயக்கத்தின்போது (1916-18) (Home Rule Movement) இக்கொடி அகலவாட்டில் ஐந்து சிவப்புப் பட்டைகளும், நான்கு பச்சைப் பட்டைகளும் தீட்டப்பட்ட இரு நிறமுள்ள கொடியாக இருந்தது. இதைத்தவிர அக்கொடியில் சூரியன், சந்திரன் மேலும் நட்சத்திரங்களின் வடிவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

விசயவாடா (Vijayawada) காங்கிரசில் 1921-ஆம் ஆண்டில் மூன்று நிறக் கொடியாக சிவப்பு, வெண்மை, பச்சை நிறங்களுடன் பறக்கவிடப்பட்டது. இக்கொடியே 1931-ஆம் ஆண்டுவரை காங்கிரசு மாநாடுகளில் ஏற்றப்பட்டது.

கராச்சியில் 1931-ஆம் ஆண்டில் நடந்த இந்திய தேசிய காங்கிரசில் மகாத்மா காந்தியின் விருப்பத்திற்கிணங்க மேலே காவி நிறத்திலும் இடையில் வெண்மை நிறத்திலும் கீழே பச்சை நிறத்திலும் ஆகிய கொடி பறக்கவிடப்பட்டது. அக்கொடியின்

நடுவில் இராட்டைச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அதே ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ஆம் நாள் தேசிய கொடிநாளாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இக்கொடிதான் நாடு சுதந்திரம் அடையும் வரை பயன்பட்டு வந்தது.

சுதந்திர பாரதத்தின் கொடி: இந்திய அரசியல் நிருணய சபை (Constituent Assembly of India) 1947-ஆம் ஆண்டு சூலை மாதம் 22-ஆம் நாள் அசோகச் சக்கரம் நடுவில் கொண்ட காவி, வெண்மை, பச்சை நிறங்களுள்ள மூன்று நிறக் கொடியை ஒரு மனதுடன் இந்திய தேசிய கொடியாக ஏற்றுக் கொண்டது.

இந்திய தேசிய கொடியின் தத்துவப் பின்னணி: தேசிய கொடியின் நீள அகலம் மூன்றுக்கு இரண்டு (3:2) என்ற வீதத்தில் அமைந்துள்ளது. கொடியின் மேல்பகுதியிலுள்ள காவி நிறம் வீரத்திற்கும் தியாகத்திற்கும் அடையாளமாகவும், இடையிலுள்ள வெண்மை நிறம் உண்மைக்கு அடையாளமாகவும், கீழுள்ள பச்சை நிறம் நம்பிக்கைக்கும் ஆற்றலுக்கும் அடையாளமாகவும் திகழ்கின்றன. கொடியின் நடுவிலிருக்கும் அசோகச் சக்கரம் அறத்திற்கும் இந்தியாவின் பண்டைய நாகரிகத்திற்கும் அதனுடைய குறிக்கோள் முன்னேற்றத்திற்கும் அடையாளமாக விளங்குகிறது.

இந்திய தேசிய கொடி பற்றிப் பண்டித நேருவின் கூற்று: பண்டித நேரு இந்திய தேசியக் கொடியை 1947-ஆம் ஆண்டு சூலை 22-ஆம் நாள் இந்திய அரசியல் நிருணய சபையிடம் வழங்கிப் பின் வருமாறு குறிப்பிட்டார்.

'சரித்திரத்திலும் கர்ண பரம்பரையிலும் இந்திய மக்கள் இடம் பெற்று விட்டார்கள். நாம் தோற்றுப் போயிருந்தபோது இக்கொடியே நமக்கு முன்னோக்கிச் செல்லும் துணிவை அளித்தது. இதனால் வீரம் அடைந்தவர்கள் எத்தனையோ பேர்'.

'இக்கொடியின் நடுவில் காணப்படும் அறவாழி (தருமச்சக்கரம்) இந்தியாவின் பண்டைய நாகரிகத்தின் அறிகுறி. எனவே, வேறு எந்தச் சக்கரத்தையும் விட இச்சக்கரம் அசோகனின் பெயரையும் கொண்டிருக்கும்'.

'உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டுடனும் நட்பு கொண்டிருக்கவும், விடுதலைக்கு விழையவும், எந்த நாட்டுக்கும் உதவி புரியவும் இந்தியா விரும்புகிறது என்பதை இக்கொடி அங்கெல்லாம் எடுத்துச் சொல்லும்.' சி. சி.

துணை நூல்:

பட்டாபி சீதாராமைய்யா, இந்திய தேசிய காங்கிரசின் வரலாறு, பம்பாய், 1946.

**இந்திய தேசிய நூலகம்:** இந்திய தேசிய நூலகம் மேற்கு வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவில் அமைந்துள்ளது. ஆசியாவின் மிகப்பெரும் நூலகங்களுள் இதுவும் ஒன்று. இங்கு நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளின் நூல்களும் பதினேழு இலட்சத்துக்கும் மிகுதியான ஆங்கிலம் மற்றும் மேற்கத்திய மொழிகளின் நூல்களும் உள்ளன. இது ஏறக்குறைய நாற்பதுக்கும் மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நூலகம் இன்று முப்பது ஏக்கர் நிலப்பரப்பின் நடுவில் உயர்ந்த தோற்றத்துடன் எழுப்பப்பட்ட கட்டடங்களில் இயங்கி வருகிறது.

தேசிய நூலகத்தின் தோற்றம் கல்கத்தா பொது நூலகத்திலிருந்து தோன்றியது எனலாம். கி.பி. 1835-ஆம் ஆண்டு சே.எச். இசுடாக்லர் என்ற ஆங்கிலேயர் (இங்கிலீசுமேன் பத்திரிகையின் ஆசிரியர்) கல்கத்தாவில் ஒரு பொது நூலகம் வேண்டும் என விரும்பிப் பெருமக்களின் உதவியை நாடினார். அதன் விளைவாக கி.பி. 1836-ஆம் ஆண்டில் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. போர்டு வில்லியம் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட 4675 நூல்களையும் பெருமக்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு மருத்துவரின் வீட்டில் அப்போதைக்கு நூலகம் தொடங்கப் பெற்றது. இந்தியரும் ஆங்கிலேயரும் மனமொன்றி நூலகத்தின் வளர்ச்சிக்கென முயற்சி எடுத்துக் கொண்டனர். கி.பி. 1857-க்குப் பின் சிப்பாய்க் கலகத்தின் பின்விளைவுகளால் நூலகத்தின் வளர்ச்சிசிறிதே தடைப்பட்டது. இந்தியாவின் அரசப் பேராளராக இருந்த கர்சான் பிரபு ஒரு முறை நூலகத்திற்கு வருகை தந்தார். நூலகம் மிக வறுமையுற்ற நிலையிலிருந்ததைக் கண்டு மனம் வருந்தி, அதனைச் செப்பனிடத் துணிந்தார். முதற்படியாக அச்சிறு நூலகத்தை அரசாங்கமே வாங்கித் தன் மேற்பார்வையிலுள்ள நூலகங்களையும் சேர்த்து விரிவாக்கி, அதற்கு 'இம்பீரியல் நூலகம்' என்று பெயரிட்டது.

இம்பீரியல் நூலகம் 1903-ஆம் ஆண்டு சனவரி முப்பதாம் நாள் சுமார் ஓர் இலட்சம் நூல்களுடன் பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டது. திறப்பு விழாவின்போது கர்சான்பிரபு, 'இங்குப் பாரதத்தின் அனைத்து மொழிகளிலுமுள்ள நூல்களும் எல்லாப் பொருட்பகுதியைப் பற்றிய மேற்கோள் நூல்களும் இடம்பெற வேண்டும்' என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார். இங்கிலாந்திலுள்ள பிரிட்டிசு மியூசிய

நூலகத்தைப் போல் இந்நூலகமும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பது அவர்தம் நோக்கமாயிருந்தது.

1947-இல் இந்தியா விடுதலை பெற்றதும் 'இம்பீரியல்' என்ற பெயர் 'தேசிய' என்று மாற்றப்பட்டது. தேசிய நூலகம் மத்திய அரசின் கல்வித்துறையின் நேரடிப் பாதுகாப்புக்குள் வந்தது. இந்திய மொழிகள் அனைத்தும் இங்கு இடம்பெற வேண்டும் என்ற ஆன்றோர் கருத்து 1954-க்குப் பின்னரே நிறைவேற்றப்பட்டது. இந்திய விடுதலையைத் தொடர்ந்து தேசிய நூலகத்தின் இருப்பிடத்திலும் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் ஆளுநர் மாளிகையைத் தேசிய நூலகத்திற்கு அன்போடு ஈந்தார். 1954-இல் நூல்கள் ஒப்படைப்புச் சட்டம் (Delivery of Books Act, 1954) இயற்றப்பட்டது. அதன்படி, பாரத நாட்டின் பதிப்பாளர்கள் தாங்கள் பதிப்பிக்கும் ஒவ்வொரு நூலிலும் ஒரு படியைக் கல்கத்தா தேசிய நூலகத்திற்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. அச்சட்டத்தால் அன்று தொட்டு இன்றுவரை நூல்கள் வந்த வண்ணம் உள்ளன.

நூலகம் நிருவாக வசதியின் பொருட்டு நிருவாகப் பகுதி நீங்கலாக முப்பத்தொன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஓர் உதவி நூலகரின் தலைமையில் இயங்கி வருகிறது. அவற்றுள் இந்திய மொழிகள் பதினான்கும் ஆங்கிலம், அரபி, உருது, சீனம், உருசிய மொழி உட்படக் கீழை, மேலை நாட்டு மொழிகள், தேசப் படங்கள், அறிவியல், பாதுகாப்பு, புத்தகக் கட்டுமானம், சிறுவர் பகுதி, மைக்ரோபிலிம் பகுதி, அரசு வெளியிடும் நூல்களுக்கான பகுதி,அந்நிய நாட்டுத் தொடர்பு ஆகிய பல பிரிவுகளும் அடங்கும். இவை தவிரத்தனியார் நன்கொடை ஈந்த பகுதிகளும் உள்ளன. சர். அசுட்டோசு முகர்சி அளித்த கொடை இவற்றுள் முதன்மையானது. அதில் சுமார் எண்பத்து மூவாயிரம் தொன்மை வாய்ந்த, வேறெங்கும் கிடைக்காத, பன்மொழி நூல்கள் உள்ளன. இவை தவிரச்சாதுநாத் சர்க்கார், எல்.என். சென், அறிஞர் வையாபுரிப்பிள்ளை ஆகியோர் வழங்கிய நூல்களும் இங்கே இடம் பெற்றுள்ளன.

தமிழ்ப் பிரிவில் ஏறக்குறைய முப்பத்தையாயிரம் நூல்கள் உள்ளன. இவற்றுள் தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை அளித்த ஆயிரம் தமிழ் நூல்களும் சுமார் இரண்டாயிரம் ஆங்கில நூல்களும் உள. நூல்கள் ஒப்படைப்புச் சட்டத்தினால் ஆண்டொன்றுக்கு ஆயிரத்து இருநூறு முதல் ஆயிரத்து நானூறு நூல்கள் வரை நூலகத்தை வந்தடைகின்றன. பருவ ஏடுகள், நாளிதழ், மாத இதழ், வார இதழ், மாத மிருமுறை இதழ், ஆண்டு இதழ் என ஏறக்குறைய 1300 இதழ்கள் வருகின்றன.

தமிழ் நூல்களுள் குறிப்பிடத்தக்க சில நூல்கள் என, கி.பி.1578-இல் முதன்முதலில் அச்சேறிய 'தாக்டரினா கிறிசுதம்' என்பதன் புகைப்படப் பிரதி, கி.பி. 1756-இல் அச்சேறிய திருவாசகம், சுப்பையா செட்டியார் பதிப்பித்த சிலப்பதிகாரம் (கி.பி.1856), வீரமாமுனிவரின் சதுரகராதி முதலானவற்றைக் குறிப்பிடலாம். இட நெருக்கடி காரணமாகப் பருவ இதழ்கள் கட்டுச் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படவேண்டும் என்ற எண்ணம் முற்றுப்பெறா நிலையிலேயே உள்ளது. இவை தவிர வையாபுரிப்பிள்ளை வழங்கிய முந்நூறுக்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் இங்குக் குளிர் சாதனப் பெட்டகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இதற்கான அட்டவணைப் பட்டியல் (Bibliography) தயாரிக்கப்பட்டுள்ளது. இங்குப் பாரதியார் நடத்திய 'இந்தியா' என்னும் ஏட்டின் ஓராண்டு (1905)இதழ்கள் பாதுகாக்கப்படுகின்றன.

நூலகத்தில் ஒரே நேரத்தில் இருநூறு பேர் அமர்ந்து படிப்பதற்குரிய பகுதி உள்ளது. நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பும் உறுப்பினர்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்தித் தேவையான நூல்களைப் பெறலாம். பழைய பிரதிகளிலிருந்தோ வேறு கிடைக்கப் பெறாத ஏடுகளிலிருந்தோ ஆய்வுக்குத் தேவையான பொருள் வேண்டுமெனின் புகைப்படப் பிரதிகளைப் பெற வசதி உண்டு. பன்னாட்டு நூலகங்கள் தங்களுக்கிடையே தேவையான நூல்களை (International Library Lending) முறைப்படி பெற்றுக்கொள்ள நெறிமுறைகள் உள்ளன. கிழிந்த நூல்களையும் செல்லரித்த நூல்களையும் செப்பனிட அதற்கென மேற்படிப்பு படித்த அறிவியலார் உள்ளனர். தனியே அறிவியல் கூடமும் உள்ளது.

மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இருக்கும் இந்த நூலகத்திற்கு ஆண்டுதோறும் 120 இலட்ச உருபாய் ஒதுக்கப்படுகிறது. ஓர் இயக்குநரும் ஒரு நூலகரும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றனர். இவர்களுக்குக்கீழ் உதவி நூலகர்களும் துணைக்கலைஞர்களும் பொறுப்பேற்று நூலகத்தின் பல்வேறு பிரிவுகளை நிருவகிக்கின்றனர்.

நூலகம் இப்போது பழைய கட்டிடத்திலும் ஒரு புதிய ஒன்பது நிலைக் கட்டிடத்திலும் இயங்கி வருகிறது. இடமின்மை காரணமாக மேலும் மூன்று கட்டிடங்கள் எழும்ப உள்ளன. இங்கு ஆய்வுக்காக வரும் ஆய்வாளர்கள் தங்குவதற்கு வசதிகளும் உண்டு.

அதற்கென ஓர் ஆய்வாளர் விடுதி இயங்கி வருகிறது. முன்னேற்பாடாக வரின் தங்க இதில் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

தேசிய நூலகத்தின் அருகிலேயே மையக் குறிப்பு நூலகம் (Central Reference Library) என்று ஒரு பகுதியும் இயங்கி வருகிறது. இதன் பணி தேசிய நூல் விவரப் பட்டியலைத் (Bibliography) தொகுத்தலே. தேசிய நூலகத்தில், நூல்கள் ஒப்படைப்புச் சட்டத்தின் கீழ் வந்தடையும் நூல்கள் முதற் குறிப்புகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் மையக் குறிப்பு நூலகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கு ஆங்கிலம் உட்படப் பதினான்கு இந்திய மொழிகளில் தேசிய நூல் விவரப்பட்டியல் தொகுக்கப்படுகிறது.

தேசிய நூலகம் ஆண்டுக்கு மூன்று விடுமுறை நாட்களில் (குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்த தினம்) மட்டுமே செயற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பு.கோவி.

**இந்திய நகர்ப்புறக் குடும்பம்**: இந்தியச் சமூக அமைப்பில் குடும்பத்தின் பழக்க வழக்கங்கள் மரபு வழியாகப் பல தலைமுறைகளுக்குத் தொடர்ந்து வருகின்றன. பண்டைய சமூகங்களில் சமூகத்தின் அடிப்படை குடும்பமே ஆகும். ஏனென்றால் மனிதர்களின் எல்லாத் தேவைகளுக்கும் குடும்பமே பொறுப்பு ஏற்று வந்தது. ஊரகச் சமூகங்களில் இன்னும் இத்தகைய அமைப்பு பெருமளவில் மாற்றம் அடையவில்லை. ஆனால் நகரங்களில் உள்ள குடும்பங்களில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில் முன்னேற்றமும் தொழிற்சாலைகளின் தோற்றமும் இவற்றுக்குத் தலையாய காரணங்கள் ஆகும். கூட்டுக் குடும்ப அமைப்பு மாற்றம் அடைந்து தனிக்குடும்பங்கள் தோன்றின. பெரும்பாலான நகர்க் குடும்பங்களில் கணவன், மனைவி இருவரும் உழைத்து வருமானம் தேடுகின்றனர். குடும்பங்களில் மக்களுரிமை மயமான (Democratic) நோக்கு காணப்படுகிறது. குடும்பத்தின் தலைமையும் முக்கியமான செயல்களில் முடிவெடுக்கும் உரிமையும் குடும்பத்தினர் எல்லோருக்கும் பங்கிடப்பட்டுள்ளன. ஆண்களைப் போல் பெண்களும் உயர்தரக் கல்வி கற்கிறார்கள். பணியிலும் ஈடுபடுகிறார்கள். திருமணங்கள் பற்றிய முடிவெடுக்கத் தனிப்பட்ட ஆண், பெண் இருவருக்கும் அதிகமான உரிமை இருக்கிறது. அதாவது, குடும்பத்தின் பெரியவர்களே திருமணத்தைப் பற்றிய முடிவெடுக்கும் நிலைமை மாற்றம் அடைந்துள்ளது. ஆண்களும் பெண்களும் தமக்கு ஏற்ற உயர்நிலைக் கல்வி பற்றியும் தாமே முடிவெடுக்கின்றனர். மரபுவழி வந்த குடும்பத் தொழில்களில் பிள்ளைகள் ஈடுபடுவதில்லை. ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு இடையே உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குடும்பத்தில் ஒருவர் பகல்நேரத்தில் வேலைக்குப் போவதும் மற்றொருவர் இரவில் வேலைக்குப் போவதும் நகரக்குடும்பங்களில் காணப்படக்கூடியவை. சில குடும்பங்களில் குடும்ப உறுப்பினர்களின் ஓய்வு நேரங்களும் வெவ்வேறாக இருக்கின்றன.

குடும்பங்கள் அளவில் சிறியனவாக இருக்கின்றன. கணவன், மனைவி குழந்தைகள் மட்டுமே குடும்பத்தில் இருக்கின்றனர். ஆண்களுக்குத் திருமணம் ஆனவுடன் அவர்கள் தனிக்குடும்பங்களாக வாழ்கின்றனர். குடும்பக்கட்டுப்பாடு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆதலின் நகரக்குடும்பங்கள் பெரும்பாலும் திட்டமிட்ட குடும்பங்களாக அமைந்திருக்கின்றன. கணவன், மனைவி இருவரும் உழைத்து ஊதியம் தேடுபவராக இருக்கின்றமையால் நகரக்குடும்பங்களில் மனைவிக்குச் சம உரிமை கிடைக்கிறது. தந்தை வழிக் குடும்பங்களில் இருந்து வந்த தந்தையதிகாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. ஒருவர்மீது மற்றவர் அதிகாரம் செலுத்துவதை நகரக் குடும்பத்தினர் பெரும்பாலும் வெறுக்கின்றனர். அதிகாரத்திற்கு மாறாகச் சம உரிமையும் சுதந்திரமும் இவர்களால் விரும்பப்படுகின்கின்றன.

**இந்திய நடனக் கலை** மிகவும் தொன்மையானது. மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தொல்பொருள்களுள் நடனப் பெண்ணின் உருவங்களும் காணப்படுகின்றன. சிவபெருமான் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள் ஆடல் இலக்கணத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. தண்டு முனிவர் சிவபிரான் கட்டளைப்படி பரதமுனிவருக்குக் கற்பிததனால், தாண்டவம் எனப்பெயர் பெற்றது என்று கூத்த நூல் கூறுகிறது. இது பரதம் எனவும் பெயர் பெறும். பரதத்திற்குரிய பாவம்,இராகம்,தாளம் என்னும் மூன்றும் அமைந்திருப்பதே தாண்டவம் என்பர்.

சிவபெருமான் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள் ஏழிசைகளினின்று தோன்றியவை. காளிகா தாண்டவம் படைத்தற் செயலையும், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம் ஆகிய இரண்டும் இறைவனின் காத்தற்றொழிலையும், சங்காரத்தாண்டவம் அழித்தற் செயலையும், திரிபுரத்தாண்டவம் (கொடு கொட்டி, பாண்டரங்கம்) மறைத்தற் செயலையும், ஊர்த்துவ தாண்டவம் அருளற் செயலையும், ஆனந்தத் தாண்டவம் ஐந்து செயல்களையும் ஒருங்கே செய்தலையும் குறிக்கின்றன. இந்த ஏழுதாண்டவங்களையும் நூற்றெட்டு வகைகளாகச் சிவபெருமான் ஆடினார் என்பர்.

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் நூலின் மூன்றாம் பெரும்பிரிவு நடனத்தைப் பற்றி விரிவான விளக்கங்களைத் தருகிறது. இசைவழி நிகழும் நடனம் நிருத்தம் எனப்படும். நிருத்தம் என்பது தாண்டவம் முதலிய எல்லாக் கூத்துக்கும் உரிய பொதுப்பெயராக விளங்குகிறது. திவாகரம், பிங்கலம் முதலிய நூல்களில் நாடகம், நிருத்தம் என்னும் சொற்கள் கூத்தின் பொதுப்பெயர்களாகவே கூறப்படுகின்றன. பஞ்சமரபில் தாண்டவம், நிருத்தம், நாட்டியம், குரவை, வரி, கோலம், வசை என்னும் ஏழு வகைக் கூத்துகள், சாந்தி, விநோதம், வசை என்னும் மூவகையுள் அனைத்துக் கூத்துகளும் அடங்கும் முறை, தாண்டவங்களுக்குரிய தாளங்கள் போன்ற பல்வேறு பொருள்கள் பற்றி அறிவனார் விவரித்துக் கூறியுள்ளார்.

இவற்றுள் வசைக் கூத்து பதினொன்று எனவும் இந்தப் பதினொன்று வகை ஆடல்களும் அமரர் ஆடியவை எனவும் பஞ்சமரபு கூறுகிறது. சிவபெருமான் முப்புரம் எரிக்கச் சென்றபோது திசைமுகன் காணுமாறு வெண்ணீறு பூசி ஆடிய கூத்து பாண்டரங்கம் எனப்படும். முப்புர அவுணர்கள் சிவபெருமான் நகைப்பில் எரிந்து சாம்பலாகியதும் சாம்பற் குவியல் மேல் உமை நின்று, பாணி, தூக்கு, சீர் என்னும் தாளங்களைச் செய்யும் வெற்றிக் களிப்பில் சிவபெருமான் கைகொட்டி நின்றாடிய கூத்து கொடுகொட்டி எனப்படும். முப்புரங்களும் தீயில் எரிவதைக் கண்டும் இரங்காமல் ஆடலில் கொடுமைப் போராக ஆடியதால் இது கொடுகொட்டி எனப் பெயர் பெற்றது. கம்சன் அனுப்பிய யானையின் கொம்பை ஒடித்த பின் கண்ணன் ஆடிய கூத்து அல்லியம் எனப்படும். இக்கூத்தில் அபிநயம் எதுவும் இல்லை. இக் கூத்து அலிப்பேடு எனவும் குறிப்பிடப்படும். வாணன் என்னும் அவுணனை மல்லனாகச் சென்று தாக்கிய பொழுது கண்ணன் ஆடிய கூத்து மல் எனப்படும். காமன் மகன் அநிருத்தனைத் தன் மகள் உழையின் பொருட்டுச் சிறை வைத்த வாணாசுரனுடைய தெருக்களில் கண்ணன் குடத்தைக் கொண்டு ஆடிய கூத்து குடம் எனப்படும். கரிய கடல் நடுவில் நின்று சூரனுடைய வேற்றுருவத்தை அறிந்து வெற்றி பெற்ற முருகன், அக்கடல் நடுவில் அலைகளை அரங்கமாகக் கொண்டு ஆடிய கூத்து துடி எனப்படும். அவுணர்கள் போருக்கு ஆற்றாமல் தம் படைகளை நழுவ விட்டு வருத்தமுற்ற போது, முருகன் தன் குடையைச் சரித்து ஆடிய கூத்து குடை எனப்படும்.

ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்துவிகம் எனனும் நான்கு வகை அபிநயங்களுடனும் ஒன்பது சுவைகளுடனும் சதி, சுரம் முதலியவற்றுடனும் நடிப்பது நிருத்தம் எனப்படும். இது இசை வழிக் கூத்து எனப் பெயர் பெறும். நாட்டியம் என்பது உள்ளத்துக் கருதிய பொருள்களை அபிநய மாத்திரத்தால் நடித்துக் காட்டுவதாகும். இது அபிநயக் கூத்து எனப்படும்.

'விழிசிரம் கை கால் மெய்யுடன் வயமிசை நளின பாவம் நாட்டிய மாமே' என்பது பரத சூத்திரம். இது நாடகத்தின் அடிப்படை ஆகும். குரவை என்பது கண்ணனை நடுவில் நிறுத்தி ஆய்ச்சியர் கைகோத்தாடல் ஆகும். வரி என்பது உலகப் பொது நெறிகளை நாடக வழக்கில் காட்டுவதாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தின் இயல்பை அவ்வாறே அமைத்துக் காட்டல் நிலவரி என்பர். ஐவகை நிலத்துக்கு உரிய முருகன் முதலிய கடவுளர்க்கு உரிய வெறி முதலாகிய ஐந்து கூத்தினையும் கூத்தநூலார் கோலம் என்பர்.

தேசி, வடுகு, சிங்களம் என்பன மூவகை நிருத்தமாகும். நின்றாடுவது தேசி; அசைந்தாடுவது வடுகு; நடந்தாடுவது சிங்களம் ஆகும். சாந்திக்கூத்து, விநோதக் கூத்து, வசைக்கூத்து என்பன மூவகைக் கூத்து. இவற்றுள் உயர்ந்தோரை மகிழ்விக்கும் பொருட்டு ஆடும் கூத்து விநோதக் கூத்து ஆகும். குரவை, கலி நடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை, வெறியாட்டு என்னும் ஏழும் விநோதக் கூத்து வகையுள் படும். வென்றி, வசை விநோதம் முதலிய பலவகையால் ஆடப்படுவது வசைக் கூத்து ஆகும்.

அகத்து வழித் தோன்றும் சாத்துவிகம், இராசசம், தாமசம் (அமைதி, ஊக்கம், ஒடுக்கம்) என்னும் முக்குணங்களும், குணங்களின் வழித் தோன்றும் உவகை, நகை, அழுகை, வெகுளி, பெருமிதம், அச்சம், இளிவரல், வியப்பு, நடுநிலை என்னும் ஒன்பதும் சுவைகள் ஆகும். அகத்து வழிப்பட்ட குணங்களும் சுவைகளும் தோன்ற இறைவனால் ஆடப்பெற்ற தாண்டவங்கள் அகமார்க்கம் எனப் பெயர் பெற்றன. சிவனால் ஆடப்பெற்ற பதினாறு வகை நிருத்தங்கள் ஆதி, அனு, பிரகாசம், பீடம், புட்பாஞ்சலி, புயங்கம், தேசி, ஒத்து, நீதி, நிழல், வைப்பு, வகுப்பு, வாக்கியம், கவுத்தம், துணுக்கு, தெண்டபாதம் என்பனவாம். இவ்வகை நிருத்தங்களுக்குரிய தாள வகைகளும் அவற்றுக்கான மாத்திரைகளும் பரதரால் விரித்துரைக்கப்பட்டன என அறிவனார் குறிப்பிடுகிறார்.

புராணங்களிலும் இதிகாசங்களிலும் இளவரசிகள் நடனம் கற்றுத் தேர்ச்சியடைந்திருந்தனர் என்னும் செய்தி காணப்படுகின்றது. பரதரின் நாட்டிய சாத்திரம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இந்நூலையொட்டி மற்ற இந்திய

மொழிகளிலும் பல நாட்டிய நூல்கள் இயற்றப்பட்டன.

சாஞ்சி, மதுரா, அமராவதி, நாகார்ச்சுன கொண்டா, எல்லோரா ஆகிய இடங்களில் காணப்படும் சிற்பங்களை வடித்த சிற்பிகள் நாட்டியக் கலையில் சிறந்த அறிவு பெற்றவராக இருந்திருக்க வேண்டும் என்பதை அச்சிற்பங்களில் காணப்படும் முறையான நாட்டிய, நிருத்தத் தோற்றங்களினின்று அறியலாம். இச்சிற்பங்கள் பெரும்பாலும் நாட்டிய சாத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் 'சரீ' என்னும் வகையான நிருத்தங்களைக் குறிக்கின்றன. நந்திகேசுவரர் இயற்றிய அபிநயதருப்பணம் என்னும் நூல் நாட்டிய சாத்திரத்தையொட்டி எழுதப்பட்டதாகும்.

தஞ்சையில் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பிரகதீசுவரர் ஆலயத்திலும் சிதம்பரத்தில் கட்டப்பட்ட நடராசர் ஆலயத்திலும் முதன்முதலாகக் கரணங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டன. ஒரிசாவில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டுவரையில் கட்டப்பட்ட விட்டல் தியல் பரமேசுவர, இராசராணி ஆகிய கோவில்களில் சரீ, தானம் ஆகிய நிருத்தங்களின் சிற்பங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சாந்தேல மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட (கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டிலிருந்து பதி மூன்றாம் நூற்றாண்டு வரையில்) கசுராகோ (Kajuraho) ஆலயங்களிலும் நிருத்தங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இராசசுத்தானம், சௌராட்டிரம், ஒரிசா போன்ற இடங்களிலும் இமயம் முதல் குமரி வரையில் காணப்படும் பெரும்பாலான கோவில்களிலும் நிருத்தங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

சாரங்கதேவர் இயற்றிய சங்கீதரத்தினாகரம் என்னும் நூலிலும் அபிநயதருப்பணத்திலும் நாட்டிய சாத்திரத்தையொட்டிய மரபு மீறல்கள் 'பத்ததி' என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய மரபு மீறல்கள் பல்வேறு வகையான இந்திய நடனங்களாகப் பிற்காலத்தில் உருப்பெற்றன. இவ்வகை நடனங்களுக்கான நாட்டிய இலக்கண அடிப்படைகளைப் பல நாட்டிய நூல்களில் காணலாம். இந்த ஆடல் இலக்கண அடிப்படை அபிநயதருப்பணத்தைத் தவிரப் போச மன்னன் இயற்றிய சிங்காரப்பிரகாசம், சோமேசுவரர் இயற்றிய மானசோல்லாசம், சயசேனாதிபதி இயற்றிய நிருத்தரத்தினாவளி, குசராத்து நாட்டைச் சேர்ந்த வசனாசாரிய சுதாகலசர் இயற்றிய சங்கீதோபநிசத சாரோதரம், ஆந்திரத்தைச் சேர்ந்த அத்தமுக்தாவளி, மணிபுரியைச் சேர்ந்த கோவிந்த சங்கீதலீலாவிலாசம், ஒரிசாவின் மகேசுவரமகாபத்திரர் இயற்றிய அபிநவசந்திரிகை, வங்கத்தைச் சேர்ந்த இரகுநாதர் இயற்றிய சங்கீத தாமோதரம், கேரளநாட்டைச் சேர்ந்த பலராம பாரதம், அத்தலட்சணதீபிகை, இராசசுத்தானத்தைச் சேர்ந்த கும்பாகரணர் இயற்றிய நிருத்தியரத்தின கோசம், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த முகமதுசா இயற்றிய சங்கீதமல்லிகை, தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட அதிபரதம், பரதாருணவம், நிருத்த அத்தியாயம், சங்கீதமகரந்தம் போன்ற பல்வேறு நூல்களில் காணப்படுகின்றது. இவையேயன்றி இந்தியாவின் பல்வேறு மொழிகளில் பல நாட்டிய நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அந் நூல்கள் பரதரின் நாட்டிய சாத்திரத்தின் அடிப்படையில் எழுதப்பெற்றவை.

பரதநாட்டியம், கதகளி, மணிபுரி, ஒடிசி, கதக்கு போன்ற பல்வேறு வகை நடனங்கள் கி.பி. 1300–ஆம் ஆண்டு முதல் கி.பி. 1800–ஆம் ஆண்டுவரையிலான காலத்தில் தனிப்பட்ட நடன முறைகளாக உருப்பெற்றன. சங்கீதரத்னாகரம் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்து நாட்டிய சாத்திர இலக்கண மரபுகள் மீறப்பட்டு வந்தன என்று குறிப்பிடுகிறது.

சயதேவர் இயற்றிய கீதகோவிந்தம் இசையுடன் நடனத்தையும் சேர்த்து நிகழ்த்தும் முறையை இந்தியாவெங்கும் பரப்பியது. இதன் விளைவாக இந்திய நடனத்திற்கு இறையுணர்வு இன்றியமையாததாகி விட்டது. கண்ணன் நடனம் ஆடுபவனாகப் புராணங்கள் விவரிப்பதன் காரணமாகப் பாகவதபுராணத்தின் கதைகளைக் கொண்டு இயற்றப்பட்ட நூல்கள் நடனத்திற்குச் சிறப்பிடம் கொடுத்தன.

இந்திய நடனங்களில் இசையும் நடனமும் இரண்டறக் கலந்திருக்கின்றன. நடனமில்லாத இசையுண்டு. ஆனால் இசையில்லாத நடனமில்லை. தாண்டவ நடனத்திலும் தாளக்கருவிகள் சதிசுரங்கள் அல்லது சொல்லுக் கட்டுகள் இசைக்கப்படுகின்றன. நடனத்திற்காக அமைக்கப்படும் இசையில் சதிகளுக்கும் தாளத்திற்கும் முதலிடம் கொடுக்கப்படுகிறது. நடனத்தின் இடையே ஆடலாசிரியர் சதிகளை இசைக்கிறார். இத்தகைய சதிகள் நடனத்தின் கால அளவினின்று மாறுபட்டதாகவும் இருக்கலாம். அதாவது, நடனம் மெதுவாகக் குறைந்த கால அளவில் செய்யப்படும்பொழுது சதிகள் விரைவுக்காலத்தில் இசைக்கப்படலாம். நடனத்திற்கான இசையில் பெரும்பாலும் சதிகள் இருப்பதில்லை. சதிகள் அவ்வப்பொழுது ஆடலாசிரியரின் முறைக்கும் கற்பனைக்கும் ஏற்ப அமைக்கப்படுகின்றன. தில்லானா

என்னும் பரதநாட்டியப் பகுதியில் மட்டும் இசை அமைக்கப்படும்பொழுதே சதிகள் இசையுடன் சேர்க்கப்படுகின்றன. அபிநயத்தின் அடிப்படையிலும் பாடலின் கருப்பொருளுக்கு ஏற்றவாறும் இராகங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. விருத்தம் போன்ற நடனப்பகுதிகளில் தாளத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுவதில்லை. இவற்றில் அபிநயமே சிறப்பாகக் கருதப்படுகிறது. இசையின் ஏழுசுரங்களுக்கு இணையான நடனச் சொல்லுக்கட்டுகள் உள்ளன.

ச ரி க ம ப த நி

தா தி தோம் தக தரிகிட தக ததிங்கிணதோம்

இச்சொற் கட்டுகள் நடனத்திற்கு ஏற்றவாறு அவ்வப்பொழுது ஆடலாசிரியர்களால் மாற்றி அமைக்கப்படுகின்றன. புதிய அபிநயங்களையும் கற்பனைத் திறத்திற்கு ஏற்பப் புதிய பாவங்களையும் இந்திய நடனத்தில் புகுத்த முடியும். இயலிசை நாடகங்களில் இத்தகைய கற்பனைச் சொற்கட்டுகள் மிகுதியாக இடம்பெற முடியும்.

தமிழ்நாட்டு ஆலயங்களில் கொடியேற்றம் நிகழும்பொழுதும் திருவிழாக் காலங்களிலும் பண்டைக் காலத்தில் நவசக்தி நிருத்தியம் என்னும் ஆடல் நிகழ்ந்து வந்தது. இது பிரம்மன், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய சந்தி தேவர்களுக்காக நடத்தப்பட்டு வந்தது. சில கோவில்களில் நடனத்திற்கு ஏற்ற சர்வவாத்தியம் என்னும் சடங்கு இசை இசைக்கப்படுகிறது.

போரில் வெற்றிபெற்றுத் திரும்பும் மன்னர்களையும் வீரர்களையும் வரவேற்கும் முறையில் ஆடப்பெற்று வந்த சய நிருத்தியம் என்னும் வெற்றி நடனத்தோற்றங்கள் தஞ்சையை அடுத்த திருக்கோடிக்காவல் என்னும் ஊரிலுள்ள கோவிலின் கோபுரத்தில் காணப்படுகின்றன. நால்வகைப் படையினர் அணிவகுத்து வரும் காட்சியும் அவர்களைப் பாணரும் ஆடல்கலைஞர்களும் ஆரவாரத்துடன் வரவேற்கும் காட்சியும் இச்சிற்பங்களில் காணப்படுகின்றன.

இந்திய நடனங்கள் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்னும் மூவகைப் பகுதிகளைக் கொண்டவை. நிருத்தம் என்னும் பகுதியில் பலவகைக் கரணங்களும் அங்ககாரங்களும் அடங்கும். நிருத்தியம் என்பது பாடலின் பொருளுக்கு ஏற்ப ஆடும் கூத்துப்பகுதி. இது இராசசம், தாமசம், சாத்துவிகம் ஆகிய மூவகை அகச்சுவைகளையும் காட்டுவதாக அமைந்திருக்கும். இம்மூவகை அகச்சுவைகளினின்று ஒன்பது வகைச் சுவைகள் எழுகின்றன. இச்சுவைகளை அபிநயத்தின் மூலம் அவையினருக்கு வெளிப்படுத்த முடியும். இந்திய நடனங்கள் பொதுவாக இலயம் என்னும் தத்துவ அடிப்படையில் அமைந்ததாகும். இந்தத் தத்துவத்தின் உருவகமே தாளம்.

இந்திய நாட்டிய இயலில் நடனத்தை விளக்கும் வகைகள், முறைகள், நடிப்பு வகைகள் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்ட அடிப்படை விதிகள் காணப்படுகின்றன. அயல் (பகியா), முறைமை (அபியந்தரம்), வட்டார நடிப்பு (பிரவிருத்தி), அடிப்படையான விளக்கம் (சாமானியபிநயம்), சிறப்பு விளக்கம் (சித்திராபிநயம்) ஆகியவை இவ்விதிகளையொட்டிய துணைவிதிகளாகும். இவ்விதிகளின் அடிப்படையிலேயே அபிநயதருப்பணம், விட்டுணுதருமோத்தர புராணம், நாட்டியசாத்திரச் சங்கிரகம் போன்ற நூல்கள் எழுதப்பட்டன. இந்நான்கு வகைகளான அபிநயங்களில் பல நுட்பங்கள் அடங்கியுள்ளன. நாட்டியசாத்திரத்தின் தாண்டவ இலக்கணம் என்னும் பகுதியில் தாண்டவத்தில் இரேசிகங்கள், அங்ககரங்கள், பிண்டிகள் ஆகிய மூன்று கூறுகள் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய நடனத்தை நிருத்தியம், நிருத்தம், நாட்டியம் (தாண்டவம்), இலசியம் (சுகுமாரம் அல்லது சிங்காரம்) ஆகிய நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த நான்குவகை ஆடல் பகுதிகளை இந்திய நடனங்கள் எல்லாவற்றிலும் காணலாம். இவற்றுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்கள் மட்டுமே வேறுபடுகின்றன. நடனப்பகுதி மட்டும் கொண்ட ஆடல் நிருத்தம் என்றும் அபிநயத்துடன் சேர்ந்த நடனம் நிருத்தியம் என்றும் கூறப்படுகின்றன. நிருத்தத்தில் தாளம் சிறப்பிடம் பெறுகிறது. புவியின் ஈர்ப்புத் தன்மையுடன் இயைபுற ஆடற்கலைஞர் சமநிலையில் இருந்து ஆடலின் அசைவுகளையும் நிருத்தங்களையும் செய்கிறார். திடுமெனக் குதித்தலும் பல்வேறு திசைகளில் மிதத்தலும் கொண்ட பாலே (Ballet) போன்ற மேனாட்டு நடன முறைகள் இந்திய நடனத்தில் இல்லை. புவியின் ஈர்ப்புக்கு எதிரான அசைவுகள் மேனாட்டு நடனங்களில் உண்டு. இந்திய நடனத்தில் தாளம் என்பது காலத்துடன் இயைபு கொண்டு நடனக்கலைஞர் செய்யும் அசைவாகும். கதகளியைத் தவிர மற்ற இந்திய நடனங்களில் பெருந்துள்ளல்கள் இல்லை. மண்டலங்கள், கரணங்கள், சரீக்கள் போன்ற அடிப்படை அசைவுகளே உள்ளன. பரதர் 32 சரீக்களுள் 16 ஆகாயசரீக்களைக் குறிப்பிடுகிறார். புவி ஈர்ப்பினை விட்டு விலகும் அசைவுகளே ஆகாய சரீக்கள் ஆகின்றன. சரீ, கரணம், மண்டலம் ஆகியவற்றைத் தவிர வட்டங்கள் (இரேசிகங்கள்), சுற்றுகள் (பிரமரி),



க்ருட்டிண வருகை - பாகவத மேளா



பரதநாட்டியம்

குதித்தலும் தாவுதலும் (உத்பிலவணம்), பல பகுதி கள் இணைந்த பிண்டிபந்தங்கள், சக்கரம் என்னும் முழுமையான சுற்றல்களை இது சூறிக்கும். இது கதக்கி நடனத்தில் காணப்படுகின்றது.

நாட்டிய இயல்

- விளக்கும் வகைகள் (தருமிகள்)
  - உலோகதருமி
    - நாடகத்தில் பயன்படும் முறை
  - நாட்டிய தருமி
    - நடனத்தில் பயன்படும் முறை சில நேரங்களில் நாடகத்திலும் பயன்படும்
- முறைகள் (விருத்திகள்)
  - கைசிகி (மென்மையான)
    - இலசிய நடன முறைக்கு ஏற்றது
  - அரபதி (விறுவிறுப்பான)
    - தாண்டவ நடன முறைக்கு ஏற்றது
  - சத்வதி (பகட்டான)
    - சுவைகளை விளக்கும் முறை
  - பாரதி (மொழிவழியான)
    - நடனத்திற்குப் பயன்படாத முறை
- *நடிப்பு வகைகள் (அபிநயம்)

* நடிப்பு வகைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

நடிப்பு வகைகள் (அபிநயம்)

- ஆங்கிகம் (உடல் அசைவுகள்)
  - முகசம் (முக அசைவு) உபாங்கம் (சிற்றுறுப்பு அசைவு)
    - புருவம், கண் இமைகள் விழிகள், மூக்கு உதடுகள், வாய்
  - சாரீரம்: (உடல் அசைவு) அங்கம்: (உடலின் பெரிய உறுப்புகள்)
    - தலை, மார்பு, இடுப்பு, தொடைகள், கைகள், கால்கள்.
  - சேட்டாகிருதம் (உடல் முழுமையும்)
    - நிருத்தம்
- வாசிகம் (மொழி) நடனத்தில் இசை, சதி, சொல்லுக் கட்டுகள் (நாடகத்தில் வாசிகாபிநயம்)
- ஆகாரியம் (உடை, அணிகள் ஒப்பனை) நடனம், நாடகம் இரண்டிற்கும் பொருந்தும்
- சாத்துவிகம் (உள் நிலை)
  - நடனத்தில் இடம் பெறாது

நடனக்கலை சமூகத்தில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. கோவில்களைச் சேர்ந்த ஆடற்கலைஞர்கள் மன்னர்களாலும் மக்களாலும் மதிக்கப்பட்டனர். இக் கலைஞர்களே இசை, நடனம் ஆகிய கலைகளை வளர்த்து வந்தனர். இறைவணக்கத்துடன் நடனமும் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. கோவில்களில் நடனமாடும் மங்கையர் தம் வாழ்க்கையை இறைத் திருப்பணிக்கே முழுமையாக அளித்தனர். இவர்கள் மன்னர்களாலும் மக்களாலும் மதிக்கப்பட்டனர். இவர்கள் தேவதாசிகள் (இறைவனின் வேலைக்காரிகள்) என்று குறிப்பிடப்பட்டனர். அக்காலத்தில் தமிழகத்தில் மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்ட நடனம் விநோதக் கூத்து என்னும் நகைச்சுவை நிறைந்த நடனம் ஆகும். சாந்திக் கூத்து என்பது மரபுவழி நடனங்களைக் குறிக்கும். சாந்திக் கூத்து பரதநாட்டியமாக வளர்ந்து வந்தது. சோழ மன்னர்கள் நூற்றுக்கணக்கான ஆடற்கலைஞர்களைப் போற்றி வந்தனர். இதனையொட்டி, தமிழகத்தை ஆண்ட பாண்டிய, பல்லவ, நாயக்க, மராத்திய மன்னர்களும் ஆடற்கலைஞர்களைப் போற்றி வந்தனர். இவர்களுடன் இயலிசைப்புலவர்களும் ஆடலாசிரியர்களும் போற்றப்பட்டனர்.

நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கரணங்களைத் தமிழ் நாட்டில் தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய ஐந்து கோவில்களில் காணலாம். கரணங்கள் நடனத்திற்கான அடவுகளை அமைப்பதற்கு அடிப்படையாக இருக்கின்றன. தஞ்சையை மராத்திய மன்னர்கள் ஆண்டு வந்த காலத்தில் (கி.பி. 1654-1854) தேவதாசிகளின் ஆடல் சதிர் நடனம் என்று குறிப்பிடப்பட்டது. சதிர் என்னும் சொல் மராத்திய மொழியில் பார்வைக்கு அளித்தல் என்னும் பொருள்படும். அரசவையில் நடனக் கலைஞரின் ஆடல் அறிவிக்கப்பட்ட காலத்தில் சதிர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அக்காலத்தின் மார்க்கம் என்னும் முறையில் நடைபெற்று வந்த நடனத்தில் தஞ்சை நால்வர் (சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு) பல மாற்றங்களை ஏற்படுத்தினர். துளசா மன்னர் (கி.பி. 1763-1787) இயற்றிய சங்கீதசாராமிருதம் என்னும் நூலில் 16 அடவுகளும் அவற்றின் பெயர்களும் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுக்கான சொற்கட்டுகளும் உள்ளன. இம்முறையில் அமைந்த நடனம் இக்காலத்திய பரதநாட்டிய முறையின் முன்னோடியாக அமைந்தது. ஆங்கிலேயரின் அரசாட்சியில் குறிப்பாக, 19-ஆம் நூற்றாண்டில் இந்திய நடனங்கள் நலிவுற்றன. தேவதாசிகள் ஆட்டத்திற்குச் சமூகத்தில் மதிப்பு குறைந்தது. அக்காலத்தில் பாலே நடனத்தில் சிறந்து விளங்கிய உருசிய நாட்டு அன்னா பாவ்லவா (Anna Pavlova) என்னும் நடனமங்கை உதயசங்கர் என்னும் இந்தியக் கலைஞர் மூலம் தேவதாசிகளின் நடனத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அன்னா பாவ்லவா பரதநாட்டியத்தை நன்கு கற்றுத்தேர்ச்சியடைந்து 1924-ஆம் ஆண்டு இலண்டன் நகரத்து கவண்ட்டுத்தோட்ட அரங்கில் (Covent Garden Theatre) இந்திய நடன நிகழ்ச்சியை உதயசங்கருடன் நடத்தினார். பாவ்லவா உருக்குமணி தேவி என்பவரையும் இந்திய நடனம் கற்கத் தூண்டினார். இதனையடுத்து உருத் தெனிசு (Ruth St. Denis), தெத் சான் (Ted Shawn) என்ற அமெரிக்கத் தம்பதியர் இந்தியா வெங்கும் சுற்றுப்பயணம் செய்து இந்திய நடனங்களைக் கற்றுத் தேர்ச்சியடைந்து நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். மணிபுரி நடனங்களை 1917-ஆம் ஆண்டு இரவீந்திரநாத தாகூர் கண்டு அவற்றைத் தம்முடைய சாந்திநிகேதனம் என்னும் பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக அமைத்தார். கேரளத்தில் வள்ளத்தோல் என்னும் கவிஞர் கதகளிப் பயிற்சிக்காக 1930-ஆம் ஆண்டு கேரள கலா மண்டலத்தை நிறுவினார்.

தமிழகத்திலும் வேறு சில மாநிலங்களிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தேவதாசிகள் முறை சட்டப்படி ஒழிக்கப்பட்டது. இதன் விளைவாகத் தமிழ்நாட்டில் நடனக் கலை மறையத் தொடங்கிற்று. அக்காலத்தில் ஈ. கிருட்டிண அய்யர் என்னும் வழக்கறிஞர் தென்னிந்தியா எங்கும் சுற்றுப் பயணம் செய்து பரதநாட்டியத்தையும் பாகவதமேள நாட்டியத்தையும் பயின்றார்; தாமே பெண்வேடம் பூண்டு நடன நிகழ்ச்சிகளை நடத்தினார். இவருக்குச் சமூகத்தில் வன்மையான எதிர்ப்பு இருந்தது. அக்காலத்தில் நடனக் கலை தரக்குறைவாக மதிக்கப்பட்டதே இதற்குக் காரணம். நடன எதிர்ப்பு இயக்கம் ஒன்று உருவாயிற்று. இதனை எதிர்த்து 1928-ஆம் ஆண்டு கிருட்டிண அய்யர் திருவாளப்புத்தூர் கல்யாணியின் புதல்வர்களைக் கொண்டு, சென்னை இசைக் கழகத்தில் நடன நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்தார். இந்நடன நிகழ்ச்சிக்குச் சமூகத்தில் பெருமளவில் ஆதரவு கிட்டியது. பல எதிர்ப்புகளுக்கு இடையில் கணபதி அய்யரின் மகள் கலாநிதி காஞ்சிபுரம் கண்ணப்ப நட்டுவனாரிடம் நடனம் பயின்று பரத நாட்டிய நிகழ்ச்சி நடத்தினார். பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்னும் சிறந்த நட்டுவனாரிடம் நடனம் பயின்ற சயலட்சுமி, சீவரத்தினம் ஆகிய இரு நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சியைப் பார்த்தபின் உருக்குமணிதேவி தாமும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் நடனம் பயின்றார். மேடைகளில் பல நடன நிகழ்ச்சிகளைச் செய்தார். காலப் போக்கில் நடனத்திற்குச் சமூகத்தில் இருந்துவந்த

இழிவு மறையத் தொடங்கி, நடனக்கலையில் பல்வேறு வகையினர் ஈடுபடத் தொடங்கினர். பரத நாட்டியத்தை இந்தியாவெங்கும் பரப்பியவர்களுள் இராம கோபால் அவருடைய குழுவினர் பாலசரசுவதி மிருணாளினி சாராபாய், தமிழ் நாட்டு ஆடலாசிரியர்கள் போன்றவர்களையும், இந்தியக் கவின் கலை மன்றம், இசைக்கழகம், சென்னைக் கலாச்சேத்திரம் போன்ற அமைப்புகளையும் குறிப்பிடலாம்.

**பரதநாட்டியம்:** இந்திய நடனங்களுள் பரதநாட்டியம் மிகப் பழமையானது. பரதர் இயற்றிய நாட்டிய சாத்திரம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல்வேறு முறைகளுள் ஏகாகாரிய இலசியங்கம் என்னும் முறையும் ஒன்று. இம்முறையில் ஒரே நடனக் கலைஞர் பல பாத்திரங்களுக்கான அபிநயங்களைக் காட்டுவர். ஒரே கலைஞர் நான்கு அபிநயங்களையும் தன்னுடைய தாயிபாவம் என்னும் ஆதார நிலையின்மூலம் காட்டுவார். கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப்பின் பரதநாட்டியம் தென்னகத்தில் மட்டுமே புகழ் பெற்று விளங்கிற்று. தமிழகத்து மூவேந்தர்கள் காலத்தில் பரத நாட்டியம் மன்னர்களால் போற்றப்பட்டு வளர்க்கப்பட்ட கலையாகத் திகழ்ந்தது. நாட்டிய சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள கரணங்கள் தஞ்சை, சிதம்பரம் ஆகிய ஊர்க்கோவில்களில் இலக்கணம் வழுவாமல் காணப்படுகின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சதிர் நாட்டிய முறை பரதநாட்டியக் கலையில் தோன்றியது. தஞ்சையை ஆண்டு வந்த துளசா மன்னன் அரசவையில் திகழ்ந்த சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு என்னும் நான்கு ஆடல் ஆசிரியர்களும் முத்துச்சாமி தீட்சதரின் மாணவர்களாக இருந்தனர். இவர்கள் இசையிலும் நடனக் கலையிலும் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் தொடங்கிய சதிர் முறை நாட்டியம் இன்றும் பழக்கத்தில் இருக்கிறது.

**பரத நாட்டிய முறை:** பரத நாட்டியத்தில் நிருத்தம், அபிநயம் என இரு கூறுகள் உள்ளன. கை, கால் போன்ற பெரிய உடலுறுப்புகள் அசைவதற்கு அங்க அசைவு என்றும் விரல், கண் போன்ற சிறிய உடலுறுப்புகள் அசைவதற்கு உபாங்க அசைவு என்றும் பெயர். நாட்டியத்தில் உடலின் முழு எடையும் எல்லா உறுப்புகளிடையே பங்கிடப்படும் நிலை சமபங்கம் என்றும், ஒருபுறம் எடை அதிகமாயின் அபாங்கம் என்றும், உடலின் இருபுறங்களிலும் எடை சமமாகப் பங்கிடப் பட்டிருப்பின் அந்நிலை திரிபங்கம் என்றும் குறிப்பிடப்படும். உடல் உறுப்புகள் யாவும் ஒருங்கிணைவு பெற்ற ஆடல் நிலை அடவு எனப்படும். நிருத்தங்களுக்கு அடிப்படையானவை அடவுகளே ஆகும். அடவுகளுக்குத் தாளமும் சொற்கட்டுகளும் உள்ளன.(எ-டு. - நட்டடவு. தை - யும் - தத் - த - தை - யும் - த - க) அடவுகளின் அமைப்பு 'பத்ததி' அல்லது நட்டுவனாரின் சம்பிரதாயம் எனப்படும். வழிமுறைக்கு ஏற்ப அமைந்திருக்கும் பல அடவுகள் சேர்ந்தது ஒரு தீர்மானம் எனப்படும். தீர்மானங்களுக்குரிய சொற்கட்டுகள் உள்ளன. தீர்மானங்கள் பல்வேறு தாளங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளன. இவை மிருதங்கம் போன்ற தாளக் கருவிகளால் விளக்கம் பெறுகின்றன. பொதுவாகத் தென்னிந்திய பரத நாட்டிய முறையில் இக்காலத்தில் மேற்கொள்ளப்படும் வரிசைமுறை இங்குச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அலாரிப்பு என்னும் அவை வணக்கப் பகுதியுடன் பரதநாட்டியம் தொடங்குகிறது. இது எளிமையான நடனப் பகுதியாகும்; இது புட்பாஞ்சலி என்றும் அரங்கபூசை என்றும் முற்காலத்தில் வழங்கப்பட்டது. இதனையடுத்துச்சதிசுரம் என்னும் நிருத்தப் பகுதி தொடங்குகிறது. நடனத்திற்கு ஏற்ற சதிசுரப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. இதில் பாடல் பகுதிகள் இல்லை. சுரங்கள் மட்டுமே பாடப்படுகின்றன. இசைக்குரிய தாளங்களே சதிசுரத்தின் நடனத்திற்குப் தாளங்களாக உள்ளன. சுரசதிகள் பல முறைகள் பாடப்படுகின்றன. அவற்றுக்குப் பல்வேறு அடவுகள் செய்யப்படுகின்றன. சுரசதியில் எல்லா அடவுகளையும் பயன்படுத்த முடியும். ஒவ்வொரு சுர வரிசையும் 24 தட்டுகள் கொண்டவை. சுரசதிகளும் அடவுகளும் எவ்வாறு இணைகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

ச க ரி ச நி - ரி ச நி த - ப ம பா

தை - தை க தை தி - தை தத தை தி தை தை தா

சதி சுரம் என்னும் ஆடல் பகுதியில்தான் ஆடற் கலைஞர் தாம் கற்ற அடவுகளின் தூய்மையான வடிவங்களைத் திறம்படக் காட்டமுடியும். இதற்கு அடுத்தபடியாக நடனம் ஆடுபவர் சத்தம் (சப்தம்) என்னும் பகுதியை ஆடுகின்றனர். இதற்கு நிருத்தத்துடன் அபிநயமும் உண்டு. சத்தத்தினை அடுத்து வருணம் என்பது ஆடப்படுகிறது. இது கடினமானதும் ஆடல் நுட்பங்கள் நிறைந்ததுமான நடனம் ஆகும். பாடலின் ஒரே வரிக்குப் பல்வேறு வகைப்பட்ட தீர்மானங்கள் ஆடப்படுகின்றன. இத்தீர்மானங்களின் தாளங்கள் மூன்று தாளக் காலங்களில் அமைந்துள்ளன. தாளமும் இசையும் அழகுற இணைந்து, சிற்பங்களை யொத்த நடனமாக உருவெடுக்கின்றன. வருணம் பின்வரும் வரிசையில் ஆடப்படுகிறது:



பரத நாட்டியம்

தீர்மானம் பாடலின் முதல் வரிக்கு
அபிநயம் பாடலின் ,, ,,
தீர்மானம் ,, ,, ,,
அபிநயம் பாடலின் இரண்டாம் வரிக்கு
தீர்மானம் ,, ,, ,,

ஒவ்வொரு நிருத்தமும் தொடங்கப்படும்பொழுது விரைவான கால் தட்டும் அசைவுகளால் அறிவிக்கப் படுகிறது. இதனையடுத்து ஆடற் கலைஞர் பின்வருமாறு ஆடுகிறார்.

அபிநயம் பாடலின் மூன்றாம் வரிக்கு
தீர்மானம் ,, ,, ,,
அபிநயம் பாடலின் நான்காம் வரிக்கு
தீர்மானம் ,, ,, ,,

அடுத்தவரியுடன் அடவுகள் செய்யப்படுகின்றன. இதனையடுத்துப் பல்லவி பலமுறை பாடப்படும் பொழுது அபிநயமும் உடன் நிகழ்கிறது. அபிநயமும் கால் அசைவுகளும் சேர்ந்து உடன் நிகழும் நிருத்தப் பகுதி வருணத்தில் மிகக் கடினமானதும் நடனத்திற்கு அழகு சேர்ப்பதும் ஆகும். வருணத்தின் இறுதிப்பகுதி சரணம் ஆகும். சரணத்தில் பாடலின் பொருளுக்கு அபிநயம் செய்தபின் நிருத்தப்பகுதிகள் தொடங்குகின்றன. இவை விரைவுக் காலத்தில் ஆடப்படுகின்றன. சரணம் பின்வரும் வரிசையில் ஆடப் படுகிறது.

அபிநயம் பாடலின் முதல் வரிக்கு
நிருத்தம் ,, முதல் வரிக்கான சுரத்திற்கு
தட்டுமெட்டு ,, ,, ,, பொருளுக்கு
(கால் அசைவுடன்
நிருத்தம்)

வருணங்கள் பொதுவாக இறைவனைப் புகழ்வதாக அமைந்துள்ளன. நடனம் ஆடும் கலைஞர்கள் வருணப் பகுதியின் சரணத்தில் நிருத்தம் செய்யும் பொழுது தம்மை மானிட ஆன்மாவாகவும் இறைவனைப் பரம்பொருள் வடிவமாகவும் உணர்ந்து கொள்வதற்கே இத்தகைய அபிநய நிருத்த முறை அமைக்கப்பட்டுள்ளது. இதில் தாயி பாவம் எனப்படும் நிலையான உணர்வும், சஞ்சரிபாவம் என்னும் மாறுமுணர்வும் ஆடற் கலைஞரின் தனிப்பட்ட கற்பனைத் திறனுக்கு ஏற்ப அமைகின்றன.

கடினமான வருணப் பகுதிக்குப்பின் சிறிது நேரம் எளிமையான நடனப் பகுதி தொடங்குகிறது. இது பதம் எனப்படும். கவிதை, பாடல், விருத்தம் போன்ற மென்மை இசைப்பகுதிகளுக்கு அபிநயம் செய்யப்படுகிறது. பதங்களில் தலைவி, தலைவன் மனவெழுச்சி உறவுகள் இடம்பெறுகின்றன இவை இறைவனை அல்லது தலைவனை அடையும் துடிப்பினைக் காட்டுவனவாகவும் இருக்கலாம். ஆடற் கலைஞர்களுக்குப் பாடல்களின் முழுப் பொருள் தெரிந்திருந்தால்தான் பதங்களுக்கு நுட்பமான அபிநயங்களைச் செய்ய முடியும். பதங்களுடன் இக் காலத்தில் கீர்த்தனம், சாவளி போன்ற பகுதிகளையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

பரதநாட்டியத்தின் இறுதிப்பகுதி தில்லானா என்னும் துடிப்புமிக்க பகுதியாகும். இது குறிப்பிட்ட பாடலை ஓர் இராகத்தில் அமைத்து அதற்கெனத் தனிப்பட்ட தாள வகைகளைச் சேர்த்து ஆடப்படும் பகுதியாகும். இப்பகுதியினை ஆடுவதற்கு முன்னரே ஆடற்கலைஞரின் திறமையும் மென்மையும் அபிநய நிருத்தத்தூய்மையும் அவையினருக்குப் புலப்பட்டு விடுகின்றன. தில்லானாவில் தாளத்தின் மூன்று காலங்களும், கால் அசைவுகளும், பல்வேறு கோணங்களில் செய்யப்படும் நிருத்தங்களும், ஆகாசசரீ எனப்படும் துள்ளல்களும் அடங்கியுள்ளன. இவை கார்வைகள் எனப்படுகின்றன. இதனையடுத்து இறைவனை வணங்கும் ஒரு துதிப்பாடலுடன் நாட்டியம் நிறைவு பெறுகின்றது. நாட்டியம் நிறைவு பெறுவதைக் குறிப்பிடக்கூடிய தனிப்பட்ட விரைவுக் காலசைவுகள் உள்ளன.

கதகளி: தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் மக்களிடையே விளங்கிவந்த நடன முறைகளின் அடிப்படையில் அமைந்த ஆடற்கலையே கதகளி ஆகும். இது கேரள நாட்டில் ஆடப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சாக்கைக் கூத்து என்பதன் அடிப்படையிலும் பண்டைத்தமிழ் நாட்டில் சேரமன்னர்களின் ஆதரவில் வளர்க்கப்பட்ட கூத்து முறைகளின் புதிய வடிவத்திலும் அமைந்திருக்கும் ஆடல்முறையே கதகளி நடனமாகும். தமிழகத்தின் ஆட்டங்களாகிய திரையாட்டம், களியாட்டம், கூடியாட்டம் போன்றவைகளின் சாயல்கள் கதகளி நடனத்தில் காணப்படுகின்றன. கதகளியின் முகஒப்பனையும் முகமூடியும் திரையாட்டத்துடன் தொடர்பு கொண்டனவாக உள்ளன.

சேரநாட்டில் ஆடப்பட்டு வந்த முடியெட்டு, கோலம், துள்ளல் போன்ற ஆட்டங்களும் கதகளிக்கு முன்னோடிகளாக இருந்தன. கூத்து, துள்ளல், பகவதி, களி ஆகிய ஆட்டங்களினின்று கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாட்டிய நாடகமே கதகளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் கள்ளிக் கோட்டை மன்னராக இருந்த

சாமோரின் என்பவரால் கதகளி வளர்ச்சி அடைந்தது. இந்த சாமோரின் கண்ணன் மீது பக்தி கொண்டு செயதேவர் இயற்றிய கீதகோவிந்தம்' என்னும் பக்திப் பாடலைத் தழுவிய கிருட்டிணாட்டம் என்னும் நாட்டிய நாடகத்தை இயற்றினார். கிருட்டிணாட்ட நாட்டிய நாடகங்கள் எட்டு இரவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. அக்காலத்தில் கொட்டாரக் கரை மன்னன் இந்த நாட்டிய நாடகக் குழுவினரைத் திருவாங்கூருக்கு அனுப்புமாறு சாமோரினுக்கு மடல் அனுப்பினான். சாமோரின் இதற்கு மறுப்புத் தெரிவித்ததால் கொட்டாரக்கரை மன்னன் தானே இராமனாட்டம் என்னும் எட்டு நாட்டிய நாடகங்களை இயற்றினான். இந்த இராமனாட்டம் என்ற எட்டு நாட்டிய நாடகங்களும் இன்றைய கதகளி ஆட்டம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன. கிருட்டிணாட்டத்தில் வடமொழி மிகுதியாகக் கலந்திருந்தது. ஆனால் இராமனாட்டம் மலையாள மொழியிலேயே அமைந்திருந்தது. இந் நாட்டியங்கள் ஆடற் கலைஞர்கள் மிகுதியாக ஆங்கிக அபிநயத்தைப் பயன்படுத்துமாறும் பாடல்களைத் தாமே பாடாமல் இசைக் கலைஞர்கள் பாடுமாறும் அமைக்கப்பட்டிருந்தன.

மலையாள மொழியில் முதன்முதலில் எழுதப்பட்ட கதகளி நாட்டிய நாடகங்கள் கீசகவதம், தட்சயக்ஞம், சீதாசுயம்வரம் என்பனவாகும். இவற்றை இறையியம்மன் தம்பி என்பவர் இயற்றினார். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் திருவாங்கூர் மன்னராக இருந்த சுவாதித் திருநாள் இராமவர்மா என்பவரும் கதகளி நாட்டிய நாடகங்கள் இயற்றியுள்ளார். இம்மன்னர் பல கீர்த்தனங்களைக் கருநாடக இசையில் இயற்றிய இயலிசைப் புலவராகவும் திகழ்ந்தார். அக்காலத்தில் கேரள நாட்டில் நாட்டிய தருமி முறையை வளர்க்கும் வகையில் வைணவ இசையும் கீத கோவிந்தமும் புகழ்பெற்று விளங்கின. கதகளி நாட்டிய நாடகங்கள் பலரால் தொடர்ந்து எழுதப்பட்டு வந்தன. இவற்றில் கொட்டு, தேசி நிருத்தம், தேசி இலசியங்கம், தேசி கரணம் போன்ற சொற்கள் மிகுதியாகக் காணப்பட்டன. இவையாவும் பண்டைத் தமிழகத்து ஆடல் வகைகளே.

தஞ்சையைக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆண்ட துளசா மன்னர் இயற்றிய சங்கீத சாராமிருதம் என்னும் நூலிலும் அதே காலத்தில் திருவாங்கூரை ஆண்ட பலராமவருமா என்னும் மன்னர் இயற்றிய பலராம பாரதம் என்னும் நூலிலும் கதகளியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அத்த லட்சண தீபிகை' என்னும் வடமொழி நூலில் கதகளியின் நிருத்த நுட்பங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இன்றைய கதகளி ஆட்டத்தின் முறை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கியிருக்கலாம் என்பது மத்தஞ்சேரி கோவிலில் காணப்படும் சுவரோவியங்களிலிருந்து அறியப்படுகின்றது.

கதகளியில் நிருத்தமும் அபிநயமும் இரு சிறப்பான பகுதிகளாகும். கை, கால் அசைவுகளுடன் கண் அசைவும் புருவங்களின் அசைவும் மிகச் சிறப்பான இடத்தைக் கொண்டிருப்பதைக் கதகளியில் காணலாம். கதகளி ஆட்டத்தின் தொடக்கத்தில் தோடயம், புறப்பாடு என்னும் இரு நிருத்தங்கள் இடம்பெறுகின்றன. அபிநயம் ஆடற்கலைஞரின் திறமைக்கு ஏற்ப அமைகிறது. அபிநயத்தில் கையசைவு (அத்தம்) முதலிடம் பெறுகின்றது. அத்தலட்சண தீபிகை 2 அடிப்படைக் கையசைவுகளை (அத்தங்கள்) 500 சொற்களில் விவரிக்கின்றது. இந்தக் கையசைவுகளுள் சிலவற்றைச் சேர்த்துப் புதிய அசைவுகளையும் தோற்றுவிக்கலாம். புராண இதிகாசக் கதைகள் கதகளி நாட்டியத்தின் கருப்பொருள்களாக இருக்கின்றன.

கதகளியில் ஒப்பனைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கதகளி ஒப்பனையும், பண்டைய சீன இசை நாடகங்களில் காணப்பட்ட ஒப்பனையும், சப்பான் நாட்டுக் கபுகி (Kabuki) ஆட்டத்தின் ஒப்பனையும் பல ஒற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன. கலைஞர்கள் எந்தச் சுவைக்கு அபிநயம் செய்கின்றனரோ அதற்கு ஏற்ற நிறத்தில் ஒப்பனை செய்யப்படுகின்றது. கதகளி ஆட்டத்திற்கான உடை அணிந்து ஒப்பனை முடிந்தபிறகு கலைஞர்களை அந்தப் பாத்திரத்தின் பெயரைக் கொண்டே அழைக்கவோ குறிப்பிடவோ செய்கிறார்கள். அதாவது, அக் கலைஞர் அப்பாத்திரமாகவே மாறிவிடுகிறார். ஒப்பனைக்காரர்களுக்குப் பயிற்சியும் திறனும் தேவை. ஒப்பனைக்காரர்கள் மிகவும் மதிக்கப்படுகிறார்கள். கலைஞர்கள் ஏற்கும் பாத்திரம் சாத்துவிக அபிநயத்திற்கு ஏற்றதாக இருந்தால் ஒப்பனை பச்சைநிறத்தில் செய்யப்படுகிறது. பாத்திரங்களின் குணம் மாறும்பொழுது ஒப்பனை நிறமும் மாறுகிறது. வெண்மை, கருமை, செம்மை ஆகிய மூன்று நிறங்களில் தாடிகள் அமைக்கப்படுகின்றன. முக ஒப்பனையில் கத்தரித்த காகிதமும் இடம்பெறுகின்றது. முடியின் அமைப்பும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு இருக்கிறது. ஆடல் கலைஞர்களின் உடையும் மிகப் பெரிதாகத் தோற்றமளிக்குமாறு தைக்கப்பட்டுள்ளது. பெண்கள், அந்தணர், முனிவர் ஆகியோரின் ஒப்பனை 'மினுக்கு' என்று குறிப்பிடப்படுகிறது.

ஆட்டம் தொடங்கும்பொழுது மேலப்பாடம் என்னும் முரசு ஒலிக்கிறது. இதற்குப்பின் தோடயம்,

புறப்பாடு என்னும் நிருத்தங்களும் அவற்றையடுத்து நாட்டிய நாடகத்தின் கதைப்பகுதியும் தொடங்கு கின்றன. பாத்திரங்களுள் சிலர் மெல்லிய திரைக்குப் பின் சில நிருத்தங்களைச் சிறிது நேரம் செய்து கொண்டிருந்த பிறகு திரை விலகுகிறது. கலைஞர் அரங்கில் தோன்றி ஆடலைத் தொடங்குகிறார். இது திரநோக்கு என்று குறிப்பிடப்படுகிறது. கதை யின் பாடல்கள் மலையாள மொழியில் அமைந்திருக் கின்றன. நளசரித்திரம், கலியாண சவுகந்திகம், பலி விசயம், குலவணசுதவதம், சீதா சுயம்வரம் ஆகியவை கதகளிக்காகவே இயற்றப்பட்ட நாட்டிய நாடகங் கள் ஆகும். நிருத்தத்தின் பகுதிகள் கலசங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. கதகளியின் சிறப்பு அதன் பாத்திரங்கள் தம் மனவெழுச்சிநிலைத்தலை(Sthayi-bhava) அடிப்படையாகக் கொண்டு அதன்மீது பல் வேறு அபிநயங்களையும் நிருத்தங்களையும் அமைப் பதில்தான் இருக்கிறது. இது கேரளநாட்டின் பழம் பெரும் பண்பாட்டின் சின்னமாக இன்றும் புகழ் பெற்று விளங்குகிறது. செண்டை என்னும் முரசு கதகளியின் தலையான தாளக் கருவியாகும்.

கதகளியினின்று சில பகுதிகளை மட்டும் எடுத்து அவற்றுடன் வேறு சில புதிய பகுதிகளையும் சேர்த்து ஆடப்படும் ஆட்டம் ஓட்டம் துள்ளல் என் னும் நாட்டியம் ஆகும். இதனை மக்களிடையே பரப்பியவர் குஞ்சன் நம்பியார் என்னும் மலையாளக் கவிஞர் ஆவார். ஆடல் கலைஞரின் கற்பனைத் திறன் அபிநயத் திறன் இவைகளை நன்கு பயன் படுத்தும் வகையில் இளக்கியாட்டம் என்னும் ஆடல் முறை அமைந்துள்ளது. பாடலின் சொற்களுக்கு ஏற்ப அமையும் ஆடற் பகுதி சொல்லியாட்டம் எனப் படுகிறது.

கேரள நாட்டில் கொச்சிக்கு அருகில் இருக்கும் செருத்துருத்தி என்னும் ஊரில் பரதப்புழை ஆற்றங் கரையில் கேரள கலா மண்டலம் என்னும் பயிற்சிப் பள்ளி கதகளியை மரபுவழியில் வளர்த்துக் கலைஞர் களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இதனை அமைத்தவர் வள்ளத்தோல் என்னும் மலையாளக் கவிஞர் ஆவார்.

ஒடிசி நடனம் இந்தியாவின் மிகத் தொன்மை யான நடனங்களுள் ஒன்று என்பதனைக் கி.மு. இரண் டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குகைச் சிற்பங்களி லிருந்து அறியலாம். இந்தக் குகைகள் இராணி கும்பா என்னும் இடத்தில் இருக்கின்றன. கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்குப்பின் கட்டப்பட்ட கோவில்கள் எல்லாவற்றிலும் சிறந்த நடன உருவத் தோற்றங் களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோவில்களில்கூட நடனச் சிற்பங்கள் நிறைந்துள்ளன. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பரசுராமேசுவரர் கோவிலில் சிவபெருமானின் தாண்டவ உருவங்கள் காணப்படுகின்றன. வேறு பல கோவில்களில் நடரா சரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. பொதுவாகக் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரையிலான கோவிற் சிற்பங்களில் நாட்டிய சாத்திரத்தின் பல பகுதிகளை அப்படியே சிற்பங்களாக வடித்திருப்பதைக் காணலாம். சரீ போன்ற நிருத்தப் பகுதிகளும் சிற்ப வடிவில் அமைக் கப்பட்டிருக்கின்றன. நாட்டிய சாத்திரத்தின் ஒன்ப தாம் அதிகாரமும் நான்காம் அதிகாரமும் கோனாரக்குக் கோவிலில் சிற்ப வடிவில் காணப்படு கின்றன. கரணங்கள் பல நுட்பமாகச் செதுக்கப் பட்டுள்ளன.

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த மகேசுவர மகா பத்திரர் இயற்றிய 'அபிநயசந்திரிகை' என்னும் நாட்டிய நூலில் கடினமான கரணங்களைப் பற்றிய விவரங்களைக் காணலாம். இந்த விவரங்களுடன் தொடர்புடைய விருச்சிக குட்டிலம், விட்டுணுக் கிரந்தம், சக்தசியம், சக்கரமண்டலம், கங்காவதா ரணம் போன்ற சிக்கலான கரணங்களைக் கோனாரக் குக் கோயிலிலும் ஒரிசாவினர் இயற்றியுள்ள மற்ற நாட்டிய நூல்களிலும் காணலாம். கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் நாராயணதேவ கசபதி என்பவர் இயற்றிய நாராயண நிருத்திய காண்டம், இரகுநாதரதர் இயற்றிய நிருத்திய கௌமுதி, நாட்டிய மனோரமா என்னும் நூல்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சாதுநாத சின்கா இயற்றிய அபிநயதருப்பணம் ஆகியவை சிறப்பான நாட்டிய நூல்களாம். இந்நூல் களில் ஒடிசி நடன முறையைப் பற்றிய விவரங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

கதகளி நடனத்திற்குச் செயதேவர் இயற்றிய கீத கோவிந்தம் துணையாக இருந்ததைப்போன்று ஒடிசி நடனங்களுக்கும் கீதகோவிந்தப் பாடல்கள் துணை யாக இருந்தன. கவி சூரிய பலதேவரதர், கோபால கிருட்டிண பட்நாயகர், பணமாலிதாசு போன்றவர் கள்இயற்றியுள்ள பக்திப்பாடல்களும் ஒடிசி நட னத்தைவளர்த்தன. சக்தி வழிபாட்டினர் ஆண்களுக்கு நடனப்பயிற்சியளித்து வந்தனர். இவர்கள் கோவில் களில் பெண் வேடம் தரித்து நடனமாடினர். இவர் களைத் தவிர மகரீ (Mahari)என்று குறிப்பிடப்படும் பெண்களும் கோவில்களில் நடனமாடி வந்தனர், சிற் பசாத்திரம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நடனநுட்பங்களையும் ஒடிசி நடனத்தில் காணலாம்.

பரதநாட்டியத்தின் அடிப்படை அசைவுகள் ஒடி சியில் காணப்படுகின்றன. ஆனால் கால் அசைவுகள் பரதநாட்டியத்தினின்று வேறுபடுகின்றன. தனுபாதம்

என்னும் கால் அசைவில் ஒருகால் மேலே வளைந்து ஆடற் கலைஞரின் காதைத் தொடுகிறது. அந்தக் காலின் பெருவிரல் மறுபக்கத்துக் கையால் பிடித்துக் கொள்ளப்படுகிறது. அடவுகளை யொத்த நிருத்த அசைவுகளுள் மீனதண்டி, பர்த்துலம், துவிமுகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சரீயைப் போன்ற 'சலீ' என்னும் அசைவும், கரணங்களைப் போன்ற பைட்டா அசைவும், ஆகாச சரீ, பூமி சரீ ஆகிய இரு அசைவுகளும், கதி என்று குறிக்கப்படும் நடையும், அருத்தமண்டலி அல்லது அரைமண்டியைப் போன்ற சௌகமும், இவற்றைத்தவிர ஒருகால் அசைவு (ஏகபாத சரீ), இருகால் அசைவு (துவிபாத சரீ), ஏகபாத சரீ, உத்பிலவனாங்கள் என்று குறிப்பிடப் படும் குதித்தல்களும், பிரமரி என்று குறிக்கப்படும் சுற்றல்களும் ஒடிசி நடனத்தின் சில நுட்பங்கள் ஆகும். கரணங்களை யொத்த 'பங்கி' களும் எல்லா நடனப் பகுதிகளிலும் இறுதியில் ஆடற் கலைஞர் அழகும் மென்மையும் ஒருங்கே அமையுமாறு மெல்லப் பின்னே நடந்து செல்லும்பொழுது கொண்டிருக்கும் தோல் அத்தமும் ஒடிசி நடனத்திலும் காணப்படு கின்றன.

ஒடிசி நடன நிகழ்ச்சி நில வணக்கம் என்னும் பகுதியுடன் தொடங்குகிறது; இது 'பூமி பிரணாம்' என்று வழங்கப்படுகிறது. இதனை அடுத்து விநாயகர் வழிபாடு என்னும் பகுதி ஆடப்படுகிறது; இது 'விக்னராச பூசை' என்று வழங்கப்படுகிறது. இதற்குப் பின்னர் நடன நுட்பங்கள் நிறைந்த கடின மான 'படு நிருத்தியம்' என்னும் பகுதியும் அதற்குப் பின்னர் தேவதா வந்தனம் பகுதியும் இடம்பெறு கின்றன. ஒடிசி நடனத்தில் பரதநாட்டியத்தின் தீர் மானங்களும் அபிநயமும் கரணங்களும் ஒரு சில மாற்றங்களுடன் காணப்படுகின்றன. இதற்குப் பிறகு ஆடற் கலைஞர் சுரபல்லவி என்னும் பகுதியை ஆடு கிறார். சுரபல்லவியில் ஏதேனும் ஓர் இராகத்திற்கு அபிநயம் செய்யப்படுகிறது. இதற்குப் பின்னர்க்கீதா பிநயம் என்னும் பகுதியில் ஏதேனும் ஒரு பக்திப் பாடலுக்குப் பரத நாட்டியத்தின் 'பதம்' போன்ற முறையில் ஆடல் அமைகிறது. பரத நாட்டியத்தில் தில்லானாவுடன் ஆடல் நிறைவு பெறுவதைப்போல் ஒடிசி நடனத்தில் தரசன் என்னும் பகுதியுடன் ஆடல் நிறைவு பெறுகிறது.

**மணிபுரி நடனம்** இந்திய நடனங்களுள் மிகத் தொன்மையானதாக இருந்தாலும் இந்த நடனம் அண்மைக் காலத்தில்தான் இந்திய நடனங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. மணிபுரி நாட்டில் வாழும் மக்கள் தங்களை மெய்திகள் என்று குறிப்பிடுகின்ற னர். பல சமயத் தொடர்பான நடனங்கள் பழங் காலத்திலிருந்தே மெய்தி மக்களால் ஆடப்பெற்று வந்தன. சமய குருக்களும் பெண்டிரும் தூய வெண் ணிற உடை அணிந்து சமய வழிபாட்டு நடனங்களை ஆடி வந்தனர். பண்டைய மெய்தி நடனங்கள் சிவனை வழிபடும் முறையில் அமைந்திருந்தன. கி.பி. 17–ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மெய்தி நடனத்தில் வைண வக் கருத்துகளும் பாடல்களும் இடம் பெற்றன. இக்காலத்து மணிபுரி நடனம் வைணவ பக்தி முறையில் அமைந்துள்ளது. மெய்தி நடனம் கி.பி. 18–ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இக்காலத்து மணி புரி நடன உருவத்துடன் அமைந்தது. பாகவதத்தில் கூறப்பட்டிருக்கும் கண்ணன் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ச்சியாக மணிபுரி நடனத்தில் காணலாம்.

மணிபுரியைக் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில ஆண்டு வந்த பாக்கிய சந்திரர் என்னும் மன்னர் கோவிந்த சங்கீத லீலா விலாசம் என்னும் நடன நூலை இயற்றினார். மணிபுரி நடனத்தைப் பற்றிய விவரங் களைக் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் சித்திரரத கந்தருவர் என்பவர் இயற்றிய 'நர்த்தன வர்த்திகம்', காருகாசாரியர் இயற்றிய 'இராசப்பிரகாசம்' ஆகிய நூல்களில் காணலாம். நாட்டிய சாத்திரத்தை யொட்டியே இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. மணி புரி நாட்டின் தாளக் கருவியாகிய 'கோல்' என்பதை எவ்வாறு இசைக்க வேண்டும் என்னும் விவரங்களைச் சந்திர கீர்த்தி என்னும் மன்னர் இயற்றியுள்ள 'மிருதங்க சங்கிரகம்' என்னும் நூலில் காணலாம். இதனைத் தவிர பக்தி சித்தாந்தர் இயற்றியுள்ள சிரீ கிருட்டிணஇராச சங்கீத சங்கிரகம் என்னும் நூலில் நடனத்திற்காக இயற்றப்பட்ட பல பாடல் களைக் காணலாம். இப்பாடல்கள் இக்காலத்து மணி புரி நடனத்தில் இராச நடனப்பகுதிகளில் பாடப்படு கின்றன. இராச நடனப் பகுதிகள் கண்ணன்–இராதையின் காதலை வெளிப்படுத்தும் நடனங்கள் ஆகும்.

பரதநாட்டியம், ஒடிசி நடனங்களில் காணப்படும் சிறப்பவடிவமான அடவுகளோ கரணங்களோ மணி புரிநடனத்தில் இல்லை. இந்நடனத்தின் தொடக்க முத்திரை நாகபந்த முத்திரை எனப்படுகிறது. இது ஆடற் கலைஞர் 8 வடிவில் உடலை வளைத்துச் செய்யப்படுவதாகும். நடன அசைவுகள் மெதுவாக வும் மென்மையாகவும் இருக்கின்றன. இந்த நடனத் தில் மெதுவாக வரையப்பட்ட S வடிவமும் 8 வடிவ மும் காணப்படுகின்றன. அபிநயமும் கடுமையான சுவைகளைக் காட்டுவதில்லை. ஆடற் கலைஞரின் முகம் எப்பொழுதும் மென்மையான சுவைகளை மட்டுமே காட்டுகின்றன. பரதநாட்டியத்தில் இருக் கும் தீர்மானங்களை யொத்த 'பரேங்கு' என்னும் அசைவுகள் மணிபுரி நடனங்களில் காணப்படுகின் றன. நடனத்தின் தாளங்கள் மிகவும் கடினமானவை

யாகவும் சிக்கல்கள் நிறைந்தனவாகவும் இருக்கின்றன.

இக்காலத்தில் பல கிராமிய நடனங்கள் மணிபுரி நடனத்தில் இடம்பெற்றுவிட்டன. மரபுவழி யமைந்த மணிபுரி நடனத்தில் இலை கரோபா (Lai Haroba), கம்பா தோயிபி (Khamba Thoibi) என்னும் இரு நடனப்பகுதிகளும் உள்ளன. இவற்றில் நிருத்தமும் அபிநயமும் இடம்பெற்றுள்ளன. நடனம் ஒரே ஓர் ஆடற்கலைஞராலோ பல கலைஞர்களாலோ நிகழ்த்தப்படலாம். இராச நடனங்கள் நிருத்தமும் அபிநயமும் கலந்து ஆடப்படும் நடனப் பகுதிகள் ஆகும். கண்ணனின் பல திருவிளையாடல்கள் ஆடற் பகுதிகளாக அமைகின்றன.

மணிபுரி நடனம் மென்மையும் அழகும் நிறைந்தது. இராச நடனத்தில் அன்பு, காதல், பிரிவு, துயரம் போன்ற சுவைகள் மிகுதியாக இடம் பெறுகின்றன. இந்திய நடனக்கலையில் இராசலீலை என்னும் நடனப் பகுதியைப் புகுத்தியது மணிபுரி நடனமே ஆகும். இது பக்திச் சுவையைப் பரப்பும் நடனமாகக் கருதப்படுகிறது.

வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர் மணிபுரி நடனத்தைத் தாம் தொடங்கிய சாந்தி நிகேதனம் என்னும் கல்வி நிலையத்தில் ஒரு நடனக் கலையாகச் சேர்த்துக் கொண்டார்.

கதக்கு: இந்திய நடனங்களுள் இறுதியாகக் கருதப்படுவது கதக்கு நடனம் ஆகும். ஏனென்றால் கதக்கு நடனம் முகலாய மன்னர்களின் அரசவைகளில் வளர்ச்சியடைந்த கலையாகும். இந்திய நடனங்களில் காணப்படும் பக்திச் சுவையும் இறையுணர்வும் கதக்கு நடனத்தில் காணப்படுவதில்லை. மேலும், கதக்கு நடனத்துடன் தொடர்பு கொண்ட சிற்ப வடிவங்கள் எங்கும் இல்லை. இராசசுத்தானத்து ஓவியங்களில் கதக்கு நடன உருவங்கள் காணப்படுகின்றன. இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் ஆகும். கதக்கு நடனத்திற்குத் தொடர்ச்சியான வரலாற்றுக் குறிபபுகளும் கோவில் சிற்பங்களும் இல்லை. பரத நாட்டியத்தில் காணப்படும் கரணங்களும் அடவுகளும் நுட்பமான உடல் அசைவுகளும் இல்லை. பெரும்பாலும் சுற்றுதல் குதித்தல் ஆகியவையே இடம்பெறுகின்றன. முக அபிநயத்திலும் கண்கள் புருவங்கள் ஆகியவற்றின் அசைவுகளே மிகுதியாக இருக்கின்றன. கதக்குக் கலைஞர்கள் இடுப்பிற்குக்கீழே இறுக்கமான 'சூரிதார்' என்று குறிப்பிடப்படும் உடையும் அதற்குமேல் இடுப்பிலிருந்து முழங்கால் வரையில் மெல்லிய உடையும் அணிகின்றனர். இந்த மெல்லிய உடையின் வழியாகத் தொடைகளும் முழங்கால்களும் தெரிகின்றன. கதக்கு நடனக்கலைஞர்கள் எல்லோரும் இத்தகைய உடையையே அணிகின்றனர். ஒவ்வொரு நடனப்பகுதி நிறைவுபெறும்பொழுதும் பரத நாட்டியத்தில் தீர்மானம் ஆடப்படுவது போல் கதக்கு நடனத்தில் 'சக்கரம்' என்று குறிப்பிடப்படும் சுற்றுதல் ஆடப்படுகிறது.

கதக்கு நடனத்தில் நிருத்தம், அபிநயம் என்னும் இருபெரும் பகுதிகள் உள்ளன. மற்ற இந்திய நடனங்களில் காணப்படும் இறைவணக்கத்திற்கு மாறாக அரசனை வணங்கும் சலாமிமுறையில் கதக்கு நடனம் தொடங்குகிறது. இதற்குப் பின்னர்த் தோரா, துக்ரா,பரனா ஆகிய நடனப்பகுதிகள் இடம்பெறுகின்றன. நகரா, பகவாசு, தபலா, சங் போன்ற தாளக் கருவிகள் கதக்கு நடனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கதக்குச் சொற்கட்டுகளுக்கு எடுத்துக் காட்டுகளாக தாகி-தரி-கிட-தக்-துன்-சனக்சனக் என்பனவற்றைக் குறிப்பிடலாம். வேறு சில சொற்கட்டுகளுக்கு ஆடற்கலைஞர் தம் சலங்கையை மட்டும் அசைத்து ஒலியெழுப்புகிறார். இது 'நட்வரி போல்' என்று குறிப்பிடப்படுகிறது. நட்வரி போலுக்கு எடுத்துக்காட்டாக, திக்-தா-திக்-திக்-திரம் என்பன வற்றைக் குறிப்பிடலாம். பரதநாட்டியத்தில் காணப்படும் சதி, சதிசுரம், கார்வைகள் போன்ற எந்தப் பகுதியும் கதக்கு நடனத்தில் இடம் பெறுவதில்லை. அபிநயம் மிகுதியாக இடம்பெறும் கதக்கு நடனப் பகுதிகள் தும்ரி தத்ரா என்பனவாகும்.

மோகினி ஆட்டம்: இது கேரளநாட்டைச் சேர்ந்த நடனமாகும். வியவகாரிகமாலை என்னும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவடமொழி நூலுக்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மலையாள உரை எழுதப்பட்டது. இவ்வுரையில் மோகினி ஆட்டக் கலைஞர்களுக்கு அரசு மானியம் வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓட்டந்துள்ளல் என்னும் ஆடல் வகையினை அமைத்த குஞ்சன்நம்பியார் என்னும் கவிஞர் மோகினி ஆட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். திருவாங்கூரைக் கி.பி.1758முதல் 1798 வரை ஆண்டுவந்த கார்த்திகைத் திருநாள் இராமவர்மா என்னும் மன்னர் பலராம பாரதம் என்னும் நாட்டிய நூலை வடமொழியில் இயற்றினார். தமிழ்நாட்டிலிருந்து கேரளத்திற்கு வரவழைக்கப்பட்ட கோவில் ஆடற் கலைஞர்கள் நிகழ்த்திய தாசியாட்டம் என்னும் நடனத்தை இம் மன்னர் கண்டு களித்தார் என்பதையும், இந்த நடனத்தை மோகினியாட்டம் என்னும் பெயருடன் கேரளத்தில்பரப்புவதற்காகக் கறுத்தேதத்துச் சோமத்திரி என்னும் அமைச்சரை நியமித்ததையும் உள்ளூர்ப்

பரமேசுவர ஐயர் இயற்றியுள்ள 'கேரள சாகித்திய சரிதம்' என்னும் நூலில் வாயிலாக அறியலாம்.

கார்த்திகைத் திருநாள் மன்னருக்குப்பின் சுவாதித்திருநாள் மன்னர் திருவாங்கூர்ப் பகுதியை ஆட்சி செய்தார். சுவாதித்திருநாள் சிறந்த இயலிசைப் புலவராக விளங்கியதால், அவர் தாம் இயற்றிய பாடல்களுக்கு நடனமாக மோகினியாட்டத்தை அமைத்தார். தஞ்சையை ஆண்டுவந்த இரண்டாம் சரபோசி மன்னரின் மறைவுக்குப்பின் தஞ்சை அரசவையில் இருந்த சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய நால்வருள் பொன்னையாவும் வடிவேலுவும் சுவாதித்திருநாள் மன்னரின் அரசவைக்குச் சென்றனர்.

கேரளத்தில் மோகினியாட்டம் பரதநாட்டிய முறையின் அடிப்படையில் தமிழ் ஆடலாசிரியர்களால் வளர்க்கப்பட்டது. ஆயினும் மோகினியாட்டத்தில் பரதநாட்டியத்தைக் காட்டிலும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பரதநாட்டியம் அலாரிப்பு, சதி சுரம், சத்தம், வருணம், பதம், சாவளி, விருத்தம், தில்லானா என்னும் வரிசையில் ஆடப்படுகிறது. ஆனால் மோகினியாட்டம் அலாரிப்பு என்னும் பகுதிக்கு மாறாகச்சொல்லுக்கட்டு என்னும் இறைவணக்கப் பகுதியுடன் தொடங்குகிறது. இதனைச் யடுத்துச்சுரசதி அல்லது சதிசுரம் என்னும் பகுதி ஆடப்படுகிறது. சத்தம் என்னும் பகுதி மோகினியாட்டத்தில் இல்லை. இப்பகுதி சொல்லுக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்குப்பின் பதவருணம் என்னும் கடினமான பகுதி ஆடப்படுகிறது. இதில் நிருத்தமும் (நடனம் மட்டும்) நிருத்தியமும் (அபிநயத்துடன் கூடிய நடனம்) கலந்து காணப்படுகின்றன. இதனை யடுத்துச் சுலோகம், சாவளி, தில்லானா ஆகிய பகுதிகள் ஆடப்படுகின்றன. மோகினியாட்டத்தில் எல்லாத் தென்னிந்திய மொழிகளிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. வடமொழிப் பாடல்களும் இடம்பெறுகின்றன. இந்த நடனம் பெரும்பாலும் பரதநாட்டியத்தை ஒத்திருக்கிறது. ஆங்காங்குக் கதகளியின் சாயல் தென்படுகிறது. ஆடற் கலைஞரின் உடையும் ஒப்பனையும் மென்மையாக அமைந்திருக்கின்றன. மென்மையான மனவெழுச்சிகள் அபிநயங்களின் வழிக் காட்டப்படுகின்றன. மோகினியாட்டத்தில் நயனாபிநயம் என்று குறிப்பிடப்படும் கண் அபிநயம் சிறப்பான பங்கு பெறுகிறது.

மோகினியாட்டத்தின் அடிப்படைக் கருப்பொருள்: பாற்கடலைக் கடைந்த தேவர்களும் அசுரர்களும் அமிழ்தத்திற்காகப் போராடிய வேளையில் அசுர இயல்புகளை அழிக்கும் முறையில் மோகினியால் ஆடப்பெற்ற நடனம் என்பதே ஆகும். ஆதலின் மோகினியாட்டத்தில் மனிதர்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கும் உந்துகளுக்கும் இடமளிக்காமல் சிறந்த உயர்நிலை உணர்ச்சிகளுக்கு விருந்தளிக்கும் வகையான அபிநயங்களே இடம்பெறுகின்றன. இக்காலத்தில் மோகினியாட்டம் இந்திய நடனக் கலைஞர்களால் கற்றுக் கொள்ளப்பட்டுப் பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெறுகின்றது.

எஸ். கோ.

துணை நூல்கள்:

**Row, Leela**, Nritta Manjari, The 62 Fundamental Sequences of Bharatha Natyam, Indian Society of Oriental Art, Calcutta, 1948.

**Subramania Sastri, S. (Ed)**, Sangita Saramrita of Tulaja, Music Academy, Madras, (1942).

**Vatsyayan Kapila**, Indian Classical Dance, Ministry of Inf. & Broadcasting, Govt. of India, New Delhi, 1974.

**இந்திய நாடகக் கலை:** நாடகக் கலைக்குத் தலைவராக விளங்குபவர் நடராசப் பெருமான். பேரண்டப் பெருவெளியை மெய்ப்பாடாகவும், மறைகள் அனைத்தையும் சொற்களாகவும், வான் மதியையும் விண்மீன்களையும் ஆடை அணி அரங்கப் பின்னணிகளாகவும், தாமே உள்ளுணர்வான சாத்துவிகமாகவும் திகழ்பவர் நடராசப் பெருமான் என்று இருக்கு வேதம் தெரிவிக்கிறது.

இந்திய நாடகக் கலையின் பழமையான அடிப்படை நூல் நாட்டிய சாத்திரம் ஆகும். நாடகக் கலை பிரமாவால் தோற்றுவிக்கப்பட்டது என்று நாட்டிய சாத்திரம் கூறுகிறது. இருக்கு வேதத்திலிருந்து வசனத்தையும், எசுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், சாம வேதத்திலிருந்து இசையையும், அதருவண வேதத்திலிருந்து சுவைகளையும் கோத்து நான்கு வேதங்களையும் ஓதவும் கேட்கவும் இயலாத எளியவர்களும் அவற்றை உய்த்து உணர்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பேறுகளைப் பெறுவதற்கு வழியான ஐந்தாம் வேதமாக ஆக்கப்பட்டது நாட்டிய வேதம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பிரமா இதனைப் பரத முனிவருக்குக் கற்பிக்க, அவர் ஆடல் வல்லானாகிய சிவபெருமானிடமிருந்து தாண்டவத்தையும், உமையவள் உசைக்குக் கற்பித்த வாசியத்தையும் இணைத்துத் தம் நூறு புதல்வர்களுக்கும் நாட்டிய சாத்திரத்தைக் கற்பித்தார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிய சாத்திரம் நாடகத் தோற்றம், அரங்கக் கட்டட அமைப்பு, பூசை வழிபாட்டு முறைகள், அங்க அபிநயங்கள், முத்திரைகள், கரணங்கள், சாரிகள், வாசிக அபிநயம், நாடகக் காப்பிய அமைப்பு, நாயக நாயகி பண்புகள், இசை நுணுக்கம், சுவை உணர்வுத் தோற்றம், நாடகப் படைப்பின் பலன் போன்ற பல்வேறு வகையான பொருள்களையும் உணர்த்துவதாகும்.

செவ்வியல் நாடகம் எனக் கருதப்படும் வடமொழி நாடகங்கள் உரூபகங்கள், உபரூபகங்கள் என இரு வகை அமைப்பைக் கொண்டவை. நாட்டிய சாத்திரம் தவிர, இளங்கோவின் சிலப்பதிகாரம், நந்திகேசுவரரின் அபிநய தருப்பணம்,அபிநவ குப்தரின் அபிநவ பாரதி, தண்டியின் காவிய தரிசனம், தனஞ்சயனின் தசரூபகம், ஏமச்சந்திரனின் காவியானுசாசனம், போசனின் சிங்கார பிரகாசம், சாதா தனயனின் பாவபிரகாசனம், விசுவநாதகவிராசனின் சாகித்திய தருப்பணம், கூத்தநூல், மதிவாணர் நாடகத்தமிழ், சாரங்க தேவரின் சங்கீத இரத்தினாகரம் போன்ற பல நூல்களிலும் உரூபகங்கள், உபரூபகங்கள், நாடகக்கலை பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. நாடக வடிவங்களை நாடகம், பிரகரணம், சமாவகாரம், ஈகாமிருகம், திமம், வியாயோகம், அங்கம், பிரகசனம், பாணம், வீதி எனப் பத்து வகைகளாகப் பரத முனிவர் குறிப்பிடுகிறார். ஆனால் உபரூபகங்களைப் பற்றி இவரது நூலில் குறிப்புகள் காணப்படவில்லை. அவை பதினெட்டு என்று கூறப்படினும் அதன் எண்ணிக்கையைப் பற்றிய தெளிவு கிடைக்கவில்லை. உபரூபகங்களைப் பற்றிய பெயர்கள் பின்வருமாறு:-தோம்பி, சிரீகதிதம், பாணம், பாணிகம், பிரசுதானம், இராசகம், நாடகம், கோசுடி, சல்லாபகம், சில்பகம், பிரேச்சனகம், நாட்டிய இராசகம், அல்லிசகம், துருமல்லிகை, நாடகம், தோடகம், காவியம், உல்லோபக்கியம், மல்லிகம், கல்பவல்லி, பாரிசாதம், சட்டகம் ஆகியவையாம். கிளை வகைகளில் பிராகிருதம் மற்றும் மாநில மொழிகளும் கையாளப்பட்டு அவை மார்க்கம், தேசி என்ற இரு பிரிவுகளில் பின்னதைச் சார்ந்தனவாகத் தெரியவருகின்றன.

தசரூபகங்களில், ஒன்று முதல் பத்து அங்கங்கள் வரைகொண்ட நாடக அமைப்புகள் உண்டு. நாடகம், பிரகரணம் தவிர ஏனைய அமைப்புகள் யாவும் ஐந்திற்குக்குறைவான அங்கங்களைக் கொண்டனவாகவே தெரிகின்றன. நாடகக் காப்பியங்கள் வசுது (கரு) என அறியப்படுகின்றன. இவை தெரிந்த கதையாகவோ கற்பனைக் கதையாகவோ இரண்டும் கலந்த கதையாகவோ அமையப் பெறலாம். ஒவ்வொருநவும் தலைக்கதை (அதிகாரம்), இணைக்கதை (பிராசங்கிகம்) என இருவகைப்படும். ஒரு நாடகத்தின் கட்டுக்கோப்புப் பீசம், பிந்து, பதாகா, பிரகரி, காரியம் என ஐந்து கூறுகளைக் கொண்டதாக அமையும். இவை முகம், பிரதிமுகம், கருப்பம், விமரிசம், நிருவகனம் என ஐந்து சந்திகளால் இணைக்கப்பட்டுள்ளன. இவைகளுள் ஒவ்வொன்றும் ஆரம்(தொடக்கம்), பிரயத்தனம் (முயற்சி), பிராபல்யம்(நம்பிக்கை), நியதாப்தி(தடைநீக்கம்), பலாகமம் (பலன் துய்த்தல்) என்ற ஐந்து நிலைகளில் கடந்து செல்கிறது. உடலில் இணைப்புகள் எப்படி உடலுக்கு ஓர் அமைப்பைத் தருகின்றனவோ அவ்வாறே இந்த ஐந்து சந்திகளும் நாடகக் காப்பியத்திற்கு நாடகத் தன்மையை அளிக்கின்றன.

நாடகத்தின் தலைமகனைத் தீரோதத்தன், தீரஉதாத்தன், தீரலலிதன், தீரசாந்தன் என நான்கு வகைப்படுத்துவர் இவர்கள் முறையே உயர்ந்த குணமும் உறுதியும் படைத்தவராகவும், உறுதியும் ஆவலும் மிக்கவராகவும், உற்சாகமும் நகைச்சுவைத் தன்மையும் பெற்றவராகவும் இரக்கமும் நற்குணமும் பெற்றவராகவும் கருதப்படுவர். நாயகிகள் முத்தா (பேதை), பிரௌதா (மங்கை), பிரகல்பா (மடந்தை) என மூவகைப்படுவர். நாடகக் கட்டுக்கோப்பின் பிரிவுகள் அங்கங்கள் என்று சொல்லப்படும். அவை 64 சிறு பிரிவுகளை உடையன. அவை 12 முகங்களாலும் 12 பிரதி முகங்களாலும் 13 கருப்ப அங்கங்களாலும் 13 விமரிசக அங்கங்களாலும் 14 நிருவாக அங்கங்களாலும் ஆனவை.

வடமொழி நாடகப் படைப்பில் பூருவரங்கம் என்று சொல்லப்படும் சடங்கும் இசையும் நாடகம் தொடங்குவதற்குமுன் காணும் செயலாகும். பூருவரங்கம் 18 கூறுகளைக் கொண்டது. இதன் முதல் பகுதி 9 இசை வல்லுநர்களின் அமைதியைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவை இசை முறை (கீத விதி) என்பதைத் தொடர்ந்து, சூத்திரதாரனால் மேடையில் பல்வேறு பகுதிகளிலும் உறையும் கடவுள்களுக்கு நடத்தப்படும் வழிபாடாகும். நாந்தி என்ற வாழ்த்துப்பாவும் பிரசுதாவனா என்று சொல்லப்படும் அறிமுகக் காட்சியும் பரத வாக்கியம் என்ற நாடக இறுதியில் நடைபெறும் வாழ்த்தும் வடமொழி நாடக மரபில் காணப்படுகின்றன. நாடகப் போக்கிற்குத் தேவையான சில செய்திகளைப் பார்வையாளர்களுக்குத் தெரிவிக்கச் சில இடைக் காட்சிகள் வடமொழி நாடகங்களில் கையாளப்படுதலுண்டு. அவை பிரசுதாவனா, விசுகம்பகம், பிரவிசிகம், சூலிகா போன்ற பெயர்களால் குறிப்பிடப் படுகின்றன.

ஒரு நாடகக் காவியத்தைப் படிக்கும்பொழுதும் அல்லது அதைக் காட்சிக் காவியமாக மேடையில்

கண்டு சுவைக்கும் பொழுதும் ஒரு வகை சுவை உணர்வைப் பார்வையாளர்களுக்குத் தருவது வடமொழி நாடக நடிக, நடிகையரின் தலையாய பொறுப்பாகும். ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்துவிகம் என நால்வகை அபிநயங்களால் காவிய பாவம் நாட்டிய பாவமாக உணர்த்தப்படுகிறது. நடிப்பு முறையைப் பற்றி விளக்கும் பரத முனிவர் இதனை நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என மூவகையாகப் பிரிக்கிறார் ஆங்கிகமும் சாத்துவிகமும் மட்டும் இணைந்த சுத்த நடனத்தை நிருத்தம் என்றும், ஆங்கிகம், சாத்துவிகம் ஆகியவற்றுடன் ஆகாரியம் இணைந்து பாத்திரங்களோடு பொருந்த நிகழ்த்தப்படுவதை நிருத்தியம் என்றும், நான்கு வகை அபிநயங்களும் இணைந்து வருவதை நாட்டியம் என்றும் குறிப்பிடுவர்.

இவை கைசிகி, பாரதி, ஆரபடி, சாத்துவதி என நான்கு விருத்திகளோடு இணைந்து முற்றிலும் ஒயிலாக்கம் கொண்ட நாடக வழக்காகவோ உலக வழக்கை ஒட்டியதாகவோ படைத்துக் காட்டப்படும். விபாவம், அனுபாவம், வியபிசாரிபாவம் ஆகியவற்றின் இணைப்பால் இரசம் வெளிப்படுகிறது.உள்ளத்துணர்வைத் தூண்டுவதற்குக் காரணமாக எது விளங்குகிறதோ அது விபாகம் எனப்படும். அது ஆலம்பனம், உத்திபனம் என இரண்டு வகைப்படும். அவ்வுணர்வுக்கு உரிய சூழல் உத்திபனம் எனப்படும். உள்ளத்துணர்வை உடலின் புறவெளிப்பாடுகளால் உணர்த்தும்போது அது அனுபாவம் எனப்படுகிறது. இவ்வாறு விபாவ அனுபாவங்களால் உணர்த்தப்படு தலைப் பாவ வெளியீடு என்று குறிப்பர் பரதர் 49 பாவங்களைக் குறிப்பிடுகிறார். அவற்றில் அடிப்படை உணர்வுகளைத் தாயிபாவம் என்றும், மனத்தில் நின்று தோன்றி வெளிப்படுபவைகளைச் சாத்துவிகம் என்றும், நிலையாக நிற்காமல் தோன்றிச் சிறிது நேரம் நின்று தாயிபாவத்திற்கு உரம் அளித்து நீங்குபவைகளை வியபிசாரி அல்லது சஞ்சாரி பாவம் என்றும் பரத சாத்திரம் குறிப்பிடுகிறது.

எட்டு தாயி பாவங்களாவன: இரதி, காசம், சோகம், குரோதம், உற்சாகம், பயம், சிகுப்சை, விசுமயம் என்பவையாகும். எட்டு சாத்துவிக பாவங்களாவன: தம்பம் (அசைவற்ற நிலை), சுவேதம் (வியர்வை), உரோமாஞ்சம் (மயிர்க்கூச்செறிதல்), சுரசாதம் (குரலில் மாற்றம்), வேபது (நடுக்குறுதல்), வைவருணம் (நிறம்மாறுதல்),பிரணயம் (மயக்கமடைதல்), அசுரு (கண்ணீருகுத்தல்) முதலியன வாகும் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதல் தோற்றம் ஈறாகச் சிலப்பதிகார உரையாசிரியர் கூறும் விறல் என்னும் வகைகளை இவற்றுடன் ஒப்பிடலாம்.

வியபிசாரி பாவங்களாவன:

நிருவேதம், கிளானி, சங்கை, அசூயை, மதம், சிரமம், ஆலாசியம், தயனியா, சிந்தை, மோகம், சுமிருதி, திரிதி, விருதம், சபலம், கருசர், ஆவேகம், சடதம், கருவம், விசாதம், அவுதுசுகியம், நித்திரை, அபசமாரம், சுபிதம், விபோதம், அமருசம், அவாகித்தம், உக்கிரதை, மதி, வியாதி, உன்மாதம், மரணம், திராசம், விதருக்கம்.

வடமொழி நாடகங்கள் நிகழ்த்தப்பெற்ற நாடகக் கட்டடக் கலை பற்றிய தெளிவான குறிப்புகள் நாட்டிய சாத்திரத்தில் தரப்பட்டுள்ளன. நாடக அரங்குகள் விகிருட்டம் (செவ்வகம்), சதுரசுரம் (சதுரம்), திரைசுரம் (முக்கோணம்) என மூன்று வடிவங்களால் ஆனவை. ஒவ்வொரு வடிவமும் சேட்டம் (தலை), மத்தியம் (இடை), கனிட்டம் (கடை) என மூன்று வகை அளவுகளைக் கொண்டது. இக்கட்டடங்களுக்கான நீளம், அகலங்களின் அடிப்படை அலகு அத்தம் எனப்படும். 108,64,32 ஆகிய அளவுகள் முறையே தலை, இடை, கடை ஆகிய கட்டடங்களுக்குரிய நில அளவாகும். செவ்வக வடிவத் தலைஅரங்கம் 108 அத்த நீளமும் 64 அத்தம் அகலமும் கொண்டது. அதுபோன்றே இடை 64, 32 என்றும்; கடை 32, 16 என்றும் கொள்ளப்படும். இவற்றுள் தலை அரங்கு கடவுளர்களுக்கும், இடை அரங்கு அரசர்களுக்கும், கடை அரங்கு மக்களுக்கும் உரியவை என குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தம் என்பது 24 பெரு விரல்கள் கொண்டது. நாடகக் கட்டடத்திற்கு நூல் பிடித்து அளவு கொடுப்பதிலிருந்து அதன் பொறுப்பு முழுவதையும் ஏற்றிருப்பதால் இயக்குநர் சூத்திரதாரன் (நூல் பிடிப்பவர்) என அழைக்கப்படுகிறார் என்று விளக்கம் கூறுவதுண்டு.

நாடக அரங்கக் கட்டடம் வேத்தியல், பொதுவியல் என இருவகைப்படும். வேத்தியல் அரசர்க்குரியது. அதற்கு நாட்டிய கிரகம் என்பது பெயர். பொதுவியல் மக்களுக்கு உரியது. அதற்கு நாட்டிய மண்டபம் என்பது பெயர். ஒரு நாடக அரங்குக் கட்டடம் எந்த வடிவமாக அமைந்திருந்தாலும் அது சரி சமமாகப் பிரிக்கப்பட்டு மேடைக்கும் அவைக் கூட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. மேடை அவைத் தளத்திலிருந்து ஓர் அத்தம் உயரம் கொண்டதாகும். மேடையின் பிற்பகுதி நேப்பத்தியம் என்று சொல்லப்படும் ஒப்பனைக் கூடமாகவும், முற்பகுதி அரங்கப் பீடம் (பின்தளம்), அரங்க சீருடம் (முன்தளம்) என்ற நடிப்புத் தளமாகவும் பயன்படுத்தப்படும். முன்தளத்தின் இரு மருங்கிலுள்ள தளங்களையும் மத்தவாரனி என்று குறிப்பிடுவர். ஒன்றுக்கு மேற்பட்ட காட்சிகள் நடைபெறும்பொழுது இப்பகுதிகள் பயன்படுத்தப்

படும் என்பது தெரிய வருகிறது. பின்தளத்தில் அதன் பின்னால் அமைந்துள்ள ஒப்பனை அறையிலிருந்து மேடையில் நுழைவதற்கு வலம், இடம் ஆகிய இருபக்கங்களில் வாயில்கள் உள்ளன. அரங்கப் பீடம் என்ற பின்தளத்தின் இவ்விருவாயில்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் இசைக் கலைஞர்கள் அமர்ந்து இருப்பர். இது வேதி எனப்படும்.

வடமொழி நாடகங்களில் திரையைப் பற்றிய குறிப்பு இருப்பினும், அவை எங்கு அமைக்கப்பட்டிருந்தன என்பது பற்றிச் சரியான விவரம் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி போன்று அமைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறுவர். வடமொழி நாடகங்களில் கிடைக்கப்பெறும் குறிப்புக்களிலிருந்து, இவை நிரந்தரமாகக் கட்டித் தொங்க விடப்பட்டவை என்பதைவிட, நன்கு பயன்படுகிற முறையில் அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறியலாம்.

பண்டைய நாடகங்கள் இசைப் பயன்பாடு மிக்கனவாகவும் பாட்டு மற்றும் பேச்சுமொழி, தாள, இலய ஓசை, இழைவால் கதாபாத்திரங்களின் பால், வயது, மனச்சூழல் முதலியவற்றைக் காட்டி நிற்பனவாகவும் அமைந்தவை. அவை புறப்பொருள்களின் துணையின்றி நடிகனின் உள்ளாற்றல்களால் சைகைகள் மூலம் சூழல், கையாளப்பட வேண்டிய பொருள்கள், ஒளி அமைப்பின் பின்னணி யாவுமே விளக்கிக் காட்டுவனவாக அமைந்தவை ஆகும். நாடக இலக்கிய ஆக்கத்திலேயே மேடைக் கூறுகள் அடங்கியுள்ளமையால், சைகைகள், முத்திரைகள் நடிகனின் மனோ தரும அடிப்படையில் நாடகத்தின் கருத்து, படிமம் ஆகியவற்றின் விளக்கவுரைகளாக அவை திகழ்கின்றன.

பல்வேறு பாவங்களோடு கூடிய தாயி பாவங்கள் அதனதன் இரசத் தன்மையை அடைகின்றன. இரசானுபவம் என்பது பார்வையாளர்கள் இடத்தில் தோன்றுகின்ற ஓர் உயர்ந்த ஆனந்த நிலைமையாகும். சுவைகள் எட்டு. அவை, சிருங்காரம்,ஆசியம், கருணை, இரௌத்திரம், வீரம், பயானகம், பீபசுதம், அற்புதம் என்பனவாகும். இவை தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டுவகை மெய்ப்பாடுகளாகிய உவகை, நகை, அழுகை, வெகுளி, அச்சம், பெருமிதம், இளிவரல், மருட்கை என்பனவாகும். சுவைக்கப்படும் பொருளும் அதனை நுகர்ந்த பொறியுணர்வும் அது மனத்துப்பட்டவழி உள்ளத்துள் நிகழும் குறிப்பும், குறிப்புப் பிறந்த உள்ளத்தால் உடலின்கண் தோன்றும் வேறுபாடான விறலும் ஆகிய நான்கையும் மெய்ப்பாட்டோடு இணைத்து, 32 பொருளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மேலே குறிப்பிட்ட இரசானுபவம் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டிலும் ஒத்திருப்பதைக் காணலாம்.

பார்வையாளர் சகுருதயர் என்று குறிப்பிடப் படுகின்றனர். நடிகரைப் போலவே பார்வையாளரும் படைப்பாற்றல் மிக்கவராக நடிகனோடு இணைந்து செல்லும் மனப்பண்பு பெற்றவராக அமைதல் வேண்டும் என்று பார்வையாளருக்கும் இலக்கணம் வகுத்துள்ளது நாட்டிய சாத்திரம். சில குறிப்பிடத் தக்க வடமொழி நாடக ஆசிரியர்களும் அவர்களின் நாடகங்களும் வருமாறு:

| | | |
|---|---|---|
| பாசமகாகவி | — | அபிடேக நாடகம், அவமாரிகா, பாலசரிதம், தரித்திர சாருதத்தம், தூத கடோற்கசம், தூதவாக்கியம், கருணபாரம், மத்தியம் வியாயோகம், பிரதிமா, சொப்பன வாசவதத்தம், பிரதிக்ஞு யோகரதாராயணம், ஊருபங்கம், பஞ்சராத்திரதம். |
| காளிதாசன் | — | மாளவிகாக்கினிமித்திரம், அபிக்கியான சாகுந்தலம், விக்கிரமோர்வசியம். |
| சூத்திரகன் | — | மிருச்ச கடிகம் |
| விசாகதத்தர் | — | முத்திரா இராட்சசம். |
| பவபூதி | — | உத்தரராம சரிதம், மாலதி மாதவம். |
| மகேந்திரவர்மன் | — | மத்தவிலாசப் பிரகசனம். |
| போதயனார் | — | பகவத்தச்சுகியம். |
| அர்சர் | — | நாகாநந்தம், இரத்தினாவளி. |

**இந்தியக் கிராமிய நாடகக் கலை வடிவங்கள்:** இந்திய வரலாற்றில் வடமொழி நாடகத் தொடர்ச்சி மாநில மொழிகள் வளர்ச்சியுற்றபோது மெல்ல மெல்ல மங்கலாயிற்று. இதன் தொடக்கம் ஏறத்தாழ கி.பி.10–ஆம் நூற்றாண்டு எனலாம். வட்டாரவழக்குகள் 15–ஆம் நூற்றாண்டில் மொழியின் முழு வடிவம் பெறத் தொடங்கின. தென்னிந்திய மொழிகள் வடமொழித் தாக்கத்தைத் தவிர, தாமாகவே இலக்கிய வளங்களை பெருக்கிக் கொள்ளவில்லை. எனவே இந்தக் காலக்கட்டத்தில் பண்பட்ட நாடக இலக்கியங்கள் ஒன்றும் தோன்றவில்லை. எனினும் சாரணர்கள் என்று அழைக்கப்பட்ட நாடக மாந்தர் புராணக் கதைகளைப் பாடி ஆடி நாடெங்கும் அலைந்து திரிந்தனர் என்பது தெரிகிறது. சாரணர்கள், அரிகதைக் கலைஞர்கள், பக்தி இயக்கப் பெரியோர் போன்றோர் கிராமிய நாடகக் கலை வடிவங்களுக்கு முன்னோடிகளாக அமைந்திருந்தனர் எனலாம். அவர்களுக்கு இராமாயணமும் பாரதமும் ஊற்றாக விளங்கின.

கேரளத்தில் கூடியாட்டம் என்பது வடமொழி நாடக வடிவத்தின் தாக்கம் பெற்று இன்றும் நின்று நிலவுகின்ற நாடக வடிவமாக விளங்குகிறது. இது நிகழ்த்தப்படும் அரங்கினைக் 'கூத்தம்பலம்' என்று சொல்கின்றனர். இவ்வரங்கக் கட்டடம் நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரங்கக் கட்டடக் கலை அமைப்பின் கூறுகளைச் கொண்டதாகும். சாக்கையர் கூத்து எனவும் கூடியாட்டம் சொல்லப்படுகிறது. சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்ற சாக்கையர் கூத்துக்கும் இக்கலை வடிவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. சாக்கையர் தனித்துக் கதை சொல்லும் பாணியைக் கூத்து என்றும் பிற நடிகர் நடிகைகளுடன் வேடம் அணிந்து நிகழ்த்தும் நாடகப் பகுதிகளைக் கூடியாட்டம் என்றும் சொல்கிறார்கள்.


மேடையில் உயரமான குத்துவிளக்கு ஒளியில் பூசை மற்றும் வழிபாட்டுச் சடங்குகளோடு இது நிகழ்த்தப்படுகிறது. கூடியாட்ட நிகழ்ச்சியில் ஒருவர் பிடித்துக்கொண்டு நிற்பதான திரை பயன்படுத்தப்படுகிறது. இதற்கு உரிய இசைக்கருவி முழவு என்று சொல்லப்படுகிறது. இது ஆள் உயரமுள்ள செப்புப் பானையின் வாயைத் தோலால் கட்டி இரு கைகளாலும் தட்டப்படுகின்ற கருவியாகும். வடமொழி நாடகத்தின் பாடல் ஒன்றின் வரியைச் சாக்கையர் கூற, அதனை மேடையின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கும் நங்கையர் என்னும் பெண் கலைஞர் திரும்பக் கூறுவர். அவ்வரியை அபிநயத்தில் கூறிமுடித்ததும் குழுவின் ஓசைக்கு ஏற்ப மெய்ப்பாடுகளால் பதவுரை, விளக்கவுரை போல அவ்வரிக்குச் சாக்கையரின் ஆட்டம் மீண்டும் விரிந்து செல்லும். இரவு முழுவதும் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நாள் ஒன்றுக்கு ஓரிரு பாடல்களே படிக்கப்படுகின்றன. பெரும்பாலும் அபிடேகம், மத்தவிலாசப் பிரகசனம், பகவத அச்சுகீயம், சுபத்திராதனஞ்செயம், தபுதிசம்காரம் போன்ற வடமொழி நாடகங்களே நடிக்கப்படுகின்றன. முழுமையாக நாடகம் நடத்தி முடிப்பதற்கு 72 நாட்களுக்குமேல் ஆகும். அவ்வாறு நடந்திருப்பது அரிதாகவே காணப்படுகிறது. முகத்தில் முக் குணங்களுக்கும் உரிய வண்ணச் சாய பூச்சு ஒப்பனை மேற்கொள்ளப்படுகின்றது. பெண்களும் பங்கேற்கும் நாடக வடிவம் இது. விதூடகன் முதலிய பாத்திரங்கள் மலையாள மொழியில் பேசுவதுண்டு. இது ஒரு செவ்வியல் நாடக வடிவம் ஆகும். அரங்கில் காட்சி அமைப்பு ஏதும் கிடையாது. மரத்தாலான இருக்கை ஒன்றுதான் மேடைப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. காலம், காட்சி, சூழல் யாவும் நடிகரின் நடிப்பினால் புலப்படுத்தப்படுகின்றன. சில பாத்திரங்களின் முதல் மேடைத் தோற்றம் கண்ணுக்கு இனிமையான காட்சியாக இருக்கிறது.

**கிருட்டிண ஆட்டம்:** கி.பி.15–ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் குருவாயூர்க் கோவிலில் தோன்றிய வழிபாட்டு நாட்டிய நாடகமாகும். கண்ணன் பிறப்பு முதல் கம்சவதை வரை உள்ள கதைகளை எட்டாகப் பிரித்துள்ளனர். பாத்திரங்கள் குணங்களுக்குத் தகுந்தவாறு வண்ணங்களாலும் கோலங்களாலும் முகத்தில் எழுதப்பெற்று, முகமூடி போன்ற ஒப்பனை அமைப்பை இது கொண்டுள்ளது. ஏராளமான சிறுவர்கள் பங்கேற்கும் வடிவம் இது. பெண்கள் பங்கேற்றல் இல்லை. ஒயிலாக்கம் நிறைந்த ஒப்பனை ஆடை அணி முதலியவற்றைக் கொண்டது. பெண்களுடைய ஒப்பனை கூட மிகவும் நளினப்படுத்தப்பட்டதாகும். சில பாத்திரங்களுக்கு முகமூடிகளை அணிவித்து மேடையில் அனுப்புவது முண்டு. நாட்டிய முத்திரைகளைக் கையாண்டு அபிநயம் நிகழ்த்தப்படுகிறது. சில காட்சிப் படிமங்களும் பல்வேறு பாத்திரங்களின் அடவுக் கோலங்களும் கண்ணுக்கு இனிமையாக அமைவனவாகும். கதகளியின் முன்னோடியான கலைவடிவம் என்று இதனைக் கூறுவதுண்டு. பாடல்கள் மலையாளமும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் இசைக்கப்படுகின்றன. செண்டை என்னும் இசைக் கருவி பயன்படுத்தப்படுகிறது. தனி மேடைஅமைப்பு இல்லை. கோவில் பிரகாரத்தில் ஒரு மண்டபத்தில் உயர்ந்த குத்துவிளக்கின் ஒளியில் நடைபெறும் நிகழ்ச்சியாகும் இது.

**கதகளி:** கதகளி கிருட்டிணன் ஆட்டத்திலிருந்து தோன்றியது என்பர். இதை இராமன் ஆட்டம்



கிருட்டிண ஆட்டம்



கதகளி

என்று கூறுவாரும் உண்டு. கிருட்டிணன் ஆட்டத்தைப் போலவே இதுவும் ஆடை அணி, ஒப்பனை, அபிநய முறை, மற்றும் செண்டை போன்ற இசைக் கருவி முதலியன கொண்டது.முகமூடிக் கதாபாத்திரங்கள் இல்லை. பச்சை வேடம், கத்தி வேடம், தாடி வேடம் என்று கதாபாத்திரங்கள் பிரிக்கப்படுகின்றன. குணங்களின் அடிப்படையில் ஒப்பனை அமையும். இதனை ஒரு கோயிற் கலை என்பதைவிட ஒரு சமூகக் கலை எனக் கூறலாம். தனிப்பட்ட மேடை கிடையாது. குத்துவிளக்கு ஒளியிலேயே நடைபெறும் நிகழ்ச்சியாகும். தரையில் மூன்று பக்கமும் பார்வையாளர் அமர்ந்து இருக்க, நடுவில் உள்ள தளம் மேடையாக மாறுகிறது. மனிதர்களால் கையாளப்படும் திரையே பயன்படுத்தப்படுகின்றது. திரையின் பயன்பாடு கதகளியில் குறிப்பிடத்தக்கதாகும். சில பாத்திரங்களை அடிவரையிட்டுக் காட்டவும், முக பாவங்களை அடிவரையிட்டுக் காட்டவும், முதல் தோற்றத்திலேயே திரை மறைவிலிருந்து பாத்திரங்களின் குணாதிசயங்களைப் புலப்படுத்தும் வண்ணமும் திரை பயன்படுத்தப்படுகிறது. பாடல்களுக்கு ஏற்ப விரிவான அபிநயமும் செண்டை என்னும் தோல் கருவிக்கு ஏற்ப மனோதரும அபிநயமும் பார்வையாளர் சுவைக்கும்படி அமைந்திருக்கின்றன. மரத்தாலான இருக்கை ஒன்றுதான் மேடைப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இதைப் பயன்படுத்துகின்ற முறையும் அபிநயங்களால் விளக்குகின்ற முறையும், தளம், காலம் ஆகிய சூழல்களை உணர்த்துகின்றனவாக அமைந்தனவாகும்.

பவாய்: இது சக்தி வழிபாட்டு அடிப்படையில் குசராத்தைச் சார்ந்த கலைவடிவம்; நவராத்திரிப் பண்டிகையையொட்டி நடப்பது. 'உணர்ச்சி வெளியீடு','வாழ்க்கையின் நாட் குறிப்பு', 'வாழ்வு தாங்கி' எனப் பவாய் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. அசைத தாக்கர் என்னும் அந்தணரால் பவாய் உருவாக்கப்பட்டது. இது வேடங்கள் என்று சொல்லப்படுகிற பல துணுக்குகளால் ஆனது ஒவ்வொரு வேடமும் ஒவ்வொரு காட்சியாகும். மூன்று மணிநேரம் வரை நீண்டு இருக்கின்ற வேடங்களும் உள்ளன. வேடங்கள் என்று சொல்லப்படும் இச் சிறுகதை வடிவங்களைப் பத்து வரை இணைத்து இரவு முழுவதும் நடத்துவது உண்டு. இது இசை, நடனம், நாடகப்பாங்கான வசனங்கள் ஆகியவை விரவப்பட்டதாகும்.

நாயக்கு என்ற தலைவன் இதன் சூத்திரதாரி யாவான். மேடை என்பது ஒரு சமதளத்தில் நாயக்கு தம் வாள் முனையால் பத்தடி ஆரமுள்ள ஒரு வட்டம் வரைவார்; இதுவே மேடையாகும். சுற்றிலும்




பவாய்

பார்வையாளர் அமர்ந்திருப்பர். ஒரு பவாய் குழுவில் நாயக்கு, வேடச்சாரியா என்னும் நடிகர்கள், கஞ்சாலியாசு என்ற பெண் வேடம் தாங்குபவர், இரங்கோலோ என்னும் கோமாளி மற்றும் இசைக் கலைஞர்கள் ஆகியோர் இருப்பர். பவாய் என்பது சில பாத்திர இயல்புகளை வலியுறுத்திப் பாடுவதாகும். இம்மண்ணுலகத்து வேடிக்கை மனித வாழ்க்கையை வெளிப்படுத்திக் காட்டும்போது சில பச்சையான கொச்சை மொழிகளையும் பயன்படுத்துவதுண்டு. மண்ணால் ஆன எண்ணெய் விளக்குகள் ஒளி அமைப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மத்தளம், குந்தளம், சாரங்கி தாளம், புங்கால் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒப்பனை அறையில் இருந்து மேடைத் தளத்திற்கு வரப் பாதை அமைக்கப்பட்டு இருக்கும். அரசர் போன்ற கதாபாத்திரங்கள் அணிவகுப்போடு தீப்பந்த ஒளியில் மேடைக்கு அழைத்து வரப்படுவார்கள். விநாயகர் வழிபாட்டுடன் நிகழ்ச்சி தொடங்கும். உரையாடல் மூலம் ஒரு கருத்து வலியுறுத்தப்பட்டதும், அதைத் தொடர்ந்து நடனம் நிகழும். வெண்மை, சிவப்பு, கருமை நிறங்கள் கலந்த ஒப்பனை தீட்டப்படுகின்றது.

நௌடங்கி: இந்தி மொழி பேசுகின்ற பகுதிகளில் விளங்குகின்ற ஒரு கிராமிய நாடகமாகும். இது இசை நாடக வடிவைச் சேர்ந்தது. எனவே இசைக்குத் தலைமைப் பண்பு உண்டு. கிராமியக் கலைகளை வழிபாட்டுக் கலைகள், பொது வாழ்வுக் கலைகள் எனப் பிரித்தால் இக்கலை பொது வாழ்வுக் கலையில் உட்படும். உத்தரப்பிரதேசம், பஞ்சாபு, இராசசுத்தானம், போன்ற மாநிலங்களில் இந்த இசை நாடகம் காணப்படுகிறது. இதனைத் தொடக்கத்தில் பாடல்களின்றி அமைத்து வந்தார்கள். நௌடங்கி என்ற இராசகுமாரியைப் பற்றிய இசைக்கதை தோன்றிய பிறகு இதற்கு நௌடங்கி என்பதே பெயராகிவிட்டது என்றும், இசை வடிவத்திலிருந்து நாடகம் சேர்க்கப்பட்ட பிறகு நாடகம் என்ற சொல் நடக்கி, நௌடங்கி என்று மருவியது என்றும், பழைய காலத்தில் இதற்கு நுழைவுக் கட்டணமாக நௌ-டக்காசு (ஒன்பது நாணயங்கள்) ஏற்படுத்தப்பட்டமையால் அதுவே நௌடங்கி என்று மருவியதாகவும் இதன் பெயர் பற்றிப் பல காரணங்கள் கூறுகிறார்கள்.

இசைக் கதைகள் மூலம் இசைத்து வந்த மரபை ஒட்டி நௌடங்கி தோன்றியுள்ளது. கதையை இசையாகப் பாடும்பொழுது, அதற்கேற்ப உடல் அசைவுகளையும் சைகைகளையும் அமைத்தும், கதையின் உணர்ச்சி மிக்க கட்டங்களை அந்தந்தக் கதாபாத்திரங்களுக்கு ஏற்ப நடித்தும் வந்தமையால் வெறும் கதை சொல்லும் பாங்கிலிருந்து இது நாடகமாக மலர்ந்தது. இவ்வளர்ச்சிக் கட்டத்தில் மேலும் பாடகர்கள் இணைக்கப்பட்டார்கள்.



நௌடங்கி

இடுப்பளவு உயரமுள்ள ஒரு மேடையில் நௌடங்கி நாடகம் நடத்தப்படும். பார்வையாளர் நான்கு புறங்களிலும் அமர்ந்திருப்பர். இசைக்குழுவோடு இணைந்து எல்லா நடிகர்களுமே அவரவர் புனைந்த வேடங்களோடு மேடையிலேயே அமர்ந்திருப்பர். வீதிகள், சதுக்கங்கள் ஆகிய இயற்கைச் சூழல்கள், சுற்றிலும் உள்ள கட்டடங்கள், மரங்கள் போன்ற எல்லாவற்றையும் இதன் நடிப்பில் பயன்படுத்தல் உண்டு. ஆர்மோனியம், சாரங்கி, கிளாரினெட்டு, நகரா போன்றவை இதன் இசைக்கருவிகளாகும். பெண்கள் நடித்தல் இல்லை. ஆண்களே பெண் வேடமும் புனைவர். இந்து-முசுலீம் இணைந்த ஒரு கிராமியப் பண்பாட்டுப் பின்னணியில் எழுகின்ற பிரச்சினைகள் இதற்கான கருப்பொருள்களாக அமைகின்றன. இந்தி, இராசசுத்தானி, பிராசு ஆகிய மொழிகளோடு பெர்சிய மொழி கலந்த உருது மொழியில் நாடகங்கள் எழுதப்படுகின்றன. திப்புசுல்தான், அமர்சிங்கு இராவுத்தர், பிருதிவிராசு செளகான், இராணி துர்க்காவதி, பன்னா ஆகியோரின் வரலாற்று நிகழ்ச்சிகள் நௌடங்கி நாடகங்களாக்கப்பட்டுள்ளன. நள

தமயந்தி, இராசா அரிச்சந்திரா போன்ற புராணக் கதைகளும் சமுதாயச் சிக்கல்களும் நாடகங்களாக்கப் படுகின்றன.

ஒரு கால கட்டத்தை உணர்த்தும் குறிப்பிட்ட ஆடை அணி கிடையாது. ஒப்பனை குறிப்பாக, பெண் கதாபாத்திரங்களுக்குப் பளிச்சிடும் வகையில் அமையும். இது ஒரு வீதி அமைப்பு நாடகமாகும். மிகைப்பட்ட நடிப்பு (Over Action), அறுதியிட்டு முன் கூட்டிக் கருதிக்கூறும் வசனங்கள், பாட்டுகள், ஆட்டங்கள் முதலியவற்றால் நாடகத்தின் போக்கு வளர்க்கப்படுகிறது. இவ்வடிவத்தில் தோன்றும் கோமாளிக் கதாபாத்திரத்திற்கு முன்சிசி என்று பெயர். புராணக் கதைகள் வீரக் கதைகள், சரித்திரக் கதைகள், சமூகக் கதைகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. அக்காராக்கள் என்ற அமைப்பைச் சார்ந்தவர்களால் நடிகர்களுக்குப் பாட்டு, நடிப்பு, நடனம், மற்போர் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அக்காராக்கள் என்பன பயிற்சிப் பள்ளி ஆகும். சத்ரா, முசாபர் நகர், சகரான்பூர், கான்பூர், கன்னோசு ஆகிய ஐந்து இடங்களில் உள்ள பயிற்சிப்பள்ளிகள் தலையாயவை ஆகும்.

பகத்து, கயால், மஞ்சு என்னும் நாடக வடிவங்களும் நௌடங்கியை ஒட்டியவைஆகும். பக்தன் என்ற பொருளைக் கொண்ட பகத்து வடிவம் கீர்த்தனைப் பாடல்கள் அடங்கிய ஓர் இசை நாடகமாகும். நௌடங்கியின் மூல வடிவம் இதுவே என்றும் நௌடங்கியை இவ்வடிவத்தின் மகள் என்றும் குறிப்பிடுவர். கயால் என்பது இராசசுத்தானத்தைச் சார்ந்த கவிதை வடிவமுள்ள ஒரு நாடகவடிவமாகும். கயால் என்னும் உருது மொழிச் சொல்லுக்குக் கற்பனை என்பது பொருள் ஆகும். பார்வையாளர் கற்பனையைப் பெரிதும் சார்ந்து இருக்கின்றமையால் இதற்கு இப்பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. மஞ்சு என்பதும் அதைப் போன்றே ஓர் இசை நாடகமாகும். மஞ்சு என்றால் மேடை என்று பொருள். வட மொழி நாடக முறைப்படி கொடிமரம் நாட்டி வழிபாடு நடத்துவது இதில் ஒரு முறை ஆகும்.

தமாசா: மராட்டியர்கள் ஔரங்கசீபு மன்னருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபோது, மகாராட்டிரத்தில் தங்கிய மொகலாய வீரர்களை உற்சாகமூட்ட வடஇந்தியாவிலிருந்து நடன மாதர்களைக் கொண்டு வந்தனர். இவர்களது நடனம் மராட்டிய மாநிலத்துக் கொண்டால்கள் மரபு நடனத்தில் இயைந்ததால் தாமாசா உருவாயிற்று. தமாசா என்றால் விளையாட்டு, வேடிக்கை, மனமகிழ்ச்சி என்று பொருள். இது பாரசீகச் சொல்லின் மரூஉ ஆகும். மராட்டிய பழைய கதை சொல்லும் இசைப்பாட்டுப்



தமாசா

பாணியாகிய பாவிடாவைப் பின்பற்றித் தமாசாவில் தலைப்பாடல் பாட, துந்துணா மற்றும் கைத்தாளக் காரர்கள் பின்பற்றிப் பாடுவார்கள். இதற்கேற்ப ஆடுவதும் இடையிடையே வசனம் பேசுவதும் இதில் இடம்பெறும்.

பாசிராவ் காலத்தில் தமாசா சீர் பெற்று விளங் கியது. இதில் பாலுணர்ச்சி ஊட்டும் பாட்டும் ஆட்டமும் மிகுதியாக உண்டு. எனவே பிற்காலத்தில் உயர் நிலையினரால் வெறுக்கப்பட்டு மகர், மங்கர் என்னும் ஒதுக்கப்பட்ட இனத்தவரிடம் இது பயின்று வந்தது.

தமாசா மகர் இனத்தவரின் கலையாயிற்று. கி.பி. 18–19–ஆம் நூற்றாண்டில் இராம்சோசி, பாயாபாய் ஆகியோர் தமாசா பாட்டுஇசையில் சிறந்த வல்லுநர் களாகக் கருதப்பட்டனர். தொடக்கத்தில் நடனச்சிறு வர் எனப்படும் ஆண்கள் ஆடினர். அதன் பின்னர்ப் பெண்கள் ஆட முற்பட்டனர். மூன்று பக்கம் பார்வை யாளர்களைக் கொண்ட உயரம் குறைவான மேடை யில் தோலக், ஆல்சி எனச் சிறியதும் பெரியதுமான மத்தளங்களின் முழக்கத்தோடு தமாசா தொடங் கும். விநாயகர் துதியைத் தொடர்ந்து கோமாளியின் தோற்றம் அமையும். கோமாளி சோசுதாய என்று அழைக்கப்படுகிறான். தமாசா சிறு நிகழ்ச்சிக் கோவை ஆகும். இதில் பால்காரி வாதம் செய் தல் போன்ற சிறு சிறு நிகழ்ச்சியில் பாட்டும் உரை யாடலும் கலந்திருக்கும். கோமாளியே கண்ணன் போன்று பல பாத்திரங்களாகத் தன் வேடத்தி லேயே உரையாடுவான். வாக்கு எனப்படும் தமாசா நாடகங்கள் துக்காராம், சான்சிராணி, புராணக்கதை எனப் பலவகைப்படும். கதைப் போக்குப் பாட்டிலும் நடிகர்களின் மனோதருமப்படியான வசனங்கள் இடையில் விரவியும் அமையும் நகைச்சுவை, பால் உணர்ச்சி ஊட்டும் இலாவணிப் பாட்டுகள், கிளர்ச்சி யூட்டும் நடனங்கள், சத்தான பாடல்கள், மத்தளங் களின் முழக்கம் இவை தாமாசாவின் தனித்தன்மை களாகும்.

சாத்துரா; வங்காளத்தில் நிலவுகின்ற ஒரு நாடக வடிவமாகும். 16 அடிச் சதுரமும் $2\frac{1}{2}$ அடி உயரமு முள்ள மேடை அமைக்கப்படுகிறது. மேடையின் இரு புறங்களிலும் மேடையைவிட அரை அடி தாழ்ந்த ஒரு தளத்தில் இசைக்குழுவினர் அமர்ந்திருப்பர். ஒரு புறம் மத்தளம் (தோலக்), சாலரா, சதங்கை ஆகிய கருவிகளும் எதிர்ப்புறத்தில் வயலின், கிளாரினெட்டு, ஆர்மோனியம், சின்னம் ஆகிய கருவிகளும் இசைக் கப்படும். மேடையைச் சுற்றி நாற்புறமும் தரையில் பார்வையாளர் அமர்ந்திருப்பர். மேடையின் நான்கு மூலைகளிலும் கம்பங்களில் ஒளிவிளக்குகள் பொருத் தப்பட்டிருக்கும். மூன்று புறம் ஆண்களும் ஒருபுறம் பெண்களும் அமர்ந்து, இந்த மைய மேடை நாட கத்தைப் பார்ப்பது வழக்கம். மேடையில் ஒரு நாற் காலி மட்டுமே பயன்படுத்தப்படும். மேடையிலிருந்து 60 அடி தொலைவிலுள்ள ஒப்பனை அறைக்குச் செல்ல மேடையின் மூலையிலிருந்து நேர்ப்பாதை அமைக்கப்பட்டிருக்கும். இப்பாதையின் இருமருங்கும் மூங்கில்கள் நடப்பட்டுக் கயிறுகள் கட்டிப் பாதை வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கும். இவை அனைத் தும் தற்காலிக மேடையாகும். விவேக்கு என்னும் கதாபாத்திரம் சாத்துராவில் முக்கியமானதாகும். இவர் தெருக்கூத்தில் கட்டியங்காரனைப் போன்ற வர். சாத்துரா, ஒரிசா, பீகார் போன்ற மாநிலங்க ளிலும் புகழ் பெற்றது.




சாத்துரா

கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தின் பகுதியாகப் பக்தர்கள் ஆடிப்பாடி ஊர்வலம் சென்று வந்தனர். இதில் காலப் போக்கில் நாடகப் பாங்குகள் சேர்க்கப்பட்டன. சாத்துரா என்றால் ஊர்வலம் என்பது பொருள். தொடக்கத்தில் கிருட்டிண கதை கள் மட்டுமே இடம்பெற்றிருந்தன; நாளடைவில் பிற புராணக் கதைகளும் சேர்க்கப்பட்டன. 20–ஆம் நூற் றாண்டுவரை ஆடலும் செய்யுளுரையும் மட்டும் பெற்றுச் சாத்துரா விளங்கியது. பின்னர்ப் பேச்சுரை

கள் சேர்க்கப்பட்டன. பேச்சுரைகளை நடிகர்கள் சொந்தமாகவே மனோதருமப்படி பேசுவதுண்டு. கி.பி.19-ஆம் நூற்றாண்டில் இராமசாத்துரா, துர்க்கா சாத்துரா, சிவ சாத்துரா போன்ற சாத்துராக்கள் தோன்றின. மகிடாசுரமர்த்தனி போன்ற காட்சிகள் மிகப் பெரியனவாகவும் உறைந்த நிலைக் காட்சிக ளாகவும் அமையும். நடிகர்கள் மிகைப்பட நடித்தல் உறுதிப்படக் கூறுதல், உரைக்கக் கூறுதல் போன்ற, பாணிகளைப் பின்பற்றுவர். நாடக வசனங்கள் சில சமயங்களில் பாட்டாகவும் பாடப்படும். இசை அறி வுள்ள பாடகர்கள் நடிகர்கள் ஆகின்றனர்.

சாத்துராக் கலைஞர்களுள் பிரசாமோகன்ராய் மோதிலால் ராய் போன்றோர் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் புகழ் பெற்றவராவர். உதுபல்தத்துபோன் றோர் சாத்துராவில் உத்வேகம் பெற்றுப் புதிய நாட கம் படைத்துக் காட்டியதும் சாத்துரா இப்போது புத்துயிர் பெற்றுள்ளது. இப்போது சில வணிகக் குழுக் கள் சாத்துரா நடிகர்களையும், சாத்துராக் கூறுகள் கொண்ட புதியவணிகவியல் நாடகங்களையும் நடத்தி வருகின்றனர். இவை மிகவும் செல்வாக்குடன் விளங்கு கின்றன.

சௌ: ஒரிசாவில் மயூர்பஞ்சு, பீகாரில் செராய் காலா, வங்காளத்தில் புருலியா ஆகிய மாவட்டங் களில் காணப்படும் கலை வடிவம் இது. சௌ என் பது சாயா (நிழல்) என்னும் வடமொழிச் சொல்லி லிருந்து வந்தது என்றும், சாத்மா (மறைத்துக் கொள் ளுதல்) என்னும் சொல்லிலிருந்துதான் வந்தது என் றும் கூறுவர். சௌ நடனம் சித்திரா பௌர்ணமியை ஒட்டிய 28 நாட்கள் விழாவில் கடைசி மூன்று நாட் கள் நடக்கும் சடங்காகும். தெலி, தமினி, காந்திரா, கான்சாரி, பாத்திரா, கௌடியா, பனியா, பாடிய முதலிய இனத்தவர் இவ் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். சிவனும் சக்தியும் இணைந்து சிவ வடிவத்தில் நிற்பதைக் குறியீடாகக் காட்டுவது மங்களக் கட்டம் என்னும் ஊர்வலச் சடங்காகும். காமானாகட்டம் (கட்டம் நீராடும் துறையாகும்) முடிந்தபிறகு சௌ நடனங்கள் நடைபெறுகின்றன. பழங்குடி மக்கள், விவசாயிகள், போர்ப் பயிற்சி பெற்றவர்கள் இந்நட னத்தில் பங்குபெறுகின்றனர். வாள், கேடய அசைவு முறைகளில் உருவானது இதன் ஒயிலாக்கம். முகம், கைகள் ஆகியவற்றைவிடக் கால் மூட்டுகளே இயக்கங்கள் மூலம் சைகையாக நடித்துக் காட்டப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. சாரிகள் என்ற அமைவுகளின் அடிப்படையில் தோபகங்கள் என்னும் சாயல் நடிப்பு முறைகள் அமைக்கப்படுகின்றன. புலி யுடன் பாய்ச்சல், புலியின் நடை, யானை நடை, மயில் நடை, அன்ன நடை, தேவ நடை, அசுர நடை,



சௌ

எனச் சாயல்கள் விரியும். இவற்றிலிருந்து வாழ்க்கைச் செயல் வடித்துக் காட்டப்பெறும். இதிகாசக் கதைகளிலிருந்து கழுத்து அசைவுகள் வரை இதன் கருவாகக் கையாளப்படுகின்றன. மகிடாசுரமர்த்தனி, துரியோதனன் தொடைபிளத்தல், இருடியசிருங்கர் போன்ற இதிகாச நிகழ்ச்சிகளும், மயில் நடனம், சருப்பநடனம், சாகர நடனம் போன்ற விலங்குகள், பறவைகள் தொடர்பான நிகழ்ச்சிகளும் மீனவன், ஓடக்காரன் போன்ற தொழில் முறைகளும் ஆடப்படுகின்றன. முகத்தில் பல்வகையான முகப் போலிகளைச் செய்து அணிந்து கொள்வர்.

**எட்சகானம்:** இது கன்னட மாநிலத்தில் நிகழ்த்தப்படுகின்ற ஒரு நாடக வடிவம். இதன் காலம் கி.பி.16-ஆம் நூற்றாண்டு என்றும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு என்றும் இரு வகையான கருத்துகள் நிலவுகின்றன. பெத்த கெம்ப கவுடன் தெலுங்கில் எழுதிய கங்கா கௌரி விலாசம் (கி.பி. 1513–1569) என்பதுதான் முதல் எட்சகான நாடகம் எனத் தெரிய வருகிறது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கருநாடகம், தமிழகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் இது நிலவியதாகத் தெரிகிறது. எனினும் கருநாடகத்தில்தான் கலைவடிவமாக இன்றும் மிளிர்கிறது. செவ்வகம் அல்லது சதுர வடிவமான மேடையில் நான்கு மூலைகளிலும் கால்கள் நடப்பட்டு வாழைமரம் கட்டப்பட்டிருக்கும். எண்ணெய் விளக்குகள் ஒளி செய்யும். பாகவதர்மத்தளம், சுருதி, தாளத்துடன் பின்தள மேடை மையத்தில் அமர்ந்திருப்பர். இன்று ஆர்மோனியம். குறுங்குழல் ஆகிய கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. செண்டை மேளமும் உண்டு. அவையினர் மூன்று புறமும் அமர்ந்திருப்பர். ஒப்பனைக்காகச் சிறிது தொலைவில் கூரை வேய்ந்த மறைப்புப் பந்தல் அமைத்துக் கொள்வர். விநாயகர் வணக்கம் (சில சமயம் மூகாம்பிகையையும் வணங்குவர்) பாகவதரின் விருத்தம், விதூடகன் உரையாடல், கோடங்கி உரையாடல், பின்னர்ப் பாத்திரங்கள் தோன்றுதல் என்ற முறையில் எட்சகான நிகழ்ச்சிகள் அமையும். திரையை இருவர் பிடிக்க, பாத்திர அறிமுகம் நடைபெறும். பால கோபால, சத்தியபாமா உருக்குமணி நடனங்கள் நடைபெறும். ஆண்களே பெண் வேடந்தாங்குவர். திரைக்குப்பின் பாத்திரம் தோன்றுதல் கண்களுக்கு விருந்தாக அமையும். பாகவதர் கூறும் பாக்களில் கதை அமைந்திருப்பினும், பாகவதர், நடிகர் ஆகியோர்க்கிடையிலும் நடிகர்களுக்கிடையிலும் உரையாடல்கள் நடைபெறும். செண்டை, மத்தள ஒலிக்கேற்ப நடன முறைகள் நடைபெறும். கருநாடக இசை விரவி இசை அமையும். இராமாயண, மகாபாரதத்தை யொட்டி அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் உள்ளன. காட்சிக்கினிய ஒப்பனை, ஆடை, அணிகள், தலை அணிகலன்கள் உடையது எட்சகானம். பாத்திரப் படைப்புகளின் ஒப்பனை, வண்ணம் தீட்டப்பெற்ற பாணியாகும். குணநலன் அடிப்படையில் பொதுமையான பாத்திரங்களுக்காக வகைப்படுத்தப்பட்ட ஒப்பனை முறை கையாளப்படுகிறது.



எட்சகானம்

**தெருக்கூத்து:** தமிழகத்தின் மரபுக் கலை வடிவமாகும் தெருக்கூத்து. இந்தக்கூத்து திரௌபதி அம்மன் வழிபாட்டின் பின்னணியில் பாரதக் கூத்து என்ற பெயரில் நடைபெறுகின்றது. இது வடார்க்காடு தென்னார்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் சடங்கு சார்ந்த நிலையில் நிகழ்த்தப்படுகின்றது. பாரதக் கதை பகலில் கூறப்பட்டு, இரவில் கூத்தாகக் காட்சிகள் நடித்துக் காட்டப்பெறும். தற்காலிகமாகக்கட்டப்பட்ட கீற்றுக் கொட்டகையில் இரவுக் கூத்துகள் நடைபெறும்.

அருச்சுனன் தபசு, படுகளம் போன்றவை காலை, மாலை, பகல் வேளைகளில் கூத்தின் மேடைக்கு வெளியே நடைபெறும். வில்வளைப்பு, சுபத்திரைக்

கல்யாணம், துகில் உரிதல், அருச்சுனன் தபசு, கீசக வதம், கிருட்டிணன் தூது, கருடமோட்சம், 18-ஆம் நாள் போர், படுகளம் போன்றவை கூத்து நாடகங் களாகும்.

மூன்று புறம் ஆட்கள் அமர்வர். ஆர்மோனியம், தோலக்கு மிருதங்கம் முகவீணை, கைத்தாளம்போன் றகருவிகள் இசைக்கப்படும். மேடையின் பின்தளத் தில் இசைக்கலைஞர்கள் வரிசையாக அமர்ந்திருப்பர். அவர்களுக்கு முன் ஓர் இருக்கை போடப்பட்டிருக்கும். அது விசுப்பலகை என வழங்கப்படுகிறது. கருநாடக இசைப்பாணியில் அமைந்த இசை இடம்பெறும். கிரீ டம், புயக்கட்டைகள், மார்பு அணிகள், வைக்கோலி னால் விரிந்துநிற்கும் மேல்துணிப் பாவாடை, சிவப்பு, கருப்பு, வெண்மை, மஞ்சள் சார்ந்த வண்ணக் கல வையால் முகத்தில் எழுதிய ஒப்பனை முதலியன இக் கலை வடிவின் முருகியல் செறிவைக் காட்டுவதாகும். பெண்களே ஆண்வேடம் தாங்குவர். அடவுகள், இருவர் பிடிக்கும் திரை, சக்தி மிக்க அபிநய முறைமை ஆகியவை தெருக்கூத்தின் சிறப்பியல்க ளாகும். கட்டியக்காரன், சூத்திரதாரி, விதூடகன், மற்றும் அவையினரோடு இணையும்பாவம் ஆகிய பல நிலைகளில் கூத்தாடி திகழ்கிறான். கூத்து வடிவம் முன்பு தமிழகமெங்கும் நிலவியதாகத் தெரிகிறது. வசனங்கள் விரவிய பாட்டுகள், நாடக உத்திகள் நிறைந்தது இக்கூத்து. முன்பு எண்ணெய் விளக்கும், பின்னர்க் காந்தவிளக்குகளும், இப்போது மின்விளக்குகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாகவதமேளா: தஞ்சை மாவட்டத்தில் சித்திரை மாதம் நரசிம்ம செயந்தியையொட்டி, நடக்கும் பிரக லாத நாடகமே பாகவதமேளாவாகும். இது பக்தி நெறியில் பசனை முறையில் அமைந்த பாகவ தர்களின் நாடக வழிபாடாகும். இப்போது மெலட் டூரிலும் சாலியமங்கலத்திலும் நடைபெற்று வரு கிறது. இந்நாடகம் தெலுங்கில் உள்ளது. இது பிராமணர்களின் கலை வடிவம். அச்சுதப்ப நாயக் கர் ஆந்திராவிலிருந்து குடியேறிய அந்தணர்களுக்கு அளித்த கிராமங்களில் மெலட்டூர் ஒன்றாகும். இன்று மெலட்டூர் பாகவதமேளா என்ற பெயரிலேயே இது வழங்கப்படுகிறது. வரதராசப் பெருமாள் கோவில் எதிரில் 18-20 அடிகளில் அமைக்கப்பட்ட கீற்று மேடை யில் இந்நாடகம் நடைபெறுகிறது. இதன் முன்னர்ப் பார்வையாளர்களுக்காகப் பந்தல் போடப்பட்டிருக் கும். இரவு 9.30 மணிக்குத் தொடங்கும் நிகழ்ச்சி காலை வரை தொடரும். பந்தலையொட்டி ஒப்ப னைக்காக ஒரு சிறிய கீற்றுக்கொட்டகை கட்டிக் கொள்வர்.




தெருக்கூத்து

விநாயகர் வழிபாடும், கோணங்கி என்ற விதூடகனின் வழிபாட்டு ஆட்டமும், பேச்சுகளும் முடிந்த பின்னர்த் தோடயமங்களம் என்னும் வாழ்த்துப் பாடல் நடைபெறும். பின்னர்ப் பாத்திரப் பிரவேசம் என்னும் கதாபாத்திரங்கள் அறிமுகம் நடைபெறும். பின்னர்ப்பரதநாட்டியப்பாணியில் உருவான சுத்த நடன முத்திரைகள் கையாளப்படுகின்றன. இசையமைப்பு, பாத்திரங்கள் தோற்றத்திற்கு எனக் குறிப்பிடப்பட்டுத் தருவுக்கேற்ப அமைந்துள்ளது. சுத்த நிருத்தம், பாத்திர வேடங்கள் பூண்ட நிருத்தியம், பாத்திரங்களே பாடி நான்கு வகை அபிநயங்களாலும் விளக்கும் நாட்டியம் ஆகிய பரத முனிவரின் மூன்று வகைகளும் இதில் விரவி நிற்கக் காணலாம். வேங்கடரமண சாத்திரியார் கிருதிகள் இதற்குரியவை. அவை தியாகராசசுவாமிகளின் கிருதிகள் போன்றவை.

புடி என்னும் கிராமத்துப் பாமாகலாபம் என்ற நாட்டிய நாடகம் பாகவதமேளா போன்றதே.

இராதை கண்ணன் காதல், கோபியர் கண்ணன் விளையாட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கண்கவர் விளக்குக் காட்சிகள் அமைந்த இராசலீலா என்னும் இசை நாட்டியம் உத்தரப்பிரதேசத்தில் காணப்படுகிறது. 9 முதல் 14 வயதுச் சிறுவர் பங்கேற்கும் இந்நாட்டியம் பிருந்தாவனத்தில் நடைபெறுகிறது. தசரா வேளையில் வாரணாசியிலும், இராம்நகரிலும் துளசிதாசரின் இராமசரித மானசாவைப் பின்பற்றி 31 நாட்கள் இராமாயண நாடகம் நடைபெறும். இதில் சிறியோரும் பெரியோரும் இணைந்து நடிப்பர். அசாமில் கிருட்டிணன், உருக்குமணி, சத்தியபாமா பாத்திரங்களைப் பின்னணியாகக் கொண்ட பாவனா ஆட்டம் அல்லது



பாகவதமேளா

வசனங்களும் இதில் இடம் பெறுகின்றன. நரசிம்ம மூர்த்திக்கு முகமூடியைப் பயன்படுத்துகின்றனர். மேடையைத் தாண்டிப் பாத்திரங்கள் வெளியே வந்து நடிப்பதும் உண்டு. பெண்களுக்குப் புடவை, பரதநாட்டிய உடை. ஆண்கள் வேடத்திற்கு இராச அங்கி முதலியன உடையாகும். ஆந்திராவில் குச்சுப்


ஆசுதிய நாடகம் நடைபெறுகின்றது. இது சத்திரங்கள் எனப்படும் வைணவ மடங்களில் நிகழ்கின்ற இராசலீலாவைப் போன்றது.

காசுமீரில் பாந்து சாசன் என்னும் நாடக நிகழ்ச்சி நடைபெறுகிறது. சாசன் என்பது விழா என்று பொருள்படும். இவ்விழாவில் அசுகதம், கேலிக்

கூத்து நிறைந்த நாடகங்கள் ஒயில் வடிவாக்க நிலையில் படைத்துக் காட்டப்படுகின்றன. இசைப் பின்னணி முழங்க நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. நடன அடவுகளால் நிகழ்ச்சிகள் வலுவூட்டப்படுகின்றன. சிகார்கா என்ற நடன நாடகத்தில் முகமூடிகளை அணிவதுண்டு. கேரளத்தில் முடியேற்று என்பதும் தமிழகத்தில் சிறுத்தொண்டநாயனார் கூத்து, கணியான் கூத்து என்பனவும் ஆந்திரத்தில் வீதி நாடகம், புரகதா என்பனவும் போன்ற எண்ணற்ற கிராமிய ஆட்டக் கலைகள் நாடகங்களைத் தாங்கி நிகழ்வுக் கலைகளாக இன்றும் நிலவுகின்றன. இவற்றில் பல பொதுக் கூறுகளைக் காணலாம். இவை அந்தந்த மாநில மண்ணின் இயல்புகளையும் பெற்று, பழைய இந்திய நாடகக் கலையின் கூறுகள் மிளிர நின்று நிலவுவனவாகும்.

பாவைக் கூத்துகள்: புத்தமத நூலான தேரிகதாவில் நூல்பாவைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே கிறித்துவின் காலத்திற்கு முன்னரே பாவைக் கூத்துகள் இந்திய நாட்டில் நிலவி வந்துள்ளன எனத் தெரிகிறது. பாவைக் கூத்தைப் பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும், புராணங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. வடமொழி நாடகங்களில் சூத்திரதாரன் என்னும் சொல், 'பாவைகளின் நூலைப் பிடித்து ஆட்டுவோன்' என்னும் பொருள்பற்றித் தோன்றியது என்னும் கருத்தும் உண்டு. சூத்திரம் என்பதற்கு நூல் என்று பொருள். கைப்பாவை, கழிப்பாவை, நூல் பாவை, தோற்பாவை ஆகிய பாவைக்கூத்துகள் இந்திய நாட்டில் காணப்படுகின்றன. இவற்றுள் நூற்பாவைக் கூத்தும், தோற்பாவைக் கூத்தும் பல்வேறு நிலைவேறுபாடுகளுடன் சிறந்த மரபுக் கலைகளாக விளங்குகின்றன. இவற்றுள் தோற்பாவைகளில் அவ்வம் மாநிலக் கோவில்களில் காணப்படும் ஓவிய மரபு, தொடர்பு பெற்றுள்ளதைக் காண இயலும்.

பாவைக்கூத்துகளின் படைப்பு முறைகளில் வடமொழி நாடகம் மற்றும் கிராமிய நாடகக் கலையின் வழியும் வகையும் பின்பற்றப்பட்டு வருகின்றமை காணலாம். கோமாளி போன்ற கதாபாத்திரங்களை எல்லாப் பாவைக் கூத்துகளிலும் காணலாம். தமிழகம் மற்றும் கேரளத்தில் பிராமணர்கள் கேலிக்கதைப் பாத்திரங்களாக அறிமுகப்படுத்தப் படுகின்றனர். பாலுணர்வுப் பின்னணியில் பச்சையான நகைச்சுவைகளும், சமூக-அரசியல் அங்கதங்களும் கையாளப்படுகின்றன.



தோற்பாவை நிழற்கூத்து

தோற்பாவை நிழற்கூத்து ஒரிசா, தமிழ்நாடு, கேரளா, கருநாடகம் ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றது. கேரளாவில் தோற்பாவைக்கூத்தில் கம்பராமாயணப் பாடல்களும் விளக்கங்களும் கூறப்படுகின்றன. தமிழ் நாட்டில் தொழிலாகக் கொண்டு இயங்கும் தோற்பாவைக் குழுக்கள் உள்ளன. கேரளாவில் கிருட்டிணகுட்டிப் புலவரும், தமிழ்நாட்டில் முருகன் இராவும் இக்கலையில் புகழ்பெற்றவர்கள். தோற்பாவைகளின் வடிவளவில் மாநிலத்துக்கு மாநிலம் வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரிசாவில் சிறிய உருவங்கள் காணப்படுகின்றன. ஆந்திராவில் 4 அடியிலிருந்து 6 அடி உயரமுள்ள உருவங்கள் கால்கள் கைகள் அசையும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

எருமை, மாடு, ஆடு, மான் ஆகியவற்றின் தோல்களால் இவை உருவாக்கப்படுகின்றன. ஒரிசா, கேரள மாநிலங்களில் உருவங்கள் கருமையான நிழல் வடிவங்களில் துளைகளாலான அலங்காரங்கள்

காணப்படுகின்றன. ஆந்திரா, கருநாடகம், தமிழகத்தில் தோற்பாவை உருவங்கள் நிறச் சேர்க்கைகளுடன், கண்ணாடி போன்று ஊடுருவும் தன்மையும் பெற்றுள்ளன. குச்சிகளால் இவற்றின் கை, கால்கள், தலை போன்ற இணைப்புகள் இயக்கப்படுகின்றன.

தோற்பாவைக்கூத்து மேடை பெட்டி வடிவில் அமைக்கப்படுகிறது. கேரளாவில் இக்கூத்து கோயிற் சடங்காக நடத்தப்படுகிறது. பாலக்காட்டு மாவட்ட ஒற்றைப் பாலத்தை அடுத்த ஆரியங்காவு அம்மன் கோவிலில் கூத்துமாடம் என்னும் ஓர் அரங்கக் கட்டடம் இதற்காக அமைக்கப்பட்டுள்ளது பாவைகள் ஒரு வெண்திரையின் பின் இயக்கப்பட்டுப் பாவைகளுக்குப் பின்னாலிருந்து அளிக்கப்படும் ஒளியில் இதன் நிழலோ ஊடுருவல்களோடு கூடிய உருவங்களோ பார்வையாளர்களுக்குப் புலப்படும் வகையில் இயக்கப்படுகின்றன. எண்ணெய் விளக்குகள் மரபுவழி ஒளியமைப்பாகும். இப்போது மின்விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. தோற்பாவைகளின் இயக்கம் உன்னதமான திறமைக்கு எடுத்துக்காட்டாகும். தமிழகத்து முருகன் இராவ் ஒருவரே பல கதாபாத்திரங்களை இயக்குவதும், அவற்றிற்கு ஏற்பப் பல குரல்களில் பேசுவதும் அவரது சிறப்பு இயல்பாகும்.

நூற்பாவையைப் பொறுத்தவரை ஒரிசா, இராசசுத்தான், தமிழகம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் சிறந்து விளங்குகின்றன. தமிழகத்தில் தஞ்சை மாவட்டமும், சேலம் மாவட்டமும் இப்பொம்மலாட்டக் கலையின் இருப்பிடமாயுள்ளன. கும்பகோணம் மணி அய்யர், சேலம் செம்மலை ஆகியோர் இதில் சிறந்தவராவர். தமிழகத்தில் பொம்மலாட்டம் கட்டை பொம்மைக் கூத்து என்ற பெயரிலும் கருநாடகத்தில் கொம்பயாட்டம் என்ற பெயரிலும் குறிப்பிடப்படுகின்றன. கருநாடகத்தில் எட்சகானம், தமிழகத்தில் தெருக்கூத்து, திருவிழா இசை நாடகம் ஆகியவற்றின் படிகளாகவே நூற்பாவைக் கூத்தின் நாடக வடிவம் அமைந்துள்ளது. தலை, தோள்கள், கைகள், இடுப்பு, மூட்டுப் போன்றவை இயக்கப்பட்டு மனித நாடகக் கலை இயக்கங்களை எதிரொலிப்பவையாக உள்ளன.

நூற்பாவைக் கூத்தில் திரைமறைவில் மேலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள நூல்களை அசைப்பதன் மூலம் பாவைகளை இயக்குகின்றனர். எனவே இக்காலத் திரைகளாலான முகப்பு அரங்கு பொம்மைகளின் உயரத்திற்கு ஏற்ப அமைக்கப்படுகின்றது. கருப்பு நிறப் பின்திரை பயன்படுத்தப்படுவதே மரபு எனினும் இப்போது ஏனைய வண்ணங்கள் தீட்டிய திரைகளும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மின்



பருனாம்வனம்



அந்தாயுக்கு துக்ளக்கு

விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. கும்ப கோணம் பரதநாட்டியப் பொம்மை அதன் இயக்கத் திறனால் பெயர் பெற்றது.

கையுறை அல்லது கைப்பாவை என்பது மறைந்து வரும் ஒரு கலையாகும். ஒரிசா, கேரளம் ஆகிய மாநிலங்களில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்று மாக இக்கலை காணப்படுகிறது. இராதை கண்ணன் கதை ஒரிசாவிலும், கதகளியின் படியாகக் கேரளா விலும் கையுறைப் பாவைக் கூத்து நடைபெறுகின் றது. இரு கைகளிலும் இரு பொம்மைகளைத் தாங்கி ஒருவர் இயக்க, அவருக்குத் துணையாகப் பின்பாட்டுக்காரரும் மத்தளக்காரரும் இசையமைக் கின்றனர்.

கழிப் பாவை வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங் களில் காணப்படுகின்றன. வங்கத்தில் சாத்துராவின் படிகளாக இதன் உருவங்கள் அமைந்துள்ளன. பாவையோடு பொருத்தப்பட்ட மூங்கிற்கழி ஆட்டு வோர் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும். பாவை களின் கைகள் நூலால் இயக்கப்படும். பாவைகளின் ஆடைகள் மூங்கில் கழியை மறைத்திருக்க, பாவை யாட்டுவோர் மூங்கில் பாயின்பின் மறைந்திருந்து பாயின் மேலே பாவையை ஆட்டுவர். இருவர் மூவர் பாவை ஆட்டுபவர் தோன்றிக் கூத்தை நிகழ்த்து வர். ஒரிசாவில் பாவை ஆட்டுபவர் நிற்பதற்குப் பதில் அமர்ந்திருப்பார் என்பது மட்டுமே வங்கத்தி லிருந்து வேறுபட்டது.

இந்திய விடுதலைக்குப் பின்னர்ப் பாவைக்கூத்து ஒரு புத்துயிர் பெற்றுள்ளது. புதிய குழுக்களும் முயற்சிகளும் நடக்கின்றன. இராசசுத்தானின் பாரதீய லோக கலா மண்டலம், தில்லி சிரீராம் கலை மையக் குழு ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். தமிழகத் தின் பாவைக்கூத்தில் குழந்தைகள், குடும்ப நலப் பயிற்சியாளர்களுக்குப் பாடமாகத் திரு. சீனிவாசன் சில புதிய முயற்சிகள் செய்து பார்த்துள்ளார். அர சாங்கத் திட்ட விளம்பரத்திற்குப் பாவைக் கூத்து பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

**சமூக அரசியல் நோக்க நாடகங்கள்:** நாடகக்கலை 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில ஆதிக் கத்தையும், சமூகத் தீமைகளையும் எதிர்க்கப் பயன் படுத்தப்பட்டது. வங்க மொழியில் தீனபந்து மித்தி ராவால் நீலதருப்பணம் என்னும் முதல் சமுதாயத் தீங்கு எதிர்ப்பு நாடகம் கி.பி. 1860-இல் இயற்றப்பட் டது. ஆங்கிலத்தோட்ட முதலாளிகள் ஈவு இரக்கமின் றித் தொழிலாளர்களை வருத்தும் நிலையை இந்நாட கம் உணர்த்துகின்றது. கி.பி. 1875-இல் கல்கத்தாவில் தேசியநாடக மன்றம் தோன்றியது. தோதீந்திரநாத்து தாகூர் புருவிக்கிரம் என்னும் நாடகத்தில் தேசிய

உணர்வூட்டும் வசனங்களைச் சேர்த்ததும், கி.பி.1876-இல் நார்த்து புரூக்குப் பிரபு வங்காளத்தில் நாடகத் தடைச் சட்டம் கொண்டுவந்தார். தொடர்ந்து கி.பி. 1879 மார்ச்சு 14-இல் நாடக நிகழ்ச்சிச் சட்டம் நிர்.19 ஏற்படுத்தப்பட்டது. கி.பி.1885-இல் இந்தியத் தேசிய காங்கிரசு தோன்றிய பிறகு தேசியப் பற்று நாடகங்களில் காணப்பட்டது. புராணக் கதைகளை நாடகமாக நடித்தாலும் அவை ஆங்கிலேயரை எதிர்க்கும் உட்கருத்துகளையே கொண்டிருந்தன. சான்றாக, 1906-ஆம் ஆண்டு மராத்தி மொழியில் பிரோபக்கர் கண்டில்கர் எழுதிய கீசகவதம் என்னும் நாடகத்தில் வீமன் திலகரையும், கீசகன் கர்சான் பிரபுவையும் நினைவூட்டும் வகையில் பாத்திர அமைப்பு இருந்தது. இது தவிர, சரித்திரப் பின்னணியிலும் நாடகங்கள் எழுதப்பட்டன. வங்கத்தில் கிரிசு சந்திரகோசின் சிராசு உத்தௌலா, மீர்காசிம், சத்திரபதி சிவாசி போன்றனவும், அசாமில் அகோகுஅரசர்கள் பர்மியப் படையெடுப்பைஎதிர்த்தலும், மராத்தியில் சிவாசியும், கன்னடத்தில் எச்சமாநாயக்கர், திப்புசுல்தான், சித்தூர் சின்னம்மா போன்றவர்களைப் பற்றியனவும் ஆகிய கதைகள் நாடகங்களாக்கப்பட்டன.

தமிழகத்தில் தெ.பொ. கிருட்டிணசாமிப்பாவலர் எழுதிய பதிபக்தி, தேசிய கொடி, கதர்பக்தி, கதரின் வெற்றி ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். மேலும் பாசுகரதாசு, விசுவநாததாசு, மன்னார்குடி நடராசபிள்ளை, தோட்டி எம்.எம். சீனிவாசலு நாயுடு, அனந்த நாராயண ஐயர், கே.டி. நடராசபிள்ளை, எம். ஆர். கமலவேணி, கே.பி. சானகிஅம்மாள், எம்.என். இராசம், கே.பி. சுந்தராம்பாள் போன்றோர் நாடகங்களில் பாடல்கள்வழித் தேசிய உணர்வு ஊட்டினர்.

1940-இல் சமதருமம், பொதுவுடைமைபோன்றஅரசியற் கருத்துகள் தோன்றியபோது, அவற்றைப் பரப்பும் கொள்கைப் பரப்பு ஊடகமாக நாடகமேடை பயன்பட்டது. 1942-இலிருந்து இந்திய நாடக மேடையில் இந்திய மக்கள் நாடக மன்றம் சிறப்பிடம் வகிக்கத் தொடங்கிற்று. இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து பாசிச எதிர்ப்பு அமைப்பாக விளங்கிய இ.ம.நா.ம., பின்னர்ப் பொதுவுடைமைக் கட்சி அமைப்பாக மாறியது. இவ்வகை நாடகங்களுள் விபன்பாட்டாச்சாரியாவின் நபானா குறிப்பிடத்தக்கது. இதன் இயக்குநர் சிறந்த நடிகரும் இயக்குநருமான, மகசசாய் பரிசு பெற்ற சம்யுத்திரா ஆவார். இப்டா (IPDA) எனச்சொல்லப்பட்ட இந்திய மக்கள் நாடக மன்றம் ஒரு தேசிய அமைப்பாக மாறி இந்தியா முழுவதும் கிளைகளைத் தோற்றுவித்தது.

பால்ராசுசகானி, இரவிசங்கர், முல்குராசு ஆனந்து, இரமேசு தாபர், சாந்தி பருகன், குவாசா அகமது அப்பாசு, உதுபல்தது போன்ற புகழ்பெற்ற கலைஞர்களும் நாடக ஆசிரியர்களும் இயக்குநர்களும் இவ்வமைப்பில் குறிப்பிடத்தக்கவராவர்.

பொதுவுடைமைத் தத்துவம், தொழிலாளர்கள் படும் இன்னல்கள், வருக்கப் போராட்டம் போன்றவை நாடகங்களின் கருப்பொருள்களாக அமைந்திருந்தன. ஒரிசாவில் காளிசரன்பட்நாயக்கின் பாட்டா (அரிசி), இரத்தமதி (சிவந்தமண்) கேரளாவில் கே. தாமோதரனின் பாட்டபாக்கி வி.டி. பட்டதிரிபாட்டின் ‘அடுக்களையிலிருந்து அரங்கிற்கு’ போன்ற சமுதாய இன்னல்களைக் காட்டும் நாடகப் படைப்புகள் இந்தப் பின்னணியில் தோன்றியவை.

கேரளாவில் 1952-இல் கேரள மக்கள் கலைக் கழகத்தின் சார்பில் அரங்கேற்றப்பட்ட தோப்பில் பாசியின் படைப்பான ‘நீங்கள் என்னைக் கம்யூனிசுட்டாக்கினீர்கள்’ என்பது பெரும் வெற்றி படைத்த நாடகமாகும்.

வங்கத்தில் உதுபல்தத்தின் அசுகார், என்பது நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் பாதுகாப்பின்மையைக் காட்டும் நாடகமாகும். மார்க்சீயப் பார்வையில் அமைந்த மாறும் காலங்கள், சாத்துராபாணியில் அமைந்த இலெனின், பெர்லின் வீழ்ச்சி, மாவோ, இந்தியக் கொரில்லாக்கள் என்னும் இவருடைய நாடகங்கள் சிறந்த பாதிப்புகளை ஏற்படுத்தியவையாகும். அறிஞர் அண்ணாவின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் சமுதாய, அரசியல் நோக்கில் நாடகக்கலையைப் பயன்படுத்திக் கொண்டது. பெரியாரின் தலைமையில் இயங்கிய திராவிடக் கழக இயக்கத்தில் இருந்த அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன், மதியழகன் போன்றோர் நாடகத்தை வன்மை மிக்க விளம்பரக் கருவியாகப் பயன்படுத்தினர். அண்ணாவின் நீதிதேவன் மயக்கம், சந்திரோதயம் போன்ற நாடகங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியதும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. தென்னவர் மீது வடவர் செலுத்திய ஆதிக்கத்தை விளங்கக் காட்டிய படைப்புகளும், நகைச்சுவை நடிகர் என்.எசு. கிருட்டிணனின் சமுதாய அங்கதங்களும், எம்.ஜி. இராமச்சந்திரனின் இன்பக்கனவு முதலிய திரைப் படங்களும் இவ்வியக்கத்தின் கொள்கையைப் பரப்பப் பெரிதும் பயன்பட்டன. தமிழகத்தில் மற்றக் கட்சிகளும் நாடகத்தைப் பயன்படுத்தின. எனினும் அவற்றின் தாக்கம் மிகக் குறைவே. 1977-க்குப் பிறகு நிறநாடகம் என்ற பெயரில் நடிகனது உடலையும்

குரலையும் மட்டும் நம்பிப் பொதுவுடைமைக் கட்சிகளும், கலை இலக்கிய முற்போக்கு மன்றங்களும் வீதி நாடகங்கள் நடத்தி வருகின்றன. எனினும் மகாராட்டிரம் ஆந்திரா போன்று கிராமிய வடிவங்களைத் தமிழகம் இன்னும் முழுமையாக நாடகத்தில் பயன்படுத்தவில்லை.

டத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நாடக ஆசிரியராவார். இவரது அரண்மனைத் தாதி (இரங்கர் லாகிரி) ஒரு கற்பனைவாத துன்பியல் நாடகமாகும்.

விடுதலைக்குப் பின்னர் அசாம் நாடகக் கலை வலிமை பெற்றுள்ளது எனக் கூற இயலவில்லை.



பொம்மலாட்டம்

மொழிவழி நாடகங்கள்:

அசாம் நாடகங்கள்: அசாம் நாடகங்கள் அண்டைய வங்க மொழி நாடகத்தின் பாதிப்பிற்குட்பட்டவை (காண்க: வங்கமொழி நாடகம்). இந்நாடக மரபு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. சமயத்தலைவரும், சமூகச் சீர்திருத்தவாதியுமான சங்கர்தேவ் நாடகம் மூலம் தம்கருத்துகளைப் பரப்பினார். உசையும் அநிருத்தும் போன்ற புராண நாடகங்கள் பகுல்சகியா போன்றோரால் நடத்தப் பட்ட போது, சந்திரகுமார் அகர்வாலா, பூபென் அசாரிகா போன்றோரின் நடப்பியல்நீதியைச் சார்ந்த பிஞ்சலி, பூகன் போன்ற நாடகங்களும் நடத்தப்பட்டன. எல்.என். பெசபருவா (கி.பி. 1868-1938), சந்திராகர் பருவா (கி.பி.1874-1961). துருகேசுவர் சர்மா (கி.பி. 1885-1961) ஆகியோர் அசாம் நாடக உலகில் குறிப்பிடப்படத்தக்கவராவர். சோதி பிரசாத்து அகர்வாலா (1903 -1951) விடுதலைக்கு முந்திய கால கட்டத்தில் ...

இங்கு வணிக முறை நாடக அரங்குகளே மிகுதி. தாய் மொழியில் எழுதப்பட்டவற்றை விட வங்கமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்களே மிகுதியாக உள்ளன. அருண்சர்மாவின் உணவு என்ற நாடகம் குறிப்பிடத்தக்கது. இதன் இயக்குநர் துலல் ராயும் குறிப்பிடத்தகுந்தவர்.

மணிப்புரி: இச்சிறிய மாநிலத்தில் செழுமையான வழிபாட்டு நாடக வடிவங்கள் காணப்படுகின்றன. கண்ணன் இந்நாடகத்தின் மையமாக விளங்குகிறான். வங்கத்துச் சாத்துரா வடிவம் இங்குக் காணப்படுகிறது. இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் வங்க நாடகங்களுடன் மணிப்புரி நாடகக்கலை வரலாறு தொடங்குகிறது. தொடர்ந்து வங்க மொழி நாடகத்தின் மணிப்புரி வடிவமும் 1930-க்குப் பிறகு மணிப்புரி மொழி நாடகங்களும் வளர்ச்சிபெற்றுள்ளன.

இந்திய விடுதலைக்குப் பிறகு மணிப்புரி நாடகக் கலையில் சிறப்பும் விரைவும் மிக்க வளர்ச்சியைக்

காண முடிகிறது. மரபுவழிக் கதைகள் மற்றும் வடிவங்களில் சோதனையாக்கங்கள் நடைபெற்று வருகின்றன. இளைஞர்கள் முன்னணியில் இதனைச் செய்து வருகின்றனர். ஓவியம் என்னும் புகரம்பாவின் (1945-1980) நாடக இலக்கியம் முக்கியமானதாகும். கன்னியாலாலின் கலாசேத்திராவும், இரத்தன் தியத்தின் தோரசுதமுவும், அனைத்திந்தியப் பாராட்டைப் பெறும்வண்ணம் நாடகங்களை உருவாக்கி வருகின்றன. இவர்களே தங்கள் நாடகங்களையும் எழுதிக் கொள்கின்றனர். அம்மாநிலக் கிராமியக் கதைகள், மற்றும் கலைகள் இவர்களது நாடக ஆக்கத்தின் அடித்தளமாகும். புதிய விளக்கத்தோடு இவர்கள் படைக்கின்றனர். கன்னியாலால் காட்சியமைப்பு ஏதுமின்றி நடிகர்களைக் கொண்டே படிமங்களைப் படைத்துக்காட்டுகிறார். சமூக விமரிசனம் இவர் நாடகங்களில் இடம்பெறுகின்றது. தியத்தின் இரு சகோதரிகள், பறவைகளின் குரல்கள் ஆகியவை களரிப்பயிற்றுப் போன்ற கலைகளின் கூறுகளைக் கொண்டவை. இவரது ஊருபங்கம் என்னும் பாச மகாகவியின் சமசுகிருத நாடகம் அகில இந்தியப் பாராட்டுப் பெற்றதாகும்.

**ஒரியா நாடகம்:** ஒரியா நாடகமும் அசாம் நாடகத்தைப் போலவே வங்க நாடகத்தின் தாக்கம் பெற்றதாகும். கலைதப்பாட்டுகள், நாடகப் பாங்கான நடனங்கள், கிராமிய நிகழ்வுக் கலைகள், பாவைக் கூத்துகள் நிறைந்த மாநிலம் ஒரிசா. வணிக முறையிலான நாடகங்களின் தாக்கம் இருந்தும் மரபுக் கலைகள் சிதறாத நிலையில் இன்றும் காணப்படுகின்றன. அசுவினிகுமார் கோசு(கி.பி.1892-1962)காளிசரன் பானிக்கிரகி போன்றோர் வணிகமுறை நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய நாடக ஆசிரியர்களாவர். விடுதலைக்குப் பின்னர் ஒரிய நாடகத்தின் வளர்ச்சி என்று சிறப்பித்துக் கூற எதுவுமில்லை. இன்றைய சமூக உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நாடக ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டுக் கூறவேண்டுமாயின், மனோரஞ்சன்தாசு, செ.பி.தாசு, விசய மிசுரா, கார்த்திக்குரத்துப்போன்றோரைக் குறிப்பிடலாம். மரக்குதிரை, ஆரணிய அறுவடை, கதிரவன் மறையும் முன்பு என்னும் நாடகங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவையாகும். முன்னது மனோரஞ்சன் தாசின. பின்னது சே.பி. தாசினது ஆகும்.

**மராத்தி நாடகம்:** வங்கத்தை அடுத்து நாடகக் கலையில் சிறந்து நிற்பது மராத்தி நாடகமே ஆகும். கி.பி.1843-இல் சங்கலி என்னும் சிற்றரசில் விட்டுணு தாசுபாவே என்பவர்தாம் புதிய மராத்தி நாடகத்தினைத் தொடங்கி வைத்தார் எனலாம். இவரது சீதா சுயம்வரம் என்னும் நாடகம் கருநாடகத்து எட்சகானம்,மராட்டியக்கிராமிய நடனங்கள் மற்றும் கலைகள் ஆகியவற்றின் கூறுகளைக் கொண்டதாகும். தமாசாவின் இயல்பைப் புதிய மராத்தி நாடகங்களில் காணலாம். கே.பி. கடில்கர் சீவகதம் பற்றி அரசியல் நோக்க நாடகத்தில் குறிப்பிட்டுள்ளார். கம்சரி என்பவரின் 'ஒரே ஒரு தவளை' என்னும் மதுவிலக்கு நாடகம் புகழ்பெற்றதாகும். மற்றொரு நாடகம் தேவிலாலின் சாரதா ஆகும். 1920க்குப் பிறகு மராத்தி நாடகக்கலை நடப்பியல் பாணிக்குத் திரும்பியது. மாமாவரேர்கரின் பூமிகன்னியாசீதை, ஆதிக்கத்தின் அடிமைகள் ஆகியன மராத்தி நாடக இலக்கியத்தில் ஒரு நிலையாகும். பி.கே. ஆத்திரே, பி.எல். தேசுபாண்டே போன்றோர் நாடக ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

கோகல் எழுதிய "இன்சுபெக்டர் செனரல்," பிரசுடின் எழுதிய திரீபென்னிலபரா ஆகிய நாடகங்களைத் தேசுபாண்டே மராட்டிய மொழியில் பெயர்த்துள்ளார். மராத்தி மொழி இசை நாடகத்தில் பெயர்பெற்றதாகும். ஏ.பி. கோல்தாட்கர் மற்றோர் இசை நாடக ஆசிரியராவார். நாராயணஇராவ் காலகந்தருவ என்ற பெயரால் எல்லாராலும் அறிந்து கொள்ளப்பட்ட நடிகர் ஆவர். அவரது பெண்வேடம் பெயர்பெற்றதாகும். விடுதலைக்குப் பிறகு விசய தெண்டுல்கரைத் தவிர, கன்னோல்கள் சயந்து தாவலி, மகேசு எல்குஞ்சுலான், சதீசு அலேகர் அசியுல் வாலேச, அனில் பார்வே ஆகியோர் மராட்டிய நாடக ஆசிரியர்களாவர். கன்னோல்கரின் ஏக சூனிய பாசராவ், எல்குச்சுவாரின் வாசனாகந்த, தாலிவியின் சந்தியானாயா ஆகியவை பல முறை மேடையேறிய நாடகங்களாகும். விசயமேதா, அரவிந்த தேசுபாண்டே, சபார் பட்டேல், அமோல் பலேக்கர், திலிப்புகோல்தாட்கர், சத்தியதேவ்துபே ஆகியோர் புகழ்பெற்ற மராத்தி நாடக இயக்குநர் ஆவர். சபார் பட்டேலின் காவிராம் கொதுவால் மிகவும் புகழ்பெற்ற படைப்பு ஆகும். பிருதிவி தியேட்டர், இந்தியன் நேசனல் தியேட்டர், தேசீய நிகழ்க் கலை மையம் ஆகியவை மராத்தி நாடகத்திற்கு ஊக்கமளிக்கும் நிறுவனங்களாகும். உரோசினி அட்டங்காடி காந்தி திரைப்படத்தில் கத்தூரிபாயாக நடித்ததன் மூலம் உலகம் முழுதும் அறிமுகமாகி உள்ளார். இவர் மராட்டிய நாடக மேடையில் சிறந்த நடிகையாவார். திரைப்பட நடிகரான நசுருதீன் சாவும் பம்பாய் நாடக மேடையில் சிறப்பிடம் பெற்றவரே.

**வங்கமொழி நாடகம்:** இலெவடம், கோலக்கு நாததாசு ஆகியோரின் புதிய நாடக முயற்சியைத் தொடர்ந்து, சோரசங்கு அரங்கு கவிஞர் தாகூர் சகோதரர்களால் தொடங்கப்பட்டது. கவிஞர் தாகூர்

தம் நாடக எழுத்தாக்கத்தை வான்மீகி பிரதிபா என்னும் அவரது முதல் இசை நாடகத்துடன் தொடங்கி, ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதி முடித்தார். அவற்றுள் செவ்வலரி, இராசா, முத்ததாரா போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். தாகூர் நாடகங்கள் இந்நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் சம்புமித்திராவால் மேடையேற்றப்பட்ட பின்பே இவற்றின் மேடையாக்கக் கூறுகள் அவர் நிறுவிய நிறுவனமான சாந்திநிகேதனத்திற்கு வெளியே உணரப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கிரிசு சந்திரகோசின் (கி.பி.1844-1911) சிராசு உத்தௌலா, சத்திரபதி சிவாசி, திவிசேந்திர இலால் இராயின் இராணாபிரதாப்பு (கி.பி.1863-1913), தூர்க்கா தாசு, சந்திர குப்தர் போன்ற வரலாற்று நாடகங்கள் வங்கத்தில் மட்டுமன்றி, அக்கால கட்டத்திலேயே பிற மொழிகளிலும் நடிக்கப் பெற்றவையாகும். நடிப்புக் கலையில் இன்றும் சிறந்து விளங்கும் மகசசாய் பரிசு பெற்ற சம்புமித்திரா, உதுபல்தத்துப் போன்றோரும், 1930 இல் புகழ்க்கொடியோடு விளங்கிய அகிந்திர சௌத்திரியும் சிசிர்குமார் பதுரியின்(கி.பி.1889-1959) வழித்தோன்றல்களாவர். உதுபல்தத்தின் இலிட்டில் தியேட்டர் குழுப்பினர் சாத்துராப் பாணியில் இலெனின், மாவோ, வியட்நாம் பற்றிய படைப்புகளை நடத்தினர். புதிய நாடக இயக்கம் 'புதிய அறுவடை' என்னும் நாடகத்துடன் தொடங்கியது. தருண் இராய், அருண்முகர்ஜீ, மொகித்சட்டர்சி போன்றோர் இயக்குநர், நாடக ஆசிரியர்கள் என்ற நிலையில் சிறப்பாகக் கருதப்படுகின்றனர். உருத்திரப்பிரசாத்து சென்குப்தா 'நத்திகார்' என்னும் அமைப்பில் மேலை நாடகங்களான பிரசுடின் நாடகங்களைப் படைத்துள்ளார்.

வங்க நாடக ஆசிரியருள் பாதல் சர்க்காருக்குத் தனியிடம் உண்டு. அவரது மூன்றாம் நாடக அரங்கக் கோட்பாடு இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இவர் நடிகர், பார்வையாளர் ஆகிய நாடகப் படைப்பின் அடித்தளத்தில் மரபு, வழக்கம் தாண்டிய மூன்றாம் நிலை நாடகத்தைப் படைத்து வருபவர். இவரது 'ஏவம் இந்திரசித்து', 'பாக்கி இதிகாசர்' ஆகியன புதிய இந்திய நாடகமாகக் கருதப்படுகின்றன. ஒளியமைப்பில் தபசுசென் குறிப்பிடத்தக்கவர். இவ்வாறு வங்க நாடகக்கலை இந்தியாவில் முன்னணியில் நிற்கிறது.

**மலையாள நாடகம்:** கேரளவர்ம வலியகோயித்து தம்புரானின் சாகுந்தல நாடக மொழிபெயர்ப்புடனும் (1901), திருவட்டார் நாராயண பிள்ளையின் சாகுந்தல நாடக அரங்கேற்றத்துடனும் புதிய மலையாள நாடகம் கி.பி.1882-இல் தொடங்குகிறது. வடமொழி நாடகம், தமிழ்இசை நாடகம் ஆகியவற்றின் பாதிப்போடு சேக்சுபியர், மோலியர், இப்சன் போன்றோரின் மேலை நாட்டு நாடகங்களின் பாதிப்பும் மலையாள நாடகத்தைப் பெரிதும் தாக்கியுள்ளன. ஈ.வி. கிருட்டிணபிள்ளை, சி.வி. இராமன்பிள்ளை, போன்றோரின் நாவல் பத்திகள் மற்றும் சமூக நகைச்சுவை நாடகங்கள் தொடக்க கால மலையாள நாடகக் கலையுள் குறிப்பிடத்தக்கன. சி.செ. தாமசின் கி.பி.1128 இல் 'கிரைம்நிர். 27உம்,' புளிமான பரமேசுவரன் பிள்ளையின் சமத்துவவாதியும் மலையாள நாடகத்தில் தனிஇடம் பெற்றவை. என். கிருட்டிண பிள்ளை சமுதாயச் சிக்கல்களைக் கொண்ட நாடகம் எழுதியவர். இவரது 'பக்கின பவனம்' குறிப்பிடத்தக்கதாகும். இப்சனின் பாதிப்பை இவரிடம் காணலாம். சி.என். சிரீகண்டன் நாயரின் முப்பெரும் நாடகங்களான சாகேதம், இலங்காலட்சுமி, காஞ்சன சீதை ஆகியவை புகழ் பெற்ற நாடகங்களாகும். இவர் நாடக ஆசிரியராக மட்டுமன்றி, நாடக இயக்கத் தலைவராகவும் விளங்குபவர். சி. சங்கரபிள்ளை இவர்தம் பூசாமுறி, கருப்புத் தெய்வத்தைத்தேடி ஆகியன அனைத்திந்திய அளவில் அறியப்பட்டவை. கேரளததில் நாடகக்களரி. நாடகப் பட்டப்படிப்பு தோன்றக் காரணமானவரும் இவரே. காவாலம் நாராயணப் பணிக்கர் கிராமிய மற்றும் செவ்வியல் வடிவப் பின்னணியில் நாடகம் எழுதுபவர். இவரது 'தெய்வத்தார்', 'அவனவன் கடம்ப', என்பவை புகழ் பெற்றவை. இவரது வடமொழி நாடகப் படைப்பான பாசனின் மத்திய மவியாயோகம் அகில இந்தியாவில் மட்டுமன்றி, உலக நாடுகளிலும் இவருக்கு அறிமுகத்தை அளித்தன. தேசிய நாடகப் பள்ளி மாணவரும் தமிழகத்தைச் சார்ந்தவருமான சே. இராமாநுசத்தின் மலையாள நாடகப் படைப்புகள் சிறப்பிடம் பெற்றவையாகக் கருதப்பட்டன. மரபுக் கலைகளில் எழுச்சி பெற்ற கற்பனையின் வீச்சிற்காக இவர் தம் நாடகங்கள் பாராட்டப் படுகின்றன. இவரது 'கருப்பு தெய்வத்தைத் தேடி' என்னும் நாடகம் அகில இந்திய அங்கீகாரம் பெற்றதாகும்.

கேரளத்தில் 1967-இலிருந்து தோன்றிய நாடகக்களரி புதிய நாடக உணர்வைக் கேரளத்தில் ஏற்படுத்தியது. இந்தப் பயிலியல் நாடகத்தைத் தவிர தொழிலியல் நாடகத் துறையில் தோப்பில் பாசி, என்.என். பிள்ளை, திக்கோடியன், கே.டி. முகமது, எம்.டி. வாசுதேவன் நாயர் ஆகியோர் குறிப்பிடப் படத்தக்கவராவர்.

**கன்னட நாடகம்:** எட்சகான மரபும், மராத்தி நாடகத் தாக்கமும் கன்னட நாடகக் கலையின் பின்னணியாகும். வணிக இயல் குழு வடமொழி, ஆங்கில,

மராத்தி நாடகங்களின் மொழிபெயர்ப்பு நாடகங்களை நடத்தி வந்தன. இவற்றுள் குப்பிவீரண்ணாக் குழு குறிப்பிடத்தக்கது. 1930 வரை ஆடம்பரக் காட்சியமைப்பும், வரலாற்று நாடகங்களும் பரவலாக இருந்தன. டி.பி. கைலாசம், நாராயண இராவ், டி.ஆர். பெந்தரே, ஏ.என். கிருட்டிண இராவ், சிவராம் கரந்து, ஆதியரங்காச்சாரியா போன்றோர் நாடக ஆசிரியர்களாக மட்டுமன்றி, கன்னட நாடகக் கலையின் வளர்ச்சிக்குக் காரணமானவர்களும் ஆவர். விடுதலைக்குப் பிறகு, கிரிசுகர்னாடு, பி.வி. கரந்து ஆகியோர் கன்னடமொழி நாடகக் கலைக்குப் பெரிதும் தொண்டாற்றியுள்ளனர். பிரசன்னா, நாகேசு சிம்கா, இலங்கேசு, சி.பி. சோசி, சந்திரசேகரப் பட்டீல், சந்திரசேகர கம்பார் போன்ற இயக்குநர்களும் நாடக ஆசிரியர்களும் கன்னட நாடக அரங்கில் தமக்கெனத் தனியிடம் வகுத்துக்கொண்டவர்களாவர். கருனாடின் துக்ளக்கு, அயவதனா, கம்பாரின் சோகுமாரசுவாமி ஆகியன குறிப்பிடத்தக்க நாடகங்களாகும். வீ. இராமமூர்த்தி ஒளியமைப்பிலும் அரங்கச் சிற்பத்திலும் சிறந்தவராவார். எக்காடுவில், கே.வி. சுப்பண்ணா நாடகம், திரைப்படக் கலை ஆகிய இரண்டின் சுவையிலும் ஆக்கமுறையிலமைந்த செயலில் ஈடுபட்டுள்ளார்.

**தெலுங்கு நாடகம்:** மராத்தி, பார்சி நாடகப் பாதிப்புடன் புதிய தெலுங்கு நாடகக்கலை கி.பி. 1880-இல் முகப்பு நாடக அரங்கத் தோற்றத்துடன் தொடங்குகிறது. ஆந்திர நாடகத்தின் முதன்மையாளராகப் பெல்லாரி டி. இராமகிருட்டிணாச்சாரிலு கருதப்படுகிறார். தருமாவரம் கிருட்டிணமாச்சாரியார், கோலாச்சலம் சீனிவாச இராவ் ஆகிய இருவரும் முக்கியமான தெலுங்கு நாடக ஆசிரியர்களாவர். தெலுங்கு நாடகக் கலையில் நடப்பியல் பாணி சி.வி. அப்பாராவின் கன்னியாசுல்கத்துடன் தொடங்குகிறது. பெல்லாரி இராகவாச்சாரி சிறந்த நடிகராவார். இவர் சேக்சுபியர் நாடகப் பாத்திரங்களில் தலைசிறந்து விளங்குகிறார். சுதந்திரத்திற்குப்பின்னர் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும்போது, தெலுங்கு நாடகக் கலை பின்தங்கிய நிலையில் உள்ளது. எனினும் சமூகச் சீர்திருத்தம், அரசியல் கருத்து விளக்கம் இவற்றிற்காகத் திரு கத்தார், திரு சுந்தரம் போன்ற இளைஞர்கள் மரபுக் கலைகளின் உத்திகளை இணைத்துப் படைக்கும் படைப்புகள் இந்நாடகக் கலை வளர்ச்சிக்கு ஓரளவு நம்பிக்கையூட்டுகின்றன.

**தமிழ் நாடகம்:** சிலப்பதிகாரத்திலும் சாத்தனாரின் கூத்தநூலிலும் பரிதிமாற்கலைஞரின் நாடகவியலிலும் தமிழ் நாடகம் பற்றிய இலக்கணங்கள் காணப்படுகின்றன. தமிழ் நாடகம் இசை தழுவிய கூத்தேயாகும். தமிழ் மரபுவழி நாடகக்கலை என்று கூறிக்கொள்ளத்தெருக்கூத்து ஒன்றுதான் எஞ்சி நிற்கிறது. பாகவதமேளா தமிழ் நாட்டின் தெலுங்கு மொழி நாடகமாகும். கி.பி.1891-ஆம் ஆண்டு சங்கரதாசு சுவாமிகள் (கி.பி. 1867-1927) நாடக உலகில் நுழைந்ததும், தமிழ் நாடகத்தின் திருப்புமுனை தொடக்கமாயிற்று. இவருக்குச்சமகாலத்தவர் அப்பாவுப்பிள்ளை, கந்தசாமி, முத்துசாமிக் கவிராயர், சந்தான கிருட்டிணநாயுடு, சங்கரலிங்கக் கவிராயர், பாசுகரதாசு முதலியோர்.

மதுரைத் தத்துவ மீனலோசனி தத்துவ பாலசபா, மதுரைப் பாலமீன இரஞ்சனி சங்கீத சபா, மதுரை ஒரிஜினல் பாய்சு கம்பனி போன்ற குழுக்கள் தமிழ் நாடகக் கலையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. 1927-இல் சிரீபாலசண்முகானந்த சபா என்ற பெயரில் டி.கே. எசு. சகோதரர்கள் நாடகக் குழு அமைத்தனர். அவ்வை டி.கே. சண்முகம் தமிழ் நாட்டில் தலைசிறந்த நடிகராவார்.

தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். இவர் சென்னையில் சுகுணவிலாச சபை நிறுவினார். சேக்சுபியர், காளிதாசர் நாடகங்களை மொழிபெயர்த்தும் தழுவியும் தமிழில் சில நாடகங்கள் எழுதியதோடு தாமே பல நாடகங்களும் எழுதியுள்ளார். இவரது மனோகரா நாடகம் பலமுறை அரங்கேற்றப்பட்ட சிறப்புடையது.

திரு. கன்னையா கம்பனி சென்னை சிரீகிருட்டிண விநோத சபா என்ற பெயரில் தசாவதாரம், இராமாயணம், மகாபாரதம் போன்ற நாடங்களை அரங்கேற்றியுள்ளது. பல தந்திரக் காட்சிகளைக் காட்டி மக்களை மகிழச் செய்தவர் கன்னையா. திரு. எசு. சி. கிட்டப்பா (1919-1926) என்னும் மேடை இசை நடிப்பு வல்லுநர், இக் குழு மேடையிலேயே முதலில் தோன்றினார்.

இவரைப் பின்பற்றி நவாபு டி. எசு. இராசமாணிக்கம் மதுரைத் தேவிபால விநோத நாடக சபா என்னும் புகழ்மிக்க நாடகக்குழுவை அமைத்தார். தமிழ் நாடக மேடையில் திரு.எம். கந்தசாமி முதலியாருக்குத் தனியிடம் உண்டு. சே.ஆர். அரங்கராசு, வடுவூர் துரைசாமி ஐயங்கார் போன்றோரின் நாவல்கள் நாடகமாக்கப்பட்டன. மற்றொரு நாடக ஆசிரியர் சங்கரதாச சுவாமிகள் ஆவார். தமிழகத்தின் சிறந்த நகைச்சுவை நடிகரான கலைவாணர் என்.எசு. கிருட்டிணன், என்.எசு.கே. என்ற பெயரில் நாடகக்குழு ஒன்றை அமைத்தார். இவரது நாடகக் குழுவில் கே.ஆர். இராமசாமி, சிவாசிகணேசன் போன்றோர் நடித்தனர். எசு.வி. சகசுரநாமத்தின் சேவைக் குழு (Seva stage) மற்றொரு நாடகக் குழுவாகும். விடுதலைக்குப்பின் உள்ள தொழில்

முறைநாடகக் குழுக்களில் டி.கே.சண்முகம் குழுவினர், சகசுரநாமத்தின் சேவைக்குழு, மேசர் சுந்தரராசனின் என்.எசு.என் நாடகக்குழு, மனோகரின் நேசனல் தியேட்டர்சு ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். விவேகானந்தா பைன் ஆர்ட்சு மூலம் சோ அங்கத நாடகங்களை மேடையேற்றினார்.

எம்.ஜி. இராமச்சந்திரன், சிவாசிகணேசன், எசு.எசு. இராசேந்திரன், மனோரமா போன்றோர் திரைப்பட நடிகராயினும், நாடகங்களிலும் நடித்து வந்தனர். கே. பாலச்சந்தர், கோமல் சுவாமிநாதன், பூரணம் விசுவநாதன் போன்றோர் அமெச்சூர் நாடக சபாக்களில் புதிய முயற்சிகள் சில செய்தனர்.

நாடகம் பற்றிய முதல் பயிற்சி முகாம் 1977-இல் காந்தி கிராம பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் சே. இராமானுசம், திரு.எசு.பி. சீனிவாசன் ஆகியோர் இணைந்து நடத்தியதாகும். இதனைத் தொடர்ந்து, தேசிய நாடகப் பள்ளியின் இரண்டரை மாதப் பயிற்சி, பாதல்சர்க்காரின் நாடகப் பயிற்சி முகாம், மதுரைப் பல்கலைக் கழகத்தில் நாடகச் சான்றிதழ்ப் படிப்பு, நிச நாடக இயக்கத்தின் தெருக் கூத்துப் பயிற்சி முகாம், ஆசிரியருக்கான நாடகப் பட்டறை முதலியன நடைபெற்றன. மரபுக்கலையோடு இணைந்து புதிய நாடக முயற்சிகளில் சே.இராமானுசத்தின் புறஞ்சேரி 1977-78 எர்ணாகுளம் தேசிய நாடக விழாவிலும், பன்சிகவுல் இயக்கிய 'பிணந்தின்னும் சாத்திரங்கள்' 1978-இல் தில்லி சிரீராம் கலை மையத்திலும், 1984-இல் நிச நாடக இயக்கத்தின் சார்பில் மு.இராமசாமி இயக்கிய 'துர்க்கிர அவலம்' பெங்களூர், தில்லி சங்கீத நாடக அகாடமி விழாக்களிலும், 1985-இல் கூத்துப் பட்டறையின் சார்பாக எசு. இராசேந்திரன் இயக்கிய ந. முத்துசாமியின் 'கட்டியங்காரன்' எருணாகுளம் அகாடமி விழாவிலும் பங்கு பெற்றன.

அண்ணா, கருணாநிதி, அரு. இராமநாதன்,எசு.டி. சுந்தரம், பி.எசு. இராமையா, தி. சானகிராமன், என்.வி. இராசாமணி, கே. பாலச்சந்தர், சோ, மு.சா. கிருட்டிணமூர்த்தி போன்ற நாடக ஆசிரியர்களால் பல நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இந்திரா பார்த்தசாரதியின் மழை, போர்வை போர்த்திய உடல்கள், ஔரங்கசீபு, ந. முத்துசாமியின் நாற்காலிக்காரர், சுவரொட்டிகள் புதிய நாடகத்தில் குறிப்பிடத்தக்க சிலவாகும். இவை பிற இந்திய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. மதுரை நிச நாடக இயக்கம், சென்னையில் பரிகுசா, கூத்துப்பட்டறை போன்றவை புதிய முயற்சிகளில் ஈடுபட்ட குழுக்களாகும். பரம்பைச் செல்வன், அசுவகோசு, ஞானி, மு. இராமசுவாமி, இரா. இராசு, கே. எசு. இராசேந்திரன், ஆறுமுகம் போன்ற புதிய இளம் நாடக இயக்குநர்கள் நவீன நாடகப் போக்குகளில் தலைமை வகிக்கின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் நாடக ஆய்வுக்காக நாடகத் துறையை உருவாக்கியுள்ளது. இதில் கல்லூரி ஆசிரியர்களுக்குரிய நாடகப்பட்டறை, மரபுவழிக் கலைகள் மூலம் நடிகர் பயிற்சி முறைகள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சற்றுப்பின்தங்கினாலும் தேசிய ஓட்டத்தில் தமிழகமும் சேர்ந்துள்ளது.

**இந்தி நாடகக்சலை:** பார்சி நாடகக் குழுவின் பாதிப்பு இந்தி நாடகக்கலையில் பெரிதும் காணப் படுகிறது. ஆ.சா. ஆசுகர் காசுமீரி, இராசேசியாம் கதாவாசக் நாராயணப் பிரசாத் பெதாம் போன்றோர் வணிகமுறை குழுவின் நாடக எழுத்தாளர்களுள் சிறந்து விளங்கினர். காசுமீரின் பீசும சபதமும் சத்திய அரிச்சந்திராவும் புகழ்பெற்றவை. பாரதேந்து அரிச்சந்திரர் (கி.பி.1850-1885) இந்தி நாடகத் தந்தையாகக் கருதப்படுகிறார். இவர்தம் அரிச்சந்திராவும் அந்தேர்நகரியும் குறிப்பிடத்தக்கன. இந்தி நாடகக் கலையில் நாடக இலக்கிய வடிவாக்கத்தின் திட்டத்தில் நூலாக்கும் தகுதி பெற்றுள்ளவை செயசங்கர் பிரசாத்தின் (கி.பி. 1889-1937) நாடகங்களாகும். இவற்றை மேடையாக்கம் செய்யும் முயற்சி பின்னர்த் தோன்றியது. இவர்தம் கந்தகுப்தர், சமுத்திரகுப்தர் போன்றவை பெயர்பெற்றவை. இந்தி நாடகத்தில் இலட்சுமி நாராயண மிசுரா, உபேந்திரநாத்து அசுக்கு போன்றோர் சமூகச்சிக்கல்களைத் தாங்கிய நாடகங்கள் பல எழுதினர். இந்தித்தொழில்முறைநாடகத்தில்பிருதிவிராசுகபூரின் பிருதிவிக்கு திரையகம் சிறப்பானதாகும். விடுதலைக்குப் பின்னர் மோகன் இராகேசு, இலட்சுமி நாராயணன் இலால், சுரேந்திரவருமா, மணிமதுக்கர், இரமேசு பட்சி, சங்கர் சேசு, முத்திரா இராட்சசு போன்றோர் நாடக ஆசிரியர்களாக விளங்குகின்றனர்.

தருமவீரர் பாரதியின் அந்தாயுக்கு, மோகன் இராசேசின் ஆசாடமாதத்தில் ஒரு நாள், ஆதே அதுரே ஆகியன தேசிய அளவில் குறிப்பிடத்தக்கவை. குசராத்தில் சி.சி. மெகதாவின் ஆக்குகார்கி (புகை வண்டி) குறிப்பிடத்தக்க நாடகமாகும். ஆதிமாக்சு பாவன், இயசுவந்து தாகர், கைலாசு பாணியா, பர்வின் சோசி போன்றோர் குசராத்தி மொழி நாடக இயக்குநர்களாவர். இளம் நாடக ஆசிரியரில் மதுரை என்பர் குறிப்பிடத்தகுந்தவராவார். பஞ்சாபியில் ஐ.சி. மெகதாவின் மணப்பெண், பல்வந்து கார்க்கியின் மாமரம், சிலாபாட்டியாவின் நாயக

நாயகி என்னும் இசை நாடகம் ஆகியவை குறிப்பிடத் தக்கனவாகும்.

புதிய நாடகம்: புதிய இந்திய நாடகம் கி. பி. 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாட்டு-குறிப்பாக இங்கிலாந்து நாட்டுப் பாதிப்பைப் பெற்றுத் தொடங்குகிறது. ஆங்கில ஆதிக்கமும் ஆங்கிலக் கல்வியும் இப்பாதிப்பிற்குக் காரணங்களா கின்றன. ஆங்கிலேய அதிகாரிகள் தங்கள் மன மகிழ்விற்காக இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்த சில நாடகப் படைப்புகளும், இங்கே தங்கிய ஆங்கி லேயர் எழுதி நடித்த நாடகமும் புதிய நாடகங் களுக்கு முன்மாதிரிகளாகக் கொள்ளப்பட்டன. வண்ணந்தீட்டிய பொதுத் தளங்கள் கொண்ட திரை கள், முகப்புத் தாங்கிய மேடை, ஒளியமைப்பு, பறையறையும் பாணியில் அமைந்த பேச்சு, முகக் குறிப்பு ஆகியன புதுமையாகிப் பார்வையாளர்களைக் கவர்ந்தன. வணிகக் குலத்தினரான பார்சிக்கள் கி. பி. 1850–இல் நாடகக்குழு ஒன்றை வணிக அடிப்படை யில் தொடங்கினர். கண்ணைக்கவரும் காட்சியமைப் பும், மிகைப்படுத்தப்பட்ட அபிநயமும், நிகழ்ச்சிச் செறிவு மிக்க கதைகளும் உடைய நாடகங்களை பார்சி நாடகக்குழு இந்தியா முழுவதும் நடத்தியது. இதன் விளைவாகப் பல்வேறு மாநிலங்களிலும் இது போன்ற நாடகக்குழுக்கள் தோன்றி மக்களிடையே பேராதரவைப் பெற்றன.

ஆங்கிலக் கல்வி கற்றமையால் சேக்சுபியர், பெர்னாட்சா, இப்சன் போன்றவரின் நாடக இலக்கிய வடிவாக்கத்தின் தாக்கம் ஏற்பட்டுப்பல நாடகங்கள் எழுதப்பெற்றன. இதன் பின்னணியில் சில நாடக வகைகள் தோன்றின. அவற்றுள், நாட்டுப் பற்றை வலியுறுத்தும் வரலாற்று நிகழ்வுகள், விடுதலை வீரர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியவற்றைக் கருவாகக் கொண்ட நாடகங்கள் ஒருவகை; வருக்கப் போராட்டம், சமுதாயச் சீர்திருத்தம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட போதனை நாடகங்கள் மற்றொரு வகை; பள்ளிப் பாடப் புத்தகத்திற்கான இலக்கிய நாடகங்கள் வேறொரு வகையாகும்.

எராசிம் இலெப்டெபு (Herasim Lebdeff) என்னும் உருசியரும் வங்காள மொழி ஆசிரியரான கோகுல நாத்தாசும் மாறுவேடம் (Disguise), மோலியரின் அன்பே சிறந்த மருத்துவர் (Love is Great Doctor) ஆகிய இரண்டு நகைச்சுவை நாடகங் களை மொழிபெயர்த்து, 1975 இல் வங்க மொழியில் அரங்கேற்றினர். இதுவே புதிய இந்திய நாடகத்தின் தொடக்கம் எனலாம்.

கருநாடகத்தில் குப்பிவீரண்ணா (கி.பி.1814), டி.பி கைலாசம், ஆந்திராவில் கே.வி. வீரேசலிங்கம் பந்தலு, (கி.பி.1848), இராகவாச்சாரி(1919) தமிழ்நாட்டில் சம்பந்த முதலியார் (1904) ஆகியோர் புதிய நாடகப் பயிலியல் அமைப்பில் குறிப்பிடத்தக்கோர். கேரளா வில் சாகுந்தலம் என்னும் நாடகம், கேரளவரும தம்புரான் மொழிபெயர்ப்பு புதிய நாடகத் தொடக்க மாகக் கருதப்படுகிறது. திருவட்டார் நாராயண பிள்ளையே முதலில் சாகுந்தலத்தை அரங்கேற்றிய வர். குசராத்தில் கவிராசு (கி.பி.1865), இந்தியில் பார தேந்து அரிச்சந்திரா (கி.பி.1870), செயசங்கர் பிரசாத்து (1928), வங்கத்தில் பண்டித இராம் நாராயணன் (கி.பி. 1857), கவிஞர் இரவீந்திரநாத தாகூர் (கி.பி.1877), ஒரிசாவில் இராம் சங்கர் இராய்(கி.பி.1888), மராட்டி யில் கே.டி. கடில்கர்(1906)முதலியோர் புதியநாடகத் துறையில் குறிப்பிடத் தக்கோராவர். 1953-இல் மத்திய சங்கீத நாடக அகாடமியின் தோற்றமும், 1957–இல் தில்லியில் தேசிய நாடகப் பள்ளியின் தோற்றமும் நாடக வளர்ச்சியில் சிறப்பிடம் பெறு கின்றன.

பஞ்சாபு, சண்டிகார், பாட்டியாலா, பரோடா, இரவீந்திர பாரதி, கல்கத்தா, மைசூர், பங்களூர், கள்ளிக்கோட்டை ஆகிய பல்கலைக் கழகங்களில் நாடகத் துறைகள் தோன்றியுள் ளன. சான்றிதழ் முதல் பட்டப்படிப்பு, ஆய்வு கள், கிராமியக் கலைகளுடன் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் போல்வன அங்கு நடைபெறுகின்றன. கள்ளிக்கோட்டைப் பல்கலைக் கழகத்தின் திருச்சூரி லுள்ள நாடகப் பள்ளி, போபால் அரங்கமண்டல் தில்லி தேசிய நாடகப் பள்ளி போல்வன கலைக்குழு வாகவும் (Repertory company)சோதனைக் கூடமாக வும் ஆய்வுக் கூடமாகவும் விளங்குகின்றன.

வடமொழி நாடகங்களைப் படைத்தல், மரபுக் கலைகளிலிருந்து உத்திகளைக் கையாளுதல், சோதனை முயற்சி ஆகியவை நாடகக் கலையில் நடைபெற்று வருகின்றன. இந்தியத் தன்மையுடன் நாடகங்கள் மிளிரவேண்டும் என்னும் முயற்சிகள் இப்போது நடைபெறுகின்றன.

அல்காசி (1925 -ஆங்கிலம், இந்தி), உதுபல்தது (1929), சம்புமித்திரா (1915 வங்காளம்), அபீப் தன் வீர் (1923 – இந்தி)ஆகியோர் சில குறிப்பிடத்தக்க முன்னோடி இயக்குநர் ஆவர். தியேட்டர் யூனிட்டு, இலிட்டில் தியேட்டர் குருப்பு, பொகுருபீ, நயா தியேட்டர் என்பன முறையே இவர்களுடைய நாடகக் குழுக்கள் ஆகும்.

பம்பாயில் விசயமேதாவின் அரங்காயன், காளி தாசரின் சாகுந்தலம், விசாகதத்தரின் முத்திரா இராட்சசம் போன்ற வடமொழி நாடகங்கள் அரங்

கேற்றப்பட்டுள்ளன. அரவிந்த தேசுபாண்டே, அவர் மனைவி சுபாதேசுபாண்டே ஆகியோர் பம்பாயில் அரங்கக் கலையில் ஈடுபட்டுள்ளனர். இந்திய தேசிய நாடக மன்றம் (IPTA), தேசிய நிகழ் கலை மையம் (NEPA) முதலியன பம்பாயில் புதிய நாடகத்திற்கு ஊக்க மளித்து வருகின்றன.

வங்கத்தில் அசிக் பானர்சி, உருத்திர பிரகாசு சென்தப்தா போன்றோரின் நந்திகாடு, தருன் இராயின் அரங்கச் கலை மையம் (Theatre Centre), அருண் முகர்சியின் சேத்தனா போன்ற குழுக்கள் வங்காளத்தில் பணியாற்றி வருகின்றன. சியா மனந்த சலான், அனாமிகா குழுவில் பணிபுரிந்தார். தில்லியின் இரசாசந்திரநாத்து தமது அபியான் மூலம் நாடகத்தை நடத்தி வருகிறார். இவரது பொறுப்பில் உள்ள சிரீராம் கலை மையம் பொம்மலாட்டம், புதிய நாடகம் ஆகியவற்றில் சிறந்து விளங்கு கிறது.

பி.வி. கரந்து (கன்னடம், இந்தி), சபார் பட்டேல் (மராத்தி), இரத்தன் தியம், கன்னையா இலால் (மணிபுரி), அருண்முகர்சி (வங்காளம்), எம்.கே. இரெய்னா, பன்சிகவுல், பி.எம். சா (இந்தி), காவா லம் நாராயணப் பணிக்கர், சே. இராமானுசம் (மலை யாளம்), பிரசன்னா (கன்னடம்), மோகன் மகரிசி (இந்தி) போன்றோர் தேசிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க இயக்குநர்கள். ஓம் சிவபுரி, ஓம்புரி, மனோகர் சிங், உரோகிணி அட்டங் காடி, சுதாபுரி, சுரேகா வருமா, உத்தராபரோக்கர், திருப்தி மித்திரா போன்றோர் சிறந்த நடிகராவர் கோவர்த்தன் பாஞ்சால் அரங்கக் கட்டடக் கலையி லும், என். சி. செயின் விமரிசனத்திலும், வீ. இராம மூர்த்தியும் தபசுசென்னும் ஒளியமைப்பிலும், தர்சிம் லால் அரங்கத் தச்சு வேலையிலும் சிறந்தவராவர். விசய்தெண்டுல்கர், பாதல் சர்க்கார் போன்றோர் சிறந்த நாடக ஆசிரியராவர்.

சிறந்த மேடைப் படைப்புகள் சில வருமாறு:

அந்தாயுக்கு துக்ளக்கு (அல்காசி), சரண் தாசுசோர் (அபீப்புதன்வீர்), பருனாம்வனம் (கரந்து), காசிராம் கோத்துவால் (ஐபூார் பட்டேல்), மத்யமவியாயோகம் (காவாலம் நாரா யணப் பணிக்கர்), மாரிச சங்கபாத்து (அருண் முகர்சி), ஊருபங்கம் (இரத்தன் தியம்), ஆல அப்சார் (பன்சிகவுல்) கருப்புத் தெய்வத்தைத் தேடி (இராமானுசம்), திருசங்கு (பி.எம். சா). உதுபல்தத்து கதை ஆசிரியர், இயக்குநர், நடிகர் என்ற மூன்று நிலைகளிலும் சிறந்தவர். இவர் சேக்சுபியர் நாடகங் களை தொடக்கக்காலத்தில் ஆங்கிலத்திலும், பின்னர் வங்க மொழியிலும் உருவாக்கினார். மாக்சிம் கார்க்கி யின் அதலபாதாளம் (Lower depth), இலெனின், மாவோ, சாத்துரா ஆகிய மொழிபெயர்ப்புகள் இவர் தம் சிறந்த படைப்புகளாகும். தாகூர் நாடகங்களைச் சம்புமித்ரா மேடையாக்கம் செய்து மக்களிடையே பரப்பினார். இரத்தசுரபி, இராசா, ஈடிபசு போன் றவை இவர் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை. இவர் மனைவி திருப்திமித்திரா சிறந்த நடிகையாக விளங்குகிறார்.

அபீப் தன்வீரின் மிருச்சகடிகம், சரன் தாசுசோா என்பன சிறந்த படைப்புகளாகும், கிரேக்க நாடகங் களையும் இப்சன், உலோர்கா, சிடிரிண்பரு, மோலி யர் போன்றோரின் நாடகங்களையும் அல்காசி பம்பாயில் தியேட்டர் யூனிட்டு என்னும் நாடகக் குழுவில் மொழியாக்கம் செய்து அரங்கேற்றினார். தேசிய நாடகப் பள்ளியின் இயக்குநராகி அதனைச் செம்மைப்படுத்தியவர் அல்காசியே ஆவார். நாடகக் கல்வியுடன் சப்பான், செர்மனி போன்ற பிற நாடகக் கோட்பாட்டுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பை இணைத்தவரும் இவரே. தருமவீர் பாரதியின் அந்தாயுக்கு, மோகன் இராகேசின் ஆசாட்காரத்தின், கிரிசுகர்னாடின் துக்ளக்கு, பாதல் சர்க்காரின் பாக்கி இதிகாசு போன்ற தேசிய நாடகப் பள்ளி நாடகங் கள் தனித்தன்மை பெற்ற சிறப்புடையவையாகும்.

இந்திய நாடக அரங்கம் 1960-க்குப் பிறகு மரபு வழி நிகழ்வுக் கலைகளிலிருந்து இந்தியத் தன்மை பெற்ற தனி மேடை மொழியாக்கத்திற்கான முயற் சியில் ஈடுபட்டுள்ளது. இன்றைய சிக்கல்களை காட்டும் நாடகங்களை மரபுக் கலைகளின் உத்திகளில் படைத்துக் காட்டுதல் என்பது இதன் நோக்கு ஆகும். ஏதாவது ஒரு நிகழ் கலை வடிவத்தைச் சார்தல், பல வடிவங்களின் உத்திகளைச் சேர்த்தல், இவ்வுத்தி களிலிருந்து எழுச்சி பெறல் போன்றவை நாடக ஆக் கத்தால் நடைபெற்று வருகின்றன.

மராத்தியில் விசய தெண்டுல்கரின் (1928) அமைதி நீதிமன்றம் நடைபெறுகிறது. காசிராம் கோத்து வால், வங்கத்தில் பாதல் சர்க்காரின் ஏவம் இந்திர சித்து, பாக்கி இதிகாசம், இந்தியில் மோகன் இரா கேசின் ஆதே அதுரே, கன்னடத்தில் கிரிசு கர்னாடின் அயவதனா போன்ற நாடகங்கள் இம்முயற்சிகளின் பலனாகும்.

சென்னையில் மகராசு பிளேயர்சு, பம்பாயில் தியேட்டர் குரூப்பு ஆகியன ஆங்கில நாடகங்களை நடத்துகின்றன. அலக்பதம்சி இத்துறையில் சிறந்த இயக்குநராவார்.

தனிப்பட்ட நிறுவனங்களாலும் மாநிலங்களி லுள்ள இயலிசை மன்றங்களாலும் தேசிய நாடகப்

பள்ளியிலும் நாடகக் கல்லூரிகளிலும் பயிற்சி பெற்றோரைக் கொண்டு கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், நாடக ஆர்வமுள்ளவர்கள் ஆகியோருக்காக நாடகப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன. மேலை நாடகக் கலைஞர்களோடு கொள்வினை, கொடுப்பினை நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பேரிசான், பெனிவிட்சு, மாயாதன்பர்கு, சான்மார்டின் போன்ற வெளிநாட்டோரும் உலகப் புகழ் பெற்ற குராட்டோவிசுகி, பீட்டர் புருக்கு, இரிச்சார்டு செக்குனர் போன்றோரும் பங்குகொள்ளும் பட்டறைகள், படைப்புகள் நாடகக் கலையில் புதிய பரிமாணங்களை உணர வகை செய்துள்ளன. பிரசுடு பெக்கடு, செனே, ஐனசுகோ போன்ற இந்த நூற்றாண்டுத் தலை சிறந்த நாடகக் காப்பியங்களும், நாடகக் கோட்பாடுகளும் இந்தியாவில் பல இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்றாண்டின் இறுதிக்கட்டத்திலும் எல்லாத் துறைகளிலும் ஒரு நடுக்கம் தோன்றிப் புதிய கோட்பாடுகளுடன் அடுத்த நூற்றாண்டு தொடங்குவதை வரலாற்றில் காணலாம். இந்திய நாடகக் கலையிலும் இவ்வதிர்வு இப்போது தோன்றியுள்ளது.

சே. இரா.

**இந்திய நிலப் பயன்பாடு:** வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் நிலம் இன்றியமையாக் காரணியும் அடிப்படைத் தேவையுமாகும். நிலத்தைப் பயன்படுத்தும் (Land Utilization) முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. மிகுந்த நன்மை பயக்கும் வகையில் நிலத்தைப் பயன்படுத்த முனையும்போது பல இடர்ப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. நிலத்தின் தன்மையிலும் பல வேறுபாடுகளுள்ளமையால், எல்லா நிலங்களும் வேளாண்மைக்குகந்தனவாகா. பனி மண்டலங்கள், வறட்சியான பாலை நிலங்கள், மலை உச்சிகள் போன்ற நிலப் பகுதிகளில் உணவு உற்பத்தி செய்வது மிகவும் கடினமாகும். அத்தகைய நிலங்களைப்பயன்படுத்துவதற்குக் கடின உழைப்பும், நிதி வசதிகளும், தொழில்நுட்பக் கருவிகளும், பயிற்சி அனுபவம் பெற்ற பணியாளர்களும் பெரிதும் தேவைப்படும்.

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 45.5 விழுக்காடே விளைநிலமாகப் பயன்படுத்தப்படுகின்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பயிரிடப்படும் விளைநிலம் 171.325 மிலியன் எக்டேராகவும் (Hectares) காடும் அதைச் சார்ந்த பகுதியும் 60.3 மிலியன் எக்டேராகவும் பயிரிடத் தகுதியற்ற நிலம் 50.7 மிலியன் எக்டேராகவும், மேய்ச்சல் பகுதிகள் 14.9. மிலியன் எக்டேராகவும், மரங்களும், பழத்தோட்டங்களும் 4.1 மிலியன் எக்டேராகவும் பயிரிடத் தகுந்த ஆனால் பயிரிடப்படாத நிலங்கள் 17.2 மிலியன் எக்டேராகவும், தரிசு நிலங்கள் 22.6 மிலியன் எக்டேராகவும் உள்ளன. எஞ்சிய நிலப்பகுதியின் பயன்பாட்டுப் புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. பயிரிடப்படும் விளை நிலம் அதன் தன்மையின் காரணமாக மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. காலநிலை, மண்வளம், நீர்ப்பாசன வசதி, இட அமைப்பு ஆகிய காரணிகள் பயிரிடப்படக்கூடிய நிலப் பயன்பாட்டை வரையறுக்கின்றன. பயிரிடத்தகுந்த மொத்த நிலத்தில் குசராத்து, கேரளம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, ஒரிசா, பஞ்சாபு, மத்திய பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் முறையே 97%, 83%, 83%, 79%, 78%, 70%, 68%, 62%, நிலங்கள் விளைநிலங்களாகப் பயன்படுகின்றன.

கடலோரச் சமவெளிப் பகுதிகளிலும் (Coastal Plains) சிந்து, கங்கை நதிவளச் செறிவுப்பகுதிகளிலும் (River Delta) இந்தியாவிலேயே உயர்ந்த அளவு, அதாவது 80-90 விழுக்காடு நிலம் விளைநிலமாகப் பயன்படுத்தப்படுகிறது. மலைப் பகுதிகளிலும் வறட்சிப்பகுதிகளிலும் இப்பயன்பாடு குறைந்து 10 முதல் 20 விழுக்காடு வரை உள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் வேளாண்மைசார் மக்களின் பெருக்கத்தினாலும் உணவுப் பண்டங்களின் தேவை பெருகி விளைநிலங்களின் பரப்பளவு மிகுந்துள்ளது. கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களும் விளைநிலங்களாக மாற்றப்பட்டு அதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்திய வேளாண்மை சார்ந்த மக்களின் பெருக்கம் தொடர்ந்து நிகழ்வதால் பயிரிடும் நிலத்தில் மக்கள்தொகை நெருக்கம் மிக அதிகமாக உள்ளது. ஒவ்வொரு 100 ஏக்கர் விளைநிலத்திலும் சராசரி 135 பேர், வேளாண்மையைத் தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர். இதுவே, இங்கிலாந்தில் 6 ஆகவும், போலந்தில் 31 ஆகவும், கிரீசில் (Greece) 48 ஆகவும் உள்ளது. போதுமான அளவு உணவைப் பெறுவதற்குத் தனியாள் ஒருவர் 1.5 ஏக்கர் விளை நிலத்தை வைத்திருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்திய மக்களின் தலையாய அடிப்படை உணவு, தானிய வகைகள் எனினும் தனியாள் ஒருவருடைய நில அளவு 0.75 ஏக்கராக மட்டுமாகவே இருந்து வருகிறது. தனியாள் ஒருவருக்குத் தேவையான 1.5 ஏக்கர் விளைநிலத்தையுடைய இந்திய மக்கள்தொகை 50 விழுக்காடு குறைய வேண்டும் என்பது இன்றியமையாததாகும். மொத்த விளைநிலத்தைப் பரந்த வேளாண்மை முறை (Extensive Cultivation) மூலம் பெருக்குவது மற்றொரு முறையாகும்.

பரந்த வேளாண்மை முறையைச் செயற்படுத்துவதில் பல வரையறைகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. நில அளிப்பு, வளரும் அல்லது பெருகும் தன்மையுடையதன்று. ஏற்கனவே மரபியல் வழி, பல பயன்பாட்டுக்குட்படுத்தப் பட்டுள்ள நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவது பல சிக்கல்களையும், பிற துறைகளில் இணை விளைவுகளையும் (Side Effects) உண்டாக்கும். காடுகளை விளைநிலங்களாக மாற்றலாம் என்றால் அதிலும் பற்றாக்குறை உள்ளது. காட்டு வளங்களை மேலும் 33.3 விழுக்காடு பெருக்க வேண்டும் என்பது காட்டுவளத் தேவையின் அடிப்படையில் இந்திய அரசு எடுத்துள்ள முடிவாகும். கட்டடங்கள், சாலைகள் முதலியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவது தொழிற்றுறை வளர்ச்சியைப் பெரிய அளவில் பாதிக்கும். அத்தகைய நிலங்கள் பெரும்பாலும் பயிரிடுவதற்கு உகந்ததன்று.

தரிசு நிலங்களையும் (Fallow Lands) வறண்ட பயன்தரா நிலங்களையும் (Barren Lends) பயிரிடத் தக்கதாக மாற்றப்படுவதன் மூலமும் பரந்த வேளாண்மை முறையைச் செயற்படுத்தலாம். ஆனால், இம்முறைக்கு மிக்க அளவில் நிலம் பண்படுத்தும் திட்டங்கள் (Land Reclamation) மிகுந்த நிதி, தொழில்நுட்ப வளங்களுடன் முதலீடு செய்ய வேண்டும். மலைகள், குன்றுகள், பாலை நிலங்கள், மலைச்சரிவுகள் போன்றவை இத்திட்டத்தின் கீழடங்கும். இத்தகைய நிலங்கள் இராசசுத்தானில் 6.2 மிலியன் எக்டேரும், அசாமில் 5.6 மிலியன் எக்டேரும், குசராத்தில் 4.8 மிலியன் எக்டேரும், உத்தரப் பிரதேசத்தில் 4.5 மிலியன் எக்டேரும், தமிழ்நாட்டில் 4 மிலியன் எக்டேரும், மகாராட்டிரத்தில் 6 மிலியன் ஏக்கரும், கன்னடாவில் 4 மிலியன் ஏக்கரும், கேரளத்தில் மிகக் குறைவான 0.8 மிலியன் ஏக்கருமே உள்ளன. இந்நிலங்களைப் பயிரிடும் நிலங்களாக மாற்றுவதைவிட, இத்தகைய நிலங்களின் மண்வளத்திற்குகந்த மரங்களை வளர்ப்பதும், கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்வதும் மேய்ச்சல் நிலமாக மாற்றுவதும், குறைந்த முதலீட்டில் உழைப்பிற்கு மிகுந்த ஆதாயத்தையும் பயனையும் விளைவிக்கும்.

இந்தியாவில் பயிரிடத் தகுந்த விளைநிலங்களில் பயிரிடப்படாமல் தரிசாக உள்ளவை 22.6 மிலியன் எக்டேராகும். இவற்றில் எளிதில் அகற்ற இயலாத புல்லும் முட்புதர்களும், கொடிகளும் களையும் வளர்ந்துள்ளன. இவை மண்வளம் குன்றியும், வடிகால் வசதிகளில்லாமலும், நீர்வளமின்றியும் உள்ளமை யோடு, மலேரியா போன்ற தொற்றுநோய்கள் பெருக்கக்கூடிய பகுதிகளாகவும் உள்ளன. இந்நிலங்களில் உப்புத்தன்மையும் காரத் தன்மையும் மிகுதியாக உள்ளன. மேலும், இவை காட்டு மிருகங்களின் இருப்பிடமாவதால் பாதுகாப்பின்றி அழிவும் ஏற்படுகிறது.

மண் அரிப்பின் காரணமாக விளைநிலங்களின் அளவு பல்வேறு மாநிலங்களில் குறைந்து கொண்டே வருகிறது. இந்தியாவில் 300 மிலியன் ஏக்கர்களுக்கும் மேலான விளைநிலங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. மண் பாதுகாப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதனால் இந்நிலங்கள் வீணாவதைத் தடுக்கலாம். மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், இராசசுத்தான், குசராத்துப் போன்ற மாநிலங்களின் ஆற்றோரப் பகுதிகளில் மண் அரிப்பு மிகுந்து காணப்படுகிறது. மண் அரிப்பைத் தடுக்க மண் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் அணைகட்டுதல், வரப்பெடுத்தல், பெரும்வரப்பு அமைத்து உழவு செய்தல் (Contour Cultivation) காடு வளர்த்தல், புல் வளர்த்தல், மேய்ச்சலைக் கட்டுப்படுத்தல், நிலத்தைச் சமனாக்கல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும்.

தொடர்ந்து பெருகிவரும் உணவுத் தேவையை நிறைவு செய்வதற்குப் புதிதாக நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இந்தியாவில் மிகக் குறைவாக உள்ளன. இதற்குத் தேவையான மிகுந்த முதலீடும், தொழில்நுட்ப உழைப்பும் மிகுந்த ஆதாயத்தை அளிக்கவல்ல தொழிற்றுறையை நாடிச் செல்கின்றன. எனவே பரந்த பண்ணை முறையை மட்டும் சார்ந்து முன்னேற நாடாமல், செறிந்த பண்ணை முறையை நாடெங்கிலும் செயற்படுத்த இந்திய அரசு தன் திட்டங்களின் வாயிலாக வலியுறுத்துகிறது.

நிலப் பயன்பாடு வேளாண்மைக்கு மட்டும் உரியதன்று. விளைநிலங்களாக மட்டுமல்லாமல் நிலம், உச்ச நன்மையைத் தரும் வகையில், சமூகப் பொருளாதாரத்திற்குகந்ததாகப் பயன்படுவதே அதன் சிறப்புத் தன்மையாகும். தொழிற்றுறை வளர்ச்சி, கனிம மூலப் பொருள்களை ஆய்ந்து பயன்படுத்துதல், செய்திப் போக்குவரத்து வளர்ச்சி, மின்சாரத் திட்டங்கள், நீரோட்டக் கட்டுப்பாடு, நீர்ப்பாசன வசதி, சுகாதார வசதி, வடிகால் வசதி, குடிநீர் வழங்கல், குடியிருப்பு வசதி, ஊரக நலத்திட்டங்கள், பிற வாழ்க்கை வசதித் திட்டங்கள் போன்றவை நிலத்தைப் பண்படுத்தும் பணிகளுடன் இணைந்து நிலப் பயன்பாட்டினுள் அடங்குகின்றன.

**இந்திய நூலகச் சங்கம்:** இக்கால இந்திய மக்களிடையே நூலக விழிப்புணர்ச்சி ஏற்படக் காரணமாக இருந்தது தேசிய விடுதலை இயக்கம் எனலாம். இந்திய மக்கள் கல்வி, சமூ

கம், அரசியல் ஆகியவற்றில் முன்னேற்றம் அடையவேண்டும் என எண்ணிய விடுதலை இயக்கத் தலைவர்கள் கல்வியைப் பரப்ப நூலகங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்கள். இதனால், நாடு முழுவதும் நூலகங்களை அமைக்க ஆர்வம் கொண்டனர். இதற்காகப் பரோடா மன்னர் சயாசி ராவ் கெய்டுவார்டு (Sayaji Rao Gackward-III), ஆந்திராவைச் சேர்ந்த ஐயாங்கி வேங்கடரமணய்யா போன்றவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 1914-ஆம் ஆண்டில் ஐயாங்கி வேங்கடரமணய்யாவின் முயற்சியால் முதன் முதலில் ஆந்திர தேச நூலகச் சங்கமும்(Andhra Desa Library Association), 1919-ஆம் ஆண்டில் அகில இந்தியப் பொது நூலகச் சங்கமும் (All India Public Library Association) விசயவாடாவில் ஏற்படுத்தப்பட்டன. இதன் காரணமாக ஆர்வமிக்க நூலகர்கள் தங்கள் மாநிலங்களிலும் நூலகச் சங்கங்களை ஏற்படுத்த விரும்பினர். டாக்டர் எசு.ஆர். அரங்கநாதனின் முயற்சியால் 1928-ஆம் ஆண்டில் சென்னை நூலகச் சங்கம்(Madras Library Association)அமைக்கப்பட்டது. இதுபோன்று பல நூலகச் சங்கங்கள் தோன்றலாயின.

இந்திய நூலகச் சங்கத்தின் தோற்றம்: மாநில அளவில் நூலகச் சங்கங்கள் தோன்றிய போதிலும் தேசிய அளவில் ஒரு நூலகச் சங்கம் இல்லையே என அப்போதிருந்த நூலகர்கள் உணர்ந்தனர். கல்கத்தாவிலுள்ள இம்பீரியல் நூலகத்தின் அப்போது நூலகரான திரு.கே.எம். அசதுல்லா (K.M. Asadulla) என்பவரின் பெரும் முயற்சியால், முதல் அகில இந்திய நூலக மாநாடு (All India Library Conference) கல்கத்தாவின் ஆசிய சமூகக் கூடத்தில் (Asiatic Society Hall) 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ஆம் நாள் கூட்டப்பட்டது. இம்மாநாடு அப்போது இந்திய அரசின் கல்வி ஆணையாளராக இருந்த திரு. சே.லீத் வில்சன் (J. Leitch Wilson) என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் இந்திய நூலகச் சங்கத்தின் (Indian Library Association) அமைப்பு மற்றும் விதிகள் தயாரிக்கப்பட்டுப் பின் செயலாக்கப்பட்டது.

அதன்படி அப்பொழுது பஞ்சாபு பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த டாக்டர் ஏ.சி. ஊல்னர் (Dr.A.C. Woolner) என்பாரைத் தலைவராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழக நூலகராக இருந்த டாக்டர் எம்.ஓ. தாமசு (M.O. Thomas) என்பவரையும், வங்காள மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராய் இருந்த திரு. குமார் முனிந்திர தேப்ராய் மகாசை (Kumar Munindra Debrai Mahasai, M.L.V., Bengal) என்பவரையும் துணைத் தலைவர்களாகவும், திரு.கே.எம். அசதுல்லா அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இந்திய நூலகச் சங்கம் அமைக்கப்பட்டது.

நோக்கங்கள்: இந்திய நூலகச் சங்கம் பல நோக்கங்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. அவற்றுள் முக்கிய நோக்கங்கள் (Objectives) கீழ் வருவன: (1) நூலக இயக்கத்தைத் தொடர்ந்து வளர்ப்பது, (2) நூலகர்கள் சிறந்த பயிற்சி பெறுவதற்கான எல்லா வசதிகளையும் ஏற்படுத்துவதுடன் நூலக அறிவியலில் ஆராய்ச்சிக்கான வசதிகளையும் ஏற்படுத்துதல், (3) நூலகர்களின் ஊதியத்தையும் பணி நிலைமையையும் செம்மைப் படுத்துதல், (4) நூலகச் சார்பான பொதுக் கருத்துகளில் உலக நூலகச் சங்க நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல், (5) நூலகங்களையும் ஆவண மையங்களையும் நிறுவ ஏற்பாடு செய்தல், (6) நூலகச் சட்டங்களை வடிவமைப்பதில் உதவுதல், மேலும், அவற்றைச் செயற்படுத்துமாறு அரசுகளிடம் பரிந்துரைத்தல், (7) பிற வெளிநாட்டு உள்நாட்டு நூலகச் சங்கங்களுடன் ஒத்துழைத்தல்.

அமைப்பு: இந்திய நூலகச் சங்கம் மூன்று அமைப்புகளைக் கொண்டது. அவையாவன: (1) பொதுச் சபை (General Body), (2) பேரவை (Council), மற்றும் (3) நிருவாகக் குழு(Executive Committee).

இச்சங்கத்தில் நூலகர்கள் மட்டுமன்றிக் கல்வியாளர்கள், நூலக இயக்கத்தில் ஆர்வமுள்ள பொதுமக்கள், வாசகர்கள், நூலக நண்பர்கள், பிற நூலகச் சங்கங்கள், அரசு, மற்றும் தனியார் நிறுவனங்களுள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மேற்கூறிய பேரவை மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தேர்தல் வாயிலாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

இது ஒரு தேசிய நூலகச் சங்கமாகையால் தன் பணியைச் சிறந்த முறையில் செய்ய 13 பிரிவுக் குழுக்களை (Sectional Committee) அமைத்துள்ளது. ஒவ்வொரு பிரிவுக் குழுவும் ஒவ்வொரு வகை நூலகங்களின் வளர்ச்சிப் பணிகளைக் கவனித்து வருகிறது. சங்கச் செயல்களை ஒருமுகப் படுத்துவதற்காக 1970-ஆம் ஆண்டு மாநாட்டில் மாநிலக் குழுக்களையும் (State Committee) ஐந்து மண்டலப் பேரவைகளையும் (Zonal Council) அமைப்பதென்று முடிவெடுத்து அவை அமைக்கப்பட்டன.

சங்கச் செயல்கள்: (1) சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இச்சங்கம் தொடக்

கத்திலிருந்தே பாடுபட்டு வருகிறது. இந்தியா முழு வதும் நூலகங்களை அமைத்து எல்லா மக்களுக்கும் கல்விச் செல்வம் கிடைக்கும்படி செய்ய நூலகச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்து வதற்காக இச்சங்கம் மாநில அரசுகளையும், அவற்றை ஒன்றிணைத்து ஒரு மாபெரும் தேசிய நூலக அமைப்பு ஏற்படுத்த மத்திய அரசை யும் வலியுறுத்துகிறது. இதற்காக இச்சங்கம் அரசு களுக்கு 'மாதிரி நூலகச் சட்டம்' (Model Library Bill) தயாரித்துக் கொடுத்துள்ளது. இத்துடன் இருந்துவிடாமல் அவற்றை சட்டமாக்கி நடை முறைப்படுத்தப் பலமுறை அரசுகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததோடு தொடர்ந்து முயன்றும் வரு கிறது.

(2) இந்திய நூலகச் சங்கம் நூலக அறிவியற் கல் வியில் ஈடுபாடு கொண்டுள்ளது. தேசிய அளவில் ஒரே சீரான தரமான உயர்கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழகங்களையும் கல்வி நிலையங்களையும் கேட்டுக் கொள்வதுடன் பல் கலைக்கழக மானியக் குழுவின் கவனத்திற்கும் கொண்டு வருகிறது. மேலும், கால மாற்றத்திற் கேற்ப நூலக அறிவியல் கல்வி அமைப்பில் புதுப் பாடத் திட்டங்களை உண்டாக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

(3) இச்சங்கம் நூலகர்களின் சமூக மதிப்பை உயர்த்தவும் மக்களிடமிருந்து நன்மதிப்பைப் பெறச் செய்யவும் பல வழிகளில் பாடுபட்டு வருகிறது. நூலகர்களின் வாழ்க்கை நிலையைப் பிற துறை யிலுள்ள அலுவலர்களைப் போல் உயர்த்தவும், பணி நிலைமைகளைச் சீர்திருத்தவும், சம்பள விகிதத்தைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கவும் அவ்வப் போது அரசுடன் வாதாடி வருவதுடன், நூலகர் களின் சார்பில் சம்பளக் குழுக்களுக்கும் (Pay Commissions) பல்கலைக்கழக மானியக் குழுவிற்கும் பல முறை ஆலோசனை கூறி வந்துள்ளது. பல்கலைக் கழக மானியக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க டாக்டர் எசு.ஆர். அரங்கநாதன் 1957-ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி நூலகர்களின் கல் வித் தகுதி, பணியின் தன்மை, பணிச்சுமை, சம்பள விகிதம், ஒரு நூலகத்திற்கு வேண்டிய மனித சக்தி (Man power) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல அளவீடுகளைக் கணித்துத் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(4) இச்சங்கம், ஆண்டுதோறும் மாநாட்டைப் பல இடங்களில் நடத்துகிறது. தேசத்தின் பல பாகங்களிலும் இருந்து ஆர்வமுள்ள உறுப்பினர்கள், மாநாட்டில் கலந்துகொண்டு நூலகத்தைச் சார்ந்த நடைமுறையில் இருக்கும் முக்கிய சிக்கல்களை மையமாகக் கொண்ட தலைப்புகளின் அடிப்படை யில் கட்டுரைகளை எழுதி, அவற்றை விவாதித்து, இறுதியில் முடிவுகள் செய்கின்றனர். இத்தகு முடி வுகள் மத்திய அரசுக்கும் மற்ற முக்கிய தேசிய அமைப்புகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமை கின்றன.

(5) மக்களிடையே நூலக உணர்வை ஏற்படுத்த இச்சங்கம் தேசிய அளவில் நூலக வாரவிழாவை ஆண்டுதோறும் நவம்பர் 14-ஆம் நாள் முதல் 20 ஆம் நாள் வரை கொண்டாடச் செய்கிறது. முதல் அகில இந்திய நூலக மாநாடு 1919-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் நாள் சென்னையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்றமையால் அதனை நினைவு படுத்த வேண்டி மேலே குறிப்பிட்ட விழாக் கொண் டாடப்படுகிறது. மேலும் 'புத்தகக் காதலர்' என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் சவகர்லால் நேரு அவர்களின் பிறந்த தினமும் இத்துடன் சேர்ந்து வருவதால் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. விழாவில் நூல் பதிப்பாளர் களும், நூல் விற்பனையாளர்களும் கலந்துகொண்டு புத்தகக் கண்காட்சிகளை நடத்துவதால் மக்களை ஈர்த்து நூல் படிக்கும் பழக்கத்தை மேலும் வளர்க் கிறது. விழாக் காலத்தில் நூலகப் பணிகளையும் சேவைகளையும் மக்களுக்குத் தெரிவிப்பதால் நூல கப் பணிக்குப் பெருமையையும் மதிப்பையும் சேர்க் கிறது.

(6) இச்சங்கம், நூலகங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கான அறிக்கையை உருவாக்கி, தேசியத் திட்டக் குழுவின் செயற்படுத்தும் குழுவிடம் தந்துள் ளது. அதில் நூலகச் சேவைகளைப் புதிதாக்கும் இன்றியமையாமையினை வலியுறுத்தியுள்ளது. இவ் விதமே இச்சங்கம் ஏனைய தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து நான்காம் ஊதியக் குழுவிடம் அரசுத் துறைகளில் பணியாற்றும் எல்லா நூலகர்களுக்கும் ஒரே சீரான ஊதிய விகிதத்தையும், பணியில் முன் னேற்றமடைய பல பணி நிலைகளையும் ஏற்படுத் தும்படி வலியுறுத்தி ஒரு விளக்கமான அறிக்கையை உருவாக்கி அளித்துள்ளது.

இந்திய நூலகச் சங்கம், உலக நூலகச் சங்கங் களுள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இச்சங்கம், உலக நூலக வளர்ச்சிக்காகச் செய்யும் எந்தச் செயலிலும் பங்கு கொள்வதற்காக உலக நூலகச் சங்கங்களின் பேரியக்கத்துடனும் (International Federation of Library Association) பொதுநல நாடுகளின் நூலகச் சங்கங்களுடனும் (Common

Wealth Library Association) தொடர்பு கொண்டுள்ளதோடு தேசிய அங்கத்தினராகவும் இருந்து வருகிறது. இலிசுபனில் (Lisbon) 1935–ஆம் ஆண்டில் நடந்த முதல் உலக நூலகர்களின் மாநாட்டில் இச் சங்கம் கலந்து கொண்டது. இதன் விளைவாக 1951–ஆம் ஆண்டில் 'ஆசிய நூலகச் சங்கங்களின் பேரியக்கம்: (Asia Federation of Library Association) ஒன்றை நிறுவ வேண்டியதன் இன்றியமையா மைகளை உணர்ந்தது. அதற்காகத் தேசிய அமைப்புகளான இராசாராம் மோகனராய் நூலக நிறுவனத்தோடும், இந்தியத் தர நிருணய நிலையம் (Indian Standard Institute) இந்தியத் தேசிய புத்தகநிறுவனம்(National Book Trust of India) ஆகியவற்றோடும் தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருகிறது.

வெளியீடுகள்: இந்திய நூலகச் சங்கம் பல நல்ல வெளியீடுகளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் வெளியிட்டுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கன: (1) இந்திய நூலகங்களின் நெறிகாட்டி (Directory of Indian Libraries), (2) ஆசியாவின் பாடப் பருவ இதழ்கள் நெறிகாட்டி(Directory of Learned Periodicals in Asia), (3) டாக்டர் எசு.ஆர். அரங்கநாதனின் நூல் தேர்வு (Book Selection), (4) தென் ஆசிய நூலகங்களில் உள்ள பாடப் பருவ இதழ்களின் கூட்டு நூற்பட்டி (Union Catalogue of Periodical Holdings in South Asian Libraries), (5) பி.என். கௌர் (P.N. Gour) எழுதிய இந்தியில் கருத்துப் பொருளைக் குறிக்கும் தலைப்புகள் (Subject Headings), (6) இந்தியாவின் ஐம்பதாண்டுக் கால நூலகவியல் (Fifty Years of Librarianship in India), (7) ஐம்பதாண்டுக் கால இந்திய நூலகச் சங்கம் (Fifty years of Indian Library Association) முதலியனவாகும்.

இந்திய அரசின் கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சரகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இச்சங்கம் 'இந்தியாவிலுள்ள நூலகங்களின் நெறி காட்டி' (Directory of Libraries in India) ஒன்று தயாரித்து வருகிறது. இவையன்றி வேறு சில பருவ இதழ்களையும் இச் சங்கம் வெளியிட்டுள்ளது. அவையாவன:

(1) நூலகச் செய்திமலர் (Library Bulletin 1942-1946), (2) அப்கிலா (Abgila Standing for Annals, Bulletin and Granthalaya of Indian Library Association 1949-1953), (3) இந்திய நூலகர் இதழ் (Journal of Indian Librarianship 1954-64), (4) இந்திய நூலகச் செய்திமலர் (Indian Library Bulletin Since 1965), (5) ஐ.எல்.ஏ. செய்தி அறிக்கை (I.L.A. News Letter Since 1984).

இந்திய நூலகச் சங்கம் அண்மையில் சாரதா அரங்கநாதன் நூலக அறிவியல் அறக்கட்டளை (Sarda Ranganathan Endowment for Library Science) உதவியுடன் 'அரங்கநாதனின் தத்துவம்' என்ற தலைப்பில் உலக மாநாடு (International Conference on Ranganathan's Philosophy) புதுதில்லியில் 1985–ஆம் ஆண்டு நவம்பர் 11–ஆம் நாள் நடத்தியது. பல கட்டுரைகள் வரவேற்கப்பட்டுப் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளது. இச்சங்க அலுவலகம் புது தில்லியிலுள்ள டாக்டர் முகர்சி நகரிலுள்ள அன்சால் கட்டிடத்தில் செயற்பட்டு வருகிறது. எம்.சு.

துணை நூல்:

**Bharadwaja (BL)**, The Indian Library Association: Its Contribution to the development of Libraries in India, Edited by S.N. Agarwal, Print House, Lucknow, 1982.

***இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள்:*** பண்பாட்டுச் சின்னங்கள் மக்களின் சமூக வாழ்க்கையில் சிறந்த பங்கு கொண்டுள்ளன. மக்களின் மனப்பான்மைகள், ஊக்குவிப்புகள், சமூக எதிர்பார்ப்புகள் போன்றவற்றை அவர்கள்தம் பண்பாட்டுச் சின்னங்கள் எதிரொலிக்கின்றன. மக்கள் வாழ்க்கையின் பல்வேறு கூறுகளுடன் இயைபு கொண்ட சின்னங்கள் இருக்கின்றன. இச்சின்னங்களுக்குப் பல உட்பொருள்கள் உள்ளன. உளச் சின்னங்கள் மனிதர்களின் ஆளுமையை உருவாக்குகின்றன என்று யுங்கு போன்ற உளவியலறிஞர்கள் கூறியுள்ளனர். உளச் சின்னங்களை யுங்கு உள உருவங்கள் (Archetypes) என்று குறிப்பிட்டுள்ளார். சமூக உளவியலில் சின்னங்கள் கருத்துப் பரிமாற்றம், உள ஒன்றுபடல், சமூகக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு உறுதுணையாக இருக்கின்றன. சின்னங்களை, மக்களின் நனவிலி நிலைக் கருத்துகளின் உருவகங்கள் என்று வரையறுக்கலாம். சின்னங்கள் மக்கள் வாழ்க்கையுடனும் இரண்டறக் கலந்து விடுகின்றன. திருமணச் சின்னமாக மோதிரம், மாலை போன்றவை குடும்பத்தின் ஒற்றுமையை நினைவுறுத்துவனவாக அமைகின்றன. இவற்றைப் போன்றே நாட்டுத் தலைவர்களின் படங்கள், நாட்டுக் கொடி, நாட்டுப்பாடல் ஆகியவை நாட்டு மதிப்பை நினைவுறுத்துவனவாக விளங்குகின்றன. வணிகச் சின்னம், வணிக அடையாளம், நாணயம், காசோலைப் புத்தகம் ஆகியவை தொழில் முன்னேற்றத்தின் சின்னங்களாக இருக்கின்றன. பட்டங்களின் விவரம், கல்வி நிலையத்திற்குரிய உடைகள் ஆகியவை கல்வியின் சின்னங்களாக அமைகின்றன. இத்தகைய சின்னங்களின் வழி மனிதர்கள் தம்மைச் சமூகத்துடன் தொடர்புபடுத்திக் கொள்கி

றார்கள். மக்கள் நாட்டுக் கொடியை மதிக்கும் பொழுது அவர்கள் தங்கள் நாட்டையே மதித்தவரா கின்றனர்.

இத்தகைய சின்னங்கள் பல இந்தியப் பண்பாட்டு டன் இணைந்துள்ளன. அவற்றுள் சில சின்னங்களைப் பற்றி இங்குக் காணலாம்.

நடராசர் நடனத்தின் வாயிலாக ஆடற்கலைஞர் கள் மற்றவர் மனங்களை மயங்க வைக்கின்றனர். இதற்குமுன் ஆடற் கலைஞர்கள் ஆடல் அரசனாகிய சிவபெருமானின் தாண்டவக் கோலத்தை ஆடலின் சின்னமாக உள்ளத்தில் ஏற்றுக் கொள்கிறார்கள். சிவன் கையில் இருக்கும் உடுக்கையின் ஒலி வாய்மை யினைக் குறிப்பதாகவும், சிவபெருமானின் ஆடல் உருவத்தைச் சுற்றி எரியும் அனல் அறிவொளியின் திறனைக் குறிப்பதாகவும், ஆடலின் தாள ஒலி சிவத் தின் படைப்பாற்றலுள் அடங்கியுள்ள, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைக் குறிப்பதாகவும் கருதப்படுகின்றன. மனித உள்ளத்தின் இயல் கடந்த நிலையைக் குறிக் கும் நடராசர் சின்னம், இந்தியாவில் ஆடல் கலைச் சிறப்பினை உணர்த்துவது மட்டுமன்றி, இந்தியப் பண்பாட்டின் அடிப்படை நம்பிக்கைகளையும் வாழ்க் கைத் தத்துவத்தினையும் விளக்கும் உருவமாகவும் அமைந்துள்ளது.

தாமரை, மலரும் செழிப்பின் உருச்சின்னமாக அமைந்துள்ளது. திருமகள் தாமரை மலர் மீது இருப்பதாகக் கூறுவதும் செல்வத்தினைத் தாமரை மலருடன் தொடர்புப்படுத்துகிறது. ஆதலின், பத்ம சிரீ,பத்மபூசன் போன்ற அரசு விருதுகளும் அறிவின் உருவாகத் தோன்றிய புத்தர் வழி நடக்கும் பௌத் தர்கள் தூய்மையாகக் கருதும் தாமரை மலருடன் தொடர்பு கொண்டிருப்பனவாக உணர்தல் கூடும்.

இதனைப்போன்றே யானை, வலிமை, செழிப்பு ஆகியவற்றை நினைவுறுத்துகிறது. பழங்காலச் சிற் பங்களில் யனையை மிகுதியாகக் காணமுடியும். நாகப்பாம்பும் செல்வத்தைக் காக்கும் சின்னமாகக் கருதப்படுகிறது. சக்தி ஒரு பெண் தெய்வமாகவும் தீமைகளை அழிப்பவளாகவும் கருதப்படுகிறாள். சரசுவதி கல்வி, கலைகளை நினைவுறுத்தும் சின்ன மாக விளங்குகிறாள். இத்தகைய சின்னங்கள், பண் பாட்டுச் சமய உணர்வுகளைக் காட்டுவனவாகவும் தீய நடத்தைகளின்று மனிதர்களைக் காப்பாற்று வனவாகவும் அமைந்துள்ளன.

**இந்தியப் பண்பாடு;** மக்கள் அனைவரும் இயல்பாகவே அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வினைப் பெற விரும்புகின்றனர். இத்தகைய வாழ்வினை அடையச் செம்மையான உலகியல் இன்றியமையாதது. செம்மையான உலகியல், பண்பு டையார் துணையாலேயே அமையும். இது பற்றியே வள்ளுவர் 'பண்புடையார்ப் பட்டுண்டுலகம்' எனக் குறிப்பிட்டுள்ளார். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற சொற்றொடரும் இதனையே விளக்குகிறது. எனவே, செம்மையான வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது பண்பாடு எனலாம்.

பண்பாடு என்னும் சொல்லை ஏறக்குறைய நாற் பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்த் டி.கே. சிதம்பரநாதமுதலியார் உருவாக்கிக் கொடுத்தார் என்பது கூறப்படுகிறது. அதற்கு முன்னர்க் 'கலாச் சாரம்' என்னும் சொல் வழங்கப்பட்டு வந்தது. பண்படு என்னும் சொல்லே பண்பாடாயிற்று. இதுபண் படுத்தல் அல்லது சீர்படுத்தல் எனப் பொருள்படும். பண்பாடு என்பதற்கு நம்மைச் செம்மையான வாழ் விற்குப் பண்படுத்திக் கொள்ளுதல் அல்லது தகுதி யாக்கிக் கொள்ளுதல் என்று பொருள் கொள்ளலாம். சான்றாண்மையாகிய ஒழுக்கம், உயர்ந்த வழியில் செல்லுதல் ஆகியவற்றையும் பண்பாடு குறிக்கும். பண்பாடு, ஒரு வாழும் முறையாக வாழ்வின் முழு மையையும் தன்னுள்ளே அடக்கியுள்ளது. 'ஒரு சமு தாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு' என மானிடவியலும் சமூகவிய லும் கருதுகின்றன. இ.பி. தெய்லர் (E.B. Taylor) என்ற அறிஞர், 'மனிதன் சமுதாயத்தின் உறுப்பினன் என்ற நிலையில் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், வழக்கம், ஏனைய ஆற்றல்கள், பழக்கங்கள் ஆகியவற்றைத் தன்னுள்ளே அடக்கியுள்ள சிக்கலான முழுமையே பண்பாடு' எனக் கூறுகிறார். கே.எம். முன்சி (K.M. Munshi) அவர்கள், 'பண்பாடு என்பது சீரிய வாழ்வு முறை; இவ்வாழ்வு முறை மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளால் ஊக்குவிக்கப் படுகிறது' என்கிறார். 'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்' என்கிறது கலித்தொகை.பிறர் தன்மையை அறிந்து வாழ்தல் பண்பாடாம். 'நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தோறும் பண்புடையாளர் தொடர்பு' என்னும் குறள், பண்பாட்டின் தெளிந்த பொருளை உணர்த்துகிறது.

பண்பாடு பின்வரும் இயல்புகளைக் கொண்டது. மனிதன் சமுதாயத்திலிருந்து கற்றுக் கொண்ட பண்புகள், பழக்கங்கள், எண்ணங்கள் ஆகியவற்றைப் பண்பாடு குறிக்கிறது.1. மரபு வழியாகப் பெறப்பட்ட தன்று பண்பாடு. சமுதாயம் ஒருவனைப் பண்புடை யவனாக ஆக்குகிறது. 2. பண்பாடு நிலைபெற்ற ஒன்றன்று. அது நெகிழும் தன்மையுடன் கூடிய

இயக்காற்றல் பெற்றது. பண்பாடு வழிவழியாக வந்து கொண்டே இருக்கிறது. 3. பண்பாடு சமுதாயத்தின் சாதனையாகும். ஒவ்வொரு தனிமனிதனும் பண்பாட்டிற்குத் தன் பங்கினை அளித்தாலும், பண்பாடு உருவாவதும் வளர்வதும் சமுதாயத்தில் தான். 4. பண்பாடு சமுதாயத்தின் உயர்ந்த குறிக்கோள்களான அறத்தேவைகளை நிறைவு செய்வதால், நடைமுறை வாழ்விற்குப் பயன்படுகிற ஒன்றாக விளங்குகிறது. 5. பண்பாட்டின் அமைப்பு தொடர்ந்து மாறிக்கொண்டே வந்தாலும் அதன் வளர்ச்சி நிற்பதில்லை. 6. ஒவ்வொரு நாட்டின் பண்பாடும் பிற பண்பாட்டின் தாக்கத்திற்கு உள்ளானாலும், அவற்றின் சிறப்புக் கூறுகளை இணைத்துக் கொண்டு தன்னை முழுமை ஆக்கிக் கொள்கிறது. மேலும், எந்த இரு பண்பாடும் ஒத்ததாக இருப்பதில்லை. ஒவ்வொரு பண்பாடும் குறிப்பிட்ட மக்களின் பட்டறிவினால் விளைந்ததாகும். 7. பண்பாட்டுடன் செயற்படுவது, மனித இனம் முழுமைக்கும் உரித்தான ஒரு பொது நுகர்வே தவிர, தனி மனிதனுக்கோ, சமுதாயத்திற்கோ உரியதன்று.

பண்பாடு பொருள் பற்றியதாகவோ, ஆன்மா பற்றியதாகவோ இருக்கலாம். பிற நாட்டுப் பண்பாடுகளில் பொருட் கூறுகள் மேலோங்கியிருக்க இந்தியப் பண்பாட்டில் ஆன்மிகக் கூறுகள் மேலோங்கி நிற்கின்றன. இந்தியப் பண்பாடு என்பது, மக்களுக்கே உரிய பண்பட்ட உளப்பான்மை என்பது பொருளாகும். உடலையும் உள்ளத்தையும் செம்மைப் படுத்தி ஆன்மிகத்தின் மேம்பாட்டை மையமாகக் கொண்டு இயங்குவது இந்தியப் பண்பாடு. ஆன்ம வேட்கையை அடித்தளமாகக் கொண்டதே இந்தியப் பண்பாடு. இவ்வுயர்ந்த குறிக்கோளுடன் பண்பாட்டிற்குரிய அனைத்து இயல்புகளையும் தன்னகத்தே கொண்டு இந்தியப் பண்பாடு விளங்குகிறது. மேலும் இந்தியப் பண்பாடு பின்வரும் சிறப்புக் கூறுகளையும் கொண்டுள்ளது.

உலகில் எகிப்திய, கிரேக்க, பாபிலோனியப் பண்பாடுகள் ஒவ்வொரு காலங்களில் உச்ச நிலையில் இருந்தன. கால வெள்ளத்தில் அவை அழிந்து போயின. ஆனால், இந்தியப் பண்பாடு என்றும் அழியாத அமைப்போடு உறுதியாக இன்றும் நிலை பெற்று விளங்குகிறது. இந்தியப் பண்பாட்டின் மூலக் கூறுகள் பல நூற்றாண்டுகளாக அரசின் ஆதரவில்லாதபோதிலும், பல்வேறு படையெடுப்புகள் நிகழ்ந்த போதிலும் அவற்றை வென்று அழியாது வளர்ந்து வருகிறது. மிகப் பழங்கால வேதங்களும், காப்பியங்களும், இறைவடிவங்களும், முனிவர்களும் இன்றைக்கும் ஓர் இந்தியனுடைய உள்ளத்தை ஈர்க்கின்றன. இந்தியப் பண்பாட்டின் சிறந்த பண்பாக விளங்குவது சகிப்புத் தன்மையும், பிறசமய, இனங்களின் மீது மதிப்பும் ஆகும். இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஆரிய, திராவிட, பாரசீக, கிரேக்க, அரேபிய, இசுலாமிய, கிறித்தவப் பண்பாடுகளின் சீரிய கூறுகளைத் தன் சகிப்புத் தன்மையாலும் பிறவற்றின் மீதுள்ள மதிப்பினாலும், தன்னுடன் இணைத்துக் கொண்டு சிறந்து விளங்குகிறது. இதன் விளைவாகச் சமய, கால, இன, பால் வேற்றுமைகளைக் கடந்து உலக மக்கள் அனைவரும் ஏற்கக் கூடிய பண்பாடாகவும், அனைவருடைய தேவைகளையும் நிறைவு செய்யக் கூடியதாகவும் இந்தியப் பண்பாடு விளங்குகிறது. இந்திய நாட்டிற் பிறந்த இப்பண்பாடு உலகெங்கும் விரிந்து பரந்து கிடக்கிறது என வரலாறு மொழியியல், தொல்லியல், அறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட பண்பாடாகையால் இது தொடக்கங்காணமுடியாச் சிறப்பினையுடையது. இந்தியப் பண்பாட்டின் மற்றுமொரு சிறப்பியல்பாக விளங்குவது வேற்றுமையில் ஒற்றுமை காணுவதாகும். இந்திய நாட்டில் பல்வேறு வேற்றுமைகள், இனங்கள், மொழிகள், சமயங்கள், சடங்குகள், எண்ணங்கள், மெய்ப் பொருளியல்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவை இருப்பினும், இவ்வேற்றுமைக் கூறுகளின் ஊடே மனநிறைவை அளிக்கக் கூடிய ஓர் ஒற்றுமைச் சிறப்புடன் இப்பண்பாடு விளங்குகிறது. இந்தியப் பண்பாடு, இறை உணர்வையும், ஆன்மிக நாட்டத்தையும் அடித்தளங்களாகக் கொண்டுள்ளது. ஆன்மா வீடுபேறு அடைய இறை உணர்வு இன்றியமையாதது. ஆன்மாவின் மேம்பாட்டையே இறுதிக் குறிக்கோளாகக் கொண்டிருப்பது இந்தியப் பண்பாடாகும். மறுமையைப் பற்றி மிகுதியாக வலியுறுத்தினாலும், உலகியலோடு ஒன்றியே அனைத்து அறிவியல் கூறுகளையும், சமுதாய, பொருளியல், அரசியல் போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டு, நடைமுறை வாழ்விற்குத் துணை புரிகிறது. இந்தியப் பண்பாடு அறிவியல்களின் ஆக்கம் நிறைந்த கருத்துகளை ஏற்றுக் கொள்வதோடு, இயற்கையோடு இணைந்த வாழ்வியலையும் போற்றுகிறது.

இந்தியப் பண்பாட்டின் பிறிதொரு சிறப்பியல்பு சமயம் ஆகும். சமயமின்றி இந்தியப் பண்பாடு பொருளற்றது. அறம் என்னும் உயரிய கோட்பாட்டைத் தன்னுள் பெற்றுள்ளது. சமயம் உணர்த்தும் இறைவன் வினை, மறுபிறவி, மண்ணுலகில் பிறத்தல் ஆகிய கோட்பாடுகள் இந்தியப்பண்பாட்டில் அடங்கியுள்ளன. மேலும், சிறந்த அறக்கோட்பாடுகளான 'இன்னா செய்யாமை' 'உண்மையை உறுதியாகக் கடைப்பிடித்தல்' 'உடல் உள்ளக்கட்டுப்பாடுகள்' போன்றன வேதகாலந்

தொட்டு இன்றுவரை உலகியலில் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவற்றையும் சிறந்த மெய்ப்பொருளியல் களையும் தன்னகத்தேகொண்டு இந்தியப் பண்பாடு விளங்குகிறது. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் கண்டு தன்னுடன் இணைத்துத் திகழ்வது இந்தியப் பண்பாடு.

சமுதாயத்தால் உண்டாக்கப்பட்ட நமது பண்பாடு, தனி மனிதச் சிந்தனைக்கும் ஆளுமைக்கு மட்டுமன்றி, இந்திய மண்ணில் இருக்கிற அனைத்துப் பொருள்களுக்கும் நன்மதிப்பை நல்கி வருகிறது. இத் தகைய சிறந்த பண்பாட்டினைப் பெற்றிருக்கிற ஒவ் வோர் இந்தியனும் பெருமைப்படத் தக்கவனாவான்.

பி.ஆர்.ந.

**இந்தியப் பண அங்காடி**: பண அங்காடி பொதுவாகக் குறுகிய காலக் கடன் வசதிபெறும் நிதித் துறையைக் குறிப்பதாகும். இது, சேமிப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கும் தொழில், வணிகம் முதலியவற்றில் ஈடுபட்டிருப்போர் குறுகிய காலக் கடன் வசதி பெறுதற்கும் வழி வகுக்கிறது. இடைக் காலத்தில் மிகையாக உள்ள நிதியினை விற்கவும், வாங்கவும் உதவும் நிதி நிறுவனங்களை ஒருங்கி ணைக்கும் அங்காடி என இதனைக் கொள்ளுதல் பொருந்தும். இவ்வகையில் நீண்டகாலக் கடன் வசதி களை அளிக்கும் மூலதன அங்காடியினின்றும் (Capital Market) இது வேறுபட்டது. எனினும் பண அங் காடியும் (Money Market) மூலதன அங்காடியும் எவ் விதத் தொடர்புமின்றி இயங்கும் தன்மையுடை யவை எனக் கொள்ளுதல் கூடாது. மூலதன அங்கா டியில் வழங்கப்படும் ஆதாய ஈவு (Dividend) அல்லது வட்டி (Interest) பண அங்காடியின் கடன் அளிப்பு அளவினை மாற்றிவிடக் கூடும்.

பண அங்காடி தனித்தன்மை வாய்ந்த ஒன்றா கும். எங்கெல்லாம் பணம் கொடுக்கல் வாங்கல் நிகழ் கிறதோ அங்கெல்லாம் பண அங்காடி இயங்குவதா கக் கருதலாம். ஒரு நாட்டின் பண அங்காடியின் அமைப்பு, அந்நாட்டின் வரலாறு, சட்ட திட்டங்கள், பொருளாதார அமைப்பு, மக்களுடைய சேமிப்பு முதலீட்டு இயல்புகள், மரபுகள் ஆகியவற்றின் அடிப் படையினைச் சார்ந்து அமையும். இந்தியப் பண அங் காடி (Indian Money Market) குறிப்பாக இரு இயல் புகளை உடையது எனலாம். அவை, ஒருங்கமைந்த துறை (Organised Sector) ஒருங்கமையாத் துறை (Unorganised Sector) என்பவையாகும். வணிக வங் கிகள், நாணயமாற்று வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவை மைய வங்கியின் மேற்பார்வையில் ஒருங் கமைந்த முறையில் இயங்கும் முதல் வகையினைச் சாரும். வட்டித் தொழிலர்கள் (Money lenders), நாட்டு முறை வங்கியர் (Indigenous Bankers), நிதி கள் (Nidhi), கடன் அலுவலகங்கள் (Loan Offices) போன்றவை ஒருங்கமையா முறையில் இயங்கும் இரண்டாம் வகையினைச் சாரும்.

இந்தியப் பண அங்காடியின் பிறிதோர் இயல்பு விறுவிறுப்பான பருவக் காலத்தில் (Busy Season) மிகுதியான பணம் தேவைப்படுவதும் மந்தக்காலத்தில் (Slack Season) குறைவான பணம் தேவைப்படுவதும் ஆகும். அக்டோபர் தொடங்கி ஏப்ரல் முடிய உள்ள விறுவிறுப்பான பருவக் காலத்தில், அறுவடை முடிந்த பின் விவசாய விளைபொருள்களை விற்பனை செய்யவும், பலஇடங்களுக்கு அனுப்பி வைக்கவும், கணிசமானநிதி தேவைப்படுகிறது. இத்தேவையை முழுமையாக நிறைவு செய்திட இந்தியப் பண அங்காடியினால் இன்னும் இயன்றிட வில்லை என்பது கருதத்தக்கது.

இந்தியப் பண அங்காடியின் பிரிவுகள்: பண அங்காடி நன்கு சிறப்புற இயங்குவதற்குக் குறுகிய காலத் தாள்களும், ஆவணங்களும் மிக்க அளவில் புழக்கத்தில் இருக்க வேண்டும். எப்பொழுதும் ஒரு வர் தம்மிடமுள்ள இத்தகைய ஆவணங்களைக் கழிவு செய்து பணம் பெற்றிட வாய்ப்பிருக்க வேண்டும். இந்தியப் பண அங்காடி, நியூயார்க்கு பண அங்காடி அல்லது இலண்டன் பண அங்காடி அளவிற்கு வளர்ச்சியும் முதன்மையும் அடையவில்லை. எனினும் பண அங்காடியின் ஒருங்கமைந்த துறை, அழைப்புக் கடன் சந்தை (Call Money Market), உண்டியல் சந்தை (Bill Market), பிணைக் கடன் சந்தை (Collateral Loan Market) என்று முப்பிரிவுகளைக் கொண் டும் பம்பாய், கல்கத்தா ஆகிய பெருநகரங்களைத் தலையாய மையங்களாகக் கொண்டும் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்திய மைய இருப்பு வங்கியும் (Reserve Bank of India), வணிக வங்கிகளின் தலைமை அலுவலகங்களும் பம்பாயில் உள்ளன. மேலும் பண்டங்கள், உலோகங்கள், பங்குச் சீட்டுகள், அரசு ஆவணங்கள் ஆகியவற்றை வாங்கவும் விற்க வும் பம்பாயில் மிகுந்த வசதிகள் உள்ளன. எனவே குறுகிய கால ஆவண முதலீட்டையும், குறுகிய காலக் கடனையும் நாடுவோர்க்குப் பம்பாய் நல்வாய்ப்பு களை அளிக்கிறது. ஒருங்கமைந்த பண அங்காடியின் நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த முறையில் செய லாற்றிட 1935-ஆம் ஆண்டு வரையில் திட்ட வரை யறை ஏதுமில்லை. பணம் வெளியிடும் நேரடி அதிகாரத்தைக் கொண்டிருந்த அரசு, அதன் வாயி லாக வட்டிவீதத்தையும் மாற்றியமைக்க முடிந்தமை யால், பண அங்காடியின் மீது தன் செல்வாக்கினைச் செலுத்தி வர முடிந்தது. இந்தியாவின் மைய வங்கி யான இந்திய மைய இருப்புவங்கி, 1935-ஆம் ஆண்டு

செயற்படத் தொடங்கியது. இது தொடங்கப் படுவதற்கு முன்னால் இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பணியிற் சிலவற்றைச் செய்து வந்தது. பிற வணிக வங்கிகள் தமக்குப் பணம் தேவைப்பட்ட காலத்தில் தம்மிடமுள்ள அரசுப் பிணையங்களின் ஈட்டின் மீது இம்பீரியல் வங்கியிடமிருந்து கடன் பெற்று வந்தன. ஆனால், இக்கடனுக்கு அவை செலுத்த வேண்டிய வட்டிவீதம் மிகையாக இருந்து வந்தது. எனவே வணிக வங்கிகள் நிறைவான பயன் பெற இயலவில்லை. ஆனால், இந்திய மைய இருப்பு வங்கி தோற்றுவிக்கப்பட்ட பிறகு அழைப்புக் கடன் சந்தை, சீட்டுச் சந்தை, துணைக்கடன் சந்தை ஆகியனவற்றை அது தன் சட்ட திட்டங்களின் வழியாகவும் நெறிப்படுத்துவதன் வாயிலாகவும் அவற்றின் பணிகளைச் சிறப்புடன் நிருவகிக்கிறது.

**அமைப்புக் கடன் சந்தை:** இது பண அங்காடியின் மையமாக இயங்குவது. வணிக வங்கிகளும் நாணயமாற்று வங்கிகளும் தமக்குத் தேவையான இடைக்கால நிதியினை இங்குக் கடனாகப் பெறுகின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் இது இயங்கி வருகிறது. பெரிய வணிக நிறுவனங்கள், வணிக வங்கிகள், நிதியாளர்கள் ஆகிய அமைப்புகள் நேரடியாக அல்லது தரகர்கள் வழியாக வங்கிகளுககு அழைப்புக் கடனை வழங்குகின்றன. வணிக வங்கிகளும் குறிப்பாக நாணய மாற்று வங்கிகளும் இச்சந்தையின் கடனை நாடுகின்றன. இச்சந்தையிலுள்ள வட்டிவீதம் விறுவிறுப்புக் காலங்களில் மிகுதியாகவும் மந்தக் காலங்களில் குறைவாகவும் இருக்கும். வங்கிகள் தம் கையிருப்பு உரொக்க விகிதத்தை இந்திய மைய இருப்பு வங்கி விதித்துள்ள விகிதப்படி எப்பொழுதும் வைத்திருக்க அழைப்புக் கடன் சந்தையில் கடன் வாங்குகின்றன.

**உண்டியல் சந்தை:** பண்டங்கள் வாங்கல், விற்றல் நடவடிக்கைகளையொட்டி உண்டியல்கள் வரையப்படுகின்றன. நன்கு வளர்ச்சியுற்ற உண்டியல் சந்தையில் பலவகை உண்டியல்களை ஏற்கவும் மாற்றித்தரவும் ஆயத்தமாக வாங்குவோரும், விற்போரும் செயலாற்றி வருவர். பண்டங்களை வாங்குவோர் விற்போர் தவிர, நாணயமாற்று வங்கிகள், மைய வங்கி, உண்டியல் தரகர்கள், ஏற்பகங்கள், தள்ளுபடி நிலையங்கள், காப்பீட்டுக் கழகங்கள், மிகுதியான பண வசதியுள்ள கூட்டுப்பங்கு நிறுவனங்கள் ஆகியன உண்டியல் சந்தையின் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இந்தியாவில் உண்டியல் சந்தை ஓரளவே வளர்ச்சி பெற்றுள்ளது. இந்திய மைய இருப்பு வங்கி 1952-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் தனது உண்டியல் சந்தைத் திட்டத்தை தோற்றுவித்தது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 17(4) இன்படி பத்துக் கோடி உருபாய்க்கும் அதற்கு மேலும் வைப்புகள் உள்ள வங்கிகள், தம் வாடிக்கையாளரின் 90 நாட்கள் தவணை உண்டியல்களைப் பிணையாக அளித்து, இந்திய மைய இருப்பு வங்கியிடம் கேட்டுக் கடன்பெற வழிவகை செய்யப்பட்டது. வணிக வங்கிகள் பெரும்பாலும் கடன் வழங்கிடும்போது கேட்புக் கடனையே வழங்குகின்றன. இக்கேட்புக் கடன்களில் ஒரு பகுதியைத் தவணைக் கடன்களாக மாற்றி அவற்றைப் பிணையமாக வைத்து இந்திய மைய இருப்பு வங்கியிடம் கடனுதவி பெற்றிட, வணிக வங்கிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. இதன்பொருட்டுத் தம் கேட்பு உண்டியல்களைத் தவணை உண்டியல்களாக மாற்றுவதில் வங்கிகள் ஏற்க வேண்டிய முத்திரை வரியில் (Stamp Duty) பாதிச் செலவை இந்திய மைய இருப்பு வங்கி ஏற்றுக் கொண்டது. தொடக்கத்தில் பத்துக் கோடி உருபாய்க்கு மேற்பட்ட வைப்புகளுடைய வங்கிகளுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட இத்திட்டம், நாளடைவில் அட்டவணைப்படுத்தப்பட்ட எல்லா வங்கிகளுக்கும் விரிவாக்கப்பட்டது. இத்திட்டம் 1963-ஆம் ஆண்டு வரை உள்நாட்டு உண்டியல்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. பின்னர் ஏற்றுமதி உண்டியல்களையும் ஏற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டது.

இவ்வுண்டியல் சந்தைத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தன. இது எளிமையாக இல்லை. இத்திட்டத்தினால் பயன்பெறும் வண்ணம் வணிக வங்கிகள் கேட்பு உண்டியல்களைத் தவணை உண்டியல்களாக மாற்றிட இந்திய மைய இருப்பு வங்கி தனிச்சலுகைகளை வழங்க வேண்டி வந்தது. இச்சலுகைகள் நிறுத்தப்பட்டால் திட்டம் நலிவுறும் நிலை தோன்றும். எனவே, 1970-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு புதிய உண்டியல் சந்தைத் திட்டம் இந்திய மைய இருப்பு வங்கியின் 17 (2) (3) விதிப்படி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியப் பண அங்காடியில் பல ஆண்டுகளாக உண்டியல்கள் புழக்கத்திலிருந்தபோதும், அவற்றைப் பெருமளவில் தள்ளுபடி செய்து நிதிபெறும் முறை வழக்கத்தில் இல்லை. பண்டங்களின் மீது கடன்பெறும் முறையே பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. புதிய உண்டியல் சந்தைத் திட்டம் உண்டியல்களை மறு தள்ளுபடி (Re-discounting) செய்திட வழிவகுத்துப் பணச் சந்தையில் ஓர் இயல்பான நெகிழ்ச்சியை வழங்கியது. இவ்வுண்டியல் சந்தையின் மூலம் வணிக வங்கிகளின் கடன் நடவடிக்கைகளில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் இந்திய மைய இருப்பு

வங்கி தோற்றுவிக்க முயல்கிறது. சில வரையறை களுக்குட்பட்ட உண்டியல்களை மட்டுமே அது மறு தள்ளுபடி செய்ய முன் வருவதன் மூலம் கட்டுப் பாட்டையும் ஒழுங்கையும் செயற்படுத்துகிறது.

துணைக்கடன் சந்தை: இது பண அங்காடியின் சிறப்பான பகுதியாகும். சாதாரணக் கடன், அதிகப் பற்றுக்கடன் (Over drafts), உரொக்கக் கடன் ஆகியன இதில் அடங்கும். வணிக வங்கிகள் அரசு ஆவணங்கள், முதல்தரப் பங்குச் சீட்டுகள், பல்வேறு பண்ட இருப்புகள் போன்றவற்றை ஈடாக ஏற்றுக் கொண்டு இவ்வகைக் கடனை வழங்குகின்றன. ஈடாகப் பெறும் பொருள் அல்லது பண்டத்தின் மதிப்பிற்கும் கடன் தொகைக்கும் இடையே ஏற்ற இடை வெளி (Margin) இருக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, அரசு ஆவணங்கள் போன்ற உயர்ந்த ஈட்டிற்கு 10 முதல் 20 விழுக்காடுகளும், முதல் தரப் பங்குச் சீட்டுகளுக்கு 30 முதல் 40 விழுக்காடுகளும், பண்டங்களுக்கு 30 முதல் 50 விழுக்காடுகளும் இடை வெளி இருக்கவேண்டும் என வங்கிகள் வரையறுப்ப துண்டு. பொதுவாக வணிகர்கள் கையிருப்புப் பணத்தை விரும்புதல் கண்கூடு. இதற்கு ஈடாக அவர்கள் பண்டங்களை அளிக்கின்றனர். அதிகப்பற்று வேண்டுவோர் கடன் சீட்டுகள், பங்குச் சீட்டுகள் ஆகியவற்றை ஈடாக வைக்கின்றனர்.

கருவூல உண்டியல்கள்: வங்கிகள் வணிக அடிப் படையில் வரையப்படும் உண்டியல்களை மட்டு மன்றிக் கருவூல உண்டியல்களை (Treasury Bills) வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்றன. மைய அரசும் மாநில அரசுகளும் வெளியிடும் இவ்வுண்டியல் கள் பொதுவாக மூன்றுமாதத் தவணை கொண்டவை. இவற்றின் மீது வணிக வங்கிகள் தம்மிடம் மிகை யாக உள்ள பணத்தைக் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்கின்றன. போர்க்காலச் செலவுகள், அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறை (Budget Deficit), நடைமுறை மூல தனச் செலவுகள் போன்றவற்றை ஈடுகட்ட அரசுகள் இவ்வுண்டியல்களை வெளியிடுகின்றன. தள்ளுபடிச் சந்தை இல்லாத நிலையில் கருவூல உண்டியல்களை நன்கு பரப்பிட அரசால் இயலவில்லை. எனினும், இந்திய மைய இருப்பு வங்கி இவ்வகை உண்டியல் களுக்கு மறுதள்ளுபடி வசதியையும் வேறு சலுகை களையும் வழங்கி இவற்றைப் பரவலாக்க முயன்று வருகிறது.

பண அங்காடியின் வட்டி வீதங்கள்: ஒரு பண அங்காடியின் நடவடிக்கைகள் அங்கு நிலவும் வட்டி வீதத்தை மையமாகக் கொண்டு இயங்கும் தன்மை யனவாகும். வணிக வங்கிகள் கடன்கள் மீது விதிக் கும் வட்டிவீதம் அவ்வப்போது நிலவும் பொருளா தார நிலை, பணப்புழக்க அளவு, பருவகால வேறு பாடுகள் ஆகியனவற்றைச் சார்ந்து அமைகின்றது. பண அங்காடி நன்கு வளர்ச்சியுள்ள நாடுகளில் மைய வங்கி விதிக்கும் வங்கி வீதத்திற்கும் (Bank Rate)பண அங்காடியிலுள்ள பிற வட்டி வீதங்களுக்கும் குறிப் பிடத்தக்க அளவு நிலை பெறவில்லை. இங்கு நாட்டு வங்கியர்கள் சிறு வணிகர்களின் உண்டியல்களைத் (Hundies) தள்ளுபடி செய்து தரும் வீதம், இந்திய மைய இருப்பு வங்கியின் வீதத்தினின்றும் கணிசமாக மாறுபட்டிருப்பதைக் காணலாம். நாட்டு வங்கியரின் வட்டிவீதம் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில்கூட ஒரே அளவினதாக அமைவதில்லை. பம்பாய் நகரிலேயே மூன்று முதன்மையான சந்தை களில் ஒரே நேரத்தில் பலவீதங்கள் நிலவுவதும் உண்டு. இந்த வட்டி வீதங்களிடையே வேறுபாடுகள் இருந்திடக் காரணம் பணச் சந்தையின் மையப் பகுதி நன்கு வளர்ச்சியுற்றதாகவும் நாட்டு வங்கி யாளரின் (Bazaar Bank) பகுதி கட்டுப்பாடின்றி இயங்கும் தன்மையதாகவும் இருப்பதேயாகும். இந்தியப் பண அங்காடியில் மைய வங்கியின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் தன்னிச்சையாக இயங்குகிற, ஒருங்கமையாத துறை சார்ந்த வட்டித் தொழிலர்களுள் நாட்டு வங்கியர்கள் ஆகியோர் பலர் உள்ளனர். வட்டிக்குக் கடன்தரும் தொழில் தொன்றுதொட்டு நடந்துவரும் தொழில்களுள் ஒன்றாகும். குறிப்பிட்ட சில இனங்களைச் சார்ந்த மக்கள் பரம்பரைத் தொழிலாகப் பல்லாண்டுகளாகக் கடன் தரும் தொழிலை மேற் கொண்டு வந்துள்ளனர். வட்டித் தொழிலருக்கும் நாட்டு வங்கியருக்குமிடையே உள்ள சிறப்பு வேறு பாடு யாதெனில், முன்னவர் தம் பணத்தையே கடனாக வழங்கித் தொழில் நடத்துகிறார். ஆனால், நாட்டு வங்கியர்கள் வைப்புகளைப் பெற்று அல்லது வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்றுத் தொழில் நடத்துகிறார்கள். உற்று நோக்குமிடத்து, இவ்விரு வகையினராலும் வட்டித் தொழிலிலுள்ள தீமைகள் மிகுந்துள்ளனவேயன்றிப் பொருளாதாரத்திற்கு நன்மைகள் ஏற்படவில்லை. பெரும்பாலும் இவ்வகை நிறுவனங்கள் வணிகர்களுக்கு உரொக்கக் கடன் வசதியை அளிக்கவே முன்வருகின்றன. உண்டியல் நடவடிக்கைகள் மிகக் குறைவு. ஒழுங்குற்ற அமைப் புடைய வணிக வங்கியர்க்கும் அத்தகைய அமைப் பற்ற நாட்டு வங்கியர்க்கும் முறையான தொடர்பு இல்லாமையால், முன் கூறியபடி இருவகைச் சந்தை களிலும் வேறுபட்ட வட்டி வீதங்கள் நிலவுகின்றன. நாட்டு வங்கியர்களும் வட்டித் தொழிலர்களும் தனித்தனி நிறுவனங்களாக, தனி மனிதர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் நடவடிக்கை

களை ஒருங்கிணைத்திடத் திட்டங்கள் எவையும் இல்லை. இவ்வாறு பண அங்காடியின் ஒருங்கமை யாத் துறை ஒருங்கிணைக்கப்பட்டால் காலப்போக்கில் ஒருங்கமைந்த துறையுடன் அதன் தொடர்பு வலுப்பட்டு, எதிர்காலத்தில் முழுமையான ஒருங்கமைந்த பண அங்காடி தோன்றுவதற்கு வழி உண்டாகும். ஆர்.இ.

**இந்தியப் பல்கலைக் கழகங்கள்**: பொதுவாக இன்று பல்கலைக்கழகம் (University) என்னும் சொல்லுக்கு உணரப்படும் கருத்தில், இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தான் பல்கலைக்கழகங்கள் தோன்றின. இலண்டன் பல்கலைக்கழகத்தின் அடிப்படையில், இந்தியாவில் முதன்முதலாக மூன்று பல்கலைக்கழகங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் அன்றைய ஆங்கில அரசினால் அமைக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் இலக்கிய மறுமலர்ச்சியுடனும் அறிவியல் கருத்துகள் பரப்புகையுடனும் தம் வரலாற்றைத் தொடங்குகின்றன. இன்று வழங்கப்படும் ‘பல்கலைக்கழகம்’ என்னும் கருத்து இந்திய மண்ணில் விளைந்ததன்று; மேனாட்டவர்களால் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது என்பது குறிக்கத்தக்கது. எனினும், உயர்கல்வி வழங்கிய இடங்கள் பல பழங்கால இந்தியாவில் இருந்து வந்திருக்கின்றன. வேத காலத்தில் இருந்த ‘குருகுலங்களை’ (Gurukulas) பல்கலைக்கழகங்கள் என்று சொல்லிவிட முடியாது. என்றாலும், அவையே அக்கால உயர்கல்வியான வேதங்கள் (Vedas), சாத்திரங்கள் (Shastras) ஆகியவற்றைக் கற்பதற்கு அடிப்படையாக விளங்கி வந்திருக்கின்றன. அக்காலத்தில் இருந்த பரிசத்து (Parishads) முறையே இன்றைய பல்கலைக்கழக வளர்ச்சியின் முதற்படியாகக் கூறலாம். பலவேறு இடங்களிலிருந்து வந்த அறிஞர்களும் அவர்தம் மாணவரும் அறிவு விளங்க விவாதிக்கக் கூடிய கூட்டமே பரிசத்து எனப்பட்டது. விவாதத்திலும் சொல்லாற்றலிலும் வல்லோருக்கு இக்கூட்டம் பட்டங்கள் வழங்கும் பணியையும் செய்து வந்திருக்கிறது. இன்றுள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைப் போலவே இவை நாளடைவில் உயர்கல்வி மையங்களாகத் தழைத்தோங்கின. இவற்றுள் சில வைதிக சமய அடிப்படையில் வளர்ந்தன; சில பௌத்த சமயச் சார்பில் சிறந்தோங்கின. இத்தகு உயர்கல்வி மையங்கள் ஐரோப்பாவிலிருந்த இடைக்காலப் (Mediaval) பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, பண்டைய இந்தியாவில் இருந்தன வென்று மேனாட்டார் குறிப்புச் சுட்டுகிறது. தட்சசீலம் (Takshasila) என்னும் இடத்தில் (இப்பொழுது பாகிசுத்தானில் உள்ளது) இருந்த கல்விக்கூடமே இந்தியாவின் பழமையான ‘பல்கலைக்கழகமாக’க் கருதப்படுகிறது. கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரை இப்பல்கலைக் கழகம் கல்வியிற் சிறந்தோங்கியதாகக் கூறப்படும்.

**பௌத்தக் கல்வி மையங்கள்**: பௌத்தத் துறவிகள் தங்குமிடங்கள் கல்வி மையங்களாகச் சிறந்தன. பௌத்த சமயப்படி, பௌத்தத் துறவிகள் ஆண்டில் எட்டு மாதங்கள் நாடெங்கும் பயணம் செய்தும் இரந்தும் வாழ வேண்டியிருந்தது. காலப் போக்கில் அவர்கள் பணமும் நிலமும் புரவலர்களிடமிருந்து பெற்றுத் துறவிகளின் மடம் கட்டினர். இம் மடங்கள் விகாரங்கள் (Viharas) எனப்பட்டன. பௌத்த சமயக் கொள்கைகளைக் கற்பிப்பதற்கென்றே இம் மடங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் மற்ற அறிவியலும் கலைகளும் வளர வளர, இவையும் கற்பிக்கத் தகுந்த பாடங்களாகச் சேர்க்கப்பட்டு, காலப்போக்கில் பெருங்கல்வி மையங்களாகப் பௌத்த மடங்கள் விளங்கலாயின. நாலந்தாவில் அசோக மன்னர் ஒரு பௌத்த மடம் நிறுவினார் என்பது சொல்லப்படுகிறது. படாதித்தியா (Bataditya) என்பவரால் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட பௌத்த மடமே பின்னர் நாலந்தாப் பல்கலைக் கழகமாக வளர்ந்து ஏறத்தாழ 800 ஆண்டுகள் தழைத்தோங்கியது என்று நம்பப்படுகிறது.

யுவான் சுவாங்கு, இட்சிங்குப் போன்ற சீனப் பயணிகள் இப்பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் தங்கிப் பௌத்த சமய நூல்கள் பலவற்றிற்குப் படிகள் எடுத்துச் சென்றனர் என்று அவர்கள் வரலாற்றுக் குறிப்பிலிருந்து தெரிகிறது. யுவான் சுவாங்கு நாலந்தாவில் 10,000 மாணாக்கர்களும் 1000 ஆசிரியரும் தங்கியிருந்தனர் என்றும், ஆசிரியர்கள் சிறந்த கல்வித்திறமை கொண்டிருந்தார்கள் என்றும், மகாயான புத்த நெறிகள், நீதிகள், சாக்கியத் தத்துவம், தருக்கம், இலக்கணம், மருத்துவம், விலங்கியல் முதலியவை போதிக்கப்பட்டன வென்றும், இப்பல்கலைக் கழகத்தில் நுழையும் தகுதிபெறுதற்குக் கடும்போட்டி இருந்ததென்றும், பொதுவாக நூற்றில் 20 மாணாக்கரே நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்றனர் என்றும், அனைத்து மாணாக்கருக்கும் இலவச உணவு, உடை, உறையுள், மருந்து முதலியன வழங்கப்பட்டன என்றும் குறித்திருக்கின்றார். சொல்வன்மையை இப்பல்கலைக்கழகம் மிகவும் வளர்த்தது என்றும் கூறப்படுகிறது.

பல்கலைக்கழகத் தலைவருக்குக் கல்வி வல்லுநர் குழு, ஆட்சி வல்லுநர் குழு என்ற இரு அவைகள் துணைபுரிந்தன. பாடத்திட்டம், தேர்வு, வேலைப்

பங்கீடு முதலியவைகளைக் கல்வி வல்லுநர் குழுவும், கட்டடப் பராமரிப்பு, நிதிப் பங்கீடு, உண்டி, உறையுள், மேலாண்மை போன்ற செயல்களை ஆட்சி வல்லுநர் குழுவும் கவனித்தன. சீனா, கொரியா, திபெத்து சாவா (Jawa) முதலிய நாடுகளிலிருந்து அறிஞர் நாலந்தாவிற்கு வருகை தந்தனர் என்றும், தின்னாகர், தர்மபாலர், சந்திரபாலர், குணமதி, இந்திரமதி போன்ற அறிஞர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார்கள் என்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. தின்னாகரின் தருக்கநூல்களும் இந்திரமதியின் இலக்கண நூல்களும் அக்காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தனவாம்.

கங்கையின் வடகரையில் வங்கால் பால அரசர்களின் ஆதரவோடு விக்கிரமசீலம் (Vikramasilā) என்னும் பல்கலைக்கழகம் சிறந்து விளங்கியது. இது சிறப்பில் நாலந்தாவிற்கு இணையாகத் திகழ்ந்ததாம். இவை தவிர, உச்சயினி (Ujjain), வல்லபி (Valabhi), காசி (Kashi Banares), காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் புகழ்பெற்ற உயர் கல்வி மையங்கள் செயற்பட்டு வந்தன. இக்கல்வி மையங்கள் அனைத்தும் மாணவர்கள் தங்கிப் பயிலும் வகையில் (Residential) அமைந்திருந்தன. குருகுலக் கல்வி மையங்களைப் போலன்றி, பல்வேறு துறைகளைக் (Faculties) கொண்டவையாக இக்கல்வி மையங்கள் விளங்கின. அனைத்துப் பல்கலைக்கழகங்களும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மொகலாயர் படையெடுப்போடு அழிந்துபட்டன. நாலந்தாவின் புகழ்பெற்ற தர்ம கஞ்சம் என்ற நூலகம் தரைமட்டமாக்கப்பட்டது.

**தமிழ்ச் சங்கங்கள்:** வட இந்தியாவின் வேத காலக் கல்வி மையங்களுக்கும் பௌத்தக்கல்வி நிலையங்களுக்கும் இணையாகத் தமிழ்நாட்டில் 'தமிழ்ச் சங்கம்' என்ற கழகம் இருந்ததாகத் தமிழ் நூல்களிலிருந்து தெரிகிறது. பாண்டிய நாட்டுத் தலைநகரான கூடல் நகரத்தில் கிறித்துப்பிறப்பிற்கு முன்னமேயே பல்கலைக்கழகத்தை ஒத்த தமிழ்ச் சங்கங்கள் இருந்திருக்கின்றன. புதிய நூல்கள் இச்சங்கங்களின் ஒப்புதல் பேரிலேயே அரங்கேற்றப்பட்டன.

சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் தமிழகம் முழுவதும் வேதபாடசாலைகள் நிறுவப்பட்டன. உயர்கல்வியென்பது வேதங்கள், வடமொழி இலக்கணம் ஆகியவற்றைக் கற்பதுவே என்று எண்ணப்பட்டது. பௌத்த, சமண சமயங்களும் தமிழ் நாட்டில் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்ப விகாரங்களையும் பள்ளிகளையும் ஏற்படுத்தின. எடுத்துக்காட்டாக, காஞ்சிபுரத்தில் பௌத்த, சமண சமய நூல்கள் எல்லாம் கற்பிக்கப்பட, அந்நகரம் சிறந்த வேதக்கல்வி மையமாகத் திகழ்ந்தது.

**கோயில் கல்லூரிகள்:** பௌத்த சமயக் கல்விச்சாலைகளின் சிறந்த கட்டுக் கோப்பான நிருவாகத்தைப் பின்பற்றி, இடைக்காலத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்துசமயக்கோயில்கல்லூரிகள், மடங்கள் கல்விமையங்களாகத் திகழத் தொடங்கின. கோயில் கல்லூரிகள் தமிழ் நாட்டில் காஞ்சி, திருமுக்கூடல், எண்ணாயிரம், திருவொற்றியூர் என்னும் இடங்களிலும் பிசப்பூரில் சுலோத்தகில், வங்காளத்தில் நாடியா, நவதீபம் ஆகிய இடங்களிலும் இயங்கின. இத்தகு கல்விக்கூடங்களில் பணிக்கொடைகள் நிறுவப்பட்டு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உணவு, உடை, மருந்து முதலியன இலவசமாக அளிக்கப்பட்டன. ஓர் ஆசிரியருக்கு இருபது மாணாக்கர் என்ற விகித அடிப்படையில் கல்விப்பணி நடைபெற்றது. கி.மு.6-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை வேதபாடசாலைகள், குருகுலங்கள், புத்தவிகாரங்கள், வடமொழிக் கல்லூரிகள், தமிழ்ச் சங்கங்கள், கோயில் கல்லூரிகள், சமணப் பள்ளிகள் எனப் பலவகைப்பட்ட உயர்கல்வி மையங்கள் பாரதம் முழுமையும் சிறந்து விளங்கின.

**இசுலாமிய மதரசாக்கள்:** முகலாயரின் ஆட்சிக் காலத்தில் 'மதரசா' (Madrasahs) என்ற உயர் கல்விக் கூடங்கள் எழுந்தன. இந்த நிறுவனங்கள் அக்காலத்தில் சிறந்து விளங்கிய பாரசீகத்தின் சிராசுப் பல்கலைக் கழகத்திற்கு இணையாக விளங்கின. இராம்பூர் மதரசா தருக்க நெறியிலும், இலக்னோ மதரசா இறைமாட்சியிலும், தில்லி மதரசா இசுலாமிய மரபிலும், சலந்தர் மதரசா கணிதவியல், வானியல்களிலும் சிறந்து விளங்கின. பல்வேறு நாடுகளிலிருந்தும் மாணாக்கர்கள் இக்கல்வி மையங்களுக்கு வந்து பயின்றனர்.

**மேனாட்டுப் பாங்கில் உயர் கல்வி நிலையங்கள்:** கிறித்தவப் பாதிரிகள் ஆங்கில அரசின் உதவியோடு மேலைநாட்டு உயர் கல்வியைப் பரப்ப வங்காளத்தில் செராம்பூரில் தச்சு கல்லூரி, பம்பாயில் சான் கல்லூரி, சென்னையில் நோபிலி கல்லூரி முதலியவற்றைத் தொடங்கி நடத்தி வந்தனர். அதனால், மாணவர்களுக்குத் தேர்வுகள் நடத்திப் பட்டங்கள் அளிக்கப் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கல்கத்தா பம்பாய், சென்னை ஆகிய மூன்று நகரங்களில் இலண்டன் பல்கலைக் கழகத்தின் அடிப்படையில் கி.பி.1857 இல் மூன்று பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்பல்கலைக்கழகங்களுக்கு வேந்தரும், துணைவேந்தரும், பணியமர்த்தம் செய்யப்பட்டனர். தேர்வுகள் நடத்திப் பட்டங்கள் அளிப்பதென்ற பணியைத் தவிர கற்

பித்தல், ஆராய்ச்சி என்ற தலையாய பணிகளைப் பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ளவில்லை. இப் பல்கலைக் கழகங்களின் முதன்மையான பணி தேர்வு நடத்துதல் என்ற நிலையில் இருந்தது.

கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் இருந்த பல்கலைக்கழகங்களும் அதனுடன் இணைந்த கல்லூரிகளும் ஏறத்தாழ 20 ஆண்டுகள் நாட்டின் கல்வித் தேவையை நிறைவேற்றி வந்தன. இலாகூரை (இப்போது பாகிசுத்தான் நாட்டில் உள்ளது.) தலைமையகமாகக் கொண்டு, கி.பி. 1882-இல் பஞ்சாபுப் பல்கலைக்கழகம் (University of Punjab) தோற்றுவிக்கப்பட்டது. ஐந்தாண்டுகள் கழித்து, கி.பி. 1887-இல் இந்தியாவின் ஐந்தாம் பல்கலைக் கழகமாக அலகாபாது நகரில் அலகாபாது பல் கலைக்கழகம் தோன்றியது. இப் பல்கலைக்கழகம் தொடங்கியதற்குப் பின் புதிய பல்கலைக்கழகம் தொடங்குவதில் 1916-ஆம் ஆண்டுவரை ஒரு பெரிய சுணக்கம் (Lull) இருந்து வந்தது.

கல்லூரிகளின் எண்ணிக்கை கி.பி. 1857க்குப் பின்னர்ப் பெருகத் தொடங்கியது. ஆனால், பெரும்பாலான கல்லூரிகள் கலைக் கல்லூரிகளாகவே தொடங்கப்பட்டன. சில சட்டக் கல்லூரிகளும் கட்டடப் பொறியியல் கல்லூரிகளும் மட்டுமே தொடங்கப்பட்டன. இயந்திரப் பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்படவில்லை. தொழிற்கல்விக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படாமையால் நாட்டில் தொழில் வளர்ச்சியும் பொருளாதாரமும் முன்னேற்றம் அடையவில்லை. மிகவும் விரைவாக உயர்கல்வி பெருகியதால் அதன் தரமும் குன்றியது.

இந்திய அரசு 1902-இல் கர்சன் பிரபு (Lord Curzon) தலைமையில் பல்கலைக்கழகக் குழு (Universities Commission) ஒன்றினை அமைத்தது. இக்குழு பல்கலைக்கழகக் கல்வித் தேவைகளை ஆராய்ந்து, கல்வியமைப்பில் மாற்றத்திற்கான பரிந்துரைகளை வழங்கியது. அவற்றின் அடிப்படையில் 1904-ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சட்ட முன்வரைவு (Indian Universities Act of 1904) பல்கலைக்கழகச் சீர்திருத்தத்திற்கான கருத்துக்களை வெளியிட்டது. அவற்றின் தலையாய கருத்துகள் பின்வருவன: 1. ஒவ்வொரு பல்கலைக் கழகமும் சொந்தமாகவே கற்றல், கற்பித்தல், ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல், 2. தகுதியுடைய கல்லூரிகளுக்கு மட்டுமே இணைத்தல் (Affiliation) அனுமதி அளிக்கப்படுதல், 3. பல்கலைக் கழக ஆட்சிக்குழுவில் 100க்கு மேற்படாமல் உறுப்பினர்கள் ஐந்தாண்டுக் காலத்திற்கு மட்டுமே இருத்தல், 4. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் ஆசிரியருக்குப் பெரும் பங்களித்தல். இப்பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தியாவில் இருந்த 5 பல்கலைக் கழகங்களும் அவற்றின் தலைமையகத்தில் கற்பித்தல் துறைகளைத் (Teaching Departments) தொடங்கின.

இந்திய அரசு 1917-ஆம் ஆண்டில் சர் மைக்கேல் சேட்லர் (Sir Micheal Sadler) தலைமையில் அமைந்த கல்கத்தாப் பல்கலைக் கழகக் குழு (Calcutta University Commission) பழைய பல்கலைக் கழகங்களைப் புதுமைப்படுத்துதல், புதிய பல்கலைக்கழகங்களைத் தனித்தன்மை வாய்ந்த தங்கிப் பயிலும் சிறிய பல்கலைக் கழகங்களாக அமைத்தல், மூன்றாண்டுப் பட்ட வகுப்புகள், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தல் போன்ற மாற்றங்களைப் பரிந்துரை செய்தது. சேட்லர் குழுவின் பரிந்துரைகளுள் எதையும் கல்கத்தாப் பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தவில்லை. எனினும், அடுத்துத் தோன்றிய புதிய பல்கலைக்கழகங்களில் சில இக்குழுவின் பரிந்துரைகளிற் சிலவற்றை ஏற்றுக்கொள்ளத் தொடங்கின. அலிகார் முசுலிம் (1920), இலக்னோ (1921), தாககா (இப்போது வங்காளதேசத்தில் உள்ளது) (1921), தில்லி (1922), நாக்பூர் (1923), ஆந்திரா (1926), ஆக்ரா (1927), அண்ணாமலை (1929) ஆகிய பல்கலைக்கழகங்களே சேட்லர் குழு அறிக்கைக்குப் பின் இந்தியாவில் தொடங்கப்பட்டவையாம். இவற்றுள் நாக்பூர், ஆந்திரா, ஆக்ரா ஆகியன இணைந்த கல்லூரிகளைக் (Affiliated Colleges) கொண்டவை; பிற பல்கலைக் கழகங்கள் ஓரிடத்தில் அமைந்த தனித்த பல்கலைக் கழகமாகவும் (Unitary) ஒரே நகரில் உள்ள பல கல்லூரிகளை இணைத்த பல்கலைக்கழகமாகவும் (Federal) அமைந்தன.

திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் 1937-இல் மாகாணப் பல்கலைக்கழமாகத் (State University) தொடங்கப்பட்டது (இந்திய மாகாணங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு 1956-இல் திருத்தி அமைக்கப்பட்ட பின், 1957-இல் கேரளாப் பல்கலைக் கழகம் என இதற்குப் பெயரிடப்பட்டது). இரண்டாம் உலகப் போரின் விளைவால் 1942 வரை புதிய பல்கலைக் கழகங்கள் நாட்டில் தோன்றவில்லை. உட்கல் பல்கலைக்கழகம் கட்டாக்கு (Cuttack) நகரில் தோன்றியது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் சாகர் (Saugar), இராசசுத்தான் (Rajasthan) பல்கலைக்கழகங்கள் முறையே 1946-இலும் 1947-இலும் தோன்றின. இந்தியா 1947-இல் சுதந்திரமடைந்த பொழுது இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 19. சுதந்திர இந்தியாவில் புதிய பல்கலைக் கழகங்கள் வேகமாகத் தோற்றுவிக்கப்பட்டன. அவை வழக்கமான பல்கலைக்கழக அமைப்பு, செயல் ஆகியவற்றிலிருந்து மாறியிருந்தன. எடுத்துக்காட்டாக, சாம்நகரிலுள்ள (Jamnagar) குசராத்து ஆயுர்வேதப் பல்கலைக்கழகம் (1966)

பழங்கால இந்திய மருத்துவ முறைகளைக் கற்பிப்பதற்கென்றே தொடங்கப்பட்டது. மத்திய பிரதேசத்தில் கிரகார் (Khiragarh) நகரிலுள்ள பல்கலைக் கழகமான இந்திர கலா சங்கீத விசுவவித்தியாலயம் (1956) இசை, நடனம் இவ்விரண்டு மட்டுமே கற்பிக்கின்றன. பீகாரில் தார்பாங்கா (Darbhanga) நகரிலுள்ள பல்கலைக்கழகமான காமேசுவர சிங்கு தார்பாங்கா விசுவவித்தியாலயம் (1961) வடமொழி கற்பித்தலை மட்டுமே செய்கிறது. தமிழ்நாட்டில் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் (1981) தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் மக்கள் தொடர்பான ஆய்வுகளைச் செய்வதற்காகவே தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து பாகிசுத்தான் பிரிந்தவுடன் (1947) செய்ப்பூரில் இராசசுத்தான் பல்கலைக்கழகமும் சண்டிகாரில் பஞ்சாபுப் பல்கலைக்கழகமும் தோன்றின. தேசத்தலைவர்களுக்கு அஞ்சலி செய்யும் வகையில் சில பல்கலைக்கழகங்கள் அவர்கள் தம் பெயரிலேயே தோற்றுவிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, புதுதில்லியில் உள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் (1969), அகமது நகரிலுள்ள குரு நானக்குப் பல்கலைக்கழகம் (1969), சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம் (1978), கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகம் (1982), திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் (1982), காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் (1985) முதலியவற்றைச் சொல்லலாம். சில்லாங்கு (Shillong), கொகிமா (Kohima) ஆகிய ஈரிடங்களில் அமைந்துள்ள வடகிழக்கு மலைப் பல்கலைக்கழகம் (North Eastern Hill University 1973), மலைப்புற மாநிலங்களான நாகாலாந்து, மேகாலயா ஆகியவற்றிற்கும், அருணாசலப் பிரதேசம், மிசோரம் ஆகிய யூனியன் பிரதேசங்களுக்கும் கல்வி வளர்ச்சி அளிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிர் கல்வி வளர்ச்சிக்காக இந்தியாவில் முதன்முதலாக 1951-இல் பம்பாய் நகரில் திருமதி நதிபாய் தாமோதர் தாக்கர்சே பெண்கள் பல்கலைக்கழகம் (Shreemati Nathibai Damodar Thackersey Womens' University) தொடங்கப்பட்டது. இதைப் பின் பற்றி அன்னை தெரசாவின் பெயரில் ஒரு மகளிர் பல்கலைக்கழகம் (1984) தமிழ்நாட்டிலுள்ள கொடைக்கானலில் உள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் பெண்களுக்காகச் சிரீபத்மாவதி மகிள விசுவ வித்தியாலயா என்னும் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் உள்ளது. பல்கலைக்கழகப் புறக்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலாக ஆந்திரப்பிரதேச வெளிப்பல்கலைக்கழகம் (1982) ஒன்று ஆந்திர மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இதைப்போலவே, தேசிய அளவில் பல்கலைக்கழகப் புறக் கல்வியை வளர்த்திடும் வகையில் இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக் கழகம் (1985) புது தில்லியில் தொடங்கப்பட்டது. இன்று இந்தியாவில் 140 பல்கலைக்கழகங்கள் (1985) உள்ளன.

வேளாண்மை நாடான இந்தியாவின் வேளாண்மை வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு வேளாண்மையில் உயர்கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றுக்காக இந்தியாவில் 21 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றுள், முதன்முதலாகக் கோவிந்த வல்லப பந்து வேளாண்மை – தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் (Govind Ballabh Pant University of Agriculture and Technology) 1960-ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்தில் பண்டுநகர் என்னுமிடத்தில் தோற்றுவிக்கப்பட்டது (தொடங்கும்போது உத்தரப்பிரதேச வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற பெயரே இருந்தது). உத்தரப் பிரதேசத்தைப் பின்பற்றிப் பிற மாநிலங்களும் தத்தம் மாநிலங்களில் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களை விரைவாகத் தொடங்கின. இன்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற கணக்கில் இவ்வகைப் பல்கலைக்கழகங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. கோயம்புத்தூரில் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971 இல் தோன்றியது.

பல்கலைக்கழக நிதியுதவிக் கழகச் சட்டத்தின் (1956) அடிப்படையில், பல உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக நிலையை(University Status)எய்தின. அவை கருதுநிலைப் பல்கலைக்கழகங்களாகவும் (Deemed Universities) எண்ணப்பட்டன. இவ்வகைப் பல்கலைக் கழகங்கள் இன்று இந்தியாவில் 12 உள்ளன. அவை, குருகுல காங்கிரி விசுவ வித்தியாலயா, அரித்துவார் (1900); இந்திய வேளாண்மையாய்வு நிறுவனம், புதுதில்லி (1905); இந்திய அறிவியல் கழகம், பெங்களூர் (1909); குசராத்து வித்தியா பீடம், அகமதாபாது (1920); சமியா மிலியா இசுலாமியா (Jamia Mjlia/Islamia); புதுதில்லி (1920); இந்தியச் சுரங்கப் பள்ளி, தன்பாது (Indian School of Mines, Dhanbad) (1926); தாட்டா சமூக அறிவியல் நிறுவனம், பம்பாய் (1936); காந்திகிராம ஊரக நிறுவனம், காந்திகிராமம் (1957); ஆங்கில, அயல்மொழிகள் மைய நிறுவனம், அய்தராபாது (1958); பிர்லா தொழில்நுட்பவியல் நிறுவனம், பிலானி (1964); கட்டடக் கலைத் திட்டப் பள்ளி, புதுதில்லி (1979); தயால் பாக்குக் கல்வி நிறுவனம் (Dayal BaghEducational Institute), ஆக்ரா (1980) ஆகியனவாம். இக் கருதுநிலைப் பல்கலைக்கழகங்கள் தாமே பட்டங்கள் வழங்கும் உரிமை பெற்றுள்ளன.

பல்கலைக்கழகங்கள், கருதுநிலைப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றோடு சில தேசிய நிறுவனங்களும் (National Institutes) பல்கலைக்கழக நிலையைப் பெற்று ஆய்வு செய்வதோடு பட்டங்களும் வழங்குகின்றன. கராக்பூர் (1951), பம்பாய் (1958), சென்னை (1959), கான்பூர் (1960), புதுதில்லி (1963) ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஐந்து இந்தியத் தொழில்நுட்பவியல் (Indian Institutes of Technology) நிறுவனங்கள்; இந்திய மருத்துவ அறிவியல் கழகம், புதுதில்லி (1956); இந்தியப் புள்ளியியல் நிறுவனம், கல்கத்தா (1932); மருத்துவப் பட்ட மேற்படிப்புக் கல்வி, ஆய்வு நிறுவனம், சண்டிகார் (1962); சிரீசித்திரா திருநாள் மருத்துவ அறிவியல், தொழில்நுட்பவியல் நிறுவனம் (Sree Chitra Tirunal Institute for Medical Science and Technology), திருவனந்தபுரம் (1973), தட்சிணபாரத இந்திப் பிரசார சபை (Dakshina Bharat Hindi Prachar Sabha) சென்னை ஆகிய தேசியச் சிறப்பு மிக்க நிறுவனங்கள் ஆய்வுக்கும் கல்விக்கும் பட்டங்கள் வழங்குகின்றன.

பயிற்று மொழி: பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் முதன்முதலாகக் கி.பி. 1857-இல் தொடங்கியபோது பயிற்றுமொழி ஆங்கிலமாகவே இருந்து வந்தது. இந்தியாவில் 1937-இல் தேசிய காங்கிரசு அரசுகள் (National Congress Governments) சில மாகாணங்களில் அமைந்தபோது அவ்வரசு, மாநிலமொழி வழியான கல்வியை வலியுறுத்தின. இந்தியச் சுதந்திரத்திற்குப் பின் பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழியாக எம்மொழியை வைப்பது என்பதில் மாநில அரசுகள் பெரிதும் கவனம் செலுத்தின. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தி மொழிக்கு அலுவலக மொழி (Official Language) என்னும் தகுதியை அளித்தது. மொழியின் அடிப்படையில் 1956-இல் இந்திய மாநிலங்கள் அமைந்தபோது, ஒவ்வொரு மாநிலமும் ஆங்கில மொழிக்கு மாறாகத் தத்தம் மாநில மொழிகளையே ஆட்சிமொழியாக்கத் திட்டம் தீட்டத் தொடங்கின. பயிற்று மொழி வைப்பதில் அரசியல் தலையீடு வெளிப்பட்டது. பல வட இந்தியப் பல்கலைக் கழகங்களில் இந்தியே பயிற்று மொழியாக உள்ளது. இந்தி மொழி பேசாத தென்னிந்திய மாநிலங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைப் பயிற்று மொழியாக்குவதற்கு வேகமான எதிர்ப்புணர்ச்சி உள்ளது. எனவே, தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களில் தாய்மொழி அல்லது ஆங்கிலமே பயிற்று மொழியாக உள்ளது. மும்மொழித் திட்டத்தை (Three Language Formula) இந்திய அரசு கொண்டு வந்த போதிலும், பல பல்கலைக் கழகங்கள் இத்திட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. மருத்துவம், தொழில்நுட்பவியல் போன்ற துறைகளில் இன்னும் ஆங்கிலமே பயிற்று மொழியாக உள்ளது. இத்துறைகளில் கூடப் பல பல்கலைக் கழகங்கள் தாய் மொழியிலேயே பாட நூல்களையும் எழுதத் தொடங்கிவிட்டன.

ஜெ. கோ. பி.

துணை நூல்கள்:

**Buch, M.B.** (Ed)., Second Survey of Research in Education Centre of Advanced Study in Education, M.S. University of Baroda, Braoda, 1979.

**Naik, J.P.**, The Education Commission and After, Allied Publishers, New Delhi, 1982.

**Nurula, S. and Naik, J.P.**, A History of Indian Education, Macmillan, Delhi, 1974.

***இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்கம்***: இந்தியா, சிரீலங்காப் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான மன்றம் (Inter-University Board of India and Ceylon) 1925-இல் தோற்றுவிக்கப்பட்டது. 'சிலோன் பல்கலைக்கழகம்' (University of Ceylon) இம் மன்றத்திலிருந்து 1973-ஆம் ஆண்டு விலகியதால், இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம் (Association of Indian Universities) எனப் புதிய பெயரிடப் பெற்றது. இச்சங்கம் அரசியற் கட்டுப்பாடற்ற (Voluntary) ஒரு நிறுவனம். இது இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கிடையே ஒரு செய்திப் பாலமாகவும் உயர்கல்வியினை ஒருங்கிணைக்கும் கருவியாகவும் விளங்குகிறது.

இந்தியப் பல்கலைக்கழகங்களிலுள்ள அனைத்துத் துணைவேந்தர்களும் இச்சங்கத்தின் உறுப்பினர்களே. இச்சங்கத்தின் பொதுக்குழு ஆண்டுக்கு ஒரு முறை கூடும். செயற்குழுவில் 19 துணைவேந்தர்கள் உள்ளனர். இச்செயற்குழு பொதுவாக ஆண்டுக்கு நான்கு முறை கூடிச் சங்கத்தின் செயற்பாடுகளை வரையறுக்கிறது.

இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்கம் இந்தியாவிலும் பிறநாடுகளிலும் உயர்கல்வி குறித்த அனைத்துச் செய்திகளையும் சேகரிக்கும் பணியினைச் செய்கிறது. மேலும், இந்தியப் பல்கலைக்கழகங்கள், வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆகியன வழங்கும் பட்டங்களின் தகுதியை உறுதி செய்து ஒப்புதல் (Recognition) வழங்குவது இச்சங்கத்தின் தலையாய பணியாகும். புதிய பல்கலைக்கழகச் சட்டமியற்றுதலில் மாநில அரசுகள் முனையும்போது, இச்சங்கம் தொடர்பு கொண்டு உதவுகிறது. இது தேசியக்கல்வி

நிறுவனங்களுக்கு (எ-டு. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்) பல்கலைக்கழகச் சார்பாளர்களை நியமிக்கவும் செய்கிறது. பல்கலைக்கழகப் பணவுதவி ஆணையகம் (University Grants Commission), கல்வி அமைச்சகம் ஆகியவற்றுடன் இது நேரடித் தொடர்பு கொண்டு பணியாற்றி வருகிறது.

இச்சங்கத்தின் வெயீடான 'பல்கலைக்கழகக் கையேடு' (Universitics Hand Book) என்னும் நூலில் இந்தியப் பல்கலைக் கழகங்கள் குறித்த அனைத்துச் செய்திகளும் உள்ளன. இந்தியப் பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டத்திற்காக ஆய்வு செய்யப் பட்ட கட்டுரைகளின் தொகுப்பு விளக்கத்தை (Bibliography of Doctoral Dissertations) இரண்டு தொகுதிகளாக இச்சங்கம் வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்துறைக்கும் வினாவங்கி நூல் வரிசைகள் (Questions Bank Book Series) என்னும் கேள்வித் தொகுப்பு நூல்களை, இச்சங்கம் 18க்கும் மேற்பட்ட பாடங்களுக்கு வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழகச் செய்திகள் (University News) என்னும் மாதமிரு முறை ஏடு உயர்கல்வி குறித்து இச்சங்கத்தால் வெளியிடப் பெறுகிறது.

இச் சங்கம் 1979-ஆம் ஆண்டிலிருந்து கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டு முறைமை, தேர்வுகள் (Evaluation Methodology and Examinations) ஆகியவற்றில் அஞ்சல்வழித் தொடர்கல்வி அளித்து வருகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே விளையாட்டையும் உடற் பயிற்சியையும் வளர்த்திடும் நோக்கத்துடன் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டு மன்றம் (Inter - University Sports Board) ஒன்றை நடத்தி வருகிறது. இம்மன்றத்தில் அனைத்து இந்தியப் பல்கலைகக்ழகங்களும் இடம் பெற்றுள்ளன.

இச்சங்கத்தின், 1986-87-ஆம் ஆண்டிற்கான தலைவராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் 1904**: இந்தியப் பல்கலைக்கழகங்களின் பேராளர்களையும், மற்றக் கல்வி நிறுவனங்களின் பேராளர்களையும் கொண்ட ஒரு மாநாட்டினைக் கர்சன் பிரபு 1901 செப்டம்பரில் சிம்லாவில் கூட்டினார். கல்வித் தரத்தை எவ்வாறு மேம்படுத்தலாமென்பது பற்றி இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இம்மாநாடு பல முடிவுகளை நிறைவேற்றியது. சர் தாமசு இராலே (Sir Thomas Raleigh) என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களின் அமைப்பையும் செயல்முறைகளையும் எந்த வகையில் மேம்படுத்தலாமென்பது பற்றிக் கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு இக்குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 1904-ஆம் ஆண்டில் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் (Indian University Act) இயற்றப்பட்டது.

பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிப் பிரிவுகளை ஏற்படுத்துதல் வேண்டும் என்றும் தனியாக ஆய்வுக் கூடங்களும் பெரிய நூலகங்களும் இருத்தல் வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. திறமைமிக்க பேராசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் பணியமர்த்தப்பட வேண்டும்; பல்கலைக்கழக ஆளவை (Senate) யில் 50-க்கு மேற்பட்ட, ஆனால் 100-க்கு குறைந்த உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். இவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். இவ்வுறுப்பினர்களுள் பெரும்பாலானவர்களை அரசே பணியமர்த்தம் செய்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய (20 அல்லது 15) உறுப்பினர்கள் மட்டிலுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகம் அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரப்படுதல் வேண்டும். ஆளவையின் முடிவுகளை நீக்குவதற்கும் செயற்படுத்தற்கும் திருத்தியமைப்பதற்கும் அரசுக்கு அதிகாரமிருத்தல் வேண்டும். ஆட்சிக்குழுவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் தனியார் கல்லூரிகளை ஆய்வு செய்தல் வேண்டும். தனியார் கல்லூரிகள் குறிப்பிட்ட கல்வித் தரத்தைப் பாதுகாத்து வருதல் வேண்டும். தனியார் கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகம் ஒப்புதல் கொடுப்பதற்கும் அதனை நீக்குவதற்கும் அரசின் அனுமதியும் தேவையானதாகும். பல்கலைக் கழகங்களின் அலுவல் வரம்பின் எல்லை எப்பகுதி வரையில் உள்ளது என்பதை அரசே முடிவு செய்தல் வேண்டும.

பின்னர்க் கல்கத்தா, சென்னை, பம்பாய், அலகாபாது ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு, அவற்றிற்கென்று தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அந்தப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்த மட்டிலும் இந்த 1904-ஆம் ஆண்டைய இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் செல்லாது.

சென்னை மாநிலத்தைப் பொறுத்தமட்டிலும் 1923-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம் இயற்றப்பட்டு, அது சென்னை மாநிலம் முழுவதற்கும் செல்லத்தக்கதாக இருந்தது. அந்நிலையில் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம்

சென்னை மாநிலத்துக்குச் செல்லாததாகி விட்டது. இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்தைத் தவிர்த்து, மேலும் பல பல்கலைக்கழகங்கள் தமிழ் நாட்டில் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் தனித் தனிச் சட்டம் உள் ளது.

**இந்தியப் பழங்கல்வி முறைகள்:** மனித இனம் தோன்றிய நாள் முதல் 'கற்பித்தல், கற்றல் ஆகிய செயல்கள் ஏதோ ஒரு வகையில் நிகழ்ந்த வண்ணம் இருந்துவருகின்றன. பண்பாட்டு ஏணியின் முதற்படியில் இருந்த பண்டைச் சமுதா யங்களிலும் இளைஞர்கள் இன்றியமையாத வாழ்க் கைத் திறன்களில் பயிற்சியளிக்கப் பட்டுப் பின்னர்ச் சமுதாயத் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர். நாகரிகம் பெருகப் பெருகப் 'பள்ளிகள்' எனப்பட்ட தனியான கல்வி நிலையங்களும் தோன்ற, 'ஆசிரியர் கள்' எனப்படும் சிறப்புப் பிரிவினரும் தோன்றினர்.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரை அதன் தொடக்ககாலக் கல்வி அமைப்பின் அடித்தளமாக அமைந்தவை வேதகாலக் கல்வி முறையும் அதன் இணைக் காலத்ததாகக் கருதப் படும் பண்டைய தமிழர் கல்வி முறையுமே. பின்னர் எழுந்த பௌத்த, சமண, இசுலாமியக் கல்வி முறைகளும் இந்திய மக்களின் கல்வி வளர்ச்சி யில் குறிப்பிடத்தக்க பங்கு பெற்றன. இப் பல்வேறு இந்தியப் பழங்காலக் கல்வி முறைகள் ஒவ்வொன்றி லும் சில தனிப் பண்புகள் காணப்பட்டன. இந்தியப் பழங்கல்வி முறைகளின் அழியாப் பல சிறப்புகளின் பாதிப்பு சுதந்திர இந்தியாவின் இன்றைய கல்வி முறையிலும் இருத்தல் தெளிவு.

**வேதகாலக் கல்வி முறை:** பண்டைய இந்திய நாகரிகத்தின் கருவூலங்களாக வேதங்கள் கருதப் படுகின்றன. வேத கால இந்தியாவில் இருக்கு எசுர், சாமம் போன்ற வேதங்களின் அறிவினைப் பெற்ற சமுதாயப் பிரிவினர் வேதங்களின் துதிப்பாக்களை யும் அவற்றுடன் தொடர்பு கொண்ட சடங்கு முறைகளையும், பின்னர் எழுந்த 'உபநிடதங்க ளின்' கருத்துகளையும் தம் குடும்ப ஆண் தலை முறையினருக்கு வாய்மொழியாகவும் எடுத்துக் காட் டுகளாகவும் கற்பிக்கத் தொடங்கினர்.

இக் கல்வி முறை வேத காலக் கல்வியின் தொடக்கக் கட்டமாக அமைகிறது. வேத காலப் பள்ளிகளின் சிறந்த ஆசிரியர்களின் புகழினால் கவ ரப்பட்டுப் பிற குடும்பத்துச் சிறுவர்களும் இவ்வாசிரி யர்களின் மாணாக்கர்களாயினர். தொடக்கத்தில் வேதியச் சிறுவர்கள் மட்டும் இவ்வாசிரியர்களால் கல்வி கற்க ஏற்கப்பட்டனர். பின்னர் அன்றைய சமுதாயத்தின் பிற பிரிவினரான சத்திரியர், வைசியர் குடும்பச் சிறுவர்களும் வேத ஆசிரியர்களால் ஏற்கப்பட்டனர். இவர்களுக்குத் தேவைப்படும் வாழ்க்கைத் திறன்களுக்கேற்ற பாடப் பொருள்களும் படிப்படியாக வேத காலப் பள்ளிகளில் கற்பிக்கப் படத் தொடங்கின.

**குருகுலக் கல்வி:** வேதகாலப் பார்ப்பனக் கல்வி முறை 'குருகுலக்கல்வி' எனச் சிறப்பாகச் சொல்லப் படுகிறது. வேதகாலப் பள்ளிகள் குருகுலங்களெனப் பட்டன. குருகுலங்களில் கற்க விழையும் தகுதிபெற்ற சிறுவர்கள், ஆசிரியர்களைப் பணிவுடன் அணுகி, அவர்கள் இசைவினைப் பெற்று, அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் ஒருவராக வாழ்ந்து, ஆசிரியர் களுக்குத் தேவைப்படும் பணிவிடைகளைச் செய்து, அவ்வப்போது அவர்கள் கற்பித்தலைச் செவிமடுத் துக் கல்வி பயின்றனர். குருகுல உறுப்பினராக வாழ்ந்து கற்பது மாணாக்கர்தம் ஒழுக்க–ஆன்மிகப் பயிற்சிக்கும் உதவியது. குருகுலங்களில் பயிலும் மாணாக்கர்களுக்குப் புலனடக்கத்திலும் நடத்தை யிலும் வலுவான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந் தன. ஆசிரியர் சொல்லுக்கு மறுப்பின்றி முழுமை யாகக் கீழ்ப்படிதல் ஒவ்வொரு மாணாக்கரிடமும் எதிர்பார்க்கப்பட்டது. எளிய புறவாழ்க்கையினையும் உயர்ந்த சிந்தனைகளுக்குட்பட்ட அகவாழ்க்கையை யும் வாழ மாணாக்கர்களுக்குக் குருகுலக்கல்வி முறை பயற்சியளித்தது.

**குருகுலப் பள்ளி ஆசிரியர்கள்:** இவர்கள் சமுதா யத்தில் மிக்க உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட் டனர். அரசர்களும் அவர்களுக்கு மரியாதை செலுத் தினர். இத்தகைய உயர்மதிப்பினைப் பெறத்தக்க அறிவு, ஒழுக்கம், ஆன்மிக உயர்வு ஆகிய யாவற் றையும் இவ்வாசிரியர்கள் பெற்றிருந்தனர். கற்பித்த லுக்கென இவர்கள் எத்தகைய ஊதியத்தையும் தம் மாணாக்கர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. கல்வி புகட்டுதலைத் தமது மேன்மையான கடமையாக இவர்கள் கருதினர். உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கை வாழ்ந்து, மாணாக்கர்களுக்குக் குருகுல ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுகளாக விளங்கினர். தம் மாணாக்கர் களை மிக்க அன்புடனும் கட்டுப்பாட்டுடனும் நடத் தினர். மாணாக்கர்களின் தகுதி, தேவை ஆகியவற் றுக்கேற்பக் கல்விக் காலம் இருந்தது. கல்விக் காலம் முடிவடைந்த பின் மாணாக்கர் ஆசிரியரிடமிருந்து விடைபெற்றுத் தம் தனி வாழ்க்கையைத் தொடங் கினர். இவ்வாறு பிரிந்து செல்லும்போது, தம் அன் பினையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில் தம்மால் இயன்ற அன்பளிப்பு எதையேனும் மாணாக் கர்கள் ஆசிரியருக்குத் தருவது வழக்கம்.

குருகுலப் பள்ளிகள்: இவை அழகும் அமைதியும் நிறைந்த இயற்கைச் சூழலில் அமைந்திருந்தன. பல பள்ளிகள் குறிப்பிட்ட ஒரு சூழலில் அருகருகே இருத்தலும் உண்டு. இத்தகைய தொகுப்பு இன்றைய பல்கலைக் கழகங்களைப் போன்று செயற்பட்டன. காசி, தட்சசீலம், நதியா போன்ற இடங்களில் பின்பு எழுந்தவை இவ்வகை எனலாம். குருகுலப் பள்ளியில் ஓர் ஆசிரியர் ஒரு சில தகுதி வாய்ந்த மாணாக்கர்களுக்குக் கற்பித்ததனால் அவர்கள்பால் தனிக் கவனம் செலுத்தி, அவர்கள் ஒவ்வொருவரது முழுத் திறனும் நல்வளர்ச்சி பெறும் வகையில் பயிற்சியளிக்க முடிந்தது.

வேதகாலப் பள்ளிகளில் தொடக்கத்தில் வேதங்களும் அவற்றின் துணை நூல்களுமே கற்பிக்கப்பட்டன. பிற்காலத்தில், இவற்றுடன் சோதிடம், வானவியல், மருத்துவம், தருக்கம், தத்துவம் போன்ற பல்வேறு கலைகளும் கற்பிக்கப்பட்டன. இது வேத காலக் கல்வியின் நோக்கம் விரிவு பெற்றதை உணர்த்துகிறது. சத்திரியர், வைசியர் ஆகிய சமுதாயப் பிரிவு மாணாக்கர்கள் குருகுலப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின், இவர்கள் தம் வாழ்க்கைத் தொழில்களுக்கு உதவக் கூடிய பயிற்சியும் ஓரளவு அளிக்கப்பட்டது. குருகுலக் கல்வியின் அடிப்படை கற்பித்தல் முறை ஆசிரியரது வாய்மொழி விளக்கமும் மாணாக்கர் அதனை நெட்டுருச் செய்தலுமாக இருந்தது. பிற்காலத்தில் ஓலைகளில் எழுதும் முறை பின்பற்றப்பட்டது.

குருகுலக் கல்வி சீரிய வாழ்க்கைக்கான கல்வியாக விளங்கியது. ஆசிரியரது கற்பித்தலின் பயனாக மாணாக்கர் அறிவு பெற்றதுடன், அவருடன் வாழ்ந்த தன்பயனாக அவர்கள் பல சமய, ஒழுக்க ஆன்மிகப் பண்புகளையும் பெற்றனர். ஆசிரியர் சமூகத் தலைவராகப் போற்றப்பட்டார். ஆசிரிய – மாணாக்கத் தொடர்பு அன்பு, மதிப்பு ஆகிய இருவலுவான அடித்தளங்களின் மேல் அமைக்கப்பட்டிருந்தது. உடலுழைப்பு கல்விப் பயிற்சியின் ஒரு சிறந்த பகுதியாகக் கருதப்பட்டது.

குருகுலக் கல்வி முறையில் சில குறைபாடுகள் இருத்தலைக் கல்வி வல்லுநர் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். இக்கல்வி முறையில் மாறி வந்த சமூகத் தேவைகளுக்கேற்பத் தன்னை மாற்றியமைத்துக் கொள்ள உதவும் நெகிழ்ச்சித் தன்மையின்மை இதன் செல்வாக்கைக் குறைத்தது. இப்பள்ளிகள் சமூகத்தின் உயர்நிலைப் பிரிவினரெனக் கருதப்படுவோருடைய சிறுவர்களுக்கு மட்டுமே பயனளிப்பனவாக இருந்தன. சமூகத்தின் அடித்தள மக்களுள் பெரும்பான்மையினர் இம்முறையினால் புறக்கணிக்கப்பட்டனர். பண்டைய வேத காலத்தில் சமுதாயத்தில் பெண்கள் நிலை உயர்ந்திருந்ததென ஊகிக்கப் பல சான்றுகள் காணப்பட்டாலும், பிற்காலக் குருகுலக் கல்வி முறை பெண் கல்வியைப் பெருமளவு புறக்கணித்தது. இவ்வாறே தொழிற் கல்விக்கும் போதிய முதன்மைத் தன்மை அளிக்கப்படவில்லை. எனினும், குருகுல முறையின் மையக் கருத்துகளான தகுதிக்கேற்ற கல்வி, சிறு வகுப்புகள், பரிவுடன் கூடிய இணக்கமான ஆசிரிய – மாணாக்கர் தொடர்பு, கற்பித்தலைத் தம் கடமையாக ஆசிரியர் கருதுதல், குறிக்கோள் மிகுந்த எளிய வாழ்க்கைக்கான இளமைக்காலப் பயிற்சி போன்ற பலவும் இன்றும் கல்விச் சிறப்பு மிக்கனவாகத் திகழ்கின்றன என்பது தெளிவு.

**பண்டைய தமிழகத்தில் கல்வி:** இந்தியாவின் வடபகுதியில் வேதகாலம் முதல் எழுந்து வளர்ந்து பரவிய குருகுலக் கல்வி முறையுடன், அதே காலத்தில் தென்பகுதியில் பண்டைய தமிழகத்தில் பரவியிருந்த கல்வி அமைப்பு, கற்பித்தல் முறை போன்றன பற்றிய பல கருத்துகள் சங்க இலக்கியங்களினின்றும் நமக்குக் கிடைக்கின்றன. பண்டைய தமிழகத்தின் கல்விச் சிறப்புப் பற்றிய சான்றுகள் பலவும் தெரிந்துள்ளன. அவை, வரலாற்றுக் கால முறைப்படி கிடைக்கப் பெறாவிடினும், ஆங்காங்கே இலக்கிய நூல்களில் பரவலாகக் காணப்படும் பல்வேறு விவரங்களைத் தொகுத்து ஆராய்ந்து, பண்டைய தமிழகக் கல்வி முறை பற்றிய பல உண்மைகளை ஆராய்ச்சியாளர் நமக்குத் திரட்டித் தந்துள்ளனர்.

பவணந்தி முனிவரின் நன்னூல் நூற்பாக்கள் தமிழகக் கல்வியின் பல பண்புகளை எடுத்துக் கூறுகின்றன. நல்லாசிரியர்களின் சிறப்புப் பண்புகள், கல்வி கற்போரது தன்மை, கற்பித்தலின் இயல்பு, ஆசிரிய மாணாக்கர் தொடர்பு போன்ற பலவற்றைப் பற்றி நன்னூல் தெளிவுபடுத்துகிறது. நன்னூலாசிரியர் காலத்துக்கு முற்பட்ட தமிழகச் சமுதாயத்திலும் பெருமளவு இதே போன்ற கல்வி முறை பரவிக் காணப்பட்டது என்று ஊகித்தல் கூடும்.

**கல்வியின் நோக்கம்:** கல்வியின் நோக்கங்களென நன்னூல் நான்கு இலக்குகளைக் குறிப்பிடுகிறது. அவை அறநெறிப்பட்ட வாழ்க்கை, பொருளீட்டுதல், வாழ்க்கையின் நல்லின்பங்களை நுகர்தல், பின்னர் இவற்றைத் துறந்து பேரின்ப வீட்டினையடைதல் ஆகியவையாம். குருகுலக் கல்வியின் வாழ்க்கைக் குறிக்கோள்களை இவை ஒத்திருத்தல், இவ்விரு கல்வி முறைகளும் ஒன்றோடொன்று கலந்து வளர்ச்சி பெற்றதனைத் தெளிவுபடுத்துகிறது.

**கல்வி அமைப்பு:** தமிழகத்தின் சமுதாய நிலைகள் எல்லாவற்றிலும் கல்வி பரவியிருந்தது. கல்வியின் சிறப்பு மக்கள் யாவராலும் உணரப்பட்டது. கல்வியின் வழியேதான் பண்பாடு, நல்லொழுக்கம், சமூகப் பண்புகள் போன்றவற்றை ஒருவன் பெறவியலும் என்பது வலியுறுத்தப்பட்டது. நேரடியாகக் கற்றலைப் போன்று கேள்வி வழியே அறிவு பெறுதலும் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. கற்றலுக்கேற்ப நடத்தலின் தேவையும் வலியுறுத்தப்பட்டது. கல்வியின் நடைமுறைப் பயன் தெளிவுபடுத்தப்பட்டது. கல்வி கற்றவன் எண்ணும் உரிமையும் ஆய்வுத் திறனும் பெற்று விளங்க வேண்டும். கல்வி பற்றிய குறட்பாக்கள் இத்தகைய பல கருத்துகளை எடுத்துக் கூறுகின்றன.

**தமிழகக் கல்வியின் சிறப்பு:** பார்ப்பனக் கல்வி முறை போலன்றிப் பண்டைய தமிழகக் கல்வி சாதி சமய வேறுபாடுகளின்றிச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவு மக்களுக்கும் அளிக்கப்பட்டது என்பது அதன் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். இவ்வாறே, பெண்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதனையும் புறக்கணிக்கவில்லை. கல்வித் திட்டத்தில் தமிழ்மொழி இலக்கிய இலக்கணங்கள் நடுஇடம் பெற்றிருந்தனவெனினும் பிற கலைகளும் பங்கு பெற்றன. போர்க் கலைகள், நுண்கலைகள் ஆகியன கற்பிக்கத் தனிப் பள்ளிகள் இருந்தன. ஆசிரியர்கள் நிலை உயர்ந்து காணப்பட்டது. கற்பித்தல் முறை பெருமளவு குருகுலப் பள்ளிகளிற் பின்பற்றப்பட்டது போன்று இருந்தது.

**உயர்கல்வி:** பண்டைய தமிழகத்தே பல்கலைக் கழகங்கள் போன்ற உயர்கல்விக் கூடங்கள் தென் மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய நகரங்களிற் நிறுவப்பட்டுச் சிறந்து விளங்கின. முதல், இடை, கடைச் சங்கங்கள் இத்தகையன. பிற்காலத்தில் காஞ்சி போன்ற இடங்களில் சமண, பௌத்தக் கல்விக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெரும் புலவர்களும் பேராசிரியர்களும் அவற்றில் இடம் பெற்றுத் தமிழ் இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு மட்டுமன்றி, கணிதம், அறிவியல், வானவியல், மருத்துவம், நுண்கலைகள் போன்ற பல துறைகளின் வளர்ச்சிக்கும் உதவினர். உயர்நிலைப்பட்ட இத்தகைய கல்வி அமைப்புடன் எல்லா ஊர்களிலும் சிற்றூர்களிலும் பல பள்ளிகள் செயற்பட்டன. அவை 'கணக்காயர்' எனப்பட்ட ஆசிரியர்களால் தம் இல்லங்களிலும் ஊர்ப் பொதுவிடமான கோயில்களிலும் நடத்தப்பட்டன.

கல்வி வாய்மொழியாகவும் பின்னர் ஓலைச் சுவடியில் எழுத்தாணி கொண்டு எழுதியும் கற்பிக்கப்பட்டது. ஒழுங்கு, நன்னடத்தை, முழுக்கவனம், ஆர்வம், அறிவு வேட்கை, ஆசிரியர் சொல்லுக்குப் பணிவோடும் மகிழ்ச்சியோடுங் கீழ்ப்படிதல், நல்ல நினைவாற்றல் போன்ற பண்புகள் மாணாக்கர்களிடம் எதிர்பார்க்கப்பட்டன. மாணாக்கனது தகுதிக்கேற்பக் கற்பித்தல் முறை ஆசிரியரால் கையாளப்பட்டது. உடற்பயிற்சிக்குக் கல்வியில் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. திறன் மிகுந்த மாணாக்கர் ஆசிரியருக்கு உதவியாகப் பிற மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் முறையும் அன்று காணப்பட்டது. ஆசிரியர்கள் சமுதாயத் தலைவர்களாகக் கருதப்பட்டனர். சிறந்த ஆசிரியர் பலர் அன்று காணப்பட்டதன் விளைவாகப் பழங்காலத் தமிழகக் கல்வி உலகின் அன்றைய சிறந்த கல்வி அமைப்புக்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. பிற்காலத் திண்ணைப் பள்ளிகள் பண்டைய பண்புகள் ஒரு சிலவற்றைக் கொண்டு இயங்கி, தமிழக மக்கள் கல்வித் தரம் குறையாமல் இருக்க உதவின.

**பௌத்தக் கல்வி முறை:** வேதகாலப் பார்ப்பனர் கல்வி முறையினை அடுத்து, சிறப்பாக இந்தியாவின் வடக்கிலும் மையப்பகுதிகளிலும் புத்தரது சமயக் கருத்துகளின் விளைவாக எழுந்து பரவிய பௌத்தக் கல்வி முறையினையும் இந்தியப் பழங்கல்வி முறைகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். பல கூறுகளில் பௌத்தக் கல்வி முறையானது பார்ப்பனக் கல்வி முறையினை ஒத்திருந்ததெனினும், இவற்றினிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் காணப்பட்டன. பௌத்தக் கல்வியில் வேதங்களைக் கற்றல் நடுவிடம் பெறவில்லை; ஆசிரியர்களும் பார்ப்பனப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை; மேலும் பௌத்தப் பள்ளிகளில் தொடக்க காலந்தொட்டுச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். வடமொழியை விடப் பாலி மொழி கல்விக் கூடங்களில் சிறப்பிடம் பெற்றது. பௌத்த சமயம் தமிழகத்தில் பரவித் தமிழ்நாட்டுப் பேரரசர்களின் துணையைப் பெற்ற காலங்களில், பௌத்தக் கல்வியின் அடிப்படையில் அமைந்த பள்ளிகள் தமிழகத்திலும் நிறுவப்பட்டன.

பௌத்தக் கல்வியின் தலையாய நோக்கம் சமயத் தலைவர்களான பிட்சுகளை உருவாக்குதலாகும். பிட்சுகள் தங்கியிருந்த விகாரங்கள் எனப்பட்ட மடாலயங்கள் பௌத்தக் கல்விக் கூடங்களாக உருப் பெற்றன. சமயத் தொண்டாற்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் இவ்விகாரங்களிலுள்ள பிட்சுக்களின் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் கற்பிக்கப்பட்டனர். இவ்வாறு சேர ஆர்வமுள்ளவர்களுக்குச் சில எளிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. நோயுற்றோர், அடிமைகள், கடன்பட்டோர், அரசனின் பணியாட்கள் போன்றோர் பௌத்த சங்கங்களில் சேரத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்ட

னர். சேர விரும்புவோர்க்குக் குறிப்பிட்ட வயது வரையறையும் செய்யப்பட்டிருந்தது.

பௌத்த சங்கங்களில் மாணாக்கராகச் சேரத் தகுதியும் விருப்பமும் உடையோர் தம் தலை முடியை மழித்து, மஞ்சள் உடையணிந்து சங்கத்தின் பிட்சுகளை அடிபணிந்து, அவர்களுக்குக் கீழ் நிலையில் உட்கார்ந்து புத்த பகவானிடமும் தர்மத்திடமும் சங்கத்திடமும் சரண் புகுவதாக வாக்குறுதி அளித்த பின் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஓர் இளைஞன் இவ்வாறு பௌத்த சங்கத்தில் முதன் முதல் சேரும் நிகழ்ச்சி 'பப்பச்சா' எனப்பட்டது. ஏறக்குறைய 8 வயதில் சேர்ந்தோர் தம் கல்வியை முடித்துச் சங்கத்தின் முழு உறுப்பினராக உயரக் குறைந்தது 12 ஆண்டுகள் கல்வியும் பயிற்சியும் பெற வேண்டும். இவ்வாறு முழு உறுப்பினராகும் சடங்கு 'உபசம்பாதம்' எனப்பட்டது. சங்கத்திலுள்ள மூத்த பிட்சுகள் பல்வேறு மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்டினர்.

பௌத்த விகாரப் பள்ளிகளில் சேர்ந்தபின் மாணாக்கர்களுக்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. தூய்மை, பொருட் பற்றின்மை, உலக இன்பங்களைத் துறத்தல், உணவு உடை ஆகியவற்றில் எளிமை, உடலுழைப்பு போன்றன மாணாக்கரிடம் எதிர்பார்க்கப்பட்டன. தண்டனைகளும் ஓரளவு தொடக்கக் காலத்தில் கடுமையாக இருந்தன. கற்பித்தல், வினாக் கேட்டல், ஊக்குவித்தல், குறிப்புத் தருதல் போன்ற பல முறைகள் ஆசிரியர்களான மூத்த பிட்சுகளால் கையாளப்பட்டன. ஆசிரியத் தகுதி பெறக் குறைந்தது பத்து ஆண்டுகளாவது பிட்சுகளாகப் பணியாற்றியவர்களாக இருத்தல் வேண்டும். பௌத்த விகாரப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவ உறவு குருகுலப் பள்ளிகளின் தன்மையை ஒத்திருந்தது.

புத்த விகாரங்களில் அளிக்கப்பட்ட கல்வியும் பயிற்சியும் முதலில் பிட்சுகளை உருவாக்குதலுக்கான சமய-ஆன்மிக-ஒழுக்கப் பயிற்சியாகவே இருந்தது. காலஞ் செல்லச் செல்லச் சமயத்தைக் கற்பித்தலுடன் உலக வாழ்க்கையுடன் இணைந்த பிற கலைகளையும் கற்பித்தல் தொடங்கப்பட்டது. இதற்குப் பெருமளவு குருகுலக் கல்வியின் அமைப்புக்காரணமாக இருந்தது. நாளடைவில் இவ்விகாரப் பள்ளிகள் பல்வேறு துறைகளிற் சிறப்புப் பெற்று வெளி நாடுகளினின்றும் அறிஞர்களைக் கவரும் அளவுக்குப் பெயரும் புகழும் பெற்றன. பாடலி புத்திரம், நாலந்தா, வல்லபி போன்ற உயர் கல்விக் கூடங்களின் சிறப்பினைப் பாகியான், யுவான்சுவாங்கு போன்ற சீனப் பயணிகள் நன்கு விவரித்துள்ளனர். இவற்றில் பிட்சுகளாகப் பிற்காலத்தில் சமயத் தொண்டு புரிவோர் மட்டுமன்றி, வேறு பல வாழ்க்கைத் தொழிலில் பின்னர் ஈடுபட ஆர்வமுள்ளோரும் கல்வி பயின்றனர். வரலாற்றுக் காரணங்களின் விளைவாகப் புத்த சமயத்தின் செல்வாக்கு இந்தியாவில் குன்றிப்போன நாள் வரை, பௌத்தக் கல்வி நிலையங்கள் பொதுமக்கட் கல்விக்கும் உயர் சமய, கலைக் கல்விக்கும் தொடர்ந்து தொண்டாற்றி வந்தன.

**சமணக் கல்வி:** சமண சமயம் இந்தியாவில் தோன்றிச் செல்வாக்குப் பெற்ற காலங்களில் சமண மடாலயப் பள்ளிகள் நிறுவப்பட்டு, அவை சமயத் தொண்டர்களுக்கும் பிற்காலத்தில் பொது மக்களுக்கும் கல்வி புகட்டின. இவற்றின் பொதுப் பண்புகள் பெருமளவு பௌத்தப் பள்ளிகளின் இயல்புகளை ஒத்திருந்தன. புத்த சமயக் கோட்பாடுகளுக்கு மாற்றாகச் சமண தீர்த்தங்கரர்களின் கொள்கைகளை இப் பள்ளிகள் கற்பித்தன.

**இசுலாமியக் கல்வி முறை:** ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனியின் துணைக்கொண்டு இந்தியத் துணைக் கண்டத்தில் காலூன்றிய காலத்துக்கு முற்பட்ட காலக் கல்வி முறையினை இந்தியப் பழங்கல்வி எனக் கொள்ளும் போது, இசுலாமியக் கல்வி முறையும் இதனுள் அடங்கும். இசுலாமிய சமயம் இந்தியாவில் பரவி நிலை பெற்ற பின்னர்ச் சமயப் பணிக்காகப் பல மசூதிகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுடன் இணைந்து இசுலாமியப் பள்ளிகள் செயற்பட்டன. இப்பள்ளிகள் 'மக்தாபுகள்', 'மதரசாக்கள்' என இருவகைப்படும்.

மக்தாபுகள் தொடக்கப் பள்ளிகளாகும். இவற்றின் தலையாய கல்விப்பணி இசுலாமியப் புனித நூலான திருக்குர்ரானிலிருந்து நாள்தொழுகைக்குத் தேவைப்படும் பகுதிகளைச் சிறுவர்களுக்குக் கற்பித்தலாகும். இதனுடன் சிலபோது அரபு, உருது மொழியறிவும் புகட்டப்பட்டது. படிக்க, எழுத, கணக்கிடக் கற்பிக்கப்பட்டன. மசூதிகளைச் சார்ந்த மக்தாபுகளைப் போன்று, தனிப்பட்ட முசுலிம் செல்வர்களுடைய இல்லங்களிலும் ஆசிரியர்களான 'மௌல்வி'களின் துணையுடன் மக்தாபுகள் நிறுவப்பட்டன.

மதரசாக்கள் உயர்கல்வி நிலையங்களாகச் செயற்பட்டன. இவற்றில் சமயபாடத்துடன் இலக்கணம், சொல்லாடற்கலை, தருக்கம், சட்டம், தத்துவம், அறிவியல் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டன. பாரசீக மொழி இவற்றில் பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. மொகலாய மன்னர்களின் ஆதரவில் தில்லி, ஆக்ரா, ஆசுமீர் போன்ற

இடங்களில் உயர் கல்வி நிலையங்களும் நிறுவப்பட்டன. முசுலிம் சமூகத்தினர் கற்பித்தலை ஒரு புனித கடமையாகக் கருதினர். ஆசிரியர்களைப் பெரிதும் மதித்தனர். அரசர்களும் பிரபுக்களும் மசூதிகளையும் அவற்றுடன் இணைந்த பள்ளிகளையும் பாதுகாப்பதில் பெருங்கவனம் செலுத்தினர். கற்கும் மாணாக்கர்களுக்கு மிக்க பொருளுதவி தரப்பட்டது. இசுலாமியப் பள்ளிகள் தொடக்கத்தில் சிறுபான்மையினரான முசுலிம் சமூகக் குழந்தைகளுக்கென ஏற்படுத்தப்பட்டனவெனினும், பிற்காலத்தில் நாட்டின் பல்வேறு பிரிவினர்தம் குழந்தைகளும் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

**திண்ணைப் பள்ளிகள்:** ஆங்கில ஆட்சிக்கு முன் இந்திய நாட்டில் பழங்கல்வி முறைச் செல்வாக்கின் அடிப்படையில் எழுந்த பல பள்ளிகள் பொது மக்களுக்கான தொடக்கக் கல்வி நிலையங்களாக நாடெங்கிலும் பணியாற்றி வந்தன. இக்காலத்தில் பல பொதுவான தொடக்கப் பள்ளிகளும் தனிப்பட்டோரால் நிறுவப்பட்டு வாணிகம், வேளாண்மை போன்ற தொழில் புரிவோர்தம் குடும்பக் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி புகட்ட உதவின. இப்பள்ளிக்கூடங்கள் திண்ணைப் பள்ளிகள் எனப்பட்டன. இவற்றில் அளிக்கப்பட்ட கல்வியின் தரம் இவற்றில் பணியாற்றிய ஆசிரியர்களைப் பொறுத்திருந்தது. வசதிகள் பொதுவாகக் குறைந்த அளவில் பெற்ற இத் தொடக்கப் பள்ளிகள் மக்கள்தம் வட்டார மொழிகளில் பாடங்களைக் கற்பித்தன. இவற்றின் கல்வித் தரம் குறிப்பிடத்தக்கபடி உயர்ந்து காணப்படாவிடினும், பொது மக்கள் கல்வித் தேவையை ஓரளவேனும் நிறைவு செய்து, நாட்டுக் கல்வியை (Indigenous Education) மக்களுக்கு இவை அளித்தன என்பது மறுக்க முடியாததாகும். இத்தகைய நாட்டுக் கல்வியின் அடிப்படையில்தான் ஆங்கில ஆட்சிக் காலத்தில் கல்வி வசதி மேலும் பெருகுவது இயலுவதாயிற்று. எஸ்.ச.

துணை நூல்கள்:

**சுந்தரசண்முகனார்,** தமிழர் கண்ட கல்வி, பாரி நிலையம், சென்னை, 1970.

**சந்தானம் எஸ்.,** கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1981.

**இந்தியப் பழங்குடி மொழிகள்:** ஒரு குறிப்பிட்ட பகுதி, பேச்சு, பண்பாட்டு ஒருமை அல்லது சமுதாயக் கட்டமைப்புக் கொண்ட சமுதாயப் பிரிவே பழங்குடியென மானிடவியலாரும் சமூகவியலாரும் வரையறுக்கின்றனர். இம்மக்கள் பேசும் மொழிகள் பழங்குடி மொழிகளாகும். இன்று இந்திய நாட்டில் ஏறத்தாழ நானூறுக்கும் அதிகமான பழங்குடி மக்களினங்கள் வாழ்கின்றன. இந் நாட்டின் மக்கள் தொகையில் 6.87 விழுக்காட்டினர் பழங்குடி மக்களாவர்.

இப்பழங்குடிகளுள் அதிக மக்கள்தொகை கொண்ட கோண்டுகள் மத்திய பிரதேசம், மகாராட்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இராசசுத்தான், குசராத்து, மகாராட்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் பில்லர்கள் (Bhils), பீகார், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் வாழும் சந்தால்கள் ஆகியோர் மிகுதியான மக்கள்தொகை கொண்ட பழங்குடியினராவர். தேசிய அளவில் கவனத்தைக் கவரும் சிறுபான்மைப் பழங்குடியினர் அந்தமானியர் ஆவர்.

இந்திய நாட்டில் 1600-க்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இந் நாட்டில் பேசப்படும் மொழிகளனைத்தும் இந்தோ – ஆரிய மொழிகள், திபேத்திய –பர்மிய மொழிகள், ஆசுதிரிக்கு மொழிகள், திராவிட மொழிகள் என்னும் நான்கு பெரும் பிரிவுகளுள் அடங்கும். இவற்றுள் இந்தோ – ஆரிய மொழிகளை 32,17,20,700 (73 விழுக்காடு) மக்களும், திராவிட மொழிகளை 10,74,10,820 (24.4 விழுக்காடு) மக்களும், ஆசுதிரிக் மொழிகளை 61,92,495 (1.5 விழுக்காடு) மக்களும், திபேத்திய – பர்மிய மொழிகளை 31,83,801 (0.73 விழுக்காடு) மக்களும் பேசுகின்றனர்.

அட்சன் (Hodgson) என்பவர் முதன்முதலில் இந்தியப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்த அறிஞராவார். இவர் கி.பி. 1828-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1853-ஆம் ஆண்டுவரை பழங்குடி மொழிகளைப் பற்றிப் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். இவருக்குப் பின் பி. சுமிட்த்து (B. Schmidt) கி.பி. 1837-ஆம் ஆண்டில் தோடா மொழியைப் பற்றியும், கி.பி. 1838-இல் ஆர். இலீச்சு (R. Leech) என்பவர் பிராகூயி மொழியைப் பற்றியும் ஆராய்ந்தனர். இந்தியப் பழங்குடி மொழிகளைப் பற்றிப் பெருமளவில் ஆய்வுக் கட்டுரைகள் கி.பி. 1840-ஆம் ஆண்டிலிருந்தே வெளிவரலாயின. இந்தியப்பழங்குடி மொழிகளைப் பற்றி 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முறையாக ஆராய்ந்தவர் கிரியர்சன் (Grierson) ஆவர். இவர் 'இந்திய மொழியியல் ஆய்வு' (Linguistic Survey of India) என்னும் பெயரில் பதினொரு தொகுதிகளை வெளியிட்டார். அந்தமான்-நிக்கோபார்த் தீவில் பேசப்படும் அந்தமானிய மொழி, ஓங்கி (Onge) மொழி, சாரவா (Jarawa) மொழி, சென்டினலீசு

(Sentenelese) மொழி போன்றவை வகைப்படுத்தப் படாத மொழிகளுள் அடங்கும். திபேத்திய – பர்மிய மொழிகளும் ஆசுதிரிக்கு, மொழிகளும் பழங்குடி மக் களால் மட்டுமே பேசப்படுகின்றன.

ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்திற்கு மாக்சு முல்லர் என்னும் அறிஞரே 'முண்டா' என்ற பெயரை வழங் கினார். இம்மொழிகளைத் திராவிட மொழிகளிலி ருந்து வேறுபடுத்தியவரும் இவரேயாவார். சார்சு கேம்ப்பெல் (George Campbel) வழங்கிய 'கோலா ரியன்' என்ற பெயர் நீண்ட நாள்கள் வழக்கில் இல்லை. முண்டா மொழிகள் பேசும் பழங்குடி மக்கள் மத் திய இந்தியாவின் மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். ஆசுதிரிக்கு – ஆசியாடிக்கு என்ற பெயர் மோன் (பர்மா) வியட்நாமிய மொழிகளையும் உள்ளடக்கிய தாகும். இம் மொழிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாய் 'முண்டா' என்ற பெயரில் வழங்கப்பட்டன. ஆசுதிரிக்கு மொழிக் குடும் பம் ஆசுதிரோனேசியன் துணைக்குடும்பம், ஆசுதிரோ – ஆசியாடிக்குத் துணைக் குடும்பம் என்ற இரண்டு பெரும்பிரிவுகளை உடையது. முதற்பிரிவு மடகாசுகர், இந்தோனேசியா, பசிபிக்குத்தீவுகள் ஆகியவற்றில் வழங் கும் மொழிகளை உள்ளடக்கியதாகும். இரண்டாம். பிரிவிலுள்ள மான்கோமர் பர்மாவில் பேசப்படுகிறது. மலாக்கா நாட்டுப் பழங்குடியினர் பேசும் சாக்கை (Sakei), செமாங்கு (Semang) ஆகிய மொழிகள் இப்பிரிவைச் சார்ந்தனவாகும். நிக்கோபார்த் தீவில் வாழும் நிக்கோபரிப் பழங்குடிகள் பேசும் மொழி யும் இப்பிரிவைச் சாரும். முண்டா மோன் ஆகிய மொழிகளுக்கு இது ஓர் இணைப்புச் சங்கிலியாக விளங்குகிறது. அசாம் மாநிலத்தில் பேசப்படும் காசி (Khasi) மொழி இலிங்-காம் (Lyng-ngam), சிண்டெங்கு (Synteng), (War)வார் ஆகிய கிளைமொழி களைப் (Dialects) பெற்றிருக்கிறது. திபேத்திய- பர்மிய மொழிக் குடும்பத்திற்கு இடையே இம்மொழி பேசும் பகுதி ஒரு தீவாக விளங்குகிறது. மோன் காசி ஆகிய மொழிகள் ஒரே வாக்கிய அமைப்புடை யனவாகும்.


முண்டா மொழிப்பிரிவு இப்பொழுது இந்தியா வில் பேசப்படும் பரப்பிலும் மிகுதியான பரப்புடைய நிலப்பகுதியில் பேசப்பட்டிருக்க வேண்டும். முண்டா மொழிகளில் பாதிக்கு மேற்பட்டன ஒரிசாவின் தென்கோடியிலிருக்கும் கொராபுட்டு மாவட்டத்தில் பேசப்படுகின்றன. இம்மொழிக் குடும்பத்தினர் மத் தியபிரதேசம், பீகார், ஒரிசா முதலிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இம்மொழிகள் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ அறுபது இலட்சமாகும். இம்மொழிக் குடும்பத்தில் சந்தாலி மொழியினைப் பெரும்பாலோர் பேசுகின்றனர்.

கிரியர்சன் தம் 'இந்திய மொழியியல்' ஆய்வின் நான்காம் தொகுதியில் ஏழு ஆசுதிரிக் மொழிகளைப் பற்றி எழுதியுள்ளார். இம்மொழிக் குடும்பம் பற்றி வெளி உலகு நன்கு அறியும் முன்பே, போடிங்கு (Bodding) என்பவர் சந்தாலி மொழியைப் பற்றியும், கோப்மன் (Holfmann) முண்டாரி மொழியைப் பற்றி யும், திராக்கே (Drake) கொர்க்கு மொழியைப் பற்றி யும், இராமமூர்த்தி சவரா மொழியைப் பற்றியும் ஆராய்ந்தனர். கி.பி. 1951–1955-க்கு இடைப்பட்ட காலத்தில் மூன்று தென்முண்டா மொழிகளைப் பற்றிப் புதிதாக அறியும் வாய்ப்பேற்பட்டது. சுதி பூசன் பட்டாசாரியா பரெங்கி, போண்டோ (ரெமோ என்றும் அழைப்பர்) திடாய் போன்ற மொழிகளை ஆராய்ந்தார்.

பின்னோ (Pinnow) என்பவரின் முண்டா ஒப்பி யல் ஒலியியல் (1959), முண்டா ஒப்பியல் வினைகள் ஆகிய இரு நூல்களும் முண்டா ஒப்பியல் மொழியிய லுக்கு வழிவகுத்தன எனில் அது மிகையாகாது. இவ ரைத் தொடர்ந்து நார்மன் சைடு (Norman Zide) என்பவரும் இம்மொழிகளைப் பற்றி நிறைய ஆய்வு செய்துள்ளார். இவர்களுக்கு முன்பே குயிப்பர் (Kuiper) இம்மொழிகளைப் பற்றி ஆராய்ந்து, முறை யான அறிவியல் ஆய்வுமுறைக்கு வழிவகுத்தார் என லாம். இம்மூவரும் ஆசுதிரிக்கு மொழி வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெறுகின்றனர். இம்மொழிகள் பற்றிய படிப்புக்குச் சிறந்த அடித்தளத்தை அமைத் துத் தந்த பெருமை இவர்களையே சாரும்.

சயாம்-சீனத் துணைமொழிக் குடும்பம், திபேத் திய-பர்மியத் துணை மொழிக் குடும்பம் என இரண் டாகத் திபேத்திய-சீன மொழிக் குடும்பம் பிரிக்கப் பட்டுள்ளது. திபேத்திய – பர்மியத் துணை மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பழங்குடி மொழிகள் அனைத் தும் பெரும்பாலும் இந்தியாவில் பேசப்படுகின்றன. இம்மொழிகள் அசாம், மிசோராம், அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் மாநிலங்களிலும் பூட்டான் நாட்டிலும் பேசப் படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கொண்ட இம்மொழிக் குடும்பத்தின் மக்கள் தொகை இந்திய மக்கள் தொகையில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகும். இம்மொழிகளைக் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. திபேத்திய – பர்மிய மொழிகளின் தனிச் சிறப்பு அவற்றின் தொனியாகும் (Tone).

திபேத்திய-பர்மியத் துணை மொழிக் குடும்பம் திபேத்திய-இமாலயன் பிரிவு, வடக்கு அசாம் பிரிவு, அசாம்-பர்மியப் பிரிவு என மூன்று பிரிவுக ளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அசாம்-பர்மியப் பிரிவு மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.




அவை, போடா பிரிவு (Boda group), நாகர் பிரிவு (Naga group), நாகா-குக்கிப் பிரிவு (Naga-Kuki group), கச்சின் பிரிவு(Kachingroup), குக்கி சின் பிரிவு (Kuki-chin group), பர்மாப் பிரிவு (Burma group), இலோலோ-மோசாப் பிரிவு (Lolo-moso group), சக்கு (லூயி) பிரிவு (Sak (luei) group) ஆகும். திபெத்திய-இமாலயன் பிரிவு மேலும் இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது. போடியாவும் இமாலயன் பிரிவு மொழிகளும் இவற்றில் அடங்கும். போட்டியா (Bhotia) பிரிவைச் சார்ந்த பல்தி (Balti), இலடாக்கி (Ladakhi), இலகூலி, மோன்பா போன்ற மொழிகள் இவற்றில் அடங்கும். இமாசலப் பிரதேசத்தில் பேசப் படும் கின்னோரி (Kinnauri), சிக்கிமில் பேசப்படும் இலெப்சா (Lepcha), குருங்(Gurung), முர்மி (Murmi), மகரி (Magari), நேபாளி, இரங்கு (Rang) போன்ற மொழிகள் இமாலயன் பிரிவைச் சார்ந்தனவாகும். வடக்கு அசாம் பிரிவில் ஆதி (Adhi), தப்ளா (Dafla), அபோர் (Abor), மிரி (Miri), மிசுமு (Mishmi) போன்ற மொழிகள் அடங்கும். அசாம்-பர்மியப் பெரும் பிரிவு மேலும் ஏழு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டுள்ளதை மேலே காணலாம். போடோ பிரிவில் அசாமில் பேசப்படும் போடோ, இலாலுங்கு (Lalung), திமாசா (Dimasa), இரபா (Rabha), மிக்கிரி (Mikiri) போன்றவையும், மேகாலயாவில் பேசப் படும் கேரோ (Garo), கொச்சு(Koch) போன்ற மொழி களும் இவற்றில் அடங்கும். நாகர் பிரிவு மேலும் ஐந்து உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை மேலை நாகாப் பிரிவு; நடு நாகாப்பிரிவு, கீழை நாகாப் பிரிவு, நாகா-போடோப் பிரிவு, நாகா-குக்கித துணைப்பிரிவு ஆகும். நாகாலாந்தில்

பேசப்படும் அங்காமி (Angami), செமா, கேழா (Kazha), ஆவோ (Ao), உலோதா (Lotha), சங்கு (Chang), கொன்யக்கு (Konyak), நாகா, சங்தம் (Sang tam), பொம் (Phom), இம்சுங்க்ரே, கேயின் நுன்கம் போன்ற மொழிகளும், மணிப்பூரில் பேசப்படும் கபுய் (Kabui), மாவோ (Mao), தங்கூல் (Tanghul) போன்ற மொழிகளும், அருணாசலப் பிரதேசத்தில் பேசப்படும் நோக்டே (Nocte), வாஞ்சோ, தங்க்சா (Tangsa) போன்ற மொழிகளும் நாகா மொழிப் பிரிவைச் சார்ந்தனவாகும். கச்சின் மொழிப் பிரிவில் கச்சின் (Kachin) என்ற மொழி மட்டுமே அடங்கியுள்ளது. குக்கி-சின் (Kuki-chin) மொழிப்பிரிவு ஆறு உட்பிரிவு களைக் கொண்டுள்ளது. அவை மைதை பிரிவு, (Meithei group), வடக்கு சின் பிரிவு (North Chin group); நடு சின் பிரிவு, பழைய குக்கிப் பிரிவு, தென் சின், வகைப்படுத்தப்படாத குக்கி-சின் ஆகியன வாகும். மணிப்பூரில் பேசப்படும் மணிப்பூரி, மைதை, தாடோ (Thado), பைதே (Paite), வைபை(Vaiphei), குக்கி போன்ற மொழிகளும், அசாமில் பேசப்படும் பவீ, திரிபுராவில் பேசப்படும் கலம் (Halam) போன்ற மொழிகளும் இப்பிரிவில் அடங்கும். பர்மிய மொழி போன்ற மொழிகள் பர்மிய மொழிப் பிரிவிலும், இலோலோ, மோசோ, இலிசு (Lisu), அகா (Aka), இக்வி(Kwi), நீயி(Nyi) போன்ற மொழிகள் உலோ லோமோசோ மொழிப்பிரிவிலும் இலூயி(Lui)போன்ற மொழிகள் சக்கு மொழிப் பிரிவிலும் அடங்கும்.

மணிப்பூர் மாநிலத்தில் பேசப்படும் மணிப்பூரி மொழி இலக்கிய வளம் நிறைந்த மொழியாகும். மணிப்பூர் மாநிலத்தில் 64 விழுக்காட்டினர் இம் மொழி பேசுகின்றனர். மணிப்பூரி மொழிக்குத் தனி வரிவடிவம் இருந்தது. இப்பொழுது வங்காள வரி வடிவத்திலும் எழுதப்படுகிறது. நேபாளத்தில் பேசப் படும் நேபாளி மொழியும் இலக்கிய வளம் நிறைந்த மொழியாகும். நாகரி எழுத்து வடிவத் தைப் பின்பற்றுகின்றனர். கிழக்கு நேபாளம், சிக்கிம், தார்சிலிங்கு ஆகிய இடங்களில் பேசப்படும் இலெப்சா மொழிக்குத் திபேத்திய மொழியினின்றும் வரிவடிவம் அமைந்துள்ளனர். இவ் வரி வடிவத்தில் நூல்களும் வெளியாகியுள்ளன. இராபர்ட் சாபேர் (Robert Shafer) என்பவர் நாகா மொழிப் பிரிவைச் சார்ந்த இலெப்சா மொழி எவ்வாறு தார்சிலிங்கில் பேசப்படுகிறது என வியப்படைகிறார். இமாலயன் மொழிகள் எண்ணுப் பெயர்களைப் பொறுத்தமட் டில் முண்டா மொழிகளைப் பின்பற்றுகின்றன. இம் மொழிக் குடும்பத்தில் மற்றொரு சிறப்பான மொழி கேரோ (Garo) வாகும். இம்மொழி கேரோ குன்று களில் பேசப்படுகிறது. கேரோ மொழிக்கு இலக்கியங் களும் கிளைமொழிகளும் உண்டு. இரபா மொழி கேரோ மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய தாகும். நாகா மொழிகளில் அங்காமி நாகா மிகவும் சிறப்பானதொன்றாகும். 'குக்கி', 'சின்' என்ற பெயர் கள் அண்டை மொழியினரால் வழங்கப்பட்டவையா கும். திபேத்தோ-இமாலயன் மொழிகள் சிக்கலான ஒலியனியல் அமைப்பையும் போடோ, நாகா, குக்கி சின் பிரிவுகள் எளிய ஒலியனியல் அமைப்பையும் கொண்டுள்ளன. பெரும்பாலான மொழிகளின் அடிச் சொற்கள் ஓரசைச் சொற்களாக (Monosyllables) உள்ளன.

அகா (Aka) மொழியைப் பற்றி இராபின்சனும் ஆண்டர்சனும் (Anderson) ஆராய்ந்துள்ளனர். அபோர், மிரி, தப்ளா மொழிகளுக்கிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம். பர்டம் பேசு (Burton Page) என்பவர் குருங்கு (Gurung) மொழியைப் பற்றி யும், இசுபிரிக்கு (Sprigg) என்பவர் முர்மி (Murmi) மொழியைப் பற்றியும், பர்லிங்கு (Burling) என்பவர் கேரோ மொழியைப் பற்றியும் ஆராய்ந்துள்ளனர். எண்டர்சனின் (Hendersan) ஆய்வுதான் உலுசாயி மொழி பற்றிய முன்னோடி ஆய்வாகும். அம்மொழி யைப் பற்றிப் பர்லிங்கு என்பவரும் வில்லியம் பிரைட்டு (William Bright) என்பவரும் ஆராய்ந்துள்ளனர் என் பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பர்லிங்கு தொல் போடோ மொழியை மீட்டுருவாக்கம் செய்துள் ளார். இலாப்லர் (Loffler) காமி ஒலியனியலையும், பர்மியகுஒலியனியலையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். சீன மொழியியல் அறிஞர்கள் யூவான் (Yuan) அகா மொழியையும் மா (Ma) நியி (Nyi) மொழி யையும் ஆராய்ந்துள்ளனர். தாடோ மொழியைத் திருமலையும் சிரீகிருட்டிணனும் ஆராய்ந்துள்ள னர். திபேத்திய பர்மிய மொழிக் குடும்பத்தில் இராபர்ட்டு சாப்பரின் (Robert shaffer) பணி குறிப் பிடத்தக்கது.

பழங்குடி மக்களுள் மிகச் சிலரே இந்தோ-ஆரிய கிளைமொழிகளைப் பேசுகின்றனர். தனிப்பட்ட இந்தோ-ஆரிய மொழிகளைப் பேசும் பழங்குடி மக் கள் இல்லை. இவர்கள் ஆரியமொழி அல்லாத ஒன்றைப் பேசியவர்களாக இருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. அசோங்கு(Hajong) காரியா (Khar ia), உலோட்டா, மால்பகாடி, பைகா, பத்ரா, அல்பா (Halba), பில்லர் போன்ற பழங்குடி மக்கள் இந்தோ ஆரியக் கிளைமொழிகளைப் பேசுகின்றனர். இக் கிளைமொழிகள் கிழக்கு, மத்திய மேற்கு இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன.

இந்திய நாட்டில் வழங்கும் மொழிகளுள் இந்தோ-ஆரிய மொழிகளுக்கு அடுத்தபடியாக மிகுதி யான மக்களால் பேசப்படுவன திராவிட மொழிகள். பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் திராவிட

மக்களால் பேசப்பட்டு வருகிற இம்மொழிகளுள் சில இலக்கியம் கண்டவை, பல இலக்கியம் காணாதவை; சில திருந்தியவை; பல திருந்தாதவை; சில கோடி மக்களால் பேசப்படுபவை; பல ஆயிரக்கணக்கான மக்களால் பேசப்படுபவை. இன்று 22 க்கும் அதிகமான திராவிட மொழிகள் உள்ளன என மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிட மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகள் இலக்கிய மொழிகள் (Literary Languages) ஆகும். துளு, குடகு ஆகிய மொழிகள் இலக்கிய வளமில்லா மொழிகளாகும். மற்றெல்லாத் திராவிட மொழிகளும் பழங்குடி மக்களால் பேசப்படுவனவாகும்.

ஒரிசா மாநிலத்தில் பேசப்படுகிறது. கூபி மொழி ஒரிசாவிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் பேசப்படுகிறது. கோலாமி மொழி பேசும் பழங்குடி மக்கள் ஆந்திரப் பிரதேசத்தில் அதிலாபாது மாவட்டத்திலும் மகாராட்டிர மாநிலத்தில் வார்தா மாவட்டத்திலும் வாழ்கின்றனர். பர்சி (Parji) மொழி பேசும் பழங்குடி மக்கள் மத்திய பிரதேசத்திலுள்ள பசுதார் மாவட்டத்தில் வாழ்கின்றனர். இம்மொழியினரைப் 'பர்சாசு' என்றழைப்பர். கொண்டா அல்லது கூபி என்னும் மொழி பேசும் பழங்குடி மக்கள் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த விசாகப்பட்டினம், சீகாகுளம் ஆகிய மாவட்டங்களிலும் ஒரிசாவைச் சார்ந்த கொராபுட்டு மாவட்டத்திலும் வாழ்கின்றனர். இம்மக்களைத் 'கொண்டதொரா' என்றும் 'கூபி' என்றும் அழைப்பர். கதபா மொழி பேசும் பழங்குடி

| திராவிட மொழிகள் | | |
|---|---|---|
| தென்திராவிட மொழிகள் | நடுத்திராவிட மொழிகள் | வடதிராவிட மொழிகள் |
| தமிழ் | தெலுங்கு | குரூக்கு |
| மலையாளம் | கோண்டி | மால்தோ |
| கன்னடம் | கூயி | பிராகூயி |
| குடகு | கூவி | |
| துளு | கோலாமி | |
| தோடா | பர்சி | |
| கோத்தா | கொண்டா | |
| | நாயக்கி | |
| | பெங்கோ | |
| | முண்டா | |

ஒரவன் பழங்குடி மக்கள் பேசும் குருக்கு மொழி பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பேசப்படுகிறது. மால்தோ மொழி பேசும் பழங்குடி மக்கள் மேற்கு வங்கத்தில் இராசுமகால் குன்றுப்பகுதிகளிலும் பீகாரில் சந்தால், பர்கனா பகுதிகளிலும் வாழ்கின்றனர். இந்தியாவுக்கு வெளியே பேசப்படும் ஒரே திராவிட மொழி பிராகூயி மொழியாகும். இம்மொழி பாகிசுத்தானில் பலுச்சிசுத்தான் பகுதியில் பேசப்படுகிறது. கோண்டி என்னும் பழங்குடி மொழி ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா, மகாராட்டிரம் போன்ற நான்கு மாநிலங்களில் பேசப்படுகிறது. திராவிடப் பழங்குடி மொழிகளுள் இம்மொழியே மிகுதியான மக்களால் பேசப்படுகிறது. கோந்து மக்கள் பேசும் கூயி மொழி

மக்கள் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த சீகாகுளம் மாவட்டத்தில் சாலூர் தாலுக்காவில் வாழ்கின்றனர். இம்மொழியினைக் 'கொணகொர் கதபா' என்றும் கூறுவர். நாயக்கி மொழி பேசும் பழங்குடி மக்கள் மகாராட்டிரத்திலுள்ள சந்தாப் பகுதியிலும் பெரார்ப் பகுதியிலும் வாழ்கின்றனர். பெங்கோ மொழி பேசும் பழங்குடி மக்கள் ஒரிசாவிலுள்ள கொராபுட்டு மாவட்டத்திலும் தசமந்தபூர்ப் பகுதியிலும் காலகண்டிப்பகுதியிலும் வாழ்கின்றனர். முண்டா மொழி பேசும் பழங்குடி மக்கள் ஒரிசாவிலுள்ள கொராபுட்டுப் பகுதியில் வாழ்கின்றனர். தமிழகத்தில் தோடா, கோத்தா மொழிகள் பேசும் பழங்குடி மக்களும்; கன்னடக் கிளை மொழியினைப் பேசும் கசபர் பழங்குடி மக்களும்; காட்டு நாயக்கர் பழங்குடி மக்க

ளும், தமிழின் கிளைமொழியினைப் பேசும் இருளர் பழங்குடி மக்களும்; முள்ளுகுறும்பா, பெட்டகுறும்பா மொழிகள் பேசும் பழங்குடி மக்களும் நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்றனர். காடர் மொழி பேசும் பழங்குடி மக்கள் கேரளாவிலும் கோயமுத்தூர் மாவட்ட ஆனைமலைப் பகுதியிலும் வாழ்கின்றனர். தமிழின் கிளைமொழியினைப் பேசும் காணிக்காரப் பழங்குடி மக்கள் கேரளாவிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் வாழ்கின்றனர். தமிழின் கிளைமொழிகளைப் பேசும் மலையாளிப் பழங்குடி மக்கள் தமிழகத்தி லுள்ள வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், திருச்சி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

இம்மொழிகள் பற்றிய ஆய்வுகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கின. பிரான்சிசு எல்லீசு (Francis Ellis) என்பவர் நான்கு திராவிட இலக்கிய மொழிகளுக்கும் மால்தோ போன்ற மொழிகளுக்குமிடையேயுள்ள உறவைக் கண்டுபிடித்தார். இம்மொழிகளைப் பற்றிய தெளிவான கருத்தைத் தந்தவர் டாக்டர் கால்டுவெல் (Dr. Caldwell) அவர்களேயாவர். கி.பி. 1856- ஆம் ஆண்டில் வெளியான அவருடைய நூலான 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages) தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகள் இந்தோ-ஆரிய மொழிகளிலிருந்தும் முண்டா மொழிகளிலிருந்தும் மாறுபட்டன என்பதனைத் திட்டவட்டமாக விளக்கியது. மேலும், இவர் திராவிட மொழிகள் என்னும் பெயரை மொழியியல் உலகம் அறியுமாறு செய்தார். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேலைநாட்டிலிருந்து வந்த சில கிறித்தவ சமய ஊழியர்கள் பல திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்து நூலாக வெளியிட்டனர். திராவிட மொழியியல் பேரறிஞர் எமனோ (M.B. Emeneau) திராவிடப் பழங்குடி மொழியான தோடா, கோத்தா, கோலாமி போன்றவற்றை ஆராய்ந்தார். திராவிட மொழியியல் பேரறிஞர்கள் பர்ரோ (T. Burrow), சுதிபூசன் பட்டாச்சாரியா (Sudhibushan Bhattacharya) ஆகியோர் இணைந்து பர்சி, நாயக்கி, கூயி, கூவி, கதபா, கோண்டி, பெங்கோ, முண்டா முதலான நடுத்திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்தனர். திராவிடப் பழங்குடி மொழிகளைப் பெருமளவில் ஆராய்ந்த பெருமை இம்மூன்று பேரறிஞர்களையே சாரும். பேராசிரியர்கள் ப. கிருட்டிணமூர்த்தி, பி.எசு. சுப்பிரமணியம் போன்ற அறிஞர்களும் திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தமான் தீவில் வாழும் ஓஞ்சி, சாரவா, சென்டினலிசு, அந்தமானியர் போன்றோர் பேசும் மொழிகள் இந்நான்கு மொழிக்குடும்பத்திலும் அடங்கா. இவை வகைப்படுத்தப்படாத மொழிகளின்கீழ் அடங்கும்.

மனிதனுடைய சமூகப் பழக்க வழக்கங்களில் மொழி பேசும் பண்பும் ஒன்று. ஒரு மொழியில் காணப்படும் சொற்கள், அதன்கண் காணப்படும் அமைப்பு முறை போன்றவை அம்மொழி பேசுவோனுடைய வாழ்வையும் வரலாற்றையும் காட்டுவனவாக உள்ளன. பழங்குடி மொழி ஆய்வு வரலாறு அற்ற பழங்குடி மக்களின் வாழ்க்கையையும் வாழ்க்கை வளர்ச்சியையும் அறியத் துணை புரிகிறது. சு.ச.

**இந்தியப் பித்தர் சட்டம்:** இச்சட்டம் 1912-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்டது. சம்மு காசுமீர் பகுதியைத் தவிர்த்து இந்தியா முழுவதும் இந்தியப் பித்தர் பற்றிய சட்டம் (The Indian Lunacy Act) செல்லத்தக்கது ஆகும்.

பேதைமை யுடையவர் அல்லது மனநிலைக் கோளாறு உள்ளவர் (An Idiot or "Person of unsoundmind) பித்தர் என இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளார். பித்தர் என்பவரை எங்கு எவருடைய ஆணையின் அடிப்படையில் தங்க வைப்பது என்பது குறித்தும் அவருக்குச் சொத்து ஏதுமிருந்தால் அதைப் பராமரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் இச்சட்டத்தில் முதன்மையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பித்தர் காப்புமனை (Asylum) என்பது மத்திய அல்லது மாநிலஅரசால் நிறுவப்பட்ட அல்லது உரிமம் வழங்கப்பட்ட பித்தர் காப்புமனை அல்லது பித்தர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட மருத்துவ மனையைக் குறிக்கும் என இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. பித்தர் என்பவரைப் பித்தர் காப்புமனையில் தங்க வைப்பதற்கான வகைமுறை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பித்தர் காப்பு மனைக்கும் மூன்று நபர்களுக்குக் குறையாத வகையில் பார்வையாளர்களை மாநில அரசு நியமிக்க வேண்டும். அவர்களுள் ஒருவர் மருத்துவ அதிகாரியாக இருக்க வேண்டும். அரசுப்பணியிலிருக்கும் பதிவு பெற்ற மருத்துவ அதிகாரியும், இச்சட்டத்தின்படி மருத்துவ அதிகாரியாக மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவராகத் தொழில் புரிபவரும், மருத்துவ அதிகாரி என்ற விளக்கத்தில் கட்டுப்பட்டவர். சிறைச்சாலைகளின் தலைமை அதிகாரி (Inspector Gen-

eral of Prisons) அவர் வகிக்கும் அப்பதவியின் காரணமாக அவரது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பித்தர் காப்புமனைகளுக்குப் பார்வையாளராவார்.

ஒரு பித்தர் காப்புமனையில் சிகிச்சை பெற விரும்பினால் அவர் தாக்கல் செய்யும் மனுவின் அடிப்படையில் இரண்டு பார்வையாளர்கள் அனுமதி அளித்தால் அம்மனுதாரரை அம்மனையில் தங்க அனுமதிக்கலாம். ஆனால், வெளியேற விருப்பம் தெரிவித்து அம்மனுதாரர் எழுத்து மூலம் அறிவிப்புக் கொடுத்தால் 24 மணி நேரத்துக்குள் அவரை அம்மனையிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும்.

பித்தர் என்பவரைப் பித்தர் காப்புமனைக்கு அனுப்ப விரும்புபவர் பொதுவாக அப்பித்தர் வசிக்கும் பகுதியிலுள்ள அதிகாரம் வழங்கப்பட்ட முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர்(First Class Magistrate) முன்பு மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அம்மனுவைக் கணவன் அல்லது மனைவி தாக்கல் செய்ய வேண்டும். கணவன் அல்லது மனைவி இல்லாவிட்டாலோ அவர்களும் பித்தர்களாக இருத்தல், இந்தியாவில் இல்லாமலிருத்தல், போன்ற காரணங்களினால் மனுத்தாக்கல் செய்யமுடியாமல் போனாலோ பித்தருடைய நெருங்கிய உறவினர் அம்மனுவைத் தாக்கல் செய்யலாம்.மனுத்தாக்கல் செய்பவர் வயது ரிமை அடைந்தவராகவும், மனுத்தாக்கல் செய்வதற்கு முன் பதினான்கு நாட்களுக்குள் பித்தரை நேரில் பார்த்தவராகவும் இருக்க வேண்டும். அம்மனுவுடன் இரண்டு மருத்துவச் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்விரண்டு சான்றிதழ்களை வழங்கியவர்கள் பித்தரை மனுத்தாக்கல் செய்வதற்கு முன் ஏழு நாட்களுக்குள் மருத்துவப் பரிசோதனை செய்திருக்க வேண்டும். அவ்விரண்டு சான்றிதழ்களை வழங்கியவர்களுள் ஒருவர் மருத்துவ அதிகாரியாக இருக்க வேண்டும். மேற்கூறிய குற்றவியல் நடுவர் தக்க விசாரணை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும். பித்தர் என்று முடிவு எடுத்தால் பித்தர் காப்புமனையில் அவரைத் தங்க வைக்க ஆணை பிறப்பிக்கலாம். அதற்குப் பித்தர் காப்புமனையின் பொறுப்பாளர் பித்தரை அங்குத் தங்க வைக்க ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும், யாராவது பித்தரை அங்குத் தங்க வைக்கும் செலவை ஏற்றுக் கொள்வதாக ஒப்புக் கொள்ள வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் நடுவர் அவ்வாறு ஆணை பிறப்பிக்கலாம். ஆனால், அப்பித்தர் அபாயகரமானவராகவும் வெளியிலிருக்கத் தகுதியற்றவராகவுமிருந்தால், மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படாத நிலையிலும் அப்பித்தரைப் பித்தர் காப்புமனைக்கு நடுவர் அனுப்ப ஆணையிடலாம்.

ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பிலுள்ள காவல்துறை அதிகாரி அவரது அதிகார வரம்புக்குட்பட்ட பகுதியில் அவ்வதிகாரி பித்தர் என நம்புவதற்குப் போதிய காரணமுள்ள நபர் அலைந்து திரிந்து கொண்டிருந்தால் அவரைக் கைது செய்யலாம். மேலும், அப்பகுதியில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய பித்தர் இருப்பதாக அவ்வதிகாரி நம்பினால் அவ்வாறான பித்தரை அவர் கட்டாயம் கைது செய்ய வேண்டும். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக அதிகாரம் படைத்த தொடர்புடைய குற்றவியல் நடுவரிடம் அனுப்பப்பட வேண்டும். அந்நடுவர் மருத்துவப் பரிசோதனைக்கு உத்தரவிட வேண்டும். தக்க விசாரணை நடத்தி அந்நபர் பித்தர் என்று முடிவுசெய்தால் அந்நபரைப் பித்தர் காப்புமனைக்கு அனுப்ப அந்நடுவர் ஆணையிட வேண்டும். அப்பித்தரின் உறவினர் அல்லது நண்பர் விரும்பினால் அப்பித்தர் உரிமம் வழங்கப்பட்ட பித்தர் காப்புமனைக்கு அனுப்பப்படலாம். ஆனால், அதற்கான செலவை அவ்வாறு விரும்பும் நண்பர் அல்லது உறவினர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த நண்பர் அல்லது உறவினர் விரும்பித் தக்க உறுதிப் பத்திரம் எழுதிக் கொடுத்தால் அவரிடம் அப்பித்தர் ஒப்படைக்கப்படலாம்.

பித்தர் எனப்படுபவர் தக்க பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டில் இல்லாமலிருந்தாலோ, அப்பித்தரை அவர் பாதுகாப்பாளர் கொடுமைப்படுத்தினாலோ, பராமரிக்கத் தவறினாலோ அது குறித்துத் தொடர்புடைய காவல்துறை அதிகாரி தொடர்புடைய குற்றவியல் நடுவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்பித்தரைப் பராமரிக்கச் சட்டப்படி கடமைப்பட்டவர் எவரும் இல்லையெனில், தக்க விசாரணை நடத்தி அப்பித்தரைப் பித்தர் காப்புமனைக்கு அந்நடுவர் அனுப்பலாம். அப்பித்தரைப் பராமரிக்கச் சட்டப்படி கடமைப்பட்டவர் யாருமிருந்தால் அவ்வாறு கடமைப்பட்டவர் பித்தரை நல்லமுறையில் பராமரிக்க வேண்டும் என நடுவர் ஆணையிடலாம். அவ்வாணையை அவ்வாறு கடமைப்பட்டவர் வேண்டும் என்றே மீறினால் அவரை ஒருமாத காலம் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு அந்நடுவர் ஆணையிடலாம்.

மேற்கூறிய வகைகளில் விசாரணை நடத்தி இறுதி ஆணை பிறப்பிக்கும் வரை, பித்தரின் பாதுகாப்புக் குறித்து நடுவர் தக்க ஆணை பிறப்பிக்கலாம். மருத்துவப் பரிசோதனைக்காகப் பித்தர் என நம்பப்படுபவரை ஒரு தடவையில் பத்து நாட்களுக்கு மேல் நீடிக்காத வகையில் பாதுகாப்பில் நடுவர் வைக்கலாம். ஆனால் நடுவர் முன்பு, முதலில்

கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்பட்டு அக்காலம் நீடிக்கக்கூடாது.

மேற்கூறிய வகைகளில் குற்றவியல் நடுவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பெருநகரைப் (Presidency Town) பொறுத்த மட்டிலும் காவல் துறை ஆய்வாளர் (Commissioner of Police) பயன் படுத்துவார்.

மேற்கூறிய வகையில் குற்றவியல் நடுவர் அல்லது காவல்துறை ஆய்வாளர் அவர்களால் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்படும் பித்தரை அவ்வதிகாரிகள் பிறப்பிக்கும் இறுதி ஆணைக்குமுன் ஏழு நாட்களுக்குள் மருத்துவ அதிகாரி பரிசோதனை நடத்தியிருக்க வேண்டும். பித்தர் காப்புமனையில் தங்க வைக்க வேண்டும் என மேற்கூறிய அதிகாரிகள் பிறப்பிக்கும் ஆணை ஒரு மாத காலத்திற்கு மட்டும் செல்லத்தக்கது. அக்காலத்துக்குள் தொடர்புடைய பித்தர் பித்தர் காப்புமனையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஒருவர் மனநிலைக் கோளாறு உள்ளவரா என்றும், அக்கோளாறினால் தம்மையும் தம் அலுவல்களையும் கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளவரா என்றும், பெருநகராயிருந்தால் உயர்நீதிமன்றமும் வேறு இடமாக இருந்தால் மாவட்ட நீதிபதியும் விசாரணை செய்யலாம். அதற்கான மனுவை மனநோயாளி எனச் சொல்லப்படுபவரின் உறவினர் அல்லது அரசுத் தலைமை வழக்கறிஞர் (Advocate-General) உயர்நீதி மன்றத்துக்குமுன் தாக்கல் செய்யவேண்டும். உறவினர் அல்லது இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் காப்பாளர் (Curator) என்று சொல்லப்படுபவர் அல்லது அரசு வழக்கறிஞர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மாதிரியான மனுவை மாவட்ட நடுவர் முன்னர்த் தாக்கல் செய்யலாம்.

மேற்கூறிய வகையில் தாக்கல் செய்யப்படும் மனுவின் அடிப்படையில் தொடர்புடைய நடுவர் விசாரணை செய்து தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் மனநிலைக் கோளாறு உள்ளவர் என்று முடிவு செய்யப்பட்டால், அந்நபரின் சொத்துகளைப் பராமரிப்பது குறித்துத் தக்க ஆணையை நீதிபதி பிறப்பிக்கலாம். மேலும், மனநோய் உள்ளவர் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் ஆகியோரை மனநோயாளியின் சொத்துகளிலிருந்து பராமரிப்புச் செய்வது தொடர்பாகவும் தக்க ஆணை பிறப்பிக்கலாம். அம்மனநோயாளி தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளக் கூடியவராகவும், மற்றவருக்கு ஆபத்து விளைவிக்காதவராகவுமிருந்தால், அம்மனநோயாளியின் பாதுகாப்பு (Custody) குறித்து எவ்வித ஆணையும் பிறப்பிக்க வேண்டியதில்லை. ஆனால், அம்மனநோயாளி தம்மைத்தாமே கவனித்துக் கொள்ள முடியாமலோ மற்றவருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவராகவோ இருந்தால், அவரைப் பித்தர் காப்புமனையில் தங்க வைப்பது உட்பட அவரது பாதுகாப்புத் தொடர்பாக நீதிமன்றம் தக்க ஆணை பிறப்பிக்கலாம். அதற்கான செலவைப் பித்தரின் சொத்திலிருந்தோ பித்தரைச் சட்டப்படி பராமரிக்கக் கடமைப்பட்டவரிடமிருந்தோ கைப்பற்ற ஆணையிட வேண்டும். பித்தருக்குத் தக்க சொத்து இல்லையென்றாலோ அவரைப் பராமரிக்கக் கடமைப்பட்டவருக்கும் தக்க பொருளாதார வசதியில்லை என்றாலோ அச்செலவை மாநில அரசு ஏற்க நேரிடும்.

மேற்கூறிய வகைகளில் குற்றவியல் நடுவரால் பித்தர் காப்புமனைக்கு அனுப்பப்பட்ட பித்தரை உறவினர் வேண்டினால், தக்க விசாரணைக்குப் பின் காப்பு மனையிலிருந்து நடுவர் விடுதலை செய்யலாம். உறவினர் மனுவின் அடிப்படையில் குற்றவியல் நடுவரால் நடவடிக்கை எடுக்கப்பட்ட பித்தர் ஆபத்தானவர் என்றும் வெளியில் இருக்கத் தகுதியற்றவர் என்றும் பித்தர் காப்புமனை நிருவாகி அறிவித்தால் அப்பித்தரை விடுதலை செய்யக்கூடாது. பித்தர் காப்புமனை பார்வையாளர்களுள் மூவர் (அவர்களுள் ஒருவர் மருத்துவ அதிகாரியாக இருக்க வேண்டும்) விடுதலை செய்ய உத்தரவிட்டால் மேற்கூறிய வகைகளில் பித்தர் காப்புமனைக்கு அனுப்பப்பட்டவர் விடுதலை செய்யப்படலாம்.

பித்தர் காப்புமனையை மாநில அரசு நடத்தலாம்; அல்லது தனியார் நடத்த உரிமம் வழங்கலாம். உரிமம் வழங்கப்பட்ட பித்தர் காப்புமனையில் பித்தர் தங்கியதற்கான செலவைக் கொடுக்கக் கட்டுப்பட்டவருக்குச் சட்டப்படியாக வசதியில்லாத நிலையில் மாநில அரசு ஏற்றுக்கொள்ள நேரிடும்.

***இந்தியப் புதையல் சட்டம்:*** இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களால் இந்தியப் புதையல் சட்டம் (The Indian Treasure Trove Act, 1878) கி.பி. 1878-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-11-1956-க்கு முன் 'பி' பகுதி (Part B) யில் அடங்கியிருந்த மாநிலங்களைத் தவிர்த்து இந்தியா முழுமைக்கும் செல்லும். இச்சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

மதிப்புள்ள பொருள் பூமியிலோ பூமியுடன் இணைக்கப்பட்ட பொருளிலோ புதைக்கப்பட்டிருந்தால் அது புதையல் என்று கருதப்படும்.

உரூபாய் 10 மதிப்புக்கு மேற்பட்ட புதையல் கண்டு பிடிக்கப்பட்டால், அவ்வாறு கண்டுபிடித்தவர் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவல் கொடுக்க வேண்டும் (இச்சட்டத்தின்படி ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு மாநில அரசால் நியமிக்கப்படும் அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று அழைக்கப்படுவார்). புதையலின் மதிப்பு, கண்டெடுக்கப்பட்ட இடம், நாள் ஆகிய விவரங்கள் அந்தத் தகவலில் அடங்கியிருக்க வேண்டும். மேலும், புதையலை அருகிலுள்ள அரசாங்கக் கருவூலத்தில் கண்டுபிடித்தவர் ஒப்படைத்துவிடவேண்டும் அல்லது; வேண்டும்போது ஒப்புவிப்பதாகக் கூறி மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்யும் தொகைக்குக் கண்டெடுத்தவர் பிணையாவணம் (Security) எழுதித் தரவேண்டும்.

அப்புதையலுக்கு உரிமை கொண்டாடுபவர்கள் நேரிலோ அவரவர் சார்பாளர் மூலமாகவோ குறிப்பிட்ட நாளில் தம்முன் விசாரணைக்காக வர வேண்டும் என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் மாநில அரசு பிறப்பித்துள்ள விதிமுறைகளின்படி ஓர் அறிவிப்பை வெளியிட வேண்டும். மேற்படி விசாரணைக்காகக் குறிப்பிடப்பட்ட நாள், அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்கு மேற்பட்டும் ஆறு மாதங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அந்த அறிக்கையின்படி வாராதவர்கள் அப்புதையலில் உரிமை ஏதேனுமிருந்தாலும் அதை இழந்து விடுவார்கள். குறிக்கப்பட்ட நாளில் விசாரணை செய்து, குறிப்பாக எந்த இடத்தில், எந்தச் சூழ்நிலையில், யாரால், அப்புதையல் கண்டு பிடிக்கப்பட்டது என்பதனை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்யவேண்டும். மேலும், யாரால், எந்தச் சூழ்நிலையில் அந்தப் புதையல் புதைத்து வைக்கப்பட்டது என்பதனையும் இயன்ற வரையில் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு முடிவு செய்யப்படும் நாளுக்கு நூறு ஆண்டுகளுக்குள் அப் புதையல் தம் முன்னால் வந்து உரிமை கொண்டாடுபவராலோ, அவர்தம் முன்னோராலோ புதைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்புவதற்குப் போதுமான காரணம் இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் நம்பினால், அவர் குறிக்கும் நியாயமான காலத்துக்குள், புதையலுக்கு உரிமை கொண்டாடுபவர் தம் உரிமையை நிலை நாட்டுவதற்காக உரிமையியல் வழக்குத் தொடர வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையிடவேண்டும். அவர் அவ்வாறு வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றால் அவருக்கு அந்தப் புதையல் கிடைக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட விசாரணையின்படி யார் அந்தப் புதையலைப் புதைத்தவர் என்பது தெரிவதற்குப் போதிய காரணமில்லாவிட்டாலும், முன் குறிப்பிட்டுள்ளபடி உரிமை கொண்டாடுபவர் உரிமையியல் வழக்குத் தொடராவிட்டாலும், அவ்வாறான வழக்கைத் தொடர்ந்து தோற்றுவிட்டாலும், அப் புதையலானது யாராலும் வேண்டப்படாதது என்று அதாவது, அந்தப் புதையல் யாருக்கும் உரியதன்று என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுப்புச் செய்வார். அவ்வாறான அறிவிப்பால் பாதிக்கப்பட்டவர் அதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள மேலதிகாரியிடம் குறிப்பிட்ட காலத்துக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

அவ்வாறு விடுபட்ட புதையல் என்ற அறிவிப்பு இறுதியாகியபின், அந்தப் புதையல் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தின் உரிமையாளர் எவரும் உரிமை கொண்டாடாவிட்டால் அந்தப் புதையல் அதைக் கண்டுபிடித்தவரின் சொத்தாகிவிடும். கண்டுபிடித்த இடத்தின் உரிமையாளர் உரிமை கொண்டாடினால், அதாவது, புதையல் இருந்த இடத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் மட்டும் உரிமை கொண்டாடினால், புதையலின் முக்கால் பங்கு கண்டுபிடித்தவருக்கும் மீதிப் பங்கு இடத்தின் உரிமையாளருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். ஆனால், புதையலைக் கண்டுபிடித்தவருக்கும் புதையல் இருந்த இடத்தின் உரிமையாளருக்கும் ஒப்பந்தம் ஏதாவது ஏற்பட்டால் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தப் புதையல் அவ்விருவருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய விழுக்காட்டுக்குமேல் புதையல் பிரித்துக் கொடுக்கப்பட்டால், அந்த அளவுக்கு மேல் உள்ள பங்கிற்குச் சமமான தொகை அடுத்தவருக்குக் கொடுக்க நேரிடும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவுப்படி புதையலைப் பொது ஏலத்தில் விற்று, அதில் கிடைத்த பணத்தைப் புதையலைக் கண்டுபிடித்தவருக்கும், புதையல் இருந்த இடத்தின் உரிமையாளருக்கும் அவரவருக்குச் சேர வேண்டிய விகிதப்படி பிரித்துக் கொடுக்கப்படவும் வழி உள்ளது.

புதையல் இருந்த இடத்தின் உரிமையாளர் என்ற முறையில் உரிமை கொண்டாடுபவர் உண்மையிலேயே அந்த இடத்தின் உரிமையாளர் அல்லர் என்று புதையலைக் கண்டுபிடித்தவர் வாதாடினால், அந்த வழக்கு உரிமையியல் நீதிமன்றத் தீர்ப்புப்படி முடிவு செய்யப்படும். அதேமாதிரி, புதையல் இருந்த இடத்துக்கு ஒருவருக்கு மேற்பட்ட பலர் உ

கொண்டாடினால் அதுவும் உரிமையியல் நீதிமன்ற முடிவுக்கு விடப்படும்.

மேற்கூறியவாறு புதையலைப் பிரித்துக் கொடுப்பதற்கு முன்பு புதையலின் மதிப்புக்கு ஈடான பணத்தை அதனுடன் ஐந்தில் ஒரு பங்கு பணத்தைக் கூட்டி, அந்த மொத்தத் தொகையைக் கருவூலத்தில் பங்கு கொடுக்கப்பட வேண்டியவர்களின் நலனுக்காகச் செலுத்திவிட்டுப் புதையலை அரசுக்கு உரிமையாக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்டு.

புதையலைக் கண்டுபிடிப்பவர் அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தெரியப்படுத்தாவிட்டாலோ, புதையலைக் கருவூலத்தில் ஒப்படைக்கா விட்டாலோ, புதையலை வேண்டும்போது ஒப்படைப்பதாகக் கூறிப் பிணையாவணம் எழுதிக் கொடுக்காவிட்டாலோ, புதையலின் அடையாளத்தை மாற்றினாலோ, அவருக்கு அப்புதையற் பொருளில் எதுவும் சேராது; அப்பொருள் அரசாங்கத்தைச் சேர்ந்துவிடும். மேலும், குற்றவியல் நீதிமன்றத்தில் அக்குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்படுவார். அவ்வாறான தவற்றைச் செய்வதற்குப் புதையலைக் கண்டு பிடித்தவருக்குப் புதையல் இருந்த இடத்தின் உரிமையாளர் உடந்தையாக இருந்தால் அவருக்கும் அதே நிலைதான் ஏற்படும்.

சுருங்கச் சொல்லின், புதையலை யார் புதைத்து வைத்திருந்தாரோ அவர் அல்லது அவர் மூலம் சட்டப்படி உரிமை கொண்டாடுபவர்களுக்குப் புதையல் முழுதும் சொந்தமாகும். புதையலைப் புதைத்து வைத்தது யார் என்று தெரியாவிட்டால் அது ஆளற்ற புதையலாகும் அந்தப் புதையலில் முக்கால் பங்கு புதையலைக் கண்டுபிடித்தவருக்கும் புதையலிருந்த இடத்தின் உரிமையாளருக்கு மீதிப் பங்கும் சேரும். புதையல் இருந்த இடத்துக்கு உரிமையாளர் யாரும் இல்லாவிட்டால் அந்தப் புதையல் முழுவதும் கண்டுபிடித்தவருக்கு உரியதாகும். புதையலைக் கண்டுபிடித்தவரும் இடத்தின் உரிமையாளரும் சில தவறுகளைச் செய்தால் அவர்கள் உரிமையை இழந்துவிடுவார்கள். அப்போது புதையல் அரசுடைமையாகிவிடும். அவ்வாறான உரிமையற்ற புதையலை அரசாங்கத்துக்கு உரியதாக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்டு.

**இந்தியப் பெருங்கடல்:** ஒரு நாட்டின் பெயரை வைத்துப் பெயரிடப்பட்ட ஒரே பெருங்கடல் இதுவே. கிழக்கு, தெற்கு, மேற்கு, ஆகிய முப்புறமும் இந்தியாவைச் சுற்றிக் கடல்கள் உள்ளன.

மூன்று பெருங்கடல்களுள் இந்தியப் பெருங்கடலே சிறியதாகும். இப்பெருங்கடல் 3,897 மீ. சராசரி ஆழத்தைக் கொண்டு 7,34,42,000 ச.கி.மீ. பரப்பில் பரவி உள்ளது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஆழம் மிக்க பகுதி 7,439 மீ. ஆழத்தைக் கொண்டுள்ளது. இப்பெருங்கடலில் பெரும்பகுதி புவியிடைக் கோட்டிற்குத் தெற்கே பரவியுள்ளது. வங்காள விரிகுடாவும் அரேபியக் கடலும் இந்தியப் பெருங்கடலின் வட பகுதியில் விரிந்துள்ளன. ஆக இப்பெருங்கடல் வடக்கிலிருந்து தெற்காக விரிந்து செல்கிறது. இப்பெருங்கடலின் அகலமான பகுதி இப்பெருங்கடலின் தெற்கு எல்லையை ஒட்டி அமைந்துள்ளது.

**எல்லைகள்:** மேற்கு எல்லை ஆப்பிரிக்கக் கடற்கரை வழியாகச் சென்று, ஆப்பிரிக்காவின் தென் முனையில் இருந்து 20 பாகை கிழக்கு நெடுங்கோட்டைப் பின்பற்றி, அண்டார்க்டிகாவை அடைகிறது. அண்டார்க்டிக்காவின் கடற்கரை தென் எல்லையாக அமைந்துள்ளது. கிழக்கு எல்லை அண்டார்க்டிகாவின் கடற்கரையிலிருந்து 147 பாகை கிழக்கு நெடுங்கோடு வழியாய் வடக்கு நோக்கிச் சென்று, தாசுமேனியாவின் (Tasmania) மேற்குக் கடற்கரை, பாக்சு நீர்ச் சந்தியின் மேற்கு எல்லை, ஆசுத்திரேலியாவின் தெற்கு-மேற்கு-வடக்குக் கடற்கரைகள் ஆகியவற்றை ஒட்டிச் சென்று, யார்க்கு முனையைத் (Cape York) தொட்டு, தாரசு நீர்ச்சந்தி (Torres Strait) யின் மேற்கெல்லை, மேற்கு இரியாவின் (West Irian)




இந்தியப் பெருங்கடல்

தெற்குக் கடற்கரை, சிறு சுந்தா தீவுகளின் (Lesser Sunda Islands) கடற்கரைகள், சாவா-சுமத்திரா தீவுகளின் கடற்கரைகள் ஆகியவற்றின் வழியாகச் சென்று சிங்கப்பூரை அடைகிறது. தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளின் மேலைக் கடற்கரைகளும் பர்மா, பங்களாதேசம், இந்தியா, பாகிசுத்தான், ஈரான் முதலிய நாடுகளின் கடற்கரைகளும் வட எல்லையாக அமைந்துள்ளன.

இப்பெருங்கடலின் கண்ட வரைக் கடல்கள் பெரும்பாலும் இப்பெருங்கடலின் வட எல்லையையும் கிழக்கு எல்லையையும் ஒட்டி அமைந்துள்ளன. அவையாவன: செங்கடல், ஏடன் வளைகுடா, பாரசீக வளைகுடா, ஓமன் வளைகுடா, அரேபியக் கடல், இலட்சத் தீவுக்கடல், வங்காள விரிகுடா, அந்தமான் கடல், திமோர் கடல் (Timor Sea), ஆராபூர் கடல் (Arafura Sea), கிரேட் ஆசுதிரேலியன் பைட்டு (Great Australian Bight), மேற்கு எல்லையில் உள்ள மொசாம்பிக்கு கால்வாய் (Mozambigue Channel) ஆகியவை கண்ட வரைக்கடலே.

இப்பெருங்கடலில் பல தீவுகள் உள்ளன. கிழக்குப் பகுதியைவிட மேற்குப் பகுதியில் தீவுகள் மிகுதி. தீவுகளுள் சில முருகைத் தீவுகளாகும். மாலத் தீவுகள், சாகோசு (Chagos), கோகோசுத் தீவுக் கூட்டம் (Cocos Groups) எடுத்துக்காட்டுகளாகும். இத்தீவுகளுள் சில எரிமலைத் தீவுகளாகும். கிராசெட் தீவு (Crozet Island), தூய பால் தீவு (St, Pauls Island) போன்றவை எரிமலைத் தீவுகள்.

எகிப்தியர்கள்தாம் இந்தியப் பெருங்கடல் பற்றி முதன்முதலில் அறிந்திருந்த மக்களாவர். பின் அரேபியர்களும் சீனர்களும் இப்பெருங்கடல் பற்றி அறியலாயினர். போர்த்துகீசியர்களும் தச்சு (Dutch) நாட்டவர்களும் ஆங்கிலேயர்களும் இறுதியாகப் பிரான்சு நாட்டவர்களும் இந்திய நாட்டையடைய இந்தியப் பெருங்கடலைக் கடந்தனர். இந்தியப் பெருங்கடலின் நடுப்பகுதியைக் கி.பி. 1521-இல் விக்டோரியா கப்பலில் தெல்கானோ(Delcano) என்பவர் முதலில் கடந்தார். பின் தச்சுக் கப்பல்கள் கடந்தன. அண்டார்க்டிகாவை ஒட்டிய பகுதியில் முதலில் பயணம் செய்து அதனைப் பற்றிய விவரந் தந்தவர் காப்டன் குக்கு (Captan Cook) என்பவராவார். பின்னர் இப்பகுதியில் உருசிய ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர். இந்தியப் பெருங்கடலில் முதன் முதலில் ஆய்வு நடத்தியது சாலஞ்சர் என்ற புகழ்பெற்ற ஆய்வுக்கலமே. பல நாட்டுக் கப்பல்கள் கி.பி. 1872-இலிருந்து 1952 வரை ஆய்வுகளை இப்பெருங்கடலில் ஆங்காங்கு நடத்தின. 1960-65-இல் பன்னாட்டு இந்தியப் பெருங்கடலியற் சுற்றாய்வு (International Indian Ocean Expedition) பன்னாட்டு ஆய்வுக் கலங்களின் துணைக்கொண்டு இப்பெருங்கடலில் விரிவான ஆய்வுகளை நடத்தியது.

இந்த ஆய்வுகள் இதுவரை போதுமான அளவுக்கு நடைபெறவில்லை. இப்பெருங்கடலைச் சுற்றிப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளே அமைந்திருப்பதால் இங்கு ஆய்வுகள் விரைவாக நடைபெறவில்லை எனலாம். இப்போது இந்தியக் கடற்கரையை ஒட்டி மட்டும் ஆய்வுகள் ஓரளவு நடந்து வருகின்றன.

இரா. இரா.

**இந்தியப் பேரிணையம்:** இந்தியப் பேரிணையம் அல்லது ஒன்றியம் தோன்றுதல்:- இந்தியாவைக் கி.பி. 1757-ஆம் ஆண்டுமுதல் 1947-ஆம் ஆண்டு வரை ஒரே நாடாக இணைத்து ஆட்சி செய்த ஆங்கில அரசாங்கம், தான்இயற்றிய 1947-ஆம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டத்தின் வாயிலாக (Indian Independence Act, 1947) இந்தியா என்றும், பாகிசுத்தான் என்றும் இந்தியாவைப் பங்கிட்டு இரு இறைமை நாடுகளைத் தோற்றுவித்தது. பின்னர், இந்தியப் பகுதியின் அரசியலமைப்புச் சட்டமன்றம் (Constituent Assembly of India) இந்தியப் பகுதியிலுள்ள முந்தைய பிரிட்டிசு மாகாணங்களையும் பண்டைய இந்தியச் சார்பு அரசர்களால் (Dependent Indian Rulers) ஆளப்பட்டு வந்த ஏறக்குறைய 600 பெரிய, சிறிய அரசுகளையும் ஒரு பேரிணையமாக (Union) இணைத்து, அரசியல் அமைப்பில் ஒரு கூட்டாட்சியாக இந்திய நாட்டைஆக்கியது. மேலும், அது இந்தியா முழுமைக்கும் ஒரு நடுவண அரசாங்கத்தையும், ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு பேரிணைய நிலத்துக்கும் (Union Territory) ஓர் அரசாங்கத்தையும் அமைத்து, ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளும் 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் பிரிவுகளிலிருந்தும் பிரிட்டிசு, ஐரிசு, அமெரிக்க அரசியலமைப்புகளிலிருந்தும், அவற்றின் அரசியலமைப்பு வழக்கங்களிலிருந்தும் எடுத்து உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவை ஒரு குடியாட்சிக் குடியரசாகவும் இறைமை உடைய நாடாகவும் ஆக்குதல், இந்தியக் குடிமக்கள் யாவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் நீதி கிடைக்குமாறு செய்தல், எண்ணவும் பேசவும், சமய வழிபாட்டு முறைகளைக் கையாளவும் தன்னுரிமை (Liberty) கிடைக்குமாறு செய்தல், யாவருக்கும் சமமான நிலையும் (Equality of Status) சமவாய்ப்பும் கிடைக்குமாறு செய்தல், ஒவ்வொருவருக்கும் மதிப்பும் பேரிணையத்துக்கு ஒற்றுமையும் கிடைக்குமாறு செய்தல், யாவரிடையேயும் சகோதர உணர்வு பரவுமாறு (Fraternity) செய்தல்

ஆகியவையே இந்திய அரசியலமைப்பின் நோக்கங்களாகுமென்று அதன் முன்னுரையில் (Preamble) கூறப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் (Basic Principles) (அ) இந்தியா ஒரு குடியரசு நாடு (Republic), (ஆ) இந்தியா ஒரு பாராளுமன்றக் குடியாட்சி நாடு (Parliamentary Democracy) (இ) இந்தியா அமைப்பில் ஒரு கூட்டாட்சி நாடு, (ஈ) இந்தியக் குடிமக்களுக்கு ஆதார உரிமைகள் (Fundamental Rights) இருத்தல், (உ) அரசுக்குச் சில இயக்க நெறிக் கோட்பாடுகள் இருத்தல் (Directive Principles of State Policy), (ஊ) நீதித்துறையின் தனித்த நிலை (Independence of the Judiciary) முதலியனவாகும்.

இந்தியா விடுதலை பெற்றபின்னர்த் தன் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒருவரைக் குடியரசுத் தலைவராக ஏற்றுக்கொண்டு மிகச் சிறந்த குடியரசு நாடாக விளங்குகிறது. ஒரு தன்னாட்சி உரிமை பெற்ற உறுப்பு நாடாக இங்கிலாந்துக் கூட்டமைப்பில் (Britsh Common wealth) இருப்பதால், அவ்வமைப்பின் தலைவராக ஆங்கிலேய அரசியாரை ஒப்புக்கொண்டுள்ளதே தவிரத் தன் தலைவராக அரசியாரை ஒப்புக்கொள்ளவில்லை. வயதுவந்த எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாகம், நாட்டின் பொதுச் சட்டமே யாவருக்கும் தலைமையாக இருத்தல் (Rule of Law) முதலிய இயல்புகளை உடைய பாராளுமன்றக் குடியாட்சி முறை இந்தியாவிலிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 12 முதல் 35 வரை குடிமக்களின் ஆதார உரிமைகளைக் கூறுகிறது. சமய, இன, சாதி, பால் அடிப்படைகளில் மக்களுக்கிடையே வேறுபாடு எதுவும் காட்டாமல் யாவருக்கும் சட்டத்தின்முன்னர்ச் சமமான நிலை என்ற உரிமை; நாட்டின் பாதுகாப்புக்கும் அயல்நாட்டு நல்லுறவுக்கும் பொது ஒழுங்குக்கும் ஒழுக்க மேம்பாட்டுக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் பேச்சுரிமை; அமைதியாகக் கூடவும் கழகம் அமைக்கவும் உரிமை; நாட்டின் எப்பகுதிக்கும் செல்லவும் குடியேறவும், சொத்துகளை வாங்கவும் விற்கவும், சட்டவகையாக அல்லாமல் எவருடைய உயிரும் உரிமையும் எதேச்சாதிகாரமாகப் பறிக்கப்படாமலிருக்கவும் உரிமை; கட்டாயப் பணிமுறை (Forced Labour), குழந்தைகள் தொழிற்சாலைகளில் பணிசெய்ய அமர்த்துதல் முதலியவற்றுக்குத் தடை; சமய வழிபாட்டு உரிமை; பண்பாட்டுக் கல்வி உரிமைகள்; அடிப்படை உரிமைகளை நீதிமன்ற ஆணைகளின் வாயிலாகப் பாதுகாத்துக் கொள்ள உரிமை முதலியவையெல்லாம் அடிப்படை உரிமைகளாகும். அடிப்படை உரிமைகளெல்லாம் எந்தத் தனிநபராலும், அரசாங்கத்தாலும் மீறுதற்கு இயலாதவை (Inviolable)யாகும்; அவற்றை மீறுகிற ஆட்களின் மீதோ அரசாங்கத்தின்மீதோ உரிமை இழந்தவர் நீதிமன்றத்தின் முன்னர் வழக்குத் தொடுத்தால் அவ்வழக்குகளை ஆய்வு செய்து, தீர்ப்பு வழங்கி, உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நீதிமன்றத்தால் இயலும். எனவே, அடிப்படை உரிமை பற்றிய வழக்குகள் நீதி மன்ற ஆய்வுக்கு உட்பட்டவை (Justiciable) யாகும்; ஆனால், அடிப்படை உரிமைகள் நாட்டின் பாதுகாப்பையோ மற்றவருடைய உரிமைகளையோ பொது ஒழுங்கையும் அமைதியையுமோ அழிக்கக்கூடிய அளவுக்கு வரம்பிகந்து கையாளப்படத் தக்கவை அல்ல (Not Absolute). இதற்கு மாறான இயல்புடையவை அரசு நெறிக் கோட்பாடுகள் (Directive Principles of State Policy) ஆகும். ஆண்களும் பெண்களும் சமமான உயிர் வாழ்வுக்குப் போதுமான பொருளைப் பெறுமாறு ஆட்சிக் கொள்கையை அமைத்தல்; பொதுநலனுக்குகந்த வகையில் சமுதாயச் செல்வ வளங்கள் எல்லாம் பகிர்ந்தளிக்கப்படுக் கட்டுப்படுத்தப்படுமாறு செய்தல்; ஆண், பெண் இருபாலாரும் ஒத்த வேலைக்கு ஒத்த ஊதியம் பெறுமாறு செய்தல்; மக்களுடைய வாழ்க்கைத்தரமும் உடல் நலமும் உயருமாறு செய்தல்; வேலை செய்யும் உரிமை , கல்விபெறவும், வேலை இல்லாதகாலத்தும் முதுமையிலும் நோயிலும் அரசாங்க உதவி பெறும் உரிமை; கடுமையற்ற வேலைச் சூழ்நிலையும் கணிசமான ஊதியமும் ஓய்வுநேரமும் பெற அரசாங்கம் வழிசெய்தல்; பன்னாட்டு ஒப்பந்தங்களும் அமைதியும் பாதுகாப்பும் நிலைபெறும்படியான சூழ்நிலைகளை உருவாக்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாக வைத்து, அரசாங்கம் தன் கொள்கைகளை வகுத்து முறைப்படி செயற்படுத்துதல் வேண்டும். இவையெல்லாம் அரசாங்கம் கையாளவேண்டிய கொள்கைகளாகும். இவற்றை அரசாங்கம் பின்பற்றாவிட்டால் அதன்மீது அரசுநெறிக் கோட்பாடுகளை மீறியதாக எவரும் நீதிமன்றத்தின்முன் வழக்குத் தொடுக்க இயலாது. அரசாங்கம் அண்மையில் இந்நெறிக் கோட்பாடுகளைச் செயற்படுத்துதற்குச் செய்த சில சட்டங்கள் (குறிப்பாகத் தனியார் சொத்துகளைப் பொதுப்பணிக்காக அரசாங்கம் எடுத்துக் கொள்ளுவதற்கு வழிசெய்யும் சட்டம்) தனியார் சொத்துரிமை முதலிய அடிப்படை உரிமைகளைப் பாதிக்கவே, அடிப்படை உரிமைகள் அரசுநெறிக் கோட்பாட்டினும் உயர்ந்தவை என்றும் அரசு நெறிக் கோட்பாடுகள் அடிப்படை உரிமைகளைவிட உயர்ந்தவை என்றும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. வழக்குகளும் தோன்றித்தலைமை நீதிமன்றம் வரை

சென்றன. அண்மையில் தலைமை நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி, அடிப்படை உரிமைகளை விட அரசுநெறிக் கோட்பாடுகளே உயர்ந்தவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தியப் பேரிணையத்தின் அரசியலமைப்பிலுள்ள இன்னொரு சிறப்பு நீதித்துறையின் தனித்தநிலை (Independence of the Judiciary) ஆகும். அதாவது, தலைமை நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலமர்த்துவது அமைச்சரவையின் ஆலோசனையின்மீது குடியரசுத் தலைவரே; ஆயினும், நீதிபதிகளை அரசாங்கத்தால் பதவி நீக்கம் செய்தல் இயலாது; நீதிபதி அரசியலமைப்புக்கு மாறாகக் குற்றம் செய்தாலோ தவறாக நடந்தாலோ திறமையற்றிருந்தாலோ அவரைப் பதவி நீக்கம் செய்யுமாறு கூறும் தீர்மானம் நடுவண பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு, ஒவ்வொன்றிலும் கூட்டத்திற்கு வந்து வாக்களிப்போருள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினராலும் மொத்த உறுப்பினருள் பெரும்பான்மையோராலும் நிறைவேற்றப்படுதல்வேண்டும்; மேலும்,ஒருவர் நீதிபதியாக அமர்த்தப்பட்டபின்னர் அவருடைய ஊதியங்களோ படிகளோ ஓய்வூதியங்களோ விடுப்புவசதிகளோ அவருடைய பதவிக் காலம் முடியும் வரை மாற்றப்படுதலும் கூடாது (அரசியலமைப்புப் பிரிவுகள் 124 (4), 125 (2); நீதிபதிகளுக்கு இவ்வாறு பணிப் பாதுகாப்பு (Security of Tenure) இருந்தால்தான் அவர்களால் எல்லா வழக்குகளிலும் (அரசாங்கத்துக்கெதிரான வழக்குகளிலும் கூட) அரசாங்கத்தின் தயவுக்கோ வெறுப்புக்கோ விருப்புக்கோ அஞ்சாமல் ஆய்வு செய்து நீதியான தீர்ப்புகளை வழங்க இயலும் என்ற காரணத்தினால்தான், இத்தகைய முறையில் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடு, இந்தியா முதலிய நாடுகளில் நீதித்துறையின் தனித்த நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இந்தியப் பேரிணையத்தின் அரசியலமைப்பு:** இந்தியா அல்லது பாரதம் என்பது மாநிலங்களெல்லாம் இணைந்த ஒரு பேரிணையம் (Union of States) ஆகும். என்று இந்திய அரசியலமைப்பின் முதற்பிரிவு கூறுகிறது. இந்தப் பேரிணையத்தில் இப்பொழுது 23 மாநிலங்களும் (States) 8 பேரிணைய நிலங்களும் (Union Territories) அடங்கியிருக்கின்றன. ஆகையால், இதற்குரிய அரசியலமைப்பு ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பாகவேதான் (Federal Constitution) இருத்தல் இயலும். இந்நாடு ஒரு கூட்டாட்சி நாடு என்ற தொடர் இதன் அரசியலமைப்புச் சட்டத்தின் எப்பகுதியிலும் கூறப்படவில்லை; இது ஒரு பேரிணையம் என்றுதான் கூறப்பட்டுள்ளது; எனினும், இது கூட்டாட்சி அரசியலமைப்புகளில் காணப்படுகிற (1) நடுவண அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வு (Division of Powers), (2) அரசியலமைப்பின் தலைமையான தன்மை (Supremacy of the Constitution), (3) அரசியலமைப்பின் பிரிவுகளை விளக்கவும் அதன் காப்பாளனாகச் செயற்படவும் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்துக்கு இருக்கும் அதிகாரம் (Power of the Supreme Court to interpret the Constitution and act as its guardian), (4) அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சாதாரண சட்டத்தை மாற்றுவதுபோல மாற்ற முடியாதவாறு இறுக்கமாகஅல்லது நெகிழ்ச்சியற்ற தன்மையோடு அது இருத்தல் (Rigidity of the Federal Constitution) ஆகிய தன்மைகளைப் பெற்று உள்ளது. அரசியலமைப்பின் 246-ஆம் பிரிவிலும் அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையிலும் (Seventh Schedule)கூறப்பட்டுள்ளவாறு, பேரிணையப் பட்டியலிலுள்ள (Union List) 97 பொருள்களின்மீது நடுவண பாராளுமன்றமும் மாநிலப் பட்டியலிலுள்ள (State List) 65 பொருள்களின்மீது மாநிலச் சட்டமன்றமும் கலவைப் பட்டியலிலுள்ள (Concurrent List) 47 பொருள்களின்மீது இரு அரசாங்கச் சட்ட மன்றங்களும் சட்டங்கள் செய்ய அதிகாரங்கள் இருக்கின்றன. ஒரு கலவைப் பட்டியல் பொருள்மீது செய்யப்பட்ட நடுவணச் சட்டமும் மாநிலச் சட்டமும் ஒன்றுக்கொன்று மாறுபடுமேயானால் நடுவணச் சட்டமே செல்லுபடியாகும். மூன்று பட்டியல்களிலும் கூறப்படாத எஞ்சிய அதிகாரங்கள் (Residuary powers of Legislation) நடுவண அரசாங்கத்திடம் இருக்கின்றன (பிரிவு 248).

**பேரிணைய நிருவாகம் (Union Executive):** பேரிணையத்தின் தலைவர் குடியரசுத் தலைவர் (President) ஆவர். அவர் பாராளுமன்ற இரு சபைகளிலும் மாநிலக் கீழவை சட்டமன்றங்களிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத்தேர்வு முறை ஒற்றை மாற்று வாக்கெடுப்பில் அமைந்த ஒன்று. இவ்வுயர் பதவிக்கு வேட்பாளராக வருபவர் இந்தியக் குடியாளாகவும் 35 ஆண்டு நிரம்பப்பெற்றவராகவும் பாராளுமன்றக்கீழ்ச்சபை உறுப்பினராகத் தேர்வு பெறுதற்கு வேண்டிய தகுதிகளைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். அவர் இரண்டாம் முறையும் போட்டியிடலாம். அவர் அரசியலமைப்பை மீறியதாக அவர்மீது குற்றச்சாட்டைப் பாராளுமன்றத்தின் ஒரு மன்றம் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற, இன்னொரு மன்றம் குற்றச்சாட்டை ஆய்ந்து அது உண்மையே என்று முடிவு செய்து ஒரு தீர்மானத்தைக் கூட்டத்துக்கு வந்து வாக்கு அளிக்கும் உறுப்பினருள் மூன்றில் இரண்டு

பங்கினர் ஆதரவோடு நிறைவேற்றினால், குடியரசுத் தலைவர் தமது பதவிக்காலம் முடிவடைவதற்குள் பதவியிலிருந்து நீக்கப்படுவார். அவருடைய பணிகளும் அதிகாரங்களும் விரிவானவை. அவர் தலைமை அமைச்சரையும் அவருடைய ஆலோசனையின்பேரில் மற்ற அமைச்சர்களையும் அமர்த்தி, இந்திய அரசாங்கப் பணிகளை நிறைவேற்றுதற்குரிய விதிகளை வகுத்து, அமைச்சர்களுக்குப் பணிகளை ஒதுக்குகிறார். பேரிணையத்தின் ஆட்சி பற்றி அமைச்சர் செய்யும் தீர்மானங்கள் அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். ஆட்சி, சட்டம் செய்தல் ஆகியவை பற்றிய செய்திகளும் அவருக்கு அளிக்கப்படுதல்வேண்டும். இரு சபைகளும் நிறைவேற்றும் சட்டவரைவு (Bill) அவர் கையெழுத்துக்கு வரும்போது, அவர் அவற்றின் பணமசோதாவைத் தவிர மற்றவற்றை மன்றத்தின் மறு ஆய்வுக்குத் திருப்பி விடலாம். இரு சபைகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாதபோது, அவற்றை ஒரு கூட்டுக் கூட்டத்துக்கு அவர் அழைக்கலாம். பாராளுமன்றம் கூடியிராத காலத்தில் அவர் ஆணைகள் (Ordinances) விடுக்கலாம். ஒரு மாநிலத்திலிருந்து அவருடைய ஒப்புதலுக்காக வரும் மசோதாவுக்கு அது பண மசோதாவாக இல்லாவிடில், அவர் அதற்கு ஒப்புதலளிக்கவோ மறுக்கவோ மாநில மன்ற மறு ஆய்வுக்குத் திருப்பிவிடும்படி ஆளுநருக்கு ஆணை விடுக்கவோ செய்யலாம். இந்திய அரசாங்க நிருவாகச் செயல்கள் எல்லாம் அவர் பெயரால் நிறைவேற்றப்படுகின்றன. இந்தியப் பாதுகாப்புக்கு இடையூறு இருந்தால் அவர் 'நெருக்கடி நிலை விளம்பரம் விடுக்க' அதிகாரம் இருக்கிறது. அவர் தலைமை உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகளை அமர்த்துகிறார். அவர் இந்தியப் படைகளின் தளபதி ஆவார். குடியரசுத் தலைவருக்கு இவ்வளவு பரந்த அதிகாரங்கள் இருந்தாலும், அவர் ஓர் அரசியலமைப்பு வரம்புக்குட்பட்ட தலைவரே ஆவார். அதாவது, அவர் தம் அமைச்சரவையினுடைய ஆலோசனையின்படிதான் இவ்வதிகாரங்களை எல்லாம் கையாளுதல், வேண்டும் (அரசியலமைப்பு பிரிவு 74-1). அமைச்சர்களெல்லாரும் ஆங்கிலேய அமைச்சர்களைப் போலப் பாராளுமன்ற உறுப்பினராவர். அவர்கள் கீழ்ச் சபைக்குக் (பாராளுமன்றத்தின்) கூட்டுப் பொறுப்புடையவர்கள் (அரசியலமைப்பு பிரிவு 75-3).

சட்டமன்றம்: சட்டமன்றமாகிய பாராளுமன்றத்தின் மேல்சபையின் (இராச்சிய சபையில்) 250 உறுப்பினர்களுள், 238 பேர் மாநில, பேரிணைய நிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர்; தலைவரால் இலக்கியம், அறிவியல், கலை, சமூகப் பணி முதலிய துறைகளின் சார்பாக அமர்த்தப்பட்ட உறுப்பினர்கள் 12 பேர்உள்ளனர். உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை விலகுகின்றனர். கீழ்ச்சபையாகிய மக்கள் சபையில் (Lok Sabha) உறுப்பினர்கள் (இப்போது 542) 23 மாநிலங்களிலிருந்தும் பேரிணைய நிலங்களிலிருந்தும் நேரடித் தேர்தல் வாயிலாக 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு உறுப்பினரை ஆங்கிலோ இந்தியர் சார்பாளராகத் தலைவர் அமர்த்துகிறார். பதவிக் கால முடிவடையும் முன்னர் மக்கள் சபை தலைவரால் கலைக்கப்படலாம். சாதாரண மசோதாக்கள் இரு சபைகளிலும் தாக்கல் செய்யப்படலாம். பணமசோதா கீழ்ச்சபையில்தான் தாக்கலாக வேண்டும். இது நிறைவேற்றும் பணமசோதாவை மேல்சபை 14 நாட்களுக்குள் நிறைவேற்றினாலும் நிறைவேற்றாவிட்டாலும் அது சட்டமாகிவிடும். மற்றச் சட்டங்களில் இரு சபைகளுக்கிடையே ஏற்படும் முட்டுக்கட்டையை நீக்க இரண்டும் சேர்ந்த கூட்டுக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெறும். தலைவர், தலைமை உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகள், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்தற்குக் குற்றவிசாரணை செய்யும் அதிகாரம் இரு மன்றங்களுக்கும் உண்டு.

தலைமை நீதிமன்றம்: இதில் ஒரு தலைமை நீதிபதியும் துணை நீதிபதிகளும் தலைவரால் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுடைய பணிப் பாதுகாப்பு நிலைகளும் பதவி நீக்க முறைகளும் நீதித்துறையின் தனித்த நிலை என்ற தனிநிலையை உண்டாக்குகின்றன. இது இந்திய அரசாங்கத்துக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமிடையே தோன்றும் வழக்குகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமிடையே தோன்றும் வழக்குகள், ஆகியவற்றில் முதன்மை ஆய்வு அதிகாரமும் (Original Jurisdiction) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆட்கொணர் ஆணை, தடை ஆணை முதலியவற்றை வெளியிடவும் அதிகாரம் பெற்றுள்ளது. மாநில உயர்நீதிமன்றத்தின் உறுதிச் சான்றுடன் வரும் உரிமை, குற்ற இயல் வழக்குகளில் மேல் முறையீட்டு அதிகாரம் இதற்கு உண்டு. இத்தகைய வழக்குகளில் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விளக்கமளிக்கக் கூடிய சட்டக் கேள்வி அடங்கியிருப்பதாகச் சான்று பத்திரம் கூறுதல் வேண்டும். தலைமை நீதி மன்றத்தின் ஒப்புதலுடனும் மேல்முறையீடு செய்யலாம். ஓர் உரிமை வழக்கிலடங்கிய தொகை உரூ. 20,000-க்குக் குறையாததென்று மாநில உயர்நீதி மன்றம் சான்றளித்தாலும் மேல் முறையீடு தலைமை நீதிமன்றத்தில் செய்யலாம். குடியரசுத் தலைவர் விரும்பும்போது இது அவருக்கு ஆலோசனை வழங்குதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

மாநிலம் ஒவ்வொன்றுக்கும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்ட மன்றம் உள்ளது. அதனோடு சில மாநிலங்களில் பல்வேறு தொகுதிகளிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட மேல் சபையும் உள்ளது. அவற்றின் பதவிக்காலமும் பணிகளும் நடுவண பாராளுமன்றங்களுக்கு இருப்பதைப் போன்று உள்ளன. எவரையும் குற்ற விசாரணை செய்து நீக்க இயலாது. மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகளை அமர்த்தும் முறை, பணிப்பாதுகாப்பு நிலைகள், நீக்கும்முறை முதலியவையெல்லாம் தலைமை நீதிமன்றத்தாருக்கு உள்ளன போன்றுள்ளன. உயர் நீதிமன்ற நீதிபதியின் ஒய்வு வயது 62-ம் தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 65-ம் ஆகும். மாநில அமச்சரவை அமைப்பிலும் நிலையிலும் நடுவணத்தை ஒத்து இருக்கிறது. சில பேரிணைய நிலங்களுக்கு ஒற்றை மன்ற சட்டசபையும் ஆளுநரும் அமைச்சரவையும் இருக்கின்றன.

**நடுவண மாநில உறவுகள்:** இந்தியா ஒரு கூட்டாட்சி நாட்டிலிருப்பதைப் போன்று நடுவண-மாநில அதிகாரப் பங்கீட்டுப் முறையை மேற்கொண்டாலும் நடுவண அரசாங்கம் மாநிலங்களின் சட்ட அதிகாரம், நிருவாக அதிகாரம், நிதி அதிகாரம் முதலியவற்றில் தலையிடுதல் கூடாதென்று துல்லியமாகப் பிரிக்கப் பட்டிருக்கவில்லை. இம்மூன்றிலும் நடுவண அரசாங்கத்திற்குத் தலையிடும் அதிகாரம் உண்டு. (அ) சட்ட மசோதா ஒன்று மாநில ஆளுநரின் கையெழுத்தைப் பெறாமல் தலைவருடைய பார்வைக்கு நிறுத்தி வைக்கப்படலாம். மாநில உயர்நீதிமன்ற அதிகாரங்களை மாற்றும் மாநிலச் சட்டமசோதாவை ஆளுநர் கட்டாயமாகக் குடியரசுத் தலைவருடைய ஆய்வுக்கு அனுப்புதல் வேண்டும். தனியார் சொத்தைப் பொது நலனுக்காக அரசாங்கம் கட்டாயமாக எடுத்துக் கொள்ள வகை செய்யும் மசோதாவும் தலைவருடைய ஒப்புதலைப் பெற்றால்தான் சட்டமாகும். மாநில உயர்நீதி மன்றம் மாநிலங்களுக்கிடையே வாணிகம் முதலிய பொருள்களைப் பற்றிய மசோதாக்களைக் குடியரசுத் தலைவர் முன் இசைவுடன் தான் மாநிலச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் வேண்டுகோளுக்கிணங்க நடுவண பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். அரசியலமைப்புப் பிரிவு 249-ன் படி, இராச்சிய சபையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினரால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின்படி மாநிலப் பட்டியலில் உள்ள பொருள் மீதும் பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். இந்தியப் பாதுகாப்புக் காரணமாக மாநிலப் பட்டியல்மீது நடுவணப் பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். இதற்குமுன் விளம்பரம் செய்யப்படவேண்டும்.

**நிருவாகம்:** மாநில அரசாங்கம் தன் நிருவாக அதிகாரங்களைக் கையாளும்போதும் பேரிணைய நிருவாக அதிகாரத்துக்குத் தடை இல்லாத வாறு கையாளுதல் வேண்டும். பேரிணைய நிருவாகம் இதன் பொருட்டு அவ்வப்போது விடுக்கும் ஆணைகளை மாநில அரசாங்கம் ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். மேலும், தேசிய முக்கியத்துவமுடைய செய்தித்துறை வசதிகள், இரயில்வே முதலியவற்றை மாநிலத்தில் அமைத்தலிலும் பேரிணையம் மாநிலத்துக்கு ஆணைகள் விடுக்க அதிகாரம் உண்டு. ஒரு மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுடன் பேரிணையம் தன் பணிகள் சிலவற்றை அதனிடம் ஒப்படைக்கலாம். நெருக்கடி நிலையின்போதும், மாநில அரசாங்கம் அரசியலமைப்பு விதிகளுக்கிணங்கச் செயற்பட இயலாதென்று குடியரசுத் தலைவர் கருதும்போதும், மாநில நிருவாகம் முழுவதும் பேரிணைய நிருவாக அதிகாரத்தின் முழுக் கட்டுப்பாட்டில் வந்து செயற்படுகிறது.

**நிதிமானியம்:** இந்தியப் பாராளுமன்றத் தீர்மானத்தின் வாயிலாக மாநிலங்களுக்குத் தேவைப்படும் நிதிவசதிகளைப் பேரிணையம் மானிய உதவிகளாக (Grants-in-Aid) வழங்கி அதற்குரிய நோக்கங்களையும் வரையறை செய்வதால், மாநில அரசாங்கங்களின் கொள்கைகளையே அது உருவாக்கக் கூடிய நிலையிலிருக்கிறது. இத்தகைய, மூன்று வகையாகப் பேரிணையம் மாநிலங்களைக் கட்டுப் படுத்துகிறது. இந்தியக் கூட்டாட்சி அமைப்பு ஒரு தோற்றமே அல்லாமல் அது உண்மை அன்று என்ற கருத்துக் கூறப்படுகிறது. மேலும், மாநில ஆளுநர்களைக் குடியரசுத் தலைவர் அமர்த்தும் அதிகாரமும் ஆளுநருடைய அறிக்கையின்பேரில் குடியரசுத் தலைவர் மாநில ஆட்சியைப் பேரிணையத்தின்கீழ்க் கொண்டுவருதற்குரிய அதிகாரமும் மேற்கண்ட கருத்தை உறுதி செய்கின்றன. இதற்கெல்லாம் விடையாக, நெடுங்காலமாக ஒற்றைவகை அரசாக இருந்த (Unitary State) இந்தியாவை ஆங்கிலேயர் நிருவாக வசதிக்காக மேல்நிலையில் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பரவல் (Decentralisation) முறையில் மாகாணங்களுக்குப் பிரித்து வழங்கி, மேலிருந்து கீழ்நோக்கிய முறையில் கூட்டாட்சியை உண்டாக்கியதனால் இப்பொழுதும் அவ்வாறே செய்ய வேண்டியதாயிற்றென்றும், இதனால் ஒற்றையாட்சி இயல்புகள் இந்தியக் கூட்டாட்சி அரசியலமைப்பில் காணப்படுகின்றன என்றும், மேலும் நடுவில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களெல்லாம் நெருக்கடிக் காலத்திலல்லாமல் சாதாரண நிலையில் கையாளப்

பட மாட்டா என்றும் கூறப்படுகின்றன. பெருமளவில் தொழில்வளம், நாடுகள் ஒன்றையொன்று பெருமளவில் சார்ந்திருத்தல், இக்காலத்தில் முழு அளவில் அழிவை உண்டாக்கக்கூடிய அணுக் கருவிப் போர் முறைகள், அதனால் நாடுகளின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தல் முதலிய காரணிகளெல்லாம் நடுவண அரசாங்கத்துக்கு மாநிலங்களின்மீது கூடுதலான அதிகாரங்களை உருவாக்கியுள்ளன என்றும் கூறப்படுகின்றது. இந்தியக் கூட்டாட்சி முறை ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சியைப் போன்று போட்டி இயல்புடைய கூட்டாட்சிமுறை அன்று (Competitive Federalism): அது ஒரு கூட்டுறவுக் கூட்டாட்சி முறை (Co-operative Federalism) என்ற கருத்தே இக்காலத்தில் யாவரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகும்.

குடியரசுத் தலைவர் பதவி, அவர் தேர்வுமுறை, நடுவண, மாநிலங்களின் நிருவாக அதிகாரங்கள், பேரிணைய நிலங்களின் உயர்நீதி மன்றங்கள், பேரிணைய மாநில நீதிமன்றங்கள், நடுவண மாநிலங்களுக்கிடையே உள்ள சட்ட அதிகாரத் தொடர்புகள் முதலியவற்றைப் பற்றிக் கூறும் அரசியலமைப்புப் பிரிவுகளை மாற்றுதற்கும், ஏழாம் அட்டவணையையும் பாராளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கையையும் கூறும் பிரிவுகளை மாற்றுதற்கும், திருத்தத் தீர்மானங்களை நடுவண பாராளுமன்றத்தில் ஏதேனுமொரு சபையில் தாக்கல் செய்து, அத்தீர்மானம் அதிலும் மற்றச்சபையிலும் மொத்த உறுப்பினருள் பெரும்பாலானவராலும் கூட்டத்துக்கு வந்திருந்து வாக்களிப்பவருள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினராலும் நிறைவேற்றப்பட்டு, அதன் பின்னர், மாநிலங்களுள் பாதி மாநிலங்களின் சட்டமன்றங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டால் திருத்தத் தீர்மானம் சட்டமாகும். அரசியலமைப்பின் மற்றப் பிரிவுகளைத் திருத்தும் தீர்மானங்களை மேற்கண்ட முறையில் மாநிலச் சட்டமன்றங்களுடைய ஒப்புதலுக்கு விடுக்காமல் நிறைவேற்றினால் அவை சட்டமாகும்.

**இந்தியப் பொருளியல்:** பொருளியல் அல்லது பொருளாதாரம் என்ற சொல் இரு பொருள்களில் பயன்படுகிறது. ஒருபுறம் எண்ணற்ற மனித விருப்பங்கள் இருக்க, மறுபுறம் அவ்விருப்பங்களை நிறைவேற்றத்தக்க மூலவளங்கள் பற்றாக் குறையாக இருக்கின்றன. மூலவளங்கள் பல வழிகளில் பயன்படத்தக்கவையாக இருப்பதால் இம் மூலவளங்களைப் பயன்படுத்துவதில் மக்களும் அரசுகளும் எவ்வாறெல்லாம் செயற்படுகிறார்கள் என்பதைப் பற்றிய பல கொள்கைகள், கோட்பாடுகள், கற்பித கருத்துகள் ஆகியவற்றின் அறிவுத் தொகுப்புப் பொருளியல் அல்லது பொருளாதார இயல் எனப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரம் என்ற பொருளில் கையாளப் பெறுவது இரண்டாம் விளக்கம். ஒரு நாட்டிலுள்ள வேளாண்மைத் துறை, காடுகள், மீன்வளம், சுரங்கம் மற்றும் தாதுப்பொருள் வளம் போன்றவற்றை உள்ளடக்கியது முதன்மைத் துறை (Primary Sector), குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெருந் தொழில்கள், பாதுகாப்புத் துறைத் தொழில்கள் போன்றவற்றை உள்ளடக்கியது இரண்டாந்துறை அல்லது தொழில் துறை (Secondary or Industrial Sector) ஆகும். இவ்விரண்டு துறைகளிலும் சேர்க்கப்படாத வாணிகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, வங்கிகள் போன்றவை பணித்துறை (Teritary Sector) யாகும். மூன்று துறைகளின் நிலைகள், செயல்கள் ஆகியவை நாட்டின் பொருளியல் அல்லது பொருளாதாரம் எனப்படுகின்றன. இந்திய நாட்டில் இம்மூன்று துறைகளிலும் இருந்த, இருக்கின்ற, இருக்க வேண்டிய நிலைகள் குறித்த பொருளியல் (Economics) விளக்கம் பொருளாதார (Economy) வளர்ச்சியையும், இவ்வளர்ச்சியின் அடிப்படையில் மக்களின் உண்மையான வாங்கும்திறனில் ஏற்படும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் (Standard of Living) வெளிப்படுத்தும்.

வரலாற்றுப் பின்னணி: இன்றைய இந்தியப் பொருளாதாரம் பற்றிய உண்மை நிலைகளை நன்கு அறிந்திடச்சுருக்கமான வரலாற்றுப் பின்னணி உதவும். ஆதலின் அதனை ஆங்கிலப் பேரரசு ஏற்படுமுன் இருந்த நிலைகள், ஆங்கிலப் பேரரசுக் காலத்தில் இருந்த நிலைகள், சுதந்திர இந்தியாவின் தொடக்க நிலைகள், இன்றைய நிலைகள் எனச் சில பகுதிகளாகக் காணலாம்.

ஆங்கிலப் பேரரசு இந்தியாவில் தோன்றுவதற்கு முன்பு இருந்த இந்தியப் பொருளாதாரம்: இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலப் பேரரசு தோன்றுவதற்கு முன், பிறர் உதவியின்றித் தானே இயங்கிக் கொள்ளும் தன்மையுடன் கூடிய ஊரகங்கள் (Villages) ஒரு புறமும், நிருவாகம், உள்நாட்டு வாணிகம், பன்னாட்டு வாணிகம், கைவினைத் தொழில்கள், வழிபாட்டு மையங்கள் ஆகியவற்றின் தலைமைப் பீடங்களாக விளங்கிய நகர்கள் மறுபுறமும் சிறந்து விளங்கின.

**ஊரகங்கள்:** எளிய வேலைப்பகுப்பு முறையின் அடிப்படையில் வேளாண் தொழில் செய்வோர், பல தரப்பட்ட சிறப்பான கைவினைஞர்கள், தொழிலா

ளர்கள், ஊரக அதிகாரிகள் ஆகியோரைத் தன்னகத்தே கொண்டு ஊரகங்கள் தன்னாட்சி அடிப்படையில் சிறந்து விளங்கின. உற்பத்தியில் உணவு உற்பத்தி முதன்மை இடத்தைப் பெற்றுவந்தது. பிற கைவினைஞர்கள் உழவுத் தொழிலுக்குத் தேவையானவற்றை எல்லாம் ஆக்கித் தந்தனர். உற்பத்தியில் பெரும் பகுதி ஊரகங்களிலேயே நுகரப்பட்டது. அறுவடைக் காலத்தில் நெல்லாகவே கூலி கொடுக்கப்பட்டது. பண்டமாற்றுப் பொருளாதாரம் செயற்பட்டது. ஊரகத்தினர் தங்களின் பணத் தேவையை நிறைவேற்ற அவ்வூரகத்திலேயே இருந்து வந்த வட்டிக்கடைக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் பெற்றனர். உள்ளூர் ஊராட்சிகள் ஊர் நிருவாகத்தினைக் கவனிப்பது மட்டுமல்லாமல் நீதிமன்றங்களாகவும் செய்ற்பட்டன. இடையிடையே ஏற்பட்ட பல போர்கள், பஞ்சம் போன்றவற்றால் மக்கள் துன்பத்தையும் தாங்கி வாழ்ந்தனர்.

**நகர்கள்:** மதுரை, அலகாபாது, காசி, கயா, பூரி போன்ற பல நகர்கள் வழிபாட்டுத் திருத்தலங்களாகவும், தில்லி, இலாகூர், பூனா, இலக்னோ, தஞ்சாவூர் போன்ற பல நகர்கள் தலைநகரங்களாகவும் நீதி மன்றங்களின் மையங்களாகவும், மிர்சாபூர், பெங்களூர், சென்னை, ஊப்ளி, கல்கத்தா போன்ற நகர்கள் வாணிக மையங்களாகவும் சிறப்புடன் செயற்பட்டு வந்தன.

**தொழில்கள்:** உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லோரும் தொழுதுண்டு பின் செல்பவரே என்ற கருத்துப் பரவலாக வேரூன்றிச் செயற்பட்டிருந்தாலும், கைவினைத் தொழில்கள் சீரும்சிறப்பும் பெற்று விளங்கின. தாக்காவின் (Dhaka) மசுலின் துணியும் வங்காளத்தின் கலிக்கோவும் காசிப் பட்டும் உலகப் புகழ்பெற்று விளங்கின. இந்தியத் துணிகள் கி.மு. 2000க்கும் முற்பட்ட எகிப்திய முதுமக்கள் தாழிகளில் பயன்படுத்தப்பட்டிருந்ததற்கும், கிரீசு, எகிப்து போன்ற நாடுகளில் இவ்வகைத் துணிகளுக்குப் பெரும் தேவை இருந்த தென்பதற்கும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. 15 மீட்டர் நீளமும் 3/4 மீட்டர் அகலமும் உள்ள துணியை ஒரு சிறிய மோதிரத்திற்குள் நுழைக்கும் வண்ணம் மிக மென்மையாகவும் நேர்த்தியாகவும் நெய்த பெருமை இந்திய மண்ணுக்குண்டு என வரலாற்றுப் பேராசிரியர்கள் புகழ்ந்து கூறியுள்ளனர். காசுமீரத்துக் கம்பளமும் நாகபுரி, மூர்சிதாபாது ஆகியவற்றின் பட்டாடைகளும் அகமதாபாது வேட்டிகளும் இந்தியாவின் தொழில் மேன்மையை உலக நாடுகளில் பறைசாற்றிய கைவினைப் பொருள்களாகத் திகழ்ந்தன. ஆங்கிலப் பேரரசுக் காலத்தில் இந்தியப் பொருளாதாரம்: ஆங்கிலேயப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் இந்தியப் பொருளாதாரம் மூவகை மாறுதல்களை அடைந்தது.

**(அ) கைவினைத் தொழில்களின் வீழ்ச்சியும் ஊரக மயமாதலும்:** இங்கிலாந்து நாட்டின் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய புதிய தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா மாற்றமடைந்தது, இதனால்,உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி குன்றியது. அயல்நாட்டுப் பண்டங்களின் இறக்குமதி பெருகியது. உள்நாட்டில் ஏற்பட்ட சாலை வசதிப் பெருக்கமும் போக்குவரத்துச்செய்தித் தொடர்பு வசதிகளும் இந்தியக் குறுநில மன்னர்களின் ஆதிக்கம் படிபடியாகக் குறைந்ததும் இந்நிலையை மிகவும் முனைப்பாக்கின. ஆங்கிலேயரின் தன்னல நடவடிக்கையால் அதுவரை இல்லாதிருந்த பற்றாக்குறையும் வறுமையும் வேலையின்மையும் உருவாகி வளர்ச்சி பெற்றன. இயந்திரங்களின் துணைக்கொண்டு பேரளவில் உற்பத்தி செய்யப்பட்ட மலிவான பண்டங்களின் வருகையால் இந்தியத்தொழில்கள் நலிவுற்றன. சூயசு கால்வாய் கி.பி. 1869-இல் திறக்கப்பட்டதால் போக்கு வரத்துச் செலவு கணிசமான அளவு குறைந்ததும் இந்தியத் தொழில்கள் மேலும் நலிவடையக் காரணமாய் அமைந்தது. ஆங்கிலேய ஆட்சியின் விளைவால் ஆங்கிலேயர்களின் பழக்கமும் அவர்களின் பண்பாட்டைப் பின்பற்றிய வகைகளும் இந்தியத் தொழில்களை மிகவும் பாதித்தன. வேலையில்லாக் காரணத்தால் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே சார்ந்திருக்கும் நிலை தோன்றியது. வாரிசு உரிமையால் வேளாண்மை நிலங்கள் துண்டாடப்பட்டு உற்பத்தித் திறன் குறைந்து, நிலமில்லா விவசாயக் கூலிகளின் எண்ணிக்கையும் பலமடங்கு பெருகியது.

**(ஆ) நில உடைமையிலும் நிலவரி முறைகளிலும் மாற்றங்களும்,வாணிக மயமான வேளாண்மையும்:** மேன்மேலும் வருவாயைப் பெருக்குவதற்கு உள்நாட்டுக் குறுநில மன்னர்களுடன் உறவாடியும் பயம்காட்டியும் நிலவரி வருவாயைப் பெறும் உரிமையை ஆங்கிலேயர்கள் பெற்றதால் தோன்றிய சமீன்தாரி முறை வேளாண் பெருமக்களைப் பிழைப்பூதிய நிலைக்கு (Subsistence Level) இறக்கிவிட்டது. உன்னத நிலையில் இருந்த உழவர் பெருமக்கள் அடிமைகள் போல் வாழும் இழிநிலைக்கு வந்துவிட்டனர்.

வேளாண்மை விளைபொருள்களுள் பெரும்பகுதி சொந்த நுகர்வுக்கும் ஓரளவே விற்பனைக்கும் பயன்

படுத்தும் நிலை ஏற்பட்டது. ஆங்கில நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் துணையான தன்மையில் இந்திய விவசாயம் பருத்தி, சணல், கரும்பு, கடலை போன்ற தொழில் மூலப் பண்டங்களை உற்பத்தி செய்யும் அமைப்பாக உருவெடுத்துவிட்டது. இதன் விளைவுகளில் ஒன்றாக இந்தியா அடிக்கடி உணவுப் பற்றாக்குறையால் வாட நேரிட்டது.

(இ) இந்தியத் தொழில் மாற்றங்கள்: கைவினைத் தொழில்களின் சிதைவு ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்க, ஒருசில தனிப்பட்டவர்களின் முயற்சிகளால் ஒருசில பெருந் தொழில்களும் நாட்டில் நிறுவப்பட்டன. நூற்பாலைகளும் சணல் ஆலைகளும் தனியார் துறையில் தோன்றிச் செழிப்படையத் தொடங்கின. இந்தியாவில் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது, இரும்பு எஃகுத் தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்தது. நிலக்கரிச் சுரங்கங்கள் பல தோன்றின. இத்தகைய தொழில்களை ஆதாய நோக்கத்துடன் பல ஆங்கிலேயர்களும் பிற அயல் நாட்டாரும் தொடங்கியபோதிலும், இந்திய நாட்டின் பார்சி இனத்தவர்களும் குறிப்பிடத்தக்க முன்னணியில் இருந்தனர். பெருவாரி மூலதனமோ பயிற்சியோ இல்லாவிட்டாலும் ஆபத்துகளையும் இடர்தாங்கல்களையும் ஏற்கும் தொழில் துணிவுடன் செயற்பட்ட இந்தியர்களுள் குசராத்து மாநில மக்களும், பார்சி, மார்வாரி, செட்டியார், செயின் இனத்தவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். முதல் நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1923க்குப் பிறகு ஒருசில இந்தியத் தொழில்களுக்கு அயல் நாட்டுத் தொழில்களினால்ஏற்படும் போட்டியிலிருந்து பாதுகாக்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. அதனால் இரும்பு, எஃகு, துணி, சணல், சர்க்கரை, காகிதம், தீப்பெட்டி போன்ற பல பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் ஓரளவுக்கு வளர்ச்சி பெறத் தொடங்கின. இருப்பினும் ஆற்றலும் கற்பனையும் தொழில் ஆபத்துகளை ஏற்கும் துணிவும் உள்ள தொழில் முயல்வோர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாலும், மூலதனப் பற்றாக்குறை நிலை இருந்ததாலும், சேமிப்புகளைத் திரட்டி முதலீடுகளை ஊக்குவிக்கும் வங்கி நிறுவனங்களும், பிற நிதி நிறுவனங்களும் வளரா நிலையினாலும், அரசின் ஆதரவு இல்லாதிருந்ததாலும் மற்றும் இவை போன்ற காரணங்களாலும் தொழில் வளர்ச்சி குன்றிய அளவிலேயே இருந்தது.

ஆங்கில அதிகாரிகளுக்கும் பிறருக்கும் ஊதியம், ஓய்வு ஊதியமளித்தல், ஆதாயத்தையும் பரிசுகளையும் அளித்தல் என்ற பல வடிவங்களில் இந்தியாவின் செல்வம் பெருமளவில் வெளியேறிச் சாதாரண இந்தியனின் பரம்பரைச் சொத்துகளும் சுரண்டப்பட்டு, ஏழ்மையும் வறட்சியும் வேரூன்றி விட்டன. அதே நேரத்தில் அயல்நாட்டவர்களைப் புகழ் பாடிக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்ட இந்தியச் செல்வர்களின் வாணிக, தொழில் நிறுவனங்கள், செழிப்பையும் அரசு ஆதரவையும் பெற்று, முற்றுரிமை அமைப்புக்களாக வளர்ச்சி பெற்றன.

சுருங்கக் கூறின், 1947-இல் இந்தியா அரசியல் விடுதலை பெற்றபோது, பண்டித சவகர்லால் நேரு குறிப்பிட்டபடி இந்தியாவில் தொழில்கள் பல தோன்றி வளர்ச்சியையும் விரைவான தொழில் வளர்ச்சிக்கான முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையும் பெற்றிருப்பது போல வெளிப்படையில் தென்பட்டாலும், உண்மையில் செல்வத்தை உற்பத்தி செய்யும் பல இயல்புகளை இந்தியா பெற்றிருக்க வில்லை. இத்தகைய தேக்க நிலையில் இந்தியா வளர்ச்சிப் பாதையை உருவாக்கும் பணியைத் தொடங்கியது.

விடுதலை பெற்ற இந்தியாவின் பொருளாதாரம்: குறைவான தனியாள் வருவாய், மொத்த உற்பத்தியில் வேளாண்மை உற்பத்தியின் பங்கு மிகுதியாக இருத்தல், மிகுதியான மக்கள்தொகையின் காரணத்தால் தோன்றிய இடர்கள், ஆழமாக வேரூன்றியிருக்கும் வேலையின்மை, குறைவேலை, மூலதனப் பற்றாக்குறை, மிகக் குறைவான மூலதன ஆக்கம், முனைப்பான ஏற்றத்தாழ்வுடன் கூடிய செல்வ, வருமானப் பங்கீடு, மிகவும் குறைவான நிலையில் உள்ள தொழில்நுட்பம், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த நிலையில் உள்ள சராசரி வாழ்க்கைத்தரம், மிகுதியான மக்கள் அடர்த்தி, உழைப்போர் எண்ணிக்கையின் குறைவு, மோசமான சுற்றுப்புறச் சுகாதார நிலைகள், நாட்டுப்புறச் சேமிப்புகளைக் குவிக்கும் அமைப்புகளும் வலுவான நிதி அமைப்புகளும் இன்மை ஆகிய பல குறைகளைப் போக்க இந்தியப் பொருளாதாரத் திட்டங்களின் மூலம் வழிவகைகளை நாட வேண்டியிருந்தது.

இந்தியத் திட்டங்கள்: முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 முதல் 1956 முடிய), 1956 முதல் 1961 முடிய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், 1961 முதல் 1966 முடிய மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம், 1966 முதல் 1969 முடிய மூன்று ஓராண்டுத் திட்டங்கள், 1969 முதல் 1974 முடிய நான்காம் ஐந்தாண்டுத் திட்டம், 1974 முதல் 1978 முடிய ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம், 1978 முதல் 1980 முடிய ஆறாம் திட்டத்தின் முற்பகுதி ஆண்டுகளின் திட்டம், 1980 முதல் 1985 முடிய திருத்தப்பட்ட

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் ஆகிய ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களையும் நிறைவேற்றி, 1985 முதல் 1990 வரையில் உள்ள ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க நிலையில் இந்தியப் பொருளாதாரம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரித்து, நாட்டு வருமானத்தையும் உண்மைத் தலா வருமானத்தையும் அதிகரித்து, மக்கட்பெருக்கத்தையும் விலை உயர்வையும் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தி உண்மை வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், முழு வேலை நிலையை அடைதல், செல்வ, வருமானப் பங்கீட்டிலும் பொருளாதார ஆற்றல் ஒருசிலரிடையே குவிதலிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் படிப்படியாகக் குறைத்தல், ஏழ்மையையும் அறியாமையையும் போக்கிச் சமுதாய நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறுதல் ஆகிய பல அடிப்படைக் குறிக்கோள்களுடன் இத்திட்டங்கள் தீட்டப்பெற்றுச் செயற்படுத்தப்படுகின்றன.

சுதந்திரப் போராட்டத்தினாலும், 1947-இல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினையாலும் பாதிக்கப்பட்டிருந்த நிலைகளை மாற்றி மறுவாழ்வு அளிப்புப் பணிகளை மேற்கொள்வதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு முதல் திட்டம் உருவாக்கப்பட்டது. கனரகத் தொழில்கள், அடிப்படைத் தொழில்கள், இயந்திரங்களை உருவாக்கும் தொழில்கள் ஆகியவற்றின்மீது மிகுதியான முதலீடுகளை மேற்கொண்டு, எதிர்கால இந்தியா தொழில்மயமாவதற்கான ஓர் அடித்தளத்தை உருவாக்குவது, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முதல் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் வரை அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது. விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுச் செல்வ, வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்தி, தன்னிறைவு நிலையை அடைவதைச் சனதா அரசினால் அமைக்கப்பட்ட ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1978–83) குறிக்கோளாகக் கொண்டது. ஆனால், அரசு மாற்றத்தினால் ஐந்தாண்டுத் திட்டக் காலமும் மாற்றப் பெற்றது. புதிய ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980–1985) முதலீடுகள், உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றைப் பெருக்கும் வகையில் சமுதாய, பொருளாதாரப் பின்னமைப்புகளை உருவாக்குவதற்கு முதலிடம் தருதல், ஊரகங்களிலும், அமைப்புகளற்ற துறைகளிலும் வேலைவாய்ப்புகளை மிகுதியாக்கும் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல், ஏழ்மையையும் வருமான, செல்வ ஏற்றத்தாழ்வுகளையும் நீக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் ஆகிய குறிக்கோள்களுடன் அமைந்தது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985–1990) உற்பத்தித் திறனையும் உணவு உற்பத்தியையும் முழு வேலை நிலையையும் பெறுவதை அடிப்படைக் குறிக்கோள்களாகக் கொண்டு தீட்டப்பட்டுள்ளது.

பொதுத் துறையில் முதல்திட்டக் காலத்தில் 1960 கோடி ரூபாயும், இரண்டாம் திட்டக் காலத்தில் 4600 கோடி உரூபாயும், மூன்றாம் திட்டக் காலத்தில் 7,500 கோடி உரூபாயும் செலவிடப்பட்டது. 1966 69 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட மூன்று ஓராண்டுத் திட்டக் காலத்தில் பொதுத் துறையின் மொத்தச் செலவு 6630 கோடி உரூபாய். இது நான்காம் திட்டத்தில் 15,902 கோடி உரூபாயாக மிகுந்தது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் உத்தேசச் செலவு 39,303 கோடி உரூபாய். இத்திட்டக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமுதாயச் சிக்கல் ஆகியவற்றால் அவசர அறிவிப்பும் 20 அம்சப் பொருளாதாரக் கொள்கையும் ஏற்பட்டுத் திட்டமிட்ட பொருளாதாரம் என்ற பாதையிலிருந்து சிறிது பிறழ்ந்து செல்வது போலத் தென்பட்டது. ஆனால், அடுத்து வந்த சனதா அரசு ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அதன் நான்காம் ஆண்டிலேயே முடித்து வைத்து, 1978 முதல் ஆறாம் திட்டத்தை மேற்கொண்டது. இத்திட்டக் காலத்தில் பொதுத் துறையில் 71,000 கோடி உரூபாய் செலவிட முடிவுசெய்யப்பட்டது. ஆனால், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய இந்திரா காங்கிரசு 1980–85க்கான புதிய ஆறாம் திட்டத்தை அமைத்து, பொதுத் துறையில் 97,500 கோடி உரூபாய் செலவிடத் திட்டமிட்டது. இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் ஏழாம் திட்டத்தில் பொதுத் துறையில் மேற்கொள்ளத்தக்க மதிப்பீட்டுச் செலவு 180,000 கோடி உரூபாய்.

அதிகரித்து வரும் முதலீடுகளுக்குத் தேவையான உள்நாட்டுச் சேமிப்பும் கணிசமான அளவுக்கு அதிகரித்து வந்திருக்கிறது. மொத்த நிலையான மூலதனத்திரட்சி விகிதம் 1950ஐச் சேர்ந்த ஆண்டுகளின் மத்தியில் 11 விழுக்காடாகவும், 1970ஐச் சேர்ந்த ஆண்டுகளின் இறுதியில் 18 விழுக்காடாகவும் மிகுந்து இருந்ததாக இந்திய மைய இருப்பு வங்கியின் அறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 3.5 ஆகவே இருந்து வந்திருக்கிறது. உற்பத்தித்திறனில் உள்ள குறையும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் மிகுந்து வரும் இறுதிநிலை மூலதன-விளைவு வீதமும் இதற்கான அடிப்படைக் காரணங்கள் என்பதையும் இவ்வறிக்கை தெளிவுபடுத்துகிறது.

**வேளாண்மைத் துறை:** தொழில் துறை வளர்ச்

சிக்கான பல திட்டங்களைத் தோற்றுவித்து நிறைவேற்றி வந்தாலும், வேளாண்மைத்துறைதான் இந்தியப் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பு போல இருந்து வருகிறது. ஏறத்தாழ 70 சதவீத மக்கள் வேளாண்மைத்துறையையே சார்ந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் கணிக்கப்பெறும் நாட்டு வருவாயில் வேளாண்மைத் துறையும் அதனுடன் நெருக்கமான தொடர்புடைய துறைகளும் கணிசமானதொரு பங்கை அளித்து வருகின்றன. இது 1980-81-இல் 40 விழுக்காடாக இருந்தது. 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி ஏறத்தாழ 59.4 விழுக்காடு உழைக்கும் மக்கள் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருந்தனர் என்பதிலிருந்து வேளாண்மை பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்து வருகிறது என்பதை நன்கு உணரலாம்.

முதல் திட்டத் தொடக்கக் காலத்தில் வேளாண்மைப் பெருமக்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தது. பெரும்பாலும் கடனாளிகளாகவே பிறந்து கடனாளிகளாகவே வாழ்ந்து கடனாளிகளாகவே இறக்கும் இரங்கத்தக்க நிலையில் அவர்கள் இருந்தனர். ஆனால், ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையில் நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முதல் திட்டக் காலத்தில் விவசாய விளைபொருள்கள் பெருமளவில் பெருகியதால் பற்றாக்குறையும் பணவீக்கமும் விரைந்து குறைந்தன. இரண்டாம் திட்ட முடிவில் உணவு உற்பத்தி 79.3 மிலியன் டன்களாக அதிகரித்தாலும் பணவீக்கச் சூழ்நிலை வளர்ச்சி பெறத் தலைப்பட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டாலும், மூன்றாம் திட்டமுடிவில் அந்நிலையைப் பெற இயலாமல் ஏறத்தாழ அத்திட்டக்காலத்தில் 1,100 கோடி உரூபாய் அளவுக்கு உணவை இறக்குமதி செய்யும் அவல நிலை ஏற்பட்டது. இந்நிலை ஓராண்டுத் திட்டக் காலங்களிலும் தொடர்ந்தது. நான்காம் திட்டக் காலத்தில் உணவு உற்பத்தி 125 மிலியன் டன்களாக அதிகரித்தது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பருவமழை பொய்த்ததால் உற்பத்தி மீண்டும் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் குறைவாகவே இருந்தது. ஆறாம் திட்டக் காலத்தில் ஏறத்தாழ 12,539 கோடி உரூபாய் செலவிடப்பட்டது. இந்நிலையை அடையத்தக்க வகையில் நீர்ப்பாசனத் திட்டங்கள், நில உடைமை அமைப்பு மாற்றுத் திட்டங்கள், விவசாயக் கடன் உதவிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாயப் பண்டங்களின் விற்பனை அமைப்புகள், உணவு சேமிப்புக் கிடங்கு வசதிகள், கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றிலும் தேவையான மாறுதல்களை ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கோதுமை, அரிசி ஆகியவற்றில்தான் அதிக உற்பத்திப் பெருக்கம் காணப்படுவதால் பருப்பு வகைகள், வித்துகள், புன்செய் தானியங்கள் போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

உணவுப்பண்டங்கள், பிறவகைப் பண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவுகள் திட்டக் காலத்தில் கணிசமாக அதிகரித்திருந்தாலும் இன்னும் முடிக்க வேண்டிய பணிகள் பல உள. குறிப்பாக, இந்திய வேளாண்மைத் துறையின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும். எனவே, ஏழாம் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறைக்கும் உணவு உற்பத்திக்கும் உற்பத்தித்திறன் மேம்பாட்டிற்கும் இவற்றின் அடித்தளமாகப் பயன்படத் தக்க வகையில் பொருளாதாரப் பின்னமைப்புப் பணிகளை மிகுதிப்படுத்துவதற்கும் மிகுந்த சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழ்மையிலும் பழைமை நம்பிக்கைகளிலும் ஊறிப்போயுள்ள வேளாண்மைப் பெருமக்களிடையே விழிப்புணர்ச்சியையும் ஒளிமயமான எதிர்கால நம்பிக்கையையும் தோற்றுவிக்கு முகத்தான், ஊரக நலத் திட்டங்களையும் ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் வளர்ச்சித் திட்டங்களையும் ஏழாம் திட்டத்தில் நிறைவேற்றித் தற்சார்பு நிலையினை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏழாம் திட்டக் காலத்தில் விவசாய உற்பத்தி இலக்கை அடைவது இயலும் என்ற நம்பிக்கையுடன் அரசு செயற்பட்டு வருகிறது.

**தொழில் துறை:** ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் துறை மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. சீரான வளர்ச்சி இன்மை, மிகக் குறைவான மூலதனச் செறிவு, நுகர்வோர் பண்டங்களையே பெருமளவில் உற்பத்தி செய்தல் ஆகிய குறைகளுடன் இந்தியா தொழில் துறை வளர்ச்சிப் பாதையில் காலடி எடுத்து வைத்தது. மின் ஆற்றல், நீர்ப்பாசனம் போன்ற தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைகளை உருவாக்குவது முதல் திட்டத்தின் குறிக்கோளாக அமைந்தது. தொழில் வளர்ச்சி 1956-ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை முடிவின் அடிப்படையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டது. நுகர்வோர் பண்டங்களைப் உற்பத்தி செய்யும் தொழில்களின் பெருக்கம், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள உற்பத்தி ஆற்றலை முழு அளவில் பயன்படுத்துதல், தேசியத் தொழில்களைப் புதுமைப் படுத்துதல், இரும்பு, எஃகு, கனரகத் தொழில்கள் போன்றவற்றை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்

டாம் திட்டம் உருவாக்கப்பட்டது. ஒரிசாவில் உரூர் கேலா இரும்புத் தொழிற்சாலையும் மத்திய பிர தேசத்தில் பிலாய் எஃகுத் தொழிற்சாலையும் மேற்கு வங்காளத்தில் துர்க்காபூர் எஃகுத் தொழிற் சாலையும் பொதுத் துறையில் ஏற்படுத்தப்பட்டன. இந்துசுத்தான் எந்திரக் கருவிகள்(Hindustan Machine Tools), சிந்திரியில் உள்ள உரத் தொழிற்சாலை, இந்துசுதான் கப்பல் கட்டும் தொழிற்சாலை, சித்த ரஞ்சனில் உள்ள இரயில் எஞ்சின் தொழிற்சாலை ஆகி யவை விரிவாக்கப்பட்டன. சிறு தொழில்களிலும் ஊரகத் தொழில்களிலும் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அடுத்தடுத்த திட்டங்களிலும் எல்லா வகையான தொழில்களின் முன்னேற்றத்திற் கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது.

கடந்த 35 ஆண்டுகளில் இந்தியத் தொழில்க ளின் உற்பத்தி ஏறத்தாழ ஐந்து மடங்கிற்கும் அதிக மாக அதிகரித்துள்ளது; இந்தியாவும் ஒரு தொழில் மயமான நாடாக மாற்றமடைந்துள்ளது; பலதரப் பட்ட தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ளன; பிற நாடுகள் விரும்பி இறக்குமதி செய்து கொள்ளத்தக்க வகையிலான பொறி செய் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களும் வளர்ச்சி பெற்றுள்ளன.

தொழில்துறை உற்பத்தியில் தனியார் துறை மட்டுமல்லாமல் பொதுத் துறை இணைந்த துறையும் சிறப்பிடம் பெற்று வருகிறது.

மொத்தத்தில் தொழில் துறை வளர்ச்சி ஆறாம் திட்டக் காலத்தில் இருந்த ஏறத்தாழ 5 விழுக்காட் டைக் காட்டிலும் ஏழாம் திட்டக் காலத்தில் அதிக மான அளவில் இருக்கவேண்டும் என்ற கருத்து இப் போது வலுப்பெற்று வருகிறது. ஏழாம் திட்டக் காலத்தில் இவ்வளர்ச்சி வீதம் குறைந்த பட்சம் 8 அல்லது 9 விழுக்காடு அளவிலாவது இருந்தால்தான் இந்தியப் பொருளாதாரம் வலுவடைந்த நிலையில் இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. நாட்டில் வசதி களும் ஆள்பலமும் தொழில்நுட்ப வளர்ச்சியும் நிரு வாகத் திறனும் நிறைந்திருப்பதால், இவ்வளர்ச்சி யைப் பெறுவது இயலும் என்ற நம்பிக்கையுடன் அரசும் மக்களும் செயற்படுகின்றனர். இருப்பினும் தொழில் நிறுவனங்களின் செயல்திறன் இன்னும் பல மடங்கு பெருக வேண்டும்; பயன்படாமல் இருக்கும் எஞ்சிய ஆற்றலைத் திறம்படப் பயன்படுத்த வேண் டும்; தனியார் துறையும் பொதுத் துறையும் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்து, நாட்டு உணர்வுடன் இன்னும் சிறப்பாகச் செயற்படவேண் டும்; செயல்துணிவுடனும் மிகுந்த பொறுப்புடனும் செயலாற்றவேண்டும். எண்ணெய் இயற்கை எரிவாயு ஆணையம், மிகு மின் தொழிற்சாலைகள், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் போன்ற ஒருசில அரசுத் துறை அமைப்புகள் ஆதாயம் தரத்தக்க வகையில் செயற்பட்டாலும், பல்லாண்டுகளாக ஆதாயம் ஈட் டாத பிற அரசுத் துறை நிறுவனங்களும் ஆதாயம் தரத்தக்க வகையில் உற்பத்தித் திறனை மிகுதியாக் கிச் செயற்படுவது மிகவும் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும்.

அயல்நாட்டு மூலதனமும் உதவியும்: வறுமை என்னும் நச்சுச் சுழலை உடைத்தெறிந்து விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற உள்நாட்டு மூல வளங்களை மட்டுமல்லாமல, அயல்நாட்டு மூலவளங் களையும் நாடுதல் நாடுகளின் இயல்பு. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. உள்நாட்டுச் சேமிப்பின் பற் றாக்குறையை ஈடுசெய்தல், அயற்செலாவணியைப் பெறுதல், தொழில்நுட்ப மாற்றங்களுக்கு வசதி செய்து தருதல் போன்ற பல அடிப்படைகளில் அயல்நாட்டு மூலதனத்தையும் உதவியையும் இந்தியா பெற்று வந்திருந்த போதிலும், இந்நாட் டின் பெருமிதத்திற்கு இரண்டகம் விளைவிக்கும் எந்தக் கட்டுப்பாட்டையும் ஏற்றுக் கொள்ளவில்லை. முதல் திட்டக் காலம் தொடங்கி 1981-82 வரை அயல் நாட்டில் உள்ள தனிப்பட்டவர்கள், அரசுகள், பன்னாட்டு நிதி அமைப்புகள் போன்றவற்றிட மிருந்து ஏறத்தாழ 24,731 கோடி உரூபாய் உதவியை நாடு பெற்றிருக்கிறது. ஆனால், இந்நிலை தொடரா மல் வளர்ச்சிக்குத் தேவையான நிதி மூலவளங் களையெல்லாம் உள்நாட்டிலேயே திரட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதோடு, அம்முயற்சிகளில் முழு வெற்றி பெறத்தக்க வாய்ப்பு களும் நன்குள்ளன என்பது வலுவூட்டும் நல்ல கூறுக ளாகும்.

ஏழ்மையும் பொருளாதாரச் சமத்துவ மின்மையும்: இந்தியப் பொருளாதாரத்தில் உடனடியாகக் கவனிக் கப்பட்டுத் தீர்வு காணப்பட வேண்டியவை இவை. ஏறத்தாழ 50 விழுக்காட்டிற்கும் மிகுதியான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகக் கருதப் படுகிறது. வறுமைக் கோட்டிற்குப் பலவிதமான விளக் கங்கள் உள்ளன. ஊரகங்களின் மாத வருவாய் 1979-80-ஆம் ஆண்டில் நிலவிய விலைகளின் அடிப்படை யில் 76 உரூபாய்க்குக் குறைவாகப் பெறுபவர்களும் நகர்ப்புறத்தில் மாத வருவாய் 88 உரூபாய்க்குக் குறைவாகப் பெறுபவர்களும் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்ற புதிய ஆறாம் திட்டத்தின்(1980-85)விளக்கத்தின்படி, இந்தியாவில் ஏறத்தாழ 317 மிலியன் மக்கள் வறுமைக்கோட்டிற் குக் கீழ் உள்ளனர். இவர்களுள் 260 மிலியன் மக்கள் ஊரகங்களிலும் 57 மிலியன் மக்கள் நகர்களிலும்

வாழ்கிறார்கள். இந்நிலை மாறிட வேண்டும். அதற்காக ஏழாம் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. அரசு நடவடிக்கைகள் ஒரு புறம் இருக்க, ஏழ்மையை அகற்றிட, வறியவர்கள் துன்பம் நீங்கிடப் புரட்சிப் பாதையில் இறங்குவதைக் காட்டிலும் நாட்டின் தந்தை அண்ணல் மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்ட வண்ணம் செல்வோர் யாவரும் தங்களிடம் உள்ள செல்வத்திற்குத் தங்களை முழு உரிமையாளர்களாக எண்ணாமல் இறையருளால் வாய்ப்புத் தரப்பட்ட அறங்காவலர்கள் என்ற உண்மையை உணர்ந்து செயற்படுவதே சாலச் சிறந்த வழியாகும்.

விலைகள்: தனியார் வருவாய் உயர்வே பொருளாதார முன்னேற்றம். முதல் திட்டக் காலத்தில் காணப்படாத விலை உயர்வுப் போக்கு இரண்டாம் திட்டக் காலத்தில் தொடங்கி, ஊர்ந்து, தவழ்ந்து, நடந்து, ஓடும் பணவீக்கமாக இந்தியாவில் உருவெடுத்துவிட்டது. பல காரணங்களால் ஏற்பட்ட பணவீக்கத்தைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முழுப் பலனைத் தர இயலவில்லை. பண அளிப்பு 1950-51-இல் 2020 கோடி உருபாயாக இருந்தது. பின்னர் 1980-81-இல் 23,270 கோடி உருபாயாக மிகுந்ததனால் மட்டுமல்லாமல், வேறு பல காரணங்களாலும் இந்தியாவில் பொருளின் விலைகள் உயரும் போக்கைப் பெற்றிருந்தன. பொருளாதார வளர்ச்சிப் பருவத்தில் விலை உயர்வு இயல்பே என்றாலும், விலை தொடர்ந்து மிகும்போது சமுதாயத்தில் பல பிரிவினர் அல்லற்பட நேரிடுகிறது. விலைகளின் போக்கு 1984-85-இன் தொடக்கத்தில் ஏறுமுகமாகவும் பிற்பகுதியில் தளர்ந்தும் இருந்தது. தளர்ந்த போக்கிற்கு அரசின் பணவீக்கத் தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. பொதுப் பங்கீட்டு முறையை விரிவாகப் பயன்படுத்தியும் உள்நாட்டு உற்பத்திக்கேற்ப இன்றியமையாத பண்டங்களின் இறக்குமதியை மிகுதிப்படுத்தியும் மொத்தத்தில் எல்லாப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கியும் விலைகளைக்குறைக்க அரசு முயன்று வருகிறது. ஆனால், 1985-86-ஆம் ஆண்டிற்காக நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஈடு செய்யப்படாமல் துண்டு விழும் வகையில் உள்ள உருபாய் 3349 கோடி, பணவீக்கத்தை மேலும் முனைப்பாக்கிவிடும் என்றே அறிஞர் பெருமக்கள் அஞ்சுகின்றனர்.

வேலையின்மை: இந்தியப் பொருளாதாரம் எதிர்நோக்கியுள்ள பல சிக்கல்களில் வேலையின்மை என்பதும் ஒன்று. உழைக்கும் மக்கள் தொகையுள் வேலையற்றோர் முதல் திட்டக் கால முடிவில் 2.9 விழுக்காடு இருந்தனர். அது இரண்டாம் திட்டக் கால முடிவில் 3.6 சதவீதமாகவும், மூன்றாம் திட்டக் கால முடிவில் 4.5 சதவீதமாகவும், மூன்று ஓராண்டுத் திட்டங்கள் கால முடிவில் 9.6 சதவீதமாகவும், 1971-இல் பகவதி கமிட்டியின் மதிப்பீட்டின்படி 10.4 சதவீதமாகவும் அதிகரித்திருக்கிறது. காரணங்கள் பல சொல்லப்பட்டாலும் ஆறாம் திட்டக் காலத்தில் அதிகப்படியாகச் சேரும் அத்தனை பேர்களுக்கும் (ஏறத்தாழ 34.28 மிலியன் பேர்களுக்கும்) வேலை வாய்ப்பை அளித்தலும் இயலாமல் போகலாம்.

வேலையற்றிருப்போர் எண்ணிக்கை 1985-இல் 11.98 மிலியனாக இருக்கும் என்பது திட்ட மதிப்பீடு. ஆனால், கடந்த ஒருசில ஆண்டுகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் 1985-இல் வேலையற்றிருப்போர் எண்ணிக்கை 15 முதல் 20 மிலியன் வரை இருக்க வாய்ப்புண்டு.

வேலையின்மையை ஊரக வேலையின்மை நகர்ப்புற வேலையின்மை எனப் பிரிக்கலாம். ஊரகங்களில் பருவக்கால வேலையின்மை, மறைமுக வேலையின்மை என இரு வகைகள் உண்டு. நகர்ப்புறத்தில் ஆலைத்தொழில் வேலையின்மை, படித்தவர்களிடையே வேலையின்மை என்ற இரு வகைகள் உண்டு. ஊரகக் கைத்தொழில்கள், சிறுதொழில்கள், விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்யும் சிறுதொழில்கள் ஆகியவற்றைப் பெருமளவில் வளர்ச்சி பெறச் செய்வதன் மூலமும், உள்ளூர்த் தேவைகளுக்கேற்ப நுண்ணினத் திட்டமிடுதல் முறையைக் கையாளுவதன் மூலமும் ஊரக வேலையின்மையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிகவும் இன்றியமையாததாகத் தேவைப்படும் உற்பத்தி நிலைகளைத் தவிர மற்ற எல்லா உற்பத்தி நிலைகளிலும் தொழிலாளர் செறிவுள்ள உற்பத்தி முறையைப் பயன்படுத்துதல், குறைந்தகட்டுமானக்காலத்தையும், தொழில்லாளர் செறிவுள்ள முறையையும் கொண்ட தொழில்களுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவை மூலம் ஆலைத்தொழிலில் உள்ள வேலையின்மையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டில் இப்போதுள்ள எழுத்தறிவு பெற்றோர் அளவு 36 சதவீதம். இதைக் கணிசமான அளவுக்கு உயர்த்தத் தொடக்க நிலைக் கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமானதாகவும் ஆக்குதல் நன்று. மேலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைவரும் சொந்தமான வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளும் வகையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை மாற்றி அமைக்கலாம். வேலைவாய்ப்பைக் கருதாமல் ஆய்வுகளையும் அதன்மூலம் சமுதாயத்திற்கு மொத்தமாக ஆற்றும் பணிகளையும் கருத்தில் கொண்டு

அதன் வழி நாடுபவர்களுக்கு உயர்கல்வி கொடுக்கப் படலாம். சொந்தமாகத் தொழில் செய்ய முனைவோருக்கு எல்லா வசதி வாய்ப்புகளையும் அரசு செய்து தருதல் வேண்டும். இவ்வாறெல்லாம் செயற்பட்டு, படித்தோரிடையே வேலையின்மையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் பெருக்கம்: இந்தியாவின் தலையாய சிக்கல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று பெருகி வரும் மக்கள்தொகை. உலக நாடுகளில் சீனாவிற்கு அடுத்தபடியாக அதிக மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் மக்கள்பெருக்கம், 1921–ஆம் ஆண்டு முதல் மிகவும் முனைப்பாகிவிட்டது. வியத்தகு மாற்றங்களுடன் கூடிய மருத்துவ முன்னேற்றமும், அதனை அடைவதற்கு அரசு மேற்கொண்ட பல முயற்சிகளுக்கு மக்கள் தந்த பேராதரவும் இறப்பு விகிதத்தை மிக வேகமாகக் குறைக்க உதவின. சராசரி 1000 ஆட்களுக்கு 1951–இல் 27.4 என்றிருந்த இறப்பு வீதம் 1981–இல் 14.8 ஆகக் குறைந்துவிட்டது. ஆனால், 1951–இல் சராசரி 1000 ஆட்களுக்கு 39.9 என்றிருந்த பிறப்பு வீதம் 1981–இல் 36.0 என்ற அளவுக்குத்தான் குறைந்திருக்கிறது. இதனால், 1951–61–இல் சராசரியாக ஆண்டொன்றுக்கு 2.15 விழுக்காடு அளவிலும், 1961–71–இலும், 1971–81 இலும் சராசரி ஆண்டொன்றுக்கு 2.48 விழுக்காடு அளவிலும் மக்கள்தொகை பெருகி வந்திருக்கிறது. இதனால் திட்டமிட்ட செலவுகளும், திட்டமிடாத செலவுகளும் மிகுந்திருக்கின்றன. ஏழாம் திட்டக் காலத்தில் மக்கட்பெருக்க வீதம் 1.8 விழுக்காடாக இருக்குமென்றும் மக்கள்தொகை 1990–இல் 813 மிலியன் அளவில் இருக்குமென்றும் மதிப்பீடுகள் தரப்பட்டிருந்தாலும், நடப்பு நிலவரங்களின் அடிப்படையில் பார்த்தால், மக்கள்பெருக்க வீதம் குறைந்த அளவு 2 விழுக்காடாக இருக்கலாம்; மக்கள் தொகையின் அளவு 1990–இல் 814.5 மிலியனாகவும் இருக்கலாம். எனவே, முன் திட்டங்களில் பயன்படுத்தியதைக் காட்டிலும் அரசு தீவிரமான அளவில் குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்த முன் வந்திருக்கிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் போக்குவரத்து, செய்தித்தொடர்பு, வாணிகம், வங்கிகள், பொது நிதி போன்ற எல்லாத் துறைகளிலும் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நாட்டின் முதுகெலும்பு போன்ற வேளாண்மைத் தொழிலுக்கு உதவி செய்வதற்காக நாட்டின் மைய இருப்பு வங்கி, வேளாண்மைத் துறை என்று ஒரு துறையையே ஏற்படுத்திப் புதிய பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. பெரும் வாணிக வங்கிகளையெல்லாம் நாட்டு உடைமையாக்கி, அவற்றின் நிதி வசதிகளை இன்று எல்லோரும் பெற வாய்ப்புகள் தரப்படுகின்றன. உணவு மற்றும் இன்றியமையாத பண்டங்களின் பங்கீட்டிலும் அரசு ஈடுபட்டு, மக்களுக்கு நல்ல பணிகளை ஆற்றி வருகிறது.

எதிர்நோக்கிய சிக்கல்கள் எவ்வளவு இருந்தாலும் உறுதியுடனும் ஒருமைப்பாட்டு உணர்வுடனும் அச்சிக்கல்களைப் போக்கி உலகில் உள்ள பல்வேறு நாடுகளும் உலக மன்றங்களில் பாராட்டும் வகையில் பீடு நடைபோட்டு முன்னேறி வரும் இந்தியப் பொருளாதாரத்தை, இன்று எவரும் பின்தங்கிய பொருளாதாரம் என்று குறிப்பிடுவதில்லை. எழுச்சி நிலையை அடைந்து விரைந்து முன்னேறி வளரும் பொருளாதாரங்களின் வரிசையில் முன்னணியில் நின்று, வளர்ந்து செல்கிறது இந்தியப் பொருளாதாரம்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்;

**Bright Singh, D.**, Economics of Development, Asia Publishing House, Bombay, 1971.

**Misra, S.K.& Puri**, V.K., Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1985.

**Ruddan Datt and Sundaram**, K.P.M., Development Issues of the Indian Economy, Chand and Company, New Delhi, 1985.

**Shrinivas, Y.**, Thakur, Indian Economic Development, Retrospect and Prospect, Sterling Publishers, Jalundar, 1982.

**Venkata Subbiah, H.**, Indian Economy Since Independence, Asia Publishing House, Bombay, 1961.

**இந்தியப் போக்குவரத்து:** தொழில்மயமாக்கப்பட்ட எல்லா நாடுகளுக்கும் போக்குவரத்து மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அந்நாட்டின் போக்குவரத்து முன்னேற்றத்தைப் பொறுத்தும் அமையும். போக்குவரத்து என்பது, பொதுவாகப் பயணிகளையும் அவர்கள் பொருள்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதாகும். போக்குவரத்துச் சாதன உதவியால் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய முடியும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும், பொருளாதார, சமூக, அரசியல் வளர்ச்சி அடைவதற்கும் போக்குவரத்து இன்றியமையாததாகும். திறமையான போக்குவரத்து ஒரு நாட்டின்

ஆக்கத்திறனைக் (Productivity) குறிக்கும். இந்தியாவின் போக்குவரத்தில் இருப்புப்பாதைப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, விமானப்போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து ஆகியவை சிறந்த இடத்தினைப் பெறுகின்றன.

சாலைப் போக்குவரத்து: இந்தியாவில் சாலைப் போக்குவரத்து, நகரங்களையும், ஊரகங்களையும் இணைப்பதற்கும் பலவகைப்பட்ட ஊர்திகளின் போக்குவரத்திற்கும் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் சாலைப் போக்குவரத்து மிகவும் பரந்து விரிந்த அமைப்புடையதாகும். இதில் பலவகையான ஊர்திகள், இழுப்புந்துகள் (Trucks), பேருந்துகள், சரக்குந்துகள், மாட்டு வண்டிகள், மிதிவண்டிகள் போன்றவை அடங்குகின்றன. சாலைப் போக்குவரத்து பிற போக்குவரத்துகளான புகைவண்டி,கப்பல், விமானம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் போக்குவரத்தாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில், முதன் முதலாக 1929–ஆம் ஆண்டு செயகர் குழுவின் தலைமையில், சாலைகளைச் சீர்படுத்துவதற்கான திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. பின்னர், 1943–ஆம் ஆண்டுத் தலைமைத் தொழில் நுட்ப அறிஞர்களின் சார்பில் சாலைப் போக்குவரத்தின் முன்னேற்றத்திற்காக ஒரு நீண்ட கால 20 ஆண்டுத் திட்டம் செயற்படுத்த வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டம் நாக்பூர்த் திட்டம் எனப்படும். இத்திட்டத்தின் கீழ்ச் சாலைகள் பின்வருமாறு பல வகைகளாகப் பிரிக்கப்பட்டன. 1) தேசிய நெடுஞ்சாலை 2) மாநில நெடுஞ்சாலை 3) மாவட்டச்சாலை (4) ஊரகச் சாலை. இதன் தலையாய நோக்கம் நகர்ப்புறச் சாலைகளை ஊரகங்களோடு இணைப்பதாகும். மேலும், ஊரகங்களில் விளைகிற வேளாண்மைப் பொருள்களான அரிசி, கோதுமை,கரும்பு, கேழ்வரகு போன்றவற்றை நகரங்களுக்குக் கொண்டு செல்வதற்குச் சாலைகள் அமைக்கப்பட்டன. இத்திட்டம் மைய, மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சாலைப் போக்குவரத்து முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாக்பூர்த் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைக்காக (National High ways)உரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், திட்டக் காலத்தில் இதற்காக உரூ.10 கோடி மட்டுமே செலவழிக்கப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைப் போக்குவரத்துக் கழகச் சட்டப்படி உரூ. 13.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பின்னர் இருபதாண்டு பம்பாய்த் திட்டம் 1961–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஒவ்வோர் ஊரகமும் நகர்ப்புறச் சாலைகளோடு இணைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதாவது ஊரகத்திற்கும் நகரத்திற்கும் குறைந்தது 4 மைல் இடைவெளியில் மட்டுமே போக்குவரத்து இல்லாமல் இருக்கலாம். இதற்குமேல் திட்டவட்டமாகச் சாலைகள் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்படி பாலங்கள் அமைத்தல், பழைய சாலைகளைப் பழுது பார்த்தல், தலையாய சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்படி 1961–இல் 6.09 இலட்சங் கிலோ மீட்டராக இருந்த சாலைகளின் நீளம், 10.51 இலட்சங் கிலோ மீட்டராக 1981–ஆம் ஆண்டு விரிவாக்கப்பட்டது. இதற்காக அரசாங்கம் உரூ. 5200 கோடி ஒதுக்கீடு செய்தது. அதில் உரூ. 630 கோடி ஊரகப்புறச் சாலைகளைச் சீர்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால், ஊரகச் சாலைகளின் நீளம் 1950–ஆம் ஆண்டில் 4 இலட்சம் கிலோ மீட்டரிலிருந்தது,14.80 இலட்சம் கிலோ மீட்டராக 1980–ஆம் ஆண்டு உயர்ந்தது. அதாவது 200 விழுக்காட்டுக்கு மேல் மிகுந்தது. இவற்றில் முடிக்கப்பட்ட 5.46 இலட்சங் கிலோ மீட்டர் அளவு நடுத்தரமான சாலைகளும் 31,358 கிலோ மீட்டர் நீளத் தேசிய சாலைகளும், 11 இலட்சம் கிலோ மீட்டர் அளவு மாநிலச் சாலைகளும், 4.1 இலட்சங் கிலோ மீட்டர் அளவு ஊரகச் சாலைகளும் அடங்கும்.

வளர்ச்சிச் சிக்கல்கள்: இச்சிக்கல்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது சாலைகளின் பற்றாக்குறையாகும். நாட்டின் தேவைக்கேற்ற அளவு சாலைகள் போதுமானவையாக இல்லை. மேலும்,அவை நன்றாகப் பாதுகாக்கப்படவுமில்லை. தேவையான பாலங்கள் கட்டாமை, துண்டிக்கப்பட்ட சாலைகளை ஒன்று சேர்க்காமை, நடைபாதைச் சாலைகள் அமைக்கப்படாமை ஆகியவை சாலை வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மேலும், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படுவதாலும், ஒருங்கிணைக்கப்பட்ட சாலைகள் அமையாதிருப்பதாலும், சாலைகள் அமைப்பதற்கு மிகுதியான பணம் செலவாகிறது. பொதுப் பயனை அளிக்கும் துறையாதலால் அரசுகளின் முதலீடு, திட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாகவே இது வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலுள்ளது. இரண்டாவதாக, ஐந்தாண்டுத்திட்டங்களில் சாலைப்

போக்குவரத்து வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப் படவில்லை. அதனால், ஊரகச் சாலை வளர்ச்சி புறக் கணிக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மலைப் பகுதிகளுக்கும் போதுமான சாலைப் போக்குவரத்து அமைக்கப்படவில்லை. மிகுதியாகத் தொழிற்சாலை கள் நிறுவப்பட்டுள்ள நகரங்களில் மட்டும் சாலைப் போக்குவரத்து வசதிகள் மேலும் மேலும் விரிவாக்கப் பட்டுள்ளன. இந்தியாவின் சாலைப் போக்குவரத்தில் பயணிகளும் பொருள்களும் பெறுமிடம் தலையாய தாகும். இயந்திரமயமாக்கப்பட்ட, இயந்திரமய மாக்கப்படாத ஊர்திகள் பல சாலைகளைப் பயன் படுத்துகின்றன. இரயில் போக்குவரத்துக்குக் கடின மாக உள்ள மலைப்பகுதிகளில், உந்து வண்டிகள் சாலைகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றன.

உந்து வண்டிகளின் எண்ணிக்கை, உந்து வண்டி களின் அடர்த்தி, சாலைப் போக்குவரத்தில் உந்து வண்டிகளின் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து வசதி வளர்ச்சி பெறுகிறது. உந்து வண்டிகளின் எண்ணிக்கை தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரு துறைகளிலும் 1951-ஆம் ஆண்டிலிருந்து விரைந்த வளர்ச்சி பெற்று 1979-80- ஆம் ஆண்டுக்குள் 12 மடங்காக உயர்ந்தது. உந்து வண்டிகளின் அடர்த்தியை, ஓர் இலட்சம் மக்கள் பயன்படுத்தும் மொத்த வண்டிகளில் எண்ணிக்கை எனவும், 100 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பயன் படுத்தப்படும் உந்து வண்டிகளின் எண்ணிக்கை என வும் அளவிடலாம்.

மொத்தப் போக்குவரத்தில் 1950-51-இல் 26 விழுக்காடாக இருந்த சாலைப் போக்குவரத்து, 1977-78-இல் 59 விழுக்காடாக உயர்ந்தது. சாலைப் போக்குவரத்து தலையாய பங்கு வகித்தாலும் இதன் மேலாண்மையில் அரசு மிகுந்த அக்கறை காட்டாத தால், திறமையான முறையில் இது பணிபுரிய முடிய வில்லை. ஒவ்வோர் உந்து வண்டி ஓட்டுநரும் அனுமதிக்கட்டணம் செலுத்த வேண்டும் என்பதா லும், சாலை ஆய்வு நிலையங்கள் (Check Post) சரிவரச் செயற்படாமையாலும், இருப்புப்பாதைப் போக்குவரத் தோடு போட்டியிட வேண்டியிருப்பதாலும் மிகுந்த அளவு வரி கட்டவேண்டி இருப்பதாலும் சாலைப் போக்குவரத்துத் துறை திறமையான முறையில் செயற்பட முடியவில்லை.

தேசியப் போக்குவரத்துக் கொள்கைக் குழு 1976-இல் உந்து வண்டிச் சட்டம் மாற்றியமைக்கப் பட வேண்டும் என்றும் உள்மாநில அனுமதிக் கட்ட ணம் விதிக்கக் கூடாது என்றும் வங்கிகளின் வாயி லாகக் கடன் வசதி அளித்தல், எரிபொருள் செலவை மிச்சப்படுத்துவதற்கு வண்டிகளைப் புதுமுறையில் அமைத்தல், ஆய்வு நிலையங்களைக் குறைத்தல், சாலைகளைச் செம்மையான முறையில் பாதுகாத் தல் போன்றவை சாலைப் போக்குவரத்து முன் னேற்றத்திற்கு உதவும் என்றும் பரிந்துரைத்தது.

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து: இந்தி யாவில் நீர்வழிப் போக்குவரத்து ஏறக்குறைய 13,500 கிலோ மீட்டர் அளவு உள்ளது. இதில் ஐந்தில் ஒரு பங்கு நீராவிப் படகுகளால் செல்லக் கூடியது. இவ்வகையான போக்குவரத்தை அசாம், மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, கேரளம், ஆந்திரப் பிர தேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காணலாம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இவ் வகைப் போக்குவரத்து, இந்தியாவில் பல தொழிற் சாலைகள் தொடங்குவதற்கு உதவியாக இருந்தது. இக்காலத்தில் உள்நாட்டு நீர்ப் போக்குவரத்துகளில் மைய, மாநில அரசுகள் பல வழிகளைப் பின்பற்று கின்றன.

நீண்ட தூரத்திற்கும் குறைந்த தூரத்திற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. இதில் பயணம் செய் வதை மக்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால், இதில் பயணக் கட்டணம் மற்றவற்றைவிடக் குறைவாக உள்ளது. மேலும், இதன் உதவியால் மரம் போன்ற கனமான பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்கு எளிதாகக் கொண்டு செல்ல முடியும்.

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து வளர்ச்சியும் ஐந்தாண்டுத் திட்டங்களில் சிறப்பிடம் பெறுகிறது. நீர்ப் போக்குவரத்தையும் சாலை, இருப்புப்பாதைப் போக்குவரத்தோடு இணைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. மேலும், நீண்டகால 15 ஆண்டுத் திட்டங்கள் வாயிலாக, உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து வளர்ச்சிக்குத் திட்டங்கள் செயற் படுத்தப்படுகின்றன. தேசிய போக்குவரத்துக் கொள்கைக் குழு, சில நீர்வழிகளைத் தேசிய நீர் வழிகளாகப் பிரிக்கப் பரிந்துரைத்துள்ளது. இந்தியா வின் நீர் வழித் திட்டத்தின் வளர்ச்சியே போக்கு வரத்துத் துறையின் வளர்ச்சி என்று கருத வேண் டும் எனவும், மைய அரசு இதன் வளர்ச்சிக்கு ஆத ரவு அளித்து முதலீடு செய்ய வேண்டும் எனவும் இக்குழு பரிந்துரைத்தது.

கப்பல் போக்குவரத்து: வெளிநாட்டு வாணிகத் திற்கு இந்தியா கப்பல் போக்குவரத்தையே முழு மையாக நம்பியிருக்கிறது. நாட்டின் பொருளா தார வளர்ச்சிக்கும் இது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இந்தியா, உலகக் கப்பல் போக்கு வரத்தின், பதினைந்தாம் இடத்தைப் பெறுகிறது. உலகப் போக்குவரத்தில் இந்தியக் கப்பல் போக்கு வரத்தின் பங்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | விழுக்காடு |
|---|---|
| 1948 | 0.39 |
| 1951 | 0.52 |
| 1959 | 0.55 |
| 1961 | 0.70 |
| 1966 | 1.05 |
| 1974 | 1.12 |
| 1978 | 1.42 |

இந்தியாவில் மூன்று கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் உள்ளன. அவை விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துசுத்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை, கல்கத்தாவிலுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை, பம்பாயில் உள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை ஆகியனவாகும்.

உலகக் கப்பல் தொழிற்சாலைகளை 1973-ஆம் ஆண்டு நடந்த எண்ணெய்த் தட்டுப்பாடு மிகவும் பாதித்தது. இதனால், கப்பல் போக்குவரத்துக் குறைக்கப்பட்டதால் கப்பல் நிறுவனங்களின் வருவாயும் குறைந்தது. இந்நிறுவனங்களில் 1981-82-ஆம் ஆண்டில் உரூ.350 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும், சில கப்பல்கள் ஒரு துறைமுகத்தில் நின்றுவிட்டால் ஒருநாளைக்கு உரூ. 25,000 முதல் உரூ, 35,000 வரை கட்டணம் கட்ட நேரிடுகிறது. பொருள்களைக் கப்பலில் இருந்து எடுத்து, அவை சேர வேண்டியவர்களுக்குச் சேர்ப்பதும் சிக்கலாக உள்ளது. பொருள்களைச் சேதமடையாமல் ஒழுங்காகப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் மிகுதியான முதலீடு செய்து பொருள்கள் சேகரித்து வைக்கும் கிடங்குகளை அமைக்க வேண்டியுள்ளது.

விமானப் போக்குவரத்து: இந்தியாவில் விமானப் போக்குவரத்துப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். முதன் முதலாக 1911-ஆம் ஆண்டு ஆகாய விமானம் அலகாபாத்திலிருந்து நைனிக்கு 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு விடப்பட்டது. விமானப் போக்குவரத்து 1953-ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்டது. இது செயற்படுவதற்கு இரண்டு கழகங்கள் அமைக்கப்பட்டன. உள்நாட்டுப் போக்குவரத்திற்கு இந்திய விமானப் போக்குவரத்துக் கழகமும், பன்னாட்டுப் போக்குவரத்துக்கு இந்திய வெளிநாட்டுப் போக்குவரத்துக் கழகமும் (Air India) நிறுவப்பட்டன. பன்னாட்டு ஆகாய விமானப் போக்குவரத்து 1979-80-இல் 10.5 மிலியன் பயணிகளையும் 200,00 கண்டி எடையுள்ள பொருள்களையும் எடுத்துச் சென்றது. இன்று இந்திய ஆகாய விமானப் போக்குவரத்து 69 இடங்களுக்குச் சென்று தன் பணியை ஆற்றுகிறது. இதில் 62 இடங்கள் இந்தியாவிலேயே உள்ளன. மூன்றாவது ஆகாய விமானப் போக்குவரத்து வாயுதூத்து (Voyudoot) என்ற பெயரில் 1981-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுகிறது.

இந்திய ஆகாய விமானப்போக்குவரத்து (Indian (Airlines) உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மிகவும் உதவிபுரிந்தது. நீண்டதூரப் பயணம் மேற்கொள்ள நேர்ந்தால் இதன் உதவியால் வெகு சீக்கிரத்தில் அப்பயணத்தை முடித்துவிடலாம். இதன் உதவியால் 1960-61 இல் போக்குவரத்து 53.20 மிலியன் கண்டியிலிருந்து, 1978 79 இல் 390, 96 மிலியன் கண்டியாக (Tonnes) உயர்ந்தது.

இந்திய ஆகாயவிமானம், இது பன்னாட்டு வாணிகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. பயணிகளின் போக்குவரத்து 1960 70 இல் 13%ஆக இருந்தது. 1970 78 இல் 16% ஆக உயர்ந்தது. பொருள்களையும் மிகுந்த அளவில் இது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதாவது வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்கிறது. இவ்விமானப் போக்குவரத்து 1973-74-இலிருந்து தொடர்ந்து ஆதாயத்துடன் செயற்படுகிறது. இதனால், 1977-78-ஆம் ஆண்டு உரூ 28.45 கோடி ஆதாயமாக அரசாங்கத்திற்குக் கிடைத்தது. இதன் தேவை நாளுக்கு நாள் மிகுந்ததால் இதை நிறைவேற்ற போயிங்கு 747 (Boeing 747) என்னும் விமானமும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வாயுதூத்து: இந்தியாவின் மூன்றாவது விமானப் போக்குவரத்தாக 1981 சனவரி 26-ஆம் தேதி

தொடங்கப்பட்டது. இதன் அடிப்படை நோக்கம், வடகிழக்குப் பகுதிகளுக்கு விமானப் போக்குவரத்து இல்லாததால் அங்கு அத்தேவையை நிறைவேற்றுவதாகும். இதன் அலுவலகம் தில்லியில் உள்ளது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 25 கோடி உருபாயாகும். இந்திய அரசாங்கம் இதற்கு வேண்டிய. செலவை ஏற்றுக்கொள்கிறது.

நீண்டதூரப் பயணத்திற்கு விமானப் போக்குவரத்து உதவிய போதிலும், ஆதாயம் பெறும் வகையில் செயற்பட்டபோதிலும் இது செயற்படுவதற்கு அதிக ஆற்றல் தேவைப்படுகிறது. ஆனால், இக்காலத்தில் எண்ணெய் பற்றாக்குறையால் கட்டணம் உயர்ந்திருப்பதால் பிற போக்குவரத்துகளின் வாயிலாகவும் பயணம் செய்ய மக்கள் விரும்புகிறார்கள். ஆகாய விமானங்களைக் குறைந்த தூர இருப்பிடங்களில் தங்க வைக்காமல் இருந்தால் செலவைக் குறைக்கலாம். சிறப்பாகப் பன்னாட்டு வாணிகத்தை ஒழுங்குபடுத்த விமானப் போக்குவரத்தின் முன்னேற்றமும் வளர்ச்சியும் தேவையாயுள்ளன.

திட்டக்கால வளர்ச்சி: திட்டக் காலங்களில் விமான நிலையங்கள் பல கட்டப்பட்டன. முன்னரே இருந்த விமான நிலையங்கள் சீரமைக்கப்பட்டன. நான்காம்திட்டக் காலத்தில் ஆகாயவிமான வளர்ச்சி, போக்குவரத்து ஆகியவற்றுக்காக உரு. 202 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் உரு 72 கோடி பம்பாய், கல்கத்தா, சென்னை, தில்லி ஆகிய இடங்களிலுள்ள விமான நிலையங்களை மேம்படுத்த விமானப் போக்குவரத்துத் துறை செலவு செய்தது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து வசதிக்காகப் பல்வேறு விமான நிலையங்களை வளர்ச்சி அடையச் செய்யவும் திட்டம் வகை செய்துள்ளது.

இந்தியாவில் விமானப் போக்குவரத்தின் முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது. டி.கா.

துணை நூல்கள்:

**Frank, E., Huggett**, Travel and Communications, George G. Harrap and Company Limited, London, 1972.

**Donald J. Bowersox and George, D.**, Wagenheim, Introduction to Transportion, MacMillan Publishing Company, 1981.

**Alak Ghosh**, Indian Economy - Its Nature and Problem, The World Press Private Limited, 1965.

***இந்திய-பாகிசுத்தான் உறவுகள்:*** இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாள் ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. ஆனால் இந்தியாவை இரு கூறுகளாகப் பிரித்த பின்னரே வெள்ளையர் வெளியேறினர். தொமினியன் தகுதி பெற்ற இந்தியா, பாகிசுத்தான் என்ற இரு சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட்டன. விடுதலை பெற்றது முதல் இந்தியாவிற்கும் பாகிசுத்தானுக்குமிடையே உறவுகள் நன்முறையில் அமையவில்லை.

பாகிசுத்தான் 1956-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின்படி ஓர் இசுலாமியக் குடியரசாயிற்று. அதாவது சமயச் சார்புடைய நாடாயிற்று. மாறாக, இந்தியா சமயச் சார்பற்ற நாடாக விளங்குகிறது. இந்தியாவில் இசுலாமியருக்குச் சம உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதோடு, சிறுபான்மையினர் என்ற நிலையில் சிறப்புச் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், பாகிசுத்தானில் பெரும்பாலான இந்துக்கள் நாட்டி

| விவரங்கள் | 1951 | 1961 | 1967 |
|---|---|---|---|
| சுமந்து செல்லப்பட்ட பயணிகள் (விழுக்காட்டில்) | 44.9 | 94.8 | 181.0 |
| சுமந்து சென்ற பாரம் (மிலியன் கிலோ கிராம்களில்) | 39.7 | 40.0 | 23.4 |
| அவசரத் தபால்களின் சுமை (மிலியன் கிலோ கிராம்களில்) | 3.2 | 7.5 | 10.8 |
| பறந்த கி. மீட்டர் தூரம் (மிலியன்) | 31.3 | 44.3 | 67.1 |

லிருந்து விரட்டப்பட்டதோடு, எஞ்சியிருந்தோர் நாட்டு அரசியலில் எவ்வகைப் பங்கும் ஏற்காத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பாகிசுத்தானில் முசுலிம்களும் இந்துக்களும் இணையான தகுதிகளைப் பெற்ற குடிமக்களாக இருப்பர் என்ற சின்னாவின் உறுதிமொழி பகற்கனவாயிற்று.

பிரிவினைக்குப் பின்னர்ப் பாகிசுத்தானிலிருந்து, குறிப்பாகக் கிழக்கு வங்காளத்திலிருந்து இந்து அகதி இந்தியாவில் குவிந்தனர். அதனால், இந்தியப் பொரு ளாதாரம் மிகுதியாகப் பாதிக்கப்பட்டது. அகதிகளுக் காக இந்திய அரசு ஆண்டுதோறும் 10 கோடி உருபாய் செலவழிக்க நேர்ந்தது. அவர்கள் நிலையாகக் குடி யிருக்கத் தண்டகாரண்ய திட்டம் வகுக்கப்பட்டது. பம்பாய் (இன்றைய மகாராட்டிரம்), மத்தியபிர தேசம், ஆந்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங் களைச் சார்ந்த நிலப்பகுதிகளில் அகதிகளுக்குக் குடி யிருப்புகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.

இந்தியா பாகிசுத்தான் ஆகிய இவ்விரு நாடு களை எதிர்நோக்கியிருந்த மற்றொரு சிக்கல் வெளி யேறியோரின் சொத்துகள் பற்றியதாகும். பாகிசுத் தானை விட்டு வெளியேறிய இந்துக்களின் சொத்து 500 கோடி உருபாயென மதிப்பிடப்பட்டதென்றால் இந்தியாவிலிருந்து பாகிசுத்தானுக்குச் சென்ற முசு லிம்களின் சொத்து 100 கோடி உருபாயாக மதிப் பிடப்பட்டது. பின்னர் 1949-இல் மேற்கொள்ளப் பட்ட கராச்சி ஒப்பந்தத்தின்படி வெளியேறியோர் சொத்துகளை அகதிகளின் மறுவாழ்விற்காகவும், நாட்டுப் பொருளாதாரப் புனரமைப்பிற்காகவும் பயன்படுத்த வேண்டுமென்ற போதிலும் பாகிசுத் தான் அவ்வுடன்பாட்டிற்கு மாறாகச் செயற்பட்டது

பிரிவினைக்கு முன்னர்ப் பிரிட்டிசு இந்திய அரசு கொண்டிருந்த கடன் தொகையில், பாகிசுத்தான் விடுதலைக்குப் பின்னர் அதன் பங்காக 300 கோடி உருபாயை இந்தியாவிற்குச் செலுத்த வேண்டியிருந் தது. அத்தொகையைச் செலுத்தத் தவறியது இரு நாடுகளிடையே விரிசலை உண்டாக்கியது. மேற்கே கச்சுப் பகுதியைச் சார்ந்த இரன்(Rann) நிலப்பகுதி யிலும், கிழக்கே மேற்கு வங்கம், அசாம் ஆகிய பகுதி களிலும் பாகிசுத்தான் இராணுவத்தினர் ஊடுருவித் துப்பாக்கிச் சூடு நடத்தி வந்ததும் இரு நாடுகளுக் கிடையேயான நல்லுறவைப் பாதித்தது.

சிந்து ஆற்று நீர்ப்பங்கீடு, விடுதலைக்குப்பின் இரு நாடுகளுக்கிடையே சிக்கலை ஏற்படுத்தியது. இறுதி யில், உலக வங்கியின் உதவியுடன் இச்சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டது. சிந்து நதி ஒப்பந்தம் 1960 செப்டம்பர் 19-இல் பாகிசுத்தானுடன் மேற்கொள் ளப்பெற்றது. சிந்து, சீலம், சீனாபு ஆறுகளின் நீரைப் பாகிசுத்தானுக்கு அளிக்கவும், இராவி, பியாசு, சட்லசு ஆறுகளின் நீரை இந்தியாவிற்கு அளிக்கவும் முடிவு செய்யப் பெற்றது.

காசுமீர்ச் சிக்கல் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். காசுமீர் மக்களுள் இசுலாமியரே பெரும்பான்மை யோர் ஆவர். இலதாக்குப் பகுதியில் பௌத்தர்கள் பெரும்பான்மையோராய் விளங்குகிறார்கள். காசு மீரை ஆண்டுவந்த அரசராகிய மகாராசா அரிசிங்கு ஓர் இந்து ஆவார். தலைமை ஆளுநர் மவுண்ட்டுபேட் டன் காசுமீர், இந்தியா பாகிசுத்தான் ஆகிய இரு தொமினியன்களுள் ஏதாவது ஒன்றுடன் இணைந்திட வேண்டுமென எடுத்துரைத்தார். காசுமீர் மகாராசா முடிவெடுக்கத் தயங்கினார். சம்மு-காசுமீர் அரசு இந்தியா, பாகிசுத்தான் ஆகிய இரு தொமினியன் களுடனும் நடைமுறை ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள விழைந்தபோது இந்தியா அதில் ஆர்வங் காட்டவில்லை. பாகிசுத்தான் மட்டும் நடைமுறைஒப் பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போதிலும், பாகிசுத்தான் காசுமீருக்கு உணவு, பெட்ரோல் முதலானவை வழங்குவதைத் தடை செய்தது. காசுமீர், பாகிசுத் தான் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டது. பாகிசுத்தான் நகரங்களிலிருந்து காசுமீருக்குப் பொருள்கள் அனுப்பக்கூடாது என்று தடை விதிக்கப் பட்டது. சம்மு-காசுமீர் பாகிசுத்தானுடன் இணைந்திடுமாறு இராணுவ நெருக்கடியினையும் பாகிசுத்தான் உருவாக்கியது. மேலும், பாகிசுத்தான் காசுமீர் மீது தாக்குதல்களை நடத்தியது. காசுமீர்த் தலைநகர் சிரீநகர் கைப்பற்றப்படும் நிலை ஏற்பட் டது. இந்தச் சிக்கலான சூழ்நிலையில் இந்திய அரசி டம் உதவி செய்யும்படி காசுமீர் மகாராசா வேண்டி னார். ஆனால், இணைப்புப் பத்திரத்தில் காசுமீர் மகாராசா கையெழுத்திட்ட பின்னரே, இந்தியப் படை காசுமீருக்கு அனுப்பப்பட்டது. இந்திய விமா னப்படைகளின் தீரத்தினால் சிரீநகர் காப்பாற்றப் பட்டது. காசுமீர் இந்தியாவுடன் இணைந்தது.

பாகிசுத்தான் இவ்விணைப்பு வன்முறையான தெனவும் ஏற்க இயலாது எனவும் அறிக்கை வெளியிட்டது. ஐக்கிய நாடுகள் அவைக்கு இந்திய அரசு பாகிசுத்தான்மீது குற்றச்சாட்டினைக் கொண்டுசென்றது. ஐக்கிய நாடுகள் அவை உடனடி யாகப் போர் நிறுத்தத்தைச் செய்யும்படி ஆணை யிட்டது. போர் நிறுத்த ஒப்பந்தம் 1949 சனவரி முதல் ஏற்பட்டது. அதை நடத்தும் ஐ.நா. அதிகாரியாகக் கடற்படைத் தலைவர் நிமிட்சு (Nimitz) நியமிக்கப் பட்டார். அவர் முயற்சி வெற்றிபெறாமல் போகவே

சர் ஓவன் திக்சன் (Sir Owen Dixon) ஐ.நா. பேராளராக நியமிக்கப்பட்டார். ஆனால், அவருடைய முயற்சிகளும் வெற்றிபெறவில்லை. டாக்டர் பிராங்கு கிரகாம் (Dr. Frank Graham) ஐ.நா. பேராளராக அவரைப் பின்தொடர்ந்தார். அவருடைய முயற்சிகளும் பயன் அளிக்கவில்லை. காசுமீரத்தில் செல்வாக்குள்ளவரும் தேசிய மாநாட்டுத் தலைவருமான சேக் அப்துல்லா காசுமீரத்தின் முதல்வரானார். அரசியல் நிருணய அவை 1951–ஆம் ஆண்டில் கூடியது. இந்தியாவுடன் சம்மு–காசுமீர் அரசு இணைந்ததை ஒப்புக்கொண்டது. புது அரசியல் சட்டம் 1957 சனவரித் திங்கள் 26–ஆம் நாள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. காசுமீரச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் இராணுவத்தை அங்கு அனுப்ப வேண்டுமென ஐ.நா.பாதுகாப்புச் சபையில்கொண்டு வந்த தீர்மானம் ஒன்றினை உருசியா தனது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறைவேறாமல் தடுத்துவிட்டது. இம்முறை பாதுகாப்புச்சபையின் தலைவராயிருந்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த குன்னார் யாரிங்கு ஐ.நா. பேராளராக அனுப்பப்பட்டார். ஆனால், அவரது முயற்சியும் பலனளிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் அவை காசுமீர்ச் சிக்கலைத் தீர்க்கமேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் பயனற்றுப் போயின. காசுமீரில் ஒரு பகுதி பாகிசுத்தான் ஆக்கிரமிப்பில் இருப்பதால் பொது வாக்கெடுப்பிற்கு, இந்திய அரசு உடன்படவில்லை. குறிப்பாக, 1954-ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா, பாகிசுத்தானுக்கு ஆயுத உதவி புரிந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் காசுமீரம் சட்ட அடிப்படையில் இந்தியாவுடன் இணைந்த மாநிலமாகும். பாகிசுத்தானுக்கு இச்சிக்கல் இன்னும் முடிவு பெறாத ஒன்று என்ற கருத்து உள்ளது.

மேற்கு வங்கத்தில் பராக்கா அணைக்கட்டுத் திட்டம் வகுக்கப்பட்டபோது பாகிசுத்தான் அத்திட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தது. உண்மையில், கல்கத்தாத் துறைமுகத்தைப் பாதுகாப்பது அதன் நோக்கமாகும். ‘காமன்வெல்த்து’ப் பிரதமர்கள் மாநாட்டில் 1961-இல் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர்நேரு, பராக்கா அணைக்கட்டால் கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் எனப் பாகிசுத்தான் அதிபர் அயூப்கானுக்கு எடுத்துரைத்தார். மேலும், இருநாட்டுப் பேராளர்கள் அச்சிக்கலைக் குறித்து விவாதிக்கலாமெனவும் கருத்துரை வழங்கினார். ஆனால், பாகிசுத்தான் இந்தியாவைத் தூற்றி அவதூறு செய்தது. பாகிசுத்தானிலிருந்து பங்களாதேசம் உருவாகும்வரை இதற்குத் தீர்வுகாண இயலாமற் போயிற்று.

சீனா 1962 அக்டோபரில் திடீரென இந்தியாவின்மீது படையெடுத்தபோது, பாகிசுத்தான் கொண்டிருந்த போக்கிலிருந்து இந்தியாவிற்கு எதிராக அந்நாடு எத்தகைய பகைமை உணர்வை வளர்த்துக் கொண்டிருந்தது என்பது நன்கு புலப்பட்டது. இந்தியாவிற்கு ஆதரவு தெரிவிப்பதற்கு மாறாகக் காசுமீரத்துக்குள்ளடங்கிய இலடாக்குப் பகுதியைக் குறித்துச் சீனாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இராணுவ உதவிபுரிந்ததற்கும் எதிர்ப்புத் தெரிவித்தது.

பாகிசுத்தான் அமெரிக்காவுடன் செய்துகொண்ட இராணுவ ஒப்பந்தத்தின் விளைவாக 1954–இல் இருந்து1965 வரை150கோடித்தாலர் பெறுமான இராணுவ உதவி பெற்றது. அமெரிக்கப் பாட்டன் பீரங்கி வண்டிகளும், போர் விமானங்களும் பாகிசுத்தானுக்கு வழங்கப்பட்டன. ஆனால், அப்படைக் கருவிகளைப் பாகிசுத்தான் இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்தும் என அமெரிக்கா கருதவில்லை. எனினும், 1965–இல் நடைபெற்ற இந்தியா–பாகிசுத்தான் போரில் அக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கிடையில் 1954–இல் அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட தென் கிழக்கு ஆசிய இராணுவக் கூட்டமைப்பிலும், 1955–இல் நிறுவப்பட்ட மத்திய இராணுவக் (பாக்தாத்து) கூட்டமைப்பிலும் பாகிசுத்தான் உறுப்பு நாடாகப் பங்கேற்றது.

பிரதமர் நேரு 1964–இல் இறந்தபின்னர், இந்தியாவில் சிறப்பான முறையில் ஆட்சி செலுத்தத் தலைசிறந்த தலைவர்கள் யாருமிலர் எனக் கருதிய பாகிசுத்தான் இந்தியாவைத் தாக்கத் திட்டமிட்டுக் கச்சுப் பகுதியைத் தாக்கியது; காசுமீரில் பாகிசுத்தானியர் ஊடுருவினர். பாகிசுத்தான் இராணுவம் 1965 செப்டம்பர் முதல் நாள் சம்முவிற்குள் புகுந்தது. இந்தியா எதிர்த் தாக்குதல் நடத்தவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டது. ஐ.நா. பாதுகாப்புச் சபை போர் நிறுத்தத்திற்கு ஆணையிட்டது. சோவியத்துப் பிரதமர் கோசிசின் தலையிட்டு இரு நாட்டுத் தலைவர்களையும் பேச்சு வார்த்தை நடத்துமாறு தாசுகண்டிற்கு (Tashkent) அழைத்தார். இந்தியப் பிரதமர் இலால்பகதூர் சாத்திரியும், பாகிசுத்தான் அதிபர் அயூப்கானும் கலந்துரையாடி 1966 சனவரி 10–இல் நல்லுறவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். அவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தாசுகண்டு ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அங்கேயே எதிர்பாராத வகையில் சாத்திரி மாரடைப்பால் உயிர் துறந்தார்.

தீர்ப்புரிமை மன்றத்தின் பரிந்துரையை 1968

பிப்பிரவரியில் இந்தியா ஏற்றதன் பயனாக, 830 ச.கி.மீ. கொண்ட கச்சுப் பகுதி பாகிசுத்தானுக்கு வழங்கப்பட்டது. எனினும், தாசுகண்டு ஒப்பந்தத்திற்கு மாறாகப் பாகிசுத்தான் செயற்படத் தொடங்கியது. இரண்டு பாகிசுத்தானியர் இந்திய விமானமொன்றினை 1971 சனவரியில் இலாகூருக்குக் கடத்திச் சென்றனர். கிழக்குப் பாகிசுத்தானில் பாகிசுத்தான் அரசுக்கு எதிராக சேக் முசிபூர் இரகுமான் தலைமையில் புரட்சி நடைபெற்றது. பாகிசுத்தான் அடக்குமுறையைக் கையாண்டது. ஏறத்தாழ ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியப் பொருளாதாரத்திற்குப் பெரும் சோதனை விளைந்தது. கிழக்கு வங்க எல்லையில் தாக்குதல்கள் நடைபெற்றன. இந்நிலையில் இந்தியா 1971 ஆகசுட்டில் உருசியாவுடன் இருபது ஆண்டுக்கால அமைதி-நட்புறவு – ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினைச் செய்துகொண்டது. இந்தியாவோ உருசியாவோ எந்தப் பிற நாட்டின் தாக்குதலுக்காளானால் உடனடியாக அவ்விரு நாடுகளும் கலந்தாலோசித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பது அவ்வொப்பந்தத்தின் சிறப்புக் கூறாகும். பங்களா தேசத்திலிருந்து பாகிசுத்தான் இராணுவம் விலக வேண்டுமென இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வற்புறுத்தினார். பாகிசுத்தான் எட்டு இந்திய விமானத் தளவாடங்களின் மீது 1971 திசம்பர் 3-இல் திடீர்த் தாக்குதல் நடத்தியது. அதைத்தொடர்ந்து இந்தியாவில் நெருக்கடி நிலை வெளியிடப்பட்டது. இந்தியா எதிர் விமானத் தாக்குதலை நடத்தியது. பாகிசுத்தானிலிருந்து பிரிந்த வங்காள தேசத்தைத் தனிநாடென ஏற்று ஒப்புதல் தந்தது. அதனால், பாகிசுத்தான் இந்தியாவுடன் தூதரக உறவுகளை முறித்துக்கொண்டது. பதினான்கு நாட்கள் நடைபெற்ற அப்போரின் இறுதியில் பாகிசுத்தான் இராணுவம் இந்தியத் தளபதி மானக்சாவிடம் சரணடைந்தது. ஐ.நா. பாதுகாப்பு அவை போர் நிறுத்தத்திற்கான தீர்மானத்தை இயற்றியது.

அயூப்கான் பதவி துறந்ததை அடுத்துப் பூட்டோ என்பார் பாகிசுத்தான் அதிபரானார். இந்திரா காந்தியின் முயற்சியின்பேரில் இரு தலைவர்களும் சிம்லாவில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தி 1972 சூலை 2-இல் சிம்லா ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர். இரு நாடுகளுக்கான சிக்கல்களுக்கு வன்முறையைக் கையாளாமல் இணக்கமான முறையில் தீர்வுகாணவேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வகையில் மீண்டும் தூதரக உறவுகள் மேற்கொள்ளப்பட்டன. பண்பாட்டு, அறிவியல் பரிமாற்றத்திற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டன.

சியா-உல்-அக்கு 1977-இல் பதவியைக் கைப்பற்றிய பிறகு மீண்டும் இரு நாடுகளுக்கிடையே விரிசல் ஏற்படத் தொடங்கியது. பாகிசுத்தான் அமெரிக்காவின் உதவியோடு அணுக்குண்டு தயாரிப்பதில் முனைப்பாக உள்ளது. இலங்கையில் தமிழர்களை ஒடுக்கப் பாகிசுத்தான் தக்க உதவிபுரியுமென உறுதிமொழி தந்துள்ளது. தீவிர சீக்கியவாதிகளுக்குப் புகலிடம் தருவதோடு அவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளித்து வருவதாக இந்தியா புகார் செய்துள்ளது. அதேநேரத்தில் குறிப்பாக இந்திரா காந்தியின் மறைவிற்குப் பின்னர்ப் பாகிசுத்தான் அதிபரும் இந்தியப் பிரதமர் இராசீவ் காந்தியும் பல முறை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். அணுநிலையங்களின்மீது இருநாடுகள் ஒன்றின்மீது ஒன்று தாக்குதல் நடத்தாதென்று 1985 திசம்பரில் ஒப்புக்கொண்டுள்ளன. அம்மாதத்தில் தாக்காவில் நடைபெற்ற தென் ஆசிய மண்டல ஒத்துழைப்பு மாநாட்டில் இரு நாட்டுத் தலைவர்களும் பங்கேற்றனர். அண்மைக்கால நிகழ்ச்சிகள் ஒருபுறம் வருந்தத் தக்கவையாகயிருப்பினும், மறுபுறம் நம்பிக்கை யூட்டுபவையாகவும் அமைந்துள்ளன.

நேரு காலம் முதல் இந்தியா ஆக்கிரமிப்புச் செயலில் ஈடுபடாதென உறுதிமொழி தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பாகிசுத்தான் இந்தியாவைத் தவறாகப் புரிந்துகொண்டு செயற்பட்டுள்ளது என்பதையும் வரலாற்று ஏடுகள் எடுத்துரைக்கின்றன. ஆனால், இரு நாடுகளும் ஒன்றோடொன்று நல்லெண்ணத்துடன் ஒருங்கிணைந்து அவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதே சாலச் சிறந்ததென்பதை இரு நாட்டுத் தலைவர்களும், மக்களும் உணர்ந்துள்ளனர் என்பதில் ஐயப்பாடில்லை எனலாம். ந.கு.நா.

**இந்திய மக்கள்தொகை:** உலக மக்கள் தொகையில் சீனாவுக்கு அடுத்த இடத்தைப் பெற்று 722 மிலியனுக்கும் (1983) மிகுதியான மக்களைக் கொண்ட நாடு இந்தியா. உலக மக்கள்தொகையுள் 15 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள் இந்தியாவில் வாழ்கின்றனர். இதுவே வளர்ந்து வரும் உலக நாடுகளின் மக்கள்தொகையில் 21 விழுக்காட்டுக்கும் மிகுதியானதாகும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குரிய சிறப்பியல்புகளுள் மக்கள்தொகை, ஆக்கத்திறன், அளவு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இன்றியமையா இடத்தைப் பெறுகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கான மூல வளமே மக்கள் வள ஆற்றல் (Manpower Resources) ஆகும். ஆனால், இயற்கை வளங்களின் வளர்ச்சி, அவற்றைப் பயன்படுத்தும் வழிவகைகள் ஆகியவற்றைக் காட்டிலும் மக்கள்தொகை பெருகினால் அது பொருளா

தார வளர்ச்சிக்கு எதிர்மறையான வறுமைக்கு நாட்டைக் கொண்டு செல்லும்.

இந்தியாவும் பிற மூன்றாம் உலக நாடுகள் (Third World Countries) என்று சொல்லப்படும் வளம் குன்றிய நாடுகளும் 'மக்கள் தொகை எழுச்சி' (Population Explosion) என்ற சிக்கலினால் இன்னலுறுகின்றன. இக்கருத்தில் மக்கள்தொகையியலாரும் (Demographers) பொருளியலாரும் முரண்பாடான பல்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர் எனினும், அளவுக்கு மீறிய மக்கள்தொகைப் பெருக்கம், தனி ஆள் வருவாயையும் (Per Capita Income) வாழ்க்கைத் தரத்தையும் பாதித்து, நலத் திட்டங்களின் (Welfare Schemes) பளுவையும் செலவையும் (Burden & Cost) மிகச் செய்கின்றன என்பதில் ஒத்த கருத்துடையவராக இருக்கின்றனர். மக்கள்தொகைப் பெருக்கம் எதிர்நோக்கும் பயன்களுக்கு ஊறு விளைவிக்கிறது. ஏற்கனவே செறிந்த மக்கள் உழைப்பைச் சார்ந்துள்ள வேளாண்மையையும், தொழிற்றுறையையும் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில், பெருகிவரும் மக்கள்தொகை, ஆக்கத்திறனைக் (Productivity) குறைத்து விடுகிறது. மேலும் வேலையின்மை (Unemployment), குறைவேலை (Under employment), மறைமுக வேலையின்மை (Disguised unemployment) போன்ற சிக்கல்கள் மிகுந்த அளவில் பெருகுகின்றன. இவற்றைத் தொடர்ந்து, மக்கள் தொகை நெருக்கம் (Density of Population) திட்டமிடப்படாததும் அகக் கட்டுமான (Infrastructure) வசதிகள் இல்லாததுமான நகரங்கள் பெருகவும், நகர்ப்புறங்களிலும் ஊரகங்களிலும் குடியிருப்பு வசதியின்மை, சுகாதாரமற்ற சூழ்நிலை ஆகியவற்றையுடைய சமுதாயம் உருவாகவும் வழி வகுக்கிறது. இவ்வகையான ஒன்றோடொன்று பின்னப்பட்ட சிக்கல்கள் நிறைந்த வாழ்க்கை நிலையை இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் பரவலாகக் காணலாம்.

வளர்ச்சிப் போக்கு: இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சிப் போக்கு (Growth Trend) கி.பி. 1891-ஆம் ஆண்டிலிருந்து 1921-ஆம் ஆண்டுவரையில் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்து வந்தது. குறிப்பிடத்தக்க ஏற்றங்களைக் கொண்ட சில பத்தாண்டுகளும் (Decades), சிறு ஏற்றங்களைக் கொண்ட சில பத்தாண்டுகளால் மாற்றம் பெற்றன. அதுவே 1911 1921 ஆகிய பத்தாண்டில் எதிர்மறை (Nagative) வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்து என்பதை அட்டவணை-1 விளக்குகிறது. அக்காலத்தில் பெருவாரியாக நிகழ்ந்த காலரா, பிளேக்கு (Plague) போன்ற கொள்ளை நோய்களும் பஞ்சமுமே இதற்கான காரணம் எனக் கருதப்படுகிறது. சளிக்காய்ச்சல் என்ற கொள்ளை நோயால் 1918-19-ஆம் ஆண்டுகளில் மட்டும் நாட்டில் 5 விழுக்காடு மக்கள் இறந்தனர் எனப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

அட்டவணை - 1

இந்திய மக்கள் தொகை (சதுர கி.மீ.க்கு)

| வரிசை எண் | குடிமதிப்பு ஆண்டு | மக்கள்தொகை (கோடியில்) | ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் (விழுக்காடு) | மக்கள் தொகை நெருக்கம் (ஒரு ச.கி.மீட்டருக்கு) |
|---|---|---|---|---|
| 1 | 1901 | 23.83 | 0.30 | 77 |
| 2 | 1911 | 25.20 | 0.50 | 82 |
| 3 | 1921 | 25.12 | 0.03 | 81 |
| 4 | 1931 | 27.89 | 1.06 | 90 |
| 5 | 1941 | 31.85 | 1.34 | 103 |
| 6 | 1951 | 36.10 | 1.26 | 117 |
| 7 | 1961 | 43.91 | 1.98 | 142 |
| 8 | 1971 | 54.82 | 2.20 | 178 |
| 9 | 1981 | 68.52 | 2.25 | 216 |

ஒரு தனி எண்ணிக்கை கொண்ட மக்கள் தொகை, 1921-ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஒவ்வொரு பத்தாண்டிலும் தொடர்ந்து கூடி வந்தது. மக்கள் தொகை வளர்ச்சியின் ஏறும் போக்கில் 1921-51-ஆம் ஆண்டுக் கால ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் ஒரு விழுக்காட்டிலிருந்து 1.3 விழுக்காட்டிற்குள், மிகுந்த மாற்றங்களின்றி நிலையாயிருந்தது. இதற்கு இக் காலங்களில் நிகழ்ந்த வங்காளப் பஞ்சமும் (1942-43) விடுதலைக்குப் பின் நாட்டுப் பிரிவினையால் (Partition) மக்கள் இடம்பெயர்ந்ததும் காரணங்களாகக் கருதப்படுகின்றன. நாட்டின் இறப்பு, பிறப்பைக் காட்டிலும் மிகுதியாகக் குறைந்ததும் இதற்கான காரணமாகச் சொல்லப்படுகிறது.

இந்திய மக்கள்தொகை 1951-ஆம் ஆண்டிற்குப் பின்னர் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சியடையத் தொடங்கியது. 1941-51-இன் சராசரிப் பத்தாண்டு வளர்ச்சி வீதம் (Average Decennial Growth Rate) 13. 31 விழுக்காட்டிலிருந்து 1951-61 இல் 21. 6 விழுக்காடாகவும், 1961-71-இல் 24.8 விழுக்காடாகவும் வளர்ச்சியுற்றது. மக்கள் தொகை 1961-71, 1971-81 ஆகிய இரு பத்தாண்டுகளிலும் 24.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இவ்வாறு 1901 முதல் 1981 வரையில் 186.84 விழுக்காடளவுக்கு வளர்ந்துவிட்டது. 1921 முதல் 1971 வரையான 50 ஆண்டுகளுக்குள் இந்திய மக்கள்தொகை இரட்டிப்பானது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 1951-81 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட 30 ஆண்டுக்காலங்களில், மக்கள் தொகை 89 விழுக்காடு அளவுக்கு மிகுந்து, 323 மிலியன் மக்களைக் கூடுதலாகப் பெற்றது. இந்திய மக்கள்தொகை வரலாற்றில் 1981-ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனை எனக் கூறப்படுகிறது. இவ்வாண்டுக்குப் பின்னரே வளர்ச்சி வீதத்தில் ஒரு சீரிய தன்மை ஏற்படத் தொடங்கியது.

இந்திய மக்கள்தொகையின் ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 1961-81க்கிடையில் 2.2 விழுக்காடு என்று சற்றே உயர்ந்து, நிலைத்திருப்பினும், கி.பி. 2000 ஆண்டளவில் இந்தியமக்கள்தொகை 1 பிலியன் (100 கோடி) அளவைத் தாண்டிவிடும் என்றும் அஞ்சப்படுகிறது. 1981-ஆம் ஆண்டைய மக்கள்தொகைக் கணிப்பு, இக்காலத்திற்கு முந்தைய மக்கள்தொகை எதிர்நோக்குகளைக் (Population Projection) காட்டிலும் மிஞ்சிவிட்டது. இந்தியத் திட்டக் குழுவால் பயன்படுத்தப்பட்ட தெரிவுசெய்த எதிர்நோக்குப் புள்ளிவிவரங்கள் 672 மிலியன் அளவுக்கே இருந்தது.

அட்டவணை-2 இந்திய பிறப்பு, இறப்பு வீதங்களில் காணப்படும் ஏற்ற இறக்கங்களைத் தெளிவாக விளக்குகிறது. பிறப்பு வீதத்தில் 1901 81-ஆம் ஆண்டுக் காலங்களில் மிகக் குறைந்த வீழ்ச்சியே காணப்படும் போழுது அதேகாலத்தில் இறப்பு வீதமும் குறிப்பிடத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்திருப்பது மக்கள்தொகையின் பெருக்கத்திற்கு ஒரு காரணம் என்பது அறியத்தக்கது. பிறப்பு வீதமும் இறப்பு வீத

அட்டவணை - 2

பிறப்பு, இறப்பு வீதங்கள் (1901-1981)

| வரிசை எண் | குடிமதிப்பு ஆண்டு | பிறப்பு வீதம் (1000 மக்களுக்கு) | இறப்பு வீதம் (1000 மக்களுக்கு) |
|---|---|---|---|
| 1 | 1901 | 46.1 | — |
| 2 | 1911 | 49.2 | 42.6 |
| 3 | 1921 | 48.1 | 47.2 |
| 4 | 1931 | 46.4 | 36.3 |
| 5 | 1941 | 45.2 | 31.2 |
| 6 | 1951 | 39.9 | 27.4 |
| 7 | 1961 | 40.9 | 22.8 |
| 8 | 1971 | 41.1 | 18.9 |
| 9 | 1981 | 33.3 | 12.5 |

மும் ஏறக்குறைய ஓரளவுக்குச் சீராக அமைந்திருந்த 1901–1921–ஆம் ஆண்டுக் காலங்களில் மக்கள்தொகைப் பெருக்கமும் சீராக இருந்தது. அக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சமும், கொள்ளை நோய்களும் தொடர்ந்து நிகழா வண்ணம் நலவழித் திட்டங்களினால் தடுக்கப்பட்டதால், இறப்பு வீதம் குறைந்தது. பேரளவில் நிகழ்ந்து வந்த இளங்குழந்தைகளின் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 218 என்ற வீதத்திலிருந்து 1931–1981–ஆம் ஆண்டுகளில் 136 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இளங்குழந்தைகளின் இறப்பிற்குக் காரணமான நோய்களும் குறிப்பாகப் பெரியம்மை (Small Pox) போன்றவையும் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டன. பிறப்பு வீதத்தில் மிகக் குறைந்த அளவிற்கு மட்டுமே 1941–ஆம் ஆண்டிலிருந்து பின்னோக்கிச் செல்லும் போக்குக் காணப்படுகிறது.

மக்கள்தொகை நெருக்கம்: உலகின் மொத்த மக்கள்தொகையில் 15 விழுக்காட்டைப் பெற்றுள்ள இந்தியா, உலகத்தின் மொத்த நிலப்பரப்பில் 2.4 விழுக்காட்டையே தன் நிலப்பகுதியாகக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் சராசரி மக்கள் நெருக்கம் (Density of Population) 1981–ஆம் ஆண்டில் (சம்மு,

அட்டவணை – 3

இந்திய மக்கள்தொகை நெருக்கம்

| வரிசை எண் | மாநிலங்கள் | மக்கள் தொகை மில்லியனில் 1981 | நெருக்கம் சதுரக் கிலோ மீட்டருக்கு 1981 | நெருக்கம் சதுரக் கிலோ மீட்டருக்கு 1971 |
|---|---|---|---|---|
| 1 | தில்லி | 6.2 | 4194 | 2742 |
| 2 | சண்டிகார் | 0.5 | 3961 | 2257 |
| 3 | கேரளா | 25.4 | 665 | 549 |
| 4 | மே வங்காளம் | 54.6 | 615 | 499 |
| 5 | பீகார் | 69.9 | 402 | 324 |
| 6 | தமிழகம் | 48.4 | 372 | 317 |
| 7 | உத்தரப் பிரதேசம் | 110.9 | 377 | 300 |
| 8 | பஞ்சாப் | 16.8 | 333 | 269 |
| 9 | அரியானா | 12.9 | 292 | 227 |
| 10 | மகாராட்டிரம் | 62.8 | 204 | 164 |
| 11 | ஆந்திரப் பிரதேசம் | 53.6 | 195 | 158 |
| 12 | கர்நாடகா | 37.1 | 194 | 153 |
| 13 | அசாம் | 19.9 | 254 | 186 |
| 14 | ஒரிசா | 26.4 | 169 | 141 |
| 15 | குசராத்து | 34.1 | 174 | 136 |
| 16 | மத்திய பிரதேசம் | 52.2 | 118 | 94 |
| 17 | இராசசுத்தான் | 34.3 | 100 | 75 |
| 18 | இமாசலப் பிரதேசம் | 4.3 | 77 | 62 |
| 19 | நாகாலாந்து | 0.8 | 47 | 31 |

காஷ்மீர் நீங்கலாக) ஒரு சதுரக் கிலோ மீட்டருக்கு 216 ஆகும். இதுவே 1971-ஆம் ஆண்டில் 177 ஆகவும் 1961-இல் 142 ஆகவும், 1921க்கு முன்னர் 80 ஆகவும் இருந்தது.

கேரளமும் மேற்கு வங்காளமும் முறையே ச.கி.மீட்டருக்கு 655,615 என மிகுதியான மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களாகும். மலைப் பகுதிகளானஇமாசலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, ஓரளவு வறண்ட வெப்ப மண்டலப்பகுதிகளைக் கொண்ட இராசசுத்தான் (Rajasthan) போன்ற மாநிலங்கள் மிகக் குறைந்த மக்கள் நெருக்கத்தைக் கொண்டவை. இம்மாநிலங்கள் ச. கி. மீ. ஒன்றுக்கு 100 பேரையும் அதற்குக் குறைந்த எண்ணிக்கையையும் கொண்டவையாகும்.

நகரியமாதல் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள், 1981-ஆம் ஆண்டைய குடிமதிப்பின்படி (அசாம், சம்மு-காசுமீர் நீங்கலாக) மொத்த மக்கள் தொகையுள் 24 விழுக்காடு மட்டுமேயாகும். இந்தியாவில் அனைத்து மாநிலங்களுள் நகர்ப்புற மக்களின் விழுக்காடு மகாராட்டிரத்தில் 35 ஆகவும், தமிழகத்தில் 33 ஆகவும் இருப்பதோடு, இமாசலப் பிரதேசத்தில் 8 விழுக்காடாகவும், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் 12 விழுக்காடாகவும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

மொத்த நகர்ப்புற மக்களுள் 60 விழுக்காட்டுக்கான மக்கள், ஓர் இலட்சம் மக்களுக்கும் மேலான எண்ணிக்கையைக் கொண்ட 216 நகரங்களில் வாழ்கின்றனர். இந்தியாவின் மொத்த நகரங்களுள் 6.7 விழுக்காடு நகரங்கள், ஓர் இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டவையாகும். நகர்ப்புற மக்கள் தொகையின் விழுக்காடு, 1971-81 ஆகிய ஆண்டுக் கிடையில் 46 ஆக இருந்தது. இதுவே 1961-71-இல் 38 விழுக்காடாகவும், 1941-51-இல் 26 விழுக்காடாகவும் இருந்தது. பல ஊரகங்கள் 1970-ஆம் ஆண்டில் நகரங்களாக வகைப்படுத்தப்பட்டதன் விளைவாக நகரிய வீதம் (Urbanisation Rate) உயரத் தொடங்கியது.

இந்திய மக்கள் தொகையில் 524 மிலியன் அளவுக்கான மக்கள் 5,76,000 ஊரகங்களில் வாழ்கின்றனர். இவ்வூரகங்களில் 70 விழுக்காடுகளுக்கும் மிகையானவை, ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டவை. எஞ்சிய ஊரகங்களுள் 1971-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 6333 ஊரகங்கள் 5000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டவையாகும். ஓர் ஊரகத்தின் சராசரி மக்கள் தொகை 752 மட்டுமே. இது 1961-ஆம் ஆண்டு எண்ணிக்கையான 650-ஐக் காட்டிலும் 17 விழுக்காடு மிகையானது. இப்போது ஊரகங்களுள் 32 விழுக்காடளவு கேரளா, தமிழகம் ஆகிய மாநிலங்களில் அடங்குகின்றன.

ஆண்-பெண் விகிதம்: மக்கள்தொகையில் ஆண்களை மிகையாகப் பெற்றுள்ள சில நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. பெண்களைக் காட்டிலும் ஆண்கள் 1981-ஆம் ஆண்டைய இந்தியக் குடிமதிப்பின்படி 23 மிலியன் அளவுக்கு மிகையாய் உள்ளனர். ஆண், பெண் விகிதம் 1921-இல் 1000 ஆண்களுக்கு 955 பெண்களாக இருந்து, 1971-இல் 930 ஆகக் குறைந்து, 1981-இல் 933 ஆகக் கூடியுள்ளது. மக்கள் தொகையின் இப்பண்பு மாநிலங்களுக்கிடையே மாறுபட்டுக் காணப்படுகிறது. கேரளா தவிர்த்த பிற மாநிலங்களில் ஆண்களின் எண்ணிக்கை, பெண்களைக் காட்டிலும் கூடுதலாயுள்ளது.

கல்வியறிவு: 1981-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணிப்பின்படி இந்திய மக்கள் தொகையில் 36 விழுக்காடு மக்கள், கல்வியறிவு பெற்றவர்கள். இவர்களுள் ஆண்களில் 47 விழுக்காடும், பெண்களில் 25 விழுக்காடும் கல்வியறிவு பெற்றுள்ளனர். இப்புள்ளி விவரங்கள், 1951-ஆம் ஆண்டுக் கணிப்பைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது. கல்வியறிவு 1951-ஆம் ஆண்டில் 17 விழுக்காடாகவே இருந்தது. ஆண்கள் 24 விழுக்காடாகவும், பெண்கள் 8 விழுக்காடாகவும் கல்வியறிவு பெற்றிருந்தனர். மக்கள் தொகையில் 5 வயதுக்குக் குறைவான மக்களின் விகிதம் 1951-1981 ஆகிய ஆண்டுக் காலக் கட்டத்தில் மிகுந்திருந்ததின் காரணத்தால் கல்வியறிவில் போதுமான முன்னேற்றத்தைப் புள்ளி விவரங்கள் காட்டவில்லை. கல்வியறிவு வீதம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்திருப்பினும், கல்வியறிவற்ற மக்களின் மொத்த எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது. கல்வியறிவற்ற மக்களின் எண்ணிக்கை 1971-1981 ஆகிய 10 ஆண்டுகளில், 387 மிலியனிலிருந்து 437 மிலியனளவுக்கு உயர்ந்துள்ளது. இவ் உயர்ச்சி 13 விழுக்காடென்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

மாநிலங்களுக்கிடையில் கல்வியறிவில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மிகுந்த கல்வியறிவு படைத்த கேரளாவில் 69 விழுக்காடு அளவிற்கும், பீகார், இராசசுத்தான், சம்மு-காசுமீர், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 24 இலிருந்து 27 விழுக்காடுகள் மிகக் குறைந்த அளவிலும் காணப்படுகின்றன. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் நகர்ப்புறக் கல்வியறிவு, ஊரகக் கல்வியறிவைக் காட்டிலும் இரண்டு மடங்காகும்.

அட்டவணை - 4

ஆண் – பெண் விகிதம் (1921—81)
(1000 ஆண்களுக்குப் பெண்கள்)

| வ.எண் | மாநிலங்கள் | 1921 | 1961 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|
| 1 | பீகார் | 1,016 | 994 | 954 | 946 |
| 2 | ஒரிசா | 1,086 | 1,001 | 988 | 981 |
| 3 | ஆந்திரப் பிரதேசம் | 993 | 981 | 977 | 975 |
| 4 | தமிழகம் | 1,029 | 992 | 978 | 977 |
| 5 | கேரளா | 1,011 | 1,022 | 1,016 | 1,032 |
| 6 | கர்நாடகம் | 969 | 959 | 957 | 963 |
| 7 | மத்திய பிரதேசம் | 974 | 953 | 941 | 941 |
| 8 | அசாம் | 908 | 876 | 896 | 901 |
| 9 | மே.வங்காளம் | 905 | 878 | 891 | 911 |
| 10 | இராசசுத்தான் | 896 | 908 | 911 | 919 |
| 11 | உத்தரப் பிரதேசம் | 909 | 909 | 879 | 885 |
| 12 | பஞ்சாபு | 821 | 864 | 865 | 879 |
| 13 | அரியானா | .. | ... | 867 | 870 |
| 14 | சம்மு, காசுமீர் | 870 | 878 | 878 | 892 |
| 15 | இமாசலப் பிரதேசம் | .. | ... | 958 | 973 |
| 16 | குசராத்து | 944 | 940 | 934 | 942 |
| 17 | மகாராட்டிரம் | 950 | 936 | 930 | 937 |
| | அனைத்து இந்தியா | 955 | 941 | 930 | 933 |

அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்பு: இந்தியாவில் பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டம்ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1876-ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டும் இவ்வடிப்படை நிகழ்ச்சிகளின் பதிவு (Civil Registration) முறையற்ற ஒன்றாகவே தொடர்ந்து வந்தது. இப்பதிவு 1969-ஆம் ஆண்டு முதல் சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டது. எனினும் இதனைச் சீரிய முறையில் நடைமுறைப் படுத்துவது இன்றுவரை சிக்கல் மிக்க ஒன்றாகவே இருந்து வருகிறது. தேசிய மாதிரிக் கணிப்பின் மூலம் மதிப்பிடப்பட்ட புள்ளி விவர வீதங்களும் குறை மிகுந்த ஒன்றாகவே காணப்படுகிறது. எனவே, அண்மைக் காலத்தில் இதற்குச் சற்று மேலான மாதிரிப் பதிவு முறை (Sample Registration System) என்ற புள்ளி விவரக் குறிப்பு, பொதுப் பதிவாளர் (Registrar General) அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டது. இம்முறையும், நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட பற்றாக்குறையாலும் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களைச் சிறு அளவில் பகுப்பதில் எழுந்த சிக்கல்களாலும், எதிர் பார்த்த அளவுக்குப் பலனளிக்கவில்லை. இவை வெளியிட்ட புள்ளிவிவர அறிக்கைகளில் பல மாநிலங்களுக்கான பிறப்பு வீதங்கள், பொருத்தமற்றவகையில் குறைந்த அளவைக் காட்டுவதாகப் பலரும் கருதுகின்றனர். ஆகவே நாட்டின் பல பகுதி

களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கருவளம் (Fertility), இறப்புநிலை ஆகிய விவரங்கள் அறுதியிட்டுச் சொல்லக்கூடிய அளவில் இல்லை.

தாக்கம்: தொடர்ந்து பெருகிவரும் மக்கள் தொகை வளர்ச்சியினால், முனைப்பான திட்டங்களின் மூலம் செயற்படுத்தப்படும் பொருளாதாரத் திட்டங்களின் விளைவுகளை மக்கள் அடைய இயலாமற் போகிறது. நாடு விடுதலை பெற்ற பின் பேரளவில் உணவு உற்பத்தியிலும் கல்வி மேம்பாட்டிலும் மருத்துவ வசதிகள் அளிப்பதிலும், அகக்கட்டுமான வசதிகள் கட்டி எழுப்பப் படுவதிலும் நாட்டின் செல்வமும் சேமிப்பும் முதலீடு செய்யப்பட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கான பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. தொழிற்றுறை வளர்ச்சிக்கும் வேளாண்மை முன்னேற்றத்திற்கும் தனிச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் விளைவுகளைப் பெருகிவரும் மக்கள் தொகைக்குப் பங்கீடு செய்யும்பொழுது, மக்களின் தனி ஆள் வருமானம் (Per Capita Income) குறைந்து கொண்டே தான் செல்கிறது. குறைந்த ஆள் வருவாய், முதல் ஆக்கத்திற்குத் (Capital Formation) தேவையான சேமிப்பைத் (Saving) தோற்றுவிப்பதில்லை. மனித வளத்தைப் (Human Resources) பயன்படுத்துவதற்கு மூலதனப் பற்றாக்குறை காணப்படுவதால் வேலையின்மை பெரிய அளவில் தோன்றுகிறது.

உணவு, கல்வி, மருத்துவம் போன்றவைகளிலிருந்து தனி மனிதன் பெறும் பங்கு அளவிட இயலாத அளவுக்குக் குறுகியதாயுள்ளது. இதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள (Below poverty line) மக்களின் தொகை பெருகிக் கொண்டே போகிறது. நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 1985–ஆம் ஆண்டில் மொத்த மக்கள் தொகையில் பாதியாகும். ஊரக மக்களுள் 40 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ளனர். தமிழ்நாட்டில் மட்டும் 23 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாக தமிழக அரசின் 1985–ஆம் ஆண்டின் ஆய்வு அறிக்கை ஒன்று வெளிப்படுத்துகிறது.

அட்டவணை–5 இந்திய உணவு உற்பத்தியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பெருக்கத்தையும், அதே காலத்தில் மக்கள்தொகையில் ஏற்பட்ட பெருக்கத்தையும் தனி ஆள் (Per Capita) பெறும் அளவையும் விளக்குகிறது.

மக்கள் அறிவியல் சார்பான நோக்குடன் திருமணம், குடும்பம், குழந்தைப் பிறப்பு (Child birth) முதலானவற்றை அணுகுமுறைமுன்னேற்றமடைந்தால் மட்டுமே மக்கள் தொகைப் பெருக்கத்தில் கட்டுப்பாட்டைக் காண இயலும். இதற்கு நீண்டகால, குறுகிய காலத் திட்டங்கள் தேவை. மக்களின் சமூகப் பண்பாடும், சிறு குடும்பத்தின் நலன் அறிந்து உணரும் வண்ணம் மாற்றங்களைப் பெற வேண்டும். பெரிய குடும்பங்களைச் சார்ந்து வாழும் இன்றியமையாப் பொருளாதாரக் குடும்ப அமைப்பும் மாற வேண்டும். கல்வி அறிவு பெருகுவதனாலும் பொருளாதார முன்னேற்றத்தினாலுமே இத்தகைய சமூகப் பொருளாதார மாற்றங்களை அடைய இயலும்.

அட்டவணை–5

| வரிசை என் | ஆண்டு | மக்கள் தொகை (மிலியனில்) | உணவு உற்பத்தி (மிலியன் டன்னில் | தனி ஆள் பெறும் அளவு (கிராமில்) |
|---|---|---|---|---|
| 1 | 1956 | 397 | 63 | 431 |
| 2 | 1961 | 442 | 76 | 469 |
| 3 | 1966 | 493 | 74 | 408 |
| 4 | 1972 | 562 | 96 | 467 |
| 5 | 1979 | 659 | 114 | 474 |
| 6 | 1980 | 674 | 101 | 411 |
| 7 | 1981 | 689 | 114 | 454 |
| 8 | 1982 | 706 | 117 | 454 |
| 9 | 1983 | 722 | 113 | 440 |

வறுமை ஒழிப்பு என்ற இலக்கை வற்புறுத்தும் இக்காலத்தில், நாட்டின் வேலையின்மையைத் தீர்த்திடவும், பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் (Control-of Population) திட்டங்களைச் செயற் படுத்துவதில் அரசின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் தக்க வகையில் அமைதல் இன்றியமையாததாகும். ஆக்கத்திறனுடைய சிறு குடும்பங்களாகிய கட்டுப்பாடான இந்திய மக்கள் தொகை வளர்ச்சியில், இந்தியப் பொருளாதார வளர்ச்சி உள்ளது என்பதை மக்கள் உணர வேண்டும்.

இந்தியா இப்போதும் மிகுந்த மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கொண்ட 'மக்கள்தொகை எழுச்சிப்' (Population Explosion) படிநிலையிலேயேயுள்ளது. எனினும் அதன் அண்டை நாடுகளுடனும் வளரும் நாடுகளுடனும் (Developing Countries) ஒப்பிடும்போது, மக்கள்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகக் காணப்படுகிறது. இந்தியாவின் பிறப்பு வீதம் பாகிசுத்தான், பங்களாதேசம் ஆகிய நாடுகளைக் காட்டிலும் குறைவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்க சிறப்புக் கூறு ஆகும்.

**இந்திய மருத்துவ மன்றச் சட்டம்** 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லத்தக்கது. இச்சட்டம் இயற்றப்பட்டவுடன் 1933-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய மருத்துவ மன்றச் சட்டமானது (The Indian Medical Council Act, 1933) நீக்குதல் செய்யப்பட்டது.

மருத்துவப் படிப்புக்காக வழங்கப்படும் பட்டங்கள் இச் சட்டத்தில் மூன்று அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல பல்கலைக் கழகங்கள் வழங்கும் மருத்துவப் படிப்புக்கான பட்டங்கள் முதல் அட்டவணையில் அடங்கியுள்ளன. சட்டப்படி உருவாக்கப்பட்டதும், மருத்துவப் படிப்பு வசதி கொண்டதுமான பல்கலைக்கழகம் மட்டும் இச்சட்டத்தில் பல்கலைக்கழகம் எனக் கூறப்படுகிறது. அயல் நாட்டிலுள்ள மருத்துவ அமைப்புகள் வழங்கும் மருத்துவப் பட்டங்கள் இரண்டாம் அட்டவணையில் உள்ளன. ஆனால், அந்த அயல் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் கொண்டு கொடுப்புப் பாங்கு (Reciprocity) இருக்க வேண்டும். மூன்றாம் அட்டவணை இருபகுதிகளாக உள்ளது. முதல் அட்டவணையில் இல்லாத இந்தியாவில் உள்ள மருத்துவ அமைப்புகள் வழங்கும் மருத்துவப் பட்டங்கள் மூன்றாம் அட்டவணையில் முதல் பகுதியிலும், இரண்டாம் அட்டவணையில் இடம் பெறாத வெளிநாட்டு மருத்துவ அமைப்புகள் வழங்கும் பட்டங்கள் மூன்றாம் அட்டவணையின் இரண்டாம் பகுதியிலும் அடங்கியுள்ளன. இந்த மூன்றாம் அட்டவணையின் இரண்டாம் பகுதியில் உள்ள பட்டங்களைப் பெற்றவர்கள் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். மேலும் விதிமுறைகளை யொட்டி நடைமுறைப் பயிற்சி (Practical Training) எடுத்துக் கொள்ள வேண்டும். கொண்டு கொடுப்புப் பாங்கு இல்லாத அயல் நாட்டில் வழங்கப்படும் மருத்துவப் பட்டங்களை இச்சட்டப்படி ஏற்றுக் கொள்ள மத்திய அரசு இந்திய மருத்துவக் குழுவைக் கலந்து ஆராய்ந்த பின் ஆணையிடலாம். மேலும், மேற்கூறிய அட்டவணைகளில் ஒரு மருத்துவப் பட்டத்தைச் சேர்க்க, இந்திய மருத்துவக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர் மத்திய அரசு ஆணையிடலாம்.

மேற்கூறிய மருத்துவப் பட்டங்கள் எல்லாம் புதிய அறிவியல் மருத்துவத்தை அதாவது எதிர்முறை (Allopathic) மருத்துவத்தைச் சேர்ந்தவையாகும்.

அந்தந்த மாநிலத்தில் மாநில மருத்துவக்குழு அமைக்க அந்தந்த மாநிலத்தில் உள்ள சட்டம் வகை செய்ய வேண்டும். மேலும் அம்மாநிலச் சட்டத்தில் மாநில மருத்துவப் பதிவேடு வைக்க வகை செய்யப் பட வேண்டும். இந்திய மருத்துவ மன்றச் சட்டத்தில் உள்ள அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவப் பட்டங்களைப் பெற்றவர்கள் மேற்படி மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்படத் தக்கவர்கள்.

இந்திய மருத்துவக்குழு அமைக்க மத்திய அரசு இச்சட்டப்படி வகை செய்ய வேண்டும். இந்திய ஒன்றியப் (Union Territory) பகுதிகளைத் தவிர்த்து ஏனைய மாநிலங்களைப் பொறுத்து ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு பிரதிநிதியைத் தொடர்புடைய மாநில அரசைக் கலந்தாலோசித்து இந்திய மருத்துவக் குழு அங்கத்தினராக மத்திய அரசு நியமிக்க வேண்டும். இவ்வாறு நியமனம் செய்யப்படுபவர் முதலிரண்டு அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள மருத்துவப் பட்டங்களில் ஒன்றைப் பெறிருக்க வேண்டும். அம்மாநிலத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். அம்மாநில மருத்துவப் பதிவேட்டில் (வைக்கப்படிருந்தால்) பதிவு செய்யப்பட்டவராகவுமிருக்க வேண்டும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் ஒரு பிரதிநிதியை, அப்பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்புப் போதனை செய்பவர்களிலிருந்து அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி உரிமை (Senate) உறுப்பினர்கள் இந்திய மருத்துவக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாநில மருத்துவப் பதிவேட்டில்

பதிவு செய்தவர்களுள் இச்சட்டத்தின் முதலிரண்டு அட்டவணைகளிலும், மூன்றாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியிலும் குறிப்பிட்டுள்ள மருத்துவப் பட்டங்களையுடையவர்களிலிருந்து ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்தவர்களுள் இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள மருத்துவப் பட்டங்களைப் பெற்றவர்களிலிருந்து ஏழு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எட்டு உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்பட வேண்டும்.

ஒரே சமயத்தில் ஓர் உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட முறைமையில் செயற்படக் கூடாது. இவ்வாறு இந்திய மருத்துவக் குழு அமைக்கப்படும்.

இக்குழுவின் உறுப்பினர்பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஐந்து ஆண்டுகள் கழிந்தாலும் மறு உறுப்பினர் தேர்வு அல்லது நியமனம் செய்யப்படும் வரையில் பதவி வகிக்கலாம். மூன்று சாதாரண கூட்டங்களுக்குத் தக்க காரணமின்றி ஓர் உறுப்பினர் வராமலிருந்தால் அவர் உறுப்பினர் பதவியை இழப்பார். ஒரு பல்கலைக்கழகப் போதனைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் அப்பல்கலைக்கழகப் போதனைக்குழுவிலிருந்து நீங்கிவிட்டால் தம் உறுப்பினர் பதவியை இழப்பார். மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அப்பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டால் தங்கள் உறுப்பினர் பதவியை இழப்பார்கள். காலியாகும் இடத்துக்கு விதிப்படி தேர்வு அல்லது நியமனம் செய்யப்படும். புதிதாகத் தேர்வு அல்லது நியமனம் செய்யப்படுபவர்கள் எஞ்சியுள்ள காலத்துக்கு மட்டும் உறுப்பினர்களாகச் செயற்படுவார்கள்.

உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகவும் மற்றொருவரைத் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆனால், அவர்களது உறுப்பினர் பதவிக் காலத்தைக் கர்ட்டிலும் நீடிக்கக் கூடாது.

வருடத்திற்கு ஒரு முறையாவது இந்திய மருத்துவக் குழுவின் கூட்டம் நடைபெற வேண்டும். ஒரு கூட்டம் நடைபெறக் குறைந்தது பதினைந்து உறுப்பினர்கள் குழுமியிருக்க வேண்டும். குழுமியிருக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துப்படி முடிவுகள் எடுக்கப்படும்.

இந்திய மருத்துவக் குழுவானது ஒரு நிருவாகக் குழுவை அமைக்க வேண்டும். பொதுக்குழுவின் தலைவரும், துணைத்தலைவரும் நிருவாகக் குழுவின் முறையே தலைவர், துணைத்தலைவர் ஆவார்கள். அவ்விருவரையும் தவிர்த்து ஏழுக்குக் குறையாமல் பத்துக்கு மேற்படாமல் நிருவாகக் குழு உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அவர்கள் பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மூன்றாவது அட்டவணையின் இரண்டாம் பகுதியில் கண்ட பட்டத்தைப் பெற்றவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ அமைப்பில் பயிற்சி பெறத் தேர்வு செய்யப்பட்டவுடன் மாநில மருத்துவப் பதிவேட்டில்இடைக்காலமாகப் பதிவு செய்யப்படலாம். ஒப்புக் கொள்ளப்பட்ட மருத்துவப் பட்டம் பெறுவதற்கான தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர், இராணுவ மருத்துவப் பணியில் சேருவதற்காகவும் ஒப்புக் கொள்ளப்பட்ட மருத்துவ அமைப்பில் உள்ளிருப்பு மருத்துவராகப் பணியாற்றுவதற்காகவும் மாநில மருத்துவப் பதிவேட்டில் இடைக்காலமாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

முன் பத்தியில் குறிப்பிடப்பட்டவர்களைத் தவிர்த்து இச்சட்டத்தின் அட்டவணையில் கண்டுள்ள பட்டங்களைப் பெற்றவர்கள் மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்படத்தகுதி வாய்ந்தவராவர். அவ்வாறு பதிவு செய்யாதவர் அரசிலோ உள்ளாட்சி நிறுவனம் நிருவகிக்கும் மருத்துவ அமைப்பிலோ மருத்துவராகப் பணிபுரியக்கூடாது. எந்த மாநிலத்திலும் மருத்துவத் தொழில் செய்யவும் கூடாது. மருத்துவச் சான்றிதழில் கையெழுத்திடக் கூடாது. மருத்துவ நிபுணர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கக்கூடாது. இத்தடைகளை மீறிச் செயற்பட்டால் குற்றவியல் தண்டனைக்குள்ளாக நேரிடும்

மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவர்கள் இந்திய மருத்துவப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்படத் தகுதி வாய்ந்தவர்கள். இந்திய மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவர்கள் இந்தியாவில் எப்பகுதியிலும் தொழில் செய்யலாம். தங்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தைச் சட்டப்படி பெறுதற்கு உரிமையுண்டு. தொழில் நன்னடத்தை, தொழில் நெறி, நாணயம் குறித்து இந்திய மருத்துவக் குழு விதிகள் பிறப்பிக்கலாம்.

மாநில மருத்துவப் பதிவேட்டிலிருந்து ஒருவர், பெயர் நீக்கப்பட்டலோ அதில் பதிவு செய்ய மறுக்கப்பட்டாலோ, பாதிக்கப்பட்டவர் மத்திய அரசுக்கு மேன்முறையீடு செய்யலாம். அதில் இந்திய மருத்துவக் குழுவைக் கலந்தாலோசித்து எடுக்கப்படும் மத்திய அரசின் முடிவு இறுதியானதாகும்.

ஒப்புக் கொள்ளப்பட்ட மருத்துவப் பட்டங்கள் வழங்குவதற்கான குறைந்த அளவு மருத்துவப்படிப்பு

குறித்து இந்திய மருத்துவக் குழு நிருணயம் செய்ய லாம். மருத்துவப் படிப்பில் முதுநிலைப் பட்டம் பெறு வதற்கான கல்வி அனைத்து இந்தியாவிலும் ஒரே தன் மையில் அமைவதற்கான ஒரு முதுநிலைக் குழுவை (Post Graduate Committee) மத்திய அரசு அமைக்க லாம். அதில் ஒன்பது உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் இந்திய மருத்துவக் குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் முதுநிலை மருத்துவப் பட்டம் பெற்றவர் களாகவும் முதுநிலை மருத்துவப் பட்டம் பெறு வதற்குப் படிக்கும் மாணவர்களுக்குப் போதித்த அல்லது தேர்வு நடத்திய அனுபவம் உடையவராகவு மிருக்க வேண்டும். அந்த ஒன்பது உறுப்பினர்களுள் அறுவர் மத்திய அரசால் நியமிக்கப்படுவார்கள். ஏனைய மூவர் இந்திய மருத்துவக்குழு உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதுநிலைக் குழுவின் பரிந்துரைகளை இந்திய மருத்துவக் குழு ஏற்காவிட்டால் அவை மத்திய அரசுக்கு அனுப்பப் படும். மத்திய அரசின் முடிவு இறுதியானது.

ஒரு பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்பு வழங்கும் மருத்துவப் பட்டத்தை ஏற்றுக் கொள்வது தொடர்பாக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் நோக்குடன் அவை நடத்தும் தேர்வு, போதனை அளிக்கும் இடம் ஆகியவற்றைப் பார்வையிட இந்திய மருத்துவக் குழுவின் செயற்குழு, மருத்துவ ஆய்வாளர்களை நியமனம் செய்யலாம். மேற்கூறிய தேர்வுகளையும், போதனை நடக்கும் இடங்களையும் இந்திய மருத்துவக் குழுவால் நியமிக்கப்படும் பார்வையாளர்கள் பார்வையிட்டு இந்திய மருத்துவக் குழுவின் தலைவருக்கு அறிக்கை அளிக்கலாம். மத்திய அரசு விரும்பினால் அவ்வறிக்கை மத்திய அரசுக்கு அளிக்கப்படும்.

மேற்கூறிய பார்வையாளர் அல்லது செயற் குழுவின் அறிக்கையிலிருந்து ஒரு பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்பு நடத்தும் தேர்வுக்குரிய கல்வியானது விதிமுறைகளுக்கு ஒத்துவரவில்லை யென்றாலோ கட்டிட வசதி, ஆசிரியர்களின் எண்ணிக்கை, பயிற்சிமுறை, தேவைப்பட்ட கருவிகள் ஆகியவற்றில் குறைபாடு இருப்பதாகத் தெரிய வந்தாலோ மாநில அரசு வழியாகத் தொடர்புடைய பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்பை மத் திய அரசு விளக்கம் கேட்கலாம். மேற்குறிப்பிட்டவை பற்றி மாநில அரசும் தன் பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பலாம். மத்திய அரசு தக்க ஆணை பிறப்பிக்கலாம். அப்பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்புக்கு வழங்கப்பட்ட அனுமதியை மத்திய அரசு திருப்பிப் பெற்றுக் கொள்ளவும் செய்யலாம்.

சட்டப்படி அனுமதிக்கப் பட்டவர்களைத் தவிர்த்து வேறு எவரும் மருத்துவப் பட்டப்படிப்பு வழங்கக் கூடாது. பொய்யான மருத்துவப் பட்டங் களை எவரும் உபயோகப் படுத்தக் கூடாது. இவ்விதி முறைகளை மீறும் செய்கையானது 1916-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய மருத்துவப் பட்டங் கள் பற்றிய சட்டப்படி தண்டிக்கக்கூடிய குற்றங்கள் ஆகும். பி.கே.மி.

**இந்திய மாதர் சங்கம்:** இது மகளிரின் முன்னேற்றத்திற்காக 1917-ஆம் ஆண்டு சென்னை யில் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் மகளிரின் கல்வி வளர்ச்சி என்னும் தலையாய நோக்கத்துடன் 1921-ஆம் ஆண்டு ஆசிய மகளிர் மாநாட்டினை நடத்தி யது. இம்மாநாட்டில் ஆசியாவின் பல்வேறு நாடு களைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு மகளிர் கல்வி முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை வகுத் தனர். இவ்வழிமுறைகளையொட்டி நாட்டின் பல்வேறு இடங்களிலும் இந்திய மாதர் சங்கத்தின் கிளைகள் தொடங்கப்பட்டன. சென்னையில் உள்ள சேவாசதனம், குழந்தை வழிகாட்டு அமைப்பு, அவ்வை இல்லம் போன்ற சமூகப் பணி இல்லங்கள் இச்சங்கத்தினரால் தோற்றுவிக்கப்பட்டன. இச் சங்கம் பல்வேறு மகளிர் முன்னேற்ற இயக்கங்கள் நாட்டில் தோன்றுவதற்குத் தொடக்கமாக அமைந்தது. இது பணியில் ஈடுபட்டிருக்கும் பெண் களுக்காக விடுதிகளையும் உற்றவரால் கைவிடப் பட்ட பெண்களுக்காகப் பாதுகாப்பு இல்லங்களையும் நடத்தி வருகிறது.

**இந்திய மானிடவியல் கழகம்:** இந்திய மானிடவியலின் மேம்பாட்டிற்காக நிறுவப்பட்டதே இந்திய மானிடவியல் கழகமாகும். இக் கழகம் இந்திய மானிடவியலில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களால் நடத்தப்படும் ஓர் அமைப்பாகத் திகழ்கிறது. இப் போது இக்கழகத்தின் தலைமையகம், தில்லிப் பல் கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் செயற் பட்டு வருகின்றது. தலைவர் ஒருவர், துணைத் தலை வர்கள் ஐவர், பொதுச் செயலர் ஒருவர், செயலர் ஒருவர், பொருளாளர் ஒருவர், வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, நடுப் பகுதிகளுக்காக ஒவ்வொரு வட்டாரச் செயலர்கள் ஆகியோருடன் செயற் குழு உறுப்பினர்களையும் கொண்டு இக்கழகம் இயங்கி வருகின்றது. இக்கழகத்தில் 1984-ஆம் ஆண்டு விவ ரப்படி இருபத்தெட்டுச் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்திய மானிடவியல் கழகத்தில் உறுப்பினர்கள் பலவாறாகச் சேர்க்கப்படுகின்றனர். வாழ்நாள் உறுப் பினர்கள், நிறுவன உறுப்பினர்கள், ஆண்டு உறுப்பினர்

கள், இணை உறுப்பினர்கள் (Associate Members), மாணாக்கர் உறுப்பினர்கள் என உறுப்பினர் பல வகைப்படுவர்.

கழகத்தின் வெளியீடுகள்: 'இந்திய மானிடவிய லார்' (Indian Anthropologist) என்னும் ஆய்விதழை இக்கழகம் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் ஆண் டிற்கிருமுறை அதாவது ஒன்று சூன் திங்களிலும் மற்றொன்று திசம்பர்த் திங்களிலும் வெளியிடப்படு கிறது. மானிடவியலின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந் தோருக்கு ஆர்வமளிக்கும் வகையில் சிறப்பு ஆய்வுரை கள், இவ்விதழில் வெளியிடப்படுகின்றன. மானிட வியலின் சிறப்புத்தன்மை வாய்ந்த புதிய வெளியீடு கள் பற்றிய பல்வேறு கருத்துகளைக் கொண்ட ஆய் வுரைகளையும் இவ்விதழ் வெளிக் கொணர்கிறது.

இந்திய மானிடவியல் கழகத்தின் உறுப்பினர் ஆவதன் வழி 'இந்திய மானிடவியலார்' ஆய் விதழுக்குக் கட்டணத் தொகையினைச் செலுத்த லாம். இந்த ஆய்விதழ் வெளியீட்டை அச்சிடும் உரிமையனைத்தும் இந்திய மானிடவியல் கழகத் திற்கே உரித்தானதாகும்.

இந்திய மானிடவியல் கழகத்தின் உறுப்பினர்கள் மட்டிலுமே இந்த ஆய்விதழில் ஆய்வுரைகள் எழுத வேண்டும் என்னும் வரையறையில்லை. இந்த ஆய் விதழில் எழுதும் ஆசிரியர்கள் தங்கள் ஆய்வுரை களைக் கழகத்தின் அனுமதியின்றி வெளியிடும் உரிமை உண்டு. ஆசிரியர் அல்லாத பிறர், ஆய்வுரைகளை வெளியிட விரும்பினால் கழகத்தின் அனுமதி பெற்று வெளியிடலாம்.

இந்திய மானிடவியல் கழகம், எசு.சி.இராய் (S.C. Roy) நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது, இராஞ்சிப் பல்கலைக் கழக மானிடவியல் துறையுடன் இணைந்து, 'இந்திய மானிடவியலின் நூறாண்டுகள், என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய் திருந்தது. அக்கருத்தரங்குகளில், இந்திய மானிட வியலின் பல்வேறு பிரிவுகளைப் பற்றிய ஆராய்ச்சி களும், இந்திய, அயல்நாட்டு வல்லுநர்களால் அளிக் கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளும் விரிவாக விவாதிக்கப்பட்டன. ம.ந.பு.

துணை நூல்கள்:

**Tiwari**, S.C., and Datta P.K.(Eds), Indian Anthropologist, Matchless Printers, Delhi, 1984.

**Vidyarthi, L.P.**, Rise of Anthropology in India, Concept Publishing Company, Delhi, 1978.

***இந்திய மானிடவியல் மதிப்பாய்வு***: இந் திய அரசின் பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் ஆராய்ச்சி அமைப்பாக இந்திய மானிடவியல் மதிப்பாய்வு (Anthropological Survey of India) இயங்குகிறது. இவ்வமைப்பு இந்திய மக்களைப் பற்றிய மானிடவியல் சார்ந்த ஆய்வு செய்யும் ஒரு முதன்மையான தேசிய நிறுவனமாகும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்நிறுவனத்தின் பரந்த வளர்ச்சிக்கு இந்திய அரசு வழிகோலியது. அக்காலத் தில் 325 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இந்திய மானிடவியல் மதிப்பாய்வு மேலும் 269 உறுப்பினர் களைத் தன்னுள் கொண்டுவளர்ந்தது. இதன் பின்னர் நிலையான வளர்ச்சியின் அடிப்படையில் பல உறுப் பினர்களைத் தன்னகத்தே சேர்த்துக்கொண்டு வரு கிறது. இன்று நிருவாக அலுவலர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 680 ஆகும்.

இந்தியாவில மானிடவியல், கல்விசார் துறை யாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர், மானிட வியல் செயற்பாடுகள் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதி யாக இருந்தது. அன்றைய இந்திய அரசு 1916-ஆம் ஆண்டு சூன் திங்களில் இந்திய விலங்கியல் மதிப் பாய்வை நிறுவியது. அதனுள் ஓர் உறுப்பாக மானிட வியற் பிரிவு செயற்பட்டு வந்தது. மானிடவியற் பிரிவு, 1945-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் முதல் நாளில் இந்திய விலங்கியல் மதிப்பாய்விலிருந்து பிரிக் கப்பட்டு, இந்திய அரசின் கல்வித்துறையின்கீழ் பி.எசு, குகாவின் (B.S. Guha) தலைமையில் ஒரு தனிப்பிரிவாகச் செயற்படத் தொடங்கியது.

குகா, 1927-இல் இந்திய விலங்கியல் மதிப்பாய் வில் ஓர் உறுப்பாகச் செயற்பட்ட மானிடவியற் பிரி வின் இயக்குநராகப் பணியாற்றிப் பின்னர் மானிட வியற்பிரிவு தனிப்பிரிவாகச் செயற்பட்டபொழுது, அதன் சிறப்புஅலுவலராகஅமர்த்தப்பட்டார். இந்திய மானிடவியல் மதிப்பாய்வு 1948-ஆம் ஆண்டு வரை வாரணாசியில் இயங்கி வந்தது. பின்னர்க் கல்கத்தாவி லுள்ள இந்திய அருங்காட்சியகக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு இவ்வமைப்பு மானிடவியல் துறை (Department of Anthropology) எனப் பெயர் பெற் றது. இத்துறையின் கொள்கைகளாகப் பின் வருவன வற்றை வரையறை செய்தனர்.

1. அறிவியலறிவின் வளர்ச்சியையும் தேசிய அளவில் இணக்கத்தையும் ஒற்றுமையையும் வளர்த் தல்.

2. ஆதிக்குடிகள், பிற்படுத்தப்பட்ட பழங்குடி கள் முதலானோரின் வளர்ச்சிப் பணியில் ஏற்படும் நிருவாகச் சிக்கலில் துணை புரிதல்.

3. மக்களின் உடல் சார்ந்த தரத்தையும் சமூகத்தில் உயர்ந்த வாழ்நிலை அமைப்பையும் வழிவகுக்கச் செயல்முறை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இதன் பின்னர் மீண்டும் ஒருமுறை இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் கொள்கைகள் மாற்றப் பெற்றுப் பின்வருமாறு அமைக்கப்பட்டன.

1. இந்தியாவின் பழங்குடிகள் முதலான அனைத்துச் சமூகத்தினையும் உயிரியல்சார் அடிப்படையிலும் பண்பாட்டுஅடிப்படையிலும் ஆய்தல். 2. தொல்லுலகம்முதல் இக்காலம் வரையிலான அனைத்துக் காலங்களிலும் காணப்படும் எலும்புக் கூடுகளைக் கண்டெடுத்துப் பாதுகாத்து வைப்பதும் ஆய்வு செய்தலும். 3. இந்தியப் பழங்குடிகளின் கலைகள், கைவினைப்பொருள்கள் முதலானவற்றின் உருவப் படிவங்களைச் சேகரித்தல். 4. மானிடவியல் துறையில் மாணவர்களுக்கு உயர் ஆய்வில் பயிற்சி அளித்தல். 5. ஆய்வுமுடிவுகளை வெளியிடுதல்.

இந்தியத் தலைமைப் பண்பாட்டின்கீழ் அடங்கி வாராத எளிய குடிகளான அந்தமானின் ஒங்கிப் பழங்குடியினர், வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் (அருணாசலப் பிரதேசம்) வாழும் ஆதி (Adi), பசுதர் (Bastar) மாவட்டத்தில் வாழும் பழங்குடிகள் முதலான அனைத்துப் பழங்குடிகளையும், பிற சமூகங்களையும் பற்றிப் பண்பாட்டு மானிடவியல் பரப்பிலும் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) பரப்பிலும் ஆய்வுகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு, அளக்கப்பட்டு அவற்றின் இனவகைகள் வரையறுக்கப்பட்டன. பொருள் சார் கூறுகளின் பரப்பை (Distribution of Material Traits) ஆய்வு செய்து 1959 இல் இந்திய மானிடவியல் மதிப்பாய்வு முதன்முறையாக ஓர் அனைத்திந்தியச் செயல்திட்டத்தை மேற்கொண்டது. இச்செயல் திட்டம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் பண்பாட்டு வடிவுருவத்தையும் (Cultural Profile) பண்பாட்டு மண்டலத்தில் (Cultural Zone) காணப்படும் பல்வேறு பகுதிகளையும் அறுதியிடும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்டது. இச்செயல்திட்டத்திற்கென 40 பண்பாட்டுக் கூறுகளைத் தேர்ந்தெடுத்து, 1959 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் 1961 ஆம் ஆண்டு மார்ச்சு வரையிலான காலத்தில் இந்தியாவின் 322 மாவட்டங்களுள் 311 இல் இத்திட்டத்திற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெரும்பான்மையான மாவட்டங்களில் ஒரு சிற்றூரிலும், பண்பாட்டு வேற்றுமைகள் மிகுந்து காணப்பட்ட மாவட்டங்களில் இரண்டு சிற்றூரிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பதினொரு பண்பாட்டுக் கூறுகளின் தரவுகள் அடிப்படையில் 1961-ஆம் ஆண்டு 'இந்திய உழவர்களின் வாழ்க்கை நிலை' (Peasant Life in India) என்னும் தலைப்பில் முதல் அறிக்கை வெளியிடப்பட்டது.

வீடுகள், கலப்பை, மாட்டுவண்டி முதலிய கூறுகளின் அமைப்புகளையும் வகைகளையும் அவை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கையாளப்படும் முறைகளையும் பற்றி இவ்வாய்வு முடிவு ஆழ்ந்த கருத்தினை வெளிப்படுத்தியது. இதுவேயன்றி இந்த ஆய்வு மொழி, பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையிலும் இக்கூறுகளின் பரப்பைப் பல்வேறு பகுதிகளோடு ஒப்பிட்டு மதிப்பிடவும் வழிகோலியது. இதனால், இச்செயல்திட்டம் இந்திய மானிடவியலின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாய் அமைந்தது. ஏனைய புறக்கூறுகளின் ஆய்வு முடிவுகளும் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டதிலிருந்தே இந்திய மானிடவியல் மதிப்பாய்வு, பல அனைத்திந்தியச் செயல்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டில் மானிடவியலின்பால் மிகுந்த ஆர்வம் வளர்ந்துள்ளது. பல பல்கலைக் கழகங்களில் மானிடவியல் துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல மாநிலங்கள் பழங்குடி ஆய்வு நிறுவனங்களை நிறுவிப் பழங்குடி மக்களின் பண்பாட்டை ஆய்வு செய்தும் அவர்களின் நலனிற்காகச் செயலாற்றியும் வருகின்றன. திட்டமிடுதலிலும் வளர்ச்சிப் பணிகளிலும் மானிடவியலார் பங்கு கொள்கின்றனர். இந்தப் பணிகளுக்கு இந்திய மானிடவியல் மதிப்பாய்வு துணை நிற்கிறது.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வை 1970-ஆம் ஆண்டு திருத்தியமைத்து வலுப்பெறச் செய்ய ஒரு முடிவை இந்திய அரசு மேற்கொண்டு, இவ்வமைப்பின் கொள்கைகளைப் பின் வருமாறு மறுவரையறை செய்துள்ளது. 1. இந்திய நாடு முழுவதிலும் சமூக, பண்பாடு, உடல்சார் முதலிய மானிடவியலின் பிரிவுகளில் இவ்வமைப்பு ஏற்றுக் கொண்ட ஆய்வுகளைத் தொடர்தல். 2. வளர்நிலைத் தொடர்புடையதும் தேசிய அளவில் முதன்மை பெற்றதுமான பயன்முறை சார்ந்த மானிடவியல் துறையில் சிறப்புக் கண்ணோட்டத்தை ஏற்படுத்துதல். 3. பல்கலைக் கழக மானிடவியல் துறைகள், பழங்குடி ஆய்வு நிறுவனங்கள், மானிடவியல் சார்ந்த நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல். 4. மானிடவியல் சார்ந்த அனைத்து அமைப்புகளோடும் தேசிய அளவில் ஒருங்கிணைப்

பாளராகவும் நெறிப்படுத்தும் நிறுவனமாகவும் செயற்படுதல். 5. இந்திய அரசாங்கத்திற்கு மானிடவியல்சார் கருத்துரைப்போராகப் பணியாற்றுதல்.

மேற்கண்ட செயல் நோக்கங்களை ஏற்றுச் செயற்பட்டபொழுது இந்திய மானிடவியல மதிப்பாய்வின் சிறந்த செயலாக்கம் நிறைந்த இயக்குநராக டாக்டர் எசு. சி. சின்கா (S.C. Sinha) பொறுப்பேற்றிருந்தார். பின்னர் இவர் விசுவபாரதிப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில், 'சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவின் அனைத்துப் பகுதி நலிந்த மக்களின் பொருளாதார மாற்றங்களின் போக்கு', 'அனைத்திந்திய உயிர்சார்-மானிடவியல் பரப்பாய்வு' (All India Bio-Anthro pological Survey) ஆகிய இரண்டு முதன்மையான அனைத்திந்தியச் செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வு தனது நாற்பது ஆண்டுக் கால வாழ்வில் பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல், ஏனைய துணைப் பரப்புகள் ஆகியவற்றைப் பற்றி, நாட்டின் அனைத்துப் பகுதியிலும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. சமூக, பண்பாட்டு மானிடவியலார் நாட்டின் அனைத்துப் பகுதியிலுமுள்ள அறிமுகமற்ற எளிய சிறு சமூகங்கள், சாதி, உழவர், நகர்ப்புறச் சமூகம், புண்ணியத் தலங்கள் முதலான அனைத்துப் பிரிவுகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டனர். உடல்சார் மானிடவியலார் இந்திய மக்களின் உடலமைப்புகளைப் பல்வேறு முறைகளில் ஆய்வு செய்தனர். இவ்வனைத்து மானிடவியல் பிரிவுகளிலும் சிக்கல் சார்ந்த பரப்புகளிலும் தெளிவுபெற வேண்டிய பரப்புகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் அடிப்படைத் தரவு ஆவணம் (Basic Data Archive) 1982-ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட 515 செயல் திட்டங்களின் தரவுகளைச் சேகரித்துப் பாதுகாத்து வருகிறது.

இவ்வமைப்பு (இ.மா.ம.) ஐந்து மண்டல அருங்காட்சியகங்களைக் கொண்டிருக்கிறது. இவ்வருங்காட்சியகங்களில் சற்றேறக்குறைய 5000 பொருள்கள் சேகரிக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்வமைப்பின் படத்தொகுப்பியற் பிரிவு (Cinematographic Section) பல்வேறு பழங்குடிகளைப் பற்றிய 52 படத்தொகுப்பினைத் தயாரித்துள்ளது. இது தவிர்த்துப் பழங்குடிகளைப் பற்றிய மிகுந்த எண்ணிக்கையிலான ஒளிப்படங்களையும் தயாரித்துள்ளது.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வு தன் தலைமையகத்திலும் ஏழு மண்டல அலுவலகத்திலும் ஒரு துணை மண்டல அலுவலகத்திலும் நூலகத்தைக் கொண்டுள்ளது. இது 1982-ஆம் ஆண்டு வரையில் 80 நூல்களையும் 58 பருவ வெளியீடுகளையும் 6 செய்தி மலர்களையும் இந்தியப் பழங்குடி வரைபடத்தையும் வெளியிட்டுள்ளது.

**ஆய்வுத் துறைகள்:** இந்திய மானிடவியல் மதிப்பாய்வு சமூக, பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல் ஆகிய இரண்டு முதன்மையான ஆய்வுப் பகுதிகளைக் கொண்டுள்ளது. இது தவிர்த்து உளவியல், மொழியியல், மனிதச் சூழ்நிலையியல், புள்ளியியல், உயிர்-வேதியியல், கதிர் இயக்கவியல், அருங்காட்சியகம் முதலான சார்புடைய ஆய்வுப் பிரிவுகளையும் இது கொண்டுள்ளது. மேற்கண்ட ஆய்வுகளுக்குத் துணை நிற்கும் பிரிவுகளாக ஒலி, சோதனைக் கூடம், ஒளிப்படப்பிரிவு, படத்தொகுப்பியல், அடிப்படைத் தரவு ஆவணம், தீர்வகம் (Clearing

| | மண்டலம் | அலுவலகம் | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | அந்தமான் நிக்கோபார் மண்டலம் | போர்ட் பிளேர் | 1951 |
| 2. | வடகிழக்கு மண்டலம் | சில்லாங்கு (Shillong) | 1953 |
| 3. | நடுமண்டலம் | நாக்பூர் | 1955 |
| 4. | தென்மண்டலம் | மைசூர் | 1960 |
| 5. | வடமேற்கு மண்டலம் | தேராதூன் (Dehra-Dun) | 1969 |
| 6. | நடுதுணை மண்டலம் | சகதல்பூர் (Jagadalpur) | 1972 |
| 7. | மேற்கு மண்டலம் | உதயபூர் (Udaipur) | 1975 |
| 8. | கிழக்கு மண்டலம் | கல்கத்தா | 1976 |

House) முதலானவற்றையும் இ.மா.ம. அமைப்புக் கொண்டுள்ளது.

மண்டல அலுவலகங்கள்: இ.மா.ம. தனது தலைமையகத்தைக் கல்கத்தாவில் கொண்டியங்குகிறது. இதன் ஏழு மண்டல அலுவலகங்களும் ஒரு துணை மண்டல அலுவலகமும் மேற் குறிப்பிடப் பெற்ற இடங்களில் இயங்கி வருகின்றன.

அண்மைக்காலம் வரை இ.மா.ம. தலைவராக இயக்குநரே பொறுப்பு வகித்து வந்தார். இந்திய அரசு 1984-ஆம் ஆண்டின் இடையில் தலைமை இயக்குநர் பதவியை ஏற்படுத்தி, இப்பதவிக்கு முதலாவதாக டாக்டர் கே. எசு. சிங்கை (K. S. Singh) அமர்த்தியது. புதுதில்லியில் இவரது அலுவலகம் அமைந்துள்ளது. டாக்டர் கே. எசு. சிங்கு இப்பதவியுடன், போபாலில் உள்ள இராசுட்டிரிய மனாவ் சங்கராலயாவின் (Rashtriya Manav Sanghralaya) நிருவாகப் பொறுப்பையும் கவனித்து வருகிறார். இவ்வமைப்பு, முன்னர் இ.மா.ம.வின் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வந்தது. பின்னர் இது, இந்திய அரசின் கல்வி, பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் தனிப் பிரிவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் இவ்வமைப்பு தன்னாட்சி அமைப்பாக இயங்க அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இ.மா.ம. இந்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள மிகப்பெரிய மானிடவியல் நிறுவனமாகும்.

பி.கே.மி.

**இந்திய மின்சாரச் சட்டம்**: இது இந்திய அரசால் 1910-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் 1959-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. இந்திய மின்சாரச் சட்டம் (The Indian Electricity Act) சம்மு-காசுமீர் பகுதியைத் தவிர அனைத்து இந்தியாவுக்கும் செல்லத் தக்கது.

மேற்கொண்டு தொடர்வதற்கு முன்னர் இந்திய அரசு 1948-ஆம் ஆண்டில் இயற்றிய மின் வழங்கும் சட்டத்தைப் (The Electricity Supply Act) பற்றிக் குறிப்பிடவேண்டும். இந்த 1948-ஆம் ஆண்டுச் சட்டத்தில் மாநில அரசால்மாநிலமின் வாரியத்தை அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியம் மின் உற்பத்தி செய்யும் பணியிலும் அதை வழங்குதல் செய்யும் பணியிலும், அவற்றை ஒட்டிய பணிகளிலும் ஈடுபடலாம். மின் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபடக்கூடிய நிறுவனங்களை அமைக்க மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது மத்திய அரசு மட்டிலுமோ மத்திய அரசு மாநில அரசுடன் (அல்லது மாநில அரசுகளுடன்) இணைந்தோ மாநில அரசுகள் தங்களுக்குள் இணைந்தோ மின் உற்பத்தி செய்யும் நிறுவனங்களை அமைக்கலாம். நிறுவனங்களின் சட்டப்படி (Companies Act) அந்த நிறுவனங்கள் பதிவு செய்யப்படவேண்டும். மின் உற்பத்தி செய்யும் பணியில் மாநில அரசும் ஈடுபடலாம்.

மின்சாரச் சட்டப்படி மாநில அரசும் மின் வழங்கும் பணியில ஈடுபடலாம். (இனி வரும் பகுதிகளில் 1910-ஆம் ஆண்டைய மின்சாரச் சட்டம் மட்டும் குறிப்பிடப்படும்.) இச்சட்டப்படி மத்திய மின் வாரியம் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மின் உற்பத்தி செய்தல், அதை எடுத்துச் சென்று வழங்குதல் ஆகிய செய்கைகளை ஒழுங்குபடுத்த மத்திய மின்வாரியம் விதிகளைப் பிறப்பிக்கலாம். உரிமம் கோருபவர்கள் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பது குறித்தும் மத்திய மின்வாரியம் விதிகள் பிறப்பிக்கலாம். இச்சட்டத்தில் மின் ஆற்றலை எவ்வாறு வழங்குதல் என்ற பொருள் குறித்துச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. முன்னரே கூறியபடி மாநில அரசும், மாநில மின்வாரியமும் மின் வழங்குதல் பணியில் ஈடுபடலாம். மேலும் மத்திய மின்வாரியம் பிறப்பிக்கும் விதிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்டவரும் வழங்குதல் பணியில் ஈடுபடலாம். மேற்கூறியவர்களைத் தவிர்த்து மற்றவர் எவரும் (உள்ளாட்சி நிறுவனங்கள் உட்பட) மின் வழங்குதல் பணியில் ஈடுபட உரிமம் வழங்கவோ அனுமதி அளிக்கவோ இச்சட்டத்தில் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசால் உரிமம் வழங்கப்படாதவர் எவரும் வழங்கும் பணியில் ஈடுபடக்கூடாது என்றும், ஆனால், மாநில அரசால் அனுமதிக்கப்பட்டால், உரிமம் இல்லாதவர்கூட வழங்கும் பணியில் ஈடுபடலாம் என்றும் இச்சட்டத்தின் 28-ஆம் பிரிவில் கூறப் பட்டுள்ளது.

மின் வழங்கும் பணியில் ஈடுபட உரிமம் கோருபவர் அதற்கென ஏற்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதை விதிமுறைகளையொட்டி விளம்பரம் செய்ய வேண்டும். விளம்பரம் செய்யப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் பெறப்படும் மறுப்புகள் ஆராயப்பட வேண்டும். படைத்தளம், விமான நிலையம், கப்பல் கட்டப்படும் இடம், தற்காப்பு நோக்கத்திற்காக மத்திய அரசிடம் உள்ள இடம் ஆகியவை சம்பந்தப்பட்ட மனுவாக இருந்தால் மத்திய அரசுக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர் மாநில மின்வாரியத்தைக் கலந்தாலோசித்த பின்னர் மாநில அரசு உரிமம் வழங்கலாம். அதில் தக்க நிபந்தனைகளை விதிக்கலாம். ஏற்கனவே அளிக்கப்பட்ட உரிமத்தைத் திருத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்டவர் நுகர்வோர்களில் முன்னுரிமை ஏதும் வழங்காமல், மின் ஆற்றலை வழங்குதல் வேண்டும். பொது மக்களுக்குத் தேவையான பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு மின் ஆற்றலை வழங்குதலில் முன்னுரிமை காட்ட மாநில அரசு உத்தரவிடலாம். கட்டணம் விதிப்பதில் ஒரே தன்மையான அளவுகோலைக் கடைப்பிடிக்க வேண்டும். மின் ஆற்றலை ஒழுங்கான முறையில் பங்கீடு செய்ய மாநில அரசு தக்க ஆணைகளைப் பிறப்பிக்கலாம். கட்டணம் செலுத்தாத நுகர்வோருக்கு ஏழுநாள் கெடு அளித்துப் பின்னும் செலுத்தாவிடில் மின் ஆற்றல் தொடர்பைத் துண்டித்து விடலாம். நுகர்வோர் செலவில் வழங்கப்படும் மின்ஆற்றலை அளவு எடுக்க மின்னளவி (Meter) பொருத்தப்பட வேண்டும். அதனைச் சோதனை செய்ய உரிமம் பெற்றவரின் ஊழியர்களுக்கு அதிகாரம் உண்டு.

உரிமம் வழங்கப்பட்டவர் தாம் மேற்கொண்ட பணி நிமித்தம் மின்தொடரைப் பூமிக்கடியிலும் மேல்நிலையிலும் அமைக்க நேரிடும். கம்பங்கள் பதிப்பது, முதலிய ஏனைய வேலைகளையும் செய்ய நேரிடும். அவ்வேலைகளை அரசு, உள்ளாட்சித்துறை மற்றும் தனியாருக்குப் பாத்தியப்பட்ட சொத்துகளில் செய்ய நேரிடலாம். அதற்காக இச்சட்டத்தில் சில அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தியத் தந்திச் சட்டத்தில் தந்தி நிருவாகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் உரிமம் வழங்கப்பட்டவர் பயன்படுத்தலாம் என இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. (காண்க: இந்தியத் தந்திச் சட்டம்) நில எடுப்புச் சட்டத்திலுள்ள (Land Acquisition Act) வகை முறைகளும் பயன்படுத்தப்படலாம். மேற்கூறிய வகையில் உரிமம் வழங்கப்பட்டவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் முதன்மையானவை இங்குக் குறிப்பிடப்படும்.

புதிதாகச் செய்ய வேண்டிய வேலையைத் தெரு, இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகியவற்றின் அடியிலோ மேலாகவோ நடுவிலோ நிறைவேற்றப்பட வேண்டியிருந்தால் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தெருவைப் பழுது பார்க்கக் கடமைப்பட்டவருக்கு ஒரு மாதத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அத்துடன் செய்யவிருக்கும் வேலையைக் காட்டக்கூடிய வரைபடமும் இணைக்கப்பட வேண்டும். ஒரு மாத காலத்துக்குள் தெருவைப் பழுது பார்க்க வேண்டியவரிடமிருந்து மறுமொழி ஏதும் வராவிட்டால் அவர் நிறைவேற்றவிருக்கும் வேலையை ஏற்றுக் கொண்டதாக அனுமானிக்கப்படும். உரிமம் வழங்கப்பட்டவர் 48 மணி நேரத்துக்குக் குறையாத அளவில் பழுது பார்க்க வேண்டியவருக்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டுத் தம் வேலையைத் தொடங்கலாம். பழுது பார்க்கக் கடமைப்பட்டவர் குறிப்பிட்ட காலத்துக்குள் மறுப்பு அல்லது திருத்தம் தெரிவித்தால் அவ்வாறு தெரிவித்த ஒரு வார காலத்துக்குள் உரிமம் வழங்கப்பட்டவர் மாநில அரசுக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டும். அச்சிக்கலில் மாநில அரசின் முடிவு இறுதியானது.

இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகியவற்றை நிருவகிக்கக் கடமைப்பட்டவருக்கு மேற்கூறிய வகையில் ஒரு மாதத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். வரைபடமும் இணைக்கப்பட வேண்டும். மறுப்பு ஏதுமிருந்தால் அதை அந்த நிருவாகி மூன்று வார காலத்துக்குள் தெரியப்படுத்த வேண்டும். அச்செய்தி குறித்து உடன்பாடு ஏதும் ஏற்படாவிட்டால் இசைவுத் தீர்ப்பு முறைப்படி (Arbitration) முடிவு செய்யப்படும். குறிப்பிட்ட காலத்துக்குள் மறுப்பு ஏதும் எழுப்பப்படாவிட்டால் அவ்வேலையை நிருவாகி ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள மின்தொடரில் (Electric Line) கோளாறு ஏதும் ஏற்பட்டால் மேற்கூறிய தெருவைப் பழுது பார்க்கக் கடமைப்பட்டவருக்கும் இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகியவற்றை நிருவகிக்கக் கடமைப்பட்டவருக்கும் எழுத்து மூலம் முன்னறிவிப்புச் கொடுத்துவிட்டு (இதற்கு இத்தனை நாள் என்ற காலக்கெடு இல்லை) மேல்நிலை மின்தொடர் (Overhead Line) அமைக்கலாம். பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள மின்தொடரைப் பழுது பார்க்கும் வேலை முடிந்தவுடன் மேல்நிலை மின்தொடரை நீக்கிவிட வேண்டும்.

முன்னரே செய்யப்பட்ட வேலையில், பழுது பார்த்தல், புதுப்பித்தல், திருத்துதல் ஆகியவற்றைச் செய்ய நேர்ந்தால் (முன்னரே செய்யப்பட்ட வேலை அமைந்திருக்கும் நிலையில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்றால்) 48 மணி நேரத்துக்குக் குறையாத அளவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னறிவிப்புச் செய்துவிட்டு உரிமம் வழங்கப்பட்டவர் அவ்வேலையைச் செய்து முடிக்கலாம். அவசர நிலையிருந்தால் அந்த முன்னறிவிப்புத் தேவையில்லை.

பொதுவாக இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகிய இடங்களில் மேல்நிலை மின்தொடர் அமைப்பதற்கு மாநில அரசின் அனுமதி தேவை.

தனியார் இடத்தின்மேல், மேல்நிலை மின்தொடர் அமைக்க அத்தனியாரின் அனுமதி தேவை. ஆனால், மேல்நிலை மின்தொடருக்கு முட்டுக் கொடுக்க வேண்டிய அல்லது தாங்கக்கூடிய கம்பத்தைத் தனியார் இடத்தில், பெருநகராயிருந்தால் காவல்துறை ஆய்வாளரின் அனுமதியுடனும், வேறு இடமாக இருந்தால் மாவட்ட நீதிபதி அனுமதியுடனும் அமைக்கலாம். அவ்வாறு அனுமதி வழங்கும்போது அந்த அதிகாரிகள் தக்க வாடகையையோ இழப்பீட்டுத் தொகையையோ நிருணயிக்க வேண்டும்.

வழங்குதல் செய்வது சம்பந்தப்பட்ட மின்தொடர், அமைத்தல் மற்றும் அத்துடன் தொடர்புடைய வேலைகளைச் செய்வதற்காக அவ்வப்போது தெரு, தெருவையொட்டிய நடைபாதை, இருப்புப்பாதை, வடிகால், கழிவுநீர்ப்பாதை ஆகியவற்றை உரிமம் வழங்கப்பட்டவர் தோண்டலாம். ஆனால், அவ் வேலைகளை இருப்புப்பாதை, மற்றும் மத்திய மாநில அரசுகளும், உள்ளாட்சி நிறுவனமும் பழுது பார்க்கக் கடமைப்படாத தெருவில் செய்வதற்கு மாநில அரசின் முன் அனுமதி தேவை. அவ்வாறு அனுமதியளிப்பதற்குமுன், உரிமம் வழங்கப்பட்டவர் தான் செய்ய விரும்பும் வேலை குறித்து விளம்பரம் செய்ய வேண்டும். அதையடுத்து எழுப்பப்படும் மறுப்புகளை ஆய்வு செய்த பின்னர்த்தான் மாநில அரசு மேற்கூறிய அனுமதியை வழங்க வேண்டும்.

இச்சட்டப்படி தாம் நிறைவேற்ற வேண்டிய வேலைக்கு இடையூறு ஏதும் ஏற்படும் என்று தோன்றினால் உரிமம் வழங்கப்பட்டவர் எவ்விதமான குழாயையும் (முதன்மைக் கழிவு நீர்க்குழாயைத் தவிர்த்து) கம்பியையும் மாற்றியமைக்கலாம். ஆனால், அவ்வேலையைச் செய்வதற்குமுன், உரிமம் வழங்கப்பட்டவர், மேற்படி குழாய் மற்றும் கம்பிகளுக்கு உரிமைப் பட்டவர்களுக்கு ஒரு மாத காலத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புச் செய்ய வேண்டும். அத்துடன் செய்யவிருக்கும் வேலைகுறித்து வரைபடமும் இணைக்கப்பட வேண்டும். உரிமைப் பட்டவர் 14 நாட்களுக்குள் மறுப்பு ஏதும் தெரிவித்தால், உரிமம் வழங்கப்பட்டவருக்கும், உரிமைப்பட்டவருக்கும் இடையே உடன்பாடு ஏதும் ஏற்படாவிட்டால் அச்சிக்கல் இசைவுத் தீர்ப்புக்கு விடப்படும். மேற்படி 14 நாட்களுக்குள் மறுப்பு ஏதும் எழுப்பப்படா விட்டால் உரிமம் வழங்கப்பட்டவர் தாம் நினைத்த வேலையை நிறைவேற்றலாம். உரிமைப்பட்டவர் தாமே அவ்வேலையைச் செய்து முடிக்க முன்வரலாம். அதற்கான செலவை உரிமம் வழங்கப்பட்டவர் கொடுத்து விட வேண்டும்.

மின்தொடர் அமைப்பதற்காக வடிகால், கழிவு நீர்க்குழாய், நீர்ப்பாதை ஆகியவற்றின் அருகில் குழி தோண்ட வேண்டிய நிலை ஏற்பட்டால் அவற்றைப் பராமரிக்கக் கடமைப்பட்டவர்களுக்கு 48 மணிநேரத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். தந்திக் கம்பி அமைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து 30 அடி தூரத்துக்குள் மின் தொடர் அமைக்க வேண்டியிருந்தால், தந்தி நிருவாகத்துக்கு 10 நாட்களுக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவசரநிலை ஏற்பட்டால் முடிந்த அளவு முன்னறிவிப்புக் கொடுத்தால் போதும்.

தெரு, இருப்புப்பாதை, வடிகால், கழிவு நீர்ப்பாதை, சுரங்கப்பாதை ஆகியவை தோண்டப்பட்டாலோ உடைக்கப்பட்டாலோ அப்பகுதி உடனடியாக வேலியிடப்பட வேண்டும். எச்சரிக்கை அறிவிப்புகள் அமைக்கப்பட வேண்டும். வேலை முடிந்தவுடன் தோண்டப்பட்ட அல்லது உடைக்கப்பட்ட பகுதி பழுது பார்க்கப்பட வேண்டும். அவ்வாறு பழுது பார்க்கத் தவறினால் அச்சொத்துகளின் பாதுகாவலர் பழுது பார்க்கும் வேலையைச் செய்து முடித்து அதற்கான செலவை மற்றவரிடமிருந்து ஈடுகட்டலாம். இத்தொகை குறித்து ஏற்படும் தகராறு, இசைவுத் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும்.

மேல்நிலை மின் தொடருக்கருகில், மின் வழங்கும் பணிக்கு இடையூறு ஏற்படும் வகையில் நிற்கும் மரம் அல்லது மேல்நிலை மின்தொடர் அமைக்கப்பட்டபின் ஏற்பட்ட எவ்வகையான பொருளையும், பெருநகராயிருந்தால் காவல்துறை ஆய்வாளரின் அனுமதியுடனும் வேறு இடமாக இருந்தால் முதல் வகுப்பு நீதிபதி அனுமதியுடனும் நீக்கலாம். முன்னரே உண்டாக்கப்பட்ட மரமாயிருந்தால் அதற்குத் தகுந்த இழப்பீட்டுத் தொகையை அவ்வதிகாரிகள் முடிவுசெய்ய வேண்டும்.

மேற்கூறிய செய்கைகளை உரிமம் வழங்கப்பட்டவர் செய்யும் நிலையில் ஏற்படும் இழப்புக்கு அவர் பொறுப்பு ஏற்க வேண்டும். இழப்பீட்டுத் தொகை தொடர்பான தகராறு இசைவுத் தீர்ப்புக்கு விடப்படும். உரிமம் வழங்கப்பட்டவருக்கு மேற்கூறிய வகையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், வழங்கும் பணியில் ஈடுபடும் மாநில அரசுக்கும் மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டவருக்கும் பொருந்தும்.

மின் உற்பத்தி, மின் வழங்கீடு ஆகிய பணிகளில் ஈடுபட்டவர் எவரும் விமானத் தளம், இருப்புப் பாதை, கால்வாய் ஆகியவற்றையோ அல்லது அவற்றில் செல்லும் போக்குவரத்தையோ சேதப்படுத்தக் கூடாது. மேலும் தந்தி மற்றும் தொலைபேசிக் கம்பி

களைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தந்தி நிருவாகத்துக்கும், மின்சாரச் சட்டப்படி பணியில் ஈடுபட்டவருக்கும் ஏற்படும் தகராறு மத்திய அரசு முடிவுக்கு விடப்படும்

மின் ஆற்றல் வழங்குதல் செய்ய உரிமம் வழங்கப்பட்டவருடைய மனுவின் அடிப்படையில் அல்லது அவருடைய இசைவுடன் மாநில அரசு உரிமத்தை நீக்கம் செய்யலாம். ஆனால், அவ்வாறு நீக்கம் செய்வதற்குப் பொதுமக்களின் நலன் இடையூறாக இருக்கக் கூடாது. மேலும் இம்முறையில் உரிமத்தை நீக்கம் செய்வதற்குமுன், மாநில மின்வாரியம், மத்திய அரசு அக்கறை கொண்டிருந்தால் மத்திய அரசு, உள்ளாட்சித்துறை ஆகியவற்றைக் கலந்தாராய வேண்டும்.

மேலும், கீழ்க்காணும் குறைபாடுகளுக்காக உரிமத்தை மாநில அரசு நீக்கம் செய்யலாம். 1. இச்சட்டப்படி செய்ய வேண்டிய வேலைகளைத் தக்க காரணம் ஏதுமின்றிச் செய்யாமல் உரிமம் வழங்கப்பட்டவர் வீண் காலக்கழிவு செய்தல் 2. மீறினால் உரிமம் நீக்கம் செய்யப்படுமென்று உரிமத்திலேயே சொல்லப்பட்டுள்ள கட்டளைகளை உரிமம் வழங்கப்பட்டவர் மீறுதல் 3. தாம் நிறைவேற்ற வேண்டிய வேலையைத் திறமையாகச் செய்து முடிக்கக்கூடிய நிலையில் தாம் இருப்பதாக உரிமம் வழங்கப்பட்டவர் மாநில அரசை மனநிறைவு செய்ய முடியாமற் போதல்-அல்லது உரிமத்தில் குறிப்பிட்டுள்ள வைப்புப் பணத்தைக் (Deposit) கட்ட முடியாமற் போதல் 4. உரிமம் வழங்கப்பட்டவரின் பொருளாதார நிலை மனநிறைவாக இல்லாமல் இருக்கும் நிலை 5. பொது மக்களின் நலனைக்கருதிச் சிலவகைப்பட்ட நுகர்வோருக்கு மின் ஆற்றல் வழங்குவதில் முன்னுரிமை காட்டுமாறு மாநில அரசு பிறப்பிக்கும் ஆணையைக் கடைப்பிடிக்காமலிருப்பது.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுக்காக உரிமத்தை நீக்கம் செய்வதற்கு முன்னர் உரிமம் வழங்கப்பட்டவருக்கு மூன்று மாத காலத்திற்குக் குறையாதவாறு முன் அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டும். அதில் நடவடிக்கை எடுக்க நேர்ந்த காரணங்களைக் குறிப்பிட வேண்டும். உரிமம் வழங்கப்பட்டவர் விளக்கம் ஏதும் கொடுத்தால் ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்னர்த்தக்க காரணமிருந்தால் உரிமத்தை மாநில அரசு நீக்கம் செய்யலாம்.

உரிமம் மேற்கூறிய வகைகளில் நீக்கம் செய்யப்படும்போது உரிமம் வழங்கப்பட்டவரின் அமைப்பை (Undertaking) மாநில மின் வாரியம் விரும்பினால் அதற்கும் அல்லது மாநில அரசு விரும்பினால் மாநில அரசுக்கும், அல்லது உள்ளாட்சித்துறை நிறுவனம் விரும்பினால் அதற்கும், அல்லது மேற்கூறியவர் உரிமம் வாங்குவதற்கு விரும்பாவிட்டால் வேறு எவருக்கும் விற்பனை செய்யுமாறு மாநில அரசு உத்தரவிடலாம். விற்பனைத் தொகையானது அங்காடி விலையை ஒட்டியே அமைய வேண்டும். அது குறித்துக்கருத்து வேறுபாடு இருந்தால் இசைவுத் தீர்ப்புக்கு விடப்படும். மேற்கூறிய வகையில் விற்கப் படாவிட்டால், ஆறு மாத காலத்துக்குள் உரிமம் வழங்கப்பட்டவர் தம் அமைப்புக்குச் சேர்ந்த பொருள்களைத் தம் விருப்பம் போல் விற்பனை செய்யலாம். அதுவும் நடைபெறாவிட்டால் தெருக்களில் மின் ஆற்றல் வழங்கும் பணிக்காக அமைக்கப்பட்ட பொருள்களை மாநில அரசு நீக்கிவிட்டு அதற்கான செலவை உரிமம் வழங்கப்பட்டவரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம்.

மேற்கூறிய வகையில் மாநில அரசின் ஆணைப்படி விற்பனை நடைபெற்றால் உரிமத்தையொட்டி வாங்குபவர் செயற்படலாம். மேலும் உரிமம் வழங்கப்பட்டவரின் கடன்கள் வாங்குபவரைக் கட்டுப்படுத்தாது. ஆனால் அக்கடன்கள் விற்பனைத் தொகையைப் பாதிக்கும்.

உரிமத்தில் குறிப்பிட்டுள்ள காலம் கடந்த பின்னர் உரிமம் வழங்கப்பட்டவரின் அமைப்பை, மாநில மின்வாரியம் அல்லது மாநில அரசு அல்லது உள்ளாட்சி நிருவாகம் வாங்குவதற்குச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்டவர் தம் பணியைச் செய்ய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டவருக்கும் பொருந்தும்.

மின் ஆற்றல் உற்பத்தி செய்தல், வழங்குதல், பயன்படுத்தல் போன்ற செய்கைகளின்போது ஏற்படும் பேரிடர் குறித்து விசாரணை செய்ய இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி நிறைவேற்றத்தக்க செயல்களை ஆய்வு செய்ய ஆய்வாளர்களைத் தொடர்புடைய அரசு பணியமர்த்தம் செய்யலாம். மின் ஆற்றலைத் திருடுவது, வேண்டும் என்றே விரயம் செய்வது, மின் ஆற்றல் வழங்குதல் செய்ய உரிமம் வழங்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டவர் நிபந்தனைகளை மீறி வழங்குதல் செய்யாதிருத்தல், அல்லது அனுமதியில்லாத பகுதியில் வழங்குதல் செய்தல் போன்ற செய்கைகள் தண்டிக்கத் தக்க குற்றங்களாகும்.

தமிழ் நாட்டில் மின்சாரம் வழங்கும் பணியில் தமிழ்நாடு மின்வாரியம் பெருமளவில் ஈடுபட்டுள்ளது. பல உள்ளாட்சி நிறுவனங்களும், இப்பணியில் ஈடுபட்டுள்ளன. இவ்விருவர்களையும் தவிர்த்துத் தமிழ்நாட்டில் சில கிராமப் பகுதிகளில் மின் வழங்கீட்டுப் பணி

யில் ஊரக மின் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. முன்னர்ச் சில தனியார் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் மின் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. மேற்படி தனியார் நிறுவனங்கள் நடத்தி வந்த அமைப்புகளைத் தமிழக அரசே ஏற்றுக் கொள்ள வகை செய்யும் வழியில் 1954-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் வழங்கும் அமைப்புகளை ஏற்றுக் கொள்ளும் சட்டம் (Tamil Nadu Electricity Supply Undertakings (Acquisition) Act 1954) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி ஓர் அமைப்பை அரசு ஏற்றுக் கொண்டவுடன் இழப்பீட்டுத் தொகை செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. இப்போது தமிழ்நாட்டில் தனியார் நிறுவனம் ஏதும் மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கவில்லை.

இந்திய மின்சாரச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதற்காகத் தமிழக அரசு, 1980–ஆம் ஆண்டில் இந்திய மின்சாரச் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தத்தில் அமைந்துள்ள சிறப்பான பகுதிகளில் முதலாவது என்னவென்றால், மின்சாரத்தைத் திருடும் குற்றத்திற்குக் கடும் தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளமையாகும். ஏனைய குற்றங்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படும். அத்தண்டனை ஆறு மாத காலத்திற்குக் குறையாததாக இருக்கவேண்டும். மேலும் பொருள் தண்டமும் விதிக்கப்படலாம். குற்றவியல் நடுவரின் ஆணையில்லாமலேயே அவ்வாறு குற்றம் புரிபவரைத் தொடர்புடைய அதிகாரி கைது செய்யலாம்.

இந்திய மின்சாரச் சட்டத்தின் கீழ் மின் வழங்கும் பணியில் ஈடுபடத் தமிழ்நாடு அரசால் உரிமம் அல்லது அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் அல்லது உள்ளாட்சித்துறை நிறுவனம் உபயோகப்படுத்தும் மின்சாரத்துக்கும் விற்பனை செய்யும் மின்சாரத்துக்கும் தீர்வை விதிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, 1939–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சாரத் தீர்வைச் சட்டத்தை (The Tamil Nadu Electricity Duty Act of 1939) இயற்றியது. மேற்கூறிய வகையில் மின் வழங்கும் பணியில் ஈடுபட்டவர் இச்சட்டத்தில் உரிமம் வழங்கப்பட்டவர் என்று விளக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் உரிமம் வழங்கப்பட்டவர் தமிழக அரசுக்கு, மேற்கூறிய 1939–ஆம் ஆண்டுச் சட்டப்படி தீர்வை செலுத்த வேண்டும். மத்திய அரசையும் இருப்புப்பாதை நிருவாகத்தையும் தவிர்த்து ஏனையோருக்கு உரிமம் வழங்கப்பட்டவர் முந்தின மாதத்தில் விற்பனை செய்யும் மின்சாரத்துக்கு (ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவிற்கு மேல் என்ற விழுக்காட்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தால் மட்டும்) ஒரு யூனிட்டுக்கு 5 பைசா வீதம் தீர்வை செலுத்த வேண்டும். தன்னுடைய அமைப்பை நிறுவுதல், பராமரிப்புச் செய்தல், நடத்துதல் ஆகியவற்றொடு தொடர்பில்லாத காரியங்களுக்கு முந்தின மாதத்தில் உரிமம் வழங்கப்பட்டவர் பயன்படுத்திய மின்சாரத்துக்கும் ஒரு யூனிட்டுக்கு ஐந்து பைசா என்ற விழுக்காட்டில் தீர்வை செலுத்த வேண்டும். அவ்வாறு உரிமம் வழங்கப்பட்டவர் உபயோகித்த மின்சாரம் வேறு தனிப்பட்ட நுகர்வோருக்கு ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவிற்கு மேல் என்ற விழுக்காட்டில் விற்கப்பட்டிருக்க முடியும் என்றால்தான் அத்தீர்வை செலுத்தப்பட வேண்டும். முந்தைய மாதத்தில் உரிமம் வழங்கப்பட்டவர் விற்பனை செய்த மின்சார அளவையும் (என்ன விலையாயிருந்தாலும் சரி) தம் நிறுவன அமைப்பு, பராமரிப்பு, நடத்துதல் தொடர்பில்லாத செயல்களுக்கு உரிமம் வழங்கப்பட்டவர் பயன்படுத்தியமின்சார அளவையும் கூட்டினால் 16,666 யூனிட்டுகளைத் தாண்டாவிட்டால் மேற்கூறிய தீர்வையை உரிமம் வழங்கப்பட்டவர் செலுத்த வேண்டியதில்லை. ஆனால், மேற்கூறிய இரு வகைகளில் கண்ட மின்சாரத்தின் அளவு ஒரு நிதி ஆண்டில் இரண்டு இலட்ச யூனிட்டுகளுக்குக் குறையாமலிருந்தால், 16,666 யூனிட்டுகளைத் தாண்டாத மாதங்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டவர் தீர்வை செலுத்த வேண்டும்.

மத்திய அரசின் உபயோகத்துக்கும், இருப்புப் பாதை அமைத்தல், பாதுகாத்தல், நடத்துதல் போன்ற செயல்களுக்காக இருப்புப்பாதை நிருவாகத்துக்கும் விற்கப்படும் மின்சாரம், வேறு நுகர்வோருக்கு விற்கப்பட்டால் ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவுக்குமேல் விலை கிடைக்கும் என்றால், மேற்கூறிய வகையில் மத்திய அரசுக்கும், இருப்புப்பாதை நிருவாகத்துக்கும் விற்கப்படும் மின்சாரத்துக்கு விதிக்கும் விலையில் தீர்வையைக் கழித்து விட வேண்டும். உரிமம் வழங்கப்பட்டவர் செலுத்த வேண்டிய தீர்வையைக் குறித்த காலத்தில் செலுத்தாவிட்டால் 12 விழுக்காடு வட்டி செலுத்தவேண்டும். மேலும், நில வரி நிலுவையை வாங்கக் கடைப்பிடிக்கும் வழியை மேற்படி தீர்வை நிலுவையை வட்டியுடன் வாங்கக் கடைப்பிடிக்கலாம்.

மின்சாரம் நுகரப்படும் அளவின்மீது வரி விதிக்கும் நோக்கத்துடன் 1962–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சாரம் நுகர்வு மீது வரி விதிக்கும் சட்டத்தை (The Tamil Nadu Electricity Taxation on Consumption Act 1962) இயற்றியது.

இச்சட்டம் மேற்கூறிய 1939-ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடராக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் மின்சாரத்தை நுகரும் விழுக்காட்டின் அடிப்படையில் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

நெசவுத் தொழிலகத்துக்கு உயரழுத்த மின் வழங்கல் வழியாக வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 30 விழுக்காடு வரியாக விதிக்கப்படும். 400 மின்விசை (Voltage) க்கு மேற்பட்ட மாறுதிசை மின் அழுத்தமும், 440 மின்விசைக்கு மேற்பட்ட நேர் மின்னழுத்தமும் உடைய மின் வழங்கலுக்கு உயரழுத்த மின் வழங்கல் (High Tension Supply) என்பது பெயர்.

சிமிண்டு தொழிலகத்துக்கு உயரழுத்த மின்வழங்கல் வழியாக வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 15 விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

ஒரு தொழிலகத்தில் உண்டாக்கப்படும் தலைமை விளை பொருளின் அகவிலையில் 15 விழுக்காட்டுக்கு மேலான மின் ஆற்றல் செலவு ஏற்படும் நிலையில், அத்தொழிலகம் ஆற்றல் செறிந்த தொழிலகம் (Energy Intensive Industry) எனச் சொல்லப்படும். அவ்வாறான தொழிலகத்துக்கு உயரழுத்த மின் வழங்கல் முறையில் மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 10 விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

மேற்கூறிய மூன்று தொழிலகங்களைத் தவிர்த்து வேறு எவருக்கும் உயரழுத்த மின் வழங்கல் மூலம் வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 35 விழுக்காடு வரியாக விதிக்கப்படும். ஆனால், உயரழுத்த மின் வழங்கலில் உள்ள நுகர்வோர்கள் எரிபொருள் உபரி வரி (Fuel Surcharge) செலுத்தக் கடமைப்பட்டிருந்தால் அவர்களுக்குப் 10 விழுக்காடு வரிதான் விதிக்கப்படும்.

400 மின்விசை (Voltage) யும் அதற்குக்கீழான மாறுதிசை மின் அழுத்தமும், 400 மின்விசையும் அதற்குக் கீழான நேர்மின் அழுத்தமும் உடைய மின் வழங்கல் தாழழுத்த மின் வழங்கல் எனப்படும். விளக்கு, விசிறி, குளிர் பதனி, அடுகலன் இணைந்த கூட்டு மின்சுற்று வழியின் சமையல் விளக்கு, வானொலி, ஆகிய சுமைகளைக் கழித்தால் வரும் சுமை, ஆயிரம் மின் வேகத்திற்குக் குறையாத வீட்டு மின் இணைப்பு, வீட்டுப் பெருஞ்சுமை மின் வழங்கல் (Domestic Bulk Supply) எனப்படும்.

தாழழுத்த மின்வழங்கல் வழியாக வீட்டுப் பெரும் சுமைக்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் இருபது விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

தாழழுத்த மின் வழங்கல் வழியாகப் பெரும் சுமை அல்லாத வீட்டுப் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் பத்து விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

மேற்கூறிய வரி, மத்திய அரசு நுகரும் மின்சாரத்துக்கும் மற்றும் இருப்புப்பாதை அமைத்தல், பாதுகாத்தல், நடத்துதல் ஆகியவற்றிற்கு நுகரப்படும் மின்சாரத்துக்கும் விதிக்கப்படத்தக்கது அன்று.

மின் வாரியமும், இந்திய மின்சாரச் சட்டப்படி மின் வழங்கும் பணியில் ஈடுபட உரிமம் அல்லது அனுமதி வழங்கப்பட்டவரும் மேற்கூறிய வரியை நுகர்வோரிடமிருந்து பெற்று அரசுக்குச் செலுத்த வேண்டும். இவ்வரி உரிய காலத்தில் செலுத்தபடாவிட்டால் 12 விழுக்காடு வரை வட்டி விதிக்கப்படும். இச்சட்டத்தின்படி வரி செலுத்தப்பட வேண்டிய வரா இல்லையா என்பதுபற்றியும், வரி விகிதம் குறித்தும் எழும் தகராறுகள் இந்திய மின்சாரச் சட்டப்படி, பணியமர்த்தப்படும் மின்சார ஆய்வாளர் முடிவுக்கு விடப்படும். இச்சட்டப்படி செலுத்த வேண்டிய வரிநிலுவையைப் பெறுவதற்கு உரிமையியல் வழக்குத் தொடரலாம். அல்லது நிலவரியைப் பெறக் கடைப்பிடிக்கும் முறையைப் பின்பற்றலாம். அதாவது, வரிநிலுவை செலுத்தக் கடமைப்பட்டவரின் அசையும் சொத்துகளைக் கைப்பற்றி ஏலத்தில் விற்று வரியைப் பெறலாம்.

தமிழ்நாடு மின்வாரியத்துக்குச் சேரவேண்டிய பணத்தை விரைவாகத் தண்டல் செய்ய வகை செய்யும் நோக்கத்துடன் தமிழக அரசு 1978 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியச் (நிலுவைத் தண்டல் செய்யும்) சட்டத்தை (The Tamil Nadu Electricity Board (Recovery of Dues) Act, 1978) இயற்றியுள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்துக்குச் சேரவேண்டிய நிலுவை (Dues) என்பது, வழங்கிய மின்சாரத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை, என விளக்கப்பட்டுள்ளது. மின்னளவி, மின் இயந்திரம் போன்ற கருவிகள் மற்றும் கம்பிகள் ஆகியவற்றைப் பொருத்த, சோதனை செய்ய, பார்வையிட, பழுது பார்க்க ஆகும் ஊதியம் அல்லது கட்டணம், மேற்கூறிய பொருள்களை வாடகைக்கு எடுத்தால் அந்த வாடகை ஆகியவையும் மேற்கூறிய நிலுவை என்பதன் விளக்கத்தில் அடங்கும்.

தமிழ்நாடு மின்வாரியத்துக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையைக் குறிப்பிட்ட நாளுக்குள் செலுத்திவிடும்படி அத்தொகையைச் செலுத்தக்

கடமைப்பட்ட கடனாளிக்கு விதிமுறை செய்யப்பட்ட படிவத்தில் அறிப்புக் (Notice) கொடுக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை முழுமையுமோ அதில் பகுதியையோ தாம் கட்ட வேணடியதில்லை எனக் கடனாளி கூறுவாரேயானால், குறிப்பிட்ட காலத்துக்குள் மின்வாரியம் குறிப்பிடும் மேன்முறையீட்டு அதிகாரிக்குக் கடனாளி மேன்முறையீடு தாக்கல் செய்யலாம். மேன்முறையீட்டு அதிகாரி தீர்ப்பு அளிக்கும்போது குறிப்பிட்ட காலத்துக்குள் நிலுவைத்தொகை செலுத்தப்படவேண்டும் என ஆணையிட வேண்டும். மேற்கூறிய வகையில் குறிப்பிட்ட காலங்களுக்குள் நிலுவைத்தொகை செலுத்தப்படாவிட்டால், நிலுவைத் தொகையுடன் சேர்த்துத் தண்டனைத்தொகையும் செலுத்தப்பட வேண்டும். நிலுவைத் தொகையையும் தண்டனைத் தொகையையும் செலுத்த வேண்டி மறுபடியும் கடனாளிக்கு ஓர் அறிவிப்பு அனுப்ப வேண்டும். அந்த அறிவிப்பு பதிவு அஞ்சலில் அனுப்பினால் போதும். தாம் செலுத்தக் கடமைப்பட்டவர் அல்லர் என்று கடனாளி கூறினால், அந்த அறிவிப்பைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் மேற்கூறிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை முழுவதையும் தொடர்புடைய அதிகாரியிடம் கட்டிவிட்டு, உரிமையியல் வழக்குத் தொடரலாம். அவ்வாறு மூன்று மாத காலத்திற்குள் அல்லது மின்வாரியத் தலைவரால் நீடிக்கப்பட்டால் நீடிக்கப்பட்ட காலத்துக்குள் மேற்கூறிய தொகை செலுத்தப் படாவிட்டால், அத்தொகையை நிலவரி நிலுவைத்தொகைத் தண்டல் செய்யும் முறையில் தண்டல் செய்யலாம். சட்டப்படி வேறு வகைகளிலும் தண்டல் செய்வதற்குத் தடை கிடையாது. முன்னரே குறிப்பிட்டபடி மின் தொடர்பும் துண்டிக்கப்படலாம்.

**இந்திய மேலாண்மைக் கழகம்**: கிடைக்கக்கூடிய வளங்களையும் ஆற்றலையும் (Resources) கொண்டு குறிப்பிட்ட இலக்கைப் (Goal) பொருளாதார ஆதாயத்துடன் அடைய உதவும் செயற்பாட்டு முறை மேலாண்மை (Management) எனப்படும். மேலாண்மைக்கென்று கல்வி நிறுவனம் ஒன்று முதன்முதலில் கி.பி. 1881–ஆம் ஆண்டுஅமெரிக்க ஐக்கிய நாடுகளில் பென்சில்வேனியா(Pensilvania)என்ற இடத்தில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில், வார்ட்டன் பள்ளியில் (Wharton School) தொடங்கப்பட்டது. அதன்பின் என்பது ஆண்டுகள் கழித்துத்தான் இலண்டனிலும் மான்செசுட்டரிலும் இதுபோன்ற பள்ளிகள் தொடங்கப்பட்டன. முதலில் இவை வணிகத்தில் இலாபம் காணுவதன் பொருட்டு அணுகும் கொள்கைகளைப் பயிற்றுவிப்பதாகவே தொடங்கப்பட்டன. பின்னர் உளவியல், பொருளாதாரம், அரசியல், கணக்கு போன்றவற்றை உள்ளடக்கியதாக மேலாண்மை (Management) என்ற ஒரு துறை தொடங்கப் பெற்றது.

மேலாண்மைத் துறை இந்திய நாட்டில் வேரூன்றிய காலம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும். ஆனால், இதன் இன்றியமையாமை கடந்த பதினைந்து ஆண்டுகளாகத்தான் உணரப்பட்டு, இதனைக் கொண்டு பயன் அடைய எல்லோரும் முயன்று கொண்டு இருக்கின்றனர். இதனை இந்திய நாட்டில் அறிமுகப்படுத்தி இதன் வளர்ச்சிக்குப் பலவாறு, பலதரப்பட்ட நடவடிக்கைகள் மூலம் முயற்சிகள் மேற்கொண்டு, மக்களுக்கும் இந்திய நாட்டுக்குமாகச் சேவை செய்ய முதன்முதலாக 'அனைத்து இந்திய மேலாண்மைக் கழகம்' (All India Management Association) தோற்றுவிக்கப்பட்டது.

தோற்றம்: அனைத்து இந்திய மேலாண்மைக் கழகம் (AIMA) தேசிய அளவிலான குறிக்கோளைக் கொண்டு, இந்திய அரசின் ஆணைப்படி 9.10.1957–ஆம் நாளன்று புதுதில்லியைத் தலைமையகமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் இப்போதைய (1986) தலைவர் திரு. எசு. எல். இராவ் ஆவார்.

குறிக்கோள்: இக்கழகம் தொடங்கப்பட்டதன் தலையாய நோக்கம் மேலாண்மைத் துறையை அறிவியலடிப்படையில் நன்கு உருவாக்கி இந்திய நாட்டில் அறிமுகம் செய்து முன்னேற்றுதலாகும். கடந்த 27 ஆண்டுகளில் இக்கழகம் தொழில்துறை மேலாண்மையினை (Professional Management) இந்தியாவின் சூழலுக்கேற்றவாறும் தொழிற் சாலைகளின் வடிவமைப்புக்குத் தக்கவாறும் அமைத்து ஊக்குவித்து வருகிறது. மேலாண்மைத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தனிப்பட்டவர்களையும் இது ஊக்குவிக்கிறது. இக்கழகம் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்து வருகிறது. மேற்கண்ட குறிக்கோளை அடையும் வண்ணம் பல துணைக் குழுக்களின் கருத்துரைகளைக் கேட்டுப் பணிபுரிகிறது.

செயல்கள்: இக்கழகம் பல பிரிவுகளையும் கல்விச் செயல்களையும் கொண்டதாக இயங்கி வருகிறது. இதுவரை, 1984–ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையான 2,500–ஐயும் சேர்த்தால் ஏறக்குறைய 10,000 க்கும் மிகுதியானோர் இக்கழகப் பிரிவில் பயிலுபவர்களாகத் தங்களைப்

பதிவு செய்துள்ளார்கள். இவர்களின் தேர்வு முறைகளை வரையறைப்படுத்தும் பொருட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது. அக்குழு சூழ்நிலைக்கேற்றவாறு தேர்வு முறைகளை மாற்றியமைத்துச் சீர்திருத்தங்களை அவ்வப்போது செய்து வருகிறது. நேர்முகத் தொடர் வகுப்புத் திட்டத்தையும் (Personal Contact Programme) 1983-மார்ச்சில் இருந்து அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன் இரண்டாம் வகுப்பு 1983 அக்டோபர் அன்று நடத்தப்பட்டது. மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் பரிசுகளும் பணமுடிப்பும் வழங்குகிறது. இக்கழகம் சில தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் (Disciplines)சான்றிதழ்ப் படிப்பு(Certificate Course), பட்டயப்படிப்பு (Diploma Course) முதலியன நடத்துகிறது. எடுத்துக்காட்டாக, ஆள்தொகுதிமேலாண்மை (Personnel Management) மேற்கண்ட படிப்புகளில் பயில்வோரைத் தேர்ந்தெடுக்க இந்தியாவெங்கும் 29 இடங்களில் தேர்வுகள் நடத்துகிறது.

இதன்பால் மேலாண்மையை ஊக்குவிக்கும் ஒரு பிரிவும் செயற்பட்டு வருகிறது. இதன் அடிப்படைக் குறிக்கோள் காலம் அறிந்து சூழ்நிலைக்கேற்றவாறு செயற்பட மேலாண்மையாளர்களை ஊக்குவிப்பதே யாகும். பெரிய நிலையங்களில் செயலாற்றும் அதிகாரிகள் இதற்காக நடத்தப்படும் கலந்துரையாடலகள், குழுக்கூட்டங்கள், கருத்துரைக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கு பெற்று நாட்டிற்கு நற்பணியாற்ற இது பெரிதும் உதவுகிறது.

வெளியீடுகள்: இக்கழகம் ‘இந்திய மேலாண்மை’ (Indian Management) என்ற ஒரு திங்களிதழை வெளியிடுகிறது. இவ்விதழில் ஏறக்குறைய மாதம் 30,000 படிகள் விற்கப்படுகின்றன. இது தவிர ஒவ்வோராண்டும் மேலாண்மை பற்றிய பல நூல்களையும் இக்கழகம் வெளியிடுகிறது.

மேலாண்மைத் தகவல் மையம்: இம்மையம் 1983, மே மாதம் தில்லியில் தொடங்கப்பட்டது. இத்துடன் ஒரு நூலகமும் ஓர் அமைப்பாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிக் கருத்துகளைச் செயல் முறைப்படுத்துவோர்க்கு உதவியாக அவ்வப்போது இம்மையம் பெரும் பணியாற்றி வருகிறது.

உறுப்பினர்கள்: கல்வி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களும் (Combined Institutions) இதில் உறுப்பினராகலாம். தொழிற் கல்வி கற்றவர்களும் தொழில் செய்பவர்களும் தனிப்பட்ட முறையில் உறுப்பினர் ஆகலாம்.

அனைத்து இந்திய மேலாண்மைக்கழகம் அரசின் மற்றைய கல்வி நிறுவனங்களிலும் உறுப்பு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, தேசிய உற்பத்தித்திறன் குழு (National Productivity Council), இந்தியச் சுற்றுலாமற்றும்பயண மேலாண்மைக் கழகம் (Indian Institute of Tourism and Travel Management) ஆகியவற்றில் இது பங்கு கொள்கிறது. இது மட்டுமன்றி, அதன் வெளிநாட்டுக் கழகங்களுடனும் இது தொடர்பு கொண்டுள்ளமையால், இது அறிவியலடிப்படையில் வளர்ச்சி பெறுவது மட்டுமன்றி மக்களுக்கு ஏற்றவாறு மிகுந்த நன்மை பயப்பதாகவும் உள்ளது.

தென்னிந்திய மண்டலத்தின் ஒரு கிளை மேலாண்மைக் கழகம் சென்னையில் உள்ளது. இக்கிளையின் தலைவராகத் திரு ஆர். சேம்சு தாவீது (James David) இருந்து வருகிறார். டி.ஜெ.

**இந்திய மைய இருப்பு வங்கி:** இந்திய நாட்டின் நிதி, பணவாக்க அமைப்பின் செயல்முறைகளில் நிலையான பாதுகாப்பு நிலவுவதற்குத் தேவையான மேலாண்மைப் பொறுப்புகளை ஏற்று, பொருளாதாரத்தின் ஒருங்கமைந்த (Organised) நிதித் துறைக்குத் தலைமையாகச் செயலாற்றுவது இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) யாகும். ஒருங்கமையாத (Unorganised) துறையும் இவ்வங்கியின் கட்டுப்பாட்டிற்குள்ளடங்கியே செயற்படுகிறது. கட்டுப்பாடற்ற பலவகைப்பட்ட மரபியல் வங்கிகள் (Indigenous Banks), ஓரளவு கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டு இருப்பு வங்கிகள் (Joint Stock Banks), வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், சிறந்த கட்டுப்பாடுகளுக்குட்பட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகிய பல்வேறு வகைக் கூறுகளையுடையதாக இந்திய வங்கியியல் அமைப்பு வளர்ந்துள்ளது. வங்கியியல் துறையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நாட்டின் அரசியல், நிதி நிலைமையையும் பொருளாதார, வாணிக, ஊதிய விலைவாசி நடவடிக்கைகளையும் பெரிதும் பாதிக்குமாகையால், வங்கியியல் துறையின் தலைமை வங்கியாக விளங்கும் இந்திய மைய இருப்பு வங்கியின் பணிகளும் பொறுப்புகளும் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றன.

வரலாறு: பல்வேறுபட்ட வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளைக் கண்காணித்து அவற்றின் மேல் கட்டுப்பாடு செலுத்தி மக்களின் நம்பிக்கையுடன் செயலாற்றும் மைய வங்கி ஒன்றின் தேவையை வாரன்ஏசுடிங்சுகி.பி.1873–ஆம் ஆண்டில் பரிந்துரைத்தார். முதல் முறையாக 1921–ஆம் ஆண்டில் மைய வங்கியின் கோட்பாடுகள் அடிப்படையில் பேரரசு வங்கி (Imperial Bank of India) அரசின் சார்பில் அரசின்நேரடிப் பொறுப்பில் நிறுவப்பட்டது. அரசிற்கான வங்கியாக இவ்வங்கி பணியாற்றினாலும் பணத் தாள்களை வெளியிடும் பொறுப்பு அரசிடமே

தொடர்ந்திருந்து வந்தது. இவ்வாறு அரசு வங்கி, அரசு ஆகிய இரண்டுமே நிதி, பணவாக்கத் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க, மைய இருப்பு வங்கி ஒன்றினை நிறுவ வேண்டும் என இந்தியச் செலாவணி நிதிக்கான அரசுக் குழு (Royal Commission-1926) பரிந்துரைத்தது. அதற்காக உடனடியாக எடுக்கப்பட்ட முயற்சிகள் சட்டமன்ற ஆதரவை இழந்ததனால் வெற்றிபெற வில்லை. இந்திய அரசியலமைப்பின் சீர்திருத்தத் தொடர்பாக வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை யிலும் (White Report) மைய இருப்பு வங்கியின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. அதன் விளைவாக 1934-ஆம் ஆண்டு இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அடுத்த ஆண்டி லேயே வங்கியும் தோற்றுவிக்கப்பட்டது.

அமைப்பு: இந்திய மைய இருப்பு வங்கி பங்கு தாரர்களின் வங்கியாக (Shareholders Bank) 5 கோடி உருபாய் மூலதனத்துடன் 100 உருபாய் மதிப் புள்ள பங்குகளாக(Shares) 5 லட்சம் உருபாய் செலுத் திய முதலாகவும் (Paid up Capital) கொண்டு, 1935-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் தொடங்கப்பட் டது. 1949 சனவரித் திங்களில்இவ்வங்கிநாட்டுடைமை யாக்கப்பட்டு. அதன் முழுமையான பங்கு மூல தனமும் அரசுக்குச் சொந்தமாயிற்று. பங்குதாரர் களுக்கு ஒவ்வொரு 100 உருபாய் மதிப்புப் பெற்ற பங்குகளுக்கும் இழப்பு ஈடாக 118-10-0 உருபாய் என்ற வீதத்தில் அளித்தது.

இந்திய மைய இருப்பு வங்கியின் தலைமைச் செயலகம் பம்பாயில் நிறுவப்பட்டுள்ளது. வங்கியின் மேலாண்மையையும் பொது நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்தும்பணியையும் செய்ய மைய இயக்கு நர் குழு (Central Board of Directors) அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவின் ஆளுநரும் (Governor) மூன்று துணை ஆளுநர்களும் நான்கு இயக்குநர்களும் ஓர் அரசு அலுவலரும் மைய அரசால் பணி அமர்த்தப்படுகின்றனர். ஆளுநர் தலைமை நிருவாக அதிகாரியாக முழு அதிகாரத்துடன் செயற்படுகி றார். ஆளுநரும் துணைஆளுநர்களும் ஐந்து ஆண்டு களுக்குக் குறையாமல் பணியில் நீடித்து இருக்கலாம். இயக்குநர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகளெனினும் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவதற்கும் அனுமதிக் கப்படுவர்.

நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு வட் டாரங்களைச் சார்ந்த பணிகளை மேற்கொள்ளத் தகுந்த வகையில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனி வாரியங்கள் (Local Boards) முறையே புது தில்லி, சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங் களில் நிறுவப்பட்டுள்ளன. இவ் வாரியங்களின் ஐந்து உறுப்பினர்கள் மைய அரசால் அமர்த்தப்படுகின்ற னர். வட்டார வாரியங்கள் தங்கள் எல்லைக்குள் எழும் பொருளாதார நிதி நடவடிக்கைகள் (Interests),கூட்டுறவு, மரபியல் வங்கிகளின் தேவைகள்ஆகிய வற்றைப் பார்வையிடுகின்றன. மேலும், மையக்குழு அவ்வப்போது அளிக்கும் ஆணைகளையும் சில தனிப் பட்ட பணிகளையும்செயற்படுத்துகின்றன.வட்டாரப் பணித் தேவைகளின் ஆய்வு அறிக்கைகளைத் தங்கள் பரிந்துரைகள் ஆலோசனைகள் ஆகியவற்றுடன் அளித் தல் தனிப்பட்ட பணிகளுள் அடங்கும்.

இந்திய மைய இருப்பு வங்கியின் பணத்தாள் களை வெளியிடும் தலையாய பணியினைச் சிறப்பு டன் நிறைவேற்ற வங்கியியல் துறை (BankingDepartment), பணத்தாள் வெளியீட்டுத் துறையென (Issue Department)இரு தனித் துறைகள் உள்ளன. இவ்விரு துறைகளின் அலுவலகங்கள் நாடெங்கிலும் பரவலாக மாநகரங்களில் செயற்படுகின்றன. ஒவ்வொரு பண வெளியீட்டுத் துறையிலும் பொதுப் பிரிவு, காசாளர் பிரிவு என இரு துறைகள் உள்ளன. இரு பிரிவுகளுக் கும் பொதுவாக ஒரு தலைமைச் செலாவணி அலு வலர் (Currency Officer) பொறுப்பு அலுவலராகப் பணியாற்றுகிறார். வங்கியியல் துறையில் பொதுக் கணக்குப்பிரிவு, பொதுக் கடன் பிரிவு, வைப்புக் கணக்குப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு என நான்கு துறைகள் உள்ளன.

பணத்தாள் வெளியீட்டுத் துறை, வங்கியியல் துறை ஆகிய இரு துறைகளின் கடன் சொத்துப் பற்றிய வாரக் கணக்கு இருப்புப் பட்டியலாக (Balance Sheet) வெள்ளிக் கிழமைதோறும் இந்திய மைய இருப்பு வங்கியால் வெளியிடப்படுகிறது. மாத, ஆண்டுக் கணக்குகள் அவற்றிற்குத் தொடர்பான இறுதி வெள்ளிக் கிழமைகளில் வெளியிடப்படுகின் றன.

குறிக்கோள்கள்: உலக நாடுகளிலுள்ள மைய வங்கிகளின் குறிக்கோள்களே இந்திய மைய இருப்பு வங்கியின் குறிக்கோள்களும் இந்திய நாட்டின் மரபு, சூழ்நிலை, தனிப்பட்ட நிதிச் சிக்கல்கள், சமூ கப் பொருளாதார நிலை, திட்டமிடப்பட்ட பொரு ளாதாரக் கொள்கை, வாணிக முறை ஆகியவற்றிற் குத் தகுந்த வகையில் நடைமுறையில் பிறநாட்டு மரபுகளிலிருந்து வேறுபட்டுச் செயற்படுகிறது. வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து அதன் பணியிலும் கொள் கையிலும் செயல்முறைகளிலும் காலமாறுதல்களிலும் மாறும் தேவைக்கேற்றபடிஅவ்வப்போது மாறுதல்கள் செய்து செயலாற்றி வருகிறது. வங்கியின் சட்ட முன் வரைவில் (1934 Act Preamble) நாட்டின்

நிலையான செலாவணி மதிப்பைப் பாதுகாப்பதே வங்கியின் தலையாய குறிக்கோள் என்க் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், காலப்போக்கில் இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் வலியுறுத்தப்படும் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு ஏற்றவாறு நிதி, வங்கியியல் கோட்பாடுகளில் மாறுதல்களைப் புகுத்தி அவற்றைச் செயற்படுத்தும் கருவியாக இந்திய மையஇருப்பு வங்கி மாறியது. நிலையான செலாவணி மதிப்பைப் பாதுகாக்கும் பணி தொடர்ந்து சிறப்பிடம் பெற்றாலும், நாடு பொருளாதார முன்னேற்றப் பாதையில் முன்னேறி வளர்ச்சியடைய அதற்கெனத் தனிக் கொள்கைகளுடன் செயற்பட முனைந்துள்ளது. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன: (1) வங்கிகள் வெளியிடும் பணத் தாள்கள் (Bank Notes) தொடர்பானவற்றை நெறிப் படுத்துதல், (2) வணிக வங்கிகளை ஒருங்கமைத்து அவை திறமையுடன் செயலாற்ற வழி வகுத்தல், (3) வணிக வங்கிகளுக்கும் தன்னிடம் பண இருப்பு வைத்திருக்கும் பிற நிதி நிறுவனங்களுக்கும் தான் வங்கியாகத் தனி உரிமையுடன் (Discretionary) கடனுதவிகள் அளித்தல், (4) நாட்டின் மொத்தக் கடன் அளிப்புகளைப் பொதுக் கொள்கைகளாலும் தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடுகளாலும் (Selective credit Controls) கட்டுப்படுத்துதல், (5) அரசின் வங்கியியல், நிதியியல் (Fiscal) பணிகளைச் செயற்படுத்துதல், (6) இந்தியச் செலாவணியின் மாற்று மதிப்பு வீதத்தை உறுதிசெய்து காத்தல், (7) அயற் செலாவணி இருப்பு, பன்னாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றின் மேலாண்மையைக் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் மேற்கொள்ளுதல், (8) நாட்டின் பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றிற்குத் துணையாக (அ) வங்கி வசதிகள் நாடு முழுமையும் பரவ வழி வகுத்தல், (ஆ) புதிய நிதி நிறுவனங்கள் அமைத்தல, (இ) வேளாண்மைத் துறைக்குக் கடன் வசதிகளைப் பெருக்குதல், (ஈ) தொழிற்றுறைக்கு நிதி வசதிகளை விரிவாக்குதல், (உ) பின், தங்கிய ஒருங்கமையா இந்தியப் பண அங்காடி அமைப்பை முறைப்படுத்தி முன்னேற்றுவித்தல் ஆகியன, (9) நாட்டின் பணம், கடன், வங்கியியல், அயற் செலாவணி ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்களைத் தொகுத்து வெளியிடல் ஆகியனவாம். இந்தியப் பொருளாதார நிதி நடவடிக்கைகளை நெறிப் படுத்தி (Regulation), மேற்பார்வையிட்டு (Supervisory), ஊக்குவிக்கும் நாட்டின் மைய வங்கியாக இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது என்பதை இக்குறிக்கோள்கள் வலியுறுத்துகின்றன என்பது புலனாகிறது.

பணிகள்: செலாவணி வெளியிடுதல் (Issue of Currency): இந்தியச் செலாவணியை அச்சடித்து வெளியிடும் முழு அதிகாரமும் தனி ஆணையுரிமையும் இந்திய மையஇருப்பு வங்கியிடம் சட்ட முறைப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை 2,5, 10,20,50,100,500,1000,5000,10000 உரூபாய் பணத் தாள்களாக வெளிவருகின்றன. ஓர் உரூபாய் பணத் தாள்களும் காசுகளும் அதற்குச் குறைந்த மதிப்புள்ள உலோகக் காசுகளும் மட்டும் இந்திய அரசால் வெளியிடப்பட்டு, இந்திய மைய இருப்பு வங்கியின் மூலம் புழக்கத்திற்கு விடப்படுகின்றன. இவற்றின் மொத்த மதிப்பு மைய இருப்பு வங்கி வெளியிடும் பண அளிப்புடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவாக உள்ளது. வங்கியின் பணத்தாள்களை வெளியிடும் துறை பணம் அச்சடிக்கும் பொறுப்பை மேற்கொள்கிறது. அச்சடித்த பணத்தை முறையாகப் புழக்கத்திற்கு விடுவதும் புழக்கத்திலிருக்கும் பணத்தை மீட்டுப்பெறும் (Withdrawal) பொறுப்பும் வங்கியியல் துறையின் பணியாகும். பணம் வெளியீட்டுத்துறை நாடெங்கிலும் உள்ள பாரத மாநில வங்கிகளிலும் (State Bank of India) அதன் ஏழு கிளை வங்கிகளிலும் (Subsidiaries) செலாவணிப் பெட்டகங்களைப் (Currency Chests) பாதுகாப்பாக வைத்துள்ளது. இவை வங்கியின் முகவர்களாகவும் (Agencies) கிளை முகவர்களாகவும் (Sub-Agencies) செயற்படுகின்றன. வங்கிகள் அல்லாத இடங்களில் அரசாங்கக் கருவூலங்களில் (Treasuries) செலாவணிப் பெட்டகங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இப் பெட்டகங்கள் புதிதாக வெளியிடப்படும் உரூபாய் பணத் தாள்களுடனும் உலோகக் காசுகளுடனும் பணத்தை இருப்பாக வைத்துக் கொண்டிருக்கும் கொள்கலமாக (Receptacles) விளங்குகின்றன.

தேவைக்கேற்றபடி பெட்டகத்திலிருந்து பணம் புழக்கத்திற்கு விடப்படும். புழக்கத்திலுள்ளபணம் பெட்டகத்திற்கு வைப்பாக வந்து சேருவதும் உண்டு. இந்தியப் பொருளாதாரத்தில் செலாவணியின் தேவை பருவகால (Seasonal) அடிப்படையில் மாறுபட்டு இயங்குகிறது. அறுவடைக் காலமான அக்டோபர், நவம்பர்த் திங்களில் தொடங்கப்படும் விறுவிறுப்பான உயர்ந்த செலாவணித் தேவை ஏப்பிரல் திங்கள் வரை நீடித்திருக்கும். அதற்குத் தக்கவாறு புழக்கத்திலும் பணத்தேவை மந்தப் பருவமான மே முதல் செப்தம்பர் வரை குறைந்து, பின் தொடர்ந்து விரிவடையும். வணிக வங்கிகளின் பண இருப்புக் குறைந்து, அவை இந்திய மைய இருப்பு வங்கியிடம் வைத்துள்ள இருப்பிலிருந்து உதவி பெற்றுக் கொள்ள நாடும்போது, அந்நிலை உண்மையான பணத் தேவையின் உயர்வைச் சுட்டிக் காட்டும். அவ்வகையில், உதவியை நாடுகிற வணிக வங்கிகளின் பணத்தேவையை நிறைவு செய்வதற்காக

இந்திய மைய இருப்பு வங்கி உடனடியாகப் பண மாக மாற்றத் தகுந்த சொத்துகளைப் பண வெளி யீட்டுத் துறைக்குச் செலுத்தி, உடனடித் தேவைக் கான பணத்தைப் பெற்றுக்கொள்கிறது.

பண வெளியீட்டுத் துறையின் காப்புறுதிச் சொத்துகள் (Assets) வெளியிடப்படும் பணத்தின் அளவை வரையறுக்கின்றன. இச் சொத்துகள் தங்க மாகவோ அயற்செலாவணியாகவோ இந்திய உரூபாய் பணத் தொகையாகவோ இந்திய அரசின் காப் புறுதி உரூபாய்ச் சீட்டுகளாகவோ (Government of India Rupee Securities) இருக்கலாம். 1934-ஆம் ஆண்டு இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டப்படி வங்கி வெளியிடும் மொத்தப் பண மதிப்பில் 40 விழுக்காடு தங்கமாகவோ, இசுடர்லிங் (Sterling) காகவோ காப்புறுதி இருப்பாக வைத்திருக்க வேண் டும். இம் முறை 'விகித அளவு இருப்பு முறை' (Proportional Reserve System) எனப்படும். 1956- இலும் 1957-இலும் சட்ட மாறுதல்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு, மொத்தக் காப்புறுதி இருப்பாக வைத்திருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இம்முறை குறைந்த அளவு இருப்பு முறை (Minimum Reserve System) எனப்படுகிறது. இம்முறை இந்தியா வில் செயற் படுத்தப்படுவதனால், இரண்டாம் ஐந் தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென மிகுந்த பணத் தாள்களை அச்சிட்டு வெளியிட முடிந்தது. ஆனால், மிகையான பணத்தாள்கள் புழக்கத்தில் வந்ததன் விளைவாக அதன் மதிப்புக் குறைந்து, பணவீக்கம் (Inflation), ஏற்பட்டு விலைகள் உயர்ந்துகொண்டே சென்றன.

கடன் கட்டுப்பாடுகள் (Credit Control): கடன் வசதிகளைக் கட்டுப் படுத்துவதன் மூலம் மைய இருப்பு வங்கி, நாட்டின் பணவாக்க மேலாண்மை யைத் திறமையான முறையில் செயற்படுத்துகிறது; பொதுக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள், தேர்ந் தெடுத்த கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் ஆகியவற் றின் மூலம் இப்பணியை ஆற்றுகிறது. வங்கி வீதத் தில் (Bank Rate) மாறுதல்களை ஏற்படுத்துதல், திறந்தவெளி அங்காடிச் செயல்கள் (Open Market Operations), மாறும் காப்புறுதி இருப்புகள் (Variable Reserve Requirements) ஆகியவை பொதுக் கட்டுப் பாட்டுக் கோட்பாடுகளுள் அடங்கும். கடன் வசதிகள் விரிவாக வேண்டும் என இந்திய மைய இருப்பு வங்கி விரும்பும்போது, வணிக வங்கிகள் தன்னிடம் வைத் திருக்கும் காப்புறுதி இருப்புகளின் அளவு வரையறை யைத் தளர்த்துகிறது. அதனால் வணிக வங்கிகள் அதிகக் கடன்களை வழங்க உதவுகிறது. கடன் களைக் கட்டுப்படுத்த வேண்டிய காலத்தில் இதற்கு எதிர்மறையாகச் செயற்படுகிறது.

தனிப்பட்ட சில நோக்கம், பணிகளுக்கென கடன் அளிப்பது அல்லது மறுப்பது, தனிப்பட்ட பிணையம், காப்புறுதிச் சீட்டுகளுக்குக் கடன் அளிப் பது அல்லது மறுப்பது போன்ற செயல்களினால் மைய இருப்பு வங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையைச் செயற்படுத்து கிறது. சில சூழ்நிலை, இடங்கள் ஆகியவற்றின் தேவைக்கேற்றபடி நேரடியாக வங்கி ஈடுபட்டுக் கடன் வசதிகளைக் (Direct Credit Regulation) கட்டுப்படுத்துவதும் உண்டு.

வங்கிகளின் வங்கி, இறுதிக் கடன் ஈவோன் (Bankers Bank & Lender of Last Resort): நாட்டில் உள்ள எல்லா வங்கிகளுக்கும் தலைமை வங்கியாக இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுவதால் பிற வங்கிகளின் பாதுகாவலனாகக் (Custodian) கருதப் படுகிறது. 1962-ஆம் ஆண்டு வங்கிச் சட்டப்படி வணிக வங்கிகள் இந்திய மைய இருப்பு வங்கியில் கட்டாயமாகக் கணக்குகள் வைத்திருக்கவேண்டும். வணிக வங்கிகள் தங்கள் மொத்தத் தேவை, காலக் கடன் பொறுப்பு (Time Liabilities) ஆகியவற்றின் மூன்று விழுக்காட்டுக்குக் குறையாமல் மைய வங்கி யிடம் காப்பு இருப்பாக (Reserve) வைத்திருக்க வேண்டும். இந்திய மைய இருப்பு வங்கி குறிப்பிடும் இத்தொகை இருப்பின் வீதம் 15 விழுக்காடு வரை வங்கிகளுக்கு வங்கி மாறுபடும். அட்டவணைப்படுத் தப்பட்ட வங்கிகள் கூடுதலான இருப்புத் தொகையை வைப்பாக வைக்க வேண்டப்படலாம். வங்கிகள் செயற்படும் முறை, நிதித் தேவை, காலம் ஆகியவற்றின் அடிப்படையில் இருப்புத் தொகை வேறுபடுகிறது. இவ் இருப்புத் தொகை மைய வங்கியில் குவிந்திருப்பதால், நிதி இடர்களுக் குள்ளாகும் வங்கிகளுக்கு இந்திய மைய இருப்பு வங்கி உதவப் பயன்படுகிறது. மேலும், வங் கிகளுக்குத் தீர்வகமாகச் (Clearing Houses) செயற்படும் பணிச்செலவுக்கும் வங்கிகளுக்கிடையே எழும் பிற பணிகள், பணம் கொடுக்கல் வாங்கல் செய்தல் போன்றவைகள் கட்டணமின்றி அல்லது மிகக் குறைந்த பணிக் கட்டணத்தில் செயற்படவும் ஆகும் எல்லாச் செலவுகளுக்கும் உதவுகிறது. வங்கி யியல் துறை வல்லுநர்கள் வங்கித் தொழில் நுட்பப் பயிற்சிகள் பெறவும் இந்திய மைய இருப்பு வங்கி ஆவன செய்கிறது.

வணிக வங்கிகளும் பிற வங்கிகளும் நிதிச் சிக்கலி னால் பாதிக்கப்படும் பொழுது இந்திய மைய இருப்பு வங்கி இறுதிக் கடன், ஈவோனாக

உதவியளித்துப் பாதுகாப்பு வழங்குகிறது. இக்கட்டான காலங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிணையங்கள் (Approved Securities), அரசுக் கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து நிதி உதவி பெறுகின்றன. வணிக வங்கிகளின் இருப்பில் உள்ள மாற்று உண்டியல்களை (Re discount Bills) மறு கடன் கழிவு செய்து பணம் கொடுப்பதன் மூலமும் இந்திய மைய இருப்பு வங்கி நிதிச் சிக்கல்களைத் தவிர்க்க உதவுகிறது. வணிக வங்கிகளுக்கு அவ்வப்போது தேவைக்கேற்ற அறிவுரை பகர்ந்தும் செயற்பட வேண்டிய சிறந்த வழிகளைச் சுட்டிக்காட்டியும் நண்பனாக இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது. வேறு எவ்வழியிலும் பணம் பெற இயலாத முறிவு நிலை (Bankruptcy) நேரத்தில் வணிக வங்கிகளுக்கு இறுதிக் கடன் அளித்து மீட்புப் பணி ஆற்றுவதால் இறுதிக் கடன் ஈவோன் என இந்திய மைய இருப்பு வங்கி சொல்லப்படுகிறது.

கண்காணித்தலும் நெறிப்படுத்தலும் (Supervisory & Regulatory Functions): நாட்டின் நிதி, வங்கியியல் துறையின் மேலாட்சியையும் அவற்றை நெறிப்படுத்தும்பணி உரிமையையும் இந்திய மைய இருப்பு வங்கி சட்ட முறையில் பெற்றுள்ளது. 1934-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் 1966-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் வங்கி நெறிப்படுத்தும் சட்டம் (Banking Regulation Act) என வழங்கப்படுகிறது. சட்டங்களில் மாற்றங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு இந்திய இருப்பு வங்கி நெகிழ்ச்சியடைய கொள்கைகள் மூலம் காலம், இடத்திற்கேற்ற வேறுபாடுகளுள்ள கோட்பாடுகளை வணிக வங்கிகள்மேல் செலுத்திக் கண்காணிக்க அதிகாரம் பெற்றுள்ளது. கூட்டுறவு வங்கிகள் முதற் கொண்டு வங்கித் தொழிலில் ஈடுபடாத ஆனால், வைப்புகளை பெறுகிற நிதி நிறுவனங்களின் கண்காணிப்பும் இந்திய மைய இருப்பு வங்கியின்கீழ் அடங்குகிறது. வங்கியியல் துறையினர் எப்பிரிவைச் சார்ந்தவராயினும், இந்திய மைய இருப்பு வங்கிக்குத் தேவையான உண்மைச் செய்திகள், விவரங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றை அளிக்க எல்லாக் காலங்களிலும் கடமைப்பட்டுள்ளனர்.

வங்கித் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு வங்கியும் நிறுவனமும் இருப்பு வங்கியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். கிளை வங்கிகள் செயற்படுவதற்கும் மைய வங்கியின் அனுமதி தேவை. இவ்வங்கிகளின் செலுத்தப்பட்ட மூலதனம், காப்பு இருப்பு, வைப்புத் தொகை, நீர்மைச் சொத்து, கடன்அளித்தல், பெறுதல் ஆகிய நடவடிக்கைகள் சட்டத்திற்குட்பட்ட வகையில் அமைந்து செயற்படுத்தப்படுகின்றனவாஎன்பதைச் சில திங்களுக்கு ஒருமுறை மேற்பார்வை,ஆய்வு, கண்காணிப்புகளின் மூலம் இந்திய மைய இருப்பு வங்கி கண்டறிந்து செயற்படுகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட 20 அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளின்மேல் சமூகக் கட்டுப்பாட்டையும் நாட்டின் முழு வங்கியியல் துறையிலும் முனைப்பான கட்டுப்பாட்டையும் செலுத்துகிறது. அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் தங்கள் கடன் பொறுப்பு, சொத்து புள்ளி விவர அறிக்கைகள் ஆகியவற்றை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் இந்திய மைய இருப்பு வங்கியிடம் கொடுக்க வேண்டும். அவை வங்கிகளின் நிதி நடவடிக்கைகளையும் உண்மை நிலையையும அறியப் பெரிதும் உதவுகிறது.

அரசின் வங்கி: இந்திய மைய இருப்பு வங்கி இந்திய மைய, மாநில அரசுகளுக்கு வங்கியாக நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்படுகிறது. பல்வேறு அரசாங்கப் பணக் கொடுக்கல் வாங்கல்களை அரசின் சார்பில் இந்திய மைய இருப்பு வங்கி ஏற்று நடத்துகிறது. விலை பேசுதல், ஒப்பந்தங்களை (Contracts) உண்டாக்குதல், கணக்குகளை வைத்திருத்தல் யாவும் வங்கியின் பொறுப்பாகும். இந்திய மைய இருப்பு வங்கி செயற்படாத இடங்களில் பாரத மாநில வங்கி அதே பணியை மேற்கொள்ளப் பணிக்கப்படுகிறது. அரசின் சார்பில் எழும் நிதி வங்கியியல் தொடர்பான தொழில் யாவற்றையும் பொதுக் கடன் மேலாண்மையையும் இந்திய மைய இருப்பு வங்கி ஏற்று நடத்துகிறது. அரசிற்கு அளிக்கும் பணிகளுக்கென வங்கி எவ்விதக் கட்டணமோ தனியுரிமையோ பெறுவதில்லை. ஆனால், வங்கியிடம் வைக்கப்பட்டிருக்கும் அரசின் பணத்திற்கு வங்கி வட்டி ஏதும் வழங்குவதில்லை. மாநில அரசுகள் இந்திய மைய இருப்பு வங்கியிடம் குறிப்பிட்ட ஒரு தொகையை வட்டியின் இருப்பாக வைத்திருக்க வேண்டும். மைய, மாநில அரசுகள் தங்கள் கணக்குகளையும் மிகுந்திருக்கும் நிதிகளையும் இந்திய மைய இருப்பு வங்கியிடம் மட்டுமே வைத்திருக்க வேண்டும்.

மைய, மாநில அரசுகளுக்கு இந்திய மைய இருப்பு வங்கி வழிவகை முன்பணக் கடன்களை (Ways & Means Advances) குறுகிய மூன்று மாத காலக் கடன் வடிவத்தில் வழங்குகிறது. 1943-44-ஆம் ஆண்டிலிருந்து இந்திய மைய அரசு இவ்விதக் கடன்களைப் பெறவில்லை. ஆனால், தனிப்பட்ட (Special) வழிவகை முன்பணக் கடன்முறையில் வங்கி வீதத்திலிருந்து ஒரு விழுக்காடு குறைந்த வட்டி வீதத்தில் மாநில அரசுகளுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது.

மைய அரசின் குறிப்பிட்ட தேவைக்குரிய கருவூலச் சீட்டுகளை (Adhoc Treasury Bills) வாங்குவதன் மூலமும் உதவி அளிக்கிறது. மைய, மாநில அரசுகளுக்கு அதிகப் பற்று (Over draft) வசதிகளையும் அளிக்கிறது.

அரசு வழங்கும் பொதுக் கடன்களைப் பொது மக்களிடமிருந்து பெறுதல், அதற்கான வட்டியைச் செலுத்துதல், அவற்றைப் புதுப்பித்தல் போன்றவற்றைத் திறமையுடன் செயற்படுத்த இந்திய மைய இருப்பு வங்கியில் தனித்துறை ஒன்று செயற்படுகிறது. பொதுக் கடன்களின் மேலாண்மைப் பணிக்கென அரசிடமிருந்து ஓராண்டுப் பொதுக் கடன் மதிப்பில் ஒரு கோடி உருபாய்க்கு 2000 உருபாய் வீதம் கழிவுத் தொகை (Commission) பெறுகிறது. நாட்டின் நிதியியல் வங்கியியல் தொடர்பான நுட்ப அறிவுரைகளை அரசுக்கு வழங்குவது மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத் திட்டம், வளப் பாதுகாப்புப் பகிர்வு, பன்னாட்டுநிதி ஆகிய துறைகளிலும் அரசுக்கு ஆலோசனைகளை வழங்கி அவற்றைச் செயற்படுத்துவதற்கும் இந்திய மைய இருப்பு வங்கி உறுதுணையாக நிற்கிறது.

அயற் செலாவணியை நெறிப்படுத்துதல்: இந்தியச் செலாவணி மாற்று விகிதத்தின் நிலையான மதிப்பை அயற் செலாவணி அங்காடியில் நெறிப்படுத்துதலும் (Regulation of Foreign Exchange) பாதுகாப்பதும் இந்திய மைய இருப்பு வங்கியின் பொறுப்பாகும். இதற்காக நாட்டின் அயற் செலாவணி இருப்பு முழுவதும் இவ்வங்கியிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. வங்கி தானாகவோ அரசின் சார்பிலோ அயற் செலாவணிகளை வாங்கவும் விற்கவும் அதிகாரம் பெற்றுள்ளது.

அயற் செலாவணியைப் பொதுமக்களிடமிருந்து இந்திய மைய இருப்பு வங்கி நேரடியாகப் பெறுவதில்லை. அதற்கென உரிமம் பெற்ற அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகளும் வணிக வங்கிகளும் அவற்றை வாங்கவும் விற்கவும் செய்கின்றன. இவ்வங்கிகள் மூலம், மைய அரசு அவ்வப்போது வெளியிடும் மாற்று வீதத்தின் அடிப்படையில், அயற் செலாவணி நடவடிக்கைகளை இந்திய மைய இருப்பு வங்கி மேற்பார்வையிடுகிறது. பன்னாட்டுப் பணவாக்க நிதியின் (International Monetary Fund)செயல்களைப் பின்பற்றி அயற் செலாவணியின் மாற்று வீதத்தை நிலைப்படுத்தக் கூடிய அமைப்பாகவும், அவற்றின் அளிப்பு, தேவை ஆகியவற்றை நெறிப்படுத்தும் வங்கியாகவும் இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது. பண்டங்களை இறக்குமதி ஏற்றுமதி செய்பவர்கள், அயல்நாடுகளில் பணிபுரிபவர்கள், பயணம் செய்பவர்கள், அயல்நாடுகளுக்குப் பணம் அனுப்புகிறவர்கள் ஆகிய யாவரும் இவ்வங்கி மூலமே பணம் செலுத்த வேண்டும். தன்னிடம் அயற்செலாவணி, தங்கம் வெள்ளி போன்றவற்றை இருப்பாக வைத்திருப்பதன் மூலம் பல நிதிச் சிக்கல்களிலிருந்து இவ்வங்கி நாட்டைப் பாதுகாக்கிறது.

தீர்வகம்: வங்கிகளுக்கிடையே எழும் கணக்குகளைச் சரிசெய்தல், கொடுக்கல் வாங்கல், பற்று வரவுகளைச் சமன் செய்தல் ஆகிய பணிகளை ஆற்றும் தீர்வகமாகவே (Clearing House) இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது. இத்தீர்வகப் பணிகளை இப்போது பெங்களூர், கல்கத்தா, ஐதராபாது, கான்பூர், சென்னை, நாகபுரி, புதுதில்லி, பாட்னா ஆகிய இடங்களிலுள்ள தீர்வக அலுவலகங்கள் மேற்கொள்கின்றன. இத்தீர்வக அலுவலகங்களை அணுக இயலாத இடங்களில் பாரத மாநில வங்கிகள் செயற்படுகின்றன.

புள்ளி விவரங்களைச் சேகரித்தல்: இந்திய மைய இருப்பு வங்கி, நாட்டின் பொருளாதார நிதி, வங்கியியல் துறைகளின் நடவடிக்கைகள், பண அளிப்புத் தேவை, அயற் செலாவணி, பன்னாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றில் ஏற்படக் கூடிய விளைவுகளைக் கண்டறிய அவற்றின் தொடர்பான புள்ளி விவரங்களையும் ஆய்வுகளையும் மேற்கொள்கிறது. ஆய்வுகளின் மூலம் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இதற்கெனத் தனியாகப் பொருளாதாரத் துறையும் புள்ளி விவரத் துறையும் செயற்படுகின்றன. ஆய்வின் முடிவுகள் கருத்துத் தொகுப்பாகவும் அறிக்கைகளாகவும் வெளியிடப்படுகின்றன. பொதுமக்களுக்கு வெளிப்படுத்தக் கூடாத நிதி, வங்கியியற் கருத்துகள், ஆகியவை அரசுக்கு அறிவுரைகளாகவும் பரிந்துரைகளாகவும் அவ்வப்போது வழங்கப்படுகின்றன. வங்கியின் சிறப்பான வெளியீடுகளுள் குறிப்பிடத்தக்கவை 1. திங்கள் வார அறிக்கைகள் (The Reserve Bank of India Bulletin Monthly & Weekly), 2. ஆண்டறிக்கை (Annual Report), 3. எண்ணற்ற புள்ளி விவரப் பட்டியல்கள் அடங்கிய வெளியீடுகள் ஆகியவையாம்.

பொருளாதார வளர்ச்சிப் பணிகள்: நாட்டின் நிலையான பொருளாதார முன்னேற்றம் இடையூறின்றி வளர்ச்சிப் பாதையில் செல்லவும் தங்கு தடையற்ற வாணிகம் செழிக்கவும் நிதி வங்கியியல் நடவடிக்கைகள் பொதுமக்களின் நம்பிக்கையுடன் சிறக்கவும் அரசுக்கு உறுதுணையாக இந்திய மைய இருப்பு வங்கி பணியாற்றி வருகிறது. இது பொருளாதா

முன்னேற்றத்திற்கு அடிப்படையான தொழில்துறை, வேளாண்மைத் துறைகளுக்குத் தேவையான நிதி உதவிகளைப் பல தனிக் கடன்கள் (Special loans) மூலமாக வழங்குகிறது. கூட்டுறவு வளர்ச்சிக்கான நிதி உதவியை வழங்கியும், வேளாண்மைக் கடன்துறை (Agricultural Credit Department), வேளாண்மை மறுநிதிக்கழகம் (Agricultural Refinance Corporation) ஆகியவற்றின் மூலமாக வேளாண்மைத் துறையில் புரட்சி ஏற்படத் தாராளமாகக் கடன்களை அளித்தும் வருகிறது. மாநில நிதிக் கழகங்கள் (State Finance Corporation), இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிகள் (Industrial Development Banks of India) ஆகியவற்றின் மூலம் தொழில்துறையின் தேவைகளை இது நிறைவு செய்கின்றது.

**இந்திய மொழிகள்**: பொதுவாகத் தனி மொழிகள் என்பது மொழியமைப்பு வேறுபாடுகளை ஒட்டி மட்டுமல்லாமல், அந்த மொழி பேசும் மக்களின் மொழிவளர்ச்சியையும் ஒட்டி அமைவதால், மொழிகளின் எண்ணிக்கை பற்றிச் சரியான முடிவு செய்ய இயலவில்லை. இந்த உண்மை இந்திய மொழிகளுக்கும் பொருந்தும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் பேசும் மொழிகளைப் பற்றி ஆராய்ந்த கிரியர்சன் என்பார், 225 முதன்மை மொழிகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார். ஆனால், 1961-இல் மக்கள்தொகைக் கணக்கெடுப்புத்துறை அறிக்கையின்படி, இந்திய மொழிகளின் எண்ணிக்கை 1692 என்பது அறியப்படுகிறது. ஐந்துபேர் மட்டுமே பேசினாலும் அதனை ஒரு மொழியாக எடுத்துக் கொண்டதன் விளைவு இது. ஆனால், அதே நிறுவனம் ஆயிரம் பேருக்கு மேல் பேசும் மொழியையே தனிமொழியாக எடுத்துக் கொண்டு, இந்தியாவில் 200 மொழிகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. 5000 பேருக்குமேல் பேசுவதைத் தனிமொழியாகக் கொண்டால், இன்றைய இந்தியாவில் 50 மொழிகள் இருப்பதாகக் கொள்ளலாம்.

இந்திய மொழிகளைத் தெரிந்துகொள்ள வரலாற்று நோக்கும் மொழிப் பயன்பாட்டு அறிவும் மொழிபேசும் மக்களின் நாகரிகமும் பயன்படும். அதற்கு ஒப்பிலக்கண நோக்கில் செய்யப்படும் பாகுபாடு உறுதுணையாக உள்ளது. எனவே, ஒப்பிலக்கண நோக்கில் இனமொழிகள் அல்லது மொழிக் குடும்பம் என்ற பாகுபாடு கொண்டு அவற்றைப் பற்றிய சில செய்திகள் இங்கு விளக்கப்படுகின்றன.

இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளையும் மொழி வரலாற்று நோக்கில் பார்க்கும்போது, அவை நான்கு மொழிக் குடும்பத்தில் அடங்குகின்றன. அவையாவன ஆசுதிரிக்கு (Austric), திராவிடம் (Dravidian), சீனோ-திபேத்தியம் (Sino-Tibetian), இந்தோ-ஆரியம் (Indo-Aryan) என்பன. இவற்றுள் ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே எண்ணிக்கையிலும் சதவிகிதத்திலும் அதிகம். கிட்டத்தட்ட 70% ஆரிய மொழி பேசுபவர்கள். திராவிட மொழி பேசுபவர்கள் 22%. ஒரு சதவிகிதம் ஆசுதிரிக்கு மொழியும் அதற்குக் குறைந்த அளவில் சீனோ-திபேத்திய மொழியும் பேசுபவர்கள் இருக்கிறார்கள்.

ஆசுதிரிக்கு, சீனோ-திபேத்தியம் இனமொழிகளைப் பேசும் பெரும்பான்மையோர் பழங்குடிகள். இம்மொழிகட்கு எழுத்து வடிவம் இல்லை.

இலக்கியமுடைமை, பண்பாட்டுச் சிறப்பு, அரசியல் இன்றியமையாமை ஆகிய காரணங்களால் மத்திய அரசாங்கம் அரசியல் அமைப்பில் 15 மொழிகளை முதன்மை மொழிகளாக எடுத்துக் கொண்டுள்ளது. அவை ஆரியம் (11), திராவிடம் (4) ஆகிய மொழிக் குடும்பங்களைச் சார்ந்தவை.

**ஆசுதிரிக்கு இனமொழிகள்**: இது ஆசுதிரோ-ஆசியமொழிகள் (Austro-Asiatic) என்று சொல்லப்படும். இந்த இனமொழிகளைப் பேசுவோர் இந்தியாவின் நடுப் பகுதியிலும், அதற்குக் கிழக்கே உள்ள அசாம் பகுதியிலும், பர்மா, மலாயா போன்ற பிற நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

இந்த இன மொழிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) ஆசுதிரோ-ஆசியமொழி, 2) ஆசுதிரோ-ஆசியன். இந்தியாவில் முதற் பிரிவைச் சார்ந்த மொழிகளைமட்டுமே பெரும்பான்மையாகப் பேசுகிறார்கள். இந்த மொழியினத்தைச் சார்ந்த 1) கோல் (Kol) அல்லது முண்டா (Munda) மொழிகள், 2) அசாமில் இருக்கும் காசி (Kassi), 3) இரிக்போரிசு ஆகியவை இந்தியாவில் வழங்குகின்றன.

ஆசுதிரிக்கு மொழி பேசியோர் ஒரு காலத்தில் இந்தியா முழுமையும் பரவியிருந்திருக்க வேண்டும் என நம்ப இடமுண்டு. இன்றைய நிலையில் முண்டா பிரிவில் சந்தாலி 32 இலட்சம் உள்ளனர். அவர்கள் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் உள்ளனர். பழங்குடி மக்கள் மொழி என்ற முறையில் இந்த மொழியே எண்ணிக்கையால் முதலிடம் பெறுகிறது. இந்தப் பிரிவில் அடங்கும் மற்றொரு மொழியான முண்டாரி (Mundari) மொழி 1 இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. இவர்கள் பீகாரின் தென் பகுதியான இராஞ்சியைச் சுற்றி வாழ்கிறார்கள். கோ (Ho) என்ற மற்றொரு மொழியும் 1 இலட்சம் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இதுவும் தென்

பீகாரில் சைபசா (Chaibassa) என்ற பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறது.

கரியா (Karia) என்னும் மொழி 1,70,000 மக்களுக்கு மேற்பட்டவராலும், பூமிசு (Bhumij) 1,40,000 மக்களாலும் தென்பீகார்ப் பகுதியில் பேசப்படுகிறது. மகாராட்டிர மாநிலத்தில் பீரார் (Berar) பகுதியில் வழங்கும் கொர்ச்சு (Korch) என்ற மொழியும் ஒரிசா மாநிலத்தில் வழங்கும் சோரா அல்லது சாரா மொழியும் 1 இலட்சம் மக்களால் பேசப்படுகின்றன.

அசாமில் உள்ள காசி மொழி, 3,00,000 மக்களாலும், இரிக்கோரிபாசுப் பழங்குடி மக்களால் பேசப்படும் இரிக்கோபரீசு மொழி 10,000-க்கும் மேற்பட்ட மக்களாலும் பேசப்படுகின்றன.

ஆசுதிரிக்கு மொழி, மொழியியல் ஆராய்ச்சிக்கும் மானிடவியல் ஆய்வுக்கும் சிறப்பாகப் பயன்படுகிறது. ஏனெனில், இந்தியாவின் தொன்மையில் இன்று எஞ்சியவை அந்த மொழிகளும் அம்மொழி பேசுவோரிடம் காணப்படும் பழைய நாகரிகக் கூறுகளும் ஆகும். மேலும், பர்மா, இந்தோ-சைனா, மலாயா, இந்தோனேசியா, மெலனிசியா (Melanisia), பாலனிசியா (Polynesia) ஆகிய நாடுகளோடு இந்தியாவுக்குள்ள வரலாற்றுத் தொடர்பைப் புலப்படுத்தவும் இந்த இனமொழிகள் உதவுகின்றன.

இந்தியாவுக்குக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வந்த கிறித்தவப் பாதிரியார்கள் இந்த மொழிகளுக்கு எழுத்துருவம் கொடுத்தார்கள். எனவே, இதற்கு முன்னுள்ள மொழியைப் பற்றி அறிய எழுத்துச் சான்றுகள் எதுவும் இல்லை. சந்தாரி, முண்டாரி, காசி ஆகிய மொழிகளில் வழங்கும் வாய்மொழிப்பாடல்களும் நாடோடிக் கதைகளும் தொகுக்கப்பட்டு அவை, வங்காள மொழி எழுத்துகளிலும் தேவநாகரி எழுத்துகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சீனோ-திபேத்திய இனமொழிகள்: மங்கலாய்டு இனத்தைச் சேர்ந்த சீன-திபேத்திய மொழிகளைப் பேசும் மக்கள் இந்தியாவில் கி.மு. 10-ஆம் நூற்றாண்டிலிருந்தாவது வாழ்ந்திருக்கவேண்டும். அதாவது, வடமொழியில் நான்கு வேதங்களும் இயற்றப்பட்ட காலத்துக்கு முந்திய காலம் என்றும் கூறலாம். மொகஞ்சோதாராவில் மங்கலாய்டு இனத்திற்கு உரிய சிறப்புப் பண்புகளைப் பெற்ற சிலைகளும் எலும்புக் கூடுகளும் காணப்படுவதால் இந்த இன மக்களின் பழமை வெளிப்படுகிறது.

மங்கலாய்டு மக்கள் பேசும் மொழிகள் இரண்டு பெரும் பிரிவுகளை உடையன. அவை 1) திபேத்திய-பர்மிய இன மொழிகள், 2) சியாமிசு-சீன இன மொழிகள் எனப்படும். இந்தியாவைப் பொறுத்த வரையில் திபேத்திய-பர்மிய இனத்தைச் சேர்ந்த மொழிகளே காணப்படுகின்றன. மொழியியல் நோக்கில் இது, மேலும் சிறு உட்பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கப்படுகிறது. அவை 1) இமாலயன் பிரிவு, 2) வட அசாம் பிரிவு, 3) அசாம்-பர்மீசுப் பிரிவு, 4) திபேத்தியம் என்று குறிக்கப்படுகின்றன. இமாலயன் பிரிவில் முர்மி (Murmi) என்னும் மொழியும், மகர் (Magar) மொழியும், நேபாளத்தில் முக்கிய மொழியான நெவாரி (Newari) மொழியும் குறிப்பிடத்தகுந்தவை. ஆனாலும், முன்னவை இரண்டும் ஆயிரக் கணக்கான மக்களே பேசும் மொழிகள். நெவாரி ஏறக்குறைய 2,00,000 மக்களால் பேசப்படுகிறது. இது எழுத்து வடிவம் பெற்று ஓரளவு இலக்கியமும் பெற்றுள்ளது.

வட அசாம் மொழிகளுள் அக (Aga), அபோர் மிரி (Abormiri), தப்லா (Dafla), மிசிமி (Mishmi) ஆகியவை அடங்கும். இம்மொழிகளைப் பேசுவோரும் ஆயிரக்கணக்கானவர்களே

அசாம்-பர்மீசுப் பிரிவை, போடோ நாகா (Bodo Naga) என்றும், பர்மீசு குகிச்சின் (Burmese Kuhichin), கச்சின் (Kachin) கோலோ (Colo) என்றும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். போடோ நாகா உட்பிரிவில் போடோமொழி அடங்கும். ஒரு காலத்தில் பிரமபுத்திரா பள்ளத்தாக்கில் இது வழங்கப்பட்டிருக்க வேண்டும். இன்று அசாம், வடக்கு, கிழக்கு வங்காளம் ஆகியவிடங்களில் அசாமி, வங்காளம், மைதிலி போன்ற மொழிகட்கு இடங்கொடுத்துவிட்டு, சில தீவுகள், மலை வெளிப்பகுதிகள் முதலிய இடங்களில் மட்டும் இது வழக்கில் உள்ளது. நாகா, கிளை மொழிகள் சிலவற்றை உள்ளடக்கியுள்ளது.

பர்மீசு-குகிச்சின், கச்சின், கோலோ என்ற பிரிவில் பர்மிய மொழியும் மெய்தை (Meitei) மொழியும் முக்கியமானவை. பர்மிய மொழி பர்மாவின் தேசிய மொழியாகச் சிறப்புற்று விளங்குகிறது. மணிப்பூர் என்ற பிரதேசத்தில் 5,00,000 மக்களால் பேசப்படும் மொழியே மணிப்பூரி (மெய்தை) எனப்படும். இன்னும் சிலமொழிகள் ஆயிரக்கணக்கான மக்களாலேயே பேசப்படுகின்றன. மணிப்பூரி மொழி எழுத்துவடிவம் உடையதோடு 15-ஆம் நூற்றாண்டு முதலே எழுத்துச் சான்றுமுடையது. அப்போதைய மேற்குடிமக்கள் இந்து சமயத்தில், குறிப்பாக, வங்காளத்தில் தோன்றிய சைதன்னியர் பரப்பிய வைணவக் கொள்கையில் ஈடுபட்டதால், இன்று அவர்கள் வங்காள மொழி எழுத்துகளைப் பயன்படுத்துகிறார்

கள். அதனால், பழைய வரிவடிவம் இன்று வழக்கில் இல்லை.

திபேத்தியப் பிரிவுமொழிகள் அண்மைக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தவை. இலாகா (Laaga) என்ற மொழியே இந்த நூற்றாண்டில் திபேத்தின் மொழியாக வழங்குகிறது. இது பிரமபுத்திரா பள்ளத்தாக்கில் அசாம், காசி, நாகாமலைப் பகுதிகளில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் தனி எழுத்து வடிவம் கொண்டு வழங்குகிறது என்பது வரலாற்றால் அறியப்படுகிறது. அவர்கள் அகம் (Aham) அகோம் (Ahom) அல்லது கம்தி (Kamti) என்ற மொழி பேசி, புரஞ்சி (Buranji) என்ற வரலாற்று இலக்கியங்களை எழுதி வைத்துள்ளார்கள். ஆனால், இன்று அவர்கள் அசாமி பேசும் மக்களாக மாறிவிட்டதால், அந்த மொழியும், அந்த மொழியின் எழுத்து வடிவும் அழிந்துவிட்டன.

இந்திய-ஆரிய மொழிகள்: இந்திய மொழிகளில் பிற கண்டங்களின் மொழியோடு தொடர்பும், வரலாற்றுத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் உடையவை இந்திய-ஆரிய மொழிகள். இவை இந்தியாவுக்கு வந்த காலத்தை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது. இந்த மொழிகளோடு இனத்தொடர்புடைய மொழிகள் உலக அளவில் மிகுந்த எண்ணிக்கையும் சீரும் சிறப்பும் பெற்றவை.

உண்மையில் இந்திய-ஆரிய மொழிகள் என்பவை, இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் உட்பிரிவே ஆகும். எனவே, வெளிநாடுகளில் பேசப்படும் பாரசீகம், ஆர்மேனியன், கிரீக்கு, இலத்தீன் போன்ற பழங்கால மொழிகளோடு இவை தொடர்புடையவை.

இந்தியாவில் பிற இனமொழிகள் பேசிய மக்களும் சிறுகச் சிறுக மாறி, இந்திய-ஆரிய மொழி பேசுவோராக மாறியதையும் வரலாற்றில் காண முடிகிறது. இன்றைக்கு இந்தியாவில் வழங்கும் மொழிகளுள் மிகப் பழமையான வரலாற்றுச் சான்றுடையது வடமொழி அல்லது சமசுகிருதம் ஆகும்.

வடமொழி வேதங்கள் எனப்படுபவை கி.மு.1000-இல் இயற்றப்பட்டிருக்க வேண்டும். பின்னர் எழுந்த இராமாயணம், மகாபாரதம் போன்றவையும் பழைய இந்திய-ஆரியமொழிக் காலத்தில் (Old Indo-Aryan) தோன்றியவையாகும். இந்தக் காலம் கி.மு. 300 வரை தொடர்ந்து வந்திருக்க வேண்டும். எனினும், கி.மு. 500 முதல் கி.பி. 600 வரையுள்ள காலத்தை முதலாம் நடு இந்திய-ஆரிய மொழிகளின் காலம் (Middle Indo-Aryan) என்றும், பிராகிருத மொழிக் (Prakrit) காலம் என்றும் சொல்லப்படும். கி.பி. 600 முதல் 1000 வரையில் உள்ள காலத்தை இரண்டாம் நடு இந்திய-ஆரிய மொழிக்காலம் அல்லது அபப்பிரம்ச (Apabhramsa) காலம் என்று குறிப்பிடுவார்கள். புது இந்திய மொழிக் காலம் (New Indo-Aryan) கி.பி. 1000 முதலே தொடங்குகிறது. அதாவது, இன்றைய இந்திய மொழிகளின் தனித்த மொழிக் கூறுகள் இப்பொழுது தோன்றலாயின. இந்தக் காலத்தைப் 'பாசா' (Bhasha) என்று பொதுவாகக் குறிப்பிடுவார்கள்.

இந்திய-ஆரிய மொழிகளுக்கு முதன் முதலாக ஒப்பிலக்கணம் எழுதியவர் சான்பீம்சு. அவருடைய நூலின் பெயர் இந்தியாவினுடைய புதிய இந்திய-ஆரிய மொழிகளின் ஒப்பிலக்கணம் (Comparative Grammer of the Modern Indo-Aryan Languages of India 1872-79) என்பதாகும். இந்தி, பஞ்சாபி, சிந்தி, குசராத்தி, மராத்தி, ஒரியா, வங்காளம் ஆகிய ஏழு மொழிகளே முக்கியமானவை எனக் கருதுவதாகக் குறிப்பிட்டு, அந்த ஏழு மொழிகளுக்குள்ள உறவு நிலையையும், அவற்றின் மூல மொழியான வடமொழியோடு உள்ள உறவு நிலையையும் விளக்குவதையே முக்கிய நோக்கமாக அந்த நூல் கொண்டுள்ளது.

ஏழு இந்திய-ஆரிய மொழிகளையும் இந்தி, மராத்தி, வங்காளம் என்று மூன்றாகப் பிரித்துள்ளார். முதல் முயற்சி என்ற முறையில் அது ஓரளவு தான் சிறப்புடையது. அடுத்து, கிரியர்சன் எழுதிய இந்திய மொழியியல் அள்வை நோக்கு (Linguistic Survey of India, 1903-1908) என்ற 11 தொகுதிகளும் இந்திய மொழிகளின் ஆராய்ச்சி வரலாற்றில் சிறப்பிடம் பெறும். அவற்றுள் ஐந்து தொகுதிகள் (5-9) இந்திய-ஆரிய மொழிகளைப் பற்றிய செய்திகளை விளக்குகின்றன. அவர் புறப்பிரிவு (Outer sub-branch), இடைப்பிரிவு (Inner Sub-branch), நடுப்பிரிவு (Mediate Sub-branch) என்று பெரும் பிரிவாகப் பிரித்து, அவற்றின் மொழியமைப்புத் தன்மையை விளக்கியுள்ளார். புறப்பிரிவு மொழியமைப்பில் பிரிநிலையாகவும் (Analytic), அகப்பிரிவு தொகுநிலையாகவும் (Synthetic) குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெரும் பிரிவுகளையும் உட்பிரிவுகளாகப் பகுத்துள்ளார். ஆரிய மொழிகளில் மொத்தம் ஆறு உட்பிரிவுகள் உள்ளன. அவை 1) வடமேற்குப் பிரிவு, (இதில் சிந்தியும், மேற்குப் பஞ்சாபியும் அடங்கும்) 2) தெற்குப் பிரிவு, (இதில் மராத்தி, கொங்கணி இரண்டும் அடங்கும்) 3) கிழக்குப் பிரிவு, (இதில் ஒடியா (ஒரிசா), வங்காளம், அசாமி, பீகாரி (அதாவது மைதிலி, மகதி, போச்புரி) ஆகியவை அடங்கும்) 4) இடைப்பிரிவு கீழ் நடுப்பகுதி (East-Central), (இதில் கோசாலி அல்லது கீழை இந்தி உள்ளது)

5) நடுப்பிரிவு, (இந்தி, பஞ்சாபி, குசராத்தி, இராசசுத்தானி முதலியவை அடங்கும்) 6) வடக்குப் பிரிவு இமாலயன் பிரிவு (இதில் பகடி மொழிகள் (நேப்பாள மொழி கீழைப் பகடியாகக் கருதப்படும்) அடங்கும்).

தார்டிக்கு என்ற உட்பிரிவும் இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் உண்டு. இது இரானியன் (**Iranian**) என்ற தனிப்பெரும் பிரிவில் அடங்கும் உட்பிரிவு என்பதே அறிஞர் பலரின் கருத்து. இந்திய-ஆரிய மொழிக் குடும்பத்தின் மொழிகளில், மக்களின் கல்வி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் கருதப்படுவன இந்தி, உருது, வங்காளம், ஒரியா அசாமி, மராத்தி, குசராத்தி, சிந்தி, பஞ்சாபி, காசுமீரி ஆகியவையாகும்.

மொழியியல் நோக்கில் எல்லாக் கிளை மொழிகளும் சிறப்புடையனவே. ஆனாலும், இலக்கிய முடைமை, வரலாறு, பெரும்பான்மை மக்களால் பேசப்படுவது போன்றவற்றால் மேற்குறித்த மொழிகளே சிறப்புடையனவாகும். இந்திய அரசியல் அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ள 15 மொழிகளுள் 11 மொழிகள் இந்திய-ஆரிய மொழிகள். அவற்றுள் வடமொழியும் ஒன்று. இது பேச்சு மொழியாக இல்லாவிட்டாலும் பிற சிறப்புகளை உடையது. ஏனைய 10 மொழிகளையும் 1971-மக்கள் தொகைக் கணக்கின்படி எண்ணிக்கை அடிப்படையில் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம். வளைவுக்குள் மக்கள் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தி (16 கோடிக்கு மேல்), வங்காளம் (4 கோடிக்கு மேல்), மராத்தி (4 கோடிக்கு மேல்), உருது (3 கோடிக்கு மேல்), குசராத்தி (2 கோடிக்கு மேல்), ஒரியா (ஏறக்குறைய 2 கோடி), பஞ்சாபி (1 கோடிக்கு மேல்), அசாமி (ஏறக்குறைய 1 கோடி), காசுமீரி (ஏறக்குறைய 25 இலட்சம்), சிந்தி (பத்து இலட்சம்).

திராவிட மொழிகள்: தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளே திராவிட மொழிகளாகும். எல்லீசு என்பார் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் முதன்முதலில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகியவை ஒரு தனி மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று குறிப்பிட்டார். இராபர்ட்டு கால்டுவெல் கி.பி.1856-இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் மூலம் தமிழ், மலையாளம், துளு, குடகு, தோடா, கோட்டா, தெலுங்கு, கோண்டி, கூயி, மால்டா, குறுக்கு ஆகியவை ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று விளக்கிக் காட்டியதோடு, அவை வடமொழி அமைப்பிலிருந்து வேறுபட்டவை என்றும் சுட்டிக்காட்டி, ‘திராவிடம்’ என்ற பெயரையும் இட்டுச் சென்றார்.

இன்று திராவிடமொழிகளாக 22 மொழிகளுக்கு மேற்பட்டவை விளங்குகின்றன. சரியான எண்ணிக்கையை வரையறுக்க முடியவில்லை. இப்பொழுது முதன்முதலாக ஆராயப்பட்டுள்ள கசபா, இருளா, குறும்பா, கொரகா, பனியா, காட்டுநாயக்கா போன்றவை தனித்தனி மொழிகளா தமிழ், கன்னடம் ஆகியவற்றின் கிளைமொழிகளா என்பது முடிவு செய்யப்படவில்லை. ஆனால், ஆந்திரா, மத்தியபிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலும் பல புதிய திராவிட மொழிகள் காணப்பட்டு அவற்றின் இலக்கணங்களும் முழுக் குறிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஒப்பிலக்கண நோக்கில் அறிஞர்கள் 21 மொழிகளையே எடுத்துக் கொண்டு அவைகளுக்கிடையே உள்ள உறவைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

திராவிட மொழிகளை இப்பொழுது தென் திராவிடம், நடுத்திராவிடம், வடதிராவிடம் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். தமிழ், மலையாளம், குடகு, தோடா, கன்னடம், துளு ஆகியவை தென் திராவிட மொழிகள். மேலே குறிப்பிட்டபடி இருளா, பனியா, காட்டுநாயக்கா போன்ற பழங்குடி மக்களின் மொழிகள் தென் திராவிடத்தில் அடங்கும். ஆயினும், அவை எந்தத் தென் திராவிட மொழிகளோடு நெருங்கிய உறவு உடையன என்ற உண்மை இன்னும் தெளிவாகவில்லை.

நடுத்திராவிட மொழிகள் என்ற பிரிவில் தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூவி, கொலாமி, நாய்கி, பர்சி, கதபா ஆகிய மொழிகள் அடங்குகின்றன. வட திராவிடத்தில் குறுவர், மால்தோ, பிராகுயி ஆகிய மூன்று மொழிகளும் சேரும். பிராகுயி இன்று பாகிசுத்தானில் உள்ள பெலுசிசுத்தான் என்ற பிரதேசத்தில் மட்டுமே பேச்சு மொழியாக வழங்கி வருகிறது.

இந்திய அரசியல் அமைப்பு, தென்திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளையும், நடுத்திராவிட மொழிகளில் தெலுங்கு மொழியையும் ஏற்றுக்கொண்டுள்ளது. தெலுங்கு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 4 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு, இந்திய மொழிகளில் மூன்றாம் இடத்தையும், தமிழ் ஏறக்குறைய 4 கோடி மக்களால் பயன்படுத்தப்பட்டு ஐந்தாம் இடத்தையும், மலையாளம் 2 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு எட்டாம் இடத்தையும், கன்னடம் 2 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு ஒன்பதாம் இடத்தையும் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தகுந்தது.

இந்திய மொழியின் எழுத்துகள்: இந்திய மொழி எட்டுவித எழுத்து வடிவங்களைக் கொண்டது. நாகரி (அல்லது தேவநாகரி) எழுத்துகளை வட மொழி, இந்தி, மராத்தி ஆகிய மூன்று மொழிகளும் பயன்படுத்துகின்றன. பஞ்சாபி மொழி எழுத்துக்கு குருமுகி(Gurumuki) என்பது பெயர். ஏனைய எழுத்து முறைகள் அந்தந்த மொழியின் பெயரால் சொல்லப் பட்டாலும் வங்காளம், அசாமி, மணிப்புரி ஆகிய மூன்று மொழி எழுத்துகளும் சிறிது வேறுபாடு உடையவை. தெலுங்கு, கன்னடம் ஆகிய இரண்டு மொழி எழுத்துகளும் பெரும்பாலும் ஒத்த வடிவின. இந்திய மொழிகளின் எழுத்து வடிவங்கள் வேறு பட்டாலும், எழுத்து முறை அடிப்படை ஒன்று தான். அதாவது, தனி உயிரெழுத்துகள் ஒரு வடி வத்தையும் அவை மெய்யோடு கூடி வரும்போது மாற்று வடிவத்தையும் உடையவை. மேலும், இந்திய மொழி எழுத்துகள் ஒலி வேறுபாடு மிகுதியாக உடை யனவல்ல. அதனால், ஒவ்வொரு சொல்லின் உச்ச ரிப்பும் எழுத்தும் ஒத்திருக்கும்.

மொழிகளிடையே பொதுத்தன்மை: இந்திய மொழிகள் நான்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தி ருந்தாலும், மொழி அமைப்பில் இந்த மொழிகளுக்கு இடையே ஒற்றுமை இருப்பது அறிஞர்களால் சுட்டிக் காட்டப்பட்டதோடு 'மொழியியல் பரப்பு' (Linguistic Area) என்ற பொதுக் கோட்பாடு உருவாக்கப் பட்டு, இந்தியா ஒரு மொழியியல் பரப்பு (India as a Linguistic Area) என்ற உண்மையும் வலுப் பெற்று வருகிறது.

ஒலி நிலையில் நுனிநா, நுனி அண்ண ஒலி களோடு (த,ல போன்றவை) நாமடி ஒலிகள் (Retroflex) (ட,ள போன்றவை) எல்லா இந்திய மொழிக ளிடையேயும் காணப்படுகின்றன. குறுகுறு, பளபள போன்ற இசையொலிச் சொற்கள் (தமிழ் இலக் கணத்தில் இரட்டைக் கிளவி என்பவை) அமையும் முறை பொதுவாக உள்ளது. சொல்லியல் நிலையில் வினையிலிருந்து வினையாலணையும் பெயர் உண் டாக்குவது, பின்னொட்டுக்களை மிகுதியாகப் பயன் படுத்துவது, வேற்றுமை உருபு ஏற்பதற்காக மாறும் வடிவத்தை (நான்-என்-மரம்-மரத்து) ஆறாம் வேற் றுமை வடிவமாகப் பயன்படுத்துவது போன்றவை இந்திய மொழிகளிடையே காணப்படும் பொதுப் பண்புகள் ஆகும். தொடரியல் நிலையில் வினை யெச்சத்தைப் பயன்படுத்தி இரண்டு வாக்கியங்களை ஒன்று சேர்த்தலும், வாக்கியத்தில் எழுவாய், செயப் படுபொருள் (அல்லது பெயர்தொடர்), பயனிலை என்ற முறையில் அமைப்பது போன்றவையும் எல்லா இந்திய மொழிகளிடையேயும் காணப்படுகின்றன.

செ.வை.ச

துணை நூல்:

**Shapiro, C., Michael & Schiffman F., Haroled**, Language and Society in South India, Motilal Banarsidass, Indological Publishers, Delhi, 1981.

**இந்திய வயதுரிமைச் சட்டம்,** இந்திய அரசால் கி.பி. 1875-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. சம்மு-காசுமீர் பகுதியைத் தவிர்த்து இந்தியா முழுவதும் இந்திய வயதுரிமை அடையும் சட்டம் (The Indian Majority Act) செல்லத்தக்கது.

உரிமை வயது அடையாதவருடைய (Minor) ஆள் அல்லது உடைமைக்கு (Person or property) நீதி மன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தாலோ, அவருடைய உடைமையை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் காப்பாயம் (Court of Wards) ஏற்றிருந் தாலோ, அவ்வாறான உரிமை வயது அடையாத இளைஞர், 21 வயதை அடைந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் (Major) கருதப்படுவர். அவ்வாறு காப்பாளரோ காப்பாயமோ நியமிக்கப் படாத நிலையில் 18 வயதை அடைந்தவுடன் அவ்விளையர் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்படுவார்.

மேற்கூறிய வகையில் வயதைக் கணக்கிடுவதற்கு ஒருவர் பிறந்த நாளை முழு நாளாகக் கருத வேண்டும். அவரது 18-ஆவது ஆண்டு நிறைவு நாளின் தொடக்கத்தில் 18 வயது நிறைவடைந்தவ ராகவும், 21-ஆம் ஆண்டு நிறைவு நாளின் தொடக்கத்தில் 21 வயது நிறைவடைந்தவராகவும் கருதப்படுவார். ஒருவர் 1950-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாளில் பிறந்தார் என்று கொண்டால் 1968-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் தேதி பிறந்த வுடனேயே அவர் 18 வயது நிறைந்தவராகக் கருதப் படுவார். 21 வயதைக் கணக்கிடுவதற்கும் இந்த எடுத்துக்காட்டுப் பொருந்தும்.

மேற்கூறிய விதி இந்தியாவைச் சட்டப்படி உறைவிடமாகக் (Domiciled) கொண்டவர்களுக்கு இனவேறுபாடின்றிப் பொருந்தும். ஆனால், இவ்விதி ஒருவரின் திருமணம், மணவிலக்கு, தத்து எடுத்தல், 'மகர்' என்று இசுலாமியரால் கூறப்படும் கணவன் மனைவிக்குத் திருமணத்திற்காகப் பணம் கொடுத்தல் ஆகிய செய்கைகளுக்குப் பொருந்தாது. எடுத்துக் காட்டாக இசுலாமியச் சட்டப்படி ஒரு முகமதியர் 15 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்த வராகக் கருதப்படுவார். அவ்வயதைக் கடந்தவுடன் அவர் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனால், அவர் உயில் எழுத வேண்டுமானால் காப்பாளர் அல்லது காப்பாயமிருந்தால் 21 வயதைக்

கடந்தவராகவும், அவர்கள் நியமிக்கப்படாவிட்டால் 18 வயதைக் கடந்தவராகவும் இருக்க வேண்டும்.

பழைய இந்துச் சட்டப்படி ஓர் இந்து, 15 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்த வராகச் சில மாநிலங்களில் கருதப்பட்டார். சில மாநிலங்களில் 16 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்பட்டார். முன்னரே குறிப்பிட்டபடி இந்திய வயதுரிமை அடையும் சட்டம் திருமணத்துக்கும் தத்து எடுப்பதற்கும் பொருந்தாது. எனினும், 1956–ஆம் ஆண்டு இந்துத் தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தில் தத்து எடுப்பதற்கு, ஓர் இந்து 18 வயதைக் கடந்தவராக இருக்க வேண்டும் என்பதும், 1956–ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டத்தில் 21 வயது கடந்த இந்து ஆணும் 18 வயது கடந்த இந்துப் பெண்ணும் திருமணத்தில் ஈடுபடலாம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளன. எனவே, இனச் சட்டங்களில் திருமணம், மகர், மணவிலக்கு, தத்து எடுத்தல் ஆகிய வற்றிற்குக் குறிப்பிடப்பட்டுள்ள வயது செல்லத்தக் கது. அச்செயல்களில் இந்திய வயதுரிமை அடையும் சட்டம் பொருந்தாது.

**இந்திய வயது வந்தோர் கல்விக் கழகம்,** புது தில்லியில் 1937-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. இக் கழகம் 1939–ஆம் ஆண்டுதான் பதிவு செய்யப் பட்டது. எல்லாவிதமான அறிவையும் எளிதில் விளங்கும் முறையில் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வது, ஈராண்டுக்கு ஒருமுறை கல்வி மாநாடு கூட்டுவது போன்றவையே இந்திய வயது வந்தோர் கல்விக் கழகத்தின் (Indian Adult Education Association) தலையாய நோக்கங்களாகும். இக் கழகம், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் செயற் படும் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் (National Adult Education Programme) பணியாளர் களுக்குப் பயிற்சி, கருத்தரங்கு, பணிப்பட்டறை (Workshop) ஆகியவற்றை நடத்தி வருகிறது. 'இந்திய வயது வந்தோர் கல்வி இதழ்' (Indian Journal of Adult Education) என்னும் மாத இதழையும் இக் கழகம் நடத்தி வருகிறது. இந்திய வயது வந்தோர் கல்வி இதழில், தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் நடைபெற்று வரும் சிறப்பான பணிகள், சாதனைகள், முன்னேற்றம் ஆகியவை இடம் பெறு கின்றன. இக் கழகம் இந்திய வானொலி நிலையங் களுடனும் பாரிசு நகரில் உள்ள ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்துடனும் (UNESCO) தொடர்பு கொண்டு, இந்தியாவில் வயது வந்தோர்க்குரிய கல்விப் பணியாற்றி வருகிறது.

**இந்திய வரலாற்றுக் கழகம்** 1935-இல் தொடங்கப்பட்டது. அப்போது இக்கழகத்திற்கு இக் கால இந்திய வரலாற்றுக் கழகம் (Modern Indian History Congress) என்று பெயரிடப்பட்டது. அதற்கு முன்னதாக 1919–ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட அகில இந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் பண் டைய இந்திய வரலாற்றினைப் பற்றி ஆய்வு செய்து அதன் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். ஆகவே, இக்கால இந்திய வரலாற்று ஆய்வுகளை மேற் கொண்டு, அதன் வரலாற்றுச் செய்திகளை ஒருங்கி ணைக்கப் புதியதோர் கழகம் அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

இதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகளைப் 'பாரத இதிகாச சம்சோதக மண்டலம்' (Bharatha Itihasa Samshodhaka Mandala) என்னும் அமைப்பு மேற் கொண்டது. இதன் நிருவாகச் செயற்குழுவின் (Provisional Working Committee) தலைவராக எம்.சி. கேல்கர் (M.C.Kelkar) என்பார் இருந்தார். இவர் முயற்சியின் பலனாக இக்கழகத்தின் முதல் மாநாடு புனேயில் (Pune) 1935–ஆம் ஆண்டு சூன் திங்கள் நடைபெற்றது. அதன் தலைவராக அலகா பாத்துப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சர் சாபத் அகமதுகான்(Sir Shabat Ahamed Khan)தேர்ந்தெடுக் கப்பட்டார். இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகப் பேராளர்களும் வரலாற்று அறிஞர்களுமாக ஏறத் தாழ 50 பேர் இதில் பங்கு கொண்டு தம் ஆய்வு களை வெளியிட்டனர். இந்திய வரலாற்றினை முற் றிலும் புதிய அறிவியல் நோக்கில் ஆய்வு செய்து உருவாக்குவது என்னும் உயரிய நோக்கில்இதற்கென ஒரு குழுவும் விதிமுறைகளும் அமைக்கப் பெற்றன.

அலகாபாத்தில் 1938–ஆம் ஆண்டில் நடைபெற்ற இதன் இரண்டாம் மாநாட்டிற்குப் பேராசிரியர் பண் டர்கார் (Prof. Bhandarkar) தலைமையேற்றார். இதில் 'பண்டைய இந்திய வரலாற்றுக் கழகம்' என் னும் அமைப்பிலான 'பண்டைய' எனும் சொல் கைவிடப்பட்டது. வரலாற்று ஆர்வலர்கள் இதில் வகைசெய்யப்பட்டனர். இதன் உறுப்பினர் கட்டணம் ரூ.5/-- என வரையறை செய்யப்பட்டது. இம்மாநாட் டில் ஆய்வாளர்கள் எட்டுக் குழுக்களாகப் பிரிக்கப் பட்டு, உரையாடல்களை நடத்தி ஏறத்தாழ 90 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர்.

இதன் மூன்றாம் மாநாடு 1939–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் கல்கத்தாவில் டாக்டர் ஏ.சி. மசூம் தார் (Dr A. C. Mazumdar) தலைமையில் நடை பெற்றது. இம்மாநாட்டில், இந்திய வரலாறு மட்டு

மல்லாது, ஏனைய உலக நாடுகளின் வரலாற்றினையும் ஆய்வு செய்து தொகுத்திட முடிவு செய்தனர்.

இக்கழகத்தை இந்திய வரலாற்று அறிஞர்கள் பேரவையாக, இந்தியப் பேரரசு ஏற்றுக்கொண்டு, இதன் வரலாற்று அறிஞர்களை உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வரலாற்றுக் கருத்தரங்கங்களுக்குப் பேராளர்களாக அனுப்புதற்கு, ஆவன செய்திட அரசினை வேண்டிக் கொண்டனர். இலாகூரில் (Lahore) 1940-ஆம் ஆண்டு டாக்டர் கிருட்டிணசாமி ஐயங்கார் (Dr. Krishnasamy Ayangar) தலைமையில் இதன் நான்காம் மாநாடு நடந்தது. அது முதற்கொண்டு இக்கழகம் 'பொதுவான முழுமை பெற்ற அதிகார பூர்வமான அமைப்பு' என்னும் பெயரினைப் பெற்றது.

ஐதராபாத்தில் (Hydrabad)இதன் ஐந்தாம் மாநாடு பேராசிரியர் சி.எசு. சீனிவாசாச்சாரி(Prof. C.S. Srinivachari)தலைமையில், 1941_ஆம்ஆண்டு திசம்பர் மாதம் நடந்தபோது இந்திய வரலாற்றுக் காலக் குறியீட்டிற்கேற்பப் (Chronological basis) பல்வேறு கால வரலாற்று ஆய்வுகள் நடத்தப்பட்டன. அதன் உறுப்பினர்கள், அது முதற்கொண்டு, மாநாட்டின் தலைவர், மற்றும் பகுதித் தலைவர்களையும் தேர்ந்தெடுக்க விதிமுறைகளை வகுத்தனர். இந்திய நாடு முழுவதும் விளைந்த பல்வேறு அரசியல் குழப்பம் காரணமாக இதன் ஆறாம் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுப் பின்னர் 1943-ஆம் ஆண்டு அலிகாரில் (Aligarh) இராவ்பகதூர் கே.என்.தீட்சித்து தலைமையில் நடைபெற்றது. இதன் ஏழாம் மாநாடு 1944-ஆம் ஆண்டு டாக்டர் எசு.என். சென்(Dr. S.N. Sen) தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டின் ஆய்வுப் பணிகளுக்காக ஐதராபாத்து நிசாம் (Hydrabad Nizam) உரூ. 50,000/-நன்கொடை அளித்தார்.

இக்கழகத்தின் எட்டாம் மாநாடு தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் டாக்டர் தாராசந்து (Dr. Tarachand) தலைமையில் நடந்தபோது,ஏறத்தாழ 200 வரலாற்று அறிஞர்கள் பங்கேற்று, 89 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர். பேராசிரியர் கே.ஏ. நீலகண்டசாத்திரி தலைமையில் 1946-ஆம் ஆண்டு பாட்னாவில் இதன் ஒன்பதாம் மாநாடு நடைபெற்றது. இதில் சமூக,பண்பாட்டுமாற்றங்கள், பரிமாற்றங்கள், கல்வியியல் குறித்த விரிவான ஆய்வுகள் ஆகியவற்றை நடத்தி, அவற்றின் தொகுப்புகளை வெளியிட்டனர்.

நாடு விடுதலை பெற்றதும், 1947-ஆம் ஆண்டு பம்பாயில் இதன் 10-ஆம் மாநாட்டில் பேராசிரியர் முகமது அபீபு (Prof. Mohamad Habib) தலைமையேற்றார். இந்திய வரலாற்றுக் கழகத்தை உலக நாடுகள் வரலாற்று விஞ்ஞானக் குழுவில் உறுப்பினராகப் பதிவு செய்யவும் அதில் பங்கு பெறவும் இம்மாநாட்டில் முடிவு செய்தனர். இக்கழகத்தின் 11-ஆம் கூட்டம் 1948-ஆம் ஆண்டு மகாமகோபாத்தியாயா டி.வி. பொதார் (Mahamahopadhyaya D.V. Potdar) தலைமையில் தில்லியிலும், இதன் 12-ஆம் மாநாடு 1949-ஆம் ஆண்டு டாக்டர் ஆர்.பி. திரிபாதி (Dr. R.P. Tripati) தலைமையிலும் நடைபெற்றது. இதன் பொதுச் செயலாளர் பிசேவர் பிரசாத்து (Bishewar Prasad) இந்தியாவில் வரலாற்றுப் பாடங்களைப் போதிக்கும் முறை குறித்தும், ஆய்வின் தன்மை, பொருளடக்கம் ஆய்வாளர்களிடையிலான ஒத்துழைப்புப் போன்றவை குறித்தும் அறிக்கை ஒன்றை வெளியிட, மாநாடு ஒரு குழுவினை அமைக்க வழி செய்தார்.

நாகபுரியில் 1950-ஆம் ஆண்டு ஏமச்சந்திர ராய் சவுத்திரியின் (Hemachandra Roy Chaudary) தலைமையில் நடைபெற்ற இக் கழகத்தின் 13-ஆம் மாநாட்டில், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத்து (Dr.Rajendra Prasad) அதன் காப்பாளராகவும் (Patron) நிருவாகக் குழு உறுப்பினராகவும் ஏற்கப்பட்டார். அம்மாநாடு இந்திய இராணுவ வரலாற்றினை (Indian Military History) அளிக்குமாறும், ஆய்வாளர்களுக்கு இந்திய அரசுநிதி போன்ற வசதிகள் அளிக்குமாறும் வேண்டிக் கொண்டது. மேலும் ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஆய்வேடுகளை அச்சிடவும், மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இருப்புப் பாதைக் கட்டணச் சலுகைகளைப் பெறவும் வழி செய்தது.

இதன் 14-ஆம் மாநாடு சி.எசு. தேசாய் (Desai) தலைமையில் செய்ப்பூரில் (Jaipur) 1952-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இதன் 15-ஆம் மாநாடு குவாலியரில் டாக்டர் இராதாகுமுதமுகர்சி(Dr.Radha Kumud Mukarjee) தலைமையிலும், 16-ஆம் மாநாடு வால்டேரில் (Waltair) டாக்டர்பி.வி. கானே(Dr.P.V.Kene) தலைமையிலும் நடைபெற்றன. டாக்டர் என்.பி. சக்கரவர்த்தி தலைமையில், 1954-ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்றபோது ஏறத்தாழ 350 அறிஞர்கள் பங்கேற்றனர். அவர்களுள் 113 பேர் வரலாற்று ஆய்வுகளை வெளியிட்டனர். இதில் கல்வெட்டுகள், அகழாராய்ச்சி ஆகிய பணிகட்கு வேண்டிய அரசின் உதவியை வேண்டிக் கொண்டனர்.

இதன் அடுத்த மாநாடு கல்கத்தாவில் 1955-ஆம் ஆண்டு சர்தார் கே.எம். பணிக்கர் (K.M. Panikkar) தலைமையிலும், 19-ஆம் மாநாடு ஆக்ராவில் 1956-ஆம் ஆண்டில் டாக்டர் இலால் (Lal)தலைமையிலும் நடைபெற்றன. இதன் 20-ஆம் மாநாடு குசராத்

(Gujarat) திலுள்ள ஆனந்து வித்தியாநகரில் (Anandh Vidya Nagar) கே.எம். முன்சி (K.M. Munshi) தலைமையில் நடைபெற்றது. இதன் வரலாற்று ஆவணங்களின் (Historical Records) சிறப்பினை நாடாளுமன்றத்தில் டாக்டர் இரகுவீர் சிங் மேற்கோள் காட்டி விளக்கினார்.

அதன் பின்னர் 21-ஆம் மாநாடு திருவனந்தபுரத்தில் கூடியபோது பெரும் அளவில் பேராளர்கள் கலந்து கொண்டனர். இதில் இந்திய வரலாற்றுக் கழக வெளியீட்டுக் குழு (Publication Committee) வும், இந்திய வரலாற்று ஆய்வாளர்களின் தொகுப்பும் வெளியிடப் பெற்றன. இதில் வரலாற்று அறிவியல் துணை ஆய்வுகள், வரலாற்றுக் கலை, வரலாற்றுப் புவியாய்வு (History of Art, Historical Geography), பகுதி ஆய்வு (Toponomy) புவியியல் ஆய்வு (Topography), கல்வெட்டாய்வு (Epigraphy) ஆகியவை குறித்த ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பெற்றன. அடுத்து 1959-ஆம் ஆண்டில் கௌகத்தி (Gauhati) யில் இதன் 22-ஆம் மாநாடும், அலிகாரில் (Aligarh) டாக்டர் யு.என். கோசால் (Dr. U.N. Goshal) தலைமையில் இதன் 23-ஆம் மாநாடும் நடைபெற்றன. இதில் இந்திய வரலாற்றினை விரிவான பல தொகுப்புகளாக (Comprehensive History of India) வெளியிட்டனர். உலக நாடுகளின் வரலாற்று அறிவியல் கழகத்தின் பாரிசுத் தலைமையகத்தில் இந்திய வரலாற்றுக் கழகம் (Comite Internationale des Sciences Historiques, Paris) உறுப்புக் கழகமாக ஒற்றுக் கொள்ளப்பட்டது.

தில்லியில் (Delhi) இதன் 24-ஆம் மாநாடு மகாமகோபாத்தியாயா டாக்டர் வி.வி. மிராசி (Mahamahopathyaya Dr. V.V. Mirashi) யின் தலைமையில் நடைபெற்றபோது, இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான ஆய்வுப் பரிமாற்றங்கள், பாடத்திட்ட முறைகள் குறித்து விரிவான உரையாடல்கள் நடைபெற்றன. புனேயில் (Pune) 1963-ஆம் ஆண்டில் இக்கழகத்தின் வெள்ளிவிழா மாநாடு பேராசிரியர் செர்வானின் (Prof. H.K. Sherwan of Hydrabad) தலைமையில் நடைபெற்றது. இதில் பாரத இதிகாச சம்சோதக் மண்டலம் (Bharta Itihasa Samshodhak Mandala) என்னும் முக்கிய அமைப்பும் பங்கு பெற்றது. ஏறத்தாழ 170 ஆய்வுக் கட்டுரைகள் இம்மாநாட்டில் ஆராயப்பட்டன.

ஆசிய வரலாற்றுக்கான உலகநாடுகளின் மாநாடு (International Conference on Asian History) 1964-ஆம் ஆண்டில் ஆங்காங்கில் (Hong Kong) நடைபெற்றபோது இந்திய வரலாற்றுக்கழகப் பேராளர்கள் அதில் பெரும் பங்காற்றினர். அதே ஆண்டில் இராஞ்சியில் (Ranchi) இதன் பொதுச் செயலர் டாக்டர் எசு.பி. சென் (Dr. S.P. Sen) இளைய தலைமுறையினர் ஆய்வில் பங்கு பெற வேண்டி இம் மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தார். அலகாபாத்தில் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இதன் 27-ஆம் மாநாட்டிற்கு சே.என். பானர்சி (J.N. Banerjee) தலைமையேற்க, இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் எம்.சி. சாக்ளா (Chagla) இதில் பங்கேற்றார்.

அந்த ஆண்டிலேயே வியன்னாவில்(Vienna)நடைபெற்ற அகில உலக வரலாற்று விஞ்ஞானக் கழக (Comite Internationale des Sciences Historiques) மாநாட்டில் இக்கழகத்தின் பேராளர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியர் பனார்சி பிரசாத் சாக்சேனா (Prof.Banarsi Prasad Saksena) தலைமையில் மைசூரில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியா தவிர, ஏனைய உலக நாடுகளின் வரலாற்று ஆய்வேடுகள் 24 வெளியிடப்பட்டன. நிரஞ்சன்ராய் (Niranjan Roy) தலைமையில் 1967-ஆம் ஆண்டில் பாட்டியாலா (Patiala) வில் நடைபெற்ற மாநாட்டில் பிரிட்டனின் வரலாற்று அறிஞர் கிறித்தோபரும் (Christopher) மற்றும் பல பேரறிஞர்களும் பங்கு கொண்டனர். பம்பாயில் நடை பெற்ற இதன் 30-ஆம் மாநாட்டில் பிரிட்டன் வரலாற்று அறிஞர் டாக்டர் சான் மோரிசு (Dr. John Moris), டாக்டர் எரிக் ஆப்சுவம் (Eric Hobswam) ஆகியோர் கலந்து கொள்ள, இதன்பொதுத் தலைவராகச் சி.எம். மோரேசு (G.M. Moraes) பணியாற்றினார்.

வாரணாசியிலுள்ள (Varanasi) பனாரசு இந்துப் பல்கலைக்கழகம் (Banaras Hindu University) இதன் 31-ஆம் மாநாட்டினை 1969-ஆம் ஆண்டில் கூட்டியது. இதன் தலைவராக என்.கே. சின்கா (N.K. Sinha) விளங்கினார். இம்மகாநாட்டின்போது இந்தியக் கப்பல் கழகப் போக்குவரத்தும் வரலாறும் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய வரலாற்றின் விரிவாக்க வெளியீடு நான்கு நூல்களை வெளிக் கொணர்ந்தது. டாக்டர் கே.கே. பிள்ளை ((Dr. K. K. Pillai) தலைமையில் சபல்பூரில் (Jabalpur) இதன் 32-ஆம் கூட்டமும், முசாபர்பூரில் (Mujaffarpur) 1972-ஆம் ஆண்டு திரு சுசோபன் சர்க்கார் (Susobhan Sarkar) தலைமையில் இதன் அடுத்த மாநாடும் நடைபெற்றன. இதில் பங்களாதேசத்தில் (Bangaladesh) இருந்து பேராளர்கள் கலந்துகொண்டனர். இம்மகாநாட்டிற்கு மத்தியகல்வி அமைச்சர் நூருல் ஆசன் (Nurul Hassan) உரு.10,000/- செலவினங்களுக்காக அளித்தார். நூல்கள் வெளியீட்டிற்கென இந்திய வரலாற்று ஆய்வுக்கழகம் உரு. 5000/- நன்

கொடையாக அளித்தது. இம்மாநாட்டில் 'இந்திய நிலவியல் தன்மை' (Nature of Property Land in India), 'இந்தியச் சுதந்திரப் போர்' குறித்த கருத்தரங்கமும், கண்காட்சியும் ஆய்வுகளும் நடத்தப்பெற்றன. மாநில வாரியான வரலாற்றுக் கழகங்கள் இதில் இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பெற்றது.

புதுதில்லியில் (New Delhi) இதற்கென நிலையான அலுவலகம் கட்டப்பெற்றது. சண்டிகாரில் 1973-ஆம் ஆண்டு நடைபெற்ற இதன் மகாநாட்டில், இந்திய வரலாற்றுப் பாடங்களைத் தவிர, ஏனைய பிற நாடுகளின் வரலாற்றினையும்மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைத்திட இந்தியப் பேரரசினை வேண்டிக்கொண்டனர். 'பண்டைய இந்தியக் குடியாட்சி' (Republic in Ancient India) 'இந்தியக் கிராமியச் சமூகங்கள்' (Village Community in India) குறித்த கண்காட்சியும் கருத்தரங்கமும் விரிவான ஆய்வுகளும் நடந்தன.

மேற்கு வங்காள ஆளுநர் மேதகு ஏ.எல். தயசு (Hon.A.L. Dias) தலைமையில் கல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில் இந்திய வரலாற்றுக் கழகம் மேற்கொள்ளும் பணிகளுக்காக இந்தியப் பேரரசு நிதி உதவி அளித்திட வேண்டிக் கொண்டனர். இந்திய அரசின் கல்வித் துறையால் பங்களாதேசத்திலுள்ள நான்கு முதன்மையான வரலாற்றறிஞர்கள் அழைக்கப்பட்டனர்.

அலிகாரில் (Aligarh) நடைபெற்ற இக்கழக மாநாட்டில் இதற்கு முன்னர் நடைபெற்ற மாநாட்டு உரையாடல்கள் மற்றும் ஆய்வுகளைத் தொகுத்து நூல்களாக வெளியிட முடிவு செய்து, இதற்கென உரூ. 25,000- நிதி ஒதுக்கீடு செய்தனர். இம்மகாநாட்டில் சமூகக் கொடுமைகள் மற்றும் இனக்கொள்கை எதிர்ப்புக் குறித்த பண்டைய, இடைக்கால, இக்கால இந்திய வரலாற்றுக்கான (Social Protest and Religious Movement in Ancient, Mediaeval and Modern India) ஆய்வும் கருத்தரங்கம், கண்காட்சி ஆகியவையும் நடைபெற்றன. அடுத்த மாநாடு கோழிக்கோடு பல்கலைக் கழக வளாகத்தில் 1975-ஆம் ஆண்டு நடைபெற்றது. கல்கத்தாவில் 1976-ஆம் ஆண்டு சகதீசு நாராயண சர்க்கார் (Jagadish Narayana Sarkar) தலைமையில் நடைபெற்ற 37-ஆம் மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியக்கலை (Indian Art and Society) மற்றும் சமூகம் குறித்த ஆய்வுகள் அளிக்கப்பட்டன. இடைக்கால, பண்டைய இந்திய ஓவியங்கள், கலைகள் குறித்த ஆய்வேடுகளும் அளிக்கப்பட்டன.

புவனேசுவரத்தில்(Bhuvaneshwar) சதீசு சந்திரா (Satish Chandra) தலைமையில் நடைபெற்ற 1977-ஆம் ஆண்டைய கழக மகாநாட்டில் எதிர்காலத்தில் இந்தியவரலாற்றுப் பாடங்களில் அறிவியல் -சமயச்சார்பற்ற (Scientific and Secular approacb) கருத்துகளை உட்புகுத்திப் போதித்திட முடிவுசெய்தனர்.

பேராசிரியர் கோபால் தலைமையில் ஐதராபாத்து (Hydrabad) உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் 39-ஆம் மாநாடும், வால்டேரில் (Waltair) பேராசிரியர் கரே (Khare) அவர்களின் தலைமையில் அடுத்த மாநாடும் நடைபெற்றன. இதில் சீனாவிலிருந்து (China)பெய்சிங்குச் சீன சமூக விஞ்ஞானக் கழகச் சார்பில் (Chinese Academy of Scocial Sciences Beijing) பேராளர்கள் கலந்து கொண்டனர். ஏறத்தாழ 300 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. பம்பாயில் நடைபெற்ற இந்திய வரலாற்றுக் கழகத்தின் அடுத்த மாநாடு 1980-ஆம் ஆண்டில் டி.சி. சர்க்கார் (Sircar) தலைமையில் நடந்தபோது, இக்காங்கிரசின் வரலாற்று வல்லுநர்கள் அனைவரும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வரலாற்று நூல்களை இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்த்திடும் பணிகளைத் தொடங்கினர்.

பின்னர் இதன் 42-ஆம் மாநாடு கயாவில் (Gaya) பேராசிரியர் சதீசு சந்திரமிசுரா (Prof. Satish Chandra Misra) தலைமையில் 1981-ஆம் ஆண்டிலும், 43-ஆம் மாநாடு குருசேத்திராவில் (Kurukshetra) இர்பான் அபீபு (Irfan Habib) தலைமையில் 1982-ஆம் ஆண்டிலும் நடைபெற்றன. பின்னர் 1983-இல் பர்தவான் பல்கலைக்கழகத்தில் இதன் 44-ஆம் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1984-இல் 45-ஆம் மாநாட்டிற்கு உறுதுணை நின்றது. இக்கழகத்தின் 46-ஆம் மாநாடு 1985-ஆம் ஆண்டு திசம்பர் கடைசி வாரத்தில் பஞ்சாபு மாநிலத்திலுள்ள அமிர்தசரசில் நடைபெற்றது.

இவ்வாறு இக்கழகம் தொடங்கப்பெற்ற நாளிலிருந்து நாடு முழுவதும் புகழ்பெற்ற வரலாற்று வல்லுநர்களை ஒருங்கிணைத்துப் புதிய பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வெளியிட்டு, ஆய்வுப் பணிகளை ஆர்வலர்கட்கு அளித்து, புதிய பாட முறைகளை வரலாற்று மாணவர்கட்கு வழங்கிப் பெருந்தொண்டாற்றி வருகிறது என்பது மறுக்கவியலாத உண்மை. எம்.தே.

**இந்திய விடுதலைச் சட்டம்**: இந்தியவிடுதலைச் சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1947-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 18-ஆம் நாள்

நிறைவேற்றியது. இச்சட்டத்தின் வாயிலாக இந்திய விடுதலை உறுதி செய்யப்பட்டு ஏறத்தாழ 40 கோடி மக்கள் தொகையினை உள்ளடக்கிய மிகப்பெரிய தொரு நாட்டினை இரண்டு பிரிவாகப் பிரித்து, சுதந்திர அரசுகளுக்கு அதிகார மாற்றத்தினை எளி தாகவும் விரைவாகவும் செய்ய வழி பிறந்தது.

இந்தியாவிற்கு முறையான விடுதலை வழங்கிட, இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இயற்ற வேண்டிய சட்டத்திற்கான சட்டமுன் வரைவை ஆயத்தம் செய்திடமவுண்ட்டுபேட்டன்பிரபு இந்தியத் தலைவர் களுடைய கருத்துகளுக்கிணங்க அதன்கண் புதிய பல திருத்தங்களைச் செய்து, அப்போதைய சீர்திருத்த ஆணையரான(Reformer Commissioner)வி.பி.மேனன் என்பாரின் கருத்துரையின் அடிப்படையில் அதற்குப் புதிய வடிவம் தந்தார். தலைமை அமைச்சர் அட்லி (Atlee) அச்சட்ட முன்வரைவை1947 சூலைத் திங்கள் 4-ஆம் நாள்பொது அவையின்(House of Commons) ஒப்புதலுக்காக முன்வைத்தார். அச்சட்ட முன்வரை வினைத் தொழிற்கட்சியும் (Labour Party) எதிர்க்கட் சியாக இருந்த பழைமை விரும்பிகள்கட்சியும் (Conservative Party) ஆதரிக்கவே, அது எதிர்ப்பின்றிப் பாரா ளுமன்றத்தின் இரு அவைகளிலும் விரைவாக நிறை வேற்றப்பட்டுச் சூலை 18-ஆம் நாள் இங்கிலாந்து மன் னரின் ஒப்புதலைப் பெற்றது. அதன் அடிப்படையில் 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாள் தலைமை ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற 'இந்திய' ஆணையின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இந்திய விடுதலைச் சட்டம் (Indian Independence Act, 1947) நடை முறைக்குவந்தது. இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு விடுதலை நாடுகள் உருவாயின. இதன் வாயிலாக உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்களுக்குஅரசியல் விடுதலைவழங்கப்பெற்றது.

இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்: இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு சுதந்திர ஆட்சிகள் (Dominions) 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15 முதல் உருவாக்கப்படும். சிந்து, பலுச்சிசுத்தானம், வட மேற்கு எல்லைப்புற மாநிலம், மேற்குப் பஞ்சாபு, கிழக்கு வங்காளம் ஆகியவை பாகிசுத்தானில் அடங் கும். ஏனைய பகுதிகள் விடுதலை இந்தியாவில் அடங்கும். இந்த இரு அரசுகளின் முடிவான எல்லையை உறுதிப்படுத்த எல்லை நிருணயக் குழு ஒன்று அமைக்கப் பெறும்.

இந்த இரு அரசுகளின்ஆட்சிக்கும் தலைமை ஆளு நர்களை இங்கிலாந்து மன்னர் அமர்த்துவார். புதிய அரசுகளின் சட்டமன்றங்கள் மறுக்காத வரையில் ஒருவரே இரு அரசிற்கும் தலைமை ஆளுநராகப் பணியாற்றலாம். பின்னர் 1945 ஆகசுட்டு 15-ஆம் நாளுக்குப் பிறகு அந்தந்த நாட்டின் சட்டமன்றங் களே முழு அதிகாரம் கொண்டிருக்கும். இந்தியா விற்குச் சட்டமியற்றும் அதிகாரத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் இழக்கும். அது போன்று அந்நாள் முதற்கொண்டு இந்தியாவை ஆளும் பொறுப்பி லிருந்து இங்கிலாந்து அரசு விலகும். இங்கி லாந்துக்கும் இந்தியச் சிற்றரசுகட்கும் அல்லது பழங்குடி மக்கட்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங் கள் அனைத்தும் செல்லுபடியாகா என்று இச்சட்ட முன்வரைவு கூறியது.

இதன் பின்னர் இங்கிலாந்து மன்னர், 'இந்தியப் பேரரசர்' என்ற பட்டத்தினைத் துறப்பார். இந்தியா, பாகிசுத்தான் என்னும் இரண்டு நாடுகளி லும் அரசியல் நிருணய அவைகளே மத்திய சட்ட மன் றங்களாகப் பணியாற்றும். இந்தியவிடுதலைச் சட்டத் தினை நடைமுறைக்குக் கொணரும் அதிகாரம் தலைமை ஆளுநரிடமே இருக்கும்.

புதிய அரசில் அரசு அலுவலர்களை இந்திய அமைச்சர்நியமிக்கவியலாது என்றாலும் ஏற்கெனவே பணியிலுள்ள அலுவலர்களின் நலன்கள் பாதுகாக் கப்படும். இந்தியப் பாதுகாப்புப் படை இரு நாடு களின் அரசுகளுக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்படும். இந்திய அமைச்சரும், இந்தியக் கணக்கு ஆய்வாள ரும் இதுகாறும் ஆற்றிய பணிகளைத் தொடர வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். அதிகார மாற் றத்திற்கான விடுதலை விவரங்களை விரிவான ஆய் வின் அடிப்படையில் ஒப்படைக்கப்படும்.

வங்காள மாநிலத்தைக் கிழக்கு, மேற்கு வங்கா ளங்களாகப் பிரிப்பதற்காகவும், சில்கட் (Silhut) என்ற பகுதியை அசாமில் (Assam) இருந்து பிரித்து வங்காளத்துடன் இணைப்பதற்காகவும் சர் சிரில் ராடு கிளிப்பு (Sir Cryl Rad Cliffe) என்பவர் தலை மையில் ஓர் எல்லை நிருணயக் குழுவினையும், கிழக்கு, மேற்கு பஞ்சாபின் எல்லையை வரையறுக்க அவர் தலைமையில் பிறிதொரு குழுவையும் மவுண்ட்டு பேட்டன் பிரபு அமர்த்தினார்.

இக்குழுவின் உறுப்பினர்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளால் இதன் தலைவரே எல்லை நிருணயப் பணிகளை இறுதியில் வரைந்திட வேண் டியதாயிற்று. இதன்படி வங்காளத்தில் முசுலிம் மக் கள் பெரும்பான்மையாக வாழ்கிற மாவட்டங்க ளான சிட்டகாங்கு (Chittagang), நவகாளி(Noakhali, திப்பேரா, பேகர்கஞ்சு, தாக்கா (Dhaka), பரீத்பூர் (Faridpur), மைமென்சிங்கு (Mymensingh), செசோர் (Jessore), நாதியா (Nadhiya), பாக்ரா (Bacra), தினா சுபூர் (Dhinajpur), மால்டா (Malda), பப்ளு (Bablu),

இராசசாகி (Rajashahi), இரங்பூர் (Rangpur) போன்ற இடங்களில் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையினராக வாழாவிட்டாலும், இயற்கை எல்லையை வகுக்க வேண்டுமென்னும் அடிப்படையில் குல்னா (Khulna) மாவட்டமும் கிழக்கு வங்காளத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டது இத்துடன் அசாமின் சில்கட்டுப் பகுதியும் இணைக்கப்பட்டது.

வங்காளத்தின் ஏனைய பகுதிகள் மேற்கு வங்காளமாக உருவெடுத்தன. இதன் விளைவாக வங்காள முசுலிம்களில் 16 விழுக்காட்டினர் மேற்கு வங்காளத்திலும், முசுலிம் அல்லாதவர் ஏறத்தாழ 42 விழுக்காட்டினர் கிழக்கு வங்காளத்திலும் வாழ நேர்ந்தனர். மக்களுள் 45 விழுக்காட்டினர், 38 விழுக்காட்டு நிலப்பரப்பில் வாழ்ந்தனர். பியாசு (Beas), சட்லசு (Sutlej), இராவி (Ravi) ஆறுகளின் மீது கட்டுப்பாடுகள் செலுத்தும் மேலாதிக்கமும் கிழக்குப் பஞ்சாபிற்குக் கிடைத்தது.

மேற்கூறிய பிரிவினை நிகழ்ந்தபோது ஆங்காங்கே எதிர்ப்புகள் எழுந்தபோதிலும் விரைவில் எல்லைகள் வரையறை செய்யப்பெற்றன.

இந்திய விடுதலைச் சட்டப்படி இந்தியாவிற்கும் பாகிசுத்தானத்திற்கும் ஒரே தலைமை ஆளுநர் பணி புரியலாம். அப்போதைய சூழ்நிலையில் இரு வேறு நாடுகளுக்கிடையில் எளிதில் தீர்க்க இயலாத பல சிக்கல்களின் தன்மையினை நன்குணர்ந்திருந்த மௌண்ட்பேட்டன் பிரபுவே இடைக்காலத் தலைமை ஆளுநராகப் பணிபுரிய வேண்டுமென்று பலரும் விரும்பினர். நேரு முதலான தலைவர்கள் இந்தியாவில் தொடர்ந்து மவுண்ட்டுபேட்டன் பிரபுவே தலைமை ஆளுநராகப் பணிபுரிய வேண்டுமென்றபோதிலும், முகமது அலி சின்னா (Muhammad Ali Jinnah) போன்றவர்கள் அதற்கு மாறான கருத்தைக் கூறி வந்தார்கள்.

அதன்பின்னர் அதிகார மாற்றம் செய்யவேண்டி, முறைப்படி இடைக்கால அரசின் காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களிடம் இந்திய அரசின் நிருவாகத் துறைகள் ஒப்படைக்கப் பெற்றன. பாகிசுத்தான் அரசின் நிருவாகத்துறைகள் முசுலிம்லீகுப் பேராளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இரு நாடுகளைச் சார்ந்த பேராளர்கள், தலைமை ஆளுநரின் தலைமையில் பொதுவாக அரசுப்பணிகளைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சமயச் சார்புடைய கருத்துவேற்றுமைகளால் பிரிவினை தொடர்பான சிக்கல்கள் உருவாகுமானால் அதனைத் தீர்க்கப் பிரிவினைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் காங்கிரசு, முசுலிம் லீகு உறுப்பினர்கள் ஒத்த அளவில் பங்குபெற்றனர். இதன் தலைவராகமவுண்ட்டுபேட்டன் பிரபுவே இருந்தார்.

இரண்டு அரசுகளும் தீர்வு காணவியலாத பொதுவான சிக்கல்களில் தலையிட்டுத் தீர்ப்பு வழங்கிட சர். பாட்ரிக் இசுபென்சு (Sir patric Spence) என்பவர் தலைமையில் ஓர் இந்தியப் பேராளரும், ஒரு பாகிசுத்தானியப் பேராளரும் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது.

முப்படைகள் பிரிக்கப்பட்டு, அதில் நான்கில் ஒரு பகுதி பாகிசுத்தானுக்கு அளிக்கப்பட்டது. முசுலிம் பிரிவுகள் பாகிசுத்தானுக்குச் சென்றன. மற்றப் பிரிவினர்கள் இந்தியாவுடன் இணைந்து கொண்டனர். பிரிவினையின்போது எழும் சிக்கல்களைக் களைய வசதியாக ஒரு பொதுவான படைத் தலைமை இன்றியமையாததாக இருந்தாலும், வகுப்புவாத உணர்வு படைப்பிரிவுகளிலும் ஊடுருவி விட்டதால் அதனைச் செயற்படுத்த இயலவில்லை. ஆங்கிலப் படைவீரர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறினர்.

இந்தியச் சுதந்திரச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் முன்னிருந்த சட்டமன்றம் செயற்படுத்திய எல்லா அதிகாரங்களையும் அரசியல் நிருணய அவை செயற்படுத்தலாம். அரசியல் நிருணய அவை (Constituent Assemblies) இறைமையுடையனவாக (Sovereignty) கட்டுப்பாடுகளின்றி அரசியலமைப்பையும் உருவாக்கலாம். ஆனால் சட்டமன்றங்களாகச் செயற்படும்போது 1935–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திற்குட்பட்டுச் செயற்படவேண்டும்.

மக்கள் இறைமையினின்றும் விருப்பினின்றும் பிறந்ததே அரசியலமைப்பாகும். ‘நாமே நமக்கு அளித்துக்கொண்ட அரசிலமைப்பு’ என்றும், ‘இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஓர் இறைமையுள்ள மக்களாட்சிக் குடியரசாக அமைக்கிறோம்’ என்றும் அரசியலமைப்பின் முகப்பு கூறுகிறது.

இந்திய விடுதலைச் சட்டம் 1947 இடைக்காலமாகக் கருதப்பட்ட இந்தியாவை ஒரு விடுதலை பெற்ற நாடாக்கியது. 1945–ஆகசுட்டு 15–ஆம் நாள் முதல் 1950–ஆம் ஆண்டு சனவரி மாதம் 26–ஆம் நாள்வரை இந்தியா சுதந்திரத்தகுதி பெற்ற (Dominion) நாடாகவிருந்தது. பின் புதிய அரசியலமைப்புடன் கூடிய குடியரசின் தொடக்க நாளாகிய 1950 சனவரி 26 முதல் இந்தியா முழுமைபெற்ற இறைமை நாடாயிற்று.

இந்திய விடுதலைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும், பண்டித சவர்கலால் நேரு, இந்தியாவின்

தலைமை அமைச்சராகவும், மவுண்ட்டுபேட்டன் பிரபு முதல் தலைமை ஆளுநராகவும் பதவியேற்றனர். அதேபோன்று இலியாகத் அலி கான் (Liaguat Ali Khan) முதல் பாகிசுத்தானிய தலைமை அமைச்சராகவும், சின்னா (Jinnah) அந்நாட்டின் முதல் தலைமை ஆளுநராகவும் பதவியேற்றனர்.

**இச்சட்டத்தின் பின்விளைவுகள்:** ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறியதும், அரசியல் அடிப்படையில் ஆங்கிலேய இந்தியா என்றும், இந்திய இந்தியா என்றும் இந்நாடு துண்டிக்கப்பெற்றது. ஆங்கிலேய இந்தியாவில் ஒன்பது ஆளுநர் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களும் ஐந்து தலைமை ஆளுநரின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களும், மலைவாழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளும், எல்லைப்புற மாநிலங்களும், அந்தமான்-நிக்கோபார் தீவுகளும் உள்ளடங்கியிருந்தன.

இந்திய இந்தியாவில் சிறியதும் பெரியதுமாக சற்றேறக்குறைய 500 மாநிலங்கள் அடங்கியிருந்தன இவற்றுள் நூற்றுக்கும் மேலானவை அளவில் பெரியனவாகும். ஐதராபாது, காசுமீர், மைசூர், திருவிதாங்கூர் (Travancore), பரோடா ஆகியவை இவற்றுள் அடங்கும். ஒரு சில மாநிலங்கள் தவிர பெரும்பாலானவற்றில் தன்னாட்சி நிலவி வந்தது. அவை இடைக்கால ஐரோப்பிய நிலமானிய நாடுகளைப் போன்ற தோற்றம் கொண்டனவாய் இருந்தன.

இந்திய விடுதலைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும் இவை முழு இறைமை பெற்ற மாநிலங்களாயின. இந்தியா அல்லது பாகிசுத்தான் ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றில் இவை சேர்ந்திடும் முழு உரிமை பெற்றிருந்தமையால், அப்பகுதி வாழ் மக்களின் விருப்பத்திற்கிணங்கவும், அரசியல், புவியியல் காரணங்களுக்காகவும் இம்மாநிலங்கள் இரண்டு நாடுகளுள் தாம் விரும்பும் நாட்டோடு இணைந்து கொண்டன.

பெரும்பாலான மாநிலங்கள் இந்தியாவுடன் இணைந்துகொண்டதால், நாட்டில் அடங்கிய எல்லைகளைத் திருத்தி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 'ஒன்றுபடுதல்' (Integration) என்னும் முறைப்படி இராசசுத்தானம்(Rajasthan), திருவிதாங்கூர், கொச்சி, (Trivancore Cochin) சௌராட்டிரம் (Sourashtra) போன்றன இவ்வகையில் உருவான மாநிலங்களாகும்.

'இணைப்பு' (Merger) என்னும் முறைப்படி சிறு மாநிலங்கள் ஒன்று சேர்ந்து அண்மையிலிருந்த பெரிய மாநிலங்களுடன் இரண்டறக் கலந்தன. பீகாருடன் சேரைக்கெல்லா, காசுரவம் போன்ற சிற்றரசுகளும், ஒரிசாவுடன் சில நிலமானிய அரசுகளும், சென்னை மாநிலத்துடன் புதுக்கோட்டையும் இவ்வகையாகச் சேர்ந்தன.

இதன் விளைவாக இந்திய ஒன்றியம் பதினாறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலங்களில் பின்னர் மக்களின் பேராளர்கள் ஆள்வதற்கும் வழியேற்பட்டது. புதிய இந்தியா பல்வேறு மாநில அரசுகளைக் கொண்டு, நன்றாகப் பிணைக்கப்பட்டு, மத்திய அரசுடன் கூடிய கூட்டாட்சி முறை (Federal System) அரசியலொன்று ஏற்பட வழிகண்டது. இவ்வரிய சாதனையை நிகழ்த்தியவர் அரசியல் வித்தகரான சர்தார் வல்லபாய்பட்டேல் ஆவார்.

எம். தே.

துணை நூல்கள்:

**Pylee, M.V.**, India's Constitution trans. by Kuppusuamy TV., & Subramaniam S., Bureau of Tamil Publications, Tamil Nadu Government, Madras, 1967.

**Kannaiah, V.**, Indian Constitution, Bureau of Tamil Publications, Government of Tamil Nadu, Madras, 1968.

**இந்திய வெடி பொருள் சட்டம்,** இந்தியாவை ஆண்டு வந்த ஆங்கில அரசால் கி.பி. 1884-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச் சட்டம் கி.பி. 1887-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதி செயல்முறைக்கு வந்தது. அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லத்தக்கது. வெடிபொருள்களை உற்பத்தி செய்வது, இறக்குமதி செய்வது, சேர்த்து வைப்பது, எடுத்துச் செல்வது ஆகிய செய்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் இந்திய வெடி பொருள் சட்டம் (The Indian Explosives Act 1884) இயற்றப்பட்டது.

வெடிபொருள் என்பது வெடிமருந்து (Gun-Powder) கலவை நீர்மம் (Nitro-Glycerine), வெடிமருந்து (Dynamite), துப்பாக்கித் துணி (Gun-Cotton) வெடிக்க அல்லது உடைக்கப் பயன்படும் பொருள்கள், பாதரசம் அல்லது ஒத்த உலோக பல்மினேட்டு (Fulminate), வண்ண மத்தாப்பு அல்லது மேற்கூறியவற்றை ஒத்த பிற பொருள்கள் அல்லது வெடிக்கவோ உடைக்கவோ தீ மூட்டவோ உதவும் பொருள்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். மேலும், வெடிபொருள் என்பது மூடுபனிச் சைகை (Fog Signal), வாணம், வெடித்திரி, எறிவாணம், வெடிமருந்து மூடி, அதிர்வெடி, தோட்டா, பலவகை

வெடிகுண்டுகள், அல்லது மேற்கூறியவற்றிலிருந்து தக்கபடி மாற்றியமைத்த பிற பொருள்கள் ஆகிய வற்றையும் குறிக்கும்.

மேற்கூறிய விளக்கத்தையொட்டி ஏற்படும் வெடி பொருள் பட்டியலில் ஒரு பொருளைக் கூட்டவோ, நீக்கவோ மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. மிக வும் அபாயகரமான வெடிபொருள்களை இறக்குமதி செய்வது, உற்பத்தி செய்வது ஆகியவற்றை முழுமை யாகத் தடை செய்யவோ, அவ்வாறு இறக்குமதி மற் றும் உற்பத்தி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக் கவோ மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. மேற்கூறி யவாறு, இச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற் றும் வகையில் உரிமம் வழங்குவதற்கும், விதிமுறை களைத் தயார் செய்வதற்கும் மத்திய அரசுக்கு இச் சட்டத்தின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதிமுறைகளைத் தயார் செய்யுமுன் அதன் நகல் வெளியிடப்பட வேண்டும். வெளியீடு செய்யப்பட வேண்டிய முறை குறித்து மத்திய அரசு முடிவு செய்யும். அந்த நகல் குறித்து எழுப்பப்படும் எதிர்ப் புகள், ஆலோசனைகள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு அசல் விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண் டும். அசல் விதிமுறைகள் அரசு இதழில் (Official Gazette) வெளியிடப்பட்டவுடன் செயல்முறைக்கு வரும்.

விதிமுறைகளை மீறி வெடிபொருள்களை இறக்கு மதி செய்வது, உற்பத்தி செய்வது, கைவசம் வைத் திருப்பது, உபயோகப்படுத்துவது, எடுத்துச் செல் வது, விற்பனை செய்வது ஆகிய செய்கைகள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கத்தக்க குற்றங் களாகும். அவ்வாறு தண்டிக்கக்கூடிய குற்றத் தொடர்பான வெடிபொருள்களும், அவற்றை வைத் திருக்கப் பயன்படுத்தும் பண்டங்களும் பறிமுதல் செய்யப்படத்தக்கவையாகும். மேற்கூறியவாறு குற் றத்தை ஒரு மரக்கலத்தின் உரிமையாளர் செய்து அதற்காக ஒறுப்புத்தொகை (Fine) விதிக்கப்பட்டால் அந்தத் தொகையை அவரிடமிருந்து பெற அந்த மரக்கலத்தை விற்பனை செய்ய ஆணையிடலாம். அஞ்சத்தக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய குற் றங்கள் புரிபவரை நடுவரது ஆணையின்றிக் கைது செய்யலாம். அவ்வாறான குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி வெடிபொருள் உற்பத்தி செய்யப்படும் - வைத்திருக் கும் - உபயோகப்படுத்தும் - எடுத்துச் செல்லப்படும் இடம் அல்லது வாகனங்கள், மரக்கலம் ஆகியவற்றில் நுழைந்து சோதனை செய்யலாம். அச் சோதனை யில் வெடிபொருளைக் கைப்பற்றவும், அழிக்கவும் செய்யலாம்.

மத்திய அரசு தயாரிக்கும் விதிமுறைகளை யொட்டி இந்தியப் படைகள் உற்பத்தி செய்யும்- வைத்திருக்கும் - உபயோகிக்கும் - எடுத்துச் செல் லும் - அல்லது இறக்குமதி செய்யும் வெடிபொருள் களுக்கு மேற்கூறிய இச் சட்டத்தின் விதிகள் பொருந்தா. அதுபோல், மத்திய மாநில அரசுகளால் அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் இச்சட்டத்தின்படி செய்யும் செய்கைகளுக்கும் மேற்கூறிய இச்சட்டத் தின் விதிகள் பொருந்தா.

வெடிபொருள்கள் உற்பத்தி செய்யும் - வைத்தி ருக்கும் - இடங்களிலோ, வாகனங்கள் மரக்கலங்க ளில் எடுத்துச் செல்லும்போதோ, அவற்றில் ஏற்றி இறக்கும்போதோ வெடிபொருள் வெடித்து விபத்து ஏற்பட்டால் அதை உடனே உரிமையாளர் அல்லது வாகனங்கள் மரக்கலங்கள் ஆகியவற்றைத் தம் பொறுப்பில் வைத்திருப்போர் விதிமுறைகளில் குறிப் பிட்டுள்ள காலத்துக்குள் அண்மையிலுள்ள காவல் நிலைய அதிகாரிக்கும், தலைமை வெடிபொருள் ஆய்வாளருக்கும் தெரியப்படுத்த வேண்டும். அவ் வாறு தெரியப்படுத்தாத செய்கை தண்டிக்கதக்கக் குற்றமாகும்.

மேற்கூறிய விபத்து இந்தியப் படைகளைப் பற் றியதாய் இருந்தால் அப்படையைச் சார்ந்த அதி காரிகள் அவ்விபத்துக் குறித்து விசாரணை செய்ய வேண்டும். வேறு இடங்களில் நிகழும் விபத்துக் குறித்து, அது தலைமை நகரமாக (Presidency Town) இருந்தால் காவல்துறை ஆய்வாளரும், வேறு இட மாக இருந்தால் மாவட்டக் குற்றவியல் நீதிபதியும் (District Magistrate) விசாரணை செய்ய வேண்டும். விபத்துக் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்ட நிலை யில், அந்த அதிகாரிகள் மட்டில் விசாரணை செய்ய அதிகாரம் உண்டு. உயிரிழப்பு இல்லாத நிலையில் மாவட்டக் குற்றவியல் நீதிபதிக்குக் கீழ்ப் பணிபுரியும் ஒரு நீதிபதி விசாரணை செய்யலாம். மத்திய அரசு விரும்பினால் மேற்கூறிய அதிகாரிகளை விடுத்து, தலைமை வெடிபொருள் ஆய்வாளரை அல்லது வேறு தகுதி வாய்ந்த ஒருவரை விபத்துக் குறித்து விசாரணை செய்ய ஆணையிடலாம். அவ்விசார ணையில் உதவி செய்ய வல்லுநர்கள் நியமிக்கப்பட லாம். மேற்படி விசாரணைகளின் நடைமுறைகள் குறித்து மத்திய அரசு விதிமுறைகள் தயார் செய்ய லாம். விபத்தின் காரணம், அதைத் தவிர்ப்பதற் கான வழி முறைகள் ஆகியவற்றை முடிவு செய்வது விசாரணையின் நோக்கமாகும். விசாரணை அதி காரிகளுக்குக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தி லுள்ள அதிகாரம் உண்டு. விசாரணை முடிந்தபின் அறிக்கை மத்திய அரசுக்கு அளிக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை கடுமையானது அன்று என்பதால் 1908-ஆம் ஆண்டில் வெடிசார் பொருள் சட்டம் (The Explosive Substance Act, 1908) இயற்றப்பட்டது. வெடிசார் பொருள் என்பது வெடி செய்யப் பயன்படும் அனைத்துப் பொருள்களையும், வெடிமருந்தை உள்வைத்தோ உடன் வைத்தோ வெடியை உருவாக்கவும், உருவாக்க உதவவும் பயன்படும் கருவிகள், எந்திரங்கள், அமைப்புகள் ஆகிய அனைத்தையும் அல்லது அவற்றின் தனி உறுப்புகளையும் உள்ளடக்கும்.

சட்டப் புறம்பாக வேண்டுமென்றே வெடிக்கக் கூடிய பொருளைப் பயன்படுத்தி வெடிக்கச் செய்வதன் மூலம், மனித உயிருக்கு ஆபத்து அல்லது பொருளுக்குக் கடும் சேதம் உண்டாக்கக்கூடிய ஆபத்தை ஏற்படுத்தும் செய்கைக்கு, அவ்வாறு உண்மையாகவே உயிருக்கு ஆபத்து அல்லது பொருளுக்குச் சேதம் உண்டாகாத நிலையிலும் கூட, ஆயுள் தண்டனை வரை கடும் தண்டனை விதிக்க மேற்கூறிய 1908-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அதுபோல், உயிருக்கு ஆபத்து அல்லது பொருளுக்குக் கடும் சேதம் விளைவிக்கக்கூடிய வகையில் வெடிபொருளைப் பயன்படுத்தி, வெடியை உண்டாக்கும் நோக்கத்துடன் செய்யும் செய்கைக்கும், அந் நோக்கத்துடன், வெடி பொருளைச் செய்வதோ, தன் கைவசம் அல்லது தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோ போன்ற செய்கைக்கும் தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. வெடி பொருளைச் செய்வது அல்லது தெரிந்தே தன் கைவசம் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்ற செய்கையானது சூழ்நிலை காரணமாகச் சட்டப் புறம்பான நோக்குடன்தான் அச்செய்கை ஏற்பட்டுள்ளது என்ற நியாயமான சந்தேகம் ஏற்படும் கட்டத்தில் அச்செய்கைக்கும், மிகக் கடும் தண்டனை விதிக்க, மேற்கூறிய 1908-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்:** இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மைத் துறையின் பங்கு மிகச் சிறப்புப் பெற்றதாகும். இத்துறை, நாட்டு உழைப்புக் குழாமின் (Labour force) 74 விழுக்காட்டினருக்கு வேலை வாய்ப்பை அளிப்பதாகவும், நாட்டு வருவாயில் 40 விழுக்காட்டைத் தரும் உற்பத்தித் துறையாகவும் இருந்து வருகிறது. வேளாண்மைப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தில் வேளாண்மை ஆராய்ச்சியின் தேவையை உணர்ந்து, ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பேரரசு வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் என்னும் அமைப்பு, 1929-ஆம் ஆண்டு புது தில்லியில் (New Delhi) நிறுவப்பட்டது. இந்த அமைப்பே விடுதலைக்குப் பின்பு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக (Indian Council for Agricultural Research) (ICAR) மாக உருவெடுத்து, நாட்டு வேளாண்மைத் துறையின் பணிகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும் தலைமையிடமாக வளர்ந்துள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் அமைப்பில் இரு முறை குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. (1) மைய அரசின் கீழ் 1966-ஆம் ஆண்டுவரை தனிப்பட்ட முறையில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் செயற்பட்டு வந்த வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை மீன் வளத் துறை ஆகியவற்றையும் அவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கிய அனைத்து ஆராய்ச்சி நிலையங்களையும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், தன் கீழ்க் கொண்டுவந்தது. இக்கழகம் தன்னாட்சி அமைப்பாகவும் திருத்தி அமைக்கப்பட்டது. (2) வேளாண்மை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, 1973-ஆம் ஆண்டு மைய, மாநில அரசுகளின் தொடர்புகளை வலுப்படுத்தவும், அயல்நாட்டுத் தொடர்புகளை நேரடியாகக் கவனித்துக் கொள்ளவும், மைய அரசின் வேளாண்மைப் பிரிவில், 'வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வித் துறை' (Department of Agricultural Research Education-DARE) என்னும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின் செயலாளர் கழகத்தின் தலைமை இயக்குநர் (Director) ஆவார். இவ்விதம் நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தி முன்னேறி வரும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், நாட்டின் வேளாண்மை, கால்நடை, மீன் வளர்ச்சி ஆகியவற்றிற்குத் தேவையான ஆராய்ச்சி, கல்வி, விரிவாக்கப் பணிகள் ஆகியவற்றைத் திட்டமிட்டு, ஒருங்கிணைத்துச் செயற்படுத்தி வரும் தலைமையகமாக வளர்ந்துள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் 37 ஆராய்ச்சி நிலையங்களும், அதன் கீழ்ப் பல்வேறு துணை நிலையங்களும், எண்ணற்ற ஆராய்ச்சியாளர்களுடனும், தேவையான பல புதிய தொழில்நுட்ப ஆய்வு வசதிகளுடனும் செயற்படுகின்றன. இக்கழகம், நாட்டிலுள்ள 25 வேளாண்மைப் பல்கலைக் கழகங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவற்றின் வளர்ச்சியிலும் ஆராய்ச்சிப் பணிகளிலும் சிறப்புப் பங்கு வகித்து வருகிறது. இவற்றைத் தவிர, தேசிய அளவிலான நிலையங்களான இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் (IARI), இந்தியக்

கால்நடை ஆராய்ச்சி நிலையம் (IVRI) தேசிய பால்வள ஆராய்ச்சி நிலையம் (NDRI) ஆகிய மூன்றும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்பட்டு வருகின்றன. மேலும் இக்கழகம், அனைத்திந்தியத் திட்டங்களான 71 ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்கள் மூலமும் (AICORP), 392 தனிப்பட அமைந்த (Adhoc) ஆராய்ச்சித் திட்டங்கள் மூலமும் உணவுப் பயிர்கள், பணப் பயிர்கள் (Cash Crops), தோட்டக்கலைப் பயிர்கள், மண் உழவியல், வேளாண்மைப் பொறியியல், கால்நடை, மீன் இன முன்னேற்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக முனைப்புடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. தமிழகத்தில், கோவை நகரில் உள்ள கரும்புப் பயிரின் வளர்ச்சி நிறுவனம் (Sugarcane Breeding Institute) இதற்கு எடுத்துக்காட்டாகும்.

வளர்ச்சி (Growth): இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் உணவு, பிற வேளாண்மை விளைபொருள்கள் ஆகியவற்றைக் குறுகிய காலத் தேவைக்கும் நீண்டகாலத் தேவைக்கும் ஏற்ப உற்பத்தி செய்யும் பொருட்டு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்கள், அவ்வப்போது உருவாக்கப்பட்டுத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறு தொடர்ந்து வளர்ந்தும் விரிவடைந்தும் வரும் பல்வேறு வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் அதன் தொடர்பான ஆராய்ச்சிக் கல்வி மேம்பாட்டிற்கும் என மைய அரசு அளித்த உதவித்தொகை 1947-48-இல் உரூ. 0.16 கோடியாக இருந்தது 1983-84-ஆம் ஆண்டில் உரூ. 581.83 கோடியாக உயர்ந்துள்ளது. இம் முதலீட்டு வளர்ச்சியுடன் 1949-50-ஆம் ஆண்டு உணவுப் பொருள்களின் உற்பத்தியும் 54.9 மிலியன் கண்டியிலிருந்து(Tonnes) 1983-84-ஆம் ஆண்டில் 151.5 மிலியன் கண்டியாக உயர்ந்துள்ளதை ஒப்பிடும் போது, கழகத்தின் செயற்பாட்டுத் திட்டங்களின் பலனையும் அதன் விளைவாக உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளதையும் அறிந்துகொள்ள இயலும். மேலும் இந்த ஆண்டில் வேளாண்மை ஆராய்ச்சி, கல்வித் துறை ஆகியவற்றிற்குக் கூடுதலாக உரூபாய் 715 கோடிகளை முதலீடு செய்ததுடன் உணவுப் பொருள்களின் உற்பத்தியையும் 160 மிலியன் கண்டியாக உயர்த்தத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டும் வருகின்றன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் வேளாண்மை ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டதன் விளைவாக, உணவுப் பொருள்களின் உற்பத்தி, உலக நாடுகள் போற்றும் வண்ணம் பெருகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொடக்கக் காலத்தில் பல்வேறு சிக்கல்களைக் கடந்து, பலவித மாற்றங்களுக்கு உட்பட்டு, வேளாண்மைத் துறையில் அறிவியல் கல்வியின் வளர்ச்சிக்கு அடிகோலும் ஓர் இயக்கமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் உருவெடுத்தது. இக் கழகம், நாடெங்கிலும் வேளாண்மை அறிவியல் மையங்களை அமைத்துள்ளது. அது மட்டுமன்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் வேளாண்மை வளர்ச்சி, ஆராய்ச்சி, உற்பத்தி ஆகிய பணிகளை வியத்தகு முறையில் செய்து வருகிறது. இக்கழகம் வெற்றியாக முடித்த பணிகளின் சிறப்புக் கூறுகள் பின்வருவன.

பயிர் முன்னேற்றம்: வீரிய மக்காச்சோளம் (1933) குட்டை ரக நெல் (1955), வீரியச்சோள ரகங்கள் (1957), வீரியக்கம்பு வகைகள் (1954,) குட்டைக் கோதுமை வகைகள் (1961), வீரியப்பருத்தி வகைகள் (1915) ஆகியவற்றின் கண்டுபிடிப்புகளைப் பயிர் முன்னேற்றத்தில் இந்த நூற்றாண்டின் சிறப்பான முன்னேற்றமென்று சொல்லலாம்.

மண், நீர்வளம் இவற்றிற்கான ஆராய்ச்சி 1935-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மண்ணின் நிறம், உவர் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியினால் பஞ்சாபு, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் மண்வளம் பாதிக்கப்பட்ட நிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டு, மண்வளத்தை மீண்டும் பெறத் தேவையான வழிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளன. மண் ஆய்வு அடிப்படையில், 1952-ஆம் ஆண்டுமுதல் நிலங்களில் நடத்தி வந்த உரங்களின் பயன்பாடு தொடர்பான ஆராய்ச்சிகளால் முடிவில், நாட்டில் பரவலாக உள்ள எல்லா மண் வகைகளிலும் பயிர்களுக்குத் தேவையான தழை, மணி சாம்பல் போன்ற ஊட்டச் சத்துகள் குறைவாக உள்ளன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நுண்சத்துகளைக் கண்டறிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு, நாட்டிலுள்ள மண் வகைகளில் துத்தநாகச் சத்துக் குறைவாக உள்ளமை அவ்வராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டது. இவை போன்ற ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், வருங்கால உற்பத்தித் திட்டத்திற்கும் தீவிர ஆராய்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் உறுதுணையாயிருக்கும்.

பயிர் சாகுபடி முறைகள்: உழவர்களின் நிலங்களில், 1955-ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து பயிர் சாகுபடி முறைகள் (Crop Management Practices) பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்து, பல்வேறு வேளாண்மைப் பருவம், மண்வளம், சூழ்நிலைகள் ஆகியவற்றிற்கு ஏற்பத் தேவையான பயிர்செய்யும்-வழிமுறைகளையும் இடவேண்டிய உரச் சத்துகளை

யும் குறித்து, விவரங்களைத் திரட்டி அளிக்கிறது. இதன் மூலம் பூச்சி மருந்துகள், களைக் கொல்லிகள், வளர்ச்சியை ஊக்குவிக்கும் மருந்துகள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு, அதன் விளைவுகளும் பயன் களும் செயல்முறைகளும் கண்டறியப்படுகின்றன. மானாவாரிச் சாகுபடிக்குத் தேவையான சாகுபடி முறைகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றால் முன் னேற்றம் காணப்பட்டு வருகிறது.

பொறியியல், நீர்ப்பாசன மேம்பாடுகள்: பயிர் உற்பத்தியின் போதும் அறுவடைக் காலத்திலும் அதன் பின்பும் செயற்படத் தேவையான வேளாண் மைக் கருவிகளையும் இயந்திரங்களையும் அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் முன்னேற்றங் களையும் ஆராய்ச்சி மூலம் வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கண்டறிகிறது. கால்நடைகளின் உதவியுட னும் எந்திர ஆற்றலுடனும் இயக்கப்படும் உழவுக் கருவிகள் பல, புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் ஓடும் நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் முறைகளிலும், சொட்டு நீர்ப்பாசன முறையிலும், பாசன நீரைக் கொண்டு செல்லும் முறைகளிலும், பாசன நீர்ப் பயன்பாட்டு முறைகளிலும், ஆராய்ச்சி கள் விரிவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வரு கின்றன.

கால்நடை அறிவியலும் ஆராய்ச்சிகளும்: கால் நடைகளின் இன முன்னேற்றத்திலும், கால்நடை ஊட்டச் சத்துகளிலும் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் வியக்கத்தக்க அறிவியல் கண்டுபிடிப்புகள் பல வற்றிற்கு உதவின; மாற்றங்களையும் ஏற்படுத்தின. உள்நாட்டு ஆராய்ச்சியும் கடல்வாழ் மீன்வள ஆராய்ச்சியும் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களை அடைந்துள்ளன.

தேசியத் திட்டங்கள்: அனைத்திந்திய ஒருங் கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்கள், 1957-ஆம் ஆண்டு முதல், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள், மாநில வேளாண்மைத் துறைகள் ஆகியவற்றின் உதவியோடு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற் றின் மூலம் தேசிய அளவில் முக்கியமான வேளாண்மை, கால்நடை, மீன்வளம் தொடர்பான சிக்கல்களுக்குப் பல ஆராய்ச்சியாளர்கள் கூட்டு ஆராய்ச்சிகளைப் பல இடங்களில் நடத்தி, முடிவு களைக் கண்டறிந்துள்ளனர்.

வேளாண்மைக் கல்வி: இரண்டாம் கல்விக் குழுவின் பரிந்துரைப்படி, விவசாயப் பல்கலைக் கழகங்களுக்குத் தேவையான எல்லா நிதி உதவி களும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகவே அளிக்கப்பட்டு வருகின்றன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், வேளாண்மைக் கல்லூரிகள் ஆகிய வற்றின் வளர்ச்சிக்காக இந்தக் கழகத்தால் தேர்வு செய்யப்பட்ட 26 பணிகளுக்கு 100 விழுக்காடு கொடைத் தொகை அளிக்கப்பட்டது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், 1985 ஆம் ஆண்டிற்குள் 163 கோடைக்காலப் பயிற் சிகளை (Summer Training Courses) நடத்தியுள்ளது. இதன் மூலம் 3300-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்கப் பணியாளர்கள் போன்றோர் பயன் பெற்றுள்ளனர். இவை தவிர கருத்தரங்குகள் (Seminars), மாநாடுகள் (Conferences), பட்டறைகள் (Workshops) முதலியன நடத்தப்பட்டு, பல்கலைக்கழக ஆசிரியர்கள் கல்லூரி ஆசிரியர்கள், அறிவியல் வல்லுநர்கள் ஆகியோரின் அறிவு மேம்பாட்டிற்கு வழி செய்யப்பட்டது.

இளநிலை, முதுநிலை வேளாண்மைக் கல்வித் தொடர்பான துறைகளில் தகுதியுடையோர் சேரும் பொருட்டுத் தகுதி அடிப்படையில், பல்வேறு உதவித் தொகைகளையும் ஊக்கத் தொகைகளையும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அளித்து வரு கிறது.

நாட்டில் உருவாக்கப்படும் அறிவியல் திறனைச் சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, 1975-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் முதல் வேளாண்மை அறிவியல் வல்லுநர்களுக்கென ஓர் அமைப்பு (ARS) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அறிஞர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு 'வேளாண்மை அறிவியலார் தேர்வுக் குழு, (Agricultural Scientists Research Bank-ASRB) ஒன்று அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

இளநிலை அறிஞர் முதல் ஆராய்ச்சி நிலையங் களின் இயக்குநர் வரையிலுள்ள எல்லோரும், வேளாண்மைசார் மேலாண்மை (Agricultural Management) யிலும் பிற துறைகளிலும் அவ்வப் போது பயிற்சி பெற, இந்திய வேளாண்மை ஆராய்ச் சிக் கழகத்தின் கீழ்த் 'தேசிய வேளாண்மை ஆராய்ச் சிக் கூடம்' (National Agricultural Agro Research Management-NAARM)ஒன்று ஐதராபாத்தில் செயற் பட்டு வருகிறது.

வேளாண்மை, கால்நடை, மீன்வளத்துறை தொடர்பான ஆராய்ச்சி, வளர்ச்சி விவரங்களை உடனுக்குடன் சேகரித்து அவற்றைப் பதிவு செய்ய வும், வேளாண்மைத் துறையின் திட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்கவும், ஆய்வு செய்ய

வும், தேவைப்படின் மாற்றியமைக்கவும், மதிப்பிட வும், 1930-ஆம் ஆண்டு புள்ளியியல் துறை ஒன்று தொடங்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

வேளாண்மையில் நடைபெற்றுள்ள ஆய்வுகளின் முடிவுகளையும் உத்திகளையும் விரைவில் பரவச் செய்யும் நோக்கத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் பின்வரும் முன்மாதிரித் திட்டங் களைச் செயற்படுத்தி வருகிறது: 1) விவசாயிகளுக் கும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் விவசாய அறிஞர்களைக் கொண்டு, 1965-ஆம் ஆண்டு முதல் பேரளவில் தேசிய செய்முறைத் (Demonstrative) திட்டங்களை விவசாயிகளின் நிலங்களில் செயற் படுத்தி வருகிறது. 2) தேசிய செய்முறைத் திட்டங் களின் மூலம் மண், நீர், பயிர் முதலிய வளங்களை ஒருங்கிணைந்த முறையில் முன்னேற்றம் செய்து, நாட்டின் மொத்த உற்பத்தித் திறனைப் பெருக்கு வதே குறிக்கோளாகும். 3) ஊரகப் பயிற்சி முகா மாகவும் செய்முறைக் கூடமாகவும் செயற்படும் வகையில், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர், இளைஞர், விவசாயிகள் ஆகியோருக் கென 85 வேளாண்மை அறிவியல் மையங்கள் தொடங்கப்பட்டு, பயிற்சிகள் மூலம் முன்னேற்றத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 4) சிறிய விவசாயிகளுக்கும் நிலமற்றவர்களுக்கும் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட வேளாண்மை உத்திகளைப் பர வச் செய்யவும் 'ஆய்வுக் கூடங்களிலிருந்து வய லுக்கு' (Lab. to Land) என்னும் திட்டம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பொன்விழா ஆண்டில் (1979) தொடங்கப்பட்டு, 1984-ஆம் ஆண்டு வரையில் 2 இலட்சம் வேளாண்மைசார் குடும்பங் களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. 5) வேளாண்மையின் ஆராய்ச்சி முடிவுகளையும், அறிவியல் விவரங்களை யும் எங்கும் பரவச் செய்யும் கையில் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு இவ் ஆராய்ச்சிக் கழகம் சிறப்பிடம் அளித்து வருகிறது. வேளாண்மை, கால்நடை, புள்ளி யியல், கல்வித்துறைத் தொடர்பான துறைகளில் 1985-ஆம் ஆண்டிற்குள் 15க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி ஏடுகளையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலைப்பு களில் வெளியீடுகளையும் உருவாக்கி வெளியிட்டுள் ளது. மேலும், வேளாண்மை பற்றிய விவரங்களையும் ஆராய்ச்சிகளையும் விவசாயிகள் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் அறியும் பொருட்டுப் பல செய்திச் சுருள்கள் படமாக்கப்பட்டு நாடெங்கி லும் திரையிடப்படுகின்றன.

அயல்நாட்டுத் தொடர்புகள்: உணவுப் பற்றாக் குறை நெருக்கடி (Food Shortage Crisis) காரணமாக எழுந்த பல அயல்நாட்டுத் தொடர்புகளையும் பட்டறிவுகளையும் (Experiences) இவ்ஆராய்ச்சிக் கழகம் நாட்டு வேளாண்மை வளர்ச்சிக்கு அளித்து உதவுகிறது. வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வித் துறை களில், அறிவியல், தொழில் முறை உதவிகளுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறது. ஆராய்ச்சித்துறை சார்ந்த 15க்கும் மேற்பட்ட ஒப்பந் தங்களைச் சோவியத்து உருசியா, அமெரிக்கா, உலக நிறுவனங்கள் (ICRISAT, IRRI, FORD Foundation) ஆகியவற்றுடன் செய்து கொண்டுள்ளது.

மேற்கண்ட ஆய்வுகளை உற்று நோக்கும்போது, தொடக்கம் முதல் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் படிப்படியாக நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப வும், அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கேற்பவும் தனது ஆராய்ச்சி அணுகுமுறையிலும் அமைப்பிலும் மாற்றங்களைச் செய்துகொண்டு வளர்ந்து வந்துள்ளதை அறியலாம். தலைமைப் பொறுப்பு, தொலைநோக்கு, கூட்டு முயற்சி ஒருங்கிணைந்த செயல் திட்ட முறைகள் முத லியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஆராய்ச்சி, கல்வி, விரிவாக்கத்துறை மூன்றையும் ஒருங் கிணைத்துச் சீரிய முறையில் பணியாற்றி, தன் பொன்விழாவைக் கொண்டாடி இருக்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நாட்டின் பொரு ளாதாரக் கட்டமைப்பில் மிகச் சிறந்த இடம் வகிக் கிறது என்று சொல்லலாம். முடிக்கப்பட்ட பணிகளை எண்ணிப் பெருமைப்படும்போது, இனி வரும் ஆண்டு களிலும் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தை அடைந்தாக வேண்டும் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். எந்தத் துறையிலும் ஆராய்ச் சிக்கு முடிவு என்ற நிலையை வரையறுக்க முடியாது. புதிய கண்டுபிடிப்புகள் புதிய சூழ்நிலையில் இணை யும்போது புதிய சிக்கல்களை உருவாக்கும். எடுத்துக் காட்டாக, இந்நூற்றாண்டின் இறுதியில் எதிர் பார்க்கப்படும் மக்கள் தொகையின் உணவுத் தேவை யை நிறைவு செய்ய உற்பத்தியை இரு மடங்காக உயர்த்த வேண்டியுள்ளது. பருப்புவகை, எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பின்தங்கிய நிலையிலிருப்பதால், இந்தியா அயல்நாட்டுச் செலா வணியை இவற்றின் இறக்குமதிக்காக இழந்து கொண்டிருக்கிறது. மேலும், பல பயிர்களின் உற்பத் தித் திறனில் மிகக் குறைந்த முன்னேற்றமே காணப் படுகிறது.

எஸ். ஆர். சு.

**இந்திய வேளாண்மை வளர்ச்சி:** பொரு ளாதார வளர்ச்சிக்கு வேளாண்மைத் துறையின் முன் னேற்றம் இன்றியமையாத் தேவை என்னும் வர லாற்று உண்மைக்கு வளரும் நாடுகளும் வளர்ந்த

நாடுகளும் சான்று பகர்கின்றன. பொருளாதாரம் பின்தங்கிய தேக்க நிலையிலிருந்து வளர்ச்சியின் முதல் படியாகிய எழுச்சி நிலையை(Take off stage)அடைய, அதன் வேளாண்மைத் துறை வளர்ச்சியடைய வேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகள் முதலில் வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்து, அதைத் தொடர்ந்து தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தன. பழங்காலத்திலிருந்தே வேளாண்மை இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கி வருகிறது. அண்மைக் காலத்தில் இத்துறை பசுமைப் புரட்சியின் விளைவாக வியக்கத் தக்க அளவில் மறுமலர்ச்சி அடைந்து அயல்நாடுகளுக்கு விளைபொருள்களை ஏற்றுமதி செய்யவும் தொடங்கியுள்ளது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 விழுக்காட்டினர் அன்றாட வாழ்க்கைக்கு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவ்வேளாண்மை இந்தியாவின் தலையாய தொழிலாக மட்டுமல்லாமல் தேசியத் தொழிலாகவும் உளதெனினும், சிக்கலான உற்பத்தி முறை, குறைந்த ஆக்கத்திறன் (Productivity),தரமற்ற விளைபொருள்கள், நிலவுடைமை முறை, துண்டுப்பட்டுச் சிதறுண்ட நில அமைப்புகள், உழவர்களை அழுத்தும் கடன்பளு, சமூக சமயக் கட்டுப்பாடுகள், மரபியல் பண்பாடுகள் முதலியவற்றால் வளர்ச்சி குன்றிக் காணப்படுகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம்(Growth Rate) அந்நாட்டின் வேளாண்மை வளர்ச்சி வீதத்தையும் சார்ந்துள்ளது. வேளாண்மைத் துறை நாட்டு மக்களின் இன்றியமையா உணவுத் தேவைகளை நிறைவு செய்வதாலும், தொழில் துறைக்கான மூலப் பொருள்களை அளிப்பதாலும், வேளாண்மை வருவாயைப் பெருக்கி உற்பத்திப் பொருள்களுக்கான தேவையைப் பெருக்குவதாலும், ஏற்றுமதியின் மூலம் அயற் செலாவணியைப் பெறுவதாலும், எண்ணற்றவர்க்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதாலும், நாட்டின் சிறப்புடையதாகப் போற்றப்பட்டு வருகிறது. நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலோர் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது மட்டுமல்லாமல் தங்கள் வாழ்க்கைக்கு அத்தொழிலையே நம்பியும் உள்ளனர். இவர்களின் விழுக்காடு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்பதைக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரம் விளக்குகிறது,

வேளாண்மையைத் தலையாய தொழிலாகக் கொண்டிருக்கும் நாட்டில் பிற தொழில்களின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பது வளர்ச்சிப் பொருளியல் வல்லுநர்களின் (Growth Economists) கருத்து. கடந்த எண்பது ஆண்டுகளாக 10 இந்தியர்களுள் 7 பேர் வேளாண்மைத் தொழிலைக் கொண்டவர்களா

அட்டவணை-1

| ஆண்டுகள் | வேளாண்மை சார்ந்த மக்கள் (விழுக்காட்டில்) |
|---|---|
| 1891 | 61 |
| 1901 | 66 |
| 1921 | 73 |
| 1931 | 65.6 |
| 1941 | — |
| 1951 | — |
| 1961 | — |
| 1971 | 67.0 |
| 1981 | — |

யிருந்த அதே காலத்தில், அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்குச்செருமனி, கனடா, நியூசிலாந்து முதலிய வளர்ச்சியடைந்த நாடுகளில் அவற்றின் மக்கள் தொகையில் 20 விழுக்காட்டுக்கும் 10 விழுக்காட்டுக்கும் இடைப்பட்டவர்களே வேளாண்மையைத் தங்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாகக் கொண்டிருந்தனர். மக்கள்தொகை எத்துறையைச் சார்ந்துள்ளது என்பதைக் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடலாம்.

நாட்டு வருவாய்: இவ்வாறு இந்தியாவில் வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டவர்கள் மிகுந்திருப்பினும், நாட்டு வருவாயில் நிலையான விலைகளில் (Constant Prices) வேளாண்மையின் பங்கு அதாவது விளைபொருள்களின் மதிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உயரவில்லை. சிறப்பாக நாட்டு வருவாயில் வேளாண்மை வருவாய் முதலிடம் பெற்றாலும், ஆண்டுக்கு ஆண்டு வேளாண்மை வருவாயின் பங்கு குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. நாட்டு வேளாண்மை வருவாய் 1951-இல் 59 விழுக்காடாகவும் 1971-இல் 48 விழுக்காடாகவும் 1981-இல் 40 விழுக்காடாகவும் குறைந்துள்ளதனைப் புள்ளி விவர ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

வளர்ச்சியடைந்த அமெரிக்கா, கனடா, ஆசுத்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அவற்றின் நாட்டு வருவாய்களில் வேளாண்மைத் துறையின் பங்கு முறையே 5 விழுக்காடும் 7 விழுக்காடும் 13 விழுக்காடும் 4 விழுக்காடும் ஆகும். இந்தியா இந்நிலையை அடையப் பல ஆண்டுகளாகும். எனவே, நாட்டின் எதிர்காலப் பொருளாதார

அட்டவணை – 2

நாட்டு வருவாயில் வேளாண்மையின் பங்கு
(விழுக்காட்டில்)

| வ.எண் | துறை | ஆண்டுகள் (1970—71 விலையில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 1951 | 1961 | 1971 | 1981 |
| 1 | வேளாண்மை | 58.7 | 54.0 | 47.5 | 40.1 |
| 2 | காடுகள் | 1.3 | 1.1 | 1.1 | 0.8 |
| 3 | மீன்துறை | 0.6 | 0.7 | 0.5 | 0.6 |
| 4 | சுரங்கம், கல்தொழில் | 0.7 | 0.9 | 0.9 | 1.0 |
| 5 | தொழிற்றுறை | 10.0 | 12.0 | 13.6 | 15.2 |
| 6 | கட்டடத்தொழில் | 4.3 | 4.6 | 5.3 | 4.6 |
| 7 | மின்சாரம், எரிவாயு, தண்ணீர் | 0.2 | 0.5 | 0.9 | 1.3 |
| 8 | வாணிகம், போக்குவரத்து | 11.6 | 13.5 | 15.8 | 18.5 |
| 9 | நிதி, நிலையான சொத்து | 3.5 | 3.8 | 4.8 | 5.7 |
| 10 | சமுதாய, தனியார் பணிகள் | 9.1 | 9.0 | 9.5 | 12.2 |

முன்னேற்றம் வேளாண்மைத் துறையைச் சார்ந்திருக்கும் என்பது தெளிவு. வேளாண்மை இந்திய நாட்டில் பெரும் பகுதியினரின் வாழ்க்கைக்கும் வருவாய்க்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பதுடன், நாட்டு வருவாயில் நேரடியாக மிகுந்த அளவினைத் தருவதாகவும் உள்ளது.

தொழில்துறை: இந்தியப் பொருளாதாரத்தின் பிற துறைகள் வேளாண்மையைச் சார்ந்தே வளர்ச்சியடையும் அமைப்பைக் கொண்டவை. நாட்டின் சிறப்புத் தொழில்களான பருத்தி, சணல், சர்க்கரை, தாவர எண்ணெய் (வனசுபதி) போன்றவை பற்றி அமையும் தொழில்கள் வேளாண்மையிலிருந்து பெறப்படும் அடிப்படைப் பெருள்களைக் கொண்டே நடைபெறுகின்றன. தேயிலை, காப்பி, இரப்பர் போன்ற தொழில்கள் நேரடியாக வேளாண்மையைச் சார்ந்திருக்கின்றன. நெல் அரைத்தல், எண்ணெய் தூய்மை செய்தல், கைத்தறி, கதர்த் துணி உற்பத்தி செய்தல் போன்றவை மறைமுகமாக வேளாண்மையைச் சார்ந்துள்ளன. இந்திய வேளாண்மைத் துறையின் பிற சிறப்புத் தொழில்களாகக் காடு வளர்த்தல், மீன்பிடித்தல், கால்நடை வளர்ப்பு, காகித உற்பத்தி, தோல் பதனிடும் தொழில், தோல் உற்பத்தி, தீப்பெட்டித் தொழில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும், இரசாயன உரங்கள், வேளாண்மைக் கருவிகள்; எந்திரங்கள், பயிர்ப்பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றின் தேவைகளை வேளாண்மைத் துறை உருவாக்குவதன் வாயிலாக, இத்தொழில்களும் வேளாண்மையைச் சார்ந்தே நடைபெறுகின்றன. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மை சாரா இரும்பு, எஃகுத் தொழில், விமானம் கட்டும் தொழில், இரசாயனத் தொழில், பொறியியல் தொழில், எந்திரத் தொழில் முதலியன உருவாக்கப்பட்டுத் தொழில் துறை தனித்தன்மையுடன் வளர்ச்சியடைந்தாலும், இத்தொழில்களைச் சார்ந்துள்ளவர்களுக்கான உணவுப் பொருள்களை வேளாண்மை வழங்க வேண்டியுள்ளது.

அயல்நாட்டு வாணிகம்: பன்னாட்டு வாணிகத்தின் வாயிலாக அயற் செலாவணியைப் பெருக்குவதிலும் இந்திய வேளாண்மை சிறப்பிடம் பெறுகிறது. தேயிலை, சர்க்கரை, எண்ணெய் விதைகள், புகையிலை, வாசனைப் பொருள்கள் (Spices) போன்ற விளைபொருள்கள், இந்தியாவின் மொத்த

ஏற்றுமதியில் 50 விழுக்காடாகும். வேளாண்மைப் பொருள்கள் கலந்த உற்பத்திப் பொருள்களான சணல், ஆடைகள் முதலியன மொத்த ஏற்றுமதியில் 20 விழுக்காடாகும். இவை கூட்டு மொத்தமாக 70 விழுக்காடாகும் என்பது வேளாண்மை அயற் செலாவணி ஈட்டுவதில் எவ்வளவு சிறப்பிடம் பெறு கிறது என்பதை விளக்குகிறது.

இந்திய உள்நாட்டு வாணிகமும் போக்கு வரத்துத் துறையும் கூட வேளாண்மையைச் சார்ந் துள்ளன. இவற்றின் பெரும்பாலான தொழில் நட வடிக்கைகள் வேளாண்மையைச் சார்ந்தவையே. விளைபொருள்கள் உள்நாட்டு அங்காடிகளில் தலையாய இடம் பெறுகின்றன. நல்ல விளைச்சல் மிகுந்த வாங்குந் திறனை உழவர்களுக்கு அளித்து,

அட்டவணை - 3

சராசரி ஆண்டு தலையாய ஏற்றுமதிப் பொருள்கள் (கோடி உருபாயில்)

| வ.எண் | பொருள்கள் | 1951—56 | 1960–61 | 1970—71 | 1980-81 | 1981—82 | 1982—83 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சர்க்கரை | — | 2 | 38 | 40 | 64 | 62 |
| 2 | தேயிலை | 106 | 195 | 148 | 426 | 395 | 368 |
| 3 | சணல் | 149 | 213 | 190 | 330 | 258 | 203 |
| 4 | பருத்தி | 81 | 91 | 75 | 277 | 330 | 366 |
| 5 | தோல் | 32 | 39 | 72 | 337 | 369 | 346 |
| 6 | இரும்பு | 30 | 27 | 117 | 303 | 352 | 372 |
| 7 | புகையிலை | 15 | 25 | 33 | 141 | 235 | 240 |
| 8 | எந்திரங்கள் | — | 13 | 130 | 727 | 851 | 786 |
| 9 | முந்திரிப்பருப்பு | 11 | 30 | 52 | 140 | 182 | 134 |
| 10 | ஆடைகள் | — | — | 9 | 378 | 596 | 528 |
| 11 | கைவினைப் பொருள்கள் | — | — | 70 | 894 | 1131 | 1172 |
| 12 | மீன் | — | 7 | 31 | 213 | 280 | 349 |

இந்தியப் பொருளாதார முன்னேற்றத் திட்டங் களைச் செயற்படுத்த இன்றியமையாத் தேவை யான முதலீட்டுப் பொருள்களை (Capital Goods) இறக்குமதி செய்ய, வேளாண்மைப் பொருள்களை யும் விளைபொருள்களில் எஞ்சியவற்றையும் ஏற்று மதி செய்து பெறப்படும் அயற் செலாவணி பயன் படுத்தப்படுகிறது. உணவுப் பற்றாக்குறைக் காலங் களில் உள்நாட்டு விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப் படுத்தவும் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யவும் வேளாண்மைத் துறை ஏற்றுமதியால் ஈட்டப்பெற்ற அயற் செலாவணி உதவுகிறது. இந்திய வேளாண்மைப் பொருள்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

அவர்கள் உற்பத்திப் பொருள்களை நாடவும் அவற்றின் தேவைகள் பெருகவும் வழி வகுக்கிறது. விலைகள் உயர்வதால் உற்பத்தித் தொழில் முன் னேற்றமடைகிறது. உழவர்களின் செழிப்பு தொழில் வளத்திற்கும் நாட்டின் நிதிவளப் பெருக் கத்திற்கும் வித்தாகிறது. மோசமான விளைச்சல் வாணிக மந்தத்திற்கு (Business Depression) நாட்டை இழுத்துச் செல்லும். இந்திய மாநில அரசுகளின் கருவூலம் வேளாண்மைத் துறையின் செழிப்பையும் வருவாயையும் நம்பியே இருக்கிறது. இந்திய இருப் புப்பாதைப் போக்குவரத்தும் சாலைப் போக்குவரத் தும் வேளாண்மைப் பொருள்களை ஏற்றிச் செல்வ தனால் மிகுதியான வருவாயைப் பெற்று வருகின்றன.

ஆக்கத்திறன்: மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள இந்திய வேளாண்மை வறுமைச் சுழற்சியில் (Vicious Circle of Poverty) சிக்கிக் கொண்டிருக்கிறது. மக்கள்தொகை பெருகிக் கொண்டே போவதால் உணவுக்கான தேவை வளர்ந்து கொண்டே போகிறது. உணவுப் பற்றாக்குறை போன்ற நெருக்கடி நிலையைத் தொழில்துறை வளர்ச்சியினால் மட்டும் நீக்கிவிட இயலாது. வேளாண்மையின் ஆக்கத்திறனை உயர்த்துவதன் மூலமே வேளாண்மையை வறுமைச் சுழலிலிருந்து விடுவிக்க இயலும். இந்திய நாட்டில் வேளாண்மையின் ஆக்கத்திறன் மிகக் குறைவாக உள்ளது. வேளாண்மையின் ஆக்கத்திறனை நில ஆக்கத்திறன், உழைப்பாளி ஆக்கத்திறன் என இருவகைப்படுத்தலாம். நில ஆக்கத்திறன் நிலத்தின் வளத்தைச் சார்ந்தும், உழைப்பாளியின் ஆக்கத்திறன் உழைக்கும் வேளாண்மையினரின் திறனைச் சார்ந்தும் உள்ளன. இந்தியாவில் நில ஆக்கத்திறன் பிற நாடுகளுடன் ஒப்பிட்டு ஆராயும்போது மிகக் கீழான நிலையில் காணப்படுகிறது என்பதை அட்டவணை 4 விளக்குகிறது.

அட்டவணை — 4

| | நில ஆக்கத்திறன் | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | விளை பொருள் | நாடு | (ஓர் எக்டேர் நிலத்தில் சராசரி ஆண்டு விளைவு, கிலோகிராமில்) 1951—55 | 1961—65 | 1976—78 |
| 1 | நெல் | உலகம் | 1145 | 1365 | 1692 |
| | | இந்தியா | 809 | 987 | 1244 |
| | | சீனா | 1744 | 1853 | 2349 |
| | | அமெரிக்க ஐக்கிய நாடு | 1920 | 2917 | 3384 |
| | | சப்பான் | 2653 | 3341 | 3977 |
| 2 | கோதுமை | உலகம் | 1152 | 1209 | 1781 |
| | | இந்தியா | 714 | 835 | 1225 |
| | | சீனா | 935 | 882 | 1372 |
| | | பிரான்சு | 2078 | 2930 | 4346 |
| | | செருமனி | 2778 | 3275 | 4547 |
| 3 | பருத்தி | உலகம் | 210 | 330 | 404 |
| | | இந்தியா | 90 | 120 | 154 |
| | | சீனா | 160 | 250 | 458 |
| | | சோவியத்து உருசியா | — | 700 | 885 |
| | | மெக்சிகோ | 330 | 640 | 940 |

பல புதிய தொழில் நுட்ப (New Technology) முன்னேற்றத் திட்டங்கள், தீவிர சாகுபடித் திட்டம் (Intensive Agricultural Area Programme), பரவல் பண்ணை முறை (Extensive Farming), உயர்ந்த விளைச்சலைத் தரும் விதைவகையைப் (High Yielding Variety) பயிரிடும் திட்டம் போன்றவற்றின் வாயிலாக இந்தியாவில் நில ஆக்கத்திறன் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. கோதுமை, உருளைக் கிழங்கு விளைச்சல்களில் 100 விழுக்காடு முன்னேற்றமும், பிற பண்டங்களின் விளைச்சல்களில் 20 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடு முன்னேற்றமும் ஏற்பட்டிருப்பது, தொடர்ந்த வளர்ச்சியைக் காட்டுகிறது.

அரசின் பலக்குறைவும், அரசியல் கிளர்ச்சிகளும், பாரசீகப் போர்ச்சுகீசிய ஆங்கிலேய மக்களின் ஈடுபாடும், நாட்டில் பொருளாதார அழிவை ஏற்படுத்தி விட்டன. ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்றிய பின்பு பெருஞ் செல்வம் நாட்டை விட்டு வெளியேறியபடியால், நாட்டின் வளம் படிப்படியாகக் குன்றத் தொடங்கியது. வேளாண்மையின் புறக்கணிப்பால் பஞ்சமும் (Famine) வறுமையின் கொடுமையும் ஏற்பட்டன. தமிழகத்தில் கி.பி. 1793-இல் ஏற்பட்ட பஞ்சம் கி.பி. 1877, 1878, 1889, 1892, 1897, 1900 ஆகிய ஆண்டுகளில் நாடு முழுவதும் பரவி ஒன்றரைக்கோடி மக்களின் உயிரைக் கொள்ளை கொண்டது எனப் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. செழித்

அட்டவணை — 5

இந்தியாவில் நில ஆக்கத்திறன் வளர்ச்சி

| வ.எண் | விளை பொருள் | (எக்டேருக்குக் கிலோகிராமில்) 1960–61 | 1970—71 | 1982—83 |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 1013 | 1123 | 1230 |
| 2 | கோதுமை | 851 | 1630 | 1840 |
| 3 | மக்காச்சோளம் | 926 | 1279 | 1100 |
| 4 | நிலக்கடலை | 745 | 834 | 760 |
| 5 | சர்க்கரை | 4613 | 4963 | 5620 |
| 6 | பருத்தி | 125 | 106 | 160 |
| 7 | உருளைக்கிழங்கு | 7251 | 9976 | 13480 |

இந்திய வேளாண்மைத் தொழிலாளர் ஒருவரின் ஆண்டு வருவாய் உரூ. 500 ஆகும். ஆனால், சிறு தொழில் துறைத் தொழிலாளியின் வருவாய் உரூ. 800ஆகவும் பெருந்தொழில்துறைத் தொழிலாளியின் வருவாய் உரூ. 1700 ஆகவும் உள்ள நிலையை ஆராயும்போது,வேளாண்மைத் தொழிலாளர்களின் பாகுபாடான (Indiscriminate) சுரண்டல் (Exploitation) நிலை தெளிவாக வெளிப்படுகிறது.

வரலாறு: ஆங்கிலேயர் ஆட்சி கி.பி. 1757-ஆம் ஆண்டு தொடங்குவதற்கு முன்பே பொருளாதாரச் சீர்குலைவு இந்தியாவில் நிலவியது. இந்தியப் பொருளியல் வரலாற்றில் 'மிக இருண்ட காலம்' எனக் கருதப்படும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வங்காளத்தில் (Bengal) தொடங்கிய சீர்குலைவு நாடு முழுவதும் பரவி வேளாண்மையையும் பாதித்தது. மைய

தோங்கிய வேளாண்மைச் செல்வம் உறிஞ்சப்பட்டு விட்டது.

வேளாண்மை சார்ந்த மக்களின் நலன்களைப் புறக்கணித்து நிலவரியாகப் பெருந்தொகையை இங்கிலாந்து அரசு இந்தியாவிலிருந்து பெற்றது. இங்கிலாந்தில் கி.பி. 1798-1898 ஆம் ஆண்டுகளில் நிலவரி 5 முதல் 20 விழுக்காடாக இருந்தபோது, இந்தியாவில் அதே அரசு 80 முதல் 90 விழுக்காடு வீதத்தில் நிலவரி விதித்துப் பெற்றது. வங்காளத்தைக் கி.பி. 1764-இல் ஆண்ட இறுதிமுகலாய மன்னன் பெற்ற நில வருவாய் 8, 17, 553 பவுனாகும். அதன் பின் 30 ஆண்டுக் காலத்தில் இங்கிலாந்து அரசு அதே பாநிலத்திலிருந்து வசூலித்த நில வருவாய் 26,80,000 பவுன் தொகையாகும். தமிழகத்தில் கி.பி. 1820 இல் நிலத்தின் மொத்த உற்பத்தியின் பாதி மதிப்புத்

தொகை நிலவரியாகச் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டது. இவ்வாறு இந்திய வேளாண்மை வறுமையுற வறுமையுற, இங்கிலாந்தின் வாணிகமும் தொழில் புரட்சியும் சிறப்புற்று ஓங்கின. அக்காலங்களில் மேலோட்டமாக எடுக்கப்பட்ட வேளாண்மை நலத் திட்டங்களில் நீர்ப்பாசனத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. அடிக்கடி நிகழ்ந்த பஞ்சங்களைத் தவிர்ப்பதற்காகக் கி.பி. 1870-80ஆம் ஆண்டுக் காலங்களில் 11, 851, 193 பவுன் இசுடெர்லிங்குத் (Sterling) தொகை நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் திட்ட முயற்சிகளுக்கெனச் செலவிடப்பட்டது.

நாடு விடுதலை பெற்றதிலிருந்து முறையான வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும், வேளாண்மை பின்னடைந்த நிலையிலிருப்பதற்குள்ள காரணங்களைப் பொதுக் காரணிகள் (General Factors), நிறுவனக் காரணிகள் (Institutional Factors), தொழில் நுட்பக் காரணிகள் (Technological Factors) என மூவகைப் படுத்தலாம்.

பொதுக் காரணிகள்: இயற்கை வளங்களின் வளர்ச்சியைக் காட்டிலும் மக்கள்தொகை வளர்ச்சி இந்தியாவில் மிகுந்திருப்பதால் வேளாண்மை வளர்ச்சித் தடைபடுகிறது. தனி ஆள் வருவாயையும் (Per Capita Income ) வாழ்க்கைத் தரத்தையும் (Standard of Living) உயர்த்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகள் மக்கள்தொகைப் பெருக்கத்தால் எதிர்பார்க்கும் பலனைக் காட்டிலும் குறைவாக அமைந்து விட்டன. முன்னரே நிலவும் தொழிலாளர் செறிந்த (Labour Intensive) நிலமுறையும் பெருகி வரும் மக்கள் தொகையும் வருவாயைக் குறைத்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருக வழி வகுக்கின்றன. வளம் குறைந்த இறுதிநிலை நிலங்களும் (Marginal Lands) இறுதிநிலைக்குக் குறைவான நிலங்களும் உணவுத் தேவை மிகுதியின் காரணமாகப் பயிரிடப்படுவதால் ஆக்கத் திறன் குறைகிறது. பெருகும் மக்கள் தொகையை ஈடுகட்டும் அளவில் பிற துறைகள் வளர்ச்சியடையாததால், மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) வேளாண்மையில் மலிந்து காணப்படுகிறது.

பெரும்பான்மையான வேளாண்மைத் தொழிலாளர்களிடையே சேமிப்பும் முதலீடும் அதிகமாக உள்ளன. மேலும், இவர்கள் கல்வி அறிவில்லாதவர்களாகவும் அறியாமையில் (Ignorance) மூழ்கினவர்களாகவும் மரபியல் ( Traditional) சார்ந்தவர்களாகவும் இருப்பதால், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் குன்றிக் காணப்படுகின்றனர்.

இந்திய ஊரகச் சமூகச் சூழ்நிலை (Rural Social Atmosphere) முன்னேற்றத்திற்கு ஊறு விளைவிப்பதாக (Inhibitory) உள்ளது. இந்து சமய விதிக் கோட்பாடு (Doctrine of Fate) மக்களிடத்தில் வேரூன்றியிருப்பதால், 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்ற போக்கும், சாதிப் பிரிவினைகளும் செல்வர்கள் ஏழைகளைச் சுரண்ட உதவுகின்றன. கூட்டுக் குடும்ப முறை தனி மனிதனின் ஊக்கத்தைத் தாக்குகிறது. குடும்பப் பற்றும் மொழிப் பற்றும் இடப்பெயர்ச்சியில் (Migration) மக்கள் ஈடுபட்டு மாற்று இடங்களுக்கும் பிற வேலைக்கும் சென்று உயர்ந்த ஊதியம் பெறத் தடையாயிருக்கின்றன. தங்கள் வேளாண்மைத் தொழிலில் கூட புதுமுறைகள் புகுத்தப்படுவதை விரும்பி ஏற்பது அரிதாக உள்ளது. ஊரகங்களில் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடிய அங்காடி அமைப்போ வேறு இடங்களுக்கு அவற்றைக் கொண்டு விற்பதற்குரிய போக்குவரத்து வசதிகளோ சேமித்து வைக்கக்கூடிய பாதுகாப்புப் பொருட் கிடங்குகளோ (Godowns) குளிரறைக் கிடங்கு (Freezer) வசதிகளோ இல்லாததால் வேளாண்மையினர் விளைபொருள்களைக் குறைந்த விலைக்கு விற்கும் நிலைக்குள்ளாகித் தாம் பெறக் கூடிய மிகுந்த ஆதாயத்தை இழந்துவிடுகின்றனர். மேலும், தாங்கள் எப்பொழுதும் நிலக்கிழார்களுக்கும் உயர்ந்த வட்டிக்குக் கடன் அளிப்பவர்களுக்கும் (Money Lenders) அடிமைகளாகி விடுகின்றனர்.

நிறுவனக் காரணிகள்: இந்தியச் சொத்துரிமை வழக்கத்தின்படி வாரிசுகள் சம பங்கு பெறுவதால் சராசரி இந்திய நில உடைமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மேலும், நிலம் துண்டுபடுதல், சிதறுதல் (Sub-Division & Fragmentation) காரணமாகப் பொருளாதார இழப்பு (Economic Loss) நிலையில் பல நிலங்கள் பயிரிடப் படுகின்றன. இவை நீர்ப்பாசன வசதி, இரசாயன உரம், புதிய இயந்திரங்கள் போன்றவற்றைப் பெற்றாலும் பயனடைவதில்லை. வேளாண்மையினரிடையே ஊக்கமின்மைக்கும் சண்டைகளுக்கும் குறைந்த வருவாய்க்கும் துண்டுபட்ட நிலங்களே அடிப்படைக் காரணங்களாக உள்ளன.

இந்திய நில உரிமை அமைப்பு (Land Tenure Structure) வேளாண்மை வளர்ச்சிக்கு இடையூறாயிருந்து வந்தது. சமீன்தாரி, மகல்வாரி, இரயத்துவாரி உரிமை முறைகள் நிலைபெற்றிருந்ததால், நிலத்தை உழும் உழவர்கள் நில உரிமையில்லாமலும் தங்களுக்கும் தங்கள் தொழிலுக்கும் எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமலும் இருந்ததால் நிலத்தை வளப்படுத்துவதிலும் தொழில் முன்னேற்றத்திலும் முன்னேற

முயற்சிகள் எடுக்கவில்லை. நிலச் சீர்திருத்தங்களின் வாயிலாக இம்முறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டாலும் அவற்றின் விளைவாக மிகுந்த நிலங்களைச் சொந்தமாகக் கொண்ட நிலக் கிழார்களும் இடைத் தரகர்களும் நாடு முழுவதிலும் மிகுந்து காணப்படுகின்றனர். உற்பத்தியின் பயனை நிலத்தை உழுபவர்கள் பெறாமல் இடைத்தரகர்களும் நிலக்கிழார்களுமே நுகர்கின்றனர். நிலச் சீர்திருத்தத் திட்டங்களின் வாயிலாக நில உரிமைகளைப் பெற்ற பெரும்பான்மையான ஏழை உழவர்களுக்குப் புதிய சாகுபடி முறைகளைப் பற்றிய அறிவும் அவற்றைப் பின்பற்றத் தேவையான வசதியும் திறமையும் மிகக் குறைந்த அளவில் உள்ளன.

தொழில்நுட்பக் காரணிகள்: இந்திய வேளாண்மைத் தொழிலில் பழைமையான உற்பத்தி முறைகளே பின்பற்றப்படுகின்றன. தொழில் நுணுக்கம் புகுத்தப்படுவதால் வேலை அடிப்படையில் வேலையிழப்புச் சிக்கல்களும் மறைமுக வேலையின்மையும் பெருகும் என ஊரகங்களில் தொழில்நுட்பத்திற்கு வரவேற்பு இல்லை. வேளாண்மையினரிடையே நிலவும் கல்வியறிவின்மை எந்திரங்கள், பூச்சிக் கொல்லிகள், இரசாயன உரங்கள், மண் பாதுகாப்பு, உயர் விளைச்சல் தரும் விதைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றைப் புறக்கணிக்கச் செய்கிறது. பயன்படுத்தக் கூடிய எந்திரங்களும் குறைந்த விலைக்கு இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படவில்லை. விலங்குகளின் ஆற்றல் மிகுந்திருப்பதாலும் நிலங்கள் துண்டுபட்டுச் சிதறுண்டிருப்பதாலும் எரிபொருள் பற்றாக் குறையாய் இருப்பதாலும் வேளாண்மையின் முழுமையான அளவுக்குத் தொழில் நுணுக்கம் வெற்றி பெறவில்லை.

இந்திய வேளாண்மை அளவுக்கு மீறிய மழையினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கினாலும் அளவுக்குக் குறைந்த மழையினாலும் வறட்சியினாலும் ஆண்டுதோறும் இன்னலுக்குள்ளாகிறது. நீரைத் தேக்கி நீர்ப்பாசன வசதியை அளிப்பது இன்றியமையாததாகும். முதன்மைப் பயிராகிய நெல்லுக்கும் கோதுமைக்கும் தொடர்ந்து நீர் வசதி தேவைப்படுகிறது. இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதற்கும் நீர்ப்பாசன வசதி இன்றியமையாததாகும். நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏழை வேளாண்மையினருக்குத் துணை வேலைவாய்ப்புகளையும் அளிக்கிறது. மைய, மாநில அரசுத் திட்டங்களின் வாயிலாகச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குளம், ஏரி, நீர்த்தேக்கம், அணைக்கட்டு, கிணறுகள் போன்றவற்றால் நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படுகின்றன. எனினும், புள்ளி விவரங்களை உற்று நோக்கும்பொழுது நீர்ப்பாசன வளர்ச்சியில் இந்தியா பின்தங்கிய நிலையிலிருப்பதைக் காணலாம். நாடு விடுதலையடையுமுன் பயிரிடும் நிலங்களில் 24 விழுக்காடு நிலம் நீர்ப்பாசன வசதியைப் பெற்றது. பின்பு 1970–ஆம் ஆண்டளவில் இவ்விகிதம் குறைந்து 19 விழுக்காட்டை யடைந்தது. மீண்டும் இப்போது 22 விழுக்காட்டு நிலையையே அடைந்துள்ளது. இவற்றிற்கு நீர்ப்பாசனத் திட்ட அமைப்பு முறையில் உள்ள திறமைக் குறைவு, மிகுதியான தண்ணீர் வரி, நீர் இறைக்கும் எந்திரம் (Pumpset) போன்ற கருவிகள் பெறுதற்குத் தேவையான நிதி வசதிகள் இல்லாமை முதலியன குறிப்பிடத்தக்க காரணங்களாகும். அரசுப் பணித்துறைகளுக்கிடையே ஒத்துழைப்பில்லாமையால், துணைக் கால்வாய்கள் வெட்டுவதிலும் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது. பழைய நீர்ப்பாசனத் திட்டப் பணிகளைப் பாதுகாப்பதிலும் பழுதுபார்க்கும் பணியிலும் வேலைகள் தொடர்ந்து நிறைவு செய்யப்படாததால் நீர்ப்பாசன ஆற்றல் முழுமையாகப் பயன்படாமலுள்ளது.

ஊரகங்களில் வங்கிகள் செயற்படாத காரணங்களால் நிதி வசதியின்மை தலையாய அடிப்படை இடையூறாகும். இந்திய வேளாண்மையினர் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, உழன்று, கடனிலேயே மடிந்து, கடனையே தம் வாரிசுக்கும் விட்டுச் செல்கின்றனர் (The Indian Farmer is born in debt, lives in debt and bequeaths the debts) என்பது இன்றும் செயலிற் காணப்படுகிற பழமொழியாகும்.

பசுமைப் புரட்சி: நாடு விடுதலையடைந்த பின் இந்திய அரசு வேளாண்மைத் துறைக்கும் சிறப்பிடம் அளித்து, சமூகப் பொருளாதாரத் தொழில்நுட்பக் குறைகளைக் களைந்து, ஆக்கத்திறனை உயர்த்தி, உணவில் நாடு தன்னிறைவு பெறப் பல்வேறு திட்டங்களைத் தீவிரமாகச் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் இந்திய வேளாண்மையில் காணப்படும் மரபியல் (Traditional) தன்மைகளையும் பிழைப்பு நிலைப் பண்ணை (Subsistence Farming) முறைகளையும் மாற்றி, அங்காடிக்காகப் பேரளவு வேளாண்மை (Large Scale Farming) உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்ற குறிக்கோள்களைக் கொண்டு செயற்படுகிறது. பொருளாதார வளர்ச்சியின் எல்லா நிலைகளிலும் வேளாண்மைத் துறையின் வலுவைப் பெறுவதும், நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும் வேளாண்மையைத் தொழில் நுண்ணறிவு மாற்றங்களின் அடிப்படையில் புதுமைப்படுத்துவதுமே பசுமைப் புரட்சியின் பொருளாகும். நிலத்தின் வளத்தைப்

பேணவும் ஆக்கத்திறனை உயர்த்தவும் வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் முடிக்கவும் பண்ணைகளின் வருவாயை உயர்த்தவும் வேளாண்மையில் தொழில் நுட்பம் புகுத்தப்பட்டு எந்திரங்கள் பயன்படுத்தப்படுதல் இன்றியமையாததாகும். இத்துறையில் இந்தியா பின்தங்கிய நிலையிலிருந்தாலும், முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்று குறிப்பிடத்தக்க வகையில் சீர் பெற்று முன்னேற்றமடைந்துள்ளது.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் (1951-1556): இத்திட்டம் வேளாண்மைத் திட்டமாகவே உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது. பொதுத் துறைக்கு அளிக்கப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை உரூ. 1960 கோடியில் உரூ. 601 கோடி வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்டது. சணல், பருத்தி, உணவு, கரும்பு, எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தி முறையே 61%, 43%, 14%, 12%, 8% வளர்ச்சியடைய வேண்டுமென இலக்குகள் வரையறுக்கப்பட்டன. இவற்றை அடைவதற்காகக் கூட்டுறவு இயக்கங்கள், சமுதாயத் திட்டங்கள் நீர்ப்பாசன வசதித் திட்டங்கள், உரங்கள் விதைகள் வழங்கல், நிலச் சீர்திருத்தங்கள் போன்றவை முனைப்புடன் செயற்படுத்தப்பட்டன.

இத்திட்டக்கால இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் 4.73 மிலியன் கண்டியிலிருந்து 0.59 மிலியன் கண்டியாகக் குறைந்தது. சணல், பருத்தி, கரும்பு ஆகியவற்றின் உற்பத்தியும் பெருகி அவற்றின் ஏற்றுமதி அளவும் மிகுதியாயின. இங்கு 14 மிலியன் ஏக்கர் நிலங்கள் புதிதாக நீர்ப்பாசன வசதிகள் பெற்றன. நிலத்தைப் பண்படுத்தி (Land Reclamation) வேளாண்மைக்குக் கொண்டுவரும் திட்டத்தின் வாயிலாக 12 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டுப் புதிதாகப் பயிரிடும் நிலங்களாக மாறின. நைட்ரசன் (Nitrogen) உரங்களின் பயன்பாடு 100 விழுக்காடும் பாசுபேட்டு (Phosphate) உரங்களின் பயன்பாடு 80 விழுக்காடும் பெருகின. இந்திய ஊரகங்களுள் 40 விழுக்காடு ஊரகங்கள் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் பயன்களைப் பெற்றன. பிற திட்டங்களின் பயன்களைப் புள்ளிவிவரங்களைக் கொண்டு கூற இயலாது எனினும், வேளாண்மையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் நாட்டின் பணவீக்க நிலையும் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை இயற்கைச் சூழ்நிலை உருவாக்கப்பட்டது எனலாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61): முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போன்று இத் திட்டத்தில் வேளாண்மைக்குச் சிறப்பான முதன்மையிடம் அளிக்கப்படவில்லை; எனினும், புறக்கணிக்கப் படவில்லை. பொதுத் துறையின் மொத்த முதலீட்டுத் தொகையான உரூ. 4600 கோடியில் உரூ. 950 கோடி வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்டது. இது முதல் திட்டத்தில் 31 விழுக்காடும், இத்திட்டத்தில் 20 விழுக்காடுமாகும். முதல் திட்ட இலக்குகளையே இத்திட்டத்திலும் விரைந்து செயற்படுத்த வலியுறுத்தப்பட்டது. எந்திரங்களைப் பயன்படுத்தி 5 இலட்சம் ஏக்கர் நிலங்களும், பேரளவு சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங்களின் வாயிலாக 70 மிலியன் ஏக்கர் நிலங்களும், நிலங்களைப் பண்படுத்தலின் வாயிலாக 15 மிலியன் ஏக்கர் நிலங்களும் புதிதாகப் பயிரிடும் வேளாண்மை நிலங்களாக மாற்றப்பட்டன. நில வளத்துக்கு 2,30,000 கண்டி இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டது. நாட்டில் 4000 விதைப் பண்ணைகள் நிறுவப்பட்டன. நீண்டகாலத் திட்டங்களான பண்ணையாள் உரிமைச் சட்டம், நில இணைப்புச் சட்டம் (Consolidation of Holdings), நில உச்சவரம்புச் சட்டம் போன்றவை சட்டமுறையில் செயற்படுத்தப்பட்டு, நிலச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான உறுதியான அடித்தளம் நிறுவப்பட்டது. கூட்டுறவுப் பண்ணை வளர்ச்சிக்கெனத் 'தேசியக் கூட்டுறவுப் பண்ணை வாரியம்' அமைக்கப்பட்டது.

பொதுவான நோக்கில், உற்பத்தியும் முன்னேற்றமும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தாலும், மக்கள்தொகை வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சி, மக்களின் வருவாய் உயர்வு ஆகிய காரணங்களால் உணவுப் பொருள்களின் தேவை மிகுந்து, விலைகள் உயர்ந்து, பணத்தின் மதிப்புக் குறைந்து, உணவு இறக்குமதி அதிகரித்தது. அயற்செலாவணியும் குறைய நேரிட்டது. இந்நிலை மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் தொடர்ந்தது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961-66): வேளாண்மைக்கு மீண்டும் இத்திட்டத்தில் முதன்மையிடம் ஒதுக்கப்பட்டு, பொதுத் துறையின் மொத்த முதலீட்டுத் தொகையான உரூ. 8577 கோடியில் உரூ. 1754 கோடி வேளாண்மைக்குச் செலவிடப்பட்டது. நிலத்தைப் பண்படுத்தும் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்கள், தொழில் நுட்பச் சாகுபடித் திட்டங்கள், உரம் விதை கருவிகள் வழங்கும் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், கூட்டுறவு, பிற ஒருங்கிணைந்த வேளாண்மை நிறுவனத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் உணவுப் பொருள்களின் உற்பத்தியை 30 விழுக்காடும், பிற வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியை 31 விழுக்காடும் எட்டுவது இத்திட்டத்தின் சிறப்பு

வேளாண்மை இலக்காகக் குறிப்பிடப்பட்டது. இத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படுத்தப்பட்டால், நாடு உணவில் தன்னிறைவையும் (Self-Sufficiency) பொருளாதார வளர்ச்சியில் தானியங்கும் நிலை (Self-Sustaining) யையும் அடையும் என்பது எதிர் பார்க்கப்பட்டது.

விரைந்த தொழில் வளர்ச்சியின் வாயிலாக வேளாண்மைத் துறை புதுமை மயமாவதற்குத் தேவையான வேளாண்மைக் கருவிகள், இரும்பு, எஃகு, மின்சாரம் போன்றவை அளிக்கப்பட்டன. வேளாண்மைக் கருவிகள், எந்திரங்கள் ஆகியவற் றின் வளர்ச்சிக்கென ஒவ்வொரு மாநிலங்களிலும் ஆய்வுக் கூடங்கள், பணிமனைகள், பயிற்சி நிலையங் கள் முதலியன நிறுவப்பட்டன. இத்திட்டக் காலத் தில் நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, சணல், எண்ணெய் வித்துகள் ஆகியன முறையே 27.5%, 20%, 18%, 10%, 14%, 11% அளவு உற்பத்தியில் பெருகின. பேரளவு, சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங் களின் வாயிலாக 25.6 மிலியன் ஏக்கர் நிலங்கள் புதி தாகச் சாகுபடி செய்யப்பட்டன. மண்வளப் பாது காப்பு, நிலத்தைப் பண்படுத்தல் ஆகிய திட்டங்களி னால் 7.1 மிலியன் ஏக்கர் நிலங்கள் பயனடைந்தன. நைட்ரசன், பாசுபேட்டு, பொட்டாசியம் ஆகிய இரசா யன உரங்கள் 1.6 மிலியன் கண்டி அளவு நில வளத் திற்காகப் பயன்படுத்தப்பட்டன. பசுந்தழை உரம் 39 மிலியன் ஏக்கர் நிலங்களில் இடப்பட்டது. பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக 50 மிலியன் ஏக்கர் நிலங்கள் பயனடைந்தன. குறுகிய, நீண்டகால வேளாண்மைக் கடன் வசதிகளாக உரூ. 680 கோடி கூட்டுறவுத் துறைத் திட்டங்களின் வழியாக வழங்கப் பட்டன.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற் பட்ட வறட்சி, பஞ்சம், சீனா-பாகிசுத்தான் போர் ஆகியவற்றின் விளைவாக 1965-66-ஆம் ஆண்டுகளில் திட்டச் செயற்பாடுகள் பெரும் மாறுதல்களுக்குட் பட்டன. விளைபொருள்களின் உற்பத்தி மிகவும் குறைந்து உணவுப் பற்றாக்குறையும் நெருக்கடி நிலை யும் ஏற்பட்டன. பணவீக்கம் மிகுந்து, விலைகளும் உயர்ந்து உணவுப் பொருள்களின் இறக்குமதி மதிப்பு உரூ. 1100 கோடியை எட்டியது. இது வேளாண் மைத் துறையில் இத்திட்டத்தின் தோல்வியை வெளிப்படுத்தியது. அயற் செலாவணிச் சிக்கலும் பெருகியமையால் அப்போதைக்கு ஐந்தாண்டுத் திட் டம் கைவிடப்பட்டு, மூன்று ஓராண்டுத் திட்டங்கள் (Annual Plans) உருவாக்கப்பட்டு, அவை அவசரக்கால அடிப்படையில் (Emergency) செயற்படுத்தப்பட்டன.

ஆண்டுத் திட்டங்கள் (1966-1969): இவ்வாண் டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறைக்கென உரூ. 1624 கோடி செலவிடப்பட்டது. இது மொத்தத் திட்ட மூலதனத்தில் 24 விழுக்காடாகும். நீர்ப்பாச னத் திட்டங்களுக்கென உரூ. 457 கோடி செல வானது. உழவர்கள் உடனடியாகப் பயன்பெறக் கூடிய சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங்கள், இரசாயன உரம், உயர் விளைச்சல் தரும் வீரிய விதைகள் முதலி யன வழங்கும் திட்டங்கள் சிறப்பிடம் பெற்றுச் செயற்படுத்தப்பட்டதன் விளைவாக உணவு உற்பத்தி, 1967-68-இல் 95.6 மிலியன் கண்டியாகப் பெருகியது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74): வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்கள் இத்திட் டத்தில் தலையாய இடம் பெற்றன. மொத்த முத லீட்டுத் தொகையான உரூ. 15,092 கோடியில் உரூ. 3817 கோடி வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டது. இது மொத்தச் செலவினங்களில் 24 விழுக்காடாகும். நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் வெள்ளக் கட்டுப் பாட்டிற்காகவும் உரூ. 1097 கோடி ஒதுக்கப்பட்டது. பல பயிர்ச் சாகுபடித் திட்டம் (Multiple Cropping) உயர் விளைச்சல் தரும் திட்டங்கள் ஆகியவை சிறப் பிடம் பெற்றுப் பசுமைப் புரட்சிக்கு அடிப்படையாக விளங்கின. பருத்தி, உணவுப்பொருள், கரும்பு, எண் ணெய் வித்துகள், சணல் ஆகியவை முறையே 33%, 31%, 25%, 24%, 19% அளவு உற்பத்தியில் பெருகின. பல பயிர்ச் சாகுபடித் திட்டமுறைப்படி 9 மிலியன் எக்டேர் (Hectares) நிலங்கள் பயிரிடப்பட்டன. மண் வளப் பாதுகாப்பு 5.6 மிலியன் எக்டேர் நிலங்கள் பெற்றன. நிலத்தைப்பண்படுத்தல் திட்டத்தால் 1 மிலியன் எக்டேர் நிலங்கள் பயனடைந்தன. பேரளவு, சிற்றளவு நீர்ப்பாசன வசதிகளை 11.4 மிலியின் எக் டேர் நிலங்கள் பெற்றன. திருத்திய வித்துகள் 72 மிலியன் எக்டேர் நிலங்களில் பயன்படுத்தப்பட்டன. நைட்ரசன், பொட்டாசியம், பாசுபேட்டு உரங்கள் 2.3 மிலியன் எக்டேர் நிலங்களில் 9.6 மிலியன் கண்டி அள வில் இடப்பட்டன. பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தி னால் 80 மிலியன் எக்டேர் நிலங்கள் பயனடைந்தன.

இன்றியமையா விளைபொருள்களைப் பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சியும் மக்களும் அரசும் முனைந்து செயற்பட்ட திட்டங்களுமே மகத்தான பசுமைப்புரட்சியின் தொடக்கத்திற்கு அடிப்படையா யிருந்தன எனக் கூறலாம். உணவுப்பொருள் உற்பத்தி யில் ஏற்பட்ட முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். பொதுச் சட்டம் 480 (P.L. 4 8 0) மூலம் பெற்று வந்த உணவுப்பொருள் உதவியைத் தேவையில்லை என 1971-72-ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிடக் கூடிய நிலைக்கு வேளாண்மை வளர்ச்சியடைந்தது. இத் திட்டத்தில் வேளாண்மைத் துறை 20.5 விழுக்காடு

மூலதனத்தைப் பெற்றது. திட்ட மொத்த முதலீடான உரூ. 39,287 கோடியில் உரூ. 8,084 கோடி வேளாண்மைக்குச் செலவிடப்பட்டது. திட்டக்கால இறுதியில் உணவுப்பொருள் 126 மிலியன் கண்டியாகவும், சர்க்கரை 16.5 மிலியன் கண்டியாகவும், எண்ணெய் வித்துகள் 8.9 மிலியன் கண்டியாகவும், பருத்தியும் சணலும் தனித்தனியே 7.1 மிலியன் கட்டுகளாகவும் (Bales) உற்பத்தி அளவு பெருகிற்று. பருத்தி, சணல் ஆகியவற்றின் பெருக்கம் எதிர்பார்த்த அளவைவிடக் குறைவாக இருந்ததற்குக் காரணம் தேவையான நீர்ப்பாசன வசதியின்மையே எனக் கருதப்பட்டது. உயர்ந்த விளைச்சல் தரும் வித்துகள் (High Yielding Variety Seeds) 38 மிலியன் எக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்டன. நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 11 மிலியன் எக்டேர் நிலங்கள் புதிதாகப் பயிரிடும் நிலங்களாக மாறின. பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்களின் அளவு 4.3 மிலியன் கண்டிகளாகும். இத்திட்டக்கால முன்னேற்றம் நிலையற்றதாக ஏற்றத் தாழ்வுகளுடன் காணப்பட்டது. இதற்குச் சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படாததும் பொருளாதாரத்தில் காணப்பட்ட பணவீக்கமும் பருவமழை தவறியமையும் குறிப்பிடத்தக்க காரணங்களாகக் கருதப்பட்டன.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1975-1980): இத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்ட வறுமை ஒழிப்பு (Eradication of Poverty), பொருளாதாரத் தன்னிறைவு (Self Reliant Economy) ஆகிய கோட்பாடுகள் பசுமைப் புரட்சிக்கு உறுதுணையாயிருந்தன. இத்திட்டத்தின் மொத்த முதலீடான உரூ. 39,322 கோடியில் உரூ. 16,012 கோடி வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டது. இது மொத்த முதலீட்டில் 41.07 விழுக்காடாகும். நீர்ப்பாசனத் திட்டங்கள், வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்காக உரூ.4226 கோடி (10.7%) ஒதுக்கப்பட்டது. அதனால், புதியதாக 12.0 மிலியன் எக்டேர் நிலங்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றன. நாட்டில் பரவலாக வறட்சி நிலை காணப்பட்டாலும் திட்டக்கால இறுதியில் உணவுப்பொருள் உற்பத்தி 149.8 மிலியன் கண்டி அளவை எட்டியது. இரசாயன உரங்களின் பயன்பாடு 6.4 மிலியன் கண்டி அளவாக மிகுந்தது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85): வறுமையையும் வேலையின்மையையும் ஒழிப்பது இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக வலியுறுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Rural Development Programme) வாயிலாக வேளாண்மையை வளமுறச் செய்யத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. திட்டத்தின் மொத்த முதலீடான உரூ. 97,500 கோடியில் வேளாண்மைக்காக உரூ.24,699 கோடி ஒதுக்கப்பட்டது. இது மொத்த முதலீட்டில் 35.3 விழுக்காடாகும். இவற்றில் உரூ. 12,160 கோடி (12.5%) வெள்ளக் கட்டுப்பாடு, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டது. திட்டக்கால இறுதியில் உணவுப்பொருள் உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 7.1 விழுக்காடாகவும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு வளர்ச்சி வீதம் 26.6 விழுக்காடாகவும் உயரும் என இத்திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டுக்குழு (Mid-term Appraisal) 1983-இல் அறிவித்தது.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே வேளாண்மை நிதித் தேவைகளை நிறைவு செய்யக் கடன் வழங்கும் சிறப்பு நிறுவனங்கள் பல செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் கூட்டுறவு நிறுவனங்கள், நிலவள வங்கிகள், வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம் (Agricultural Refinance Development Corporation), வேளாண்மைத் தொழிற்கழகம், வணிக வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இவை உழவர்களுக்கு நேரடியாகவும் குறிப்பிட்ட சில திட்டங்களை மேற்கொள்வதற்காகவும் கடன்களைவழங்குகின்றன. இங்குக் குறிப்பிட்ட சில திட்டங்கள் என்பதில் சிறப்பாகத் தேசிய விரிவாக்கப்பணித்திட்டம் (National Extension Services), சமுதாய முன்னேற்ற வட்டாரங்கள் (Community Development Blocks), செறிந்த வேளாண்மைத் திட்டம் (Intensive Agricultural Programme), விரிவான வேளாண்மைத் திட்டம் (Extensive Agricultural Programme), இருபது அம்சத் திட்டம் (20 Point Programme) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (National Rural Employment Programme-NREP), சிற்றளவு உழவர் முன்னேற்றக் கழகம் (Small Farmers Develoment Agencies SFDA), வறட்சிசார் நிலை உழவர் திட்டம் (Drought Prone Area Programme) போன்றவை அடங்கும்.

பணவீக்கம், விலை ஏற்றத்தாழ்வுகள், இடைத்தரகர்கள், மொத்த வணிகர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஏழை உழவர்கள் பாதுகாக்கப்பட விளை பொருள்களுக்கு ஆதரவு விலைகளை (Support Price) வரையறை செய்யும் கொள்கை பின்பற்[illegible]து. காண்க: அரசு கொள்முதல் கொ[illegible]

நிலச் சீர்திருத்தங்கள் இந்திய வேளாண்மையில் எந்த அளவிற்கு விளைவுகளை உண்டுபண்ணியிருக்

கின்றன என்பதை அளவிட இயலாது எனினும், இது வரை இந்திய வேளாண்மை அடைந்துள்ள வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் இச்சீர்திருத்தங்கள் மூலக் கற்களாக நின்று, சுரண்டலைத் தடுத்தன என்றும், உழவர்களின் இடையூறுகள் பலவற்றை உடைத்தெறிந்தன என்றும் திட்டவட்டமாகக் கூறலாம். சிறப்பாகத் தரகர் ஒழிப்பு (Abolition of Intermediaries), சமீன்தார் முறை ஒழிப்பு (Abolition of Zamindari System), குடிவாரச் சீர்திருத்தம் (Tenancy Reforms), குடிவார உரிமைப் பாதுகாப்பு, நில உச்சவரம்பு (Ceiling on Land Holdings), நில ஒருங்கிணைப்பு (Consolidation of Land), நிலச் சிதறலைத் தடுத்தல், ஏழை உழவர்களுக்குப் பட்டா வழங்குதல், நிலக்கொடை இயக்கம், கூட்டுறவுப் பண்ணை முறை ஆகிய சீர்திருத்தத் திட்டங்களால் பல பொருளாதார, சமுதாய விளைவுகள் வேளாண்மையில் ஏற்பட்டன. இடைத் தரகர்கள் மறைந்துவிட்டனர். அடிமை நிலை ஒழிந்து, உழவர்களின் வாழ்க்கைத் தரமும் சமூக நீதியும் உயர்ந்துள்ளன. அவர்களிடையே தாங்கள் நிலச் சொந்தக்காரர்கள் அல்லது உழைப்பினால் அதைப்பெறத் தகுதியுடையவர்கள் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. குடிவாரச் சட்டங்களினால் உழவர்கள் பாதுகாப்புப் பெறுகின்றனர். உயர்ந்த அளவு வாரம் (Rent) எவ்வளவு என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

வாணிக நோக்குடன் வேளாண்மை வளம் பெற விற்பனை உபரியை இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) பெறுகிறது. மேலும், விலையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள், விளை பொருள்களின் தரத்தை வரையறை செய்யும் அமைப்பு (Agmark), போக்குவரத்து வசதிகள், அங்காடிகளைப் பற்றிய செய்திகளை அளித்தல், ஊக வாணிகக் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள், இருப்புக் கிடங்கு வசதிகள், கூட்டுறவு விற்பனை, விற்பனை ஆய்வுகள் ஆகியவற்றின் வளர்ச்சியின் வாயிலாக இந்திய வேளாண்மை, விற்பனை முறையில் வியக்கத்தக்க அளவில் முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

தமிழக வேளாண்மை வளர்ச்சி: தமிழகத்தில் வேளாண்மைத் துறை நிலையான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. தமிழகத்தின் பரப்பளவு 1,30,000 சதுரக் கிலோமீட்டர்; சராசரி மழை அளவு 942.8 மில்லி மீட்டர்; நிலப்பரப்பில் 73 விழுக்காடு வண்டல் நிலமாக உள்ளது.

நீர்ப்பாசனம்: பயிர் விளைச்சலுக்கு அடிப்படைத் தேவையாகிய நீர்ப்பாசனம் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. நீர்ப்பாசனம் பெறும் 2.71 மிலியன் எக்டேர் நிலப்பரப்பில் 1.047 மிலியன் எக்டேர் நிலங்கள் சிறுபாசனக் கிணறுகளால் பயனடைகின்றன. நிலப்பரப்பு நீர் அனைத்தும் பயன்படுத்தப்பட்டுவிடுவதால் நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கும் பொருட்டுப் புவியியல் படிவங்களுக்கேற்ற முறைகளில், துளைக் கிணறுகள் (Bore wells), குழாய்க் கிணறுகள் (Wells with Pumpsets) ஆகியன அமைக்கப்படுகின்றன. இதற்கென உருவான தமிழக வேளாண்மைப் பொறியியல் துறை, நீர்ப்பாசன வளத்தைப் பெருக்கும் பணியில் பெருந் திட்டங்களைச் செயற்படுத்துகிறது. இத்துறையால் பல்வேறு திட்டங்களின் வாயிலாக 1961-ஆம் ஆண்டு முதல் முடிக்கப்பட்ட பணிகளாவன:

1) தனியார் குழாய்க் கிணற்றுத் திட்டம் ... 68433 கிணறுகள்
2) வடிமுனைக் குழாய்க் கிணற்றுத் (Tube Wells) திட்டம் ... 53530 ,,
3) கிணற்றுள் துளை அமைக்கும் திட்டம் ... 36617 ,,
4) பாறையைத் தகர்த்துக் கிணற்றை ஆழப்படுத்தும் திட்டம் ... 33607 ,,

தனியார் குழாய்க் கிணற்றுத் திட்டத்தின் மூலம் வேளாண்மையினருக்கு, வேளாண்மைப் பொறியியல் துறை விசைத் துளைக் கருவிகளையும் கைத்துளைக் கருவிகளையும் துளையிடும் சுத்தியல் (Hammer Drill) சுழல்துளைக் கருவிகள், கைத்துளைக் கருவிகள் ஆகியவற்றையும் வாடகைக்கு வழங்குகிறது. இத்துறையினால் 1984-85-ஆம் ஆண்டில் மட்டும் 48,800 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, 19,520 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெற்றுள்ளது. வண்டல் நிலங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களில் இவ்வடிமுனைக் குழாய்க் கிணறுகள் பரவலாக அமைக்கப்படத்தக்க மூலவள வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன என்பது ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வடிமுனைக் குழாய்க் கிணறும், 2 எக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் வழங்க இயலும். இக்கிணறுகள் 1984-85-ஆம் ஆண்டில் 3049 அமைக்கப்பட்டன. பருவ மழை தவறியதன் காரணமாக 5000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. அதில் 3009 கிணறுகள் அமைக்கப்பட்டுவிட்டன.

கிணற்றுள் துளைக் கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் 1984-85-ஆம் ஆண்டில் 3427 கிணறுகள் துளையிடப்பட்டு, 1370 எக்டேர் நிலங்கள் பயனடைந்தன. அதே ஆண்டில் பாறையைத் தகர்த்துக்

கிணற்றை ஆழப்படுத்தும் திட்டத்தின் வாயிலாக 2470 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, 989 எக்டேர் நிலங்கள் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கசிவுநீர்க் குட்டைகள் 1074 அமைக்கப்பட்டு அவற்றால் அருகிலுள்ள கிணறுகளின் நீர்ப்பாசன மூலவளம் மிகுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. வறட்சி பாதித்த பகுதித் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 1980-85-ஆம் ஆண்டுகளில் 350 சமுதாயக் கிணறுகள் (Community Wells)அமைக்கப்பட்டு, 5000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிகளைப் பெற்றுள்ளன.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் (1985-86) 20,000 எக்டேர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை அளிக்கக் குறியீடு வரையறுக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தி: தமிழகத்தின் வேளாண்மைத் துறையில் உணவு தானிய உற்பத்தி சிறப்பிடம் பெறுகிறது. அதில் நெல் இன்றியமையாப் பயிராகும். உணவு உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலம் என்ற நிலை மாறி, இப்போது தமிழகம் ஓர் உபரி மாநிலமாக மாறியுள்ளது. தமிழகத்தின் மொத்த 69 இலட்சம் எக்டேர் சாகுபடி நிலத்தில் 36 விழுக்காட்டுக்கும் மிகுதியாக நெல் பயிராகிறது. பேரளவு விளைச்சலைத் தரும் பயிர்த் திட்டத்தின் கீழ் விரிவான பண்ணை முறை (Extensive Farming), செறிந்த பண்ணை முறை (Intensive Farming) போன்ற திட்டங்களினால், ஏக்கர் ஆக்கத்திறனும் உழைப்பின் ஆக்கத்திறனும் உயர்ந்துள்ளன. அனைந்திந்திய சராசரி நெல் உற்பத்தி அளவு 1979-80-ஆம் ஆண்டு ஓர் எக்டேருக்கு 1230 குவிண்டாலாயிருந்தபோது தமிழகத்தின் உற்பத்திஅளவு 20 குவிண்டால் ஆகும். இது பிற தென்னக மாநிலங்களைவிட உயர்ந்த அளவாகும். இதற்குத் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் (Intensive Agricultural Area Programme) நெல் சாகுபடியில் புகுத்தப்பட்டுள்ள புது வகை விதைகளாக ஐ.ஆர்.8,5,22, கோ.25,32,29,33, கருணா, பொன்னி முதலியனவும் காரணமாகும்.

தமிழகத்தில் பருவமழையையே சார்ந்திருக்கும் 52 விழுக்காடு நிலச் சாகுபடியில் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி ஆகியவை மானாவாரியாகப் பயிர் செய்யப்படுகின்றன. இவற்றைப் பேரளவில் விரிவாக்க, 1000 ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் தமிழகமெங்கும்(தஞ்சை, நீலகிரி மாவட்டம் நீங்கலாக) செயற்படுகின்றன. இவற்றில், குறைந்த நீரில் மிகுதியாகவும் விரிவான பரப்பிலும் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்கள், மழை நீரையும் மண்ணின் ஈரத்தையும் பாதுகாத்தல், மிகுந்த பலன் தரும் பயிர்த் திட்டத்தை ஏற்றல், பருவத்திற்கேற்ற வகைகளைக் கண்டறிதல், நுண்ணூட்ட உரம் (Organic Manure), இரசாயன உரத்தைப் பயன்படுத்தல், பயிர்ப் பாதுகாப்பு, உழுபடைக் கருவிகளைப் பயன்படுத்தல், உழவர் பயிற்சி முதலியன செயல் விளக்கங்களுடன் செய்து காண்பிக்கப்படுகின்றன. ஓர் இலட்சம் எக்டேர் பரப்பளவில் 1984-85-ஆம் ஆண்டில் 212 ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகளில், சரிவிற்குக் குறுக்கே கோடை உழவு செய்தல், அகலப்பாத்தி ஆழ்கால் அமைத்தல், பலபயிர் சாகுபடி செய்தல், ஊடுபயிராகப் பயறு வகை சாகுபடி செய்தல், ஊடுபயிராக எண்ணெய் வித்துப்பயிரிடுதல், கொழுகலப்பை கொண்டு விதைத்தல், இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், நிலக்கடலைக்குச் சிப்சம் இடுதல், விதையுடன் நுண்ணுயிர் கலத்தல், நிலத்திற்கு ஏரி வண்டல் இடுதல், கலவை உரம் உண்டாக்குதல், சிக்கன உழவுக் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற திட்டப் பணிகள் முறைப்படி செயற்படுத்தப்பட்டன.'எலிகாப்டர்'மூலம் பயிர்களுக்குப் பூச்சி மருந்து அடிக்கும் திட்டம் 1961-62 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது.

கோடைமலை, கொல்லிமலை, கல்ராயன்மலை, சவ்வாது மலை, பச்சை மலை ஆகிய மலைப்பகுதிகளில் தோட்டப் பயிர் முன்னேற்றத் திட்டங்கள் செயற்படுகின்றன. இதனால், மலைவாழ் மக்களின் வாழ்க்கை வளம் பெறுகிறது. வணிக விளைபொருள்களில் பருத்தி, தமிழகத்தில் முதலிடம் பெறுகிறது. செறிந்த பருத்தி வளர்ச்சித் திட்டம் (Intensive Cotton Development Programme), மாநில ஒருங்கிணைந்த பருத்தி வளர்ச்சித் திட்டம் (Co-ordinated Cotton Development Schemes) ஆகியவற்றின் வழியாகப் பருத்தி உற்பத்தி பெருகியுள்ளது.

தமிழகத்தில் 1961- ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு வரையறுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) 6.4.60-ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு உச்சவரம்பு 30 தரப்படுத்தப்பட்ட (Standard) ஏக்கராக வரையறுக்கப்பட்டது. அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் 5 தரப்படுத்தப்பட்ட ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும், ஆனால் அதுவும் சேர்த்து மொத்த உச்சவரம்பு 60 தரப்படுத்தப்பட்ட ஏக்கருக்கு மேற்படக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது. இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்டு, மூலச் சட்டத்தின் வழி அளிக்கப்பட்டிருந்த சில விதிவிலக்குகள், 17/70-ஆம் சட்டத்தினாலும், அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் நீக்கப்பட்டன.

5 அல்லது அதற்குக் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 தரப்படுத்தப்பட்ட ஏக்கராகும். நில உச்சவரம்புச் சட்டத்தினால் 30.4.85-ஆம் நாள் வரையில் அடைந்த முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு (ஏக்கரில்) | . . | 1,62,667 |
| நிலத்தை அரசு தன்வசம் எடுத்துக் கொள்ளுவதற்கு முன் தடையாணையின் கீழ் உள்ள பகுதி. | . . | 23,199 |
| அ) தகுதி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பரப்பு. | . . | 1,19,079 |
| ஆ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு. | . . | 4,041 |
| இ) உபரி நில விநியோக விதிகளின் 13-ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவை. | . . | 9,976 |

| பயனடைந்தோர் | எண்ணிக்கை | பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 40,914 | 45,330 |
| பழங்குடியினர் | 75 | 111 |
| ஏனையோர் | 52,176 | 73,638 |
| மொத்தம் | 93,165 | 1,19,079 |

வழங்க வேண்டியிருக்கும் பரப்பு ... 6,373 ஏக்கர்.

சமூக வனத் திட்டம் மற்றும் ஊரக எரிமர உற்பத்தித் திட்டங்கள் தவிர, அரசுக் காட்டில் ஆங்காங்கே தரம் குறைந்தும், மதிப்புக் குறைந்தும் பாழ்பட்டுப்போன பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் இலட்சக் கணக்கில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவை காடுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இயற்கைச் சூழலை மேம்படுத்துவதற்கும் செயற்படுத்தப்படுகின்றன.

உழவர்கள் நிலையான வருவாய் ஈட்ட ஏறக்குறைய 13 இலட்சத்திற்கும் மிகுதியான பழமரம் பிறமரம் ஆகியவற்றின் கன்றுகள் ஏறத்தாழ 15,000 எக்டேர் பரப்பில் பயிரிட வழங்கப்பட்டன. மின் சக்தி பயன்பாட்டிற்கு வருவதற்கு முன், வேளாண்மைக்கு நீர் இறைக்க விவசாயிகள் எருதுகளைப் பயன்படுத்தினர். இதனால், காலம் வீணாவது மட்டுமல்லாமல் மிகுந்த செலவுள்ளதாகவும் இருந்தது. இப்பொழுது இவ்வேலையைச் செய்யப் பத்து இலட்சத்திற்கும் மேலான மின்சார விசையேற்றிகள் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்திய நாட்டிலுள்ள மின்விசையேற்றிகளுள் இது ஏறக்குறைய 120 விழுக்காடு ஆகும். நாட்டிலுள்ள மின்விசையேற்றிகளில், மிகையான எண்ணிக்கை தமிழகத்தில்தான் உள்ளது. வேளாண்மைக்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்கத் தமிழக அரசு தக்க முடிவு எடுத்துள்ளது. குறைவழுத்த மின் நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்க ஓர் அலகிற்கு (Unit) 80 காசுகள் அடக்க விலையானாலும் சிறு விவசாயிகளுக்கு 12காசுகள் வீதமும், மற்ற வேளாண்மையினருக்கு 15 காசுகள் வீதமும் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. சிறு வேளாண்மையினருக்கு 15.9.84 முதல் இலவசமாகவும், மற்ற வேளாண்மையினருக்கு எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தினாலும் ஆண்டொன்றிற்கு, ஒரு குதிரைச் சக்திக்கு ரூ.75 கட்டணமாகவும் தமிழக அரசு மாற்றியமைத்துள்ளது.

தமிழக அரசு பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகளை நிறுவி அதன் வாய்[illegible]கச் சர்க்கரை

விளைச்சலைப் பெருக்குகிறது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் நாள் ஒன்றுக்கு 1250 கண்டி சர்க்கரை உற்பத்தித் திறன் அடங்கிய 2 சர்க்கரை ஆலைகளை – ஒன்றைத் தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் கிராமத்திலும், மற்றொன்றைத் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தாலுக்காவில் உள்ள எறையூர் கிராமத்திலும், –நிறுவியுள்ளது. இவ்விரண்டு சர்க்கரை ஆலைகளும் 1977–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்திலும் மற்றும் 1978–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்திலும் முறையே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

மேலும் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான துணைக்கருவிகளான கரும்பு வெட்டும் கத்திகள், தட்டுகள் போன்ற சிறிய நுண்கருவிகளைத் தயாரிப்பதற்கும், சர்க்கரை ஆலைகளுக்குத் தேவைப்பட்ட எந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கும் எந்திரப் பட்டறை ஒன்றையும் நிறுவியுள்ளது. இப்பட்டறை இயங்குவதற்குச் சென்னைப்பெருநகர் வளர்ச்சிக் குழுமம், செங்கல்பட்டு மாவட்டத்தில் சிங்கப்பெருமாள் கோவில் பக்கத்திலுள்ள மறைமலை நகரில் 5.50ஏக்கர் அடங்கிய ஓர் இடத்தை அளித்துள்ளது. இவ்விடத்தில் கட்டட வேலை இப்போது தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. பட்டறைக்குத் தேவைப்பட்ட எந்திரங்கள் வாங்குவதற்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இப்பட்டறை 1985–ஆம் ஆண்டிலிருந்து செயற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வேளாண்மையிலும் அதனைச் சார்ந்த துணைத் தொழில்களிலும் குறைந்த அளவு கூலி, தமிழகத்தில் 1959-ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்டது. இக்குறைந்த அளவு கூலி 1948–ஆம் ஆண்டு ஏற்பட்ட குறைந்த அளவு கூலிச் சட்டத்தின் அடிப்படையில் சட்டமுறையாக்கப்பட்டது. கூலி விகிதங்கள், அவ்வப்போது சீர்திருத்தப்பட்டு வந்தன. நிலச் சீர்திருத்த ஆணையர் ஆலோசனைப்படி 5.4.83 முதல் மீண்டும் கூலி விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அதன்படி பணிகளின் வகையைப் பொறுத்து நாள் கூலி விகிதங்கள் இப்போது குறைந்தது உரு. 8–இலிருந்து உரு. 18 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரே பணியைச் செய்யும் ஆண், பெண் ஆகியோரிடையே பாகுபாடின்றிக் கூலி வழங்கும் கோட்பாடு(Principle) செயற்படுத்தப்படுகிறது. வேலைநேரத்தையும் அரசு வரையறை செய்துள்ளது. இவற்றை நன்முறையில் உறுதியாக நிறைவேற்றும் பொறுப்பு வருவாய்த் துறையிடம், மாவட்ட ஆட்சியாளரின் கண்காணிப்பின் கீழ் ஒப்படைக்கப் பட்டுள்ளது. குறைந்த அளவு கூலி வழங்காமல் ஏமாற்றுபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். இவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புடனிருக்கச் செய்ய வானொலியும் தொலைக் காட்சியும் கல்வித் துறையும் பல திட்டங்களின் வழியாகப் பயன்படுத்தப்படுகின்றன.


தமிழகமெங்கும் பரவலாக வளர்ச்சியடைந்துள்ள வேளாண்மைக் கல்வியும் ஆராய்ச்சி நிலையங்களும் வேளாண்மையினர் புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதற்கு விருப்புடன் அளித்து வரும் ஆதரவும், தமிழக அரசு செயற்படுத்தும் பல்வேறு திட்டங்களுமே தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி தழைத்தோங்கக் காரணிகளாக விளங்குகின்றன.

திட்டங்களின் வாயிலாக இந்திய வேளாண்மைத் துறையில் சிறப்பான முன்னேற்றங்கள் காணப்பட்டு உற்பத்தியின் அளவு மிகுந்திருப்பினும், எடுக்கப்பட்ட முயற்சிகளையும், உள்ளீடு வெளியீடுகளையும் (**Input and Output**) தேவை அளிப்புடன் ஆராய்ந்தால், பசுமைப்புரட்சி நிறைவுற்றதாக இல்லையென அறியலாம். எனவே விளைபொருள்களின் உற்பத்தி அளவும் வேகமும் இன்னும் பெருக வேண்டும்.

**இந்தியா** ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. இது உலகில் ஏழாம் பெரும் நாடாகும். சீனாவுக்கு அடுத்தபடியாக மக்கள் தொகையில் இந்தியா உலகிலேயே இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. உலக மக்களுள் ஆறில் ஒருவன் இந்தியக் குடிமகன். ஆப்பிரிக்கா, தென்அமெரிக்காக் கண்டங்களிலுள்ள அனைத்து நாடுகளின் மக்கள் தொகைக்குச் சமமான மக்கள் இந்தியாவில் மட்டும் வாழ்கிறார்கள்.

ஆசியாவில் இந்தியா சிறப்பிடம் பெற்ற நாடாகும். இந்தியப் பெருங்கடலில் துருத்திக் கொண்டு நிற்கும் இது ஒரு மூந்நீரகமாகும். அராபியாவையும் ஆப்பிரிக்காவையும் மேற்கிலும், பர்மா, மலேசியா, இந்தோனேசியத் தீவுக்கூட்டங்களைக் கிழக்கிலும் கொண்டு தனித்த ஒரு நாடாக இந்தியா விளங்குகிறது.

இந்திய நாட்டின் நிலமும் மக்களும் பல பெரும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். இங்கு வறண்ட பாலைவனமும் வளமான காடுகளும் உள்ளன. உலகிலேயே மிகுதியான மழைப்பொழிவு இந்தியாவில்தான் ஏற்படுகிறது. அகன்ற சமவெளிகள், பெரிய ஆறுகள், உலகிலேயே மிக உயர்ந்த மலைத் தொடர்கள், வெப்ப மண்டலத் தாழ்நிலங்கள் போன்றவை இந்தியாவின் சிறப்புக் கூறுகளாகும். இந்திய மக்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள்; பலவிதமான சமயத்தைச் சார்ந்தவர்கள்; பல்வகை மொழிகளைப் பேசுபவர்கள்; செல்வச் செழிப்




இந்தியா – அமைவிடம்

பான இந்தியர்களும் வாழ்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடும் கோடிக்கணக்கான இந்தியர்களும் வாழ்கிறார்கள். கல்லூரிகளுக்குச் சென்று கல்வி கற்கும் மாணவ மாணவியர் பலர். பள்ளி வாயிலைக்கூடக் காணாதவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

வாழ்க்கை முறையிலும் வேறுபாடுகள் உண்டு. தொன்றுதொட்டு வரும் பண்டைய பழக்க வழக்கங்களைக் கைவிடாமல் பின்பற்றுவோரும் உண்டு. இக்கால அறிவியல் முன்னேற்றத்துடன் பண்பாட்டு முதிர்ச்சி பெற்றவர்களும் உண்டு.

எல்லைகள்: வடக்கில் இமயமலைத் தொடர்களும் தெற்கில் இந்தியப் பெருங்கடலும் கிழக்கில் வங்காளக் குடாக் கடலும் மேற்கில் அரபிக் கடலும் இந்தியாவின் எல்லைகளாகும்.

வடக்கில் சீனா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளும் தெற்கில் இந்தியப் பெருங்கடலும், மேற்கில் அரபிக்கடலும் பாகிசுத்தானமும், கிழக்கில் பர்மா, பங்களாதேசம், வங்காள விரிகுடா ஆகியவையும் இதன் எல்லைகள் எனவும் கூறலாம்.

உலக நடுக்கோட்டிற்கு வடக்கில் 8.4° முதல் 37.6° வரையிலான வட குறுக்குக் கோட்டிற்கும் 68.7° முதல் 97.25° வரையிலான கிழக்குநெடுங்


கோட்டிற்கும் இடையில் இந்தியா அமைந்துள்ளது. குமரி முனை இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், வங்காளக்கடல் ஆகிய முக்கடல்களால் சூழப்பட்டுள்ளது.

பரப்பு: வடக்குத் தெற்காக இந்தியாவின் நீளம் 3214 கி.மீ. கிழக்கு மேற்காக அகலம் 2933 கி. மீ. இதன் மொத்தப் பரப்பளவு 32, 80, 483 ச. கி. மீ. ஆகும். இதன் நிலப்புற எல்லை 15,200 கி.மீ. கடற்புற எல்லை 6083 கி.மீ. வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள அந்தமான்-நிக்கோபார் தீவுகளும், அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகளும், இந்தியாவின் பகுதிகளாகும்.

மண்ணூல் அமைப்பியல் (Geological Structure): மண்ணூல் அடிப்படையில் இந்தியாவை மூன்று சிறப்புப் பகுதிகளாகப் பிரிக்கலாம். இதில் பாகிசுத்தானமும், பங்களாதேசமும் அடங்கும். அவை 1. முந்நீரக இந்தியா எனப்படும் தக்காணப் பீடபூமி. 2. இமயமலைத் தொடர்கள். 3. சிந்துகங்கைச் சமவெளி என்பனவாம்.

முந்நீரக இந்தியா எனப்படும் தக்காணப் பீடபூமி விந்திய மலைகளுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இமயமலைத் தொடர்களும் அதன் கிளைகளும் இந்தியாவின் மேற்கிலும் வடக்கிலும் உள்ளன. சிந்து கங்கைச் சமவெளி என்பது சிந்து, கங்கை, பிரமபுத்திரா எனப்படும் மூன்று பெரும் ஆறுகளால் உருவாகியுள்ள சமவெளிப் பகுதியாகும். இச்சமவெளியே தக்காணப் பீடபூமியை வடபெரு மலைத் தொடர்களிலிருந்து பிரிக்கிறது.

இம்மூன்று பெரும் பிரிவுகளையும் மண்ணூல் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. முந்நீரக இந்தியா (தக்காணப் பீடபூமியையும் அதனை அடுத்துள்ள பகுதிகளையும் சார்ந்தது). 2. முந்நீரகத்திற்கு அப்பாலுள்ள இந்தியா, (இதில் இமயமலைத் தொடர்களும் பரந்து விரிந்துள்ள சிந்து கங்கைச் சமவெளியும் அடங்கும்) என்பனவாம்.




இந்திய முக்கிய உணவுப் பயிர்கள்

மண்ணூல் ஆய்வாளர்களின் கருத்துப்படி முந்நீரக இந்தியா என்னும் தக்காணப் பீடபூமியே, இந்தியாவின் மிகத் தொன்மையான நிலப்பகுதியாகும். தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, அண்டார்க்டிகா, இந்தியா ஆகிய அனைத்தும் ஒரு பெரும் கண்டம் ஒன்றின் பகுதியென்று கருதப்படுகிறது.

முந்நீரகத்திற்கு அப்பாலுள்ள இந்தியா இமயமலைகளையும் சிந்துகங்கைச் சமவெளியையும் உள்ளிட்ட பகுதியாகும். இதன் மேற்பரப்பு மென்மையானதும் உறுதியற்றதுமாகும். இது பல்வேறு மாறுதல்களை அடைந்து இன்றைய நிலையில் அமைந்துள்ளது. இப்பகுதி நீண்ட காலம் கடலடியில் கிடந்தமையால் இம்மாறுதல்கள் ஏற்பட்டிருக்கவேண்டும்.

**இயற்கை அமைப்பு:** இந்தியாவை ஏழு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. வடபெருமலைகள், 2. சிந்துகங்கைச் சமவெளி, 3. நடுமேட்டுநிலங்கள், 4. முந்நீரக மேட்டுநிலம், 5. கிழக்குக் கடற்கரை, 6. மேற்குக் கடற்கரை, 7. எல்லைப்புறக் கடல்களும் தீவுகளும் என்பனவாம்.

குன்றுகள், மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் போன்ற எல்லா வகையான நில அமைப்புகளையும் இந்தியாவில் காணலாம். இந்தியாவின் பெரும்பாலான நிலமேற்பரப்பு மேட்டுநிலப்பாங்கானவை. தட்டையாகவும் அலை மட்டம்போலும் காணப்படும் சமவெளிகள் மிகப் பரந்த அளவில் இங்குள்ளன. 300 முதல் 900 மீட்டர் வரை உயர்ந்துள்ள இத்தகைய சமவெளிகள், நடுமேட்டு நிலங்களிலும் தக்காண முந்நீரக மேட்டு நிலத்திலும் காணப்படுகின்றன. எனினும் இந்தியாவில் வண்டல்மண் படிந்த சமவெளிகள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாம். சிந்து கங்கைச் சமவெளியில் தட்டையான நிலத்தில் அடர்ந்த எப்போதும் பசுமை நிறைந்த பயிர் பச்சைகள் பெரும்பரப்பில் பரவி இருப்பதைக் கண்டு களிக்கலாம். ஆரியர் (Aryans), சித்தியர் (Scythians), ஹூணர் (Huns), பட்டாணியர் (Pathans), மங்கோலியர் (Mongols) போன்ற படையெடுப்பாளர்கள் இந்தச் சமவெளிகளால் கவரப்பெற்றே அணியணியாக வந்தார்கள். மௌரிய, குப்த, மொகலாயப் பேரரசுகள் இங்கே நிலைநாட்டப்பெற்று வளர்ந்தன.

**மலைத்தொடர்கள்:** மகேந்திர மலை, மலைய மலை, சகியபருவத மலை, காளிதாசனால் 'அதவாத்துமா' என்று போற்றப்பட்ட இமயமலை, இரைவதகமலை, விந்திய மலை, ஆரவல்லி மலை போன்றவை இந்நாட்டிலுள்ள மலைகளாகும் எனப் பாரத பக்தித் தோத்திரம் கூறுகிறது.

1. இமயமலை. 2. பட்காய் மற்றும் இந்தியாவின் வடக்கிலும் வடகிழக்கிலும் உள்ள மலைத்தொடர்கள், 3. விந்திய மலை, 4. சாத்பூரா மலை, 5. ஆரவல்லி மலை. 6. சயாத்திரி மலை (மேற்குத் தொடர்ச்சி மலை), 7. கிழக்குத் தொடர்ச்சி மலை என்பன இந்தியாவிலுள்ள மலைகளாம்.

இமயமலையே உலகில் மிகப் பெரும் மலைத்தொடராகும். இது மற்ற உலக மலைகளுடன் ஒப்பிடும்போது வயதில் குறைந்ததாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் வடக்கில் ஏறத்தாழ 2500 கி.மீ. தொலைவுக்குப் பரவியுள்ள இம்மலைத்தொடர், ஏறத்தாழ 5 இலட்சம் ச.கி.மீ. பரப்பில் படர்ந்துள்ளது. இம்மலையில்தான் உலகிலேயே உயர்ந்த மலையுச்சியான எவரசுட்டும் (Everest), 8000 மீட்டர் உயரத்திற்கு மேல் உயரமுள்ள வேறு பத்து மலையுச்சிகளும் உள்ளன. இம்மலையில் அடிக்கடி நிகழும் நிலநடுக்கங்களும் அதிர்வுகளும் இம்மலை மேலும் நிலைபிறழ்ந்து உயரக்கூடும் என்பதை அறிவிப்பதாக உள்ளன என மண்ணூல் ஆய்வாளர் கூறுகின்றனர்.


இமயமலை பல இலட்சம் ஆண்டுகளாக வளர்ந்து வருவதாகவும் நீர் அரிப்புகளுக்கு இலக்காகியுள்ளதாகவும் ஆய்வாளர் கூறுகின்றனர். இவ்வரிப்பின் விளைவாகத் தோன்றியவையே கங்கை, சிந்து, பிரமபுத்திரா என்னும் மூன்று ஆறுகளாகும். இம்மூன்று ஆறுகளும் கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக அடித்துக் கொணரும் வண்டல் மண்ணினால் உருவானதுதான் சிந்துகங்கைச் சமவெளி ஆகும்.

இமயமலைத் தொடர்களை மூன்று இணையாகச் செல்லும் மலைத் தொடர்களாகப் பிரிக்கலாம். அவை 1. பெரிய இமயமலைத்தொடர், 2. உயரம் குறைந்த இமயமலைத் தொடர், 3. புறத்து இமயமலைத் தொடர் என்பனவாம்.

பெரிய இமயமலைத் தொடர் (Greater Himalayas) கடல் மட்டத்திலிருந்து 6100 மீட்டருக்குமேல் உயரமுடையது. இங்கிருந்து தான் பல பனியாறுகள் உற்பத்தியாகின்றன. அவற்றுள் சில உலகில் மிகவும் நீளமானவை.

உயரம் குறைந்த இமயமலைத்தொடர் (Lesser Himalaya) பெரிய இமயமலைத் தொடருக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இதனை நடு இமயமலைத் தொடர் என்றும் கூறலாம். இது ஏறக்குறைய 2600முதல் 4600மீட்டர் வரை உயரமுள்ளது. உயரக் குறைவினால் இங்கிருந்து பனியாறுகள் தோன்றுவதில்லை.

புறத்து இமயமலைத்தொடர் (Outer Himalaya) என்பது, உயரம் குறைந்த இமயமலைத் தொடருக்




இந்தியா - இயற்கை அமைப்பு

கும் இந்தியாவின் சமவெளிகளுக்கும் இடையில் எழுந்துள்ளது. இது ஏறத்தாழ 1000 முதல் 1300 மீட்டர் வரையிலான உயரமுள்ளது.

பட்காய் (Patkai) மற்றும் அதனுடன் தொடர்பு கொண்ட ஏனைய மலைத் தொடர்கள் இந்திய-பங்களாதேச-பர்மா எல்லைகளில் காணப்படுகின்றன. இவற்றைப் பூருவாச்சல் (Purvachal) அல்லது கிழக்கு மலைத்தொடர்கள் என்று பொதுவாகக் கூறலாம். இத்தொடர்கள் வில் போன்று வளைந்து செல்பவை. இமயமலை தோன்றிய காலத்தில் இவையும் தோன்றியிருக்கலாம்.

ஆரவல்லி மலைத்தொடர் வடமேற்கு இந்தியாவில் உள்ள மிகத்தொன்மையான மலைத்தொடர்களுள் ஒன்று. இன்று காணப்படும் ஆரவல்லி மலை பண்டைய ஆரவல்லி மலைத்தொடரின் எஞ்சிய பாகமே என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும்.

விந்திய மலை ஏறத்தாழ முந்நீரக இந்தியாவின் அகலம் வரை நீண்டுள்ளது. இதன் நீளம் சற்றேறக்குறைய 1050 கி.மீ. இம்மலைத் தொடரின் உயரம் ஏறக்குறைய 300 மீட்டராகும். பண்டைய ஆரவல்லித் தொடர்களின் சிதறுண்ட பாகங்களிலிருந்து உருவானதே விந்திய மலைத்தொடர் என்பர்.

சாத்பூரா மலைத்தொடர் பிறிதொரு தொன்மையான மலைத் தொடராகும். இது ஏறத்தாழ 900 கி.மீ. நீளமுள்ளது. இதன் மலையுச்சிகளில் சில 1000 மீட்டர் வரை உயரமுள்ளவை. இம்மலை முக்கோண வடிவமுள்ளது. இம்முக்கோணத்தின் முடி இரத்தினபுரியிலும், ஏனைய இரு பக்கங்கள் நருமதை தபதி ஆறுகளை ஒட்டியும் அமைந்துள்ளன.

சயாத்திரி மலைத்தொடரை மேற்குத் தொடர்ச்சி மலை என்றும் கூறுவர். இத்தொடர் ஏறக்குறைய 1200 மீட்டர் வரை உயரமுள்ளது. இது 1600 கி.மீ. நீளமுள்ளது. தக்காணப் பீடபூமியின் மேற்கு எல்லையில் மேற்குக் கடற்கரையை ஓரளவு ஒட்டினாற்போல் நீண்டுள்ள இதன் வடக்குப் பகுதி தபதி ஆற்றுக் கழிமுகத்தில் தொடங்கி, தெற்கில் கன்னியாகுமரி வரை செல்கிறது. இது அரபிக்கடலைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ள தொடராகும். தெற்குப் பருவக் காற்றுகள் இம்மலைப் பகுதியில் பெருமழையைப் பெய்விக்கின்றன. இதன் விளைவாக மேற்குக் கடற்கரை பலத்த மழையைப் பெறுகிறது.

கிழக்குத் தொடர்ச்சி மலை இது இந்தியாவின் கிழக்குக் கடற்கரையையொட்டினாற் போல அமைந்துள்ளது. இம்மலைத் தொடர் பல பெரும் ஆறுகளால் அறுக்கப்பட்டுள்ளமையால் தொடர்ச்சியற்றுக் காணப்படுகிறது. இத்தொடரின் வடக்கில் கோதாவரி, மகாநதி போன்ற ஆறுகள் 1000 மீட்டர் உயரத்திற்குமேல் உள்ள மலைப்பகுதிகளிலிருந்து உற்பத்தியாகின்றன.

ஆறுகள்: சிந்து, கங்கை, பிரமபுத்திரா, நருமதை, தபதி, மகாநதி, கோதாவரி, கிருட்டிணா, காவேரி, வைகை, தாமிரபரணி போன்றவை இந்தியாவின் முக்கிய ஆறுகளாகும். இந்திய மக்கள் ஆறுகளைப் புனிதமாகக் கருதுகின்றனர். இவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து பயணம் செய்து ஆறுகளில் நீராடுதலைப் பெரும் திருவிழாக்களாகக் கொண்டாடும் வழக்கத்தை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இத்தகைய பயணத்தைத் தீர்த்தயாத்திரை என்று சொல்லுகிறார்கள். கங்கை ஆற்றில் அரித்துவாரத்திலும் பிரயாகையிலும் (அலகாபாது), பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை ‘கும்பமேளா’ என்னும் திருவிழாவைப் பல நூறு ஆண்டுகளாக இந்தியர் கொண்டாடி வருகின்றனர். இதைப் போன்றே காவிரி ஆற்றில் குடந்தையில் மகாமகம் என்னும் விழா கொண்டாடப்படுகிறது. ஆற்று நீரைப் புனிதமாகக் கருதி, அதில் நீராடினால் பாவங்கள் ஒழியும் என்னும் நம்பிக்கை உடைய ஆத்திக இந்துக்கள் இன்றும் வாழ்கிறார்கள். வாரணாசியில் கங்கை நீரை வெண்கலச் செம்புகளில் அடைத்துக் கங்கா நீர் என்னும் பெயரில் விற்பனை செய்கிறார்கள்.

இந்தியாவின் ஆறுகள் மூன்று சிறப்பான நீர்ப் பிரிக்கூரைகளைக் (Watershed) கொண்டுள்ளன. அவை, 1. வடக்கில் இமயமலைத் தொடரும் அதன் கிளையான காரகோர மலைத்தொடரும் அமைந்த பிரிவு. 2. நடு இந்தியாவில் விந்திய-சாத்பூரா மலைத்தொடர்ப் பிரிவு, 3. மேற்குக் கடற்கரையில் சயாத்திரி அல்லது மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரிவு என்பனவாம். இம்மூன்று நீர்ப்பிரிக்கூரைகளுள் ஏதேனும் ஒன்றிலிருந்து இந்தியாவின் பெரும் ஆறுகள் தொடங்குகின்றன.

இந்தியாவின் ஆறுகள் ஆண்டொன்றுக்கு 1,68,30,000 இலட்சம் கன அடி நீரைக் கொண்டு வருகின்றன என்று மதிப்பிடப்பெற்றுள்ளது. இவ் ஆறுகள் பல ஆக்கப் பணிகளுக்குக் காரணமாய் அமைகின்றன. இமயமலையிலிருந்து இவை அடித்து வரும் வண்டல்மண் வளமான விளைச்சலுக்கு உறுதுணையாய் உள்ளது. மலையடிவாரத்தில் இவ்வண்டல் மண் பல பெரும் சமவெளிகளை உருவாக்கியுள்ளது. ஆறுகள் கடலில் கலக்குமுன் பல கழிமுகங்களை (Delta) உருவாக்கி நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதனால் விளைச்சல் பெருகி, மக்களின் வளமான வாழ்வு உயர்ந்துள்ளது. சிந்து, கங்கை, பிரமபுத்திரா ஆறுகள் உருவாக்கியதுதான் சிந்து கங்கைச் சமவெளி. கிழக்குக் கடற்கரைக் கழிமுகங்கள், மகாநதி, கோதாவரி, கிருட்டிணா, காவேரி, பெண்ணை போன்ற ஆறுகளால் உருவாக்கப்பட்டவையாம். மேற்குக் கடற்கரைக் கழிமுகங்கள் வடகோடியில் நருமதை தபதி ஆறுகள் உருவாக்கியவையாம். தென்னாட்டிலும் சாராவதி, நேத்திராவதி, பாரதப்புழை, பெரியாறு, பம்பா போன்ற ஆறுகளின் கழிமுகங்கள் சிற்றாறுகளின் பயனாய் அமைந்தவையாம்.

இந்தியாவின் ஆறுகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. இமயமலை ஆறுகள், 2. தக்காண ஆறுகள் என்பனவாம்.

இமயமலை ஆறுகள்: இமயமலை ஆறுகள் தக்காண ஆறுகளைவிடக் காலத்தால் பிந்தியவை; ஆனால் வேகமாகப் பாயக்கூடியவை. அதனால் இவை இன்றளவும் வளர்ச்சியுறாத நிலையிலேயே யுள்ளன என்பது மண்ணூலாரின் கருத்தாகும். அவை ஓடிவரும் கால்வாய்களை அரித்தும், ஆழமான மலைப் பள்ளங்களை உண்டாக்கியும் நூற்றுக்கணக்கான மீட்டர் ஆழ்ந்த மலைப்பள்ளங்களின் வழி

யாகப் பாய்ந்து, தமக்கென வழிகளை அமைத்துக் கொண்டுள்ளன. பனியுருகுவதாலும் மழைபொழிவதாலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் சிந்து, கங்கை, பிரமபுத்திரா போன்ற ஆறுகள் ஆண்டு முழுதும் வற்றாத ஆறுகளாக விளங்குகின்றன. இந்திய ஆறுகளின் மொத்த நீர்வரத்தில் 70 விழுக்காட்டு நீர் இமயமலை ஆறுகளிலிருந்து கிடைக்கிறது என்பதிலிருந்தே இவ்வாறுகளின் சிறப்பினை உணரலாம். எனினும் இவ்வாறுகளின் பெரும்பாலான நீர் வங்கக் கடலில் கலந்து விடுகின்றது. நடு இந்தியாவிலுள்ள ஆறுகளின் 5 விழுக்காட்டு நீர் கங்கையாற்றுடன் கலந்து கடலில் சேருகிறது.

சிந்து ஆற்றின் பெயர் ஆரியர்கள் சூட்டியதாகும். சிந்து ஆற்றைக் கிரேக்கர்கள் இண்டசு (Indus) என்றனர். இந்தியா என்னும் பெயர் இந்தச் சொல்லிலிருந்தே பிறந்ததாகும். சிந்து ஆற்றின் இரு மருங்கிலுமிருந்த பள்ளத்தாக்குகளில் பண்டைய நாகரிகங்கள் தோன்றிக் கிளைத்திருந்தன. இந்நாகரிகங்கள் சுமேரிய, எகிப்திய நாகரிகங்களைவிடத் தொன்மையானவை என்றும் அவற்றைவிடச் சிறப்பானவை என்றும் கருதப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாற்றின் துணையாறுகளான சீலம் (Jhelum), சீனாபு (Chenab), இரவி (Ravi), பியாசு (Beas), சட்லசு (Sutlaj) என்னும் ஐயாறுகளே பஞ்சாபு என்னும் பெயர் வரக் காரணமாயின. (பாஞ்ச்-ஐந்து; ஆப்-ஆறு (நீர்). சிந்து ஆறு திபேத்திலுள்ள கயிலாய மலையிலிருந்து (Mount Kailas) உற்பத்தியாகிப் பல கிலோ மீட்டர்கள் இமயமலையில் ஓடி, பஞ்சாபு மாநிலத்தில் அதன் துணையாறுகளை இணைத்துக் கொள்கிறது. பின்னர் இன்றைய பாகிசுத்தான் வழியாகப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கிறது.

கங்கை இந்துக்களின் புனித ஆறாகும். இந்த ஆறு இந்தியாவின் இதயம் போன்ற பகுதியில் பாய்ந்து ஆரியப் பண்பாட்டின் மையமாகத் திகழ்கிறது; இமயமலையிலுள்ள கங்கோத்திரி (Gangotri) என்னும் பனிமிக்கஇடத்திலிருந்து உற்பத்தியாகி, உத்தரப் பிரதேசம், பீகார், வங்காளம் போன்ற மாநிலங்களின் வழியாகப் பாய்ந்து வங்காளக்குடாக் கடலில் கலக்கிறது. யமுனை, கோமதி, கார்கி, சாரதா, கண்டகி, சம்பல், சோனை, கோசி போன்றவை கங்கையாற்றின் துணையாறுகளாகும். இந்துசுத்தான் சமவெளியில் கங்கையின் விசிறிக் கால்கள் போன்று இவை பரவி வடஇந்தியாவை வளமாக்குகின்றன. இதன் வடிகாலே இந்தியாவின் மிகப்பெரும் வடிகாலெனக் கருதப்படுகிறது. இவ்வடிகால் இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ காற்பங்கு என்பதிலிருந்தே இதன் சிறப்பினை அறியலாம்.

பிரமபுத்திரா ஆறு மேற்குத் திபேத்தில் உற்பத்தியாகி, ஏறத்தாழ 1300 கி.மீ. இமயமலையில் பாய்ந்தோடி, பின்னர்த் தென்மேற்காகத் திரும்பி ஓடித் தெற்காகப் பாய்ந்து, கங்கையாற்றின் கீழ்க்கோடிக் கிளையான பத்துமா என்னும் ஆற்றுடன் இணைகிறது. பின்னர்க் கங்கையுடன் சேர்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தக்காண ஆறுகள்: தக்காண ஆறுகள் மிகத் தொன்மையானவை என்பது மண்ணூல் வல்லுநர்கள் கருத்து. நருமதை, தபதி, கோதாவரி, கிருட்டிணா, காவேரி, பெண்ணை, மகாநதி, தாமோதர், சாராவதி, நேத்திராவதி, பாரதப் புழை, பெரியாறு, பம்பா என்பன தக்காண ஆறுகளாகும். இவ் ஆறுகள் அனைத்தும் மழையையே நம்பிப் பாய்வன. இதன் விளைவாக இவ் ஆறுகள் கோடைக்காலத்தில் வறண்டுவிடுகின்றன. இந்தியாவின் மொத்த நீர் வரத்தில் 30 விழுக்காட்டு நீரைத் தக்காண ஆறுகள் கொடுக்கின்றன. இதில் 20 விழுக்காட்டு நீரை மேற்கிலிருந்து கிழக்காகப் பாயும் ஆறுகளும் எஞ்சிய 10 விழுக்காட்டு நீரைக் கிழக்கிலிருந்து மேற்காகப் பாயும் ஆறுகளும் கொடுக்கின்றன.

கோதாவரி, கிருட்டிணா, காவேரி, பெண்ணை போன்ற ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகித் தக்காணப்பீடபூமியில்ஓடி,வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றன. கோதாவரி ஆற்றுவடிகால் இந்தியாவின் இரண்டாம் வடிகாலெனக்கருதப்படுகிறது. இது இந்தியாவின் மொத்தப் பரப்பில் 10 விழுக்காட்டுப் பரப்பாகும். கிருட்டிணா வடிகால் நிலம், தக்காண ஆறுகளில் இரண்டாம் இடத்தையும், இந்தியாவில் மூன்றாம் இடத்தையும் கொண்டதாகக் கருதப்படுகிறது.

மகாநதியும் தாமோதர் ஆறும் பீடபூமியின் வடமேற்கில் உற்பத்தியாகிக் கிழக்காக ஓடி, வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றன. தக்காண முந்நீரகத்தின் மூன்றாம் இடத்தைப் பெறும் வடிகாலைக் கொண்டுள்ளது மகாநதி. இந்தியாவில் நாலாம் இடத்தைப் பெறும் நருமதையும் தபதியும் பீடபூமியின் வடகோடி மூலையில் உற்பத்தியாகிக் காம்பே (Cambay) வளைகுடாவின் வழியாக அரபிக்கடலில் கலக்கிறது. நருமதையின் வடிகால் நிலமும் கணிசமானது.

சாராவதி,நேத்திராவதி, பாரதப்புழை,பெரியாறு, பம்பா போன்ற ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, மேற்குக் கடற்கரை வழியாகப் பாய்ந்தோடி அரபிக்கடலில் கலக்கின்றன. இவை பெரும்பாலும் சிற்றாறுகள். இவற்றின் வடிகால் பரப்பும் மிகச் சிறியவை.




இந்தியா - ஆறுகள்


இயற்கைப் பயிர்பச்சைகள்: இந்தியாவைப் போல் பல்வகைப்பட்ட பயிர்பச்சைகளைக் கொண்ட நாடு உலகில் இல்லை என்று கூறலாம். உலக நடுக் கோட்டிற்கு வடக்கில் அமைந்துள்ளதாலும் பரந்த அளவு குறுக்குக் கோடுகளுக்கிடைப்பட்டிருப்பதாலும் இந்தியாவின் தட்பவெப்ப நிலையில் மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் அமைந்துள்ளன. மேலும் உயர அளவுகளிலும் விதவிதமான நிலைகளை இங்குக் காணலாம். உலகில் மிக உயர்ந்த மலைத்தொடர்களுக்கும் கடல் மட்ட அளவில் இருக்கும் இடங்களுக்கும் வேறுபாடு உண்டு. ஈரப்பதத்திலும் (Humidity) மழை அளவுகளிலும் கூட இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை இந்தியாவில் காணலாம். இந்தியாவின் தார் பாலைநிலத்தில் (Thar Desert) ஈரக்கசிவும் மழையும் மிகக் குறைந்தும் மேகாலய மாநில மலைக்குன்றுகளில் மிக உயர்ந்தும் உள்ளன. மேகாலய மாநிலத்திலுள்ள சிரபுஞ்சியில் (Cherrapunji) யில் ஆண்டொன்றுக்கு 1080 செ.மீ. மழை பொழிகிறது. ஆனால்

தார் பாலைநிலத்தில் ஆண்டுக்கு 2 அல்லது 3 செ.மீ. மழையே பெய்கிறது. உலகிலேயே சிரபுஞ்சியில்தான் மிகுதியான மழை பெய்கிறதெனக் கணக்கிட்டுள்ளனர்.

இந்தியப் பயிர்பச்சைகள் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அவை 1. தக்காணப் பயிர்பச்சைகள், 2. மலபார்ப் பயிர்பச்சைகள், 3. சிந்து வெளிப் பயிர்பச்சைகள், 4. கங்கைவெளிப் பயிர்பச்சைகள், 5. அசாம் பயிர்பச்சைகள், 6. கிழக்கு இமய மலைப் பயிர்பச்சைகள், 7. மேற்கு இமயமலைப் பயிர் பச்சைகள், 8. அந்தமான் தீவுக்கூட்டத்தில் காணப்படும் பயிர் பச்சைகள் என்பனவாம்.

தக்காணப் பகுதி பெரும்பாலும் உயர்ந்த மேட்டு நிலமாக உள்ளதால், இங்குப் பனை, தென்னை, ஈச்சமரம் போன்ற மரங்கள் காணப்படுகின்றன.

மலபார்ப் பயிர்பச்சைகளை மேற்குக் கடற்கரையிலும் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் காணலாம். இங்குப் பருவக்காற்று மழை மிகுதியாகப் பொழிவதால் பயிர்பச்சைகள் செழித்து வளருகின்றன. இங்குள்ள காடுகளில் நூக்கமரம் (Rose wood), கருங்காலி (Iron wood), தேக்கு போன்ற உறுதியான மரவகைகளும் மென்மையான மரவகைகளும் மூங்கில் வகைகளும் வளமாகக் காணப்படுகின்றன.




இந்தியா – காடுகள்

சிந்துவெளிப் பயிர்பச்சைகள் பஞ்சாபு சமவெளி, இராசசுத்தானம், இயமுனை ஆற்றுப் பகுதி, கட்சு, வட குசராத்துப் பகுதிகளில் சிறப்பாகக் காணப்படு கின்றன. இவை குறைந்த வளமுள்ளவை. கங்கை வெளிப் பயிர்பச்சைகள் யமுனை ஆற்றிலிருந்து வங் காளம், ஒரிசா வரையிலும் காணப்படுகின்றன. இக் காடுகளில் வகைவகையான மரங்கள் வளருகின்றன. இங்கே சால மரங்கள் மிகுதியாக உள்ளன.

அசாம் பயிர்பச்சைகள் பிரமபுத்திரா, சூர்மா (Surma) பள்ளத்தாக்குகளிலும் குறுக்கிடும் மலைத் தொடர்களிலும் காணப்படுகின்றன. இங்குள்ள பயிர் பச்சைகள் மிக அடர்த்தியானவை; சவன்னா புல் போன்று நீண்டு வளர்ந்தவை; அகன்ற இலைகளைக் கொண்டவை; அடர்ந்த மூங்கிற் கொத்துகளையும் இங்குக் காணலாம். கிழக்கு இமயமலைப் பயிர்பச் சைகள் சிக்கிம் மாநிலத்தில் தொடங்கித் தார்சிலிங்கு (Darjeeling), குரிசியாங்கு (Kurseong) ஆகிய இடங்க ளில் வளமாகவும் மிகுதியாகவும் வளருகின்றன. இங்கு ஏறத்தாழ 4000 வகையான பூத்துக்குலுங்கும் மலர்ச் செடிகளையும் 20 வகையான பனை வகை களையும் காணலாம். இப்பகுதியிலுள்ள வெப்பமண் டலக் காடுகளில் அகன்ற இலைகளைக் கொண்ட இனச் செடிகளையும் இலாரல் (Laurel), மாப்பில் (Maple), ஆல்டர் (Alder), பிர்ச்சு (Birch), ஊசியிலை சூனிபர் (Juniper), இரோடோடென்டிரசு (Rhododendrous) என்னும் மலர் வகைகள், மெல்லியதும் எளிதில் வளையக்கூடியதுமான மரவகைகள் ஆகிய வற்றையும் காணலாம்.

மேற்கு இமயமலைப் பயிர்பச்சைகள் குமான் (Kumaon) மலைத்தொடர்களிலிருந்து காசுமீரம் வரை பரவியுள்ளன. இப் பகுதியின் தாழ்ந்த மண்ட லங்களில் சால மரங்கள் மிகுதி. சவன்னா நிலப்பகுதி களில் சால மரங்கள் இல்லை. இங்கு 5 வகையான கமுகு மரங்களைக் காணலாம். வெப்ப மண்டலத்து ஊசியிலைக் காடுகளையும் அகன்ற இலைகளைக் கொண்ட வெப்பமண்டல மரங்களையும் இங்குக் காணலாம். இந்த மட்டத்திற்குமேல் தேவதாரு, இசுபுரூசு (Spruce) இலைகளின் அடியில் வெள்ளைக் கோடுடைய மரவகை (Silver fir) போன்றவை காணப் படும். வெப்ப மண்டலத்திற்குமேல் 4500 மீட்டர் வரை உயரமும் அதற்கு மேல் உயரமுமுள்ள பகுதி களை ஆல்பைன் மண்டலம் (Alpine Zone) என்பர். இங்குச் சில்வர் பிர் (Silver fir), சில்வர் பிரிச்சு (Silver birch), சூனிப்பர் (Juniper) போன்ற மர வகைகள் காணப்படுகின்றன.

அந்தமான் பயிர்பச்சைகளை அந்தமான்-நிக்கோ பார்த்தீவுகளில் காணலாம். இப்பகுதிகளில் மாங்கு ரோவ் (Mongrove) காடுகள், பீச்சுக் காடுகள் (Beech), எப்போதும் பசுமையான காடுகள், அரைகுறை பசு மைக்காடுகள், இலையுதிர்காடுகள் போன்றவற் றைக் காணலாம்.

விலங்குகள்: இந்தியாவில் காணப்படும் பயிர்பச் சைகளின் மாற்றத்திற்குத் தக இதன் விலங்கினங் களும் மாறுபடுகின்றன. வீட்டு விலங்காகிய ஆவும் ஆவினங்களுமே இந்தியாவில் பெரும்பாலும் நிறைந் துள்ளன. இந்தியாவின் கால்நடை எண்ணிக்கை 22½ கோடி எனக் கணக்கிடப் பட்டுள்ளது. அவற்றுள் 17½ கோடி ஆவினங்களும் 5 கோடி எருமையினங்களும் அடங்கும். அவை உலகக் கால்நடையில் காற்பங்கா கும். அவற்றைத் தவிர ஏறத்தாழ 10 கோடி ஆடு களும், செம்மறியாடுகளும் இங்குள்ளன. இந்தியா வின் பொருளாதாரத்தின் அடிப்படையே இவ்விலங்கி னங்கள் தாம்.

ஆவினைப் போற்றி வழிபடும் வழக்கம் இந்நாட் டில் தொன்றுதொட்டு வருவதாகும். இந்தியாவில் தோன்றிய சைவமும் வைணவமும் புத்தமும் சமண மும் ஆவின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. பசுவ தையை மொகலாய மன்னர் அக்பரும் தடுத்திருந்தார். காந்தியடிகளின் நிருமாணத் திட்டத்தில் பசுவதை யைத் தடைசெய்ய வேண்டும் என்பதும் ஒன்றாகும். இன்றும் பெரும்பாலான இந்திய மாநிலங்கள் பசு வதைத் தடைச் சட்டத்தைச் செயற்படுத்தி வரு கின்றன. பசுவதைத் தடைச் சட்டத்தை எதிர்ப்போரும் உண்டு. சுருங்கக் கூறின், சிற்றூர்களை முதுகெலும்பு போல் கொண்டுள்ள இந்தியாவின் பொருளாதாரமே கால்நடைச் செல்வத்தைப் பரா மரிப்பதிலேயே உள்ளது. இந்தியாவின் மிகத் தொன்மையான சிந்துவெளிப் பண்பாட்டிலேயே ஆவினத்தைப் போற்றி வந்ததற்கான தொன்மைச் சான்றுகள் உள்ளன. எனினும் இந்தியாவில் ஆவி னம் முறைப்படி பராமரிக்கப்படவில்லை என்பதும் உண்மைதான்.

இந்தியாவின் விலங்குகளைப் பாலூட்டிகள் (Mammals), ஊனுண்ணிகள் (Carnivorous), தழையுண்ணி கள்(Herbivorous),ஊர்ந்து செல்வன(Reptile), பறவை கள் போன்றவையாகப் பிரிக்கலாம்.

பாலூட்டிகள்: சுண்டெலிகள், மூஞ்சூறுகள் (Moles), முள்ளம்பன்றிகள், பறக்கும் இலெமூர்க் குரங்குகள், வௌவால்கள், குரங்குகள், வாலில்லாக் குரங்குகள், இலாங்கர் (Langar) போன்றவை பாலூட்டிகளுள் சிறப்பானவையாம். கொரில்லா, பாபூன், சிம்பன்சி, உரங்குட்டான் போன்ற மனிதக் குரங்குகள் இந்தியாவில் இல்லை எனலாம்.

ஊனுண்ணிகள்: இந்தியாவில் இருவகையான ஓநாய்கள் உள்ளன. முதல்வகை ஓநாய்கள் மேற்கு இமயமலைப் பகுதிகளில் வாழ்கின்றன. இவை அடர்ந்த உரோமத்தைக் கொண்டவை. இரண்டாம் வகை இந்தியாவெங்கும் காணப்படும் சிறு ஓநாய்களாகும். நரி வகையும் ஊனுண்ணியேயாகும். நரிகளும் இந்தியாவில் பரந்து வாழ்கின்றன. நான்கு வகைக் குள்ள நரிகளும் (Fox) இரண்டு வகைக் காட்டு நாய்களும் காட்டுப்புறங்களில் வாழ்கின்றன.

கறுப்புநிறக் கரடிகள் இந்தியாவில் பல பகுதிகளில் காணப்படுகின்றன. இதனைத் தேனுண்ணும் கரடி (Sloth bear) என்கிறார்கள். மேற்கு இமயமலைப் பகுதிகளில் பெரிய ஆசியக் கறுப்புக் கரடிகள் வாழ்கின்றன.

பண்டா (Panda) என்னும் இமயமலைக் கரடியினம், 18 வகை மென்மயிருடைய கீரியினம் (Marten), மரநாய் (Weasel) போன்ற விலங்குகளும் வாழ்கின்றன. புனுகுப் பூனைகளும் (Civets) கிழக்கிந்தியத் தீவுகளில் வாழும் புனுகு பூனைகளும் (Linsangs), இந்தியாவெங்கும் காணப்படுகின்றன. இந்தியக் காடுகளில் ஒருவகைக் கழுதைப்புலிகள் (Hyena) மட்டிலுமே வாழ்கின்றன. நான்கு வகைச் சிறுத்தைகளும் (Panthers), இந்தியாவெங்கும் காணப்படும் பொதுவான சிறுத்தைப் புலிகளும் (Leopards), கறுப்புநிறச் சிறுத்தைப்புலிகளும், இமயமலைப் பகுதிகளில் வாழும் பனிச் சிறுத்தைப் புலிகளும் இந்தியாவில் காணப்படுகின்றன. இந்தியக் காடுகளில் புலிகள் (Tigers) மிகுதியாக உள்ளன. அண்மையில் வனவிலங்கு நிறுவனம் புலியை இந்தியாவின் தேசிய சின்னமாக அறிவித்துள்ளது. விரைவாகக் குறைந்துவரும் இவ்வினத்தை அழிவிலிருந்து காக்கப் புலிப் பாதுகாப்புத் திட்டத்தை (Project Tiger) இந்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

சிங்கங்கள் வட இந்தியாவில் மிகுதியாகக் காணப்பட்டன. ஆனால் அவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மிகுதியாக அழிந்து விட்டன. குசராத்து மாநிலத்தில் கி.பி. 1880-ஆம் ஆண்டளவில் கத்தியவாரிலுள்ள கிர் காடுகளில் 12 சிங்கங்களே இருந்தன என்றும், இந்திய அரசு மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாகச் சிங்கங்கள் எண்ணிக்கை உயர்ந்து வந்தது என்றும் தெரிகிறது.

இந்தியாவில் பல வகைப் பூனைகள் வாழ்கின்றன. அவை இந்தியப் பாலைநிலப் பூனை, எங்கும் காணப்படும் காட்டுப்பூனை, சிறுத்தைப் புலிவகைப் பூனை, மீன் வகைப் பூனை போன்றவையாகும். இலிங்சு என்னும் குறுவால் பூனையினம் காசுமீரத்திலும் காரக்கல் (Caracal) என்னும் காட்டுப்பூனை வடமேற்கு இந்தியாவிலும் காணப்படுகின்றன. புள்ளியுடைய சிறுத்தை வகை (Clouded Leopard) இமயமலையில் மிகுதியாகக் காணப்படுகின்றது. கோரைப்பற்களையுடைய சிறுத்தை(Cheetah) இனம் இந்தியாவிலிருந்தே மறைந்துவிட்டது.

தழையுண்ணிகள்: இந்தியத் தழையுண்ணிகளுள் (Herbivorous) உருவத்தில் பருத்தும் மிகுதியாகவும் வாழ்வன யானைகளேயாகும். இவை இந்திய முந்நீரகக் காடுகளில் வாழ்கின்றன. புத்திக் கூர்மையும், பழக்கப்படுத்தக் கூடிய தன்மையும் உள்ளமையால் இவை பிடிக்கப்பட்டு, காடுகளில் வெட்டப்படும் மரக்கட்டைகளை இழுத்துவரப்பயன்படுத்தப்படுகின்றன. இவை விழாக்களிலும், கோயில்களிலும் இடம்பெறுகின்றன. ஒற்றைக் கொம்புடைய இந்தியக் காண்டாமிருகங்கள் (Rhinoceros) அழியும் நிலையில் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க இந்திய அரசு முயன்று வருகிறது.

குதிரையினம் இந்தியாவில் தோன்றவில்லை. அவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. கழுதையினத்தில் ஒருவகை மட்டுமே இந்தியாவெங்கும் காணப்படுகிறது. இருவகைப் பன்றிகளான, காட்டுப்பன்றிகள் (Wild bear), குள்ளப்பன்றிகள், சருகுமான்(Mousedeer), புள்ளிமான், குரைக்கும் மான், சம்பர் (Sambar) போன்ற விலங்குகள் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றன. புனுகுமான் காசுமீரத்தில் மட்டும் வாழ்கிறது. காசுமீரத்தில் உள்ள ஆங்குல் (Hangul) என்னும் ஒருவகை மான் மறைந்து வரும் இனத்தைச் சார்ந்தது. நான்கு கொம்புள்ள மானும் கரியமான் (Black Buck) என்னும் விலங்கும் இந்திய மானும் நாடு முழுதும் காணப்படுகின்றன. காட்டெருமை அசாம், மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளிலும், ஆசிய மலையாடுகள் (உள்வாங்கிய பெரிய கொம்புகளை உடையவை) இமயமலையிலும் காணப்படுகின்றன. கறுப்புக் காளை (Blue Bull) என்னும் ஒருவகை விலங்கு பெரிய உருவமுடையது. இது பயிர் பச்சைகளை அழித்துச் சேதம் விளைவிக்கக் கூடியது. வங்காளம், மேற்குக் கடற்கரை போன்ற பகுதிகள் நீங்கலாக, இந்த வகை விலங்கு நாடெங்கும் காணப்படுகிறது. கார் (Gaur) என்னும் காட்டெருது உலகிலேயே உயரமானதும் அழகானதுமாகக் கருதப்படுகிறது. இவ்வகைக் காட்டெருதுகளைக் கருநாடக மாநிலத்தைச் சார்ந்த பந்திப்பூர் (Bandipur) வனவிலங்குக் காப்பகத்திலும், தமிழ்நாட்டைச் சார்ந்த முதுமலை வனவிலங்குக் காப்பகத்திலும் காணலாம்.


ஊர்வன (Reptiles): இந்தியாவில் மூவகை முதலைகளைக் காணலாம். அவை ஆற்று முதலை, சதுப்பு நில முதலை, கழிமுக முதலை என்பனவாம். சிந்து, கங்கை, மகாநதி, பிரமபுத்திரா போன்ற ஆறுகளில் ஆற்று முதலைகள் காணப்படுகின்றன. அவற்றைக் கரியால் (Gharial) என்பர். சதுப்பு நில முதலைகள் இந்தியாவில் பரவலாகக் காணப்படுவன. ஆற்று முகத்துவாரங்களிலும் கடலையொட்டியுள்ள கால்வாய்களிலும் கழிமுக முதலைகள் காணப்படுகின்றன. 'அலிகேட்டார்' (Alligator) முதலைகள் இந்தியாவில் இல்லை. இந்தியாவில் ஏறத்தாழ 50 வகை ஆமைகள் உள்ளன. நான்கு வகைப் பல்லிகளும் பலவகைப் பாம்புகளும் இந்தியாவில் உள்ளன. மலைப்பாம்பு (Python) இந்தியாவிலே மிகப் பெரும் பாம்பினமாகும். இது 7 மீட்டர் வரை நீளமுள்ளது, ஏறத்தாழ 200 பவுண்டு எடையுள்ளது. அழகான இப்பாம்பு இந்தியா எங்கும் காணப்படுகிறது. குறிப்பாகப் பெருங்காடுகளிலும் ஈரப் பதமுள்ள தாழ்ந்த சதுப்புநிலங்களிலும் முட்புதர்கள் நிரம்பிய வறண்ட காடுகளிலும் இவ்வகைப் பாம்புகள் மிகுதி.

கொடும் நஞ்சுடைய பாம்புகள் (Kraits) பதினொரு வகையானவை. நாகப்பாம்பு இருவகையானது. இதுவும் கொடிய நஞ்சுடையது. விரியன் (Viper) என்னும் நச்சுப்பாம்பில் 20 வகைகள் உள்ளன.

பறவைகள்: இந்தியாவில் 1200 இனப் பறவைகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள 8600 இன வகைகளில் இது 14 விழுக்காடாகும். இவற்றைத் தவிர வேறுசில பறவை இனங்களும் இந்தியாவில் வாழ்கின்றன. பறவைகளின் புகலிடமான செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கல் புகழ்பெற்றது. இங்கு அயல் நாட்டைச் சார்ந்த பறவைகள் வந்து குஞ்சு பொறித்து இனப் பெருக்கம் செய்கின்றன. இந்திய நாட்டுப்பறவையாக மயில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தட்பவெப்ப நிலையும் மழைப்பொழிவும்: மிகுந்த பரப்பும் உயர வேறுபாடும் இந்தியாவில் வெவ்வேறு தட்பவெப்ப மண்டலங்களை உருவாக்கியுள்ளன. வட இந்தியாவில் இமயமலை அடிவாரத்திலுள்ள பகுதிகளில் கடுங்குளிரும் கடுங்கோடையும் உள்ளன. ஆனால் தென் இந்தியாவில் வட இந்தியாவைப் போன்ற கடுங்குளிர் ஏற்படுவதில்லை. இத்தகைய வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு, இந்தியா வெப்பமண்டலப் பருவக்காற்று வகையைச் சார்ந்த தட்பவெப்பநிலையை உடையது எனக் குறிப்பிடலாம்.

தட்பவெப்பம்: மலை வாசத்தலங்கள் கடற்கரைப் பகுதிகள், மேட்டு நிலங்கள் போன்றவை வெவ்வேறான தட்பவெப்ப நிலைகளைக் கொண்டுள்ளன. மலை வாசத்தலங்களான சிம்லா (Simla), தார்சிலிங்கு (Darjeeling) போன்ற இடங்கள் மிகக் குறைந்த வெப்பநிலையைக் கொண்டவை. கடற்கரை மாநகரங்களான பம்பாய், சென்னை போன்றவை சீரான வெப்பம் உடையவை. மேட்டு நிலமான நாகபுரி கடும் கோடைக்குப் பெயர் பெற்ற மாநகரம்.




காற்றும் – காற்றழுத்தமும்.

பருவங்கள்: இந்திய வானவியல் ஆய்வு நிலையத்தார் இந்தியப் பருவங்களை நான்காக வகுத்துள்ளனர். அவை 1. குளிர்காலம் (திசம்பர் முதல் மார்ச்சு வரை), 2. கோடைக்காலம் (ஏப்பிரல் மே மாதங்கள்), 3. மழைக் காலம் (சூன் முதல் செப்டம்பர் வரை), 4. தென்மேற்குப் பருவக்காற்றுப் பின்வாங்கும் காலம் (அக்டோபர், நவம்பர்) என்பனவாம். தமிழ் அறிஞர் காலத்தை ஆறு பருவங்களாக வகைப்படுத்துவர். அவை 1. கார் 2. கூதிர், 3. முன்பனி, 4. பின்பனி, 5. இளவேனில், 6. முதுவேனில் என்பனவாம்.

மழையளவு: இந்தியாவில் மழை பெய்யும் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுக்க இயலவில்லை. அதன் பொழிவின் அளவுகளும் ஒரு தன்மையாக இருப்பதில்லை; பெய்யினும் பெய்யும், பொய்ப்பினும் பொய்க்கும் தன்மை படைத்தது. அசாம், மேற்கு வங்காளம், மேற்குக் கடற்கரை போன்ற

பகுதிகளில் கனத்த மழை பொழிகிறது. பம்பாய், மத்திய பிரதேசம், பீகார் போன்ற பகுதிகள் நல்ல மழையும், சென்னை, வடமேற்குத் தக்காணம், மேல் கங்கைச் சமவெளி போன்ற பகுதிகள் ஓரளவு மழையும் பெறுகின்றன. இராசசுத்தானிப் பாலைநிலமும், காசுமீரத்தைச் சார்ந்த இலதாக்குப் பகுதிகளும் சிறிதளவு மழை பெறுகின்றன. மேகாலயா மாநிலத்தைச் சார்ந்த சிரபுஞ்சியில்தான் உலகிலேயே மிகுதியான அளவு மழை பொழிகிறது. இங்கு 1000 செ.மீ.க்கு மேல் மழை பெய்கிறது. மேலும் இந்தியாவில் மழை ஆண்டு முழுவதும் சீராகப் பெய்வதில்லை.


பருவக்காற்றுகள்: இந்தியாவில் மழையைக் கொணரும் காற்றுகள் இரண்டாகும். அவை 1. தென்மேற்குப் பருவக்காற்று. 2. வடகிழக்குப் பருவக்காற்று என்பனவாம். தென்மேற்குப் பருவக் காற்றால் இந்தியாவின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்கிறது. ஆனால் வடகிழக்குப் பருவக்காற்று சில இடங்களில் மட்டும் ஓரளவு மழையைக் கொடுக்கிறது. தமிழ் நாட்டிற்கு மிகுதியான மழையை வடகிழக்குப் பருவக்காற்றே கொடுக்கிறது.

தென்மேற்குப் பருவக்காற்று இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் சூன் மாதத் தொடக்கத்தில் பெய்யத் தொடங்கும். பருவக்காற்றுவீசத் தொடங்கும் நாளையும் திட்டவட்டமாகக் கூற இயலாது. இப்பருவ மழை இரு காரணங்களுக்காகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. முதலாவது, இப்பருவக்காற்று வீசத் தொடங்கும்போது வேளாண்மைத் தொழில் தொடங்குகிறது. இரண்டாவது, இப்பருவக்காற்று வீசுவதால்தான் கடுங்கோடை வெப்பமும் தணிகிறது.


இந்தியாவில் மே மாதம் கடுங் கோடைக்குப் பெயர் பெற்ற மாதமாகும். இம்மாதத்தில் வெப்ப அலைகள் இந்தியாவின் பல பகுதிகளில் தாக்குகின்றன. பல இடங்களில் வெயில் வெப்பத்தாக்கு ஏற்பட்டுப் பலர் சாவதும் உண்டு. குறிப்பாகக் கடுங் கோடைக்குப் பெயர் பெற்ற வடஇந்திய மாநிலங்களில் இத்தகைய சாவுகள் ஆண்டுதோறும் நிகழ்கின்றன.

சூறாவளிகள்: இந்தியாவில் அவ்வப்போது சூறாவளிகள் ஏற்படுதலும் உண்டு. தென்மேற்குப் பருவக் காற்று வீசுவதற்கு முன்னும் பின்னும் மழையுடன் இத்தகைய சூறாவளிகள் வீசுவதுண்டு. வங்காள விரிகுடாவிலும், அரபிக்கடலிலும் இருந்து சூறாவளிகள் உருவாகின்றன. பெரும்பாலும் வங்காளவிரிகுடாவில் சூறாவளிகள் வீசுகின்றன. மேற்கு வங்காளக் கடற்கரை, வட ஒரிசா, ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள், தமிழ்நாட்டுக் கடற்கரை போன்ற பகுதிகள் வங்காள விரிகுடா சூறாவளித் தாக்குதலுக்கு ஆளாகின்றன. குசராத்துக் கடற்கரைப் பகுதி அரபிக்கடல் சூறாவளியால் தாக்கப்படுவதுண்டு. சூறாவளிகளால் பெரும்சேதம் விளைவது இயற்கை. எனினும் அவை பலத்த மழைப் பொழிவையும் ஏற்படுத்துகின்றன.

ப.ர.





இந்தியா - பருவக் காற்றுகள். கோடைக்காலம்




இந்தியா - பருவக்காற்றுகள். குளிர்காலம்

**இந்தியா பெயர்க்காரணம்:** இந்தியாவின் வட மேற்குப் பகுதியை வந்தடைந்த வைதிக ஆரியர்கள், இமயத்தில் தோன்றிப் பஞ்சாபு வழியே பாய்ந்து அரபிக்கடலை யடையும் பெரிய ஆற்றினைச் 'சிந்து' என்றனர். இது வைதிக வடமொழிப் பெயரா அன்றி, ஆரியர் வருகைக்கு முன்பு அப்பகுதியில் இருந்த மக்கள் அவ்வாற்றிற்கு இட்டிருந்த பெயரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அப் பெயர் இருக்கு வேதத்தில் காணப்படுவதனால் பலர் அதனை வடசொல் என்று கருதுவர். அதே 'சிந்து' என்னும் பெயரைப் பண்டைய பாரசீகர்கள் 'இந்து' என்றனர். ஏனெனில், இத்தொன்மையான பாரசீக மொழியில் வடமொழி 'ஸ' உள்ள இடங்களில் 'ஹ'




இந்தியா–மழை அளவு

பயன்படுத்தப்பெறும். ஆகவே 'ஸிந்து' 'ஹிந்து' வாயிற்று; பாரசீகமொழியில் 'ஹிந்து' என்னும் சொல் அந்த ஆற்றினைக் குறித்ததோடு, அதனைச் சூழ்ந் திருந்தநாட்டையும் குறித்தது. நாளடைவில் அப் பெயர் இமயத்திற்குத் தென்பாலுள்ள முந்நீரகத் திற்கே ஆயிற்று. கிரேக்கர்கள் பாரசீகச் சொல்லை எடுத்தாண்டனர். அவர்கள் ஆற்றினை 'இந்தசு' என்றும் அதைச் சூழ்ந்த நிலப்பகுதியை 'இந்தியா' என்றும்குறிந்தனர். கிரேக்க மொழியில் ..'இயா' என்று முடியும் (நாடுகளைக் குறிக்கும்) சொற்கள் பலவுள: எடுத்துக்காட்டு:- 'மெசபொடோமியா', 'மாசிடோனியா', 'பார்த்தியா' 'அயோனியா' 'பர்சியா' முதலி யன. அவ்வாறே இந்தசைச் சூழ்ந்த நாட்டிற்கு 'இந்தியா' என்பது பெயராயிற்று. பண்டைய இந்திய இலக்கியங்களில் 'இந்தியா' என்னும் சொல் இடம் பெறவே இல்லை. எனவே இச்சொல் வெளிநாட்டினரால் இந்நாட்டிற்குப் பெயராக இடப் பட்டது என்பது தெளிவு. ந.சு.

**இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை:** இந்தியா வில் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை என்பது ஒரு சாராரின் கருத்து. இந்திய நாட்டிற்கு அடிப் படை ஒற்றுமை உண்டு என்பது மற்றொரு சாரா ரின் கருத்து. இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை யை ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்களே என்று கூறுவோரும் உண்டு.

இந்தியாவுக்கு அடிப்படை ஒற்றுமை இல்லை என்பது ஆங்கிலேயர் வேண்டுமென்றே திணித்த கருத்து. பல்லாயிரம் கி. மீ. தொலைவு நீண்டும் அகன்றுமுள்ள இந்தியாவில் பல்வேறு மொழிகள், மாநில வேறுபாடுகள், உணவு, உடை, பழக்க வழக் கங்கள், வழிபாட்டுமுறை வேறுபாடுகள் போன்ற வெளித்தோற்ற வேறுபாடுகளைக் கண்ணுற்றவர் கள், இந்தியா ஒரு நாடன்று; நாடுகளின் நாடு எனக் கருதினர். இக்கருத்து தவறு என்பதை, டாக்டர் அன்னிபெசண்ட்டு அம்மையார் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தாம் எழுதிய 'இந்தியா ஒரு நாடு' (India a Nation) என்னும் நூலில் விளக்கி யுள்ளார். பண்டித சவகர்லால் நேரு 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' (Discovery of India) என்னும் தமது நூலில், இந்தியப் பண்பாடு 'பன்மையில் ஒருமை' (Unity in diversity) உடையது எனக் குறிப்பிட் டுள்ளார்.

இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையை ஏற்படுத் தியவர்கள் ஆங்கிலேயர்களே, என்னும் கருத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அவர்கள் நிருவாக ஒருமையை (Administrative Unity) ஏற்படுத்தினார் கள் என்பது ஓரளவு உண்மை. இத்தகைய நிருவாக ஒருமையை இந்துப் பேரரசர்களும், மொகலாயப் பேரரசர்களும் ஓரளவு ஏற்படுத்தியிருந்தனர். நாட் டின் பெரும் பகுதி ஆங்கில ஆட்சிக்கு அடிமைப்பட்ட போது, அவர்கள் தம் நிருவாகத் திறனால் அரசியல் ஒருமையை ஏற்படுத்தினார்கள்.

இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை தொன்று தொட்டு வருவது என்பதையும் இவ்வொற்றுமை பண்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது என்ப தையும் பேராசிரியர் இராதாகுமுத முக்கர்சி (Radha Kumud Mookerjee) என்பார் எழுதிய 'இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை' (The Fundamental Unity of India) என்னும் நூலில் கோவையாக விளக்கிக் கூறி யுள்ளார். மேற்போக்காகப் பார்ப்பவர், 'பல வற்றினூடே உறைந்திருக்கும் ஒன்றினையும் (One

in the many) கூட்டுத்தொகையில் உறைந்திருக்கும் தனித்துவத்தையும் (Individual in the Aggregate), கூடி இணைந்துள்ளதில் உறைந்திருக்கும் எளிமையையும் (Simple in the Composite) உணரமாட்டார் என்பது அவருடைய கூற்றாகும்.

'இயற்கையமைப்பு, சமூக ஏற்பாடு, மொழி, பழக்க வழக்கம், சமயம் போன்ற பல்வேறு வேறுபாடுகளினூடே, இமயம் முதல் குமரிவரை அறிந்துணரத்தக்க ஒருமையுணர்வு இழையோடியிருப்பதை இந்திய வரலாற்றைக் காணும் எவரும் தெரிந்துகொள்ள இயலும்' என்கிறார் சர் எர்பர்ட்டு இரிசிலி (People of India, p-299). இத்தகைய ஒருமைப்பாடு அண்மைக் காலத்தைய ஒரே மாதிரியான நிருவாக அமைப்பு முறையாலும் பெருகி வளர்ந்துவரும் இக்காலக் கல்வி முறையாலும் பேணிக்காக்கப்பட்டு வந்துள்ள தென்பதை ஐயந்திரிபறக் கூறலாம். இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையைப் பல கூறுகளில் கண்டறியலாம்.

நிலவியல் ஒருமைப்பாடு: பரதனின் நாடு (பாரத வருடம்) என்னும் ஒரே பெயரில் இந்தியா குறிக்கப்படுவதிலிருந்து, இவ்வடிப்படை ஒற்றுமையின் முதற்கூற்றினை உணரலாம். இதிகாசங்களும் புராணங்களும் பாரதம் என்னும் பெயராலேயே இந்தியாவைக் குறிக்கின்றன. பரதனின் நாடு என்னும் பெயருக்கு ஆழ்ந்த வரலாற்றுப் பின்னணி உண்டு. அது இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையை வலியுறுத்துகிறது. பரதனின் நாடு என்னும் சொல் நிலவியல் எல்லைகளைக் குறிப்பிடுவதோடு, உலகம் முழுவதையும் ஆண்ட முடியாட்சி அமைப்பையும் குறிப்பிடுவதாகக் கூறுவர். ''அடிப்படை ஒருமையை வலியுறுத்தும் இப்பெயரைக் குறித்த உணர்வு, இந்தியாவின் இறைமையியல் வல்லுநர்கள், அரசியல் தத்துவவாதிகள், கவிஞர்கள் போன்றோரிடம் எப்போதும் இருந்துவந்துள்ளது. அதனாற்றான் அவர்கள் இமயம் முதல் குமரிக் கடல்வரை பரந்ததும் பல்லாயிரம் கி.மீ. நீள அகலங்களைக் கொண்டதுமான இந்நாட்டை, உலகப் பேரரசர் ஒருவரின் ஆட்சியின் பாற்பட்டதென்று சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

(இந்தியாவின் சிறப்பு வரலாறு) இமயம்முதல் கன்னியாகுமரி வரையிலும் அட்டாக்கிலிருந்தது கட்டாக்கு வரையிலுமான இந்நாட்டை அரசர்களும் பேரரசர்களும் ஆண்டார்கள் என்று புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளனர். இடைக்காலத்தில் ஆண்ட மன்னர்களும் இந்தியாவை ஒரே நிலவியல் தொகுதி எனக் கொண்டு இந்தியா முழுவதையும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொணர முயன்றிருக்கிறார்கள். இன்று 'பாரதமாதா' நம் தாய்த்திரு நாடுஎன்னும் நிலவியல் ஒருமைப்பாட்டை அனைவரும் வலியுறுத்துகிறார்கள். வந்தேமாதரகீதம் இந்த உள்ளுணர்வின் அடிப்படையில் அமைந்த ஒருமைப்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறது.

அரசியல் ஒருமைப்பாடு: அரசியலிலும் இந்தியா முழுவதற்குமான ஒருமையுணர்ச்சி வலியுறுத்திக் கூறப்படுவதைக் காணலாம். இந்தியாவை ஆண்ட அரசர்கள் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள விழைந்து, அதனை ஒரே தொகுதி என்றே கருதிவந்துள்ளனர். சக்கரவர்த்தி என்னும் இலட்சியமே இந்தியாவை ஆண்ட பெருமன்னர்களின் குறிக்கோளாக இருந்தது என்பதைப் பல்வேறு காலகட்டங்களிலும் காணலாம். சந்திரகுப்த மௌரியர், அசோகர், சமுத்திரகுப்தர் போன்ற பெருமன்னர்கள் இந்தியா முழுவதிலும் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட முயன்றனர். இந்தியா முழுவதையும் ஆளும் அரசியல் ஆளுமையே இந்துக்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த அரசியற் கொள்கையாகும். ஆதிராசா, இராசாதிராசா, சாம்ராட்டு, ஏகராசா, விராட்டு, சருவபூமா போன்ற சொற்களை அவர்கள் அடிக்கடி பயன்படுத்தியுள்ளார்கள். இச்சொற்களைப் பண்டைய சமசுகிருத இலக்கியங்களில் காணலாம். அதனுடன் இராசசூயம், வாசபேயம், புரைபிசேகம், ஐந்திரம், மகாபிசேகம் போன்ற சடங்குகளையும் வேள்விகளையும் மாறி மாறித் தொடர்ந்து செய்துவந்துள்ளார்கள் என்பது, தொன்மைக்கால இந்துக்கள் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள முயன்றிருக்கிறார்கள் என்னும் கருத்தை நிலைநாட்டுவதாம்.

இடைக்காலத்திலும், அலாவுதீன் கில்சி, அவுரங்கசீபு போன்ற இசுலாமிய மன்னர்கள் இந்தியா முழுவதையும் ஒருகுடைக்கீழ் நிலைநாட்டவே முயன்றார்கள். மொகலாயப் பேரரசர்கள் உருவாக்கிய பேரரசு நிருவாக அமைப்பும், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி அரசியல் துறையில் இந்த அனுபவத்தை ஏற்படுத்தியது. மொகலாயப் பேரரசர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிருவாக அமைப்பு, ஒரே வகையான சட்டங்கள், பழக்க வழக்கங்கள், பொதுவான நாணய அமைப்பு முறை, ஒரே ஆட்சிமொழியான பாரசீக மொழி, நன்கு அமைக்கப்பட்ட பரந்த சாலை அமைப்புகள் போன்றவற்றின்மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை நிலைநாட்டினார்கள். ஆங்கிலேயரும் இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாட்டை நிலைநாட்டினார்கள். இந்தியா விடுதலை பெற்றபின், சுதேச சமசுத்தானங்களை இந்தியக் குடியரசுடன் இணைத்து, அரசியல் ஒருமைப்பாட்டை முழுமையாக்கியது.

சமய ஒருமைப்பாடு: இந்தியாவில் நிலவிவரும் பல்வேறு சமயங்களினூடேயும் சமய ஒருமைப்பாடு இழையோடியிருப்பதைக் காணவியலும். சிவ வழிபாடு, விட்டுணு வழிபாடு போன்றவற்றில் சிறுசிறு வேறுபாடுகள் இருப்பினும், அவை இரண்டுமே வட நாட்டிலும் தென்னாட்டிலும் பரவியுள்ளன. விட்டுணுவை வழிபாடு செய்தற்கேற்ற தலங்களும், சிவவழிபாட்டுத் தலங்களும் நாடு முழுமையும் உள்ளன என்பது வெளிப்படை. சைவர்கள் நாடு முழுமையையும் சுட்டும் சோதிலிங்கங்கள் பன்னிரண்டு என்பர். வைணவர்கள் 108 தலங்களை இந்தியா முழுவதிலும் சுட்டுவர். அதனைப் போன்றே சக்தியை வழிபாடு செய்பவர்களும் சக்தி பீடங்கள் நாடு முழுமையும் உள்ளன என்பர். இவ்வழிபாட்டுத் தலங்கள் பனி உறையும் இமயமலையின் உச்சியிலிருந்து கடல் அலைகள் அலம்பும் கன்னியாகுமரிவரை பரவியுள்ளன.

இராமாயணம், மகாபாரதம் போன்ற தொன்மையான இதிகாசங்களைத் தென்னாட்டவர் பக்தி உணர்வோடு ஊன்றிப் படிப்பதைப் போன்று வடநாட்டிலும் பத்தியோடு படிப்பதை இன்றும் காணலாம். இராமன், கிருட்டிணன் போன்றோர் வரலாறுகளை நாடு முழுவதிலும் பல இலட்சம் மக்கள் படித்து இன்புறுகின்றனர். கற்பு நெறியும் பசு (ஆவினம்), வேதங்கள், பகவத் கீதை, புராணங்கள் ஆகிய அறநூல்களும் நம்நாட்டு மக்கள் அனைவராலும் போற்றிப் புகழப்படுகின்றன. வேதங்களும் புராணங்களும் இன்றும் நாடு தழுவிய மக்களில் பெரும்பாலோர்க்கு அமைதியான உயர்வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. ஒருவனே தேவன், ஆத்துமா அழியாதது, மறுபிறப்பு, ஊழ்வினை, வீடுபேறு போன்ற வாழ்க்கை முடிபுகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதோடு, இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களும் அவற்றைப் போற்றி எண்ணுகின்றனர். கண்ணுக்குப் புலப்படாத பரம்பொருள் உண்டென்பதிலும், கொல்லாமை, தானதருமம், பொறையுணர்வு ஆகியவற்றிலும் பெரும்பாலும் ஒத்த கருத்துடையவர்களாகத் திகழ்கிறார்கள்.

சமயச் சடங்குகளும் அவற்றைச் செய்யும் வழிமுறைகளும் நம் நாடுமுழுமையிலும் ஏறத்தாழ ஒருமையை உணர்த்துவன. இவற்றைத் தெற்றெனச் சுட்டிக் காட்டும் அழியாச் சின்னங்களாகத் திருக்கோயில்களும் புனிதத் தலங்களும் நாடு முழுமையும் உருவாக்கப் பெற்றுள்ளன. வடக்கில் பத்திரி-கேதாரமும், தெற்கில் இராமேசுவரமும், கன்னியாகுமரியும், மேற்கில் துவாரகையும், கிழக்கில் செகந்நாத புரியும் இந்துக்கள் போற்றி வழிபடும் புண்ணியத் தலங்களாகும். இதனாற்றான் காசி இராமேசுவரப் பயணம் மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்து நாடு முழுவதும் வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு தூய இந்துவும் இத்தகைய தலயாத்திரையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்து சமயம் சொல்லுகிறது. புண்ணியப் பயணம் செய்வோர் தாய்த்திருநாட்டின்மீது கொண்டிருக்கும் அசையாத நாட்டுப்பற்றை இத்தகைய பயணங்கள் விளக்குகின்றன. அதன் பயனாக நாடு பற்றிய நுட்பமான அறிவினைப் பெறவும் பண்டைக் காலத்திலேயே மக்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. வடமொழி நூல்களில் காணப்படும் புனித இடங்களின் பட்டியலைக் காணும்போது நாடு முழுவதிலும் நிலவிவந்த சமய ஒருமைப்பாட்டை நன்கு உணரலாம்.

இந்துக்கள் நாள்தோறும் வழிபாடு செய்யும் போது கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி, சரசுவதி, நருமதை, காவேரி போன்ற ஆறுகளின் பெயர்களை நினைவிற் கொள்வர். இவ்வாறுகள் வடக்கு தெற்குப் பகுதிகளில் ஓடுவன. இவ் வாறுகளில் குளிப்பதால் வீடுபேறு அடையலாம் என்றும், பாவங்கள் தீரும் என்றும் இந்துக்கள் நம்புகின்றனர். மேற்குறிப்பிட்ட ஆறுகள் இந்தியாவின் விரிந்து பரந்துள்ள பரப்பைக்காட்டுவதுடன், மக்களின் பண்பாடு சமயநெறி போன்றவற்றையும் இந்திய மக்களின் அடிப்படை ஒற்றுமையையும் நினைவூட்டுகின்றன

பண்பாட்டு ஒருமைப்பாடு: உலகில் வேறெங்கும் காணப்படாத, வியப்பூட்டும் வகையில் வெவ்வேறான மக்களை இணைக்கும் முறையாக இந்திய நாகரிகமும் பண்பாடும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டிற்கும் அடிப்படை ஒற்றுமை உள்ளது. மொழி வேறுபாடுகள், பழக்க வழக்க வேறுபாடுகள், அரசியல் ஒற்றுமையின்மை போன்றவற்றினூடே இந்திய இலக்கியங்களும், சிந்தனை முறையும் பண்பாட்டு ஒருமையைப் பதிய வைத்துள்ளன. இலக்கியக் கருத்துகளில் அடிப்படை ஒற்றுமை, தத்துவ ஒருமை, எழுதாச் சட்ட நடைமுறைகள் போன்றவற்றிலும் நாடு முழுமைக்குமான பொதுநோக்கு காணப்படுதல் இந்தியப் பண்பாட்டில் குறிப்பிடத்தக்கதாகும். சமூக, பண்பாட்டு ஒருமை நாடு முழுமைக்கும் ஒரே அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. சமூகக் கொண்டாட்டங்கள், சமயச்சடங்குகள், திருவிழாக்கள்,வாழ்க்கை முறைகள் போன்றனவும் வடநாட்டிலும் தென்னாட்டிலும் ஒன்றுபோல் இருப்பதைக் காணலாம். குடும்பத்தோடு இணைந்து வாழும் புனிதத் தன்மை, சாதிவரன்முறைகள், சம்சுகாரங்கள் எனப்படும் சடங்குகள், ஈமச்சடங்குகள், சமையற்கட்டைத் துப்புரவாக வைத்தல் போன்றவை அனைத்து இன மக்களுக்கும் பொதுவானவை. நாடு முழுமைக்கும் இவை பெரும்பாலும் ஒன்றுபோலவே நடைபெறு

கின்றன. கங்கணக்காப்பு (Rakshabandan), தசரா, தீபாவளி, ஒலி (Holi), சங்கராந்தி எனப்படும் பொங்கல், பிள்ளையார் சதுர்த்தி போன்ற விழாக்கள் நாடெங்கும் கொண்டாடப்படுவதினின்றும் இவ் வடிப்படை ஒருமையை அறியலாம்.

மொழி ஒற்றுமை. கிறித்தவ ஆண்டு தொடங்கும் முன்னர்ப்பிராகிருதமொழி இந்தியாவின் பொது மொழியாய் இருந்தது. அசோகப் பெருமன்னரின் சமயத் தூதர்கள் இம்மொழியைப் பயன்படுத்தி அற நெறிகளை எளிய மக்களுக்குப் போதித்தார்கள். பிற்காலத்தில் பாலி மொழியும் வடமொழியும் அதன் இடத்தைக் கைப்பற்றிக்கொண்டன. சமசுகிருத மொழியைப் புனித மொழிகளில் ஒன்றென இந்திய நாட்டு மக்களுள் பெரும்பாலோர் ஒப்புக்கொள்வர். இந்தி, மராத்தி, குசராத்தி, வங்காளி போன்ற வட இந்திய மொழிகள் சமசுகிருதத்திலிருந்து தோன்றியவை. தென்னாட்டு மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலும் வடமொழியின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. சமசுகிருதத்தின் இடத்தை இன்று ஆங்கில மொழி பிடித்துக்கொண்டுள்ளது.

இனவியல் ஒருமை. திராவிடர், ஆரியர், சகர், சித்தியர், ஊணர் போன்றோர் ஒன்றாக இணைந்து, இந்து சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து, தத்தம் தனித்தன்மையை இழந்துவிட்டனர். இந்தியாவில் வாழும் பெரும்பாலான முசுலிம்களும் கிறித்தவர்களும்கூட இந்துக்களின் வழித்தோன்றல்களே; இந்துக்களாயிருந்து பின்னர் இசுலாம், கிறித்தவ மதங்களுக்கு மாறியவர்களே. இவ்வினங்கள் எல்லாம் காலப்போக்கில் இணைந்து இனவியல் ஒருமைப்பாட்டை உருவாக்கியுள்ளன. இதனால் அனைவரும் இந்தியர் என்று கருதப்பெறும் பொது இந்திய ஆளுமை உருவாகியுள்ளது.

இந்துக்களிடையே பண்டைக்காலம்முதல் நிலவி வந்த ஒருமைப்பாட்டைப் பன்மையில் ஒருமை அல்லது வேற்றுமையில் ஒற்றுமை என்று கூறுவது சாலப் பொருந்தும். இந்துக்கள் அல்லாதாரையும் இந்து ஒருமைப்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டவர் என்று கருதமுடியாது. ஞானிகள், சித்தர்கள், தீர்க்கதரிசிகள் போன்றோர் வெவ்வேறாக இருந்தாலும், அவர்கள் ஒன்றுகூடி இணைந்து நட்புறவுடன் வாழ முயலுகின்றனர். இந்தியாவில் வாழும் இசுலாமியர், இந்து சகோதரர்கள் அறிவியல், தத்துவம், சமயம் போன்றவற்றில் ஆழ்ந்த பரிவு காட்டி வருவதும் கண்கூடு. திருத்தப்பட்டுப் புதுமையாக்கப்பட்டுவரும் இக்கால இந்து சமயம், சமயப்பொறைவுணர்வுடன் மாற்றுச் சமயத்தையும் தம்போல நடத்திச் சமூக மக்களாட்சிக் கருத்துக்கு வழிகாட்டுகிறது.

இந்தியப் பண்பாட்டு ஒருமைக்கு வழிவகுப்பவை பின்வருவன 1. முனிவர்கள், ஞானிகள், சமயப் போதகர்கள், பயணிகள், 2. பேரரசினை நிலைநாட்டிய வெற்றிவீரர்கள். 3. நிருவாக ஒருமைப்பாடு, சமய-மொழி ஒருமைப்பாடு, இக்காலப் போக்குவரத்துச் சாதனங்கள், இந்தியர் அனைவருக்கும் உரிய பொது வரலாறு, தேசிய உணர்வு போல்வன.

வரலாற்றுக்கு முந்திய காலம்: இப்புவி தோன்றிய காலம் முதல் இக்காலம்வரை உள்ள வரலாறு முதற்காற் பேரூழி, (Primary) இரண்டாங்காற் பேரூழி (Secondary), கடைப் பேரூழி அல்லது மூன்றாங்காற் பேரூழி (Tertiary) ஆகிய காலக் கட்டங்களைக் கடந்து நாலாங்காற் பேரூழியில் (Quartern-ary) உள்ளது. நாலாங்காற் பேரூழியின் முதற்கட்டம் முன்னூழி (Pleistocene) என்றும், அதைஅடுத்து வருகின்ற கட்டம் அண்மைக்கால ஊழி (Holocene) என்றும் சொல்லப்படுகிறது. நாம் வாழ்ந்து கொண்டிருப்பது அண்மை ஊழிக் காலமாகும். மேற்கூறிய நாலாங்காற் பேரூழியின் முன்னூழிக் காலத்தில்தான் முதன் முதலில் மனிதன் கற்கருவிகள் செய்யத் தொடங்கினான். இக்காலம் முன்னூழி, இடை முன்னூழி பின்முன்னூழி என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இம்முன்னூழிக் காலத்தில் கியூன்சு (Qunz), மின்டல் (Mindel), இரிசு (Riss), ஊர்ம் (Wurm) என நான்கு பனிப்படலக் காலங்களும், மூன்று இடைப் பனிப்படலக் காலங்களும் இருந்தன. இக் காலகட்டத்தில் மத்திய தரைக்கடலுக்குத் தெற்குப் பகுதியில் காணப்படுவதுபோல, இவ்வுலகின் சில இடங்களில் பனிப்படலத்துக்குப் பதிலாக மழைக்காலம் அமைந்துள்ளது. ஆனால் இந்தியாவில் இக்காலத்தில் பரவலான இடங்களில் மழைக்காலமும், இமயமலைப் பகுதி போன்ற இடங்களில் பனிப்படலக் காலமும் இருந்திருக்கின்றன.

மனித வரலாற்றை முன்வரலாற்றுக் காலம் (Prehistory), இடைவரலாற்றுக்காலம் (Proto History), வரலாற்றுக் காலம் (History) எனப் பிரித்துள்ளனர். முன்வரலாற்றுக்காலத்தைப் பழங்கற்காலம் (Palaeolithic), நுண்ணிய கற்காலம் (Microlithic)புதிய கற்காலம் (Neolithic) என மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

பழங்கற்காலம்: இக்காலம் முற்பழங்கற்காலம் (Lower Palaeolithic) இடைப்பழங்கற்காலம் (Middle

Palaeolithic), பிற்பழங்கற்காலம் (Upper Palaeolithic) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப் பழங்கற்காலம் இந்தியாவில் கி.மு. 10,000 ஆண்டு வரை இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

முதன் முதலில் கி.பி. 1863-ஆம் ஆண்டு இராபர்ட் புரூசுபூட்டு (Robert Bruce Foote) என்பவர் இந்தியாவில் பழங்கற்காலக் கருவிகளைக் கண்டு பிடித்தார். ஆனால், அதற்குஉரிய சரியான ஆராய்ச்சியை டி. தெர்ரா, டி.டி. பெடர்சன் (De-Terra & T.T. Paterson) ஆகியோர் தலைமை யிலான இயேல்-கேம்பிரிட்சுப் பல்கலைக்கழக (Yele Cambridge University) ஆராய்ச்சிக் குழு 1935-ஆம் ஆண்டில் நடத்தியது. அதைத் தொடர்ந்து பி.பி. இலால் (B.B. Lal), வி.டி. கிருட்டிணசாமி (V.D. Krishnaswamy), எச்.டி. சங்காலியா (H.D. Sankalia), டி. சென் (D.Sen), எப்.இ.சூனர் (F.E. Zeuner) மற்றும் பலர் பல குறிப்பிடத்தக்க வரலாற்றுக்கு முந்திய காலத்து இடங்களைக் கண்டுபிடித்து ஆராய்ச்சி நடத்தினர்.

முற்பழங்கற்காலம்: சிந்து, கேரளம் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா இந்திய மாநிலங்களிலும், முற்பழங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர். அடர்ந்த காடுகள் உள்ளமையாலும் மனித வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் கிடைக்காமையாலும் சிந்துவிலும் கேரளத்திலும் முற்பழங்கால மக்கள் வாழ இயலவில்லை.

மேற்குப் பஞ்சாபு-சோகான் சமவெளி (பாகிசுத்தான்); கிழக்குப் பஞ்சாபு- சிர்சா சமவெளி, பியாசு-பங்கன்கா சமவெளிகள்; காசுமீர்-பகல்காம்; இராசசுத்தான் - செய்ப்பூர், பண்டி, காம்பிரி, நகரி, சோனிட்டு, பைசோகர்; குசராத்து-சபர்மதி, மாகி, ஆர்சங்கு, கார்சன், சமவெளிகள், கச்சுப்பகுதி; மத்திய பிரதேசம்-நர்மதை, பெட்வா, சோனார், சோன் சமவெளிகள்; பீகார்-சகரதார்பூர், பண்டா, சாசர்ப்பா, சாசுடாட்டு, காவிபகார்; வங்காளம் கன்சாபாதி, தால்கிசோர் சமவெளிகள், சுசுனியா நயாகர்; அசாம் - காரோமலை, உரோன்கிராம் உரோன்கிகிரி, மோல் மிகிரி; ஒரிசா-குளினா, பகமணி, மகாநதி, பேசுடரணி, புர்நபலாங்கு, புவர்னரேகா சமவெளிகள், கமார்பால்; மகாராட்டிரம்-கோதாவரிச் சமவெளி, நிவேசா, நாசிக்கு, தவுளியா, பாடேன், காங்காபூர், கங்கவாடி, சபல்பூர், மூலா; கொங்கணப் பகுதிகள்; ஆந்திரா-கர்னூல், நாகார்ச்சுனகொண்டா, பங்காரு, சத்தியவேடு; கருநாடகம்-நின்கடாகள்ளி, கிப்பனகள்ளி, நந்திகேசுவர், அனகவொடி, பகல்கோட்டு, அலூர், நிட்டூர், தமின்கால்; தமிழ்நாடு - பல்லாவரம், கோர்தலை ஆற்றுப்பகுதி, வடமதுரை, அத்திரம்பாக்கம், திருப்பெரும்புதூர், மஞ்சக்கரணை; அரக்கோணம்-திருப்பதிப் பகுதிகள் ஆகிய இடங்களில் முற்கற்காலப் பண்பாட்டு மக்கள் ப்யன்படுத்திய கற்கருவிகள் காணக் கிடைக்கின்றன.

மேற்கண்ட அனைத்து இடங்களிலும், அவ்விடங்களின் புவியியல் அமைப்பிற்கு ஏற்ப இக்காலத்தைச் சார்ந்த தடயங்கள் கிடைக்கின்றன. இக்கால மக்கள் பயன்படுத்திய கூழாங்கற்களால் ஆன ஆயுதங்கள், பெரும்பாலான இடங்களில் ஆற்றுப்படுகையிலேயே காணப்படுகின்றன. மலை அடிவாரங்களில் இம் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். தமிழ் நாட்டில் கோர்த்தலை ஆற்றுப்படுகையிலுள்ள அத்திரம்பாக்கத்தில் உள்ள மலை அடிவாரத்தில் இக்கால மக்கள் வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தண்ணீர், கற்கருவிகள் செய்யப் பயன்படும் கற்கள் ஆகியன கிடைத்தமையால் மக்கள் இவ்விடங்களில் வாழ முடிந்தது. மேலும் இலலித்பூர் போன்ற இடங்களில், பெரிய கற்பாறைகளின் மறைவுகளில் மக்கள் தங்கி வாழ்ந்தனர். இவர்கள் சில சமயங்களில் காடுகளுக்கு அருகிலும் வாழ்ந்தனர். உணவுக்காக வேட்டையாட இக்காடுகள் பெரிதும் உதவியாக இருந்தன. இவர்கள் மலையின் உச்சிப் பகுதி, அடர்ந்த காட்டின் உட்பகுதி ஆகிய இடங்களில் வாழவில்லை. ஏனெனில் தண்ணீரும் உணவுக்கான விலங்குகளும் மலை உச்சியில் கிடைப்பதில்லை. அடர்ந்த காட்டில் அவர்களுக்கு ஆயுதம் செய்யத் தேவையான கற்களும் தண்ணீரும் எளிதில் கிடைப்பதில்லை.

முற்கற்கால மக்கள் பெரும்பாலும் கற்கோடரிகளையே ஆயுதமாகப் பயன்படுத்தினர். இக்கோடரிகள் அவர்களுக்கு வேட்டையாடவும், தோல் உரிக்கவும், மாமிசம், எலும்பு முதலியவற்றை வெட்டவும் நிலத்தைத் தோண்டவும் பயன்பட்டன.

சோகான் சமவெளிகளில் (Sohan Valley)காணப்படும் கல் ஆயுதங்கள்தாம் இந்தியாவிலேயே மிகவும் பழமை வாய்ந்தவை. இவை இரண்டிலிருந்து நான்காம் பனிப்படலக் காலம்வரை (Glacial Ages) காணப்படுகின்றன. இங்குக் காணப்படும் கருவிகளின் காலத்தைச் சோகான் காலத்துக்கு முற்காலம், முதல் சோகான், இடைசோகான், பிற்சோகான் காலம் என நான்கு வகைப்படுத்துவர். சோகானுக்கு முற்காலத்தில் ஆயுதங்கள் கரடுமுரடாக இருந்தன. ஆனால், முதல் சோகான் காலத்தில் ஆயுதம் செய்யும் முறையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டு இருந்தது. இடைசோகான் காலத்து ஆயுதங்கள்

தேயாமலும் நேர்த்தியாகவும் உள்ளன. நீள்வட்ட வடிவ அலகுகள், முக்கோண வடிவ அலகுகள் போன்ற கல்லாயுதங்கள் இக்காலத்தில் காணப்படு கின்றன. ஆனால் பிற்காலச் சோகான் ஆயுதங்கள் இக்காலத்திற்கு முற்காலங்களில் மக்கள் பயன்படுத் தியவைபோல இருந்தாலும், அளவில் சிறியனவாக இருக்கின்றன. இச்சோகான் ஆயுதங்கள் சட்லசு நதியின் துணை நதியாகிய சிர்சா நதி சமவெளிப் பகுதியிலும், பியாசு மற்றும் பங்கங்கா சமவெளிப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

முதன்முதலில் பழங்கற்காலக் கோடரிகளைப் புரூசு பூட்டு என்பவர் கி.பி. 1863-ஆம் ஆண்டு சென்னையிலுள்ள பல்லாவரத்தில் கண்டுபிடித்தார். இவை 'மதராசுக் கைக் கோடரி' (Madras Hand-axe) என வழங்கப்பட்டன. பிறகு பேட்டர்சனும், கிருட் டிணசாமியும் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆராய்ச்சி நடத்தியபோது, அத்திரம்பாக்கத்தில் அபிவில்லியன் (Abbevillion), அச்சூலியன் (Acheulian) என்று வகைப்படுத்தப்பட்ட கல் ஆயுதங்களைக் கண்டு பிடித்தனர். அபிவில்லியன் ஆயுதங்கள் கரடுமுரடாகக் காணப்படுகின்றன. ஆனால் அச்சூலியன் ஆயுதங்கள் சிறிது சீராகவும் செய்முறையில் வளர்ச்சி பெற்றன வாகவும் காணப்படுகின்றன. எனவே மக்கள் அபி வில்லியன் கற்கருவிகள் செய்த பிறகே, அச்சூலியன் வகைக் கற்கருவிகளைச் செய்திருக்க வேண்டும்.

இக்கால மக்கள் உணவு சேகரிப்பவர்களாக இருந்தார்கள்; ஆதலின் ஒரே இடத்தில் தங்கி வசிக்கவில்லை; எவ்வித உடையும் இல்லாமலோ தோல் ஆடையுடனோ திரிந்தனர்; வேட்டையாடு வதே அவர்களது முக்கியத் தொழில்; மாமிசம் அல் லது காடுகளில் கிடைக்கும் செடி, கிழங்கு, கொட்டை, பழங்கள் முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர். காலப் போக்கில் இம்மக்கள் ஒவ்வொரு வேலைக்கும் ஏற்ற வெவ்வேறு கல் ஆயுதங்களை உருவாக்கத் தொடங் கினர். புவியியலார் இக்காலம் ஏறக்குறைய கி.மு. 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கணித் துள்ளனர்.

இடைப்பழங்கற்காலம் (Middle Palaeolithic): இக்கால மக்கள் முற்பழங்காலத்தைத் தொடர்ந்து வாழ்ந்தவர்கள். இந்தியாவில் கீழ்க்காணும் சில முக்கிய இடங்களில் இப்பண்பாடு காணப்படுகிறது. மகாராட்டிரம் - நிவேசா, பாண்டூர், மகேசுவர், விதர்ப்பா, சன்டோலி; கருநாடகம் - பகல்கோட்டு, சங்கனகல்லு, பெல்லாரி; ஆந்திரம் - கர்னூல், நால் கோண்டா, இராமதிர்தம்பயா, கரிம்நகர்; தமிழ் நாடு - அத்திரம்பாக்கம், வடமதுரை, குடியம்; ஒரிசா - காட்கை, இராம்பா, சகநாத்பூர், பேய்டர்னி; கிழக்கு வங்காளம், அசாம் - கரோமலைகள், பிர்பன், பான்குரா, மிட்டாபூர்; பீகார் - பாட்னா, கயா, பகல்பூர், மாங்குயர், சிசுபன்; உத்தரப்பிரதேசம் - தான்சு, பேலன் சமவெளிகள்; மத்தியபிரதேசம் - நரசிங்பூர், ஒசங்காபாது, மகேசுவர், பீட்வா, சேனார், பீமா, நர்மதை, சின்னா சமவெளிகள்; குசராத்து - பாடர் ஆறு, பாலிதா, துக்வாடா, தெற்குக் கச்சுப் பகுதி; இராசசுத்தான் - சம்பல் பகுதி, சித்தூர், உலுனி (Luni), காம்பிரி; காசுமீர், பஞ்சாபு - பகல்காம், கணேசுபர்.

இடைப்பழங்கற்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் பல மகாராட்டிரத்திலுள்ள விதர்ப்பா பகுதியில் ஆற்றுப்படுகையில் பெருமளவில் கிடைக் கின்றன. கருநாடக மாநிலத்தில் கிடைக்கும் ஆயு தங்கள் ஒரே சீராக இல்லாமல், பெரும்பாலானவை கூர்முனையோடு காணப்படுகின்றன. இம்மாநிலத் திலுள்ள கரகுன்கி என்னும் இடத்தில் இனம் காண முடியாத விலங்குகளின் எலும்புப் புதை படிவங்கள் (Fossils) கிடைத்துள்ளன. ஆந்திராவில் காணப்படும் கருவிகள் மகாராட்டிரத்தில் கிடைப்பவற்றை விடப் பெரியவை. இம்மாநிலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த இடம் எல்லேசுவரத்தின் அருகிலுள்ள இராம திருதம்பய ஆகும். இங்கு மட்டும் 10 இடங்களில் 600-க்கும் மேற்பட்ட ஆயுதங்கள் கிடைக்கின்றன. முற்பழங்கற்கால ஆயுதங்கள் கிடைக்கும் தமிழ் நாட்டிலுள்ள அத்திரம்பாக்கம், வடமதுரை, குடியம் ஆகிய இடங்களில் இடைப்பழங்கற்காலக் கருவிகளும் கிடைக்கின்றன. இக்கருவிகள் செய்யும் இடம் ஒன்று நருமதா சமவெளிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. இங்கு எண்ணற்ற கற்கருவிகள் பரவலாகக் காணப்படுகின்றன. இராசசுத்தானிலுள்ள சம்பல் ஆற்றுச் சமவெளிப் பகுதியில் இருபக்கமும் (Biface) பட்டை தீட்டப்பட்ட கல் ஆயுதங்களும் கைக்கோட ரிகளும் (Hand axe) துளையிடப் பயன்படும் சிறு உளிகளும், தோல் உரிக்கப் பயன்படும் மெல்லிய ஆயுதங்களும் காணப்படுகின்றன.

இடைப்பழங்கற்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் முற்காலத்தைவிட அளவில் சிறியனவாகப் பல வகைகளில் வெவ்வேறு வேலைகளுக்கெனச் செய்யப்பட்டன. இவை படிகக்கல் (Chert), மணிக்கல் (Chalcedony) இரத்தினம் (Agate) போன்ற உயர்வகைக் கற்களால் ஆனவை. மரம், எலும்பு போன்றவற்றை உடைக்கக் கூர் முனைக் கருவிகளும் (Points), சிறிய கற்கோடரிகளும், தோல் உரிக்கவும் இறைச்சியை வெட்டவும் வேட்டையாடவும் எனப் பல வகை ஆயு தங்களும் செய்யப்பட்டன. இது இக்காலத்தில் ஏற் பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகும். இக்

கால மக்களின் வாழ்க்கை முற்பழங்கற்கால மக்களைப் போலவே இருந்தது.

மூலா சமவெளியிலுள்ள மூலநகர் என்னும் இடத்திலும், மேற்கூறிய சில இடங்களிலும் கிடைத்த கரித்தூள்களைக் கரிமம் 14 (Corbon 14) முறையில் பரிசோதித்ததிலிருந்தும், இங்குக் கிடைத்துள்ள சில விலங்குகளின் எலும்புப் புதைபடிவங்களைப் பரிசோதித்ததிலிருந்தும் இப்பண்பாடு ஏறத்தாழக் கி.மு. 50,000 முதல் கி.மு. 20,000 வரை நீடித்திருந்தது என்பது கணிக்கப்பட்டுள்ளது.

பிற்பழங் கற்காலம்: இடைப் பழங்கற்காலத்தைத் தொடர்ந்து பிற்பழங் கற்கால மக்களின் பண்பாட்டின் தடயங்கள் இந்தியாவில் கீழ்க்காணும் இடங்களில் காணப்படுகின்றன. ஆந்திரம் - சித்தூர், கர்னூல், இரேணிகுண்டா, மல்லகுண்டலு, நாகார்ச்சுனகொண்டா; கருநாடகம்-சல்வட்கி, மிரால்பாவி, கிருட்டிணம்மா, மேரால்பாவி;தமிழ்நாடு-சிதம்பரம்; உத்தரப் பிரதேசம் - பவுசாலி, இராசுபுட்டு, பேலன் சமவெளி; மத்திய பிரதேசம் - சோன் சமவெளி, சிதி, அடோல், பிம்பேட்கா; மகாராட்டிரம் - போரிவலி, கண்டில்லி, நிவேசா, தவுளியா; குசராத்து - பவகார் மலைப்பகுதி, விசதி:

இக்கால மக்கள் மிகவும் சிறிய அளவில் கல் ஆயுதங்களைச் செய்து பயன்படுத்தினர். இவை மிக நல்ல முறையில் தோற்றம் அளிக்கின்றன. இவ்வாயுதங்கள் நீளமாகவும், தரமானவையாகவும் காணப்படுகின்றன. இவ்வாயுதங்கள் ஆந்திராவிலுள்ள மல்லகுன்று என்னும் இடத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. மேலும், கருநாடகத்திலுள்ள சல்வட்கி, மிரால்பாவி ஆகிய இடங்களிலும் இவ்வகை ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. குசராத்தில் கற்களால் ஆகிய பெரிய ஈட்டி, அம்பு வடிவ ஆயுதம் போன்றவை கிடைத்துள்ளன.

இக்கால மக்கள் ஆயுதம் செய்யும் முறையில் நன்கு முன்னேற்றம் அடைந்திருந்தனர் என்பது இவ்வாயுதங்களால் தெரியவருகின்றது. கற்களால் மட்டுமன்றி எலும்புகளாலும் ஆயுதங்கள் செய்தனர் என்பதை, ஆந்திரத்திலுள்ள முச்சண்டு சிந்தாமணி என்னும் இடத்திலும் கர்னூலிலுள்ள பில்ல சுர்கம் என்னும் இடத்திலும் கிடைத்துள்ள எலும்புகளால் செய்யப்பட்ட கருவிகள் உறுதிப்படுத்துகின்றன.

இக்கால மக்கள் தொடர்ந்து மலைக் குகைகளில் வசித்தனர் என்பதை மத்திய பிரதேசத்துப் பிம்பேட்காவிலுள்ள குகையில் காணப்படும் ஆயுதங்கள் உறுதிப்படுத்துகின்றன. கல் ஆயுதங்கள் இலெவலாசியன் (Levalloisian) தொழில் நுட்ப முறையில் செய்யப்பட்டனவாகக் காணப்படுகின்றன. நிவேசாவில் இடைப்பழங்கற்கால ஆயுதங்களோடு இக்காலத்திற்குரிய ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவை சால்சிடனி என்னும் கல்லில் செய்யப்பட்டவை. பாட்டேன் என்னும் இடத்தில் சாசுபர் மற்றும் சால்சிடனியால் செய்யப்பட்ட ஆயுதங்கள் கிடைக்கின்றன.

ஓர் இடத்தில் கிடைக்கும் ஆயுதங்களும் அங்கு நிலவும் பல்வேறு இயல்புகளும் பழங்காலத்தைய அவ்விடத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலையை அறிய உதவுகின்றன. குசராத்தில் பிற்பழங்கற்கால ஆயுதங்களும், புதைபடிவங்களும் பவகார் மலைப்பகுதியில் காணப்படுகின்றன. இவற்றை ஆய்வு செய்ததில் இப்பிற்பழங்கற்காலத்தில் இப்பகுதியில் கடுமையான வறட்சி நிலவியதாகவும், இவ்வறட்சியானது நுண்ணிய கற்கால மக்களின் வருகையின்போது நீங்கியதாகவும் தெரியவருகிறது. இப்பண்பாடு கி.மு. 20,000 முதல் கி.மு. 10,000 ஆண்டுக் காலத்தில் வளர்ந்திருந்ததாகக் கரிமம் 14 முறைப்படி ஆராய்ந்ததில் தெரியவருகிறது.



பழங்கற்காலக் கருவிகள்

நுண்ணிய கற்காலம் (Microlithic): இது பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலமாகும். இக்காலத்து மக்கள் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் மிக நுண்ணியதாக இருந்தமையால் இக்காலத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்காலத்து மக்கள் வாழும் நிலத்தின் பரப்பு முற்காலங்களைவிட மிகுதியாக இருந்தது.

இப்பண்பாடு மேற்கு வங்காளத்தில் – பங்குரா, பீர்பாம், மித்னாபூர்; பீகாரில் – பகல்பூர், மர்வானியா, பிரதாப்பூர்; உத்தரப்பிரதேசத்தில் – இலேகானியா, பகார், கிருங்கருளிபகுதி மற்றும் பேலன் சமவெளி; ஓரிசாவில் – சுன்தர்கார், பூரி, தேன்கார்ல்; ஆந்திரப் பிரதேசத்தில் – நாகார்சுன கொண்டா, சங்கனகல்லு, கிட்டலூர்; கருநாடகம் - பிரமகிரி, சலகல்லி, சிட்லபாடி; தமிழ்நாட்டில் – மெய்ஞ்ஞானபுரம், கூத்தம்புளி, குதன்குளி, சாயர்புரம்; கட்டலங்குளம், குளத்தூர், புட்டம்தருவி, நாசரேத்து, மேலும்; மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் வட்டத்திலுள்ள திடியன், தெ. கல்லுப்பட்டி, புதுப்பட்டி போன்ற இடங்களிலும் இப்பண்பாட்டுத் தடயங்கள் டாக்டர் கே.வி. இராமனால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மகாராட்டிரம் – நாசிக்கு, எல்லோரா, கார்லே குகைகள், கொங்கனப்பகுதி, குசராத்து – இலிங்கனாசு, மத்தியபிரதேசம் – சம்பல் சமவெளி, இரத்லாம், உச்சயினி, இந்தூர், இராசசுத்தான்–உதயபூர், சித்தூர், ஆசுமீர்.

இக்கால மக்கள் ஆற்றங்கரைகள் மட்டும் அன்றிக் கரைக்குச் சற்றுத் தொலைவிலும், மணற்பாங்கான இடங்களிலும், கடற்பகுதிகளிலும், குகைகளிலும் பாறை மறைவுகளிலும் தங்கள் வாழ்க்கையைக் கழித்தனர். இக்காலத்து மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் முற்காலத்தைவிட மிகவும் சிறியவை. இவை வெவ்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் அழகாகச் செய்யப்பட்டுள்ளன. இவ்வாயுதங்கள் படிகக்கல், மணிக்கல், இரத்தினம், போன்ற உயர் வகைக் கற்களால் ஆனவை. மக்கள் பொதுவாக விலங்குகளை வேட்டையாடி உணவாக உட்கொண்டனர்.

உத்தரப் பிரதேசத்தில் சராய் நகர் ராய் என்னும் இடத்தில் நடத்திய அகழாய்வில் களிமண்ணால் கட்டப்பட்ட அடுப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதே இடத்தில் மான், எருமை, காண்டாமிருகம் மீன், ஆமை முதலியவற்றின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது இக்கால மக்கள் இவ்விலங்குகளை உணவாக உட்கொண்டனர் என்பதைப் புலப்படுத்துகிறது. இவை அன்றி, இக்காலத்தில் பசு, குதிரை, ஆடு, நாய், எலி, முதலை, மீன் முதலிய விலங்குகள் வாழ்ந்தனவெனத் தெரிகிறது. மக்கள் மீன் பிடிக்கும் கலையையும் அறிந்திருந்தனர். சில இடங்களில் மக்கள் மட்பாண்டங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. சராய் நகர் ராயில் கூர் முனைக் கொண்ட ஆயுதம், சம பக்கம் கொண்ட அலகு போன்ற ஆயுதம் முதலியன கிடைக்கின்றன.

இக்காலத்தைய பட்டை தீட்டப்பட்ட, பட்டை தீட்டப்படாத கல் ஆயுதங்கள் கருநாடகத்திலும் பீகாரிலும் கிடைக்கின்றன. ஆனால், ஆந்திரத்திலுள்ள நாகார்சுனகொண்டாவில் பட்டை தீட்டப்படாத ஆயுதம் மட்டிலுமே காணப்படுகிறது. இது இந்தியாவிலேயே மிகப் பழமையான நுண்ணிய கற்கால இடமாகும். இத்தகைய ஆயுதங்கள் ஒரிசாவிலும் ஆந்திரத்திலும் கருநாடகத்திலும் வேறு பல இடங்களிலும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் திருநெல்வேலி ஒரு சிறந்த நுண்ணிய கற்காலப் பகுதியாகும். தேரி (Teri) என்னும் செம்மண் மேடுகளில் இவை காணப்படுகின்றன. இங்கு அம்பு வடிவ ஆயுதம், அலகு போன்ற ஆயுதம், சிறிய செதுக்கிகள், முக்கோண வடிவ ஆயுதம் ஆகியன காணப்படுகின்றன. ஆனால், கற்கோடரிகளும் பானை ஓடுகளும் இங்குக் காணப்படவில்லை. குசராத்திலும் இலிங்கனாசு என்னும் இடத்திலும் பானை ஓடுகள் காணப்படவில்லை. ஆனால், இவ்விடத்தில் மனிதன் எலும்புகளும் விலங்குகளின் எலும்புகளும் காணப்படுகின்றன. இதிலிருந்து இங்கு வாழும் மக்கள் வேட்டையாடுதல், மீன் பிடித்தல் முதலிய தொழில்களைத் தெரிந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் இவர்கள் குகைகளிலும், இராசசுத்தான் போன்ற இடங்களில் மூங்கிலினால் ஆன வீடுகளிலும் வாழ்ந்துள்ளனர் எனக் கருதப்படுகிறது. வீடுகளின் தரை நன்கு கற்களால் அமைக்கப்பட்டது.

இவர்கள் பொதுவாக இறந்தவர்களைப் புதைத்தனர். பிணத்தின் தலை மேற்குத் திசையில் இருக்கும்படி நீளவாக்கில் படுக்க வைத்துக் கைகளை மார்புக்குமேல் வைத்துப் புதைத்தனர்.

கரிமம் 14 முறைப்படி பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியதிலிருந்து இந்நாகரிமானது கி.மு. 8000 முதல் கி.மு. 2000 வரை இருந்திருக்கக் கூடும் என உறுதி செய்யப்பட்டுள்ளன.

புதிய கற்காலம் (Neolithic): பழைய கற்காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து புதிய கற்காலப் பண்பாடு தொடங்கியது. இப்பண்பாட்டு மக்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தனர். உணவு சேகரிப்பவர்களாக முற்காலங்களில் இருந்த மனிதர்கள் இக்காலத்தில் விவசாயம் செய்து உணவுத் தானியங்களை உற்பத்தி செய்தனர். இக்காலத்தில் நடந்த இம்மாறுதல் ஒரு விவசாயப் புரட்சி என்றே கருதப்படுகிறது. இம்மக்கள் அறுவடை செய்ய உதவும்ஆயுதம், ஈட்டி, கோடரி, கல் ஆயுதம் ஆகியவற்றைச் செய்தனர். இவ்வாயுதங்கள்

நன்றாக மெருகு ஏற்றப்பட்டு அழகான தோற்றத்தோடு காணப்படுகின்றன. இக்கால மக்கள் மட்பாண்டங்கள் செய்யும் தொழிலை அறிந்திருந்தனர். பசு, ஆடு, பன்றி, நாய் போன்ற விலங்குகளை வீட்டில் வளர்க்கத் தொடங்கினர். இதிலிருந்து இப்புதிய கற்கால மக்கள் பழைய கற்கால மக்களைப் போல நாடோடியானதும் காட்டு மிராண்டித்தனமானதுமான வாழ்க்கையைவிட்டு ஒரே இடத்தில் தங்கிக் குடும்ப வாழ்க்கையை நடத்தினர் என்பது தெளிவாகிறது.

இப்பண்பாடானது இந்தியா முழுவதும் ஒரே தன்மையானதாக அமையவில்லை. ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு வகையாக அமைந்திருந்தது. வட இந்தியப் புதிய கற்கால மக்கள் பர்சோகும், காப்கிரால், மார்தாண்டு, காலிபங்கன், உலோத்தல் ஆகியவிடங்களில் சுடாத செங்கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். சில வேளைகளில் மரங்களையும் பயன்படுத்தினர். தரைகள் நன்றாக மண்ணால் மெழுகப்பட்டுச் சில இடங்களில் காவியும் அதன்மேல் பூசப்பட்டுள்ளது. இக்கால மக்களின் மற்றொரு கண்டுபிடிப்பு மட்பாண்டங்கள் செய்ய உதவும் சக்கரம் (**Potters Wheel**) ஆகும். இதற்கு முன்பு கையினால் மட்டும் மட்பாண்டங்களை மனிதன் செய்து வந்தான். பின்னர்ச் சக்கரத்தைப் பயன்படுத்தி நல்ல தரமான மட்பாண்டங்கள் செய்தான். இக்கால மக்கள் கற்களாலான ஆயுதங்கள் மட்டும் அன்றி, எலும்புகளால் ஆன ஆயுதங்களையும் பயன்படுத்தி வந்தனர்.

இம்மக்கள் இறந்த மனிதர்களின் உடல்களை நீளவாக்கில் படுக்க வைத்தே புதைத்து வந்தனர். சில இடங்களில் இறந்த மனிதனோடு வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடுநாய் முதலிய விலங்குகளையும் சேர்த்தே புதைத்தனர். இம்முறை காலிபங்கன், உலோத்தல் முதலிய இடங்களில் காணப்படுகிறது.

இக்கற்காலம் கி.மு. 2400 முதல் கி.மு 1400 வரை இங்கு நீடித்திருந்தது.

தென்இந்தியப் புதிய கற்காலம் அல்லூர், கோடேகல், பலவாய், தேர்டல், பிரமகிரி, சங்கனகல்லு, பிக்லிகால், மாசுக்கி, நாகாச்சுனகொண்டா, உத்னூர், டி. நர்சிப்பூர், தெக்கலக் கோட்டை ஆகிய இடங்களில் இருந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. சர். மார்டிமர் வீலர் பிரமகிரியில் அகழாய்வு நடத்தினார். தமிழகத்தில் பையம்பள்ளி, அப்புக்கல்லு முதலிய தர்மபுரி வடார்க்காடு பகுதிகளில் புதிய கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன.

இக்கால மக்கள் பயன்படுத்திய கற்கோடரிகளின் முனை நன்கு கூராக இருந்தது. மக்கள் செம்பு உலோகத்தினால் ஆன ஆயுதங்களையும் பயன்படுத்தினர். பிக்லிகால், சங்கனகல்லு, பிரமகிரி ஆகிய இடங்களில் பெரும்பாலும் கையால் ஆன சாம்பல் நிற மட்பாண்டங்களே பயன்பாட்டில் இருந்தமை தெரிய வருகிறது. மக்கள் விவசாயம் செய்யக் கற்றிருந்தனர். ஆடு மாடுகள் மேய்க்கவும் வீட்டில் வளர்க்கவும் கற்றிருந்தனர். மக்கள் வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். பிக்லிகாலில் மக்கள் செவ்வக மற்றும் சதுர வடிவ வீடுகளில் வாழ்ந்தனர். இவ்வீடுகளின் சுவர்கள் மூங்கிற் பாயினால் ஆனவை. இந்த மூங்கில் பாய் மீது களிமண் நன்றாகப் பூசப்பட்டுள்ளது. தரைக் களிமண்ணும் சாணமும் கலந்த கலவையினால் ஆனது.

மேலும், இக்காலத்தில் சுடுமண் பொம்மைகளான காளை, மனித முண்டம் ஆகியவை கிடைக்கின்றன. வட இந்தியாவில் காணப்படுவது போலவே இங்கும் மக்கள் இறந்தவர்களின் உடலைப் புதைத்தே வந்தனர்.

இத்தென்னிந்தியப் புதிய கற்காலம் கரிமம் 14 முறைப்படி ஆராய்ந்ததில் சுமார் கி.மு. 2500 கி.மு 1000 வரை நீடித்திருந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது

கிழக்கிந்தியப் புதிய கற்காலம் இமயமலைப் பகுதி, அசாம், சிராந்து மற்றும் பல இடங்களில் நிலவி இருந்தது.

இப்பகுதிகளில் மக்கள் பிடியுள்ள கற்கோடரி, கூழாங்கற்களால் ஆன சுத்தியல் போன்ற ஆயுதம், ஆப்புவடிவ ஆயுதம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இவை யாவும் நல்ல வடிவில் அமைந்துள்ளன. மற்றும் சிராந்து என்னும் பகுதியில் எலும்பினால் ஆன பல வகை ஆயுதங்கள் வேட்டையாட, தோல் உரிக்க, துணி நெய்ய, தைக்க மற்றும் நிலத்தைத் தோண்டப் பயன்படுத்தப்பட்டன. இம்மக்கள் பீடபூமிப் பகுதியிலும் மலை அடிவாரங்களிலும் வாழ்ந்தனர். ஆனால், சிராந்து என்னும் இடத்தில் மட்டும் இம்மக்கள் சதுப்பு நிலப்பரப்பில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

இந்தியாவின் மற்ற இடங்களில் உள்ளது போல் இங்கும் மக்கள் வட்டமான வீடுகளில் வாழ்ந்தனர். வீட்டின் சுவர் களிமண் பூசப்பட்ட மூங்கில் தட்டியாலானது. கூரை காய்ந்த புல்லினால் வேயப்பட்டுள்ளது. தரை நன்றாகக் களிமண் பூசப்பட்டுள்ளது.

இக்கால மக்கள் சிவப்பு நிறம், நல்ல சாம்பல் நிறம், கறுப்பு-சிவப்பு ஆகிய நிறங்களில் மட்பாண்டங்களைச் செய்தனர். மட்பாண்டங்களுள் துளையிடப்பட்ட கிண்ணம், உதடு வைக்கப்பட்ட கிண்ணம், மூக்குவைக்கப்பட்ட சாடி ஆகியன குறிப்பிடத்தக்



புதிய கற்காலக் கருவிகள்

கன. மட்பாண்டங்களைக் கைகளாலும் சக்கரத்தாலும் செய்தனர்.

சிராந்து என்னுமிடத்தில் எரிக்கப்பட்ட நெல் கோதுமை ஆகியன அகழாய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டன. அவை இக்கால மக்கள் உழவுத் தொழிலில் கொண்டிருந்த ஈடுபாட்டை உணர்த்துகின்றன. மற்ற இடங்களில் கிடைப்பது போலவே இங்கும் சுடுமண் பொம்மைகளான பறவைகள், விலங்குகள், நாக தேவதை ஆகியன கிடைக்கின்றன.

இக்கிழக்கிந்தியப் புதிய கற்காலம் கி.மு. 2500 முதல் கி.மு. 1650 வரை நீடித்திருந்தது.

வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்கள்: முற்பழங்காலத்தையும் இடைப் பழங்கற்காலத்தையும் சார்ந்த ஓவியங்கள் இந்தியாவில் இதுவரை எங்கும் கிடைக்கப் பெறவில்லை.இதற்குப் பிற்காலத்திலிருந்து தான் இந்தியாவில் ஓவியங்கள் காணப்படுகின்றன. வட இந்தியாவில் – பர்சாகும், தால்பான், இமயமலைப் பகுதிகளிலும் மத்திய இந்தியாவில் – ஆதம்கார், மகதேவ், விசைகார் முதலிய இடங்களிலும் தென் இந்தியா - குப்கல்லு, பிக்லிகால் ஆகிய இடங்களிலும் தமிழகத்தில் பல இடங்களிலும் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுக்கு முந்திய காலங்களில் மனிதன் வேட்டையாடுவதையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்ததால் இதுவே பெரும்பாலான ஓவியங்களில் இடம்பெற்றுள்ளது. முதன்முதலில் கார்லே என்பவர் பாறை ஓவியத்தை இந்தியாவில் கண்டு பிடித்தார்.

மனித உருவம் மட்டும் அன்றி யானை, பன்றி, காண்டாமிருகம், எருமை, நாய், மான், புலி, ஆடு முதலிய விலங்குகளும் ஓவியத்தில் இடம்பெற்றுள்ளன. இவை யாவும் பெரும்பாலும் கோடுகள் மூலமே வரையப்பட்டுள்ளன.

பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் மத்திய பிரதேசத்திலுள்ள பீம்பெட்கா என்னும் இடத்தில் காணப்படுகின்றன. இவை யாவும் பிற்பழங்கற்காலத்தைச் சேர்ந்தவையாகும்.

நுண்ணிய கற்காலத்தைச் சார்ந்த ஓவியம் ஒன்று விசைகார் என்னும் இடத்தில் காணப்படுகிறது. இதில் ஒரு காண்டாமிருகத்தை ஐந்து பேர் அம்புகளுடன் தாக்குவது போல ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இதே காலத்தைச் சேர்ந்த மற்றோர் ஓவியம் ஏற்கெனவே கூறிய பீம்பெட்கா என்னும் இடத்தில் காணப்படுகிறது. இந்த ஓவியமானது இறந்த ஒரு குழந்தையைப் புதைக்கும் காட்சியாக அமைந்துள்ளது.

ஒரு மானை வேட்டையாடும் காட்சி புதிய கற்கால இடமான பர்சாகும் என்னும் இடத்தில் பாறையின் மீது தீட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தென்னார்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் குதிரை மீது சவாரி செய்யும் காட்சி, கிராம நடனப் பெண்களின் ஓவியங்கள் ஆகியவை அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இரும்புக் காலத்தைச் சார்ந்தனவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஓவியங்கள் பெரும்பாலும் சிவப்பு, கருப்பு, வெள்ளை போன்ற வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. இவை காய் அல்லது செடி, கொடிகளின் சாற்றில் கலந்தோ அல்லது வண்ணம் கரையக்கூடிய கொழுப்புப் பொருளைப் பயன்படுத்தியோ ஒருமெல்லிய குச்சி கொண்டு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

இவ்வோவியங்களைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகவே, இவ்வாராய்ச்சியின் முடிவுகள் இக்கால ஓவியங்களைப் பற்றிய முழு விவரங்களை அறிய அனைவருக்கும் உதவியாக இருக்கும் என நம்பலாம்.

செம்பு உலோகக் காலம்: இக்காலம் பொதுவாக வட இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிகத்

தைத் தொடர்ந்து வருவதாகும். இக்காலம் புதிய கற்காலத்தோடு சேர்ந்து தென் இந்தியாவில் காணப் படுகிறது. இக் காலக்கட்டத்தில் முதன்முறை யாக மக்கள் செம்பு உலோகத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். ஆகவே, இக்காலம் இப்பெயர் பெற் றது.

செம்பு உலோகக் காலம் இந்தியாவில் பல பகுதி களில் நிலவிய பண்பாட்டின் அடிப்படையில் பிரிக்கப் பட்டுள்ளது.

பானாசு ஆற்றுப் பண்பாடு: இப்பண்பாடு இராசசுத்தானிலுள்ள பானாசு (Panas) என்னும் ஆற் றங்கரையில் தழைத்திருந்ததால் இப்பெயர் பெற் றது. அகார், சிலுண்டு முதலிய சில இடங்களில் இப்பண்பாட்டுத் தடயங்கள் காணப்படுகின்றன. இக் கால மக்கள் சுடாத செங்கற்களால் வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். கூரை காய்ந்த புல்லினால் வேயப் பட்டது. தரை சில இடங்களில் சுட்ட களிமண்ணா லும் சில இடங்களில் சுடாத களிமண்ணாலும் அமைக்கப்பட்டது. செம்பினால் கோடரி, கத்தி போன்ற ஆயுதங்களைச் செய்தனர். ஆனால், இவை அரப்பா காலத்தைவிட தரத்தில் சற்றுக் குறை வாகவே இருந்தன. பொதுவாகவே சிவப்பு, கருப்பு-சிவப்பு வகை மட்பாண்டங்களையே இவர்கள் பயன் படுத்தினர். இதன் வெளிப்புறம் வெள்ளைச் சாயத் தால் தீட்டப்பட்டுள்ளது. இப்பண்பாட்டுப் பானை யின் கழுத்துப்பகுதியில் பதிந்த ஒரு மெல்லிய கோடு காணப்படும். பெரும்பாலும் சக்கரத்தைக் கொண்டே மட்பாண்டங்களைச் செய்தனர். எனி னும் சிலர் கையால் செய்யப்பட்ட மட்பாண்டங் களையும் பயன்படுத்தினர். கரிமம் 14 முறைப்படி இப்பண்பாடு கி.மு. 2000 முதல் கி.மு. 1400 வரை வளர்ந்திருந்ததாக அறியப்படுகிறது.

கயத்தா பண்பாடு: இப்பண்பாடு கலிசிந்து ஆற்றங்கரையில் வளர்ந்திருந்தது. இம்மக்கள் பயன் படுத்திய செம்பினால் ஆன பொருள்களும் ஆயுதங் களும் அதிக அளவில் இப்பகுதியில் கிடைக்கின்றன; கல்லாயுதங்களையும் பயன்படுத்தினர். இம்மக்கள் கட்டிய வீடுகள் பற்றிய முழு விவரம் எந்தவோர் அகழாய்விலும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. எனினும் சில இடங்களில் மூங்கிலால் வீடு கட்டப் பட்டதற்கான தடயங்கள் காணப்படுவதை வைத்து இவர்கள் செவ்வகம் அல்லது வட்ட வடிவமான வீடு களில் வசித்து இருக்கலாம் எனத் தெரிய வருகிறது. இக்கால மக்கள் செம்பினால் செய்யப்பட்ட வளை யங்கள், மணிக்கற்கள், மாவுக்கல் (Steatite) போன்ற உயர்வகைக் கற்களைப் பதித்த கழுத்தணி களைப் பயன்படுத்தினர். இம்மக்கள் மாநிற மற் றும் வண்ணம் தீட்டப்பட்ட சிவப்புநிற மட்பாண்டங் களைப் பயன்படுத்தினர். மட்பாண்டங்கள் மேல் சீப்புகள் கொண்டு கோடுகள் வரையப்பட்டுள்ளன. கரிமம் 14 முறை ஆய்விலிருந்து இப்பண்பாடு கி.மு. 2000 முதல் கி.மு. 1800 வரை வளர்ந்திருந்தது எனத் தெரியவருகிறது.

மாளவப் பண்பாடு: பானாசு, கயத்தா பண்பாடு களை அடுத்து மாளவப் (Malava) பண்பாடு தொடர்ந்தது. இப்பண்பாடு மத்திய பிரதேசத்தில் இரான், நாக்தா, நவ்ததோலியிலும், மகாராட்டிரத் தில் இனாம்காவிலும் வடக்கு விந்திய மலைப்பகுதி, தக்காண இலாவாபீடபூமிப் பகுதிகளிலும் காணப் பட்டது. நருமதையின் தென் கரையில் அமைந்துள்ள நவ்ததோலியில் மட்டிலுமே இப்பண்பாடு பற்றிய முழு விவரம் கிடைக்கிறது. இங்கு மக்கள் வாழ்ந்த வீடு மூங்கில் தட்டியினால் ஆனது. தட்டி மீது களி மண் பூசப்பட்டுள்ளது. தரை சுண்ணாம்பு கலந்த கலவையினால் ஆனது. மக்களின் குடியிருப்புகளைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. நவ்ததோலியில் இளஞ்சிவப்பு மட்பாண்டங்கள் மீது கருப்பு நிறம் தீட்டப்பட்ட பல்வகை மட்பாண்டங் கள் கிடைக்கின்றன. இவை மாளவ வகை மட்பாண் டங்கள் எனச் சொல்லப்படுகின்றன. இப்பண்பாடு காணப்படும் எல்லா இடங்களிலும் இவ்வகை மட் பாண்டங்கள் கிடைக்கின்றன. இம்மட்பாண்டங்கள் மீது பலவகைக் கோடுகள், மனித விலங்குகளின் உருவங்கள் ஆகியவை வரையப்பட்டுள்ளன. இம் மக்கள் கோதுமை, பார்லி, அரிசி, பசு, மான், பன்றி ஆகியவற்றின் இறைச்சியை உணவாக உட்கொண்டனர். செம்பினால் ஆன உலோக ஆயு தங்களோடு கற்களால் ஆன ஆயுதங்களையும் இவர் கள் பயன்படுத்தினர். செம்பு உலோகத்தால் ஆன காண்டாமிருகம், யானை, எருமை, காளை இழுத் துச் செல்லும் ஒரு தேரும் அதன் மீது ஒரு மனிதன் அமர்ந்து அதை ஒட்டுவது போல அமைந்த பொம் மைகளும் தபதி ஆற்றுப்படுகையிலுள்ள சவால்டா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பண்பாடு கி.மு. 1700 முதல் கி.மு. 1400 வரை தழைத்திருந்தது.

சோர்வே பண்பாடு மகாராட்டிரம் மற்றும் தக்காண பீடபூமிப் பகுதிகளில் காணப்படுகிறது. காணப்படும் இடங்கள் தைமாபாத்து, நிவேசா, பிரகாசம், இனாம்கான், சந்தோலி, சோர்வே மற் றும் சில இடங்கள். இப்பண்பாட்டு மக்கள் பெரும் பாலும் பார்லி, கோதுமை, அரிசி ஆகிய தானியங் களை உட்கொண்டனர். மேலும், பல மிருகங்களின் இறைச்சியை உண்டதற்கான சான்றுகளும் ஆராய்ச் சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மக்கள் மண்

ணால் ஆன மூக்கு வைக்கப்பட்ட சாடி, கிண்ணம் மற்றும் பல மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். இவை யாவும் நன்றாகச் சுடப்பட்டவை. இவை சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதன் மீது கருப்பு நிறக் கோடுகள் வரையப்பட்டுள் ளன. பொன், செம்பு, தந்தம் ஆகியவற்றால் ஆன வளையல், சலங்கை, காதணி போன்ற அணிகளைப் பயன்படுத்தினர். இவ்வணிகளை அழகுபடுத்தப் படிக்கல், மணிக்கல், இரத்தினம் போன்ற உயர்வகைக் கற்களைப் பயன்படுத்தினர். இக்கால மக்கள் செம்பினால் ஆன கோடரி, உளி, கத்தி, மீன் தூண்டில், அரிவாள் போன்ற ஆயுதங்களோடு மணிக்கல், படிக்கல் போன்ற கற்களால் ஆன ஆயு தங்களையும் பயன்படுத்தினர். இப்பண்பாடு கி.மு. 1400 முதல் கி.மு. 1100 வரை தழைத்திருந்ததாக அறியப்படுகிறது.

கிழக்கிந்தியச் செம்பு உலோகக் காலம் பீகார் வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் காணப்படு கின்றன. பீகாரிலுள்ள சிராந்து என்னும் இடத்தில் இக்கால மக்கள் மற்ற இடங்களில் காணப்படுவது போலவே வீடுகள் கட்டி வாழ்ந்தனர். வீடுகளின் கூரை காய்ந்த தழையினால் வேயப்பட்டுள்ளது மக்கள் அரிசி, கோதுமை போன்ற தானியங்களைப் பயிர் செய்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. இங்கும் மக்கள் செம்பு உலோகத்தாலும் கற்களா லும் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்தினர். மேலும் சுடுமண் பொம்மைகள், நாகதேவதை, மிருகங்கள் பறவைகள் ஆகியனவும் இங்குக் கிடைக்கின்றன. மக்கள் சிவப்பு, கருப்பு-சிவப்பு, கருப்பு, சாம்பல் ஆகிய நிறங்களில் மட்பாண்டங்களைச் சக்கரத்தி னால் செய்தனர். இப்பண்பாட்டுத் தடயங்கள் வங் காளத்திலுள்ள பர்த்துவான் என்னுமிடத்திலும் கிடைக்கின்றன. இங்கு மக்கள் கறுப்பு-சிவப்பு, பள பளப்பு மிக்க கருப்பு போன்ற மட்பாண்டங்களைக் கையினாலும், சக்கரத்தினாலும் பல வடிவங்களில் செய்து பயன்படுத்தினர். பீகாரிலும் இங்கும் இறந்த வர்களைத் தாழியிலிட்டுப் புதைத்தனர். இந்தப் பண்பாடு வங்கத்தில் பரத்பூர் என்னுமிடத்திலும் காணப்படுகிறது. இப்பண்பாடு கி.மு. 1600 முதல் கி.மு. 800 வரை தழைத்திருந்தது.

சிவப்பு நிற மட்பாண்டப் பண்பாடு, யமுனை, கங்கைச் சமவெளி, சாசகான்பூர், பரேலி, ஈடாவா, தாடு மீரட்டு,சகரன்பூர்,முசாபர்நகர்,இராசசுத்தானி லுள்ள பரத்பூர், செய்ப்பூர், சண்டிகர் ஆகிய இடங் களில் காணப்படுகிறது. இப்பண்பாட்டு மக்கள் பயன் படுத்திய மட்பாண்டங்கள் சிவப்பு நிறமாகக் காணப் படுகின்றமையால் இப்பண்பாடு இப்பெயர் பெற்றது. சாடிகள், கிண்ணங்கள், தட்டுகள் போன்ற மட் பாண்டங்களை இம்மக்கள் பயன்படுத்தினர். சில இடங்களில் இவற்றின்மீது வண்ணமும் தீட்டப்பட் டுள்ளது. மக்கள் கற்களால் ஆன வீடுகளைக் கட்டி வாழ்ந்ததற்கான தடயங்கள் செய்ப்பூரிலுள்ள சோத்பூர், சண்டிகரிலுள்ள சாரன்குர் ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. கற்களால் ஆன ஆயு தங்களோடு செம்பினால் ஆன ஈட்டி, உளி ஆகிய பலவகை ஆயுதங்களையும் மக்கள் இக்காலத்தில் பயன்படுத்தினர். இப்பண்பாடு கி.மு. 2600 முதல் கி.மு. 1100 வரை என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பெருங்கற்காலம்: தென்னிந்தியாவில் பெருங் கற்காலப் பண்பாடு புதிய கற்காலத்தை அடுத்து வந்தது. இப்பண்பாட்டின் தொடக்கம் கி.மு. 300 என்று கருதப்படுகிறது. இக்கால மக்கள் பண்பாட் டில் முதிர்ச்சி அடைந்தவர்களாய் விளங்கினர். பெருங்கற்கால மக்கள் பெருங் கற்களைப் பயன் படுத்தி இறந்தவர்களைப் புதைத்தனர். எனவே,இப் பண்பாடு இப்பெயர் பெற்றது. கருநாடகம், கேர ளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இப்பண்பாட் டின் சின்னங்கள் காணக் கிடக்கின்றன. தமிழகத் தில் பரவலாக இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப் படுகின்றன. தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், சானூர், கொடுமணல் முதலிய இடங்களிலும் கருநாடகத்தில் பிரமகிரியிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பகுதி களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கே.வி.இரா.

சிந்து வெளி நாகரிகம் உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் குறிப்பிடத்தக்க நாகரிகம். சிந்து நதிப்பகுதியில் இந்நாகரிகம் வளர்ந்தமையால் சிந்துவெளி நாகரிகம் எனப் பெயர்பெற்றது. இந் நாகரிகத்தின் எஞ்சிய அழிபாடுகள் பெருமளவில் அகழாய்வுகள், கள ஆய்வுகள் மூலம் இந்தியாவின் வடமேற்குப் பகுதியின் பல்வேறு பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சிந்து வெளி நாகரிகம் நிலவிய இடங்களுள் குறிப்பிடத்தக்கவை அரப்பா, மொகஞ் சோதாரோ, சான்கோதாரோ, உலோகஞ்சோ- தாரோ, அலிமுராத்து, பாண்டிவாகி, அம்ரி, காலிபங் கன், உலோதல் ஆகிய இடங்களாகும். சிந்து வெளி நாகரிகப் பகுதிகள் இன்றைய ஆப்கானிசுத்தான், பாகிசுத்தான், இந்தியா ஆகிய நாடுகளில் உள்ளன. இந்நாகரிகம் கி.மு. 3250 முதல் 2750 வரை தழைத் தோங்கியிருந்தது.இங்குக் கண்டுபிடித்த கட்டடங்கள் ஒரு பெரும் நகர நாகரிகம் இருந்ததற்கான கூறு களைக் கொண்டுள்ளன. மொகஞ்சோதாரோவும் அரப்பாவும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரங்களா கும். இங்கு வீடுகள் நேராக ஒரே வரிசையில் கட்டப் பட்டுள்ளன. தெருக்கள் நீளமாகவும் அகலமாகவும் காணப்படுகின்றன. வீடுகள் சிறந்த முறையில் பல அறைகளையும் குளிக்கும் அறைகளையும் சாய்க்



காலிபங்கன்

கடைகளையும் கொண்டு விளங்கின. ஊரின் நடுவில் பொதுக் கிணறுகள் காணப்பட்டன. மொகஞ்சோதாரோவில் பொதுக்குளம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அரப்பாவில் தானியக் கிடங்கு ஒன்றும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இம்மக்கள் பிறநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இம்மக்கள் பசு, எருது, நாய் ஆகிய விலங்குகளை அறிந்திருந்தனர். பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களின் பயனையும் அறிந்திருந்தனர். அகழாய்வில் பல முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகளை அறிஞர்கள் இதுவரை படித்திலர்.

வேதகாலம் முதல் கி.பி. 1206 வரை: இந்திய வரலாறு இன்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஓரளவு தொடங்குகிறது என்று கருதலாம். இதில் ஏறத்தாழக் கி.மு. 2500-இலிருந்து கி.மு. 1500 வரையுள்ள காலப்பகுதியில் வடமேற்கு இந்தியாவில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்தது. அதுவும் கிறித்துவிற்குமுன் பதினைந்துநூற்றாண்டுக் கால அளவில் மறைந்து போயிற்று. அது மறைந்ததற்குத் தலையாய காரணம் மத்திய ஐரோப்பா, மத்திய ஆசியாப் பகுதிகளிலிருந்து பாரசீகம் வடமேற்குக் கணவாய்கள் வழியாக இப்போது பாகிசுத்தான் என்று வழங்கும் நாட்டினுட் புகுந்த ஆரியர்களே என்பது பல அறிஞர்களுடைய கருத்து. இந்த ஆரியர்கள் ஆரியமொழி என்னும் ஒருவகை மொழி பேசியவர்கள். வடமேற்கு இந்தியப் பகுதியை வந்தடைந்த ஆரியர்கள் தொடக்கத்தில் நாடோடிகளாக இருந்தனர். இந்தியாவிற்கு வந்தபின் ஒரே பகுதியில் தொடர்ந்து பல காலம் தங்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். எனவே, வேளாண்மையும் சிற்றரசாட்சியும் தோன்றி வளரலாயின.

ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்து நிலைத்துக் கொண்ட பிறகுகூட இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். பெரும்பாலான மக்கள் ஓர் இடம் விட்டு மற்றோர் இடம் வந்து தங்கிப் புது வாழ்வு தொடங்குவராயினர், அதனைப் படையெடுப்பு என்பதை விடக் குடியேற்றம் என்று கூறுதலே சிறந்தது. இம்மக்கள் பஞ்சாபு, சிந்துப் பகுதிகளிலிருந்து நாளடைவில் கங்கைச் சமவெளியை வந்தடைந்தனர். இவ்வாறு பல நூற்றாண்டுகள் கழிந்தபின் வட ஆரியர்கள் இந்தியாவின் மத்திய, தென் பகுதிகளுக்குக் குடிபெயர்வாராயினர். ஏறத்தாழக் கி.மு. 500 அளவில் பெரும்பாலும் இந்தியா முழுவதும் இவர்கள் பரவிவிட்டனர்.

இவர்கள் வருகைக்குப் பின் புகழிழந்து மறைந்து போனதே சிந்துவெளி நாகரிகம் ஆகும். ஆதலால் ஆரியர்க்கு முன்பும் ஆரியர் நாகரிகங்களினின்று வேறுபட்டிருந்த நாகரிகங்கள் இந்தியாவில் இருந்தன என்பது பெறப்படும். இவ்வாறு இந்தியாவில் பரவியிருந்த நாகரிகங்களில் திராவிட நாகரிகம் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும். அவர்களின் மொழிவேறு; ஓரளவு இனமும் வேறு. ஆயினும், ஆரியர்கள் இந்தியா முழுவதும் பரவிவிட்ட பிறகு இருவகை நாகரிகங்களும் ஓரளவு ஒன்றாலொன்று பாதிக்கப்பட்டதன் விளைவாக ஆரியர் வாழ்க்கை நெறிகளும் கோட்பாடுகளும் பிறராலும் திராவிடர் முதலியோர் நாகரிகங்கள் ஆரியராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன; முற்றிலும் என்று கூற முடியாவிடினும் ஓரளவு அது நிகழ்ந்ததுண்டு. ஆயினும் ஆரியர் நாகரிகத்தின் சிறந்த கூறுகள் யாவை, பிறர் நாகரிகங்களிற் கலந்த கூறுகள் யாவை என்று கூறுதல் இயலும். ஆரியர் மொழியான சமசுகிருதத்தால் மிகக் குறைவாகப் பாதிக்கப்பட்ட மொழி திராவிட மொழியாகிய தமிழ் எனலாம். ஆரியர்களின் குடியேற்ற முயற்சிகள் பல நூற்றாண்டுக் கால அளவில் நிகழ்ந்தன. அதற்கு ஒரு தலையாய காரணம் இந்தியாவிலிருந்த எளிதிற் கடத்தற்கரிய பேராறுகளும், தண்டகாரணியம் போன்ற அடர்ந்த காடுகளும் ஆகும்.

ஆரியர்கள் பஞ்சாபப் பகுதியில் குடியேறிய காலத்திலேயே இருக்கு வேதத்தின் பெரும் பகுதிகளை இயற்றிவிட்டனர். இயற்கைச் சக்திகளான தீ (அக்னி), நீர் (வருணன்), காற்று (வாயு), மேகம்-இடி-மின்னல்-மழை (இந்திரன்), இறப்பு (எமன்) முதலியவற்றை வழிபடும் பாடல்களே அவர்களின் வேதங்கள் ஆகும். இவற்றைப் பிற்காலத்தில் வேத வியாசர் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு வேதங்களாகப் பாகுபடுத்தினார். ஆரியர்கள் இந்திரன், வருணன், அக்கினி, வாயு, எமன், உருத்திரன், விட்டுணு முதலிய தேவர்களை வணங்கினர். அவர்கள் வேள்விகளை நிகழ்த்தி அத்தேவர்களை மகிழ்வித்து அவர்களிடமிருந்து வரங்கள் பெற்று வாழ்ந்தனர். அதாவது வேள்விகளின் விளைவாக இந்திரன் முதலிய இறையவர் மகிழ்வுற்று மழை பெய்வித்து, மக்கள் வாழ்க்கையை வளம்படச் செய்வர் என்று அவர்கள் நம்பினர். வேதப்பாடல்களில் மிகச் சிறந்த வழிபாட்டுப் பாடல் காயத்திரி என்னும் மந்திரம் ஆகும். இது விசுவாமித்திரர் என்னும் வேதகால முனிவரால் இயற்றப்பட்டது என்பர். வேதகாலத்தில் வசிட்டர், பரத்துவாசர், விசுவாமித்திரர், வாமதேவர், கௌதமர் முதலியோர் புகழ் பெற்ற முனிவர்கள். அவர்கள் வேதத்தை வாய்மொழியாகவே இயற்றியும் கற்பித்தும் பயின்றும் வந்தனர். அவற்றை எழுதாமலேயே காத்து வந்துள்ளனர்.

ஆரியர்களிடையே சநாதன தருமம் என்று ஒரு நெறி உண்டு. அதன் பகுதியாக வருண ஆசிரம தருமங்களும் நிறுவப்பட்டன. அவ்வகையில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சமுதாயத்தை நால்வகையாகப் பாகுபடுத்தி, ஒவ்வொருவருக்கும் உரித்தான தொழில்கள், கடமைகள் முதலியவற்றை ஒதுக்கி வைப்பது வருண தருமம் ஆகும். ஒவ்வொருவரும் பிரமசாரி (மாணவர்), கிருகசுதர் (இல்லறத்தார்), வானப் பிரசுதர் (முற்றுந்துறக்க முயல்வோர்), சன்னியாசி (முற்றுந்துறந்தோர்) என்று நால்வகை நிலைகளில் முறையே நிற்றலே வாழ்க்கைநெறி என்றும் ஆரியர் கொண்டனர். ஆசிரம தருமம் ஆடவர்க்கே உரியது. மகளிர்க்கு பிரமசரியம், வானப் பிரசுதம், சன்னியாசம் என்னும் நிலைகள் கூறப்படவில்லை.

ஆரியர் குடும்ப வாழ்க்கை, பொதுவாழ்க்கை போலவே ஆண்பால் ஆக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தொடக்கக் காலத்தில் மகளிர்க்கும் வேதமோதும் உரிமையிருந்தது. ஆயினும், ஆண்களோடு சமமான சமூக உரிமைகளுக்கு உரியராக அவர்கள் எப்பொழுதுமே கருதப்பட்டதில்லை. பிற்காலத்தில் சாதிமுறை இறுகிப்போனது போல ஆண் ஆதிக்கமும் அந்தச் சமூகத்தின் ஓர் இயல்பாக இருந்தது. பிரமசரியத்திலிருந்து சன்னியாசம்வரை முன்னேறுதல் ஆசிரம தருமம் எனப்படும்.

வருணங்களில் பிராமணர் வைதிகக் கல்வி கற்றலையும் வேள்வி இயற்றலையும் தொழிலாகக் கொண்டனர்; சத்திரியர் என்போர் அரசர்கள்; அவர்கள் நாட்டையும் அறத்தையும் காத்தல் வேண்டும். வைசியர் கைத்தொழில், வாணிகம் முதலியவற்றில் ஈடுபடுதல் வேண்டும். சூத்திரர் வேளாண்மை செய்தல்வேண்டும். ஆரியர் சமுதாயத்தில் இக்கோட்பாடுகள் நிலவியது போல ஆரியரல்லாத பழங்குடி மக்களிடையே 'குடிகள்' என்னும் பிரிவினைகளும், மரம், மலை, ஆறு முதலிய இயற்கை நிலைகளில் வாழ்வதாகக் கருதப்பட்ட தேவதைகளை வழிபடுதலும் வழக்கிலிருந்தன.

ஆரியர்களுள் முதல் மூன்று பிரிவினரும் இருபிறப்பாளர் எனவும் நாலாமவர் ஒருபிறப்பாளர் என்றும் கருதப்பட்டனர். தாய் வயிற்றிலிருந்து பிறக்கும் உடற்பிறப்பும் 'பிரம்மம்' என்னும் 'கடவுள்' உண்மையைக் கற்கும்போது பிறக்கும் அறிவுப் பிறப்பும் ஆகிய இரண்டும் இரு பிறப்பாகும். இரண்டாம்

பிறப்பின்போது உபநயனம் என்னும் இரண்டாம் (அதாவது அகக்) கண்களைப் பெற்றனர். அதற்கு அடையாளமாகப் பூணூல் (முப்புரிநூல்) அணிந்தனர்.

ஆரியருள் பிராமணருக்குக் கோத்திரம், பிரவரம் என்பன உண்டு; தங்கள் முன்னோரில் சிறந்த வைதிக முனிவர் இன்னார் என்று கருதுதல் அடிப்படையில் கோத்திரம் அமையும். சத்திரியருக்குக் கோத்திரம் என்பது இன்றாயினும் தங்கள் புரோகிதருடைய கோத்திரத்தைத் தாங்கள் மேற்கொள்வர். ஆகவே, இடைக்கால அரசவமிசங்கள் தங்களைப் பாரத்து வாசம் முதலிய கோத்திரத்தினர் என்று கூறிக் கொண்டது, இப்புரோகிதக் கோத்திர மரபை ஒட்டியே என்பது புலனாகும். இதனை அறியாத சிலர் பல்லவர், கடம்பர் முதலிய அரசர்களைப் பிராமண குலத்தவர் என்று கூறினர். ஆரியர் நாகரிகம் இந்தியாவில் பல இடங்களிலும் பரவத் தொடங்கிய போது, ஆரியரல்லாத குடிகளிடையே ஆரியருடைய நாகரிகத்தைத் தாமும் மேற்கொள்ளவேண்டும் என்னும் அவா மிகுந்தது. அதன் பயனாகப் பலர் முப்புரி நூல் அணிந்தனர்; கோத்திரங்களையும் மேற்கொண்டர்.

ஆரியர்கள் கி.மு. ஆறு அல்லது ஐந்து நூற்றாண்டு வரை வேதம் ஒன்றனையே உயர் கல்வியாகப் போற்றினர். வேதத்தின் கிளை நூல்களான பிராமணம், ஆரணியகம் என்பவை கி.மு. 10-இலிருந்து 7 வரையுள்ள நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டன. பிறகு பிரமம் என்னும் ஆதிக்கடவுளைப் பற்றிய வினாவகைகள் உபநிடதங்களில் சுாணப்படுகின்றன. அதுவரை எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் கடவுளைப் பற்றி ஆராய்தலில் முழுமையாக ஈடுபட்டன. கடவுள் பற்றிய இலக்கியத்தைச் சரிவர உணர்வதற்கு உரிய ஒரு கருவியாகவே உலகியல் அறிவை ஆரியர் கருதினர். இலக்கணம், நீதி, தருக்கம், கணிதம் என்பவை யாவும் இவ்வாறே கருதப்பட்டன. ஆரியர் நாகரிகத்தின் செல்வாக்கால் எழுந்த பிற மொழி, வட்டார இலக்கியங்களும் பெரும்பாலும் இக்கோட்பாட்டினையே கருத்தில் கொண்டிருந்தன.

ஆரியர் கங்கைச் சமவெளிக்கு வந்து குடியேறி நிலைத்துக்கொண்ட பிறகு, தொடக்கத்தில் சிற்றரசுகள் பல தோன்றிப் பிறகு அவை பேரரசுகளாக வளர்ந்தன. கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் ஆரியாவருத்தத்தில், அதாவது ஆரியர் குடியேறியிருந்த வட இந்தியாவில், பதினாறு மகாசனபதங்கள் (பெரிய அரசுகள்) ஆட்சியில் இருந்தன. அவற்றில் மகதம், கோசலம், வத்தியலம், அவந்தி, குரு, பாஞ்சாலம், காசி முதலியவை புகழ்பெற்றவை. கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு வட இந்திய வரலாற்றில் மிகப் புகழ் பெற்று விளங்கியது மகத அரசு ஆகும். அதன் தலைநகரம் பாடலிபுத்திரம். மேற்குறிப்பிடப்பட்டவையன்றி இமயமலைத் தொடரின் அடிவாரத்தில் பல ஆரிய பரம்பரை வழக்கத்திற்குப் புறம்பான சிற்றரசுகள் ஆட்சிபுரிந்தன. அவற்றை யாண்ட அரசர்கள் அரசப் பரம்பரையினராயினும் சத்திரியரல்லர். அவர்கள் ஆட்சியில் பொதுமக்களுக்கும் ஓரளவு பொறுப்பும் பங்கும் இருந்தன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டு உலகிலேயே அறிவியல் துறையில் மிகப்பெரிய ஞானிகளைத் தோற்றுவித்த பெருமையுடையது. கிரேக்க நாட்டில் சோலன், சீனத்தில் கன்பூசியசு என்போர் தோன்றியவாறே, வட இந்தியாவிலும் மகாவீரர், புத்தர் ஆகிய பெரியோர்கள் தோன்றினர். எக்காரணத்தாலோ இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ந்து வந்துள்ள பெரும்பான்மை மக்கள் தங்கள் பொதுவாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் எவ்வகை ஆதார மாறுதல்களையும் விரும்பாமலும் மேற்கொள்ளாமலும் வாழ்ந்து வந்துள்ளனர். சமுதாயத் துறையிலேயேயன்றி அரசியல் துறையிலும் கூட சமூக, அரசியல் நிலையங்கள் முசுலிம், ஐரோப்பிய ஆட்சிகள் ஏற்படும் வரை ஒரே விதமாகவே இருந்து வந்துள்ளன. புத்தர் முதல் இராமானுசர் வரை பல சீர்திருத்த வாதிகள் தோன்றிச் சமய சமுதாய நிலையங்களை மாற்றவோ திருத்தவோ முயன்றனர். எனினும் அவர்களுடைய செல்வாக்குச் சமுதாயத்தை மிகுதியாகப் பாதித்துவிடவில்லை. ஆரியர்கள் தங்கள் ஆட்சித் துறையில் அரசன் என்னும் அரசியல் தலைவனையும் சபா, சமிதி என்னும் பிரதிநிதிக் குழுக்களையும் அரசனுக்கு அறிவுரை கூறும் புரோகிதனையும் அமைத்திருந்தனர். கிராமத் தலைவனைக் கிராமணி என்றும் சேனைத் தலைவனைச் சேனானி என்றும் அழைத்தனர்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கௌதம புத்தர், மகாவீரர் ஆகிய இரு சமயவாதிகள் தோன்றித் தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இவர்கள் இருவருமே அகிம்சைக் கொள்கையைச் சிறப்பாக அறிவுறுத்தினர். புத்தர் கடவுள் உண்மையை வெளிப்படையாகக் கூறவில்லை. மகாவீரரின் பின்வந்தோர் இந்துக் கடவுளரைப் போன்ற, அதே பெயர்களைக் கொண்ட பல தெய்வங்களின் உண்மையை ஏற்றுக் கொண்டனர். இவ்விரு மதத் தலைவர்களும் பீகார் மாநிலத்திலும் இமயமலை அடிவாரத்திலுமுள்ள சிற்றரசுகளைச் சார்ந்த வட்டாரங்களுக்கும் சென்று தங்கள் கருத்துகளைப் பரப்பினர். இவ்விரு மதங்களும் வைதிக பிராமண மதத்தின் அடிப்படைக் குறைபாடுகளாகிய வேள்வி செய்தல், பெண்ணடிமை

ஆகியவற்றை எதிர்த்தன. ஆயினும் பிற்காலத்தில் இந்துக்கள் இவ்விரு மதங்களுமே வைதிக சமயத்தின் வழித்தோன்றல்கள் என்று கருதியதோடு, புத்தரை விட்டுணுவின் அவதாரங்களில் ஒருவராகவும் ஏற்று வழிபடலாயினர். இதனால், புத்தமதச் செல்வாக்கு மங்கத்தொடங்கியது.


புத்தசமயம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் புகழ்பெற்றிருந்தது. ஆனால், அது வட இந்தியாவில் முசுலிம் ஆட்சி தொடங்கியதிலிருந்து இந்நாட்டைவிட்டு ஏறத்தாழ முற்றிலும் அகன்று விட்டது. புத்தமதம் வேறுபட்ட சமய உருவங்களில் பர்மா, சீனா, சப்பான், சிரீலங்கா, திபேத்து முதலிய நாடுகளில் பரவிற்று. கி.மு. முதல் நூற்றாண்டுக்கும் கி.பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால அளவில் பௌத்த சமயம் ஈனயானம், மகாயானம் என இரு பகுதிகளாகப் பிரிந்தது. இவற்றில் ஈனயானம் புத்தர் தாமே நிறுவிய எளிய கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டது; மகாயானம் புத்தரைக் கடவுள் நிலைக்கு உயர்த்தியது. அவர் பல அவதாரங்களை எடுத்ததாகப் புத்த சாதகக் கதைகள் குறிப்பிடுகின்றன. அசோகர், கனிசுகர், அர்சர் ஆகிய பேரரசர்கள் புத்தமதத்தைத் தழுவி, அதனைப் பரப்பினர்.

மகா வீரரது சைன சமயம் பௌத்தத்தின் வளர்ச்சிக்கு நேர்மாறான வளர்ச்சியை அடைந்தது. அம்மதமும் பிற்காலத்தில் சுவேதாம்பரம், திகம்பரம் என்று இரு நிலைகளாகப் பிரிந்தது. பௌத்தத்தைப் போலல்லாமல் சைனம் இன்றும் இந்தியாவில் பல இடங்களில்(முக்கியமாக இராசசுத்தானத்தில்)தழைத்திருக்கக் காணலாம். இம்மதம் இந்துமதத்தைப் போல இந்தியத் துணைக் கண்டத்தின் நான்கு எல்லைக்குட்பட்டே நிலைத்து வந்துள்ளது. இவ்விரு சமயங்களும் புராண காலத்திற்குப் பிறகு, பக்தி மார்க்கத்தை மேற்கொண்டு புத்துருவேற்று வளர்ந்து வந்த இந்து சமயத்தால் நலிவுற்றன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.மு. 323 வரை (சந்திர குப்த மௌரியரின் அரசாட்சி எய்திய காலம் வரை) வட இந்திய அரசியல் வரலாறு மகதத்தின் வரலாறாகவே அமைந்துள்ளது. பிம்பிசாரர் என்னும் அரசர் மகதத்தில் ஏறத்தாழக் கி.மு. 545-இல் அரசக் கட்டிலேறினார். அவர் காலத்திலிருந்து நவநந்தர்களை வென்று, சந்திர குப்த மௌரியரின் முடி சூடிக் கொண்டது வரையில், மகதத்தில் ஒன்பது அரசர்கள் ஆண்டு வந்தனர். இவர்களில் பிம்பிசாரர், அசாதசத்துரு, சிசுநாகர், மகா பத்துமநந்தர் என்போர் குறிப்பிடத்தக்கோர். பிம்பிசாரர் காலத்தில் காசியரசும் இலிச்சாவிக் குடியரசும் மகதத்தோடு இணைந்தன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் மகாசைரசு என்னும் பாரசீகப் பேரரசர் வடமேற்கு இந்தியாவில் காந்தாரம் என்னும் பகுதியை வென்று தம் பேரரசில் இணைத்தார். அவரைத் தொடர்ந்து வந்து பிற பாரசீகப் பேரரசர்கள் காலத்திலும், இப்பகுதிகள் அவர்கள் பேரரசின் பகுதிகளாகவே இருந்தன. மகா தரையசு என்னும் பேரரசர் ஆட்சியில் (கி.மு.522-485) பஞ்சாபு, சிந்துப் பகுதிகளும் வெல்லப்பட்டுப் பாரசீகப் பேரரசின் பகுதிகளாயின. இவை அப்பேரரசின் இருபதாம் சத்திராவாக (பெரிய மாகாணம்) ஆக்கப்பட்டன (கி.மு. 516). இம்மாகாணம் இரண்டாம் ஆர்ட்டாயர் சீசு (கி.மு. 405-358) என்னும் பேரரசர் காலம்வரை பாரசீகப் பேரரசில் அடங்கியிருந்தது. பிறகு அது தனிநிலை அடைந்தது. பாரசீகரையடுத்துக் கிரேக்கர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து நாடு பிடித்தனர். மாசிடோனியா மன்னரான மகா அலெக்சாந்தர் கி.மு. 326-இல் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து, தட்சசீலத்து மன்னரான அம்பி என்பார் அழைப்பிற்கிணங்கிச் சீலத்தைக் கடந்து போரசு என்னும் அரசரைக் கடும்போரில் வென்றார். அதன் விளைவாக அவ்வாற்றின் கரையிலுள்ள இந்தியா முழுவதும் கிரேக்கர் ஆட்சியில் அடங்கிற்று. அலெக்சாந்தர் இறந்ததும் அவர் இந்தியாவில் வென்ற பகுதிகள் எல்லாம் சிறிது சிறிதாகக் கிரேக்க ஆதிக்கத்தினின்றும் தம்மை விடுத்துக் கொண்டன. சந்திரகுப்தன் என்பார் மகதத்தின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் அரசாண்டு வந்த நந்தர் என்னும் அரசர் மீது போர் தொடுத்து ஆட்சியைக் கைப்பற்றித் தமது மௌரிய குல அரசை மகதத்தில் (கி.மு. 325-301) நிறுவினார். அவரே முதலாம் மௌரிய குல மன்னர் ஆவார். அவர் அரசுக் கட்டிலேறுதற்கு மிகவும் உதவியவர் சாணக்கியர் என்னும் கௌடில்யர் ஆவார். இந்த வரலாற்றைக் குப்தர்கள் காலத்தில் வாழ்ந்திருந்த விசாகதத்தர் என்னும் நாடகாசிரியர் இயற்றிய முத்திராராட்சசம் என்னும் நாடக நூலிற் காணலாம். இக்கௌடில்யரே அர்த்தசாத்திரம் என்னும் 'ஆட்சிமுறை' நூலை வடமொழியில் இயற்றியவர் என்று கருதப்படுகிறார்.

சந்திரகுப்தர் அவைக்களத்தில் கிரேக்கர் தூதராக இருந்த மெகசுதனிசு என்பவர் இயற்றிய 'இண்டிகா' என்னும் நூலில் அவர் மகதத்திலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்து வைத்துள்ளார். இக்குறிப்புகள் அக்கால வடஇந்தியாவைப் பற்றி-முக்கியமாக ஆட்சி முறைகளையும் சமுதாய மரபுகளையும் பற்றி



அசந்தா-குடைவரைகள்



மாமல்லபுரக் கடற்கரைக் கோவில்



தில்லி இரும்புத்தூண்




கோமதீசுவரர் சிலை - சரவணபெலகோலா

இந்தியத் தேசியசின்னம்





ஆடலவ் வல்லான்




அவேரிக்கோயில்



சார்மினார் - ஐதராபாத்து



இந்தியா புனிதப்பயணம்




கைலாசநாதர் கோவில் - எல்லோரா



புனித கங்கையில் நீராடுதல்

அறிதற்குப் பயன்படுகின்றன. சந்திரகுப்தர் வட இந்தியாவின் பெரும் பகுதியை வென்று தம் ஆட்சியில் கொணர்ந்தார். அவர் சிரியாவை ஆண்ட செலியூகசு நிகேடார் என்பவரை ஆப்கானிசுத்தானத்தில் வென்று, வடமேற்கு இந்தியா முழுவதையும் தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தார். அவர் அரசெய்தியதோடு இந்தியா முழுவதிலுமே சத்திரியர் ஆட்சி என்பது முற்றுப்பெற்றுவிட்டது. ஆரியரின் வருண தருமம் தன் ஒரு காலை இழந்து முக்காற்பகுதி மட்டில் செயற்பட்டு வந்தது. சந்திரகுப்தர் ஆட்சி முறையில் பாரசீகரையும், சமய மரபில் சமணரையும் பின்பற்றினார் என்று கருதப்படுகிறார்.

சந்திரகுப்தர் ஆட்சி கி.மு. 301-இல் முடிவுற்றது. அவரை அடுத்து மகதத்தின் மன்னரான பிந்துசாரர் என்பவர் தாம் பெற்ற பேரரசினை மேலும் பல வெற்றிகளால் விரிவுபடுத்தினார். அவரது பேரரசு தெற்கே மைசூர் வரையில் பரவிற்று. அவர் மகனானஅசோகர் (கி.மு.273-232)தமது பேரரசினை எதிர்த்த கலிங்கத்தின்மீது போரிட்டுக் கடும் போருக்குப் பின் மீண்டும் தமது ஆட்சியோடு இணைத்துக் கொண்டார். அப்போரில் தாம் கண்ட பெருஞ்சேதத்தால் மனம் மாறி, அகிம்சை மதமான பௌத்தத்தைத் தழுவினார். கலிங்கப் போருக்குப் பின் அவர் எந்தப் போரிலும் ஈடுபடவில்லை. அவர் சந்திரகுப்தர் நிறுவிய ஆட்சி முறையினை ஓரளவு மாற்றியமைத்தார். அவர் 'இனிப் போரிடுவதில்லை' என்று ஒரு கொள்கையை மேற்கொண்டாராயினும் தனது வலுவான படையினைக் கலைத்துவிடவில்லை. இன்னா செய்யாமையை ஓரளவு ஆட்சியில் புகுத்த வேண்டுமென்று விரும்பினாராயினும் மரண தண்டனையை ஒழித்துவிடவில்லை. 'அவர் பௌத்த மதத்தில் சேரவில்லை. இந்துவாகவே இருந்தார்' என்று சிலர் நிறுவ முற்படுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அவருடைய ஆட்சி அவர் எழுதிய அல்லது எழுதுவித்த பாறை, கல்தூண் ஆணைகள் மூலமே அவரது ஆட்சி வரலாற்றை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாணைகளை அசோகர் 'ஆணைகள்' என்பர். இவை பெரும்பாலும் தமது பேரரசிற்குட்பட்ட மாகாண ஆட்சித் தலைவர்களுக்கு அசோகர் இட்ட கட்டளைகளே ஆகும். இவ்வாறு அரசியற் கட்டளைகளைப் பாறையில் பொறித்து வைத்தல் என்பது பாரசீகப் பேரரசில் காணப்படும் ஒரு மரபு. அசோகர் இந்தியா முழுவதிலும் பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பரப்புவதற்குத் தரும மகாமாத்திரர் என்னும் சில அதிகாரிகளை நியமித்ததோடு, அந்த மதத்தைச் சிங்கள நாட்டில் பரப்புவதற்குரிய செயல்களையும் மேற்கொண்டார். அவரது ஆட்சிக் காலத்தில் மூன்றாம் பௌத்த சங்கம் கூடிற்று.அசோகருக்குப் பிறகு மௌரியர் ஆட்சி வலுக்குன்றியது.




மௌரிய பேரரசு

மௌரியர் ஆட்சி கி.மு. 188-இல் முடிவுற்றது. அவ்வமிசத்தின் கடைசி அரசர் பிரகத்ரதர் என்பவர். அவர் படைத் தலைவர்களுள் ஒருவரான புசுய மித்திர சுங்கர் என்பவர் மன்னரைக் கொன்று தாம் மகதத்துப் பட்டமெய்தினார். புசுயமித்திரர் நிகழ்த்திய புரட்சி, பௌத்தர்களது ஆதிக்கத்தைஎதிர்த்துச் சில இந்து அரசியற் பேராளர்கள் நிகழ்த்திய புரட்சி என்று கருதப்படும். சுங்கர்களைப் பற்றிக் காளிதாசர் தமது மாளவிகாக்னிமித்திரம் என்னும் நாடகத்தில் குறிக்கிறார். சுங்கர் ஆட்சிக் காலத்தில் தன் அளவிலும் பெருமையிலும் குன்றத் தொடங்கிய மகதம், குப்தர்கள் ஆட்சிக்காலத்தில்தான் மீண்டும் தனது பழைய புகழை எய்திற்று. சுங்கர் குலத்தில் நான்கு மன்னர்கள் மொத்தம் 45 ஆண்டுகள் ஆண்டனர். கடைசி சுங்க மன்னரான தேவபூதி என்பாரைக் கண்வ வமிசத்தைச் சேர்ந்த வாகதேவர் என்பவர் கொன்று ஆட்சி எய்தினார்.

வட இந்திய வரலாறு கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முடிய ஓர் இருண்ட காலமாகத் தோற்றமளிக்கிறது. இதற்குக் காரணம் அந்தக்காலத்து வரலாற்றினை முற்றிலும் அறிந்துகொள்ளுதற்குப் போதுமான சான்றுகள் இல்லாமையே ஆகலாம். அக்காலத்தில் நிகழ்ந்த அரசியல் பெருநிகழ்ச்சிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக் கால அளவில் வடமேற்கு இந்தியாவில் 'இந்திய-கிரேக்க' அரசர்

கள் ஆட்சி புரிந்த வரலாறு; 2. அவர்கள் ஆட்சி முடிந்ததிலிருந்து ஏறத்தாழக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சிரீகுப்தர் என்பவர் ஆட்சியை நிறுவியது வரையிலான இடைப்பகுதி. இதன் வரலாறு பற்பல சிற்றரசர்களது ஆட்சியைப் பற்றியது; 3. தக்காணத்தில் சாதவாகனர் ஆட்சி.

மத்திய ஆசியாவிலுள்ள பாக்டிரியாவில் சுதந்திர அரசை நிறுவிக் கொண்ட யூடிமோசு என்பவர் கி.மு. 189-இல் இறந்தார். அவரைப் பின்பற்றி ஆண்டவர்களுள் தெமெட்ரியோசு, மினாண்டர் என்போர் குறிப்பிடத்தக்கவர். மினாண்டர் பாக்டிரியப் பேரரசின் இந்தியப் பகுதிகளை ஆண்டவர். அவர் மகதத்தைக் கைப்பற்ற முயன்றார். அபல்லொதோரசு என்னும் ஓர் 'இந்திய-கிரேக்க'ப் படைத் தலைவர் சிந்துவை நோக்கிப் படையெடுத்து உச்சயினி, தட்சசீலம் முதலிய இடங்களை அப்பேரரசோடு சேர்த்தார். சிறிதுகாலம் பாடலிபுத்திரமும் அதில் அடங்கி இருந்தது. அப்பேரரசின் பெரும் பகுதி இந்தியாவிற்குப் புறம்பேதான் இருந்தது. கி.மு. 160-இலிருந்து 150 வரை மினாண்டர் காந்தாரத்திலிருந்து மதுரா வரையுள்ள பகுதியை ஆண்டார். அவர் சிந்து மன்னன் மகளை மணந்துகொண்டதால் சிந்துப் பகுதியும் அவர் ஆட்சியில் அடங்கிற்று. மினாண்டர் பௌத்த மதத்தைத் தழுவினார். பௌத்த சமய நூலான 'மிலிந்தபன்னா' என்னும் நூல் மினாண்டருக்கும் பௌத்த சமயங்களுக்குமிடையே நிலவிய நல்லுறவைக் காட்டுகிறது.

மத்திய ஆசியக் குடிகளுள் ஒரு வகையினரான சாகர்கள் கி.மு. 120-80 கால அளவில் 'இந்திய-கிரேக்க' ஆட்சிப் பகுதிகளை வென்று கைப்பற்றி ஆண்டனர். சாகர்கள், யுலேச்சிகள், பகலவர்கள், குசானர்கள் என்போர் அனைவரும் மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களே. இவர்கள் எல்லோருமே வடமேற்கு இந்தியாவின் சிற்சில பகுதிகளைச் சில காலமேனும் ஆண்டுவந்துள்ளனர். இவர்கள் யாவரிலும் இந்திய பார்த்திய குலத்தவர்கள் நிறுவிய இரு வமிசங்கள் குறிப்பிடத்தக்கவை. 1. வோனோனசு என்பார் நிறுவிய வமிசம்; 2. கொண்டாபர்னசு என்பார் நிறுவியது.

கொண்டாபர்னசு ஆப்கானிசுத்தானம், காந்தாரம் முதலிய பகுதிகளைக் கி.பி. 19-45 வரை ஆண்டார். இவரைக் கிறித்தவ அப்போசுதலர்களுள் ஒருவரான புனித தோமாசு (St. Thomas) என்பவர் கிறித்தவச் சமயத்திற்கு மாற்றினார். கொண்டாபர்னசின் பின் தோன்றல்கள் வல்லமையற்றவர்களாதலால் அவர்களை நீக்கிவிட்டு அப்பகுதியில் ஆட்சி நிறுவிய குழுவினர் குசானர்கள் ஆவர்.

குசானர்களில் (Kushans) முதன் முதல் இந்தியாவில் அரசை நிறுவியவர் குசுலா கட்பீசசு (Kujulakad-phises) என்பவர் ஆவார். குசானர்களின் ஆட்சி விவரங்கள் அவர்கள் வெளியிட்ட எண்ணிறந்த, பல தரப்பட்ட நாணயங்கள் வாயிலாகத் தெரிய வருகின்றன. முதல் கட்பீசசை அடுத்து இரண்டாம் கட்பீசசு ஆண்டார். அவரையடுத்துக் கி.பி. 78-இலிருந்து ஏறத்தாழ 120 வரை ஆண்ட கனிசுகர் (Kaniska) குசான அரசர்களுள் புகழ்பெற்றவர். அவர் அரியணை ஏறிய ஆண்டிலிருந்து தொடங்குவதே சக ஆண்டு என்பது. அவர் ஆட்சி சமயம், ஆட்சி, நகரமைப்பு, நாணய வெளியீடு, சிற்பம் என்னும் பலதுறைகளிலும் புகழ்பெற்றது. அவர் பௌத்த சமயத்தவர். அவர் காலத்தில் நான்காம் பௌத்த சங்கம் கூடிற்று. அவர் கனிசுகபுரம், புருடபுரம் என இரு நகரங்களை நிறுவினார். அவற்றில் பிந்தியதே இன்று பெசாவர் என்று கூறப்படுவது. அவர் பௌத்த சமயத்தில் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த ஈனயான-மகாயானப் பிரிவினை ஒன்றாக்க முயன்றார். அவர் இம்முயற்சியில் வசுமித்திரர், அசுவகோசர், பார்க்கவர் முதலிய பௌத்த அறிஞர்களை ஈடுபடுத்தினார். அவர்கள் முயற்சியில் ஈனயானம் ஓரளவிற்கு நிலைபெற்றது. கனிசுகர் போற்றிய புகழ்பெற்ற பௌத்தர்களுள் நாகார்ச்சுனர் என்பவரும் ஒருவர். சரகர் என்னும் புகழ்பெற்ற மருத்துவக் கலை வல்லுநரும் இவர் காலத்தில் வாழ்ந்தவரே. இந்திய - கிரேக்க - உரோமானியப் பண்பாட்டுத் தொடர்பால் தோன்றிய காந்தாரக் கலை மரபு கனிசுகரது பேரரசில் மிகுந்த வளர்ச்சியுற்றது.

கனிசுகரையடுத்து அவர் மகன் குவிசாகர் (Huvisaka-ஏறத்தாழக் கி.பி. 120-138) அரசராகி, கனிசுகரைப் போலவே பௌத்தத்தைப் போற்றிக் குசுகபுரம் (Huskapura) என்பதொரு நகரத்தையும் அமைத்தார். வாசுதேவர் என்னும் குசான மன்னர் ஆட்சிக்காலத்தில் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்) அவர்களது பேரரசு வலுவிலும் பரப்பிலும் பெரிதும் குன்றியது. அவ்வமிசத்தின் ஆட்சி கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் முற்றிலும் முற்றுப் பெற்றது.

குசானர் ஆட்சி முற்றுப் பெற்றதற்கும் குப்தர்கள் ஆட்சி தொடங்குதற்கும் இடைப்பட்ட ஒரு நூற்றாண்டுக் கால அளவில் வட இந்தியாவின் பெரும் பகுதிகளில் அரசியற் குழப்பநிலை நிலவிற்று. அக்காலத்தில் பாரசிவர் என்னும் ஒரு குலத்தோர் பற்றிய செய்தி அறியக் கிடக்கிறது. அவர்களுள் ஏழு அரசர்கள் ஆண்டனர். அவர்கள் தீவிர சைவர்கள். அவர்களுள் கடைசியாக ஆண்டவர் பவநாகர் என்ப

வர். பவநாகர் தம் மகளை வாகாடக மன்னரான முதலாம் பிரவரசேனர் என்பவரின் மகனான கௌதமிபுத்திரருக்கு மணம் புரிவித்தார்.

வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதி மத்திய ஆசியக் குடிகளின் ஆதிக்கத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. இதுபற்றிய செய்தி இருவகை சத்திரியர் ஆட்சிகளைப்பற்றியவரலாற்றில் இடம் பெற்றுள்ளது. பூமகர் வமிச ஆட்சி ஒன்றும் மேலை சத்திரவர் ஆட்சி ஒன்றும் நடைபெற்றன. சத்திரபர்(சத்திரபவனர்)என்னும் பாரசீகச் சொல் மாநில ஆட்சித் தலைவரின் ஆட்சிப் பெயரைக் குறிக்கும். அவர்கள் கரோத்தி என்னும் எழுத்து முறையைப் போற்றினர். முற்கூறிய வகுப்பினருள் பூமகர் (Bhumaka), நாகபாணர் (Nahapana) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இவர்களைத் தக்காணத்தில் ஆண்டுவந்த சாதவாகனர்கள் அடிக்கடி படையெடுத்துத் தாக்கினர். நாகபாணரை மகாசத்திரபர் என்று கூறுதலும் உண்டு. அவர் நாசிக்கைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார். அவர் கௌதமிபுத்திர சதகருணி(Gautamiputra Satakarni) என்னும் சாதவாகன மன்னரால் தோல்வியுற்றார். மற்றொரு சத்திரபர் கிளையினரில் உருத்திரதாமர் என்பவர் புகழ்பெற்றவர். அவர் சாதவாகனரையும் இயதேயரையும் வென்றார். அவர் பேரரசில் மாளவம், கத்தியவார், மார்வார், சிந்து, வடகொங்கணம் என்னும் பகுதிகள் அடங்கி இருந்தன. உருத்திரதாமருக்குப் பிறகு 20 அரசர்கள் ஆண்டனராயினும் அவர்கள் ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது. அவர்கள் ஆதிக்கம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் சமுத்திரகுப்தர் படையெடுப்பால் முற்றிலும் ஒடுங்கிற்று.

சுங்கர், கண்வர் ஆட்சிக்காலத்திற்குப் பிறகும் குப்தப் பேரரசு தோன்றுதற்கு முன்பும் தக்காணத்தில் ஆண்டவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் சாதவாகனரும் கலிங்கத்தைச் சில காலம் ஆண்ட காரவேலரும் ஆவர். இவர்களுள் காரவேலர் சுங்கர் காலத்தைச் சேர்ந்தவர். அவர் வரலாறுஅத்திகும்பக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் சாதவாகனரை வென்றதாகவும் ஒரு தமிழர்க் கூட்டணியை முறியடித்ததாகவும் பாடலிபுத்திரம் வரை படையெடுத்துச் சென்று வெற்றியோடு திரும்பியதாகவும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது.

சாதவாகனர் என்பார் ஆந்திரர். அவர்கள் வரலாறு நாணயங்களாலும் புராணங்களில் தரப்படும் மரபுப் பட்டியல்களாலும் கல்வெட்டுகளாலும் அறியப்படுகிறது. அவர்களுள் முதலில் ஆண்டவர் சீமுகர் (Simuka) என்பவர். அவர் ஆட்சி கி.மு.235-இல் தொடங்கிற்று. சாதவாகனர் மௌரியப் பேரரசிற்கு அடங்கி அரசு செலுத்தியவர்கள். ஆதலால் அவர்கள் ஆட்சியிலும் பெரும்பாலும் மௌரியருடைய அரசியல் முதலிய பொதுநிலைய பாரம்பரியங்ளும் மரபுகளும் காணப்படும். அவர்களுள் சில அரசர்களின் பெயர்கள் 'வாசிசுட்டிபுத்திர', 'கௌதமிபுத்திர, என்றிருத்தலால் அவர்கள் மருமக்கட் தாயத்தினரோஎன்று சிலர் ஐயுறுகின்றனர்.

சீமுகருக்குப் பின் அவர் சகோதரர் கிருட்டிணரும் அவருக்குப்பின் அவர் மருமானான சாதகருணியும் ஆண்டனர். கௌதமிபுத்திர சாதகருணிஆட்சிக்காலத்தில் சாதகவாகனர் ஆட்சி உச்சிநிலை எய்தியது அவர் சாதனைகளைப் பற்றி நாசிக்குக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அவர் சாகர்களை வென்றார். சாதவாகனருள் ஒருவரான புலுமாயி என்பவர் மேலை சத்திரபரான முதலாம் உருத்திரதாசரால் தோற்கடிக்கப்பட்டார். எக்கினசிரீ சாதகருணி என்பவர் சாதவாகனர்களுள் கடைசியில் ஆண்டவர்களுள் ஒருவர். அவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்டார். சாதவாகனர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு தக்காணத்தில், குறிப்பாகக் கிழக்குப் பகுதியில் இக்சுவாகுகள், பிருகதுபாலாயனர்கள், ஆனந்தர்கள், சாலங்காயனர்கள் ஆகியோர் அரசியல் ஆதிக்கம் செலுத்தினர். வடபகுதியில் ஆபிரர்களும் திரைகூடகர்களும் சிறிதுகாலம் ஆண்டனர். பல்லவர்களும் இக்சுவாகுகள், ஆனந்தர்கள் என்போரைப் போலவே சாதவாகனர் வீழ்ச்சிக்குப்பின் அவர்களது பேரரசின் தென்கிழக்குப் பகுதியில் தொடக்கத்தில் சிற்றரசர்களாக ஆண்டனர். அவர்களுள் இக்சுவாகுகள் பௌத்தத்தைப் போற்றினர். நாகார்ச்சுனகொண்டா என்னுமிடத்தில் உள்ள பௌத்தச் சிற்பங்கள் அவர்களால் ஆக்கப்பெற்றவை.

வடமேற்கில் சத்திரபர்கள் ஆட்சியும் சற்றுக் கிழக்கே பாரசிவர் ஆட்சியும் தக்காணத்தில் சாதவாகனர் ஆட்சியும் முடிவுற்றபிறகு, ஒன்றிரண்டு நூற்றாண்டுக்கால அளவில் வடஇந்தியாவில் ஓர் அரசியற் குழப்பநிலை நிலவிற்று. அது ஓர் இருண்டகாலம் ஆகும். இந்த இருள் மகதத்தில் குப்தர்கள் ஆட்சி தொடங்கியபோது வடஇந்தியாவிலும் மேலைச் சாளுக்கியர் ஆட்சி தொடங்கியபோது தக்காணத்திலும் ஓரளவு நீங்கியது.

குப்தப் பேரரசின் ஆட்சி கல்வெட்டுகள், இலக்கியங்கள், வெளிநாட்டவர் குறிப்புகள் ஆகியவற்றால் விளங்குகிறது. சிரீகுப்தர் என்பவர் அவ்வரசவமிசத்தைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவினார். அவர் ஆட்சியைப் பற்றி ஈ-சிங்கு என்னும் சீன ஆசிரியர் குறிப்பிடுகிறார்.


சிரீகுப்தருக்குப் பிறகு கடோற்கசர் என்பவர் ஆண்டார். முதலாம் சந்திரகுப்தர், கி.பி. 316–320–இல் பட்டமெய்தினார். அவர் ஆட்சிக் காலத்திலேயே மகதம் வலுப்பெற்றுப் பகைவர்களை நாற்புறமும் வென்று ஆட்சி எல்லையைப் பரப்பியது. அவர் இலிச்சாவி இளவரசியான குமாரதேவி என்பவளை மணந்து கி.பி. 330 வரை ஆண்டார்.

சந்திரகுப்தரை அடுத்து அவர் மகன் சமுத்திர குப்தர் பேரரசரானார். அலகாபாத்துக் கல்தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தரின் வெற்றியினைக் குறிப்பிடுகிறது. அக்கல்வெட்டில் சமுத்திரகுப்தரின் தென்னாட்டு வெற்றிகளும் வடநாட்டுவெற்றிகளும் விரிவாகப் பேசப்படுகின்றன. மகேந்திரர், வியாக்கிரராசர், மந்தராசர், மகேந்திரகிரி, சுவாமிதத்தர், நிலராசர், அசுத்திவருமர், உக்கிரசேனர், குபேரர், தனஞ்சயர், தாமனர், விட்டுணுகோபர் ஆகியோர் அவரால் வெல்லப்பட்டவர்கள். அவர்களை வென்று அவர்களுடைய நாடுகளை அவர்களுக்கே திருப்பியளித்துவிட்ட பெருமை அவரைச் சாரும். அவர்கள் திறை செலுத்தவும், அவரைச் சாம்ராட்டு என்று ஏற்றுக்கொள்ளவும் உடன்பட்டனர்.

சமுத்திரகுப்தர் பரிவேள்விசெய்தார். அவர் ஆட்சி பெரும்பாலும் வடஇந்தியா முழுவதும் பரவிற்று. அவர் இசையில் வல்லவர்; வடமொழி இலக்கியத்தைப்பயின்றவர். அவர் ஆட்சியில் நாடு செழித்தது; மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். இந்து சமயம் புத்துயிர் பெற்றது. வடமொழி வளர்ந்தது. பௌத்தமும் பாலியும் அந்த அளவிற்குச் சற்றுத் தாழ்ச்சியடைந்தன. பௌத்தத்திற்கு அசோகர் செய்த தொண்டினைச் சமுத்திரகுப்தர் இந்து மதத்திற்குச் செய்தார்.

சமுத்திரகுப்தரையடுத்து, அவர் இரண்டாம் மகன் சந்திரகுப்தர் பட்டமெய்தினார். அவர் தந்தையையும் விஞ்சும் புகழ்படைத்தார். அவர் ஆட்சிப் பரப்பு மேலும் அகன்றது. அவர் தம் தமையனைக் கொன்று அவர் மனைவியான துருவதேவியையும் கைப்பற்றிக் கொண்டு அரசு கட்டிலேறினார் என்பது ‘தேவி சந்திரகுப்தம்’ என்னும் நாடகத்தால் அறியக்கிடக்கிறது. இரண்டாம் சந்திர குப்தர் கி.பி. 380–இல் பட்டமெய்தி கி.பி. 412 வரை ஆண்டார். அவர் உருத்திரசிம்மர் என்னும் மேலைச்சத்திரப மன்னரை வென்று பரிவேள்வி செய்தார். அவர் விக்கிரமாதித்தியர் என்னும் பட்டம் பூண்டார். அவர் உச்சயினியைத் தம் பேரரசின் மேற்குத் தலைநகராக அமைத்துக் கொண்டார். அவர் ஆட்சிக் காலத்தில் சீன அறிஞரும் பயணியுமான பாகியான் வட இந்தியாவிற்கு வந்தார். அவர் குப்தர் ஆட்சியின் சீரிய தன்மையைப் பற்றியும் அக்காலத்து இந்தியச் சமுதாய நிலையைப் பற்றியும் குறிப்புகள் எழுதி வைத்துள்ளார். குப்தர்கள் காலத்து நாணயங்களுள் பல பொன்னால் ஆனவை. தில்லியில் குதுப்புமினாரையடுத்து நிறுத்தப் பெற்றிருக்கும் இரும்புத் தூண் குப்தர் காலத்தது. அது இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தது என்று கருதுகின்றனர்.

இரண்டாம் சந்திரகுப்தர் பிறகு குமாரகுப்தர் (கி.பி.415–455), கந்தகுப்தர் (கி.பி.455–467) என்போர் காலத்திலும் குப்தப் பேரரசு வலுக்குன்றாமலேயே இருந்தது. கந்த குப்தர் காலத்திலேயே இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஊணர்களின் தொந்தரவு மிகுந்தது. அவர்களை அடக்கி நிறுத்துவதிலேயே அம்மன்னரின் பெரும்பான்மைப் பொழுது செலவாயிற்று. அவருக்குப் பிறகு புரகுப்தர், நரசிம்ம குப்தர், இரண்டாம் குமாரகுப்தர் ஆகிய மூன்று அரசர்கள் ஆண்டனர். அவர்கள் ஆட்சி கி.பி. 477 வரை நீடித்தது. ஏறத்தாழக் கி.பி. 500–இல் மாளவத்தில் குப்தர் ஆட்சி ஊணர் தலைவரான தோரமானர் என்பவரால் நிலைகுலைக்கப்பட்டது. பிறகு மாளவத்தில் ஆண்ட எசோதருமர் காலத்தில் மௌக்கரிகள் என்னும் ஒரு வமிசத்தாரால் குப்தர் ஆட்சி வீழ்ச்சியுற்றது.




குப்தர் பேரரசு

குப்தர் ஆட்சிக் காலத்தை இந்து வரலாற்றின் பொற்காலம் என்பர். அக்காலத்தில் சமய, இலக்கிய, கலைத் துறைகளில் பெரியதொரு முன்னேற்றம் ஏற்

பட்டது. காளிதாசர் என்னும் பெரும்புலவரும் விசாகதத்தர், சூத்ரகர் என்னும் நாடகாசிரியர்களும் இக்காலத்தவர்களே. சற்றுப் பிற்காலத்திலிருந்த பாரவி, தண்டி என்போரும் இம்மரபைப் பின்பற்றி எழுந்தவர்களே. பஞ்சதந்திரம் என்னும் அறவுரை நூல் குப்தர் காலத்தே முழுமைபெற்றது. பல புராணங்களும் எழுதப்பட்டன. அமரசிம்மர் என்பவர் 'அமரகோசம்' என்னும் நிகண்டினைத் தொகுத்தார்.

விஞ்ஞான ஆராய்ச்சியும் அக்காலத்தில் உயர் நிலை எய்தியது. வாக்குப்பட்டரது 'அட்டாங்க சங்கிரகம்' தலை சிறந்த மருத்துவ நூல். ஆரியபட்டர் வராகமிசிரர் ஆகியோர் கணிதம், வான நூல், சோதிடம் போன்ற துறைகளில் உலகப்புகழ் பெற்றுள்ள நூல்களை இயற்றினர். பௌத்த அறிஞர்களுள் புத்தகோசர், வசுபந்து என்போர் இயற்றிய பௌத்த மரபு நூல்கள் குறிப்பிடத்தக்கன. குப்தர் ஆட்சியும் அவ்வாட்சி தோற்றுவித்த சமுதாய, கலை நிலைமைகளும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிறிது சிறிதாக மறையத் தொடங்கின.

வட இந்திய வரலாற்றில் கி.பி. ஆறாம் நூற்றாண்டும் அதனை அடுத்த சில நூற்றாண்டுகளும் குழப்பம் மிகுந்த நூற்றாண்டுகள் என்று கூறவேண்டும். இக்குழப்பம் முசுலிம் ஆட்சி தில்லியில் சுல்தானியமாக நிலைத்துக் கொள்ளும் வரை நீடித்தது. இவ்விடைக்காலத்தில் வட இந்தியாவில் நான்கு வகை அரசியல் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அவை: 1. அர்சர் ஆட்சிக்காலம், 2. இராசபுத்திரது தோற்றமும் வளர்ச்சியும், 3. அராபியரது சிந்துப்படையெடுப்பு, 4. கோரிமுகம்மதுவின் வெற்றியால் தில்லியில் சுல்தானியம் நிறுவப்பெறும்வரை அங்கு நிலவிய பற்பல சிற்றரசுகள்.

ஏறத்தாழக் கி.பி.500-இல் ஊணர் தலைவரான தோரமானர் மாளவத்தில் தம் ஆட்சியை நிறுவிச் சில காலம் ஆண்டார். அவர் மகன் மிகிரகுலர் என்பவர் மிகக் கொடியவர். யுவான்சுவாங்கு என்னும் சீனப்பயணி அவரது கொடுமையை விவரித்துள்ளார். ஊணர்கள் ஆட்சி அதற்குமேல் நீடிக்கவில்லை. மாளவத்தில் எசோதருமர் ஊணர்களை எதிர்த்துப் போராடி வென்றார். கனோசியை ஆண்ட மௌக்கரிகள் என்னும் அரசர்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். எசோதருமர் சாதனைகள் மந்தசோர் கல்வெட்டுக் குறிப்புகளால் விளங்குகின்றன. மௌக்கரிகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கன்னோசியிலிருந்து ஆண்டனர். அரிவருமர் என்பவர் அக்குலத்தைத் தோற்றுவித்தார். அவர்களுக்கும் குப்தர்களுக்கும் மண உறவு ஏற்பட்டது. அவர்களுள் ஈசானவருமர் என்பவர் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தவர். அவரையடுத்து வந்த சருவவருமர் ஆட்சியிலும் போரிலும் சிறந்தவர். அவர் காலத்தில் மௌக்கரி ஆட்சி பஞ்சாபிலிருந்து வங்காளம்வரை பரவிற்று. அவ்வமிசத்தைச் சேர்ந்த திருகவருமர் என்பவர் அர்சரின் உடன்பிறந்தாளான இராச்சிய சிரீயை மணந்துகொண்டார். அவர் மகத மன்னர் தேவகுப்தரால் கொல்லப்பட்டார். பிறகு மௌக்கரி அரசும் அர்சரது அரசின் ஒரு பகுதியாயிற்று.

சாதவாகனர்கள் சரிவிற்குப் பிறகு கீழைத் தக்காணத்தில் பிருகத்பாலாயனர்கள், சாலங்காயர்கள், ஆனந்தர்கள் முதலியோர் ஆண்டனர். தென் தக்காணத்தில் கடம்பர்கள் வனவாசியிலிருந்தும் மேலைக்கங்கர்கள் தலைக்காட்டிலிருந்தும் ஆண்டனர். அவர்களுள் காகுசுதவருமர் என்பவர் புகழ் பெற்றவர். தாலகுண்டா தூண் கல்வெட்டு அவ்வமிசத்தின் தோற்றத்தைப் பற்றியும் தொடக்கக் கால அரசர்களைப் பற்றியும் கூறுகின்றது.

கங்கர்களும் கடம்பர்களைப் போலவே ஒரு பழங்குடியினர். இவர்களுள் மேலைக் கங்கர் என்று ஒரு பிரிவு தென் மைசூர்ப் பகுதியை ஆண்டது. கீழைக் கங்கர் என்னும் மற்றொரு பிரிவு ஒரிசாவிலிருந்து ஆண்டது.




அர்சர் பேரரசு

கன்னோசியை ஆண்ட அரசரின் ஆட்சி கி.பி.606-இலிருந்து 647 வரை நீடித்தது. அவர் வர்த்தனர் வமிசத்தைச் சேர்ந்தவர். அவ்வமிசத்தில் அரசு பூண்ட

முதல்வர் புசுயபூதி என்பவர். அவர் பின்தோன்றலான பிரபாகரவர்த்தனர் கி.பி. 584-605 வரை தானேசுவரிலிருந்து ஆண்டார். அவருக்கு இராச்சிய வர்த்தனர், அர்சவர்த்தனர் என்னும் மைந்தர் இருவரும் இராச்சியசிரீ என்னும் மகளும் இருந்தனர். இராச்சியவர்த்தனர் பட்டமெய்தி (கி. பி. 605) ஓராண்டே அரசு செலுத்தியபின், மாளவ மன்னரையும் கௌடதேச மன்னரான சசாங்கரையும் எதிர்த்துச் செய்த போரில் மடிந்தார்.

இராச்சிய வர்த்தனருக்குப்பின் அவர் தம்பி அர்சவர்த்தனர் அரசு கட்டிலேறினார். அவர் ஆட்சி நாற்பதாண்டுக் காலம் நடைபெற்றது. அவரது ஆட்சியைப் பற்றிய விவரங்கள், அவர் அவைக்களப் புலவரான பாணபட்டர் இயற்றிய அர்சசரிதம் என்னும் நூலாலும் அவர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்து சென்ற சீனப் பயணியான யுவான் சுவாங்கு என்பாரின் குறிப்புகளாலும் கல்வெட்டுகளாலும் தெரியவருகின்றன. அவர் பட்டமெய்திய போது அவருக்கு வயது பதினாறு. அவர் ஆட்சி தொடங்கியதுமே தானேசுவர், கனோசி ஆகிய இரு பகுதிகளையும் சேர்த்து ஆளத்தொடங்கினார் அவர் ஆட்சியிலும் போரிலும் சிறந்தவர். தூரக்கிழக்கிலிருந்த கௌட மன்னரான சசாங்கரை அவர் வெல்ல முடியவில்லை. அப்போது தக்காணத்தில் ஆண்டு வந்த இரண்டாம் புலிகேசி என்பவரால் நர்மதை ஆற்றங்கரையில் அர்ச வர்த்தனர் தோற்கடிக்கப் பட்டார். ஆனால், அவரது பிற வட இந்தியப்போர் முயற்சிகள் யாவும் வெற்றியில் முடிந்தன.

அர்சர் காலத்தில் யுவான்சுவாங்கு அவரது அவைக்களத்திற்கு வந்தார். அப்பௌத்தப் பெரியாரால் ஈர்க்கப்பட்ட அர்சர் பௌத்தக் கொள்கைகளை மேற்கொண்டார். யுவான்சுவாங்கு நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் கல்வித் துறைப் பெருமைகளைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறார். அர்சர் ஆட்சியில் வேளாண்மையும் வாணிகமும் செழித்தோங்கின. அவர் காலத்தில் பௌத்தம் போற்றப் பட்டதாயினும், சாதிக் கட்டுப்பாடும் தீண்டாமைப் பழக்கங்களும் மிகுந்தன. அர்சர் சில நாடகங்களை இயற்றினார். அவை இரத்தினாவளி, பிரியதர்சிகா, நாகானந்தம் என்பவை. அவர் ஆட்சியில் பெருமையோடு விளங்கிய பிற ஆசிரியர்களுள் மதங்கதிவாகரரும் பர்த்தருகரியும் குறிப்பிடத்தக்கோர். அர்சர் கி.பி.647-ல் இறந்ததும் அவர் ஆட்சி மறைந்தது.

அர்சர் காலத்திற்குப்பின் இராசபுத்திர அரசர்கள், குறிப்பாகக் கூர்ச்சரப்பிரதிகாரர்கள் ஆட்சியைக் கைப்பற்றி வட இந்தியாவின் பெரும் பகுதிகளைத் துண்டுபோட்டு ஆண்டனர். கூர்ச்சரப் பிரதிகாரர்களுள் நாகப்பட்டர் என்பவரே முதலாமவர். அவ்வமிசத்தின் வெவ்வேறு கிளைகள், வடமேற்கு இந்தியப்பகுதியில், குறிப்பாகக் குசராத்தில்ஆண்டன. இதற்கிடையே காசுமீரத்தில் கார்க்கோடர் வமிசம் ஆண்டது; அவர்களைத் தொடர்ந்து உத்துபலர் ஆண்டனர். வங்காளத்தில் கௌடர் ஆட்சிக்குப் பிறகு பாலர் ஆட்சி தோன்றி அந்தப் பகுதியில் சிறிது அமைதியை நிலைநாட்டியது. இந்தப் பாலர்கள் ஆட்சி கி.பி. 1197 வரை தொடர்ந்தது. முசுலிம் படையெடுப்பாளரான மகம்மது பின் பத்தியார் என்பவர் இறுதி பாலமன்னரான இந்திரத்துய்ம்ந பாலர் என்பவரை ஆட்சி நீக்கம் செய்தார்.

காசிம் என்னும் அராபியர் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே சிந்துமீது படையெடுத்து அதனைக் கைப்பற்றி முசுலிம் ஆட்சியை நிறுவினார். அவர் நிறுவிய ஆட்சி நெடுநாள் நீடிக்கவில்லையாயினும் அதுவருங்காலத்தில் முசுலிம் ஆட்சி வட இந்தியாவில் நிலைபெறுவதற்கு ஒரு முன்னோடியாக அமைந்தது.

வட இந்தியாவில் மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தக்காணத்தில் சாளுக்கியர், இராட்டிரகூடர் என்போர் ஆண்டனர். சாளுக்கியர் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு மகாராட்டிரத்திலிருந்து ஆண்டனர். சாதவாகனருக்குப் பிறகு தக்காணத்தில் தோன்றிய பெரிய அரசு சாளுக்கியருடையதே. அவர்கள் மேலைச் சாளுக்கியர் கீழைச் சாளுக்கியர் என்று இரு பிரிவாகப் பிரிந்து, முந்தையோர் வாதாபியிலிருந்தும் பிந்தியோர் வேங்கியிலிருந்தும் ஆண்டனர். மேலைச் சாளுக்கியர்களுள் இரண்டாம் புலிகேசி புகழோடு ஆண்டார். அவர் அர்சரைத் தோற்கடித்தார். ஆனால், அவரை நரசிம்ம பல்லவர் என்னும் பல்லவ மன்னர் தோற்கடித்துக் கொன்றார். சில ஆண்டுகள் பின்வாங்கி இருந்த சாளுக்கியர் ஆட்சி மீண்டும் தலையெடுத்தது. அவர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையறாத பகைமை நீடித்து வந்தது.

இரண்டாம் கீர்த்திவருமர் என்னும் சாளுக்கிய அரசரைநீக்கிவிட்டு,தந்திதுருக்கர் என்னும் இராட்டிரகூடர் தமது ஆட்சியை நிறுவினார். இராட்டிரகூடர் ஆட்சி கி.பி. 973 வரை நடைபெற்றது. இராட்டிரகூடர்களுள் மூன்றாம் கோவிந்தன், முதலாம் அமோகவருசன் மூன்றாம் இந்திரன் மூன்றாம் கிருட்டிணன் என்னும் அரசர்கள் புகழ்பெற்று ஆண்டனர். ஆட்சி இறுதிக்காலத்தில் அவர்கள் சோழப் பேரரசர்களோடு போர்புரிய வேண்டியதாயிற்று. அவர்கள் ஆட்சியை நீக்கி விட்டு, இரண்டாம் தைலர் என்பவர் மீண்டும் மேலைச்சாளுக்கியர் ஆட்சியை நிறுவினார். அச்சாளுக்கியரின் தலைநகரம் கல்யாணி

நகரம் ஆகும். இராட்டிரகூடர்கள் ஆட்சி சிறப்புற அமையவில்லை. ஆனால் முதலாம் கிருட்டிணன் காலத்தில் எழுப்பப்பட்ட எல்லோரா கைலாசநாதர் கோயிலும் எலிபாண்டா சிற்பங்களும் புகழ்பெற்றவை. கல்யாணிச் சாளுக்கியருள் இரண்டாம் சோமேசுவரர், நான்காம் விக்கிரமாதித்தியர் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் .அவர்கள் கீழைச் சாளுக்கியரோடும் சோழப் பேரரசர்களோடும் முடிவின்றிப் போரிட்டனர். விக்கிரமாதித்தியரின் அவைக்களப் புலவரான பில்கனர் விக்கிரமாங்க தேவசரிதம் என்னும் தமது நூலில் அம்மன்னரைப் பெரிதும் புகழ்ந்துள்ளார். மேலைச் சாளுக்கியர் (கல்யாணி) ஆட்சி நான்காம் சோமேசுவரர் (1184–1200) என்பாரோடு முடிவுற்றது.

தாரா நகரத்திலிருந்து ஆண்ட பாரமாரர் குலம் இரண்டு நூற்றாண்டுக் காலம் மாளவத்தில் புகழோடு விளங்கியது. அம்மன்னர்களுள் இரண்டாம் வாக்குபதிராசர் முஞ்சர் (974–995), முதலாம் போசர் (1010–1055) ஆகியோர் சிறந்தோர். பண்டேல் கண்டிலிருந்து ஆண்ட சண்டேலர்கள் கூர்ச்சரப் பிரதிகாரர்களுக்கு அடங்கி ஆட்சி புரிந்தனர். இம்மன்னர்கள் கசுராகோயில் கலை வளர்தற்குப் பேருதவி புரிந்தனர். காலசூரிகளும் சகமான களும் குறிப்பிடத்தக்க சிற்றரசர்களாக விளங்கினர். சௌகான்கள் தொடக்கத்தில் பிரதிகாரர்களுக்கு அடங்கிச் சிற்றரசர்களாக ஆண்டனர். இரண்டாம் விக்ரசராசர் அவ்வரசாட்சியை நிலைப்படுத்தினார். அவர்களுள் அசயராசர் என்பவர் ஆசமீர் நகரத்தை உருவாக்கினர். நான்காம் விக்கிரசராசர் கசினி முகமதோடு பொருத பெருமையுடையவர். தோமாரர்கள் என்போர் தில்லி நகரத்தை உருவாக்கினர். மூன்றாம் பிருதிவிராசர் சயசந்திர ககதவாலரின் மகள் சம்யுத்தையை வலியக் கைப்பற்றிச் சென்று மணந்து கொண்டார். எனவே அவ்விருவருக்கும் பகைமை மூண்டது. மூன்றாம் பிருதிவிராசர் மூன்றாம் தராய் என்னுமிடத்தில் முதல்தடவை கோரி முகம்மதுவை வென்றார். எனினும் அதே இடத்தில் கி.பி. 1192–இல் நடந்த இரண்டாம் போரில் அவர் கோரிமுகமதுவால் கொல்லப்பட்டார். கோரி முகமது முசுலிம் ஆட்சியை வட இந்தியாவில் தொடங்கி வைத்தார். கோரிமுகமது கி.பி. 1620–இல் இறந்தபோது அவர் அடிமைகளுள் ஒருவரான குத்புதீன் அய்பெக்கு என்பவர் தில்லியில் முசுலிம் சுல்தானியத்தை நிறுவினார். ந.சு.

இந்திய வரலாறு (கி.பி.1206–1526 ): முகமது கசினியும் முகமது கோரியும் படையெடுத்தபின் இந்தியாவில் முசுலிம் ஆதிக்கம் பெருகத் தொடங்கியது. முகமது கோரி இறந்தபின் அவரது நம்பிக்கைக்குரிய அடிமையான குத்புதீன் அய்பெக்கு அடிமை மரபினைத் தோற்றுவித்தார். இந்தியாவின் பெரும் பகுதியில் கி.பி.1206 இலிருந்து கி.பி.1526 வரை சுல்தான்களின் ஆட்சி நிலவியது. அடிமை மரபு, கில்சி மரபு, துக்ளக்கு மரபு, சையது மரபு, உலோடி (Lodi) மரபு ஆகிய ஐந்து மரபுகள் ஆட்சி செய்தன. இந்துக்களிடையே ஒற்றுமையின்மையால் அவர்களால் முசுலிம்கள் ஆட்சியை வீழ்த்த முடியவில்லை. சுல்தான்கள் ஆட்சியின் பயனாக இந்தியப் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டன. நிருவாகம், கலை, சமயம் ஆகிய துறைகளிலும் மாற்றம் காணப்பட்டது. தக்காணத்தில் பாமினி அரசும் விசய நகரப் பேரரசும் தோன்றின. வடஇந்தியாவில் சுல்தான்களின் ஆட்சி பாபரால் முடிக்கப்பட்டு, கி.பி. 1526–இல் மொகலாயப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது.

அடிமை மரபு: இந்தியாவில் முசுலிம் ஆட்சியைத் தொடங்கிய முகமது கோரி கி.பி. 1206–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15–ஆம் நாள் கொலை செய்யப்பட்டார். அவருக்கு ஆண் வாரிசு இல்லை. பல இடங்களில் இருந்த அவர்தம் பேராளர்கள் தன்னாட்சி செலுத்தத் தொடங்கினர். குத்புதீன் அய்பெக்கு ‘சுல்தான்’ என்ற பட்டத்துடன் இந்தியப் பகுதிகளுக்கு மன்னரானார். இவரது மரபை அடிமை மரபு (Slave Dynasty) என்றனர். நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்த இவர் கி.பி. 1210–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலாகூரில் போலோ விளையாட்டின் போது குதிரையின் மீதிருந்து விழுந்து இறந்தார். இவருக்குப்பின் ஆராம்பக்சு (Aram Baksh) சுல்தானாக்கப்பட்டார். ஆராம்சா எனப்பட்ட இவர் குத்புதீனின் மகன் என்று சிலரும் சகோதரன் என்று சிலரும் உறவினரே இல்லை என்று வேறு சிலரும் கருதுகின்றனர். ஆனால், தகுதியற்ற இவரைப் பதவியில் இருந்து நீக்கி, இல்துத்மிசு(Iltutmish) என்ற பதான் அரசப் பேராளரைப் பிரபுக்கள் வரவழைத்தனர். ஆராம்சாவை (Aram Shah) வென்றுஇல்துத்மிசு சுல்தான் ஆனார்.

இல்துத்மிசு இராந்தம்பூர், மந்தாவார் (Mandawar) ஆகியவற்றைக் கைப்பற்றினார். வங்காளக் கில்சி மாலிக்குகள் கீழ்ப்படுத்தப்பட்டனர். குவாலியர், பில்சாக (Bhilsa)் கோட்டை, உச்சயினி ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவர் கி.பி. 1236 ஏப்பிரல் 29–ஆம் நாள் இறந்தார். இவர் காலத்தில் தான் செங்கிசுகான் (Chingzkhan) படையெடுப்புக் கி.பி. 1221–இல் ஏற்பட்டது. குதுப்மினார் இவரால் கட்டி முடிக்கப்பெற்றது.

இல்துத்மிசின் மூத்தமகன் அவரது காலத்திலேயே இறந்துவிட்டான். ஏனைய பிள்ளைகள்

திறமையற்றவர்கள். எனவே, அவர் தன் மகள் இரசியாவை (Raziyya)தன் வாரிசாக அறிவித்தார். ஆனால், பெருங்குடிமக்கள் பெண்ணொருத்தி அரசாள்வதை விரும்பாமல் இல்துத்மிசின் மகனான உருகன்-உத்-தீன் பிரோசு (Rukn-ud-din Firuz) என்பவரைச் சுல்தான் ஆக்கினர். இவன் திறமைற்றவன். எனவே, அவர்கள் இரசியாவை அரசியாக்கினார். இவருக்குப்பலத்த எதிர்ப்பும் இருந்தது. தன் அபிசீனிய அடிமையான் யாகுதிற்கு (Yaqut) இவர் காட்டிய பரிவைப் பலர் எதிர்த்தனர். பெருங்குடி மக்களால் யாகுத்துக் கொல்லப்பட்டார். இரசியா சிறையிடப் பட்டார். இவர்தம் மற்றொரு சகோதரர் சுல்தானாக்கப்பட்டார். இரசியா தப்பி மீண்டும் தம் படையுடன் வந்தபோது சுல்தானால் கி.பி.1240-ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டார். இரசியாவும் அவர் கணவரும் கொல்லப்பட்டனர். போர்த்திறனும் அறிவும் கொண்டவர் இரசியா. இவருக்குப்பின் ஆட்சி செய்த முயுசுதீன் பகராமும் (Muiz-ud-din Bahram) அலாவுதின் மசூதும் (Alauddin Masud) திறமையற்றவர்கள். மங்கோலியர் கி.பி.1241-இலும், 1245-இலும் இந்தியாவின்மீது படையெடுத்தனர். இல்துத்மிசின் இளைய மகனான நாசருதீன் முகமது (Nasir-ud-din Mahmud) கி.பி.1246-ஆம் ஆண்டு சுல்தானாக் கப்பட்டார்.

நாசருதீன் சமய ஈடுபாடும் நற்குணமும் உடையவர். இவர் கல்வியாளரை ஆதரித்தார்; ஆனால் திறமையற்ற அரசர்; இவரது அமைச்சரான கியாசுதீன் பால்பனே (Ghiyas- ud-din Balban) ஆட்சியை நடத்தி வந்தார். இவர் மங்கோலியரை விரட்டி நாட்டைப் பாதுகாத்தார்; கலகக்காரர்களை அடக்கினார். பால்பனின் பகைவர்கள் இவரை விரட்டிய போதும் மீண்டும் உயர் பதவியில் பால்பன் அமர்த்தப்பட்டார். வாரிசு இன்றி நாசருதீன் இறந்ததால் பால்பன் சுல்தான் ஆனார்.

அடிமையாகத் தம் வாழ்வைத் தொடங்கிய பால்பன் படிப்படியாக முன்னேறிச் சுல்தான் ஆனார். நாசருதீனின் மகளை மணந்தார். அடிமை மரபின் சிறந்த அரசராகப் பால்பன் கருதப்படுகிறார். இவர் இராணுவத்தைச் சீர்திருத்தினார்; இராசபுத்திரர்களை விரட்டினார்; உள்நாட்டுச் சீர்த்திருத்தங்களால் புகழ் பெற்றார்; கோட்டைகளைப் புதுப்பித்தார்; நிலச் சீர்திருத்தங்களைச் செய்தார்; மங்கோலியரின் முன்னேற்றத்தைத் தடுத்தார். வங்காளத்தை ஆண்ட துக்ரில்கான் (Tughril Khan) பால்பன் ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தார். அதை அடக்கப் பால்பனே நேரில் சென்றார். துக்ரில்கான் கொல்லப்பட்டார். பால்பன் தம் இரண்டாம் மகனை வங்காள ஆளுநர் ஆக்கினார்.

பால்பனின் மூத்தமகன் கி.பி. 1285-இல் ஏற்பட்ட மங்கோலியப் படையெடுப்பின்போது கொல்லப்பட்டதால் பெரும் அதிர்ச்சி அடைந்த அரசர் கி.பி. 1287-ஆம் ஆண்டு இறந்தார். கடவுள் நம்பிக்கை உடையவராகவும் சிறந்த படைத்தலைவராகவும் வீரராகவும் நிருவாகியாகவும் மக்கள் நலம் பேணுவராகவும் பால்பன் இருந்தார். பால்பனுக்குப்பின் சுல்தானான இவர் பேரன் கைகுபாத்து (Kaiqubad) வலிமையற்று விளங்கினான். அதனால் குழப்பம் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கில்சி பிரபுவினால் கொல்லப்பட்டார். இதனுடன் அடிமை மரபு முடிவுற்றது.

கில்சி மரபு (கி.பி. 1290–1320): கைகுபாத்து கொல்லப்பட்ட பின் கி.பி. 1290 சூன் 13-ஆம் நாள் சலாலுதின் பிரோசு சா (Jalal-ud-din Firuzshah) தம் 70-ஆம் வயதில் சுல்தானாகிக் கில்சி மரபைத் தொடங்கினார். அவர் இரக்க மனம் கொண்டவர். பெருங்குடிமக்கள் கீழறுப்புப் பணிகளில் இறங்கினர். சுல்தானின் இராந்தம்பூர்ப் படையெடுப்புத் தோல்வியில் முடிந்தது. மங்கோலியப் படையெடுப்பை எதிர்த்து வெற்றி கண்டார். ஆனால், மதம் மாறிய மங்கோலியரைத் தில்லிக்கருகே வாழ அனுமதித்தார். அவர்கள் புதிய முசல்மான்கள் (New Mussalmans) எனப்பட்டனர். சலாலுதீன் தம் மருமகன் அலாவுதீன் கில்சியால் கி.பி. 1296-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார்.

தேவகிரியை ஆண்ட யாதவகுல மன்னரான இராமச்சந்திரனையும் அவன் மகன் சங்கரதேவனையும் தம் மாமன் காலத்திலேயே அலாவுதீன் வென்றார். அலாவுதீன் சலாலுதீனின் மறைவுக்குப்பின் ஏற்பட்ட குழப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு கி.பி. 1296-ஆம் ஆண்டு அக்டோபர் 3-ஆம் நாள் சுல்தான் ஆனார். தம்மை எதிர்த்தவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார்.

அலாவுதீன் மங்கோலியர் படையெப்புகளை முறியடித்தார். ஐந்து முறைகளும் வெற்றி அலாவுதீனுக்கே கிடைத்தது. எல்லைப்புறங்களில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். புதிய முசல்மான்களை ஒடுக்கினார். கூர்சரத்தை ஆண்ட கருணதேவனை வெல்லப் படையெடுத்தார். அவர் மனைவி கமலாதேவியும் மகள் தேவாலதேவியும் தப்பி ஓடினர். கூர்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. காபூர் (Kafur) என்ற அலியும் கைப்பற்றப்பட்டான். அவனே பின்னர் மாலிக்காபூர் (Malik kapur) என அழைக்கப்பட்டான்.

இராந்தம்பூரைக் கைப்பற்றும் முயற்சியில்




பம்பாய் - அங்காடி



கைவினைப் பொருள்கள்
விற்பனை அங்காடி



உழவர்- ஏர் உழுதல்



[illegible] வேளாண் குடிகள்




இராசபுதான் பெண்கள் குடிநீர் எடுத்தல்



இராசபுதான் தலைநகரம் செய்ப்பூர்

செங்கற்கள் அறுக்கும் தொழில்





இந்திய யானை



கல்கத்தா துறைமுகம்




இமயமலை



பம்பாய் - நகரம்

பெரும் சேதம் ஏற்பட்டாலும் இறுதியில் அலாவுதீன் அதைக் கைப்பற்றினார். மேவாரின்மீது படையெடுத்தார். அதன் இராணி பத்மினியின் மீது காமங் கொண்டார். அலாவுதீனிடமிருந்து தப்பப் பத்மினி உயிர்த் தியாகம் செய்தாள். சித்தூர்க்கோட்டையை அலாவுதீன் கைப்பற்றினார். பின்னர், மாளவம் கைப்பற்றப்பட்டது. உச்சயினி, மாண்டு (Mandu), தார், சந்தேரி ஆகியவை பிடிக்கப்பட்டன.




அலாவுதீன் கில்சியின் பேரரசு

மாலிக்காபூரின் தலைமையில் கி.பி. 1307–ஆம் ஆண்டு படையொன்று தென்னிந்தியாவின் மீது படையெடுத்தது. தேவகிரி மன்னன் இராமச்சந்திரன் திறை செலுத்த ஒப்புக் கொண்டான்.

தேவலாதேவி அலாவுதீனின் மகனுக்கு மணம் முடிக்கப்பட்டாள். காகதீய மன்னன் பிரதாபருத்ர தேவன் முறியடிக்கப்பட்டான். ஒய்சள (Hoysala) மன்னன் மூன்றாம் வீரபல்லாளன் தாக்கப்பட்டுச் சரணடைந்தார். மாபார் (Mabar) எனப்படும் பாண்டி நாட்டின்மீது காபூர் படையெடுத்தார். அங்கிருந்த கலகச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டார். மதுரை நகரைத் தாக்கிக் கொள்ளையிட்டார். இராமேசுவரம் வரை படையெடுத்தார். காபூர் எல்லையற்ற செல்வத்துடன் தில்லி திரும்பினார். திறை செலுத்த மறுத்த சங்கர தேவன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்.

அலாவுதீன் பல சீர்திருத்தங்களைச் செய்தார். சாகீர் முறையை(Jagir) நீக்கினார். ஒற்றர் படையை தீவிரப்படுத்தினார். பிரபுக்களைக் கண்காணித்தார். மது அருந்துவதைத் தடை செய்தார். அரசாங்க வருமானத்தைப் பெருக்கினார். வணிகர்களைக் கண்காணித்து அளவைகளைச் சரியாகப் பயன்படுத்தச் செய்தார். கலப்படங்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்பட்டது. அவர் படையைச் சீர்திருத்தினார். அலாவுதீன் 1316–ஆம் ஆண்டு சனவரி 2–ஆம் நாள் காலமானார். அவரது ஆட்சியில் மாலிக்காபூர் பெரும்அதிகாரம் பெற்றிருந்தார்.

அலாவுதீனுக்குப்பின் அவர் தம் இளைய மகனைப் பதவியிலிருத்தினார் காபூர். மற்ற உறவினரைக் கொடுமையாய் நடத்தினார். 35 நாள் ஆட்சிக்குப் பின் காபூர் கொல்லப்பட்டார். அலாவுதீனின் மூன்றாம் மகன் முபாரக்கு குழந்தை சுல்தானின் காவலரானார். ஆனால் அவர் சுல்தானைக் குருடாக்கிவிட்டு கி.பி. 1316 ஏப்பிரலில் குத்புதீன் முபாரக்கு (Qutb-ud-din Mubarak) என்று பட்டம் சூட்டிக்கொண்டார்.

முபாரக்குசா (Mubarak Shah) தம் தந்தையின் கடினமான சட்டங்களை ஒழித்தார். கூர்சரத்திலும் தேவகிரியிலும் ஏற்பட்ட கலகங்கள் ஒடுக்கப்பட்டன. ஆயினும் சுல்தானுக்கு எதிராகக் கலகங்கள் மூண்டன. முபாரக்கு சா கி.பி. 1320–ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். இதில் சீரிய பங்கு வகித்த குசுரு என்பார் நாசருதீன் என்னும் பெயருடன் சுல்தான் ஆனார். இவர் ஆட்சியை மக்கள் விரும்பவில்லை.

காசி மாலிக்கு(Ghazi Malik)என்பவர் தலைமையில் குசுரு சா கி.பி. 1320 செப்டம்பர் 5–ஆம் நாள் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். பின் பிரபுக்கள் விருப்பத்திற்கேற்பக் கியாசுதீன் துக்ளக்கு (Ghiyas-ud-din Tughluq) என்ற பெயருடன் காசி மாலிக்கு சுல்தான் ஆனார்.

துக்ளக்கு மரபு (கி.பி. 1320-1413): கியாசுதீன் துக்ளக்கு வலிமையும் நற்குணமும் பெற்றவர். பொருளாதாரத்தைச் சீர்திருத்தினார். விவசாயத்தை மேம்படுத்தினார். கோட்டைகளைப் பழுதுபார்த்தார். நீதி, காவல் துறைகள் சீர்திருத்தப்பட்டன. அறிஞர்களை ஆதரித்தார். இராணுவம், அஞ்சல் முறை போன்றவை திருத்தி அமைக்கப்பட்டன. இவர் தம் அவைப்புலவர் அமீர் குசுரு (Amir Khusru).

வாரங்கலில் (Warangal) ஏற்பட்ட கலகத்தை அடக்கத் தம் மகன் சானா சாவை (Jauna Shah) அனுப்பினார். முதல் முறை தோற்றாலும் இரண்டாம் முறை சானாசா வென்றான். வாரங்கல்

சுல்தான்பூர் எனப் பெயரிடப்பட்டது. வங்காளத்தில் ஏற்பட்ட கலகம் ஒடுக்கப்பட்டுக் கிழக்குப் பகுதி தில்லியின் ஆட்சிக்குட்பட்டது.

கியாசுதீன் கி.பி. 1325-இல் ஏற்பட்ட விபத்தினால் இறந்தார். முகமது பின் துக்ளக்கு என்னும் பெயருடன் சானா சுல்தான் ஆனார். இவர் சிறந்த கல்விமான். படைத்தலைவர்; ஆனால், செயல் வீரர் அல்லர். நன்மை செய்ய விரும்பித் தீமை செய்யும் இயல்புடையவர். முகமதுபின்துக்ளக்கு(Muhammad bin Tughluq) கி.பி. 1327-இல் தில்லியிலிருந்து தம் தலைநகரைத் தேவகிரிக்கு மாற்றினார்; இதனால், ஏற்பட்ட துன்பத்தை கண்டவுடன் மீண்டும் தில்லிக்கே மாற்றினார். இவர் செய்த நாணயச் சீர்திருத்தம் ஏளனத்திற்குள்ளானது. தங்கம், வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாகச் செப்பு நாணயங்களை வெளியிட்டார். அதனால், கள்ளநாணயங்கள் பெருகின. பொருளாதாரம் சீர்குலைந்தது. செப்பு நாணயங்களுக்கு ஈடாகத் தங்க, வெள்ளி நாணயங்களைக் கொடுத்துப் பெரும் நட்டத்திற்குள்ளானார். மங்கோலியப் படையெடுப்பைத் தடுக்கமிகுதியான தங்க, வெள்ளி அணிகலன்களைக் காணிக்கையாக அளித்தார். திபேத்து, சீனா போன்ற நாடுகளின்மீது படையெடுத்த முயற்சிகள் பெரும் சேதத்திற்குள்ளாயின. தோவாபு (Doab) பகுதியில் மிகுதியான வரி விதித்தார்; மக்கள் துன்புற்றனர். வங்காளத்தில் ஏற்பட்ட கலகத்தை முகமதுவினால் அடக்க முடியவில்லை. அயோத்தி ஆளுநரின் கலகம் ஒடுக்கப்பட்டது. ஆயினும் பொருளாதார நிலை சீர்கேடுற்றது. தெலிங்கானா, துவாரசமுத்திரம் ஆகிய பகுதிகளில் கலகம் ஏற்பட்டது. விசய நகரப் பேரரசின் எழுச்சி சுல்தானின் ஆட்சிக்கு எதிராக விளங்கியது. அலாவுதீன் பாமன் சாவின் (Alauddin Babman Shab) தலைமையில் கி.பி. 1347-இல் பாமினிப் பேரரசு ஏற்படுத்தப்பட்டது. கலகத்தை அடக்க தட்டா (Thattah) என்ற இடத்திற்குச் சுல்தான் துக்ளக்குச் சென்றபோது கி.பி. 1351மார்ச்சு மாதம் 20-ஆம் நாள் உயிரிழந்தார்.

முகமதுவின் சாவிற்குப்பின் நாட்டில் குழப்பம் மலிந்தது. அவருக்குப்பின் அவர் சிறிய தந்தையின் மகன் பிரோசு சுல்தானாக்கப்பட்டார். அவர் கி.பி. 1353 நவம்பரில் மேற்கொண்ட இரண்டு வங்காளப் படையெடுப்புகளும் வெற்றி பெறவில்லை. ஆனால், சாசு நகர் (Jajnagar), தெலிங்கானா ஆகிய பகுதிகளில் வாகை சூடினார். நாகர்கோட்டு(Nagarkot), சிந்து பகுதிகளில் வெற்றிபெற்றபோதும், சுல்தானின் திறமையின்மை வெளியாகியது. இவர் ஆட்சியில் மங்கோலியப் படையெடுப்பு நிகழவில்லை.

தீவிர முசுலிம் ஆன பிரோசு இந்துக்களைக் கொடுமைப்படுத்தினார். காலிபை மதித்தார். சாகீர் முறையைக் கொண்டுவந்தார். பல வரிகளை நீக்கினார். குர்-ஆனைப் பின்பற்றினார். வேளாண்மை கைத்தொழில்ஆகியவைவளர்ச்சியுற்றமையால் பொருளாதாரம் முன்னேறியது. பிரோசாபாத்து(Firuzabad) என்னும் நகரை உருவாக்கினார். இன்னும் சிலநகரங்களையும் கட்டடங்களையும் அமைத்தார். நீதி வழங்குவதில் சிறந்து விளங்கினார். பெண்களுக்கு உதவும் நிறுவனத்தை ஏற்படுத்தினார். படை பலம் பெற்று விளங்கியது. அடிமை முறை புகுத்தப்பட்டது.

இவரது மூத்த மகன் இறந்ததால் அதிர்ச்சியுற்ற சுல்தான் தகுதியற்ற இரண்டாம் மகனான முகமது கானின் நடத்தையால் நலிவுற்றார். உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. முகமதுகான் ஓடி ஒளிந்தார். பிரோசின் பேரனான துக்ளக் கானைச் சுல்தானாக்கியபின் கி.பி. 1388 செப்டம்பர் 20-ஆம் நாள் அவர் இறந்தார். துக்ளக் கான் கி.பி. 1389 இல் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் அபுபக்கரும் நாசருதீன் முகமதும் உமாயூனும் ஒருவர் பின் ஒருவராக ஆண்டனர். பின்னர் முகமது-பின்-துக்ளக்கின் பேரனான நசரத்சாவும் பிரோசு சாவின் பேரனான முகமதுசாவும் சுல்தானானார்கள். இச்சூழ்நிலையில் நாடெங்கும் கலகம் ஏற்பட்டது. தைமூர் படையெடுப்பும் இத்துடன் சேர்ந்துகொண்டது. தைமூரின் பேரன் கி.பி. 1398-இல் மூல்தானைக் கைப்பற்றினார். தைமூரும் தில்லி வந்து பெரும் வெற்றி பெற்றார். சுல்தான் முகமது தோற்கடிக்கப்பட்டார். தில்லி சூறையாடப்பட்டது. தைமூர் கி.பி. 1339-இல் நாடு திரும்பினார். பல குழப்பங்களுக்கிடையே முகமது மீண்டும் தில்லி வந்து சேர்ந்தார். முகமது கி.பி. 1413-பிப்ரவரியில் உயிர் துறந்தார்.

சையதுமரபு (கி.பி. 1414-1451): துக்ளக்கு மரபு வீழ்ச்சியடைந்த பின் பிரபுக்கள் தௌலத்கான் லோடியைத் தில்லிச் சுல்தானாக்கினர். ஆனால், அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மூல்தானை ஆண்ட இசார் பிரோசாவிடம் (Hissar Firu Shah)கைதியாக அனுப்பப்பட்டார். பிரோசா சுல்தான் ஆனார். அவரது மரபு சையது மரபு எனப்பட்டது. இவருக்கு எதிராகப் பல கிளர்ச்சி ஏற்பட்டன. அவருக்குப்பின் அவர் மகன் முபாரக்சா சுல்தான் ஆனார். கோக்கர்கள் கலகம் செய்தனர். முபாரகாபாத்து என்ற நகர் உருவாக்கப்படுவதைப் பார்வையிடச் சுல்தான் வந்தபோது காலமானார். இவருக்குப்பின் முகமது சுல்தான் ஆனார். இவரது ஆட்சியில் குழப்பம் மலிந்திருந்தது. இவர் கி.பி. 1445-இல் இறந்ததால் இவர் மகனான அலாவுதீன் ஆலம் சா (Alauddın Alam Shah) சுல்தானாக்கப்பட்டார். திறமையும் வீரமும் அற்றவராக இவர் விளங்கினார். சிற்றின்பங்களில்

மூழ்கிய அலாவுதீன் தில்லியைப் பகலூல்கான் உலோடிக்கு (Buhlul Khan Lodi) விட்டுக்கொடுத்து விட்டு ஓய்வு எடுத்துக் கொண்டார்.

உலோடி மரபு (கி.பி. 1451): ஆப்கானியரான பகலூல்கான் உலோடி கி.பி. 1451 ஏப்பிரல் 19-ஆம் நாள் தில்லி சுல்தான் ஆனார். அரசு சீர்குலைந்த நிலையிலிருந்தது. இவர் பிரபுக்களின் கொட்டத்தை அடக்கினார். சான்பூரை (Jaunpur) வென்றார். குவாலியர் அரசர் கிராத் சிங்கை (Kiratsingh) வென்றார். இவர் நோயுற்றதால் வாரிசுரிமை பற்றிய சிக்கல் ஏற்பட்டது. இவர் கி.பி. 1489-இல் இறந்தார். இவரது இரண்டாம் மகன் சிக்கந்தர் சா (Sikandar Shah) என்னும் பெயருடன் சுல்தான் ஆனார். அவர் திறமையான அரசர்; வெற்றிவீரர். தோல்பூர், சந்தேரி, திர்குத்து (Tirkut) ஆகிய பகுதிகளின் தலைவர்கள் அடக்கப்பட்டனர். வங்காளத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அவர் கி.பி.1517-இல் காலமானார். அவர் நல்ல நீதியாளர்; ஏழைகளின் குறைகளைக் கேட்டறிந்தார். அமைதியும் செல்வமும் ஓங்கின. எனினும், சகிப்புத்தன்மையற்றவர்.

அவர் மகன் இப்ராகிம் கி.பி. 1517-இல் அரசரானார். அவர் பிரபுக்களை அடக்கினார். தௌலத்கான் (Daulatkhan) உலோடியும் ஆலம்கானும் பாபரை (Babar) இந்தியாவின் மீது படையெடுக்குமாறு வேண்டினர். பானிபட்டு, என்னுமிடத்தில் கி.பி. 1526- ஆம் ஆண்டில் நடந்த போரில் பாபர் இப்ரகீமைத்தோற்கடித்து முகலாயப் பேரரசைத் தோற்றுவித்தார்.

வட இந்தியாவில் சிறப்பான அரசுகளாக விளங்கியவை வங்காளம், கான்பூர், மாளவம், குசராத்து, காசுமீர் ஆகியன. தென்னிந்தியாவில் பாமினி அரசு சிதைந்து ஐந்து சுல்தானியங்கள் ஏற்பட்டன. அவை பேரார், பீடார், அகமதுநகர், பீசப்பூர், கோல்கொண்டா என்பனவாம்.

இந்து அரசான விசயநகர அரசு தென்னிந்தியாவில் சிறப்புற்று விளங்கியதும் இக்காலத்தின்தான். சிறந்த இராசபுத்திர அரசாக மேவார் விளங்கியது.

சுல்தான்களின் ஆட்சியில் இசுலாம் பரவியது; இந்துக்கள் ஒடுக்கப்பட்டனர்; கலை வளர்ச்சியுற்றது; இலக்கியம் ஆதரிக்கப்பட்டது; பக்தி மார்க்கம் ஏற்பட்டது; மாநில மொழிகள் வளர்ச்சி அடைந்தன; கட்டடக்கலை சிறப்புப்பெற்றது; ஆயினும் முசுலிம்களிடையே ஒற்றுமை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஒருவருக்கொருவர் நம்பிக்கை காட்டுதல் போன்ற குணங்கள் குறையலாயின. இதுவே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. வெ.பா.

இந்தியா-வரலாறு (கி.பி.1526 முதல் 1858 வரை): இந்தியாவில் மொகலாய வரலாறு கி.பி. 1526-ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. தில்லியை ஆண்ட சுல்தான் இப்ராகீம் உலோடியை மொகலாய மன்னர் பாபர் கி.பி. 1526-இல் நடைபெற்ற பானிப்பட்டுப் போரில் தோற்கடித்து இம்மரபினரின் ஆட்சியை நிறுவினார். வரலாற்றில் இப்போர் முதல் பானிப்பட்டுப் போர் எனப்படும். சகிர்-உத்-தீன் முகம்து என்னும் முதற்பெயரைக் கொண்ட பாபர் (பாபர்என்பதற்குப் புலி என்பது பொருள்) துருக்கிய மரபினரான தாமர்லேன் (Tamer Lane) என்பாரின் வழித்தோன்றல். தந்தை வழியாகப் பாபர் தம் 11-ஆம் வயதில் பர்க்கானா என்னும் சிறுபகுதியைப் பெற்றிருந்தார். சாமர்கண்டை வென்றபோது பாபர் பர்க்கானாவை இழந்தார். பின்னர் இரண்டையும் இழந்து காபூலின் மன்னரானார். இந்தியாவின் மீது பல முறை படையெடுத்த பாபர் கி.பி. 1526-இல் இப்ராகீம் உலோடியையும் கி.பி. 1527-இல் இராசபுத்திர வீரர் சங்கராம சிங்கையும் வெற்றிகண்டார். இவ்விரு பெரும் வெற்றிகளுடன் மேலும் பல வெற்றிகளைப் பெற்று வங்காளம், பீகார் போன்ற பகுதிகளையும் வென்று, வடக்கில் காபூல் கிழக்கில் வங்காள எல்லை, தெற்கில் குவாலியர் ஆகியவற்றிற்குட்பட்ட பரந்த பேரரசைப் பாபர் நிறுவினார். மேலும், பல பகுதிகளை வெற்றி கொள்ளும் ஆசை பாபரின் மரணத்தால் (கி.பி. 1530) முற்றுப்பெறவில்லை. பாபருக்குப்பின்னர் அவர் மூத்த மகன் உமாயூன் மொகலாயப் பேரரசர் ஆனார்.

உமாயூனின் ஆட்சிக்காலத்தில் செர் சா (Sher Shah) என்னும்ஆப்கானியப் படைத்தலைவர் எழுச்சியுற்று உமாயூனை விரட்டிவிட்டு அரசராக முடிசூட்டிக் கொண்டார். செர்சா வெற்றிவீரரும் திறமை வாய்ந்த நிருவாகியுமாவார். மீண்டும் இந்தியாவில் ஆப்கானியரின் ஆட்சியை நிலைநாட்டும் வாய்ப்பும் இருந்தது. ஆனால், அவர் ஐந்தாண்டுகளே (கி.பி. 1540-45) ஆட்சி செய்தமையால் இவ்வாய்ப்பை அவருக்குப்பின் வந்த ஆப்கானியர்களால் நிறைவேற்ற இயலவில்லை. செர்சாவின் ஆட்சிக்காலத்தில் வடஇந்தியாவின் பெரும்பகுதிகளில் நிருவாக அமைப்முறை வலுவாக நிலைநாட்டப்பெற்றது. நிலவரிச் சீர்திருத்தம், பேரரசை மாவட்டங்களாகப் பிரித்து நேராட்சி நடத்தல், சாலைகள் அமைத்தல், அஞ்சல் முறை போன்றவற்றைச் செய்தார். பின்னர் வந்த மொகலாயப் பேரரசர் அக்பருக்கு வழிகாட்டியவர் என்று அவரைப் போற்றினர்.

செர்சா (Sher Shah): செர்சா தம் திறமையாலும் இராணுவத் தகுதியாலும் பேரரசராக உயர்ந்தார். அவர் ஓர் ஆப்கானியர். ஆப்கானியப் பேரரசை மொகலாயரிடமிருந்து பறித்து, மீண்டும் நிலைநாட்டிய பெருமை அவரையே சாரும். செர்சா நிருவாகத் திறமைக்குப் பெயர் பெற்றவர். தம் பேரரசை அவர் 'சர்க்கார்'களாகவும், 'பர்க்கானா'க் களாகவும் பிரித்து, நிருவாகத் துறைகளைச் செம்மையாக நிருவகிக்க அதிகாரிகளையும் நீதித்துறை அதிகாரிகளையும் அமர்த்தினார். அவர் நிலத்தை அளந்து ஒவ்வொரு பண்ணையின் அளவையும் நெறிமுறைப்படுத்தினார். நாலில் ஒரு பங்கு நிலவரி வாங்கப்பட்டது. நிலவரியைக் குடியானவர்களே தாம் சாகுபடி செய்த தானியமாகவோ பணமாகவோ நேரிடையாகக் கட்டலாம். குடியானவர்களுக்கு நிலப்பட்டா வழங்கும் முறையை முதன் முதலில் புகுத்தியவர் அவரே. அந்த ஆவணத்தில் குடியானவனின் நிலத்தின் அளவும் அவன் செலுத்த வேண்டிய நிலவரியின் அளவும் குறிக்கப்பட்டிருந்தன.

செர்சா போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்கினார். வங்காளத்தையும் பஞ்சாபையும் இணைக்கும் மிக நீண்டசாலையை (Grand Turnk Road) உருவாக்கி, சாலையின் இருமருங்கிலும் மரங்களை நட்டு, இந்து-முசுலிம் வழிப்போக்கர்களுக்குத் தங்கும் விடுதிகளையும் அமைத்தார்.

இந்தியாவில் இந்துக்களும் இசுலாமியர்களும் வாழ்வதால், இவ்விரு இனங்களையும் இணக்கமாகச் செயற்படச்செய்யும் முயற்சிகளை மேற்கொண்டார். நாணயமுறையைச் சீர்திருத்தி மிகுதியான வெள்ளிக் காசுகளை வெளியிட்டார். அவற்றில் இந்தி-பாரசீக எழுத்துகளைப் பொறித்தும் நாணயச் செலாவணியைச் சீர்படுத்தினார். இவரை இந்திய ரூபாயின் தந்தை என்பர். நீதியை நடுநிலை தவறாமல் செயற்படுத்தினார். குடியானவர்களின் உரிமைகள் காக்கப்பட்டன. இவர் கட்டடக்கலைப் பிரியர். இவருடைய கல்லறையை இன்றும் சசாரம்(Sasaram) என்னுமிடத்தில் காணலாம். அது அழகிய கட்டடக் கலைக்கோர் எடுத்துக்காட்டு. இடைக்கால இந்திய வரலாற்றில் இவரை மாபெறும் மன்னர்களுள் ஒருவராகக் கருதலாம். இவர்தம் மகனும், அடுத்து அரியணையேறியவருமான இசுலாம் சா(Islam Shah) பேரரசைக் குலையாமல் காத்தபோதிலும், கி.பி.1553 ஆம் ஆண்டில் காலமானபோது நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. அரச குடும்பத்தில் ஏற்பட்ட மோதல்களும் அரண்மனையில் வாழ்ந்த ஆப்கானியப் பிரபுக்களிடையே மூண்ட கொந்தளிப்பும் கசப்புணர்ச்சியும் பேரரசை அலைக்கழித்தன. அரியணையைக் கைப்பற்றப் பலர் போட்டியிட்டுக் கொண்டமையால், பேரரசு அவர்களுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்படலாயிற்று. இத்தருணத்தில் உமாயூன் ஏதுமிலியாகப் பாரசீக மன்னரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார். இந்தியாவில் நிலவிய சூழ்நிலையை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு பாரசீக மன்னரின் உறுதுணையுடன் இந்தியாவில் மீண்டும் மொகலாயர் ஆட்சியை நிலைநாட்ட அவர் முயன்றார்; காபூலையும் காண்டகாரையும், பஞ்சாபையும் வென்றார். அப்போது ஆப்கானிய அரசனாயிருந்த சிக்கந்தர் சூர் (Sikander Sur) அவரை எதிர்த்தான்; எனினும் தோல்வியுற்றான். உமாயூன் கி.பி. 1555-இல் மீண்டும் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் உமாயூன் கி.பி. 1556-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் காலமானார். அப்போது 14 வயதே நிரம்பி இருந்த அவர் மகன் அக்பர் சிக்கந்தர் சூரைவிட வலுவானதொரு பகைவனை எதிர்நோக்க வேண்டியவரானார். ஆப்கானியப் பேரரசர் இசுலாம் சா என்பவரின் இந்துப் படைத் தலைவரும் இசுலாம் சாவிற்குப் பின்னர்ப் பதவியேற்ற முகமது ஆதில்சாவின் தலைமை அமைச்சருமான ஏமச்சந்திரர் என்பாரை அவர் சந்திக்க வேண்டியவரானார். மொகலாய வரலாற்று ஆசிரியர்கள் அவரை ஈமு (Hemu) என்று குறிப்பிடுவர்.

உமாயூன் காலமானதையும் அக்பர் பஞ்சாபில் இல்லை என்னும் செய்தியையும் அறிந்த ஈமு பெரும் படையுடன் முன்னேறிச் சென்று தில்லி, ஆக்ரா என்னும் இரு பகுதிகளையும், மொகலாயப் படையைத் தோற்கடித்துக் கைப்பற்றிக்கொண்டார். தில்லியைக் கைப்பற்றியதும் ஈமு ஆப்கானியப் படைவீரர்களைத் தம் பக்கம் கவர்ந்து கொண்டார். அவர்களின் துணையுடன் அரியணையேறி, நாணயங்களை அச்சடித்து, விக்கிரமாதித்தர் என்னும் வரலாற்றுப் பெயரையும் சூட்டிக் கொண்டார். பின்னர்த் தம்மை எதிர்க்க அனுப்பப்பட்ட மொகலாயரின் படைகளைச் சந்திக்க முன்னேறிச் சென்றார். மீண்டும் ஒருமுறை கி.பி. 1556-ஆம் ஆண்டில் நடைபெற்ற பானிப்பட்டுப் போர்க்களத்தில் தில்லி அரியணையை அக்பர் வென்றதும் ஈமு இழந்ததையும் குறிப்பிடல் வேண்டும். இப்போரை இரண்டாம் பானிப்பட்டுப் போர் என்பர். போர்க்களத்தில் ஈமு கடுமையாகத் தாக்கி வெற்றி பெறும் தருணத்தில் அவருடைய கண்களைத் துளைத்த அம்பொன்றினால் அவர் மூர்ச்சையாகி விட்டார். ஈமுவின் படைவீரர்கள் அவர் இறந்துவிட்டார் என எண்ணிப் போர்க்களத்தை விட்டு அனைத்துத் திக்குகளிலும் சிதறியோடினர். போரில் அக்பர் வெற்றி பெற்றார். அக்பர் ஈமுவைக் குத்திக் கொன்றார்; அவருடைய காப்பாளரான பைராம்

கான் இத்தகைய கொடுமையைச் செய்யுமாறு அக்பருக்கு வழிகாட்டினான்.

பானிப்பட்டுப் போர்க்களத்தில் மொகலாயப் பேரரசின் அடிக்கல் நாட்டப்பட்டது உண்மைதான் ஆனால், அது கி.பி. 1526-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பானிப்பட்டுப் போரிலன்று; கி.பி. 1556-இல் நடைபெற்ற இரண்டாம் பானிப்பட்டுப் போரில்தான். ஈமுவின் தோல்விக்கும் சாவிற்கும் பின்னர்த் தில்லியை ஆண்ட மொகலாயப் பேரரசர்கள் அத்தகைய பேரிடரைக் கி.பி. 1707-ஆம் ஆண்டில் அவுரங்கசீபு சாகும்வரை ஒருபோதும் எதிர்நோக்கவில்லை. இதற்கு முன்னர் வட இந்தியாவை ஆண்ட இரு பேரரசுகளான மௌரியப் பேரரசும் குப்தப் பேரரசும் இந்தியாவில் நிலை நாட்டப்பட்ட பேரரசுகளேயாகும். மௌரிய, குப்த, மொகலாயப் பேரரசுகள் மூன்றிற்கும் ஓரிரு ஒற்றுமைகள் உண்டு. இம் மூன்று பேரரசுகளையும் மூன்று, நான்கு பேரரசர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக ஆண்டு, கட்டிக் காத்து விரிவுபடுத்தினர். மௌரியப் பேரரசைச் சந்திரகுப்த மௌரியரும் பிந்துசாரரும் அசோகரும் நிலைநாட்டினர். குப்தப் பேரரசைச் சமுத்திரகுப்தரும் இரண்டாம் சந்திரகுப்தரும் குமாரகுப்தரும் கந்தகுப்தரும் உறுதிப்படுத்தினர். மொகலாயப் பேரரசை அக்பர், சகாங்கீர், சாசகான், அவுரங்கசீபு போன்றவர்கள் கட்டிக்காத்தனர். இம்மூன்று பேரரசுகளும் நல்லதொரு நிருவாக அமைப்பை அவரவர் காலத்தில் நிலைநாட்டியதுடன், கலைக்கும் கட்டடக்கலைக்கும் புத்துணர்ச்சியூட்டி மலரச் செய்தன என்பது வரலாற்று உண்மை.

மொகலாயப் பேரரசு படிப்படியாகப் பெருகி வடக்கில் இமயமலைத் தொடர் முதல் ஏறத்தாழ தெற்கில் கடல்வரையிலும், மேற்கில் இந்துகுசு (Hindukush) மலைத்தொடர் முதல் கிழக்கில் இந்தியாவின் இயற்கை யெல்லை வரை பரந்திருந்தது. ஆப்கானிய அரசர்களைத் தோற்கடித்த பின்னர், அக்பர் ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற்கொண்டு தம் அதிகாரத்தை வடஇந்தியாவின் பெரும்பாலான பகுதிகள், ஆப்கானிசுத்தானம், பலுசிசுத்தானம், காண்டகார் போன்ற பகுதிகளில் நிலைநாட்டினார். இவ்வெற்றிகள் கி.பி. 1560-க்கும் கி.பி. 1595-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பெறப்பட்டன. மாளவத்தில் (கி.பி. 1560) தொடங்கிக் காண்டகாரில் (கி.பி. 1955) முடிவுற்றன. இவ்வெற்றிகள் கோண்டுவானா (1564), இராசபுதனம் (1569), குசராத்து (1572), வங்காளம் (1576), காசுமீரம் (1586), காபூல் (1581), சிந்துவின் தென்பாகம் (1591), ஒரிசா (1592), பலுச்சிசுத்தானம் (1595), காண்டகார் (1595) போன்றவை அக்பரால் கைப்பற்றப்பட்டன.

வடஇந்தியாவில் மிகப் பரந்த பேரரசினை நிலைநாட்டி வடஇந்தியா முழுவதையும் காபூல், காண்டகார், கசினி (Ghazni), அவற்றின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருந்த சிற்றரசுகள் போன்றவற்றையும் கைக்கொண்ட பின்னர், அக்பர் தம் கவனத்தைத் தக்காணத்தின் மீது திருப்பினார். அகமது நகரின் மீதும் காந்தேசத்தின்மீதும் அவர் படையெடுத்தார். எனினும் அவர் ஓரளவுதான் வெற்றிபெற்றார். பேராரையும் (1596) மேற்கூறிய இரு அரசுகளின் சிறு பகுதிகளையும்(1601) பெற்றார். இவ்வெற்றிகளுடன் தொடர்பான சில நிகழ்ச்சிகளைக் கூறவேண்டும். தக்காணப் படையெடுப்புகளின்போது இடைக்கால வரலாற்றில் புகழ்பெற்ற இரு அரசியார்களைக் குறிப்பிடவேண்டும்: இராணி துர்க்காவதியும் சாந்த்பீபியுமே அவ்விரு அரசியராவர்.

இராணி துர்க்காவதி தன் இளம் வயது மகனின் பேராளராக கோண்டுவானாவை ஆண்டாள். அளவற்ற திறனுக்கும் இராணுவப் பயிற்சிக்கும் பெயர் பெற்ற அவ்வரசி மொகலாயப் படையை எதிர்த்துப் போரிட்டும் பயனில்லாமல், தற்கொலை செய்து கொண்டு உயிர்துறந்தாள். எஞ்சிய பெண்கள் தீயில் குதித்து மாண்டனர்.

சாந்த் சுல்தானா என்னும் சாந்த் பீபி அகமது நகர் அரசி; படைக்கலம் தரித்துப் படைவீரர்களுக்கு ஊக்கமூட்டி முற்றுகையிடப்பெற்ற கோட்டையைக் காத்துப் பெருமைபெற்றவள். அவள் மொகலாயப் படைகளின் குண்டுகளால் சேதமடைந்த கோட்டை மதிலைப் பழுதுபார்க்கும்போது அக்பரால் சுட்டுக் கொல்லப்பட்டாள்.

அக்பர் மேவார் மன்னர் இராணா பிரதாபசிம்மனுடன் செய்த போர்களை இராசபுதன நாட்டுப் புறப்பாடல்கள் உயிரோவியங்களாகக்குறித்துள்ளன. சேம்சு தாடு (James Tod) என்பார் தாம் எழுதிய 'இராசசுத்தான் கதைகளும் தொன்மைகளும்' (The Annals and Antiquities of Rajasthan) என்னும் நூலில் அவற்றைத் தொகுத்துள்ளார். இந்தியாவில் இசுலாம் சமயம் நுழைவதைத் தடுத்து இந்து சமயத்தைப் பேணிக்காக்கும் பேரரண்களாக இராசபுத்திரர்கள் விளங்கினார்கள். இராசபுத்திரர்களைஎதிர்த்தே பெரும்பாலான பட்டாணியத்துருக்கர்கள் போராடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இராசபுத்திரர்கள் அடிக்கடி தோற்றுப்போனார்கள், எனினும் சுதந்திரம் பெற வாய்ப்புக் கிட்டியபோது அதை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தத் தவறவில்லை. அவர்களுடன் மணவுறவு கொண்டு தம் பக்கம் கவர்ந்துகொள்ள அக்பர் முடிவு செய்தார்.

இக்கொள்கையின் அடிப்படையில் அக்பர் இராணா ஆம்பர் என்பவரின் மகளையும் இராசா பிகாரிமால் என்பவரின் மகளையும் மணந்துகொண்டார். இதன் விளைவாகப் பகவன்தாசு, மான்சிங்கு என்னும் பெயர் கொண்ட பெரும் வீரர்கள் அக்பரின் படைத்தலைவர்களாக அமர்த்தப்பெற்றுப் பெரும் பொறுப்புகளை வகித்தார்கள். அக்பர் பிகானீர், செய்சல்மர் அரசகுமரிகளையும் அந்த அடிப்படையில் மணந்துகொண்டு, அவர்களின் உறவினருக்குப் பதவிகள் கொடுத்தார். இக்கொள்கையினால் நெஞ்சம் நெகிழ்ந்த இராசபுத்திர இளவரசர்கள் மொகலாயப் பேரரசின் வலிமைவாய்ந்த தலைவர்களானார்கள். அக்பர், அவுரங்கசீபு போன்றோரின் ஆட்சிக்காலத்தில் மான்சிங்கும், சசுவந்த்சிங்கும் மொகலாயப் பேரரசின் தூண்கள்போல் கருதப்பட்டனர். எனினும் திருமண உறவின்மூலம் இராசபுத்திரர்களைக் கவர்ந்த இக் கொள்கை மேவாரின் இராணாவினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இராசபுதனத்தின் முதன்மையான அரசுகளுள் ஒன்று மேவார்.

பெரும்பாலான இராசபுத்திர இனங்களும் அரசுகளும் அக்பருடன் நல்லுறவு கொண்டபோது, அக்பரை எதிர்த்துப் பேரராட மேவார் ஆயத்தமாகியது. மொகலாயப் பேரரசருக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார் மேவார் இராணா. சித்துார் மேவாரின் தலைநகர். அக்பர் சித்தூரை முற்றுகையிட்டார். இராணாசங்கராமசிங்கின் மகன் இராணா உதயசிம்மன் மலைப்புறங்களுக்கு ஓடிவிட்டார் எனினும் சித்தூரைக் காக்கச் செய்மல் (Jaimal), பட்டா (Patta) என்னும் இரு படைத்தலைவர்கள் முன் வந்தார்கள்.


பெரும்பாலான இராசபுத்திர அரசுகள் – மார்வார், ஆம்பர் (செய்ப்பூர்), பிகானீர், பண்டி (Bundi) போன்றவை அக்பரின் மேலாண்மையை ஒப்புக்கொண்டபோதிலும், மேவார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. தலைநகர் கைவிட்டுச் சென்றதையும் பொருட்படுத்தாது, இராணா பிரதாபசிம்மனின் தலைமையில் அணிதிரண்டனர். உதயசிம்மன் கி.பி. 1572-ஆம் ஆண்டில் காலமானார். பிரதாபசிம்மன் மொகலாயப் படைகளை அல்திகாட்டுக் கணவாயில் (Haldighat Pass) நடைபெற்ற போரில் எதிர்த்தார். மொகலாயப் படைகளுக்கு இராசபுத்திரரான மான்சிங்கு தலைமை தாங்கினார். இராசபுத்திரரின் பெயருக்கும் புகழுக்கும் எடுத்துக்காட்டாய் நின்றது மேவார் ஒன்றுதான் பிரதாபனின் படைவீரர்கள் தம் தகுதியைக் காட்டிப் பொருதார்கள். பெரும் படையுடன் போரிட்ட மொகலாயர் வெற்றி பெற்றனர்(1576). பிரதாபசிம்மன் ஆரவல்லி குன்றுகளுக்குத் தப்பியோடினார். பேரிடர்களுக்கும் பெருந்துன்பங்களுக்கும் ஆளாகியும் அவர் மேவாரைச் சுதந்திரமடையத் தொடர்ந்து போரில் ஈடுபட்டிருந்தார். தாம் இறந்த கி.பி. 1597-ஆம் ஆண்டிற்குள் பிரதாபசிம்மன் தாம் இழந்த மேவாரின் பெரும்பகுதிகளை மீட்டார். எனினும் அவரால் சித்தூரை மீட்க இயலவில்லை.

**அக்பரின் சீர்திருத்தங்கள்:** மொகலாயப் பேரரசர் அக்பர் நிருவாகத் துறையை நிலையான அமைப்பில் வடிவமைத்துக் கொடுத்தார். இந்துக்களின் மீது அவர் காட்டிய பரிவும் பாசமும் தீவிர முசுலிம்களால் விரும்பப்படவில்லை.

அக்பர் பேரரசு முழுவதையும் 15 சுபாக்களாகப் (மாநிலங்களாக) பிரித்தார். அவை தில்லி, ஆக்ரா, அச்மீர், இலாகூர், காபூல், மூல்தான், அகமதாபாது, மாளவம், காந்தேசம், பீரார், அகமதுநகர், அலகாபாது, அவுத்து (அயோத்தி), பீகார், வங்காளம் என்பனவாம். இம்மாநிலங்கள் பெரும்பாலும் ஒரே வகையான நிருவாக அமைப்புமுறையைக் கொண்டிருந்தன. இவற்றின் ஆளுநர் சுபேதார் (Subedar) எனப்பட்டார். அவருக்கு இராணுவ, உள்நாட்டு விவகாரங்களில் கட்டிலா அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வருவாய்த் துறையைக் கண்காணிக்கத் திவான் (Dewan) என்னும் அலுவலர் அமர்த்தப்பட்டார். நீதித்துறையை மிரால்டுசு (Miradis), காசிகள் (Kazis) என்னும் அலுவலர்கள் கவனித்தனர். சட்டம் ஒழுங்கைக் கொத்தவால்கள் என்னும் அலுவலர்கள் நிருவகித்தனர். பக்சி(Bakshi) எனப்படும் அலுவலர் ஊதியத்துறையையும் (Pay Department), மிர்பகர் (Mir Bahr) கப்பல், துறைமுகங்கள், படகுத் துறைகள் போன்றவற்றையும், வக்கியாநவிசு (Wakia-Navis) ஆவணத் துறையையும் (Record Department) கவனித்தார்கள்.

அக்பர் இராணுவ அதிகாரிகளிடையே படிப்படியாக உயரும் தரத்தின் அடிப்படையில் உருவாக்கப்பெற்ற மன்சப்தாரர்களை (Mansabdars) அமர்த்தி, இராணுவ நிருவாகம் முழுவதையும் திருத்தி அமைத்தார். சாகீர்களைக் (நிலமானியம்) கொடுப்பதற்கு மாறாகத் தம் அதிகாரிகளுக்கு அக்பர் ஊதியத்தைப் பணமாகக் கொடுத்தார். வருவாய்த் துறையைத் தோடர்மால் (Todar Mall) என்பாரின் உறுதுணையுடன் செப்பனிட்டார். நிலங்களின் வளத்திற்குத்தக மூன்று தரங்களாக அனைத்து நிலங்களையும் முதன்முதலாகப் பிரித்தவர் அக்பரேதான். நிலவரி மூன்றிலொரு பங்காக நிருணயிக்கப்பட்டது. அதனை உற்பத்தி செய்யப்பட்ட பொருளாகவோ பணமாகவோ கட்டலாம். செர்சாவினால் உருவாக்கப்பெற்ற இத் திட்டத்தை அக்பர் மேலும் நன்முறையில் திருத்தி

அமைத்தார். இதனால் மக்கள் நிலையான நன்மைகளைப் பெற்றனர்.




மொகலாயப் பேரரசு

அக்பரின் அரண்மனையில் அக்காலத்தில் திறமை மிக்கவர்களாய்க் கருதப்பட்ட சில பெருமக்கள் அவையை அணிசெய்தனர். அபுல் பைசி(Abul Faizi), அபுல் பசல் (Abul Fazl) என்போர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். பைசி தலைசிறந்த இலக்கியக்கவிஞர்; அபுல்பசலோ சிறந்த கல்விமான், நூலாசிரியர், அவைக்கலைஞர் என்று போற்றப்பட்டவர். அபுல்பசல் அக்பரின் நம்பிக்கைக்குகந்த நண்பரும் அறிவுரையாளருமாவார். அவர் எழுதிய நூலான 'அய்னி அக்பரி' பேரரசரின் ஆட்சியை அறிந்துகொள்ள உதவும் அடிப்படை நூலாகும். அக்பரின் மூத்த மகன் சலீம் அபுல்பசலின் கொலையைத் துண்டியதால் பேரரசர் ஆழ்ந்த வருத்தமுற்றார். இராசா மான்சிங்கு அக்பரின் படைத்தலைவர். கடுமையான படையெடுப்புகளை நடத்தும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அக்பர் திறமையான அலுவலர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தமைக்கு இராசா தோடர்மால் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரும் சிறந்த போர் வீரரே. எனினும் நிலவரித் துறையைத் திருத்தி அமைத்ததே அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது பீர்பாலும் தான்சேனும் அக்பரின் அரண்மனையை அணிசெய்த ஏனையோருள் குறிப்பிடத்தக்கவர்கள். பீர்பால் நகைச்சுவைக்கும் தான்சேன் இசைக்கும் பெயர்பெற்ற கலைஞர்கள்.

இந்தியாவில் மொகலாயப் பேரரசை உறுதிப்படுத்த அக்பர் தமக்கெனக் கொள்கையொன்றை உருவாக்கினார். பெரும் பகுதிகளை வெல்லுவதால் மட்டும் பேரரசு காக்கப்படமாட்டாது என்பதை நன்குணர்ந்து இந்துக்கள், இசுலாமியர்கள் போன்ற அனைத்துக் குடிமக்களின் அன்பும் ஆதரவும் பெற்றுப் பரந்த அடிப்படையில் ஆட்சியை அமைக்க வேண்டுமென அவர் கருதினார். எனவே முதன் முதலாக இந்துக்களின் நம்பிக்கையைப் பெற அவர் கவனம் செலுத்தினார். ஆம்பர் மன்னர் இராசா பீகாரிமால் என்பாரின் மகளை அவர் (1562) மணந்து கொண்டார்; ஏனைய இராசபுத்திர அரசுகளுடனும் அத்தகைய மணவுறவுகளைச் செய்துகொண்டார்; இந்துக்கள் வெறுத்த செசியா வரியை நீக்கினார். இந்துப்பயணிகள மீது சுமத்தப்பட்ட பிறிதொரு வரியும் விலக்கிக் கொள்ளப்பட்டது; உயர்ந்த பதவிகளில் இந்துக்களை அமர்த்தினார். அவர் இந்துக்களை முழுதும் நம்பினார். இதன் விளைவாக இந்துப் பெருங்குடிமக்களும் மொகலாயப் பேரரசுக்கு விசுவாசமாக விளங்கினார்கள்.

அக்பர் அனைவருக்கும் இணக்கமானவர்; பெருந்தன்மையாளர்; கருணையுடையவராயினும் கொடுமையாகவும் இருக்கக்கூடியவர்; நீதியில் நடுநிலைமை தவறாதவர். அவர் கல்லாதவர்; எனினும் வரலாறு, சமயநூல்கள் கவிதை போன்றவற்றை அவர் திரட்டியதுடன், அவற்றைப் பிறர் படிக்கக் கேட்டு அறிந்தார். நினைவாற்றல் மிகுந்த பேரரசர்; கண்டும் கேட்டும் கற்றுக்கொண்டவர். இலக்கியம், தத்துவம், சமயம் போன்றவற்றுள் எழும் ஐயங்களை உரையாடல்கள் மூலம் அறிந்துகொள்ளும் ஆர்வங்கொண்ட அவர், தாமும் அவ்வுரையாடல்களில் பங்கு கொண்டார்.

அவர் சுன்னி முசுலிமாகவே வளர்க்கப்பட்டவராயினும், சூபிக் கோட்பாடுகளிடம் அவருக்கிருந்த ஈடுபாட்டினால் அவருடைய வைதிகக் கொள்கை தளரலாயிற்று. 'இபதத் கானா' என்னும் அரண்மனையில் நள்ளிரவில் இந்து, சமணம், சொராசுடிரியம், கிறித்தவம் போன்ற வெவ்வேறு சமயங்களைப் பற்றியவிளக்கங்களைப் பேரரசர் பொறுமையாகக் கேட்டுத் தெளிந்தார். மேற்கூறிய நான்கு சமயங்களையும் போற்றிப் பாராட்டிய அக்பர் அவற்றின் சடங்குகளையும் பின்பற்றினார். சமணப் பெரியார்கள் கூறிய கொல்லாமைக் கோட்பாட்டின் செல்வாக்கினால், விலங்குகளைக் கொல்லக்கூடாதென்றும் அகிம்சைக் கோட்பாட்டைப் பின்பற்றினார்; வேட்டையாடுதலையும் துறந்து மீன் பிடித்தலையும் குறைத்துக் கொண்டார். குறிப்பிட்ட சில நாள்களில் புலால் உண்பதைத் தவிர்த்ததுடன்

விலங்குகளைக் கொல்லக்கூடாதென்று எழுத்துமூலம் ஆணைகளையும் பிறப்பித்தார். இந்து சமயத்திடத்தும் கிறித்தவசமயத்தினிடத்தும்கூட இவ்வண்ணமே அவர் நடந்துகொண்டார். சமயத் தொடர்பான விவரங்களில் அவர் முழுப் பொறையுணர்வுடன் நடந்துகொண்டமை கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் புதுமையாகும்.

ஆனால், சமயப் பொறையை அளவுக்கு மீறி நடைமுறைப்படுத்த அவர் கி.பி. 1579-ஆம் ஆண்டில் பிழையிலா ஆணை (Infallibility Decree) யொன்றைப் பிறப்பித்தார். அதன்படி சமயத்துறையிலும் ஏனைய உள்விவகாரங்களிலும் பேரரசரையே தலையாய நீதிபதி என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இறுதியாக அக்பர் கி.பி. 1582-ஆம் ஆண்டில் தீன் இலாகி அல்லது தெய்விக சமயம் என்னும் புதிய சமயத்தை உருவாக்கினார். இப்புதிய சமயத்தின் அடிப்படைக் கருத்து கடவுள் ஒருவரேயென்பதும் பேரரசர் மண்ணுலகில் கடவுளின் பேராளர் என்பதும் ஆகும். ஆனால், இப்புதிய சமயத்தைப் பின்பற்றியவர்கள் அவருடைய நண்பர்களுள் சிலரேயாவர்.

அவரங்கசீபு: அவுரங்கசீபின் ஆளுமை முரண்பட்ட குணங்களின் கலவையாகும். தம் தந்தையாருடன் கலகஞ் செய்தே அரியணையைக் கைப்பற்றியதுடன், ஆக்ரா கோட்டைக்குள் அவரைச் சிறைவைத்தார். சாசகான் கி.பி. 1666-இல் சாகும்வரை அடைக்கப்பட்டே காலத்தைக் கழித்தார். தம் அண்ணன் தாரா சூக்கோவைப் (Dara Shukoh)போலி விசாரணை நடத்திச் சமய நிந்தனையாளன் என்று வழக்குத் தொடுத்துக் கொன்றார். பிறிதொரு அண்ணனை இந்தியாவை விட்டு நாடுகடத்திக் கொன்றார். தம்பியை ஆயுள் கைதிபோல் சிறைப்படுத்தினார்.

ஒருவரையும் நம்பாத சந்தேகக் குணம் அவருடன் பிறந்தது. தம் சொந்த மக்களையே நம்பாதவர். மிர்சும்லா (Mir Jumla), செய்சிங்கு (Jaisingh), சசுவந்தசிங்கு போன்ற பெரும்படைத் தலைவர்கள் காலமானபோது, பேரரசர் அவுரங்கசீபு தொல்லைகளிலிருந்து விடுபட்டவர் போல் மகிழ்ந்தார். இந்துக்களையும் இசுலாமியர்களையும் இணைத்துப் பேரரசைப் பரந்ததொரு அடிப்படையில் அன்பாலும் பாசத்தாலும் ஆளவேண்டுமென்று முயன்ற அக்பருக்கு மாறாக, அவுரங்கசீபு இந்தியாவை இசுலாமிய நாடுபோல் கருதும் கொள்கையைப் பின்பற்றினார்.

மேற்கூறிய கொள்கையைச் செயற்படுத்தியதால் தீய விளைவுகள் விளைந்தன. பேரரசு முழுவதிலும் மனக்குறையும் குழப்பமும் நிலவின. சாட்டுகள் (Jats) கலவரத்தில் ஈடுபட்டனர். இக்கலவரம் அவுரங்கசீபின் ஆட்சிக்காலம் முழுதும் நீடித்தது. பண்டேல்கண்டை (Bundelkhand) ஆண்ட சத்திரசால் (Chhatrasal) கலகஞ்செய்து இருமுறை பேரரசுப் படைகளைத் தோற்கடித்து, தமக்கென்று சுதத்திர அரசினை நிறுவிக்கொண்டார். 'சத்நாமிகள்' (Satnami) எனப்படும் இந்துப் பிரிவினரும் அவுரங்கசீபிற்கெதிராகக் கலகஞ் செய்தனர்.

அக்பர் இறந்தபின்னரும் மொகலாயப் பேரரசர்கள் தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றுப் பேரரசைப் பரப்ப முயன்றார்கள். சகாங்கீர், சாசகான், அவுரங்கசீபு ஆகிய மொகலாய மன்னர்கள் முறையே கி.பி.1605, 1628, 1658-ஆம் ஆண்டுகளில் அரியணையேறினர். அக்பருக்குப் பின்னர் அவர் மகன் சகாங்கீரும் சகாங்கீருக்குப் பின்னர் அவர் மகன் சாசகானும் சாசகானுக்குப் பிறகு அவர் மகன் அவுரங்கசீபும் மொகலாயப் பேரரசர்களாக முடிசூட்டிக் கொண்டனர். அக்பர் காலத்தில் பிடிக்கப்படாத காங்கிரா (Kangra) கோட்டையைக் கைப்பற்றிய சகாங்கீர், வங்காளத்தையும் மேவாரையும் வென்று பெரும்புகழ் எய்தினார். இராணா பிரதாப சிம்மனின் மகன் இராணா அமரசிம்மன் கி.பி. 1614-ஆம் ஆண்டில் மொகலாயருக்கு அடிபணிந்தான். எனினும், மேவார் அரச குடும்பம் அக்பருடன் மணஉறவினை வைத்துக்கொள்ளவில்லை. மேவாரும் ஏனைய இராசபுத்திர அரசுகளைப்போன்று தாழ்ந்து பணிந்தது. வங்காளம் முழுவதும் பிடிக்கப்பெற்று, கூச்-பீகாரும் மொகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. அகமது நகரக் கோட்டை அடிபணிந்தது. சாசகானும் அவுரங்கசீப்பும் தக்காணச் சுல்தானியங்களை வென்றனர். பீசப்பூர், கோல்கொண்டா அகமதுநகரின் எஞ்சிய பகுதிகள் போன்றவை மொகலாயப் பேரரசில் இணைக்கப்பட்டன. தொலைவிலிருந்த தஞ்சாவூரையும் திருச்சிராப்பள்ளியையும் கூட அவுரங்கசீப்பு விட்டு வைக்கவில்லை. அவையும் வெல்லப்பட்டன.

எனினும் மொகலாயப்பேரரசர்கள் ஒரு நிகழ்ச்சியில் தோற்று, இரு நிகழ்ச்சிகளில் முழு வெற்றி காணவில்லை. காண்டகாரைப் பிடிக்கப் பல முறை படையெடுத்து முயன்றும் அவர்களால் அதைக் கைப்பற்ற இயலவில்லை. அது பாரசீகத்தின் பகுதியாகவே இருந்துவிட்டது. இராசபுத்திர அரசுகளான மேவாரையும் மார்வாரையும் அவர்களால் முற்றிலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவுரங்கசீபு சமய மிகைப்பற்றுடையவர். இந்துக்களை வேறுபட அவர் நடத்

தியதால் மராத்தியர்களும், சீக்கியர்களும் கிளர்ந்தெழுந்தார்கள். இவ்வெழுச்சிகளால் மொகலாயப் பேரரசு விரிசலடையலாயிற்று. பின்னர் வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று. அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்திலேயே மராத்தியர்கள் பெரும் சக்தியாக உருவெடுத்தனர். பின்னர் வந்த சீக்கியர்கள் அவுரங்கசீபுக்குப் பின்னர் வந்த மொகலாய அரசர்களின் காலத்தில் மொகலாயப் பேரரசை அழிக்கும் பணியை நிறைவேற்றி முடித்தனர். மொகலாயரின் ஏனைய வரலாற்றை ஆராயும் முன் மராத்தியரின் முன்னேற்றத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

மராத்தியரின் எழுச்சி: மராத்திய அரசை நிலைநாட்டியவர் சந்திரபதி சிவாசியாவார் (Shivaji). அவர் மகாராட்டிரத்திலுள்ள சிவநேரிக் கோட்டையில் கி.பி. 1630-ஆம் ஆண்டில் பிறந்தார் (1627 என்பாரும் உண்டு). சீசாபாய் என்னும் அவர் அன்னையார் சிவாசியை வளர்த்தார். சிவாசியின் தந்தை சாசி (Shahji) பீசப்பூர் சுல்தானிடம் அலுவல் பார்த்தார். அவர் பிறிதொரு மனைவியுடன் வாழ்ந்தார். சிவாசியையும் அவர் தாயாரையும் பராமரிக்கச் சாசி சிறு சாகீர்(Jahir)ஒன்றைக் கொடுத்திருந்தார். சிவாசிக்கு இளம் பருவத்திலிருந்தே துணிச்சல் மிக்க போர்ப் பயிற்சிகளில் ஆர்வம் இருந்தது. அவர் 19 வயது நிரம்புவதற்குள்ளாகவே தோர்னா(Torna)கோட்டையுடன் இன்னும் பல கோட்டைகளையும் பிடித்துக் கொண்டு மலைக்கோட்டைகளால் சூழப்பட்ட பெரும் பரப்பைச் சாகீராகப் பெறும் வாய்ப்பைப் பெற்றார். சாவலி (Jaoli) என்னும் பகுதியையும் அவர் பெற்றதுடன், பீசப்பூர் சுல்தானுக்குச் சொந்தமாயிருந்த கொங்கணம் முழுவதையும் படிப்படியாகக் கைப்பற்றிக் கொண்டார். பீசப்பூர் சுல்தான் சிவாசியை உயிருடனோ கொன்றோ கொண்டு வரும்படி அப்சல்கான் (Afzal Khan)தலைமையில் படையொன்றை அனுப்பினார்.

ஆனால், சிவாசிக்கும் அப்சல்கானுக்குமிடையே போர் நடப்பதற்கு முன்னர் அமைதி உடன்படிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் இரு தலைவர்களுக்கிடையே சந்திப்பொன்றும் ஏற்பாடாகியிருந்தது. சிவாசியும் அப்சல்கானும் ஒவ்வொருவரும் இரண்டு துணைவர்களுடன் பிரதாப்கட்டு(Pratapgarh) என்னும் கோட்டையின் மலைச் சரிவில் சந்திப்பதென முடிவாயிற்று. இருவரும் சந்தித்துக் கொண்டபோது, சிவாசியைக் கட்டித் தழுவிய அப்சல்கான் அவருடைய கழுத்தை நெறித்து, இறுக்கிப்பிடித்துக் கொண்டு குறுவாளால் முதுகில் குத்தினான். ஆனால், கவசமணிந்து வந்திருந்த சிவாசியை அவனால் கொல்ல இயலவில்லை. மாறாகச் சிவாசி புலிநகத்தால் அவனுடைய வயிற்றைக் கிழித்துக் கொன்றார். சிவாசியின் தொண்டர்கள் அப்சல்கானின் கையை வெட்டினர். அப்சல்கானின் படைகள் சின்னாபின்னமாக்கப்பட்டன. அப்சல்கான்தான் முதலில் சிவாசியைக் கொல்ல முயன்றான் என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ளாத வரலாற்றாசிரியர்களுமுண்டு. இவ்வாறு விதவிதமான கருத்துகளைக் கொண்டு, எந்தக் கருத்து உண்மையானது என்பதை உணர்தல் எளிதன்று. ஆனால் அப்சல்கான் படைகள் தோல்வியுற்றன என்பதில் ஐயமில்லை. சிவாசி இப்போது சுதந்திர சிற்றரசன் போல் கருதப்பட்டார்.

சிவாசியும் அவுரங்கசீபும்: சிவாசியின் பெருகி வளர்ந்து வந்த பெயரும் புகழும், கி.பி.1657-ஆம் ஆண்டில் மொகலாயப் பேரரசுப் பகுதிகளைத் தாக்கிய படையெடுப்புகளும் சிவாசிக்கும் அப்போது தக்காண ஆளுநராக இருந்த அவுரங்கசீபுக்குமிடையே மோதலை ஏற்படுத்தின. அடுத்தாண்டில் அவுரங்கசீபு மொகலாயப் பேரர்சரானார். முடிசூட்டிக் கொண்ட சில ஆண்டுகளுக்குள் சிவாசியை அடக்கும் நோக்குடன் செயிசுட்டகான்(Shayista Khan) என்பாரைத் தக்காண ஆளுநராக அமர்த்தினார். ஆனால், சிவாசியோ கி.பி. 1663-ஆம் ஆண்டில் நள்ளிரவில் புனேயில் தங்கியிருந்த செயிசிட்டகானைத் தாக்கி விரட்டினார். பின்னர் அவுரங்கசீபு தம் மகன் இளவரசன் மூவாசம் (Muazzam) என்பாரைத் தக்காண ஆளுநராக நியமித்தார். சிவாசி மொகலாயப் பேரரசுக்குச் சொந்தமான சூரத்தையும் (Surat) அகமதுநகரையும் சூறையிட்டார். சிவாசியை அடக்கும் குறிக்கோளுடன் அவுரங்கசீபு இராசபுத்திரப் படைத்தலைவரான செய்சிங்கு (Jai Singh) என்பாரையும் திலீர்கான் (Dilir Khan) என்பாரையும் தக்காணத்திற்கு அனுப்பி வைத்தார். செய்சிங்கு பீசப்பூருடனும் அண்டையிலிருந்த சிற்றரசுகளுடனும் உறவு கொண்டு புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டார். சிவாசி அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். புரந்தர் உடன்படிக்கையின்படி, சிவாசி தம்மிடம் இருந்த கோட்டைகளுள் பன்னிரண்டைத் தவிர ஏனைய அனைத்தையும் பேரரசருக்குக் கொடுக்கவும், மொகலாயப் பேரரசரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளவும் இசைந்தார் (1665).

செய்சிங்கு பின்னர்ப் பீசப்பூரைத் தாக்கச் சிவாசியின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றார். சிவாசியின் அருந்தொண்டை அவுரங்கசீபு புகழ்ந்து பாராட்டிப் பரிசுகள் அனுப்பியதுடன், தம்மைச் சந்திக்க வரும்படியும் அழைப்பு விடுத்தார். உயிருக்கு ஊறு ஏற்படாது என்ற செய்சிங்கின் உறுதியின்

பேரில் சிவாசி பேரரசரின் அழைப்பினை ஏற்றுக் கொண்டார். இவர்கள் சந்திப்பு ஆக்ராவில் நடைபெற்றது.

பேரரசரின் அரசவையில் சிவாசி வந்தபோது அவருக்கு உரிய மரியாதை தரப்படாததைக் கண்டு சிவாசி சினம் கொண்டார். அரசவையிலேயே தம் உணர்ச்சிகளைக் காட்டிய அவர், உணர்ச்சி வயப்பட்டுத் தரையில் சாய்ந்தார். பேரரசர் அவருக்கு விருதொன்றையும் அளிக்காது அரசவையிலிருந்து அனுப்பிவிட்டார். சிவாசியைத் தப்பியோடாமல் காக்கும் பொருட்டு அவர் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிக் காவலர்கள் அமர்த்தப்பட்டார்கள் (1666).

தக்காணத்திற்குத் திரும்பிச் செல்லத் தமக்கு தம் தொண்டர்களுக்கும் அனுமதியளிக்குமாறு சிவாசி வேண்டினார். தொண்டர்கள் திரும்பிச் செல்லலாம் என்று அனுமதித்த பேரரசர், சிவாசியைக்கடும்கண்காணிப்பின்கீழ் வைத்தார். அவுரங்கசீபு தம் கைக்குள் சிக்கிய பகைவனை விட்டுவிட மனமொப்பவில்லை.

சிவாசி அவுரங்கசீபின் காவலிலிருந்து தப்பிச் செல்வதென்ற முடிவின்படி சூழ்ச்சியொன்றைச் செய்தார். நோயுற்றதாக அறிவித்துக் கொண்டு அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் பிரபுக்களுக்கும் பெரும் கூடைகளில் தித்திப்புகளை அனுப்பி வந்தார். தித்திப்புக் கூடைகள் போவதும் வருவதும் வழக்கமாகிவிட்ட நிலையில் சிவாசியும் அவருடைய மகன் சம்பாசியும் இரண்டு கூடைகளில் அமர்ந்து சிறையிலிருந்து தப்பினர். சிவாசி நலமாக கி.பி. 1666-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஒன்பது மாத இடைவெளிக்குப்பின்னர் மகாராட்டிரம் திரும்பினார்.

தாயகம் திரும்பிய சிவாசி உடனே மொகலாயப் பேரரசருடன் மீண்டும் போர் தொடுத்தார். செய்சிங்கு கி.பி.1667 ஆம் ஆண்டில் காலமானார். இளவரசர் மூவாசம் தக்காண ஆளுநராக நியமிக்கப்பெற்றார். எனினும் அவரால் சிவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியாக, கி.பி.1668-ஆம் ஆண்டில் சிவாசியுடன் அமைதியுடன்படிக்கை செய்துகொண்டதுடன் அவரை இராசா (Raja) என்று அவுரங்கப்சீபு ஏற்றுக்கொண்டார். இருப்பினும் மீண்டும் கி.பி. 1670-ஆம் ஆண்டில் மொகலாயருக்கும் மராத்தியருக்கும் இடையே மோதல்கள் மூண்டன. சிவாசி சூரத்தைக் கொள்ளையிட்டு, காந்தேசப் பகுதியில் சௌத்து (Chauth) என்னும் வரியை வசூலித்தார். சௌத்து என்பது அரசாங்க வருமானத்தில் நாலிலொரு பங்காகும். தாம் முன்னர்க் கொடுத்த கோட்டைகள் சிலவற்றைச் சிவாசி மீட்டுக் கொண்டதுடன், பேரரசு படைகள் புறமுதுகு காட்டி ஓடும்படி விரட்டினார். சிவாசி கி.பி. 1674-ஆம் ஆண்டில் இராய்கட்டு என்னும் மலைக் கோட்டையில் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். மொகலாயருக்கெதிராகப் பீசப்பூர், கோல்கொண்டா சுல்தான்களுடன் அவர் நட்பு கொண்டார். சிவாசி கி.பி.1677-ஆம் ஆண்டில் தென்னாட்டின்மீது படையெடுத்தார். தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள செஞ்சியைக் (Jinji) கைப்பற்றிக் கொண்டதுடன் வேலூர் (Vellore), பெல்லாரி போன்ற இடங்களையும் கைப்பற்றிக்கொண்டார். சிவாசி சென்னைக்கு அருகில் இருக்கும் பூவிருந்தவல்லிவரை வந்தார் என்பதைக் கிழக்கிந்திய வணிகக்குழுவின் குறிப்புகளிலிருந்து அறியலாம். சிவாசி கி.பி. 1680-ஆம் ஆண்டில் காலமானார். அவர் காலமான பின்னர் ஏறத்தாழ நூறாண்டுகள் மராத்தியர் இந்திய வரலாற்றில் பெரும் பங்காற்றினர்.

மராத்தியரின் வளர்ந்து வந்த செல்வாக்கு மட்டும் அவுரங்க சீபை அச்சுறுத்தவில்லை. அவரை வேறு பல தொல்லைகளும் சூழ்ந்தன. இராசபுத்திரர்களுடன் அவர் போராட வேண்டியவரானார். இராசா சசுவந்த சிங்கு (Raja Jaswant Singh) பேரரசரின் நம்பிக்கைக்குரிய படைத்தலைவராகக் கைபர் கணவாயில் போராடி உயிர் துறந்தபோது (1678). அவுரங்கசீபு உடனே அவருடைய அரசைக் கைப்பற்றிக் கொண்டார். இந்துக்கள் மீது செசியா (Jizya) என்னும் தலைவரி விதித்தார்; மார்வார் மீது படைகளை ஏவி அதை மொகலாயப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். இதன் விளைவாக அவுரங்கசீபுக்கும் இராசபுத்திரர்களுக்குமிடையே (1679) போர் மூண்டது. இருதரப்பிலும் வெற்றி தோல்விகள் மாறிமாறி வந்தன. இறுதியில் கி.பி. 1681-ஆம் ஆண்டில் மேவாருடன் ஏற்பட்ட உடன்படிக்கையால் செசியா வரி சில பகுதிகளில் விலக்கிக் கொள்ளப்பட்டது. அவுரங்கசீபு இறந்த பின்னரும் மார்வாருடன் போர் நீடித்தது. அசீத்சிங்கின் அரசுரிமை ஏற்றுக்கொண்ட பின்னரே கி.பி.1709-ஆம் ஆண்டில் மார்வாருடன் நடந்த போர் முடிவுக்கு வந்தது. அவுரங்கசீபு அடுத்துத் தம் கவனத்தைத் தக்காணத்தின்மீது திருப்பினார். அவரே தக்காணத்திற்கு நேரிடையாகக் கி.பி.1681-ஆம் ஆண்டு வந்தா. அடுத்த 26 ஆண்டுகள் அங்கேயே தங்க வேண்டியவரானார். தக்காணத்தில் பீசப்பூரையும் (1689) கோல்கொண்டாவையும்(1687),எஞ்சி இருந்த பாமினி அரசுப் பகுதிகளையும் இறுதியாக வென்றதை அவருடைய அருஞ்சாதனை எனலாம். சில ஆண்டுகளுக்குப்பின்னர்த் தொலைவிலிருந்த தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி (1694) வரை மொகலாயப் பேரரசு நிலைநாட்டப்பட்டுப் பரந்த பேரரசாயிற்று.

சிவாசி மன்னர் காலமானபின், அவருடைய மகன் சம்பாசி (Sambhaji) அரியணையேறினார்; நெறிகெட்ட இளைஞரான அவராட்சியில் நிருவாகம் சீர்கேடுற்றதால் நாட்டில் குழப்பம் மேலிட்டது. மொகலாயப் படைகள் அவரைக் கி.பி. 1689-இல் கைப்பற்றி, அவரையும்அவர்தம் பணியாட்களையும் சித்திரவதை செய்து கொன்றன. சம்பாசியின் 7வயது மகன் சாகுவும் (Shahu) மொகலாயரின் பாசறையில் வைக்கப்பட்டான்.

சம்பாசிக்குப் பின்னர் அவர் தம்பி இராசாராம் (Rajaram) முடிசூட்டிக்கொண்டார். அவர் கி.பி. 1700-ஆம் ஆண்டில் காலமானபோது, அவர் மனைவி தாராபாய் (Tara Bai) தம் இளம் மகன் மூன்றாம் சிவாசியின் அரசப் பேராளராக நிருவாகத்தைத் திறமையாக நடத்தினாள். மராத்தியர்கள் கி.பி. 1699 க்கும் 1706க்கும் இடைப்பட்ட காலத்தில் நருமதையாற்றைக் கடந்து மாளவத்தின்மீது படையெடுத்தார்கள். காந்தேசத்தையும் (Knandhes) பேராரையும் (Berar) கைப்பற்றிக் கொண்டு குசராத்துக்குள்ளும் நுழைந்தனர். பேரரசர் அவுரங்கசீபு சாகும்போது மொகலாயப் பாசறைகளை யொட்டியிருந்த பகுதிகளை மாராத்தியர்கள் கொள்ளையிட்டார்கள்.

வயது முதிர்ந்த அவுரங்கசீபு கி.பி. 1707-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் அகமது நகரிலேயே காலமானார். அவுரங்கசீபோடு இந்தியாவில் மொகலாயப் பேரரசின் ஒளிமிகுந்த ஆட்சிக்காலம் முடிவுற்றது. பின்னர் அது நலிந்து மெலிந்து வீழ்ச்சியுற்றது.

அவுரங்கசீபிடம் போற்றத்தகுந்த குணங்களும் இருந்தன. அவர் தூய, வைதிக முசுலிமாக வாழ்ந்து உயிர்நீத்தார். இசுலாம் சமய நெறிமுறைகளை ஒரு சிறிதும் பிசகாமல் பின்பற்றினார். எளிய வாழ்க்கை வாழ்ந்தார். குடிப்பழக்கம் இல்லாதவர். பெரும்பாலான மொகலாயப் பேரரசர்களிடம் காணப்பட்ட களங்கங்கள் அவரிடம் பெரும்பாலும் இல்லையெனலாம். மனத்திட்பமும் திறமையும் மிக்கவர்.

எளிமையைக் கடுமையாக அவுரங்கசீபு பின்பற்றினார்: தொப்பிகள் தைத்துச் சேமித்த $4\frac{1}{2}$ உருபாயை மட்டுமே தாம் இறந்த பிறகு பிணம் மூடும் துணிக்குச் செலவிடவேண்டுமென்றும் குர்-ஆனைக் கைப்பட எழுதிச் சேமித்த 305 உருபாயை மட்டுமே தம் ஈமச் சடங்கின்போது பிச்சையிடவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவர் கலைகளையும் இலக்கியத்தையும் புறக்கணித்தார். அரசு பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும் தனிமனிதர் வரலாறு எழுதுவதையும் கூட அவர் தடுத்தார்.

கலை: கட்டடக் கலைக்கு மொகலாயப் பேரரசர்கள் அருந்தொண்டாற்றினார்கள். அவுரங்கசீப்பைத் தவிர்த்த அனைத்து அரசர்களும் பெரும் கட்டடங்களைக் கட்டினார்கள். வலிமையான பேரரசு மறைந்த போதிலும் அவர்கள் கட்டின மசூதிகள், கல்லறைகள், அரண்மனைகள், கோட்டைகள், நுழைவாயில்கள் போன்றவை இன்றும் நினைவுச் சின்னங்களாகவும், அவர்களின் வண்ண ஓவியங்கள் அப்பேரரசர்களை நினைவுகூரச்செய்து, அவர்தம் புகழையும் சிறப்பையும் செல்வத்தையும் கூறும் ஊமைச்சின்னங்களாகவும் திகழ்கின்றன.

மொகலாயரின் கட்டட அமைப்பில் குவி மாடங்கள் (Dome) சீரிய இடத்தைப் பெறுவன. இந்துக்களுக்கு இம்முறை தெரிந்திருக்கவில்லை போலும். பிற்காலத்தில் இவ்வமைப்பினை அவர்களும் கற்றுக்கொண்டார்கள். மாறாக மொகலாயப் பேரரசில் வழக்கிலிருந்த பல தலப்பாணிகள் (Local Styles) இந்துக்களின் கட்டடக்கலைப்பாணியால் பாதிக்கப்பட்டன. குறுகிய தூண்கள், சுண்ணச்சாந்துகலவை முறை, தண்டைக்காட்டு வளைவுகள் (Corbel Brackets) போன்ற அணிசெய்யும் முறையை அவர்கள் இந்துக்களிடமிருந்து பெற்றார்கள்.

அக்பர் காலத்துக் கட்டடங்கள் இந்து-இசுலாமியக் கூறுகளை இணைத்துக் கட்டப்பட்டன. பத்தேபூர் சிக்ரியில் (Fatehpur-Sikri) அக்பர் அமைத்த நகரமும், அங்குள்ள புலந்த் தர்வாசா (Buland Durwaza) என்னும் உயர்ந்த நுழைவாயிலும் இந்தியா முழுவதிலுமே கலைத் திறனுக்கு அணிசெய்வதாகும். அவை பளிங்குக் கற்களாலும், மணற் கல்லாலும் கட்டப்பெற்றுள்ளன. இக்காலத்தில் கட்டப்பட்டது தான் தில்லியிலுள்ள உமாயூன் கல்லறையாகும். சகாங்கீரின் ஆட்சிக் காலத்தில் அக்பர் காலத்தைப் போன்று பெருமளவில் கட்டப்படவில்லையாயினும் இரு கலைச் சின்னங்களைச் சுட்டிக்காட்டலாம். முதலாவது, நூர்சகானின் தந்தையாருக்குக் கட்டப்பட்ட இதிமத்-உத்-தௌலாவின் கல்லறையாகும். இது ஆக்ராவில் அமைக்கப்பெற்றது. இதில் அந்நியக் கலப்புப் பாணியும் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது, சிக்கந்தராவில் கட்டப்பட்டுள்ள அக்பரின் கல்லறையாகும். இதுவும் ஆக்ராவுக்கு அண்மையில் தில்லி செல்லும் வழியில் உள்ளது.

சாசகான் காலத்துக் கட்டடங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இக்காலத்தில்தான் இந்திய-பாரசீகக் கட்டடக் கலைப்பாணி சிறப்பான இடத்தைப் பெற்றது. ஆக்ராவில் உள்ள தாசுமகாலும் முத்து மசூதியும் சாசகானின் கட்டடக்கலைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இக்கட்டடங்களில் மொக

லாயர் கலை உச்சக்கட்டத்தை அடைந்ததெனலாம். சாசகான் கட்டிய எண்ணிலாக் கோட்டைகள், மசூதிகள், அரண்மனை போன்றவற்றைத் தில்லி, இலாகூர், காசுமீரம், ஆசுமீர், அகமதாபாது, காபூல், காண்டகார் முதலிய இடங்களில் இன்றும் உள்ளன. அவை தாசுமகால், முத்து மசூதி போன்ற அமைப்பையே பெரும்பாலும் கொண்ட சிறந்த கலைக்கூடங்கள். தில்லிச் செங்கோட்டையிலுள்ள திவான்-இகாசும் (Diwan-Khas) ஆக்ராக்கோட்டையும் உலகத்தாரின் பாராட்டைப் பெற்றவை.

மொகலாயப் பேரரசைப் போன்றே மொகலாயக் கட்டடக் கலையும் கடல் அலைகளைப் போன்று உயர்ந்த அளவுக்கு எழும்பிப் பின்னர் உடைந்தது. மொகலாயக் கலையும் சாசகானுக்குப் பின்னர் விரைந்து நலிவடைந்தது. மொகலாயப் பேரரசு அவுரங்கசீபுக்குப் பின்னர் நலிந்து மெலிந்ததைப் போன்றது இது. அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தில் ஒருசில கட்டடங்களே கட்டப்பட்டன. அப்போதே இக்கலை நலியத் தொடங்கிவிட்டது எனலாம்.

கட்டடக் கலையைப் போன்றே மொகலாயரின் ஓவியக்கலையும் வளர்ச்சியுற்று நலிவடையலாயிற்று. தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்ட பாரசீகக் கலைப் பாணி இந்துமக்கள் கருத்துகளின் செல்வாக்குத் தாக்கம் பெற்றுப் படிப்படியாக இந்திய-பாரசீக அல்லது மொகலாயக் கலைப்பணியாக உருமாறியது. இந்துக் கலைஞர்கள் பலர் மொகலாயப் பேரரசர்கள் புகுத்திய பாரசீகப் பாணியால் கவரப்பெற்றுத். தம் கருத்துகளை அதற்குத்தக மாற்றிக் கொண்டார்கள். அவர்கள் புதிய கலைப்பாணியொன்றை அமைத்தார்கள். மொகலாயர் கால ஓவியங்கள் காலப்போக்கில் வெவ்வேறு பாணிகளாக உருமாறி அடுத்துவந்த தலைமுறைகளால் தொடரப்பட்டன.

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி: அவுரங்கசீபு காலமானதும் பேரரசில் வாரிசுரிமைப் போர் மூண்டது. அவருடைய மூன்று மைந்தர்களுள் மூத்தவர் பகதூர் சா என்னும் பட்டப்பெயருடன் அரியணை ஏறினார். வாரிசுரிமைப் போருக்குப் பின்னர்க் கி.பி. 1712-இல் அவர் மகன் சகாந்தர் சா (Jahandar Shah) பட்டத்திற்கு வந்தார். அவர் தகுதி, திறமையற்ற செலவாளி. அவர்தம் இரு சகோதரர்களான சையது உசேன் அலிகான் (Sayyid Hussain Alikhan), சையது அப்துல்லா கான் (Sayyid Abdulla khan) என்பவர்களின் துணையுடன் பரூக்சயர் என்பார் சகாந்தர் சாவைப் பதவி துறக்கச் செய்து, பின்னர்க் கொன்றார். பரூக்சயரின் ஆட்சியின்போது உசேன் அலிகான் படைத் தலைவராகவும் அப்துல்லாகான் தலைமை அமைச்சராகவும் பொறுப்பேற்றனர். பரூக்சயரின் பெயரில் அவர்களே ஆட்சிபுரிந்தனர். பேரரசரோ நெறி கெட்டவர். நாட்டில் சட்ட ஒழுங்கு தறிகெட்டுப்போய்க் குழப்பம் தலைவிரித்தாடியது. சீக்கியர், இராசபுத்திரர், சாட்டுகள் போன்றோருடன் போர்கள் மூண்டன. சையது சகோதரர்கள் பகடைக்காய்களை மாற்றுவதைப்போல் ஒருவரையடுத்து மற்றொருவராக போலிப் பேரரசர்களை அமர்த்திச் செயற்பட்டார்கள். இறுதியில் முகமதுசா (Muhammed Shah) அவர்களை அகற்றிவிட்டு கி.பி. 1719-முதல் கி.பி. 1748 வரை அரசாண்டார். அவருடைய ஆட்சிக்காலத்தில் பல மாநிலங்கள் சுதந்திர அரசுகள் போன்று செயற்படலாயின. ஐதராபாத்தில் நிசாம்-உல்-முல்க்கின் மரபும், அவுத்து, வங்காளம் போன்ற பகுதிகளில் புதிய அரசுகளும் நிலைநாட்டப் பெற்றன.

மராத்தியர்கள் படிப்படியாக அதிகாரம் பெற்றுப் பெருவளர்ச்சியுற்றனர். சிவாசியின் மரபினர் பெயருக்கு அரசர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், உண்மையான அதிகாரம் பேசுவாக்களின் கையிலிருந்தது. அவர்களின் இரண்டாம் பேசுவாவான முதலாம் பாசிராவ் (Baji Rao I) மொகலாயரிடமிருந்து சிந்தியாவைப் பிடுங்குவதற்கான தீவிரத் திட்டம் ஒன்றை உருவாக்கினார். மாளவம், குசராத்து, இராசபுதனம், பண்டேல்கண்டு போன்ற பகுதிகளை அவர் வென்றார். வளர்ந்து வரும் பேசுவாவின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையறியாத தில்லிப் பேரரசர் மாளவத்தின் ஆளுமையை ஏற்றுக் கொண்டதுடன், நருமதைக்கும் சம்பலுக்கும் இடைப்பட்ட பகுதிகள் அனைத்தையும் கை விட வேண்டியவரானார். மராத்தியர்களால் கவரப்பெற்ற பரந்த பகுதிகளைப் பேசுவாவின் கீழ்ப்பணியாற்றிய நால்வர் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் 1. குவாலியரில் சிந்தியா, 2. இந்தூரில் ஓல்கார், 3 பரோடாவில் கெய்க்வாடு 4. நாகபுரியில் போன்சிலேக்கள். இவர்களுடன் புனேயை மையமாகக் கொண்டு பேசுவாக்கள் ஆண்டனர். இவை ஐந்தும் மராத்திய அரசுகளாகத் திகழ்ந்தன. இவர்கள் பேசுவாவின் அதிகாரத்தை அப்போதைக்கு ஏற்றுக்கொண்டனர்.

மொகலாயப் பேரரசு கி.பி. 1739-ஆம் ஆண்டில் பாரசீகப் பேரரசர் நாதர்சாவின் (Nadir Shah) படையெடுப்பால் வீழ்ச்சியுற்றது. மொகலாயப் பேரரசுப் படை எளிதாகத் தோற்கடிக்கப்பட்டு, நாதர்சா தில்லியைக் கைப்பற்றிக்கொண்டார். நாதர்சா செத்தொழிந்தார் என்னும் வதந்தியைக் கேள்வியுற்று நாதர்சாவின் சில ஆயிரம் படைவீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நாதர்சா பழிக்குப்பழி என்னும்

அளவில் ஆயிரக்கணக்கான தில்லிவாழ் மக்களை 5 மணி நேரம் வேட்டையாடிக் கொன்றுகுவித்தார்.

நாதர்சா இறந்தபின் அகமதுசா துரானி (Ahmad Shah Durrani) என்னும் ஆப்கானியத் தலைவச் நாதர்சாவின் ஆட்சிப்பகுதியின் கிழக்குப் பாகத்தைக் கைப்பற்றிக்கொண்டார். துரானியை அகமதுசா ஆப்தாலி (Ahmad Shah Abdali) என்றும் கூறுவர். அவர் கி.பி. 1747-இல் ஆப்கானிசுத்தானம் என்னும் பெயர்கொண்ட அரசினை தாம் வென்ற பகுதியில் நிலைநாட்டினார். அவர் நாதர்சாவின் இந்தியப் படையெடுப்பின்போது உடன்வந்தவர். மொகலாயப் பேரரசின் நலிவினை நேரிலேயே கண்டறிந்த அவர், இந்தியாவில் ஆப்கானியரின் அரசாட்சியை மீண்டும் நிலைநாட்ட உறுதிபூண்டார். அக்குறிக்கோளுடன் அவர் கி.பி. 1748க்கும் 1757க்கும் இடைப்பட்ட காலத்தில் பலமுறை இந்தியாவின்மீது படையெடுத்தார். பஞ்சாபு கி.பி. 1750-இல் கைப்பற்றப்பட்டது. அடுத்த ஆண்டில் அவர் காசுமீரத்தை வென்றார். கிழக்கில் சர்கிந்து (Sirhind) வரையிலுள்ள பகுதிகள் அனைத்தையும் மொகலாயப் பேரரசர் அவருக்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

இந்தியாவை அடுத்தடுத்து வந்த அழிவுகளிலிருந்து காப்பாற்றும் நிலையில் இத்தருணத்தில் இருந்தவர்கள் மராத்தியர்களேயாவர். பாசிராவ் பேசுவா கி.பி. 1740-ஆம் ஆண்டில் காலமானார். பின்னர் அவர் மகன் பாலாசி பாசிராவ் (Balaji Baji Rao) பேசுவாவானார். புதிய பேசுவா மராத்தியர்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்தினார். புனே அவருடைய தலைநகராயிற்று. அகமதுசா துரானி கி.பி. 1757-இல் இந்தியாவை விட்டுச்சென்றதும் பேசுவாவின் சகோதரரான இரகுநாதராவ் என்பார் ஆப்கானியரை விரட்டியடித்துவிட்டு இலாகூரைக் கைப்பற்றிக் கொண்டார் (1758).

மராத்தியரின் அதிகாரம் இப்போது உச்சகட்டத்திலிருந்தது. அவர்களின் ஆட்சிப்பகுதிகள் வடக்கில் இமயமலை, வடமேற்கில் சிந்து ஆறு போன்ற பகுதிகளிலிருந்து தெற்கில் இந்திய முந்நீரகம் வரை பரவியிருந்தன. பேசுவாவின் அரசு இப்பரந்த பகுதிகளில் அரசோச்சியது.

அகமதுசா துரானி கி.பி. 1750-இல் மீண்டும் பஞ்சாபைக் கைப்பற்றிக்கொண்டார். வட இந்தியாவில் மராத்தியரின் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டப் பெரும் படையொன்றை கி.பி. 1760-ஆம் ஆண்டில் மராத்திய அரசு அனுப்பியது.

மராத்தியர் தில்லியை (1760) எளிதாக வென்றனர். அகமதுசா துரானியின் படையை மராத்தியர் பானிப்பட்டுப் போர்க்களத்தில் சந்தித்தனர். இதைத்தான் மூன்றாம் பானிப்பட்டுப் போர் என்பர். இரு தரப்பினரும் வரலாற்றுச் சிறப்புமிக்க அப்போர்க்களத்தில் போரில் ஈடுபட்டனர். உரோகில்லர்களும் அயோத்தி சூசாஉத்தௌலாவும் மராத்தியரின் அதிகாரப் பெருக்கத்தைக் கண்டஞ்சி அகமதுசா துரானிக்கு உதவினர். 'இந்துசுத்தானத்தைக் குத்தியுள்ள முள்' என்று மராத்தியரை உரோகில்லர்கள் பழித்தனர். மராத்தியர் இராசபுத்திரர்களைப் பகைத்துக் கொள்ளவே அவர்கள் நடுநிலையைக் கையாண்டனர். சீக்கியர்களும் அவர்களுக்கு உதவவில்லை. பஞ்சாபில் அவர்களிடம் வலிமைவாய்ந்த படையிருந்தது.

போர் மூண்டது. முழுப் படையுடன் கி.பி. 1761-ஆம் ஆண்டு சனவரி மாதம் 4-ஆம் நாள் மராத்தியர் தாக்கினர். ஆறு மணிநேரப் போருக்குப் பின்னர் மராத்தியரே வெற்றிபெறும் நிலையில் இருந்தனர். ஆனால் திறமைவாய்ந்த படைத்தலைவரான அகமதுசா துரானி தோல்வியை வெற்றியாக மாற்றும் திறன் படைத்தவரானார். பகல் 1½ மணி அளவில் போரிடாமல் பத்திரப்படுத்தியிருந்த புதிய படையை ஏவி மராத்தியரை அவர் தாக்கியபோது போர் அவருக்கு வெற்றி வாய்ப்பை நல்கியது. மராத்தியர் படுதோல்வியுற்றனர். மராத்தியர் 20 கல் தொலைவிற்கு விரட்டப்பட்டனர். ஏறத்தாழ 2,00,000 மராத்தியப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். விசுவாச இராவும் சதாசிவராவும் மேலும் சில தலைவர்களும் போர்க்களத்தில் மடிந்தனர்.

மராத்தியர் உற்ற படுதோல்வியால் வட இந்தியாவில் பேரரசை நிலை நாட்டும் அவர்கள் எண்ணம் கை கூடவில்லை. பேசுவாக்களின் மதிப்பு நலிந்துமெலியலாயிற்று. மராத்தியரின் ஒற்றுமையும் சீர் குலைந்தது.

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பல காரணங்கள் இருந்தன. தக்காணப்படையெடுப்பால் மிகுந்த பொருள் அழிவுடன் மக்களும் நாசமாயினர். அவுரங்கசீபு பல ஆண்டுகள் தலைநகரில் இல்லாமையால் நிருவாகத்துறை சீரழிந்தது இந்துக்களை – குறிப்பாக இராசபுத்திரர்களைப் பகைத்துக் கொண்டதும் அவுரங்கசீபு சமயத்தின் மீது கொண்ட மிகைப்பற்றும் வீழ்ச்சிக்குக் காரணமாயின. பிரபுக்களின் ஒழுக்க வீழ்ச்சியும் படைவீரர்களின் திறமைக்குறைவுங்கூடக் காரணமாயின. மராத்தியரின் எழுச்சி மொகலாயப் பேரரசுக்குச் சாவுமணி அடித்தது. பெரும்பாலான இந்துக்களும் சியா முசுலிம்களும் அவர்களுக்கு உதவினர். இறுதியாக நாதர்

சாவின் படையெடுப்பு மொகலாயப் பேரரசை நிலை குலைத்து அழித்தது.

இந்தியாவுக்கு ஐரோப்பிய வணிகக் குழுக்கள்: வாசுகோடகாமா என்னும் போர்ச்சுகீசியர் இந்தியாவின் மேற்குக் கடற்கரை நகரமாகிய கோழிக் கோட்டினை கி.பி. 1497-இல் வந்தடைந்தார். இந்தியாவுக்கு கடல்வழி கண்டு பிடித்தது ஐரோப்பியரின் சாதனைகளுள் ஒன்றாகும். இதன் பயனாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே வாணிகம் தொடங்கியது. இவ்வாணிகம் தொடக்கத்தில் போர்ச்சுகீசியரின் முற்றுரிமையாக இருந்தது. அவர்கள் பல இந்தியர்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றினர். அவர்கள் பெருஞ்செல்வத்தைத் திரட்டிக் கொண்டு தம் வலிமை வாய்ந்த படை பலத்தால் அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றலாயினர். வங்காளத்தைச் சார்ந்த ஊக்லியில் (Hooghly) குடியேறிய போர்ச்சுகீசியர் மக்களை பல்வேறு வழிகளில் அச்சுறுத்தினர். அடிமை வாணிகத்தில் ஈடுபட்ட அவர்கள் இந்து, முசுலிம் திக்கற்ற குழந்தைகளைக் கிறித்தவர்களாக மதம் மாற்றினார்கள். ஆனால் சாசகானின் மனைவி மும்தாசு வளர்த்த இரு திக்கற்ற அடிமைப்பெண்களை அவர்கள் கைப்பற்றியபோது சாசகான் அவர்களை வஞ்சந் தீர்த்துக் கொண்டார். ஊக்லி நகரம் கி.பி. 1632-ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டதுடன் போர்ச்சுகீசியப் பற்றிடமும் அழிக்கப்பட்டது; ஏறத்தாழ 4000 கைதிகள் ஆக்ராவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தியாவுடன் வாணிகம் செய்ய ஏனைய ஐரோப்பிய நாடுகளும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முனைந்தன. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழு கி.பி. 1690-ஆம் ஆண்டிலும், தச்சிய (Dutch), தேனிய (Danes), பிரெஞ்சு வணிகக் குழுக்கள் முறையே கி.பி. 1602, 1616, 1664-ஆம் ஆண்டுகளிலும் நிலைநாட்டப்பட்டன.

ஆங்கில வணிகக் குழுவினர் கி.பி. 1612-ஆம் ஆண்டில் சூரத்தில் பண்டசாலை ஒன்றை நிறுவினர். மூன்றாண்டுகளுக்குப்பின்னர் ஆங்கிலத் தூதர் சர் தாமசு ரோ (Sir Thomas Roe) என்பார் சகாங்கீரின் அரண்மனைக்கு வருகை புரிந்ததுடன், ஆங்கில வணிகக் குழுவுக்குச் சில சலுகைகளையும் பெற்றுத் தந்தார். போர்ச்சுகீசியரின் வாணிகம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நலிவடையலாயிற்று. தச்சியரும் தேனியரும் இந்திய வாணிகத்தில் சிறப்படைந்தவர்களாக ஒரு காலத்தும் கருதப்படவில்லை. இந்தியாவின் வாணிகத்தில் போட்டியிட்டவர்கள் ஆங்கிலேயரும் பிரெஞ்சியருமேயாவர். பிரெஞ்சியர் சற்றுத் தாமதமாகத் தம் பணியைத் தொடங்கினராயினும், அவர்கள் விரைவாக முன்னேறிச் சிறப்படைந்தவர்களாயினர். அவர்கள் புதுச்சேரியில் தம் பற்றிடத்தைக் கி.பி. 1674-இல் அமைத்துக் கொண்டு, சில ஆண்டுகளுக்குப்பின்னர்ப் பாதுகாப்பரண்கள் கட்டி, அவற்றைத் தம் வாணிகத்தின் மையமாக்கிக் கொண்டனர். அவர்கள் கி.பி. 1690-92-ஆம் ஆண்டுகளில் சந்திரநாகூரில் கி.பி.1674-இல் நவாபு செயித்தகான் என்பாரிடமிருந்து பெற்று மற்றொரு பண்டசாலையையும் திறந்தார்கள். மலபார்க்கடற்கரையில் மாகி (Mahe) என்னுமிடத்தில் கி.பி. 1725-ஆம் ஆண்டில் பிறிதுமொரு பண்டசாலையை அமைத்து வலுவாக்கினர். நாகபுரியை ஆண்ட மராத்தியப் போன்சுலேகளுக்கெதிராக அவர்கள் கருநடாக நவாபின் குடும்பத்திற்கு இராணுவப் பாதுகாப்புக் கொடுத்தபோது பிரெஞ்சியரின் மதிப்பு மேலோங்கலாயிற்று.

பிரெஞ்சியரின் அதிகாரத்தைப் பெரு நிலைக்கு உயர்த்தும் பணி தூப்ளே (Dupliex) என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கி.பி. 1742-ஆம் ஆண்டில் புதுச்சேரி ஆளுநராக நியமிக்கப்பெற்றார். அவர் தலைசிறந்த அரசியல் வல்லுநராக இருந்தமையால் இந்தியாவில் நிலவிய உண்மையான அரசியல் நிலையை உய்த்துணர்ந்துகொண்டார். இந்தியப் படைவீரர்களின் தகுதியற்ற நிலையை அறிந்த அவர், ஐரோப்பிய முறையில் பயிற்சிபெற்ற குறைந்த அளவு படைவீரர்களால் கட்டுப்பாடற்ற இந்திய அரசர்களின் படைகளைத் தோற்கடிக்க முடியும் என்பதை உணர்ந்தார். இது தூப்ளேயின் முதற் கருத்தாகும். மேலும், இந்திய அரசு வமிசங்களின் நிலையற்ற தன்மையையும், அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வதையும் அவர் கண்டார். போட்டியிட்டுக் கொள்ளும் கட்சிகளுள் ஒன்றிற்குத் தம் கட்டுப்பாடான சிறு படையின் உதவியை அளித்தால் எளிதாக வெற்றி பெறமுடியும் என்றும், அதன்மூலம் இந்தியாவில் பிரெஞ்சிய இராணுவ அதிகாரத்திற்கு அடிக்கல் நாட்டமுடியும் என்றும் முடிவுக்கு வந்தார். இது அவருடைய இரண்டாம் கருத்தாகும்.

கருநாடக நவாபு பெருகிவரும் பிரெஞ்சியரின் ஆதிக்கத்தைக் கண்டஞ்சினார். பிரெஞ்சியர் ஆங்கிலேயரைத் தோற்கடித்துச் சென்னையை அவர்களிடமிருந்து கைப்பற்றிக்கொண்டனர். ஆனால் சென்னை கருநாடக நவாபின் எல்லைக்குள் இருந்தமையால் அதனை மீண்டும் கைப்பற்ற நவாபு 10,000 படைவீரர்கள் கொண்ட பெரும்படையை அனுப்பினார். தூப்ளே வெறும் 500 பேரைக் கொண்ட ஐரோப்பியப் படையின் உதவியால் நவாபின் படையைச் சிதற அடித்துப் படுதோல்வி அடையச் செய்தார்.

பிரெஞ்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் ஐரோப்பாவில் போர் மூண்டபோது, இந்தியாவிலும் ஆங்கில பிரெஞ்சு வணிகக் குழுக்களிடையே போர் மூண்டது. இவ்விரு குழுக்களுக்கும் இடையில் இரண்டு கருநாடகப் போர்கள் நடந்தன. தூப்ளே தம் இரண்டாம் கருத்தை இரண்டாம் போரின்போது செயற்படுத்தி வெற்றி கண்டார். ஐதராபாத்து நிசாமான ஆசாப்சா (Nizam Asaf Saha) இறந்தபோது வாரிசுரிமைப் போராட்டம் எழுந்தது. போட்டியிட்டவர்களுள் ஒருவருக்குத் தூப்ளே துணைநின்றார். வெற்றிபெற்ற அவர் கிருட்டிணா ஆற்றுக்குத் தெற்கிலிருந்த மொகலாயப் பகுதிகள் அனைத்திற்கும் தூப்ளேயை ஆளுநராக அமர்த்தியதுடன், மசூலிப்பட்டினத்தையும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகளையும் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடையாக அளித்தார். புசி (Bussy) என்பாரின் தலைமையில் பிரெஞ்சுப் படையொன்று ஐதாபாத்தில் தங்கியது. புசி நிசாமின் அறிவுரையாளராகவும் ஆக்கப்பட்டார். வடசர்க்கார்ப் பகுதிகளின் நிலவரி படைகளின் ஊதியத்திற்கென ஒதுக்கப்பட்டது.

இத்தகைய கொள்கையை ஆங்கிலேயரும் விரைவாகப் பின்பற்றினர். இராபர்ட் கிளைவு என்னும் ஆங்கிலப்படைத் தலைவர் சிறுபடையொன்றுடன் கருநாடக நவாபான சந்தா சாகிபைத் தோற்கடித்தார். இந்த வெற்றி தக்காணத்தில் ஆங்கிலேயரின் அதிகாரத்தையும் கௌரவத்தையும் உயர்த்தியது.

இராபர்ட்டு கிளைவு வங்காளத்தில் இத்தகைய கொள்கையை அப்போது பயன்படுத்தினார். இதன் விளைவாக ஆங்கிலேயர் பரந்ததும் நிலையானதுமான வெற்றியைப் பெற்றனர். வங்காள ஆளுநராக இருந்த நவாபு அலிவர்த்திகான் (Alivardikhan) சுதந்திர அரசர் போல் ஆட்சி நடத்தினார். அவர் கி.பி. 1756-இல் காலமானார். அவருக்குப் பின் அவருடைய மகள் வயிற்றுப் பேரன் சிராசு-உத்-தௌலா (Siraj-ud-Daula) அரியணையேறினார். 24 வயதினரான அவர் அனுபவம் இல்லாதவர். மக்களின் தகுதி, திறமை பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. ப்ழக்க வழக்கங்களில் அவர் மிகுந்த குறைபாடுடையவர். ஆங்கிலேயர் அவரை மிக மோசமானவர் என்று கருதினர். சிராசு-உத்-தௌலா கல்கத்தாவிலிருந்து ஆங்கிலப் பற்றிடத்தைத் தாக்கினார். அக்காலத்தில் வங்காளத்தில் கல்கத்தாவே ஆங்கிலேயரின் முதன்மையான பற்றிடமாகும். எதிர்ப்பு யாதுமின்றிக் கல்கத்தா கைப்பற்றப்பட்டதுடன், 146 ஆங்கிலேயரும் கைப்பற்றப்பட்டனர். அவர்களைக் காற்றோட்டமில்லாச் சிறிய அறையில் அடைத்துவைத்தபோது, 123 பேர் மூச்சுவிடமுடியாமல் திணறிச் செத்தனர். இதனை இருட்டறை நிகழ்ச்சி (Black-Hole-Tragedy) என்பர். இதனைப் பொய் என்று கூறுவாருமுளர். இந் நிகழ்ச்சிக்குப்பின் சிராசின் நடத்தை உறுதியானதாக இருக்கவில்லை.

கல்கத்தாவின் வீழ்ச்சி பற்றிய செய்தி சென்னையை அடைந்தவுடன், கிளைவும் வாட்சனும் வந்து எதிர்ப்பேதுமின்றிக் கல்கத்தாவைத் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார்கள். இத்தருணத்தில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சியருக்குமிடையே போர் மூண்டபோது, இந்தியாவிலும் அவர்களுக்கிடையே போர் மூண்டது. ஆங்கிலப் படைகள் சந்திரநாகூருக்கு எதிராக அணிவகுத்துச் சென்று, நாவாபின் மிகக் கடுமையான எதிர்ப்புக்கிடையே அதனைக் கைப்பற்றிக்கொண்டன. சந்திரநாகூர் பிரெஞ்சியரின் வலுவான பற்றிடமாகும். ஆங்கிலேயரை எதிர்க்கும்படி நவாபு தம் படை அலுவலர்களுக்கு ஆணையிட்டார். ஆனால் நவாபின் படைத்தலைவரான மகாராசா நந்தகுமார் இலஞ்சம் வாங்கிக் கொண்டார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நவாபு ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியவரானார். அவ்வுடன்படிக்கையால் நவாபு அவமானப் படுத்தப் பட்டார். கல்கத்தாவில் ஆங்கிலேயர் இழந்த சொத்துகள் அனைத்தையும் நட்ட ஈடாகக் கொடுத்ததுடன், அவர்கள்கேட்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றவும் உடன்பட்டார். பிரெஞ்சுப் படைகளைவிலக்கிக்கொள்ளவும்ஒப்புக்கொண்டார். பிரெஞ்சியருக்குப் பாதுகாப்பளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார் அவர். ஆதலின் ஆங்கிலேயர் நவாபின் செய்கையை நம்ப மறுத்தனர். ஏனெனில் அவருக்குப் பிரெஞ்சியரிடம் மிகுந்த பரிவிருந்தது. ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும் போரிட்டுக் கொண்டிருந்தனர். பிரெஞ்சுப்படைகள் நவாபுடன் சேர்ந்து கொள்வதால் மீண்டும் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயர் விரட்டப்படுவரோஎன்னும் அச்சமும் இருந்தது. ஆதலின் ஆங்கிலேயர் நவாபுக்கு எதிராக விளங்கிய கட்சியுடன் சேர்ந்து கொண்டு சூழ்ச்சி செய்து சிராசு-உத்-தௌலாவைவிலக்கத் தீர்மானித்தனர். நவாப்புக்கு வேண்டாத படைத்தலைவர்களுடன் சேர்ந்து இரகசியச் சதித்திட்டமொன்றை அவர்கள் கி.பி. 1757-ஆம் ஆண்டுசூன் மாதம் 10-ஆம் நாள் தீட்டினர். நவாபின் படைத்தலைவரான மீர் சாபரும் (Mir Jafar) இராய்துர்லபு(Rai Durlab)என்னும் தலைவரும் ஆங்கிலேயருக்கு உதவவேண்டுமென்றும், அப்படிப்பட்ட உதவிக்குக் கைம்மாறாக மீர் சாபர் நவாபு ஆக்கப்படுவாரென்றும், ஆங்கிலேய வணிகக் குழுவும் அதன் அலுவலர்களும் பல பரிசுகள் பெறுவர் என்றும் திட்டமிடப்பட்டது.

சிராசு-உத்-தௌலாவின் ஆட்சியை கி.பி. 1757-சூன் 23-ஆம் நாள் நடந்த பிளாசிப் போர் முடிவு கட்டியது. மிர்சாபரின் தலைமையிலும் இராய் துர்லபு தலைமையிலுமான நவாபின் படையினர் ஏனைய படை வீரர்களுடன் இணந்தேயிருந்தனர். மோகன்லால், மிர்மதன் என்னும் படைத் தலைவர்களின் சிறுபடைகள் பிரெஞ்சு அலுவலர் ஆதரவுடன் போர்க்களத்தில் இருந்தன. மிர்சாபர் காட்டிக் கொடுத்தமையால் சிராசு-உத்-தௌலாவின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அவர் தப்பியோட முயன்றபோது பிடிபட்டுக் கொல்லப்பட்டார். வங்காளத்தின் தலைநகரான மூர்சிதாபாத்தில் (Murshidabad) மிர்சாபர் நவாபாக அரியணை ஏறினார்.

கருநாடகத்திலும் ஆங்கிலேயருக்கு வெற்றி கிட்டியது. ஐரோப்பாவில் பிரெஞ்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே மூண்ட ஏழாண்டுப் போரினால் இந்தியாவில் செயற்பட்ட இரு வணிகக் குழுக்களும் போரிட்டுக் கொண்டன. இத்தருணத்தில்தான் கி.பி 1760-ஆம் ஆண்டு சனவரி மாதம் 22-ஆம் நாள் வந்தவாசி (Wandiwash) என்னுமிடத்தில் போர் நடைபெற்றது. பிரெஞ்சுப் படைகள் படுதோல்வியுற்றன. அவர்களின் ஆட்சி இந்தியாவில் நலியத் தொடங்கியது. ஐரோப்பாவிலிருந்து வந்த வாணிகக் குழுக்களுள் ஆங்கிலேயரிடமே வலிமைமிக்க படையும் திறமையும் இயக்க அமைப்பும் உறுதி குலையாதிருந்தன. இந்தியாவில் நிலவிய ஒற்றுமையின்மையால் அரசுகள் தத்தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டன. நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை. ஆங்கில உதவி கிட்டினால் போதுமென்று இந்திய அரசுகள் தமக்குள்ளே போட்டியிட்டுக் கொண்டன. தூப்ளேயினால் தொடங்கப்பட்ட கொள்கையை ஆங்கிலேயர் பெரிதும் பயன்படுத்தி வெற்றி கண்டனர். இந்தியப் படைவீரர்களுக்கு ஐரோப்பிய இராணுவ முறையில் பயிற்சி அளித்து, இந்திய அரசுகளின் போட்டியைப் பயன்படுத்திக் கொண்டு, வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் இந்தியா முழுவதையும் ஆளும் திறன் பெற்றனர்.

ஆங்கிலேய ஆட்சி உறுதிப்படல்: பிளாசிப் போரின் பயனாக ஆங்கிலேயர் உண்மையிலேயே வங்காளத்தின் ஆட்சியாளர்களானார்கள். மிர்சாபரை அரியணையில் அமர்த்தியவர்கள் அவர்களே; அவரைப் பதவியிலிருந்து விலக்கியவர்களும் அவர்களே. பின்னர் மிர் காசிம் என்பாரை வங்காளத்தின் நவாபாக்கினார்கள். மிர்காசிம் தம் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றபோது அவரும் தோற்கடிக்கப்பட்டார். உதவி வேண்டி அவர் அயோத்தி நவாபிடம் ஓடினார். அயோத்தி நவாபு வங்காளத்தின்மீது படையெடுத்து வந்தபோது அவரும் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு அவர் வற்புறுத்தப்பட்டார்.

பிளாசியில் வெற்றிபெற்ற கிளைவு கல்கத்தாவின் ஆளுநராகி, அயோத்தி நவாபுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அப்போது மொகலாயப் பேரரசராகக் கருதப்பட்ட சா ஆலம் (Shah Alam) என்பாருடனும் கிளைவு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார். ஏனெனில் வங்காளத்தின் ஆட்சியும் அவருக்குட்பட்டிருந்தது. இரட்டையாட்சி எனப்பட்ட இப்புதிய ஏற்பாட்டின்படி, இந்திய அலுவலர்களின் உதவியுடன் ஆங்கிலேயர் நிலவரியை வசூல் செய்து அரசுக்குத் தேவையான செலவினங்களைச் செய்துகொண்டார்கள்; பேரரசருக்கு 26 இலட்சம் உரூபாயையும் நவாபிற்கு ஓய்வூதியமாக 50 இலட்சம் உரூபாயையும் தந்துவிட்டு, எஞ்சிய தொகையைத் தாங்களே வைத்துக் கொண்டார்கள். இராணுவமும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் சிவில், இராணுவம் ஆகிய இருதுறைகளையும் கவனிக்கும் பொறுப்பும் அவர்களுடையதாயிற்று.

இத்தருணத்தில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முறையில் தீவிர மாற்றமொன்று ஏற்பட்டது. ஆங்கிலப் பாராளுமன்றம் ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act-1773) ஒன்றைக் கொண்டு வந்தது. அதன்படி இந்தியப் பகுதிகளிலிருந்த அரசப் பேராளரும் (Governor-General) அவருக்குத் துணை நிற்கும் குழுவின் நான்கு உறுப்பினர்களும் ஆட்சி நடத்த அச்சட்டம் வழிவகை செய்தது. வங்காளத்தின் ஆளுநரே அரசப்பேராளராகவும் நால்வர் குழுவின் தலைவராகவும் அமர்த்தப்பட்டார். பம்பாய், சென்னைக் குழுக்களின் ஆளுநர்கள் அவருக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று அச்சட்டம் அறிவித்தது. உயர்நீதிமன்றம் ஒன்று கல்கத்தாவில் நிலைநாட்டப்பட்டது. வணிகக்குழுவின் ஊழியர்களை விசாரிக்கும் அதிகாரமும் அந்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது. அந்நீதிமன்றத்திற்குத் தலைமை நீதிபதியும் மேலும் மூன்று நீதிபதிகளும் நியமிக்கப்பட்டார்கள். வங்காளத்தின் ஆளுநரான வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) என்பார் அப்புதிய சட்டத்தின்படி முதல் அரசப் பேராளர் ஆனார்.

அயோத்தியுடன் ஆங்கிலேயர் நட்புறவு கொண்டிருந்தனர். அயோத்தி வசீர் உரோகில்கண்டு (Rohilkhand) பகுதியைத் தம் அரசுடன் இணைத்துக் கொள்ள ஆர்வம் காட்டினார். அதனைக் கைக்

கொள்ள ஆங்கிலப் படையின் உதவியை அவர் நாடினார். போர் வீரர்களுக்காகும் செலவினை ஏற்றுக் கொள்வதுடன் 40 இலட்சம் உரூபாயைக் கொடுப்பதாகவும் அவர் கூறியிருந்தார். ஏசுடிங்சு இவ்விவகாரத்தில் தலையிட்டு, உரோகில்கண்டை ஆங்கிலப் படையின் உதவியுடன் வென்றார்.

அயோத்தி நவாபுடன் ஏசுடிங்சு புதியதொரு ஏற்பாட்டினைச் செய்துகொண்டார். அதன்படி நவாபின் படைகளுக்குப் பயிற்சி கொடுத்துக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. படைப்பயிற்சிக்காகும் செலவினங்களுக்காகச் சில மாவட்டங்களின் வருவாய் நவாபினால் ஒதுக்கி விடப்பட்டது. இவ்வாறு அயோத்தி ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட பகுதியாயிற்று. ஏசுடிங்சு மைசூருடனும் மராத்தியர்களுடனும் போர் செய்ய வேண்டியவரானார்.

மராத்தியர்கள்: மூன்றாம் பானிப்பட்டுப் போரில் (1761) ஏற்பட்ட படுதோல்வியால் மராத்தியரின் முன்னேற்றம் சிறிது காலத்திற்குத் தடைபட்டது. ஆனால் கி.பி. 1769-ஆம் ஆண்டில் மராத்தியர் வட இந்தியாவின்மீது படையெடுக்கத் தொடங்கினர். சாட்டுகளையும் (Jats) இராசபுத்திரர்களையும் தோற்கடித்துத் தில்லியைக் கைப்பற்றிக்கொண்டு, சட்டப்படி உரிமை பெற்றிருந்த மொகலாயப் பேரரசர் சா ஆலம் என்பாரை அகற்றிவிட்டுத் தோவாப் பகுதியையும் மராத்தியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அயோத்தியும் உரோகில்கண்டும் பிடிபடும் நிலையில் மாதவராவ் பேசுவா காலமானார். உடனே மகாராட்டிரத்தில் குழப்பமும் நெருக்கடியும் சூழ்ந்தன. இதன் விளைவாக மராத்தியரின் படையெடுப்புத்திட்டம் கைவிடப்பட்டது. பேசுவா பதவிக்குப் பலர் போட்டியிட்டனர். மராத்தியர் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தனர். ஒரு கட்சி ஆங்கிலேயரின் உதவியை நாடியது. அதன் பயனாக மராத்தியர்களுடன் போர் மூண்டது.

ஆங்கிலப்படை புனே (Pune) என்னுமிடத்திற்கு 20 கல் தொலைவில் வந்து கொண்டிருந்த நிலையில் மராத்தியரின் பெரும் படையொன்று அவர்களை எதிர்த்தது. உடனே ஆங்கிலேயர் பின் வாங்கினர். பின்னர் வார்கான் (Wargaon) என்னுமிடத்தில் தோறகடிக்கப்பட்டனர். ஆங்கிலேயர் மராத்தியரின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியவராயினர். இரகோபா என்பாரைப் பேசுவா பதவிக்கு அமர்த்தும் எண்ணத்தை அவர்கள் கைவிட வேண்டியவராயினர். மராத்தியரிடமிருந்து கவர்ந்த அனைத்தையும் அவர்கள் கொடுத்துவிட ஒப்புக் கொண்டனர் (1779). ஆனால் ஆங்கிலப் படைகள் பம்பாய் திரும்பியதும் தமக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்தெறியப் புதிய படைகளை ஆயத்தப் படுத்தின. ஏசுடிங்சு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றுச் சால்பை (Salbai) உடன்படிக்கை (1782) செய்து கொண்டனர். இவ்வுடன்படிக்கை இரு கட்சிகளுக்கும் நல்ல பலன்களைக் கொடுத்தது.

மைசூர்: இக்காலத்தில் மைசூரில் ஐதர் அலி (Haidar Ali) வலிமை பெற்று அரசர் போன்று காணப்பட்டார். நிசாம், மராத்தியர் போன்றோர்களின் பகுதிகளில் தம் அரசின் எல்லைகளைப் பரப்பி வந்த ஐதர் அலி, தென்னாட்டிலேயே தலைசிறந்த படைத்தலைவர்களுள் ஒருவர் என்று கருதப்பட்டார்.

திறமையற்ற சென்னை அரசுக்கும் ஐதர் அலிக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ஐதர் அலி பெரு வெற்றி பெற்றார். அவரிட்ட நிபந்தனைகளை ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்ளவேண்டியவராயினர் (1769). ஆனால் உடன்படிக்கையை ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன், பிரெஞ்சியருக்குச் சொந்தமான மாகியைக் கைப்பற்றியதன் விளைவாக ஐதர் அலியைப் பகைத்துக்கொண்டனர். மாகியின் பாதுகாப்பு ஐதர் அலியிடமிருந்தது. எனவே கி.பி. 1780-ஆம் ஆண்டில் ஐதர் அலி கருநாடகத்தின்மீது படையெடுத்து அப்பகுதிகளைச் சூறையாடிச் சென்னையின் நுழைவாயில்வரை வந்தார். ஆங்கிலேயர் மீண்டும் படுதோல்வியுற்றனர். போர் நடந்து கொண்டிருந்தபோது ஐதர் அலி காலமாகவே, அவருடைய மகன் திப்பு சுல்தான் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை (1784) செய்துகொண்டார்.

ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் போர் மூண்டபோது, ஆங்கிலேயர் நிசாமுடனும் மராத்தியருடனும் உடன்படிக்கை செய்துகொண்டு இணைந்திருந்தனர். ஆங்கிலேயர் திப்புவுடன் செய்த போரில் திப்பு தோல்வியுற்றார். அவர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமெனவும் 330 இலட்சம் உரூபாய் கொடுக்கவேண்டுமெனவும் தம் அரசுப் பகுதிகளில் பாதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டார் (1792). மைசூர் முழுவதையும் வெல்லசுலி பிரபு (Lord Wellesley) வென்றார். இந்திய அரசுகள் அனைத்தையும் ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டு வரும் திட்டத்தைத் தீவிரமாகச் செயற்படுத்த அவர் முயன்றார். இதன் அடிப்படையில்தான் அவர் துணைப்படைத் திட்டத்தைக் (Subsidiary Alliance) கொண்டுவந்தார். சுதேச அரசுகளின் எல்லைகளை அயலார் படையெடுப்புகளிலிருந்து பாதுகாக்க உத

வும் இத்திட்டத்தின் பொருட்டு உள்நாட்டு அரசுகள் தம் சுதந்திரத்தை ஆங்கிலேயரிடம் அடகு வைக்கும் நிலை ஏற்பட்டது. இத்திட்டத்தை ஒப்புக்கொள்ளும் அரசர் ஆங்கிலப் படையொன்றை வைத்துக் கொண்டு, அதன் தேவைக்கான செலவினங்களை மானியமாகக் கொடுக்கவேண்டும். அயற் சக்தியுடன் உறவுகளை ஆங்கிலேயரின் அனுமதியின்றி வைத்துக் கொள்ளக்கூடாது.

நிசாமைத் தூண்டித் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வைத்தலில் வெல்லசுலி வெற்றிகண்டார். ஆனால் ஐதர் அலியின் மகனான திப்பு அத்தகைய அடிமைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென மறுத்ததோடு, பிரெஞ்சியருடன் உடன்படிக்கை செய்துகொள்ளவும் முடிவு செய்தார். இதன் விளைவாகத் திப்புவின்மீது போர் தொடுப்பதென முடிவாயிற்று (1799). மைசூரின்மீது ஒரே சமயத்தில் சென்னையிலிருந்தும் பம்பாயிலிருந்தும் படைகள் முன்னேறிச் சென்றன. திப்புவின் தலைநகரான சீரங்கப்பட்டணம் தாக்கப்பட்டது. திப்பு போரில் இறந்தார்.

மைசூரின் ஒரு பகுதி இந்து அரசக் குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மைசூர் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டது.

சால்பை உடன்படிக்கைக்குப் பின்னர் மராத்தியரின் வலிவும் மதிப்பும் பெருகி வளர்ந்தன. இக்காலத்தில் மராத்தியர்களின் தனிப் பெருந்தலைவர்களாய்த் திகழ்ந்தவர்கள் மகதாசி சிந்தியாவும் (Mahadaji Sindhia) நானாபட்னாவிசும் (Nana Fadnavis)ஆவர். வடஇந்தியாவின் பெரும் பகுதிகள் மகதாசி சிந்தியாவின் வசமாயிருந்ததுடன் தில்லி மன்னரையும் அவர் தம் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தார். பெனோயிட் டி பாயிக்னே (Benoit de Boigne) என்பார் ஐரோப்பிய முறையில் சிந்தியாவின் படைகளுக்குப் பயிற்சி அளித்தார். ஆங்கிலப் படைகளை எதிர்க்குமளவிற்கு அவர் திறமை பெற்றிருந்தார். அவர் இசுலாமியர்களையும் இராசபுத்திர அரசுகளையும் தோற்கடித்ததுடன் ஓல்காரையும் வென்றிருந்தார். அவருடைய பெருகிவளரும் ஆதிக்கத்தைக் கண்டு ஆங்கிலேயரே அஞ்சினர். அவருடன் போர் மூளும் அச்சம் நிலவியது. மகதாசி கி.பி. 1794-இல் காலமானார். அவரை அடுத்து 13 வயதான தவுலத்ராவ் சிந்தியா அரியணை ஏறினார்.

இந்தூர் அரசினை ஏறத்தாழ 30 ஆண்டுகள் திறமையாக நிருவகித்த அகல்யாபாய் ஓல்கார் (Akalya Bai Holkar) ஓராண்டுக்குப் பின்னர்க் காலமானார்.

மராத்திய ஆதிக்கத்தின் தலைமையிடமான புனேயில் நானா பட்னாவிசு என்பார் இளம் வயதினரான பேசுவா மாதவராவ் நாராயணின் பெயரில் ஆட்சி நடத்தினார். அவர் சிறந்த நிருவாகி. திப்புவிற்கு எதிராக நானா பட்னாவிசு, காரன்வாலிசுடன் (Cornwallis) சேர்ந்துகொண்டு, கொடையாகக் கிடைத்த பகுதிகளிலிருந்து மூன்றிலொரு பகுதியைப் பெற்றார். இதன் பயனாக மராத்தியரின் எல்லை துங்கபத்திரை ஆறுவரை பரந்தது.

எனினும் மராத்திய அரசு உட்பகையால் சிதறி விடும் நிலையிலிருந்தது. சிந்தியாவும் பேசுவாவும் இணைந்துகொண்டு ஓல்காருடன் போரிட்டனர். தோற்றுப்போன பேசுவா ஆங்கிலேயரின் பாதுகாப்பை வேண்டி, துணைப்படைத் திட்டத்தைப் பசீன் உடன்படிக்கையின்படி ஏற்றுக்கொண்டார். மராத்தியத் தலைவர்கள் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்த போதிலும், அவர்களால் ஒன்றாக இணைய முடியவில்லை. வெல்லசுலி பிரபு சிந்தியாவுக்கும் போன்சுலேவுக்கும் எதிராகப் போர் தொடர்ந்தார். போர் ஒரே காலத்தில் தக்காணத்திலும் வடஇந்தியாவிலும் நடந்தது. தக்காணப் படைகளின் தலைவராகச் சர் ஆர்தர் வெல்லசுலி (Sir Arthur Wellesley) அமர்த்தப்பட்டார். அவர் அரசப் பேராளரின் உடன்பிறந்தார் ஆவார். பிற்காலத்தில் அவரை வெல்லிங்டன் பிரபு என்றனர். சிந்தியாவின் படைகள் அரேயிலும் (1803) போன்சுலேயின் படைகள் ஆர்கானிலும் (Argaon) படுதோல்வியுற்றன. வடஇந்தியாவில் படைத் தலைவர் இலேக்கு (Lake) என்பாரின் தலைமையில் வந்த படைகள் தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றின. சிந்தியாவின் படைகள் இலாசுவாரியில் (Laswari, 1803) தோற்றன. தவுலத்ராவ் சிந்தியாவும் பீராரின் அரசர் போன்சுலேயும் படுதோல்வியுற்றுத் துணைப் படைத் திட்டத்தை ஒப்புக்கொண்டனர். இருவரும் பல முக்கியப் பகுதிகளை ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர்.

இதுவரை மராத்தியக் கூட்டில் சேராதிருந்த ஓல்கார் நெருக்கடியான நிலையில் போரில் குதித்தார். தொடக்கத்தில் வெற்றிபெற்றாலும் விரைவில் அவர் தோற்றுப்போனார். இலேக்கு பரத்பூர் கோட்டையை முற்றுகையிட்டார். ஓல்காருடன் அதன் அரசர் சேர்ந்து கொண்டதே அதற்குக் காரணம். எனினும் அவரால் அதைக் கைப்பற்ற இயலவில்லை; பெருத்த சேதம் விளைந்தது.

பேசுவா ஆங்கிலேயருடன் மீண்டும் கிர்க்கி (Kirkee) என்னுமிடத்தில் மோதித் தோற்றுப் போனார். போன்சுலேயும் ஓல்காரும் கூட்டாகச்

சேர்ந்து ஆங்கிலேயரைத் தாக்கிய போதும் அவர்களிருவரும் தோற்றனர். இதன் விளைவாக மராத்தியரின் ஆதிக்கம் அழியலாயிற்று. போன்சுலே பதவியிலிருந்து விலக்கப்பட்டார். நருமதைக்கு வடபால் அமைந்திருந்த அவருடைய ஆட்சிப் பகுதியை ஆங்கிலேயர் தம் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக் கொண்டனர். பேசுவாவுக்கு மானியமாகப் பெருந் தொகை வழங்கப்பட்டது. பேசுவா என்னும் பதவியும் நீக்கப்பட்டது. அவர் ஆண்ட பகுதிகள் ஆங்கிலப் பகுதிகளுடன் இணைக்கப் பட்டன. சிவாசியின் வழி வந்த ஒருவர் சதாராவைச் சுற்றியுள்ள சிறுபகுதியை ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டு ஆள அனுமதிக்கப் பட்டார்.

மராத்தியப் போருக்குச் சிறிது முன்னரே நேபாளத்தைச் சார்ந்த கூர்க்கா அரசருடன் போர் மூண்டது. சில பகுதிகளை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டுக் காட்மண்டில் ஆங்கில அதிகாரி ஒருவரை நிலையாகத் தங்கவைக்க அவர் ஏற்றுக்கொண்டார். சிந்து மாநிலமும் கி.பி. 1843-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டது.

சீக்கியர்: பஞ்சாபு ஆங்கிலப்பகுதிகளுடன் இணைக்கப்பட்ட இறுதிப் பகுதியாகும். அதனைக் கைப்பற்றச் சீக்கியருடன் ஆங்கிலேயர் இரு போர்களை நடத்தினர். குரு கோவிந்த சிங்கு சீக்கியர்களை இராணுவ வீரர்களாக மாற்றியிருந்தார்.

பஞ்சாபின்மீது நாதர்சாவும் அகமது சா துரானியும் படையெடுத்த காரணத்தால், மொகலாயருக்கு அங்குச் செல்வாக்கு இல்லை. சீக்கியர்கள் அங்கு மிகுந்த வலிமையுடன் விளங்கினர். அகமதுசா துரானியை அடுத்து வந்தவர்கள் சீக்கியர்களுடன் கிழக்கில் சகரன்பூர் (Saharanpur) முதல் மேற்கில் அட்டாக்கு வரையிலும் தோற்றுவிட்டனர். வடக்கில் காங்கிராவிலிருந்து தெற்கில் மூல்தான்வரையிலும் சீக்கியர் தம்ஆட்சியை விரிவுபடுத்தினர். எனினும் சீக்கியர்களுக்குள் ஒற்றுமையின்மையால் அவர்கள் பல குழுக்களாகப் பிரிந்திருந்தனர். இரஞ்சித்சிங்கு என்பார் அவர்கள் அனைவரையும் இணைத்து வலுவான அரசு ஒன்றை நிலைநாட்டினார். தம் படைவீரர்களைப் பயிற்றுவிக்க அவர் ஐரோப்பிய அதிகாரிகளை வேலைக்குஅமர்த்திக் கால்சா என்னும் சீக்கியப் படையை உருவாக்கினார்.

இரஞ்சித் சிங்குடன் இணையாத சீக்கியர்கள் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டார்கள். காங்கிரா, அட்டாக்கு, மூல்தான், காசுமீரம், பெசாவர் போன்ற பகுதிகள் சிங்கின் ஆட்சிக்குட்பட்டன. அவர் கி.பி. 1839-இல் காலமானார். இரஞ்சித் சிங்கின் இறப்பிற்குப் பிறகு சீக்கிய அரசில் குழப்பம் மூண்டது. கால்சா படையினர் மிகுந்த செல்வாக்குற்று ஆட்சிபுரியலாயினர்.

சீக்கியப் படைகள் கி.பி.1845-இல் சட்லசு ஆற்றைக் கடந்து ஆங்கிலப் பகுதிகளைத் தாக்கின. எனினும் போரிட்ட நான்கு போர்களிலும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஆயினும் சீக்கியர்களின் வீரம் போற்றுதற்குரியது. பஞ்சாபு பகுதியைத் தல்கவுசி பிரபு ஆங்கிலப் பகுதியுடன் இணைத்துக்கொண்டார்; அவகாசியிலிக் கொள்கையைப் பின்பற்றிப் பல சுதேச அரசுகளைக் கைப்பற்றி, அவற்றை ஆங்கில அரசுடன் இணைத்தார். இந்தியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டபின்னர், பர்மாவையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

பிளாசிப் போரிலிருந்து சிப்பாய்க் கலகம் வரையிலான நூறாண்டுகளில் ஆங்கிலேயர் பல சீர்திருத்தங்களைச் செய்தனர். காரன்வாலிசு பிரபு நிலையான நிலவரித் திட்டத்தைச் செயற்படுத்தி நிருவாகத்தைத் திருத்தியமைத்தார். ஏசுடிங்சு நிலத்தை மிகுதியான குத்தகை கொடுப்பவர்களுக்குக் கொடுத்துச் சமீன்தாரி முறையைப் புகுத்தினார். நிருவாகத் துறையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இந்தியர்களுக்கு உயர்பதவிகள் கொடுக்கப்படவில்லை.

வில்லியம் பெண்டிங்குப் பிரபு அரசப் பேராளராக (1828-35) இருந்தபோது பல அரும்பணிகளைச் செய்தார். சதி என்னும் உடன்கட்டை ஏற்றும் கொடிய வழக்கம் ஒழிக்கப்பட்டது. தக்கர்கள் என்னும் கொள்ளைக் கூட்டத்தினரை அடக்கினார். பழங்குடி மக்களின் கொடிய பழக்கவழக்கங்கள் மாற்றப்பட்டு அவர்கள் நாகரிகப் பாதைக்குக் கொணரப்பட்டனர். இந்தியர்களுக்கு நீதிமன்றம், நிருவாகம் போன்ற துறைகளில் பெரும் பதவிகள் பெண்டிங்கு காலத்தில் கொடுக்கப்பட்டன.

தல்கவுசி பிரபு நல்ல பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். பொதுப்பணித்துறையை அவர் உருவாக்கினார். சாலைகள், கால்வாய்கள், இருப்புப் பாதைகள், மின்சாரத் தந்தி முறை, அஞ்சல்துறை போன்றவை அமைக்கப்பட்டுப் போக்குவரத்து வசதிகள் பெருகின. ஆங்கிலக் கல்வியும் அவர் காலத்தில் தான் புகுத்தப்பட்டது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றவை நிறுவப்பட்டன. பெண் கல்வியும் தொடங்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டதன் பயனாக நாட்டில் பல மாற்றங்கள் தோன்றலாயின. வங்காள உரைநடை இலக்கியம், ஆங்கில வங்காள மொழிச் செய்தித்தாள்கள், இதழ்கள், அரசியல் கிளர்ச்சிகள் செய்யும் செயல்

திட்டம் போன்றவை இந்தியாவில் தொடங்கப்பட்டன.

பிளாசிப் போரில் (கி.பி. 1757) தொடங்கிய ஆங்கில ஆட்சி கி.பி. 1857க்குள் பெரும்பாலான இந்தியப் பகுதிகளில் பரவலாயிற்று. இக்காலகட்டத்தில்தான், கி.பி. 1857-ஆம் ஆண்டில் சிப்பாய்க் கலகம் எனப்படும் பெருங்கிளர்ச்சி மூண்டது. கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று இடங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டன.

**1857-ஆம் ஆண்டுக் கிளர்ச்சி:** இந்திய வரலாற்றில்மிகப் பெரும் நிகழ்ச்சியான இதனைச் சிப்பாய்க்கலகம் என்பார்கள். இதனை இந்தியர்களின் முதல்சுதந்திரப்போர் என்பாருமுளர். இக்கிளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன.

படைவீரர்கள் இக்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்தார்கள். அவர்கள் சிப்பாய்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஆங்கிலப் படைவீரர்களை விட எண்ணிக்கையில் இந்தியப் படைவீரர்கள் பல மடங்கு மிகுதியாக இருந்தனர். படை பலம் கொண்டே ஆங்கிலேயர் இந்தியாவை வென்றும் நாட்டில் அமைதியை நிலைநாட்டியும் வந்தனர். ஆனால் படிப்படியாக ஆங்கில ஆட்சிக்கெதிராகப் பல மனக்குறைகள் தோன்றலாயின. படைவீரர்களல்லாத ஏனைய மக்களும் பல காரணங்களால் ஆங்கில ஆட்சியை வெறுத்தனர். ஆங்கில அரசு இந்தியர் அனைவரையும் கிறித்தவ சமயத்திற்கு மாற்றிவிடுமோ என்ற அச்சம் மக்கள் அனைவரிடத்தும் குடிகொண்டிருந்தது. ஊதியம், பதவி உயர்வு போன்றவை குறித்தும் படை வீரர்களிடையே பெரும் மனக்குறைகள்இருந்தன. என்பீல்டு துப்பாக்கிகளைப் படையில் புகுத்தியது கிளர்ச்சிக்கு உடனடிக் காரணமாயிற்று. துப்பாக்கியின் தோட்டாவினை வாயில் கடித்துக் குண்டுகளைத் திணிக்கும் முறை சொல்லொணா அச்சத்தை விளைவித்தது. இந்துக்களும் இசுலாமியர்களும் விரும்பாத முறையில் பசுமாட்டுக் கொழுப்பையும் பன்றிக் கொழுப்பையும் அவற்றின்மீது தடவி, தத்தம் சமய மரபுகளிலிருந்து தீட்டுப்படும்படி ஆங்கிலேயர் சூழ்ச்சிசெய்தார்கள் என்றும், தீட்டுப்பட்டவர்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றினார்கள் என்றும் தெரிய வந்ததால் சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்தனர். பராக்பூரில் படைவீரர்களின் கிளர்ச்சி தொடங்கி, மீரட்டு, இலக்னோ போன்ற இடங்களுக்கும் அது காட்டுத்தீயாகப் பரவியது. மீரட்டில் ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டார்கள். பின்னர்ப் படைவீரர்கள் தில்லி நோக்கிச் சென்றனர். படைவீரர்களல்லாதாரும்அவர்களுடன் இணைந்து கொண்டனர். அங்கும் ஐரோப்பியர்களில் பலர் கொல்லப்பட்டனர். மொகலாய மரபினைச் சார்ந்த பகதூர் சா (Bahadur Shah) என்பார் பேரரசராக அறிவிக்கப்பட்டார். உத்தரப்பிரதேசத்திலும் மத்தியபிரதேசத்தில் பண்டேல்கண்டிலும் கிளர்ச்சிகள் பரவின. தில்லி, இலக்னோ, கான்பூர், பரேலி, சான்சி(Jhansi) போன்ற இடங்கள் கிளர்ச்சியாளரின் அரண்களாயின. மேற்கூறிய இடங்களில் படைவீரர்களின் கலவரங்களை அடுத்துப் பொதுமக்களின் கிளர்ச்சிகளும் கொள்ளையிடுதலும் தொடர்ந்தன. ஆங்கிலேயர் அச்சத்திற்குள்ளாயினர். பலவிடங்களில் ஆங்கிலேயர் விரட்டப்பட்டனர்.

கிளர்ச்சி அங்குமிங்கும் தனித்தனி நகரங்களில் மூண்டது. அவர்களிடத்தில் பொதுவான செயல் திட்டம் இல்லை. மக்களுள் பெரும்பாலோர் இக்கிளர்ச்சியில் முழுமனத்துடன் பங்கு கொள்ளவில்லை. சுதேச அரசர்களுள் பலர் இக்கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டவில்லை. சீக்கியர்கள் படைவீரர்களை ஆதரிக்காமல் ஆங்கிலேயருக்கு உதவினர். நேபாள மன்னரும் ஆங்கிலேயருக்கு உதவினார். இதன் விளைவாகப் படைவீரர்கள் கிளர்ச்சி கி.பி. 1858-இல் அடக்கப்பட்டது.

சான்சி இராணி இலட்சுமிபாய் கலகக்காரர்களின் முன்னணித் தலைவியானார். ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட அவருக்கு உறுதுணையாக நானா சாகேப்பும் தாதியா தோப்பேயும் இருந்தனர். இலட்சுமிபாய் வீர மரணம் அடைந்தார். நானா சாகேபு நேபாளத்திற்கு ஓடிவிட்டார். தாதியா தோப்பே பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்டார். பகதூர் சா இரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டார்.

கிளர்ச்சியின்போது இரு தரப்பிலும்பல கொடுமைகள் நடந்தன. கான்பூரில் நூற்றுக் கணக்கான ஆங்கிலப் படைவீரர்களும் அலுவலர்களும் கொல்லப்பட்டார்கள். ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும்கூட இரையானார்கள். கிளர்ச்சியை அடக்க முற்பட்ட ஆங்கிலேயரும் பல கொடுமைகளை இழைத்தார்கள். அரசப் பேராளரான கானிங்கு பிரபு திறமையாகச் செயலாற்றி நிலைமையைச் சமாளித்தார். இந்தியாவில் ஏற்பட்ட கி.பி. 1857-ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் விளைவாக ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சி அகற்றப்பட்டு, இந்தியா ஆங்கில அரசின் நேராட்சிக்குட்படுத்தப்பட்டது. அதற்கான சட்டத்தை இங்கிலாந்து அரசு கி.பி. 1859-இல் நிறைவேற்றியது. பேரரசியாரின் அறிக்கை வெளியிடப்பட்டு ஆங்கிலேயர் சமயத்துறையில் தலையிடுவதில்லை என்பது அறிவிக்கப்பட்டது.

**இந்திய வரலாறு (கி.பி. 1858 முதல் 1950 வரை):** இக்காலப் பகுதி வரலாற்று நிகழ்ச்சிகளை நான்கு

தலைப்புகளில் ஆராயலாம். இங்கிலாந்து அரசாங்கம் கி.பி. 1858-இல் அரசப் பேராளர்கள் (Viceroys) மூலம் இந்தியாவை நேரிடையாக ஆளும் பொறுப்பை மேற்கொண்டது. இவ்வரசப் பேராளர்கள் ஆட்சி முதற்பகுதியில் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் இந்திய அரசியலமைப்பில் ஏற்பட்ட படிப்படியான வளர்ச்சியை இரண்டாம் பகுதி ஆராய்கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய வரலாற்றுடன் இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதால், மூன்றாம் பகுதியில் விடுதலை இயக்கத்தின் சிறப்பான நிகழ்ச்சிகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. சுதந்திர இந்தியாவின் மூன்று ஆண்டுக் காலச் சோதனைகளும் சாதனைகளும் கட்டுரையின் இறுதிப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

அரசப் பேராளர்கள் ஆட்சி: இந்தியாவை நேரடியாக ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இங்கிலாந்து அரசு, ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் கடந்த கால ஆட்சியின் விளைவாகத் தோன்றிய கசப்புணர்ச்சியையும் மனக் குறையையும் நீக்கும் பொருட்டும், இந்திய மக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்தியாவை மேலும் செம்மையான முறையில் ஆளுவதற்கான சட்டம் ஒன்று (An Act for the better governance of India) கி.பி. 1858-இல் நிறைவேற்றப்பட்டது. இங்கிலாந்து அரசியார் விக்டோரியா ஒரு பேரறிக்கை மூலம் இந்தியர்களின் நல்வாழ்வில் ஆங்கில அரசுக்குள்ள அக்கறையை வலியுறுத்திக் கூறினார். இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு இங்கிலாந்து அமைச்சரவையில் ஒரு தனி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கிலாந்து அரசின் சார்பில் இந்தியாவை ஆள அரசப்பேராளர் அமர்த்தப்பட்டார். கானிங்கு பிரபு முதல் மவுண்டு பேட்டன் பிரபு ஈறாகக் கி.பி. 1858 முதல் 1947 வரை இருப்து அரசப் பேராளர்கள் இந்திய ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர். கானிங்கு பிரபு ஆட்சியில் இந்தப் புதிய அரசியல் ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. எல்சின் (Elgin) பிரபு, இலாரன்சு (Lawrence) பிரபு ஆகியோர் ஆட்சியில் ஆப்கானியர்களால் ஏற்பட்ட தொல்லைகள் தலையிடாக் கொள்கை மூலம் சமாளிக்கப்பட்டன. மேயோ (Mayo) பிரபு, நார்த்புரூக்கு (Northbrooke) பிரபு ஆகியோர் ஆப்கானிசுத்தானத்தில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்ததோடு மட்டுமன்றி நிதி, வாணிகம், பொதுப்பணி, போக்குவரத்துப் போன்ற துறைகளில் சிலசீர்திருத்தங்களையும்மேற்கொண்டனர். இலிட்டன் (Lytton) பிரபு ஆட்சியில் இரண்டாம் ஆப்கானியப் போரினால் இந்திய அரசு பல தொல்லைகளுக்காளாயிற்று. பஞ்ச நிலையைச் சமாளிக்கப் பஞ்ச விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுப் பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் முதல் முதலாகத் திட்டவட்டமாக மேற்கொள்ளப்பட்டன. இந்திய மக்களின் அன்பையும் ஆதரவையும் பெருமளவில் பெற்றவர் இரிப்பன் (Ripon) பிரபு ஆவார். சீர்திருத்த மனப்பான்மை கொண்ட இவர் பலதுறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொண்டது மட்டுமன்றி, இந்திய மக்கள் தன்னாட்சிப் பொறுப்பைச் செவ்வனே செய்து முடிக்க நிருவாகப் பயிற்சியும் அனுபவமும் தேவைஎன்பதையும் உணர்ந்தார்.எனவே தல ஆட்சி (Local Government) நிறுவனங்களில் இந்தியர்கள் பங்கு பெற வாய்ப்புகள் அளித்தார். அடுத்து வந்த தப்ரின் (Dufferin) பிரபு ஆட்சியில் பர்மா பிரிட்டிசு இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இவர் ஆட்சியில் தான் இந்தியத் தேசிய காங்கிரசு அமைக்கப்பட்டது. இலான்சுடவுன் (Lansdowne), இரண்டாம் எல்சின் (Elgin II) ஆகியோர் ஆட்சிகளில் சில நிருவாகச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அடுத்துப் பதவியேற்ற தீவிர ஏகாதிபத்தியுவாதியான கர்சான் (Curzon) பிரபு ஆப்கானிசுத்தானம், பாரசீக வளைகுடா, திபேத்துப் பகுதிகளில் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்டினார். சீர்திருத்தத்தில் ஆர்வம் காட்டிய இவர் பல நிருவாகத் துறைகளைச் சீர்படுத்தி அமைத்தார். இவர் 1904-ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டம், 1905-ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினைச்சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் இந்தியத் தேசியத்தின் வளர்ச்சியைத் தடை செய்ய முயற்சிசெய்தார். இரண்டாம் மிண்டோ (Minto II) பிரபு ஆட்சியில் இந்திய அரசியல் அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அரசப் பேராளர் ஆர்டிஞ்சு (Hardinge) பிரபு ஆட்சியில் கல்கத்தாவிலிருந்து தில்லி இந்தியத் தலைநகரமாக மாற்றப்பட்டு, வங்காளம் மீண்டும் இணைக்கப்பட்டது. செம்சுபோர்டு (Chelmsford) ஆட்சியில் மூன்றாம் ஆப்கானியப் போர் நடந்தது. அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பு வாய்ந்த 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் காந்திய ஆண்டுத்தொடங்கியது இக்காலப் பகுதியில்தான்.

இவர் ஆட்சியில் காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், அடுத்துவந்த இரீடிங்கு (Reading) பிரபு ஆட்சியில் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. இர்வின் (Irwin) பிரபு ஆட்சியில் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டு, இந்தியாவின் அரசியல் சிக்கலைத் தீர்க்க இலண்டனில் வட்ட மேசை மாநாடுகள் (Round Table Conference) நடத்தப்பட்டன. இவை தொடர்பாகக் காந்தி-இர்வின் உடன்

பாடு (Gandhi-Irwin Pact) ஏற்பட்டது. வில்லிங்டன் (Willington) பிரபு ஆட்சியில் ஒருபுறம் அடக்குமுறை தாண்டவமாட, மற்றொரு புறம் இந்தியர்களுக்குத் தன்னாட்சி உரிமையும் பொறுப்புள்ள அரசாங்கமும் கொடுக்கும் நோக்கத்துடன் 1935-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த அரசப்பேராளர் இலின்லித்கோ (Linlithgow ஆட்சியில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு மாநிலங்கள் தன்னாட்சி உரிமை பெற்றன. இரண்டாம் உலகப் போர் இந்திய அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இதுவரை இங்கிலாந்து அரசு வழங்கிய சிறப்புரிமைகள் இந்திய மக்களுக்கு மனநிறைவைத் தரவில்லை. இந்தியச் சிக்கல் தீர்க்கப்படாமலேயே இருந்தது. இதற்கு ஒரு தீர்வுகாண இங்கிலாந்து அரசு சர்இசுடாபோர்டு கிரிப்சு (Sir Stafford Cripps) என்ற அமைச்சரை அனுப்பியது. அவருடைய திட்டம் இந்தியத் தலைவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. காங்கிரசு 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) இயக்கத்தைத் தொடங்கியது. எனவே அடுத்துப் பதவியேற்ற வேவல் (Wavell) பிரபு சிம்லா மாநாட்டில் இந்திய அரசியல் தலைவர்கள் பலரைக் கூட்டி இந்தியச் சிக்கலுக்குத் தீர்வு காண முயற்சிசெய்தார். ஆனால் அது பயனளிக்கவில்லை. தொழிற்கட்சி ஆங்கில அரசு அமைச்சரவைக் குழு ஒன்றின்மூலம் 1946-இல் ஒரு புதிய அரசியல் திட்டத்தை அறிவித்தது. இந்தியாவுக்கு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க ஓர் அரசியல் நிருணய சபை கூட்டப்பட வேண்டுமென்றும், அதற்கிடையில் ஓர் இடைக்கால அரசாங்கம் (Interim Government) நிறுவப்படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. பண்டித சவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட்டது. முதலில் ஒத்துழைக்க மறுத்த முசுலிம் லீகு (Muslim League) பிறகு இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்றது. புதிய அரசியல் நிருணயசபை 1946-ஆம் ஆண்டு இறுதியில் கூடிப் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியைத் தொடங்கியது. ஆங்கில அரசு 1948-சனவரி மாதத்திற்குள் இந்தியர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வெளியேற முடிவு செய்திருப்பதாக அறிவித்து, அதைச் செயற்படுத்த மவுண்ட்டுபேட்டன் (Mountbatten)பிரபுவை அரசப் பேராளராக அனுப்பியது. அவருடைய திட்டத்தின்படி இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்டது. இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1946-சூலை மாதத்தில் நிறைவேற்றிய சட்டப்படி 1947 ஆகசுட்டு 15-ஆம் நாளன்று இவ்விரண்டு நாடுகளும் சுதந்திரம் பெற்றன. சுதந்திர இந்தியாவின் தலைமை ஆளுநராக மவுண்ட்டுபேட்டன் பிரபுவே மீண்டும் அமர்த்தப்பட்டு, 1948-சூன் திங்கள் வரை அப்பதவியிலிருந்தார். அடுத்துச் சுதந்திர இந்தியாவின் ஒரே இந்தியத் தலைமை ஆளுநராக சி. இராசகோபாலாச்சாரி பதவியேற்று, 1950 சனவரி 26-ஆம் நாள் வரை அப்பதவியிலிருந்தார். அந்த நன்னாளில் இந்தியாவின் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு, இந்தியா ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டதையடுத்து இராசேந்திரப் பிரசாத்து இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார்.

ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தடைபட்டது. இந்தியாவின் மூலப் பொருள்கள் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இங்கிலாந்தில் உற்பத்தியான பொருள்கள் இந்தியர்கள் மீது திணிக்கப்பட்டன. இந்தியக் கைத்தொழில்கள் யாவும் நசித்துப் போயின. மூலப் பொருள்கள் மட்டுமன்றி, வரிப்பணம் மூலமாகவும் இந்தியாவின் செல்வம் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்திய அரசின் வேளாண்மைக் கொள்கையும் நிலவரிக் கொள்கையும் வேளாண்மையை ஓர் ஆதாயமில்லாத் தொழிலாக மாற்றின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஓரளவு தொழில் வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் அதன் பயனை இந்தியர்கள் நுகர முடியவில்லை. நாட்டில் ஏழ்மையும் பஞ்சமும் பசியும் தாண்டவமாடின. இங்ஙனம் இந்திய அரசியல் பொருளாதாரக் கொள்கையின் விளைவாகச் செல்வ வளம் மலிந்த இந்திய நாட்டில் மக்கள் ஏழ்மையில் உழலும் துன்பநிலை காணப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி: இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் கி.பி. 1858-ஆம் ஆண்டு ஒரு சீரிய காலக் கட்டத்தைக் குறிக்கும். கிழக்கிந்திய வணிகக் குழுவின் சார்பில் இந்தியாவை ஆளும் பொறுப்பேற்றிருந்த கட்டுப்பாட்டு வாரியமும் (Board of Control) இயக்குநர் குழுவும் (Court of Directors) கலைக்கப்பட்டு, இந்தியாவை ஆளும் பொறுப்பு இங்கிலாந்து அரசாங்கத்தின் இந்திய அமைச்சரிடம் (Secretary of State for India) ஒப்படைக்கப்பட்டது. இப்பொறுப்பை அவர் அரசப் பேராளர் (Viceroy) மூலம் நிறைவேற்றினார். இதைத் தொடர்ந்து இந்திய நிருவாகத் தொடர்பான பல சட்டங்கள் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முதன்மையானது கி.பி. 1861-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய ஆட்சிக் குழுச் சட்டம் (Indian Councils Act). இச்சட்டம் அரசப் பேராளரின் செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தியது. செயற்குழுவே சட்டமன்றமாகவும் பணியாற்றி வந்ததால், சட்டமியற்றும் பணியைச் செய்வதற்கென ஆறுக்குக்

குறையாமல் பன்னிரண்டுக்கு மேற்படாமல் கூடுதல் உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரம் அரசப் பேராளருக்கு வழங்கப்பட்டது. அவர்களில் பாதிப் பேருக்குக் குறையாமல் ஆட்சிப் பணிச் சார்பற்றவர்களாக (Non-official) இருக்கவேண்டும் என்று அந்தச் சட்டம் வரையறுத்தது. அன்றியும் கி.பி. 1833-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் இச்சட்டத்தின் மூலம் பன்முகப்படுத்தப்பட்டு, மாநிலங்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரம் மீண்டும் கொடுக்கப்பட்டது. சட்டமியற்றும் பணியில் பங்கு பெற இந்தியர்களுக்கும் ஒரு வாய்ப்பு அளித்தது என்ற வகையில் இச்சட்டம் இன்றியமையாத ஒன்றாகும்.

சட்டமன்றத்தில் இந்தியப் பேராளர்களின் எண்ணிக்கை மிகுதியாக்கப்பட வேண்டும்; தேர்தல் முறை புகுத்தப்பட வேண்டும் என்ற இந்தியர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கி.பி. 1892-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிக் குழுச்சட்டம் மையச் சட்டமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பத்துக்குக் குறையாமலும் பதினாறுக்கு மேற்படாமலும் உயர்த்தி, ஆட்சிப் பணிச் சார்பற்ற உறுப்பினர்கள் விகிதத்தை மிகுதிப்படுத்தியது. மேலும், உறுப்பினர்கள் நியமன முறை தவிரத் தேர்தல் மூலமும் நியமிக்கப்பட இச்சட்டம் வழி வகை செய்தது. நகர சபைகள், மாவட்ட ஆட்சிமன்றங்கள், வாணிகக் குழுக்கள் மூலமாக உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் முறையை இச்சட்டம் ஏற்படுத்தியது. வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கும் உரிமையையும் பொதுநலன் தொடர்பான எந்தப்பொருள் பற்றியும் கேள்வி கேட்கும் உரிமையையும் முதல்முதலாக உறுப்பினர்களுக்கு இச்சட்டம் அளித்தது.

இந்தியர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் கி.பி.1892-ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இந்தியத் தேசிய காங்கிரசு அரசியல் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடியது. இச்சூழ்நிலையில் இங்கிலாந்தில் பதவியைக் கைப்பற்றிய தாராளக் கட்சி (Liberal Party) அரசு இந்தியர்களுக்கு மேலும் சில உரிமைகளை வழங்க முடிவு செய்தது. இங்கிலாந்தில் இந்திய அமைச்சராக இருந்த மார்லி (Morley) பிரபுவும் அரசப் பேராளர் மிண்டோ பிரபுவும் இணைந்து சில சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்தனர். இவற்றின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதே 1909-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிக்குழுச் சட்டமாகும்.


அரசப் பேராளரின் ஆட்சிக் குழுவில் இந்தியர் ஒருவரை அமர்த்தும் பழக்கத்தை இச்சட்டம் செயல் முறையில் புகுத்தியது. மையச் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்த அளவு அறுபது வரை இருக்கலாமென்றும், அவர்களுள் இருபத்தேழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்றும் இச்சட்டம் கூறியது. மையச் சட்டமன்றத்திற்கு மேலும் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதுபோலவே மாநில ஆளுநர் ஆட்சிக் குழுக்கள், சட்டமன்றங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் மிகுதியாக்கப்பட்டது. மேலும், இச்சட்டம் முதல்முதலாக வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை (Communal Representation) ஏற்று, இசுலாமியர்களுக்குத் தனித் தேர்தல் தொகுதிகள் அமைத்து, அவற்றின் மூலம் இசுலாமிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வழிவகை செய்தது. இச்சட்டம் இந்தியர்கள் எதிர்பார்த்த அளவுக்குப் பொறுப்புள்ள அரசாங்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாகச் சட்ட வரம்பிற்குட்பட்ட தன் விருப்ப ஆட்சியையே (Constitutional Autocracy) ஏற்படுத்தியது.

இந்தியர்களுக்கு நிருவாகத்தில் மேலும் மிகுதியான பங்கும், விரிவான அடிப்படையில் தேர்தல் முறையும், பொறுப்புள்ள அரசாங்கமும் உடனடித் தேவை என்பதை இந்தியத் தலைவர்கள் வலியுறுத்தினார்கள். பின்னர் 1917-இல் வெளியிட்ட ஆகசுட்டு அறிக்கை மூலம் இந்திய அமைச்சர் மாண்டேகு (Montague) பொறுப்புள்ள ஆட்சியைப் படிப்படியாக இந்தியாவில் ஏற்படுத்துவதே ஆங்கில ஆட்சியாளர்களின் குறிக்கோள் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து, அரசப் பேராளர் செம்சுபோர்டுடன் கலந்து உரையாடி ஒரு சீர்திருத்தத் திட்டத்தை வெளியிட்டார். இதன் அடிப்படையில் இயற்றப்பட்டதுதான் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம். தலைமை ஆளுநரின் ஆட்சிக்குழு உறுப்பினர் அறுவருள் மூவர் இந்தியர்களாக இருக்க வேண்டுமென்று இச்சட்டம் கூறியது. மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது. மைய அரசாங்கத்தில் இரண்டு அவைகள் கொண்ட ஒரு சட்டமன்றத்தை இச்சட்டம் நிறுவியது. மைய அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லாப் பொருள்களும் பற்றிச் சட்டமியற்றவும், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரவும், கேள்விகள் துணைக் கேள்விகள் கேட்கவும் உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. வகுப்பு வாரித் தேர்தல் தொகுதிகள், இசுலாமியர்கள் தவிரச் சீக்கியர்கள், பிராமணரல்லாதார் போன்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டன. இச்சட்டத்தின் ஓர் இன்றியமையாத கூறு என்னவெனில், மாநிலங்களில் இரட்டை ஆட்சி முறையை (Dyarchy) ஏற்படுத்தியதாகும். இதன்படி பொறுப்புள்ள ஆட்சி

என்ற கோட்பாடு மாநில அளவில் ஓரளவு செயற்படுத்தப்பட்டது. மாநில அதிகார வரம்பிற்குட்பட்ட துறைகள் மேலும் ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) எனவும் மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) எனவும் பிரிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட துறைகள் ஆளுநராலும் அவர் நிருவாகக் குழுவினாலும், மாற்றப்பட்ட துறைகள் ஆளுநராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களாலும் நிருவகிக்கப்பட்டன. மாநிலங்களில் ஓரங்கச் சட்டமன்றங்கள் நிறுவப்பட்டன. அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது. மாநிலங்களிலும் வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறை மாற்றப்பட்ட துறை எவை எவை என்பது சரிவர, வரையறுக்கப்படாமையும், அவை ஒற்றுமையாக இயங்காமையும், மாநில ஆளுநர்கள் பெற்றிருந்த சிறப்பு அதிகாரங்களும் மாநிலங்களில் பொறுப்பாட்சி என்ற கோட்பாட்டையே கேலிக் கூத்தாக்கின.

மேற்கூறிய சட்டத்திலுள்ள குறைபாடுகளைப் போக்கவும் இந்தியாவின் அரசியலமைப்புச் சிக்கலுக்குத் தீர்வு காணவும் முட்டிமன் குழு, சைமன் குழு போன்ற விசாரணைக் குழுக்களை அமைத்தும், இலண்டனில் வட்டமேசை மாநாடுகள் கூட்டியும் ஆங்கில அரசு பல முயற்சிகளில் ஈடுபட்டது. இவற்றின் விளைவாக இயற்றப்பட்டதே 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம். இச்சட்டம் நேரடி இந்திய மாநிலங்களையும் சுதேச அரசுகளையும் கொண்ட ஒரு கூட்டாட்சி அமைப்பை (Federation) உருவாக்கியது. மாநிலங்களில் 1919-ஆம் ஆண்டு சட்டப்படி இயங்கிக் கொண்டிருந்த இரட்டை ஆட்சி முறையை ஒழித்து, இச்சட்டம் அம் முறையை மைய அரசில் புகுத்தியது. ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர், அவருடைய ஆட்சிக் குழு ஆகியோரின் பொறுப்பிலும், மாற்றப்பட்ட துறைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சர்கள் பொறுப்பிலும் விடப்பட்டன. இச்சட்டம் தலைமை ஆளுநருக்குப் பல வகையான சிறப்பதிகாரங்களையும் தன் விருப்ப அதிகாரங்களையும் வழங்கியிருந்ததால், அமைச்சர்கள் அவர் விருப்பத்திற்கு மாறாக எதையும் சாதிக்க இயலவில்லை. மைய அரசில் ஈரவைகளைக் (Bicameral) கொண்ட சட்டமன்றம் உருவாக்கப்பட்டது. உறுப்பு அரசுகளுக்கிடையேயும், உறுப்பு அரசுகளுக்கும் மைய அரசுக்குமிடையேயும் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துவைக்க இச்சட்டம் ஓர் உயர் நீதிமன்றத்தை நிறுவியது. இச்சட்டத்தின் ஓர் இன்றியமையாத கூறு என்னவெனில், இரட்டை ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு மாநிலங்களுக்கு முழுத் தன்னாட்சி உரிமை (Provincial Autonomy) அளிக்கப்பட்டதேயாகும். மாநில ஆட்சிப் பொறுப்புத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் தலைமை ஆளுநர் மாநில நிருவாகத்தில் தலையிடப்பெற்றிருந்த சிறப்பதிகாரங்கள் காரணமாகவும், மாநில ஆளுநர் பெற்றிருந்த அவசர, தன் விருப்ப அதிகாரங்கள் காரணமாகவும் மாநிலச் சுயாட்சி பெயரளவில் மட்டுமே இருந்தது. இச்சட்டம் சில மாநிலங்களில் ஈரவைச் சட்டமன்றத்தையும் சில மாநிலங்களில் ஓரவைச் சட்டமன்றத்தையும் நிறுவியது. பல்வேறு வகுப்பினருக்குத் தனித் தேர்தல் தொகுதிகள் அளிக்கப்பட்டன இச்சட்டத்தின் மாநிலச் சுயாட்சி பற்றிய பகுதி மட்டுமே 1937-இல் நடைமுறைக்கு வந்தது. பொதுத்தேர்தல்கள் நடைபெற்றுப் பல்வேறு மாநிலங்களில் இந்தியத் தேசிய காங்கிரசு அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஆனால் 1939-இல் நாடெங்கிலும் காங்கிரசு அமைச்சரவைகள் பதவியிலிருந்து விலகின.

இதற்குப் பிறகு1942-இல் ஆங்கில அமைச்சர் சர் இசுடாபோர்டு கிரிப்சு ஒரு திட்டத்தை அறிவித்தார். எதிர்கால அரசியல் அமைப்பை உருவாக்கிக்கொள்ள இந்திய அரசியல் நிருணய அவையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை இத்திட்டம் இந்தியர்களுக்கு வழங்கியது. ஆனால், உடனடியாக ஒரு தேசிய அரசு நிறுவப்பட வேண்டும் எனவும் நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பு இந்தியர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கூறிய காங்கிரசின் வேண்டுகோள்களையும் முசுலிம் லீகின் பாகிசுத்தான் வேண்டுகோளையும் கிரிப்சு ஏற்காததால், காங்கிரசும் முசுலிம் லீகும் இத்திட்டத்தை ஏற்க மறுத்தன. புதிதாக அரசப் பேராளராக 1945-இல் பதவியேற்ற வேவல் பிரபு சிம்லா மாநாட்டைக் கூட்டி, இந்திய அரசியல் கட்சித் தலைவர்களுடன் உரையாடலை நடத்தினார். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்வரை ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றும், அதில் காங்கிரசுக்கும் முசுலிம் லீகிற்கும் இணையான பேராளர் எண்ணிக்கை அளிக்கப்படவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் தொழிற்கட்சி 1946-இல் இந்தியாவிற்கு அனுப்பிய அமைச்சரவைத் தூதுக்குழு இந்தியர்களுக்குச் சாதகமான மேலும் சில மாற்றங்களைச் செய்து, மேலே கூறப்பட்ட திட்டத்தை இந்தியத் தலைவர்களுக்கு முன் வைத்தது. பண்டித சவகர்லால் நேருவின் தலைமையில் 1946-இல் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. முசுலிம் லீகு இந்த இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்ற போதிலும் காங்கிரசுக்கும் முசுலிம் லீகுக்குமிடையே




இந்தியா – ஆங்கிலேயர் ஆட்சியில்

ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால், இடைக்கால அரசு செம்மையாகச் செயற்பட முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் 1946 செப்தம்பர் மாதம் அரசியல் நிருணய அவை அரசியலமைப்பை உருவாக்கும் பணியைத் தொடங்கியது. இங்கிலாந்து அரசு அதிகாரத்தை இந்தியர்களிடமே ஒப்படைத்துவிட்டு இந்தியாவைவிட்டு வெளியேற முடிவு செய்துவிட்டதாக அறிவித்து, அம் மாற்றத்தை விரைந்து செயற்படுத்த மவுண்டு பேட்டன் பிரபுவை அரசப் பேராளராக அனுப்பியது. இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும், அதன் அடிப்படையில்தான் இந்திய சுதந்திரம் கிட்டும் என்பதையும் உணர்ந்த மவுண்ட்டுபேட்டன் பிரபு, நேரு போன்ற தலைவர்களைப் பிரிவினைக்கு இணங்க வைத்தார். காந்தியடிகள் உட்படக்காங்கிரசுத் தலைவர்கள் பிரிவினையைத் தவிர்க்க முடியாத ஒரு கட்டாயமாக விருப்பமின்றி ஏற்றனர். இந்தியா,பாகிசுத்தான் ஆகிய இரு சுதந்திர நாடுகள் 1947 ஆகசுட்டுப் பதினைந்தாம் நாள் உருவாயின. சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக மவுண்ட்டுபேட்டன் பிரபுவே அமர்த்தப்பட்டு 1948-சூன் வரை அப்பதவியில் தொடர்ந்து இருந்தார். அதற்குப் பிறகு சி. இராசகோபாலாச்சாரி தலைமை ஆளுநர் பதவியை ஏற்று 1950 சனவரி வரை அப்பதவியிலிருந்தார். புதிய அரசியலமைப்பு 1950 சனவரி 26–ஆம் நாள் நடைமுறைக்கு வந்து இந்தியா ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டபொழுது, இராசேந்திர பிரசாத்து குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய விடுதலைப் போராட்டம்: இராசாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, சுவாமி விவே கானந்தர் போன்றவர்களால் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட சமூக, சமய சீர் திருத்த இயக்கங்கள் இந்திய மக்களிடையே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தி, இந்தியாவின் தொன்மை யான பண்பாட்டில் பெருமைகொள்ளும்படி செய்த தோடு மட்டுமன்றி, அதிலுள்ள குறைபாடுகளைப் போக்க வேண்டியதன் தேவையையும் உணர்த்தின. இவ்வாறு தோன்றிய பண்பாட்டுப் பற்று தேசியத் திற்கு வித்திட்டது. ஆங்கில ஆட்சியின் விளைவாக உருவான ஒற்றுமை உணர்வு, நாட்டில் பரவிய மேலை நாட்டு அறிவு, ஆங்கில மொழி ஆகியவை இந்திய மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சுதந்திர அரசியல் உணர்வைத் தட்டியெழுப்பித் தேசியம் வலுப்பெற உதவிபுரிந்தன. இந்தத் தேசிய உணர்வின் சின்னமாக விளங்கியதுதான் கி.பி.1885-இல் ஆலன் ஆக்டேவியன் இயூம் (Allan Octavian Hume) என்ற ஓய்வுபெற்ற ஆங்கில ஆட்சிப்பணி அதிகாரியால் நிறுவப்பட்ட இந்தியத் தேசிய காங் கிரசு என்னும் அமைப்பாகும். இந்திய விடுதலை இயக்கத்தின் முதல் கட்டம் என்று கி.பி.1885 முதல் 1905 வரையிலான காலப் பகுதியைக் கூறலாம். இக் காலப்பகுதியில் இந்தியத் தேசிய காங்கிரசு சுரேந்திர நாத்து பானர்சி, தாதாபாய் நௌரோசி, பிரோசுசா மேத்தா, கோபாலகிருட்டிண கோகலே போன்ற மிதவாதிகள் தலைமையில் தலைமை ஆளுநர் குழு விரிவாக்கம் நிருவாகத்தில் இந்தியர்களுக்கு மேலும் பங்கு போன்ற வேண்டுகோள்களை மட்டுமே வலியுறுத்தியது. இவ்வேண்டுகோள்களையும் சட்ட அடிப்படையிலான அமைதியான முறையில் பெறவேண்டுமென்பதே அவர்கள் நோக்கமாகும். இரண்டாம் கட்டத்தில் 1906 முதல் 1919 வரை காங்கிரசில் தீவிரவாதிகளின் செல்வாக்குப் பெரு கியது. பால கங்காதர திலகர், இலாலாலசதிபராய், பிபின் சந்திரபாலர் போன்ற தீவிரவாதிகள் இந்தியா விற்குத் தன்னாட்சி உரிமை வேண்டிக் குரல் எழுப் பினர். மேலும், அமைதியான முறையில் விண்ணப் பங்கள் மூலம் ஆங்கில அரசாங்கத்திடமிருந்து எந்தச் சலுகையும் பெறமுடியாதென்பதையும், போராட் டங்கள், கிளர்ச்சிகள் மூலமே அது இயலும் என்பதை யும் அவர்கள் வலியுறுத்தினர். சூரத்து மாநாட்டில் 1907-ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. அயல் நாட்டுப் பொருள்களைப் புறக் கணித்தல், தேசியக்கல்வி போன்ற திட்டங்கள் கொண்ட ஒத்துழையாமை இயக்கத்தைத் தீவிர வாதிகள் செயற்படுத்த முனைந்தனர். காந்தியடி களின் ஒத்துழையாமைத் திட்டத்திற்கு இது ஒரு முன் னோடியாக அமைந்தது என்பது இங்கு நோக்கத்தக் கது. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஆங்கில அரசு கடுமையான அடக்குமுறை மூலம் ஒடுக்கியது. தீவிரவாதிகளிலேயே இளைஞர்கள் சிலர் வன் முறைப்புரட்சியின் மூலந்தான் ஆங்கில வல்லாட்சியை ஒழிக்கமுடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை யில், இரகசிய இயக்கங்கள் மூலம் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் பெரும்பாலான மக்களின் ஆதரவு இல்லாத காரணத்தினால் அந்தப் புரட்சி இயக்கம் (Terrorist Movement) வெற்றிபெற வில்லை.

அடுத்த காலப்பகுதி 1919முதல்1947 வரைஆகும். இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஓர் இன்றிய மையாத கட்டமாகும். இக்காலப் பகுதியில் விடுதலை இயக்கத்தின் தனிப்பெருந்தலைவராக விளங்கியவர் மகாத்மாகாந்தி ஆவார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட நீதியற்ற செயல் களை எதிர்த்து அமைதியான முறையில் போராடித் தாயகம் திரும்பிய காந்தியடிகள், கோபால கிருட்டிண கோகலேயின் மாணவராக, இந்தியத் தேசிய காங்கிரசின் ஒரு தொண்டராகச் சேர்ந்து, நாளடைவில் அக்கட்சியின் ஒப்புயர்வற்ற தலைவராக உயர்ந்து, ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் பல இயக் கங்களையும் போராட்டங்களையும் அமைதியான முறையில் நடத்தி, இந்தியா விடுதலை பெறக் காரண மாக இருந்தார். ஆங்கில ஆட்சியின் அடக்கு முறையை 1919-இல் சாலியன்வாலாபாக்கில் எதிர்த் தும், இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் இரௌலட்டுச் சட்டத்தைக் (Rowlatt Act) கண்டித்தும், துருக்கிக்கு ஆங்கில அரசு இழைத்த நீதி யற்ற செயலைக் கண்டித்தும் காந்தியடிகள் இந்தியா வில் தம் முதல் ஒத்துழையாமை இயக்கத்தைத் (Non-Co-operation Movement) தொடங்கினார். இவ்வியக்க மும் காந்தியடிகள் இந்தியாவில் பிற்காலத் தில் நடத்திய இயக்கங்களும் 'சத்தியாக்கிரகம்' என்று சொல்லப்பட்ட உண்மை, இன்னாசெய்யாமை ஆகிய இரு அடிப்படைகளில் உருவாக்கப்பட்ட இயக் கங்களாகும். அமைதிக் கோட்பாட்டிற்குப் புறம்பான சில நிகழ்ச்சிகள் சௌரி சௌரா (Chauri Chaura) என்ற இடத்தில் நடந்ததைத் தொடர்ந்து, 1922-இல் காந்தியடிகள் இவ்வியக்கத்தை நிறுத்திவிட ஆணை யிட்டார். காந்தியடிகள் 1922 முதல் 1927 வரை அரசியலிலிருந்து முற்றிலும் விலகி, நிருமாணத் திட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த பொழுது, சி.ஆர்.தாசு (C.R.Doss), மோதிலால் நேரு (Motilal Nehru) போன்றவர்கள் தலைமையில் சுயராச்சியக் கட்சிதோன்றி, சட்டமன்ற நடவடிக்கை களில் கலந்து கொள்ள வேண்டுமென்ற புதிய தொரு திட்டத்தை மக்கள் முன் வைத்தது. பல்வேறு

காரணங்களினால் இக்கட்சியின் செல்வாக்கு நீடிக்க வில்லை. காந்தியடிகள் 1929-இல் அரசப் பேராளர் இர்வின் பிரபுவைச் சந்தித்து, இந்திய அரசியல் சிக்கல் பற்றி நடத்திய உரையாடல்கள் பயன்தராத தால், 1930-இல் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். காந்தியடிகள் 1930-இல் தண்டி (Dandi) என்னுமிடத்தில் தொடங்கிய உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நாடெங்கிலும் மக்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டனர். ஆங்கில அரசு தீவிரமான அடக்குமுறையைக் கையாண்டு இவ்வியக்கத்தை ஒடுக்க முயற்சி செய்தது. இதற்கிடையே ஆங்கில அரசு சைமன் என்பாரின் தலைமையில் குழுவொன்றை நியமித்தும் வட்டமேசை மாநாடுகள் கூட்டியும் இந்திய அரசியல் சிக்கலுக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொண்டு, 1935-இல் ஒரு புதிய அரசியலமைப்புத் திட்டத்தை அளித்தது. அதன்படி இந்திய மாநிலங்களுக்கு முழுத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இந்தியத் தேசிய காங்கிரசு 1937-இல் அமைச்சரவை அமைத்தது. இரண்டாம் உலகப் போர் 1939-இல் தொடங்கியபோது இந்திய மக்களின் ஒப்புதலின்றி இந்தியா ஈடுபடுத்தப்பட்டதைக் கண்டித்து, நாடெங்கிலும் காங்கிரசு அமைச்சரவைகள் பதவியைத் துறந்தன. உடனடியாக ஓர் இடைக்காலத் தேசிய அரசு அமைக்கப்படவேண்டும் என்றும் தற்காப்பு உட்பட எல்லாப் பொறுப்புகளும் இந்தியர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் காங்கிரசு விடுத்த வேண்டுகோள்களை ஆங்கில அரசு ஏற்க மறுத்த தால், காந்தியடிகள் மீண்டும் தனி ஆள் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். பெரும் எண்ணிக்கையில் காங்கிரசுத் தொண்டர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். இந்தியாவில் போர் பற்றிய அச்சம் பெருகிக் கொண்டே இருந்த சூழ்நிலையில், இந்தியர்களுடைய ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெறும் நோக்கத்துடன், ஆங்கில அரசு சர் இசுடாபோர்டு கிரிப்சு என்னும் அமைச்சரை இந்தியாவுக்கு அனுப்பி, இந்தியாவின் அரசியல் சிக்கலுக்குத் தீர்வு காணும் பணியில் ஈடுபட்டது. கிரிப்சு அளித்த திட்டம் காங்கிரசுக்கோ முசுலிம்லீக்குக்கோ ஏற்புடையதாக இல்லை. எனவே காந்தியடிகள் தலைமையில் மீண்டும் காங்கிரசு, 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் தொடங்கியது. காந்தியடிகள், பண்டித சவகர்லால் நேரு, வல்லபாய் படேல் உட்படப் பல காங்கிரசுத் தலைவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். தலைவர்கள் இல்லாத நிலையிலும், நாடு தழுவிய இவ்வியக்கம் மக்களால் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டது. அமைதியான முறையில் நடக்க வேண்டுமென்று காந்தியடிகள் விரும்பியபோதிலும் கொலை, கொள்ளை, நாசவேலை போன்ற செயல்கள் இவ்வியக்கத்தை மாசுபடுத்தின. இதற்கிடையில் போரில் இங்கிலாந்து தோல்விமேல் தோல்வியை அடைந்து வந்தது. இச் சூழ்நிலையில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப்படைக்கலம் தாங்கிப் போரிடுவதன் மூலம் சுதந்திரத்தைப் பெற முடியுமென்று கருதிய சுபாசு சந்திரபோசு இந்தியாவிலிருந்து தப்பிச் சென்று செருமனி, சப்பான் போன்ற நாடுகளை அடைந்து, அந்நாடுகளின் உதவியுடன் இந்தியத் தேசிய இராணுவம் ஒன்றை அமைத்துச் சிங்கப்பூரில் ஒரு சுதந்திர அரசாங்கத்தையும் நிறுவினார். ஆனால் உலகப் போரில் நேசநாடுகள் இறுதியில் அடைந்த வெற்றி இம்முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது. புதிய தலைமை ஆளுநராகப் பதவியேற்ற வேவல் பிரபு 1945-இல் இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்கத் தயாரித்த திட்டம், சிம்லா மாநாட்டில் இந்திய அரசியல் தலைவர்களால் ஆய்வுசெய்யப்பட்டது. காங்கிரசுக்கும் முசுலிம்லீக்குக்குமிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகள் காரணமாக இம்முயற்சி தோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து, உலகப் போர் முடிவடைந்தவுடன் இங்கிலாந்தில் பதவிக்கு வந்த தொழிற்கட்சி அரசு அமைச்சரவைக் குழு ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பி, இந்தியாவின் அரசியல் கட்சித் தலைவர்களுடன் உரையாடுதலை நடத்தியது. காங்கிரசுக்கும் முசுலிம் லீகுக்குமிடையே இணக்கம் ஏற்படுத்த இக்குழுவினால் இயலவில்லை. இதற்கிடையே இங்கிலாந்து அரசாங்கம் 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்க முடிவு செய்துள்ளதாக அறிவித்து, அந்த ஆட்சி மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய மவுண்ட்டுபேட்டன் பிரபுவை அரசப் பேராளராக அனுப்பியது. முசுலிம் லீகின் பாகிசுத்தான் கோரிக்கையை ஏற்பதன் மூலந்தான் இந்திய சுதந்திரம் ஏற்படும்என்பதைஉணர்ந்தமவுண்ட்டுபேட்டன் பிரபு இந்தியப் பிரிவினைக்கு இந்தியத் தலைவர்களை இணங்க வைத்தார். சவகர்லால் நேரு தலைமையில் 1946-இல் ஓர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, அக்காலத்திலேயே ஓர் அரசியல் நிருணய அவையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியாவிற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணியும் தொடங்கியது. இந்தியா, பாகிசுத்தான் என்னும் இரண்டு சுதந்திர நாடுகள் 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் தோன்றின.

சுதந்திர இந்தியா: இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த பொழுதே இந்து-முசுலிம் வகுப்புக் கலவரங்கள் தோன்றி, நாட்டைப் பெரும் அல்லலுக்குள்ளாக்கின. காந்தியடிகள் கலவரங்கள் நடந்த பகுதிகளுக்கு நேரே சென்று அமைதியையும் ஒற்றுமையையும்




இந்தியா – விடுதலைக்குப்பின்

ஏற்படுத்தப் பாடுபட்டார். இந்து-முசுலிம் ஒற்றுமைக்கே தம் வாழ்வை அளித்த காந்தியடிகள் வகுப்புவாத வெறியன் ஒருவனால் 1948-ஆம் ஆண்டு சனவரி மாதம் 30-ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டது சுதந்திர இந்தியாவிற்கு ஒரு பேரிழப்பாகும். பிரிவினையின் விளைவாக இடம் பெயர்ந்து வந்த எண்ணற்ற அகதிகளுக்கு (ஏதுமிலிகள்) மறுவாழ்வு அமைத்துக் கொடுப்பது சுதந்திர இந்தியாவின் மற்றொரு பெரும் பணியாக அமைந்தது. பெரியதும் சிறியதுமான 562 சுதேச சமசுதானங்களையும் போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான கோவா, பாண்டிச்சேரி போன்ற பகுதிகளையும் இந்தியாவுடன் இணைக்கும் சிக்கல், அரசியல் அறிவும் அஞ்சா நெஞ்சமும் படைத்த உள்நாட்டுத்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேலினால் தீர்த்து வைக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவுக்கு ஒரு செம்மையான அரசியலமைப்பை உருவாக்கியது இந்தியத் தலைவர்களின் பெருஞ்சாதனையாகும். சுதந்திர இந்தியாவின் முதலமைச்சர் நேருவின் தலைமையில் இந்தியாவின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தி.நா.வா.

இந்திய வரலாறு (1950-ஆம் ஆண்டிற்குப் பின்): இந்திய வரலாற்றில் 1950-ஆம் ஆண்டு மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த ஆண்டில் தான் இந்திய அரசு, இந்திய அரசியல் ஆகியவை

ஒருதிடமான உருவத்தைப் பெற்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி இந்தியா முழுமையான சுதந்திரம் பெற்ற மக்களாட்சிக் குடியரசாக அமைக்கப்பட்டது. இந்தியக் குடிமக்களுக்கு நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை அளிப்பதும் மக்களிடையே சகோதர மனப்பான்மையை வளர்ப்பதும் தனி மனிதனுடைய மதிப்பையும் நாட்டினுடைய ஒற்றுமையையும் காப்பதும் குடியரசின் முக்கியக் குறிக்கோள்கள் என்பது அறிவிக்கப்பட்டது. கூட்டாட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இந்திய ஒன்றியத்தில் சேர்ந்த உறுப்பு நாடுகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. முதலாம் பிரிவில் முந்திய ஆங்கிலேய மாகாணங்களான அசாம், பீகார், மத்தியபிரதேசம் (மாகாணங்கள்), பம்பாய், சென்னை, ஒரிசா, உத்தரப்பிரதேசம் ஆகியவையும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாபும் மேற்கு வங்காளமும் அடங்கியிருந்தன. இரண்டாம் பிரிவில் முந்திய சிற்றரசுகளான ஐதராபாத்து, சம்மு-காசுமீரம், மைசூர், பாடியாலா, கிழக்குப் பஞ்சாபு சிற்றரசுகளின் ஒன்றியம்(PEPSU),இராசசுத்தான், சௌராசுட்டிரம் திருவாங்கூர், கொச்சி, விந்தியப் பிரதேசம் ஆகியவையும் அடங்கியிருந்தன. மூன்றாம் பிரிவில் தில்லி, ஆசுமீர், போபால், பிலாசுபூர், கூச்பீகார், குடகு இமாசலப் பிரதேசம், கட்சு, மணிப்பூர், திரிபுரா ஆகியவை அடங்கியிருந்தன. அந்தமான், நிகோபர் தீவுகள் நான்காம் பிரிவில் சேர்க்கப்பட்டன. ஆட்சி அதிகாரங்கள் மைய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவ்விருவகை அரசுகளுக்கிடையே ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துவைக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின் உட்பொருளை விளக்கிவைக்கவும் உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியா ஒரு கூட்டாட்சிக்குரிய தன்மைகளைப் பெற்றிருப்பினும் நெருக்கடிக் காலத்தில் மைய அரசு வலிமை உள்ளதாக இயங்குவதற்கு வேண்டிய வழி முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மூன்று வகை நெருக்கடிக் காலங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் எதிர்நோக்கப்பட்டிருக்கின்றன. 1. அயல் நாட்டிலிருந்தோ உள்நாட்டுக் கலவரத்தாலோ நாட்டுப் பாதுகாப்பிற்குப் பெரிய இடர் ஏற்படல், 2. மாநிலத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி ஆட்சி அமைக்க இயலாமை, 3. நிதி நெருக்கடி. முதல் இருவகை நெருக்கடிக் காலங்களில் அடிப்படை உரிமைகள் அப்போதைக்கு நிறுத்திவைக்கப்படும். சீனா 1962-ஆம் ஆண்டில் படையெடுத்தபோது நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. உள்நாட்டு நெருக்கடிக் காரணமாக 1975-ஆம் ஆண்டில் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டது. அரசியலமைப்புச் சார்ந்த நெருக்கடி நிலை பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நெருக்கடி நிலை குடியரசுத் தலைவரின் அறிக்கையின் வாயிலாக அறிவிக்கப்படும். அப்போது அமைச்சரவை ஆட்சிக்குப் பதிலாகக் குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருடைய ஆட்சி ஏற்படுத்தப்படும். மாநிலத்திற்கு வேண்டிய சட்டங்கள் நாடாளுமன்றம் வாயிலாகவோ குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டத்தின் வாயிலாகவோ இயற்றப்படும். பாதுகாப்புப் பற்றிய நெருக்கடிக் காலத்தில் கூட்டாட்சி முறை நிறுத்தி வைக்கப்படும். நிதி, சட்டம் ஆகிய துறைகளில் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மறைந்துவிடும். நிதி பற்றிய நெருக்கடிக் காலத்தின்போது மைய அரசு மாநில அரசுக்குத் தேவைப்பட்ட ஆணைகளைப் பிறப்பிக்கக்கூடும். நிதி நெருக்கடி நிலை இதுகாறும் இந்தியாவில் அறிவிக்கப்படவில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் ஆகியவற்றிற்குப் பொறுப்புள்ள அமைச்சரவை ஆட்சி நடைபெற வழிவகுத்துள்ளது. மையத்தில் குடியரசுத் தலைவரும் மாநிலத்தில் ஆளுநர்களும் ஆட்சித் தலைவர்களாக இருப்பினும், அவர்கள் யாவரும் அமைச்சரவையின் ஆலோசனைப்படியே நடக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

வாக்குரிமை வயதுவந்தோர் அனைவருக்கும் அளிக்கவும், சமயச் சார்பு அற்ற அரசு ஏற்படுத்தவும் அரசியலமைப்புச் சட்டம் வழிவகுத்துள்ளது.

இராசேந்திர பிரசாத்து 1950-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராகப் பணியாற்றி வந்தார். எசு. இராதாகிருட்டிணன் 1962-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பை வகித்துவந்தார். சாகீர் உசேன்(Zakir Hussain) 1967-இல் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1969-இல் இறந்த பிறகு வி.வி. கிரி அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய தேர்தலின்போது அப்போதைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி காங்கிரசு மேலிடத்தின் வேட்பாளருக்கு எதிராகக் கிரியை ஆதரித்தார். அதனால், காங்கிரசுக் கட்சி பிளவுபட்டது. பக்ருத்தீன் அலி அகமது 1974-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977-இல் பக்ருத்தீன் அலி அகமதுவின் இறப்பினை அடுத்துச் சனதா (Janata) கட்சியின் ஆதரவைப் பெற்ற என். சஞ்சீவிரெட்டி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது சனதாக் கட்சியின் ஆட்சி மையத்திலும் பல மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் 1982-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குடியரசுத் தலைவர் தேர்தலில் செயில்சிங்கு (Jailsingh) வெற்றி

பெற்றார். இவர் ஏழாம் குடியரசுத் தலைவரா வார். இவர் காங்கிரசு கட்சியின் ஆதரவைப் பெற்ற வர். இருமுறை முசுலிம்களையும் ஒருமுறை சீக்கிய ரையும் குடியரசின் 35 ஆண்டு வரலாற்றிலே குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்து, இந் திய அரசு சமயச்சார்பற்ற அரசு என்பதை வெளி யுலகிற்கு அறிவித்துள்ளது.

இந்தியா 1950-ஆம் ஆண்டில் குடியரசாக அமைக்கப்பட்ட போதிலும், அரசியலமைப்புச் சட் டத்தின்படி முதல் பொதுத் தேர்தல் 1951-52-ஆம் ஆண்டில்தான் நடத்தப்பெற்றது. அந்தப் பொதுத் தேர்தலின்போது முதல் முறையாக வயதுவந்தோர் அனைவரும் வாக்குரிமையைப் பெற்றனர். அவர் களது எண்ணிக்கை 17½ கோடியாகும். அது 1946-ஆம் ஆண்டு வாக்காளர் எண்ணிக்கையைவிட ஐந்து மடங்கு மிகுதியாகும். அத்தேர்தலை நடத்தப் பத்து இலட்சம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பெற்றனர். நாடு 3772 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தாழ்த்தப் பட்ட சமுதாயத்தினருக்காகச் சில இடங்கள் ஒதுக் கப்பட்டன. 2,00,000 வாக்குச் சாவடிகள் நிறுவப் பட்டன. முதல் முறையாகக் கல்லாதார் பலர் வாக்காளர்களாகச் செயற்பட்டமையால் பல்லாயிரக் கணக்கான வாக்குகள் செல்லுபடியாகவில்லை. மக்கள் அவையில் காங்கிரசுக் கட்சி 489 இடங்களுள் 364 இடங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற் றது. சவகர்லால் நேரு நாடாளுமன்றக் காங்கிரசு கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையால் இந்தியக் குடியரசின் முதல் தலைமை அமைச்சரா கப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்.

இரண்டாம் பொதுத் தேர்தல் 1957-ஆம் ஆண் டில் நடைபெற்றது. மக்கள் அவையில் 371 இடங் களைக் கைப்பற்றிக் காங்கிரசுக் கட்சி பொறுப் பைத் தக்கவைத்துக் கொண்டது. சவகர்லால் நேரு தொடர்ந்து தலைமை அமைச்சராகப் பணியாற்றி னார்.

மூன்றாம் பொதுத் தேர்தல் 1962-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. மீண்டும் காங்கிரசு அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிப் பொறுப் பைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டது. சவகர்லால் நேரு 1964-ஆம் ஆண்டில் காலமானார். அவருக்குப்பின் இலால்பகதூர் சாத்திரி தலைமை அமைச்சர் ஆனார். அவரும் 1967-ஆம் ஆண்டில் காலமானதால் இந்திராகாந்தி தலைமை அமைச் சராகப் பதவியேற்றார். அந்த ஆண்டிலேயே நான் காம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 25 கோடி மக்கள் வாக்களித்தனர். காங்கிரசுக் கட்சி மக்கள் அவையில் 283 இடங்களைப் பெற்றது. 17 மாநிலங்களில் 8 மாநிலங்களில் மட்டுமே அக்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிட்டியது. சில மாநி லங்களில் கட்சித் தாவல்கள் காரணமாக அரசுகள் நிலையற்ற தன்மையைப் பெற்றன. கூட்டு அரசு முறையும் கையாளப்பட்டது. மைய அரசும் மாநில அரசும் ஒரே கட்சியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த வரை மைய மாநில அரசுகளுக்கிடையே தொல்லை கள் ஏற்படவில்லை. அவை வெவ்வேறு கட்சிகளு டைய ஆட்சிப்பொறுப்பில் சிக்கியபோது மைய-மாநில அரசுகளுக்கிடையே நிலவவேண்டிய உறவு முறைகளைப் பற்றி விவாதம் மேலெழுந்தது. அவற்றை ஆராய்ந்து வரையறுப்பதற்கென ஆய்வுக் குழுக்கள் அமர்த்தப்படலாயின. இப்போது சர்க் காரியா குழு அதை ஆராய்ந்து வருகிறது.

மீண்டும் பொதுத் தேர்தல்கள் 1971-இல் நடத் தப்பட்டன. அதற்கிடையே அதிகாரப் போட்டியின் காரணமாகக் காங்கிரசுக் கட்சி பிளவுபட்டது. எனி னும் இந்திராகாந்தி தம்முடைய அரசியல் அறிவுத் திறன் காரணமாக மக்கள் அவையில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சிப் பொறுப்பைத் தக்க வைத்துக்கொண்டார். இத்தேர்தல் அவருடைய செல்வாக்கை நிலைநாட்டியது. மக்கள் அவையில் 349 இடங்களைப் பெற்று ஆட்சிப்பொறுப்பை மீண் டும் அவர் தக்க வைத்துக்கொண்டார். அவருடைய தேர்தல் செல்லுபடியாகாதென 1975-ஆம் ஆண்டில் அலகாபாத்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை யடுத்து நாட்டில் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டது. சகசீவன்ராம், இயசுவந்தராவ் சவான், எச்.ஆர். கோகலே, கே. பிரமானந்தரெட்டி ஆகியோரை உட் கொண்ட நெருக்கடிக் குழு ஆட்சியை நடத்தியது. ஆர்.எசு.எசு. போன்ற அமைப்புகள் தடைசெய்யப் பட்டன. குடியரசுத் தலைவர், தலைமைஅமைச்சர், சபாநாயகர் ஆகியோருடைய தேர்தல் நீதிமன்றத் தின் பரிசீலனைக்கு அப்பாற்பட்டதாகச் செய்வதற்கு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. தலைமை அமைச்சருக்குக் குற்றவியல், உரிமையியல் நட வடிக்கை ஆகியவற்றிலிருந்து விலக்களிக்க மேலும் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. நாடாளுமன்றத் தின் பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீடிக்கப்பட்டது. இதற்கிடையில் செயப்பிரகாசு நாராயண் (Jaya prakash Narayan) தலைமையில் மக்களாட்சிக்காப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. சனசங்கம், காங்கிரசு (ஓ) போன்ற கட்சிகள் இணைந்து சனதாக் கட்சியைத் தோற்றுவித்தன. இந்திரா காங்கிரசு 1977-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேர்தலில் தோல்வியுற்றது. இந்திரா காந்தியும் தோற்கடிக்கப்பட்டார். மக்கள் அவையில் சனதாக் கட்சி அறுதிப் பெரும்பான்மை யைப் பெற்று, மொரார்சி தேசாயின் தலைமையின்

கீழ் ஆட்சியை அமைத்தது. சனதாவின் ஆட்சி நீடிக்க வில்லை. அக்கட்சியினருக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக மொரார்சி தேசாய் பதவியைத் துறந்தார். இந்திரா காங்கிரசின் உதவியுடன் சரண்சிங்கு தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். நாடாளுமன்றத்தில் தமக்குப் பெரும்பான்மைப் பலம் ஏற்படுவதற்கு வழியில்லை என்பதைச் சரண் சிங்கு அறிந்தபோது மக்கள் அவையைக் கலைத்து விட்டுப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கருத்தைக் கூறினார். தலைமை அமைச்சரின் கருத்துப்படி, குடியரசுத் தலைவர் மக்கள் அவையைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்த ஆணை பிறப்பித்தார். பின்னர் 1980-இல் நடந்த தேர்தலில் இந்திரா காங்கிரசு பெரு வெற்றிபெற்றது. இந்திரா காந்தி மீண்டும் தலைமை அமைச்சரானார். அவர் 1984-இல் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மகன் இராசீவ் காந்தி கட்சியின் தலைமைப் பொறுப்பையும் தலைமை அமைச்சர் பொறுப்பையும் ஏற்றார். அவ்வாண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரசு பெரு வெற்றியடைந்தது. 35 ஆண்டுக் காலத்தில் நடந்த 8 பொதுத் தேர்தல்கள் ஆசியாவில் மக்கள் ஆட்சிக்கு வெற்றியைத் தேடித் தந்ததுடன் அதனை நிலைபெறவும் செய்தன.

இந்தியக் குடியரசு வரலாற்றில் மொழிவாரி மாநிலங்களை அமைப்பது ஒரு முதன்மைச் சிக்கலாக அமைந்துள்ளது. இந்தச் சிக்கல் சுதந்திரத்திற்கு முன்பே தோன்றியிருந்தது. புதிதாக 1936-இல் தோற்றுவிக்கப்பட்ட சிந்து, ஒரிசா மாநிலங்கள் மொழியின் அடிப்படையிலே அமைக்கப்பட்டனவாகும். மாநிலங்களை மொழியின் அடிப்படையில் திருத்தியமைக்க வேண்டும் என்று 1920-ஆம் ஆண்டிலிருந்தே காங்கிரசுக் கட்சி கோரியது. அதனுடைய மாநிலக் குழுக்கள் பெரும்பாலும் மொழியின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. ஆகவே அரசியல் நிருணய சபைக் கூட்டத்தில் இச்சிக்கல் எழுப்பப்பட்டது. இச்சிக்கலுக்கு முடிவு காண 1948-இல் தார் குழு (Dhar Commission) அமைக்கப்பட்டது. நிருவாகத் திறன் குறைந்துவிடும் என்பதாலும், மொழி காரணமாகப் புதியதொரு சிறுபான்மைக் கூட்டம் ஆங்காங்கே ஏற்படக்கூடும் என்பதாலும், தேசிய ஒற்றுமைக்கு இடர் விளையக்கூடும் என்பதாலும் அக்குழு மொழிவாரி மாநிலங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பரிந்துரை செய்யவில்லை. ஆனால்,மாநில மொழிகளோடு பல ஆசைகள் பிணைக்கப்பட்டிருந்தமையால்,மொழிவாரி மாநிலக் கோரிக்கையை மறுப்பதால், நாட்டு ஒற்றுமை காப்பாற்றப் படுவதற்குப் பதிலாகச் சீர்குலையக்கூடும் என்ற அச்சம் தேசியத் தலைவர்களிடையே தோன்றியது. ஆகவே சே.வி.ப. (JVP - சவகர்லால் நேரு, வல்லபாய்படேல், பட்டாபி சீதாராமையாவை உட்கொண்ட) குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவும் மொழிவாரி மாநில அமைப்பிற்கு ஆதரவளிக்க வில்லை. ஆந்திரர்களிடையே மொழிவாரி மாநில அமைப்புக் கொள்கைக்குப் பேராதரவு ஏற்பட்டிருந்தது. பொதுவுடைமைக் கட்சிக்கு உதவி செய்யும் அளவிற்கு அங்கு மொழிப்பற்றுத் தலைதூக்கியது. காங்கிரசுக் கட்சியில் பிளவும் ஏற்பட்டது. அதனால் மாநில அரசு பாதிக்கப்பட்டது. பொட்டி சிரீராமுலு உண்ணா நோன்பை 1953-இல் மேற்கொண்டார். அவரது இறப்பு ஆந்திராவில் பெருங்கிளர்ச்சியைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. ஏனைய இடங்களிலும் கிளர்ச்சிகள் தோன்றுதற்குரிய சூழ்நிலை உருவாகி வந்தது. ஆகவே மாநிலச் சீரமைப்புக்குழுவினை (S.R.C.) அரசு அமைத்தது. அதில் பசுல் அலி, பணிக்கர், குன்சுரு ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். நாட்டுப் பாதுகாப்பு, நாட்டு ஒற்றுமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பரிந்துரை செய்யுமாறு அக்குழுவினை அரசு கேட்டுக்கொண்டது. அக்குழுவின் பரிந்துரையை ஆய்ந்து அரசு 1956-ஆம் ஆண்டில் மாநிலச் சீரமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி மராத்தி பேசும் பகுதிகளைப் பம்பாயுடன் இணைத்து அம்மாநிலத்தை விரிவுபடுத்தியது. இவ்வேற்பாட்டினை மராத்தியரும் குசராத்தியரும் வரவேற்கவில்லை. சம்யுக்த மகாராட்டிர சமிதியும் மகாகுசராத்து சனதா பரிசத்தும் போராட்டத்தைத் தொடங்கின. அதன் விளைவாக 1960-இல் குசராத்து, மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

நாகர்கள் 1961-ஆம் ஆண்டில் தனி அரசு வேண்டிப் போராட்டம் நடத்தினர். இந்திய அரசு இராணுவத்தைக் கொண்டு போராட்டத்தை முறியடிக்க முற்பட்டது. இறுதியில் அரசு நாகர்களுக்குத் தனி மாநிலம் அமைக்க இசைவளித்தது.

பஞ்சாபில் தோன்றியிருந்த சிக்கல் வெறும் மொழிச் சிக்கலாக அமைந்திருக்கவில்லை. ஆங்கில ஆட்சிக்காலத்தில் சீக்கியர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவ்வாட்சி அழிந்தபோது அவர்களோடு வாழ்ந்திருந்த முசுலிம்கள் பாகிசுத்தானில் சேர்ந்தனர். ஆங்கிலேயர்களும் முசுலிம்களும்சென்றுவிட்டபிறகு இந்துக்கள் மட்டுமே அவர்களோடு இருக்கலாயினர். ஆகவே இந்துக்களுடன் மோத வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களுடைய தனித்தன்மையும் செல்வாக்கும் நிலையாக இருக்கும்பொருட்டு அவர்களுக்கெனத் தனி அரசியல்

அமைப்பு ஒன்றை உருவாக்கி இருந்தனர். அதுவே அகாலி தளமாகும். ஆங்கிலேய அமைச்சர் தூதுக்குழு 1946-இல் இந்தியா வந்தபோது பாகிசுத்தான் பற்றிய பேச்சு எழுந்தது. இந்தியா 1947-இல் விடுதலை பெற்றபோது அவர்களைத் தனிமுறையாக நடத்தவில்லை என்பதால் அவர்களிடையே கசப்புணர்ச்சி வளர்ந்துவந்தது. அது பஞ்சாபி சபா கோரிக்கையின் வாயிலாக வெளிப்பட்டது. ஆனால், அரசும் மாநிலச் சீரமைப்புக்குழுவும் அதனைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் 1957-ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவு அளித்தனர். அதற்குப் பதிலாக மொழிக் கொள்கை பற்றி உடன்பாடு ஒன்றைக் காங்கிரசுக் கட்சி அவர்களுடன் செய்துகொண்டது. ஆனால், விரைவில் மனக் கசப்பும் நம்பிக்கை இன்மையும் சீக்கியர்களிடம் வளர்ந்தன. தாரா சிங்கு உண்ணா நோன்பு மேற்கொண்டார். சீக்கியர்களுடைய குறைகளை ஆராய ஒருகுழுவை நியமிக்க அரசு ஒப்புக் கொண்டது. பதேசிங்கு 1965-இல் உண்ணா நோன்பை மேற்கொண்டார். அதன் விளைவாக, 1966-இல் மொழியின் அடிப்படையில் பஞ்சாபு மாநிலம் அமைக்கப்பட்டது. இந்தி பேசும் மக்களின் மன நிறைவாக அரியானா மாநிலம் அமைக்கப்பட்டது. சண்டிகர் பற்றிய சிக்கல், எல்லைத் தகராறுகள் போன்றவை சீக்கியர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தின. சீக்கியத் தீவிரவாதிகள் காலிசுத்தான் அமைக்கப் போராடி வருகின்றனர். பொற்கோயிலிலிருந்து தீவிரவாதிகள் நாட்டின் அமைதியைக் குலைக்கும் செயல்களில் ஈடுபட்டனர். பொற்கோயிலில் இந்திய இராணுவம் புகுந்ததால் சீக்கியர்களுடைய கசப்புணர்ச்சி மேலும் மிகுதியாயிற்று. தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி சீக்கியத் தலைவர் உலோங்காவாலுடன் உடன்பாடு செய்துகொண்டு, நாட்டு ஒற்றுமையையும் அமைதியையும் காப்பாற்றியுள்ளார்.

அசாம் மாநிலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. நேருவின் காலத்தில் ஒரு தனி மலைநாடு அமைக்கப்பட்டது. அனைத்துக் கட்சி மலைத் தலைவர்கள் மாநாட்டிலும் அசாம் மாநில மக்களோடும் மேற்கொள்ளப்பட்ட நீண்ட உரையாடல்களுக்குப் பிறகு 1969-இல் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. அதன்படி அசாம் மாநிலத்திற்குள் மற்றொரு மாநிலம் அமைக்கப்பட்டது. அதுவே மேகாலயாவாகும். மேகாலயாவிற்கு எனத் தனியே ஒரு சட்டமன்றமும் தனி அமைச்சரவையும் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் அசாம் மாநில அரசே தொடர்ந்து சட்டம், ஒழுங்கு ஆகிய துறைகளைக் கவனித்துவர வழிவகுக்கப்பட்டது.

இமாசலப்பிரதேசம், மணிப்பூர், திரிபுரா ஆகியவை 1972-இல் மாநிலங்களாக அறிவிக்கப்பட்டன. அந்த ஆண்டிலேயே மிசோரம் மைய ஆட்சியின் நேராட்சிப் பகுதியாக அமைக்கப்பட்டது. வடகிழக்கு எல்லைப் பகுதி அருணாசலப் பிரதேசம் எனப்பட்டது. சிக்கிம் 22-ஆம் மாநிலமாக 1972-இல் இந்திய ஒன்றியத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தியா 1947-இல் சுதந்திரம் பெற்றபோது பாண்டிச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம், சந்திரநாகூர் ஆகியவை பிரெஞ்சுக்காரர்களிடமும் கோவா, தியூ, தாமன் ஆகியவை போர்ச்சுகீசியர்களிடமும் இருந்தன. சுதந்திரம் பெற்ற பிறகு பிரஞ்சுக்காரர்களையும் போர்ச்சுகீசியரையும் தங்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தியப் பகுதிகளை விட்டுக் கொடுக்கும்படி இந்திய அரசு கேட்டுக் கொண்டது. சுதந்திரநாகூரில் வாக்கெடுப்பு 1949-இல் நடத்தப்பட்டு அது இந்திய ஒன்றியத்துடன் இணைந்தது. ஏனைய இடங்களில் வாக்கெடுப்புத் தள்ளிப் போடப்பட்டது. இந்தோசீனாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டபோது, இந்தியாவில் அவர்களுக்குச் சொந்தமான பகுதிகளிலும் கிளர்ச்சிகள் தோன்றின. அப்பகுதிகள் 1956-இல் முறையாக இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. அவை இந்திய நேராட்சிப் பகுதிகள் என அறிவிக்கப்பட்டன.

கோவா, தியூ, தாமன் பகுதிகளிலும் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இந்திய அரசும் போர்ச்சுகீசியர் ஆதிக்கத்தை அகற்றிவிட முடிவு செய்தது. போர்ச்சுகீசியர் அதற்கிசையவில்லை. எனவே இருநாடுகளுக்கிடையேயிருந்த அரசியல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இந்தியாவின் வழியாகப் போர்ச்சுகீசியர் தம்பகுதிகளுக்குச் செல்லுவது தடைசெய்யப்பட்டது. இறுதியாக1961-இல் இந்திய அரசு இராணுவத்தைப் பயன்படுத்தி 36 மணி நேரத்தில் போர்ச்சுகீசியப் பகுதியைக் கைப்பற்றியது. கோவா இந்திய நேராட்சிப் பகுதியாயிற்று.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பது அரசின் தலையாய பணியாக இருந்தது. மொழிவாரி மாநிலங்கள் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைத்து விடுமோ என்று ஐயம் இருந்தது. ஏனெனில் அம்மாநிலங்கள் மாநிலப்பற்றை வளர்த்துவிட்டன. அவை தத்தம் உள்ளூர் மொழியினை வளர்க்க எல்லா முறைகளையும் கையாண்டன. அதன் காரணமாகத் தேசிய ஒருமைப்பாடு குலையாதிருக்க மண்டல (Zonal) சபைகள் அமைக்கப்பட்டன. இந்திய ஒன்றியம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. வடமண்டலச் சபையில் பஞ்

சாபு, இராசசுத்தானம் காசுமீரம், சம்மு ஆகியவை இடம்பெற்றன. தென்மண்டலச் சபையில் ஆந்திரா, சென்னை (தமிழ்நாடு), கேரளம், மைசூர் (கர்நாடகம்) ஆகியவை இடம்பெற்றன. கிழக்கு மண்டலச் சபையில் மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, அசாம் ஆகியவையும், மேற்கு மண்டலச் சபையில் மகாராட்டிரம், குசராத்து ஆகியவையும் மத்திய மண்டலச் சபையில் உத்தரப்பிரதேசமும் மத்தியபிரதேசமும் இடம் பெற்றிருந்தன. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் அதன் முதலமைச்சரும் மற்றும் இரு அமைச்சர்களும் உறுப்பினர்களாகத் திகழ்ந்தனர். நீர்ப்பாசனத்திற்கு ஆறுகளின் நீரைப் பகிர்ந்து அளித்தல், மின்சக்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை வகுத்தல், மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காணல் போன்றவை மண்டலக்காவற் படையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. சிறுபான்மையினரின் நலனைக் காக்க ஆணையர் அமர்த்தப்பட்டனர். எனினும் இந்தச் சபைகள் மிகுதியாக எதையும் சாதிக்கவில்லை. எடுத்துக்காட்டாக, அசாமியர்களுக்கும் வங்காளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையின்மை தொடர்ந்து நீடிக்கிறது.

மொழிவாரி மாநிலங்கள் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினரை மட்டுமன்றி இந்தி மொழியையும் பாதித்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய மொழிகளை அரசுமொழி, இந்திய மொழிகள் எனஇருபிரிவாகப் பிரித்துள்ளது. இந்தியை அரசு மொழியாகத் தேர்ந்தெடுத்தனர். ஆங்கிலம் தொடர்ந்து 1965-ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப் பட்டுவரவும், அதன்பிறகு இந்தி மட்டுமே அரசு மொழியாக இருக்கவும் முடிவு செய்யப்பட்டது. தென்பகுதி மக்களும்வங்காளிகளும் இந்தியை மட்டும் அரசு மொழியாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அது இந்தி பேசும் மக்களுக்குச் சாதகமாக அமைந்து விடும் என்று எண்ணினர். ஆங்கிலம் தொடர்ந்து அரசு மொழியாக இருப்பதை இந்தி ஆதரவாளர்கள் விரும்பவில்லை. ஏனெனில், ஆங்கில மொழி கற்றறிந்தோர் மொழியாக விளங்குகிறதேயன்றி, பாமர மக்களின் மொழியாக விளங்கவில்லை. இந்தி மொழி மக்கள் தொகையில் 42-விழுக்காட்டினர் பேசும் மொழியாக இருப்பதால் அதைப் புறக்கணிப்பது மக்களாட்சிக் கருத்துக்கு ஒவ்வாதது என வாதாடினர். ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக 1963-இல் ஆட்சி மொழிகள் சட்டத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டது. இந்தியை ஆட்சி மொழியாக 1965-ஆம் ஆண்டில் ஏற்படுத்த வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் அறிவித்திருந்தமையால், அதைப் பற்றி அரசு ஓர் அறிக்கையை 1964-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வெளியிட்டது. மையச் சுற்றறிக்கை, ஆவணம் ஆகியவை இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இருக்கவேண்டும் என்றும், இந்தி மாநிலங்களுக்குள் பரிமாறிக்கொள்ளப்படும் கடிதங்களும் அம்மாநிலங்களுக்கும் மைய அரசுக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்தும் இந்தியில் இருக்க வேண்டும் என்றும், ஏனைய இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலத்தில் இருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் ஆட்சிமொழிபற்றிய செய்தியை நம்பாமையால் இந்திப் போராட்டம் மூண்டது. அதன் விளைவாக ஆட்சிமொழிகள் சட்டம் திருத்தியமைக்கப் பட்டது. ஆங்கிலம் தொடர்ந்து இணை ஆட்சி மொழியாக இருக்க வழிவகை செய்யப்பட்டது.

மொழி பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும் அளவிற்கு வளர்ந்ததோடல்லாமல் கல்விக் கொள்கையையும் மிகுதியாகப் பாதித்தது. தொடக்கக் கல்வி எல்லா இடங்களிலும் மாநில மொழியில் இருத்தல் வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இடைநிலைக் கல்வியும் உயர் கல்வியும் எம்மொழியில் இருத்தல் வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு தோன்றியது. முடிவில் மும்மொழித் திட்டம் (Three Language Formula) வெளியிடப்பட்டது. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியும், இந்தி பேசும் மாநிலங்களில் வேறு ஏதேனும் ஒரு மொழியும் கற்றுத்தரவேண்டும் என்று முடிவு செய்தனர். வடமாநிலங்களில் மாநில மொழியான இந்தி, ஆங்கிலம், சமசுகிருதம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. தென் மாநிலங்களில் மாநில மொழி, ஆங்கிலம், இந்தி ஆகியவை கற்பிக்கப்பட்டன. தி.மு.க. அரசு தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட போது இந்தி மொழி அகற்றப்பட்டது. அத்துடன் மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டது. பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாநில மொழியில் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட்டது. சில இடங்களில் ஆங்கிலம் தொடர்ந்து பயிற்று மொழியாக இருந்துவருகிறது.

மொழி மட்டுமன்றி, சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த பிரிவுகளும் நாட்டு ஒற்றுமை உருவாவதைப் பாதித்தன. வகுப்புச் சண்டைகள் நீடித்தன. முசுலிம் மாநாடு 1961-இல் கூடியது. கேரளாவில் முசுலிம் லீகு செல்வாக்குப் பெற்ற நிலையில் இருக்கிறது; வகுப்புணர்வு தொடர்ந்து வருவதை அது எடுத்துக் காட்டுகிறது. கேரளாவில் கிறித்தவர்கள் அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். சீக்கியர்களுள் சிலர் வகுப்புணர்வால் உந்தப்பட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அசாமில் அகதிகள் வருகை மாநில உணர்ச்சியை வளர்த்தது.

அண்மையில் 1985-ஆம் ஆண்டுத் தேர்தலில் கண பரிசத்தின் வெற்றி, மாநிலஉணர்ச்சியின் வலிமையை எடுத்துக்காட்டுகிறன. இந்து சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் பிளவுகளும் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தீங்கு விளைவித்துள்ளது. குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையும் பிற்பட்டவர்களின் நிலையும் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

பிரிவினைச் சக்திகளையும் போக்குகளையும் முறியடிக்க 1961-ஆம் ஆண்டில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது. வகுப்பு வாதம் மொழிச் சிக்கல்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. புதிய அனைத்திந்தியப் படைத் துறை சாராத அரசுப் பணிகள் நிறுவப்பட்டன. பொது எழுத்து முறை மேற்கொள்ளப்பட்டது. பிரிவினைக் கொள்கைக்குத் தடை விதிக்கப்பட்டது. மாணவர்களும் மற்றவர்களும் தேச ஒருமைப்பாட்டைக் காக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தேசிய ஒற்றுமைக்கு மட்டுமன்றித் தேசியப் பாதுகாப்பிற்கும் 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல சோதனைகள் ஏற்பட்டன. வட எல்லையில் சீன-இந்திய எல்லைத் தகராறு காரணமாக 1962-ஆம் ஆண்டில், முறைப்படி அறிவிக்கப்படாத சீன-இந்தியப் போர் நடைபெற்றது. இப்போரில் சீனர்கள் இந்தியப் படைகளைப் புறங் கண்டனராயினும், இறுதியில் தங்கள் படைகளை இந்தியாவிலிருந்து தம் விருப்பப்படி விலக்கிக் கொண்டனர். வடக்கில் நடுநிலைப் பகுதி உருவாக்கப்பட்டது. எல்லைத் தகராறுகள் காரணமாக 1965-ஆம் ஆண்டில் இரண்டாம் பாகிசுத்தான் போர் நடைபெற்றது. இப்போரில் இந்தியா வெற்றி பெற்றது. ஐக்கிய நாடுகளின் தலையீட்டின் விளைவாகப் போர் நிறுத்தப்பட்டது. இருநாடுகளும் போர் நிறுத்தக் கோட்டிற்கு அப்பால் தங்கள் படைகளை விலக்கிக் கொண்டன. சோவியத்துஉருசியா இருநாடுகளுக்கிடையே அமைதி நிலவப் பெரும் பங்கேற்றது. தாசுகண்டில் அமைதி மாநாடு 1966-ஆம் ஆண்டில் நடந்தது. மீண்டும் 1971-ஆம் ஆண்டில் மூன்றாம் பாகிசுத்தான் போர் தொடங்கியது. கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் பாகிசுத்தான் அரசுக்கு எதிராகப் போராடினர். பாகிசுத்தான் அரசின் வன்முறைச் செயல்கள் பலரை இந்தியாவிற்கு அகதிகளாகத் துரத்தின. அதனால் இந்தியாவின் பாதுகாப்பிற்கும் பொருளாதாரத்திற்கும் ஊறு ஏற்பட்டது. எனவே கிழக்குப் பாகிசுத்தான் மக்களுக்கு உதவியாக இந்தியா படை அனுப்பிற்று. கிழக்குப் பாகிசுத்தான் பிரிவினை எய்தியது; அதனால் பங்களாதேசம் உருவாயிற்று. இந்திய அரசின் வங்காள இராணுநடவடிக்கை மேற்குப் பகுதியிலும் போர் மூளக் காரணமாகியது. இப்போரிலும் இந்தியா வெற்றி கண்டது.

உலக அமைதிக்கு 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா அருந்தொண்டு ஆற்றியுள்ளது. அதற்குச் சிறப்புக் காரணம் சவகர்லால் நேருவின் அயல் நாட்டுக் கொள்கையாகும். இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அமைதி இன்றியமையாதது என்பதை அவர் உணர்ந்தார். இந்தியா மட்டும் அமைதிக் கொள்கையைக் கடைப்பிடித்தால் போதாது; ஏனைய நாடுகளும் அமைதியை விரும்பினாலன்றி உலகில் அமைதி ஏற்பட வழியில்லை என்று அவர் உணர்ந்தார். ஆசிய மாநாட்டை 1949-ஆம் ஆண்டில் கூட்டி இந்தோனீசியாவில் அமைதி ஏற்பட முயற்சி செய்தார். கொரியாப் போரின்போது ஐ.நா. வுடன் சேர்ந்து அங்கு அமைதி நிலவப் பாடுபட்டார். போர்க் கைதிகள் சிக்கலுக்கு முடிவு காண இந்தியத் தளபதி அனுப்பப்பட்டார். இந்தோ-சீனாவில் ஏற்பட்டிருந்த போரை நிறுத்த இந்தியா பாடுபட்டது. இப்போர் முடிவுறக் காரணமாக இருந்த செனீவா உடன்பாடு ஏற்பட இந்தியா காரணமாக இருந்தது. சூயசுக் கால்வாய்ப் பகுதியில் 1956-இல் நடந்த ஆங்கிலேய பிரெஞ்சு ஆக்கிரமிப்பைத் தடுக்க, ஐ.நா. விற்கு இந்தியா உதவி செய்தது. காங்கோவிலும் சைப்ரசிலும் அமைதியைக் காக்க நிறுவப்பட்ட பன்னாட்டுப் படைக்கு இந்தியா தனது வீரர்களை அனுப்பி வைத்தது. இந்தியா 1974-இல் அணு ஆயுதத்தைத் தயாரித்த போதும் அணுச்சக்தியை அமைதிப் பணிக்குப் பயன்படுத்த வேண்டும் என்று வாதாடி வருகிறது. இனவெறிக் கொள்கைக்கு (Apartheid) கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஐ.நா.வில் எல்லா நாடுகளும் சேர வேண்டும் என்பது இந்தியாவின் கருத்து. எனவே செஞ்சீனாவை ஐ.நா. வில் சேர்த்துக் கொண்டால்தான் உலகில் அமைதி நிலைநாட்டப்படும் என்று வலியுறுத்தியது. இசுரேல் நாட்டுக்கும் அராபியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் இந்தியா அராபியர்களுக்கு ஆதரவளித்து ஆதிக்க வெறியை முழுமையாக எதிர்த்தது. வியட்நாம் போரில் அமெரிக்கா தலையிடுவதையும் டிகோ கிரேசியாவில் அமெரிக்கர் தம் கப்பல் தளத்தை அமைப்பதையும் இந்தியா கடுமையாக எதிர்த்தது. பாண்டுங்கு மாநாட்டில் 1954-இல் இந்தியா பெரும் பங்கேற்றுப் பஞ்சசீலக் கொள்கைக்கு ஆதரவளித்தது. சோவியத்து உருசியா 1956-இல் அங்கேரியின் விவகாரத்தில் தலையிட்டு இராணுவம் கொண்டு தாக்கியதைக் கண்டும் வாளாமை மேற்கொண்ட இந்திய அரசு, தனது கூட்டுசேராக் கொள்கையினின்




இந்தியா – மாநிலங்கள்

றும் விலகிற்று என்றும் கருதலாம். ஆப்கானிசுத் தானத்தை 1978–இல் உருசியப் படைகள் தாக்கிச் செயலாற்றியதையும் இந்திய அரசு கண்டிக்காதது மேற்கூறிய கருத்துக்குச் சற்று ஆதரவு அளிக்கும்.

உலக நாடுகள் இரு பிரிவாகப் பிரிந்து ஒன்றை ஒன்று எதிர்த்து வருவதால், உலக அமைதி சீரழிகிறது என்னும் கருத்தால் இந்தியா கூட்டுசேராக் கொள்கையை அறிவித்தது. அதன் விளைவாக மூன்றாம் உலகம் ஒன்று ஏற்பட்டுவிட்டது. கூட்டுசேராக் கூட்டணி நாடுகளின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. கூட்டுசேரா நாடுகளின் மாநாடு இந்தியாவில் 1985–இல் நடைபெற்றது. இந்தியா அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றது. தென் ஆசிய நாடுகளின் மண்டலக் கூட்டுறவுச் சங்கம் (S.A.A.R.C.) 1985–இல் அமைக்கப்பட்டது. அதில் இந்தியா சேர்ந்துள்ளது. அதே காலத்தில் 1971–இல் இந்தியா உருசியாவுடன் நட்புறவு உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டது. பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார நிலையை உருவாக்க 1950–ஆம் ஆண்டில் திட்டக் குழு அமைக்கப்பட்டது. நாட்டு வாய்ப்பு வளங்களைச் சமமாகவும் மிக்க பயனுள்ளனவாகவும் பயன்படுத்துவதே அதன் நோக்கமாகும். இதுவரை ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் 1951 – ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்காலத்தில்

2378 கோடி உரூபாய்க்குத் திட்டம் வகுக்கப்பட்டது. வேளாண்மை, மின்சக்தி வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி ஆகியவற்றிற்கு முதலிடம் வழங்கப்பட்டது. அத்திட்டத்தின் பயனாகத் தானிய உற்பத்தி 20 விழுக்காடு உயர்ந்தது. அறுபது இலட்சம் ஏக்கர் நிலம் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தேசிய வருமானம் 18 விழுக்காடு உயர்ந்தது. இரண்டாம் திட்டம் 1956-இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொழில் வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் இடமளிக்கப் பட்டது. கனரகத் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புப் பெருக்கம், சமதருமச் சமுதாயம் அமைத்தல் ஆகியவை இதன் சீரிய நோக்கங்களாகும். ஆவடிக் காங்கிரசின் (1955) முடிவிற்கேற்பப் பொதுத் துறையில் பல பெரிய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. புதிதாக 80 இலட்சம் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டம் நிறைவேற 7900 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் 1966-இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக 7500 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. உணவுத் தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல் இதன் நோக்கமாகும். நாட்டு வாய்ப்பு வளங்கள் போதுமானவையாக இராமையால் அயல் நாட்டு உதவியை நாட வேண்டியதாக இருந்தது. பன்னாட்டுப் பணநிதியிலிருந்தும் கடன் வாங்க வேண்டியதாயிற்று. இத்திட்டத்திற்கு 12727 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. நான்காம் திட்டம் 1966-இல் வரையறுக்கப்பட்டது. பொருளாதார நிலைமைகள் காரணமாக ஓராண்டுத் திட்டங்கள் 1969 வரை தீட்டப்பட்டன. நான்காம் திட்டத்திற்கு 25000 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. கிராம வளர்ச்சித்திட்டம், வேலைவாய்ப்பு, கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி, சத்துணவு, குடிசை மாற்றுத்திட்டம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஐந்தாம் திட்டம் 1974-இல் நடைமுறைப்படுத்தப்பட்டு 32000 கோடி உரூபாய்க்குத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆறாம் திட்டம் 1979-இல் வகுக்கப்பட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 1985-இல் வடிவம் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட திட்டங்களின் விளைவாக வேளாண்மை வளர்ச்சியுற்றது. வேளாண்மைக்குப் புதுமையான கருவிகள் பயன்படுத்தப்பட்டன. உரத் தொழிற் சாலைகள் பலவற்றை நிறுவி உழவர்களுக்குப் போதுமான உரத்தை அளித்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாசன வசதிகளை மேன்மைப் படுத்தப் பல அணைகள் கட்டப்பட்டன. நிலச் சீர்திருத்தம், கூட்டுறவு முறை ஆகியவற்றின் வாயிலாக வேளாண்மைக் கூட்டமைப்புச் சீர்திருத்தி அமைக்கப் பட்டது. அவற்றுள் முக்கியமானவை சமீன்தாரிமுறை ஒழிப்பும் நில உச்சவரம்புச் சட்டமும் ஆகும். குடியானவர்களுக்குக்கடன் வழங்குவதற்கும், வேளாண்மைப் பொருள்களை விற்பதற்கும் கூட்டுறவு முறை பயன்படுத்தப்பட்டது. வேளாண்மை வளர்ச்சிக்காகச் சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் தேசிய விரிவாக்கப் பணியும் தொடங்கப்பட்டன. அதையடுத்துப் பஞ்சாயத்து அரசு அமைக்கப்பட்டது. வேளாண்மை வளர்ச்சிக்காக ஆய்வுக் கூடங்களும் வேளாண்மைக் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டுள்ளது. தனியாரும் அரசும் சேர்ந்து இப்பணியில் சீரிய பணியாற்றியுள்ளனர். தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மின் சக்தியைப் பெற அணுச்சக்தி பயன்படுத்தப்பெற்றுவருகிறது. அவற்றுள் ஒன்று கல்பாக்கம் அணுச்சக்தி ஆலை நிறுவனமாகும். தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாறுதல்களின் விளைவாக, வணிகம் பெருகியுள்ளது. இருப்புப்பாதை, சாலை, கப்பல், விமானம் ஆகிய போக்குவரத்துச் சாதனங்கள் புதுமை மயமாக்கப்பட்டுள்ளன. இவையாவும் அரசின் நேரடிக் கவனிப்புக்கு உட்படுத்தப்பெற்றுள்ளன. வங்கிகளைத் தேசியமயமாக்குவதன் மூலமாக எளிய மக்களுக்கு அவை பயன்தரத் தக்க அளவில் செயற்பட்டு வர வழிவகுக்கப்பட்டுள்ளது. நாட்டு நாணய முறை தசாம்ச முறையில் மாற்றியமைக்கப்பட்டது. புதிய நாட்காட்டி 1957-இல் நடைமுறைக்கு வந்தது. இது சக ஆண்டை (Saka Era) அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தியச் சமுதாயத்தில் 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவதாக, தீண்டப்படாதவர்களின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. தீண்டாமைக் குற்றங்கள் சட்டம் 1955-ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன் விளைவாக அவர்கள் பொதுக்கோயிலுக்கு எவ்வகைத் தடையுமின்றிச் செல்ல வழி ஏற்பட்டது. பணக்கொடை, ஒதுக்கீடு போன்றவற்றின் வாயிலாக அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பெண்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒருதார மணம், கலப்பு மணம், மணவிலக்கு, பெண்களுக்குச் சொத்துரிமை போன்றவற்றின் வாயிலாக அவர்களுடைய நிலை செம்மைப்படுத்தப் பெற்றுள்ளது. சமூக நல வாரியங்கள் அவர்களுக்குத் தக்க உதவியைச் செய்து வருகின்றன. பின்னர் 1976-இல் வகுக்கப்பட்ட இருபது அம்சத் திட்டம் கொத்தடிமைகளுக்கும் பெண்களுக்கும் வாழ்வளிக்கத் துணை செய்தது.

கல்வித் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டம் 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவசக் கல்வி வழங்க வழி வகுத்துள்ளது. பல கல்விக் குழுக்கள்

நிறுவி அவற்றின் பரிந்துரைக்கேற்பக் கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை தொடக்கக் கல்விக் குழு, இடைத்தர மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் குழு (1958), இராதாகிருட்டிணன் குழு, இலட்சுமணசாமிக் குழு, கோத்தாரிக் குழு ஆகியவையாகும். பல்கலைக் கழகக் கல்வியின் மேம்பாட்டிற்காகப் பல்கலைக் கழக மானியக் குழு அமைக்கப்பட்டுள்ளது. விடுதலை பெற்ற 38 ஆண்டுகளில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை வியக்கத்தக்க அளவு பெருகியுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கையும் கூடுதலாகியுள்ளது. தொழிற் கல்வி பெரிதும் வளர்ந்துள்ளது.

அறிவியல் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அறிவியல், தொழில் ஆராய்ச்சி ஆகிய நிறுவனங்களின்கீழ்ப் பல தேசிய ஆய்வுக்கூடங்களும் கல்வி நிறுவனங்களும் இயங்குகின்றன. அணுச் சக்திக் குழு அணு ஆராய்ச்சியை வளர்த்து வருகிறது. அப்சரா என்ற அணு உற்பத்திச் சாதனம் 1956-இல் செயற்படத் தொடங்கியது. மின் சக்தியைப் பெருமளவில் உற்பத்தி செய்யக் கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்திரா காந்தி அம்மையார் அணுச்சக்திக் குழுவின் தலைவியாக இருந்த போது, 1974-இல் இராசசுத்தான் மாநிலம் பொக்கரான் பாலைநிலத்தில் அணுக்குண்டு வெடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. விண்வெளி ஆராய்ச்சியிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆரியபட்டா, உரோகிணி போன்ற விண்வெளிக் கப்பல்களை இந்தியா செலுத்தியுள்ளது. இராக்கேசு சர்மா விண்வெளிப் பயணத்தை 1984-இல் மேற்கொண்டார். இன்சாட்டு (Insat) போன்ற செயற்கைக் கோள்கள் இத்துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இலக்கியத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 'சாகித்திய அகாடமி' (1954) இலக்கிய வளர்ச்சிக்கு உதவி செய்து வருகிறது. தேசிய நூல்கள் வாரியம் (National Book Trust) நல்ல இலக்கியங்களை உருவாக்குகிறது.

கலை வளர்ச்சிக்குப் பேராதரவை அரசு நல்கி வருகிறது. சங்கீத நாடக அகாடமி 1953-இலும் இலித கலா அகாடமி 1954-இலும் அமைக்கப்பட்டன. இவை சிறந்த கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் விருதுகள் வழங்கியும் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தும் வருகின்றன. திரைப்படங்கள் தயாரிப்பும் விரைவாக முன்னேறி வருகிறது. பன்னாட்டுத் திரைப்பட விழா இதற்குப் பேருதவியாக இருக்கிறது.

விளையாட்டுத் திறனை வளர்க்கப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் பல விளையாட்டுப் போட்டிகள் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க அர்ச்சுனாவிருது வழங்கப்பட்டு வருகிறது. ஆசிய விளையாட்டுப் போட்டியை 1982-இல் யாவரும் வியக்கும் வண்ணம் இந்தியா நடத்திக் காட்டியுள்ளது. தி.அர.இரா.

துணை நூல்கள்:

**Sathianathaier, R. and Vasudeva Rao, T.N.**, History of India, Vol. III, S. Viswanathan and Co., Madras, 1982.

**Nilakanta Sastri, K.A. and Srinivasachari, G.**, Advanced History of India, Athid Publishers, New Delhi, 1982.

**Gopal, Sarvepalli, Jawaharlal** Nehru-An Anthology, Oxford University Press, Delhi, 1983.

**Majumdar, R.C.** & others, An Advanced History of India, Macmillan, Madras, 1982.

**Majumdar R.C.** & others, History and Culture of the Indian People, The Delhi Sultanate, Bharatiya Vidya Bhavan, Bombay, 1980.

**Majumdar, R.C.**, British Paramountcy and Indian Renaissance (The History & Culture of the Indian People), Vol. I & II, Bharatiya Vidya Bhavan, Bombay, 1981.

**Lane-poole**, S., Medieval India under Muhammaden Rule London, 1903.

**Prasad, Iswari**, History of Medieval India, Allahabad, 1950.

**இந்தியா பங்களாதேச எல்லை ஒப்பந்தம், 1974:** இந்தியா, பங்களாதேச நாடுகளுக்கிடையில் 1974 மே 14-இல் எல்லை ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த இரு நாடுகளுக்கிடையில் பொருளாதார அடிப்படையில் பலபொருளாதாரத் திட்டங்கள் (Projects), நிதிநிலை உறவுகள் தொடர்பான ஒப்பந்தங்கள் நன்முறையில் ஏற்பட்டபிறகு, எல்லை ஒப்பந்தம் நட்புறவுச் சூழ்நிலையிலும் ஒருவருக்கொருவர் கொள்ளும் நம்பிக்கையின் அடிப்படையிலும் ஏற்பட்டு, இரு நாடுகளுக்கிடையில் உள்ள அரசியல் உறவு வலுவாக்கப்பட்டது.

பெருபாரி பகுதிகள் (Berubari Union) இந்தியாவோடு இருக்கப் பங்களாதேசம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஒப்புக்கொண்டது. வகுக்கப்பட்ட எல்லைகளின் அறிவிப்பு 1974 மே 19-இல் வெளியிடப்பட்டது. தாகாராம் (Dhaharam) பகுதியும் அங்கார் போடா (Angarpota) பகுதியும் பங்களாதேசத்தோடு இருக்க இந்த ஒப்பந்தத்தின்மூலம் இந்தியா ஒப்புக்கொண்டது. தின் பிகா (Tin Bigha) பகுதியானது 178 மீட்டர் நீளமும் 85 மீட்டர் அகலமும் கொண்டது. தாகாராம் பகுதியினையும் பான்பாரி மொசா (Panbari Mouza) பகுதியினையும் இணைக்கும் டின் பிகா பகுதியினை, இந்தியா பங்களா தேசத்திற்குக் காலவரையறையின்றிக் குத்தகைக்கு விட்டுவிட ஒப்புதல் அளித்தது.

இந்த ஒப்பந்தத்தின்மூலம் பங்களாதேசம் விடுதலை சமயத்தில் இருந்த எல்லைச் சிக்கல்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டன. இந்தியர்கள் வாழும் பகுதிகள் இந்தியாவுக்கும் பங்களாதேச நாட்டினர் வாழ்ந்த பகுதிகள் பங்களாதேசத்திற்கும் கொடுக்கப்பட்டு, இரு நாடுகளுக்கும் உள்ள எல்லைச் சிக்கல்கள் எளிமையாகத் தீர்க்கப்பட்டன. 'எல்லைப்புற மக்கள் இன்னல்களுக்குள்ளாகாமல், சிக்கல்கள் தீர்க்கப்படத் தாக்காவும் (Dhaka) புதுதில்லியும் ஆர்வம் காட்டின. இணைப்புப் பகுதிகள் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையேயும் எந்தவிதமான நட்ட ஈடும் தரத் தேவையில்லை என்று இருநாடுகளும் இந்த ஒப்பந்தத்தின்மூலம் உறுதி செய்துகொண்டன.

எல்லைப் பிரதேசப் பகுதிகள் 1974-இல் முடிவாக வரையறுக்கப்பட்டன. வரையறுக்கப்படாத எல்லைகள் பற்றி 1974 எல்லை ஒப்பந்தம் முடிந்த 6 மாதத்திற்குள் தீர்த்துவிட இருநாட்டின் பேராளர்கள் முடிவெடுக்க ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டது. இணைக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அந்தந்த நாடுகளின் குடிமக்கள் என ஒப்பந்தத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. குன்றுப் பகுதிகள் இருநாடுகளின் எல்லைப் பகுதிகளில் உள்ளன. எந்தெந்த எல்லைப்பகுதிகளில் குன்றுகள் குறிக்கப்படல் வேண்டுமென இராட்கிளிப்புத் தீர்ப்பின் (Radcliffe Award) அடிப்படையில் குறிக்கப்பட ஒப்பந்தம் வகை செய்தது காகர் கால் (The Hakar khal) பிரதேசத்தின் எல்லைகள் 1958-இல் நேரு-நூன் (நூன் என்பவர் மேற்குப் பாகிசுத்தானத்தின் பேராளர்) ஒப்பந்தம் அடிப்படையில் வரையறுக்கப்பட்டது. இருநாடுகளுக்கிடையே ஓடும் ஆறுகளின் நடுப்பாகமே எல்லைகள் என வரையறுக்கப்பட்டு, ஒப்பந்தத்தின் மூலம் இருநாடுகளும் ஒத்துக்கொண்டன.

முகுரி ஆற்றின் (Muhuri River) கரைப்பகுதிகளைக் கட்ட இருநாடுகளும் ஒத்துக்கொண்டன. பெலோனியாப் பகுதியில் (Belonia Sector) ஓடும் முகுரி ஆற்றிலும் (Muhiri River), பெனினி ஆற்றிலும் (Fenini river), சிட்டகாங்கு குன்றுகள் பகுதியில் உள்ள பயான் அசலாங்கு (Bayan Asalong) ஓடையிலும் இலதிடில்லாடுமாபாரி (Lathitilla-Dumabari Area) பகுதியில் ஓடும் புட்னி சாரா ஆற்றிலும் (Putni Chara River) ஆறுகளின் நடுப்பகுதியே இருநாடுகளுக்கும் பொதுவான எல்லைப்பகுதிகள் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டது. பகல்பூர் இருப்புப்பாதைத் தண்டவாளப் பகுதி (Bhagalpur Railway line) பற்றி எல்லைக்கோடுகளை வரையறுத்து, கிழக்குப் பகுதியில் இரயில்வே தண்டவாளப் பகுதியின் முடிவிலிருந்து கிழக்கே 25 மீட்டருக்கு அமைந்துள்ள பகுதியே எல்லையென ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டது.

இருநாடுகளின் எல்லைப்பகுதியில் இருக்கும் மாவட்டங்களின் எல்லைப்பகுதி பற்றி 1915, 1918-இல் ஏற்பட்ட 'மாவட்டங்களின் எல்லை ஒப்பந்தத்தின்' முடிவுகள் ஒத்துக்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில், சிப்புர்-கௌராங்கலா (Sibpur-Gaurangala Sector) பகுதியும் திரிபுரா-நவகாளி-கோமிலா பகுதியும் (Tripura-Noakhali Comilla Sector) வரையறுக்கப்பட்டு, ஒப்பந்தத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. பியானிபசார்-கரிம்கானி பகுதியில் (Beanibazar-Karimgani Sector) வரையறுக்கப்படாத பகுதிகளின் எல்லைகள் குறிக்கப்பட்டு, உம்பதி (Umpati) கிராமம் இந்தியாவோடு இணைக்கப்பட்டது.

தா.எ.

**இந்தியாவில் தச்சுக்காரர்**: நெதர்லாந்து எனப்படும் ஆலந்து நாட்டுமக்கள் தச்சுக்காரர் (The Dutches) எனப்பட்டனர். நெதர்லாந்து இசுபெயின் நாட்டினால் ஆளப்பட்டு வந்தது. இசுபெயின் மன்னர் இரண்டாம் பிலிப்பு என்பாரின் ஆட்சிக்காலத்தில் சமூக, சமய, பொருளாதாரக் காரணங்களினால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் இசுபெயினை எதிர்த்து நெதர்லாந்து கலகம் செய்தது. இரண்டாம் பிலிப்பு இவர்களின் சுதந்திர வேட்கையை அடக்கியொடுக்க முயன்றும் பயனளிக்காமல் போகவே, இவர்கள் சுதந்திரம் பெற்றனர். வெற்றிபெற்ற இவ்வேளையில்தான் ஆம்சுடர்டாம் என்னும் நகரைச் சார்ந்த வணிகர்கள் கி.பி. 1592-ஆம் ஆண்டில் தச்சு வணிகக் குழுவைத் தொடங்கினார்கள். மூன்றாண்டுகளுக்குப் பின்னர்க் (1595-இல்) கார்னிலியசு ஊட்மன் (Cornelins Houtman) என்னும் தச்சுக்காரர் இந்தியாவுக்குப் புறப்பட்டுச்சென்று, பெரும் மதிப்புமிக்க பொருள்களுடன் கி.பி. 1957-இல் தாயகம் திரும்பினார்.

தச்சுக்காரர் இந்தியத்தீவுக் கூட்டத்தில் தம் வணிகத்தைத் தொடங்கிப் பெரும் வெற்றி கண்டார்கள். இவர்களின் வெற்றியால் பேரார்வம் கொண்ட இன்னும் பல தச்சுக்காரர் பல்வேறு வணிகக் கழகங்களைத் தொடங்கி, இந்தியத் தீவுகளுடன் வணிகம் செய்ய முற்பட்டனர். இவ்வாறு இந்தியாவுடன் வணிகம் செய்யத் தொடங்கப்பட்ட அனைத்து வணிகக் குழுக்களும் கி.பி.1602 ஆம் ஆண்டில் ஒன்றாக இணைக்கப்பட்டுத் தச்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு என்னும் பெயரில் வணிகக் கழகம் ஒன்று உருவாக்கப்பெற்றது. இக்கழகத்திற்குப் பட்டயம் ஒன்றும் வழங்கப்பட்டது. கீழைநாட்டு வணிகத்தைத் தொடர இக்கழகத்திற்குத் தச்சு அரசு முற்றுரிமை வழங்கியது. அதனுடன் போர் உடன்படிக்கை செய்து கொள்ளல், புதிய இடங்களைக் கைப்பற்றுதல், கோட்டைகளைக் கட்டிக் கொள்ளல் போன்றவற்றைச் செய்து கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது.

தச்சு வணிகக் குழுவின் ஒரே நோக்கம் வணிகம் செய்வதுதான். கிழக்கு ஆசியாவில் உள்ள நறுமணப்பொருள்கள் கிடைக்கும் தீவுகளில் இவர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தினர். இத்தீவுகளில் தம் முற்றுரிமையைத் தமக்கே உரிமையாக்கிக் கொள்ள இவர்கள் தீவிரமாக முயன்றனர். இத்தீவுகளின் முதன்மைப் பொறுப்பாளர்கள் ஆலந்தின் ஆளுமையை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்வதற்கு இவர்கள் இடையறாது முயற்சிசெய்தார்கள். ஏனைய ஐரோப்பிய நாடுகள் இத்தீவுகளுடன் வணிகம் செய்யக் கூடாதெனத் தடுக்கப்பட்டன. வணிக முற்றுரிமை தம் வசமே நீடித்து நிலைபெற்றிருக்க அனைத்து முயற்சிகளையும் இவர்கள் மேற்கொண்டனர்.

தொடக்கத்தில் ஆங்கிலேயரும் தச்சுக்காரரும் நண்பர்களாகவே இந்திய வணிகத்தில் ஈடுபட்டனர். இருநாடுகளும் புராட்டஸ்டண்டு நாடுகள். கத்தோலிக்க நாடுகளான இசுபெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. தச்சுக்காரர்கள் விடாப்பிடியாகத் தம் முற்றுரிமையை வலியுறுத்தி அதை நிலைநாட்ட உறுதிபூண்டனர். அதற்கான அனைத்து விலைகளையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தனர். இரு நாடுகளுக்கிடையே மூண்ட சச்சரவு கி.பி.1623–ஆம் ஆண்டில் ஏற்பட்ட அம்பாய்னா படுகொலையில் முடிவுற்றது. அம்பாய்னா என்னுமிடத்தில் தச்சுக்காரர் பத்து ஆங்கிலேயர்களையும் ஒன்பது சப்பானியர்களையும் கொடூரமாகக் கொன்றனர். இப்படுகொலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆங்கிலேயர்கள் நறுமணப் பொருள் தீவகளைக் (Spice Islands) கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவிலேயே வணிகம் செய்ய முற்பட்டார்கள். போரில் ஏற்பட்ட நட்டஈடாகத் தச்சுக்காரர்கள் கிராம்வெல் என்னும் ஆங்கிலக் காவலருக்கு 85,000 பவுன்களைக் கொடுக்க வேண்டியவராயினர்.

தச்சுக்காரர்கள் மலாக்காவைப் போர்ச்சுகீசியரிடமிருந்து கி.பி. 1641–இல் வென்றனர். இலங்கையைக் கி.பி. 1658–இல் இவர்கள் பெற்றனர். இந்தியாவில் இவர்களுக்கு நாகப்பட்டினம் கிட்டியது. இந்நகரம் இன்றைய தஞ்சாவூர் மாவட்டத்தில் சோழமண்டலக் கடற்கரையில் அமைந்துள்ளது. வங்காளத்தில் சின்சுரா (Chinsurau) என்னும் நகரும் இவர்கள் வசமாயிற்று. தொடக்கத்திலிருந்து முடிவுவரை இவர்களின் **நிலை இந்தியாவில்** சிறப்பானதாக இருக்கவில்லை.

**இந்தியாவில் தேனியர்:** இந்தியாவுக்கு கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் வருகைபுரிந்த ஐரோப்பியர்களுள் ஒருசாரார் தேனியர். போர்ச்சுகல் நாட்டு மாலுமியான வாசுகோடகாமா கி.பி. 1498–ஆம் ஆண்டு நன்னம்பிக்கைமுனை வழியாகக் கேரளக் கடற்கரையை அடைந்ததைத் தொடர்ந்து, போர்ச்சுகீசிய இசுபானிய வணிகர்கள் இந்திய நாட்டைத் தேடி அலையலையாக வரத் தொடங்கினர். சூரத்து, பம்பாய், கோவா, சாந்தோம் (சென்னை), நாகப்பட்டினம், தரங்கம்பாடி (Tranquebar) போன்ற பல இந்தியத் துறைமுகங்களிலும் இலங்கையில் திரிகோண மலையிலும் தம் தொழிற்சாலைகளை (Factories) அமைத்துக் கொண்டு, பிற ஐரோப்பிய நாட்டு வணிகக் கப்பல்கள் அத்துறைமுகங்களை நெருங்கவிடாமல் செய்துவந்தனர். கோவாவைத் தலைமையிடமாகக் கொண்டு, போர்ச்சுகீசிய ஆளுநர் ஒருவர் இந்திய நாட்டில் தம் பகுதிகளாகச் சில துறைமுகங்களை அறிமுகம் செய்துகொண்டு ஆளத்தொடங்கினார். கடற்கரைப் பகுதி மக்களான மீனவர்களின் வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களை உள்நாட்டு அரசர்களுக்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டினர் போர்ச்சுகீசியர். மூர் எனப்பட்ட மரக்காயர் இனப் பெண்களுடன் முறையற்ற தொடர்புகளை வளர்த்துக்கொண்டனர். இவர்களுடைய ஒழுக்கக் குறைவான நடத்தையால்தான் இந்தியாவில் பறங்கிப்புண் (Branco) எனப்பட்ட பாலியல் நோய் தோற்றம் பெற்றது. உள்நாட்டுப் பெண்டிருடன் கொண்ட உறவுகளால் பாதிப்பறங்கியர் (Half White Portuguese) என்றழைக்கப்பட்ட புதிய கலப்பு இனம் உருவாயிற்று. இந்து சமயக் கோயில்கள் பல போர்ச்சுகீசியரால் இடித்துக் கொள்ளையிடப்பட்டன; அவை இருந்த இடங்களில்

கத்தோலிக்கத் திருச்சபைகள் கட்டப்பட்டன. இடிக்கப்பட்ட கோயில்களும் இனக் கலப்பில் உருவான பாதிப் பறங்கியரும் தாய்நாடு எதிர்நோக்கியிருக்கும் இருண்ட காலத்தைச் சுட்டிக் காட்டும் எடுத்துக்காட்டுகள் என உள்நாட்டு மன்னர்கள் உணரத் தலைப்பட்டனர்.

தஞ்சைப் பகுதியைக் கி.பி. 1600 முதல் 1630 வரை ஆண்ட நாயக்க அரசர் விசயரகுநாதர், தம் நாட்டுத் துறைமுகமான நாகப்பட்டினத்தில் போர்ச்சுகீசியக் கடலோடிகளான வணிகர்கள் அளித்து வந்த தொல்லைக்கு முடிவு கட்ட முனைந்தார். வளர்ந்துவிட்ட ஐரோப்பியக் கடற்படை வலிமையை ஐரோப்பியரைக் கொண்டே ஒடுக்க முடிவு செய்தார். தென்மார்க்கு, ஆலந்து ஆகிய நாடுகள் தேனியக் கிழக்கிந்திய வணிகக் குழு என்ற பெயரிலும் ஐக்கியக் கிழக்கிந்திய வணிகக்குழு என்ற பெயரிலும் வணிக நிறுவனங்கள் அமைத்துக் கொண்டு இந்திய நாட்டின்பால் அன்பு காட்டுவதை அறிந்த இரகுநாத நாயக்கர், தேனியக் (Danish) கிழக்கிந்திய வணிகக் குழுவை ஆதரிக்கத் தீர்மானித்தார்.

ஆலந்து நாட்டுப் படைத்தளபதியும் தேனியக் கிழக்கியந்திய வணிகக் குழுவின் தலைவரான உருக்லாந்து கிராப்பே (Rocland Crappe) என்பவரும் வணிகக் கப்பலில் சோழ மண்டலக்கரையை நோக்கி வரும்போது,கடலில் போர்ச்சுகீசியக் கப்பல் ஒன்றால் தாக்கப்பட்டனர். அவர்கள் வந்த கப்பல் சிதைந்தது. ஆலந்து நாட்டுத் தளபதியும் கிராப்பேயும் படகு ஒன்றின் மூலம் தப்பிக் கரை சேர்ந்து தஞ்சையை அடைந்தனர். இரகுநாத நாயக்கர் நிகழ்ந்ததைக் கேட்டறிந்து, போர்ச்சுகீசிய வணிகர்களைச் சிறைபிடித்துப் பன்னிரண்டாயிரம் பொன் தண்டத் தொகை விதித்து, தேனியக் கப்பல்களுடைய வழியில் இனிக் குறுக்கிடக்கூடாது என்று போர்ச்சுகீசியர்களுக்குக் கட்டளையிட்டார். தரங்கம்பாடித் துறைமுகத்தைத் தேனியக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கு வாடகைக்கு விடத் தீர்மானித்தார். இவ்விவரங்களை ஒரு பொன்னோலையில் எழுதி, தேனிய அரசர் நான்காம் கிறிசுடியனின் (கி.பி. 1588–1648) பேராளராக இலங்கைக்கு வந்திருந்த ஓவ்கிடு என்ற கடற்படைத் தளபதி அனுப்பினார். (இப்பொன்னோலையைத் தென்மார்க்கு நாட்டு அரசு ஆவணக் காப்பகம் இன்றும் காத்து வருகிறது). அதன் பின்னர் இரகுநாத நாயக்கரை ஓவ்கிடு சந்தித்து, இருநாடுகளுக்கும் இடையில் தொடங்க வேண்டிய வணிக உறவுகள் குறித்து ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி, 8 × 5 கி.மீ. பரப்பளவு கொண்ட தரங்கம்பாடிப் பகுதி உரூ. 3111/- ஆண்டு வாடகைக்குத் தேனியர்களிடம் விடப்பட்டது. தரங்கம்பாடிக் கடற்கரையில் தேன்சுபர்கு (Dansburg) என்ற கோட்டையைக் கட்டிக்கொண்டு, வெடி மருந்துகள், மதுவகைகள் முதலியவற்றை இறக்குமதி செய்தும் உலோகங்கள், துணிவகைகள், மிளகு முதலிய நறுமணப் பொருள்களை ஏற்றுமதி செய்தும் வணிகத்தைத் தொடர்ந்தனர். ஐரோப்பிய நாடுகளில் கோடைக்காலத்தில் இறைச்சியைக் கெடாமல் பதப்படுத்தத் தக்க நறுமணப் பொருள்கள் இல்லாத நிலையில் மிளகு அவர்களுக்கு ஓர் அரிய பண்டமாகப் பயன்பட்டது. கேரளப் பகுதியிலிருந்து உள்நாட்டு வணிகம் மூலமாக மிளகு அவர்களுக்குக் கிடைத்தது.

இரகுநாத நாயக்கர் ஆட்சிக்குப் பின்னர் விசயராகவ நாயக்கர் ஆட்சியின்போது தரங்கம்பாடிக்கு உரிய வாடகைப் பணத்தைத் தேனிய ஆளுநர் அளிக்கத் தவறியதால், நாயக்கரின் படைகள் தரங்கம்பாடியை முற்றுகையிட்டன. அப்போது ஏற்பட்ட சிறு பூசலில் ஏறத்தாழ 10 தேனிய வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சியைத் தவிரக் கி.பி. 1845–ஆம் ஆண்டு தேனியர்கள் தம் இந்தியப் பகுதிகளை ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கு விற்றுவிட்டுச் செல்லும் வரை எவ்விதப் போரிலும் அவர்கள் ஈடுபடவில்லை.ஆங்கிலப் பிரெஞ்சுப் போர்களின் விளைவாகக் கி.பி. 1801–ஆம் ஆண்டு தரங்கம்பாடி ஆங்கிலேயரால் முற்றுகையிடப்பட்ட போதும், தேனிய ஆளுநர் உடனே பணிந்துவிட்டார்.

தரங்கம்பாடியில் கி.பி. 1620-ஆம் ஆண்டில் தேனியக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் குடியேற்றம் ஏற்பட்ட நாளிலிருந்தே தேனிய ஆளுநர் ஒருவர் இப்பகுதியின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். உள்நாட்டுத் துறைமுகப்பணியாளரான கரையார் அல்லது கரைதுறை வேளாளர் இனத்தைச் சேர்ந்தோர் தேனியர்களுக்கு உதவி புரிந்துள்ளனர். கரையார் இனத்தைச் சேர்ந்த காலிங்கராயபிள்ளை என்பவர் தினமாரக்கா துபாசியாக (தமிழிலிருந்து தேனிய மொழிக்கும் தேனிய மொழியிலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்பவர்) இருந்தவர் என்றும், கப்பல் சாத்திரம் என்றநூல் அவருடைய வமிசத்தாரிடமிருந்து பெற்று அண்மையில் பதிப்பிக்கப்பட்டது என்றும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் குறிப்பால் அறியலாம். தரங்கம்பாடியில் கி.பி. 1620-ஆம் ஆண்டில் வாழ்ந்த காலிங்கராய பிள்ளையின் சிற்பம் ஒன்று அவ்வூரிலுள்ள சின்னக் கோயில் என்ற வழிபாட்டிடத்தில் காணப்படுகிறது.

தரங்கம்பாடி முதலிய இந்தியக் குடியேற்றப்

பகுதிகள் கி.பி. 1777-ஆம் ஆண்டு தேனிய வணிகக் குழுவினிடமிருந்து தேனிய அரசருக்கு மாற்றப் பட்டன. அதன்பின் தேனிய அரசரின் நேரடிப்பேராள ராக ஆளுநரே இருந்து வந்தார். தஞ்சை மராட்டிய அரசப் பேராளரின் பிரவர்த்திகம் என்ற பதவி வகித்த தண்டாச்சியாபிள்ளை என்பவரும் நிருவாகத் தில் குறிப்பிடத் தக்க பங்கு வகித்துள்ளார். இந்திய அரசு மரபுப்படி முழு மானியமாக அளிக்கப்பட்டிருந்த நிலங்களெல்லாம் அளக்கப்பட்டுத் 'தேனிய அர சரின் ஊர் அளவுக் குழு' (Danish king's Land Survey Commission) என்னும் நூலில் பதிவு செய்யப் பட்டன. உரிமைத் (Civil) தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்குக் குழு அதிகாரம் பெற்றிருந்தது. இதில் இந்து, கிறித்தவ, இசுலாமிய, ஐரோப்பிய மரபுகளுக்குத் தக்கவகையில் விசாரணையும் தீர்ப்புகளும் இடம் பெற்றன. தேனியர்களின் சிறப் பான நிருவாகத்தையும் அலுவலகக் கட்டடங்கள் பாதைகள் முதலியவற்றைப் பராமரித்த செம்மை யான முறையையும் கருதியே, ஆங்கிலேய அரசு கி.பி. 1845 முதல் 1860 வரை தரங்கம்பாடியைத் தஞ்சை மாவட்டத் தலைநகராக வைத்திருந்தது.

தேனிய வணிகக் குழுவின் வணிகமும் பண்ட மாற்றலும் உள்நாட்டுக் காசுப் புழக்கத்தின் மூலம் நடைபெற்றதென்றாலும் கூலிகொடுத்தல் போன்ற வற்றிற்கெனத் தாங்களே காசுகளும் அடித்து வெளி யிட்டனர். ஈயம், தாமிரம், வெள்ளி ஆகிய மூவகை உலோகங்களாலும் ஏறத்தாழ 300 வகையான காசு கள் தரங்கம்பாடியிலிருந்து வெளியிடப்பட்டன. தங்கக்காசு ஒருவகை மட்டும் வெளியிடப்பட்டதெனத் தெரிகிறது. நான்காம் கிறிசுடியன் அரசர் காலத்தில் தென்மார்க்கு நாட்டில் தரங்குறைந்த உலோகக் காசுகள் வெளியிடப்பட்டன. தரங்கம்பாடியிலும் இத்தகைய தரங்குறைந்த உலோகக் காசுகளைத் தேனிய வணிகக் குழுவினர் வெளியிட்டதால் நாயக்க அரசர் அந்நாணயங்களைப் புழக்கத்தில் செல்லா தவையென ஆணைபிறப்பித்த நிகழ்ச்சியும் நடை பெற்றுள்ளது.

சமயம்: ஆலந்து, தென்மார்க்கு, பிரிட்டன் ஆகிய நாட்டவர் புராட்டசுடெண்டு சமயத்தினராகை யால் போர்ச்சுகீசியருடைய, சமயஞ்சார்ந்த புனித உரோமானியப் பேரரசின் திட்டத்தை வெறுத்தனர்; உள்நாட்டு மக்களின் சமய உணர்வுகளை நேரடி யாகப் புண்படுத்துவது தமது அரசியல் தற் கொலைக்கே வழிவகுக்கும் எனவும் உணர்ந்தனர். ஆயினும் புராட்டசுடெண்டு சமயத்தை இந்தியர் களுக்குப் போதிப்பது இன்றியமையாதது எனக் கரு தினர். தென்மார்க்கு அரசர் நான்காம் பிரடரிக்கு, தம் நாட்டுப் புராட்டசுடெண்ட்டுத் திருச்சபையின் தலைவராகவும் இருந்தமையால் கி.பி. 1706-ஆம் ஆண்டில் செருமனி நாட்டைச் சேர்ந்த பார்த்த லோமியசு சீகன்பால்கு, என்றிக் புளூட்சௌ என்ற இரு இளைஞர்களைத் தரங்கம்பாடிக்குச் சமயப்பணி புரிய அனுப்பினார். சீகன்பால்கு தரங்கம்பாடியில் தங்கித் தமிழ் கற்றார்; விவிலியத்தின் புதிய ஏற் பாட்டினைத் தமிழில் மொழி பெயர்த்து வெளி யிட்டார். 'புதிய எருசலேதி' என்ற பெயரில் கிறித் தவக் கோயில் ஒன்றினைக் கி.பி. 1717-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் கட்டுவித்தார். இந்தத் திருச்சபை சிலுவை வடிவில் அமைக்கப்பட்டது. உள்நாட்டுச் சமயம் மாறிய கிறித்தவர்களுக்காகக் கட்டப்பட்டதா தலால் உயர்சாதிக் கிறித்தவர்கள் ஒருபுறமும் தாழ்த் தப்பட்ட கிறித்தவர்கள் மறுபுறமும் இருந்து வழிபடு வதற்கேற்ற வகையில் இவ்வாறு கட்டப்பட்ட தென்று கருதப்படுகிறது. இத்திருச்சபையின் முகப் பில் தேனிய அரசர் நான்காம் பிரடரிக்கின் முத லெழுத்துகள் (Monogram) பதிக்கப்பட்டுள்ளன. இன்றுவரை, இத்திருச்சபையில் சிறப்பான காலங் களில் தேனிய அரசரின் நலன் வேண்டி வழிபடும் பழக்கம் உள்ளதாகக் கூறுவர்.

வரலாற்றுச் சின்னங்கள்: தேனியர்கள், தரங்கம் பாடியையே தம் இந்தியக் குடியேற்றப் பகுதிகளுக் குத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். பீகா ரில் பாட்னா, வங்காளத்தில் சிராம்பூர் ஆகிய இடங்களிலும் அவர்களுடைய குடியேற்றங்கள் அமைந்திருந்தன. தரங்கம்பாடி தேனியக் கோட்டை, ஊரின் முகப்பில், தேனிய அரசர் 7-ஆம் கிறிசுடி யனின் முதலெழுத்துகள் பதித்த கி.பி. 1792-ஆம் ஆண்டைச் சேர்ந்த கோட்டைவாயில், கல்லறைகள், தேனிய வணிகர்களும் பிற ஐரோப்பிய இனத்த வரும் வழிபடுவதற்குரிய சீயோன் ஆலயம், புதிய எருசலேம் திருச்சபை, பொறையாறு நகரிலுள்ள பெத்லகாம் திருச்சபை, கும்பினித் தோட்ட மாளிகை ஆகியனவும் செராம்பூரிலுள்ள திருச்சபை யும் தேனியர்கள் இந்தியாவில் விட்டுச் சென்றுள்ள சின்னங்கள் ஆகும்.

பீங்கான் பாண்டங்கள் நீல நிறத்தில் குழல் வடிவில் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டுத் தேனி யரால் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவை தரங்கம் பாடிப் பீங்கான் (Tranquebar Porcelain) என்றே இன்றுவரை பெயர்பெற்றுள்ளன. சாயவு மேசை வடிவில் விரிவான மேற்பகுதியில் இழுப்பறைகள் கொண்ட மேசைகள் தரங்கம்பாடிக்கு அருகில் உள்ள ஒழுகைமங்கலத்தில் செய்யப்பட்டன. இவை பீரோ தனுவா (Bureau Danoise) என வழங்கப் படுகின்றன.

எஸ். இரா.

**இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்:** இந்தியாவுடன் வணிகம் செய்வதற்கென முதல் பிரெஞ்சு வணிகக்குழு கி.பி. 1664-இல் தோற்றுவிக்கப்பட்டது. பதினான்காம் உலூயி மன்னரின் அமைச்சர் கோல்பர்ட்டு (Colbert) இக்குழுவுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பல சிறப்புரிமைகளை வழங்கினார். அந்நாட்டு மக்கள் அயல் நாட்டு வணிகத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டில்லாததால் தொடக்கத்திலிருந்தே வணிகக் குழுக்கள் அரசாங்க ஆதரவோடு செயற்பட வேண்டிய நிலையில் இருந்தன.

கேரோன்: தச்சு (Dutch) நாட்டு வணிகக் குழுவில் பணியாற்றி அனுபவம் பெற்றிருந்த கேரோன் (Caron) என்பவரை கி.பி. 1667-இல் கோல்பர்ட்டு இந்தியாவுக்கு அனுப்பினார். அவர் சூரத்திலும் மசூலிப்பட்டினத்திலும் வணிக மையங்களை ஏற்படுத்தியதோடு கோல்கொண்டா சுல்தானிடமிருந்து வரிவிலக்கு உரிமைகளையும் பெற்றார்.

பிரான்சாயிசு மார்ட்டின்: கேரோன் பிரான்சுக்குத் திரும்பிய பின் அவர்தம் துணை அதிகாரியாகப் பணியாற்றி வந்த பிரான்சாயிசு மார்ட்டின், (Francois Martin) பீசப்பூர்ச்சுல்தானின் ஆளுநரான செர்கான் உலோடியிடமிருந்து புதுச்சேரி என்று பிற்காலத்தில் பெயர் பெற்ற பகுதியைக் கி.பி. 1694-இல் பெற்றார். அரண்களை அமைத்தும் ஆயுத சாலைகளைக் கட்டியும் அவ்விடத்தை வலிமைப்படுத்தியதோடு கி.பி. 1667-இல் சிவாசிக்குப் பெருந்தொகையைச் செலுத்தி, அவருடைய தாக்குதலிலிருந்து மார்ட்டின் புதுச்சேரியைக் காத்தார்.

விரைவில் பெரும் செல்வச் செழிப்படைந்த புதுச்சேரி கி.பி. 1701-இல் கீழைப்பகுதி பிரெஞ்சு வாணிக மையங்களின் தலைமையிடமாக அறிவிக்கப்பட்டது. மார்ட்டின் தலைமை நிருவாகியாகவும் அமர்த்தப்பட்டார். அவர் சுதேச அரசுகளோடு நட்பாகவும் நேர்மையாகவும் பழகினார்.

புதுச்சேரி தவிர இந்தியாவின் மற்றப் பகுதிகளில் பிரெஞ்சுச் செல்வாக்கு வளர்ச்சியுறவில்லை. சூரத்துவணிக மையம் கி.பி.1714-இல் கைவிடப் பட்டது. ஆகவே, பிரெஞ்சு வணிகக்குழு இலாபத்துடன் செயற்படவில்லை. இந்நிலையில் கி.பி. 1720-இல் இக்குழுவானது மாற்றியமைக்கப்பட்டது.

இலெனாயிர் (கி.பி. 1720, 1726-35): இலெனாயிர் (Lenoir) புதுச்சேரியின் ஆளுநராகப் பதவி வகித்தபோது பிரெஞ்சு வணிகம் முன்னேற்றமடைந்தது. கள்ளிக்கோட்டை, மாகி, ஏனாம் ஆகிய பகுதிகளில் வணிக மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

துமாசு (கி.பி. 1735-1741): இலெனாயிரை அடுத்து ஆளுநராகப் பதவியேற்ற துமாசு (Dumas) அமைதியான முறையில் பிரெஞ்சுச் செல்வாக்கை விரிவுபடுத்த விரும்பினார். இவர் கருநாடக நவாபுகளுடன் நெருங்கிய நட்புக் கொண்டார். கிழக்குக் கடற்கரையிலுள்ள காரைக்கால் கி.பி. 1739-இல் பிரெஞ்சுக்காரர் வசமாகியது. இரகுசி போன்சுலே கி.பி. 1740-இல் கருநாடக நவாபு தோசுத்து அலியைக் கொன்றபோது துமாசு, நவாபின் உறவினர்களுக்கு அடைக்கலம் அளித்ததோடு மராத்தியப்படையைத் திரும்பிச் செல்லுமாறு செய்தார். எனினும், மராத்தியர் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி அதன் ஆளுநர் சந்தா சாகிபைச் சிறைப்பிடித்துச் சென்றனர். இந்நிலையில் கி.பி. 1741-இல் தூப்ளே (Dupleix) புதுச்சேரியின் ஆளுநராகப் பதவியேற்றார்.

தூப்ளே (கி.பி. 1741-1754): சந்திரநாகூரின் தலைமை ஆட்சியாளராகப் பணியாற்றித் தனி வணிகத்தின்மூலம் பெரும் பொருளீட்டிய தூப்ளே, புதுச்சேரி ஆளுநராகப் பதவியேற்றபின், பெரும் திட்டங்களை வகுத்தார். புதுச்சேரியின் ஆட்சி முறையைத்திருத்தவும் அந்நகருக்குக் கடற்புறமாக அரண்களைஅமைக்கவும் முனைந்ததோடு, சுதேச மன்னர்களின் நட்பைப் பெறவும் முயன்றார்.

ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர்: ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரினால் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே கி.பி. 1744-இல் மோதல் ஏற்பட்டு அது இந்தியாவுக்கும் பரவியது. ஆங்கில அரசால் அனுப்பப்பட்ட பார்னெட்டு (Barnett), நவாபு அன்வாருதீனின் (Anwar-ud-din) தலையீட்டால் புதுச்சேரியைத் தாக்காமலேயே கி.பி. 1745-இல் திரும்பினார்.

ஆனால், நவாபின் தலையீடு பிரெஞ்சுக்காரரைக் கட்டுப்படுத்தவில்லை. இலாபூர்தொனே (La Bourdonnais) தூப்ளேய்க்கு உதவி செய்தற் பொருட்டு ஒரு கப்பற் படையோடு கி.பி. 1746-இல் வந்தார். ஆங்கிலக் கப்பற்படை இலாபூர்தொனேயை எதிர்க்கப் போதிய வலிமை பெற்றிராததால் வங்காளத்தை நோக்கிப் பயணமாகியது. இலாபூர்தொனே சென்னையைத் தாக்கிக் கைப்பற்றினார்.

தூப்ளேய்க்கும் இலாபூர்தொனேய்க்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபட்டால், இலாபூர்தொனே ஆங்கிலேயரிடமிருந்து பணயத் தொகையைப் பெற்றுக் கொண்டு, சென்னையை விட்டு வெளியேற ஒப்புக் கொண்டார். இதற்கிடையே அன்வாருதீன் சென்னையைத் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமெனக்

கோரி, அதை நோக்கி ஒரு படையை அனுப்பினார். ஆனால், அப்படை அடையாற்றுப் போர்க்களத்தில் பிரெஞ்சுப் படையிடம் தோல்வியுற்றது.

அதன் பிறகு தூப்ளே, புதுச்சேரிக்கு அருகிலுள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான புனித தேவிடுக் கோட்டையைக் (Fort Saint David) கைப்பற்றுவதற்கென நான்கு முறைகள் தாக்குதல்கள் நடத்தினார். ஆனால், இம்முயற்சிகள் வெற்றியடையவில்லை.

ஆங்கிலேயர் கி.பி. 1748–சூலை மாதத்தில் புதுச்சேரியைக் கைப்பற்றத் தங்கள் கப்பற் படையை ஏவினர். இரண்டு மாத முற்றுகைக்குப் பிறகு இம்முயற்சி தோல்வியுறவே ஆங்கிலக் கப்பற்படை தம் கோட்டைக்குத் திரும்பியது.

அதன் பிறகு ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த எய்–லா–சேபல்(Aix-la-chapelle) உடன்படிக்கையைக் குறித்த செய்தி இந்தியாவுக்கு எட்டியது. போர்க் கைதிகளையும் கைப்பற்றப்பட்ட இடங்களையும் இருசாராரும் மாற்றிக் கொள்ள இவ்வுடன்படிக்கை வகை செய்தது. அதன்படி கி.பி. 1749–இல் சென்னை ஆங்கிலேயருக்குத் திரும்ப அளிக்கப்பட்டது.

இருந்தபோதிலும், இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே தொடர்ந்தாற்போல் அமைதி நிலவக்கூடிய நிலை நிலவவில்லை. இவ்விரு வணிகக் குழுக்களும் அண்மையில் நடந்த போரின்போது சேர்த்த பெரும் படைகளைப் பெற்றிருந்தன. அவற்றின் திறமையையும் வலிமையையும் கண்ணுற்ற சுதேச மன்னர்கள் அவ்வணிகக் குழுக்களில் ஏதாவதொன்றோடு நட்புறவு வைத்துக் கொள்ள விரும்பினர். பணத்தாலும் நாட்டுப்பகுதிகளாலும் கவரப்பட்ட இவ்வணிகக் குழுக்களும் சுதேச மன்னர்களின்பால் கண்டிப்பான தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற இயலவில்லை.

இந்திய விவகாரங்களில் தலையிடுதல்: அண்மையில் நடைபெற்ற போரினால் பிரெஞ்சுக்காரரின் மதிப்பு உயர்ந்திருந்ததை உணர்ந்த தூப்ளே, பேராசைத் திட்டங்களை வகுக்கலானார். நிசாம் உல்முல்க்கு கி.பி. 1748–இல் காலமானதால் தக்காண அரசப் பதவிக்கு அவர் இரண்டாம் மகன் நாசிர் சங்குக்கும் அவர் பேரர் முசாபர் சங்குக்கும் இடையே போட்டி எழுந்தது. அதே வேளையில் கருநாடக நவாபு அன்வாருதீனுக்கும் பழைய நவாபு குடும்பத்தைச் சேர்ந்த சந்தா சாகிபுக்குமிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது. முசாபர் சங்கும் சந்தா சாகிபும் ஒன்றாக இணைந்து முதலில் கருநாடகத்தைக் கைப்பற்ற முனைந்தனர். தூப்ளே அவ்விருவரோடும் நட்புக் கொண்டு அவர்களுக்குப் படையுதவி செய்ய முன்வந்தார். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரைப் போன்று இந்திய அரசியல் விவகாரங்களில் தலையிடத் தொடங்கினர். அண்மையில் நடந்த போரின்போது அவர்கள் சென்னையை இழந்தபோதிலும், மற்ற வணிக மையங்கள் பாதிக்கப்படவில்லை. அவர்களின் கப்பற்படை வலிமையுடன் இருந்தது. சென்னைக்குத் தெற்கே அமைந்த சாந்தோமைக் (Santhome) கைப்பற்றியதோடு, கொள்ளிடத்தின் நுழைவாயிலில் அமைந்த தேவகோட்டைத் துறைமுகத்தையும் தஞ்சாவூர் மன்னனிடமிருந்து கவர்ந்தனர்.

முசாபர் சங்கும் சந்தாசாகிபும் பிரெஞ்சு உதவியுடன் ஆம்பூர்ப் போர்க்களத்தில் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, சந்தாசாகிபு கருநாடகத்தில் நவாபாகப் பட்டமேற்றார். பிரெஞ்சுக்காரரின் உதவிக்கு ஈடாக அவர் அவர்களுக்கு வணிகச் சலுகைகள் பல அளித்ததோடு, வில்லிய நல்லூர், பாகூர் ஆகிய சாகீர்களையும் தூப்ளேய்க்குக் கொடுத்தார்.

அன்வாருதீனின் இளைய மகன் முகம்மது அலி திருச்சிராப்பள்ளியைத் தம் வசம் பெற்றிருந்தார். அவருக்கு ஆங்கிலேயரின் ஆதரவும் இருந்தது. கருநாடகத்தில் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்தோடு தூப்ளே, சந்தாசாகிபையும் முசாபர் சங்கையும் திருச்சிராப்பள்ளிமீது படையெடுக்குமாறு தூண்டியதோடு, அவர்களுக்குப் படை உதவியும் அளித்தார்.

தூப்ளேயின் இச்செய்கையால் தங்கள் வணிகம் பாழாகக்கூடும் என உணர்ந்த ஆங்கிலேயர், தங்கள் நலனைப் பாதுகாக்கச் செயலில் ஈடுபட்டனர். முகம்மது அலிக்குத் துணையாக இருந்ததோடு, நிசாம் மன்னர் நாசிர் சங்கை உடனடியாகக் கருநாடகத்தின்மீது படையெடுக்குமாறு தூண்டினார்.

இதற்கிணங்க நாசிர் சங்கு தம் படையோடு கருநாடகத்திற்குள் புகுந்தார். புதுச்சேரி வரை முன்னேறிய நிசாம் மன்னர், தம் போட்டியாளரான முசாபர் சங்கைச் சிறைபிடித்தார். அதன்பிறகு ஆர்க்காட்டிற்குப் பின்வாங்கி, ஏறத்தாழ ஆறுமாத காலம் நடவடிக்கை எதிலும் ஈடுபடாமல் காலம் போக்கினார். இதற்கிடையில் பிரெஞ்சுக்காரர் செஞ்சியைக் கைப்பற்றியதோடு, மசூலிப்பட்டினத்தையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். செஞ்சியைக் கைப்பற்றிப் புசி (Bussy) என்னும் படைத்தலைவர் புகழ் எய்தினார். நாசிர், செஞ்சியை மீட்க எடுத்துக்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை.

அவருக்குக் கீழிருந்த பட்டாணிய நாவாபுகளின் துரோகச் செயலால் நாசிர் சங்கு, ஒரு சண்டையின் போது கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து சிறையிலிருந்த முசாபர் சங்கு, விடுவிக்கப்பட்டுப் பிரெஞ்சுக்காரரின் ஆதரவோடு கி.பி. 1750-இல் நிசாம் மன்னராக முடிசூட்டப்பட்டார். புதிய நிசாம் மன்னர் சந்தா சாகிபைக் கருநாடகத்தின் நவாபாக உறுதிப்படுத்தியதோடு, கிருட்டிணா ஆற்றுக்குத் தெற்கே உள்ள பகுதிகளுக்குத் தூப்ளேயைத் தம்முடைய பேராளராக அமர்த்தினார்.

புசியின் தலைமையிலான பிரெஞ்சுப் படையின் துணையோடு கி.பி. 1751 சனவரியில் முசாபர் சங்கு தம் தலைநகருக்குப் பயணம் ஆனார். ஆனால், போகும் வழியில் புதிய நிசாம் மன்னரால் தாங்கள் பெற்ற ஆதாயத்தில் மன நிறைவு கொள்ளாத பட்டாணிய நவாபுகள், கலகம் விளைவித்து அவரைக் கொன்றனர். இந்நிலையில் மிகத் திறமையுடன் செயற்பட்ட புசி, நாசிர் சங்கின் இளைய சகோதரர் சலபத் சங்கைப் புதிய நிசாம் மன்னராகக் கலகக்காரர்கள் ஏற்கும்படி செய்தார். சலபத்து சங்கு பிரெஞ்சுக்காரருக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளை உறுதிப்படுத்தியதோடு, புசிக்கு மொகலாயப் பேரரசின் உயர்குடிப் பட்டத்தையும் அளித்தார்.

பிரெஞ்சுக்காரர் இவ்வாறு வெற்றிகளை அடைந்தபோதிலும், ஆங்கிலேயர் தொடர்ந்து முகம்மது அலிக்கு ஆதரவு அளித்து வந்தனர். ஆங்கிலேயர், இராபர்ட்டு கிளைவின் தலைமையில் கி.பி. 1751-இல் ஆர்க்காட்டைக் கைப்பற்றினர். திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றச் சந்தா சாகிபு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. இந்நிகழ்ச்சிகள் பிரெஞ்சுக்காரரின் மதிப்பைப் பெரிதும் பாதித்தன.

இவற்றைக் குறித்த செய்திகள் பிரான்சுக்கு எட்டியபோது அந்நாட்டு அரசாங்கம் தூப்ளேயைத் திரும்ப அழைத்துக்கொள்வதென்றும் தன் இந்தியக் கொள்கையை மாற்றிக் கொள்வதென்றும் முடிவு செய்தது. ஆனால், தூப்ளேயின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சந்தா சாகிபு கி.பி. 1752-இல் தஞ்சாவூர்த் தளபதியால் கொல்லப்பட்டதை அடுத்து, அவர் மகன் இராசா சாகிபைப் புதிய நாவாபாக தூப்ளே அறிவித்தார். தொடர்ந்து நடந்த போர் நடவடிக்கைகளால் கி.பி. 1752-ஆம் ஆண்டின் இறுதிக்குள் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, செஞ்சி ஆகிய இடங்களைத் தவிரக் கருநாடகத்தில் மற்றைய இடங்களை இழந்தனர். இருந்தபோதிலும் தூப்ளே, மராத்தியரோடும் மைசூர் மன்னரோடும் சேர்ந்து திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்ற மீண்டும் முயற்சி மேற்கொண்டார். ஆனால், இதுவும் தோல்வியடைந்தது. இதைத் தொடர்ந்து தூப்ளே ஆங்கிலேயருடன் அமைதி ஒப்பந்தம் செய்துகொள்வது என முடிவு செய்தார். ஆனால், கி.பி. 1754-இல் இதற்கெனச் சதுரங்கப் பட்டினத்தில் தொடங்கிய பேச்சுகள் இருசாராருக்குமிடையே எழுந்த கருத்து வேறுபாடுகளால் முறிவடைந்தன. இப்பேச்சுகளின்போதும் திருச்சிராப் பள்ளிக்கு அருகில் போர் தொடர்ந்து நடைபெற்றது.

கொடெகு : இதற்கிடையே பிரெஞ்சு அரசாங்கத்தின் புதிய கொள்கைக்கு ஏற்பத் தூப்ளே கி.பி. 1754-இல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். பிரெஞ்சு வணிகக் குழு இயக்குநர்களில் ஒருவரான கொடெகு (Godeheu) என்பவர், இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். கொடெகு கி.பி. 1754 ஆகசுட்டுத் திங்களில் புதுச்சேரியை அடைந்தார். சென்னையின் ஆங்கில ஆளுநரான சாண்டர்சுடன் பேச்சுகள் தொடங்கி, அக்டோபர்த் திங்களில் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார். இதையடுத்த சில நாட்களில் தூப்ளே ஐரோப்பாவுக்குப் பயணமானார். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே கி.பி. 1755 சனவரியில் புதுச்சேரி ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

புதுச்சேரி உடன்படிக்கையானது, இருசாராரும் சுதேசி மன்னர்கள் அளித்த பதவிகள், பட்டங்கள் ஆகியவற்றைத் துறக்க வகை செய்ததோடு, சுதேசி மன்னர்களின் விவகாரங்களில் தலையிடுதலைத் தடைசெய்தது. மேலும் ஆங்கிலேயர் சென்னை, தேவிடு கோட்டை, தேவ கோட்டை ஆகியவற்றைப் பெற்றிருக்கவும், பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, மேலும் சில பகுதிகள் போன்றவற்றை வைத்திருக்கவும் இவ்வொப்பந்தம் இசைவளித்தது. தக்காணப் பகுதியிலும் 'இரு சாராரும் சம எண்ணிக்கையிலான வணிக மையங்களைப் பெற்றிருக்க அனுமதிக்கப்பட்டனர். மீண்டும் பிரான்சும் இங்கிலாந்தும் கி.பி. 1756-இல் போரில் ஈடுபட்டதால் புதுச்சேரி ஒப்பந்தம் தற்காலிகமானதாகவே அமைந்தது.

தக்காணத்தில் புசியின் நிலை: கருநாடகத்தில் பிரெஞ்சுக்காரரின் நிலை இவ்வாறு இருக்கையில், தக்காணத்தில் நிசாம் மன்னர் அவையில் அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பெரிதும் வளர்த்துக் கொண்டனர். சலபத் சங்கு பிரெஞ்சுக்காரரைப் பெரிதும் சார்ந்திருந்தார். அவர் மசூலிப்பட்டினம், திவித் தீவு (Divy), மற்றும்பல சுற்றப்புறச் சிற்றூர் ஆகியவற்றை அவர்களுக்கு அளித்ததோடு, புசியைத் தமக்குத் துணையாக ஐதராபாத்திலேயே தங்கியிருக்குமாறு

செய்தார். தம் உறவினர் காசி உத்தீன்கான், தக்காண ஆட்சி உரிமைக்குச் சொந்தம் கொண்டாடியபோது, புசியின் துணையோடு அவரை எதிர்த்துப் போரிட்டார். புசியின் வற்புறுத்தலால் மராத்தியர்கள் சலபத் சங்கை நிசாம் மன்னராக ஏற்றுக் கொண்டனர். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சலபத் சங்கு கொண்டவீடு பகுதியைப் பிரெஞ்சுக்காரருக்கு அளித்தார். பிரெஞ்சு நலனுக்கு எதிராகச் செயற்பட்ட சையது இலசுகர் கான் (Syed Laskar Khan) என்னும் நிசாமின் அமைச்சரைப் புசி ஒடுக்கிக் கி.பி. 1753-இல் குண்டூர், இராசமகேந்திரவரம், ஏலூர், சிகாகோல் ஆகிய சர்க்கார்ப்பகுதிகளைப் பிரெஞ்சுப் படைகளின் பாதுகாப்புக்காகப் பெற்றார்.

இவ்வாறு தக்காணத்தில் பிரெஞ்சுக்காரர் புதிய பகுதிகளைப் பெற்ற போதிலும் அப்பகுதிகளிலிருந்து பணம் வசூலிப்பது கடினமாக இருந்தது. சர்க்கார் பகுதியின் ஆளுநரான சபார்கான் பிரெஞ்சுக்காரருக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு ஆங்கிலேயரின் உதவியையும் நாடினார். புசி தம் படையைக் கொண்டு அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டினார். தக்காணத்தில் புசிபெற்றிருந்த செல்வாக்கை கி.பி. 1755-ஆம் ஆண்டின் புதுச்சேரி உடன்படிக்கை எவ்வகையிலும் பாதிக்கவில்லை. ஆனால், தூப்ளே இந்தியாவிலிருந்து பிரான்சுக்குத் திரும்பிய நிகழ்ச்சி, நிசாம் மன்னர் பிரெஞ்சுக்காரர் வலிமையில் கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தது. அம் மன்னருக்கு மீண்டும் நம்பிக்கையூட்டப் புசி பெரிதும் முயன்றார்.

பிரெஞ்சுக்காரருக்கு ஆதரவாக இருந்த மைசூர் மன்னரை எதிர்த்துக் கி.பி. 1755-இல் நிசாம் மன்னர் படையெடுத்தார். அதேசமயம் மராத்தியரும் மைசூரைத் தாக்கினர். இந்நிலையில் புசி தம் படையுடன் நிசாம் மன்னருக்கு உதவியாகச் சென்ற போதிலும் மைசூர் மன்னரை நிசாமோடும் மராத்தியரோடும் அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி செய்தார். இதனால், நிசாமுக்குச் சேரவேண்டிய கப்பத் தொகைப் பாக்கி கிடைத்தது. இவ்வேற்பாட்டினாலும் தக்காணத்தில் பிரெஞ்சுச் செல்வாக்கு உயர்ந்தது.

ஆனால், நிசாமின் தலைநகரில் பிரெஞ்சுக்காரருக்கு எதிர்ப்பு வளர்ந்துகொண்டேயிருந்தது. நிசாமின் புதிய அமைச்சரான சா நவாசுகான், பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றப் பெரிதும் முயன்றார். அவரது கருத்துக்கிணங்கக் கி.பி. 1756-இல் நிசாம் புசியைப் பதவி விலக்கம் செய்தார். மராத்தியர்களும் ஆங்கிலேயரும் தமக்கு எதிராக நிசாமோடு இணையக் கூடுமென உணர்ந்த புசி, ஐதராபாத்தில் அரண் சூழ்ந்த பகுதியில் தம் நிலையை ஏற்படுத்திக் கொண்டு பகைவர்களை எதிர்க்க ஆயத்தமானார். விரைவில் அவருக்கு மசூலிப்பட்டினத்திலிருந்து உதவிப்படையும் வந்தது. தாம் எதிர்பார்த்த ஆங்கிலப் படையுதவி கிடைக்காத நிசாம் அச்சங் கொண்டு புசியை மீண்டும் தம் அவையில் பதவியில் அமர்த்தினார்.

மீண்டும் ஐரோப்பியப் போர்: பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே கி.பி. 1756-ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் போர் தொடங்கிவிட்டதைக் குறித்த செய்திகள் இந்தியாவுக்கு எட்டின. புசி கி.பி. 1757-ஆம் ஆண்டு முழுவதும் தக்காணப் பகுதியில் ஆங்கில வணிக மையங்களைக் கைப்பற்றுவதிலும் நிலச் சொந்தக்காரர்களை ஒடுக்குவதிலும் ஈடுபட்டார். வங்காளத்தில் சிராசுத் தௌலாவுக்கு உதவியாகப் படையொன்றை அனுப்பவும் திட்டமிட்டார். ஆனால் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சந்திரநாகூரைக் கைப்பற்றியதோடு பிளாசிப் போர்க்களத்தில் பெரும் வெற்றியடைந்து, புசியின் திட்டங்களைத் தோல்வியுறச் செய்தனர். சந்திரநாகூரின் வீழ்ச்சி பிரெஞ்சுக்காரர்களின் மதிப்பைத் தாழ்த்தியது மட்டுமல்லாமல் மொரீசியசு, போர்போன் போன்ற தீவுகளுக்கு வங்காளத்திலிருந்து உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதையும் நிறுத்தியது. இதனால், பிரான்சிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட கப்பற்படைக்கு உணவளிப்பது கடினமாகியதால் அதன் வலிமை பாதிக்கப்பட்டது.

நிசாமின் அமைச்சர் சா நவாசுகான், கி.பி. 1758-இல் தம் மன்னருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் எதிரான சதியில் ஈடுபட்டார். இதையறிந்த புசி ஐதராபாத்துக்கு விரைந்து சலபத் சங்கின் ஆட்சியை நிலைநிறுத்தினார்.

இந்நிலையில் தி இலாலி (Count de Lally)புசியை உடனடியாகப் புதுச்சேரிக்குத் திரும்புமாறு ஆணை பிறப்பித்தார். புசி தக்காணத்தை விட்டு வெளியேறியதும், ஆங்கிலேயர் மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றினர். சலபத் சங்குடன் கி.பி. 1759-இல் ஆங்கிலேயர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி முன்பு புசியின் கட்டுப்பாட்டில் இருந்த எல்லாப் பகுதிகளையும் அவர்கள் அடைந்தனர். அவருடைய அரசுப் பகுதியில் பிரெஞ்சுக்காரருக்கு இனி இடமளிப்பதில்லை என நிசாம் வாக்களித்தார்.

கருநாடகத்து நிகழ்ச்சிகள்: ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய இரு சாராரின் நிலையையும் கி.பி. 1755-ஆம் ஆண்டு புதுச்சேரி உடன்படிக்கை

திட்டவட்டமாக வரையறை செய்யவில்லை. ஆங்கிலேயர் முகம்மது அலியின் அதிகாரத்தைக் கருநாடகம் முழுவதிலும் நிலைநாட்டுவதற்கெனத் தங்கள் படைகளை அவர் உதவிக்கு அனுப்பினர். இதற்கு எதிரான நடவடிக்கைக்குப் பிரெஞ்சுக்காரர் ஆயத்தம் செய்துகொண்டிருக்கையில்தான் ஐரோப்பாவில் போர் தொடங்கியது. அதையடுத்துப் பிரெஞ்சு அரசாங்கம் ஆங்கிலேயரை ஒடுக்குவதற்கென இலாலியை அனுப்பியது.

புதுச்சேரியை அடைந்த இலாலி கடலூரையும் தேவிடு கோட்டையையும் கைப்பற்றினார். தேவ கோட்டையும் அவரிடம் வீழ்ச்சியுற்றது. அதைத் தொடர்ந்து அவர் சென்னையைத் தாக்கியிருக்கலாம். ஆனால், அந்நகருக்குப் பலத்த கப்பற்படைப் பாதுகாப்பு இருந்து வந்தது; ஆகவே தஞ்சாவூரை முற்றுகை மூலம் கைப்பற்ற முயற்சி செய்தார். ஆனால், வெடிமருந்து பற்றாக்குறையினால் அவர் புதுச்சேரிக்குப் பின்வாங்க வேண்டியதாயிற்று.

தி ஆக்கின் தலைமையிலான பிரெஞ்சுக் கப்பற்படை, பகைக் கப்பற்படையுடன் நடத்திய சண்டையில் சேதத்திற்குள்ளாகியதால் அது மொரீசியசு தீவுக்குப் பின்வாங்கியது. ஐதராபாத்திலிருந்து புசி கருநாடகத்திற்குத் திரும்பியதால் தக்காணத்திலும் பிரெஞ்சுக்காரருக்கு இழப்புகள் ஏற்பட்டன. இவையெல்லாம் இலாலியின் மதிப்பை மிகுதியாகக் குறைத்துவிட்டன.

இலாலியும் புசியும் சேர்ந்து கி.பி. 1758 திசம்பரில் சென்னையை முற்றுகையிட்டனர். இலாரன்சு தலைமையிலான ஆங்கிலப்படை, முற்றுகையைச் சமாளிக்கப் பலத்த ஏற்பாடுகள் செய்திருந்தது. ஆங்கிலக் கப்பற்படை கி.பி. 1759 பிப்பிரவரியில் சென்னையை நெருங்கியதால் இலாலி இம்முற்றுகையை விலக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. இம்முற்றுகையின் தோல்வி, பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை முதன்முறையாக வீழ்ச்சியுறச் செய்தது.

இதையடுத்துச் சிறிதுகாலம் இருசாராரும் தீவிரப் போர் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருந்தனர். இலாலி பணப் பற்றாக்குறையினால் இன்னலுற்றார். அவர் படையினர் கட்டுப்பாட்டை இழந்தனர். ஆங்கிலக் கப்பற்படை தொடர்ந்து சோழ மண்டல கடற்கரைப் பகுதியில் ஆதிக்கம் வகித்தது. ஆங்கிலப் படையின் புதிய தளபதி கூட்டு (Col. Coote), பிரெஞ்சுக்காரர் வசமிருந்த வந்தவாசிக் கோட்டையைக் கைப்பற்றியதோடு, அவர்களை வந்தவாசிச் சண்டையிலும் தோற்கடித்தார். அவர் ஆர்க்காட்டையும் அதன் அருகில் அமைந்த கோட்டைகளையும் வென்றார். புதுச்சேரி, செஞ்சி, காரைக்கால் ஆகிய இடங்கள் மட்டும் கி.பி. 1760-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் பிரெஞ்சுக்காரர் வசம் எஞ்சியிருந்தன.

இலாலி, நிசாம் மன்னரின் சகோதரர் பசலத்து சங்கையும் (Fazlat Jung) மராத்திய முராரிராவையும் உதவிக்கு அணுகினார். ஆனால், அவர்கள் உதவியளிக்க முன்வரவில்லை. அதையடுத்து அவர் மைசூரில் புதியதாக ஆதிக்கம் வகித்த ஐதர் அலியை அணுகி அவருக்கு மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளை அளிப்பதாக ஒப்புக்கொண்டு அவரது படையுதவியைப் பெற்றார். அப்படை கருநாடகத்தைத் தாக்கி நாசம் விளைவித்தது. ஆனால், பிரெஞ்சுக்காரருக்கு வெற்றிகிட்டாது என உணர்ந்தவுடன், ஐதர் தன் படைகளை விலக்கிக்கொண்டு அவர்களோடான நட்புறவை முறித்துக்கொண்டார்.

இதையடுத்து ஆங்கிலேயர் முன்னேறி கி.பி. 1760 ஆகசுட்டு மாதத்தில் புதுச்சேரியையே வளைத்துக் கொண்டனர். கடற்புறத்திலிருந்தும் அந்நகர் முற்றுகையிடப்பட்டது. புதுச்சேரி கி.பி. 1761 சனவரி 15-ஆம் நாளில் சரணடைந்தது. செஞ்சியையும் மலபார் கடற்கரையில் மாகியையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். அவ்வாண்டு ஏப்பிரல் மாதத்திற்குள் பிரெஞ்சுக்காரருக்கு இந்தியாவில் ஓர் இடம் கூட எஞ்சியிருக்கவில்லை. புதுச்சேரியும் மற்றப் பிரெஞ்சு வணிக மையங்களும் கி.பி. 1763-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி பிரான்சுக்கு அளிக்கப்பட்டபோதிலும் அதன் ஆதிக்கம் மீண்டும் உயிர் பெறவில்லை.

இவ்விரு ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயும் கி.பி 1778-இல் போர் ஏற்பட்டபோது, சப்ரெயின் (Suffrein) தலைமையில் கப்பற்படையையும் புசி தலைமையில் தரைப்படையையும் பிரான்சு அனுப்பியது. இவை ஐதர் அலியோடு சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. ஆனால், இப்படைத் தலைவர்கள் சாதனைகள் ஏதும் புரியவில்லை. தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்த நடத்தப்பட்ட இறுதிப் போராட்டமாக இப்போர் கருதப்படுகிறது. இது வெர்சே (Versailles) உடன்படிக்கை மூலம் முடிவுற்றது.

இதன் பிறகு பிரெஞ்சுப் புரட்சித் தொடர்பான போர்களின் போதும் நெப்போலியன் காலத்தில் நடந்த போர்களின் போதும் இந்தியக் கடல் பகுதிகளில் ஆங்கிலேயரின் வணிகத்தை அழிக்க பிரான்சு முயற்சி செய்தது. அதற்காக அது மராத்தியரோடும் திப்பு சுல்தானோடும் தொடர்ந்து அரசியல் உறவுகள் வைத்திருந்தது. ஆனால் இம்முயற்கள் பயனளிக்கவில்லை.

புதுச்சேரி, காரைக்கால், மாகி ஆகிய பகுதிகள் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதி வரை பிரெஞ்சு ஆட்சியில் இருந்து வந்தன. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின்போது இவை விடுதலை வீரர்களுக்குப் புகலிடமாக இருந் தன. இந்திய விடுதலைக்குப் பிறகு இந்திய அரசாங் கம் பிரெஞ்சு அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, பிரான்சு 1954-இல் தன் ஆதிக் கத்தைக் கைவிட்டு இப்பகுதிகளிலிருந்து வெளியேறி யது. ந.வ.கே.

துணை நூல்கள்:

**Majumdar, R.C.** & Others, An Advanced History of India, 4th Ed., Macmillan, Delhi, 1982.

**Smith, Vincent, A. and Percival Spear**, The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976.

**Mahajan, V.D.**, India Since 1526, S. Chand & Co., New Delhi, 1973.

**இந்தியாவில் போர்ச்சுகீசியர்**: இந்தியா விற்குக் கடல்வழி கண்டுபிடிக்க முயன்ற முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுகல் ஆகும். என்றி என்ற போர்ச்சுகீசிய இளவரசர் (கி.பி. 1393-1460) புதிய நாடுகளைக் காணத் துடிக்கும் மாலுமிகளைப் பெரிதும் ஊக்குவித்தார். பார்த்தலோமியோ தயசு என்பவர் இந்தியாவிற்கு வரும் முயற்சியில் நன்னம் பிக்கை முனையை அடைவதில் வெற்றி கண் டார். அங்கு வீசிய பேரலைகளைக் கண்டஞ்சி, அவர் தாயகம் திரும்பினார். அவருக்குப் பின்னர் அவர் நாட்டைச் சார்ந்த வாசுகோட காமா என் பார் நன்னம்பிக்கை முனையைக் கடந்து மேலைக் கரையிலுள்ள இந்தியாவின் கள்ளிக்கோட்டையைக் கி.பி. 1498-இல் வந்தடைந்தார். இக் கண்டுபிடிப்பு ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியாகக் கருதப் படுகிறது. சர் இ. தெனிசன் இராசு (Sir Denison Ross) என்ற வரலாற்று வல்லுநர் தம் 'கேம்பிரிட்சு இந்திய வரலாறு' என்னும் நூலுள் இடைக்கால உலக வரலாற்றில் இதுவே தலையாய நிகழ்ச்சி என்பார்.

புது வணிகத் தொடர்பு காரணமாகப் போர்ச்சு கல் பெரும் பொருளீட்டியது. அதுபோழ்து கள்ளிக் கோட்டைப் பகுதியின் இந்து அரசரான சாமரின் (Zamorin) என்பாரும் இத்தொடர்பைப் பெரிதும் ஊக்குவித்தார். மூன்று மாதங்கள் இந்தியாவில் தங்கி வணிகம் செய்த வாசுகோடகாமா பெரும் பொருளோடு தாயகம் திரும்பினார். இவரது வெற்றி யைக் கண்ட போர்ச்சுகீசியப் பெருவணிகர் பலர் ஆல்வரசு கேப்ரல் என்பார் தலைமையில் மீண்டும் ஒரு வணிகக் குழுவை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர். அக்குழுவும் கி.பி. 1500-இல் கள்ளிக் கோட்டையை வந்தடைந்தது. வாசுகோடகாமா விடமிருந்த நுண்மாண் நுழைபுலம் கேப்ரலிடம் இல்லாத காரணத்தால் ஆட்சியாளருடன் பூசல் விளைந்தது. அதன் விளைவாக அவர் அப்பகுதியை விட்டு ஓடும் அவலநிலை ஏற்பட்டது.

போர்ச்சுகீசிய வணிகத்தை மேலும் வலிமை மிக்கதாக்கக் கி.பி. 1502-இல் வாசுகோடகாமாவே மீண்டும் இருபது நாவாய்களுடன் கள்ளிக்கோட் டையை வந்தடைந்தார். போர்ச்சுகீசிய வணிகத் திற்குத் தடையாக இருப்பவர்கள் அராபியர்களே என்பதை உணர்ந்த அவர், அவர்களை முறியடிக்க வும் துணிந்தார். கள்ளிக்கோட்டைப் பகுதியினை ஆண்ட இந்து அரசர்களும் அவர்களை வெறுத்த னர் என்பதையும் அவர் தெளிவாக உணர்ந்தார். ஆயினும் அவரது தன்னலப் போக்கையும் கொள்கை யற்ற பாங்கையும் இந்து அரசர்கள் வெறுத்தனர். அவரை நம்பி அராபிய வணிகர்களைப் பகைத்துக் கொள்ளச் சாமரின் சிறிதும் இணங்கவில்லை. மாறாக அராபியர்களின் ஆதரவைப் பெறும்பொருட்டுச் சாம ரின் போர்ச்சுகீசியர்களை எதிர்க்கவும் துணிந்தார். தீயூழ்க் காரணமாக அப்போரில் சாமரின் தோல்வியுற்றார். இதனால், போர்ச்சுகீசியரின் மேலாண்மை அங்கு மேலோங்கி நின்றது. இதன் விளைவாய்ப் போர்ச்சுகீசியர்கள் கள்ளிக் கோட்டை, கொச்சி, கண்ணனூர் போன்ற பகுதி களில் தம் வணிக மையங்களை நிறுவினர். இந்தியா வில் நிறுவப்பட்ட வணிக மையங்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு அல்மேடா என்பார் கி.பி. 1505-இல் ஆளுநராக நியமிக்கப்பெற்றார். அவர் கி.பி. 1505-இலிருந்து 1509 வரை இங்குத்தங்கியிருந்து தம் தாயகத்தின் நலனைப் பேணிப்பாதுகாத்தார். தம்மிடம் போதிய படைவன்மையில்லாமையை நன் குணர்ந்த அவர் தம் எல்லையை விரிவுபடுத்த ஒரு போதும் துணியவில்லை. கடற்கரை அருகேமட்டும் தம் தொழிற்பேட்டைகளை நிறுவ அவர் பெரிதும் முனைந்தார். கடற்பகுதியிலிருந்தால் தம் சிறு நாவாய்ப்படையின் துணைக்கொண்டு அவற்றைக் காக்க முடியுமென்பது அவர்தம் துணிவு. ஆதலின், அவர்தம் கொள்கை 'நீல நீர்க்கொள்கை' (Blue Water Policy) என வழங்கப் பெறுகிறது. கடற்பகுதி மட்டுமெனின் இந்தியாவை ஆட்படுத்துதல் எளிது. இல்லையெனில் அது கானல்நீர் போன்றது என்பது அவர்தம் முடிவு. இக்கொள்கையின் விளைவால் கி.பி. 1508-இல் தம்மை எதிர்த்த மூர் இனத்தாரு

டன் போரிட்டுக் கி.பி. 1509-இல் நிகழ்ந்த போரில் உயிரிழந்தார்.

ஆல்புகர்க்கு (கி.பி.1509-1515): அல்மேடாவிற்குப் பின்னர் ஆளுநராகப் பதவியேற்ற ஆல்புகர்க்கு திறமை மிக்கவர். இவர் ஒரு பெரும் வெற்றியாளர் என்பதோடு நல்ல ஆட்சியாளரும் ஆவார். இந்தியாவில் ஒரு போர்ச்சுகீசியப் பேரரசை நிறுவுதலையே இவர் தம் தலையாய பணியாகக் கொண்டார். அதனை நிறைவேற்றும்பொருட்டு நான்கு வகை நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டார். 1) கடற்கரைக்கு அருகில் சில சிறப்புப் பகுதிகளை வென்று, அதில் போர்ச்சுகீசிய நேரடி வணிகத் தொடர்பினை நிறுவுதல். 2) திருமண உறவுகள் மூலம் சில மாவட்டங்களிலேனும் தம் குடியேற்றத்தினை நிறுவுதல். 3) மேற்கண்ட இருமுறைகளும் செயற்படவில்லையெனில் ஆங்கு அரண்களை நிறுவித் தமது ஆட்சியினை நிலைப்படுத்தல்.4) இம்மூன்று முறைகளும் செயற்படவில்லையெனில் இப்பகுதியிலுள்ள சிற்றரசுகளைப் போர்ச்சுகீசிய அரசின் மேலாண்மையை ஏற்று ஒருவகைக் கப்பம் செலுத்தச் செய்தல். இந்நால்வகைக் கோட்பாடுகளையும் கையாண்டு இவர் இங்கு ஒரு சிறு போர்ச்சுகீசிய அரசை நிறுவுவதில் வெற்றியும் கண்டார். இவர் கி.பி. 1510-இல் பிசப்பூர் மன்னரான யூசுபு ஆதில்கான் என்பவரிடமிருந்து கோவாவை வென்று தம் பகுதியோடு இணைத்துக் கொண்டார். அதே மன்னரிடமிருந்து கி.பி. 1512-இல் இவர் பனசுடெரிம் அரணையும் கைப்பற்றினார். தூரக்கிழக்கில் கி.பி. 1511-இல் சிறந்த வணிக மையமாகத் திகழ்ந்த மலாக்கா என்ற இடத்தையும் கைப்பற்றினார்.இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் அமைந்த இந்த வணிக மையம் போர்ச்சுகீசிய வணிக முன்னேற்றத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. இதன் விளைவாக வெனிசு போன்ற இத்தாலிய வணிக மையங்கள் தங்கள் வணிகத்திற்குப் போச்சுகீசியர்களையே நம்பி வாழும் நிலையும் ஏற்பட்டது. இசுலாமியரின் வணிகத்தை முற்றிலும் முறியடிக்கும் பொருட்டுக் கி.பி. 1513-இல் இவர் ஏடன் (Aden) என்ற இடத்தையும் கைப்பற்ற முனைந்தார். அம் முயற்சியில் இவரால் வெற்றிபெறஇயலவில்லை. ஆயினும் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மசு(Hormuz) என்ற இடத்தை இவர் கைப்பற்றித் தம் வணிகத்தினைப் பெரிதும் ஊக்குவித்தார். இலங்கையிலுள்ள கொழும்பு என்னும் இடத்திலும் தம் வணிக மையத்தை நிறுவுவதில் இவர் வெற்றி கண்டார். இவர் கோவா என்னும் இடத்தைத் தம் தலைமை மையமாக்கி அனைத்து வணிகத்தினையும் நடத்தி, அவ்விடத்திற்குப் பெரும்புகழை ஈட்டித் தந்தார்.

தொலைநோக்குமிக்க இப்பெருமகன் இன்றியமையா வணிகத் தடங்களில் தம் மேலாண்மையை நிறுவி அதன்வழித் தம் தாயக வணிகத்தினை மேம்படுத்தினார். இராசு (Ross) என்பார் கூறுவது போன்று மலாக்கா, ஆர்மசு, ஏடன் போன்ற வணிகத் தடங்களின் இன்றியமையாமையை நன்குணர்ந்த இவர், அவற்றில் தம் வணிகத்தைச் சிறந்தோங்கச் செய்த பெருமைக்குரியவர். இவை அனைத்தையும் விடப் போர்ச்சுகீசியர்களை இந்தியாவில் இரண்டற ஒன்றச் செய்ததுதான் இவர் பணிகளுள் தலையாயதாகக் கருதப்படுகிறது. போர்ச்சுகீசியர்களை இந்தியப் பெண்டிரோடு மணவுறவு கொள்ளச் செய்து இங்குப் போர்ச்சுகீசியக் குடியேற்றம் ஒன்றை நிறுவ இவர் பெரிதும் விழைந்தார். மற்றும் பல சிறப்பு வணிகத்தடங்களில் இவர் தம் மேலாண்மையை நிறுவி அதன் வாயிலாகப் பிறநாடுகளுக்கும் இவரைச் சார்ந்தே வணிகம் செய்யும் நிலையினையும் உருவாக்கினார். போர்ச்சுகல் உருவாக்கிய மாபெரும் வெற்றியாளரும் ஆட்சியாளரும் இவரேயெனில் மிகையாகாது.

இவருக்குப் பின்வந்தோர் தியூ, தாமன், சால்செட்டு, பேசின், சாந்தோம், ஊக்ளி போன்ற இடங்களைக் கைப்பற்றினர். ஆயினும் இவர்கள் கோவா, தாமன், தியூ போன்ற இடங்களைத் தவிரப் பிற இடங்களை இழந்தனர். கோவாவும், தியூவும், தாமனும் 1961 வரை போர்ச்சுகலிடமே இருந்தன. இந்திய அரசு 1961-இல் அவற்றை வென்று தன்னுடன் இணைத்துக் கொண்டது.

போர்ச்சுகீசியரின் தோல்விக்குக் காரணங்கள்: இந்தியாவின் ஒரு பகுதியை வென்று அங்கு முதன் முதலில் தங்கள் மேலாண்மையை நிறுவியவர்கள் போர்ச்சுகீசியர்தாம்; எனினும் அவர்களால் நிலையான ஒரு பேரரசை இங்கு நிறுவ இயலவில்லை. கடலாதிக்கமின்மையினால் அவர்களால் கடல் கடந்து ஒரு பேரரசை நிறுவ இயலவில்லை. போர்ச்சுகல் கி.பி. 1580-இல் இசுபெயின் பேரரசுடன் இணைக்கப்பட்டதால் அது தனித்தன்மையை இழந்ததுடன், தனக்கென ஒரு பேரரசையும் அமைத்து நிலைநிறுத்திக் கொள்ளவும் இயலாது போயிற்று. வரலாற்றுச் சிறப்புமிக்க ஆர்மடாப் போர்க்களத்தில் இசுபெயின் தோற்கடிக்கப்பட்டதால் அதன் கனவும் பொய்த்தது. போர்ச்சுகீசிய ஆளுநர்களும் இங்குப் பல தவறுகளைச் செய்தனர். இவர்கள் நாடு கவர்வதை விடுத்துத் தங்கள் சமயக்காவலர்களாக மாறினர். ஈண்டிருந்த மக்களைத் தங்கள் சமய மாற்றம் செய்யவே இவர்கள் பெரிதும் முயன்றனர். இதனால், இவர்கள் இம்மக்களின் ஆதரவை இழக்கவே பிற

ஐரோப்பிய வல்லரசுகளால் தோற்கடிக்கப்பட்டனர். தங்கள் சமயத்தை ஏற்காத மக்கள் இவர்களால் பெரிதும் கொடுமைப்படுத்தப்பட்டனர். சமயமாற்றத்தில் கொலையும், உடல் உறுப்புத் துண்டித்தலும் கொடுமைப்படுத்துதலும் இவர்கள் கையாண்ட முறைகளாக இருந்தன. தண்டனை மன்றங்களின் கொடுங்கோன்மை, கட்டாயச் சமய மாற்றம், உடலொறுப்புப் போன்ற கடுந்தண்டனைகளால் இவர்கள் மக்களின் மிக்க வெறுப்புக்குள்ளாயினர். ஈண்டிருந்த கோயில்கள் அனைத்தையும் இவர்கள் கொள்ளையிட்டதை மக்கள் ஒருபோதும் மறந்தாரில்லை. இலங்கை, பர்மா, சயாம் போன்ற நாடுகளில் வசித்த பல்லாயிரக்கணக்கான பௌத்தர்கள் போற்றிய புத்தரின் புனிதப்பல் பொடியாக நொறுக்கப்பட்டுக் கடலில் வீசப்பட்டது. அல்புகர்க்கு போன்றோர் இசுலாம் சமயத்தை இழிவுபடுத்தியதை இசுலாமியர் பெருங்கொடுமையாகக் கருதினர். வணிகத்திலும் அவர்கள் நேர்மையைக் கையாளவில்லை. சாமரின் போன்ற இந்து அரசர்களோடு இவர்கள் நேர்மையற்ற முறையில்நடந்து கொண்டது இவர்தம் செல்வாக்கைப் பெரிதும் குறைத்தது. போர்ச்சுகீசிய ஆளுநர்களும் அலுவலர்களும் செருக்குடையவராயும் கையூட்டு முறையினைப் போற்றுவோராயும் அமைந்திருந்தனர். தன்னலம் காரணமாகத் தங்கள் தாயக நன்மையையும் இவர்கள் புறக்கணித்தனர். மக்கள் ஆதரவை இழந்த போர்ச்சுகீசியர்கள் மொகலாயப் பேரரசின் வளர்ச்சியினாலும் தக்காண சுல்தானியத்தின் தோற்றத்தாலும் பெரிதும் தளர்ந்து போயினர். இவர்கள் தளர்ந்து சோர்ந்தபோது பிற ஐரோப்பியர்கள் வருகை இவர்களை முற்றிலும் செயலிழக்கச் செய்தது. அவர்களிடையே நிலவிய பூசல்கள் காரணமாகக் கடலாதிக்கமற்ற போர்ச்சுகீசியர் முற்றிலும் தோல்வியுற்றனர். போர்ச்சுகல் கி.பி. 1580 – இல் இசுபெயின் பேரரசுடன் இணைக்கப்பட்டதோடு அதன் ஆட்சிக்காலம் முடிவுற்றது.

போர்ச்சுகீசிய ஆட்சியின் தாக்கம்: போர்ச்சுகீசியர்கள் ஒரு நிலையான பேரரசை நிறுவுவதில் தோல்வியுறினும், அவர்கள் தம் ஆட்சி இங்குச் சில நிலையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை ஈண்டு நினைவுகூர வேண்டும். போர்ச்சுகீசியர்தாம் இந்தியாவில் ஐரோப்பிய ஆட்சிமுறை நிறுவப்படுவதற்கு அடித்தளம் அமைத்தவர்கள் என்னில் மிகையாகாது. துருக்கியர்களை அவர்கள் முறியடித்ததால் தான் பிற ஐரோப்பியர்கள் ஈண்டு வந்து வணிகம் செய்து, அதன்வழி ஆட்சியாளர்களாகத் திகழ முடிந்தது. ஐரோப்பியர்களுள் ஆங்கிலேயர்களின் கடலாதிக்கம் மிகுந்து காணப்பட்டதால் அவர்கள் பிற ஐரோப்பியர்களை வென்று தங்கள் மேலாண்மையை நிறுவ முடிந்தது.

போர்ச்சுகீசியர் மலபார்ப் பகுதிகள் ஒன்றிணைவதையும் அதன் மூலம் அவை வலிமைபெறுவதையும் தடுத்து நிறுத்தினர். பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டு மலபார்ப் பகுதிகள் ஒன்றிணைவதைத் தடுத்ததோடு, இங்கு ஒற்றுமையின்மைக்கும் வித்திட்டனர். இவர்கள் இங்குப் புதியதொரு போர் முறைக்கு வித்திட்டனர். பீரங்கிப்படை மூலமும் துப்பாக்கிப்படை மூலமும் போரிட்டு, ஒருவகையான புதிய போர்முறையினைப் பயன்படுத்தி இந்தியர்களை வென்றனர். பின்னர் இப்போர்முறை இந்தியாவில் பெரிதும் பின்பற்றப்பட்டது. இந்தியாவுக்குப் புதிய வணிகத்தடம் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்தியா மேலைநாடுகளோடு நேரடித் தொடர்பு கொள்ள வழிபிறந்தது. அதன் வணிகம் வளர்ந்ததோடு, அதன் பொருள்களுக்குப் பல புதிய வணிகச் சந்தைகளும் கிடைத்தன. இதனால், தொடக்க காலத்தில் இந்தியப்பொருள்களுக்கு நல்ல வரவேற்புக் கிட்டியது. போர்ச்சுகீசியர்தம் வணிகத் தடங்களைக் கடற்கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்றினர். வணிக வழித்தடங்களைச் செம்மைப்படுத்தியதோடு அவற்றை வணிகப் பாதுகாப்புமிக்க பகுதிகளாகவும் மாற்றிய பெருமை இவர்களையே சாரும். போர்ச்சுகீசியர் இந்தியாவில் பல முன்னேற்றங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தனர். இந்தியர்களோடு மணவுறவு கொண்டு இந்தியச் சமூக வாழ்வில் ஒரு மாற்றத்தை விளைவித்தனர். சதி போன்ற சமூகக் கொடுமைகளையும் இவர்களே களைந்தனர். இந்தியச் சமூகத்தில் நிலவிய பல சமூகக் கொடுமைகளைக் களைவதில் இவர்களே முன்னோடியாகத் திகழ்ந்தனர். இறுதியாகப் பண்பாட்டுத் துறையிலும் இவர்கள் பெரும் மறுமலர்ச்சியை ஊக்குவித்தனர். பல்லாயிரக்கணக்கான இந்துக்களைக் கிறித்தவர்களாக்கியதால் இங்கு ஒரு பண்பாட்டுமறுமலர்ச்சியை இவர்கள் ஊக்குவித்தனர். கிறித்தவர்களாக மாறிய பின்னரும் மாறியவர்கள் தங்கள் பழைய பண்பாட்டினைப் புறக்கணிக்காது பேணிக் காத்தமையால் ஒருவகைக் கலப்பினம் உருவாவதற்கு இவர்கள் தம் ஆட்சியேபெரிதும் துணைநின்றது. பெ.சு.

**இந்தியாவில் யூதர்**: யூதர்கள் எருசலேம் நகரத்தைச் சார்ந்தவர்கள். பாலசுத்தீனத்தின் பகுதியாய் இருந்த எருசலேத்தைக் கி.பி. முதலாம் நூற்றாண்டில் உரோமானியர் தாக்கி அழித்தபோது, உயிருக்கஞ்சிய பல யூதக் குடும்பங்கள் உலகின் பல பாகங்களுக்கு ஓடிப்போந்தனர். அவர்களுள் பலர் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள மலையாளப் பகுதியில் குடியேறினர். சேர மன்னரான பாசுகர

வருமன் என்பார் யூதருக்குத் தங்க இடம் கொடுத்த பட்டயம் இவர்களின் வரலாற்றைக் குறிக்கும் சான்றாகும். யூதர்கள் நல்ல செல்வர்கள்; திறமை மிக்க வணிகர்கள்.

இன்றும் மகாராட்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் பல யூதர்களின் குடும்பங்கள் சிறப்பாக வாழ்ந்துவருகின்றன. இவர்கள் ஏமன் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று கருதப்படுவர். இவர்கள் கி.பி.2-ஆம் நூற்றாண்டளவில் பம்பாய் கொலாபாவில் குடியேறியதாக அறியலாம்.

இன்றைய கேரள மாநிலத்தின் பெரும் நகரங்களுள் ஒன்றான கொச்சி-எர்ணாகுளத்தில் யூதர்கள் வணிகத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இங்கு யூதர்களின் வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. இந்தியாவில் குடியேறிய யூதர்களுள் இந்தியப் பெண்களை மணந்துகொண்டவர்களும் உண்டு. இந்துக்கள் காட்டிய சமயப்பொறையை யூதர்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

**இந்தியானா** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பத்தொன்பதாம் மாநிலமாகும். இந்தியானா (Indiana) வின் மேற்கில் இல்லினாய்சும், வடக்கில் மிச்சிகனும் மிச்சிகன் ஏரியும், கிழக்கில் ஒகையோவும், தெற்கில் கெண்டகியும் எல்லைகளாகும்.

இம்மாநிலத்தின் பரப்பளவு 93,993 ச.கி.மீ. இதில் 502 ச.கி.மீ. பரப்பளவில் நீர்நிலைகள் உள்ளன. மிச்சிகன் ஏரி இதனுள் அடங்காது.

இந்தியானா மாநிலத்தின் மக்கள்தொகை 54,90,224 (1980). சிறிய மாநிலம் பெருமளவு மக்கள் தொகை கொண்டுள்ளமைக்கு இந்தியான்ா ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்தியானா பாபாலிசு இம்மாநிலத்தின் தலைநகராகும். இதன் மக்கள்தொகை 7,11,539 (1980). போர்ட்டு வெயின், கேரி, இவான்சுவிலி, சௌத் பெண்டு, ஏமண்டு, மன்சி, ஆண்டர்சன், தெர்ரா ஆட்டு என்பன பிற நகரங்களாகும்.

இந்தியானாவின் நில அமைப்பு ஏறத்தாழச் சீராக அமைந்துள்ளது. இம்மாநிலம் கடல்மட்டத்தைவிட 170 மீ. முதல் 335 மீ. வரை உயரமுடையது. படிப்படியாகச் சரியும் வண்டல்மண் படிந்தது இம் மாநிலம்.

இந்தியானா குளிர்கால மழையும் வெப்பமான கோடைக்காலத்தையும் கொண்ட தட்பவெப்பநிலையுடையது. ஆண்டுக்கு 100 செ.மீ. வரை மழை பெறும் இந்தியானாவின் தென்பகுதியில், வட பகுதியைவிட மழை மிகுதி. தென்பகுதியில் ஆண்




வேளாண்மை, தொழில், மூல வளங்கள்

டுக்கு 200 நாள்களுக்கு மேல் பனிமூட்டம் இருப்பதில்லை. ஆனால், வடக்கில் இது 150 நாள்களுக்குள்ளாகவே இருக்கும்.


நிலப்பிரிவுகள்: இந்தியானாவை மூன்று நிலப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வடக்கிலிருந்து தெற்காக அவை 1. பெரும் ஏரிச் சமவெளிகள், 2. தில் சம வெளிகள், 3. தென்பாகத்துக் குன்றுகளும் தாழ் நிலங்களும் ஆம்.

ஆறுகள்: வாபாசு ஆறும் அதன் கிளைகளான வெள்ளாறும் திப்பிகானோ ஆறும் இம்மாநிலத்தின் மூன்றிலிரண்டு பாகத்திற்கு நீர் வழங்குகின்றன. செயிண்டு சோசபு ஆறு, கன் காகீ, ஒயிட்வாட்டர் ஆறு போன்றவை பிற ஆறுகள். ஒகையோ ஆறு இம்

மாநிலத்தின் தென் எல்லையாயிருந்தாலும் இவ்வாற்றின் பகுதிகள் இந்தியானாவில் பாய்வதில்லை. வாவாசி ஏரி இந்தியானாவின் பெரிய ஏரி. இம்மாநிலத்திலுள்ள 36 ஏரிகளும் 12 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளன. இந்தியானாவின் வடகிழக்கில் உள்ள இவற்றுடன் வேறு பலபெரும் ஏரிகளையும் குறிப்பிடலாம். அவை மணிடோ, மாக்சின்குக்கி, தர்க்கி என்பனவாம். கிளிப்டி நீர்வீழ்ச்சி இந்தியானாவின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சியாகும். ஏறத்தாழ 30 மீ. உயரத்திலிருந்து இந்நீர்வீழ்ச்சி விழுகிறது.

பொருளாதாரம்: செய்தொழிலும் வேளாண்மையுமே இம்மாநிலத்தின் முதன்மையான வருமானத்தை அளிக்கின்றன. கிரே பகுதியில் மிகப் பெரிய உருக்கு ஆலைகளும் எண்ணெய் தூய்மை செய்யும் ஆலைகளும் உள்ளன. இந்தியானா பாலிசு முதன்மையான செய்தொழில் மையமாகும். பரந்து செழித்த சமவெளிகளிலிருந்து உணவுப்பயிர்கள் மிக்க அளவில் விளைகின்றன.

செழித்த மண்வளமே இந்தியானாவின் மிகப்




இந்தியானா

பெரும் இயற்கைச் செல்வமாகும். காடுகள், கனிமப் படிவங்கள், நீர் ஊற்றுகள் அளவுக்கு மீறிய தண்ணீர் ஆகியவை பிற இயற்கைச் செல்வங்கள்.

இந்தியானாவுக்குத் தேவையான மின்சாரம் நிலக்கரியிலிருந்து கிடைக்கிறது. இங்கு நீர் மின்சக்தி குறைவாகவே கிடைக்கிறது.

இந்தியானா போக்குவரத்துக்கு ஏற்ற வானவூர்தி நிலையங்களையும் இருப்புப்பாதைத் தொடர்களையும் பேருந்து வழிகளையும் மிகுதியாய்ப் பெற்றுள்ளது. இந்த ஒரு மாநிலத்தில் மட்டும் 320 விமான நிலையங்கள் உள்ளன.

வரலாறு: இந்திய மரபு வழியினரே இந்தியானாவின் பழங்குடிகள். அவர்களை மேடுகட்டிகள் (Mound Builders) என்று கூறினர். இறந்தவர்களைப் புதைக்கும் மணல்மேடுகளைக் கட்டியதால் இப்பெயர் வந்தது போலும். இந்தியானாப் பகுதியில் காலடி வைத்த முதல் வெள்ளையர் இராபர்ட்டு கவலியர் என்ற பிரான்சுப் புவியியல் ஆய்வாளர் ஆவார். அவர் கி.பி. 1679-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதியாகிய கனடாவிலிருந்து வந்தார். அவர் கி.பி. 1731-ஆம் ஆண்டில் இந்தியானாவில் வின்சினசு (Vincennes) என்னுமிடத்தில் பிரான்சு மக்கள்தம் முதல் குடியேற்றத்தை நிலை நாட்டிக் கி.பி. 1733-இல் கோட்டையொன்றையும் கட்டினார்.

ஆங்கிலேயப் படைகள் கி.பி. 1778-இல் இந்தியானாப் பகுதியைக் கைப்பற்றத் தொடங்கின; கோட்டையையும் கைப்பற்றின. அமெரிக்காவின் வர்சீனியாப் படைகள் கி.பி. 1778-இல்கோட்டையைக் கைப்பற்றின. ஆங்கிலேயப் படைகள் திரும்பவும் அதனைக் கைப்பற்றின. எனினும், கி.பி.1779-இல் அமெரிக்கரின் படைத்தலைவரான கிளார்க்கு என்பவர் அதைத் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டார். கி.பி. 1787-இல் இந்தியானா அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியின் பாகமாயிற்று.



மாநிலச் சட்டமன்றம்

அமெரிக்கக் காங்கிரசு சட்ட மன்றம் கி.பி. 1800-ஆம் ஆண்டில் இந்தியானாப் பகுதியைத் தன் பகுதியாக நிலைநாட்டியது. பின் இது 1816-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 11-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பத்தொன்பதாம் மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தியானாவை ஊசியர் அரசு (Hoosier State) என்றும் குறிப்பிடுவர். ஊசியர் என்னும் சொல்லுக்குச் சண்டைக்காரன் என்பது பொருள்.

**இந்தியானா பாலிசு** அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள இந்தியானா மாநிலத்தின் தலைநகரம். இந்நகரம் வெண்ணாற்றங்கரையில் (White River) அமைக்கப்பட்டுள்ளது. இந்தியானா மாநிலத் தலைநகரமாக இந்தியானா பாலிசு (Indianapolis) கி.பி. 1820-ஆம் ஆண்டில் ஆக்கப்பட்டது. உணவுத் தானியங்களைப் பதப்படுத்தும் முதன்மையான வேளாண்மைப் பகுதியில் அமைந்துள்ள இவ்வூர் உணவுத் தானியம், கால்நடைகள் போன்றவற்றின் சிறப்பான சந்தையாகவும் கருதப்படுகிறது. இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள், வானவூர்திகள், பேருந்துகளின் பகுதிகள், தொலைபேசிக் கருவிகள், மின்னியல் கருவிகள், சாலை அமைப்பு, இயந்திரங்கள் போன்றவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கல்வி நிறுவனங்கள் பலவற்றின் மையமாகும். இங்குள்ள பட்லர் பல்கலைக்கழகம் (Butler University) அவற்றுள் ஒன்று. ஓய்வு பெற்ற அமெரிக்கப் படைவீரர் இயக்கத்தின் தேசியத் தலைமையிடம் இவ்வூரில் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலச் சட்டமன்ற மாளிகை (State Capital) யும், சேம்சு விட்காம்பு இரிலே (James Whitecomb Riley) என்னும் கவிஞரின் வீடும், அவர் இறந்தபின் அடக்கம் செய்யப்பட்ட இடமும், குடியரசுத் தலைவராயிருந்த பெஞ்சமின் ஆரிசன் (Benjamin Harrison) என்பாரின் வீடும், படைவீரர்கள் மற்றும் மாவுமிகளின் நினைவுச் சின்னமும் இந்நகரில் அமைந்துள்ள சிறப்பான சின்னங்களாகும். இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற பேருந்துப் பந்தயத் திடலும் உள்ளது. பெஞ்சமின் ஆரிசன் கோட்டை இவ்வூருக்கு அண்மையிலுள்ளது. இந்தியானாபாலிசுவின் மக்கள்தொகை 7,11,539 (1980).

**இந்திரகாளி** என்பது தமிழிலுள்ள பாட்டியல் நூல்களுள் ஒன்று. பாட்டியல் நூல்களுள் பழமை

யானதாகிய பன்னிரு பாட்டியல் என்னும் நூல் இந்திரகாளியம் என்னும் பாட்டியல் நூலினைச் சுட்டி அதிலிருந்து பல நூற்பாக்களைத் தொகுத்துள்ளது. வச்சணந்திமாலை என்னும் பாட்டியல் நூலின் உரை இந்திரகாளி என்னும் ஒரு பாட்டியல் நூலைக் குறிப்பிடுகிறது. நவநீதப்பாட்டியல் உரையும் இந் நூலைக் குறிப்பிட்டுள்ளது. இலக்கண நூலிலும் இலக்கண உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள இந்திர காளியம், இந்திரகாளி எனப்படும் நூலைச் சேர்ந் தனவாக அமைந்துள்ள நூற்பாக்களின் இயல்பை யும், பொருளமைதியையும் நன்கு ஆராய்வோர் இவ்விரு பெயர்களும் ஒருவர் செய்த பாட்டியல் நூலையே குறிக்கும் எனக் கருதுகின்றனர். இதன் ஆசிரியர் இந்திரகாளியார் எனப்படுவார். நவநீதப் பாட்டியல் உரையில் அமைந்துள்ள 'இந்திரகாளிய னார் உரைத்தபடி' என்னுந்தொடர்கொண்டு இந் நூலாசிரியர் இந்திரகாளியனார் என்று வழங்கப் பட்டமையினை உணரலாம். இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. பன்னிரு பாட்டியலில் 34 நூற்பாக் களும், வெண்பாப் பாட்டியல் உரையில் 6 நூற்பாக் களும், நவநீதப் பாட்டியல் உரையில் 5 நூற்பாக் களும் இடம்பெற்றுள்ளன. அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் இந்திரகாளியமும் இந்நூலும் வேறெனக் கருதுவோர் இந்நூலாசிரியர் சமணர் என்று கூறு கின்றனர். தமிழில் பாட்டியல் நூல்கள் தோற்றங் கொண்டபின் அவை இரு பிரிவுகளாகப் பிரிந்த மையலாயின. அவற்றுள் ஒரு பிரிவு அகத்தியர் நெறி என்றும், மற்றொரு பிரிவு இந்திரகாளியார் நெறி என்றும் வழங்கப்பட்டன. நவநீதப் பாட்டியல், சிதம் பரப்பாட்டியல் ஆகிய பாட்டியல் நூல்கள் அகத்தி யர் நெறியையும், வச்சணந்திமாலை இந்திரகாளி யார் நெறியையும் பின்பற்றி அமைந்தன. இந்நூல் பாட்டியல் நூல்கள் வரிசையில் முற்பட்டதன்றாயி னும், பாட்டியலில் ஒரு புதிய நெறியைத் தோற்று வித்து, அந்நெறியில் வச்சணந்திமாலை என்னும் பிறிதொரு பாட்டியல் நூல் வழிநூலாகத் தோன்று வதற்குக் காரணமாக விளங்கியுள்ளது. இந்நூலாசிரி யர் பெயரிலுள்ள இந்திரர் என்னும் பெயர் கொண் டும், இந்நூல் வச்சணந்தி மாலை என்னும் நூலுக்கு முதல் நூலாக இருப்பதுகொண்டும் இவர் சமணரா வார் என்று சிலர் கருதுகின்றனர். அடியார்க்கு நல் லார் குறிப்பிடும் இந்திரகாளியமும் இந்நூலும் ஒரு வரே செய்தன எனக் கருதுவோர் இவற்றின் ஆசிரி யர் சமணர் என்னும் கருத்தை உடன்படாமல், இவர் வைதிக நெறியினராவார் என்று கருதுகின்ற னர். யாமளேந்திரர் என்னும் பெயர் இந்திரயாமளர் என்னும் தொடர் முன் பின்னாக மாறி அமைந்தது என்றும், இச்சொல்லின் தமிழ்வடிவமே இந்திரகாளி என்பதாகுமென்றும், யாமளை காளியின் பெயர் களுள் ஒன்றாகும் என்றும், இத்தமிழ்ப் பெயரால் நூல் இந்திரகாளி எனப்பட்டது என்றும் கூறுகின் றனர். இந்நூல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன் றியது என்று கருதப்படுகிறது. காண்க: இந்திரகாளி யம்.

**இந்திரகாளியம்** சிலப்பதிகார உரையாசிரிய ராகிய அடியார்க்கு நல்லார் தம் உரையினை எழுது வதற்கு உதவியாக அமைந்தனவாகக் குறிப்பிடும் ஐந்து நூல்களுள் ஒன்று. இதனை இவர் தம் உரைச் சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலும் இதனோடு எண்ணப்பட்ட ஏனைய நான்கு நூல்களும் சிலப்பதிகாரமென்னும் நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்கள் அல்லவாயினும், ஒருபுடை ஒப்புமை கருதித் துணையெனக் கொள்ளப்பட்டன என்று கூறியுள்ளார். முழுதும் மறைந்தொழிந்த தமிழ் நூல்களுள் ஒன்றாகிய இந்நூல் இசைத்தமிழ் இலக்கணங்கூறும் நூலாகும் என்று கருதப்படுகிறது. இது நாடகம் பற்றிய நூல் எனக் கருதுவாரும் உளர். இந்நூலாசிரியர் யாமளேந்திரர் ஆவார். இவர் பார சவ முனிவருள் ஒருவர். பாரசவர் என்பது ஒரு வகைச் சாதியாரைக் குறிக்கும். யாமளேந்திரர் என் னும் பெயர் யாமள இந்திரர் என்னும் இருசொற் கள் புணர்ந்தமைந்த வடிவமாகும். இதிலுள்ள சொற் கள் முன் பின்னாக மாறி இந்திரயாமளர் என அமைந்தது என்றும், இதன் தமிழ் வடிவமே இந்திர காளி என்றும், இந்திரகாளி அல்லது இந்திரகாளிய ரால் செய்யப்பட்ட நூல் இந்திரகாளி என்றும் இந்திரகாளியம் என்றும் வழங்கப்பட்டதென்றும் கூறுகின்றனர். யாமளை என்பது காளியின் பெயர் களுள் ஒன்றாதலின், யாமளேந்திரர் என்னும் பெயர் கொண்டவர் வைதிக நெறி சார்ந்தவராவார் என்று கருதப்படுகிறது.

இந்திரகாளியரால் செய்யப்பட்ட இந்திரகாளி யம் என்னும் பாட்டியல் ஒன்று பன்னிரு பாட்டியல் நூலால் அறியப்படுகிறது. இந்திரகாளியர் முத்தமி ழுக்கும் இலக்கணம் செய்திருந்தார் என்றும் கூறப் படுகிறது. அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் இந்திர காளியமும் பாட்டியல் இலக்கணம் பற்றிக் கூறும் இந்திரகாளியமும் ஒரே நூலாகும் என்று சிலரும், வேறு நூல்களாகும் என்று வேறு சிலரும் கருதுகின் றனர். இசைத் தமிழுக்குப் பாட்டியலறிவும் வேண் டப்படுமாதலின் இந்திரகாளியரே இசையியல், பாட் டியல் ஆகிய இரண்டிலக்கணமும் அடங்க இந்நூலைச் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. இந்நூல் தோன்றிய காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். காண்க: இந்திர காளி.

**இந்திரசித்தன்**: இந்திரசித்தன் இராவணனது முதல்மகன். இவன் பெருவீரன். விற்போரிலும் மாயப்போரிலும் வல்லவன். இவன் பிறந்தபொழுது அழுதஓசை மேகம் இடித்தாற் போன்றிருந்தமையால் மேகநாதன் எனப் பெயரிடப்பட்டான். இராவண னது திக்குவிசயத்தின்போது இந்திரனை வென்ற மையால் இந்திரசித்து என்னும் பெயர் பெற்றான். இராவணனின் மகன் என்னும் பொருள்பட இராவணி எனவும் இவனைக் குறிப்பர். இவன் தம்பியர் அதி காயன், அக்ககுமாரன், தேவாந்தகன், நராந்தகன், திரிசிரா என்போர். இவன் தாய் மண்டோதரி.

இவன் இந்திரனைச் சிறைசெய்து தன் தந்தை முன் நிறுத்தியபோது, பிரமன் இவனை இந்திரசித்தன் எனப் பாராட்டி வரங்கள் தந்தான்.

அசோகவனத்தை யழித்த அனுமன் தன் தம்பி யாகிய அக்ககுமாரனைத் தரையில் தேய்த்துக் கொன்றமையை அறிந்த இந்திரசித்தன், அவனைப் பிரமாத்திரத்தால் பிடித்து இராவணனிடம் கொண்டு போய்ச் சேர்த்தான்.

இராவணன் கூட்டிய மந்திரக் குழுவில் இந்திர சித்தன் வீரவுரை பேசினான்; 'மானுடரையும் குரங் கினத்தையும் வேரும் இல்லாதபடி வென்று மீள் வேன், விடை தருக', என வேண்டினான்.

அதிகாயனும் பிற தம்பியரும் போரில் மாண்ட தும், 'என் தம்பியைக் கொன்ற இலக்குவன் குருதியை மண்ணில் சிந்திலேன் எனில், என்னிடம் தோற்ற இந்திரன்பால் என் வீரம் நான்குமுறை தோற்ற தாகுக, என்று சூளுரைத்துக் களம் சென்றான். இந்திரசித்தனைக் கண்ட வீடணன் இலக்குவனிடம் அவனது வலிமையைக் கூறித் தக்க துணையோடு போர்புரிய வேண்டினான். அனுமன், நீலன், அங்கதன் ஆகியோரை ஆயிரமாயிரம் அம்புகளால் இந்திரசித் தன் புண்படுத்தினான். பின் இலக்குவனோடு போர் புரிந்தான். தன் தேரை இலக்குவன் சிதைக்கவும் வானில் சென்று அணு உருக்கொண்டு, அரவப் படையை (நாகபாசத்தை) ஏவி அனைவரையும் கட் டுண்டு வீழச்செய்தான்.

மறுநாள், இந்திரசித்தன் இலக்குவனை நோக்கி, என் தம்பியர்க்கும் சிறிய தந்தைக்கும் உம் இருவர் குருதி கொண்டு நீர்க்கடன் செய்வேன்' என வஞ்சி னம் கூறிப் போர் தொடங்கினான். பெரும்போர் நிகழ்த்தியபின் பிரமாத்திரத்தை ஏவி அனைவரும் மூச்சற்று விழச் செய்தான்.

அனுமன் காணுமாறு மாயச்சீதையை வெட்டி வீழ்த்திய இந்திரசித்தன் அயோத்தியை அழிக்கச் செல்வதாகக் கூறி விரைந்து, நிகும்பலையை அடைந்து பகைவரை வெல்லும் வேள்வியைத் தொடங்கினான். உண்மையறிந்த இலக்குவன் வீடணன் முதலியோரு டன் சென்று வேள்வியைச் சிதைத்தான். வேள்வி அழியக் கண்ட இந்திரசித்தன் வருந்திப் பின் போர்க்கு எழுந்தான். வெல்லுவது அரிது என உணர்ந்த நிலை யில், தன் தந்தையை நெறிப்படுத்திக் காக்கக் கருதி அவனிடம் சென்று சீதை மீது கொண்ட ஆசையை விடுமாறு கூறினான். ஆனால், இராவணன் செருக்கு டன் அவன் அறிவுரையைப் புறக்கணித்தான். முயற்சி பயனறவே, இந்திரசித்தன் மீண்டும் களம் புகுந்து கடும்போர் விளைத்தான். அவன் போர்த்திறம் கண்டு வானவர் பொன்மலர் பொழிந்தனர். இலக்குவன் வியந்தான்.

இலக்குவன் இந்திரசித்தனின் தேரைச் சிதைத்துக் கையைத் துணித்தான். 'இராமனே நல்லற மூர்த்தி எனில் இவனைக் கொல்க' என்று ஒரு பிறைவாய் அம்பைச் செலுத்தினான். இந்திரசித்தன் தலை மண்ணில் வீழ்ந்தது. அத்தலையை எடுத்துச் சென்று இராமன்முன் வைத்தனர். இராமன் இலக்குவனைத் தழுவி மகிழ்ந்தான்.

செய்தியறிந்த இராவணன் களம்சென்று தம் தலைமகனின் தலையற்ற உடலைக்கண்டு அரற்றி னான். 'எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம் ஏங்கி ஏங்கி நினக்கு நான் செய்வதானேன்' என்று புலம்பி, அவ்வுடலோடு இலங்கை அடைந்தான். மண்டோதரி, 'தவழ்கின்ற பருவத்தில் சிங்கங்களை மோதவிட்டு விளையாடிய உன் வீரச் செயலை மீண்டும் காண் பேனோ?' என்று கதறினாள். மகன் உடலைத் தயிலத் தோணியில் இட்டு வைக்கக் கூறி இராவணன் தானே போர்புரியப் புறப்பட்டான்.

இராமகாதையில் இடம்பெறும் வீரர்களுள் இந்திர சித்தன் சிறந்துவிளங்குகிறான். இவனை 'வில்லாளரை எண்ணில் விரற்கு முன்னிற்கும் வீரன்' எனக் கம்பர் போற்றுவார். இவன் களம் புகுந்தபோது, 'இன்று போர் வலிது' என வீடணன் கூறியமையும், இவன் போர்த்திறம் கண்டு, 'இவனோடு எஞ்சும் ஆண் தொழில் ஆற்றல்' என இலக்குவன் வியந்தமையும், இவன் தலையை அங்கதன் எடுத்து வரக்கண்ட இராமன், 'என் தலை எடுக்கலானேன்; இனிக் குடை எடுப்பேன்' என மகிழ்ந்தமையும் இவனது வீரச் சிறப்பிற்குச் சான்று பகர்வன.

இந்திரசித்தன் திக்குவிசயத்தின்போது ஆதிசே டன் மகள் சுலோச்சனையைக் கவர்ந்து வந்து மணந் தான் என்றும், ஆதிசேடன் இலக்குவனாகப் பிறந்து அதற்குப் பழி தீர்க்க அவனைக் கொன்றான் என்

றும் கூறும் கதைகள் உள. இவற்றுக்கு மூலநூல்களில் சான்று இல்லை. ந.மெ.

சில விளக்கங்கள்:

1. இந்திரசித்தன் தம்பியாகிய திரிசிரா சனத்தானத்தில் கரதூடணருடன் இராமனால் கொல்லப்பட்ட திரிசிராவின் வேறாவான். பின்ன வன் இராவணனது சிற்றன்னை மகன்.

2. சுலோச்சனை பற்றிய செய்திகள் வான்மீகத் திலோ கம்பர், ஒட்டக்கூத்தர் நூல்களிலோ இல்லை.

3. 'என்தலை உடுக்கலானேன்' என்பது கம்பர் கழகப் பதிப்பின் பாடம். 'என்தலை எடுக்கலானேன்' என்ற சாமி. சிதம்பரனார் கொண்ட பாடம் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இந்திரத்துய்மன்** மகாபாரதம், பாகவதம் ஆகிய இதிகாச புராணங்களில் இடம்பெறும் கதை மாந்தர்களுள் ஒருவன். இப்பெயரில் பலர் இருந்துள் ளனர்.

1. பரதனின் புதல்வனான சுமதி என்பவனுக்கு மகன். இவன் அரசவையிலிருந்தபோது அகத்திய முனிவர் வந்தார். வந்தவரை ஏற்றுப் போற்றா மலும் மதியாமலும் இருந்த இவன்மீது சினங் கொண்டு, 'மத யானையாகப் போக' என அவர் சாபமிட்டார். அதன் விளைவாக யானையாய் மாறிய இவன், 'கசேந்திரன்' என்னும் பெயரில் காட்டில் திரிந்து கொண்டிருந்தான். நீருண்ணுதற் குக் குளத்தில் இறங்கிய போது, ஒரு முதலை இவன் காலைக் கௌவிக் கொண்டது. தன் செயலற்று இறுதியில் 'ஆதிமூலமே' என்று திருமாலை நினைந்து ஓலமிட, அது கேட்ட திருமால் தம் சக் கரப் படையினை ஏவி, முதலையைக் கொன்று கசேந்திரனைக் காத்துக் காட்சியளித்தார். இவன் கசேந்திரனாகிக் கடைசியில் பரமபத[illegible] ய்திய செய்தி பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

2. சந்திர குலத்து அரசர்களுள் ஒருவன். நீண்ட காலம் உயிரோடு வாழ்ந்தவன். இவன் வரலாற்றை மார்க்கண்டேய முனிவர் பாண்டுவிற்குக் கூறினார். தேவருலகில் பல்லாண்டுகள் இந்திரப் பட்டம் பெற்று விளக்கியவன். வெள்ளைக் குதிரையாகி மார்க்கண்டேய முனிவரைத் தாங்கினான்.

3. கண்ணனால் கொல்லப்பட்டவன்.

4. இப்பெயரில் ஒரு குளம் அமைந்து விளங் கியது. இந்திரத் துய்ம்மன் 1000 வேள்விகள் செய்து, எண்ணிறந்த பசுக்களை அந்தணர்களுக்குப் பரிசாக வழங்கினான். அப்பசுக்களின் குளம்புகளால் ஆக்கப் பட்டது இக்குளம். இச்செய்தி மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ளது.

5. பாத்ம கற்பத்தில் இருந்த ஒரு பாண்டிய மன்னன். புராணக் கேள்வியால் மறுபிறப்பில் பிராமணனாய்ப் பிறந்து, திருமாலை நினைந்துதவம் புரிந்தான். திருமாலால் முத்தி அடைந்தான். இவன் புதல்வர்கள் சுத்துய்மனும் விப்பிரவாகுவும் ஆவர்.

6. மகத நாட்டு மன்னன். மனைவி பெயர் அக லிகை. வஞ்சனாகிய இந்திரன் தன் மனைவியோடு கூடா ஒழுக்கம் கொள்ள, அதனை அறிந்த இவன் அவர்களை ஊரை விட்டு வெளியேற்றினான். சு.ஜே.

**இந்திர நீல பருப்பதம்** தேவாரப் பாடல் பெற்ற வடநாட்டுத் தலங்களுள் ஒன்று. திருஞான சம்பந்தரின் தேவாரப் பதிகம் இத்தலத்திற்குள்ளது. இவர் பல தலங்களுக்கும் சென்று பதிகம் பாடி வழி பட்டுத் திருக்காளத்தி மலைக்குச் சென்றார். அங்குக் காளத்திநாதரைப் பதிகம்பாடி வழிபட்ட பின்னர் அம்மலையிலிருந்தே வடக்கிலும் குடக்கிலும் விளங் கிய ஐந்து சிவத்தலங்களை உள்ளத்தால் நினைந் துருகிப் பாடினார். அந்த ஐந்து தலங்களுள் ஒன்று இந்திர நீல பருப்பதம் எனப்படும். ஏனைய தலங் கள் வடகயிலை, திருக்கேதாரம், கோகரணம், திருப் பருப்பதம் ஆகியனவாகும். இங்குள்ள இறைவன் தன் திருவடியினை நினைத்த அளவில் அருளிச் செய்வான் என்னும் கருத்தில் அமைந்த 'நிலவும் இந்திர நீல பருப்பதத்து உலவினான் அடி உள்க நல் குமே' என்னும் தேவாரப்பகுதி, திருஞான சம்பந்தர் இத்தலத்திற்குச் செல்லாமல் தொலைவிலிருந்தே நினைந்து பாடிய குறிப்பினை உணர்த்துவதாக உள்ளது. இறைவன் பெயர் -நீலாசல நாதர்;இறைவி பெயர் நீலாம்பிகை. நீலாசலம் என்பது நீலமலை யினைக் குறிக்கும்.

இந்திரன் வழிபட்டமையால் இத்தலம் இந்திர நீல பருப்பதம் என்னும் பெயர் பெற்றது. இச்செய்தி யினை, 'இந்திரன் தொழும் நீலபர்ப்பதத்து அந்த மில்லியை' என்று ஞானசம்பந்தர் பதிகத்தின் இறுதிப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். பயண வசதிகள் மிக் குள்ள இக்காலத்திலும் இத்தலத்திற்குச் சென்று வருவது எளிதானதன்று. சென்னையிலிருந்து கல் கத்தா சென்று, அங்கிருந்து புகைவண்டியில் பகால் பூர், தார்பங்கா, இரக்சூல் வழியாகச் சென்று பிக்ந தொரி அடைந்து, அங்கிருந்து 60 கல் தொலைவு கடந்து நேபாளத்தின் தலைநகரான காட்மண்டு வினை அடைதல் வேண்டும்; அங்கிருந்து வடகிழக் கில் மலைமேல் ஏறத்தாழ 100 கல் சென்றால் இத்

தலத்தினை அடையலாம். கடல் மட்டத்திற்கு மேல் 18000 அடி உயரத்தில் உள்ள இவ்விடத்திற்கு, உறை பனியில் நடந்து செல்ல வேண்டியும் இருக்கும். இத் தலத்தில் கட்டிடமாக அமைந்த திருக்கோயில் இல்லை. சிவலிங்கம் போல அமைந்த சுயம்புமூர்த் தியே இங்குள்ள இலிங்கமாக உள்ளது. மலையின் குவிந்த கீழ்ப்பகுதி பீடமாகத் திகழ்கிறது. இப்பீட மாக அமைந்துள்ள பாறை நீல நிறமுடையதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அருகில் நீலகங்கை என்னும் சிற்றாறு ஓடுகிறது. இறைவன் திருவுரு எனக் கருதப்படும் பகுதிக்கு வடகிழக்கில் பச்சை நிறத்தில் அமைந்துள்ள தான்தோன்றியான பாறை அம்பிகையைக் குறிக்கும். இறைவன் திருமேனி அரு கில் உள்ள பிறிதொரு பாறை இந்திரன் எனக் கரு தப்படுகிறது. வெள்ளிப் பனிமலையின் மிக்க உயர மான இடத்தில், இத்தகையதொரு அமைப்பினை உளங்கொண்டு சிந்தித்தால், இந்திர நீலபருப்பதம் எனப் பெயரமைந்ததன் பொருத்தம் புலனாகும்.

**இந்திரப் பிரத்தம்** என்பது தில்லிமாநகருக்கு அண்மையிலுள்ளதோர் ஊர். இதனை 'இந்திரப்பத்' என்பர். பாலி இலக்கியத்தில் இந்நகரம் குரு மர பினர் ஆண்ட பகுதியிலுள்ள ஊராகக் கூறப்பட்டுள் ளது. அங்குத் தனஞ்சய கவுரவர் என்பார் அரசராக இருந்தாரெனக் குருதம்ம சாதகம் குறிப்பிட்டுள் ளது. 14 கி.மீ. அளவிற்கு அது பரந்து விரிந்திருந் தது. பண்டைக் காலத்தில் சிறப்பான நகரங்களாகக் கருதப்பட்ட மூன்று நகரங்களுள் இந்திரப் பிரத்தம் ஒன்று; ஏனையவை உத்தர பாஞ்சாலமும் கேகய மும் ஆம். இந்திரப் பிரத்தத்தை வாரணாசியுடன் நேர்வழியொன்று இணைத்தது. இந்த நகரத்தில் இந்திரன் பல வேள்விகளைச் செய்தான் என்று பதும புராணம் கூறுகிறது. அவன் இரமாபதி என் னும் தெய்வத்தை வழிபட்டான் என்றும், நாராயண னின் முன்னிலையில் அந்தணர்களுக்குப் பல அன் பளிப்புகளை வழங்கினான் என்றும் அப்புராணம் சுட் டிக் காட்டுகிறது. அதன் பின்னரே இந்நகரம் இந்தி ரப்பிரத்தம் எனப் பெயர் பெற்றது. கோவிந்த சந் திரர் என்பாரின் கமுலி மானியக் கல்வெட்டிலும் இந்நகரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நகரம் தென் தில்லிக்கு ஏறத்தாழ 3. கி.மீ தொலைவில் இயமுனைஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பின்னர், இந்நகரம் உதிட்டிரரின் தலைநகராய், மகாபாரதத் தில் பெருஞ்சிறப்புப் பெற்ற நகரம் என்று கூறப் பட்டுள்ளது. காகடவாலர் கல்வெட்டுகளில் குறிப் பிடப்பெற்றுள்ள இந்திரத்தானம் என்னும் ஊர் இந்திரப் பிரத்தத்தையே குறிக்கிறதென்பர். இங்குப் பாண்டவர்களும் இருந்தார்கள் என்றும் கூறுவர். இதற்குக் காண்டவப் பிரத்தம் என்ற பெயருமுண்டு.

**இந்திர விழா** என்பது பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் எடுக்கப்பெற்ற ஒருவிழா வாகும். நாடு நோயின்றி வளமுற இந்திரனுக்கு விழா நிகழ்த்துமாறு அகத்திய முனிவர் ஆணையிட, அதன்படி தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம் பியன் என்னும் சோழமன்னன் இந்திரனை வேண்டி, அவன் இசைவு பெற்று ஆண்டுதோறும் தன் தலை நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் இவ்விழாவினை நடத்தி வந்தான்: பின்னர் வந்த சோழ மன்னர் களும் தொடர்ந்து நடத்தி வந்தனர்; நெடுமுடிக் கிள்ளி என்னும் சோழன் இவ்விழாவை நடத்தாத தால் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட் டது என்பர். இந்திரவிழாவைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதை யிலும் மணிமேகலையில் விழாவறை காதையிலும் இடம் பெற்றுள்ளன. இந்திரவிழா நடைபெற்ற தனை வான்மீகி, காளிதாசர் முதலியோர் தத்தம் நூல்களில் குறித்துள்ளனர். மருதநிலத் தெய்வமாகிய இந்திரனை மக்கள் விழவு செய்து அழைக்க, அவன் வெளிப்படுவான் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் சுட்டியுள்ளார்.

சித்திரைத் திங்களில் சித்திரை விண்மீனொடு கூடிய முழுநிலவு நாளில் (சித்திரா பௌர்ணமி) இந்திரவிழாக் கொண்டாடப் பெறும். வள்ளுவ முதி யோன் யானையின் பிடரியில் பெருமுரசினை ஏற்றி, அதனை முழக்கிப் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க' என வாழ்த்தி, இந்திர விழா வின் தொடக்கத்தையும் முடிவையும் எடுத்துக்கூறி விழாவைத் தொடங்குமாறும், வீடுகள், மன்றங்கள், தெருக்கள் முதலியவற்றை அணி செய்யுமாறும் அறி விப்பான். மேலும், பல்வேறு கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடத்துமாறு நகர மக்கள் அறிவிக்கப் படுவர். இருபத்தெட்டு நாட்கள் இவ்விழா நிகழும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் மருவூர்ப் பாக்கத்துக் கும், பட்டினப்பாக்கத்துக்கும் இடைப்பட்ட சோலை கள் விளங்கும் நாளங்காடியில் காவல்பூதக் கோவில் இருந்தது. அது இந்திரன் ஏவலால் முசுகுந்தன் பொருட்டு அருளப் பெற்றது. முசுகுந்தன் இந்திரனது கோநகரைக் காத்தபோது, அவுணர்கள் எதிர்த்து வந்து அவனிடம் தோற்றனர். பின்னர் இருள் செய் யும் கணையைத் தம் மாயையால் முசுகுந்தன் மீது ஏவினர். அந்த வஞ்சத்தை ஒழிக்க, மிகப்பெரிய பூதம் ஒன்றை முசுகுந்தன் பொருட்டு இந்திரன் ஏவினான். அப்பூதம் அவுணர் மாயையைப் போக்கிற்று. பின்னர் அது புகார் நகரிலேயே தங்கியிருந்தது. இந்திரவிழா வின்போது அதற்குப் பல்வகை உணவுப் பொருள் களையும் படைத்து மறக்குடி மகளிர் வழிபட்டனர்.

வீரமறவர்கள் அப்பூதத்திற்குத் தம் தலைகளைக் கொய்து வைத்து உயிர்ப்பலி ஊட்டினர்.

வச்சிரநாடு, மகதநாடு, அவந்திநாடு ஆகிய நாடுகளின் பழைய வேந்தர்கள் தேவர்களுக்கு முன்னொருகால் உதவியதற்குக் கைம்மாறாகத் தேவ தச்சனான மயன் அவர்களுக்கு முறையே முத்துப் பந்தர், வித்தியா மண்டபம், தோரணவாயில் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தான். கரிகாலன் வடநாட்டுக்குச் சென்று வந்தபோது அந்நாட்டு மன்னர்கள் மேற்குறித்த மூன்றையும் திறையாகவும் பகைப் புறத்தும் அளித்தனர். அவன் அவற்றைப் புகாருக்குக் கொண்டுவந்து ஒன்றாக ஒரு மண்டபத்தில் வைத்தான். அது சித்திரமண்டபம் எனப்பெற்றது. இந்திரனால் சோழ மன்னர்க்கு அளிக்கப் பெற்ற வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூத சதுக்க மன்றம், பாவைமன்றம் ஆகிய தெய்வத் தன்மை சான்ற ஐவகை மன்றங்களும் புகாரில் இருந்தன. இவற்றிலெல்லாம் இந்திர விழாவின்போது அரிய பலிகளை இட்டுப் போற்றினர்.

இந்திரனுக்குரிய வச்சிரக் கோட்டத்தில் விழாவின் தொடக்கத்துக்கு அறிகுறியாகக் கொடி ஏற்றப் பட்டது. மரகத மணியும் வயிரமும் இழைத்த பவளக் கால்களும், பசும்பொன் மேற்கூரையும் உடைய பல்லக்கில் இந்திரன் உருவம் வீதிவலம் வந்தது. வீதிகள் அழகுறுத்தப் பெற்றன. எங்கும் பூரண கும்பங்களும், முளைப்பாலிகைகளும், பாவை விளக்கும், பசும்பொன் கொடியும், வெண்சாமரையும், பொற்சுண்ணமும் இந்திரனை வரவேற்கக் காத்திருந்தன.

ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார், அரசகுமரர், வணிககுமரர் முதலியோர் ஒருங்கு திரண்டு தம் அரசு மேம்படுதற்கு இந்திரனை வாழ்த்தினர்; காவிரியின் பெரிய சங்கமத் துறையில் இந்திரன் உருவத்திற்கு (வச்சிரத்துக்குப்) புண்ணிய நன்னீரைப் பொற்குடங்களில் முகந்து, மண்ணகம் மருள, வானகம் வியப்பத் திருமஞ்சன நீராட்டினர்.

இவ்வாறு இந்திரவிழா ் ழ்ந்தபொழுது சிவன், செவ்வேள், பலதேவன், திரு , அருகன் ஆகியோர் கோவில்களிலும், பிற வேறு தெய்வக் கோவில்களிலும் வேள்விகளும் கடவுளர் விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. அறவோர் விளங்கிய இடங்களில் எல்லாம் அறவுரைகள் நிகழ்ந்தன. அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இரவும் பகலும் கூத்தும் இசையும் நிகழ்ந்தன. தெருவெங்கும் விழாக் களிப்புச் சிறந்திருந்தது. பரத்தைமை ஒழுக்கம் பூண்ட கணவரோடு மகளிர் ஊடல் நிகழ்தல் உண்டு.

இந்திரவிழாவின்போது மாதவி பதினொரு வகை ஆடல்களை ஆடிக்காட்டியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

வித்தியாதர வீரன் ஒருவன் தன் காதலியுடன் பூம்புகாருக்கு வந்து, மேற்குறித்த நாளங்காடிக் காவற்பூதம், ஐவகை மன்றங்கள் ஆகியவற்றின் பெருமையைக் கண்டும், மாதவியின் ஆடலைக் கண்டும், அமரர் தலைவனான இந்திரனை வணங்கியும் நகரில் மகிழ்வுடன் நடந்த இந்திரவிழாவினைக் கண்டுகளித்தான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

விழாவிற்குக் கொடி எடுத்த நாள் முதல் இருபத்தெட்டு நாள்களும் தொடர்ந்து விழா நடந்து, பின்னர்க் கொடி இறக்கப்பெற்று விழா முடிவுறும். விழா முடிந்த பின் வரும் முழுமதி நாளில் மக்கள் கடலாடி மகிழ்ந்ததாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

ந.மா.

**இந்திரன்** அதிதிக்கும் காசிய பிரசாபதிக்கும் பிறந்த 12 புதல்வர்களுள் ஒருவன். இவன் சொர்க்கத்தில் உள்ள தேவர்களுக்குத் தலைவன்; மருத நிலத்துக்குக் கடவுள்; கிழக்குத் திசைக்குக் காவலன்.

இவனது தலைநகரம் அமராவதி; ஊர்தி ஐராவதம் என்னும் யானையும் உச்சைச்சிரவம் என்னும் வெள்ளைக் குதிரையுமாகும். சபை சுதர்மை; வனம் நந்தனம்; சாரதி மாதலி; செல்வம் கற்பகதரு, சந்தானம், அரிச்சந்தானம், பாரிசாதம், மந்தாரம்; உப்பரிகை வைசயந்தம்; மகன் சயந்தன்; இரதம் வியோம யானம்; தேவவைத்தியர் அச்சுவனிதேவர், தன்வந்திரி; அரம்பையர் ஊர்வசி, திலோத்தமை முதலியோர். இவன் நூறு அசுவமேத யாகம் செய்து இந்திரபதம் பெற்றவன்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில் உள்ள இடைவெளியைச் சார்ந்த தெய்வங்களுள் தலைசிறந்தவன் இந்திரன் என்று இருக்குவேதம் குறிக்கிறது. இருக்கு வேதத்தில் நான்கில் ஒரு பகுதிக்கதிகமான பாடல்கள் இவனைப் போற்றுவனவாக உள்ளன. இவன் இடி, மின்னல் இரண்டுடனும் தொடர்புடையவன். வறட்சி, இருள் என்னும் அரக்கர்கள் இவனுக்குப் பகைவர்கள். இவன் ஒளியைப் பரவச்செய்தும், சிறை வைக்கப்பட்ட நீரை விடுவித்தும் பெரும்புகழ் ஈட்டியவன். இவன் பழுப்பு நிறமான தாடி, தலைமயிர் உடையவன், கையில் வச்சிரத்தை மிகச் சிறப்பான படைக்கலமாகத் தாங்கி நிற்பவன். இப்படைக்கலம் இரும்பால் ஆனது; கூரிய முனைகள் பலவற்றையுடையது; பொன்னொளி வீசுவது. இந்திரன் வில்லம்புகளை ஏந்தியும் வளைந்த ஈட்டியைத் தாங்கி

யும் விளங்குபவன்; இரு குதிரைகள் பூட்டிய பொன் தேரில் ஊர்பவன்; சோமபானம் பருகுவதில் மிக்க விருப்பம் உடையவன். இப்பானம் இவன் வீரச் செயல்கள் புரிவதற்குரிய வலிமையை அளிக்கும். இதுவே விருத்திரனை அழிக்கும் ஆற்றலை இவனிடம் தோற்றுவித்தது. விருத்திரனை அழிப்போன் என்னும் பொருள்தரும் 'விருத்திரகா' என்பது இவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. 'தியௌ', 'துவட்டா' ஆகியோரையும் இவன் தந்தை என்பர். அக்கினி, பூடன் ஆகிய இருவரும் இவனுடன் பிறந்தவர்கள். இந்திராணி இவன் மனைவி.

இயற்கையைச் சீர்படுத்த இவன் பல செயல்கள் செய்தான். தொடக்கத்தில் அசைந்து திரியும் ஆற்றல் பெற்றிருந்த மலைகளை அங்குமிங்கும் திரியாதவாறு நிலைபெறச் செய்தான். விண்ணையும் மண்ணையும் அகன்று விளங்கும்படி நிறுத்தி உரியவாறு அமைத்தான்.

அரக்கர்களை அழித்த பெருமை வாய்ந்த இவனை வீரர்கள் வழிபடுகின்றனர். வழிபடுவோரைப் பாதுகாப்பது இவனது பண்பு. அவர்களுக்குச் செல்வம் ஈந்து வெற்றியையும் பெற்றுத் தருபவன்.

இவன் மிக்க வன்மை உடையவன். 'மகவான்' என்னும் பெயர் இவனது வன்மையை எடுத்துக் கூறுவதாகும்.

பணிக்கூட்டத்தினரால் கவரப்பட்டுக் குகைக்குள் ஒளித்து வைக்கப்பட்ட ஆனிரைகளைச் சரமா என்னும் பெண் நாயின் துணையுடன் மீட்டவன் இவன். சுதாசன் முதலிய மண்ணுலக வீரர்களுடன் போர் புரிந்தவன்; உடல்வலி மிக்கவன்; சிறந்த வீரன். இந்திரன் மிகப்பழமை வாய்ந்த தெய்வம் என்பர் ஆராய்ச்சியாளர்.

பாரசீகரின் பழைய நூலான அவெசுதாவில் வரும் இந்திரன் அசுரன் எனப்படுகிறான். அசுரன் என்பது அந்நூலில் சிறப்பான கருத்தில் ஆளப்பட்டுள்ளது. விருத்திரனை அழித்தவன் என்று பொருள்படும் 'விருத்திரக்கனன்' என்ற பெயரும் அவெசுதாவில் இடம் பெற்றுள்ளது.

பாகவதம், இராமாயணம், பாரதம், காந்தம், இரகுவம்சம், காஞ்சிப் புராணம், திருவிளையாடற் புராணம், திருவாரூர்ப் புராணம், எறும்பியூர்ப் புராணம், நாகைக் காரோண புராணம், பூவாளூர்ப் புராணம், சிவமகா புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும், பொதுவான புராண மரபிலும் இந்திரனைப் பற்றிய வரலாற்றுக் கதைகள் பெருகிக் காணப்படுகின்றன.

இவன் தோல்வியும் அடைந்துள்ளான். அகலிகையிடம் நெறி தவறி நடந்ததால் கௌதமரால் சபிக்கப்பட்டான்; இராவணன் மகன் மேகநாதனிடம் தோற்றான். ந.மா.

இந்திரன் (தொல்லியல்) இந்து, சமண, பௌத்த சமயத்தினர் வழிபடுகின்ற இறைவடிவங்களுள் ஒன்று. இந்துக்கள் இவரை மழைக்கடவுளாக வழிபடுகின்றனர். இந்திரன் தேவலோகத்தின் தலைவர். திசைத் தெய்வங்களுள் இந்திரன் கிழக்குத் திசையின் தெய்வம். வேதங்களில் இந்திரன் மிகச் சிறந்த தெய்வமாகக் கருதப்பட்டார். பிந்திய வேதகாலத்தில் இச்சிறப்பு அழிந்து இந்துக்களின் சிறு தெய்வமானார். உரோமானியக் கடவுள் சூபிடர் புலுவியசிற்கு (Jupiter Pluvius) இணையான தெய்வமாக இந்திரன் கருதப்படுகின்றார். இந்திரன் இருப்பிடம் அமராவதி ஆகும். இது மேரு மலையில் அமைந்துள்ளதாகக் கூறுவர். இந்திரனின் மனைவி இந்திராணி; ஊர்தி ஐராவதம் என்னும் வெள்ளை யானையாகும். இந்து (Indu) என்ற சொல்லில் இருந்தே இந்திரன் என்ற பெயர் பிறந்தது. இந்து என்றால் மழையைத் தருபவன் என்பது பொருள். வறட்சியைப் போக்கி உயிர் இனங்களுக்கு மழையைத் தருவித்துச் செழிப்பை உண்டாக்குபவன் என்று இந்துக்கள் இந்திரனைக் கருதுகின்றனர். இலக்கியங்களில் இந்திரனைக் குறித்துப் பல்வேறு கதைகள் உள்ளன. இந்து சமய நூல்களும் புத்த சமய நூல்களும் சமண நூல்களும் இந்திரனைப் பற்றிக் கூறுகின்றன. சமண சமயத்திலும் புத்த சமயத்திலும் இந்திரன் திசைக் கடவுளாகக் கருதப்படுகின்றார். சீனாவில் உள்ள புத்த சமயத்தினர் இந்திரனை வழிபடுகின்றனர். இங்கு இவர் சக்கிரா (Sakra) என்னும் பெயரில் அழைக்கப்படுகிறார்.

மகேந்திரா, தேவபதி, மேகவாகனன், வச்சிரி, மகேந்திர சகரா, சுவர்க்கபதி, பாகசாதனன், புரந்தரன், உக்கிரதாண்டவன் போன்ற பலபெயர்களால் இந்திரன் அழைக்கப்படுகின்றார். இந்திரனின் தேர்ப்பாகன் மாதலி. இந்திரன் சக்கிரதனசு என்ற அம்பை வைத்திருப்பவர். இவரது வாள் பரஞ்சயம் எனப்படும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த மணிமேகலை என்னும் நூல் காவிரிப்பூம்பட்டினத்தில் நடக்கும் இந்திரவிழாவினைப் பற்றிக் கூறுகிறது. வங்காளத்தில் இன்றளவும் இந்திரன் வழிபாடும், ஆண்டுக்கொருமுறை திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சிற்பங்களில் இந்திரன் அழகான தோற்றம் உடையவராக ஐராவதம் என்ற வெள்ளை யானையின்

மீது அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். இவர் நான்கு கைகளை உடையவர்; வலக் கைகளில் ஈட்டியும் வச்சிரமும், இடக்கைகளில் அம்பும் வில்லும் வைத்திருப்பார். சில சிற்பங்களில் தூண்டில்முள், வளை போன்றவற்றையும் வைத்திருப்பது போல் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

**இந்திரா (மன்னன்), முதலாம் (தோரா. கி.பி. 670-690)** கருநாடக மாநிலத்திலுள்ள மால்கெடுப் (Malkhed) (மானிய கடகம்) பகுதியை ஆண்டு வந்த இராட்டிரகூட வேந்தர்களுள் இந்திராவும் ஒருவன். இப் பெயரில் வேறு மூவரும் ஆண்டனர். அதனால் இவன் முதலாம் இந்திரன் எனப்படுவான். கல்வெட்டுகளின் அடிப்படையில் இவ்வேந்தன் இராட்டிரகூட மரபில் இரண்டாம் மன்னனாகக் கருதப்படுகிறான். இம்மரபின் முதல் மன்னனாகக் கருதப்படுபவன் தந்திவருமன் (தோரா. கி.பி. 650-670) ஆவான். எனவே, இவனை அடுத்து ஆட்சி புரிந்த முதலாம் இந்திரா கி.பி. 670 முதல் கி.பி. 690 முடிய ஆண்டதாகக் கொள்ளப்படுகிறது.

இவன் எலிச்சுப்பூரைத் (Ellichpur) தனது தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தான். எலிச்சுப்பூர் நகரம் இலட்டூரி (Latur) லிருந்து 150 கல் தொலைவில் உள்ளது. இவனைப் பற்றி வேறு விவரங்கள் கிடைக்கவில்லை. இவனுக்குப் பின் முதலாம் கிருட்டிணன் இராட்டிரகூட வேந்தன் ஆனான்.

இந்திரா, இரண்டாம் (தோரா. கி.பி. 730-752) முதலாம் கர்க்கனின் (Karkka) (தோரா. கி.பி. 710-730) மகனும் முதலாம் கோவிந்தராசனின் (தோரா. கி.பி. 690-710) பேரனுமான இரண்டாம் இந்திரா கர்க்கனுக்குப் பின் இராட்டிரகூட வேந்தனாக மணிமுடி சூடினான். விட்டுணு பக்தனான முதலாம் கிருட்டிணன், நன்னகுணவலோகன் ஆகிய இருவரும் இந்திராவின் தம்பியர் ஆவர்.

இவ்வேந்தன் சாளுக்கிய இளவரசியான பவநாகா (Bhavanaga) என்னும் பேரழகியை மணந்ததாகச் சாமன்கட் பட்டயம் (Samangad Plates) குறிப்பிடுகிறது. சஞ்சன் பட்டயங்களோ (Sanjan Plates) கைரா (Kaira) என்னுமிடத்தில் மணப்பந்தலில் அமர்ந்திருந்த இப்பேரழகியை இந்திரா வன்முறையில் கவர்ந்து சென்றான் என்று செப்புகின்றன. இவ்வேந்தனுக்குப் பிறந்தவனே தந்தி துர்க்கன் (Dantidurga) ஆவான். இரண்டாம் இந்திரா காலமான பின்னர் தந்திதுர்க்கன் (தோரா. கி.பி. 752-756) இராட்டிரகூட மன்னன் ஆனான்.

இந்திரா, மூன்றாம் (கி.பி. 914-928) மால்கெடு (Malkhed) இராட்டிரகூட மரபின் புகழ்பூத்த, வலிமைசான்ற வேந்தர்களுள் மூன்றாம் இந்திராவும் ஒருவன் ஆவான். இவன் தன் பாட்டனான இரண்டாம் கிருட்டிணனை (கி.பி. 880-914) அடுத்து இராட்டிரகூட அரசின் மன்னன் ஆனான். இவன் கி.பி. 914-இல் தனது முப்பதாம் வயதில் அரியணையேறி, கி.பி. 928 முடிய ஆட்சி புரிந்து, இராட்டிரகூட அரசின் எல்லைகளை விரிவுபடுத்திப் பெரும் புகழ் பெற்றான்.

துருவனைப் (கி.பி. 780-792) போன்று போராற்றல் மிக்கவனாகத் திகழ்ந்த இவன் இராட்டிரகூடர்களின் பேராதிக்கத்தை நிலை நாட்டுவதில் முனைந்து செயற்பட்டான்.

வெற்றிகள்: பிரதிகார (Pratihara) வேந்தனான முதலாம் மகேந்திர பாலன் (Mahendrapala I) காலமானபின், இவன் மக்களான இரண்டாம் போசனுக்கும் (Bhoja II), முதலாம் மகிபாலனுக்கும் இடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. முதலாம் மகிபாலன் (Mahipala I - கி.பி. 913-943) சந்தேல (Chandella) மன்னனான அர்சனின் (Harsha) உதவியைப் பெற்றுப் போசனைத் தோற்கடித்து விரட்டிவிட்டு, பிரதிகார ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இதுபோன்ற அரசியல் குழப்ப நிலை இந்திராவின் வடஇந்தியப் படையெழுச்சிக்கு வழி வகுத்தது. அடுத்து, பிரதிகாரச் சிற்றரசனான பரமார உபேந்திர ராசா (Paramara Upendraraja)என்பான் நாசிக்கு மாவட்டத்தின் மீது படையெடுத்துக் கோவர்த்தனாவை முற்றுகையிட்டான். இந்திராவோ ஆக்கிரமிப்பாளனான உபேந்திர ராசாவை வென்று அடிமைப் படுத்தியதுடன், உச்சயினியையும் கைப்பற்றிக் கொண்டான். தான் வடஇந்தியப் படையெழுச்சியை மேற்கொள்ள உச்சயினியைத் தனது இராணுவ மையமாகவும் பயன்படுத்தினான்.

வடஇந்தியப் படையெழுச்சி: மூன்றாம் இந்திரா கி.பி. 916-இல் வடஇந்தியப் படையெழுச்சியைத் தொடங்கினான். வடஇந்தியப் படையெழுச்சியின் முதல் கட்டமாகக் கன்னோசி (Kanauj) இவனால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மகிபாலனை ஒழித்துக் கட்டத் திட்டம் தீட்டினான். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சாளுக்கியச் சிற்றரசனான நரசிம்மனைப் பெரும் படையுடன் மகிபாலன் மீது ஏவினான்; மகிபாலன் தோற்கடிக்கப்பட்டுப் போர்க்களத்தினின்றும் விரட்டப்பட்டான். மூன்றாம் இந்திராவின் வடஇந்தியப் படையெழுச்சி வெறும் தாக்குதலைப் போன்றது. கன்னோசியை நீண்ட காலம் இவன் வைத்துக்கொள்ளவில்லை. மகிபாலனே பின்னர் அந்நகரைக் கைப்பற்றிக் கொண்டான்.

வேங்கியைக் கைப்பற்றல்: வெற்றி வீரனான இந்திரா அடுத்து வேங்கியின் (கீழைச் சாளுக்கியர்)

அரசியல் விவகாரங்களில் தலையிட்டுத் தனது செல்வாக்கை விரிவுபடுத்த விழைந்தான். வேங்கி வேந்தனான முதலாம் அம்மா (Amma I) கி.பி. 926-இல் இறந்தபோது, அங்குக் குழப்பம் ஏற்பட்டது. தாடபனின் (Tadapa) மக்களான உயுத்தமல்லன் (Yudhamalla), இராச மார்த்தாண்டன், கந்திக விசயாதித்தியன் ஆகியோர் அரியணைப்போரில் ஈடுபட்டனர். இந்நிலையில் இந்திரா இரண்டாம் உயுத்தமல்லனுக்கு ஆதரவளித்து அவனைக் கி.பி. 928-இல் வேங்கி அரியணையில் அமர்த்தி, வேங்கி நாடு முழுவதையும் தனது மேலதிகாரத்திற்கு உட்படுத்தினான்.

மேலாண்மைமிகு மன்னன்: வல்லடிப் போர்களின் மூலம் அண்டை அரசுகளை வென்று, இராட்டிரகூடரின் பெருமையையும் மேலாண்மையையும் உயர்த்தியதுடன், அரசின் எல்லைகளை விரிவுபடுத்தியவன் மூன்றாம் இந்திரா. இவ்வகையில், இவன் துருவன், மூன்றாம் கோவிந்தன் என்னும் இரு இராட்டிரகூட மாமன்னர்களுடன் ஒப்புமை கூறத்தக்கவன் ஆவான்.

இலக்கிய வளர்ச்சி: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் இலக்கியம் வளர்ந்தது. இவனது காலத்துப் புலவரான திருவிக்கிரமபட்டர் என்பார் நளசம்பூ அல்லது தமயந்திகதா என்னும் காவியத்தை வடமொழியில் இயற்றினார். வடமொழியில் உள்ள சம்பூகதைகளுள் இதுவே காலத்தால் முந்தியது. 'மடாலசா சம்பூ' என்னும் காவியத்தையும் இப்புலவரே இயற்றியதாகக் கூறப்படுகிறது.

மதிப்பிடு: படை வலிமை கொண்டு, இராட்டிரகூடரின் பேராதிக்கத்தைப் பரப்பிய பேராதிக்கவாதிகளுள் ஒருவனாகத் திகழ்ந்த மூன்றாம் இந்திரா, இராட்டிரகூடர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறான்.

இந்திரா, நான்காம்: மால்கெடு இராட்டிரகூட மரபின் கடைசி மன்னன் நான்காம் இந்திரா. இராட்டிரகூட அரசு மிக வேகமாக அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த சூழ்நிலையில், நான்காம் இந்திரா வேந்தன் ஆனான். மூன்றாம் கிருட்டிணன் (கி.பி. 939-966), கொட்டிகா (Khottiga) (கி.பி. 967-973), கர்க்கா (கி.பி.972-973) ஆகியோரது ஆட்சிக் காலத்திலேயே இராட்டிரகூட அரசின் புகழ் மங்கிவிட்டது. இரண்டாம் கர்க்கா கி.பி. 973-இல் இரண்டாம் தைலப்பாவால் தோற்கடிக்கப்பட்டு, அரச பதவியையும் நாட்டையும் இழந்தான். தைலப்பாவோ இராட்டிரகூட அரசின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். இந்நிலையில் இந்திரா கங்க நாட்டில் அடைக்கலம் புகுந்தான்.

கங்க வேந்தனும் இராட்டிரக்கூடச் சிற்றரசனுமான நொளம்பாந்தக மாறசிம்மன் என்பான் தன் தங்கையின் மகனான நான்காம் இந்திராவை அரியணையில் அமர்த்தப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டான். இருப்பினும் இவனது எண்ணம் ஈடேறவில்லை. மாறசிம்மன் கி.பி. 975-இல் பங்கபுரா என்னுமிடத்தில் சல்லேகனை (வடக்கிருத்தல்) மேற்கொண்டு இறந்தான்.

தனது நாட்டை இழந்த துயரால் மனம் நொந்த நான்காம் இந்திரா உயிர்வாழ விரும்பவில்லை. எனவே, கி.பி. 982-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இருபதாம் நாள் சரவணபெலகோலாவிற்கு அருகில் சல்லேகனை மேற்கொண்டு உயிர்துறந்தான்.

மூன்றாம் கிருட்டிணனின் பேரனான நான்காம் இந்திரா காலமானவுடன் இராட்டிரகூட அரசும் அழிந்தது. தென்னிந்திய அரசியல் வரைபடத்திலிருந்து (Map) இராட்டிரகூட அரசு மறைந்தது. கல்யாணிச் சாளுக்கிய அரசு மறுமலர்ச்சி பெற்றது.

பொழுதுபோக்கு: பெரும்பாலும் போலோ விளையாட்டினைப் போன்று, குதிரை மீதமர்ந்து விளையாடும் பந்தாட்டத்தில் நான்காம் இந்திரா பேரார்வம் கொண்டிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றறிஞர் சிலர் இரண்டாம் கர்க்காவையே இம் மரபின் இறுதி அரசனாகக் கருதுவர்.

ம. இரா.

துணை நூல்கள்:

**Nilakanta Sastri**, K.A., A History of South India, Oxford University Press, Madras, 1983.

**Yazdani**, G., The Early History of the Decan, Oriental Books Reprint Corporation, Delhi, 1982.

**Majumdar**, R.C. & Others, An Advanced History of India, Macmillan, Madras, 1982.

**இந்திரா காந்தி** சுதந்திர இந்தியாவின் மூன்றாம் தலைமை அமைச்சராயிருந்தவர். இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற அரசியல் பேரறிஞர். இவர் 1917-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் நாள் சவகர்லால் நேருவுக்கும் கமலாநேருவுக்கும் மகளாகப் பிறந்தார். பள்ளிக் கல்வியைப் புனேயிலும் (Pune) பம்பாயிலும் பயின்ற இந்திரா காந்தி 1934-ஆம் ஆண்டு இரவீந்திரநாத தாகூரின் விசுவபாரதி பல்கலைக் கழக மாணவியானார். அங்கு ஆசிரியர் அனைவராலும் பாராட்டப்பெற்று மாணவர்களிடையே செல்வாக்கு மிக்கவராக விளங்கினார். பின்

னர் இங்கிலாந்து சென்று ஆக்சுபோர்டு பல்கலைக் க்ழகத்தில் பயின்றார்.



திருமதி இந்திரா காந்தி

இந்திரா காந்தி 1938-ஆம் ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசின் உறுப்பினரானார். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவரான பெரோசு காந்தியை 1942-இல் மணந்தார். இவர்களுக்கு இராசீவ் காந்தி, சஞ்சய் காந்தி என்ற இரண்டு மக்கள் பிறந்தனர். இவர் 1942-இல் காந்தியடிகளால் கொண்டுவரப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் பற்றிய அகில இந்திய காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டதால் கைது செய்யப்பட்டார்.

சுதந்திரமடைந்த பின்னர் இந்திரா பிரதமரின் வீட்டு நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்; சமுதாயப் பணியிலும் ஆர்வம் கொண்டிருந்தார்; இவர் 1955-ஆம் ஆண்டு காங்கிரசுச் செயற் குழுவின் உறுப்பிவர் ஆனார். பின்னர் 1958-இல் மத்திய பாராளுமன்றக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்; இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக 1959 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்; தேசியப் பணியில் பங்கு கொள்ள இளைஞர்களை ஊக்குவித்தார்.

நேரு 1964-இல் மறையவே இலால்பகதூர் சாத்திரி தலைமை அமைச்சரானார். அவரது அமைச்சரவையில் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சராக இந்திரா பணியாற்றினார். இக்காலத்தில்தான் இவர் முதல் முறையாகப் பன்னாட்டுத் திரைப்பட விழாவைத் தில்லியில் அமைத்து, நல்ல திரைப்படங்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுத் திரையிட்டுச் சிறந்த படங்களுக்குப் பரிசு அளிக்கும் முறையையும் புகுத்தினார். இந்தியாவில் தொலைக் காட்சியை முதன் முறையாக அறிமுகப்படுத்தியவர் இந்திரா காந்திதான். தமிழ்நாட்டில் 1965-இல் நடந்த இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இந்திரா தமிழகத்திற்கு அனுப்பப்பட்டார். திறமையான பரிவு மிக்க இவர்தம் நடவடிக்கை மக்களின் கொதிப்பைத் தணித்தது; நிலைமையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இந்தியா மீது பாகிசுத்தான் 1965-இல் போர் தொடுத்தது. செய்தி ஒலிபரப்பு அமைச்சரான இந்திராகாந்தி இந்திய வீரர்களை ஊக்குவித்தார்.

இலால்பகதூர் சாத்திரி 1966 சனவரி 19-ஆம் நாள் மறைந்தார். இந்திரா காந்தி காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1966 சனவரி 26-ஆம் நாள் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். காங்கிரசு 1967 பொதுத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றது. அப்பொழுது புரட்சிகரமான சமூகப் பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்தப் பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். காங்கிரசுக் கட்சியினரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு 1969-இல் காங்கிரசுக் கட்சி பிளவுற்றது. பெரும்பான்மைக் காங்கிரசு உறுப்பினர்களும் தலைவர்களும் இந்திரா காந்திக்குத் துணை நின்றனர். இவர் 1971-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுத் தமது கொள்கைக்கு மக்கள் அளித்த பேராதரவுடன் ஆட்சி அமைத்தார்.

அரசியல் சட்டத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்காக 1975 சூன் மாதத்தில் உள்நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தார். பின்னர் நடந்த பொதுத்தேர்தலில் (1977) காங்கிரசுக் கட்சி தோற்றது. சனதாக் கட்சி பதவியில் அமர்ந்தது. மொரார்சி தேசாய் இந்தியாவின் தலைமை அமைச்சரானார். சனதாக் கட்சியின் வீழ்ச்சிக்குப்பின் 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஆதரவுடன் இந்திரா காந்தி மீண்டும் ஆட்சியில் அமர்ந்தார்.

சமநிலைச் சமுதாயச் சிந்தனை அடிப்படையில்

பொருளாதாரத் திட்டம் ஒன்றை இந்திராகாந்தி அறிவித்தார். வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பது இதில் தலைசிறந்த கூறாகும். வரலாற்றுப் புகழ்பெற்ற மன்னர் மானிய ஒழிப்பு, சமநிலைச் சமுதாயக்கோட்பாட்டில் இந்திரா காந்திக்கிருந்த பிடிப்பை வெளிப்படுத்தியது.

ஏழை மக்கள் வாழ்வு மலர இருபது அமிசத் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொணர்ந்தார். இந்திரா காந்தி நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் ஒருபொழுதும் விட்டுக் கொடுத்த தில்லை. அரசியல் சட்டத்தில் மதச் சார்பற்ற குறிக் கோள்களை மிகவும் ஆதரித்தார்.

சாதிச் சண்டையை ஒழிக்க விடா முயற்சியுடன் அவர் போராடினார். ‘சீக்கியர்கள் உங்கள் மெய்க் காப்பாளராக இருக்கவேண்டா’ என்ற எச்சரிக்கைக் குறிப்புடன் வந்த கோப்பில், ‘நாம் சாதி சமய மொழி வேறுபாடுகளைக் கடந்து நிற்போம்’ என்று குறிப்பு எழுதித் திருப்பி அனுப்பினார்.

பன்னாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலையில் பாரத நாட்டின் வளத்தினை அடிப்படையாகக் கொண்டு, பாரதப் பொருளாதாரம் உறுதித் தன்மை யையும் வலுவையும் பெற இந்திரா காந்தி உழைத் தார். மிகக் கடுமையான உலகு தழுவிய பொருளா தார நெருக்கடியிலிருந்து பாரதம் மீண்டுவர, இவ ரது தலைமை இந்தியருக்கு உதவியது. இந்திய மக்களின் தன்னிறைவு முயற்சிக்கு அடிப்படை ஏற் படுத்தியவரும இவரே. சிறந்த முன்னேற்றத்திற் கான திட்டங்களை ஏற்படுத்தியவரும் இவரே.

பாரதத்தின் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற் றத்திற்கு இந்திரா காந்தி பெரிதும் காரணமாவார். பன்னாட்டுத் தலைவர்களுள் சுற்றுப்புறச் சூழ்நிலை யின் இன்றியமையாமையை உணர்ந்தவர் இந்திரா காந்தி. இந்திய நாட்டின் பண்பாட்டிலும் தொன்மை யிலும் பெருமிதம் கொண்டவர் இவர். இவர் சங்கீத நாடகக் கழகத்தின் தலைவராக 1965 முதல் 1974 வரை இருந்தார். தட்சிண பாரத இந்தி பிரசார சபையின் தலைவர் என்ற முறையில் அதன் வேலை களை ஊக்குவித்தார். தமது ஆழ்ந்த நுண்ணறிவு காரணமாகப் பாரதத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்கலைக் கழகங்களும் அறிவியல் கழகங்க ளும் இவருக்கு டாக்டர் பட்டங்களை வழங்கிப் பெருமைப்படுத்தின. பிரெஞ்சு நிறுவனம் ஒன்று 1967, 1968-ஆம் ஆண்டுகளில் நடத்திய வாக் கெடுப்பினால் உலக மக்களால் மிகவும் விரும் பத்தக்க பெண்மணி இந்திராகாந்தியே என்ற முடிவிற்கு வந்தது. அமெரிக்கா 1971 -- இல் எடுத்த சிறப்புக் கணக்கெடுப்பிலும் இந்திராவே உல கின் விரும்பத்தக்க பெண்மணியாக அறிவிக்கப்பட் டார். இந்திரா 1953-இல் அமெரிக்க மாதர் பரிசும், 1960-இல் ஏல் பல்கலைக் கழகத்தின் ஆலந்து நினை வுப் பரிசும், அரசியற் செயல்களில் சிறந்திருந்தமைக் காக 1965-இல் இத்தாலியின் ‘இசபெல்லா டி எசு டேயின்’ பரிசும் பெற்றார்; குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் சிறந்த தொண்டு புரிந்ததற்காக, 1983-இல் ஐ.நா.வின் மக்கள்தொகைப் பரிசு வழங்கப்பட் டது.

எல்லா வளங்களிலும் மனிதவளம் மதிப்பு மிகுந் தது என்பதை உணர்ந்த இந்திரா காந்தி ஊனமுற் றோர்க்கு உறுதுணையாக இருந்தார்; அவர்களின் நலனுக்காகப் பல திட்டங்களைத் தொடங்கினார்; தொழு நோய் மருத்துவத்திற்காக நாடு தழுவிய இயக்கத்தை மேற்கொண்டார்; ஊனமுற்றோருக்கு நம்பிக்கை ஒளியைக் காட்டியவர் இந்திரா காந்தி.

பழங்குடியினர், பின் தங்கியோர் நலனிற்காகப்பல திட்டங்களை இவர்தொடங்கினார். இவை பொரு ளாதார, சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை. பெண்களின் உரிமை பற்றி வலியுறுத் திப் ‘பெண்கல்வி’யின் இன்றியமையாத் தன்மையை உணர்த்தினார். இவ்வாறு இந்திய மக்களின் உணர் வுகளை இவர் எழுப்பினார்.

இமயமலையை நேசித்துத் தன்னை மலைமகள் எனக் கூறிக் கொண்ட இந்திரா, மலைவாழ் மக் களின் மேம்பாட்டுக்கெனச் சிறப்புத் திட்டங்களை யும் உருவாக்கினார். விடுதலைப் போரில் ஈடுபட்ட வர்களுக்கு உறுதியான உதவிகளை அளித்தார்.

‘இளைஞர்கள் இந்நாட்டின் முதுகெலும்புகள். நாட்டின் வளமை அவர்களின் வலிமையில்தான் இருக்கிறது. நாடு புதிய மறுமலர்ச்சியின் கட்டத்தில் இருக்கிறது’ என்ற இவர், புதிய இந்தியாவை உரு வாக்கும் இளைஞர்கள்பால் அசைக்க இயலாத நம் பிக்கை கொண்டிருந்தார். பாரத இளைஞர்கள் விளையாட்டுகளில் சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்பினார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளைப் பாரதத்தில் நடத்திய இவர், தில்லிக்குப் புதிய விளை யாட்டரங்கங்களையும் ஏனைய வசதிகளையும் ஏற் படுத்தித் தந்தார். விளையாட்டுத் துறையின் வளர்ச் சிக்குப் பாடுபட்டதற்காக 1983-இல் உலக ஒலிம்பிக் குழு தங்கப் பரிசு ஒன்றினை இவருக்கு வழங்கியது.

நாட்டுப் பாதுகாப்பின் இன்றியமையாமையை அறிந்தவர் இவர். இந்திய இராணுவம் புதுமைப் படுத்தப்பட்டது; பாதுகாப்புத் துறை தன்னிறைவு பெற உற்பத்தி முயற்சிகளை இவர் ஊக்குவித்தார். இதன்பயனாக நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்

பாற்றும் முழுத் திறமையையும் இந்திய இராணுவம் இப்போது பெற்றுள்ளது. போர் வீரர்களின் நலன் போற்றப்பட்டது. படை வீரர்களின் தேவைகளை நுணுகி ஆராய்ந்து அவர்களின் வேலைவாய்ப்புகளை அரசு மேம்படுத்தியது.

இந்திராவின் தலைமையின் கீழ்ப் பாரத இராணுவம் 1971-இல் அரிய செயலைச் செய்து முடித்தது. ஆயிரம் ஆண்டு போர்தொடுப்போம் என்று வீரம் பேசிய பாகிசுத்தான் பாயிரம் எழுதுமுன்னே இந்திய வெற்றிக்காவியத்தை இவர் இராணுவத்தின் துணை கொண்டு எழுதி முடித்தார். வங்கதேச விடுதலைக்காக இவர் காட்டிய அரசியல் சாணக்கியமும் வீரமும் உலகினர் மறக்க முடியாதவை.

அமைதியை வலியுறுத்திய உலகத் தலைவர்களுள் ஒருவர் இவர். இவர் இந்தியா உலக அரங்கில் உயர்ந்து நிற்கவேண்டும் என்று விரும்பினார். ஐ.நா. வின் கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் தம்மை உரிமைப்படுத்தினார். சார்பு நாடுகளின் விடுதலைக்கு ஆதரவு கொடுத்த இவர் சுரண்டலை எதிர்த்தார். அணிசேரா இயக்க நாடுகளின் தலைவராக இவர் 1983 மார்ச்சில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நெஞ்சில் உறுதியையும் நேர்மைத் திறத்தையும் கொண்டு எதிர் வரும் அச்சங்களையும் அறை கூவலையும் எதிர்த்த இவர் வன்முறைகளை ஒழித்தார். கோழைத்தனத்தை வெறுத்த வீராங்கனையாக விளங்கிய இவருக்கு 1972-இல் 'பாரதரத்தினா' விருது அளிக்கப்பட்டது.

இந்தியாவை நேசித்த இந்திரா பிரியதர்சினி நாட்டின் குறிக்கோள்களுக்காவும் உலக சமுதாய அமைதிக்காகவும் தன்னை உரிமைப்படுத்திக் கொண்டார்; இந்தியாவின் இயற்கை எழில்களை நேசித்துப் பாரதப் பண்பாட்டுக் கலைகளைப் போற்றி, இந்நாட்டு மெய்யுணர்வாளர்களை மதித்தார்.

பஞ்சாபு மாநிலத்தைச் சார்ந்த தீவிரவாதிகள் தனி நாடு கேட்டுக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இந்திய ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த இந்திரா காந்தி அதை ஏற்க மறுத்தார். தீவிரவாதிகள் அமிர்தசரசில் உள்ள பொற்கோயிலில் புகுந்துகொண்டு சொல்லொணா இன்னலை விளைவித்தனர். அதனைத் தவிர்க்க இந்திரா காந்தி 1983-ஆம் ஆண்டு சூன் மாதம் 6-ஆம் நாள் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார். இராணுவம் பொற்கோயிலினுள் நுழைந்தது. தீவிரவாதிகளின் தலைவரான பிந்தரன்வாலே உட்படப் பலர் கொல்லப்பட்டனர். இதனைப் பொறுக்காத இவர்தம் சீக்கியப் பாதுகாவலர்கள் இருவரால் 1984 அக்டோபர் 31-ஆம் நாள் சுடப்பட்டு மறைந்தார். இரா.இரா.

**இந்திராகாந்தி தேசிய கலை மையம்:** மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் நினைவாக அவரது 68-ஆம் பிறந்த நாளில் (நவம்பர் 19, 1985), புதுதில்லியில் டாக்டர் இராசேந்திரப்பிரசாத்துச் சாலையருகே ஏறத்தாழ 21.9 ஏக்கர் பரப்பளவில் இந்திராகாந்தி தேசிய கலை மையம் (Indira Gandhi National Centre for Arts) அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 5 ஆண்டுகளுக்குள் இது முழுமையாக உருவாகி விடும். இம் மையத்திற்கான அடிக்கல்லைப் பிரதமர் இராசீவ் காந்தி நாட்டினார். தொலைதூர ஊர்ப்புறங்களிலும் மலைப்புறங்களிலுமுள்ள திறமைமிக்க கலைஞர்களையும் அவர்தம் கலைகளையும் ஊக்குவிக்கும் வகையில் இம் மையம் செயற்படும். உலகில் இதுவரை எங்குமே இல்லாத தனித் தன்மையுடைய கட்டடம் ஒன்று இம்மையத்திற்காகக் கட்டப்படவுள்ளது. இம்மையத்தில் இந்திராகாந்தியின் பெயரிலேயே கலாநிதி (Kala-nidhi), கலா கோசம் (Kala Kosa), ஞானபத சம்பதம் (Jnanpada Sampada), கலா தரிசனம் (Kala Darshan) ஆகிய பிரிவுகள் அமையும்.

**இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக்கழகம்** தெற்குத் தில்லியில் 100 ஏக்கர் பரப்பளவுள்ள கார்கித் திடலில் (Maidan Garhi) அமைந்துள்ளது; மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக அவரது 68-ஆம் பிறந்த நாளில் (நவம்பர் 19,1985) தொடங்கப் பெற்றது. இப்பல்கலைக்கழகத்திற்கான அடிக்கல்லைப் பிரதமர் இராசீவ் காந்தி நாட்டினார். இப்பல்கலைக்கழகத்திற்கான கட்டட வேலைகள் விரைவில் நிறைவுறும். இன்னும் ஓராண்டுக் காலத்தில் இப்பல்கலைக்கழகம் முழுமையாகச் செயற்படத் தொடங்கும். இந்திரா காந்தி தேசிய வெளிப் பல்கலைக்கழகத்தின் (Indira Gandhi National Open University) முதல் துணைவேந்தர் பேராசிரியர் இராம ரெட்டி (G. Rama Reddy) ஆவார். இப்பல்கலைக் கழகம் வாழ்வியல், அறிவியல், சமூகவியல், கல்வியியல், சட்டவியல், உடல் நலவியல் (Health Sciences), பொறியியல், தொழில்நுட்பம், நுண்கலை (Fine Arts), மேலாண்மையியல், வணிகவியல், வேளாண்மையியல் ஆகிய துறைகளில் குறுகிய கால, நீண்டகாலப் பாடங்களைக் கற்பிக்கும்.

நாட்டில் உள்ள பிற பல்கலைக்கழகங்களின் வழக்கமான கல்விப் பணிகளைச் செய்யாமல், உயர் கல்வியியலின் தரமான கல்வியினை ஊர்ப்புறங்களிலுள்ள ஏழை மக்களுக்கும் மாணவர்களுக்கும்

தொழிலாளர்களுக்கும் பணியிலிருப்போருக்கும் வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சேர்ந்து பயிலும் வாய்ப்பை இழந்தவர்களுக்குப் புதிய கல்வி அளிக்கும் வகையிலும், இப்போது பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு வளமூட்டும் கல்வி (Enrichment) அளிக்கும் வகையிலும் இப்பல்கலைக்கழகக் கல்விப் பணி அமையும்.

இங்கிலாந்து, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் செயற்படும் வெளிப்பல்கலைக்கழகங்களைப் போல், இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக் கழகத்திலும் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, காட்சி-கேள்விக் கருவிகள் (Audio-Visual Aids), அச்சிடப்பட்ட நூல்கள் ஆகியவற்றின் உதவியுடன் கற்பித்தல் நடைபெறும். இப்பல்கலைக்கழகத்தில் தொலைக்காட்சி வழிக்கற்பித்தல், அகமதாபாத்து நகரிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் (Indian Space Research Organisation) உதவியுடன் நடைபெறும்.

இந்திராகாந்தி தேசிய வெளிப்பல்கலைக்கழகம் குறிப்பாக, அறிவியல், தொழில் நுட்பவியல், தொடர் கல்வி ஆகியவற்றில் மிக்க கவனம் செலுத்தும். இப்பல்கலைக்கழகத்தில் கல்விச் செயல் தொடர்பான செய்திகளைப் படம் பிடித்துக் கற்பிக்க, கல்விப் படப்பிடிப்பு மையம் (Educational Studio) ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்திராகாந்தி தேசிய வெளிப்பல்கலைக் கழகத்தின் தலைமையகம் குதுப்மினார் (Qutib Minar) அருகில் அமையும். இந்தியாவின் பலபகுதிகளிலும் இப்பல்கலைக்கழகத்தின் மாநில மையங்கள் (Regional Centres) செயற்படும். உத்தரப் பிரதேசம், மகாராட்டிரம், மேற்கு வங்காளம், இராசசுத்தான், கேரளா ஆகிய மாநிலங்களில் இப்பல்கலைக்கழகம் மாநில மையங்களைத் தொடங்கும்.

இந்திரா காந்தி தேசிய வெளிப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலமும் இந்தியும் பயிற்று மொழியாக இருக்கும். கற்போர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துப் பிற மாநில மொழிகளையும் பயிற்று மொழியாக்கும் திட்டமும் உள்ளது.

**இந்திராசி, பவன்லால் (கி.பி. 1839-1888)** என்பவர் குசராத்தி மொழி எழுத்தாளர்; பேரரசு ஆசியக் கழகத்தின் (Royal Asiatic Society) உறுப்பினர். இலெய்டன் பல்கலைக் கழகம் (Leyden University) இந்திராசி பவன்லாலுக்கு (Inraji Bhavanlal) முனைவர் பட்டம் (Doctor of Philosophy) கொடுத்துச் சிறப்பித்தது. இவர் குசராத்தி மொழியில் எழுதப் பெற்ற நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**இந்திரா சைலேந்திரர்** சைலேந்திரப் பேரரசின் அரசர்களுள் ஒருவர். சைலேந்திர மன்னர்கள் மகாயான புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்களைக் குறித்து மூன்று கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. முதல் கல்வெட்டு மலாயாவிலும் மற்ற இரு கல்வெட்டுகள் சாவாவிலும் (Java) கிடைத்துள்ளன. இவை முறையே கி.பி. 775, 778, 782-ஆம் ஆண்டுகளில் சைலேந்திர மரபினர் மலாயா, சாவா, சுமத்திரா போன்ற பகுதிகளில் ஆட்சியை நிலைநாட்டி இருந்ததைச் சுட்டுகின்றன. இறுதிக் கல்வெட்டு இந்திரா சைலேந்திரர் என்பாரையும் இன்னும் பலதிறப்பட்ட அரசர்களையும் குறிப்பிட்டுள்ளது. சைலேந்திர மன்னர்கள் சீனாவுடனும் இந்தியாவுடனும் அரசு முறைத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

**இந்திராணி** திருப்பாற்கடலில் அமுதத்துடன் தோன்றியவள். இவளைத் திருமால் இந்திரனுக்கு மனைவியாக அளித்தார். இவள் இந்திரனைப் போல் வச்சிரம், சூலம், கதை ஆகியவற்றைத் தரித்து, யானையை ஊர்தியாகக் கொண்டாள்.

இவள் சத்த (7) மாதர்களுள் ஒருத்தி. இவளைத் துவட்டாவின் மகள் என்றும் கூறுவர். இந்திரபதம் பெறுவோர் இவளைக் காதலியாய்ப் பெறுவர். நகுடன் இந்திரபதம் பெற்று இவளைப் பெற்ற போது, அகத்தியர் முதலிய ஏழு இருடிகள் சுமக்கும் பல்லக்கில் வந்தால் உடன்படுவேன் என்று கூறி இவள் மறுத்தாள்.

இந்திரன் பாண்டவர்களாகப் பிறந்தபோது, இவள் துருபதன் செய்த யாகத்தில் திரௌபதியாகப் பிறந்தாள்.

சூரனாதியர் செய்யும் துன்பத்தைச் சிவனிடம் முறையிட இந்திரன் கைலைக்குச் சென்றபோது, மகாசாத்தாவை இவளுக்குக் காவலிருக்க வேண்டிச் சென்றான். கணவன் விரைவில் திரும்பிவர இவள் தவமியற்றிக் கொண்டிருந்தாள். அப்போது இவளைக் கண்ட அசமுகி என்னும் அரக்கி இவளைத் தன் தமையனுக்கு உகந்தவள் என்று கைப்பற்றி இழுத்தாள். அதனால் வருந்திய இவள் குரல் கேட்டு மகாகாளர் அசமுகியின் கையை வெட்டி, இவளை விடுவித்தார்.

திருமால் மடியில் தான் இருக்க அருள்செய்யுமாறு அவரிடம் வேண்டிக்கொண்டாள். அதற்கேற்பத் திருமால் துவாரகையில் கண்ணனாக அவதரித்த

போது, தவம்புரிந்த இந்திராணி இராதையாகத் தோன்றினாள். கண்ணனுடன் விளையாடித் தரிசிக்கக் கண்ணன் இவளை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

இந்திராணிக்குச் 'சசி' என்ற பெயரும் உண்டு. இவள் மகன் சயந்தன் ஆவான். ந. மா.

**இந்திராயன் படைப்போர்** என்பது படைப்போர் என்னும் இசுலாமியத்தமிழ் இலக்கிய வகையுள் அடங்கும் ஐந்து படைப்போரின் ஒரு பகுதி ஆகும் (காண்க: இபுனியன் படைப்போர்). இது அசன் அலிப் புலவரால் இயற்றப்பட்ட ஐந்து படைப் போரின் ஐந்தாம் பிரிவாக அமைந்துள்ளது. எனவே, இதற்கு முன்பாக அமைந்துள்ள இபுனியன் படைப்போர், உச்சிப்படைப்போர், வடோச்சிப் படைப்போர், தாகிப் படைப்போர் என்னும் நான்கு பகுதிகளில் அமைந்துள்ள போர்ச்செய்திகளின் தொடர்ச்சியே இந்திராயன் படைப்போர் எனலாம்.

இந்திராயன் படைப்போர் என்னும் தலைப்பில் உள்ள இந்திராயன் என்னும் பெயர் முசுலிம் அல்லாத கூட்டத்தாருக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்று வந்த மன்னன்பெயராகும். இப்படைப்போரின் முதல் பகுதியில் இந்திராயனுக்கும் அவன் மகளை மணமுடிக்கக் காத்திருக்கும் வடோச்சிக்கும் நடைபெற்ற போர்ச் செய்திகளும், இரண்டாம் பகுதியில் இந்திராயனுக்கும் நான்காம் கலீபாவான அலி (ரலி) அவர்களுக்கும் நடைபெற்ற போர்ச் செய்திகளும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இப்போர்ச் செய்திகளை அசன் அலிப்புலவர் 840 ஈரடிக்கண்ணிகளில் சுவைபடப் பாடியுள்ளார்.

போரின் இறுதியில் அலி (ரலி) அவர்களின் வலிமைமிக்க போர்த்திறத்தால் இந்திராயன் தோல்வி அடைந்து, ஏகத்துவ இறைவழிபாட்டுக் கோட்பாட்டினை ஏற்று, இசுலாத்தைத் தழுவினான் என்பது குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்திராயன் இசுலாத்தைத் தழுவுவதற்கு முன்னர் இசுலாமிய நெறித் தொடர்பாக அவனுக்கேற்பட்ட ஐயங்களை வினாவாக எடுத்துக் கூற, அதற்குரிய விடைகளாக அலி (ரலி) விளக்குவதான பகுதியும் இடம் பெற்றுள்ளது. இசுலாமிய நெறியில் தமக்கெழுந்த ஐயப்பாடுகள் நீங்கியதும், இந்திராயன் உளமார இசுலாத்தை ஏற்றுச் சுல்தான் முகம்மது தீன் என்ற பெயரினைப் பெறுவதோடு இந்திராயன் படைப்போர் முற்றுப் பெறுகிறது. ஐந்து படைப்போரில் இந்திராயன் படைப்போருக்கு முன்னர் நான்கு படைப்போர்கள் இடம்பெற்றிருந்தாலும் அவை அனைத்திற்கும் உரிய முடிவு இந்திராயன் படைப் போரிலேயே அமைந்துள்ளது. சி.ந.

**இந்திராவதி ஆறு** தென்னிந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் பாயும் ஓர் ஆறு. இதன் நீளம் 507 கி.மீ. இந்த ஆறு தென்மேற்கு ஒரிசாவில் உற்பத்தியாகி மேற்கு, தென்மேற்காக மத்தியபிரதேசத்தில் பாய்ந்து, கோதாவரி ஆற்றுடன் இணைந்து, ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கும் ஒரிசாவிற்கும் எல்லையாக அமைகிறது.

**இந்திரியங்கள்**: புலன்களுக்கு இந்திரியங்கள் என்பது பெயர். இவை ஞானேந்திரியங்கள் என்றும் கர்மேந்திரியங்கள் என்றும் இருவகைப்படும். இவற்றில் முதல் வகை செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என்பவையாகும். சிலர் மனத்தையும் இவற்றோடு சேர்த்துக் கொள்கின்றனர். இரண்டாம் வகையில் யோனி, ஆசனவாய், கை, கால், வாய் அடங்கும். இவை பிராண, அபான, சமான, வியான, உதான என்னும் ஐவகை உயிர் வாயுக்களுடன் தொடர்புடையவை. ஒவ்வொரு வகையிலும் ஐந்து உறுப்புக்களைக் குறிப்பதால் 'பஞ்சேந்திரியங்கள்' என்று சொல்லப்படுகிறது.

இந்த உறுப்புகளினால் காண இயலாத இறைவன் இவற்றிற்குப் புறம்பானவன் என்று கூறப்படுகிறான். ஞானேந்திரியங்களுக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் தொடர்பினால் மக்கள் பொருள்களை உணர்கின்றார்கள். இவற்றால் உணரப்படுபவை முறையே ஒலி, தொடு உணர்ச்சி, உருவம், சுவை, மணமாகும். இவ்வாறு இப்புலன்களுக்கும் பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, ஒளி, நீர், மண் ஆகியவற்றிற்கும் தொடர்பு உண்டு என்பது நியாய தத்துவ நூல்களின் அடிப்படைக் கருத்து ஆகும்.

இந்த இந்திரியங்களின் இருப்பிடமான உடலை ஆயதனம் என்று குறிப்பிடுவர். ஐந்து ஞானேந்திரியங்களையும் சேர்த்து ஒன்றாக இந்திரிய கிராமம் என்று கூறுவார்கள். ஆசைக்கு இருப்பிடம் இந்திரியங்களும் மனமும் அறிவுமாகும் என்று தத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன. அதனால் இவைகளை வசப்படுத்துதல் சாதகனின் முதற் குறிக்கோளாகும். இந்த இந்திரியங்களின் விடயமாகிய பொருள்களினின்றும் மனத்தைத் திருப்புவதே வைராக்கியமாகும்.

உடலைக் காட்டிலும் இந்திரியங்களும், இந்திரியங்களைக் காட்டிலும் மனமும், மனத்தைக் காட்டிலும் அறிவும், அறிவைக் காட்டிலும் ஆன்மாவும் மேம்பட்டன என்று பகவத் கீதையும் இந்திரியங்களைக் காட்டிலும் பொருள்களும், பொருள்களைக் காட்டிலும் மனமும், மனத்தைக் காட்டிலும் அறிவும், அறிவைக் காட்டிலும் ஆன்மாவும் நுண்ணியவை என்று கடோபநிடதமும் கூறுகின்றன. இந்திரியங்களைக் குதிரைகள் என்றும், பொருள்களை அவை

செல்லும் பாதை என்றும், உடல், இந்திரியம், மனம் இம்மூன்றையும் உடைய ஆன்மாவை நுகர்பவர் என்றும் அறிஞர்கள் கருதுவதாகக் கடோபநிடதம் கூறுகிறது. கடிவாளக் கயிறு கொண்டு ஓட்டப்படும் குதிரையைப் போல, மனத்தால் ஏவப்பட்ட இந்திரியங்கள் செயற்படுகின்றன. ஒரு நல்ல தேரோட்டியின் ஆணையின்படி நடக்கும் குதிரையைப் போல, இந்திரியங்களும் நல்ல அறிவு பெற்ற ஒருவன் மனமிடும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. இந்த இந்திரியங்கள் இயற்கையாகவே வெளியே உள்ள தூலமான பொருள்களை உணரும் திறமையைத் தான் பெற்றுள்ளன. அவை நுண்ணிய ஆன்மாவை உணரும் திறனைப் பெறவில்லை. மனத்தைக் கட்டுப் படுத்தும் ஒருவன் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் திறமையைப் பெறுகின்றான். ந.க.

**இந்திரியான்மவாதி**: சைவ சமயம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை வலியுறுத்துகிறது. இம்முப்பொருட்கோட்பாடு சைவ சமயத்தின் அடிப் படைக் கோட்பாடாகும். சைவ சமயம் இம் மூன்றினையும் தனித்தனி இயலாக ஆராய்ந்துள்ளது. அவற்றுள் ஆன்மாவைப் பற்றி - பசுவினைப்பற்றி சைவ சித்தாந்தம் கூறும் செய்திகளுள் ஒன்றாக இந்திரிய ஆன்மவாதி பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

கருவிகள் எனப்படும் கரணங்கள் அகக்கரணம், புறக் கரணம் என இரு வகைப்படும். சைவசித்தாந்தத்தில் அகக் கரணங்கள் என்பன மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றையும், புறக்கரணங்கள் என்பன மெய், வாய், கண், முக்கு, செவி ஆகியவற்றையும் குறிக்கும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளால் இந்திரியங்களால் முறையே உணரப்படும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகிய ஐந்தும் ஐம்புலன்கள் எனப்படும்.

ஆன்மாவின் இயல்பினை விளக்க முற்பட்டவர்களுள் உடல்தான் ஆன்மா என வாதிப்பவர் சிலர். அவர்கள் தேகான்மவாதிகள் எனப்படுவர். வேறு சிலர் இந்திரியங்களே (ஐம்புலன்களே) ஆன்மா எனக் கூறுவர். அவர்களை 'இந்திரியான்மவாதிகள்' என்று சைவ சமயம் கூறும். இந்திரியான்மவாதி என்பதற்கு 'இந்திரியங்களே ஆன்மாவாகும் என்று கூறும் கோட்பாடுடையவன்' என்பது பொருளாகும்.

தேகான்மவாதி, அந்தக்கரணான்மவாதி போன்றவர்கள் கூறும் ஆன்மா பற்றிய கருத்துகளைச் சைவ சித்தாந்தம் மறுத்து, அது பற்றிய தன் கருத்துகளை நிறுவும்போது இந்திரிய ஆன்மவாதி கூறும் கருத்துகளையும் மறுத்து விடுகிறது. கண் காணும்; ஆனால் கேளாது; செவி கேட்கும்; ஆனால் காணாது. இவ்வாறு ஐம்பொறிகளுள் ஒவ்வொன்றும் ஒன்று அறிந்ததனை மற்றொன்று அறிய முடியாநிலையில் உள்ளது. ஆனால், ஒரு கனியை வாங்கி, முகர்ந்து, பின் சுவைத்துத் துய்க்கும்போது, 'பழத்தைக் கண்டான் வாங்கினேன்; அதனை முகர்ந்தேன்; பின்னர்ச் சுவைத்துத்தின்றேன்' என்று கூறுமாறு, சுவை முதலாகிய ஐம்புல உணர்வுகளும் ஒரே அறிவில் பொருந்தித் தொடர்புபட நிகழ்வதனால், அவ்வாறு அறியும் ஆன்மா மெய், வாய், கண், மூக்கு , செவி என்னும் ஐம்பொறிகளுக்கும் (இந்திரியங்களுக்கும்) வேறாக உளதாதல் வேண்டும். இவ்வாறு கூறி இந்திரியான்மவாதியின் ஆன்மா பற்றிய கருத்தினைச் சைவ சித்தாந்தம் மறுத்துத் தன்கருத்தினை நிறுவ முற்படுகிறது.

**இந்து உரிமை வயது அடையாமை காப்புச் சட்டம், 1956**: ஓர் இந்து உரிமை வயதைக் கடக்கும் வரையிலும் அவனது சொத்துகளைப் பாதுகாக்கும் பொறுப்பானது அரசனுக்கு உண்டு என்று மனு சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளது. ஒருவன் 16 வயதை அடையும் வரையிலும் இளையர் (Minor) ஆகக் கருதப்படுதல் வேண்டும் என்று நாரத சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளது. பழைய இந்துச் சட்டத்தின்படி வங்காள மாநிலத்தில் உள்ளவர் 15 வயது நிறைந்தவுடன் உரிமைவயது அடைபவராகவும் (Major) ஏனைய மாநிலங்களில் 16 வயது நிறைந்தவுடன் உரிமை வயது அடைபவராகவும் கருதப்பட்டனர். இந்த மாறுபட்ட கருத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் கி.பி. 1875-ஆம் ஆண்டில் இந்திய உரிமை வயது அடைபவர் சட்டம் (Indian Majority Act,1875) இயற்றப்பட்டது. இன வேறுபாடின்றி இச்சட்டம் அனைத்து இந்தியருக்கும் பொருந்தக்கூடியதாகும். ஆனால், திருமணம், மணவிலக்கு, தத்து எடுத்தல் ஆகிய விவகாரங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது. ஓர் இளையருக்கு அவருடைய ஆளுமை அல்லது உடைமைக்கு (Person or Property) நீதிமன்றத்தால் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலோ அவருடைய உடைமையை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் காப்பாயம் (Court of Wards) ஏற்றிருந்தாலோ அந்த இளையர் 21 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் (Major) கருதப்பட வேண்டும் என்றும், ஏனைய நிலையில் 18 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்படவேண்டும் என்றும் இந்த 1875-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இளையர் என்பவர் தன் இளவயது காரணமாகத் தன்னையும் தன்னுடைய உடைமைகளையும் பாதுகாக்கவும் பராமரிக்கவும் இயலாத நிலையில்

உள்ளார். எனவே அவருக்குக் காப்பாளர் தேவைப் படுகிறது. அந்த இளையர் உரிமை வயதை அடைந்த வுடன் காப்பாளரின் (Guardian) கடமை முடி வடைந்துவிடுகிறது. பழைய இந்துச் சட்டத்தில் ஓர் இளையவருக்கு முக்கியமாக மூன்று வகைக் காப்பா ளர்களிருந்தார்கள். இயற்கைக் காப்பாளர்கள் (Natural Guardians) ஒரு வகையாகும். தகப்பன், தகப்பனுக்குப்பின் தாய், திருமணமான பெண்ணுக் குக் கணவன் ஆகியவர்கள் இயற்கைக்காப்பாளர்கள். சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுக்குத் (Illegitimate Children) தாயும்,தாய் இல்லாத நிலை யில் தகப்பன் யாரென்று தெரிந்திருந்தால் தகப்ப னும், திருமணமான பெண்ணுக்குக் கணவனும் இயற்கைக் காப்பாளர் ஆவார்கள். இளையருக்கு உயில் மூலம் காப்பாளரை நியமிக்கத் தகப்பனுக்குப் பழைய சட்டத்தின்படி அதிகாரம் உண்டு. அந்த அதிகாரம் பழைய சட்டத்தில் தாய்க்குக் கிடை யாது. ஒரு மித்தாட்சரக் கூட்டுக் குடும்பச் சொத்தில் ஓர் இளையருக்கு உள்ள பங்கு சம்பந்தமாக உயில் மூலம் காப்பாளரை நியமிக்கப்பழைய இந்துச் சட் டத்தின்படி தகப்பனுக்குக்கூட அதிகாரம் கிடை யாது. உயில்மூலம் நியமிக்கப்படும் காப்பாளர் இரண் டாம் வகையாகும். நடப்புமுறைக் காப்பாளர் (Defact Guardian) என்பவர் மூன்றாம் வகையா கும். சட்டப்படியான காப்பாளர் இல்லாத நிலையில் நடைமுறையில் ஒருவர் இளையரின் காப்பாளராகச் செயற்பட்டால் அவர் அவ்வாறு அழைக்கப்படுவார்.

இந்திய அரசானது கி.பி.1890–ஆம் ஆண்டில் காப் பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தை (Guardian and Ward Act,1890) இயற்றியது. இச்சட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இது எல்லா இனத்தவருக்கும் பொருந்தக்கூடியது. இந்திய உரிமை வயது அடைவோர் சட்டத்தில் (Indian Majority Act,1875) சொல்லப்பட்டுள்ள வயது வரை யறை இச்சட்டத்திலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இந்த 1890–ஆம் ஆண்டைய சட்டத்தின்படி ஓர் இளையரின் ஆளுமை அல்லது உடைமை அல்லது இரண்டுக்கும் எவரையும் காப்பாளராக நியமிக்க மாவட்ட நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட் டுள்ளது. ஆனால், காப்பாயத்திடம் நிருவாகமிருந் தால் அந்த இளையரின் ஆளுமை மற்றும் உடைமைக் கும் காப்பாளரை நீதிமன்றம் நியமிக்க முடியாது. மேலும், இளையர் பெண்ணாக இருந்து திருமணமாகி யிருந்தால் கணவன் காப்பாளராகச் செயற்படத் தகுதியற்றவராக உள்ளார் என்று நீதிமன்றம் முடிவு செய்தால்தான் வேறு ஆணை அப்பெண்ணின் ஆளு மைக்குக் காப்பாளராக நீதிமன்றம் நியமிக்க முடியும். உரிமை வயது அடையாத, திருமணமாகாத மகளுக் கும் உரிமை வயது அடையாத மகனுக்கும் தகப்ப னிருந்தால், அத்தகப்பன் காப்பாளராகச் செயற்படத் தகுதியற்றவன் என்று நீதிமன்றம் முடிவு செய்தால் தான் வேறு எவரையும் இளையரின் ஆளுமைக்குக் காப்பாளராக நீதிமன்றம் நியமிக்க முடியும். காப் பாளர் சம்பந்தமான பழைய இந்துச் சட்டத்தில் இந்த 1890–ஆம் ஆண்டைய சட்டம் தலையிடாவிட் டாலும் இயற்கைக் காப்பாளர்களையே காப்பாளர்க ளாக நியமிக்க நீதிமன்றத்திற்கு இச்சட்டத்தின்மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே குறிப்பிட்டபடி இயற்கைக் காப்பாளர் தகுதியில்லாத வராக இருந்தால் வேறு யாரையும் காப்பாளராக நீதிமன்றம் நியமிக்கலாம். உயில் மூலம் நியமிக்கப் பட்ட காப்பாளர் இருந்தால் அவரையே நீதிமன்றம் 1890–ஆம் ஆண்டைய சட்டப்படி காப்பாளராக நியமிக்கலாம். உயில் மூலம் நியமிக்கப்பட்ட காப் பாளர் இச்சட்டத்தின் 39–ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ள காரணங்களுக்காக நீக்கப்பட்டு வேறு எவ ரும் நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்பட லாம். காப்பாளர் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், காப்பாளர் தம் கடமை களைச் சரிவரச் செய்யாதிருத்தல், காப்பாளர் நொடித்துப் போதல் போன்ற காரணங்களும் இன்னும் பல காரணங்களும் மேற்படி 39–ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. (இதே காரணங்களுக்காக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர் நீக்கப்பட்டு வேறு காப்பாளர் நியமிக்கப் படலாம்). காப்பாளர் நியமிப்பதில் இளையரின் நலனையே முதன்மையானதாக மனத்தில் கொண்டு காப்பாளர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால், எந்த நிலையிலும் மித்தாட்சரக் கூட்டுக்குடும்பத்தின் சொத் தில் உள்ள இளையரின் பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாக 1890–ஆம் ஆண்டின் சட்டப்படி நீதிமன் றம் காப்பாளரை நியமிக்க முடியாது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி பழைய இந்துச் சட்டப்படி இயற்கைக் காப்பாளர்கள், உயில் வழிக் காப்பாளர்கள் என்று காப்பாளர்கள் உளர். காப்பா ளரின் அதிகாரம் உயிலில் குறைக்கப்படாமலிருந்தால் அந்தக் காப்பாளருக்கு இயல்பான காப்பாளருக்குச் சமமான அதிகாரம் உண்டு. அவ்வாறான காப்பாளர் கள் நீதி மன்றத்திடம் அனுமதி வாங்காமலேயே இளையரின் சொத்துகளைப் பராதீனம் (Alienations) செய்யலாம். ஆனால் சட்டப்படியான தேவையி லிருந்து அல்லது இளையரின் சொத்துக்கு நன்மை உண்டு என்றால்தான் அவ்வாறு பராதீனம் செய்ய லாம். ஆனால், அவ்வாறான இயல்பான காப்பாள ரும், உயில்மூலம் நியமிக்கப்பட்ட காப்பாளரும் 1890–ஆம் ஆண்டைய சட்டப்படி காப்பாளராக நியமிக் கப்பட்டால் அவர்களது அதிகாரம் குறைந்துவிடு

கிறது. நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர் இளையரின் நலனைப் பேணிக் காக்க வேண்டும். சொத்துகளை ஒரு புத்திசாலியான மனிதன் எவ்வாறு நிருவாகம் செய்வானோ அம்முறையில் நிருவாகம் செய்ய வேண்டும். ஆனால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அந்தக் காப்பாளர் இளையரின் சொத்துகளைப் பராதீனம் செய்யக் கூடாது. ஐந்து ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கோ அல்லது இளையர் உரிமை வயது அடையும் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கோ நீதிமன்ற அனுமதியில்லாமல் அந்த நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர் இளையரின் சொத்துகளைக் குத்தகைக்கு விட முடியாது. இளையருக்கு அனுகூலமிருந்தால்தான் அவ்வாறு சொத்துகளைப் பராதீனம் செய்யவோ (அயன்மைப்படுத்த-To Alienale)அல்லது குத்தகைக்கு விடவோ நீதிமன்றம் அனுமதி வழங்கும். எனவே, நீதி மன்றத்தின் அனுமதியில்லாமல் சட்டப்படியான காரணங்களுக்காகப் பராதீனம் செய்யப் பழைய சட்டப்படி அதிகாரம் படைத்த இயல்பான காப்பாளர் மற்றும் உயில்மூலம் நியமிக்கப்பட்ட காப்பாளர் (உயிலில் அதிகாரம் குறைக்கப்பட்டிருக்கக்கூடாது) ஆகியோரின் அதிகாரம் 1890-ஆம் ஆண்டைய காப்பாளர் சட்டப்படி காப்பாளராக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவுடன் குறைந்து விடுகிறது.

பின்னர் 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசானது இந்து உரிமை வயது அடையாமை காப்புச் சட்டத்தை (Hindu Minority and Guardianship Act, 1956) இயற்றியது. இச்சட்டம் 25.8.1956-ஆம் நாளில் நடைமுறைக்கு வந்தது. சம்மு-காசுமீர்ப் பகுதி தவிர அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லுபடியாகும். இந்துக்களுக்கு மட்டும் இச்சட்டம் பொருந்தும். (இந்து என்பது யார் என்று விரிவாக இந்துச் சட்டம் என்ற கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது). இச்சட்டத்தில் ஓர் இளையர் 18 வயதைக் கடந்தவுடன் உரிமை வயதை அடைவதாகச் சொல்லப்பட்டுள்ளது. மேற்கூறிய கி.பி.1890-ஆம் ஆண்டைய காப்பாளர் சட்டத்துக்குத் துணைச் சேர்க்கையாக (Supplemental) இந்த 1956-ஆம் ஆண்டைய சட்டம் இயற்றப்பட்டுள்ளதாக 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

காப்பாளர் என்பவர் யார் என்றும் இயற்கைக் காப்பாளர்கள் யார் என்றும் 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. மகனுக்கும் திருமணமாகாத மகளுக்கும் தகப்பனும் தகப்பனுக்குப் பின் தாயும் இயற்கைக் காப்பாளர்கள் ஆவார்கள். ஆனால் 5 வயது நிறைவடையாத குழந்தை சாதாரணமாகத் தாயின் பாதுகாப்பிலிருக்க வேண்டும். சட்டத்துக்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தாயும் தாய்க்குப்பின் தகப்பனும் இயற்கைக் காப்பாளர் ஆவார்கள். ஆனால், சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த பெண்ணுக்குத் திருமணமாகி விட்டால் அவளுக்குக் கணவன்தான் காப்பாளர் ஆவான்.

இயற்கைக் காப்பாளர், தகப்பன் அல்லது தாயால் உயில் மூலம் நியமிக்கப்படும் காப்பாளர், நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர் ஆகியோர் 'காப்பாளர்' என்ற விளக்கத்தில் அடங்கியுள்ளனர். பழைய இந்துச் சட்டத்தில் உயில்மூலம் காப்பாளரை நியமிக்கத் தகப்பனுக்கு மட்டும் அதிகாரம் உண்டு. 1956-ஆம் ஆண்டைய சட்டத்தின்மூலம் அந்த அதிகாரம் தாய்க்கும் அளிக்கப்பட்டுள்ளது.

காப்பாளராக இருப்பதற்கு இந்துவாக இருக்க வேண்டும் என்றும், இல்வாழ்க்கையைத் துறந்தவராக இருக்கக்கூடாது என்றும் 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேலும், மித்தாட்சரக் கூட்டுக் குடும்பச் சொத்தில் உள்ள பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாக எவரையும் காப்பாளராக நியமிக்கக் கூடாது என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தின் 12-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இப்பிரிவு உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பாதிக்காது என்று இப்பிரிவிலேயே கூறப்பட்டுள்ளது. எனவே, இயற்கைக் காப்பாளர்கள் கூட உயில்மூலம் அவ்வாறான பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாகக் காப்பாளரை நியமிக்க முடியாது.

கூட்டுக் குடும்பச் சொத்தானது இந்துச் சட்டப்படி நிருவாகிக் கட்டுப்பாட்டில் அடங்கியது. கூட்டுக் குடும்பச் சொத்துக் கூட்டுக் குடும்பத்துக்குப் பாத்தியப்பட்டது என்பதாலும் பிரிவினையாகாத பங்கு மாறக் கூடியது என்பதாலும் அவ்வாறான பிரிவினையாகாத பங்குக்குக் காப்பாளரை நியமிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இந்தியாவில் உள்ள தனியாக அதிகாரம் வழங்கப்பட்ட உயர்நீதிமன்றங்களுக்கு (Chartered High Courts) அவ்வாறான பங்கு சம்பந்தமாகக்கூடக் காப்பாளர் நியமிக்க அதிகாரம் உள்ளது. அதாவது, கூட்டுக்குடும்பச் சொத்தை விற்க வேண்டிய நிலை ஏற்படும்போது அக்குடும்பத்தின் நிருவாகியையே காப்பாளராக நியமிக்கலாம்; அல்லது கூட்டுக்குடும்பத்தில் உள்ள ஆண்கள் எல்லோருமே இளையர்களாக இருந்தால் அவ்வாறான உயர்நீதிமன்றம் காப்பாளரை நியமிக்கலாம்.

நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர் எவ்வாறு நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் பராதீனம் செய்யவோ, குறிப்பிட்ட காலத்துக்குமேல் போகக்கூடிய குத்தகைக்கு விடவோ கூடாது என்று 1890-

ஆம் ஆண்டுச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதோ அதுபோல் இயல்பான காப்பாளரும் நீதிமன்ற அனுமதியில்லாமல் பராதீனம் செய்யவோ குத்தகைக்கு விடவோ கூடாது என்று 1956-ஆம் ஆண்டுச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான அனுமதி பெறாமல் செய்யப்படும் பராதீனமும் குத்தகையும் தவிர்க்கத்தக்கது (Voidable) என்று மேற்படி இரண்டு சட்டங்களிலுமே சொல்லப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் ஏற்கனவே குறிப்பிட்டபடி இயற்கைக் காப்பாளருக்குப் பழைய இந்துச் சட்டப்படி உள்ள அதிகாரம் 1890-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளரின் அதிகாரத்தைவிட அதிகமானது. ஆனால், அந்த இயற்கைக் காப்பாளர் 1890-ஆம் ஆண்டுச் சட்டப்படி காப்பாளராக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவுடன் அந்த அதிகமான அதிகாரம் குறைந்துவிடுகிறது. அதாவது, இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் சில குறிப்பிட்ட நிலையில் பராதீனம் செய்யலாம். ஆனால், இயற்கைக் காப்பாளரே நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்பட்டால், நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் பராதீனம் செய்யக்கூடாது. இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்படாவிட்டாலும்கூட நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் பராதீனம் செய்யக்கூடாது என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

நடப்பு முறைக் காப்பாளர் (Defacto guardian) எவ்விதமான முறையிலும் இளையரின் சொத்துகளை நிருவாகம் செய்யக்கூடாது என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான தடையை மீறிச் செய்யப்படும் பராதீனம் தொடக்கத்திலிருந்து செல்லாதது ஆகும்.

1956-ஆம் ஆண்டுச்சட்டப்படி தாய் ஒரு கட்டத்தில் காப்பாளராகச் செயற்பட உரிமையுடையவளாக இருக்கிறாள். அவ்வாறான தாய் மறுமணம் செய்து கொண்டால் என்னவாகும் என்று 1956-ஆம் ஆண்டுச் சட்டத்தில் கூறப்படவில்லை. இந்து விதவை மறுமணம் செய்து கொள்ள 1856-ஆம் ஆண்டைய இந்து விதவை மறுமணச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மறுமணம் செய்யும்போது விதவையைத்தவிர வேறு எவரையும் உரிமை வயது அடையாத குழந்தைகளுக்குக் காப்பாளராக நியமிக்க நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய மேற்படி 1856-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான விதவையின் மறுமணம் குழந்தையின் நலனைப் பாதிக்கக்கூடும் என்றால் வேறு எவரும் நீதிமன்றத்தால் காப்பாளராக 1890-ஆம் ஆண்டைய சட்டத்தின்படி நியமிக்கப்படலாம்.

கணவன் மனைவிக்குள் மணவிலக்கு நீதிமன்றத்தின் மூலம் ஏற்படும்போது இளையரான குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு சம்பந்தமாகத் தகுந்த ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்க 1955-ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**இந்துக்கள்** இந்தியாவில் வாழும் பெரும்பாலான மக்களைக் குறிக்கும் சொல். இது ஒரு சாதியையோ ஒரு வழிபாட்டு முறையையோ சுட்டும் சொல்லன்று. கன்னியாகுமரி முதல் காசுமீரம் வரை வாழும் இசுலாமியர் கிறித்தவர் அல்லாதார் அனைவரையும் குறிப்பிடும் சொல்.

'இந்து' (Hindu) என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய சொல் என்றோ அதனை அந்நியர்கள் அளித்தார்கள் என்றோ சொல்வது சரியன்று. தொன்மைக்கால நூலான இருக்குவேதத்தில் வரும் சப்தசிந்து என்ற பெயர் இந்திய நாட்டிற்கு அடைமொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். மேலும், வடமொழியில் உள்ள 'ச' என்னும் எழுத்து பிராகிருத மொழியிலும் ஐரோப்பிய மொழிகளிலும் 'ஹ' என்று மாறி வருவது தெளிவு. எனவே, 'சப்த சிந்து' 'ஹப்த ஹிந்து' என்று மாறி, பிறகு 'ஹிந்து' என மாறியிருக்கலாம்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளாக 'இந்து' என்ற சொல் இந்தியரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பிருதிவிராசன் காலத்திலிருந்து இந்திய நாட்டுக் கவிஞர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள், சமுதாயத் தலைவர்கள், அரசியல் வல்லுநர்கள் போன்றோர் அனைவரும் இந்துக்களையும் இந்து தருமத்தையும் 'இந்து' என்னும் பெயராலேயே குறித்து வருகின்றனர். சுதந்திர வீரர்களான குரு கோவிந்த சிங்கு, வித்தியாரண்யர், சிவாசி போன்றோர் 'இந்து சுயராச்சியத்தை' நிறுவ வேண்டிக் கனவுகள் கண்டனர். மேலும், 'இந்து' என்னும் சொல் அப்படிப்பட்ட வீரர்களின் வாழ்க்கை, தீரச் செயல்கள், அவர்தம் குறிக்கோள்கள் போன்றவற்றை நினைவிற்குக் கொண்டுவருகின்றது.

அயலார் இந்திய சமுதாயத்தை நோக்குங்கால் இந்து தருமத்தின்கீழ்ச் சைவம், வைணவம், சாக்தம், வைதிகம், பௌத்தம், சமணம், சீக்கியம், இலிங்காயதம், ஆரிய சமாசம் போன்ற பல வழிபாட்டு மரபுகள் இருப்பதைக் கண்டு வியப்புறுகின்றனர். இந்திய முன்னோர்கள் மக்களின் பல்வேறு தரப்பட்ட மனப்பக்குவத்திற்கு ஏற்ப இவ்வாறான வெவ்வேறு வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், இவற்றின் குறிக்கோள்கள் அனைத்தும் ஒன்றே. அதாவது, பிரமம், ஆத்மா, சிவன், விட்டுணு, ஈசு

வரன், சூன்யம் என்று வெவ்வேறு பெயர்களால் சொல்லப்படும் உயர்ந்த உண்மையை உணர்ந்து அறிவதையே குறிக்கோளாக அமைத்தனர். இதனைக் குறிக்கும் வடமொழிச் சுலோகம் ஒன்று உண்டு. அதன் கருத்துரை இதுதான்: ''தொன்மைக் காலத்து மந்திரங்களைக் கண்ட இருடிகள் அவரை (ஒருவராகிய கடவுளை) இந்திரன், இயமன், மாதரிச்வான் என்று அழைத்தனர். சொற்களால் வருணிக்கமுடியாத அந்த ஒன்றையே வேதாந்திகள் 'பிரமம்' என்னும் சொல்லால் சுட்டிக் காட்டுகின்றனர். சைவர்கள் அவரைச் சிவன் என்றும், வைணவர்கள் விட்டுணு என்றும் வழிபடுகின்றனர். புத்தர்களும், சமணர்களும் அவரைப் புத்தர் என்றும் அர்கதர் என்றும் அழைக்கின்றனர். சீக்கியச் சகோதரர்கள் சத்சிரீ அகால் என்றும் அழைக்கின்றனர். உலக நாயகனான அவரைச் சிலர் சாசுதா (Sasta) என்றும், குமாரசாமி என்றும் விளிக்கின்றனர். வேறு சிலர் எசமானே, தந்தையே, தாயே என்று கூவியழைத்துப் பக்தியுடன் வழிபாடு செய்கின்றனர். இத்தகைய இறைவன் ஒருவரேதாம்; இரண்டாவதாக எதுவும் இல்லை. அதாவது அவர் இணையற்றவர் ஆவார்''.

இந்துக்கள் பல கடவுளர்களை வழிபடுவதுபோல் தோன்றினாலும், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்னும் இறுதி நோக்கிலேயே வழிபடுகின்றனர். இந்தக் கருத்தையே இருக்குவேதம், 'ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி' என்று கூறுகிறது; 'இறைவன் ஒருவனே; அவனை உலகத்தோர் பல்வேறு பெயர்களில் அழைக்கிறார்கள்' என்பதே இதன் சாரம். இக்கருத்தையே 'சிவ மகிமைத் தோத்திரம்' வலியுறுத்துகிறது. 'எல்லா ஆறுகளும் அடையும் ஒரே பெருங்கடல் போலப் பல்வேறு சுவைகளையுடையவர்கள் அவற்றிற்கேற்ப வேதம், சாங்கியம், யோகம், சைவம், வைணவம் என வெவ்வேறு வழிகளைப் பின்பற்றி அடையும் குறிக்கோள் நீயே'.

இந்துக்களின் பண்பாட்டையே இராதாகிருட்டிணன் போன்ற அறிஞர்கள் இந்தியப் பண்பாடு என்று குறித்தனர்.

**இந்துகுசு மலைத்தொடர்** உலகிலேயே மிக உயர்ந்த மலைகளுள் இமயமலைத் தொடர்களுக்கு அடுத்தபடியாகக் கருதப்படும் இம்மலைத் தொடர் ஏறத்தாழ 805கி.மீ. நீளமுள்ளது. இது மத்திய ஆசியாவிலுள்ளது. பாமீர் முடிச்சுக்கு மேற்கில் வட பாகிசுத்தானிலிருந்து வடகிழக்கு ஆப்கானிசுத்தானம் வரை இந்துகுசு (Hindu Kush) மலைத் தொடர் படர்ந்துள்ளது. இம்மலைத் தொடர் 7695மீ. உயரமுள்ளது. இதன் மிக உயர்ந்த மலையுச்சியை திரிச்மீர் என்பர் (Tirich Mir) என்பர். இம்மலைத் தொடர் உச்சிகளில் எப்போதும் பனிமூடியிருக்கும். இங்கு மக்கள் பெரும்பாலும் வாழ்வதில்லை. இம் மலைத் தொடரின் உயர்ந்த பகுதிகளில் பல கணவாய்கள் உள்ளன. அத்தகைய கணவாய் ஒன்றின் வழியாகத்தான் மகா அலெக்சாந்தரும் தாமர்லேனும் (Tamerlane) இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். இக்காலத்தில் அவை வாணிக வழிகளாக அமைந்துள்ளன.

'இந்துகுசு' என்னும் சொல்லுக்கு இந்துக்களைக் கொல்லும் மலை என்பது பொருள். குசு (Kush) என்றால் சாவு என்று பொருள்படும். இந்தியாவிலிருந்து எண்ணற்றவர் இசுலாமியர் அரண்மனைகளில் தொண்டாற்றக் கொண்டு செல்லப்பட்டபோது, ஆப்கன் மலைத்தொடர்களில் பலர் அல்லலுற்று இறந்து போனார்கள். அதைத்தான் இந்துகுசு என்னும் சொல் நினைவூட்டுகிறது.

உயர்ந்த மலையாயினும், மக்களையும் வாணிகத்தையும் தடுத்து நிறுத்தும் தடைகல்லாக இம் மலைத்தொடர் ஒருபோதும் இருந்ததில்லை. இம் மலைத் தொடரில் சிபர் (Shibar), சலங்கு (Salang) என்னும் பெயர் கொண்ட இரு கணவாய்கள் சிறப்பானவை. சிபர் கணவாய் 3260 மீ. உயரத்திலுள்ளது. சலங்கு கணவாய் 4075 மீ. உயரத்திலுள்ளது. சலங்கு கணவாயின் வழியாக ஆப்கானிசுத்தான அரசு சோவியத்து ஒன்றியத்தின் தொழில்நுட்பத் துணையுடன் சலங்குச் சுரங்கப் பாதையை 1964-ஆம் ஆண்டில் அமைத்தது. இச்சுரங்கப் பாதையின் நீளம் 2.67 கி.மீ. இதன் பயனாகக் காபூலிலிருந்து சோவியத்து ஒன்றிய எல்லைக்குச் சில மணி நேரத்தில் சென்றடையலாம். இச்சுரங்கம் பனியால் மூடப்படும்போது அதனை அகற்றப் பெரும் படையொன்றை ஆப்கானிய அரசு ஆயத்த நிலையில் வைத்துள்ளது. இதனால் போக்குவரத்து இடையூறு பெரிதும் தவிர்க்கப்படுகிறது.

அலெக்சாந்தருடன் பயணம் செய்த வரலாற்று அறிஞர்கள் இந்துகுசு மலைத்தொடரைக் காகசசு (Caucasus) என்று குறித்தனர். இம் மலைத் தொடர் பெரும் நீர்ப்பிரி மேடாகவும் (Watershed) கருதப்படுகிறது. இம்மலையுச்சியில் பெய்யும் மழை சிந்து ஆறு, ஆமுதார்யா (Amu Darya) ஆறு ஆகியவற்றிற்கு நீர் வரத்தைக் கொடுக்கிறது.

**இந்து கூட்டுக் குடும்பம்:** இந்து கூட்டுக் குடும்பம் என்பது பொது மூதாதை ஒருவரின் நேர்வழி ஆண் தோன்றல்களையும், அவர்களின் மனைவியரையும், மணமாகாத பெண்மக்களையும் கொண்டதாகும். மகளுக்குத் திருமணம் ஆனவுடன் அவள் கணவன் குடும்பத்தைச் சார்ந்தவள் ஆகிறாள்.

இந்து கூட்டுக் குடும்பம் (Hindu Joint Family) என்ற தொடரில் இரு சிறப்புக் கூறுகள் அடங்கியுள் ளன. ஒன்று 'குடும்பம்'; மற்றொன்று 'கூட்டு'. தந்தை யும் தந்தை வழி உறவினர்களும் அதாவது, தாயாதி களும் (Agnates) இருப்பதுதான் இதன் தலையாய பண்பு ஆகும். ஓர் இந்துக் கூட்டுக் குடும்பம் தோன்று வதற்குக் கட்டாயம் ஓர் ஆண்வழிப் பொதுமூதாதை யர் இருக்க வேண்டும். அவர் தந்தையாகத்தான் இருப்பார். ஆனால், அவரது மறைவுக்குப்பின் கிளை வழி உறவினர் (Collaterals) அதாவது, பெரியப்பன், சிற்றப்பன், அவர்களின் குழந்தைகள், சகோதரர்கள் அடங்கிய கூட்டுக் குடும்பமாக இருக்கலாம். கூட்டுக் குடும்பமானது அதன் உறுப்பினர்கள் கூட்டாக இருப் போம் என்று ஓர் உடன்பாடு செய்து கொண்ட தனால் ஏற்பட்டதன்று. பிரிக்க இயலாத நிலை இயல் பாகவே இருக்கிறது என்று கூற வேண்டும்.

சொத்துக் கூட்டுக் குடும்பத்துக்குப் பொதுவானது. ஆனால், சொத்து ஏதுமில்லாமலேயே ஒரு கூட்டுக் குடும்பம் செயற்படலாம். பொதுவாக, உணவு, இறை வழிபாடு, குடியிருத்தல் எல்லாம் கூட்டாக இருக் கும். ஆனால், சில சமயங்களில் வசதியை முன்னிட்டு உணவும் குடியிருத்தலும் தனியாக இருக்கலாம்.

இந்து கூட்டுக் குடும்பத்தின் சொத்தில் ஒருவர் பிறப்பினாலேயே உரிமை பெற்றிருப்பதற்குப் பங் குரிமை (Coparcenary) என்றும், பங்குரிமை உடைய வரைப் பங்குரிமையர் (Coparcener) என்றும் கூறு வர். இந்த உரிமை ஆண்களுக்கு மட்டுமே உண்டு. கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் கூடப்பங்குரிமை பெண்களுக்குக் கிடையாது. ஆண் களிலும் ஒரு குறிப்பிட்ட தலைமுறையினருக்கு மட் டுமே பங்குரிமை உண்டு. ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஓர் ஆண் உறுப்பினருக்குப் பங்குரிமை உண்டா இல் லையா என்பது,அவருக்குப் பாகப்பிரிவினை கேட்கும் உரிமை உண்டா இல்லையா என்ற கேள்விக்குக் கிடைக்கும் பதிலைப் பொறுத்தது. பொது முன் னோரிடமிருந்து மூன்று தலைமுறைக்கு அப்பாலிருந் தாலும் கூடக் கடைசியாகச் சொத்து வைத்திருந்த ஆணிடமிருந்து (Last Male holder) மூன்று தலை முறைக்குள்ளிருந்தால், அந்த ஆண் உறுப்பினருக்குப் பாகப்பிரிவிரினை கேட்கும் உரிமை உண்டு.கருவிலிருக் கும் போதே அந்த உரிமை அவருக்குக் கிடைக்கிறது.

பங்குரிமை அமைப்பில் இன்னின்னாருக்கு இன் னின்ன சொத்து என்ற வரையறை கிடையாது. முழுச் சொத்துக்கும் பங்குரிமையர் கூட்டுரிமையர் ஆவர். பங்குரிமையர் மத்தியில் எஞ்சுநர் உரிமை (Survivorship) உண்டு. பங்குரிமை என்பது இந்துச் சட்டத்தால் ஏற்பட்ட அமைப்பாகும். விரும்புகின்ற வர்கள் ஒருங்கிணைந்து செய்துகொண்ட ஏற்பாடு அன்று. ஒரு பங்குரிமையர் தமது பங்குரிமையை மற்ற வருக்குத் தானம் செய்ய முடியாது. சென்னை, பம்பாய், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களைத் தவிர, வேறு மாநிலங்களில் ஒரு பங்குரிமையர் தமது பங்குரிமையை விற்க முடியாது. அம் மூன்று மாநிலங் களிலும் பிரிவினையாகாத தமது பங்கினை மட்டும் விற்கலாமேயொழிய, ஒரு குறிப்பிட்ட கூட்டுக் குடும் பச் சொத்தைத் தமக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று ஒரு பங்குரிமையர் விற்க முடியாது. ஒரு பங் குரிமையர் தமது பங்குரிமை சம்பந்தமாக உயில் (Will) எழுதக் கூடாது என்றிருந்த தடையானது, 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசு முறைச் சட்டத் தின் மூலம் நீக்கப்பட்டுவிட்டது. கூட்டுக் குடும்பத் தின் நிருவாகி, கூட்டுக் குடும்பத்தின்அசைவியல் மற் றும் அசையாச் சொத்துகளை நியாயமான அளவில் அறப் பணிகளுக்குத் (Pious Purposes) தானம் செய்ய லாம்.

கூட்டுக் குடும்பத்தினருக்கு உரிமைப்பட்ட சொத் தினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகையில் பரம்பரைச் சொத்து (Ancestral Property) அடங்கும். பரம்பரைச் சொத்து என்பது தந்தை, தந்தையின் தந்தை, தந்தையின் தந்தையின் தந்தை ஆகியோரிடமிருந்து ஒருவனுக்குக் கிடைப்பதாகும். மூன்று தலைமுறைக்கு அடுத்துள்ள தந்தைவழிப் பாட்டனின் சொத்தோ, தாய்வழி, உடன் பிறந் தோர் அல்லது உறவினரின் சொத்தோ பரம்பரைச் சொத்தாகாது.

இரண்டாம் வகைக் கூட்டுக் குடும்பச் சொத்து களில் பின்வரும் சொத்துகள் அடங்கும். கூட்டுக் குடும்ப உறுப்பினர்களால் கூட்டுக் குடும்பச் சொத் தின் உதவியைக் கொண்டு சேர்க்கும் சொத்துக் கூட் டுக் குடும்பச் சொத்தாகும். கூட்டுக் குடும்ப உறுப் பினர்கள் தங்களது தனிப்பட்ட சொத்தைக் கூட்டுக் குடும்பச் சொத்தாகப் பாவித்தால், அது கூட்டுக் குடும்பச் சொத்தாகும்.

கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனை வரும் கூட்டு முயற்சியால் கூட்டுக்குடும்பச் சொத்தின் உதவியின்றிச் சேர்க்கும் சொத்துக் கூட்டுக் குடும்பச் சொத்தாக அனுமானிக்கப்படும். அந்த அனுமானம் (Presumption) தவறு என்று மெய்ப்பிக்கப்பட்டால், அது அவர்களின் கூட்டாளிகள் சொத்தாகக் (Partnership Properties) கருதப்படும். அந்தக் கூட்டு முயற்சியில் சிலர் மட்டுமே சேர்ந்திருந்தால், சேர்க் கப்படும் சொத்து அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர் களுடைய தனிப்பட்ட சொத்தாகும்.

அரசு ஒருவனுக்கு மானியமாகச் சொத்துக் கொடுத்

தால் அது கூட்டுக் குடும்பச் சொத்தாகாது. அது கொடுக்கப்பட்டவனின் தனிச் சொத்தாகும். ஆனால், அந்தக் கூட்டுக் குடும்பத்தின் நன்மையின் பொருட்டு அந்த மானியம் கொடுக்கப்பட்டாலோ அதைக் கூட்டுக் குடும்பச் சொத்தாக எண்ணும் வழக்கமிருந்தாலோ அது கூட்டுக் குடும்பச் சொத்தாகும். கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து அரசாங்கத்தின் நன்மைக்கும் உதவிக்கும் பணம் செலவு செய்தால், அதற்காக அளிக்கப்படும் அரசாங்க மானியம் கூட்டுக் குடும்பச் சொத்தாகும்.

தந்தையிடமிருந்தோ அவர்வழி உறவினரிடமிருந்தோ பிற உறவினரிடமிருந்தோ ஒருவனுக்குக் கொடையாகச் சொத்துகள் கிடைத்தால் அவை அவனுடைய தனிச் சொத்தாகும். திருமணத்தின் போது கிடைக்கும் சொத்தும் நண்பர்களிடமிருந்து கிடைக்கும் சொத்துகளும் திருமணத்தை முன்னிட்டுக் கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் கொடையாக அளிக்கும் சொத்துகளும் அவனது தனிச் சொத்தாகும்.

கூட்டுக் குடும்பம் சில காரணங்களால் இழக்க நேரிடும் கூட்டுக் குடும்பச் சொத்தைப் பங்குரிமையர் ஒருவர், தம் தனி முயற்சியால் கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவியின்றி மீட்பாரானால், அதில் அவருக்குரிய பங்கு போகப் பரிசாக நான்கில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறான சொத்தினை மீட்பவர் தந்தையாக இருந்தால் அது அவரது தனிப்பட்ட சொத்தாகும்.

கூட்டுக் குடும்பத்தின் சொத்துகளுக்குத் தீங்கில்லாமலும் அதன் துணையில்லாமலும் ஒருவன் ஈட்டும் சொத்து, அவனுடைய தனிச் சொத்தாகும். கடன் பெற்று ஒருவன் வாங்கும் சொத்து, ஆயுள் காப்பீட்டுப் பணம், வருங்கால நிதி, விபத்தில் பாதிக்கப்பட்டு அதனால் ஈடாகக் கிடைக்கும் பணம் முதலியவை ஒருவனது தனிச் சொத்தாகும்.

ஒருவன் கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவியால் கல்வி பயின்று, தொழில் புரிந்து, கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சம்பாதிக்கும் சொத்துக் கூட்டுக் குடும்பச் சொத்தா, அவனது தனிச் சொத்தா என்ற வினாவிற்குப் பதில் அவன் பெற்ற கல்வியின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. அது சிறப்புக் கல்வியாக இருந்தால் அது கூட்டுக் குடும்பச் சொத்தாகும். இல்லாவிட்டால் அது அவனது தனிப்பட்ட சொத்தாகும். இது 1930-ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலை. இந்துக் கல்விப் பயன்கள் சட்டம் (Hindu Gains of Learning) 1930-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, கூட்டுக் குடும்பத்திலிருந்து அவனுக்கு அளிக்கப்படும் கல்வி எவ்விதமானதாயிருந்தாலும், அதன் மூலம் அவன் சம்பாதிக்கும் சொத்து அவனது தனிப்பட்ட சொத்தாகும்.

கூட்டுக் குடும்பத்தின் தந்தை இயற்கையாகவே அதன் நிருவாகியாக (கர்த்தா) இருப்பார். தந்தைக்குப்பின், குடும்பத்தின் மூத்த ஆண் உறுப்பினர் நிருவாகியாக இருப்பார். மூத்தவர் தமது உரிமையைத் துறந்து அடுத்தவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்கலாம். அவ்வாறு நிருவாகியாக இருப்பவர் குடும்பத்தலைவர் (கர்த்தா) என்று சொல்லப்படுவார். அவர் எக்காரணத்தினாலாவது நிரந்தரமாகச் செயற்படாத நிலை ஏற்பட்டால் அடுத்தவர் அப்பொறுப்பை ஏற்கலாம்.

கூட்டுக் குடும்பத்தின் நலனை மனத்திற் கொண்டு மேற்படி நிருவாகி செயற்படவேண்டும். குடும்பத்தின் சட்டப்படியான தேவைக்காகக் குடும்பச் சொத்துகளை விற்கும் அல்லது வில்லங்கம் செய்யும் உரிமை நிருவாகிக்கு உண்டு. தேவையில்லாமல் விற்றால் அது தவிர்க்கத்தக்க வில்லங்கம் (Avoidable Alienation) ஆகும். குடும்பத்தின் நன்மைக்காகவும் (மூதாதையர்) பரம்பரை வணிகத்திற்காகவும் நிருவாகி கடன்பெறலாம். ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் சமரசம் செய்து கொள்ளவும் நிருவாகிக்கு அதிகாரம் உண்டு.

கூட்டுக் குடும்ப நிருவாகி தந்தையாக இருந்தால், அவருக்குச் சில சிறப்பு அதிகாரங்கள் உண்டு. குடும்ப நலனுக்காக மட்டுந்தான் தந்தை அல்லாத நிருவாகி கடன் பெறலாம். அவ்வாறான கடனை அடைக்கக் (அதுவும் வேறு வழியில்லாவிட்டால் தான்) குடும்பச் சொத்தைத் தந்தை அல்லாத நிருவாகி வில்லங்கம் செய்யலாம். குடும்பத்துக்கு எவ்விதப் பயனில்லாத கடன்களையும் தந்தை பெறலாம். அவ்வாறான கடன்கள் அத்தந்தையின் மகன், மகனுக்கு மகன், மகனுக்கு மகனுக்கு மகன் ஆகியோரைக் கட்டுப்படுத்தும். இது அறநெறி அடிப்படையில் ஏற்பட்ட கடமை (Pious Obligation) என்று சொல்லப்படும். ஆனால், சட்டப் புறம்பான காரியங்களுக்காகவோ ஒழுக்கங்கெட்ட நடவடிக்கைகளுக்காகவோ தந்தை கடன் வாங்கினால், அது குடும்பத்தினர் எவரையும் கட்டுப்படுத்தாது. அறநெறி அடிப்படையில் ஏற்பட்ட கடமைப்படி அடைக்கப்பட வேண்டிய கடன்களைத் தீர்ப்பதற்காகத் தந்தை குடும்பச் சொத்துகளை விற்கலாம். அது மேற்கூறிய மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன் பங்குகளைக் கட்டுப்படுத்தும்.

சுருங்கச்சொல்லின், இந்து கூட்டுக் குடும்பத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் குடும்பச் சொத்தில் பங்குரிமை கிடையாது. குறிப்பிட்ட

முறையில் உறவமைந்த ஆண்களுக்கு மட்டுமே அந்த உரிமையுண்டு. குடும்பச் சொத்துக் கூட்டுக் குடும்பத்துக்குப் பொதுவானது. குடும்ப உறுப்பினர்கள் தனிச் சொத்துகளை வைத்துக்கொள்ளலாம். அவற்றைக் குடும்பச் சொத்தாகப் பாவித்தால் அவை குடும்பச் சொத்தாகிவிடும். கூட்டுக் குடும்பத்தில் எஞ்சுநர் உரிமைப்படியே (Survivorship) சொத்துரிமை மாறுகிறது.

இச் சிறப்புகள் வங்காள மாநிலத்தைத் தவிர ஏனைய மாநிலங்களில் உள்ள இந்துக்கள் கடைப்பிடிக்கும் 'மித்தாட்சர' (Mitakshara) சட்டப்படி ஏற்பட்டவைகளாகும். வங்காள மாநிலத்தில் உள்ள தாயபாகச் சட்டப்படி, கூட்டுக் குடும்பம் இருந்தாலும் பங்குரிமை கிடையாது. குடும்பச் சொத்து முழுவதும் தந்தைக்கு மட்டுந்தான் பாத்தியப்பட்டது. தந்தைக்குப் பின்தான் ஆண்மக்களுக்குப் பங்கு கிடைக்கும். அதுவும் வாரிசு முறைப்படி கிடைக்கும்; எஞ்சுநர் உரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் அன்று.

மேற்படி 'மித்தாட்சர' சட்டப்படியான இந்து கூட்டுக்குடும்பச் சொத்துகள் சம்பந்தமாக 1956-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் (Hindu Succession Act, 1956) தீவிர மாறுதல்களைப் புகுத்தியுள்ளது. அது பற்றி அறிய அச்சட்டம் பற்றிய கட்டுரையைக் காண்க.

**இந்துச் சட்டம்**: இந்துக்களுக்கு உண்மையான பெயர் இந்து அன்று. 'பாரத வாசிகள்' என்பது தான் முதலில் ஏற்பட்ட பெயர். பரத அரசன் வமிசத்தில் வந்தவர்கள் என்று கருதப்பட்டதால் அவ்வாறு சொல்லப்பட்டனர். இந்த நாட்டின் மீது படையெடுத்து வந்த பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோர் சிந்து நதியின் கரைகளில் வசித்தவர்களை இனம், மொழி வேறுபாடு இன்றிச் 'சிந்துக்கள்' என்று குறித்தனர். அந்தச் சொல் நாளடைவில் இந்துக்கள் என்று மருவியது. இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் இந்துக்கள் ஆவார்கள்.

சட்டவியலில் இந்துக்களுக்குச் செல்லுபடியாகும் பழைய இந்துச் சட்டம் மிகத் தொன்மையானது; இறைவனால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது; தருமம் எனப்படும் அறத்தினை அடிப்படையாகக் கொண்டது. அரசனோ சட்டமன்றங்களோ இயற்றிய சட்டமன்று. கீழ்க்கண்டவை இந்துச்சட்டத்துக்கு முதல் அடிப்படைகளாகும். 1. சுருதிகள். 2. சுமிருதிகள். 3. விளக்க உரைகள் (Commentaries). 4. அரசர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள். 5. பழக்கமும் வழக்கமும். 6. நீதிமன்றத் தீர்ப்புகள். 7. செய்சட்டங்கள். 8. நீதி, நேர்மை, நன்மனச்சான்றுகள்.

சுருதிகள்: வழிவழியாகக் கேட்கப்படுபவைகள் (What is heard) சுருதிகள் என்று சொல்லப்படும். இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் 'சிட்சா' (ஒலியியல்), 'கல்பம்' (சடங்குகளுக்குரியகட்டளைகள்), 'வியாகரணம்' (இலக்கணம்), 'நிருத்தம்' (வேத கடினபத உரைகள்), 'சந்தால்' (செய்யுள்), 'சோதிடம்' (வானநூல்) ஆகிய ஆறும் சுருதிகளில் அடங்கியவை.

சுமிருதிகள்: சுமிருதி என்றால் பழைய நினைவு (Recollection) என்று பொருள்படும். எல்லாம் வல்ல இறைவன் ஞானிகளுக்கும் முனிவர்களுக்கும் சொல்லியவற்றை அந்த ஞானிகளும் முனிவர்களும் தங்கள் நினைவிலிருந்து எடுத்து அறிவுறுத்தியவைகள் சுமிருதிகள் என்று கூறப்படுகின்றன. தரும சாத்திரங்கள், தருமசூத்திரங்கள் ஆகிய இரண்டு வகைகளும் சுமிருதிகள் என்ற விளக்கத்தில் அடங்கும். மனு, யாக்ஞவல்கியர், நாரதர் ஆகியோர் எழுதியவை தரும சாத்திரங்கள் ஆகும். அவற்றுள் மனு எழுதியது மிகத் தலையாயது. கௌதமர், வசிட்டர், பௌத்தாயனர், சாகலர், சௌனகர், விட்டுணு, ஆபசுதம்பர், பிரகசுபதி, அத்திரி போன்றோர் எழுதியவை தரும சூத்திரங்கள் ஆகும். இந்தியாவில் ஒரு பேரரசைக் கி.மு. 321-ஆம்ஆண்டில் உருவாக்கிய சந்திரகுப்த மௌரிய அரசருக்கு உதவியாக இருந்த விட்டுணு குப்த சாணக்கியர் என்பவர் எழுதிய அர்த்த சாத்திரத்தை இங்குக் குறிப்பிட வேண்டும். நீதி, நிருவாகம் வரிவிதித்தல் போன்ற அரசரின் கடமைகள் அந்த நூலில் சொல்லப்பட்டுள்ளன. உள்துறை ஆட்சி, கூட்டுறவு முயற்சி, இளங்குற்றவாளிகள் போன்றவை அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நூல் இந்துச் சட்டத்திற்கு மூல ஆதாரமில்லை என்றாலும், அந்தக் காலத்தில் நிலவிய சட்டம், நிருவாகம் போன்ற விவரங்களை அறிய உதவுகிறது.

விளக்க உரைகள்: 'சுமிருதி' நூல்களைப் பற்றிப் பல்வேறு காலங்களில் பற்பல ஆசிரியர்கள் விளக்க உரைகள் எழுதியிருக்கிறார்கள். காலத்துக்கேற்பத் தங்கள் சொந்தக் கருத்துகளைப் புகுத்தி அந்த ஆசிரியர்கள் எழுதினார்கள். 'மனுபாசா', 'மனுதி', 'சாகா', 'மனுவியாகன்' போன்றவை மனுதரும சாத்திரத்திற்கு எழுதப்பட்ட விளக்க உரைகள் ஆகும். 'யாக்ஞவல்கிய' சுமிருதியைப் பற்றி விக்னேசுவர் சோதி என்பவர் எழுதிய விளக்க உரை நூல்தான் 'மித்தாட்சர' சட்டம் என்று சொல்லப்படுகின்றது. இச்சட்டம் வங்காள மாநிலம் தவிர, ஏனைய மாநிலங்களில் உள்ள இந்துக்களுக்குப் பொருந்தும். சிமுதவாகனர் எழுதிய 'தாயபாகம்' என்ற விளக்க உரை நூலும் இரகுநந்தர் எழுதிய 'தாயதத்துவம்' என்ற நூலும் வங்காள மாநிலத்திலுள்ள தாயபாகச் சட்டத்தின் அடிப்படைகளாகும். மித்தாட்சரச்

சட்டப்படி கூட்டுக் குடும்பச் சொத்துகளில் எல்லாப் பங்குரிமையாளர்களுக்கும் (Copartners) பங்குண்டு. தாயபாகச் சட்டத்தின்படி தகப்பனிருக்கும்போது குடும்பச் சொத்தில் மற்றவர்களுக்குப் பங்கில்லை. இதுதான் இவ்விரண்டு வகைச் சட்டங்களுக்கும் உள்ள மிகத் தலையாய வேறுபாடாகும்.

அரசர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்: சுமிருதிகளுக்குத் தருமம்தான் பக்கபலம். அவை அரச ஆணை அல்ல. அரச ஆணைகளைக் காட்டிலும் சுமிருதிகள் உயர்ந்தவை எனக் கருதப்பட்டன. இந்தத் தத்துவத்தில் பிற்காலத்தில் மாறுபாடு ஏற்பட்டது. மௌரியப் பேரரசைச் சேர்ந்த பேரரசர்களும் அவர்களுக்குப் பின்வந்த ஆற்றல் வாய்ந்த பேரரசர்களும் பல ஆணைகளைப் பிறப்பித்தார்கள். இயற்கையாகவே அந்த ஆணைகள் மதிக்கப்பட்டன. சுமிருதிகளில் உள்ள சட்டத்தைக் காட்டிலும் அரச ஆணைகள் உயர்வானவை என்று முதன் முதலாக நாரத சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளது. இதே கருத்து அர்த்தசாத்திர நூலிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

பழக்கமும் வழக்கமும்: பழக்கமும் வழக்கமும் இந்துச் சட்டத்திற்குத் தலையாய அடிப்படை என்று மனு, நாரதர் ஆகிய சுமிருதியோர் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாவட்டஆட்சித் தலைவருக்கும் முத்துராமலிங்கம் என்பவருக்கும் நடந்த வழக்கில் (12 M.I.A. 397) பழக்கவழக்கத்தின் தேவையைப் பிரிவி கவுன்சில் வலியுறுத்தியுள்ளது. பழக்க வழக்க (Customs and Usage) அடிப்படையில் ஏற்படும் சட்டமானது சுமிருதிகளில் சொல்லப்பட்டுள்ள சட்டத்தையும் மீறக் கூடியதாகும். சட்டத்தின் நிலையை அடையப்பழக்க வழக்கத்திற்குக் கீழ்காணும் பண்புகள் இருக்க வேண்டும். அது மிகவும் பழமையானதாக இருக்க வேண்டும்; நியாயமானதாக இருக்க வேண்டும்; ஒரே தன்மைத்தாக (Uniform) இருக்க வேண்டும்; சமூக நலனுக்கும் நல்லொழுக்கத்திற்கும் மாறுபட்டதாக இருக்கக் கூடாது; இடைவெளி இல்லாமல் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்புகள்: பல வழக்குகளில் பிரிவி கவுன்சிலும், உச்ச, உயர்நீதி மன்றங்களும், இந்துச் சட்டம் பற்றிய மூல பாடம் (Text), பழக்க வழக்கங்கள் பற்றி விளக்கம் கூறும் வகையில் தீர்ப்புகள் வழங்கியுள்ளன. அந்தத் தீர்ப்புகள் முன்மாதிரியான தீர்ப்புகளாகக் (Judicial Precedents) கருதப் படுகின்றன. இம்மாதிரியான தீர்ப்புகளும் இந்துச் சட்டத்திற்கு மூல ஆதாரமாகும். ஒரு குறிப்பிட்ட பொருள் தொடர்பாக இந்துச் சட்டத்தில் ஏதும் சொல்லப்படாதிருந்தால், நீதி, நேர்மை, நன்மனச் சான்று (Justice, Equity and good Conscience) அடிப்படையில் நீதிமன்றங்கள் செயற்படும். எடுத்துக்காட்டாக, தத்தெடுக்கப்படும் மகனுக்கு அவனைத் தத்தெடுக்க, தாய்வழி உறவினர்களின் சொத்துக்களை வாரிசு முறைப்படி அடைய மேற்சொன்ன சுமிருதிகளில் எவ்விதக் கூற்றும் இல்லை என்ற நிலையில், அந்த உரிமையை நீதி, நேர்மை, நன்மனச் சான்று அடிப்படையில் நீதி மன்றம் அவனுக்கு வழங்கியுள்ளது.

இந்துச் சட்ட மூல ஆதாரங்களில் ஒரே மாதிரியான நிலை இல்லை. மாறுபட்ட கருத்துகள் நிலவின. இதனால் வீண் குழப்பமும் நிலையற்ற தன்மையும் நிலவின. மேலும், வளரும் சமூக நீதிக்கு ஏற்பப் பழைய இந்துச் சட்டத்தின் சில பிரிவுகள் அமையவில்லை. எனவே, அவ்வப்போது அரசு சில சட்டங்களை இயற்றியது. 1955 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்துத் திருமணச் சட்டமும் (Hindu Marriage Act 1955),1956-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் இந்து வாரிசு முறைச்சட்டமும் (Hindu Succession Act 1956), 1956 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் இந்து வயது அடையாமை காப்புடைமைச் சட்டமும் (Hindu Minority and Guardianship Act 1956), 1956-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் இந்து தத்து எடுத்தல் பராமரிப்புச் சட்டமும் (Hindu Adoption and Maintenance Act 1956) மத்திய அரசால் இயற்றப்பட்டன.

ஏதாவது ஒரு பொருள் (Matter) குறித்து மேற்கண்ட நான்கு சட்டங்களில் வகை செய்யப்பட்டிருந்தால், அந்தப் பொருள் குறித்து முன்பிருந்த பழைய மூலபாடம், விதி, இந்துச் சட்டம் பற்றிய விளக்கம், சட்டத்துக்குச் சமமான பழக்க வழக்கங்கள் (Any text, rule or interpretation of Hindu law or custom or usage as part of this law in force) ஆகியன செல்லாதவைகளாகும் என்பது மேற்கண்ட நான்கு சட்டங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. மேலும்,இந்நான்கு சட்டங்களும் இயற்றப்படுவதற்கு முன் நடைமுறையிலிருந்த சட்டங்களில் உள்ள விதிமுறைகளுக்கும் மேற்படி நான்கு சட்டங்களில் உள்ள விதிமுறைகளுக்கும் முரண்பாடு ஏதுமிருந்தால் அந்தப் பழைய சட்டங்களில் உள்ள முரண்பாடான விதிமுறைகள்செல்லத்தக்கன அல்லஎன்பதும் இந்நான்கு சட்டங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. ஏறக்குறைய இந்துக்களின் தனிப்பட்ட அனைத்துச் செய்திகளுக்கும் இந் நான்கு சட்டங்களிலும் விதிமுறைகள் இருக்கின்றமையால், இப்போது இந்துக்களுக்கு இந் நான்கு சட்டங்கள்தாம் மிகத் தலையாய ஆதாரமாகும்.

இந்து என்பவன் யார் என்று மேற்கண்ட நான்கு சட்டங்களிலும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. இந்து மதத்தின் எந்தப் பிரிவையும் சேர்ந்தவன் இந்து ஆவான். வீர சைவன், இலிங்காயத்து என்பவர்களும் இந்து ஆவார்கள். பிரம்ம, பிரார்த்தனா, ஆரிய சமாசம் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்களும் இந்து ஆவர். புத்த, சமண, சீக்கிய மதங்களைச் சேர்ந்தவர்களும் இந்துக்கள் ஆவர். சட்டமுறைப்படியோ சட்டத்துக்குப் புறம்பாகவோ பிறந்த குழந்தைகளின் பெற்றோர் இருவரும் இந்துக்களாகவோ புத்தர்களாகவோ சமணர்களாகவோ சீக்கியர்களாகவோ இருந்தால் அக் குழந்தைகளும் இந்துக்கள் ஆவர். அவ்வாறான குழந்தைகளின் பெற்றோருள் ஒருவர் மட்டும் இந்துவாகவோ புத்த மதத்தினராகவோ சமண மதத்தினராகவோ சீக்கிய மதத்தினராகவோ இருந்து, பெற்றோருள் மற்றவர் பிற மதத்தினராக இருந்தால் அக்குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்த குழந்தையாகக் கருதப்படும் என்ற வினாவுக்கு விடை அந்தக் குழந்தை வளர்க்கப்படும் முறையைப் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாக, தகப்பன் சீக்கிய மதத்தைச் சார்ந்தவனாகவும் தாய் கிறித்தவ மதத்தைச் சார்ந்தவளாகவும் இருப்பின், அந்தக் குழந்தை சீக்கிய மத முறைப்படி வளர்க்கப்பட்டால், அந்தக் குழந்தை இந்துவாகும். மாறாகக் கிறித்தவ முறைப்படி வளர்க்கப்பட்டால் அந்தக் குழந்தை இந்துவாகக் கருதப்படமாட்டாது. பிற மதத்திலிருந்து இந்து, புத்த, சமண, சீக்கிய மதத்துக்கு மாறுபவர் இந்து ஆவார். இந்து, புத்த, சமண சீக்கிய மதங்களிலிருந்து பிற மதத்துக்கு மாறி, மறுபடியும் முதலில் இருந்த மதத்துக்குத்திரும்பி வருபவரும் இந்து ஆவர். இந்த இந்துக்களுக்கு இந்துச் சட்டங்கள் பொருந்தும். மேற்கண்ட நான்கு சட்டங்களும் நடைமுறையில் உள்ள பகுதிகளில் நிலையகமாகக் கொண்ட (Domiciled) கிறித்தவ, முகமதிய, பார்சி, யூதர்கள் ஆகிய இனத்தவர் அல்லாதவர்களுக்கு இச் சட்டங்கள் செல்லுபடியாகும். ஆனால், பழைய இந்துச் சட்டம் அல்லது அந்தச் சட்டத்திற்குச் சமமான பழக்க வழக்கம் அவர்களுக்குச் செல்லாது என்று மெய்ப்பிக்கப்பட்டால், இந்நான்கு சட்டங்களும் அவர்களுக்குச் செல்லாதவையாகும். மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (Scheduled Tribes) இந் நான்கு சட்டங்களும் செல்லுபடியாகும் என்று மத்திய அரசு அறிவித்தால் மட்டும் செல்லுபடியாகும்.

(இந்துக்களின் கூட்டுக் குடும்பத்தின் தன்மை பற்றி அறிய 'இந்து கூட்டுக் குடும்பம்' என்ற கட்டுரையைக் காண்க. மேற்கூறிய 1955 மற்றும் 1956-ஆம் ஆண்டைய நான்கு சட்டங்கள் பற்றி அறிய அந்தந்தச் சட்டம் பற்றித் தனியாக எழுதப்பட்டுள்ள கட்டுரைகளைக் காண்க. இந்துப் பெண்களின் நிலைபற்றி அறிய அந்த நான்கு சட்டங்களையும் இந்துப் பெண்களின் நலனைப் பேணும் முக்கிய சட்டங்கள் என்ற கட்டுரையையும் காண்க). ஈ.ப.

## இந்துசமய அறக்கட்டளைச் சட்டம்:

கருப்பொருளும் நோக்கமும் ஐயமற உறுதியளிக்கப்பட்டுச் சமய மற்றும் அற நோக்கங்களுக்காகச் சொத்தினை முழுமையாக வழங்குதலை அறக்கட்டளை அல்லது அறக்கொடை எனலாம். இத்தகைய நிலைக் கட்டளைகள் நிறுவனத்தின் பொருட்டு அல்லது தனியாளின் பொருட்டு ஏற்படுத்தும் நிலையான ஏற்பாடாகும்.

அறக்கட்டளை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் செவ்வனே நடைபெற மூலதனம் ஒன்றினை ஏற்படுத்தி, அதிலிருந்து எழும் வருவாயைப் பயன்படுத்தச் செய்யப்படும் ஏற்பாடே அறக்கட்டளையாகும். (இரீ ஆடம்சு கி.எ. டார்ன்ட்டுகுழு மருத்துவமனை(1963) All E.R 285). மேலும், விரிவாகக் கூற வேண்டுமானால், அறக்கட்டளைகள் என்னும் நிலைக் கட்டளைகள் குறிப்பிட்ட தெய்வத்தினை வழிபடுவதற்காகவோ அதனை ஏற்படுத்துவதற்காகவோ சமயம் அல்லது அற ஈடுபாடுள்ள நிறுவனத்தினைப் பேணிக் காப்பதற்காகவோ பொதுமக்களுள் குறிப்பிட்ட பிரிவினரின் நன்மைக்காகவோ, சமயம், அறிவு, வணிகம், நலவாழ்வு, பாதுகாப்பு அல்லது மனிதக் குலத்திற்கு நன்மை பயக்கும் நோக்குடைய வேறு ஏதாவது நோக்கத்திற்காகவோ கொடை வழி அல்லது உயில் வழியாக ஒதுக்கி வைக்கப்படும் அல்லது முழுமையாக வழங்கப்படும் சொத்துகளாகும் (வருமான வரி ஆணையர் எ.பெம்சவ் (1891) ஏ.சி. 531).

அறக்கட்டளைகளைச் சமய அல்லது அறநோக்குடைய அறக்கட்டளைகள், தனிமுறை அல்லது பொதுமுறை அறக்கட்டளைகள் என இருவகைப் படுத்தலாம்.

**அறக்கட்டளை நிறுவும் தகுதி:** உரிமை வயது அடைந்த திண்ணிய மனமுடைய ஓர் இந்து, தம்முடைய சொத்தினைச் சமயம் அல்லது அறநோக்கத்திற்காகக் கொடைவழி அல்லது உயில்வழி வழங்கத் தகுதியுடையவர் ஆவார். அறக்கட்டளைகள் எழுத்து வடிவில் இருக்க வேண்டியதில்லை. ஆனால், ஓர் உயில்வழி அறக்கட்டளை ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமெனின், அது எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்; குறைந்தது இருவர் சான்றுக் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும். சமயச் சடங்குகள் தேவையில்லை. ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்துவதற்காக

ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்டபடி பொறுப் புரிமை அமைப்பு (Trust) ஒன்றினை நிறுவ வேண்டிய தில்லை. கடவுளின் பெயரில் ஏற்படுத்தப்படும் ஆவணத்தைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. கொடையை ஏற்படுத்துபவர் சொத்தினைத் தனி யாக ஒதுக்கி வைத்து, அதன் உடைமையுரிமை யிலிருந்து முழுமையாக விலகி இருத்தல் வேண்டும்.

அறக்கட்டளை ஏற்படுத்தும் எண்ணம்: தெய்வ வழிபாட்டிற்காக அல்லது குறிப்பிட்ட ஓர் அறநோக் குடைய அறக்கட்டளைக்காக முறையான ஓர் அறக் கட்டளையை நிறுவ வேண்டுமெனில், கொடையாளி தமது சொத்தினை முழுமையாக, நிரந்தரமாக வழங்க வேண்டும். தெளிவான, ஐயப்பாட்டிற்கு இடமில்லாத வகையில் அவரது எண்ணம் வெளிப் படல் வேண்டும்.

சொந்த உரிமையாளர் தமது சொத்திலுள்ள முழு நலன்களையும் முழுமையாக வழங்கலாம். இது முழுமையான பொது உரிமை ஆக்கம் (Absolute Dedication) எனப்படும். அல்லது சொத்தினில் குறை வான நலன்களை மட்டுமே அளிக்கலாம். இதற்கு பகுதிப் பொது உரிமை ஆக்கம் (Partial Dedication) என்பது பெயர். முழுமையாக வழங்கப்படுகிறதா அல்லது பகுதியாக வழங்கப்படுகிறதா என்பது ஆவணத்தின் கூற்றுகளைப் பொறுத்தது. பொது உரிமை ஆக்கம் முழுமையாக இருப்பின் அறக்கட் டளையின் மேலாளர் சட்டத்தேவை அல்லது சொத்தின் நன்மை ஆகியன தவிர மற்றக் காரணங் களுக்காக உரிமை மாற்றம் செய்ய முடியாது. ஆனால், அது பகுதியாக இருப்பின் பயனாளியின் பேரில் பொருட் பிணைப்பொறுப்பு (Charge) மட்டுமே உண்டு. இத்தகைய பொருட்பிணைப் பொறுப்புக்குட்பட்டுச் சொத்து அதனது இயல்பான பண்புகளைக் கொண்டிருக்கும். அதாவது, சொத்து வாரிசுகளுக்குச் செல்லலாம்; உரிமை மாற்றம் செய் யப் பெறலாம்; பாகப்பிரிவினை செய்யப்படலாம். அறக்கட்டளையைப் பொறுத்தவரை சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கொடையைப் பற்றிய 123-ஆம் பிரிவு பொருந்தாது. கடவுள் திரு வுருவச் சிலையின் பேரிலான கொடையை வாய் மொழியாக ஏற்படுத்தலாம். அது எழுத்து வடிவில் இருக்க வேண்டியதில்லை.

நோக்கம் உறுதியானதாக இருத்தல் வேண்டும்: எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளை ஏற்படுத்தப் படுகிறதோ, அந்நோக்கத்தினை அந்த அறக்கட் டளையின் நிறுவனர் தெளிவாக உரைக்க வேண்டும். மானியத்தின் நோக்கம் சமயம் பற்றியதா அறம் பற்றியதா என்பது இந்துக் கோட்பாட்டின்படி அறியத் தக்கது.

சொத்து குறிப்பானதாக இருத்தல் வேண்டும்: அறக்கட்டளைப் பொருட்டு அளிக்கப்படும் சொத்து எது எனத் துல்லியமாகக் கூறப்பட வேண்டும்; ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். குறுப்பிட்ட சொத் துத் தனியாக ஒதுக்கப்படல் இன்றியமையாதது. அவ் வாறு சொத்தினை ஒதுக்கிவைக்காமல், பணத்தைத் தராமல் கொடையாளி தனது கணக்கேட்டில் குறித்துவைத்து இருந்தால் மட்டும் போதாது. அது முறையான அறக்கட்டளையை ஏற்படுத்தாது. சமய மற்றும் அற நோக்கங்களுக்காகத் தம்மால் கொடைவழி அல்லது உயில்வழி அளிக்க வல்ல சொத்துகளையும் இந்து ஒருவர் வழங்கலாம். அப் போது ஏற்படுத்தப்பட்டிராததும் தமது வாழ் நாளுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட இருப்பதுமான வழிபாட்டுக்குரிய தெய்வ உருவிற்காகக்கூடச் சொத் தினை ஒருவர் உயில்வழி அளிக்கலாம்.

அறக்கட்டளை எந்தச் சட்டத்தினையும் மீறு வதாக இருக்கக் கூடாது: அப்போது நடைமுறை யில் இருக்கும் எந்தவொரு சட்டத்தின் வெளிப்படை யான கூற்றுகளையும் மீறுவதாக ஓர் அறக் கட்டளை அமையக்கூடாது. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வரையிலா நிலைக்கு எதி ரான விதியும் (Rule against Perpetuity) வருவாயைக் குவித்தலுக்கு எதிரான விதியும்(Rule Against accum-ulation) பொது நன்மையை நாடி ஏற்படுத்தும் அறக் கட்டளைக்குப் பொருந்தா. ஆனால், கடனாளிகளை ஏமாற்றும் எண்ணத்துடன் செய்யப்படும் அல்லது நொடிப்பு நிலைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் செய்யப்படும் உரிமை மாற்றங்கள், சமய மற்றும் அற ஈடுபாடு கொண்ட அறக்கட்டளைக்கு என்று இருந் தாலும்கூடச் செல்லா. செயலுக்குக் கொண்டு வரும் எண்ணம் இல்லாமல் வெறும் ஆவணம் ஒன் றினை எழுதி வைத்தல் முறையான அறக்கட்டளை யாக அமையாது (அப்பளா இராமனுசசார்யலு எதிர் வெங்கடவாரை குக்காச்சார்யவா (A.T.R 1947 A.P. 316).

சமய மற்றும் அறநோக்குடைய அறக்கட்டளை கள்: சமயத் தொடர்பான அல்லது அறம் தொடர் பான நோக்கத்தினால் அறக்கட்டளைகளை ஏற் படுத்தலாம். இந்துக்களைப் பொறுத்தவரை சமய மற்றும் அற நோக்குடைய அறக்கட்டளைகளுக்கு இடையில் வேறுபாடு ஏதும் இல்லை. பழங்காலம் முதலே அவை ஒன்றில் ஒன்று அடங்கியிருப்பவை யாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு வழக்கிலும் நோக்கம் மதத் தொடர்பு கொண்டதா மதச் சார்

பற்றதா என்பதை இந்துக்கோட்பாட்டின் அடிப்படையில்தான் நோக்க வேண்டும். இந்துச் சட்டத்தில் சமய மற்றும் அற நோக்கங்கள் பொதுப் பயனையோ நன்மையையோ உள்ளடக்கி இருக்கவில்லை. மத நலங்களைப் பெறுவதற்காகவே அமைந்துள்ளன.

சமய மற்றும் அறச் செயல்கள் இந்துச் சட்டத்தில் தொன்றுதொட்டு இசுதா, பூர்த்தா என்னும் இரு தலைப்புகளின்கீழ் வந்துள்ளன. முன்னது, வேத வேள்விகள் மற்றும் அவை குறித்த சமயச் சடங்குகள், கொடைகள் முதலியவற்றைக் குறிப்பிடுகின்றது. பின்னது, கோயில்கள் கட்டுதல், குளங்கள், கிணறுகள் வெட்டுதல், பாதை அமைத்தல், மடங்கள், தரும சாலைகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றை நிறுவுதல், மரங்கள் நடுதல், பழச்சோலைகள் அமைத்தல் போன்ற அருளார்ந்த அற ஈடுபாடு கொண்டவற்றைக் குறிப்பிடுகின்றது.

அறம் மற்றும் சமய நோக்கம் என்பதன் பொருள்: 1961-ஆம் வருமான வரிச் சட்டத்தின்கீழ், அறம் மற்றும் சமய நோக்கங்களுக்காக ஏற்படுத்தும் பொறுப்புரிமைச் சொத்திலிருந்து எழும் வருமானத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வரி விதிப்புத் தொடர்பாக, எவைஎவை சமய நோக்கம், அற நோக்கம் கொண்டவை என்பது குறித்து விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. 'அறநோக்கம்' என்பது வருமானவரிச் சட்டத்தின் பிரிவு 2 (15) கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், 'சமயநோக்கம்' என்ற சொற்றொடர் வரையறுக்கப்படவில்லை.

அறநோக்கம் என்ற சொற்றொடர் வறியருக்கு உதவி, கல்வி, மருத்துவம் மற்றும் இலாபம் தரும் செயலில் ஈடுபடாத, பொது மக்களின் நன்மைக்காக உளமுவந்து ஆற்றும் செயல் ஆகியவற்றை உள்ளடக்குவதாக 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 2 (15) வரையறுக்கிறது. இவ்விளக்கம் சமய நோக்கத்தினையும் உள்ளடக்கும் அளவு பரந்தது. அற நோக்கங்கள் வருமான வரி ஆணையர் எ. பெம்சல் (1891) ஏ சி 531, 583 என்ற வழக்கில் மாக்நாட்டன் பிரட்னலாலால் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1) பசிக்கான பரிகாரம் 2) கல்விக்கான மேம்பாடு 3) சமய மேம்பாடு 4) முன்னர்க் கூறியவற்றில் எதிலும் சேராத, சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் மற்ற நோக்கங்கள். மேலும், 1925-ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 118-ஆம் பிரிவிலும் இதற்கான மேற்கோள்களைக் காணலாம். ஆங்கிலச் சட்டத்தில் கி.பி. 1736-ஆம் ஆண்டு மார்ட்மைன் சட்டம் 1888 மற்றும் 1881-ஆம் ஆண்டு மார்ட்மைன் மற்றும் அற உதவிச் சட்டங்களின்கீழ் அறத்திற்கான கொடைகள் கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளன. 1925-ஆம் ஆண்டு இறங்குரிமைச் சட்டத்தின் 118-ஆம் பிரிவில் கூட ஒரு கட்டுப்பாட்டு வாசகம் காணப்படுகிறது. இது நெருங்கிய உறவினர் இருக்கும்போது சமயம் அல்லது அறநோக்கத்திற்காகச் செய்யப்படும் மரணப்படுக்கைக் கொடைகளைத் (Death-Bed gifts) தடுக்கிறது. ஆனால், இப்பிரிவு இந்துக்கள், புத்தர்கள் போன்றோர்க்குப் பொருந்தாது. ஆனால், வாழ்வோர்க்கு இடையேயான கொடைகளில் (Gifts Intervivos) இத்தகைய கட்டுப்பாட்டு வாசகம் ஏதும் கிடையாது. பொது மக்களுக்கு உதவி செய்தலே அறத்தின் அடிப்படைச் சாரமாகும். பொது மக்களின் நன்மைக்கு ஊறு விளைவிக்கும் எந்தவொரு பொறுப்புரிமை அமைப்பும் அறநோக்குடையது எனக் கருத முடியாது.

பொது அறக்கட்டளை ஒன்று பொது மக்கள் நீண்ட நாள் அனுபவிப்பதைத் தொடர்ந்து கூடச் செயலுக்கு வரலாம். கோயில் ஒன்று அதன் நிறுவனர் பொதுவாக வைக்கும் போது பொதுக் கோயிலாகக் கருதப்படும். தென்னிந்தியக் கோயிலைப் பொறுத்தமட்டில், பொதுஅனுமானம்அது பொதுக் கோயில் என்பதாகும்.

நிறுவனங்களும் சமய அறக்கட்டளைகளின் நிருவாகமும்: சமய நோக்கத்திற்கோ அறநோக்கத்திற்கோ முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவை கோயில், அறச் சொத்து (Debutter Property) எனலாம். அதன் பொருளாவது தெய்வத்துக்கு உரியது என்பதாகும். அர்ப்பணித்தல் முழுமையாகவும் முடிவாகவும் கோயிலின் மேலாளர்வசம் இருக்கும். ஆனால், சொத்துக் கடவுள் திருஉருவின்மீது சேர்ந்தடையும். மடத்தினைப் (சமய மாணாக்கரின் உறைவிடம்) பொறுத்த மட்டில், மடத்தின் தலைவரான (Mahant) மடாதிபதி பேரில் இவை சேர்ந்தடையும். அவர் சாதாரணமாகச் சந்நியாசியாக (துறவியாக) இருப்பார்; மணவாழ்க்கை மேற்கொள்ளாதவர்: அவர் ஆணாக இருக்க வேண்டும் என்பதில்லை.

கோயில்களும்மடங்களும்மக்கட்கு நன்கு தெரிந்த சமய நிறுவன வகைகளாகும். கோயில் என்பது கடவுள் திருவுருவிற்காகச் சமைக்கப்படும் ஓர் உயர்விடம். தெய்வ முன்னிலையினால் வழிபாட்டிற்குப் புனிதமாக்கப்பட்ட ஓர் இடம். மடம் என்பது துறவியரின் உறைவிடம். குறிப்பிட்ட ஒருசமயக்கோட்பாட்டு முறைக்கு அல்லது சமயக் கல்வி மற்றும் கடவுட் பற்றினைப் பரப்புவதற்காக அல்லது வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட நிலையமாகும். அதன் முதன்மையான நோக்கம் சமயஅறிவினை மேம்படுத்தலும், சீடர்களுக்கும் அதனைப் பின்பற்றுவோர்களுக்கும்

போதனை தருதலும் ஆகும். தெய்வத் திருவுருவங்கள் அங்கிருந்தாலும் அவற்றின் வழிபாடு அங்கு இரண்டாம் நிலையே.

கோயிலின் மேலாளர் (Shebait) பூசாரி அல்லது அர்ச்சகர் அல்லர். அவர் கடவுளுக்குப் பணியாற்றும் தொண்டர். ஆனால் பூசாரி என்பவர் நிறுவனரால் அல்லது கோயில் மேலாளரால் வழிபாடு நடத்துவதற்காக அமர்த்தப்படுபவர்; மேலாளரின் பணியாள். கோயில் மேலாளர் சொத்தினை நிருவகிப்பவர். பொறுப்புரிமையாருக்குள்ள உரிமைகளும் கடமைகளும் அவருக்கு இருந்தாலும் ஆங்கிலச் சட்டப்படியான பொறுப்பு நிருவாகத்திற்கும் பொறுப்பானவர். (வித்யா வாருதி எ. பாலுசாமி 1922-23). கடவுள் திருவுருதான் சொத்தின் உரிமையாளர். சுவாதீனமும் சொத்தின் நிருவாகமும் மட்டும் கோயில் மேலாளர் வசம் இருக்கும். தர்மகர்த்தா என்பது தமிழ்நாட்டில் வழங்கும் சொல். தர்மகர்த்தா என்பவர் கோயிலின் மேலாளரைவிட (Shebait) அதிக அதிகாரம் பெற்றவர். அவரே தர்மகர்த்தாவாகவும் இருக்கலாம். பரம்பரை தர்மகர்த்தாவும் நியமிக்கப்படும் தர்மகர்த்தாவும் தேர்தல் முறை தர்மகர்த்தாவும் தமிழ் நாட்டில் வழக்கத்தில் உள்ளன.

சமய மற்றும் அறநோக்குடைய பொறுப்புரிமைகள் குறித்த சட்டங்கள்: இந்து சட்டத்தில் மிகக் குறைந்த அளவே சமயம் மற்றும் அறக்கட்டளைகளைக் குறித்த சட்டங்கள் உள்ளன. இந்துக்களின் வரலாறு முழுவதிலும் அறம் (தானம்) செய்தல் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதை நிறைய சாத்திரங்களிலும் நீதி நூல்களிலும் இலக்கியங்களிலும் காணலாம். இந்த ஆதாரங்களை மேற்கோள் காட்டியே இந்திய நீதிபதிகள் சமய மற்றும் அற நோக்குடை அறக்கட்டளைகள் பற்றிய சட்டங்களை வரைந்துள்ளனர். இப்போதைய சட்டம் பெரும்பாலும் நீதிபதிகள் ஏற்படுத்திய சட்டமே. இந்திய உச்ச நீதிமன்றம் உட்பட இந்தியாவிலுள்ள எல்லா நீதிமன்றங்களும் இப்போதைய சூழலுக்கு ஏற்ப இதனுடைய சட்டங்களை உருவாக்கவும் விளக்கமளிக்கவும் இன்னமும் முனைந்துள்ளன. முசுலிம் மற்றும் இந்து சமூகத்தின் அறக்கட்டளைகளை நிருவகிக்கவும், அவற்றின்மீது நல்ல கட்டுப்பாடு மேற்கொள்ளவும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி.1890-ஆம் ஆண்டு அறநோக்குடைய அறக்கட்டளைகள் சட்டம், 1920-ஆம் ஆண்டு அறநோக்குடைய மற்றும் சமயப் பொறுப்புரிமைச் சட்டம் போன்ற சில சட்டங்கள் இயற்றப்பட்டன. பின்னர், பல்வேறு மாநிலங்கள் அவற்றின் எல்லைகளுக்கு உட்பட்டு, அறக்கட்டளைகளை நிருவகிக்கச் சட்டங்கள் பலவற்றை இயற்றியுள்ளன. தமிழ் நாட்டில் 1959-ஆம் ஆண்டு சென்னை இந்து சமயமற்றும் அறநோக்குடைய அறக்கட்டளைகள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 1960-62 ஆண்டுகளில் இந்துசமய அறக்கட்டளைகளின் ஆணைக்குழு விரிவான அறிக்கை அளித்தும் அறக்கட்டளைகள் குறித்த சட்டம் இன்னமும் தொகுக்கப்படவில்லை.

ஆ. ச.

**இந்து தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் (1956):** இந்து தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டமானது (The Hindu Adoptions and Maintenance Act 1956) இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1956-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 21-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. பழைய இந்துச் சட்டத்தில் பல முரண்பாடுகள் இருந்ததனாலும் வேகமாக மாறிவரும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையொட்டிச் சட்டத்தைத் தொகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும் 1955, 1956-ஆம் ஆண்டுகளில் இந்தியக் குடியரசானது, இந்துக்களின் தனிப்பட்ட விவகாரங்களான (Personal Matters) திருமணம், வாரிசுரிமை, காப்புரிமை, தத்து எடுத்தல், வாழ்க்கைப் பொருளுதவி சம்பந்தமாக நான்கு சட்டங்களை இயற்றியது. அச் சட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

சம்மு-காசுமீர் பகுதி தவிர அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லுபடியாகும். இந்துக்களுக்கு மட்டும் இச்சட்டம் செல்லத்தகுந்தது. புத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் இச்சட்டத்தின்படி இந்துக்களாகக் கருதப்படுகிறார்கள் (இந்து என்பவர் யார் என்பதுஇந்துச் சட்டம் என்ற கட்டுரையில் விவரமாக விளக்கப்பட்டுள்ளது). இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள விவகாரங்கள் சம்பந்தமாகப் பழைய இந்துச் சட்டம் செல்லாது. இந்தச் சட்டத்துக்கும் பழைய சட்டத்துக்கும் முரண்பாடு இருந்தால் பழைய சட்டத்திலுள்ள முரண்பாடு செல்லாது.

**தத்து எடுத்தல்:** மகனைத் தத்து எடுப்பது பழைய இந்துச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தத்து எடுப்பதில் மதக் கோட்பாடு இணைந்திருந்தது. தனக்கு இறுதிச் சடங்குகள் செய்வதற்காகவும், தனது வம்சாவளியை நிலைநாட்டவும், மகனில்லாத இந்து தனக்கு ஒரு மகனைத் தத்து எடுப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறு தத்து எடுப்பது சம்பந்தமாகப் பழைய சட்டத்தில் ஒரே மாதிரியான நிலை இல்லை. அக்குறையை இச்சட்டம் நீக்குகிறது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு இச்சட்டத்தின்படிதான் தத்து எடுக்கப்படவேண்டும்.

தத்து எடுப்பதற்குப் பழைய இந்துச் சட்டத்தில்

ஆணுக்கு மட்டும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. பழைய சட்டப்படி ஒரு பெண் தனக்காகத் தத்து எடுப்பதற்கு அதிகாரம் கிடையாது. கணவன் இறந்த நிலையில் அவனது விதவை தனது கணவனுக்காக ஒரு மகனை பழைய சட்டப்படி தத்து எடுக்கலாம். அது குறித்துப் பல மாறுபட்ட கருத்துகள் நில வின. காலமான கணவனின் அனுமதியிருந்தால்தான் விதவை தத்து எடுக்கலாம் என்றும், அவ்வாறான அனுமதியில்லாவிட்டால்கூட விதவை தத்து எடுக் கலாம் என்றும், இன்னும் வேறுபல கருத்துக் களும் பழைய சட்டத்தின்படி நிலவின. புதிய சட் டத்தின்படி இந்துப் பெண்ணுக்குத் தத்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தின் படி மகனைமட்டும் தான் தத்து எடுக்கலாம். புதிய சட்டத்தின்படி மகளையும் தத்து எடுக்கலாம்.

இனி, புதிய சட்டத்தில் உள்ள விதிமுறைகளைக் கவனிக்குங்கால் (பழைய சட்டத்தில் உள்ள நிலை உரிய இடத்தில் குறிப்பிடப்படும்) இப்புதிய சட்டத் தின்படி 18 வயதைக் கடந்தவர் ஆணாக இருந் தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் உரிமை வயதை அடைந்தவராகக் (Major) கருதப்படுவர். நல்ல மனநிலையிலுள்ள உரிமை வயதை அடைந்த இந்து ஆண் தனக்கு ஒரு மகனையோ அல்லது மகளையோ தத்து எடுத்துக் கொள்ளலாம். திரு மணம் ஆகாதவனும் தத்து எடுக்கலாம். மனைவியை இழந்தவனும் தத்து எடுக்கலாம். ஆனால், மனைவி இருந்தால் அவளுடைய இசைவு (சம்மதம்) இருந் தால்தான் தத்து எடுக்க முடியும். ஒன்றுக்கு மேற் பட்ட மனைவி இருந்தால் எல்லா மனைவியரின் இசைவும் தேவை. ஆனால், இந்துவாக இல்லாமல் போனவளும் அல்லது முடிவாக உலக ஆசையைத் துறந்தவளும் அல்லது நீதிமன்றத்தால் மனக் கோளாறு உள்ளவள் என்று தீர்ப்பளிக்கப்பட்டவளு மான மனைவியின் இசைவு தேவையில்லை.

உரிமை வயது அடைந்தவளும் நல்ல மனநிலை யிலுள்ளவளும் திருமணமாகாதவளுமான பெண் தனக்கு மகனையோ ஒரு மகளையோ தத்து எடுக்கலாம். கணவன் மரணமடைந்துவிட்டாலோ அல்லது மணவிலக்கு ஏற்பட்டாலோ அல்லது கண வன் இல்வாழ்வைத் துறந்துவிட்டாலோ அல்லது கணவன் ஒரு மணக்கோளாறு உள்ளவன் என்று நீதி மன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலோ அல் லது கணவன் இந்துவாக இல்லாமல் போய்விட் டாலோ அவனுடைய மனைவி ஒரு மகனையோ ஒரு மகளையோ தத்து எடுக்கலாம். கணவனது அனுமதியில்லாத நிலையில் அவனது விதவை தத்து எடுக்கலாமா எடுக்கக் கூடாதா என்ற விவகாரம் குறித்துப் பழைய சட்டத்தில் மாறுபட்ட கருத்துகள் இருந்தன. புதிய சட்டத்தில் கணவனது அனுமதி பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, ஒரு விதவை இப்போது தத்து எடுப்பதற்குக் கணவனின் அனுமதி தேவையில்லை, அவ்வாறு விதவையால் தத்து எடுக்கப்படும் மகன் அந்த விதவையின் காலம் சென்ற கணவனின் மகனாகக் கருதப்படுவான் என்று உச்ச நீதிமன்றம் ஒருவழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது.

உறவு மூலமோ அல்லது தத்து மூலமோ இந்து வாக இருக்கும் மகனோ, மகனின் மகனோ அல்லது மகனின் மகனின் மகனோ இருந்தால் மகனைத்தத்து எடுக்க முடியாது. இயல்பான ஒரு மகன் மட்டும் இருக்கிறான் என்று வைத்துக் கொண்டால் அவன் இந்துவாக இல்லாவிட்டால் மகனைத் தத்து எடுக்க லாம். இந்துவாக இருக்கும் மகளோ அல்லது மக னின் மகளோ இருந்தால் மகளைத் தத்து எடுக்க முடியாது. மகனிருந்து மகள் இல்லாவிட்டால் மகளைத் தத்து எடுப்பதில் தடையில்லை. மகள் இருந்து மகன் இல்லாவிட்டால் மகனைத் தத்து எடுப்பதில் தடையில்லை.

தத்து எடுக்கும் தாய் தத்து எடுக்கப்படும் மக னைக் காட்டிலும் குறைந்தது 21 வயது மூத்தவ ளாக இருக்க வேண்டும். இம்மாதிரியான நிபந்தனை பழைய சட்டத்தில் இல்லை. தத்து எடுக்கும் தகப் பன் தத்து எடுக்கப்படும் மகளைக் காட்டிலும் குறைந்தது 21 வயது மூத்தவனாக இருக்க வேண்டும்.

தத்து எடுக்கப்படும் மகனோ மகளோ ஏற்க னவே தத்து எடுக்கப்பட்டிருக்கக் கூடாது. ஒரே சமயத்தில் ஒரு குழந்தையை இருவர் தத்து எடுக்க முடியாது. தத்து எடுக்கப்படும் குழந்தைக்குத் திரு மணமாகியிருக்கக் கூடாது. பழைய பம்பாய் சட்டப்படி அம் மாநிலத்தில், திருமணமானவனையும் அதிலும் தத்து எடுப்பவனைக் காட்டிலும் மூத்தவ னாகஇருப்பவனையும்தத்துஎடுக்கும் பழக்கமிருந்தது. அது இப்போது செல்லாது. தத்து எடுக்கப்படும் குழந் தை 15 வயதைக் கடந்திருக்கக் கூடாது. ஆனால், மரபியல் சட்டம் (Customery Law) அனுமதித்தால் திருமணமான குழந்தையையும் 15 வயதைக் கடந்த குழந்தையையும் தத்து எடுக்கலாம்.

தத்து எடுக்கப்படும் குழந்தை இந்துவாக இருக்க வேண்டும். பழைய சட்டப்படி தத்து எடுப்ப வரும் தத்துஎடுக்கப்படுபவரும் ஒரே சாதியைச் சார்ந் தவராக இருக்க வேண்டும். இப்போது அந்தச் சாதி வேறுபாடு கிடையாது. எடுத்துக்காட்டாக, ஒரு சீக்கிய மதத்தைச் சேர்ந்தவன் சமண மதத்தைச் சேர்ந்த குழந்தையைத் தத்து எடுக்கலாம். ஏனெனில், அவ்விருவருமே புதுச்சட்டப்படி இந்துக்கள் ஆவார்

கள். பழைய சட்டப்படி சில சாதிகளில் தத்து எடுக்கும் தகப்பனும், தத்து எடுக்கப்படும் குழந்தையின் தாயும் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளக் கூடிய உறவு நிலையில் இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவன் தன் சகோதரி அல்லது மகளின் மகளைப் பழைய சட்டப்படி தத்து எடுக்க முடியாது. ஏனெனில், தத்து எடுப்பவன் அக்குழந்தையின் தாயைத்(சகோதரி அல்லது மகள்) திருமணம் செய்ய முடியாது. அவ்வாறான கட்டுப்பாடு புதிய சட்டத்தில் இல்லை. ஊமையும்செவிடுமானகுழந்தையைப் பழைய சட்டப்படி தத்து எடுக்க முடியாது. புதிய சட்டப் படி குழந்தையின் உடல் ஊனம் தடையாக இல்லை. பழைய சட்டப்படி பெற்றோரின் ஒரே குழந்தையைக் கூடத்தத்துக் கொடுக்கலாம். அதற்குப் புதிய சட்டத் திலும் தடையில்லை.

குழந்தையின் தகப்பனுக்குத்தான் தத்துக் கொடுப்பதில் முதல் உரிமை உள்ளது. ஆனால், குழந்தையின் தாய் உயிருடனிருந்தால் அவள் இசைவு இன்றித் தகப்பன் தத்துக் கொடுக்க முடியாது. தாய் முற்றிலும் உலக ஆசையைத் துறந்துவிட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ அல்லது மனக் கோளாறு உள்ளவள் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலோ அந்த நிலையில் குழந்தையின் தாயின் இசைவு தேவையில்லை. குழந்தையின் தகப்பன் இறந்து விட்டாலோ அல்லது முற்றிலும் உலக இச்சையைத் துறந்து விட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய் விட்டாலோ அல்லது மனக் கோளாறு உள்ளவன் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டாலோ குழந்தையின் தாய், தகப்பனின் அனுமதியில்லாத நிலையிலும் தத்துக் கொடுக்கலாம். குழந்தையின் பெற்றோர் இருவருமே இறந்து விட்டாலோ அல்லது அவ்விருவரும் உலக இச்சையை முற்றும் துறந்து விட்டாலோ அவ்விருவரும் மனக்கோளாறு உள்ளவர்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தாலோ அல்லது அவ்விருவரும் குழந்தைதையைக் கைவிட்டுவிட்டாலோ அல்லது குழந்தையின் பெற்றோர் யாரென்று தெரியாதிருந்தாலோ அக்குழந்தையின் காப்பாளர் நீதிமன்றத்தின் முன்அனுமதியுடன் தத்துக் கொடுக்கலாம். பழைய சட்டத்தின்படி அனாதைக் குழந்தையைத் தத்து எடுக்கமுடியாது. புதிய சட்டப்படி நீதிமன்றத்தின் அனுமதியுடன் குழந்தையின் காப்பாளர் தத்துக் கொடுக்கலாம். குழந்தையின் மாற்றாந் தகப்பன் அல்லது மாற்றாந் தாய்க்கு தத்துக்கொடுக்கும் உரிமை கிடையாது. ஆனால், அவர்கள் குழந்தையின் பெற்றோர் இல்லாத நிலையில் குழந்தையின் காப்பாளராக இருந்தால் நீதிமன்றத்தின் அனுமதியுடன் கொடுக்கலாம்.

தத்து எடுப்பவர்தாம் உரிய வயது அடைந்தவராக இருக்க வேண்டும் என்று (மைனராக இருக்கக் கூடாது என்று) புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. தத்துக் கொடுப்பவர் அவ்வாறாக இருக்க வேண்டும் என்று புதிய சட்டத்தில் சொல்லப்படவில்லை. எனவே, குழந்தையின் பெற்றோர் உரிய வயது அடையாதவர்களாக இருந்தாலும்கூடப்புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குறைபாடு ஏதுமில்லாவிட்டால் தத்துக் கொடுக்கலாம்.

தத்துக் கொடுப்பவர் குழந்தையைத் தத்து எடுப்பவரிடம் ஒப்படைக்க வேண்டும். தத்து எடுத்ததற்கு அடையாளமாகத் தத்து எடுப்பவர் குழந்தையை ஏற்றுக் கொள்ளவேண்டும். பழைய சட்டப்படி தத்த ஓமம் என்ற மதச்சடங்கு அவசியம். அச்சடங்கு இப்போது தேவையில்லை.

தத்து எடுத்த தேதியிலிருந்து தத்து எடுக்கப்பட்ட குழந்தை தத்து எடுத்தவரின்குழந்தையாகச்சட்டப்படி கருதப்படும். அந்தத்தேதியிலிருந்து அக்குழந்தைக்குப் பிறந்த குடும்பத்தினருடனிருந்த தொடர்பு அறுந்துவிட்டதாகக் கருதப்படும். தத்து எடுக்கப்படாமலிருந்தால் எவரெவரைத்திருமணம் செய்ய முடியாத உறவு நிலையிலிருந்திருப்பாரோ, அப்படிப்பட்டவர்களைத் தத்துக்குப் பின்னும் தத்து எடுக்கப்பட்டவர் திருமணம் செய்யக் கூடாது. தத்துக்கு முன்னால் தத்துக் கொடுக்கப்பட்டவருக்குக் கிடைக்கும் (Vesting) சொத்துத் தத்தினால் பாதிக்கப்படாது. அவ்வாறான சொத்திலிருந்து எவரேனும் பராமரிப்புக் கோரும் உரிமையுடையவராக இருந்தால் தத்துக்குப் பின்னும் அச்சொத்து அவ்வாறான பராமரிப்புத் தொகைக்குக் கட்டுப்படச் செய்யும். தத்துக்கு முன்பு தத்து எடுக்கும் குடும்பத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் சொத்தைத் தத்து எவ்விதத்திலும் பாதிக்காது. எடுத்துக்காட்டாக, முருகன் என்பவன் 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் மரணமடைகிறான். அவன் மரண மடைந்த பின்னர் அவன் தன் மனைவியும் இரண்டு மகள்களும் உயிருடனிருக்கிறார்கள். முருகனின் சொத்துக்களில் அம்மூன்று பெண்களுக்கும் சமமாக அதுவும் முழுமையாக வாரிசுரிமை கிடைத்திருக்கும். அதற்குப் பின்பு முருகனின் விதவை ஒரு மகனைத் தத்து எடுக்கிறாள். அந்தத் தத்து மேற்படி மூன்று பெண்களுக்கும் கிடைத்த வாரிசுரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது.

தத்து எடுப்பவருக்கு மனைவியர் பலர் இருந்தால் அவர்களுள் மூத்த (Senior) மனைவி தத்து எடுக்கப்பட்ட குழந்தையின் தாயாகப் பாவிக்கப்படுவாள். ஏனைய மனைவிகள் அக்குழந்தையின் மாற்றாந்

தாய்களாகக்கருதப்படுவார்கள். மனைவியை இழந்த ஆண் அல்லது திருமணமாகாத ஆண் தத்துக்குப் பின் மணக்கும் மனைவியானவள் தத்துக் குழந்தையின் மாற்றாந்தாயாகக் கருதப்படுவாள். தத்துக்குப் பின் தத்து எடுக்கும் திருமணமாகாத பெண் அல்லது விதவை திருமணம் செய்து கொண்டால் அக்கணவன் அந்தத் தத்துக் குழந்தையின் மாற்றாந் தகப்பனாகக் கருதப்படுவான். மணவிலக்குச் செய்து கொண்ட பெண் மற்றும் மறுமணம் செய்து கொண்ட விதவை பற்றிப் புதிய சட்டத்தில் ஏதும் சொல்லப்படவில்லை. ஆனால், அவர்கள் தங்களது பழைய கணவனுக்காகத் தத்து எடுக்க முடியாது என்பது தெளிவு.

சட்டப்படி எடுக்கப்பட்ட தத்தைத் தத்து எடுத்தவரோ அல்லது வேறு எவருமோ நீக்கம் செய்ய முடியாது. தத்து எடுக்கப்பட்ட குழந்தையும் தத்தை மறுப்புச் செய்ய முடியாது. தத்து எடுப்பதற்கும் தத்துக் கொடுப்பதற்கும் பணம் அல்லது விருது ஏதும் கொடுப்பதோ அல்லது பெற்றுக் கொள்வதோ குற்றவியல் நீதிப்படி தண்டிக்கக்கூடிய குற்றமாகும்.

வாழ்க்கைப் பராமரிப்பு: நூறு தவறுகள் செய்தாவது வயதான பெற்றோரையும், புனிதவதியான மனைவியையும் குழந்தையையும் ஒருவன் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளான் என்று மனு சாத்திரம் கூறியுள்ளது.

பழைய இந்துச் சட்டப்படி பராமரிப்பு என்ற கோட்பாட்டைப் பொறுத்தமட்டில் ஓர் இந்து ஆணுக்கு இரண்டுவித கடமைகள் இருந்தன. அவனுக்குச் சொத்துகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவன் தன் மனைவி, உரிமை வயதை அடையாத மகன் (18 வயது நிறைவு அடையாத மகன்), திருமணமாகாத மகள், வயதான பெற்றோர் ஆகியவர்களைப் பராமரிக்கக் கடமைப்பட்டவன். இக்கடமை உறவு என்ற அடிப்படையில் மட்டும் ஏற்பட்டது. இது முதல் வகைக் கடமையாகும்.

வாரிசு உரிமைப்படி ஓர் இந்துவுக்குக் கிடைக்கும் சொத்திலிருந்து காலம் சென்ற அச்சொத்தின் உரிமையாளன் சட்டப்படியும் அறநெறிப்படியும் பராமரிக்கக் கடமைப்பட்டவர்களை அவ்வாறு வாரிசு உரிமைப்படி சொத்தை அடைபவன் அந்தச் சொத்திலிருந்து பராமரிக்கக் கடமைப்பட்டவன். அதாவது, ஒரு குறிப்பிட்ட முறையில் கிடைக்கும் சொத்து அவன் கைவசமிருப்பதால் அவனுக்கு அவ்வாறு பராமரிக்கும் கடமை ஏற்படுகிறது. இது இரண்டாம் வகைக் கடமையாகும். மேற்படி கடமைகளைப் பொறுத்த மட்டில் புதிய 1956-ஆம் ஆண்டைய பராமரிப்புச் சட்டமானது தொகுத்து வழங்குகிறது. இப்புதிய சட்டத்தில் ஆணுக்குச் சமமாகப் பெண்ணுக்கும் அவ்வாறான சில கடமைகள் சுமத்தப்பட்டுள்ளன. ஏனெனில், 1956-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டப்படி ஆணுக்குச்சமமாகப் பெண்ணுக்கும் சொத்து கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. எனவேதான், புதிய சட்டப்படி பராமரிப்புக் கடமையானது பெண் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. மேலும் சில மாறுதல்கள் புதிய சட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன.

பராமரிப்பு என்ற சொல் மூன்றாம் பிரிவு உட்பிரிவு (ஆ) வில் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி ஓர் இந்து மனைவியை அவளுடைய ஆயுள்காலம்வரை பராமரிக்கும் கடமையானது அவளுடைய கணவனுக்கு உள்ளது என்பது புதிய 1956-ஆம் ஆண்டைய சட்டத்தின் 18-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. இக்கடமை பழைய சட்டத்தின்படியும் உண்டு. சாதாரணமாக ஓர் இந்து மனைவி கணவனுடன் ஒரே வீட்டில் வசிக்கக் கடமைப்பட்டவள். ஆனால், போதுமான காரணமிருந்தால், கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையை இழக்காமலேயே மனைவி தனித்து வாழலாம் என்று பல வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதையொட்டி 1946-ஆம் ஆண்டில் இந்து திருமணமான பெண்களின் தனித்து வாழ்தல் மற்றும் பராமரிப்பு உரிமைச் சட்டம் (Hindu Married Women's Right to Separate Residence and Maintenance Act 1946) இயற்றப்பட்டது. இந்த 1946-ஆம் ஆண்டைய சட்டமானது புதிய 1956-ஆம் ஆண்டைய இந்து தத்து எடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் மூலம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையை இழக்காமலேயே மனைவி தனித்து வாழப் புதிய சட்டத்தின் 18-ஆம் பிரிவிலும் வகை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ஏழு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மனைவியைக் கணவன் கைவிடுதல், கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தால் ஆபத்து விளையும் என்று மனைவிக்குப் பயம் ஏற்படும் அளவுக்கு மனைவியைக் கணவன் கொடுமைப்படுத்துதல், கொடூரமான தொழுநோயால் கணவன் பீடிக்கப்பட்டிருத்தல், கணவனுக்கு வேறு மனைவி இருப்பது, கணவன் வைப்பாட்டி வைத்திருத்தல், கணவன் மதம் மாறுதல், வேறு ஏதாவது போதுமான காரணம் ஆகியவைகள் தாம் அந்த ஏழு காரணங்களாகும்.

கற்பு நெறி தவறி வாழும் மனைவியானவள் அவ்வாறு பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையை இழக்காமல் தனித்து வாழும் உரிமையை இழந்தவள் ஆவாள் என்பது புதிய சட்டத்தின் அதே 18-ஆம்

பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. தனித்து வாழும் உரிமையைத்தான் இழக்கிறாள் என்று புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதேயொழிய கணவனுடன் சேர்ந்து வாழும் உரிமையை இழந்தவள் ஆவாள் என்று சொல்லவில்லை. மனம் திருந்திக்கணவனுடன் வாழ விரும்பும் அவ்வாறான கற்பு நெறிதவறிய மனைவியை ஏற்றுக்கொள்ளக் கணவன் மறுத்தால், அவளுக்குக் கணவன் பராமரிப்புத்தொகை கொடுக்க நேரிடும் என்பது பழைய சட்டத்தில் சொல்லப் பட்டுள்ளது. அந்த நிலைதான் புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பும் தொடர்கிறது என்பது மனங் கொள்ளத் தக்கது. அவ்வாறான கற்பு நெறிதவறிய மனைவிக்குப் பராமரிப்புத்தொகை கொடுக்க நேரிட்டால் அவளது பழைய ஒழுக்கம் கெட்ட நடத்தையை மனத்தில் கொண்டு அத்தொகை நிருணயம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

பழைய இந்துச் சட்டப்படி வைப்பாட்டியைப் பராமரிக்கும் கடமை ஓர் இந்துவுக்குக் கிடையாது. ஆனால், அவனுடன் அவன் காலமாகும்வரை உண்மையுடன் வாழ்ந்தால் அவனது சொத்திலிருந்து பழைய சட்டப்படி அவளுக்குப் பராமரிப்புக் கிடைக்கும். ஆனால், புதிய சட்டத்தில் வைப்பாட்டிக்குப் பராமரிப்புக் கோரும் எவ்வித உரிமையும் கிடையாது.

ஓர் இந்து விதவை தன் கணவனின் தகப்பனாரிடமிருந்து பராமரிப்புக் கோரலாம் என்பது புதிய சட்டத்தின் 19–ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளது. பழைய சட்டத்திலும் அவ்வுரிமை இருந்தது. அவ்வாறு மருமகள் மாமனாரிடமிருந்து பராமரிப்புக் கோர இரண்டு முக்கிய நிபந்தனைகள் உள்ளன. மருமகள் பங்கு பெறாத பொதுக் குடும்பச் சொத்து மாமனாரிடம் இருக்க வேண்டும். இது முதல்நிபந்தனை. அவளுக்குத் தனிப்பட்ட சொத்தோ அல்லது சொந்தமான வருமானமோ இருக்கக்கூடாது. மேலும், அவள் கணவனது சொத்திலிருந்தோ அல்லது அவள்தன் பெற்றோரிடமிருந்தோ அல்லது அவளது குழந்தைகள் மற்றும் அக்குழந்தைகளின் சொத்திலிருந்தோ பராமரிப்புப் பெற முடியாத நிலையிலிருக்க வேண்டும். இது இரண்டாம் நிபந்தனையாகும். மேலும், அவ்வாறான விதவையான மருமகள் மறுமணம் செய்து கொண்டால் அவ்வாறு பராமரிப்புக் கோரும் உரிமையை இழந்து விடுவாள்.

ஓர் இந்து ஆணும் பெண்ணும் தங்கள் வயதான அல்லது தள்ளாத நிலையிலுள்ள பெற்றோரைப் பராமரிக்க வேண்டும் என்பது புதிய சட்டத்தின் 20–ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. தங்களது சொந்த வருமானத்தின் மூலமோ அல்லது சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலமோ தங்களைப் பராமரித்துக்கொள்ள முடியாத நிலையிலுள்ள பெற்றோரைத்தாம் அவர்களின் பிள்ளைகள் பராமரிக்கக் கடமைப்பட்டவர்கள். பெற்றோரைப் பராமரிக்கும் கடமை பழைய சட்டப்படி மகனுக்கு உண்டு. புதிய சட்டம் மகனின் அக்கடமையை வலியுறுத்துவதுடன் நில்லாமல் அக்கடமையை மகள் மீதும் சுமத்தியுள்ளது.

ஓர் இந்து ஆணும் பெண்ணும் தங்கள் குழந்தைகளை அவர்கள் சட்டமுறையில் இல்லாதவர்களாயிருந்தாலும்கூட (Illegitimate Children) பராமரிக்க வேண்டும் என்பது புதிய சட்டத்தின் 19–ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பழைய சட்டப்படி ஓர் இந்து ஆணுக்குத் தன்னுடைய சட்ட முறையில் இல்லாத மகனைப் பராமரிக்கும் பொறுப்பு இருந்தது. ஆனால், சட்டமுறையில் இல்லாத மகளைப் பராமரிக்கும் பொறுப்பு அவனுக்குப் பழைய சட்டப்படி கிடையாது. உரிமை வயதை அடையாத குழந்தைகள் (Minor Children) தங்கள் தகப்பன் அல்லது தாயிடமிருந்து பராமரிப்புக் கோரலாம் (உரிமை வயதை அடைவதற்கு முன்பே திருமணமாகும் மகளைப்பற்றி இப்பிரிவில் குறிப்பிடவில்லை) மனைவியைப் பராமரிக்கும் கடமை கணவனுக்கு இருப்பதால் திருமணமாகும் உரிமை வயது அடையாத பெண்ணைத் தகப்பன் பராமரிக்க வேண்டியதில்லை என்பது மனங் கொள்ளத்தக்கது. உரிமை வயது அடைந்த பின்பும்கூட மகள் திருமணம் செய்து கொள்ளாமலிருந்தால் அவளை அவள் பெற்றோர் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால், அவ்வாறு திருமணமாகாத மகளுக்குச் சொந்த வருமானமோ அல்லது சொத்தோ இருந்தால் அவளைப் பராமரிக்கும் கடமை பெற்றோருக்கு இல்லை.

காலமாகும் ஓர் இந்துவின் (அவர் ஆணாகவுமிருக்கலாம் அல்லது பெண்ணாகவுமிருக்கலாம்) சொத்துகளை வாரிசு உரிமைப்படி அடைபவர், அவ்வாறு காலமானவர் சட்டப்படி பராமரிக்கக் கடமைப்பட்டவர்களை, அவ்வாறு அடையும் சொத்துகளிலிருந்து பராமரிக்கக் கடமைப்பட்டவர். இக்கடமையானது காலமானவரின் சொத்துகளை வாரிசு உரிமைப்படி இல்லாமல் உயில் போன்ற பத்திரங்கள் மூலம் அடைபவருக்கும் உண்டு என்று ஒரு வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் காலமானவரின் ஆதரவைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் (Dependants) என்று புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளார்கள். ஆனால், அவ்வாறு காலமானவரின் ஆதரவை எதிர்

பார்த்து வாழ்ந்தவர்கள் காலமானவரின் சொத்தில் பங்கு பெற்றிருந்தால் பராமரிப்புக்கோரும் உரிமையை இழந்தவர்களாவார்கள். மேற்கூறியவாறு காலமான வரின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்கள் பட்டியலில் 25 பேர்கள் அடங்கியுள்ளார்கள். கால மானவரின் பெற்றோர், உரிமை வயது அடையாத மகன், திருமணமாகாத மகள், விதவையான மகள், காலமானவா ஆணாக இருந்தால் அவருடைய விதவை ஆகியோர் மேற்கூறிய காலமானவரின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்களின் பட்டியலில் அடங்கி யுள்ளவர்களில் முக்கியமானவர்கள் ஆவர். காலமான வரின் விதவை மறுமணம் செய்து கொண்டால் பராமரிப்புக் கோரும் உரிமையை இழந்து விடுவாள்.

பராமரிப்புத்தொகையை நிர்ணயிக்கக்கூடிய முறைகளைப் புதிய சட்டத்தின் 23-ஆம் பிரிவு விளக்குகிறது. பராமரிப்புத் தொகை கோருபவர் அதைக் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆகியோரின் வாழ்க்கைத்தரம், கோருபவரின் நியாயமான தேவை கள், இன்னும் இப்பிரிவில் விளக்கப்பட்டுள்ள காரணங் கள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு பராமரிப்புத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்படும் தொகையானது மாறுதல் ஆகும் நிலையை ஒட்டி மாற்றி அமைக்கப்படலாம்.

பராமரிப்புக் கோரக்கூடிய உரிமை பெற்றவர் வேறு மதத்துக்கு மாறுவதன்மூலம் இந்துவாக இல்லாமற் போனால், அவ்வாறான பராமரிப்புக் கோரும் உரிமையை இழந்து விடுவார் என்பது புதிய சட்டத்தின் 24-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பராமரிக்கக் கடமைப்பட்டவர் இந்துவாக இல்லாமல் போனால் என்னவாகுமென்று புதிய சட்டத்தில் சொல்லப்படவில்லை. பழைய சட்டத்தின்படி இந்து வாக இல்லாமல் போனாலும் பராமரிக்கக் கடமைப் பட்டவர் அக்கடமையிலிருந்து மீள முடியாது. புதிய சட்டம் வந்த பின்பும் அந்த நிலைதான் தொடர் கிறது.

காலமானவர் செலுத்த வேண்டிய கடன்களைத் தீர்த்தபின்புதான் அவருடைய ஆதரவை எதிர் பார்த்து வாழ்ந்தவர்களுக்குப் பராமரிப்புத்தொகை கொடுக்க வேண்டும். காலமானவர் எழுதிய உயில் மூலமோ அல்லது நீதிமன்றத்தின் ஆணை மூலமோ அல்லது பராமரிப்புத் தொகை பெறுபவர், அதைக் கொடுக்க வேண்டியவர் ஆகியவர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமோ உண்டாக்கப்பட்டிருந்தால் ஒழிய, காலமானவரின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பராமரிப்புத் தொகையைக் காலமானவரின் சொத்துகளின் மீது பொருட்பிணைப் பொறுப்பு (Charge) ஏற்படுத்த முடியாது. மேலும், அவ்வாறான சொத்துகளை ஒருவர் இனாமாக இல்லாமல் பணம் அல்லது வேறு மதிப்புள்ள பொருளைக் கொடுத்துப் பெற்றால், அவ்வாறு சொத்தை அடைபவரிடமிருந்து பரா மரிப்புத்தொகை கோரமுடியாது பராமரிப்பு வேண்டு வோர் உண்டு என்று தெரிந்திருந்தால் பணம்அல்லது பொருள் கொடுத்து அவ்வாறான சொத்தை அடை பவர் அச்சொத்திலிருந்து பராமரிப்புத்தொகை கொடுக்கக் கடமைப்பட்டவராவார். அவ்வாறான சொத்தை ஒருவர் இனாமாக அடைந்தால், அவரும் அச்சொத்திலிருந்து மேற்கூறிய பராமரிப்புத்தொகை கொடுக்கக் கடமைப்பட்டவராவார். அவ்வாறு இனாமாகச் சொத்தைப் பெறுபவருக்குப்பராமரிப்புக் கோரக்கூடியவர்களிருக்கிறார்கள் என்று தெரியாம லிருந்தாலும்கூட அக்கடமையிலிருந்து அவர் மீள முடியாது.

**இந்து திருமணச் சட்டம்**: இனவிருத்திக் காக உடலுறவு கொள்வது மிருகங்களின் இயல்பான குணம். ஆதியில் மனிதனும் இதே நிலையிலிருந் தான். அதாவது, ஆணும் பெண்ணும் அந்த அந்த இனத்துக்குப் பொதுவானவர்களாகக் கருதப்பட் டார்கள். அந்த நிலையில் அந்த இனத்திலுள்ள எந்த ஆணும் அந்த இனத்திலுள்ள எந்தப் பெண்ணுடனும் உடலுறவு கொள்ளும் நிலையிருந்தது. காலப்போக் கில் ஒரு பெண்ணை ஒரு ஆண் தனக்கு மட்டும் பாத்தியப்பட்டவளாகக் கருதும் எண்ணம் வளர்ந் தது. அதுவே பின்னர்த் திருமணம் என்ற அமைப்பாக வளர்ந்தது. அதாவது ஓர் ஆணும் பெண்ணும் குழந்தைகள் பெற்று, வளர்த்து ஆளாக்கும் நோக்கு டன் ஒன்று கூடி வாழ்வது திருமணம் என்ற அமைப் புக்கு வழிவகுத்தது.

இசுலாமிய மதத்தில் திருமணம் என்பது ஓர் ஒப் பந்த அடிப்படையில் எழுகிறது. ஆனால், இந்து மதத்தில் திருமணம் என்பது புனிதமானதாகக் கரு தப்படுகிறது. மதக் கோட்பாடுகள் திருமண அமைப் புடன் இணைக்கப்பட்டுள்ளன. அதாவது, மகன் பிறக்காவிட்டால் தகப்பன் 'புத்' என்ற நரகத்துக்குச் செல்வான் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். கண வன் இறந்தாலும் மனைவி அந்தத் திருமண உறவை விலக்க முடியாது என்று இந்து மதத்தில் நம்பப்படு கிறது. அந்த அளவுக்கு இந்து மதத்தில் திருமணம் என்ற அமைப்புக்குச் சிறப்பிடம் அளிக்கப்படு கிறது.

எனினும், பழைய இந்துச் சட்டத்தில் சில குறை பாடுகள் இருந்தன. ஒரே சமயத்தில் பெண்கள் பலரைத் திருமணம் செய்வதற்கு ஆணுக்கு உரிமை வழங்கப்பட்டது. பொதுவாக, விதவை மறுமணமும்

மணவிலக்கும் இந்து மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. ஆனால், குறிப்பிட்ட சில சமூகங்களில் மட்டும் வழக்காற்றின் காரணமாக மணவிலக்கும் விதவை மறுமணமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. வேகமாக மாறிவரும் சமூகக் கருத்துகளுக்கு இந்துச் சட்டத்தின் சில பிரிவுகள் ஒத்துவரவில்லை. கணவன் காணாமல் போனாலோ இறந்து விட்டாலோ உலக இச்சையைத் துறந்து விட்டாலோ ஆண்தன்மையற்றவனாக இருந்தாலோ மானபங்கப் படுத்தப்பட்டாலோ மனைவி வேறு ஒருவனை மறுமணம் செய்யலாம் என்று நாரதருடைய சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளபோதிலும், இந்துப் பெண் மறுமணம் செய்யும் பழக்கம் நடைமுறையில் இல்லாமல் போய்விட்டது. எனவே, இந்துக்கள் திருமணம் குறித்து மத்திய அரசு 1955-ஆம் ஆண்டில் இந்து திருமணச் சட்டத்தை(Hindu Marriage Act, 1955) இயற்றியது. இது 18.5.1955-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்தச் சட்டம் இந்துக்களுக்கு மட்டும் செல்லுபடியாகும். புத்த, சமண, சீக்கிய மதத்தினரும் இச்சட்டத்தில் உள்ள விளக்கத்தின்படி இந்துக்களாகக் கருதப்படுகிறார்கள். (இந்து என்பது யார், எந்தெந்த மக்களுக்கு இச்சட்டம் பொருந்தும் என்பன பற்றி முழுவிவரம் அறிவதற்கு 'இந்து சட்டம்' என்ற கட்டுரையைக் காண்க). இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு, இச்சட்டத்தில் எந்தெந்த விவகாரங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளதோ அவைகளுக்குப் பழைய இந்துச் சட்டமும், வழக்காற்றுச் சட்டமும் செல்லா. இந்தச் சட்டத்துடன் முரண்பாடு கொண்ட முந்தைய அரசால் இயற்றப்பட்ட சட்டத்திலுள்ள விதிமுறைகளும் செல்லா.

இச்சட்டம் சம்மு-காசுமீர் பகுதியைத் தவிர இந்தியா முழுவதும் செல்லத் தக்கது. இங்கு வசிக்கும் இந்துக்களுக்கும், இந்தியாவை வாழிடமாகக் கொண்ட(Domiciled)ஆனால்,இந்தச் சட்டம் செல்லத் தக்க பகுதிக்கு வெளியில் வசிக்கும் இந்துக்களுக்கும் பொருந்தும். இங்கிலாந்து நாட்டு 1950-ஆம் ஆண்டைய சட்டத்திலுள்ள (English Act, 1950) நெறிமுறைகள் இந்து திருமணச் சட்டத்தில் பின்பற்றப் பட்டுள்ளன. இந்தச் சட்டத்தில் 1956, 1964, 1976-ஆம் ஆண்டுகளில் மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டங்கள் மூலம் (Act 73 of 56, Act 44 of 64,Act 68 of 76) திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 1976-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்ங்கள் முக்கியமானவை. தமிழக அரசு 1967-ஆம் 'ண்டில் இயற்றிய சட்டத்தின் மூலம் (Act 21 of ` திருத்தம் செய்துள்ளது.

மேற்கொண்டு தொடருவதற்குமுன் பழைய இந்து திருமணங்கள் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும். பழைய சட்டத்தில் மூன்று வகைத் திருமணங்கள் இந்து இனத்தில் இருந்தன. 1. ஒருவனுக்கு ஒருத்தி என்று சொல்லப்படும் ஒரு தார திருமணம் (Monogamy). 2. ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் என்று சொல்லப்படும் பலதார திருமணம் (Polygamy). 3. ஒருத்திக்கு ஒரு கணவனுக்கு மேற்பட்ட கணவர் பலர் உள்ள திருமணம் (Polyandry). இத்திருமணத்தை இந்து மதம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் தடை செய்யவில்லை. எனவே, குறிப்பிட்ட சில வகுப்பினரிடம் இத்திருமண வழக்கம் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

பழையகாலத்தில் எட்டு வகையான முறைகளில் இந்து திருமணங்கள் நடந்தன. அவற்றுள் நான்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாகும் (Approved). அவை 1. பிரம்மா முறை. 2. தெய்வ முறை 3. ஆரிட முறை. 4. பிரசாபதி முறை. ஏற்றுக் கொள்ளப்படாத நான்கு முறைகளாவன: 1. அசுர முறை. 2. காந்தர்வ முறை. 3. சத்திரிய அல்லது இராட்சச முறை. 4. பிசாசு முறை. மேற்கண்ட எட்டு முறைகளுள் பிரம்மா முறையும் அசுர முறையும்தாம் நடைமுறையிலிருப்பதாகவும், ஏனைய முறைகள் மறைந்து விட்டன என்றும் சொல்லப்படுகிறது. மறைந்து விட்டதாகச் சொல்லப்படும் முறைகளுள் காந்தர்வ முறை என்பது ஓர் ஆணும் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்வதாகும். திருமணம் செய்வதற்குரிய மணமகளின் பெற்றோரோ காப்பாளரோ மணமகனிடமிருந்து எவ்விதமான மறுபயனும் எதிர்பாராமல் திருமணம் செய்து கொடுப்பது பிரம்மா முறை திருமணமாகும். 'சுல்க்கா' என்று சொல்லப்படும் மணப்பெண்ணுக்கான விலையைப் பெற்றுக் கொண்டு திருமணம் செய்து கொடுப்பது அசுர முறைத் திருமணமாகும். அசுர முறையில் மணப்பெண் விற்கப்படுகிறாள். பிரம்மா முறையில் எவ்வித மறு பயனையும் எதிர்பாராமல் மணமகள் திருமணம் செய்து கொடுக்கப்படுகிறாள். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்படும் இந்துக்களின் நான்கு பிரிவைச் சேர்ந்த எவரும் அவரவர் விருப்பப்படி பிரம்மா முறையிலோ அல்லது அசுர முறையிலோ திருமணம் செய்து கொள்ளலாம்.

இந்து திருமணத்தில் தீக் கடவுளை வேண்டுதல், வாக்குதானம், கன்னிகாதானம், சப்தபதி, தாலி கட்டுதல், அம்மிமிதித்து அருந்ததி பார்த்தல் போன்ற சடங்குகள் உள்ளன. அவற்றுள் தீக்கடவுளை வணங்குதலும் திருமணத்திற்காக உண்டாக்கப்படும்

புனிதமான நெருப்பை மணமக்கள் இருவரும் வலம் வந்துஏழுபடிகளை எடுத்து வைப்பதும்(சப்தபதி)ஆகிய இரண்டு சடங்குகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும்.

இச்சட்டப்படி திருமணம் நடப்பதற்கு ஐந்துநிபந் தனைகள் இந்து திருமணச் சட்டத்தின் 5-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன: 1. உயிரோடு இருக்கும் மனைவியோ கணவனோ முறையே மண மகனுக்காவது மணமகளுக்காவது திருமணச் சமயத் தில் இருக்கக் கூடாது. 2. மணமக்களில் எவரேனும் மனச்சீர்கேட்டினால்(Unsoundness of Mind)திருமணத் திற்கு ஒப்புதல் கொடுக்க முடியாத நிலையிலிருக்கக் கூடாது. திருமணத்திற்கு ஒப்புதல் கொடுக்கக் கூடிய நிலையிலிருந்தாலும், அவ்விருவருள் எவரேனும் திரு மணத்திற்குத் தகுதியற்ற நிலையை அடையும் அள வுக்கோ அல்லது குழந்தைகள் பெறத் தகுதியற்ற நிலையை அடையும் அளவுக்கோ மனநிலை சரியில் லாதவராக (Mental Disorder) இருக்கக்கூடாது; அல் லது மணமக்களுள் எவரேனும்மீண்டும் மீண்டும்வலிப்பு நோயால் பாதிக்கப்படக் கூடியவராகவோ பைத் தியம் (Insane)பிடித்தவராகவோ இருக்கக் கூடாது. 3. மணமகன் 21 வயது பூர்த்தியடைந்தவராகவும் மண மகள் 18 வயது பூர்த்தியடைந்தவளாகவும் இருக்க வேண்டும். 4. மணமக்கள் ஒருவருக்கொருவர் தடை விதிக்கப்பட்ட உறவு முறையில் (Prohibited Relationship) இருக்கக்கூடாது, ஆனால், மரபியல் சட்டம் (Custom or Usage having the force of law) அனு மதித்தால் அவ்வித உறவு இருந்தாலும் குற்றம் இல்லை. 5. மணமக்கள் ஒருவருக்கொருவர் சப்பிந்தா (Sapinda)உறவு நிலையில் இருக்கக் கூடாது, ஆனால், மரபியல் சட்டம் அனுமதித்தால் அவ்வித உறவு இருந்தாலும் குற்றமில்லை.

பழைய இந்துச் சட்டப்படி மணமக்கள் இந்துக் களாக இருந்தாலும் பிற சாதியைச் சார்ந்தவர் களாக இருக்கக் கூடாது. இந்த இடத்தில் சாதி என்பது பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியவர்களைக் குறிக்கிறது. மேல் சாதியைச்சேர்ந்த பெண்ணைக் கீழ்ச் சாதியைச்சேர்ந்த ஆண் திருமணம் செய்வது பழைய இந்துச் சட்டப்படி செல்லாது ஆனால், மேல் சாதியைச் சேர்ந்த ஆண் கீழ்ச் சாதி யைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்வது பழைய இந்துச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டி ருந்தது. ஒரே சாதியில் உள்ள வேறுபட்ட உட்பிரிவு களைச் சார்ந்தவர்களது திருமணத்தைப் பழைய இந்துச் சட்டம் ஏற்றுக்கொண்டது. ஆனால், 1955-ஆம் ஆண்டைய இந்து திருமணச் சட்டத்தின்படி திருமணத்திற்குச் சாதி வித்தியாசம் கிடையாது. பழைய இந்துச் சட்டப்படி மணமக்கள் ஒரே கோத் திரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது. புதிய சட்டத்தில் அந்தத் தடையில்லை.

மேற்படி 5-ஆம் பிரிவில் உள்ள 1-ஆம் நிபந்தனை யின்படி விதவையோ மணவிலக்குச் செய்த வரோ மறுமணம் செய்வதற்குத் தடையில்லை என் பது தெளிவாகிறது. மேலும், இருதுணை மணம் (Bigamy) தடைசெய்யப்பட்டுள்ளது. இருதுணை மணம் சட்டப்படி தண்டிக்கத்தக்க குற்றம் என்பது இச்சட்டத்தின் 17-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள் ளது. இந்த 1955-ஆம் ஆண்டைய சட்டம் வரு வதற்கு முன் ஓர் இந்து ஆண் ஒரே சமயத்தில் பெண்கள் பலரைத் திருமணம் செய்வது பழைய இந்துச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே சில மாநிலங்களில் இருதுணை மணத்தைத் தடை செய்யச் சட்டங்கள் இயற்றப்பட்டன (அந்த விவ ரம் அறிய 'இருதுணை மணம்' கட்டுரையைக் காண்க). இறுதியாக இந்த 1955-ஆம் ஆண்டைய சட்டத்தின் மூலம் அனைத்திந்திய அளவில் (சம்மு-காசுமீர் தவிர) உள்ள இந்துக்களுக்கு இருதுணை மணம் கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு இச்சட்டத்தின் மூலம் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இச்சட்டத்தின் 5-ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள நான்காம், ஐந் தாம் நிபந்தனைகளின்படி மணமக்களுக்குள் தடை விதிக்கப்பட்ட உறவு கூடாது. சப்பிந்தா உறவும் கூடாது. அந்த உறவுகள் என்ன என்பது இச் சட்டத்தின் 3-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. தடைவிதிக்கப்பட்ட உறவுப் பட்டியலில் உள்ள சிலர் கீழ்க்காணுபவர் ஆவார்கள். மணமக்களில் ஒருவர் மற்றவரின் ஆண்வழி முன்னோராயிருக்கக் கூடாது. உடன் பிறந்தானின் மனைவியைத் திருமணம் செய் யக் கூடாது. சகோதர சகோதரிக்குள் திருமணம் கூடாது. ஒருவன் உடன் பிறந்த சகோதரன் அல்லது சகோதரியின் மகளைத் திருமணம் செய்யக் கூடாது. சகோதரர்களின் பிள்ளைகளுக்குள்ளும், சகோதரி களின் பிள்ளைகளுக்குள்ளும், சகோதர சகோதரி களின் பிள்ளைகளுக்குள்ளும் திருமணம் கூடாது.


மணமக்கள் இருவரும் பொது மூதாதையர் மூலம் உறவினர் என்றால் அந்தப் பொது மூதாதை யர் மணமக்களது தகப்பன்மார்கள் மூலம் 5-ஆம் தலைமுறைக்குள் இருந்தால் அவ்விருவரும் சப் பிந்தா உறவினர் ஆவார்கள். பழைய சட்டத்தில் இது 7-ஆம் தலைமுறை எனக் கணக்கிடப்பட்டிருந் தது. பொது மூதாதையர் மணமக்களுடைய

தாய்கள் மூலம் உறவு என்றால் மூன்றாம் தலைமுறைக்குள்ளிருந்தால் அது சப்பிந்தா உறவு ஆகும். பழைய சட்டத்தில் இது 5–ஆம் தலைமுறை எனக் கணக்கிடப்பட்டிருந்தது. கணக்கிடும்போது மணமக்களை முதலாம் தலைமுறை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். கீழ்க்காணும்குடிவழிப் பட்டியல் ஓரளவுக்கு அந்த உறவை விளகக உதவும்.

மூன்றாம் தலமுறை என்றால்தான் தடை எனவே மணமகனுக்கும் சாவித்திரிக்கும் சப்பிந்தா உறவு இல்லை.

பூங்கொடி என்ற பெண் பொது மூதாதையரின் மகனுடைய மகனுடைய மகனுடைய மகனுடைய மகள் ஆவாள். மணமகனுக்கும் பூங்கொடி என்ற

பட்டியல்




மேற்படி குடிவழிப்பட்டியல்படி இராமன் என்பவர் பொது முன்னோர் ஆவார். அவருக்கு ஐந்து மக்கள். அவர்களுள் இருவர் பெண் மக்கள். மூவர் ஆண்மக்கள். 3–ஆம் பிள்ளையான ஆண் மகன் மூலம் ஏற்பட்ட வாரிசு கோவிந்தன் மணமகன் ஆவான். அதாவது, மணமகன் பொது மூதாதையரின் மகனுடைய மகனுடைய மகன் ஆவான். இராமனின் மற்றப்பிள்ளைகள் மூலம் ராணி, சாவித்திரி, பூங்கொடி, இராதை என்ற பெண்கள் உள்ளனர். இந்த நான்கு பெண்களுக்கும் மணமகனுக்கும் சப்பிந்தா உறவு உண்டா இல்லையா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இராணி என்ற பெண் பொது மூதாதையரின் மகளுடைய மகனுடைய மகள் ஆவாள். இராணிக்கும் மணமகனுக்கும் அவரவர் தகப்பன் மூலம் பொது மூதாதையர் 4–ஆம் தலைமுறையிலிருக்கிறார். எனவே இராணியை அவன் மணக்கக்கூடாது. அவ்விருவரும் சப்பிந்தா உறவினர்.

சாவித்திரி என்ற பெண் பொது மூதாதையரின் மகனுடைய மகளுடைய மகள் ஆவாள். மணமகன் சாவித்திரி என்ற பெண்ணை மணக்கலாம். பொது மூதாதையர் சாவித்திரிக்கும் தாய் மூலம் உறவு. அந்தத் தாய் மூலம் பொது மூதாதையர் சாவித்திரியிடமிருந்து நான்காம் தலைமுறையில் உள்ளார்.

பெண்ணுக்கும் சப்பிந்தா உறவு இல்லை. ஏனெனில், பொது மூதாதையர் பூங்கொடிக்கு ஆறாம் தலைமுறையில் உள்ளார். அதாவது, ஐந்தாம் தலைமுறை என்றால்தான் தடை.

இராதை என்ற பெண் பொது மூதாதையரின் மகளுடைய மகளுடைய மகள் ஆவாள். மணமகனுக்கும் இராதை என்ற பெண்ணுக்கும் சப்பிந்தா உறவு இல்லை. ஏனெனில், அந்தப் பெண்ணின் தாய் மூலம் கணக்கிடும்போது பொது மூதாதையர் 3–ஆம் தலைமுறை என்ற எல்லைக்கோட்டைத் தாண்டி 4 ஆம் தலைமுறையில் உள்ளார்.

மேற்படி இருதுணை மணம் கூடாது; தடுக்கப்பட்ட உறவு கூடாது; சப்பிந்தா உறவு கூடாது என்ற மூன்று நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றை மீறி நடக்கும் திருமணத்தின் கதி என்ன என்பதற்கு இச்சட்டத்தின் 11–ஆம் பிரிவில் விடை கிடைக்கிறது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு மேற்படி மூன்று நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறி நடக்கும் திருமணம் இல்லா நிலையது (Void) ஆகும். அந்தத் திருமணம் , ஆரம்பத்திலிருந்தே செல்லத்தகாத திருமணம் என்று அந்த 11 ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறான திருமணத் தரப்பினர் ஒருவர் தாக்கல் செய்யும் மனுவின் மீது அந்தத் திருமணம் இல்லா நிலையது என்று நீதிமன்றம்

தீர்ப்பளிக்கலாம் என்று 11-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே குறிப்பிட்டபடி இருதுணை மணம் குற்றவியல் நீதியின்படி குற்றமாகும். தடுக்கப் பட்ட உறவு கூடாது; சப்பிந்தா உறவு கூடாது என்ற விதிகளை மீறித் திருமணம் செய்பவர் குற்ற வியல் நீதியின்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்பது இச்சட்டத்தில் 18-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளது.

மேற்கூறிய 5-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள 2-ஆம் நிபந்தனையான மனநோய் போன்றவற் றால் பீடிக்கப்பட்ட திருமணம் தவிர்க்கத்தக்க திருமணம் (Voidable Marriage) ஆகும் என்பது இச் சட்டத்தின் 12-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. செல்லத்தகாத திருமணம் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கும் வரை அந்தத் திருமணம் செல்லத்தக்கது ஆகும்.

மேற்கூறிய 5-ஆம் பிரிவிலுள்ள வயது வரம்பு என்ற 3-ஆம் நிபந்தனையை மீறி நடக்கும் திரு மணம் இல்லா நிலைய திருமணம் அன்று; தவிர்க் கத்தக்க திருமணமும் அன்று. சட்டப்படி செல்லத் தக்க திருமணம் ஆகும். ஆனால் குறிப்பிட்ட வயது அடையுமுன் திருமணம் செய்பவர்கள் குற்றவியல் நீதியின்படி தண்டிக்கத்தக்கவர்கள் என்பது இச்சட் டத்தின் 18-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

மணமக்களுள் யாராவது ஒருவரின் வழக்காற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திருமணச் சடங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதும் அந்தச் சடங்குகளில் 'சப்தபதி'யும் ஒன்று என்றால் ஏழாம் அடி வைத்தவுடன் திருமணம் பூர்த்தியடைகிறது என்பதும் இச்சட்டத்தின் 7-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளன. அவ்வாறான சடங்குகள் இல்லாத திருமணம் செல்லாது என்று தமிழ்நாடு உயர்நீதி மன்றம் சில வழக்குகளில் தீர்ப்பளித்தது. தமிழ்நாட் டில் திராவிட இயக்கம் தோன்றியபின் மேற்படி சடங்குகள் இல்லாமல் பல திருமணங்கள் நடைபெற் றன; நடைபெற்றும் வருகின்றன. அவை சுயமரி யாதை அல்லது சீர்திருத்தத் திருமணங்கள் என்று சொல்லப்படுகின்றன. நடைபெற்ற அத்திருமணங் களும் நடைபெறவிருக்கும் திருமணங்களும் சட்டப் படி செல்லுபடியாகும் என்று அறிவித்து 1967-ஆம் ஆண்டில் தமிழக அரசு ஒரு சட்டம் இயற்றித் திருத் தம் செய்தது (Tamil Nadu Act 21 of 67). மண மக்கள் இருவரும் உறவினர், நண்பர்கள், மற்றவர் முன்பாகக்கணவன் மனைவியாவதாக அறிவித்தாலோ அல்லது மாலை மாற்றிக் கொண்டாலோ அல்லது மற்றவர் விரலில் மோதிரம் அணிவித்தாலோ அல்லது தாலி கட்டினாலோ அது இந்தத் திருத்தத்தின்படி செல்லத்தக்க திருமணம் ஆகும். இதுதான் சுயமரி யாதை அல்லது சீர்திருத்தத் திருமணம் ஆகும். இவ் வகைத் திருமணம் தமிழ்நாட்டில் மட்டும் செல்லத் தக்கது.

இந்துக்களின் திருமணத்திற்குச் சாட்சியம் வேண் டும் என்றால் அதைப் பதிவு செய்ய இச்சட்டத்தின் 8-ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. கண வனோ மனைவியோ தகுந்த காரணமின்றி மற்றவரைப் பிரிந்து வாழ்ந்தால் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்று 9-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பிரிந்து வாழ் பவர் தம்முடன் வந்து வாழ வேண்டும் என்று வழக்குத் தொடர்பவர் கோரலாம்.

இச்சட்டத்தின் 12-ஆம் பிரிவில் சொல்லப்பட் டுள்ள காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள திருமணம் தவிர்க்கத் தக்க திருமணம் ஆகும். அவ்வாறான திருமணத்தைச் செய்துகொண்ட தம்பதிகளில் எவ ரேனும் ஒருவர் அந்தத் திருமணத்தைச் செல்லாது என அறிவிக்குமாறு நீதிமன்றத்தில் மனுச் செய்ய லாம். அதற்கான காரணங்கள்: 1. எதிர்மனுதாரின் உடலுறவு கொள்ள முடியாத தளர்ந்த நிலையினால் (Impotency) திருமணம் முழுமையடையாமலிருப்பது. 2. 5-ஆம் பிரிவில் உள்ள இரண்டாம் நிபந்த னையை மீறிய செய்கை. 3. திருமணத்திற்கு மனு தார் அல்லது அவர் காப்பாளரின் இசைவினை வன் முறையாலோ ஏமாற்றியோ பெற்ற செய்கை. ஆனால், வன்முறை நீங்கிய ஒருவருடத்துக்குள் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். அதுபோல் ஏமாற் றியது கண்டுபிடிக்கப்பட்ட ஒருவருடத்திற்குள் மனுத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு வன்முறை நீங்கிய பின்போ ஏமாற்றியது கண்டுபிடிக்கப்பட்ட பின்போ மனுதார் முழு மனத்துடன் எதிர் மனுதாரு டன் வாழ்ந்திருந்தால் அவ்வாறு மனுதாக்கல் செய்ய முடியாது. 4. எதிர்மனுதாரர் (மனைவி) திருமணத் தின்போது கருவுற்றிருப்பது. அதற்கு மனுதார் கார ணமாயிருக்கக்கூடாது. மேலும், அந்த விவரம் மனு தாரான கணவனுக்குத் திருமணத்தின்போது தெரிந் திருக்கக்கூடாது. திருமணத்திலிருந்து ஒரு வருடத்திற் குள் மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டும்.

மேற்கூறியவாறு மனுத்தாக்கல் செய்வதற்குரிய காரணங்கள் உண்டு என்பது தெரிந்தபின் மனுதார் சம்மதித்து எதிர்மனுதாருடன் உடலுறவு கொண் டால், அவ்வாறு மனுத்தாக்கல் செய்யும் உரிமையை மனுதார் இழந்து விடுவார்.

மணவிலக்குச் செய்யும் உரிமை தம்பதிகள் இரு வருக்கும் இச்சட்டத்தின்மூலம் வழங்கியிருப்பது

சிறப்பு அம்சமாகும். அதற்கான காரணங்கள் 13-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன: 1. திருமணத்திற்குப்பின் எதிர்மனுதார் மனுதாரரைத் தவிர வேறு ஒருவருடன் மனப்பூர்வமாக உடலுறவு கொண்ட செய்கை. 2. மனுதாரை எதிர்மனுதார் கொடுமைப்படுத்தியது. 3. மனுத்தாக்கல் செய்வதற்கு முன்பு இரண்டு ஆண்டுக்காலமாகக் கைவிட்டு விடுதல். 4. எதிர்மனுதார் மதமாற்றம் செய்தல். 5. மனுவுக்கு முன்பு குறைந்தது மூன்று வருடகாலமாக எதிர்மனுதார் குணப்படுத்த முடியாத கடுந் தொழு நோயால் அவதிப்படுதல். 6. மனுவுக்கு முன்பு குறைந்தது மூன்று வருடகாலமாக எதிர்மனுதார் பரவக்கூடிய பால் வினை நோயினால் பீடிக்கப்பட்டிருத்தல். 7. உலகப்பற்றைத் துறத்தல். 8. ஏழு வருடமும் அதற்கு மேலேயும் எதிர்மனுதார் உயிருடன் இருப்பதாகத் தகவல் இல்லாமலிருப்பது. 9. நீதிமுறைப்படி பிரிந்திருப்பதற்கு நீதிமன்ற ஆணை ஏற்பட்ட பின்பு ஓராண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலமான போதிலும் இருவரும் கூடி வாழாமலிருப்பது. 10. இருவரும் கூடி வாழ வேண்டும் என்று நீதிமன்றம் பிறப்பித்த ஆணையிலிருந்து ஓராண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலம் ஆன போதிலும் இருவரும் கூடி வாழாமலிருப்பது. 11. இசைவு வழி மணமுறிவு.

மேற்படி காரணங்கள் இருவருக்கும் பொதுவானவை. மணவிலக்குக் கோரக் கணவனுக்குக் கிட்டாத, ஆனால் மனைவிக்கு மட்டும் உள்ள சில காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. சம்பந்தப்பட்ட திருமணம் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நடைபெற்றிருந்தால், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு கணவன் மற்றொரு மனைவியைத் திருமணம் செய்து இருத்தல். அல்லது இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு கணவன் திருமணம் செய்து கொண்ட மனைவி மனுதார் திருமணத்தின்போது உயிரோடிருத்தல். மனுத்தாக்கல் செய்யும் காலத்தில் அடுத்த மனைவி உயிரோடில்லாவிட்டால் அவ்வாறு மனுத்தாக்கல் செய்ய முடியாது. 2. திருமணத்திற்குப் பின்பு கணவன் கற்பழித்தல், மிருகத்துடன் உடலுறவு கொள்ளுதல், பிற ஆணுடன் கணவன் இயற்கைக்கு விரோதமான உடறலுவு கொள்ளுதல் ஆகிய குற்றங்களைப் புரிவது. 3. வாழ்க்கைப் பராமரிப்புச் சட்டங்களின்படி மனைவிக்குக் கணவன் பராமரிப்புத் தொகை கொடுக்க வேண்டும் என ஆணை பிறப்பித்து, ஒரு வருடம் மற்றும் அதற்கு மேல் ஆனபோதிலும் இருவரும் உடலுறவு கொள்ளாமலிருப்பது. 4. மனைவிக்கு 15 வயது ஆகுமுன்பு திருமணமாகிய நிலையில் 15 வயது அடைந்து, ஆனால் 18 வயது அடைவதற்கு முன்பு மனைவியானவள் திருமணத்தை உதறித் தள்ளுதல்.

கணவன் மனைவியிடமிருந்து நீதிமுறைப்படியான பிரிவை (Judicial Separation) இச்சட்டத்தின் 13-ஆம் பிரிவின் 1-ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காகக் கேட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம். 13-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எல்லாக் காரணங்களுக்காகவும் மனைவி அந்தப் பரிகாரத்தைக் கோரலாம்.

தம்பதிகள் இருவருடைய இசைவுடன் மணவிலக்குக் கோரும் உரிமையானது (Divorce by Mutual concent) 1976-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. திருமணமாகி ஓராண்டு முடிவடையுமுன்பு மணவிலக்குக் கோரும் மனுத்தாக்கல் செய்யக்கூடாது. ஆனால், சிறப்புக் காரணங்களிருந்தால் அதற்கு முன்பே தாக்கல் செய்யலாம். மணவிலக்கு ஆணை ஏற்பட்ட பின்பு மேல்முறையீட்டுக் காலம் முடிவடையுமுன்போ அல்லது மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அது முடிவடையும் முன்போ மறுமணம் செய்யக் கூடாது. மேல் முறையீடு தாக்கல் செய்யும் உரிமை இல்லாவிட்டால் உடனே மறுமணம் செய்யலாம். இச்சட்டத்தின்படி வழக்குகள் நடக்கும்போது பராமரிப்புத் தொகை கொடுக்க நேரிடலாம். நிலைமையைப் பொறுத்துக் கணவன் மனைவிக்கோ அல்லது மனைவி கணவனுக்கோ பணம் கொடுக்க நேரிடலாம். மணவிலக்கு ஏற்பட்டு மறுமணம் ஆகும்வரை அத்தொகை கொடுக்க நேரிடும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி இச்சட்டத்தின் 11-ஆம் பிரிவின்படி சில களங்கங்களால் பீடிக்கப்பட்ட திருமணம் ஆரம்பத்திலிருந்தே இல்லா நிலைய (Void) திருமணம் ஆகும். 12-ஆம் பிரிவின்படி மற்றச் சில களங்கங்களால் பீடிக்கப்பட்ட திருமணம் நீதிமன்றத்தில் தவிர்க்கத்தக்க திருமணம் (Voidable Marriage) என்ற அடிப்படையில், அத்திருமணத்தைச் செல்லாதது என்று தீர்ப்பு அளிக்கலாம். அவ்வாறான திருமணங்களின் மூலம் பிறக்கும் குழந்தைகளின் கதி என்ன என்பது இச்சட்டத்தின் 16-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அவ்வாறான குழந்தைகள் தங்கள் பெற்றோரின் சட்டப்பூர்வமான குழந்தைகளாகக் கருதப்படவேண்டும் என்பதும் ஆனால், பெற்றோரின் உறவினருக்கு அக்குழந்தைகள் வாரிசாக மாட்டார்கள் என்பதும் மேற்படி 16-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளன. ஆனால், திருமணம் செய்து கொள்ளாமல் கணவன் மனைவி போல் வாழ்வதின் மூலமோ அல்லது வேறு எந்தவிதமான தகாத உறவு மூலமோ சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுக்கு (Illegitimate Children) இப்பயன் கிடையாது.

கே. சு.

**இந்துப்பூர்**: ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் அனந்தப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது வடபெண்ணை ஆற்றங்கரையை அடுத்துள்ள நகரம். இந்நகரம் அனந்தப்பூருக்கு ஏறத்தாழ 100 கி.மீ. தெற்கில் உள்ளது. இங்கு வேர்க்கடலை உடைக்கும் ஆலைகள் மிகுந்துள்ளன. அதனுடன் கைத்தறி நெசவும் பட்டு உற்பத்தியும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வூருக்குக் கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் தான் இலேபாக்சி (Lepakshi) என்னும் சிவன் கோயில் உள்ள ஊர் உள்ளது. இக்கோயில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறுவர்.

**இந்துப் பெண்களின் நலன் பேணும் சட்டங்கள்** (Acts which Promote the Interests of Hindu Women): பழைய இந்துச் சட்டத்தின்படி இந்துப் பெண்கள்குறிப்பிடத்தக்க உரிமை ஏதுமின்றி அல்லல்பட்டு வந்தார்கள். இந்தியாவை அடிமைப் படுத்தி ஆட்சி செய்து வந்தஆங்கிலேயர்கள் இந்துப் பெண்களின் அவல நிலையை நீக்கும் நோக்கத்துடன் அவ்வப்போது சில சட்டங்களை இயற்றினார்கள். 15.8.1947-ஆம் தேதியில் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு இந்திய மத்திய அரசும் மாநில அரசுகளும் அதே நோக்குடன் சில சட்டங்களை இயற்றின. அவற்றுள் முக்கியச் சட்டங்கள் இங்குக் குறிப்பிடப்படும்.

இந்துக்களில் சில வகுப்பினர் கணவன் இறந்தவுடன் அவன் மனைவி உடன் கட்டை ஏறும் கொடிய பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். இதை ஒழிக்க ஆங்கில ஆட்சியானது கி.பி. 1829-ஆம் ஆண்டில் உடன்கட்டை ஏறுதலைத் தடுக்கச் சதி ஒழிப்புச் சட்டத்தை இயற்றியது. பொதுவாக, இந்து மதக் கோட்பாட்டின்படி இந்து விதவைக்கு மறுமணம் செய்யும் உரிமை கிடையாது. ஆனால், சில பிரிவுகளில் மட்டும் மரபியல் உரிமைப்படி (Customary Right) இந்து விதவை மறுமணம் செய்வது அனுமதிக்கப்பட்டு வந்தது. கி.பி. 1856-ஆம் ஆண்டில் இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கில அரசானது இந்து விதவை மறுமணச் சட்டத்தை (Hindu Widows Remarriage Act 1856) இயற்றியது. இது எல்லா இந்துக்களுக்கும் பொருந்தும். இந்து விதவை மறுமணம் செய்வது இச்சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1955-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்ட இந்து திருமணச் சட்டத்தின்படியும் (Hindu Marriage Act 1955) இந்து விதவையின் மறுமணம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பழைய இந்துச் சட்டத்தின்படி ஓர் இந்து இறக்கும் போது அவன் தனிப்பட்ட சொத்துகள் சம்பந்தமாக அவன்தன் விதவை வாரிசுமுறையில் நான்காம் நிலையிலிருந்தாள். அதாவது, இறந்தவனுக்கு மகன், மகனுடைய மகன், மகனுடைய மகனுடைய மகன் இவர்களுள் யாரேனும் இல்லாதிருந்தால்தான் இறந்தவனுக்கு அவன்தன் விதவை வாரிசு ஆவாள். பொதுக் குடும்பச் சொத்தாக இருந்தால் இறக்கும் கணவனது பங்கு மற்றப் பொதுக் குடும்பத்திலுள்ள ஆண்களுக்குச் சேர்ந்துவிடும். பொதுக் குடும்பத்தில் மற்ற ஆண்கள் இல்லாத நிலையிலும், சொத்துகள் இறக்கும் கணவனின் தனிப்பட்ட சொத்துகளாக இருந்த நிலையிலும் விதவை அவ்வாறு 4-ஆம் வாரிசாக இருந்தாள். எனவே, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இறந்தவனின் சொத்துகளில் அவன்தன் விதவைக்குப் பங்கு கிடைக்காமலிருந்தது. இந்தக் குறைபாட்டை நீக்க 1937-ஆம் ஆண்டில் ஆங்கில அரசானது இந்துப்பெண்களுக்குச்சொத்துகளில் உரிமை வழங்கும் சட்டத்தை (Hindu Women's right to Property Act 1937) இயற்றியது.

ஓர் இந்து உயில் எழுதி வைக்காமல் இறந்தால் அவனுடைய தனிப்பட்ட சொத்துகளிலும், பொதுக் குடும்பச் சொத்துகளில் அவனுக்குள்ள பங்கிலும் அவன் தன் விதவைக்கு வாரிசு உரிமைப் பங்கு கிடைக்கும் என்பது இச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இறந்தவனின் தனிப்பட்ட சொத்துகளில் அவனது மகனுக்குச் சமமான பங்கு கிடைக்கும். பொதுக் குடும்பச் சொத்துகளில் இறந்தவனுக்குள்ள பங்கு முழுவதும் அவன் தன் விதவைக்குக் கிடைக்கும். இந்த உரிமை அடிப்படையில் அவள் பாகப் பிரிவினை கோரலாம். இந்தப் பயன் சட்டப் பூர்வமான சக விதவைகளுக்கும் பொருந்தும். அவ்வாறு அந்த விதவைக்குக் கிடைக்கும் உரிமை வரம்புடைய பாத்தியதையாக (Limited right other wise called as Widow's Estate) இருந்தது அம் மாதிரியான வரம்புடைய பாத்தியதையானது முழுப் பாத்தியதையாக (Absolute Right) 1956-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் மூலம் (Hindu Succession Act 1956) ஆக்கப்பட்டு விட்டது.

இறந்த கணவன் மற்றும் அவன்தன் ஆண்வாரிசுகளின் சொத்துகளில் வாரிசு முறைப்படி கிடைக்கும் உரிமையை அவன் விதவை மறுமணம் செய்யும் போது இழந்து விடுவாள் என்று 1856-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து விதவை மறுமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு இந்த நிலை மாறிவிட்டது. இந்த வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு விதவைக்குக் கிடைக்கும் வாரிசுரிமை முழுமையாகிறது என்பதால் அந்த முழு

உரிமையை ஒருவிதவை மறுமணம் செய்வதன் மூலம் இழக்க மாட்டாள். ஆனால், வாரிசு வழிமுறை (Succession) ஆரம்பமாகுமுன்பே ஒரு விதவை மறு மணம் செய்தால் வாரிசுமுறைப்படி கிடைக்கக்கூடிய உரிமையை அவ்விதவை இழந்து விடுவாள். உதா ரணமாக, பழைய மற்றும் புதுச் சட்டங்கள்படி இறந் தவனின் மகனின் விதவையும் ஒரு வாரிசு ஆவாள். அதாவது, விதவையான மருமகளும் ஒரு வாரிசு ஆவாள். அந்த மருமகள் அவளது மாமனார் இறக்கும் முன்பே மறுமணம் செய்திருந்தால் அந்த மாமனார் சொத்துகளில் அவளுக்குப் பங்கு ஏதும் கிடையாது. விதவை என்ற நிலையில் வாரிசுரிமை கொண்டாடும்போதுதான் அவ்வாறான மறுமணம் பாதிக்கும். உதாரணமாக, இப்போது உள்ள சட்டத் தின்படி குறிப்பிட்ட நிலையில் ஓர் இந்துவுக்கு அவன் தன் மகளும் வாரிசு ஆவாள். அந்த மகள் விதவையாகி தகப்பனின் மரணத்துக்கு முன்பே மறுமணம் செய் திருந்தாலும் கூட அவள் தன் தகப்பனுக்கு வாரிசு ஆவாள். ஏனெனில், ஒருவனின் விதவை என்ற அடிப் படையில் அவள் உரிமை கொண்டாடவில்லை.

கணவனின் சொத்துகளில் உயில் பத்திரத்தில் மூலம் இந்து விதவைக்குக் கிடைக்கும் உரிமையானது முழுமையானதாக இருந்தால், அவளது மறுமணத் தால் அவள் அந்த உரிமையை இழக்க மாட்டாள் என்பது 1856-ஆம் ஆண்டைய விதவை மறுமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அது இதுவரை உள்ள நிலையாகும். அவ்வாறு உயில் மூலம் கிடைக்கும் உரி மையானது வரம்புடைய பாத்தியதையாக இருந்தால் அதை அந்த விதவை மறுமணம் செய்வதன் மூலம் இழந்துவிடுவாள் என்பதும் ஆனால், மறுமணத்திற்குத் தெளிவாக அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அந்த உயில் மூலம் கிடைக்கும் வரம்புடைய பாத்தியத்தை மறுமணம் செய்வதால் அவ்விதவை இழக்க மாட் டாள் என்பதும் மேற்படி இந்து விதவை மறுமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன. இந்நிலை இந்நாள் வரை தொடர்ந்து வருகிறது.

கணவனிடமிருந்தும் அவன் இறந்தால் அவன் சொத்துகளிலிருந்தும் பராமரிப்புக் கோரும் உரிமை இந்துப் பெண்ணுக்குப் பழைய சட்டத்தின்படியுமிருந் தது. 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப் பராமரிப்புச் சட்டத்திலும் (Hindu Adoption and Maintenance Act 1956) மேற்படி உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குற்ற விசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவிலும் அந்த உரிமைக்குப் பாது காப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்து விதவை தன் கணவனின் தகபபனிடமிருந்தும் அந்தத் தகப்ப னின் தகப்பனிடமிருந்தும் குறிப்பிட்ட சந்தர்ப்பங் களில் வாழ்க்கைப் பராமரிப்புத் தொகை கோரலாம் என்பதும் மேற்படி 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது, அவள்தன் கணவனின் சொத்துகளில் இருந்தோ அல்லது அவள்தன் குழந்தைகளிடமிருந்தோ பராமரிப்புத் தொகை கிடைக்காத நிலையில், அப்பெண் அவ்வாறு தன் கணவனின் தகப்பனிடமிருந்தும், அவர் தகப்பனிட மிருந்தும் வாழ்க்கைப் பராமரிப்புத் தொகை கோர லாம். அவ்வாறான தகப்பன்மார்கள் தங்களிட முள்ள இறந்தவனின் சொத்துகளிலிருந்து அந்த பெண்ணுக்குப் பராமரிப்புத் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். அந்த விதவை மறுமணம் செய்தால் மேற் கூறியவாறு பராமரிப்புத் தொகை கோரும் உரிமையை இழந்து விடுவாள்.

இந்துத் தகப்பன் திருமணமாகாத மகளைக் காப் பாற்றக் கடமைப்பட்டவன். ஆனால், அந்தக் கடமை தாய்க்குக் கிடையாது. 1956-ஆம் ஆண்டைய பராமரிப்புச் சட்டத்தில் ஓர் இந்துத் திருமணமாகாத பெண் தன் தாயிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரும் உரிமை முதன் முதலாக வழங்கப்பட்டுள் ளது. ஓர் இந்து தன் தாயைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன். ஆனால், பழைய சட்டப்படி அந்தக் கடமை மகளுக்கில்லை. தாய் மகளிடமிருந்து பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையானது முதன் முதலாக மேற்படி 1956-ஆம் ஆண்டைய பராமரிப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. பழைய இந்துச் சட்டப்படி திருமணமாகாத முறை தவறிப்பிறந்த பெண் மகளைக் (Illegitimate Unmarried Daughter) காப்பாற்ற அவள்தன் பெற்றோர் கடமைப்பட்டவர் அல்லர். அந்தக் கடமையைப் பெற் றோர் மீது மேற்படி 1956-ஆம் ஆண்டைய சட்டம் சுமத்தியுள்ளது.

ஒரு குறிப்பிட்ட நிலையில் அவ்வாறான முறை தவறிப்பிறந்த பெண் குழந்தை தன் தகப்பனிட மிருந்து மட்டும் பராமரிப்புத் தொகை கோரலாம் என்பது குற்ற விசாரணை முறைச் சட்டம் 125- ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது அதாவது, திருமணம் ஆனா லும் ஆகாவிட்டாலும் சட்ட வயது அடையாமலும் தன்னைப் பராமரித்துக் கொள்ள முடியாத நிலையி லும் அந்த முறை தவறிப்பிறந்த குழந்தை இருக்க வேண்டும். சட்ட வரம்பு வயதைத் தாண்டிய போதும் சில குறைபாடுகளால் தன்னைத் தானே பராமரித்துக் கொள்ள முடியாமலும், திருமணம் ஆகாமலும் இருக்கும் முறை தவறிப் பிறந்த பெண் மகள் தன் தகப்பனிடமிருந்து மேற்படி 125-ஆம் பிரிவின்படி பராமரிப்புக் கோரலாம்.

பொதுவாகப் பழைய சட்டப்படி ஓர் இந்துப்

பெண் தன் கணவனை விட்டுப் பிரிந்து தனியாக வாழ உரிமை கிடையாது. ஆனால், கணவன் முறை தவறி நடந்தாலோ கணவன் வீட்டில் வைத்து மனைவியைப் பராமரிக்கவிருப்பமின்றி மறுத்தாலோ அல்லது வேறு எவ்விதமான நியாயமான காரணம் இருந்தாலோ கணவனிடமிருந்து தனித்து வாழும் உரிமை மனைவிக்கு உண்டு என்று சில வழக்குகளில் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அதற்குப் பின் 1946-ஆம் ஆண்டில் இந்து மணமான பெண் தனித்து வாழும் மற்றும் பராமரிப்புத் தொகை கோரும் சட்டம் (Hindu Married Women's right to separate residence and Maintenance Act ,1946) இயற்றப்பட்டது. பின்பு இச்சட்டம் நீக்கம் செய்யப் பட்டு விட்டு, 1956-ஆம் ஆண்டில் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புத் தொகை கோரும் சட்டம் இயற்றப்பட்டது. கணவன் வேறு மனைவியைத் திரு மணம் செய்வது, வைப்பாட்டியுடன் வாழ்வது, மதம் மாறுவது மற்றும் அச்சட்டங்களில் விளக்கப் பட்டுள்ள ஏனைய காரணங்களிருந்தால், பரா மரிப்புத் தொகை கோரும் உரிமையை இழக் காமலேயே மனைவி தனித்துவாழலாம் என்று அந்த இரண்டு சட்டங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உரிமை குற்றவிசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவிலும் கூறப்பட்டுள்ளது.

வாரிசுரிமைப்படி இந்து விதவைக்குக் கணவன் சொத்துகளில் கிடைக்கும் பங்கு பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் இந்து இறக்கும்போது அவனுக்கு ஆண் வாரிசும் விதவையும் இல்லாவிட் டால்தான் அவனுடைய மகளுக்கு அவன் சொத் துகளில் பங்கு கிடைக்கும் என்று பழையஇந்துச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. திருமணமாகாத மகளிருந்தால் திருமணமான மகளுக்கு அவ்வாறு பங்கு கிடைக்காது. இறந்தவனின் தாய் வாரிசுரி மைக்கு 7-ஆம் படியிலிருந்துதான் மேற்படி மகள், தாய் ஆகியவருக்கு வாரிசுரிமைப்படி கிடைக்கும் பாத்தியதை வரம்புடை பாத்தியதையாக இருந்தது. இந்த நிலை 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசு முறைச் சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டுவிட்டது. ஓர் இந்து உயில் எழுதாமல் இறந்தால் அவன் சொத்துகளுக்கு அவன் தாயும் மகளும் (திருமண மானவள், ஆகாதவள் என்ற வித்தியாசமின்றி) அவன் மகனுக்குச் சமமாக இறந்தவனின் சொத் துகளில் பங்கு பெறுவார்கள் என்று மேற்படி 1956 -ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதுவும் அந்த வாரிசுரிமை அச்சட்டத்தின்படி முழு மையானதாக இருக்கும்.

இந்துக்களின் திருமணம் புனிதமானதாகக் கருதப்படுகிறது. எனவே, மணவிலக்கைப்பொதுவாக இந்துமதம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், சில சாதியினர் மட்டும் பரம்பரை வழக்கப்படி மண விலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார்கள். 1947-ஆம் ஆண்டில் பம்பாய் மாநிலத்தில் இயற்றப் பட்ட பம்பாய் இந்துக்களின் மணவிலக்குச் சட்டத் திலும்(Bombay Hindu Divorce Act 1947), 1949-ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் இயற்றப்பட்ட சென்னை இந்து இருதுணைமணம் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டத்திலும் (Madras Bigamy Prevention and Divorce Act 1949), 1952-ஆம் ஆண்டில் சௌராட்டிர மாநிலத்தில் இயற்றப்பட்ட இந்து மணவிலக்குச் சட்டத்திலும் (Saurashtra Hindu Divorce Act 1952) முதன் முதலாக இந்துப் பெண் ணுக்கு மணவிலக்குக் கோரும் உரிமை சட்டப்படி வழங்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் இந்துத் திருமணச் சட்டத்தை இந்தியக்குடி யரசு இயற்றியது. இதன் மூலம் மேற்படி மாநிலச் சட்டங்கள் செல்லாதாகிவிட்டன. இந்த 1955-ஆம் ஆண்டைய சட்டத்தில் மண விலக்குக் கோரும் உரிமை இந்துப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது மணவிலக்குக் கோரக்கூடிய காரணங்களும் இச்சட் டத்தில் விளக்கப்பட்டுள்ளன. மணவிலக்குப் பெறும் இந்துப் பெண் மறுமணம் புரியும்வரை கணவனிட மிருந்து பராமரிப்புக் கோரும் உரிமையானது 1955-ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டத்திலும் குற்ற விசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவி லும் வழங்கப்பட்டுள்ளது.

கணவனின் அனுமதியிருந்தால் மட்டும் இந்து விதவை ஆண் குழந்தையை மட்டும் பழைய இந்துச் சட்டப்படி தத்து எடுக்கலாம். 1956-ஆம் ஆண்டைய இந்து தத்து எடுத்தல் சட்டத்தில் இந்துப் பெண்ணுக்கு அதிகமான தத்து எடுக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. 18 வயது பூர்த்தி அடைந்த இந்துப் பெண் திருமணம் ஆகாத நிலை யில் தனக்கு மகனையோ மகளையோ தத்து எடுக்கலாம் என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள் ளது. கணவன் இறந்து போனாலோ, மணவிலக்கு ஏற்பட்டாலோ, கணவன்மதம் மாறினாலோ, கண வன் இல்லறத்தைத் துறந்துவிட்டாலோ கணவன் ஒரு மூளைக்கோளாறு உள்ளவன் என்று நீதிமன் றம் முடிவுசெய்தாலோ திருமணமான இந்துப் பெண் கணவனின் அனுமதியில்லாத நிலையிலும், ஆண் அல்லது பெண் குழந்தையைத் தத்து எடுக்கலாம் என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. தத்து எடுக்கப்படும் சலுகை முதன் முதலாக ஓர் இந்துப் பெண் குழந்தைக்கு இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள் ளது. ஆனால், அதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

உதாரணமாக, தத்து எடுக்கப்படும் பெண் குழந்தைக்குத் திருமணமாகியிருக்கக் கூடாது. மேலும், 15 வயது நிறைந்திருக்கக் கூடாது.

முதல் மனைவி உயிருடனிருக்கும்போதே இரண்டாம் மனைவியைத் திருமணம் செய்யும் வழக்கம் இந்துக்களில் அதிக அளவிலிருந்தது. இந்த வழக்கத்தை ஒழிப்பதற்காக முதன் முதலாகப் பம்பாய் மாநிலத்தில் 1946–ஆம் ஆண்டில் இந்து இருதுணை மணத் தடுப்புச் சட்டம் (Bombay Prevention of Hindu Bigamous Marriage Act 1946) இயற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 1949–ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் இந்து இருதுணை மணத் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டம் (The Madras Hindu Bigamy Prevention and Divorce Act 1949) இயற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 1950–ஆம் ஆண்டில் சௌராட்டிர மாநிலத்தில் சௌராட்டிர இந்து இருதுணை மணத் தடுப்புச் சட்டம் (Saurashtra Prevention of Hindu Bigamous Marriage Act 1950) இயற்றப்பட்டது. மேற்படி மாநிலச் சட்டங்கள் 1950–ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தின் மூலம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டன. மேற்படி சட்டங்களில் இருதுணை மணம் தண்டிக்கக் கூடிய குற்றமாக்கப்பட்டுள்ளது. மேற்படி 1950–ஆம் ஆண்டைய இந்து திருமணச் சட்டத்தின் 17–ஆம் பிரிவின்படி இருதுணை மணம் செய்பவர் இந்தியத் தண்டனைச் சட்டம் 494 பிரிவின் படி தண்டிக்கப்படத்தக்கவர். இது இருபாலருக்கும் பொருந்தும் என்றாலும், இச்சட்டம் இந்துப் பெண்களுக்கு மிகவும் நன்மை செய்யக்கூடிய சட்டமாகும். ஏனெனில், ஓர் இந்துப் பெண் இருதுணை மணம் (Bigamy) செய்வது மிக மிக அரிதாகும்.

மணச்சீர் தடுப்புச் சட்டத்தை (Dowry Prohibition Act 1961) மத்திய அரசானது 1961–ஆம் ஆண்டில் இயற்றியது. மணமக்கள் வீட்டாரில் ஒரு வீட்டார் அடுத்த வீட்டாருக்குத் திருமணத்தை உத்தேசித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ திருமணத்திற்குமுன்போ திருமணச்சமயத்திலோ அல்லது மணத்திற்குப் பின்போ கொடுத்த அல்லது கொடுப்பதாக ஒப்புக் கொண்டபொருள்தான்மணச்சீர் என்பது இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. திருமணத்திற்காக மண மக்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகள், முகமதியச் சட்டப்படி கொடுக்கப்படும் மகர் பணம் ஆகியவை இந்த விளக்கத்தில் அடங்காது. அவ்வாறான மணச்சீர் கேட்பதும் மணச்சீர் கொடுக்காததால் கொடுமைப்படுத்துவதும் குற்றவியல் நீதிப்படி தண்டிக்கக்கூடிய குற்றமாகும். இது இரு வீட்டாருக்கும் பொருந்தும். மேலும், இச்சட்டம் எல்லா மதத்தினருக்கும் பொருந்தும். எனினும், பெரும்பான்மையான இனத்தவரான இந்து சமூகத்தில் பெண்வீட்டாரிடமிருந்துதான் மணச்சீர் கேட்கும் வழக்கம் நடைமுறையில் அதிகமாக உள்ளது. எனவே, இச்சட்டம் இந்துப் பெண்களின் நலனைப் பேணும் சட்டமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**இந்து மகாசபை** என்பது இந்தியாவில் இருக்கும் அரசியல் கட்சிகளுள் ஒன்று, இந்து மக்களை ஒற்றுமைப்படுத்தும் நோக்கில் இது உருவாக்கப்பட்டது. இதனை 1906–ஆம் ஆண்டில் நிறுவினர். இந்து நலன்களைப் பாதுகாத்து இந்து இனத்தின் பெருமைக்கும் ஆற்றலுக்கும் பாடுபடும் அனைத்திற்கும் உதவுவதே இதன் நோக்கமாகும்.

இந்தியாவில் இந்து ஒருமைப்பாட்டை முன்னேற்றுவித்து இந்து நாட்டினை உருவாக்குவதே இதன் தலையாய குறிக்கோளாகும். இந்துசுத்தானத்தில் மக்களாட்சி அடிப்படையில் இந்துப் பண்பாட்டையும் மரபுகளையும் காக்கும் வண்ணம் புதியதோர் இந்து அரசினை நிலைநாட்டுவதும் இதன் நோக்கமாகும்.

முசுலிம் லீகு உருவாக்கப்பட்டு வகுப்புவாதத் தொகுதிகளை அது வேண்டியபோது இந்து மகாசபை அதனை வலுவாக எதிர்த்தது. தேசிய இயக்கங்களைச் சார்ந்த இந்துக்களும் இசுலாமியர்களும் கூட இக்கோரிக்கையை எதிர்த்தனர். இந்துக்களின் நலன்களைப் பாதுகாக்க இந்து இயக்கம் ஒன்று தேவை என்பதைத் தலைசிறந்த தேசியவாதிகளும் உணர்ந்தனர். இந்து மகாசபையைத் தொடங்கக் காரணமாயிருந்தோர் இலாலா இலசபதிராய், பண்டித மதன்மோகன் மாளவியா, சி. ஒய். சிந்தாமணி ஆகியோர் ஆவர்.

இது 1930–ஆம் ஆண்டில் அரசியலில் ஈடுபடத் தொடங்கியது. இசுலாமியருக்குக் கொடுக்கப்பட்ட மிகுதியான அரசியல் சலுகைகளை இக்கட்சியினர் கடுமையாக எதிர்த்தனர். இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் சமயத் தொடர்பான விவகாரங்களில் தலையிடாமல் இருந்த நடுநிலைக் கொள்கையை இவர்கள் கண்டித்தனர். இதனால், ஒரு காலத்தில் காங்கிரசைவிட இந்து மகாசபையில் உறுப்பினர்கள் மிகுதியாக இருந்தனர். இந்தியாவுக்குப் படிப்படியாக அரசியல் சுதந்திரம் வழங்கும் நோக்குடன் வெளியிடப்பட்ட 1935–ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் அடிப்படையில் 1937-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்துமகா சபை படுதோல்வி அடைந்தது.

மகாராட்டிரத்தைச் சார்ந்த விநாயக தாமோ

தர சாவர்க்கர் என்னும் புரட்சியாளர் 1938–ஆம் ஆண்டில் இந்துமகா சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இச்சபை மீண்டும் உணர்ச்சி பெற்றுச் செயலாற்றத் தொடங்கியது. சாவர்க்கர் புரட்சி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இந்தியாவில்இந்துக்களின் வலிமையைப் பெருக்கி இந்துக்களின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டுமெனஅவர் விரும்பினார். இந்தியாவை இந்துமயமாக்கி, இந்துக்களுக்குப் போர்ப்பயிற்சி கொடுக்க வேண்டுமெனவும் அவர் முயன்றார். இரண்டாம்உலகப் போரின்போது காங்கிரசுக் கட்சியைக் கலக்காமல் இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தியதைத் தொடர்ந்து மாநில ஆட்சிகளைத் துறந்துவிட்ட காங்கிரசின் செயலைச் சாவர்க்கர் ஏற்றுக்கொள்ளவில்லை. காந்தியடிகள் முசுலிம் லீகுடன் இணைந்து ஒப்பந்தம் வேண்டியதையும் அவர் குறை கூறினார். சாவர்க்கர் 1943–ஆம் ஆண்டில் இந்து மகாசபையின் தலைவர் பதவியிலிருந்து விலகினார். அவருக்குப்பின் வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் சியாம் பிரசாத்து முகர்சி தலைவரானார். பாகிசுத்தான் கோரிக்கையைச் சியாம் பிரசாத்து முகர்சியும் கடுமையாக எதிர்த்தார்.

முசுலிம் லீகின் பாகிசுத்தான் கோரிக்கை நாளுக்கு நாள் வலுவடைந்து வந்தமைக்குக் காங்கிரசு காட்டும் அளவுக்கு மீறிய சலுகைகளே காரணம் என்று இந்து மகாசபை குறை கூறியது. எனினும், இந்தியாவை இந்தியா என்றும், பாகிசுத்தான் என் என்றும் இரண்டாக ஆங்கிலேயர் பிரித்தனர்.

இந்திய விடுதலைக்குப் பின்னரும் இது பெயரளவில் செயற்பட்டு வருகிறது. போபட்கர், கோகுல் சந்து நாரங்கு, பானர்சி என்போர் இச்சபையின் தலைவராகப் பணியாற்றினர். இதன் தலைமை அலுவலகம் தில்லி மாநகரில் 'மந்திர் மார்க்கம்' என்னும் சாலையில் உள்ளது. இதனை 'இந்து மகாசபா பவன்' என்பர். இது இலட்சுமி–நாராயணர் கோயிலுக்கு அண்மையில் உள்ளது.

**இந்து மதம்**: வரலாற்றுக் காலத்துக்கு முன்னர், மிகவும் செழிப்பான நாகரிகத்தோடு விளங்கிய சிந்து நதி பாயும் சமவெளிப் பகுதியில் வாழ்ந்தவர்கள் இதனைத் தோற்றுவித்தனர். வரலாற்றுக் காலத் தொடக்கத்திலிருந்து பல்வேறு இனக் குழுவினர், பல்வேறு பண்பாட்டினர், பல்வேறு மொழியினர் வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் இந்தியாவிற்குள் புகத் தொடங்கினர். இங்ஙனம் வந்தவர்கள் சிந்து நதியின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்களை இந்துக்கள் என்று அழைத்தனர்.

இந்து என்ற சொல் முதலில் சிந்து நதி பாயும் நாட்டைக் குறிப்பதாக இருந்தது. பின்னர் அச்சொல் அந்த நாட்டு எல்லைக்குள் வாழ்ந்தவர்களைக் குறித்தது. நாளடைவில் அது தொல்குடி மக்கள், காட்டு மனிதர்கள்,முற்றும் நாகரிகமடையாதவர்கள், பண்பட்ட திராவிடர்கள், வேத காலத்து ஆரியர்கள் ஆகிய அனைவரையும் குறிக்கும் சொல்லாகப் பொருள் வளர்ச்சி பெற்றது.

இந்த நாகரிகம் பாஞ்சாலத்திலிருந்து கங்கைச் சமவெளியில் பரவி, அங்கிருந்த பழங்குடி மக்களின் வழிபாட்டோடு கலந்தது. பின்னர் இது தென் திசையில் படர்ந்து, அங்கு நன்கு வளர்ந்து மேம்பாடுடனிருந்த திராவிட சமயத்துடன் இரண்டறக் கலந்தது. இதிகாசக் காலத்தில் திராவிட, ஆரியப் பண்பாடுகள் கலந்தன. அக்காலத்தில் வேத மதம் என்ற நிலை மாறி, இது இந்து மதம் என ஆயிற்று.

இந்து மதத்தின் கூறுகளாகக் கௌமாரம், சைவம், காணாபத்தியம், சௌரம், வைணவம், சாக்தம் ஆகிய ஆறு உட்சமயங்கள் தோன்றின. முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவது கௌமாரம். கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவது காணாபத்தியம்.சூரியனைக் கடவுளாகக் கொண்டு வழிபடுவது சௌரம். சிவன், விட்டுணு, சக்தி ஆகியோரை முழுமுதற்கடவுளாகக் கொண்டு முறையே சைவம், வைணவம், சாக்தம் ஆகிய உட்சமயங்கள் வழிபடுகின்றன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் காலத்தில் இவை நெறிமுறைப்படுத்தப்பட்டுச் சீராகப் பரவத் தொடங்கின. இவை பின்னர் அறுவகைச் சமயங்கள் என வழங்கப்பட்டன.

இயற்கைச் சக்திகளை வழிபட்ட வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து ஏறத்தாழ நான்கு அல்லது ஐயாயிரம் ஆண்டுக் காலமாக, இந்து மதம் ஆன்ம சிந்தனையிலும் அனுபவங்களிலும் வழிபாட்டு முறைகளிலும் பிற மதங்களைத் தன்னுட் சேர்த்துக் கொள்ளும் ஈர்ப்புத் தன்மையிலும் பல்வேறு திருப்பங்களைக் கண்டது.

இந்தியாவில் வாழும் மக்கள் யாவரும் எச்சமுதாயத்தைச் சேர்ந்தவராயினும் எந்தத் தெய்வத்தைத் தொழுபவராயினும், வெவ்வேறு சடங்காசாரங்களைச் செய்வோராயினும் அவர்கள் அனைவரும் இந்துக்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

அழிவற்றதும் எல்லாவற்றையும் கடந்ததும் வாலறிவுடையதும் குணமற்றதும் அருவமுமான பரம்பொருளை வழிபடுவோர் சுத்த ஞானம் பெற்ற பெரியோர் ஆவர். நிர்க்குணபிரமத்தை அல்லது உயர்ந்த குணங்களை உருவகமாக வடிவம் அமைத்து உருவநிலையிலான இறைவனைவழிபடுவோர் அடுத்த

நிலையினர். அவதாரங்களாகிய இராமன், கிருட்டிணன் போன்றோரை வணங்குபவர் அவர்க்கடுத்த நிலையினர். பல்வேறு புராணங்களில் வரும் தேவதைகள், முனிவர்கள், மகான்கள், மூதாதையர், பெரியோர் ஆகியோரை வழிபடுவோர் அடுத்த நிலையினர். சிறு தெய்வங்களையும் பூதங்களையும் வழிபடுவோர் கடைசி நிலையில் உள்ளனர். இவ்வாறு கடவுள்பால் நம்பிக்கை உடைய பல சம்பிரதாயங்களின் கூட்டாக இந்துமதம் விளங்குகிறது. இது பல்வேறு கொள்கைகளையுடைய மதப் பிரிவுகளை அரவணைத்துத் தன்னுள் ஒருமைப்படுத்திக் கொண்டுள்ளது. 'ஒரு குறிப்பிட்ட சமய தத்துவமே வீடுபேற்றிற்கு வழிகாட்டும்; இதனை ஏற்காதுபோனால் பெரும் பாவத்தைச் செய்தவனாகி, ஒருவன் மீளா நரகில் வீழ்வான்' என்பது போன்ற வறட்டுப் பிடிவாதக் கொள்கை இந்து மதத்தில் இல்லை.

இந்துமதம் எச்சமயக் கொள்கையையும் நல்ல எண்ணத்துடனும் மரியாதையுடனும் வரவேற்றுத் தன்னுள் ஒருமைப்படுத்தித் தன்னுருவாக்கிக் கொள்ளும் ஆற்றலுடையது. ஒழுக்கந்தான் முக்கியமே தவிர, நம்பிக்கையும் அதன்வழிப்பட்ட சடங்குகளும் முக்கியமானவை அல்ல. எனவேதான், சிறந்த வீரராகப் போற்றப்பட்ட மூதாதையர், அந்தந்த இடத்தில் புகழ் பெற்றிருந்த பக்தர்கள், கிரகங்கள், குல தெய்வங்கள், வாழ்வில் பயன் தந்து நின்ற விலங்குகள், பறவைகள், மரங்கள் முதலான எல்லாரும் பரந்த இந்துக் கோவில்களில் இடம்பெற்றுள்ளனர். ஆனால், இவர்கள் யாவரும் ஒரே பரம் பொருளின் கூறுகள் என்ற கருத்து மட்டும் ஓங்கியே நிற்கிறது.

பெயரில் வேறுபாடு இருப்பதை இந்துக்கள் பொருட்படுத்துவதில்லை. பிரமன், திருமால், சிவன், முருகன், விநாயகன், காளி, வரலாற்றில் காணும் மகான்களின் பெயர்கள் யாவும் ஒரு பரம்பொருளைச் சுட்டுவதற்கே வழங்கப்பட்டன. இதனாலேயே விருப்பத் தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமையை இந்து மதம் ஏற்கிறது. என்றாலும், அதன் அடிப்படைத் தத்துவமான 'உண்மைப் பொருள் (சத்) ஒன்றே' என்ற ஆழ்ந்த சிந்தனையின் அடித்தளத்திலிருந்து அது அணுவளவும் பிறழ்வதில்லை.

ஒரு மனிதன் எந்நிலையில், எதை, எப்படி வழிபட்டாலும் ஆன்மிகத் துறையில் அவன் வளர்ந்தோங்குவதற்கு உறுதுணை செய்வதே இந்து மதத்தின் தலையாய கோட்பாடு.

மனிதன் எவனாயினும் அவனை மனிதனாக மதிப்பதும், சமயச் சகிப்புத் தன்மையும், பரம் பொருள் நாட்டத்தில் அசையாத பற்றுக் கொள்வதுமே இந்து மதத்தின் சாரமான கொள்கைகள் எனலாம்.

கிறித்தவர்களுக்கு விவிலியமும், முகம்மதியர்களுக்குக் குர்ஆனும் இருப்பதுபோல இந்துக்களுக்கு வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை போன்றவை இருக்கின்றன.

இந்து மதம் தொன்மைத் தொடர்போடு காலத்திற்கேற்ற வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் பெற்று, பல முறைகளில் முன்னேறியுள்ளது. வேதங்களில் கூறப்படுகிற கரும காண்டங்களை ஒதுக்கிவிட்டு உபநிடதங்களில் ஞானகாண்டம் தோன்றியுள்ளது.

உபநிடதங்கள் தத்துவ ஆராய்ச்சியில் புகுந்து வெறும் வாதம், எதிர்வாதங்கள் மலிந்த காடாகிவிடவே, உண்மையையும் பண்பையும் மக்கள் பின்பற்றி நடந்தால் போதும், அதுவே உயர்வானது, தெய்விகமானது என்ற அறைகூவல் எழுந்தது. வரட்டுப் பேச்சும் வீண் வாதங்களும் மண்டிப்போன அந்தக் காலத்தில்தான் உள்ளத் தூய்மையும் அசையா இறை நம்பிக்கையும் கொண்டு பயன் கருதாத நற்செயல் புரிதலே சமய அறநெறி என்பதை வலியுறுத்தும் பகவத்கீதை தோன்றிற்று.

மனிதன் வெறும் உணர்ச்சிப் பொறிகளால் இயங்கும் இயந்திரமல்லன். அவனை ஆட்டிப் படைத்து அடிமை கொள்ளும் சக்திகளை அவனது ஆன்மா வென்று நிற்கக் கூடியது. ஆன்மாவைக் கொண்டே ஆன்ம சித்தியாகிய முன்னேற்றம் அடையவேண்டும் என்று கீதை அறிவுறுத்துகிறது.

வீடுபேறு எனப்படுவது ஆன்மா தன்னையே உணர்வதாகிய உயர்ந்த அனுபவம் ஆகும். பரம் பொருளுடன் ஆன்மா கலந்து நிறைவினை எய்துவதே வீடுபேறு. இதுவே முடிவான பேரின்பத்தைத் தருவது. மற்றச் செயல்கள் எல்லாம் இதை அடைவதற்கான வழி முறைகளே. இந்த வழிமுறைகளை ஞானமார்க்கம் (அறிவு வழி), பக்தி மார்க்கம் (அன்பு நெறி), கரும மார்க்கம் (அறநெறிச் செயல் வாழ்வு) என்று மூன்று பகுதிகளாகச் சொல்வார்கள்; எனினும், அவை தனித்தனியே நிற்பன அல்ல.

ஞானம், பக்தி, கருமம் என்னும் முந்நெறிகளை ஒட்டியே சமுதாய நிலையில் வருணாசிரம தருமங்கள் தோற்றுவிக்கப்பட்டன. சமுதாய மேம்பாட்டிற்காகத் தொழில்நிலையை அடிப்படையாகக்கொண்டு இவை நிறுவப்பெற்றன. இவ்வாறே தனிமனித வாழ்வில் மாணவநிலை (பிரமசரியம்), இல்லறம், காட்டில் வாழ்வு, துறவறம் என்ற நான்கு நிலைகள் தோன்றின. இவை ஒருவனின் வாழ்க்கை நிலைப்

படிமுறைவளர்ச்சி மேம்பாட்டைக் குறிக்க எழுந்த குறியீடுகள்தாம். மாணவர் ஆயினும் இல்லறத்தார் ஆயினும் துறவி ஆயினும் அவ்வந்நிலையில் நின்றே தத்தம் தகுதியால் நிறைவினை எய்துதற்கு உரியர். இந்நிறைவான வளர்ச்சி மேம்பாட்டின் முடிவு சீவன் முத்தன் அதாவது உயர்ந்த ஆன்ம நிலை பெறுதல் என்பதாம்.

உயர்ந்த ஆன்மாக்கள் என்போர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உயர் மனநிலை பெற்றவர். கருமவினைக் கோட்பாடு, மறுபிறப்பு, அலதாரக் கொள்கை, கோவில் வழி பாடு, உருவ வழிபாடு முதலியவற்றை உடன்பட்ட வாழ்க்கை நெறியுடையவராயினும், இச்சான்றோர் 'அன்பே கடவுள்' ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற உயர்வற உயர்ந்த கோட்பாட்டில் ஊறித் திளைப்பர்.

இவர்கள் யாரையும் தம்மவராகவும் தமக்குச் சமமானவராகவும் நினைப்பவர். இவர்களே வீடு பேற்றிற்கு உரியர்.

இந்து மதம் என்ற தொடர் பழமை வாய்ந்த தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலோ பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களிலோ திருக்குறளிலோ காணப்பெறவில்லை. மணிமேகலையில்தான் (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு) மதம் என்று பொருள்படும் சமயம் என்ற சொல் முதற்கண் காணப்பெறுகிறது. 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை'யில் கடவுள் இவ்வுலகைத் தோற்றுவித்து இயக்குகிறார் என்ற தத்துவத்தில் பிறந்து, மக்களின் வழிபாட்டு முறைகளை வகுத்து, சமுதாய வாழ்வை ஒழுங்குபடுத்தும் மதங்களையும் வேத அடிப்படையில்லாத சமணம், புத்தம் போன்ற சமயங்களையும் உலோகாயதம் உள்ளிட்ட ஞானத் தத்துவக்கோட்பாடுகளாகிய தரிசனங்களைப் பற்றிய செய்திகளையும் காணலாம். இங்குக் குறிக்கப்பெறும் வைதிக மார்க்கம் என்பது இந்துசமய நெறியே ஆகும். எனினும், இந்து என்ற சொல் இங்கும் காணப்பெறவில்லை.

தொல்காப்பியத்தில் திருமால், முருகன், வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை முதலிய திணைநிலத் தெய்வங்களும் அவற்றின் வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

இந்நிலத்தெய்வங்களுக்கு எல்லாம் மூலமாக இவற்றைக் கடந்து விளங்கும் பரம்பொருள் ஒன்று உண்டு என்ற கருத்தையும் தொல்காப்பியர் காலத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். இதனைக் கொடிநிலை கந்தழி... கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்ற தொல்காப்பிய நூற்பாவினால் அறியலாம்.

மேலும், 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப' என்னும் தொடரால் தொல்காப்பியர் காலத்திலேயே தனி மனிதனுக்குரிய விருப்பத் தெய்வ வழிபாட்டு நிலை ஒப்புக்கொள்ளப்பட்டு நிலை பெற்றிருந்ததையும் உணரலாம். இத்தகைய கோட்பாடுகள் எல்லாம் இந்து மதத்திற்கு ஏற்புடையனவே.

இந்து மதம் இமயம் முதல் குமரி வரை பரந்து இன்றும் இயங்கி வரும் வலிமை பொருந்திய ஒரு மாபெரும் மதமாகும். இன்றைய இந்தியாவின் வட கோடியிலுள்ள இமயத்தில் கைலாசநாதர் ஆகிய சிவலிங்க வழிபாடும் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரியில் பராசக்தியாகிய அம்மன் வழிபாடும் சிறப்பாக நிகழ்கின்றன. இதனாலேயே டாக்டர் எசு. இராதாகிருட்டிணன், 'இந்துமதம் தொடர்ந்து நீடிக்கும் ஓர் இயக்கம்; தேங்கி விட்ட நிலை அன்று; என்றும் இயங்கும் ஒரு முயற்சி; முடிந்து விட்ட முறையன்று; வளர்ந்து வரும் ஒரு பண்பு; நின்று விட்ட தோற்றம் அன்று' என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

அன்பும் அருளும் உடைய கடவுள் ஒருவர் உண்டு என்பதில் நம்பிக்கை உடையதும், சகிப்புத் தன்மை கொண்டதும், வளர்ச்சி நிறைந்த ஆற்றல் கொண்டதுமான இந்து மதம் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு ஒரு வாழ்க்கைமுறை.

வாழ்க்கைக்கு ஒரு பிடிப்பையும் சிந்தனைக்கு வளத்தையும் உள்ளத்திற்கு அமைதியையும் ஆன்மாவிற்கு உயர்வையும் தரவல்லதே இந்து மதம்.

இறைவனை அடைவதற்குப் பத்தி, பூசனை, வழி பாடு, அறநெறி வாழ்வு, அன்புள்ளம், பொதுநலத் தொண்டு ஆகிய எளிய வழிகளே போதுமானவை என இன்றைய இந்து மதம் எடுத்தியம்புகிறது.

பூ. அ.

**இந்து மறுமலர்ச்சி:** இந்தியா கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடையில் இங்கிலாந்து அரசின் நேரடியான ஆட்சியின்கீழ் வந்தபோது இந்நாடு இடைக்காலத்திலிருந்து புதிய காலத்திற்குச் சென்றது. அது சமயம் இந்தியர்கள் வாழ்வும் மறுமலர்ச்சி அடைந்தது. இந்தியர்கள் ஆங்கிலேயர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். அத்தொடர்பு இந்தியர்களிடையே இந்து சமய, சமூக, கல்வி ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. அறிவியல் கண்ணோட்டத்துடன் மனித வாழ்க்கையை நோக்கிய

ஆங்கிலேயர்கள் இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், ஏற்றத் தாழ்வுகளை மாற்றியமைக்கவும், அறிவியல் முறை யிலான சிந்தனைகளைத் தூண்டவும் முன்வந்தனர். ஆங்கிலக்கல்வி இந்நாட்டில் பரவியதால் இந்தியர்கள் இந்திய சமுதாய அமைப்பில் புதிய சீர்திருத்தங் களைப் புகுத்த விரும்பினர். இக்கல்வி மேலை நாடு களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற் குப் பெரிதும் உதவியது. இதனால், மேலைநாட்ட வரின் முற்போக்குக் கொள்கைகளும் இந்தியாவில் பரவ வாய்ப்புப் பெற்றன. இவை படித்த இந்தியர் களின் வாழ்வில் மறு மலர்ச்சியை வளர்க்கத் துணை யாய் நின்றன. மேலை நாட்டுக் கல்வியும் தொடர் பும் பிரமசமாசம், பிரார்த்தனை சமாசம் போன்ற சமுதாய, சமய இயக்கங்கள் ஏற்படக் காரணமாய் இருந்தன. கிறித்தவப் பாதிரிகள் இந்துக்களைக் கிறித்தவர்களாக மாற்றுவதைத் தடுத்து நிறுத்து வதற்கு வைதிக இந்துக்கள், ஆரிய சமாசம் என்ற ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

பிரம சமாசம்: பிரம சமாசத்தைத் தோற்று வித்தவர் இராசாராம் மோகன்ராய் (கி.பி. 1774-1833). இவர் வங்காளத்தில் பர்துவான் மாவட்டத் தில் உள்ள இராதாநகர் என்னும் கிராமத்தில் ஒரு செல்வ அந்தணர் குலத்தில் பிறந்தார். இவர் முத லில் பாடலிபுத்திரம் என்ற நகரிலிருந்த பள்ளியில் பாரசீக மொழியும் அரபு மொழியும் கற்றார்; பிறகு காசிக்குச் சென்று வட மொழியும் வேதநூல்களும் கற்றார். வங்காளத்தில் கிழக்கிந்திய வணிகக் குழு வில் சில ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின் கல்கத்தாவிலேயே தங்கிச் சமய, சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவர் தம் 16-ஆம் வயதில் உருவ வழிபாட்டுக்கு மறுப்பு ஒன்று எழுதினார்; இதனை அச்சிட்டு இலவச மாக வழங்கினார். அதன்பின் வேதங்களிலும் உப நிடதங்களிலும் தாம் நல்லவை என்று எண்ணிய பகுதிகளை மொழிபெயர்த்து வெளியிட்டார். இவர் உருவ வழிபாடு பற்றிக் கி.பி. 1819-இல் நடைபெற்ற சொற்பொழிவில் கலந்து கொண்டு வெற்றி பெற் றார். ஆண்டவன் ஒருவனே; எல்லாச் சமயத்தவர் களிடமும் ஒருமைப்பாடும் சமத்துவமும் நிலவ வேண்டுமென்பது இவரது முக்கிய நோக்கமாகும். ஒரே தெய்வ வழிபாட்டுக் கோட்பாட்டைப் பரப்பக் கி.பி. 1825-இல் இவர் வேதாந்தக் கல்லூரியை நிறுவி, இந்து சமயத்தில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களை ஒழிக்க விரும்பினார். எல்லாச் சமயங் களிலுமுள்ள சிறந்த கூறுகளைச் சேர்த்து, உருவமில் லாத பரம்பொருளை வணங்குவதற்கென்று பிரம சமாசம் என்ற சமய வழிபாட்டு இயக்கத்தைக் கி.பி. 1828-இல் வங்காளத்தில் தொடங்கினார். சாதி சமய வேற்றுமையற்ற சமுதாயத்தைப் படைப்பதே இச் சமாசத்தின் தலையாய நோக்கமாகும். இதற்கென இவர் ஓர் ஆலயத்தை நிறுவி அனைவரும் ஒன்று கூடித் தொழுவதற்கு வழிவகை செய்தார். அதில் உருவங்களை வைப்பதும் சடங்குகள் செய்வதும் அனுமதிக்கப்படவில்லை. இவரை இந்துமதச் சீர் திருத்தவாதிகளின் முதல்வர் எனக் குறிப்பிடுகின்ற னர். சாதிக் கொடுமைகள், சதி அல்லது உடன் கட்டை ஏறுதல், தீண்டாமை போன்ற சமுதாயக் கொடுமைகளை அகற்றுவதற்கும் பெண்களின் நிலையை உயர்த்திச் சம உரிமை அளிப்பதற்கும் இச் சமாசம் பெரிதும் பாடுபட்டுள்ளது. உடன்கட்டை ஏறுவதைத் தடைசெய்யும் சட்டத்தை வில்லியம் பெண்டிங்கு பிரபு உருவாக்குவதற்குப் பெரிதும் உத வியவர் இராசாராம் மோகன்ராய். ஆகவே, இவர் இந்திய மறுமலர்ச்சியின் தந்தையாவார். சமய சமூகக் கொடுமைகளில் சில நீக்கப்பட்டதால் வங்காளத்தில் பொதுமக்களிடத்தில் நாட்டுப் பற்றை உருவாக் கினார். பின்னால் எழுந்த தேசிய இயக்கங்களுக் கெல்லாம் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

இராசாராம் மோகன்ராய் மறைவுக்குப்பின் தேவேந்திரநாத தாகூர் (கி.பி. 1818-1905) இச்சமாசத் தின் நிருவாகப் பொறுப்பேற்றார். இந்து சமயத்தின் முக்கியக் கோட்பாடுகளை இச்சமாசத்தின் மூலம் தாகூர் பாதுகாத்தார். கேசவ் சந்திர சென் (கி.பி. 1834-1884) தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து இச்சமாசம் செல்வாக்குப் பெற்றது. இவர் இச்சமாசத் தைத் தேசிய அளவிற்கு விரிவுபடுத்தினார். பிரம சமா சத்தில்கி.பி. 1865-ஆம் ஆண்டு ஒரு பிளவு ஏற்பட்டது. இதன் விளைவாகத் தேவேந்திரநாத தாகூர் தலை மையில் இயங்கிய சமாசத்தை ஆதி பிரம சமாசம் என்றும், கேசவ் சந்திர சென்னின் தலைமையில் இயங்கிய சமாசத்தை முற்போக்கு இந்திய பிரம சமாசம் என்றும் பெயர் மாற்றம் செய்தனர்.

பிரார்த்தனை சமாசம்: மற்றொரு சமய சமூக சீர் திருத்த நிறுவனம் பிரார்த்தனை சமாசமாகும். பம்பா யில் கி.பி. 1867-ஆம் ஆண்டு கேசவ சந்திர சென் என் பவர் இச்சமாசத்தை ஆரம்பித்தார். இதன் தலைவர் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்கர் (கி.பி.1823-1898) ஆவார். ஆர்.சி. பந்தார்கரும் (R.G. Bandarkar) நீதி பதி மகாதேவ் கோவிந்த ரானடேயும் (கி.பி.1842-1901) இச்சமாசத்தின்சிறப்புமிக்க உறுப்பினர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் இந்து சமயத்தில் நிறைந் திருக்கும் குறைகளையும் ஒவ்வாத செயல்களையும் அகற்ற முயன்றனர்.

மக்களிடையே கடவுள் வழிபாட்டை ஊக்குவிப்பதே பிரார்த்தனை சமாசத்தின் தலையாய நோக்கமாகும். இச்சமாசம் பிரார்த்தனை மூலமாகப் பக்தியைப் பெருக்க முனைந்தது. இந்து சமய வரம்பிற்குள் இருந்து கொண்டு சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்ய இச்சமாசம் விரும்பியது. பல குலத்தினர் ஒன்று சேர்ந்து உணவு அருந்துதல், கலப்புத் திருமணங்கள், விதவை மறுமணங்கள், பெண்களின் நிலையை உயர்த்தல், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை மேம்பாடடையச் செய்தல் ஆகியவற்றைச் செயற்படுத்த இச்சமாசம் அரும்பாடுபட்டது. இது பெற்றோரால் கைவிடப்பட்ட திக்கற்றவர்களுக்குப் புகலிடம் ஒன்றை அமைத்தது; இரவுப் பள்ளிக்கூடங்களை நடத்தியது. பெண்கள் மன்றங்களை அமைத்துப் பெண்களுக்குக் கல்வி கற்பித்தது. இச்சமாசம் பண்டார்ப்பூரில் ஒரு திக்கற்றோர் இல்லத்தை நடத்தியது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை மேம்படுத்துவதற்காக ஒரு தொண்டு நிலையத்தை அமைத்தது. நீதிபதி இரானடே கி.பி. 1884–85-ஆம் ஆண்டு தக்காணக் கல்விக்கழகம் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். இவர் தம் வாழ்நாள் முழுவதையும் இச்சமாசத்தின் வளர்ச்சிக்குச் செலவிட்டார்.

ஆரிய சமாசம்: சமய, சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்யத் தீவிரமாக ஈடுபட்ட நிறுவனம் ஆரிய சமாசமாகும். சுவாமி தயானந்த சரசுவதி (கி.பி. 1824–1883) என்பவரால் ஆரிய சமாசம் தோற்றுவிக்கப்பட்டது. இவர் கி.பி. 1824-இல் குசராத்தில் மோர்வி மாவட்டத்தில் உள்ள தங்கரா (Tangra) என்னும் சிற்றூரில் ஒருவைதிக பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் மூலசங்கர். தயானந்தர் மதுராவிலிருந்த சுவாமி நிரஞ்சனானந்த சரசுவதி என்னும் பெரியாரிடம் வேதமும் சாத்திரமும் பயின்றார். உலக மக்கள் எல்லோரும் ஒரே சமுதாயமாக வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் தயானந்தர் ஆரிய சமாசத்தைக் கி.பி.1875-இல் நிறுவினார். அவருடைய அறிவுரை, ‘வேதங்கள் இறைவனுடைய அருள்வாக்கு; வேதங்களுக்கு மாறுபட்டவை நம்பத்தக்கனவல்ல; சகல மக்களையும் ஒரே சமுதாயமாக இணைக்கவல்ல சாதனம் வேத உபதேசமே’ என்பதாகும். வேதங்களுக்குப் புதிய விளக்கங்களைத் தந்தார். வேதங்களைத் தவிர ஏனைய புராணங்களை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆரிய சமாசம் சாதி வேற்றுமைகளை ஒப்புக்கொள்வதில்லை; இளம்பெண் மணத்தையும் பலதார மணத்தையும் கண்டிக்கிறது; இளங் கைம்பெண் மணத்தையும் ஒரே மனைவி மணத்தையும் ஆதரிக்கிறது. தயானந்தர் தம் கருத்துகளைச் ‘சத்தியார்த்த பிரகாசம்’ (Satyartha Prakash) என்னும் நூலின் மூலம் பரப்பினார்.

இச்சமாசம் இந்தியர்கள் இசுலாம், கிறித்தவம் போன்ற சமயங்களின் மீது மோகங் கொண்டதை ஓரளவு தடை செய்தது. வேத வாழ்க்கையே வீடு அளிப்பதால் இந்துக்கள் அல்லாதாரான பிற சமயத்தினரைத் தூய்மை செய்து தாய் மதத்தில் சேர்த்துக் கொண்டது. இதனைத் தூய்மை இயக்கம் (Suddhi Movement) என்று குறித்தனர். சமுதாயச் சீர்திருத்தங்கள், பழங்காலக் குருகுலக் கல்வி முறையைப் பரப்புதல் ஆகியவை போன்ற நற்பணிகளை இச்சமாசம் செய்துள்ளது. தயானந்தர் தோற்றுவித்த கல்வி நிறுவனங்கள் நாட்டுப்பற்றை உண்டாக்கும் நிலையங்களாகப் பணியாற்றின. இவர் தொண்டுகள் நாட்டு மக்களை இந்தியச் சமயத்திலும் பண்பாட்டிலும் பற்றுக் கொள்ளும்படி தூண்டின. வடமொழி மயமான இந்தியே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று இச்சமாசம் விரும்பியது. இந்தி மொழிக்கு நாகரி எழுத்துகளை முதன் முதல் பயன்படுத்தியவர் தயானந்தரேயாவார். ‘சத்யமேவ சயதே’ என்ற மந்திரத்தை இந்தியருக்கு வழங்கியவர் இவரே.

சுவாமி தயானந்தருக்குப் பிறகு இச்சமாசத்தின் பணி இலாலா அன்சுராசு, பண்டித குருதத்து ஆகியோரால் பின்பற்றப்பட்டது. ஆங்கிலக் கல்வியறிவின் இன்றியமையாமையை உணர்ந்த இலாலா அன்சுராசு கி.பி. 1885-இல் இலாகூரில் தயானந்தா ஆங்கில வேதப்பள்ளியை நிறுவினார். இது ஒரு கல்லூரியாக மாறியது. இச்சமாசம் சமய வளர்ச்சிக்கும் தேசிய ஒற்றுமைக்கும் அயராது பாடுபட்டது.

இராமகிருட்டிண இயக்கம்: இராமகிருட்டிண பரமஅம்சர் (கி.பி. 1836-1886) இந்து சமய மறுமலர்ச்சிக்கும் உலக ஆன்மிக முன்னேற்றத்திற்கும் ஞான விழிப்பை உண்டுபண்ணினார். இவர் வங்காளத்தில் ஊக்ளி ஆற்றங் கரையிலுள்ள கமார்புக்கர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் இயற்பெயர் கதாதர சட்டர்சி. இவர் தம் 23-ஆம் வயதில் சாரதாமணி தேவி என்றசிறுமியை மணந்தார். இவர் கி.பி. 1855-இல் கல்கத்தாவுக்கு அருகில் தட்சிணேசுவரம் என்னும் ஊரில் உள்ள காளிகோயிலில் பூசாரியாகப் பணியாற்றினார். இவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் மிக உயர்ந்த ஆன்மிக ஞானியாக விளங்கினார்.

இராமகிருட்டிணர் சமயங்கள் அனைத்தும் வீடுபேறடைய வழிகாட்டும் பல வழிகளென்றும் எம்மதமும் சம்மதமே என்றும் கூறினார். இவர் பரம்பொருளின் வடிவங்கள் பலவற்றிலும் உள்ள ஆண்டவன் ஒருவனே; அவனுடைய திருநாமங்

களே இராமன், கிருட்டிணன், கிறித்து, அல்லா என்பனவெல்லாம் என்ற கருத்தை வலியுறுத்தினார். இவை யாவும் ஒரே கடவுளின் மற்றப் பெயர்களே என்றும் கூறினார்.

கடவுள் நம்பிக்கையை மக்களிடையே வளர்ப்பதற்கு உருவவழிபாட்டு முறை தேவையென்று கூறினார். ஆனால், வழிபாட்டின்போது சடங்குகள் செய்வதை இவர் ஆதரிக்கவில்லை. தாம் கண்ட உண்மைகளைச் சாரம் நிறைந்த சொற்களாலும் நீதிக் கதைகள் மூலமாகவும் யாவரும் எளிதில் புரிந்துகொள்ளும்படி விளக்கி மக்களுக்குச் சிறப்பான முறையில் மெய்யுணர்வுப் பயிற்சியளித்தார். இவரால் கவரப்பட்ட மாணவர்களுள் சிறப்பு மிக்கவர் நரேந்திரநாத் தத்தா என்ற இயற்பெயர் கொண்ட சுவாமி விவேகாநந்தர் ஆவார்.

சுவாமி விவேகாநந்தர் (கி.பி. 1863-1902): இவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் இளம் பட்டதாரி. இராமகிருட்டிண பரமஅம்சரின் தலைமை மாணவரும் தவயோகியுமான இவர் தம் ஆசிரியரின் கொள்கைகளைப் பரப்பினார். இந்திய நாட்டின் பண்டைய ஆன்மிகத் துறையின் சிறப்புமிக்க வழிமுறையை மக்களுக்கு எடுத்துரைத்தார். துறவிக் கோலம் பூண்ட இவர் அமெரிக்காவில் சிகாகோ நகரில் கி.பி. 1893-ஆம் ஆண்டு உலக சமயங்களின் மகாநாட்டில் இந்து சமயத்தின் பெருமையை விளக்கி அரியதொரு சொற்பொழிவை ஆற்றினார். இவர் இங்கிலாந்திலும் பிரான்சிலும் சொற்பொழிவுகள் ஆற்றிய பிறகு தாயகம் திரும்பினார். சுவாமி விவேகாநந்தர் கி.பி. 1897-இல் இராமகிருட்டிண இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன் கிளைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் தொடங்கப்பட்டன. இந்து சமயத்தவர் மேம்பாடடையவும் மக்கள் நேயப் பணிகளை மேற்கொள்ளவும் இவ்வியக்கம் செயற்பட்டது. ஏழை எளியவருக்கு அன்புடன் செய்யும் தொண்டே கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டிற்குச் சமம் என்று விவேகாநந்தர் கூறினார். தீண்டாமையை ஒழித்துக் கட்டவும் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவும் கூறினார். மேலை நாட்டு முறைகளைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவதைக் கண்டித்தார்.

இவ்வியக்கம் வெள்ளம், பஞ்சம், நிலநடுக்கம், கொள்ளை நோய் முதலியவற்றால் துன்புறும் மக்களுக்கு உதவி செய்து வருகிறது. மருத்துவ மனைகள், திக்கற்றோர் இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இந்துக்களிடையே சமய உணர்வை மேம்பாடடையச் செய்யவும் ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கவும் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டவும் இவ்வியக்கம் பெரிதும் பாடுபட்டுள்ளது.

பிரமஞான சபை: இந்து சமய சீர்திருத்த நிறுவனமான பிரமஞான சபையைக் கி.பி. 1875-இல் உருசிய அறிஞர் பிளாவாட்சுகி என்ற அம்மையாரும் ஆல்காட்டு என்பவரும் சேர்ந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதன்முதல் நிறுவினர். சமயங்களின் உட்கருத்தை மக்கள் உணர்ந்து அதன்படி ஒழுக வேண்டுமென்பது அவர்கள் நோக்கம். இவ்விரு தலைவர்களும் கி.பி. 1879-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து தம் கருத்துகளைப் பரப்பினார்கள். இந்திய சமயச் சூழ்நிலை வளமுடன் இருப்பதைக் கண்ட அவர்கள் இச்சபையின் தலைமையிடத்தைக் கி.பி. 1886-இல் சென்னைக்கருகில் உள்ள அடையாறு என்னுமிடத்திற்கு மாற்றி அமைத்தனர்.

இச்சபை இனம், நிறம், சமயம் ஆகிய வேறுபாடுகள் இல்லாத உலகச் சமுதாயத்தை வளர்ப்பதையே தலையாய நோக்கமாய்க் கொண்டுள்ளது. இந்தச் சமயத்தின் கோட்பாடுகளான மறுபிறவி, கருமவினை ஆகியவற்றை இச்சபை ஏற்றுக் கொண்டுள்ளது; உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. உலக மக்களிடையே உடன்பிறப்பு நேய உணர்வை வளர்க்கப் பாடுபடுகிறது. இந்து சமய மறுமலர்ச்சிக்கு இச்சபை அயராது பாடுபட்டது.

அயர்லாந்தில் பிறந்து இந்தியாவைத் தமது தாயகமாகக் கொண்ட டாக்டர் அன்னி பெசண்டு அம்மையார் (கி.பி.1847-1935) இந்துப் பெண்களைப் போன்று உடையணிந்து இந்துக்களின் வாழ்க்கை முறையை மேற்கொண்டு இச்சபையை ஓங்கி வளரச் செய்தவர்களுள் மிகச் சிறப்பு மிக்கவர். இவர் 1907-ஆம் ஆண்டு இச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் சாதி ஒழிப்பு, பெண்கல்வி, நாட்டு விடுதலை முதலியவற்றிற்கு அயராது பாடுபட்டார். இவர் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர் காசியில் அடிக்கல் நாட்டிய மத்திய இந்துப் பாடசாலை படிப்படியாக வளர்ந்து பனாரசு இந்துப் பல்கலைக் கழகமாய்த் திகழ்கிறது. பெசண்டு அம்மையார் தம் வாழ்நாள் முழுவதும் இச்சபையின் முன்னேற்றத்திற்காகப் பெரும்பாடுபட்டார்.

சமூகம்: ஆங்கில மொழி வழிக்கல்வி இந்திய மக்களிடையே மேனாட்டுக் கருத்துகளையும் புதிய சிந்தனைகளையும் பரப்பியது. அறிவியல் அறிவு பழைய சமூக முறையை மாற்றியது. இந்திய மக்களின் சிந்தனைகளில் மறுமலர்ச்சி தோன்றியது.

உடன்கட்டையேறுதல்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய மிகவும் கொடிய

சமுதாயப் பழக்கம் சதி அல்லது உடன்கட்டை ஏறுதலாகும். இக்கொடிய பழக்கம் ஒழிக்கப்பட்டது சிறந்ததொரு சமூகச் சீர்திருத்தமாகும். இறந்த கணவனுடன் மனைவியை உயிருடன் எரிக்கும் விவேகமற்ற இக்கொடிய செயலைச் சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்று கூறுவர். இந்த உடன்கட்டை ஏறும் பழக்கத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த சமூகச் சீர்திருத்தவாதிகளுள் தலைசிறந்தவர் இராசாராம் மோகன்ராய். இவர்தம் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்ற அரசப் பேராளரான வில்லியம் பெண்டிங்கு பிரபு கி.பி. 1829-ஆம் ஆண்டு உடன்கட்டை ஏறுதலைச் சட்டத்தின் மூலமாகத் தடை செய்தார். விதவையைத் தீக்கிரையாக்குவது தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றம் என்றும் இக்கொடிய செயலில் தலையிடுவோருக்குக் கடுந் தண்டனை அளிக்கப்படும் என்றும் இச்சட்டம் கூறியது. இச்சட்டம் கி.பி. 1830-ஆம் ஆண்டு சென்னை, பம்பாய் மாநிலங்களில் செயல்முறைக்குக் கொண்டு வரப்பட்டது. இக்கொடிய பழக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்றது மிகவும் பெருமைப்படற்குரியதாகும்.

குழந்தைக் கொலை அடக்கப்படுதல்: இந்தியாவில் பெண் குழந்தைகள் பிறப்பதைப் பல இனங்கள் விரும்பவில்லை. அவ்வாறு பிறந்த பெண் குழந்தைகளைப் பட்டினி போட்டும் ஆறுகளில் வீசியும் கொன்றனர். குழந்தைகளின் தாய்மார்கள் தம் மார்புக் காம்புகளில் அபினைத் தடவி அதனால் உண்டாகும் நஞ்சினால் பெண் குழந்தைகளைக் கொன்றனர். வட இந்தியாவில் இராசபுதனம், பஞ்சாபு, மாளவம், கட்சுப் பகுதி, கத்தியவார் ஆகிய பகுதிகளில் இக்கொடிய பழக்கம் பரவலாக இருந்து வந்தது. சமய வேண்டுதல்களின் பெயராலும் இவை நிகழ்ந்தன. இப்பழக்கத்தையும் இராசாராம் மோகன்ராய் போன்ற சமூகச் சீர்திருத்த வாதிகளின் ஆதரவாலும் ஒத்துழைப்பாலும் வில்லியம் பெண்டிங்கு பிரபு சட்டத்தின் மூலம் அகற்றி வெற்றி பெற்றார். சென்னையில் மலைவாழ் குடியினரிடையே பழக்கத்திலிருந்த நரபலியையும் இவர் கட்டுப்படுத்தினார்.

விதவைத் திருமணம்: கணவனை இழந்த இளங் கைம்பெண் மறுமணம் செய்து கொள்ள முடியாதபடி இந்தியப் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தன. இந்திய அரசு கி.பி. 1829-ஆம் ஆண்டு செய்த சட்டத்தின் மூலமாக உடன்கட்டை ஏறுதல் ஒழிக்கப்படவே, அது விதவைத் திருமண முறைக்கும் மறைமுகமாக ஊக்கத்தைத் தந்தது. சமயச் சங்கங்களான தரும சபையும் தத்துவ போதினியும் விதவைத் திருமணத்திற்காகப் பாடுபட்டன. பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகர் கி.பி. (1820-1891) என்ற வடமொழி அறிஞர் தம் எழுத்தாலும் பேச்சாலும் இளங்கைம் பெண்களின் மறுமணத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். விதவைகளின் மறுமணத்திற்காக இந்திய அரசு சட்டம் இயற்றப் பெரும் பொறுப்பு எடுத்துக் கொண்ட சீர்திருத்தவாதிகளுள் தலைசிறந்தவர் பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகர். இவரது முயற்சியால் கி.பி. 1856-இல் இளங் கைம்பெண்கள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சமூகச் சீர்திருத்த நிறுவனங்களான பிரம சமாசமும் ஆரிய சமாசமும் பெண்களின் முன்னேற்றத்திற்கு அரும் பாடுபட்டன. விதவை மறுமணச் சட்டம் இந்திய சமுதாயத்திற்குச் செய்த பெரியதொரு சமுதாயச் சீர்திருத்தமாகும்.

மகாராட்டிரத்தில் நீதிபதி மகாதேவ கோவிந்த ரானடே, பேராசிரியர் டி. கே. கர்வே (D.K. Karve) போன்ற சமூகச் சீர்திருத்தச் செம்மல்களின் அரும் பணிகளால் அம்மாநிலத்திலுள்ள கைம்பெண்களின் வாழ்வு மலர்ந்தது. பம்பாயில் கி.பி. 1866-இல் விதவை மறுமணச் சங்கம் தொடங்கப்பட்டது. பேராசிரியர் டி. கே. கர்வே தாமே ஒரு விதவையை மணந்து கொண்டார். இவர் புனேயில் கி.பி. 1896-இல் 'விதவை இல்லம்' என்ற ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இதுதான் பின்னர் மகளிர் பல்கலைக் கழகமாக மலர்ந்தது. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வீரேசலிங்கம் பந்தலு (கி.பி. 1849-1919) என்பவர் சென்னையில் கி.பி. 1898-இல் ஒரு விதவை இல்லத்தைத் தோற்றுவித்தார்.

குழந்தைத் திருமணம் தடை செய்தல்: பெண்கள் பருவமடைவதற்கு முன்னரும், சில வேளைகளில் அவர்கள் குழந்தைகளாக 5 அல்லது 10 வயதிருக்கும் போதும் மணம் முடித்து வைப்பது இந்துக்களிடையே நிலைத்திருந்த ஒரு பழக்கமாகும். இவ்வாறு மணம் செய்வதைக் குழந்தைத் திருமணம் அல்லது பாலியத் திருமணம் என்பர். குழந்தைத் திருமணம் சமுதாயத்தின் ஒரு பெரும் குறையென்று சீர்திருத்தவாதிகள் கருதினர். கேசவ சந்திர சென் என்பவரின் பெரும் முயற்சியால் கி.பி. 1872-இல் குழந்தை மணம், பல தார மணம் ஆகியவை சட்டம் மூலம் தடைசெய்யப்பட்டன. பக்ராம்சி மெர்வான்சி மலபாரி என்ற பார்சியினத் தலைவர் குழந்தைத் திருமணங்களை அகற்ற அரும்பாடுபட்டார். இவரது முயற்சியால் கி.பி. 1881-இல் இந்திய அரசு 'திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கும் வயதுச் சட்டம்' என்பதனை இயற்றியது. இதன் விளைவாகக் குழந்தைத் திருமணங்கள் குறைந்தன.

திருமண வயது வரையறைக் குழு 1928-ஆம்ஆண்டு சூன் திங்கள் சிம்லாவில் கூடித் திருமணச் சீர்திருத்தங்களைக் குறித்துக் கலந்துரையாடியது. இராவ் சாகிபு அரிபிலாசு சாரதா (Haribilas Sarda) என்பவரின் முயற்சியால் 1929-இல் சிறுவர் சிறுமிகளின் திருமணத் தடுப்புச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதுவே புகழ்வாய்ந்த 'சாரதா சட்டம்' என்பதாகும். இது சமூக மக்களிடையே பரப்பரப்பை ஏற்படுத்தியது. இச்சட்டம் திருமணமாகும் வயது ஆண்களுக்கு 18-ஆகவும், பெண்களுக்கு 12-ஆகவும் வரையறை செய்தது. இச்சட்டத்தை மீறுவோர் சட்டப்படி தண்டிக்கப்படுவர் என்று இச்சட்டம் அறிவித்தது. சிறுவர் சிறுமியர்களின் நல்வாழ்வுக்கான இச்சீர்திருத்தம் இந்திய சமுதாய வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

தக்கர்களை அழித்தல்: இந்திய சமுதாயத்தில் தக்கர்கள் என்னும் கொடும் கொள்ளைக் கூட்டத்தினர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் வழிப்போக்கர்களை ஏமாற்றிக் கழுத்தை நெறித்துக் கொன்றனர். இந்திய அரசு கி.பி. 1829-இல் சமூகப் பகைவர்களான தக்கர்களைப் பற்றிய இரகசியங்கள் அனைத்தையும் கண்டுபிடித்து வெளியிட்டது. ஆங்கில அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கி.பி. 1829-30-ஆம் ஆண்டுகளில் 2000 க்கும் மேற்பட்ட தக்கர்களைக் கைது செய்து கொன்றனர். தக்கர்கள் என்ற சமூகப் பகைவர்களை அடக்கியது பெரியதொரு சமுதாயச் சீர்திருத்தமாகும். சமூகச் சீர்திருத்தப் பணிகளைக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டிலும் பல பெரியோர்கள் செய்து வந்துள்ளனர். இவர்களது பணி இந்து சமுதாய மறுமலர்ச்சிக்கு இன்றியமையாததாக அமைந்தது.

சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் இந்திய மகளிரும் பெரும் பங்கேற்றனர். அவர்களுள் முதல்வராகப் போற்றப்படும் பெண்மணி பண்டித இராமாபாய் (கி.பி. 1858-1922) ஆவார். இவர் கருநாடக மாநிலத்திலுள்ள மங்களூரில் பிறந்தார். இளமையிலிருந்தே சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை மனதிற் கொண்ட இவர் குழந்தைத் திருமணத்தைத் தடுத்தார். இவர் கைம்பெண்களின் மறுமணம் போன்ற முற்போக்கு எண்ணங்களைப் பரப்பினார். இந்திய நாட்டுப் பெண்களின் அவல நிலையை நீக்குவதற்கு இவர் தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். நீதிபதி மகாதேவ கோவிந்த இரானடே இவ்வம்மையாரின் சீர்திருத்தப் பணிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

இந்தியப் பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்காக இவ்வம்மையார் பல நிறுவனங்களை அமைத்தார். அவை சமூகச் சேவைப்பணி இல்லங்களாகச் செயற்பட்டன. இவ்வம்மையார் புனேயில் 'ஆரிய மகிளா சங்கம்' என்ற ஒரு கழகத்தை ஏற்படுத்தினார். இவர் பம்பாயில் 'சாரதா சதன்' என்ற விதவைகள் மறுவாழ்வு இல்லம் என்பதனைத் தோற்றுவித்தார். அதில் சாதி, சமய, வேறுபாடின்றி எல்லாக் கைம்பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுக் கல்வியும் கைத்தொழிலும் கற்பிக்கப்பட்டனர். இவர் புனேயில் 'கிருபாதசன்' என்ற மற்றொரு விதவைகள் மறுவாழ்வு இல்லத்தை நிறுவினார். இங்குக் கைம்பெண்கள், திக்கற்ற பெண்கள் ஆகியோருக்குப் பல வகையான தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டு அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சியடைய வழிவகை செய்யப்பட்டது. பின்னர் இராமாபாய் புனேயில் 'முக்தி மிசன்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். இது ஆதரவற்ற மகளிர்க்குப் புகலிடமாகவும், புத்தி சுவாதீனமில்லாத பெண்களுக்குத் தொழிற்கல்வி அளிக்கும் பள்ளியாகவும் திகழ்ந்தது.

கோபாலகிருட்டிண கோகலே (கி.பி. 1866-1915): இந்திய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியோர்களுள் மகாராட்டிர மாநிலத்திலுள்ள கோலப்பூர் என்னும் ஊரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கோபால கிருட்டிண கோகலேயும் ஒருவர். இவர் சமுதாய நலப்பணிகளுக்கு மிகச் சிறந்த தொண்டாற்றினர்; கைம்பெண்களின் மறுமணத்தை வலியுறுத்தினர்; தீண்டாமை ஒழிப்பை ஆதரித்தார். பாலகங்காதர திலகர் நடத்திய 'கேசரி', 'மராத்தா' ஆகிய இதழ்களின் மூலமாகக் கோகலே தம் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பினார். நீதிபதி மகாதேவ கோவிந்த இரானடேவைக் கோகலே தம் அரசியல் ஆசானாக ஏற்றுக் கொண்டார். மத்திய சட்ட சபையின் உறுப்பினராக இவர் பதவி வகித்த போது இந்திய அரசைக் கட்டாயக் கல்வி முறையைச் செயற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார். இவர் 1905-ஆம் ஆண்டு மக்களுக்குப் பொதுநலத் தொண்டில் பயிற்சியளிக்க 'இந்திய ஊழியர் சங்கம்' (Servants of Indian Society) என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். 'இந்தியாவின் மாணிக்கம்', 'மகாராட்டிரத்தின் அணிகலன்' என்று பாலகங்காதர திலகராலும் காந்தியடிகளாலும் போற்றப் பெற்ற பெருமையையுடையவர் இவர்.

மகாத்மா காந்தி (கி.பி. 1869-1948): இவர் 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற சமூகச் சீர்திருத்தவாதி ஆவார். இவருடைய இயற்பெயர் மோகன்தாசு கரம்சந்த் காந்தி. இவர் குசராத்து மாநிலத்தில் போர்பந்தர் என்னும் ஊரில் கி.பி. 1869-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் வாழ்நாள் முழுவதும் பல சமூகத் தீமைகளை அகற்ற அயராது ஆர்வத்தோடு போராடினார்.

இவர் தீண்டாமை, மதுவிலக்குப் போன்ற சமூகத் தீமைகளை வேருடன் களைய அரும்பாடு பட்டார். இந்திய நாட்டில் பெரும்பாலான மக்கள் தாழ்த்தப் பட்டவர்கள். இவர்களைத் தீண்டக் கூடிய தகுதியும் அற்றவர்கள் என்று மக்கள் கருதினர். ஆகவே தாழ்த் தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகக் காந்தி அடி கள் அரும்பாடுபட்டார். தாழ்த்தப்பட்டவர்களை இவர் அரிசனங்கள் அல்லது கடவுளின் மக்கள் என்றே அழைத்தார். அரிசனங்களின் வழிபாட்டிற்கு இந்துக் கோயில்கள் திறந்து விடப்பட்டன. குடிப்பழக்கம் என்ற மற்றொரு சமூகத் தீமையையும் அகற்ற முயன் றார். குடிப்பழக்கம் மக்களுடைய நல்வாழ்வை அழிப் பதாதலின் குடிப்பதால் ஏற்படும் தீமைகளை எழுதி யும் பேசியும் வந்தார். இவர் குடிப்பழக்கத்தைச் சட் டப்படி ஒழிக்கச் செய்தார். இவர் பெண்கள் நலனுக் காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட் டார். இவர் ஏழ்மை நிலையிலுள்ள இந்திய நாட்டின ருக்கு வாழ்க்கைக்குப் பயனளிக்கத்தக்க வகையில் கல்வி முறை அமையவேண்டும் என்று விரும்பினார். மக்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற கோட்பாட்டிற்கிணங்க இவர் வார்தா கல்வித் திட்டத்தை வகுத்தார். இவர் காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போரில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு ஆங்கில ஆட்சியிலிருந்து இந் திய நாட்டை விடுதலை அடையச் செய்தார். இவரு டைய இன்னா செய்யாமைக் கொள்கைகளும் தியாக உணர்வும் இந்திய நாட்டின் விடுதலைப் போருக்குக் கருவிகளாக அமைந்தன. எனவே, இவரை இந்திய மக்கள் 'தேசத் தந்தை' என்று அழைக்கிறார்கள்.

இராசகோபாலாச்சாரி (கி.பி. 1878-1972): தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் ஓசூர் வட்டத்திலுள்ள தொரப்பள்ளி என்னும் சிற்றூரில் கி.பி. 1878-ஆம் ஆண்டு இராசாசி என்று அன்புடனும் மரியாதையுட னும் அழைக்கப்படும் இராசகோபாலாச்சாரி பிறந் தார். இவர் மக்களுக்குத் தொண்டு செய்வதில் அதிக ஈடுபாடு கொண்டார். சேலம் நகரசபைத் தலைவ ராகப் பதவி வகித்தபோது இவர் ஒரு சமூகச் சீர் திருத்தவாதியாக விளங்கினார். இவர் தீண்டா மையை அகற்ற அரும்பாடுபட்டார். இவர் திருச்செங் கோட்டுக்கு அருகிலுள்ள புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் 1925-ஆம் ஆண்டு காந்தி ஆசிரமம் என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இவர் சமுதாயப் பணிகளுக்கு அரிய தொண்டாற்றினார்; கலப்பு மணங் களை ஆதரித்தார். இவர் சென்னையின் முதலமைச்ச ராக இருந்தபோது முதன்முறையாக மதுவிலக்குச் சட்டத்தை இயற்றினார். ஆலய நுழைவுச் சட்டத் தின் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் ஆலயங்களில் தடையின்றிச் சென்று இறைவனை வணங்க வழிவகை செய்தார். இந்திய விடுதலைப் போரில் அண்ணல் காந்தியடிகளுடன் சேர்ந்து பெரும் பங்கு ஏற்று, இவர் சிறந்த அரசியல் வாதியாகத் திகழ்ந்தார். வல்லரசு கள் செய்யும் அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்து வதற்கு அயராது பாடுபட்டது, இவர் மனித சமு தாயத்திற்குச் செய்த சிறப்பான தொண்டாகும்.

ஈ.வே. இராமசாமி (கி.பி. 1879-1973): தமிழ் நாட்டில் பெரியார் மாவட்டத்தின் தலைநகரான ஈரோடு நகரத்தில் கி.பி. 1879-ஆம் ஆண்டு ஈ.வெ.ரா. பெரியார் என்று பாசத்தாலும் அன்பாலும் அழைக் கப்பட்ட ஈ.வெ. இராமசாமி பிறந்தார். தமிழ்நாட் டின் பெரும் சீர்திருத்தவாதியாக விளங்கிய இவர் பின்தங்கிய மக்கட்கு ஆற்றிய அருந்தொண்டு மிகச் சிறந்ததாகும். இவர் தீண்டாமை ஒழிப்புப் போராட் டத்தில் முழுமனத்துடன் ஈடுபட்டு வெற்றிபெற்றார். கேரள மாநிலத்தில் 1924-ஆம் ஆண்டு வைக்கம் என்னுமிடத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப் பட்ட ஈழவர், தீயர், புலையர் ஆகியோர் கோயிலி லும் சாலைகளிலும் செல்லும் உரிமைகோரி நடத் திய போராட்டத்தில் மாபெரும் வெற்றி பெற்றார். இவரை 'வைக்கம் வீரர்' என்று அழைத்தனர்.

இவர் மக்களிடையே தன்மான உணர்ச்சியை ஊக்குவித்தும் மூடநம்பிக்கைகளை எதிர்த்தும் நாட்டு மக்களிடையே தம் கொள்கையைப் பரப்பி னார். இவர் ஒரு பகுத்தறிவு வாதியாவார். பெண் களின் முன்னேற்றத்திற்கு இவர் அரும்பாடுபட்டார். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்புப் போன்ற சமூக சீர்திருத்தக் கொள்கைகளைத் தம் சொற்பொழிவு வாயிலாகப் பரப்பினார்.

அம்பேத்கர் (கி.பி. 1891-1956): மகாராட்டிய மாநிலத்தில் கி.பி. 1891-ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பில் பீமாராவ் இராம்சி என்ற இயற்பெயர் கொண்ட அம்பேத்கர் பிறந்தார். இவர் இந்து சமூ கத்திலுள்ள சாதிக் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத் திற்கு அயராது உழைத்தார்; தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பேராளராக இங்கிலாந்தில் கூடிய இரு வட்டமேசை மாநாடுகளில் கலந்து கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி அமைக்கப் பாடுபட்டார். இது இந்தியரின் ஒற்றுமையைப் பாதிக்கும் என்று கருதிய காந்தியடி கள் புனே உடன்படிக்கையை அம்பேத்கருடன் செய்து கொண்டார். இதனால், தாழ்த்தப்பட்டோ ருக்கான தனித்தொகுதி முறை கைவிடப்பட்டது. இவர் அரசியல் அமைப்புச் சட்டமன்ற உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அரசியல் சட் டத்தை உருவாக்குவதில் பெரும்பங்கேற்றார். இவர்

1947–ஆம் ஆண்டு சவகர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பணிபுரிந்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்த, சிறந்த சமூக சீர்திருத்தவாதி இவர் என்று கூறுவதில் மிகையில்லை.

முத்துலட்சுமி: தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துலட்சுமி அம்மையார் ஒரு சிறந்த சமூகத் தொண்டர். தென்னிந்தியாவில் முதன்முதலாக மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணி இவரே ஆவார். இவர் தமது வாழ்நாளைப் பெண்கள் முன்னேற்றத்திலும் குழந்தைகள் நோய் ஒழிப்பிலும் செலவிட்டார். இந்திய அரசு இவரைப் பெண்கள்-குழந்தைகள் நோய்கள் பற்றி ஆராய்ச்சி செய்ய இலண்டனுக்கு அனுப்பியது. இவரது மருத்துவத் தொண்டினைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு இவரைச் சென்னை மேலவை உறுப்பினராக அமர்த்தியது.

இவர் சென்னையில் 'ஔவை இல்லம்' என்ற விடுதியை நிறுவினார். வறுமையால் அல்லல்படும் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் புகலிடமாக விளங்குவதோடு நல்ல கல்வி, நீதி போதனை, நல் வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கற்பிக்கும் இடமாகவும் ஔவை இல்லம் விளங்குகிறது. இவரது முயற்சியால் 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்' இயற்றப்பட்டது.

இவர் சென்னை அடையாறு என்னுமிடத்தில் புற்றுநோய் ஆராய்ச்சிக்கழகத்தை நிறுவினார். இது இந்தியாவிலேயே தலைசிறந்ததெனப் பாராட்டப்படுகிறது. பள்ளிப் பிள்ளைகளுக்கு மருத்துவச் சோதனை முறையையும், மருத்துவமனைகளில் பெண் மருத்துவர்களை அமர்த்தும் ஏற்பாடுகளையும் செய்தது, இவர் மருத்துவத் துறைக்கு ஆற்றிய சிறப்புமிக்க தொண்டாகும்.

சகோதரி சுப்புலட்சுமி: சமூக சீர்திருத்த இயக்கத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பெரும் தொண்டாற்றிய பெண்மணி சென்னையைச் சேர்ந்த சகோதரி சுப்புலட்சுமி ஆவார். இளம் வயதிலேயே கைம்பெண்ணான இவ்வம்மையார் கைம்பெண்களின் அவல நிலையினையும் பொருளாதார நெருக்கடியையும் நன்றாக உணர்ந்தார். இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற நோக்குடன் இவர் பெண்கள் நல முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டார். இளங்கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இவர் சென்னையில் 'சேவா சதன்' என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இங்குப் பெண்களுக்குப் பொதுக் கல்வியும் தொழிற்பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இங்குத் தேர்ச்சி பெற்ற கைம்பெண்கள் பலருக்கு வேலை கிடைத்ததுடன் அவர்கள் வாழ்வும் மலர்ந்தது. இந்நிறுவனம் இவ்வம்மையார் கைம் பெண்களுக்காற்றிய தொண்டின் சின்னமாக விளங்குகிறது.

சிரீநாராயண குரு (கி.பி. 1854–1928): கேரளா மாநிலத்தில் திருவனந்தபுரம் என்னும் நகரில் கி.பி. 1854-இல் நாராயண குரு என்பவர் ஈழவர் குலத்தில் பிறந்தார். பின்தங்கிய நிலையிலிருந்த ஈழவர் குலமக்கள் புதிய வாழ்வு வாழ்வதற்கு அயராது உழைத்தார். ஈழவர் குல மக்களுக்கெல்லாம் கல்வியைப் போதித்தார். ஈழவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நாராயண குரு 'சிரீநாராயண தர்மபரிபாலன சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அவருடைய மந்திரம் 'உலகில் ஒரே இனம், ஒரே சமயம், ஒரே கடவுள்தான் உண்டு' என்பதாகும்.

இவர் கி.பி. 1887–இல் அடுவிபுரத்தில் ஓர் ஆலயத்தைக் கட்டி அதன் சுவரில் 'சாதி வேறுபாடும் வெறுப்பும் வேற்றுமையும் இல்லாமல் எல்லோரும் சமமாகப் பழகி வாழும், வணங்கும் உண்மையான ஆலயம் இது' என்ற சொற்றொடரைப் பொறிக்கச் செய்தார். இவரது அறிவுரை ஒரு தேசியப் பண்பாடு வளர்வதற்கு உதவியாக அமைந்தது.

கல்வி: ஆங்கிலக் கல்வியால் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் இந்தியர்கள் மேனாட்டுத் தத்துவங்களையும் அறிவியல்களையும் கற்றுப் புரிந்துகொள்ளத் தொடங்கினார்கள். மேனாட்டுக் கல்வி முறை இந்தியர்களின் அறிவுக் கண்களைத் திறந்து இந்திய சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

இந்தியாவில் ஆங்கிலக் கல்விமுறை வில்லியப் பெண்டிங்கு பிரபு ஆட்சி செய்த காலத்தில் தொடங்கப்பட்டது. இவர் கி.பி. 1835-இல் ஆங்கில மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்ற மெக்காலே பிரபுவின் திட்டத்தைச் செயற்படுத்தினார். பின்னர்க் கி.பி. 1854–ஆம் ஆண்டில் ஆங்கில அரசு இந்தியாவில் தொடக்கக் கல்வியின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் செயற்பட வேண்டுமென்றும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும் விரும்பியது. இவ்வாண்டில் கட்டுப்பாடு மன்றத்தின் தலைவரான சர் சார்லசு உடு (Sir Charles Wood) என்பவர் இந்தியக் கல்வித்திட்டம் என்பதனைத் தயாரித்து அனுப்பினார். இத்திட்டத்தின்படி இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டுமென்றும், அவை இலண்டன் பல்கலைக் கழகத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. தொடக்கக் கல்வி முன்னேற்றத்திற்கான திட்டங்களும் அதில் கூறப்பட்டிருந்தன. அரசப் பேராளர் தல்கௌசி பிரபுவின்

(Lord Dalhausie) ஆட்சிக்காலத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் கி.பி. 1857-ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவப் பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கல்வித் துறை நிறுவப்பட்டது. மாநிலங்களில் நிருவாகப் பொறுப்பினைத் திறம்படச்செயற்படுத்த இயக்கு நரும் அவருக்கு உதவியாக ஆய்வாளர்களும் அமர்த் தப்பட்டனர். அரசப் பேராளர் இரிப்பன் பிரபு ஆட்சி செய்த காலத்தில் கி.பி. 1882-ஆம் ஆண்டு அண்டர் (Hunter) என்பவரின் தலைமையில் ஒரு கல்விக்குழு அமர்த்தப்பட்டது. இதனை அண்டர் குழு என்று குறிப்பிட்டனர். இக்குழுவின் பரிந்துரை களை அரசு ஏற்றுக்கொண்டது. இதன்படி இந்தியா வில் தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. உள்ளூர் ஆட்சி மன்றங்கள் தொடக்கப் பள்ளிகளை யும் உயர்நிலைப் பள்ளிகளையும் நிறுவுவதற்கு அனு மதி வழங்கப்பட்டது. தனியார் துறைப்பள்ளிகளுக் கும் கல்லூரிகளுக்கும் அரசு உதவிக் கொடைகளும் அளிக்கப்பட்டன. கல்லூரிக் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் அரசப் பேராளர் கர்சன் பிரபுவின் (Lord Curzon) ஆட்சிக் காலத்தில் 1902-ஆம் ஆண்டு சர் தாமசு இராலே (Sir Thamos Raleigh) என்பவரின் தலைமையில் பல்கலைக்கழகக் குழு ஒன்று நிறுவப்பட்டது. அக்குழு செய்த பரிந் துரைகள் 1904-இல் இயற்றப்பட்ட பல்கலைக் கழகச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுப் 'பல்கலைக் கழகங்களின் சட்டம்' உருவாயிற்று. அதன்படி பல்கலைக் கழகங் களின் சட்ட அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டன. பல்கலைக் கழகங்கள் மீது அரசு கட்டுப்பாடு கடுமை யாக்கப்பட்டது. அரசின் 1913-ஆம் ஆண்டுத் தீர் மானம் உயர்கல்விக் கொள்கையை விவரித்தது. நாளடைவில் தாக்கா (Dhaka), அலிகார், வார ணாசி, பாட்னா, நாகபுரி ஆகிய இடங்களிலும் வேறு பல இடங்களிலும் பல்கலைக் கழகங்கள் தொடங்கப் பட்டன. கல்கத்தாப் பல்கலைக் குழு 1919-இல் உயர்நிலைக்கல்வி பற்றியும் பல்கலைக் கழகக் கல்வி பற்றியும் பரிந்துரைகள் செய்தது. இந்தியச் சட்டம் 1919-ஆம் ஆண்டில் வெளியானபோது கல்வித் துறை யின் நிருவாகத்தை அது மாநிலச் சட்ட மன்றத்திற்குப் பொறுப்பான இந்திய அமைச்சர்களிடம் ஒப்படைத் தது. இராதாகிருட்டிணன் குழு 1949-இல் அமர்த்தப் பட்டது. இது பல்கலைக் கழகக் கல்வி நன்றாக விரி வடைய வேண்டுமென்றும் ஆராய்ச்சி செய்ய வேண்டு மென்றும் பரிந்துரை செய்தது. இது பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதியத்தையும் உயர்த்தியது; அவர் களுடைய தகுதியையும் கூறியது.

இந்திய அரசு 1956-இல் பல்கலைக் கழக மானியக் குழு ஒன்றை நிறுவி, இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களின் கல்வித் தரத்தையும் நிருவாகத்தையும் நிதிநிலைமையையும் கவனிக்கச் செய்தது. இந்தியக் கல்வித் துறையில் நல்ல வளர்ச்சியினால் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இலக்கியம்: கவிதைகளாலேயே கருத்துகளை வெளியிடும் தன்மை 19,20-ஆம் நூற்றாண்டுகளில் மாறி உரை நடையிலும் கருத்துகளைத் தெரிவிக்க லாம் என்ற மாறுதல் ஏற்பட்டதால் இந்திய மொழி களில் கட்டுரைகள், நாடகங்கள், புதினங்கள் ஆகி யவை உருவாக்கப்பட்டன.

வங்காள இலக்கியம்: இந்தியா கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வங்காள இலக்கியத்தின் எழுச்சியை யும் வளர்ச்சியையும் கண்டது. இந்தியாவில் வங்காள மொழி முன்னணியில் நின்றது.

இராசா இராம்மோகன்ராய் (கி.பி. 1774-1833) பல சமய நூல்களையும் இலக்கண நூல்களையும் இயற்றினார்; உபநிடதங்களை மொழிபெயர்த்தார்; வங்காள மொழிக்கும் பண்பாட்டுக்கும் புதிய ஒளியும் ஆற்றலும் உண்டாகுமாறு செய்தார்.

ஈசுவர சந்திர வித்தியாசாகர் (கி.பி. 1820-1891): இவர் வடமொழிச் சொற்களை வங்காள மொழிக் கேற்றவாறு அமைத்துத் தெளிவாக எழுதக்கூடிய நடையொன்றை உண்டாக்கினார். அதனால், இவரை அறிஞர்கள் வங்காளி உரைநடையின் தந்தை என்று கூறுவர்.

மதுசூதன தத்தா (கி.பி. 1823-73): இவர் புகழ் வாய்ந்த வங்கக் கவிஞர். இவர் இயற்றிய புகழ் பெற்ற காவியங்கள் மேகநாத வதகாவியம், விரசகன காவியம் என்பன.

பங்கிம் சந்திர சட்டர்சி (கி.பி. 1838-1894): இவர் வங்காள மொழியில் பல புதினங்களை எழுதி னார். அவற்றுள் வரலாற்றுப் புதினம் இராசசிம்மன், சீதாராம் போன்றவையும் சமூகப் புதினம் விட விருட்சம் போன்றவையும் குறிப்பிடத்தக்கவை யாகும்.

தீனபந்து மித்திரர் (கி.பி. 1830-1873) சிறந்த நாடகாசிரியர். இவர் பல நாடகங்களை எழுதியுள் ளார். நீலதர்ப்பணம் என்னும் நாடகம் வங்காளக் கிராமவாசிகளை நசுக்கி வந்த நீலித்தோட்ட அமைப்பை அடியோடு நீக்குவதற்குத் துணை செய் தது.

பூதேவ முகோபாத்தியாயர் (கி.பி. 1825-1894): இவர் ஒரு சிறந்த கட்டுரையாளர். வங்க மொழியில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

காளீபிரசன்னசிம்மர் (கி.பி. 1840-1870): இவர் பல வடமொழி நாடகங்களை வங்க மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இவருடைய இதோம் பேஞ்சார் நக்சா வங்க மொழியிலுள்ள அழியா நூல் களுள் ஒன்றாகும்.

இரவீந்திர நாத தாகூர் (கி.பி. 1861-1941) வங்க எழுத்தாளர்களுள் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறார். இவர் எழுதிய கீதாஞ்சலி என்னும் கவிதைத் தொகுப்பு 1913-இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றது. இவர் எழுதிய கோரா, புயல் போன்ற புதினங்கள் மிகவும் சிறப்பு வாய்ந் தவை. இவருடைய நாடகங்களுள் சித்திராங்கதா, பால்குண ஆகிய இரண்டும் முக்கியமானவை. 'ஜன கணமன' எனத் தொடங்கும் இந்திய தேசிய கீதத்தை இயற்றியவரும் இவரே.

மராத்திய இலக்கியம்: பாலகங்காதர திலகர் 'கேசரி' என்னும் இதழில் எழுதிய கட்டுரைகள் மராத்திய இலக்கியங்களுள் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

கேசவ சுதர் என்பவரைப் புதிய மராத்திய இலக்கி யத்தின் தந்தை எனப் போற்றுகின்றனர். 'தன் வாழ்க்கை வரலாறு' எழுதியவர்களுள் சிறப்பானவர் சாவர்க்கர் என்பவர். பாசேக்கர் என்பவர் கி.பி. 1871-இல் மனோரமா என்ற முதல் சமூக நாடகத்தை இயற்றினார். பிரேம் சோதனை, சன்ம இரகசியம் என்கிற நகைச்சுவை நாடகங்களைக் காடில்கர் என்ப வர் இயற்றினார்.

**தெலுங்கு இயக்கியம்:**

வீரேசலிங்கம் பந்துலு (கி.பி. 1848-1919) ஆந் திர நாட்டில் வாழ்ந்த தலை சிறந்த அறிஞரும் எழுத் தாளரும் ஆவார். இவர் தெலுங்கு மொழியை வளப் படுத்தினார். இவர் இயற்றிய 'இராசசேகரசரிதம்' என்னும் நூல் இக்காலத் தெலுங்கு இலக்கியத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். வடமொழி இலக் கிய நூல்களுள் சிலவற்றை இவர் தெலுங்கில் மொழி பெயர்த்தார். தேசோத்தாரக நாகேசுவரராவ் முதன் முதலாகத் தெலுங்கில் செய்தித்தாளை வெளி யிட்டார்.

தமிழ் இலக்கியம்: தமிழ் இலக்கிய உலகில் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன் றின. தஞ்சாவூரில் ஆட்சி செய்த மராத்திய சர போசி மன்னர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரி தும் ஊக்கமளித்தார்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் (கி.பி.1822-1879) தமிழ் உரைநடையில் ஒருவகைத் திருத்தத்தைச் செய்து அழகுபெறச் செய்தார். இவர் எளிய நடை யில் நூல்களை இயற்றித் தமிழ்மொழி மறுமலர்ச்சி யில் பெரும் பங்கேற்றார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை (கி.பி. 1815-1876) இயற்றிய முருகன் பிள்ளைத் தமிழ், ஆற்றூர் புரா ணம், குசேலோபாக்கியானம், அகிலாண்டநாயகி மாலை, திருவிடைமருதூர் உலா முதலியன மிகச் சிறந்த இலக்கியமாகும். உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம் சிறந்த செய்யுளிலக்கியமாகும். வீராசாமி செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரி, வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரம், தாமோதரம் பிள்ளை எழுதிய சூளாமணி வசனம், சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிர காசிகை ஆகியவை உரைநடையில் சிறந்த படைப்பு களாகும்.

டாக்டர் கால்டுவெல் (கி.பி. 1814-1891) என் னும் கிறித்தவப் பாதிரியார் ஆங்கிலத்தில் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் மிகவும் புகழ்வாய்ந்ததொன்றாகும். டாக்டர் சுவாமி நாதையர் மீனாட்சி சுந்தரம் பிள்ளைசரித்திரம், என் சரித்திரம் முதலியவற்றை எளிய நடையில் எழுதி வெளியிட்டார். ஓலைச் சுவடிகளைத் தேடிக்கண்டு பிடித்துச் சங்ககாலத் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். சூரிய நாராயண சாத்திரியார் உயர் நடையில் எழுதிய உரைநடை நூல் மதிவாணன் கதையாகும்.

இராமலிங்க அடிகள் (கி.பி. 1823-1874) மிகச் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் இயற்றிய பக்திப் பாடல்களின் தொகுப்பே 'திருவருட்பா' ஆகும். திரு வருட்பாவில் கூறப்பெறும் கருத்துகள் அனைவரா லும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகும். இவர் இயற்றிய தமிழ்க் கீர்த்தனங்கள், கும்மி போன்றவை இசைத் தமிழ்ப்பாடல்களாகும். சீவகாருணிய ஒழுக் கம், மனுமுறை கண்ட வாசகம் போன்றவை இனிய உரைநடைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மறைமலை அடிகளார் (கி.பி. 1876-1950), டாக்டர் ரா.பி. சேதுபிள்ளை (கி.பி.1896-1961), நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அறிஞர் அண்ணா போன்றோர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறப்பான தொண்டு புரிந்திருக்கிறார்கள்.

திரு.வி. கல்யாணசுந்தரனார் (கி.பி. 1883-1953) தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றினார். முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை போன்றவை இவர் எழுதிய சிறந்த நூல்களாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (கி.பி. 1882-1921): இவர் தமிழ்நாட்டில் எட்டையபுரத்தில் சின்னசாமி, இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்; தமிழ் மொழியில் உணர்ச்சி மிகும் பாடல்களைப் பாடினார். தேசியப் பாடல்கள், கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, ஞானரதம் என்னும் நூல்களில் நாட்டுப்பற்றைத் தெய்வ பக்தியின் நிலைக்கு உயர்த்தி இருக்கிறார்.

பாரதிதாசன் (கி.பி. 1891-1964): புதுவை மாநிலத்தில் பிறந்த இவருடைய இயற்பெயர் கனக சுப்புரத்தினம். தேதிய கவி பாரதியார் மீது கொண்ட அன்பினால் இவர் பாரதிதாசன் என்று பெயர் சூட்டிக்கொண்டார். இவர் பகுத்தறிவுடன் கூடிய சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் நிறைந்த பாடல்கள் பல இயற்றியுள்ளார். பாண்டியன் பரிசு, சேர தாண்டவம், குடும்பவிளக்கு ஆகிய கவிதை நூல்கள் இவருடைய புகழ் வாய்ந்த படைப்புகளாகும். இவர் இருண்ட வீடு, அழகின் சிரிப்பு முதலிய கவிதை நூல்களும் உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசன் உரைநடையிலும் கவிதையிலும் பல நூல்களைப் படைத்துள்ளார். தமிழக அரசு இவரை அரசுக் கவிஞராக அமர்த்திப் பெருமைப் படுத்தியது. இவர் இயற்றிய மாங்கனி, இயேசு காவியம், அர்த்தமுள்ள இந்துமதம் போன்ற நூல்கள் சிறப்புக்குரியனவாகும்.

புதுமைப்பித்தன்(1906-1948) தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர். இவர் சிறுகதைகள் உலகமொழிகளின் தலைசிறந்த சிறுகதைகளோடு ஒப்பிடத்தக்கவை. காஞ்சனை, நாசக்காரக் கும்பல், உலக அரங்கு, பளிங்குச்சிலை முதலிய நூல்கள் இவருடைய சிறந்த படைப்புகளாகும். ஆரணி குப்புசாமி முதலியார் (கி.பி. 1867-1925) ஒரு சிறந்த புதினப் படைப்பாளர். இவர் ஏறக்குறைய 75 புதினங்கள் எழுதியுள்ளார். இந்துமத உண்மை, கைவல்ய வசனம் போன்றவை இவருடைய சிறப்பான நூல்களாகும். பம்மல் சம்பந்த முதலியார் (கி.பி.1873-1964) ஓர் இணையற்ற நாடகப் பேராசிரியர். நாடகங்களைத் தாமே எழுதியும் தாமே தலைமைப் பாத்திரங்களில் நடித்தும் நாடக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தார். மனோகரா, இரத்தினாவளி, சபாபதி போன்ற நாடகங்கள் இவருடைய கலைப் படைப்புகளாகும். இவர் கி.பி. 1891-இல் சுகுண விலாச சபா என்ற நாடக அரங்கைச் சென்னைத் தலைநகரில் துவக்கினார். நாடக வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களுள் இவர் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

அ.கே.

துணை நூல்கள்:

**Majumdar**, R.C. & Others, An Advanced History of India, Macmillan, Madras, 1982.

**Luniya, B.N.**, Evolution of Indian Culture, Lakshmi Narayan Agarwal, Agra (U.P.), 1983.

**Sathianathaier, R. & Vasudeva Rao, T.N.**, A Political and Cultural History of India, Vol. III, S. Viswanathan (PVT) Ltd , Madras, 1982.

**இந்து-முசுலீம் ஒப்பந்தம்:** இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இடையிலே தோன்றிய மாறுபட்ட கருத்துகளால் அவர்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று. அவர்களிடையிலான வேற்றுமை முதல் உலகப் போர் தொடங்கியதைத் தொடர்ந்து மெல்ல மெல்லத் தணியலாயிற்று. முசுலீம் லீகு 1913-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் அரசுக்கு ஆதரவு தருவதற்கு மாறாக, இந்தியாவிற்குப் பொருத்தமான தன்னாட்சி உரிமை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. பம்பாயில் 1915-ஆம் ஆண்டில் காங்கிரசும் முசுலீம் லீகும் ஒரே சமயத்தில் மாநாடு நடத்தின. அதனைத் தொடர்ந்து இரு கட்சிகளும் மேலும் நெருங்கி வளரலாயின.

காங்கிரசும் முசுலீம் லீகும் 1916-ஆம் ஆண்டில் ஒரே சமயத்தில் இலக்னோ நகரில் மாநாடுகள் நடத்தின. காங்கிரசு மாநாட்டிற்கு அம்பிகா சரண் மசும்தாரும், முசுலீம் லீகு மாநாட்டிற்கு முகமது அலி சின்னாவும் தலைமை தாங்கினர். சின்னா, டாக்டர் அன்சாரி முகம்மது அலி போன்ற முசுலீம் லீகுத் தலைவர்களும், அம்பிகா சரண் மசும்தார், சுரேந்திரநாத் பானர்சி, மோதிலால் நேரு, பால கங்காதர திலகர் போன்ற காங்கிரசு இயக்கத் தலைவர்களும் பொது அரசியல் இலக்கினை அடைந்திட மனம் விட்டுப் பேசியதால் ஓர் உடன்பாடு காண முடிந்தது. அவ்வுடன்பாடு இந்து முசுலீம் ஒப்பந்தம் (Hindu-Muslim Pact) எனப் பெயர் பெற்றது. அது இலக்னோவில் ஏற்பட்டதால் 'இலக்னோ ஒப்பந்தம்' (Lucknow Pact) என்று இந்திய வரலாற்றில் குறிப்பாகவும், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பாகவும் பெயர் பெற்றது எனலாம்.

இலக்னோ உடன்பாட்டு இந்து-முசுலீம் ஒப்பந்தப்படி, எல்லா மாநிலங்களிலும் முசுலீம்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கிட காங்கிரசு ஒப்புக்கொண்டது. பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள் தொகையினை அடிப்படையாகக் கொள்ளாது பஞ்சாபில் 50 விழுக்காடு இடங்களையும், வங்காளத்தில் 40 விழுக்காடு இடங்களையும் ஏற்க, முசுலீம் லீகு ஒப்புதல் அளித்தது. அதனால், இசுலாமியர்கள் பெரும்பான்மையாக உள்ள மாநிலங்களில் இசுலாமியரின் மக்கள் தொகைக்கு ஏற்பக் கூடுதலான இடங்களைப் பெற வழி ஏற்பட்டது.

எந்த ஒரு சட்டமன்றத்திலும் ஒரு வகுப்பின் சமயம், பண்பாடு தொடர்பான தீர்மானத்தினை அந்த வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுள் 75 விழுக்காட்டினர் எதிர்த்தால் அத்தீர்மானத்தினை நிறைவேற்றக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. இசுலாமியர்களின் அச்சத்தைப் போக்கிடவே இச்சிறப்புரிமைகள் வழங்கப்பட்டன. இதனால், காங்கிரசு அதன் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ எதிர்ப்புக் கோட்பாட்டினைக் கைவிட்டது.

இந்திய தேசிய வரலாற்றில் இலக்னோவில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் எப்போதும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளது எனலாம். சூரத்தில் கி.பி 1907–ஆண்டில் பிளவுபட்ட இரண்டு காங்கிரசு பிரிவினரும் அதாவது தீவிரவாதிகளும் மிதவாதிகளும் இங்குத்தான் ஒன்றுகூடினர். இங்குத்தான் இந்து-முசுலீம் ஒப்பந்தமும் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தம் நாட்டின் வலிவுக்கும் பொலிவுக்கும் ஒற்றுமைக்கும் ஒரு சிறந்த வாயிலாக அமைந்தது. அப்போது இதே ஒப்பந்தம், பின்னால் பாகிசுத்தான் என்ற தனி நாடு கோரிக்கைக்கு அடிக்கல் நாட்டப்படுவதற்கு முன்னோடியாகும் என்று கருதவில்லை. இந்த வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் காங்கிரசு இயக்கத்திற்குப் பெரும் தொல்லையாகப் பின்னால் அமைந்தது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் கேட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்பதை மட்டும் ஏற்றுக்கொண்டு அதனை 1919 ஆம் ஆண்டிலும் 1935 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டங்களில் புகுத்தினர். இது பின்னால் நாட்டுப் பிரிவினைக்கு வழிகோலிற்று.

இந்து-முசுலீம் ஒப்பந்தம் இருசாரார்களின் நலம் கருதியும் நாட்டின் விடுதலைப் போராட்டக் காலத்தில் சில சீர்திருத்தங்கள் கருதியும் ஏற்பட்ட போதிலும், எதிர்பார்த்த பலன் ஏதும் விளையவில்லை. மாறாக இவ்வொப்பந்தம் நீண்ட நாட்களாக நீடிக்காமல் தேய்ந்து மறையலாயிற்று. நா.ஜெ.

**இந்துலூரி அன்னயதேவா** என்பவர் வாரங்கல்லை ஆண்ட காகதீய மரபினைச் சார்ந்த உருத்திரமாதேவி என்பாளின் மகாபிரதானர்களுள் ஒருவர். உருத்திரமாதேவி கணபதிதேவரின் புதல்வி. தம் தந்தையால் அரியணைக்கு அமர்த்தப்பட்டு இந்த அம்மையார் கி.பி. 1259 முதல் 1295 வரை ஆண்டார். இந்துலூரி அன்னயதேவா கண்ணய்யா என்பாரின்மகன். இவருக்கு அரசக்குடும்பத்தாருடன் நெருங்கிய குருதித் தொடர்பு இருந்தது. இந்துலூரி அன்னயதேவாதான் கண்டபெண்டெந்திர கங்கய்யா சாகினி என்பார் காலமானபின் மகாபிரதானர் என்னும் அமைச்சர் பதவியை வகித்தார். உருத்திரமாதேவியின் இரண்டாம் மகள் உருயம்மா என்பாளை இவர் திருமணம் செய்துகொண்டார். இவர் மகாபிரதானராகவும் சேனாதிபதியாகவும் இருந்து இவ்வரசிக்குத் தொண்டாற்றினார். நிருவாகத்துறையிலும், அரசியார் தம் பகைவர்களுக்கெதிராக நடத்திய போர்களிலும் உறுதுணையாக நின்றார்.

உருத்திரமாதேவி காலமானபோது பிரதாபருத்திரர் என்பார் அரியணை ஏறினார். பிரதாபருத்திரர் காயசுத்தா தலைவர்களுக்கெதிராகப் போருக்குச் சென்றபோது இந்துலூரி அன்னயதேவரும் ஏனைய படைத்தலைவர்களும் உடன் சென்றனர். காயசுத்தர்கள் (Kayasthas) தோற்கடிக்கப்பட்டனர். அன்னயதேவர் அரசக் குடும்பத்துடன் திருமண உறவு கொண்டவராகையால் பல சலுகைகளைப் பெற்றார்.

**இந்துலூரி கண்ணய்யா** காகதீய மன்னர் உருத்திரமாதேவியார் அரசியாக இருந்த காலத்தில் படைத்தலைவர் போன்றிருந்தவர். இந்துலூரி அன்னயதேவரின் தந்தையார். உருத்திரமாதேவியார் காலமானபின் இவரும் மகாபிரதானர்களுள் ஒருவராகப் பதவி வகித்தவர். இம்மகாபிரதானர்கள் அரசுத் துறைத் தலைவர்களாகவும் மாநில ஆளுநர்களாகவும் பொறுப்பு ஏற்றிருந்ததுடன், அரசரின் அமைச்சரவைக் குழுவிலும் உறுப்பினர்களாயிருந்தனர். இந்துலூரி கண்ணய்யாவும் அத்தகைய பொறுப்பை வகித்தவர்.

**இந்து வாரிசுரிமைச் சட்டம்,** 1956: இந்து வாரிசுரிமைச் சட்டமானது (Hindu Succession Act) 1956–ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. இது 1956–ஆம் ஆண்டு சூன்மாதம் பதினெழாம் நாள் நடைமுறைக்கு வந்தது. சம்மு-காசுமீர்ப்பகுதிகள் தவிர அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் பொருந்தும். இச்சட்டம் இந்துக்களுக்கு மட்டும் பொருந்தும். புத்த, சமண, சீக்கிய மதத்தினரும் இச்சட்டத்தின்படி இந்துக்களாகக் கருதப்படுகிறார்கள். (இச்சட்டத்தின்படி இந்து என்பவர் யார் என்று கண்டறிய 'இந்துச் சட்டம்' என்ற கட்டுரையைக் காண்க).

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு வாரிசுரிமை சம்பந்தமாக இந்தியாவில் வங்காள மாநிலத்திலுள்ள 'இந்துக்கள்' 'தாயபாகம்' என்ற கோட்பாட்டையும் ஏனைய மாநிலங்களில் உள்ள இந்துக்கள் 'மித்தாட்சர'க்கோட்பாட்டையும் கடைப்பிடித்து வந்தார்கள். மித்தாட்சரக் கோட்பாட்டின்படி, குடும்பச்

சொத்தானது குடும்பத்திலுள்ள பங்குரிமையாளர் (Coparceners) அனைவருக்கும் பாத்தியப்பட்டது. அது பிறப்பினால் கிடைக்கும் உரிமை. ஒரு பங்குரிமையாளர் இறந்தால் அவருடைய உரிமை மற்றவருக்கு எஞ்சுரிமை (Survivorship) மூலம் சேரும். தாயபாகத்தில் தகப்பனுக்கு மட்டுந்தான் குடும்பச் சொத்தில் உரிமை உண்டு. தகப்பனுக்குப் பின்னால்தான் மற்றவருக்கு உரிமை கிடைக்கும். மேலும், தென்னிந்தியாவில் 'அலியசந்தானம்' மருமக்கள்தாயம் என்ற கோட்பாடுகளை சில இந்துக்கள் கடைப்பிடித்து வந்தார்கள். கேரள மாநிலத்திலுள்ள நம்பூதிரி என்ற இந்து வகுப்பினருக்குத் தனிக் கோட்பாடு இருந்தது. இவ்வாறான பலவிதமான கோட்பாடுகளும் மாறுபாடான கருத்துகளைத் தெரிவித்து எழுதப்பட்ட தீர்ப்புகளும் வீண்குழப்பத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தின. மேலும், மாறிவரும் சமூகக் கருத்துகளுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கான சொத்துரிமை சம்பந்தமாகப் பழைய இந்துச் சட்டத்திலுள்ள கருத்துகள் ஒத்து வரவில்லை. (இந்துப் பெண்களின் நலன் பேணும் சட்டங்கள் என்ற கட்டுரையைக் காண்க). எனவே, இந்துக்களின் வாரிசுரிமை தொடர்பாகச் சட்டத்தைத் தொகுக்கும் (Codify) நோக்கத்துடன் இந்த வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டம் எல்லா இந்துக்களுக்கும் சம அளவில் செல்லத்தக்கது. இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள விவகாரங்கள் சம்பந்தமாக பழைய இந்துச் சட்டம் செல்லாது. இச்சட்டத்திலுள்ள விதிமுறைகளுக்கும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களிலுள்ள விதி முறைகளுக்கும் முரண்பாடு ஏதுமிருந்தால் அவ்வாறு முந்தைய சட்டத்திலுள்ள முரண்பாடு செல்லாது ஆகும்.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின் தாயபாகம் மருமக்கள்தாயம், அலியசந்தானம், நம்பூதிரி கோட்பாட்டைச்சேர்ந்தவர்களுக்கும்இச்சட்டத்தின்படிதான் வாரிசுரிமை கிடைக்கும். மித்தாட்சரக் கோட்பாட்டைச் சேர்ந்த இந்துவின் தனிப்பட்ட சொத்துகளுக்கும்இச்சட்டத்தின்படிதான் வாரிசுரிமையை தீர்மானிக்க வேண்டும். ஆனால், மேற்படி சொத்துகள் சம்பந்தமாக சட்டப்படி செல்லத்தக்க உயில் ஏதும் எழுதப்பட்டிருந்தால் அதன்படிதான் வாரிசுரிமை தீர்மானிக்கப்படும்.

பழைய இந்துச் சட்டப்படி மித்தாட்சரக் கோட்பாட்டில் அடங்கிய இந்து ஒருவன் கூட்டுக் குடும்பத்தில் உள்ள தனது பாகப்பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாக உயில் ஏதும் எழுத முடியாது. இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி மித்தாட்சரக் கூட்டுக் குடும்பச் சொத்திலுள்ள பங்கு சம்பந்தமாகவும் ஓர் இந்துவுக்கு உயில் எழுதும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மித்தாட்சரக் கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையுள்ள ஒருவன் இச்சட்டத்தின்படி முதல் வகுப்பு வாரிசுகள் என்று குறிப்பிட்டுள்ள பெண் வாரிசுகள் இல்லாமல் இறந்தால் அவனது பங்கு எஞ்சுரிமைப்படி (Survivorship) மற்றப் பங்குரிமையாளர்களுக்குச் (Coparceners) சேரும் என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறான பெண் வாரிசுகள் இல்லாமல் ஓர் இந்து இறப்பது மிக அரிதாகும். அவ்வாறான பெண் வாரிசுகள் இருந்தால் மித்தாட்சரக் கூட்டுக் குடும்பப் பங்கு சம்பந்தமாக வாரிசுரிமை இச்சட்டப்படி முடிவு செய்யப்படும். எனவே, மேற்குறிப்பிட்ட பல மாறுபாடான கோட்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு ஒரே மாதிரியான வாரிசுரிமை இச்சட்டத்தின் மூலம் உண்டாக்கப்பட்டுள்ளது.அதாவது தாயபாகத்தில் உள்ள கோட்பாடு பரந்த கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறலாம். எனவே, இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு ஓர் இந்துவின் சொத்துக்கு அவனது உயில்படி அல்லது இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விதி முறைப்படிதான் வாரிசுரிமை முடிவு செய்யவேண்டும்.

தன்சொத்துச் சம்பந்தமாக உயில் ஏதும் எழுதி வைக்காமல் மரணமடையும் ஓர் இந்து ஆணுக்கு உள்ள வாரிசுகள் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். அவையாவன, 1. முதல்வகுப்பு: மகன், மகள், விதவை, தாய், ஏற்கனவே மரணமடைந்த மகனின் மகன், ஏற்கனவே மரணமடைந்த மகனின் மகள், ஏற்கனவே மரணமடைந்த மகளின் மகன், ஏற்கனவே மரணமடைந்த மகளின் மகள், ஏற்கனவே மரணமடைந்த மகனின் விதவை, ஏற்கனவே மரணமடைந்த அது மாதிரி மரணமடைந்த மகனின் மகன் (அதாவது சொத்துகளின் உரிமையாளன் மரணம் அடைவதற்கு முன்பே மரணமடைந்த மகன் பேரன் வழிக் கொள்ளுப் பேரன்), ஏற்கனவே மரணமடைந்த மகனின், அதே மாதிரி மரணமடைந்தமகனின் மகள், ஏற்கனவே மரணமடைந்த மகளின் அதுமாதிரி மரணமடைந்த மகனின் விதவை. ஏற்கனவே மரணமடைந்த மகன் பேரன் என்று குறிப்பிடும்போது, மகன் பேரனில் யார் முதலில் இறந்தது என்பது முக்கியமன்று; ஆனால், மகனும் பேரனும் தகப்பன் இறப்பதற்கு முன்பு இறந்திருக்க வேண்டும்.

இரண்டாம் வகுப்பு வாரிசுகள்: இதில் ஒன்பது பிரிவுகள் உள்ளன. I. தகப்பன். II. (1) மகனுடைய மகளுடைய மகன். (2) மகனுடைய மகளுடைய மகள். (3) சகோதரன் (4) சகோதரி. III. (1) மகளுடைய

மகனுடைய மகன். (2) மகளுடைய மகனுடைய மகள். (3) மகளுடைய மகளுடைய மகன். (4) மகளுடைய மகளுடைய மகள். IV. (1) சகோதரனுடைய மகன். (2) சகோதரியின் மகன். (3) சகோதரனின் மகள். (4) சகோதரியின் மகள். V. தகப்பனின் தகப்பன் தகப்பனின் தாயார். VI. தகப்பனின் விதவை. சகோதரனின் விதவை. VII. தகப்பனின் சகோதரன். தகப்பனின் சகோதரி. VIII. தாயாரின் தகப்பன். தாயாரின் தாய். IX. தாயுடைய சகோதரன். தாயுடைய சகோதரி. (ஒரு தாய்க்குப் பல தகப்பனார்கள் மூலம் பிறந்த சகோதர சகோதரர்கள், இந்தவாரிசுரிமைக்கு சதோதர சகோதரிகளாகக் கருதப்படமாட்டார்கள்).

உயில் மற்றும் அதுபோன்ற பத்திரங்கள் எழுதி வைக்காமல் மரணமடையும் ஓர் இந்துப் பெண்ணின் தனிப்பட்ட சொத்துக்கு வாரிசுரிமை எவ்வாறு முடிவு செய்யப்படும் என்பது இச்சட்டத்தில் விளக்கப் பட்டுள்ளது. அச்சொத்து அவளுக்கு அவள் பெற்றோரிடமிருந்து வாரிசுரிமைப்படி கிடைத்திருந்தால் கீழ்க்காணுமாறு வாரிசுரிமை முடிவு செய்யப்படும். முதலில் அவள் குழந்தைகளுக்கும், அவளுக்கு முன்பே இறந்துபோன குழந்தைகளின் குழந்தைகளுக்கும் சொத்து பிரித்துக் கொடுக்கப்படும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் அச்சொத்து அவள் தகப்பனாரின் சொத்தாகப் பாவிக்கப்பட்டு அதன்படி வாரிசுரிமை தீர்மானிக்கப்படும்.

அச்சொத்து அவளுக்கு அவள் கணவன் அல்லது கணவனின் தகப்பனாரிடமிருந்து வாரிசுரிமைப் படி கிடைத்திருந்தால் கீழ்க்காணுமாறு பிரித்துக் கொடுக்கப்படும். அவள் குழந்தைகளுக்கும் அவளுக்கு முன்பே மரணமடைந்த குழந்தைகளின் குழந்தைகளுக்கும் முதலில் பிரித்துக் கொடுக்கப்படும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் அச்சொத்து அவள் கணவனுடையது என்று பாவிக்கப் பட்டு அதன்படி வாரிசுரிமை முடிவு செய்யப்படும்.

மேற்கூறிய இரண்டுவகையிலும் அடங்காத அப்பெண்ணின் தனிப்பட்ட சொத்துக்குக் கீழ்க்காணுபவர்கள் வாரிசுகள் ஆவார்கள். 1. கணவன்; மகன்; மகள்; ஏற்கனவே மரணமடைந்த மகனின் குழந்தைகள் அல்லது மகளின் குழந்தைகள்; 2. கணவனின் வாரிசுகள். 3. பெற்றோர்கள். 4. தகப்பனாரின் வாரிசுகள். 5. தாயாரின் வாரிசுகள்.

ஆண் மற்றும் பெண் ஆகியவர்களின் சொத்துக்கு யார் வாரிசு என்று முடிவு செய்வதற்குச் சில பொதுவான விதிமுறைகள் இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. முதலில் அவற்றைத் தெரிந்து கொள்வது நலம். இரண்டு வாரிசுகள் சமஅளவில் சொத்தின் உரிமையாளருடன் உறவு என்றால், முழு அளவு உறவு (Full Blood), ஒருவழிஉறவு (Half Blood) இரத்த வாரிசைக் காட்டிலும் உரிமை அதிகம். எடுத்துக்காட்டாக, கோவிந்தன் என்பவனுக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். முதல் மனைவி மூலம் கண்ணன், சேகரன் ஆகிய இரு ஆண்மக்களும் இரண்டாம் மனைவி மூலம் சுகுமாரன் என்ற மகனும் உள்ளனர். முதல் மனைவி மூலம்பிறந்த கண்ணன் இறக்கும்போது அவன் சகோதரர்களான சேகரன் சுகுமாரன் ஆகியவர்கள் மட்டும் வாரிசுரிமைப் பட்டியலில் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் சேகரனும் சுகுமாரனும் கண்ணனின் சகோதரர்கள் என்றாலும் கண்ணனும் சேகரனும் முழு அளவு இரத்த பந்தத்தின் மூலம் உறவினர். அதாவது அவ்விருவரும் ஒரே பெற்றோருக்குப் பிறந்தவர்கள். ஆனால், கண்ணனும் சுகுமாரனும் சகோதரர்கள் என்றாலும் அவ்விருவரும் முழு அளவில் உறவினர் அல்லர். ஏனெனில், அவ்விருவருக்கும் தகப்பன் பொதுவானவர். ஆனால், தாய் பொது அல்லள். எனவே, சேகரனுக்குத்தான் கண்ணனின் சொத்து வாரிசுரிமைப்படி கிடைக்கும். சுகுமாரனுக்கு அதில் பங்கில்லை. அந்தச் சகோதரர்கள் மூவரும் ஒரு தாய்க்கு வெவ்வேறு தகப்பன்மார் மூலம் பிறந்தவர்கள் என்றால் அம்மூவரும் ஒருவருக்கொருவர் வாரிசு ஆகமாட்டார்கள்.

மரணமடைந்த சொத்துரிமையாளனுக்கு வாரிசு உரிமை கொண்டாடும் சொத்துரிமையாளனுக்குமுன்பே மரணமடைந்த மகனின் விதவை, அல்லது சொத்துரிமையாளனுக்கு முன்பே மரணமடைந்த அதே மாதிரி மரணமடைந்த மகனின் விதவை, அல்லது சொத்துரிமையாளனின் சகோதரனின் விதவை அதாவது இறந்த சொத்துரிமையாளனின் விதவையான மருமகள், மகன் வழிப்பேரனின் விதவை, சகோதரனின் விதவை ஆகிய விதவைகள், விதவை என்ற முறையில் வாரிசுரிமை கொண்டாடும் தகுதியிருந்தால் அந்த விதவை சொத்துரிமையாளன் இறப்பதற்கு முன்பே மறுமணம் செய்திருந்தால் அவள் அந்த வாரிசுரிமையை இழந்து விடுவாள். சொத்துரிமையாளனை அவன் வாரிசு கொலை செய்து விட்டால், கொலை செய்தவன் வாரிசுரிமையை இழந்து விடுவான். ஆனால், கொலை செய்தவனின் மரபுவழித்தோன்றல்கள் பாதிக்கப் படமாட்டார்கள். ஆனால், பழைய சட்டப்படி கொலை செய்தவனின் மரபுவழித்தோன்றல்களுக்கும் கொலை செய்யப்பட்டவனின் சொத்துகளில் பங்கு கிடைக்காது.

பழைய இந்துச் சட்டப்படி மதம் மாறியவன் வாரிசுரிமையை இழக்கத்தக்கவன். இத்தடையை நீக்க

கி.பி. 1850 ஆம் ஆண்டில் சாதி குறைபாடு நீக்கச் சட்டம் (Caste Disabilities Removal Act, 1850) இயற்றப் பட்டது. இப்போதைய 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி மதம் மாறியவன் வாரிசுரிமையை இழக்க மாட்டான். ஆனால், அவனது மரபு வழித்தோன்றல்கள் இச்சட்டத்தின்படி அவ்வுரிமையை இழக்க நேரிடும். எனினும், வாரிசுரிமை ஆரம்பித்த நேரத்தில் மதம் மாறியவனின் மரபுவழித் தோன்றல்கள் இந்துக்களாக இருந்தால் வாரிசுரிமையை இழக்க மாட்டார்கள்.

பழைய இந்துச் சட்டப்படி குருடு, செவிடு, ஊமை, பித்தன், குன்மநோயால் பீடிக்கப்பட்டவன் ஆகியோர் வாரிசுரிமையை இழப்பவர் ஆவார்கள். இத்தடையை நீக்க 1928-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைக் குறைபாடுகள் நீக்கச் சட்டம் (Hindu Inheritance Disabilities Removal Act. 1928) இயற்றப்பட்டது. பிறவியிலேயே ஏற்பட்ட பித்துத்தன்மை, மடமை தவிர வேறு எவ்வித உடல் சம்பந்தமான குறைபாட்டினாலும் ஒருவன் வாரிசுரிமையை இழக்க மாட்டான் என்பது மேற்படி 1928-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குறைபாட்டைத் தவிர வேறு எவ்விதக் குறைபாட்டினாலும் ஒருவன் தன் வாரிசுரிமையை இழக்க மாட்டான் என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. மடமை, பித்துத்தன்மை உட்பட மேற்படி உடற்கூறு சம்பந்தமான குறைபாடுகள் எவையும் வாரிசுரிமையை இழக்கச் செய்யக் கூடியன என்பது இந்த 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்படவில்லை. எனவே, இப்போது மடமை, பித்துத் தன்மையும் கூட குறைபாடுகளாகக் கருத முடியாது.

கணவன் மரணமடையும் காலத்தில் கற்பு நெறி இல்லாத மனைவிக்குக் கணவன் சொத்தில் பங்கு கிடையாது என்று பழைய இந்துச் சட்டத்தில் சொல்லப்பட்டது. ஆனால், 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கற்பு நெறி இல்லாமை ஒரு குறைபாடாகச் சொல்லப்படவில்லை. எனவே, கற்பில்லாத விதவை தனது வாரிசுரிமையை இழக்கமாட்டாள்.

சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுள் (Illegitimate Children) சூத்திரன் மகனுக்கு மட்டும் தகப்பனுடைய சொத்தில் பங்கு கேட்கும் உரிமை பழைய இந்து சட்டப்படி இருந்தது. பிராமண, சத்திரிய, வைசிய சாதிகளில் அம்முறை கிடையாது. சட்டப்படி பிறந்த மகனுக்குக் கிடைக்கும் பங்கில் பாதிதான் பழைய சட்டப்படி சூத்திரனின் சட்டத்திற்குப் புறம்பான மகனுக்குக் கிடைக்கும். பழைய சட்டப்படி சட்டத்துக்குப் புறம்பாகப் பிறந்த மகளுக்குச் சூத்திரசாதி உட்பட எந்தச் சாதியிலும் தகப்பன் சொத்தில் பங்கு கிடையாது. பழைய சட்டப்படி சட்டத்திற்குப் புறம்பான ஆண், பெண் குழந்தைகளுக்குத் தாயின் தனிப்பட்ட சொத்தில் பங்கு உண்டு. ஆனால், தாய்க்குச் சட்டப்படியான குழந்தைகள் இருந்தால் சட்டத்திற்குப் புறம்பான குழந்தைகளுக்குப் பங்கு கிடைக்காது என்று ஒரு வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதற்கு மாறுபட்ட கருத்தைச் சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்தது. 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் சட்டத்திற்குப் புறம்பான குழந்தைகள் தாய்க்கு உறவினர் ஆவார்கள் என்று விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால், அக்குழந்தைகள் தகப்பனின் உறவினர் என்று இச்சட்டத்தில் கூறப்படவில்லை. எனவே, 1956-ஆம் ஆண்டைய வாரிசுரிமைச் சட்டப் நடைமுறைக்கு வந்தபின்பு எந்தச் சாதியிலும் தகப்பனின் சொத்துகளில் சட்டத்துக்குப் புறம்பான குழந்தைகளுக்குப் பங்கு கிடைக்காது. ஆனால், தாயின் சொத்துகளில் அக்குழந்தைகளுக்குப் பங்கு உண்டு. (இந்து திருமணச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள களங்கங்களினால் பாதிக்கப்பட்ட திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் அவர்கள் பெற்றோர் களைப் பொறுத்தமட்டிலும் சட்டப்படியான குழந்தைகள் ஆவார்கள்).

பிரிவினையான மகனுக்குத் தகப்பனது தனிப்பட்ட சொத்தில் பழைய சட்டப்படி பங்கு கிடைக்காது. இந்தப் புதிய சட்டப்படி பிரிவினையான மகனுக்கும் பங்கு கிடைக்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி இந்து ஆணுக்கு உள்ள வாரிசுகள் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டுள்ளார்கள். முதலாம் வகுப்பில் உள்ள வாரிசுகள் இருந்தால் இரண்டாம் வகுப்பில் உள்ள வாரிசுகள் எவருக்கும் பங்கு கிடையாது. இரண்டாம் வகுப்பில் மொத்தம் ஒன்பது பிரிவுகள் உள்ளன. அதில் முதல் பிரிவு வாரிசாக இருந்தால் அதற்கடுத்த பிரிவிலுள்ள வாரிசுகளுக்குப் பங்கு கிடைக்காது. அதாவது முன்பிரிவிலுள்ள வாரிசு இருந்தால் பின்பிரிவிலுள்ள வாரிசுக்குப்பங்கு கிடைக்காது. எந்த ஒரு பிரிவுக்கும் வாரிசுரிமை கிடைக்குமானால் அந்தப் பிரிவிலுள்ள வாரிசுகள் அனைவருக்கும் சமமாகப் பங்கு கிடைக்கும்.

முதல் வகுப்பிலுள்ள வாரிசுகள் அனைவருக்கும் ஒரே சமயத்தில் பங்கு கிடைக்கும். விதவைக்கு ஒரு பங்கு கிடைக்கும். சட்டப்படியான பல விதவைகள்

இருந்தால் விதவைகள் எல்லோருக்கும் மொத்தமாக ஒரு பங்கு கிடைக்கும். மகன், மகள், தாய் ஆகிய ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு கிடைக்கும்.

ஏற்கனவே மரணமடைந்த மகனின் வாரிசுகளுக்கு, மகன் மகளுக்குக் கிடைக்கும் பங்குக்குச் சமமாகப் பங்கு கிடைக்காது. அதை விளக்குவதற்காகக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுக் கொடுக்கப்படுகிறது. கோவிந்தன் என்பவன் இறக்கும்போது அவனுக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள், கோவிந்தனுக்கு முன்பே இறந்துபோன ஆண்மகன் மூலம் இரண்டு ஆண்குழந்தைகள் உயிருடனிருக்கிறார்கள். கோவிந்தனின் சொத்தை அவன் மனைவிக்கு ஒரு பங்கு, உயிருடனிருக்கும் மகனுக்கு ஒரு பங்கு, மகளுக்கு ஒரு பங்கு, முன்பே இறந்துபோன மகனுக்கு ஒரு பங்கு என்று நான்கு பங்குகளாகப் பிரிக்கவேண்டும். முன்பே இறந்துபோன மகனுக்குக் கிடைக்கும் நான்கில் ஒரு பங்கை அவன்தன் மகன் இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்படி முதலிரண்டு வகுப்பிலுள்ள வாரிசுகள் இல்லாவிட்டால் மரணமடைந்த சொத்துரிமையாளருக்கு ஆண்கள் மூலம் உள்ள உறவினருக்குப்(Agnates) பங்கு கிடைக்கும். அவர்களும் இல்லை என்றால் பெண்கள் மூலம் உள்ள உறவினருக்குப் (Cognates) பங்கு கிடைக்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி ஓர் இந்து ஆணுக்குப் பல பெண் வாரிசுகள் புதிய சட்டப்படி உள்ளனர். அவர்களில் அவனின் விதவை, மகனின் விதவை, மகன் வழிப் பேரனின் விதவை, மகள், தாய் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் முதல் வகுப்பு வாரிசுகள் ஆவார்கள். பழைய இந்துச் சட்டப்படி அவர்களில் மரணமடைந்தவரின் விதவை, மகள், தாய் மட்டும் வாரிசாக இருந்தார்கள். அதுவும் வாரிசுமுறையில் விதவை 4 ஆம் படியிலும், விதவை இல்லாவிட்டால் மகளும், 7-ஆம் படியில் தாயும் இருந்தார்கள். மேலும், திருமணமாகாத மகளிருந்தால் திருமணமான மகளுக்குப்பழைய சட்டத்தின்படி பங்கு கிடையாது. 1937-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்படி (Hindu Women's Right to Property Act,1937) விதவை முதல்படிக்கு உயர்த்தப்பட்டாள். முதன்முறையாக இந்த 1937-ஆம் ஆண்டையசட்டத்தின்படி மகனின் விதவைக்கும் பேரனின் விதவைக்கும் பங்கு கிடைக்க வழி செய்யப்பட்டது. அதுவும் முதல் வாரிசாகஎடுத்தஎடுப்பிலேயேஆக்கப்பட்டுள்ளார்கள். 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி மேற்படி பெண்கள் எல்லோரும் அதாவது தாயும் மகளும் மேற்படி விதவைகளுக்குச் சமமாக முதல் வகுப்புக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், திருமணமாகிய மகள்,திருமணமாகாத மகள் என்ற வித்தியாசம் கிடையாது. பழைய சட்டத்தின்படி பெண்களுக்குக் கிடைக்கும் உரிமை வரையுடை பாத்தியதையாக (Limited Right) இருந்தது. புதுச்சட்டத்தின்படி அது முழுமையான உரிமையாகும். மேலும், புதுச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் ஒரு பெண் வரையுடையபாத்தியமுள்ளசொத்தைஅனுபோகத்தில் வைத்திருந்தால்அது முழுப்பாத்தியமுள்ள சொத்தாக மாறும். புதுச் சட்டம் (1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டம்) இயற்றப்படுவதற்கு முன் ஒரு விதவை மறுமணம் செய்தால் கணவனிடமிருந்து வாரிசுரிமைப்படி கிடைத்த சொத்தை இழந்து விடுவாள். புதுச் சட்டப்படி அவ்வாறு இழக்கமாட்டாள். ஆனால், மகனின் விதவையும் பேரனின் விதவையும் சொத்துரிமையாளனான இந்து மரணமடைவதற்கு முன்பே மறுதிருமணம் செய்திருந்தால் அந்த விதவைகள் வாரிசுரிமையை இழந்து விடுவார்கள். பெண் வாரிசுகளுக்குப் புதுச்சட்டப்படி வாரிசுரிமை முழுமையாகக் கிடைத்தாலும் குடும்ப வீட்டை ஆண் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்யும் வரையில் பாகப்பிரிவினை கேட்க முடியாது. ஆனால், அப்பெண்கள் விதவையாக இருந்தால் அல்லது திருமணமாகாமலிருந்தாலோ கணவனால் கைவிடப்பட்டிருந்தாலோ குடும்பவீட்டில் வசிக்கலாம்.

முதன்முறையாகச் சகோதரி என்பவர் 1929-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைத் திருத்தச் சட்டத்தின் மூலம் (Hindu Law of Inheritance (Amendment) Act,1929) வாரிசாக ஆக்கப்பட்டாள். அச்சட்டத்தின் மூலம்தான் மகனின் மகளும், மகளின் மகளும் வாரிசாக ஆக்கப்பட்டார்கள். ஆயினும் அப்பெண்கள் அதாவது சகோதரி, மகளின் மகள், மகளின் மகள் வாரிசுமுறையில் கீழ்ப்படியில் இருந்தார்கள். புதுச் சட்டத்தின்படி மகனின்மகளும் மகளின் மகளும் முதல் வகுப்புக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். ஆனால், சகோதரி மட்டும் இரண்டாம் வகுப்பில் உள்ள இரண்டாம் பிரிவுக்குத் தள்ளப்பட்டுள்ளாள்.

பழைய சட்டப்படி சகோதரனானவன் மகனின் மகள், மகளின் மகளைக் காட்டிலும் உயர்வான படியிலிருந்தான். அந்த இரண்டு பெண்களும் புதுச்சட்டப்படி முதல் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட போதிலும் 'சகோதரன்' இரண்டாம் வகுப்பிற்கு அதுவும் இரண்டாம் பிரிவுக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி இந்துப் பெண்ணுக்கு ஏற்பட்ட வாரிசுகள் ஐந்து பிரிவுகளில்

சொல்லப்பட்டுள்ளார்கள். முதல் பிரிவில் உள்ள வாரிசு இருந்தால் அடுத்த பிரிவிலுள்ள வாரிசுக்குப் பங்கு கிடைக்காது. ஒரு பிரிவிலுள்ள வாரிசுகள் அனைவரும் சமமாகப் பாவிக்கப்படவேண்டும். ஏற்கனவே ஒரு வாரிசு இறந்திருந்தால் அவன் உயிருடனிருந்தால் அவனுக்கு என்ன பங்கு கிடைக்குமோ அதைத்தான் இறந்தவனுடைய வாரிசுகள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். (ஏற்கனவே ஆணின் சொத்துக்கு வாரிசுரிமையை விளக்குவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டைக் காண்க).

மேற்சொன்ன ஆண் அல்லது பெண் வாரிசு யாரும் இல்லாத நிலையில் இறந்தால், அவ்வாறு இறந்தவருடைய சொத்து அரசுக்குப் பாத்தியப் பட்டதாகும்.

## இந்து விதவைகள் மறுமணச் சட்டம்:

திருமணம்: இந்து மதம் திருமணத்தை ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகக் கருதவில்லை; ஒரு புனிதமான சமயச் சடங்காகக் கருதுகிறது. சம்சுகாரம் என்று சொல்லப்படும் சமயச் சடங்குகளில் ஒன்றாகவே திருமணம் கருதப்படுகிறது. உடல் உறவுக்குச் சமூகம் ஒப்புதல் அளிக்கும் ஒரு சடங்கு என்பதை விடச் சமயச்சடங்கு என்பதற்கே அற நூல்களில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறவியிலே மனிதனிடம் அமைந்துவிட்ட கறையைப் போக்கித் தூய்மையாக்கிக் கொள்ளச் சமயம் காட்டும் ஒரு பாதையே திருமணம். திருமணத்தின் தலையாய நோக்கம் இன்பம் துய்ப்பதும் குழந்தைகள் பெறுவதும் மட்டுமன்றி, அறநெறியில் ஒழுகுவதே யாகும். பிரமசரியத்தையோ துறவறத்தையோ மேற்கொள்ளாத ஓர் ஆண் ஒரு பெண்ணை மணந்து கொண்டு குழந்தைகளை ஈன்றெடுப்பது நற்கதி பெறுவதற்குச் செய்ய வேண்டிய சமயக் கடமையாகும். மனைவி என்பவள் கணவனுக்கு உலகியல் வாழ்க்கையில் உதவுபவள் மட்டுமல்லள்; மேலாக விண்ணுலக வாழ்க்கையை அடைவதற்கும் உதவுபவள் என்று கருதப்பட்டாள். அதனால்தான் மனைவி அறத்துணைவி என்று கூறப்பட்டாள்.

திருமண வயது: அற நூல்களில் திருமணம் செய்து கொள்வதற்குக் குறைந்த அளவு வயதை வரையறுக்கவில்லை. பெண்ணைவிட ஆண் மூத்தவனாக இருப்பது சிறப்பு என்று நூல்கள் கூறுகின்றன. இது இன்று வரையில் நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆயிரத்தில் ஒரு திருமணத்திலேயே ஆணை விடப் பெண் மூத்தவளாக இருக்கிறாள். குழந்தைகளாக இருக்கும் போதேகூட திருமணம் செய்து வைப்பது வழக்கமாக இருந்தது.

கணவன் இறப்பு: பல நேரங்களில் பெண் இளம் வயதினளாக இருக்கும்பொழுதே கணவன் இறந்து விடுவதுண்டு. அதன் பின்னர் அவள் விதவையாகவே காலம் கழிக்க வேண்டியிருந்தது. அற நூல்கள் விதவை கற்பு நெறி தவறாமல் எளிய வாழ்க்கை நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. பெண்கள் இளம் வயதினராக இருக்கும் பொழுதே திருமணம் நடைபெற்றுக் கணவனுடன் சேர்ந்து வாழாமலேயே கூட விதவைகளானவர்கள் பலர்.

வழக்கம்: நாகரிகத்துடனும் ஒழுக்கத்துடனும் வாழுவதற்காகச் சில சமூகங்களில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளுவது வழக்கமாக இருந்தது. தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் விதிகளே வழக்கமாகும். சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்படும் வழக்கம் எழுதப்படாச் சட்டமாகும். ஆதாரத்துடன் வழக்கத்தை மெய்ப்பித்துக்காட்டும் போது பழைய அறநூல்கள் தள்ளி வைக்கப்பட்டு, வழக்கமே நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. விதவைகள் மறுமணம் செய்து கொள்வது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கமாக இல்லாததால் விதவை மறுமணம் செல்லா நிலையாக இருந்தது. பல சமூகத்தினர் விதவை மறுமணத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அதனால், விதவை மறுமணம் செல்லா நிலையாக இருந்தது. விதவை மறுமணம் முறையிலா மணமாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் முறையிலா மணக் குழந்தைகளாகக் கருதப்பட்டார்கள்.

இந்து விதவைகள் மறுமணச் சட்டம்: இந்நிலையில் எல்லா இந்து விதவைகளும் மறுமணம் செய்து கொள்வதற்கு ஏதுவாகச் சட்டம் இயற்றப்பட்டது. அந்தச் சட்டமே இந்து விதவைகள் மறுமணச் சட்டமாகும். இந்தச் சட்டம் 25.7.1956 இல் நடைமுறைக்கு வந்தது. இந்து விதவைகள் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்று வழக்கத்திலோ அற நூல்களிலோ இருந்தால் இந்தச் சட்டப்படி அது செல்லாது. இந்து விதவை எந்தக் குலம், எந்தப் பிரிவாக இருந்தாலும் அவள் மறுமணம் செய்து கொள்வதை இந்தச் சட்டம் ஒத்துக்கொள்கிறது. விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு முழு உரிமை உடையவர்கள். முதல் திருமணத்திற்குள்ள சமயச் சடங்குகள் விதவை மறுமணத்திற்கும் பொருந்தும். விதவை உரிமை வயது அடையாதவராக இருந்தால் தந்தை, பாட்டன், தாயார் அல்லது அண்ணன் இசைவுடன் மறுமணம் செய்து கொள்ளலாம்.

மகளிர் சொத்துரிமை (Women's Estate): முற்காலத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் சொத்துரிமை பெற்றிருக்கவில்லை. மனு சுமிருதியும் யாஞ்ஞவல்கிய சுமிருதியும் சில சொத்துகளை மட்டும் மகளிருக்கே சிறப்பாக, தனியாக உரியவை

என்று கூறுகின்றன. அந்தச் சொத்தைச் சீதனம் என்று சொல்லலாம். கணவன் இறப்பினால் மனைவிக்கு வந்தடையும் சொத்துகள் சீதனச் சொத்தல்ல. இதில் அவளுக்கு முழு உரிமை கிடையாது. அதில் வரை உரிமை (Limited Interest) அல்லது தகுதிநிலையுரிமை (Qualified Interest) என்ற அளவிலேயே சொத்துரிமை இருந்தது. இதையே மகளிர் சொத்துரிமை (Women's Estate) என்று குறிப்பிட்டனர். இவ்வகையிலான சொத்துகளில் அந்தப் பெண்ணுக்குச் சீதனச் சொத்தைப்போல் முழுஉரிமை கிடையாது. அவள் இறப்பிற்குப் பின்னர் அந்தச் சொத்துகள் அவளுடைய வாரிசுகளுக்குப் போகாது அவள் யாரிடமிருந்து சொத்தை அடைந்தாளோ அவருடைய வாரிசுகளுக்குப் போகும்.

விதவை மறுமணம்: மகளிர் சொத்துரிமை தொடர்பாக விதவை மறுமணம் செய்துகொண்ட அன்றே அவள் இறந்ததாகக் கருதப்படும். விதவை மறுமணத்தினால் அவள் இறந்தாகக் கணக்கிடப்பட்டு, முதல் கணவன் மூலமாகக் கிடைத்த சொத்துகள் யாவற்றையும் அவள் இழக்க நேரிடும். அந்தச் சொத்துகள் முதல் கணவனின் வாரிசுகளுக்குப் போய்ச் சேரும். விதவைக்கு உரிமையுடைய சொத்து மறுமணத்தினால் விலகிப் போகாது.

காப்பாளர்: விதவை ஒருத்தி மறுமணத்திற்குப் பின் அவள் முதல்கணவன் மூலமாகப் பிறந்த உரிய வயது அடையாத குழந்தைகளுக்குக் காப்பாளராக இருப்பது அவ்வளவு விரும்பத் தக்கதன்று என்பது கருதப்பட்டது. அதனால் முதல் கணவனின் ஆண் உறவினருள் எவரேனும் ஒருவரைக் காப்பாளராக அமர்த்த நீதிமன்ற நடவடிக்கை எடுக்கச் சட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. உரிய வயது அடையாதவருக்குத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தனித்துச் சொத்து இல்லாவிட்டால், தாயாரின் ஒப்புதலின் பேரில் புதிதாக அமர்த்தப்படும் காப்பாளர் பராமரிப்புக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும் நிலையிலேதான் வேறு காப்பாளரை நீதிமன்றம் அமர்த்தலாம்.

இந்து திருமணச் சட்டமும் இந்து உரிமை இறக்கச் சட்டமும்: இந்து திருமணச் சட்டம் 18.5.1955-இல் நடைமுறைக்கு வந்தது. முறையான திருமணத்திற்குள்ள கட்டுப்பாடுகள் அதில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அதில் முதலாம் நிபந்தனை திருமணம் செய்து கொள்ளுபவருக்குத் திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு கணவன் அல்லது வேறு மனைவி உயிருடன் இருக்கக் கூடாது என்பதாகும். எனவே இந்துத் திருமணச் சட்டம் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதை ஒத்துக் கொள்கிறது.

இந்து உரிமை இறக்கச் சட்டம் 17.6.1956-இல் நடைமுறைக்கு வந்தது.அது கணவன் இறந்தபின் விதவைக்கு வரும் சொத்துகளில் விதவைக்கு முழு உரிமையைக் கொடுத்திருக்கிறது. கணவன் இறந்தவுடன் விதவை முழுச் சொத்துரிமை பெறுகிறாள். அதனால் விதவை மறுமணம் செய்து கொள்வதால் கணவனிடமிருந்து வந்த சொத்தை இழக்க வேண்டியதில்லை. இறந்த கணவனது சொத்துகளில் இந்து விதவைக்கு உயில் மூலம் கிடைக்கும் உரிமையானது முழுமையானதாக இருந்தால் அந்த உரிமை அவளது மறுமணத்தால் பாதிக்கப் படாது. அவ்வாறு உயில் மூலம் கிடைக்கும் உரிமை வரம்புடைய பாத்தியதையாக (Limited Right) இருந்தால் அதை மறுமணம் செய்வதன் மூலம் அந்த விதவை இழந்து விடுவாள். அனால் மறுமணம் செய்வதற்குத் தெளிவான அனுமதியிருந்தால் அவ்வாறு வரம்புடைய பாத்தியதையை அவள் இழக்கமாட்டாள்.

முடிவு: நாகரிகத்தைப் பாதுகாக்கவும் ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்தவும் விதவைகளின் நலனுக்காக ஒத்துக்கொள்ளப்பட்டது விதவைகள் மறுமணச் சட்டம்; விதவைகள் மறுமணம் செய்து கொள்வதையோ விதவைகளை மறுமணம் செய்து கொள்வதையோ சமூகம் முழுமையுடன் ஒத்துக்கொள்கிறதா என்பது இன்றும் கேள்விக் குறியாகவே இருக்கிறது. வ.சி.ச.

**இந்தூர்** மத்திய பிரதேசத்தில் உள்ள ஒரு மாவட்டம். சரசுவதி, கான் என்னும் இரு சிற்றாறுகளின் கரையில் இது அமைந்துள்ளது. கடல் மட்டத்திற்கு மேல் 558மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இந்நகர் பம்பாய்க்கு வடகிழக்கில் 545 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் பல நெடுஞ்சாலைகளின் மையமாகும். அதனுடன் இது ஓர் இருப்புப்பாதை சந்திப்பு மாகும்.

மேற்கு மத்திய பிரதேச உற்பத்திப் பொருள்களைச் சேமித்தும், பிற மாநிலங்களுக்குப் பகிர்ந்தும் கொடுக்கும் பணி இந்தூரில் நடைபெறுகிறது. இது ஒரு வாணிக மையமும் தொழில் வளம்பெற்ற நகரமும் ஆகும். இந்தூரே மத்திய பிரதேசத்தின் மக்கள் தொகை மிகுந்த நகரமாகும். தானியங்கள் அரைத்தல், ஓடுகள் தயாரித்தல், சிமிண்டு உற்பத்தி, பனியன் தொழிற்சாலை, சமுக்காளம் தயாரித்தல், இரசாயனத் தொழில்கள், கூடாரங்கள் தயாரித்தல், வீட்டுக்கான தட்டுமுட்டுச் சாமான்கள் உற்பத்தி, விளையாட்டுப் பொருள்கள் தயாரித்தல் போன்றவை இந்தூரின் சிறப்புத் தொழில்கள். பித்தளை, இருப்பு வார்ப்புக் கூடங்கள், பேருந்து, சைக்கிள் வண்டித்

தொழிற்சாலைகள் பொறியியல் பணிமனைகள் போன்றவை இங்கு உண்டு.

இந்தூர் நகரம் மராத்தியத் தலைவர்களுள் ஒருவரான ஒல்கார் என்னும் மரபினரால் கி.பி.1715-ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டது. இதனை மல்கார் ராவ் ஒல்கார் கி.பி. 1728-இல் உருவாக்கினார் என்றும் கூறுவர். நருமதை ஆற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள தலை சிறந்த வாணிகச் சந்தைக்கு வந்த நிலக்கிழார்கள் இங்கு இந்திரேசுவரர் கோயிலைக் கி.பி. 1741-ஆம் ஆண்டில் கட்டினார்கள். இக்கோயிலின் பெயராலேயே இந்நகரம் இந்தூர் என்றழைக்கப்படலாயிற்று. முன்னாளைய இந்தூர் அரசின் தலைநகரமாக இந்நகரம் கி.பி. 1815-இல் ஆக்கப்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இது ஆங்கிலேய மத்திய இந்தியாக்குழுவின் (British Central India Agency) தலைமையிடமாகவும், மத்திய பாரத அரசின் (1948-56) கோடைக்காலத் தலைநகரமாகவும் கருதப்பட்டது. இந்நகரில் இந்தூர் பல்கலைக்கழகம் 1964-இலிருந்து செயற்படுகிறது. பல கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஒல்கார் மரபினரின் கைவசம் இருந்த இந்தூர் கி.பி. 1818-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆங்கிலேயரின் பாதுகாப்பின்கீழ் வந்தது. இந்தியா 1947 இல் விடுதலை அடைந்தபோது 1948-ஆம் ஆண்டில் இவ்வூர் இந்தியாவுடன் இணைந்தது. இந்தூர் இணைந்த போது அதனுடன் மேலும் 24 சிற்றரசுகள் இணைந்து மத்திய பாரதம் என்னும் மாநிலம் உருவாக்கப்பட்டது. மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டபோது 1956-ஆம் ஆண்டில் மத்திய பாரதம் மத்திய பிரதேச மாநிலத்தில் இணைந்தது.

இந்தூரில் உள்ள சமணக் கோயில் புகழ் பெற்றது. இதனைச் செயின் காஞ்ச் மந்திர் (Jain Kanch Mandir) என்பர். இதைக் கண்ணாடிக்கோயில் (Glass Temple) என்றும் கூறுவர். இக் கோவிலினுள் முத்துப் பதித்த அழகான வண்ண வண்ணக் கண்ணாடிகளைக் கண்டு களிக்கலாம். சரசுவதி ஆற்றங்கரையின்மீது அமைக்கப்பட்டுள்ள இலால்பாக்கு அரண்மனை பேரரசர்களின் குடியிருப்பாய் இருந்தது.

இந்தூர் மாநகரின் மக்கள் தொகை 8,27,071 (1981). இந்தூர் என்னும் பெயர் கொண்ட மாவட்டம் 3910 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. இதன் பெரும்பகுதி முன்னாளைய மராத்திய ஒல்கார் அரசரின் ஆட்சிப் பகுதிகளை உள்ளடக்கியது. அம்மாநிலச் சிற்றரசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. மாளவ மேட்டுநிலம் இப்பகுதியில்தான் உள்ளது. சோரல் ஆறு (Choral River) நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுவதால் கூடுதலான நிலம் சாகுபடிக்கு வந்துள்ளது. கோதுமை, சோளம், பருத்தி, எண்ணெய் விதைகள் போன்றவை சிறப்பான உற்பத்திப் பொருள்கள். இந்தூர் மாவட்டத்தின் மக்கள் தொகை 14,05,904 (1981).

இந்தூர் மண்டலம் (Indore Division) என்னும் பகுதியில் இந்தூர், தேவாசு (Dewas), தார் (Dhar), சாபூவா (Jhabua), மாண்டாசூர் (Mandasor), இரத்லம் (Ratlam), உச்சயினி (Ujjain), கிழக்கு நிமார் (East Nimar), மேற்கு நிமார் (West Nimar) ஆகிய மாவட்டங்கள் அடங்கும். இம் மண்டலத்தின் பரப்பு ஏறத்தாழ 71,000 ச.கி.மீ.; மக்கள் தொகை 88,83,317 (1981).

**இந்தோ-ஆரிய மொழிகள்** : இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம் மிகவும் பழமையானதாகும். இது வேதகாலத்தைச் சார்ந்த மொழிகளைக் கொண்டுள்ளது. மொழியியல் அடிப்படையில் இந்தோ – ஆரிய மொழி வரலாற்றை மூன்று பெரும் பிரிவிற்குள் அடக்குவர். பழைய இந்தோ-ஆரிய மொழிக்காலம், இடைக்காலம், இக்காலம் என மூவகைப்படும். பழைய இந்தோ-ஆரியக் காலத்தை வேத காலம் என்றும் கூறுவர். கி.மு. 1200-க்கும் முன் தொடங்கி வழக்கில் இருப்பதாக இதனை அறிஞர்கள் குறிப்பிடுவர். கி.மு. 450 தொடங்கி ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுக் காலத்தை இந்தோ-ஆரிய மொழியின் இடைக்காலம் என்பர். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாணினி சமசுகிருத மொழியைவேத மொழி என்று குறிப்பிடுகின்றார். உயர் இலக்கிய வகைக்கு உரிய மொழியாக இது கருதப்படுகிறது. இடைக்கால சமசுகிருத மொழிக்குப் பல்வேறு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இக்கால மொழியினைப் பிராகிருத மொழியென்றும் குறிப்பிடுவர். அபபிரம்சா (Apabhramsa) என்னும் மொழி இடைக்கால மொழியமைப்பின் உயர் வடிவாக அமைந்துள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்த இந்தி, வங்காளம், குசராத்தி ஆகிய மொழிகளை உள்ளடக்கியவற்றை இந்தோ-ஆரிய மொழிகள் என்று குறிக்கின்றனர். இன்று இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய 73 விழுக்காடு மக்கள் இந்தோ-ஆரியமொழிகளைப் பேசுகின்றனர். இந்தியா, இலங்கை, பங்களாதேசு ஆகிய நாடுகளில் 40 கோடிக்கு அதிகமானவர்கள் இந்தோ-ஆரிய மொழிகளைப் பேசுகின்றனர். 1961-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்புக்குப் பின் ஏறக்குறைய தாய் மொழியாகப் பேசப்படும் 547 மொழிகள் இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தில் அடங்கும். இந்தோ ஆரிய மொழிகளில் இந்தியும் உருதும் ஏனைய மொழிகளைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் இந்தி என்னும் சொல் வழக்கில் காணப்படுகிறது. இந்தி வட இந்தியா முழுதும் தொடர்பு மொழியாகப் பயன்படுகிறது. கல்கத்தா இந்தி, பம்பாய் இந்தி என்று குறிப்பிடும் வகையில் பல்வேறு வட்டாரக்கிளை மொழிகள் இந்தியில் உள்ளன. இவை தவிரப் பல்வேறு சமூக வழக்குகளும் இந்தியில் காணப்படுகின்றன.

இந்தோ-ஆரிய மொழி இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளின் வழியாக வந்த ஆரியர்களால் பேசப்பட்டு இங்கே பரவியதாகக் கூறப்படுகிறது. மிகப்பழைய மொழியாக இங்குக் கிடைப்பது கிறித்து பிறப்பதற்கு 1000 வருடங்களுக்கு முன்னர் வேத நூல்களில் காணப்படும் சமசுகிருத மொழியின் பழைய வழக்காகும். வேதகாலச் சமசுகிருத வழக்கு இலக்கியங்கள் படைக்கவும் பயன்பட்டது. மகாபாரதம், இராமாயணம் முதலியன இவ் வழக்கில் எழுதப்பட்டன. செய்யுள் இலக்கியங்கள், நாடக காவியங்கள், பஞ்சதந்திரக் கதைகள் மற்றும் தத்துவம், இலக்கணம், மதக்கோட்பாடுகள் ஆகியனவும் உயர்வழக்கில் எழுதப்பட்டுள்ளன. சமசுகிருதம் கற்றறிந்தோரிடைத் தொடர்பு மொழியாகவும் பயன்பட்டது. 1961-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 2544 பேர்களே சமசுகிருதத்தைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். வேதத்தில் பயன்பட்ட உயர்வழக்குகளுக்குள்ளேயே சில மொழியியல் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். சான்றாக அதர்வணவேதத்தில் ‘மசி’ என்னும் தன்மைப் பன்மையினைக் குறிக்கும் உருபன் இருக்கு வேதத்தில் ‘மசு’ என்று வருகிறது.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பதஞ்சலி என்னும் அறிஞர் சமசுகிருதத்தில் கிளைமொழி வேறுபாடுகள் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். அதில் வட பகுதியில் பேசப்பட்ட வழக்கு, கிழக்குப் பகுதியில் பேசப்பட்ட வழக்கு என இருவேறு பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் லகர ஒலியானது ரகர ஒலியாக இருக்கு வேதத்தில் வழங்குகிறது. சமசுகிருதத்தில் உள்ள லகர மற்றும் ரகர ஒலிகளை அ,இ,உ போன்று உயிரொலிகளாகக் கருதுகின்றனர். சொல் லிறுதியினைத் தவிர்த்து ஏனைய இடங்களில் மெய்யொற்றுகள் அதிகம் காணப்படுகின்றன. வேற்றுமையியல் ஏழு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சமசுகிருதத்தில் பிராகிருதா (Prakrta) என்பது அசல், இயற்கையான எனப் பொருள்படும் இச் சொல்லினை அடியொற்றிப் பிராகிருதம் என்னும் சொல் உருவாகியது எனக் கருதலாம். பிராகிருதம் பொதுவாக மக்கள் பேசும் வழக்கினைக் குறிக்கும். சமசுகிருதம் இலக்கியம் மற்றும் உயர் சூழலில் பயன்பட்டது. இருப்பினும், காலப் போக்கில் பிராகிருத மொழியிலும் இலக்கியங்கள் பல தோன்றலாயின. பிராகிருத மொழியில் ‘நியா’ ஆவணங்கள் உள்ளன. அசோகரின் கல்வெட்டுகள் அனைத்தும் பிராகிருத மொழி வகையினைச் சார்ந்தனவாகும். கி.பி. முதல் நூற்றாண்டு வரை சமசுகிருத மொழியினைக் கல்வெட்டுகளில் காண்பதரிதாக உள்ளது. புத்தர் தமது சீடர்களைப் பொதுமக்களின் வழக்குகளைப் பயன்படுத்தித் தமது போதனைகளை எடுத்துக் கூறச் சொன்னதாகக் கூறப்படுகிறது. பிராகிருத மொழி வகையினைச் சார்ந்தது பாலி என்னும் மொழி. இம்மொழியில்தான் புத்த மதக் கோட்பாடுகள் எழுதப்பட்டுள்ளன. ‘காந்தாரி தம்மபத’ என்னும் புத்தமத இலக்கியம் பாலி மொழியில் உள்ளது. பிராகிருத மொழியின் மற்றோர் உயர்வழக்கு மகாராட்டிரி (Maharastri) எனப்படும். இது மராத்திய நாட்டில் வழங்கப்பட்ட வழக்காகும். ‘கர்பூர மஞ்சரி’ என்னும் கவிதை நாடகங்கள் மகாராட்டிரி வழக்கில் எழுதப்பட்டுள்ளன. அரசர்கள் மற்றும் அரண்மனை உயர் அலுவலர்கள் தவிர்த்த ஏனையோர்கள் சவுரசனி (Saurasani) என்னும் மகாராட்டிரி கிளைமொழியினைப் பேசுவதாகவும், ஏனைய கதை மாந்தர்கள் மாகதி (Magadhi) வழக்கினைப் பேசுவதாகவும் தெரியவருகின்றன.

அர்த மாகதி (Ardha Magadhi) என்னும் கிளை மொழி வழக்கினில்தான் சமண மதக்கோட்பாடுகள் எழுதப்பட்டுள்ளன. மதக்கோட்பாடுகளைத் தவிர்த்த ஏனைய இலக்கியப் பணிகளுக்குச் சமண மகாராடிரி வழக்கு பயன்பட்டுள்ளது. ‘பௌமச்சரியா’ (Paumacariya) என்னும் விமலா சூரியின் செய்யுள் இலக்கியம் அர்த மாகதியில் காணப்படுகிறது. பிராகிருத மொழியின் கிளைமொழிகளில் பைசாசி என்பதும் ஒன்றாகும். இது தீய சக்திகளின் பேச்சு வழக்காகக் கருதப்படுகிறது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தரசேனா என்னும்அரசன் காலத்திய கல்வெட்டுகளிலிருந்து நாம் அபபிரம்சா (Ababhramsa) எனும் கிளைமொழியில் இலக்கியங்கள் இருந்தன என்று அறியலாம். அபபிரம்சா இடைக்கால இந்தோ-ஆரிய மொழியாகும். இம்மொழி நன்கு வளம் பெற்றுச் சிறப்பாக விளங்கியது.

இந்தோ-ஆரிய மொழிகளில் பல்வேறு திராவிடச் சொற்களைக் காணமுடிகிறது. குடம்என்னும் திராவிடச் சொல் ‘குண்ட’ என்று இருக்குவேதத்தில் காணப்படுகிறது. ‘அப்பா, அக்கா, ஊர்’ ஆகிய திராவிட மொழிச் சொற்கள் சமசுகிருதத்தில் காணப்படுகின்றன. கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பின்

கிரேக்க, பர்மிய மொழிகளின் தாக்கங்களையும் சமசுகிருதம் பெற்றது. எஸ்.ஆ.

**இந்தோ - ஆரியர்** இந்தியாவில் வாழும் பல் வேறு இனமக்களுள் ஒருவர். இந்தியாவில் ஆரியர், பாரசீகர், கிரேக்கர், சகர், யூச்சி, ஊணர், இசுலாமியர், ஐரோப்பியர் போன்ற மக்கள் பல நூற்றாண்டுகளாகக் குடியேறியுள்ளனர். இவர்கள் ஓரினத்தைச் சார்ந்தவர்களல்லர். இந்தியாவில் குடியேறிய இவர்களுக்குள் இனக்கலப்பும் ஏற்பட்டுள்ளதால் இவர்களைத் திட்டவட்டமாக இந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதும் இயலாது. எனினும், இந்தியாவில் குடியேறிய மக்களின் உருவ அமைப்பு, மொழி போன்றவற்றின் அடிப்படையில் சர் எர்பர்ட்டு இரைசிலி (Sir Herbert Risley) என்பார் இந்தியாவின் இனங்களை ஏழு பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவை 1. துருக்கிய-இரானிய இனம், 2. இந்தோ-ஆரிய இனம், 3. சித்திய திராவிட இனம், 4. ஆரிய-திராவிட இனம், 5. மங்கோலிய திராவிட இனம், 6. மங்கோலிய இனம், 7. திராவிட இனம் என்பனவாம்.

இந்தோ-ஆரிய இன மக்கள் பஞ்சாபு, இராசசுத்தானம், காசுமீரம் போன்ற பகுதிகளில் குடியேறினர். இவர்கள் உடல் அமைப்பில் நீண்டு உயர்ந்தவர்களாயும், அழகான தோற்றம் உடையவர்களாயும், கருநிறக் கண்களையும் முகத்தில் நிறைய முடியையும் நீண்ட தலையையும் குறுகியதும் பளிச்சென்று தெரியும் நிலையிலுள்ளதுமான மூக்கினையும் கொண்டவர்களாயும் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனினும், இந்தோ-ஆரிய இனத்தவர் இந்தியாவின் ஏனைய இனங்களுடன் இரண்டறக் கலந்து விட்டமையால் இவர்களைத் தனியாகச் சுட்டிக்காட்டுவது எளிதன்று.

**இந்தோ-இரானிய மொழிகள்** : இந்தோ ஆரிய மொழிக் குடும்பமும் இந்தோ-இரானிய மொழிக் குடும்பமும் சேர்ந்தே இந்தோ-இரானியக் குடும்பமாகக் கருதப்படுகிறது.

கி.பி. 600க்கு முற்பட்ட பழைய இரானியமொழிக் கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்துள்ளன. அவை பழைய பெர்சியன் (Persian), அவசுதன் (Avestan) ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. முன்பு இரான் நாட்டில் வடகிழக்குப் பகுதியில் பழைய பெர்சியன் மொழி பேசப்பட்டது. இதனைத் தவிர வேறு இரான் மொழி பேசப்பட்டதற்குச் சான்றுகள் பல உள்ளன. எரோடோட்டசு(Harodotus)என்பவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்றாசிரியர். அவர் மீடியன் (Median) மொழியைச் சார்ந்த 'பெண் நாய்' (Spaha) என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், பல மீடியன் மொழிச்சொற்கள் பழைய பெர்சியன் மொழியில் விரவி வந்துள்ளன.

இரானிய மொழியான அவசுதன் மொழியில் சோராசுட்டிர (Zoroastrain) மதப்பாடல்கள் எழுதப்பட்டன. பழைய பெர்சிய மொழியில் அச்சமிண்டு (Achaemind) அரசர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவசுதன் மொழி இடைக்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. பழைய பெர்சிய மொழி கி.மு. 600 முதல் 400 வரை ஓரளவு வழக்கிலிருந்ததாகத் தெரிகிறது. பழைய பெர்சிய மொழிக்கும் இடைக்காலப் பெர்சிய மொழிக்கும் அரசு ஆதரவு இருந்து வந்தது.

இடைக்காலப் பெர்சிய மொழி கி.மு. 300 முதல் கி.பி. 950 வரையிலான காலத்தைச் சார்ந்தது. இது பழைய பெர்சிய மொழியமைப்பினைப் போன்று ஒரு சில மாற்றங்களுடன் விளங்கியது. இடைக்காலப் பெர்சியன் மொழி இரானின் தென்மேற்குப் பகுதிகளில் பேசப்பட்டு வந்தது. வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் பர்த்தியன் (Parthian) மொழி பேசப்பட்டமை கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. சோக்டியன் (Sogdian),சாகா(Saha)போன்றவை இரான்மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளாகும். ஆயினும், இவை இடைக்கால இரானிய மொழிகளிலிருந்து மிகவும் வேறுபட்டவையாகும். ஒவ்வோர் இரானிய மொழிக்கும் பல்வேறு கிளை மொழிகள் உள்ளன. கோத்தனீசு (Khotanese) என்பது சாகா மொழியின் கிளை மொழிகளுள் முக்கியமானதொன்றாகும். சோக்டிய மொழி கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னும் வழக்கிலிருந்ததற்குப் போதிய கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. கோதன் நகரம் புத்த மதத்தின் சிறப்பு மையமாகத் திகழ்ந்தது. அந்நகரின் எல்லா நடவடிக்கைகளும் புத்தமதச் சாயலைப் பெற்றிருந்தன. இசுலாமியப் படையெடுப்பினால் (கி.பி. 11 ஆம் நூற்றாண்டு) கோத்தனிசு மொழி வளர்ச்சியும் புத்தமத இலக்கியங்களும் திடீரென்று வீழ்ச்சியுற்றன. சோக்டியன், சாகா ஆகிய மொழிகள் கிழக்கு இரானிய மொழிப்பிரிவினைச் சார்ந்தனவாகும். இப்பிரிவினைச் சார்ந்த மொழிகள் பல தென்னாசியப் பகுதிகளில் அதிகமாகப் பேசப்பட்டதாக அறியலாம். வடஆப்கானிசுத்தான் பகுதிகளில் பாக்டிரியன் (Bactrian) மொழியும், மேற்கு உசுபெக்கிசுத்தான் (Uzbekistan) பகுதிகளில் குவாரெசிமியன் (Khwarezmian) மொழியும், சோவியத்து நாட்டில் தாசிகிசுத்தான்(Tadzhikistan) பகுதிகளிலும், கிழக்கு உசுபெக்கிசுத்தான் பகுதிகளிலும் சோக்டிய மொழியும் பேசப்பட்டன. அக்காலத்தில் இரான் நாட்டிற்குச் சீன நாட்டுடன் வாணிகத் தொடர்பு நிலவியது. சீனாவிற்குப் போகும் வழிகளில் அமைந்த குடியிருப்புகளில் சோக்டிய மொழி பேசப்பட்டது.

**இக்கால இரானிய மொழி:** இக்கால இரானிய

மொழி இடைக்கால இரானிய மொழிகளிலிருந்து மிகவும் வேறுபட்டுள்ளது. இடைக்காலத்தினைச் சார்ந்த சாகா, பாக்டிரியன் போன்ற மொழிகளின் நேரடிச் சாயலைப் பெற்ற இக்கால இரானிய மொழிகள் எவையுமில்லை. சிறுசிறு வட்டாரங்களில் பேசப்பட்டு நிலைபேறடைந்த மொழியினைக் கொய்னே(Koine)என்று குறிப்பிடுகின்றனர். இவற்றுள் ஒரு சில மொழிகள் இடைக்கால இரானிய மொழிகளுடன் தொடர்புடையனவாகத் தெரிகின்றன. பசுதோ (Pashto), தாட்சிக்கு(Tadzik),இரானியன், பெர்சியன் ஆகிய மொழிகள் இக்கால இரானிய மொழிகளுள் முக்கியமானவை.

பெர்சிய மொழி இரான் நாட்டின் தேசிய மொழியாகும். இதனைப் பாரிசி (Farisi) என்று குறிப்பிடுகின்றனர். இது 15,000,000 மக்களின் தாய்மொழியாக உள்ளது. ஆப்கானிசுத்தான் நாட்டில் இது இரண்டாம் ஆட்சி மொழியாக இருந்துவருகிறது. ஆப்கானிசுத்தான் ஆட்சி மொழி பசுதோ (Pashto) என்பதாகும். இது 10,000,000 மக்களால் பேசப்படுகிறது. பலுச்சி மொழியும் குருதிசு மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது. பலுச்சி மொழி பேசுவோர் காப்சியன் கடற்கரைப் பகுதிகளில் முதன் முதல் வாழ்ந்தனர் என்று கூறுவர். ஒசடிக்கு மொழிக்கு இரோன் (Iron), திகோர் (Tigor) ஆகியன இருபெரும் கிளை மொழிகளாகும். இரோன் என்னும் கிளைமொழி கிழக்குப் பகுதிகளில்பேசப்படும் மொழியாகும். திகோர் கிளை மொழி தெற்குப்பகுதிகளில் பெரு வழக்கில் உள்ளது. இக்கிளைமொழி மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகிறது. இதில் காணும் சொற்கள் இரோன் கிளை மொழிகளிலிருப்பதைவிட நீண்டதாகவும்,பழையவழக்காகவும் காணப்படுகின்றன. விவிலியம்(Bible)இரோன் கிளைமொழியில் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு இலக்கியங்களும் இக்கிளை மொழியில் காணப்படுகின்றன. பெரும்பாலான ஒசடிக்கு மொழியின் மற்றொரு கிளைமொழி துவல் (Tuol) என்பது. இக்கிளைமொழி சார்சியன் மொழியின் எழுத்துகளைக் கொண்டு எழுதப்படுகிறது. இவ்வாறு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சில நூல்கள் காணப்படுகின்றன.


பசுதோ மொழியிலும் இருபெரும் கிளைமொழி வழக்குகள் காணப்படுகின்றன. பசுதோ என்னும் சொல்லே தென்மேற்குக் கிளைமொழியிலிருந்து பெறப்பட்டதாகும். பசுதோ என்ற கிளைமொழி வடகிழக்குப் பகுதியில் பேசப்படுகிறது. பசுதோ மொழியில் காணும் இலக்கியங்களைப் பசுதோ கிளை மொழி பேசும் மக்களும் படைத்துள்ளனர். பலுச்சி மொழியில் பல்வேறு கிளைமொழிகள் உள்ளன. அவற்றில் இராக்சானி (Rakshani), சரவானி (Saravani), கெச்சி (Kechi), இலோட்டுனி (Lotuni) முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இராக்சானிக் கிளை மொழி பரவலாக அனைவராலும் பேசப்படுகிறது. பாக்கிசுத்தான், ஆப்கானிசுத்தான் நாடுகளிலுள்ள வானொலி நிலையங்கள் இராக்சானிக் கிளைமொழியில் ஒலிபரப்பு நடத்துகின்றன.


இரான் நாட்டின் மத்திய பகுதிகளில் பெர்சிய மொழி அதிகமாகப் பேசப்படுகிறது. இயசுது (Yazd), கெர்மன் (Kerman) பகுதிகளில் வாழும் பார்சி மக்கள் பழைய கப்ரி மொழியினைப் பயன்படுத்துகின்றனர். இரான் மொழிகளுக்குரிய கிளைமொழிகள் எல்லாம் இன்று வரை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இப்போது கிளைமொழி ஆய்வில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர்.

மொழியியல் கூறுகள்: இரானிய மொழிகள் தமது அடிப்படை மொழியியற் கூறுகளில் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் சாயலை ஓரளவு பெற்றுள்ளன. அராபிய மொழிகளிலிருந்து இக்காலப் பாரசீக மொழியும், உசுபெக்கு மொழியிலிருந்து தாட்சிக்கு மொழியும் பெருமளவு கடன் வாங்கியுள்ளன. இரானிய முறை திராவிட மொழிக்குரிய சிறப்புக் கூறாகும். இது ஆரிய மொழிகளின் வழியாக இரானிய மொழிகளைச் சென்றடைந்திருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது. பெரும்பாலான இரானிய மொழிகளில் உரசொலிகள் அதிகம் காணப்படுகின்றன. அவைகள் குறிப்பிடத்தக்க உரசொலிகளாகும். இவ்வுரசொலிகள் எல்லா இரானிய மொழிகளிலும் முழுதும் காணப்படுவனவாகக் கூற இயலாது. பசுதோ மொழியில் இருந்த உரசொலி வழக்கொழிந்து விட்டது. பலுச்சி மொழியில் உரசொலிகள் பெரும்பாலும் முழுமையாக வழக்கிழந்துவிட்டன. சகர ஒலி ஈரானிய மொழிகளில் 'ஹ' கர ஒலியாக வழங்கப்படுகிறது.

இரானிய மொழிகளில் 6-ஆம் வேற்றுமை உருபும் (Genitive) 4-ஆம் வேற்றுமை உருபும்(Dative) மூன்றாம் வேற்றுமை உருபும் இணைந்து ஒன்றெனக் காணப்படுகின்றன. இத்தகைய வேற்றுமை அமைப்பு மிகவும் எளிதாக சோக்டன் மொழியில் காணப்படுகிறது. இதற்கு மாறாக, ஒசடிக்கு மொழி நிறைய வேறுபாடுகளைப் பெற்று வேற்றுமையியலில் சிறப்புற விளங்குகிறது.

பெரும்பாலான இரானிய மொழிகள் இறந்த காலங்காட்டும் வினைத்தொடரில் செயப்படுபொருள் குன்றிய, குன்றா வினை வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. பசுதோ, கோத்தனிசு மொழிகளில் எண், பால் வேற்றுமைகள் தெளிவாக உணர்த்தப்படுகின்


சென்றம் மொழிகள்
(Centrum Languages)
கெலனிக்கு
இத்தாலோ-கெல்டிக்கு
செர்மானிக்கு
இலக்கிய கிரேக்கம்
இன்றைய கிரேக்கம்
மேற்கு
கிழக்கு
வடக்கு
ஆங்கிலம்
செருமன்
தச்சு பிளமிசு
பிரிசியன்
ஆப்ரிக் கான்சு
கெல்டிக்கு (Celtic)
இத்தாலிக்கு
பி.கெல்டிக்கு
கியூகெல்டிக்கு
ஆசுகோ உம்பீரியன்
இலத்தீன் பாலிசுகன்
கோத்திக்கு
பிரிட்டானிக்கு
மாங்க்சு
ஐரிசு
அசுகன்
உம்பீரியன்
நார்வேசியன்
தேனிசு
சுவிடிசு
ஐசுலாந்திக்கு
இசுகாட்சு
ஐரிரி
கெயிலிக்கு
காலிசு
வெல்சு
கார்னிசு
இலத்தீன்
பாலிசுகன்
மேற்கு
கிழக்கு
இசுபானிசு
போர்ச்சுகீசு
பிரஞ்சு
காட்டலன்
பிரஞ்சு
போர்ச்சுகீசு
இத்தாலியன்
உருமேனியன்
இரயட்டோ
உரொமானிக்கு


தம் மொழிகள்
(Satum Languages)
ஆர்மேனியன்
அல்பேனியன்
இந்தோ-இரானியன்
பால்டோ-ஸ்லாவிக்கு
இரானியன்
இந்தியன்
ஸ்லாவிக்கு
பால்டிக்கு
பெர்சியன்
கிழக்கு இரானியன்
மேற்கு இரானியன்
பமீர்
பெலுச்சி
ஆப்கன்
குர்டிக
காசுபியன்
பழைய பெர்சியன்
லெட்டிக
இலித்துவேனியன்

றன. ஏவல் வாக்கியங்கள் (Imperative Sentences) மிகவும் விரிவாக இரானிய மொழிகளில் அமைந்துள்ளன. பெர்சிய மொழியிற்காணும் வாக்கியங்களில் வருகின்ற சொற்கள் மிகவும் செறிவாக அமைந்துள்ளன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் முகமதியர் ஆட்சி இரான் நாட்டில் ஏற்படத் தொடங்கியது. இதனால், அங்கே மதமாற்றமும் மொழி மாற்றங்களும் நிகழத் தொடங்கின. இசுலாமிய மதத்தின் புனித மொழியான அராபிய மொழி ஆதிக்கம் பெற்றது. இதனால், பெர்சியமொழியில் 40 முதல் 50 விழுக்காடு அராபிய மொழிச் சொற்கள் வழக்கில் வரத்தொடங்கின. எஸ். ஆ.

**இந்தோ-ஐரோப்பிய மொழிகள்:** இதன்கண் உலக வழக்கில் மூவாயிரத்துக்கும் மிகுதியான மொழிகள் காணப்படுகின்றன. இவற்றுள் சில மொழிகள் பலகோடி மக்களால் பேசப்படுகின்றன. சில ஆயிரம் மக்களாலேயே பல பேசப்படுகின்றன. சில மொழிகள் சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்டவை. பேச்சு வழக்கில் மாத்திரம் வழங்குவன பல.

உலக மொழிகளை அவற்றின் பண்பு, அவை பேசப்படும் இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்பதாகப் பிரிக்கலாம். அவையாவன: (1)இந்தோ-ஐரோப்பிய மொழிகள், (2) திராவிட மொழிகள், (3) சீனோ-திபத்து மொழிகள், (4) யுரால்-ஆல்தேயிக்கு மொழிகள், (5) கெமித்தோ-செமித்திக்கு மொழிகள், (6) ஆப்பிரிக்கன் மொழிகள், (7) மலேயா-பாலினீசியன் மொழிகள், (8) அமெரிக்க-இந்திய மொழிகள், (9) பிற மொழிகள் (சப்பானிய மொழி, மான்-கூமர் மொழிகள், காச்சியன் மொழிகள், ஆசுத்திரேலிய மொழிகள், பாப்புவன் முதலியன).

உலக மக்கள் தொகையுள் கிட்டத்தட்ட ஐம்பது விழுக்காட்டுக்கு மேற்பட்டோர் (200 கோடி ) குறிப்பிடப்பட்டவற்றுள் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட வகையுடைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இம் மொழிகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய இலக்கணச் சிறப்புடன் செழிப்புற்று வளர்ச்சி பெற்றவை. இம்மொழிகளுள் வடமொழி (Sanskrit), கிரீக்கு, உருசியன், பெர்சியன், இலத்தீன், செருமன், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க, ஆசுத்திரேலிய, ஆப்பிரிக்கப் பெருநிலப் பகுதிகளிலும், பல சிறு தீவுகளிலும் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பேச்சு மொழிகளாக வழங்கி வருகின்றன. எனவே, இம் மொழிகள் உலகின் எல்லாப் பாகங்களிலும் வழங்கக் காணலாம். 'இந்தோ-ஐரோப்பியன்' என்ற சொல் பொதுவாக இம்மொழிகளை இணைத்து வழங்கும் பெயராக அமைந்துள்ளது. இவற்றிற்கு வேறு சில பெயர்களும் உண்டு. செருமானிய மொழிநூல் அறிஞர்கள் இவற்றை 'இந்தோ-செருமானிக்கு' என்று குறிப்பார்கள். இவற்றிற்கு 'இந்தோ-ஆரியன்' என்னும் பெயரும் உண்டு.

இம்மொழிகளில் காணப்படும் நூறு என்னும் பொருள் தரும் சொல்லின் முதல் ஒலியினை வைத்து இவற்றை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். சில மொழிகளில் 'ககர', 'ஹகர' ஒலிகளும், வேறு சில வற்றில் 'சகர' ஒலிகளும் உள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு இம்மொழிகள் முறையே 'சென்றம்' (Centrum) மொழிகள் என்றும், 'சதம்' (Satum) மொழிகள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. சிலர் இவற்றை முறையே மேற்கு, கிழக்கு மொழிகள் எனவும் வழங்குவர்.

பண்பு, இன உறவுகளின் அடிப்படையில் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் செர்மானிக்கு, உராமான்சு, சிலாவிக்கு, பால்டிக்கு, கெலனிக்கு, இந்திக்கு, இரானியன் என்று பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணமும் ஒலி அமைப்பும் பிற மொழிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இந்தியாவில் பேசப்படும் திராவிட மொழிகளில் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணக் கூறுகள் காணப்படுகின்றன. எனினும், இக்கூறுகள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் (Pre-Historic Period) திராவிட மொழிகளிலிருந்தே இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்குப் பெயர்ந்து, மீண்டும் அவை இங்கே வந்திருக்கலாம் என்னும் கருத்து பல சான்றுகளால் வலுப்பெறுகிறது. சா.டே.

**இந்தோ-கிரேக்க நாணயங்கள்:** இந்தியாவின் மேற்குப் பகுதியைச் சிரியா, பாக்டிரியா (Bactria) ஆகிய நாடுகளிலிருந்த கிரேக்கர்கள் கி.மு.2-ஆம் நூற்றாண்டில் தங்களது ஆளுகையின் கீழ்க் கொண்டுவந்தனர். இந்தோ-கிரேக்க நாணயங்கள் வட்டவடிவ அமைப்பை உடையன. சதுர வடிவமான நாணயங்கள் குறைந்த அளவே வெளியிடப்பட்டன. வெள்ளி, நிக்கல் (Nickel), செம்பு உலோகங்களில் நாணயங்கள் உருவாக்கப்பட்டன. தங்க நாணயங்களும் சிறிய அளவில் வெளியிடப்பட்டன. நாணயங்களுள் பெரிய அளவுகளும் சிறிய அளவுகளும் இருந்தன. நாணயம் ஒவ்வொன்றும் குறிப்

பிட்ட அளவு எடை உடையதாகக் காணப்பட்டது. நாணயங்களின் ஓர விளிம்புகளைச் சுற்றிப் புள்ளிகள் அழகாகக் காணப்படுகின்றன. இந்தோ-கிரேக்க நாணயங்களில்தாம் முதன்முதலாக அரச உருவங்கள் ஒருபக்கமும் கடவுள்களின் உருவங்கள் மறுபக்கமும் காணப்படுகின்றன. அரச உருவங்கள் பொதுவாக மகுடமுடன் கூடிய அரசர் தலையையோ நெஞ்சளவு உள்ள தலைப்பகுதியையோ கொண்டு விளங்குவன. இவர்களின் உருவ அமைப்பிலிருந்து அரசரின் தோற்றப் பொலிவு, இளமை போன்றவற்றை நன்கு அறியலாம். நாணயங்களின் மறுபக்கத்தில் கிரேக்கக் கடவுளர்களின் உருவங்கள், அடையாளங்கள் (Symbols) போன்றவை காணப்படுகின்றன; கிரேக்கப் பெண் தெய்வங்களும் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன. இந்தோ-கிரேக்க நாணயங்கள் சில வற்றில் இந்தியக் கடவுள்களான சிவன், திருமால் போன்றோரின் உருவங்கள் காணப்படுகின்றன. அப்போலோ (Apollo), சியசு (Zeus), ஆர்ட்டிமிசு Artemis) தயசுகோரி (Dioskouroi) போன்ற கிரேக்கக் கடவுள்கள் நாணயங்களில் காணப்படுகின்றன. கபிசா நகரத்துத் தேவதை (City Goddess of Kapisa),புட்கலவதி தேவதை (Pushkala-vati Devata) போன்ற நகரத் தேவதைகளும் நாணயங்களின் மறுபக்கத்தில் இடம்பெற்றிருக்கின்றன. கடவுளர்களின் அடையாளக் குறிகளும் இந்நாணயங்களில் காணப்படுகின்றன. சில நாணயங்களில் குதிரை வீரன், யானை, திமிலுடைய எருது, சிங்கம், பாக்டிரிய நாட்டு ஒட்டகம் போன்ற உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தோ-கிரேக்க நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் பொதுவாக மூன்று சொற்களாகக் காணப்படுதல் இதன் சிறப்புக்கூறுகளுள் ஒன்றாகும். அவை அரசர், வெளியிட்ட அரசரின் பெயர், அவர் சூட்டிக் கொண்ட பட்டப் பெயர் என்பனவாம். சில இந்தோ-கிரேக்க நாணயங்களில் கிரேக்க எழுத்துகள் மட்டும் ஒருபக்கம் காணப்படும். இந்நாணயங்கள் இந்தியாவில் வெளியிடப்படவில்லை என்று தெரிகிறது. தயடோட்டசு (Diodotus), யூத்திடமசு (Euthydemus)போன்ற அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் கிரேக்க எழுத்தில் கிரேக்க மொழியுடைய நாணயங்களாகும். இருபக்கங்களிலும் எழுத்துகள் கொண்ட நாணயங்களின் ஒருபக்கத்தில் கிரேக்கமும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியும் காணப்படுகின்றன. பிராகிருத மொழி, கரோத்தி (Khorasthi) எழுத்துகளைக் கொண்டு விளங்குகிறது. மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட கிரேக்கச் சொல்லே பிராகிருத மொழியில் காணப்படுகிறது. பண்டாலியோன் (Pantaleon), அகதோகிளசு (Agathocles) போன்ற அரசர்களின் நாணயங்கள் பிராமி (Brahmi) எழுத்து வடிவத்தில் காணப்படுகின்றன.

இந்திய நாணயக் கலை வளர்ச்சியில் இந்தோ-கிரேக்க நாணயங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதற்குமுன் கரடுமுரடான ஒழுங்கற்ற அமைப்புடைய நாணயங்களே இந்தியாவில் காணப்பட்டன. இந்தோ-கிரேக்க நாணயங்களின் அமைப்பில் பிற்காலத்தில் ஒழுங்கான அமைப்புடைய நாணயங்கள் வெளியிடப்பெற்றன. அந்நாணயங்களில் உருவங்களும் எழுத்துகளும் பொறிக்கப்பட்டன. தங்கத்தால் ஆன நாணயங்களை முதன்முதலில் இந்தியாவில் வெளியிட்டவர்கள் இந்தோ-கிரேக்க அரசர்களேயாவர்.

டி.த.

***இந்தோசீன அரசியல் நிலை:*** இப்போது இந்தோசீனா (Indo China) என வழங்கப்படும் நாட்டிற்கு ஒரு நெடுங்கால வரலாறு உண்டு. கம்போடியா (Combodia), இலாவோசு (Laos), வியட்நாம் (Viet Nam) ஆகிய மூன்று தனி அரசுகளைக் கொண்ட இந்தோ-சீனா ஒரு தீபகற்ப வடிவமுடைய நிலப்பகுதியாகும். இத்தீபகற்பத்தின் கிழக்குப் பாதியே இந்தோசீனப் பகுதியாகும். இதன் கிழக்குப் பகுதியில் தென்சீனக் கடலும், மேற்கில் தாய்லாந்து நாடும் தாய்லாந்து வளைகுடாவும் இருக்கின்றன. இந்நாட்டில் பல இனமக்களும் அண்டை நாடுகளான தாய்லாந்து, சீனா, மலாயா, இந்தோனேசியா முதலியவற்றிலிருந்து அவ்வப்போது படையெடுத்து வந்து குடியேறி வந்ததால் இங்கு ஒரு கலப்பு இனம் நாளடைவில் தோன்றிற்று. முதலில் வடக்கில் தென் சீனச் சமவெளியிலிருந்து சிறு கூட்டங்களாக இத்தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதியில் சீன இனமக்கள் குடியேறினர். இவர்கள் தெற்கிலிருந்து படையெடுத்து வந்த இந்தோனேசிய மலாய் கூட்டத்தாரோடு மோதி, அவர்களை மலைப்பகுதிகளுக்குத் தள்ளிவிட்டனர். இப்போது வட வியட்நாம் எனப்படும் பகுதியில் வியட்டுகள் (Viets) என்னும் கூட்டத்தார் ஒரு தனி அரசை நிறுவினர். ஆனால் நாம்வியட் (Nam Viet) எனப்படும் இத்தனி அரசைக் கி.பி. 100-ஆம் ஆண்டில் சீனப் பேரரசை ஆண்ட ஆன் குடும்பப் (Han Dynasty) பேரரசர்கள் கைப்பற்றி ஆண்டுவரலாயினர். சீனர் இந்நாட்டிற்கு அன்னாம் (Annam) என்று பெயர் இட்டனர். சீனர்கள் வடவியட்நாமை ஆண்ட நிகழ்ச்சி வியட்நாமின் அரசியல் நிலை வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகும், எவ்வாறெனில் சீனப் பேரரசில் காணப்பட்ட அரசியற் கருத்துகளும், சமூக, பொருளாதார முறைகளும் சீன ஆட்சியின் மூலமாக வடவியட்நாமாகிய அன்னாம் நாட்டில் வேரூன்றி, அவற்றுக்கு இன்றளவும் மதிப்புக் கொடுக்கப்படுவதற்கு வழி உண்டாயிற்று. தாய் இன

மக்கள் கி.பி. 200-ஐ ஒட்டிப் படை எடுத்து வந்து குடியேறினர். ஏறக்குறைய கி.பி. 100-இல் தங்களை இந்தியர், சீனர் ஆகியோருடைய வழி வந்தவரென்று கூறிக்கொண்ட கெமர் (Khmer) என்னும் ஒரு புதிய இனத்தார் இத்தீபகற்பத்தின் தென்கிழக்கு நிலப் பகுதியில் குடியேறினர். இந்நிலப்பகுதியே இப் போதைய கம்போடிய நாடு இருக்கும் பகுதி ஆகும். இப்புதிய இனத்தாரே; இப்போதைய கம்போடிய நாட்டு மக்களின் மூதாதையர் ஆவர். இவர்களுடைய அரசியலாதிக்கமும் இந்நாட்டின் அரசியல் நிலையை உருவாக்கிய காரணிகளுள் ஒன்று ஆகும். எவ்வாறெனில் எவ்வாறு வடக்குப் பகுதியில் சீனருடைய அரசியல் முறைகள் நன்கு வேரூன்றினவோ அதனைப் போன்றே தென்பகுதியில் கெமர் இனத்தார் ஏற்படுத்திய இந்திய – மலாய் மரபுகள் வேரூன்றலாயின. கெமர் இனத்தாருடையஅரசியலாதிக்கம் தென்சீனா முதல், தாய்லாந்து வளைகுடா வரை ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு (அதாவது கி.பி. 800 முதல் 1300 வரை) பரவி இருந்தது. இவர்கள் ஏற்படுத்தியிருந்த பேரரசுமறைந்தது. இவர்கள் கலைகள், கட்டடக் கலைகள், அரசாங்கம் முதலிய துறைகளில் பெரும் பணி செய்துள்ளனர். இப்பொழுது இடிபாடுகளுடன் காணப்படுகின்ற இவர்களுடைய பண்டைத் தலை நகரமாகிய அங்கோர் (Angkor) என்பது இப்பொழுதும் இவர்களுடைய கலைத் தொண்டுக்குச் சான்றாக விளங்குகிறது.

கெமர் இனமக்களுடைய படையெடுப்பு ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திற்று. இவர்கள் இந்தோசீனாவின் தென்பகுதியில் குடியேறிய செயல், வட வியட்நாம் அரசு சீனாவின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுதற்கு ஒரு வாய்ப்பைத் தோற்றுவித்தது. சீன ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றாலும் வடவியட்நாமியர் சீனப் பேரரசருக்குத் திறை செலுத்த வேண்டிய கட்டாயத்திலிருந்தனர்.அவர்கள் தம் நாட்டுக்குச் சீனர் அளித்திருந்த அன்னாம் என்னும் பெயரை நீக்கிவிட்டு தேவியட்டு (De Viet) என்னும் பெயரைக் கொடுத்தனர். இலாவோசு நாட்டில் கி.பி. 1353-ஆம் ஆண்டில், முன்பு குடியேறி இருந்த தாய் மக்கட் கூட்டங்கள் இணைந்து இலான்சாங்கு (Lan Xang) என்னும் ஒரு புதிய அரசைத் தோற்றுவித்தன. இங்கு ஒரு முறையான அரசாங்கமும், படை அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டன; வியட்நாமின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூசல்களின் விளைவாகச் சம்பாசக்கு (Champasak), வியண்டியன் (Vientiane), இலுவான் பிரபாங்கு (Luvang Brabang) என்னும் 3 சிறு நாடுகள் தோன்றின. ஆனால் தாய்லாந்து படை எடுத்து வந்து கி.பி. 1828-ஆம் ஆண்டில் வியண்டியனையும், சீனாவும் வியட்நாமும் (தேவியட்டு) சம்பாசக்கையும் இலுவான் பிரபாங்கையும் வென்றன. தாய்லாந்தும் வியட்நாமும் கெமர் நாட்டின் பகுதிகளையும் வென்றன. தே வியட்டு நாட்டில் 1802-ஆம் ஆண்டில் ஒரு புதிய அரச குடும்பம் ஆளத் தொடங்கி, தே வியட்டு என்ற பெயரை வியட்நாம் என்று மாற்றிற்று.

மேற்கத்திய நாடுகளின் அரசியல் தொடர்பு: இந்த வியட்நாம் நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு கத்தோலிக்கப் பாதிரிமார் குடியேறித் தங்களுடைய சமயக் கோட்பாடுகளைப் பரப்பி, வியட்நாமியர் பலரைக் கிறித்தவர்களாக ஆக்கினர். இதனால் இவர்களுக்கும் வியட்நாமியப் பேரரசர்களுக்கும் சிற்சில மோதல்கள் ஏற்பட்டன. பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியன் சில பிரெஞ்சுப் பாதிரியார்கள் கொல்லப்பட்டதற்குப்பழி வாங்கும் பொருட்டும், நாட்டில் பிரெஞ்சுக்காரர்களுக்கு இடம் பிடிக்கும் பொருட்டும் ஒரு படையை விடுத்தார். இதன் விளைவாக வியட்நாம் பிரெஞ்சு அரசாங்கத்தோடு 1874-ஆம் ஆண்டிற்கும் 1884-ஆம் ஆண்டிற்கும் இடையே பல ஒப்பந்தங்களைச் செய்து, தாங்கின் (Tankin) என்னும் வடவியட்நாம் மாகாணத்தையும் அன்னாம் என்னும் நடுவியட்நாம் மாகாணத்தையும் பிரெஞ்சுக் காப்பு நாடுகளாகவும் (French Protectorates), கொச்சின் சீனா (Cochin China) என்னும் வியட்நாம் பகுதியைப் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகவும் ஆக்கிற்று. இதற்கிடையில் 1863-ஆம் ஆண்டில் பிரான்சு கம்போடியாவைக் கைப்பற்றி, அங்கு ஒரு காப்பு அரசாங்கத்தை (Protectorate) நிறுவிற்று. பிரெஞ்சுப் படைகள் 1880-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலுவான் பிரபாங்கில் புகுந்திருந்த தாய்நாட்டுப் படைகளோடு போரிட்டு, அவைகளை விரட்டிவிட்டு, 1893-ஆம் ஆண்டில் இலுவான் பிரபாங்கு நாட்டையும் கைப்பற்றின. இந்த நாடு 1917-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் காப்பு நாடாகவும், சம்பாசக்கும் வியண்டியனும் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளாகவும் ஆக்கப்பட்டன. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே இந்தோசீனா முழுவதும் பிரெஞ்சு அரசியலாதிக்கத்துக்குள் வந்து விட்டது.

இரண்டாம் உலகப் போரும் அதை ஒட்டி நடைபெற்ற அரசியல் மாற்றங்களும்: இரண்டாம் உலகப் போரில் (1939-45) பிரான்சு செருமனியால் தோற்கடிக்கப்பட்டுச் சரணடைந்ததும் (சூன், 1940), செருமனியின் கூட்டாளி அச்சு நாடாகிய சப்பான் செருமனியின் சார்பாகப் போரிலிறங்கி, இந்தோசீனாவில் தன் படைகளை விடுத்து அங்கிருந்த பிரெஞ்சு அதிகாரிகளை அதிகாரமற்ற பொம்மை ஆட்சியாளர்களாக இருக்கும்படி விட்டு, வியட்நாம் பேரரசர்

பாவோ தாய் (Bao Dai) என்பவரை வியட்நாமை ஒரு தன்னாட்சி நாடாக விளம்பரம் செய்யும்படியும், அங்குச் சப்பானுடன் நட்புறவுடைய ஓரரசாங்கத்தை ஏற்படுத்தும்படியும் தூண்டிற்று. சப்பானின் தூண்டுதலின் பேரில் நொரோடாம் சிகானோக்கு என்னும் அரசர் (Norodom Sihanouk) கம்போடியாவையும், சிசாவாங் வாங்கு என்னும் அரசர் இலுவான் பிரபாங்கையும் விடுதலை நாடுகளாக விளம்பரம் செய்தனர். சப்பான் 1945, பிப்பிரவரியில் போரின் போக்குத்தனக்கெதிராக இருப்பதைக் கண்டு இந்தோசீனாவிலிருந்த பிரெஞ்சு அதிகாரிகளையெல்லாம் சிறைகளில் முடக்கி வைத்தது. சப்பான் 1945, செப்டம்பரில் ஐக்கிய நாடுகளிடம் சரணடைய, பிரெஞ்சு அரசாங்கம் மீண்டும் தனது அரசியலாதிக்கத்தை இந்தோ சீனாவில் நிலைநாட்ட முயற்சி செய்ய, பிரெஞ்சியருக்கும் இந்தோசீன மக்களுக்குமிடையே விடுதலைப் போர்கள் தொடங்கலாயின. நாட்டை வட, தென் பகுதிகளாகப் பிரிக்கின்ற 17-ஆம் வட அட்சக் கோட்டிற்கு வடக்கேயுள்ள பகுதியைச் சீனதேசியப் படைகளும், தென்பகுதியை ஆங்கிலேயப் படைகளும் கைப்பற்றிச் சப்பானியப் படைகளை வெளியேற்றின. பிரான்சின் தூண்டுதலின் பேரில் இலுவான் பிரபாங்கின் அரசர் சிசாவாங் வாங்கு இலாவோசு முழுமையையும் தன்னாட்சி நாடாக ஆக்கினார். இதேபோலப் பிரான்சு கம்போடியாவையும் கைப்பற்றித் தன்னாட்சி நாடாக ஆக்கிற்று. இவ்விருநாடுகளும் பிரெஞ்சுப் பேரிணையத்தின் (French Union) உறுப்பு நாடுகளாயின. ஆயினும் இதே சமயத்தில் வியட்நாமில் ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி அரசாங்கத்துக்குப் பல சோதனைகளும் சிக்கல்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. இங்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற குழுவுக்கு வியட்நாம் குடியாட்சிக் குடியரசு என்பது (Democratic Republic of Vietnam) பெயர். இதனுடைய தலைவரே மாசுகோவிலும் சீனாவிலும் பொதுவுடைமைக் கோட்பாட்டில் பயிற்சி பெற்றவரும், வியட்நாமிய விடுதலைப் புரட்சிக் கழகத்தின் (வியட்மின் - Viet Minh) (Revolutionary League for Independence of Vietnam) தலைவரும், பொதுவுடைமைத் தலைவருமாகிய ஓ சி மின் (Ho Chi Minh) என்பவராவார். பிரெஞ்சு, வியட்மின் தலைவர்கள் பலமுறை கூடித்தம் வேறுபாடுகளை அமைதியாகத் தீர்க்க முயன்றும் பயனளிக்காமல் போகவே, 1946-ஆம் ஆண்டில் போர் தொடங்கிற்று. பிரெஞ்சியர் நகரங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், நாட்டுப் புறங்களை அவர்களால் வெல்ல இயலவில்லை. பிரான்சு வசமிருந்த தின் பின் பியூ என்னும் பெரிய கோட்டையை 55 நாள் முற்றுகையிட்டுப் பொதுவுடைமைப் படைகள் 1954, மே-இல் கைப்பற்றின. இதன்பின் 1954-இல் செனிவா (Geneva) வில் செய்யப்பட்ட பிரெஞ்சு வியட்மின் போர் நிறுத்த ஒப்பந்தப்படி, 17-ஆம் வடகோட்டிற்கு வடக்கே உள்ள வியட்நாம் (வடவியட்நாம்) பொதுவுடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு, அக்கோட்டிற்குத் தெற்கேயுள்ள தென் வியட்நாமுக்குப் பிரான்சு தன்னாட்சி உரிமை வழங்குவதென்றும் ஏற்பாடாயிற்று. பழைய பேரரசர் பாவோ தாய் தென்வியட்நாமின் பேரரசர் ஆனார்; அவருடைய குடிமக்கள் அவரை 1955 அக்டோபரில் வாக்கெடுப்பின் மூலம் பதவிநீக்கம் செய்து, நிகோ தின் திம் (Ngo Dinh Diem) என்பவருடைய தலைமையில் நாட்டைக் குடியரசாக ஆக்கினர். கம்போடியாவும் இலாவோசும் முழு தன்னுரிமை பெற்ற நாடுகளாக ஆயின. வடவியட்நாம் அரசாங்கம் இரண்டு வியட்நாம்களையும் ஒன்றாகத் தனதாட்சியின் கீழ் இணைக்கப் போரைத் தொடங்கிற்று; வடவியட்நாமுக்கு பொதுவுடைமைச் சீனா உதவி செய்தது. தென் வியட்நாமுக்குப் பேருதவி செய்த ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குப் பெருமளவு பொருளழிவும், ஆளழிவும் ஏற்பட்டன. பொதுவுடைமையர் தென்வியட்நாமின் தலைநகரமாகிய செய்கோனைக் கைப்பற்றி (1975, மே) இரண்டையும் ஒன்றாக இணைத்தனர். போர் முடிந்தது. செய்கோனில் அமெரிக்கருடைய பாதுகாப்பிலிருந்த ஆட்சியாளர் அகற்றப்பட்டார்; அமெரிக்கப் படைகளும் வெளியேறின. இப்பொழுது வியட்நாமுக்கும் கம்போடியாவுக்கும் எல்லைத் தகராறுகள் இருக்கின்றன, எனினும் பிரெஞ்சியருடைய அரசியலாதிக்கம் இந்தோ சீன நாடுகளெல்லாவற்றிலிருந்தும் நீக்கப்பட்டு, அவையெல்லாம் தன்னாட்சி நாடுகளாக இருக்கின்றன.

துணை நூல்கள்:

**Buttinger, Joseph**, Viet Nam, New York, 1967.

**Dobby, Emest, H.G.**, Southeast Asia, London, 1950.

**Hammer, Ellen, J.**, The Struggle for Indochina, Stanford, Calif., 1954.

**இந்தோசீனா** தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள கம்பூச்சியா, இலாவோசு, வியட்நாம் என்னும் மூன்று நாடுகளை உள்ளிட்ட நிலப்பகுதியாகும். நீண்டு வளைந்து தென்சீனக் கடலில் படர்ந்து விரிந்துள்ள கிழக்குப்பாதித் தீபகற்பமே இந்தோசீனாவாகும்.

இந்தோசீனா (Indochina) பல்வேறு பண்பாடுகளையும் வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் கொண்டுள்ள பகுதியாகும். இதன்மீது நடைபெற்ற

படையெடுப்புகள் பல. மேற்கிலிருந்து தாய்லாந்தும், வடக்கிலிருந்தும் கிழக்குக் கடற் புறத்திலிருந்தும் சீனாவும் இந்தோசீனாவின்மீது படையெடுத்தன. இந்தோசீன மக்களில் பெரும்பாலோர் நடு ஆசியச் சமவெளிகளிலிருந்தும் மலைப்பகுதிகளிலிருந்தும் தென்சீனாவிலிருந்தும் வந்து குடியேறியவர்கள். அவர்களுக்கும் முன் வந்து குடியேறிய பழங்குடியினருள் சிலர் இன்று இந்தோனேசியாவிற்குச் சொந்தமான தீவுகளிலிருந்து வந்தவர்கள். நூற்றாண்டுகள் பல கழிந்துபோயினும் இத்தீபகற்பத்தில் வாழும் மக்களிடையே இனப்பாகுபாடுகளும் மொழி வேறுபாடுகளும் தலை தூக்கியதால் தொல்லைகள் மூண்டன. அதனால் மக்களிடையே ஒற்றுமையும் ஒருங்கிணைந்த உணர்வும் வளர்ச்சியுறவில்லை என்று கூறலாம்.



இந்தோசீனா

சுதந்திரப் பழங்குடி இனங்களும் சுதந்திர அரசுகளும் இப்பகுதியில் ஒரு காலத்தில் நிறைந்திருந்தன. கி.பி. 10–ஆம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு முடியச் சீனாவும் தாய்லாந்தும் இந்தோசீனாவைக் கட்டுப்படுத்தத் தமக்குள்ளே போரிட்டுக் கொண்டன. கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் இந்தோசீனா பிரான்சின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. அத்தொடர்பு 1954–ஆம் ஆண்டு வரை நீடித்தது. இப்பகுதியைப் பிரெஞ்சிய இந்தோசீனா என்றும் குறித்தனர்.

தென்சீனாவிலிருந்தும் இந்தோசீனா தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியிலிருந்தும் மக்கள் வந்துற்றபோது, அவர்கள் இந்தோனேசிய–மலாய் கலப்பின மக்களுடன் மோதிக்கொண்டனர். இரு குழுவினரும் போரிட்டனர். பெரும்பாலான பகுதிகளில் இந்தோ–மலாய் மக்கள் பின்வாங்கி மலைப் பகுதிகளுக்கு ஓடலாயினர். ஆற்றங்கரைப் பகுதிகளைப் படையெடுப்பாளர் கைப்பற்றிக் கொண்டனர்.

தென் சீனாவின் கடற்கரைச் சமவெளியிலிருந்து தீபகற்பத்திற்கு வியத்துகள் (Victs) வந்துற்றனர். செவ்வாற்றின் கழிமுகப்பகுதிகளில் பல சிறுசிறு அரசுகள் எழுந்தன. அதனையே வட வியட்நாம் என்றனர். இவ்வரசுகள் கி.மு. 200 ஆம் ஆண்டளவில் ஒருங்கிணைந்து நாம்வியட்டு என்னும் முடியாட்சி அரசு உருவாகியது. சீனாவைஆண்ட ஆன் பேரரசு (Han Empire) கி.மு. 111–ஆம் ஆண்டில் இப்பகுதியைக் கைப்பற்றிக்கொண்டது. சீனர்கள் இப்பகுதியை சியோ–சி (Chiao Chih) என்றனர். அடுத்த ஆயிரமாண்டுகளுக்கு வியட்நாம் சீனப்பேரரசின் பகுதியாக இருந்தது.

இன்று இலாவோசு என்று சொல்லப்பெறும் பகுதியின் மீது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே தாய் மக்கள் (Thais) தென்சீனாவிலிருந்து படையெடுத்தனர். அவர்கள் இந்தோ–மலாய் மக்களையும் வென்றார்கள். அவர்கள் கா (Kha) எனப்படுவர். தாய்மொழியில் கா என்ற சொல், ‘அடிமை’, ‘காட்டுமிராண்டி’ எனப் பொருள்படும்.

கெமர் மக்கள் (Khmer) கி.பி. 100–ஆம் ஆண்டளவில் இன்றைய கம்பூச்சியாவில் நுழைந்தனர். இந்தியா, சீனாவின் மக்களும், இந்தோமலாய் மக்களும் தம் மூதாதையர்கள் என அவர்கள் உரிமை கொண்டாடினர். அவர்களே இன்றைய கம்பூச்சியர்களின் மூதானதயர்கள். தாய்லாந்து வளைகுடாவிலிருந்து சீனாவரை பரவியிருந்த இந்தோசீனாவின் பெரும் பகுதிகளைக் கெமர் அரசர்கள், கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை அரசாண்டனர். அவர்தம் பேரரசு கலை, கட்டடக் கலை, அரசுமுறை போன்றவற்றில் சீரும் சிறப்புமுற வாழ்ந்து புகழ் பெற்றது. அவர்களின் தலைநகராயிருந்த ஆங்கோர் (Angkor) இன்றும் கலைச் சின்னமாக நிற்கிறது.

கெமர்கள் கி.பி. 939–ஆம் ஆண்டில் ஆட்சி செய்த போது சீனாவின் பிடியிலிருந்து வியட்நாமியர்கள் தம் சுதந்திரத்தைத் திரும்பவும் பெற்றனர். சீனர்கள் அதை அமைதிப்படுத்தப்பெற்ற தென்பகுதி என்று பொருள்படும்படி அன்னாம் (Annam) என்று குறிப்பிட்டனர். வியட்நாமியர்கள் அப்பெயரை ஏற்க மறுத்துச் சினங்கொண்டனர். பலமுறை கலகஞ் செய்தனர். இறுதியாகத் தம் நாட்டை விடுதலையுறச் செய்தனர். புதிய நாட்டை அவர்கள்

'தாய் வியட்டு' (Dai Viet) என்றழைத்தனர். அச் சொல்லுக்குப் பெரிய வியட்டு (Big Viet) என்பது பொருள். விடுதலை பெற்றும் சீனாவுடன் அமைதி காக்க வேண்டித் தொடர்ந்து சீனாவுக்குக் கப்பங் கட்டி வந்தனர்.

கெமர் அரசர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தம் ஆட்சியை இழக்கத் தொடங்கினர் இலான் சங்கு (Lan Zang) என்னும் முடியாட்சி அரசு கி.பி. 1353-இல் இன்றைய இலாவோசுப் பகுதியில் நிலைநாட்டப் பெற்றது. பா நகூன் (Fa Ngoun) என்னும் இலா வோசுப் பெருங்குடி மகன் அதை நிலைநாட்டினார். சிறுவனாக இருந்தபோது அவர் கம்பூச்சியாவுக்கு ஓடிச்சென்று ஆங்கோரில் வாழ்ந்து வந்தார். பா நகூனும் அவரை அடுத்து அவரின் பின்வந்தவர்களும் மீகாங்கு ஆற்றங்கரையின் மேல்பகுதியில் வாழ்ந்த பல தாய்ப் பழங்குடிகளை இணைத்தனர்; ஒரு நாடாக்கினர். அடுத்த நூற்றாண்டில் இலான் சங்கு, நல்லதோர் அரசை உருவாக்கி இராணுவ அமைப்பை யும் நிலைநாட்டினார். அவர் தம் நாட்டைச் சுற்றி யுள்ள ஏனைய நாடுகளுடன் இலாபம் கொடுக்கும் வாணிகத்தையும் மேற்கொண்டார். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் திறமையாயிருந்த குழுக் கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டமையால், நாட்டின் ஒருமைப்பாடு சீர்குலைந்தது. சம்பாசக்கு (Champasak), வியண்டியான் (Vientiane), இலுவான் பிரபாங்கு (Luang Prabang) என்னும் மூன்று சிறு நாடுகளாக அவ்வரசு சிதறுண்டு பிரிந்தது.

தாய், வியட்நாமியர், பர்மியர் ஆகியோர் இச்சிறு நாடுகளின்மீது 18-ஆம் நூற்றாண்டில் பலமுறைகள் படையெடுத்தனர். வியண்டியானைக் கி.பி. 1828-ஆம் ஆண்டளவில் தாய்மக்கள் அழித்தனர். சம்பா சக்கு, இலுவான் பிரபாங்கு ஆகிய இரு நாடுகளும் சீனா, வியட்நாம் போன்ற நாடுகளின் வசமாயின. தாய்மக்களும் வியட்நாமியரும் 19-ஆம் நூற்றாண் டின் இடைப்பகுதியில் பழைய கெமர் பேரரசின் பகுதிகளைக் கைப்பற்றினர். அப்பகுதியே இன்றைய கம்பூச்சியாவாகும்.

இந்தோசீனாவின் கிழக்குக் கடற்கரையில் கி.பி. 1802-ஆம் ஆண்டில் புதிய மரபு ஒன்று ஆட்சிக்கு வந்தது. அங்குத் தாய் வியட்டு சுதந்திரமாக ஏறத் தாழ 900 ஆண்டுகள் விளங்கியது. அவ்வரசையே வியட்நாம் என்றனர். இக்கால வரலாறு இவ்வர சாட்சியுடன் இப்பகுதியில் தொடங்கியது எனலாம்.

இந்தோசீனாவில் பிரெஞ்சுக்காரர்கள்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தோசீனாவில் பிரெஞ்சுக் காரர்களின் செல்வாக்குப் பெருகி வளரலாயிற்று. பிரெஞ்சுக் கிறித்தவ சமயப் பரப்புநர் வியட்நாமி யரை உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாற்றினர். அவர்களின் சமயப் பரப்புதலைக் கண்டு வியட்நாமியப் பேரரசர்கள் சில வேளைகளில் கிறித்த வர்களை எதிர்த்தார்கள். பிரெஞ்சுப் பேரரசர் மூன் றாம் நெப்போலியன் கி.பி. 1858-இல் கிறித்தவப் பாதிரிகள் சிலர் கொல்லப்பட்டமை குறித்துப் பழி வாங்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்பினார். அதன்மூலமாகத்தான் இந்தோசீனாவில் பிரெஞ்சுக் காரர்களின் செல்வாக்குப் பெருகலாயிற்று.

கொச்சின் சீனா எனப்பட்ட தென் வியட்நாமின் பகுதிகளை வியட்நாமியர் விட்டுக்கொடுக்க வேண்டு மெனப் பிரான்சு வற்புறுத்தியது. பின்னர்க் கி.பி. 1874க்கும் 1884க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற் பட்ட உடன்படிக்கைகளின்படி தோன்சின் (வடவியட் நாம்), அன்னாம் (நடுவியட்நாம்) போன்ற பகுதிகளில் பிரான்சு தம் ஆட்சியை நிலைநாட்டியது. கொச்சின் சீனா பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதியாயிற்று.

இதே வேளையில் இன்று கம்பூச்சியா எனப்படும் கம்போடியாவைக் கி.பி. 1863-இல் கைப்பற்றிக் கொண்டு அங்கும் புரவலர் ஆட்சியை நிலைநாட்டி யது. இலாவோசிலும் கி.பி.1880-ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சுப் படைகள் தாய் மக்களின் படையுடன் மோதின. இலுவான் பிரபாங்கு 1893-இல் பிரெஞ் சுக்காரர்களின் ஆட்சிக்குள் வந்தது. இலுவான் பிரபாங்கும் 1917-இல் பிரெஞ்சுக்காரர்களின் புரவ லர் பகுதியாயிற்று. சம்பாசக்கு, வியண்டியான் பகுதி கள் பிரெஞ்சிய இந்தோசீனாவில் பிரெஞ்சுக் குடி யேற்றப் பகுதிகளாயின.

இரண்டாம் உலகப்போர் மூண்டபோது பிரெஞ்சு இந்தோசீனாவின் நிலை மிகுதியாக மாறியிருந்தது. பிரான்சுநாடு 1940 சூன் மாதம் 22-ஆம்நாள் செரும னியிடம் சரணடைந்தது. பிரான்சின் தோல்வியைக் கண்ணுற்ற சப்பான் அந்தச் சூழ்நிலையைப் பயன் படுத்திக் கொண்டு, தன் படைகளை இந்தோசீனா விற்கு அனுப்பி அப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண் டது. போருக்குப்பின் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சி நீடிப்பதைச் சப்பான்ஏற்றுக்கொண்டது. சப்பானியப் படைவீரர்கள் 1945 மார்ச்சு மாதத்தில் அனைத்துப் பிரெஞ்சிய அலுவலர்களையும் இராணுவ அமைப்பு களையும் கட்டுக்காவலில் வைத்தனர்.

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த போது வியட்நாமியப் பேரரசர் பா தாய் (Bao Dai) என்பாரைத் தூண்டி, வியட்நாமைச் சுதந்திர நாடென அறிவிக்கச் செய்தது சப்பான். அதனுடன் நட்புறவைப் பாராட்ட வேண்டுமெனவும் அறிவுறுத் தியது. நொரோடாம் சிகானோக்கு என்னும்பேரரசர் கம்போடியாவின் (கம்பூச்சியாவின்) சுதந்திரத்தை

அறிவித்தார். இலுவான் பிரபாங்கையும் அதேபோல் சிசாவாங் வாங்கு (Sisavang Vong) என்பவர் சுதந்திர நாடாக அறிவித்தார்.

சப்பான் 1945 செப்டம்பர் 2-ஆம் நாள் கீழ்ப் படிந்த பின்னர், மீண்டும் இந்தோசீனாவில் தம் ஆட்சியை நிலைநாட்டப் பிரெஞ்சியர் முயன்றனர். வியட்நாமில் தேசிய சீனாவின் படைகள் சப்பானின் கீழ்ப்படிதலை 17 பாகை வட குறுக்குக் கோட்டிற்கு வடபாலிருந்த பகுதியில் ஏற்றுக்கொண்டது. தென் பாதியில் இருந்த சப்பானியப்படைகள் ஆங்கிலேயரிடம் கீழ்ப்படிந்தன. பிரெஞ்சுக்காரர்கள் சிசாவாங் வாங்கைத் தூண்டி இலாவோசின் சுதந்திரத்தை அறிவிக்கக் கூறினர். கம்போடியாவையும் பிரான்சு திரும்பக் கைப்பற்றிக்கொண்டது. பின்னர்த் தன்னைத்தான் ஆண்டுகொள்ளும் உரிமையை அதற்கு வழங்குகிற்று. பிரெஞ்சு ஒன்றியத்தில் இலாவோசும் கம்போடியாவும் உறுப்பு நாடுகளாயின.

வியட்நாமில் அதே காலத்தில் பிறிதொரு சுதந்திர அரசு நிலைநாட்டப்பட்டது. அதை வியட்நாமிய மக்களாட்சிக் குடியரசு என்பர். அதை ஓ சீ மின் (Ho Chi Min) என்னும் தலைசிறந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர் வழி நடத்தினார். பிரெஞ்சியருக்கும், வியட்நாம் தலைவர்களுக்குமிடையே எழுந்த வேறுபாடுகளை அமைதியான வழியில் தீர்த்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. போர் 1946-இல் மூண்டது.

பிரெஞ்சியர் வியட்நாமிய நகரங்களைத் தம் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தாலும், நாட்டுப் புறங்களைஅவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரான்சு 1953-ஆம் ஆண்டளவில் தோல்வியை எதிர் நோக்கிய நிலையில் இருந்தது. வியட்நாமின் படைகள் 1954 மே 7-ஆம் நாள் தியன் பியன் பூ (Dien Bien Phu) என்னும் பெருங்கோட்டையைக் கைப்பற்றியபோது போர் முடியும் தறுவாயில் இருந்ததெனலாம். முற்றுகை 55 நாள்கள் நீடித்தும் பயனில்லை.

இந்தோசீனாவில் வியட்நாமியச் சிக்கலைத் தீர்க்கும் நோக்குடன் 1954 சூலையில் சுவிட்சர்லாந்து நாட்டின் செனீவா நகரில் வியட்நாமின் அலுவலர்களும் பிரெஞ்சிய அலுவலர்களும் பல்வேறு அரசுகளின் பேராளர்களும் ஒன்று திரண்டனர். போர் நிறுத்த உடன்படிக்கையொன்றைப் பிரெஞ்சிய வியட்நாமின் அலுவலர்கள் ஏற்றுக் கையெழுத்திட்டனர். 17 பாகை வடக்குக் குறுக்குக் கோட்டிற்கு வடபாலிருந்த பகுதிகளை வடவியட்நாம் என்னும் பெயரில் பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்தது செனீவா உடன்படிக்கை. தென் வியட்நாமுக்குப் பிரான்சு முழுச் சுதந்திரம் கொடுத்தது. 17 பாகை வட குறுக்குக் கோட்டிற்குத் தெற்கிலிருந்த பகுதியைத் தென் வியட்நாம் என்றனர்.

புதிய அரசான தென் வியட்நாமின் தலைவராக முன்னாள் பேரரசர் பா தாய் (Bao Dai) பொறுப்பேற்றார். தென் வியட்நாமிய மக்கள் 1955 அக்டோபரில் அவரைத் தேர்தலில் தோற்கடித்தனர். தென் வியட்நாம் ஒரு குடியரசென அறிவிக்கப்பட்டது. நிகோ தின் திம் (Ngo Dinh Diem) என்ற கத்தோலிக்கக் கிறித்தவர் குடியரசுத் தலைவரானார்.

செனீவா மாநாட்டின் முடிவுகளின்படி கம்போடியாவும் இலாவோசும் சுதந்திர நாடுகளெனப் பிரான்சு அறிவித்தது. இந்தோசீனா என்ற பெயரும் இல்லாதொழிந்தது.

**இந்தோனேசியக் குடியரசு** (Republika Indonesia): இந்து மாக்கடலில் நிலநடுக்கோட்டையொட்டி கீழ்மேல் 3000 மைல்கள் பரவிய ஆயிரக் கணக்கான தீவுகளைக் கொண்டது இந்தோனேசியா. இந்நாட்டின் 6000க்கு அதிகமான தீவுகளில் 15 கோடி மக்கள் உள்ளனர். மலாய் மொழியைச் சார்ந்த 'பஹ்சா இந்தோனேசியா' என்ற மொழி நாட்டின் பொது மொழி.

வெளித் தோற்றத்தில் முழு உரிமை பெற்ற மக்கள் ஆலோசனை மன்றம், (People's Consultative Assembly), அம்மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் கீழ்ச்செயற்படும் நிருவாகத் துறை, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை ஆகியவற்றைக் கொண்ட அரசியல் சட்ட முறையிலான ஒற்றையாட்சி முறையைக் கொண்டது இந்நாடு. எனினும், நடைமுறையில் இராணுவத்தின் பக்கபலம், ஆட்சி ஆதிக்கத்துடன் கூடிய அதிகாரம் ஆகியவற்றைக் கொண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி முறை இங்கு நடைபெறுகிறது எனலாம்.

நெதர்லாந்தின் காலனி ஆட்சிக்கு எதிராக 1945, 1949-ஆம் ஆண்டுகளுக்கிடையே எழுந்த விடுதலைப் போரின் தொடக்கத்தில் ஏற்கப்பட்ட 1945-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் அமைந்துள்ளது. புதிய நிலையான அரசியலமைப்பு முறை ஏற்படுத்த 1950, 1956-ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோற்றதால் 1959-இல் குடியரசுத் தலைவர் சுகர்ணோ, 1945-ஆம் ஆண்டைய முந்திய தற்காலிக அமைப்பையே மறுபடி கொணர்ந்தார். அதன்படி பெரும்பான்மை அதிகாரங்கள் கொண்ட குடியரசுத் தலைவரின்கீழ் ஒருபலமிக்க நிருவாகமுறை செயற்பட்டது. எனினும்,

1966-ம் ஆண்டில் 'புதிய அமைப்பு' (New Order) எனப்படும் முறை செயற்படுத்தப்பட்டது. தலைவர் சுகர்ணோவின் தன்னிச்சை அதிகாரமுற்ற மாற்றப் பட்டு இராணுவ தளபதி சுகர்த்தோவிடம் நிருவா கப் பொறுப்பு அதிகாரங்கள் மாற்றப்பட்டன.

நிருவாகத்துறை (Executive): 1945-ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி குடியரசுத்தலைவர் நாட்டின் மாபெருந் தலைவரும் நிருவாகத் துறைத் தலைவ ரும் முதல் பெரும் படைத் தலைவருமாவார். குடி யரசுத் தலைவரை மக்கள் ஆலோசனை மன்றம் தேர்ந்தெடுக்கிறது. அவரது பதவிக்காலம் ஐந்தாண்டு கள். சுகர்த்தோ மூன்றாம் முறையாக 1978-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய அமைப்பின்கீழ் நிருவாகத்துறை மூன்று நிறுவனங்களைக் கொண்டது. ஒன்று பாப்பென்னாசு (Bappennas) என்பது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பொறுப்பானது. இரண்டாவது பெர்த்தாமினா (Pertamina) என்பது. இது நாட்டின் முக்கிய வருவாய் இனத்தைக் கொடுக்கும் தொழில் நிறுவனமான தேசிய எண்ணெய் நிறுவனம். மூன் றாவது பாதுகாப்பு, ஒழுங்கு,அமைதி ஆகியவற்றைப் பேணிக்காத்திடும் பொறுப்புள்ள கோப்கந்தீபு (Kop-kantib) என்பது. தம் அரசியல் எதிரிகளைக் குடி யரசுத் தலைவர் இவ்வமைப்பைக் கொண்டு அடக்கி ஆளுகிறார். சில ஆண்டுகளுக்கு முன்னர்(1965ஆம்ஆண் டில்) ஆறு மூத்த படைத்தளபதிகளின் கொலையை யொட்டிப் பொதுவுடைமைக் கட்சிக்கு எதிராக அமைக்கப் பெற்ற இந்த நிறுவனம் இன்றும் பெருஞ் செல்வாக்குடன் திகழ்கிறது.

சட்டத்துறை: 1. மக்கள் ஆலோசனை மன்றம் (Majelis Permusyaravatan Rakyat): இதில் 460 சட்ட மன்ற உறுப்பினர்களும், பிராந்திய இராணுவ அரசி யல் கட்சிகளின் பிரதிநிதிகளாகக் குடியரசுத் தலைவ ராலும் மாநில ஆளுநர்களாலும் அமர்த்தப்பட்ட 460 பேர்களுமாக மொத்தம் 920 உறுப்பினர் இருக் கின்றனர். இது ஐந்தாண்டுகட்கு ஒருமுறை கூடித் தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவரையும் தேர்ந்தெடுப்பதுடன், பொதுவான நாட்டின் கொள்கை முறைகளையும் அறிவிக்கிறது. 2. இரண் டாவதாக மக்கள் பிரதிநிதி சபை அல்லது சட்டப் பேரவை(Parliament People's Representative Council or Dewan Perwakilana Rakyat) தேர்ந்தெடுக்கப் பட்டு 5 ஆண்டுகள் செயற்படும். இதில், 460 உறுப்பி னர்கள் உள்ளனர். அவர்களுள் 364 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டவர். மற்றும் 96 பேர் வாக்குரிமை யற்ற இராணுவத்தினரின் பிரதிநிதிகளாகக்குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

நீதித்துறை (Judiciary): மா காமா அகங்கு (Mah Kamah Agung) எனப்படும் உச்சநீதி மன்றத்தைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். முதல் விசா ரணை, மேலாய்வு ஆகிய இரு உரிமைகளும் இது கொண்டது. ஆனால் நீதி மறுஆய்வு உரிமைகள் இதற் குக் கிடையாது. முதன் முறையாக 1981-இல் ஒரு படைத்தளபதி முதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

நிருவாக அமைப்பு: நாட்டில் 27 மாநிலங்களும் 364 மாவட்டங்களும் உள்ளன. இவற்றிற்குத் தனிச் சட்டமன்றங்கள் இருக்கின்றன. பிராந்தியச் சட்ட மன்றங்கள் நிருவாகத் தலைவர்களை நியமிக்கின்றன.

தேர்தல்: புதிய அமைப்பின்படி, நேரடி யான,தடையற்ற இரகசிய முறையில் தேர்தல் கள் நடக்கின்றன. பதினெட்டு வயதுக்கு மேற் பட்டோர் அல்லது மணமானோருக்கு வாக்கு ரிமை உண்டு. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள், இராணுவத்தினர் ஆகியோருக்கு இந்த உரிமை யில்லை. அரசியல் கட்சிகளின் பட்டியலின் பேரில் வாக்குகள் அளிக்கப்படுகின்றன. கட்சிகளின் பெய ரும் அடையாளமும் கொண்ட வாக்குச் சீட்டுகளில் துளை போடுவதன் மூலம் வாக்குப் பதிவு நடக்கி றது.

கட்சிகள்: நாட்டில் இப்போது உள்ள கட்சிகள் ஆளும் கட்சியான கோல்கார் (Golkar), வளர்ச்சி ஒற்றுமைக் கட்சி (Development Unity), இந்தோ னேசியன் சனநாயகக் கட்சி (Indonesian Democratic Party) ஆகியன. பொதுவுடைமைக் கட்சி ஏற் கனவே தடை செய்யப்பட்டுள்ளது. புதிய கட்சி கள் அமைப்பதற்குத் தடை இருக்கிறது. கட்சிச் செயலகங்கள் செயற்படவும் விளம்பரம் செய்யவும் பொருளுதவியும், சட்ட மன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்களுக்குச் சம்பளம், படி முதலியவைகளும் அரசு கொடுக்கிறது. இங்கு 1982-ஆம் ஆண்டுத்தேர் தலில் ஆளும் கோல்கார் கட்சிக்கு 94 சதவீதமும், வளர்ச்சி ஒற்றுமைக்கு 28 சதவீதமும், சனநாயகக் கட்சிக்கு 8 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன என்று அறியப்படுகிறது.

இராணுவம்: அரசியலில் இராணுவத்திற்குப்பெரும் செல்வாக்கும் அதிகாரமும் உள்ளன. இந்நாட்டில் 1967-இல் தலைமைக்கு வந்த குடியரசுத் தலைவர் சுகர்த்தோ ஓர் ஒய்வு பெற்ற தளபதி. அமைச்சர் குழு 17 பேரில் 8 பேர் படைத் தலைவர்கள். மேலும் 106துறைகளுள் 52துறையினரும், மாகாண ஆளுநர் களுள் பலரும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். சட்டமன்றம், சட்டப் பேரவைஇரண்டிலும்அவர்களே தலைவராயுள்ளனர். உச்சநீதிமன்றம், கணக்காய்வுக்

குழுமம் ஆகிய இவற்றிலும் தளபதிகளே பெரும்பாலும் பதவி பெற்றுள்ளனர். இராணுவப் பயிற்சிக்கழகத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர். படைத் துறையைச் சாராத பொதுத் துறைகளிலும் அமைதிக் கால அரசாங்கப்பணிகளிலும் இராணுவத்தினர் பொறுப்பு ஏற்கலாம் என்ற 'இரு பொறுப்பு'க் கொள்கை நடைமுறையில் உள்ளது. (வழிகாட்டி மக்களாட்சி (Guided Democracy) என்ற முறை தலைவர் சுகர்ணோவினால் தேர்வு நிலையாகச் செயற்படுத்தப்பட்டுப் பின்னர்க் கைவிடப்பட்டது).

குடியரசு என்ற பெயரில் இராணுவத்தினரின் செல்வாக்கை வைத்து உரிமைகள் யாவற்றையும் கைக்கொண்ட குடியரசுத் தலைவரின் தன்னுரிமை முறையில் நாட்டு நிருவாகம் நடக்கிறது. தி.க.

## இந்தோனேசியக் குடியாட்சிக் கட்சி

**இந்தோனேசியக் குடியாட்சிக் கட்சி** (Indonesian Democratic Party) என்ற அரசியல்கட்சி 1973- ஆம் ஆண்டில் இந்தோனேசியக் குடியரசுத் தலைவர் சுகர்த்தோ ஐந்து முசுலிம் அல்லாத சிறு அரசியற்கட்சிகளை ஒன்றாக இணைத்ததன் விளைவாகத் தோன்றிய ஒரு கட்சி ஆகும். இது தோன்றிய அரசியல் சூழ்நிலை, 1949-ஆம் ஆண்டு தச்சு நாட்டவருடைய (The Dutch) ஆட்சியிலிருந்து இந்தோனேசிய நாடு முழுவிடுதலை பெற்றபிறகு காணப்பட்ட குழப்பமான அரசியல் சூழ்நிலையே ஆகும். விடுதலை பெற்றபிறகு அந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சிமுறையையும் பெயரளவுக்கு அதிகாரங்களையுடைய தலைவரையும் நிறுவினர். அப்போது அங்கு இருந்த முக்கியமான அரசியற்கட்சிகள் 1. மாசியுமி என்ற முசுலிம் கட்சி, 2. முசுலிம் இறையியலார் கட்சி (Muslim Theologians' Party), 3. நகதத்துல் உலாமா, 4. தேசிய கட்சி, 5. பொதுவுடைமைக் கட்சி (PKI), 6. தேசிய பொதுவுடைமைக் கட்சி ஆகியவையாம். இவை தவிரப் பல சிறு தேசிய முசுலிம் கட்சிகளும் தேசியப் பொதுவுடைமைக் கட்சியும் இருந்தன. முதலில் இவை தமக்குள் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொன்றுக்கும் வாக்காளர் தொகுதிகளிலிருந்த ஆதரவுக்கு ஏற்ற விகிதத்தில், நாட்டின் பாராளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளிலிருந்தும் சார்பாளர்கள் அமர்த்தப்பட்டனர்; தேர்ந்தெடுக்கப்பட வில்லை. கல்வியறிவு மிகக் குறைவான வாக்காளர்களையுடைய இந்நாட்டில் முதன்முதலாக 1955-ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மேற்குறிப்பிட்ட அரசியற் கட்சிகளுள் முசுலிம் கட்சி, நகதத்துல் உலாமா, தேசியக்கட்சி (PNI), பொதுவுடைமைக் கட்சி முதலிய நான்கும் கணிசமான இடங்களைப் பெற்று வலுவான அரசியற் கட்சிகளாக வந்தன. ஆனால் அவற்றுள் பொதுவுடைமைக் கட்சிக்கு மட்டுமே வரையறை செய்யப்பட்ட திட்டங்கள் இருந்தன. ஏனையவற்றுக்குத் திட்டவட்டமான குறிக்கோள்களில்லை. ஒவ்வொன்றுக்கும் சமுதாயத்தில் அரசியல் அலுவலர், வணிகர், வேளாண் தொழிலாளர் ஆகிய வகுப்பாரிடை ஆதரவும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளான சாவா, சுமத்திரா, செலிபிசு முதலிய தீவுப் பகுதிகளில் செல்வாக்கும் இருந்தன. இந்நாட்டிற்கு 1950-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை ஏழு தலைவர்கள் மாறி மாறி குறுகிய காலப் பகுதிகளுக்கு ஆட்சி அமைத்தனர். ஒவ்வோர் ஆட்சியாளரும் உள்நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, படைச்சீரமைப்பு முதலிய கேள்விகளுக்குத் தீர்வு காண முயன்றனர். ஒவ்வொருவருடைய ஆட்சியும் நிலையற்றிருந்ததால் மக்களுக்கு ஏமாற்றமே உண்டாயிற்று. இந்நிலையில் பெயரளவில் அதிகாரமுடைய ஒரு குடியரசுத் தலைவராகப் பதவியில் சுகர்ணோ நீடித்திருக்க விரும்பவில்லை. அவர் 1957-ஆம் ஆண்டில் வழிநடத்தப்பட்ட குடியாட்சி முறை (Guided Democracy) என்ற ஒன்றை நாட்டில் செயற்படுத்தினார். அதன்படி மேற்படி நான்கு அரசியற் கட்சிகளின் சார்பாளர்களும், தொழிலாளர்கள், உழவர்கள், சிந்தனையாளர்கள் தொகுதி (Intelligentsia), தேசிய தொழிலதிபர்கள், சமய அமைப்புகள், படைப்பிரிவினர், இளைஞர் கழகங்கள், பெண்கள் கழகங்கள் முதலிய பணியாளர் குழுக்களின் (Functional Groups) சார்பாளர்களும் அடங்கிய ஒரு மன்றம் (Council) குடியரசுத் தலைவருடைய வழிநடத்துதலின்படி எல்லாக் கேள்விகளையும் ஆய்வுசெய்து ஒரு பொதுக் கருத்தை உருவாக்குதல் வேண்டும். சுகர்ணோ படைத் தலைவர்களின் எழுச்சியை அடக்க விரிவான அதிகாரங்களைக் கையாண்டார். தமது ஆணை ஒன்றின் வாயிலாகத் தம்மையே குடியரசுத் தலைவராகவும் நிருவாகப் பொறுப்புடையவராகவும் அவர் ஆக்கிக் கொண்டார். பொதுவுடைமையாளர்கள் அவரை ஆதரிக்க, அவர் அவர்களுக்குப் பாதுகாப்பளித்தார்; மற்றக் கட்சிகளை அவர் ஒடுக்கினார். ஆனால் அவருடைய அரசாங்கத்தால் மேலே குறிப்பிடப்பட்ட கேள்விகளைத் திறமாகத் தீர்க்க முடியவில்லை. மலேசியாவுடன் இந்தோனேசியாவுக்கு இருந்த தகராறு வளர்ந்தது. இச்சூழ்நிலையில் படைத்தளபதி சுகர்த்தோ 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் ஆட்சியை எளிதில் கைப்பற்றி, சுகர்ணோவிடமிருந்து அதிகாரங்களைப் பெற்றுப் பொதுவுடைமையாளர்களை ஒடுக்கித் தாமே 1968-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராகவும் ஆனார். இவர் கையாண்ட ஒரு புதிய முறையின் (A New Order) விளைவாக மலேசியாவுடனிருந்த எதிர்ப்பு நீக்கப்பட்டது; சுகர்ணோவினால் ஐக்கிய நாடுகள்

சபையிலிருந்து நீக்கப்பட்டிருந்த இந்தோனேசியா சுகர்த்தோவினால் மீண்டும் அச்சபையில் சேர்க்கப்பட்டது. அமெரிக்கப் பொருளியல் வல்லுநருடைய ஆலோசனைகளைப் பெற்றும், அயல்நாட்டு முதலீடுகளை இந்தோனேசியத் தொழில்களில் பெற்றும், நாட்டின் அயல்நாட்டுக் கடன்களை ஒழுங்கு செய்தும், அயலவர் முதலீட்டைக் கவருதற்குப் பல வழிகளைக் கையாண்டும், பணவீக்கத்தைக் (Inflation) குறைத்தும், நாணய மதிப்பைஉயர்த்தியும் சுகர்த்தோ பணிசெய்தார். ஆயினும் வரவர இவர் ஓர் வல்லாட்சியாளராகவே செயற்படலாயினார்; ஒழுங்கைக் கொண்டு வருவதற்குத் திரட்டப்பட்ட பாதுகாப்புப்படை (Kopkantib) இவர் கையில் ஓர் அரசாங்க உறுப்பாகவே செயற்பட்டது. பல அரசியற் கட்சிகளின் உள்துறைச் செயல்களிலும் இவர் தலையிட்டு அவற்றைக் கட்டுப்படுத்தினார். இவர் 1971-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வாக்காளர்களைக் கட்டாயப்படுத்தினாரென்ற குற்றச் சாட்டும் தோன்றியது. கோல்கார்(Golkar) என்ற கட்சிச்சார்பற்ற ஓர் அமைப்பை இவர் ஒரு அரசாங்கக் கட்சியாகவே செயற்படுமாறு கட்டுப்படுத்தினார். அதுவே 1971, 1977-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் மிகப் பெரிய வெற்றியும் பெற்றது. இவர் 1971 தேர்தலில் பெற்ற வெற்றியைவைத்துக்கொண்டு மற்றைய அரசியற் கட்சிகளை இணைத்து அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்தார். இவர் 1973-ஆம் ஆண்டில் பார்முசி, நகதத்துல் உலாமா, பார்த்தை சரகத்து இசுலாம் இந்தோனேசியா (PSII), பெர்த்தி முதலிய சிறிய முசுலிம் அரசியல் கட்சிகளையெல்லாம் ஒன்றிய வளர்ச்சிக் கழகம் (United Development party) என்ற புதிய பெயரில் ஓர் அரசியற் கட்சியாக இணைத்தார். முசுலிம் அல்லாத 5 அரசியற் கட்சிகளை அதாவது, தேசியக்கட்சி(PNI), பார்க்கிண்டோ, கடோலிக்கு, தேசியபொதுவுடைமைக் கட்சி அல்லது முர்பா முதலியவைகளை ஒன்றாக இணைத்து இந்தோனேசியக் குடியாட்சிக்கட்சியை(Indonesian Democratic Party)உருவாக்கினார். ஆயினும்,இவற்றுக்கு இடையே திட்டவட்டமான கொள்கைகளும் ஒற்றுமையும் இல்லாதகாரணத்தால், இவற்றால் அரசாங்கம் தன் விருப்பப்படி செய்யும் செயல்களைத் தடுக்க இயலவில்லை. வெளிப்புறத் தீவுகளிலுள்ள அறிஞர்கள், ஆட்சியை சாவாத் தீவே நடத்துகிறதெனக் குறை கூறினர். மாணவர் கிளர்ச்சிகள் தோன்றின. இவ்வெதிர்ப்புகளுக்கிடையே சுகர்த்தோ மூன்றாம் தடவையாகக் குடியரசுத் தலைவராக ஆனார்.

துணை நூல்கள்:

**Andersen**, Java in a time of Revolution, 1972,
Feith, Herbert, The Decline of Constitutional Democracy in Indonesia, 1962.

**Lev Daniel**, S., The Transition to guided Democracy, 1966.

***இந்தோனேசியப் பொதுவுடைமைக் கட்சி*** (Indonesian Communist Party): பல்வேறு ஆசிய நாடுகளைப்போல் இந்தோனேசியாவும் பல கட்சி முறையைக் கொண்டுள்ளது. பல்வேறு அரசியல் கட்சிகள் தோன்றியதற்கு இரு முக்கிய காரணங்களைக் கூறலாம். ஒன்று, அந்நாட்டில் இருந்த தச்சு (Dutch) ஆதிக்கமுறை. மற்றொன்று, அந்நாட்டில் பின்பற்றப்பட்டுவரும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை (Proportional Representation System). நாட்டின் விடுதலைக்காகத் தச்சு ஆட்சியாளர்களை எதிர்த்து இந்தோனேசிய மக்கள் விடுதலைப்போர் நடத்திய கட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் தோன்றின. ஆனால் இக்கட்சிகள் நெடுநாளைக்கு நிலைக்கவில்லை. கட்சிகள் தோன்றுவதும் மறைவதும் தொடர்ந்து நிகழ்ந்து வந்தன. தச்சு ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தோனேசியா விடுதலை பெற்ற பின்பு நிலைமை ஓரளவு சீரடைந்தது.

இந்தோனேசியத் தேசிய விடுதலை இயக்கத்தின்போது தோன்றிய கட்சிகளில் ஒன்றுதான் அந்நாட்டின் பொதுவுடைமைக் கட்சி. இக்கட்சி 1920-ஆம் ஆண்டு மே மாதம் அந்நாட்டில் தொடங்கப்பட்டது. இக்கட்சி 1921-ஆம் ஆண்டிலிருந்து விடுதலை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்கத் தொடங்கியது. தீவிரவாத நடவடிக்கைகளை இக்கட்சி பின்பற்றியதன் விளைவாகத் தச்சு ஆட்சியாளர்கள் இக்கட்சிக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. கட்சித்தலைவர்கள் பலர் சிறையிலிடப்பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர். அடக்குமுறையை உரமாகக் கொண்டு வளரும் பாங்குடையது பொதுவுடைமைக்கட்சி. இதற்கேற்பத் தச்சு ஆட்சியாளர்களின் அடக்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொதுவுடைமைக் கட்சி மிகத்தீவிரமாக ஆட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது. ஆனால் இக்கட்சி இந்தோனேசியா முழுவதிலும் வலுவுள்ளதாகக் காணப்படவில்லை. இந்தோனேசியாவின் ஒரு பகுதியான சாவாவில் (Java) மட்டுமே இது வலுவுடையதாக இருந்தது. இந்தப்பகுதியில் வேலை நிறுத்தங்களும் அழிவு வேலைகளும் நடைபெற்றன. பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைப் பரப்பின் பயனாக அறியாமையுடைய மக்கள் புரட்சி வேட்கையால் உந்தப்பட்டனர். இவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவேனும் ஒரு புரட்சி நடத்தவேண்டும். இல்லாவிடில் இவர்களுடைய ஆதரவைப் பொதுவுடைமைக் கட்சி இழக்க

நேரிடும் என்ற நிலை தோன்றியது. தச்சுக்காரர்களுக்கெதிராக எந்த நடவடிக்கை எடுப்பது என்று குழப்பமடைந்திருந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள், புரட்சி செய்வதென்று முடிவெடுத்தனர்.

ஆனால் இவர்கள் எதிர்பார்த்த நாடு தழுவிய கொந்தளிப்பு ஏற்படவில்லை. பாண்டென் (Banten), மேற்குச் சுமத்திரா (Western Sumatra) ஆகிய பகுதிகளில் 1924–ஆம் ஆண்டின் இறுதியிலும் 1927–ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் புரட்சி தொடங்கியது. சாவாவின் முக்கிய நகரங்களில் குறிப்பிடத்தக்க குழப்பங்கள் ஏதும் நிகழவில்லை. பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு அதிகமிருந்த பகுதிகளில் தச்சு ஆட்சியாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாகப் புரட்சி முறியடிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கைது செய்யப்பட்டனர். எண்ணூறுக்கும் அதிகமானோர் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். புரட்சி தோல்வியுற்றது. ஆனால் பொதுவுடைமைக் கட்சி அழியவில்லை.

இந்தோனேசியா சுதந்திரம் அடைந்ததன் பின், அதிலும் குறிப்பாக 1955–ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப்பின், அந்நாட்டில் நான்கு முக்கிய அரசியல் கட்சிகள் காணப்பட்டன. அவற்றுள் ஒன்று பொதுவுடைமைக்கட்சியாகும். 1958–ஆம் ஆண்டளவில் சிதைந்து போகாமல் செயற்பட்ட ஒரே கட்சி பொதுவுடைமைக்கட்சியேயாகும். இக்கட்சியின் செல்வாக்கு 1959–ஆம் ஆண்டிற்குமேல் பன்மடங்கு அதிகரிக்கலாயிற்று. இக்கட்சியின் செல்வாக்கு 1965–ஆம் ஆண்டு உச்சகட்டத்தை அடைந்தது. அப்பொழுது முப்பது இலட்சம் உறுப்பினர்களை இக்கட்சி கொண்டிருந்தது. சோவியத்து ஒன்றியத்தின் பொதுவுடைமைக்கட்சிக்கு அடுத்தபடியாகத் திகழ்ந்தது இந்தோனேசியப் பொதுவுடைமைக்கட்சி.

இந்தப் பொதுவுடைமைக் கட்சி 1965–ஆம் ஆண்டில் ஐந்தாம் படையொன்றை இந்தோனேசியாவில் உருவாக்கும் நடவடிக்கைகளைத் தொடங்கியது. அப்பொழுது பதவியில் இருந்த குடியரசுத்தலைவர் சுகர்ணோவின் மறைமுக ஆதரவுடன்தான் இக்கட்சி படைதிரட்டும் நடவடிக்கையை மேற்கொண்டது. தன் ஆதரவாளர்களுக்குக் கருவிகள் கொடுப்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தோனேசியப் படைத்துறை இதைக் கடுமையாக எதிர்த்தது. அரசைக் கவிழ்ப்பதற்காக 1965–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30–ஆம் தேதி பொதுவுடைமைக் கட்சி முயற்சி எடுத்தது. இந்த முயற்சி இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இக்கட்சியின் அழிவுக்காலம் தொடங்கியது. இது இராணுவத்தினரிடையேயுள்ள கட்சியின் பகைவர்களைக் களைந்தெறிந்து அதனைத் தூய்மைப்படுத்தத் திட்டம் தீட்டியது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக இந்தோனேசியா இராணுவத் தளபதிகள் ஆறுபேரும், பாதுகாப்பு அமைச்சரின் உதவியாளரும் படுகொலை செய்யப்பட்டனர். பொதுவுடைமைக் கட்சி அழிக்கப்பட்டதற்கு இக்கொடுஞ்செயல் காரணமாயிற்று. பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்கள் எதிர்பார்த்ததுபோல் ஆட்சிக்கெதிராகவோ இராணுவத்திற்கு எதிராகவோ மக்கள் புரட்சி செய்யவில்லை. மாறாக, ஆயிரக்கணக்கான பொதுவுடைமைக்கட்சி உறுப்பினரும் ஆதரவாளர்களும் பொதுமக்களால் கொல்லப்பட்டனர். இந்த மனிதவேட்டை ஆறுமாத காலம் நடந்தது. எண்பதினாயிரத்திலிருந்து ஐந்து லட்சம்பேர்வரை கொல்லப்பட்டனர் என்பது மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு விரைவாகச் சரிந்தது. அரசு மேற்கொண்ட சட்டமுறையிலமைந்த நடவடிக்கைகளின் விளைவாக எஞ்சியிருந்த ஆதரவையும் இக்கட்சி இழந்தது. அதிபர் சுகர்ணோ பதவியிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து தளபதி சுகர்த்தோ (General Suharto) நாட்டின் அதிபராகப் பதவி ஏற்றார். இதனை அடுத்து 1966–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13–ஆம் தேதி பொதுவுடைமைக் கட்சி தடைசெய்யப்பட்டது. அன்றிருந்து இன்று வரை இக்கட்சி மறைமுகமாகத்தான் செயற்பட்டுவருகின்றது. இப்பொழுது இக்கட்சிக்குச் சீனர்களின் ஆதரவு மட்டுமே உள்ளது; முற்றிலும் அழிக்கப்படவில்லை என்றாலும் வலுவற்ற மறைமுக அமைப்பாகத்தான் இந்தோனேசியப் பொதுவுடைமைக்கட்சி இப்பொழுது செயற்பட்டு வருகின்றது. ஆ. ஜா.

**இந்தோனேசிய மொழி**: மலேசியாவிற்கும் ஆசுத்திரேலியாவிற்கும் இடைப்பட்டுப் பசிபிக்குப் பெருங்கடலிலும் இந்தியப் பெருங்கடலிலும் அமைந்து கிடக்கும் சங்கிலித் தொடர் போன்ற அமைப்புடைய மூவாயிரம் தீவுகளைக் கொண்டது இந்தோனேசியக் குடியரசாகும்.

இந்தோனேசியத் தீவுகளில் வாழும் மக்கள் ஆசியாவிலிருந்தும் பசிபிக்குக் கடற்கரைத் தீவுகளிலிருந்தும் சிறு சிறு கூட்டமாகச் சென்று குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இந்தோனேசிய மக்கள் ஆயிரக் கணக்கான தீவுகளில் வாழ்ந்து வருவதால் செய்திப் பரிமாற்றம் சிக்கலாய் அமைந்துள்ளது. இதனால் இங்கு 200க்கும் மேற்பட்ட மொழிகளும் கிளைமொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகள் 16 மொழிப் பிரிவுகளில் அடங்கும். இம் மொழிகளுள் பெரும்பாலானவை மலாய்

பாலினீசியன் அல்லது ஆசுத்திரோனீசியன் (Austronesian) மொழிக் குடும்பத்தைச் சார்ந்தன.

மலாய் – பாலினீசியன் (Malay – Polynesian) மொழிகள் தனித்தன்மை பெற்று மற்ற மொழிக் குடும்பங்களுடன் தொடர்பற்றுக் காணப்படுகின்றன. மலாய் – பாலினீசியன் இரண்டு பெரும் கிளை மொழிக் குடும்பங்களைக் கொண்டுள்ளது. அக்கிளை மொழிக் குடும்பங்கள் மேற்கு மலாய்-பாலினீசியன், கிழக்கு மலாய்-பாலினீசியன் என்பனவாகும். மேற்குப் பாலினீசியன் மொழிகள் 13 கோடி மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இவை பண்பாடு, வாணிகம் ஆகியவற்றின் அடிப்படையில் கிழக்குப் பாலினீசியன் மொழிகளை விடச் சிறப்பு வாய்ந்தனவாகத் திகழ்கின்றன. மேற்குப் பாலினீசியன் மொழிகளுள் மலாய், இந்தோனேசியன், மலகசி (Malagasy), தகலோகு (Tagalog) போன்றன அலுவலகத் தகுதி பெற்ற மொழிகளாகும். கிழக்கு மலாய்-பாலினீசியன் மேற்குப் பாலினீசியன் மொழிக் குடும்பத்தை விட மிகுதியான மொழிகளைக் கொண்டிருந்தாலும், மிகக் குறைந்த எண்ணிக்கையினரால்-பத்து இலட்சம் மக்களால் பேசப்பட்டு வருகிறது.

இந்தோனேசிய மொழி ஒரு செயற்கை மொழியாகும். இது 'பாசா (Bhasha) இந்தோனேசியா' அல்லது 'பாசா' என்று குறிக்கப்படுகிறது. இம்மொழி இந்தோனேசியாவில் குறிப்பாகச் சுமத்திராவில் வாழ்ந்து வரும் வணிகர்களால் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வந்த மலாய் மொழியின் கிளை மொழியான 'பிட்கின் மலாய்' (Pidgin Malay) அல்லது 'மார்க்கெட் மலாய்' (Market Malay) என்பதிலிருந்து தோன்றியதாகும்.

---

தச்சுக்காரர்களின் (Dutch) ஆட்சிக் காலத்தில் கி.பி. 1928-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தோனேசியன் அந்நாட்டின் தேசிய மொழியாக (National Language) அறிவிக்கப்பட்டது. இந்தோனேசியாவில் நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்பட்டு வந்தாலும், சந்தனீசு (1 கோடி 4 இலட்சம்), சவானிசு ($4\frac{1}{2}$ கோடி) போன்ற மொழிகள் மிகுதியான மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், மலாய் மொழியின் ஒரு கிளைமொழியைத் தேசிய மொழியாகப் அறிவிக்கப் பல காரணங்கள் இருந்தன.

மலாய் மொழிதான் இந்தோனேசியாவின் தொன்மொழியாகும். இது முதல் தரமான இலக்கிய மரபினைக் கொண்ட மொழி. இம்மொழி பல இந்தோனேசியக் கடற்கரைப் பகுதிகளிலும் சுமத்திரா, கலிமந்தன் போன்ற இடங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்றைய இந்தோனேசிய மொழியின் அடிப்படையாகக் கருதப்படும் பிட்கின் மலாய் பல நூற்றாண்டுகளாக இந்தோனேசியாவில் மட்டுமல்லாமல் பல தென்கிழக்கு ஆசியக் கடற்கரைப் பகுதிகளிலும் தொடர்பு மொழியாகப் (Lingua Franca) பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும், இது மலாய்-பாலினீசியன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததால், எல்லா இந்தோனேசியர்களாலும் இதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

இந்னோனேசியாவில் காணப்படும் சில கல்வெட்டுகள் வாயிலாக (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல்) ஒருவகையான மலாய்மொழி அலுவலக மொழியாகவும் இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்பட்ட மொழியாகவும் இருந்தமை தெரிகிறது. மலாய் மொழி கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் பெரும் மதிப்படைந்து ஆட்சித் துறையிலும் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்திலும் பெருமளவு பயன்படுத்தப்பட்டது. இக் காலக்கட்டத்தில்தான் பிற மொழி இலக்கியங்கள் பல மலாய் மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டன. இந்நிலை கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

தச்சு ஆட்சியின் விளைவாக மலாய் மொழிக்கு மாற்றாகத் தச்சு மொழியின் பயன்பாடு மிகுந்தது. எனினும் தச்சு, மலாய் மொழியை முற்றிலுமாய் எல்லா நிலைகளிலும் அகற்றிவிடவில்லை. தச்சுக்காரர்களுக்கும் சில உள்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடுகள் தச்சு மொழியிலும் மலாய் மொழியிலும் எழுதப்பட்டன. மலாய், இந்தோனேசியா, வெளிநாட்டு வணிகர்கள் ஆகியோரிடையே பொது மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இக் காலத்தில்தான் இந்தோனேசியன் தேசிய மொழியாக்கப்பட்டது. முதலில் இம்மொழி 'மார்க்கெட் மலா'யின் சிதைந்த வடிவமாகக் (Corrupted form) கருதப்பட்டது. இதனால் இது உயர்மலாய் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டது.

இம்மொழி கி.பி.1942 வரை வளர்ச்சியடையாத மொழியாக இருந்து வந்தது. இக்காலத்தில் ஏற்பட்ட சப்பானியர் குடியேற்ற (Colony) ஆட்சியின் விளைவாக இந்தோனேசியன் புத்துயிர் பெற வாய்ப்பு ஏற்பட்டது; கல்வித் துறையிலும் நிருவாகத்திலும் மிகுதியாகப் பயன்படத் தொடங்கியது. அரசு கி.பி. 1945-இல் அமைத்த மொழிக் குழுவின் ஆதரவினால் இந்தோனேசியன் சிறந்ததொரு மொழியாக உருவாகியது. எழுத்து மொழியாகவும் அலுவலக மொழியாகவும் இந்தோனேசியா முழுவதும் இது பயன்படுத்தப் பெற்றது. தொடக்கப் பள்ளிகளில் இந்தோனேசியன் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தோனேசிய அரசு அவ்வப்போது குழுக்களை அமைத்து இம்மொழியை வளர்த்து வந்தாலும், இது எல்லா நிலைகளிலும் அத்தீவுகளில் வழங்கிவரும் வட்டார மொழிகளை முழுவதுமாக அகற்றிவிட வில்லை. சில பள்ளிகளில் அவ்விடங்களில் வழங்கி வரும் வட்டார மொழியே முதன் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. இந்தோனேசியாவிலுள்ள பெரும் பாலான பள்ளிகளிலும் முதல் இரண்டு ஆண்டுகள் அந்த வட்டார மொழிகளும் மற்ற ஆண்டுகளில் இந்தோனேசிய மொழியும் கற்பிக்கப்படுகின்றன. இன்று இந்தோனேசியன் முதன் மொழியாக 80 இலட்சம் மக்களால் கிழக்குச் சுமத்திரா, இரியௌ தீவுகள், சாவா, மேற்குக் கலிமந்தன், மொலுக்கசு சுலவாசி, (தி)சம்பி போன்ற இடங்களில் பேசப்பட்டு வருகிறது.

இந்தோனேசியாவில் வரலாற்று நிலையில் நான்கு வகையான எழுத்து முறைகள் வழக்கிலிருந்தமையைக் காணலாம். அவை 1. பல்லவ கிரந்தம் (Pallava Grandha). 2. பழம் சவானிசு(Old Javanese) 3. அரபிக்கு (Arabic). 4. உரோமன் (Roman) ஆகியன.

பல்லவ கிரந்த எழுத்துகள் கி.பி. 400-இல் சமசுகிருத மொழிக்காகப் பயன்படுத்தப்பட்டன. இன்றைய இந்தோனேசியனின் அடிப்படை வடிவமான முன் மலாய் கூட முதலில் கி.பி. 683-இல் பல்லவ கிரந்த எழுத்துகளால் எழுதப்பட்டு வந்தது. மேலும், இது கி.பி. 792-இல் பழம் சவானிசு எழுத்துகளாலும், கி.பி. 1326-இல் அரபிக்கு எழுத்துகளாலும் எழுதப்பட்டு வந்தது. முதன்முதலாக மலாய்மொழி கி.பி. 1521-இல் தான் உரோமன் எழுத்துகளால் எழுதப்பட்டது. இதைப் போல இந்தோனேசியாவில் காணப்படும் பிற மொழிகளும் வெவ்வேறு காலக்கட்டத்தில் வேறு வேறுபட்ட எழுத்துகளால் எழுதப்பட்டு வந்தன.

இந்தோனேசியாவில் வழக்கிலிருந்த உரோமன் எழுத்து முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி, அவ்வெழுத்து முறையை இந்தோனேசிய மொழித் தன்மைக்கு ஏற்றதொரு எழுத்து முறையாக ஆக்கி, இந்தோனேசியா முழுவதற்கும் பொதுவான ஒன்றாக ஆக்கும் முயற்சி நடைபெற்றது. இதனால் இந்தோனேசிய மொழிக்காகக் கி.பி. 1901 முதல் 1972 வரை ஆறுவகையான உரோமன் எழுத்து முறைகள் (Writing systems) பரிந்துரை செய்யப் பெற்றுப்பயன்படுத்தப்பட்டன. இவ்வெழுத்து முறைகளில் பொதுவாக உரோமன் எழுத்துகளே பயன்படுத்தப்பட்டிருந்தாலும் எழுத்துகளின் எண்ணிக்கை, ஒலிப்புமுறை ஆகியவற்றில் வேறுபாடு காணப்படுகிறது. இவ்வெழுத்து முறைகள் பல்வேறு குழுக்களால் பரிந்துரை செய்யப் பெற்றன. இதனால் இவ்வெழுத்து முறைகள் வேறு வேறு பெயர்களைக் கொண்டுள்ளன.

பரிந்துரை செய்யப்பட்ட உரோமன் எழுத்து முறைகளில் உரோமன் எழுத்துகளைத் தவிர, சில ஒலிக்குறிகளும் (Diacritics), அவை எங்கே எவ்வாறு பயன்படுத்தப்படுவன என்பதற்கான வரன்முறைகளும், கூட்டுச் சொற்கள், குறுக்கங்கள் (Abbreviation), நிறுத்தக் குறியீடுகள் (Punctuation) போன்றன வற்றின் விளக்கங்களும் வரன்முறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

பல நிலைகளில் எளிமையும் செம்மையும் செய்யப்பட்ட இன்றைய எழுத்துமுறை 'திருந்திய எழுத்து முறை' யாக (Improved System) 1972-இல் இந்தோனேசியக் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்பட்டது. இம்முறையில் எல்லா உரோமன் எழுத்துகளும் (சிறிய பெரிய எழுத்துகள் உட்பட) பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிரப் பலவகையான நிறுத்தற் குறியீடுகளும் இடம் பெற்றுள்ளன. மேற்கூறியன போன்ற பலவகையான எழுத்து மாற்றங்களுக்கு அந்நாட்டின் பண்பாட்டு மாற்றம், மொழியியல் வளர்ச்சி, அரசியற் கொள்கை, அமைக்கப்பட்ட குழுக்களின் தனித்தன்மை, மொழியின் நிலை, சமயம் போன்றவை காரணங்களாய் அமைந்துள்ளன.

இப்பொழுது இந்தோனேசியாவில் பின்பற்றப்பட்டு வருகிற எழுத்து முறை கீழ்க்காணும் ஒலிப்பினைக் கொண்டுள்ளது.

மொழிப் பயன்பாட்டின் தெளிவு கருதிக் கீழ்வரும் பதினைந்து நிறுத்தல் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

( . ) ( , ) ( ; ) (:) (——) ( - ) ( . . ) (?) ( ! ) ( . . . . . ) ( " . . . . . . . . . " ) ( ' . . . . . . . . ' ) ( . . . . . . . . . . 2) ( / ) ( ' ).

இந்தோனேசியன், மலாய் மொழிகள் அடிப்படையில் தொடர்பு கொண்டிருந்தாலும் தச்சு, ஆங்கிலக் குடியேற்ற ஆட்சியின் விளைவாக இவ்விரு மொழிகளுக்குமிடையே சொல்வளத்தில் மாறுபாடு காணப்படுகிறது. மலாய்மொழி ஆங்கிலச் சொற்களையும் இந்தோனேசியன் தச்சுச் சொற்களையும் மிகுதியாகக் கொண்டுள்ளன. தேவை ஏற்படும் பொழுதும் சொற் செல்வம் குறைவாகக் காணப்படும் பொழுதும் இந்தோனேசியன் மொழியில் சொற்கள் கடன் வாங்கப்பட்டன. இது தவிர இந்தோனேசியன்

| எழுத்துகள் | ஒலிப்பு | எழுத்துகள் | ஒலிப்பு |
|---|---|---|---|
| A | a | N | en |
| B | be | O | o |
| C | ce/ce | P | pe |
| D | de | Q | ki |
| E | e | R | er |
| F | ef | S | es |
| G | ge | T | te |
| H | ha | U | u |
| I | i | V | ve |
| J | je/je | W | we |
| K | ka | X | eks |
| L | el | Y | ye |
| M | em | Z | zet |

மொழியில் இந்தோனேசியாவில் காணப்படும் கிளை மொழிச் சொற்களும் சமசுகிருதம், அரபிக்கு, சீனம், ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிச் சொற்களும் காணப்படுகின்றன.

காவலர், தோழன், இடம், வட்டில், கோவில், அப்பம், கஞ்சி, கிடங்கு, குடுமி, கழுதை, கொத்த மல்லி, மச்சம், சுருட்டு, பெட்டி, வண்ணான், முத்து, பவளம் போன்று பல நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இம்மொழியில் காணப்படுகின்றன. சங்கப் பிற்கால நூலான மணிமேகலை காலம் முதல் பிற் காலச் சோழர் காலமான கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத் திற்கும் இந்தோனேசியத் தீவுகளுக்கும் இருந்து வந்த நெருங்கிய தொடர்பு இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகத்தான் பல்லவ கிரந்தமும் பல தமிழ்ச் சொற்களும் அங்குப் பயன்படுத்தப்பட வாய்ப்பேற்பட்டது.

இந்து, முசுலிம், மேல்நாட்டினர் ஆகியோரின் பண்பாட்டுத் தாக்கத்தின் விளைவாகவே பல சொற் கள் இம்மொழியில் புகுந்துள்ளன. சமசுகிருத மொழி யிலிருந்து பெறப்பட்ட பெரும்பான்மையான சொற் கள் சமய, உறவுமுறைச் சொற்களாகவே காணப்படு கின்றன. (எ.டு. Syurga 'heven', Neraka 'hell', Raja 'king' போன்றன).

மற்றைய மொழிகளைப் போலல்லாமல் கூட்டுச் சொற்கள் 2 என்ற எண்ணிட்டுக் குறிக்கப்படு கின்றன.

எ.டு. laki² = lakilaki 'male'
tanam²am = tanam tanamam "plants"

இந்தோனேசிய, மலாய் மொழிகளின் ஒலிப்பு, எழுத்து முறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு இப்பொழுது ஒரு பொது ஒலிப்புமுறை பின்பற்றப்பட்டு வருவதால், இம்மொழிகளுக்கிடையே தொடர்பு மேலும் மிகுதிப் பட்டு இலக்கியப் பரிமாற்றம் ஏற்பட வாய்ப்புப் பெருகியுள்ளது. எச்.சி.

துணை நூல்கள்:

**Allen, M., Sievers**, The Mystical World of Indonesia, Culture & Economic in Conflict, The Jhons Hopkins University Press, London, 1974.

**Gonda**, J., Sanskrit in Indonesia, International Academy of Indian Culture, New Delhi, 1973.

**Rubi**, J., Language Standardization in Indonesia in Lanaguge Planning Processes,(Eds)John Rubin Et al Mouton, The Hague. 1977.

**Shanmugam**, S.V., Indonesian Studies, Indian Council for Cultural Relations, New Delhi. 1979.

**இந்தோனேசியா** தென்கிழக்கு ஆசிய நாடு களுள் ஒன்று. இது 13,600 தீவுகளைக் கொண்டது. இந்தோனேசியா உலக நடுக்கோடு செல்லும் வழியில் அமைந்துள்ள ஆசிய நாடு. தீவுகளுள் பல மிகச் சிறி

யவை. ஏறத்தாழ 3.ச.கி.மீ. பரப்புள்ள தீவுகளும் உள்ளன. அதேபோல் மிகப் பெரிய தீவுகளும் இந்தோனேசியாவில் (Indonesia) உள்ளன. நியூகினியின் பாதியும் போர்னியோவின் முக்கால் பகுதியும் இந்தோனேசியாவுக்குச் சொந்தமான பெருந்தீவுகளாம்.

இந்தோனேசிய மக்களுள் பெரும்பாலோர் சிற்றூர்களில் வாழும் உழவர்கள். கூட்டுறவை வலியுறுத்தும் உள்ளூர்ப் பழக்க வழக்கங்களால் கிராமப்புற மக்களின் வாழ்க்கை கட்டுப்பாட்டின்கீழ்க் கொணரப்பட்டுள்ளது. அதத்து (Adat) என்பவர், தம்மிடையே




இந்தோனேசியா

உலக நாடுகளில் மக்கள் தொகையில் இந்தோனேசியா ஐந்தாம் இடத்தைப் பெறுகிறது. சற்றேறக்குறைய 6000 தீவுகளில் மக்கள் வாழ்கிறார்கள். இந்தோனேசிய மக்களில் ஐந்தில் மூன்று பங்கு மக்கள் சாவா (Java) என்னும் தீவில் வாழ்கிறார்கள். இந்நாட்டின் பெரு நகரங்களில் பெரும்பாலானவை சாவாத் தீவிலேயே அமைந்துள்ளன. சகர்த்தா (Jahartha) மிகப் பெரு நகரமும் இந்தோனேசியாவின் தலைநகரமுமாம்.

பரப்பு: இந்தோனேசியாவின் பரப்பு 19,19,443 ச.கி.மீ. ஆகும். கிழக்கு மேற்காக இந்தோனேசியத் தீவுகள் 5120 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளன.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 15,95,46,000 (1981) ஆகும்.

இந்தோனேசிய மக்களுள் பெரும்பாலோர் மலாய் இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் 4500 ஆண்டுகளுக்கு முன்னர் மலாயாவிலிருந்து வந்திருக்கலாம் என்று அறிஞர்கள் நம்புகிறார்கள்.

இந்தோனேசியர்கள் ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட மலாய்பாலினேசிய மொழிகளையும், பாப்புவன் மொழிகளையும் பேசுகிறார்கள். இந்தோனேசியன் மொழி ஆட்சிமொழி.

தோன்றும் சச்சரவுகளை அவர்கள் வெளிப்படையாகக் கலந்துரையாடியே தீர்த்துக் கொள்கின்றனர் என்கிறார்.

சமயம்: இந்தோனேசிய மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இசுலாமியர்கள்; 5 விழுக்காட்டினர் கிறித்தவர்கள். இங்குள்ள இசுலாமியர்கள் பின்பற்றும் இசுலாமிய சமயம் அராபிய நாட்டு இசுலாம் சமயத்திலிருந்து மாறுபட்டுள்ளது. இந்தோனேசிய இசுலாமியரின் சமயம் நெளிவு சுளிவுகளைக் கொண்டது; நெகிழும் தன்மையது.

பாலித்தீவிலும் மேற்கில் இலம்போக்குத் தீவிலும் வாழும் மக்கள் பாலி-இந்துமதம் என்னும் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். அதன் அடிப்படை இந்து சமயம்; எனினும் அது பண்டைய பாலினிய, சாவானிய நம்பிக்கைகளையும் கொண்டுள்ளது. பாலி இந்துக்கள் இயற்கைக் கூறுகளான மலைகள், மரங்கள், மூதாதையர் போன்றவற்றை வழிபடுகிறார்கள்.

புத்த சமயமும் இந்து சமயமும் பல நூற்றாண்டுகளுக்குமுன் இந்தோனேசியாவின் சிறப்பான சமயங்களாயிருந்தன. ஆனால், இன்று புத்தர்களின்எண்ணிக்கையும் இந்துக்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்துவிட்டன.

உணவு: இந்தோனேசியர்களின் சிறப்பான உணவு அரிசியேயாகும். அரிசியை வேகவைத்தும் பொரித்தும் பலவகைகளில் அமைந்த ஏனைய உணவுப் பொருள்களோடு கலந்தும் உண்டு களிப்பர். பொதுவாக இந்தோனேசியர்கள் தம் உணவைத் தேங்காய்ப் பாலிலும் எண்ணையிலும் சமைப்பர்.

இந்தோனேசிய மக்களுள் பெரும்பாலோர் இசுலாமியராக இருப்பதால் அவர்கள் பன்றி இறைச்சியை உண்பதில்லை. சில பகுதிகளில் அரிசியைத் தவிர வேறு பொருள்களையும் உணவாகக் கொள்வர். தேநீரையும் காப்பியையும் அவர்கள் விரும்பி அருந்துகின்றனர்.

மாநகரங்களில் வாழும் மக்கள் கிராமப்புறப் பண்ணைவாழ் மக்களை விடப் பல உணவு வகைகளை உட்கொள்வர்.

ஆடைகள்: இந்தோனேசிய ஆடவரும் பெண்டிரும் வண்ணவண்ணப் பாவாடைகளை அணிவர். அவற்றைக் கெய்ன் (Kain) அல்லது சாரோங்கு (Sarong) என்பர். கெய்ன் என்பது உடலைச் சுற்றி மூடிமறைக்கும் நீண்ட ஆடைத்துண்டு. ஆண்கள் சட்டையையும் காலுறையையும் அணிவர். பெண்கள் நீண்ட கைவைத்த மார்புச் சட்டையை அணிந்து கொள்வர்.

ஆண்கள் சிறப்பான தொப்பியொன்றைத் தலையில் வைத்துக் கொள்வர். பெண்கள் தோள்களை மூடும் போர்வையால் தலையையும் மூடிக் கொள்வர். மற்ற இசுலாமிய நாடுகளின் பெண்களைப்போல் இந்தோனேசியப் பெண்கள் பர்தா அணிவதில்லை. நகரங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் மேலைநாட்டுப் பாணியில் ஆடைகளை அணிந்து கொள்கிறார்கள்.

பண்ணைகளில் குடியிருக்கும் இந்தோனேசியக் குடும்பத்தினர் தூங்கும் அறையொன்றையும் புழங்கும் அறையொன்றையும் கொண்ட வீடுகளில் வாழ்கிறார்கள். புழங்கும் அறையே சமையற்கட்டாகவும் பயன்படுகிறது. கற்களால் சமையல் அடுப்பை அமைத்துக் கொள்கின்றனர். சமையற் கட்டில் நீண்ட மூங்கிற் கழிகளில் மீனையும் இறைச்சியையும் உலர வைத்துவிடுவர். மண்ணெண்ணெய் அல்லது எண்ணைய் அடுப்பைப் பயன்படுத்திச் சமைப்பர்.



சகர்த்தா நகரம்

சாவாவைத் தவிர ஏனைய இடங்களில் கட்டப் பட்டுள்ள வீடுகள் தரையிலிருந்து ஏறத்தாழ 2மீ. உயரமுள்ள பொய்க்கால்களின்மீது பழைய மரபுப் படி கட்டப்பட்டுள்ளன. சாவாவில் வீடுகளைத் தரை மட்டத்திலேயே கட்டியுள்ளனர். வாழும்இடத்திற்குக் கீழுள்ள பகுதிகளில் மாட்டுத் தொழுவங்களையும், கோழி அடைக்கும் கூடுகளையும் அமைத்துள்ளனர். அங்குப் பணிக்குப் பயன்படும் கருவிகளையும் விறகு போன்ற பொருள்களையும் சேர்த்து வைப்பர். வீட் டின் தரைகளும் சுவர்களும் மரத்தாலும், தட்டை யாக அமைந்த மூங்கிற் பத்தைகளாலும் ஆனவை. களிமண் ஓடுகளையோ பனை ஓலைகளையோ கொண்டு கூரைகள் வேயப்பட்டுள்ளன.

இந்தோனேசியாவில் உள்ள ஒருசில குழுவினர் நீண்ட வீடுகளை அமைத்து அதில் நூறுபேர் வரை தங்குகின்றனர். போர்னியோவைச் சேர்ந்த தயக்கு களும் செலிபீசைச் சேர்ந்த தோர்டசா மக்களும் சுமத்திராவைச் சார்ந்த பாடக்குகளும் இத்தகைய வீடுகளில் வாழ்கிறார்கள். பல இந்தோனேசியர்கள் தம் வீட்டை அழகுபடுத்தச் சுவர்களில் செதுக்கு மர வேலைப்பாட்டுச் சட்டங்களைப் பயன்படுத்தியுள்ள னர். மாநகரங்களில் வசிப்போர் மேலைநாட்டு அமைப்புடைய வீடுகளில் வாழ்கிறார்கள்.

இந்தோனேசியர் பல கலைகளில் கைதேர்ந்த வர்கள். சாவாவின் பழமையான அரச அரண்மனை களில் நாட்டியமும் பாலித்தீவில் நாட்டுப்புற நாடக-நாட்டியமும் சிறப்பானவை. சாவானிய நாட் டியக்காரர்கள் மெல்ல அசையும் அசைவுகளை விரி வாகவும் விரல் அசைவுகளைக் குறிப்பிட்ட பொரு ளைக் கொள்ளுமாறும் பயன்படுத்துவர். போர், காதல் போன்ற காட்சிகளை அந்நாடகங்கள் சித்திரிக்கின்றன. பாலித் தீவினரின் நாட்டியங்கள் தொன்மையான இந்து இதிகாசங்களைப் பின்னணி யாகக் கொண்டவை. அவை வலிமையான தாளங் களையும் அசைவுகளையும் கொண்டுள்ளன.

பொம்மலாட்ட நாடகங்கள் சாவா, பாலிப் பண்பாட்டில் சிறப்பான இடம் பெறுகின்றன. அவற்றில் தோல், மரப் பொம்மைகள் பயன்படுத்தப் படுகின்றன. வெண்திரைக்குப் பின்னர் அமர்ந்திருப் போரால், கதைகளின் தன்மைக்கேற்பப் பொம்மை கள் நகரும். எண்ணெய் விளக்கொளி பொம்மை களின் மீது விழுவதால் அவற்றின் நிழல் திரைச் சீலையின் மீது படும். பொம்மலாட்டக்காரர் கதை யைக் கூறிச் செல்வார். இத்தகைய பொம்மலாட்டக் காட்சிகள் இரவு 9.00 மணிக்குத் தொடங்கிக் காலை 6.00 மணி வரை நிகழும்.

நிலம்: இந்தோனேசியத் தீவுகளை மூன்று தொகுதிகளாகப் பிரிக்கலாம். அவை. 1. பெரிய சுந்தாத் தீவுகள், 2. சிறிய சுந்தாத் தீவுகள், 3. மொலுக்கசு. இவற்றைத் தவிர நியூகினியின் பகுதி யான இரியன் சயா (Iriyan Jaya) வையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பெரிய சுந்தாத் தீவுகள்: போர்னியோ, செலி பீசு, சாவா, சுமத்திரா போன்றவை இத்தொகுதி யில் அடங்கும். இந்தோனேசியரில் பெரும்பாலோர் இத்தீவுகளிலேயே வாழ்கிறார்கள். அதேபோல் இந் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும் இத் தீவுகளிலேயே மையமிட்டுள்ளன.



போர்னியோ தீவிலுள்ள சிற்றூர்

போர்னியோ: உலகிலேயே மூன்றாம் பெருந் தீவாகும். அத்தீவின் முக்கால் பங்கு இந்தோனேசியா வுக்குச் சொந்தமானது. எஞ்சிய கால்பங்கு மலேசி யாவுக்குச் சொந்தமான சரவாக்கு, சாபா ஆகியவற் றுக்குச் சொந்தமானது; இதைப் புருனை என்பர். இந்தோனேசியாவுக்குச் சொந்தமான போர்னியோ வைக் கலிமந்தன் என்பர். இங்குப் பருவக்காற்று மழைக் காடுகளும் மலைகளும் மிகுதி. இந்நாட்டின் மிக நீண்ட காபுவாசு ஆறு (Kapuvas River) இங்குப்

பாய்கிறது. மக்கள்தொகை மிகக் குறைவு. மக்களுள் பெரும்பாலோர் கடற்கரையையடுத்து வாழ் கிறார்கள்.

செலிபிசு: நான்கு தீபகற்பங்களைக் கொண்டது. இந்தோனேசியாவிலேயே மலைகள் மிகுந்த பகுதி இதுதான். நடுப்பகுதியிலுள்ள மலைத்தொடர்கள் 3000மீ வரை உயர்ந்துள்ளன. வட தீபகற்பம் பல எரிமலைகளைக் கொண்டுள்ளது. செலிபீசின் பெரும் பாலான பகுதி, காடுகளால் மூடப்பட்டுக் கிடக்கிறது. உள்நாட்டுப் பள்ளத்தாக்குகள், மேட்டு நிலங்கள் போன்றவற்றுள் சில, வளமான பண்ணை நிலங் களையும் மேய்ச்சற்றரைகளையும் கொண்டிலங்கு கின்றன. கடற்கரையை அடுத்துள்ள பகுதிவாழ் மக்கள் மீன் பிடித்து வாழ்கின்றனர். உசுங்கு பாடாங்கு (Ujung Padang) இத்தீவின் பெருநகரமும் சிறப்பான துறைமுகமுமாம்.

சாவாத்(Java) தீவே இந்தோனேசியாவின் மக்கள் நெருக்கம் மிகுந்த தீவாகும். ஆயிரக்கணக்கான சிறு பண்ணைகள் நிரம்பிய சிற்றூர்கள் சாவாவை அழகு படுத்துவன. இத்தீவே தொழிற்சாலைகள் மிகுந்த பகுதியுமாம். இந்தோனேசியாவின் பெரு நகரங்கள் இத்தீவிலேயேயுள்ளன சகார்த்தா தலைநகரும் நாட்டின் பெருநகரமும் ஆகும். சாவாவின் குறுக்கே கீழ் மேலாகப் பலமலைத்தொடர்கள் சங்கிலி கோத் தாற்போல் செல்கின்றன. அவற்றில் பலவற்றின் மலையுச்சிகள் 3000 மீட்டருக்கும் மிகுதியான உயர முடையவை. இத்தொடர்களிலும் எரிமலைகள் உண்டு. மலைத்தொடர்களுக்கு வடபால் பல வள மான சமவெளிகளும் அமைந்துள்ளன. தென்பால் மலை முகடுகளில் சுண்ணாம்புக்கற்கள் மிகுதி. மேற்குச் சாவாவில் மிக உயர்ந்த மேட்டு நிலங்கள் பரவியுள்ளன.

சுமத்திராத் தீவு உலகிலேயே ஐந்தாம் பெருந் தீவாகக் கருதப்படுகிறது. இங்குள்ள பாரிசான் மலைத்தொடர்கள் சிலவற்றில் எரிமலையுச்சிகளைக் காணலாம். குறிப்பாக, தென்மேற்குக் கடற்கரை யோரத்தில் உள்ள மலையுச்சிகள் 3600மீ. வரை உயரமுள்ளன. இப்பகுதியில் பருவக்காற்று மழைக் காடுகளும் சில பண்ணை நிலங்களுமுண்டு. கிழக்குக் கரை சதுப்புநிலங்களைக் கொண்டுள்ளது. மேற்குத் திசையில் மலைச் சரிவுகள் கடலை நோக்கிச் செல்கின்றன.

சிறிய சுந்தாத் தீவுகள் பாலித் தீவிலிருந்து 1100 கி.மீ. கிழக்கில் திமோர் தீவுவரை பரவியுள் ளது. பாலியில் மக்கள்தொகை மிகுதி; அதன் பெரு நகரம் தென்பசார் (Denpasar). சிறிய சுந்தாத் தீவுக் கூட்டத்திலேயே இதுதான் பெருநகரமுமாகும். இத் தீவுகளிலுள்ள பெரும்பாலான நகரங்கள் கடற் கரையையொட்டியுள்ள வாணிக மையங்களாகும். சிறிய சுந்தாத் தீவுகளிலேயே மிகப் பெரிய தீவாக இருப்பது திமோர் தீவாகும். இத்தீவுகளிலும் பல மலைத்தொடர்கள் உண்டு. இலாம்பர்க்குத் தீவி லுள்ள இரின்சானி மலையுச்சிநெடிதுயர்ந்தது. இதன் உயரம் 3276 மீ. பல சிற்றாறுகள் மலைகளிலிருந்து பாய்ந்தோடிக் கடலை அடைகின்றன. கிழக்கில் செல்லச்செல்லச் சிறிய சுந்தாத் தீவுகளில் மழைக் காலம் குறுகிவிடுவதால், கிழக்குப் பகுதிகளில் பருவக் காற்று மழைக்காடுகள் குறைவு; நிறையப் புல் வெளிகள் உண்டு. கூலவகைத் தானியம் கீழ்ப்பகுதி மக்களின் சிறந்த உணவு. மேற்கில் அரிசி சிறப்பான உணவுப் பொருளாகும்.

கிழக்கே செல்லச் செல்ல மக்கள் தொகையும் குறையத் தொடங்குகிறது. மக்கள் வாழ்க்கையும் பலவகைகளில் மாறுபடுகிறது. இலாம்பர்க்குத் தீவில் வாழும் சசக்குகள் மலைமேடுகளில் வீடுகளைக் கட் டிக் கொண்டு வாழ்கிறார்கள். திமோர் தீவினர் புல் வீடுகளை அமைத்து அவற்றில் வாழ்கின்றனர்.

உலக நடுக்கோட்டின் இருபக்கங்களிலும் அமைந் துள்ளது மொலுக்கசுத் தீவுக்கூட்டம். செலிபீசுத் தீவிற்கும் நியூகினித் தீவிற்கும் இடையில் உள்ள இத் தீவுக்கூட்டத்தைச் சார்ந்த அல்மெகராத் தீவு பெரி யது. இது 17,790 ச.கி.மீ. பரப்பளவுடையது. இத னைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான சிறு தீவுகளில் மக்கள் வாழ்வதில்லை. மொலுக்கசுப் பெருந்தீவுகள் மலைப்பாங்கானவை; அடர்ந்த காடுகளைக் கொண் டவை. அரு, தனிம்பர் தீவுகள் சம நிலமானவை; சதுப்பு நிலங்களைக் கொண்டவை. பினையா மலை யுச்சி சிராம் தீவில் உள்ளது. இதன் உயரம் 3027 ம

மொலுக்கசின் பெரும்பாலான மக்கள் கடற் கரையையொட்டியுள்ள வாணிகக் குடியேற்றங்களில் வாழ்கிறார்கள். நறுமணப் பொருள் தீவுகள் (Spice Islands) என்று இத்தீவுகளையே கூறுவர். மொலுக்க சின் பழங்குடிமக்கள் நியூகினியைச் சார்ந்த பாப்பு வான்கள் (Papuans) எனப்படுவர். நறுமணப் பொருள் களின் வாணிகத்தால் இங்கு அராபிய, தச்சிய, மலாய் மக்கள் குடியேறி, உள்ளூர் மக்களுடன் கலப் புத் திருமணஞ் செய்து கொண்டனர்.

நியூகினியே உலகில் இரண்டாம் பெருந்தீவாகும். இதன் மேற்குப் பாதியை இரியன் சயா (Iriyan Jaya) என்பர். இது இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. கிழக்குப் பாதி பாப்புவா நியூகினி என்னும் சுதந்திர நாடாகும்.

இந்தோனேசியாவிலேயே வளர்ச்சி குன்றியதும், மக்கள் நெருக்கம் குறைந்ததும் இரியன் சயாவே

யாகும். பருவக்காற்று மழைக்காடுகள் இரியன் சயாவின் 90 விழுக்காட்டு நிலப்பரப்பில் உள்ளன. சயபுரம், இரியன் சயாவின் பெருநகரமாகும். இங்குள்ள பன்கக் சயாவே இந்தோனேசிய மலையுச்சிகளில் மிக உயரமானது. இது 5030 மீ. உயரமுடையது.

பொருளாதாரம்: இந்தோனேசியா இயற்கைச் செல்வங்களுக்குப் பெயர்பெற்றது. அதனால் பண்ணை நிலங்கள் நன்முறையில் வளர்ச்சியுற்றுள்ளன. எரிமலைச் சாம்பல் கொண்டுள்ளமையால் நிலங்கள் செழுமையானவை. பருவக்காற்றுத்தட்பவெப்பநிலையையும், மிகுதியான மழையையும் பெறுவதால் இந்தோனேசிய உழவர்கள் பல்வகையான பயிர்களை விளைவிக்கின்றனர். இந்நாட்டில் தகரமும் பெட்ரோலியப் பொருள்களும் படிந்துள்ளன. பாக்சைட்டு, நிலக்கரி, இரும்புத்தாது, நிக்கல் போன்றவை ஏனைய கனிமப்பொருள்கள். காடுகள் மூன்றில் இரண்டு பங்கு நிலத்தை மூடியுள்ளன. அவற்றின் உறுதியான மரங்கள் விலைமதிப்பற்றவை. இந்தோனேசியாவில் பலவகையான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. வேளாண்மையே இந்நாட்டின் சீரிய பொருளாதாரத் தொழிலாகும். இங்குக் காப்பி, பனை எண்ணெய், இரப்பர், கரும்பு, தேயிலை, புகையிலை போன்ற ஏற்றுமதிப் பொருள்கள் பெரும் பண்ணைகளில் பயிரிடப்படுகின்றன. சிறு பண்ணைகளில் கூவைக் கிழங்கு, தேங்காய், கூலம், வேர்க்கடலை, பழச்சாறு, நறுமணப்பொருள்கள் சர்க்கரைவள்ளிக் கிழங்கு போன்றவையும் பயிராகின்றன. உழவர்கள் தம் குடும்பத்திற்காகவும் விலைக்கு விற்கவும் மேற்கண்ட பொருள்களைப் பயிரிடுவர். இரப்பர் இந்தோனேசியாவின் சிறப்பான ஏற்றுமதிக்கு உதவும் பணப் பயிராகும். இறைச்சிக்காக உழவர்களுள் சிலர் கால்நடைகளையும் செம்மறியாடுகளையும் வளர்க்கிறார்கள்.

சாவாவின் உழவர்கள் இந்தோனேசியாவின் அரிசி உற்பத்தியில் பெரும் அளவை விளைவிக்கிறார்கள். மலையருவிகள் கொணரும் நீரைப் பயன்படுத்தி நெல்வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்கிறார்கள். நெல் வயல்களில் குறைந்த அளவு இருபோகங்கள் விளைகின்றன. மரங்களை வெட்டித் தீயிட்டுக் கொளுத்தியபின் நிலத்தைச் சாகுபடிக்குப் பயன்படுத்தும் உழவர்களும் உண்டு.

இந்தோனேசியாவில் தொழிற்சாலைகள் குறைவு. இங்கு 12,000 தொழிற்சாலைகள் இருந்தாலும் அவற்றில் முக்கால் பங்கில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 50 க்கும் குறைவான தொழிலாளர்களே பணிபுரிவர். 90 விழுக்காடு தொழிற்சாலைகள் சாவாவில் அமைக்கப்பட்டுள்ளன. சிகரெட்டுகள், பருத்தி ஆடைகள், கண்ணாடிப் பொருள்கள், சவுக்காரம் போன்றவை செய்தொழில்களுள் சில. சிமிண்டு,இரசாயனப் பொருள்கள், காகிதம், பெட்ரோலியப் பொருள்கள், சிறு கப்பல்கள், பேருந்து சக்கரப்பட்டை, ஏனைய இரப்பர் பொருள்கள் ஆகியவற்றை இந்தோனேசியா உற்பத்தி செய்கிறது.

சுமத்திராவில் பெட்ரோல் கிடைக்கிறது. தூரக்கிழக்கு நாடுகளில் பெட்ரோல் உற்பத்தியாகும் சிறப்பான நாடுகளில் இந்தோனேசியா தக்க இடத்தைப் பெறுகின்றது. பெட்ரோல் உற்பத்தியில் மூன்றிலிரண்டு பங்கு சுமத்திராவிலிருந்தே கிடைக்கிறது.

தகர உற்பத்தியில் இந்தோனேசியா முதலிடம் வகிக்கிறது. சுமத்திராவுக்கு அண்மையிலுள்ள பங்கா (Bangka), பில்லிட்டன் (Billiton),சிங்கெப்பு(Singkep) தீவுகளில் தகரச் சுரங்கங்கள் உள்ளன. ஓரளவு பொன்னும் வெள்ளியும் சல்பரும் கூட இந்தோனேசியாவில் கிடைக்கின்றன.

இந்தோனேசியாவில் 2 இலட்சம் மீன்பிடிபடகுகள் செயற்படுகின்றன. அவற்றுள் ஏறத்தாழ 3000 படகுகள் எந்திரப்படகுகள். மீன் பிடிக்கும் தொழில் இந்நாட்டு மக்களால் பரவலாகப் பின்பற்றப்படுகிறது. பலவகை மீன்கள் இங்குக் கிடைக்கின்றன. கடற்கரையை யொட்டிய பகுதிவாழ் மக்கள் பெரும்பாலும் மீன் உண்பர்.

காடுகளில் எபனி, தேக்கு போன்ற உறுதியான மரங்கள் இந்தோனேசியாவில் மிகுதியாகக் கிடைக்கின்றன. மர உற்பத்தியில் போர்னியோவும் சாவாவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. போக்குவரத்துப் பற்றாக்குறையால் மரமறுக்கும் தொழில் வளர்ச்சியுறவில்லை. கின்கொனா மரத்திலிருந்து கொய்னா மருந்து தயாரிக்கப்படுகிறது.

போக்குவரத்து: அடர்ந்த காடுகளையும், கரடுமுருடான மலைகளையும் கொண்டுள்ளமையால் போக்குவரத்துச் சாதனங்கள் அவ்வளவு எளிதாக இந்நாட்டில் அமையவில்லை. இருப்புப்பாதைத் தொடர்கள் அரசுக்குச் சொந்தமானவை. சாவா, மதுரா, சுமத்திரா போன்ற பகுதிகளில் இருப்புப்பாதைத் தடங்கள் உண்டு.

இந்நாட்டில் 80,000 கி.மீ. சாலைகளும் அதில் 14000 கி.மீ. நீளமுள்ளதும் அகன்றதுமான சாலைகளும் உள்ளன.

அரசுக்குச் சொந்தமான கப்பல் குழு உண்டு. சகர்த்தாவும் பலம்பாங்கும் சிறந்த துறைமுகங்கள்.

அரசு வானவூர்தியையும் நடத்துகிறது. அதனைக் கருடா வானவூர்தி என்பர்.

அஞ்சல், தொலைவரி, தொலைபேசி, வானொலி, தொலைக் காட்சி போன்றவை அரசுக்குட்பட்டவை.

வரலாறு: தொன்மையான மனிதனின் எலும்புகள் சாவாவில் கிடைத்துள்ளன. 'சாவா மனிதன்' என்று கூறப்படும் இம்மனித இனத்தவர் 15 இலட்சம் ஆண்டுகளுக்குமுன் அதாவது, வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடும் என்பது அறிஞர்களின் கருத்து.

இந்தோனேசியரின் மூதாதையர் தென்கிழக் காசியாவின் நிலப்பகுதியிலிருந்து கி.மு. 2500 ஆண்டளவில் வந்திருக்கக்கூடும்.

இந்தியாவிலிருந்து கி.பி. 500-ஆம் நூற்றாண்டில் வந்த இந்து சமயம், புத்தசமயம் ஆகியவற்றின் செல்வாக்கு இந்தோனேசியாவில் காணப்படுகிறது. சாவாவிலும் சுமத்திராவிலும் சிறு சிறு அரசுகள் தோன்றி வளர்ந்தன. இந்துக்கள் நம்பியதைப்



போரா பதூர் தூபி நுழைவாயில்

போன்றே இந்தோனேசியர்களும் அரசன் மனித வடிவத்தில் இறைவனால் அனுப்பப்பட்டவனே என்னும் கொள்கையைப் பெரிதும் நம்பினர். இந்தோனேசியாவின் கட்டடங்கள் இந்தியக் கட்டடக்கலையின் செல்வாக்கிற்குட்பட்டன. அவற்றை இன்று இந்நாட்டில் காணப்படும் கோயில்களைப் பார்த்தாலே அறிந்து கொள்ளலாம். இன்றும் இந்தோனேசியாவின் சிற்றூர்கள் இந்தியாவின் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் கதைகளைத் தம் பொம்மலாட்ட நாடகங்களின் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. நாட்டுப்புறமக்கள் தொடர்ந்து பேய் பிசாசுகளை நம்பியும் வழிபட்டும் வருவதோடு மலைகள், மரங்கள் மற்றும் ஏனைய பொருள்களை வழிபட்டும் மகிழ்கிறார்கள். மேலும், இந்தியக் கடவுளரையும் இவர்கள் வழிபடுகிறார்கள்.

இந்து, புத்த சமய அரசுகள்: இந்தோனேசியாவில் இந்து, புத்த சமய அரசுகள் பல நூற்றாண்டுகள் ஒன்றோடொன்று எதிரிகளாக இருந்தன. நடு சாவாவில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் மாதரம் (Mataram) என்னும் பெயர் கொண்ட இந்து அரசு நிலைநாட்டப்பட்டது. அது வீழ்ச்சியுற்றபோது சைலேந்திரா என்னும் வம்சாவளியினர் புத்தசமய அரசை நிலைநாட்டினர். நடு சாவாவில் சைலேந்திரப் பேரரசர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தம் ஆட்சியை இழந்தனர். திருமண உறவினால் மீண்டும் புத்தசமயஅரசு ஒன்று சிரீவிசயப் பேரரசு என்னும் பெயரில்உருவாக்கப் பெற்று, அதன் அரசர்கள் ஆட்சி நடத்தினர். சிரீவிசயப் பேரரசு கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே தென் சுமத்திராவில் நிலைநாட்டப் பெற்று வளர்ச்சியுற்றிருந்தது. புதிய அரசு ஒன்று மாதரம் என்னும் பெயரில் நடு சாவாவில் சைலேந்திரப் பேரரசை அகற்றிவிட்டுப் பதவியைப் பெற்றது. மாதரமும் சிரீவிசயாவும் பெரும் பகை நாடுகளாயின.

அரசு அதிகாரம் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சாவாவின் கிழக்குப் பகுதிக்குச் சென்றது. அங்கும் அடுத்தடுத்துப் பல வலிமை வாய்ந்த அரசுகள் உருவாயின. சோழப் பேரரசர் முதலாம் இராசேந்திரர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சிரீவிசயப் பேரரசை வென்றார். சிங்கோசரி அரசு கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பெரும் நிலப்பரப்புகளை வெற்றி கண்டிருந்தாலும், கலகங்களின் விளைவாக அது சிதைவுற்றது. வித்சயா என்னும் இளவரசர் கி.பி. 1923-ஆம் ஆண்டில் நாட்டில் அமைதியை நிலைநாட்டி, மட்சாபகித்து என்னும் புதிய அரசொன்றை நிலைநாட்டினார். அவ்வரசு இந்தோனேசியாவின் பல பகுதிகளை வென்று, சிரீவிசயாவின் அதிகாரத்தை முடிவுக்குக் கொணர்ந்தது. மட்சாபகித்துக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பெரும்பாலான தீவுகளைத் தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக்கொண்

டது. எனினும், அதன் அதிகாரச் சிறப்பை வரலாற்று அறிஞர்களால் உய்த்துணர முடியவில்லை.

சிரீவிசயாவே பெரும்பாலும் இந்தோனேசியாவின் வாணிகத்தை நடத்தி வந்தமையால், அது இப் பகுதியின் கடலாதிக்கம்பெற்றபேரரசாகக்கருதப்பட்டது: ஆனால், சாவாவில் இருந்தவை உள்நாட்டு அரசுகளானமையால் அவற்றிற்கு வாணிகத்தைவிட அரிசி உற்பத்தியே ஆதிக்கத்திற்கு வழி வகுத்தது. மட்சாபகித்து அரசு வாணிகத்தையும் அரிசியையும் தன் ஆட்சியின் அடித்தளமாகக் கொண்ட முதல் இந்தோனேசிய அரசாகும்.

அரேபியாவிலிருந்து சீனாவரை பரவியிருந்த பன்னாட்டு வாணிக வளர்ச்சியின் விளைவாக இந்தோனேசியத் தீவுகளுக்குப் பல சிக்கல்கள் தோன்றின. அரேபிய, சீன, இந்திய, பாரசீக வணிகர்கள் இந்தோனேசியாவில் கிடைத்த பீங்கான், துணிமணிகள், கச்சாப்பட்டு போன்ற பொருள்களுடன் நறுமணப் பொருள்களையும் நறுமணம் வீசும் கட்டைகளையும் வாணிகப் பொருளாக்கிக் கொண்டனர். ஆசியப் பொருள்கள் ஐரோப்பாவிற்கும் எடுத்துச் செல்லப் பட்டன. இத்தாலியப் பயணியான மார்க்கோ போலோ கி.பி. 1292-ஆம்ஆண்டில் இந்தோனேசியத் தீவுகளுக்குச் சென்றார்.

இசுலாம் சமய வளர்ச்சி: இந்தோனேசியாவுக்கு இசுலாம் சமயத்தை முதன் முதலாகக் கொண்டு வந்தவர்கள் அரேபியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்த இசுலாமிய வாணிகர்களேயாவர். பிற்காலத்தில் மலாய்த் தீபகற்பத்தின் தென்மேற்குக் கடற்கரையிலிருந்த மலாக்காவிலிருந்து இந்தோனேசியா மிகுதியான இசுலாம் சமயச் செல்வாக்கைப் பெற்றதெனலாம்.

மலாயாவுக்கும் சுமத்திராவுக்கும் இடையிலிருந்த மலாக்கா நீர்ப்பிரிவில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்று வந்த வாணிக வழியை மலாக்கா கைப்பற்றியது. மலாக்காவும் பெரும் வாணிகச்சிறப்பு மிக்க நாடாக அக்காலத்தில் திகழ்ந்தது. அதன் அரசர் இசுலாம் சமயத்திற்கு மதம் மாறவே, மலாக்காவிலிருந்து இந்தோனேசியாவின் பல பகுதிகளில் இசுலாம் சமயம் பரவலாயிற்று. பல துறைமுகப்பட்டினங்கள் மலாக்காவுடன் நெருங்கிய வாணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு காலப் போக்கில் மட்சாபகித்துடன் தமக்கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டன. இதன் விளைவாக மட்சாபகித்து அரசு நலியத் தொடங்கிக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சியுற்றது. அதன் அழிவில் மாதரம் என்னும் பெயரில் புதிய தான இசுலாமிய அரசு ஒன்று தோன்றியது. இப் புதிய அரசு சாவாவின் நடுவிலும் கிழக்கிலும் வலிமையுடையதாகத் திரும்பவும் நிலைநாட்டப் பெற்றது.

இந்தோனேசியாவுக்கு ஐரோப்பியர் வருகை: வாசுகோடகாமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி கி.பி. 1497-98-ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவைச் சுற்றி வந்து ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்தார். போர்ச்சுகீசியர் கி.பி. 1511-இல் மலேசியாவிலிருக்கும் மலாக்காவைக் கைப்பற்றிக் கொண்டு, அங்குக் கோட்டையொன்றையும் கட்டி, இந்தோனேசியாவுடன் செல்வம் கொழிக்கும் வாணிகத்தைத் தொடங்கினர்.

ஆங்கில, தச்சு வாணிகர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியரை வாணிகத்துறையில் எதிர்த்தனர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழு கி.பி. 1600-ஆம் ஆண்டிலும் தச்சுக் கிழக்கிந்தியக் குழு கி.பி. 1602-ஆம் ஆண்டிலும்கீழ்த்திசை நாடுகளுடன் வாணிகம் செய்ய வணிகக் குழுக்களை நிறுவின. ஆங்கில - தச்சு (Dutch) வணிகக் குழுக்கள் போர்ச்சுகீசியரை முறியடித்துவிட்டு, ஆதிக்கத்தைப் பெற்றுத் தமக்குள் பூசல் விளைவித்துக் கொண்டன. கிழக்கிந்தியத் தச்சு வணிகக்குழு ஆங்கிலக் குழுவை விடச் செல்வச் செழிப்பிலும் வலிமையிலும் வலுவாயிருந்தது. அம்பாய்னாவையும் (Amboina) ஏனைய நறுமணப் பொருள் விளையும் தீவுகளையும் கி.பி. 1620 ஆம் ஆண்டில் விட்டேகும்படி தச்சுக்காரர்களை ஆங்கிலேயர் வற்புறுத்தினர். அம்பாய்னாவில் குடியேறியிருந்த ஆங்கிலேயர் பலரைக் கி.பி. 1623-ஆம் ஆண்டில் தச்சுக்காரர்கள் புரிந்த கொலையை 'அம்பாய்னா படுகொலை' என்பர். பின்னர்த் தச்சுக்காரர்கள் விரைவாக வாணிகத்துறையில் முன்னேறிக் கடல் வாணிகத்தையே தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தனர். மலாக்காவைக் கி.பி. 1641-இல் தச்சுக்காரர்கள் போர்ச்சுகீசியரிடமிருந்து கைப்பற்றினர்.

தச்சுக்காரர்களின் ஆட்சி: சாவாவிலிருந்த மாதரத்தின் அரசர் கி.பி. 1677-ஆம் ஆண்டில் தம் நாட்டில் அவருக்கெதிராக எழுந்த கலகக்காரர்களை அடக்கத் தச்சுக்காரர்களின் உதவியை நாடினார். தச்சுக்காரர்கள் அவருக்கு உதவினர். கைம்மாறாக அவர் தச்சுக்காரர் சாவாப் பகுதிகளில் வாணிகம் செய்ய உரிமைகள் அளித்தார். பின்னர் வற்புறுத்திப் பல துறைமுகப்பட்டினங்களுடனும் ஏனைய இந்தோனேசியத் தீவுகளுடனும் வாணிகம் செய்யும் உரிமையைப் பெற்றனர். நாளடைவில் அத்தீவுகளும் அவர்கள் வசமாயின. கிழக்கிந்தியத் தச்சுக்காரரின் வாணிகக்

குழு கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தோனேசியாவின் பெரும்பாலான தீவுகளை வாணிகத் தொடர்பால் கட்டுப்படுத்தியது. இத்தீவுக் கூட்டங்களும் தச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் எனப் பெயர் பெற்றன.

தச்சுக்காரர்களின் ஆட்சியால் பல கொடுமைகள் நிகழ்ந்தன. அவர்கள் இந்தோனேசியர்கள் குறிப்பிட்ட சில பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்து, அவர்கள் உறுதிபடுத்திய விலைக்கு அவர்களிடமே விற்க வேண்டுமென வலியுறுத்தினர். இதன் விளைவாகத் தொடக்கத்தில் தச்சுக்காரர்கள் பெரும் ஆதாயம் பெற்றனர். ஆனால், காலப்போக்கில் தச்சு வணிகக் குழுவின் செலவினங்களும் கட்டுக்கடங்காது பெருகிவிட்டன. நாளடைவில் வணிகக்குழு பொருளை இழந்தது. தச்சு அரசாங்கம் கி.பி. 1798-இல் தலையிட்டது. அடுத்த ஆண்டில் வணிகக்குழு கலைக்கப்பட்டது. வணிகக்குழு கட்டுப்படுத்திய நிலைகளைத் தச்சு அரசாங்கமும் மேற்கொண்டது.

ஐரோப்பாவில் நடைபெற்ற நெப்போலியனது போர்களின்போது கி.பி. 1811-ஆம் ஆண்டில் ஆங்கிலப்படைகள் தச்சுக்காரரின் கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டன. நெப்போலியனின் தோல்விக்குப் பின்னர், கி.பி. 1816-இல் இங்கிலாந்து, மீண்டும் இந்தோனேசியத் தீவுகளைத் தச்சுக்காரர்களுக்குக் கொடுத்தது.

தொடக்கத்தில் தச்சு அரசு சாவாவை மட்டும் திட்டவட்டமான அரசியல் கட்டுப்பாட்டின்கீழ் ஆண்டது. படிப்படியாகத் தச்சுக்காரரின் ஆட்சி மற்றத் தீவுகளையும் கைப்பற்றியது. தச்சுக்காரர்கள் இந்தோனேசியாவில் சுரண்டும் கொள்கையைப் பின்பற்றியதால் அத்தீவுகளின் ஒருமைப்பாட்டைப்பற்றி அவர்கள் அக்கறை காட்டவில்லை.

தச்சுக்காரரின் சுரண்டலாட்சியை எதிர்த்து 1908 ஆம் ஆண்டில் இந்தோனேசியச் சுதந்திர இயக்கம் எழுந்தது. இவ்வியக்கம் சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டது. அதனை புடி உட்டோமா (Budi Utoma) என்பர். புடி உட்டோமா என்றால் 'நன் முயற்சி என்பது பொருள். அடுத்த இருபதாண்டுகளில் பல்வேறு நாட்டுணர்ச்சியால் தூண்டப்பெற்ற குழுக்கள் பல செயலாற்றின. அவற்றுள் ஒன்று இந்தோனேசியத்தேசியக் கட்சியாகும். அதன் தலைவர் சுகர்ணோ ஆவார். மக்களுக்கு ஆட்சியில் உரிமை வழங்க எண்ணிய தச்சியர் மக்கள் குழு (Volksraad) ஒன்றினை நிலைநாட்டினர். பொதுவுடைமைக் கட்சியால் 1926-27-இல் தூண்டப்பெற்ற கலகம் தோல்வியில் முடிவுற்றது. சுகர்ணோ உட்படப் பல தேசியத் தலைவர்கள் சிறையில் அடைக்கப் பெற்றோ நாடு கடத்தப்பட்டோ தண்டனை அடைந்தனர்.

இரண்டாம் உலகப்போரின்போது சப்பானியர் இந்தோனேசியாவை 1942-45 வரை கைப்பற்றியிருந்தனர். ஆனால், போர் முடியும் வேளையில் 1947-ஆகசுட்டு மாதம் 17-ஆம் நாள் சப்பான் சரணடைந்தது. சுகர்ணோவும் ஏனைய தேசியத் தலைவர்களும் இந்தோனேசியாவைச் சுதந்திர நாடென அறிவித்தார்கள். சுகர்ணோ இந்தோனேசியக் குடியரசின் குடிரசுத் தலைவரானார். தச்சு அரசு 1949 திசம்பர் மாதத்தில் இத்தோனேசிய ஐக்கிய நாடுகளின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டது. இந்நாடு 1950-இல் தன் பெயரை இந்தோனேசியக் குடியரசு என மாற்றிக் கொண்டது.

இரியன் சயா என்னும் மேற்கு நியூகினி 1962 வரை தச்சுக்காரரின் கைவசம் இருந்தது. அது 1969-இல் இந்தோனேசியக் குடியரசுடன் இணைந்துவிட்டது. போர்ச்சுக்கீசியர் வசமிருந்த திமோர் தீவும் 1976-இல் இந்தோனேசியாவுடன் இணைந்தது.



சுகர்ணோ (இடம்) சுகர்த்தோ (வலம்)

சுகர்ணோ 1967-பிப்பிரவரி 22-ஆம் நாள் தம் அதிகாரங்கள் அனைத்தையும் படைத்தலைவர் சுகர்த்தோ என்பாரிடம் ஒப்படைத்தார்.

இந்தோனேசியாவின் பெருநகரங்கள்: சாவாத் தீவில் உள்ள சகர்த்தா இந்தோனேசியாவின் தலைநகரமும் பெருநகரமும் ஆகும். இதன் மக்கள் தொகை 45,76,000 (1971).

சுரபாயாவும் பாண்டுங்கும் இந்தோனேசியாவின் இரண்டாம், மூன்றாம் பெருநகரங்கள். சுரபாயாவின் மக்கள் தொகை 15,56,250. பாண்டுங்கின் மக்கள் தொகை 12,01,730. யோக்யர்த்தா தொன்மையான நகரங்களுள் ஒன்று; மக்கள்தொகை 3,42,260.


சுமத்திராவின் துறைமுகப் பட்டினங்கள் பெலாவன், படாங் பலம்பாங்கு என்பனவாம். மா.சு.

**இந்தோனேசியாவில் கல்வி**: அனைவருக்கும் கட்டாயத் தொடக்கப் பள்ளிக் கல்வி என்ற தேசியக் குறிக்கோளை இந்தோனேசியா இன்னும் அடையவில்லை. எனினும், பத்து வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் எழுபது விழுக்காடு மக்கள் குறைந்தது படிக்கும் திறனாவது பெற்றவர்களாக உள்ளனர்.

இந்தோனேசியாவில் சமயச் சார்பற்ற (Secular), பள்ளிகள் இசுலாமியப் பள்ளிகள் (Islamic) என்னும் இருவகைப் பள்ளிகள் உள்ளன. கல்வி பண்பாடு அமைச்சகத்தின் (Ministry of Education and Culture) பொறுப்பில் சமயச் சார்பற்ற பள்ளிகள் இயங்கி வருகின்றன. சமய அமைச்சகத்தின் (Ministry of Religion) பொறுப்பில் இசுலாமியப் பள்ளிகள் உள்ளன.

சமயச் சார்பற்ற பள்ளிகளில் மட்டுமே மாணவர்கள் பலர் உள்ளனர். அதே போல், இசுலாமியப் பள்ளிகளில் மட்டுமே பயிலும் மாணவர்களும் உளர். இந்த இரு பள்ளிகளிலும் சேர்ந்து பயிலக் கூடிய மாணவர்களும் உண்டு. இத்தகைய மாணவர்கள் காலையில் ஒரு பள்ளியிலும் மாலையில் மற்றொரு பள்ளியிலும் சேர்ந்து பயிலுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மழலையர் பள்ளிக் கல்வி நான்கு, ஐந்து வயது நிறைந்த குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிக் கல்வி மொத்தம் ஆறு ஆண்டுகள். ஆறு வயதில் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் சேருகின்றனர். பன்னிரண்டு வயதில் தொடக்கப் பள்ளிக் கல்வியை முடித்துக் குழந்தைகள் வெளிவருகின்றனர். உயர்நிலைப் பள்ளியில் (General Junior High School) மூன்று ஆண்டுகளும், மேல்நிலைப் பள்ளியில் (Senior High School) மூன்று ஆண்டுகளும் மாணவர்கள் பயிலுகின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் பொதுக் கல்வி, ஆசிரியர் பயிற்சி, தொழிற் பயிற்சி ஆகியன கற்பிக்கப்படுகின்றன. பதினைந்து வயதில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் பதினெட்டு வயதில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியையும் மாணவர்கள் முடிக்கின்றனர்.



தொடக்கப் பள்ளியில் மாணவர்கள்

உயர் கல்வி: மொத்தம் 42 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அனைத்தும் அரசு பல்கலைக் கழகங்களே. பல்கலைக் கழகங்களில் மூன்றாண்டுப் பட்டப் படிப்பும் ஈராண்டுப் பட்ட மேற்படிப்பும் வழங்கப்படுகின்றன. டாக்டர் பட்டத்திற்கான ஆய்வுகளை மூன்றாண்டுகள் மேற்கொள்கின்றனர் மாணவர்கள்.

இந்தோனேசிய அரசு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளின் முற்பகுதியில், வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் உள்ள மருத்துவம், வேளாண்மை, கல்வி, அறிவியல், சமூக அறிவியல் போன்ற ஒரே தன்மையான புலங்களையும் துறைகளையும் இணைத்து, ஒரு கூட்டமைப்பு (Consortium) ஏற்படுத்தியது. இந்தக் கூட்டமைப்பில் இருக்கும் மூத்த பல்கலைக் கழகம் 'முதன்மைநிலை மையம்' (Centre for Excellence) எனப்படுகிறது. இம் மையங்கள் ஆசிரியர் தொழில் திறனை உயர்த்துதல், இன்னும் வளர்ச்சியடையாத பல்கலைக் கழகத் துறைகளை மேம்படுத்துதல் போன்ற செயல்களுக்குப் பொறுப்பேற்கின்றன.

மொழிக் கல்வி: இந்தோனேசியாவில் 400க்கு மேற்பட்ட மொழிகளும் கிளை மொழிகளும் உள்ளன. இந்நாடு 1945-இல் சுதந்திரம் அடைந்த பின் மலாய் மொழியைத் (Malay) தேசத்தை இணைக்கும் அலுவலக மொழியாக்கி, அம்மொழிக்கு 'இந்தோனேசியன்' என்ற பெயரிட்டுள்ளது. இம்மொழி எல்லோராலும் விரும்பிக் கற்கப்படுகின்றது. இரண்டாம் வகுப்பிற்குமேல் உள்ள அனைத்துக் கல்வி நிலைகளிலும் இந்தோனேசியன் மொழி கற்பிக்கப்படுகிறது. பிற வட்டார மொழிகள் இரண்டாம் வகுப்புவரை மட்டுந்தான் பயிற்று மொழியாக உள்ளன. மேல் வகுப்புகளில் அம்மொழிகள் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன. இது போன்ற பயிற்சி மொழித் திட்டம் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) என்ற நாட்டின் பொன்மொழிச் சிந்தனையை வளர்க்க உதவும் என எண்ணப்படுகிறது.

வயது வந்தோர் கல்வி: இந்தோனேசியா (Indonesia) வில் அண்மைக் காலத்தில்தான் முறைசாராக் கல்வித் திட்டங்கள் பல கொண்டு வரப்பட்டன. நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் தேவைகள், நாட்டு மக்களின் தனித் தேவைகள் ஆகியவற்றிற்கு உதவும் வகையில் இக்கல்வித் திட்டங்கள் அமைந்துள்ளன.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் அரசுத் துறைகளும் தனியார் துறைகளும் சேர்ந்து, வயது வந்தோர் கல்வியறிவை மேம்படுத்தின: இவை பள்ளிப் படிப்பைப் பாதியிலே நிறுத்திய தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி வகுப்புகள் நடத்தின; ஊரக நலம் (Community Health), குடும்ப நலம், தொழிற் பயிற்சி ஆகியவற்றில் வயது வந்தோர்களுக்குப் பயிற்சி அளித்தன. வேளாண்மைச் செயல் முன்னேற்றத்திற்காக வானொலி ஒலிபரப்புச் செய்யப்பட்டது. 5,400 க்கும் மேற்பட்ட தனியார் வணிக நிறுவனங்கள் 1979-ஆம் ஆண்டளவில் தொழிற்பயிற்சி வகுப்புகள் நடத்தின. இவற்றில் எண்பது இலட்சம் பேர் பங்கு பெற்றனர்.

நிருவாகம்: மழலையர் பள்ளிக் கல்வியிலிருந்து, பல்கலைக் கழகக் கல்வி வரை உள்ள கல்வி நிலைகளை நாட்டின் தலைநகரான சகர்த்தாவிலிருந்து (Jakarta) வரும் அரசுச் சட்டங்களே கட்டுப்படுத்துகின்றன. நாட்டில் 27 மாநிலப் பகுதிகளில் உள்ள கல்வி அலுவலகங்கள் அரசுத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் 75 விழுக்காடு பள்ளிகள் உள்ளன. இவற்றில் தனியார் பள்ளிகள், கிறித்தவப் பள்ளிகள், சமயச் சார்பற்ற பள்ளிகள் ஆகியவை அடங்கும். சமய அமைச்சகத்தின் பொறுப்பில் 25 விழுக்காடு பள்ளிகள் உள்ளன. இவற்றில் தனியார் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளும் உண்டு. தனியார் பள்ளிகள் அரசிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன.

பாடத் திட்டம்: இருவகைப் பாடத்திட்டங்கள் இந்தோனேசியப் பள்ளிகளில் உள்ளன. கல்வி அமைச்சகத்தின்கீழுள்ள அரசு, தனியார் பள்ளிகளில் மொழி, கணிதம், உயிரியல், சமூக அறிவியல், தொழிற்பயிற்சி முதலியன கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் குடிமைப் பயிற்சி (Citizenship Training) வலியுறுத்தப்படுகிறது. இப்பயிற்சியில் பஞ்சசீலக் கொள்கைகளான கடவுள் நம்பிக்கை, மனித நேயம், நாட்டுப்பற்று, மக்களாட்சிப் பண்புகள், சமுதாய நீதி ஆகியவற்றில் ஒவ்வொரு இந்தோனேசியக் குடிமகனும் பயிற்சி பெறுகிறான்.

இசுலாமியப் பள்ளிகளில் இருவகையில் கல்வி தரப்படுகின்றது. பெசந்திரன் (Peasantran) பள்ளிகளில் மாணவர்கள் கூடி, இசுலாமிய ஆசானிடம் அராபிய மொழி, குர்ரான், முகமது நபியின் பொன்மொழிகள், இசுலாமியச் சட்டம், பண்பாடுகள் ஆகியவற்றைக் கற்கின்றனர். மதர்சா (Madrasah) பள்ளிகள் பெசந்திரன் பள்ளிக் கல்வியைத் தருவதோடு மேலை நாட்டுப்பண்புகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் கற்பிக்கின்றன.

தேர்வுமுறை: பொதுவாக, ஆசிரியர்கள் மாணவர்களை ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு அவர்கள் பள்ளித் தேர்வில் வாங்கிய மதிப்பெண்கள் அடிப்படையிலேயே அனுப்புகின்றனர். ஆனால், தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப்

பள்ளி ஆகியவற்றின் இறுதியில் மட்டும் பொதுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பொதுவாக, இத் தேர்வுகள் சில சமயங்களில் தேசிய அளவிலோ மாநில அளவிலோ வட்டார அளவிலோ நடத்தப்படு கின்றன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் (Teacher-Training High School) சான் றிதழ் பெற்றவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியரா கலாம்; ஆசிரியர் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற பட் டதாரி ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியராக லாம். ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிக்கா கக் கருத்தரங்கம், கல்விப் பட்டறை, வானொலி ஒலிபரப்பு ஆகியன பயன்படுகின்றன.

கல்வியியல் ஆய்வு: இருவகைகளில் கல்வியாய்வு கள் மேற்கொள்ளப்படுகின்றன. கல்வியியலில் பட்ட மேற்படிப்புக்காக மாணவர்கள் ஆய்வுக் கட்டுரை எழுதுவது முதல் வகையாகும். இவ்வகை ஆய்வுகள் பொதுவாக நாட்டு வளர்ச்சியோடு இயைந்ததாக இல்லை. ஆய்வு வளர்ச்சி மையங்களில் மேற்கொள் ளப்படும் ஆய்வுகள் இரண்டாம் வகை. இவ் ஆய்வு கள் நாட்டு வளர்ச்சி சார்ந்தனவாகவும் அரசே பணி உதவி செய்வதாகவும் உள்ளன.

இந்தோனேசியக் கல்வி முறையில் இன்னும் சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. உயர்கல்வி யில் மிகுதியாக மாணவர்கள் சேர்வதால் வேலை யின்மைச் சிக்கல் மாணவர்களிடம் மிகுந்து காணப் படுகிறது. நூற்றுக்கணக்கான மொழிகள் இந்நாட் டில் இருப்பதால் தொடக்கப்பள்ளி நூல்களைப் பலமொழிகளில் எழுதுவதென்பது இயலாத ஒன்றாக உள்ளது. நாட்டின் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்துவதன் இன்றியமையாமையைக் கல்வியின் வாயி லாக மக்களுக்கு உணர்த்த வேண்டிய நிலையில் இந் நாடு இருக்கிறது.

**இப்சன், என்றிக்கு** (கி.பி. 1828-1906) நார்வே நாட்டு நாடகநூல் ஆசிரியர்; சமூக நாடகங்களை எழுதி உலகுக்கு வழிகாட்டியவர். இவருடைய நாட கங்கள் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் எழுதப்பட்டவையல்ல. அவை சமூக, மனவியல் நெடுநோக்கின் அடிப்படையில் புறக்கணிக்க முடி யாத அறநெறிகளை உலகுக்கு எடுத்துக் காட்டுவன.

இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டுக்கு முன்னர் எழு திய நாடகங்கள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்க வில்லை. ஆனால், அந்த ஆண்டில் இவர் எழுதிய 'பொம்மை வீடு' (The Doll's House) என்னும் நாடகம் மக்களிடையே மிகுந்த பரப்பரப்பை உண் டாக்கி அவர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. இவ ருடைய நாடகங்கள் உலக நாடகவியலில் தம் செல் வாக்கைச் செலுத்தின. இவரைக் குறிப்பாகச்சார்சு பெர்னார்டு சா (George Bernard Shah) பின்பற்றி னார் என்று கூறுவர்.

**இப்சுவிச்சு** கிழக்கு இங்கிலாந்திலுள்ள ஒரு மாவட்டத்தைப் போன்றது. இது சப்போக்கின் நிருவாக மையமாகும். வட கடலில் ஆர்வெல் என்னும் ஆறு கடலில் கலக்கும் கழிமுகத்தின் முன்னர் இப்சுவிச்சு (Ipswich) அமைந்துள்ளது. வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்படும் எந்திரச் சாதனங்களும் கட்டுமான வாகனங்களும் இந்நகரத்தின் சிறப்பான உற்பத்திப் பொருள்களாகும். இவற்றைத் தவிரச் செயற்கை உரம், சிகரெட்டு, மாவரைத்தல், மாவாலை, சாராயம் காய்ச்சல், அச்சுயந்திரங்கள் உற்பத்தி, துணிமணி நெய்தல் போன்றவை பிற தொழில்களாகும். இப்சுவிச்சு கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை வணிக மையமாகவும் மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யும் நகரமாகவும் இருந்தது. இங்குக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற உரோமரின் வாணிகத்தால் இவ்வூர் தலைநகரமாகவும் முதன்மை யான இடமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். உரோமரின் வாணிகம் சீர்குலையத் தொடங்கிய நாளிலிருந்து இங்குள்ள துறைமுகமும் மங்கிப் பொலி விழக்கலாயிற்று. மீண்டும் கி.பி. 19-ஆம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் புதிய துறைமுகம் கட்டப்பட்டபோது இப்சுவிச்சு மறுமலர்ச்சியுற்று வளரலாயிற்று. இங்கு உரோமானியர் வாழ்ந்த நினைவுச் சின்னங்களை இன்றும் காணலாம். இது 1974-ஆம் ஆண்டுவரை கிழக்கு சப்போக்கின் தலை நகராக இருந்தது. இதன் மக்கள்தொகை 1, 20, 447 (1981).

இப்சுவிச்சு[2] என்னும் பெயரில் ஒரு நகரம் கிழக்கு ஆசுத்திரேலியாவிலுள்ள குவின்சுலாந்து மாநிலத்தில் பிரிசுபேன் மாநகரின் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் குவின்சுலாந்து மாநிலத்தின் நிலக்கரிச் சுரங்கங்களின் மையமாகஉள்ளது. கம்பள நெச வாலைகளும் ஏனைய தொழிற்சாலைகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இப்சுவிச்சு[3] அமெரிக்க ஐக்கிய நாட்டின் மசாசு செட்சு மாநிலத்தின் வட கிழக்கில் இப்சுவிச்சு ஆற்றங் கரையிலும் இப்சுவிச்சு விரிகுடாவிலும் அமைந்துள்ள தொரு நகரம். இது ஒரு சுற்றுலா மையம்; மின் கருவிகளின் தொழிற்சாலைகளமைந்த நகரம். இங்குள்ள சோயாட்டுப் பாலம் (Choate Bridge) அமெரிக்காவில் முதன் முதலாகக் கட்டப்பட்ட தாகும்.

**இப்பாகிரேட்டிசு**: கி.மு. ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்க மருத்துவ அறிஞராவார். இப்பாகிரேட்டிசு (Hippocrates) என்னும் பெயரில் வேறு பலர் இருந்தனர் என்பது கருதப்படுகிறது. அவர்களினின்று இவரை வேறு படுத்திக் காட்டுவதற்காக இவர் புகழ் பெற்ற இப்பாகிரேட்டிசு (Hippocrates the Great) என்று குறிப்பிடப்பட்டார். அக்காலத்தில் இவர் மருத்துவ இயலின் தந்தை என்று கருதப்பட்டார். இக்காலத்திலும் மருத்துவர்கள் எடுத்துக் கொள்ளும் தொழில் உறுதிமொழி இவருடைய பெயரிலேயே எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவர் கிரேக்க நாட்டில் காசு (Cos) என்னுமிடத்தில் வாழ்ந்தார். கிரேக்கநாட்டின் பல இடங்களிலும் இப்பாகிரேட்டிசு சுற்றுப்பயணம் செய்தார்.விரிவான மருத்துவ நூல்களை எழுதினார். இவர் மனித உடலியல் பற்றி எடுத்துரைத்த கருத்துகள் மனிதர்களின் ஆளுமையைப் பற்றிய ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இப்பாகிரேட்டிசு மனித உடலில் குருதி, கோழை, கரும் பித்தம், மஞ்சள் பித்தம் ஆகிய நான்கு நீர்மங்கள் (Body Humours) உள்ளன என்றும், இந்த நீர்மங்களுள் ஏதேனும் ஒன்றின் மிகுதி அல்லது குறைவு ஏற்படின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்றும், இத்தகைய நீர்மங்களுக்கு ஏற்ப மனிதர்களின் ஆளுமைகளை வகைப்படுத்தலாம் என்றும் கூறினார். இக்கருத்து ஆளுமையின் முழுமையான விளக்கமென்று இக்காலத்து உளவியலார்களால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் இப்பாகிரேட்டிசு ஆளுமைக் கோட்பாட்டின் முன்னோடியாகக் கருதப் படுகிறார். இவருடைய கருத்துகள் காலென்(Galen) என்னும் மருத்துவ அறிஞரால் விரித்துரைக்கப் பட்டன.



இப்பாகிரேட்டிசு

**இப்பார்கசு** என்பார் கி.மு. 500-ஆம் ஆண்டளவில் வாழ்ந்த கிரேக்க நாட்டவர்; ஏதென்சு நகரத்தின் அரசரான பைசிசுட்டிராட்டசு(Pisistratus) என்பாரின் மகன். இப்பார்கசு (Hipparchus) தம் தமையன் இப்பியாசு (Hippias) என்பாருடன் இணைந்து கி.மு. 527-ஆம் ஆண்டில் தம் ‘தந்தையார் காலமான பின் பதவிக்கு வந்தார். ஆனால், அரசு நிருவாகப் பொறுப்புகள் அனைத்தையும் இவர் தம் தமையனிடம் விட்டுவிட்டுப் பண்பாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளில் மட்டும் இவர் பங்கு கொண்டார். அனக்ரியான் (Anacreon) சைமனிடுசு (Simonides) போன்ற கவிஞர்களை ஏதன்சுநகருக்குக் கொண்டுவந்தவர் இவரே. ஆர்மோடியசு (Harmodius), ஆரிசுட்டோகியட்டான் (Aristogeiton) என்னும் பெயர் கொண்ட இரு மேல்குடி மக்கள் இப்பார்கசைக் கொன்றனர்.

இப்பார்கசு என்னும் பெயர் கொண்ட பிறிதொருவர் பைசிசுட்டிராட்டசுவின் உறவினர். இவர் கி.மு. 496-ஆம் ஆண்டில் ஆளுநராகத் (Archon) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்பார்கசு என்னும் பெயரில் பண்டைக் கிரேக்க வானநூல் ஆய்வாளர் ஒருவரும் இருந்தார்.

**இப்பாலசு** என்பார் பண்டைக்காலத்தில் இந்தியாவுக்குக் கடல்வழி கூறிய உரோமானியர். உரோமாபுரியில் அகசுடசு ஆண்ட காலத்தில் இந்தியாவுக்கும் உரோமாபுரிக்கும் வளமான வாணிகம் தொடங்கலாயிற்று. ஏறத்தாழக் கி.பி. 50-ஆம் ஆண்டளவில், மேலைநாட்டு மாலுமிகள் இந்தியாவின் மேற்குக் கரையிலிருக்கும் மலபாருடன் நேரடியான கடற் பயணத்தைக் குறுகிய காலத்தில் செய்துமுடித்தார்கள் என்றும், இந்தக் கடல்வழியைக் கண்டுபிடித்தவர் இப்பாலசு (Hippalos) என்றும் அறியக்கிடக்கிறது. இது இந்தியாவின் மேற்குக் கடற்கரை வழியாக வந்த பழைய பாதையைவிடச் சுருக்கமானதென்றும் தெரிகிறது.

**இப்ராகிம் உசேன் குவாசா** என்பவர் பேரரசர் அக்பரின் அவையிலிருந்த கையெழுத்தாளர் (Calligrapher). இவர் அக்பரைப் பற்றி அழகான கையெழுத்து நூல் ஒன்றை எழுதியுள்ளார். அப்துல் காதிர் பதோனி (Abdul Qadir Badauni) என்பார் இவர் எழுதிய ஆண்டுக் குறி வாய்பாட்டைக்(Chronogram) கண்டுபிடித்தார். அக்பருடைய அரண்மனையில் எட்டு வகையான அழகுக் கையெழுத்து முறைகள் நடைமுறையில் இருந்தவென அபுல்பசல் கூறுகிறார். அதில் எட்டாம் வகையை நாசுடாலிக்கு (Nastaliq) என்பர். இவ்வகைக் கையெழுத்துகளைப்

பேரரசர் அக்பர் பெரிதும் விரும்பினார். இப்ராகீம் உசேன் குவாசா கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

**இப்ராகிம் உருக்னுதீன்** சலாலுதீன் பிரோசு என்பானின் இளைய மகன். சலாலுதீன் பிரோசு தில்லிச் சுல்தானிய அரசர்களின் கில்சி மரபின் முதல் மன்னன். இவனை அடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய அலாவுதீன் கில்சி தில்லிச் சுல்தானாக அரியணை ஏறுமுன், சலாலுதீனின் மனைவியான மலிகா சகான் தன் இளைய மகன் இப்ராகிம் உருக்னுதீனை அரசனாக அறிவித்தாள். இப்ராகிமின் அண்ணன் அர்கலி கான் இதனையறிந்து வருத்தமுற்று மூல்தானிலேயே தங்கிவிட்டான். அண்ணன் தம்பி உறவில் கண்ட சிக்கலை அறிந்த அலாவுதீன் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, தில்லிக்குப் படையுடன் அணி வகுத்து விரைந்து வந்தான். இப்ராகிம் எதிர்த்த போதும் அலாவுதீனை முறியடிக்க இயலவில்லை. இவனுடைய துணைவர்களும் இவனைக் கைவிட்டனர். எனவே, இப்ராகீம் மூல்தானை நோக்கித் தன் தாயாருடனும் தன் நம்பிக்கைக்கு உகந்தவராயிருந்த அகமது சாப்பு என்பாருடனும் தில்லியை விட்டு ஓடினான். அலாவுதீன் தில்லி அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

**இப்ராகிம் ஏதில்சா, முதலாம் (கி.பி. 1535-57)**: பீசப்பூர் சுல்தானியத்தில் இசுமாயில் ஏதில்சாவுக்கு ஆண்மக்கள் இருவர் இருந்தனர். அவர்களுள் மூத்தவரான மல்லூகான் கி.பி.1534-35-இல் அடுத்த சுல்தானானார். இவர் திறமையற்றவர் என்பதால் தலைமை அமைச்சரான அசத்கான் மல்லூகானை அகற்றிவிட்டு, அவர் தம்பி இப்ராகிமை (கி.பி. 1535-57) அரியணையில் அமர்த்தினார். புதிய சுல்தானுக்கு அப்போது வயது பதினைந்தே என்பதால் ஐந்து ஆண்டுக் காலம் அசத்கானின் வசமே ஆட்சிப் பொறுப்பு இருந்தது. விசய நகர அரசில் குழப்பம் நிலவியதைப் பயன்படுத்தி அச்சுதராயரின் மைத்துனரான திருமலைக்கு உதவினார் இப்ராகிம் ஏதில் சா. இதனால் இவருக்குப் பெரும் பொருள் கிடைத்தது. அங்குத் தொடர்ந்து நடந்த குழப்பத்தைப் பயன்படுத்தி, ஆதோனியைக் (Adoni) கைப்பற்ற அசத்கான் முயன்று தோல்வியுற்றார். அகமது நகரும் பீடாரும் கி.பி. 1540-இல் சோலாப்பூரைக் கைப்பற்றப் போரிட்டதில் அந்நகரம் பெரிதும் சேதமுற்றது. அகமது நகர், பீடார், கோல்கொண்டா, விசயநகர் ஆகிய நான்கின் படைகளும் கி.பி. 1543-இல் ஒன்று கூடிப் பீசப்பூரைத் தாக்கின. இவர்களுக்கிடையில் பிளவினைத் தோற்றுவித்து ஏதில்சா வெற்றி பெற்றார். அகமது நகர் கி.பி.1544-இல் இவரால் தோற்கடிக்கப்பட்டது. இவருக்கு உறுதுணையாக இருந்த அமைச்சர் அசத்கான் கி.பி. 1546-இல் காலமானார். அகமதுநகரின் படைகள் கி.பி.1547-இல் சோலாப்பூரையும், கி.பி.1552-இல் விசய நகரப் படைகள் இரெய்ச்சூர் ஆற்றிடை நிலத்தையும் கைப்பற்றிக் கொண்டன. அகமது நகரும் விசயநகரும் சேர்ந்து கி.பி. 1553-இல் பீசப்பூரை முற்றுகையிட்டுச் சில மாதங்களில் விலகிச் சென்றன. அகமதுநகர் மீது கி.பி. 1554-இல் இவர் படையெடுத்து வெற்றியோடு திரும்பினார்; கோவாவின் மீது நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்தது.

இப்ராகீம் ஏதில்சா சியா (Shia) பிரிவைக் கைவிட்டு, சுன்னிப் (Sunni) பிரிவையே அரச சமயமாக்கித் தக்காண முசுலிம்களை ஆதரித்தார். பாரசீக மொழிக்குப் பதிலாக மராத்தியும் கன்னடமும் இவர் ஆட்சியில் ஆட்சி மொழிகளாகப் பயன்படுத்தப்பட்டன. இந்துக்களும் ஆதரிக்கப்பட்டனர். இர.ஆ.

**இப்ராகிம் ஏதில்சா, இரண்டாம் (கி.பி. 1580-1627)**: பீசப்பூர் சுல்தானியத்தின் ஐந்தாம் அரசர். தம் ஒன்பதாம் வயதில் அரசராக்கப்பட்ட இவர் முந்திய அரசரும் இவரது பெரியப்பாவுமான அலி ஏதில்சாவின் விதவை மனைவியான சாந்த்பீபியின் பாதுகாப்பில் அமர்த்தப்பட்டார். நிருவாகமானது கமல்கான் என்பவரது பொறுப்பில் விடப்பட்டது. கமல்கானுக்குப் பிற பிரபுக்கள் பகைவராயினர். எனவே, சாந்த்பீபியின் உதவியோடு கிச்வர்கான் (Kishvarkhan) ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். இவர் சாந்த்பீபியைச் சதராக் கோட்டையில் அடைத்துவிட்டுத் தனியாட்சி செலுத்த நினைத்தார். எதிர்ப்பு மிகுதியாகவே கிச்வர்கான் நாட்டைவிட்டே ஓடி, அகமது நகரில் அடைக்கலம் புகுந்து அகமதுநகர், கோல்கொண்டா ஆகிய நகர்களின் படைகளோடு பீசப்பூர்மீது படையெடுத்தார். இவ்வேளையில் பகைவரை விரட்டியடித்துப் புகழ் பெற்ற திலாவர்காள் (Dilavar Khan) கையில் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவரும் அரச குடும்பத்தை மதியாமல் தனியாட்சி செலுத்த முயன்றார். ஆனால், கி.பி. 1591-இல் அகமது நகர்ப் படைகளால் தோற்கடிக்கப்பட்டதும் இவர் பதவியிருந்து அகற்றப்பட்டார். இப்ராகிம் ஏதில்சாவே நிருவாகத்தை மேற்கொண்டார். திலாவர்கான் அகமது நகருக்குச் சென்று பீசப்பூரின்மீது ஒரு படையெடுப்புக்கு ஏற்பாடு செய்தார். முடிவில் தந்திரமாகத் திலாவர்கானைப் பீசப்பூருக்கு வருமாறு செய்து, அவரது கண்களைக் குருடாக்கிச் சிறையில் தள்ளினார் சுல்தான் இப்ராகிம்.

இப்ராகிம் ஆட்சியை அவர்தம் தம்பி இசுமெயிலும் சில பிரபுக்களும் எதிர்த்துக் கிளர்ச்சி

செய்தனர். அவர்கள் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக அகமது நகர் சுல்தான் பர்கான் நிசாம்சா என்பார் படையெடுத்து வந்தார். இப்ராகிம் ஏதில்சாவால் அவர் கடுமையாக முறியடிக்கப்பட்டார். எனினும், பர்கானின் மரணத்தை அடுத்து அகமதுநகரில் குழப்பங்கள் தோன்றியபோது சாந்த்பீபியின் அறிவுரையின் பேரில் அதனைத் தீர்த்து வைப்பதற்கு இப்ராகிம் முயன்றார். முடிவில் அகமது நகரில் மாலிக்கு அம்பர் அமைச்சரானபோது மொகலாயரின் படை முயற்சிகள் இக்கூட்டு எதிர்ப்புக் காரணமாகவே பல ஆண்டுகள் வெற்றி பெற முடியாமால் போயின.

இவர் பீடாரைக் கி.பி. 1619-இல் வென்று தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். பீசப்பூர் சுல்தான்களுள் தலை சிறந்தவராகக் கருதப்படுபவர் இவரே. நிருவாகத்தில் பல திருத்தங்களைச் செய்து இவர் செம்மைப்படுத்தினார். நிலவுடைமைப் பதிவேடுகள் நாடு முழுமைக்குமாக உருவாக்கப்பட்டு, நில வரிவிதிப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. தோடர்மாலை இவர் பின்பற்றினார் என்று சிலர் கருதுகின்றனர். அரச சமயமாக இருந்த சியா பிரிவினை இவர் கைவிட்டுச்சுன்னிப் பிரிவினைப்புகுத்தினார். எனினும், இந்துக்களிடமும் மிகுந்த பரிவோடு இவர் நடந்துகொண்டார். பல பிராமணரும் மராட்டியரும் இவரது நிருவாகத்திலும் படையிலும் உயர்பதவிகளை வகித்தனர். இந்துக்கள் இவரை சகத்குரு என்று கொண்டாடினர். ஏசு சங்கத்தினருக்கும் இவர் உதவி நல்கிப் போர்த்துகீசியரோடு நல்லுறவு கொண்டிருந்தார். 'தாரிக்கி பெரிசுடா' என்ற வரலாற்று நூலினை எழுதிய முகமது காசிம் என்ற பெரிசுடாவை ஆதரிததவர் இம்மன்னரே. ஆனந்தமகல், மித்தல் மகல். மாலிகா சகான் மசூதி போன்றவை இவரால் கட்டப்பட்டன. இவர் கி.பி. 1627 செப்டம்பரில் காலமானார். இப்ராகிம் இரவுசா என்ற இவரது கல்லறை மிகவும் அழகோடு இன்றும் இலங்குகிறது. இர.ஆ.

**இப்ராகிம் கர்டி** என்பான் ஐதராபாதைச் சார்ந்த நிசாம் அலியின் படையிலிருந்த புசி (Bussy) என்னும் பிரெஞ்சுக்காரரால் மேலைநாட்டு முறையில் போர்ப்பயிற்சி பெற்ற துப்பாக்கிப் படை வீரர்களுள் ஒருவன். இந்த இசுலாமிய வீரன் மிகுந்த நெஞ்சுரம் கொண்டவன். இவன் பின்னர் மராத்தியருடன் சேர்ந்துகொண்டான். மூன்றாம் பானிப்பட்டுப் போர்க்களத்தில் (கி.பி. 1761) மராத்தியத் தலைவரான சதாசிவராவ் தம் படையை மூன்று அணிகளாகப் பிரித்து நடுவில் இருந்த அணிக்குத் தாமே தலைவராகவும், இடப்புற அணியின் தலைவராக இப்ராகிம் கர்டியையும், வலப்புற அணியின் தலைவர்களாக மல்கரிராவ் ஒல்காரையும் சானகோசி சிந்தியாவையும் நியமித்திருந்தார். இப்ராகிம் கர்டியின் அணியினர் அகமது சா துரானியின் வலப்புற அணியைக் கடுமையாகத் தாக்கினர். துரானியப் படையில் எட்டாயிரத்திலிருந்து ஒன்பதினாயிரம் படைவீரர்கள் காயமடைந்தார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள் என்று தெரிகிறது. எனினும், மராத்தியர்கள் இப்போரில் தோல்வியுற்றார்கள்.

**இப்ராகிம் நிசாம் சா:** பாமினி அரசு வீழ்ச்சியடைந்த பிறகு ஐந்து சுதந்திர அரசுகள் தோன்றின. அவற்றுள் ஒன்றுதான் நிசாம் சாகி வமிசம். மாலிக்காசன் பக்ரி (Malik Hasan Bahri) என்பவர் தாம் இந்த வமிசத்தைத் தோற்றுவித்தவர். இந்த வமிசத்தில் தோன்றியவர் இப்ராகிம் நிசாம் சா. இவர் தந்தையின் பெயர் 'பர்கான்'. மூத்த மைந்தரான நிசாம்சா தந்தைக்குப்பின் அரியணையேறினார். அவர் அரியணையேறியபொழுது கட்சிப் பூசல்கள் மிகுதியாக இருந்தன.

தெக்கானிசுகளும் (Deccanis) காபாசிசுகளும் (Habasis) ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். தெக்கானிசுகளின் தலைவராக மியான் மஞ்சுவும் காபாசிசுகளின் தலைவராக இக்லாசு என்பவரும் பணியாற்றினர். இப்ராகிம் நிசாம் சா நிசாம்சாகி வமிசத்தைத் தோற்கடிக்க அடில்சா என்பவரை அழைத்தார். இப்ராகிம் நிசாம்சா தாமே படையை நடத்திச் சென்று அடில்சாவை எதிர்த்தார். ஆனால், கி.பி. 1595-ஆம் ஆண்டு நால்துர்கு (Naldurg) என்ற இடத்தில் நிகழ்ந்த கடும் போரில் இப்ராகிம் நிசாம்சா உயிர் நீத்தார். பி.ச.

**இப்ராகிம்-பின்-அரீ** என்பவர் ஓர் இசுலாமிய வரலாற்றாசிரியர். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் எழுதிய நூலின் பெயர் தரிக் இப்ராகிமி (Tarikh Ibrahmi) என்பதாகும். தொடக்கக்காலத்திலிருந்து மொகலாயப் பேரரசர் பாபர் இந்தியாவை வெற்றி கண்டது வரையிலான இந்திய வரலாற்றைச் சுருக்கமாக இந்நூலில் இவர் எழுதியுள்ளார். இந்நூலைக் கி,பி. 1528-ஆம் ஆண்டில் பாபருக்கு இவர் உரிமைப்படுத்தினார்.

**இப்ராகிம் லோடி** (கி.பி. 1517-1526) இந்தியாவை ஆண்ட லோடி மரபின் கடைசி அரசர். தைமூரின் படையெடுப்புத் (கி.பி. 1398-1399) துக்ளக்கு மரபினரின் அழிவுக்குக் காரணமாயிற்று. வட இந்தியா சிறு சிறு அரசுகளாகச் சிதறுண்டது. வலிமை பொருந்திய பேரரசு ஏதும் ஏற்படவில்லை. துக்ளக்கு மரபுக்குப் பின்னர் தில்லிச் சுல்தானியம் சய்யிதுகளின் (Sayyids) பொறுப்பில் இருந்தது. அப்

போது தில்லி அதனைச் சுற்றியிருந்த ஒரு சில பகுதிகள் என்ற அளவிற்குச் சுருங்கியது. அணைகின்ற விளக்கு சுடர்விட்டு ஒளிவீசுவது போல உலோடி மரபு தோன்றியது. உலோடி மரபின் முதல் சுல்தான் பகுலுல் லோடி (Bahlul Lodi) கி.பி. 1451–1526) இந்தியாவில் முதல் ஆப்கானியப் பேரரசினைத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கிய உலோடி வமிசத்தின் கடைசிச் சுல்தான் இப்ராகிம் உலோடி ஆவார். அடக்கி ஆள்வதன் மூலம் அரசரின் மிக்குயர் பெருமையினை நிலைநாட்டவும் அனைவரையும் அச்சுறுத்திப் பணிய வைக்கவும் முடியும் என்ற இறுமாப்பில் திளைத்தவர் இப்ராகிம் லோடி. பிரபுக்களை அடக்க முயன்றபோது, அதுவரை சமநிலையில் தோள் கொடுத்துச் சுல்தானியத்தின் பெருமையைக் காத்த அவர்கள் அடங்காது ஆர்ப்பரித்து எழுந்தனர்: உட்பூசல்கள் தொடங்கின. ஒருசில பிரபுக்கள் சிறப்பாகச் சுல்தானின் நெருங்கிய உறவினர்கள் அயலவர் உதவியினை நாடினர். இந்திய வடமேற்கெல்லையில் வாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்த பாபருக்கு எதிர்பாராத நல்வாய்ப்பாக அது அமைந்துவிட்டது. இப்ராகிமின் எதிரிகளுக்கு ஆதரவாக நுழைந்த பாபர் முதலாம் பானிபட்டுப் போரில் (கி.பி. 1526) இப்ராகிமின் படைகளை முறியடித்து, மொகலாயரின் ஆட்சியினைத் தொடங்கினார். இப்ராகிமுடன் உலோடி வமிசமும் அழிந்தது.

இப்ராகிமின் தந்தையான சிக்கந்தர் உலோடி தாம் இறக்கும் வேளையில் அரசவை உயர்பிரபுக்களை அழைத்து அரசுரிமை பற்றி ஆலோசனை நடத்தினார். பிரபுக்கள் அனைவரும் பேரரசினை இரு கூறாக்கிச் சுல்தானின் இரு மகன்களுக்கும் அளிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கினர். அதன்படி பேரரசு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தில்லியைத் தலைநகராகக் கொண்ட பகுதி மூத்தவரான இப்ராகிமிற்கும் கல்பி கோட்டையினை மையமாகக் கொண்ட சான்புரி (Jaunpur) இளையவரான சலால் கானுக்கும் (Jalal Khan) வழங்கப்பட்டது. இதனை மறுத்தால் தம் உயிருக்கு ஊறு விளையும் என்பதனை உணர்ந்த இப்ராகிம் ஏமாற்றத்தினை உள்ளடக்கி, தந்தையின் கட்டளைக்குத் தலை வணங்கினார்.

இப்ராகிம்லோடி கி.பி. 1517–ஆம் ஆண்டில் தில்லியின் சுல்தானாக அரியணை ஏறினார். அரியணை ஏறியதும் முதல் பணியாகப் பேரரசு பிரிக்கப்பட்டுவிட்டதை வன்மையாகச் சாடினார். பிரபுக்கள் நிலை தடுமாறினர். தம் இளவலுக்கு வழங்கப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றி, மீண்டும் சுல்தானியத்தை இணைக்க முடிவு செய்தார். சுல்தான் சிக்கந்தரும் அவர்தம்அரசவைப் பிரபுக்களும் தடுக்க எண்ணிய வாரிசுரிமைப் போர்தொடங்கியது. சலால் கான் தோல்வியுற்றார். சுல்தானியம் மீண்டும் ஒரே ஆட்சியின்கீழ் வந்தது. ஆயினும், சுல்தானின் அவ்வெற்றி சுல்தானியத்தின் வலிமையை வெகுவாகக் குலைத்துவிட்டது. வெற்றிப் பெருமிதத்தில் திளைத்த சுல்தான் தம் தம்பியின் ஆதரவாளர்களைப் பழி வாங்க முனைந்தார். பிரபுக்கள் அனைவருமே ஐயத்திற்குள்ளாயினர். பிரபுக்களின் செல்வாக்கினை அழிக்கச் சுல்தான் நடவடிக்கைகளைத் தொடங்கினார். தங்களைக் காத்துக் கொள்ளச் சுல்தானை எதிர்க்க வேண்டியது பிரபுக்களின் கடமையாயிற்று.

இதற்கிடையில் இராச புத்திரரிடமிருந்து குவாலியர் பகுதியினை இப்ராகிம் வென்றார். குவாலியரை அடுத்து மேவார்மீது படையெடுத்தார். அப்போது மேவார் இராசபுத்திர அரசுகளின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தது. மேவாரின் மன்னர் இராணா சங்கா தில்லியில் மீண்டும் இந்துப் பேரரசினை உருவாக்குவதைத் தமது தலையாய கடமையெனக் கொண்டிருந்தார். இராசபுத்திரக் கூட்டணியின் தலைவராகப் படை நடத்துவதில் ஈடு இணையற்றவராக விளங்கிய இராணா சங்காவிடம் மோதி, இப்ராகிம் தமக்குத் தலைக்குனிவைத் தேடிக் கொண்டார். மன்னரின் பெருமையினை நிலைநாட்ட, பேரரசின் புகழ் சிறக்க, இசுலாமின் ஏற்றம் பெருக, உயிரையும் பணயம் வைக்கத் தயங்காத இசுலாமியப் பிரபுக்கள் சுல்தானின் ஆணவப்போக்கினால் மனம் தளர்ந்து வெறுப்புற்று முனைப்பின்றிச் செயற்பட்டதே, இப்ராகிமின் தோல்விக்கான முக்கிய காரணமெனக் கருதப்படுகின்றது.

சுல்தான் இப்ராகிம் பேரரசரின் ஏற்றமிகு உயர் நிலையினை உறுதிப்படுத்த முயன்றார். சுல்தான் பகலுல்லோடி அரசவைப் பிரபுக்களுடன் இணைந்து பழகி, அவர்களையும் தமக்கு இணையானவர்களாகவே நடத்தினார். அவருக்குப் பின்னர் வந்த சுல்தான் சிக்கந்தர் பிரபுக்களின் கொட்டத்தை அடக்க முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், இப்ராகிமோ சுல்தான் வணக்கத்திற்குரியவரென்றும் பிரபுக்கள் அனைவரும் அவர் முன் கைகட்டி வாய் பொத்தி நிற்க வேண்டும் என்றும் கருதினார். சுல்தானின் ஏவலர்களே தவிர, அவருடன் இணைந்து பழகவோ ஆசனத்தில் அமரவோ தகுதியற்றவர்கள் எனக் கருதி, அவர்களை அவ்வாறே நடத்தியும் வந்தார். 'அரசு உறவு முறை அறியாது' (Kingship knows no Kinship) என்ற கொள்கையினைத் தீவிரமாகக் கடைப்பிடித்து, அரசவை நடைமுறைகளையும் கடுமையாக மாற்றியமைத்தார். அதன் விளைவாகப் பிரபுக்களின் தோழமை, விசுவாசம்,

பக்தி, முனைப்பாற்றல் ஆகியவற்றை இழந்தார். தங்களது செல்வாக்கு அழிக்கப்படுவதையும் தங்களது மதிப்புக் குறைபடுவதையும் கண்டு ஆத்திரமடைந்த பிரபுக்கள் புரட்சி செய்தனர். பிரபுக்களின் எழுச்சியினை அடக்கிச் சுல்தானின் அதிகார மேன்மையினை நிலைநாட்டும் முன்னர், பாபரின் படையெடுப்பு ஏற்பட்டுவிட்டது.

அசம் உமாயூன் சர்வானி (Azam Humayun Sarwani), மியான் உசைன் பார்முலி (Mian Hussain Farmuli), இசுலாம் கான் (Islam Khan), தவுலத்கான் (Daulat Khan) போன்ற மிகச் சிறந்த படைத்தலைவர்கள் சுல்தானின் ஆட்சிப் பீடத்தின் தூண்களாக நின்றவர்கள் புரட்சியில் ஈடுபட்டனர். தவுலத்கான் தவிர ஏனையோர் சுல்தானின் கொடுங்கோன்மைக்குப் பலியானார்கள். நாடெங்கிலுமிருந்த பிரபுக்கள் போர்க் குரல் எழுப்பினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தவுலத்கான் லோடி ஆவார். சுல்தான் இப்ராகிமின் நெருங்கிய உறவினரான அவர் பஞ்சாபு மாநில ஆளுநராக இருந்தார். சுல்தான் இப்ராகிம் தம்மை அழிக்கத் திட்டமிட்டிருப்பதை அறிந்த தவுலத்கான், பாதுகாப்புத் தேடி எல்லைக்கப்பால் காபூலில் இருந்த பாபரின் உதவியினை நாடினார். அதே நேரத்தில் சுல்தானின் மற்றுமொரு நெருங்கிய உறவினரான ஆலம்கான் உலோடியின் ஆதரவினையும் தேடிக் கொண்டிருந்தார்.

காபூலில் அரசோச்சி வந்த பாபர் தவுலத்கான், ஆலம்கான் லோடிகளின் வேண்டுதலை இறையருளாகவேகொண்டு, பெரும்படையொடு பஞ்சாபில் நுழைந்தார். ஆனால், பாபரை வரவேற்பதற்கு மாறாகத் தவுலத்கானும் ஆலம்கானும் அவரை எதிர்த்தனர். அவர்களை வென்ற பின்னர், இலாகூரிலிருந்த இப்ராகிமின் படைகளைச் சிதறடித்து விட்டுக் காபூல் திரும்பினார். பின்னர், ஐந்தாம் முறையாகப் பாபர் கி.பி. 1525ஆம் ஆண்டு திசம்பரில் இந்தியாவினுள் நுழைந்தார். தவுலத்கானை மீண்டும் முறியடித்துப் பஞ்சாபு முழுவதையும் தமதாக்கிக் கொண்டு, தில்லி நோக்கித் தம் படைகளை நடத்தினார்.

பாபரை எதிர்த்துத் தாக்குவது போல இப்ராகிமின் மாபெரும் படை வழிமறித்து நின்றது. பானிப்பட்டு நகர் வரலாற்றுப் புகழ் மிக்க அப்போரின் களமாயிற்று. பாபர் தமது படைகளை அணிவகுத்து நிறுத்தித் தற்காப்பு முறைகளை உறுதிபடுத்திய பின்னர், இப்ராகிமின் படைகளின் தாக்குதல்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே கி.பி. 1526-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள் 21-ஆம் நாளன்று இப்ராகிமின் முன்னணிப் படைகள் அணிவகுத்து விரைந்து வந்தன. விரைந்து வந்த படைகள் பாபரின் தற்காப்பு முறைகளைக் கண்டு சற்றே தயங்கி நின்றன. முன்னணிப் படைகளின் தயக்கம் பின்னால் விரைந்து வந்த படையினரிடையே குழப்பத்தை விளைவித்தது. இந்தச் சூழலைப் பயன்படுத்திப் பாபர் பீரங்கிகளைப் பயன்படுத்த ஆணையிட்டார். இப்ராகிமின் படைகள் குழப்பம் நீங்கிப் போரிடத் தொடங்குமுன்னர் ஆயிரக்கணக்கில் மடிந்தனர். மீதிப் படைகள் கதிகலங்கி ஓட்டம் பிடித்தன. அதனைக் கண்ட சுல்தான் மிகுந்த வீரத்துடன் போர்க்களத்தில் நுழைந்து போரிட்டு மரணம் அடைந்தார். அவரைச் சுற்றி மட்டிலும் ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்து கிடந்தனர். இப்ராகிம் உலோடியுடன் உலோடி வமிசமும் வீழ்ந்தது.

சுல்தான் இப்ராகிம் உலோடி எடுப்பான தோற்றம் மிக்கவர்; வீரம் நிறைந்தவர்; திறமையானவர்; கவின்கலைகளில் நாட்டம் கொண்டு அதனை ஊக்குவித்தவர். பேரரசரின் நிலையினை உயர்த்தி, ஆட்சியினை ஒருமுனைப்படுத்த வேண்டும்; தன்னலங்கொண்ட பிரபுக்களை அடக்கி, மக்களின் வளமான வாழ்வினை ஊக்குவிக்கவேண்டும் என்ற கொள்கைகளில் ஆர்வம் கொண்டவர். வறியவர்களை அறிஞர்களைப் பேணும் பண்பாளர். அவரது ஆட்சிக்காலத்தில் நாடு வளமிகுந்து காணப்பட்டது. போற்றுதற்குரிய குணநலன்களைப் போலவே அவரிடம் குறைகளும் மிகுந்திருந்தன. இறுமாப்பு மிக்கவர்; ஆன்றோர் அறிவுரைகளைத் துச்சமெனத் தூக்கியெறியும் உன்மத்தர்; உறவாடி உறுதுணையாக்க வேண்டிய உற்ற நண்பர்களைப் பழிவாங்க முயன்று, அவர்களை அழித்தொழிக்க முற்பட்டு, இறுதியில் தம்மையும் அழித்துக் கொண்டவர். போர்க்களத்தில் அடிப்படை முன்னேற்பாடுகளைக் கூடக்கடைப்பிடிக்காது, மாபெரும் படையிருந்தும், தோல்வியுற்று மடிந்தவர். இப்ராகிமின் குணநலக் குறைபாடுகளும் அவர்தம்அரசவைப் பிரபுக்களின் தன்னலப்போக்கும் இந்தியாவில் மொகலாயப் பேரரசு ஏற்படக் காரணமாக அமைந்தது. வ. இரா.

துணை நூல்:

Majumdar, R.C. & Others., An Advanced History of India, 5th ed, Macmillan, 1982.

**இபதத்கானா** மாமன்னர் அக்பர் உருவாக்கிய சிறப்புறு கவின்கூடம் 'இபதத்கானா (Ibadat Khana) என்று கூறப்பட்ட வழிபாட்டு இல்லம் (House of Worship) ஆகும். இவ்வில்லம் கி.பி. 1575-ஆம் ஆண்டு பதேபூர் சிக்ரியில் (Fatehpur Sikri) (ஆக்ரா அருகில் உள்ளது) அமைக்கப்பட்டது.

அக்பரது பதினைந்தாம் வயதிலேயே அவருக்குப் புலப்படாத சக்தி ஒன்று அவரை அலைக்கழிப்பதை உணர்ந்து, திடுக்கிட்டதாக அபுல் பாசல் என்பார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இறைவனைப் பற்றிய உண்மைகளை உண்மைத் தத்துவங்களைஅறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் மீதூரப் பெற்ற அக்பருக்கு உறுதுணையாக விளங்கியவர் அவரது ஆருயிர் நண்பர் அபுல் பாசல் ஆவார். அவரது உறுதுணையுடன் ஏனைய சமயங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பினை அக்பர் பெற்றார்.

இதன் விளைவுதான் இபதத்கானா அல்லது வழிபாட்டில்லம் ஆகும். ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையிலும் தொடங்கப்பட்ட சமயம் சார்ந்த விவாதங்கள் ஒருசில வேளைகளில் அடுத்த நாள் காலையிலும் தொடர்வது உண்டு. பேரார்வத்துடன் அக்பர் அத்தகு விவாதங்களில் கலந்து கொண்டார்.

500 பேர்கள் அமருவதற்கான வசதி செய்யப் பட்டிருந்த அம்மன்றத்தில் இருக்கைகள் நான்கு தகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன. மேற்குப் பகுதி நபிகள் நாயகத்தின் வழித் தோன்றல்களான சய்யிதுகளுக்கும் (Sayyids), கிழக்குப் பகுதி அரசவை அறிஞர்களுக்கும் அதிகாரிகளுக்கும், வடக்குப்பகுதி இசுலாமிய சமயத் துறவிகளுக்கும் (Shaiks or Ascetics) தென்பகுதி சமய விற்பன்னர்களுக்கும் (Ulemas or Jurists) என ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

தொடக்ககாலத்தில் இசுலாம் சமயத்தினர் மட்டுமே விவாதங்களுக்கு அழைக்கப்பட்டனர். தாம் இசுலாத்தின் அடிப்படை உண்மைகளை உணர்ந்து கொள்ளவேண்டும் எனவும், அவ்வடிப்படை உண்மைகளின் தொடக்கம், விளக்கம் ஆகியவற்றை ஐயந்திரிபற அறிந்து கொள்ள ஆவல் கொண்டிருப்பதாகவும், அவற்றை உணர்த்தும் வகையில் விவாதங்களும் விளக்கங்களும் அமைய வேண்டும் என்றும் அக்பர் வேண்டுகோள் விடுத்திருந்தார். தொடக்கநிலையில் அமைதியுடன் தொடங்கிய விவாதங்கள் நாட்கள் செல்லச் செல்லக் கடுமையாக மாறிக் கைகலப்பு என்ற நிலையில் திசைமாறின. சுன்னி (Sunnis), சியா (Shias) பிரிவினர்களுக்கிடையே காணப்பட்ட கருத்து மாறுபாடுகள் அக்பரைச் செயலற்றுப் போகச் செய்தன. அப்துன் நபிக்கும்,(Abdun-Nabhi), மக்தும் உல் முல்க்கு (Mukhdum-ul-Mulk) என் பாருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதங்களும், வாதங்களின் முடிவில் கைகலப்பில் இறங்க எத்தனித்த நிலையும், அக்பரை இசுலாம் சமயத்தின் மீதே வெறுப்புக் கொள்ளச்செய்தன என மிகைப் படுத்திக் கூறுவோரும் உளர். இருப்பினும், அக்பர் மனத்தில் இசுலாமிய சமயப்பற்றுச் சிறிதும் குறையவில்லை. இபதத்கானாவின் விவாதங்கள் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டன.

இதற்கிடையில் அக்பரின் மனத்தில் 'கொல்லாமை' போன்ற கருத்துகள் நுழைந்தன. வேட்டையாடுதலை நிறுத்திப் பொன்னும் பொருளும் வாரி வழங்கித் தமது உள்ளத்திலே ஏற்பட்ட கலக்கத்தினை ஆற்றுப்படுத்த முயன்றார்.

இபதக்கானா கி.பி. 1578-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் மீண்டும் உயிர் பெற்றது. அப்போது இது முற்றிலும் உருமாறியிருந்தது. இப்புதிய அமைப்பில் வேற்றுச் சமயத்தினருக்கும் இடமளிக்கப்பட்டது. சூபி (Sufis), சுன்னி, சியா, வேத சமயத்தினர், சமணர், புத்தர், யூதர், சொராட்டிரர் (Zoroastrian) மற்றும் கிறித்தவர் என அனைத்துச் சமயங்களின் விற்பன்னர்களும், தத்துவசொற்போர்ச்வல்லுநர்களும், அறிஞர்களும் என அனைத்துச் சமய அறிஞர்களும் ஒரே இடத்தில் குழுமும் அம்மாமன்றம் உலகச் சமயங்களின் பொதுமன்றமாகவே மாறிவிட்டது எனவும், அம்மாமன்றத்தின் நடுநாயகமாக மாமன்னர் அக்பர் வீற்றிருந்தார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இபதத்கானா விவாதங்கள் இசுலாமிய சமயம் மட்டும் உண்மைகளைக் கொண்டிருக்கவில்லை என்ற எண்ணத்தினை அக்பரது மனத்திலே உருவாக்கின. மேலும், மாபெரும் பேரரசினை உருவாக்கிய அக்பர் அப்பேரரசில் இருந்த அனைத்துச் சமயங்களின் அடிப்படைத் தத்துவங்களையும் அறிந்துகொள்ள விழைந்ததில் வியப்பில்லை. அரசியல் அதிகாரங்களுடன் சமயத்துறைத் தலைமை அதிகாரங்களையும் தம்மகத்தே கொண்டிருப்பது நன்மை பயக்கும் என்பதை உணர்ந்தார். இசுலாமிய சமய விற்பன்னர்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடு அரசுக்கெதிரான நடவடிக்கைகளைத் தூண்டிவிடக்கூடும் என்பதனையும் உணர்ந்தார்.அதன் காரணமாகவே கி.பி. 1579-ஆம் ஆண்டில் சமயத்துறைத் தலைமை அதிகாரங்களையும் தாமே எடுத்துக் கொண்டார். அதன்படி இசுலாமிய சமய அறிஞர்களிடையே தோன்றிய கருத்து மாறுபாடுகளுக்கு முடிவுரை கூறும் தகுதியினைப் பெற்றார். அக்பரின் முடிவுகள் திருக்குரானின் கருத்துக்களை ஒட்டியே இருக்கும். இதன்மூலம் இசுலாத்தில் தோன்றும் தேவையற்ற விவாதங்களை முடித்து, மக்களிடையே அமைதி நிலவச் செய்ய வேண்டுமென்பது அக்பரின் நோக்கமாகும்.

தவறுபடா ஆணை (Infalliblity Decree): மேலே குறிப்பிட்ட கருத்தினை வலியுறுத்தும் ஆவணம் ஒன்றினைச் சேக்குமுபாரக்கு (Shaik Mubarak) என்பார் வரைய, அதனை இந்திய இசுலாமியத் துறைத்

தலைவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதன்படி அக்பர் இந்தியாவில் அரசியல் தலைமை யோடு சமயத்துறைத் தலைமையினையும் பெற்றார். இந்தியாவில் இசுலாத்தின் தனித்தலைமையினை ஏற்றுக்கொண்டது உலக இசுலாத்தின் தலைவரான துருக்கிய காலிபுக்கும் (Caliph of Turkey) சியா பிரிவின் உலகத்தலைவரான பாரசீக மாமன்னருக்கும் (Imam of Persia) விடுத்த சவாலாகவும், தமது தனிப் பெரும் உரிமையினை நிலைநாட்ட அக்பர் கை யாண்ட முறையாகவும் அமைந்தது.

அக்பரின் இந்த முடிவினை இசுலாத்தின் பரம் பரை சமயத் தலைவர்களான உலேமாக்கள், சய்யிது கள், சேக்குகள் போன்றோர் முழுவதுமாக ஆதரிக்க வில்லை: அக்பரைக் குறை கூறத் தொடங்கினர்.

இபதத் கானாவில் விவாதங்கள் தொடர்ந்தன. விவாதங்கள் முடிவுற்ற பின்னர் ஒவ்வொரு சமயத் தின் அறிஞர்களும் பேரரசரைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடினார்கள். அவர்கள் தங்களது சமயத்திற்கு அக்பரை மதமாற்றம் செய்ய முயன்று தோல்வியே கண்டனர். இருப்பினும், அக்பர் மதம் மாறிவிட்டார் என்ற வதந்திகளுக்கும் குறைவில்லை.

புருசோத்தம்தாசு (Purushotham Das), தேபி போன்ற யோகிகள் அக்பருக்கு இந்து சமயத்தின் கூறுபாடுகளையும் விதிப்பயன்களைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

தசுத்துர் மகயார்சி இராணா (Dastur Mahayarji Rana) என்பவர் சொராட்டிர சமயத்தின்(Zoroastrianism) மதத்தத்துவங்களை விளக்கினார். இதனால் சூரிய வழிபாடு, தீ வழிபாடு ஆகியவை அக்பரது அரண்மனையில் தோன்றின. பாரசீக விழாக்களும் கொண்டாடப்பட்டன.

அக்பரது வேண்டுதலுக்கிணங்கி, கத்தோலிக்கக் கிறித்தவப் பாதிரிகள் கோவாவிலிருந்து கி.பி. 1580-ஆம் ஆண்டில் பதேபூர்சிக்ரிக்கு வருகை தந்தனர். உருடால்ப் அகுவிவா (Fr. Rudolf Aquaviva) அந் தோணி மான்சரேட்டு (Antony Monserrate) பிரான்சிசு என்றிசு (Francis Henriques) ஆகிய கத் தோலிக்கத் துறவிகள் அக்பரின் இபதத்கானா விவா தங்களில் ஆர்வமுடன் பங்கேற்றனர். கிறித்தவ சமயக் கோட்பாடுகளில் அக்பர் மிகுந்த ஆர்வம் காட்டினாலும் ஒருசில கோட்பாடுகளை ஏற்க மறுத் தார்.

இர விசய அரி, விசயசேன அரி, பானு சந்திர உபாத்தியாயா போன்றோர் சமண சமயக் கோட் பாடுகளை இபதத் கானாவில் வலிந்துரைத்தனர். கொல்லாமை, புலாலுண்ணாமை, மது அருந்தாமை போன்ற நற்கருத்துகளை அக்பர் விரும்பியேற்றுக் கொண்டார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதேபோல புத்த, சீக்கிய சமயத்தினருடனும் அக்பர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். குரு அமர்தாசு, குரு இராம்தாசு ஆகியவர்களுடன் அக்பர் விவாதம் நடத்தியிருக்கிறார். சீக்கியர்களின் வேதமான 'ஆதிகிரந்த்' அக்பரால் போற்றப்பட்டது.

உன்னத நோக்கோடு உயர்ந்த குறிக்கோள்களு டன் உருவாக்கப்பட்ட இபதத்கானா உலக சமயங் களின் மாமன்றமாக (Parliament of Religions) விளங்க வேண்டியதற்கு மாறாக, பங்கெடுத்துக் கொண்டோரின் தவறுகள், குறுகிய நோக்கு ஆகி யவை காரணமாக மதிப்பிழந்தது. சமய விற்பன்னர் கள் அம்மாமன்றத்தினை ஒரு பட்டிமன்றமாக்கி, தங் களது சொல்லாற்றல் கொண்டு ஏனைய சமயத்தின ரின் வாயையடைத்து மாமன்னரின் மதிப்பில் உயர வேண்டும் எனக் கருதினரே தவிர, பொறுப்போடு ஆழமான உண்மைகளை ஆய்ந்து, அளவுடன் வெளிக் கொணரும் பரந்த ஆன்மிக உணர்வையோ பண் பையோ கொண்டிருக்கவில்லை. அதனால் அக்பருக்கு அவர்கள்பால் இருந்த நம்பிக்கையும் மதிப்பும் குறைய ஆரம்பித்தது. இனி இபதத் கானாவினால் பயனேது மில்லை என உணர்ந்த அக்பர் கி.பி.1582 ஆம் ஆண் டில் அதனை மூடிவிட ஆணையிட்டார்.

இபதத்கானா நடவடிக்கைகள் அக்பரின் மனத் தில் வியத்தகு மாறுதல்களை உருவாக்கின. அம்மாறு தல்களின் விளைவே அவரால் உருவாக்கப்பட்ட 'தீன் இலாகி' (Din Ilahi) என்ற புதிய சமயமாகும்.

வ.இரா.

**இபன் ஆகல்** என்பார் அராபிய எழுத்தாளர் களுள் ஒருவர். அராபியர் கி.பி. 8-ஆம் நூற்றாண் டில் இந்தியாவில் சிந்து மாநிலத்தில் ஆட்சியை நிலை நாட்டினர். எனினும், அவ்வாட்சி நிலையான பலன் எதையும் அளிக்கவில்லை. ஆனால், பண்பாட்டு அடிப் படையில் இப்படையெடுப்பு அராபியருக்குப் பல நன்மைகளை ஈந்தது. இந்துக்களுக்கும் அராபியருக்கு மிடையே கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட்டதால் இந்தியப் பண்பாடு அயல் நாடுகளுக்குப் பரவ வாய்ப் பேற்பட்டது. அயல் நாட்டினர் இந்துக்களின் சமயம், தத்துவம், மருத்துவம், கணக்கியல், வானியல், நாட் டுப்புறவியல் போன்றவற்றின் புதிய கருத்துகளை அறிந்துகொண்டனர். அவற்றை அவர்கள் அராபியா வுக்கு மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளுக்கும் கொண்டு சென்றனர். இதை மசூதி (Masudi) என் பாரும் இபன் ஆகல் (Ibn Haugal) என்பாரும் திட்ட

வட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அராபியக் குடியேற்றக்காரர்கள் இந்துப் பெருங்குடிமக்களுடன் அருகருகே பல்லாண்டுகள் இணக்கத்துடனும் அமைதியாகவும் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**இபன் கால் தூன்** (கி.பி. 1232-1406) இவர் ஓர் அராபியர். இவரது முழுப்பெயர் இபன்கால்தூன் அப்-அர்-இரகுமான் என்பது. இவர் தூனிசு (Tunis) என்னும் இடத்தில் கி.பி. 1332-இல் பிறந்தார். இவர் கல்வியறிவு நிரம்பியவர். பல்துறை அறிவு உடையவர். இவர் சிறந்த வரலாற்றாசிரியர்; சமூக விஞ்ஞானி; தத்துவ நிபுணர்; அரசியல் மேதை.

முகமதிய ஆட்சி இசுபெயின் நாட்டில் வீழ்ச்சியடைந்தவுடன் இவர் குடும்பத்தார் வடமேற்கு ஆப்பிரிக்காவில் குடியேறினர். இவர் இசுலாமியப் பண்பாட்டில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர்; குரானைத் தெளிவாக உணர்ந்தவர். அல்சீரியா, மொராக்கோ, எகிப்து முதலிய நாடுகளில் பெரிய பதவிகளை இவர் வகித்தார். முகமதிய அரசுகளின் பேராதரவு இவருக்குக் கிடைத்தது. ஆனால், பொறாமைக்காரர்களாலும் சூழ்ச்சியாளர்களாலும் சில காலம் இவர் சிறைத் துன்பமும் அடைந்தார்.

இவர் அல்-முகாடிமா (Al-Mukudaddimah) என்ற சிறந்த நூலை இயற்றினார். இது 7 பிரிவுகளையுடையது. இதில் இசுலாமிய வரலாறு, அராபியர் வரலாறு முதலியன விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. இந்நூலால் இவரது ஆராய்ச்சித்திறன் நன்கு வெளிப்பட்டது. முகமதிய ஆட்சி வீழ்ந்ததன் காரணத்தை ஆராய முற்பட்டார். இதற்கு மறைபொருள் ஆராய்ச்சியைவிட (Metaphysical Knowlegde) வரலாற்று அறிவே பெரிதும் உதவும் என்று இவர் நம்பினார். உண்மைகளைத் தெரிந்துகொள்வதில் வரலாறு ஒன்றே பெரிதும் துணை புரியும் என்பது இவர்தம் கருத்து.

அல்காசலி (Al-Ghazali) போன்ற பழைய முகமதியத் தலைவர்கள் அரிசுடாட்டில் கூறிய இயற்கைக் காரணத்தை மறுத்தார்கள்; கடவுள்தான் முதற்காரணம் என்றார்கள். இபன்கால்தூனும் இவற்றை ஒப்புக்கொண்டார்.

இவர் அறிவியலின் மூலகர்த்தாவாகத் தம்மைக் கருதினார். நாகரிகமானது சமூக வளர்ச்சிக்குத் தொடக்கமாகவும் முடிவாகவும் அமைவதோடன்றி அரசியல் கூட்டமைப்பிற்கும் துணை செய்கிறது. மனிதன் இயல்பாகவே பிறருடன் பழகும் தன்மையுடையவன்; தன் தேவைகளுக்குப் பிறர் உதவியை நாடுபவன் என்று இவர் கருதினார். பழங்குடிமக்கள் உணவின் தேவை பற்றிக் கவலைப்படுபவர்கள். ஆனால், நகரத்தில் வாழ்வோர் பொருள்வளம், அறிவுவளம், ஆன்மிக மேம்பாடு போன்றவற்றைச் சிந்திப்பார்கள். அரசியல் அமைப்பு முறைகள் சமுதாயத்தின் நன்மைக்கும் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் துணைபுரிபவை. இவ்வாறு இபன் கருதினார்.

கலையும் அறிவியலும் அரசின் துணையால் முன்னேறும். அரசு மனிதனைப் போன்றே வளர்ச்சியும் வீழ்ச்சியும் அடையும். நாகரிகம் அரசுபோல விரைவில் அழியாது. நாகரிகம் மிகப் பரந்த ஒன்று. சமூகப்பண்பு, பொருளாதார முன்னேற்றம், ஆதிக்க உணர்வு, கல்வி முதலியனவெல்லாம் நாகரிகத்தில் அடங்கும். இவை இபனின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

துணை நூல்கள்:

Walter J. Fichel, Ibn Khaldun and Tamerlane, Berheley and Las Angeles, 1952.

Walter J. Fichel, Ibn Khaldun's Activities in Mameluk Egypt 1382-1406, Berheley 1951.

Mushin Mahdi, Ibn Khaldun's Philosophy of History, A Study in the Philosophic foundation of the Science of Culture, NewYork and London, 1957.

**இபன் குதைபா** (கி.பி. 828-889) என்பார் அராபிய வரலாற்றறிஞரும் மொழிநூல் வல்லுநருமாவார். இவர் ஈராக்கு நாட்டைச் சார்ந்த கூபா (Kufa) என்னும் ஊரில் கி.பி. 828-ஆம் ஆண்டில் ஈரானிய மரபில் பிறந்தார். இபன் குதைபா (Ibn Qutayba) நீதிபதியாகத் தினவர் (Dinawar) என்னுமிடத்தில் தம் வாழ்வைத் தொடங்கி, பின்னர் பாக்தாதில் நிலையாக வாழ்ந்து அங்கேயே காலமானார். அராபிய மொழியில் முதன் முதலாக முறையாக நூலை எழுதியவர் இவரேயாவார். இவர் எழுதிய நூல் 'கித்தாப் அல்மாரிப்' எனப் பெயர் பெறும்; பொது அறிவு நூல் (Book of General Knowledge) என்பது அதன் பொருள். இந்நூல் உலக வரலாற்றை உலகம் தோன்றிய நாள் முதல் இவ்வாசிரியரின் காலம் வரைத் தொகுத்துக் கூறுகிறது. இபன் குதைபா பெரும்பாலான இசுலாமியக் கலைகளைப் பற்றித் திறம்பட எழுதியுள்ளார். திருகுர்-ஆன் பற்றியும் நபிகள் நாயகத்தின் அறவுரைகள் பற்றியும் இவர் பல தொகுதிகளைத் தொகுத்துள்ளார்.

**இபன் கோர்டாட்சுபே** அராபிய எழுத்தாளர்களுள் ஒருவர். மலாய் முந்நீரகத்திலும் இந்

தியத் தீவுக் கூட்டத்திலும் இரு பெரும் இந்துப் பேரரசுகள் எழுச்சிபெற்று இறுதியில் வீழ்ச்சியுற்றன. முதல் இந்துப் பேரரசை நிலை நாட்டியவர்கள் சைலேந்திர மரபினைச் சார்ந்தவர்கள். இவர்கள் இப்பேரரசைக் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் நிலை நாட்டினார்கள். மலாய் முந்நீரகம், சுமத்திரா சாவா, பாலி (Bali), போர்னியோ (Borneo) உள்ளிட்ட தீவுக் கூட்டம் அனைத்திலும் இப்பேரரசு பரவியிருந்தது. இத்தீவுகளுடன் அராபிய வணிகர்கள் வாணிகம் செய்தார்கள். சைலேந்திர மரபினரின் அரசியல் அதிகாரம், செல்வச் செழிப்பு, பேரரசரின் பகட்டான வாழ்வு, ஆட்சியில் அவர்களுக்கிருந்த மேலான செல்வாக்குப் போன்றவற்றைக் கண்ணுற்ற அராபிய வணிகர்கள் அவ்வரசர்களை 'மகாராசாக்கள்' எனக் குறிப்பிட்டனர். அரசர்கள் பெரும் கப்பற்படையை வைத்திருந்தனர் என்றும் சாம்பா, காம்போசம் போன்ற பகுதிகளின்மீது வெற்றிகரமான படையெடுப்புகளை நிகழ்த்தினர் என்றும் அவர்கள் எழுதி வைத்துள்ளார்கள். அவ்வாறு எழுதிய எழுத்தாளர் களுள் ஒருவர் இபன் கோர்ட்டாட்சுபே (Ibn Khordadzbeh) என்பவராவார். இவர் கி.பி. 844 முதல் 848 வரை இப்பகுதியைப் பற்றி எழுதும்போது, சைலேந்திர அரசரின் ஒரு நாளைய வருமானம் 200 மணங்கு பொன் என்று மதிப்பிட்டுள்ளார்.

**இபன் சாதிக்கு சோசபு பென் சேக்கபு** ஒரு கவிஞராகவும் தத்துவ ஞானியாகவும் சட்ட வல்லுநராகவுமிருந்தார். யூதச் சட்டத் தொகுப்பு நூலறிஞர் (Talmudist) என்று இவரை மக்கள் போற்றினர். இவர் 11 ஆண்டுகள் (1138-1149) நீதிபதியாகப் பணியாற்றினார். ஆனால், இவருடைய தத்துவ நூலே இவருக்குப் பெருமையைத் தேடித் தந்தது. ஆன்மா பற்றிய அறிவே எல்லா வகையான அறிவுகளுக்கும் திறவுகோலாக அமைகிறது. ஆதலின் மற்ற அறிவியல்களைப் படிக்கத் தேவை இல்லை. மனிதனைப் பற்றிய அறிவு உலகைப் பற்றித் தெரிந்துகொள்ளத் (Macrocosm) துணைபுரிகிறது.

இபன் சாதிக்கு (Ibn Zaddik Joseph Ben Jacob. 1149 A.D.) ஒலம் காட்டன் (Olam Katon) என்ற நூலை எழுதினார். அதன் முதற்பகுதியில் அமைந்துள்ள நுண்பொருள் கோட்பாட்டியல் மனிதனைப் பற்றிய அறிவிற்கு ஓர் அடித்தளமாக அமைகிறது. முகம்மதிய தத்துவ ஞானிகள் கடைப்பிடித்து வந்த கொள்கைகளையும் பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகியோரின் கொள்கைகளையும் இவர் ஒப்புக்கொண்டார்.

இரண்டாம் பகுதியில் மனிதனுடைய உடல், உள்ளம் பற்றிய தன்மைகளை ஆராய்ந்தார். மனிதனின் இயற்கைத் தன்மைக்கும் உலகின் இயற்பியலுக்கும் உள்ள பொருத்தத்தை இது வற்புறுத்தியது.

மூன்றாம் பகுதியில் இபன் சாதிக்கு இறைமை பற்றிய (Theology) ஆராய்ச்சியில் ஈடுபட்டு, இறை ஒற்றுமை பற்றிக் (Divine Unity) குறிப்பிடுகிறார். இவருடைய இறைமை பற்றிய ஆராய்ச்சியில் எல்லைகளுக்கு உட்பட்ட உலகத்திலிருந்து படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும்; அவன்தான் கடவுள் என்று தெரியவருகிறது என்று கூறினார். இறைவனின் குணங்களைப் பற்றிய சிந்தனைகள் தத்துவ ஞானிகளுக்கு எட்டவொண்ணா நிலையில் இருந்தன.

நான்காம் பகுதி கடவுளின் நீதியையும் மனிதனின் கடமையையும் விளக்குகிறது. இவர் மனிதனின் சுதந்திரமான விருப்பம் அல்லது மனத் திட்பத்தில் நம்பிக்கையும் கொண்டவர். மனிதன் கடவுளைப் பற்றி அறியவும் அவருடைய நல்ல குணங்களைக்கடைப்பிடிக்கவும் தன்னுடைய சுதந்திரத்தைப் பயன்படுத்தவேண்டும். அப்படிச் செய்யும்போது புகழ் அல்லது இகழ் வரலாம். வெளிப்படையான நல்விளைவுகளோ தண்டனைகளோ இந்த உலகில் இயற்கையாக நடைபெறுகின்றன. இறைவன் அன்பினாலோ வெறுப்பினாலோ அவை நடைபெறுகின்றன என்று நினைத்தல் கூடாது.

**இபன் பதூதா** (கி.பி. 1304-1378) இந்தியாவுக்கு வருகை புரிந்த ஆப்பிரிக்கச் சுற்றுப் பயணிகளுள் ஒருவராவர். இவர் கி.பி. 1333-இல் இந்தியாவுக்கு வருகை புரிந்தார். இந்தியாவின் நிலைமை பற்றி இவருடைய நூலான இரெக்லா (Rehla)வில் பயனுள்ள குறிப்புகளை எழுதியுள்ளார். இவர் வட ஆப்பிரிக்காவில் உள்ள தான்சியர் (Tangier) என்ற இடத்தில் கி.பி. 1304-இல் பிறந்தார்.

இபன்பதூதா (Ibn Batuta) தம் 21-ஆம் வயதில் வெளிநாட்டுக்குப் பயணத்தைத் தொடங்கினார். மெக்கா, அலெக்சாந்திரியா, பாரசீகம், சாமர்கண்டு, கொராசன், பால்க்கு, ஈரத்து (Herat) போன்ற இடங்களைச் சுற்றிப் பார்த்தபிறகு இந்தியாவை அடைந்தார். இவர் கி.பி. 1334-இல் தில்லியை அடைந்து அப்பொழுது அங்கு ஆட்சி புரிந்த முகமது-பின்-துக்ளக்கு அரசவைக்குச் சென்றார். முகமது-பின்-துக்ளக்கு இபன்பதூதாவின் அறிவாற்றலைப் பாராட்டி, அவரைத் தில்லியின் 'காசி' (Gazi) யாக நியமித்தார். இந்த நீதித்துறைப் பதவியை எட்டாண்டுக்காலம் சுல்தானின் நன்மதிப்பை இழக்கும் வரையில் வகித்தார்; பின்பு சிறையில் அடைக்கப்பட்டார். இறுதியில் சுல்தான் இவரைச் சிறையிலிருந்து விடுவித்து மீண்டும் ஆதரவு காட்டினார்.

இவர் முகமது-பின்-துக்ளக்குப் பற்றி மிகுதியான செய்திகளை எழுதியுள்ளார். துக்ளக்கு தலைநகரைத் தில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றியதைப் பற்றியும் இவர் எழுதியுள்ளார். இவர் கி.பி. 1334-ஆம் ஆண்டு வெறிச்சோடிக் கிடந்த தில்லியையும் குடியிருப்பில்லாத வீடுகளையும் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் முகம்மது-பின்-துக்ளக்கின் சிவில் இராணுவத் தகுதி, அரசவை, இராணுவ நிருவாகம், மாநில நிருவாகம் ஆகியவை பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த நாட்களில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளையும் குறிப்பாக, துக்ளக்கின் காலத்தில் நடந்த கலகங்களையும் அவற்றைச் சுல்தான் எவ்வாறு அடக்கினார் என்பதையும் விளக்கமாக எழுதியுள்ளார்.

இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இந்தியாவைப் பற்றிய சுவை மிகுந்த விவரங்களைக் கொடுத்துள்ளார். அதிலிருந்து அப்பொழுது நிலவிய சமுதாயப் பழக்க வழக்கங்களை அறியலாம். அறிவாளி வருக்கம் அதன் தகுதியை இழந்தது. துக்ளக்கு 'செய்க்கு'களையும் (Shaikhs) 'மான்லிசு'களையும் (Manlis) தண்டித்ததாகவும் அடிமைத்தனம் நடைமுறையில் இருந்ததாகவும் இவர் கூறுகிறார்.

இவர் துக்ளக்கின் பஞ்சக் கொள்கையை விவரிக்கிறார். தானியங்கள் அரசின் கிடங்கிலிருந்து மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் கூறுகிறார். பாகியாசு (Faqias), காசி (Gazi) போன்றோர் உணவுத் தேவையுள்ளோர் பட்டியலை அனுப்பியதாக இவர் எழுதியுள்ளார். இவர் வெளி நாட்டவராதலாலும் துக்ளக்கின் அரசவையில் இல்லாததாலும் அரசவையில் பணிபுரிந்த மற்றையோர்போல் அல்லாமல் உண்மை நிகழ்ச்சிகளை எழுதியுள்ளதால், இவருடைய நூல் மூல ஆதாரமாகத் திகழ்கிறது.

இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நிலவிய கடன் சட்டம் (Law of Debt) பற்றிய விவரங்களைத் தருகிறார். இவர் கருத்து மார்க்கோபோலோ என்ற வெளிநாட்டுச் சுற்றுப் பயணியால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. இவர் இந்துக்களின் விருந்தோம்பலைப் பெரிதும் பாராட்டியுள்ளார். மேலும், இவர் சமயச் சட்டங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டன எனக் கூறுகிறார். பெண் கல்வி புறக்கணிக்கப்படவில்லை என்பதை இவர் அனூர் (Hanour) என்னும் ஊரை அடைந்த பொழுது, அங்குப் பெண்களுக்கு 13 பள்ளிகளும் ஆண்களுக்கு 23 பள்ளிகளும் இருப்பதைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளமையால் புலப்படுத்தியுள்ளார்.

இவருடைய குறிப்புகளிலிருந்து தண்டனை கடுமையாக இருந்ததை அறியலாம். மலபார் போன்ற பகுதிகளில் சிறு குற்றங்களுக்குக்கூட கடுந்தண்டனை வழங்கப்பட்டது. தேங்காய் திருடியதற்காகச் சில சமயங்களில் மரண தண்டனை கூட விதிக்கப்பட்டதாக இவர் எழுதியுள்ளார். தாம் பல தரப்பட்ட சூபிகளை (Sufis) இலங்கையிலும் இந்தியாவிலும் சந்தித்ததாக எழுதியுள்ளார்.

இவர் இந்தியாவில் 14 ஆண்டுகள் கழித்தார். அப்பொழுது நாட்டைப் பற்றிப் பல செய்திகளைச் சேகரித்தார். இவர் இந்தியாவின் நிலவியல் நிலையை மட்டுமல்லாமல் சமுதாய நிலையையும் மக்களின், அன்றாட வாழ்க்கை நிலையையும், பொருளாதார நிருவாக முறை போன்றவற்றையும் குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய குறிப்புகள் இந்திய வணிகம், தொழில், வேளாண்மை, சாலைகள், போக்குவரத்து, கப்பல்துறை, எடை, அளவை ஆகியவற்றைப் பற்றியவை.

இவர் எதையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலும் மிக எளிய நிகழ்ச்சிகளைக் கூட விரிவாக விளக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். எதையும் வெளிப்படையாக எழுதும் தன்மையும் உள்ளதை உள்ளபடியே எண்ணும் உள்ளமும் கொண்ட இவர் செயல்கள் இவருக்குப் புகழ் தந்தன. இவருடைய குறிப்புகள் நம்பத்தகுந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. எனினும், இவர் நூலில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இவர் வெளிநாட்டவராதலாலும் மக்களின் மொழியாகிய இந்துசுத்தானி (Hindustani) தெரியாததாலும் பொது மக்களிடையே கலந்துரையாட முடியவில்லை. எனவே, உண்மையான செய்திகளை இவரால் சொல்ல முடியவில்லை. அக்காலத்தில் வாழ்ந்த வரலாற்றாசிரியர் போல் இவரும் கால வரையறையின் விளைவுகள் (Chronological Sequence) பற்றிக் கவலை கொள்ளவில்லை. இவருடைய நூலில் உண்மைக்குப் புறம்பான பல செய்திகள் இருப்பதால், இதன் மதிப்பீட்டைப் பலர் விமரிசனம் செய்வதற்கு ஏதுவாயிற்று. இவ்வாறு பல குறைபாடுகள் இருப்பினும் இபன் பதூதாவின் நூல் தக்க மூல ஆதாரமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. இந்நூல துக்ளக்கு ஆட்சி பற்றி மட்டுமல்லாமல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய சமுதாய, பொருளாதார நிலையையும் படம் பிடித்துக் காட்டுகிறது. பி.ச.

**இபாடான்** நைசீரியாவிலுள்ளதொரு நகரம். இது மேற்கு ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய நகரம். கடற்கரையிலிருந்து 142 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்நகரம் இலோகாசு நகரின் வடகிழக்கில் உள்ளது. படைகளின் பாசறையாக விளங்கிய இபா

டான்(Ibadan)கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெருகி வளர்ந்தது. பிற பகுதிகளிலிருந்து தொடர்ந்து குடியேறிய மக்கள் பெருக்கத்தால் இதன் வளர்ச்சி விரைவடைந்தது. இபாடானுக்கும் இலோகாசுக்கும் இடையே இருப்புப்பாதைத் தொடர்பு 1901-ஆம் ஆண்டு ஏற்பட்டது.

இபாடான் நகரம் வேளாண்மை செய்யப்பெறும் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் அமைந்துள்ளது. இங்கு யாம், கசாவா, மக்காச்சோளம் போன்ற உணவுப் பொருள்கள் விளைக்கப்படுகின்றன. மேற்கில் கோகோ, பனை எண்ணெய் போன்றவை நிறைந்துள்ள வளைவான பகுதியொன்றையும் அதனருகில் சுரங்கங்களையும் காணலாம்.

மாயோ (Mayo) குன்றின் மீதுள்ள நகர மன்றத்தை மையமாகக் கொண்டு இபாடானின் பழம்பகுதி காணப்படுகிறது. அதைச் சுற்றிக் களிமண் சுவர் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. வீடுகள் களிமண்ணாலும் களிமண் குழம்பாலும் பூசப்பட்டுள்ளன. ஓலை வேயப்பெற்ற கூரைகள் இக்காலத்தில் வளைத்து நெளிக்கப்பட்ட இரும்புத்தகடுகளால் வேயப்பட்டுள்ளன. இதனைச் சுற்றி மக்கள் வாழும் பழம் பகுதிகளும் இதற்கு மேற்கில் வணிகப் பகுதிகளும் வடக்கில் நிருவாகப் பகுதிகளும் உள்ளன. இப்பதிகளுக்கு வெளியே புதிய குடியேற்றப் பகுதிகள் உள்ளன. இப்பகுதிகளில் உள்ள மாளிகை வீடுகள் செங்கற்களாலானவை. களிமண்ணிற்கு மாறாகச் சிமிண்டினைப் பெருமளவில் இப்போது பயன்படுத்துகிறார்கள். இபாடான் பல்கலைக் கழகக் கல்லூரி 1948 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்றது. இது 1962-இல் இபாடான் பல்கலைக் கழகமாக்கப்பட்டது. இங்கு 5000 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இபாடானின் மக்கள்தொகை 8,85,000.

**இபாமினாண்டசு** (*ஏறத்தாழ கி.மு.* 418-362) கிரேக்க நாட்டில் தீப்சு (Thebes) நகரைச் சார்ந்த படைத்தலைவரும் அரசியல் வித்தகருமாவார். தீப்சு நகரைக் கி.மு. நாலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுபார்ட்டானியர் (Spartans) கைப்பற்றிக் கொண்டனர். தீப்சு தேசபக்தர்கள் இபாமினாண்டசு (Epaminondas), பெலப்பிடாசு (Pelopidas) ஆகிய இருவரின் தலைமையில் அணிதிரண்டு கி.மு. 379-ஆம் ஆண்டில் தீப்சுவிலிருந்து இசுபார்ட்டானியரை விரட்டியடித்தனர். இசுபார்ட்டாவைத் தோற்கடிக்கும் நோக்குடன் இவர்கள் வலிமை வாய்ந்ததொரு இராணுவ அமைப்பை நிலைநாட்டிக் கிரேக்க வரலாற்றில் தீப்சின் முதன்மை நிலையை உருவாக்க உறுதிபூண்டார்.

இபாமினாண்டசு கி.மு. 379 முதல் 362 வரை தீப்சின் தலைசிறந்த இராணுவத் தலைவராகவும் அரசியல் தலைவராகவும் திகழ்ந்தார். இவரால் நடத்திச் செல்லப்பட்ட படையினர் கி.மு. 371-ஆம் ஆண்டில் இலூக்டிரா (Leuctra) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் இசுபார்ட்டானியரைத் தோற்கடித்தனர்; மேலும், மெசீனியா (Messenia) வையும் விடுவித்தனர். பின்னர், இபாமினாண்டசு பேரரசுக் கொள்கையைக் கைக்கொண்டு தீப்சைச் சக்திவாய்ந்த அரசாக்கியதுடன், ஏதென்சு நகருடன் போட்டியிட்டுக் கடலாதிக்கம் பெறவும் முயன்றார். அர்கேடியக் கூட்டிணைப்பை (Aracadian League) உருவாக்கிய போதும் தெசலி (Thessaly) யின் மீது தாக்கிய போதும் ஏதென்சும் ஏனைய கிரேக்க அரசுகளும் இவர் மீது ஐயம் கொண்டன. தீப்சை எதிர்க்க இசுபார்ட்டா, ஏதென்சு, சிசிலியிலுள்ள சிராகியூசு (Syracuse) ஆகியவை ஒன்றாக எதிர்ப்பு அணியைத் தொடங்கின. இபாமினாண்டசு கி.மு. 362-ஆம் ஆண்டில் இசுபார்ட்டாவை அழிக்கப் பெலப்பனிசசு (Peloponnesus) மீது படையெடுத்தார். இவரை எதிர்ப்பு அணியினர் மண்டினேயா (Mantinea) என்னும் போர்க்களத்தில் சந்தித்தனர். தீப்சு நாட்டுப் படைவீரர்கள் இப்போரில் வெற்றி பெற்றபோதிலும் இபாமினாண்டசு கொல்லப்பட்டார். இவர் காலமானபோது தீப்சின் அதிகாரமும் சிதறுண்டது.

**இபான்** போர்னியோ தீவில் வாழும் பழங்குடிகளாவர். இபான் என்னும் சொல் 'திரிந்து கொண்டிருப்பவர்கள்' என்பதைக் குறிக்கும்.இவர்கள் தயாக்கு (Dayak) என்றும் சொல்லப்படுவர். போர்னியோ தீவு மலேசியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையில் அமைந்துள்ள தீவுக் குழுக்களில் அமைந்துள்ளது. இத்தீவின் தெற்கில் இந்தோனேசியா ஆட்சிக்குட்பட்ட கலிமண்டன் (Kalimantan)தீவும் வடக்கில் மலேசியாவின் கூட்டமைப்பிற்குட்பட்ட சரவாக்கு (Sarawak), சபா (Sabah) தீவுகளும் உள்ளன. இபான் Iban) பழங்குடியினர் கலிமண்டான் தீவுகளின் மேட்டு நிலப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் பல்வேறு காலங்களில் இடப்பெயர்ச்சி அடைந்து கண்டு (Kantu), தேசா (Desa), கெட்டுங்காவு (Ketungau) முதலான குழுக்களாகக் காணப்படுகின்றனர்.

இபான் மக்கள் சராசரி ஐந்தடி உயரத்தையும், சுருளற்ற முடியையும், தோலின்மேல் அடர்ந்த முடி இன்மையையும், மிதமானது முதல் கடுமையான பழுப்புநிறம் கொண்ட உடலமைப்பினையும் கொண்டுள்ளனர். இவர்கள் தொன்மை மங்கோலிய (Palaeo-mongoloid) இனத்தைச் சார்ந்தவர்கள். மரபு வழிப்படி இபான் மக்கள் கண் புருவத்திலும் கண்ணிமையிலும் உள்ள முடியையும் முகத்தின் மீதுள்ள

முடியையும் வழித்துவிடுவர்; இருகாதுகளையும் தந்தங்களாலும் அழகுபடுத்தப்பட்ட எலும்புகளாலும் அலங்கரித்துக் கொள்வர். முற்காலத்தில் தாம் மேற்கொண்டிருந்த வேட்டையையும் விலங்கு வேட்டைகளையும் நினைவிற்கொள்ளக் கைகள், கழுத்து, தோள்பட்டைகள், தொடை, முதுகு ஆகிய பகுதிகளில் பச்சை குத்திக் கொள்கின்றனர். ஆண்கள் சிறிய காற்சட்டையையும் பருத்தித் துணியையும் உடுக்கின்றனர். பெண்கள் மார்பிலிருந்து முழங்கால் வரையிலும் ஆடை அணிகின்றனர்.

பல இபான் குடும்பங்கள் இன்றளவும் ஒரே கூரையின்கீழ் நீண்ட வீட்டில் வாழ்கின்றனர். இருநூறு முதல் நானூறு பேர் தங்குவதற்கு ஏற்றவகையில் ஐந்நூறு அடி நீளமும் இருபது முதல் முப்பதடி அகலமும் கொண்ட வீடுகளையும், ஐந்நூறு முதல் அறுநூறு பேர் தங்குவதற்கு ஏற்ற வகையில் ஆயிர அடி நீளமும் முப்பது முதல் அறுபதடி அகலமும் கொண்ட வீடுகளையும் அமைத்திருக்கின்றனர். (காண்க: ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள்) ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தாலும் தனித்தனியாகப் பகுக்கப்பட்ட 'பைலக்கு' என்னும் அறைகளில் ஒவ்வொரு குடும்பமும் தன் விருப்பத்துடன் வாழ்கின்றது. பெரும்பாலும் ஒருதுணை (Monogamy) மணத்தையே கொண்டுள்ளனர். தலை வேட்டை (Head Hunting) மேற்கொண்ட காலங்களில், குறிப்பாகப் போர்க்காலங்களில் எதிரியின் தலையைக் கொண்டு வருகிறவனையே பெண்கள் மணங்கொள்ள விரும்பினர். விலங்குகளை வேட்டையாடியும் தலை வேட்டையாடியும் தோட்டப் பயிர் செய்தும் வாழ்ந்த இபானியர் இத்தொழில்களைப் படிப்படியாக விடுத்து, காட்டை எரித்துச் சாய்வு நிலங்களில் தோட்டப் பயிர்களையும் சமநிலங்களில் நெல்லையும் பயிரிடுகின்றனர்.

இபான் சமயம் ஆவிகளின்பால் நம்பிக்கையையும் வழிபாட்டு மரபுகளையும் கொண்டிருக்கின்றது இவர்களின் பெரும்பான்மையான செயற்பாடுகள் சடங்குகளையும் சமய நம்பிக்கைகளையும் கொண்டு காணப்படுகின்றன. இவர்கள் அடிப்படை உணவிற்காகப் பயிரிடும் அரிசியையே ஆவி என நம்புகின்றனர். இதற்கு உயிரும் உண்டு என நம்புவதால் வழிபாடு செய்து காணிக்கை செலுத்துகின்றனர். ஒவ்வொரு செயற்பாட்டினையும் தொடங்குமுன் தன் கனவின் உணர்வையும் பறவையின் சகுனத்தையும் முன்வைத்து அச்செயற்பாட்டின் நலனைக் கணிப்பர். கால்வழியையும் கிளைக் கால்வழியையும் கொண்டிராத இச்சமூகத்தில் பொருளாதார, சமய, சமூக ஒழுங்கமைப்புகளில் குடும்பமே முதன்மையான இடத்தை வகிக்கிறது ஆயினும், பல குடும்பங்களைக் கொண்ட ஒவ்வொரு நீளமான வீட்டிற்கும் துவய் ருமா (Tuai Rumah) என்னும் தலைவனை நியமிப்பர். இவர் முதியவர்கள் அடங்கிய குழுவினரின் ஒப்புதலோடு செயற்படுகிறார். இக்குடிகள் சமூக வளர்ச்சியிலும் அயற் பண்பாட்டின்மீதும் பற்றுக் கொண்டுள்ளமையால் இவர்களுள் சிலர் ஆங்கிலம் அறிந்தவராகவும் உள்ளனர். இவர்களுள் சிலர் மலாயாப்பல்கலைக்கழகத்திலும் மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பயிலுகின்றனர்.

***இபிசீனியா*** என்பாள் கிரேக்கப் பெண். இவள் தந்தையார் அகமெம்னன் கிரேக்கத் தலைவரும் திராய் (Troy) போரில் பங்கு பெற்றவரும் ஆவார். ஆர்ட்டிமிசு (Artemis) என்னும் தேவதையின் புனிதக் கலைமானை அகமெம்னன் (Agamemnon) கொன்றதால் கடுங்கோபம் கொண்ட அத்தேவதையின் சினத்தைத் தணிக்கத் தம் மகள் இபிசீனியாவைப் (Iphigenia) பலிகொடுக்குமாறு அவர் பணிக்கப்பட்டார். இவளைப் பலிகொடுக்கப் பலிப் பீடத்திற்கு அழைத்து வந்தார்கள். ஆனால், ஆர்ட்டிமிசு இவளைத் தூக்கிக்கொண்டு கருங்கடலின் வடகரைக்குச் சென்றாள். ஆர்ட்டிமிசின் கோயிலில் இபிசீனியா பூசாரியானாள். அங்குள்ள நிலத்திற்கு வரும் அயலாரைப் பலிகொடுப்பது இவளுடைய கடமைகளுள் ஒன்று. அப்போலோ தெய்வம் இபிசீனியாவின் சகோதரனாகிய ஓரசுடிசு (Orestes) என்பானை அந்நிலத்திற்கு அனுப்பியது. சகோதரனும் சகோதரியும் ஒருவரையொருவர் அடையாளங் கண்டு கொண்டதும் அவ்விடத்திலிருந்து கிரீசுக்குத் திரும்பினர்.

***இபின் பாச்சா***: இபின் பாச்சா இசுலாமியத் தத்துவ ஞானி. சாரக்கோசா (Saragossa) என்ற இடத்தில் இவர் பிறந்தார். இவரது காலம் கி.பி. 12–ஆம் நூற்றாண்டு. அண்டலுசியா (Andalusia) என்ற துருக்கி நாட்டைத் திரும்பக் கைப்பற்றக் கிறித்தவர்கள் நடத்திய போராட்டத்தில் இவர் கடுந்துயரடைந்தார். இவர் அரிசுடாட்டிலின் கட்டுரைகளுக்கு உரை விளக்கம் எழுதினார். இவர் மருத்துவம், கணிதம், வானநூல் முதலியவற்றை நன்றாகக் கற்றவர்.

இபின் பாச்சாவின் (Ibn Bajja) கட்டுரையாகிய தனியாட்சி (The Rule of the Solitary) என்ற நூல் மிகவும் சிறப்புடையது. இதன் முதன்மையான கருத்தென்னவெனில், ஆன்மாவைச் சுறுசுறுப்பான அறிவாற்றலோடு (Active Intellect) இணைப்பதாகும். ஒருவன் ஒரு விதியையோ ஒழுங்குமுறையையோ குறித்துப் பேசினால், அதன்படி வாழ்க்கையை அமைப்பது மட்டுமல்லாமல், அத்தகைய அமைப்புத் தனி மனிதனிடம்தான் காணப்பெறும் என்றும் கூறி

னார். இதனால், ஒரு தனிமனிதனின் ஒழுங்கு முறை ஒரு நாட்டிற்கு நல்ல மாதிரியாக அமையும். ஒரு சிறந்த நாடு என்பது சீர்திருந்திய பழக்க வழக்கங் களைக் கொண்டதாக விளங்கும். மனித வாழ்க்கை யின் குறிக்கோள் குறைபாடில்லாத நகருக்குத் (Perfect City) தன்னை அமைத்துக் கொள்வது.

இவ்வாறு இவருடைய கட்டுரை ஆன்மிகக் கொள்கைகளை உடையதாக அமைந்திருந்தது. ஆன்மாவானது முதலில் பருப் பொருளிலிருந்து (Matter) படிமுறை வளர்ச்சி (Evolution) அடைந்து புலன்களுக் கெட்டாத தன்மையை அடைகிறது. பிறகு, புனித மான ஆன்மிகத் தன்மையடைகிறது என்பது இவரது கருத்தாகும்.

இபின் பாச்சா இசுபெயின் நாட்டு இசுலாமியத் தத்துவத்தில் புதிய கருத்தைப் புகுத்தினார். அதாவது, ஒவ்வொரு தனிமனிதனுடைய குறிக்கோளும் முதற் கண் மாறுபட்டாலும், கடைசியில் ஒரு ஞானியின் மெய்யறிவோடு இணைந்து செயற்படும் என்று இவர் கூறுகின்றார்.

**இபுகாவு**: பிலிப்பைன்சு தீவுகளின் வட பகுதி யில் வாழும் பழங்குடியினரே இபுகாவு (Ifugao) எனப்படுவர். இபுகாவு என்னும் சொல் 'மக்கள்' எனப் பொருள்படும். இந்தோனேசியாவின் வடக்கி லிருக்கும் இத்தீவின் ஒரு பிரிவான உலுசானின் வடபகுதியில் காணப்படும் இவர்கள் உலகப் பழங் குடிகளுள் சிறப்பிடத்தை வகிக்கின்றனர். இவர்கள் மொழி அரிசி என்னும் சொல்லிற்கு 2 சொற்களைக் கொண்டுள்ளது. நடுத்தர உயரம், கரும்பழுப்பான சுருளற்ற தலைமுடி, உடலின் பரவலான முடி, பழுப்பு நிறக் கண், அகன்ற முகம், வெளிர் மஞ்சளி லிருந்து பழுப்பு மஞ்சள் வரை நிறமுடைய உடல் முதலான உடற்கூறுகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் இன அடிப்படையில் போர்னியோ தீவிலுள்ள தயாக்கு (Dayak), பொன், இந்திய நாகர், பர்மப் பழங்குடிகள் ஆகிய தொன்மைச் சமூகத்தினர் போலத் தொன்மை மங்கலாயிடு இனத்தைச் சார்ந்தவர்கள். இபுகாவினர் குன்றுகளின்மீது அமைந்திருக்கும் சிறு சிறு சிதருண்ட குடியிருப்புகளிலேயே வாழ்கின்றனர். இத னால் போக்குவரத்து இன்றளவும் வளர்ச்சி பெற வில்லை.

படிநிலை அமைப்புக்கொண்ட நிலங்களில் பயிர்த் தொழிலை 6000 அடி வரை உயரமுள்ள இம்மலை களில் இவர்கள் செய்வதாலேயே உலகில் பழங்குடி களுள் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளனர். சாய்வான மலைப்பகுதிகளை எரித்துப் பல அடுக்குகளாகக் கொண்ட நிலங்களைச் சமன் செய்து உருளைக் கிழங்கு, பருப்பு வகைகள், நெல் முதலான வற்றைப்பயிர் செய்கின்றனர். ஒருசில இடங்களில் அடுத்தடுத்த படிநிலை அமைப்புடைய நிலத்தின் சுவர் 50 அடி உயரம் வரை காணப்படுகிறது. இப்பகுதியில் ஏற்படும் வெள்ளம், மழை, நீர் முதலானவை நிலங் களைப் பெருமளவில் அரிக்கா வண்ணம் கண்மாய் களையும் கால்வாய்களையும் கொண்ட மிகச்சிறந்த வடிகால் வசதிகளை அமைத்திருக்கின்றனர். இன்றைய பொறியாளர்கள் கண்டு வியக்கும் வண்ணம் வடிகால் வசதிகளை இபுகாவினர் 500 ஆண்டுகளுக்கு முன்பே கையாண்டிருக்க வேண்டுமென்பது தெரிகின்றது.

இபுகாவினரின் திருமணம் பல்மண (Polygamy) முறையாகும். இவர்கள் திருமணத்திற்கு வயதுவரம்பு கிடையாது. பெற்றோர்கள் பெண்ணைப் பார்த்துத் திருமணம் நடத்தி வைப்பதில்லை. பெரும் சொத்து டைய குடும்பங்களில் திருமணம் சிறப்பாக நடத்தப் படுகிறது. செல்வக் குடும்பங்களில் ஒருவன் மூன்று மனைவியரைக் கொண்டிருக்கிறான். இபுகாவு குடி களில் இளையவர் கூடம் சிறப்பிடத்தைக் கொண் டுள்ளது. அகமாங்கு (Agamang) என்னும் இளையவர் கூடங்களில் சிறு குழந்தைகளும் திருமணமாகாதவர் களும் மட்டுமே தங்க வேண்டும். பெண்களுக்கென்று தனியான கூடம் உண்டு. இங்குக் குழந்தைகள், மண மாகாத பெண்கள், மூதாட்டியர் முதலானோர் இர வில் தங்குவர். மணமாகாத ஆண்களுக்கும் பெண்க ளுக்கும் தனித்தனியான இளையவர் கூடம் இருப் பினும், திருமணத்திற்குமுன் இருபாலாரும் கலவி யில் ஈடுபட அனுமதிக்கின்றனர்.

இபுகாவினர் உறவு முறைக் குழுக்களாகவே காணப்படுகின்றனர். இக்குடிகளுக்குத் தலைவன் கிடையாது. இதனால் ஒவ்வொரு குடும்பமும் சமூக அமைப்பின் பெரும்பாலான செயற்பாடுகளில் இயங்கு கிறது. ஒருவருக்கொருவர் உதவமாட்டார்கள். உறவு முறைக் குழுக்களிடையே மட்டும் ஒத்துழைப்புக் காணப்படுகிறது. இவர்கள் தம்மிடையே குடும்பச் செல்வாக்கையும் தகுதியையும் பராமரிக்க விரும்புவர். இதனால் சச்சரவு ஏற்படும்பொழுது சண்டை செய் பவனைக் கொன்றுவிடவும் செய்வர். இறந்த குடும் பத்தினர் தம்மைக் கொலை செய்தவனையோ அவனது மனைவியையோ அவனது உறவினர்களுள் ஒருவரையோ கொன்று விடுவர். இரத்தச் சண்டை இவர்களின் பண்பாட்டில் ஒன்றிணைந்த கூறாகும். இவர்களின் தொன்மைப் பண்புகளான தலை வேட்டையாடல், மரத்தினாலான கைவினைப் பொருள்கள் செய்தல், அழகிய ஆடைகள் நெய்தல், பெரிய கற்றூண்களை நினைவுச் சின்னமாக அமைத் தல், தம் தகுதியை வெளிப்படுத்தும் சமூக விருந்தை நடத்துதல் முதலானவை இன்றளவும் இவர் களிடையே காணப்படுகின்றன.

திருமணத்திற்குப்பின் மனைவியின் சொத்தையும் கணவனின் சொத்தையும் தம்பதியினர் கூட்டாகக் கவனிப்பர். மூத்த குழந்தை தன் தாய் தந்தையர் இருவர் சொத்தில் எவர் ஒருவரது சொத்து அதிகமாக உள்ளதோ அதை எடுத்துக் கொள்ளும். இரண்டாம் குழந்தை மீதமுள்ள பாகத்தைப் பெறும். இபுகாவுப் பழங்குடியினர் சமயச் சடங்குகளை மிகுதியான எண்ணிக்கையில் நடத்துகின்றனர். ஆவிகளையும் கடவுள்களையும் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளையும் வழிபடக் கோழி, பன்றி, எருமை முதலான விலங்குகளைப் பலியிடுகின்றனர். ஓங்கா (Honga), உய்யாவுயி (Vyawve) என்னும் உறவுக் குழுக்களுடனும் ஊர் மக்களுடனும் அரிசியிலிருந்து பெறப்பட்ட மதுவினைப் பருகி களிப்புறுகின்றனர்.

இன்றைய இளைய தலைமுறையினர் கிறித்தவ மதத்தை ஏற்க முற்பட்டுள்ளனர். கிறித்தவர்கள் நடத்தும் சமயப்பணிப் பள்ளிகளில் பயின்று பிலிப்பைன்சு நாட்டின் தேசியப் பண்புடன் மிகுந்த தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

**இபுலீசு நாமா** என்பது இசுலாமியத் தமிழிலக்கிய வகையுள் ஒன்றான 'நாமா' என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த ஓர் இலக்கியமாகும். நாமே (Name) என்னும் பாரசீகச் சொல்லின் தமிழ் வடிவமே நாமா (Nama) என அமைந்துள்ளது. பாரசீக மொழியில் 'நாமே' என்பது 'கதை' அல்லது 'தொடர் வரலாறு' என்று பொருள்படும். 'நாமே' என்னும் சொல் பாரசீக மொழியில் குறிப்பிடத்தக்க ஒருவகை இலக்கியப் பிரிவினைச் சுட்டுதற்குப் பயன்படுத்தப்படுகிறது. சான்றாகக் காபூன் நாமே, சியாசத் நாமே, ச நாமே போன்ற புகழ்மிக்க பாரசீக இலக்கியங்களைக் குறிப்பிடலாம். நாமா இலக்கிய வகையில் ஏறத்தாழ இருபத்தெட்டு நூல்கள் தமிழில் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று இபுலீசு நாமாவாகும்.

இபுலீசு நாமா என்னும் பெயரில் இரண்டு நாமாக்கள் தோன்றியுள்ளன. இவற்றைச் செய்யது ஆலிம் சாகிபு அவர்களும் புலவர் செய்யிதபூபக்கர் அவர்களும் தனித்தனியாக இயற்றியுள்ளனர். கோட்டாற்றுப் புலவர் செய்யிதபூபக்கர் இயற்றியுள்ள இபுலீசு நாமாவிற்கு இரு பதிப்புகள் வெளிவந்துள்ளன. இபுலீசு என்பது சாத்தான் என்பதற்கு இணையான சொல்லாகும். இச்சொல் ஆசையற்றிருத்தல் என்று பொருள்படும். இச் சொல் 'பலச' என்னும் அரபுச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் நேர்ப்பொருள் 'ஆசையற்றவன்' என்பது. இபுலீசு அல்லாவின் பேரருளை விரும்பி ஆசையற்றதால் இப்பெயர் பெற்றான். இபுலீசு நாமா என்னும் பெயரில் வெளிவந்துள்ள இரு இலக்கியங்களும் இபுலீசின் வரலாற்றினை எடுத்துரைக்கின்றன. அல்லா இபுலீசைப் படைத்தது, அவன் இறைவனின் கட்டளையை ஏற்க மறுத்தது ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. புலவர் செய்யிதபூபக்கரின் இபுலீசு நாமா அம்மானைப் பாடல் முறையில் அமைந்துள்ளது. பிற நாமா இலக்கியங்களுடன் ஒப்பிடும்போது இதில் அரபுச்சொற்கள் மிகுதியாக இடம் பெறாமையினை அறிதல் கூடும். சி.ந.

**இபுனியன் படைப் போர்** என்பது இசுலாமியத் தமிழ் இலக்கியங்களுள் ஒன்று. படைப்போர் என்பது இசுலாமியப் புலவர்கள் தமிழில் உருவாக்கிய ஓர் இலக்கிய வகையாகும். இவ்விலக்கிய வகையினை ஆங்கில இலக்கியங்களில் காணப்படும் போர் பற்றிய நாட்டுப் பாடல் (War Ballads) களுக்கு இணையாகக் கூறலாம்.

இசுலாம் தோன்றிய காலம் முதல் பலவகை எதிர்ப்புகளைக் கண்டுள்ளது. அவ்வெதிர்ப்புகள் போர்களாகவும் உருப்பெற்றதுண்டு. இசுலாமியத் தொடக்க காலம் எண்ணற்ற போர்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. ஆனால், இப்போர்கள் யாவுமே தற்காப்புப் போர்களாகவே அமைந்தன. இத்தகு முறையில் இசுலாமிய நெறியுடன் தொடர்புடைய ஏதாவது ஒரு போர்ச் செய்தியைப் பாடு பொருளாகக் கொண்டமைந்த இலக்கியங்களே படைப்போர் என்னும் இலக்கியமாகும்.

படைப்போர் இலக்கியப் பிரிவில் அமைந்த ஓர் இலக்கியமே ஐந்து படைப்போர் என்னும் நூலாகும். இசுலாமிய நெறியின் தொடக்கக் காலத்தில் முசுலிம்களுக்கும் முசுலிம் அல்லாதவர்களுக்கும் இடையே நடைபெற்ற ஐந்து போர்ச் செய்திகளின் தொகுப்பு 'ஐந்து படைப்போர்' என்னும் இலக்கியமாகும். ஐந்து படைப்போரின் முதல் பகுதியாக அமைந்திருப்பது இபுனியன் படைப்போர். இதனை அடுத்து ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக ஏனைய நான்கு போர்ச் செய்திகளும் வெவ்வேறான தலைப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஐந்து படைப்போர் என்னும் நூலினை இயற்றியவர் அசன் அலிப் புலவர். இந்நூல் கி.பி. 1737-இல் அரங்கேற்றப்பட்டதற்கான அகச் சான்றுகள் நூலிலும் காணப்படுகின்றன. இபுனியன் படைப்போர் என்னும் தலைப்பில் காணப்படும் இபுனியன் என்னும் பெயர் முசுலிம் அல்லாத கூட்டத்தாருக்குத் தலைமை தாங்கிச் சென்ற படைத்தலைவனைக் குறிக்கும். இவன் குருசான் என்னும் ஊரின் அரசனாவான். இவனது உருவத்தை ஒரு பூதமாகவே அசன் அலிப் புலவர் வருணித்துள்ளார். இசுலாமிய

வரலாற்றில் நான்காம் கலீபாவாக விளங்கிய அலி (ரவி) அவர்கள் ஏகத்துவ இறைவழிபாட்டுக் கொள்கையை எதிர்ப்பவனான இபுனியனை அடிபணிய வைத்து வெற்றி கண்டார். இவர் கூட்டத்தாருக்கும் இபுனியன் கூட்டத்தாருக்கும் இடையே நடைபெற்ற போர்ச்செய்திகளை அசன் அலிப் புலவர் விரிவாக 874 ஈரடிக் கண்ணிகளில் விவரித்துள்ளார். இபுனியன் படைப்போரின் இறுதியில் அலி (ரவி) அவர்களால் இபுனியன் கொல்லப்பட்ட செய்தி கேட்ட அவன் மனைவியின் ஒப்பாரி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனோடு இபுனியன் படைப் போர்ச் செய்திகள் முற்றுப் பெற, இந்து படைப்போரில் இரண்டாம் பகுதியான உச்சிப் படைப்போர்ச் செய்திகள் தொடங்குகின்றன. சி.ந.

**இம்கோடெப்பு** பண்டைய எகிப்து நாட்டின் அரசியல் வல்லுநர்; கட்டடக்கலைச் சிற்பி. இம்கோடெப்பு (Imhotep) கி.மு. 30 ஆம் நூற்றாண்டில் சோசர் (Zozer) என்னும் பெயர் கொண்ட எகிப்திய மன்னருக்காகப் பிரமிடுக் கோபுரம் ஒன்றைக் கட்டினார். இது படிப்படியாக அமைக்கப் பெற்ற பிரமிடுக் கோபுரமாகும். இவர் சிறந்த அறிஞராகக் கருதப்பட்டார்; சிறந்த மருத்துவரும் ஆவார். இவர் பாரோ மன்னர்களுக்கு அரசியல் நடைமுறைகளை விளக்கிக் கூறிய தலையாய அறிஞர். பண்டைய எகிப்தியர்களை இவர் பெரிதும் கவர்ந்தார். பிற்காலத்தில் மக்கள் இவரைக் கடவுளாகப் போற்றி வழிபட்டனர்.

**இம்பால்** இந்தியக் குடியரசில் மணிப்பூர் மாநிலத்தின் தலைநகரமாகும். இங்கு மிகுதியாக நெல்விளையும் சமவெளி மையம் இருக்கிறது. அசாம் மாநிலத்திற்கும் பர்மா நாட்டிற்கும் இடையிலுள்ள குன்றுகளின் நடுவில் ஏரி வடிகால்கள் போன்றுள்ள இச்சமவெளி நெல் சாகுபடிக்கேற்றது. வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பல கிராமங்களின் தொகுதியாகக்கூட இம்பால் (Imphal) நகரைக் கருதலாம். இது 1942-45-ஆம் ஆண்டுகளில் இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர்களை எதிர்த்துப் போராடும் முன்னேற்றத் தளமாக இருந்தது. இங்கு 1944 ஏப்பிரல்-மே மாதங்களில் சப்பானியரின் தாக்குதல்களை எதிர்த்துக் கடும்போர் நடைபெற்றது. இம்பாலின் மக்கள்தொகை 1,55,639 (1981).

**இம்பீரியல் பள்ளத்தாக்கு** அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் தென் மத்திய பாலை நிலத்தில் அமைந்துள்ள செழுமையான நீர்ப்பாசன வசதி பெற்ற பகுதியாகும். இது மெக்சிகோ நாட்டின் எல்லையாகவும் சால்ட்டன் கடலின் (Salton Sea) தென்பகுதியாகவும் உள்ளது. இப்பள்ளத்தாக்கு கடல் மட்டத்தைவிடத் தாழ்வாக உள்ளது. ஒரு காலத்தில் இது கலிபோர்னியா வளைகுடாவின் பகுதியாக இருந்தது. கொலொராடோ ஆற்றின் (Colorado River) கழிமுகப் பகுதி படிப்படியாக இவ்வளைகுடாவின் ஒரு பகுதியைத் துண்டுபடுத்திவிட்டது. இப்பகுதியில் உள்ள செழுமையான வண்டல்மண் இம்பீரியல் பள்ளத்தாக்கில் (Imperial Valley) வேளாண்மையின் முதுகெலும்பாய் அமைந்துள்ளது. கொலொராடோ ஆறு அனைத்து அமெரிக்கக் கால்வாயின் (All American Canal) வழியாக நீரைக் கொணர்ந்து ஏறத்தாழ 2,00,000 எக்டேர் பரப்பிற்குப் பாசன வசதி அளிக்கிறது. இப்பள்ளத்தாக்கு அமெரிக்காவின் செழுமைவாய்ந்த பண்ணைகளைக் கொண்ட பகுதிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆண்டு முழுவதும் இங்கு வேளாண்மை செய்ய இயலும். அல்பால்பா (Alfalfa) என்னும் ஒருவகை மணப்புல், பருத்தி, பீட் சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்கள் கோடைக்காலத்திலும் முலாம் பழம், வேறு சில சிறப்புப் பயிர்கள் ஆகியவை குளிர்காலத்திலும் விளைகின்றன. பிராவ்லி (Brawley), காலெக்சிகோ (Calexico) எல் சென்ட்ரோ (El Centro), ஓல்ட்விலி (Holtville) ஆகியவை இப்பள்ளத்தாக்கில் உள்ள பெரு நகரங்களாகும்.

**இம்மடி நரசிம்மர் (கி.பி. 1491-1505):** விசயநகரப் பேரரசில் சாளுவ அரச குலத்தை நிறுவியவர் சாளுவ நரசிம்மர். இவருக்குத் திருமலை என்கிற திம்மபூபர், தர்மராயர் ஆகிய ஆண்மக்கள் இருவர் இருந்தனர்; இருவரும் சிறுபிள்ளைகள். எனவே, திம்மரைப் பட்டத்து வாரிசாக அமர்த்தி நம்பிக்கைக்குரிய படைத்தலைவரான நரச நாயக்கரைப் பாதுகாவலராக அமர்த்தியபின், சாளுவ நரசிம்மர் காலமானார். சில மாதங்களிலேயே நரச நாயக்கரின் பகைவரான திம்மராசர் என்பவரால் திம்மபூபர் கொலை செய்யப்பட்டார். எனவே, தர்மராயரை இம்மடி நரசிம்மர் என்ற பட்டப் பெயரோடு நரசநாயக்கர் அரியணையில் அமர்த்தினார். தந்தையாகிய நரசிம்மரைப்போல் இரு மடங்கு சிறந்தவர் என்ற பொருளில் இம்மடி என்ற அடைமொழி இவர் பெயருடன் சேர்ந்துள்ளது. ஆயினும், இச்சிறுவனைப் பெனுகொண்டாவில் காவற்சிறையில் வைத்து இறுதிவரையில் நரசநாயக்கரே ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டார். இம்மடி நரசிம்மர் பெயரளவிலேயே அரசரென இருந்து சிறைவாழ்வு வாழ்ந்தார். இந்நிலையில் கி.பி. 1503-இல் நரச நாயக்கர் தம் மகன் வீரநரசிம்மரிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துக் காலமானார். நிருவாகத்தை நடத்துதல் மட்டும் போதாதென்றும் பட்டமேற்றலும் வேண்டுமென்றும் ஆசை கொண்ட வீரநரசிம்மர் கி.பி. 1505-இல் இம்மடி நரசிம்மராய

ரைக் கொன்று தாமே முடிசூட்டிக் கொண்டார். சாளுவ வமிசம் முடிவுற்றுத் துளுவ வமிசத்தின் ஆட்சி விசயநகரப் பேரரசில் ஏற்பட்டது. இர. ஆ.

**இம்மத்சாகி அரசர்கள் (பேரார்)** இம்மத் சாகி வமிசத்தைத் தோற்றுவித்தவர் பதுல்லா இம் மத் உல்முல்கு என்பவர். இவர் பிறவியிலேயே இசு லாமிய சமயத்தைச் சேர்ந்தவர் அல்லர். இவர் கரு நாடக மாநிலத்திலே பிறந்த ஓர் இந்து ஆவார். பாமினிப் படை இவரைக் கருநாடகத்திலிருந்து கைது செய்து, கட்டாயப்படுத்தி, இசுலாம் சமயத் தைத் தழுவச் செய்தது. பேரார் ஆளுநர் கான்ச கானின் (Khan Jahan) மெய்காவலர்களுள் ஒருவராக இவர் பணியில் அமர்த்தப்பட்டார். தம் சலியா உழைப்பாலும் நுண்ணறிவாலும் இவர் பேரார் நாட்டிலிலுள்ள உயர்ந்த பதவிகளைப் பெற்றதோடு, 'இம்மத் உல்முக்கு' என்ற பட்டத்தையும் பெற்றார். பின்னர்ப் பாமினிப் பேரரசின் வடக்கேயுள்ள பேரார் அரசின் ஆளுநராகப் பதவியேற்று, கி.பி. 1490-ஆம் ஆண்டில் மத்திய அரசின் பலக்குறைவைப் பயன் படுத்திப் பேராரின் சுதந்திரத்தையும் பெற்றார். இவர் கி.பி. 1504-ஆம் ஆண்டில் காலமானார்.

இவருடைய மூத்த மகன் அலாவுதீன் இம்மத் சா (Alauddin Himmat Shah) கி.பி. 1504 ஆம் ஆண்டிலேயே பேரார் அரசின் பட்டத்துக்குரியவ ரானார். இவருடைய ஆட்சிக் காலத்தில் பேராரை இணைத்துக் கொள்ள அகமதுநகர் அரசு திட்டமிட் டுச் செயற்பட்டபோது, தவிர்க்க முடியாத போர் இவ்விரண்டு அரசுகளுக்குமிடையே மூண்டது. கால முழுவதும் இந்த இரண்டு நாடுகளும் பல்வேறு காரணங்களை முன்னிட்டுப் போரில் ஈடுபட்டன. பல முறைகளில் இவ்விரண்டு நாடுகளுக்கிடையே அமைதிக்கான உடன்படிக்கைகள் ஏற்பட்டன; என் றாலும் கூட, அந்நிலை நீண்டநாட்கள் வரை நீடிக்க வில்லை.

அலாவுதீன் இசுமாயில் ஆதில்கான் (Ismail Adilkhan) என்பவருடைய சகோதரியை மணந்தார். கோல்கொண்டா அரசுடன் நட்புறவுடன் இருந்தார். எனவே, அலாவுதீனுடைய இராணுவ பலம் பெருகி யது. அகமதுநகர் அரசுடன் போரிட்டுக் கொண்டே இருந்தார். அலாவுதீன் கி.பி. 1530-ஆம் ஆண்டில் காலமானவுடன் அவருடைய மூத்த மகன் தரியா இம்மத் சா (Daria Himmat Shah) பட்டத்துக்கு வந் தார்.

அரசர் தரியா இம்மத் சாவின் ஆட்சிக் காலத் தில் நாட்டில் அமைதி நிலவியது; வளம் பெருகியது; பீசப்பூர் அரசுக்கும் அகமதுநகர் அரசுக்கும் இடையே நான்கு முறை போர்கள் நிகழ்ந்தன. அப்போர் களில் தரியா இம்மத் சா ஒரு முறை பீசப்பூர் அர சையும் மூன்று முறைகளில் அகமதுநகர் அரசையும் ஆதரித்தார். இவர் கி.பி. 1562 ஆம் ஆண் டில் காலமானார். பின்னர் இவருடைய மகன் பர் கன் இம்மத் சா என்பவர் குழந்தைப் பருவத்திலேயே பேரார் அரசரானார்.

பர்கன் இம்மத் சா (Burhan Himmat Shah) குழந்தையாயிருந்த காரணத்தால், துப்பால்கான் (Tupal Khan) என்பவர் பேராளராகப் பதவி ஏற் றார். இவர் மனவலிமையும் உடல் வலிமையும் பேராசையும் கொண்டவர். எனவே, நர்மாலாக் கோட்டையில் தங்கி, உண்மையான அரசராகவே அனைத்து அதிகாரங்களையும் தம் கைக்குள் அடக்கி ஆட்சி புரிந்தார். முதலாம் முர்தாசா (Murtaja I) என்பவர் பேரார் அரசை எதிர்த்துப் படையெடுத்த போது, அப்படையெடுப்பினைத் தடுக்கத் துப்பால் கானால் முடியவில்லை. துப்பால்கான் பேராரை விட்டே பல இடங்களுக்குப் புகலிடம் தேடி ஓடினார்; காந்தேச அரசிடம் பாதுகாப்பைத் தேடித் தோல்வி கண்டார்; இறுதியில் வேறு வழியின்றி நர்மாலாக் கோட்டையில் பர்கன் இம்மத்சாவுடன் தங்க நேரிட்டது. இவருடைய மகன் கவில்கார் என்ற இடத்திற்கு ஓட்டம் பிடித்தான்.

நர்மாலாக் கோட்டை பாதுகாப்பிற்குச் சிறந்த இடமாகும்; குன்றுகளால் சூழப்பட்டச் சிறந்த அர ணாகும். எனினும் கோட்டைக்குள்ளே உணவுப் பண்டங்கள் கிடைக்காமல் பெரிதும் தொல்லைகளுக் காளானார். இந்தச் சூழ்நிலையில் முதலாம் முர்தா சாவின் படைகளும் சோர்ந்துவிட்டன. ஆயினும், முர்தாசா அப்படை வீரர்களுக்கு வேண்டிய ஊக் கத்தை அளிக்கும் வண்ணம் வெறி உணர்ச்சியை ஊட்டினார். புத்துணர்ச்சியுடன் எதிரியின் படைகள் ஆர்த்தெழுந்து வருவதைப் பார்த்த துப்பால்கான் உடனே அண்டையிலுள்ள குன்றுகளில் ஓடி ஒளிந் தார்; இறுதியில் பிடிபட்டார். நர்மாலா கி.பி. 1574-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் முதலாம் முர்தாசாவின் வசமாயிற்று. பின்னர்த் துப்பால்கான் மகனும் தன் வசமிருந்த கவில்கார் என்ற பகுதியை யும் முதலாம் முர்தாசாவிடமே ஒப்படைத்தான்.

இறுதியில் பர்கன் இம்மத்சா, துப்பால்கான், அவருடைய மகன் சாம்சிர் உல்முல்க்கு ஆகியோர் முத லாம் முர்தாசாவினால் கைது செய்யப்பட்டு, அகமது நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குக் கோட் டையிலே அடைக்கப்பட்டு உயிர் நீத்தனர்.

பொன்.சு.

**இம்மத்து நகர்** வடகிழக்குக் குசராத்து மாநி லத்தில் சபர்காந்தா (Sabar Kantha) மாவட்டத்

தின் நிருவாகத் தலைநகரம். ஆரவல்லி மலைத் தொடருக்கும் காம்பே வளைகுடாவிற்கும் இடையிலுள்ள தாழ்நிலப் பகுதியில் இம்மத்து நகர் (Himat Nagar) அமைந்துள்ளது. இந்நகரம் சபர்மதி ஆற்றுக் கருகில் உள்ளது. இதர் (Idar) என்ற முந்தைய அரசருக்குச் சொந்தமான அரசின் தலைநகராயிருந்தது இவ்வூர். இக்காலத்தில் இது ஒரு வணிக மையமாகத் திகழ்கிறது. இங்குத் தானியங்கள், எண்ணெய் விதைகள், பருத்தி ஆடைகள் போன்றவற்றை வாங்கி விற்கும் வாணிகம் நடைபெறுகிறது. ஆலைகளின் மூலம் பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தல், எண்ணெய் விதைகளை ஆலைகளிலிட்டு எண்ணெய் எடுத்தல், கைத்தறி நெசவு, தீக்குச்சி உற்பத்தி, மட்பாண்டங்கள் செய்தல், கண்ணாடித் தொழில் போன்றவை இங்கு நடைபெறுகின்றன. இந்நகருக் கருகில் மணற் கற்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. இம்மத்து நகரை இருப்புப்பாதைத் தொடர்களும் நெடுஞ்சாலைகளும் இணைக்கின்றன. இதன் மக்கள் தொகை 39,698 ஆகும் (1981).

**இம்மென்கீரனார்** சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் இயற்பெயர் கீரனார். தாம் பாடிய பாடலில் அமைந்த அரிய சொல்லாட்சி காரணமாக இம்மென்கீரனார் என்றழைக்கப்பட்டார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் (398) இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையில மைந்த அப்பாடல் களவில் ஒழுகும் தலைவன் பிரிந்தமையால், ஆற்றாமை மீதூர வருந்தும் தலைவி, அவன் மலையினின்றும் வருகின்ற ஆற்றினை நோக்கிப் புலந்து கூறுவதாக அமைந்துள்ளது. தலைவி ஆற்றினை நோக்கி, ‘நும்மோன் செய்த கொடுமைக்கு இம்மென்று, அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க, நன்றுபுறமாறி அகறல்’ என்று கூறுகிறாள். இதன்கண், உன்னுடைய தலைவன் செய்த தவற்றை நினைந்து நாணாமல் இம்மென்னும் ஒலியோடே சுழலாதே; எம்முடைய கண்களினின்றும் தெளிந்த துளிகள் மிகாநிற்பக் கண்டும் முகம் திரும்பிப் போகாதே என்று புலந்து கூறுவது சிறப்பாக உள்ளது. ‘இம்மென்று அலமரல்’ என்ற தொடரில் அமைந்த ‘இம்மென்’ என்பது இவர் பெயரின் முன்னடையாக அமைந்தது எனத் தெரிகிறது.

**இம்ராகுவன்** வட மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் வாழும் பழங்குடிகளாவர். ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான மௌரிட்டானியாவின் (Mauritania) தலைநகராகிய நௌவாக்சோட்டிலிருந்து (Noua-kchott) வடமேற்குக் கடற்கரை நகரமான நௌவாதிபொவ் (Nouadhibou) வரை நீண்டு கிடக்கும் 400 கல் கடற்கரைப் பகுதியில்தான் இம்ராகுவன் (Imraguen) வாழ்கின்றனர். இப்பகுதி அட்லாண்டிக்குக் கடலுக்கும் சகாராப் பாலைவனத்திற்கும் இடையில் இருப்பதால் இம்ராகுவரின் வாழ்க்கை மீன் பிடிக்கும் தொழிலைச் சார்ந்துள்ளது.

நடுத்தரமான உயரத்தையும் கறுத்த மேனியையும் குறுகிய சுருண்ட மயிரையும் தடித்த உதடுகளையும் அகன்ற முகத்தையும் கொண்ட இம்ராகுவர் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர். இம்ராகுவன் பழங்குடியினர் தகுதி அடிப்படையில் மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்படுகின்றனர். செனகா (Zenaga) உயர் வகுப்பினராகவும் அராடின் (Harratine) கீழ் வகுப்பினராகவும் ஏனையோர் கூலியாட்களாகவும் காணப்படுகின்றனர்.

இம்ராகுவன் பழங்குடியினரின் முதன்மைத் தொழில் மீன்பிடித்தலாகும். உயர் வகுப்பைச் சார்ந்த செனகாவின் ஒவ்வொரு குடும்பத்தினரும் 30 அடி நீளமும் தட்டையான அடிப்பரப்பையும் உடைய இலான்சி (Lanche) என்னும் மீன்பிடி படகுகளைக் கொண்டுள்ளனர். ஆண்கள் பகல் முழுவதும் கடலில் மீன்பிடிப்பர். மாலையில் கரை திரும்புவர். படகு கரையைச் சேர்ந்ததும் ஆண்கள் படகைச் சுற்றி நின்று வலையை இழுத்து மீன்களை வெளியே எடுப்பர். பெண்களும் குழந்தைகளும் தங்கள் பெற்றோர் கரை திரும்புவதுகண்டு மகிழ்ந்து மேளமடித்து ஆடிப்பாடுவர். படகில்லாத குடும்பங்கள் செப்காசு (Chebkas) என்னும் நீண்ட வலையைக் கரையிலிருந்து 30 மீட்டர்கள் தள்ளிக் கடலில் விடுவர். சில மணி நேரம் கழித்து வலையைக் கரைக்கு இழுப்பர். இவ்விதமான மீன்பிடி முறையிலும் மிகுதியான அளவில் மீனைப் பிடிக்கின்றனர். மௌரிட்டியன் கடற்கரைப் பகுதி ஏனைய ஆப்பிரிக்கக் கடற்கரைகளைக் காட்டிலும் மிகுதியான அளவில் மீன்களைக் கொண்டிருக்கிறது. இம்ராகுவர் தம்பொருளாதாரம் மீன்பிடி தொழிலைச் சார்ந்திருப்பதால் மீன் பொருள்களைப் பதப்படுத்துவதிலும் விற்பனை செய்வதிலும் கை தேர்ந்துள்ளனர்.

பெண்கள் சுறா மீன்களின் தலைப் பகுதியை வெட்டி எடுத்து அதிலிருந்து எண்ணெய் எடுக்கின்றனர். மற்றப் பாகங்களை உப்பிட்டு உலர்த்துகின்றனர். உலர்ந்த மீனை மீண்டும் ஒருமுறை உப்பிட்டுப் பதப்படுத்திச் சேமித்து வைக்கின்றனர். இவ்வகையாகப் பதப்படுத்தப்பட்ட திச்டார் (Tichtar) மீன்களை இருமாதத்திற்கு ஒருமுறை நௌவாதிபொவ் நகரத்திற்குக் கொண்டு சென்று சந்தையில் பண்டமாற்றம் செய்து கொள்வர். தம் மீன்களைக் கொடுத்து அவற்றிற்கு ஈடாக அரிசி, உப்பு, நல்ல தண்ணீர் முதலானவற்றைப் பெற்றுத் திரும்புவர். இம்ராகுவரின் சந்தைப் பயணம் 10 முதல் 12 நாட்

கள் வரையாவதால், பயணத்தின்பொழுது கடற்பாட்டு என்னும் தம் மரபுவழிப்பாடல்களைப் பாடுகின்றனர். இம்ராகுவன் பழங்குடிப் பகுதியில் ஆண்டில் இருமுறை மீன்கள் குறைந்து காணப்படுவதால், இவர்கள் அக்காலத்தில் கடற்கரைக்குச் சென்று ஒரு மாதம் முதல் இரண்டு மாதம் வரை தங்கி மீன் பிடித்துத் திரும்புகின்றனர்.

செனகர் கற்களாலான உறுதியான வீடுகளிலும் ஏனையோர் சிறு கம்பளிக் கூடாரங்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் மீன், மீன்பொருள்கள், அரிசி, கடல் ஆமை முதலானவற்றை உண்கின்றனர். மீன் அடிப்படை உணவாக அமைந்தாலும் கடல் ஆமைகளை வேட்டையாடுவதில் பேரார்வம் காட்டுகின்றனர். இவை சுவை மிக்கன எனக் கருதுவதால் வலையைக் கொண்டு அதிக அளவில் பிடித்து, இவற்றின் இறைச்சியைப் பதப்படுத்திப் பல நாட்களுக்குப் பயன்படுத்துகின்றனர்.

இம்ராகுவர் இப்பகுதியில் தனித்து ஒதுங்கி மீன் பிடி தொழிலை ஏற்றுள்ளமை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். பெனி ஆசான் அராபியர்கள் (Beni Aassan Arabs) கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை இங்கு நாடோடி பெர்பர் (Berber) பழங்குடியினரைத் தோற்கடித்துத் தம் வசப்படுத்தினர். பெர்பர் குடிகளில் ஒரு பகுதியினர் தென்கரையை அடைந்து மீன்பிடி தொழிலை மேற்கொண்டனர். துருக்கியரும் பாரசீகர்களும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தென்கடற்கரைப் பகுதிகளில் அடிமை வாணிகத்தைத் தொடங்கினர். இவர்கள் இம்ராகுவரின் உயர் வகுப்பினரான செனகருடன் தொடர்பை மேற்கொண்டு ஆதிக்கம் பெற்றனர்.

இம்ராகுவரின் பகுதி மீன் நிறைந்த கடற்பகுதியாக மட்டுமல்லாமல் பறவைகள் நிறைந்து காணப்படும் இயற்கைச் சூழ்நிலையையும் கொண்டிருக்கிறது. இதனால் இவர்களின் பகுதி சுற்றுலா மையமாக மாறி வருகிறது.

**இம்லர், ஐன்ரிக்கு** (1900-1945) என்பார் செருமானிய நாசிகளின் தலைமைக் காவலராவார். இவர் 1934 முதல் 1945 வரை இப்பதவியிலிருந்து செயலாற்றினார். இம்லர் (Himmler) மியூனிச்சு (Munich) நகரத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்த பள்ளியாசிரியர். இம்லர் 1918-இல் பவேரியப் படையில் சேர்ந்தார். அப்போது இவர் இளைஞராக இருந்தமையால் முதல் உலகப் போரில் போரிடும் தகுதியைப் பெறவில்லை. பின்னர்க் கோழிப் பண்ணை ஒன்றை நடத்தினார். கோழிப் பண்ணை இவருக்கு வாழ்வில் நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. எனவே, 1923-இல் நாசிக் கட்சியில் சேர்ந்தார். செருமானியர்கள் தங்களை ஆரிய இனத்தவர் என்று கூறிப் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தனர். இவரும் அக்கொள்கையைக் கண்மூடித்தனமாக நம்பினார். இம்லர் காவல் படையைச் சீரமைத்தார். இவர் 1934 ஏப்பிரல் மாதத்தில் பிரசியாவில் (Prussia) இரகசியப் பாதுகாப்புப் படையின் தலைவரானார். இவர் 1936-இலிருந்து கெசடப்போ (Gestapo) என்று பெயர் கொண்ட மேற்கூறிய இரகசியப் பாதுகாப்புப் படையின் பொறுப்பாளரானார். ஆரிய இனத்தைச் சாராத யூதர் போன்றவர்களைக் கொல்லும் இனக் கொலைத் தண்டனை முகாம்களில் இவரது ஆணை செயற்பட்டது. இவர் 1943 முதல் 1945 வரை இட்லரின் ஆட்சிக் காலத்தில் உள்துறை அமைச்சராகப் பணியாற்றினார். ஏறத்தாழ இறுதிவரை இவர் இட்லரின் அன்புக்கு உரியவராகவே இருந்தார். ஐரோப்பாவில் உருசியாவின் முன்னேற்றத்தைத் தடுக்க மேற்கு நாடுகள் தனியானதொரு உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இவர் கவுன்ட்டு பெர்னடாட்டு (Count Bernadot) என்பாரை வேண்டினார். செருமனி சரணடைந்தபோது இவர் ஒளிந்திருந்த இடத்தை ஆங்கிலப்படை வீரர்கள் கண்டுபிடித்தனர். இவர் சிறை செய்யப்பட்டார். ஆனால், இவர் 1945 மே மாதம் 27-ஆம் நாள் நஞ்சு மாத்திரைகளை விழுங்கிப் போர்க் குற்றவாளியென விசாரிக்கப்படாமலேயே, நேசப் படைகளின் பிடியிலிருந்து தப்பித் தற்கொலை செய்து கொண்டார்.

**இமயமலை:** இந்தியாவின் இயற்கையமைப்புத் தனிச்சிறப்பு வாய்ந்தது. இயற்கையமைப்பை ஒட்டி இந்தியாவை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. தீபகற்ப இந்தியாவிற்கு வெளியில் உள்ள மலைகள் (Mountains of extra Peninsular India) 2. வட இந்தியச் சமவெளி. 3. தீபகற்ப இந்தியா அல்லது தெற்கிலுள்ள தக்காணப்பீடபூமி. 4. கடற்கரைச் சமவெளிகள்.

தீபகற்ப இந்தியாவிற்கு வெளியில் உள்ள மலைகள்:

1. இமயமலை: இமயமலை இந்தியாவின் வடக்கு எல்லையாக உள்ளது. இம்மலை இந்தியாவை ஆசியாவின் பிற பகுதிகளிலிருந்து பிரிக்கின்றது. அதனால், இந்தியா ஆசியாவின் பிற பகுதிகளிலிருந்து வேறுபட்டுத் தனிப் பண்புகளுடம் விளங்குகிறது. இவ்விதம் நிலத்தால் தனிமை எய்துவது ஓர் அரிய காட்சியாகும்.

இமயமலை மத்திய ஆசியாவின் மையத்திலுள்ள உலகக் கூரை என்று சொல்லப்படும் பாமீர் முடிச்சிலிருந்து பிறைச் சந்திர வடிவில் தென்கிழக்காகப்

பரவியுள்ளது. பனி மூடிய மலையாதலால் இமய மலை என்று சொல்லப்படுகிறது. இமம் என்பது பனி என்று பொருள்படும். இம்மலை உலகிலேயே மிகப்பெரிய திகைப்பூட்டும் மலையாகும். இம்மலை மேற்கில் காசுமீர் பகுதியிலுள்ள சிந்து ஆற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து கிழக்கில் அசாம் பகுதியிலுள்ள பிரமபுத்திரா மலையிடுக்கு வரை தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. இதன் நீளம் ஏறத்தாழ 2400கி.மீ. இம்மலை ஏறத்தாழ 150 முதல் 500 கி.மீ. அகலம் உள்ளது.

இமயமலை பெரும்பாலும் படிவுப் பாறைகளால் ஆன மடிப்பு மலை ஆகும். புவியில் ஏற்படும் நில அசைவுகளின் விளைவாகப் புவிப்பரப்புச் சுருங்கி மடிப்புகள் ஏற்படுகின்றன.இமயமலைப்பகுதி, மீசோசோயிக்குக் (Mesozoic) காலத்தில் பெரிய பள்ளமாக இருந்தது. அப்பகுதியில் ஒரு கடல் இருந்தது. அதற்குத் தெதீசுக் கடல் (Sea of Tethys) என்று பெயர். கடலில் நீண்ட காலமாகவே படிதல் நிகழ்ந்து வந்தது. தெதீசுக் கடலுக்கு வடக்கில் அமைந்த பகுதி (இப்போதைய சைபீரியாவின் மையப்பகுதி) அங்காரா நிலப்பகுதி என்றும் (Angara land) தெற்கில் அமைந்த பகுதி (இப்போதைய தீபகற்ப இந்தியா) கோண்டுவானா நிலப்பகுதி (Gondwana land) என்றும் சொல்லப்பட்டன. ஏறத்தாழ ஏழு கோடி ஆண்டுகளுக்கு முன்பு அங்காரா நிலம் கோண்டுவானா நிலத்தை நோக்கி நகர்ந்ததால் அவற்றிற்கிடையே அமைந்துள்ள தெதீசுக் கடலின் படிவுப்பொருள்கள் அமுக்கப்பட்டு, நிலம் உயர்த்தப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாகப் பல மடிப்புகள் தோன்றின. இவை பின்னர் இமய மலைத் தொடர்கள் என்று கூறப்பட்டன எனப் புவியமைப்பியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மிக்க அண்மைக்காலத்தில் தோன்றியதாலும் செழுமையாக இருப்பதாலும் இமயமலையில் பல குறுகிய ஆழமான பள்ளத்தாக்குகள் உள்ளன. ஆறுகள் மண் அரிப்பில் ஈடுபட்டுள்ளன. மிக உயரமான பகுதிகளில் பனியாறுகளினால் தோற்றுவிக்கப்பட்ட பள்ளத்தாக்குகளும் உள்ளன.

இமயமலையில் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்த மூன்று வரிசைகள் காணப்படுகின்றன. அவை 1. பெரிய இமயமலைத்தொடர்கள், 2. உள் இமய மலைத்தொடர்கள் (The Greater Himalayas or The Inner Himalays). இவற்றின் உயரம் 5000 மீட்டருக்கும் மேல் உள்ளது. இப் பகுதியில் உலகிலேயே மிக உயர்ந்த மலையுச்சிகள் காணப்படுகின்றன; எவரெசுட்டு 8848 மீ., கிஞ்சின் சங்கா 8586 மீ., தவளகிரி 8075 மீ., நந்தாதேவி7816 மீ., காட்வின் ஆசுட்டின் 8611 மீ., இப்பகுதி ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டுள்ளது. அதனால் பனியாறுகள் அமைந்துள்ளன. பனி வரைகோட்டிற்குக் கீழே பனியாறுகள் உருகி, நீராக மாறி ஆறுகளாகப் பாய்கின்றன. இவை வட இந்தியச் சமவெளிகளை வளப்படுத்துகின்றன. குறிப்பாக, கோடைக்காலத்தின் தொடக்கத்தில் சமவெளியில் மழைப்பெயல் இல்லாத காலத்தில் பனி உருகுவதால், ஆறுகளில் ஓடிவரும் நீர் மிக முக்கியத்துவம் பெறுகிறது.

தாழ்ந்த இமயத் தொடர்கள் அல்லது மத்திய இமயமலைத்தொடர்கள்: இவை பெரிய இமயத் தொடருக்குத் தெற்கில் அமைந்துள்ளன; 3500 மீ. முதல் 5000 மீ. வரை உயரம் உடையன. இப்பகுதியில் சிம்லா, நைனிடால், மசூரி, தார்சிலிங்கு (Darjeeling), காசுமீரப்பள்ளத்தாக்கு ஆகிய சிறப்பு மிக்க கோடை வாசத்தலங்கள் உள்ளன.

சிவாலிக்குக் குன்றுகள் அல்லது வெளி இமய மலைத் தொடர்கள்: இவை தாழ்ந்த இமயத் தொடர்களுக்குத் தெற்கில் அமைந்துள்ளன. இவை 1000 மீ. முதல் 1500 மீ. வரை உயரம் உள்ளன மேற்குப் பகுதியில் கற்களும் முட்புதர்களுடன் கூடிய காடுகளும் காணப்படுகின்றன. கிழக்குப்பகுதியில் தெராய்க் (Terai) காடுகள் காணப்படுகின்றன. சிவாலிக்குக் குன்றுகளுக்கும் தாழ்ந்த இமயத் தொடர்களுக்கும் இடையில் உள்ள வண்டல் மண் நிறைந்த அகன்ற தட்டையான பள்ளத்தாக்குகளுக்குத் தூன் (Doon) என்பது பெயர். (எ-டு) தேராதூன், கல்காதூன், கங்கரர்தூன். சிவாலிக்குக் குன்றுகளின் அகலம் ஏறத்தாழ 8 கி.மீ. முதல் 50 கி.மீ. வரை உள்ளது. இக் குன்றுகள் மிக அண்மைக்காலத்தில் மடிப்படைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன. நில அமைப்பின் அடிப்படையில் இமயமலையுடன் சேர்ந்த பகுதிகளாகக் கருதப்பட்டபோதிலும் புவியியல் அடிப்படையில் இக்குன்றுகள் கங்கைச் சமவெளியுடன் பெரிதும் இணைந்துள்ளன. சிவாலிக்குக் குன்றுகளின் வெளிவிளிம்பில் ஆறுகளினால் படிவிக்கப்பட்ட பரல்கள் உள்ளன. இவற்றிற்குப் பாபர்(Bhabbar) என்பது பெயர். சிவாலிக்குக் குன்றுகள் மேற்கில் அகன்றுள்ளன. இமயமலை தோன்றிய பின்பு இவை தோன்றியிருக்க வேண்டும். ஆறுகள் பெரும்பாலும் மலையிடுக்குகளின் வழியாகச் சிவாலிக்குக் குன்றுகளைக் கடந்து செல்கின்றன.

சர் சிட்னி புராடு (Sir Sidney Burraud) என்பவர் இமய மலையினை நெடும்பக்கமாகப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அப்பிரிவுகளாவன:

i) பஞ்சாபு இமயமலை(The Punjab Himalayas): இது சட்லெசு ஆற்றிற்கும் சிந்து ஆற்றிற்கும் இடையிலுள்ள பகுதியாகும். நீளம் ஏறத்தாழ 560 கி.மீ.

இமயமலை திடீரென வளைந்து செல்லக் கூடிய பகுதியில் சட்லெசு ஆறு கடந்துசெல்கிறது. சில மலையுச்சிகள் 6000 மீ. உயரத்திற்கும் மிகுதியான உயரமுடையன. ஏறத்தாழ 134 கி. மீ. நீளமும் 40 கி.மீ. அகலமும் கொண்ட நீண்ட பள்ளத்தாக்கு வட மேற்கிலிருந்து தென் கிழக்காக அமைந்துள்ளது. இப் பள்ளத்தாக்கில்தான் காசுமீரப் பள்ளத்தாக்கு, உதாம்பூர்தூன், கோட்லிதூன் ஆகியன அமைந்துள் ளன. பெரும் ஏரிகள் படிவுகளினால் நிரப்பப்பட்ட தால் இவை தோன்றியிருக்கலாம். காசுமீரிலுள்ள ஊலார் ஏரி (Wular lake), சிரீநகருக்கு அருகிலுள்ள இரு ஏரிகள் ஆகியன இதற்குச் சான்றுகளாக உள் ளன.

ii) குமான் இமயமலை: இது சட்லெசு ஆற்றிற் கும் காளி ஆற்றிற்கும் இடையில் உள்ள பகுதியாகும். நீளம் ஏறத்தாழ 320 கி.மீ. நந்தாதேவி, பத்திரி நாதம், கேதார்நாதம், திரிசூலம், மானச கங்கோத் திரி, சோன்லி போன்ற பல உயர்ந்த மலையுச்சிகள் இப்பகுதியில் உள்ளன.

iii) நேபாள இமயமலை: இது காளி ஆற்றிற் கும் டீசுட்டா (Tista) ஆற்றிற்கும் இடையில் அமைந் துள்ள பகுதியாகும். நீளம் 800 கி.மீ. பனி மூடிய சிகரங்கள் 6800 மீட்டருக்கும் மிகுதியான உயரம் உடையவை இப்பகுதியில் உள்ளன. எவரெசுட்டு, கிஞ்சின் சங்கா, தவளகிரி, அன்னபூரணா ஆகியவை அத்தகைய சிகரங்களாம்.

iv) அசாம் இமயமலை (The Assam Himalayas) டீசுட்டா ஆற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து பிரமபுத் திரா ஆறு வரை உள்ள பகுதியாகும். நீளம் 720 கி.மீ. சமவெளியிலிருந்து மலைகள் திடீரென உயரு கின்றன. உயரம் ஏறக்குறைய 7000 மீட்டருக்கு மேல் இருக்கும்.

2. பாட்காய் உலூசாய் குன்றுகள்: கிழக்கில் அசாம், பர்மா பகுதியில் இம்மலைகளின் உயரம் குறைந்து தாழ்ந்த குன்றுகளாகக் காணப்படுகின்றன. இவை பாட்காய் குன்றுகளிலிருந்து உலூசாய் குன்று கள் வரை வடக்குத் தெற்காக அமைந்துள்ளன. இக் குன்றுகள் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் இடையே எல்லையாக அமைந்துள்ளன. காசிக் குன்றுகள், காரோக் குன்றுகள், செயந்தியாக்குன்றுகள், நாகாக் குன்றுகள் ஆகியன இப்பகுதியில் காணப்படும் சில சிறப்பான குன்றுகளாகும். இமயமலைகள் தோன் றிய போதே இக்குன்றுகளும் தோன்றியிருக்கவேண் டும். மேற்கு இமயமலையைப் போலன்றி இப்பகுதி கள் ஆண்டுமுழுவதும் ஈரம் மிக்க கால நிலையைப் பெற்றுள்ளன.

3. சில்லாங்குப் பீடபூமி: இது தீபகற்ப இந்தியாவி லிருந்து பிரிந்து அமைந்துள்ள ஒரு பகுதியாகும். இது மென்மையான பாறைகளாலான ஒரு பீடபூமி. இது மடிப்பாலான இரு பகுதிகளுக்கிடையே அமைந்துள்ள மிகக் குறுகலான பீடபூமியாகும். அரங்கமா குன்று களுக்கும், சில்லாங்குப் பீடபூமிக்கும் இடையே அமைந் துள்ள குறுகிய வழியாகச் சூறாவளிகள் உள்நாட்டிற் குச் செல்கின்றன.

இமயமலை புனித மலையாகக் கருதப்படுகிறது. தேவர்கள் வாழும் இமயமலை என்னும் பொருளில் இதனைத் 'தேவதாத்மா இமாலயம்' என்று புரா ணங்கள் விவரிக்கின்றன. 'மன்னும் இமயமலை எங் கள் மலையே' என்றார் பாரதி. வடபெருங்கல்என்று இதனைத் தமிழ்நாட்டுச் சங்க இலக்கியங்கள் கூறும்.

இரா.இரா.

**இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல் கெழுகுட்டுவன்:** பதிற்றுப் பத்தினால் அறியலா கும் சேர மன்னர்களுள் ஒருவன். இந்நூலால் அறியப் பெறும் ஏனைய மன்னர்களுள் ஒருவனான இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பியாவான். இம்மன்னனைப் பாலைக் கௌதமனார் என்னும் புலவர் பதிற்றுப் பத்தின் மூன்றாம் பத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார். இந்நூலினால் அறியலாகும் சேர வேந்தர் உதியஞ்சேரல் மரபினர் என்றும், இரும் பொறை மரபினர் என்றும் இருவகைப்படுவர். இம் மன்னன் உதியஞ்சேரல் மரபினைச் சார்ந்தவனா வான். இவனைப் பற்றிய செய்திகளை இந்நூல் மூன் றாம் பத்தின் செய்யுள்களாலும் பதிகத்தாலும் அறியலாம். இப்பத்தின் பதிகம் இம்மன்னனின் பெற் றோர் பெயர்களைக் குறிப்பிடாவிட்டாலும், இவனை 'இமயவரம்பன் தம்பி' எனக் குறிப்பிடுவ தால் அவற்றை எளிதாக அறிந்துகொள்ள முடிகிறது. இவன் தந்தையின் பெயர் உதியஞ்சேரல்; தாயின் பெயர் வெளியன் வேண்மாள் நல்லினி.

குட்டுவன் என்பது இவன் இயற்பெயராகக் கரு தப்படுகிறது. 'பல்யானைச் செல்கெழு' என்னும் அடைமொழி இவன் பெற்றிருந்த யானைப்படை மிகுதியாலும், இவனது பேராற்றலாலும் அமைந்த தாகலாம். இது கருமையும் வலிமையும் பொருந்திய மேகம் போன்ற யானைகளை மிகுதியாகத் தன் படையில் கொண்டிருந்தவன் என்னும் கருத்துடை யது. மூன்றாம் பத்திலமைந்த பாடல் ஒன்றில் (29) 'எயில்கடக்கும், பெரும் பல்யானைக் குட்டுவன், வரம்பில் தானை' என வருவது இக்கருத்திற்கு அர ணாக அமைகிறது.

இம்மன்னன் உம்பற்காடு என்னும் பகுதியில் தன் செங்கோலாட்சி நிகழுமாறு செய்தான். பகை

வருடைய அகப்பா என்னும் அரணை அழித்துப் பகலில் அதற்கு எரியூட்டினான். தமிழகத்தின் கிழக்குக் கடல்சார்ந்த பகுதிகளையும் போரில் கைப்பற்றித் தன்னாட்டோடு இணைத்து, இரண்டு கடல்களையும் தன்னாட்சிக்குட்பட்டனவாக்கினான். தன் குலத்தில் தோன்றித் தனக்கு மூத்தவர்களாக விளங்கிய பெரியவர்களைப் பேணி, அவர்களுக்குத் தன் நாட்டினைப் பகிர்ந்து கொடுத்தான். இரு கடற்கரையிலிருந்தும் யானைகளைத் தொடர்நடையாக அனுப்பி, அக்கடல் நீரை ஒரே நேரத்தில் தலைநகரத்திற்குக் கொணர்ந்து புனித நீராடப் பெற்றான். அயிரை என்னும் தன்னாட்டு மலையில் உறையும் கொற்றவையினைத்தன் மரபினோர் போல வழிபட்டான். இவனுடைய புரோகிதரான நெடும் பாரதாயனார் துறவு பூண்டு காடு செல்ல அதனைக் கண்ட இவனுக்கும் துறவுள்ளம் பிறக்கக் காடு செல்ல முற்பட்டான். இம்மன்னன் இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவை பதிகத்தாலறிந்த செய்திகளாகும்.

இம்மன்னன் கொங்கு நாட்டினை வென்று தன் நாட்டோடு இணைத்துக் கொண்டான் என்பதனைப் பாலைக்கௌதமனார் தம் பதிற்றுப் பத்துப் பாடலொன்றில் (22), 'ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த, வேல்கெழு தானை வெருவருதோன்றல்' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் அதேபாடலில், இவனது அகப்பா வெற்றியினைக் 'கடுமிளைக் குண்டு கிடங்கின், நெடுமதில் நிரைப்பதணத்து, அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த, பொன் புனை உழிஞை வேல்போர்க் குட்டுவ' என்ற பகுதியில் சுட்டியுள்ளார். மேலுமவர் இம்மன்னன், இலக்கணம், பொருள்நூல், வானசாத்திரம், சுருதி, மெய்யறிவு ஆகிய துறைகளில் புலமை மிக்கிருந்தான் என்றும் வேத வேள்வியில் நாட்டங்கொண்டிருந்தான் என்றும் (21) கூறியுள்ளார்.

பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தால் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனாரிடம், 'நீர் வேண்டிய கொண்மின்' என்று கூற, அவரும் 'யானும் என் பார்ப்பனியும் வீடு பேறு எய்த வேண்டும்' என்று கூறப் பெரியவர்கள் கூறியபடி, பத்துப் பெருவேள்விகள் செய்து, அவர்களை வீடு பேறடையச் செய்தான் என்று பதிகம் கூறுகிறது.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**: பதிற்றுப்பத்து என்னும் சங்க இலக்கியத்தால் அறியப்படும் சேர வேந்தர்களுள் ஒருவன். குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் இம்மன்னன்மீது பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடியுள்ளார். இந்நூலினால் அறியப்படும் சேர மன்னர்கள் உதியஞ்சேரல் மரபினர் என்றும், இரும்பொறை மரபினர் என்றும் இரு வகையில் அடங்குவர். இம்மன்னன் உதியஞ்சேரல் மரபினைச் சார்ந்தவனாவான். இவனைப் பற்றிய செய்திகள் இந்நூலின் இரண்டாம்பத்தின் செய்யுள்களிலும். அதன் பதிகத்திலும் காணக் கிடக்கின்றன.

ஆதன் என்பது சேரர்க்குரிய பெயர்களுள் ஒன்று. சேரலாதன் என்பது இம்மன்னனின் இயற்பெயராகலாமென்றும், பிற சேரலாதனின் வேறுபடுத்தறிய நெடுஞ்சேரலாதன் எனப்பட்டான் என்றும். நெடுமை என்னும் அடை இம்மன்னனின் பெருமை முதலிய உயர்வு கருதி அமைந்தது என்றும் கருதப்படுகிறது. இமயம் வரை சென்று வென்ற வெற்றியின் அறிகுறியாக இம்மன்னன் இமயவரம்பன் என்னும் சிறப்படைமொழி பெற்று விளங்குகிறான். பதிற்றுப்பத்தின் பதிகங்கள் உணர்த்தும் சேர வேந்தர்தம் தாய முறை பற்றி ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடிருப்பினும், அங்கு மக்கட்டாய முறையே மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பது பெரும்பாலோர் முடிபாகும். அவ்வகையால் இந்நெடுஞ்சேரலாதனின் தந்தை உதியஞ்சேரலும், தாய் வெளியன் வேண்மாள் நல்லினியும் ஆவர். இவன் தம்பி, மூன்றாம் பத்தின் தலைவனான பல்யானைச் செல்கெழுகுட்டுவனாவான். இம்மன்னனுக்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி, சோழன் மணக்கிள்ளி என்னும் இரண்டு மனைவியர் இருந்துள்ளனர். பதுமன்தேவி வழியாகக் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும், மணக்கிள்ளி வழியாகக் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும் பிறந்தனர். இம்மக்கள் இருவரும் முறையே பதிற்றுப் பத்தின் நான்கு, ஐந்து ஆகிய பத்துகளின் தலைவர்களாக விளங்குகின்றனர்.

இம்மன்னன் இமயம் வரை சென்று வென்று அம்மலைமேல் வில் இலச்சினையைப் பொறித்தான்; தமிழகம் முழுவதையும் தன் செங்கோலாட்சியின் கீழ்க் கொணர்ந்தான்; ஆரியர்களைப் பணியச் செய்தான். நயனில்லாத வன்சொல்லினரான யவனர்களைப் போரில் அகப்படுத்தி, அவர்தம் கைகளைப் பின்புறத்தில் கட்டித் தலையில் நெய்யினை ஊற்றினான். அவர்களிடமிருந்து பின்னர் நன்கலங்களையும் வயிரங்களையும் தண்டமாகப் பெற்று விடுவித்தான். அவ்வாறு பெற்ற பொருள்களைத் தம்மவர்க்கு வழங்கினான். தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனாருக்குத் தன்னாட்டைச் சார்ந்த உம்பற் காட்டுப் பகுதியில் 500 ஊர்களைப் பிரமதாயமாக வழங்கியதோடு, தனது தென்னாட்டு வருவாயுள் 28 ஆண்டுகள் பாகமும் நல்கினான். இவன் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவை பதிகத்தாலறிந்த செய்திகள்.

கடல்நடுவே, கடம்பினைக் காவல் மரமாகக் கொண்டிருந்த பகைவரொடு இம்மன்னன் போர் புரிந்து பெற்ற கடல் வென்றியும், ஆரியர் துவன்றிய இமயம் வரை இருந்த பகை மன்னர்களை வென்ற தரைவென்றியும் குமட்டூர்க் கண்ணனாரால் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. கடற்கடம்பெறிந்து இவன் பெற்ற வெற்றியினை மாமூலனார், இரண்டு அகநானூற்றுப் பாடல்களிலும் (227, 347) இமயத்தில் விற்பொறித்த செய்தியினை ஒருபாடலிலும் (127) சுட்டியுள்ளார். சிலப்பதிகார வஞ்சிக் காண்டம் போற்றும் செங்குட்டுவன் தந்தையும் இம்மன்னனும் ஒருவரேயாவர் என்பது கூறப்படுகிறது.

***இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம்,*** இமாசலப் பிரதேச மாநிலச் சட்டப்பேரவை இயற்றிய சட்டத்தின் அடிப்படையில், 1970-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 22-ஆம் நாள் சிம்லா நகரிலுள்ள கோடைமலைப் (Summer Hill) பகுதியில் தொடங்கப் பெற்றது. இப்பல்கலைக்கழகம் தோன்றுவதற்குமுன், பஞ்சாபுப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளாக (Affiliated Colleges) இருந்து வந்த இமாசலப் பிரதேசக் கல்லூரிகள் யாவும், இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன. இங்குப் பட்ட மேற்படிப்பு மையம் (Post Graduate Centre) ஒன்றும் இப்பல்கலைக்கழகப் பொறுப்பில் இயங்கி வருகிறது. சோலான் (Solan) பகுதியில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரியும், பாலம்பூர் (Palampur) பகுதியிலுள்ள வேளாண்மைக் கல்லூரியும் முன்பு இமாசலப் பிரதேசப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பில்தான் இருந்து வந்தன. இக்கல்லூரியிரண்டினையுங் கொண்டு 1978-ஆம் ஆண்டில் தனித்ததொரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தோன்றியது. இப்பல்கலைக்கழகம் சிம்லாவில் ஒரு மாலை நேரக் கல்லூரியையும் (Evening College) நடத்தி வருகிறது.

உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதவியல் ஆகிய அறிவியற் பாடங்களும் ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், இந்தி, வடமொழி ஆகிய மொழிகளும், அரசியல், உளவியல், பொருளியல், கல்வியியல், வரலாறு, வணிகவியல் (Commerce), வணிகத் தொழில் நிருவாகம் (Business Administration) ஆகிய கலையியற் பாடங்களும் இப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுகின்றன. சட்டவியலுக்கும் இசைக்கும் தனித்தனித் துறை இங்கு உண்டு.

இமாசலப் பிரதேசப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த கல்லூரிகள் 24 உள்ளன. அவை இளங்கலை, இளம் அறிவியல் பட்டப் படிப்பிற்குப் பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன. இப்பல்கலைக் கழகத்துடன் இணைந்த 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் (Associated Institutions)வடமொழிக் கல்லூரிகளாக உள்ளன. இங்கு வடமொழியுடன் இக்கால இந்திய மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன.

இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம் 1971 ஆம் ஆண்டு அஞ்சல் வழித் தொடர் கல்வியையும் அளித்து வருகிறது. கல்வியியல், வணிகவியல், பொருளியல், ஆங்கிலம், இந்தி, வரலாறு, அரசியல், வடமொழி ஆகியவற்றில் முதுநிலைப் பட்டப் படிப்புக்கான கல்வியை அஞ்சல்வழியாக இப்பல்கலைக் கழகம் வழங்கி வருகிறது.

இமாசலப் பிரதேசத்தில் வசிக்கும் பெண்களும், இம்மாநிலத்தைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினரும் ஆசிரியர்களும் உடல் ஊனமுற்றோரும் இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்விசாராப் பணியாளர்களும் (Non-teaching Staff) தனியாகப் படித்துத் தேர்வு எழுத இப்பல்கலைக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம் எம்.பில்., பிஎச்.டி., டி.லிட்.போன்ற உயர்கல்விப் பட்டப் படிப்புக்கான வசதிகளையும் அளிக்கிறது.

இமாசலப் பிரதேசப் பல்கலைக் கழகத்தில் 1981 82-ஆம் கல்வியாண்டில் சேர்ந்திருந்த மாணவர்கள், மாணவிகளின் எண்ணிக்கை முறையே 13,210-உம், 4,125-உம் ஆகும்.

***இமாசலப் பிரதேசம்*** இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களுள் ஒன்று. இமாசலப் பிரதேசம் முழுமை பெற்ற மாநிலமாக 1971-ஆம் ஆண்டு சனவரி மாதம் 25-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது இந்திய ஒன்றியத்தின் 18-ஆம் மாநிலமாக அமைந்துள்ளது.

இமாசலப் பிரதேசம் (Himachal Pradesh) இந்தியாவின் வடமேற்கு மூலையில் இமயமலைத் தொடர்களின் இடையில் அமைந்துள்ளது. இதன் வடக்கில் சம்மு காசுமீர (Jammu Kashmir) மாநிலமும் தென்கிழக்கில் உத்தரப் பிரதேச மாநிலமும், தெற்கில் அரியானா மாநிலமும், மேற்கிலும் கிழக்கிலும் பஞ்சாபு மாநிலமும் எல்லைகளாம். இம்மாநிலம் இந்தியாவுக்கும் திபெத்திற்கும் எல்லையாக உள்ளது.

இம்மாநிலம் பெரும்பாலும் மலைகளைக் கொண்டுள்ளது. மலைகள் 460 மீட்டரிலிருந்து 6400 மீட்டர் வரை உயர்ந்துள்ளன. உயரம் காரணமாகத் தட்பவெப்ப நிலையிலும் பலவகை வேறுபாடுகளைக் காணலாம்.

பரப்பு: இமாசலப் பிரதேசத்தின் பரப்பளவு 55, 673 ச.கி.மீ. ஆகும்.




இமாசலப் பிரதேசம்

மக்கள்தொகை: இம்மாநிலத்தின் மக்கள் தொகை 42,37,569. (1981).

இயற்கைப் பிரிவுகள்: இமாசலப் பிரதேச மாநிலத்தை வடபகுதி, தென் பகுதி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். வடபகுதி மட்டமானகோடைக் காலத்தையும் குளிர்காலத்தில் கடுங்குளிரையும் மிகுதியான பனிப்படலத்தையும் பெற்றுள்ளது. ஆனால், தென்பகுதியோ சமவெளிகளைப் போன்று மிகுந்த வெப்பத்தைக் கொண்டுள்ளது.

சிம்லா, சிர்மூர் யாவட்டங்களில் வண்டல்மண் காணப்படுகிறது. ஏனைய பத்து மாவட்டங்கள் காடுகளையும் குன்றுகளையும் கொண்டுள்ளன.

இமாசலப் பிரதேச மாநிலத்தில் ஆண்டு மழையளவு ஏறத்தாழ 180 செண்டி மீட்டர்களாம். காங்ரா (Kangra) மாவட்டத்தைச் சார்ந்த தருமசாலாவில் மழை மிகுதி.

ஆறுகள்: இமாசலப் பிரதேசத்தில் சீனாபு, (Chenabe), இராவி (Ravi), பியாசு (Beas), சட்லசு (Sutay), இயமுனை (Jumna) போன்ற சிறப்பான ஆறுகள் பாய்கின்றன. இவ் ஆறுகளில் ஆண்டு முழுதும் நீர் வரத்து உண்டு. மழைக்காலங்களில் பெய்யும் மழையாலும் கோடைக்காலங்களில் பனியுருகுவதாலும் இவை வற்றா ஆறுகளாம். இயற்கையாக எழுந்துள்ள நீர்த்தேக்கங்களாலும் ஆறுகள் மலைப்பகுதியிலிருந்து சமவெளிப்பகுதிகளில் பாய்வதாலும் நீர்மின்சாரம் பெற நல்வாய்ப்பு உள்ளது.

மாநிலம் உருவான வரலாறு:இமாசலப் பிரதேசம் 1948-ஆம் ஆண்டு ஏப்பிரல் 15-ஆம் நாள் இந்திய அரசின் நேராட்சிப் பகுதியாக ஆயிற்று. அப்போது பஞ்சாபைச் சார்ந்த முப்பது மலை அரசுகளை ஒன்றாக இணைத்து இமாசலப் பிரதேசம் என்று பெயர் சூட்டினர். அது 1951-இல் 'சி' பிரிவு அரசாக்கப்பட்டு ஒரு துணை ஆட்சியின்கீழ் வந்தது. அக்காலத்தில் அந்தப் பகுதியை ஆட்சி செய்ய 36 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றமும் மூவரைஅமைச்சர்களாகக் கொண்ட அமைச்சரவையும் உருவாக்கப்பட்டன.

அரசு சீர்திருத்தக்குழு 1954-இல் இமாசலப் பிரதேசத்தைப் பஞ்சாபுடன் இணைக்கக் கோரிப் பரிந்துரைத்தது. ஆனால், இமாசலப் பிரதேச மக்கள் அப்பரிந்துரையைக் கடுமையாக எதிர்க்கவே, அதனைச் செயற்படுத்த முடியாமல் போயிற்று. அதனால், இமாசலப் பிரதேசம் தனித்தன்மையை இழக்காமல் தொடர்ந்து நீடிக்கலாயிற்று. இமாசலப் பிரதேசம் 1956 நவம்பர் முதல் நாள் மீண்டும் இந்திய ஒன்றியத்தின் நேராட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுத் துணை ஆளுநரும் நியமிக்கப்பட்டார். ஆனால், அதன் சட்டமன்றம் கலைக்கப்பட்டது. சட்டமன்றத்திற்கு மாறாக 1957-இல் பிரதேச ஆட்சிக்குழு ஒன்று (Territorial Council)உருவாக்கப்பட்டது. அவ்வாட்சிக் குழுவிற்குக் குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் சிலவே கொடுக்கப்பட்டிருந்தன. நாடாளுமன்றத்தில் நிறைவேறிய 1962-ஆம் ஆண்டு அரசியலமைப்பு 14-ஆம் திருத்தச்சட்டப்படி, இமாசலப்பிரதேசம் 1963-இல் இந்திய அரசின் நேராட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. அதனால், சட்டமன்றத்தையும் அமைச்சர் குழுவையும் இமாசலப் பிரதேசம் பெற்றது.

இமாசலப் பிரதேசத்தில் 1966 அக்டோபர் வரை ஆறு மலை மாவட்டங்களே இருந்தன. அவை மகாசு, மண்டி, சம்பா, சிர்மூர், பிலாசுபூர், கிண்ணார் என்பனவாம். பின்னர் 1966 நவம்பர் மாதத்தில் பஞ்சாபு மாநிலத்தைச் சார்ந்த மலைப் பகுதிகளான சிம்லா, காங்ரா, குலு, (Kulu) இலாகுல்-இசுப்பிட்டி (Lahul Spiti) போன்ற மாவட்டங்களும், ஓசியாபூர் (Hoshiarpur), கிருதார்பூர் மாவட்டங்களைச்சார்ந்த சில பகுதிகளும், அம்பாலா மாவட்டத்தைச் சேர்ந்த

நலாகார் வட்டமும் இமாசலப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டதால் அதன் பரப்பு விரிவடைந்தது.

இமாசலப் பிரதேசம் 1971 சனவரி 25-ஆம் நாள் இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றாய் பத்து மாவட்டங்களுடன் மீண்டும் திருத்தி அமைக்கப் பட்டது. சிம்லா அதன் தலைநகராயிற்று. மாவட் டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு 1972–73-இல் பன்னி ரண்டாக உயர்ந்தன.

| மாவட்டம் | பரப்பு | மக்கள் தொகை | தலைநகர் |
|---|---|---|---|
| 1. அமீர்பூர் | 1118 | 3,17,761 | அமீர்பூர் |
| 2. இலாகுல்&இசுபிட்டி | 13835 | 32,100 | கெய்லாங்கு |
| 3. உனா | 1540 | 3,17,422 | உனா |
| 4. காங்ரா | 5739 | 9,90,758 | தருமசாலை |
| 5. கிண்ணர் | 6401 | 59,547 | கால்பா |
| 6. குலு | 5503 | 2,38,734 | குலு |
| 7. சம்பா | 6528 | 3,11,147 | சம்பா |
| 8. சிம்லா | 5131 | 5,10,932 | சிம்லா |
| 9. சிர்மூர் | 2825 | 3,06,952 | நகான் |
| 10. சோலன் | 1936 | 3,03,280 | சோலன் |
| 11. பிலாசுபூர் | 1167 | 2,47,368 | பிலாசுபூர் |
| 12. மண்டி | 3950 | 6,44,827 | மண்டி |
| | 55673 | 42,37,569 | |

நிருவாகம்: சட்டமன்றத்தின் ஒரே அவையை மட்டும் இமாசலப் பிரதேசம் கொண்டுள்ளது. அதனை விதான சபா என்பர். அதன் உறுப்பினர் எண்ணிக்கை 68.
( மாவட்டங்கள் பற்றிய விவரங்கள் மேலே காண்க)

வேளாண்மை: வேளாண்மையிலும் தோட்டக் கலைப் பயிர்களைச் சாகுபடி செய்தலிலுமே இமா சலப் பிரதேச 75 விழுக்காடு மக்கள் ஈடுபட்டுள்ளனர். விளைநிலத்தில் ஏறத்தாழ 16 விழுக்காடு நிலத்தில் நீர்ப்பாசன வசதி உள்ளது. பல்வேறு வகையான பழ வகைகள், உருளைக் கிழங்கு, இஞ்சி, காய்கறி வகை கள், ஆப்பிள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன. கோதுமை, மக்காச்சோளம், நெல் போன்றவை சிறப் பான உணவுப்பொருள்கள்.

இமாசலப் பிரதேசத்தின் மலை உயரம் மாறு படுவதனால் அதன் தட்ப வெப்ப நிலையிலும் மாறு தல் காணப்படுகிறது. இங்குள்ள தட்டவெப்ப நிலை பல்வேறு வகைப் பழங்களைப் பயிரிடத் தகுதி வாய்ந்தது. பழங்களை விளைவிக்கும் நிலப்பரப்பு ஆண்டாண்டுதோறும் விரிவாக்கப்பட்டு வருகிறது. இதனால், இவ்வரசுக்கு மிகுதியான வருமானம் கிட்டு கிறது. காட்டில் விளையும் பழமரங்களைப் பெருக்கி வளர்த்து உயர்ந்தவகைப் பழங்களைப் பயிரிடும் முயற்சியும் அரசால் கையாளப்படுகிறது.

முசுக்கட்டைச் செடி, ஒலிவமரம், அத்தி, உண வுக்காகும் மழைக்குடைத்தாவரம் போன்ற புதுவகைப் பயிர் பச்சைகளை வளர்க்க அரசு பெருமுயற்சி செய்து வருகிறது.

கால்நடை வளர்ப்பு: மலைப்பாங்கான பகுதி களாக விளங்குவதால் இங்கு எந்திரக் கருவிகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது எளிதன்று. எனவே, வேளாண்மை செய்யக் காளைமாடுகளையே பெருமளவு பயன்படுத்துகிறார்கள். செம்மறி ஆடும் வெள்ளாடும் வளர்க்கும் தொழில் சிறப்புற்று விளங்கு கிறது. ஆட்டு உரோமம், இறைச்சி போன்றவை மலைவாழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படுவன.

காடுகள்: காடுகள் 1981-82-ஆம் ஆண்டில் 21,142 ச.கி.மீ. பரப்பில் இருந்தன. இது மொத்தப் பரப்பில் 38 விழுக்காடாகும். பெரும்பாலான காடுகள் அரசுக்குச் சொந்தமானவை. தேவதாரு, கெய்ல், சில், ஊசியிலை மரம், வெள்ளை பர்மரம், நியோசா பைன்மரம் போன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன. நியோசா பைன் மரங்கள் இந்தியாவிலேயே இங்கு மட்டும்தான் காணப்படுகின்றன. சால், பன், ஒக்கு (Oake), வால்நட்டு (Walnut), மாபில் (Maple), பாப்லர் (Paplar), சீமல், துன், சிசாம் போன்றபரந்த இலைகளைக் கொண்ட தாவர வகைகளும் இக் காடுகளில் வளருகின்றன.

கனிமங்கள்: உப்பு, மாக்கல், களிக்கல், சுண்ணாம்புக்கல், பாரிய கந்தகை (Barytes), பாறை வகைகள் (Dolmite) நிமிளை என்னும் கந்தகக்கல் போன்றவை சிறப்பாக இம்மாநிலத்தில் கிடைக்கும் கனிமங்களாகும். இரும்புத்தாதுக்கள், செம்பு, ஈயம், பாசுபேட்டு இன்னும் பல்வேறு கனிப் பொருள்கள் இம்மாநிலத்தில் கிடைக்கும் என்று தெரிய வந்துள்ளது. மண்டி மாவட்டத்தில் கல்லுப்புப் படிவங்களும் சிர்மூர் மாவட்டத்தில் களிக்கல் படிவங்களும் உள்ளன. மாக்கல் படிவங்கள் பெரு மளவில் மண்டி, சம்பா, காங்ரா மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிர்மூர், பிலாசுபூர், காங்ரா ஆகிய மாவட்டங்களிலும் மண்டி, சிம்லா ஆகிய மாவட்டங்களிலும் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. சிர்மூர், பிலாசுபூர், காங்ரா மாவட்டங்களில் காணப்படும் சுண்ணாம்புக் கல் சிமெண்டுத் தொழிற்சாலைகளுக்குப் பெரிதும் பயன் படுகின்றது.

மின்சாரம்: இமாசலப் பிரதேசம் நீர்மின்சக்திக்குப் பெயர்பெற்றது. இங்கு 12500 மெகாவாட்டு மின்சாரம் உற்பத்தியாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. கிரி, பச்சி (Giri & Bassi) என்னும் ஊர்களில் நீர்மின் திட்டங்கள் செயற்படுகின்றன. மேலும், பஞ்சாபு மாநிலத்திற்குச் சொந்தமான சோசிந்தர் நகர் நீர்மின் திட்டமும், பைரா சியூல் (Baira-Suil) நீர்மின் திட்டமும்தேசிய நீர்மின் கழகத்திற்கு உரிமை யானவை பியாசு சட்லசு இணைப்பு நீர்மின் திட்டம் பாக்ரா. நிறுவனத்தால் கண்காணிக்கப்பட்டாலும் இமாசலப் பிரதேசத்திலேயே அது அமைந்துள்ளது.

கிராமங்களில் முக்கால் பங்குக்கு மேற்பட்டவை மின்சாரத் தொடர்பைக் கொண்டுள்ளன. தேவைப் பட்டபோது பிறமாநிலங்களிலிருந்தும் மின்சாரம் விலைக்கு வாங்கப்படுகிறது.

தொழிற்சாலைகள்: இமாசலப் பிரதேசம் தொழிற்சாலைகள் குறைந்த மாநிலமாகும். இயற்கை வளம் மிகுதியாக இருந்தாலும், தொழிற்சாலைகள் வளர்ச்சியுறாமல் பின்தங்கிய நிலையில் உள்ளன 1980-81 ஆம் ஆண்டில் சிறுதொழிற்சாலைகள் 9200 செயற்பட்டன. அவற்றில் 40,000 மக்கள் பணியாற்றி னர். அவற்றைத் தவிர எண்ணற்ற குடிசை, கிராமக் கைத்தொழில்களும் இயங்குகின்றன. பர்வன்னோ (Parvanno) என்னுமிடத்தில் பழங்களைப் பதப் படுத்தும் தொழிற்சாலை நன்முறையில் செயற்படு கிறது. அரசு தொழிற்சாலைகளை நிலைநாட்டச் சலுகைகளையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

பெரும் தொழிற்சாலைகளும் இடைப்பட்ட தொழிற்சாலைகளும் நகான், உரோசின், பிலாசுபூர் போன்ற ஊர்களில் இயங்கி வருகின்றன. பன்னிரு மாவட்டங்களிலும் தொழிற்சாலை மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

போக்குவரத்து: இமாசலப் பிரதேசத்தில் சாலைகள் போக்குவரத்துச் சிறப்பாக அமைந்துள் ளது. நாட்டுடைமையாக்கப் பெற்ற 82 விழுக்காட்டுத் தடங்கள் அரசுச் சார்புடைய இமாசலச் சாலைப் போக்குவரத்து வாரியத்தால் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. சாமான்கள் போக்குவரத்து, தனியார் துறையினரால் நடத்தப் பெறுகிறது.

இமாசலப் பிரதேசம் மலைப் பகுதியாகையால் இருப்புப்பாதைகள் குறைவு. இங்கு இரு இருப்புப் பாதைத் தொடர்அமைப்புகள் உள்ளன. அவை சிம்லா வையும் கால்காவையும் சோகிந்தர் நகரையும் பத்தான்கோட்டையும் இணைக்கின்றன.

சிம்லாவுக்கு 25 கி.மீ. தொலைவில் சப்பர்கட்டி (Jubber Hatti) என்னுமிடத்தில் விமானநிலையம் ஒன்றை இந்திய அரசு கட்டிவருகிறது. சண்டிகாரி லிருந்து குலு மாவட்டத்தில் உள்ள பூந்தர் (Bhuntar) என்னுமிடத்திற்கு வான வழியுள்ளது.

குடிநீர் வழங்கும் ஏற்பாடும் இம்மாநிலத்தில் சீராக அமைக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் நல்வாழ்வுக்கான மருத்துவமனைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

கல்வி கற்கும் மாணவர் தொகையும் உயர்ந்து வருகிறது. கல்வி கற்றவர் 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 42.48 விழுக்காட்டினர் எனக் கருதப் படுகின்றனர். இங்குப் பொதுப் பல்கலைக் கழகம் ஒன்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றும் இராணுவப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் இயங்கிவரு கின்றன.

சுற்றுலா: சிம்லா, தல்அவுசி, தருமசாலை, குலு, காசாலி, சோலன், செயில், குப்ரீ போன்ற

இடங்களில் மலைவாசத்தலங்கள் அமைந்துள்ளமையால், ஆயிரக்கணக்கான பயணிகள் இமாசலப் பிரதேசத்திற்குச் சுற்றுலா வருகின்றனர்.

இமாசலப் பிரதேசக் காடுகளில் பிற மாநிலங்களில் காணப்படாத காட்டுவிலங்குகள் வாழ்கின்றன.

இம்மாநிலத்தின் சிறப்பான மொழி பகாரி (Pahari) என்பதாகும்.

**இமாம்**: என்ற சொல் மசூதியில் பணியாற்றும் தலைமை அதிகாரியைக் குறிக்கும். மக்களைத் தொழுகைக்கு இட்டுச் செல்வதே இவருடைய தலையாய கடமையாகும். தீர்க்கதரிசியாகிய முகமதுநபி தொழுகையை 'மெதினா'வில் (Medina) உள்ள அவருடைய மசூதியில் நடத்தினார். மெக்கா நகரில் உள்ள மசூதியில் 'காபா' (Kaba) இருக்கிறது. காலிபாக்கள் (Caliphs) சமயத் தொடர்பான செயல்களில் மட்டுமன்றி அரசியல்பற்றிய செய்திகளிலும் மக்களை வழிநடத்திச் சென்றனர். ஆகையால், அவர்கள் தலைமை இமாம்கள் என்று சொல்லப்பட்டனர்.

சிறப்புக் காலங்களில் பொதுத் தொழுகையைச் சிறப்பு விருந்தினரோ மதத் தலைவர்களோ நடத்தினர். இசுலாமிய சமய குருமார் பதவி மற்ற சமயங்களில் காணப்படுவது போன்று ஓர் அமைப்பு முறையின் அடிப்படையில் உருவாகவில்லை. நல்ல குணங்களும் திறமையும் உள்ள இசுலாம் மதத்தைச் சேர்ந்த அனைவரும் தொழுகையை வழி நடத்திச் செல்லலாம். ஆனால், வழக்கமாகத் தொழுகைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இமாமே தொழுகையை நடத்திச் செல்கிறார்.

சவுதி அரேபியாவில் அரசரே அரசியல் தலைவராகவும் இமாமாகவும் செயற்படுகிறார்.

ஓமன் நாட்டில் சுல்தான் தான் நியமித்த ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழுவின் உதவியுடன் ஆட்சி புரிந்தாலும், அந்நாட்டின் மலைப் பிரதேசத்தீவுகளில் வாழும் சில மக்கள் சுல்தானைவிட இமாமையே தலைவராக ஏற்றுக் கொள்கின்றனர்.

ஏமன் அரசாங்கத்தில் கி.பி. 897 முதல் 1962 வரையில் இமாம்தான் அரசியல் தலைவராகவும் சமயத்தலைவராகவும் கருதப்பட்டார். ஏமன் நாடு எகிப்தியர்கள், துருக்கியர்கள் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த போதிலும் இமாமே செல்வாக்கு மிக்கவராக விளங்கினார்.

மெசாது(Meshed) என்னும் ஈரானிய நகரில் உள்ள இமாம் 'ரிசா' என்பவரின் பொன் கூரையால் வேயப்பட்ட கல்லறையைக் காண ஆயிரக்கணக்கில் பயணிகள் செல்கின்றனர். இந்தச் சமயத் தலைவரின் கல்லறையைச் சுற்றித்தான் இந்த நகரமே உருவாக்கப்பட்டது. இந்நகரம் கி.பி. 1300-ஆம் ஆண்டு வளமுடையதாக இருந்தது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் தில்லியில் இமாம் இருக்கிறார். இவரே இந்தியாவில் உள்ள அனைத்து முசுலீம்களின் தலைவராவார். இவர் பண்டிகைக்காலங்களில் அனைத்து முசுலீம்களுக்கும் அறிவிப்புகள் விடுக்கிறார். இவரே தொழுகையை முன்நின்று நடத்துகிறார். பி.ச.

**இமிலிபிராண்டே (கி.பி. 1818-1848)**: பிராண்டே குடும்பத்தில் தோன்றிய சார்லட்டு, பிரான்வெல் (Branwell), இமிலி, ஆன் (Anne) ஆகிய நால்வரும் பாதிரியாராகிய பாட்ரிக்கு(Patrick)என்ற தம் தந்தையின் கண்டிப்பான பார்வையில் வளர்க்கப்பட்டனர். வெளியுலகப் பழக்கம் மிகுதியும் இல்லாமல் குறுகிய வட்டத்திற்குள் கட்டுப்பாட்டில் வளர்க்கப்பட்ட அவர்கள், கற்பனை செய்வதிலேயே மிகுதியும் ஈடுபாடு கொண்டார்கள். எப்போதும் நோய்வாய்ப்பட்டு வருந்தும் உடல்நிலை கொண்ட அவர்கள் தம் காலத்தை எழுத்துப் பணியில் செலவிடத் தொடங்கினார்கள். அவர்கள் முதலில் கவிதைகள் இயற்றினார்கள். பின்னர்ப் புதிய உலகம் அவர்களை அழைத்தது. சார்லட்டு பிராண்டே (Charlotte Bronte) சேன் அயர் (Jane Eyre) என்னும் புதினத்தாலும், இமிலி பிராண்டே (Emily Bronte) தம் 'விதரிங் ஐட்சு' (Wuthering Heights) என்னும் புதினத்தாலும் ஆங்கில இலக்கிய உலகில் தனிச்சிறப்பிற்குரிய இடத்தைப் பெற்றனர். அவர்கள் சகோதரி ஆனும் ஆக்னெசு கிரே (Agnes Grey) என்னும் புதினத்தை எழுதினார்.

பிராண்டே சகோதரிகளுள் இமிலி மிகவும் கூச்ச இயல்பு கொண்டவர். அவர்கள் வசித்த பொட்டல் வெளிப்பகுதியின் (Moor) அமைதியில் தம்மை இழந்து அதில் கலந்து தன்மயமான உலகில் வாழ்ந்தவர் இமிலி. இச்சகோதரிகளின் புதினங்கள் 'கரர் பெல்' என்ற புனை பெயரில்தான் முதலில் வெளியிடப்பட்டன. அவர்கள் காலத்தில் உணர்வு மயமாய்ப் புதினங்கள் படைக்க எந்தப் பெண் எழுத்தாளருக்கும் துணிவில்லை. சார்லட்டு பிராண்டேதான் முதன் முதல் இப்புரட்சிக்கு வித்திட்டார். பெண்கள் படும் பாடுகளை வெளிப்படையாகப் பேசத் துணிந்தவர்கள் இச் சகோதரிகள் என்பது குறிக்கத்தக்கது.

இமிலி தம் புதினத்தில் தாம் வளர்ந்த புறச் சூழலின் ஆன்மாவாகத் தம்மை வெளிப்படுத்தினார். இவர் எழுத்துகளில் ஒருவகையான சோகம் ததும்பக் காணலாம். புகழ்பெற்ற இவர் தம் 'விதரிங் ஐட்சு'

என்னும் புதினத்தில் அவல வெளிப்பாட்டினை ஆங்கிலப் புதினங்களில் மிக அருமையாகத்தான் காண முடியும். இந்தப் புதினம் அமைப்பு முறையிலும் மனித ஆழ்மன உணர்வுகளையும் வாழ்க்கைத் துயரங்களையும் வெளிப்படுத்தியிருப்பதிலும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இந்தப் புதினம் அவர்கள் வாழ்ந்த பொட்டல் வெளி நிலத்தின் தனிமையையும் வெறுமையையும் மிக இயல்பாகச் சித்திரிக்கிறது. பாத்திரப் படைப்பு மிக உன்னதமானது. அவர்கள் உணர்ச்சி வெளிப்பாட்டில் கவிதையியல்பினைக் காணமுடியும். திடுக்கிடும் திருப்பு முனைகளையும், உச்சக்கட்டங்களையும் ஏறக்குறைய நம்ப முடியாத உணர்ச்சிக் குமுறல்களையும், அவற்றின் விளைவான அவலத் தாக்கத்தினையும் உணர முடிகிறது. ஒரே ஒரு புதினத்தால் நிலையான இடம் பெற்றுள்ளதே இமிலியின் படைப்பாக்கத் திறனின் சிறப்பினைக் காட்டும்.

பிராண்டே சகோதரிகளின் படைப்புகள் ஆங்கிலப் புதினங்களின் புனைவியல் புதுமைக்கு எடுத்துக்காட்டுகளாகும். அன்றியும் கதைத் தலைவியை வலுவுடைய உணர்ச்சிமயமான பாத்திரமாக உருவகித்து முதன்மை கொடுத்த புதுமையும் இவர்களுக்கே உரியதாம்.

இமிலியின் கவிதைகள் சிலவும் சிறப்பானவை. இமிலி இயற்கைக்கு அப்பாற்பட்ட கற்பனை உலகங்களைக் கலைநுணுக்கத்துடன் படைத்துக் காட்டினார். அவர் சொல்லில் அவரை இனம் காண வேண்டுமென்றால் 'அவர் வானப் பெருவெளியில் தோன்றி மறையும் ஆன்மா' எனலாம். அவர் சிந்தனை, வாழ்க்கை, இறப்பு, இறவாத்தன்மை எல்லா வற்றிலும் ஆழம் உண்டு. வேர்டுசுவொர்த்து (Wordsworth), சேக்சுபியர் (Shakespeare) போன்ற பேரறிஞர்களுக்கு இணையான கலைப் பார்வையினை இவரிடம் காண முடிகிறது. பி.எஸ்.வே.

**இயக்கக் குறையுடைமை** என்பது குழந்தைகளிடம் காணப்படும் பொதுவான சில நடத்தை வேறுபாடுகளைக் குறிக்கும். தைராய்டு சுரப்பியின் கோளாறுகளினால் சில குழந்தைகள் வயதுக்கு மீறிய அல்லது குறைந்த உடல் வளர்ச்சியை அடைகின்றனர். இது தைராய்டின் மிகை இயக்கம் (Hyperthyroidism) காரணமாக ஏற்படுகிறது. தைராய்டின் குறை இயக்கம் (Hypothyroidism) காரணமாகவும் வேறு உயிர்ப்பொருள் கோளாறுகளின் (Metabolic disorders) காரணமாகவும் சில குழந்தைகள் தம் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியை அடைவதில்லை. இத்தகைய குழந்தைகள் தங்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கும் திறன்களை வளர்த்துக் கொள்ளாமல் கூச்சம் மிகுந்தவராகவும் மற்றக் குழந்தைகளிடமிருந்து ஒதுங்கியும் வாழ்கின்றனர். இவர்கள் பெரும் பகுதியான நேரத்தைக் கற்பனையுலகில் செலவிடுகின்றனர். வேறு சில குழந்தைகள் தம் குறைகளை மறைக்கப் பெருமுயற்சி எடுத்து அது பயனற்றுப் போவதால் மனக்குலைவு அடைகின்றனர். உடல் இயக்கக்குறை (Physical Motor Retardation), தெளிவிலாத கையெழுத்து, தெற்றுதல் (Stuttering), திக்குதல் (Stammering), மழலைப் பேச்சு (Lisping), வேறு பல வகைகளான பேச்சுக் குறைபாடுகள், இடக்கைப் பழக்கம் முதலியவற்றையுடைய குழந்தைகள் இயக்கக் குறையுடைய (Motor Retardation) குழந்தைகளாகக் கருதப்படுகிறார்கள். இக்குறைகள் குழந்தைகளுடைய கல்வி வளர்ச்சியில் குறுக்கிடுகின்றன. நுண்ணறிவு வளர்ச்சியைத் தடை செய்கின்றன; குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவித்து, இவர்களின் ஆளுமை வளர்ச்சியையும் பாதிக்கின்றன. தம்மையொத்த குழந்தைகள் தம்மைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்பது பற்றிச் சிறு குழந்தைகள் அறிய விரும்புகின்றனர். பிறர் தம்மை இகழ்வது கண்டு தம்முடைய திறன்களில் பெருமளவு நம்பிக்கையின்மையை அடைகின்றனர். இதனால், இத்தகைய குழந்தைகளிடம் காப்புணர்வு குறைகிறது. மனவெழுச்சிச் சமநிலையும் சீர்குலைகிறது. இதன் காரணமாகப் பல்வேறு நடத்தைச் சிக்கல்கள் இக்குழந்தைகளிடம் எழக்கூடும். இக்காரணத்தினால் இவர்களிடம் உடல் ஊனமுற்ற குழந்தைகளைப் போன்று ஆளுமைப் பிறழ்வுகள் ஏற்படுகின்றன.

குழந்தைப் பருவத்து வளர்ச்சி நிலைகளில் இயக்கக்குறையுடைமை போன்ற நடத்தைகள் இயக்கக் குறையில்லாத சில குழந்தைகளிடமும் காணப்படலாம். எடுத்துக்காட்டாகப் பள்ளியில் ஆசிரியர்களிடமிருந்து ஏற்புடைமை மறுக்கப்படும் பொழுது சில குழந்தைகளிடம் திக்குதல், தெற்றுதல், கையெழுத்துக் கோளாறுகள் போன்ற குறைகள் சிறிது காலத்திற்குக் காணப்படுகின்றன. ஆசிரியர்களின்மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாகவும், நல்ல எழுதுகோல் இல்லாமை, வகுப்பறையில் தாம் அமரும் இடம் நெருக்கமானதாக இருத்தல், நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் இல்லாமை, தம்முடைய மேசை நாற்காலி ஆகியவை பழுதாகியும் உடைந்தும் இருத்தல் போன்ற காரணங்களினாலும் குழந்தைகள் இயக்கக் குறைகளைச் சிறிது காலத்திற்கு அடைகின்றனர். இச்சூழமைவுகள் ஆசிரியர் கவனத்திற்கு வந்து சீர்திருத்தப்பட்டால் குழந்தைகளிடம் காணப்படும் இயக்கக் குறைகள் தாமாகவே நீங்கி விடுகின்றன.

சிறுவயதில் ஒருவனுக்கு ஏற்படும் கசப்பான அனுபவங்களின் காரணமாக வாழ்நாள் முழுவதும் சில

இயக்கக் கோளாறுகளும் கூச்சமும் இருப்பதைப் பார்க்கலாம். இத்தகையவர்களுக்கு ஏற்படும் குழந்தைப்பருவ அல்லது பள்ளிப் பருவ அனுபவங்களை யொட்டி மனவெழுச்சிகள் நனவு நிலையிலிருந்து நனவிலிக்குத் தள்ளப்பட்டு ஆழ்மன ஒடுக்கல்களாக இருக்கின்றன. இவை உளக்கோளாறுகளுக்கும் சில நேரங்களில் காரணமாகின்றன. இத்தகைய ஆழ்மன ஒடுக்கல்களை உளப்பகுப்பு முறையினைக் கொண்டு வெளியே கொண்டு வரமுடியும். இவற்றை உளவழி மருத்துவமுறையினால் குணப்படுத்தலாம்.

**இயக்கத்திறன் சோதனை**: தொழிலகங்களில் குறிப்பிட்ட சில பணிகளில் இயக்கத்திறனும் இயக்க ஒருங்கிணைவும், தொழில் வல்லுநர்களிடத்தும் தொழிலாளர்களிடத்தும் மிகுதியாகத் தேவைப்படுகின்றன. இத்திறன்கள் ஒருவரிடம் அமைந்துள்ளனவா என்றும், அமைந்திருப்பின் அவை எந்த அளவிற்கு அமைந்திருக்கின்றன என்றும், உளவியல் முறையில் சோதனை செய்து அறிவதற்குப் பயன்படும் அளவீட்டுமுறை இயக்கத்திறன் சோதனை (Motor Coordination Test) எனப்படும். கைகளின் இயக்கத்திறனை மதிப்பிடுவதற்கு ஓ-கானர் விரல் திறமைச் சோதனை (O Connor Finger Dexterity Test) என்னும் சோதனை, நுட்பமாக எந்திர வேலைகளில் ஈடுபடுவோரைத் தேர்ந்தெடுக்கும்பொழுது பயன்படுத்தப்படும் உளவியல் சோதனையாகும். ஒரு பலகையில் வரிசைக்குப் பத்து வீதம்பத்துவரிசைகளில் 100 சிறு துளைகள் இருக்கும். பலகைக்கு அருகில் ஒரு பெட்டியில் ஊசிகள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு நேரத்தில் 3 ஊசிகள் வீதம் விரல்களில் எடுத்து மேல் வரிசையை இடப் பக்கமிருந்து வலப் பக்கமாக ஒவ்வொரு துளையிலும் நிரப்பிச் செல்ல வேண்டும். முதல் வரிசை முடிந்ததும் இரண்டாம் வரிசையை நிரப்ப வேண்டும். மேல் ஐந்து வரிசைகளை நிரப்புவதற்கு எவ்வளவு காலம் ஒருவர் எடுத்துக் கொள்ளுகின்றார் என்பதைக் குறிக்துக் கொள்ள வேண்டும். பிறகு கீழ் ஐந்து வரிசைகளுக்கும் அவ்வாறே காலத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும். ஒருமுறை இச்சோதனையை முடிப்பதற்கு ஒருவர் எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளுகிறார் என்பதுதான் கெலிப்பு எண்ணாகக் (Slove) கொள்ளப்படுகிறது. ஆட்படுநர் ஊசிகளைத் தவற விட்டுவிடுகிறாரா கைகள் திறம்பட இயங்குகின்றனவா என்பனவும் கவனிக்கப்படுகின்றன. இச்சோதனையை ஒட்டி மற்றொரு சோதனையும் உண்டு. அது இடுக்கித் 'திறமைச் சோதனை (Tweezer Dexterity Test) என்பதாகும். இச்சோதனையிலும் ஊசிகளும் பலகையும் கொடுக்கப்பட்டிருக்கும். இச்சோதனையில் ஓர் ஊசியைச் சாமணத்தினால் எடுத்து ஒரு துளைகளுக்குள் பொருத்த வேண்டும். மற்ற முறைகள் எல்லாம் மேலே காட்டிய விரல் திறமைச் சோதனை போன்றதேயாகும். இயக்கத்திறன் சோதனையை 'மினிசோட்டாக்கையாளுதல் வீதச் சோதனை' (Minnesotta Role of Manipulation) மூலமாகவும் அளிக்கலாம். இதில் ஒரு பலகையில் 60 வட்டமான உருளைகள் வரிசைக்குப் பதினைந்தாக நான்கு வரிசைகளில் இருக்கும். இவற்றின் இரு பக்கங்களிலும் இரு வேறு நிறங்கள் பூசப்பட்டிருக்கும். இரண்டு வகையான சோதனைகளை இதனைக் கொண்டு நடத்தலாம். ஒன்று, இடத்தில் வைக்கும் சோதனை (Placing Test). இச்சோதனையில் பலகையின் முன் நான்கு வரிசைகளாக அடுக்கப்பட்டுள்ள உருளைகளை ஒவ்வொன்றாக ஒரு கையினால் எடுத்து 60 துளைகளிலும் நிரப்ப வேண்டும். அதற்கான காலம் அளவிடப்படும்; ஐந்து முறை செய்ய வேண்டும். மற்றொன்று, திருப்பி வைக்கும் (Turning Test) சோதனை. இச்சோதனையில் முன்னால் அடுக்கப்பட்டுள்ள உருளைகளை ஒவ்வொன்றாக வலக் கையினால் எடுத்து, அதைத் திருப்பி இடக் கைக்கு மாற்றி இடக் கையினால் துளையில் நிரப்ப வேண்டும். ஐந்து முறைகளிலும் ஆட்படுநர் எத்தனை முறைகள் தவறு செய்கிறார், எவ்வளவு நேரத்தில் சோதனையைச் செய்து முடிக்கிறார் என்பன மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இச்சோதனைகளைத் தவிர இரு கைகளைக் கொண்டு செய்யும் சோதனைகளும் உண்டு. கைகளின் இயக்கத்திறனை வேறு ஒரு சோதனை மூலமாகவும் அறியலாம். ஒரு பலகையில் பெரிய துளைகளிலிருந்து தொடங்கிச் சிறிய துளைகள் வரையில் இருக்கும். ஆட்படுநர் ஒரு நீளமான கம்பியை ஒவ்வொரு துளையிலும் விளிம்புகளில் கம்பி படாதவாறு அதை நுழைத்து எடுக்க வேண்டும். விளிம்பில் கம்பி பட்டால் உடனே மின் மணி ஒலிக்கும். அது ஒரு தவறாகக் கணக்கிடப்படும். ஆட்படுநர் குறிப்பிட்ட கால அளவுக்குள் இந்தச் சோதனையை முடிக்கிறாரா, மணியொலி எத்தனை முறை கேட்கின்றது என்பது மதிப்பீடு செய்யப்படும். இச்சோதனையை ஆட்படுநர் முதலில் ஒரு கையினாலும் பின்னர் மறு கையினாலும் செய்ய வேண்டும். இச்சோதனை வலக்கை இயக்கத்திறனையே அளவிடும். ஆயினும், இச்சோதனையின் மூலம் ஆட்படுநர் இடக்கையினரா என்பதையும் அறிய முடியும். என்.பா.

**இயக்கர்** தேவ வகையினராகக் கருதப்படும் பதினெண் கணத்தவருள் ஒரு பிரிவினர். தேவர், அசுரர், முனிவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், வித்தியாதரர், நாகர், பூதர், வேதாளர், தாரா கணத்தர்,

ஆகாயவாசிகள், போக பூமியர் ஆகியவர்கள் பதினெண் கணத்தவராவர் என்று புறநானூற்று உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவர்களுள் சிலரை விடுத்து, வேறு சிலரைச் சேர்த்துப் பதினெண் கணத்தினைக் கூறுபவர்களும் உள்ளனர். இப் பதினெண் கணத்தவர்களும் சிவபெருமான் முடியில் சூடியுள்ள பிறையினைப் புகழ்வார்கள் என்பது புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

இயக்கர், இயட்சர் எனப்படுவர். பிரமனால் படைக்கப்பட்டவர்களுள் ஒருசாரார் அவனை நோக்கிப் 'பட்சிக்க வேண்டும்' என்றும், மறுசாரார் 'இரட்சிக்க வேண்டும்' என்றும் வேண்டினர். 'இரட்சிக்க வேண்டும் என்று வேண்டியவர்கள் இயட்சர்கள் ஆகுக' எனக் கூற, அவர்கள் அவ்வாறாயினர். இவர்கள் கயிலாய மலையிலுள்ள குபேரனின் தோட்டத்தில் பணிபுரிய நியமிக்கப் பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

சங்க காலத்தில் இயக்கன் என்னும் பெயரை இயற்பெயராகக் கொண்ட ஆடவர்கள் இருந்துள்ளனர். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனின் நண்பர்களுள் ஒருவன் பெயர் இயக்கன் என்பதாகும். இயக்கி என்னும் பெயரில் சிறு தேவதை உள்ளது. ஆயர் குலப் பெண்ணாகிய மாதரி, மதுரை நகரின் புறத்தே விளங்கிய இயக்கி என்னும் தெய்வத்திற்குப் பாற்சோறிட்டு வழிபட்ட செய்தியினைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இயக்கி என்பதனை ஆரியாங்கனை என்று விளக்கியுள்ளனர்.

சமண சமயத்திலும் இயக்கன், இயக்கி எனப்படும் இயக்கர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவர்கள் தெய்வத் தன்மை உடையவர்களாய்ச் சமண தீர்த்தங்கரர் ஒவ்வொருவருக்கும் பணி செய்வதற்கு நியமிக்கப்பட்டவர்களாவர்.

இயக்கி என்னும் தெய்வம் இக்காலத்தில், கன்னியாகுமரி மாவட்டதின் பலவிடங்களில் இசக்கி என்னும் பெயரில் வழிபடப்பட்டுவருகிறது.

**இயக்குநர்**: நிறுவனங்களின் மேலாண்மையில் முதன்மையான இடம் வகிப்பவர்கள் இயக்குநர்கள் (Directors). தனி நிறுவனமாக இருந்தால் குறைந்தது இருவரும், பொதுத்துறை நிறுவனமாக இருந்தால் குறைந்தது மூவரும் இயக்குநர்களாக இருக்க வேண்டும். இயக்குநர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். செயன்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிப் பங்கை அவர்கள் தங்களின் பெயரில் எடுக்க வேண்டும். இதற்காக இரண்டு மாத காலம் கொடுக்கப்படும். பொது நிறுவனங்களிலும் அவற்றின் துணை நிறுவனங்களிலும் மூன்றில் ஒரு பாக இயக்குநர்கள்தாம் நிலையாக இருப்பார்கள். எஞ்சியுள்ளவர்களில் மூன்றில் ஒரு பாகம் சுழல் முறைப்படி (By Rotation) ஓய்வு பெறுவார்கள். ஓய்வடைந்த இயக்குநர்கள் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படலாம். செயன்முறை விதிகள் அல்லது நிறுவன அமைப்பு முறையேடு ஆகியவற்றின் விதிகளுக்கேற்ப எண்ணிக்கை மிகுதல் கூடும். ஆனால், மைய அரசின் அனுமதி தேவை. ஒருவர் ஒரே காலத்தில் இருபது பொது நிறுவனங்களுக்கு அல்லது அவற்றின் துணை நிறுவனங்களுக்கு இயக்குநராக இருக்கலாம். அதற்குமேல் இருக்கக் கூடாது.

ஒரு நிறுவனம் சிறப்பு அறிவிக்கை கொடுத்துச் சாதாரண முடிவுகளை நிறைவேற்றி ஓர் இயக்குநரை நீக்கிவிடலாம். ஆனால், மைய அரசால் அமர்த்தப்பட்ட இயக்குநரையோ விகிதாசாரப் போராளராக அமர்த்தப்பட்ட இயக்குநரையோ அவ்வாறு நீக்கிவிட முடியாது. ஓர் இயக்குநர் தம் பதவியிலிருந்து தாமாகப் பணி விலகலாம். கீழ்க்காணும் குணங்களையுடையவர்கள் இயக்குநர்களாக அமர்த்தப்படத் தகுதியுடையவராகார். (1) இயல்பான மனநிலை இழந்தவர்கள், (2) தீர்வு காணப்படாத படி நொடித்தவர், (3) நொடித்தவர் என்று விண்ணப்பம் கொடுத்தபின் அத்தகைய விண்ணப்பம் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் உள்ள ஒருவர். (4) ஒழுக்கக் குறைவிற்காகக் குறைந்தது ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றவர், (5) பங்குக்குரிய பணத்தை ஆறு மாதத்திற்குள் கட்டத் தவறினவர், (6) பிரிவு 203-இன் கீழ்த் தகுதியற்றவர் என நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டவர். மேற்கூறிய சூழ்நிலையில் இயக்குநர்கள் தாங்களாகவே பதவியை விட்டு விலகிவிட வேண்டும். மேலும், ஓர் இயக்குநர் விடுமுறைக் கடிதம் இல்லாமல் தொடர்ந்து மூன்று அவைக் கூட்டத்திற்கு வராவிட்டாலும், அவரோ அவர் கூட்டாளியாக இருக்கும் கூட்டு வாணிகமோ அவர் உறுப்பினராக இருக்கும் தனியார் நிறுவனமோ கடன் வாங்கினாலும் அல்லது கடனுக்குப் பொறுப்புறுதி அளித்தாலும், நிறுவனத்துடன் அவர் கொண்ட ஒப்பந்தத்தின்மீது உள்ள அக்கறையை அவர் வெளியிடாதிருந்தாலும், அவர் இயக்குநராக இருப்பது நீதிமன்றத்தினால் தடைசெய்யப்பட்டாலும், பதவி நீக்கம் செய்யப்பட்டாலும், அவர் இயக்குநர் பதவியிலிருந்து நீங்க வேண்டும்.

இயக்குநர்கள் இயக்குநரவை (Board of Directors) அல்லது குழு மூலம்தான் முடிவுகளை நிறைவேற்ற வேண்டும். தனிப்பட்ட இயக்குநர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால், அவைக் கூட்டத்தில்

தனியாகச் சொத்துகளின் உரிமையில் அதிகாரம் தரப்படும். இயக்குநரவை குறிப்பிட்ட சில திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உதவிக் குழுக்களை (Sub-Commitee) அமைத்துக் கொள்ளலாம்.

நிறுவனத்தின் சொத்துகளுக்குப் பாதுகாவலர்களாக இயக்குநர்கள் விளங்குகிறார்கள். நிறுவனத்தின் நன்மைக்காக மட்டில் அச்சொத்துகளைப் பயன்படுத்தலாம். தன் சொந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தினால் நம்பிக்கை முறிவு ஏற்படும். இயக்குநரவை ஒரு முகவர் நிலையிலும் உள்ளது. அது ஒப்பந்தங்களில் நிறுவனத்திற்காகக் கையெழுத்திடலாம். இயக்குநர்கள் தங்கள் அதிகாரத்தையும் கடமைகளையும் கவனமுடன் மேற்கொண்ட காலத்தில் ஏற்படும் இழப்புகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர். ஆனால், தங்கள் பொதுவான புறக்கணிப்பினாலும், நம்பிக்கை முறிவினாலும் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பைத் தாங்களே ஈடுகட்டும் நிலை ஏற்படும். அந்நிலையில் பொறுப்பைக் குறைத்துக் காட்டும் எவ்வித விதிகளும் செல்லா.

இயக்குநர்கள் இன்றைய நிறுவனவியலில் நிறுவனத்தின் உறுப்புகளாகக் கருதப்படுகின்றனர். நிறுவனத்தின் எண்ணமும் செயலும் இயக்குநர்களின் எண்ணமும் செயலுமாகும். இயக்குநர்களின் தீங்குகளும் குற்றங்களும் நிறுவனம் செய்தனவாகும். பல்வேறு நிலைகளில் பங்கேற்றுச் செயலாற்றும் இயக்குநர்களைப் பற்றி நிறுவனச் சட்டத்தில் தெளிவான வரையறை கொடுக்கப்படவில்லை. நிறுவனவியல் சட்டத்தின் 2 (13)-ஆம் பிரிவில், ‘இயக்குநர்’ என்பது அந்தப் பதவியில் உள்ள எவரையும் குறிக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரையறை இயக்குநரின் நிலையைத் தெளிவாக்குவதாயில்லை. இயக்குநர் ஒருவரின் கட்டளைகளுக்குட்பட்டு நடந்தால், அவ்வாறு கட்டளைக்கு உட்படச் செய்பவரும் இயக்குநராகக் (Pseudo-Director) கருதப்படுகிறார்.

நிறுவனத்தின் இயக்குநர்கள் கூட்டாகச் செயற்பட வேண்டும். இக்கூட்டு இயக்குநர்கள் ‘குழு’ (Board) என்று குறிப்பிடப்படுகின்றனர். இக்குழுதான் நிறுவனத்தின் தலைமைச்செயலாட்சித்துறை (Chief Executive) ஆகும். மற்ற இயக்குநர்கள் இக்குழுவின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டுச்செயலாற்ற வேண்டும். இக்குழு அமைக்கப்படும் வகையும் அதற்கு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறைகளும் அதன் அதிகாரங்களும் கடமைகளும் பொறுப்புகளும் மிகுதியாகும்.

பணி அமர்த்தல்: நிறுவனத்தின் முதல் இயக்குநர்கள், தோற்றுவிப்பாளர்களால் அமர்த்தப்படுகின்றனர். செயல்முறை விதிகளில் அவர்களின் பெயர்கள் குறிக்கப்படும். செயல்முறை விதிகள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் இவ்வியக்குநர்கள் தங்கள் ஒப்புதலை எழுத்து மூலம் எழுதிப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும். இல்லையெனில், அமைப்பு முறையேட்டுக்குப் பங்கேற்க ஒப்புக்கொண்டவர்கள் பொதுக் கூட்டத்தால் இயக்குநர்கள் அமர்த்தப்படும் வரை இயக்குநர்களாகச் செயலாற்றுவர்.

நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பாகம் அமர்த்தப்பட்டு, அவர்கள் வரிசைப்படி முறையாக ஓய்வு பெற வேண்டும். அவர்களுள் மூன்றில் ஒரு பாகம் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் முதலில் வந்தவர் முதலில் போக வேண்டும் என்ற அடிப்படையில் ஓய்வு பெற வேண்டும். ஒரு பொது நிறுவனத்தின் செயல்முறை விதிகள் மொத்த இயக்குநர்களுள் மூன்றில் இரண்டு பங்கு பேராளர்களாக அமர்த்தப்பட வேண்டும் என்றும் கூறுகின்றன. அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பணியிலிருக்கலாம். முறைப்படியாக, ஓய்வுபெறும் விதி இவர்களுக்குப் பொருந்தாது. இதேபோல் ஒரு கம்பெனி மூன்றில் ஒரு பங்கு இயக்குநர்களை நிலையான இயக்குநர்களாக அமர்த்தலாம். இவர்களும் முறைப்படி ஓய்வு பெற வேண்டிய தேவையில்லை. இவர்களின் இசைவு இவர்களால் கையெழுத்திடப்பட்டுப் பதிவாளரிடம் கொடுக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால், இயக்குநர்களின் அவைக் கூட்டம் கூடுதலான இயக்குநர்களை அடுத்த பொதுக்கூட்டம் வரை அமர்த்தலாம். மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கை செயல்முறை விதிகள் அனுமதித்த உயர்ந்த அளவு எண்ணிக்கைக்கு மேல் போகக்கூடாது. இறுதியாக, மைய அரசு பிரிவு 408-இன்கீழ் இரண்டு இயக்குநர்களை மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பதவி வகிக்கும் வகையில் அமர்த்தலாம்.

அதிகாரங்கள்: ஒரு நிறுவனத்தின் அதிகாரங்கள் இரண்டு வகைப்படும். (1) அவைக்குத் தலைமை தாங்குதல், (2) பொதுக்கூட்டங்களில் நிறுவனத்தின் முடிவுகளை நிறைவேற்றுதல். நிறுவனத்தின் உயர் அதிகார வரம்பிலுள்ள இயக்குநர்கள் நிறுவனக் கோட்பாடுகளை உருவாக்கிச் செயலாற்றி வருகின்றனர். அவர்கள் பங்குகளை வெளியிடலாம்; பங்கு விடுப்பை ஏற்கலாம்; கடனுறுதிச் சீட்டுகளை வெளியிடலாம்; ஆதாய ஈவுக்குப் பரிந்துரை செய்யலாம்: நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தத்தில் ஈடுபடலாம். நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் தங்கள் அதிகாரங்களைப் பிற நிருவாக அதிகாரிகளுக்கும் உதவிக் குழுக்களுக்கும் ஒப்படைக்கலாம். எனினும், சில அதிகாரங்களை நிறுவனக் கூட்டத்தில் முடிவு எடுத்துத் தாங்கள் மட்டிலுமே செயற்

படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, பங்கழைப்புச் செய்தல், கடனுறுதிச் சீட்டுகள் வெளியிடுதல், நிறுவனத்தின் பணத்தை முதலீடு செய்தல், கடன் பெறுதல் (பிரிவு292) போன்றவற்றை அவர்கள் நேரிடையாகச் செய்ய வேண்டும். ஆனால், கடனுறுதிச் சீட்டுகளைத் தவிர, வேறு வழியில் கடன் பெறுதலிலும், நிறுவனத்தின் பணங்களை முதலீடு செய்வதிலும், கடன் வாங்குவதிலும், தனிப்பட்ட சூழ்நிலைகளில் அதிகாரங்களைப் பிறரிடம் ஒப்படைக்கலாம்.

கடமைகள்: நிறுவனத்தின் அளவு, தொழில் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இயக்குநர்களின் கடமைகள் மாறுகின்றன. அவற்றைச் செயல்முறை விதிகள் விளக்குகின்றன. குறிப்பிடத்தக்க பொது விதிகளாவன: (1) இயக்குநர்கள் நியாயமான அக்கறையுடனும் எச்சரிக்கையுடனும் செயலாற்ற வேண்டும். (2) அவர்கள் பெருந்தன்மையுடனும் தகுதியுடனும் செயலாற்ற வேண்டும். (3) அவர்கள் நிறுவனத்தின் முழுநேர ஊழியர்கள் அல்லர் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். (4) எல்லா இயக்குநரவைக் கூட்டங்களுக்கும் அவர்கள் வர வேண்டிய தேவையில்லாவிட்டாலும் முக்கியமான கூட்டங்களுக்குத் தவறாமல் வரவேண்டும். (5) அதிகாரங்களை நிருவாக அதிகாரிகளுக்கு அவ்வப்போது ஒப்படைக்க வேண்டும். (6) அதிகார எல்லையை வரையறுத்து அதற்குத் தகுந்த முறையில் தங்கள் கடமைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். (7) ஒவ்வொரு செயலிலும் சட்டத்திற்கும் செயல்முறை விதிகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

ஊதியம்: இயக்குநர்களின் ஊதியம் செய்முறை விதிகளால் முடிவு செய்யப்படும். அதற்காக நிறுவனம் தனி முடிவுகளை எடுக்கும். இருந்தாலும் அவை இயக்குநர் சட்டப் பிரிவுகள் 198, 309 ஆகியவற்றின் விதிகளுக்குட்பட்டு இருக்க வேண்டும். கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகத் தனியாகப் பணம் கொடுக்கப்படும். நிறுவனத்தின் முழுநேர இயக்குநர்களாக இல்லாதிருப்பவர்களுக்கு ஊதியம் அல்லது கழிவு (Commission) ஒரு சிறப்பு முடிவு மூலம் கொடுக்கப்படும். அவ்வூதியம் அந்நிறுவன நிருவாக இயக்குநர் அல்லது மேலாளர் இல்லாத போது, நிறுவனத்தின் ஆதாயத்தில் 1% என்றும் மற்ற நிலைகளில் 3% என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், மைய அரசின் அனுமதியுடன் மிகுதியாகவும் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொள்ளுதற்குரிய தொகையை உரூ. 250/- வரை உயர்த்துவதற்கு அத்தகைய அனுமதி தேவையில்லை.

கே. என். இரா.

துணை நூல்கள்:

**Shah, S.M.**, Lectures on Company Law, N. M. Tripathi Private Limited, Bombay, 1981.

**Ashok, K.**, Bagrial, Company Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1982.

**இயக்குவினை** தமிழ்வினைகளைச் செயப்படுபொருள் குன்றிய வினை (Intransitive), செயப்படுபொருள் குன்றாவினை (Transitive) இயக்குவினை (Causative verb) என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். செயப்படுபொருள் குன்றிய வினைகள் வா, போ, உறங்கு போன்றவை. இவை செயப்படுபொருள் உடையனவல்ல. உண், அடி, அடக்கு போன்றவை செயப்படுபொருள் குன்றாவினைகள். இவை வரும் வாக்கியங்களில் செயப்படுபொருள் காணப்படும். இயக்குவினைகள் இவ்விரு வகை வினைகளிலிருந்தும் வருவிக்கப்படுகின்றன. ஒருவர் ஒரு செயலைச் செய்யும்படி மற்றொருவரை இயக்குவதே இயக்குவினையாகும். ஆகவே, இயக்கு வினையில் ஒருவர் ஒரு செயலைச் செய்கிறார். மற்றொருவர் அவரை அந்தச் செயலைச் செய்யும்படி இயக்குகிறார். எடுத்துக்காட்டாக, இராமன் கண்ணனை அந்தச் செயலைச் செய்யும்படி செய்கிறான். இதுபோன்றே அன்னை குழந்தையை உண்பித்தாள் என்ற தொடரில் குழந்தை உண்ணும் தொழிலைச் செய்ய அன்னை அந்த செயலைச் செய்யும்படி அதை இயக்குபவள் ஆகிறாள். ஆகவே, இயக்குவினைகள் எப்போதும் இரு எழுவாய்களைக் கொண்டு வரும்.

தமிழில் இயக்குவினைகள் இருவகையாக உருவாகின்றன. ஒன்று, சொல்லியல் அடிப்படையிலானது; வினையடிகளுடன் -வி, -பி ஆகிய விகுதிகள் சேர்ந்து இயக்குவினைகள் உருவாகின்றன. மற்றொன்று, தொடரியல் அடிப்படையிலானது. செய், வை, பண்ணு ஆகிய துணைவினைகள் ஆட, செய்ய போன்ற குறையெச்ச வினைகளோடு இணைந்து இயக்குவினைகள் உருவாகின்றன.

இராமன் கண்ணனை ஆட்டுவித்தான்.
ஆசிரியர் மாணவனை வருவித்தார்.
இராதை குழந்தையை உண்பித்தாள்.

இவற்றில் வரும் ஆட்டுவி, வருவி, உண்பி ஆகிய வினைகள் சொல்லியல் அடிப்படையில் உருவான இயக்குவினைகள்.

இராமன் கண்ணனை ஆடச் செய்தான் / ஆடவைத்தான் / ஆடப்பண்ணினான்.

ஆசிரியர் மாணவனை வரச் செய்தார் / வர வைத்தார் / வரப் பண்ணினார்.

இராதை குழந்தையை உண்ணச் செய்தாள் / உண்ண வைத்தாள் / உண்ணப் பண்ணினாள்.

இவற்றில் வருவன தொடரியல் அடிப்படையில் உருவான இயக்குவினைகள்.

வரலாற்றுநோக்கில் தமிழில் சொல்லியல் அடிப்படையிலான இயக்குவினைகளே பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. தொடரியல் அடிப்படையிலான இயக்குவினைகள் பிற்கால வளர்ச்சியாகும். இன்றைய தமிழில் இவ்வகை இயக்குவினைகளே பெரும்பாலும் நடைமுறை வழக்கில் உள்ளன. ஆயினும், காண்பி, வருவி போன்ற ஒருசில சொல்லியல் அடிப்படையிலான இயக்குவினைகளும் வழக்கில் உள்ளன. எம்.சு.

**இயக்கூர்திச் சட்டம்:** இயக்கூர்திச் சட்டமானது இந்திய அரசால் 1939-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இயக்கூர்திச்சட்டம் (The Motor Vehicles Act, 1939) என்று சொல்லப்படும் இச்சட்டம் அனைத்து இந்தியாவுக்கும் செல்லத்தக்கது. இச்சட்டம் பல தடவைகளில் திருத்தப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் இரண்டாம் பிரிவில் பலவகைப்பட்ட இயக்கூர்திகளைப் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அவற்றுள் சில முக்கியமானவை மட்டும் இங்குக் குறிப்பிடப்படும். இயக்கூர்தி (Motor Vehicle) எனப்படுவது இயந்திர சக்தியால் உந்தப்படும் வாகனம் என விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால், பதிக்கப்பட்ட தண்டவாளத்தின்மீது செல்லும் வாகனமும் தொழிற்சாலை அல்லது சுற்றிலும் மூடப்பட்ட பகுதிகளில் மட்டும் பயன்படுத்தத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ள வாகனமும் இவ்விளக்கத்தில் அடங்கா. ஓட்டுநரைத் தவிர்த்து ஆறு பயணிகளை ஏற்றிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இயக்கூர்தி 'பெரிய பொறி வண்டி' (Omni Bus) எனப்படும். ஒப்பந்த வாகனம் (Contract Carriage) என்பது, ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்வதற்காக ஒப்பந்தம் செய்யப்படும் முழு வாகனத்தையும் குறிக்கும். இவ்வாகனம் செல்லும் பாதையில் புதுப் பயணிகளை ஏற்றக்கூடாது. ஒரு சமயத்தில் ஒப்பந்த வாகனம் பற்றியமட்டில் ஓர் ஒப்பந்தம் மட்டும் ஏற்படலாம். அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் ஒரே சமயத்தில் அவ்வாகனத்தில் பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது. பயணிகள் பேருந்து (Stage Carriage) என்பது பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லும் வாகனம். இது குறிப்பிட்ட தடத்தில் மட்டும் செல்லும். பயணிகளிடமிருந்து தனித்தனியாகக் கட்டணம் வசூல் செய்யப்படும். அந்த வாகனம் செல்லக்கூடிய தடம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். தடத்தின் தொடக்கக் கட்டத்திலோ வழியில் உள்ள குறிப்பிட்ட இடத்திலோ இவ்வாகனத்தில் பயணிகள் ஏறலாம். முழு தடத்துக்கோ அதன் பகுதி தூரத்துக்கோ ஒரு பயணி தனிப்பட்ட முறையில் கட்டணம் செலுத்தி, இவ்வாகனத்தில் பயணம் செய்யலாம்.

சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட அல்லது சரக்குகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் இயக்கூர்தி சரக்குவண்டி (Goods Vehicle) என்று விளக்கப்பட்டுள்ளது. அவ்வாகனத்தில் ஒருசில பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் சென்றாலும் அது சரக்கு வண்டி என்றுதான் சொல்லப்படும். பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லப் பயன்படுத்தும் அல்லது அவ்வாறு பயன்படுத்தத்தக்க வகையில் அமைக்கப்பட்ட இயக்கூர்தி பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனம் (Public Service Vehicle) என விளக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வாகனம் (Transport Vehicle) என்பது, பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனத்தையும் சரக்கு வண்டியையும் குறிக்கும். பொதுமக்களுக்கான வாகனம் (Public Carrier) என்பது, ஒருவர் தம் சரக்குகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் போக்குவரத்து வாகனத்தைக் குறிக்கும். தனியார் வாகனம் (Private Carrier) என்பது அதன் உரிமையாளரின் சொந்தச் சரக்குகளை மட்டும் ஏற்றிச் செல்லப்பயன்படுத்தப்படும் போக்குவரத்து வாகனமாகும்.

இச்சட்டத்தின்படி சாலைப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், ஏனைய செயல்களைச் செய்யவும், மாநிலப் போக்குவரத்து அதிகாரிகளையும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளையும் பணியமர்த்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் பொதுவான சாலைகளில் இயக்கூர்திகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய விபத்துகளையும் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் தடுக்கவும் பாதுகாப்பு அளிக்கவும் இச்சட்டத்தில் பல வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை மாநில அரசுகள் மேற்கூறிய தங்கள் அதிகாரிகள் மூலம் நிறைவேற்றும். மேலும், அவ்வதிகாரிகள் மூலம் மாநில அரசுகள் பல கட்டுப்பாடுகளை விதிக்கவும் இச்சட்டம் வகை செய்துள்ளது.

தொடர்புடைய அதிகாரியால் வழங்கப்பட்ட

ஓட்டுநர் உரிமம் (Driving Licence) இல்லாத நிலையில் எவரும் ஓர் இயக்கூர்தியைப் பொது இடத்தில் ஓட்டக் கூடாது. பொதுமக்கள் பயன்படுத்த உரிமை பெற்றுள்ள இடம் பொது இடம் என்று சொல்லப்படும். அவ்வாறான ஓட்டுநர் உரிமம் இல்லாது இயக்கூர்தியைப்பொது இடத்தில் ஓட்டுவது சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். இயக்கூர்தியை 18 வயதுக்குக் குறைந்தவர் ஓட்டக் கூடாது. போக்குவரத்து வாகனத்தை 21 வயதுக்குக் குறைந்தவர் ஓட்டக்கூடாது. சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சோதனைகளை நடத்தி, திருப்தி அடைந்த பின்னர்த் தான் தொடர்புடைய அதிகாரி, ஓட்டுநர் உரிமம் வழங்க வேண்டும். மேலும், ஓட்டுநர் உரிமம் கோருபவருக்குத் தகுந்த உடல் வலிவு இருக்க வேண்டும். எவ்வகையான இயக்கூர்தி அல்லது இயக்கூர்திகளை ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது ஓட்டுநர் உரிமத்தில் குறிப்பிடப்பட வேண்டும். ஓட்டுநர் உரிமம் ஐந்து ஆண்டுக்காலம் இந்தியா முழுவதும் செல்லத் தக்கது. அதைப் புதுப்பிக்கவும் இச்சட்டம் வகை செய்துள்ளது.

நோய் அல்லது உடல் ஊனத்தால் ஒருவருடைய ஓட்டும் திறமை பாதிக்கப்பட்டால் தொடர்புடைய அதிகாரி ஓட்டுநர் உரிமத்தை நீக்குதல் செய்யலாம்; அல்லது மருத்துவச் சான்றிதழ் கோரலாம். ஒருவர் வழக்கமாகக் குற்றம் புரிபவராக இருந்தாலோ மதுபானம்அருந்தும் பழக்கத்துக்கு அடிமையாக இருந்தாலோ நீதி மன்றத்தின் அனுமதியில்லாமலேயே கைதுசெய்யக் கூடிய குற்றத்தைச் செய்வதற்கு இயக்கூர்தியைப் பயன்படுத்தினாலோ அவர் இயக்கூர்தியை ஓட்டும் முறை பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியதாக இருந்தாலோ தொடர்புடைய அதிகாரி ஓட்டுநர் உரிமத்தைக் குறிப்பிட்ட காலத்துக்கு நீக்குதல் செய்யலாம். இச்சட்டத்தின் கீழ் செய்சில குற்றங்களுக்காகத் தண்டனை வழங்கும் போது ஓட்டுநர் உரிமத்தைக் குறிப்பிட்ட காலத்துக்கு நீக்குதல் செய்வதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பயணிகள் பேருந்தில் நடத்துநராகப் (Conductor) 'பணி' செய்வதற்கு உரிமம் பெற்றிருக்க வேண்டும். ஓட்டுநர் உரிமத்தை நீக்குதல் செய்வதற்கு அதிகாரிகளுக்கும் நீதிமன்றத்துக்கும் அதிகாரம் வழங்கியிருப்பதுபோல் நடத்துனர் உரிமத்தை நீக்குதல் செய்யவும் மேற்கூறியவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் இயக்கூர்தியும் இச்சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டும். போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனத்துக்குத் தகுதிச் சான்றிதழ் இன்றியமையாதது. அச்சான்றிதழ் இரண்டு ஆண்டுகட்கு மேற்படாத வகையிலும், ஆறு மாத காலத்துக்குக் குறையாத வகையிலும் தொடர்புடைய அதிகாரியால் நிருணயிக்கப்படும் காலத்துக்குச் செல்லத்தக்கது.

போக்குவரத்து வாகனங்களைக் கட்டுப்பாடு செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வழங்கும் அனுமதிச் சீட்டு (Permit) இல்லாமல் மேற்கூறிய போக்குவரத்து வாகனங்களைப் (Transport Vehicles) பொது இடங்களில் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய வாகனங்களில் முக்கியமாகக் குறிப்பிட்ட தடத்தில் செல்லக் கூடிய பயணிகள் பேருந்து (Stage Carriage), ஒப்பந்த வாகனம் (Contract Carriage), சரக்குகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லும் வாகனம் (Public Carrier), ஒருவர் தம் சொந்தச் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தும் வாகனம் (Private Carrier) ஆகியவற்றிற்கு அனுமதிச்சீட்டு வழங்குவதற்கான வகைமுறைவிரிவாக இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

அனுமதிச்சீட்டுப் பெற வேண்டும் என்ற விதியிலிருந்து சிலவகை வாகனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வணிக நோக்கு இல்லாத அரசாங்கக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில அரசுக்குப் பாத்தியப்பட்ட வாகனங்கள், சாலைகளைத் தூய்மைப்படுத்த உள்ளாட்சி நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் வாகனங்கள், பிணத்தை எடுத்துச் செல்வதற்காக மட்டும் பயன்படுத்தப்படும் வாகனங்கள் ஆகியவை அவ்வாறு விதிவிலக்கு அளிக்கப்பட்ட வாகனங்களுள் சில.

ஒப்பந்த வாகனத்துக்கும் பயணிகள் பேருந்துக்கும் வழங்கப்படும் அனுமதிச்சீட்டின் காலம் மூன்றாண்டுக்குக் குறையாத வகையிலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காத வகையிலும் அனுமதிச் சீட்டு வழங்கும் அதிகாரியால் நிருணயம் செய்யப்பட வேண்டும். சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் அனுமதிச் சீட்டு ஐந்தாண்டுக் காலத்திற்குச் செல்லத் தக்கது. அனுமதிச் சீட்டுகளின் காலத்தைப் புதுப்பிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தேவையை அனுசரித்து நான்கு மாத காலத்துக்குமேல் நீடிக்காத வகையில் அப்போதைக்கு அனுமதிச் சீட்டு வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

தொடர்புடைய அதிகாரியின் அனுமதியில்லாமல் ஒரு வாகனத்துக்காக அளிக்கப்பட்ட அனுமதிச் சீட்டு மற்றவருக்கு மாற்றத் தக்கது அன்று. அனுமதிச் சீட்டில் கண்ட வாகனத்தை மாற்றுவதற்கும் அதிகாரியின் அனுமதி தேவை. அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர் இறந்து விட்டால், அந்த இறப்

பைத் தொடர்புடைய அதிகாரிக்கு ஒரு மாத காலத்துக்குள் தெரியப்படுத்திவிட்டால், அந்த வாகனத்தின் உடைமையைச் சட்டப்படி பெறுபவர், இறந்தவருக்கு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டின் அடிப்படையில் மூன்று மாத காலத்துக்குச் செயற்படலாம். மேற்கூறிய இறப்பு ஏற்பட்ட மூன்று மாத காலத்துக்குள் வாகனத்தின் உடைமையைப் பெறுபவர் தாக்கல் செய்யும் விண்ணப்பத்தின் அடிப்படையில், அனுமதிச் சீட்டைத் தொடர்புடைய அதிகாரி அவருக்கு மாற்றலாம்.

வாகனங்கள் ஓடக்கூடிய நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பது குறித்தும் வேகக் கட்டுப்பாடு குறித்தும். கட்டணம் குறித்தும் ஓட்டுநர்களின் வேலை நேரம் குறித்தும் பயணிகள் பேருந்து செல்லக்கூடிய தடம், கால அட்டவணை, மற்றும் தடத்தில் செல்லக்கூடிய எண்ணிக்கை விவரம், மேலும் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஏனைய பொருள்கள் ஆகியவற்றைக் குறித்தும் அனுமதிச் சீட்டில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். மேற்படி அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறிய நிலையிலும், அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர் அதில் கண்ட வாகனத்தின் உரிமையாளராக இல்லாமற் போகும் நிலையிலும், ஏமாற்றிப் பொய் சொல்லி அனுமதிச் சீட்டு வாங்கியிருந்த நிலையிலும், பொதுமக்களின் நலனுக்காக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டில் கண்ட வாகனத்தைப் பொது மக்களின் நலனுக்குப் பயன்படுத்தாத நிலையிலும், அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர் அயல் நாட்டுக் குடிமகனாகி விட்ட நிலையிலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தொடர்புடைய அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒழுங்கு நடவடிக்கையை ஒட்டி அனுமதிச்சீட்டை அப்போதைக்கு நீக்குதல் செய்யவும் நிலையாக நீக்குதல் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது.

பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லப் பயன்படும் சாலைப் போக்குவரத்தைத் தேசியமயமாக்குவதற்கும் போக்குவரத்துக் கழகங்களை மாநில அரசுகள் அமைப்பதற்கும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. அதற்காக வேகத்தடை விதிக்கவும் சைகைக் காட்டிகளைச் சாலை ஓரங்களில் அமைக்கவும் இயக்கூர்திகளை நிறுத்தக்கூடிய இடங்களை நிருணயிக்கவும் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக இயக்கூர்தியில் உந்துகல இயக்காழி (Steering Wheel) வலப் புறத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உந்துகல இயக்காழி இடப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தால், வாகனம் எப்பக்கம் (இடப் புறத்திலா வலப் புறத்திலா) திரும்பவிருக்கிறது என்பதையும், வாகனம் நிற்கப் போகிறது என்பதையும் சைகைகள் மூலம் காட்டக்கூடிய இயந்திரச் சக்தி அல்லது மின் சக்தியால் இயங்கக் கூடிய அமைப்புகளை அவ்வாகனத்தில் பொருத்தியிருக்க வேண்டும். இரு சக்கர இயக்கூர்திகளை ஓட்டுபவரும் அவற்றில் பயணம் செய்பவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் எனக் கட்டளையிடுவதற்கு அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் விதிகள் (Rules) தயாரிப்பதற்கு மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தையும் சட்டப்படி தயாரிக்கப்பட்டுள்ள விதிகளையும் மீறும் செய்கைகள் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

இச்சட்டத்தின்கீழ் வரக்கூடிய வாகனத்தை எவரும் காப்பீடு (Insurence) இல்லாத நிலையில் பொது இடத்தில் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு காப்பீடு இல்லை என்பது தெரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ள வாகனத்தை, ஊதியத்துக்காக ஓட்டுபவருக்கு இவ்விதி பொருந்தாது. மேலும், ஒரு வாகனத்துக்குக் காப்பீடு செய்ய வேண்டும் என்ற விதியிலிருந்து மத்திய, மாநில அரசுகள், உள்ளாட்சித் துறை, மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியோருக்கு உரிமையுடைய வாகனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கத் தொடர்புடைய அரசுக்குஅதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

காப்பீடு ஒப்பந்தமானது (Policy of Insurance) அதிகாரம் வழங்கப்பட்டவரால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட கூட்டுறவு சங்கத்தால் அளிக்கப்பட வேண்டும். ஒரு வாகனத்தைப் பொது இடத்தில் பயன்படுத்துவதனால் ஒருவருக்கு ஏற்படும் இறப்பு அல்லது காயம் அல்லது ஒரு மனிதனின் சொத்துக்கு ஏற்படும் இழப்பு, பொதுமக்கள் பயன்படுத்தும்வாகனங்களில் பயணம் செய்யும் பயணியின் இறப்பு, காயம் ஆகியவற்றினால் வாகனத்தின் உரிமையாளருக்கு ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் (Insurer) ஈடு செய்ய வேண்டும். பொதுவாக ஒரு விபத்தில் ஏற்படும் இழப்புக்குக் கீழ்க்காணும் விழுக்காட்டின் அடிப்படையில் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் பொறுப்பாவார். 1. சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனமாயிருந்தால் ஓர் இலட்சத்து ஐம்பதினாயிரம் உரூபாய்க்கு மேல் பொறுப்பு இல்லை. ஓட்டுநரைத் தவிர்த்து ஆறு பணியாட்களைப் பொறுத்த மட்டும் தொழிலாளர்களின் இழப்பீட்டுச் சட்டத்தின்படி (Workmen's Compensation Act) ஏற்படும் பொறுப்பும் இந்த வரம்பினுள் அடங்கும். 2. ஒப்பந்த அடிப்படையிலோ வாடகைக்கோ வெகுமானத்துக்கோ பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தைப் பொறுத்தமட்டிலும், பயணிகளைத் தவிர ஏனை

யோருக்கு ஏற்படும் இழப்புக்கு மொத்தமாக 50 ஆயிரம் உரூபாய்க்கு மேற்படா வகையில் பொறுப்பு உண்டு. அவ்வாறான வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளின் இழப்புக்கு ஒரு பயணிக்கு 15 ஆயிரம் உரூபாய் என்ற விழுக்காட்டில் பொறுப்பு ஏற்படும். 3. எந்த வகை வாகனமாயிருந்தாலும் மூன்றாமவரின் சொத்துக்கு ஏற்படும் இழப்புக்கு ஆறாயிரம் உரூபாய்க்கு மேல் பொறுப்பு இல்லை.

மேற்கூறிய வரம்புக்கு மேல் காப்பீடு செய்ய சட்டப்படி வற்புறுத்த முடியாது. ஆனால், காப்பீடு ஒப்பந்தத்தில் தொடர்புடைய இருவரும் ஒப்புக் கொண்டால் அந்த வரம்புக்கு மேலும் காப்பீடு செய்யலாம். காப்பீடு ஒப்பந்தம் பெற்றவரின் பணியாட்கள், அதாவது ஓட்டுநர், சரக்கு வண்டியில் ஏற்றிச் செல்லப் படுபவர், பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனமாயிருந்தால் அதில் நடத்துநர், பயணச்சீட்டு ஆய்வாளராகப் பணியாற்றுபவர் ஆகியோருக்குத் தொடர் புடைய வாகனத்தைப் பொது இடத்தில் பயன்படுத்துவதால் ஏற்படும் விபத்தினால் உண்டாகும் இழப்புக்கு ஈடு செய்யுமாறு சட்டப்படி காப்பீடு செய்வது தேவையில்லை. ஆனால், அப்பணியாட்களுக்குத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டப்படி செலுத்த வேண்டிய தொகைக்குக் காப்பீடு செய்வது இன்றியமையாதது. வாடகை அல்லது வெகுமதி அல்லது வேலை ஒப்பந்த அடிப்படையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களைத் தவிர வேறு வாகனங்களில் செல்லும் பயணிகளுக்குக் காப்பீடு செய்வது தேவையில்லை. சுருக்கமாக கூறினால் மூன்றாமவருக்கு ஏற்படும் இழப்புக்கு அதுவும் ஒரு குறிப்பிட்ட தொகை வரை இழப்பீடு செய்வதற்குச் சட்டப்படி காப்பீடு செய்வது இன்றியமையாதது. ஆனால், வாகன உரிமையாளர் விரும்பினால் (காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் ஏற்றுக் கொண்டால்) எல்லாவிதமான இழப்புக்கும் ஈடு செய்யக் காப்பீடு செய்யலாம்.

காப்பீட்டு ஒப்பந்தம் பெறுபவர் தொடர்புள்ள வாகனத்தை விற்ற பின்னர் ஏற்படும் இழப்புக்குக் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் பொறுப்பாக மாட்டார். வாகனத்தை விற்றபின் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கியவர் ஒப்புக் கொண்டால், காப்பீட்டு ஒப்பந்தம் வாகனத்தை வாங்கியவர் பெயருக்கு மாற்றப்படலாம்.

இச்சட்டத்தின்கீழ் வரக்கூடிய வாகனங்களினால் ஏற்படும் இழப்புக்கு ஈடு செய்வது குறித்துத் தீர்ப்பு மன்றங்கள் (Claims Tribunal) அமைக்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்த 6 மாத காலத்திற்குள் இழப்பீடு கோருபவர் மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு மனுத்தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்படுமாயின், அதற்குத் தகுந்த காரணமிருந்தால், அத்தாமதத்தை நீதிமன்றம் மன்னித்து விடும். விபத்துக்கு ஓட்டுநர் மீது எவ்வகைத் தவறு இல்லாத நிலையிலும் விபத்தில் இறந்தவரின் வாரிசுகளுக்கு 15 ஆயிரம் உரூபாயும், விபத்தினால் நிலையான ஊனம் அடைந்தவருக்கு 7500 உரூபாயும் சட்டப்படி இழப்பீடு கிடைக்கும். ஓட்டுநர்மீது தவறு ஏதேனுமிருந்தால் மேற்கூறிய தொகையுடன், நீதிமன்றம் சாட்சியத்தின் அடிப்படையில் முடிவு செய்யும் இழப்பீடும் கிடைக்கும். அதாவது விபத்தில் சிக்கி இறந்தோரின் (Victim) வயது, காயத்தினால் பட்ட அவதி, மருத்துவச் செலவு, இறந்தோரின் சம்பாதிக்கும் திறமையில் ஏற்பட்ட பாதிப்பு, இறந்தோரைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீடு நீதிமன்றத்தால் நிருணயம் செய்யப்படும். இத்தொகைக்கு வாகனத்தின் ஓட்டுநரும் உரிமையாளரும் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கியவரும் பொறுப்பாவார்கள். ஆனால், காப்பீட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கியவரின் பொறுப்பு நிருணயம் செய்யப்படும்.

**இயங்குகால மொழியியல்** என்பது ஒரு மொழியின் வெவ்வேறு கால மொழியமைப்பினை ஒப்பிட்டுக் கால அடிப்படையில் அம்மொழி அடைந்துள்ள மாற்றங்களை வரலாற்று நோக்கில் விவரிக்கும் மொழியியல் பகுதியினைச் சுட்டும். இது தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் (Linguistic Ontogeny), சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் (Linguistic Phylogeny) என இருபெரும் பிரிவுகளைக் கொண்டது.

தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் ஒரு தனிமனிதனின் பேச்சு முறைமை அவனது குழந்தைப் பருவத்திலிருந்து இறக்கும் வரையுள்ள காலத்தில் எவ்வாறு தோற்றம் பெற்று வெவ்வேறு மாற்றங்களை அடைகிறது என்பதனை விளக்கும். இது கருத்துப் பரிமாற்ற மரபு எவ்வாறு குழந்தையினைப் பாதிக்கிறது என்னும் நிலையில் குழந்தையினை மையமாகக் கொண்டு அணுகப் பெறுவது (Child Centred) எனவும், குழந்தை பெற்றுவரும் கருத்துப் பரிமாற்ற மரபின்மீது குழந்தையின் தாக்கம் எவ்வாறு அமையப்பெறுகிறது என்னும் நிலையில், முறைமையினை (System) மையமாகக் கொண்டு அணுகப் பெறுவது (System Centred) எனவும் அமையும்.

சமுதாய மொழிக் கூறு மாற்றவியல் வெவ்வேறு காலங்களில் மொழியின்கண் ஏற்படும் மாற்றங்களை

வரலாற்று நோக்கில் விவரிப்பதால் இது வரலாற்று மொழியியல் (Historical Linguistics) எனவும் சொல்லப்பெறும். வரலாற்று மொழியியல் மொழியின் அகவரலாறு (Internal History), புறவரலாறு (External History) ஆகிய இரண்டினையும் விவரிக்கும். ஒரு மொழியின் அகவரலாறு மொழி அமைப்பின்கண் ஏற்படும் மாற்றங்களைச் சுட்டும் வகையில் அமையும். புற வரலாறு மொழியினைப் பேசுகின்ற மக்களின் வாழிடம்; அவர்களின் இடமாற்றம் (Migration), அம்மொழி பேசும் மக்களுக்கும் பிற மொழிகளைப் பேசும் மக்களுக்கும் இடையே காணப்பெறும் மொழித்தொடர்பு போன்றனவற்றை விவரிக்கும்.

சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் மொழியின் அக அமைப்பு (Central System), புற அமைப்பு (Peripheral System) ஆகிய இரு அமைப்புகளிலும் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களை விவரிக்கும். மொழியின் அக அமைப்பில் ஒலியன்களின் எண்ணிக்கை, அவற்றின் வருகைமுறை ஆகியவற்றில் நடைபெறும் ஒலியன் மாற்றமும் (Phonological Change), சொல்வகை (Part of speech), இலக்கணக் கூறுகள் (Grammatical Categories), செயலிகள் (Functors), தொடர்-தொடர்வகைகள் (Constructions and Construction Types) ஆகிய நான்கையும் உள்ளடக்கிய இலக்கண மையக்கூற்றுப் (Grammatical Core) பகுதியில் நடைபெறும் இலக்கண மாற்றமும் (Grammatical Change). சொற்களஞ்சியத்தில் (Lexicon) சொற்களின் எண்ணிக்கையில் ஏற்படும் சொற்களஞ்சிய மாற்றமும் (Lexical Change), சொற்களின் வடிவத்தில் ஏற்படும் வடிவமாற்றமும் (Shape Change), உருபன் அன்றிச் சொல்லின் மாற்றுவடிவங்களில் ஏற்படும் மாற்றுவடிவ மாற்றமும் (Alternation Change) நிகழப் பெறுதலுண்டு. புற அமைப்பில் சொற்பொருளில் நடைபெறும் பொருள்மாற்றமும் (Semantic Change), ஒலிகளின் ஒலிப்புமுறைமையில் ஏற்படும் ஒலிமாற்றமும் (Phonetic Change) நடைபெறுதலுண்டு. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hocket, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1958.

**Lehmann, P.**, Historical Linguistics -An Introduction, Holt Rinehart and Winston, New York, 1983.

***இயங்குநிலை ஆய்வு:*** பொருளாதாரத்தின் நடவடிக்கைகளை நடைமுறைக்குத் தகுந்த வகையில் மாறும் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் முறை இயங்குநிலை ஆய்வு (Dynamic Analysis) எனப்படும். பெரும்பாலான பொருளியல் கோட்பாடுகள் 'நிலையான பொருளாதார'க் (Static Economy) கருதுகோளின் மேல் உருவாக்கப்பட்டவை; எனினும் அண்மைக் காலங்களில் இயங்குநிலை ஆய்வுகள் சிறப்பானவையாகக் கருதப்பட்டு அவற்றின் அடிப்படையில் பல புதிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வாணிகச் சுழற்சி, வருவாயை உறுதிசெய்தல் (Income Determination) விலைக் கோட்பாடுகள், பொருளாதார வளர்ச்சி ஆகியன 1925 ஆம் ஆண்டிற்குப் பின் இயங்குநிலை ஆய்வுப் பின்னணியில் ஆராயப்படுகின்றன. சே. தின்பர்சன்(J. Tinbergen), இராபட்சன் (Robertson), சே.எம். கீன்சு (J.M. Keynes), மிர்டால் (Myrdal), பால் சாமுவேல்சன் (Paul Samuelson), எராடு தோமர் (Harrod Domer), கிக்சு (Hicks) போன்ற பொருளியல் வல்லுநர்கள் இயங்குநிலை சார்ந்த ஆய்வு முடிவுகளைப் பல படிவங்களாகவும் கோட்பாடுகளாகவும் வெளியிட்டதுடன் அத்தகைய நோக்கில் பொருளியல் ஆய்வு வளர வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இயங்குநிலைப் பொருளியலில் வெளியீடு (Output) மாறிக்கொண்டேயிருக்கும். நிலையான பொருளியலில் (Static Economics) ஒரு குறிப்பிட்ட காலத்தில் மாறிகள் (Variables) மாறாதிருக்கும் போது நடைபெறும் செயல்கள் ஆராயப்படுகின்றன. இவை கோட்பாடுகள் பலவற்றைப் படைப்பதற்கு உதவி செய்கின்றனவே தவிர, நடைமுறையில் செயற்படுவன அல்ல. காலக் கட்டுப்பாடுகள் மாறிக் கொண்டேயிருக்கும் இன்றைய உலகில், மாறாத எடுமானங்களின் மேல் உருவாக்கப்படும் கோட்பாடுகள் நடைமுறைக்கு அப்பாற்பட்டனவாயுள்ளன. பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகள் நிலையான பொருளியலின் மேல் உருவாக்கப்பட்டு வளர்ந்துள்ளமையால், இயங்கு பொருளியலின் (Dynamic Economics) முழுமையான அறிவுக்கு, முதலில் நிலையான பொருளியலைப் பற்றிய தெளிவு இன்றியமையாதது. நிலையான பொருளியல் ஆய்வில் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் ஒரு பொருளின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாமல் அதன் மதிப்பு ஒரே சீராயிருந்தால், அப்பொருளின் பொருளியல் மாறிகளும் (Economics Variables) மாறாது நிலையானதாயிருக்கும் எனக் கருதப்படுகிறது. அதே நிலை நாட்டின் மொத்த வருவாயில் மாறுதல் ஏற்படாத போதும் காணப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் பொருள்களின் அளிப்பு, விலைகள், தேவையின் அளவு, நாட்டு வருவாய், வேலைவாய்ப்பு, மக்கள் தொகை, முதலீட்டுநிலை (Level of Investments) ஆகிய பொருளியல் மாறிகள் மாறாதிருந்தால் பொருளாதாரம் நிலையாக (Static Economy) உள்ளது எனப்

பொருள்படும். நுண்ணியல் அணுகுமுறை(Micro point of view) நோக்கில் ஒரு பொருளியல் மாறி, மாறுதல்களுக்குட்பட்டிருக்கலாம்; ஆனால், பேரினக் கண்ணோட்டத்தில் (Macro Approach) அம்மாறுதல், பொருளாதாரத்தில் எவ்விதத் தாக்குதலும்(Impact) ஏற்படுத்தாமல் நிலையாக உள்ளதைக் காணலாம். நுண்ணியல் ஆய்வில் தனிப்பட்ட பொருள்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும்; ஆனால், அதன் தாக்குதல் நாட்டின் மொத்த விலை நிலையைக் கணக்கிடும்போது, பேரியல் அணுகு முறையில் மறைந்து ஒரே நிலையைக் காட்டும். மேலும், தனிப்பட்ட மனிதர்களின் வருவாயில் மாறுதல்கள் ஏற்படினும், நாட்டு வருவாய் நிலையானதாயிருப்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தும்.

பொருளாதாரத்தில் ஒரு மாறி மட்டும் நிலையானதாகவும் மற்றவை இயங்கும் தன்மையிலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, முதலீட்டு அளவும் வீதமும் நிலையானதாக இருக்கும்போது பொருளாதாரத்தில் இயங்கும் தன்மை இருக்கும். ஒரே அளவிலான முதலீடு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால், பொருளாதாரத்தில் முதலாக்கம் நீடிக்கிறது; அதனால், பொருளாதார நடவடிக்கைகள் மிகுந்து அதில் வளர்ச்சி காணப்படும். இயங்குநிலைக்கும் நிலையான நிலைக்கும் நேரடி உறவுகள் இல்லையெனினும், இயங்கு பொருளியல் நிலையான பொருளியலிலிருந்து நீங்காது. உள்ளியல்பாயிருப்பதைக் (Inherent) காணலாம். இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டு, இரு கருத்துக் கோட்பாடுகளை அளிக்கின்றன. இவை இரு வகையான சிந்தனைகளின் விளைவுகளே.

இயங்கும் பொருளியலில் மாறிகளின் மதிப்புகள் வேறுபடும் காலங்களில் (Different points of Time) செயற்படும் வகைகள் ஆராயப்படுகின்றன. வேறுபடும் காலங்களில் குறிப்பிட்ட சில மாறிகள் செயற்படும் தன்மை, இயங்கும் உறவுகள் (Dynamic relationship) எனப்படுகிறது. பேராசிரியர் சும்பீட்டர் (Prof. Schumpeter) கருத்துப்படி, இயங்கும் உறவுத் தன்மைகள் என்பன வேறுபடும் காலங்களின் பொருளாதார அளவுகள் இணைக்கப்படுவனவாகும். அதாவது குறிப்பிட்ட காலத்தில் அளிக்கப்படும் ஒரு பொருளின் அளவு அக்காலத்தில் 't' நிலவும் விலையைச் சார்ந்தது 't-1'. இவ் வியங்கும் பொருளியல் இயங்கும் உறவுத் தன்மையைப் பொறுத்தது என்பதை விளக்குகிறது.

பல்வேறு மாறிகள் (Different Variables) வேறுபட்ட காலங்களில் செயற்படும் வகையை இயல்பான சமன்பாடு (Equation) என்றும் இயங்கும் அமைப்பு (Dynamic System) என்றும் பேராசிரியர் இரேக்நர் பிரிசு (Prof. Ragner Frish) குறிப்பிடுகிறார். இவரது கோட்பாட்டின்படி இயங்குநிலை ஆய்வில் குறிப்பிட்ட காலத்தில் மாறிகள் பல எவ்வாறு செயற்படுகின்றன, அவற்றுக்கிடையே எழும் உறவுகளும் (Inter Relations) விளைவுகளும் யாவை என்பன போன்றவை ஆராயப்படுகின்றன. இவை மட்டுமல்லாமல், வேறுபட்ட காலங்களில் குறிப்பிட்ட மாறிகள் பல சூழ்நிலைகளுக்கிடையில் எவ்வாறு செயற்படுகின்றன, அவற்றின் விளைவுகள், உறவுகள் யாவை என்பன போன்ற சமன்பாடுகள் மூலம் கண்டறியப்படுகின்றன. சமன்பாடுகள் ஒரே காலத்தில் பல மாறிகளின் கூறுகளைப் பகுத்தாயப் பயன்படுத்தப்படுகின்றன.

இயங்கும் உறவுகள் நுண்ணியல் துறைக்கும் பேரியல் துறைக்கும் பொருந்துவனவாகும். குறிப்பிட்ட காலத்தில் 't' அங்காடியில் ஒரு பொருளின் அளிப்பு 'S' என்று எடுகோளாகக் கொண்டால், அதன் விலை குறிப்பிட்ட காலத்திற்கு முந்திய காலத்து (Previous Time) அளிப்பையும் விலையையும் சார்ந்துள்ளது. இந்த இயல்பாக இயங்கும் உறவுத் தன்மையைச் (Dynamic Functional Relationship) சமன் பாட்டின் மூலம் தெளிவாக்கலாம்.

$$St = f\ (Pt - 1)$$

S . . அளிப்பு

t . . குறிக்கப்பட்ட காலம்

Pt — 1 . . முந்தைய கால விலை

இதே வகையில் பொருளின் தேவை அளவை 'D' என வைத்துக் கொண்டால், அடுத்த காலத்தின் (Succeeding Period) இயல்பான எதிர்பார்க்கப்படும் விலை t+1 ஆகும். இங்குத் தேவைக்கும் விலைக்கும் உள்ள உறவுக் கோட்பாட்டை விளக்கும் முறை இயங்கும் கோட்பாடு (Dynamic Theory) அல்லது இயங்கு பொருளியல் எனக் கருதப்படும்.

இயங்கு முறை அமைப்பில் மாற்றங்கள் அகவியலாகவும் (Endogenous) தன்னியலான (Independent) குணங்களை உடையனவாகவும் தங்கள் எல்லைக்கப்பால் நடைபெறும் செயல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகாதபடி தனிச் சிறப்புடன் செயற்படுவனவாகவும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. புறவியலான (External) கூறுகளால் தொடக்கத்தில் எதிர்பாராமல் தாக்கப்பட்டு இழுக்கப்பட்டாலும் இயங்கு முறை அமைப்பு, குறுகிய காலத்தில் தானாக இயங்கும் நிலைக்குத் தன்னைச்சரி செய்து கொண்டு இயங்கும். தானே தொடர்ந்து தோற்றுவிக்கும் படிமுறையில்


(Self Generating Process) இயங்கும் பொருளியல் வளர்ச்சியடைகிறது. இதையே பேராசிரியர் பால் சாமுவேல்சன் என்பவர் ஒவ்வோர் இயங்கு முறை அமைப்பும் செயற்படும் வகை எனக் குறிப்பிடுகிறார்.

இயங்கும் பொருளியலில் தானே காலப்போக்கில் தோற்றுவிக்கும் முன்னேற்றக் (Self Generating Development) கூறு உள்ளது. அதனைத் தனிப்பட்ட முனைப்புச் செயன்முறை எனப் பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

பொருளாதாரத்தில் குறிப்பிட்ட கால உற்பத்தி, தேவை, விலை போன்ற மாறிகளின் மதிப்புகள் மற்றொரு காலமதிப்பைச் சார்ந்து இருக்கின்றன எனக் கூற முடியுமானால், அந்தப் பொருளாதாரம் இயங்கும் பொருளாதார அமைப்பில் இயங்குகிறது எனக் கருதப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு காலத்தில் நிலவும் மாறிகளின் மதிப்பின் மூலம் தொடர்ந்து வரும் காலத்தில் நிலவும் மதிப்பை அறியலாம். இயங்கும் பொருளியல் புறவியல் தாக்குதல்களுக்கு அப்பாற்பட்டுச் செயற்படுவதால், இயங்கு முறை அமைப்பு தன்னடக்கியதாகவும் (Self contained) தானியங்கும் ஆற்றுலுடையதாகவும் (Self sustaining) விளங்குகிறது.

இயங்கு முறை ஆய்வில் மொத்தத் தேவைக்கும் (Aggregate Demand) மொத்த அளிப்புக்கும் (Aggregate supply) இடையே ஏற்படும் சமநிலையில் (E) (Equilibrium) நாட்டு வருவாய் நிலை (I)(Level of national income) உறுதி செய்யப்படுகிறது. முதலீட்டு உயர்வால் மொத்தத் தேவை உயரும்போது மொத்தத் தேவை வளைகோடும் உயர்வாக நகர்ந்து, புதிய சமநிலை அளவைக் ($E^2$) காட்டும். நாட்டு வருவாயும் மிகுந்து புதிய நிலையை ($I^2$) எட்டுவதைப் படம்-1-இல் காணலாம்.

கோட்பாடுகள் நடைமுறையில் செயற்பட வேண்டுமானால் இயங்குமுறை ஆய்வு இன்றியமையாத் தேவையாகும். உண்மை உலகில் வருவாய், விலைகள், முதலீடு, நுகர்வு, அளிப்பு ஆகிய மாறிகள் நிலையற்றவையாக மாற்றங்களுக்குட்பட்டே இயங்குகின்றன. இத்தகைய மாறிகள் எவ்வாறு செயற்படுகின்றன? எவ்வாறு ஒன்றுக்கொன்று பிறழ்ந்து இயல்மாறுபாடுகள் கொள்கின்றன? (Act & React) இவற்றால் ஏற்படும் எதிர் விளைவுகள் யாவை? என்பன போன்ற கருத்துகளுக்கான தெளிவை இயங்குநிலை ஆய்வு வெளிப்படுத்துகிறது. எராட்டுதோமர் கருத்துப்படி, பல்வேறுபட்ட பொருளியல் ஆக்கக் கூறுகளின் வளர்ச்சி வீதத்தில் (Growth Rate) ஏற்படும் உறவு முறைகளைச் சார்ந்ததுதான் இயங்கும் பொருளியல். அது வளரும்




நாட்டு வருவாய்

ஒரு பொருளாதாரத்தில் தொடர்சியாக மாற்றங்கள் உண்டாவதைப் பற்றியதாக இருக்க வேண்டும். இயங்கும் பொருளியல் மாறிகள் சில ஒன்றையொன்று சார்ந்தனவாகவும், வெளியீட்டின் வீதம் மாற்றங்களைக் கொண்டதாகவும் இருக்கும். இதில் எராட்டு தோமர் இயங்கும் பொருளியல் ஆய்வு முறையையும், இயங்கும் பொருளியலின் குறியிலக்கை (Scope) யும் கருத்தில் கொள்கிறார்.

சில மாறிகள் பிற மாறிகளுடன் சேர்வதால் எவ்வாறு மாற்றங்களுக்குட்படுகின்றன என்ற உறவு முறையை மாற்றங்களின் வீதம் (Rates of change) தெளிவுபடுத்துகிறது. இது இயங்குநிலை ஆய்வு முறையின் விளைவு. மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் வளரும் பொருளாதாரத்தில் மட்டுமே மாற்றங்களும் வளர்ச்சியும்காணப்படும். எனவே, எராட்டுதோமரின் இயங்கும் பொருளியல் வளரும் பொருளாதாரத்தை மட்டுமே குறியிலக்காகக் கொண்டது. இவரது ஆய்வில் கால இடைவெளிக்கு (Time log) இடம் இல்லை. சமநிலை, பொருளியல் மாறிகளின் மாறும் உறவுகளுக்குத் தகுந்த வகையில் சரிப்படுத்தப்பட்டு (Adjusting) நகரும் சமநிலை (Moving equilibrium) தொடர்ந்து அந்தந்தப் பொருளியல் சூழ்நிலையைச் சார்ந்து நிலவும்.

எராட்டுதோமரின் இயங்குநிலை ஆய்வு இயங்கும் பொருளியலின் பரப்பை விரிவாக்கியது. வாணிகச் சுழற்சி விலைகளின் ஏற்ற இறக்கம் (Fluctuations) போன்றவற்றில் மட்டும் கவனம் செலுத்தாமல், வளர்ச்சிப் பொருளியலின் சிக்கல்களில் பொருளியல் வல்லுநர்கள் அக்கறையுடன் ஈடுபட வழி வகுத்தது. வளரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிச் சிக்கல்களை ஆராய்வதால் பொருளியல் வளர்ச்சிப் படிவங்களும் கோட்பாடுகள் பலவும் புதிய இயங்குநிலை ஆய்வு முறையில் வெளிவருகின்றன. பேரியல் பொருளாதார ஆய்வு முறையில் இயங்கு நிலை ஆய்வு தனிச் சிறப்பிடம் பெற்றுள்ளது.

**இயங்கு நூலகம்** என்பது ஊரும் அல்லது நகரும் நூலகம் ஆகும்.

புத்தகங்களும் முழுமையான நூலகச் சேவையும் கிடைக்காத அல்லது பெறமுடியாத அல்லது இவற்றை அறியாத மக்கட்கும், நூல்நிலையங்களை அணுக இயலாத மக்கட்கும் சேவை செய்வதற் கென்றே இயங்கு நூலகம் அமைக்கப்பட்டது. இது குதிரை வண்டியிலோ சிறிய உந்து வண்டியிலோ (Van) பேருந்து வண்டியிலோ புத்தகங்கள் அடுக்கும் தட்டுகள் கொண்ட அமைப்புடன் பொருத்தப்பட்டி ருக்கும். குறிப்பிட்ட சில பகுதிகளில், மக்களின் தேவையைக் கணித்து எதிர்காலத்தில் நிலையான நூலகம் அமைப்பதற்கு, முன்னோடியான ஓர் ஏற்பா டாக இது அமைகிறது. சிற்றூர்கள், புற நகர்ப்பகுதி கள், புதிய நகர் விரிவுகள் (Townships) ஆகியவற்றின் நூலகத் தேவையை மதிப்பிட இம்முறை உதவுகிறது. ‘சக்கரம் வைத்த நூலகச் செயற்கைக் கோள்’ என்று இயங்கு நூலகத்தைப் புனைந்துரைக்கலாம்.

இதனுடைய உருவ அமைப்பு, அளவு, சேர்க்கப் படவேண்டிய நூல்கள் ஆகியவை சூழ்நிலைகளையும் அங்குள்ள மக்களின் தேவையினையும் கருத்திற் கொண்டு முடிவு செய்யப்படுகின்றன. இடம், கால நிலை, மக்கள்தொகை, அவர்களின் பொருளாதார நிலை, கல்வித் தகுதி, முன்னரே அப்பகுதியில் வழங் கப்பட்டுள்ள நூலகச் சேவை முதலியவை இவற்றின் முக்கியக் கூறுகள் ஆகும்.

எடுத்துக்காட்டாக, பள்ளிகளுக்குச் செல்லும் இயங்கு நூலகமானது பள்ளிக் குழந்தைகளுக்கேற்ற பலவகை நூல்களைக் கொண்டு செல்லும். கிராமப் புறங்களுக்குச் செல்லும் இயங்கு நூலகம், முதியோர் கல்வி நூல்களைக் கொண்டு செல்லும்.

மக்கள் படிப்பதற்கு நூல்களை வழங்காமல், அவர்களின் காட்சிக்கு மட்டுமே வைக்கின்ற இயங்கு நூலகங்களும் சில உண்டு. அவை நடமாடும் நூலகக் காட்சிச் சாலைகளாகவே பயன்படுபவை. சான்றாக, நியூ செஞ்சுரி புத்தக நிலையம் நடமாடும் நூலகக் காட்சிகள் நடத்துவதை இந்தியாவின் எல்லாப் பகுதி களிலும் அடிக்கடி காணலாம். அவை நூல்களை விற்பனைக்காக மட்டுமே காட்சியில் வைக்கின்றன. சிலவகை இயங்கு நூலகங்கள் நூல் நிலையங்களுக்கு மட்டும் நூல்களைக் கொண்டு சென்று வழங்கும்; திரும்பப் பெறும்; பொது மக்களுக்கு வழங்கும் பணி யினைத் தாமே செய்யாமல் அந்நூல் நிலையங்களின் வாயிலாகச் செய்யும்.

இயங்கு நூலகம் நூலகச் சேவையினை மக்களி டம் கொண்டு செல்கிறது. இந்தியா உட்படப் பல நாடுகளிலும் எல்லா மக்களுக்கும் நூலகப் பணி புரி யும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. சான்றாக, மருத்துவ மனையில் இருக்கும் நோயாளிகள், சிறை யிலிருக்கும் கைதிகள், முதியோர், உடல்ஊனமுற் றோர் போன்றோர் நூல்கள் பெற வாய்ப்பினை ஏற்படுத்துதல் இதன் ஒரு பகுதி. இந்தத் திட்ட மானது இத்தகைய நூலகப் பணிகளை இதற்கு முன் அறியாதவர்களுக்காகவும் பெறமுடியாதவர்களுக் காகவும் ஏற்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக, இசுலாமிய சமயக் கோசாப் பெண்கள் (Ghosha) தம் வாழ்க்கை முறைகளாலும், சமுதாயக்கட்டுப் பாடுகளினாலும், மற்ற மக்களோடு வந்து பழகவும் பொது நூலகங்களுக்குச் சென்று அவற்றைப் பயன் படுத்தவும் முடியாத நிலையில் இருப்பர். அவர் களுக்கு இந்த இயங்கு நூலகம் பேருதவியாக இருக் கிறது. அதோடு மட்டுமன்றி இது அவர்களுடைய அத்துணை நூலகத் தேவைகளையும் நிறைவேற்று கிறது. அது போலவே இந்தியாவைப் போன்ற நாடுகளில் உள்ள மனை வாழ்மகளிர்க்கும், வெளியே சென்று இப்போது ஏற்பட்டிருக்கும் உலக வளர்ச்சியை நூல்கள் மூலம் அறிய முடியாத நிலையில் உள்ள வர்க்கும், நூல்களின் மேல் வேட்கை கொண்டவர் களுக்கும், அவ்வேட்கையைத் தீர்க்கும் நீர் ஊற்றாக இது செயற்படுகிறது.

இந்நூலகச் சேவை குறைவான கட்டுப்பாடுகளு டன் மிகுதியான மக்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நூலகங்கள் நூலக வாயிலாக வாசகர்களுக்கும் நேரே வாசகர்களுக்கும் ஆற்றும் பணி குறிப்பிடத் தக்கது. இது படிக்கும் (Reading) தகுதியை வாசகரி டம் வளப்படுத்துகிறது. தன்னுடைய தலைமை நூல கத்திற்கு வாசகர்களைப் பற்றிய பல செய்திகளை அறிவிக்கவும், தகவல்களைச் சேகரிக்கவும் நூலக ஆராய்ச்சிக்குரிய தகுதிகளை வளர்க்கவும் உறுதுணை யாக இருக்கிறது. நிலையான நூலகம் அமையும் வாய்ப்புப் பெறமுடியாத பட்டி தொட்டிகளுக்கும் சின்னஞ் சிறிய கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள

அத்துணை பேருக்கும் சேவையினைச் செவ்வனே செய்யக் கூடிய ஒரே வாய்ப்பு இயங்கு நூலகமே.

**செயற்பாட்டு முறை:** இயங்கும் நூலகம் சென்று நிற்பதற்குக் குறிப்பிட்ட இடங்கள் சில உண்டு. குறிப்பிட்ட ஒவ்வோர் இடத்திலும் குறிப்பிட்ட அளவு நேரமே இது நிற்கும். அதே போன்று, குறிப்பிட்ட நாட்களில்தான் அந்தக் குறிப்பிட்ட இடங்களுக்கும் செல்லும். எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஒரு பகுதிக்குச் செல்லும். அந்தப் பகுதியில் அது நிற்கும் இடங்களில் குறிப்பிட்ட அளவு நேரம் (நாற்பது நிமிடம் அல்லது ஒரு மணி நேரம்) நின்று பணி செய்யும். ஒவ்வோர் இயங்கு நூலகத்திலும் ஒரு நூலகர், ஓர் உதவி நூலகர், ஓர் ஓட்டுநர் ஆகக் குறைந்த அளவு மூவர் இருப்பர். சில பெரிய நடமாடும் நூலகங்களில் இன்னும் இரண்டு உதவி நூலகர், ஒரு துப்புரவாளர் (Cleaner) ஆக அறுவர் இடம் பெறலாம். ஆகவே பணியாட்களின் எண்ணிக்கை அந்த நூலகத்தின் நூல்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் கூடியோ குறைந்தோ இருக்கும்.

**இயங்கு நூலகத்தின் தோற்றம்:** இயங்கு நூலகம் எவ்வளவு பழமையானது என்று அறிவது எளிதன்றாயினும், ஒரு சில நிகழ்ச்சிகளைக் கொண்டு இதன் தோற்றத்தை ஒருவாறு கணக்கிடலாம். ஆரி நாரிசு என்ற ஆராய்ச்சியாளர் சகாராப் பாலைவனத்தில் ஒட்டகங்களின் மேல் நூல்களை ஏற்றிச் சென்றார். இச்செய்தியால் பண்டைய காலத்தில் ஒட்டகம் கூட நடமாடும் நூலகத்திற்குப் பயன்படுத்தப்பட்டமை அறியலாம். ஆனால், இதற்கு முன்னோடி பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அங்கே குதிரை வண்டிகளில் நூல்களைக் கொண்டு சென்று பணி செய்தனர். இப்பணிகள் சில கிராம நிலையங்களுக்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் கிடைத்தன. சில நாடுகளில் தொலைபேசி (Telephone) மூலமாகவும் படகுகள் மூலமாகவும் இப்பணி விரிவாக்கப்படுகிறது. கனடாவில் இருக்கும் நூலகங்கள் இந்த முறையில் தான் எசுக்கிமோக்கள் (Eskimoes) என்னும் வடதுருவத்தில் பனியில் வாழும் மக்கட்கும் நூல்கள் கிடைக்க உதவி செய்கின்றன. பிரான்சு நாட்டிலுள்ள தேசிய இரயில்வே ஏறக்குறைய பத்தாயிரம் நூல்களை 1957-ஆம் ஆண்டு இரயில் வண்டி மூலம் எடுத்துச் சென்று வழியில் உள்ள இரயில் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் கொடுத்துப் பணியாற்றியது. நார்வே நாட்டில் நூல்களைப் படகில் எடுத்துச் சென்று கொடுத்து வாங்குவதைக் காணலாம். நியூமெக்சிகோ நாட்டில் நவசோ (Navajo) பழங்குடியினருக்காக ஆகாய விமானத்தில் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

'மெல்வில் தூயீ' (Melvil Dewey) என்பவர் தம்முடைய கட்டுரையில் ('டயல் பெப்ருவரி 1,1906') இயங்கும் நூலகமானது நியூயார்க்கு மாநிலத்தில் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) கி.பி. 1892-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது என்று கூறுகிறார். கனடா நாட்டில் முதல் இயங்கு நூலகம் பிரேசர் பள்ளத்தாக்கில் (Fraser Valley) 1930-33-ஆம் ஆண்டுகளில் கார்னகி அற நிறுவனத்தால் (Carnagie Trust) தொடங்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் இது முக்கியப் பணி செய்வது மட்டுமன்றி நூலகப் பணியில் ஒரு முக்கிய உறுப்பாகவே கருதப்படுகிறது. ஆங்கிலத் தீவுகளில் மட்டும் 327 இயங்கு நூலகங்கள் 1962-இல் பணிபுரிந்தன. சோவியத்து நாட்டில் தொழிலாளர்கட்குக் கல்வியறிவை வளர்க்க இந் நூலக முறையே பெரிதும் உதவிற்று; இப்போதும் உதவுகிறது.



பழமை இயங்கு நூலகம்

அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) இவற்றை அமைப்பதற்குக் கிழக்கு நைசீரியா, ஈராக்கு, இந்தியா, சிங்கப்பூர், மலகாசிக் குடியரசு, கொலம்பியா, பெரு, சிலி, கிரீசு, போன்ற நாடுகளுக்குப் பண உதவி அளித்தது. கிழக்கு நைசீரியாவில் 'எனுகு' என்னும் இடத்தில் 1957-இல் 1500 முதல் 2000 நூல்கள் கொண்ட இயங்கு நூலகம் ஒன்று ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டது. இதுவே மேற்கு ஆப்பிரிக்காவின் முதல் இயங்கு நூலகம்.

இந்தியாவில் தில்லிப் பொது நூலகம் இந்திய அரசும் யுனெசுகோவும் இணைந்து செயற்படும் சோதனைக்கட்டத் திட்டமாக 1951 அக்டோபரில் இயங்கு நூலகம் அமைக்க ஏற்பாடு செய்தது. முதலாம் இயங்கு நூலகம் 1953-ஆம் ஆண்டு ஏப்பிரலில் தில்லிப் பொது நூலகம் வாயிலாக, நான்கு கிராமப் பகுதிகளுக்கும் நான்கு நகரப் பகுதிகளுக்குமாகத் தொடங்கப்பட்டது. இதில் இந்தி, உருது, பஞ்சாபி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூல்கள் இருந்தன. இரண்டாம் இயங்கு நூலகம் 1960-ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது. பின் மேலும் இரண்டு நூலகங்கள் மையக் கல்வி அமைச்சகத்தால் 1964 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டன. இந்த இயங்கு நூலகங்களில் 1967-ஆம் ஆண்டின் கணக்குப்படி 30,000 பேர் நூல்கள் எடுத்துப் பயன்படுத்தும் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றும், சராசரியாக ஒரு நாளைக்கு ஆயிரத்தைந்நூறு நூல்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன என்றும் கூறுவர். இப்போது இந்தியாவெங்குமாக அறுபதுக்கும் மேலான இயங்கு நூலகங்கள் செயற்பட்டுக் கொண்டிருகின்றன.

தமிழ்நாட்டில் முதன்முறையாக இயங்கு நூலகம் அமைக்கப்பட்ட தகுதியும் பெருமையும் மதுரைக்கு உண்டு. அங்கு அமைந்துள்ள மதுரை மாவட்டப் பொது நூலகம் 6.12.1965 அன்று முதலாம் இயங்கு நூலகத்தை ஒரு சிறிய பேருந்து கொண்டு அமைத்தது. இது காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 2 மணி முதல் 5.30 மணி வரையிலும் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் முறையாகச் சென்று நூல்கள் வழங்கி வருகிறது. இந்த நூலகத்தில் இப்போது 2470 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுள் பெரும்பாலோர் பெண்கள். ஒரு நாளைக்குச் சராசரி 500 பேர் இந் நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந் நூலகத்தில் மொத்தம் 9480 நூல்கள் (பெரும்பாலும் தமிழில்) இருக்கின்றன. இப்பணிக்கு மாதக் கட்டணம் 25 பைசா மட்டுமே இக் கட்டணத் தொகை பேருந்தின் நிருவாகச் செலவுகளுக்குப் பயன்படுகிறது. ஒன்பது நாட்களுக்கு ஒருமுறை இது குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லும். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை புத்தகம் எடுத்துக் கொள்ளலாம். மதுரை மாநகரை ஒன்பது பிரிவுகளாகப் பிரித்து இது பணி புரிகிறது. இதில் வைப்பு நிதியாகப் புத்தகம் ஒன்றுக்கு உருபாய் 5 வீதம் 15 உருபாய் மூன்று புத்தகங்களுக்குப் பெறப்படுகிறது. இந்த இயங்கு நூலகம் இப்போது உறுப்பினரின் வீடு தோறும் செல்கிறது.

அடுத்ததாக 1967-இல் கோயம்புத்தூரிலும், 1968-இல் சென்னையிலும் இந்த இயங்கு நூலகங்கள் தொடங்கப்பெற்றன. கோயம்புத்தூரில் 1164 உறுப்பினர் 800 நூல்களையும், சென்னையில் 2276 உறுப்பினர் 23,011 நூல்களையும் பயன்படுத்துகின்றனர். இவ்விரண்டு பகுதிகளிலும் கூடப் பெண்களே பெரும்பான்மை உறுப்பினர். கோவையில் மூன்று சிறிய பேருந்துகளும்,சென்னையில் இரண்டுஇலேலண்டுப் பேருந்துகளும் இப்பணிக்குப் பயன்படுகின்றன. இப்போது திருநெல்வேலி மாவட்டத்திலும் ஓர் இயங்கு நூலகம் பணி செய்கிறது. டி.ஜெ.

**இயங்கும் ஆய்வகம்**: அறிவியல் கற்பித்தலில் ஆய்வகத்தினுடைய பங்கு இன்றியமையாதது. மாணவர்களுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தி, அச் சிக்கல்களுக்குச் சோதனை முறையில் தீர்வு காணச் செய்தலே சிறந்த கல்வி முறையாகும். சோதனை செய்யும் திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவும் அறிவியல் மனப்பான்மையைப் பெறவும் அறிவியலில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும் ஆய்வகம் ஓர் இன்றியமையாத கருவியாகும். எனினும், சிறந்ததோர் ஆய்வகத்தினை ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்துவது என்பது பொருளாதார நெருக்கடியுள்ள நாடுகளுக்கு எளிதான செயல் அன்று. 'ஆய்வகம் இல்லை' எனவே, 'வாய்மொழி மூலம் அறிவியல் கல்வி' என்ற எண்ணத்தைப் போக்கி, ஆய்வக வசதி இல்லாத பள்ளியிலும் ஆய்வக வேலையில் மாணவருக்குப் பயிற்சி அளிக்கவே தொடங்கப்பட்ட திட்டம் 'இயங்கும் ஆய்வகம்' ஆகும்.

நோக்கம்: இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இயங்கும் ஆய்வகத் திட்டம் முதன் முதலாகத் தொடங்கப் பெற்று நடந்து வருகிறது. தொடக்க நிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்திச் செம்மையுறச் செய்வதே இவ்வாய்வகங்களின் நோக்கமாகும். கல்வி பரவலாக்கப்பட்ட இந்நாளில் பல புதிய பள்ளிகள் பிள்ளைகளின் வீட்டிற்கருகிலேயே பெரும்பாலும் நாட்டுப்புறப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் தொடங்கப் பெற்றுள்ளன. நகர்ப் புறப்பள்ளிகளில் போதிய ஆய்வக வசதி அமைந்துள்ளது. ஆனால், அண்மைக் காலத்தில் தொடங்கப் பெற்ற நாட்டுப்புறப் பள்ளிகளில் போதிய ஆய்வக வசதி ஏதும் இல்லை. இவ்வேறுபாட்டை நீக்கி, நாட்டுப் புறப் பள்ளிகளில் பயிலும் மாணவரும் பயன்பெறும் பொருட்டே இத்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. போதிய ஆய்வக இடம், கருவிகள், மின்இணைப்புப் போன்ற வசதிகள் அற்ற பள்ளிகளின் தேவைகளை இத்திட்டம் முடிந்த அளவிற்கு நிறைவு செய்கிறது. இத்திட்டப்

1978 79-ஆம் ஆண்டு முதல் மேல் நிலைப் பள்ளிகளுக்கும் விரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வகம் செயற்படும் முறை: தமிழ் நாடு 51 கல்வி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கல்வி மாவட்டத்திற்கு ஒன்றாக 51 இயங்கும் ஆய்வகங்கள் செயற்படுகின்றன. ஒவ்வோர் ஆய்வகமும் ஓர் அறிவியல் பட்டதாரி ஆசிரியரின் கீழ்ச் செயற்படுகிறது. இந்த இயங்கும் ஆய்வகம் ஊர்தியில் (Mobile van) அமைக்கப்பட்டுள்ளது. இதில் தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் கற்பிக்க வேண்டிய அறிவியல் பகுதிகளுக்குத் தேவையான கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் மேல்நிலைப் பள்ளிக்கும் தேவையான கருவிகளை இணைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடக்க நிலைக் கல்விக்கு அறிவியல் பெட்டிகள் (Science Kits) இவ்வூர்தியில் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் அறிவியற்கல்வியைப் பாதுகாக்கும் துணை இயக்குநரின் நேரடிப் பார்வையில் உள்ளது.

ஒவ்வோர் ஊர்தியினையும் பொறுப்பேற்றிருக்கும் பள்ளித் துணை ஆய்வர் ஒவ்வொரு திங்களுக்கும் தமது பயணத் திட்டத்தினை அமைப்பார். தம் பொறுப்பிலுள்ள பள்ளிகளுக்கு இத்திட்டத்தினை முன்னரே அறிவித்து விடுவார். அப்பள்ளிகளில் கிடைக்கும் பொருள்களின் தன்மைக் கேற்பவும், சூழ் நிலைக்குத் தகுந்தவாறும் திட்டத்தினை அமைப்பார். திட்டமிட்டபடி, அவ்வட்டத்தில் உள்ள தொடக்க நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி ஆகியவற்றுக்கு ஒவ்வொரு திங்களும் இயங்கும் ஆய்வகத்தில் தேவைப்படும் கருவிகளை ஏற்றிச் செல்வார். துணை ஆய்வர் நாள் முழுவதும் மாணவர்களுக்குக் கற்பித்தும் சில சோதனைகளைச் செய்து காட்டியும் சிலவற்றை மாணவரைக் கொண்டே செய்யச் சொல்லியும் பயிற்சி கொடுக்கிறார். அப்பள்ளியில் நடைபெறும் அறிவியல் தொடர்பான நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டுத் தேவையான அறிவுரைகள் கூறுகிறார். ஒவ்வொரு சனிக்கிழமையும் இயங்கும் ஆய்வகத்துடன் ஆசிரியர் மன்றக் கூட்டங்களுக்கும் சென்று, அங்குக் குழுமியிருக்கும் இருநூற்றுக்கும் மேற்பட்ட தொடக்க நிலை ஆசிரியர்களுக்கு அறிவியல் கருத்துகளை விளக்கியும் சோதனைகள் செய்து காட்டியும் அவர்களுக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கியும் உதவி செய்கிறார்.

இவ்வாறு பணியாற்றும் இயங்கும் ஆய்வகத் துணை ஆய்வர்களுக்கு அவ்வப்போது மறு பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. அறிவியல் கற்பித்தலில் புதிய முறைகளையும் நுணுக்கங்களையும் கொடுத்து, இந்த இயங்கும் ஆய்வகங்கள் சிறந்து செயற்பட எல்லா நடைமுறைகளும் மேற் கொள்ளப்படுகின்றன. மேலும், இவ்வாய்வகத்தில் காட்சிக் கேள்விக் கருவிகளான (Audio-visual Aids) 16 மி.மீ. திரைப்பட ஒளியுருப் படிவக் கருவியும் (Motion film projector), நாடாப்பதிவுக் கருவியும் (Tape Recorder) இணைந்து செயற்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயற்பாட்டில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும், இது சிற்றூர்களில் பயிலும் மாணவர்கள் நேரிடை அனுபவங்களைப் பெற்று, அறிவியல் கல்வியைப் பயில்வதற்கு அரியதொரு வாய்ப்பாக அமைகின்றது.

அ.ப.

***இயந்திர மொழிபெயர்ப்பு:*** மனித வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் இயந்திரம் ஆட்சி செய்து வருகிறது. பல நூற்றாண்டுகளாக மனிதனே செய்து வந்த மொழி பெயர்ப்புப் பணியும் இதன் ஆளுகைக்கு உட்பட்டு விட்டது. வாரன் வீவர் (Warren Weaver) என்ற அமெரிக்கர் 1949-ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் இது பற்றிய குறிப்புகளை வெளியிட்டார். இந்தக் காலத்திலேயே சோவியத்து யூனியனிலும் பிரான்சு நாட்டிலும் இயந்திர மொழிபெயர்ப்புப் பற்றிய சிந்தனை வெளிப்படலாயிற்று. அங்கு இது தானியங்கி மொழி பெயர்ப்பு (Automatic Translation) எனப்பட்டது. இயந்திர மொழிபெயர்ப்புக் குறித்த செயன் முறைகள் 1950 களின் தொடக்கத்தில் அமெரிக்காவில் வடிவம் பெறலாயின. நாளாக நாளாக, இயந்திர மொழி பெயர்ப்பு தனியொரு அறிதுறையாக வளர்ச்சியுறலாயிற்று. அமெரிக்கா, சோவியத்து யூனியன், பிரான்சு, பிரிட்டன், மேற்குச்செருமனி, சீனா, மலேசியா முதலிய நாடுகளில் இது இன்று பெரிய அளவில் செயற்பட்டு வருகிறது. இந்தியாவும் கடந்த சில ஆண்டுகளாக இத்துறையில் கவனம் செலுத்திக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிறது. பெங்களூர் இந்திய அறிவியற் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முதலிய நிறுவனங்கள் இயந்திர மொழிபெயர்ப்பில் சில சாதனைகளை நிகழ்த்தியுள்ளன.

உலக நடப்பை விரைவாகவும் குறைந்த செலவிலும் தெரிந்துகொள்ள மனிதன் விரும்புகிறான். இயந்திர மொழிபெயர்ப்பு இந்த விருப்பை நிறைவேற்ற அவனுக்கு உதவுகிறது. நன்கு திட்டமிடப்பட்ட மொழிபெயர்ப்பு இயந்திரம் ஓர் இலட்சம் சொற்களைக் கொண்ட பகுதியை 5 மணித்துளிகளில் மொழிபெயர்த்து விடுகிறதாதலின், மனிதன் இதில் பேரார்வம் காட்டுகிறான். இந்த மொழி பெயர்ப்புக்குப் பெரும்பாலும் கணிப்பொறிகள் தாம் பயன்படுத்தப்படுகின்றன. சில சமயங்களில் இதற்

கென வடிவமைக்கப்பட்ட இயந்திங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மொழிபெயர்ப்பு மொழியோடு தொடர்புடையது. இயந்திரத்துக்கு மொழி தெரியாது. மொழிபெயர்ப்பில் பங்குபெறுகிற மூலமொழியையும் (Source language) இலக்கு மொழியையும் (Target language) இயந்திரத்துக்குக் கற்பிக்கவேண்டும். மொழிகற்பித்தலுக்கு முன் இரண்டு மொழிகளின் அமைப்பிலக்கணத்தையும் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ்-மலையாளம் போல ஒரே குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் எனில், இலக்கணத்தில் சிக்கல் மிகுதியாக இராது. உருசிய-தமிழ் போல வெவ்வேறு குடும்பமொழிகள் என்னில், சிக்கல் தோன்ற வாய்ப்புண்டு. அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான வழியையும் இயந்திரத்துக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

இந்த மொழி கற்பித்தலோடு தொடர்புடைய மற்றொன்று இருமொழி அகராதியாகும். மூல மொழிச் சொற்களுக்கு நிகரான இலக்குமொழிச் சொற்களைக் கொண்ட அகராதியை உருவாக்கி, அதையும் இயந்திரத்தில் பதிவு செய்து வைக்க வேண்டும். ஒத்த சொற்களை (Equivalents) மொழிபெயர்ப்பில் பயன்படுத்தற்குரிய வழியையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும்.

ஒன்றுக்கு ஒன்று என்றில்லாது ஒன்றுக்குப் பல, பலவற்றுக்கு ஒன்று என்கிற நிலையில் மூலமொழிக்கும் இலக்குமொழிக்கும் இடையே சொற்களும் இலக்கண விதிகளும் தொடர்புற்று இருக்கும்போது, தகுந்த ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் எழலாம். இதைத் தீர்க்கத் தேவையான சில குறியீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதுண்டு.

இயந்திரத்துக்குத் தெரிந்த எழுத்து முறை உரோமன் எழுத்து வடிவந்தான். எனவே, மொழிபெயர்ப்புக்குரிய பகுதியை உரோமன் வடிவில் எழுதி, இயந்திரப் பதிவு செய்து, அதைப் படிப்பதற்குரிய கட்டளைகளையும் (Instructions) சொல்லிக் கொடுக்க வேண்டும். (தமிழ்ப் பல்கலைக் கழகம் கணிப்பொறிக்கேற்ற தமிழ் எழுத்து வடிவத்தை உருவாக்கி வருகிறது).

மொழி இலக்கணம், மொழி அகராதி, மொழி பெயர்ப்பு விதிகள் முதலியவற்றைத் திட்டப்படுத்தி, இயந்திரத்தில் பதிவு செய்ய வேண்டும். பின் தேவையான மூலப்பகுதியை இயந்திரத்தில் உள்ளீடு (Input) செய்யவேண்டும். உள்ளீடு செய்த பகுதி முன்திருத்தம் (Pre-editing) செய்யப்படும். அடுத்த நிலையில் மூலப்பகுதியிலுள்ள சொற்றொடர்கள் பகுப்பாய்வு செய்யப்படும். பின்னர்ச் சொன்னிலை மொழிபெயர்ப்பு (Word to word Translation) மேற்கொள்ளப்படுகிறது. மாற்று விதிகளைப் (Transfer rules) பயன்படுத்தி, இலக்குமொழியின் இயல்புக்கேற்ற முறையில் வாக்கியங்கள் அமைக்கப்பட்டு, மொழிபெயர்க்கப்படுகின்றன. இந்தக் கட்டத்தில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின், அவை பின் திருத்தம் (Post-editing) செய்யப்பட்டு, எதிர்பார்த்த மொழிபெயர்ப்பு இயந்திரத்தின் வெளியீடாக (Output) இலக்குமொழியில் கிடைக்கிறது. இயந்திர மொழிபெயர்ப்பின் இந்தப் பல்வேறு செயற்பாடுகளைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்கும்.

இயந்திரம் மொழிபெயர்க்கத் தொடங்குமுன், அதற்குப் பெரிய அளவில் மனித முயற்சி தேவைப்படுகிறது. இருமொழி வல்லுநர், மொழியியலார், கணிப்பொறியாளர், தொழில்நுட்பவியலார் என இரண்டு மூன்று துறைகளைச் சார்ந்தவர்களின் பல மணிநேரக் கூட்டுழைப்பு மூலமே இது இயலும். இதைச் சீரிய முறையில் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி இயந்திரத்துக்கு ஒரு தடவை சொல்லிக்கொடுத்து விட்டால், பிறகு மொழிபெயர்ப்பு என்பது அதற்குச் சில மணித்துளி வேலையேயாகும். என்றாலும், இயந்திரத்தாலும் சிலவற்றை மொழிபெயர்க்க இயலாது எனச் சொல்வதுண்டு. அறிவியல், தொழில்நுட்பவியல் தொடர்பான பகுதிகளை மொழிபெயர்ப்பதுபோல இலக்கியப் பகுதிகளை மொழிபெயர்த்தல் எளிதன்று என்கின்றனர். இலக்கியத்துக்கான பண்பாட்டுச்சூழல், உணர்ச்சிக்கூறு, ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் முதலியன இலக்கியங்களில் இடம் பெறு

(மூலமொழி) உள்ளீடு ⟶ முன்திருத்தம் ⟶ சொற்றொடர்ப் பகுப்பு

↓

சொல் - சொல் மொழிபெயர்ப்பு

↓

வெளியீடு ⟵ பின்திருத்தம் ⟵ சொற்றொடர் அமைப்பும் மொழிபெயர்ப்பும்

(இலக்குமொழி).

தலும், அவற்றை எல்லாம் இயந்திரத்திடம் எதிர் பார்க்க இயலாததும் இந்தச் சிக்கலுக்குக் காரண மாகும். எனினும், இந்தச் சிக்கலுக்கும் விடைகாண இயந்திர மொழிபெயர்ப்பாளர் முயன்று வருகின்ற னர். இராம.சு.

துணை நூல்கள்:

**Chellamuthu, K., Rangan, K., Murugesan,K.,** Tamil University Machine Translation System, Tamil University, Thanjavur, 1985.

**Eugene A. Nida,** Towards a Science of Translatings (Chapter 12), Leiden, E.J. Brill, 1964.

**Paul L. Garvin,** On Machine Translation, The Hague, Mouton, 1972.

**William N. Locke and A. Donald Booth (eds),** Machine Translation of Languages, New York, John Willy & Sons, London, Chapman & Hall, 1955.

**Roberts, A.H. & Michael Zarechnak,** Machanical Translation in A. Sebeok (ed.), Current Trends in Linguistics, Vol. 12, The Hague, Mouton.

செல்லமுத்து, க., தானியங்கி மொழி பெயர்ப்பு, அறிவுச்சுடர் பத்தாவது ஆண்டுமலர், சென்னை, 1985.

**இயல் சாரா உளவியல் கருத்துகள்:** மக்கள் தத்தம் தொழில், கல்வி, பொழுதுபோக்கு, விருப்பங்கள் போன்றவற்றின் அடிப்படையில் சில உருவகச் சொற்களையும் கருத்துகளையும் உண் டாக்குகின்றனர். இத்தகைய கருத்துகள் இயல்சாரா உளவியல் கருத்துகள் (Concepts of Unofficial Psychology) எனப்படுகின்றன. போதை மருந்துப் பழக் கம் உடையவர்கள் தமக்குள் சில சொற்களைக் குழூஉக்குறி போன்று பயன் படுத்துகின்றனர். இவர் களிடையே சில நடத்தைமுறைகள் ஏற்புடையன வாக இருக்கின்றன. சில பேச்சு வழக்குச் சொற்கள் விரும்பத்தகாத பொருள்களைக் கொடுப்பதில்லை. சமூகத்தில் மற்றவர்களிடையே இத்தகையசொற்கள் விரும்பத்தகாத பொருளுடையனவாக இருக்கலாம். ஆனால் இக்குழுவினரால் இச்சொற்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதனைப் போன்றே சில வகையான நடை, உடை, மனப்பான்மைகள் அமை கின்றன. மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் கள் சில கருத்துகளைச் சிறந்தவையாக உருவகப் படுத்திக்கொள்கிறார்கள். இக் கருத்துகளுக்கு இவர் களிடையே இருக்கும் பெருமை மற்றவர்களிடையே இருக்காது. இளைஞர்களிடையே இத்தகைய உரு வகங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவர்க ளுடைய பேச்சு வழக்கிலும் மற்றவர்களுக்குப் புரி யாத சொற்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய சொற்களும் கருத்துகளும் காலத்திற்கு ஏற்ப மாறு தல் அடைகின்றன. இவை ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கும் பரவலாம். எடுத்துக்காட்டாக, சில ஆண்டுகளுக்கு முன்னர் புரூசுலி (Brucely) என்னும் சப்பானியக் கராத்தே வீரர் உடல் வலிமை, அழகு, பண்பு ஆகியவற்றின் இருப்பிடமாகக் கருதப் பட்டு வந்தார். வீரத்தின் உருவகமாக அவர் கருதப் பட்டார். காலப்போக்கில் அந்த இடத்தை வேறொரு வர் நிரப்பலாம்.

சமய வழிபாட்டிலும் இத்தகைய உருவகங்களும் கருத்துகளும் அவ்வப்போது குறிப்பிட்ட சில குழுக்க ளிடையே தோன்றுகின்றன. சமூகச் சிக்கல்களும் காலப்போக்கில் புதிய சொற்களால் குறிக்கப்படுகின் றன (அயற்றன்மையுறல், இளைஞர் அமைதியின்மை போன்றவை). சில நேரங்களில் இவை பண்பாட் டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கடவுள், கரு மம், மறுபிறவி, வானுலகு, நரகம் போன்ற உருவகங் களை அமைக்கின்றன. இவற்றை யுங்கு (Jung) என் னும் உளவியலார் மூலஉருச் சின்னங்கள் (Archetypes) என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய கருத்துகள் மனிதர்களின் நடத்தை யின்மீது மிகுந்த தாக்கம் கொண்டிருக்கின்றன. இவை உளவியல் விதிகளுள் அடங்காதனவாக இருக்கின்றன. இவை மக்களின் உள்ளத்தில் சிறப் பான இடத்தைக் கொண்டிருக்கின்றன. ஆதலின் இவை இயல்சாரா உளவியற் கருத்துகள் எனப்படு கின்றன.

**இயல்திட்டவாதம்:** இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து தோன்றியது. இயல் திட்டவாதம் (Teleological Argument) உலக இயல்பினைப் பற்றிக் கூறுகிறது. இதன் பொருள் நோக்கம் அல்லது முடிவு என்பதாகும். உலகம் எதனால் உண்டாக்கப்பட்டது, உலகம் எவ்வாறு செயற்படுகிறது என்ற வினாக் களுக்கான விடைகளைப் பழங்கால அறிஞர்கள் கூறியுள்ளனர். உலகம் ஒரே மூலப் பொருளினால் உண்டாக்கப்பட்டது அல்லது தொகுக்கப்பட்டது என்று ஒரு பிரிவினர் கருதி வந்தனர். மற்றொரு பிரிவினர் உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு மூலப் பொருள்களின் தொகுப்பினால் உண்டாக்கப்பட்டது என்று கருதினர். இயல்திட்ட வாதிகள் உலகம் ஒரு பெரிய இயந்திரம் போன்றது என்றும், இவ்வியந்திரமாகிய உலகினை இயக்கு வதற்குக் கடவுள் ஒருவரால்தான் முடியும் என்றும்

கூறுகின்றனர். உலகத் தோற்றத்தைப் பற்றி மேற் கூறியவாறு இருவகைப் பட்ட கருத்துகள் நிலவு கின்றன.

உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இயல்திட்ட வாதக் கொள்கையின் வாயிலாக அறியலாம். கடவுள் இவ்வுலகில் ஓர் உயிர்ப் பொருளாக இருக்கிறாரா இல்லையா என்பதை அறியவும் இவ்வியல்திட்ட வாதமுறை (Teleology Argument Proof for the existance of God) பயன்படுகிறது.

இயந்திரவியல் தத்துவக் கோட்பாட்டாளர்கள் உலகின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் காரணமில்லாமல் நடைபெறாது என்றும், ஒவ்வொரு செயலின் காரணத்திற்கும் விளைவு ஒன்று உண்டு என்றும் சான்று காட்டி வலியுறுத்திக் கூறுகின்றனர். உலகம் ஓர் இயந்திரம் போன்றது என்று கூறுபவரின் தத்துவம் இயந்திரவியல் தத்துவம் என்றும், உலகம் பருப்பொருளினைக் கொண்டதென்றும் இயற்கை விதிகளுக்குட்பட்டுச் செயற்படுகின்றதென்றும் கூறும் கொள்கையினரின் தத்துவம் இயல்திட்டவாதம் என்றும் சொல்லப்படும்.

கடந்த காலம், நிகழ்காலம் ஆகிய இவ்விரண்டு காலங்களிலும் உலகில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டே எதிர்கால நிகழ்ச்சிகள் வரையறை செய்யப்படுகின்றனவென்றும், இவ்வுலகினைப் படைத்த இறைவன் ஒருவனால்தான் எதிர்கால நிகழ்ச்சிகளின் நடைமுறைகளை அறிந்து செயற்பட இயலும் என்றும் இயல்திட்டவாதிகள் கருதினார்கள். பொதுவாக இயல்திட்டவாதம் உலகில் படைக்கப் பட்டவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**இயல்நிலை கடந்த ஆற்றலும் சமய குருமார்களும்:** சமயங்கள் எல்லாவற்றிலும் இயல்நிலை கடந்த ஆற்றல் தொடர்பாகப் பலவகை நம்பிக்கைகள் உள்ளன. சமய நம்பிக்கைகளும் சமயச் சடங்குகளும் மனிதனுக்கும் தெய்வ ஆற்றலுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றியனவாகும். சமயச் சடங்குகள் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தெய் வங்களை வணங்குவதற்காகவும் அவற்றோடு தொடர்பு கொள்ளுவதற்காகவும் ஏற்பட்டன. இந்த நம்பிக்கைகள் மனிதர்கள் வாழும் சூழ்நிலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. இவை சமூகத் தில் நிலவி வரும் மனித உறவுகள், மனிதர்களின் வாழ்க்கை ஆகியவற்றைப்புரிந்து கொள்ளவும் உதவு கின்றன. எனவே இவற்றை மூட நம்பிக்கைகள் என்று எளிதில் ஒதுக்கிவிட முடியாது.

பண்டைக் காலத்தில் மனிதன் தன் வாழ்வில் நடக்கும் பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தபொழுது இவற்றை ஒரு பெரிய ஆற்றல் வரையறுக்கிறது என்று நம்பினான். மேலும், இறந்து போனவர்களைக் கன வில் கண்டதால் ஆவிகளில் நம்பிக்கை ஏற்பட்டு மனிதன் முன்னோர் வழிபாட்டை மேற்கொண் டான். மனிதனால் சில காலங்களில் ஒன்றும் செய்ய இயலாநிலை ஏற்பட்டபடியினாலும், முன்னறிவிப்பு இல்லாமல் வெள்ளம், மழை, பஞ்சம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகள் ஏற்பட்டபடியினாலும் கடவுள் நம்பிக்கை மனிதனுக்கு ஏற்பட்டது. ஆறு, மலை, மரம், சூரியன் போன்ற இயற்கைப் பொருள்கள் தெய்வ ஆற்றலுடன் இருப்பனவாகக் கருதி இயற்கை வழிபாட்டையும் மேற்கொண்டான். இந்த அனைத்து ஆற்றல்களும் புனிதமானதாகக் கருதப்பட்டு வணங் கப்பட்டன.

தெய்வ ஆற்றல்களின்பால் கொண்டுள்ள நம்பிக் கையும் அது தொடர்பான சடங்குகளும் சமயத் தொடர்பு கொண்டனவாக உள்ளன. இத்தகைய ஆற்றல்கள் புனிதமானவையாகவும் பக்திக்கேற்ற வையாகவும் மக்களால் கருதப்படுகின்றன. இவை தொடர்பான சடங்குகளும் நம்பிக்கைகளும் வாழ்க்கை யில் ஏற்படக்கூடிய முதன்மையான நிகழ்ச்சிகளுக்குக் காரணத்தைப் பெற முடியாத நிலையில் ஏற்படு கின்றன. ஒருவருக்குத் துன்பத்தை அல்லது வசதி யின்மையைக் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு இந்நம்பிக்கைகளினால் விளக்கம் பெறப்படுகின்றது. முற்பிறவியில் செய்த வினையால் இப்பிறப்பில் ஒருவன் இன்ப துன்பங்களைப் பெறுகிறான் என்பது நம்மிடையே உள்ள ஒரு நம்பிக்கை. மேலும், தெய்வ ஆற்றல்கள் நம் செயல்களின் தன்மைகளுக்கேற்பத் தண்டித்தலையோ நன்மையளித்தலையோ செய் கின்றன என்பது எல்லாச் சமயத்தவர்களின் நம்பிக்கையாகும்.

இயல்நிலை கடந்த சக்திகளின்பால் உள்ள நம் பிக்கையை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை யாவன: தெய்வ நம்பிக்கை, முன்னோர் வழிபாடு, ஆவிகள் அல்லது பேய்கள் தொடர்பான நம்பிக்கை. இந்த ஆற்றல்களைக் 'காத்து அருள்புரியும் ஆற்றல் கள்' என்றும் 'தண்டிக்கும் ஆற்றல்கள்' என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

தெய்வங்கள், குல தெய்வம், வீட்டுத் தெய்வம் என மூவகைத் தெய்வங்கள் உள்ளன. இவை தவிரச் சிலருக்கு அவர்களுடைய விருப்பமான தெய்வங் களும் உண்டு. மாரியம்மன், பிடாரி, பகவதியம்மன் போன்ற தெய்வங்கள் ஊர்ப் பொதுத் தெய்வங் களாகக் கருதப்படுகின்றன. குல தெய்வம் சில வேளைகளில் 'கருப்பு' போன்ற சிறிய தெய்வமாக வும் இருக்கலாம். வீட்டுத் தெய்வம் பெரும்பாலும் இறந்த முன்னோர்களாகவோ ஊர்த் தெய்வங்களா

கவோ இருக்கலாம். இந்த இயல்நிலை கடந்த ஆற்றல்களின்பால் உள்ள நம்பிக்கை சாதிகளின் தன்மைக்கேற்றவாறு மாறுபடுகிறது. உயர்சாதியினர் பெரும்பாலும் சிறு தெய்வங்களை வணங்குவதில்லை. அவர்கள் பெரும்பாலும் தங்கள் சமயத் தெய்வங்களையோ ஊர்ப்பொதுத் தெய்வங்களையோ வணங்குகிறார்கள். பொதுவாகப் பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களும் சிறு தெய்வங்களை வணங்குகிறார்கள். இவர்களே பேய், பிசாசு போன்றவைகளில் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். விலங்குகளைத் தெய்வங்களுக்குப் பலியிடுகிறார்கள். உயிர்ப் பலியிடும் பழக்கம் உயர்சாதியினரிடையே மிகுதியான அளவில் இல்லை.

ஊர்ப் பொதுத் தெய்வங்களுக்கு ஒவ்வோராண்டும் திருவிழாக்கள் உண்டு. அவை மக்களிடையே மிகுதியான சிறப்பிடம் பெற்றுள்ளன. சமூகத்திலும் குடும்பத்திலும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள தொடர்பினைப் பொறுத்து இயல்நிலை கடந்த ஆற்றல்களின் எண்ணிக்கை வேறுபடும். குடும்பங்கள் முறையான வலிமை மிக்க தலைமையைக் கொண்டிருந்தால், அச் சமூகத்தில் தெய்வங்கள் பலமுள்ளவையாகக் கருதப்படும். மேலும் மனித உறவுகளின் அடிப்படையில் தெய்வங்களும் இருக்கும். எடுத்துக்காட்டாக, முருகன், கணபதி போன்ற உடன்பிறப்புத் தெய்வங்களையும், பரமசிவன், பார்வதி போன்ற திருமண உறவுள்ள தெய்வங்களையும் இந்து சமயத்தில் காணலாம்.

தெய்வங்கள் அவற்றின் ஆற்றலின் தன்மைகளுக்கேற்பச் சமுதாயத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உயர்ந்த அல்லது சாதாரண நிலையில் வைக்கப்படுகின்றன. பொதுவாக மிகுதியான ஆற்றலைக் கொண்ட, நன்மைகளைக் கொடுக்கக் கூடிய தெய்வங்களை உயர்வாகக் கருதி மக்கள் மிகுந்த பக்தி செலுத்துகின்றனர். கோபமுள்ளனவாகவும் செயல்களுக்கேற்ப நன்மை அல்லது தீய பலன்களைக் கொடுப்பனவாகவுமுள்ள தெய்வங்களின்பால் பயம் கொண்டு பலி போன்றவற்றைக் கொடுத்து வணங்குகிறார்கள். கெடுதல்களை விளைவிக்கும் பிசாசு போன்ற ஆற்றல்களுக்கு மிகுதியாகப் பயப்படுகிறார்கள். இவற்றின் பாதிப்பில் இருந்து தப்புவதற்கு மந்திரம் போன்றவற்றைக் கடைப்பிடிக்கிறார்கள். பக்தி செலுத்துவதன் மூலமும் கடவுளின் பாதுகாப்பைப் பெற முயற்சி செய்கிறார்கள்.

திருவிழாக் காலங்களில் பூசைகளும் வேண்டுதல்களும் நடத்தப்படுகின்றன. சாதாரணமாக மக்கள் கோவில்களுக்குச் சென்று வருகிறார்கள். புண்ணிய நாட்களில் சிறப்புப் பூசை செய்கிறார்கள். தங்களுடைய எண்ணம் நிறைவேற அல்லது துன்பம் நீங்க கடவுள்களிடம் முறையிட்டு வழிபாடு செய்கிறார்கள். இதனால் அவர்கள் துன்பத்தைத் தாங்கும் மனவலிமையைப் பெறுவதாக நம்புகிறார்கள்.

முன்னோர்கள் வழிபாடு பெரும்பான்மையான மக்களிடம் காணப்படுகிறது. இறந்தவர்கள் ஆவிகளாக இருப்பார்கள் என்றும், குடும்பத்தில் நன்மைகள் ஏற்படுவது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது என்றும் நம்புகிறார்கள். இறந்தவர்கள் மறுபடியும் குடும்பத்தில் பிறப்பார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடத்தில் உள்ளது. தீயமுறையில் இறந்தவர்கள் பேய்களாக மாறுவார்கள் என்ற நம்பிக்கையும் உள்ளது. பேய்கள் மரங்களிலும் பாழடைந்த வீடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்து வருகின்றன என்று நம்புகிறார்கள். பெரும்பான்மையான கிராமமக்கள் பேய்களைப் பற்றிய கதைகளை மிகுதியாகக் கூறுவர். தீமை செய்யும் பேய்களைக் கட்டுப்படுத்த மந்திரவாதிகளின் உதவியை நாடுகிறார்கள். மதக் குருமார்களும் பூசாரிகளும் சமூகத்தில் முதன்மையான பங்கு வகிக்கிறார்கள். இவர்கள் தெய்வ வழிபாட்டுக்கான சடங்குகளை முன்னின்று செய்கிறார்கள். இவர்கள் தெய்வங்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கிறார்கள். சில சமூகங்களில் பூசாரிகள் தம் ஆற்றலால் தெய்வங்களின் விருப்பு வெறுப்புகளைத் தெரிவிக்கிறார்கள். மக்களின் வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படும்பொழுது அவர்கள் பூசாரிகளை நாடி மன வலிமையைப் பெறுகிறார்கள். நாட்டில் மழையின்மையாலோ அம்மை போன்ற தொற்று நோய்களாலோ மக்கள் துன்பப்படும் பொழுதும், குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படும்பொழுதும் மத குருமார்களும் பூசாரிகளும் தெய்வ வழிபாடுகள் நடத்தி, மக்களிடையே ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகிறார்கள்.

இவர்கள் குடும்பத்தில் சடங்குகளையும் கோவிலில் பூசைகளையும் திருவிழாக்களையும் முன்னின்று நடத்துகிறார்கள். மலை வாழ்மக்கள் போன்ற சமூகத்தினரிடையே பூசாரிகளே பெரும்பாலும் தலைவர்களாக உள்ளார்கள். சமய குருமார்கள் மத நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் பாதுகாத்து, அவை சமூகத்தில் சரிவரப் பின்பற்றப்படப் போதுமான முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

நன்கு வளர்ந்த சமூகத்தில் நிலையான ஒரு முக்கிய இடம் பெற்றுள்ள இந்து சமயம், கிறித்தவ சமயம், புத்த சமயம், சமண சமயம் ஆகியவற்றின் குருமார்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இசுலாமிய சமயத்தில் பொதுவாகச் சமய குருமார்கள் இல்லை. சமூகத் தலைவர்கள் உள்ளனர். புத்த, சமண சமயத்தில் குருமார்களுக்கு என்று முறையான ஒரு வாழ்வு முறை உள்ளது. அவர்கள் குடும்பம்

உலகம் முதலானவற்றின் மீதுள்ள பற்றைத் துறந்து மடத்தில் கட்டுப்பாடுள்ள ஒரு நெறியான வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள். சமயத் தொடர்பான வேதாந்தக் கருத்துகளைக் கற்று, விவாதித்துப் பல நூல்களை எழுதுகிறார்கள்; மக்களிடையே சமயக் கருத்துகளைப் பரப்புகிறார்கள்; பிறமொழியிலுள்ள சமயநூல்களை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடுகிறார்கள். கிறித்தவச் சமய குருமார்கள் முறையாகத் தங்கள் பணிக்குப் பயிற்சி பெறுகிறார்கள். வேண்டுதல்களை நடத்துவதிலிருந்து மடத்தின் சார்பாகச் சமூகப் பணிகளை நடத்துவதுவரை பல்வேறு பணிகளைச் செய்கின்றனர். இந்துக்களிடையே பல மடத்தின் தலைவர்கள் தங்கள் மடத்தின் வாயிலாக இறைபணி செய்து வருகிறார்கள். கிராமத்து மக்களிடையே அவர்கள் தெய்வங்களை வணங்குவதற்கும், கோவில்களைப் பாதுகாப்பதற்கும் பூசாரிகள் உள்ளார்கள். இவர்கள் குடும்ப வாழ்கையில் இருந்து கொண்டே கோவில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்; முக்கிய நாட்களில் நீராடி விரதமிருந்து பூசைகளைச் செய்கிறார்கள். இவர்களுள் சிலர் சோதிடம், மருத்துவம் தெரிந்தவர்களாகவும் உள்ளனர். சிலர் மந்திரங்கள் கூறிப் பேய் பிசாசுகளை விரட்டுபவர்களாகவும் உள்ளனர்.

சமய குருமார்களும் பூசாரிகளும் இக்காலத்திலும் கிராம மக்களிடையே மிகுதியான செல்வாக்குப் பெற்றவர்களாக உள்ளார்கள். நன்கு வளர்ந்து நல்ல அமைப்பைப் பெற்றுள்ள சமயங்களிலும் சமய குருமார்களின் செல்வாக்கு மிகுதியாக உள்ளது. இக்காலத்தில் பெரும்பான்மையான சமயகுருமார்கள் முறையான உயர்கல்வி பெற்ற பிறகே சமயப் பயிற்சி பெறுகிறார்கள். பிறகு நன்கு தேர்ச்சி பெற்ற சமயகுருக்களாகப் பணி புரிகிறார்கள். சீ.சே.தே.

**இயல்பிறந்த இயற்கை** இயற்கைக்கு அப்பாற்பட்ட ஓர் உலகமாகும். இயல்பிறந்த இயற்கை (Supernature) மறைவானதும் விளக்கவியலாததும் புரிந்து கொள்ள முடியாததும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதுமாகும். இயல்பிறந்த இயற்கை தொன்மைச் சமயம் முதல் இன்றைய வளர்ந்தசமயங்கள் வரையுள்ள எல்லாச் சமயங்களிலுமுள்ள ஒரு பண்புக்கூறாகும். இது குறிப்பிட்ட ஒரு பொதுவான சிந்தனைக்கும் அறிவியல் நோக்கத்திற்கும் விலகிச் செல்லக் கூடியதாகும்; ஒரு கற்பனை உலகினைச் சார்ந்ததாகும்; இயற்கையின் சாதாரண நிகழ்விற்கப்பாற்பட்டதும் இயற்கையின் எல்லைக்கப்பாற்பட்டதுமான ஒரு மேலான மண்டலமாகும்.

பரந்துள்ளதும் சிக்கலானதுமாகிய பல பொருள்களிடையே மனிதன் கொண்டுள்ள இடத்தினை நிலைநாட்டும் இயக்கத்தின் ஒரு பகுதியே மந்திரம், ஆவியுலகம், சமயம் ஆகிய அனைத்தும் என்பார் எர்சுகோவிட்சு (Herskovits). இது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதோர் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதோர் ஆற்றலாகவும், மந்திரவாதி, சூனியத்தைக் குணப்படுத்துபவர் (Witch-doctors), சமயத்தலைவர்கள், மன்னர்கள் ஆகியோருடன் தொடர்புடையதாகவும் கருதப்படுகிறது. கடவுள் அல்லது ஆவிகளிடமிருந்து பெறப்படுகின்ற புனித ஆற்றலின் விரும்பத்தக்க விளைவைச் சமயத் தலைவர் வழியே ஏற்படுத்தும் தன்மையே இயற்கை மீறிய நிலை என்பார் இவான்சு-பிரிட்சர்டு (Evans Pritchard).

தெய்விகத் தொடர்பானவற்றில் நம்பிக்கை கொண்டு சடங்குகளை மேற்கொள்வதே 'சமயம்' என்கிறார் 'பொகெட்டு' என்ற மானிடவியலார்; இதில் செய்யப்படும் சடங்குகள் மனிதனையும் இயற்கை மீறிய ஆற்றலையும் இணைக்கின்றன என்கிறார். இயற்கை இறந்த நிலையைப் பற்றி மனிதன் கொள்ளும் நம்பிக்கைகளும் சடங்குகளுமே தொன்மைச் சமயம் உருவாகக் காரணமாயின. இத்தகைய நிலையையே வித்தியார்த்தி, 'மனிதன் - இயற்கை ஆவித் தொகுப்பு' (Man, Nature Spirit Complex) என்கிறார்.

இயற்கை மீறிய நிலை பற்றிய கருத்துகள் பல்வேறு சமுதாயத்தினரிடையேயும் பல்வேறு மக்களிடையேயும் பலவாறு வேறுபட்டு நிலவுந் தன்மை காணக் கூடியதாகும். இதனாலேயே இயற்கை மீறிய நிலை என்பது சிலரால் பேய்களையும் ஆவிகளையும் கொண்டதாகக் கருதப்படுகிறது. மற்றவருக்கு உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து கண்ணுக்குப் புலப்படாத ஆற்றலாக இது எண்ணப்படுகிறது. வேறு சிலருக்கு மனித உருவிலுள்ள (Anthropomorphic) பல்வேறு கடவுளர்வரிசையாகவோ (Pantheon) தனிப்பெருங்கடவுளாகவோ (Single High God) இத்தன்மை புலப்படுகிறது. சமயமென்பது புனிதத்தன்மை கொண்டதென்றும், மந்திரம் அல்லது 'தொல் அறிவியல்' (Primitive Science) புனிதமற்ற தன்மையினை உடையதென்றும் கருதுகின்றனர். தர்க்கைம் (Durkheim) என்பவர் மனிதரும் இயற்கை மீறிய நிலையும் நிலை தடுமாறும்போது (Upset States of Existence) அவற்றைச் சரிப்படுத்துவது சமயத்தின் செயற்பாடாகும் என்று கூறுகிறார்.

பழங்கால மனிதன் சில கனவுகளைக் கண்டான்; குரலின் எதிரொலியினைக் கேட்டான்; இவற்றைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் விழித்துக் கொண்டிருக்கும் போதே மனமருட்சி தரும் அனுபவங்

களைப் பெற்றான். இவ்வாறு அறிந்து கொள்ளவியலாத சில அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருக்கும்போதே, புரியாத புதிரான நிகழ்ச்சிகள் உண்டாகித் தொல் வரலாற்றுக்கால மனிதனின் உடலில் இருந்து செயற்படுகின்றன என்பது எண்ணப்பட்டது என்கிறார் தைலர் (Tylor). அதாவது, மனிதனின் உடலை விட்டுத் தடையின்றிச் சென்று பல அனுபவங்களைச் சந்திக்கும் தனித்தியங்கும் ஆன்மா (Free-soul) ஒன்று; மற்றது உடலின் ஆன்மா (Body-soul). இது நிலையாக உடலை விட்டு வெளியேறும்போது ஏற்படுவதே இறப்பு. இந்நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்டனவே இரட்டை ஈமச் சடங்குகளான பச்சை ஈமச்சடங்கும் (Green funeral) உலர்ந்த ஈமச்சடங்கும் (Dry funeral) ஆகும். இவற்றுள் முன்னது மனிதன் இறந்தவுடனேயே செய்யப்படுகிறது. பின்னது ஆன்மா உடலுக்குத் திரும்பும் என்ற நம்பிக்கையினை முழுவதுமாக இழந்த நிலையில் சில நாட்கள் கழித்துச் செய்யப்படுவதாகும். ஆன்மா உடலைவிட்டு அப்போதைக்கு வெளியேறி விட்டதா அல்லது நிலையாக வெளியேறி விட்டதா என்பதில் ஏற்பட்ட தெளிவின்மையே இவ்விரட்டைச் சடங்குகளுக்குக் காரணமாக இருக்கலாம். புரிந்து கொள்ளவியலாததும் உடல் தொடர்பற்றதுமாகிய ஆவிகளைக் குறித்தெழுந்த பக்தியொடுபட்ட பயமே, தொன்மைக் காலச் சமயத்திற்குக் கருவாகத் திகழ்ந்தது. இக்கருத்துகளின் நம்பிக்கையால் எழுந்ததே ஆவியுலகம்; இவற்றை விவரிக்கும் கோட்பாடு ஆவியுலகக் கோட்பாடாகும் (Animism). அனைத்திற்கும் உயிருண்டு என்ற சமய நம்பிக்கையின் அடிப்படையில் புரிந்து கொள்ளவியலாத, கண்ணுக்குப் புலப்படாத, உடல் தொடர்பற்ற, மனிதர்களைக் குறிக்காத, ஏதோ ஓர் இயற்கை மீறிய ஆற்றலானது உலகத்திலுள்ள உயிருள்ளதும் உயிரற்றதுமாகிய அனைத்துப் பொருள்களிலும் அமைந்துள்ளது என்ற பண்டைய மனிதனின் நம்பிக்கையில் விளைந்தனவே அவனுடைய அனைத்துச் சமய வாழ்க்கைகளும் என மாரெட்டு (Marett) கூறுகிறார். இது அறிவின் எல்லைக்கப்பாற்பட்டாலும் அதே வேளையில் மனித ஆற்றலுக்கும் உட்பட்டுள்ளது. மனிதன் தனக்குள் கொண்டிருக்கும் நற்பண்புகள் ஏதாவதொன்றில் அல்லது அவனைச் சுற்றியிருக்கும் பொருள்கள் எவையேனும் ஒன்றில் இவ்வாற்றல் தெளிவாக வெளிக்காட்டப்படுகிறது. ஒரு மனிதனிடம் அல்லது வேறு ஏதாவது ஒரு பொருளிடம் அமைந்துள்ள இயற்கை மீறிய நிலையின் அளவு மாறுபடினும் அதன் செயலாற்றல் மாறுபடுவதில்லை. இயல்பிறந்த இயற்கையில் அனைத்திற்கும் உயிருண்டு என்ற உயிரிய உலகத்தை விவரிப்பதே மேற்கூறிய உயிரியக் கோட்பாடாகும் (Animatism).

சூரியன், தோற்றம், மறைவு, இடிக்குப் பின் வரும் மழை, பூத்துக் காய்த்துக் குலுங்கும் மரங்கள் ஆகிய இயற்கைப் பொருள்களின் வழிபாட்டினை இது குறிக்கிறது. இயற்கை ஆற்றலில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினையே இவ்வழிபாடு காட்டுகிறது.

மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளச் ‘சமயம்’, ‘மந்திரம்’ என்னும் இருவழிகளை மேற்கொள்கிறான். இயற்கைக்கும் இயற்கை மீறிய நிலைக்கும் அடிப்படையாக அமைந்துள்ள ஆற்றல், சமுதாயத்துடன் ஒத்துப் போகும்படி கட்டுப்படுத்துவதற்காக ‘மந்திரம்’, ‘சமயம்’ ஆகிய இருவழிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் முந்தையது இயற்கை மீறிய நிலையினையும், பிந்தையது இயற்கை நிலையினையும் குறிக்கின்றன. இவற்றில் மேற்கொள்ளப்படும் சடங்குகள் இவற்றைச் செய்யும் மனிதனுக்கும் இயற்கை மீறிய ஆற்றல்களுக்குமிடையே ஒரு பிணைப்பினை உண்டாக்க உதவுகின்றன.

பழங்கால மனிதன் வாழ்க்கையின் உண்மை நிலைகளை (Realities) எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனவே, அனைத்திற்கும் மேலான ஓர் ஆற்றலுள்ளது என்பதில் நம்பிக்கை கொண்டு, மந்திரம் மூலமாகவோ பூசையுடன் கூடிய சடங்குகள் மூலமாகவோ சமய வழிபாட்டினை மேற்கொண்டான். மனிதனின் கடினமான சூழ்நிலைகளையும் மனக்குறைகளையும் தீர்க்கும் கருவிகளாக மந்திரமும் சமயமும் பின்பற்றப்படுகின்றன.

இயற்கை மீறிய நிலையால் தாக்கப்படுதலில் நம்பிக்கை கொள்வதென்பது தாக்கியவர்களைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளில் கொண்டுள்ள நம்பிக்கையினையே குறிக்கிறது. எனவே, சூனியம் (Sorcery), பில்லி சூனியம் (Witchcraft) ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள் தெய்விகத் தன்மையுடன் (Divination) எப்பொழுதும் இணைந்தேயுள்ளன.

‘சூனியம்’ என்பது நடைமுறையில் ஏற்படக்கூடிய உணர்வுள்ள செயலாகும். இது இதற்குப் பலியாகக் கூடியவர்களுக்கு (Victims) நிகழும் கற்பனையான பின்விளைவுகளைக் குறிப்பதால், ‘தீமை பயக்கும் மந்திரம்’ (Evil Magic) எனப்படுகிறது. ‘சூனியம்’ சூனியக்காரர்களுக்கே உரித்தான ஒன்றாகும். சூனியத்துடன் தொடர்புடைய அனைத்துச் செயல்களும் இயற்கை மீறிய செயல்களாகக் கருதப்படுகின்றன. பழி வாங்கப்படுபவரை மெழுகினால் செய்து வைத்து மந்திர மூலம் அவரை இன்னலுக்கு உள்ளாக்குவர். இது மந்திரப்பாவை (Sorcery Figure) எனப்படும்.

வானத்தில் பறப்பது, விளக்குமாற்றின் மேல் பறப்பது போன்றவை ஐரோப்பியச் சூனியம் வல்லுநர்கள் இயற்கையாகத் தம் தாய்மாரிடமிருந்து பெறப்பட்டனவாகும்.

மந்திரவாதியும் மதகுருவும் இம்மை உலகிற்கும் மறுமை உலகிற்கும் இடை நிற்பவர்களாகச் (Mediators) செயற்படுகின்றனர். மந்திரமும் சமயமும் அறிவியல் முறைக்குப் பின்னர் (Post-Scientific Technique) வருபவை என்பார் மலினோசுகி (Malinowski). ஆவியுலக வழிபாட்டிற்கும் கடவுள் வழிபாட்டிற்கும் உரிய விளக்கத்தைக் கொண்டுள்ளதே சமயமாகும். 'மந்திரம்' என்பது கண்ணுக்குப் புலப்படாத சில தீய ஆற்றல்களைக் கொண்டதாகும். மந்திரத்தையொட்டிய பாடல்களில் செய்யப்படும் சிறு மாற்றங்கள் சமய வழிபாட்டுப் பாடல்களாக அவற்றை மாற்றுகின்றன.

பிரேசர் ஒப்புமை விதி (Law of Similarity) தொடர்புடைமை விதி (Law of Contact) என்னும் இருவகை மந்திரங்களைப் பற்றிக் கூறுகிறார். முதல் விதிக்கான எடுத்துக்காட்டுகள் சில: சோட்டா நாக்பூரிலுள்ள பழங்குடியினர் சிலர் மழை வேண்டும் போது மலையுச்சிக்குச் சென்று கோழி அல்லது பன்றியினைப் பலி கொடுக்கின்றனர். இதனால் உருவாக்கப்படும் ஒலி முழக்கம் இடியினை ஒத்துள்ளதால், இதனையடுத்து மழை வரும் என நம்புகின்றனர். சிலைகளை உருவமைத்து அவற்றை எரித்தல் அல்லது ஆணிகளை அவற்றின் மீது அடித்தல் ஆகியவற்றால், அதே உருவினைக் கொண்டு உயிருடன் இருப்பவர்கள் துன்பங்களை அனுபவிப்பர் என்றும் கருதினர். ஆப்பிரிக்கப் 'பில்லி சூனியம்' (Voodoo) இதற்குத்தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

'தொடர்புடைமை விதிக்கு' எடுத்துக்காட்டாகப் பழங்குடியினரிடையே காணப்படும் பின்வரும் வழக்கத்தினைக் கூறலாம். ஒருவனுடைய உடைமைகள் இறப்பிற்கு பின்பும் அவனையே சாரும் என்பதைப் பெரும்பாலும் அனைத்துப் பழங்குடியினரும் வலியுறுத்துகின்றனர். ஆடை, அணிகலன்கள், மூபு வெட்டும் கருவிகள் ஆகியனவையும் இவற்றுள் அடங்கும். முதன்முதலாக அணியப்படும் ஆடை ஒருவனுடைய உடலின் ஒரு பகுதியாகவும் இறுதி வரையில் அவனுக்கே சொந்தமாகவும் கருதப்படுவதால், இறந்த பின்னர்க்கூட அவன் ஆடைகளை அவனைச் சார்ந்த பிறர் அணிய மறுக்கின்றனர். எனவே, இவற்றை இறந்தவனோடு புதைக்கவோ எரிக்கவோ செய்கிறார்கள்.

மந்திரம் பல நேரங்களில் புனிதப் பொருள் வழிபாட்டுடன் (Fetishism) இணைக்கப்படுகிறது. இந்த நம்பிக்கையின்படி, மனிதனைத் துன்பத்தின் பிடியிலிருந்து அகற்றவும் அவன் விரும்பியதை அடையவும் நிறைவேற்றக் கூடிய ஆற்றல் சில பொருள்களில் உள்ளது எனக் கருதப்படுகிறது. இப்பொருள்களே மிகுதியான முதன்மை பெறும் புனிதப் பொருள்கள் (Fetishes) எனப்படுகின்றன. இவை மண்டையோடாக, தாயத்தாக (Amulet) அல்லது இறகாக இருக்கலாம். இவற்றிலுள்ள ஆற்றலே இவற்றைப் பயன்படச் செய்கின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவின் 'நூயர்' (Nuer) பழங்குடியினர், மத்திய இந்தியாவைச் சேர்ந்த சவோரா (Saora) பழங்குடியினர் ஆகியோரைப் புனிதப் பொருள் வழிபாட்டைப் பின்பற்றுவோருக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். 'நூயர்' சமுதாயத்தில் வானக் கடவுளின் அருளைப் பெற்றவனே நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே எடுத்துக் கூறும் பேரறிவாளனாவன் என்ற கருத்தினால், அத்தகையோர் மிகப் புனிதமுடையவராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் அண்மைக் காலத்தில் வானத்திலிருந்து வந்தவர்கள் என நூயரால் கருதப்பட்டு, 'குக்' (Guk) என்று சொல்லப்படுகின்றனர். திங்கா (Dinka) பழங்குடியினர்மீது வெற்றி பெறப் போர் செய்வதற்கு இயற்கை மீறிய ஆற்றல் பெற்றவர்கள் வழி வகுத்ததனால் இவர்கள் தமது பெருமையினை மேலும் மிகுதிப்படுத்திக் கொண்டுள்ளனர். சண்டையைத் தொடங்கும் எண்ணமும் அதற்கான காலமும் பற்றிய கட்டளைகளை இவர்கள் வானக் கடவுளிடமிருந்து தங்கள் கனவிலும் மெய்ம் மறந்த நிலையிலும் பெறுவதாகக் கருதப்படுகிறது.

இயல்பிறந்த ஆற்றல் பெற்றவர்கள்: ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுதல், இயற்கை கடந்த ஆற்றல்களைத் தம்பால் கொண்டு வருதல், உயிர்ப்புப் பொருள்களின் சக்திகளை ஆட்கொண்டிருத்தல் முதலான தனித்திறமை கொண்டோர் இயல்பிறந்த ஆற்றல் பெற்றவர்களாவர். தெய்வ நம்பிக்கை, முன்னோர் வழிபாடு, ஆவிகள் அல்லது பேய்கள் வழிபாடு, ஆவிகள் அல்லது இயல்நிலை கடந்த ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுள்ளவர்களைத் தெய்வத் தன்மையுற்றவர் (Shaman), மந்திரவாதி (Magician), சமய குரு (Priest) என ஒவ்வொரு சமுதாயத்தினரும் தத்தம் சமய முறைகளுக்கேற்ப அழைக்கின்றனர். இவர்கள் தங்கள் சமூகத்தின் தெய்வங்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயற்படுகின்றனர். தொன்மைச் சமூகங்களில் தெய்வத் தன்மையுற்றவர்கள் தம் சமூகத்திலுள்ள உறுப்பினர்களைக் காட்டிலும் சில தனிப்பட்ட செயல்களைப் புரிந்து, இயல்பிறந்த ஆற்றலைக் கட்டுப்படுத்தும் தன்மையைப் பெறுகின்றனர். புகைபிடித்தல், போதைப் பொருள்களை உட்கொள்ளுதல், மேளம் கொட்டுதல், நடனம் புரிதல், மனத்தை ஒருநிலைப்

படுத்துதல், மருட்சி மனத்தோற்றப் பட்டறிவுகளைக் (Hallucinatory experiences) கொள்ளல், மந்திரம் கற்றல், சூனியக்கலைகளைப் பயிலுதல் முதலான கலைகளைப் பெற்று மக்களுக்கு நன்மை செய்யும் ஆற்றல், தீங்கிழைக்கும் ஆற்றல் ஆகிய இருவித ஆற்றல்களையும் செயற்படுத்தும் திறனைத் தெய்வத்தன்மையுற்றவர்கள் பெறுகின்றனர். ம.ந.பு.

துணை நூல்கள்:

**Harris, Marvin,** Culture, People, Nature: An Introduction to general Anthropology, Fitzhenny & White Side Ltd, Toronto, 1972.

**Malinowski, B.,** Magic, Science and Religion, Double day Company, New York, 1955.

**இயல்பு உரிமைகள்**: மனிதர்கள் ஒவ்வொருவரும் மனநிறைவோடு வாழ வேண்டும். இந்த மனநிறைவு பெற ஒவ்வொருவரும் அவரவர் விருப்பத்திற்குகந்த வகையில் வாழ்வினை நடத்த வேண்டும். இவ்வாறு அவரவர் விருப்பத்திற்கேற்ப வாழ ஒவ்வொரு மனிதனும் முழு உரிமை படைத்தவன். இந்த உரிமைகளை அவனே பெற வேண்டும். இவை இறைவனாலோ இயற்கையாலோ வழங்கப்பட்டதாக இருக்கவேண்டும். மனிதன் இந்த உரிமைகளைத் தனி ஆள் ஒருவரிடமிருந்தோ குழுவிலிருந்தோ பெற்றிருந்தால், அவன் அந்தத் தனி ஆள் அல்லது குழுவின் விருப்பத்துக்கேற்ப வாழக்கூடியவனாகி விடுவான். எனவே, மனிதனது உரிமை அந்தத் தனி ஆள் அல்லது குழுவைச் சார்ந்ததாகி விடும். அவனது வாழ்வு கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகவும் தனிப்பட்டவர் குழுவின் ஆதிக்கத்திற்கு ஏற்பவும் அமைந்துவிடும். இதனால் அவனது உரிமைகள் பாதிப்பிற்குள்ளாகி விடும். ஆகவே மனிதன் உரிமைகளை இயற்கையாகவே பெற வேண்டும். இவ்வுரிமைகள் அவனது பிறப்புரிமையாக இருக்கவேண்டும்; அவனுக்கு மறுக்கப்படாத, அசைக்க முடியாத உரிமைகளாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட உரிமைகளைத்தான் இயல்பு உரிமைகள் எனலாம். உலகில் எல்லாவற்றையும் விஞ்சிய சக்தி இயற்கையாக இருப்பதால், அந்த இயற்கையே அவனுக்கு அளித்த உரிமைகள் இயல்பு உரிமைகள் (Natural Rights) எனப்படும்.

தனிமனிதனால் தனித்து வாழ முடியவில்லை. ஏராளமான இடர்ப்பாடுகளுக்கு ஆளானான். ஆகவே பிறரோடு சேர்ந்து வாழமுயற்சி செய்ததன் விளைவே சமூகம். ஆனால் சமூகம் தோன்றுவதற்கு முன்பே ஒவ்வொரு மனிதனும் இயல்பு உரிமைகளைக் கொண்டிருந்தான் என ஆப்சு (Hobbes) தம்முடைய இலெவியதான் என்ற நூலில் கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் தன்னைக் காத்துக்கொள்ள உரிமை படைத்தவன். அவன் எது நல்லது, எது தன்னைக் காக்குமென்று அவனது வாழ்க்கைப் போராட்டத்தில் தன்னுடைய நடவடிக்கைகளைத் தேர்வு செய்ய முழு உரிமை கொண்டவன். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதைத்தான் இயல்பு உரிமைகள் எனக் கூறுகின்றார். இவர் கூறுகின்ற மனிதனுக்குக் கட்டுப்பாடுகள் எவையும் இல்லை. தனக்குப் பிடித்த நடவடிக்கைகளை அல்லது செயல்களைச் செய்யக் கூடியவனாக மனிதன் விளங்கினான் எனத் தனது இயற்கை நிலையில் விளக்குகிறார். இவர் இயற்கைச் சட்டம், இயல்பு உரிமை என இரண்டை வரையறுத்து, ஒவ்வொன்றிற்குமுள்ள வேறுபாடுகளையும் விளக்குகிறார். இயல்பு உரிமையில் மனிதனுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும வரையறுக்கப்படவில்லை. ஆனால் இயற்கைச் சட்டம் சில கட்டுப்பாடுகளை வரையறுத்துள்ளது என்கிறார். இயற்கை நிலையில் தான்தோன்றித்தனமாக இருந்த மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க அமைந்துள்ளது இயற்கைச் சட்டம். ஏனெனில் இயற்கை நிலையில் தன்நலத்திற்காக, பெயருக்காக, ஆசையை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு மனிதனும் பிறரோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அதனால் அமைதியாக இருக்க முடியவில்லை. மக்கள் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தனர். இங்ஙனமிருந்த மக்களுக்கு அமைதி நிலவ வழிவகுத்தது இயல்பு சட்டம் என்கிறார். இந்த இயல்பு சட்டம் உருவாக வேண்டுமாயின், மக்கள் அனைவரும் தான்தோன்றித்தனமாகக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி அனுபவித்து வந்த இயல்பு உரிமைகளை விடவேண்டும். இந்த இயல்பு உரிமைகளைத் தங்களது வாழ்வின் அமைதிக்காக எல்லோரும் பொதுவான ஒருவரிடம் அல்லது ஒரு குழுவிடம் ஒப்படைக்கவேண்டும். இவை பொதுவாகவும் அனைவருக்குமாகவும் ஒப்படைக்கப்பட்டவை. ஒவ்வொருவரும் எல்லோருக்குமாக வாழ, ஒருவரோடொருவர் ஒத்துழைத்து, ஒருவருக்கொருவர் உதவிசெய்து வாழ இவ்வுரிமைகள் ஒப்படைக்கப்பட்டன. உரிமைகள் அனைத்தையும் பெற்றவர் அரசரானார். உரிமைகளை ஒப்படைத்தவர்கள் அவருக்குக்கீழ் வாழும் மக்களானார்கள். மக்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மக்களைக் காக்கக்கூடிய பொறுப்பு அரசனைச் சார்ந்தது. ஆனால் அரசனை எதிர்க்க மக்கள் அதிகாரம் பெற்றவர்கள் அல்லர் என்பதையும் ஆப்சு கூறுகின்றார்.

ஆப்சு விளக்கியுள்ள இயற்கை நிலையானது, சமூகம், அரசியல் ஆகியன தோன்றுவதற்கு முன்னர் உள்ள நிலையாகும். இந்த நிலையில் மக்கள் இயல்பு

உரிமைகள் கொண்டிருந்தனர் என்பது விவாதத்திற்குரியதாக உள்ளது. ஏனெனில் உரிமைகள் தோன்றும் இடமே சமூகம் எனப் பலரும் விளக்கியுள்ளனர். சமூகமேயில்லாமல் உரிமைகள் பிறப்பது சரியன்று. ஏனெனில் ஒவ்வோர் உரிமைக்கும் இணையாக ஒரு பொறுப்பு அமையும். ஆனால் ஆப்சு கூறியுள்ள மனிதன் எந்தவிதப் பொறுப்பும் கொண்டவனாக விளங்கவில்லை. மனிதன் எவை மகிழ்சியூட்டுகின்றனவோ அவற்றையெல்லாம் செய்யக்கூடியவனாகவும், எதை வேண்டுமானாலும் அடையப் பிறரோடு போராடக் கூடியவனாகவும் இருந்ததாகக் கூறுகின்றார். இப்படிப்பட்ட மனிதன் எல்லா உரிமைகளையும் அனைவருக்குமாக ஒப்படைத்தான் என்று சொல்வதை நம்ப இயலவில்லை, தவிர, தன்னைக் காத்துக் கொள்ளும் இயல்பு உரிமையை அவனே வைத்திருந்தான் என்று கூறுவதும் முரணானதாக உள்ளது.

தாமசு ஆப்சைத் தொடர்ந்து, சான்லாக்கு (John Looke) இயல்பு உரிமைகளைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார். உயிர்வாழ்தல், உடைமை, சுதந்திரம் ஆகியன ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கப்பட்டுள்ள அழிக்க முடியாத இயல்பு உரிமைகள் என்றும், இந்த இயல்பு உரிமைகளைக் காப்பதே அரசியல் சமூகத்தின் நோக்கமென்றும், இவற்றை அரசாங்கத்தின் மூலந்தான் பெற முடியுமென்றும் கூறுகின்றார். மனிதன் இயல்பு உரிமைகளை இயற்கை நிலையிலேயே பெற்றிருந்தான் என்றும், இயல்பு உரிமைகளோடு பொதுவான கடமைகளையும் பெற்றிருந்தான் என்றும், மக்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ்ந்தனர் என்றும், கட்டுப்பாடு ஏதுமின்றி, அமைதி, நல்லெண்ணம், ஒருவர்க்கொருவர் உதவி, பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர் என்றும் கூறுகின்றார். ஆனால் இயற்கை நிலையில் மக்கள் இயல்பு உரிமைகளையும் கடமைகளையும் கொண்டு விளங்கினர் என்பதை முழுமையாக ஏற்க முடியவில்லை. இயற்கை நிலையில் மக்களிடம் சில குறிப்பிட்ட திறமை இருந்திருக்கலாம். இத்திறமையைப் பிறர் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். இத்திறமையைப் பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் இல்லாமல் அவர்கள் இருந்திருக்கலாம். எனவே இதனை இயல்பு உரிமை என்று சொல்லமுடியாதென வாதிடுகின்றனர். இவர் இயல்பு உரிமைகள் அனைத்தையும் மக்கள் விட்டுக் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை. இயற்கை நிலையில் இருந்த சில குறைபாடுகளைக் களையும் வண்ணம் சில இயல்பு உரிமைகளை உயிர்வாழ்தல், உடைமை, சுதந்திரம் ஆகியவற்றைக் காப்பதற்காக மாற்றம் செய்ய இணங்கினர் என்கிறார்.

சான்லாக்கின் இயல்பு உரிமை அமெரிக்க, பிரெஞ்சு மக்களிடம் ஆழமாகப் பதிந்துவிட்டது. அமெரிக்கர்கள் சுதந்திரத்திற்காகப் போராடுதலையும், அயலார் ஆட்சியிலிருந்து தங்களை விடுவிக்கப் போராடுதலையும் நியாயமானதே என்று வெளியிட்டனர். ஏனெனில் மக்கள் சுதந்திரமாக வாழ்வது இயல்பு உரிமையெனக் கோரினர். எல்லோரும் சமமானவர்கள், உயிர்வாழ, சுதந்திரமாக இருக்க, மகிழ்வோடு இருக்க ஆண்டவன் சில அழிக்க முடியாத இயல்பு உரிமைகளை மக்களுக்கு அளித்திருக்கின்றான் என அமெரிக்க மக்கள் உரிமைகள் சாசனம் கூறுகின்றது. இந்த உரிமைகளைக் காப்பதற்காக அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கங்கள் அனைத்தும் மக்களின் ஒப்புதலோடு ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஏற்படுகின்ற அரசாங்கங்கள் மக்களின் இயல்பு உரிமைகளுக்கு எதிராக இயங்குமானால், மக்கள் அந்த அரசாங்கங்களை மாற்றவும் நீக்கவும் உரிமை கொண்டவர்களெனவும் சாசனம் கூறுகிறது. எனவே அரசாங்கத்தின் கடமை இயல்பு உரிமைகளைக் காப்பதாகும். இயல்பு உரிமைகளைக் காக்காத அரசாங்கங்களை மாற்றுவதும் நீக்குவதும் மக்களின் இயல்பு உரிமைகளில் உள்ளடங்குகின்றன. தம் விருப்பம் போல் ஆட்சி செலுத்தும் அரசாங்கங்களை எதிர்த்துப் புரட்சி செய்யலாம் என்ற இலாக்கின் இயல்பு உரிமைகளைப் பிரெஞ்சு மக்கள் முன் உதாரணம் காட்டி விளக்குகின்றனர். ஏனெனில் மக்கள்தாம் அரசாங்கத்தில் உயர்ந்த அதிகாரம் கொண்டவர்கள். அரசாங்கம் மக்களுக்காகத்தான் இயங்கவேண்டுமென்ற இயல்பான தன்மையோடு சேர்த்துப் பேசுகின்றனர். எனவேதான் பிரெஞ்சுப் புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நோக்கங்களை நிலைநாட்டியுள்ளது. இவை இயல்பு உரிமைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும்.

இயல்பு உரிமைகள் காலத்திற்குக்காலம், நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும், எல்லாக் காலத்திற்கும், எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய இயல்பு உரிமைகள் இவைதாம் என வரையறுப்பது கடினம். ஏனெனில் காலம், நாடு, மக்கள் ஆகியவற்றிற்கேற்பஇயல்புரிமைகள் வேறுபடுகின்றன. ஆனால் இவை மனித சமுதாயத்தைக் காக்கக் கூடியவை என்பதில் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. உயிர்வாழ்தல், சுதந்திரம், நல்வாழ்வைப் பேணுதல் ஆகியன கி.பி. 1776-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமெரிக்கச் சுதந்திர அறிவிப்பில் வரையறுக்கப்பட்ட இயல்பு உரிமைகளெனலாம். ஆனால் பிரெஞ்சுச் சுதந்திர அறிவிப்பு நல்வாழ்வைப் பேணுதலை இயல்பு உரிமையாகக் கருதவில்லை. சுதந்திரத்தையும் உடைமையையும் காப்

பாற்றுவது,தன் விருப்பப்படி மக்களைக் கைது செய்வதைத் தடுப்பது ஆகியன பிரெஞ்சுச் சுதந்திர அறிவிப்பில் இடம் பெற்றுள்ள இயல்பு உரிமைகளாகும். இயல்பு உரிமையில் அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத்து உருசியாவும் எந்தவித உடன்பாட்டிற்கும் வர முடியவில்லை. ஏனெனில் 'தனி ஒருவரின் உரிமை' என்பதற்கு இரண்டு நாடுகளும் தங்களுக்கேற்ற வகையில் விளக்கம் கொடுக்கின்றன. எனவே இயல்பு உரிமை எல்லோருக்கும் பொருந்தும்வண்ணம் வரையறுக்க இயலாமல் உள்ளது.

அரசியல் அறிஞர்களுள் சிலர் சமத்துவ உரிமை என்பதை இயல்பு உரிமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. சே.எசு. மில் என்பார் சமத்துவ உரிமையை இயல்பு உரிமையாக ஏற்றுக்கொள்ளாதவர்களுள் முக்கியமானவர். அரசியல் பல்வேறு வகைப்பட்ட மக்களை இணைக்கும் காரணியாகப் பெரும்பான்மை மக்களோடு தொடர்பு கொண்டிருப்பதால், சமத்துவமென்பது அரசியலுக்கு நல்லதென்றாலும், நடைமுறையில் சமத்துவமென்பது சாத்தியப்படக்கூடியதன்று என்கிறார். ஆனால் பயன்வழிக் கோட்பாட்டாளர்கள் இயல்பு உரிமை என்பதையே ஏற்றுக்கொள்ளவில்லை. சே.எசு. மில் பயன்வழிக் கோட்பாட்டாளர்களுள் ஒருவராவர்.

மனிதன் முழுமனிதனாக இருக்க வழி செய்வது தான் இயல்பு உரிமைகளெனச் சமூகவியலார் வாதிடுகின்றனர். இயல்பு உரிமைகள் இயற்கைநிலையில் இருந்தன; பின்னர் இவை சட்டமாக்கப்பட்டன என்பதைக் காட்டிலும், எந்த நிலையிலும் மனிதன் முழுமையுறுவதற்கு இவை தேவையென வலியுறுத்துகின்றனர். மனிதனின் உள்ளுணர்வை வளர்க்க உதவும் காரணி இயல்பு உரிமைகள் ஆகும் என்று டி.எச். கிரீன் (T.H.Green) என்னும் அரசியல் அறிஞர் கூறுகின்றார். அவர் மனிதன் எப்படியிருக்க வேண்டுமென்பதை அவன்வன்தான் தீர்மானிக்க வேண்டும்; இதுதான் இயல்பு உரிமையின் சிறப்புக்கூறு என்கிறார். மனிதன் அறநெறியோடு குறிக்கோள் கொண்டவனாகத் தனது வாழ்வைச் சமூகத்திற்கு அளித்து வாழ உறுதுணை செய்வன இயல்பு உரிமைகள். அரசாங்கம் மனிதன் அறநெறியோடும் குறிக்கோளோடும் வாழ வழிவகுத்துக் கொடுக்க வேண்டுமென்கிறார்.

இயல்பு உரிமைகளை அடிப்படை உரிமைகளோடு ஒப்பிட்டுக் கூறுபவர்களும் உள்ளனர். தோரதி பிக்கில்சு (Dorothy Pickles) என்பவர் இயல்பு உரிமை தான் அடிப்படை உரிமை என்கிறார். மொத்தத்தில் மனிதர்கள் மனிதர்களாக வாழக் குறைந்த அளவு உரிமைகள் தேவை. இவைபற்றி இரண்டு அறிவிப்புகள் இன்றைய நாளில் நடைமுறையில் இருக்கின்றன. அவை, அட்லாண்டிக்குச்சாசனம், மனித உரிமைகளின் பொது அறிவிப்பு ஆகியவையாம். அட்லாண்டிக்குச் சாசனம் 1941-ஆம் ஆண்டும், மனித உரிமைகளின் பொது அறிவிப்பு ஐக்கிய நாட்டுச் சபையால் 1948-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாளன்றும் வெளியிடப்பட்டன. உலக மக்களின் குடியுரிமை நாளாகத் திசம்பர் 10-ஆம் தேதி உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. பேச்சுரிமை, தன்னம்பிக்கை, அஞ்சாமை, வறுமையின்றி இருத்தல் ஆகியன அட்லாண்டிக்குச் சாசனம் கூறியுள்ள இயல்பு உரிமைகள். சமத்துவம், சுதந்திரம், அரசாங்கத்தில் பங்கு பெறல், அடிமை முறையையும் தன் விருப்பம் போல் கைது செய்வதையும் தடுத்தல், மத உரிமை, பேச்சுரிமை,சங்கம் அமைக்கும் உரிமை,சொத்துரிமை, சமவேலைக்குச் சம ஊதியம், கல்வி உரிமை ஆகியன சில முக்கியமான உரிமைகளாக மனித உரிமைகளின் பொது அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பெரும்பான்மையான நாடுகளின் அரசியலமைப்புகளில் முன்னர்க் கூறிய அடிப்படை உரிமைகள் இடம்பெற்றுள்ளன. இந்தியா, உருசியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்புக்களில் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இன்றைய நாளில் இயல்பு உரிமைகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மக்களை வழிநடத்திச் செல்லக்கூடியவையாக அமைந்துள்ளன.

என்.எஸ்.சு.

துணை நூல்கள்:

**Burns, C.D.,** Political Schools, Oxford, 1929.

**Gilchrist, R.N.,** Principles of Political Science, Longmans, London.

**Green, T.H.,** Lectures on the Principles of Political Obligation, Longmans, 1921.

**Ritchie, D.G.,** Natural Rights, Allan & Unwin, London, 1924.

**இயல்பு சீராய்வு:** கணக்குப் பதிவேடுகளில் எடுத்தெழுதப்படும் எண்கள் பிழையின்றி எழுதப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டுவது இன்றியமையாதது. எண்களை எடுத்தெழுதும்போது எழுத்தர் சில தவறுகளையும் பிழைகளையும் செய்ய நேரிடலாம். அவை கண்டுபிடிக்கப்படாமல் போனால் பெரும் பின்விளைவுகள் ஏற்படலாம். ஆகவே, இப்பிழைகளையும் தவறுகளையும் கண்டு கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளே இயல்புச் சீராய்வு (Routine Checking) எனப்படுகிறது. கூட்டல்கள், மேலெடுத்துச் செல்லல், பேரேடுகளில் இருப்புக் கட்டல், இருப்புகளைக் கீழிறக்கல்,

அவற்றை இருப்புச் சோதனைக்கு மாற்றி எழுதுதல் போன்ற அனைத்தையும் சரிபார்ப்பது இயல்பு சீராய்வில் அடங்கும்.

இயல்பான சீராய்வு தணிக்கையின் அடித்தளமாக அமைகிறது. இயல்பு சீராய்வுப் பணி பிழையின்றிப் பொறுமையாகவும் அமைதியாகவும் நடந்தால், தணிக்கையின் இறுதி முடிவுகள் உறுதியாக உண்மை நிலையை எடுத்துரைக்கும். ஆனால், இயல்பு சீராய்வு, எழுத்தர் பிழைகளையும் சிறு தவறுகளையும் கண்டுபிடிக்க உதவுமேயன்றி, கொள்கைப் பிழைகளையும், திட்டமிட்டுச் செய்யப்பட்ட மோசடிகளையும் கண்டுபிடிக்க அவ்வளவாக உதவாது. மேலும், இச்சீராய்வுப்பணி பெரும்பாலும் இளநிலை எழுத்தர்களுக்கு இடப்படுகிறது. முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர்கள் இப்பணியில் ஈடுபடுவதில்லை. ஆகையினால், திறமையுடன் செய்யப்பட்ட மோசடிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஆற்றலை இளநிலை எழுத்தாளர்களிடம் எதிர்பார்க்க முடியாது. இளநிலை எழுத்தர்களும் அவ்வளவாக வேலையில் ஈடுபாடு கொள்ளாமல் கடமையைக் கழிக்கும் வகையில் செயற்படுவார்கள். சமயத்தில் இவர்கள் பணியைக் கண்காணிக்க வேண்டிய நிலை தணிக்கையர்களுக்கு ஏற்படலாம்.

பெரிய நிறுவனங்களில் எல்லா நடவடிக்கைகளையும் சரி பார்ப்பது என்பது முடியாத காரியம். இந்நிலையில் தணிக்கையர், சோதனைச் சீராய்வு (Test Checking) மேற்கொள்வர். சோதனைச் சீராய்வின் அளவை நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கு வைப்பு முறையையும், அகக் கட்டுப்பாட்டு (Internal Control) முறையையும் பொறுத்துத் தீர்மானிப்பர். இச் சோதனைச் சீராய்வு முறையைத் தணிக்கையர் தம் சொந்தப் பொறுப்பிலேயே மேற்கொள்ளவேண்டியிருக்கும். நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் ஒருசில சோதனைச் சீராய்வுகளின் மூலம் அனைத்துப் பதிவுகளையும் கணக்குகளையும் சரிபார்க்கும் திறன் அவருக்குக் கிட்டி விடுகிறது.

பலவகை நடவடிக்கைகளைச் சீராயும்போது, பலவகை ஏற்புக் குறிகளைத் (Ticks) தணிக்கையர் பயன்படுத்துவர். பல்வேறு வண்ண எழுதுகோல்களை அல்லது மையினைப் பயன்படுத்துவர். அழித்து எழுதப்பட்ட எண்கள், அடித்து எழுதப்பட்ட எண்கள் முதலியவற்றைச் சரிபார்க்கத் தனி வகை ஏற்புக் குறியைப் பயன்படுத்த வேண்டும். எந்த வண்ண ஏற்புக்குறி எதனைக் குறிக்கிறது என்பது மறைபொருளாக வைத்திருக்கப்பட வேண்டும். ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையோடு தொடர்புடைய மற்றைய நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக ஆய்வு செய்துவிடுவது மிகவும் இன்றியமையாதது.

ஏடுகளை அழித்து எழுதுவதையும் திருத்தி எழுதுவதையும் அனுமதிக்கலாகாது. தவறாக எழுதி அதனை மாற்றி எழுத வேண்டுமெனில், அந்த இடங்களில் பழைய தவறான எண்களைத் தெளிவாகக் குறுக்குக் கோடிட்டு நீக்கி விட்டுச் சரியான எண்ணைப் பக்கத்தில் எழுதவேண்டும். எந்த எண் அழிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வேண்டும். ஏடுகளில் எழுதுகோலால் (பென்சிலால்) குறிக்கப்பட்டுள்ள எண்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏற்றுக் கொள்ளப்பட்ட எண் தணிக்கையரின் பார்வைக்குப்பின் திருத்தப்பட்டிருந்தால் அதனை மிகவும் விழிப்புடன் விசாரிக்கவேண்டும்.

சில வேளைகளில், ஒருவர் ஒரு படிவத்தை உரக்கப் படிப்பதாகவும், மற்றவர் அதன் படியையோ எடுத்து எழுதப்பட்டதையோ சரிபார்ப்பதாகவும் அமையலாம். எண்களைப் படிப்பவர் தெளிவாக உச்சரித்து உரக்க, அமைதியாகப் படிக்க வேண்டும். கணக்கு வைப்பின் அடிப்படை ஏடாக விளங்கும் கெட்டிப் பண ஏடு (Cash Book), அன்றாடக் கெட்டிப்பண வரவுகள் ஆகியவை, அவற்றுக்குரிய வரவுக் குறிப்பேட்டில் முதலில் பதிவு செய்யப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்பட்டிருந்தால், அவை சரியாக எடுத்தெழுதப்பட்டுள்ளனவா என்று ஆய்வு செய்ய வேண்டும். சில வேளைகளில் திருந்தாக் கெட்டிப்பண ஏடு (Rough Cash Book) எழுதப்பட்டு வந்தால் தணிக்கையர் சில சோதனைச் சீராய்வுகளைச் செய்து, திருந்தாக் கெட்டிப் பண ஏட்டில் எழுதப்பட்டதும் ஒழுங்குமுறைக் கெட்டிப்பண ஏட்டில் எழுதப்பட்டதும் முரண்பாடுகளின்றி இருக்கின்றனவா என்று கண்டறிய வேண்டும். அன்றாடம் பெறப்படும் கெட்டிப்பணம் எங்கு எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என்ற ஒழுங்கு முறைகளிருந்தால், அவ்வகையில் கெட்டிப்பணம் செலுத்தப்பட்டு வருகின்றதா என்று ஆய்வு செய்ய வேண்டும்.

காசோலைகளில் யார் கையொப்பமிடும் அதிகாரம் பெற்றுள்ளாரென்றும், கெட்டிப்பணச் செலுத்தல்களை யார் அனுமதிக்க வேண்டும் என்றும், செலுத்தல்கள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் தணிக்கையர் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். பணம் பெற்றுக் கொண்டமைக்காகப் பணம் பெற்றவரிடமிருந்து ஏதேனும் பற்றுச்சீட்டுகள் (Receipts) பெறப்பட்டிருக்கின்றனவா என்று அறிய வேண்டும். அதற்கென அமைக்கப்பட்ட படிவத்தில்தான் அச்சான்றுகள் பெறப்பட வேண்டும்.

பிற சான்றுகளை விசாரிக்காமல் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

கெட்டிப்பண ஏட்டின் இருபுறமுள்ள எல்லா இனங்களையும் வங்கிக் கணக்கு ஏட்டுடன் (Bank-Pass Book) விவரமாக ஒத்துப்பார்க்க வேண்டும். மறுக்கப்பட்ட காசோலை (Dishonoured Cheque),. மறுக்கப்பட்ட வரவுக்குரிய மாற்றுச்சீட்டு (Bill receivable dishonoured) ஆகியவற்றுக்கு எதிர்ப்பதிவு செய்யப்பட்டு அவை இணக்கப்படுத்தப்பட்டுள்ளனவா என்று கவனிக்க வேண்டும். கெட்டிப்பண ஏட்டின்படி வங்கி இருப்பையும் வங்கிக் கணக்கு ஏட்டின் இருப்பையும் வங்கிக் கணக்கு இணக்கப்பட்டியல் (Bank Reconciliation Statement) மூலம் ஒத்துப்பார்க்க வேண்டும்.

பணம் பெறப்பட்ட ஒவ்வோர் இனத்திற்கும் தனிப் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். வரிசைப்படி எண்ணிட்ட மறுபாதியுள்ள பற்றுச்சீட்டுப் புத்தகம் பயன்படுத்தப்பட வேண்டும். அந்தச் சீட்டு எண்ணினைக் கெட்டிப்பண ஏட்டுப் பதிவுக்கு நேராகக் குறிப்பிட வேண்டும். தவறுதலாக எழுதப்பட்ட பற்றுச்சீட்டு அதன் மொத்தத் தொகுப்பிலிருந்து நீக்கப்படலாகாது. மறுபாதியுடன் இணைக்கப்பட்டு 'நீக்கம் செய்யப்பட்டது' (Cancelled) என்று எழுதப்பட்டு, அதன்கீழ் அதிகாரியொருவரின் சுருக்கொப்பமிடப்பட வேண்டும். எண் வரிசைப்படி பற்றுச்சீட்டு ஏதும் காணாமல் போகவில்லை என்று உறுதிதரவேண்டும். தணிக்கையர் அன்றாடப் பண விற்பனைச் சுருக்கத்தைக் கெட்டிப் பண விற்பனைச் சீட்டுடன் ஒத்துப்பார்த்து மொத்தத் தொகை பொதுக் கெட்டிப்பண ஏட்டில் எழுதப்பட்டுள்ளதா என்பதனைக் கவனிக்க வேண்டும்.

தணிக்கையாளா கெட்டிப்பண ஏட்டைத் திருந்தாக் கெட்டிப்பண ஏட்டுடனும் உள்செலுத்துக் குறிப்பு மறுபாதிகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். பெறப்பட்ட தொகையைவிடக் குறைவான தொகை வங்கியில் செலுத்தப்பட்டிருப்பின், பணம் கையாடப்பட்டுள்ளது என்பதனை ஊகித்தறியலாம். பட்டியலேடுகள் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்படவேண்டும். இன்றேல், பயன்படுத்தப்படாத பட்டியலேடுகளைக் கடனாளிக்குச் சான்றாக அளித்து, கெட்டிப்பணத்தைக் கணக்கில் கொண்டு வராமல் ஏமாற்ற வாய்ப்புண்டு.

வாடிக்கையாளர்களுக்கு வழக்கமான அளவுக்கு மேலாகத் தள்ளுபடியளிக்கப்பட்டிருந்தால், அதனை நன்கு விசாரிக்க வேண்டும். வாராக்கடன் (Bad-Debts) என்று கணக்கிலிருந்து நீக்குவதிலும் மோசடிகள் நிகழலாம். திருப்பிப் பெறப்பட்ட கடனில் ஒரு பகுதியை வாராக் கடன் என்று கணக்கில் காட்டிக் கையாடல் செய்ய வாய்ப்புண்டு. கடன்களை வாராக் கடன் என்று முடிவு செய்யும் அதிகாரம் யாருக்கு அளிக்கப்பட்டுள்ளதென்று அறிந்து, வாராக் கடன்களுக்குக் காட்டப்பட்ட தொகை அவர் செய்த முடிவுதானா என்று பார்க்க வேண்டும். தன் வாடிக்கையாளரின் அனுமதி பெற்றுக் கடனாளிகளுக்கு அவர்களுடைய கணக்கு விவரத்தையனுப்பி, அதில் காணப்படும் இருப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். அக்கடிதத்தைத் தணிக்கையருக்கு நேராக அனுப்பும்படியும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

வங்கிக் கணக்கேடு போலியானதாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிணையங்கள் (Securities) மீது பெறப்பட்ட வட்டி சரிபார்க்கப்பட வேண்டும். செலுத்திய வட்டித் தொகையை அதற்குண்டான உடன்பாட்டைக்கொண்டு சரிபார்க்க வேண்டும். வரவேண்டிய வாடகை நீண்டகாலம் வாராமலிருந்தால், அதனைத் தீர விசாரிக்க வேண்டும். வாடகைக்கு விடப்படாமல் கட்டடம் காலியாக இருந்தால் அதன் காரணத்தைக் கண்டறிய வேண்டும். கழிவு அளித்தவரின் கணக்குகளோடு பெற்ற கழிவுத்தொகையைச் சரிபார்க்க வேண்டும். கழிவு வீதத்தை அதை அளித்தோருடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைக் கொண்டு அறியலாம். சந்தாக்காரர்களின் பதிவேட்டையும் பற்றுச்சீட்டுகளின் மறுபாதியையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சந்தா வரவைத் தெளிந்துகொள்ளலாம்.

பணச் செலுத்துகை ஒவ்வொன்றுக்கும் ஆதாரச் சீட்டு இருக்க வேண்டும். ஆதாரச் சீட்டில் காணப்படும் நாள், மாதம், ஆண்டு ஆகியவை அதற்கு ஈடான கெட்டிப்பண ஏட்டுப் பதிவுடன் ஒத்திருக்க வேண்டும், நேர வேலை அட்டைகள், பகுதி வேலை அட்டைகள், அன்றாடக் கூலிப் பட்டியல், மிகை நேரச் செலுத்துகை போன்ற மூல ஆவணங்களைக் கொண்டு, கூலிப்பட்டியல் ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். கூலிப் பட்டியலின் கூட்டுத்தொகையைத் செட்டிப்பண ஏட்டுடன் சரிபார்க்க வேண்டும். கூலியாகக் கொடுக்கப்பட்ட தொகையையும் அதற்காக வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். முன்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை, மற்ற வகைப் பிடித்தங்கள் கணக்கில் ஒழுங்காக எழுதப்பட்டுச் சரிகட்டப் பட்டுள்ளனவா என்று பார்க்க வேண்டும். செலுத்தப்பட்ட பங்காதாயம், வட்டி போன்றவற்றை அவற்றுக்கான வெட்டுச் சீட்டுகளுடன் (Warrant) ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். வாடகை, வரி, காப்பீடு, மின்சாரம், விளம்பரம் போன்ற இனங்கள் தொடர்பான செலவுகளை, அவற்றுக்குண்டான ஆதாரச் சீட்டுகளுடன் ஒப்பிட்

டுச் சரிபார்க்க வேண்டும். சில்லரைப் பணத்திற்கு (Petty Cash) அளிக்கப்பட்ட காசோலைகளைச் சில்லரைக் கெட்டிப்பண ஏட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

சரக்குப் பட்டியல்கள் அனைத்தையும் கொள் முதல் ஏட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சரக்குப் பட்டியல் நிறுவனத்தின் பெயரில் இருக்க வேண்டும். அதிகாரிகள் நிறுவனப் பெயரில் பொருள்களை வாங்கிச் சொந்தப் பயனுக்கு வைத்துக் கொள்ளும் வாய்ப்புகளும் உண்டு. வாங்கப்பட்ட பொருள் நிறுவனத்துக்குத் தேவைதானா எனக் காணவேண்டும். சரக்குப் பட்டியலிலுள்ள நாள் தணிக்கைக் காலத்திற்குப் பொருந்தியதுதானா எனப் பார்க்க வேண்டும். பட்டியலைச் சரிபார்த்த எழுத்தரின் கையொப்பம் அதில் காணப்பட வேண்டும். சரக்குப் பட்டியலிலுள்ள சரக்குகள் மூலதனச் சரக்காக இருக்கக்கூடாது. சரக்குக் கிடங்கிற்கு வந்து சேர்ந்ததைச் சரக்கு உள்வருகை ஏட்டுடனோ (Goods Inward Book), வாயில் காப்பாளரது உள்வருகை ஏட்டுடனோ (Gate-Keeper's Inward Book) ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வணிகத் தள்ளுபடி பட்டியலில் கழிக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட சரக்குகள் அனைத்தும் கொள்முதல் ஏட்டில் எழுதப்பட்டுள்ளனவா என்பதைப் பார்த்து உறுதிசெய்து கொள்ள வேண்டும். சரக்குப் பட்டியல் காணாமல் போயிருந்தால் இரண்டாம்படி பெற்றுத் தரும்படி கட்சியரைக் கேட்க வேண்டும். சரக்குப் பட்டியல் பல பக்கங்களுக்கு நீண்டால், மொத்தக் கூட்டுத்தொகை சரியாக உள்ளதா என்று தணிக்கையர் கவனிக்க வேண்டும். சரக்குப் பட்டியலில் காணப்படும் கணக்கிடல்கள், குறுக்குக் கணக்கிடல்கள் ஆகியவை சரியாகவுள்ளனவா எனக் கண்டறிய வேண்டும். திருப்பப்பட்ட சரக்குகளுக்கு வரவுக் குறிப்புப் (Credit Note) பெறப்பட்டதா எனக் கவனித்தல் மிகவும் இன்றியமையாதது.

விற்பனையின்போது சரக்கு அனுப்புப் பட்டியலை மூன்று படிகளில் தயாரித்து, ஒன்றை வாங்குநருக்கும் மற்றொன்றைச் சரக்கு வெளியனுப்பு ஆணையாகச் சரக்குக் காப்போருக்கும் அனுப்ப வேண்டும். விற்பனை ஏட்டுடன் ஆணை ஏடு, வெளியனுப்பு ஏடு ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். விற்பனை ஏட்டில் காணப்படும் தேதியுடன் சரக்குப் பட்டியலில் காணப்படும் தேதியை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். விற்பனை அனைத்தும் விற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளனவா என்று தணிக்கையர் சோதனை செய்யவேண்டும். விற்பனையான சரக்கு நிறுவனத்தை விட்டு வெளிச்சென்றது என்பதை உறுதிசெய்ய விற்பனைச் சரக்குப் பட்டியல் சிலவற்றைச் சரக்கு வெளிச்செல் ஏட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். நிலையான சொத்துகளின் விற்பனை எதுவும் விற்பனை ஏட்டில் இல்லை என உறுதி செய்து கொள்ள வேண்டும். இதுபோன்றே, விற்பனை ஏட்டின் கணக்கீடுகளையும் சரிபார்ப்பது இன்றியமையாதது. விற்பனைத் திருப்பங்கள், வாயில் காப்பாளர் உள்திருப்ப ஏட்டில் பதியப்பட்டனவா எனக் காணவேண்டும்.

தணிக்கையர் வரவுக்குரிய அனைத்து மாற்றுச் சீட்டுகளையும் ஒன்று விடாது பார்வையிட வேண்டும். மாற்றுச்சீட்டு ஏதும் அவமதிக்கப்பட்டால், அச்சீட்டின் தொகை குறிப்பிட்ட கடனாளியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருக்க வேண்டும். பெயரளவுக் கணக்குகளிலிருந்து ஆதாய-இழப்புக் கணக்கு, தேய்மானம், காப்பு, மூலதனம், நடைமுறை ஆகியவற்றினிடையே ஒதுக்கீடு போன்ற மாற்றம் உரிய கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதைத் தணிக்கையர் ஒத்துப் பார்க்க வேண்டும். தணிக்கையாண்டுக்குரிய எல்லா வருமானங்களும் செலவுக் கணக்கில் கொண்டுவரப் பட்டுள்ளனவா என்பதைத் தணிக்கையர் சோதனையிட வேண்டும்.

கடனாளர்களின் கணக்குகள் கொள்முதல் பேரேட்டில் காணப்படும். இவற்றில் காணும் பல்வேறு தொடக்க இருப்புகளைக் கடந்த ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பையோ முந்தைய தணிக்கையர் சரிபார்த்த கடனாளர் பட்டியலையோ கொண்டு அறிய வேண்டும். இதைப் போலவே விற்பனை ஏட்டில் காணப்படும் தொடக்கப் பற்று இருப்புகளையும் சரிபார்ப்பது இன்றியமையாத ஒன்று. பி. இரா.

**துணை நூல்கள்:**

ஆளுடைய பிள்ளை, தணிக்கை முறை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

**Tandon**, B.N., A Hand Book of Practical Auditing, S. Chand and Company, 1970.

**Kamal Gupta**, Contemporary Auditing, Tata Mc Graw-Hill Publishing Company Limited, New Delhi, 1977.

**இயல்பு பொருளியல்**: பொருளாதாரம் ஒரு கலையியலா அறிவியலா என்பதைப் பற்றியே தீவிரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளியல் என்பதற்குக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதிவரை அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்ற சொற்றொடர்தான் பயன்படுத்தப்பட்டது. அரசியல் பொருளாதாரம் என்ற சொற்றொடருக்குப் பதிலாகப் பொருளியல்

என்ற சொல் புழக்கத்துக்கு வந்ததற்குக் காரணமே பொருளாதார அறிவு வேகமாக முன்னேறி, வரையறைக்கு உட்படுத்தப்பட்டு, ஓர் அமைப்புப் பெற்ற அறிவுப் பகுதியாக வளர்ந்ததுதான் என்று கூறலாம். பொருளியல் என்பது ஓர் அறிவியல் என்றால் அது எத்தகைய அறிவியல் பிரிவைச் சேர்ந்தது? அது 'இயல்பு அறிவியல்' (Normative Science) பிரிவைச் சேர்ந்ததா 'ஆக்க அறிவியல்' (Positive Science) பிரிவைச் சேர்ந்ததா என்பது பற்றிப்பெரும் ஆய்வுகள நடந்துள்ளன. பொதுவாகக் கூறினால், இயற்பியல், புவியியல், இரசாயனம் போன்ற இயற்கை அறிவியல்கள் (Natural Sciences) ஆக்க அறிவியல்கள் எனக் கருதப்படுகின்றன. ஆனால் தத்துவம், அரசியல் போன்றவை இயல்பு அறிவியல்களாகக் கருதப்படுகின்றன.

இயல்பு அறிவியலுக்கும் ஆக்க அறிவியலுக்கும் உள்ள தலையாய வேறுபாடு, இயல்பு அறிவியல் உள்ளார்ந்த நலம்பற்றிய மதிப்பீடுகளை (Value Judgements) ஏற்றுக் கொள்கின்றது என்பதும், ஆக்க அறிவியல் அவற்றைப் புறக்கணிக்கின்றது என்பதுமேயாகும். இதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஓர் இயற்பியல் விஞ்ஞானி அணுவைப் பிளந்து, அதன் உள்ளே மறைந்து கிடக்கின்ற மிகையான ஆற்றலை வெளிக் கொணரும் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். இந்த ஆராய்ச்சியைச் செய்யும்போது, இந்த ஆற்றல் நன்மைக்காகப் பயன் படுத்தப்படுமா தீமைக்காகப் பயன்படுத்தப்படுமா என்பதைப் பற்றி அவர் கருதுவதேயில்லை. அவருடைய ஆராய்ச்சியின் போது, அவர் எவ்விதமான தனிப்பட்ட விருப்பு வெறுப்பையும் தம் ஆராய்ச்சித்துறையில் வெளிக் காட்டுவதில்லை. ஆராய்ச்சியின் ஒரே நோக்கம் உண்மையை வெளிக் கொணர வேண்டும் என்பதுதானே தவிர, அந்த உண்மையை ஆதரிக்கவேண்டும் அல்லது எதிர்க்க வேண்டும் என்கிற உள்ளார்ந்த எண்ணம் எதுவும் அவருக்கு இருப்பதில்லை. ஆனால் அரசியலில் அணுச்சக்தியைப் பயன்படுத்துவதா வேண்டாமா என்பது பற்றி முடிவெடுக்கும் போது, அணுச்சக்தி பற்றிய உண்மைகளை எடுத்துக் கூறுவதோடு, அணுச்சக்தியின் பயன்பாடு எவ்வெவ் வழிகளில் சிறந்தது, எவ்வெவ்வழிகளில் கேடானது, நன்மை பயப்பதா, தீமை தரத்தக்கதா என்பன போன்ற உள்ளார்ந்த நலஞ்சாந்த முடிவுகளைப் பகுத்தாய்வின் மூலம் வெளிக் கொணர வேண்டும். ஆக்க அறிவியல்களில் ஆராய்ச்சியின் இலக்கு உண்மையை அறிந்து கொள்வதே ஆகும். ஆனால் இயல்பு அறிவியல்களில் ஆராய்ச்சியின் இலக்கு உண்மையை அறிந்து கொள்வது மட்டுமன்றி, அந்த உண்மை சமுதாய நன்மையைத் தருமா என்று அறியும் நோக்கத்தையும் சேர்ந்ததாக இருக்கிறது.

பொருளியலானது ஓர் இயல்பு அறிவியலா, புற மெய்ம்மை சார்ந்த வரையறுக்கப்பட்ட ஆக்க அறிவியலா என்பதில் இருவேறு கருத்துகள் இருப்பதில் வியப்பொன்றும் இல்லை. பொருளியல் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஒரு கலையியலாகத்தான் கருதப்பட்டது. இறுதிநிலைப் புரட்சிக்குப் பிறகுதான் (Marginal Revolution) பொருளியல் ஓர் அறிவியல் என்கிற எண்ணமே வலுப்பெற்றது. ஆல்பிரெடு மார்சல் (Alfred Marshall) பொருளியலை ஓர் இயல்பு அறிவியலாகத்தான் கருதினார். பேராசிரியர் இலயனல் இராபின்சுதான் (Lioneli Robins) முதன்முதலில் பொருளியல் ஓர் ஆக்க அறிவியல் என்று உறுதியாகக் கருதினார். அவருடைய பொருளாதார இலக்கணம் இந்த அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டுள்ளது. பொருளியலின் நோக்கம் உண்மை விளக்கம் தருவதே; அவ்விளக்கத்தை ஆதரிப்பதோ எதிர்ப்பதோ அதன் நோக்கமன்று என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார். வேதியியல், இயற்பியல் போன்ற இயற்கை அறிவியல்கள் போலவே பொருளியல் உண்மையை மாத்திரமே தேடுகிறது. அதன் கண்டுபிடிப்புகளினால் நன்மைகள் விளையுமா, தீமைகள் விளையுமா என்று சீர்தூக்கிப் பார்த்து நன்மைகளை ஆதரிப்பதும் தீமைகளை எதிர்ப்பதும் அரசியல்வாதிகளின் பணியேயன்றி பொருளியலின் பணியன்று என்பது பேராசிரியர் இலயனல் இராபின்சின் தீவிரமான கருத்தாகும்.

கீன்சு பிரபு (Lord Keynes) திட்டவட்டமாக இதை மறுக்கவில்லை. அவரைப் பொறுத்தவரையில் பொருளியல் அதை அறிந்திருப்பவர்களுக்குச் சரியான முடிவுகளை மேற்கொள்வதற்கு உதவி செய்யும் ஒரு கருவி; அது மனித மனம் பயன்படுத்தும் ஒரு கருவி என்றாலும் பொருளியல் எந்தக் காலத்திலும் ஒரு முழுமை பெற்ற ஆக்க அறிவியலாக முடியாது. பொருளியல் எப்போதும் ஓர் அறம் சார்ந்த அறிவியல் (Moral Science) தான். இதை விளக்குவதற்குக்கீன்சு பிரபு ஓர் எடுத்துக்காட்டைக் கொடுத்திருக்கிறார். ஆப்பிள் மரத்திலிருந்து விழுவதைப்பார்த்த நியூட்டன், அதிலிருந்து புவிஈர்ப்பு விதியை உலகம் முழுதுக்கும் பொதுவான ஒரு விதியாக வெளியிட்டார். ஆனால் ஆப்பிள்களுக்கும் மரங்களுக்கும் நிலத்துக்கும் மனிதர்களைப் போல மனமிருக்குமேயானால், ஆப்பிள் விழுவதற்கு முன்பாக நான் ஏன் விழவேண்டும் என்று கேட்கும். விழுந்து கொண்டிருக்கும்போதே கீழேயிருக்கும் நிலம் பிடிக்கவில்லை என்று வேறு திசைநோக்கிச் செல்லத் தொடங்கும். அது போலவே மரமும் இந்த ஆப்பிள் பழுக்கும் வரை நான் ஏன் அதைத் தாங்க வேண்டும் என்று கேள்வி கேட்கும். நிலமும் கூட ஆப்பிள் என்மேல் ஏன் வந்து விழவேண்டும் என்று மறுக்கும். வேறொரு வகையாகக் கூறினால்,

இயற்கை அறிவியல்களில் ஆராய்ச்சி செய்கின்ற மனித இனத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறான தன்மைகளும் எண்ணங்களும் கொண்டவனாக வேறுபட்டுத் தனித்திருக்கிறான். எனவே, ரீன்சு பிரபுவின் கருத்துப்படி இயற்கை அறிவியல்கள் ஆக்க அறிவியல்களாக உருவாகக்கூடும். ஆனால் சமூகவியல்களில் குறிப்பாகப் பொருளியல், இயல்பு அறிவியலாகத்தான் இருக்க முடியும்.

'சிகாகோ பள்ளி'யைச் சார்ந்த மில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) தம் 'ஆக்கம் சார்ந்த பொருளியல் கட்டுரைகள்' (Essays in Positive Economics) என்னும் புகழ்பெற்ற நூலில் பேராசிரியர் இலயனல் இராபின்சின் கருத்தை ஆதரிக்கிறார். அவருடைய விளக்கத்தின்படி பொருளியல் ஆய்வுகள் வருங்காலத்தைப் பற்றிய வருவதுரைத்தல் (Prediction) என்கிற நோக்கத்தோடுதான் மேற்கொள்ளப்படுகின்றன. எடுகோள்கள் நடைமுறைக்கு ஒவ்வாதவையாக இருந்தாலும், வருவதுரைக்கும் வாய்ப்புகள் சரியானவையாக இருந்தால் அந்த எடுகோள்களை மேற்கொள்ளலாம் என்பது அவர் கருத்து. எடுத்துக்காட்டாக, பயன்பாடு அளவிடக்கூடியது என்கிற தவறான எடுகோளை வைத்துக் கொண்டு அதைப் பயன்படுத்தி, தேவை விதியை விளக்கி, நடைமுறையில் எவ்வாறு தேவை விதி செயற்படுகிறது என்பதுபற்றிச் சரியான முறையில் வருவதுரைக்க முடியுமானால், அந்தத்தவறான எடுகோளைப் பயன்படுத்துவது தவறாகாது என்று அவர் கூறுகிறார். அவர் கருத்துப்படி பொருளியல் உண்மைகளை வெளிக்கொணர வேண்டுமே தவிர, அந்த உண்மைகள் எவ்வாறு பயன்படுத்தப்படப்போகின்றன என்பது பற்றிய கவலை பொருளியலுக்கு அப்பாற்பட்டதாகும்.

இந்த அடிப்படையில் கேரி பெக்கர் (Gary Becker) போன்றவர்கள் குடும்பம், திருமணம், நிறபேதம் காட்டுதல் போன்றவற்றை உச்சநிலை எய்துதல் என்னும் பொருளியல் ஆய்வுமுறையின் இலக்கு மூலமாக ஆய்ந்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருக்கவேண்டுமென்பது குழந்தைகளினால் கிடைக்கக்கூடிய பயன்பாடு, குழந்தைப் பாதுகாப்புக்கு ஆகும் செலவு ஆகியவற்றால் வரையறை செய்யப்படுகிறது என்பது இவர் கருத்து. இதைப்போலவே திருமணம் என்பது மணமகளால் வரக்கூடிய பயன்பாடு, மணமகளைப் பாதுகாப்பதற்காக ஏற்படக்கூடிய செலவு ஆகியவற்றால் வரையறை செய்யப்படுகிறது என்ற எடுகோளின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் குடும்பம், திருமணம் ஆகியவற்றின் புனிதத்தன்மையை அறவே புறக்கணிக்கின்றன என்று இதனை எதிர்ப்பவர்கள் கருதுகின்றனர். ஆனால் இதன் ஆதரவாளர்கள் தங்களுடைய முடிவுகள் மனித நடத்தைக்கு ஒரு விளக்கம் கூறுகின்றனவே தவிர, மனித நடத்தை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று உறுதியாகக் கூறவில்லையென்று பதில் கருத்துக் கூறுகிறார்கள். ஆக்கப்பொருளியல் குழந்தைகளையும் மணமகளையும், பிற பண்டங்களையும் பணிகளையும் பார்க்கும் அந்தக் கண்ணோட்டத்திலேயே பார்க்கிறது. ஆனால் இயல்பு பொருளியல் அவர்களின் சமூக நிலையை மனத்தில் கொண்டு, அவர்களின் நடத்தையை ஆராய்கிறது.

குன்னார் மிர்டால் (Gunnar Myrdal) தொடக்கத்தில் ஆக்கப் பொருளியலில் மிகுதியான நாட்டம் காட்டினார். தனி விருப்பு வெறுப்பின்றிப் பொது நோக்கோடு சமூக நடவடிக்கைகளை ஆய்ந்து, முடிவான வரையறுக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்வதுதான் பொருளியலின் பணி. அந்த உண்மைகளைப் பயன்படுத்துபவர்கள்தாம் அதன் நன்மை தீமைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டும் என்பது அவருடைய தொடக்கக்காலக் கருத்து. ஆனால் அவர் நோபல் பரிசு பெறக் காரணமாயிருந்த ஆசிய நாடகம் என்ற நூல் எழுதும்போது இக்கருத்து மாறிவிட்டது. முழுமையான விருப்பு வெறுப்பற்ற சமூக ஆய்வுகள் நடைபெற இயலாது என்பதும், சமூக ஒட்டுமொத்த நடவடிக்கைகள் சமூகத்தின் தனிப் பகுதிகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒன்று திரட்டுவதால் கிடைப்பதை விட மிகுதியானவையாக இருக்கும் என்பதும் அந் நூலால புலப்படுத்தப்படுகின்றன. அணுவைப் பற்றி ஆராயும் அறிவியல் அறிஞர் ஆய்வில் ஈடுபடும்போது, ஆய்வுக்கு உடனடியாகத் தொடர்பில்லாத மற்ற எல்லாவற்றையும் புறக்கணிப்பதுபோல், பொருளியல் வல்லுநர் ஆய்வின்போது சமூக அமைப்புகள், பண்பாடு, பழக்கவழக்கங்கள், மதம், மொழி போன்றவற்றை உடனடியாகத் தொடர்பில்லாதன என்று புறக்கணித்து விடமுடியாது. அவற்றின் ஈடுபாடுகளையும் பாதிப்புகளையும் பொருளியல் ஆய்வுகள் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்கிற அளவுக்கு, அவர் கொள்கைகள் இயல்பு பொருளியலுக்குச் சார்பாக அமைகின்றன.

பொருளியல் இயல்பு அறிவியலா இயல்பு அறிவியல் அன்றா என்று பல ஆய்வுகள் நடந்த போதிலும், பொருளியல் வல்லுநர்கள் விருப்பு வெறுப்பில்லாமல் நடுநிலையில் இருந்து ஆய்வுகளை மேற்கொள்வது நடைபெறக்கூடிய செயலன்றுஎன்பதை பெரும்பாலோர் ஒப்புக் கொள்கிறார்கள். பொருளியல் எந்தக் கருத்தையும் ஆதரிக்கவோ எதிர்க்கவோ செய்யாமல் இருக்கலாம். ஆனால் பொருளி

யல் ஆசிரியர்களும் வல்லுநர்களும் அவ்வாறு இருக்க இயலாது. பொருளியலின் உண்மைகளைப் பயன்படுத்தும்போது அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகள் அவற்றை மிகவும் பாதிக்கும். எனவே பொருளியல் ஓர் ஆக்கம் சார்ந்த வரையறுக்கப்பட்ட அறிவியல் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆயினும் அதன் பயன்பாட்டைப் பொறுத்த வரையில் பொருளியல் வல்லுநர்கள் அதனை ஓர் இயல்பு அறிவியலாகத்தான் பயன்படுத்துகிறார்கள் என்று அவ் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

பொருளியல் சமூகவியலில் ஒரு பகுதி. சமூகவியல்கள் அனைத்துமே மனிதன் சமுதாயத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை ஆய்கின்றன. எனவே சமூகவியல்கள் அனைத்துக்குமே நல்லதை ஆதரிக்கவும் தீயதை எதிர்க்கவும் வேண்டிய பொறுப்புகள் கூடவே வந்துவிடுகின்றன. அவ்வகையில் உண்மையை உண்மைக்காக மட்டும் தேடுகிற இயற்கை அறிவியல்களிலிருந்து சமூகவியல்கள் மாறுபடுகின்றன. சமூகவியல்களின் நோக்கம் உண்மையை மனிதக்குல நன்மைக்காகத் தேடுவதாகும். பொருளியலும்உண்மைகளை மனிதக்குல நன்மைக்காகத்தான் தேடுகிறது. இந்த அடிப்படையில்தான் பொருளியல் ஓர் இயல்பு அறிவியலாகிறது. எஸ்.நீ.

துணை நூல்கள்:

**Alfred Marshall.**, Principles of Economics, Mac Millan, London, 1966.

**Lionel Robbins**, An Essay on the Nature and Significance of Economic Science, St. Martins, London, 1932.

**Milton Friedman**, Essays in Positive Economics, Chicago University Press, Chicago, 1952.

**Keynes, J.M.**, Collected Works, Royal Economic Society & Mac Millans, London, 1971.

**Gary kecker.**, Human Capital, Columbia University Press, New York, 1964.

**Frank J.B. Stilwell.**, Normative Economics, Pergaman, New South Wales, Australia, 1975.

**இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு**: மேல்நாட்டுத் தத்துவ வரலாற்றில் இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு குறிப்பிடத்தக்கதாகும். சாதாரண மனிதர்கள் புரிந்து கொள்ளக் கூடிய புலன் அறிவே இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு (Native-Realism) ஆகும். எடுத்துக்காட்டாக, ஒரு மரத்தைக் கண்ணால் பார்ப்பதால் அது மரம் எனப்படுகிறது. இதற்கு அறிவு ஆராய்ச்சியில் பிரமாணமாகக் கருதப்படும் காட்சிக் கொள்கை (Perception) உதவுகிறது.

பொருள்களின் தன்மைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்: புற உலகில் தோற்றம் அளிக்கும் ஒவ்வொரு பொருளும் உருவம் (Shape), நிறம் (Colour), சுவை (Taste), நுகர்தல் (Smell), தொட்டறியும் உணர்வு முதலிய தன்மைகளைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு தன்மையும் வெவ்வேறு வகையான அறிவை உண்டாக்குகிறது. இவ் இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு உண்மைக் கோட்பாட்டியலில் (Realism) ஒரு சிறு பகுதியாகக் கருதப்படுகின்றது. மு.மு.

**இயல்பூக்கம்**: இதனை நாம் குறிப்பிட்டுக் காட்டி விளக்க முடியாது. ஆனால், இதனுடைய செல்வாக்கை (Influence) எல்லா உயிரிகளின் நடத்தையிலும் காணலாம். இது எல்லா உயிரிகளிடமும் இயற்கையாகக் காணப்படும் நடத்தைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருந்து இயங்குகின்ற உள்தூண்டலைக் குறிக்கிறது. பூச்சியினங்களும் பறவையினங்களும் இனப்பெருக்கம் செய்வதிலும், பருவகாலமறிந்து கூடு கட்டுவதிலும், முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பொறித்துப் பாதுகாப்பதிலும் இயல்பூக்கமே (Instinct) அடிப்படையாக இருந்து செயல்களை ஊக்குவிக்கின்றது. விலங்குகளின் நடத்தையும் இயல்பூக்கத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. மனிதர்களின் நடத்தை நுண்ணறிவின் துணைக் கொண்டு நடைபெற்று வந்தாலும், பெரும்பாலான நடத்தைகளில் இயல்பூக்கத்தின் செல்வாக்கும்வெளிப்படுவதைக் காணலாம். மனிதர்களின் ஆளுமை வளர்ச்சியில் இயல்பூக்கத்தின் செல்வாக்குப் பரவியிருப்பதாக உளவியல் வல்லுநர்களுள் பண்புமரபியல் கோட்பாட்டினர் (Hereditorians) கருதுகின்றனர். ஆனால், மனிதர்களின் அறிவும் அனுபவமும் செயல்திறனும் வளர வளர, அவர்களின் நடத்தையில் இயல்பூக்கத்தின் செல்வாக்குக் குறைந்து வருகிறது.

மனிதன் தனது இயல்பூக்கத்தை ஆராய்ந்து, நுண்ணறிவின் உதவியால் ஆய்வு செய்து தன் செயலின் விளைவு நன்மையாக முடியும் என்று ஐயமின்றித் தெரிந்து கொண்ட பின்னரே செயற்படுகிறான். இயல்பூக்க நடத்தை எல்லாரிடமும் காணப்படுகின்றது. ஆனால், இதன் வலிமையும் தேவையும் செல்வாக்கும் மனிதர்களிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மக்டூகல் (Mc Dougall) என்பவர் இயல்பூக்கங்கள் பற்றி விரிவான ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளார். சில இயல்பூக்கங்கள் சில காலங்களுக்குப் பொருந்துவனவாக இருக்கின்றன என்று மக்டூகல் கருதுகிறார். எடுத்துக் காட்டாக, பண்டைக்காலத்

தில் மனிதர்களிடம் போரிடும் இயல்பூக்கம் மிகுதி யாகக் காணப்பட்டது. காலப்போக்கில் அது மாறி விட்டது. இந்த இயல்பூக்கம் இக்காலத்தில் மாறுதல் அடைந்து மனிதனின் தற்காப்பு இயல்பூக்கமாக அமைந்திருக்கிறது. அதாவது, மனிதன் இயற்கை யாகவே தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு விரும்புகிறான். மனிதனின் வளர்ச்சிப் பருவங்களில் இயல்பூக்கங்கள் மாறுதல் அடைந்தும் குறைந்தும் கூடியும் காணப்படுகின்றன.

மனிதர்களிடம் பல்வகைப்பட்ட இயல்பூக்கங்கள் காணப்படுகின்றன என்றும், அவற்றுள் 14 இயல்பூக் கங்கள் தலையானவை என்றும் மக்டுகல் கூறுகிறார். அவற்றைப் பெற்றோரூக்கம் (Parential Instinct), போரூக்கம் (Pugnacity), ஆராய்வூக்கம் (Curiosity), உணவு தேடுதல், அருவருப்பு (Repulsion), தவிர்ப்பு (Escape), கூடிவாழ்தல் (Gregarious Instinct), தன் வலியுறுத்தல் (Self Assertion), பணிவு (Self-abasement), பொருள் சேர்த்தல் (Acquisition), ஆக்கம் (Construction), முறையிடுதல் (Appeal), பாலுணர்வு சிரிப்பு எனத் தொகுக்கலாம். இந்த இயல்பூக்கங்களை, இவற்றின் இயல்புகளின் அடிப்படையில் சில பகுதி களுக்குள் அமைக்கலாம்.

இந்த இயல்பூக்கங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர் புடையனவாகும். இவற்றை ஆராய்ந்தால் இவை பின்வரும் மூன்று பெரும் பகுதிகளில் அடங்குவன என்று அறியலாம்.

1. தனிமனிதன் இயல்பூக்கங்கள்: ஆராய்வூக்கம், உணவு தேடுக்கம் போன்றவை இதில் அடங்குவன வாம்.

2. கூட்டுக்கம்: குழுவூக்கம், பணிவூக்கம் என்பவை இதில் அடங்குவன.

3. பாலுணர்வூக்கம்; மகவூக்கம், இனப்பாதுகாப் பூக்கம் போன்றவை இதில் அடங்குவன.

இயல்பூக்கங்களையும் அவற்றுடன் தொடர்பு கொண்ட மனவெழுச்சிகளையொட்டிய துலங்கல் களையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

உணவுதேடுக்கம் உயிரினங்கள் எல்லாவற்றிலும் காணப்படக்கூடிய அடிப்படை இயல்பூக்கமாகும். மனிதர்களிடையே இந்தஇயல்பூக்கத்துடன் தொடர்பு கொண்ட உணவு உட்கொள்ளுதல் என்னும் துலங் கல் (Response) சமூகப்பண்பாட்டுக் கட்டுப்பாடுகளி னால் ஒழுங்கமைவு செய்யப்பட்டுள்ளது. உணவு உட்கொள்வதற்கான சில பழக்கங்களும் மரபுகளும்

| இயல்பூக்கம் | | மனவெழுச்சி | துலங்கல் |
|---|---|---|---|
| 1. | உணவு தேடுக்கம் | பசி | உட்கொள்ளுதல் |
| 2. | ஆராய்வூக்கம் | வியப்பு | ஆராய்தல், பிரித்தல் |
| 3. | போரூக்கம் | சினம் | சண்டையிடுதல் |
| 4. | அருவருப்பூக்கம் | வெறுப்பு | பின்வாங்குதல் |
| 5. | தவிர்ப்பூக்கம் | அச்சம் | ஓடுதல், ஒளிதல், தயங்குதல் |
| 6. | ஆக்கவூக்கம் | படைப்புணர்வு | அடுக்குதல், வடிவமைத்தல் |
| 7. | திரட்டுக்கம் | உடைமை | பொருள் சேகரித்தல் |
| 8. | பாலூக்கம் | பாலுணர்வு | திருமணம் செய்துகொள்ளல் |
| 9. | மகவூக்கம் | பரிவு | பாதுகாத்தல் |
| 10. | குழுவூக்கம் | நட்பு | பிறருடன் நட்புக்கொண்டு பழகுதல் |
| 11. | தன்வலியுறுத்தூக்கம் | ஆதிக்கம் | தன்கருத்தை வலியுறுத்தல் |
| 12. | பணிவூக்கம் | தன்னடக்கம் | அடங்கி நடத்தல். வணங்குதல் |
| 13. | முறையீட்டுக்கம் | துன்பம் | முறையிடுதல் |
| 14. | சிரிப்பூக்கம் | மகிழ்ச்சி | சிரித்தல் |

ஒவ்வொரு பண்பாட்டினரிடையேயும் காணப்படுகின்றன. பலர் சேர்ந்து உண்ணும்பொழுது கவனிக்கத்தக்க சில பண்பாட்டமைதிகளும்(Etiquette) ஏற்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளிடம் ஆராய்வூக்கம் பெரும்பாலும் வலிமையாகக் காணப்படுகிறது. நன்கு தெரியாததும் புதுமையானதுமான பொருள்கள் ஆராய்வூக்கத்திற்குக் காரணமாகின்றன. ஆராய்வூக்கம் மனிதர்களின் அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கும் புதிய அறிவியல் கொள்கைகளுக்கும் ஆராய்வூக்கமே காரணமாகிறது. ஆசிரியர்கள் மாணவர்களிடம் ஆராய்வூக்கத்தை வளர்க்கவேண்டும். பெற்றோர் தம் குழந்தைகளிடம் ஆராய்வூக்கத்தை வளர்க்க வேண்டும். பொருள்களை ஒன்றுபடுத்துதல், பொருள்களுக்கு வடிவம் கொடுத்தல், பொருள்களை அழகுற அமைத்தல் போன்ற செயல்களில் ஆக்கவூக்கம் காணப்படுகிறது. மாணவர்களின் ஆக்கவூக்கம், கலைக் கண்காட்சி அமைத்தல், கைத்தொழில்களில் ஈடுபட்டுப் புதிய பொருள்களை உண்டாக்குதல், புதிய எந்திரப் பொறிகளைக் கண்டுபிடித்தல் போன்ற செயல்களில் வடிகால்களைப்பெறுகிறது.

மாணவர்களின் போரூக்கம், வழக்காடுமன்றம், விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றங்கள் ஆகியவற்றில் அவர்கள் ஈடுபடுவதனால் தக்க வடிகால்களை அடைகிறது. வயதுவந்தவர்களின் போரூக்கம் சமூகப்பணி, சமூக இன்னல்களை எதிர்த்துப் போராடுதல் போன்ற செயல்களின் வழித் தூய்மைப் படுத்தப்படுகிறது. இத்தகைய வடிகால்களில்லாவிட்டால் மனிதர்களின் போரூக்கம் அவர்களிடம் வன்முறையையும் ஆக்கிரமிப்புப் பண்பையும் வளர்த்து விடும். சிறுவயதிலிருந்தே மனிதர்களின் மேம்பாட்டுளத்தில் சமூக ஏற்பிலாத பொருள்கள், கருத்துகள் பற்றிய வெறுப்பு உருவாக்கப்படுகிறது. சில நேரங்களில் சார்பெண்ணங்களும் அருவருப்பூக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன. குறிப்பிட்ட சில பொருள்கள் அல்லது மனிதர்கள்மீது அருவருப்பு உண்டாவதும் இதன் விளைவேயாம். இதனைப் போன்ற தீய செயல்களைக் கண்டு, அவற்றைத் தவிர்ப்பதும் அவற்றினின்று ஒதுங்கியிருப்பதும் தவிர்ப்பூக்கமாகக் காணப்படுகின்றன. திரட்டூக்கம் மனிதர்களைத் தமக்கெனச் சொத்து சேகரிப்பதற்குத் தூண்டுகிறது. இந்த இயல்பூக்கம் மாணவர்கள் சிறந்த அழகியற் பொருள்களைச் சேர்ப்பதற்குக் காரணமாகிறது. மக்களின் பாலூக்கம் கதை, கவிதை, நாடகம், கற்பனை, ஓவியம் போன்ற கவின்கலைகளின் மூலமாகத் தூய்மைப்படுத்தப்படுகிறது. எதிர்பாலினருடன் கூட்டுக்கல்வி முறையின் காரணமாக மாணவர்களிடையே எதிர்பாலினர் பற்றிய பொதுமைக்கருத்து உருவாக வழி ஏற்படுகிறது.

வயதுவந்தோரிடம் காணப்படும் மகவூக்கம் குழந்தைகளிடத்திலும் இளையோரிடத்திலும் பரிவுணர்வின் வடிவில் காணப்படுகிறது. இதன் காரணமாக அவர்கள் மக்களிடத்து இரக்கம் காட்டுகின்றனர்; துன்புறுவோர்க்கு உதவிசெய்யவும் முன் வருகின்றனர். பள்ளிவிழாக்களும் சுற்றுலாக்களும் சமூகப்பணி முகாம்களும் மாணவர்களிடத்தில் குழுவூக்கத்தை வளர்க்க உதவுகின்றன. தன்வலியுறுத்தூக்கம் மாணவர்களிடையே அச்சமின்மையை வளர்க்கிறது. தாம் கொண்ட கொள்கைவழிச் சிலர் உறுதியாக நிற்பதற்கு இத்தகைய இயல்பூக்கமே காரணமாகும்.

பணிவூக்கம் என்பது கட்டுப்பாடுகளுக்கும் ஒழுங்கமைவுக்கும் கட்டுப்பட்டு இயங்கும் பண்பினை உணர்த்துகிறது. இத்தகைய இயல்பூக்கம் தேவையான அளவு மக்களிடம் இருத்தல் நலம். துன்பங்களினின்று விடுதலை பெறவேண்டும் என்ற இயல்பூக்கம் மனிதர்களிடம் காணப்படுவதால்தான் அவர்கள் துன்பங்களை எதிர்த்து முறையிடுகின்றனர். தொழிலாளர்கள் தம் உரிமைகளைக் கேட்கவும் முறையீட்டுக்கும் இது காரணமாகிறது.

சிரிப்பு என்பது உயிரினங்களுள் மனித இனத்திற்கு மட்டுமே உரித்தான திறனாகும். இதனை நல்வழிப்படுத்துவதே சிரிப்பூக்கத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும். மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு சிரிக்கும் இயல்பு பண்பாடற்றதாகக் கருதப்படுகிறது.

மனிதனின் இயல்பூக்கங்கள் யாவும் ஒரே நேரத்தில் காணப்படுவதில்லை. சில இயல்பூக்கங்கள் குழந்தைப்பருவத்திலிருந்தே காணப்படுகின்றன. வேறுசில இயல்பூக்கங்கள் இளமைப்பருவத்தில் தோன்றுகின்றன. சிலஇயல்பூக்கங்கள் அறிதல் செயன்முறையையொட்டி ஏற்படுகின்றன. வேறு சில இயல்பூக்கங்கள் மனவெழுச்சி வயப்பட்டவையாகும்.

பல இயல்பூக்கங்கள் ஒரே நேரத்தில் முதன்மையிடம் பெறுவதற்குப் போட்டி நிகழ்வதும் உண்டு. அத்தகைய சூழமைவுகளில் மனிதன் தன் தேவைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப இயல்பூக்கங்களுக்கு இடமளிக்கிறான். குழந்தைப் பருவததில் இயல்பூக்கங்களைக் கட்டுப் படுத்தாமல் விடுதலை உணர்ச்சியுடன் வளர்ச்சியடையச் செய்வதே சிறந்தது என்று இசுபென்சர் (Spencer) போன்ற சமூகவியலறிஞர்கள் கருதுகின்றனர். இயல்பூக்கங்கள் ஒடுக்கப்பட்டால் அவை ஆழ்மன ஒடுக்கல்களாக (Repressions) நனவிலியில்(Unconscious)தேங்கிக் கிடக்கின்றன. நாளடைவில் இந்த ஒடுக்கப்பட்ட இயல்பூக்கங்கள் வளர்ச்சியடையும் குழந்தைகளின் ஆளுமையைப் பாதிக்கின்றன.

இயல்பூக்கங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த உள வியலறிஞர்களுள் காட்டெல் (Cattell), இராசு (Ross), சிரில் பர்ட்டு (Cyril Burt) போன்றவர்கள் குறிப் பிடத்தக்கவராவர். இக்காலத்து உளவியலறிஞர்கள் மக்டூகலின் இயல்பூக்கக் கருத்தினை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆயினும் மனிதர்களிடம் இயல்பூக்கங்கள் உள்ளன; இவை அடிப்படை ஊக்கிகளினின்றும்(Basic Movies) வேறுபட்டவை என்னும் கருத்தை ஆல் போர்ட்டு (Allport), மார்கன் (Morgan), இலாங்கு பீல்டு (Longfield) போன்ற அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இயல்பூக்கங்கள் பற்றிய ஆராய்ச்சி களை உளவியலறிஞர்கள் தொடர்ந்து செய்து வரு கின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகள் எல்லா வகை களான உயிரிகளைக் கொண்டும் நிகழ்த்தப்படுகின் றன.

கே.வி.கா.

துணை நூல்:

Kendler, H.H., Basic Psychology, W.A. Bengamin, Inc., Massachusetts, 1975.

**இயலிசை நாடகம்:** இந்திய ஆடற் கலை யில் இசையும் நடனமும் அபிநயமும் இணைந்து காணப்படுகின்றன. இவற்றுடன் வாசிக அபிநயம் என்று குறிப்பிடப்படும் நாடகமும் இணைந்துள்ளது. இந்திய நாட்டிய நாடகங்கள் இசையுடன் கலந்து அமைந்துள்ளன. இந்த நாட்டிய நாடகங்கள் இயலிசை நாடகங்களின் வடிவில் காணப்படுகின் றன. இவை மேனாட்டு இசை நாடகங்களினின்றும் முழுமையாக வேறுபட்டு விளங்குகின்றன.

இயலிசை நாடகக்கலை தமிழ்நாட்டுக் கோவில் களில் பண்டைத் தமிழ் மன்னர்களால் வளர்க்கப் பட்டு வந்தன. இவற்றை நாடகங்கள் என்று கூறு வதைக் காட்டிலும் இசை நாட்டியங்கள் என்று கூறு வதே பொருந்தும். சோழ மன்னர்கள் கோவில்களில் பக்தி இசையையும் அதனுடன் இயைந்த ஆடலையும் பரப்புவதற்காகப் பல ஆடல் கலைஞர்களுக்கு மானி யம் வழங்கியதாக வரலாற்றுக் குறிப்புகள் காணப் படுகின்றன. தஞ்சையில் இருக்கும் பிரகதீசுவரர் ஆலயத்தில் குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் நிகழ்த்து வதற்காகக் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களால் அமைக்கப்பட்ட மேடை காணப்படுகிறது.

இந்திய இயலிசை நாடகங்களுள் குறவஞ்சி நாடகமும் பாகவத மேள நாட்டிய நாடகமும் குறிப் பிடத்தக்கவையாகும். தஞ்சையை ஆண்ட சாகாசி (கி.பி. 1684-1710) மன்னன் காலத்தில் திருவாரூர்க் கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது இயற்றப்பட்ட தியாகேசர் குறவஞ்சி நாட்டிய நாடகம் நிகழ்த்தப்பட்டது. துளசாசி மன்னன் (கி.பி. 1765-1787) இயற்றிய சங்கீத சாராமிருதத்தில் இசை, ஆடல் ஆகியவை பற்றிய விரிவான விளக்கங் கள் காணப்படுகின்றன. இந்நூலில் கூறப்பட்டிருக்கும் நுட்பங்கள் குறவஞ்சி நாட்டிய நாடகங்களில் பயன் படுத்தப்பட்டன. அக்காலத்தில்தஞ்சைப்பிரகதீசுவரர் கோவிலில் நாடோறும் ஆடல்கலைஞர் வழிபாட்டு நடனம் நிகழ்த்தினர். விழாக்காலங்களில் (பிரமோற் சவம்) சிறப்பு நடனங்கள் நிகழ்த்தினர்.

குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் குறப்பாட்டு என்று கூறப்பட்ட பாடல்களைக் கொண்டு இயற்றப் பட்டன. நிலக்கிழார்கள், குறுநில மன்னர்கள், அரசர் கள் ஆகியோரைப் புகழ்ந்து குறவஞ்சிப் பாடல்கள் இயற்றப்பட்டன. புதுக்கோட்டை மன்னன் இரகு நாதத் தொண்டைமானின் (1730-1769) அமைச்சராக இருந்த சுப்பிரமணிய முதலியார் என்பவரைப் புகழ்ந்து விராலி மலைக் குறவஞ்சி இயற்றப்பட்டது. இவர் சேக்கிழார் பரம்பரையில் வந்தவர் ஆவார். இக்குறவஞ்சி விராலிமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் புகழ்ந்து பாடுவதாக அமைந்திருக்கும் பாடல்களைக்கொண்டது. தஞ்சையை ஆண்ட இரண் டாம் சரபோசி என்னும் மராத்திய மன்னர் (கி.பி. 1798-1832) இயலிசையில் தேர்ச்சி பெற்றவராகவும் கவின் கலைகளைப் போற்றுபவராகவும் இருந்தார். தஞ்சையில் நாயக்க மன்னர்களால் சிறு அளவில் தொடங்கப்பட்ட சரசுவதி மகால் நூலகத்தைச் சர போசி மன்னர் விரிவடையச் செய்தார். இம்மன்னரைப் புகழ்ந்து சரபேந்திரபூபாலக் குறவஞ்சி இயற்றப்பட் டது. இதனைக் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்பவர் இயற்றினார். இக்குறவஞ்சி விருத்தப்பா, அகவற்பா, கீர்த்தனைகள் ஆகிய வற்றைக் கொண்டது. இந்த இயலிசை நாடகம் இந்திய ஆண்டுகளுள் 16 ஆண்டுகளின் பெயர்கள் அழகுறப் பொருந்தியிருக்குமாறு இயற்றப்பட்டுள் ளது. இம்முறை சம்வத்சர முத்திரை என்று கூறப் படும். இக்குறவஞ்சிக்கு ஆடல் அமைத்தவர் தஞ்சை யில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய ஆடலாசிரியர் களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோருள் பொன்னையா என்பவர் ஆவார். அக்காலத்தில் இது ஆண்டுதோறும் பிரகதீ சுவரர் கோயிலில் பிரமோற்சவம் நடக்கும் பொழுது நிகழ்த்தப்பட்டு வந்தது.

நடனத்தில் கூடல் (சம்போகம்), பிரிவு (விப்பிர லம்பம்) ஆகிய இரு இன்பச் சுவைகளைக் காட்டலாம் என்று நாட்டிய சாத்திரம் கூறுகிறது. குறவஞ்சி நாடகத்தில் பிரிவுச் சுவை பெரும்பாலும் காட்டப் படுகிறது. பாட்டுடைத்தலைவி 10 வகைகளில்

சாமானிய அபிநயமுறையில் பிரிவுத்துயர், ஏக்கம் ஆகிய மனவெழுச்சிகளையும் மதிவசை (சந்திரனைப் பழித்தல்), காமன் வசை (மன்மதனைப் பழித்தல்), சஞ்சரீ பாவம் போன்றவற்றையும் உணர்த்துகிறாள். நோக்கு, முகஅபிநயம், அத்தம் ஆகிய மூன்று நுட்பங்களைக் குறவஞ்சி நாட்டியங்களில் காணலாம். பாகவதமேள நாடகம், கதகளி ஆகியவற்றைப் போன்று பாத்திரங்கள் திரைக்குப்பின் நாட்டியங்கள் செய்த பிறகு திரைவிலக்கப்படுகிறது. கதை கூறும் பகுதியின் பாடல்கள் பெரும்பாலும் சாவேரி இராகத்தில் அமைந்துள்ளன. விருத்தம், கொச்சகம், அகவல், சிந்து, வெண்பா, ஆசிரியப்பா, கண்ணிப் பாட்டு ஆகியவற்றில் பாடல்கள் அமைந்துள்ளன. குறவஞ்சி நாடகங்களுள் குற்றாலக்குறவஞ்சி மிகுந்த சிறப்புற்றதாகும். இதனைத் திரிகூட இராசப்பக்கவிராயர் இயற்றியுள்ளார்.

திருவாரூர்க் கோவிலில் தெற்குச் சுற்றுமதிலில் மூலத்தானத்திற்கு அருகில் நின்று கோவில் ஆடற்கலைஞர், 'வாசலிது வாசலிது' என்று தியாகேசர் கோயிலின் புகழ் பாடும் முறையில் அமைந்த பாடல் குறவஞ்சி நாடகத்தைச் சேர்ந்ததாகும். குறவஞ்சி நாடகங்கள் பல சிவபெருமானைப் பற்றிய புகழையே கூறுவனவாக உள்ளன. ஆனால் இராமநாதபுரம் சிவகங்கை அரசவைப் புலவராக இருந்த (கி.பி. 1810-1896) கவிகுஞ்சர பாரதி இயற்றிய அழகர் குறவஞ்சி சுந்தரராசப் பெருமாளைப் பற்றியதாகும். மதுரை அழகர் கோவிலின் தலக்கடவுள் பாட்டுடைத் தலைவன்.

குறவஞ்சி என்னும் சொல் குறவன் வஞ்சி என்னும் இருசொற்களினின்று தோன்றியதாகும். குறவனும் வஞ்சி அல்லது பெண்ணும் குறி சொல்பவராக இருப்பவர். காலப்போக்கில் குறத்தி என்னும் பாத்திரம் தோன்றலாயிற்று. குறவஞ்சி நாட்டிய நாடகம் தமிழ் இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும். இதில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் அமைந்துள்ளன. குறத்திப்பாட்டுகள் இதில் சிறப்பிடம் பெறுகின்றன. உலா, குறம் ஆகிய நூல் வகைகள் குறவஞ்சிகளுக்கு அடிப்படை ஆயின. குறம் என்னும் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் குறத்தியின் மொழிநடைகொண்டு அமைந்திருக்கும். தமிழ்நாட்டில் மீனாட்சியம்மை குறம், திரௌபதி குறம், பவானி குறம் ஆகியவை குறவஞ்சியின் முன்னோடிகளாக இருந்தன. குலவநாடகம் என்னும் பிரபந்தவகையும் குறவஞ்சி நாட்டிய நாடகத்தை உருவாக்க உதவியாக இருந்தது. சிங்கன், சிங்கி ஆகிய இரு பாத்திரங்களும் நகைச்சுவை தரும் வகையில் உரையாடுகின்றனர். இது ஆற்றுப்படை இலக்கியத்துடன் ஒப்புநோக்கப்படுகிறது. குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் திருகூடநாதரைப் பற்றித் திரிகூடராசப்பக்கவிராயர் குற்றாலக் குறவஞ்சியைக் கி.பி. 1720-ஆம் ஆண்டு இயற்றினார். திரிகூடராசப்பக்கவிராயர் திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலத்தையடுத்த மேலகரத்தில் பிறந்தார். இவருடைய வழிவந்தவர்கள் திரிகூடராசப்பக்கவிராயர் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டனர். பிரகதீசுவரர் கோவிலில் நவராத்திரி விழாவிலும் குற்றாலத்தில் ஒவ்வோர் ஆண்டுத் திருவிழாவிலும் இக்குறவஞ்சி நாட்டிய நாடகம் நிகழ்த்தப்பட்டு வந்தது. தேவதாசி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின் இப்பழக்கம் நின்றது. இந்நாட்டிய நாடகம் 1944-ஆம் ஆண்டு சென்னைக்கலாச்சேத்திரத்தைச் சேர்ந்த உருக்குமணி தேவி என்பவரால் மீண்டும் தொடங்கப்பட்டது. அவர் தாமே பாட்டுடைத் தலைவி வயந்தவல்லியின் வேடம் ஏற்று நடித்தார்.

மாலழகர் அழகினைக்கண்டு காதல் கொண்ட இளவரசியின் கதையைக்கூறுவது அழகர் குறவஞ்சி ஆகும். பாபநாச முதலியார் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றிய கும்பேசர் குறவஞ்சி கும்பேசுவரன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் கும்பேசரைப் பற்றியதாகும். இது கி.பி. 1835 முதல் 1875-ஆம்ஆண்டு வரை சூலமங்கலத்தில் நிகழ்த்தப்பட்டு வந்தது. திருச்செந்தூர் முருகன்மீது இயற்றப்பட்ட குறவஞ்சி செந்தில் குறவஞ்சி ஆகும். தொழுவூர் நாவலர் கி.பி. 1880-ஆம் ஆண்டு கண்ணப்பர் குறவஞ்சியை இயற்றினார். இதில் உள்ள குறவஞ்சிக் கீர்த்தனைகள் இசைப்பேருரை நிகழ்த்தக் கூடிய முறையில் அமைந்துள்ளன. இக்குறவஞ்சி பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் பேச்சு வழக்கில் இயற்றப்பட்டுள்ளது. திண்ணப்பர் என்னும் வேடன் இதன் பாட்டுடைத் தலைவன்.

இருபதாம் நூற்றாண்டில் திருவிடை மருதூர் குப்பையாபிள்ளை நட்டுவாங்கம் செய்த சரபேந்திர பூபாலக்குறவஞ்சி நாட்டிய நாடகம் 1942 முதல் 1946 வரையில் தஞ்சைப் பிரகதீசுவரர் கோவிலில் நிகழ்த்தப்பட்டு வந்தது. சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தில் 1950-ஆம் ஆண்டு சரபேந்திரபூபாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம் பாலசரசுவதியின் நடனத்துடன் முதன்முதலாக நிகழச் செய்தார். மிருணாளினி சாராபாய் இதனை இந்தியாவெங்கும் நிகழ்த்தினார். தண்டாயுதபாணிப் பிள்ளையின் நட்டுவாங்கத்தில் சிற்றம்பலக் குறவஞ்சி, சென்னைக் கலாச்சேத்திரத்தைச் சேர்ந்த உருக்குமணி தேவியால் நிகழ்த்தப்பட்டது. குசராத்தி மொழியில் சந்திர மௌலீசுவரக் குறவஞ்சி என்னும் இயலிசை நாடகத்தை அஞ்சலிமெர் என்பவர் நிகழ்த்தினார்.

இது சௌராட்டிரத்துச் சோமநாதர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது இயற்றப் பட்டதாகும்.

பாகவதமேள நாட்டிய நாடகம்: நாட்டிய சாத்திரத்தின் அடிப்படையில் சித்திரகாவியம் என் னும் நடனமுறை தோன்றியது. இம்முறையில் செய தேவர் தம்முடைய கீதகோவிந்தம் என்னும் இசை நூலை இயற்றினார். கீதகோவிந்தத்தின் முறையை ஒட்டியே சங்கரதேவர் (அசாம்), உமாபதி (பீகார்), இயட்சகானம் (மைசூர்), கூச்சுப்புடி (ஆந்திரம்), பாகவத மேளம் (தமிழ்நாடு) கிருட்டிணாட்டம் (கேரளம்) போன்ற இசை நாட்டியங்கள் தோன்றின.

தமிழ்நாட்டில் ஆரியக் கூத்து என்னும் இசை நாடகம் ஆடப்பட்டு வந்தது. பக்திப்பாடலும் அவற் றிற்கு ஏற்ப ஆடலும் இணைந்தவையே இசை நாட் டியங்களாக மலர்ந்தன. விசய நகரப் பேரரசு வீழ்ச்சி யடைந்த பிறகு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பல தெலுங்குக் கலைஞர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து, நாயக்கமன்னர்கள் தென்னிந்தியாவில் ஆட்சி செலுத்தி வந்த தஞ்சைக்கு வந்தனர். அக்காலத்தில் தஞ்சையை ஆண்டு வந்த அச்சுதப்ப நாயக்கன் என் னும் மன்னன் (கி.பி. 1572-1614) ஆந்திர நாட்டின் கூச்சுப்புடி இசைக்கலைஞர்களுக்கு உதவி செய்தான். நாயக்க மன்னர்களின் அரசவையில் தெலுங்கு மொழி போற்றப்பட்டது. இக்கலைஞர்கள் ஆந்திர நாட்டில் பாகவதுலு என்றும் தமிழ்நாட்டில் பாகவதர்கள் என்றும் குறிப்பிடப்பட்டனர். ஏனெனில் இவர்கள் பாகவதத்தை இசைநாடகமாக நடத்திவந்தனர். விசயநகர அரசனாகக் கி.பி. 1502-ஆம் ஆண்டு விளங் கிய நரசிம்மராயர் பாகவதத்தை நாட்டிய நாடக மாக ஆடித் தேர்ச்சி பெற்ற கலைஞர்களுக்குக் கூச்சுப்புடி என்னும் ஊரை மானியமாக வழங்கிய தாக ‘மச்சுப்பள்ளிக்கைபியாத்து’ என்னும் ஆந்திர வரலாற்றுக் குறிப்புத் தெரிவிக்கிறது.

தமிழ்நாட்டில் வந்து குடியேறிய பாகவத இசைக் கலைஞர்களுக்குத் தஞ்சையை ஆண்டுவந்த அச்சுதப்ப நாயக்கன் ஒரு கிராமத்தை மானியமாக வழங்கினான். இவ்வூர் அச்சுதபுரம் என்று வழங்கி வந்தது. இதுவே பிற்காலத்தில் மெலட்டூர் எனப் பெயர் பெற்றது. மெலட்டூர் இசைக்கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் தீர்த்தநாராயணயதி என்னும் துறவி ஆவார். இவர் கிருட்டிணலீலா தரங்கிணி என்னும் இசை நாட்டிய நூலை இயற்றினார். இந்நூலில் பாடல்களும், பாடல்களுக்கு ஏற்ற இராகங்களும், அவற்றை அடுத்து இசை நாடகக் கலைஞர்கள் ஆடுவதற்கு ஏற்ற சொல்லுக் கட்டுகளும் சதிசுரங்களும் விரிவாக எழுதப்பட்டுள்ளன. தீர்த்த நாராயணயதி கிருட் டிண லீலா தரங்கிணியைத் தவிர வேறு பல இசை நாடக நூல்களையும் பதம், சாவளி, கவிதை நாட கம் போன்றவைகளையும் இயற்றியுள்ளார். இவற் றுள் பாரிசாதம், உருக்குமாங்கத சரித்திரம், உருக்கு மணி கல்யாணம், கம்சவதம் ஆகியவை சிறந்த இசை நாட்டிய நாடக நூல்களாகும். இவருடைய மாணாக்கர்களாக விளங்கிய வேங்கடராம சாத்திரி யும் கோபாலகிருட்டின சாத்திரியும் பாகவத மேள நாட்டிய நாடகத்தைத் தனிப்பட்ட ஒரு மரபு வழிக் கலையாக ஆக்கியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்க ளாவர். அக்காலத்தில் தஞ்சையில் அரசவை மொழி தெலுங்கு மொழியாக இருந்ததால், இந்த நாடகங் கள் பெரும்பாலும் தெலுங்கிலும் வடமொழியிலுமே இயற்றப்பட்டன. வேங்கடராமசாத்திரி இரண் டாம் சரபோசி (கி.பி. 1798-1832), சிவாசி (கி.பி 1832-1853) ஆகிய மன்னர்களின் காலத்திலும் தியா கய்யரின் காலத்திலும் வாழ்ந்தார். இவர் இயற்றிய நாட்டிய நாடகங்களுள் குறிப்பிடத்தக்கவை பிரக லாத சரித்திரம், மார்க்கண்டேயம், உசா பரிணயம், உருக்குமாங்கதம், கொல்லபாமா, சீதா கல்யாணம், உருக்குமணி கல்யாணம், துருவ சரித்திரம், கம்ச வதம், அரிச்சந்திரா, சிவராத்திரி வைபவம், பசுமாசு ரவதம் என்பனவாம். பாகவத மேள நாட்டிய நாடகக் கலை, மெலட்டூரிலிருந்து அவ்வூரைச் சுற்றி யுள்ள சூலமங்கலம், சர்லியமங்கலம், ஊத்துக்காடு, தேப்பெருமாநல்லூர் போன்ற இடங்களிலும் பர வியது. இக்காலத்தில் பாகவதமேள நாட்டிய நாட கக் கலை மெலட்டூரில் மட்டுமே மரபுவழி நடத்தப் பட்டு வருகிறது. திருவாரூரை அடுத்த கீவளூர்க் கோவில் சிற்பங்களும் கல்வெட்டுகளும், பாகவதமேள நாட்டிய நாடகக் கலை தீர்த்த நாராயணயதி தமிழ் நாட்டுக்கு வருவதற்குப் பல நூறுஆண்டுகளுக்கு முன்னரே இங்கு விளங்கி வந்திருந்ததைக் காட்டு கின்றன. சாலியமங்கலம் கோவிலிலும் வேறு சில இடங்களிலும் பாகவதமேள நாட்டிய நாடகம் பண்டைக்கால முதற்கொண்டே நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. இந்நாடகங்கள் தமிழில் இயற்றப்பட் டவை. சான்றாக, உருக்குமாங்கதம் என்னும் நாட் டிய நாடகம் தமிழில் உள்ளது. இது ஏழு இரவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது.

பாகவதமேள நாட்டிய நாடகங்களில், நிருத்தம் (ஆடல் மட்டும்), நிருத்தியம் (பொருள் உணர்த்தும் ஆடல்), நாட்டியம் (நாடகம்) ஆகிய மூன்று ஆடற் கூறுகளும் இணைந்துள்ளன. பெரும்பாலும் பெண் களின் வேடத்தையும் ஆண்களே ஏற்று ஆடுகின்ற னர். பிரகலாத சரித்திரம் என்னும் நாட்டிய நாட கம் பாகவதமேள நாட்டிய நாடகக் கலையின் சிறப் புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்நாட்டிய நாடகக் கலை நலிவுற்ற இருபதாம் நூற்றாண்டில்மெலட்டூரைச்சேர்ந்த ஈ.கிருட்டிண அய்யர் என்னும் நாட்டிய நாடகக் கலைஞரும், சென்னை அடையாறு கலாச்சேத்திரத்தைச் சேர்ந்த உருக்குமணி தேவி அம்மையாரும் இக்கலையில் ஈடுபாடு கொண்டு இதனைப் புதுப்பித்துத் தம் நாட்டிய நிகழ்ச்சிகளில் இணைத்துக்கொண்டனர். இயல்இசை நாடக மன்றம் இக்கலையை மரபுவழி நடத்துவதற்கு உதவி செய்துள்ளது. மெலட்டூரில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்த இந்நாட்டிய நாடகம் சென்னை போன்ற நகரங்களிலும் நிகழ்த்தப்பட்டது. பாகவத மேள நாட்டிய நாடகம் மெலட்டூர் இசை நாட்டியப் பரம்பரையினரால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்தது. இக்காலத்தில் வேறு நாட்டியக் கலைஞர்களும் இதனைப் போன்று வேறு பல நாட்டிய நாடகங்களை இயற்றி நிகழ்த்துகின்றனர். ஆனால் இத்தகைய நாட்டிய நாடகங்கள் மெலட்டூர் மரபு வழியில் அமைந்தவை அல்ல.

பாகவதமேள நாட்டிய நாடகம் ஆடலின் ஒரு தனிப்பட்ட துறையாக இன்றும் விளங்கி வருகிறது.

ஆந்திர நாட்டில் கூச்சுப்புடி என்னும் இடத்தில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் விளங்கி வந்த இயலிசைநாட்டிய முறை கூச்சுப்புடி நடனம் என்று குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் இக்கூச்சுப்படி நாடகம், இயட்சகானம், பரதம், பரதநாட்டியம், வீதி நாடகம் என்பன போன்ற பல பெயர்களால் குறிப்பிடப்பட்டு வந்தது. இந்த நடனமுறை பண்டைக் காலத்தில் விளங்கி வந்த சிவலீலை என்னும் இயலிசை நாட்டிய முறையிலிருந்து தோன்றியதாகும். கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வீரசைவச் சமய வழிபாட்டினரின் ஆதிக்கம் மறைந்தபொழுது விட்டுணு வழிபாட்டினர் ஆந்திரநாட்டில் சிறப்பிடம் பெற்றனர். விட்டுணு வழிபாட்டினர் பாகவதத்தை நாட்டிய நாடகமாக நிகழ்த்தி வந்தனர். இவர்கள் பாகவதர்கள் (பாகவதுலு) என்று குறிப்பிடப்பட்டனர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கீதகோவிந்த முறையில் பாடல்களைப் பாடும் வழக்கம் கலிங்க நாட்டில் விளங்கி வந்தது. பூரியிலுள்ள சகந்நாதர் ஆலயத்தில் அன்றாட வழிபாட்டிற்குச் சிரீகாகுளம் என்னும் ஊரிலிருந்து ஆடற் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். கீதகோவிந்த முறையில் இசை நடனங்களை ஆந்திர நாட்டில் புகுத்தியவர் சித்தேந்திர யோகி என்பவர் ஆவார். இவர் பாரிசாத அபகரணம் என்னும் இசை நடன நூலை குசேலபுரம் என்னும் ஊரில் இயற்றினார். இவ்வூர் பிற்காலத்தில் கூச்சுப்புடி என வழங்கப்பட்டது. சித்தேந்திர யோகி களபம் என்னும் ஆடல் முறையை முதன்முதலில் தோற்றுவித்தார். இவர் இயற்றிய பாரிசாத அபகரணம் என்பது பாமா கலாபம் என்றும் குறிப்பிடப்படுகிறது. கலாபம் என்பது ஒருவகையான நிருத்தமாகும்.

கூச்சுப்புடி நடனத்தின் இசை ஆந்திரநாட்டின் ஊரகங்களில் நடைபெற்று வந்த இசைநிகழ்ச்சிகளினின்றுதோன்றியதாகும். பரதநாட்டியமே கூச்சுப்புடி நடன முறைக்கு அடிப்படையாக இருந்தபோதிலும், நந்திகேசுவரரின் அபிநய தருப்பணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிருத்த நுட்பங்கள் இதில் இடம் பெறுகின்றன. கூச்சுப்புடி நடன நிகழ்ச்சி தொடங்கும் பொழுது குரு வணக்கம் செய்யப்படுகிறது. அதற்குப் பின் பூர்வாங்கம் என்னும் பகுதியும் நிகழ்த்தப்படுகிறது. இப்பகுதி புண்ணியாகவாசனம், இந்திரதுவசம், பிரதிட்டை, தூபம், தீபம், புட்பாஞ்சலி, அம்பத்தவம் ஆகிய சடங்குகள் அபிநயமாகச் செய்யப்படுவனவாகும். தானேசத்தை ஆண்ட அப்துல் ஆசன் என்னும் கோல்கொண்டா நவாபு கலைகளை வளர்ப்பவராக இருந்தார். பாகவத நாட்டிய நாடகங்களை நிகழ்த்தி வந்தவர்களுக்குக் கூச்சுப்புடி என்னும் ஊரகத்தை மானியமாக வழங்கினார். நவாபின் அதிகாரிகள் கி.பி.1763-ஆம் ஆண்டு வேதாந்தம், வேம்பட்டி, பாகவதல, பசுமர்த்தி, சோசியுலா, மகாங்கலி, எலேசுவரபு ஆகிய குடும்பங்களுக்குக் கூச்சுப்புடி என்னும் ஊரைச் சொந்தமாக்கினர். இக்குடும்பத்தினர் கூச்சுப்புடி இசை நடனத்தை வளர்ந்து வந்தனர். நவாபுக்கு நன்றி செலுத்தும்முறையாகக் கூச்சுப்புடி நடனத்தில் சலாமு, திச்சலாமு, தித்திச்சலாமு ஆகிய சலாம்சதிகள் இடம் பெறுகின்றன. கூச்சுப்புடி நடனம் குருகுலப் பயிற்சி முறையில் கற்றுத் தரப்பட்டது. நடனத்தில் நாட்டம் கொண்டிருந்த குழந்தை ஐந்தாம் வயதில் இராமலிங்கேசுவர் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தத் தை தை தத் தம் என்னும் சதி சுரத்திற்கு நடனம் செய்து நாட்டிய வேதம் என்னும் மறையினைக் கற்பதற்குத் தயாராக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகள் இசையும் நடனமும் கற்றுத்தரப்பட்ட பின் அபிநயமும் பஞ்ச காவியங்களும் கற்றுத்தரப்பட்டன. இவ்வாறு ஏழாண்டுகள் சென்றபின் இளம் பயிற்சியாளன் கூச்சுப்புடி நடனத்தில் தேர்ச்சி பெற்ற பெரியவர்களின் நிகழ்ச்சிகளைக் காண அனுமதிக்கப்படுவான். நூல்கள் வழியே கிடைக்கும் அறிவைக் காட்டிலும் ஆசிரியர் வழியே பெறும் அறிவே சிறந்தது என்று அந்த இளம் கலைஞன் தெரிந்து கொள்வான். அக்காலத்தில் சேத்திரய்யா என்பவர் கூச்சுப்புடி நடனத்திற்கான பத அபிநயத்தின் முறைகளை வரையறுத்தார்.

கூச்சுப்புடி நடனம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நலிவுற்று மறையத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டில் வேம்பட்டி வேங்கடநாராயணா, தாடபல்லி பேரய்ய சாத்திரி, சிந்த வேங்கட ராமய்யா, வேதாந்தம் இலக்குமி நாராயண சாத்திரி போன்றவர்கள் கூச்சுப்புடி நடனத்திற்குப் புத்துயிர் ஊட்டினர். வேதாந்தம் சத்திய நாராயண சர்மா என்பவர் கூச்சுப்புடி இயலிசை நாடகத்தில் சத்திய பாமை வேடத்தைச் சிறப்பாக நடித்தவர் ஆவார்.

இக்காலத்தில் இந்திய நடனக்கலைஞர்கள் பலரும் கூச்சுப்புடி நடனத்தை ஓரளவேனும் விரும்பிக் கற்றுக் கொள்கின்றனர். யாமினி கிருட்டிணமூர்த்தி என்னும் ஆடற்கலைஞர் கூச்சுப்புடி நடனத்தை இயலிசை நடனமுறையில் நிகழ்த்தாமல் தனிப்பட்ட ஆடல்கலைஞர் நிகழ்த்தும் நடனமாக மாற்றியுள்ளார். கூச்சுப்புடி நடனம் இக்காலத்தில் பல கலைஞர்களால் ஆய்வு செய்யப்பட்டுப் பல மாறுதல்களை அடைந்துள்ளது. இது பெரும்பாலும் இயலிசை நாட்டிய முறையில் நிகழ்த்தப்படாமல் தனிப்பட்ட கலைஞர்களால் நிகழ்த்தக் கூடிய ஆடல் பகுதிகளைக் கொண்ட நடனமுறையாக உருவெடுத்து வருகிறது. ஆயினும் கூச்சுப்புடி நடனத்தின் தொடக்கம் இயலிசை நாடக முறையிலேயே அமைந்திருந்தது.

ஆந்திர நாட்டில் தோன்றிய இயலிசை நாடக முறைகளுள் வீதிபாகவதம் என்னும் நடனமும் ஒன்றாகும். இது முற்காலத்தில் தேவதாசிகளால் ஆடப் பெற்று வந்தது. தொடக்கக் காலத்தில் கூச்சுப்புடி நடனத்தை ஆண்கள் மட்டுமே ஆடிவந்ததாலும் அதில் பெண்கள் பங்கு பெற முடியாமல் இருந்ததாலும் பாகவதக் கதைகளுக்கான நடனங்களை வீதிபாகவதம் அல்லது கொல்லகளபம் என்று குறிப்பிட்டப் பட்ட நடனமுறையில் பெண்கள் நிகழ்த்தி வந்தனர். ஓர் இடைப்பெண் (கொல்லா) அந்தணனுடன் உரையாடும் முறையில் பாகவதத்தின் கதைப்பகுதி அமைக்கப்பட்டிருக்கும். சில நிகழ்ச்சிகளில் நகைச்சுவை சேர்ப்பதற்காக விதூடகனும் இடம் பெறுவான். பெரும்பாலும் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தும் சூத்திரதாரன் இந்த நகைச்சுவைப் பாத்திரமாக நிகழ்ச்சி முழுவதும் இருப்பான். வீதிபாகவத நிகழ்ச்சி நாட்டிய நாடகத்துடன் தொடங்குகிறது. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் ஒரு திரைக்குப்பின் முதன்மைக் கலைஞர் நின்று நிருத்தம் செய்வார். கருநாடக இசையின் இராகங்கள் இதில் பயன்படுத்தப்படுகின்றன. தாளத்திற்கு மிருதங்கம் இசைக்கப்படுகிறது. சதிசுரங்களும் சதிகளும் வாய்மொழி மூலம் சொல்லப்படுகின்றன. கதைப் பகுதியை அவையினருக்கு எடுத்துரைப்பதற்கு நிருத்தமும் அபிநயமும் பயன்படுத்தப்படுகின்றன. வீதிபாகவதக் கலைஞர்கள் தம் கற்பனைத் திறத்தினால் பல்வேறு வகையான விளக்கங்களையும் நிருத்தங்களையும் செய்வதற்கு வாய்ப்பு உண்டு. வீதிபாகவதம் பெரும்பாலும் திருவிழாக் காலங்களில் கோவில்களிலும் செல்வர்தம் வீட்டுச்சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நடத்தப்பட்டு வந்தது.

கலாவந்துலு என்று குறிப்பிடப்பட்டு வந்த கோவில் ஆடற்கலைஞர்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்த வீதிபாகவதம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நலிந்துவிட்டது. இக்கலைக்குப் புத்துயிர் அளித்தவர்களுள் காமய்யா, நூரய்யா, வெங்கய்யா, சத்தியம் என்னும்இராஹூரிச்சகோதரர்களும் வேதாந்தம் இலக்குமி நாராயண சாத்திரி, வேம்பட்டி வேங்கடநாராயணர் பாகவதலு, தாசரதி இராமய்யா போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர். கோவில் கலைஞர்களாக இருந்த கலாவந்தலு என்னும் பெண்களுக்கு இராஹூரிச் சகோதரர்கள் வீதிபாகவதத்தில் பயிற்சியளித்து இக்கலையை மீண்டும் மக்களிடையே பரப்பினர். வீதிபாகவதம் இரவு முழுவதும் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சியாக இருப்பதால் பெரும்பாலான மக்கள் இதனை இக்கால வாழ்க்கைச் சூழ்நிலை காரணமாக விரும்புவதில்லை. காலஞ்சென்ற முனைவர் வே. இராகவன் இதனைத் தமிழக அரசு சங்கீத நாடக மன்றத்தின் உதவியுடன் சென்னைச் சங்கீத அகாதமியில் நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியை நடத்தியவர் மும்முடிவரம் அன்னபாதுல வேங்கடரத்தினம் அம்மையார் ஆவார்.

இக்காலத்தில் வீதிபாகவதம் என்னும் இயலிசை நாடகக்கலை தமிழ்நாட்டில் அரிகதாகாலட்சேபம் என்னும் இசைப்பேருரை முறையாக மாறிப் புகழ் பெற்று விளங்கிவந்துள்ளது. தொடக்கக் காலத்தில் பாகவதக் கதைகளும் இராமாயணமும் இந்நிகழ்ச்சிகளில் இடம்பெற்றன. இக்காலத்தில் எல்லா வகைப் புராணக் கதைகளும் இசைப் பேருரைகளில் இடம் பெறுகின்றன. இசைப் பேருரை ஒருவரால் மட்டுமே நிகழ்த்தப்படுகிறது. இதில் உரைநடையில் அமைந்த கதைப்பகுதிகளும் இடையிடையே பாடல்களும் இடம்பெறுகின்றன. ஆதலின் இது இயலிசை நாடகமாகக் கருதப்படுவதில்லை.

கன்னட மொழி பேசும் மக்களிடையே இயட்சகானம் என்னும் இயலிசை நாடகம் விளங்கி வருகிறது. இது பாகவதமேள நாட்டிய நாடகம், வீதி நாடகம், கதகளி போன்ற நடனமுறைகளைக் கொண்டநடனமுறையாகும். இது தெரத்தாதா, மூதலபயா, இயட்சகான பயலாட்டா போன்ற பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இயட்சகான பொம்பயாட்டா என்று வழங்கப்படும் கன்னடத்துப் பொம்மலாட்டமும் இந்த நடனமுறையி

னின்று தோன்றியதாகும். சிவனை வழிபட்டு வந்தவர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இயலிசை நாடகத்தை நடத்தி வந்தனர் என்றும், அதுவே இயட்சகானத்தின் முன்னோடியாகும் என்றும் ஆனந்த குமாரசாமி கருதுகிறார். இந்த நடனம் பரதர் இயற்றிய நாட்டிய சாத்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் விளங்கியது. இது சிதம்பரத்தில் இருக்கும் நடராசர் கோயிலில் நிகழ்த்தப்பட்டு வந்தது. இயட்சகானம் வடமொழி நாட்டிய நாடக முறைகளினின்று முழுமையாக வேறுபட்டதாகும். இது தேசி முறையில் இசைக்கப்பட்ட பாடலுடன் கூடிய நடனம் ஆகும். இயட்சகானத்தில் விட்டுணுவின் பத்து அவதாரக் கதைகளும் இடம் பெறுகின்றன. பாடல்களைத் தனிப்பட்ட இசைவாணர்கள் பாடுகின்றனர். இவர்கள் பாகவதர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். இசையுடன் செண்டை, மத்தளம் (முழவின் ஒருவகை) ஆகிய தாளக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. கதைப்பகுதி பிரசங்கம் என்று குறிப்பிடப்படுகின்றது. இக்காலத்தில் 125 பிரசங்கங்கள், இயட்சகான நிழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன.

குமாரவியாசர், குமார வால்மீகி போன்ற கன்னட மொழிக்கவிஞர்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் இந்தப் பிரசங்கங்களை இயற்றினர். இவற்றில் எண்பதுக்கு மேற்பட்ட கருநாடக இராகங்கள் இடம பெறுகின்றன. பல்வேறு சுவைகளுக்கும் மனவெழுச்சிகளுக்கும் ஏற்பத் தனிப்பட்ட இராகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பைரவி, காம்போதி போன்ற இராகங்கள் போரையும்; நீலாம்பரி, ஆனந்தபைரவி, தோடி, சாவேரி, இரகுபதி, புன்னாகத்தோடி, மோகனகல்யாணி போன்ற இராகங்கள் துயரத்தையும்; மத்தியமாவதி, தோடி, ஆரபி, சிரி, சங்கராபரணம் போன்ற இராகங்கள் இரக்கத்தையும்; நாதனாமக்கிரியை, முகாரி போன்ற இராகங்கள் இன்னலையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

கதைப்பகுதியின் உரையாடல்கள் கலைஞர்களின் கற்பனைத் திறத்திற்கு ஏற்ப அவ்வப்பொழுது அமைகின்றன. இயட்சகானத்தில் பெரும்பாலும் ஆண்களே எல்லா வேடங்களையும் ஏற்று நடிக்கின்றனர். பயங்கரம் சினம் ஆகிய இரு மனவெழுச்சிகளும் பெரும்பாலும் இடம் பெறுகின்றன. பரதநாட்டிய இலக்கணத்தின் அடிப்படையில் இயட்சகானத்தை ஆராய்ந்தால் அது தாண்டவமுறையிலமைந்த நடனமாகும் என்று கூறலாம். பரதநாட்டியத்திற்கு உரித்தான 108 கரணங்கள், 33 பிண்டிபந்தங்கள், 32 சரீக்கள், நிராலம்பசரீக்கள், 6 தானங்கள், கைசிகி, சாத்துவம் ஆகிய பிரயோகங்கள், பல்வேறு மண்டலங்கள், நடைகள் ஆகிய யாவும் இயட்சகானத்திலும் காணப்படுகின்றன. நிகழ்ச்சி தொடங்கும் பொழுது கதைப்பாத்திரங்கள் அவையினருக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அவ்வமயம் கதைப்பாத்திரங்கள் திரைக்குப்பின் பாதி மறைந்து நிருத்தம் செய்கின்றனர்.

இயட்சகானத்தின் சிறப்பான கூறு அதன் ஆகாரிய அபிநயமும் ஆடை அணிகலன்களும் ஆகும். முக ஒப்பனை பளிச்சிடும் நிறங்களில் அமைக்கப்படுகின்றது. பல்வேறு வகைகளான தலைப்பாகைகள் அவரவர் ஏற்றிருக்கும் கதைப்பாத்திரங்களுக்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன. இந்த ஒப்பனை இந்தியச் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பெரும் அளவில் ஒத்திருக்கின்றன. சிற்பச் சாத்திரத்துடன் இயைபு கொண்ட ஒப்பனையும் உடை அலங்காரமும் இயட்சகானத்தில் காணப்படுகின்றன. ஒப்பனைக்குப் பயன்படுத்தப்படும் நிறப்பொடிகளும் பூச்சுகளும் பாக்கு மரப் பட்டை, மூங்கில், பருத்தி, மரம், நெற்பயிர் போன்ற இயற்கைப் பொருள்களால் செய்யப்படுகின்றன. மின்னும் அணிகலன்கள் அணியப்படுகின்றன. மைசூரில் சிமோர்காவையடுத்த குடிகர் எனப்படும் கைவினைஞர்கள் இந்த அணிகலன்களைச் செய்வதைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்டவர்கள். நிகழ்ச்சியில் செண்டை ஒலி உரக்க ஒலிக்கப்படுகிறது.

நிலத்தில் அறுவடை முடிந்தபின் திறந்தவெளி அரங்கில் இயட்சகானம் நடைபெறுகிறது. பழங்காலத்தில் இயட்சகானப் பயலாட்டத்தில் எரியும் பந்தங்கள் வெளிச்சம் தந்தன. இக்காலத்தில் பல காந்த விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. இயட்சகானத்தில் இசைவாணர்கள் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றனர். கதையின் முதன்மையான பாத்திரம் எரடனேவேடா (இரண்டாம் வேடம்) என்று குறிப்பிடப்படுகிறது. நிகழ்ச்சி இரவு முழுவதும் நடைபெறுகிறது. விடியற்காலையில் பாகவதர் மங்கல இசை பாடி இறைவனுக்கு ஆரத்தி காட்டுவார்.

இயட்ச கான நிகழ்ச்சிகள் கோவில்களுடன் இணைந்து நிகழ்கின்றன. இக்காலத்தில் இயட்சகான நிகழ்ச்சிகள் நலிவுற்று வருகின்றன. இயட்சகானக் கலைஞர்கள் தம் கலைத்தொழிலை விட்டு வேறு தொழில்களை நாடுகின்றனர்.

கூடியாட்டம் என்பது சாக்கைக் கூத்து என்ற பெயரில் பண்டைத் தமிழகத்தில் விளங்கி வந்த இயலிசை நாடகமாகும். இது கூத்தம்பலம் எனப்படும் கேரளத்துக் கோவில்களில் மட்டுமே ஆடப்படுகிறது.

ஆடற்கலைஞர்கள் கோவில்களைச் சேர்ந்த சாக்கியார்களும் நம்பியார்களும் ஆவார்கள். நம்பியார் குலப் பெண்கள் (நங்கையர் எனப்படுவார்) பெண் வேடம் ஏற்கின்றனர். கூடியாட்டத்தில் முழவு, இடக்கா, குறுங்குழல், குழித்தாளம் ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நடனத்திற்கான கதை குலசேகரவர்மன், அருசன், மகேந்திர விக்கிரமபல்லவன், போதாயனன் போன்ற மன்னர்கள் இயற்றிய வடமொழி நாடகங்களிலிருந்தும், பாசன் என்னும் நாடக ஆசிரியர் இயற்றிய நாடகங்களிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சக்திபத்திரன் என்னும் கேரள நாடக ஆசிரியர் இயற்றிய நாடகங்களும் கூடியாட்டத்தில் இடம் பெறுகின்றன.

கூடியாட்டத்தை முதன்முதலில் குலசேகரவர்மன் என்னும் சேர மன்னர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றி இசையமைத்தார். இதில் ஆகாரிய ஆங்கிக, வாசிக அபிநயங்கள் இடம் பெறுகின்றன. புராணக் கதைகள் கருப்பொருள்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அத்தங்களும், அத்தலட்சண தீபிகையில் கூறப்பட்டிருக்கும் முத்திரைகளும் நடைகளும் சரீக்களும் இடம் பெறுகின்றன. கதைப்பாத்திரங்களுக்கு ஏற்ப ஒப்பனையும் ஆடை அலங்காரமும் அமைகின்றன. கூடியாட்டங்கள் நீண்ட நேரம் நடைபெறுவதால் தனித்தனிப் பகுதிகளாக நடிக்கப்படுகின்றன. இவை முதல் அங்கம், இரண்டாம் அங்கம் எனப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு நாட்களில் நடிக்கப்படுகின்றன. வடமொழிப்பகுதிகளை விதூடகன் மலையாள மொழியில் நகைச்சுவையுடன் எடுத்துரைப்பான். அபிநயங்கள் மிக விரிவாகச் செய்யப்படுகின்றன. கூடியாட்டத்தின் தலையாய கூறுகள் அதன் நையாண்டிப் பகுதிகளாகும். இப்பகுதிகள் மக்களிடையே சிரிப்பை உண்டாக்கி நடனம் நீண்டநேரம் நடப்பதால் ஏற்படும் சலிப்பை நீக்குகின்றன.

இக்காலத்தில் இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களின் பகுதிகள் இயலிசை நாடகத்தின் பொருள்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றுக்கு ஏற்ற இசையமைக்கப்பட்டு, தேர்ச்சி பெற்ற ஆடற்கலைஞர்களால் இயலிசை நாடகங்களாக நிகழ்த்தப்படுகின்றன. இவை வழக்கத்தில் நாட்டிய நாடகங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய இயலிசை நாடகங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. தியாகய்யர் இயற்றிய நௌகசரித்திரம் என்னும் இசைப்பகுதியும் இயலிசை நாடகமாக நடத்தப்படுகிறது. எஸ். கோ.

**இயலிசைப்புலவர்கள்**: சிறந்த பாடல்களை எழுதி அவற்றுக்கு மரபுவழி இசையமைத்துத் தாமே அவற்றைப் பாடிப் புகழ் எய்தியவர்கள் இயலிசைப் புலவர்கள் என்று கூறப்படுகிறார்கள். இவர்கள் வாக்கேயக்காரர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இத்தகைய இயலிசைப்புலவர்கள் பண்டைக்காலம் முதற்கொண்டு உலகெங்கிலும் இருந்துவந்துள்ளனர். தேவாரம், திருவாசகம் பாடிய சைவ முதுகுரவர்கள் தமிழ் இயலிசைப்புலவர்களாக விளங்கினர். சுந்தரர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் தாம் சிவபெருமான்மீது பாடிய பக்திப்பாடல்களுக்கு இசையமைத்து அவற்றைப் பண்டைத் தமிழ்ப் பண்களில் பாடி வந்தனர். இவர்கள் காலத்திற்குப் பின் தமிழகத்துக் கோவில்களில் ஓதுவார்களும் மேளக்காரர்களும் தமிழிசையைக் காப்பாற்றி வந்தனர். தமிழகத்தில் வாழ்ந்த முதல் இயலிசைப் புலவர்கள் தேவாரம் இயற்றியவர்களே ஆவர். ஆனால் இப்பாடல்கள் கீர்த்தனை வடிவில் அமைக்கப்படவில்லை. தமிழில் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் வரிசைமுறையில் அமைந்த பாடல்களைப் பாடியவர்கள் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாசலக் கவிராயர் என்பவராவர். பண்டைத் தமிழகத்து மன்னர்களுள் சிலரும் இயலிசைப் புலவர்களாக விளங்கினர்.

தமிழகத்தில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துத்தாண்டவரும் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணாசலக்கவிராயரும் மாரிமுத்தாப்பிள்ளையும் சிறந்த இயலிசைப் புலவர்களாக விளங்கி வந்தனர். திருவாரூரில் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாபநாச முதலியாரும் இயலிசைப்புலவராக விளங்கினார். இவர்கள் தமிழ் நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சியாமா சாத்திரிகள், முத்துசாமி தீட்சிதர், தியாகராசர் ஆகியோருக்கு முந்தைய காலத்தவர்கள். சங்கீதமும்மூர்த்திகள் என்று குறிப்பிடப்பெறும் இந்த இசைப்பேரறிஞர்களுக்கு முன் தமிழ்நாட்டில் தமிழிசையைப் பரப்பி வந்தவர்கள் முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோராவர். முத்துத்தாண்டவர் சோழநாட்டில் சீர்காழியில் பிறந்தார். இத்தலம்சைவ சமய குரவர் திருஞானசம்பந்தர் பிறந்த இடமாகும். முத்துத் தாண்டவர் சீர்காழியிலுள்ள திருத்தோணியப்பர் கோவிலில் நாகசுரம் இசைக்கும் இசைவேளாளர் குலத்தில் பிறந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. பிரமபுரீசர் கோவிலில் இவருக்கு இறையருள் கிட்டியதை அடுத்து இவர் முத்துத்தாண்டவர் என்னும் பெயர் பெற்றார் என்றும் இவர் இறைவியின் கட்டளைப்படி தில்லைக்குச் சென்று தம்மை வருத்திய

தொழுநோய் நீங்கப்பெற்றார் என்றும் கூறப்படுகிறது. இவர் தில்லைநடராசப் பெருமான் கோவிலில் தம்முதற்பாடலைப் பவப்பிரியா இராகத்தில் பாடினார். இப்பாடல் 'பூலோககைலாசகிரி சிதம்பரமல்லால்' என்று தொடங்கும் கீர்த்தனம் ஆகும். இவர் நூறுபாடல்களைப்பல்வேறுஇராகங்களில் அமைத்துப் பாடியுள்ளார். இப்பாடல்களை ஏழு தாளவகைகளில் அமைத்துப் பாடியுள்ளார். இவற்றுள் மேளகர்த்தா இராகங்கள் குறைவு; சன்னிய இராகங்களே மிகுதி. கல்யாணி, ஆனந்த பைரவி, நாதனாமக்கிரியை ஆகிய இராகங்கள் மிகுதி. மற்றவை குறைவு. பழக்கமில்லாத பரசு, கருநாடக சாரங்கா, கௌரி பந்து, நாகவராளி, மங்கள கௌசிகை என்பனவும் இவர் பாடல்களில் காணப்படுகின்றன. இவருடைய கீர்த்தனைகளுள் பல ஆடலுக்கென்றே பாடியனவாகத் தெரிகின்றன. இத்தகைய கீர்த்தனைகளில் தாளச் சதிச் சொற்கள் அமைந்துள்ளன. இவற்றுள் 'ஆடிய வேடிக்கை பாரீர்' என்னும் பாடலும் 'ஆனந்தத் தாண்டவம் ஆடினார்' என்னும் பாடலும் குறிப்பிடத்தக்கன. இவர் ஆடலுக்கு ஏற்ற பதங்களையும் இயற்றியுள்ளார். முத்துத்தாண்டவர் காலத்திற்குப் பின் இவருடைய மாணாக்கர் குப்பையப் பிள்ளை என்பவர் இவருடையபாடல்களைத்தொகுத்துப்பாடி வந்தார். குப்பையப் பிள்ளையின் பரம்பரையினர் பிற்காலத்தில் திருப்பாம்புரம் என்னும் ஊரில் தங்கியிருந்தனர். இவருடைய வழிவந்தவரே திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை என்னும் புல்லாங்குழல் வல்லுநர் ஆவார். சுவாமிநாதபிள்ளையின் உடன்பிறந்தவர்களும் இசை வல்லுநர்களாகத் திகழ்ந்தனர்.

மாரிமுத்தாப்பிள்ளை தில்லை நடராசர்மீது பல கீர்த்தனைகளை இயற்றி இசையமைத்துப் பாடியவராவர். இவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தில்லை விடங்கன் என்னும் சிற்றூரில் கி.பி. 1712-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இயற்றிய நூல்களுள் புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலி விடுதூது, தில்லைப் பள்ளு, வண்ணம் ஆகியனவும் சில பதிகங்களும் இடம் பெறுகின்றன. சீர்காழி அருணாசலக்கவிராயர் இவருடைய காலத்தவர் ஆவார். மாரிமுத்தாப்பிள்ளை பல தலங்களுக்குச் சென்று ஆங்காங்குச் சிற்சில பிரபந்தங்களை இயற்றினார். இவர் பாடிய 25 கீர்த்தனைகளும் 17 இராகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஐந்து தாளங்களில் அமைந்துள்ளன. ஆடலுக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கும் அழகு சேர்க்கும் வகையில், இவர் பாடிய 'காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே' என்னும் எதுகுலகாம்போதி இராகக் கீர்த்தனை அமைந்துள்ளது. இவருடைய கீர்த்தனைகளில் எண்ணற்ற தலங்களைப்பற்றிய செய்திகளை இகழ்வது போலப் புகழ்வதைக் காணலாம். தில்லைப் பதியைப் பற்றிய பல செய்திகளையும் காணலாம். முத்துத் தாண்டவரும் மாரிமுத்தாப்பிள்ளையும் தாம் பாடிய கீர்த்தனைகளில் தம் பெயரை 'முத்திரை' அல்லது 'மகுடமாக' வைத்து இறுதிச் சரணத்தில் பாடவில்லை. மாரிமுத்தாப்பிள்ளை குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம், தனிப்பாடல்கள், அநீதி நாடகம், விடங்கேசர் பதிகம், வருணாபுரிப்பள்ளு போன்ற பல நூல்களையும் இயற்றினார். இவர் பாடிய வருணாபுரிக்குறவஞ்சியில் 170 பாடல்கள் உள்ளன. இவற்றுள் பல கீர்த்தனை வடிவில் பல்வேறு இராகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய நொண்டி நாடகம் நொண்டிச் சிந்துப்பாடல்களைக கொண்டது. இவருடைய வழி வந்த வேலுச்சாமிப் பிள்ளை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கல்வி பயின்றவர்.

அருணாசலக் கவிராயர் சீர்காழியில் கி.பி. 1711-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமிழில் பாடிய கீர்த்தனைகள் மிகுந்த புகழ்பெற்றவை. இளமையிலேயே இவர் தமிழ், வடமொழி, திருமுறைகள், புராணங்கள் போன்றவற்றைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். இவர் இயற்றிய நூல்களுள் இராமநாடகம் சிறப்பானதாகும். இந்நூல் கி.பி. 1772-ஆம் ஆண்டு திருவரங்கத்தில் அரங்கேறியது. இவருடைய கீர்த்தனைகளுள் 'ஏன் பள்ளி கொண்டீரையா' என்னும் மோகன இராகப்பாடல் இசைக்கும் நடனத்திற்கும் அழகு சேர்க்கவல்லது. பைரவி இராகத்தில் அமைந்த 'யாரோ இவர் யாரோ' என்னும் கீர்த்தனையும் புகழ் பெற்றதாகும். இராமநாடகத்தைத் தவிர இவர் பல்வேறு பிரபந்தங்களையும் பிள்ளைத்தமிழ், சீர்காழித் தலபுராணம் போன்ற கணக்கற்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

தமிழைத் தவிரப் பிறமொழிகளில் பாடல்களை இயற்றி அவற்றுக்குக் கருநாடாக இசை அமைத்துப் பாடிய இயலிசைப் புலவர்களும் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தெலுங்கு, வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். இவர்களும் கருநாடக இயலிசைப் புலவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். இத்தகையவர்களுள் தியாகய்யர், சியாமாசாத்திரி, முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவரும் முதன்மையானவர்களாவார்கள். இவர்கள் பல பாடல்களை இயற்றி அவற்றுக்கு இசையமைத்துள்ளனர்.

தியாகய்யர் (கி.பி. 1767-1847) இசை வல்லுநர்களின் பரம்பரையில் தோன்றியவர். இவர்

திருவாரூரில் வாழ்ந்த இராமபிரமம் என்னும் தெலுங்கு மொழி வல்லுநரின் மகனாவார். இராமபிரமம் வடமொழியில் உள்ள வால்மீகி இராமாயணத்திற்குப் பலமுறை தஞ்சை அரசவையில் பொருள் விளக்கம் செய்தவர். இராமபிரமத்தின் தந்தை சிரீராசகவிஎன்பவர் தெலுங்கிலும் வடமொழி யிலும் பல கீர்த்தனங்களை இயற்றியவர். தியாக ராசரின் தந்தை வழிப் பாட்டனாராகிய வீணை காள கத்தி அய்யர் என்பவர் தஞ்சை அரசவையில் இசை வல்லுநராக இருந்தார். தியாகராசரின் ஆசிரியராகிய சொந்தி வேங்கடரமணய்யர் என்பவர் தஞ்சை அரச வையில் வீணை வல்லுநராகஇருந்தார். தியாகராசர் இளமையிலேயே இராமாயணத்தில் ஈடுபாடு கொண் டிருந்தார். தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். இவர் சிறுவயதிலேயே வடமொழியில் சில கீர்த்தனங்களை இயற்றி அவற்றைத் தம் வீட்டுச் சுவரில் சுண்ணாம் புக் கட்டியால் எழுதி வந்தார் என்றும் இப்பாடல் களின் சிறப்பைக் கண்டு இவர் தந்தை இவருக்கு இசைப் பயிற்சி செய்வித்தார் என்றும் கூறப்படுகிறது.

தியாகராசருடைய இசை ஆசிரியராக இருந்த வேங்கடரமணய்யர் எஸ்பவர் தம் மாணாக்கரின் இசைப் புலமையைக் கண்டு வியந்து தியாகராசர் ஓர் இசை நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்ச்சியில் தியாகராசர், 'என் தலைவருக்கு இதுவே யான் செய்யும் சேவை' ('தொரகுனா இடுவண்டிசேவா') என்னும் பிலகரி இராகப் பாடலை விரிவாகப் பாடி இராக ஆலாபனையும் செய்தார். மற்றொரு இசை நிகழ்ச்சியில் தியாகராசர், 'பல முறை உன்னிடம் முறையிட்டேன் நீ மனம் இரங்க வில்லையோ' (மரி மரி நின்னே மொரலிட நீ மனசு தயராது) என்னும் காம்போதி இராகப் பாடலை மிக விரிவாகப் பாடி அவையினரை வியப்புறச் செய் தார். இவர் புகழினைக் கேட்ட தஞ்சை மன்னன் இவ ரைத் தம் அரசவைக்கு அழைத்தார். தியாகய்யர் அந்த அழைப்பை மறுத்து 'செல்வம் சுகம் தருமோ? (நிதிசால சுகமா) என்னும் கல்யாணி இராகப் பாடலைப் பாடினார். தியாகராசர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

குருகுலப் பயிற்சி முடிந்த பின்னர், தியாகராசர் திருவையாறு என்னும் சிவத்தலத்தில்குடியேறி, அங் குக் கிடைக்கப் பெற்ற சிறந்த இசை நூல்களைப் படித்து இசையறிவு பெற்றார். இவர் இராமன்மீது அளவு கடந்த பக்தி கொண்டு ஆயிரத்துக்கும் மேற் பட்ட கீர்த்தனங்களைப் பல்வேறு இராகங்களில் அமைத்துப் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் இசையும் இயலும் பொருந்தியிருப்பதோடு இயல் பான பக்தியுணர்வும் எளியநடையும் கொண்டவை யாகும். தியாகராசர் ஒலி வழிபாட்டினராக (நாதோபாசகர்) இருந்தார். இவருடைய பாடல்க ளுள் பல இசையின் சிறப்புப்பற்றியும் இசையின் மூலம் இறைவனையடைய முடியும்என்னும் கருத்துப் பற்றியும் அமைந்துள்ளன. எ-டு. 'சொகசுகாமிருதங் கதாளமு' இசையின் சிறப்புப்பற்றி இவர் இயற்றி யுள்ள பாடல்களின் மூலம் இசைத் தத்துவத்தினை அறிந்து கொள்ள முடிகிறது. ஆதலின் இவர் தியாக பிரமம் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் பஞ்சரத்தி னக் கீர்த்தனை என்னும் பாடல்தொகுதியையும் இறை வழிபாட்டில் பாடக்கூடிய தோத்திரப் பாடல் களையும் பிரகலாத பக்தி விசயம், நௌகாசரித்திரம், சீதாராம விசயம் ஆகிய இயலிசை நாடகங்களையும் இயற்றியுள்ளார். இளமையில் இவர் வடமொழியில் பாடல்களை எழுதி வந்தார். ஆனால், இவருடைய புகழ்பெற்ற கீர்த்தனைகள் யாவும் தெலுங்கு மொழி யிலேயே அமைந்துள்ளன. இவருடைய பாடல்களில் தியாகராச என்னும் முத்திரை காணப்படுகிறது. இறு திக் காலத்தில் இவர் துறவறம் பூண்டு நாத பிரமா னந்தர் என்னும் பெயரை அடைந்தார். ஆதலின், இவர் தியாகராச சுவாமிகள் என்று குறிப்பிடப்படுகி றார். இவர் கி.பி. 1847-ஆம் ஆண்டு மறைந்தார். சில சித்தர்களையும் மகான்களையும் போல இவர் உணவின்றித் தியானத்தில் அமர்ந்து தாம் விரும்பிய பொழுது உயிரை நீத்தார். ஆதலின், தியாகராச சுவாமிகள் சமாதியடைந்தார் என்று கூறப்படுகிறது.

முத்துசாமி தீட்சிதர் திருவாரூரில் கி.பி. 1776-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இளமையில் தம் தந்தை இராமசுவாமி தீட்சிதரிடம் இசைப்பயிற்சி பெற்றார். இவர் வடமொழியையும் முறையாகக் கற் றார். சிதம்பரநாத யோகி என்பவருடன் முத்துசாமி காசிக்குச் சென்றார். அங்குச் சிலகாலம் மறைநூல் களைக் கற்றபின் முத்துசாமி தம் ஊருக்குத் திரும்பி னார். வழியில் திருத்தணிகை மலையில் முருகப் பெருமான் கோயிலில் ஆறெழுத்து மந்திரத்தை 40 நாள்கள் ஓதினார். ஒருநாள் முருகப் பெருமான் ஒரு பெரியோன் போலத் தீட்சிதர் முன்னே தோன்றி அவர் வாயினுள் ஒரு கற்கண்டை இட்டு மறைந்தார் என்று கூறப்படுகிறது. அப்பொழுது தீட்சிதர் முருகப்பெரு மான்மீது 9 கீர்த்தனங்களைப் பாடினார். அவற்றுள் 'மானசகுருகுக' என்னும் கீர்த்தனையும் ஒன்றாகும். முத்துசாமி தீட்சிதரின் பாடல்களில் 'குருகுக' என் னும் சொல்லே அவருடைய பெயரின் முத்திரையாக அமைந்தது. தீட்சிதர் எட்டையபுர மன்னரின் அவை யில் சில காலம் இருந்தார். அம்மன்னரால் இவர் பெருமைப்படுத்தப்பட்டார். இவர் கி.பி. 1835-ஆம் ஆண்டு 'மீனாட்சிமேமுதம்தேகி' என்ற பாடலைப்

பாடிக்கொண்டிருந்த பொழுது, 'மீனலோசனி பாப மோசனி' என்ற அடியைத் தொடங்கியவுடன் உயிர் பிரிந்தது. தீட்சிதர் தம் வாழ்நாளில் பல விட்டு ணுத்தலங்களுக்குச் சென்று அந்தத்தலக் கடவுளைப் பற்றிய கீர்த்தனங்களை இயற்றினார். தமிழ் நாட்டில் பஞ்சபூதத்தலங்கள் என்று குறிப்பிடப்படும் காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, காளத்தி, சிதம்பரம் ஆகிய தலங்களுக்குச் சென்று பஞ்சலிங்கக் கீர்த்தனங்களைப் பாடியுள்ளார். இவருடைய கீர்த்த னங்களில் அவற்றின் சொற்களிலேயே அந்தந்த இரா கத்தின் சாயல் அமைந்திருப்பதே அவற்றின் பெருமை எனக் கூறலாம். மேலும், மரபு வழுவாமல் இராகங் களைப் பாடல்களில் முறையுடனும் அமைத்துள்ளார். பழக்கத்தில் இல்லாத சில இராகங்களிலும் தீட்சிதர் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இக்கீர்த்தனைக ளுள் பல வைணிக முறைப்படி கமகங்களுடன் அமைந் தவை. அதாவது, மென்மையும் இனிமையும் கொண்டு மென்மையான உளஉணர்வுகளை எழுப்பவல்ல இசை முறையாகும். இந்துத்தானி இசை இராகங்களிலும் தீட்சிதர் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.எடுத்துக் காட்டாக, யமுனா கல்யாணி இராகத்தில் அமைந்த 'சம்புபதே' என்னும் பாடல், அமீர்கல்யாணி இரா கத்தில் அமைந்த 'பரிமளரங்கநாதம்' என்னும் பாடல், பிருந்தாவனசாரங்கா என்னும் இராகத்தில மைந்த 'ரங்கபுரவிகாரா', 'சௌந்தரராசம்' ஆகிய பாடல்களைக் குறிப்பிடலாம். மேனாட்டு இசை யிலும் சில பாடல்களை இயற்றியுள்ளார். அக் காலத்தில் தஞ்சையில் ஆடலாசிரியர்களாக விளங் கிய சின்னய்யா, பொன்னய்யா, வடிவேலு, சிவா னந்தம் ஆகியவர்கள் தீட்சிதரிடம் இசை பயின்றனர்.

இசைப்பேரறிஞர் மூவருள் சியாமா சாத்திரியும் ஒருவர். இவர் கி.பி. 1762–ஆம் ஆண்டு திருவாரூரில் பிறந்தார்.இவருடையமுன்னோர்கள் காஞ்சிபுரத்தில் பங்காரு காமாட்சி ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தி வந்தனர். கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் முகமதி யர் படையெடுப்பின் காரணமாக அவர்கள் பங்காரு காமாட்சியின் சிலையைத் திருவாரூருக்கு எடுத்து வந்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் ஐதர் அலியின் படையெடுப்புக் காரணமாகச் சிலையைத் தஞ்சாவூ ருக்கு எடுத்து வந்தனர். அக்காலத்தில் தஞ்சையை ஆண்டுவந்த இரண்டாம் துளதாசி மன்னர் கி.பி. 1785–ஆம் ஆண்டு பங்காரு காமாட்சிக்குத் தஞ்சை யில் ஆலயம் கட்டினார். இதன் காரணமாகச் சியாமா சாத்திரியின் குடும்பத்தினர் தஞ்சையில் வாழ்ந்து வரலாயினர்.

சியாமா சாத்திரி இளமையில் சங்கீதசுவாமி என்னும் துறவியிடம் இசை பயின்றார். பின்னர், இவர் ஆதியப்பய்யர் என்னும் இசைப் பேரறிஞரிடம் இசையின் நுட்பங்களைக் கற்றுத் தெளிந்தார். சியாமசாத்திரி வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இவர் காலத்தில் திருவையாற்றில் தியாகபிரமம் வாழ்ந்து வந்தார். இவ்விரு இசைப் பேரறிஞர்களும் அவ்வப்பொழுது சந்தித்துத் தாம் இயற்றிய பாடல்களைப்பாடி வந்தனர். இவர் மதுரை மீனாட்சியம்மன் மீது நவரத்தினமாலிகை என்னும் 9 கீர்த்தனங்கள் கொண்ட பாடல் தொகுதியை இயற்றி யுள்ளார். ஆனந்தபைரவி இராகத்தை இவர் மிகச் சிறப்பாகப் பாடுவார். அந்த இராகத்தில் பல கீர்த் தனங்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய சில பாடல்களில் இராக முத்திரை அமைந்துள்ளது. அக் காலத்தில் தஞ்சை அரசவையில் பூலோககாபசுட்டி பொப்பிலி கேசவய்யா என்னும் இசையறிஞருடன் நிகழ்ந்த இசைப் போட்டியில் சியாமாசாத்திரி வெற்றி பெற்றார். இவருடைய மாணாக்கர்களுள் ஒருவர் மைசூர் அரசவை இசைப்பேரறிஞராக விளங்கினார்.

தமிழில் சிறந்த இயலிசைப் புலவராக விளங்கிய வருள் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழந்த கோபால கிருட்டிணபாரதி என்பாரும் ஒருவராவார். இவர் நாகப்பட்டினத்தில் பிறந்தார். இவர் இளமை யிலேயே வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளி லும் தேர்ச்சி பெற்றார்; திருவிடைமருதூரில் வாழ்ந்த இராமதாசரிடம் இசை பயின்றார். இவர் வயலின் இசைப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் கோவிந்த சிவன் என்பவரைத் தம் குரு வாகக் கொண்டிருந்தார். இவர் தியாகபிரமத்துடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார். 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா' என்னும் கீர்த்தனையை இவர் தியாகராசரிடம் பாடினார். தியாகராசரின் பஞ்சரத்தினக்கீர்த்தனையைப்போல் இவர் தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனையை இயற்றினார். இதில் 'அரகரசிவசங்கர கருணாகர', 'சரணாகதியென்று' 'மறவாமல் எப்படியும் நினை மனமே', 'பிறவாவரம் தாரும்','ஆடியபாதமே கதி' ஆகிய ஐந்து பாடல்கள் அடங்கியுள்ளன. அக்காலத்தில் கப்பல் வணிகத்தில் ஈடுபட்டுச் செல்வராக விளங்கிய கந்தப்பச் செட்டி யாரின் ஆதரவு இவருக்குக் கிடைத்தது. இவர் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள் இவருக் குப் புகழைத் தேடித்தந்தன. இக் கீர்த்தனைகளுக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளார். மகா வைத்தியநாதய்யர், இராமசாமி அய்யர் ஆகிய இரு இசை வல்லுநர்களும் கோபாலகிருட்டிண பாரதியிடம் இசை பயின்றனர்.

பல்லவி சேடய்யர் கி.பி.1846–ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள நெய்க்காரப்பட்டி என்னும்

ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை தியாக பிரமத்தின் மாணவர்களுள் ஒருவராவார். சேடய்யர் தம் தந்தையிடம் இசைப் பயிற்சி பெற்றார். அக்காலத்தில் இசை வல்லுநர்கள் தம் திறமையைப் பல்லவி பாடுவதிலேயே காட்டிவந்தமையால் சேடய்யரும் நுட்பமான பல்லவிகளைப் பாடிவந்தார். இவர் தமிழ்,தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் பாடல்களை இயற்றினார். ஒருமுறை திருவொற்றியூர் தியாகராசர் கோயிலில் பல்லவி சேடய்யர் இசைநிகழ்ச்சி நடத்தும்பொழுது சாவேரி இராகத்தை ஓர் இரவு முழுவதும் விளக்கமாகப் பாடினார். மைசூர் அரசவையில் இசை நிகழ்ச்சி நடத்தி மன்னரின் பாராட்டுகளைப் பெற்றார்.

தியாகபிரமத்தின் மாணாக்கர்களுள் ஒருவரான வீணைகுப்பய்யர் என்பவரும் தானவருணங்கள், கீர்த்தனைகள், தில்லானாக்கள் ஆகியவற்றை இயற்றி இசையமைத்துள்ளார். இவர் திருவொற்றியூரில் வாழ்ந்தார். இவர் நாராயணகௌள குப்பய்யர் என வழங்கப்பட்டார். இவர் வயலின், வீணை ஆகிய இசைக்கருவிகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் 'வேங்கடப்பஞ்சரத்தினம்', காளத்தீசப்பஞ்சரத்தினம்' ஆகிய கீர்த்தனைத் தொகுதிகளை இயற்றினார். இவர் கோவூர் அரசவை இசைப் புலவராக இருந்தார். இவருடைய மகன் தியாகய்யர் என்பவரும் இயலிசைப் புலவராக விளங்கினார்.

தியாகபிரமத்தின் மாணாக்கர்களுள் ஒருவரான பட்டினம் சுப்பிரமணிய அய்யர் (கி.பி. 1845-1902) என்பவர் சிறந்த இயலிசைப்புலவராகவும் பல்லவியை விளக்கமாகப் பாடுவதில் வல்லவராகவும் விளங்கினார். கருநாடக இசையின் 108 தாளங்களுள் மிகப் பெரியதான சிம்மநந்தனத் தாளத்தில் இவர் பல்லவி பாடிப் புகழ் பெற்றார். இந்தத்தாளம், 128 அட்சர காலங்களைக் கொண்டது. இதன் அமைப்பு 88 / 8 / 80088 / 8 / 88 / 1 + என்பதாகும். இவர் மானம்புச்சாவடி வேங்கடசுப்பய்யரிடமும் மெலட்டூர்க்கணபதி சாத்திரியிடமும் இசை பயின்றார். இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். இவர் கதனகுதூகல இராகம் என்னும் புதிய இராகத்தை இயற்றினார். இவர் பேகட இராகம் பாடுவதில் வல்லவராக இருந்தார். மைசூர் அரசவையில் இவர் இசைநிகழ்ச்சி நடத்தியபொழுது முதல் நாள் நிகழ்ச்சியில் பேகட இராக விளக்கமும், இரண்டாம் நாள் அந்த இராகத்தில் தானமும்,மூன்றாம் நாள் அந்த இராகத்தில் பல்லவியும் பாடினார். இராமநாதபுரம் சீனிவாசஅய்யங்கார், மைசூர் வாசுதேவாச்சாரியார், இசைப்புலி (Tiger) வரதாச்சாரியார் போன்ற புகழ்பெற்ற இசைவல்லுநர்கள் இவருடைய மாணாக்கர்களாக இருந்தனர். இவர் இராமநாதபுரம் மன்னராக இருந்த பாசுகரசேதுபதி, இராமநாதபுரம் பாண்டித்துரை, திருவாங்கூர் மன்னராக இருந்த ஆயிலியம் திருநாள், விசயநகர மன்னர் ஆனந்த கசபதி, மைசூர் மன்னர் ஆகியோரால் சிறப்பிக்கப்பட்டார்.

வேதநாயகம் பிள்ளை (கி.பி. 1826-கி.பி.1889) சிறந்த தமிழறிஞராகவும் புலவராகவும் விளங்கினார். இவர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றார். இவர் மயிலாடுதுறையில் நகரசபைத்தலைவராக இருந்தார். இவர் பல்வேறு தமிழ் நூல்களை இயற்றியதுடன் இனிய கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

மைசூர் வாசுதேவாச்சாரியார் (கி.பி. 1865-1961) சிறந்த இயலிசைப்புலவராகத் திகழ்ந்தார். இவர் மைசூர் மன்னர் சாமராச உடையார் அளித்த நிதிஉதவியுடன் திருவையாறு சென்று பட்டினம் சுப்பிரமணிய அய்யரிடம் இசைபயின்றார். பயிற்சி முடிந்தபின் இவர் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று இசை நிகழ்ச்சிகள் செய்தார். இவர் தெலுங்கு வடமொழி ஆகிய மொழிகளில் இசைப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் நானூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள், வருணங்கள். தில்லானாக்கள், இராகமாலிகைகள் ஆகியவற்றை இயற்றியுள்ளார். இவர் 1954-ஆம் ஆண்டுவரையில் மைசூர் முதன்மை இசைப்புலவராக இருந்தார். இவருக்கு 1959-இல் பதுமபூடன் விருதுவழங்கப்பட்டது. இவர் 1954-இல் இருந்து அடையாறு கலாச்சேத்திரத்தின் முதல்வராக இருந்தார்.

இவர்களைத் தவிரப் பல்வேறு சித்தர்களும் இசைப்பாடல்களை இயற்றியுள்ளனர். சித்தர்கள் பொதுமக்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய தத்துவப் பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துகள் நிறைந்திருக்கும். பெரும்பாலான சித்தர் பாடல்கள் மரபுவழி மறை ஆசாரங்களையும் முறையான வழிபாடு, பூசை ஆகியவற்றையும் எதிர்த்து, வாழ்க்கை நிலையாமையை எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களுள் பதினெண் சித்தர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர்கள் அட்டமா சித்திகளையும் பெற்றவர்கள். அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன்கண்ணன், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுத்தானந்தர், உரோமரிசி

பிரமமுனி ஆகிய பதினெட்டுச் சித்தர்களைத் தவிர, சிவப்பிரகாசர், கருவூர்ச்சித்தர், காகசுண்டர், சகதீசர், சுப்பிரமணியர், சிவவாக்கியர், கமால்முனி, பாம்பாட்டி சித்தர், அகப்பேய்சித்தர், அழுகணிசித்தர் போன்ற வேறு பல சித்தர்களும் எளிய நடையில் பல தத்துவப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவர்களுள் வேற்று நாட்டைச் சேர்ந்தவர்களும் இசுலாமிய மதத்தினரும் உள்ளனர் என்பது கருதப்படுகிறது.

குதம்பைச் சித்தர் பாடிய,
'மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பவர்க்கு
தேங்காய்ப் பால் ஏதுக்கடீ குதம்பாய்'

என்னும் பாடல் தமிழ்நாட்டில் எல்லோரும் அறிந்ததாகும். (மாங்காய் என்பது பிரமத்தையும் பால் என்பது பிரமஅனுபவத்தையும் மலை என்பது சமாதி நிலையையும் குறிக்கும்). இதனைப் போன்றே,

'தாம் திமி திமி திமி தந்தக்கோனாரே
தீம் திமி திமி திமி திந்தக்கோனாரே'

'ஆதி பகவனையே பசுவையே அன்பாய் நினைப்பாய்' (பசுஎன்பது உயிரைக் குறிக்கும்). ''சோதிபரகதி தான் சொந்தமாகாதோ'', ''அஞ்ஞானம் போயிற்றென்று தும்பீபற, பரமானந்தம் கண்டோம்என்று தும்பீபற'' போன்றபாடல்கள் மூலம், சித்தர்களின் எளிய பாடலில்மெய்யறிவு உட்பொருளாகத் திகழ்ந்தது என்றும், அவற்றின் மெட்டுகளும் எளிய முறைகளில் அமைந்திருந்தன என்றும் அறியலாம். சித்தர்களையன்றி, இராமலிங்க அடிகள், தாயுமானவர், மெய்கண்டார், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் போன்றவர்களும் தம் பாடல்களைத்தாமே மெட்டிசைத்துப் பாடியவர்களாவர். தமிழ்நாட்டிலிருந்த சித்தர்கள் தத்துவப் பாடல்களை இயற்றியதோடன்றி, மருத்துவத்திலும் வல்லுநர்களாக விளங்கினர். இவர்கள் மருத்துவச் சொற்களுக்கான குழுஉக்குறிகளைத் தம் பாடலில் அமைத்துள்ளனர். இவற்றின் பொருள் எளிதில் புலப்படுவதில்லை. இவை வல்நடைப்பாடல்கள் எனப்படுகின்றன. இவ்வாறன்றி, எளிதில் பொருள் புலப்படுமாறு பல பாடல்கள் அமைந்துள்ளன. இவை மெல் நடை எனப்படுகின்றன.

இந்திய இயலிசைப் புலவர்களின் வரிசையில் தியாகபிரமம், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாத்திரி ஆகிய இசைப்பேரறிஞர் மூவருடன் இணையாகக் கருதப்படும் சிறப்புடையவர் சுவாதித்திருநாள் ஆவார். இவர் கி.பி. 1813 முதல் 1846-ஆம் ஆண்டு வரை திருவாங்கூர் மன்னராக இருந்தார். இவர் இராசராசவர்மாவின் மகனாவார். இவர்கருநாடக இசையில் தேர்ச்சி பெற்றுத் தான வருணங்கள், பதங்கள், கீர்த்தனைகள், தில்லானா, சாவளி போன்றவைகளை வடமொழியில் இயற்றியுள்ளார். இவற்றையன்றிச் சுவாதித்திருநாள் தெலுங்கு, தமிழ், மலையாளம், இந்தி, மராத்தி ஆகிய மொழிகளில் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய வேறு இயலிசைநாடக நூல்களுள் அசாமிளோபாக்கியானம், குசேலோபாக்கியானம், பதுமநாபசதகம், சியானந்தூபுர வருணனைப் பிரபந்தம், உற்சவ வருணனைப் பிரபந்தம், யயாதி சரித்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர் இயற்றிய பாடல்களில் 'பதுமநாப' என்னும் முத்திரையை வைத்துப் பாடியுள்ளார். சில கீர்த்தனைகளில் 'அம்புசநாப', 'பங்கசநாப' என்னும் முத்திரைகளையும் அமைத்துப் பாடியுள்ளார். இவருடைய அரசவையில் பரமேசுவர பாகவதரும் தஞ்சையிலிருந்து சென்ற பொன்னய்யா, வடிவேலு ஆகிய ஆடலாசிரியர்களும் இருந்தனர்.

புரந்தரதாசர் கருநாடக இயலிசைப்புலவர்களுள் முதன்மையானவர் ஆவார். இவர் இசைப்பேரறிஞர்களாகிய தியாகபிரமம், முத்துசாமி, சியாமா சாத்திரி ஆகிய மூவரின் காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார். பெல்லாரி மாவட்டத்தில் அம்பி நகரத்திற்கு அருகிலுள்ள புரந்தரகட என்னும் ஊரில் கி.பி. 1484-ஆம் ஆண்டு ஒரு செல்வருக்கு மகனாகப் பிறந்தார். இவர் தம் தந்தை நடத்தி வந்த இரத்தின வணிகத்தைத் தாமும் தொடர்ந்து நடத்தி மிகுதியாகச் செல்வத்தைச் சேர்த்தார். இவருடைய இயற்பெயர் நாராயணர்என்பதாகும். இவர் வணிகத்தொடர்பான நடவடிக்கைகளில் மிகுந்த கண்டிப்பாக இருந்தார். ஒருநாள் இவரிடம் பொருளுதவி கேட்டு உதவி மறுக்கப்பட்ட ஒரு வறியவர், இவருடைய வீட்டிற்குச் சென்று இவர் மனைவியிடம் உதவி கேட்டார். நாராயணரின் மனைவி அந்த வறியவர் மீது இரக்கம் கொண்டு தம் விலையுயர்ந்த மூக்குத்தியைக் கழற்றி அந்த வறியவருக்குக் கொடுத்தார். வறியவர் அந்த மூக்குத்தி நாராயணின் மனைவியுடையது என்பதை யறியாமல் நாராயணரிடமே அதை விற்றார். இதைக் கண்ட நாராயணர் ஐயம் கொண்டு வீட்டிற்கு வந்து தம்மனைவியிடம் மூக்குத்தியைக் கொண்டு வருமாறு கூறினார். இவர் மனைவி அச்சம் கொண்டு இறைவனை வேண்டினார். இறைவன் அவ்வம்மையார் கையில் அவருடைய மூக்குத்தியைப் போன்ற ஒரு விலையுயர்ந்த மூக்குத்தியைக் கொடுத்துமறைந்தார். நாராயணர் வியப்பு மேலிட்டுத் தம் மனைவியினை நடந்ததை மறைக்காமல் கூறுமாறு கேட்டார். அவர் மனைவி நடந்ததைக் கூறியதும் நாராயணருக்கு மெய்யறிவு வந்தது. அவர் இல்லறத்தைத் துறந்து

தம் பொருள்கள் அனைத்தையும் மற்றவர்களுக்கு வழங்கிவிட்டுத் தல யாத்திரை மேற்கொண்டார். இறுதியில் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார். அங்கு கி.பி. 1525-ஆம் ஆண்டு வியாசராயரிடம் உபதேசம் பெற்றுப் புரந்தரதாசர் என்னும் பெயரை அடைந்தார். புரந்தரதாசர் மறைநூல்களைக் கற்று இசையிலும் தேர்ச்சி பெற்றார்; பல கீர்த்தனங்களைக் கருநாடக இசையில் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய பாடல்கள் தேவர் நாமாக்கள் என்று குறிப்பிடப் படுகின்றன. இவருடைய கீர்த்தனைகள் இனிமையாகவும் சொற்சுவை, பொருட்சுவை பொருந்தியனவாகவும் அமைந்துள்ளன. இளம்பருவத்திலேயே இசையை எளிதில் கற்பதற்காகப் புரந்தரதாசர் சரளிவரிசை, கீதம், வருணம், மெட்டு ஆகிய இசையமைப்புகளை இயற்றியுள்ளார். இயலிசைப்புலவர்களுள் இவரே முதன்முதலில் மாயாமாளவ கௌள இராகத்தில் சரளிவரிசையைப் பாடி, பின் கீதங்களைக் கற்று, அதற்குப் பின் வருணங்களைக் கற்றுப் பாடும் முறையைத் தோற்றுவித்தார். கோயில்களில் இறைவனைப் புகழ்ந்து பாடும் தோத்திரப்பாடல்களையும் இவர் பாடியுள்ளார். இவருக்குப் பின் வாழ்ந்த இயலிசைப் புலவர்கள் புரந்தரதாசரின் முறையையே பெரும்பாலும் பின்பற்றினர். தம் பாடல்களில் 'புரந்தர விட்டல' என்னும் முத்திரையை அமைத்துப் பாடியுள்ளார். இறுதிக் காலத்தில் புரந்தரதாசர் துறவு பூண்டார். இவர் கி.பி. 1564-ஆம் ஆண்டு மறைந்தார்.

மைசூர் சதாசிவராவ் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சித்தூரில் பிறந்தார். இவருடைய இசையாசிரியராகிய வாலாசாப்பேட்டை வேங்கடரமண பாகவதர் தியாக பிரமத்தின் மாணவராவார். சதாசிவராவ் தம்முடைய 30-ஆம் வயதில் மைசூருக்கு வந்தார். அக்காலத்தில் மைசூரில் மூன்றாம் கிருட்டிணராச உடையார் மன்னராக இருந்தார். சதாசிவராவ் மைசூர் அரசவை இசை வல்லுநராக நியமிக்கப்பட்டார். இவர் ஒருமுறை இசை நிகழ்ச்சி நடத்தும் பொழுது ஓரிரவு முழுவதும் தோடி இராகத்தை விளக்கமாகப் பாடினார். இவர் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார்.

இந்திய நடனத்தில் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் பதம் என்னும் இசைப்பாடல்களைப் பல இசைப்புலவர்கள் பாடியுள்ளனர். பதங்கள் மேற்பரப்புநோக்கில் சிங்காரச்சுவையுடையவையாகத் தோற்றமளிப்பினும் அவை பாட்டுத்தலைவி இறைவன் மீது கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்தும் பொருளைக் கொண்டவையாகும். இத்தகைய பதங்களைத் தமிழில் இயற்றி இசையமைத்தவர்களுள் கவிகுஞ்சரபாரதியார், மாம்பழக்கவிராயர், கனம் கிருட்டிணய்யர், வைத்தீசுவரன் கோவில் சுப்பராமய்யர் போன்றவர்களைக் குறிப்பிடலாம். சேத்திரக் கவிஞர் என்னும் இயலிசைப்புலவர் தெலுங்கு மொழியில் 4,000 பதங்களுக்கு மேல் இயற்றியுள்ளார். சில இயலிசைப் புலவர்கள் சிறந்த சாவளிகளை இயற்றியுள்ளனர். சாவளிகளும் நடனத்தின் பகுதியாக அமைந்துள்ளன.

துக்காராம் (கி.பி. 1608-1649) புனேக்கு அருகில் உள்ள தேகு என்னும் ஊரைச் சேர்ந்த வாரிக்கரி என்னும் மரபில் தோன்றிய விட்டுணு பக்தராவார். இவர் கடை வைத்து வணிகம் செய்து வந்தார். அதில் ஆதாயம் தேடாமல் இறைவனிடம் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட பல இன்னல்களினால் மனம் வெறுத்து ஒரு மலைக்குகையினுள் சென்று பல நாள்கள் உணவு உறக்கமின்றி இறைவனைத் தியானம் செய்தார். அதன் பயனாகமெய்யறிவு பெற்றார். சைதன்னியர் என்பவர் இவருக்கு 'இராமகிருட்டிண அரி' என்னும் மந்திரத்தை உபதேசித்தார். துக்காராம் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் இன்றும் மகாராட்டிரத்தில் வழங்குகின்றன.

நரசிம்மமேத்தா கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் பவநகருக்கு அருகில் தலசா என்னும் ஊரில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த விட்டுணு பக்தராக இருந்தார். இவர் அந்தணர் குலத்தில் பிறந்தார். ஆனால் எல்லாச் சாதியினரையும் வேறுபாடின்றிக் கருதினார். இவர் மேத்தா ஆர்மாலா, சுதாமா சரித்திரம் போன்ற காவியங்களையும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பதங்களையும் இயற்றி இசையமைத்துள்ளார். இப்பாடல்கள் காலை வேளையில் பாடப்படுவனவாகும். ஆதலின் இவை பிரபாதிகள் என்று குறிப்பிடப்படுகின்றன. இவருடைய பாடல்களுள் 'வைணவசனதோ' என்னும் பாடலை மகாத்மா காந்தியடிகள் விரும்பிப் பாடி வந்தார்.

மீரா (கி.பி. 1403-1470) சிறந்த பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் மேவார் நாட்டு அரசியாக இருந்தார். கண்ணன் மீது மிகுந்த பக்தி கொண்டு அரண்மனையையும் இல்வாழ்க்கையையும் துறந்து துறவியாக வாழ்ந்தார். துவாரகையில் பல ஆண்டுகள் இருந்தார். இவர் இயற்றிய பாடல்கள் இனிமையும் உள்ளத்தை உருக்கும் தன்மையும் உடையனவாக இருக்கின்றன. இப்பாடல்கள் இராசசுத்தானி, குசராத்தி ஆகிய மொழிகளில் உள்ளன. இவர் நூற்றுக்கணக்கான பாடல்களைக் கண்ணன் மீது

பாடியுள்ளார். அக்பரும் தான்சேனும் இவரைக் காணச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கபீர் (கி.பி. 1440-1518) இந்தி மொழியில் முதற் கவிஞர் என்று குறிப்பிடப்படுபவராவர். காசியில் நீரு என்னும் இசுலாமியரின் மனைவி நீமா என்பவர் இலகர்தாலா என்னும் ஏரியில் தாமரை மலரில் ஒரு குழந்தை கிடப்பதைக் கண்டு அதனை எடுத்து வந்து வளர்த்து வந்தார். குழந்தைக்குப் பெயரிடுவதற் காகக் குர்ஆனைத் திறந்தபொழுது கபீர் (பெரியவர்) என்னும் சொல் கண்ணில் தென்பட்டது. ஆதலின் அக்குழந்தைக்குக் கபீர் எனப் பெயரிடப்பட்டது. கபீர் இராமானந்தரின் மாணாக்கர். இவர் அரியும் அல்லாவும் ஒருவரே என்னும் கருத்துடைய பாடல் களை இயற்றினார். குருநானக்கு இவருடைய மாணாக்கராக இருந்தார். கபீர் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளார்.

சைதன்னியர், செயதேவர், சூர்தாசர் போன்ற வர்கள் வட இந்தியாவிலும் நாயன்மார்கள், ஆழ்வார் கள் போன்றவர்கள் தென்னிந்தியாவிலும் இனிய பக்திப்பாடல்களை இயற்றி அவற்றுக்கு இசையமைத் தனர்.

இந்திய இயலிசைப் புலவர்களின் பாடல்கள் இறைவன் மீது பக்தியைக் காட்டுவனவாக உள்ளன. மேனாடுகளிலும் பல இயலிசைப்புலவர்கள் இருந்து வந்துள்ளனர். இவர்கள் மேனாட்டு இசையில் காணப் படும் ஒத்திசை (Harmony), தொகுப்பிசை (Polyphony) ஆகிய முறைகளிலேயே இசைப்பாடல்களை இயற்றியுள்ளனர். இப்பாடல்கள் இசைக்கருவிக்குழுப் பாடல்களாகவே (Symphony) பெரும்பாலும் இருக் கின்றன.

ஐரோப்பிய இயலிசைப் புலவர்களுள் பதினெட் டாம் நூற்றாண்டில் செருமானிய நாட்டில் வாழ்ந்த பாக்கு (Bach, கி.பி. 1685-1750) என்பவர் முதன்மை யானவராகக் கருதப்படுகிறார். இயோவான் செபா சுடியன் பாக்கின் குடும்பத்தினருள் கி.பி. 1500-ஆம் ஆண்டு முதல் 1700-ஆம் ஆண்டு வரையில் ஐம்பதிற்கு மேற்பட்ட இசை வல்லுநர்கள் இருந்தனர். இவர் ஒத்திசை (Harmony Music) முறையில் பல பாடல் களை இயற்றி இசையமைத்தார். இவர் இயற்றிய பாடல் தொகுதி நற்பண்புடைய கிளேவியர் (The Well Tempered Clavier) என்னும் பெயரில் பல்வேறு வகையான இசைப்பாடல்களைக் கொண்டதாகும்.

ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய இயலிசைப் புலவர்களுள் சியார்சு ஆண்டெல் (George Handel), சோசப்பு ஏடன் (Joseph Hayden), மோசார்ட்டு (Mozart) ஆகியவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இம்மூவ ரும் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றி இசை யமைத்துள்ளனர். ஏடன் நூற்றுக்கு மேற்பட்ட தொகுப்பிசைகளை இயற்றியுள்ளார்.

மோசார்ட்டு கி.பி. 1756-ஆம் ஆண்டு ஆசுத்திரிய நாட்டைச் சேர்ந்த சால்சுபர்க்கில் (Salzberg) பிறந் தார். மோசார்ட்டு மூன்று வயதுக்குழந்தையாக இருந்த பொழுதே இசையில் ஈடுபாடு கொண்டார். தம் நான்காம் வயதில் இவர் பியானோவைப் போன்ற அமைப்புக் கொண்ட ஆப்சிகார்டு (Harpsi chord) என்னும் இசைக்கருவியை இசைத்தார். தம் ஐந்தாம் வயதில் இசைப்பாடல்களை இயற்றி அவற் றுக்கு இசையமைத்தார் ஆசுத்திரியநாட்டுப் பேரரசி யின் அவையில் மோசார்ட்டு தம் ஆறாம் வயதி லேயே ஓர் இசை நிகழ்ச்சியை நடத்தினார். பதி னான்கு வயது முடியும் முன்னரே மோசார்ட்டு பியானோ, வயலின், ஆப்சிகார்டு போன்ற இசைக் கருவிகளில் இசைக்கக் கூடிய இசைக் கருவிப்பாடல் கள் பலவற்றை (Sonatas) இயற்றினார். இசைக்குழு வினர் இசைக்கக் கூடிய பாடல்களையும் இயற்றி இசையமைத்தார். மோசார்ட்டு மற்றக் குழந்தை களைப் போல் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வில்லை. இவருடைய குழந்தைப் பருவம் இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதில் கழிந்தது. மோசார்ட் டின் தந்தை இலியோபால்டு (Leopald) இவரை ஐரோப்பாவெங்கும் பல நாடுகளுக்கு அழைத்துச் சென்று, இசை நிகழ்ச்சிகளை நடத்த உதவி செய் தார். மோசார்ட்டு பல சிறந்த இசைப் பேரறிஞர் களைச் சந்தித்தார். புகழ்பெற்ற பல கிறித்தவக் கோயில்களில் ஆர்கன் இசைக்கருவியில் தம் இசைப் படைப்புகளை இசைத்தார். இவருக்கும் மதகுருவுக் கும் இடையே ஏற்பட்ட மனவேறுபாடு காரணமாக மோசார்ட்டு தாம் பிறந்த சால்சுபர்க்கை விட்டு 1781-ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டார். மோசார்ட் டின் குடும்பத்தினர் வியன்னா நகரத்தில் குடியேறி னர். குழந்தைப் பருவத்தில் மோசார்ட்டுக்கு மக்கள் அளித்த வரவேற்பு இவர் வயது வந்தவரானபின் கிடைக்கவில்லை. இவர் தாம் இயற்றிய பாடல்களை விற்றும் சிலருக்கு இசைப்பயிற்சி கொடுத்தும் தம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்துகொண் டார். மோசார்ட்டு 35-ஆம் வயதில் வறுமையின் காரணமாக இறந்தார். இவர் இறந்த பிறகு இவர் இயற்றிய இசை நாடகங்கள் (Operas) புகழ்பெற் றன. இந்த இசை நாடகங்கள் ஐரோப்பாவின் எல் லாப் பெரிய அரங்குகளிலும் நிகழ்த்தப்பட்டன. மோசார்ட்டு இறப்பதற்குச் சில நாள்களுக்கு முன் இயற்றி முடித்த இசை நாடகம் மாயக்குழல் (The Magic Flute) என்பதாகும். மோசார்ட்டுஇயற்றிய 22

இசை நாடகங்களுள் துன்பியல் நாடகங்கள், இன்பியல் நாடகங்கள், கோணங்கி நகைச்சுவை நாடகங்கள் (Slapstick Comedy) போன்ற பல்வகைப்பட்ட இசை நாடகங்கள் உள்ளன. மோசார்ட்டின் தான் கியோவன்னியும் (Don Giovanni) மாயக்குழலும் பிகாரோவின் திருமணமும் (Marriage of Figaro) இசைநாடக உலகில் அழியாப் புகழ்பெற்று இன்றும் மக்களால் விரும்பி வரவேற்கப்படுகின்றன. இசை நாடகங்களைத் தவிர மோசார்ட்டு சிம்பனி (Symphony) என்று குறிப்பிடப்படும் இசைக்கருவி ஒத்திசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவற்றுள் சில இசைக்கருவித் தொடக்கப்பாடல்களாக (Overtures) வும் பல பாடல்கள் நீண்ட நேர இசைக் கருவிப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. ஒரே பாடல் 20 அல்லது 30 நிமிடங்கள் வரையில் இசைக்கப்படும். இத்தகைய பாடல்கள் நான்கு பகுதிகளைக் கொண்டவை. மோசார்ட்டின் இறுதி இசைக்கருவிப் பாடலாகிய 41-ஆம் எண் சிம்பனி என்பது 'சூபிட்டர்' (Jupiter) என்று குறிப்பிடப்படுகிறது. மோசார்ட்டு கோயில்களில் பாடக்கூடிய பாடல்களையும் இயற்றினார். விவிலியத்தின் பல சங்கீதப் பகுதிகளுக்கு (Psalms) இசையமைத்தார். இப்பாடல்கள் மாலை வழிபாட்டில் இடம் பெறுவனவாகும் (Vespers). இப்பாடல்களுள் சில தனித்து ஒருவர் பாடக்கூடியனவாகவும் வேறு சில ஆர்கனில் இசைக்கக் கூடியனவாகவம் சில குழு இசைப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. மோசார்ட்டு தம் வாழ்நாளின் இறுதிஆண்டில் இறந்தோருக்கு இசைக்கப்படும் இறுதி இசை (Requiem) என்னும் வகைப்பாடலை இயற்றி இசையமைத்தார். இப்பாடலுக்கு இசையமைத்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் இறந்தார்.

மோசார்ட்டு பல இனிய இரவுப் பாடல்களையும் (Serenades) இயற்றினார். இவர் கி.பி. 1787-ஆம் ஆண்டு இயற்றிய ஒரு சிறிய இரவுப்பாடல் (A little Night Music)என்பது புகழ்பெற்ற இரவுப் பாடலாகும். இசைக் கருவிக்குழுப் பாடல்களையும் (Concertos) இவர் இயற்றியுள்ளார். இத்தகைய நிகழ்ச்சிகளில் மோசார்ட்டு தாமே முதன்மை இசைக்கருவியை (வயலின் அல்லது பியானோ) இசைப்பார். இவற்றைத் தவிர நூற்றுக்கணக்கான இசைச் சதுரங்களை (Quartets) இயற்றியுள்ளார். இந்த இசைச் சதுரங்களில் இருவயலின்கள், ஒரு வயோலா (Viola), ஒரு செல்லோ (Cello) ஆகிய நான்கு இசைக்கருவிகள் இசைக்கப்படும். மோசார்ட்டு இயற்றிய பியானோ, வயலின் ஆகிய இசைகளில் இசைக்கக்கூடிய இசைக் கருவிப்பாடல்கள் மிக்க இனிமையானவை. பியானோ என்னும் இசைக்கருவி மோசார்ட்டின் இசைப்பாடல்களின் காரணமாக உலகெங்கிலும் புகழ்பெற்றது.

மோசார்ட்டின் வாழ்க்கையில் பல துன்பங்களும் ஏமாற்றங்களும் ஏற்பட்ட போதிலும், இவருடைய இசைப்படைப்புகள் மனத்திற்கு மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் ஊட்டக் கூடியனவாக அமைந்தன. இவர் மரபுவழி, துன்பியல் இசைப் படைப்புகளையும் செய்திருக்கிறார். மோசார்ட்டின் இசைப்படைப்புகள் கி.பி. 1800-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1877-ஆம் ஆண்டு வரையில் உலுட்விகு கோசெல் (Ludwig Kochel) என்னும் செருமானிய இசை இரசிகரால் தொகுக்கப்பட்டன. இன்று மோசார்ட்டு உலகப் புகழ்பெற்ற இசைப் பேரறிஞராகக் கருதப்பட்டுப் போற்றப்படுகிறார். ஒவ்வோராண்டும் சால்சுபர்க்கில் வேனிற்கால இசை விழாவில் இவருடைய பாடல்கள் இடம்பெறுகின்றன.

பீதோவன்: ஐரோப்பாவில் கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய இயலிசைப் புலவர்களுள் பீதோவனும் (Ludwog Van Beethovan, 1770-1827) ஒருவராவார். இவர் செருமானிய இசைப் பேரறிஞர். இவர் மோசார்ட்டின் மாணவராகச் சில காலம் இருந்தார் என்பது கூறப்படுகிறது. செருமானியச் செல்வர்களின் ஆதரவு இவருக்குக் கிட்டியது. இவர் 1792-ஆம் ஆண்டு இயலிசைப்புலவர் ஏடனைச் (Haydn) சந்தித்தார். இவர் பியானோ இசைப்பதில் சிறந்த வல்லுநராக விளங்கினார். சோனாட்டா (Sonata) என்னும் பியானோ இசைக்கருவிக் குழுப் பாடல்களை இயற்றுவதில் புகழ்பெற்று விளங்கினார். இசைக்கருவி ஒத்திசை முறையில்(Symphony) இசைப் பாடல்களை இயற்றி இசையமைக்கும் முறையில் பீதோவன் தேர்ச்சி பெற்றார். இவர் 600 இசைப் பாடல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் 9 (சிம்பனி) பியரனோ தொகுப்பிசைப் பாடல்கள், 5 பியானோ இசைக்குழுப் பாடல்கள் (Piano Concertos), ஒரு வயலின் இசைக் குழுப் பாடல், 16 இசைக்கருவிச் சதுரங்கள்(Quartets), 10 வயலின் இணைப்பாடல்கள் (Violin Sonata), 22 பியானோ இசைக்குழுப்பாடல்கள் (Piano Concertos), 5 செல்லோ இசைப்பாடல்கள் (Cello Sonata), 2 வழிபாட்டுப் பாடல்கள் (Masses), ஓர் இசைநாடகம் ஆகியவை அடங்குகின்றன. இவற்றைத்தவிர 200 பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார். பீதோவன் தம் 25-ஆம் வயதிலிருந்து செவிட்டுத்தன்மையினால் வருந்தினார். இவர் கி.பி. 1819-இல் முழுமையான செவிடரானார். பீதோவனின் இசைப்படைப்புகளுள் ஐந்தாம், ஒன்பதாம் சிம்பனிகள், இராயிகா(Eroica) என்னும் சிம்பனி, இரங்கத்தக்க பியானோ இசைக் குழுப்பாடல் (Pathetic Sonata), நாட்டுப்புறப் பியானோ இசைக் குழுப்பாடல் (Pastoral Sonata), நிலவுப் பியானோ இசைக் குழுப்பாடல் (Moonlight

Sonata), பிடெல்லோ (Fidello Opera) நான்காம் ஐந்தாம் பியானோ இசைக்குழுப்பாடல்கள் (Fourth & Fifth Piano Concertos) போன்றவற்றைப் புகழ்பெற்றனவாகக் குறிப்பிடலாம்.

மேனாட்டு இயலிசைப்புலவர்களுள் பாலசுடிரீனா (Palesterina), மாண்டிவெர்டி (Monteverdi) ஆகிய இருவரும் மோசார்ட்டின் காலத்திற்கு முன்னரே வாழ்ந்தவர்கள். இவர்கள் வழிபாட்டுப் பாடல்களை இயற்றி இசையமைத்தவர்கள். சிறந்த இசைநாடகங்களை இயற்றிப் புகழ் பெற்றவர்களுள் வெர்டி (Verdi), உரோசினி வாக்னர் (Wagner), இசுடிராசு (Strauss) ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களைத் தவிர, இத்தாலி நாட்டைச் சேர்ந்த இசுகார்லட்டி (Scarletti); செருமனியைச் சேர்ந்த ஆண்டெல் (Handel), குளுக்கு (Gluck), சூமன்(Schumann), பிராமிசு (Brahms), இசுடாக்அவுசன் (Stockhausen), ஆசுத்திரிய நாட்டைச் சேர்ந்த ஏடன் (Haydn), சோன்பர்க்கு (Schonberg), சூபர்ட்டு (Schubert), புருக்னர் (Bruckner), பெர்க்கு (Berg); உருசியநாட்டைச் சேர்ந்தபோரோடின்(Borodin),கார்கோசுகோவ் (Korkosokov),இசுடிராவின்சுகி(Stravinsky); பிரான்சு நாட்டைச் சேர்ந்த இராமோ (Rameau), பிசே(Bizet), தெபுசி (Debussy), பூலே (Boulez); இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம்சு (Williams); அங்கேரி நாட்டைச் சேர்ந்த இலிசுது (Liszt); அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த கோவெல் (Cowell) மெனால்டி, (Menaiti), பெர்ன்சுடீன் (Bernstein) போன்றபல இயலிசைப்புலவர்களும் குறிப்பிடத்தக்கவராவர்.

**இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு**: இயற்கை இரப்பரின் நிலையான விலையை உலக அங்காடியில் உறுதி செய்து, பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்காக இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (Association of Natural Rubber Producing Countries, (ANRPC) மலேசிய நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரில் (Kuala Lumpur) 1967-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் நிறுவப்பட்டது. இந்தோனேசியா,மலேசியா, சிங்கப்பூர், சிரீலங்கா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகள் எடுத்த சிறப்பு முயற்சிகளினாலும் ஒத்துழைப்பினாலும் இவ்வமைப்பு 1970-ஆம் ஆண்டு தோன்றியது. சிறிது காலத்திற்குள்ளாக இந்தியாவும்பாப்புவா நியூ கினியும் (Papua New Guinea) உறுப்பு நாடுகளாகச் சேர்க்கப்பட்டன.

குறிக்கோள்கள்: 1) உலக அங்காடியில் இயற்கை இரப்பரின் விலையை உறுதி செய்து அதற்கு நிலையான பாதுகாப்பு அளித்தல், 2) இயற்கை இரப்பர் உற்பத்தியையும் விற்பனையையும் பெருக்குதல், 3) இத்தொழில் தொடர்பாகத் தொழில் நுட்ப அறிவை வளர்த்து உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு வழங்குதல், 4) இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளிடையே கூட்டுறவையும் ஒற்றுமையையும் செய்திப் பரிமாற்றங்களையும் உருவாக்குதல்.

அமைப்பு: இவ்வமைப்பின் தலைமைச் செயலகம் கோலாலம்பூரில் நிறுவப்பட்டுள்ளது. இப்போதைய தலைமைச் செயலாளர் பி.கே. அபியரத்தினா (B.K. Abeyaratna) ஆவர். அமைப்பின் சிறப்பு மேலாண்மைப் பிரிவுகள், இயக்குநர் குழு, தொழில் நுட்பக் குழு, செயலகம், மன்றம் (Assembly) என்பவையாகும். இவை ஆண்டுக்கு ஒருமுறை மாநாடுகள் மூலம் அமைப்பின் கொள்கைகளை வரையறை செய்கின்றன.

பணிகள்: மலேசியா 1974-ஆம் ஆண்டில் முன்மொழிந்த (Proposal) திட்ட வரைவிற்கிணங்கி இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், சிரீலங்கா, தாய்லாந்து ஆகிய நாடுகள், ஒப்பந்த நோக்குடன் கூடிக் கலந்துரையாடி, இயற்கை இரப்பரின் விற்பனை விலையை உற்பத்திக் கட்டுப் பாட்டினாலும் இருப்பு வைப்பினாலும் (Stockpile) நிலையாக உறுதி செய்யப் பன்னாட்டு இயற்கை இரப்பர் ஒப்பந்தத்தினை (International Natural Rubber Agreement) உருவாக்கி ஒப்புதலளித்தன. இவ்வொப்பந்தத்தில்சேர இந்தியாவும், பாப்புவா நியூ கினியும் 1978-ஆம் ஆண்டில் முன்வந்தன. எனினும், எதிர்கால இருப்பு வைப்புச் (Buffer stock) செயற்படுவதற்குப் பல தடைகளிருந்தன. வாணிக முன்னேற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCTAD) எடுத்த முயற்சிகளும் இரப்பர் விலையில் கணிசமான மாறுதல்கள் ஏற்பட ஏதுவாயிருந்தன.

வாணிக முன்னேற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு 1980-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் செனிவாவில் முன்மொழிந்த பன்னாட்டு இயற்கை இரப்பர் ஒப்பந்தத்திற்கு, ஐரோப்பிய நாடுகள் உட்பட ஐக்கிய அமெரிக்க நாடுகளும் ஒப்புதல் அளித்ததால், 1981-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் ஒப்பந்த முடிவுகள் செயற்படத் தொடங்கின. இதற்கு இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பும் ஒப்புதல் அளித்தது. ஆனால், கூட்டமைப்பின் தனி நிலையான விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கை குறைந்த இருப்பு வைப்பு முறையில் தொடர்ந்து ஒருபக்கம் செயற்பட்டு வந்தது. இயற்கை இரப்பர் உற்பத்தியில் ஊக்கமும் ஆதாயமும் முதலீடும் மிகுதிப்பட 1980-ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிலையான விலைக் கொள்கையை உறுதி செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

இரப்பர் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இரு நாடுகளிலும் 5,50,000 டன் இரப்பர் எதிர்கால இருப்பு வைப்பாகப் பாதுகாக்கப்பட்டது. அதன் மேலாண் மைக்காகவும் விலை ஏற்றத் தாழ்வுக்கேற்றவாறு ஒப்பந்த விலையை நிலைநாட்டுதற்காகவும் தனி இருப்பு மேலாண்மையாளர் ஒருவர், உலக அங்காடி யிலிருந்து இருப்பை வாங்கவும் விற்கவும் முடிவு எடுக்கும் அதிகாரங்களுடன் செயற்பட அமர்த்தப் பட்டார். ஒப்பந்தத்தின்படி 30 மாதங்களுக்கு ஒரு முறை உறுதிசெய்யப்பட்ட விலை மறு ஆய்வு செய் யப்பட்டு உறுதி செய்யப்பட்டது. ஏற்றுமதி அளவை யும் உற்பத்தி அளவையும் கட்டுப்படுத்த ஒப்பந்தத் தில் குறிப்பு (Clause) எதுவும் குறிப்பிடப்படவில்லை. அளிப்புக் குறைவைத் தவிர்க்கவும் நீண்டகாலத் திட்டமுறையில் உற்பத்தி, ஆக்கத்திறன், விற்பனை ஆகியவற்றைப் பெருக்கவும் ஒப்பந்தத்தில் தனிக் குறிப்புகள் மூலம் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தைச் செயற்படுத்தும் ஆளுநர் குழு தேவையான காலத்தில் இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு அவற்றின் தேவை அளிப்புத் தொடர்பான அறிவுரைகளை வழங்கவும், குறிப் பிட்ட சில கொள்கைகளை மறு ஆய்வு செய்யப் பரிந்துரைக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறது. வாக் களிக்கும் உரிமையும் (Voting Rights) எதிர்கால இருப்பு வைப்பு மேலாண்மைக்கான நிதிப் பொறுப் பும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நாடுகளின் செலவுக் கணக்கிற்கேற்ப அளிக்கப்படுகின்றன.

இவ்வமைப்பு 1980-81-ஆம் ஆண்டுகளில் பன் னாட்டு இயற்கை இரப்பர் ஒப்பந்தங்களிலும் அவற் றைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளிலும் மிகுந்த அக்கறை செலுத்தியது. பன்னாட்டு ஒப்பந்தங்களி லுள்ள கூறுகளை உற்பத்தியாளர்கள் கலந்தாலோ சித்துச் செயற்பட 1980-இல் கோலாலம்பூரில் தனி மாநாடு நடந்தது. அமைப்பின் எட்டாம் மன்றம் (Eigth Assembly) புதுதில்லியில் 1981 சனவரியில் கூடியது. வல்லுநர்களின் ஆறாம் கூட்டமும் அதே காலத்தில் நடைபெற்றது. இயற்கை இரப்பர் குறைந்த அளவே உற்பத்தி செய்யும் நாடுகளின் சிக் கல்கள், தொழில் நுட்பச் சிக்கல்கள், நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள், இரப்பரின் தரத்தை உயர்த்து தல், தென் அமெரிக்க இரப்பரைப் பாதிக்கும் இலை வெப்புநோய் ஆகியவற்றைக் குறித்து ஆராய அவ்வப் போது கருத்தரங்குகள் நடத்துதல், ஆய்வுகள் மூலம் அறிவுரை பகர்தல், புள்ளி விவரங்களைச் சேகரித்து அளித்தல் ஆகிய பல வகைகளில் இவ்வமைப்பு உதவி வருகிறது. இயற்கை இரப்பர் குறித்த காலாண்டுப் புள்ளி விவரத் தொகுப்பு (Quarterly Statical Bulletin) வெளியீடும் இவ்வமைப்பினால் வெளியிடப்படு கிறது.

**இயற்கைக் கோட்பாட்டினர்:** பிரெஞ் சுப் பொருளியல் வல்லுநர்களின் ஒரு பிரிவினர் இயற்கைக் கோட்பாட்டினர் எனப்படுவர். இவர்கள் 18 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தனர். வணிகக் கோட்பாட்டினரின் கருத்து களுக்கு எதிரான இவர்கள் நிலத்தின் ஆக்கத்திறன் மட்டுமே நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு ஓர் ஆற்றல்மிக்க காரணி என்றனர். பிராங்கா குசுனே (Francois Queseny); ஆன் இராபர்ட்டு சாக்சு தூர்காட்டு (Anne Robert Jacques Turgot) ஆகியோரின் இயற்கைக் கோட்பாட்டுக் கருத்துக் களைச் சார்ந்து நிலத்தின்மீது உறுதியான நம் பிக்கை கொண்டிருந்தனர். வருமானத்தையும் செல் வத்தையும் கொடுக்கவல்லது நிலம் மட்டுமே என்று கருதினர். நிலம், உற்பத்தி முறையில் பயன்படுத்தப் படும் காரணிகளின் செலவைக் காட்டிலும் மிகை யான விளைவைக் கொடுக்கக் கூடியதென வலியுறுத் னர். நிகர உற்பத்தியைத் (Product Net) தரக் கூடிய நிலம் தொழில் துறை, வணிகம் ஆகியவற் றைக் காட்டிலும் சிறப்புடையது என்றனர்.

இயற்கைக் கோட்பாட்டினர் கருத்துப்படி, வணிக நிறுவனங்களோ மற்றத் துறைகளோ நிகர உற்பத்தி (உற்பத்திக்கான உள்ளீடுகளின் மதிப்புக்கு மிகையானது)யைத் தரக்கூடியவை அல்ல. ஆனால், இதற்கு மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட வணி கக் கோட்பாட்டினர் நாட்டின் செல்வம் அயல் நாட்டு வணிகத்தையும் உள்நாட்டு வணிகத்தையுமே சார்ந்ததென்று கருதியதால், இயற்கைக் கோட் பாட்டினர் முற்றிலும் வேறுபட்டவராகின்றனர். மேலும், இயற்கைக் கோட்பாட்டினர் இயற்கை விதி யில் (Natural Law) நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவேதான் இயற்கைக் கோட்பாடென்பது இயற்கை முறைமையின் அறிவியல் எனவும் குறிப்பி டப்படுகிறது. இயற்கைக் கோட்பாடு தலையிடாக் கொள்கை (Laissez Faire) யின் வாயிலாக அரசின் கட்டுப்பாடுகளின்றித் தன்னுரிமையாகச் செய்யப் படுவதை வலியுறுத்துகிறது. மனித நடவடிக்கைகள் இயற்கை விதிப்படி கட்டுப்படுத்தப்படுவதை நல்ல தொரு வழியாகக் கண்டனர். இயற்கைக் கோட் பாட்டினர் சமுதாயத்தை நால் வகையாகப் பகுத்த னர். 1) ஆக்கத்திறன் மிக்கோர், (அ) வேளாண்மை யினர், 2) சொத்துடையார், (அ) நிலமுடையார். 3) பெருவணிகர், கைவினைஞர், வாழ்க்கைத் தொழி லர் (Professional Men) போன்ற ஆக்கத்திறனற் றோர் (LaClass Sterile), (4) ஊதியம் பெறுவோர்

(அல்லது) உழைப்பாளர். இவர்களுள் முதல் மூன்று பிரிவினர் தற்சார்புப் பிரிவினர். இவர்களே முதலையும் தொழில் முனைப்புத் தன்மைகளையும் கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தில் சிறப்புப் பங்கேற்பர். நான்காம் பிரிவினர் பிறரைச் சார்ந்திருப்பதால் சிற்றளவான காரணியாகவே கருதப்பட்டனர்.

இயற்கைக் கோட்பாட்டினரின் தலைவனாகத் திகழ்ந்த குசுனே நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மையின் பங்கை எடுத்துரைக்கப் பொருளாதாரப் பட்டியல் (Tablean Economique) என்ற தலைப்பில் தம் நூலை வெளியிட்டார். இந்நூல், நாட்டின் பொருளாதாாத்தில் உற்பத்தியும் அதன் வாயிலாகச் செல்வத் திரட்சியும் எவ்வகையில் உருவாகின்றன என்பதை ஓரளவில் விளக்க முற்பட்டது. இந்நூல் பல வழிகளில் விளக்கமுற அமையாவிடினும் இது வெளிவந்த காலத்தில் பல அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றது. மேலும், பண்டங்களும் செலுத்துகைகளும் சுழல் ஓட்டத்தில் (Circular Flow) எவ்வாறு பங்கேற்கின்றனவென்பதை முறையான வகையில் வெளிப்படுத்தியது என்ற பாராட்டை இந்நூல் இன்றும் பெற்று வருகிறது. இந்நூல் தேசிய வருமானமும் உற்பத்தியும் ஒன்றின் மீதொன்று செயலாற்றி எவ்வாறு சமநிலையடைகின்றன என்ற விளக்கத்தைக் கூறுகிறது. மேலும், பொருளாதாரப் பட்டியல் அடிப்படை உள்ளீடு-வெளியீடுப் பட்டியலாக விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, ஆக்கத்திறன் மிகு வேளாண்மைத் துறை மற்றத் திறனற்ற உற்பத்தியாளருக்கு ஆக்கப் பொருள்களைத் தருவதுடன், மூலதன ஆக்கத்தைப் பெற்று நாட்டின் பொருளாதாரத்திற்கும் துணை நிற்கிறது.

தொன்மைப் பொருளாதாரத்தைத் தோற்றுவித்தவரும் அரசியல் பொருளாதாரத்தின் தந்தையெனப் போற்றப்படுபவருமான ஆடம் சுமித்து குசுனேவின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, இயற்கைக் கோட்பாட்டைக் குறித்து எழுதும்போது, வணிகக் கோட்பாட்டின் குறைபாடுகளைப் படம் பிடித்துக் காட்டும் பொருட்டே இக்கோட்பாடு உருவானதென்கிறார். இக்கோட்பாடு வேளாண்மைச் சமுதாயத்தில் இன்றும் ஓரளவிற்குப் போற்றப்பட்டாலும் முதனிலைத் துறை (Primary Section) யான வேளாண்மை மட்டுமே வருமானத்திற்கும் செல்வத்திற்கும் அடிப்படை என்ற ஒரு சார்பான முடிவு இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆகவே, பொருளாதாரக் கருத்து வளர்ச்சி வரலாற்றின் தொடக்கநிலையில் மிகுந்த மதிப்பைப் பெற்றிருந்த இக்கோட்பாடு பின்னர்க் குறைந்த மதிப்பையுடையதாயிற்று எனலாம்.

துணை நூல்கள்:

**Mark Blang**, Economic Theory in Retrospect, Cambridge University Press, London, 1978.

**Srivastava, S.K.**, Histroy of Economic Thought, S. Chand & Company Limited, New Delhi, 1983.

**Eric Roll**, A History of Economic Thought, Prentice Hall, Inc., U.S.A., 1959.

**Lokanathan, V.**, A History of Economic Thought, S.Chand & Company Limited, New Delhi, 1984.

**இயற்கைக் கோட்பாடு**: தத்துவ முறையில் பார்க்கும் பொழுது ஒருமைக் கோட்பாட்டின் பிரிவாக இயற்கைக் கோட்பாடு அமைகிறது. இயற்கைக்கோட்பாடு (Naturalism) அறிவியல் ஆராய்ச்சிக்கப்பாற்பட்டுப் பொருள்கள் அல்லது நிகழ்ச்சிகள் அமையுமென்பது முரண்பட்ட கொள்கை என விளக்கந் தருகிறது. உயிர் தத்துவ ஆராய்ச்சிப்படி இக் கொள்கை நடு நிலைமை வகிக்கிறது. மேலும், என்னென்ன வகைப் பொருள்கள் இந்த உலகில் இருக்கின்றன; எந்த வகையான நிகழ்ச்சிகள் நடக்கப்போகின்றன என்பனவற்றையும் இவ்வியற்கைக் கோட்பாடு அறிவிக்காது.

இயற்கைக்கோட்பாட்டினைக் கொண்ட தத்துவ அறிஞர்களுள் சிலர் கருத்தியலான (Idealism) கொள்கையை ஏற்பவர்கள்; சிலர் நாத்திகர் (Atheists); சிலர் பருப்பொருட்கோட்பாட்டினர் (Materialists).

கொள்கைகள்: 1. நமக்குத் தெரிகின்ற இந்த உலகம் இயற்கைப் பொருள்களால் உருவாகியது. மலை, மேகம், விலங்கு, மனிதர்கன் எல்லாம் இயற்கைப் பொருள்கள். எல்லாவகை இயற்கைப் பொருள்களும் இடநேரக் கோட்பாட்டிலும் காரண அடிப்படையிலும் அமைந்திருக்கின்றன. இவற்றோடு இயற்கையல்லாத பொருள்களும் அமைந்திருக்கும். இயற்கைப் பொருள்களை நேரடியாகத் தெரிந்து கொள்ளலாம். இயற்கையல்லாத பொருள்கள் இயற்கைப் பொருள்களோடு நெருங்கிச் செயற்படும்பொழுது அவைகளை அறிய வாய்ப்புண்டு.

**2.** இயற்கைக் காரணம் (Natural Cause) என்பது ஓர் இயற்கைப் பொருள் அல்லது இயற்கைப் பொருளின் வரலாற்றில் ஒரு கதையாகி மற்றோர்

இயற்கைப் பொருளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஒவ்வோர் இயற்கைப் பொருளும் அதனுடைய உளதாந்தன்மை (Existence), தொடர்நிலை, முடிபு, அதன் மேல் இயங்குகின்ற இயற்கைக் காரணங்கள் ஆகியவற்றால் அமைகிறது. மேலும், இயற்கைப் பொருள்களில் ஏற்படுகின்ற மாற்றமும் அவைகளால் ஏற்படுகிறது.

3. இயற்கைப் பாங்கு (Natural Process) என்பது இயற்கைப் பொருளில் ஏற்படுகின்ற மாற்றம். இது இயற்கைக் காரணத்தால் ஏற்படுகிறது.

4. இயற்கை ஒழுங்குமுறை (Natural Order) என்பது எல்லா இயற்கைப் பொருள்களையும் சேகரிப்பது மட்டுல்லாமல் அவைகளின் ஒருங்கிணைந்த அமைப்புமாகும். இயற்கையை எல்லாப்பகுதிகளிலும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாக விவரிக்க முடியாது, ஏனென்றால் இது ஓர் இயற்கைக் காரணத்தைக் குறிக்க வேண்டும். இயற்கைக்கு அப்பால் இயற்கைக் காரணங்கள் இல்லை. ஆனால் இயற்கையானது விவரிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது. ஆகையினால் கொள்கையளவில் இயற்கையானது விவரிக்க முடிகிறது.

5. இயற்கை முறை அல்லது ஒழுங்கு என்பது இயற்கைமுறையை இயற்கைக் காரணங்களோடு ஒன்றுபடுத்தி விவரிப்பது. கொடுத்திருக்கிற விளக்கம் உண்மையாக இருந்தால் எதிர்பார்க்கும் பலன் உண்மையாகக் கிட்டும். இயற்கை ஒழுங்கு என்பது இயற்கையில் ஒரு பகுதியான மனிதன் மற்றொரு பகுதியோடு செயல் முறையில் ஒழுங்குபட்டியல்வது.

6. இயற்கையானது அறிவிற்குப் புலப்படுவதாக இருக்கும் அதே காலத்தில் தற்செயலாகவும் அது இருக்க முடியாது. ஓர் இயற்கை நிகழ்ச்சி பல்வேறு இயற்கைக் காரணங்களால் நடைபெற்றால் அறிவிற்குப் புலப்படுவதாய் அமையாது. அறிவிற்குப் புலப்படும் இயற்கை நிகழ்ச்சிகள் ஒழுங்காக அமைந்திருக்கும். அவை இயற்கையான விதிகள் அமையக் காரணமாகும். மனிதர்கள் இயற்கை விதிகளுக்குட்பட்டு நடப்பார்கள். அது போலவே இயற்கை நிகழ்ச்சிகளும் மனிதனுடைய சமூக, அறிவுத் தொடர்பான வாழ்க்கையும் இயற்கையோடு ஒத்திருக்கும்.

7. எல்லாத் தத்துவ அறிஞர்களும் மற்ற மனிதர்களைப் போல் இயற்கை ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இயற்கை யல்லாத முறை அல்லது ஒழுங்கைக் கடைப்பிடித்தால் இயற்கைக்குப் பொருத்த மில்லாத விளக்கங்கள் ஏற்படும். இவர்கள் சொல்லுக்கும் செயலுககும் பொருத்தம் இருக்காது. இயற்கைக் கோட்பாளர் மட்டும் கொள்கைக்கும் செயலுக்கும் பொருத்தம் காண்பர்

8. பகுத்தறிவு என்பது இயற்கை முறையைச் செயற்படுத்துவது. இயற்கை அறிவியல் என்பது பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக அமைவது. அறிவியல் சிந்தனை செய்வதும் நாகரிகங்குறைந்த முறைகளைச் சீர்படுத்துவதுமாகும்; அறிவியல் கொள்கை மட்டுமல்லாமல் செயல் முறையுமாகும்; அறிவியல் சீர்படுத்தவும் செய்யும்.

9. அறிவியல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள உலகைப் பற்றிய அறிவைக் கொடுக்கிறது. இயற்கை முறையைப் பயன்படுத்துவதால் அறிவியல் கொள்கை கிடைக்கிறது. பொது அறிவிற்கும் அறிவியலுக்கும் குழப்பம் ஏற்பட்டால் அறிவியல் கூறுவதை ஏற்க வேண்டும். அறிவைப் பற்றி முடிந்த கருத்துக் கூற இயலாது.

10. ஒழுங்குமுறைப்படியுள்ள அறிவியலுக்கும் (Formal Science) செயலறிவால் தெரிந்து கொள்ளப் படும் அறிவியலுக்கும் (Emprical Science) பல மாறுபட்ட தன்மைகள் இருந்தாலும், அவை முதற்கருத்தின் உண்மைகளையோ கட்டுப்படுத்தப்பட்ட உண்மைகளையோ பாதிக்கமாட்டா. அளவையியலின் கொள்கையாவது ஆராய்வது. அதாவது, பகுத்தறிவு செயற்படுவதைக் குறிக்கிறது.

11. அறிவியலுக்கப்பால் ஓர் அறிவுமில்லை என்பதன் பொருள் என்னவெனில், அறிவியலின் துணைக் கொண்டுதான் மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பை உணர முடியும் என்பதேயாகும்.

12. எல்லாவகை இயற்கைப் பொருள்களும் உண்மையானவை. மேலும், அறிவியலின் விரிவான பொருளறிவு இயற்கையின் எல்லா உண்மைகளையும் புலப்படுத்துவதில்லை.

13. உலகத்தில் ஓர் ஒழுங்கான தன்மை இல்லை. ஆயினும் அதனுள் மனிதர்கள் ஒழுக்கத்தை அடைய முயலுகிறார்கள். பலவகை இயற்கைச் சேர்க்கைகளால் மனிதன் முழுமை (Integral) பெறுகிறான். மனித நிறுவனங்கள், செயல்கள், அநுபவங்கள், குறிக்கோள்கள், மனிதர்களின் மதிப்புகள் ஆகியனவெல்லாம் இயற்கையானவை. இயற்கை முறைதான் தகராறுகளைத் தீர்க்க முடியும்.

14. இயற்கைத் தத்துவம், மற்றத் தத்துவங்களைப் போல் ஒரு தனிப்பட்ட பொருள் விளக்கம் உடையதன்று. இயற்கைக் கோட்பாடு இயற்கையை முறைப்படுத்துவது மட்டுமல்லாமல், மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்களை ஆராய்ந்து தெளிவு பெறவும் செய்கிறது.

கருத்துரை (Criticism): இயற்கைக் கோட்பாட்டினர் அறிவியல் தத்துவம், வரலாற்றின் தத்துவம், சட்டத்தின் தத்துவம் ஆகியவற்றை ஆராய்ந்தார்கள். தத்துவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறைப்படுத்திக் கூறினார்கள். இயற்கைக் கோட்பாட்டினருக்கு எண்ணற்ற நல்ல கருத்துகள் இருந்தாலும் ஒரு தத்துவம் தேவையாக இருந்தது. வருமுன் உரைத்தல் போன்றவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆயினும், அவர்கள் 'எந்த ஒரு தத்துவமும் வருமுன் உரைத்தல் இல்லாமல் இயங்காது' என்று கூறினார்கள்.

இயற்கைக் கோட்பாடு அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலும் அமெரிக்கச் செய்தி இதழ்களிலும் வெளியாகியுள்ளது.

துணை நூல்கள்:

**John Dewey**, Ernest Nagel and Sidney Hook, Are Naturalists Materialists? Journal of Philosophy Vol. 42, New York, 1945.

**Edel**, A., Is Naturalism Arbitrary? Journal of Philosophy, Vol. 43, New York, 1946.

**இயற்கைச் சூழமைவு:** மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டிருக்கும் காரணிகளுள் இயற்கை (Nature), சூழமைவு (Nurture) ஆகிய இரண்டினையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். இயற்கை என்பது மரபுக் கூறுகளையும் சூழமைவு என்பது குழந்தை பிறந்த பிறகு அதற்கு அமையக் கூடிய சமூகக் குடும்பப் பின்னணியினையும் குறிப்பிடுகின்றன. குழந்தைகளின் நுண்ணறிவுத்திறனிலும் ஆளுமை வளர்ச்சியிலும் மரபுநிலை, சூழமைவு ஆகிய இரு பெருங் கூறுகளுள் எது வலிமையானது என்பது பற்றி உளவியலறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருந்து வருகின்றன. வெற்றியடையத்தக்க வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் ஒருவனுக்கு இருந்தால் அவன் எச்செயலையும் வெற்றியுடன் முடிக்க இயலும் என்று சூழமைவுக் கொள்கையினர் கூறுகின்றனர். வாட்சன் என்னும் உளவியலறிஞர், 'என்னிடம் உடல்நலமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள். அவர்கள் எத்தகையவர்களாக வளரவேண்டும் என்பதை முன்னரே கூறிவிடுங்கள். இக்குழந்தைகளின் மரபு நிலை பற்றி நான் கவலைப்படமாட்டேன். சூழ்நிலையின் உதவியினாலேயே அவர்களைப் பேரறிஞர்களாக்கவோ பெரும் குற்றவாளிகளாக்கவோ என்னால் முடியும்' என்று கூறினார். மரபுநிலைக் காரணிகள் மட்டுமே ஒருவனுடைய வாழ்க்கையின் வெற்றி தோல்விகளுக்கும் பண்புகளுக்கும் காரணமாக இருக்கின்றன என்று கருதுபவர் விதியைக் காரணம் காட்டி முயற்சி எடுப்பதில்லை. சூழமைவு மட்டுமே மனிதர்களின் ஆளுமைக்கும் அறிவுத்திறனுக்கும் காரணமாகின்றன என்னும் கொள்கையை உறுதியாக நம்புகின்றவர்கள், எத்தகையவர்களையும் அறிவாளிகளாக்கி விடமுடியும் என்று எண்ணித் தம் முயற்சியில் தோல்வியடைகின்றனர். மரபுக் காரணிகளும் சூழ்நிலைக் காரணிகளும் மனிதனின் அறிவுத்திறன் ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றில் பங்கு கொண்டுள்ளன.

மனிதனின் தோற்றத்திற்குக் காரணமாக இருக்கும் விந்தணுக்களிலும் (Sperm Cells) முட்டையிலும் (Ovum) இணை உயிரணுக்கோல்கள் (Chromosomes) சம எண்ணிக்கையில் இருக்கின்றன. இவற்றை இரு உருப்பெருக்கிக் கண்ணாடி வழியில்தான் காண இயலும். ஒருவர் கண்களால் நேரே காணமுடியாது. உயிரணுக் கோல்களை வண்ணம் இடப்பட்ட பிறகே உருப்பெருக்கியில் காணமுடியும் என்பதை வால்டெயர் (Waldeyer) என்பவர் கண்டுபிடித்தார். இவர் உயிரணுக்கோல்களுக்குக் குரோமோசோம்கள் என்று பெயரிட்டார். ஆங்கிலத்தில் 'குரோமா' என்பது வண்ணம் எனப் பொருள்படும். ஒவ்வொரு உயிரணுக் கோலிலும் 40,000 மரபணுக்கள் (Genes) அடங்கியுள்ளன. மரபணுக்கள் டி.என்.ஏ. (DNA) என்னும் அடிப்படை வேதியியல் சத்துகளாகும். ஒவ்வொரு மரபணுப்பகுதியிலும் இருக்கும் டி.என்.ஏ சத்துகள் குழந்தையின் உயிர்ப்பொருள் ஆக்கத்திற்குக் (Metabolism) காரணமாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மரபணுக்களுள் ஏதேனும் ஒன்று குறையுள்ளதாக இருந்தாலும் அதன் விளைவாகக் குழந்தை ஏதேனும் ஒரு குறையுடன் பிறக்கும். டி.என்.ஏ. சத்துகளை உயிரின் தொடக்கம் என்று கூறலாம். டி. என்.ஏ யின் அமைப்பைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். மரபணுக்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளைச் செய்தவர் மார்கன் (Morgan, கி.பி. 1866-1945) என்பவராவார். ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும்பொழுது தன்னுடைய தாய் தந்தை ஆகிய இருவரிடமிருந்தும் சம எண்ணிக்கையில் உயிரணுக்கோல்களையும் அவற்றில் அடங்கியுள்ள மரபணுக்களையும் பெறுகிறது. ஆனால், குழந்தை ஆண் அல்லது பெண் என்பது தந்தையிடமிருந்து பெற்ற உயிரணுக்கோலின் தன்மையைப் பொறுத்து அமைகிறது. கருவுற்ற முட்டை (Zygote) யில் காணப்படும் 23 இணை உயிரணுக்கோல்களுள் 23 உயிரணுக் கோல்கள் தந்தையிடமிருந்து பெறப்பட்டவை. கிரிகொர் மெண்டல் (Greger Mendel, கி.பி. 1822-1884) என்பவர் பண்புமரபியலின்மீது நிகழ்த்திய சோதனைகளிலிருந்து மரபணுக்களைப் பற்றிய பல உண்மைகள்

தெரியவந்துள்ளன. மரபணுக்களுள் சிலவற்றை ஆதிக்கமுள்ளவை (Dominant) என்றும் வேறு சில வற்றைப் பின்னொதுங்கும் மரபணுக்கள் (Recessive) என்றும் இரு வகைகளாகப் பிரிக்க முடியும். பிறக்கும் பொழுது ஆதிக்கமுறை மரபணுக்களால் உண்டாக்கப்பட்ட மரபியல்புகள் அடுத்தடுத்த தலைமுறைகளில் அதிகரித்துக்கொண்டே போகும். பின்னொதுங்கும் மரபணுக்களால் உண்டாக்கப்படும் இயல்புகள் பின்வரும் தலைமுறைகளில் குறைந்து கொண்டே வரும். முட்டையிலுள்ள 23 இணை உயிரணுக் கோல்களுள் ஒவ்வோர் இணையிலும் ஓர் உயிரணுக்கோல் தள்ளப்பட்டு விடுகிறது. இதே போல் விந்தணுவில் உள்ள 23 இணை உயிரணுக் கோல்களுள் ஒவ்வோர் இணையிலும் ஓர் உயிரணுக் கோல் தள்ளப்பட்டு விடுகின்றது. இவ்வாறு முட்டை, விந்தணு ஆகியவற்றுள் ஒவ்வொன்றிலும் இருக்கும் 46 (23×2) உயிரணுக்கோல்களுள் 23 உயிரணுக்கோல்கள் தள்ளப்பட்டுவிடுகின்றன. மிகுதியான 23 மட்டுமே கருவுற்ற முட்டையாகி 46 உயிரணுக்கோல் அல்லது 23 இணை உயிரணுக்கோல்கள் உடைய தாகின்றன. இந்த இணைகளுள் எந்த ஓர் உயிரணுக் கோல் தள்ளப்படுகிறது என்பது எப்பொழுதும் ஒன்றுபோல இருப்பதில்லை. உலகில் இருப்பவர்கள் 3.8 பில்லியன் மக்கள். ஆனால் 70 திரில்லியன் (Trillion) விதமான உயிரணுக்கோல் இணைவுகள் ஏற்படமுடியும். இக்காரணத்தினால் உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களுள் ஒருவரைப்போல் மற்ற வர் இருப்பதில்லை. இக்காரணத்தினால்தான் ஒரே பெற்றோரின் பல குழந்தைகள் மாறுபட்ட இயல் பினராக இருக்கின்றனர். ஒரே கருவுற்ற முட்டை (Zygote) யிலிருந்து பிறக்கும் ஒரு கரு இரட்டைக் குழந்தைகள் (Monozygotic Twins) மட்டும் தோற்றம், இயல்பு போன்ற யாவற்றிலும் ஒரேதன்மையுடைய வராக (Identical Twins) இருக்கின்றனர். மற்றவர் கள் எல்லோரும் வேறுபாடு உடையவர்களாக இருக் கின்றனர். இருவேறுபட்ட கருக்களிலிருந்து பிறக்கும் (Dizygotic Twins) இரட்டைக் குழந்தைகளும் (Fraternal Twins) வேறுபட்டே காணப்படுகின்றனர்.

மரபணுக்களின் காரணமாகக் குழந்தைகள் தம் பெற்றோர் அல்லது அவர்களின் முன்னோர்களைப் போல் இருக்கின்றனர். இதனை மரபமைப்பு (Genotype) என்று குறிப்பிடலாம். மரபணுக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் மாறுதல்களை (Mutation) அடை வதனால் பெற்றோரிடம் இருக்கும் பண்புகள் ஓரளவு குறைந்தே குழந்தைகளிடம் காணப்படுகின் றன. எடுத்துக்காட்டாக, சில நேரங்களில் அறிவுத் திறனற்ற பெற்றோர்களின் குழந்தை ஓரளவு அறிவுத் திறன் பெற்றிருப்பதும், சிறந்த அறிவாளிகளாகத் திகழும் பெற்றோர்களின் குழந்தைகள் அத்தகைய அறிவுத்திறன் பெறாமல் இருப்பதும் இந்த மரபணு அடிப்படையினால் ஏற்படக் கூடியவையாகும். உட லில் அணுப்பிரிவு (Cell Division) ஏற்படுவது உயிர்மப் பிளவியக்க (Mitosis) முறையில் நிகழ்கிறது. இனப் பெருக்க அணுப்பிரிவு மியாசிசு (Meiosis) எனப்படு கிறது. குழந்தையின் பண்புகளுள் பல அதன் பெற் றோர்களிடமிருந்தும் சில அதன் முன்னோர்களிட மிருந்தும் பெறப்படுபவை. மனிதனின் ஆளுமையிலும் அறிவுத்திறனிலும் மரபுப்பண்புகளுக்கு எத்தகைய ஆதிக்கம் இருக்கின்றன என்பது பற்றிப் பல ஆய்வு கள் செய்யப்பட்டு வந்துள்ளன. இரட்டைக் குழந்தை களைக் கொண்டும் பல ஆராய்ச்சிகள் செய்யப் பட்டுள்ளன. கால்ட்டன் (Galton, கி.பி. 1822-1911) என்பவர் பல அறிஞர்களின் முன்னோர்கள் பற் றிய ஆய்வுகளைச் செய்தார். கால்ட்டன் 977 அறிஞர்களின் நெருங்கிய உறவினர்களாக 322 அறி ஞர்களும் தூர உறவினர்களுள் 203 அறிஞர்களும் இருந்தனர் என்பதைக் கண்டுபிடித்தார். கார்ல்பியர் சன் (Karl Pearson) என்பவரும் இத்தகைய ஆய்வு களைச் செய்தார். திரையன் (Tryon R.C) என்பவர் எலிகளின் கற்றல்திறன், மனவெழுச்சி ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளார். நெருங்கிய உறவினரிடையே நுண்ணறிவு ஈவின் இணைப்புக் கெழு (Correlative Coefficient) அதிகமாகக் காணப்படுகிறது என்று தாம்சன் (Thampson) என் பவர் கூறினார். குற்ற இயல்பு பரம்பரைபரம்பரை யாக வருகிறது என்று பரம்பரை ஆராய்ச்சியாளர் கள் கூறியுள்ளனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் சூக்சு (Jukes), கல்லிகாக்கு (Kallikak) ஆகிய இருகுடும்பத் தினரின் ஏழு தலைமுறைகளில் தோன்றிய 1200 பேர் சீர்தூக்கி ஆராயப்பட்டனர். சூக்சு குடும்பத் தினர் நாடெங்கும் பரந்து வெவ்வேறு இடங்களில் இருந்தனர். சூக்சு ஒரு குற்றவாளியாக இருந்தான். இவனுடைய முன்னோர்களுள் பெரும்பாலானவர் கள் குற்ற இயல்பு கொண்டவர்களாக இருந்தனர். மார்ட்டின் கல்லிகாக்கின் (Martin Kallikak) குடும்பத்தில் குற்ற இயல்பு கொண்ட மனைவியின் தலைமுறையினர் 480 பேர்களில் 434 பேர்கள் குற் றம் புரிந்தவர்களாக இருந்தனர். கல்லிகாக்கின் நல்ல மனைவி வழிவந்த 496 பேர்களுள் 5 பேர்களே குற்ற இயல்பினராக இருந்தனர். மற்றவர்களின் இத்தகைய ஆராய்ச்சிகள் மரபுநிலைப் பண்புகளின் ஆதிக்கத்தை எடுத்துரைத்தபோதிலும், சூழ்நிலைக் கருத்தே இக்காலத்தில் வலிமையுள்ளதாக இருக்கி றது. சூழ்நிலையைக் கருப்பகாலச் சூழ்நிலை, பிறந்த பின் சூழ்நிலை என இரு வகைகளாகப் பிரிக்கலாம். குழந்தை பிறந்தபின் எத்தகைய அறிவுத்திறனுடன்

எத்தகைய மனவெழுச்சிச் சம நிலையுடன் விளங்கப் போகிறது என்பது கருப்பகாலச் சூழ்நிலையையும் (Prenatal Environment) பிறப்புக் காலச் சூழ்நிலையையும் (Pronatal) பொறுத்து அமைகிறது. பிறப்புக்குப்பின் அமையும் சூழ்நிலை, ஒருவனுடைய ஆளுமை, தன்னம்பிக்கை, அறிவுத்திறன் ஆகியவற்றை அமைக்கின்றன. மரபுவழி அமைந்துள்ள பண்புகள், நல்ல சூழ்நிலையில் வளர்ச்சியடைந்து முழுமையாகத் தோற்றமளிக்க முடியும்.

மனித உடலில் இருவகையான உயிரணுக்கள் உள்ளன. முதல் வகையான உயிரணு பாலணுவிலிருந்து பெறப்பட்டவை. இவை பாலணுக்கள் (Gametes) எனப்படுகின்றன. உடலில் உள்ள மற்றக்கரு உயிரணுக்கள் (Germ Cells) உடல் உயிரணுக்கள் (Body Cells) ஆகும். தசைகள், எலும்புகள், உடலின் உள்உறுப்புகள், நரம்புமண்டலம் போன்றயாவும் உடல் உயிரணுக்களால் ஆக்கப்பட்டவை. பாலணுக்களும் உடல் உயிரணுக்களும் வெவ்வேறு எண்ணிக்கையில் உயிரணுக்கோல்களைக் கொண்டவை. அவை பிரியும் முறையும் வேறுபட்டது. குழந்தையின் மரபுக்கூறுகள் யாவும் பாலணுக்களில் அடங்கியுள்ளன. உடலில் உள்ள மிகப்பெரியது அணு முட்டை (Ovum) ஆகும். மிகச்சிறியது விந்தணு (Sperm) ஆகும். விந்தணுவைப்போல் முட்டை 90,000 பங்கு கனமுடையதாகும். சில மரபணுக்களின் தொகுதி ஒரு குறிப்பிட்ட பண்பைக் குழந்தையிடம் உண்டாக்கலாம். சில நேரங்களில் இணை மரபணுக்கள் பல இயல்புகளுக்கும் காரணமாக அமையலாம். மரபணுக்களின் காரணமாக ஏற்படும் இயல்புகள் குழந்தை பிறந்தவுடன் தெரியாமல் இருந்து அது வளர்ச்சியடையும் காலத்தில் தெரியவரலாம். வழுக்கைத்தலை, நீண்ட ஆயுள், பால்உறுப்பு வளர்ச்சி போன்றவை வளர்ச்சியடையும்பொழுது அல்லது வளர்ச்சியடைந்தபின் தெரியவரும். பால் உயிரணுவில் உள்ள 23 இணை உயிரணுக்கோல்களுள் 22 இணைகள் ஒரே தன்மையில் ஆண்பெண் இருவரிடமும் அமைந்துள்ளன 23-ஆம் உயிரணுக்கோலில் XX என்ற இணை அமைப்பு முட்டையிலும் XY என்ற அமைப்பு விந்தணுவிலும் காணப்படுகின்றன. முட்டையில் இருக்கும் 23-ஆம் உயிரணுக்கோல் எப்பொழுதும் XX என்ற அமைப்பிலேயே இருக்கிறது. இந்த X உயிரணுக்கோல் Y உயிரணுக்கோலைப் போன்று 5 பங்கு நீளமானது. X உயிரணுக்கோல் Y உயிரணுக்கோலைக் காட்டிலும் மிகுதியான மரபணுக்களைக் கொண்டிருக்கிறது. சில விந்தணுக்களில் XY என்ற அமைப்பும் வேறு சில விந்தணுக்களில் XX என்ற அமைப்பும் காணப்படுகின்றன. XY என்ற அமைப்புள்ள விந்தணு முட்டையுடன் சேருவதால் ஆண்குழந்தையும், XX என்ற விந்தணு முட்டையுடன் சேருவதால் பெண் குழந்தையும் உருவாகின்றன. குழந்தை ஆண் அல்லது பெண் என்பது விந்தணுவால் தீர்மானிக்கப்படுகிறது. முட்டையில் இருக்கும் உயிரணுக்கோலில் காணப்படும் மரபணுக்களுக்கு இணையான மரபணுக்கள் சில விந்தணுவின் உயிரணுக்கோலில் காணப்படுவதில்லை. இத்தகைய விந்தணுவால் உருவாகும் ஆண் குழந்தையிடம் பாலணுத் தொடர்பான(Sex linked) பின்னொதுங்கும் மரபணுப்பண்புகள் (Recessive Genes) காணப்படுகின்றன. விந்தணுவில் ஒரே ஒரு எக்சு அல்லது ஒய் (X or y) உயிரணுக்கோல் மட்டும் இருப்பதால் அந்த உயிரணுக்கோலில் ஏதேனும் ஒரு குறை இருப்பின் அதனால் ஏற்படும் குறைகள் குழந்தையின் வளர்ச்சிக் காலத்தில்தான் வெளிப்படையாகத் தெரியும். Y உயிரணுக்கோலில் இக்குறைபாட்டினை ஈடுசெய்யக்கூடிய மரபணுக்கள் இல்லாத காரணத்தினால் பிறவிக்குறைகள் வெளிப்படையாகத் தெரியாமல் வளர்ச்சிக்காலத்தில் மட்டும் தெரிகின்றன. முட்டையில் உள்ள X உயிரணுக்கோலில் ஏதேனும் குறைகள் இருப்பின் அவை உயிரணுக்கோலின் மற்றொரு X 'இணையில்' இருக்கும் மரபணுக்களினால் ஈடுசெய்யப்படுகின்றன. இவ்வாறு ஈடுசெய்யும் மரபணுக்கள் ஆதிக்கமுள்ளவையாக இருப்பின் குழந்தையின் மரபணுக்கள் பாதிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, இரத்தம் உறையாமை (Hemophilia) என்னும் நோய் பால்மரபணுக்களால் பின்னொதுங்கும் பண்பாக அடுத்த தலைமுறையினருக்கு X உயிரணுக்கோல் வழியாக எடுத்துச் செல்லப்படுகிறது. ஒரு பெண் குழந்தை இந்தநோயினைக் குறையுள்ள பின்னொதுங்கும் மரபணுக்களின்வழியே தன் பெற்றோர் ஒருவரிடமிருந்து பெறக்கூடும். அந்த மரபணுக்களின் இணை மரபணுக்கள் இந்தக் குறையின்றி இருந்தால், அக்குழந்தைக்கு இரத்தம் உறையாமை என்ற நோய் காணப்படாது. ஓர் ஆண்குழந்தைக்கு இந்நோய் X உயிரணுக்கோல் வழியே ஏற்பட்டால் முன்பு கூறியவாறு ஈடுசெய்யக்கூடிய மரபணுக்கள் இல்லாத காரணத்தினால் அக்குழந்தைக்கு இந்நோய் ஏற்படுகிறது. இரவுக்குருடு, நிறமயக்கம், நீரிழிவு நோய், பார்வைக்குறை போன்ற குறைகளும் இவ்வாறு பிறப்பிலேயே ஏற்பட்டுவிடுகின்றன. இக்காரணத்தால் ஆண்குழந்தைகள் பெருமளவில் கருச்சிதைவு, குழவிப்பருவ மரணம் போன்றவற்றிற்கு ஆளாகின்றன. இயல்பாக ஏற்படும் கருச்சிதைவுகளில் பெரும்பான்மையான குழந்தைகள் ஆண்குழந்தைகள் எனக் கணக்கிட்டுள்ளனர்.

உயிரணுக்கோல் கோளாறுகளினால் ஏற்படக்கூடிய நோய்களே மங்கோலிசம் (Mongolism) எனப்

படும். அது தவுன் நோயையும் (Down's Syndrome) தர்னர் நோயையும் (Turdner's Syndrome) குறிக்கும். தர்னர் நோய்க்காக ஆய்வு செய்யும் காலத்தில் அந் நோயுள்ளவர்களின் 23-ஆம் உயிரணுக்கோலின் XX அல்லது XY அமைப்புகளுள் X என்ற ஓர் உயிரணுக் கோல் மட்டும் காணப்பட்டது. 21-ஆம் உயிரணுக் கோல் இரண்டு இணை உயிரணுக்கோலுக்கு மாறாக 3 பிரிவுகளாக இருக்கிறது என்பதும் தெரிய வந்தது. இக்காலத்தில் மரபுவழிப்பெறப்படும் நோய் களுள் பலவற்றைக் குணப்படுத்தி, இயற்கையின்மீது எவ்வாறு சூழ்நிலைக் காரணிகளால் வெற்றி கொள் ளலாம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக 'பினைல்கெடோனுரியா' (Phenyl-ketonuria) என்னும் மரபுவழி நோயைக் கூறலாம். மரபுவழி வரும் நோயைக் குணமாக்க முடியும் அல் லது வாராமல் தடுக்கவும் முடியும் என்பதை இங்குக் காணலாம். இந்நோய் சுருக்கமாகப் 'பிகேயு' (PKU) என்று குறிப்பிடப்படுகிறது. இது பின்னொதுங்கும் மரபணுக்களால் ஏற்படுகிறது. இந்நோயுள்ள குழந் தைகளுக்குப் பாலில் உள்ள புரதப்பொருளையும் வேறு சில புரதப்பொருள்களையும் உடலுக்குத் தேவையான உருவில் மாற்றக்கூடிய நொதிகள் (Enzyme) உடலில் இருக்கமாட்டா. புரதப் 'பினை லாலானைன்' (Phenylalanine) என்பதைத் 'திரையோ சைன்' (Triyosine) என்னும் பொருளாக மாற்றக் கூடிய நொதிகள் உடலில் இல்லாதகாரணத்தினால், உடலில் 'பினைல்பைருபிக்கு' அமிலம்(Phenylpyrubic Acid) சேர்ந்துவிடுகிறது. இது மைய நரம்பு மண்ட லத்தின் (Central Nervous System) வளர்ச்சியைப் பாதிக்கிறது. இதன்விளைவாகக் குழந்தைகள் மன வளர்ச்சி குன்றியவர்களாகின்றனர். பிறக்கும் பொழுது இயல்பான நிலையில் காணப்படும் குழந்தை நாளடைவில் இந்நிலையை அடைகிறது. முடியின் நிறம் மாறுகிறது. எளிதில் எரிச்சலுறும் தன்மை யுடையதாகிறது. இயக்கக்குறையுடைமையும் மிகைச் செயல் வயமும் (Hyper activity) காணப்படுகின் றன.

ஒவ்வொரு மரபணுப்பகுதியிலும் இரண்டு அல் லது மூன்று வகைகளான மரபணுத்தொகுதிகள் காணப்படுகின்றன. இவை கலப்பின மரபணு (Allele) எனப்படுகின்றன. குழந்தையின் உடலில் இருக்கும் ஒவ்வொரு மரபணுவின் அல்லீல்களும் அதன் பெற்றோரிடமிருந்து சம எண்ணிக்கையில் பெறப் பட்டவை. பெற்றோர் இருவரின் அல்லீல்களும் ஒரே தன்மையனவாக இருந்தால் குழந்தையின் அந்த மர பணுப் பகுதி இயல்பு மரபமைப்பு (Homozygous)என் றும் வேறுபாடுகள் காணப்படின் அது வேறுபாட்டு மரபமைப்பு (Heterozygous) என்றும் குறிப் பிடப்படும். ஒரு குழந்தை சுருள்முடிக்கான அல்லீல்களைத் தன் பெற்றோர் இருவரிடமிருந்தும் பெற்றிருந்தால் அது இயல்பு மரபமைப்பு (Homozy-gote) ஆகிறது. அவ்வாறன்றித் தன் பெற்றோர் இருவருள் ஒருவரிடமிருந்து சுருள் முடி மரபணுக் களையும் மற்றவரிடமிருந்து நேரான முடியின் மர பணுக்களையும் பெற்றிருந்தால் அது வேறுபாட்டு மரபமைப்பு (Heterozygote) என்று குறிப்பிடப் படுகிறது. இவற்றுள் ஓர் அல்லீலை A என்று குறிப் பிட்டால் மற்றதை a என்று குறிப்பிடலாம். குழந்தைகளிடம் AA, aa, Aa ஆகிய மூன்று வகை களான மரபணுக்களைக் காண முடியும். இங்குக் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் குழந்தையின் மரபணு AA என்று அமைந்திருந்தால் அவள் சுருள் முடியுடையுவளாகவும், மரபணு aa முறையில் அமைந்திருந்தால் அவள் சுருளற்ற முடியுடையவ ளாகவும், Aa என்ற அமைப்பில் அவள் மரபணு அமைந்திருந்தால் அவள் சுருள்-சுருளற்றது ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட முடியுடையவளாகவும் இருப்பாள். இரு மரபணுத் தொகுதிகளுள் எவை ஆதிக்கமுள்ளனவாக இருக்கின்றனவோ அவற்றைப் பொறுத்து இயல்புகள் மரபுவழிப் பெறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பெற்றோருள் ஒருவர் உயர மாகவும் மற்றவர் மிகவும் குட்டையாகவும் இருந் தால் பின்னொதுங்கும் ஆதிக்கமுள்ள மரபணுக்களின் இயல்புகளுக்கு ஏற்றவாறு அவர்கள் மகன் நடுத்தர உயரமாக இருக்கலாம். A என்னும் கலப்பின மரபணு ஆதிக்கமுள்ளது; a என்பது பின்னொதுங்கும் தன்மை யுடையது. பெரும்பாலான பரம்பரைக் குறைகள் பின்னொதுங்கும் மரபணுக்களாகவே இருக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர் நன்கு விளக்குகின்றனர். உலகில் உள்ள மக்கள் தொகையில் 20 பேர்களுள் ஒருவரிடம் பிகேயு பின்னொதுங்கும் மரபணுக்கள் காணப்படுகின்றன. P என்னும் வேறுபட்ட மர பினர் இயல்பான உடல்நிலைகொண்ட P என்ற அமைப்புள்ள வாழ்க்கைத் துணையை அடைந்தால், அவர்களுடைய குழந்தைகளிடம் 'பிகேயு' காணப்பட மாட்டாது. பெற்றோர் இருவரும் $P_P$ என்ற மரபணு அமைப்பில் இருந்தால், அவர்களுக்குப் பிகேயு குழந்தை பிறப்பதற்கு நான்கில் ஒரு பங்கு வாய்ப்பு உள்ளது.

உலகில் உள்ள மக்கள் தொகையில் இருபது பேர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பின்னொதுங் கும் பிகேயு மரபணுக்கள் காணப்படுகின்றன. பிகேயு பின்னொதுங்கும் மரபணுக்களுடையவர்களை p எனவும் ஆதிக்கமுள்ள பிகேயு மரபணுக்களுடைய வர்களை P எனவும் வைத்துக் கொண்டால், அந்தக் குழந்தையின் பெற்றோர் இருவரும் மாறு

| ஆதிக்கமுள்ள பின்னொதுங்கும் மரபணுக்களின் இயல்புகள் | |
|---|---|
| ஆதிக்கமுள்ள இயல்புகள் | பின்னொதுங்கும் இயல்புகள் |
| வெளிர்நிறக்கண் | சாம்பல் நிற, பச்சை, நீலக்கண்கள் |
| சுருள்முடி | நேரான முடி |
| இயல்பான முடி | வழுக்கைத்தலை |
| தடித்த உதடுகள் | மெல்லிய உதடுகள் |
| வளைந்த மூக்கு | நேரான மூக்கு |
| கன்னத்தில் குழி | கன்னத்தில் குழி இல்லாமை |
| நிறத்தெளிவு | நிற மயக்கம் |
| இயல்பான பார்வைத்திறன் | கிட்டப்பார்வை |
| தூரப்பார்வை | இயல்புபார்வை |
| இரத்தம் உறைதல் | இரத்தம் உறையாமை |
| இயல்பு உயிர்ப்பொருளாக்கம் | பினைல்கெடோனுரியா |
| இயல்பான இரத்த அணுக்கள் | அரிவாள் இரத்த அணுச்சோகை |

பாட்டு மரபமைப்பும் பின்னொதுங்கும் பிகேயு கலப் பின மரபணுக்களும் உடையவராக இருப்பின், அவர்களுடைய குழந்தைகள் பிகேயு நோயுடைய வராதற்கு 25% வாய்ப்புள்ளது. குழந்தை பிகேயு நோயின் பின்னொதுங்கும் கலப்பின மரபணுக் களையே கொண்டு பிகேயு நோயினால் தாக்கப்பட் டால் அந்நோயுடன்பிறப்பதற்கு 50%வாய்ப்புள்ளது. பிகேயு கலப்பின மரபணுக்களின்றி, பிகேயு நோயு மின்றிப் பிறப்பதற்கு 25% வாய்ப்புள்ளது. பெற்றோருள் ஒருவர் பின்னொதுங்கும் பிகேயு மரபணுக்களுடையவராகவும் மற்றவர் பிகேயு நோயின் மரபணுக்கள் எதுவும் இல்லாதவராகவும் அதே நேரத்தில் மாறுபாட்டு மரபமைப்பினராகவும் **(Pp)** இருந்தால் அவர்களுடைய குழந்தைக்கு பிகேயு நோய் இருக்காது.

இக்காலத்தில் ஐ பினைலாலானைன் **(I-Phenylalanine)** என்னும் மருந்தைப் பெற்றோர்கள் உட் கொண்டு அதற்குப் பின் சோதனைகள் செய்வதன் மூலம் அவர்களுடைய இரத்தத்தில் பினைல் பைருபிக் அமிலம் இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்கிறார்கள். இந்த அமிலம் இரத்தத்தில் மிகுதியாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் பெற்றோர் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குப் பிகேயு நோய் இருக்கலாம் என்று உணர்ந்து, குழந்தை பிறந்தவுடன் அதற்கு ஏற்ற மருத்துவம் செய்வதற்கு ஆயத்தமாக இருக்க முடியும். மேனாடு களில் பல மருத்துவ இல்லங்களில் குழந்தை பிறந்த வுடனும் சில வாரங்கள் சென்றபின்னும் அதற்குப் பிகேயு நோய் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கும் சோதனைகளைத் தவறாமல் செய்கின்றனர். பிகேயு நோய் குழந்தைக்கு இருக்கிறது என்று கண்டுபிடிக் கப்பட்டால் அதற்கு ஏற்றவாறு குழந்தைக்குக் கொடுக்கப்படும் உணவு மாற்றியமைக்கப்படுகிறது. இத்தகைய சிகிச்சை எந்த அளவிற்குத் தாமத மின்றிக் குழந்தைக்கு அளிக்கப்படுகிறதோ அந்த அளவிற்குக் குழந்தையின் நுண்ணறிவுத் திறன் பாதிக கப்படாமல் இருக்கும்.

இயல்பு மரபமைப்பு வகையில் 'பிகேயு'நோயினை **(Homozygotic PKU)** அடைந்தவர்களுக்குப் பெரும் பாலும் குழந்தைகள் பிறப்பதில்லை. பிறந்தால் அக் குழந்தை பிகேயு நோயுள்ள குழந்தையாகத்தான் இருக்கும். பிகேயு நோயுடைய தந்தை பிகேயு பின் னொதுங்கும் மரபணுக்களை மட்டும் தன்னுடைய குழந்தைகளுக்கு மரபு வழியே கொடுக்கும்பொழுது, தாயின் இயல்பு மரபணுக்களால் குழந்தையின் பிகேயு பாதிப்படைந்த மரபணுக்கள் ஈடுசெய்யப்படு கின்றன. பெற்றோர் இருவரும் இயல்பு மரபமைப்பு வகையில் பிகேயு உடையவராக இருப்பின், அவர்

களுக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்புகள் அரிது. பிறந்தாலும் 'பிகேயு' நோயுடன் பிறக்கும் அல்லது குழந்தை இறந்து பிறக்கும் அல்லது பெருமூளை வளர்ச்சியின்றிச் சிறுதலையமைப்புடன் (Microcephaly) இருக்கும்.

முதுமைப்பருவத்தில் கண்விழிகளில் மெல்லிய திரைவளரும் நோயும் (Cataract) ஆதிக்கமுள்ள மரபணுக்களின் வழியே அடுத்தடுத்த தலைமுறையினருக்கு வருகிறது. பெரும்பாலான மரபணுக்குறைகள் சில மரபணுக்கள் பாதிக்கப்பட்டவையாக இருப்பின், அவற்றை ஈடுசெய்யக் கூடிய வேறு நல்ல மரபணுக்களின் உதவியால் நிறைவு செய்யப்படுகின்றன.

மையநரம்புமண்டல நோய்கள், அண்டிங்டன் கோரியா (Huntington Chorea) போன்ற நோய்கள் மரபணுக்கள் வழி அடுத்த தலைமுறையினருக்கு வருகின்றன. வயதான பிறகே இந்நோய் அவர்களுக்கு இருப்பது தெரியவரும்.

தர்னர் நோய் பெண்களிடம் மட்டும் காணப்படக்கூடிய 23-ஆம் உயிரணுக்கோல் கோளாறாகும். இந்நோயுடையவர்களின் 23-ஆம் உயிரணுக்கோல் இயல்பான XX என்று அமைப்பிற்கு மாறாக X என்ற ஒரு பகுதி மட்டுமே காணப்படும். இதனை XO என்று குறிப்பிடுவர். அதாவது, 46 உயிரணுக்கோல்களுக்கு மாறாக 45 உயிரணுக்கோல்கள் மட்டுமே இவர்களிடம் காணப்படும். இத்தகைய பெண்கள் உருவத்தில் மிகச் சிறியவராகவும் குறுகிய கழுத்தும் குட்டையான விரல்களும் கொண்டவராகவும் இருப்பர். இவர்களின் வாய் காதுகள் ஆகியன இயல்புக்கு மாறாகக் காணப்படும். இவர்கள் எதற்கும் அலட்டிக்கொள்ளாதவர்களாகவும் பணிவும் அடக்கமும் மகிழ்ச்சியும் நிறைந்தவராகவும் இருப்பர். இவர்கள் சராசரி நுண்ணறிவுடையவர்கள். பூப்பு வயதையடையும்பொழுது இவர்களிடம் இரண்டாந்தரப் பாலியல்புகள் வளர்ச்சியடைவதில்லை. தர்னர் நோயுடைய பெண்களுக்கு இப்பருவத்தில் 'எசுடிரோசன்' என்னும் ஆர்மோன்களை உடலில் செலுத்துவதால் இரண்டாந்தரப் பாலியல்புகளை உடலில் தோற்றுவிக்க முடியும். ஆனால், இந்நோயுடைய பெண்கள் மலட்டுத்தன்மையுடையவராகவே இருப்பர். மேலும், எப்பொழுதும் வளர்ச்சியடையாத சிறிய பெண்ணின் தோற்றத்தையே கொண்டிருப்பர். ஆயினும், நடத்தையிலும் பழக்கத்திலும் பெண்மையின் இயல்புகள் இவர்களிடம் காணப்படும். கிளைன் பெல்டர் நோய் (Klenfelter's Syndrome) என்னும் 23-ஆம் உயிரணுக்கோல் கோளாறு, ஆண்களிடம் மட்டுமே காணப்படுவதாகும் இந்நோயுடையவர்களின் 23-ஆம் உயிரணுக்கோல் XY என்ற அமைப்பிற்கு மாறாகப் பெரும்பாலும் XXY என்ற அமைப்பில் இருக்கிறது. சிலரிடம் 23-ஆம் உயிரணுக்கோல் XYY என்ற அமைப்பிலும் காணப்படலாம். XXY என்ற அமைப்புடையவர்களிடம் வளர்ச்சிப்பருவத்தில் பெண்களின் இரண்டாந்தரப் பாலியல்புகள் காணப்படுகின்றன. இவர்களுக்கு ஆண் பிறப்புறுப்பு இருந்த போதிலும் இவர்கள் மலட்டுத் தன்மையுடையவராக இருப்பர். இதற்கு மாறாக XYY என்ற அமைப்புள்ள 23-ஆம் உயிரணுக்கோல் உடையவர்கள் வன்முறையும் குற்ற இயல்பும் சமூகஎதிர்ப்பு ஆளுமையும் கொண்டவராக இருக்கின்றனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனைப் பற்றிய திட்டவட்டமான சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. ஆயினும், XYY என்ற 23-ஆம் உயிரணுக்கோல் அமைப்புடையவர்கள் நுண்ணறிவியல் குறைந்தவர்களாக இருக்கின்றனர் என்பதைப் பெரும்பாலான ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இக்காலத்தில் பெரும்பாலான மரபணுக்கோளாறுகளைக் கருப்பக்காலத்திலேயே கண்டுபிடித்து விடுகின்றனர். எடுத்துக்காட்டாக, தவுன்நோயைக் கருப்பக் காலத்தில் கண்டுபிடிக்கும் முறை 'அம்னியோசென்டசிசு' (Amniocentesis) என்று குறிப்பிடப்படுகிறது. இம்முறையில் பனிக் குடத்தினுள்ளிருந்து ஊசி வழியாகப் பனிக்குடநீர் எடுக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகிறது. கருவிலிருக்கும் குழந்தையின் உயிரணுக்களின் இயல்பு காணப்படுகிறது. இந்த உயிரணுக்களின் இயல்பினைச் சோதனை செய்வதன் மூலம் உயிர்ப்பொருளாக்கக் கோளாறுகளையும் (Metabolic disorders) உயிரணுக்கோல் கோளாறுகளையும் (Chromosomal disorders) கண்டுபிடிக்கலாம். கருவிலிருக்கும் குழந்தைக்கு இத்தகைய கோளாறுகள் இருப்பதாகத் தெரியவந்தால் குறையுள்ள பிறவிகளைப் பெற்றோர் விரும்பினால் தடுக்க முடியும். கருவுற்று 16 வாரங்களான பிறகுதான் இத்தகைய சோதனைகளைச் செய்யமுடியும். இத்தகைய சோதனைகள் பற்றி உலகெங்கிலும் பல்வேறு கருத்துவேறுபாடுகள் நிலவிவருகின்றன.

துணை நூல்:

**Hetherington E. Mavis & Parke D. Ross,** Child Psychology: A contemporary View Point, Mcgraw Hill, New York, 1979.

**இயற்கைத் தேர்வு:** படிமலர்ச்சியின் முதன்மைக் காரணிகளுள் தலையானது இயற்கைத் தேர்வாகும் (Natural Selection). சார்லசு தார்வின் கி.பி 1858-ஆம் ஆண்டு வெளியிட்ட சிறப்பினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் தம் புகழ் மிக்க நூலில் இக்கொள்கையை வெளியிட்டார்.

இக்கோட்பாடு படிமலர்ச்சிக் கொள்கைக்கு (Theory of Evolution) இவர் அளித்த முதன்மையான பங்காகும். இவர் வெளியிட்ட இப்படைப்புக்கு முன்னர் வெளிவந்த படைப்புகளை மதிப்பிடும் போது, பிலித்தி (Blythie) என்னும் இயற்கையியலார் 'இயற்கைத் தேர்வு' என்னும் இச்சொல்லைப் புனைத்திருக்கிறார். 'உச்சநிலைகளைக் (Extreme Varieties) கொண்ட ஒவ்வாத உயிரினங்களை இயற்கை காலப் போக்கில் கழித்துவிடுகிறது' என்று பிலித்தி மொழிந்திருக்கிறார். இதுவே பிலித்தியின் தேர்வு (Blythian Selection) அல்லது இயல்நிலைப்படுத்தும் தேர்வு (Normalising Selection) என்று சிறப்பாகச் சொல்லப்பட்டது.

மக்களிடையே இயற்கைத் தேர்வின் நிகழ்விற்கு வேறுபாடுகளே (Variability) முதன்மையான காரணியாகின்றன. மக்கள் வேறுபாடுகளின்றிக் காணப்படுவார்களேயானால், இயற்கைத் தேர்வு எவ்வித மக்கள் குழுவையும் தேர்ந்தெடுத்துச் செயற்பட முடியாமற்போகும். மக்கள் தொகையில் மனிதர், மாறுபட்ட இனப்பெருக்கத்திறனைக் கொண்டுள்ளதால் மேன்மை மிக்க கூறுகளை மக்களிடையே நிலைபெறச் செய்யும் முறையே இயற்கைத் தேர்வாகும். அதாவது, குழந்தைகளின் எண்ணிக்கை மிகுந்திருப்பின், அம் மக்கள் குழுவின் மேன்மையான கூறுகள் அக்குழுவிலேயே நிலைபெற்றிருக்கும். சில மரபுத் தோற்றங்கள் (Genotypes) வேறுபட்ட கருவுறும் தன்மையின் (Differential fertility) அடிப்படையில் வேற்று மரபுத் தோற்றக் கூறுகளைக் காட்டிலும் மேன்மையான குணங்களை ஏற்படுத்தும். மக்கள் குழுக்களிடையே காணப்படும் மரபணுவின் (Gene) இயல்நிகழ்ச்சி இயற்கைத் தேர்வு செயற்படுத்தும் வேற்றுமைகளைச் (Variable) செயற்படுத்துகிறது. ஒரு சூழ்நிலையில் வாழும் ஒவ்வோர் உயிரியும் இயற்கைத் தேர்வின் தெரிவுக்கு உட்படுகிறது. தான் சார்ந்திருக்கும் சூழ்நிலை அமைப்புகளுக்கு ஏற்றவாறு தகவமைந்து மேம்பட்ட பண்புகளைக் கொண்ட உயிரிகளை(Organisms) இயற்கைத் தேர்வு ஏற்றுக் கொள்கிறது. இதனாலேயே இயற்கைத் தேர்வு மக்களிடையே மரபணுச் சமநிலையை (Genetic Equilibrium) நிலைகுலைவிக்கும் ஒரு முதன்மையான ஆற்றலாகக் கருதப்படுகிறது. வேறுபாட்டிற்குரிய மரபணு இனப் பெருக்கத்தைத் தூண்டுவதால்உயிரினங்களிடையே படிமலர்ச்சி மாற்றத்தினைச் செயற்படுத்துகிறது. வேறுபாட்டிற்குரிய மரபணு இனப்பெருக்கம் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குச் செல்லும் மரபணுவின் அடுக்கு நிகழ்வில் மாற்றத்தைச் செய்கிறது. இயற்கைத் தேர்வு மட்டுமே மரபணுவில் ஏற்படும் மாற்றத்தின் துணைக்கொண்டு வேற்று மரபணுக்களின் மீதும் செயற்படும் தன்மையது. இயற்கைத் தேர்வினூடே மலரும் படிமலர்ச்சி உயிரிகளுக்கும் சூழ்நிலைக்குமிடையே மேம்பட்ட தொடர்பை ஏற்படுத்துகிறது. இயற்கைத் தேர்வு மாறுபட்ட பல சூழ்நிலைக்கேற்றவாறு பல தகவமைப்புகளைச் செயற்படுத்துவதால், பல இலட்சக்கணக்கான ஆண்டுகளாக விரிந்த வாழ்க்கை அமைப்புகளை ஏற்படுத்தும் ஒரு முதன்மையான ஆற்றலாக விளங்குகிறது. மரபணுக்களுக்கிடையே செயல்திறமுள்ள இணக்கத்தைச் செயற்படுத்துவதாலும் படிமலர்ச்சி நிகழ்ச்சியில் இயற்கைத் தேர்வு பெறும் ஆற்றலுள்ளதாகக் காணப்படுகிறது. இயற்கைத் தேர்வு ஒருதலைச் செயலாகக் காணப்படுகிறது எனத் தார்வின் கொள்கையாளர்கள் பேச முற்பட்டனர். இயற்கைச் சூழலில் ஒரு சில உயிரிகளைப் புறக்கணித்தும், வேறுசில உயிரிகளுக்குத் துணையாகவும் இயற்கைத் தேர்வின் நிகழ்வுகள் காணப்படுகின்றன என இதன் எதிர்ப் பண்புகளை இவர்கள் சுட்டிக்காட்டினர். எனினும், தார்வின் படிமலர்ச்சி வேறுபாடுடைய இனப்பெருக்கத்தால் நிகழும் வேறுபாடுடைய இறப்பின் அடிப்படையில் அமைந்ததாகும் எனவும் இது போன்ற தேர்வு தேர்வின் முழு ஆற்றலில் ஒரு பகுதியே எனவும் விளக்கப்படுகிறது.

தகுதி (Fitness) குறைந்த உயிரிகளைக் காட்டிலும் தகுதி மிகுந்த உயிரிகளே மிகுந்த அளவில் இனப்பெருக்கம் செய்கின்றன. இதனால் தகுதிமிக்க உருவமைப்புகள் (Phenotypes), தகுதியற்ற உருவமைப்புகளை மாற்றியமைக்கின்றன. இதையே இயற்கைத் தேர்வு என்று கூறுகின்றனர். ஓர் உயிரியின் தகுதி என்பது வாழ்வின் முழுப்பகுதியையும் கொண்டு வாழ்வதோ மரபுத் தொடர்ச்சிக்காகத் தன் மரபினரைத் தோற்றுவித்துச் செயலாற்றலோடு வாழ்வதோ அன்று. தகுதி என்பது மரபுவழியில் அமையப் பெறுவதாகும். அதாவது, ஓர் உயிரியின் உடல்நலம் தொடர்ந்து மிகுந்த அளவில் கெடுமாயின் அவ்வுயிரி மரபளவில் குறைந்த தகுதியினைக் கொண்டதாகும். இவ்வாறன்றி எதிர்ப்பாற்றல் கொண்டு நோயினால் பாதிக்கப்படாமலிருக்கும் உயிரிகள் மிகுந்த தகுதியுடையனவாகும். நலிந்த உயிரிகளைக் காட்டிலும் மிகுந்த பொருத்தப்பாடுடைய உயிரிகளே தொடர்ந்து வாழும் தன்மையைப் பெறுகின்றன. இந்த இயல் நிகழ்ச்சியின்வழியிலும் இயற்கைத் தேர்வு அறியப்படும். எவ்வழி நோக்கினும் இயற்கைத் தேர்வு மக்களுக்கும் சூழ்நிலைக்கும் இடையே புதிய தகவமைப்புகளை உண்டுபண்ணும் நிகழ்ச்சியாகவே காணப்படுகிறது. இக்கொள்கையினைத் தெளிவுபடுத்தப் பல ஆய்வுகள் தொடரப்பட்டன. இனப்பெருக்க உயிர்-உளப்-பொருள்களை மிகுந்த தகவமைப்புடைய கூறு

களாக வெளிக் கொண்டு வருவதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உயிரியின் ஒவ்வொரு கால கட்டத்திலும் இத்தேர்வு (Selection) செயற்படுகிறது. உயிர்சார் கூறுகளையுடைய ஒருமித்த வேறுபாட்டிற் குரிய இனப்பெருக்கம் (Non-Random Differential Reproduction), ஓர் உயிரின் உளப்பொருள்களை மூலக்கூறு (Molecule), மரபணு (Gene), நிறக்கோல் (Choromosoes), விந்தணு (Gamete), தனிஉயிரி (Individual), இனம், சமூகம் ஆகிய பல நிலைகளில் எந்த ஓர் இடைப்பட்ட நிலையிலும் தாக்கும் தன்மையுடையது.

இயற்கைத் தேர்வுக் கொள்கை பின்வரும் அடிப் படைகளைக் கொண்டிருக்கிறது. அவ்வடிப்படை களாவன: 1. இயற்கையில் தனிஉயிரிகளிலும் இனங் களிலும் வேறுபாடு எல்லா நிலைகளிலும் காணப் படுகிறது. 2. ஒவ்வோர் உயிரினமும் ஒரேசீரான விகிதத்தில் தன் இனத்தைப் பெருக்கும். 3. இயற் கைச் சூழலில் நிகழும் இயற்கைத் தேர்வின் ஆற்றல் ஓர் உயிரி எப்பிரிவில் வாழ வேண்டும் என்பதை அறுதியிடுகிறது. 4. வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியுடையனவே வாழ்கின்றன. இச் செயல் புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றது. 5. வாழ்க்கைப் போராட்டம், இருவேறு குழுக்களிடையேயும் ஒரே குழுக்குள்ளேயும் நடக்கும் போட்டியினால் விளைவ தாகும்.

தார்வினின் புதுக்கொள்கை: இது இயற்கைத் தேர்வின் புதிய கொள்கையாகும். இக்காலப் படி மலர்ச்சியாளர்களும் உயிரியலாளர்களும் இயற்கைத் தேர்வு, உடனடி மாற்றம் (Mutation), இனப்பெருக் கத்தனித்தநிலை (Reproductive Isolation) முதலான கூறுகளைத் தொகுத்திணைத்தனர். தார்வின் புதுக் கொள்கையை ஆதரித்தவர்களுள் தோப்சான்சுகி (Dobzhansky), சீவால் (Sewall) ஆகியோர் முதன்மை யானவராவர்.

தார்வின் புதுக்கொள்கையின் பண்புகள்: 1. தார்வினின் இயற்கைத் தேர்வுக் கோட்பாடு, ஒரு சில உயிரிகளைப் புறக்கணித்தும் ஒருசில உயிரிக ளோடு துணைநின்றும் செல்கிறது. ஆனால் புதுக் கொள்கையின் வழி, செயல்திறம்மிக்க மரபணுக் கலப்பினை இயற்கைத் தேர்வு ஊக்குவிக்கிறது.

2. மரபணு உடனடிமாற்றமே (Gene Mutation) மாறுபாட்டிற்கு (Variation) முதன்மையான கூறா கிறது. உடனடிமாற்றம் பயனற்ற பண்புகளை ஏற் படுத்துமாதலால் இது படிமலர்ச்சி நிகழ்வில் பயன் பெறாது என ஒருசிலர் எண்ணுகின்றனர். எனினும் இக்கூற்று உண்மையாகாது. ஒருசில சூழ்நிலையில் பயனற்ற பண்புகளை வெளிப்படுத்தும் உடனடிமாற் றம் வேறு சூழ்நிலையில் இவ்வகையான பண்பினை வெளிப்படுத்தாது.

3. ஒத்த கருமுட்டைகளைக் கொண்ட விலங்கு களைக் காட்டிலும் கலப்பு முறையில் கருவுறும் விலங்குகளிலேயே இயற்கைத் தேர்வு நிகழ்வு செயற் படுகிறது. ஒத்த கருமுட்டைகளைக் கொண்ட நிலை யில் மரபணுவின் அடுக்கு நிகழ்வு (Gene Frequency) நிலையானதாக இருப்பதால், இயற்கைத் தேர்வு நிகழ்வும் இவ்உயிரிகளிடையே மெதுவாகச் செயற் படுகிறது.

இக்காலப் படிமலர்ச்சிக் கொள்கையின் தொகுப் பிணைவு: மரபணு உடனடி நிகழ்வு (Gene mutation), நிறக்கோலின் அமைப்பிலும் எண்ணிக்கையிலும் மாற் றங்கள், மரபுப் பண்புகள் மீண்டிணைதல் (Genetic Recombination), இயற்கைத் தேர்வு, இனப்பெருக்கத் தனித்த நிலை (Reproductive Isolation) ஆகிய ஐந்து கொள்கைகளைக் கொண்டதே இக்காலப் படிமலர்ச் சிக் கொள்கையின் தொகுப்பிணைவாகும். முதன் மூன்று கோட்பாடுகள் மரபுப்பண்பில் வேறுபாட் டிற்கு (Genetic Variability) வழி செய்கின்றன. அத னாலேயே மாற்றம் நிகழ்கிறது. இயற்கைத் தேர்வும் இனப்பெருக்கத் தனித்தநிலையும் மக்கள் குழுக்களைப் பல வழிகளில் தகவமையத் துணைபுரிகின்றன. தார் வின் பள்ளிக் கொள்கையாளர்களும் மெண்டல்பள் ளிக் (Mentel School) கொள்கையாளர்களும் 'வேறு பாடு'(Variation) என்னும் பண்பினைப் பல்வேறு முறைகளில் எடுத்தாளுகின்றனர். மெண்டல் பள்ளி யாளர்கள் வேறுபாட்டை மரபணுவின் நிலையி லிருந்து மேல்நிலை அளவிலேயே அளவிடுகின்றனர். தார்வின் பள்ளியினர் வேறுபாட்டினை உயிரியின் புறத்தோற்றத்தின் (Phenotype) நிலையிலிருந்து கீழ் நிலைவரை அளவிடுகின்றனர்.

தார்வின் உயிரிகளின் தகவமைப்பினைச் செயற் படுத்தும் இயற்கைத் தேர்வின் இயல்நிகழ்ச்சியினைப் பல விளக்கங்களுடன் எடுத்துக் காட்டுகிறார். இங்கிலாந்தில் கி.பி. 1845-இல் வெளிர் நிறமுடைய விட்டிற் பூச்சிகள் (Moths) 99 விழுக்காடுகளும் கருமைநிற விட்டிற் பூச்சிகள் 1 விழுக்காடும் இருந் தன.

தொழில்மயமாவதற்குமுன் வெளிர் நிறமுடைய விட்டிற் பூச்சிகள் மிகுந்த ஏற்புடைய வாழ்க்கை நிலையினைக் கொண்டிருந்தன. இப்பூச்சிகளின் வெளிர்நிறம் தன் சூழலின் பின்னணியுடன் ஒத்துக் காணப்பட்டதே இதற்குக் காரணமாகும். இரை தேடும் பறவைகளின் கண்களுக்குக் கருமைநிற விட் டிற் பூச்சிகளே எளிதில் தென்படும். இதனாலேயே கருப்புநிற விட்டில்களைவிட வெளிர்நிற விட்டில்

களின் வாழ்க்கை பாதுகாப்பாக இருந்தது. தொழில் மயமாக்கத்திற்குப்பின் இச்சூழ்நிலை புகைமண்டல மாகவும் கருமையாகவும் மாறிவந்தது. இச்சூழலில் கருமைநிற விட்டில்பூச்சிகள் இரைதேடும் பறவை களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொண்டன. மேற்கூறிய இந்த விளக்கம் சூழ்நிலைத் தேர்வு வாழ்க்கை நிலையை எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

மக்கள் குழுக்களிடையே நிகழும் இயற்கைத் தேர்வின் பல வகைகளைக் கண்டறிவது கடினமாயி னும், பின்வரும் வகைகள் காணப்படுவதைப் படி மலர்ச்சியியலார் சுட்டிக் காட்டுகின்றனர். அவை யாவன:

1. குறைதல் இயக்கம் (Meiotic drive), 2. முன்-கருஉயிரித் தேர்வு (Pre-zygotic Selection), 3. கரு உயிரித் தேர்வு (Zygotic Selection), 4. பிலித்தியன் தேர்வு அல்லது நிலைப்படுத்தும் தேர்வு (Blythian Selection or Normalizing Selection), 5. வழியமைந்த தேர்வு (Directional Selection), 6. பிளவுபட்ட தேர்வு (Disruptive Selection), 7. சுழற்சித் தேர்வு (Cyclic Selection), 8. அடுக்கு நிகழ்வுசார்ந்த தேர்வு (Frequency Dependent Selection), 9. மால் தூசியர் தேர்வு (Malthusian Selection), 10. எதிர்த்திசை பரி மாற்றத் தேர்வு (Recurrent Reciprocal Selection), 11. செயற்கைத் தேர்வு(Artificial Selection),12. இயல் நிலை மீறும் தேர்வு (Apostatic Selection), 13. பால் தேர்வு (Sexual Selection).

இயற்கைத் தேர்வு நிகழ்வில் கையாளப்படும் தேர்வுக்கெழு (Selection Coefficient), தேர்வு அழுத் தம் (Selection Pressure), தேர்வு எல்லை (Selection Limit), தேர்வு மதிப்பு (Selective Value) முதலான வழக்குகளின் வரையறைகளையும் அறிதல் இயற் கைத் தேர்வின் நிகழ்வினைத் தெளிவு பெற ஏது வாகும்.

தேர்வுக் கெழு (Selection Coefficient): இது இயற்கைத் தேர்வு நிகழ்வின் இயல்பினை அளந்து மதிப்பிடக்கூடியது. நிலையான மரபுத் தோற்றத் தினையும் (Standard Genotype), ஒரு குறிப்பிட்ட மர புத்தோற்றத்தில் (Genotype) அதன் இன அணுவின் (Gamete) பங்கீட்டின் வீதத்தினையும் இது நிலையான மரபுத்தோற்றத்தோடு (Standard Genotype) ஒப் பிட்டு விளக்கும்.

தேர்வு அழுத்தம்: இது ஒவ்வொரு பரம்பரையி லும் இயற்கைத் தேர்வினால் ஏற்படும் மரபணுவின் அடுக்குநிகழ்வு மாற்றத்தின் இயல்பினைக் காட்டும்.

தேர்வு எல்லை: மக்கள் குழு இயற்கைத் தேர் வுடன் செயற்பட்டு, அந்த நிகழ்வின் முடிவில் காணும் நிலையைத் தேர்வு எல்லை 1 எனக் கொண் டால், இந்தத் தேர்வு எல்லை 1 இயற்கைத் தேர் வின் செயல்நிகழ்வு படிப்படியாகக் குறைந்து வரு வதற்கேற்பத் தேர்வுஎல்லை1-உம், அதன் நிலையைப் படிப்படியாக அடையும். இந்தத் தேர்வின் வளர்ச்சி எந்த நிலையை எட்டியது என்பதை அறுதி யிடுவது பொதுவாகக் கடினமாகிறது.

தேர்வு மதிப்பு: இந்த மதிப்பு ஒரு தனி உயிரி தன் பிறப்பிலிருந்து முதிர்ச்சி நிலைவரை உண்மை யாக நிகழக்கூடிய பிழைப்பு (Survival)நிகழ்வுகளுக்கு அளவொத்தாக அமையும். மரபணுவின் நடுநிலை பிழைப்பு மதிப்பு (Mean Survival Value) மரபணு நுழைந்து இடம்பெறும் மரபுத்தோற்றத்தின் பிழைப்பு மதிப்பாகும். நடுநிலை பிழைப்பு மதிப்பு இந்த நிகழ்வில் செயற்பட்ட மரபணுக்களின் அடுக்கு நிகழ்வால் நிறுத்தெடுக்கப்படும் (Weighed).

மரபணுவின் தேர்வு மதிப்பின் நடுநிலை மர பணுவின் அடுக்குநிகழ்வின் செயற்பாடுகளாதலால் இது (தேர்வு மதிப்பின் நடுநிலை) மரபணுவின் அடுக்குநிகழ்வில் ஏற்படும் மாறுதலுக்கேற்ப மாறு படும்.

சில குறிப்பிட்ட சூழ்நிலையால், இரண்டும் இரண்டுக்கும் மேற்பட்ட இயற்கைத்தேர்வின் செயல் களும், அச்சூழ்நிலையின் மக்களின்பால் ஒருங் கிணைந்து இயலும் தன்மையுடையது என்பதையும் கவனமாக உற்று நோக்கவேண்டியதாகிறது.

எம்.சே.

துணை நூல்கள்:

**Darwin, C.R.**, On the Origin of Species by Means Natural Selection 1859.

**Dobzhansky, T.**, Genetics and the Origin of Species, Columbia University Press, New York, 1951.

**Fisher, R.A.**, The Genetical Theory of Natural Selection, Dover Publications, USA, 1929.

**Simpson, G.G.**, The Meaning of Evolution, Yale University Press, New Haven, 1949.

***இயற்கை நிலை***: இன்று மக்கள் எல்லா நாடு களிலும் அரசாங்கம் அமைத்துக் கொண்டு அதற்குக் கீழ் வாழக்கூடியவர்களாக இருக்கின்றனர். அரசாங் கங்கள் மக்களின் விருப்பத்திற்குரிய அளவில் அமை கின்றன. பாராளுமன்ற முறை அரசாங்கம், குடியர

சுத் தலைவர் முறை அரசாங்கம், மக்களாட்சி மைய முறை (Centralised Democracy), இராணுவ அரசாங்கமுறை, மதச் சார்பு அரசாங்கம் எனப் பல்வேறு வகை அரசாங்கங்கள் அந்தந்த நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்றவாறும் சூழ் நிலைக்கேற்றவாறும் அமைந்துள்ளன. இவற்றில் இந்த முறைதான் உலகில் சிறந்தது என்று ஒரு தலைத் தீர்ப்பை யாரும் வழங்க முடியாது. எடுத்துக் காட்டாக, இங்கிலாந்து நாட்டில் அரசுரிமை (Crown) அதாவது, அரசி ஆட்சி செய்வது அந்நாட்டு மக்கள் பழைமை விரும்புகின்றவர்கள் என்பதைக் காட்டுகின்றது. அது நல்லதா? நல்லதன்றா என்பதை யாரும் முடிவு செய்ய முடியாது. எனவே, அரசாங்கம் அமைப்பது மக்களின் விருப்பத்தாலும் முறையான காரணங்களாலும் இருக்கும்.

மக்கள் அனைவரும் கூடி வாழ்ந்தால்தான் அரசாங்கத்தை அவர்கள்தம் விருப்பத்திற்கேற்றவாறு அமைக்க முடியும். மக்கள் சேர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்தினாலும், அனைவரும் நன்றாக இருக்க வேண்டும்—அனைவரும் ஒன்றாக இருந்தால் தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்ற உணர்வாலும் ஏற்பட்டது சமூகம். பொது நலன், பொதுச் செயல் ஆகியன சமூகத்தால் உருவானவை. சமூகம் அரசாங்கத்தின் மாதிரியாக அமைக்கப்பட்டும் இருக்கலாம்; அமைக்கப்படாமலும் இருக்கலாம். சமூகம் எவ்வகை நில எல்லைகளுக்கும் உட்படாமல் எல்லை கடந்த நிலையில் உள்ளது. இந்தச் சமூகத்திலிருந்து எழுந்ததுதான் அரசாங்கம் என்பது பெரும்பான்மையோர் கருத்து.

மக்கள் சமூகம், அரசாங்கம் முதலியவை ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலையை இயற்கை நிலை (State of Nature) என்பர். மக்கள் இயற்கையின் சக்திகளுக்குக் கட்டுப்பட்டு இருந்தனர் என்பதையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி எதுவும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை என்பதையும் கூறுவது தான் இயற்கை நிலையாகும்.

அரசு எப்படி உருவானது என்பதைப் பற்றிப் பலவகைக் கோட்பாடுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகும். சமூக ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் மக்கள் இருந்த நிலையே இயற்கை நிலையாகும். சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களுள் முக்கியமாக இடம் பெறுபவர்கள் மூவர். அவர்கள் தாமசு ஆப்சு (Thomas Hobbes), சான் இலாக்கு (John Locke), உரூசோ (Rousseau) ஆகியோர். அவர்கள் இயற்கை நிலையைப் பற்றி வெவ்வேறு முறையில் விளக்கியுள்ளனர்.

இயற்கை நிலை மக்களின் இயல்புகளுக்கேற்ப அமைந்துள்ளதென்பதை மூன்று கோட்பாட்டாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இயற்கை நிலை என்பது நெடுங்காலமாக இருந்துவந்ததெனினும், அதற்கு முறையாக வடிவமைத்துக் கொடுத்தவர் ஆப்சு ஆவர். இந்திய அரசியல் சிந்தனை என்று சிறப்பித்துக் கூறப்படும் அருத்தசாத்திரத்திலும் இயற்கை நிலை சொல்லப்பட்டுள்ளது. சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் உண்ணுவது போல, வலியோர்கள் எளியோர்களை ஆதிக்கப்படுத்திக் கொண்டிருந்ததால் ஆட்சியற்ற நிலை (Anarchy) தோன்றியதென்றும், அதனால் அமைதியில்லாமல் இருந்தது என்றும் சாணக்கியர் கூறியுள்ளார். இந்த ஆட்சியற்ற நிலையைக் கட்டுப்படுத்தவே மனுவை முதல் அரசனாக மக்கள் தேர்ந்தெடுத்தனர் என்றும், விளைச்சலில் ஆறில் ஒன்றும் வணிகத்தில் பத்தில் ஒன்றும் அரசனுக்கு மக்கள் வழங்கினர் என்றும் அவர் கூறியுள்ளார். எனவே, அரசாங்கம் அமைக்கும் முன்னர் இயற்கை நிலை இருந்ததென்றும், இதனை நேரடியாக அரசாங்கத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தனர் என்றும் கருதப்படுகிறது. ஆனால், சமூகம் ஏற்பட்டது குறித்தும் சொல்லாமல் அச் சமூகம் தான் அரசாங்கத்தை உருவாக்கியது என்றும் சொல்லாமல் அமைதி நிலவ ஆண்டவன் அளித்த முறையென்று இந்து மதத்தினர் தம் நம்பிக்கைக்கேற்பக் கூறுகின்றனர். தாமசு ஆப்சும் பிறரும் இதிலிருந்து வேறுபடுகின்றனர்.

தாமசு ஆப்சு விவரிக்கின்ற இயற்கை நிலை, சமூகம் உருவாகுமுன்னர் இருந்த மக்கள் நிலையிலிருந்து தொடங்குகிறது. அவர், மனிதன் சுயநலமிக்கவன்; ஆசைகள் நிறைந்தவன்; புகழ் எய்த வேண்டுமென்ற வேட்கை கொண்டவனென மனிதனின் இயல்பைப் பற்றிக் கூறுகிறார். தம்முடைய ஆசைகளை, தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் முனைந்ததால், ஒருவர் மற்றொருவருடன் சண்டை போட நேர்ந்தது. இச் சண்டை ஒரு நாளில் முடிவடையவில்லை. தொடர்ந்து நிகழ்ந்ததால் மக்கள் அனைவரும் பயந்து கொண்டே வாழ்க்கையை நடத்தினர். எந்நேரமும் என்ன நடைபெறுமென்று ஒவ்வொரு மனிதனும் அச்சத்தோடு வாழ்ந்ததால், அவனுக்கு எதைப்பற்றியும் எண்ண முடியவில்லை. சமூகம், கலை, அறிவு, இலக்கியம் என்பன பற்றி உணர முடியவில்லை. வல்லானிட்டதே சட்டமென்று வலியோர் எளியோரை ஆட்டிப் படைக்கக்கூடிய நிலையிருந்ததால், பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. பாதுகாப்பு வழங்கக்கூடிய சட்டங்கள் இல்லை. தனிமனிதன் என்னவேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற நிலை

காணப்பட்டதாலும், உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து எப்போதும் வருமென்ற நிலையாலும் அவனது வாழ்வு ஒளியிழந்து காணப்பட்டது மக்கள் இந்நிலை மாறவேண்டுமென்ற உணர்வுபெற்றனர். அதன் விளைவாக மக்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட மனிதனிடமோ குழுவினிடமோ தங்கள் இயல்பு உரிமைகளை விட்டுக் கொடுத்து அவனுக்குக் கீழோ குழுவிற்குக் கீழோ வாழத் தலைப்பட்டனர். ஒரு முறை அவர்கள் தங்கள் உரிமைகளைக் கொடுத்து விட்டால் மறுபடி அவ்வுரிமைகளைப் பெற முடியாது; தவிர அவை பற்றிக் கேட்கவும் கூடாது என்ற அளவில் உரிமைகள் ஒப்படைக்கப்பட்டன. உரிமை பெற்றவர் மக்களை ஆட்சி செய்தார். அவர் அவரது விருப்பம்போல் ஆட்சிபுரிந்தார் என்று ஆப்சு கூறுகிறார். ஆப்சின் இயற்கை நிலை தெளிவாகச் சொல்லப்பட்டாலும், மனிதனைப் பற்றி அவர் அளவிட்டது சரியன்று என்றும் வரலாற்றிற்குப் புறம்பானதென்றும் ஆராய்வாளர் குறை கூறுவர்.

சான் இலாக்கு விவரிக்கின்ற இயற்கைநிலை ஆப்சு கூறிய இயற்கை நிலைக்கு முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. சான் இலாக்கின் இயற்கை நிலையில் மக்கள் அனைவரும் அமைதியாக வாழ்ந்தனர். அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதில்லை. மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவத்தோடும் வாழ்ந்தனர். மக்கள் விருப்பத்திற்கேற்ப எவ்வகைக் கட்டுப்பாடுகளுக்கும் இலக்காகாமல் சுதந்திரமாக வாழ்ந்தனர். ஒவ்வொருவரும் நியாயமாக இருந்தனர். நடுநிலைமை தருகின்ற நீதிபதிகள் இல்லாமலேயே மக்கள் நடுநிலைமையோடு வாழ்ந்தனர். அமைதி, நல்லெண்ணம், ஒருவருக்கொருவர் உதவி, பாதுகாப்புஆகியவற்றைக் கொண்டவர்களாக மக்கள் திகழ்ந்தனர். உலகில் படைக்கப்பட்ட பொருள்கள், விலங்குகள் அனைத்தும் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. இவை மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குத் துணையாக அளிக்கப்பட்டவை. இயற்கை தந்த செல்வங்களைப் பயன்படுத்த முன்னுரிமை பெற்றோர் யாரும் கிடையாது. அரசாங்கமென்ற அமைப்பும் கிடையாது. இப்பொருள்களைப் பயன்படுத்தும் முறை குறித்துச் சட்டம் இயற்றக் கூடியவர்கள் எவரும் கிடையாது. குழந்தைகள் மட்டும் பெற்றோர்களின் ஓரளவுக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும். குழந்தைகளுக்குக் கல்வி ஊட்டுவது பெற்றோர்களின் கடமை. இதனால் குழந்தைகள் ஒழுக்கமுடனும் கட்டுப்பாட்டுடனும் திகழ முடியும். பெற்றோர்கள் தங்கள் கட்டுப்பாட்டினைக் குழந்தைகள் வளர்ந்த பின்னர் விட்டுவிட வேண்டும். கணவன் மனைவிமீதும் குழந்தைகள்மீதும் கட்டுப்பாடுகள் செய்யலாம். ஆனால் அவை அவர்களை முழுமையாகக் கட்டுப்படுத்தக் கூடாது.

ஆப்சின் இயற்கை நிலையில் இயல்பு, சட்டம் கிடையாது. ஆனால் மக்கள் இயல்பு உரிமைகளைக் கொண்டிருந்தனர். தனித்து வாழ்ந்தவன் பிறரோடு சேர்ந்து வாழ வேண்டுமென்று தெரியாதவனாயினும் இயல்பு உரிமைகளோடு வாழ்ந்தான். இலாக்கின் இயற்கை நிலையில் மக்கள் சேர்ந்து வாழ்ந்தனரென்றாலும், பொதுவான தலைவர் என்பவர் அவர்களுக்கு இல்லை. ஒவ்வொருவரும் கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்தனர். சொத்துரிமையை மக்கள் அனைவரும் கொண்டிருந்தனர். இயல்பு சட்டம் அவர்களை ஒழுங்குபடுத்தியது. இயல்பு சட்டத்தை மீறுபவர்கள்மீது தண்டனை வழங்கும் அதிகாரம் ஒவ்வொரு தனிமனிதனிடமும் பொதுவாக அமைந்திருந்தது. இந்தத் தண்டனை வழங்கும் அதிகாரத்தின் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதோடு, இதுபோன்ற குற்றங்கள் வாராமல் தடுக்கவும் வழி கோலியது. இது சொத்துரிமையை அனுபவிப்பதோடு தொடர்பு கொண்டுள்ளது. பகுத்தறிவின் மறுபெயர்தான் இயல்பு சட்டம் என்றால் மிகையாகாது. இயல்பு சட்டங்கள் எவ்வாவற்றையும் இறைவன் அளித்தார். இவ்வாறு இயற்கை நிலையில் ஒவ்வொரு மனிதனும் முழுமையான உரிமை பெற்றவனாகச் சுதந்திரத்தை அனுபவித்தான். இருப்பினும் இயற்கை நிலையில் சில குறைபாடுகள்இருந்தன என்கிறார் சான் இலாக்கு. இவர் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வழக்கில் நீதிபதியாகச் செயற்பட்டால், மூன்று குறைபாடுகள் தோன்றும் என்கிறார். ஒருதலையான தீர்ப்பு, நீதி ஆணைகளைச் செயற்படுத்த இயலாத வகையில் குறைவான படை, ஒரே தன்மையான வழக்கிற்குப் பலவகைப்பட்ட – வேறுபாடான தீர்ப்புகள் ஆகியன சில குறைபாடுகள். எனவே, இந்தக் குறைபாடுகளை நீக்கவே அரசாங்கம் இன்றியமையாததாயிற்று. சட்டத்தை நடுவுநிலைமையில் நின்று கணித்துத் தீர்ப்பு வழங்க நீதிமன்றமும், நீதிமன்ற ஆணைகளைச் செயற்படுத்த ஆட்சித்துறையும், ஒரே சீரான சட்டத்தை (UniformLaw)உருவாக்கச் சட்டமன்றமும் தேவையென உணர்ந்ததால், மக்கள் இம்மூன்றையும் பெறத் தங்களது இயல்பு உரிமைகளை ஒப்படைத்தனர் என்பது இலாக்கின் சமூக ஒப்பந்தம் பற்றிய விளக்கமாகும். இவர் சமூக ஒப்பந்தம், அரசியல் ஒப்பந்தமென்று இரண்டு ஒப்பந்தங்களைக் கூறுகின்றார். சமூக ஒப்பந்தத்திற்குப் பின்னர், மக்கள் தெளிவு பெற்று அரசாங்கங்களை மாற்றியமைக்கும் அதிகாரம் கொண்டவர்கள். ஏனெனில், தவறு செய்கின்ற, மக்களைப் பாதிக்கின்றசட்டங்களை இயற்று

கின்ற அரசாங்கங்களை மாற்றுவது மக்கள் பொறுப்பு என்கிற வகையில் அரசியல் ஒப்பந்தம் திகழ்கிறது. இவரது ஒப்பந்தக் கோட்பாட்டில், பண்பட்ட மனிதன் எல்லாம் எல்லாருக்குமாக என்று உரிமைகளை ஒப்படைப்பதாகிய இயற்கை நிலை நம்பமுடியாமல் உள்ளதென்று ஆய்வாளர்கள் குறை கூறுகின்றனர்.

உரூசோவின் இயற்கைநிலை ஆப்சின் இயற்கை நிலையினின்றும் வேறுபடுகின்றது. இவர் இலாக்கிடமிருந்து முழுவதும் வேறுபடாமல், இலாக்குக் கூறிய இயற்கை நிலை அமைதியை வலியுறுத்திக் கூறியுள்ளார். எல்லையில்லாச் சுதந்திரம், முழுச்சுதந்திரம் ஆகியவற்றை மக்கள் அனுபவித்தனர் என்கிறார் உரூசோ. ஆனால், மனிதன் தனித்துப் பிறரோடு சேராமல் வாழ்ந்தான் என்றும்; மனிதன் அறநெறியில்லாமலும் சமூகமில்லாமலும் வாழ்ந்தானென்றும், அறநெறி, பகுத்தறிவு, ஆகியனபற்றித் தெரியாதவனாக இருந்தான் என்றும்; அறியாமையில் மகிழ்வோடு இருந்தான் என்றும், நாளடைவில் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் பொருளாதார வளர்ச்சி பெருகி, அறியாமை நீங்கி அறிவு பெற்றதாலும் பாதுகாப்புத் தேவையென உணர்ந்தான் என்றும் குறிப்பிடுகிறார். இதனால் அவனது இன்பவாழ்வு முடிவுற்றது; சுயதேவை மேலிட்டது; எனது என்ற எண்ணம் எழுந்தது; இதனால் தனியார் சொத்துரிமை வளர்ச்சி பெற்றது. தனிப்பட்டவர்களின் திறமைக்கேற்பச் சொத்து உருவானது. பணக்காரன், ஏழை என்ற பாகுபாடு தோன்றிற்று. இந்நிலையில் அவனையும் சொத்தையும் பாதுகாக்க மக்கள் அனைவரும் கூடி அரசாங்கம் அமைத்தனர். அந்த அரசாங்கம் மக்களுக்குப் பாதுகாப்பும் சொத்து முதலியனவற்றிற்குப் பாதுகாப்பும் அளித்தது. மக்களின் பொது விருப்பத்திற்கேற்ப (General will) அரசாங்கம் அமையும் என்கிறார். இவ்வாறு இயற்கை நிலை பற்றி மூன்று அறிஞர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

என். எஸ். ச

**இயற்கை நீதி** என்னும் சொல் ஓர் உரிமை முறையையோ நீதி முறையையோ எக்காலத்திற்கும் எல்லா மனிதருக்கும் பொருந்தும் வகையையோ குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் அன்று. இது சட்ட இயலின் ஆளுகைக்கு அப்பாற்பட்டது. இயற்கை அறிவியலில் உயிரினங்களின் நிகழ்வுகளுக்கிடையேயான உறவினை முன்னுரைக்கும் வகையில் இந்நீதி முற்றிலும் மாறுபட்ட பொருளில் பயன்படுகிறது.

இயற்கை நீதி (Natural Justice) என்ற இச்சொல்லுக்கு ஒவ்வொரு துறையினரும் தங்களுடைய அணுகுமுறைக் கேற்ப வேறுபட்ட பொருள் கொள்கின்றனர். இதற்கு மிக நீண்டதொரு வரலாறே உண்டு.

கிரேக்க நாட்டின் அரசியலறிஞரான அரிசுடாட்டில் தம் ‘ஒழுக்க இயல்’ (Ethics) என்ற நூலில், இயற்கை நீதியை நீதியிலிருந்து வேறுபடுத்தியுள்ளார். இயற்கை நீதி எப்பொழுதுமே சட்டச் சார்பாக இருந்ததில்லை என்றும், சட்ட நீதிக்கு உள்ள அதிகாரம் போல் இயற்கை நீதிக்கும் எல்லா இடங்களிலும் ஏற்புடைமை இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். இயற்கை நீதிக்கான எடுத்துக்காட்டுகளை அவர் கிரேக்கர்களின் நகர அரசுகளில் தாம் கண்டவற்றிலிருந்து எடுத்துக்காட்டுகிறார். அங்கே பெண்கள் ஆண்களிடமும், அடிமைகள் குடிமக்களிடமும், காட்டுமிராண்டிகள் எல்லனியர்களிடமும் (Hellenes) அடிபணிந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

இதற்கு மாறாக இன்பதுன்பச் சமநோக்காளர் (Stoics) என்போர் சமூக சமத்துவ அடிப்படையிலான இயற்கை நீதியை எடுத்துக் கூறினர். இவர்கள் காலத்தில் இயற்கை நீதிக் கோட்பாடு முழு உருப் பெற்றது. இயற்கை நீதி என்பதற்குப் பகுத்தறிவின் தெய்விகச் சட்டம் என்று பொருள் கூறினர். இதன் அடிப்படையில் சிசரோ என்ற அறிஞரும் இயற்கை நீதி என்பது உண்மை விதி; சரியான பகுத்தறிவு என்றும், இது மனிதர் அனைவர் மத்தியிலும் பரவிக் கிடப்பது; நீடித்து நிலை பெற்றிருப்பது என்றும், மனித இனத்தின் பொது ஒப்புதல் என்றும், இதுவே இயற்கையின் குரல் என்றும் குறிப்பிட்டார்.

சிசரோவின் மூலம் இக்கோட்பாடு உரோமானியச் சட்டத்தில் நுழைந்தது. உரோமானியர் தம் மக்களுக்கென ஒரு சட்டத் தொகுப்பைப் (Jus Civile) இயற்றினர்; தம்முடன் தொடர்பு கொண்டிருந்த பிற மக்களுக்கென வேறு ஒரு சட்டத் தொகுப்பை (Jus Gentium) இயற்றினர். இத் தொகுப்பில் இயற்கைப் பகுத்தறிவு, மனித இனம் அனைத்திற்கும் விதிக்கப்படும் சட்டங்கள் ஆகியவை அடங்கியுள்ளதால் அது நாடுகளின் சட்டம் எனப்பட்டது. இதன்படி பிற மக்கள் அனைவரும் ஒரே நிலையில் கருதப்பட்டதால் அவர்கள் சமத்துவம் பெற்றவர்களாக உயர்ந்தனர். இந்த அடிப்படையில் புனித பால் (St. Paul) என்பாரும் சட்டம் என்பது யூத இனத்தைச் சர்ராத பிறர் (Non-Jews) இதயத்திலும் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை நீதிக் கோட்பாடு பின்னர்க் கிறித்தவ சமய வாதிகளாலும், மெய்ப்பொருளியல் வாதிகளாலும் ஆதரிக்கப்பட்டது. இயற்கை நீதியைத்

தெய்விக நீதி எனக் கொண்டனர். இந்நீதியின் அடிப்படையில் அரசர்கள் மக்களை ஆளவேண்டுமெனவும், குடிமக்களும் அரசருக்கு அடிபணிந்து வாழவேண்டுமெனவும், அரசர் நீதிக்கு மாறாகச் செயற்பட்டால் மக்களும் அரசருக்குக் கீழ்படிய வேண்டிய அவசியமில்லை எனவும் முன்னணி எழுத்தாளர் அக்காலத்தில் எழுதினர். இக்காலக் குடியுரிமை, சமய உரிமைகள் முதலியவை இவ்வியற்கை நீதியிலிருந்து தோன்றியவையாகும்.

உரோமானிய வழக்கறிஞர் உல்பியன் (கி.பி. 3-ஆம் நூ.) இயற்கை நீதியைப் பிற வகையிலிருந்து பிரித்தார். சட்ட இயல் வல்லுநரான சசுடீனியனும் (Justinian) இம்முறையை ஏற்றுக் கொண்டார். கிரேசியன் (கி.பி. 11-ஆம் நூ.) என்பாரும் இயற்கை நீதியைக் கிறித்தவப் புனித நூலான விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் காணப்படும் தெய்விக நீதிக்கு இணையானது என்று எடுத்துரைத்தார். புனித தாமசு அக்வினாசு (St. Thomas Aquinas) என்பாரும் இயற்கை நீதி இறைவனின் நீதிக்குச் சமமானது என்றார். இதே போல் சான்டன்சு, இசுக்காட்டசு, வில்லியம் ஒகாம், பிரான்சிசுகோ சுவாரசு போன்றோர் தெய்விக விருப்பமே சட்டங்களுக்கு ஆதாரம் என்று வற்புறுத்தினர். சமய சீர்திருத்தக் காலத்தில் இலியோ என்பாரும் அவர் மாணவர்களும் தம் சமூகப் போதனைகளில் இயற்கை உரிமையை எடுத்துரைக்கும்போது, தெய்விக நீதி, இயற்கை நீதி ஆகிய இரண்டும் ஒன்றெனக் கொண்டார்.

இவ்வாறு இயற்கைச் சட்டம், இறைச் சட்டம், திருச்சபைச் சட்டம் அனைத்தும் ஒன்றெனக் கொள்ளப்பட்ட நிலை கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் மாறியது. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகளில் சட்டம், நீதி ஆகியவை பகுத்தறிவின் பாற்பட்டவைஎனக் கருதப்பட்டன. அத்தகைய சட்டத்தின்படி எவரும் பிறருடைய வாழ்க்கை, விடுதலை, உடல்நலம், உடைமைகள் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கக் கூடாது. ஏனெனில், மனிதர் அனைவரும் சமத்துவமும் சுதந்திரமும் பெற்றவராவர்.

இனி, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்தில் சட்டமும் உரிமையும் இயற்கை என்ற அடைமொழியோடு சொல்லப்படுவதற்குக் காரணம், மனிதன் தன்னால் அமைக்கப்பட்ட சமுதாயத்திற்குக் காலத்தால் முற்பட்டவனாக இருந்ததே ஆகும்.

இயற்கை விதியில் பின்வரும் நான்கு அடிப்படையான உண்மைகள் அடங்கியுள்ளன. 1. நீதி மனிதனின் வெறும் விருப்பம் மாத்திரமன்று; அது இயற்கையின் பகுதியாகவும் உள்ளது. 2. நீதி என்பது அறிவுக்குப் புலப்படக் கூடியது. ஏனெனில், இயற்கைச் சட்டம் என்பது பகுத்தறிவுச் சட்டமேயாகும். 3. மனிதக் குலத்துக்கு எது நல்லது என்பதைத் தீர்மானிக்கப் பெரும்பான்மை முடிவுகளே மேற்கொள்ளப்படுகின்றன. அதில் வழுக்கள் ஏற்படுமாயின் எல்லா மனிதரையுங் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. 4. இயற்கைச் சட்டம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. மான்ட்டெய்ன் (Montaigne) என்பவர் கூறுவது போல, நேர்மையும் நீதியும் ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சார்ந்தனவாக மட்டும் இருத்தல் முடியாது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விடுதலை அறிவிப்பில் இயற்கை நீதி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. பிரான்சில் கி.பி. 1789-இல் தோன்றிய புரட்சியின் விளைவாக மனித உரிமை அறிவிப்பு நிறை வேற்றப்பட்டது. அவ்வுரிமைகள் இயற்கையானவை; பறிமுதல் செய்ய இயலாத தெய்விகத் தன்மை பெற்றவை. அவை சமத்துவம், சுதந்திரம், உடைமை, பாதுகாப்பு உரிமைகள் முதலியவை ஆகும். அவற்றோடு அடக்குமுறையை எதிர்க்கும் உரிமையும் வழங்கப்பட்டது. இறைமை மக்களிடமே உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது

பன்னாட்டு அரசியலில் 20-ஆம் நூற்றாண்டில் மனித உரிமைகளை வலியுறுத்துதல் என்பது இயற்கை விதிக்குக் கொடுக்கப்படும் கொள்கை விளக்கத்தின் விளைவு என்பது கூறப்படுகிறது. இது பொருத்தமுடையது அன்று. என்றாலும், இக்கால ஐ.நா. போன்ற அமைப்புகளுக்கு ஆதாரமாக இருக்கும் மனித சமத்துவக் கோட்பாடு பண்டைக்காலத்தில் கூறப்பட்ட இயற்கை நீதி என்ற கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. செ.ஜோ.

சட்டத் துறையில்: சட்டம் அல்லது நீதித்துறையில் நீதிபதி தீர்ப்புக் கூறும் போது இயற்கை நீதி (Natural Justice) வழுவாது செயற்படவேண்டும் என்பது இன்றியமையாத ஒரு விதியாகும். இது பின்வரும் இரு கோட்பாடுகளைக் கொண்டதாகும். 1. இருபுறங்கேட்டல் (Audi Alteram Parten). அதாவது, வழக்கை முறையாக விசாரிக்காமல் யாரையும் கண்டனம் செய்யக் கூடாது. 2. ஒருவர் தம்முடைய வழக்கில் தாமே சமன் செய்து சீர்தூக்கும் நடுவராக இருக்க முடியாது (Nemo Debt Esse-Juden in Propria Causa).

இரு தரப்பினரையும் கேட்டல்: வழக்கில் இரு தரப்பினருக்கும் அவர்களுடைய வழக்குகளை எடுத்துரைக்க வாய்ப்பளிக்க வேண்டும். வழக்கைக் கேட்காமல், விசாரிக்காமல் யாரையும் கண்டனம் செய்

வதோ தண்டிப்பதோ கூடாது. தண்டிப்பதற்கு முன் பாக, அவருடைய வழக்கு நன்கு விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது இயற்கை நீதியின் முதலாம் விதியாகும். தீர்ப்பு வழங்குவதற்கு முன் இரு தரப்பினரையும் கேட்டல் வேண்டும். இதில் கீழ்க்காண்பவையும் அடங்கும். 1. பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிப்பு (Notice) அனுப்புதல்; அறிவிப்பில் அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் (Charges) தெரிவித்தல். 2. எதிர்வாதம் செய்ய (Defence) நியாயமான காலம் (Reasonable Time) வழங்குதல். 3. எதிராகப் பயன்படுத்தக்கூடிய முழுச் சான்றுப் பொருண்மைகளையும் (Evidential Facts) ஆவணங்களையும் (Documents) ஒவ்வொரு தரப்பினருக்கும் தெரிவித்தல். 4. சான்றுரைக்க ஒருவர்தம் சாட்சிகளை (Witnesses) அழைத்துவர வாய்ப்பளித்தல். மற்றும் எதிராகச் சான்று கூறுபவர்களைக் குறுக்கு விசாரணை (Cross Examination) செய்ய வாய்ப்பளித்தல். 5. வழக்குரைஞரைக் கொண்டு வழக்கினை எடுத்துரைப்பதற்கு உரிய வாய்ப்பளித்தல். 6. நியாயமான தீர்ப்பளித்தல் (Reasonable Judgment). 7. மேல் முறையீடு (Appeal) செய்யும் உரிமையினை வழங்குதல்.

இரு தரப்பினருககும் அவர்களுடைய வழக்கையுரைக்க நல்வாய்ப்புகள் அளித்த பிறகே தீர்ப்புக் கூற வேண்டும். அத்தீர்ப்பு காரணங்களோடு கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்பட்ட தீர்ப்பினைக் கொண்டதே நேர்மையான விசாரணை (Fair Hearing) ஆகும். செ.ஜோ.

**இயற்கை நெறி:** அரிசுடாட்டில், பிளேட்டோ போன்ற கிரேக்க மேதைகளிலிருந்து இன்றைய சட்ட நூலறிஞர்கள்வரை பலர் 'இயல்பான அறவுணர்வே சட்டம்' என்ற கொள்கையினை ஆதரிக்கின்றனர்.

சசுடினியன் (Justinian), பிளாக்சுடோன் (Blackstone), சிசரோ (Cicero), அக்வினாசு (Aquinas) ஆகியோர் இறைவன் வகுத்த நீதி நெறியாகிய அறவுணர்வை ஒட்டிய விதிகளே உண்மையான சட்ட விதிகள் என்ற கொள்கையினை ஆதரித்தனர்.

இயற்கை நெறி (NaturalLaw) என்ற சட்டக் கொள்கை வானம் போன்று பரந்து விரிந்துள்ளது. அந்த வானத்தில் ஆதிகாலத்திலிருந்து அறிஞர்கள் கூறிய அறிவுரைகள் விண்மீன்களாகச் சுடர் விடுகின்றன என்று தயசு (Dias) என்ற அறிஞர் கூறியுள்ளார்.

'இயற்கையின் ஆற்றல் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டே இயங்குகிறது. விண்ணின் கோள்கள் தம் நிலையில் தவறாது இயங்குகின்றன. பருவங்கள் தவறாது மாறிமாறி வருகின்றன. செடிகொடிகள் அனைத்தும் தம் நிலை தவறாமல் முளைத்து வளர்ந்து பலன் கொடுக்கின்றன. இத்தகைய இயற்கையின் வழி வாழும் மனிதனும் தன் பகுத்தறிவு கொண்டு பண்போடு வாழ்கிறான். நன்மை எது, தீமை எது என்பதை அவனது மனச்சான்று அவனுக்கு உணர்த்துகிறது. அவனது உள்ளமே ஒழுக்க உணர்வுகளின் உறைவிடமாக உள்ளது. எனவே, மனிதனின் இதயத்தில் இயல்பாக எழும் ஒழுக்க உணர்வுகளே சட்ட நெறியாகும்' என்பது இக் கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும்.

இதயத்தின் இயல்பாகச் சட்டத்தைக் கொள்வதால் இக் கோட்பாட்டினை 'இயற்கைச் சட்டக் கோட்பாடு' (NaturalLawTheory) என்று கூறுவார்கள்.

ஆங்கிலத்தில் 'இயற்கைச் சட்டம்' என்பது அறவுணர்வைக் குறிப்பதாகும். எனவே, இதனை 'அறநெறிக் கோட்பாடு' எனலாம்.

இயற்கை நெறி எனப்படும் அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்தும் வகையில் சமுதாய நலனைப் பேணுகிறது. சட்டம், சமுதாய நலனைக் காக்கும் வகையில் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்கு படுத்துகிறது. 'நன்மையைச் செய்' என்று அறம் கூறுகிறது. 'தீமையைச் செய்யாதே' என்று சட்டம் தடுக்கின்றது. அறம் காரணம் காட்டி மக்களை நல்வழிப் படுத்துகிறது. சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்த முயற்சி செய்கிறது. அறிவுறுத்துவது அறம். அச்சுறுத்துவது சட்டம். சிந்தனையை உயர்த்துவது அறம். செயலைத் திருத்துவது சட்டம். மக்கள் மனத்திலே இயல்பாக எழுவது அறநெறி. மக்களால் இயற்றப்பெறுவது சட்டவிதி. அறம் மாறா நெறிகளைக் கொண்டது. சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

அறம் என்பது இயற்கைச் சட்டம். அதனைத் தெய்விக ஆணை என்று எண்ணும் மனப்பான்மை திருவள்ளுவரிடத்தும் கிரேக்க, சீனநாட்டு ஆறிஞர்களிடத்தும் இருந்து வந்துள்ளது. உரோமாபுரியில் ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்ட சசுடீனியன் சட்டத் தொகுப்பில் (Institutes of Justinian), 'இயற்கை நெறியாகிய அறம் இறையாற்றலால் தோன்றுவது; எல்லா நாட்டினராலும் பொதுவாகப் போற்றிக் காக்கப்படுவது; என்றும் மாறாது நிலைத்திருப்பது' எனக் கூறப்பட்டுள்ளது.

**இயற்கை முதற் கொள்கையும் கல்வியும்**: கல்வியும் தத்துவமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். கல்வி வெவ்வேறு மக்களால் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு கோணத்தில் பார்க்கப்படுகிறது. அதனால் கல்வியின் அமைப்பு அதன தன் தத்துவ வழிகளை வெளிப்படுத்துகிறது.

வாழ்வில் இயற்கையின் பங்கைப் புரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது. மக்களைச் சிந்திக்கத் தூண்டுவது இயற்கையே. அனுபவம், கற்பனை, ஆராய்தல், காரணங்காண்பது ஆகியன சிந்தனை செய்வதன் தலையாய அலுவல்களாகும். இயற்கை, உலகம் முழுவதையும் ஆளுகை செய்கிறது. அனுபவங்களுக்கு அடிப்படை புலன்கள். அறிவியல் எல்லாப் புலமைக்கும் மூலகாரணமாகும். உள்ளுணர்வு, மறுஉலகம் என்ற கருத்துகள் யாவும் இயற்கையியலின் கூற்றுப்படி பொய்த் தோற்றமே. இவைதாம் இயற்கை முதற் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளாகும்.

இயற்கைமுதற் கொள்கை, அறிவியல் நோக்கு (Scientific View), இயந்திர நோக்கு (Mechanistic View), உயிரியல் நோக்கு (Biological View) ஆகிய மூன்று வகைகளில் ஆராயப்படுகிறது.

அறிவியல் நோக்கின் அடிப்படையில் ஆராய்பவர்கள் உலகை ஆள்வது இயற்கை என்பர். இயற்கை மனிதனின் வாழ்க்கையை மட்டுமன்று, அவனுடைய எண்ணங்களையும் வரலாற்றையும் முடிவு செய்கின்றது. இயற்கையான உள்ளியல்புகளைவிடப் புறம்பே காணப்படும் இயற்கைச் சூழலுக்கே இயற்கை முதற் கொள்கையின் அறிவியல் நோக்கு முதலிடம் கொடுக்கிறது.

இயந்திர நோக்கின் அடிப்படையில் உலகை ஆராயும் ஆய்வாளர்கள், இவ்வுலகம் ஓர் இயந்திரம் போன்றது; அதன் ஓர் அங்கம் மனிதன் என்பர். சூழ்நிலையின் ஒவ்வொரு தூண்டுகோலுக்கும் (Stimulus) ஏற்ப மனிதனின் விருப்பாற்றலுக்கு உட்படாத செயல் (Reflex Action) அமைகிறது என்றும், அதனால் மனிதனின் இயல்புகளும் செயல்களும் இயந்திர அமைப்பை ஒத்திருக்கின்றன என்றும் கூறுவர்.

உயிரியல் நோக்கில் உலகைக் காண்பது, இலாமார்க்கால் தொடங்கப்பட்டுத் தார்வினால்(Darwin) முழுமைப்படுத்தப்பட்ட படிமலர்ச்சிக் கொள்கையை (Theory of Evolution) அடிப்படையாகக் கொண்டது. இக்கொள்கையின்படி ஒவ்வோர் உயிரினமும் வாழ்க்கையில் தானிருக்கும் நிலையிலிருந்து மேல் நோக்கிச் செல்ல உந்தப்படுகிறது. இந் நோக்கின்படி, தற்காப்பும் (Self-preservation), தகுதியுடையன நிலைத்தலும் (Survival of the Fittest) இயற்கை ஆளுகையின் இரு கூறுகள் ஆகும். மேற்கண்ட கொள்கைகள் தன்னிறைவு கொண்டில்லாதபடியால் அம்மூன்றின் சிறப்புக் கூறுகளும் இயற்கைமுதற் கொள்கையில் எடுத்துக் கையாளப்படுகின்றன.

இயற்கை விதிகள் உலகம் முழுவதையும் ஆளுகை செய்கின்றன. அவை மனிதனைவிட வலிமை வாய்ந்தவை. இயற்கை முதற் கொள்கை சமுதாயத்தை விடத் தனிமனிதனுக்கே முதலிடம் கொடுக்கிறது. கல்வி மனித நிலையினை உயர்த்த உதவும் ஒரு கருவி என்பது இயற்கைக் கல்விக் கோட்பாட்டினரின் கருத்தாகும்.

இயற்கை முதற் கொள்கை குழந்தைகளின் இயற்கையான உள்ளியல்புகளின் வளர்ச்சியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றது. எதுவும் வெளியிலிருந்து கட்டாயப்படுத்துவதால் நன்மை பயக்காது; குழந்தைகளின் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் தடை செய்யக் கூடாது என்று இயற்கை முதற் கொள்கை கூறுகிறது. சிறு குழந்தைகளை முதியவர்களைப் போன்று நடத்துதலையும், பெரியவர்களைப் போல் சிந்திக்கத் தூண்டுதலையும் இக் கொள்கை மறுத்து, குழந்தைகளைக் குழந்தைகளாகவே காண்கிறது. அதனால்தான் பயிற்றுவிக்கும் முறையும் எளிதாக மாறியது. அறிந்ததிலிருந்து அறியாததற்கும் (Concrete to abstract) எளிதானதிலிருந்து கடினமானதற்கும் (Easy to difficult) முன்னேறிக் கற்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கொள்கையின்படி, கற்பவருடைய பாடங்கள் சொற்களாக அமைந்திராமல், செயல்களாக இருத்தல் வேண்டும்.

சுதந்திரமாகக் கற்கும் சூழ்நிலை உருவாக்கப்படுதலை இக் கொள்கை வற்புறுத்துகிறது. இக் கொள்கையின் அடிப்படையிலமையும் கல்வியானது, சிறப்பான நோக்கங்கள் (Motives) கொண்டு அமையவில்லை; முழுவதும் தன்னியல்புகளையும் இயற்கையான தன் வளர்ச்சியையும் சார்ந்துள்ளது. இது எல்லாச் சூழல்களுக்கும் ஒத்து வருவதில்லை. குழந்தையானது நெருப்புச் சுடும் என்பதைத் தீயில் கை வைத்துக் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. பகுத்துணர்வதும் (Reasoning) பயிற்சி பெறுவதும் (Training) இன்றியமையாதன. இயற்கை முதற் கொள்கையாளர்களின் கூற்றுப்படி, கல்வியின் குறிக்கோள் உள்ளார்ந்த இயல்புகளை வெளிப்படுத்துதலாகும்.

கல்வி ஒவ்வொருவர் உள்ளியல்புகளையும் ஒரே சீரான பாடத்திட்டத்தின் மூலம் எளிதாக வெளிக்

கொணர முடியாது. ஒவ்வொரு பருவ வளர்ச்சிக்கும் உரிய தேவைகள்,விருப்பங்கள்,திறன்கள்ஆகியவற்றிற் கேற்பக் கல்விப் பாடத்திட்டம் அமைதல் வேண்டும்.

குழந்தைகள் விளையாடுவது இயற்கை. ஆதலால் விளையாட்டின் வாயிலாகக் கற்பதை வலியுறுத்து வதே இயற்கை முதற் கொள்கையாகும். இக் கொள் கைக் கல்வி,உவகை, படைப்பாக்கத்திறன்(Creativity) ஆகியவற்றை வளமுற வளர்க்க உதவி செய்கிறது. சொற்களை உச்சரிப்பதற்கு முன்பாகவும், அடையா ளக் குறிகளைக் (Symbols)காட்டுவதற்கு முன்பாகவும் பொருளைக் காட்டிக் கற்பிப்பதே சாலச் சிறந்த தாகும்.

தன் விருப்ப வழியாகச் செயற்படுதல் (Self-direction), நேர்முகமாக அனுபவித்தல் (Direct experience), நடைமுறையில் சோதித்துப் பார்த்துக் கற்றல் (Practical experiments) ஆகியவை இக் கொள்கைக் கல்வியால் ஊக்குவிக்கப்படுகின்றன.

இயற்கை முதற் கொள்கையின் அடிப்படை சுதந் திரமாகும். இயற்கையான வளர்ச்சி, சுதந்திரமான சூழ்நிலை ஆகியவற்றில் உருவெடுக்கும் குழந்தை தானாகவே உணர்ந்து, அனுபவித்துக் கற்கும் பொழுது தனக்குள் கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்கிறது. அதிகாரத்தின் வழியாகப் பயிற்றுவிப் பது நீண்ட நாட்களுக்கு நீடித்திருப்பதில்லை. இயற் கையான ஆவல்கள், தூண்டுதல்கள் (Natural Urges) ஆகியவற்றை அவன் செயல்கள் கண்காணிக்கின்றன. இயற்கையான விருப்பங்களையும் திறன்களையும் தடை செய்வது சிந்தனை வளர்ச்சியைத் தடுக்கும். உடன்பாடான அணுகுமுறை (Positive Approach) இருபாலார் இணைக் கல்வி(Co-Education) ஆகியவை இம்முறையால் வலியுறுத்தப்படுகின்றன.

இயற்கை முதற் கொள்கை ஆசிரியர்கள், மாண வர்கள் ஆகியோரின் இயற்கையான ஆவல்களையும் ஆர்வத்தையும் மதித்து அவற்றிற் கேற்றாற்போல் கற்பித்தலைச் சொல்கிறது. ஆசிரியர் மேடை அமைப் பாளராக (Stage Setter) அல்லது மேலாளராக (Manager) இருத்தல் வேண்டும். மாணவர்களுக்குக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை அளிப்பதும் சூழல் களை வகுத்துத் தருவதும் ஆசிரியரின் பொறுப்பே. மாணவர்களை வற்புறுத்தவும் அவர்கள் வளர்ச்சி யில் தலையிடவும் ஆசிரியருக்கு உரிமை இல்லை. இயற்கை முதற் கொள்கையில் கல்வியில் ஆசிரியரை விடக் குழந்தைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படு கிறது. சுதந்திரமும் தனிமனிதனின் ஆவல்களும் மிகுதி யாக வலியுறுத்தப்படுகின்றன. இயற்கையே ஒரு மாணவனின் ஆசிரியராக வருணிக்கப்படுகிறது.

ஓர் ஆசிரியர் எவ்வகை நுணுக்கங்களைக் (Techniques) கையாண்டாலும் மாணவனின் இயற்கையான வளர்ச்சியை மறுக்காமல் இருத்தல், குழந்தைகளின் தேவைகள், விருப்பங்கள், திறன்கள் முதலியவற்றிற்கு முதலிடம் தந்து, ‘குழந்தை மையக் கல்வி’ (Child--Centred Education) வழங்குதல், ஆசிரியர் இயக்கு நர் (Director) ஆக இல்லாமல் வழிகாட்டியாக இருத் தல் (Guide), செயல் முறைவழிக் கற்றல் (Learning by doing), நேர்முகமாகக் கவனித்தல்(Direct Observation), தானாகவே ஈடுபடுதல் (Personal involvement) போன்றவை இயற்கை முதற் கொள்கை வழிக் கற்பித்தலில் சிறப்பான வழிமுறைகளாகும். இவ்வாறு குழந்தையை முதலிடமாகக் கொள்ளும் இக் கல்வி முறை கல்வியியலில் பெரிதான பங்கைக் கொண்டுள்ளது. வே.இரா.

துணை நூல்கள்:

**Dupcie's**, M., Adrian, Philosphy of Education in Historical Perspective, Thomson Press Ltd, New Delhi, 1972.

**Singh**, M.P., A Students History of Educational Thoughts, City Book Depot, Amritsar, 1959.

சுந்தர சண்முகனார், தமிழர் கண்ட கல்வி, பாரி நிலையம், சென்னை, 1970.

**இயற்கை வளங்கள்**: மக்கட் குலத்தின் பயனுக்காக இயற்கையில் பரந்து கிடக்கும் மூலப் பொருள்கள், வனவிலங்குகள், மற்றைய கனிப் பொருள்கள், காடுகள், நீர்வளம், மீன்வளம், பறவை கள் ஆகிய அனைத்தும் இயற்கை வளங்கள் (Natural Resources) ஆம். பொருளாதார நடவடிக்கை களுக்கு இயற்கை வளங்கள் சிறப்புமிக்க காரணி களாயிருப்பினும், 1940-ஆம் ஆண்டுக்குப் பின் தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளின் உற்பத்திப் பொருள்களான செயற்கை நூலிழைகள், இரப்பர், சலவைக் கட்டிகள், எண்ணெய் வகைகள் மற்றும் நெகிழிகள் (Plastics), செயற்கைப் பலகை (Plywood) போன்ற பொருள்களும் பொருளாதார வளங் களாய்த் திகழ்கின்றன.

இயற்கை தன்னகத்தே நிறைய செல்வத்தைப் பெற் றிருப்பதால் அதை அறிந்து வெளிக் கொணர, மனி தன் பல நுட்பங்களைக் கையாள வேண்டியுள்ளது. சில வேளைகளில் புதியவளம் ஒன்றின் பயனைக் கண் டறிவதன் விளைவால் அதன் பயன் மதிப்பு உடனடி யாக மிகுதிப்படக்கூடும்.இவ்வகையிலேயே கேரளா, தமிழ்நாடு ஆகியவற்றின் கடற்கரையோரங்களில் மோனசைட்டு மணல் (Monazite Sand) படுகைகள்

இருப்பது பலஆண்டுகளாகத் தெரிந்திருந்தபோதிலும் அண்மைக் கால அணுசக்தி அறிவியல் (Nuclear Energy Science) வளர்ச்சியின் காரணமாகவே இவற்றின் புதிய பயன்முறைகளும் அரும்பெரும் மதிப்பும் உலகுக்குத் தெரிய வந்தன. இதனாலேயே இப்படுகைக்கு அரிய நிலங்கள் (Rare Earths) என்ற பெயரும் கிட்டியது.

ஒரு நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றிக் கூறுமிடத்து, அந்நாட்டில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட வளங்களும் அவற்றின் இப்போதைய பயன்களும் கருத்திற் கொள்ளப்படுகின்றன. இருப்பினும் கண்டெடுக்கப்படாத வளங்களைப் பற்றிய அறிவின் வளர்ச்சியால்,இயற்கைவளங்களின் கிடைப்பளவு மாறலாம்.

நிலம், நீர், மீன்வளம், காட்டுவளம் போன்ற இயற்கை வளங்கள் புதுப்பிக்கப்படும் வகையினவாகவும், கனிவளங்கள் (Minerals), கனிம எண்ணெய் போன்றவை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தத் தக்கவையாய் விரைவில் அழிந்துபோகும் வகையினவாகவும் அமையலாம். ஆகவே அழிந்துபோகத் தக்க வளங்களைக் கவனமான முறையில் பயன்படுத்துவதும் புதுப்பிக்கமுடியும் வளங்களைப் பாதுகாத்துவருவதும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான அடிப்படை வழிமுறைகளாகும்.

**இயற்பகை நாயனார்** பெரிய புராணம் கூறும் அறுபத்து மூன்று சிவனடியார்களுள் ஒருவர்; சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர்; வணிக மரபைச் சேர்ந்தவர். திருநீறு அணிந்த அடியார்கள் எவரேயாயினும், அவர்கள் விரும்பியவை எவையேயாயினும் இல்லை என்னாது வழங்கிய இவர் உலக இயலுக்குப் பகையாய் வாழ்ந்து, இயற்பகை என்னும் பெயரைப் பெற்றார். இவரது வரலாறு பெரிய புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

இயற்பகையாருடைய மெய்யன்பினை உலகிற்குக் காட்டத் திருவுளங் கொண்ட சிவபெருமான் ஒரு காமுக வேதியர் வடிவங் கொண்டு வந்தார். இயற்பகையார் அவரது தூர்த்த வேடங் கண்டு மனம் வேறுபடாமல் சிவனடியார் என்றே கொண்டு வணங்கி வரவேற்றார். வந்த வேதியர் அவரிடம், 'நாம் ஒரு பொருளை வேண்டி உம்மிடம் வந்தோம். அதனைக் கொடுப்பதாகக் கூறினால் நாம் வேண்டுவது யாதென்று கூறுவோம்' என்றார். இயற்பகையார், 'என்னிடம் இருக்கும் பொருள்கள் யாவும் சிவனடியார்களுக்கே உரியனவாகும். இதிற் சிறிதும் ஐயுற வேண்டாம்' என்றார். வேதியர் 'நாம் உம்முடைய காதல் மனைவியைப் பெற விரும்பி வந்தோம்' என்றார். இயற்பகையார் அச்சொற்களைக் கேட்பதற்கு முன் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தாரோ அவ்வளவினும் பன்மடங்கு மகிழ்ச்சியினை அச்சொற்களைக் கேட்டதும் அடைந்தார். 'தாங்கள் என்னிடம் உள்ளதையே கேட்டது அடியேன் செய்த புண்ணியத்தின் பயனாகும்' என்று கூறினார். விரைந்து வீட்டிற்குள் நுழைந்து, கற்பிற் சிறந்த தம் மனைவியாரை நோக்கி, 'நான் இன்று உன்னை இவ்வடியாருக்கு அளித்து விட்டேன்' என்று மொழிந்தார். அது கேட்ட அவ்வம்மையார் மனங் கலங்கிப் பின்னர் ஒருவாறு தெளிந்தார். கணவரை நோக்கி, 'நீர் இட்ட கட்டளையை நிறைவேற்றாது வேறு செய்யத் தக்கது உளதோ?' என்று கூறி வணங்கினார். பின் அடியவரை அடைந்து அவர் திருவடிகளைப் பணிந்து திகைப்புடன் நின்றார்.

வேதியராகிய இறைவர் தாம் ஊர் எல்லையைக் கடந்து செல்லும்வரை உறவினர்களால் இடையூறு எய்தாதவாறு துணைவரல் வேண்டும் என்று அழைத்தார். 'இதனை நானாக உணர்ந்து செய்யாது, அவர் கூறும் வரையில் காலந் தாழ்த்தியது என் குற்றம்' என்று இயற்பகையார் வருந்தினார். வாளும் கேடயமும் கையில் ஏந்தி, அவர்களுக்குக் காவலாகப் பின்னே சென்றார். நிகழ்ந்ததை அறிந்த உறவினர் வெகுண்டெழுந்து, 'மனைவியைப் பிறனுக்குக் கொடுக்கும் கொடுஞ் செயலை இதுவரையில் யாரும் செய்ததில்லை. இங்ஙனம் செய்த இயற்பகை பித்துக் கொண்டு விட்டான் போலும். நம் குலத்திற்கு ஏற்பட்ட பழியைப் போக்குவோம்' என்று விரைந்து வந்து அவர்களை வளைத்துக் கொண்டனர். இயற்பகையார் வாளினைக் கையிலெடுத்துத் தாம் ஒருவராக நின்று அவர்களோடு போர் புரிந்து எதிர்த்த அனைவரையும் கொன்று முடித்தார். பின்னர் வேதியரைப் பார்த்து, 'இக் காட்டினைக் கடந்து செல்லும் வரை நான் துணையாக வருவேன்' என்று கூறிப் பின்தொடர்ந்தார்.

மூவரும் சாய்க்காடு என்னும் தலத்தை நெருங்கினர். வேதியர் இயற்பகையாரைப் பார்த்து, 'இனி நீர் திரும்பிச் செல்லலாம்' என்று கூறினார். அவரும் வேதியரின் திருவடிகளை வணங்கி விடைபெற்றார். இயற்பகையார் திரும்பியும் பாராமற் செல்வதனை இறைவராகிய வேதியர் மகிழ்ந்து நோக்கினார். அவரைக் கூவி, 'இயற்பகை முனிவனே! ஓலம்! இங்கு நீ வருவாய், ஓலம்! செயற்கருஞ் செய்கை செய்த தீரனே! ஓலம்' என்று ஓலமிட்டார். அது கேட்ட இயற்பகையார், தீங்கு செய்பவர் இன்னும் யாரேனும் இருக்கிறார்களோ என்று கருதி ஓடி வந்தார். அப்போது வேதியர் மறைந்தார். சிவபெருமான் அம்மையோடு விடை மீது எழுந்தருளிக் காட்சி

கொடுத்து, அவருக்கும் அவர் மனைவியாருக்கும் வீடு பேறு அளித்தார்.

மெய்யடியார்கள் மனைவி மக்கள் உறவினர் முதலிய உயிர்ச் சார்புகளோடு வாழ்ந்தாலும், அவர் களிடத்தே பற்றுச் சிறிதும் இன்றி, உயிர்க்குயிராகிய சிவபெருமானே தமக்கு இனியவர் என்று தெளிந்து, சிவனடியார்களையும் சிவலிங்கத்தையும்சிவன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வார்கள் என்று சைவ சாத்திர நூல்கள் கூறும். அவ்வாறு வாழ்ந்தவர் இயற்பகை நாயனார் என்பது இவரது வரலாற்றால் இனிது புலனாகும் இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத்தொகையில், 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்று கூறிப் போற்றி யுள்ளார். ஆ.ஆ.

**இயற்பா,** மயர்வற மதிநலம் அருளப் பெற்ற திருமாலடியவர்களாகியபன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் தமிழ் மறையின் இறுதி ஆயிரமாக அமைந்த பகுதி யாகும். இப்பகுதியில் முதலாழ்வார்கள் ஆகிய பொய் கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என் போரும் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திரு மங்கையாழ்வார் ஆகியோரும் இயற்றிய பாசுரங் களும் திருவரங்கத்தமுதனார் பாடிய இராமானுச நூற்றந்தாதியும் அடங்கும்.

ஒவ்வொரு வகைப் பாவிற்கும் தனித்தனி ஓசை உண்டு.அப்பாவிற்குப் பண், தாளம் அமைத்துப் பாடுங் கால் அது இசைப்பா எனவும், அங்ஙனமின்றிப் பாடுங்கால் இயற்பா என்றும் கூறப்படும். நாதமுனி கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களை அடைவு செய்து இயற்பா, இசைப்பா என்று வகை செய்த மைத்தார். அவற்றுள் முதலாயிரம், பெரிய திரு மொழி, திருவாய் மொழி ஆகிய மூன்றும் இசைப் பாத் தொகுதிகள் எனவும், இறுதி ஆயிரத்தில் அடங் குவன இயற்பா என்றும் கூறப்படும். இதனை, நாத முனிகள் தாம் உருவாக்கிய திருமொழி – திருவாய் மொழித் திருநாளில் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி அகியவற்றைத் தேவகானத்தில் ஏறிட்டு வழங்கினார் என்றும், இயற்பாவை இயலாக வழங்கினார் என்றும் கோயில் ஒழுகு கூறும் செய்தி யினால் அறியலாம். இசைப்பாவிற்குப் போலவே இயற்பாவிற்கும் பிற்காலத்தில் இராக தாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்பா திவ்வியப்பிரபந்தத்திலுள்ள 24 பிரபந் தங்களுள் 11 பிரபந்தங்களைக் கொண்டதாம். இராமானுச நூற்றந்தாதி இராமானுசர் காலத்தில் திவ்வியப்பிரபந்தத்தோடு சேர்க்கப்பட்டது. இதற்குப் பின்னர் இராமானுச நூற்றந்தாதி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் இறுதியில் சேர்த்துப்பதிக்கப் பட்டது. அந்த அந்தாதியினைச் சேர்க்காமல் இயற் பாவினை அமைத்த பதிப்புகளும் உள்ளன.

இயற்பாவின் முதற்பகுதி பொய்கையாழ்வார் பாடிய முதல் திருவந்தாதி என்பது. இது நூறு வெண்பாக்களால் அந்தாதித் தொடையாக அமைந் தது. இதனை மூத்த திருவந்தாதி எனவும் கூறுவர். இத்தொகையில் இரண்டாவதாக வருவது பூதத்தாழ் வார் இயற்றிய இரண்டாம் திருவந்தாதி ஆகும். இதுவும் நூறு வெண்பாக்களைக் கொண்டது. மூன் றாம் பகுதி பேயாழ்வார் பாடிய மூன்றாம் திருவந்தாதி. இதுவும் நூறு வெண்பாக்கள் கொண்டு அந்தாதித் தொடையாகப் பாடப்பட்டது. இம்மூன்று ஆழ்வார்களும் ஒருகால் ஓரிடத்தே ஒருங் கிருந்தபோது திருமால் இவர்களுக்குக் காட்சியருள, அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து, இம் மூவரும் இவ் வந்தாதிகளைத் தனித்தனியே பாடினர் என்பது கூறப்படுகிறது.

இயற்பாவின் நான்காம் பகுதியாகத் திருமழிசை யாழ்வார் பாடிய அந்தாதி அமைந்துள்ளது. இது நான்முகனை எனத் தொடங்குவதனால் 'நான் முகன் திருவந்தாதி' எனவும் கூறப்படும். இவர் அரி யையும் அரனையும் அரிகர (சங்கரநாராயண) உரு வில் ஒருங்கே கண்டார் என்பதனை, 'ஆறுசடைக் கரந்தான அண்டர்கோன் தன்னோடும், கூறுடை யான் என்பதுவும் கொள்ளகத்தே' என்னும் இவர் கூற்றால் அறியலாம்.

இத்தொகுதியின் ஐந்தாம் பகுதி நம்மாழ்வார் இயற்றிய திருவிருத்தம் ஆகும். இது இருக்குவேத சாரம் எனப்படும். இதிலுள்ள 100 செய்யுள்களும் கட்டளைக் கலித்துறையிலமைந்தவை; அகப்பொருள் துறைகளில் பாடப்பட்டவை. இவர் அருளிய ஏழு ஆசிரியப்பாக்களைக் கொண்ட திருவாசிரியம் என் பது இத்தொகுதியில் ஆறாவதாக அமைந்தது. இது திருமாலின் உருவம், குணங்கள், அருஞ்செயல்கள் முதலியன பற்றி வியந்து கூறுகிறது. இதனையடுத்து இவர் இயற்றிய பெரிய திருவந்தாதி இடம் பெற் றுள்ளது. இப்பிரபந்தம் 89 வெண்பாக்கள் கொண் டது.

திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவெழு கூற்றிருக்கை இயற்பாவின் எட்டாம்பகுதி. இது 47 அடிகள் கொண்ட நேரிசையாசிரியப்பாவா கும் ஒன்று முதல் ஏழு எண்கள் மடங்கி வருமாறு இது பாடப்பட்டுள்ளது. சிறிய திருமடல் என்பது அடுத்த பகுதியாகும். இதுவும் திருமங்கையாழ் வாரால் பாடப்பட்டது. அகப்பொருள் துறைகளுள் ஒன்றாகிய மடலேறுதல் என்னும் துறையில் அமைந்

தது. தான் காதலித்த தலைவியை யடைவதற்காக, அவள்பால் கொண்ட காதலை ஊரார் அறியுமாறு வெளிப்படுத்தல் வேண்டித் தலைவன், பனை மடலால் செய்யப்பட்ட குதிரை மீது ஏறியிருந்து சிறுவர்களால் தெருக்கள் வழியாக இழுக்கப்பட, அவ்வகையில் தன்னை வருத்திக் கொள்வதாகப் பாடப் படுவது இத்துறை. தலைவன், 'ஊரார் இகழிலும் ஊரா தொழியேன் நான், வாரார்பூம் பெண்ணை மடல்' என்று கூறுவதிலிருந்து இதனை யறியலாம். இதனையடுத்து இவர் இயற்றிய பெரிய திருமடல் என்னும் பிரபந்தம் பத்தாம் பகுதியாக அமைந்துள்ளது. இதுவும் கலிவெண்பாவால் மடலேறுதல் என்னும் துறையில் அமைந்தது. அளவில் முன்னதை விடப் பெரியதாகலின் இது பெரிய திருமடல் எனப் பட்டது.

இயற்பாவின் பதினோராம் பகுதியாக அமைக் கப்பட்ட இராமானுச நூற்றந்தாதி 108கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்தது; திருவரங்கத் தமுதனாரால் இயற்றப்பட்டது. இது விசிட்டாத் துவைத மதத்தை நிறுவியவரும், எம்பெருமானார், எதிராசர் முதலிய பெயர்களால் சிறப்பிக்கப்படுபவருமாகியஇராமானுசரைப் போற்றிப் பாடப்பட்டது. கோயிலொழுகு என்னும் நூல், வைணவக் கோயில் களில் இது இறுதியாகப் பாடப்படும் என்று குறிப் பிடுகிறது. இன்னும் இவ்வழக்கம் இருந்து வருகிறது. இக்காரணத்தால் இது ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களோடு ஒத்த பெருமையுடையது என்பது புலனாகும்.

ஆர்.கி.

**இயற்பெயர்** பொருள்பற்றியும் அது மொழியில் பயன்படும் விதத்தில் அமைந்துள்ள அமைப்பு வேறுபாடுபற்றியும் பின்வருமாறு பலவகையாகப்பாகுபாடு செய்யப்படுகிறது. அவ்வியற்பெயர் பெயர்ப் பதிலீட்டுப் பெயர் (Pronoun), பொதுப் பெயர் (Common noun), இயற்பெயர் (Proper noun) எனப் பாகுபாடு செய்யப்படும் இயற்பெயர் என்பதைச் சிலர் சிறப்புப் பெயர் என்று குறிப்பிடுவர். (காண்க. ச. அகத்திய லிங்கம், சொல்லியல்-1. பெயரியல், பக். 76 (1979),- எல்லா மொழிகளுக்கும் இது பொதுவாய் அதாவது, பொதுப் பண்பு உடையதாய்க் காணப் படுகிறது.

தமிழ் இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் முதற்கொண்டு எல்லா இலக்கண நூல்களும், 'இயற் பெயர்' என்ற பிரிவைக் குறிப்பிட்டு, அது விரவுப் பெயர்களுள் ஒரு சிறு பிரிவு ஆகும் என்று விளக்கியுள்ளன. உரையாசிரியர்களும் இயற்பெயரும் விரவுப் பெயரும் ஒன்றே என்று கருதுகிறார்கள். தொல்காப்பியரின் இயற்பெயர் என்பது பற்றிய கருத்தையும் உரையாசிரியர் கருத்தையும் அவற்றின் வன்மை, மென்மைகளையும் இக்காலச் சொல்லிலக் கணக் கோட்பாட்டாளர்கள் விரிவாக ஆராய்ந்துள் ளனர்.

இங்கு இயற்பெயர் என்பது இயல்புப் பெயர் (Proper noun) என்று குறிப்பதாகக் கருதப்பட்டே விளக்கம் தரப்படுகிறது. இது பற்றிய ஆராய்ச்சியில் மொழியியலார் மட்டும் அல்லாமல் சொற்பொருளியலாரும் (Semantists) ஆர்வம் காட்டியுள்ளார்கள். மொழியியலார் இயற்பெயர், பொதுப்பெயர் என்ற பகுப்பில் கருத்துச் செலுத்துவதற்குக் காரணம், மேலே குறிப்பிட்டபடி மொழி அமைப்பில் இயற்பெயர் பிற பெயர்களோடு வேறுபடுவதுதான். சொற்பொருளியலார் இயற் பெயர் பற்றிய ஆய்வில் ஈடுபடுவதற்குக் காரணம், சொல்லுக்கும் (வடிவத்துக்கும்) பொருளுக்கும் உள்ள தொடர்பைப் பொதுவாக அறிய முற்படும் போது ஏற்படும் சிக்கல்களில், இயற்பெயரின் பொருள் மட்டும் நிலை மாறுபட்டு அமைந்திருப்பதே.

பொருள்நிலையில் இயற்பெயர் என்பது, குறிப் பிட்ட ஒரு மனிதன், நாடு, நகரம், ஊர், ஆறு, மலை, ஆண்டு, மாதம் அதாவது, நாட்பெயர்கள் (Time nouns) ஆகியவற்றுள் சிறப்பாக ஒன்றுக்கே உரியதாக அமைந்துள்ளதால், இயற்பெயர்கள் மொழி அமைப்பையொட்டிய வேறுபாடு ஒன்றைப் புலப்படுத்துகின்றன. அதாவது, இயற்பெயர் பன்மை விகுதி ஏற்காது. மக்களையோ பொருள்களையோ பொதுவாகச் சுட்டும் பொதுப் பெயர்கள் பன்மை விகுதியை ஏற்றுவரும். ஆனாலும் மேலே குறிப்பிட்டதற்கு மாறாக இயற்பெயர்கள், பன்மை விகுதியையோ எண்ணுப் பெயர் அடையையோ ஏற்றுப் பன்மைச் சொல்லாக வழங்குவது எல்லா மொழிகளிலும் காணப்படுகிறது. எ-டு. தர்னர் (Turner) என்ற ஆங்கில இயற்பெயர் தர்னர்சு (Turners) அதாவது, தர்னர்கள் என்று வந்துள்ளதை ஆங்கில மொழியியலார் எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழிலும் 'ஆயிரம் இராமர்' என்ற தொடர் கம்பராமாயணத்தில் பயிலப்பட்டுள்ளது. இப்படி வரும்போது ஆகு பெயராகவோ பொதுப் பெயராகவோ மாறிவிட்டதாகக் கருதவேண்டும் என்று மொழியியலாளர் விளக்க வேண்டும் என்பார்கள். அருங்காட்சியகத்தில் பல தர்னர்களைப் பார்த்தேன் என்ற வாக்கியத்தில், தர்னர்கள் என்பது தர்னர் எழுதிய படங்கள் என்று பொருள்படும். ஆயிரம் இராமர் என்பது இராமர் போன்ற பண்புடைய ஆயிரம் மனிதர்கள் என்று பொருள்படும். எனவே இப்படிப்பட்ட மாறுபட்ட வழக்குகளை வேறு முறையில் விளக்கி விடுவதால் மேலேகூறிய பன்மை விகுதி ஏற்று வாராத இயற் பெயரின் பண்பு மாறவில்லை என்று கொள்ளலாம்

இயற்பெயர் இனஞ்சுட்டும் (வேறுபடுத்துவதற் குரிய) அடையைத் தழுவி வாராது. ஆனால் பொதுப் பெயர் அப்படிப்பட்ட அடையைத் தழுவி வரும். கறுப்புச் சட்டை, வெள்ளை மாளிகை என்று பொதுப் பெயர்கள் நிறப்பெயர் தழுவி வரும்போது, அந்த இனத்தைச் சேர்ந்த வேறு பொருளிலிருந்து பிரித்துக் காட்டும். இயற்பெயர் தனிப்பட்ட பொருளின் அல்லது மக்களின் பெயராய் இருப்பதால், அப்படிப்பட்ட பெயரடை தழுவினாலும் இனத்தைச் சுட்டி ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துக் காட்டாது. ஆனால் உலக வழக்கில் இனத்தைச் சுட்டும் அடை வருவதைப் பார்க்கலாம். ஓரிடத்தில் ஒரே பெயருடைய இரண்டு மனிதர் இருந்தால் இயற்பெயர் அடையோடு வந்து (கறுப்புப் பாலு, சிவப்புப் பாலு) ஒருவரை மற்றவரினின்றும் பிரித்துக் காட்டுகிறது. இங்கே ஒரு பெயர் இருவருடைய இயற்பெயராக வழங்குகிறது என்று கூறும்போதே இயற்பெயரின் பண்பான குறிப்பிட்ட மனிதரைக் குறிப்பது என்பது மாறிப் போய்ப்பொதுப் பெயராக மாறிவிடுவதால் இனம் சுட்டும் அடையைத் தழுவி வருகிறது என்று கொள்ள வேண்டும். செ.வை.ச.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம் ச., சொல்லியல் – 1, பெயரியல், அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணா மலைநகர், 1979.

சண்முகம் செ. வை., சொல்லிலக்கணக் கோட் பாடு–1, அனைதிந்திய மொழியியற் கழகம் அண்ணாமலைநகர், 1984.

S. **Ullmann**'s **Semantics** – An Introduction to the Science of meaning, Basic Blackwell, 1982.

**இயற்றமிழ்**: 'இயற்றமிழ்' என்ற சொல் 'இயல்', 'தமிழ்' எனப் பிரியும். 'இயல்' என்னும் சொல் 'இயல்பானது' என்று பொருள்படும். 'இயற் சொல்' என்னும் வழக்காற்றினைத் தொல்காப்பியத்தில் காணலாம் (தொல். 881). இங்குத் 'திரி பின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லா யிற்று' என்பர் சேனாவரையர். இயற்றமிழ் என்பதும் ஏனைய இசை, நாடகம் போலாது இயல்பாக வழங்கும் தமிழ் என்ற பொருளுடையதாகும். பண்ணுடனும் தாளத்துடனும் கூடி, வழங்குவது இசைத் தமிழாயிற்று; நடிப்பிற்கும் மெய்ப்பாட்டிற்கும் ஏற்ப வழங்குந் தமிழ் கூத்துத் தமிழாயிற்று; அவை இரண்டுமில்லா நிலையில் இயல்பாக வழங்குவது இயற்றமிழெனப்பட்டது.

இயற்றமிழின் தோற்றம்: தமிழ் ஒன்றே, அதன் சார்பும் பண்பும் வளர்ச்சியும் கருதி மூன்றெனப்படுகிறது. அவை மூன்றும் ஒன்றின் ஒன்று மேவி வருவனவே. இயற்றமிழ்தான் இசைத்தமிழாகவும் நாடகத் தழிழாகவும் வளர்ச்சி பெறுகிறதாகலின் முன்னதே இன்றியமையாததாகிறது. இசை கேட்டு இன்புறவும், நாடகம் கண்டு இன்புறவும் சிறப்பாக உரிமையுடையன. இயற்றமிழோ படித்து உணர்ந்து இன்புறுதற்குரியது. இசைத்தமிழைக் கல்விவல்லாரும் கல்லாரும் கேட்டு மகிழ்வர்; நாடகத் தழிழைக் கல்லாரும் கற்றாரும் பார்த்துக் களிப்படைவர். இயற்றமிழ் பெரிதும் கற்றார்க்கே பயன்படுவது. மொழியின் தோற்றம் பற்றி ஆராய்வோர் இசை நாடக அடிப்படையோடு அது பிறந்து வளர்ந்ததை நினைவூட்டுவர். அத்தகைய மொழி அத்தொடர்புகளை விட்டுச் சிறிதுசிறிதாகச் செம்மையும் செறிவுமுடைய இயற்றமிழாக உருவாகியது. பிறகு அங்ஙனம் உருவாகிய இயற்றமிழே, பிற இரண்டிற்கும் அடிப்படையாய்ப் பெருவளர்ச்சி கண்டு நிலைபெற்றமையின் இயலிசை நாடகம் என முதலில் வைத்து எண்ணப்படுவதாயிற்று.

உரையும் பாட்டும்: இயற்றமிழ் என்பது உரை நடையும் செய்யுளுமாகிய நூல்களின் தொகுதிகள் அனைத்தையும் குறிக்கும். இவற்றுள் முன்னர்த் தோன்றியது பாட்டு வடிவம் எனவும், பின்னர்த் தோன்றியது உரைநடை வடிவம் எனவும் கூறுவர். மொழியின் தோற்றம் பற்றிய கருத்து மீண்டும் இங்கு நினைக்கத்தக்கது. முதன்முதலில் ஆடலுடன் கூடிய பாடல் போல இசைத்தன்மையுடையதாக மொழி தோன்றியது; மிகுந்த வளர்ச்சிக்குப் பிறகே ஓசையின்றி இயல்பாய்ப் பேசும் உரையாடல் வழக்குத் தோன்றிற்று.

தமிழில் நெடுங்காலம் செய்யுளின் செல்வாக்கே இருந்துள்ளது. அக்காலத்து உரைநடையிலும் செய்யுளின் ஆளுமையும் தாக்குதலும் காணப்பட்டன. கலை நூல்களும் மருத்துவ நூல்களும் போல்வன எல்லாம் செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டு வந்தன. தமிழில் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என்ற நான்குவகைப் பாக்களும் தொன்றுதொட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளன. 'மருட்பா' என ஒன்று பாக்களைக் கலந்து எழுதும் முறையால் தோன்றியது. பரிபாடலும் வரிப்பாடலும் இசைத்தன்மை மிகுந்தவையாய் ஆடலுடன் கூடிய வளர்ச்சியுடையனவாய்க் காணப்பட்டன. காலப்போக்கில் தோன்றி வளர்ந்த தாழிசை, துறை, விருத்தம் என்பனவும் இசைத்தன்மை மிகுந்தன. இவற்றுள் 'விருத்தம் என்னும் ஒண்பா' பெற்ற மிகுசிறப்பு குறித்தற்குரியது. இவையெல்லாம் இசைத்தமிழின்பாற்படுமாயினும், இலக்கியங்களில் பயன்படுமாற்றால் படித்துச் சுவைத்தற்குரியவையாய் இயற்றமிழ் எனவும் பட்டன.

சில பாவகைகள் சில இலக்கிய வகைகளை எழுதுவதற்கு மரபுவழியால் உரிமையுடையனவாயின. எடுத்துக்காட்டாக, பிள்ளைத்தமிழ் கழிநெடிலாசிரிய விருத்தங்களிலும், பரணி தாழிசையிலும், உலா, தூது ஆகியவை கலிவெண்பாவிலும் பாடப்பெற்று வந்த மரபு இவண் குறிக்கத்தக்கதாகும். ஆங்கிலத்தில் உரைநடை வளர்ச்சி திட்பமும் ஒட்பமும் மிக்கது. தமிழிலும் அதனோடொத்த வளர்ச்சியைச் செய்யுள்களில் காணலாம். தமிழ் யாப்புவடிவ வளர்ச்சியைக் கண்ணுறுவார் இம்மொழியைச் 'செய்யுளின்மொழி' அல்லது 'கவிதைமொழி' என்றே கூறல்தகுமென ஒப்புவர்.

தமிழில் உரைநடைக்கான கூறுகளை முன்னர் இருந்தே காணமுடியுமாயினும் மிகவும் பிற்காலத்தில்தான் அது தனிநிலையை, இலக்கிய நிலையை எய்தியது. தொல்காப்பியத்தில் இலக்கிய வகைமைகளுள் ஒன்றாக 'உரையாப்பு' என்பது சுட்டப்படுகிறது (1336). பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின்று எழுந்த கிளவி, பொருளோடு புணராப் பொய்ம்மொழி, பொருளொடு புணர்ந்த நகைமொழி என அதன் வகைகள் குறிக்கப்படுகின்றன (1429). இறையனார் களவியல் உரை தொடங்கி, இன்று நமக்குக் கிடைத்துள்ள உரைநூல்கள் எல்லாம் 'பாவின்று எழுந்த கிளவி'யாகும். அக்காலத்தே உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்கள் தோன்றியமையைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பது இவ்வுரைச் செய்யுள் எனப்படுகின்ற பாட்டின் இடை மிடைந்து வரும் உரைக்குறிப்பைச் சுட்டுகிறது. 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' என்பது, அக்கால மரபுப்படி கட்டுக்கதைகள். நாட்டுப்புறக் கதைகள் இங்ஙனம் தோன்றி வளர்ந்தவற்றை நன்கு அறிய முடிகிறது. 'நரை விராவுற்ற நறுமென் கூந்தல், செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ, குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி' (152–154) தலைவியைத் தேற்றினர் என்ற நெடுநல்வாடைத் தொடர், உரை என்பது கதையைக் குறிக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. 'பொருளோடு புணர்ந்த நகைமொழி' என்பதும் நீதிக் கருத்தைப் புகட்ட வரும் பஞ்சதந்திரக் கதைகள் போன்றவற்றைக் குறிக்கும் என விளக்கப்படுகிறது.

இனிக் கல்வெட்டுகளில் காணப்படும் உரைநடை தனித்தன்மை வாய்ந்ததாகும். 'மணிப் பிரவாளம்' என வடமொழி கலந்த உரைநடை ஒன்றும் தோன்றி மறைந்தது. ஆயினும் அதனால் தமிழில் வடசொற்கள் அளவின்றிப் புகலாயின. மேலை நாட்டுத் தாக்கத்தினால் தமிழில் இன்று வளர்ந்துள்ள சிறுகதை, புதினம் ஆகிய கதையிலக்கியமும் கட்டுரை இலக்கியமும் குறிக்கத்தக்கன. அறிவியல், கலையியல், தொழிலியல் மருத்துவஇயல் போன்ற பல துறை நூல்களும் இயற்றமிழில் அடங்கும் உரைநடை நூல்களாகும். இதனால் உரைநடைப் பரப்பு மிகுந்ததோடன்றி, இயற்றமிழிலும் எல்லையற்றதாய் விரிந்தது. இன்று இங்ஙனம் இயற்றமிழின் கிளைகள் எண்ணற்றனவாய் உள்ளன.

**உலக வழக்கும் செய்யுள் வழக்கும்:** உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் காணப்படுகின்ற படிப்பதற்குரிய இலக்கிய வகைமைகளின் தொகுதிகள் அனைத்தும் இயற்றமிழில் அடங்கும். பனம்பாரனார் தம் தொல்காப்பியப் பாயிரத்துள், 'வழக்கும் செய்யுளும்' என்று இதனைச் சுட்டுகிறார். உலக வழக்கு என்பது பேச்சுவழக்குத் தமிழைக் குறிக்கிறது. வாய்மொழி இலக்கியங்கள் பல இசைதழுவியன; கூத்துச் சார்புடையன. எனினும் அவை பல படிப்பு நிலையிலும் ஆய்வு நிலையிலும் இயற்றமிழுக்குரியனவாய்க் காணப்படுகின்றன. தொல்காப்பியர் குறிப்பிடும் முதுமொழி (பழமொழி), பிசி (விடுகதை) போல்வன பலவாம். இவ்வியற்றமிழுள் வந்து, கலந்து வழங்கும் சொற்களைத் தொல்காப்பியர், 'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று, அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே' (880) என்று கூறுவதனாலும் உலகவழக்குச் சொற்களுக்குரிய இடத்தை அறியலாம். அவை திசைச்சொற்கள் எனப்பட்டன. புலவர்கள் செய்யுளுக்கேற்பத் திரித்து வழங்கி, நிலைபெற்றுவிட்ட சொற்கள் 'திரிசொற்கள்' எனப்பட்டன. வடசொற்கள் என்பன தமிழில் கலந்து வழங்கிய சமசுகிருதச் சொற்களாகும். அவை தமிழ் ஒலிப்புக்கேற்ப மாற்றி வழங்கப்பட்டன. வடசொற்களை ஒலிப்பு நிலை மாற்றாது வடசொற் போலவே, தமிழினிடையே வழங்குவது எவ்வாற்றானும் பொருந்தாது. இன்றைய ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களுக்கும் இவ்விதி பொருந்தும். வழங்கும் தமிழே இயற்றமிழெனினும், அதிற் கொச்சை மொழிகளையும் திரிபு வடிவங்களையும் பயன்படுத்துதல் கூடாது.

தமிழில் 'செய்யுள்வழக்கு' என்பது ஒரு தனிப்பண்புடைய மொழியாகவே கருதி வழங்கப்பட்டது. செய்யுளில் மட்டுமே ஆளும் சொற்கள், செய்யுளுக்கு எனச் சில புணர்ச்சி இலக்கணங்கள், அதற்கெனவே சில சொன்னடை மரபுகள் எல்லாம் அமைந்ததால் தமிழில் 'செய்யுள்மொழி' என்றே ஒரு தனிவளர்ச்சியைக் காணலாம். ஆயினும் தவப்பயனாக அச்செய்யுள் மொழி விளங்காத ஒன்றாய், தனியே படித்து விளங்கிக் கொள்ளவேண்டியதாய் மிகவும் விலகிப் போய்விடாமல், உலக வழக்காற்றை ஒட்டியே இன்று வரை திகழ்ந்துவருகிறது. இங்குத் தமிழின் தனிச் சிறப்பு ஒன்று நினைவு கூர்தற்குரியது. தமிழில் என்

றுமே பேச்சுத்தமிழும் எழுத்துத் தமிழும் ஒன்றாய் இருந்ததில்லை. இதனைக் கால்டுவெல் ஐயர் தம் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் நன்கு விளக்கியுள்ளார். தொல்காப்பியர் உலகவழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்குமுள்ள வேறுபாட்டைப் பல இடங்களில் விளக்கியுள்ளார். 'வந்துட்டியா' என்ற பேச்சு வழக்கை 'வந்துவிட்டாயா?' என்றுதான் ஏட்டுவழக்கில் எழுத வேண்டும்; அவ்வாறே சிதைந்த நிலையில் எழுதக்கூடாது. இங்ஙனம் பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் ஒரு சமனிலைப் பாடு தொடர்ந்து விலகியும் விலகாமலும் இருந்து வந்தமையினாலேயே தமிழ் இன்றளவும் இருவழக்கிற்கும் பொதுமொழியாய் இயங்கி-ஒன்றை விட்டொன்று மிக விலகிப் போய்விடாமல் காத்து – 'என்றுமுளதென்றமிழாய்', 'கன்னித்தமிழாய்' இயங்கிவருகிறது. செருமன் மொழியில் பேச்சிலுள்ள வட்டார வழக்குகள் விளங்கிக்கொள்ள முடியாத அளவு விலகிநிற்பதையும் அங்குள்ள எழுத்து வழக்கு அனைவர்க்கும் புரியும் நிலையில் பொதுமொழியாய் இருப்பதையும் அறிவார்க்கு இவ்வுண்மை மேலும் விளங்கும்.

இலக்கியமும் இலக்கணமும்: தமிழில் இலக்கிய வளர்ச்சி என்பது இரண்டாயிரம் ஆண்டுப் பரப பளவு உடையது. தொன்மைத் தமிழே செவ்வியல் தமிழாய் இருப்பதனால், பல்லாயிரம் ஆண்டு வளர்ச்சி நிலை கண்டமொழி இம்மொழி எனலாம் இதிலுள்ள பாட்டுவடிவ வளர்ச்சி, பாடுபொருள் வளர்ச்சி, உரைநடைவளர்ச்சி பல்துறைவளர்ச்சி என்பன பலவும் தனித்தனியே சிந்தித்தற்குரியன.

சங்க இலக்கியம்: தொல்காப்பியம், திருக்குறள் பத்துப்பாட்டு. எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன இச் சங்க இலக்கியக் குடும் பத்திற்குள் வருகின்றன. கால ஆராய்ச்சியிற் குழப்ப மிருப்பினும், சங்கச் சாயலுடைய இலக்கியங்கள் இவை என்பது மறுக்கொணாது. ஒரு குடும்பச் சாய லுடையவையாயினும் இவற்றிடையே பொருளில், உணர்வில், வடிவில் வேறுபாடுகளும் உள. இசை, நாடகத் தனி நூல்கள் கிடைக்கப் பெறவில்லை. சிலம்பு நாடகக் காப்பியமாகவும் இசைக்கூறு மிக்க தாகவும் இலங்குகிறது. பரிபாடலில் இசை அமைப்புக் காணப்படுகிறது. பிறவெல்லாம் இயற்றமிழ் அடிப் படையினவே. தனிநிலைப் பாடல்கள், காப்பியப் பாடல்கள், அறநெறிப்பாடல்கள், இலக்கணம் ஆகிய வற்றின் வளர்ச்சிநிலைகளையும் இவற்றில் காண லாம். இப்பாடல்கள் மரபிற்குட்பட்டனவாய், திரும்ப வரும் கூறுமிக்கனவாய், மிகவுயர்ந்த பண்பாட்டின் படைப்புகளாய், வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிறந்த பொருள்களைப் பொருந்திய வடிவங்களில் தருவனவாய், செழுமை மிக்கனவாய், விழுப்பம் நிறைந்தனவாய்க் காணப்படும். இவைகள் 'செவ்வியல் இலக்கியம்' என்ற தனிச்சிறப்பைப் பெறு கின்றன. பிற்கால இலக்கியங்கள் அனைத்திலும் இவற்றின் ஆளுமைத் தாக்கத்தைக் காணலாம்.

காப்பிய இலக்கியம்: தமிழ்க்காப்பிய இலக்கியங் கள் வடமொழிக் கதைகளை ஏற்றன; அத் தாக்கத் திற்குப் பெரிதும் ஆட்பட்டன. எனினும் அவை தமிழ்மரபைக் கைவிட்டில; வடமொழி மரபையும் தமிழ் மரபுப்படுத்தியே ஏற்றன. எங்ஙனம் வடசொற் களை 'வடவெழுத்து ஒரீஇத்' தமிழ் வடிவப்படுத்தி ஏற்றனவோ அதுபோலவே கலை, பண்பாட்டு, நாக ரிக மரபுகளையும் 'தமிழ்ப்படுத்தி', தமிழ் மரபுக் கேற்ப மாற்றியே ஏற்றன. இதனால் தமிழ் மேலும் சிறப்படைந்ததேயன்றித் தாழ்மையுறவில்லை. புரா ணக் காப்பியங்கள் என்பனவும் குறிப்பிடற்பாலன: தனிப்புராண இலக்கிய வளர்ச்சியும் தலபுராண வளர்ச்சியும் இவற்றுடன் ஒருசார வைத்து எண்ணத் தக்கன. தமிழுக்கே உரிய – தமிழக நாட்டுப்புறக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட பெரியபுரா ணம், திருவிளையாடற்புராணம் போல்வன வட மொழித் தொடர்புபடுத்திப் பேசப்படினும் அவை தமிழர்தம் புராணக் கதைமரபு வளர்ச்சிக்குரியன என்பது ஆய்வாளர் துணிபு.

நீதி இலக்கியம்: தமிழில் இவ்வாறொரு வகைமை பெருவளர்ச்சி காணத் திருக்குறள் அடி கோலியது. சங்க இலக்கியத்திலேயே இதற்கான வித்துகள் தூவப்பட்டுவிட்டன. சங்கப் பிற்கால வளர்ச்சியில் இவ் வகைமை வளர்ச்சி பேரிடம் பெற் றது. இடைக்காலத்தும் பிற்காலத்தும் தொடர்ந்து வளர்ந்த இதில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போல்வன குறிப்பிடற்பாலன. தமிழ் நீதி இலக்கிய வளர்ச்சியில் சமண மதத்திற்கும் பெரும்பங்கு உண்டு. இவ் வகைமையில் வெண்பா யாப்பே பேரிடம் பெறு கிறது. ஓரடியாய் நின்றும், ஈரடியாய் வளர்ந்தும், நான்கடியாய் அமைந்தும் இதன் யாப்பு வடிவங்கள் சுருக்கமும் தெளிவும் உடையனவாய்த் திகழ்ந்தன. இயற்கையைக் காட்டி அறம்சொல்வது, கதை கூறி அறம்சொல்வது, வரலாற்றைச் சுட்டி நீதி யுரைப்பது, நீதியையே நீதிக்கு உவமையாக்கி விளக்குவது என இவ்வாறெல்லாம் நீதியுரை பாங்கு கள் தமிழில் வளர்ச்சி பெற்றன. சமுதாயம், சமயச் சார்புகளின் நீங்கிய பொதுமை அறத்தையே வலி யுறுத்துமாறு, திறக்குறள் அடிப்படையமைத்ததாய், தமிழ் நீதி இலக்கியம் உலகப் பொதுமையுணர்வுடன் சிறந்து திகழ்கிறது.

பத்திமை இலக்கியம்: தமிழில் தோன்றிய

அனைத்து வகைமைகளிலும் பத்தி இலக்கியமே மேலோங்கிநிற்கிறது. இன்று கிடைத்துள்ள நூல்களில் பரிபாடல் தொடங்கி வளர்ந்துவரும் இவ்விலக்கியம் 'கல்லைக் கனியாக்கும்' கலையில் வல்லதாய்ப் படிப்போர் நெஞ்சகத்தைக் கனிவித்து நிற்கிறது. இதனை இசைத்தமிழினுள் அமைத்துக் கூறலாமாயினும், கற்று ஆராய்ந்து பயன்கொள்ளுமாற்றால் இயற்றமிழ் எல்லைக்குள்ளும் இது வைத்துப் பேசப்படுகிறது. தனிநாயக அடிகளார், 'தமிழைப் பத்தியின் மொழி எனலாம்' எனக் கூறுயுள்ளமை இங்கு நினைக்கத்தகும்.

சிற்றிலக்கியம்: தமிழில் காணப்படும் சிற்றிலக்கிய வளர்ச்சி எண்ணிக்கை மிகுதியுடையது. நெடும் பாடல்களாகிய இவை சிறுசிறு தனிப் பாடல்களுக்கும் பெருங்காப்பியங்களுக்கும் இடைப்பட்டனவாய்க் குறுங்காப்பியங்கள் போல் திகழ்வனவாம். பிள்ளைத் தமிழ், உலா, தூது, பரணி, கலம்பகம், கோவை, அந்தாதி, சதகம் போல்வன பெருவளர்ச்சி கண்டவை. பதிகம், மாலை போல்வன பல்வேறு பிரிவுகளாகக் கிளைத்தவை. பிற பல அருகிய வளர்ச்சி கண்டவை. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்ற கருத்து அதன் பன்மை சுட்ட வந்தது. உண்மையில் இவை கணக்கற்றவையாய் உள. இவற்றை அகம் தழுவியவை, புறம் தழுவியவை, சமயம் தழுவியவை, பத்தி தழுவியவை, இன்பம் தழுவியவை என்றெல்லாம் பிரிக்கலாம். இவற்றுள் பிற்காலக் குறுநில மன்னர்களை மனம் மகிழ்விப்பதற்கெனப் பாடப்பட்ட 'அரசவைப் பாட்டுகளும்' உள.

உரை வகைகள் தமிழில் தோன்றிய உரைநூல்களும் மிகப் பல. இவை காலத்தால் மறக்கடிக்கப்படும் நிலையிலிருந்த தொன்மையான நூல்களை உயிர்ப்பித்து வாழ வைத்தவை. தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பாலம் அமைத்த சிறப்பும் இவற்றிற்கு உண்டு. சமய சாத்திர உரைகள், பத்தி நூல் உரைகள், இலக்கண உரைகள், இலக்கிய உரைகள் என இவ்வாறு இவற்றின் உள்வகைகளும் பலவாகும். இவ்வுரையாசிரியர்கள் சிறந்த திறனாய்வாளர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் விளங்கி அவ்வத் துறைகள் வளரவும் உதவி செய்துள்ளனர். இலக்கிய இன்பம் துய்த்தல் என்பதை இவர்களிடமிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும்.

சமயதத்துவ இலக்கியம் என்பது திருமூலரின் திருமந்திரம்தொடங்கிச் சாத்திர நூல்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாய் இலங்குகிறது.

இசைநாடக இலக்கியமாவது கீர்த்தனை நாடகம், விலாச நாடகம் என வளர்ந்து உரையாடல் நாடகமாய் மலர்வதால் அதிலுள்ள இயற்றமிழ்க் கூறுகளுக்காக இவண் நினைக்கத்தகுவதாகும்.

இக்கால இலக்கியம் என்பது கவிதை, கதை, புதினம், நாடகம், கட்டுரை நூல்கள் எனப் பல்வேறு திறத்ததாகும். புதுக்கவிதை என ஒன்று தனியே கிளைத்துளது. இவை தவிரச் சமய நோக்கில் சைவ இலக்கியம் என்றெல்லாம் பகுத்துக் கருதுதற்கு நிறைய இடமுளது. மேலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் எனத் தமிழ் வளரும் இடங்களை வைத்தும் பிரித்துநோக்கி, வளர்ச்சி வரலாறு காண வாய்ப்புளது.

இலக்கணம்: தமிழில் இலக்கண வளர்ச்சி தனி வரலாற்றாய்வுக்கு உட்படுமளவு விரிவுடையது. ஐந்திலக்கண நூல்கள், எழுத்து சொல் பற்றிய இலக்கண நூல்கள், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி பற்றிய தனியிலக்கண நூல்கள், பாட்டியல் நூல்கள், நிகண்டுகள், செய்யுட்கோவை நூல்கள் என இவற்றின் வகைமைகளும் பலவாகும். தொல்காப்பியரே தமக்கு முன்னோர் பலரைப் பொதுவாகக் குறிப்பிடுதலால் இவ் வகைமையின் வளர்ச்சி புலனாகும். அவரால் நன்கு அடித்தளமிடப்பட்ட இவ்வகைமை தமிழ்மரபு தழுவியது, வடமொழி மரபை ஏற்றது எனவும் இரண்டு சார்புநிலைகளில் பிரிகின்றது. யாப்பிலக்கண நூல்கள் மிகப்பலவாகத் தோன்றியமையை வரலாறு உணர்த்துகிறது. அதற்குத்தமிழ் யாப்பு வளர்ச்சியே காரணமாகும். தமிழுக்கே உரிய பொருளிலக்கணம் தமிழில் இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும் வளர வாய்ப்பளித்துள்ளது. அகம், புறம் பற்றிய இலக்கண நூல்கள் தமிழர்தம் நாகரிகப் பண்பாட்டு ஆராய்ச்சிக்கும் உதவ வல்லனவாய்த் திகழ்கின்றன.

முத்தமிழ்-பல்வகைத்தமிழ்: இயல், இசை, நாடகம் என்ற பிரிவு காலத்தால் பழைய மரபைச் சார்ந்தது. அவற்றுள் இயற்றமிழ் ஒன்றே இன்று பல்வேறு கிளைகளாய்த் துறைகளாய்ப் பிரிந்து வளர்கிறது. அறிவியல் தமிழ், மருத்துவத் தமிழ், கலையியல் தமிழ், தொழில்துறைத் தமிழ், ஆட்சித் தமிழ், சட்டத் தமிழ் என எல்லையற்று விரிகிறது. எடுத்துக்காட்டாகப் படைப்பிலக்கியத்தமிழ் சிறுகதை, புதினம், இக்காலக் கவிதை, நாடகம் ஆகியவற்குரியதாய்த் தனித்தன்மை பலவற்றுடன் வளர்க்கப்படுகிறது; அது ஆராய்ச்சித் தமிழுடன் வேறுபடுகிறது; வேறுபடுவதே முறையாகும். ஆட்சித் தமிழுக்கெனச் சில சொல்லாட்சிகள், சொன்னடைகள், வாக்கிய மரபுகள், வெளியீட்டு உத்திகள் ஆகியவை பின்பற்றப்படுகின்றன. அறிவியல்தமிழும் உலகளாவிய அதன் நிலைக்கேற்பத் தமிழ்ப்படுத்தப்பட்ட

சில உலகப் பொதுக் கலைச்சொற்களை ஏற்று, சிற்சில நெளிவுசுளிவுகளுடன் தமிழுக்கும் அறிவியலுக்கும் ஒருங்கிணைவும் ஒருமையும் ஏற்படுமாறு வளர்ந்துவருகிறது. தமிழ் ஆட்சிக்கு, தமிழ் பொறியியலுக்கு, தமிழ் மருத்துவத்திற்கு என மொழிப் பயன்பாடு பல்வேறு துறைகளிலும் வளரும் காலம் நெருங்கிவருகிறது.

இயற்றமிழின் மரபும் நடையும் பேணப்படுதல் வேண்டும். ஒருமை பன்மைப் பிழை, எழுத்துப்பிழை, சந்திப்பிழை போல்வன இன்று பல்கி வருகின்றன. தொழில் தமிழாட்சி மரபு சீர்குலைந்து வருகிறது. கல்லாதார் கல்லாதாராகவும் கற்றறிந்தார் எழுத்தாளராகவும் இயங்கி வந்ததால், தமிழுக்கு இது காறும் அதன் தொடர்புடையாரால் ஊறு நேர்ந்திலது. இதழ்களும் தாளிகைகளும் நூல்களும் வரம்பின்றித் தோன்றிவரும் இந்நாளில் மொழியைக் கல்லாரும் எழுத்தாளராகிவிடுதலால் தமிழ் ஊறுபடுத்தப்பட்டு வருகிறது. இந்நிலை மாறவேண்டும்; இயற்றமிழ் மிக விரிவுபடும் அதே சமயத்தில் அதன் செம்மையும் செறிவும் குறைவுறாவாறும் காத்துக் கொள்ளவேண்டும். இராம.பெ.

**இயன்மொழி வாழ்த்து** புறத்திணைகளுள் ஒன்றாகிய பாடாண்திணையின் துறைகளுள் ஒன்று. பாடாண் என்பது புலவரின் பாடும் வினையாகிய தொழிலையோ அவரால் புகழ்ந்து பாடப் பெறும் ஆண்மகனையோ குறிக்காது; புலவர் பாடும் புகழை விரும்பும் தலைவர் தம்முடைய அறிவு, திரு, ஆற்றல், ஈகை முதலிய பெருமிதப் பண்புகளை ஆளும் ஒழுகலாற்றைக் குறிக்கும். எனவே பாடப்பெறும் ஆண்மகனின் ஒழுகலாறு பாடாண் ஆகும். அவ்வொழுகலாற்றை உணர்த்தும் பாடாண் திணையின் துறைகள் பலவற்றுள் ஒன்றாகிய இயன்மொழி வாழ்த்து என்பதனைத் தொல்காப்பியர், 'அடுத்தூர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்து' என்று குறிப்பிட்டுள்ளார் (தொல்.பொருள்.புறம். 29). இதனை, 'வெற்றியும் குணனும் பரந்து ஏத்திய இயல்மொழி வாழ்த்து' என்பர் இளம்பூரணர். இதற்கு, 'ஒரு தலைவன் எதிரே சென்று அவனுடைய செய்திகளையும் அவன் முன்னோர் செய்திகளையும் அவன்மேல் ஏற்றிப் புகழ்ந்து வாழ்த்துவது' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறி, 'இக்குடியில் பிறந்தவர்க்கெல்லாம் இக்குணங்கள் இயல்பானவை என்றும், அவற்றை நீயும் இயல்பாகப் பெற்றுள்ளாய் என்றும், அவர்களைப் போல நீயும் இயல்பாக எமக்கு அளிப்பாய் என்றும் கூறி அவனை வாழ்த்துவது' என்று விளக்கமும் தந்துள்ளார். இவர் இத்தொடரை இயன்மொழியும் வாழ்த்தும் என்று இரண்டாகக் கொண்டு விளக்குவார். இத்துறையினைப் புறப் பொருள் வெண்பாமாலை, 'இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும், அன்னோர் போல அவை யெமக்கீயென என்னோரும் அறிய எடுத்துரைத்தன்று' என்று விளக்கியுள்ளது (புறம்.வெண்பா.194). புறநானூற்றில் இத்துறை இயன்மொழி என்று வழங்கப்படுகிறது. புறநானூற்றில் 58 பாடல்களும் பதிற்றுப் பத்தில் 5 பாடல்களும் இவ்வாறமைந்துள்ளன.

**இயா** பாபிலோனியக் கடவுள்; சுமேரியர்கள் இவரை என்கி (Enki) என்று குறிப்பிட்டனர். தென்பாபிலோனியப் பகுதியில் அமைந்துள்ள ஆரிடு என்னும் நகரில் இவர் சிறந்த தெய்வமாகக் கருதப் பட்டார். பின்னர், மெசபடோமியப் பகுதியில் சுமேரிய அக்காடிய மும்மைத் தெய்வங்களுள் மூன்றாமவராகக் கருதப்பட்டார். பிற இருவர் அனு (Anu), என்லில் என்று சொல்லப்படுவர். இயா என்ற சொல்லுக்கு நிலத்திற்கு அடியிலுள்ள தூய்மையான நீரின் கடவுள் என்பது பொருளாகும்.இவரைக் கி.மு. 2200-இலேயே மக்கள் வழிபட்டனர். உடல் நலம் குன்றியவர்களும் செப்படி வித்தை செய்பவர்களும் இயாவை (Eia) வழிபட்டனர். கலைக்கும் கைத் தொழிலுக்கும் இவர் கடவுளாகக் கருதப்பட்டார். இவரது தீரச்செயல்கள் பற்றிய கதைகள் பல உள்ளன. அறிவுக் கூர்மையாலும் திறம்பட ஏமாற்றும் வீரத்தாலும் இவர் பல அரிய செயல்களைப் புரிந்துள்ளார். பிற்காலத்தில் இவர் பாபிலோனியக் குறியுரையின் கடவுளாகக் கருதப்படுகின்றார். இவர் உருவம்பாதி மீன் போன்றும் பாதி வெள்ளாடு போன்றும் காணப்படும் பெரிய உடலமைப்பைக் கொண்டது.

**இயாகோபு சாமுவேல்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் 'ஆதாம் ஏவாளின் விலாசம் அல்லது பேரின்ப லீலா சிங்காரி' என்னும் நூலை எழுதியுள்ளார். அந்நூல் கி.பி. 1885-இல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அது ஆதாம் ஏவாளின் வரலாற்றைக் கூறுவது. அது செய்யுளிலும் உரைநடையிலும் அமைந்துள்ளது.

**இயூகநாட்டுகள்:** பிரான்சு நாட்டில் உள்ள மறுப்புரையாளர் இனத்தவர் இயூகநாட்டுகள் (Huguenots) என்று குறிக்கப்பட்டார்கள். தொடக்கக் காலத்தில் இச்சமயத்தினரின் பலம் பிரபுக்கள் வசம் இருந்தது. இதில் குறிப்பிடத்தக்கவர்கள் நவார் (Navarre) நாட்டைச் சேர்ந்த அந்தோணியும் கோண்டி (Conde) இளவரசரும் ஆவார்கள். இருந்த போதும் கோலிக்னியின் (Coligny) இராணுவ நடவடிக்கைகளும் காலத்திற்கேற்ற நடிப்பும் அவனுடைய புகழுக்குக் காரணமாக அமைந்தன.

பிரான்சில் பெருவாரியாக இருந்த கத்தோலிக்கர்களுக்கும் இயூகநாட்டுகளுக்கும் அடிக்கடி சண்டைகள் நடைபெற்றன. முதலிற் போரில் எலிசபெத்து அரசி மறுப்புரையாளர்கட்குச் (Protestants) சிறிது உதவினார். அவர் செய்த உதவி பலனளிக்காது போகவே அரசியார் மீண்டும் உதவி செய்ய மறுத்துவிட்டார். எனவே கத்தோலிக்க இனத்தவரும் இயூகநாட்டுகளும் பிற நாட்டின் உதவியை நாடினார்கள். குறிப்பாக இயூகநாட்டுகள் செருமனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிடமிருந்தும், கத்தோலிக்கர்கள் இசுபெயின் நாட்டிடமிருந்தும் உதவியை நாடினர். நவார் நாட்டு அரசரும் கோண்டி அரசரும் போரிலிருந்து விலக்கப்பட்டார்கள். ஆனால் கி.பி. 1570-ஆம் ஆண்டு இயூகநாட்டுகள் உயிரிழக்கும் தறுவாயில் செருமெயின் அமைதி உடன்படிக்கை (Peace of St.Germain) ஏற்பட்டது. போர்க்காலத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைகளுள் இது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வுடன்படிக்கை மன உணர்வுகளுக்கு மதிப்பும் வழிபாட்டுச் சுதந்திரமும் வழங்கி, அரசு அலுவலகங்களுக்குத் தேர்வு முறையில் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொணர்ந்தது.

இயூகநாட்டுகளுக்குப் பல்கலைக் கழகங்களிலும் பொதுப்பணித் துறைகளிலும் உரிய உயர்நிலை வழங்கப்பட்டது. இது இயூகநாட்டுகளின் நிலைமையை மேம்படுத்திச் சமயப் பொறைக்கு அடிகோலியது.

இயூகநாட்டுகளின் வரலாற்றில் கி.பி. 1570-1572-க்கு இடைப்பட்ட காலம் கருத்துவேறுபாடுகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. ஒன்பதாம் சார்லசு பிரான்சிசு புதிய கொள்கையை உருவாக்கத் திட்டமிட்டார். கோலிக்னியின் தன்னலமற்ற தொண்டும் தியாக மனப்பான்மையும் சார்லசைக் கவர்ந்தன. ஆனால் அரசி காத்தரையனுக்கு (Catherine) கோலிக்னியின் முன்னேற்றம் பிடிக்காததால் அவரைக் கொல்லச் சதிசெய்தார். எனினும் கோலிக்னி பிழைத்துக்கொண்டார். இயூகநாட்டுகள் இது குறித்து விசாரணை நடத்தக் கோரினர். ஆனால் அரசி சமய வெறிபிடித்த பாரிசு மக்களை இயூகநாட்டுகளுக்கு எதிராகத் தூண்டிவிட்டார். இக்கலவரத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இயூகநாட்டுகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். இயூகநாட்டுகள் மோசமான நிலையை அடைந்தனர். இக்கலவரம் குறித்து ஐரோப்பாவில் பொதுவாகக் குறை கூறப்பட்டது. இதற்கிடையில் கி.பி. 1573-ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. ஒன்பதாம் சார்லசுக்கு பிறகு வந்த மூன்றாம் என்றி(Henry III) தொடக்கத்தில் இயூகநாட்டுகளுக்கு எதிராகச் செயற்பட்டாலும் தீவிரமான சமயக் கொள்கையைப் பின்பற்றவில்லை.

போர் அமைதி உடன்படிக்கையுடன் முற்றுப் பெறாது மீண்டும் தொடர்ந்தபோது நிலைமை மாறி புதிய சக்திகள் தோன்றலாயின. நாட்டின் நலத்தில் அக்கறை கொண்டவர்கள் 'அரசியல் வல்லுநர்கள்' (Politicians) என்ற கட்சியைத் தோற்றுவித்தனர். அவர்கள் சமயப் பொறையின் அடிப்படையில் அரசை உருவாக்கத் திட்டமிட்டனர். அப்போது என்றி (பின்னர் நான்காம் என்றி என அழைக்கப்பட்டவர்) நவார் நாட்டில் மறுப்புரையாளர் சமய இனத்தவரின் தலைவரானார். அதன்பின் பிரான்சு நாட்டின் வாரிசு குறித்து இயூக நாட்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால், கத்தோலிக்கலீகு ஏற்பட்டது. இந்த லீகு மறுப்புரையாளர் பிரிவைச் சார்ந்த என்றியை அரசராகாமல் தடுக்க முற்பட்டது.

நான்காம் என்றி பிரான்சு நாட்டின் பூர்பன் மரபு அரசராகக் கி.பி. 1589-இல் முடிசூட்டிக் கொண்டார். இவர் மறுப்புரையாளராக இருந்தவர். நாட்டில் அமைதி நிலவவேண்டுமெனில் தாம் கத்தோலிக்கராக மாறவேண்டும் என்பதன் தேவையை உணர்ந்த என்றி 1593-இல் கத்தோலிக்கராக மதம் மாறினார். இதன் விளைவாக அரசராக முடிசூட்டிக் கொண்ட இவரின் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரான்சு நாட்டு நகரங்கள் இவரை வரவேற்றன.

என்றி கி.பி. 1598-இல் நாண்டெசு கட்டளைகளை(Edicts of Nantes)ப் பிறப்பித்தார். இவ்வாணை பிரெஞ்சு மறுப்புரையாளர்களான இயூகநாட்டுகளுக்குப் பல்வேறு உரிமைகளையும் சலுகைகளையும் அளித்தது.

நாண்டெசு கட்டளைகள்: இக்கட்டளைகள் வரலாற்றில் சிறப்புமிக்கவையாகக் கருதப்படுகின்றன. சமயப் பொறையை ஏற்றுக்கொண்டு அதன் அடையாளமாக ஐரோப்பாவின் பெரிய நாடுகளுள் ஒன்றான பிரான்சு முதன் முதலாக இதனைப் பிறப்பித்துப் புகழ்பெற்றது. நான்காம் என்றி இக்கட்டளைகளை நாண்டெசு (Nantes) என்னும் நகரத்தில் கி.பி. 1598-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13-ஆம் நாள் பிறப்பித்துக் கையொப்பமிட்டார். இதன் பயனாகப் பிரெஞ்சு இயூகநாட்டுகளுக்கு முழு வழிபாட்டுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஏறத்தாழ 75 நகரங்களில் மறுப்புரையாளரான இயூகநாட்டுகளுக்கு இச் சுதந்திரமளிக்கப்பட்டது. குடிமக்கள் என்னும் அளவில் இயூகநாட்டுகளுக்குக் கத்தோலிக்கர்களுக்குக் கிடைத்த அனைத்து உரிமைகளும் சமமாகக் கொடுக்கப்பட்டன.

இயூகநாட்டுகள் கி.பி. 1629-ஆம் ஆண்டுக்குப்பின் அரசியல் துறையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள். பிரான்சு நாட்டின் தொழில் வளர்ச்சி, வெளிநாட்டு வாணிகம், உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றில் இயூகநாட்டுகள் மிகுந்த பங்கு வகித்தனர். உலூயியின் தொடக்கக் கால ஆட்சியின்போது கொண்டு வரப்பட்ட சில ஆணைகள் இயூகநாட்டுகளின் சமயத் தொடர்பான நடவடிக்கைகளைத் தடைசெய்தன. இயூகநாட்டுகளின் கருத்துரைக் கூட்டங்கள் தடை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தண்டனையும் வழங்கப் பட்டது. கத்தோலிக்கச் சமயத்திற்கு மாறிய இயூக நாட்டுகளுக்கு மிகுதியான சலுகைகள் கொடுக்கப் பட்டன. தங்களுடைய மதக் கொள்கையை மாற்றிக் கொள்வவற்காகச் சிலருக்குக் கையூட்டுக் கொடுக்கப் பட்டது. காலப்போக்கில் இயூகநாட்டுகளுக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அனைத்து இயூகநாட்டுகளும் கி.பி. 1681-ஆம் ஆண்டு அலுவலகப் பணிகளிலிருந்து விலக்கப்பட்டார்கள். ஏழுவயதைத் தாண்டிய அவர்களுடைய குழந்தைகள் அனைவரும் கத்தோலிக்கச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள். இதற்காக அவர்களுக்குப் பணம் கையூட்டாகக் கொடுக்கப் பட்டது. இச்செய்கை பல துறைகளில் ஊழல்களை உருவாக்கியது. இயூகநாட்டுகளின் பள்ளிக்கூடங்கள், கிறித்தவக் கோயில்கள் போன்றவை மூடப்பட்டுச் சமய குருமார்கள் தங்களுடைய கொள்கைகளைப் போதிக்க முடியாதபடி தடை செய்யப்பட்டனர். இதன் விளைவாக ஆயிரக்கணக்கானவர்கள் பிரான்சு நாட்டை விட்டு வெளியேறி, இங்கிலாந்திலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் குடியேறினார்கள். இதனால் பிரான்சு நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப் பட்டது. இக்குடியேற்றத்தைத் தடுக்கக் கி.பி. 1682-ஆம் ஆண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இயூக நாட்டுகள் பெரிதும் தண்டிக்கப்பட்டனர். முறை கேடற்ற வகையில் தற்காப்பற்ற பெண்டிரும் குழந்தைகளும் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். இன்னல்களைப் பொறுக்கமுடியாத எஞ்சிய இயூக நாட்டுகள் அனைவரும் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாறினர். அதன் பிறகு நாண்டிசு (Nantes) ஆணைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இயூகநாட்டுகளின் கிறித்தவக் கோயில்கள் மூடப்பட்டு, அவர்களுடைய சமய வழிபாடு தடைசெய்யப்பட்டது. அமைச்சர்கள் நாடு கடத்தப்பட்டனர். பலர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

சொல்லொணாச் சமயக் கொடுமைகளுக்கு இடையிலும் சில இயூகநாட்டுகள் தங்களுடைய சமயக் கொள்கைகளிலிருந்து மாறவில்லை. ஆணைகளை மீறியும் சிலர் தப்பித்துச் சென்றனர். பிடிபட்டோர் படகிழுக்கும் அடிமைகளாக வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டார்கள். இவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை இரண்டரை இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்குடியேற்றத்தால் பிரான்சின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததோடு படை வலிமையும் குன்றியது. இயூகநாட்டுகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஏற்பட்ட வெறுப்பு, மனக்குறை காரணமாக மேலும் ஒரு படையை நிருமாணிக்க உலூயிக்குத் (Louis) தேவை ஏற்பட்டது.

வெளிநாட்டிற்குக் குடிபெயர்ந்த இயூகநாட்டுகள் பிரடெரிக்கு வில்லியத்தால் ஆதரிக்கப்பட்டு, பாட்சுடம் (Potsdam) ஆணையின்படி பிராண்டன்பர்கில் (Brandenborg) தங்குவதற்கு இடம் பெற்றார்கள். இதனால் பிராண்டன்பர்கின் மக்கள் தொகை பெருகியதோடன்றி அந்நாட்டின் வேளாண்மை, தோட்டக்கலை, கம்பளி உற்பத்தி, அறிவியல் போன்ற கலைகள் வளர்ச்சி அடைந்து, பிராண்டன்பர்கு ஒரு படை பலம் மிக்க நாடாக மாறியது.

இயூகநாட்டுகளுக்கு எதிராகக் கி.பி. 1648-ஆம் ஆண்டுக்குப் பிறகும் பிரான்சு நாட்டு அரசர்கள் எடுத்த நடவடிக்கைகள் வில்லியம் பிரெடரிக்குடன் பகைமையை வளர்த்தன. இயூகநாட்டுகள் தச்சுக் காரர்களுடன் (Dutch) உறவு மேற்கொண்டமை ஆக்சுபர்கு கழகம் (League of Augsburg) உருவாகக் காரணமாக அமைந்தது. பதினான்காம் உலூயிக்குப் பிறகு, அவருடைய ஒன்றுவிட்ட பேரன் பதினைந்தாம் உலூயி ஆட்சிக்கு வந்தான். அப்பொழுது ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட பிலிப்பு இயூக நாட்டுகளுக்கு ஆதரவு தந்தார். பன்னிரண்டாம் சார்லசு கி.பி. 1767-ஆம் ஆண்டு சுவீடனில் புகழ் பெற்று விளங்கியபோது, பதினான்காம் உலூயி அவருடன் நட்புறவு கொள்ள முயற்சி செய்தார். ஆனால் இயூகநாட்டுகளுக்கு எதிராகப் பிலிப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவருடன் உறவு வைத்துக் கொள்ள சார்லசு முன்வரவில்லை. இரா.கி.

துணை நூல்கள்:

**Southgate**, G.W., A Text Book of Modern European History, 1643-1848, J.M. Dent and Sons Ltd, London.

**Grant**, A.J., Europe - The Story of the Last Five Centuries, Longmans, Green and Co., London.

**இயூரன் ஏரி**: வட அமெரிக்காக் கண்டத்தின் பெரும் ஏரிகளுள் இது இரண்டாவது. கனடா நாட்டு அண்டாரியோ மாநிலத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டு மிச்சிகன் மாநிலத்திற்கும் இடையில் இவ் ஏரி

அமைந்துள்ளது. இதன் பரப்பு 59,596 ச.கி.மீ. ஆகும். இதன் நீளம் 330 கி.மீ. அகலம் 295 கி.மீ. ஆகும். இவ்வேரியின் ஆழம் ஏறக்குறைய 60 மீ. இந்த ஏரி கடல் மட்டத்திற்கு மேல் 177 மீ. உயரத்தில் அமைந்துள்ளது.

இயூரன் ஏரி (Huron Lake) புனித மேரி ஆற்றினால் சுப்பீரியர் ஏரியுடன் இணைக்கப்படுகிறது; மெக்கிநாக்கு (Mackinac Straits) நீர்ப்பிரிவின் மூலம் மிச்சிகன் ஏரியுடன் இணைகிறது. புனித கிளாயர் ஆறு (Clair River), புனித கிளாயர் ஏரி, தெட்ராய்ட்டு ஆற்று அமைப்புகள் (Detroit System) ஆகியவற்றின் வழியாக இது ஈரி ஏரியுடன் (Lake Erie) இணைகிறது.

இயூரன் ஏரியின் கடற்கரைகளும் அதன் தரம் மிகுந்த தண்ணீரும் இயற்கை அழகுமிக்கவை. இந்த ஏரியில் நிறைய தீவுகள் உள்ளன. புனித இலாரென்சு கடல்வழி அமைப்பின் பாகமாகவுள்ள இதில் பெருங்கடலில் செல்லும் கப்பல்களையும் ஏரியில் செல்லும் கப்பல்களையும் காணலாம். குளிர்காலங்களில் நீர் உறைந்து பனிக்கட்டியாகி விடுவதால் கப்பற்பயணம் இவ்வேரியில் தடைபடுவதுண்டு. இயூரன் ஏரியைக் கி.பி. 1615-இல் கண்டுபிடித்த முதல் வெள்ளையர் சாமுவேல் டி சாம்பிளெயின் (Samuel de Champlain) என்பவராவர்.

இயூரன் ஏரிப்பகுதியில் செய்பொருள்களின் மூலம் 80 விழுக்காடு வருவாய் கிட்டுகிறது. சுரங்கத் தொழில், வேளாண்மை, காட்டுப்பொருள்கள், மீன் பிடித்தல் போன்றவற்றாலும் பொழுதுபோக்கவரும் பயணிகளாலும் எஞ்சிய 20 விழுக்காடு வருமானம் கிடைக்கிறது. இப்பகுதியில் ஏறத்தாழ 20 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவ்வேரியில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சொந்தமான ஏழு ஆழ்கடல் துறைமுகங்களும், நான்கு கனடா நாட்டுக்குச் சொந்தமான துறைமுகங்களும் உள்ளன. பிளிண்டு (Flint), மிட்லாந்து (Midland), பே சிட்டி (Bay City), சாகிநா (Saginaw), மிச்சிகன் (Michigan) போன்றவை இதன் கரையிலுள்ள சிறப்பான நகரங்கள். சர்னியா (Sarnia), அண்டாரியோ (Ontario) போன்றவை சிறப்பான தொழிற்சாலை மையங்களாகும்.

புனித இலாரென்சு கடல்வழி 1958-இல் அமைக்கப்பட்டு முடிந்த பின்னர், இயூரன் ஏரிக்கரைத் துறைமுகங்களும் ஏனைய பெரும் ஏரிகளும் அட்லாண்டிக்குப் பெருங்கடலுடன் இணையும் வழியை ஏற்படுத்தியுள்ளன. பெருங்கடல் வழிச் செல்லும் கப்பல்கள் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் உணவுத்தானியங்களை ஏற்றிச்செல்கின்றன. பெரும் ஏரிகளுக்குள்ளும் பெரும் கப்பல்கள் இரும்புத்தாது, தானியம், கற்கள், நிலக்கரி போன்றவற்றை ஏற்றிச் செல்கின்றன. பெட்ரோலியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் எண்ணெய்க் கப்பல்களையும் இங்குக் காணலாம்.

உரேனியம், தங்கம், வெள்ளி, பித்தளை, உப்பு, சுண்ணாம்புக்கல், மணல், கூழாங்கற்கள் போன்ற கனிமங்கள் இயூரன் ஏரிவடிநிலத்தில் கிடைக்கின்றன. பல்வேறு மரவகைகளும் பால்பண்ணைப் பொருள்கள், கால்நடைவளர்த்தல், பீட்சர்க்கரை, பீன்சு, உருளைக் கிழங்கு போன்றவையும் மிகுதியாகக் கிடைக்கின்றன. சில இடங்களில் மிகுதியாக மீன் கிடைக்கிறது.

இயூரன் ஏரியில் அச்சம் விளைவிக்கும் புயற்காற்றுகளும் வீசுவதுண்டு. இயூரன் என்னும் பெயரில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு மாவட்டமும் ஒரு சிற்றூரும் உள்ளன.

**இயேசு காவியம்** என்னும் நூலினைக் கவிஞர் கண்ணதாசன் தமிழ் உலகிற்குப் படைத்தளித்துள்ளார். இதனை இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ்க் கிறித்தவ இலக்கியமாகக் கொள்ளலாம். இயேசு கிறித்துவின் வரலாற்றைக் கிறித்தவர்களின் வேதமாகிய 'புனித வேதாகமம்' (Holy Bible) தனது புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளது. கிறித்தவர்களின் வேதம் இருபகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி கிறித்து பிறப்பதற்கு முன்னுள்ள வரலாற்றுச் செய்திகளைக் கூறுவது. இதனைப் பழைய ஏற்பாடு (Old Testament) என்று கூறுவர். கிறித்துவின் பிறப்பும் வாழ்வும் வரலாறும் அவர்தம் தொண்டர்களின் பணியும் புதிய ஏற்பாட்டில் (New Testament) சொல்லப்பட்டுள்ளன. கிறித்தவ வேதாகமம் முதற்கண் எபிரேய (Hebrew)மொழியில் எழுதப்பட்டு, இருநூற்றுக்கும் மேலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிறித்துவின் அடியார்களுள் ஒருசிலரான மத்தேயு (St. Mathew), மாற்கு (St. Mark), உலூக்கா (St. Luka), யோவான் (St. John) ஆகியோர் கிறித்துவின் வரலாற்றை எழுதியுள்ளனர். இவர்கள் எழுதிய கிறித்துவின் வரலாறு கிறித்தவ வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்திப்பகுதிகளாக உள்ளன.

தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் பலவும் கிறித்துவின் வரலாற்றைக் கிறித்தவ வேதாகமத்தின் அடிப்படையில் பாடியுள்ளன. அவற்றுள் சிலவாகத் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், திருவவதாரம், சுடர்மணி, வாழ்வளிக்கும் வள்ளல் முதலானவற்றைக் குறிப்பிடலாம். கிறித்தவ சமயத்தைச் சாராத பிற சமயப் புலவர்களும் கிறித்துவின் வரலாற்றைப் பாடியுள்ளனர். அவர்களுள் ஒருவரான கவிஞர் கண்ணதா

சனால் எழுதப்பட்ட 'இயேசு காவியம்' தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் தனிச் சிறப்பிற்குரியவொன் றாகும். இக்காவியம் எளிய இனிய சந்தங்களைக் கொண்டு கவிதையுணர்வு மிக்கதாய், தமிழ்ச்சுவை யும் மரபும் இலங்குவதாய்ப் படைக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் முயற்சியால், திருச்சிராப்பள்ளி கலைக்காவேரியினரால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கிறித்தவ வேதாகமத்தின் நான்கு நற்செய்திப் பகுதிகளே இந்நூலுக்குப் பெரி தும் அடிப்படையாக அமைந்துள்ளன. ஐந்து பாகங் களைக் கொண்டுள்ள இந்நூலின் முதற்பாகம் கிறித் துவின் பிறப்பினையும், இரண்டாம் பாகம் கிறித்து தம்மை இறைவன் தொண்டிற்கு ஆயத்தம் செய்து கொண்ட முறையினையும், மூன்றாம் பாகம் சமுதாய வாழ்வில் கிறித்து ஈடுபட்டுச் செய்த சாதனை போதனைகளையும், நான்காம் பாகம் கிறித்துவின் சிலுவைப்பாடுகளையும், ஐந்தாம் பாகம், கிறித்து உயிர்த்தெழுந்த செய்தியையும் கூறுவனவாக அமைந்துள்ளன. இவ்வைந்து பாகங்களும் நூற்று நாற்பத்தொன்பது தலைப்புகளில் பாடப்பட்டுள்ளன.

கவிஞர் கண்ணதாசனே 'இயேசு காவியம்' என இந்நூலுக்குப் பெயரிட்டதும், அவர் பாடியவற்றுள் இதுவே இறவாக் காவியம் என்னும் சிறப்புக்குரியது எனக் குறிப்பிட்டுள்ளதும் நினைத்தற்குரியன. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் வாயிலாகக் கிறித்து பெருமானின் நற்செய்தி யினைப் பரப்புந் தொண்டு செய்யும் கலைக்காவேரி யினர் இயேசு காவியத்தினை அழகியதொரு நூலாக 1981-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். மீண்டும் மக் கள் பதிப்பாக 1985-ஆம் ஆண்டு இது வெளியிடப் பட்டுள்ளது. கவிஞர் கண்ணதாசன் குற்றாலத்திலும் திருச்சியிலும் பலநாள் தங்கி, கிறித்தவ இறையிய லறிஞர் பலர் உடனிருந்து துணை செய்ய, இந்நூலை இயற்றினார். பின்னர் அறிஞர் குழு திருச்சியில் மும் முறை கூடி எட்டுநாள்கள் காவியத்தை ஆராய்ந்து திருத்தங்கள் கூற, கவிஞர் தேவைப்பட்ட திருத்தங் களைக் காவியத்தில் செய்து தந்தபின் பதிப்பிக்கப் பெற்றது. கிறித்தவ வேதாகமச் செய்திகளுக்கு முரணாக எந்தவொரு செய்தியும் இந்நூலில் இடம் பெறவில்லை. கிறித்துவின் வரலாற்றைப் பல்வேறு தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் பாடியிருப்பினும், கிறித்தவ சமயத்தைச் சாராத கவிஞர் கண்ணதாசன் எழுதிய இக்காப்பியம் தமிழ் மரபோடும் தமிழ் உணர்வோடும் விளங்குவதால் கற்போர் மனத்தைத் தமிழ்ச்சுவையோடும் பிணிக்கும் ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகிறது.

கிறித்துவைக் குறித்துப் புனித யோவான் (St. John) என்னும் நற்செய்தியாளர் புதிய ஏற்பாட்டி லுள்ள தமது நற்செய்தியில், 'ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்தவார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்; உண்டானதொன்றும் அவரா லேயல்லாமல் உண்டாகவில்லை' (பரி. யோவான் 1:1-2) எனக் குறிப்பிட்டுள்ளார். இயேசு காவி யம் இச்செய்தியை,

'ஆதியில் இருந்தார் அவர் பெயர்வாக்கு,
ஆண்டவ ருடனே அவர்தாம் இருந்தார்,
ஆண்டவராகவும் அவரே இருந்தார்'

எனப்பாடியுள்ளது. மேலும், புனிதயோவான்

'அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்' என எழுதியுள்ளதை, 'வாக்கு மலர்ந்து மனுவுருவானார்' என இயேசுகாவியம் சுருக்கமாகக் கவிதை நலந்தோன்ற வும் சுவைபடவும் கூறியுள்ளது. கிறித்துவின் பிறப்புக் குறித்துப் பல்வேறு கிறித்தவ இலக்கியங்கள் பாடி யுள்ளன. தமிழ்க் கிறித்தவக் கவிஞருள் ஒருவராகிய தஞ்சை வேதநாயக சாத்திரியார்,

'வானம் பூமியோ பராபரன் மானிடர்
ஆனாரோ—ஆ! என்னவிது
வானம் பூமியோ பராபரன் மானிடர்
ஆனாரோ'

(கிறித்தவக் கீர்த்தனைகள் – 27)

என வியந்து மகிழ்ந்து பாடியுள்ளார். இயேசு காவியத்திலும் கிறித்துவின் பிறப்புக் காட்சி இடம் பெற்றுள்ளது. மனித உருவெடுத்துக் குழந்தையாய்ப் பிறந்த கிறித்துவைத் தம் கண்களால் கண்டு களித்த இடையர்களின் மனநிலையைச் சிறிதும் மாறுபடாது இயேசு காவியம்,

மின்னலின் பிழம்பாய் மேனிவடித்துத்
தண்ணொளி பரப்பும் தகைசால் மைந்தனைக்
கண்ணால் கண்டு களித்தனர் ஆயரே

(இயேசுகாவியம், ப. 23)

எனப் பாடியுள்ளது.

கிறித்துவின் அன்னை மரியாளை அறிமுகம் செய்யும் இயேசுகாவியப் பகுதி படித்து மகிழ்தற் குரியவொன்றாகவுள்ளது.

'நிலவெனும் வதனம் நெற்றி
நெடுமழை அனைய கூந்தல்,
மலரெனும் கண்கள் கைகள்
மரியம்மை அழகின் தெய்வம்' என்று

(இ.கா.ப. 10)

கண்ணதாசன் சித்திரித்துக் காட்டும் மரியாள் பற்றிய சொல்லோவியத்தில் அவர்தம் கவிவண்ணம் வெளிப் படுகிறது.

கிறித்துப்பெருமான் ஆற்றிய மலைப்பொழிவு கிறித்தவ சமயத்தின் உயிர்நாடிக் கொள்கைகள் எனக் குறிப்பிடற்குரியது. கிறித்தவ சமயக் கோட் பாடுகள் பலவும் அடங்கியது இப்பகுதியாகும். உலகப் பெரும் அறிஞர்கள், தத்துவவாதிகள், சமுதாய அரசியல் தொண்டர்கள் ஆகியோரின் மனங்களைப் பிணித்த கிறித்தவ நற்செய்தி என மலைப் பொழிவு குறிப்பிடப்படுகிறது. இது கவிஞர் கண்ணதாசனின் மனத்தைப் பெரிதும் ஈர்த்த பகுதியாகவும் உள்ளது. எனவே இயேசுகாவியத்தில் உயிரோட்டம் மிக்கு விளங்குவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

பிறன்மனை நோக்காப் பேராண்மையை வள்ளுவம் சிறப்பித்துப் பாடியுள்ளது. கிறித்துப்பெரு மான் தம் மலைப்பொழிவில் விபசாரம் என்பது குறித்த புதிய கருத்தோட்டத்தினை வெளிப்படுத்தி யுள்ளார். 'விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்; ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று' (மத்தேயு, 5:27-28) என்பது கிறித்து வின் போதனையாகும். இதனை இயேசு காவியம்,

'அபசாரம் எது? கண்ட பெண்ணை எல்லாம்,
ஆசையுடன் நோக்குவதேயன்றோ? நாட்டில்,
விபசாரம் என்பதிலே இதுவும் சேரும்
வெறும்மோகம் தீர்ந்துவிட்டால் அதுவும் நிற்கும்'
(இ.கா.ப.100)

எனப் பாடியுள்ளது.

இறைவழிபாடு என்பது குறித்து அறிவுறுத்திய கிறித்து ஆரவாரத்துடன் செய்யும் வழிபாடு பயனற்றது; விளம்பரத்தோடு செய்யும் எச்செயலின் பயனும் அதனுடன் தீர்ந்துவிடும்; மேலும், அது கடவுளுக்கு உகந்ததுமன்று; பிறருக்கு உதவும் பொழுது வலக் கை செய்வது இடக் கைக்குத் தெரி யாது இருத்தல் வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும், இறைவனிடத்தில் மக்கள் மன்றாட வேண் டிய முறையினையும் கற்பித்துள்ளார்.

'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக' எனத் தொடங்கிக் கிறித் தவப் பெருமக்கள் மேற்கொள்ளும் இப்பிரார்த் தனையைப் பலரும் அறிவர். இதனைச் செய்யுள் நடையில் அழகு தமிழில் இயேசுகாவியம்,

'வானிலே அரசுகொண்ட வடிவுடை எங்கள்
தந்தாய்,
மண்ணிலே உமதுநாமம் மாபெரும் புனிதம்
போற்றி!' எனத்தொடங்கி
'தந்தையே போற்றி போற்றி! தர்மமே
போற்றி போற்றி!
சிந்தையில் நிலைத்த எங்கள் சீவனே
போற்றி போற்றி!'

என முடித்துக்காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது.

இயேசுகாவியம் தமிழ் இலக்கிய வானிலே சுடரொளி வீசும் ஒரு விண்மீன்; கவிஞர் கண்ண தாசனின் புகழுக்கு மேலும் மெருகூட்டும் ஒரு பேரிலக்கியம்; கிறித்தவரல்லாதோரும் படித்து மகிழ்ந்து போற்றுதற்குரிய கருவூலம்; இறை நம்பிக் கையைத் தோற்றுவித்து வளர்த்தற்குரிய ஒரு பக்தி இலக்கியம். ப.ச.ஏ.

துணை நூல்கள்:

கண்ணதாசன், இயேசுகாவியம், கலைக்காவேரியினர், திருச்சிராப்பள்ளி, 1981.

கிறித்தவக் கீர்த்தனைகள், கிறித்தவ இலக்கியசங்கம், சென்னை, 1985.

**இயேசு கிறித்து**: இயேசு கிறித்து தேவ குமாரன் என்றும் மனிதர்களைப் பாவங்களிலிருந்து காப்பாற்றுவார் என்றும் கிறித்தவர்கள் நம்பு கின்றனர். புதிய ஏற்பாட்டிலிருந்து(New Testament) இயேசுவைப் பற்றிய செய்தி கிடைக்கிறது. பவுல் (Paul) எழுதிய சில கடிதங்களிலிருந்து இயேசுவின் வரலாறு மக்களுக்குத் தெரிய வருகிறது. விவிலிய நூலில் தலைமாணவர்களான மத்தேயு (Mathew), மாற்கு (Mark), உலூக்கா (Luke), யோவான்(John) முதலியவர்களுடைய ஏடுகளிலிருந்து இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ளலாம். உரோமானிய எழுத் தாளர்களான தாசிட்டசு (Tacitus), சுடோனியசு (Suetonious), பிளினி (Pliny) என்பவர்களிடமிருந்தும் சில கருத்துகள் தெரிய வருகின்றன.

பாலசுதீனம் (Palestine) யூதர்களின் (Jewish) சொந்த நாடாகும். ஏரோது (Herod) காலத்தில் இயேசு பிறந்தார்; அவருடைய காலத்தில் நாடு நன்றாக இருந்தது. எருசலேமில் (Jerusalem) உள்ள கோயிலைத் திரும்பக் கட்டினார். யூதேயாவும் (Judea), சமாரியாவும் (Samaria) உரோமன் ஆட்சி யின் கீழ் இருந்தன. உரோம் நாட்டு அரசர் யூதர் களுக்குக் (Jews) கட்டுப்படுத்திய சுய ஆட்சி உரிமை அளித்தார்.



இயேசு கிறித்து

யூதர் வினைமுறைக் கோட்பாடுகளின் தொகுதி அல்லது யூதர் வினைமுறைகள் பலமாக அமைந்திருந்தன. முக்கிய மதத் தொடர்பான குழுவினர் பரிசேயர்கள் (Pharisees), சதுசேயர்கள் (Sadducees), எசனேயர்கள் (Essenes) எனப்பட்டனர்.

பரிசேயர்கள் தேசீய நம்பிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். பழைய ஏற்பாட்டில் கூறிய நம்பிக்கைகளை ஏற்றார்கள். இறந்த பிறகு ஒரு வாழ்வு இருக்கிறதென்பதை நம்பினார்கள். சதுசேயர்கள் என்பவர்கள் பணக்காரர்கள். அவர்கள் எருசலேமிலுள்ள கோயில்களைத் தங்களிடம் வைத்திருந்தார்கள். எசனேயர்கள் என்பவர்கள் மதத்தொடர்பான சகோதரர்கள். அவர்கள் மக்களிடம் இருந்து விலகி வாழ்ந்தார்கள். அவர்கள் இறைவனின் தூதனாலே ஒரு சிறந்த முன்னேற்றமான சமுதாயம் அமைக்கப்படும் என்று நம்பினார்கள்.

விவிலியம் இயேசுவின் பிறப்பைப் பற்றி இரண்டு விதமாகக் கூறுகிறது. ஒன்று மத்தேயுவின் ஏட்டிலும், மற்றொன்று உலூக்காவின் ஏட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இயேசுவின் தாய் மேரியை யோசப்பிற்குத் திருமணம் புரிய ஏற்பாடு செய்திருந்தார்கள். அவள் கன்னியாக இருக்கும் பொழுதே இறைவனின் அருளால் கருத்தரித்தாள். இயேசு பெத்தலேகேம் (Bethlehem) என்ற ஊரில் பிறந்தார். உலூக்கா இயேசு மாட்டுக் கொட்டிலில் பிறந்தார் என்றார். கிழக்கே இருந்து மனிதர்கள் ஒரு நட்சத்திரம் வழிகாட்ட இயேசுவைப் பார்க்க வந்தார்கள். வரும்பொழுது தங்கமும் விலை உயர்ந்த வாசனைப் பொருள்களும் கொண்டு வந்தார்கள். ஆனால் ஏரோது அரசன் இயேசுவைத் தன் பகைவனாக நினைத்துக் கொலை செய்யத் திட்டமிட்டான். அவனிடமிருந்து தப்புவதற்காக மேரியும் யோசப்பும் எகிப்திற்குச் சென்றார்கள். ஏரோது இறக்கும் வரையிலும் இறந்தபின்பும் அவர்கள் வரவில்லை. மத்தேயு கூறியபடி ஏரோது இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் இயேசு பிறந்தார்.

கலிலேயா (Galilee) என்னும் மலைப் பிரதேசத்திலுள்ள நாசரேத்து (Nazareth) என்னுமிடத்தில் இயேசு வளர்ந்து வந்தார். இயேசுவின் பன்னிரண்டாம் வயதில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அவர் நாசரேத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது அவருடைய குடும்பத்திலிருந்து தவறிவிட்டார். பிறகு அவர்கள் இவர் ஒரு கோவிலுக்குள் ஆசிரியர்களிடம் பாடம் கேட்டுக் கொண்டும் வினாக்களை எழுப்பி அவர்களை மகிழ்வித்துக்கொண்டும் இருந்ததைப் பார்த்தார்கள். இவருடைய குடும்பத்தினர் ஆண்டுதோறும் இசுரவேலர்கள் எகிப்தியரிடமிருந்து பெற்ற விடுதலையைக் கொண்டாடும் யூதர் திருவிழாவில் (Passover) ஏற்பாடு செய்யப்படுகின்ற விருந்து நடக்கும் வேளையில் செல்வார்கள். இத்தகைய பயணங்களினால் எருசலேமின் கோயிலைப் பற்றி ஒரு மரியாதையும் யூதர் திருவிழாவைப் பற்றி ஒரு மேலான எண்ணமும் ஏற்பட்டன.

இயேசு தச்சு வேலையைத் தம் தந்தை யோசப்பிடமிருந்து தெரிந்து கொண்டார்; ஏழைகளிடமும் பாவம் செய்தவர்களிடமும் நோயாளிகளிடமும் பரிவு காட்டினார்.

ஞானசுநானமும் அவாவூட்டுதலும் (Baptism and Temptation): இயேசு முப்பதாம் வயதில் பொது நலத் தொண்டில் இறங்கினார். யோவான் (John) என்ற தீக்கை செய்விப்பவர் ஒரு மத இயக்கத்திற்குத் தலைமை வகித்தார். அவர் இயேசுவைவிடச் சில மாதங்கள் வயதில் பெரியவர். அவர் இயேசுவிடம் மரியாதையுடன் நடந்து கொண்டார். இயேசு தீக்கை பெற யோவானிடம் சென்றார். இயேசு தம்மைக் குற்றம் செய்தவராகக் கருதவில்லை. வானத்திலிருந்து ஓர் ஒலி கேட்டது. 'அன்புள்ள மகனே, உன்னைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.' இயேசு மனத்தில் மகிழ்ச்சி பொங்க அமைதியாக வீற்றிருந்தார். நாற்பது நாட்கள் அங்கே இருந்தார். சாத்தான் அவருக்கு ஆசை (Temptation) காட்டினான். பாலைவனத்தில் கிடைத்த அனுபவத்திற்குப் பிறகு, இயேசு விவிலியத்தில் கண்ட உண்மைகளைப் பிறருக்குச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருந்தார்.

கலிலேயாவில் இயேசு நல்ல நீதிகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு காலத்தைக் கழித்தார். நோய்களைக் குணமாக்குவதிலும், பேய்களை விரட்டுவதிலும், குருடர்களுக்குப் பார்வை அளிப்பதிலும், தொழுநோயாளிகளைக் குணப்படுத்துவதிலும் நேரத்தைச் செலவிட்டார். விவிலியத்தின் தலை மாணவர்கள் எழுதிய நூல்கள் இவருடைய கட்டளையின் பேரில் இறந்தவர் உயிர்த்தெழுந்த வரலாற்றைக் கூறும்.

இறைவனின் அரசைப் (Kingdom of God) பற்றி இயேசு பேசிக் கொண்டிருந்தார். அது கையில் இருக்கிறதென்றும் நல்ல செய்தி என்றும் கூறினார். இயேசுவின் போதனைகள் யோவான் போதனைகளிலிருந்து மாறுபட்டிருந்தன. தம்முடைய மாணவர்களைப் பாவமன்னிப்புக் கேட்கச் சொன்னார் இயேசு. யோவான் இயேசுவிடம் அவர்களை அனுப்பி, இயேசு தாம் எதிர்பார்த்த இறைவனின் தூதரா என்று கேட்டு வரச்சொன்னார். இயேசு அம்மாணவர்களை அங்கே நடக்கிற அற்புதங்களைக் கவனிக்கச் சொன்னார்.

உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் யார் என்று அம்மாணவர்கள் கேட்டதற்கு நல்ல இரக்கப் பண்புடையவன் கதையைக் கூறினார். நம்மிடம் நாம் அன்பு செலுத்துவது போல் பக்கத்து வீட்டுக்காரரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று கூறினார். மற்றொரு கதையும் கூறினார். வீண் செலவு செய்து அழிகிற மகன் திருந்தி வீடு வந்தபோது தந்தை அடைகின்ற மகிழ்ச்சி போல, இறைவன் பாவம் செய்த பின் உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் மனிதனிடம் அன்பு செலுத்துகிறார் என்று கூறினார். மேற்கூறிய இரண்டு கதைகளும் இயேசு நலிவடைந்த மக்கள்பால் கொண்ட அன்பிற்கு எடுத்துக்காட்டாகும். இயேசு யாவரையும் இரக்கத்தினால் வென்றார். இவர் யாரையும் அடக்கியாள விரும்பவில்லை. இவருக்குப் பன்னிருவர் சீடர்களாக அமைந்தனர். அவர்கள் சைமன் (Simon) என்னும் பீட்டர் (Peter), ஆண்டுரு (Andrew), சேம்சு (Jemes), யோவான் (John), பிலிப்பு (Philip), பார்த்தலோமியா(Bartholomew), மத்தேயு(Mathew), தோமா (Thomas), சேம்சு (James), இலெபேயு என்னும் ததேயு, சைமன்செலாட்டசு (Siman Zelotes), யூதாசு காரியோத்து (Judas Iscariot) எனப்படுவர்.

ஆசையும் அழிவும் (Passion and Death): மனவெழுச்சியின் காரணமாக எருசலேமில் (Jerusalem) ஏற்பட்ட புரட்சி அழிவுக்குக் காரணமாக இருந்தது. இயேசு அங்கே சென்றதும் கண்ணீர் மல்கினார்.

இயேசு இசுரவேலர்கள் விடுதலை நாளைக் கொண்டாடும் யூதர் திருவிழாவை (Passover) எதிர்நோக்கியிருந்தார். ஒரு ஞாயிற்றுக் கிழமை எண்ணற்றோர் கூடியிருக்கும்பொழுது நகரத்தில் நுழைந்தார். வழியில் மக்கள் அணிகலன்களையும் பனைமர மடல்களையும் இட்டனர். தொடர்ந்து வரும் வியாழனன்று கடைசியாக இராப்போசனம் சீடர்களுடன் உண்டார். இவருடைய சீடர் யூதாசு காரியோத்து சாதுசீன் பாதிரியோடு (Saddu Cean) ஏற்பட்ட ஒப்பந்தப்படி இவரைக் கைது செய்வதைத் தடுப்பதற்காகத் தான் இராப் போசனம் இரகசியமான ஓர்அறையில் நடந்தது.இயேசு இராப்போசனம் உண்டபோது ரொட்டியையும் கிண்ணத்தையும் ஆசிர்வதித்து, அவருடைய சீடர்களுக்குக் கொடுத்தார். அந்த ரொட்டிதான் அவருடையஅழிக்கப் படப்போகின்ற உடல் என்றும் அந்தக் கிண்ணந்தான் (Cup) கிறித்துவை முழுதும் நம்பினால் பாவிகள் மீட்புற்று வாழ்வர் என்று உறுதியளிக்கும் அருள் உடன்படிக்கையின் அடையாளம் என்றும் கூறினார்.

இராப்போசனத்திற்குப் பிறகு இயேசு ஒலிவ (Olives) மலைமேலுள்ள கெத்சமனே (Gethsemane) தோட்டத்திற்குச் சென்றார். யூதாசு காரியோத்து அவரைப் பிடிக்க ஆட்களைக் கொண்டு வருவார் என்பது அவருக்குத் தெரியும். அவருடைய வியர்வை இரத்தம் போல நிலத்தில் வீழ்ந்தது. அவருடைய நெருங்கிய நண்பர்கள் அவருடைய போதனைகளைப் புரிந்து கொள்ளவில்லை. அவருக்குக் காவல் புரிந்து கொண்டிருந்த மூன்று சீடர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். உலூக்கா அவருடைய பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் 'அய்யா (Father) நீங்கள் விருப்பப்பட்டால் என்னிடமிருந்து கிண்ணத்தை எடுத்து விடுங்கள். உங்களுடைய விருப்பப்படி எல்லாம் நடக்கட்டும்' என்றார்.

யூதாசு வந்து இயேசுவை முத்தமிட்டான். இயேசுவைக் கைது செய்தார்கள். அவர் மேல் குற்றம் சாட்டினார்கள். இறைவன் மகன் என்று கூறியது பெரிய குற்றம் என்று கூறினார்கள். அவரும் அவ்வாறு கூறியதை ஒப்புக்கொண்டார். உரோமாபுரியின் ஆளுநரான பாண்டியசு பிலாத்துடு (Pontius Pilate) குற்றங்களை விசாரித்தார். எப்பொழுதும் உரோமாபுரி ஆளுநரின் வழக்கம் கைதியை விடுவித்து மக்களிடம் ஒப்படைத்து விடுதலையாகும். அவர்கள் கைதிக்குத் தக்க தண்டனை அளித்து விடுவார்கள். ஆனால் இயேசுவை அவ்வாறு செய்ய வேண்டாமென்றும், அவர் சிலுவையில் அறையப்பட்டு இறத்தல் வேண்டும் என்றும் மக்கள் கூறும்படி அவருடைய பகைவர்கள் தூண்டிவிட்டார்கள். மக்கள் இயேசுவைச் சாட்டையாலடித்தார்கள்; போலி வணக்கம் செய்

தார்கள்; முட்களாலான கிரீடத்தை அணிவித்தார்கள். பிறகுமலைக்கு மேலே இரு திருடர்கள் நடுவில் இயேசுவையும் சிலுவையில் அறைந்தார்கள். இயேசு கவலைப்படவுமில்லை; தம்மைக் காப்பாற்ற முயலவுமில்லை; 'ஆண்டவனே என்னை ஏன் கைவிட்டீர்' என்று அவர் கத்தியதைக் கேட்டு மக்கள் பலவாறாகக் கூறினர். சிலுவையில் அறைந்து மூன்று மணி நேரம் கழிந்தவுடன் இயேசு இறந்தார். ஒரு பாரசீகன் அவருடைய உடலைக் கேட்டான். மற்றொருவன் அவரை மரியாதையுடன் மூடு கல்லறையில் புதைத்தான். அவருடைய சீடர்கள் மனம் வருந்தினார்கள்.

மீண்டும் உயிர்த்தெழுதலும் மேலே போதலும் (Resurrection Ascension): அடுத்து வந்த ஞாயிற்றுக் கிழமையன்று இயேசுவின் கல்லறை காலியாக இருந்தது. இயேசு உயிர்த்தெழுந்தார். சீடர்கள் அவரைச் சந்தித்துப் பேசினார்கள். 40 நாட்கள் சீடர்கள் அவரைப் பார்த்தார்கள். பிறகு அவர்கள் பார்க்கும் பொழுதே இயேசு மேலே எடுக்கப்பட்டார். பிறகு ஒரு மேகம் வந்து அவரை எடுத்துக் கொண்டது. அதன் பிறகு உலூக்கா இயேசு தேவலோகத்தை அடைந்ததாகக் கூறினார்.

இயேசுவின் போதனைகள்: இயேசு சட்டத்தையும் தீர்க்கதரிசிகள் கூறியதையும் நிறைவேற்ற வந்ததாகக் கூறினார். இறைவனிடமும் பக்கத்து வீட்டுக்காரரிடமும் அன்பு செலுத்த வேண்டும். இறைவன் மேல் இதயபூர்வமாக, மிகவும் உறுதியான அன்பு செலுத்தவேண்டும். பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயோ நீ அதைப் பிறருக்குச்செய்ய வேண்டும். உன்னுடைய பகைவனையும் நீ நேசிக்கவேண்டும். உனக்குத் தீமை செய்தவர்களுக்காகவும் நீ ஆண்டவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். இறைவன் நல்லவர். அவர் தீயவர் மேலும் சூரியனைப் பிரகாசிக்கச் செய்கிறார். இவ்வாறு இயேசு அறிவுரை கூறினார். இயேசு மக்கள் மேல் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்.

இயேசு இறைவனின் அரசை வற்புறுத்தினார். ஒவ்வொரு மனிதனும் அதை அடையப் பாடுபட வேண்டும். உணவு, உடையை விட அது முக்கியம். நல்ல செயல்களால் மட்டுமே அதை அடைய முடியும். அந்தப் பேரரசு மனிதன் ஆற்றலினால் அடைய முடியாதது. இறைவனின் அருளினால்தான் அதை அடைய முடியும்.

இறைவனின் தூதுச் செய்தி: இறைவனைத் தந்தையாகப் பாவித்தார். தந்தைக்குத்தான் மகனைத் தெரியுமென்றும் மகனுக்குத்தான் தந்தையைத் தெரியும் என்றும் கூறினார்.

புதிய ஏற்பாட்டின் உறுதியான கூற்றுகள்: இசுரவேலர்களே கேளுங்கள். இறைவன் ஒருவனே. இயேசுவிற்கும் இறைவனுக்கும் ஒரு தொடர்பு உண்டு. யோவான்தாம் கூறிய நற்செய்தியில்(Gospel of John) இயேசுவை நன்றாகத் தெரியும் என்று கூறுகிறார்.

இறைவன் தம் குமாரன் மூலமாக மனிதரிடம் பேசுகிறார். புதிய ஏற்பாட்டில் இயேசு ஒரு விளக்காகக் கருதப்படுகிறார். மனிதனுடைய பாவத்திற்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்தார். இவர் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே தேவ குமாரனாக அமர்ந்து துணை புரிகிறார் இயேசுவிற்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பை விளக்கப் பலர் முயன்றார்கள். ஆவிஉலகம் நல்லது. ஆனால், பருப்பொருளாலான உலகம் தீமை வாய்ந்தது. கடவுள் இயேசுவை மனிதர்களைக் காப்பாற்ற அனுப்பினார்.

முற்காலக் கிறித்தவச் சமயக் கிளையினருக்குரிய கொள்கையுடையவர் (Gnostics) மனிதனுடைய சதை தீமை வாய்ந்தது; ஆனால், அதனுள் ஓர் ஆவி இருக்கிறது; இயேசு இரகசியமான ஓர் அறிவை அந்த ஆவியைக் காப்பாற்றப் பயன்படுத்தினார் என்றனர்.

மார்சியோன் (Marcion) என்பவர் கடவுள் மனிதனுடைய உடலையும் ஆன்மாவையும் படைத்தார் என்றார். இயேசுவைக் கண்ணுக்குப் புலப்படாத அன்பு வடிவமான கடவுளின் அவதாரம் என்று கூறலாம்.

மணிக்கேயியம் (Manichaeism) என்ற சமயம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஒரு பாரசீகத் (Persian) தீர்க்கதரிசி மணி (Mani) என்பவரின் போதனையில் தொடக்கமுற்றது. மணிக்கேயியம் அட்லாண்டிக்கிலிருந்து (Atlantic) சீனக் கடல் வரை பரவியது. மேற்கே சில கிறித்தவ சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இயேசு ஒளிவீசும் தூதர்களுள் ஒருவர். சாத்தான் (Satan) இறைவனிடமிருந்து ஒளியைத் திருடி அவருடைய படைப்புகளுள் அடைத்து வைத்தான். அதை விடுவிக்க இயேசு வந்தார்.

இறைமூவொருமைக் கோட்பாட்டாளரும் (Trinitarians) இயேசு நாதர் வாழ்க்கைப் பண்பு கூறும் இறையியல் பகுதிக்குரிய (Christological) கருத்து மாறுபாடும்: இயேசுவிற்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பைப் பற்றிக் கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டன. மும்மைக் கொள்கை என்னவெனில், கடவுள் ஒரு பொருளிலும் இருக்கிறார்; மனிதர்களுள்ளும் (தந்தை, மகன், பரிசுத்த ஆவி) இருக்கிறார் என்பதேயாகும்.

நைசீன் (Nicene) நம்பிக்கையானது இயேசுவினிட

முள்ள தெய்வத் தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும் உள்ள தொடர்பை விளக்க வில்லை. பவுல் (Paul) கூறியதாவது: ஆதாமில் (Adam) எல்லோரும்இறந்து (மறைந்து) போய்விடுகிறார்கள். இயேசுமட்டும் உயிர்த்தெழுகிறார். இயேசு நம்முடைய பாவங்களுக்காக உயிர் நீத்தார்.

துணை நூல்:

The Holy Bible, King James Authorised version, Oxford University Press, London, 1611.

**இயேசுசங்கம்:** மார்ட்டின் லூதர் தொடங்கிய மறுப்புரையாளர் இயக்கத்தின்(Protestant Movement) விளைவாகக் கிறித்தவ சமூகம் இரண்டாகப் பிரிந்தது. இத்தாலி, பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல், தெற்குச் செருமனி, ஆசுத்திரியா போன்றநாடுகள் போப்பாண்டவரைச் சமயத் தலைவராகக் கொண்ட கத்தோலிக்க நாடுகளாக நீடித்தன. வடக்குச் செருமானிய நாடுகள், இங்கிலாந்து, ஆலந்து, தென்மார்க்கு (Denmark), நார்வே, சுவீடன் (Suwedan) போன்ற நாடுகள் கத்தோலிக்க மறுப்பு நாடுகளாக மாறிவிட்டன. இப்போக்கைத் தடுத்து நிறுத்தப் பல போப்பாண்டவர்கள் முயன்றனர். சமயத்தைப் பீடித்திருந்த முரண்பாடான கொள்கைகளைச் சீர்திருத்தி, கத்தோலிக்க சமயம் மீண்டும் சிறப்புற்று விளங்க அவர்கள் அரும்பாடுபட்டனர். அதனால், கத்தோலிக்கரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. கத்தோலிக்கத் திருச்சபையிலும் கத்தோலிக்கச் சமயக் கோட்பாடுகளிலும் சீர்திருத்தங்கள் செய்து, கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்கு அவர்கள் பாடுபடலாயினர்.

இயேசு சங்கத்தின் தோற்றம்: கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்குப் பெருந் துணையாக இருந்த இயக்கந்தான் இயேசு சங்கம் (Society of Jesus). இச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் இசுபெயின் நாட்டைச் சார்ந்த இக்னேசியசு இலயோலா (Ignatius Loyola) என்பவராவார். இச்சங்கம் கி.பி. 1534 ஆம் ஆண்டில் உரோமாபுரி நகரில் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், கி.பி. 1540-ஆம் ஆண்டில்தான் திருச்சபை இதனை அதிகார முறையில் ஏற்றுக்கொண்டது. இக்னேசியசு இலயோலா போர் வீரராகப் பணியாற்றியவர். எனவே, இச்சங்கத்தில் இராணுவ ஒழுக்கமும் கீழ்ப்படியும் தன்மையும் போப்பாண்டவரின் அதிகாரத்திற்குக் கட்டுப்படுதலும் ஆகிய சீரிய குணங்களைக் கொண்ட விதிகளை வகுத்தார். இச்சங்கத்தைச் சார்ந்தவர்கள் தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்பவர்களாகவும், பக்தியுடையவர்களாகவும், எளிய வாழ்க்கையைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்தனர். நல்லொழுக்கம் உடையவர்கள்தாம் மற்றவர்களிடம் கடவுள் பக்தியையும் சமயக்கொள்கைகளையும் பரப்ப முடியுமென இச்சங்கத்தினர் நம்பினர்.

சமயக் கொள்கைகளைப் பரப்புவதோடு அமையாமல், இச்சங்கம் மக்களிடையே கல்வி அறிவையும் பரப்பியது. நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி அளித்தது. இதனால் மக்களது நம்பிக்கையை இச்சங்கம் பெற்றது. இச்சங்கம் நிறுவிய பள்ளிகளில் மறுப்புரையாளர் கூடத் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்பினர். இச்சங்கம் ஐரோப்பா. இந்தியா, பிரான்சு, சீனா ஆகிய நாடுகளில் ஆயிரக்கணக்கான பள்ளிகளையும் கல்லூரிகளையும் தோற்றுவித்துத் தொண்டு செய்துள்ளது. அறுவருடன் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை நாளுக்கு நாள் ஆயிரக்கணக்கில் பெருகியது. கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்ப இச்சங்கத்தினர் உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்றனர். அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் இச்சங்கத்தினர் எண்ணற்ற நிறுவனங்களைத் தோற்றுவித்துத் திறமைமிக்க தொண்டு செய்துள்ளனர். இச்சங்கத்தைச் சார்ந்த பிரான்சிசு (Francis) என்ற பெரியார் இந்தியா, சப்பான் ஆகிய நாடுகளில் கத்தோலிக்கச் சமயத்தை வளர்த்தார்.

இச்சங்கத்தின் தீவிரமான பணிகளின் விளைவாக ஐரோப்பாவில் வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. தெற்குச் செருமனியிலும் ஆசுத்திரியாவிலும் கத்தோலிக்க மறுப்புச் சமயம் பரவாது தடுக்கப்பட்டது. அப்பகுதிகளில் ஆண்ட மன்னர்கள் இச்சங்கத்தினரை அறிவுரையாளர்களாக ஏற்றுக்கொண்டனர். பெல்சியம், போலந்து, பல்கேரியா, செக்கோசுலோவாக்கியா, அங்கேரி போன்ற நாடுகளிலிருந்த மறுப்புரையாளர் இச்சங்கத்தினரின் தூய்மையான வாழ்வையும் உயர்நோக்கையும் தெளிவான சமயப் பரப்புதலையும் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டுகளையும் கண்டு வியந்து கத்தோலிக்கச் சமயத்திற்குத் திரும்பினர்.

இச்சங்கத்தினர் உலகிலுள்ள ஒவ்வொரு கண்டத்திலுமுள்ள ஒவ்வொரு நாட்டிலும் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். ஏழைகளும் தாழ்த்தப்பட்டோரும் ஒதுக்கப்பட்டவர்களும் அடிமைகளும் இந்திய சமூகத்தில் சாதிநீக்கம் செய்யப்பட்டவர்களும் கிறித்தவ சமயத்தைத் தழுவ இச்சங்கம் பெரும் பணியாற்றியது. சமயப் புரட்சியின் காரணமாக, ஐரோப்பாவில் கத்தோலிக்கச் சமயம் ஒருவரை மாற்றுச் சமயத்திற்கு இழந்ததென்றால், இயேசு சங்கத்தின் சீரிய தொண்டினால் உலகின் ஒவ்வொரு பாகத்திலும் இருவரைப் பெற்றது. சமயம், கல்வி ஆகிய பல துறைகளில் இச்சங்கம் ஆற்றிய

அரும்பணி, கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்குத் துணையாக அமைந்தது. அச் சமயம் புத்துயிர் பெற்றது. பொருளுள்ள சமயமாகவும் குறிக்கோள் கொண்டதாகவும் அச் சமயம் திகழத் தொடங்கியது. இச்சங்கத்தின் தீவிரச் சமய ஈடுபாட்டினால் மாற்றுச் சமயத்தின் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டது. ஆயிரக்கணக்கில் மறுப்புரையாளர் மீண்டும் கத்தோலிக்கச் சமயத்திற்குத் திரும்பியது, இயேசு சங்கத்தினரின் தொண்டுகளும் சாதனைகளும் எவ்வளவிற்கு உயர்ந்திருந்தன என்பதை விளக்குவதாக இருந்தது.

ஓரளவு கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மறுப்புச் சமயத்தில் மக்கள் சேராததற்கு இச்சங்கத்தினரின் சமயப் பரப்புதல்தான் தலையாய காரணமாகும். கத்தோலிக்கச் சமயம் அப்படியே ஒருசில ஐரோப்பிய நாடுகளில் நிலைத்திருப்பதற்கும் இயேசு சங்கம்தான் காரணமாகும். இச்சங்கத்தினர் இந்தியாவிலும் பல தொண்டுகளைச் செய்துவந்துள்ளனர். தமிழ்நாட்டிலும் சீரிய தொண்டுகளைச் செய்துள்ளனர். இச்சங்கத்தினரே கி.பி. 1554-ஆம் ஆண்டில் தமிழில் நூல்களை வெளியிடத் தொடங்கினர். தமிழ் ஏட்டுமொழியாய் இருந்த அவலநிலையை மாற்றி, கி.பி. 1577-ஆம் ஆண்டில் அச்சுமொழியாக்கிய பெருமையும் இவர்களையே சாரும். இதன் பயனாய்த் தமிழ் அகராதி, பேச்சுத்தமிழ் இலக்கணம், சிறுகதை போன்றவை தமிழ்மொழிக்கு இயேசு சங்கத்தினரால் அறிமுகமாயின.

உரைநடைத் தந்தையும் எழுத்தில் சீர்திருத்தம் கண்டவரும் ஆகிய வீரமாமுனிவர் (Constantius Beschi) என்பார் உரோமானியக் கத்தோலிக்கச் சமய குருவாவார். இவர் கி.பி. 1680-இல் பிறந்தவர். இந்தியாவுக்கு வருகைபுரிந்த இவர் தமிழ்மொழியைக் கற்றுச் சமய போதனை செய்ததுடன் தமிழில் தேம்பாவணி, வேதியரொழுக்கம் போன்ற நூல்களையும் எழுதினார். சதுரகராதி, தொன்னூல் விளக்கம், அன்னையழுங்கல் அந்தாதி, அடைக்கல நாயகி கலம்பகம் போன்றவையும் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தமிழ் நூல்களாகும். வீரமாமுனிவரும் இயேசு சங்கத்தைச் சார்ந்தவரேயாவார்.

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, சென்னை, பாளையங்கோட்டை, தேவகோட்டை, நாகர்கோவில், தூத்துக்குடி போன்ற இடங்களில் பல பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றை நிறுவிக் கல்வித் தொண்டில் சிறந்து விளங்குகின்றனர் இயேசு சங்கத்தினர். இச்சங்கத்தினர் பாரிசுப் பல்கலைக் கழகத்திற் பயின்று பட்டம் பெற்றவர்கள். ஆகவே, இவர்கள் கல்விக்குத் தொடக்கத்திலிருந்தே சிறப்பிடம் அளித்தார்கள்.

சீர்திருத்தம் என்று கூறித் திருச்சபையை மார்ட்டின் உலூதர் இரண்டாக்கி எதிர்த்தபோது, அதற்கு நேர்மாறாய்த் திருச்சபைக்குப் பணிந்து செல்வது இயேசு சங்கத்தினர் நோக்கமாயிருந்தது குறிப்பிடத்தக்கது. இவர்கள் திருச்சபைக்கு உறுதுணையாய் நின்று பல வீரச் செயல்களைப் புரிய முன்வந்தனர். இதைத்தான் வரலாற்றில் சமய எதிர்-சீர்திருத்தம் (Counter – Reformation) என்பர். மறுப்புரையாளரின் எதிர்ப்பை ஆக்கமுறையில் அடக்கிக் கத்தோலிக்கச் சமயத்திற்குப் புத்துணர்ச்சியூட்டிய பல அமைப்புகளுள் தலையாயது என்ற பெருமை இயேசு சங்கத்தினையே சாரும். கி.பி.

துணை நூல்கள்:

**Southgate**, G.W., A Text Book of Modern European History, Dent & Sons Ltd, London. 1975.

**Grant**, A.J., Europe - The Story of the Last Five Centuries, Longmans Green & Co., London, 1962.

**Leon**, **Joseph M.**, World Civilization, Vol.I, Cliff's Notes. INC, U.S.A., 1970.

**இயைபு** என்பது மொழிகளில் அமையும் தொடரியல் இணைப்பு வகை மூன்றனுள் ஒன்றினைக் குறிக்கிறது. சொற்கள் முறைப்படி அமைந்து பொருள் தரும்போது அவை வாக்கியம் எனப்படும். அவ்வாக்கியத்தில் அமையும் சொற்களின் சேர்க்கை பெரும்பாலும் குறிப்பிட்ட மரபுப்படியே அமைகிறது. இயைபு (Concord) என்பது மொழிகளின் அமைப்பில் காணப்படும் மிகவும் இன்றியமையாத ஓர் அமைப்பாகும். அது மொழிக்கு மொழி மாறுபடுதல் இயல்பாகும். மொழிகள் பெயர், வினை, பெயரடை, வினையடை எனச் சொல்வகைகளையும், திணை, பால், எண், இடம் எனப் பல்வேறு இலக்கணக் கூறுகளையும் கொண்டுள்ளன. இவையனைத்தும் இணைந்தே ஒரு மொழியில் பல்வேறு வாக்கியங்கள் உருவாகின்றன. தொடரியலில் வாக்கியங்களில் வந்து அமையும் சொற்களுக்குள் உள்ள இணைப்பு முறையைக் காண வேண்டும். தமிழ்மொழியில் 'அவன் வந்தான்' என்னும் வாக்கியத்தில் 'அவன்' என்பது எழுவாய், ஆண்பால் ஒருமை, படர்க்கை என்ற மூன்று தன்மைகளை விளக்குகின்றது. இச்சொல் இல்லாமலே பயனிலையாகிய 'வந்தான்' என்னும் சொல்லைக் கொண்டு எழுவாயினைத் தெளிவாகஅறிய முடிகிறது. 'வந்தான்' என்ற சொல்லிலுள்ள னகர ஈறு ஆண்பால் ஒருமையையும் 'ஆ' என்பது படர்க்கையையும் உணர்த்துகின்றன. எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள இத்தொடர்புதான் தொடரியல் இணைப்பு எனப்படும்.

மொழிகளில் உள்ள தொடரியல் இணைப்புகளை மூன்று வகைகளாகக் கொள்ளலாம். இவை இயைபு, சார்பு, தாண்டு குறிப்பு என்பனவாகும்.

உலக மொழிகள் பலவற்றில் பெயர், வினை, பெயரடை, வினையடை ஆகிய சொற்கள், பால், எண், திணை, இடம், வேற்றுமை ஆகிய இலக்கணக் கூறுகளுடன் இயைபு கொண்டு விளங்குகின்றன. பிரெஞ்சு, இலத்தீன், இத்தாலி, இசுபானிசு, செருமன், உருசியன் போன்ற பல மொழிகளில் பெயரடை எண், பால் ஆகியவற்றில் பெயருடன் இயைபு கொண்டிருக்கக் காணலாம். ஆங்கில மொழியில் சுட்டுப் பதிலீடு பெயர்களுடனும் வினைச் சொற்கள் எழுவாய்ப் பெயர்களுடனும் எண் இயைபு கொண்டுள் ளன. இலத்தீனில் filius bonus என்னும் தொடருக்கு 'நல்ல மகன்' என்பது பொருள். domini boni என்னும் தொடருக்கு 'நல்ல நாயகனுடைய' என்பது பொருள். இங்கே அடைக்கும் பெயர்ச் சொல்லுக்கு மிடையே (வேற்றுமை) இயைபு அமைந்துள்ளது. இந்த இயல்பை 'முற்று இயைபு' என்றும் 'சார்பு இயைபு' என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

இந்தி மொழியில் 'அச்சா லட்கா', 'அச்சீ லட்கீ' ஆகிய தொடர்களில் முற்று இயைபு அமைந்துள்ளது. இவ்வாறு பொருள் நிலையிலும் உருபுநிலையிலும் இயைபு அமைந்தால், அதனை முற்று இயைபு எனலாம். பால் இயைபு, எண்இயைபு, வேற்றுமை இயைபு என இயைபைப் பலவகையாகப் பகுக்கலாம். இந்தி மொழியில் 'அச்சா லட்கா' 'நல்ல பையன்', 'அச்சீ லட்கீ' 'நல்ல பெண்' என்னும் தொடர்கள் பால் இயைபு காட்டுவன. 'அச்சே லட்கே' 'நல்ல பையன்கள்', 'அச்சீ லட்கியாங்' 'நல்ல பெண்கள், என்னும் தொடர்கள் பால் இயைபோடு எண் இயைபையும் காட்டுவன. இலத்தீன் மொழியில் filius bonus, 'நல்ல மகன்', domini boni 'நல்ல நாயகனுடைய' என்பன வேற்றுமை இயைபு காட்டுவன. முதல் தொடரில் எழுவாய் வேற்றுமை இயைபும், இரண்டாம் தொடரில் உடைமை வேற்றுமை இயைபும் அமைந்திருக்கக் காணலாம். இந்தி மொழியில் அடை – பெயர் இயைபு மட்டுமல்லாமல், எழுவாய் பயனிலை இயைபும் காணப்படுகிறது. 'லட்கா ஆயா' 'பையன் வந்தான்', 'லட்கீ ஆயீ' 'பெண் வந்தாள்' என ஆண் பாலின் ஆகாரத்திற்கு ஆகாரமும், பெண் பாலில் ஈகாரத்திற்கு ஈகாரமும் இயைந்து வருவதைக் காணலாம். செயப்படுபொருளுக்கும் வினைமுற்றுக்கும் பால் இயைபு அமைந்து விளங்குவதையும் காணலாம்.

இசுபானிசு மொழியில் muchacho bueno என்றால் 'நல்ல பையன்' என்பது பொருளாகும். இங்கே பெயரின் இறுதியிலும், பெயரடையின் இறுதியிலும் ஒகாரம் அமைந்து ஆண்பாலைக் குறிக்கிறது. இது இயைபாகும். இம்மொழியில் எண் இயைபும் அமைந்திருப்பதைக் காணலாம். muchachos buenos எனின் 'நல்ல பையன்கள்' என்பது பொருளாகும். பெயரின் இறுதியிலும், அடையின் இறுதியிலும் 's' என்ற ஒலி பன்மை இயைபைக் காட்டுகிறது.

இலத்தீன் மொழியில் pueri boni: என்பது 'நல்ல பையன்கள்' (முதல் வேற்றுமைப் பன்மை) என்பதைக் குறிக்கும். puero:rum bono:rum என்பது 'நல்ல பையன்களுடைய' (ஆறாம் வேற்றுமைப் பன்மை) என்பதைக் குறிக்கும் i.. i: என்ற இயைபும் o:rum ......... o:rum என்ற இயைபும் காணப்படுகின்றன.

இசுபானிசு மொழியில் muchacho: என்பது 'பையன்' என்றும், muchacho: bueno: என்பது 'நல்ல பையன்' என்றும் பொருள்படும். இங்கே அடையிலும் பெயரிலும் இயைபு காணப்படுகிறது. muchacho: என்பது பெண்பாலானால் muchacha என அகர இறுதியோடு வரும். 'நல்ல பெண்' என்பதைக் குறிக்க muchacha buena என்பர். 'நல்ல' என்ற பெயரடை பெண்பாலைக் குறித்தால் buena என்றும், ஆண்பாலைக் குறித்தால் bueno: என்றும் முறையே ஒழுங்காக அகர இறுதியும் ஓகார இறுதியும் பெற்று வரும். பெயர்ச் சொற்கள் எல்லாம் இவ்வாறு ஒழுங்காக அகர ஓகார இறுதி பெற்று வருவதில்லை. இசுபானிசு மொழியில் rey என்பது 'அரசன்' என்றும் lepiz என்பது 'பென்சில்' என்றும் பொருள்படும். இவை இரண்டும் ஆண்பாற் சொற்களாயினும் ஓகார இறுதி பெற்று வருவதில்லை. 'கை'யைக் குறிக்கும் mano: என்ற சொல் பெண்பாற் சொல்லாகும். இது அகரம் பெறாமல் ஓகாரம் பெற்று வருவதைக் காணலாம். mano: buena என்றால் 'நல்ல கை' என்று பொருள்படும். இங்கே பெண்பாற் சொல் பெண்பால் அடையை ஏற்றாலும் பெயர்ச் சொல்லில் பால் காட்டும் இறுதியில்லை. இதேபோல lepiz bueno: 'நல்ல பென்சில்' என்பதிலும் பெயர்ச் சொல்லில் பால் காட்டும் இறுதி இல்லை. இவ்வாறு பெயர்ச் சொற்களில் பால்காட்டும் இறுதி அமையாத நிலையிலும், ஒருபாற் சொல் அப்பாலைச் சார்ந்த அடையை ஏற்கும்போது அதனைச் 'சார்பு இயைபு' என்பர்.

இந்தி மொழியில் 'லட்கா', 'லட்கீ' என்ற சொற்களில் ஆகாரமும் ஈகாரமும் முறையே ஆண்பாலையும் பெண்பாலையும் குறித்து நிற்கக்காணலாம். ஆனால், 'தேஷ்' என்ற ஆண்பாற் சொல்லில் பால் காட்டும் இறுதிஇல்லை. அதுபோலவே செய்தியைக்குறிக்கும்

'பாத்' என்ற பெண்பாற் சொல்லிலும் பால் காட்டும் இறுதியில்லை. 'ஹமாரா தேஷ்' என்றால் 'நம்முடைய நாடு' என்பது பொருளாகும். 'தேஷ்' ஆண்பாற் சொல் என்பது 'ஹமாரா' என்ற அடையில் உள்ள ஆகார இறுதியால் அறியப்படுகிறது. 'அச்சீபாத்' எனின் 'நல்ல செய்தி' என்று பொருள்படும். 'பாத்' பெண்பாற் சொல் என்பது 'அச்சீ' என்ற அடையிலுள்ள ஈகார இறுதியால் உணரப்படுகிறது. 'ஹமாரா தேஷ்' என்ற தொடரிலும், 'அச்சீபாத்' என்ற தொடரிலும் உள்ள இயைபு முற்று இயைபு ஆகாது. இதனைச் சார்பு இயைபு என்பர்.

ஆங்கில மொழியில் எழுவாய்க்கும் வினைச் சொல்லுக்குமிடையே 'எண் அடிப்படையிலே இயைபைக் காணலாம். he என்னும் ஒருமை எழுவாய் runs என்னும் ஒருமை வினையையே கொள்ளும். they என்னும் பன்மை எழுவாய் run என்னும் பன்மை வினையையே கொள்ளும். ஆங்கில மொழியில் எண் தொடர்பான இந்த இயைபு எழுவாய்ப் பெயருக்கும் நிகழ்கால வினைக்குமிடையே காணப்படுகின்றது. ஆனால், இறந்தகால வினை இடம் பெறுமிடத்து இவ்வியைபு காணப்படுவதில்லை. he, they என்ற இரண்டிற்கும் இறந்த காலவினைச் சொல்லாக ran என்பதே அமைகின்றது. பிரெஞ்சு, செருமானிய மொழிகளிலும் சில சொற்றொடர்களில் பால், எண் போன்ற இலக்கணப் பண்புகளின் அடிப்படையில் இயைபு காணப்படுகிறது.

திராவிடப் பழங்குடி மொழிகளான கொண்டா, கோண்டி, கோயா, கோலாமி, பர்சி, கதபா போன்ற மொழிகளில் பெயரடை இயைபைக் காணலாம். நாடோடிப் பழங்குடிகளான நரிக்குறவர்கள் பேசும் வாக்ரிபோலி என்ற மொழியில் பெயரும் பெயரடையும் பால், எண் இயைபு கொண்டுள்ளன. 'சொக்ரி' என்பது 'பெண்' என்று பொருள்படும். 'சொக்ரோ' என்பது 'பையன்' என்று பொருள்படும். இச்சொற்களில் இ-பெண்பாலையும் ஓ-ஆண்பாலையும் குறிக்கின்றன. பெயரடையாகிய 'கறுப்பு' என்ற பொருள்தரும் சொல்லைச் சேர்த்தால் காளி சொக்ரி, காளோ சொக்ரோ என அமைகின்றன. பெயர்ச் சொல்லில் உள்ள பால், எண் குறிக்கும் விகுதி பெயரடைக்கும் வந்து வழங்குகிறது.

தமிழ்மொழியில் வினைச்சொற்கள் மட்டுமே எண், பால் ஆகியவற்றில் எழுவாய்ப் பெயர்களுடன் இயைபு கொண்டு விளங்குகின்றன. வினைச் சொற்கள் எழுவாய்ப் பெயருக்கேற்ப எண், பால் விகுதிகளை ஏற்கின்றன. தன்மை, முன்னிலை எழுவாய்ப் பெயர்கள் எண், இட இயைபு மட்டுமே கொண்டு நிற்கின்றன. பால் இயைபு இவற்றில் காணப்படவில்லை.

தமிழ்மொழியில் எழுவாய்-பயனிலை இயைபு மிக முக்கியமான ஒன்றாகும். இவ்வியைபில் தொடர்பின்மை (Concord break) ஏற்படின், வாக்கியங்கள் இலக்கணப் பிழையாக அமையும். இவ்வியைபினை மலையாள மொழியில் காணமுடியாது. வினைமுற்றுகளில் பாலறி கிளவிகள் இணையும் மரபு இன்மையால், வினைமுற்றுகள் திணை, பால் வேறுபாட்டைக் காட்டி நிற்பதில்லை.

| | | | |
|---|---|---|---|
| நான் வந்தேன் | — ஒருமை | தன்மை | |
| நாம் வந்தோம் | — பன்மை | | |
| நீ வந்தாய் | — ஒருமை | — முன்னிலை | |
| நீர் வந்தீர் | — பன்மை | | |
| நீங்கள் வந்தீர்கள் | — மரியாதைப் பன்மை | | |

ஆனால், படர்க்கை மூவிடப் பெயர்கள் எண், இட இயைபு மட்டுமன்றிப் பால் இயைபும் கொண்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அவன் வந்தான் | — ஆண்பால் | ஒருமை | — உயர்திணை |
| அவள் வந்தாள் | — பெண்பால் | | |
| அவர்கள் வந்தார்கள் | — பன்மை | | |
| அது வந்தது | — ஒருமை | — அஃறிணை | |
| அவை வந்தன | — பன்மை | | |

தமிழ் மொழியில் காணும் இந்த இன்றியமையாத பண்பு வாக்கிய அமைப்பில் மற்றொரு பண்பையும் தோற்றுவிக்கிறது. வினைச் சொற்களே எழுவாய்ப் பெயர்ச் சொற்களின் எண், இடம், பால் ஆகியவற்றைச் சுட்ட வல்லனவாக இருப்பதால், எழுவாய்ப் பெயர்ச் சொற்களை நீக்கிவிட்டாலும், வாக்கியங்கள் பாதிக்கப்படாமல் அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள முடியும். எ-டு. வந்தேன். வந்தோம்; வந்தாய், வந்தீர்கள்; வந்தான், வந்தாள், வந்தார்கள், வந்தது, வந்தன.

மேற்கண்ட வினைமுற்றுகளிலிருந்தே எவ்வித இடர்ப்பாடும் இன்றி எழுவாய்ப் பெயர்ச் சொற்களை அறிந்து கொள்ளலாம்.

திராவிட மொழிகளில் எழுவாய் உயர்திணைப் பெயராகவோ அஃறிணைப் பெயராகவோ மூவிடப் பெயராகவோ எண்ணுப் பெயராகவோ தொழிற் பெயராகவோ வினையாலணையும் பெயராகவோ அமைகிறது. பயனிலை தனி வடிவங்களாகவோ கூட்டு வடிவங்களாகவோ அமையும். பயனிலைகள் வினைமுற்றுகளாகவோ எச்சங்களாகவோ வியங்கோள் வடிவங்களாகவோ அமைகின்றன.

தமிழ் மொழியில் எழுவாயாக அமையும் பெயர்ச் சொல்லுக்கும் பயனிலையாக அமையும் வினைச் சொல்லுக்கும் திணை, பால், எண், இடம் என்னும் இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் இயைபு காணப்படுதல் குறிப்பிடப்பட்டது. தொல்காப்பியம் வினை, பெயர் ஆகியவற்றில் காணும் பாலறி கிளவிகள் மயங்கல் கூடா என்கிறது. பயனிலையாக வரும் சொல் எந்தப் பாலைக் குறிக்கிறதோ அதே பாலைக் குறிப்பதாக எழுவாயில் வரும் பெயர்ச்சொல்லும் அமையவேண்டும். இருப்பினும், சில வழுக்களுக்கு 'வழுவற்க' எனக் கூறலையும் சிலவற்றை வழுவமைதியாகக் கொள்ளுதலையும் இலக்கண நூல்களில் காணலாம். அஃறிணையும் உயர்திணையும் கலந்து வரும்போது வியங்கோள் பயனிலையாக வருகிறது. இதற்கு 'ஆவும் ஆயனும் செல்க' என்பதைக் காட்டலாம். பால் மயக்குறும் ஐயக்கிளவியைப் பன்மையில் கூறுவதுண்டு. 'ஆண் மகனோ பெண் மகளோ அங்குத் தோன்றுபவர்' என்ற வாக்கியத்தை எடுத்துக்காட்டாகக் காட்டலாம். தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் விரவி வரும்போது உயர்திணை முடிபு கொள்வதுண்டு. எடுத்துக்காட்டு, 'யானும் என் எஃகமும் சாறும்'. மொழியில் பயின்றுவரும் வேறு, உண்டு, இல்லை என்னும் சொற்களில் திணை பால் இயைபு எதிர்பார்க்கப்படுவதில்லை. 'வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன' என்பது விதி. நன்னூலார் காலத்தில் வியங்கோள் வினையும் எல்லா இடத்திற்கும் பாலுக்கும் பொதுவாக அமைந்தது. இருதிணைப் பொதுவினைகளென நன்னூலார் கூறும் தன்மை, முன்னிலை வினைகள் ஒருமை, பன்மை வேறுபாட்டைக் காட்டி நிற்கின்றன.

தமிழ் மொழியில் எழுவாய்-பயனிலை இயைபு மிக இன்றியமையாத இடம் பெற்றிருந்தாலும், அது ஒரு புறநிலைப் பண்பே, அன்றிப் புதைநிலைப் பண்பு அன்று என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. புதைநிலை அமைப்பில் 'அவன் வா' என்பதே காணப்படுகிறது. புறநிலை அமைப்பிலேயே எழுவாய்த் தொடரின் எண், இடம், பால் ஆகியவற்றிற்கேற்ப வினைச் சொல்லில் விகுதிகள் இணைகின்றன. பின்னர், எழுவாய்ப் பெயர்த் தொடர் விருப்பத்தின் பேரில் (Optional) நீக்கப்படுகிறது. இங்கு இயைபு விதியும் (Concord rule), நீக்கல் விதியும் (Deletion Rule) ஒன்றன்பின் ஒன்றாகச் செயற்படுதல் இன்றியமையாததாகிறது. முன்னது செயற்பட்டாலன்றிப் பின்னது செயற்படாது. ஆகவே, இங்கு விதிகளின் செயற்பாட்டில் ஓர் ஒழுங்குமுறையும் (Rule Ordering) இன்றியமையாத ஒன்றாகிறது. சு.ச.

**இயைபுடன்பாட்டு உண்மைக்கொள்கை:** பெர்ட்டிராண்டுரசல் (Bertrand Russell) என்னும் தத்துவ ஞானி இயைபுடன்பாட்டு உண்மைக்கொள்கையை (Correspondence Theory of Truth) வலியுறுத்தினார். உண்மை என்பது நம்பிக்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்குமுள்ள இயைபுடன்பாடு என்று கூறினார். இது கருத்தியற் கொள்கையுடையவர்கள் (Idealists) ஒத்துக் கொண்ட இசைவிணைவுக் கொள்கைக்கு எதிராக அமைந்தது. அதாவது, எவ்வளவு ஒருவருடைய நம்பிக்கைகள் ஓரமைப்பில் இருக்கின்றனவோ அவ்வளவு அவைகளின் உண்மை நிலை விளங்கும் என்பதாகும்.

இயைபுடன்பாட்டுக் கொள்கையின் தொடக்கம் எண்ணத்திற்கும் உண்மைக்குமுள்ள தொடர்பை விளக்குவதாகும். அரிசுடாட்டில், 'இருக்கிறதை இல்லை என்று சொல்வதும் இல்லாததை இருக்கிறதென்று சொல்வதும் பொய்யாகும்' என்கிறார். அது போலவே, 'இருக்கிறதை இருக்கிறதென்று சொல்வதும் இல்லாததை இல்லை என்று சொல்வதும் உண்மை' என்கிறார். இவைகள் இயைபுடன்பாட்டுக் கொள்கையின் முக்கியக் கூறுகளாம்.

பிளேட்டோ: சாக்கிரட்டிசு (Socrates) உண்மை எவ்வாறு உண்மையல்லாத நம்பிக்கையிலிருந்து வேறுபட்டிருக்கிறது என்பதை விளக்கினார். உண்மையான நம்பிக்கை இருக்கிற பொருள்மேல் செலுத்

தப்படுகிறது. ஆனால் பொய்யான நம்பிக்கை இல்லாத பொருள்மேல் செலுத்தப்படுகிறது. 'தியேட்டிடசு (Theaetetus) உட்கார்ந்திருக்கிறார்' என்று கூறினால் அது உண்மை. 'தியேட்டிடசு பறந்து கொண்டிருக்கிறார்' என்று கூறினால் அது பொய். ஏனெனில் தியேட்டிடசு பறந்துகொண்டிருக்க வில்லை. இவ்வாறு பிளேட்டோ உண்மையையும் பொய்யையும் விளக்கினார்.

அரிசுடாட்டில்: சில நேரங்களில் உண்மையாக இருப்பது மற்ற நேரங்களில் உண்மையில்லாததாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கிறான்; இது உண்மை. சிறிது நேரம் சென்றவுடன் எழுந்து நிற்கிறான். அப்பொழுது முதல் கூறியது பொய்யாகிறது. சமநோக்காளர் (Stoics) கூறுவது பகலைப் பகல் என்பது உண்மை; அதனைப் பகல் அன்று என்பது உண்மையன்று என்கின்றனர். ஜி.இ. மூர் (G.E.Moore) உரையின் பொதுப் பண்பாக உண்மையும் பொய்யும் முதற்கண் ஏற்பட்டன; இரண்டும் இரண்டும் நான்கு; நான்கும் நான்கும் எட்டு என்கிறார்.

உரைகள் வாக்கியங்களைவிட உண்மையாகவோ பொய்யாகவோ இருக்க முடியும். பொதுவாக நம்பிக்கை உண்மையாகவும் இருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம். கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை உண்மையாகிறது.

உரைகள் இருப்பதை மறுப்பது: மூர் பொய்யான உரைகளைப்பற்றி வினாக்கள் எழுப்புகிறார். அவருடைய புதிய கொள்கை என்னவென்றால், உரைகள் என்பது ஒன்று இல்லை. நம்பிக்கையானது நம்புகிறவர்களுக்கும் நம்பிக்கையான உரைக்குமுள்ள உறவில் ஏற்படவில்லை. நம்பிக்கையின்மை நம்பிக்கையின் பொய்ம்மையை வெளிப்படுத்துகிறது. உண்மை நிகழ்ச்சி உண்மை நிலையை வளர்ச்சியடையச் செய்கிறது. நம்பிக்கையின் பொய்ம்மையை வெளிப்படுத்த மூர் கீழ்க்காணும் எடுத்துக்காட்டைக் கூறுகிறார். ஒரு நண்பர் விடுமுறைக்கு ஊருக்குப் போய்விட்டார் என்று ஒருவர் நம்புகிறார். இந்நம்பிக்கை உண்மையாயின் அவர் ஊருக்குப் போய் இருக்க வேண்டும். இந்நம்பிக்கை உண்மையற்றதாக இருந்தால் அவர் ஊருக்குப் போகவில்லை என்பது பொருள்.

அவர் ஊருக்குப் போய்விட்டார் என்பது உண்மையானால் அந்த நம்பிக்கைக்குச் சில காரணங்கள் இருக்க வேண்டும். அத்தகைய காரணங்களில்லாவிட்டால் அவர் ஊருக்குப் போய்விட்டார் என்பது பொய்ம்மையாகும் நம்பிக்கையும் உண்மை நிகழ்ச்சியும் ஒத்திருக்க வேண்டும். அவ்வாறு ஒத்திருந்தால் நம்பிக்கை உண்மையாகும்.

உரையில்லாமல் உண்மை நிகழ்ச்சி: மூரின் கருத்து உரையில்லாவிட்டாலும் நிகழ்ச்சிகள் அமைகின்றன என்பது. ஒரு நம்பிக்கை உண்மையாக அமைந்தாலும், மனிதனுக்கும் நிகழ்ச்சிக்குமுள்ள தொடர்பில்லாமல் இருக்கலாம். நிகழ்ச்சிகள் நாற்காலிகள், மேசைகள் போல் உண்மையில் அமைந்திருக்கின்றன.

இரசலின் (Russell) இயைபுடன்பாட்டுக் கொள்கை: மூருடைய கருத்துப்படி நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த அறிக்கையை ஆய்வு செய்தலும் இயைபுடன்பாட்டுக் கொள்கையின் தன்மையாகும். மூருடைய கருத்துகளைத் தெரிவிக்குமுன் இரசல் தம் கருத்துகளைத் தெரிவித்தார். அரிசுடாட்டிலியன் சங்கத்தில் 1906-ஆம் ஆண்டு படித்த கட்டுரையின்படி, ஒரு நம்பிக்கை ஒரு கருத்திலிருந்து மாறுபட்டிருக்கலாம்; அதனுள் பல தொடர்புடைய கருத்துகள் அமையப் பெறலாம்; நம்பிக்கை உண்மையாக இருந்தால் அவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து விடும்; பொய்யான நம்பிக்கையாயின், ஒன்றுமில்லை என்பது பொருள். தெசுடேமோனா (Desdemona) விற்கும் கேசியோ (Cassio) விற்கும் காதல் ஏற்பட்டது. அக்காதல் உண்மையாகவிருந்ததால் தெசுடேமோனாவும் கேசியோவும் அன்பினால் பிணைக்கப்பட்டார்கள். மேலும், ஒதெல்லோ (Othello) தெசுடேமோனாவும் கேசியோவும் காதலித்ததை நம்பினான். நான்கு கருத்துகளும் அதாவது, ஒதெல்லோ, தெசுடேமோனா, அவர்களுடைய அன்பின் அடிப்படையில் எழுந்த தொடர்பு, கேசியோ எல்லாம் ஒருங்கிணைந்து, நம்பிக்கையின் அடிப்படையில் காணப்படும்.

நம்பிக்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்கும் இடையேயுள்ள இயைபு இணைந்த கோட்பாட்டில் உண்மையான நிகழ்ச்சியானால் நம்பிக்கையும் உண்மையே என்பது அறியப்படும். அறிந்து கொள்வதும் புலன்களால் உணர்வதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன.

கருத்துரை: மேற்கூறிய கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் இரசல் இக்கொள்கையை ஆதரிப்பதை நிறுத்திவிட்டார். உண்மையான நிகழ்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் ஒரே தன்மையான சொற்களைப் பயன்படுத்தினால் போதும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நம்பிக்கையே உண்மையின் அடிப்படையில் எழுந்ததுதான். விட்சென்சுடின் (Wittgen stein) கூறுவதென்னவெனில், 'அவன் வருவதை நான் எதிர்பார்க்கிறேன்' என்பதில் ஏற்படுகிற உணர்வு, அவன் நிச்சயமாக வருகிறான் என்பதிலிருந்து வேறுபட்டிருக்கிறது. அப்படியானால், நான் எதிர்பார்க்

கிறது நடக்கும் என்று எப்படிக் கூற முடியும்? நம் பிக்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்கும் வேறுபாடு இருக்கும்.

மேற்கூறிய கொள்கையில், உரைகள் வாதத்திற் குரிய (Logical) பல்வேறு தோற்றங்கள் (Forms) என்று மட்டுமல்லாமல், பல்வேறு உருவமாதிரிகள் (Logical types) என்றும் கூறலாம்.

துணை நூல்கள்:

Moore, G.E., Some Main Problems in Philosophy, London, 1953.

Braithwaite, R.B., ed., The Common Place Books of G.E. Moore, London, 1962.

**இயைவித்தல்:** இயைவித்தல் அல்லது ஒருங் கிணைத்தல் (Co-ordination) என்னும் கொள்கை நிருவாகக் கொள்கைகளுள் முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. இயைவித்தல் மூலம்தான் நிருவாக அமைப்பு தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடிகிறது. ஒரு நிருவாக அமைப்பு பல்வேறு வகை யான செயல்களைச் செய்யக் கூடியதாக இருக்கிறது. இந்தப் பல்வேறு வகைச் செயல்களும் ஒன்றுபட்டால் தான் அந்த அமைப்பின் நோக்கம் நிறைவேறும். எனவே, ஒரு நிருவாக அமைப்பு தன்னுடைய நோக் கத்தை நிறைவேற்றும் வகையில், பல்வேறு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இப்பிரிவுகள் பொது வாகச் செயல்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு இருக்கும். இச்செயல்களை ஒற்றுமைப்படுத்தி, ஒத்து ழைக்கச் செயற்பட வைப்பதுதான் ஒருங்கிணைத்த லாகும்.

ஒருங்கிணைத்தல் செயல்களின் அடிப்படையில் உருவாகக் கூடியது. பல்வேறு பிரிவுகள் பல்வேறு செயல்களைச் செய்யக் கூடியன. ஒருங்கிணைத் தலின் மூலம் நிருவாக அமைப்புகளில் ஏற்படும் மோதல்களைத் தடுக்க முடியும். நிருவாகப் பிரிவு கள் போட்டியுடனும் பொறாமையுடனும் இயங்கி னால், ஒவ்வொரு பிரிவும் தனித்தனியான நிருவாக அமைப்புப் போல் இருக்குமேயல்லாது, நிருவாக அமைப்பின் உட்பிரிவுகள் போல் இருக்காது. தவிர, ஒரு பணியை ஒன்றுக்கு மேற்பட்ட நிருவாகப் பிரிவு கள் கூடச் செய்ய வாய்ப்பு உண்டு. இதனால், வீண் விரயமும் செலவும் அதிகரிக்கின்றன. எனவே, ஒருங் கிணைத்தல் நிருவாகப் பிரிவுகளுக்கிடையே எழும் போட்டிகளையும் பொறாமைகளையும் நீக்குவ தோடு, நிருவாகச் செலவுகளையும் கட்டுப்படுத்து கின்றது. தவிர, குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு நோக்கை அடைவதற்கும் இது பயன்படுகிறது. ஏனெனில், நிருவாகப் பிரிவுகளோடு கலந்து, காலத் தையும் இது கணித்து விடுகின்றது. நிருவாக ஒழுங் கினை இதன் மூலம்தான் கட்டிக் காக்க முடியும். நிருவாகப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களின் குறுகிய மனப்பாங்கை மாற்றி, பரந்த மனப்பான்மை யையும் இது ஏற்படுத்துகின்றது. ஏனெனில், குறிப் பிட்ட பிரிவு மட்டும் இயங்கினால் போதாது. அமைப்பிலுள்ள எல்லாப் பிரிவுகளும் இயங்கினால் தான் அமைப்புச் செயற்பட்டது போல் இருக்கும் என்பதைப் பணியாளர்களுக்கு உணர்த்துவது ஒருங் கிணைத்தல் அல்லது இயைவித்தல் ஆகும்.

இயைவித்தல் மூலம்தான் அரசாங்கம் தனது பணிகளை மக்களுக்குச் செய்ய முடியும். ஏனெனில், அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று பெரும்பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை சட்ட மன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை எனப்படும். இவை மூன் றும் சேர்ந்தால்தான் மக்கள் நலன் காக்கப்படும். மக்களுடைய தேவைகளைச் சட்டமன்றம் சட்டங் களாக உருவாக்குகின்றது. சட்டமன்றம் உருவாக்கிய சட்டங்களை ஆட்சித்துறை செயற்படுத்துகின்றது. சட்ட மன்றச் சட்டங்களும் ஆட்சித்துறையின் செய லாக்க ஆணைகளும் மக்கள் உரிமைகளைப்பாதிக்காத வாறு பார்த்துக் கொள்வது நீதித்துறையாகும். இவை மூன்றையும் ஒருங்கிணைத்தல் செய்வதால்தான் மக்களுக்கு அரசாங்கம் பணியாற்ற முடிகிறது. இல்லையேல், மூன்றும் தனித்தனித் தீவுகளாகக் காட்சியளிக்கும். மக்களுடைய தேவைகள், நலன் கள் ஆகியவை காக்கப்பட மாட்டா. எனவே, நிரு வாக அமைப்புக்கு மட்டுமன்று எந்தவோர் அமைப் பிற்கும் தேவையானது ஒருங்கிணைத்தலாகும்.

இது கொள்கை உருவாக்கத்திற்கும் (Policy For mulation) அக்கொள்கையைச் செயற்படுத்துவதற் கும் தேவையானது. ஒரு கொள்கையை உருவாக் கும் பொழுது அக்கொள்கையை நடைமுறைப் படுத்த முடியுமா என்பதையும், நடைமுறைப்படுத் தும்போது ஏற்படும் சிக்கல்களையும், அக்கொள்கை யைச் செயலாக்கும்போது நிருவாக அமைப்பின் பிரிவுகள் எவ்வாறு செயற்படுமென்பதையும் இயை வித்தல் என்னும் செயல் தீர்மானிக்கும். ஒருங் கிணைத்தலும் திட்டமிடலும் இணைந்தே செயற் படக்கூடியவை ஆகும். கொள்கை உருவாக்கத்தின் போது அதனைச் செயற்படுத்தத் தேவைப்படும் மனித சக்தி, மூலப் பொருள்கள் ஆகியவற்றையும் மதிப்பீடு செய்வது ஒருங்கிணைத்தல் கொள்கையைச் செயற்படுத்துவதற்காகும். நிருவாகப் பிரிவுகளில் முன்னுரிமையைத் தீர்மானித்து அவற்றை எங்ஙனம் நிறைவேற்ற வேண்டுமென வழிமுறைகளை அமைத் துக் கொடுப்பதும் இயைவித்தல் ஆகும். நிருவாகப் பிரிவுகளில் சிலவற்றிற்கு முன்னுரிமை வழங்கும்

போது பிற நிருவாகப் பிரிவுகள் அதனால் பாதிக் காதவாறு பார்த்துக் கொள்ளும் வல்லமை பெற்றது இக்கொள்கை. ஏனெனில், நிருவாகப் பிரிவுகள் முழுமையையும் தெரிந்து வைத்திருப்பது இயைவித் தல் பிரிவு (Co-ordination wing) ஆகும்.

ஒருங்கிணைத்தல் கொள்கை உருவாக்கலிலும் செயலாக்கத்திலும் எங்ஙனம் செயற்பட்டு வரு கிறது என்பதைப் பின்வரும் ஓர் எடுத்துக் காட்டு விளக்கும். உணவுப் பொருள் விளைவிப்பதில் நாடு தன்னிறைவு பெற வேண்டுமென்ற கொள்கை உருவாக்கப்பட வேண்டுமாயின், பின்வரும் முறை கள் மேற்கொள்ளப்படும். இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாக இருப்பதால், நடுவண அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டுள்ளது. இதில் வேளாண்மை, மாநிலங்களின் அதிகார வரையறைக்குள் இருக்கின்றது. நடுவண அரசாங்கத்திலும் வேளாண்மை-உணவு அமைச்சகம் என ஓர் அமைச்சகம் உள்ளது. தவிர, திட்ட ஆணை யம், தேசிய வளர்ச்சி மன்றம் ஆகியவை நாட்டின் முன்னேற்றத் திட்டங்களை உருவாக்கவும் செயலாக்க ஆலோசனைகள் கொடுப்பதற்காகவுமே அமைந் துள்ளன. இவ்வாறாக, மாநில அரசாங்கம், மைய அரசாங்கம், திட்ட ஆணையம் ஆகிய மூன்றும் தனித்தனியாக இருந்தால், ஒருங்கிணைந்த தேசிய வளர்ச்சி ஏற்பட முடியாது; உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவும் முடியாது. மாநிலங்களுக்கு மைய அமைச்சகம் ஆலோசனைகளையும் கருத்துரை களையும் அனுப்பி வைக்கிறது. திட்ட ஆணையம் விவரமாகக் கருத்துரைகள் குறித்து ஆய்வுகள் செய்து, நிறைவேறக் கூடிய நடைமுறைகளையும் கருத்துகளையும் தேர்வு செய்யும். மைய அரசும் விரிவாக மாநிலங்களிலும், தேசிய வளர்ச்சிக் கழகத் திலும் ஆராய்ந்து, இறுதியில் உணவு உற்பத்தித் தன்னிறைவுக் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுக் கும். இங்ஙனம் பல அமைப்புகளின் ஆய்வுகள், கருத்துகள் ஆகியவற்றின் ஒருங்கிணைவினால்தான் கொள்கை உருவாக்கம் பெறுகிறது. இதே வகையில் தான் கொள்கைகளுக்கும் செயலாக்கம் கொடுக்கப் படும். மைய அரசு தான் எடுத்த கொள்கைகள் பற்றி மாநில அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்தும். மாநில அரசாங்கங்கள் அவற்றைச் செயற்படுத்த முயலும். செயற்படுத்தும்போது எழுகின்ற நடை முறைச் சிக்கல்களை அவ்வப்போது திட்ட ஆணை யத்திற்குத் தெரியப்படுத்தும். கொள்கைகளை உருவாக்குவதில் சிக்கல்கள் மிகுந்தால், தேசிய வளர்ச்சி மன்றத்தில் அவை ஆராயப்படும். தவிர, மண்டலக் கழகங்களும் (Zonal Councils) கொள்கை உருவாக்கம், செயற்படுத்துதல் ஆகியவை பற்றி ஆய்வு நடத்தி, தவறுகளையும் நடைமுறைச் சிக்கல் களையும் தவிர்க்க ஆவன செய்யும். இவ்வாறு உணவு விளைச்சலில் தன்னிறைவையுண்டாக்க ஒருங் கிணைத்தற் கொள்கை உருவாக்கத்திலும் செயலாக் கத்திலும் ஈடுபடுகின்றது.


இயைவித்தல் தன் விருப்பப்படியும் கட்டாயமாக வும் உருவாகின்றது. இயைவித்தல் தொடர்புகள் (Communications) மூலம் உருவாகிறது. கட்டாய ஒருங்கிணைத்தல் அமைப்பின் படிநிலையால் அமை கின்றது. அமைப்பின் படிநிலை பலவாகப் பிரிக்கப் பட்டு, ஒரு படிநிலை இன்னொரு படிநிலையைச் சார்ந்து செயற்படவேண்டுமென்பதால், தொடர்பு கள் அல்லது ஒருங்கிணைத்தல் தேவைப்படுகிறது. ஒரு படிநிலை உயர்படிநிலையாக இருந்து, அதற்குக் கீழ் அமைந்த படிநிலையைக் கட்டுப்படுத்தக்கூடிய தாக, வழிகாட்டக் கூடியதாக அமைகின்ற காரணத் தால், உயர்படிநிலையைச் சார்ந்துதான் அதற்குக் கீழுள்ள படிநிலை செயற்பட முடியும். எனவே, செயற்பட வேண்டு மென்பதற்காகக் கட்டாய ஒருங் கிணைப்பு ஏற்படுகின்றது. நிருவாக ஆணைகள், கட்டளைகள் போன்றவற்றை உயர்படிநிலை பிறப் பிக்கும். அந்த ஆணைகளையும் கட்டளைகளையும் அதற்குக் கீழுள்ள படிநிலை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். ஆகவே நிருவாக ஆணைகள், கட்டளை கள் போன்றவை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைதலே ஒருங்கிணைத்தலாகும் எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

தன் விருப்பப்படி ஒருங்கிணைத்தல் ஏற்படும். இவ்வகை ஒருங்கிணைத்தல் ஒருவருக்கொருவர் பகிர்வு, ஒருவருக்கொருவர் ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் தன்மை ஆகியவற்றால் ஏற்படக் கூடிய தெனலாம். ஏனெனில், அமைப்பின் படிநிலை செங்குத்தாக அமைக்கப்பட்டாலும் ஒரு படிநிலை யில் பணியாற்றும் பணியாளர்களுக்கிடையே ஒற்றுமையுணர்வும், ஒத்துழைப்பும் இருந்தால்தான் அமைப்புச் செம்மையாகத் தனது இலக்கை அடைய முடியும். எனவே, விருப்பப்படியான ஒருங்கிணைத் தல் நிருவாக அமைப்பின் பல்வேறு பாகங்களிலுள்ள பதவித்தரங்களுக்கிடையே பக்கவாட்டுத் தொடர்பு களால் ஏற்படுகிறது. இது சட்ட வகையாகவும் சட்ட வகையில்லாமலும் அமையும். இது குழுவகை அமைப்புகளிடம் பொதுவாக இடம்பெறும். விருப்பப்படியான ஒருங்கிணைத்தல் மாநாடு கள், கருத்தரங்குகள், தனி ஆட்களுக்கிடையே தோன்றும் கருத்துப் பரிமாற்றங்கள், விவாதங்கள், பொது இடங்களில் ஏற்படும் தொடர்புகள் போன்ற வற்றின் வழியாக அமையும். இவை அனைத்தும்

சட்டவகையாக அமையாத தன் விருப்பப்படியான இயைவித்தல் ஆகும். துறைகளிடைக் குழுக்கள் (Interdepartmental Committees), இயைவித்தல் அதிகாரிகள், திட்ட ஆணையம், திட்ட வாரியம் போன்றவை சட்டவகையான இயைவித்தலை ஏற்படுத்தக் கூடியவை. தவிர, ஒரு துறையில் ஒருவர் வல்லுநர் அதாவது திறமை படைத்தவரென்றால் அத்திறமையாளரிடம் ஆலோசனை பெறுதலும் ஒருங்கிணைத்தலில் இடம் பெறும். உயர்நிலை அதிகாரிகளின் அதிகாரத்தை அவர்களது சார்பாளர்கள் பெற்றுச் செயற்படுத்தும்போது ஏற்படும் தொடர்பு இவ்வகை இயைவித்தலாகும்.

இயைவித்தல் எப்போதும் தேவையான நிருவாகக் கொள்கையென்றாலும், மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப இயைவித்தல் அணுகுமுறைகளும் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். இது நிருவாகப் பிரிவுகளுக்கிடையே தொடர்புகள் தாமாகவே உருவாகுமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். அதிகாரத்தால் உருவாகக் கூடிய தொடர்புகள் அவற்றின் எல்லையை மீறாதவாறு கண்காணிக்கப்பட வேண்டும். ஆதிக்கப்படுத்தித் தொடர்புகளைக் கட்டாயப்படுத்தினால் அவை எல்லை மீறலுக்கு வழி உண்டாகலாம். எனவே, ஒருங்கிணைத்தல் ஒருவருக்கொருவர் விருப்பப்படியாக அமையும் வண்ணம் அதற்குரிய கல்வியை வளர்க்க வேண்டும். சி.ஞா.

**இயோன்திரபசு:** மனிதன் குரங்கிலிருந்து சீரானமுறையில் படிமுறை வளர்ச்சியடைந்தான் என்பதற்கு மனிதக் குரங்குகளும் ஆதி மனிதனின் எலும்புகளும் புதைபடிவங்களும் ஆதிமனிதன் பயன்படுத்திய கற்கருவிகளும் சான்றுகளாக உள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு காலங்களில் ஆதி மனிதர்களின் மண்டையோடுகளும் புதைவடிவங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் பெரும்பான்மையானவற்றை ஆராய்ச்சியாளர்கள் பல ஆய்வுகளின் மூலம் அவை எந்தக் காலத்தில் வாழ்ந்தன; எந்த இனத்தைச் சேர்ந்தன என்ற விவரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறு முதலில் ஆராய்ச்சியாளர்களை நம்பவைத்த எச்சங்கள்தாம் 'பில்ட்டௌன்' (Piltdown) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டன. இவை இப்போது வாழும் மனிதனின் மண்டை ஓடும், மனிதக்குரங்குகளின் கீழ்த்தாடை எலும்புகளுமாகும். இவையனைத்தும் பிற்காலத்தில் பல ஆராய்ச்சிகள் மூலம் ஆதி மனிதனின் எச்சங்கள் அல்ல என்று முடிவு செய்யப்பட்டன. எனவே மனித இனத்தின் படிமுறை வளர்ச்சியில் 'இயோன்திரபசு' (Eoanthropus) என்னும் இனம் ஓர் உண்மையான நிலையன்று என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.



இயோன்திரபசு மண்டை ஓடு

இருப்பினும் மனித இனத்தின் படிமுறை வளர்ச்சியில் ஆர்வமுள்ளதொரு செய்தியாக 'இயோன்திரபசு' மனிதனைக் குறிப்பிடலாம். இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரைக்கருகில் பில்ட்டௌன் என்ற கிராமத்தில் 1913-ஆம் ஆண்டில் 'இயோன்திரபசு' மனிதனின் எலும்புகளென்று ஒரு மண்டை ஓட்டின் சில பகுதிகளும் கீழ்த்தாடையும் கண்டெடுக்கப்பட்டன. இவைமுறையே மனிதனின் மண்டை ஓட்டைப் போன்றும், மனிதக் குரங்கின் கீழ்த்தாடையைப் போன்றும் இருந்தன. இவற்றை இங்கிலாந்தைச் சேர்ந்த வழக்கறிஞரும், தொல்பொருள் ஆராய்ச்சியாளருமான சார்லசு தாவ்சன் (Charles Dawson) கண்டெடுத்ததாக அறிவித்தார். மேலும், ஒரு மண்டை ஓட்டின் வேறு சில துண்டுகளையும், மனிதக் குரங்கின் பற்களையும், பில்ட்டௌனிலிருந்து இரு மைல்களுக்கப்பாலுள்ள இடத்திலிருந்து கண்டெடுத்ததாகச் சார்லசு தாவ்சன் தெரிவித்தார்.

இம்மண்டை ஓடு மனிதனின் மண்டை ஓட்டைப் போன்றும் கீழ்த்தாடைகள் மனிதக்குரங்கின் தாடையைப் போன்றும் மாறுபட்டு இருந்ததால், ஆராய்ச்சியாளர்களை இவை பெரிதும் தடுமாற வைத்தன. உடலமைப்பியல் வல்லுநர்களுள் சிலர் அம்மண்டை ஓடும் கீழ்த்தாடையும் ஒரே மனிதனுடையவை என்றும், அவை தொன்மையான இனத்தைச் சேர்ந்த ஆதிமனிதனின் எலும்புகள் என்றும் நம்பினர். மேலும், சிலர் அவை அற்றுப்போன ஓர் இன மனித

னின் எலும்புகள் என்று கொண்டு 'இயோன்திரபசு' பில்ட்டௌன் மனிதன் இக்கால மனிதனின் முன்னோடி என்று நம்பினர்.

காலப்போக்கில் பெரும்பான்மையான வல்லுநர்கள் மேற்குறிப்பிட்ட கருத்துகளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். எனவே 'இயோன்திரபசு' மனிதனைப் பற்றிய ஆராய்ச்சி முடிவு உறுதியற்றதாக மாறியது. முடிவில் ஒகன்சுபர்கிலுள்ள விட்வாடர்சுராண்டு (Witwaetersrand) பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியின் உடலமைப்பியல் பேராசிரியர் டாக்டர் இரேமண்டு தார்ட்டு (Raymond Dart) பில்ட்டௌன் மனிதனின் எலும்புகள் அனைத்தும் 'ஒரு திறமையான மோசடி' என்று வெளிப்படுத்தினார். 'இயோன்திரபசு' வைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேலும் தொடரப்பட்டு, 1953-ஆம் ஆண்டில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் ஆங்கிலேய இயற்கையின் வரலாற்று அருங்காட்சியகமும் இணைந்து 'இயோன்திரபசு' மனிதனைப் பற்றிய கூற்றுகளை வெளிப்படுத்தின. 'பில்ட்டௌன் மனிதன் ஒரு போலி' என்ற கருத்தைப் 'பில்ட்டௌன் சிக்கலுக்கு ஒரு முடிவு' (The Solution of the Piltdown Problem) என்ற நூலில், 1953-ஆம் ஆண்டில் ஜே.எஸ் வீய்னர் (J.S. Weiner), கே.பி. ஒக்லி (K.P. Oakley), இலீக்கிராசு கிளார்க்கு (LE Gros Clark) ஆகியோர் வெளியிட்டனர். இந்த ஏமாற்று மோசடியைக் கண்டுபிடித்த முறைகளைப் பற்றிய விவரங்கள் இங்கிலாந்து அருங்காட்சியக ஆய்விதழில் வெளியிடப்பட்டன.

'பில்ட்டௌன் சிக்கலுக்கு ஒரு முடிவு'என்ற நூலில் விளக்கப்பட்டுள்ள பில்ட்டௌன் மனிதனின் எச்சங்கள் எனப்படும் மண்டை ஓட்டின் துண்டுகள் அனைத்தும் புதிய மனிதனுடையவை என்றும், கீழ்த்தாடை எலும்புகளும் பற்களும் இக்காலப் பெரிய மனிதக் குரங்கினுடையவை என்றும் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அந்த எலும்புகள் அனைத்தும் அரத்தினால் தேய்க்கப்பட்டும் இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டும் மிகத் தொன்மை வாய்ந்த எச்சங்களைப் போன்ற தோற்றத்தைத் தந்தன என்றும், பிறரை நம்பவைக்குமளவிற்குத் தவறாகக் கையாளப்பட்டதொரு திறமையான மோசடி என்றும் அந்நூல் பல உண்மைகளை வெளியிட்டது.

'பில்ட்டௌன் மனிதன் ஒரு போலி' என்ற உண்மை வெளிப்பட்டிருப்பினும், கற்படியுருவ மனிதனைப் பற்றி ஆராயும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பில்ட்டௌன் எச்சங்கள் பற்றிய உண்மைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், மிகத்தொன்மை வாய்ந்த புதைபடிவ உருவங்களைப் போன்று தோற்றமளிக்கும் எச்சங்கள் அனைத்தும் உண்மையான புதைபடிவமாக இல்லாமல் இருக்கலாம். எனவே, புதைபடிவ எலும்புகளின் ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்குப் பில்ட்டௌன் மோசடி எதிர்காலத்தில் எவரும் ஏமாறாமலிருக்க ஒரு படிப்பினையாக விளங்குகிறது. பா.ஜ.

**இர்கூட்சுக்கு** சோவியத்து ஒன்றியத்தைச் சார்ந்த சைபீரியக் குடியரசின் தலைநகரம். இந்நகரம் அங்கரா, இர்கூட்சுக்கு என்னும் இரு ஆறுகள் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது. இர்கூட்சுக்கு (Irkutsk) ஒரு தொழிற்சாலை மையம்; துறைமுகம்; திரான்சு சைபீரிய இருப்புப் பாதைத் தொடரில் (Trans-Siberian Railway) அமைந்துள்ள சிறப்பான இருப்புப் பாதை நிலையம். ஆகாய விமானங்கள், பேருந்துகள், இயந்திரக் கருவிகள், பருத்தி ஆடைகள், இரசாயனப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உலோகங்கள் போன்றவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கி.பி. 1654-ஆம் ஆண்டில் கோசாக்குகளின் கோட்டையாக நிலைநாட்டப்பட்டு, கி.பி. 1822-ஆம் ஆண்டு கிழக்குச் சைபீரியாவின் தலைநகராக்கப் பட்டது. இர்கூட்சுக்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து நாடு கடத்தப்பெற்றவர்களின் புகலிடமாக இருந்து வருகின்றது. இர்கூட்சுக்கின் மக்கள் தொகை 5,68,000 (1981).

**இர்மா:** பிராய்டு என்ற புகழ்பெற்ற உளவியலாரிடம் சிகிச்சை பெற்று வந்த உளநோயாளர்களுள் இர்மா என்னும் அம்மையாரும் ஒருவர் ஆவார். இர்மாவின் மருத்துவ வரலாறே பிராய்டின் கனவுக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தது. இர்மாவுக்குப் பல ஆண்டுகள் சிகிச்சை அளித்து வந்த பிராய்டு ஒருநாள் இர்மாவைப்பற்றிய கனவு ஒன்று கண்டார். கண் விழித்தவுடன் தம் கனவைப்பற்றிய குறிப்பு ஒன்றை விவரமாக எழுதினார். கனவுகளின் பொருள், விளக்கம், காரணம், கனவுகள் குறிப்பாலுணர்த்துபவை ஆகிய எல்லாச் சிக்கலான பொருள்களுக்கும் விடையளிப்பதாக இக்கனவு அமைந்திருந்தது. காண்க: கனவுப் பகுப்பாய்வு.

**இர்விங் வாசிங்டன் (கி.பி. 1783-1859)** என்பவர் அமெரிக்க வரலாற்றாசிரியரும் முதன்மையான எழுத்தாளருமாவார். இவர் கி.பி. 1783-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3-ஆம் நாள் நியூயார்க்கு மாநகரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு வணிகர். இவர் கல்லூரி செல்லாமல் வழக்குரைஞர் ஒருவரிடம் பணியில் அமர்ந்தார். ஆனால், உடல்நலக் குறைவின் விளைவாக இவர் வெளிநாட்டுப் பயணத்தை (கி.பி. 1804-1806) மேற்கொண்டார். பின்னர், கி.பி. 1806-ஆம் ஆண்டில் சட்டப்படிப்பை முடித்தார். இவருடைய தந்தையாரும் சகோதரர்

களும் இவரைச் சட்டத்துறையிலோ இறக்குமதி வாணிகத்திலோ அரசுப் பணியாளராகவோ இருக்க வேண்டுமென விழைந்தாலும், இறுதியில் இவர் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவராய் வாழ்வில் சிறந்தோங்கினார்.

இர்விங் வாசிங்டன் (Irwing, Washington) தம் சகோதரர் பீட்டர் என்பாரின் செய்தித்தாளான காலைச் செய்திக் கோவை(Morning Chronicle) என்னும் நாளேட்டில் எழுத வாய்ப்பளிக்கப் பெற்றார். புனை பெயரில் இர்விங் கட்டுரைகள் எழுதினார்.

இவர் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்த பெண் திருமணத்திற்கு முன்னர் உருக்கு நோயால் காலமாகிவிட்டமையால், இவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. இவர் எழுதிய வரலாற்று நூலை 'நிக்கர்பாக்கர் வரலாறு' (Knickerbocker History) என்பர். இதனை இவர் தம் சகோதரர் பீட்டருடன் இணைந்து எழுதினார்.

இவர் எழுதிய 'குறிப்பு நூல்' (Sketch Book) இங்கிலாந்திற்குச் சுற்றுலா செல்லும் பயணிகளுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

அமெரிக்க இலக்கியத்தில் சிறுகதையை எழுதியதால் இவரைச் 'சிறுகதைகளின் தந்தை' என்பர். எனினும், தாம் எழுதிய பயணநூல் போதுமான அளவு வரவேற்கப் படாமையால், இவர் வரலாறு, தன் வரலாறு போன்றவற்றை எழுதத் தொடங்கினார். 'கிறித்தோபர் கொலம்பசின் வாழ்வும் கடற்பயணங்களும்' (The Life and Voyages of Christopher Columbus) என்னும் நூலை, கி.பி. 1828-ஆம் ஆண்டில் வெளியிட்டார். அடுத்த ஆண்டில் (1829) 'கிரெனடாவை வென்றது பற்றிய வரலாற்றுக் குறிப்பேடு' (A Chronicle of the Conquest of Granada) ஒன்றை எழுதிமுடித்தார். புதினங்களைவிட வரலாற்று நிகழ்ச்சிகளை எழுதுவதில் இவருக்கு ஆர்வம் மிகுந்தது.

இலண்டனில் அமெரிக்கத் தூதரகத்தின் செயலாளராகப் பதவி ஏற்றார் இர்விங் வாசிங்டன். மூன்றாண்டுகளுக்குப்பின்னர், இவர் அமெரிக்கா திரும்பினார்.

சான் சாகோப் அசுட்டர் (John Jacob Astor) என்பார் கொடுத்த ஆவணங்களைப் பயன்படுத்தி, 'அசுட்டோரியா' (Astoria) என்னும் நூலை எழுதப் பணிக்கப் பெற்றார். படைத்தலைவன் போன்வில்லி (Captain Bonneville, கி.பி. 1837), ஆலிவர் கோல்டு சுமித்து என்பாரின் வாழ்க்கை வரலாறு (The life of Oliver Goldsmith, கி.பி. 1849), நபிகள் நாயகமும் அவரை அடுத்து வந்தவர்களும் (Mohammed and His Successors, கி.பி. 1850), சார்சு வாசிங்டன் பற்றிய 5 தொகுதிகள் (Life of George Washington, A.D. 1850-55) போன்றவை இவருடைய சிறப்பான வரலாற்றுப் படைப்புகளாகும்.

அமெரிக்காவிற்குத் திரும்பவேண்டுமெனப் பல முயற்சிகள் செய்தபோதிலும், இவர் கி.பி.1842 முதல் 1846 வரை இசுபெயினில் அமெரிக்காவின் தூதராகப் பணிபுரிந்தார். இர்விங் வாசிங்டன் கி.பி. 1859-ஆம் ஆண்டு நவம்பர் 28-ஆம் நாள் தாரிடவுன் (Tarrytown) என்னுமிடத்தில் காலமானார்.

**இர்வின் பிரபு** (1926-1931) ஆங்கில ஆட்சியின் போது பதினேழாம் அரசப் பேராளராக 1916-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இந்தியாவிற்கு வந்தார். இவருடைய பதவிக் காலம் 1926-இலிருந்து 1931 வரை நீடித்தது. இவர் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவராகவும் சிறந்த அறிவாளியாகவும் சமயப் பற்று மிக்கவராகவும் விளங்கினார். இந்தியர்களின் தன்னாட்சிக் கொள்கைக்கு இரக்கம் காண்பித்தவர் என்ற முறையில் தம்முடைய பழமையாளர் அரசியல் (Conservative) கட்சியினுடைய வெறுப்புக்கு ஆளானவர். இவர் இந்தியாவில் காலடி வைத்தபொழுது கல்கத்தாவில் இந்து-முசுலிம் இனக் கலவரம் தீவிரமாய் நடந்தது. இக்கலவரத்தில் ஆரிய சமாசத்தைச் சேர்ந்த தலைவரான சுவாமி சிரத்தானந்தர் முசுலிம் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே, இந்து-முசுலிம் இனக் கலவரங்களை அடக்கி இந்தியாவில் ஒரு நல்லுறவான சூழ்நிலையை உருவாக்குவதே தமது தலையாய பணி எனக் கருதி, இர்வின் பிரபு (Irwin) தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கினார்.



இர்வின் பிரபு

இந்தியாவில் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின்படி கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றி ஆராயவும், அரசியலமைப்பில் ஏற்பட்ட சிக்கல் குறித்து

ஆராயவும் 1927-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆணைக்குழு ஒன்று சர்சான் சைமனின் தலைமையில் நிறுவப்பட்டது. ஆனால், இக்குழுவில் இந்தியர்கள் ஒருவரும் இடம்பெறவில்லை. எனவே, இந்தியத் தலைவர்கள் அனைவரும் இக்குழுவை எதிர்த்தனர். சைமன் குழுவினர் 1928-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் இந்தியாவிற்கு வந்திறங்கிய அன்று நாடு முழுவதும் அமைதியான கதவடைப்பும் கண்டன ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. சில நகரங்களில் வன்முறைச் செயல்களும் அடக்கு முறைகளும் நிகழ்ந்தன. இதற்கிடையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தில்லியில் கூடி, முழுப் பொறுப்பாட்சி அடிப்படையில் இந்தியாவிற்கான அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபடலாயினர். மோதிலால் நேருவைத் தலைவராகக் கொண்ட சிறு குழு ஒன்று அமைக்கப்பெற்றது. குறுகிய காலத்தில் அரசியல் அமைப்புத் திட்டவரைவினை அக்குழு தயாரித்து, 1928-ஆம் ஆண்டு திசம்பரில் கல்கத்தாவில் கூடிய அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் வைத்தது. இதுவே நேரு அறிக்கையாகும். இவ்வறிக்கை இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசாக வேண்டும் என்றும் தன்னாட்சி (Dominion) அமைப்புப் பெற்ற நாடாக மாற வேண்டும் என்றும் சில சீரிய கருத்துக்களைத் தெரிவித்தது. இக் குழுவின் அறிக்கை முதலில் முசுலிம்களினால் மறுக்கப்பட்டுப் பின்னர்ச் சில திருத்தங்களோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்து இந்திய முசுலிம் லீக்கு 1929-ஆம் ஆண்டில் கூட்டிய மாநாட்டில் சின்னா தம் பதினான்கு உறுதிப்பாடுகளை வெளியிட்டார். அவர் இவ் உறுதிப்பாடுகளின் அடிப்படையில் வருங்கால அரசியலமைப்பு அமைந்தால்தான் முசுலிம்கள் அதனை ஏற்பர் என்று முழக்கமிட்டார். சைமன் குழுவுடன் இந்தியத் தலைவர்கள் ஒத்துழைக்காத போதிலும் அக் குழுவின் அறிக்கை 1930-ஆம் ஆண்டு வெளிவந்தது. அதில் அடங்கிய சிறப்புக் கூறுகள் பின்வருவன:

(1) கூட்டாட்சி அடிப்படையில் அரசியலமைப்பு இருக்க வேண்டும். (2) பர்மா தனியாகப் பிரிக்கப்பட வேண்டும். (3) மாநிலங்களில் முழு தன்னாட்சி இருக்க வேண்டும். ஆயினும், ஆளுநருக்கு ஒரு சில சிறப்பதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். (4) மத்தியில் இரு சட்டமன்றங்கள் செயற்பட வேண்டும். (5) மாநிலச் சட்டசபை விரிவு செய்யப்படுவதோடு மாநிலங்களுக்கு நிதி உரிமை அளிக்கப்படவும் வேண்டும். (6) உயர்நீதிமன்றங்கள் இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். (7) இங்கிலாந்திலுள்ள இந்தியக் குழுவின் அதிகாரங்களையும், அதன் உறுப்பினர் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டும். இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் தான் 1933-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் உருவாகியது.

சென்னையில் 1929-ஆம் ஆண்டில் காங்கிரசு மாநாட்டில் முழுச் சுதந்திரம் அடைவதே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதிக்குள் இந்தியாவிற்குத் தன்னாட்சி அமைப்பை ஆங்கில அரசாங்கம் அளிக்கத் தவறினால், முழுச் சுதந்திரப் போராட்டத்தைத் தாமே முன்னின்று நடத்துவதாகக் காந்தியடிகள் உறுதியளித்தார். இதற்கிடையில் இங்கிலாந்தில் தொழிற்கட்சி அரசாங்கம் ஏற்பட்டது. ஆங்கிலேயத் தலைமை அமைச்சரான இராம்சே மாக்டொனால்டு இர்வின் பிரபுவை உடனடியாக அழைத்து, இந்திய நிலைமை பற்றிக் கலந்தாலோசித்தார். அதனை அடுத்து 1929-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் இந்தியாவிற்குத் தன்னாட்சி அமைப்பு வழங்குவதே ஆட்சியாளரின் கொள்கை என இர்வின் பிரபு அறிவித்தார். ஆனால், இந்த அறிக்கை இந்தியத் தலைவர்களுக்கு மனநிறைவை அளிக்கவில்லை. மேலும், இங்கிலாந்தில் இந்த அறிக்கைக்குப் பலமான எதிர்ப்பு ஏற்பட்டதால், இர்வின் பிரபுவினால் மேற்கொண்டு எந்த உறுதிமொழியும் அளிக்க முடியவில்லை.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் சவகர்லால் நேருவின் தலைமையில் காங்கிரசு மாநாடு இலாகூரில் கூடியது. முழுச்சுதந்திரம் அடைவதே இந்தியாவின் குறிக்கோள் என்று அறிவிக்கும் தீர்மானம் இம் மாநாட்டில் நிறைவேறியது. அதன்படி 1930-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் நாடு முழுவதும் முழுச் சுதந்திர நாள் கொண்டாடப் பெற்றது முழுச் சுதந்திரத் தீர்மானம் சிலருக்கு மனநிறைவைத் தரவில்லையானாலும், அது பொதுவாக நாட்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

அதே சமயத்தில் காந்தியடிகள் பதினொரு செயற்கூறுகளை இர்வின் பிரபுவிடம் வைத்தார். இதற்கு அரசாங்கம் அளித்த பதில் அடக்குமுறை தான். எனவே, இந்தியத் தலைவர்கள் சட்ட மறுப்புப் போராட்டத்தில் ஈடுபடலாயினர். இப்போராட்டத்தில் முதற்படியாக உப்புச் சட்டத்தை மீறுவது எனக் காந்தியடிகள் முடிவுசெய்தார். உப்புச் சட்டத்தை மீறுவது குற்றம் என்றும் அமைதிக்கு ஊறு செய்யும் என்றும் இர்வின் பிரபு மறுமொழியாக எழுதினார். அதைக் கண்டு மனம் நொந்த காந்தியடிகள் வரலாற்றுச் சிறப்புடைய தண்டிப் பயணத்தை (Dandi March) 1930-ஆம்

ஆண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் நாள் மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் கதவடைப்பு, தடியடி, துப்பாக்கிச் சூடு போன்றவை நிகழ்ந்தன. பல தலைவர்கள் உட்பட 75,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப் பெற்றனர். இதனால் நாடே கொந்தளித்தது. இதற்கிடையில் உடன்பாட்டிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலாம் வட்டமேசை மாநாடும் காந்தி-இர்வின் ஒப்பந்தமும்: சைமன் குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னர்ச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு, முதல் வட்டமேசைமாநாடு 1930-ஆம் ஆண்டு இலண்டனில் கூடியது. இந்தியாவிலிருந்து பல கட்சிகளின் பேராளர்களும் சிற்றரசுப் பேராளர்களும் கலந்து கொண்டனர். ஆனால், காங்கிரசு மாநாட்டில் கலந்து கொள்ளாததால் இறுதி முடிவெடுக்கவில்லை. இதற்கிடையில் காங்கிரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உடன்பாட்டைக் கொணரும் முயற்சி தீவிரம் அடைந்தது. காந்தியடிகள் சுதந்திர அடிப்படையில் அரசியல் அமைப்பை உருவாக்கவும் உப்புச்சட்டங்களை நீக்கவும் சிறையில் அடைபட்டவர்களை விடுவிக்கவும் வட்டமேசை மாநாடு வழி வகுத்தால், தாம் சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிடுவதாக ஒத்துக் கொண்டார்.

இச்சூழ்நிலையில் காந்தியும் அரசப் பேராளரான இர்வின் பிரபுவும் தில்லியில் கூடிப்பேச முன்வந்தனர். இதன் விளைவாகக் காந்தி-இர்வின் ஒப்பந்தம் 1931-ஆம் ஆண்டு கையெழுத்தாகியது. இவ்வொப்பந்தம் இருசாராருக்கும் மனநிறைவை அளித்து, ஒருவகையான அமைதிக்கு வழி வகுத்தது. எனினும் இந்தியர்களுள் ஒரு பிரிவினர் இவ்வொப்பந்தத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துக் கராச்சி மாநாட்டிற்குச் சென்ற காந்தியடிகளுக்குக் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். இவ்வாறு காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்கு (Gandhi-Irwin Pact) எதிர்ப்பு இருந்த போதிலும், அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து எண்ணலாகாது. இர்வின் பிரபுவின் செயல்களில் சிறிது குறை காணப்பட்ட போதும், அவருடைய சாதனைகள் இந்திய வரலாற்றில் போற்றுதற்குரியனவாகும். இரா.கி.

துணை நூல்:

**Roberts,** P.E., History of British India, Oxford University Press, London, 1952.

**இர்வின், வில்லியம் (கி.பி. 1840-1911)** என்பார் வரலாற்று வல்லுநர்களுள் ஒருவர். இவர் ஐ.சி.எசு (I.C.S.) பட்டம் பெற்றவர். இவர் கி.பி. 1840-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் நாள் பிறந்தார். நீதிபதியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் இவர். இர்வின் வில்லியம் (Irvin William) எழுதிய நூல்கள் வாடகைச் செய்திக்குறிப்பு (Rent Digest), மொகலாயர் வரலாறு (History of the Moguls), பேரரசு விவரச்சுவடி (Imperial Gazetteer) முதலியன.

***இரகசியச் சங்கங்கள்*** சீன மஞ்சு வமிசத்தை முறியடித்துக் குடியரசை நிறுவிய சீனப் புரட்சி (1911) சீன வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகக் கருதப்படுகிறது. இப்புரட்சியை வருவித்த பல காரணங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, இரகசியச் சங்கங்களின் (Secret Societies)தோற்றமாகும். மஞ்சு வமிசத்தின் திறமையற்ற ஆட்சியினால் விளைந்த சீர்கேடுகளையும் பொருளாதாரச் சிக்கல்களையும் நீக்க, மஞ்சு வமிசத்தைக் கவிழ்த்துக் குடியாட்சியினை நிலைநாட்டுவதே இச்சங்கங்களின் நோக்கம் ஆகும். மஞ்சு வமிசத்தினால் ஏற்பட்ட கசப்புணர்ச்சியால் சீனா முழுவதும் புரட்சிக் கருத்துகள் ஓங்கிப் பல இரகசியச் சங்கங்கள் தோன்றின. சீனாவின் தென் பகுதியும், யாங்சி ஆற்றுப் பள்ளத்தாக்கும் இச்சங்கங்களின் பாசறைகளாக விளங்கின.

சீனாவின் 'குடியரசின் தந்தை' என்றழைக்கப்பட்ட டாக்டர். சன் யாட் சன்னின் தொண்டு பாராட்டுதற்குரியது. இவர் கி.பி.1866-ஆம் ஆண்டு நவம்பர் பன்னிரண்டாம் நாள் குவாட்டங்கு என்ற மாநிலத்தில் ஓர் ஏழை வேளாண் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமைப் பருவத்திலேயே அரசியல் துறையில் மிகுந்த நாட்டம் கொண்டார். பின்பு மேலை நாடுகளுக்குச் சென்று பல பாடங்களைப் பயின்று, இறுதியாக மருத்துவத்துறையில் பட்டம் பெற்றுப் பயிற்சி பெறும் காலத்தில், தம் தாய் நாட்டிற்கு வெளிநாட்டவரின் தலையீட்டால் ஏற்பட்ட கொடுமை குறித்து மனம் வருந்தினார். எனவே, தமது பயிற்சியைக் கைவிட்டுத் தாயகம் திரும்பிப் பல சீர்திருத்தங்களைச் செய்யத் திட்டமிட்டார். இந் நோக்கோடு கி.பி. 1894-ஆம் ஆண்டு, 'சிங் சங் யூ' (Hsing Chung Hui) என்ற இரகசியச் சங்கத்தை நிறுவினார். கல்வி, வேளாண்மை, தொழில் நுட்பம் ஆகியவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்திச் சீனாவைப் பிற நாட்டவரிடமிருந்து காப்பதே இச்சங்கத்தின் சீரிய நோக்கம் ஆகும்.

'பாக்சர் இயக்கம்' 1900-ஆம் ஆண்டு தொடங்கியது. அது புரட்சியாளர்களின் கருத்துகளுக்கும் செயல்களுக்கும் மிகுந்த ஊக்கம் தந்தது. டாக்டர் சன் யாட் சன் தூரக் கிழக்கு நாடுகளுக்குப் பயணம் சென்று அக் காலக் கருத்துகள் பலவற்றைப்

பயின்று, சீனாவில் பல அரிய திட்டங்களைத் தீட்டும் பொருட்டு 'டிரியாட்' என்ற இரகசியச்சங்கத்துடன் தொடர்பு கொண்டு தீவிரமாகச் செயற்பட்டார்.

இவர் 1905-ஆம் ஆண்டு தாம் நிறுவிய 'சிங் சங் யூ' என்ற இரகசியச் சங்கத்தை மற்ற இரகசியச் சங்கங்களோடு இணைத்து, 'டங் மிங் யூ' என்ற ஒருங்கிணைந்த இரகசியச் சங்கத்தை உருவாக்கினார். இச்சங்கம் ஆறு வகையான நோக்கங்களைச் செயற் படுத்தத் திட்டமிட்டது. அவையாவன 1. மஞ்சு ஆட்சியை முறியடித்து அம்மரபினரை நாட்டை விட்டு வெளியேற்றல், 2. சீனாவில் குடியரசு ஆட்சியை நிறுவுதல், 3. உலக அமைதிக்குப் பாடு படல், 4. நிலங்களை நாட்டுடைமையாக்கல், 5. சப்பானிய நாட்டுடன் கூட்டுறவு மேம்பாடு அடை தல், 6. சீனப்புரட்சிக்கு ஆதரவு வேண்டி மற்ற நாடு களுடன் இணக்கமான உறவிற்கு வித்திடுதல் ஆகியன வாம்.

இச்சங்கங்களின் கருத்துகள் சீன இளைஞர்களை மிகவும் கவர்ந்தன. நாடு முழுவதும் சீர்திருத்தங் களை ஏற்படுத்த முயன்றனர். மேலைநாட்டுக் கல் விக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. பொருளாதாரத் தில் புதுவிதமான கொள்கைகள் இடம் பெற்றன. வேளாண்மையும் தொழில் நுட்பமும் மேம்படுத்தப் பட்டன. நாடு முழுவதும் அரசியல், சமூகம், பொரு ளாதாரம், கல்வி, கலை, அறிவியல் போன்ற துறை களில் மாற்றம் ஏற்பட்டுச் சீனாவின் புகழ் ஓங்கியது. இந்த இரகசியச் சங்கங்களே 1906, 1907, 1910-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புரட்சிகளுக்குக் காரணமாகி, 1911-ஆம் ஆண்டு உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற சீனப் புரட்சியைத் தோற்றுவித்தன.

இப்புரட்சியின் விளைவாகச் சீனாவில் குடியரசு தோன்றி, டாக்டர் சன் யாட் சன் அதன் தலைவ ரானார். இவர் இரகசியச் சங்கங்களின் மூலம் சீனா வின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு முடிவில் வெற்றியும் பெற்றார். காலப்போக்கில் இச்சங்கங்கள் 'குவோ மிங் டாங்' (மக்கள் தேசிய கட்சி) என்று பெயரை மாற்றிக் கொண்டன. இத் தேசிய கட்சி டாக்டர் சன்யாட்சன்னின் ஓய்வுக்குப் பிறகு கலைக்கப் படவே, சீனாவின் அரசியலமைப்பில் பிளவுகள் தோன் றின. எனினும், சீனாவின் முன்னேற்றத்தில் இரகசி யச் சங்கங்களின் பங்கு பாராட்டற்குரியது. இரா.கி.

துணை நூல்:

**Paul H. Clyde & Burton F. Beers**, The Far East, Prentice Hall of India Private Limited, New Delhi, 1974.

**இரகசியச் சங்கங்கள்[2]:** இரகசியச் சங்கம் என் பது இரகசியங்களையும் மறைபொருளான நடை முறைகளையும் முறையாகச் செயற்படுத்துகின்றவர் களைக் கொண்ட ஒரு குழுவாகும். இரகசியச் சங்கங் களிடையே காணப்படும் சில பொதுப்படையான பண்புகளாவன: 1. முறைப்படி கூட்டம் கூடுதல், 2. ஏற்புச் சடங்கு நடைபெறுதல், 3. இரகசியத்தைக் காக்கச் சூளுரை எடுத்துக் கொள்ளுதல், 4. ஆண்டு விழா, உறுப்பினர்களின் இறப்புச் சடங்கு முதலான விழாக்களைக் கொண்டாடுதல், நடனமாடுதல், 5. பதவி ஏற்பு நடைபெறுதல், 6. புதிய உறுப்பினர்கள் அடையாளச் சின்னங்களை அணிந்து கொள்ளுதல், 7. உறுப்பினர்கள் தங்களுக்குள் சில அடையாளச் சொற்களைப் பயன்படுத்துதல், 8. சங்கத்து உறுப் பினர்களிடையே பரவலான பிரிவுகள் காணப்படு மாயினும் அவர்களுக்கிடையே ஒழுங்கும் கட்டுப் பாடும் நிலவுதல், 9. பெண்களையும் சிறுவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளாதிருத்தல், 10. தம் சமூகத்திற்கு அடிப்படை வசதிகளை அமைத் துத் தருதல், 11. உறுப்பினர்கள் அனைவரும் ஒரே விதமான அரசியல் கருத்துகளையே அல்லது மதத் தையே சார்ந்திருத்தல்.

உலகெங்கும் உள்ள பல்வேறு சமூக மக்களி டையே காணப்படும் இரகசியச் சங்கங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1) சமுதாயத்தின் அரசியல் அல்லது மத அமைப்பில் சீர்திருத்தத்தையோ மறு மலர்ச்சியையோ ஏற்படுத்துவதற்காகச் செயற்படும் குழுவாகும். இச்சங்க உறுப்பினர்கள் சமுதாயத்திற்கு ஒவ்வாதனவாகத் தாம் கருதும் பண்புகளை அகற்றப் பாடுபடுவர். 2) சமூக அமைப்பிற்குத் துணையாக வும் நன்மைபயப்பதாகவும் சமுதாயத்தின் ஓர் உறுப்பாகவும் இச்சங்கம் செயற்படும். எனினும், இவ் விரு இரகசியச் சங்கங்களிலும் சடங்குகளும் நடை முறைகளும் இரகசியமாக இருக்கும். முதல் வகை இரகசியச் சங்கம் வளர்ச்சியடைந்த சமூகங்களிலும், இரண்டாம் வகை ஆதிக்குடிச் சமூகங்களிலும் காணப்படும்.

**ஆதிக்குடிகளிடையே இரகசியச் சங்கங்கள்:** சமூகத்தில் குடும்பம் அல்லது ஒரு குழு செய்யாத பணிகளைச் செய்யவும், அயலார் தலையீட்டினால் தங்கள் தொன்மையான பழக்கவழக்கங்கள் அழிந்து போகாமல் காக்கவும் இத்தகைய இரகசியச் சங்கங் கள் தோன்றியனவாகக் கருதப்படுகின்றன. மேலும், தாய்வழிக் குடும்ப அமைப்புடைய சமூகங்களில் பெண்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆண்கள் இரக சியச் சங்கங்களை உருவாக்கத் தூண்டப்பட்டனர் என்றும், சில சமுதாயங்களில் குலக்குறி (Totem)

அமைப்புடன் இவை தோன்றியன என்றும் இரகசியச் சங்கங்களின் தோற்றத்தைக் குறித்துத் தொடக்கக் கால இனக்குழுவியலார் (Ethnographers) கூறுவர். இரகசியச் சங்கங்களைப் பிற்கால இனக்குழு ஒப்பாய் வியலார் (Ethnologists) ஆதிக்குடிகளின் சங்கம், கூட்டுறவுக் குழு, தலைகொய்வோர் குழு, வயதுப் பிரிவினர், ஏற்புச் சடங்குப் பள்ளி, நடனச் சங்கம், நாடகமாடிகள் மன்றம், உடன் பிறப்பு நிலை எனப் பலவாறாக இதன் செயற்பாட்டிற்கேற்பக் குறிப்பிட் டனர்.

இரகசியச் சங்கங்களில் ஆண்கள் வயதுக்கு வந்த வுடனேயே உறுப்பினராகச் சேர்ந்து விடுகின்றனர். இதனால், வேறு தீய எண்ணங்கள் ஏற்படாமல் மனத்தைக் கட்டுப்படுத்துவதுடன் தாம் சார்ந்திருக் கும் சமுதாயத்தின் பெருமைகளையும் அறிகின்றனர். வயதுக்கு வந்தவுடன் செய்யப்படும் இச்சடங்குகள் பெரும்பாலான சமூகங்களில் ஏற்புச் சடங்காகக் கருதப்படுகின்றன. ஏற்புச் சடங்கில் புதியவர் இறந்து போய் மீண்டும் புதைகுழியிலிருந்து தோண்டி எடுத்து உயிர்பெறச் செய்வது போன்ற ஒரு போலியான சடங்கு ஒன்றைச் செய்கிறார்கள். இச்சடங்கு சேர்க் கப்பட்டவரின் முந்தைய தகுதிநிலையை மறையச் செய்வதுடன் அவர் புதிய பெயர், புதிய பட்டம், புதிய மொழி, புதிய சலுகைகள் ஆகியவற்றைப் பெறுவதையும் குறிக்கும்.

இரகசியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலைப் பெற்றிட இயலும் எனக் கருதுகின்றனர். நைசீரியச் சமுதாயங் களான இயொரூபா (Yoruba) வின் எகுங்கன் (Egungan), இபோ (Ibo) வின் மாவ்(Mau), இபீபியோ (Ebibio) வின் எக்போ (Ekpo), எக்கோய் (Ekoi) யின் இக்பீ(Ekpe) அல்லது நக்பீ (Ngpe), இசோ(Ijo) வின் எகைன் (Ekine) ஆகிய இரகசியச் சங்கங்களின் இன்றி யமையாத பணி நடனமாடுவதும் முரசு கொட்டுவ தும் ஆகும். நடனங்கள் மக்களின் நன்மைக்காக நிகழ்த் தப் பெறுவதாகக் கருதுகின்றனர். எடுத்துக்காட் டாக, ஒப்பி (Hopi) மக்களின் மழைவேண்டி ஆடும் நடனத்தையும் சியா பியூப்லோ(Sia pueblo)மக்களின் கழிவிழுங்கும் நடனத்தையும் கூறலாம். கழிவிழுங்கும் நடனத்தில் நிலத்தைக் கொத்துக் கருவியால் கொத்துவதைப் போன்றே நடனமாடுபவர்கள் கொம்புகளால் தொண்டைப் பகுதியை உந்துகிறார் கள். இந்த நடனம் இளவேனிற்காலத்தில் நல்ல முறையில் விதைகளை விதைப்பதற்கான ஒரு சடங் காகச் செய்யப்படுகிறது. மேலும், மாறுவேட மணிந்து தங்கள் கிராமத்தையும் கோயிலையும் சுற்றி ஆடிவருவர். எந்த உருவத்தை மாறுவேடமாக மேற்கொண்டிருக்கிறார்களோ அந்த உருவத் தின் ஆவிகளை அவர்கள் பெற்றிருப்பதாக மற்றவர் எண்ணுகின்றனர். எடுத்துக்காட்டாக, முன்னோர் களின் ஆவி, கடவுள்களின் ஆவி, மனிதனுக்கும் தெய் வத்துக்கும் இடைப்பட்ட 'உருவ ஆவி' ஆகியவற்றைக் கூறலாம். இத்தகைய சங்கங்களில் ஆண்கள் இரகசி யங்களைப் பேணிக் காப்பதற்குத் தகுதியானவர்களே என்பதை அறிந்த பின்னரே அனுமதிக்கப்படுகின்ற னர். இதைப் போன்ற பணிகளைச் செய்யும் இரக சியச் சங்கங்களுக்கு எடுத்துக்காட்டாக, தென் ஆப்பிரிக்கா முழுவதும் (தென் கானாவைத் தவிர்த்து) செனகல் முதல் காங்கோ வரை பரவிக் காணப்படும் சமுதாயங்கள், வடமேற்குக் கடற்பகுதி இந்தியப் பழங்குடிகளான அரிசோனா, நியூ மெக்சிகோவில் பியூப்லோ இந்தியர்கள், மேலும் மெலனேசியச் சமூ கங்கள் ஆகியவற்றைக் கூறலாம். ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற மெலனேசியாவின் சில சங்கங் களில் 'ஆடவர் வீடு' என்னும் பொது இருப்பிடம் இருக்கும். அப்பொதுவிடத்தில்தான் ஆடவர் தங்கு வர்; உண்ணுவர்; உறங்குவர். ஆனால் திருமணமான வர் தமது குடும்பத்தாருடன் உறங்குவர். இவர்கள் முகமூடி அணிந்துகொண்டு தங்களது இரகசிய இடத் தில் கூடுகின்றனர். அப்பொழுது இவர்கள் புதிரான ஒருவித ஒலியை ஊதல்களின் மூலமும் தம்மிடம் இருக்கும் கைராட்டைகளின் மூலமும் ஏற்படுத்துகின் றனர். இவ்வாறு உண்டாக்கப்படும் ஓசை, ஆவிகளால் உருவாக்கப்படும் ஓசை என நம்பப்படுகிறது. மெலனே சியாவில் இரகசியச் சங்கங்களின் சடங்குகளில் தொப்பிகளும் ஒரு சிறந்த பங்கினை வகிக்கின்றன.

முகமூடி அணிந்து தலையில் தொப்பியும் அணிந் திருந்தால் அது உடல் முழுமைக்கும் புனிதத் தன்மை யைக் கொடுப்பதாக நம்பப்படுகிறது. இரகசியச் சங்கங்களின் உறுப்பினர்கள் 'ஆவிகள்' என்ற நிலை யில் வைத்தும் கருதப்படுவதுண்டு. மெலனேசியாவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் இவ்வாறான இரக சியச் சங்கம் ஒன்றில் சேர்ந்த பின்னர் இறந்து விட் டால், அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய துக்க முறைகளை அனுசரிப்பர்.

சில இரகசியச் சங்கங்கள் பொழுதுபோக்குப் பணி மட்டுமல்லாமல் அரசியல், நிருவாகம், நீதி, ஒழுங்குமுறை, கல்விப் பணி ஆகியவற்றையும் மேற் கொள்கின்றன. மேற்கு ஆப்பிரிக்காவில் சியாராலி யோன் (Sierra Leone), சைபீரியா ஆகிய பகுதிகளில் வழங்கும் மெண்டே (Mende), தெம்னே (Temne) என்னும் பழங்குடிகளிடையே போரோ (Poro) என் னும் 'ஆண்குழு' ஒருமைப்பாட்டையும் கட்டுப்பாட் டையும் காக்கும் அமைப்பாக விளங்குகிறது. 'போரோ' வின் தலைவர் மிகுந்த அரசியல் அதிகார மும் செல்வாக்கும் உடையவராவர். 'போரோ' அரசி

யல் அதிகாரத்தைப் பெற்றிருப்பதுடன், சிறுவர்களுக்குத் தொடக்க நிலைச் சடங்குகளையும் கல்வி அளிக்கும் பணியையும் செய்கின்றது.

'போரோ' வில் உறுப்பினரான பின்பே ஓர் ஆண் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறான். மேலும், சமுதாயத்தின் குழுமங்களில் உறுப்பினராவதற்கும் பதவிகளைப் பெறுவதற்கும் தகுதியுடையவனாகிறான். 'போரோ' வின் உறுப்பினர்களிடையே தகுதி, சமூகச் செல்வாக்கு, அடிப்படையான ஏற்றத்தாழ்வுள்ள படிநிலை அமைப்பு ஆகியவை காணப்படுவதுடன், உறுப்பினர்களின் தகுதிநிலை படிப்படியாக உயரக் கூடியதாகவும் உள்ளது. இப்படி ஒவ்வொரு தகுதிநிலையை அடையும் போதும் தொடக்கத்தில் இரகசியச் சங்கத்தில் சேருவதற்காக எந்த முறையில் தொடக்கச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டனவோ, அந்த முறையில் ஏற்புச் சடங்கினையும் ஒவ்வொரு முறையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு உயர் தகுநிலையோ அவ்வளவுக்கவ்வளவு தொடக்கச் சடங்கு நீண்டதாகவும் கடினமானதாகவும் இருக்கும். இவ்வாறு படிநிலை அமைப்புக் கொண்ட சங்கங்களில் ஒரு தகுதிநிலையைச் சேர்ந்தோர் தம் தகுதிநிலை ஒத்தவருடன் மட்டுமே சேர்ந்து உண்பர்.

மெலனேசியாவில் படிநிலை அமைப்புக் காணப்படுகிற சமூகங்களில் அச்சமூகத்தின் தலைமைப் பொறுப்பு இரகசியச் சங்கத்தின் தலைவரிடம் சென்று அடைகிறது. இதனால் அச்சமுதாயங்களில் ஆட்சிப் பொறுப்பானது தலைமுறை வழி வருவது தவிர்க்கப்படுவதுடன், பல்வேறு தகுதிநிலைகளைக் கடந்து வயது முதிர்ந்த ஆடவரிடம் சென்றடைகிறது. சில சங்கங்கள் போர்க் கருவிகளை உருவாக்குதலையும் இயக்குதலையும் உறுப்பினர்கட்குக் கல்வி அளித்தலையும் மேற்கொள்கின்றன.

மத்திய ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளின் இரகசியச் சங்கத்தில் திருமணமான ஆண்களின் தனிக் குழுவானது மற்றவர்களிடம் ஆணவத்துடன் அதிகாரம் செலுத்துவதுடன், சில தனிச் சலுகைகளையும் கொண்டிருக்கிறது. இது போன்ற சங்கங்கள் மத்திய மெலனேசியப் பகுதிகளிலும், நைசீரியா வரையிலான மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியிலும், காங்கோவில் உள்ள காம்ரூன் மற்றும் அடர்காட்டுப் பகுதியில் வாழும் ஆதிக்குடிகளிடத்திலும் காணப்படுகின்றன.

சிறுத்தைப்புலி, முதலை, பாம்பு, கால்நடைகள், ஊர்வன, பறவைகள் ஆகியவற்றின் பெயரால் சில இரகசியச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் 'சிறுத்தைப்புலி' என்பது மிகவும் பயங்கரமானதாகும். 'எக்போ', 'எக்பி', 'நெக்பீ' என்னும் பிரிவினர் சிறுத்தைப்புலி தொகுதியில் அடங்கும் ஆதிக்குடிகளாவர். மனித உயிர்ப்பலியும், மனிதனை உண்ணும் பழக்கமும் இரகசியச் சங்கங்களில் காணப்படுகின்றன. உயிருடன் பலியிடுவதைக் கருவளர்ச்சிக்கான சடங்குகளில் ஒன்றாக இவர்கள் கருதுகின்றனர். சிறுத்தைப் புலியின் கால்களைப் போன்ற மரத்தாலான படிவ அச்சைக் கை, கால்களில் அணிந்து, சிறுத்தைப் புலிபோல் நடந்து வந்து, புலிபலியாளைத் தூக்கிச் சென்றுவிட்டதைப் போன்ற ஒரு போலித் தோற்றத்தை உண்டாக்குகிறார்கள். வளைநகங்களைப் போன்ற கத்திகளைக் கொண்டு உயிர்ப்பலிக்குள்ளானோரின் உறுப்புகளைக் குறைத்து, உடலைக் கிழிக்கின்றனர்.

ஆப்பிரிக்கப் பழங்குடி மக்களின் இரகசியச் சங்கங்கள் யாவும் இத்தகைய கொடூரச் செயல்களைக் கொண்டவையல்ல. இத்தகைய சங்கங்கள் மந்திரம், மதம், சமூகச் செயற்பாடு ஆகியவற்றால் உறுப்பினர்களிடையே உதவிகள் புரிந்தும் சமூகக் கட்டுப்பாட்டைக் காத்தும் வருகின்றன. இச்சங்கங்கள் தம் இனத் தலைவரின் அதிகாரத்தை முறைப்படுத்துவதுடன் அரசு அதிகாரத்தையும் கட்டுப்படுத்துகின்றன. ஆதிக்குடிகளின் இரகசிய ஆணைகள் ஒட்டுமொத்தமான சட்டதிட்டங்களையும் மேற் கொள்ளுகின்றன. சில இரகசியச் சங்கங்கள் கடமை தவறுபவரிடம் தண்டமாகப் பொருளைக் கொள்கின்றன; சமூக ஒற்றுமையைக் குலைப்பவர்களைத் தண்டிக்கின்றன. மேற்கு ஆப்பிரிக்காவில் சங்கங்களுக்கிடையே ஏற்பட்ட இவைபோன்ற பாதுகாப்புச் செயல்கள் உலகின் பிற பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்தன. சியராலியோவின் சில பகுதிகளில் இரகசியச் சங்கங்களில் பரவிய வன்முறை, பொதுமக்களின் கண்டனத்துக்குள்ளாயிற்று. 'சிறுத்தைப்புலி' போன்ற சங்கங்கள் தடைசெய்யப்பட்டன.

அமைதி காப்பதும், சடங்குமுறைகளை உடையதும், மந்திர, மத அமைப்புகளைக் கொண்டதுமான இரகசியச் சங்கங்களுக்கு எவ்விதக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. பழைய தகோமியை(Dahomey) ஆண்ட சுல்தானியர் அரசு இரகசியச் சங்கங்களின் நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்தது. இதற்கு மக்கள் எதிர்ப்போ மறுப்போ தெரிவிக்கவில்லை. ஏனெனில் அந்தச் சங்கத்து உறுப்பினர்களிடையேயான ஒத்துழைப்பினையும் வெளிப்படையான நடவடிக்கைகளையும் அந்த அரசு தடை செய்யவில்லை. இப்போதும் தகோமிய இளைஞர்களிடையே இபி (Ibe) என்னும் குழு உள்ளது.

சில இரகசியச் சங்கங்கள் தம் செயற்பாட்டினைப் பொறுத்து வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்படு

கின்றன. எடுத்துக்காட்டாக, கலாபாரி இசோ (Kalabari Ijo) என்னும் சமுதாயத்தின் இரகசியச் சங்கம் பொழுதுபோக்கு அம்சங்களிலும் நீதிப் பணியிலும் ஈடுபடும்போது இகைன் எனவும், மாறுவேட நடனமாடும்போது செகியாப்பு (Sekiappu) எனவும் சொல்லப்படுகிறது. அதேபோன்று 'பேங்க் தீவுகளில்' வசிக்கும் மக்களின் இரகசியச் சங்கம் மதச்சார்பற்ற செயல்களில் ஈடுபடும்போது சுக்வே (Sukwe) என்றும், மறைபொருளான சிலருக்கு மட்டும் கற்றுக் கொடுக்கக்கூடிய செயலில் ஈடுபடும்போது தமாட்டே (Tamate) என்றும் சொல்லப்படுகிறது. நைசீரியாவில் உள்ள எக்காய் (Ekoi), எபிக்கு (Efik) ஆகிய குடிகளிடையே யுள்ள இச்சங்க உறுப்பினர்களிடையே பலபடித்தான அமைப்புக் காணப்படுகிறது. ஒவ்வொரு படிநிலை உறுப்பினர்களும் இரகசியமான பணிகளைக் கொண்டுள்ளனர்.

இரகசியச் சங்கங்களின் நடவடிக்கைகளைப் பெண்கள், உறுப்பினரல்லாதவர்கள், சிறுவர் ஆகியோருக்கு வெளிப்படுத்துதல் மாபெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. மத்திய ஆசுத்திரேலியாவில் ஆண் குழு ஒன்றின் சடங்கினை ஒரு பெண் தற்செயலாகப் பார்த்துவிட்டால் கூட அவள் அவ்விடத்திலேயே ஈட்டியால் குத்திக் கொல்லப்படுவாள். இப்பொழுது அவ்விடங்களில் ஆசுத்திரேலியா காவல்துறை, நீதிமன்றங்கள் ஆகியவை செயற்படத் தொடங்கிய பிறகு இத்தகைய கொடூரங்கள் நடப்பதை அவை தடுத்து விட்டன. இதே போன்று 'பேங்க் தீவுகள்', சில மெலனேசியத் தீவுகளிலுள்ள சமுதாயங்கள் ஆகியவை இரகசியச் சங்கங்களின் இரகசியத்தை வெளிப்படுத்துபவர்களை அச்சுறுத்துவதுடன் கொடுமைப்படுத்தவும் செய்கின்றன. இவ்வாறு இரகசியச் சங்கங்களில் பொதுவாக ஆண்கள் மட்டுமே உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும், நியூ அயர்லாந்தில் மலாங்கான் சங்கத்தின் சில சடங்குகளில் பெண்கள் அனுமதிக்கப்படுகின்றனர். சில பியூப்லோ இந்தியர்களின் 'கட்சினா' என்னும் சங்கத்தில் பெண்களை அனுமதித்தாலும் சில மறைவான முறைகளை அவர்கள் அறிந்து கொள்ளச் செய்வதில்லை. சியாராலியோனில் உள்ள புண்டு மக்களிடையே உள்ள பெண்கள் ஆண்களின் இரகசியச் சங்கங்களை ஒத்த குழுக்களைக் கொண்டுள்ளனர்.

இக்காலச் சமுதாயத்தில் இரகசியச் சங்கங்கள்: புதிய சமூகங்களில் அரசியல் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து மக்களிடையே ஏற்படும் எழுச்சிகளின் காரணமாக இரகசியச் சங்கங்கள் தோன்றியதை வரலாறு உணர்த்துகின்றது. ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு ஒருவருக்கொருவர் உடன்பிறப்புணர்வுடன் உதவிக் கொள்ளும் உறுப்பினர்களைக் கொண்ட பல இரகசியச் சங்கங்கள் தோன்றின. பிரான்சில் போனபர்ட்டேயின் காலத்தில் உருவான 'கார்போநாரி' என்னும் இரகசிய அரசியல் கழகம் ஐரோப்பாக்கண்டம் முழுவதும் பரவியது. இதன் உறுப்பினர்கள் பழுக்கக் காய்ச்சிய கோடாரியைத் தொட்டவாறு, 'இந்த இரும்பின்மீது ஆணையாகச் சங்கத்தின் இரகசியங்களைக் காப்பேன்' என உறுதிமொழி எடுத்துக்கொள்வர்; மறுப்பவருக்கு மரணதண்டனையே கூட விதிக்கப்படுவதுண்டு.

கிரேக்க நாட்டு விடுதலைக்காக வியென்னாவில் எட்டாய்ரியாவும் அயர்லாந்தில் தோன்சு ஐக்கிய அயிரிசுகள் (Irishmen) என்னும் சில குழுக்களும் தத்தம் தேசிய விடுதலையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்ட சிலஇரகசியச் சங்கங்களாகும். உருசியாவில் ஐக்கிய சிலொவோனியன்கள் (United Slavoni) என்னும் அமைப்பும், போலந்தில் தெம்ப்ளார்சு என்று சொல்லப்படும் சங்கமும் முறையே அந்நாட்டு விடுதலைக்காகத் தோன்றிய குழுக்களாகும்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரும்பாலான இரகசியச் சங்கங்களின் நடவடிக்கைகள் திட்டமிட்ட மறுமலர்ச்சியை நோக்கிச் செயலாற்றாமல் மிகுதியான குற்றங்களைப் புரிகின்ற அமைப்புகளாக மாறின. சைபீரியாவில் 1911-ஆம் ஆண்டு 'கறுப்புக் கை' (Black Hand) என்றழைக்கப்பட்ட இறப்பு ஒன்றியம் (Union of Death) ஓர் இரகசியச் சங்கமேயாகும். அமெரிக்கத் தென் ஐக்கிய அரசுகளில் 'குக் கிளக்சு கிளான்' (KuKluxKlan) என்னும் மறைநிலை நீக்கிரோ எதிர்ப்புச் சங்கம் குறிப்பிடத்தக்கதாகும். இதன் உறுப்பினர்கள் தாங்கள் கூடும்போது முகமூடிகளைஅணிந்து கொள்வர். அப்போது கருப்பு மேசையின் மீது விளக்குத்திரி, ஒரு சிலுவை, குத்து உளி, ஒரு சுழல் கைத்துப்பாக்கி ஆகியவற்றைப் பரப்பி வைத்திடுவர். இதன் பின்னர், 1820-இல் 'சுமோரா' என்னும் சங்கம் தொடங்கப்பெற்றபின் நேப்பிள்சு நகரச் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த கைதிகளை விடுவித்தது. பிறகு அந்தக் கைதிக்ள் கொள்ளைக்காரர்களாக மாறினர். அதுமட்டுமல்லாமல் கி.பி. 1890-இல் அவர்கள் தாய்ச் சங்கத்திலிருந்து பிரிந்து 'மாலாவிட்டா' எனத் தனியாக ஒரு குழுவை அமைத்துக் கொண்டனர். இறுதியாக 1911-ஆம் ஆண்டில் குறிப்பிட்ட சில கலகக்காரர்களைத் தூக்கிலிட்டதன் மூலம் 'சுமோரா சங்கம்' முழுவதுமாக மறைந்து போயிற்று.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் பெரும்பாலான அரசியல் மறுமலர்ச்சிக் [illegible] தமக்கென

இரகசிய அமைப்பு விதித் தொகுதிகளைக் கொண்டு பலவகைத் தடைகளை மீறி உருவாகியுள்ளன. போருக்குப் பின் தேசிய உணர்வுகளுடனும் பிரிவினை, தீவிரவாத நடவடிக்கை ஆகியவற்றுடனும் முழுமையான மறுமலர்ச்சியை அடைகிற விதத்தில் சில சங்கங்கள் உருவாகியுள்ளன. பாலசுத்தீனம், எகிப்து, சைப்ரசு, கென்யா, அல்சீரியா, அர்செண்டைனா, கியூபா, அய்ட்டி (Haiti), பிரெஞ்சு, இந்தோ சீனா, இலங்கை ஆகிய நாடுகளில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஏற்பட்ட எழுச்சிகளினால் பெருத்த அரசியல் மாற்றங்களை உண்டாக்கியுள்ள சில சங்கங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். அத்தகைய சில புகழ்பெற்ற இரகசியச் சங்கங்களின் பெயர்களாவன: 'இன்குன்சுவாய்லெவ்மி' (Ingunzwailevmi) (பாலசுத்தீனம்), 'எக்கா' (Eoka) (சைப்ரசு), மாவ்-மாவ் (Mau-Mau) (கென்யா), 'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்' (இலங்கை) மற்றும் பல நாடுகளில் அண்மைக் காலங்களில் இன உரிமையையும் நாட்டுரிமையையும் மீட்க உலகெங்கிலும் உண்டான இரகசியச் சங்கங்களையும் ஏனைய விடுதலைப் போர் வீரர் குழுக்கள் ஆகியவற்றையும் எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இரகசியச் சங்கங்களின் தோற்றம், செயல்முறை ஆகியவற்றிற்கான தொடர்புகளை ஒப்பிட்டு விரிவான ஆராய்ச்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய சங்கங்கள் மக்கள் தொகை மிகுந்து பல்வேறுபட்ட பண்பாட்டினைக் கொண்ட சமூகங்களில் காணப்படுகின்றன. மேலும், சில புரட்சியான செயல்களைச் செய்ய முற்படும்போதும் அரசியல் பூசல்களின் போதும் சமூகத்தில் இரகசியச் சங்கம் உருவாக வாய்ப்பு உண்டு. வல்லாட்சி நாடுகளில் இத்தகைய இரகசியச் சங்கங்கள் தோன்ற வாய்ப்பு இல்லை. எவ்விதச் சூழ்நிலையிலும் இரகசியச் சங்கங்கள் பொதுமக்கள் இயக்கமாக மாறுவதற்கு வாய்ப்புகள் இல்லை எனலாம். ஆ.செ.

## இரகுநாத சேதுபதி (கி.பி. 1645-1674)

இராமநாதபுரத்துச் சேதுபதிகளுள் புகழ் மிக்கவர் ஆவார். இவர் மதுரைத் திருமலை நாயக்கருக்குக் கடைசி வரையில் பெருந்துணையாக இருந்து, மதுரை அரசைப் பகைவரின் படையெடுப்பிலிருந்து பாதுகாத்ததால் இவருக்குத் 'திருமலை சேதுபதி' என்னும் விருதுப் பெயரினைத் திருமலை நாயக்கர் வழங்கினார். சேதுபதிகளுள் தலைசிறந்தவராகக் கருதப்படும் இவர், சிறந்த வீரராகவும் ஆட்சியாளராகவும் பக்திமானாகவும் கல்விமானாகவும் கல்விப் புரவலராகவும் விளங்கினார்.

இரண்டாம் சடைக்கத்தேவர் என்ற தளவாய் சேதுபதியின் (கி.பி. 1636-1645) இறப்பிற்குப் பின் (கி.பி. 1645), இராமநாதபுரத்து மறவர் சீமையில் குழப்பம் ஏற்பட்ட காரணத்தால் திருமலை நாயக்கர் அதனை மூன்றாகப் பிரித்து, இராமநாதபுரம் சீமையை இரகுநாத தேவருக்கும், சிவகங்கைச் சீமையைத் தம்பித் தேவருக்கும், திருவாடானைப் பகுதியைத் தனக்கத் தேவருக்கும் நாராயண தேவருக்கும் வழங்கினார். சில ஆண்டுகள் கழித்து தனக்கத் தேவரும் தம்பித் தேவரும் இறந்துபட்ட காரணத்தால், மறவர் நாடு முழுமையும் இரகுநாதரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இவர் கி.பி. 1645 முதல் 1674 முடிய மறவர் நாட்டின் செல்வாக்கு மிக்க சேதுபதியாகவே ஆண்டு வந்தார்.

ஆட்சியின் தொடக்கப் பகுதியில் இவர் தம்பித் தேவரின் துணையுடன் தஞ்சைச் சீமையின் மீது படையெடுத்துத் தஞ்சை நாயக்க மன்னரை வென்று, மன்னார் கோயில், தேவகோட்டை, அறந்தாங்கி, திருவாரூர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்.

**திருமலைநாயக்கருக்கு உதவுதல்:** திருமலை நாயக்கரிடம் கி.பி. 1625-இல் தோல்வியுற்ற மைசூர் வேந்தனான கந்திரவ நரச நாயக்கன் (கி.பி. 1638-1659) திருமலை நாயக்கரைப் பழிவாங்கும் பொருட்டு, கி.பி. 1656-இல் மதுரை சீமையின் மீது படையெடுத்து வந்தான். கொங்கு நாட்டின் சத்திய மங்கலத்தைக் கைப்பற்றியதுடன், ஆயிரக்கணக்கான ஆண்களின் மூக்குகளை மட்டுமன்றிப் பெண்களின் மூக்குகளையும் மைசூர்ப் படைவீரர்கள் மூர்க்கத்தனமாக அறுத்து அவற்றை மூட்டைகட்டி மைசூருக்கு அனுப்பினர். மைசூர்ப் படைகள் மதுரை நகரை நோக்கி முன்னேறிவந்து கொண்டிருந்தன. இத்தருணத்தில் திருமலை நாயக்கரோ நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். இந்நிலையில் நாயக்கரின் துணைவியார் மறவர் சீமையின் அதிபதியான திருமலை சேதுபதிக்கு உதவி நாடிக் கடிதம் அனுப்பினார். இரகுநாதரும் ஒரேநாளில் 25000 மறவர்களைத் திரட்டிக் கொண்டு வந்து, மைசூர்ப் படையினரை இரு போர்க்களங்களில் வென்று, திண்டுக்கல்லுக்கு வெளியே விரட்டியடித்தார். இவ்வாறு மூக்கறுப்புப் போர் அல்லது இரண்டாம் மைசூர்ப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனால் மைசூர்ப் படையெழுச்சியிலிருந்து மதுரைச் சீமையைக் காத்த பெருமை இரகுநாத சேதுபதிக்கு உண்டு. மைசூர்ப் படையினரின் மூக்கறுப்புப் போரை மூர்க்கத்தனமாக முறியடித்து, அவர்களது மூக்குகளையும் அறுத்து, திருமலை நாயக்கரின் உயிரையும் காத்த சேதுபதியைத் திருமலை நாயக்கர், 'திருமலை சேதுபதி' என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தார். நாயக்க

மன்னரின் உயிரைக் காப்பாற்றியதன் மூலம் இராணியின் தாலியைக் காப்பாற்றியதாலும், இராணியின் வேண்டுகோளை நிறைவேற்றியதாலும் 'இராணியின் தாலிக்கு வேலி' (இராணியின் தாலியைக் காத்தவர்), 'இராணி சொல் காத்தார்' முதலான பட்டங்களையும் விலையுயர்ந்த பரிசுகளையும் தமக்கு மட்டுமே உரிமையாய் இருந்த அரிமுகப் பல்லக்கையும் (சிங்க முகச்சிவிகை) நாயக்கர் சேதுபதிக்கு வழங்கினார். மேலும், திருப்பூவணம், திருச்சுழியல், பள்ளிமடம் என்னும் ஊர்களையும் சேதுபதிக்கு வழங்கினார். அடுத்து ஆண்டுதோறும் கட்ட வேண்டிய கப்பத் தொகையைச் சேதுபதி எப்போதும் செலுத்த வேண்டுவதில்லை எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் இரகுநாத சேதுபதி ஏறத்தாழ ஒரு தனிமன்னரைப் போன்று இராமநாதபுரத்தை ஆண்டு வந்தார் எனலாம்.

திருமலை மன்னரின் மீது பேரன்பு கொண்டிருந்த சேதுபதி மதுரைச் சீமைக்கு முசுலிம் படையெடுப்பால் ஆபத்து நேர்ந்த போதும் கைகொடுத்து உதவினார். தமது ஆற்றல்மிகு மறவர்படைகளைக் கொண்டு குதுப்கானின் படையெழுச்சியை முறியடித்தார். இதன் விளைவாக, 'தேசக் காவலன்' என்னும் விருதுப் பெயரும் சேதுபதிக்கு ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மதுரைச் சீமைக்கு எட்டயபுரம் பாளையக்காரரால் பேராபத்து ஒன்று ஏற்பட்டது. வலிமைமிக்க எட்டயபுரம் பாளையக்காரர் பிற பாளையக்காரர்களின் துணை வலியுடன் மதுரை மன்னருக்கெதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தினார். திருமலை நாயக்கரோ இப்புரட்சியை ஒடுக்கும் பணியைச் சேதுபதியிடம் ஒப்படைத்தார். சேதுபதியோ மறவர் படைகளை ஏவித் திருநெல்வேலிச் சீமையை அதிரச் செய்தார். இச் சாதனையைக் கண்டு மகிழ்ந்த திருமலை மன்னர் சேதுபதியை முத்துக்குளிப்பு நடைபெறும் மன்னார்வளைகுடாப் பகுதிக்குப் பாதுகாவலராக அமர்த்தியதுடன், திருநெல்வேலிப் பகுதியில் உள்ள மன்னார் கோயிலையும் அன்பளிப்பாக வழங்கினார்.

இறுதிக்காலம்: மதுரை நாயக்கருக்கும் இராமநாதபுரம் சேதுபதிக்கும் இடையே நிலவிய நல்லுறவு திருமலை நாயக்கரின் இறப்பிற்குப் பின் சீர்குலையத் தொடங்கியது. திருமலை மன்னரின் பேரரான சொக்கநாத நாயக்கர் மதுரை அரசராக அமர்ந்த பின்னர் மதுரைச் சீமையின் தலைநகரம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. தஞ்சை நாயக்க வேந்தரான விசயராகவருடன்போரும் தொடங்கப்பட்டது. ஒரு சமயம் வானமியான் என்னும் முசுலிம் படைத் தலைவனால் திருச்சிக்கு ஆபத்து ஏற்பட்ட போது, சொக்கநாதர் இரகுநாதரின் உதவியை நாடினார். இரகுநாதரோ கேளாக் காதினராக இருந்துவிட்டார் எனக் கூறப்படுகிறது. இதன் காரணமாக நாயக்கர் சேதுபதியின் மீது பகைமை கொண்டார். படிப்படியாகப் பெருவலிமையடைந்த இரகுநாதர் தமக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, விடுதலை பெறக் கூடும் என அஞ்சிய நாயக்கர் சேதுபதியை ஒடுக்க எண்ணினார் எனக் கருதுவாரும் உண்டு. சொக்கநாதர் தம் பெரும் படையுடன் திடீரென்று மறவர் நாட்டின் மீது பாய்ந்து, புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோயில் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். வெற்றிக் களிப்பில் திளைத்த நாயக்கர் தலைநகரில் சில அவசர அரசியல் அலுவலைக் கவனிக்கும் பொருட்டும் திருவிழா ஏற்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டும் தலைநகருக்குச் செல்ல வேண்டியிருந்தது. எனவே படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தும்படியும், மறவர் நாடு முழுமையையும் கைப்பற்றும்படியும் படைத் தலைவர்களுக்கு ஆணைபிறப்பித்து விட்டுத் தலைநகருக்குத் திரும்பினார். கொரில்லாத் தாக்குதலில் தேர்ச்சி பெற்ற மறவர் படையினரோ, காடுகளினின்றும் வெளிப்பட்டு நாயக்கர் படைகளைப் பலவிடங்களில் தாக்கி, அவர்களை அலைக் கழித்து, தாமிழந்த பகுதிகளுள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர். தோல்வியால் துவண்ட நாயக்கர் படையோ வேறு வழியின்றித் திருச்சி நோக்கி விரைந்தது.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகளால் இரகுநாத சேதுபதி தம் இறுதிக் காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்ததாகத் தெரியவில்லை. இவர் அடிக்கடி இராமேசுவரம் சென்று, இராமநாதசுவாமியை வணங்கித்தம் இறுதி நாட்களை ஆங்கே கழித்ததாகவும் கூறப்படுகிறது. ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக் காலத்திற்குமேல் மறவர் சீமையை மாண்புடன் ஆண்ட இரகுநாதர் கி.பி. 1674-ஆம் ஆண்டு ஆனி மாதம் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

பண்பாட்டுப் பெருமை: இரகுநாத சேதுபதி நாயக்கரின் தெலுங்கு மொழியான தெலுங்கையும் மறவர் நாட்டில் அறிமுகப்படுத்தினார். தெலுங்கு மொழியை இராமநாதபுரம் அவையிலும் கடிதத் தொடர்பிலும் மாற்று ஆட்சி மொழியாகச் செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் வழக்கிலிருந்த தெலுங்கு மொழி முத்திரையை நாம் இன்றும் கி.பி. 1658-ஆம் ஆண்டில் இவரால் வெளியிடப்பட்ட பனை ஓலை ஆவணத்தால் அறியலாம். நவராத்திரித் திருவிழாவையும் இச்சேதுபதி திருமலை மன்னரின் இசைவுடன் மறவர் நாட்டில் முதன் முறையாக அறிமுகப்படுத்தினார். சேதுபதியின் மீது பேரன்பு கொண்ட திருமலை மன்னர் சேதுபதிக்குத் தங்கத்

தாலான இராசராசேசுவரியின் படிமத்தை அன்புடன் வழங்கினார். இரகுநாத சேதுபதியின் கட்டளைப்படி இராமநாதபுரத்திலும் இராமேசுவரத்திலும் உள்ள இராசராசேசுவரி அம்மன் கோயில்களில் இன்றும் வழிபாடும் பூசனையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கலை வளர்ச்சி: இரகுநாத சேதுபதி தலைசிறந்த கலை, இலக்கியப் புரவலராகவும் விளங்கினார். இவர் கற்றறிந்த புலவர்களை ஆதரித்ததுடன் கோயில்களைக் கட்டுவதிலும் கோயில்களைப் புதுப்பிப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இச்சேதுபதி இராமநாதபுரத்தில் வனசங்கரி அம்மன் கோயிலையும் மாரியம்மன் கோயிலையும் கட்டினார். புனிதத்தலமான இராமேசுவரத்திற்கு அடிக்கடி புனிதயாத்திரை புரிந்த இவர், அங்கு 'இரணிய கர்ப்பதானம்' செய்து, 'இரணிய கர்ப்பயாசி' என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். இராமேசுவரத்திலுள்ள இராமநாதசாமி கோயிலின் இரண்டாம் பிரகாரத்தை இச்சேதுபதி கட்டியதாகவும் கூறப்படுகிறது. இவர் இராமேசுவரத் தீவில் ஊர் ஒன்றினையும் அமைத்துள்ளார். இராமேசுவரத்திலுள்ள கோதண்டராமச் சத்திரத்திற்கும் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறை மடத்திற்கும் இவர் பல அறக்கொடைகளை அளித்ததோடு அந்தணர்களை உண்பிக்க ஐம்பது கிராமங்களைத் தானமாகவும் வழங்கி உள்ளார்.

இலக்கிய வளர்ச்சி: திருமலை சேதுபதி கற்றறிந்த சான்றோர் பலரை ஆதரித்ததுடன், தாமே சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்தார். எனவே இலக்கிய வளர்ச்சிக்கு இவர் பேராதரவு நல்கினார். தமிழ்ப் புலவர்களான அழகிய சிற்றம்பலக் கவிராயர், அமிர்த கவிராயர் முதலான புலவர்களை இவர் ஆதரித்தார். தாயுமான சுவாமிகள் தமது இறுதிக் காலத்தை இராமநாதபுரத்தில் தான் கழித்துள்ளார். இரகுநாதருக்கு, 'சேதுமூலரட் சகதுரந்தரன்', 'வைகைவளநாடன்', 'ராமநாதசாமிகார்ய துரந்தரன்', 'பாரத நாடக ப்ரவீணன்', 'தொண்டியின் துறை காவலன்' முதலான சிறப்புப் பெயர்கள் இருந்தன என்பதனைக் கி.பி. 1697-ஆம் ஆண்டினதான செப்பேடு ஒன்றால் அறியலாம். ம.பு.

துணை நூல்கள்:

**Subramanian**, N., History of Tamilnadu, Vol. II, Ennes Publishers, Madurai, 1970.

சுப்பிரமணியன், ந., தமிழக வரலாறு, பகுதி II Ennes Publishers, Madurai, 1970.

**Tiruvenkatachari**, S., Setupatis of Ramnad, 1860.

## இரகுநாத சேதுபதி ஒருதுறைக் கோவை

இரகுநாத சேதுபதியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பொன்னாங்கால் அமுத கவிராயரால் பாடப்பட்டது. இது 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் அகத்துறையில் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது.

தலைவியைத் தனியிடத்துக் கண்ட தலைவன் அவள் அழகைப் புகழ்ந்துரைப்பதாகவும், அப்புகழ்ச்சியைக் கேட்ட தலைவி நாணத்தால் தன் கண்களைக் கைகளால் பொத்திக் கொள்வதாகவும் பாடப்படுவது 'நாணிக் கண் புதைத்தல்' என்பதாகும்.

அகத்துறை ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்வொரு பாடல் பாடுவதே புலவர்கள் வழக்கம். அவ்வாறு பாடப்படும் நூல் 'கோவை' என்றும் 'அகப்பொருட் கோவை' என்றும் பெயர் பெறும். ஆனால், ஒரே துறையைப் பற்றி நானூறு பாடல்களைப் பாடுவது அருமைப்பாடு உடையதாம்.

இரகுநாத சேதுபதி ஒரு நாள் தம் அவைப்புலவர்களிடம் 'ஓர் அகத்துறையைப் பற்றிப் பல பாடல்கள் பாட முடியுமா?' என வினவினார். ஒரு துறைக்குப் 'பத்துப்பாட்டுப் பாடுவேன்'; 'இருபது பாட்டுப் பாடுவேன்' எனச்சில புலவர்கள் கூறினர். ஆனால், அமுத கவிராயர், 'நான் நூறு பாட்டுப் பாடுவேன்' என்றார். 'நானூறு பாட்டுப் பாடுவீரா?' என்று நகைத்தார் மற்றொரு புலவர். 'சரி! அப்படியே இருக்கட்டும்; நானூறும் பாடுவேன்; அவற்றைப் பதினைந்து நாள்களுக்குள்ளும் பாடுவேன்' என்றார் அமுதர். இவ்வாறு பாடப்பட்டதே இவ்வொருதுறைக் கோவை.

ஒருதுறைக்கோவை என்னும் சிற்றிலக்கிய வகையுள் முதன்முதலாக இயற்றப்பட்டது இதுவேயாகும். இதில் 311 பாடல்களே இப்பொழுது கிடைத்துள்ளன. காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு உரை விளக்கத்துடன் 1942-இல் இந்நூல் வெளிவந்தது. இதனைப் பதிப்பித்தவர் தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை என்பவர். இரா.இ.

## இரகுநாத நாயக்கர் (கி.பி. 1589-1639)

திருச்சி மாவட்டம் தஞ்சைப் பகுதியைஆண்ட நாயக்க மன்னருள் முதன்மையானவர். அச்சுதப்ப நாயக்கருக்கும் (கி.பி. 1560-1600) மூர்த்திமாம்பாவிற்கும் மகவாகத் தோன்றிய இவர், தஞ்சை நாயக்க மரபின் பெருமையை உயர்த்தினார். ஏறத்தாழ கி.பி. 1589-க்கு முன்பே இளவரசுப் பட்டம் பெற்ற இவர்,

கி.பி. 1614-இல் அரியணையேறினார். தொடக்கத்தி லிருந்தே இவர் விசயநகரப் பேரரசரின் மேலாண் மையை விரிவுபடுத்துவதில் பேரார்வம் கொண்டு, அப்பேரரசருக்கு ஆதரவாகப் போரிட்டார்.

விசயநகரப் பேரரசுக்கு உதவுதல்: விசயநகரப் பேரரசர் முதலாம் வேங்கடரின் ஆட்சிக்காலத்தில், கி.பி. 1589-இல் கோல்கொண்டா சுல்தான் பெனு கொண்டாவை முற்றுகையிட்ட போது, இரகுநாதர் வேங்கடருக்கு ஆதரவாகப் போரிட்டு, முசுலிம் படைக ளைத் தோற்கடித்தார். அடுத்து விசயநகரப் பேரர சிற்கு உட்பட்டுக் கப்பம் செலுத்தி வந்த முராசுகள் எனினும் இனத்தவர் திம்மண கவுடர் தலைமையில் கப்பம் கட்ட மறுத்து விடுதலை பெறும் நோக்குடன் கிளர்ச்சி செய்த பொழுது, இரகுநாதர் அவர்களை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டினார். இதனால் மகிழ்ந்த வேங்கடர் நாயக்கருக்குப் பல பரிசுகளை யும் பாராட்டுகளையும் வழங்கினார்.

அரசுரிமைப் போர்: விசயநகரப் பேரரசர் வேங் கடபதி கி.பி. 1614-இல் காலமானதால் அவரால் வாரிசாக நியமிக்கப்பட்ட இரண்டாம் சீரங்க தேவ ராயன் என்ற சிக்கதேவராயர் பட்டம் பெற்றார். இந்நிலையில் மறைந்த பேரரசர் வேங்கடபதியின் அரசியார் போலிக் குழந்தை ஒன்றை நிறுத்திப் பட் டத்திற்குப் போட்டியிட்டார். சிக்கதேவராயரை எச்சமநாயக்கரும் அரசியின் கட்சியைச் சக்கராயரும் ஆதரித்தனர். சக்கராயர் சிக்க தேவராயரையும் அவ ரது குடும்பத்தினரையும் கைது செய்து கொன்றார். சிக்க தேவராயரின் இரண்டாம் மகனான இராமன் மட்டும் உயிர் தப்பினான். எச்சம நாயக்கர் குழந் தையைப் பாதுகாப்புடன் வைத்துவிட்டு, தென்னாடு சென்று இரகுநாதரின் ஆதரவைத் திரட்ட முயன் றார். இதற்குள் சக்கராயரும் மற்றத் தென்னாட்டு நாயக்க வேந்தரின் உதவியைப் பெறத் திருவரங்கத் திற்கு வந்தார். தனது பகைவனை ஆதரித்த இரகுநாத நாயக்கரைப் பழிவாங்கத் துடித்த சக்கராயர், காவிரி யில் உள்ள கல்லணையை (Grand Anicut) இடித்துத் தள்ளிப் பேரழிவை உண்டுபண்ண முனைந்தார்.

தோகூர்ப் போர் (தோப்பூர்): சக்கராயருக்கு ஆத ரவாக மதுரை நாயக்க மன்னர் முத்துவீரப்பரும் செஞ்சிநாயக்க மன்னர் கிருட்டிணப்பரும் பெரும்படை யுடன் வந்து, மூன்றுபடைகளும் சேர்ந்து கல்லணைக் கருகில்உள்ள தோப்பூரில் முகாமிட்டிருந்தனர். கோப முற்ற இரகுநாத நாயக்கர் எச்சம நாயக்கரின் துணையுடன் பெரும்படை திரட்டி, பழமானேரி வழி யாகப் படை நடத்திச் சென்று, தோப்பூரை அடைந்து, எதிரிகளுடன் கி.பி. 1616-ஆம் ஆண்டு சூன் மாதம் 8-ஆம் நாள் கடும்போர் புரிந்தார். சக்க ராயர் போரில் கொல்லப்பட்டார். மகாராசர், தள வாய் செஞ்சு ரவில்லா மாதன்னா, மதுரை நாயக்க மன்னர், செஞ்சி நாயக்க மன்னர் முதலானோர் போர்க்களத்தினின்றும் உயிர் தப்பி ஓடினர். இதன் நினைவாக வெற்றித்தூண் ஒன்றும்அங்கு நிலைநாட் டப்பட்டது.

இரகுநாதரும் எச்சம நாயக்கரும் இராம தேவ ராயரை விசயநகர வேந்தனாக அரியணையில் அமர் தினர். இவ்வெற்றியின் நினைவாக இரகுநாதர் கும்பகோணத்தில் கி.பி. 1620-இல் இராமசாமிக் கோயிலைக் கட்டினார். இவ்வெற்றிக்குப் பின்னரும் செஞ்சி நாயக்கர் கலகம் செய்தார். இரகுநாதரோ செஞ்சிப் படையை மீண்டும் புவனகிரியில் தோற்க டித்து விரட்டினார்

சக்கதேவராயரின் கொட்டத்தை அடக்குமுன்பே, இரகுநாதர் தம் மற்ற எதிரிகளான தேவிகோட்டை சோழகரையும் யாழ்ப்பாணத்துப் போர்ச்சுகீசியரை யும், கொள்ளிடத்தின் வடகரையில் இருந்த தீவின் தலைவனான சோழகரையும் ஒடுக்கினார்.

யாழ்ப்பாண அரசனை அரியணையேற்றுதல்: யாழ்ப்பாண அரசர் எதிர் மன்ன சிங்கர் தம் இறப் பிற்கு முன்பு, தம் மூன்று வயதுக் குழந்தைக்குக் கி.பி. 1615-இல் முடிசூட்டி, தம் தம்பி அரிகேசரி பண்டாரம் புரவலராக இருந்து ஆட்சி செய்து வரவேண்டுமென்று உயில் எழுதி வைத்திருந்தார். இந்நிலையில் அரசக் குடும்பத்தைச் சேர்ந்த சங்கிலி குமாரர் என்பான் புரவலரைக் கொன்று, அதிகாரத்தைத் தானே கைப் பற்றிக் கொண்டான். இதனை யாழ்ப்பாணத்து மக் களும் போர்ச்சுகீசியர்களும் விரும்பாது, சங்கிலிக் கெதிராகப் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாகச் சங்கிலி துறைமுகமான ஊர்த்துறைக் குத் தப்பியோடினான். இவன்தன் அரச மகளிரோ இரகுநாதரிடம் தஞ்சம் புகுந்தனர்.இரக்கம் கொண்ட இரகுநாதர் தம் படைவலியால் போச்சுகீசியவர வென்று, சங்கிலிக் குமாரரை மீண்டும் அரியணையில் அமர்த்தினார்.

மதுரை நாயக்கரும் தஞ்சை நாயக்கரும்: முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1609-1623) மதுரை வேந்த ரான பின்பு, தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக் கருக்கும் இடையில் நிலவிய நல்லுறவு சீர்கெட லாயிற்று. கி.பி.1616-இல் முத்துவீரப்பர் தமது தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றியது தங்கள் மீது படையெடுக்கத்தான் எனத் தஞ்சை நாயக்கர் கருதினார். கி.பி. 1617-இல் இரகுநாதர் முத்துவீரப்பரின் மகளை மணந்து கொண்ட போதி

லும், இரு அரசுகளுக்குமிடையே பகைமை வெடிக்கத் தான் செய்தது.

ஆட்சி எல்லை: இரகுநாதரின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை நாயக்க அரசு தெற்கில் இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோட்டியூரிலிருந்து வடக்கில் செங்கற்பட்டு மாவட்டம் கோவிந்தவாடி, வட ஆற்காடு மாவட்டம் நாரத்தம் பூண்டி, நெடுங்குன்றம் வரையிலும், மேற்கில் திருச்சி மாவட்டம் இலால்குடி வரையிலும் பரவியிருந்தது.

இரகுநாதரும் ஐரோப்பிய வணிகரும்: இவரது ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய வணிகர்கள் சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியில் செல்வாக்குப் பெற்று, வணிகப் போட்டியில் ஈடுபடலாயினர். இவர்களிடையே நடைபெற்ற வணிகப் போட்டி இரகுநாதருக்கு நன்மையே புரிந்தது. இவ்வணிகப் போட்டியில் இரகுநாதர் தேனியர்களை (Danish) ஆதரித்தார். தேனியர்கள் கி.பி. 1620-இல் தரங்கம்பாடியில் பண்டசாலையை அமைத்தனர்; கி.பி. 1622-இல் அங்குக் கோட்டை கட்டி வாணிகத்தைப் பெருக்கினர். இவர் தேனியருடன் நட்புக் கொண்டு போர்ச்சுகீசியரை விரட்டிய காரணத்தால், போர்ச்சுகீசியர் இவருடன் தீராப்பகைமை கொண்டனர். இருப்பினும் இரகுநாதரின் ஆட்சிக் காலத்தில் தஞ்சை அரசின் வெளிநாட்டு வாணிகம் வளர்ச்சி பெற்றது.

அரசியல் அதிகாரிகள்: இரகுநாத நாயக்கர் மக்களின் நலனை நன்கு கவனித்து நல்லாட்சி நடத்தினார். கோவிந்த தீட்சிதர் (பிரதானி), எல்லப்ப நாயக்கன் (மாதைய நாயக்கனின் மகன்), மாதைய நாயக்கர் (மல்லப்ப நாயக்கனின் மகன்), நரசிங்க ராசா, கொளுந்தப்பர், அட்டவணை (Accountant) அரங்கப்பையன் ஆகியோர் அரசியல் துறையில் இவருக்குப் பேருதவி புரிந்தனர்.

கலை வளர்ச்சி: இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இரகுநாதர் சமயப் பொறை உடையவராக விளங்கினார்; சைவ சமய வளர்ச்சிக்கும் வைணவ சமய வளர்ச்சிக்கும் தொண்டு புரிந்தார்; இராமேசுவரத்திலும் திருவரங்கத்திலும் இராமருக்குக் கோயில் கட்டினார்; கும்பேசுவரர் கோயிலின் கோபுரத்தையும் மண்டபத்தையும் கட்டியுள்ளார். அட்டவணை அரங்கப்பையன் இவ்வேந்தரின் நலம் கருதி, தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோயிலில் அம்மனுக்கு மண்டபம் ஒன்றினை அமைத்தார். இரகுநாதர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாறு, பசுபதி கோயில் ஆகிய ஊர்களில் தேரோட்டத் திருவிழாவினை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்தார். மன்னார்குடிக் கோயிலிலும் கும்பகோணம் உப்பிலியப்பன் கோயிலிலும் கூட இவர் சில திருப்பணிகளை மேற்கொண்டார். சமயப்பற்றுமிக்க இவர் இருதடவை துலாபாரதானமும் ஒரு தடவை இரணிய கர்ப்பதானமும் மகாபூதகட (Mahabhuta-gada) தானமும் செய்துள்ளார். கும்பகோணம் சக்கரபாணி கோயிலில் செதுக்கப்பட்டுள்ள உருவச்சிலை இவருடையதே எனக் கருதப்படுகிறது.

நாட்டியம்: கிறித்தவர்களை நாகப்பட்டினத்திலும் தரங்கம்பாடியிலும் தங்கி வாழ அனுமதித்ததாலும் இவரது பரந்த சமயக் கொள்கை புலனாகும். தஞ்சையில் கலை வளரப் பாடுபட்ட இவர் அவையில் உரூபவதி, சண்பகவல்லி, மூர்த்திமாம்பா, கோமளவல்லி, உலகநாயகி, சசிரேகா, இரத்தினகிரி, பாகீரதி போன்ற நாட்டியப் பெண்கள் சௌக்கக் கால பதம், சப்த சூடாமணி பிரபந்தம் (சிறந்த சொற்கட்டு), சக்கினி பிரபந்தம் (இன்றுள்ள தில்லானாவுக்கு மாற்று), குறவஞ்சி பிரபந்தம், புதிதாக வந்துள்ள பதங்கள், தேசிப்பதங்கள், துருபதங்கள் (நாடக மரபு), பேரணி நாட்டியம் போன்ற உருப்படிகளுக்கேற்ப நாட்டியமாடினர். நாட்டியக் கதம்ப நிகழ்ச்சிகளும் அவையில் அவ்வப்போது நடைபெற்று வந்தன.

இலக்கியப்பணி: இரகுநாதர் விசயநகரப் பேரரசரான கிருட்டிணதேவராயரைப் போன்று தெலுங்குக் கவிஞராகவும் புலவர்களை ஆதரிக்கும் புரவலராகவும் திகழ்ந்தார். இவரது அவையில் இசை, நாடகம், நாட்டியம், இயட்சகானம் ஆகியன சிறப்புற்று விளங்கின. எனவே இவரது அவை வித்தியா பீடமாக விளங்கியது எனக் கூறலாம்.

இரகுநாதர் பாரிசாதாபகரணம், கசேந்திர மோட்சம், சானகி பரிணயம், உருக்குமணி கிருட்டிண விவாகம், அச்சுதாப்யுதம், இயட்சனம், வான்மீகி சரிதம், இரகுநாத ராமாயணம், நள சரித்திரம், சிருங்கார சாவித்திரி முதலான தெலுங்கு நூல்களை இயற்றியுள்ளார். இவர் 'சங்கீத சுதா' என்னும் பெயரில் இசை நூல் ஒன்றினை இயற்றியதாகவும் இதற்கு இவரது அமைச்சரான கோவிந்த தீட்சதர் என்பார் முன்னுரை வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வேந்தரது அவையை சேமகூரி வேங்கட கவி, கிருட்டிணாத்வரிகவி போன்ற கவிஞர்களும், இராமபத்திராம்பா, மதுரவாணி என்னும் சுகவாணி, கிருட்டிணாசி போன்ற பெண்பாற் கவிஞர்களும் அலங்கரித்தனர். சேமகூரி வேங்கடகவி இரகுநாத நாயக்கரைப்பற்றி 'விசய விலாசம்' என்னும் காவியத்தை இயற்றியுள்ளார். கிருட்டிணாத்வரி என்பார் தெலுங்கிலும் வடமொழியிலும் சிறந்து விளங்கியதுடன் 'நைடத பாரி சாதியம்' என்னும் சிலேடைக்

காவியத்தைத் தெலுங்கு மொழியிலும், 'இரகுநாத பூபாலியம்' என்னும் நூலினை வடமொழியிலும் இயற்றியுள்ளார். வேங்கடகவி 'சாரங்கதாரா' என்னும் காவிய நாடகத்தையும் யாத்துள்ளார்.

வடமொழியிலும்தெலுங்கு மொழியிலும் மேம்பட்டு விளங்கிய இராமபத்திராம்பா 'இரகுநாதாப்யுதம்' என்னும் காவியத்தை இயற்றினார். ஒப்பற்ற பெண்பாற் கவியான மதுரவாணி இராமாயணம், குமாரசம்பவம், நைடதம் முதலான வடமொழிக் காவியங்களை இயற்றினார்.

இவ்வேந்தரது ஆட்சிக்காலத்தில் திருநாராயண தீர்த்தகுரு என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். சிவராமானந்த தீர்த்தரின் சீடரான இவர் வடமொழி, தெலுங்கு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். இப்பெரியார் கிருட்டிணலீலா தரங்கிணி, பாரிசாதாபகரணம் முதலான இசை நாடகங்களை இயற்றியுள்ளார். இவர் 'பாகவத மேளா' என்னும் புதிய இசை அமைப்புப் பாடல்களையும் உருவாக்கினார். இரகுநாதரும் 'சாலியமங்கலம் மெலட்டூர் பாகவத மேளாநாட்டியம்' சிறப்பாக நடைபெற அறக்கட்டளைகளும் அளித்துள்ளார்.

இரகுநாத நாயக்கர் தம் அவையில் மத்வாசாரியரான விசயீந்திரரையும், சுமதீந்திரரையும் வரவேற்று ஆதரித்தமை பாராட்டுக்குரியது. இவர் மாத்வ குருமாருக்கும் பெண் கவிஞர்களுக்கும் கனகாபிடேகம் செய்துள்ளமை நினைவு கூரத்தக்கது.

தஞ்சை நாயக்க வேந்தருள் புகழ்மிக்கவராகக் கருதப்படும் இரகுநாத நாயக்கர் 'சோழகமானபஞ்சனா', 'நேபாள நிருபால இசுதாபனா சமர நிசங்கா அபிநவபோசன்', 'கருநாடக பிரப் சுக பிரதக', 'சௌர்ய தைர்யகா', 'சாகித்ய போசன்' முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார் என்பதனை விசய விலாசம், சாகித்திய இரத்தினாகரம் முதலான நூல்களால் அறியலாம்.

**இரகுநாதரின் குடும்பம்:** அச்சுதப்பரின் மகனான இரகுநாத நாயக்கருக்கு அதிகார முறையிலமைந்த மூன்று அரசியர் இருந்தனர். இம்மூவருள் கலாவதி குறிப்பிடத்தக்கவர் ஆவார். இரகுநாதரை அடுத்து ஆட்சிக்கு வந்த விசயராகவ நாயக்கர் இராணி கலாவதிக்குப் பிறந்தவர். செஞ்சி நாயக்கரின் இளவரசியும் மதுரை நாயக்கரின் இளவரசியும் இவர் தம் மற்ற இரு அரசியர் ஆவர். இரகுநாதருக்கு இராமபத்திரன் என்னும் பெயரில் மகன் ஒருவனும் இருந்தான்.

ம.பு.

துணை நூல்கள்:

**Vridhagirisan, V.**, The Nayaks of Tanjore, 1940.

**Sathinathaier R.**, The Nayaks of Madura, 1924.

**Subramanian, N.**, History of Tamilnadu, 1970.

**இரகுநாதராவ் (கி.பி. 1734-1784)** மராட்டியப் படை வீரர்களுள் ஒருவர் ஆவார். இவர் கி.பி. 1734-இல் பிறந்தார். பாலாசி பாசிராவின் தம்பியான இவர் இரகோபா, தாதா சாகிபு முதலான பெயர்களாலும் குறிப்பிடப் பெறுகிறார்.

இரகுநாதராவ் குசராத்துமீது படையெடுத்துச் சென்று அகமதாபாத்தைக் கி.பி. 1753-இல் மொகலாயரிடமிருந்து கைப்பற்றினார். இதே ஆண்டில் இவர் சாட்டு அரசர்களை அடக்கி ஒடுக்கவும் பேசுவாவால் அனுப்பப்பட்டார். இவர் கி.பி. 1755-இல் ஆனந்திபாய் என்பவளை மணந்து கொண்டார். இவர் வடமேற்கு இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்று கி.பி. 1758-இல் இலாகூரைக் கைப்பற்றினார். இரண்டாம் ஆலம்கீரை மீண்டும் அரியணையில் அமர்த்திய இவர் பஞ்சாபின் மீது படையெடுத்தார். வழியில் உள்ள குஞ்ச்புரா, சர்கித்து ஆகிய இடங்கள் இவரால் கைப்பற்றப்பட்டன. பஞ்சாபை ஆளுவதற்குக் கி.பி. 1757-இல் அகமது சா அப்தாலியால் அமர்த்தப்பட்ட அவர் தம் புதல்வர் தைமூரையும், படைத்தலைவராக இருந்த சகான்கானையும் இவர் பஞ்சாபை விட்டுத் துரத்தியடித்தார்.

இரகுநாதராவின் ஆக்கிரமிப்புக் கொள்கை கி.பி. 1761-இல் மூன்றாம் பானிப்பட்டுப்போர் ஏற்படக் காரணமாயிற்று. பானிப்பட்டுப் போரில் மராட்டியர் தோல்வியைத் தழுவியதால், பேசுவா பாலாசிராவ் மூளைக் கோளாறால் கி.பி. 1761- இல் மாண்டார். பாசிராவின் இறப்பினை அடுத்து, அவர் மூத்த புதல்வ்ரான 15 வயது நிரம்பிய மாதவராவ் பேசுவாவாக அமர்த்தப்பட்டார். பேசுவாவிற்குப் பாதுகாவலராக அவர் சிற்றப்பாவான இரகுநாதராவ் அமர்த்தப்பட்டார். பேசுவாவின் பேராளராக அமர்ந்து அரசியல் காரியங்களைக் கவனித்து வந்த இவர், தானே பேச்வாவாக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார். மாதவராவ் தமக்குப் பாதுகாவலாக இருந்த தம் சிற்றப்பாவை நீக்கிவிட்டுத் தாமே பேசுவாவாக அனைத்து அதிகாரங்களையும் கி.பி. 1726-இல் ஏற்றார். பதவி கிடைக்காததால் கோபமுற்ற இரகுநாதர், பேசுவாவுடன் போர் தொடுத்த நிசாம் அலியுடன் சேர்ந்துகொண்டு பேசுவாவுக்கு எதிராகப் போரிட்டுத் தோற்றார்.

பின்னர்க் கி.பி.1768-இல் மாதவராவிற்குப் பகையாகச் சானோசி பான்சுலேயுடன் சேர்ந்துகொண்டு, மகாராட்டிரத்தின் பாதிப்பகுதியைப் பங்காகப் பெற

முயன்றார். எனவே, மாதவராவ் அவரை நாசிக்கு என்னும் நகரத்திற்கு அருகே தோற்கடித்துச் சன்வார்க் கோட்டையில் சிறை வைத்தார். மாதவராவ் கி.பி. 1772–இல் இறந்ததும் அவர்தம் இளவல் நாராயணராவ் (1772–73) பேசுவா ஆனார். இரகுநாதரின் மனைவி ஆனந்திபாயின் கொடிய சூழ்ச்சியால் நாராயண ராவ் கி.பி.1773–இல் கொல்லப்பட்டார். இதனால்; இரகுநாதர் பேசுவா ஆகும் வாய்ப்பினைப்பெற்றார்.

இரகுநாதரின் அடாத செயலை மகாராட்டிரர் வெறுத்தனர். இதனால், நாடெங்கிலும் பலமான எதிர்ப்பு உருவாயிற்று. நானா பட்நிசும் மற்றும் பதினொருவரும் மறைந்த பேசுவாவின் குழந்தையான மாதவராவ் நாராயணன் அல்லது இரண்டாம் மாதவராவைப் பேசுவாவாக அமர்த்தினர்.

தனித்துப் போராட இயலாத இரகுநாதர் பம்பாயில் இருந்த ஆங்கிலேயருடன் கி.பி.1775–இல் சூரத்து உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். இதனால் முதல் மகாராட்டிரப்போர் ஏற்பட்டது. தனது இசைவின்றி, ஒழுங்கு முறைச் சட்டத்தை மீறி, பம்பாய் அரசாங்கம் இவ்வாறு இரகுநாதருடன் சேர்ந்துகொண்டதைக் கல்கத்தா தலைமை ஆளுநர் அவை எதிர்த்தது. எனவே, கி.பி.1776–இல் கல்கத்தா அவை புனே அரசாங்கத்துடன் புரந்தரில் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. இதன்படி புனே அரசு இரகுநாதருக்கு உரூ. 25,000 உதவித் தொகை அளிப்பதாக ஒப்புக் கொண்டது. சால்பை ஒப்பந்தப்படி (கி.பி. 1782) இரகுநாதர் ஆங்கிலேயருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், அவர் கொபர்காவில் (குசராத்து) வாழ வேண்டும் என்றும் அவருக்குப் புனே அரசு உரூ. 3,15,000 வாழ்க்கைப் படியாக வழங்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. இவர் கி.பி.1784–இல் இறந்தார். ம.சு.

**இரகுமான், முசிபுர் (1920-1975)** என்பவர் வங்காளதேசத்தை (Bangladesh) உருவாக்கி நிலைநாட்டியவர். இவரை அந்நாட்டு மக்கள் சேக்கு முசிபுர் (Sheikh Mujibur) என்று அழைத்தனர். இவர் 1920–ஆம் ஆண்டு மார்ச்சு 17–ஆம் நாள் வங்காளத்தைச் சார்ந்த துங்கிப்பரா (Tungipara) என்னும் ஊரில் பிறந்தார். கல்கத்தா மாநகரிலிருந்த இசுலாமியாக் கல்லூரியிலும் தாக்கா பல்கலைக் கழகத்திலும் (Dhaka University) கல்வி கற்றார். கிழக்கு வங்காளம் 1947–இல் இந்தியப் பிரிவினையின்போது பாகிசுத்தானுக்கு வழங்கப்பட்ட மாநிலமாகும். கிழக்கு வங்காளம் தன்னுரிமை பெறவேண்டும் என்னும் நோக்குடன் அவாமி லீகு (Awami League) என்னும் பெயரில் அரசியல் கட்சியொன்றை முசிபுர் இரகுமான் 1949–ஆம் ஆண்டு தொடங்கினார். பாகிசுத்தானுக்கு எதிராகச் சதி செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, 1968–69–ஆம் ஆண்டுகளில் இரகுமான் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்குக் கிழக்கு வங்காளத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அதன் விளைவாகப் பாகிசுத்தானின் குடியரசுத் தலைவராயிருந்த அயூப்கானின் ஆட்சி கவிழ்ந்தது.

தேசிய சட்டமன்றப் பேரவைக்கு 1970–ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் முசிபுர் இரகுமானின் அவாமி லீகு கட்சி பெரும்பான்மையான இடங்களை வென்றது. அப்போது குடியரசுத் தலைவராயிருந்த யாகியாகானுக்கும் முசிபுர் இரகுமானுக்கும் இடையே வங்காளம் தன்னாட்சி பெற நிகழ்ந்த பேச்சுகள் 1971–இல் தோல்வியுற்றபோது, உள்நாட்டுக் கலகம் மூண்டது. முசிபுர் இரகுமான் மீண்டும் சிறையில் அடைக்கப் பெற்றார். கிழக்கு வங்காளத்திலிருந்து ஏறத்தாழ ஒரு கோடிமக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடி வந்தனர். இந்தியாவின் தலைமை அமைச்சராயிருந்த திருமதி இந்திரா காந்தி கிழக்கு வங்காளத்தின் சார்பாகக் குறுக்கிட்டார். அப்போது இந்தியாவின் உதவியுடன் நடைபெற்ற போரில் அம் மாநிலம் வங்காள தேசம்என்னும்பெயரில் அது சுதந்திர நாடாகக் கி.பி.1972–ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் உருவாகியது. முசிபுர் இரகுமான் அந்நாட்டின் முதல் தலைமை அமைச்சரானார். அப்போது நாட்டில் நிலவிய பாராளுமன்ற மக்களாட்சி முறையை மாற்றிவிட்டு, குடியரசுத் தலைவராக மிகுதியான நிருவாக அதிகாரங்களுடன் பதவியேற்றார். முசிபுர் இரகுமான் 1975–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15–ஆம் நாள் தாக்காவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியால் கொல்லப்பட்டார்.

**இரகுவம்சம்** என்பது சூரிய குலத்தில் தோன்றிய அரசர்களின் வம்சம். சூரிய குலத்தில் தோன்றிய திலீபன் என்ற அரசனின் மகன் இரகு. இவர் இராமாயணத் தலைமைக் கதைமாந்தரான இராமரின் தந்தையாகிய தசரதரின் பாட்டனார். வடமொழிப் பெரும்புலவர் காளிதாசர் ‘இரகுவம்சம்’ என்னும் தம்முடைய பெருங்காப்பியத்தில் சூரிய குலத்து அரசர்களின் வரலாற்றினைக் கூறுகிறார். அதில், இரகு மன்னன் வரலாற்றை மூன்று சருக்கங்களில் மிகச் சிறப்பாக வருணிக்கிறார். தந்தை திலீபனால் முடி சூட்டப்பெற்ற இரகு மன்னன் ‘திக்குவிசயம்’ செய்து தன் வலிமையால் எல்லா நாட்டு அரசர்களையும் வெற்றி கொள்கிறான். பின்னர் மிகச்சிறந்ததும், தன் உடைமைகள் எல்லாவற்றையும் தானம் செய்யக்கூடியதுமான ‘விச்வசித்து’ என்னும் வேள்வியைச் செய்துமுடித்து, மண் கலயத்துடன் தனியே ஒரு குடிசையில் வாழ்ந்து வருகிறான். அப்பொழுது, தான் கற்ற கல்விக்காகக் ‘குரு

'தட்சிணை' கொடுக்கும் பொருட்டுக் 'கவுத்சன்' என்னும் மாணவன்இரகுமன்னரிடம்பொருள் வேண்டு கிறான். செல்வங்கள் எல்லாவற்றையும் தான் இயற்றிய வேள்வியில் பிறருக்கு அளித்துவிட்டமையால் ஒன்றும் இல்லாமல் இருக்கும் தன்னை அடைந்து இரந்த கவுத்சனின் விருப்பத்தை நிறைவேற்று வதற்காகக் குபேரனுடன் போர்புரிந்து பெரும் பொருள் பெற்று அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து மகிழ்ச்சியுறச் செய்கிறான். இவ்வாறு இரகு மன்னன் வரலாற்றைச் சிறந்த முறையில் கூறிச் சூரிய குலத்து அரசர்களுள் இவனே சிறந்தவன் என்பதை யுணர்த்தியதோடு, தம் காப்பியத்திற்கு 'இரகுவம்ச மகாகாவியம்' என்னும் பெயரையும் கவிச்சக்கரவர்த்தி காளிதாசர் கொடுத்துள்ளார். இரகு மன்னனுக்குப் பின்னர்ச் சூரிய குலத்தில் தோன்றிய அரசர்கள் அனைவரும் 'இரகுவம்சத்தவர்' என்றே கூறப்பட்டனர்.

இக்குலத்தில் தோன்றிய அரசர்களின் பொது வான குணநலன்களை இரகுவம்ச காப்பியத்தின் தொடக்கத்தில் பின்வருமாறு காளிதாசர் குறிப் பிட்டுள்ளார். அவர்கள் பிறவி முதல் தூய்மையுள்ள வர்கள்; வெற்றி அடையும்வரை விடாமுயற்சியுடன் செயல்களில் ஈடுபடுபவர்கள்; கடலை எல்லையாகக் கொண்டு நாடு முழுவதையும் ஆளும் திறமை யுள்ளவர்கள்; மேலுமவர்கள் தங்குதடையின்றி எல்லாத் திசைகளிலும் இரதங்களில் செல்பவர்கள்; வேதங்களில் கூறியுள்ளபடி முறையாக வேள்விகளைச் செய்பவர்கள்; இரப்பவர்களின் விருப்பங்களை முழுமையாக மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுபவர்கள்; குற்றத்திற்குத் தகுந்த தண்டனை கொடுப்பவர்கள்; காலம் அறிந்து செயல்களில் ஈடுபடுபவர்கள்; தானம் செய்யும் பொருட்டே செல்வத்தை ஈட்டுபவர்கள்; உண்மையைக் காக்க அளவாகப் பேசுபவர்கள்; புகழிற்காகப் போர்புரிபவர்கள்; மரபு தழைக்கும் பொருட்டுத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கை நடத்துபவர்கள்; இளமையில் பொருள் ஈட்டி இன்பம் துய்ப்பவர்கள்; முதுமையில் முனிவர்களின் வாழ்க்கையை மேற்கொள்பவர்கள்; இறுதியில் யோகத்தினால் உடலைத் தியாகம் செய்பவர்கள்.

இரகுவமிசத்தில் தோன்றியதால் இராமனுக்கு இராகவன் என்னும் ஒரு பெயர் உண்டாகியது.

சு. ஜெ

**இரங்கப்பிள்ளை கவிராயர்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முத்தமிழ்ப் புலமை பெற்று விளங்கிய புலவர்களுள் ஒருவர். இவர் சென்னைக் கருகிலுள்ள பழவேற்காடு என்னும் ஊரினர். வாய்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்த அரிச்சந்திரன் வரலாறு தமிழில் புராணம், நாடகம், கதை, விலாசம், நாட்டுப்பாடல் எனப் பல வடிவங் களில் வெளிவந்தது. விருத்தம், தரு, கீர்த்தனை களோடு உரைநடையும் இடைவருவதாய் விலாசம் என்னும் இலக்கிய வடிவத்தில் இப்புலவர் 'அரிச்சந்திர விலாசம்' என்னுமொரு நூலை எழுதியுள்ளார். இந்நூல்இயலிசை நாடகமென்னும் முத்தமிழ்ச் சிறப் புடையது. இதேபெயரில் வேறொரு நூலினைத் திரிசிரபுரம் திருமலை அப்பாவுப்பிள்ளை எழுதி யுள்ளார். இரங்கப்பிள்ளை கவிராயரின் பெயர் இரங்கநாதன் என்பதனை, இவர் இயற்றிய அரிச் சந்திர விலாசத்தில் 'சீர்பெருகு அரிச்சந்திரன்திகழ் கதையை விலாசமெனச் செழிக்க இந்தப் பார்மிசைச் செந்தமிழாலே புனிதமாகப் பாடினோன் கவிரங்க நாதன் என்போன்' எனப் பாடியுள்ளமையால் அறியலாம். இவரது அரிச்சந்திர விலாசம் கி.பி. 1867-ஆம் ஆண்டில், இலக்கணப் புலவராகத்திகழ்ந்த தணிகைவிசாகப்பெருமாளையர் அவர்கள் முன்னிலை யில் செப்பம் செய்யப்பட்ட பிரதிக்கிணங்க வெளி யிடப்பட்டதாகத் தெரிகிறது.

**இரங்கற்பா** ஆங்கிலக் கவிதை ஒன்றினைக் கவிதை வடிவில் தமிழாக்கம் செய்து வெளியிடப் பட்ட நூல். இதன் ஆசிரியர் நீ. கந்தசாமிப்பிள்ளை இவர் தஞ்சைக்கருகில் வெண்ணாற்றங்கரையில் அமைந்துள்ள பள்ளியக்கிரகாரம் என்னும் ஊரில் செல்வக் குடியில் தோன்றிய தமிழறிஞர்; வேளாண் மரபினர். தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்துள்ளார். சிறந்த ஆங்கிலக் கவிஞராகத் திகழ்ந்த தாமசு கிரே (Thomas Gray) என்பவர் இயற்றிய 'இடுகாட்டில் எழுதிய இரங்கற்பா' (Elegy Written in a country Churchyard) எனப் பொருள்படும் ஆங்கிலக் கவிதை யைத் தமிழில் கவிதைவடிவில் மொழி பெயர்த்து 'இரங்கற்பா' என்னும் பெயரில் வெளியிட்டார். தாமசு கிரே இலண்டன் மாநகரைச் சேர்ந்த கானில் என்னும் பகுதியில் பிறந்தார். இவர் காலம் கி.பி. 1716-ஆம் ஆண்டிற்கும் 1771-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டதாகும். இவர் இயற்றிய இரங்கற்பா என்னும் இக் கையறுநிலைக் கவிதை (Elegy) ஒப்பற்ற சிறப்புமிக்கதாய் அமைந்து உலகமொழிகளில் தோன் றியுள்ள கவிதைகளுள் முதல் வரிசையில் இடம் பெற்றுத்திகழ்வதொன்றாகும். இதன் நடை, சுவை, பாவம்,கருத்துயர்வு முதலிய கவிதைப் பண்புகள் சிறி தும் குறையாமல் நீ. கந்தசாமிப்பிள்ளை தமிழாக் கம் செய்துள்ளார். மூலநூலும் மொழி பெயர்ப்பும் அளவால் சிறியனவாக இருப்பினும், பருந்தும் நிழ லும் போல அமைந்து செல்லும் பாங்கில், கவிதை நலம் சிறந்த கவிதை மணிகளாக விளங்குகின்றன. மூலத்தில் உள்ள ஆங்கிலச் செய்யுளின் யாப்பிற்கு

இசைய மொழி பெயர்ப்பாசிரியர் 'வெண் செந்துறை' யாப்பில் நூலை அமைத்துள்ளார். இந்நூல் பிற மொழிக் கலைச் செல்வத்தைத் தமிழில் கொண்டு வரும் முயற்சிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. மூலநூல் 32 செய்யுள்களைக் கொண்டமைந்துள்ளது போல இந்த மொழி பெயர்ப்பு நூலும் 32 வெண் செந்துறைச் செய் யுள்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் முற்பகுதி யில் தாமசு கிரேயின் வாழ்க்கை வரலாறு விரிவா கக் கூறப்பட்டுள்ளது. அடுத்து, இந்நூலில் இடம் பெற்றுள்ள சிறப்புப் பெயர்களின் ஆங்கில வடிவமும் விளக்கமும் தரப்பட்டுள்ளன. இதை அடுத்தமைந் துள்ள 'பாட்டின் பண்பு' என்னும் பகுதி, இந்த இரங் கற் பாவினைத் திறனாய்ந்து நலம் உணர்த்துவ தாக உள்ளது. இதனை அடுத்து, மொழி பெயர்ப்பு நூலும் மூல நூலும் தனித்தனியே குறிப்புரையோடு கொடுக்கப்பட்டுள்ளன. 'மொழி பெயர்ப்பு' என் னும் நெடிய கட்டுரை இறுதிப் பகுதியாக அமைந் துள்ளது. இப்பகுதியில் மொழி பெயர்ப்புப் பற்றிய பொதுவான செய்திகளும், இந்நூல் மொழி பெயர்ப் பில் ஆசிரியர் மேற்கொண்டுள்ள உத்திகளும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 'எண்ணரிய மாசில்மணி தூய ஒளி கால்வ, இருங்கடலின் அளப்பரிய கருங்குகையின் பால' என்னும் பகுதியின் ஆங்கில மூலம் வருமாறு: 'Full many a gem, of purest ray serene, The dark unfathomed caves of Ocean bear'. இதனால், மூலச் செய்யுள், மொழி பெயர்ப்புச் செய்யுள் ஆகிய இரண் டன் சிறப்பினையும் உணர்தல் கூடும்.

**இரங்கூன்** பர்மா நாட்டின் தலைநகரும் பெரு நகரமுமாகும். இதுவே அந்நாட்டின் தலைசிறந்த துறைமுகப்பட்டினம்; தொழிற்சாலை மையம். இரங் கூன் (Rangoon) தென்பர்மாவில் ஐராவதி ஆற்றின் துணையாறான இரங்கூன் ஆற்றின் இரு கரை மருங் கிலும் அமைந்துள்ளது. மர்த்தபன் வளைகுடாவுக்கு (Martaban gulf) வடக்கில் ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த வளைகுடா இந் தியப் பெருங்கடலின் காலாக அமைகிறது.

இரங்கூன் வாழ் மக்களுள் பெரும்பாலோர் அர சுப் பணியாளர்கள். இந்நகரில் பல தொழிற்சா லைகள் இயங்குகின்றன. அவற்றுள் கப்பற் கட்டும் தொழில், எண்ணெய் சுத்திகரிப்பாலை, அரிசி ஆலை, மரமறுக்கும் ஆலை போன்றவை சிறப்பானவை யாம். இரங்கூனிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள் களுள் மூன்றில் இரண்டு பங்கு அரிசியும் தேக்கு மர முமாகும். பருத்தி, தகரம், இரப்பர், பெட்ரோல், செம்பு போன்றவை ஏனைய ஏற்றுமதிப் பொருள் கள். இங்குள்ள அரிசிச் சந்தை உலகப்புகழ் பெற்றது. மட்பாண்டம் வனைதல், பருத்தி-பட்டு ஆடை நெய் தல் போன்றவை ஏனைய தொழில்களாம். பர்மா வின் தொழிற்சாலைகள் அனைத்தும் 1960-ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டதாலும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த அயலார்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாலும் இரங்கூனின் பரந்த நோக்கு நிலை (Cosmopolitan) அழிந்துவிட் டது. எனினும், இங்குச் சிறிதளவு இந்தியரும் சீன ரும் இன்றும் வாழ்கிறார்கள். நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்கள் 1960க்கு முன்னர்ப் பர்மா வின் பொருளாதாரத்துறையில் பெரும் செல்வாக் கைப் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



சுலே பகோடா - இரங்கூன்

இரங்கூனில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் பலவுள்ளன. அவை புத்தசமயத் தொடர்பானவை. அவற்றுள் சுவே தகான் பகோடா (Shwe Dagon Pagoda) என்னும் வழிபாட்டிடம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இது 2500 ஆண்டுகளுக்கு முன் கட் டப்பெற்றதாகும். இந்தப் பகோடா இரங்கூன் நக ரின் மையப் பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. இதன் தூபி பொன்னாலானது. இதன் உயரம் 99 மீட்ட ராகும். இங்குக் கௌதமபுத்தரின் எச்சங்கள் நினைவுப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. சுவே தகான் பகோடாவை அடுத்து 'கபு அயே' (Kabu Aye) என்னும் உலக அமைதிப் பகோடா (World Peace Pagoda) என்னும் நினைவுச் சின்னமொன்றுள் ளது. இதைப் பர்மாவின் முதல் தலைமை அமைச் சரான ஊநூ (U Nu) என்பார் கட்டினார். சுலே (Sule) பகோடாவும், போட்டாடாங்கு (Botataung) பகோடாவும் ஏனைய வழிபாட்டுத் தலங்களாகும்.

இரங்கூன் மாநகரில் தேசிய அருங்காட்சியகமும் இரங்கூன் தொழில் நுட்பக் கல்லூரியும் இயற்கை வரலாற்று அருங்காட்சியகமும் புத்த சமய நூலகமும் உள்ளன.

இந்நாட்டில் இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் இரங்கூன் பல்கலைக் கழகமும் ஒன்று. இப் பல்கலைக் கழகம் 1920-ஆம் ஆண்டு அமைக்கப் பெற்றது.

இரங்கூனின் பழைய பெயர் தகான் (Dagon) என்பதாகும். இந் நகரம் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. அப்போது இது மீனவரின் சிற்றூராக இருந்தது. எனினும், கி.பி. 1750-ஆம் ஆண்டு வரை இது சிறு நகரமாகவேயிருந்தது. இந் நகரை உருவாக்கிய அரசர் அலுங்பயா (Alaungpaya) என்பவராவர். அவரே இதற்கு இரங்கூன் என்று பெயரிட்டார். இந்நகரம் மட்டும் கி.பி. 1824-ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழிருந்தது. பின்னர் அவர்கள் முழுப்பர்மாவையும் கைப்பற்றிக் கொண்டனர். பர்மா கி.பி. 1824-முதல் 1948 வரை ஆங்கிலேயரிடமே இருந்தது. இந்நாடு 1948-ஆம் ஆண்டு சனவரி மாதம் 4-ஆம் நாள் விடுதலை பெற்றது.

இரங்கூன் மாநகரம் கி.பி. 1851-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருந்தீயால் பெரும் அழிவுற்றது; எனினும், மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இரங்கூனின் மக்கள் தொகை 24,58,712 (1983).

**இரங்பூர்** கத்தியவார் தீபகற்பப் பகுதியில் குசராத்தில் பவநகர் (Bhava nagar) மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மையான ஊர். இவ்வூரில் 1970-72-இல் ஜி. போசல்(Dr. Gregory Possehl) என்பவர் கள ஆய்வினை மேற்கொண்டு இதன் பழைமையைத் தெளிவுபடுத்தினார். இக்கள ஆய்வில் இடைக்கற்காலப்பண்பாடு(Middle stone age) முதல் அரப்பாப் பண்பாட்டிற்குப் பிந்திய பண்பாடு வரை உள்ள காலத்திற்கு வேண்டிய சான்றுகள் கிடைத்தன. இவற்றின் மூலம் இவ்வூரின் தொன்மையான நாகரிகம், அரப்பாப் பண்பாட்டிற்கு முற்பட்ட காலம் (Pre-Harappa Culture),அரப்பாப் பண்பாட்டுக் காலம் (Harappa Culture),அரப்பாப் பண்பாட்டிற்குப் பிந்திய காலம் (Post-Harappa Culture) என மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டது.இங்குக்கிடைத்த இடைக்கற்காலக் கருவிகள் கரடுமுரடான சரளைக் கற்களிலும் (Coarse Gravel), கடைக் கற்கால (Late stone age) நுண் கற்கருவிகள் (Microliths) மணற்பாங்கான சரளைக் கற்களிலும் (Sandy Gravel) செய்யப்பட்டன.

அரப்பாவிற்கு முற்பட்ட காலத்தில் வீடுகள் இருந்ததற்கான தடயம் கிட்டாதபோதிலும் சுடாத செங்கற்களினால் ஆன மேடை ஒன்று காணப்பட்டது. இதுவேயன்றிக் கிண்ணங்களும் (Bowls) சாடிகளும் (Jars) தட்டுகளும் (Dish) மைக்கா கலந்த சிவப்பு நிறப் பானை ஓடுகளும் (Mica Red Ware) கடினமான மங்கலான மஞ்சள் நிறப் பானை ஓடுகளும் (Buffware) சாம்பல் நிற ஓடுகளும் கிடைத்தன.

அரப்பாப் பண்பாட்டுக் காலத்தில் இருந்த நான்கு கட்டட நிலைகளை இங்குக் கிடைத்த குச்சி நடுக் குழிகள், நன்கு மெழுகிப் பூசப்பட்ட தரை ஆகியவற்றின் மூலம் அறியலாம். இந்த வீடுகள் சுடாத செங்கற்களினால் (Mud brick) உயரமான மேடையின் மீது கட்டப்பட்டன. இந்தச் செங்கற்கள் 30×15×7.5 செ.மீ. அளவைக் கொண்டவை. இவை அரப்பாப் பண்பாட்டிற்கான 4:2:1 என்ற விகிதாச்சாரத்தைக் காட்டுகின்றன. குளியல் அறைகளிலும் கழிவுப் பாதைகளிலும் 28×14×7 செ.மீ. அளவிலான சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன.

அரப்பாப் பண்பாட்டிற்குப் பிற்பட்ட காலத்தில் பெரிய அறைகளைக் கொண்ட வீடுகள் படிகக் கல்லாலும் (Chert) மாக்கல்லாலும் (Steatite) கட்டப்பட்டன. செம்பு, வெண்கலம், தங்கம் போன்ற உலோகத்திலான பொருள்கள் மிகக் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றபடியால் இவர்களின் பொருளாதாரம் நலிவுற்றிருந்தது எனலாம். மட்பாண்ட வகைகளில் ஒரு புதிய மாற்றம் இக்காலத்தில் ஏற்பட்டது. இக்காலத்தில் பளபளப்பான சிவப்பு நிறப் பானைகள் கிடைத்தன. இதனால், இக் காலம் பளபளப்பான சிவப்புநிற மண்கலப் பண்பாட்டுக் காலம் (Lustrus red ware Culture) எனக் கூறப்படுகிறது. இம்மட்கலங்கள் முற்றும் காயாத நிலையில் சிவப்பு வண்ணம் பூசப்பட்டுப் பின் அவை தேய்த்து மெருகேற்றப்பட்டன. பின்னர் அதன்மீது கருப்புச் சாயம்(Black Paint) தீட்டப்பட்டது. இவை தவிரக் கருப்பு சிவப்பு நிறமுடைய ஓடுகளும் மிகுந்து காணப்படுகின்றன. பானையின் மீது கீறல் குறியீடுகளும் (Graffiti) காணப்படுகின்றன. சுடுமண்ணினால் செய்யப்பட்ட இரண்டு குதிரைகளும் வேறுசில பொம்மைகளும் அகழாய்வில் கிடைத்துள்ளன.

கே.இரா.

துணை நூல்கள்:

**Allchins**, F.R.B., The Birth of Indian Civilisation, Penguine Book House, London, 1966.

**Sankalia**, H.D., The Pre-history and Proto-history of India and Pakistan, Poona, 1974.

**இரசல் பெர்டிராண்டு:** இங்கிலாந்து நாட்டுப் புதிய புறவாய்மைக் கொள்கையாளர் (Neo-Realist). இவர் கி.பி. 1872-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ஆம் நாள் பிறந்தார். மிகச் சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்த இரசல் பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்தார். சிறுவயதில் வீட்டிலேயே பாடம் கற்ற இரசல் பின்னர்க் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தின் திரினிட்டிக் கல்லூரியில் (Trinity Collage) கணிதமும் மெய்ப்பொருளியலும் கற்றுக் கி.பி. 1894-இல் பட்டம் பெற்றார். இவ்வாண்டே தம்மைவிட ஐந்துவயதுமூத்த ஆலிசு பியர்சுசுமித்து (AlisPiercesmith)அம்மையாரைக் காதல் மணம் புரிந்து கொண்டார். பின்பு தாம் கற்ற கல்லூரியிலேயே விரிவுரையாளராகப் பணியாற்றிய இரசல் முதலாம் உலகப்போரின் போது மனித சமுதாயம் அழிவதை விரும்பாததால் போர் எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டார். இதனால், இவர் சிறைப்படுத்தப்பட்டார். கணிதவியலிலும் அளவையியலிலும், மெய்ப்பொருளியலிலும் மிக்க ஈடுபாடு கொண்ட இரசல் இத்துறைகளின் வளர்ச்சிக்குத் தம் படைப்புகளின் மூலம் பெரிதும் உதவியிருக்கிறார். இவரது சிறந்த படைப்பாகிய 'கணித இயலின் தத்துவங்கள்' (Principia Mathemetica) என்ற நூலின் மூன்று பாகங்களை ஆல்பிரட் நார்த் ஒயிட்கெடு (Alfred North White Head) என்பவர் உதவியுடன் 1913-ஆம் ஆண்டு வெளியிட்டார். இரசலின் பிற நூல்கள் 'மெய்ப்பொருளியலின் சிக்கல்கள்' (Problems of Philosophy-1914), 'புற உலகு பற்றி நமது அறிவு' (Our Knowledge of the External World-1914) 'மனத்தின் பகுப்பாய்வு' (The Analysis of Mind-1921) என்பவையாம். இரசலின் பிற்கால நூல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது 'பொருளும் உண்மையும் பற்றிய ஓர் ஆய்வு' (An Inquiry into Meaning and Truth-1940) என்ற நூலாகும். இறுதியாக மெய்ப்பொருளியலின் இவரது சிறந்த படைப்பு 'மனித அறிவு' (Human Knowledge-1948) என்ற நூலாகும். இந்நூல்களின் வாயிலாகத் தம் கருத்துகளை உலகெங்கும் பரப்பிய இரசல் பல பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றார். 1950-ஆம் ஆண்டு உலகின் மிகப் பெரும் பரிசாகிய நோபல் பரிசு இவருக்குத் தரப்பட்டது. இவ்வாறு தொண்ணூற்றெட்டு ஆண்டுகள் வாழ்ந்து, 1970-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் இரண்டாம் நாள் இவர் காலமானார். இவர் மெய்ப்பொருளியலில், கணித அளவையியல், அறிவியல், அரசியல், சமயம், கல்வி, ஒழுக்கம் முதலியவற்றைப்பற்றி மிகுதியாகக் கூறியுள்ளார். இவற்றுள் இரசலின் மெய்ப்பொருள் சார்ந்த கருத்துகளாகிய, மெய்ப்பொருளியலில் அணுகு முறை, மெய்ப்பொருளியலில் அளவையலியின் பங்கு, மனம், சடப்பொருள், புற உலகு, உண்மை, அவற்றை உணரும் முறை ஆகிய கருத்துகளை விளக்கியுள்ளார்.

மெய்ப்பொருளியலில் அணுகு முறை: மெய்ப்பொருளியலில் அறிவியல் அணுகு முறையின் பயனை மிகுதியும் வலியுறுத்துகிறார் இரசல். இவர் கருத்துப்படி மெய்ப் பொருளியல் என்பது சமயம், அறிவியல் ஆகிய இரண்டின் சில பண்புகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு செயலாக்கமாகும். இவ்வகையில் மெய்ப்பொருளியல், அறிவியலை அடித்தளமாகக் கொள்வதற்கு இரண்டு வழிகள் உண்டு என்கிறார். ஒன்று அறிவியலின் மிகவும் பொதுவான விளைவுகளை வலியுறுத்தி, இவ்விளைவுகளுக்கு இன்னும் மிகுதியாகப் பொதுமையும் (Generality) ஒருமையும் (Unity) தருவது. மற்றொன்று அறிவியலின் முறைகளைப் படித்து, அவற்றைத் தேவையான மாற்றங்களுடன் மெய்ப்பொருளியல் சிந்தனையில் எடுத்தாள்வது. இவ்விரண்டில் இரண்டாம் முறையையே இரசல் ஏற்கிறார். இவ்வாறு அறிவியலின் முறை என்று இவர் குறிப்பிடுவது, உயிரியல் ஆய்வுக் கூடச் சோதனைகளையோ அளவீடுகளையோ கருதுகோள்களையோ (Hypothesis) அன்று. இரசல் அறிவியல் என்று குறிப்பிடுவது உயிரியல் (Biology), வேதியல் (Chemistry) போன்ற அனுபவ அறிவியல்களை அன்று. இவர் கூறும் அறிவியல் பெரும்பாலும் அளவையியலும் (Logic) கணிதவியலும் (Mathematics) ஆகும். மெய்ப்பொருளியியல் கூற்றுகள் பொதுவானவையாகவும், அனுபவ அடிப்படையில் மெய்ப்பிக்க முடியாதனவாகவும் இருக்கின்றன. முறையான அறிவியல்களில் அளவையியல் மேலே கூறிய தன்மைகளை உடையதாய் இருப்பதனால், அளவையியல் மெய்ப்பொருளியலிலிருந்து வேறு படுத்தப் பட முடியாமல் இருப்பதாக இரசல் கருதுகிறார்.

மெய்ப்பொருளியலில் அறிவியல் அணுகுமுறையை வலியுறுத்தும் இரசல், இவ்வகையில் தம் சிக்கல்களுக்கு, இருக்கும் நம்பிக்கைகளை ஐயப்படும் அணுகு முறையைப் பயன்படுத்துகிறார். மெய்ப்பொருளியலின் சிக்கல்கள் என்னும் தம் நூலில், 'பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் ஐயப்பட முடியாத உறுதியான அறிவு இவ்வுலகில் ஏதேனும் உண்டா?' என்று வினவுகிறார். இரசலின் முடிவுகளின் தற்காலிகத் தன்மை இவரது மெய்ப்பொருளியல் அணுகு முறையின் அடுத்த அறிவியல் பண்பாகும். தம் முடிவுகளை முடிவானவையாக இரசல் கருதாமல், முடிவுகளும் திருத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம் என்ற கருத்தைத் தம் படைப்புகளில் வலியுறுத்துகிறார். அடுத்ததாக, மெய்ப்பொருளியல் அறிவியல் தன்மையுடையதாய் இருக்க முடியும் என்று நியாயப் படுத்தும் இரசல் அவ்வடிப்படையில் ஒன்றுபடுத்தப்

பட்ட மெய்ப்பொருளியல் 'முறை' என்பதை வன்மை யாக மறுக்கிறார். இதற்குப் பதிலாக மெய்ப்பொரு ளியல் சிக்கல்கள் ஒன்றன்பின் ஒன்றாக மெய்ப்பொரு ளியல் பகுப்பாய்வு மூலம் அணுகப்பட வேண்டும் என்கிறார்.

மெய்ப்பொருளியலில் அளவையியலின் பங்கு: கணித அளவையியலில் ஈடுபாடு கொண்ட இரசல் பின்னர் மெய்ப்பொருளியலில் நாட்டம் கொண் டார். பின்பு இவை இரண்டிற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தினார். 'கணித இயலின் தத்துவங்கள்' Principia Mathematica) என்னும் நூலில் உருவாக்கப் பட்டுள்ள அளவையியல் என்ற முறை, இதுவரை மெய்ப்பொருளியலில் புரியாதவையாகக் கருதப் பட்ட சிக்கல்களை விளக்குவதற்கு ஒரு புதிய கருவி யாகப் பயன்படுத்தப்படுகிறது. 'அளவையியல் மெய்ப் பொருளியலின் சாரமாக அமைகிறது' என்னும் இரசலின் கருத்தை நான்கு பொதுவான கொள்கை கள் மூலம் அறியலாம்.

1. மொழி பற்றிய கொள்கை (Doctrine about Language): சாதாரண மொழிகளைப் பற்றி இரசல் குறிப்பிடும்பொழுது அவை இரு தன்மையுடன் இருப்பனவாய்க் கூறுகிறார். ஒரு தன்மையில் அவை இவ்வுலகின் இயற்கைத் தன்மையைப்பற்றி மக்களுக்கு விளக்குவனவாகவும் மற்றொரு தன்மையில் அவர்கள் சிந்தனைகளைப் பல வழிகளில் குழப்புவனவாகவும் அமைகின்றன என்கிறார். எனவே, மெய்ப்பொருளியல் கருத்துகளை வெளிப்படுத்த மக்கள் அன்றாட மொழி களை எடுத்தாளும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று இரசல் எச்சரிக்கிறார். எந்த மொழியிலும் எண்ணற்ற சொற்கள் (Voca- bulary), சொற்றொடர் அமைப்பு முறை (Syntax) என்ற இரு முக்கியமான அமைப்புகள் உண்டு. மெய்ப்பொருளியலில் பயன்படுத்தும்போது இவ்விரண் டையும் கவனமாக எடுத்தாள வேண்டும் என் கிறார் இரசல்.

2. அளவையியல் அமைப்பு நியதி: ஒரு சொற் றொடரின் இலக்கணக்கூறுகள், அக்கூற்றின் அளவை யியல் அமைப்பினை மறைத்துத் தவறான பொருள் கொள்ளச் செய்கின்றன. குறியீட்டு அளவையியலைச் (Symbolic Logic)சாதாரண மொழியில் பயன்படுத் தும் பொழுது, இந்த அளவையியல் அமைப்பு (Theory of Logical form) மிகவும் வேண்டப் படுவதாய் இருக்கிறது. இவ்வளவையியல் அமைப்பு அளவையியல் மொழியில் வெளிப்படுத்தப்படும் பொழுது, சாதாரண மொழிகளிடையே நடுநிலை யானதாய் இருக்கிறது என்கிறார் இரசல். அளவை யியல் அமைப்பு குறியீடுகளைக் கொண்டதாய் அமைவதால், இந்நடுநிலைமைத் தன்மை ஏற்படு கிறது.

3. அளவையியல் பகுப்பாய்வுக் கோட்பாடு: இரசலின் கருத்துப்படி அளவையியல் பகுப்பாய்வு (Theory of Logical Analysis) என்பது, கருத்துரை களையும் கூற்றுகளையும் தெளிவுபடுத்தும் செயல் முறையாகும். ஒரு கூற்று உண்மையானதா பொய் யானதா என்பதை விட முதலில் அக் கூற்றில் பொருள் இருக்கிறதா இல்லையா என்று கேட்பது முக்கியம் என்கிறார் இரசல். சாதாரண மொழி தவறாகப் பயன்படுத்தப்படும்பொழுது முரண்பாடுகள் தோன்றலாம். இப்படித் தவறுகள் ஏற்படாவண் ணம் இருக்க மொழியினை அளவையியல் பகுப்பாய் வுக்கு உட்படுத்துவது சிறந்தது. இதற்கு ஒரு முறை யாக வகைநியதி (Theory of Types) என்பதனைத் தருகிறார் இரசல். இதன்படி கூற்றுகள் மட்டும் அல்லாமல் சொற்களின் பொருளும் கூட வேறுபட்ட அளவையியல் வகைகளுக்குள் வரலாம் என்கிறார் இரசல்.

4. அளவையியல் அணுக்கொள்கை: இரச லின் அளவையியல் உலகுபற்றிய இயல் கடந்த (Metaphysical) நோக்குகளை அடிப்படையாய்க் கொண்டதாய் அமைகிறது. பிற அளவையிய லாளர்கள் இயல் கடந்த நிலை அல்லாத அளவையியலையே ஏற்கின்றனர். ஆனால், இரசல் மட்டும் இரண்டினையும் ஏற்கிறார். உலகு பற் றிய தமது கருத்தைத்தான் இரசல் 'அளவையியலில் அணுக்கொள்கை' (Logical Atomism) என்கிறார். இதற்கு இவர் கொள்ளும் இரண்டு அடிப்படை நம் பிக்கைகள் (அ) 'கணித இயலின் தத்துவங்கள்' (Principia Mathematica)என்னும் நூலில் உருவாக்கப் பட்டுள்ள புது அளவையியல், ஏற்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட உண்மைகளின் வடிவமைப்பை ஒரு பார் வையில் வெளிக்காட்டும் ஒரு மொழி என்பதும் (ஆ) ஏகலிசத்தின் உலக ஒருமைத் தன்மையை (Monism எதிர்த்து இவர் கூறும் உலகப் பன்மைத் தன்மை (Pluralism) என்பதுமாகும். இதன் அடிப்படையில் இரசல் கூறுவது, உலகம் பல்வேறு கூறுகளால் அல் லது அணுக்களால் ஆகியது என்பதே.

இப்படியாக மெய்ப்பொருளியல் அணுகு முறை யில் அறிவியல் தன்மையின் பயனையும் அளவையிய லின் பயனையும் தெளிவுபடுத்தும் இரசலின் கருத்து கள் மெய்ப்பொருளியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாண வழிவகை செய்கின்றன.

மனம் (Mind), சடப்பொருள் (Matter), புற உலகு (External World), உண்மை (Truth) பற்றிய ரசலின் கருத்துகள்: புறப்பொருள் பற்றியும் அதனை

அறிவது பற்றியும் இரசல் விளக்கிக் கூறும் பொழுது, புறப் பொருள் இருக்கின்றதா? என்ற அடிப்படைக் கேள்விக்குப்-'புறப்பொருள் என்ற ஒன்று இல்லை; ஆனால், சில தெரிபொருள் கூறுகளின் கூட்டமைப்பே (Grouping of sense data) இருக்கின்றன' - என்று பதில் தருகிறார். எடுத்துக்காட்டாக, நாற்காலி என்னும் பொருளில் நிறம், வடிவம், அளவுபோன்று பல கூறுகள் உள்ளன. இக்கூறுகள் அனைத்தும் நாற் காலி என்னும் பொருளுக்குச் சொந்தமாகிவிடா. ஆனால், அவற்றை மக்கள் கூட்டமைத்து நாற்காலி யாகக் காண்கிறார்கள். உண்மையில் மக்கள் நாற் காலி என்ற தனிப் பொருளைக் காணவில்லை. ஆனால், பல புலன் தெரிபொருள் கூறுகளின் (Sense data) கூட்டாக நாற்காலியைக் காணுகிறார்கள். இதனை O=f (S1, S2, S3, S4 etc,.) எனக் குறிப் பிடலாம். அதாவது புறப்பொருள் (0) என்பது புலன்தெரி பொருள் கூறுகளின் (S1, S2, S3,S4) கூட் டுச் செயலாக்கம் (f) ஆக நாற்காலி என்பது அடிப் படை அன்று; புலன் தெரிபொருள் கூறுகள்தாம் அடிப்படை. இவற்றை கூட்டமைத்தே மக்கள் பொருள்களைக் காண்கிறார்கள் என்கிறார் இரசல்.

அறிவான் (Subject), அறிபொருள் (object) தொடர்பு பற்றிக் குறிப்பிடும் பொழுது இது நேரடி யானதாக இருக்க முடியும் என்கிறார். இது மும் முனைத் தொடர்பு (Triadic relation) அன்று; இரு முனைத் தொடர்பு (Diadic relation) தான் என்கி றார். அதாவது அறிவான் அறி பொருளை நேரடி யாகத் தெரிந்து கொள்ள முடியும் என்கிறார். ஆனால் இரசலின் அறிபொருள் அல்லது பொருள் புலன் தெரிபொருள் கூறுகளின்கூட்டமைப்பே ஆகும். இப்படிக் கூறும் இரசல் தோற்றங்கள் உண்மையில் இருப்பதை மறுத்து விடுகிறார். அப்படியென்றால் தவறான காட்சிகள் ஏன் ஏற்படுகின்றன? என்ற கேள்விக்கு இரசல் தரும் பதில், ஒரு பொருள் பலவித மாகத் தோற்றமளித்தாலும்அப்பொருள் பலபொருள் கள் அன்று; அது ஒன்றுதான் என்பதாகும். இப் பொருள் ஏன் பல தோற்றங்களாகத் தெரிகிறதென் றால் இதன் புலன் தெரிபொருள் கூறுகளை மக்கள் சரியாகக் கூட்டமைக்காததனால்தான் என்கிறார் இரசல். அதாவது ஒரு பொருளை அதன் புலன் தெரி பொருள் கூறு ஒன்று, இரண்டு, மூன்று (S1,S2,S3) என்று கூட்டமைத்துக் காண்பதற்குப் பதிலாகமூன்று இரண்டு ஒன்று என்ற முறையில் காணும் பொழுது சில சமயங்களில் தவறு ஏற்படுகிறது. ஆக, வட்ட மான ஒன்றை முட்டை வடிவமாகக் காண்பது, அப் பொருளின் தன்மையன்று அதன் தோற்றமுமன்று; மாறாக அதன் கூட்டமைப்பு முறையே என்கிறார்.

புலன் தெரி பொருள் கூறுகள் பற்றிக் கூறிய இரசல் இவற்றிற்கும் அடிப்படையான ஒன்று உண்டு என்கிறார். இதற்கு நுண்ணிலைப் பொருள்கள் (Sensibilia) எனப் பெயர் தருகிறார். இது புலன் தெரிபொருள் கூறுகளிலிருந்து மாறுபட்ட ஒன்று. எடுத்துக்காட்டாக, மர நிறம் என்ற புலன் தெரி பொருள் கூறுக்கும் ஓர் அடிப்படை உண்டு. இதுதான் நுண்ணிலைப் பொருளாகும். இது பொருளுக்கு மட்டும் அடிப்படையன்று; பொருளை உணரும் நரம்பு மண்டலம், நாண் ஆகிய அனைத்திற்கும் அடிப் படையாகும். இந்நுண்ணிலைப் பொருள்கள் ஒரு வரின் கூட்டமைப்பில் நரம்பு மண்டலமாகவும் பிறி தோர் அமைப்பில் கண்ணாகவும், மற்றோர் அமைப் பில் பொருளாகவும் காணப்படுகின்றன. ஆக இந் நுண்ணிலைப் பொருள்களே எல்லாவற்றின் அடிப் படையாகின்றன. இவ்வகையில் இதனை நடுநிலை ஒருமை (Neutral Monism) என்று விளக்கலாம். இந் நியதிப்படி இயற்கையில் மனம் சார்ந்த நிகழ்ச்சிக்கும் பொருள் - சார்ந்த நிகழ்ச்சிக்கும் அடிப்படையில் வேற்றுமையில்லை. ஆக மனமும் சடப்பொருளும் இரசலின் கருத்துப்படி, முறையே மனம் சார்ந்த பொருள் சார்ந்த நிகழ்ச்சிகளின் கூட்டமைப்பே ஆகும். அடிப்படையில் மனத்திற்கும் சடப்பொருளுக் கும் இரசலின் கருத்துப்படி வேற்றுமையில்லை. இரசலின் இக்கருத்தைப் பல்வேறு சிந்தனையாளர் கள் குறை கூறியுள்ளனர்.

புற உண்மைக் கொள்கைப்படி (Realism) புறப் பொருள் என்பது தனிப்பட்ட ஒன்றாகவும் தோற்ற மாகவும் தவறாகவும் காணப்படுவதும் உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால், இரசல் இதற்கு மாறுபட்ட கருத்தைத் தருகிறார். அதாவது புலன் தெரிபொருளின் கூட்டமைப்பு ஒவ்வொரு பொருளுக்கும் மாறுபடுகிறது என்கிறார். இம் மாறு பாடுதான் காட்சிக்கு அடிப்படை என்பது போலக் கூறுகிறார். அவ்வாறாயின் பொருள் என்பது உள்ளத் தைச் சார்ந்ததா? அல்லது பொருள் ஒன்றால் உரு வாக்கப்படுகிறதா? என்ற கேள்விகளுக்கு இல்லை எனப் பதில் தருகிறார் இரசல். மக்கள் பொருள் களை உருவாக்கவில்லை. ஆனால், அவற்றை நுண்ணி லைப் பொருள்களாக உருமாற்றி அறிந்து கொள் கிறார்கள். இது உருமாற்றக் கொள்கை நியதி (Dis-traction Theory) என அறியப்படுகிறது. இரசலின் கருத்துப்படி பொருள்கள் உள்ளத்தைச் சார்ந்தவை யல்ல. வெளியே இருக்கின்றவற்றைக் குழு அமைத்துத் தெரிந்து கொள்ளப்படுவனவே என்கிறார்.

இவ்வாறாக நுண்ணிலைப் பொருள்கள் என்பவை புறப்பொருளெனக் கருத்துத் தெரிவிக்கிறார். ஆக, இவ்வாறு இருக்கிற நுண்ணிலைப் பொருள்களைக் கொண்டுதான் மக்கள் குழு அமைக்கின்றனர். இந்த

நிலை அக நிலை ஒருவேளை இருக்கின்ற ஒன்றிற்குப் புதுப் பகுப்பாய்வு கொடுத்துக் குழு அமைக்கின்றனர். இந்த நிலை அக நிலைக் கருத்து முதற் கொள்கை (Subjective Idealism) போன்று இல்லாத ஒன்றை அமைக்கவில்லை; மாறாக வெளியே இருக்கும் நுண்ணிலைப் பொருள்களைக் குழு அமைத்து மக்கள் காண்கின்றனர் என்கிறார். இதன் அடிப்படையில் அறிவினை அறிமுக அறிவு (Knowledge by Acquaintance)என்றும் விளக்கவுரை அறிவு (Knowledge by Description) என்றும் இரு வகையில் இரசல் விளக்குகிறார்.

1. அறிமுக அறிவு: வேறு வெளி ஆதாரங்கள் இன்றித் தானாகவே நியாயப்படுத்தப்படும் அல்லது நம்பப்படும் அறிவு அறிமுக அறிவு (Knowledge by Acquaintance) ஆகும். இதற்குத் தெளிவான ஓர் எடுத்துக்காட்டு புலன் உணர்வுகள் மூலம் பெறப்படும் அறிவு என்பதாகும். தொடுதல், கேட்டல், போன்ற உணர்வுகள் மூலம் உடனடியாகப் பெறப்படும் உண்மைகள் அறிமுக அறிவாகும் என்கிறார் இரசல் இதனைப் 'பொருள் பற்றிய அறிவு' (Knowledge of Things) என்றும் குறிப்பிடுகிறார். இவ்வறிவு மெல்லிய தெரிபொருள் கூறுகள் (Soft Data) மூலம் கிடைப்பதாக விளக்கப்படுகிறது.

2. விளக்கவுரை அறிவு: பிறவற்றிலிருந்து உய்த்துப் பெறப்படும் அறிவு விளக்கவுரை அறிவு (Knowledge by Description ஆகும். பொதுவான அறிவியல் என்பதும், மக்கள் பொது அறிவென்பதும் விளக்கவுரை அறிவின் எடுத்துக்காட்டுகளாகக் கூறப்படலாம். இவ்வறிவு கடினத் தெரிபொருள் கூறுகள்(Hard Data) மூலம் கிடைப்பதாக விளக்கப்படுகிறது. மாயத் தோற்றம் (Hallucination), திரிபுத் தோற்றம் (Illusion), மனம் சார்ந்த தோற்றங்கள் (Mental Images) ஆகியவற்றைக் கடினத் தெரிபொருள் கூறுகளில் சேர்க்கிறார் இரசல்.

மனம், சடப்பொருள் ஆகியவை பற்றி இரசல் தம் பிற்கால நூல்களில் சற்று மாறுபட்ட கருத்தைத் தருகிறார். புத்தி சார்ந்த நிகழ்ச்சிகளின்(Mental Events) தொகுப்பே 'மனம்' என்பதாகும். இந்நிகழ்ச்சிகள் அனுமானித்தல் (Inference) இல்லாமல் அறிந்து கொள்ளப்படக்கூடியவையாகும் என்கிறார். சடப்பொருள் அனுமானித்தலின் விளைவாகவே அறிந்து கொள்ளப்படக்கூடியது என்கிறார். நினைவு நிலை (Consciousness) என்பது கவனித்தல் (Attention) என்ற அடிப்படைத் தன்மையில் பகுக்கப்படவேண்டிய ஒன்று என்று கூறுகிறார். இக்கருத்து இரசலின் முந்திய நடுநிலை ஒருமைக் கருத்தின் மிகக் கவனமான ஒரு வெளிப்பாடே ஆகும்.

தெரிதல் அல்லது உணர்தல் (Perception) பற்றி இரசல் 'மெய்ப்பொருளியலின் சிக்கல்கள்' (Problems of Philosophy)என்னும் நூலில் குறிப்பிடும் பொழுது, புற உலகைத் தெரிதல் என்ற இச்சிக்கலுக்கு மெய்ப்பொருளியல் சார்ந்த மூன்று பதில்களைத் தருகிறார். 1. சாதாரண, எளிய புறவாய்மைக் கொள்கை (Naive-Realism), 2. காரண காரிய நியதி (Causal theory), 3. புலன் வழி அறிதல் கொள்கை (Phenomenalism) என்ற இம்மூன்றில், இரண்டாவதான காரண காரிய நியதியைத் தம் பிற்கால நூல்களில் மிகுதியாக வலியுறுத்துகிறார். இவரது காரண காரிய நியதியைப் பின் வரும் மூன்று கருத்துரைகளின் மூலம் மக்கள் விளங்கிக் கொள்ளலாம். 1. இயற்பியலும் (Physics) உடலியலும் (Physiology) கூறுவதன்படி சடப்பொருள் உண்மையில் மக்கள் உணர்வதிலிருந்து மிகவும் மாறுபட்டதாய் இருக்கிறது. எடுத்துக்காட்டாக மேசை என்பதனை மக்கள் உணரும் பொழுது, இயற்பியல் அறிஞர்கள் கூறுவது போல, மேசையினுள் இருக்கும் பலவித அணுக்களின் அமைப்பையோ, அணு அலைகளின் சந்திப்பையோ மோதலையோ அவர்கள் காணுவதில்லை. 2. ஒருவர் பார்க்கும் இவ்வுலகை அதே போன்று ஒருவேளை சிறிது மாற்றத்துடன் மற்றவரும் உணர்கின்றார் என்று மக்கள் நம்புவதற்கு நல்ல காரணங்கள் உண்டு. 3. ஒருவர் நேரடியாக உணர்வது என்பது இயற்பியல், உடலியல் காரணகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் முடிவுப்படைப்பே ஆகும். இந்நிகழ்ச்சி உணர்பவரின் மூளையில் நடக்கும் நிகழ்ச்சி ஆகும் என்று கூறுகிறார். இதனை விளக்க முற்படும் இரசல் இரண்டு விதமான இடங்களைக் (Space) குறிப்பிடுகிறார். ஒன்று, இயற்பியலின் பொதுவானதும் நடுநிலையானதுமான இடம்(Public and Neutral Space). மற்றொன்று, மக்கள் உணர்தலின் தனிப்பட்டதும் (Private) சொந்தமானதுமான (Personal) இடம் ஆகும். ஒருவன் பார்க்கும் பொருள்கள் அவனது தனிப்பட்ட உணர்தல் இடத்திற்குள் இருக்கின்றன. இந்தத் தனிப்பட்ட உணர்தல் இடத்தை அவன் யாருடனும் பகிர்ந்து கொள்ள முடியாது. இந்நிலையில் அவன் உணர்பொருள்கள் அவனது மூளையில் இருக்கின்றன அல்லது அவனது உணர்தலிடத்தில் இருக்கின்றன எனக் கூறுவது தவறானதாகும். ஏனென்றால், ஒருவனது மூளையை அவனே பார்ப்பது இல்லை. ஆகையால், அவனதுமூளை அவனது உணர்தலிடத்திற்குள் வரமுடியாது என்கிறார். ஆனால், அவனது மூளை இயற்பியலின் பொதுவான இடத்தில் மற்றப் பொருள்களைப் போல் இருக்கிறது. இவ்வாறு இந்தப்பொது இடத்தில் இருக்கும் மூளை சார்ந்து நடக்கும் நிகழ்ச்சிகள் ஒருவனது தனிப்பட்ட உணர்தலிடத்தில் (Private Perceptul) நடக்

கும் உணர்தலைக் கட்டுப்படுத்துகின்றனவாய் அமைகின்றன என்கிறார்.

இரசல் உண்மை பற்றிய எகலின் கூட்டிசைவு நியதியை (Coherence theory) ஏற்கவில்லை; மாறாக ஒத்திசைவு (Correspondence) நியதியை வலியுறுத்து கிறார். உண்மை என்பது நம்பிக்கைகளின் பாங்காய் இருக்கிறது என்றும், வடித்துப் பொருள் கொள் ளும் தன்மையில் சொற்றொடரின் பங்காய் அமை கிறது என்றும் கூறுகிறார். இவரது கருத்தின்படி நம்பிக்கைகள் ஏற்கனவே இருக்கும் உண்மைகளு டன் ஒத்திசைவு பெறும்போதே உண்மையாக முடி கிறது. இவர் 'உண்மைகள்' (Facts) என்று முன்பே இவ்வுலகில் இருப்பனவற்றைக் கருதுகிறார். 'நம் பிக்கை' என்று இவர் குறிப்பிடுவது, ஓர் உடலின் அல்லது மனிதனின் அல்லது இவ்விரண்டின் ஒரு வித மான நிலையையேயாகும். சுருங்கச் சொன்னால், ஓர் உயிரியின் நிலை என்று விளக்குகிறார். 'ஒத்தி சைவு' என்பதனை மேகம் மழையையும், புகை நெருப்பையும் உணர்த்த வருவது போன்ற ஒரு வகை உறவு என்று விளக்குகிறார்.

முடிவுரை: இவ்வாறாக மெய்ப்பொருளியல் சிக் கல்களுக்குப் பல கோணங்களில் தீர்வு காணும் இர சல் அறவியல் (Ethics) பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'இது சில பகையான பரவச உணர்வுகளின் (Emotional) அடிப்படையிலான சிந்தனைப் போக்கே' என் கிறார். ஒழுக்க முடிவுகளை (Moral Judgements) அறிவியல் ஆய்விற்குட்படுத்த முடியாததால், இம் முடிவுகள் உண்மையானவையா உண்மையற்றவையா என்று கூறல் இயலாது என்கிறார். சமயத்தின் (Religion) மூடநம்பிக்கைளை இவரைப் போல் குறை கூறியவர்கள் வேறு யாரும் இல்லை என்று கூடக் கூறலாம். பாரம்பரியச் சமயங்களின் அறிவுக்கு ஒவ்வாத கருத்துகளை ஒரு பகுத்தறிவுவாதி என்ற நிலையில் தமது நூல்களில் மிகுதியாகக் கண்டிக் கிறார் என்றாலும், இரசலின் உலகு பற்றிய கருத்து களில் சமயச் சிந்தனைப் போக்கு மறைந்து இழை யோடுவதாக வல்லுநர்கள் கருதுகின்றனர். இவ்வா றாக மெய்ப்பொருளியலுக்கு அறிவியல் அணுகு முறையைத் தந்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளார் இரசல். அளவையியல், கணிதவியல் ஆகியவற்றுடன் மெய்ப்பொருளியலின் தொடர்பை மிகத் தெளிவாக வெளிக்காட்டியது, இரசலுக்கு மெய்ப்பொருளியல் வரலாற்றில் மிகவும் முக்கிய இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. மெய்ப்பொருளிய லில் பயன்படுத்தப்படும் மொழி அளவையியல் பகுப் பாய்விற்கு உட்படுத்தப்பட்டுக் கவனமாகத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்ற இரசலின் கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒன்று. புறவாய்மைக் கொள் கைக்கு அளவை முறைப்படியும் அறிவியல் அணுகு முறைப்படியும் உறுதியான அடித்தளமும் நல்ல உருவமைப்பும் தந்தவர் இரசல் என்றால் அது மிகை யாகாது. பா.ஜே.

துணை நூல்கள்:

டாக்டர் இராதா கிருட்டிணன், கீழை மேலை நாடு களின் மெய்ப்பொருளியல் வரலாறு, தொகுதி - II, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970.

Gross R. Barry, Analytic Philosophy, Oxford Publishing Co., 1970.

Nakhnikian George, Ed., Bertrand Russell's Philosophy, London, 1974.

O'Connor D .J., Ed., A Critical History of Western Philosophy, The Free Press, New York, 1964.

**இரசவாகினி** புத்த சமயச் சார்பான நூல் களுள் ஒன்று. இது பாலி மொழியில் இயற்றப்பட் டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஒரு சோழமன்னன் காவிரிப்பூம்பட்டினத்தில் சிவாலயம் ஒன்றினை அமைக்க முற்பட்டான். அக்கோயிற்பணி நடைபெறும் போது புத்த சமயத் துறவியர் சிலர் அரசனிடம் சென்று சில அற்புதங்களை நிகழ்த்திக் காட்டி, அதனால் அரசனைக் கவர்ந்து, சிவபெரு மானுக்காக எழுப்பப்பட்ட அந்தத் திருக்கோயிலைப் புத்த சமயக் கோயிலாக மாற்றிவிட்டனர். இச் செய்தி இரசவாகினி என்னும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**இரசவாதம்** இரும்பைப் பொன்னாக்குதற் கும், உலோகங்களை உண்ணும் பொடியாகவும் பரு கும் நீராகவும் மாற்றி நோய் நீக்கும் மருந்து செய் வதற்கும் பயன்படும் அரிய கலையாகும். மூலிகைச் சாற்றினால் இயற்கை வழியாகவும் செந்தூரம், அமிலம், செயநீர், பொடி ஆகியவை கொண்டு செயற்கை வழியாகவும் தமிழகச் சித்தர்கள் நோய்க்கு மருந்து கண்டனர். விண்ணிலுலவும் கோள்களின் மாற்றத்திற்கும் உலகிலுள்ள பொருள் களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையறிந்த பண்டைச் சித்தர்கள், இரசவாத முறையால் மக்கள் நோய்நீங்கி, மூப்பு மாறி நெடுங்காலம் வாழும் வழி கண்டனர். சித்தர்கள், இலக்கிய ஆசிரியர் ஆகியோர் வாக்குகள், இரசவாதக் கலைபற்றிய செய்தியினைக் குறிப்பிடுகின்றன. பிற்காலச் சிற்றிலக்கிய வகை களுள் ஒன்றான கலம்பகம் 'சித்து' என்னும் ஓர் உறுப்பினைக் கொண்டு அதில் சித்தர் இரசவாதம் புரிந்தமை பற்றிய குறிப்பினை வெளிப்படுத்துகிறது.

'இலகு இரும்பதனைப் பொன்வெள்ளியோடேற்று வோம் உரை, குறைபடாதெடுத்த தாம்பிரமாழை மச்ச நம்மிரதவாத மிதன்றியும், பல மருந்தறிவோம்' என்று இக்கலை பற்றி ஒரு சித்தர் கூறுவதாக அழகர் கலம்பகம் குறிப்பிடுகிறது. 'இச்சமாய்ப் பின்னுமொரு பச்சிலை, மெத்தவுந் தானுமுண்டு, வெள்ளீயமும் இரும்புஞ் செம்பும் மிகவும் தங்கம் செய்யலாம்' என்பது விராலி மலைக் குறவஞ்சி கூற்றாகும். 'வெந்தழலில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்' எனத் தாயுமானாரும், 'இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனாற்போல' என்று சேக்கிழாரும் இக்கலை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இக்கலையினால் பொன் செய்யலாம் என உணர்ந்து, பொன்னாசை மிக்க மக்கள் இதனைத் தேடித் துன்புற்று உழலுவதனைத் தாயுமானவர், 'அழகேசன் நிகராக அம்பொன் மிக வைத்தபேரும், நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்' என்று விளக்கியுள்ளார்.

பொதுவாகப் பொன்னினைச் செய்வதற்குப் பயன்பட்டமையால் இரசவாதம் என்பதனைப் 'பொன் செய்யும் மருந்து' என்று கூறுவதும் உண்டு. இதனைப், 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்னும் பழமொழியும் விளக்குகிறது. இரசவாதக்கலை சார்ந்த பழமொழிகள் சிலவும் தமிழில் வழங்குகின்றன. 'வாதிமகன் வைத்தியன்', 'வாதங்கெட்டு வைத்தியம்' என்னும் தொடர்கள், இக்கலைக்கும் மருத்துவத்திற்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிடுகின்றன. 'அரிதாரப் பொன்னுக்கு அழிவில்லை' என்று மற்றொரு பழமொழி கூறுகிறது

வடமொழியில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் அர்த்தசாத்திரத்திலும், கி.மு. 5–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புத்தசமய நூலிலும் இக்கலை பற்றிய குறிப்புகள் உள்ளன. சீன நாட்டில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரசவாதி, 'வேபோயாங்கு' (Wei Po-yang) என்பார் இறவாத் தன்மை பெற முயன்றிருக்கிறார். அன்றியும், கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் 'கோ வுங்' (Ko-Hung) என்ற புகழ் பெற்ற இரசவாதி சீன நாட்டில் வாழ்ந்துள்ளார்.

பழங்காலத்தில் எகிப்து நாட்டில் கிரேக்க அறிவியலார் இக்கலையில் ஈடுபட்டனர். இலேடன் பாபிரசு என்ற அறிஞர், கி.பி. 3–ஆம் நூற்றாண்டில் எகிப்தில் இரசவாதம் புரிந்தார் என்பது கூறப்படுகிறது. பின்னர்க் கிரேக்க நாட்டறிஞர் வழியாக அரேபியாவுக்கு இக்கலை பரவியது. பாரிசு நகர நூலகத்தில் அரேபியக் கையெழுத்துச் சுவடி இதுபற்றிக் கூறுவதை அமெரிக்கச் சொற்களஞ்சிய ஆசிரியர் வால்டர் யூசுடு எடுத்துக்காட்டியுள்ளார். கிரேக்கர்களின் அறிவியல் சிந்தனைகளைப் பாக்தாதுப் பெருநகரத்தில் அரேபியர் ஆய்ந்துள்ளனர். சாபிர்–இன்–ஆயன் என்னும் புகழ்பெற்ற இரசவாதி கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார். அவரைப் பற்றிய குறிப்புகளும், அவர்பெயரில் அமைந்த நூல்களும் உள்ளன. இரசவாதக் கலை பற்றிய செய்திகள் கி.பி. 1100க்குப் பின் சிசிலியிலும் இசுபெயின் நாட்டிலும் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டுப் பரவின. பின்னரே, ஐரோப்பியர் இதுபற்றி உணரத் தொடங்கினர். உலோகங்களை மருந்தாக்க, கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவிசு நாட்டு விஞ்ஞானி 'பேராசெல்சசு' (Paracelsus) இரசவாத முறையினைக் கையாண்டார். இக்கலையறிந்த மருத்துவர்களை ஆங்கில நாட்டரசி முதலாம் எலிசபெத்தும் செர்மானியத் தலைவர் இட்லரும் ஆதரித்துள்ளனர். அறிவியலறிஞர்கள் முயன்று 1949–ஆம் ஆண்டு அணுக்கதிரியக்க வீச்சினால் உலோக மாற்று முறையில் வெற்றி கண்டார்கள்.

தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கவும், நோய் தீர்க்கும் மருந்துகள் செய்யவும் பயன்படும் இரசவாத முறையால், பல்வேறு மூலிகைச்சாற்றினைக் கலந்து செந்தூரக்கல், பாசாணக்கல் ஆகியவற்றைச் செய்தனர். இவ்வகைக் கட்டுக்கற்களால் மக்கள் நலங்கருதிச் சித்தர்பெருமக்கள் திருக்கோயில்களில் தெய்வத்திருமேனிகளை வடித்துள்ளனர். தமிழகத்தேயுள்ள சதுரகிரிச்சிவலிங்கமும், பழனி முருகனும் இத்தகுமுறையில் அமைக்கப்பட்டனவாகும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இரசவாதத்திற்குக் கந்தகமும் பாதரசமும் உப்பும் உலோகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இக்கலையில் மூலிகைச் சாற்றினாலோ செயற்கை முறையாலோ கட்டப்படும் பாதரசம் முதன்மையான பொருளாகச் செயற்படுகிறது. வெள்ளீயத்தோடு வெங்காரம் சேர்த்து வெள்ளியாக்குதலும், களங்கமான இலிங்கத்தோடு ஈயம் சேர்த்துப் பொன்னாக்குதலும் சித்தர் முறையாகும். தமிழகத்தே வாழ்ந்த சித்தர்களுள் பலர் இத்துறையில் தேர்ந்திருந்தனர் என்பதை அவர்கள் கூற்றுகளால் அறியலாம். 'ஆமெனவே துருசதுவும் நீறிற்றானால், ஆடலாம் ஒருகோடி வேதைமார்க்கம், தாமெனவே சகலசரக்கதனைக் கட்டும், சமுசயங்களெண்ணாதே தங்கமாகும்' என்பது யூகிமுனி பூரணம் நானூறு கூறும் கூற்றாகும். 'நல்ல வெள்ளி ஆறதாகும் நயந்தசெம்பு நாலதாகும், கொல்லும்நாகம் மூன்றதாகும் இலாவுபொன் விரண்டதாகும். வில்லினோசை ஒன்றுடன் வல்லவைத் தூதுவீர், எல்லையொக்க சோதியே துளங்கும் மாற்ற

தெட்டதே' - என்னும் சிவவாக்கியர் கூற்று இரச வாத முறையினையும் பயனையும் குறிப்பிடுகிறது.

சீனாக்காரம், வெடியுப்பு, நவச்சாரம் ஆகிய மூலப் பொருள்களைக் கொண்டு மருத்துவ முறைப்படி செய்யும் வகாரவித்தை பற்றிச் சித்தர்கள் குறிப்பிட் டுள்ளார்கள். தாய்ப்பாலும் மருதோன்றிச்சாறும் கூட்டி மருத்துவ முறைப்படி சுத்தி செய்யப்பட்ட பாதரசத்தை மெழுகாக்கிப் பத்துமுறை புடம் போட் டபின், கருவூமத்தையின் உதவியோடு தணலிட்டு மணி செய்யும் முறை சித்த மருத்துவரிடை உள்ளது. மற் றும் ககன மணியென ஒருவகை மணியும் உண்டு. இம் மணிகளை மருத்துவத்திற்கும் சிவயோகம் பயிலுதற் கும் இரசவாதம் செய்வதற்கும் நெறியான வாழ்வு மேற்கொண்டோர் பயன்படுத்த முடியும். உணவில் உவர்ப்பு, புளிப்பு, காரத்தன்மை ஆகியவற்றை நீக்கி யோரே இதனைப் பயன்படுத்தல் நலம் பயக்கும்.

இரசத்தையும் நாகத்தையும் மருத்துவ முறைப் படி கூட்டிப் பின் அரிதாரம், இலிங்கம் இரண்டும் கலந்து செம்பருத்திப் பூச்சாற்றோடரைத்து ஓடு மூடிச் சீலை செய்து புடம் போடச் செந்தூரமாகும். இதனோடு வெள்ளியுருக்கிக் கலந்து புடம் போடப் பொன்னாகும். இம்முறையினைப் பதினெண்சித்தருள் ஒருவரான நந்தீசர் காட்டுகிறார்.

சித்தர்கள் யோகவலிமையால் புவியில் காணும் உலோகங்களை உணவாக்கி, உடலைக் கோள்நிலைக் கேற்பச் செய்து, இரசவாதம் புரிகின்றனர். இவர் தம் உடலாற்றலாலும் வெப்பநிலையாலும் குப்பை மேனி போன்ற சிலமூலிகைச்சாற்றின் உதவியால் மட் டுமே உலோகமாற்றம் புரிகிறார்கள். ஓர் உலோகத் தின் மூலப்பொருளின் தன்மையினை மாற்றி மற் றொன்றின் குணத்தினை ஏற்றி வேறுபடுத்தும் சித் தர்கள் பற்றிச் சதுரகிரிப் புராணம்பேசுகிறது. மருத் துவ முறைக்கு இன்றியமையாதது பாதரசமே. இத னைக் கட்டும் பல வகார முறைகளில் நடைமுறை மருத்துவத்தில் செயநீர் கொண்டு பாதரசமணி கட்டு வது ஒன்றாகும். மற்றும் குமரி, மருதோன்றி, நாயு ருவி போன்ற மூலிகைகள் வழியாகவும் பாதரசமணி உண்டாக்கலாம். இதற்கும் மருத்துவ முறைப்படி புடம் போடவேண்டும். மேலும் தேரை, குருவி, முள் ளெலி, சேவல் ஆகிய உயிரினங்கள் துணைக் கொண் டும் இம்மணி கட்டி இரசவாதம்செய்ய இயலும் எனச் சித்தர்கள் கூற்றுகளால் அறியலாம். குரு.கோ.

**இரசுபுட்டீன் (கி.பி. 1871-1916)** என்பவர் உருசியாவின் சித்தர்களுள் (Mystic Leader) ஒருவர். இரசுபுட்டீன் (Rasputin), தோபுல்சுக்கு (Tobolsk) அண்மையிலுள்ள போக்ரோவிசுக்கோய் (Pokrovskoye) என்னும் ஊரில் கி.பி. 1871-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தம் 30-ஆம் வயதில் மக்களின் நோய்நொடிகளைத் தீர்க்கும் சித்தராகக் கருதப் பட்டார். இவருக்குச் சார் மன்னர்களின் குடும்பத் தாருடன் நெருங்கிய உறவு இருந்தது. அரியணையின் வாரிசான சாரேவிச் அலெக்சிசு (Tsarevich Alexis) என்பார் இவரால் வசியப்படுத்தப்பட்டார். புனித பீட்டர்சுபர்க்கில் பதவியில் அமரும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் இவரது செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் என்று கருதப்பெற்றனர். இவர் நல் லொழுக்கக் குறையுடையவராகவும் குடிகாரராகவும் இருந்தார். இவர் மீது பல அவதூறுகள் சுமத்தப் பட்டன. சார் மன்னர் இரண்டாம் நிக்கோலசும் அவர் துணைவியாரும் இவருக்கு உறுதுணையாக உள்ளனர் என்று மக்கள் கருதினர். இவர் செரு மானியருக்கு உளவு வேலை செய்தார் என்ற ஐயுற வின்பேரில் சில நிலக்கிழார்கள் இவரைக் கி.பி. 1916 -இல் கொலை செய்துவிட்டார்கள்.

**இரசை வடமலையப்ப பிள்ளை** கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் களுள் ஒருவர். இவர் திருச்சி மாவட்டம் திருவரங் கத்துக்கண்மையிலுள்ள இரையூரில் பிறந்தார். இவ் வூர் இரசையென்றும் வழங்கப்பெறும். இவர் இயற் றிய மச்சபுராணத்தின் பாயிரம், 'அடல்கெழு திண் புயன் இரையூர் வடமலை ……….. அரசரேறே' என்றும், அப்புராணத்தின் இறுதிச்செய்யுள், 'இரசை வடமலை மகிபன்' என்றும் கூறுவதால் இவ்வூர் பெறும் இருவகை வழக்கையும் அறியலாம்.

இவர் நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்; கார் காத்த வேளாளர் மரபில் எளிய குடும்பத்தில் பிறந் தவர்; நாயக்க மன்னரின் குல குரு ஒருவரால் வளர்க்கப் பெற்றுக் கல்வியறிவில் சிறந்து விளங்கிய வர். இவர் திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக் கர் காலங்களில் அம்மன்னர்களின் அரசப் பேராள ராகத் தென்பாண்டி நாட்டையாண்டார். 'அரச ரேறே', 'மகிபன்' என்று மச்ச புராணமும் 'வட மலைப் பூபதி' என்று புலவராற்றுப்படையும் கூறுவ தால், இவர் அரசபதவியிலிருந்த ஆன்றோர் என் பது விளங்குகிறது. அரசன், அமைச்சன் ஆகியோரை 'ஐயன்' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்ததுபோல, இவரையும் வடமலையப்ப பிள்ளையன் என்று குறிப் பிட்டுச் சிறப்பித்துள்ளனர். இவர் வழியினர் இன்றும் பிள்ளையன் என்றே அழைக்கப்படுகின்றனர்.

திருமேனி இரத்தினக் கவிராயரின் புலவராற்றுப் படை, தென்திருப்பேரைத் திருப்பணி மாலை, திருச் செந்தூர்த் தல புராண ஆசிரியர் வெண்ணிமலைக் கவிராயரின் கும்மிப்பாடல், வடமலைவெண்பா, முக் கூடற்பள்ளு, குழைக்காதர் திருப்பணிமாலை ஆகிய

நூல்கள் இவர்தம் தயை, கொடை, வீரம், புலமை முதலியன பற்றிச் சிறப்பிக்கின்றன.

மச்சபுராணம், நானூற்றுக்கோவை, நாற்கவி வண்ணம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். நீடூர்த்தல புராணமும் இவரால் இயற்றப்பெற்ற தெனப் புலவராற்றுப்படை குறிப்பிடுகிறது. வட மொழிப் பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய 1400 கிரந்தங்களைக் கொண்ட மச்ச புராணத்தைத் தமிழில் 5120 செய்யுள்களில் மொழி பெயர்த்துள்ளார். இதனால், இவரது வடமொழிப் பெரும்புலமையும் நன்கு புலனாகிறது. க.இரா.

**இரஞ்சித் சிங்கு (கி.பி. 1780-1839)** பஞ்சாபில் சீக்கிய அரசினை நிலைநாட்டிய சீக்கியத் தலைவர். இவரைப் 'பஞ்சாபின் சிங்கம்' என்பார்கள். இரஞ்சித் சிங்கு (Ranjit Singh) தந்தையாரின் பெயர் மகாசிங்கு (Maha Singh); தாயாரின் பெயர் இராசு கவுர் (Raj Kaur). இவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆம் நாள் இன்றைய பாகிசுத்தானிலுள்ள குசரன்வாலா (Gujranwala) மாவட்டத்திலுள்ள சிற்றூர் ஒன்றில் பிறந்தார். இவர்தம் தந்தையார் சுக்கர்சக்கியா (Sukerchakia) என்ற சீக்கியப் பிரிவு ஒன்றின் தலைவர். இவர்தம் தாயார் சிண்டு (Jind) என்னும் பகுதியின் இளவரசி. மகாசிங்கு கி.பி. 1792-ஆம் ஆண்டில் காலமான போது இரஞ்சித் சிங்கு சுக்கர்சக்கியா குழுவின் தலைவரானார்.

தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் இவர் தம் 15-ஆம் வயதில் கன்கயா குழுத் (Kanhaya) தலைவரின் மகளை மணந்துகொண்டார். பின்னர்ப் பல ஆண்டுகள் இவருடைய பணிகள் அனைத்தும், பேராசை பிடித்த இவர்தம் மாமி சதா கவுர் (Sada Kaur) என்பாரின் வழிகாட்டுதலின் படியே நடைபெற்றன.

சதாகவுரின் உறுதுணையுடன் கி.பி. 1799-ஆம் ஆண்டில் இரஞ்சித்சிங்கு இலாகூரைக் கைப்பற்றிக் கொண்டார். அன்றைய பஞ்சாபின் தலைநகரமாயிருந்தது இந்நகரம். அப்போது ஆப்கானிசுத்தானத்தின் அரசராயிருந்த சா சமான் (Shah Zaman) இவரை இலாகூரின் ஆளுநராக ஏற்றுக் கொண்டார். இருப்பினும், கி.பி.1801-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12-ஆம் நாள் இரஞ்சித் சிங்கு தம்மையே பஞ்சாபின் பேரரசர்(Maharaja) என்று அறிவித்துக் கொண்டார். சீக்கியச் சமய குருமார்களின் பெயரில் நாணயங்களை அச்சிட்டுச் சீக்கியத் தலைவர்களின்மரபினைப் போற்றிப் பாராட்டினார். சீக்கியப் பொதுநலக் குடியரசின் பெயரில் நாட்டை அரசாளத் தலைப்பட்டார். அடுத்த ஆண்டில் இவர் அமிர்தசரசைக் கைப்பற்றிக் கொண்டார். அந்நகரம் பஞ்சாபிலேயே -ஏன்-வட இந்தியாவிலேயே முதன்மையான வாணிக மையமாகும். அதனுடன் சீக்கியர்களின் புனிதக்கோயிலான பொற்கோயில் அவ்வூரில் இருப்பதால், புனித தலமாகவும் அந்நகரம் கருதப்பட்டது. பின்னர்ப் பஞ்சாபு முழுவதிலும் சிதறியிருந்த சிறுசிறு சீக்கிய அரசுகளையும் பத்தான் அரசுகளையும் அடக்கிக் கைப்பற்றத் திட்டமிட்டார். கிழக்குத் திசையில் சீக்கிய அரசினை விரிவாக்கும் பணியை ஆங்கிலேயர்கள் தடுத்து நிறுத்தினர். அமிர்தசரசு உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர் சட்லசு (Sutlej) ஆற்றை அவருடைய கிழக்கெல்லையாகக் கொள்ளும்படி இரஞ்சித் சிங்கை வற்புறுத்தினர். இதற்குப்பின்னர் இவர் வடக்கேயும் மேற்கேயும் பரவியிருந்த ஆப்கானியக் குறுநில மன்னர்கள் மீது படையெடுப்பைத் தொடங்கினார். இவர் கி.பி. 1818-ஆம் ஆண்டில் மூல்தானையும், அடுத்த ஆண்டு காசுமீரத்தையும் கைப்பற்றினார். சிந்து ஆற்றின் மறுகரையிலிருந்த மன்கேரா (Mankera)வும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் கி.பி. 1822-ஆம் ஆண்டு இவர் வசமாயின. பெசாவர் 1823-இல் இவரால் கைப்பற்றப்பட்டது. இத்தருணத்தில் இரஞ்சித்சிங்கின் அரசு, கைபர்க்கணவாயிலிருந்து மூல்தான் வரையிலும், இமயமலையின் சாரலிலிருந்து சிந்து ஆறு வரையிலும் பரவியிருந்தது.

இரஞ்சித் சிங்கின் படையில் சீக்கியர், முசுலிம்கள், இந்துக்கள் போன்ற அனைவரும் அடங்கியிருந்தனர். இவர்தம் படைவீரர்கள் சமயக் காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. படைத்தலைவர்கள் பல்வேறுசமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்களாய் இருந்ததைப்போன்றே இவருடைய அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களும் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள்.

இரஞ்சித் சிங்கு கி.பி. 1820-ஆம் ஆண்டில் தம் படையைப் புதுமைப் படுத்தும் பணியைத் தொடங்கினார். இவர்தம் காலாட் படைகளையும், துப்பாக்கிப் படைகளையும் பயிற்றுவிக்க ஏறத்தாழ 50 அயல் நாட்டுப் படைத் தலைவர்களை அமர்த்தினார். அவர்களுள் பெரும்பாலோர் பிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியனிடம் பணிபுரிந்தவர்கள். புதுமைப் படுத்தப்பட்ட பஞ்சாபியப் படை வடமேற்கு எல்லைப்புறப் பகுதியில் சீரிய பணியாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். அப்படை கி.பி. 1823-ஆம் ஆண்டில் ஆப்கானிய, பத்தானியப் படைகளை நவுசாரா (Naushahra) என்னுமிடத்தில் தோற்கடித்தது. சையது அகமது (Sayyad Ahmad) என்னும் முசுலிம் வெறியன் தூண்டிவிட்ட செகாது (Jihad) என்னும் புனிதப் போரினை எல்லைப்புறப் பழங்குடி மக்கள் செய்யக் கிளர்ந்தெழுந்தபோது, இரஞ்சித் சிங்கு

கி.பி. 1831-ஆம் ஆண்டில் அவர்களை முறியடித்தார். மீண்டும் ஒருமுறை அதே நவுசாராவில் ஆப்கானிய பத்தானியக் கூட்டுப் படைகள் தோற்றுப் போயின.

இத்தருணத்தில் ஆங்கிலேயரின் அரசப் பேராளராக இருந்த பெண்டிங்கு பிரபு கி.பி. 1831-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இரஞ்சித் சிங்கைச் சட்லசு ஆற்றின் கீழ்க்கரையில் அமைந்திருந்த உரூப்பார் (Rupar) என்னுமிடத்தில் வரவேற்றார். சிந்து மாநிலத்தில் இரஞ்சித் சிங்கின் முன்னேற்றத்தை விரும்பாத ஆங்கிலேயர், அம்மாநிலத்தைத் தாமே வைத்துக் கொள்ள விழைந்தனர். அவர்களின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி இரஞ்சித் சிங்கு வற்புறுத்தப்பட்டார். தம்மைச் சுற்றி வளைத்து முன்னேறாது தடுக்க ஆங்கிலேயர் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பதைக் கண்ட இரஞ்சித் சிங்கு சினங் கொண்டார். பின்னர் இவர் ஆப்கானியருடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கி, தோக்ரா படைத் தலைவரான (Dogra Commander) சொராவர் சிங்கு என்பவரின் தலைமையில், கிழக்குக் காசுமீரப் பகுதியான இலடாக்கு என்னும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் விளைவாகப் பஞ்சாபிகள் சீனருடன் மோதவேண்டிய சூழல் ஏற்பட்டது.

இரஞ்சித் சிங்கும் ஆங்கில அரசப் பேராளரான ஆக்லாந்து பிரபுவும் (Lord Auckland) கி.பி. 1838-ஆம் ஆண்டில் பிரோசுப்பூர் (Firozpur) என்னுமிடத்தில் சந்தித்தனர். ஆங்கிலேயரும் இரஞ்சித் சிங்கும் இணைந்து ஆப்கானிசுத்தானத்தின் மீது படையெடுக்கும்படி தூண்டப்படும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனர். அதன்படி ஆங்கில அரசின் பேராளரான சா சூசா (Saha Shuja) என்பாரை அரசுக் கட்டிலில் அமர்த்தவும் உடன்பாடாயிற்று. இவ்வுடன்படிக்கையின்படி சிந்துவில் இறங்கியிருந்த ஆங்கிலப்படை ஆப்கானிசுத்தானத்தைத் தெற்கிலிருந்து தாக்க வேண்டுமென்றும் இரஞ்சித் சிங்கின் படைவீரர்கள் கைபர் கணவாய் வழியாச் சென்று காபூலில் நடைபெறவிருக்கும் வெற்றி அணிவகுப்பில் பங்கு பெற வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

வெற்றிவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இரஞ்சித் சிங்கு பிரோசுப்பூரில் நோய்வாய்ப்பட்டார். இவர் கி.பி. 1839-ஆம் ஆண்டு சூன் மாதம் 27-ஆம் நாள் இலாகூரில் காலமானார். இவருடைய உடல் தீயூட்டப்பட்டபோது இவர் நான்கு மனைவியரும், ஏழு பணிப்பெண்களும் இவருடைய சிதையில் இறங்கித் தீக்குளித்து மாண்டனர்.

இரஞ்சித் சிங்கு படிக்காத மேதை; உடலழகற்றவர்; ஒற்றைக் கண்ணர்; அம்மை வார்த்த முகத்தினர்; ஆண் அழகர்களும் பெண் அழகிகளும் எப்போதும் இவரைச் சுற்றியிருப்பார்கள். இவர் வேட்டையாடுவதில் வல்லவர்; குதிரையேற்றப் பிரியர்; மது அருந்துவதிலும் சளைக்காதவர். இரஞ்சித் சிங்கு சீக்கியராயினும் சமய வெறியற்ற படைத்தலைவர். இவரைப் 'பஞ்சாபின் சிம்மம்' என்று கூறியதும் மிகப் பொருத்தமுடையதாகும்.

**இரஞ்சிதம், அ (1891-1960):** இவர் மதுரை மாவட்டம் சாத்தங்குடி என்னும் ஊரில் கி.பி. 1891-ஆம் ஆண்டு சூன் மாதம் 21-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தை அய்யப்பன்; தாய் முத்துப்பேச்சி. இவர் பெற்றோர் நெசவுத் தொழில் புரிந்தனர். இந்துக் குடும்பத்தில் பிறந்த இவர் கிறித்தவ மதத்தைத் தழுவினார். இவர் அக்காலத்தில் மதுரையில் புகழ் பெற்ற பசுமலை உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். அமெரிக்கப் பாதிரிமார்களின் ஆதரவில் அமெரிக்கன் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரத்தில் பி.ஏ., பட்டம் பெற்றார். இவரது அறிவுத்திறனை மெச்சி இவருக்கு ஆசிரியப் பதவி தரப்பெற்றது. அப்பணியில் இருந்து கொண்டே தம் முயற்சியால் தனிப்பயிற்சி பெற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் எம்.ஏ., பட்டமும் பெற்றார். பள்ளி ஆசிரியராகத் தொடங்கிய இவர் தாம் படித்த அமெரிக்கன் கல்லூரியிலே விரிவுரையாளராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார்.

இவர் எளிய வாழ்வும் கடின உழைப்பும் உடையவர். இவருக்கு இயல்பாக அமைந்திருந்த சாதுரியம் இவருக்குப் பல நண்பர்களைத் தந்தது. கிறித்தவராக இருந்தாலும் இவர் பிற சமயத்தினர்பால் நேசமும் பாசமும் உடையவராக இருந்தார். குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோரிடத்தும் பிற்பட்டோரிடத்தும் இவர் பேரீடுபாடுடையவராக இருந்தார். இவர் தோற்றத்தில் கிராமவாசி போன்றவர். வகுப்பிலும் மாணவர்களுக்குக் கிராமப் பொருளாதாரத்தையே சிறப்பாகக் கற்பித்தார். ஆங்கிலத்தில் ஆற்றொழுக்காகப் பேசவல்லவர். இவரது பேச்சு நடை மிக எளிமையானது. குறைந்த ஆங்கில அறிவு உடையவர்களும் இவரது பேச்சை புரிந்துகொள்ள முடியும்.

இவர் ஒரு தேசியவாதி; கதரைத் தவிர வேற்றுத் துணியை அணியார்; தொழிலாளர்களிடத்தில் தனி ஈடுபாடுடையவர். தொழிலாளர்ப் பகுதியிலேயே இவர் வாழ்ந்து வந்தார். வெள்ளையனை எதிர்த்து விடுதலைப் போராட்டம் உச்சநிலையில் இருந்த போது இவர் சிறிதும் அஞ்சாமல் மாணவரிடையே நாட்டுப் பற்றை வளர்த்தார். 'வெள்ளையனே



இரஞ்சிதம், அ.

வெளியேறு' என்ற போராட்டம் நடைபெற்றபோது அமெரிக்கன் கல்லூரியில் திரு. பிளிண்டு (Mr.Flint) என்ற அமெரிக்கப் பேராசிரியர் கல்லூரி முதல்வராக இருந்தார். அவரால் தேசிய எழுச்சியைச் சந்திக்க முடியாமையால் அமெரிக்கன் கல்லூரிக்கு ஒரு தமிழ்க் கிறித்தவரையே முதல்வராக்க வேண்டும் என்ற சூழ் நிலை ஏற்பட்டது. அப்போது அமெரிக்கன் கல்லூரி ஆட்சிக்குழு (Governing Council) பேராசிரியர் இரஞ் சிதம் அவர்களையே முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டியது. தம் எளிமையாலும் நாட்டுப்பற்றாலும் மாணவர் சமுதாயத்தை இவ ரால் அமைதிப்படுத்த முடிந்தது. இவரது பரந்த மனப்பான்மையால் அமெரிக்கன் கல்லூரி வளாகத் தில் இந்து நன்கொடையாளர் சிலர் பெயரால் பல வகுப்பறைகள் கொண்ட ஓர் அழகிய கட்டடத்தை எழுப்பினார். ஓய்வு பெற்றபின் எளியவர்களும் தொழிலாளர்களும் நிறைந்த பகுதியில் வாழ்ந்து தம் இறுதி நாள்வரை தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வந்தார். இவரது பெருமுயற்சியால் கல்லூரி ஆசிரியர் பலரும் நண்பர் சிலரும் சொந்தமாகக் குடி யிருப்புகளைப் பெறலாயினர். கூட்டுறவுக் கட்டடக் கழகம் ஒன்றை ஏற்படுத்தித் தாமே அதன் தலைவ ராக அமர்ந்து வீடுகள் கட்டிக் கொள்ளுமாறு ஆசிரி யர்களுக்குக் கடன் உதவி வழங்கினார்.

இரஞ்சிதத்தின் துணைவியார் திருமதி. ஞானமணி அம்மையார். இவருடன் பிறந்த ஆண்கள் ஐவர்; தங்கை ஒருவர். இவர் குடும்பத்தினர் அனைவரும் நல்ல கல்வி அறிவு பெற்றிருந்தனர். இவருக்கு மூன்று ஆண்மக்களும் மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

இந்துக் குடும்பத்தில் பிறந்து நல்ல கிறித்தவராக வாழ்ந்து சாதி சமயப் பாகுபாடின்றிக் கல்வித் தொண்டும் சமுதாயத் தொண்டும்புரிந்த இவர், 1960-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் முதல்நாள் மறைந்தார்.

**இரட்சணியக் குறள்** கவிஞர் எச்.ஏ. கிருட் டிணபிள்ளையால் பாடப்பட்ட நூலாகும். அண்மைக் காலம் வரை இந்நூல் கிட்டவில்லை; இப்பொழுது கையெழுத்துப் பிரதியாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. டாக்டர் வீ. ஞானசிகாமணியின் பெருமுயற்சியால் கிடைக்கப்பெற்று நூலாக வெளிவரவுள்ளது. குறள் வெண்பா என்னும் பாவகையில் பாடப்பெற்றது. கிறித்தவச்சமய இரட்சிப்பின் கொள்கைகள் சொல் லப்பட்டுள்ளன. ப.ச.ஏ.

**இரட்சணியச் சிந்து** என்பது கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய கிறித்தவச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். பாமரர் மனத்தைப் பற்றி ஈர்க்கவல்ல சிற்றிலக்கியங்களுள் சிந்து இலக் கியம் சிறப்புடையதாகும். பிற இலக்கிய வகை களைப் படைத்தளித்ததைப் போன்றே, சிந்து வகையிலான இலக்கியங்களைப் படைப்பதிலும் கிறித்தவர் ஆர்வம் காட்டியுள்ளனர். அவர்களுள் அந்தோணிமுத்துப் பிள்ளை என்பார் குறிப்பிடத் தக்கவர். மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சார்ந்த அனுமந்தம்பட்டியில் கி.பி. 1863 முதல் 1929 வரை வாழ்ந்த இக்கவிஞர், அவ் வட்டார மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். தனிப் பாடல்கள், நாடகங்கள், கீர்த்தனைகள், சிந்துப் பாடல்கள் எனப் பல்வகைப் படைப்புகளை இவர் அளித்துள்ளார். இவரது பாத்திறம் பர சமயத்தின ராலும் பாராட்டப்பட்டுள்ளது.

இவர் பாடிய சிந்து நூல்கள் இரட்சணியச் சிந்து, பிளேக்கு சிந்து, பிளேக்கு நொண்டிச் சிந்து, கம்பம் தாத்தப்பன் குளச்சிந்து, சல்லிக் கட்டுச் சிந்து, புதுக் கால் சிந்து, கம்பம் ஆங்கூர் நயினார் இராவுத்தர் சிந்து முதலியனவாகும்.

இவற்றுள் குறிப்பிடத் தக்கது இரட்சணியச் சிந்து. திரு என்னும் அடைமொழி கூட்டித் 'திரு இரட்சணியச் சிந்து' எனக் குறிக்கப்படுகிறது. இவ் வாசிரியர் இயற்றிய சிந்துகளில் பெரியதும் பெருமைக் குரியதும் இதுவேயாகும். இந்நூல் கடவுள் துதி, காப்புப் பாடல்கள் நீங்கலாக இருபத்திரண்டு தலைப்புகளை உடையது; சிந்து, கண்ணி, விருத்தப் பா வகைகளைக் கொண்டது; 1143 வரிகளில் அமைந்த 274 பாடல்கள் கொண்டமைந்தது.

இயேசு பிரான் வரலாறே இரட்சணியச் சிந்தின்

உள்ளடக்கமாகும். அவ்வரலாற்றுக்கு மூலமாகத் தேம்பாவணிக் காப்பியத்தைக் கொள்வதனை ஆசிரியரே தொடக்கத்தில் கூறியுள்ளார். சூசையை வளன் என்றும், சூசையின் தந்தையைச் சகோபு என்றும், திருநீராட்டு அருளப்பரைக் கருணையன் என்றும் வீரமாமுனிவர் தமிழ்ப்படுத்தியுள்ளார். அவ்வாறே இரட்சணியச் சிந்திலும் ஆளப்பட்டுள்ளன. இயேசுவின் தந்தையான வளன் பன்னிரு வயதில் துறவேற்க எண்ணிக் கானகம் செல்லல், இயேசுவிற்கு இருபத்தெட்டாண்டு ஆகுங்கால் வளன் நோயுறல், பின்னர் வளன் தூதுவராக வானுலகு செல்லல் போன்றவை வீரமாமுனிவரால் காப்பியச் சுவைக்காகப் புகுத்தப்பட்டவை. இவற்றையும் மற்றத் தேம்பாவணிப் படலச் செய்திகளையும், ஓரிரு பாடல்களில் சிற்சில இடங்களில் ஓரிரு சொற்களில், இந்நூலாசிரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். ஆதலின் இதனைத் தேம்பாவணிச் சுருக்கம் எனவும் கொள்ளலாம்.

சொற்சுவை, பொருட்சுவை, சந்த நயம், உவமை நயம் மிக்க இச்சிந்து 1978-ஆம் ஆண்டு மறைத்திரு ஞா. பாக்கியராசு அடிகளாரால் பதிப்பிக்கப்பட்டது. மறுபதிப்பு 1981-ஆம் ஆண்டில் ஆசிரியரின் பிற சிந்துப் பாடல்கள், கீர்த்தனைகள், நாடகக் குறிப்புகள் ஆகியவற்றுடன், 'சந்தமார் சிந்துக் கவிதைகள்' என்னும் தலைப்பில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சூ.இ.

**இரட்சணிய மனோகரம்** கவிஞர் எச். ஏ. கிருட்டிணபிள்ளையால் எழுதப்பட்ட கிறித்தவச் சமயப் பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். இதன் கண் கவிஞர் கிறித்தவ ஆன்மிக வாழ்க்கை அனுபவத்தில் அவ்வப்போது இறையுணர்வு வயப்பட்டு அருளிய பாடல்களும், இரட்சணிய யாத்திரிகத்தில் இடம் பெற்றுள்ள பக்திப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இதில் முப்பத்துநான்கு பதிகங்களும் 566 பாடல்களும் உள்ளன.

இந்நூலின் முதற்பதிப்பு கிறித்தவ இலக்கிய சங்கத்தினரால் கி.பி. 1899-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது நூலாசிரியரது முப்பத்தோராண்டுக் காலப் பக்தி வாழ்வின் வெளிப்பாடாகும். இந்நூலின் முப்பது பதிகங்களுக்கு அவற்றின் பொருளைத் திரட்டித் தரும் பாயிரம் போன்ற இரண்டடிக் கொளுப் பாட்டுகள் காணப்படுகின்றன. இவை திருக்கோவையார், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களின் துறை விளக்கக் கொளுக்களை ஒத்துள்ளன. இந்நூலிலுள்ள 'பாலியப் பிரார்த்தனை' என்னும் பகுதி கவிஞரின் மகன் சிறுவனாயிருந்த பொழுது, அவனுக்கு இறைப்பற்று இளமையிலேயே உண்டாக வேண்டுமென்ற நோக்கத்துடனும் தமிழிசையுணர்வுடனும் பாடப்பட்டதாகும். இரட்சணியயாத்திரிகமும் இரட்சணிய மனோகரமும் முற்றிலும் வெவ்வேறான நூல்கள் அல்ல. இரட்சணிய மனோகரம் தமிழ்க் கிறித்தவப் பக்திப் பனுவல். இதனைக் 'கிறித்தவத் திருவாசகம்' என்று போற்றுதல் உண்டு. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1978-ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்ட பதிப்பாக வேதாகம மாணவர் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. பதிப்பாசிரியர் இப்பதிப்பில் முதற் பதிப்பில் இல்லாத நான்கு பதிகங்களைச் சேர்த்துள்ளார். அவையும் கிருட்டிணபிள்ளை பாடியனவே யாகும். ஆகவே இரண்டாம் பதிப்பு 38 பதிகங்களையும், எழுநூற்றைம்பது பாடல்களையும் கொண்டுள்ளது. இந்நூலுக்கு உரை இல்லை. ப.ச.ஏ.

**இரட்சணிய யாத்திரிகம்** கிறித்தவத் தமிழ்க் காப்பியமாகும். இதனைக் கவிஞர் எச். ஏ. கிருட்டிணபிள்ளை இயற்றியுள்ளார். இக்காப்பியம் சான் பன்யன் (John Banyan) என்பவரால் எழுதப்பட்ட 'புண்ணியப் பயணிகள் முன்னேற்றம்' (Pilgrims' Progress) என்ற ஆங்கில நூலின் தமிழ் பெயர்ப்பான 'மோட்சப்பிரயாணம்' என்னும் நூலைத் தழுவிச் செய்யுள் நடையில் எழுதப்பட்டது. இரட்சணிய யாத்திரிகம் பாவத்திலிருந்து விடுதலை பெறவிரும்பிய ஒருவன் இரட்சிப்பினை நோக்கிச் செல்லும் பயணத்தைக் கூறுவது. இந்நூல் முழுவதும் முற்றுருவகமாக அமைக்கப்பட்டதாகும். இதில் இடம்பெற்றுள்ள பெயர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் உருவகங்களே.

இந்நூலினைக் கவிஞர் என்றி ஆல்பிரடு கிருட்டிணபிள்ளை 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்' பாடியுள்ளார். இவரைக் கிறித்தவக் கம்பன் கிருட்டிணபிள்ளை எனக் கூறுகின்றனர். இவர் கி.பி. 1827-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23-ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் கிராமத்தில் சங்கர நாராயணன், இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு மகவாய்ப் பிறந்தார். வைணவ பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த இவர் தம் முப்பதாம் வயதிற்குப் பின்னர்க் கிறித்தவ சமயத்தைத் தழுவினார். இவரது ஆன்ம வேட்கையின் வெளியீடாகக் கிறித்தவ வாழ்வின் அனுபவமாக இரட்சணிய யாத்திரிகம் வெளிவந்துள்ளது. 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் அருள்மொழிக்கிணங்கத் தாம் பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தினைத்தமிழ் மக்கள் அறிந்து பயன் பெற வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் இரட்சணிய யாத்திரிகத்தை எழுதினார். இந்நூலாசிரியர் காலம் கி.பி. 1827-1900 ஆகும்.

இந்நூல் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பருவங்களையுடையது. ஆதிபருவம் பத்தொன்பது படலங்களும், குமார பருவம் நான்கு படலங்களும், நிதான பருவம் பதினொரு படலங்களும், ஆரணிய பருவம் பத்துப் படலங்களும், இரட்சணிய பருவம் மூன்று படலங்களும் கொண்டன. இந்நூல் 3622 பாடல்களையும், 144 இரட்சணிய யாத்திரிகத் தேவாரங்களையும் கொண்டுள்ளது. இந்நூல் கி.பி. 1894–ஆம் ஆண்டில் முழுநூலாகக் கிறித்தவ இலக்கியச் சங்கத்தாரால் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. முதற்பதிப்பின் அச்சுப் படிகளை இந்நூலின் ஆசிரியராகிய எச். ஏ. கிருட்டிணபிள்ளையே திருத்தி வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் இந்நூலின் முழுமையான இரண்டாம் பதிப்பு இன்னும் வெளியிடப்பெறவில்லை. இந்நூல் முழுமைக்கும் இன்னும் உரையெழுதப் பெறவில்லை. கிறித்தவ இலக்கிய சங்கம் இந்நூலை இருபகுதிகளாக 1927–ஆம் ஆண்டிலும் 1934–ஆம் ஆண்டிலும் வெளியிட்டது. அடுத்து இரட்சணிய யாத்திரிகச் சுருக்கம் என 1977–ஆம் ஆண்டில் எழுநூறு பாடல்களைக் கொண்ட தொகுதியை வெளியிட்டுள்ளது. 'உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை' என்னும் அமைப்பு இரட்சணிய யாத்திரிகம் முழுவதற்கும் உரை எழுதி வெளியிடும் முயற்சியினை மேற்கொண்டுள்ளது. ப.ச.ஏ.

**இரட்டிப்பு** என்பது ஒரு சொல்லில் அதன் பொருளொடு தொடர்புடைய மற்றொரு பொருளை உணர்த்துவதற்காக, அச்சொல்லின்ஓர் உருபு இரட்டித்து வருவதாகும். சொற்களில் வேற்றுமை, எண், பால், காலம் போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகள் பல்வேறு முறைகளிலும் சுட்டப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, தமிழில் கள் விகுதி பன்மையைக் குறிக்கும். பெண் (ஒருமை) பெண்கள் (பன்மை). இதனைக் கூட்டும் முறை (Addition) என்றும், கள் விகுதியைக் கூட்டுருபன் (Additive Morpheme) என்றும் கூறுவர். இவ்விதம் குறைப்புமுறை (Substraction), பதிலீட்டு முறை (Suppletion) போன்ற பல முறைகளில் இலக்கணக் கூறுகள் உணர்த்தப்படுகின்றன. இரட்டிப்பு (Reduplication) இவ்விலக்கண முறைகளில் ஒன்றாகும். ஒரே உருபு இரட்டித்து வருதலே இரட்டிப்பு எனப்படும். எடுத்துக் காட்டாக, மலாய் போன்ற மொழிகளில் ஒருமைச் சொல், இரு முறை இரட்டித்துப் பன்மையாகக் காட்டப்படுகிறது. பொகு – புத்தகம், பொகு பொகு – புத்தகங்கள். தமிழில், சுடச்சுடச் சாப்பிட்டான், முகத்தைச் சிவக்கச் சிவக்கக் கழுவினாள், வேக வேகமாக ஓடினான் என்பன போன்ற வாக்கியங்களில் வினையடைகள் அழுத்தம் கொடுக்கும் பொருட்டு இரட்டிக்கப் படுதலைக் காணலாம். இரட்டிப்பு முழுமையாக இரட்டித்தல் (Complete Reduplication) சொல்லின் ஒரு பகுதியை மட்டும் இரட்டித்தல் (Partial Reduplication) என இருவகைப்படும். பொகு (புத்தகம்), பொகு பொகு (புத்தகங்கள்) போன்றவை முழுமையான இரட்டிப்புகள். இங்ஙனம் ஒரு சொல்லை முழுமையாக இரட்டிக்காமல் அதன் ஒரு அசையை மட்டும் இரட்டித்தல் பகுதி இரட்டிப்பு எனப்படும். தகலோகு (Tagalog) மொழியில் 'மட்டும்' என்ற பொருளைத் தருவதற்குச் சொல்லின் முதல் அசையை இரட்டித்தலைக் காணலாம். isa'–ஒன்று, iisa'–ஒன்று மட்டும், dalawa'–இரண்டு, dadalawa'–இரண்டு மட்டும். இம்மொழியில் வினையாலணையும் பெயர்களும் பகுதி இரட்டிப்பின் மூலமே உணர்த்தப்படுகின்றன. Su: lat–எழுத்து Su: Sulat–எழுதுகிறவன்; ga: mit–உபயோகிக்கும் பொருள், ga:ga; mit–உபயோகிக்கிறவன் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். வட அமெரிக்க மொழியான இசுதமெசு அசுடெக் மொழியில் காணப்படும் Kalaki – உள்ளே போதல், Kakalaki – பல தடவை போதல் போன்றவையும் பகுதி இரட்டிப்பேயாகும். தமிழில் சில எண்களில் பன்மையைக் குறிக்கப் பகுதி இரட்டிப்புச் செய்யப்படுகிறது. பத்து பப்பத்து (பல பத்துகள்) ஐந்து – ஐயைந்து (பல ஐந்துகள்). சில சொற்களில் பன்மையைக் குறிக்க முழுமையான இரட்டிப்புச் செய்யப்படுவதுண்டு. ஊர் ஊராகப் போனேன், கடை கடையாகத் தேடினேன் போன்ற வாக்கியங்களில் பல ஊர்களுக்குப் போனேன், பல கடைகளில் தேடினேன் என்ற பன்மைப் பொருள் இரட்டிப்பின் மூலம் வெளிப்படுகிறது.

குறு குறுத்தல், கடுகடுத்தல், மொடுமொடுத்தல் முதலிய இரட்டைக் கிளவியையும், தீத்தீ, அன்றே யன்றே, ஒக்குமே யொக்குமே ஒக்குமே யொக்கும் முதலிய அடுக்கு மொழிகளையும் ஈண்டுக் காட்டுதல் நல்லது. எம்.சு.

**இரட்டைக் கணக்கு முறை**: பொதுப் பயன் பணிநிறுவனங்களான இரயில்வே, மின்சார நிறுவனங்கள், சுரங்கங்கள் போன்றவை தங்களின் இறுதிக் கணக்குகளை வழங்கும் முறைதான் இரட்டைக் கணக்கு முறை (Double Account System) ஆகும். இவை ஒவ்வொன்றும் ஒரு தனிப்பட்ட சட்டத்தால் இயங்குவதால் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் இவை தங்களின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கின்றன. ஆதாய நோக்குள்ள வணிக நிறுவனங்களான தனிவாணிக அமைப்பு, கூட்டுவாணிகம், நிறுவனம் போன்றவை ஆதாய–இழப்புக்கணக்கு, ஆதாய–இழப்புப் பகிர்வுக்

கணக்கு, இறுதிநிலைக் குறிப்பு ஆகியவற்றை உருவாக்குகின்றன. பொதுப்பணி நிறுவனங்களின் நோக்கம் சேவையாகும். இங்கு ஆதாயம், இழப்பு என்ற சொற்கள் இடம்பெறுவது நல்லதன்று. ஆனால், இவற்றிற்கும் வரவு, செலவு, மூலதனச் செலவுகள் நடைமுறைச் செலவுகள், பங்கு முதல், கடன் ஆவணங்கள் போன்றவற்றை எழுத வேண்டிய தேவை உள்ளது. எனவே, இத்தகைய நிறுவனங்கள், வருவாய்க் கணக்கு (Revenue Account), நிகர வருவாய்க் கணக்கு (Net Revenue Account), முதல் கணக்கு (Capital Account), பொது இருப்பு நிலைக் குறிப்பு என்ற நான்கு வயையான கணக்குகளை உருவாக்குகின்றன.

வணிக நிறுவனங்களின் ஆதாய-இழப்புக் கணக்கின் கோட்பாட்டைப் பின்பற்றி வருவாய்க் கணக்கும், ஆதாய-இழப்புப் பகிர்வுக் கணக்கைப் பின்பற்றி நிகர வருவாய்க்கணக்கும் உருவாக்கப்படுகின்றன. இறுதி நிலைக் குறிப்பு மட்டும், முதல் கணக்கு, பொது இருப்பு நிலைக் குறிப்பு என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. எனவேதான் இதற்கு இரட்டைக் கணக்கு முறை என்பது பெயர். பொதுப் பயன்பணி நிறுவனங்களுக்கு மூலதனச் செலவுகளும் மூலதன வருவாய்களும் மிகுதியாக இருப்பதால் அவை முதல் கணக்கில் எழுதப்படுகின்றன. வணிக நிறுவனத்தில் இருப்புநிலைக் குறிப்பில் எழுதப்படும் நிலைச் சொத்துகளும், பங்குமுதல் கடனுறுதிச் சீட்டுகளும் முதல் கணக்கில் எழுதப்படுகின்றன. ஏனையவை பொது இறுதிநிலைக் குறிப்பில் எழுதப்படுகின்றன என்றாலும், முதல் கணக்கு காட்டும் இருப்பும் இங்கு மாற்றி எழுதப்படுகிறது. மின்சார நிறுவனங்களின் முதல் கணக்கின் பற்று-வரவு பக்க மொத்தத் தொகை, பொது இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து -பொறுப்புப் பக்கங்களில் மாற்றி எழுதப்படுகின்றது. முதல் கணக்கை மூலதன வருவாய்-செலவுக் கணக்கு என்று எழுத வேண்டும். இதில் சென்ற ஆண்டு வரை உள்ள செலவு-வரவு, நடப்பாண்டுச் செலவு - வரவு, மொத்தம் என்ற பகுதிகள் எழுதப்பட வேண்டும். போக்குவரவுப் பாதை அமைத்தல், இரயில்வே எந்திரம், மின் உற்பத்தி நிலையம் அமைத்தல் போன்றவை மூலதனச் செலவாகும். நேர்மைப் பங்கு முதல், முன்னுரிமைப் பங்கு முதல், பங்கு முனைமம், கடனுறுதிச் சீட்டுகள் போன்றவை மூலதன வருவாயாகும். எனவே, முதல் கணக்கு மொத்த மூலதனச் செலவையும் மூலதன வருவாயையும் குறிக்கும்.

வருவாய்க் கணக்கில் செலவுகளைப் பற்று எழுத வேண்டும். வருவாய்களை வரவு வைக்க வேண்டும். இக்கணக்கு நிகர ஆதாயத்தையோ நிகர இழப்பையோ காட்டும். இங்குப் பற்று எழுதப்பட்ட தேய்மானம், தேய்மான நிதிக்கு மாற்றப்பட்டுப் பொது இருப்புநிலையில் பொறுப்புப் பக்கம் காட்டப்பட வேண்டும். நிகர வருவாய்க் கணக்கில் வட்டி பெறுதல், செலுத்துதல், சிறப்பு வாடகை செலுத்துதல், காப்பு நிதி, கழிவு நிதி, அரசுக் கொடை பெறுதல் போன்றவற்றை எழுத வேண்டும். இக்கணக்கின் இருப்பைப் பொது இறுதிநிலைக் குறிப்பிற்கு மாற்ற வேண்டும்.

பொது இருப்புநிலைக் குறிப்பு முதல் கணக்கு இருப்பு அல்லது மொத்தத் தொகை, நிகர வருவாய்க் கணக்கு, இருப்பு ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப்பட வேண்டும். பின்னர், நடைமுறைச் சொத்துகளும் பொறுப்புகளும் எழுதப்பட வேண்டும். இதன் இரு பக்க மொத்தத் தொகையும் சமமாக இருக்கவேண்டும்.

இவ்வாறு பொதுப்பயன் பணிநிறுவனங்கள் தங்களின் இறுதிநிலைக் குறிப்பை இரண்டாகப் பிரித்து, மேற்கூறிய இரண்டு கணக்குகளையும் உருவாக்குவதால், இம்முறைக்கு இரட்டைக் கணக்கு முறை என்பது பெயர்.

இரட்டைக் கணக்கு முறையும் இரட்டைப் பதிவு முறையும் ஒன்று எனக் கருதக் கூடாது. இரட்டைக் கணக்கு முறை என்பது சில பொதுப்பயன் பணி நிறுவனங்கள் தங்களின் இறுதிக் கணக்குகளை உருவாக்கும் முறையாகும். ஆனால், இரட்டைப் பதிவு முறை நடைவடிக்கைகளைக் கணக்குப் பதிவேடுகளில் எவ்வாறு எழுத வேண்டும் என்று கூறும் முறையாகும். இரட்டைக் கணக்கு முறையிலும் இருப்புப்பட்டியல் இதன் அடிப்படையில்தான் உருவாக்கப்படுகிறது. எனவே, இரட்டைக் கணக்கு முறைக்கு இரட்டைப் பதிவு முறை தேவை. ஆனால், எல்லா இரட்டைப் பதிவு முறைகளிலும் இரட்டைக் கணக்கு முறை இருக்கும் எனக் கருத வேண்டியதில்லை. இரட்டைப் பதிவு முறையில் ஒற்றைக் கணக்கு (ஓர் இறுதிநிலைக் குறிப்பு), இரட்டைக் கணக்கு (முதல் கணக்கு, பொது இறுதிநிலைக் குறிப்பு) ஆகிய இரண்டு கணக்கு முறைகளையும் எழுதிடலாம்.

சொத்துகளை மறுமதிப்பீடு செய்தல்: ஒரு சொத்து பயனில்லாமற் போனால் வழக்கமாக அதனை ஆதாய-இழப்புக் கணக்கில் எழுதவேண்டும். புதிய சொத்து வாங்கும் செலவை மூலதனச் செலவாகக் கொள்ளவேண்டும். ஆனால், இரட்டைக் கணக்கு முறையில் இக்கோட்பாடு மாறுபடுகிறது. பயனில்லாவிட்டால் பழைய சொத்தின் மதிப்பு அதே அளவில் இருக்கிறது. புதிய சொத்திற்காகச்

செலவழிக்கப்படும் தொகை, முதல் செலவு, நடைமுறைச் செலவு என இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பழைய சொத்தை இன்று வாங்கினால் அல்லது கொள்முதல் செய்தால் எவ்வளவு செலவாகுமோ, அவ்வளவு தொகையை மூலதனச் செலவாகக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, 1960-இல் உரூ. 4,00,000க்குக் கட்டப்பட்ட ஒரு கட்டடம் 1980-இல் உரூ. 14,00,000க்கு மறு மதிப்பீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இருபதாண்டுக் காலத்தில் விலை இரண்டு மடங்காகி விட்டது என்பது மதிப்பிடப்பட்டது. அதாவது அக்கட்டடம் 1980-இல் கட்டப்பட்டால் உரூ. 8,00,000 செலவாகும். எனவே, இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையான உரூ. 14,00,000-இல் உரூ. 8,00,000 கூடுதலாக எழுதப்படவேண்டும். அது நடைமுறைச் செலவாகக் கொள்ள வேண்டும். மொத்த மூலதனச் செலவு உரூ. 10,00,000 ஆகும். அதாவது, 1960-இல் உரூ. 4,00,000-மும் 1980-இல் உரூ. 6,00,000-மும் ஆகும். பழைய எந்திரங்கள் விற்கப்பட்டாலும் அல்லது புதிய சொத்திற்குப் பயன்படுத்தப்பட்டாலும், அவற்றை மறுமதிப்பீட்டுக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். இறுதியில், இக்கணக்கிருப்பைக் காப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

இவ்வாறு, இரட்டைக் கணக்கு முறைப் பொதுப் பயன் பணி நிறுவனங்களில் மட்டும் உருவாக்கப்பட்டு, ஏனைய நிறுவனங்களின் கணக்கு முறைகளிலிருந்து வேறுபட்டுத் தோன்றுகிறது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

**Balasubramaniam**, M., Simplified Accountancy, Rochouse & Sons Private Limited, Madras, 1970.

**Shukla**,M.C., & **Grewal**, T.S., Advanced Account, S. Chand and Company Private Limited, New Delhi, 1974.

**இரட்டைக் காப்பியங்கள்** சங்க காலத்தையடுத்த சங்க மருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும். 'மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' என்று சிலப்பதிகாரத்தின் இறுதியிற் காணப் பெறும் அடிகள் இக்கூற்றுக்கு அரண் செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட மனநிலையில் கவிஞன் உள்ளத்திலிருந்து எழுந்த உணர்வுகளின் எதிரொலியாகச் சங்கப்பாடல்கள் அமைய, நாடும் பெயரும் ஊரும் கூறி, ஒரு கதைத் தலைவன் அல்லது கதைத் தலைவியின் வரலாற்றை நெடுகச் சொல்வதாகக் காப்பியம் அமைகிறது. சுருங்கச்சொன்னால், நிழற்படம் சங்கப் பாடல்களானால் ஒளிப்படம் அதாவது திரைப்படமாகக் காப்பியங்கள் அமைகின்றன எனலாம்.

தமிழில் எழுந்த முதற் காப்பியம் சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க் காப்பியம் எனவும் வழங்கும். இது இயலிசை நாடகப் பொருள் தொடர்நிலைச் செய்யுள்' என்றும், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றும் வழங்கப் பெறும். மேலும், இக்காப்பியத்தின்கண் பல கூத்துகளும், அவற்றிற்குரிய இசைப்பாடல்களும் இடம் பெறுதலால் இதற்கு 'நாடகக் காப்பியம்' என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியனார் குறிப்பிடும் உரைவகை நான்கனுள் 'பாவின்றெழுந்த கிளவி' என்னும் பிரிவில் இதனை இளம்பூரணர் அடக்குவர். நச்சினார்க்கினியர் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் பிரிவில் அடக்குவர். ஐம்பெருங்காப்பியங்களுள் காலத்தால் முற்பட்டதான சிலப்பதிகாரத்தினை 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' என்று பாராட்டுகிறார் தேசியகவி பாரதியார்.

சிலப்பதிகாரம் மூன்று உண்மைகளை உலகிற்கு உணர்த்துவதற்காக எழுந்தது என்பது அதன் பதிகம் குறிப்பிடுகின்ற செய்தியாகும். அரசியலில் தவறு செய்தவர்க்கு அறக்கடவுளே எமனாக நின்று வருத்தும் என்பதும், கணவனே கண்கண்ட தெய்வமென எண்ணி வாழும் கற்புடை மகளிரை உயர்ந்த சான்றோர் போற்றுவர் என்பதும், ஊழ்வினை தவறாது தன் பங்கை ஒருவர்பால் செலுத்தும் என்பதும் இக்காப்பியம் சிறப்பாக எடுத்துரைக்கும் மூன்று உண்மைகளாகும். செங்கோன்மையிலிருந்து வழுவிய பாண்டிய மன்னன் தானே தன் முடிவைத் தேடிக் கொண்டமையும், அறனற்ற வழியில் வாழ்ந்த தன் கணவன் கோவலனைப் பொறுத்துக் கடுந்துயர் உழந்த கண்ணகி இறுதியில் சான்றோர் போற்றும் தெய்வ நிலை அடைந்தமையும், முன்னைச் செய்த வினை மூண்டு வந்து கோவலன், கண்ணகி, மாதவி, பாண்டியன், கோப்பெருந்தேவி முதலானோர் வாழ்க்கையிற் படர்ந்தமையும் இக்காப்பியத்தால் விளக்கமுறுகின்றன.

இந்நூல் மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. முதலாவது புகார்க்காண்டம் தலைவி கண்ணகி பிறந்த புகார் நகர நிகழ்ச்சிகளைப் பேசுகிறது. இக்காண்டம் பத்துக் காதைகள் கொண்டது. இரண்டாவது மதுரைக் காண்டம் பதின்மூன்று காதைகள் கொண்டது; மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது. இறுதிக் காண்டமான வஞ்சிக் காண்டம் ஏழு காதைகள் கொண்டது. சேரர் தலைநகர் வஞ்சி மாநகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளை விளக்குகிறது.

கண்ணகியை மணந்த கோவலன் ஆடல் பாடல் அழகு காரணமாக அவளைத் துறந்து, மாதவி என்னும் ஆடல் அழகியைச் சார்ந்து, பின் கருத்து மாறுபட்டால் அவளை நீத்துக் கண்ணகியை அடைந்து, பொருள் ஈட்ட மதுரைக்கு அவளொடும் போந்து, அங்கு அரண்மனைப் பொற்கொல்லன் சூழ்ச்சியால் பாண்டியன் ஆணைவழிக் கொல்லப் பெற்றான். அதனையறிந்த கண்ணகி சினம் மிகுந்து, பாண்டியன் அவைக்களம் சென்று வழக்காடித் தன் கணவன் கள்வன் அல்லன் என் மெய்ப்பித்தாள். அதனால், பாண்டியன் அரியாசனத்திலிருந்து வீழ்ந்து இறக்க, தன் உயிர் கொண்டு அவனுயிர் தேடினவள் போல் கோப்பெருந்தேவியும் இறந்துபட, கண்ணகி அரண்மனையினின்றும் நீங்கி, மதுரையை எரிக்க அங்கியங் கடவுளுக்கு ஆணை பிறப்பித்தாள். மதுரை தீப்பட்ட பின் சேரநாட்டின் செங்குன்றம் போந்து, குன்றக் குறவர் காண வேங்கைமரத்து விரிநிழலின் கீழிருந்து வானவர் பூமாரி பொழியக் கணவனுடன் விண்ணகம் சென்றாள். இக்காட்சிகளைச் சிலப்பதிகாரம் விரித்துரைக்கிறது. கண்ணகிக்குக் கோயில் எடுக்க வேண்டி, அவளுக்குச் சிலை வடிக்க இமய மலையிற் கல் பெற்று, அதனைக் கங்கையாற்றில் தூய்மை செய்து, வஞ்சி மாநகரில் ஆலயம் எழுப்பிய செய்தியுடன் சிலப்பதிகாரம் முற்றுப் பெறுகிறது.

துறவறத்தில் நின்று சிறப்புப் பெற்ற கவுந்தியடிகள் என்னும் சமண சமயத் துறவியின் வாய்மொழி வழியாக நூலாசிரியர் இளங்கோவடிகள் 'கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்' (சிலம்பு: 15;137-144) என்று இல்லறத்தில் தலைசிறந்து நின்ற கண்ணகியைப் பாராட்டியிருப்பது, பெண்மை போற்றும் காப்பியம் சிலப்பதிகாரம் என்னும் கருத்தினை உறுதி செய்கிறது.

சிலப்பதிகாரத்தில் மூவேந்தர் நாடுகளும் நகரங்களும் ஆறுகளும் ஒப்பப் போற்றப் பெற்றுள்ளன. இளங்கோவடிகள் சேர அரச மரபினராயினும் எல்லோரையும் ஒப்பக் கூறும் நேர்மை, சமயப் பொறை, நுண்கலைகளை அறிந்திருந்த மாட்சி, கலைச் செய்திகளைக் கவினுறக் கூறும் திறம், இயற்கையின் இனிய பெற்றியினை விளக்கும் நுட்பம் முதலான பல சிறப்புகளை ஒருங்கே பெற்றவராகத் திகழ்கிறார்.

பாத்திரப் படைப்பில் இவர் தன்னிகரற்று விளங்கும் திறனைக் கண்ணகி மாதவி பாத்திரப் படைப்புகளிற் காணலாம். வன்னெஞ்சமும் கொடு மனமும் கொண்ட பொற்கொல்லனைப் - பொன்வினைக் கொல்லனைப் பொய்வினைக் கொல்லன்' என்று புகல்வதோடு நிறுத்தியிருப்பதிலிருந்து, இவர்தம் நன்மனம் நன்கு புலனாகிறது. இவர் கவுந்தியடிகள் என்னும் பாத்திரத்தைச் சமணத் துறவியாகப் படைத்து, அவர் வாயிலாகச் சமண சமயக் கருத்துகளைத் தம் காப்பியத்துள் விரிவாகத் தெளித்திருப்பது கொண்டு, இவரைச் சமணர் எனக் கூறுவர் சிலர். வஞ்சிக் காண்டத்துள், செங்குட்டுவன் வடபுலம் செல்லுங்கால் சிவசின்னங்கள் அணிந்திருந்ததாகக் குறிப்பிடுவதால், இவரைச் சைவர் எனச் சிலரும் குறிப்பிடுவர். இனி இக்காப்பியத்துள் இடம் பெறும் குன்றக் குரவையில் முருகவேளைப் பற்றியும், ஆய்ச்சியர் குரவையில் திருமாலைப் பற்றியும் வியந்து பாராட்டுவதால் இவரை முருக பக்தர் எனவும், வைணவர் எனவும் முறையே கூறுவாருமுளர். இவற்றை நடுநின்று நோக்கின், இளங்கோவடிகள் இன்ன சமயத்தைத் தான் சேர்ந்தவர் என அறுதியிட்டுக் கூறும் அசைக்க முடியாத ஆதாரம் இல்லை எனவே கூறலாம். ஆனால், இவர் இறைப்பற்று மிக்கவர் என்பதும், இவர் காலத்துச் சமயங்கள் அனைத்திலும் காழ்ப்பின்றிப் பரந்த நிலையில் உளந்தோய்ந்தவர் என்பதும் தெளிவாகப் பெறப்படும்.

நானில வருணனையும், நானிலத்திலும் வழங்கிய நாட்டுப் பாடல்களும், ஆடல்களும் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முறையே கடற்கரைப் பாட்டு, பாலைப்பாட்டு, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டாக மலர்ந்திருக்கக் காணலாம். அரங்கேற்று காதை அக்கால இசை, கூத்துச் சிறப்பினை நுவலும்.

சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரை உளது. அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரை நுண்மாண் நுழைபுலம் மிக்கது. ந.மு. வேங்கடசாமி நாட்டார் வரைந்த உரை அறிவார்ந்த உரை. சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டெனக் கொள்வது தக்கதாகும். இலங்கைக் கயவாகு வேந்தன், நூற்றுவர் கன்னர் முதலானோர் சுட்டப் பெறுவது இக்கொள்கைக்கு அரண் சேர்ப்பதாக உள்ளது.

இரட்டைக் காப்பியத்தில் மற்றொரு நூலான மணிமேகலை சிலப்பதிகாரக் கதைத் தொடர்ச்சியே எனலாம். புகார் நகரப் பெரு வணிகன் மாசாத்துவானின் மகனாம் கோவலனுக்கும், ஆடல் பாடல் அழகு ஆகிய மூன்றினுள் ஒன்றும் குறைவு படாது அமைந்த நங்கை மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. இவள் பிறந்தபொழுது அணிமேகலையார் ஆயிரவர்க்குக் கோவலன் தன் செங்கையின் பொன் வாரி வழங்கினான் எனச் சிலப்பதிகாரம் பேசுகிறது. மேலும், தன் முன்னோன் ஒருவன் மரக்கலமேறி வணிகஞ்செய்யச் சென்றபோது அது உடைந்து

கவிழ்ந்து ஒரு தீவைச் சார, அப்போது காப்பாற்றிய மணிமேகலா தெய்வத்தின் நினைவாகக் கோவலன் தன் மகளுக்கு மணிமேகலை என்னும் பெயர் வைத்தான்.

கோவலன் பொற்கொல்லன் சூழ்ச்சியால் மதுரையிற் பாண்டிய வேந்தனாற் கொலையுண்ணப்பட்ட நிலையில், அதனைக் கேள்வியுற்ற மாதவி, புத்த சமயஞ் சார்ந்து துறவியானாள். மணிமேகலையின் அழகு கண்டு உதயகுமரன் என்னும் அரசிளங்குமரன் அவள்மேல் காதல் கொள்கிறான். அவளை உவவனத்திடைக் காண வருகிறான். தோழி சுதமதியுடன் மலர் கொய்ய மலர்வனம் சென்ற மணிமேகலை, காம பரவசனாய்த் தன்னை நாடி வரும் உதயகுமரனிடமிருந்து தப்பப் பளிக்கறைக்குள் புகுகிறாள். மாதவியின் தாய் சித்திராபதியின் தூண்டுதலால் மணிமேகலையைப் பெண்டாள நினைந்து வரும் உதயகுமரன், தன் எண்ணம் ஈடேறாமற் போனதால், அவளை இழித்துரைத்துச் சென்று விடுகின்றான். உதயகுமரன்பால் சென்ற தன் உள்ளத்தை எண்ணி, 'இதுவோ அன்னாய் காமத்தியற்கை, இதுவே யாயின் கெடுக தன்திறம்' என்று மணிமேகலை குறிப்பிடும் சொற்கள் உலகியலை ஒட்டி அமைந்துள்ளன. மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவம் என்னும் தீவிற் கொண்டு சேர்க்கிறது. ஆங்கு, மணிமேகலை தன் பழம்பிறப்புச்செய்தியினை அறிகிறாள். எல்லார்க்கும் உணவளிக்கும் அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைப் பெற்று வந்து, சோணாட்டின் தலைநகரில் பசி என்று வந்தவர் புசிக்க உணவளிக்கிறாள். காயசண்டிகை வடிவந்தாங்கிய மணிமேகலையை உதயகுமரன் மீண்டும் தொடர்கிறான். உண்மையறியாமல் காயசண்டிகையின் கணவன், உதயகுமரனை வாளால் வெட்டி வீழ்த்துகிறான். இதனையறிந்த அரசமாதேவி மணிமேகலையைச் சிறைப்படுத்தி அவளுக்குத் தீங்கு செய்ய முற்படுகின்றாள். மனிமேகலை அறவுரை கூறி அவளைத் தெருட்டுகின்றாள். இறுதியில் பல அறங்களைப் பாங்குடன் ஆற்றிய மணிமேகலை, காஞ்சிமாநகர் சென்று, ஆங்கே பல சமயவாதிகளோடும் தருக்கவாதம் நிகழ்த்தி அவர்களையெல்லாம் வெல்லுகின்றாள். இவ்வாறு மணிமேகலைக் காப்பியக் கதை முடிகிறது.

இந்நூலாசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இப்பெயரிலிருந்து இவர் சீத்தலை என்னும் ஊரினர் என்பதும், மதுரையில் கூல (தானிய) வாணிகம் செய்தவர் என்பதும் பெறப்படுகின்றன. இளங்கோவடிகளின் காலத்தவராக இவர் கருதப் பெறுகிறார். ஆயினும், ஆய்வாளர் பலர் மணிமேகலையின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டென்று கருதுகின்றனர்.

இளங்கோவடிகளிடம் கண்ட சமயப் பொறையினைச் சாத்தனாரிடம் காண இயலவில்லை. இவர் புத்த சமயத்தின்பால் பேரீடுபாடு கொண்டவராகத் திகழ்கின்றார். அச்சமயத்தைப் புகழ்ந்து பாராட்டும் இவர், பிற சமயத்தவரைத் தாக்கிக் கூறியுள்ளார். இவர் இளமை நிலையாமை, உலகம் நிலையாமை முதலிய கருத்துகளை மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். பல்வகை அறங்களையும் தம் காப்பியத்துள் பாங்குற மொழியும் இவர், இயற்கையின் இனிய காட்சிகளில் தம் நெஞ்சைப் பறிகொடுத்து அவற்றை அழகிய சொல்லோவியங்களாகக் காட்டியுள்ளார்.

இவ்வாறாகச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும், மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரும் சில பண்புகளில் ஒத்தும் ஒவ்வாதும் இருந்தாலும் கண்ணகி, மணிமேகலை ஆகியோரைக் கதைத் தலைவியராக்கிப் பெண்மை போற்றி முப்பது காதைகளில், தாம் நம்பித் தெளிந்த சமயவுண்மைகளைப் புலப்படுத்தியுள்ளனர். இரட்டைக் காப்பியங்கள் எனக் குறிப்பிட்டுப் போற்றுமளவிற்கு இவ்விரு காப்பியங்களும் தமிழ்க் காப்பியவுலகில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. சி.பா.

**இரட்டைக் குடியுரிமை:** குடி உரிமை எனப்படுவது ஒரு சுதந்திரக் குடியாட்சி நாட்டில் குடிமகனுக்கு வழங்கப்படும் உரிமைகளும் சலுகைகளும் ஆகும். தனி மனித சுதந்திரம் அல்லது உரிமை இரண்டு வகைப்படும். முதலாவது தனி மனிதன் தன் தனித்தன்மையைத் தன் எண்ணங்களிலும், தன் சொல்லிலும், செயலிலும் வெளிப்படுத்துவதற்குரிய உரிமைகள், அல்லது அரசும் தனி நிறுவனங்களும், தனி மனிதர்கள் போன்றோர்களால் தனிமனிதன் மீது கட்டுப்பாடுகள் விதிக்காமை ஆகும். இரண்டாவது உரிமைகள் எனப்படுபவை, எல்லோருக்கும் சமமாக அளிக்கப்படுவதற்கு ஏதுவாக உள்ள சட்டங்களும், சிறப்பாகக் குற்றவியல் சட்டமும், பிறரை இழிவு படுத்துவதற்கு எதிரான சட்டம்போன்று அரசால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் ஆகும்.

உரிமை என்பது தளைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை ஏதும் இல்லாத நிலை அன்று. ஆனால் அறிவார்ந்த காரணத்துடன் கூடிய கட்டுப்பாடுகளும் உரிமைகளைக் குறிக்கும். தனியார் உரிமை என்பது மூன்று வகைப்படும்.

1. தனி உரிமை (Private rights) எனப்படுவது சுய முயற்சியினால் உருவாக்கப்படும் அனைத்துமுழு உரிமையையும் குறிக்கும். எடுத்துக்காட்டு: சுய பாதுகாப்பு, மத சுதந்திரம்.

சில கூட்டாட்சி நாடுகளில் (Federations) இந்தக் குடியுரிமை என்பது இரண்டாக இருக்கிறது. பல சிறிய அரசுகள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சி அமைக்கும் போது அந்தக் கூட்டாட்சி நாட்டின் குடிமக்கள் இரண்டு குடியுரிமைகளைப் பெறுகிறார்கள்; ஒன்று, எந்த மாநிலத்தில் வாழ்கிறார்களோ, அந்த மாநிலத்தின் குடி உரிமை; மற்றொன்று கூட்டாட்சி அரசின் குடி உரிமை. ஆனால், சில கூட்டாட்சி அமைப்பில் எடுத்துக்காட்டாக இந்தியாவில், ஒற்றை வகைக் குடி உரிமை (Single Citizenship rights) அதாவது இந்தியக் குடிமகன் என்ற உரிமைமட்டுமே அளிக்கப்படுகிறது.முன்னரே பிரதேச அல்லது மாநில உணர்ச்சி மேலோங்கி நிற்கும் போது இந்த இரட்டைக் குடியுரிமை (Double Citizenship rights)குறுகிய மனப்போக்கை வளர்த்து அதி தீவிரமாக்கி, பிரிவினைக்கு வழிகோலி விடும். நான் ஒரு இந்தியக் குடிமகன் என்ற எண்ணம் மட்டுமே மோலோங்கி நிற்குமானால் அவ்வுணர்வு ஒன்றுபட்ட வலுவான மைய அரசுடைய கூட்டாட்சிக்கு வழிகோலும். அப்படி இல்லாவிடில் நாட்டைச் சீர்குலைக்கக் கூடிய பிரதேச உணர்ச்சியே மேலோங்கி நிற்கும்.

2. அரசியல் உரிமை (அதாவது அரசியலமைப்பு அளித்த உரிமை) என்பது தனிமனிதன் அரசின் செயல்களில் பங்கேற்கும் உரிமை ஆகும். அது வாக்குரிமை, தேர்தலில் வேட்பாளராக நிற்க உரிமை, பேச்சுரிமை, கூட்டம் கூடுவதற்கு உரிமை, மற்றும் எழுதியதை வெளியிட உரிமை ஆகியவற்றையும் குறிக்கும்.

3. பொருளாதார உரிமை என்பது, தன்னைக் காத்துக் கொள்ளவும், ஒருவன் உணவை ஈட்டுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும், உழைக்கவும், ஒரு குறிப்பிட்ட மணி நேரமே உழைக்கவும், சரியான ஊதியம் ஈட்டவும், வேலை செய்வதில் தன்னைத்தானே முறைப்படுத்திக் கொள்ளவும் உள்ள உரிமைகளைக் குறிக்கும்.

எத்தகைய சுதந்திரம் விரும்பத் தகுந்தது என்பதை இலாசுகியின் ஆராய்வு தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால், அவர் குறிப்பிட்டுள்ள உரிமைகள் அனைத்துமே ஒட்டுமொத்தமாக அரசுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு வழங்க ஒப்புக் கொண்டு, அனைத்துக் குடிமக்களுக்கும் நடுநிலைமை தவறாமல் வழங்கப்பட்ட உரிமைகளே சமூக உரிமைகள் எனப்படும்.

இரட்டைக்குடியுரிமை மிக அறிவுடைய உயர் கல்வி பெற்ற, பரந்த மனப்போக்குக் கொண்ட மக்களிடையே வழங்கப்பெற்றால், கூட்டாட்சி சிறப்புறும். அது தனித்தன்மையுடன் விளங்கும். அது நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உதவும். குறுகிய மனப்போக்கு, அற்ப ஆசைகள் முதலியவை அற்றுப்போகும் மேலான பரந்த கண்ணோட்டம், அறிவு முதலியவை பெருகிப்பரவும். அது நாட்டின் சீரான வளர்ச்சிக்கும் வழிகோலும். எனவேதான் சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளில் இவை வழங்கப்பட்டு வெற்றியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அ.சி.

## இரட்டைக்கை - இணையாவினைக்கை:

ஆடல் அபிநயங்கள் கைகளாலும் முகக்குறிப்புகளாலும் உணர்த்தப்படுகின்றன. இவற்றுள் கைகளால் உணர்த்தப்படும் அபிநயங்கள் இரட்டைக்கை அபிநயம், இணையாவினைக்கை அபிநயம் என இருவகைப்படும். இரட்டைக்கை அபிநயம் என்பது இரு கைகளாலும் செய்யப்படும் அபிநயம் ஆகும். இணையாவினைக்கை அபிநயம் என்பது, ஒரே கையினால் செய்யப்படும் அபிநயத்தையும் குறிக்கின்றது.




உத்சங்கம்




சுவசுதிகம்

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் நூலில் இந்த அபிநயங்கள் பற்றிய விளக்கம் காணப்படுகிறது. இந்நூலுள் பதினைந்து இரட்டைக்கை அபிநயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, சுவத்திகம், கடகாவருத்தம், உத்சங்கம், நிடதம், நீடோளம், புடப்புட்பம், மகரம், யானைக்கொம்பு, வக்கிரத்தம், வருத்தம், கொற்கை, புத்திரிகம் என்பன. இவை எழிற்கை, தொழிற்கை எனஇருவகைப்படும். தாளத்திற்கும் காலிற்கும் ஏற்ப இயற்றி அழகுபெறக் காட்டும் கை எழிற்கை எனப்படும். அபிநயத்தின் பொருள்படத் தொழிற்படுத்திக் காட்டும் கை தொழிற்கை எனப் படும்.



கடகாவருத்தம்



காங்கூலம்

இரட்டைக்கைகளைப் பின்வருமாறு விளக்கலாம்: இரண்டு கைகளும் பதாகையாக அகமொன்றுவது அஞ்சலி எனப்படும். இரண்டு கைகளும் குடங்கைகளாக வந்து ஒன்றுவது புட்பாஞ்சலி ஆகும். இருகைகளும் பதும கோசிகமாகக் கூட்டுவது பதுமாஞ்சலி ஆகும். பதாகை இரண்டையும் மணிக்கட்டிலேற்றி வைப்பது சுவத்திகம் (குறுக்கீடு) ஆகும். இரண்டு கையும் கடகமாக மணிக்கட்டுக்கு ஏற்ப இயைந்து நிற்பது கடகாவருத்தம் ஆகும். ஒரு கை பிறைக்கையாகக் கொண்டு ஒருகை அராளமாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றி வைப்பது உத்சங்கம் ஆகும். முட்டியாக இரண்டு கையும் சமம் செய்வது நிடதம் ஆகும். இரண்டு கைகளும் பதாகையாக்கி அகம் புறமொன்றி முன் தாழ்ந்து நிற்பது, நீடோளம் அல்லது ஊஞ்சல் ஆகும். குடங்கை இரண்டும் தம்மில் பக்கம் காட்டி நிற்பது புடப்புட்பம் அல்லது புட்பபுடம் ஆகும். கபோதம் இரண்டு கைகளும் அகம் புறம் ஒன்றாக வைப்பது மகரம் ஆகும். அபய அத்தம் இரு கைகளையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது வக்கிரத்தம் அல்லது வக்கிரம் ஆகும். முகுளக்கையில் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது கபோதம் (புறா) ஆகும். இருகைகளையும் விரல்கள் சேர்த்து நேர் எதிராக வைப்பது யானைக் கொம்பு (குஞ்சரக்கை) ஆகும்.



சுகதுண்டம்

ஒற்றைக்கை அபிநயம், இணையா வினைக்கை எனவும் பண்டைத்தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சமரபு, 33 ஒற்றைக்கை அபிநயங்களைக் குறிப்பிட்டுள்ளது. ஒற்றைக்கை அபிநயம் பிண்டி எனவும் குறிப்பிடப்படும். ஒற்றைக்கை அபிநயம் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை என நான்கு வகைப்படும். முட்டி, சிகரம், அலர்பதுமம், சந்தம், சிலந்தி, சூசி, சதுரம், பதாகை, திரிபதாகை, முகுளம் ஆகிய பத்தும் ஆண்கைகள் ஆகும். நான்கு விரல்களையும் உள்ளங்கையில் வளைத்து அதன் மேல் பெருவிரலை வைத்தல் முட்டி எனப்

படும். முட்டிக் கையில் பெருவிரலை உயர நீட்டல் சிகரம் ஆகும். ஐந்து விரல்களும் வளைத்து நீட்டி வேறு வேறாகப் பிடித்தல் அலர்பதுமம் ஆகும். பதுமகோசக்கையில் ஐந்து விரல்களையும் பிரித்துப் பரப்பிக்காட்டல் சந்தம் அல்லது சந்தஞ்சம் (கிடுக்கி) ஆகும். சிலந்திப் பூச்சி போன்று கை கவிழ்த்து விரல்களை நடுக்கிக் காட்டல் சிலந்தி ஆகும். கடகாமுகக் கையில் சுட்டுவிரலை நீட்டல் சூசி(ஊசி) ஆகும். பெருவிரலை வளைத்து அணிவிரலின் அடியில் கூட்டி, அணிவிரல் நடுவிரல் சுட்டுவிரல் ஆகிய மூன்றையும் சேர்த்துச் சிறுவிரலைப் பின்னே நீட்டல் சதுரம் ஆகும். நான்கு விரல்களையும் நீட்டிப் பெருவிரலை வளைத்தல் பதாகை (கொடி) ஆகும். பதாகைக்கையில் அணிவிரலை வளைத்தல் திரிபதாகை (முக்கொடி) ஆகும். முகிழாகிய பதுமம், முகுளம் அல்லது மொட்டு ஆகும்.

கடகம், சுகதுண்டம், காங்கூலம், உன்னம், அராளம், பிறைக்கை, அன்னபக்கம், மிருகசிரம் ஆகிய எட்டும் பெண்கைகள் ஆகும். பெருவிரல் நுனியும் சுட்டு விரல் நுனியும் ஒன்று சேரவளைத்து மற்ற மூன்று விரல்களும் வரிசையாக ஒன்றைவிட மற்றது சற்றே மிகுதியாக நிமிர்ந்திருப்பது கடகம் ஆகும். அராளக் கையில் அணிவிரலை வளைத்தல், சுகதுண்டம் (கிளிமூக்கு) ஆகும். பதுமகோசத்தின் முன் அணிவிரலை வளைத்தல் காங்கூலம் ஆகும். காங்கூலம் குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம், விரிகாங்கூலம் என மூன்று வகைப்படும். சிறுவிரலும் பெருவிரலும் தம்முள் கூட, மற்ற மூன்று விரல்களும் விட்டு நிமிர்வது உன்னம் ஆகும். உன்னம் என்பது குறட்டுக்கும் அன்னப்புள்ளுக்கும் பெயர். பதாகைக் கையில் சுட்டு விரலை வளைத்தல் அராளம் ஆகும். பதாகைக் கையில் பெருவிரலை நீட்டுதல் பிறைக்கை ஆகும். சருப்பச் சிரக்கையில் சிறுவிரலை நீட்டுதல் அன்னபக்கம் (அன்னத்தின் சிறகு) ஆகும். பெருவிரலும் சிறுவிரலுந் தவிர மற்ற மூன்று விரல்களும் ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்பது மிருகசிரம் (மான்தலை) ஆகும்.

சருப்பச்சிரம், வண்டு, முகுளம், கபித்தம், கத்தரிகை, கோசம் ஆகிய ஆறும் அலிக்கை ஆகும். பதாகையில் விரல்களை வளைத்தால் சருப்பச் சிரம் (பாம்பின்தலை) ஆகும். பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்துசுட்டுவிரலும்நடுவிரலும்நெகிழ வளைந்துநிற்பது வண்டு ஆகும். விரல்நுனி ஐந்தும் குவிந்து உயர்ந்து நிற்பது முகுளம் ஆகும். இது முகிழ்க்கை அல்லது மொட்டு எனவும் வழங்கப்பெறும். சுட்டுவிரலும் சிறுவிரலும் நிமிர்ந்திருக்க மற்ற மூன்று விரல்களும் வளைந்து ஒன்று சேர்ந்திருப்பது கபித்தம் (விளாம்பழம்) ஆகும். திரிபதாகையின் வளைந்த அணிவிரல் புறத்ததாகிய நடுவிரலைச் சுட்டு விரலோடு பொருந்த நிமிர்ப்பது கத்தரிகை ஆகும். அங்குலிகளைப் பரப்பி, ஐவிரல்களின் நுனிகளை வளைத்திருப்பது கோசம் ஆகும். இது பதுமகோசம் அல்லது பதுமகோசிகம் என்றும் குறிப்பிடப்படும்.

கமரம், வலம்புரி, சங்கு, உன்னம், பிண்டி, இலதை, கபோதம், தூமம். பிரமரம் ஆகிய ஒன்பதும் பொதுக்கை எனப்படும். பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்து மற்ற மூன்று விரல்களும் தம்முள் ஒன்றித் தனித்து நிற்பது மகரம் ஆகும். இது இரட்டைக்கை முறையிலும் வரும்.சிறுவிரலும் பெருவிரலும்நிமிர்ந்து சுட்டுவிரலின்அகம்வளைந்து,மற்றஇரண்டும்நிமிர்ந்து இறைஞ்சி நிற்பது வலம்புரி எனப்படும். பெண்கை வகையில் கூறப்பட்ட உன்னமே பொதுக்கையிலும் வரும். சுட்டு விரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் நான்கும் ஒன்றுசேர்ந்து வளைந்திருக்கப் பெருவிரல் நுனி சுட்டுவிரலைத் தொடுதல் பிண்டி எனப்படும். நடுவிரலும் சுட்டுவிரலும் கூடி நிமிரப் பெருவிரல் அவற்றின் கீழ் வளைந்திருக்க, மற்ற இரண்டு விரல்களும் பின்னே நிமிர்ந்நு நிற்பது இலதை ஆகும். பதாகையில் பெருவிரல் நிமிர்ந்திருப்பது கபோதம் ஆகும். நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதி வளைந்து நிற்பது தூமம் எனப்படும். அணிவிரலும் நடுவிரலும் பொருந்தி வலம் சாய்ந்திருக்கப் பெருவிரல் நடுவிரலினுள்ளே சேரச் சுட்டுவிரலும் சிறுவிரலும் பின்னே வளைந்து நிற்பது பிரமரம் ஆகும்.

நாட்டிய சாத்திரம் ஆங்கிக அபிநயம் என்னும் பகுதியில் கையசைவுகள் அடங்குவன என்று குறிப்பிடுகிறது. ஆங்கிக அபிநயம் பொதுவாக உடல் அசைவுகளைக் குறிப்பிடும். இவற்றுள் நிருத்த அத்தங்கள் கைகளின் நிலைகளை மட்டும் குறிப்பனவாகும். நிருத்த அத்தங்கள், எப்பொருளையும் உணர்த்தாமல் ஆடலுக்கு அழகு சேர்ப்பதற்காக அடவு போன்று, ஆடல் கலைஞர்களால் செய்யப்படுவனவாகும்.

அபிநய தருப்பணம் என்னும் ஆடல் நூல், இத்தகைய நிருத்த அத்தங்களின் வகைகளை 'விநியோகம்' என்று குறிப்பிடுகிறது. நிருத்த அத்தங்களைப் பற்றிய விளக்கங்களை விட்டுணு தருமோத்தர புராணம், சங்கீதரத்தினாகரம், மானசோல்லாசம், நிருத்திய ரத்தின கோசம். சங்கீதோபநிசதசாரோத்தாரம், அத்தமுத்தாவளிபோன்ற நூல்களிலும் காணலாம். ஒற்றைக்கை இரட்டைக்கை அபிநயங்களின் எண்ணிக்கை, இந்நூல்களில் மாறுபட்டுக் காணப்படுகின்றது. நிருத்த அத்தங்களின் செயல்முறையும் நூலுக்கு நூல் முரண்பட்டுக் காணப்படுகிறது. நாட்

டிய சாத்திரம் 24 ஒற்றைக்கை அபிநயங்களையும் 13 இரட்டைக்கை அபிநயங்களையும் 27 நிருத்தக் கைகளையும் குறிப்பிடுகின்றது. அபிநயதருப்பணம்,28 ஒற்றைக்கை அபிநயங்களையும் 23 இரட்டைக் கை அபிநயங்களையும் 13 நிருத்தக் கைகளையும் குறிப் பிடுகின்றது. நாட்டிய சாத்திரம், பதாகையின் பொருள்களாக 35 'விநியோகங்களை'க் குறிப்பிடுகி றது. அபிநயதருப்பணம், 40 'விநியோகங்களை'க் குறிப்பிடுகின்றது.

சதிர் நாட்டிய முறை செம்மையுறத் தென்னிந்தியாவில் தஞ்சை சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேல் ஆகிய நால்வரால் உருப்பெற்ற காலத்திலிருந்து, ஆடலாசிரியர்கள் அபிநய தருப் பணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையினையே பின்பற்றி வந்துள்ளனர். நிருத்தக்கைகளின் பொருளை அவையினருக்குத் தெரிவிப்பதற்குப் பின் வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அபிநயதருப்பணம் கூறுகின்றது. ஆடற் கலைஞர்கள் முகக் குறிப்பினால் மனவெழுச்சிகளை உணர்த்து தலும் கண்வழியே தம் மெய் நிலையை உணர்த்து தலும் கால் வழித் தாளம் உணர்த்துதலும் ஆகிய பல்வேறு ஆடற்பகுதிகளை ஒருங்கிணைத்தல் இன்றி யமையாததாகும். கைகள் எவ்வழி அவ்வழிக் கண் களும், கண்கள் எவ்வழி அவ்வழி உளமும், உளம் எவ்வழி அவ்வழி உளநிலையும், உளநிலை எவ்வழி அவ்வழிப் பாவனையும் செல்வதே சிறந்த அபிநய முறையாகும். கை அபிநயங்கள் பல பொருள்களை உணர்த்துகின்றன. எடுத்துக்காட்டாக,பிறை நிலவுக் கை (அருத்தசந்திரஅத்தம்)அபிநயம் செய்தவுடன் அலர்ந்த தாமரைக் கை(ஆலபதுமம்) அபிநயம் காட்டு வதன் மூலம் ஆடற்கலைஞர் ஒரு சில வினாடிகளில் மதியின் பதினான்கு நிலைகளையும் உணர்த்த முடி யும். கைகள், தாமரை மலரிலிருந்து முழுநிலவு வரை யில் அபிநயம் செய்கின்றன. விரல்களில் மலர் பூக் கிறது. விரல் நுனிகளிலிருந்து புள்ளினம் பறக்கின் றது. கவிஞனுக்குச் சொற்கள் கட்டுப்பட்டு நிற் பதைப்போல் ஆடற்கலைஞரின் கைகளில் அன்பு, காதல், வெறுப்பு, பொருள்களிடையே காணப்படும் பல்வேறு உறவுகள் ஆகிய பல செய்திகள் கட்டுப் பட்டுத் துரிதமாக உணர்த்தப்படவேண்டும்.

இரு கைகளையும் பதாகைநிலையில் ஒன்று சேர்த்தல் அஞ்சலி எனப்படுகிறது. அஞ்சலி தலைக்கு மேலும் முகத்திற்கு நேராகவும், நெஞ்சுக்கு நேராக வும் வெவ்வேறு சூழமைவுகளில் செய்யப்படுகிறது. அபிநய தருப்பணத்தில் இந்திரன், வருணன், வாயு, இலக்குமி, சரசுவதி, பார்வதி, மன்மதன், இயமன், சிவன், விட்டுணு, பிரமன் போன்ற தேவர்களையும் விட்டுணுவின் பத்து அவதாரங்களையும் அங்காரகன், குரு, புதன், சனி, இராகு, கேது போன்ற கோள் களையும் உணர்த்துவதற்குத் தனித்தனி அத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தாய், தந்தை, மாமன், மாமி மைத்துனன், மைத்துனி, கொழுநன், கொழுந்தி, மருமகன், மருமகள் போன்ற உறவு முறைகளை உணர்த்துவதற்கும் தனித்தனி அத்தங்கள் கூறப் பட்டுள்ளன. கையசைவுகளுக்கு (அத்த முத்திரை களுக்கு) உயிர் இருப்பதாக அபிநய தருப்பணம் கூறுகிறது.

துணை நூல்:

அறிவனார், பஞ்சமரபு, சக்திஅறநிலையம், கோவை, 1975.

**இரட்டைப் பதிவு முறை:** உலகில் ஒவ் வொரு மனிதனும் அவன் எத்தொழிலில் ஈடுபட்டி ருந்தாலும் அவனது வருவாயையும் செலவையும் எழுதிக் கணக்குப் பார்ப்பது இயல்பு. அதற்குக் காரணம் வரவிற்கு மேல் செலவு இருக்கக் கூடாது என்பதாகும். தனி மனிதனுக்கே கணக்கு எழுதுவது தேவை என்றால், வணிகருக்கும், வணிக நிறுவனங் களுக்கும் கணக்கு எழுதுவது எவ்வளவு இன்றியமை யாதது என்பதைக் கூறத் தேவையில்லை. ஒவ்வொரு வாணிக நடவடிக்கையும் கொடுக்கல் வாங்கலால் எழுதப்படுகிறது. இது இரு பகுதிகளைக் கொண்டது. ஒரு வணிகருக்கு வேறு ஒருவர் கொடுக்காமல் எதை யும் பெற முடியாது. அவரது சேமிப்புக் கிடங்குக்குச் சரக்கு வருகிறதென்றால், அது வேறு ஒருவரின் சேமிப்புக் கிடங்கிலிருந்து வருகிறது என்பது பொருள். எனவே, ஒவ்வொரு வாணிக நடவடிக்கையும் இரு கூறுகளைப் பெற்றுள்ளது. ஒரு வணிகரைப் பொறுத்த மட்டில் ஒரு பொருளைப் பெற்றால் பிறிதொரு பொருளைத் தருகிறார் என்பதாகும். கணக்கு வைப்பு முறையில் அவை 'பற்றுப்' பகுதி (Debit side) 'வரவுப்' பகுதி (Credit side) எனப்படும். எடுத்துக் காட்டாக, இராமன் பணத்தைக் கொடுத்து ஒரு எழுதுகோல் வாங்குகிறார் என்றால், இராமன் எழுதுகோலைப் பெறுவதும், பணம் அவரைப் விட்டுப் போவதும் அந்நடவடிக்கையின் இரு கூறுகளாகும். முதற்கூறு பற்றும், இரண்டாம் கூறு வரவுமாகும். இரட்டைப் பதிவு முறையின் (Double Entry System) அடிப்படை இவ்விரு கூறுகளைப் பொறுத்து அமைந் துள்ளது.

**கணக்குப் பதிவியலின் இலக்கணம்:** மேற்கூறிய நடவடிக்கையில் கூறப்பட்ட இரு கூறுகளையும் எழு தும் முறைக்குக் கணக்குப் பதிவியல் என்பது பெயர். கணக்குப் பதிவியல் என்பது, 'வாணிக நடவடிக்கை களை உரிய கணக்குப் பதிவேடுகளில் எழுதும் கலை'

யாகும். வாணிக நடவடிக்கைகள் முறையாகவும் ஒழுங்காகவும் எழுதப்பட வேண்டும். இதை ஒரு கலைப் பாடமாகவும், அறிவியல் பாடமாகவும் கொள்ளலாம். இதனால் வணிகர்கள் பயனடைவ தால் கலையாகவும், இது சில கணக்கியல் கோட் பாடுகளைக் கொண்டுள்ளதால் அறிவியலாகவும் கொள்ளப்படுகிறது. இது நடவடிக்கைகளைப் பதிவு செய்து, வகைப்படுத்தி, சுருக்கமான முறையில் தரு கிறது. பணத் தொடர்பான நடவடிக்கைகளின் முடி வையும் இது வழங்குகிறது.

கணக்குப் பதிவியலின் குறிக்கோள்கள்: (1) வாணிக நடவடிக்கைகளின் நிலையான பதிவாக இது அமைகிறது. (2) நிதி நடவடிக்கைகளின் சமத் தன்மையை இது வழங்குகிறது. (3) வாணிக நட வடிக்கைகளின் முடிவை அதாவது, ஆண்டு இறுதியில் ஆதாயம் அல்லது இழப்பை அறிந்திட இது உதவு கிறது. (4) மொத்தக் கடனாளர்களையும் கடனீந் தோர்களையும் அறிவிக்கிறது. (5) மொத்தச் சொத்துகளையும் பொறுப்புகளையும் தெரிவிக் கிறது. (6) மொத்தப் பொறுப்புகளைச் செலுத் திடப் போதுமான சொத்துகள் உள்ளனவா என்ப தையும் அறிய உதவுகிறது.

வாணிக நடவடிக்கைகளை எழுதும்போது சில அடிப்படைக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். அவை நடவடிக்கைகளின் தன்மை, கணக்கியல் அளவை, கணக்கு எழுதுதல், இரட்டைப் பதிவு முறை போன்றவையாகும். கணக்குப் பதிவியலின் தலை யாய பொருள்கள் வாணிக நடவடிக்கைகளே. உரிமை யாளரின் சொந்த நடவடிக்கைகள் இங்கு எழுத முடியாது. இருந்தாலும், தொழிலிலிருந்து அவர் சொந்தச் செலவிற்காக எடுத்திடும் தொகை, சரக்கு போன்றவற்றை எழுத வேண்டும். இது நிறுவனத்தின் நிதிநிலையைப் பாதிக்கும். இதேபோல், உரிமை யாளர் தம் சொந்த வருவாயிலிருந்து தொழிலில் முதலீடு செய்யும் முதல், பிற செலவுகள் போன்ற வற்றையும் எழுத வேண்டும்.

கணக்கியல் அளவு: கணக்கியல் நடவடிக்கைகள் எல்லாம் பண அளவில்தான் எழுதப்படுகின்றன. மொத்தம் இவ்வளவு உருபாய் என்றுதான் எழுதப் படுகிறது. பொதுவாக எண்ணிக்கைகள் எழுதப்படு வதில்லை.

கணக்கு எழுதுதல்: தொழிலை வைத்துத்தான் எல்லா நடவடிக்கைகளும் எழுதப்படுகின்றன. தொழிலிலிருந்து ஒருவர் என்ன பெறுகிறார் அல்லது தொழிலுக்கு என்ன தருகிறார் என்ற அடிப்படையில் தான் நடவடிக்கைகள் எழுதப்படுகின்றன. அதே போல், தொழிலுக்கு வருவதும் தொழிலிலிருந்து செல்வதும் வரவும் செலவுமாக எழுதப்படுகின்றன. இந்நோக்கத்திற்காகத் தொழில் என்பது ஒரு தனி ஆளாகவே (Person) கருதப்படுகிறது. சுருங்கக் கூறின், தொழிலும் உரிமையாளரும் இரண்டு தனித்தனி ஆட்களாகக் கருதப்படுகின்றனர்.

இரட்டைப் பதிவு முறை: நடவடிக்கைகளை எழுதும்போது இரு கூறுகளையும், அதாவது, பற்று- வரவுக் கூறுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். முன் னரே சொல்லியபடி இதுதான் அறிவியல் முறையில் உள்ளது. மேலும், நடவடிக்கைகளின் எண்அளவுச் சமன்மையை (Arithmetic Accuracy) இது காட்டு கிறது.

கணக்குப் பதிவியலின் முறைகள்: இவை பொது வாக ஒற்றைப் பதிவு முறை, நாட்டுப்புறக் கணக்கு முறை, இரட்டைப் பதிவு முறை என்று மூவகைப் படும். இவற்றுள் இரட்டைப் பதிவு முறைதான் சிறந் தது. எனவே, இரட்டைப் பதிவு முறையைத்தான் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் பின்பற்று கின்றன.

இரட்டைப் பதிவு முறை: இக்காலத்தில் அறி வியல் முறையில் அமைந்துள்ள கணக்குப் பதிவியலே இம்முறையாகும். ஒரு வாணிக நடவடிக்கையின் பற் றுப் பகுதியும் வரவுப் பகுதியும் இதில் எழுதப்படு கின்றன. பொதுவாக ஒருவர் பெற்றிடுவதை வரவு வைத்தும், விடுவதைப் பற்று வைத்தும் கணக்குகள் எழுதப்படுகின்றன. ஒரு தொழில் ஒருவருக்கு ஆதா யம் என்றால், வேறு ஒருவருக்கு அது இழப்பு என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஆக, இவ்விரு கூறுகளை யும் இம் முறையில் எழுதுவதால் இதற்கு இரட்டைப் பதிவு முறை என்பது பெயர். ஒரு கணக்கைப் பற்றுச் செய்தால், மற்றொரு கணக்கை வரவு செய்ய வேண்டும். ஒவ்வொரு பற்றிற்கும் அதற்குச் சம மான வரவு எழுதப்பட வேண்டும். இதுதான் இரட்டைப் பதிவு முறையின் முதன்மைக் கோட் பாடாகும்.

இரட்டைப் பதிவு முறையில் இருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பதிவுகளின் எண் அளவு சமன்மை சரிபார்க்கப்படுகிறது. எல்லா நடவடிக்கைகளும் எல்லா வகைக் கணக்குகளும் இங்கு எழுதப்படுவதால், இது ஒரு முழுமை பெற்ற கணக்குப் பதிவியல் முறை யாகும். சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றின் மதிப்பையும், மற்றும் வேண்டிய புள்ளி விவரங்களை யும் இதிலிருந்து எளிதில் பெற்றிடலாம். வாணிக ஆதாய இழப்புக் கணக்குகளிலிருந்து வாணிக முடி வான ஆதாய இழப்புகளையும், இருப்புநிலைக்

குறிப்பிலிருந்து நிதி நிலைமையையும் அறிந்திடலாம். நடப்பாண்டு விவரங்களைக் கடந்த சில ஆண்டு விவரங்களுடன் ஒப்பிட்டுத் தொழிலின் வளர்ச்சி அல்லது தளர்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

கணக்கு வகைகள்: இரட்டைப் பதிவு முறையில் ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு, பெயரளவுக் கணக்கு என்ற மூவகைக் கணக்குகள் எழுதப்படுகின்றன. ஒரு தனி ஆள், கூட்டு வாணிகம், நிறுவனம் தொடர்பான நடவடிக்கைகளைக் கொண்டிருப்பது ஆள்சார் கணக்காகும். நிலம், கட்டடம், மனை சரக்கு, பணம் போன்ற சொத்துகளை எழுதப் பயன்படுவது சொத்துக் கணக்காகும். பெயரளவுக் கணக்கில் செலவும் இழப்பும் ஆதாயமும் வருவாயும் எழுதப்படுகின்றன.

கணக்கு விதிகள்: இரட்டைப் பதிவு முறையில் ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு விதியுண்டு. ஆள்சார் கணக்கில் பெறுவதைப் பற்று வைக்கவேண்டும்; கொடுப்பதை வரவு வைக்க வேண்டும். சொத்துக் கணக்கில் வருவனவற்றைப் பற்று எழுத வேண்டும். செல்வனவற்றை வரவு வைக்கவேண்டும். பெயரளவுக் கணக்கில் செலவையும் இழப்பையும் பற்று எழுத வேண்டும். ஆதாயத்தையும் வருவாயையும் வரவு வைக்கவேண்டும்.

மேற்கூறிய தன்மைகளையும் நன்மைகளையும் இரட்டைப் பதிவு முறைப் பெற்றுள்ளதால், பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் இம் முறையை மட்டில் கையாளுகின்றன. கே.என்.இரா.

துணை நூல்கள்:

**Suryaprakasam**, P., Advanced Accountancy, Bharathi Press, Rajamundry, 1980.

**Gupta**, R.L., Advanced Accountancy, Sultan Chand & Sons, New Delhi, 1978.

**இரட்டைப் பிணைவு:** இருமனிதர்களிடையே ஏற்படும் முரண்பாடான உரையாடலுக்கு இடையே நல்லுறவினை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படின் அது, இரட்டைப் பிணைவு எனப்படும். இருவர் கூறும் செய்திகளும் ஒரே பொருளைப் பற்றியதாக இருக்கும். ஆனால் அவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கும். இந்த முரண்பாட்டிடையே ஒருவர் மற்றவரிடம் மறு மொழியும் கூறுவார். உரையாடலில் முரண்பாடுகள் மறைந்து நிற்கும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டின் வழியாக விளக்கலாம்.

குழந்தை தம்மிடம் சார்புடையதாக நடந்து கொள்ளவேண்டும் என்று பெற்றோர் விரும்புகின்றனர். ஆனால் குழந்தை அவ்வாறு நடந்து கொண்டால் பெற்றோர் அதனை அன்புடன் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாகக் குழந்தையிடம் மன விறைப்பு அல்லது சலிப்புக் காட்டுகின்றனர். குழந்தை சார்புடன் நடந்து கொள்ளவில்லையென்றால் அதற்காகக் குழந்தையைக் கண்டிக்கின்றனர். பெற்றோரின் இத்தகைய நடத்தை பிற்காலத்தில் குழந்தை ஓர் உளப்பிணியாளனாக மாறுவதற்குத் தக்க அடிப்படைக் காரணமாக அமைகிறது. பேட்சன் (Bateson) என்பார் இதனைப்பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளார். அவருடைய ஆராய்ச்சிகள் பெரிதும் போற்றப்படுவனவாம்.

**இரட்டைப்புலவர்:** இப்பெயர் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குருடரும் முடவருமாகிய இரண்டு தமிழ்ப்புலவர்களைக் குறிக்கும். இவர்கள் செங்குந்த மரபினர். தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறைக்குத் தெற்கில் நான்கு கல் தொலைவில் உள்ள இலந்துறை என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள். மூத்தவர் முதுசூரியர் என்றும் இளையவர் இளஞ்சூரியர் என்றும் சொல்லப்பட்டனர். இவர்கள் உறவு முறையில் அத்தை மகனாகவும் அம்மான் மகனாகவும் அமைந்திருந்தாலும், ஒற்றுமை உணர்ச்சியாலும், அங்கக் குறைவினராய் இருந்ததால் ஒருவர் உதவியின்றி ஒருவர் வாழ முடியாத இவர்கள் சேர்ந்தே இருந்ததாலும், உள்ளத்தாலும் திறனாலும் ஒன்றியிருந்ததாலும் இளமைக்காலத்தில் வழங்கிய பெயர்கள் மறைய, நாளடைவில் இரட்டைப் புலவர் என்றழைக்கப்பட்டனர். குருடரது தோளில் முடவர் உட்கார்ந்து வழிகாட்ட எல்லா இடங்களுக்கும் நடந்தே சென்றனர். இவர்களும் சங்க காலப் புலவர்களைப் போலவே தம்மை மதிக்காத செல்வர்களை வெறுத்தும் மதித்தவர்களைப் புகழ்ந்தும் போற்றினர். இவர்கள் பாடல் பாடும்போது முற்பகுதியை ஒருவரும் பிற்பகுதியை மற்றவரும் பாடி முடிப்பர். வில்லிபுத்தூரார் பாராட்டிய வக்கபாகையைச் சேர்ந்த வரபதி ஆட்கொண்டானை இவர்களும் பாராட்டியுள்ளனர்.

கலம்பகம் பாடுவதில் இரட்டையர்கள் மிகச் சிறந்தவர்கள். 'கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள்' என்னும் தொடர் இதனை எடுத்துக்காட்டுகிறது. இவர்கள் பாடிய தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், காஞ்சி ஏகாம்பரநாதர் உலா, தனிப்பாடல்கள் ஆகியன நூல்களாக வந்துள்ளன. தில்லைக் கலம்பகம் தில்லையிலுள்ள நடராசப் பெருமானைத் துதித்து 100 செய்யுட்களால் பாடப் பெற்றது. திருவாமாத்தூர்க் கலம்பகம் திருவாமாத்தூர் என்னும் திருப்பதியில் வீற்றிருக்கிற இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. காப்புச் செய்யுளைச் சேர்த்து 102 செய்யுள்களைக் கொண்

டது இந்நூல். இக் கலம்பகத்தை 'மார்க்கமும் ஆகி நின் றார்மாதை நாதர் வலங்கொள்பம்பை, மேற் கரை கோயில்கண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே' என்று முடிகிற பாடலைப்பாடி அரங்கேற்றம் செய்த னர். அப்போது சபையிலிருந்த ஒருவர், 'கோயில் கீழ்க்கரையில் இருக்க மேற்கரை என்றது என்னை?' என்று வினவினார். அதற்கு இரட்டையர்கள் 'இன்று போய் நாளை அரங்கேற்றம் தொடங்குவோம், என்று கூறித் தங்குமிடம் சென்றுவிட்டனர். அன்றிரவு பெரு மழை பொழிந்து பம்பையாறு தென்பாலோடி நெறி மாறி வடபால் மீண்டது. முதல்நாள் ஐயம் எழுப்பி வினவியவர் தெளிந்து புலவர்களைப் புகழ்ந்து போற்றினர். அரங்கேற்றமும் இனிது நடந்து முடிந் தது.

பின்னர் இவர்கள் மற்றோர் ஊருக்குத் தம் வழக்கப்படி நடந்து சென்றனர். காஞ்சிபுரத்தை யடைந்து அங்குள்ள ஏகாம்பர நாதர்மீது ஓர் உலாப்பாடி அதனை அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கினர். 'விறல்விகட சக்ர விநாயகனை ஏத் தும். திறல்விகட சக்ரா யுதம், என்று முடியும் பாட லைப் பொருள் விரிக்கத் தொடங்கியவுடன் அங் கிருந்த சிலர் 'ஆயிரக்கால் மண்டமும் விகட சக்கர விநாயகரும் இங்கில்லையே என்று கூறினர். அதற் குப் புலவர்கள் 'யாமும் அறியோம்; இவை வெளிப் பட்ட பின்னர் அரங்கேற்றுவோம் என்று கூறி வேற்றி டஞ் சென்றனர். பிறகு ஒருநாள் மன்னன் வேள்வி செய்ய மண்மேட்டை வெட்டிச் சமப்படுத்தும் போது ஆயிரக்கால் மண்டபமும் விகட சக்கர விநாயகரும் வெளிப்பட்டனர். இக் காட்சியைக் கண்ட நகரத்தார் அனைவரும் இரட்டையர்களைத் தேடி அழைத்து வந்து உலாவை அறங்கேற்றம் செய்தனர்.

புலவர்கள் மேலும் பல திருப்பதிகளை வணங்கிக் கொண்டே மதுரையம்பதியை அடைந்தனர். அங் குள்ள பொற்றாமரைக் குளத்தில் முடவர், கரையில் அமர்ந்திருக்கக் குருடர் நீரில் இறங்கித் துணியைத் துவைத்தார். துணி கை தவறித் தூரத்தில் சென்று நீரில் அமிழ்ந்து விட்டது. அதனைத் தேடிக் குருடர் மிகவும் வருந்தினார். கரையிலிருந்த முடவர் குரு டரை நோக்கி 'அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத், தப்பினால் நம்மையது தப்பாதோ' என்று பாடி நகைத்தார். அதற்குக் குருடர் உடனே 'அப்படியே, ஆனாலும் கந்தை அதினுமோர் ஆயிரங் கண், போனால் துயர் போச்சுப்போ' என்று மறு மொழியாகப் பாடினார். மேலும் முடவர், 'கண்ணா யிரமுடைய கந்தையே ஆனாலும், தண்ணார் குளிரை யுடன் தாங்காதோ, என்று மீண்டும் வினவ, அதற் குக் குருடர் 'எண்ணாதீர் இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்,சொக்கலிங்க முண்டே துணை' என்று பாடினார். இதற்குள் ஆடை குருடர் கையில் கிடைத்தது பின் இருவரும் ஆலவாயண்ணலைப் போற்றிப் பாடி அங்கே சில நாள் தங்கினர். ஒரு நாள் பாண்டியன் அவைக்குச் சென்று அவனைப் புகழ்ந்து பாடினர். அரசன் புலவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தான். பரிசில் வாழ்க்கையைத் தம் வாழ்க்கையாகக் கொண்ட இவர்கள், பல சிவத்திருத் தலங்களிலும் எழுந்தருளியிருக்கின்ற இறைவனைப் போற்றி வாழ்ந்து பூதவுடலை நீத்துப் புகழுடம் பெய்தினர்.

**இரட்டைமணிமாலை** தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று தமிழிற் கூறப்படும் சிற் றிலக்கிய வகைகளில் ஒன்று. இது வெண்பாவும் கலித்துறையுமாக மாறிமாறி அமைந்த 20 பாடல்கள் கொண்ட நூலாகும். வெண்பாவும் விருத்தமுமாக 20 பாடல்கள் கொண்டமைவதும் உண்டு. விருத்தம் என்பது இங்குப் பெரும்பாலும் அகவல் விருத் தத்தையே குறிக்கும். இருபது பாடல்களும் அந்தா தியாக அமையும். இப்பிரபந்தம் இன்ன பொருள் பற்றி அமைதல் வேண்டும் என்னும் வரையறை கூறப் படவில்லை. இதன் இலக்கணம் பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக் கம், முத்துவீரியம், பிரபந்த தீபம், சுவாமிநாதம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. பன்னிருபாட்டி யல், 'வெண்பா முதலாகக் கலித்துறைபின்வரும் இந்த இருபது இரட்டைமணிமாலை' என்று (67), இதன் இலக்கணம் கூறியுள்ளது. 'பெற்ற சீர்மன் விருத்தம் வெண்பாப் பெயர்ந்து இருபான் மற்றை இரட்டைமணிமாலையாம்' என்பது வெண்பாப் பாட்டியல் (86) கூறும் இப்பிரபந்த இலக்கணமாகும். இவ்வகையில் தமிழில் அமைந்த முதல் இரட்டை மணிமாலை காரைக்காலம்மையார் இயற்றியுள்ள 'திருவிரட்டை மணிமாலையாகும். ஆசிரியவிருத்த மும் வெண்பாவும் மாறி மாறி அமைந்த 20 செய்யுட் களால், இந்நூல் அந்தாதித் தொடரில் அமைந்துள் ளது. கிளர்ந்து என்னும் சொல்லொடு தொடங்கும் இப்பிரபந்தம் கிளர்ந்து என மண்டலித்து முடிந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இரட்டையொலிப்பு:** மனிதனின் பேச்சு பல்வேறு தொடர்கள், சொற்கள் அடங்கிய ஒலி களின் வெளிப்பாடே யாகும். நுரையீரலிலிருந்து வெளிவரும் மூச்சு தொண்டையை அடைந்து, பின் மேல்தொண்டை, மூக்கறை, வாயறை முதலியவற் றுள் ஒலியூக்கமடையப் பல்வேறு பேச்சொலிகள் பிறக்கின்றன. அ, ஆ போன்ற உயிரொலிகள் பிறக் கும்போது நுரையீரலிலிருந்து வெளிப்பட்ட மூச்சு

எவ்விதத் தடையுமின்றி வெளியேறும். மாறாகக் க, ச போன்ற மெய்யொலிகளின் பிறப்பாக்கத்தின் போது, மூச்சு வாயில் தடைப்பட்டும் மாற்றமடைந்தும் வெளியேறும். அதாவது 'உந்தி முதலா'த் தோன்றுய வளி, மூக்கு, அண்ணம், நா, பல், இதழ் ஆகியற்றில் வெவ்வேறாக ஒன்றித் தடை தோன்ற மெய்யொலிகளின் பிறப்பாக்கம் அமைகிறது.

பேச்சுறுப்புகளுள் நாவும் இதழும் அசையும் உறுப்புகள் அல்லது ஒலிப்பான்கள் (Articulations) என்று குறிக்கப்படும். நாவின் பகுதிகளாகிய நுனிநா, இடைநா, கடைநா முதலியன பல், அண்ணம் போன்றவற்றில் ஒன்றி, மூச்சு தடைப்பட்டு வெளியேறுவதால் பிறக்கும் மெய்யொலிகள் பலவாம். இவ்வாறாக மூச்சு தடைப்படும் இடங்களான பல், அண்ணம் போன்றவற்றை ஒலிப்பிடங்கள் (Points of articulation) என்பர். சான்றாக 'க' என்ற ஒலி கடைநா என்ற ஒலிப்பான் கடையண்ணமாவதால், இதனைக் கடையண்ண ஒலி என்பர். இதே போன்று ஈரிதழ் ஒலியான 'ப' மேல், கீழ் இதழ்கள் ஒன்றுவதால் பிறக்கிறது. இவ்வாறாக ஒவ்வொரு மெய்யொலிக்கும் ஒரு குறிப்பிட்ட ஒலிப்பிடமே பிறப்பிடமாக அமைகிறது.

அடைப்பொலிகளைப் பொறுத்தவரை அவற்றைத் தனித்தனியே ஒலிக்கும்போது அவற்றிற்குரிய ஒலிப்பிடத்தில் பிறக்கின்றன. அதாவது குறிப்பிட்ட ஒலிப்பிடத்தில் மூச்சு அடைப்பட்டு வெளிப்படுகிறது. 'க' என்ற ஒலி கடைநா கடையண்ணத்தை ஒன்றுமிடத்தில் பிறக்கும் என்று அறியலாம். ஆயின் நாம் வேகமாகப் பேசும்போது, ஒரு குறிப்பிட்ட ஒலி ஒரு குறிப்பிட்ட ஒலிப்பிடத்திலேயே எப்பொழுதும் பிறக்கும் என்று கூறமுடியாது. பேச்சு, ஒலித் தொடர்ச்சியால் ஆகியதாகும். எனவே நாம் பேசும்பொழுது ஒவ்வோர் ஒலியையும் நிறுத்திப் பேசுவதில்லை. மாறாக விரைவாகத் தொடர்ந்து பேசுகிறோம். இந்நிலையில் ஒலியுறுப்புகள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு வேகமாக மாறிச் செல்கின்றன. இதனால் சில அடைப்பொலிகளின் பிறப்பாக்கத்தின் போது ஒலிப்பிடங்களைப் பொறுத்தவரை சில மாற்றங்கள் நிகழ்வதுண்டு.இம்மாற்றம் முன் பின் வரும் ஒலிச் சூழலைப் பொறுத்து அமைகிறது. இதனால் ஓர் அடைப்பொலியின் பிறப்பாக்கத்தின்போது ஒரே நேரத்தில் இரண்டு மூன்று இடங்களில் அடைப்புகள் நிகழலாம். இதனால் அக்குறிப்பிட்ட ஒலியின் ஒலிப்புத் தன்மையில், வேறுபடுத்தி அறியும் வகையில் மாற்றம் நிகழ்ந்துவிடுகிறது. அதாவது ஒலிப்பில் வேறுபாடு ஏற்பட்டுவிடுகிறது. இதனையே இரட்டை ஒலிப்பு (Double articulation) என்பர். சான்றாக கிளி' (Kili) என்னும் சொல்லில் ககரத்தைத் (K) தொடர்ந்து முன் உயிர் வருகிறது. இதனால் ககரத்தை ஒலிப்பதற்கான முயற்சி உருவாகும்போது (அதாவது கடைநா கடையண்ணத்தைப் பொருந்தும் நிலையில்) நுரையீரலிலிருந்து வெளிப்பட்ட மூச்சு வாயில் அடைபடுகிறது. இந்நிலையிலேயே இடைநா இடையண்ணத்தை நோக்கி எவ்வளவு உயரத்திற்கு எழ முடியுமோ அவ்வளவு உயரத்திற்கு எழுந்து இ(ı) என்னும் முன்னுயிரைப் பிறப்பாக்கம் செய்கிறது. இதனால் ககரம் அண்ண ஒலிச்சாயல் பெற்று விடுகிறது. அதாவது கடையண்ண ஒலி முன் கடையண்ண ஒலியாகிறது. இம் மாற்றத்திற்குக் 'க' வைத் தொடர்ந்து வரும் 'இ' என்னும் முன் உயிரே காரணமாகும். இதற்கு அண்ண ஒலிச்சாயல் பெற்ற ஒலிகள் ($X^y$) (X = ஏதாவதொரு அடைப்பொலி) என்று குறியீடிட்டு எழுதிக்காட்டுவர், எ.டு. ($X^y$).

ஜி. சுநா.

**இரட்பீல்டு, இராபர்ட்டு (1897–1958)** அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியல் அறிஞராகிய இவர் நாட்டுப்புற – நகரத் தொடர்ச்சிக் (Folk-Urban Continuum) கோட்பாட்டை வகுத்தவர். இனக்குழு ஒப்பாய்வியல் (Enthnology) கண்ணோட்டத்துடன் சமூக, பண்பாட்டு மாற்றங்களைக் கண்டறிந்த முன்னோடி ஆய்வாளர்களுள் தலையாயவர் இவர். இராபர்ட்டு இரட்பீல்டு(Robert Redfield)பழங்குடி–நாட்டுப்புறம் – நகரம் சார்ந்த பண்பாடுகளின் வளர்ச்சியில் காணப்படும் உறவினை ஆராய்ந்து பெரும் புகழ் பெற்றார்.

இவர் 1897–ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 4–ஆம் நாள் சிகாகோ நகரில் பிறந்தார். சட்டவியல் பயின்று வந்த இராபர்ட்டு இரட்பீல்டு 1923–ஆம் ஆண்டு மெக்சிகோ நகருக்குப் பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின்போது இவர், மானிடவியல் பயில வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு, 1926–ஆம் ஆண்டு வரை களப்பணிமேற்கொண்டார். சிகாகோப் பல்கலைக் கழகத்தில் 1927–இல் சேர்ந்து, 1928–இல் மானிடவியலில் டாக்டர் பட்டம் பெற்றார். இவரது முதல் ஆய்வான 'தெப்போசுதுலான்: ஒரு மெக்சிகோ கிராமம்' – (Tepoztlan; A Mexican Village: 1930) மானிடவியலாரிடையே புதிய சிந்தனையைத் தூண்டியது. இந்த ஆய்வுக்குப் பின்னர் வாசிங்டனில் உள்ள கார்னிசிக்கு நிறுவனத்தில் (Carnegic Institution), இணைநிலை ஆய்வாளராகச் (Research Associate) சேர்ந்து 16 ஆண்டுக் காலம் யுக்காடன் (Yucatan), குவாத்தமாலா (Quatemala) ஆகிய பகுதிகளில் களப்பணியை மேற்கொண்டார். சிகாகோப்பல் கலைக் கழகத்தில் 1934–இல் மானிடவியல் பேராசிரியராகவும் சமூக அறிவியல்களின் புலத் தலைவரா

கவும் பொறுப்பேற்றார். மெக்சிகோவின் தலை சிறந்த மானிடவியல் அறிஞர்களுள் ஒருவராகப் பிற் காலத்தில் பெயர் பெற்ற அல்போன்சா வில்லா இரோசாசுடன் (Alfonso Villa Rojas) இணைந்து 'சன்கோம்: ஒரு மாயா சிற்றூர்' (Chankom: A Maya Village-1934) என இவர் செய்த ஆய்வு, மானிட வியல் துறையில் மற்றுமொரு புதிய வினாவினை எழுப்பியது. மாயாவின் சமகால நாகரிகத்தின் வளர்ச்சியைக் கண்ணுற்று அதன் வளர்ச்சி வீதத் தினைப் பண்பாட்டுப்பேறு (Acculturation) முறையில் விளக்கினார். இந்த ஆய்வும், இவரது 'நாட்டுப்புற-நகரத் தொடர்ச்சி'க் கோட்பாட்டிற்கு உறுதுணை யாக நின்றது. பழங்குடிச் சமூகம், குடியானவர் சிற் றூர், மாநில எல்லைக்குட்பட்ட நகரம், யுகாட்டன் (Yucatan) தலைநகரம் ஆகியவற்றின் பண்பாட்டுப் படிநிலைகளை ஆராய்ந்து வெளியிட்ட யுகாட்டன் நாட்டுப்புறப் பண்பாடு (The Folk Culture of Yucatan-1941) பற்றிய ஆய்வே இவரது நாட்டுப்புற -நகரத் தொடர்ச்சிக் கோட்பாடாக அமைந்தது. இவ்வாய்வில், தனிமைப்படுத்தப்பட்ட எளிய சமூகம் வளர்ச்சியுற்ற கலப்புச் சமூகமாக வளர்ச்சிபெறும் நிலைகளில், சமூக மாற்றமும் பண்பாட்டுச் சிதைவும் நிகழும் முறைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இரட்பீல்டு, பின்னர் இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளின் நாகரிகத்தினை ஆராய்ந்து, சமூகங்க ளைப் 'பெரு மரபினர்' (Great Tradition) என்றும், 'சிறு மரபினர்' (Little Tradition) என்றும் வகைப் படுத்தினார். இவரது சிறந்த நூல்களுள் 'சிறு சமூகத் னர்' (The Little Community 1955), 'நாட்டுப்புறச் சமூகமும் பண்பாடும்' (Peasant Society and Culture-1956) ஆகியவை அடங்கும். இவர் இறுதிக்காலம் வரை சிகாகோப்பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். 1958-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**இரண்டாம் இராசசிம்ம பாண்டின்** (கி.பி. 907-931) பராந்தக வீரநாராயணனுக்கும் சேர நாட்டு வானவன் மாதேவிக்கும் மகனாகப் பிறந்த வன். தன் தந்தையின் இறப்பிற்குப் பின் இவன் அரியணையேறினான். சின்னமனூர்ச் செப்பேடுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், கங்கபிருதிவிபதி யின் உதயேந்திரம் செப்பேடுகளும், இலங்கை வர லாற்று நூலான மகாவம்சமும் இவ்வேந்தனைப் பற்றிய செய்திகளை அறியப் பயன்படுகின்றன. இவன் தனது பதினாறாம் ஆட்சியாண்டில் சின்ன மனூர்ப் பெரிய செப்பேடுகளை வழங்கினான். இவ் வேந்தனுக்குச் சடையன்மாறன், இராசசிகாமணி, சீகாந்தன், மந்தரகௌரமேரு முதலான விருதுப் பெயர்கள் உண்டு.

அரசியல் சூழல்: இவ்வேந்தன் அரச பதவியில் அமர்ந்தபோது, தஞ்சைச் சோழரது ஆட்சி தழைத்து வேரூன்றியிருந்தது. திருப்புறம்பியப் போருக்குப் பின் முதலாம் ஆதித்த சோழன் பல்லவர்களை வென்று, தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டு, சோணாட்டு எல்லையை வடக்கே இராட்டிரகூடர் களது அரசின் எல்லைவரையில் விரிவுபடுத்தினான். பல்லவ, இராட்டிரகூட இளவரசிகளை மணந்தும், சேரருடனும் கங்கருடனும் நட்புப் பூண்டும், கொங்கு நாட்டைக் கைப்பற்றியும் பாண்டியரின் புகழைஉயர்த் தினான். ஆதித்தனுக்குப் பின் சேர்ணாட்டு அரியணை யேறிய முதலாம் பராந்தகனும் (கி.பி. 907-955) சோழப் பேரரசின் எல்லைகளை மேலும் விரிவு படுத்துவதில் முனைந்து செயற்பட்டான். இந்நிலை யில் இராசசிம்மனுக்கும் பராந்தகனுக்கும் ஆதிக்கப் போட்டி எழுந்தது.

போர் நிகழ்ச்சிகள்: இராச சிம்மன் தன் பகை வர்களை உலப்பிலி மங்கலத்தில் வென்று, கொடும் பாளூர்ப் படையை முறியடித்து, தஞ்சை வேந்தனை நைப்பூரில் வென்று, தென்தஞ்சைக் காவலனை நாவற்பகுதியில் தோற்கடித்து, வஞ்சியைத் தீக்கிரை யாக்கினான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

முதலாம் பராந்தக சோழன் கி.பி. 910-இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து இராசசிம் மனை வென்று துரத்தினான். இதன் விளைவாக முதலாம் பராந்தகன் 'மதுரைகொண்ட பரகேசரி' என்று தன்னைக் கூறிக் கொண்டான். தோல்வியுற்ற பாண்டியன், இலங்கை வேந்தனான ஐந்தாம் காசி யபனிடம் படையுதவி பெற்றுச் சோழனை எதிர்ந் தான். வெள்ளூர் என்னுமிடத்தில் கி.பி. 920-இல் இருவருக்குமிடையே இறுதிப்போர் நடைபெற்றது. இப்போரில் மீண்டும் இராசசிம்ம பாண்டியன் வெற்றி வாய்ப்பினை இழந்து, தனது மணிமுடியினையும் அரச சின்னங்களையும் எடுத்துக்கொண்டு இலங் கைக்கு ஓடினான். இராசசிம்மனின் அவலநிலை கண்டு, இலங்கை வேந்தன், பாண்டியனுக்கு மீண் டும் உதவி செய்து, சோழரை வென்று, பாண்டிய நாட்டைக் கைப்பற்றித் தருவதாக உறுதியளித்தான். ஆனால் எதிர்பாராத வகையில் இலங்கையில் உள் நாட்டுக் கலகம் தோன்றவே, இலங்கை வேந்தன் இராசசிம்மனுக்கு உதவ முடியவில்லை. ஏமாற்றம் அடைந்த பாண்டியன் வேறுவழியின்றி, தன் மணி முடியையும், அரச சின்னங்களையும் இலங்கை வேந் தனிடம் ஒப்படைத்துவிட்டுத் தன் தாய் வானவன் மாதேவியின் பிறந்த நாடான சேரநாட்டிற்குச் சென்று விட்டான்.

விடாமுயற்சி கொண்ட பாண்டியன், பாண்டிய நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கி.பி. 931 வரை ஆட்சி புரிந்தான். இவ்வேந்தனது 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சின்னமனூரிலும், பத்தா மாட்சியாண்டுக் கல்வெட்டு தேனூரிலும், 11,13-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் அம்பாசமுத்திரத்திலும், 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சோழவந்தானி லும் 17-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குற்றாலத் திலும், 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு நாங்கு நேரியிலும், 20-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருப்புடைமருதூரிலும், உத்தமபாளையத்திலும் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஸ்ரீவைகுண்டத் திற்கு அருகிலுள்ள பெருங்குளத்திலும் கிடைத்துள் ளன.

கொடைத்திறன் சமயத்துறையில் சமரசக் கொள்கையைப் பின்பற்றிய இவன், சைவ, வைணவ சமணக் கோயில்களுக்கு நிலதானங்கள் அளித்துள் ளான் என்பதனைச் செப்பேட்டுச் சான்றுகளால் அறியலாம். இவன் தனது 16-ஆம் ஆண்டில், பராந் தகன் என்னும் அந்தணனுக்கு அழல்நாட்டு நற்செய் கைப்புத்தூரைத் தானமாக(சின்னமனூர்ச் செப்பேடு) வழங்கினான். அடுத்து இவன் தன் நாட்டில் பல ஏரி களையும் குளங்களையும் வெட்டி நீர்ப்பாசனத்தைப் பெருக்கினான் என்று தளவாய்புரச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த பாண்டியர் அர சினை, வீழ்ச்சியினின்றும் தடுத்து நிறுத்தும் பணியில் ஈடுபட்ட இராசசிம்மன் தோல்வியையே கண்டான். இவனது இறப்பால் பாண்டிய நாடு சோழர் வசமா யிற்று. இப்பாண்டியனைச் சில அறிஞர்கள் மூன்றாம் இராசசிம்மன் என்று குறிப்பிடுவர். ஆயினும் இவன் இரண்டாம் இராசசிம்மனேயாவான். ம.இரா.

**இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1237-1247):** முதலாம் மாற வர்மன் சுந்தரபாண்டியனை (கி.பி. 1215-1238) அடுத்து ஆட்சிக்கு வந்தான். இவன் சுந்தர பாண்டி யனது ஆட்சியின் இறுதிக்காலத்தில் இளவரசனாக அமர்த்தப்பட்டுக் கி.பி. 1237-ஆம் ஆண்டு அரசனாக மணிமுடி சூடினான். இவ்வேந்தனது மெய்க்கீர்த்தி 'பூதலவனிதை' என்னும் அழகிய தொடக்கத்தைக் கொண்டது. இவ்வேந்தனது பத்தாமாட்சியாண்டுக் கல்வெட்டு, கட்டாரி மங்கலத்தில் கிடைத்துள்ள தால், இவன் கி.பி. 1247 முடிய ஆட்சி புரிந்தான் என்பது திண்ணம். இருப்பினும் இவன் கி.பி. 1266 வரை உயிருடன் இருந்தான் என்பதனை மற்றப் பாண்டிய வேந்தரது கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

இவ்வேந்தனது இரண்டாம் ஆட்சியாண்டுக் கல் வெட்டொன்று, 'சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன்' என்னும் அரசியலதிகாரி திருத் தங்கால் திருமால் கோயிலில் 'சுந்தரபாண்டியன் சந்தி' தொடர்ந்து நடைபெற நிவந்தம் அளித்ததைக் குறிக்கிறது. மன்னார் கோயில் குலசேகர ஆழ்வார் கோயிலில் காணப்படும் இவ்வேந்தரது 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மன்னனது ஆணைக் கிணங்க, இக்கோயிலின் இரண்டாம் சுற்றுமதில் கட்டுவதற்கு வசதியாக ஊர்ச் சபையார் சில தனி யாரின் வீடுகளைப் பெற்று ஒப்படைத்ததாகக் குறிப் பிடுகிறது. இதனால் இதன் இரண்டாம் சுற்றுமதில் இவன் காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம்.

இவ்வேந்தனது தென்கரை மூலத்தானம் உடை யார் கோயில் கல்வெட்டு, (1239) மதுரையில் திரு ஞானசம்பந்தர் மடம் இருந்ததாகவும், திருவாரூர் தட்சிண கோளகி மடத்தின் மாணவர்களுள் ஒருவ ரான தத்புருடசிவா என்பவர் மடாதிபதியாக விளங்கியதாகவும் குறிப்பிடுகிறது. அம்பாசமுத்தி ரம் வட்டம் வீரவநல்லூரில் காணப்படும் கல்வெட்டி னால், கி.பி. 1239-இல் இவ்வேந்தனது அரண்மனை வேலைக்காரி, வீரவநல்லூர் விக்கிரமபாண்டீசுவரர் கோயிலில் சொக்கநாச்சியார் படிமத்தை எழுந்தரு ளச் செய்து, பலவிதமான பொன்னணிகலன்களை அளித்தமை புலனாகும்.

இவனது ஆட்சியில் இயல், இசை, நாடகம் ஆத ரிக்கப் பெற்றுத் தமிழ் வளர்ச்சி பெற்றது என்ப தனை, இவ்வேந்தனது மெய்க்கீர்த்தியால் அறியலாம்.

**இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1276-1292):** முதலாம் மாற வர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி. 1268-1311) மகன். இவன் கி.பி. 1276-இல் பாண்டிய வேந்த னாக மணிமுடி சூடினான்; தந்தையுடனும் அண்ண னான சடையவர்மன் வீரபாண்டியனுடனும் இணைந்து ஆட்சி புரிந்தான். பாண்டிய நாட்டில் ஒரே காலத்தில் மூவர் ஆட்சிபுரிந்தனர் என்பது இத னால் புலனாகும். சுந்தர பாண்டியனது ஆட்சி பற்றி அறிந்து கொள்ளப் பாண்டியர் கல்வெட்டுகளேயன்றி, வெனிசு நகரப் பயணியான மார்க்கோ போலோ, முகம்மதியப் பயணியான வாசப்பு ஆகிய இருவரின் குறிப்புகளும் பயன்படுகின்றன.

சுந்தர பாண்டியனது கல்வெட்டுகள் தஞ்சாவூர், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், கடப்பை ஆகிய மாவட்டங்களிலும் கிடைத்துள்ளன. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் சைவ சமயம் மறுமலர்ச்சி பெற்றது. வித்தியாசிவ பண்டிதரால்

சைவ மடம் ஒன்று நிறுவப்பட்டது. மார்க்கோ போலோ இவனைச் 'சௌந்தர் பாண்டி தேவர்' என்றும், வாசாபு (Wassaf) 'சுந்தர்பாண்டி' என்றும் குறிப்பிடுகின்றனர்.

திருச்சி மாவட்டத்திலுள்ள கரூர் இவனது தலை நகராய்த் திகழ்ந்தது. வாசாபு, இவன் இசிரா ஆண்டு 692-இல் (கி.பி. 1292) இறந்தானெனக் குறிப்பிட்டுள்ளார். எனவே இவன் ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் ஆண்டான் எனலாம். மஇரா.

**இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1254-1265):** பாண்டிய வேந்தனான இவன், கி.பி. 1254-ஆம் ஆண்டு அரியணையேறிய தாக அண்மைக்கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இவ்வேந்தனது மெய்க்கீர்த்திகள் 'திருவளர்முலை' 'திருமகள் வளர்முலை'-முதலான தொடக்கங்களைக் கொண்டு விளங்குகின்றன.மற்றொரு சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1253-1275), இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் - ஆகிய இருவரும் ஒரே காலத்தில் பாண்டிய நாட்டினை ஆண்டுள்ளனர் என்பது கல்வெட்டுகளால் புலனாகிறது. இவ்வேந்தனது 4, 6, 7 -ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் திருநெல்வேலியிலும், மூன்றாமாட்சியாண்டுக் கல்வெட்டுகள் குற்றாலத்திலும் சிவபுரியிலும், ஐந்தாமாட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருக்குளம்பூரிலும் சிவபுரியிலும், ஆறாமாட்சியாண்டுக் கல்வெட்டு மலையடிக் குறிச்சியிலும், பத்தாமாட்சியாண்டுக் கல்வெட்டு திருப்பத்தூரிலும், பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் சிவபுரியிலும் வல்ல நாட்டிலும் கிடைத்துள்ளன. இதனால் இவன் கி.பி. 1265 முடிய அரசாண்டான் என்பதுறுதி.

போர்கள்: முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் வீரகண்ட கோபாலனுக்கு எதிராகக் கி.பி. 1255-இல் மேற்கொண்ட படையெழுச்சியில் இரண்டாம் வீரபாண்டியனும் பங்கு கொண்டுள்ளான். வீரபாண்டியன் இலங்கையின்மீது கி.பி. 1256-இல் படையெடுத்து, இலங்கைப் படைகளைத் தோற்கடித்து, பாண்டியரின் இணைக்கயல் சின்னத்தைத் திருகோண மலையிலும் திரிகூடமலையிலும் பொறித்தான். திரிகூட மலையென்பது கண்டி நாட்டிலுள்ள முச்சிகரங்கள் கொண்ட மலையாகும். இலங்கை வேந்தனுக்குத் துணையாக வந்த சாவக இளவரசனும் தோற்கடிக்கப்பட்டு இலங்கைத் தெருக்களில் ஊர்வலமாக இழுத்து வரப்பட்டான். தோல்வியுற்ற இலங்கை வேந்தன் பாண்டியனுக்குப் பெரும் பொருள் தந்தான். இப்படையெழுச்சியில் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனும் இவ்வேந்தனுடன் படைகொண்டு சென்றான்.

இவ்வேந்தன் சோழநாட்டின்மீது படையெடுத்து, மூன்றாம் இராசேந்திரனையும் வென்றடிப்படுத்தினான். இப்போர் காவிக்களம் என்னும் இடத்தில் நடைபெற்றது. எனவே இவன் சோழ நாடு, இலங்கை, சாவக இளவரசன்-ஆகியோரை வென்றதாகக் கல்வெட்டில் கூறிக்கொள்கிறான். இவனது கல்வெட்டுகள் (கி.பி. 1256) குற்றாலம், தளபதிசமுத்திரம், தாருகாபுரம், சேந்தமங்கலம், குடுமியான்மலை முதலான இடங்களில் காணப்படுகின்றன. இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் சோழர், ஈழவர், சாவக இளவரசர், வீரகண்ட கோபாலன் (தெலுங்குச் சோழன்) ஆகியோரை வென்ற மாவீரன் என்பதையும் இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி.பி.1250-1265), முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் ஆகியோர் இவனது காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர் என்பதையும் கல்வெட்டுகளால் அறியலாம்.

**இரண்டாம் நரசிம்மன்** மலைய குல மன்னன்; இரண்டாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1051-1063) சிற்றரசருள் ஒருவன். இவன் சிறந்த திருமால் பக்தன். பார்க்கவ கோத்திரத்தைச் சேர்ந்த இவன், மிலாடு இரண்டாயிரம் பூமியை ஆண்டு வந்தான். இவனது இயற்பெயர் இரணகேசரி இராமன்; இவனது அபிடேகப் பெயர் நரசிங்கவர்மன். மலையமான் நாடு முழுமையும் தன் குடைக்கீழ் ஆண்ட இவ்வேந்தன், கி.பி. 1057-இல் திருக்கோவலூர் திரு இடைக்கழி ஆழ்வார் கோயிலின் விமானத்தையும் மண்டபத்தையும் கருங்கல்லால் கட்டினான். முன் மண்டபமும் திருச்சுற்று மாளிகையும் எடுத்ததுடன், பழைய கல்வெட்டுகளைப் படியெடுத்து விமானத்தில் பொறிக்கவும் செய்தான். நுந்தா விளக்கெரிக்கப் பசுக்களையும் தானமளித்தான். இவற்றைத் திருக்கோவலூர் கல்வெட்டுகளால் அறியலாம். மஇரா.

**இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன்** முத்தரைய வேந்தருள் தலையாயவன்; பல்லவரின் மேலாண்மைக்குட்பட்டு, முத்தரையர் நாட்டினை ஆண்டுவந்த குறுநில மன்னன்; முத்தரைய வேந்தன் மாறன் பரமேசுவரனின் மகன். இவன் இயற்பெயர் சுவரன்மாறன். எனவே கல்வெட்டுகளில் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் என்று குறிக்கப் பெற்றுள்ளான். முதலாம் பெரும்பிடுகு முத்தரையனான குவாவன் மாறனின் பேரனானதால் இவன், இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் என்று சொல்லப்பட்டான். இரண்டாம் பரமேசுவரன் (கி.பி. 728-731). இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 731-796) ஆகிய இரு பல்லவ வேந்தர்களது ஆட்சிக்காலத்தி

லும் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் சிற்றரசனாக ஆண்டுள்ளதால், இவன் ஏறத்தாழக் கி.பி. 710 முதல் கி.பி. 745 வரை ஆட்சிபுரிந்தான் எனக் கூறலாம். பாண்டிய வேந்தனான அரிகேசரி பராங்குச மாறவர்மன் (முதலாம் இராச சிம்மபாண்டியன் கி.பி. 730–768) இவனது காலத்தவனாவான்.

முத்தரைய வேந்தருள் புகழ்பெற்றுள்ள இவ்வேந்தனது வெற்றிகளையும் சிறப்புகளையும் சாதனைகளையும் தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகிலுள்ள செந்தலைத் தூண் கல்வெட்டுகள் விரித்துரைக்கின்றன. இவ்வேந்தன் செந்தலையைத் தலைநகராகக் கொண்டு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளைத் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தி ஆண்டுள்ளான். தஞ்சையும் வல்லமும் இவன் ஆட்சிக்குட்பட்ட புகழ்பெற்ற நகரங்கள் ஆகும்.

சுவரன் மாறனின் பட்டப் பெயர்கள்: இம்மாவீரனுக்கு சிரீ மாறன், சிரீ சத்ரு மல்லன், சிரீ கள்வர்கள்வன் சிரீ அதிசாகசன், அபிமானதீரன் சத்ருகேசரி, தமராலயன், செருமாறன், வேல்மாறன், சாத்தன் மாறன், வான்மாறன், தஞ்சைக்கோன், வல்லக்கோன், சீர் மாறன், கோமாறன், வெல் கொடியோன் முதலான பட்டப் பெயர்கள் இருந்தன என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

வெற்றிகள்: பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் (அச்சமயம் சோழ நாடு பல்லவரது ஆட்சிக்குட்பட்டது) இடைப்பட்ட முத்தரைய நாட்டை ஆண்டு வந்த இவன், பாண்டியர் சோழநாட்டில் வன்கவர்பு மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்தினான். பாண்டியர்–பல்லவர் ஆதிக்கப் போட்டியில் பல்லவர் பக்கம் நின்று போரிட்டுப் பல்லவர்க்கு வெற்றி தேடித்தந்த இவன், பாண்டியரைப் பல போர்க்களங்களில் வென்றுள்ளான். இதன் விளைவாகவே ‘மாறன்’ என்னும் பட்டப் பெயரையும் பூண்டான்.

அஞ்சாமை, வீரம், வெற்றி, ஆற்றல், அரசியல் திறன் முதலான பண்புகளின் மொத்த உருவாகிய இம்மாவீரன் கொடும்பாளூர், மணலூர், திங்களூர், காந்தளூர், அழுந்தியூர், காரை, அண்ணல் வாயில், செம்பொன்மாரி, வெண்கோடை, புகழி, கண்ணனூர் முதலான போர்க்களங்களில் பாண்டியன், சேரன், கொடும்பாளூர் வேந்தன் முதலானோரை வெற்றி கண்டான். இவ்வெற்றிகளை இவ்வேந்தனது செந்தலைத்தூண் கல்வெட்டுகள், பாவடிவில் வியந்து போற்றுகின்றன. இவற்றுள் கொடும்பாளூர், செம்பொன்மாரி, கண்ணனூர், அண்ணல்வாயில் ஆகியன புதுக்கோட்டை மாவட்டத்திலும், திங்களூர், மணலூர், அழுந்தியூர் ஆகியன தஞ்சை மாவட்டத்திலும், புகழியூர் திருச்சி மாவட்டத்திலும், காரை இராமநாதபுரம் மாவட்டத்திலும் உள்ளன. காந்தளூர் சேரவேந்தரின் கடற்கரைப் பட்டினமான காந்தளூர்ச் சாலையாக இருத்தல் வேண்டுமென்று அறிஞர் கருதுவர். இவன் இப்போரில் பாண்டியர்களின் யானைப்படைகளையும் கவர்ந்து வந்தான் எனக் கூறப்படுகின்றது. சேர, பாண்டிய வீரர்களின் தோல்வியைக் கேள்வியுற்ற அவர்கள் மனைவியர் துன்பத்தால் துடித்தனர்; தீக்குளித்துத் தம் உயிரை விடுத்தனர்.

இப்போர்கள்பற்றிப்பாண்டியரின் வேள்விக்குடிச் செப்பேடுகள் யாதும் குறிப்பிடாததால், இப்போர்க்களங்களில் பாண்டியர் தோல்வியுற்றமை தெளிவு. இச்செப்பேடுகள் மேற்கூறப்பட்ட போர்க்களங்களுள், கொடும்பாளூரை மட்டும் குறிப்பிட்டு, அங்குப் பாண்டியர் வெற்றி பெற்றதாகக் குறிப்பிடுகின்றன. வேள்விக்குடிச் செப்பேடுகளையும், செந்தலைக் கல்வெட்டுகளையும் நுண்ணிதின் ஆய்ந்து பார்க்குங்கால், பாண்டியர் படை சோழ நாட்டினுள் புகுந்து நெடுவயல், குறுமடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை முதலான இடங்களில் பல்லவரை வென்றது என்றும், இதனைத் தொடர்ந்து முத்தரையர் படையும் பல்லவர் படையும், பாண்டியப் படைகளை வென்று அவற்றைப் பாண்டிய நாட்டிற்குள் துரத்தியடித்தன என்றும் புலனாகிறது. பெரும்பிடுகு முத்தரையனின் வெற்றிச் சிறப்பினைச் செந்தலைக் கல்வெட்டுகள் கீழ்க்காணும் பாடலடிகளால் விளக்குகின்றன.

‘பல்லவன் வெல்லத் தென்னவன் முனையைக்
கெடச் செற்றமாறன்’

‘தஞ்சைக்கோன் .... கொடும்பாளூர் காய்ந்
தெரிந்தான்’

‘வல்லக்கோன் காரைவாய்ப் போர்வென்ற வேன்
மாறன்’

பாண்டியப் படையினர் பிற தமிழ் வேந்தர்களுடன் கூட்டுச் சேர்ந்து, மூன்றாம் நந்திவர்ம பல்லவனைக் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திக்கிராமத்தில் முற்றுகையிட்டபோது, அவனை விடுவிக்கும் பெரும் பணியில் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் பல்லவர் படைத்தலைவன் உதயசந்திரனுக்குப் பேருதவி புரிந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியார்வம்: இவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதுடன், கற்றோரைப் போற்றி மகிழும் பெற்றியுடையவனாகவும் விளங்கினான். பாச்சில்வேள் நம்பன், கோட்டாற்று இளம் பெருமானார், ஆச்சாரியர் அநிருத்தர், குவாவன் காஞ்சன்

முதலான பெரும் புலவர்களை ஆதரித்துத் தனது அரசவையில் இருத்திப் பரிசுகள் பல வழங்கினான். இப்புலவர் பெருமக்கள் இவ்வேந்தனை ஏத்திப் பாடியுள்ள வெண்பாக்களைச் செந்தலைச் சுந்தரேசுவரர் கோயிலில் உள்ள தூண்களில் காணப்படும் கல்வெட்டுகளில் காணலாம்.

கலைப்பணி: இவ்வேந்தன் சிறந்த பக்தனாகவும், கோயில் கட்டிய கோவேந்தனாகவும் விளங்கினான். இவன் நியமத்தில் பிடாரிக்குக் கோயில் ஒன்றினைக் கட்டுவித்தான். இதனைப் 'பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறனெடுப்பித்த பிடாரிகோயில்' என்ற செந்தலைக் கல்வெட்டால் அறியலாம். இப்பிடாரி கோயிலுக்குத் தெள்ளாறெறிந்த நந்திவர்மனும் பாண்டியன் மாறஞ்சடையனும் நிவந்தங்கள் அளித்துள்ளமை இதன் சிறப்பை உணர்த்தும்.

பல்லவர் வரலாற்றில் முதலாம் நரசிம்மவர்மனைப் போன்றும், சோழர் வரலாற்றில் முதலாம் இராசேந்திரனைப் போன்றும், இவன் முத்தரையர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறான். ம.இரா.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1238-1252)** இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்குப் பின்பு கி.பி. 1238-இல் பாண்டிய வேந்தனாக ஆட்சிப் பொறுப் பேற்றான். மாறவர்மன் விக்கிரம பாண்டியனது உடன்பிறந்தானான இவன் ஒய்சள (Hoysala) வேந்தனான வீரசோமேசுவரனைத் தன் மாமன் என்று கல்வெட்டில் குறிப்பிடுகிறான். 'பூமலர்த்திருவும் பொருசயமடந்தையும்' என்னும் தொடக்கத்தினைக் கொண்டது இவனது மெய்க்கீர்த்தி.

அரசியல் சூழல்: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் ஒய்சளரும் கொங்கு நாட்டினரும் பாண்டியருடன் நட்புப் பூண்டிருந்தனர். சோணாட்டின்கண் மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி.1246-1279) கொலுவீற்றிருந்தான். சோழர், பாண்டியருடன் முரண்பட்டிருந்தனர். ஒய்சளர் பாண்டியருடன் உறவும் நட்பும் கொண்டிருந்த காரணத்தால், பாண்டிய நாட்டு விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டுத் தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர்.

சோழருடன் போர்: மூன்றாம் இராசராச சோழனது ஆட்சிக் காலத்தில் பாண்டியரது படையெழுச்சியால் சோழர்க்கு ஏற்பட்ட இழிவினைப் போக்க, மூன்றாம் இராசேந்திர சோழன் முடிவு செய்தான்;ஆதலின், பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான்; பாண்டிய வேந்தனையும் முறியடித்தான்; சுந்தர பாண்டியனோ சோழனுக்குக் கப்பம் கட்ட வேண்டியதாயிற்று. இவ்வேளையில் ஒய்சள வேந்தன் வீரநரசிம்மனின் மகனான வீரசோமேசுவரன், பாண்டியனுக்கு உதவ முன்வந்தான். இவன் சோழரை வென்றான்; பாண்டிய நாட்டினை மீட்டுத் தந்தான். இதன் விளைவாக ஒய்சள வேந்தன் தன்னை 'இராசேந்திரனைப் போரில் வென்றவன்' என்றும் 'பாண்டிய குல சம்ரட்சகன்' (பாதுகாவலன்) என்றும் கல்வெட்டில் கூறிக் கொண்டான். இவற்றால் இவ்வேந்தனது காலத்தில், ஒய்சளரின் ஆதிக்கமும் செல்வாக்கும் பெருமையும் முன்எப்பொழுதும் இல்லாத அளவிற்கு உயர்ந்திருந்தமை புலனாகும்.

அரசு அலுவலர்: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் ஐயன்மழவராயன், சக்கரபாணி நல்லூரினனான 'அண்ணன் தமிழ்ப் பல்லவரையன்' போன்ற அரசியல் அலுவர்கள் ஆட்சியைச் செவ்வனே கவனித்து வந்தனர்.

கலை வளர்ச்சி: இப்பாண்டியனது காலத்தில் காலடி என்னும் ஊரினைச் சேர்ந்த இரசிவங்கரன் என்னும் கூபகராயன் 'வாழவல்ல பாண்டீச்சுரர்' என்னும் கோயிலைத் தருவையில் (திருநெல்வேலி மாவட்டம்) அமைத்தான்.

இவ்வேந்தனது ஆட்சி கி.பி. 1252-இல் முடிவுற்றது. இவனை அடுத்து அரியணையேறிய முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனும் இவனும் சில காலம் இணைந்து ஆட்சியை மேற்கொண்டனர்.

**இரண்டாம் வரகுண பாண்டியன் (கி.பி. 862-890)** தன் தந்தையான சீமாற சீவல்லபனின் (கி.பி. 815-862) இறப்பிற்குப் பின், பாண்டிய வேந்தனாக மணிமுடி சூடினான். ஐவர் மலைக் கல்வெட்டினால், இவன் கி.பி. 862-இல் அரியணையேறினான் என உறுதியாகக் கூறலாம். சின்னமனூர்ச் செப்பேடுகள் இவனை 'மன்னவர்கோன் வரகுணவர்மன்' என்று குறிப்பிடுகின்றன. தளவாய் புரச் செப்பேடு, சின்னமனூர்ச் செப்பேடு ஆகியனவும் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் இவ்வேந்தனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

அரசியல் சூழல்: இவ்வேந்தனது காலத்தில் பல்லவப் பேரரசினை நிருபதுங்கவர்மன் ஆண்டுவந்தான். நெடுங்காலம் நிலவிவந்த பாண்டிய பல்லவப் பகைமை இவ்விரு வேந்தரது காலத்தில் ஒழிந்து, நட்பு மலர்ந்தது. சோழ அரசோ எழுச்சி பெற்று வளர்ந்து கொண்டிருந்தது. விசயாலய சோழனுக்குப் பின் முதலாம் ஆதித்தசோழன் அரியணையேறினான். பல்லவ வேந்தன் நிருபதுங்கன் இறந்தான்; அவன் சகோதரன் கம்பவர்மனின் மகனான அப

ராசிதவர்மன் பல்லவ வேந்தனாகப் பதவியேற்றான், ஆதித்தனின் எழுச்சி சோழரின் மறுமலர்ச்சியாக மாறியது. சோழர்கள் தமிழக அரசு ஆதிக்கப் போட்டியில் இறங்கினர். இதுகாறும் நிலவிய பாண்டிய-பல்லவ இருமுனை ஆதிக்கப் போட்டி, சோழரின் எழுச்சியால் மும்முனைப் போட்டியாக மாறியது.

இடவைப் போர்: பாண்டியர் தாங்கள் இழந்த பகுதியினைக் கைப்பற்ற வேண்டி, சோழநாட்டின் மீது படையெடுத்துச் சென்று, காவிரியின் வடகரையில் உள்ள இடவை நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். (இடவைப் போர் பற்றிய செய்திகளை இடவைப் போர் என்னும் தலைப்பில் காண்க.)

திருப்புறம்பியப் போர்: பல்லவ வேந்தன் நிருபதுங்கன், பாண்டியன் வரகுணன் சோழநாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டதனைக் கேள்வியுற்று, பாண்டியரின் எழுச்சியைத் தடுக்க முடிவெடுத்தான். ஆதித்த சோழனும் இதனைப் பெருவாய்ப்பாகக் கருதினான். அபராசிதவர்மனின் நண்பனும் கங்க நாட்டு வேந்தனுமான முதலாம் பிருதிவிபதியும் பல்லவர்க்குத் துணைபுரிய இசைந்தான். இம்மூவரும் கூட்டுச்சேர்ந்து பாண்டியனை எதிர்த்தனர். இருதிறத்தாருக்கும் இடவையிலும் அதனைச் சூழ்ந்த பகுதியிலும் போர்கள் நிகழ்ந்தன. இறுதியாகத் திருப்புறம்பியம் என்னும் இடத்தில் இரு படைகளும் சந்தித்தன. இப்போர் கி.பி. 880-இல் நடைபெற்றதாகச் சதாசிவ பண்டாரத்தாரும் கி.பி. 885-இல் நடைபெற்றதாக நீலகண்ட சாத்திரியாரும் கருதுவர். ஆனால் இப்போர் கி.பி. 890-இல் நடைபெற்றதாகக் கொள்வதே பொருத்தம்உடையது. மண்ணியாற்றின் வடகரையில் நடைபெற்ற இப்போரில் கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதி கொல்லப்பட்டான். ஆயினும் பாண்டியர் தோல்வியைத் தழுவினர். இப்போரின் விளைவாகப் பாண்டியரின் வலிமை குறைந்ததுடன், சோழநாட்டின் பகுதிகளையும் இழந்தனர். சோழர் பேராதிக்கம் பெற இப்போர் வாய்ப்பளித்தது.

இறையன்பு: திருப்புறம்பியப் போருக்குப்பின் வரகுணவர்மன் நாட்டாட்சியில் நாட்டம் கொள்ளாது, சிவபெருமானைச் சிந்தையில் தேக்கிச் சிவப்பக்தியில் ஆழ்ந்தான். இவன் நாடாளும் பொறுப்பினைத் தன் தம்பி வீரநாராயணனிடம் ஒப்படைத்ததாகத் தெரிகிறது. இவன் தனது இறுதிக்காலத்தினைத் தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர்த் திருக்கோயிலில் கழித்ததாகவும் கூறப்படுகிறது. இவ்வேந்தன் திருச்செந்தூர் முருகன் கோயிலில் ஆண்டு முழுவதும் வழிபாடு இடையீடின்றி நடைபெற, 1400 பொற்காசுகளைத் தானமளித்துள்ளான். திருக்கோடிகாவல் கோயிலில் சரசுவதி, கணபதி சன்னிதிகளில் விளக்கெரிக்கப் பொன்தானமும், திருச்சாத்துறைக் கோயிலுக்கு 300 காசுகளும், திருச்சிராப்பள்ளித் திருமலைப் பெருமானடிகளுக்கு 527 கழஞ்சுப் பொன்னும் தானமளித்துள்ளான். தஞ்சை மாவட்டம் திருநெய்த்தானம் மகாதேவர் கோயிலில் 'வரகுண மகாராசா விளக்கு' எரிக்கப்படவும் பொன் தானமளித்துள்ளான்.

கட்டிய கோயில்கள்: இறைவன் கோயில்களுக்குத் தானங்கள் பல வழங்கிய வரகுணன் கோயில்களையும் கட்டியுள்ளான். இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர்த் திருத்தளிநாதர் கோயில், இவ்வேந்தனது காலத்தில் கட்டப்பட்டது. தஞ்சை மாவட்டம் திருவையாற்றுக்கருகில் உள்ள திருநெய்த்தானக் கோயில், திருப்பத்தூர்க் கோயில் பாணியுடன் ஒத்துள்ளதால் இதுவும், இவனது ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. இவன் திருவிடைமருதூர் சோதி மகாலிங்கேசுரர் கோயிலுக்கு வடபால் கூடல் நாயகனுக்குக் கோயில் எடுப்பித்ததாகவும், குடதிசைக் கோபுரத்தினை அமைத்ததாகவும் மருதவனப்புராணம் (திருவிடைமருதூர்ப் புராணம்) கூறுகின்றது. நாங்குநேரிவட்டம் இராதாபுரத்தைச் சார்ந்த, 'வரகுண பாண்டியபுரம்' என்றும் ஊரிலுள்ள சிவன் கோயில் 'வரகுண ஈச்சரம்' என்றும் சொல்லப் பெறுகிறது.

மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுணனின் காலத்தில் வாழ்ந்தவர்; இப்பாண்டியனின் சிவ பக்தியை, இவர் தமது திருச்சிற்றம்பலக் கோவையாரில் வியந்து பாடுகிறார். நம்பியாண்டார் நம்பியும் தமது கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில் வரகுணனின் சிவபக்தியைப் பாராட்டுகிறார். பட்டினத்தாரும் இவ்வேந்தனது சிவபக்தியைப் போற்றிப் 'பெரிய அன்பின் வரகுணதேவர்' எனச் சுட்டுகிறார். வைணவ சமயப் பெரியாரான நம்மாழ்வாரும் இவ்வேந்தனது காலத்தவரேயாவார். வரகுணன் பெருமையைக் கூறும் 'வரகுணன் கோவை' இக்காலத்தில் இயற்றப்பட்டதாகலாம்.

அரசியல் அலுவலர்: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் பராந்தகப்பள்ளி வேளான் நக்கன்புள்ளன், அண்டநாட்டு வேளான், வெண்பநாட்டு வேளான், மனோமயன் மாறன் முதலான அரசியல் அதிகாரிகள் இவ்வேந்தனுக்கு உறுதுணை புரிந்தவர்களாவர். நக்கன் புள்ளன் இரண்டாம் வரகுணனின் படைத்தலைவனாகப் பணிபுரிந்தான். எட்டிச்சாத்தன் என்பான், சாத்தூர்ப் பகுதிகளை இவனுக்குட்பட்டு

ஆண்டான். வரகுணவர்மன் ஒரு பாண்டிய வேந்தன் என்ற முறையில் புகழ்பெற்றதைக் காட்டிலும் சிவபக்தன் என்ற முறையில் பெற்றபுகழ் அதிகமான தாகும் மஇரா.

**இரண்ணவதி** மிகத் தொன்மையான ஆறுகளுள் ஒன்று. இந்த ஆறு, உத்தரப்பிரதேச மாநிலத்தில் கோரக்பூர் மாவட்டத்தின் வழியாகக் கண்டகி ஆற்றிற்கு 13 கி.மீ. மேற்காகப் பாய்ந்து, கோக்கிரா எனப்படும் சரயூ ஆற்றில் கலக்கிறது. குசிநகரத்தை ஆண்ட மல்லர்களின் சாலவனம் இரண்ணவதி (Hirannavati) ஆற்றங்கரையில் அமைந் திருந்தது.

**இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர்; பத்துப் பாட்டின் இறுதியிலமைந்துள்ள மலைபடுகடாம் என்னும் ஆற்றுப்படைச் செய்யுளை இயற்றியவர். இச்செய்யுள், கூத்தரை ஆற்றுப்படுத்துவதாக உள்ளமையால் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கப் படுகிறது. இரணியமுட்டம் என்பது, மதுரையை அடுத்துள்ள ஆனைமலை முதலிய இடங்களைத் தன்னகத்துக் கொண்ட பகுதி எனக் கருதப்படுகிறது. அப்பகுதியிலுள்ள பெருங்குன்றூர் புலவரது ஊராகும். இவ்வூர் தொண்டை நாட்டிலுள்ளது என்று கூறுவாருமுளர். கௌசிகனார் என்னும் பெயரால் இவர் அந்தணராவார் என்பது தெரிகிறது. பேராசிரியரும் தம் தொல்காப்பிய மரபியலுரையில் (தொல். மரபு. 74) பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன் என்னும் பெயரை அந்தணர்க்குரியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் மீது மலைபடுகடாம் எனப்பெரிய 582 அடிகள் கொண்ட நெடும்பாடலைப் பாடியுள்ளார். இதில் இடம் பெற்றுள்ள 'தீயினன்ன ஒண் செங்காந்தள்' (147) என்னும் அடி ஆனந்தக் குற்றமுடையது என்று ஆளவந்த பிள்ளையாசிரியர் என்னும் பிற்கால ஆசிரியர் குறை கூற, இப்பாடலுக்கு உரை வரைந்துள்ள நச்சினார்க்கினியர் அதனை மறுத்துக் கூறியுள்ள விளக்கத்தில் பெருங்கௌசிகனாரின் பெருமை புலப்படுத்தப்பட்டுள்ளது. அதன்கண் இவரை 'நல்லிசைப் புலவர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் தம் ஆற்றுப்படையில் இசைக் கருவிகளைப் பற்றியும் பண்கள்பற்றியும் கூறியிருப்பது, இவருடைய இசைத் தமிழ்ப் புலமையைக் காட்டுவதாக உள்ளது. இவர் மலைப் பகுதியில் உள்ள பல்வேறு ஒலிகளையும் குறிப்பிட்டு,அவை ஒருங்குதிரண்டு யானையின் கடாம் (மதநீர் பாய்வதால் ஏற்படும் ஒலி) போல முழங்கின என்பதனை 'மலைபடுகடாம்' என்று குறிப்பிட்டுள்ளார். இத் தொடர்ப் பொருளின் சிறப்பு நோக்கி இப் பாடல் இப்பெயரால் குறிக்கப்படுகிறது.

பெருங்கௌசிகனார் பாடலாக நற்றிணையில் இருபாடல்கள் (நற். 44, 199) உள்ளன. இவை குறிஞ்சி முல்லை ஆகிய இரு திணைகளில் தலைவன் கூற்றாக அமைந்துள்ளன. இப் பெருங்கௌசிகனாரும் மலைபடுகடாம் பாடிய பெருங்கௌசிகனாரும் ஒருவராவர் என்று டாக்டர். உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

**இரணியவதைப்பரணி**, தமிழிலுள்ள பரணி என்னும் சிற்றிலக்கிய வகையிலமைந்த ஒரு நூல். திருமால் நரசிங்கமாகத் தோன்றி இரணியனை அழித்த செய்தியினைப் பாடு பொருளாகக் கொண்டமைந்தது இந்நூல். பொதுவாகப் பரணி இலக்கியம் அதன்கண் நடைபெறும் போரில் தோற்றவர் பெயர் அல்லது அவர் தம் ஊர்ப்பெயர் கொண்டு குறிக்கப்படுவது மரபு. அம்மரபு பற்றித் தோற்றழிந்த இரணியன் பெயரால் இந்நூல் 'இரணிய வதைப் பரணி' என வழங்கப்படுகிறது. இந்நூலாசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. தம்பெயர் அல்லது தம்மைப் புரந்தவர் பெயர் பற்றித் தெரிவிக்கும் குறிப்பு எதனையும் இவர் தம் பரணியில் வெளிப் படுத்தவில்லை. கடவுள் வாழ்த்துப் பகுதியில் அரங்க நாதரையும் வளவனையும் குறிப்பிட்டுச் சிறப்பித்திருப்பது கொண்டு, இவர் சோழ நாட்டினைச் சேர்ந்தவராவர் என்று கருதலாம். பல தாழிசைகளில் இந்நூலாசிரியர் திருவரங்கத்தைச் சுட்டிச் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர், இராமானுசரை எதிராசன் என்றும், தவராசன் என்றும் குறிப்பிட்டு வாழ்த்துவதால் இவரது காலம், கி.பி. 1137-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டது என்பது தெளிவு. இவர் காலம் பற்றி ஆராய்ந்த அறிஞர் இவர் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி அல்லது கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்று கருதுகின்றனர். 'தேனறாமகிழ்த் தொடையல்' எனத் தொடங்கும் நம்மாழ்வார் காப்பாக அமைந்த விருத்தத்தினோடு அமையும் இப்பரணி இலக்கியம், 693 தாழிசைகளைக் கொண்டுள்ளது. இந்நூல் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது. கூளிக்குக் காளி கூறியது, திரு அவதாரம், போர் பாடியது, களம் காட்டல், கூழ் அடுதல் ஆகிய 14 பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்பரணி இலக்கியம் நா. வரதராசலு நாயுடு என்பவரால் 1974-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

இந்நூலிலுள்ள திருவவதாரம் என்னும் பகுதி, பிரகலாதன் வரலாற்றினை மிக விரிவாக 209 தாழிசைகளில் கூறுகிறது. பொதுவாகப் போர் இலக்கியமாக அமையும் பரணி நூல்களில், ஒன்பான் சுவைகளில் சாந்தம் (அமைதி) என்னும் சுவை வெளிப்படுவதற்கு வாய்ப்புக் குறைவேயாகும். இதற்கு மாறாக, இப் பரணியில் சாந்தச் சுவையும் வெளிப்பட்டுத் திகழ்கிறது. எளிமையும் இனிமையும் மிக்கமைந்த செய்யுள்கள், சூழலுக்கேற்ற சந்த நலங்களைக் கொண்டமைந்துள்ளன. 'அது கிடக்க' (338) 'ஒரு மிடா ஒரு வாயாக உண்டு' (673), 'பசிக்கொரு பாசனம்' (122), 'வயிறு எரிய' (548) முதலிய வழக்குச் சொற்களையும் தொடர்களையும் இந்நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். திருமால் உலகனைத்தையும் உண்டு பின் உமிழ்ந்தது அதிலுள்ள பாலை நிலத்தின் வெம்மையைப் பொறுக்க ஆற்றாமையினாலேயாகும் என்னும் கருத்தில், 'வண்டு மேவிய தண் துழாய் புனை மாயன்முன் எழு பாரெலாம், உண்டு மீள உமிழ்ந்தது அச்சுரம் உற்ற வெம்மை பொறாமையே' என்று தற்குறிப்பேற்றிக் கூறியிருப்பது, நூலாசிரியரின் கற்பனை நயத்திற்கோர் எடுத்துக்காட்டாம்

**இரணியன்** 1) காசியபர் என்ற முனிவரின் மைந்தன்; இரணியகசிபு எனப்படுவான். காசிபருக்கு அதிதி, திதி என்று இரு மனைவியர் இருந்தனர். அதிதிக்குப் பிறந்தவர்கள் ஆதித்யர் என்றும், திதிக்குப் பிறந்தவர் தைத்யர் என்றும் அழைக்கப்பட்டார்கள். தமோகுணம் நிரம்பி இருந்ததால் இவர்கள் அனைவரும் பிறரைத் துன்புறுத்தும் அரக்கர்களாக இருந்தனர். இவர்களுள் முதன்மையானவன் இரணியன் ஆவான். இவன் தாயின் பெயர் திதி. இவனுக்கு இரணியாக்கன் என்றொரு தம்பி இருந்தனன். இரணியன் நான்முகன் அருளினால் மிகவும் வலிமை பெற்று, இந்திரனிடமிருந்து அவனுடைய பதவியைப் பறித்து, மூவுலகையும் தன் வசமாக்கி, அனைவரையும் துன்புறுத்தி வந்தான். இவன் தனக்கு மேம்பட்டவராக எவரையும் கருதவில்லை. தன் தம்பி இரணியாக்கனைக் கொன்ற திருமாலிடம் தீராப்பகை கொண்டான். திருமாலைத் தெய்வமாகக் கருதி அவர்பால் பக்தி மிகக் கொண்ட தன் மகனான பிரகலாதனைச் சினந்து, அரக்கர்களைக் கொண்டு பலவகைப் படைக்கலங்களால் தாக்கச் செய்தும், கொடிய நஞ்சுடைய அரவங்களால் தீண்டச் செய்தும், யானைகளால் மலையினின்று கீழே தள்ளச் செய்தும், நெருப்பிலிட்டு எரிக்கச் செய்தும் பலவாறாகத் துன்புறுத்தி வந்தான். பரமன் அருளால் துன்பம் எதுவுமின்றி இவற்றை எல்லாம் கடந்து வந்த பிரகலாதன், திருமாலின் மேன்மையை மேலும் தீவிரமாக எடுத்துரைத்தான். 'தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் தூயன்சோதி நாராயணன்' என்று கூறிய தன் மகன் சொல்கேட்டுச் சினந்த இரணியன் 'இந்தத் தூணில் உன் திருமால் இருப்பாரா?' என்றுகேட்டு அருகிலிருந்த தூணைத் தன் காலால் எட்டி உதைத்தான். அப்பொழுது அத்தூணைப் பிளந்துகொண்டு மிகவும் அச்சுறுத்தும் நரசிம்ம வடிவுடன் வெளிவந்த திருமால், இரணியனைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு நிலைப்படிக்கு எடுத்துச் சென்றார்.

முன்னர் இவன் நான்முகனைக் குறித்துத் தவமியற்றி ஒரு வரம் பெற்றிருந்தான். மனிதனாலோ விலங்காலோ படைக்கலங்களாலோ வீட்டிற்கு உள்ளிடத்திலோ வெளியிடத்திலோ, பகலிலோ இரவிலோ நீரிலோ புவியிலோ வானிலோ மரணம் ஏற்படக் கூடாது என்பதே அவ்வரமாகும். அதனால் திருமால் மனித உடலும், சிங்கத் தலையும் கொண்டு நரசிம்மமாக வந்து, நிலைப்படியில் அமர்ந்துஅவன் உடலைத் தம் மடியில் கிடத்திக் கூரிய நகங்களால் கிழித்துக் கொன்றார். மேலும் அவன் குருதி கீழே சிந்தாமல் தாமே குடித்தார். இரணியன் வரலாறு பாகவதம், நரசிங்க புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

2) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்னும் தமிழ்நாடகத்தின் தலைவன் புராண மரபில் அசுரனாக வருணிக்கப்படும் இரணியனுக்கு மாறாக, இங்கு அவன் ஓரினத்தலைவனாகவும் பெருவீரனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளான். இராமாயணக் கதையமைப்பினை எதிர்த்துத் தமிழில் இராவண காவியம் உருவாகியதைப் போல, இரணியன் பற்றிய மரபு வழிக் கருத்தினை மறுத்து இந்நாடகம் படைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டின் இடைக்காலத்தே தமிழகத்தில் தோன்றிய பகுத்தறிவு இயக்கத்தின் கொள்கைப் பரப்பு நாடகமாக இது நடிக்கப்பட்டது.

ந.க.

***இரணியாக்கன்*** காசியப முனிவருக்குத் திதி என்னும் பெண்ணிடம் பிறந்தவன். இவன் அண்ணன் பிரகலாதனுக்குத் தந்தையாகிய இரணியகசிபு. இவனும் இரணியகசிபுவும் வைகுந்தத்தில் திருமாலின் வாயில் காவலரான 'சய, விசயர்களாக' இருந்து, சனகாதி முனிவர்களின் சாபத்தால் அசுரராய்ப் பிறந்தனர் என்று பாகவதம் கூறும்.

இரணியாக்கன் பற்றி நரசிம்மபுராணம் பின்வருமாறு கூறுகிறது: 'இரணியாக்கன் பாதாளத்தில் வசித்தான். தேவர்களுடன் பகைமை பாராட்டி அவர்களைத் துன்புறுத்தினான். உலகில் மனிதர் இயற்றும் வேள்விகளாலேயே தேவர்களின் வன்மை

கூடுகிறது என்பதை உணர்ந்து, மனிதர் வாழும் உலகின் தாங்கும் ஆற்றலைக் கெடுத்துப் படைப்பில்லாமல் செய்ய எண்ணினான். பூமியின் தாங்கும் ஆற்றலைப்பறித்துக் கொண்டு நீரினுள் மூழ்கிப் 'பாதாளத்திற்குச்' சென்றுவிட்டான். 'அடிப்படை வன்மையை' இழந்த உலகும் நீரில் மூழ்கிவிட்டது. அறிதுயில் நீங்கி எழுந்த திருமால் வேதவடிவமான பன்றி உடல்கொண்டு பாதாளம் சென்று கொம்பினால் பூமியைத் தாங்கி மேலே வந்தார்'.

திருமால் பன்றி உருவெடுத்துத் தேவர்களுடன் சென்று இரணியாக்கனை எதிர்த்தார். பின் நடந்த 'இருவர் போரில்'இரணியாக்கனை இரு கூறுகளாகக் கிழித்தெறிந்து, கடலையும் இரண்டாகப் பிளந்தார் என்று மச்சபுராணம் கூறுகிறது.

கல்கி புராணம், 'இந்திரன் அசுரப்படைகளால் தோல்வியுற்றபொழுது மூவுலகை வெல்லும் ஆற்றல் படைத்த இரணியாக்கன், அவனைக் கொல்ல ஆயத்தமானான். அப்போது அவனைக் கொன்று உலகை உய்விக்க நீர் பன்றி வடிவு கொண்டீர்' என்று திருமாலைத் துதிக்கிறது.

'தேவர்கள் செல்வம் கண்டு பொறாமையுற்ற அசுரர்கள், தேவர்களை அடக்க இரணியாக்கனைத் தலைவனாகக் கொண்டனர். இரணியாக்கன் இலட்சம் ஆண்டு, காற்றை மட்டும் உட்கொண்டு தவம் புரிந்து பிரமனிடமிருந்து ஆயிரக்கணக்கில் ஒப்பற்ற வரங்களைப் பெற்றான். பூமி அவன் வயமாகியது. நீரில் மூழ்கியது. தேவர்கள் வேண்ட அகத்திய முனிவர் நீரில் மூழ்கியுள்ள பூமியைப் புலப்படுத்தக் கடல் நீரினைக் குடித்தார். அதன் பின் திருமால் பன்றி (வராக) உருக் கொண்டு, இரணியாக்கனையும் அவனுடன் கூடிய அசுரர்களையும் கொன்று பூமியைக் காத்தார்', என்று இந்நிகழ்ச்சி பற்றி மகாபாரதம் கூறுகிறது.

தமிழிலுள்ள செவ்வைச் சூடுவார் பாகவதமும் திருமால் கேழலாகி இரணியாக்கனை அழித்ததையும், அதனால் அவன் அண்ணன் இரணியகசிபு திருமாலிடம் பகைமை கொண்டதையும் குறிப்பிடுகிறது.

சீ.சௌ.

**இரத்தக்காணி:** போரில் இறந்துபட்ட வீரனின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் நிலத்தானம் இரத்தக்காணி எனக் குறிக்கப்பட்டது. போரில் பெருவீரம் காட்டி விழுப்புண்பட்டுத் தனது இரத்தத்தைச் சிந்திய மாவீரனை இழந்து தவிக்கும் அவன் குடும்பத்தாருக்கு நிலம் அளிக்கப்படுதல் வழக்கம். இதனை உதிரப்பட்டி, நெத்துருப்பட்டி, நெத்துருகொடிகி, கல்நாடு, மானுவக்காடு எனவும் குறிப்பர். பொதுவாக ஊர்மக்கள் இறந்த வீரனின் குடும்பத்திற்கு, அவனது தொண்டினைப் பாராட்டி இரத்தக் காணிக்கை அளிப்பர். சில வேளைகளில் வேந்தனும் பிறரும் கூட இரத்தக் காணிக்கை அளித்துள்ளனர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். சமூக நலனுக்காக உயிரை விட்டோர், நவகண்டம் கொடுத்தோர் ஆகியோரின் நினைவாகவும் உதிரப்பட்டி கொடுக்கப்பட்டது.

திருப்புறம்பியம் என்னுமிடத்தில் வரகுண பாண்டியனுக்கும் சோழனுக்கும் கி.பி. 890-இல் பெரும் போர் நடந்தது. இப்போரில் சோழனுக்குத் துணைபுரிந்தது, கங்க மன்னனாகிய முதலாம் பிருதிவிபதி இறந்து பட்டான். இவன் நினைவாக நடுகற்கோயில் ஒன்று நிறுவப்பட்டதுடன், உதிரப் பட்டி என்ற நிலதானமும் அளிக்கப்பட்டதனையும் எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

'........ குடும்பரில் பெரிய தேவப்பள்ளன் அணைவெட்டிப் போகையாலே இவன் மகளுக்கு ஊரார்களிட்ட உதிரப்பட்டி குடுத்தபடி தபாவை நிலம் அரைமா அனைநிலம் சந்திராதித்த வல்மானி போவிப்பார் ......' இங்குப் பெரிய தேவப்பள்ளன் என்பான் ஊர்நன்மைக்காக அணையில் ஏற்பட்ட உடைப்பை அடைக்குங்கால் இறந்துபட்டான். எனவே அவனுடைய மகளுக்கு ஊரார் உதிரப்பட்டி அளித்தனர். பண்டு உடன்கட்டை ஏறினோர் குடும்பத்திற்கும் சாவேற்றுப்படையினர் குடும்பத்திற்கும் இரத்தக்காணி வழங்கப்பட்டுள்ளது.

**இரத்ததானம்:** அறுவைச் சிகிச்சைக் காலத்திலும், காயத்தின் காரணமாக மிகுதியான இரத்தம் உடலைவிட்டு • வெளியேறும் காலத்திலும், தீக்காயத்தினால் உடலிலிருந்து மிகுதியான ஊனீர்(Plasma) வெளியேறி விடும்போதும், குழந்தைப் பேற்றின்போதும், உடலில் இரத்தக் கசிவு (Hemorrhage) ஏற்பட்டு அது நிறுத்தமுடியாதபோதும், ஒருவர் உடலினின்று குறிப்பிட்ட அளவு இரத்தம் எடுக்கப்பட்டு, இரத்தம் இழந்தவரின் உடலினுள் ஊசி வழியே செலுத்தப்படுகிறது. இரத்தம் கொடுக்கப்படவேண்டிய சூழமைவு ஏற்படும்பொழுது முன்னறிவிப்பின்றி இதற்கான இரத்தத்தை எடுத்து மற்றவர்களுக்குக் கொடுப்பது கடினமானதாகும். இக்காரணம் பற்றி இரத்தம் கொடுப்பவர் உடலிலிருந்து முன்னேற்பாடாக இரத்தத்தை எடுத்து அதனைத் தக்க முறையில் சேமித்து வைத்துக்கொள்கின்றனர். ஒருவர் தம் உடலிலிருந்து குறிப்பிட்ட ஓரளவு இரத்தத்தை மற்றவர்களுக்காக வழங்குவது இரத்ததானம் (Blood Donation) எனப்படும். இவ்வாறு இரத்தம் வழங்குபவர்களுக்கு அரசுப் பொது மருத்துவமனைகளில் குறிப்பிட்ட ஒரு சிறிய தொகையை அன்பளிப்புப் பணமாக வழங்குகின்றனர். தனியார் நிறுவனங்

களிலும் கல்வி நிலையங்களிலும் பலர், இதற்காகப் பணம் பெற்றுக்கொள்ளாமல் இரத்தம் வழங்குகின்றனர். வழங்கப்பட்ட இரத்தத்தைச் சேமித்து வைக்கும் இடம் இரத்த வங்கி (Blood Bank) என்று குறிப்பிடப்படுகிறது.

இரத்தம் சிரையினின்று (Vein) ஊசிமூலம் எடுக்கப்பட்டு நெகிழிக்குழாய் மூலம் (Plastic Tube) நுண்ணுயிரிகளில்லாமல் தூய்மைப் படுத்தப்பட்ட ஒரு குடுவையில் 'சோடியம் சிட்ரேட்டுடன்' (Sodium Citrate) கலந்து வைக்கப்படுகிறது. இவ்வாறு வைப்பதனால் இரத்தம் உறையாமல் நீர்மநிலையிலேயே இருக்கிறது.

இரத்தம் வழங்கும் முறை முதல் உலகப் போர்க் காலத்தில் 1918-ஆம் ஆண்டு தொடங்கியது. இம்முறையை ஆசுவால்டு எச். இராபர்ட்சன் (Oswald H. Robertson) கண்டுபிடித்தார். அவர் ஒருவர் உடலிருந்து எடுத்த இரத்தத்தைப் பல நாள் கெடாமல் 2° முதல் 4° செண்டிகிரேடு வரையிலான வெப்பநிலையில் வைத்திருக்கமுடியும் என்று கண்டிபிடித்தார். சிகாகோ நகரத்திலுள்ள குக்கு மாவட்ட மருத்துவமனையில் (Cook County Hospital) 1937-ஆம் ஆண்டில் முதல் இரத்த வங்கி தொடங்கப்பட்டது. 'திரைசோடியம் சிட்ரேட்டு' (Trisodium Citrate), 'சிட்ரிக் அமிலம்' (Citric Acid), 'தெக்சுடிரோசு' (Dextrose), காய்ச்சி வடிநீர் (Sterile Water) ஆகியவை கலந்த 'ஏசிடி' (ACD-Acid Citrate Solution) என்று குறிப்பிடப்படும் கலவையுடன் இரத்தம் இரத்த வங்கியில் சேமித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு வைக்கப்படும் இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் 21 நாள் கெடாமல் இருக்கின்றன. இக்கால அளவிற்குள் இந்த இரத்தம் மற்றவருக்குக் கொடுக்கப்பட்டால் அவருடைய உடலில் அது 100 நாள் கெடாமல் இருக்கும். இரத்த வங்கியில் 21 நாள்களுக்கு மேல் வைக்கப்பட்ட இரத்தத்தைப் பயன்படுத்துவதில்லை. இந்தக் கால அளவுக்கு மேல் வைத்திருக்க நேர்ந்தால் இரத்தத்திலிருந்து சிவப்பு அணுக்களை எடுத்துவிட்டு அதிலிருந்து ஊனீரை மட்டும் பிரித்தெடுத்துச் சேமித்து வைக்கின்றனர். இரத்தம்-70° செண்டிகிரேடு வெப்பத்தில் பல நாள் கெடாமல் இருக்கும். ஊனீரைச் சேமித்து வைப்பது கடினமன்று. இரத்தம், குறைந்த வெப்பநிலையில் வைக்கப்பட்டுப் பின்னர் இயல்பு வெப்பநிலைக்கு மாற்றப்படும் முறையினால், அதிலுள்ள சிவப்பு அணுக்கள் அழிந்துவிடுகின்றன. இதனைத் தடுப்பதற்காக இரத்தத்துடன் 'கிளிசரால்' (Glycerol) அல்லது 'தைமெதில் சல்பாக்சைடு' (Dimethyl Sulfoxide) கலவையினைப் பயன்படுத்துகிறார்கள். ஊனீர்க் குறைவு இருப்பவர்களுக்கு ஊனீர் செலுத்தும் முறை பயன்படுத்தப்படுகிறது. ஊனீரைக் கடினப் பொருளாக மாற்றியும் சேமித்து வைக்கிறார்கள். இம்முறையில் ஊனீரிலிருக்கும் பொருள்கள் தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்டுச் சேமிக்கப்படுகின்றன. இதுபற்றிப் பல பயனுள்ள ஆய்வுகளைச் செய்தவர், ஆர்வர்டு பல்கலைக் கழகத்தைச் (Harvard University) சேர்ந்த எட்வர்டு சே. கோகன் (Edwrad J. Cohan) என்னும் மருத்துவ வல்லுநர் ஆவார்.

இரத்தத்தைச் சேமித்து வைக்கும்பொழுது அந்த இரத்தம் எப்பிரிவைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கிறார்கள். மனித இரத்தத்தில் நான்கு வகைகள் உள்ளன என்று காரல் இலாண்டுசிடைனர் (Karl Landsteiner) என்னும் ஆசுத்திரிய நாட்டு மருத்துவர் 1900-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். அவர் கண்டு காட்டிய முறை 'ஏ பி ஓ' (ABO) முறைஎன்று குறிப்பிடப்படுகிறது.

மாறுபட்ட பிரிவில் அமையும் இரத்தத்தினை ஒருவருக்குச் செலுத்தினால், அதிலுள்ள மாறுபட்ட பொருள்கள், செலுத்தப்பட்டவரின் இரத்தக் குழாய்களை அடைத்து அவருக்கு இறப்பினை உண்டாக்கலாம். பெரும்பாலும் அந்தந்த இரத்தப் பிரிவினரின் இரத்தத்தைச் செலுத்துவதே சிறந்தது என்று மருத்துவர்கள் கருதுகிறார்கள். இரத்தத்தை உடலிலிருந்து எடுப்பதற்குமுன் இரத்தம் கொடுப்பவரின் உடலில் தொற்றுநோய்கள், இரத்தத்தின் வழியே பரவக்கூடிய நுண்ணுயிரி நோய்கள் ஆகியவை இருக்கின்றனவா என்பதையும், அவரது இரத்தம் எப்பிரிவைச் சேர்ந்தது என்பதையும் சோதனை செய்து தெரிந்து கொள்வது மருத்துவரின் கடமையாகும்.

இரத்ததானம் செய்வதனால் ஏற்படும் பயன்கள்: இரத்த தானத்தினால் நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதுடன் வேறு பல பயன்களும் உள்ளன. இரத்ததானம் செய்வோரின் இரத்தத்தைச் சோதனை செய்துபார்க்கும் பொழுது அவர்களுக்கு ஏதேனும் நோய்கள் அல்லது இரத்தத் தொடர்பான நோய்கள் இருப்பின் அவற்றை அறியலாம். இதனைக் கொண்டு எவ்வகை இரத்தப் பிரிவினர்களுக்கு எவ்வகையான நோய்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன என்பதையும் ஆராய்ந்து கணக்கெடுப்புச் செய்துள்ளனர்.

பிறந்த குழந்தையிடம் காணப்படக்கூடிய இரத்தச் சிவப்பணுநோய் (Hemolytic Disease) ஆர்எச் இயைபிலாமை (Rh Incompatibility) யினால் ஏற்படுகிறது. குழந்தையின் இரத்தம் ஆர்எச் காரணியுடையதாக (Rh+) இருந்து, தாயின் இரத்தம் ஆர்எச் காரணி இல்லாத இரத்தப் பிரிவாக இருந்தால், கருப்பக்காலத்தில் தாயின்இரத்தத்தில் எதிரங்கங்கள் (Ontigens) தோன்றுகின்றன. இந்த எதிரங்கங்கள்

குழந்தையின் உடலில் உள்ள இரத்தச் சிவப்பணுக் களையடைந்து அவற்றை அழித்துவிடுகின்றன. இதன் காரணமாகக் குழந்தை இரத்தச் சிவப்பணு நோய் (Hemolysis) அல்லது இரத்தச் சோகை (Anaemia) போன்ற ஏதாவது ஒரு நோயுடன் பிறக் கலாம். இத்தகைய குழந்தைகளுக்குப் பிறந்தவுடன் Rh– இரத்தம் செலுத்துவதனால் அக்குழந்தைகளை இறப்பினின்று காப்பாற்ற முடியும். குழந்தையின் உடலில் உள்ள இரத்தம் மெல்ல மெல்ல அகற்றப் பட்டு, அதற்கு மாறாக Rh– இரத்தம் தொடுக்கப் படுகிறது. முதன்முறையாகக் கருத்தரிக்கும்பொழுது தாயின் இரத்தத்தில் இத்தகைய எதிரங்கங்கள் உரு வாவதில்லை. பிறப்புக் காலத்தில்தான் குழந்தை யின் இரத்தத்திலிருக்கும் சிவப்பு அணுக்கள் தாயின் இரத்தத்துடன் கலக்கின்றன. இந்த நேரத்தில் தாயின் உடலில் எந்தவித மாறுதல்களும் தோன்று வதில்லை. அடுத்த முறை கருத்தரிக்கும்பொழுது குழந்தையின் Rh+ இரத்தத்தினால் இயைபிலாமை ஏற்படுகிறது. ஆர்எச் இயைபிலாமையினால் இரத்த நோயுடன் பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றும் முறை, இக்காலத்தில் முன்னேற்றமடைந்துள்ளது. ஆர்எச் இயைபிலாமையினால் ஏற்படும் நோய் களைக் காட்டிலும் மிகுதியான நோய்கள் ‘ஏ பி ஓ’ இயைபிலாமையினால் குழந்தைகளுக்கு ஏற்படுகின் றன என்று கண்டுபிடித்துள்ளனர்.

ஒவ்வொருவரும் தத்தம் இரத்தப்பிரிவு என்ன என்று தெரிந்து கொள்வதால் வேறு சில சமூகப் பயன்களும் உள்ளன. குழந்தைக்குத் தந்தை, யார் என்பதை இரத்தப் பிரிவைக் கொண்டு கூற முடி யாது. ஆனால், குறிப்பிட்டவர் இக்குழந்தையின் தந்தை அல்லர் என்பதைக் கூறமுடியும். இரத்தப் பிரிவுகள் மரபுவழிப் பெறப்படுகின்றன. ஆதலின் தன் பெற்றோரின் இரத்தத்தில் காணப்படாத எதி ரங்கங்கள் குழந்தையின் இரத்தத்தில் காணப்படமுடி யாது. எடுத்துக்காட்டாக ஒரு குழந்தையின் இரத் தம் ஏ பிரிவாக இருக்கும்பொழுது அதன் தாய் தந்தை இருவரும் ஓ பிரிவினராக இருக்க முடியாது. இதனை ‘எம் என்’ (MN) இரத்தப்பிரிவு முறை யினைக் கொண்டும் விளக்கலாம். ஒரு தந்தையின் உடல் வகை (Phenotype) ‘எம்’ ஆகவும், மரபு வகை (Genotype) ‘எம் எம்’ (MM) ஆகவும் இருந்தால், அதாவது அவர் இரத்தப் பிரிவு ‘எம்’ ஆக இருக்க, அவர் அதனைத் தம் தாய் தந்தை இருவரிடமிருந்தும் மரபுவழியில் அடைந்திருந்தால், அவருடைய குழந் தைகளிடம் ‘எம் அல்லீல்’ (M allele) கட்டாயமாகக் காணப்படும். இதனைப் பின்வரும் அட்டவணையி னால் விளக்கலாம். இம்முறையில் இரத்தப் பிரிவு களைக் கண்டுபிடிக்கும்பொழுது மிகத்துல்லியமாக இரத்தத்தின் உட்பிரிவுகளையும் கண்டுபிடிக்கவேண் டும். ஏனெனில் இத்தகைய பாகுபாட்டில் சட்டக் கூறுகள் அமைந்துள்ளன. இவ்வாறு செய்தவன்

‘ஏ பி ஓ’ முறைப்படி ஒருவர் குழந்தையின் தந்தை இல்லை என்பதைக் கண்டுபிடித்தல் :

| தாய்–தந்தை | குழந்தையிடம் இருக்கக் கூடிய இரத்தப்பிரிவு | குழந்தையிடம் இருக்க முடியாதஇரத்தப்பிரிவு |
|---|---|---|
| ஓ×ஓ | ஓ | ஏ,பிஏபி |
| ஓ×ஏ | ஓ,ஏ | பி,ஏபி |
| ஓ×பி | ஓ,பி | ஏ,ஏபி |
| ஓ×ஏபி | ஏ,பி | ஓ,ஏபி |
| ஏ×ஏ | ஓ,ஏ | பி,ஏபி |
| ஏ×பி | ஓ,ஏ,பி,ஏபி | – |
| ஏ×ஏபி | ஏ,பி,ஏபி | ஓ |
| பி×பி | ஓ,பி | ஏ.ஏபி |
| பி×ஏபி | ஏ,பி,ஏபி | ஓ |
| ஏபி×ஏபி | ஏ,பி,ஏபி | ஓ |

மூலம், 62 விழுக்காடு அளவே ஒரு குழந்தையின் தந்தை, யார் என்பதனை உறுதியாகக் கூறமுடியும்.

இரத்தப் பிரிவு பற்றிய தெளிவான அறிவு எல்லோருக்கும் இருத்தல் இன்றியமையாதது. ஏனெனில், ஏதேனும் விபத்தில் சிக்கிக் கொண்டாலோ, வேறு எதிர்பாராத வகையாக உடலில் காயம் ஏற்பட்டு இரத்தம் இழந்துவிட்டாலோ எந்த இரத்தப் பிரிவினர் இரத்தம் கொடுக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் குழந்தையின் தந்தை, யார் என்பதைப் பற்றி எழக்கூடிய சிக்கல்களை ஓரளவிற்குத் தவிர்க்கலாம். 'ஆர்எச்' இரத்தப்பிரிவு இயைபிலாமையைத் திருமணம் நடக்கும் முன்னரே தவிர்க்க முடிகிறது. ஏனெனில், ஆர்எச் இரத்தப்பிரிவு இயைபிலாமையைப் பற்றிய அறிவு இல்லாமையினால், சில குடும்பங்களில் குழந்தைகளின்றிக் கணவன் மனைவியர் உளச் சமூகப் போராட்டங்களுக்கு உட்படுகின்றனர். ஊர்ப்புற மக்களும், கல்வியறிவற்றவர்களும் இதற்கான காரணத்தை அறிய முற்படாமல் குழந்தை இல்லை என்ற காரணத்தினால் மணவிலக்கு, மறுமணம் போன்ற முறைகளை நாடுகின்றனர். ஆதலின் இரத்த தானத்தினால் பல நற்பயன்கள் விளைகின்றன எனலாம். சா.ர.

**இரத்தம் சிந்தும் சண்டைகள்**: இரு குழுவினரிடை எழும் சண்டையில், பாதிக்கப்பட்டோர் உணர்ச்சி மிகுதியால் ஈடாகக் கொலை செய்யும்—பழிவாங்கும் போக்கால் விளைவதே 'இரத்தம் சிந்தும் சண்டை'யாகும் (Blood Fued). இக்குழுக்கள் தமக்குள் நிலவும் பகைமையினைத் தீர்க்க வழியில்லாதபோது, தொடர்ச்சியாக ஒருவரையொருவர் கொன்று குவித்துத் தம் பகைமை உணர்ச்சியினைக் கைவிடாமலிருக்கின்றனர். இவை வரலாற்றுக் காலத்திலிருந்து இக்காலம் வரை ஓர் சமுதாய நிறுவனமாக (Social Institution) இயங்கி வருகின்றன எனலாம்.

இது ஒரு குழுவினரிடையே தொடர்புடையதாகும். ஒரு குடும்பத்தினருக்கு மற்றொரு குடும்பத்தினர் இழைக்கும் பழிவாங்கும் செயலே, இரத்தம் சிந்தும் சண்டையாக உருவெடுக்கிறது. ஒருவனின் நெருங்கிய உறவினரிடமிருந்தும், அவனது கால்வழிப் பிரிவினரிடமிருந்தும்கிடைக்கக்கூடிய வலுவான பிணைப்பினைக் கொண்டுள்ளதே இச்சண்டைகளின் முதன்மையான பண்பாகும்.

இச்சண்டைகள் சமூகக் கட்டுப்பாட்டிற்குட்பட்டன; சட்டத்தைப் புறக்கணிப்பதால் இரத்தம் சிந்தும் சண்டைகள் ஏற்படுகின்றன என சீகல் கூறுகிறார். பதிலுக்குப் பதில் கொன்று, பின்னர்ச் சமாதானச் சடங்கினை (Ceremony of Reconcilation) மேற்கொள்ளல், இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு ஓர் முற்றுப் புள்ளியாக அமைகிறது. எனினும், பல சமுதாயத்தினரிடை இத்தகைய சண்டைகள், இருவரிடைப்பட்ட போராட்டமாகவே கருதப்படுகின்றன. மற்றும் உயிருக்கு நட்ட ஈடாகக் கால்நடைகளை அளித்தலாலும், இரத்தம் சிந்தும் சண்டைகள் முளையிலேயே கிள்ளியெறியப்படுகின்றன.

இரத்தம் சிந்தும் சண்டை, குழு அடிப்படையிலான சமூகங்களில், அரசியல் அமைப்பாக உள்ளது என இனப்பரப்பியலார் கூறுவர். இது சமுதாய அமைப்பின் பல்வேறு பிரிவினரிடை ஒருசமன்பாட்டை நிலைநாட்டுகிறது. எனினும், ஏதாவதொரு சமூகப் பிணைப்பு நீக்கப்பட்டு, மீண்டும் திரும்பப் பெறப்படாதபோதே நூயர் (Nuer) பழங்குடியினரிடை இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்கிறார் இவான்சு-பிரிச்சர்டு (Evans-Pritchard). ஒரு பழங்குடியினரின் சமுதாய அமைப்புகளைக் கொண்ட உட்சமுதாயங்களிடையே, ஒழுங்குபடுத்தப்பட்ட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நடத்தைகளே, இரத்தம் சிந்தும் சண்டைகளாக விளங்குகின்றன.

இரத்தம் சிந்தும் சண்டைகளின் காரணங்கள்: நெருங்கிய உறவினரான இருதரப்பினரிடையே பகைமையால் முகிழ்த்த வன்முறையே இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு முக்கியக் காரணமாய்த் திகழ்கிறது. இச்சண்டையினுள், பொதுவாகப்பழங்குடியினரிடை காணப்பட்ட வரலாற்றுப் புகழ் பெற்ற இரத்தம் சிந்தும் சண்டைகள் சிறப்பிடம் பெறுவன. இன்றளவும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பெருமளவில் காணப்படும் குடும்பச் சண்டைகள் இவற்றுடன் நெருக்கமாக தொடர்புடையன. இக்காலச் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு வகையான வன்முறைகள், இரத்தம் சிந்தும் சண்டைகளை உண்டாக்குகின்றன. எனினும், இன்றைய நிலையில் இவை மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளன. பழங்குடியினர் சண்டைக்கும், இக்காலச்சண்டைக்கும் உண்மையான வரலாற்றுத் தொடர்ச்சி இல்லாதபோதிலும், பல வகைகளில் அவைபோன்ற சண்டைகள் இன்றும் தொடரப்பட்டு வருகின்றன. இரத்தம் சிந்தும் சண்டைகள் பழங்காலச் சட்டத்தின் வெளிப்பாடாகத் திகழ்ந்தன என்பதும் குறிப்பிடத் தகுந்த செய்தியாகும். ஒரு குறிப்பிட்ட குழுத்தலைவரிடம் அல்லது சங்க உறுப்பினரிடம் கொண்ட தனிப்பட்ட பற்றுக் காரணமாக எழும் வன்முறை வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெறுகிறது என்பது தெளிவு. சிகாகோவில் இத்தாலியக் குழுவினர், ஐரிசுக் (Irish) குழுவினருடன் மிருகத்தன

மாகப் போரிட்டு வந்துள்ளனர். குறைந்த மக்கள் தொகையுடன் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் வாழும் மக்களிடையே, குடும்பச் சண்டைகள், சட்டப்படியான தற்காப்பிற்காகப் பரவலாக ஏற்பட்டனவாகும். இவை பால்கன்சு (Balkans), கார்சிகா (Corsica), சிசிலி (Sicily), இசுகாட்லாந்து (Scotland), ஐக்கிய நாடுகளின் தென்மலைப் பகுதி ஆகிய இடங்களில் நிகழ்கின்றன. இவ்விடங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நீதிமன்ற நிருவாகம் (Judicial Administration) நிலைநாட்டத் தவறியமையால், இவர்கள் தற்காப்பிற்காக வியக்கத்தக்க சண்டைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாக, ஆட்பீல்டு மெக்காய் (Hatfield Mccoy) சண்டையினைக் கூறலாம். கெண்டக்கியினை (Kentucky) மேற்கு வெர்சீனியாவிலிருந்து பிரிக்கும் ஆற்றுப் பிளவின் எதிரெதிர் வாழ்ந்த குடும்பத்தினரிடையே இச்சண்டை நிகழ்ந்தது. வேட்டையாடுவதற்குச் சிறந்த இடமாகத் திகழ்ந்து, அரசாங்கத்தால் பாதுகாக்கப்படாத இவ்விடத்தில் முதன்முதலாகக் குடியேறியவர்கள் வேட்டையாடுதல், பயிரிடுதல், மீன்பிடித்தல் ஆகியவற்றை மேற்கொண்டிருந்தனர். இம்மக்களின் சொத்துகள், கொள்ளைக்காரர்களால் கவரப்படும் நிலையில், தங்களையும் சூழ்ந்துள்ளோரையும் காப்பாற்றிக் கொள்ள ஆட்பீல்டு, மெக்காய் ஆகிய இருவேறு குழுவினர், எதற்கும் அஞ்சாத, சட்டத்திற்குப் புறம்பான தனித்தனி கூட்டங்களை அமைத்துக் கொண்டு போரிட்டனர்.

பழங்குடியினரின் உணர்வினை வெளிப்படுத்தலும், பண்டைக் காலச்சட்டத் தொகுப்பினை உயிர்ப்பித்தலுமே சண்டைகளின் தூண்டுதலுக்குக் காரணமெனக் கூறலாம். இனக்குழு நிலை, நாட்டுரிமைகளின் நிலை ஆகியவை வேகமாக மாற மாற, இவற்றிற்கிடையே பண்டைக்காலத்துச் சண்டைகளின் சில பண்புகள் தோன்றுகின்றன. மக்களின் சுதந்திர இயக்கத்தில் ஏற்படும் சில மாறுதல்கள், வருமானம் அல்லது தமக்கு அளிக்கப்படும் மரியாதைகளில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் ஆகியவை வன்முறை எழுவதற்கான சாத்தியக்கூறுகளையும் பழிவாங்கும் உணர்வையும் பகைமையையும் தோற்றுவிக்கின்றன. எங்கெல்லாம் சமுதாய மாற்றம் முரண்பாட்டினை உண்டாக்குகிறதோ, அங்கெல்லாம் மனத்தாங்கல்களைச் சமன்பாடு செய்வதற்காகப் பழங்கால முறைகள் தோன்றுகின்றன.

ஒரு பிரிவினரிடையே ஏற்படும் வாக்குவாதம் வெகுவிரைவில் சண்டையாக மாறி, ஒற்றுமையினைக் குலைக்கிறது. இங்ஙனம் குழு ஒற்றுமை குலைந்து விடுமோ என்று பயப்படும்போது, தமது நம்பிக்கையின்மையினை அடக்கி வைக்கவியலாமல், அதனைத் தமது எதிராளியின் மீது காட்டுகின்றனர். இச்சண்டைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டோர் நினைக்கவியலாத செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இதனால் சடங்குகள், சின்னங்களுக்கு மரியாதை அளித்தல், பெயர்கள், அவற்றுடன் இணைந்த கௌரவச் சின்னங்கள் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொள்கின்றனர். இவற்றை அவமதிக்கும் செயல்களை எதிர்க்கும் இரத்தம் சிந்தும் சண்டையில் ஈடுபடுவோர், தமக்குள் இணைந்து நன்முறையிற் செயற்படுகின்றனர்.

பழங்குடிச் சமூக அமைப்புகளில் இரத்தம் சிந்தும் சண்டைகள்: நைசீரியாவின் (Nigeria) திவ்(Tiv) பழங்குடியினரும் ஆப்பிரிக்க நூயர் பழங்குடியினரும் திங்காப் (Dinka) பழங்குடியினரும் பிரிவுகளைக் கொண்ட கால்வழி முறைகளைக் கொண்டுள்ளனர். இத்தகைய சமுதாயங்களில், ஒரு கால்வழியின் உறுப்பினர்கள், மற்றொருவனின் கால்வழி உறுப்பினர்களைக் கொல்லும்போது கொலைப்பட்ட கால்வழி உறுப்பினர்களைச் சார்ந்த கால்வழியினர் கொலை செய்தவனை அல்லது அக்கால்வழியின் வேறு ஓர் உறுப்பினனைக் கொல்கிறார்கள். இத்தகைய பழி வாங்கும் உணர்வு தண்டனைக்குரியதாகக் கருதப்படுவதில்லை. மாறாக, 'சில சமுதாயங்களில் கால்வழியினரிடையே சம தகுதியினை நிலைநாட்டவும் உதவுகிறது'.

ஓர் உயிருக்கு ஈடு மற்றோர் உயிர் என்பதே பொது விதியாம். எனினும், சில சமுதாயத்தில் கொல்லப்படவிருக்கும் மனிதன், இறந்தவனின் உயர் நிலைக்கு ஒத்தநிலை உள்ளவனாயிருத்தல் வேண்டும் என்பதும் அவசியமாகிறது. எனவே ஓர் குழுவிலுள்ளவன் மற்றொரு பிரிவின் பெண்ணைக் கொன்றால், பாதிக்கப்பட்டவர் கொலை செய்தவனைக் கொல்லாமல், அவர்கள் பிரிவினைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கொல்கின்றனர். இத்தகு நிலையை, வட ஆப்பிரிக்காவின் பெர்பெர் (Berber) சமுதாயத்திடைக் காணலாம்.

இரத்தம் சிந்தும் சண்டையின் கூட்டமைப்பு, ஓரளவு பெருஞ் சண்டையினை அடக்க உதவுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், தாக்கப்பட்டவன் இறக்கும்போது, இப்பின்னணியில் மறைந்திருக்கும் கொலைகாரனுக்குத் தானோ, தன்னைச் சார்ந்த உறவினரோ யாரேனுமொருவர் நிச்சயமாக இறக்க நேரிடும் என்பது நன்கு தெரிந்தேயிருக்கும். இரத்தம் சிந்தும் சண்டைகளைத் தவிர்ப்பதற்காகக் கொலை செய்தவன் பாதிக்கப்பட்ட கால்வழியினருக்கு நட்டஈடு அளிக்க முன்வருகிறான். இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகத் தோட்டக்கலை

யினையும் இடையர் வாழ்க்கையினையும் மேற்கொண்டுள்ள நூயர் சமுதாயத்தினர் திகழ்கின்றனர்.

பிலிப்பைன்சு நாட்டைச்சார்ந்த இபுகாவு (Ifugao) குழுக்களிடையே அரசியல் கூட்டமைப்பும் சாதியமைப்பும் இல்லை. இவர்கள் நெருக்கமாகப் பின்னப்பட்ட உறவுமுறைக்குழுக்களாகக் காணப்படுகின்றனர். இக்குழு உறுப்பினர்கள் எதிர்தரப்பினரோடு சண்டையிடும் காலங்களில் உதவுகின்றனர். தவறு இழைத்ததற்காக அல்லது அவமதித்ததற்காக ஒருவன், மற்றொருவனைச் சமாதானத் தூதுவனாக அனுப்புகிறான். நட்ட ஈட்டுக் கோரிக்கைகள், தீர்மானங்கள், மாற்றுக் கோரிக்கைகள், மாற்றுத் தீர்மானங்கள் ஆகியவற்றை இவன் இருதரப்பினரிடையேயும் மேற்கொள்கிறான். சமாதானத்தை நிலைநாட்டத் தூதுவர்களாகச் செல்வதன்றி மற்றபடி இவர்களுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. சமாதானப் பேச்சு தோல்வியடைந்தால், இது மிகப் பெரியதோர் சண்டைக்கு வழிகோலுகிறது. நூயர், இபுகாவோ ஆகிய சமுதாயத்தினரிடை வழக்காடு மன்றங்கள் இல்லாத போதிலும், பகைமையைத் தீர்க்கும் வேறு வழிமுறைகளுள்ளன.

இரத்தம் சிந்தும் சண்டைகளை மேற்கொள்ளும் பழங்குடியினருள் சிலரையும், சண்டைகளின் நோக்க மாறுபாட்டினையும் ஆராய வேண்டும். இபுகாவினர் 70,000 மக்கள் தொகையினைக் கொண்டவராய் நடுக் கார்டிரலாவின் கிழக்குச் சரிவுகளின் தனிமையான பகுதிகளைச் சார்ந்தோராய், போரில் பெரு விருப்புக் காட்டும் பழங்குடியினராய் உள்ளனர். இபுகாவுப் பழங்குடியினரிடையே பழிவாங்குதலுக்காகக் கொல்லுதல் மிகுந்த அளவில் காணப்படுகிறது. இவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு எப்போதும் இருப்பதில்லை. ஒருவனின் நெருங்கிய உறவினர்கள் ஒரேயிடத்தில் வசிக்காமல் பல்வேறு இடங்களில் காணப்படுவதால் அவன் தாக்கப்படும்போது, அவர்களுடைய உதவி உடனடியாகக் கிடைப்பதில்லை.

இரத்தம் சிந்தும் சண்டையில் ஈடுபடாதவர்களும், சில சமயம் கொல்லப்படும் நிலைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதற்குக் காரணம் ஓரிடத்தில் வாழும் ஒருவனின் சிற்றப்பன், பெரியப்பன் மக்கள் எவரையேனும் கொன்றிருக்க, கொல்லப்பட்டவனின் உறவினர் பழிதீர்ப்பதற்காக, ஒன்றுமே யறியாத ஒருவனைக் கொல்லும் வாய்ப்பும் உண்டாகிறது. கொலையுண்டவனுக்குச் சகோதரர் இல்லாத போது, அவன் சிற்றப்பன் அல்லது பெரியப்பனின் மக்கள் பழிவாங்கக் கடமைப்பட்டுள்ளனர். ஒன்றுவிட்ட முதல் சகோதரனின் உறவினர்களுடைய வாழ்விடங்கள் மிகுந்த தூரத்திலிருக்கும்போது இங்ஙனம் பழிவாங்கும் தன்மை குறைந்து விடுகிறது. உறவுமுறை நிலையிலும் மூன்றாவது சகோதரருக்கு மேல் இத்தகைய பழிவாங்குதல் நீடிப்பதில்லை. இங்கு, கொன்றவனையே கொல்ல வேண்டும் என்ற வரையறை இல்லை. கொலைகாரனின் நெருங்கிய உறவினரைக் கொன்றாலே போதுமானதாகும். சுருங்கக் கூறின் 'இரத்தத்திற்கு இரத்தம்', என்பதே இவர்கள் கொள்கை. உறவு முறை நெருக்கமாக இல்லாத நிலையில், பழிவாங்கும் சண்டைகள் பல ஆண்டுக் காலம் செயலற்ற நிலையிலும் இருக்கும். இதனால், இச்சண்டைகளில் ஈடுபடாதோரின் உயிர் கூடப் பல பத்தாண்டுகட்குப் பின்னரும் பாதுகாப்பற்ற நிலையிலுள்ளன. இபுகாவினரிடையே நீதியை நிலை நாட்டுவதற்கெனப் பழங்குடியினர் ஆட்சிக் குழுவோ (Tribal Council), பஞ்சாயத்துத் தலைவரோ (Headman) இல்லை. இதனால், வன்முறையில் ஈடுபட்ட நெருங்கிய உறவினனின் செயலால், தன் உயிரையே இழக்கும் நிலையிலுள்ள மற்றொருவன் தனனுடைய உயிரைக் காத்துக் கொள்ள வேண்டிய நிலை உண்டாகிறது. இபுகாவினர் குலப்பெருமையைக் காத்தலில் மிகவும் குறியாக உள்ளமையால், பிற சமுதாயத்தினரிடையே இழிவாகக் கருதப்பட நேர்ந்தால் கொல்லுதலை மேற்கொண்டு பழிவாங்குகின்றனர். சான்றாக, ஒருவன் தன் மனைவியின் திருமணமாகாத சகோதரியினைக் கற்பழித்துக் கருத்தரிக்கச் செய்தால், அபராதம் செலுத்த வேண்டியவனாகிறான். எனினும், இச்செயலில் கர்ப்பமடையச் செய்தவனைக்கொல்லுதல் இயலாததாகும் போது அவனது நேரடி உறவினன் ஆகுபவனையோ அவன் நெருங்கிய உறவினரையோ கொல்கின்றனர்.

இப்பழங்குடியினரிடையே சட்ட நடவடிக்கையென்பது, குடும்பத்தினரிடை மட்டுமேயாகும்; தனிமனித அளவில் கிடையாது. எனவே, சகோதரர்களிடை ஏற்படும் சண்டைகள் குறித்து அவர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்துள்ளமையால் தண்டிக்கப்படுவதில்லை.

கொன்யாக்கு நாகர்கள்: பிரமபுத்திரா பள்ளத்தாக்கிற்கும், பாமிய எல்லைக்குமிடையேயுள்ள மலைப்பகுதிகளில் கொன்யாக்குநாகர்கள் (Konyak Nagas) அடிமையரின் தலையினைக் கொய்து தலை வெற்றிச் சின்னத்தினைப் (Head Trophy) பெறுவதற்கென, அடிமைகளை விலை கொடுத்து வாங்கி வந்துள்ளனர். ஆனால், இவ்வாறு தலை வேட்டையாடுவோரின் வாழ்க்கையினைக் குறைத்து, அவர்களுக்கு ஆண் சந்ததியே இல்லாது 'வானக் கடவுள்' தண்டித்து விடுவார் என்ற நம்பிக்கையினால் இப்பழக்கத்தினை நாளடைவில் கைவிட்டனர். தலை

வேட்டையாடுதலென்பது போர் அடிப்படையில் மட்டுமன்றிச் செழிப்புத் தன்மையை வளர்க்கும் சக்திகள் மனிதத் தலையிலுள்ளன என்ற நம்பிக்கையினையொட்டியும் நடைபெறுகின்றன. மனித மண்டையோட்டிலுள்ள சக்தி வாய்ந்த மந்திரத்தை வாழ்வோரின் நன்மைக்காகக் கையாளலாம் என்ற இவர்களின் அடிப்படை நம்பிக்கையே தலைவேட்டையாடலின் தலையாய காரணமாகும்.

சண்டையில் கைப்பற்றப்பட்ட தலைகளைத் தங்கள் வீட்டிலும் தங்கள் தலைவர் வீட்டிலுமுள்ள அடுக்குகளில் பாதுகாத்துப் பிறரின் காட்சிக்கு வைக்கின்றனர். ஒவ்வொரு பண்டிகையின் போதும் இவற்றிற்குத் 'தானியமது' அளிக்கப்படுகின்றன. இம்மண்டையோடுகள் கிராமத்தின் செழிப்புத் தன்மையினையும், செல்வத்தினையும் பெருக்கும் என்பதில் அசைக்க முடியயாத நம்பிக்கையினை இவர்கள் கொண்டுள்ளனர். தலைவேட்டையாடலில் கொல்லப்படுபவரின் வயது, தகுதி, பால் முதலானவற்றைக் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. மேலும் இங்ஙனம் கொல்வது, போர் வீரர்களைக் கொல்வதற்குச் சமமான பெருமையாகக் கருதப்படுகிறது. தலையினைக் கொய்தோர், அத்தகைய வெற்றிக்கான முற்றுகையில் பங்கு கொண்டோர் ஆகியோரின் முகத்திலும் மார்பிலும் பச்சை குத்தப்பட்டது. தனிச்சிறப்புடைய ஆபரணங்களையும் இவர்கள் அணிந்து கொண்டனர்.

இவர்கள் பெருமையாகக் கருதியதும், சுயநலத்திற்காகச் செய்ததுமாகிய இத்தகைய அழிவுகள், ஐயத்திற்கிடமின்றிப் பல கிராமங்களிடையே சண்டைகளுக்குத் தூண்டுகோலாயின. சண்டையில் இறப்பது பெருமைக்குரியதாக கருதப்படாது, அவமானத்திற்குரிய செயலாகக் கருதப்பட்டமையால், கொன்யாக்கு நாகர்கள் நேரடிச் சண்டையினைக் கூடிய வரையில் தவிர்த்தனர்.

அசுமத்து: மேற்கு நியூகினியில் வாழும் 'அசுமத்து' (Asmat)ப் பழங்குடியினர், தலை வேட்டையாடலைத் தவிர்க்குமாறு சமயப் பெரியார்கள் வேண்டுகோள் விடுத்ததையும், இந்தோனேசிய அரசாங்கம் இப்பழக்கத்தினைத் தவிர்க்க எடுத்த நடவடிக்கைகளையும் மீறி, தங்கள் பழமையான பகுதிகளில் இன்றளவும் இச்செயலை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதல் நடத்தும்போது ஒருவனுடைய மகன் கொல்லப்பட்டால் தாக்குதல் செய்த கிராமத்தினர், பழிவாங்கப்படுதலைத் தவிர்ப்பதற்காக, அதே வயதுடைய சிறுவனை ஈடாக அளிக்கின்றனர். மீண்டும் இரு கிராமத்தினரிடை சண்டை தொடங்கும் போது, இளைஞன் ஒருவன் தூதுவனாக அனுப்பப்படுகிறான். இவ்வாறு அனுப்பப்படும் தூதுவன் பொதுவாகக் கொல்லப்படுவதில்லை. 'தலை வேட்டையாடலைத்' தவிர்க்கும் வழியாக, இம்முறையினை இந்தோனேசிய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

'அசுமத்துப்', பண்பாட்டில் தலைவேட்டையாடுதல்செழுமைச் சடங்காகச் செய்யப்படுகிறது. தலைவேட்டையாடலை மேற்கொள்ளும் போர் வீரர்கள், தங்கள் வீரச் செயலுக்குச் சான்றாக தாம் கொணர்ந்த மண்டையோடுகளின் எண்ணிக்கையினைக் கூறுகின்றனர்.

நூயர்: சூடான் குடியரசில் வாழும் இப்பழங்குடியினர் தனிபட்ட வகையில் மிகுந்த பழிவாங்கும் உணர்வினைக் கொண்டுள்ளனர். ஒருவனுடைய மகனை அடிப்பது, கூடா ஒழுக்கம், பொருளுக்குரியவரின் அனுமதியின்றி அணிகலன்கள் போன்ற சொந்தப் பொருள்களை எடுத்துச் செல்வது, தற்செயல் பழிப்பு போன்றவற்றுள், ஏதாவதொன்று சண்டைக்குக் காரணமாக அமையலாம். இவற்றால் நேரிடும் மரணம், பின்னர் இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு வழிகோலுகிறது. இரத்தம் சிந்தும் சண்டைகள் தீவிரமடையும் பொழுது, அவற்றைத் தவிர்ப்பதற்கு இவர்கள் அரசியல் அதிகார மற்றவரும், அதே சமயம் ஒழுக்கம் நிறைந்தவரும், ஆன்மிக உள்ளம் படைத்தவருமான, சிறுத்தைத் தோல் அணிந்த தலைவரிடம்,(Leopard-skin-chief) அடைக்கலம் புகுகின்றனர். இவரிடம் அடைக்கலம் புகுந்த கொலையாளியின் கைகள் கீறப்பட்டுச் சிறிதளவு இரத்தம் சிந்தப்படுகிறது. கொலையாளி,இத்தலைவனின் பாதுகாப்பிலுள்ளவரையிலும் பழிவாங்கப்படுவதிலிருந்து காக்கப்படுகிறான்.

சிறிது காலத்திற்குப் பின், இத்தலைவன் நட்டஈட்டிற்கான பேச்சுகளைத் தொடங்குகிறான். கொலை செய்தவனின் குடும்பத்தினர், பாதிக்கப்பட்டோருக்கு எவ்வளவு நட்ட ஈடு கொடுக்கவியலும் என்பதைக் கேட்டறிந்துஅதனைப் பெற்றுக் கொள்ள அவர் தூண்டுகிறார். நியாயமான நட்ட ஈட்டினைப் பாதிக்கப்பட்டோர் தொடர்ந்து ஏற்க மறுக்கும் நிலையில் அவர்களைச் சபித்துவிடப் போவதாகத் தலைவர் பயமுறுத்த, அதற்குப் பயந்து இவர்கள் அந் நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்கின்றனர். ம.ந.பு.

துணை நூல்கள்:

**Hobhouse, L.T.,** Morals in Evolution, Chapman and Hall, London, 1906.

**Otterbein, K.,** The Evolution of war—A Cross-Cultural Study, Human Relations Area Files, New Haven, 1970.

seagle, W., The History of Law, Tudor Puplishing Company, New york, 1946.

Wright, G., A Study of War, Chicago University of Chicago Press, Chicago, 1942.

**இரத்தினக் கவிராயர்** : கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் காரி இரத்தினக்கவிராயர், பெரிய காரிரத்தினக் கவிராயர் எனவும் வழங்கப்பட்டார்; திருநெல்வேலி மாவட்ட்த்துத் திருப்பேரை என்னும் ஊரைச் சேர்ந்தவர். வேளாளமரபில் வந்த இவர் வைணவ நெறியினர். இவர் மகனும் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவராக விளங்கினார். திருமேனிக் கவிராயர் என்பது அவர் பெயர். அவர் திருமேனி இரத்தினக் கவிராயர் எனவும் அழைக்கப்பட்டார். இந்த இரத்தினக் கவிராயரின் ஆசிரியர், ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்த குருகைப் பெருமாள் கவிராயர் ஆவார். இவர் திருக் குருகைப்பெருமாள் கவிராயர் எழுதிய மாறனலங்காரத்திற்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள் நுண் பொருள்மாலை, நம்பெருமாள் மும்மணிக்கோவை உரை ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இரத்தினக்கவிராயர்[2]: இவர் சிறிய காரி இரத்தினக் கவிராயர் என்றும் திருமேனி இரத்தினக் கவிராயர் என்றும் வழங்கப்பெற்றார். இவர் தந்தையார் காரி இரத்தினக் கவிராயர். காரி என்பது நம்மாழ்வார் பெயராகும். வைணவராதலின்இவருக்குக் காரிரத்தினம் என்றும் இயற்பெயரமைந்திருத்தல் கூடும். இவர் திருநெல்வேலி மாவட்டத்துத் தென் திருப்பேரை என்னும் ஊரைச் சேர்ந்தவர்; வேளாளர் மரபினர். இவர் குடும்பம் கவிராயர் குடும்பமாக விளங்கியுள்ளது. இவர் முன்னோர் திருக்கோயிலில் வாகனக் கவிபாடும் உரிமை உடையவர்.இப்புலவரும் அவ்வாறு பாடிவந்தவரேயாவர். இவர் தென் திருப் பேரைக் குழைக்காதர் திருப்பணிமாலை என்னும் நூலை இயற்றினார். இவர் புலவராற்றுப்படை என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இது இரசை வடமலையப்பப் பிள்ளைமேல் பாடப்பெற்றது. இந் நூல் 271 கண்ணிகள் கொண்டது. இந்நூல் 1693-இல் அரங்கேற்றப்பட்டதாகத் தெரிவதால், இப்புலவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது தெளிவாகிறது.

**இரத்தினகிரி** ஒரிசா மாநிலத்தின் கட்டாக்கு மாவட்டத்தில் உதயகிரி, இலலிதகிரி என்ற குன்றுகளுக்கு அருகில் அமைந்துள்ள இரத்தினகிரி என்ற குன்றின்மீது அமைந்துள்ள தொன்மையான ஊர். இவ்வூரின் சிறப்பு திபெத்திய நூல்களிலும், சீன நூல்களிலும் காணப்படுகிறது. இவ்வூர் புத்தமதக் கோட்பாடுகளை எடுத்துரைக்கும் மையமாக விளங்கியிருக்க வேண்டும் என்பது, இங்குக் கிடைக்கின்ற எண்ணற்ற புத்தமதச் சிலைகளாலும், பின்னர் 1957



பௌத்தத் துறவிகள் தங்கும் விடுதி – இரத்தினகிரி

முதல் 1950 வரை இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறைத் தலைவர் திருமதி தெபாலா மித்ரா (Debala Mitra) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வினாலும் அறியப்படும். இவ்வூர் மகாயான புத்தமதக் கோட்பாடுகளையும், யோகநிலைகளையும் எடுத்துரைக்கும் சிறப்புக் கூடமாக விளங்கியிருக்க வேண்டும். இரத்தினகிரி கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரிசாவை ஆண்டுவந்த பௌமர் (Bhauma), சேமன்கராதேவர் (Ksemankaradeva), முதலாம் சிவகரதேவர் (Sivakaradeva) ஆகிய மன்னர்களால் சிறப்புப் பெற்றது. உடைந்த நிலையில் கிட்டிய கல்வெட்டு ஒன்று குப்தர்காலக் கல்வெட்டுகளிலுள்ள எழுத்தினை ஒத்துள்ளதால் இப்புத்தமத மையம் 5-ஆம் நூற்றாண்டு முதற் கொண்டே இருக்கின்றது எனக் கூறுவர் சில வரலாற்று அறிஞர்கள்.

இங்கு மேற்கொண்ட அகழாய்வில் செங்கல்லால் கட்டப்பட்ட தூபியும், புத்தத் துறவிகள் தங்கும் விடுதியும், புத்த உருவச் சிலையும் வேறு சிலைகளும் கிடைத்தன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட மையத் தூபி செங்கல்லால் எழுப்பப்பட்டது. இது 14.5 மீட்டர் பக்கம் கொண்ட சதுரவடிவ மேடைமீது அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்ட கவிகை (Dome) கொண்டது. சதுர வடிவ மேடையின் வெளிப்பக்கங்களில் நீட்டிக் கொண்டிருக்கும் ஆறு சிறு தளங்கள் சித்திர வேலைப்பாட்டுடன் காணப்படுகின்றன. இந்தத் தூபியின் உட்பாகம் வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வட்ட வடிவ அமைப்பு மேலும் பன்னிரண்டு ஆரக் கால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரு ஆரக்கால்களுக்கிடையே உள்ள இடைவெளி மண்கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. இந்தத் தூபி இருமுறை பெரிதுபடுத்தப்பட்டது. பின் இதைச் சுற்றிலும் எண்ணற்ற சிறிய வடிவிலான தூபிகள் நிறைந்துள்ளன. இந்தத் தூபியின் காலம் எட்டாம் நூற்றாண்டு என அகழாய்வாளர் கணக்கிட்டுள்ளனர். செங்கல்லால் கட்டப்பட்ட புத்தத் துறவிகள் தங்கும் சதுர வடிவிலமைந்த இரண்டு விடுதிகள் மையத் தூபிக்கு எதிர்ப்புறம் உள்ளன. இதில் பெரியது 54.8 மீ.பக்கங்களைச் கொண்டதாகவும் சிறியது 29 மீ. பக்கங்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றன. இதன் பின்புறச் சுவரில் அழகிய வாயிலைக் கொண்ட கோயில் ஒன்றுள்ளது. மேற்கூறியவைகளைத் தவிரக் கல்லாலும் வெண்கலத்தாலும் உருவாக்கப்பட்ட அளவிறந்த புத்தச் சிலைகளும் சுடு மண்ணால் செய்யப்பட்ட உருவங்களும் பிற அகழாய்வுகளில் கிட்டாத அளவிற்கு இங்குக் கிட்டியுள்ளன. கே. இரா.

துணை நூல்கள்:

**Indian Archaeology**-A Review, 1958-60.

**Percy Brown**, Indian Architecture-Buddhist and Hindu, Bombay, 1981.

**Krishnadeva**, B.C., Archaeological Remains Monuments and Museums Part I, Delhi, 1964.

**இரத்தினகிரி உலா** சேறைக் கவிராசபிள்ளை என்னும் புலவரால் இயற்றப்பட்டது. சேறை என்பது இப்புலவர் ஊராகும். இவரது இயற்பெயர் தெரியவில்லை. வீரைக் கவிராச பண்டிதர், செங்கோட்டைக் கவிராச பண்டாரம் போன்ற பெயர்களைக் காணுமிடத்துக் கவிராசர் என்னும் பெயர் இயற்பெயராகவும் அமைந்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இப்புலவர் தொண்டை நாட்டுக் கருணீகர் மரபில் கடிகையர் குடியில் பிறந்தவர். இரத்தினகிரி என்னும் மலைக்குச் சிவாயமலை, இரத்தினாசலம், திருஅரதைப்பதி, ஐயர்மலை, மணிகிரி, வாட்போக்கி, தென்சிவதை முதலிய பல பெயர்கள் உள்ளன. இக்காலத்தில் ஐயர்மலை என்னும் பெயரே வழக்கிலுள்ளது. ஊர் நடுவில் மலை அமைந்துள்ளது. ஐயர்மலை என இன்று வழங்கும் மலையும் ஊரும் திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் காவிரியின் தென்பகுதியில், குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் 5 கல் தொலைவில் அமைந்துள்ளது. தேவாரம் இத்தலத்தினை வாட்போக்கி என்னும் பெயரால் குறிப்பிடுகிறது. வாட்போக்கித் தல இறைவனைத் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பதிகம் பாடிப் பரவியுள்ளார். அருணகிரிநாதரும் தம் திருப்புகழில் இத்தலத்தினைப் போற்றியுள்ளார். இரத்தினகிரிக்கு வாட்போக்கி என்னும் வேறுபெயர் உள்ளமையால், இவ்வுலா வாட்போக்கி உலா என்றும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வுலாவினை இயற்றிய சேறைக் கவிராச பிள்ளை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இந்நூல் 408 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவாலாகியது. 'சீர்உலா' எனத்தொடங்கும் விநாயகர் காப்பொடு விளங்கும் இவ்வுலா, 'வாழி சிவாயநகர்' எனத் தொடங்கி வாழ்த்துக் கூறும் வெண்பாவினோடு முடிகிறது. இவ்வுலாவின் சிறப் புணர்ந்த வீரராகவ முதலியார், 'கவிராசன் இப்பிரான்மிசைச் செய்த திருவுலாக் கலிவெள்ளை கற்றுருகலாம்' என்று தாம் பாடிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழில் இதனைப் பாராட்டியுள்ளார்.


இத்தலத்து இறைவனை வாயு, ஆதிசேடன், இந்திரன், இடிக்கடவுள் ஆகியோர் வழிபட்டதும், அகத்தியர், உரோமர், துர்க்கை, ஆரிய அரசன் ஆகியோர் வழிபட்டதும் போன்ற பல புராணச் செய்திகள் இவ்

வுலாவில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வுலாவில் அப்பூதி அடிகளின் மகன் விடம் தீர்த்தமை, முதலை உண்ட பாலனை அழைத்தமை, எலும்பைப் பெண்ணாக்கியமை ஆகிய தேவார மூவர் வரலாற்றுச்செய்திகளும், சண்டேசர், திருக்குறிப்புத் தொண்டர் ஆகிய நாயனார் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இரத்தினகிரி ஈசன் புகழ் கூறும் போது, சித்திரை முதலிய 12 மாதங்களின் பெயர்களையும் வேறு பொருள்படும்படி வரிசைப்பட அமைத்துப் பாடியிருப்பது நயமிக்கதாக உள்ளது. 'ஆடியான் ஆவணியான் ஆனபுரட் டாசியான்' என்னும் அடியில், மாதப் பெயர்கள் ஆடுகின்றவன், இடபத்தை அண்மையில் உடையவன், பொய் புரட்டு முதலிய மாறுபட்ட தன்மைகளை விரும்பாதவன் என்னும் வேறு பொருளில் அமைந்துள்ளன. சிவாய நகர் என்னும் ஊர்ப் பெயருக்கு ஏற்ப அங்குள்ள இறைவனைச் 'சிவாய நகர் ஆதி' என்று இந்நூல் குறிப்பிடுகிறது. இரத்தினகிரி இறைவனின் தசாங்கம் கூறும்போது அவனுடைய குதிரையாக யோகத்தையும், யானையாக மெய்ஞ்ஞானத்தையும், ஆணையாக ஐந்தெழுத்தினையும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**இரத்தினசாமி, எம்.** (கி.பி. 1885-1977) சென்னை மயிலாப்பூரில் 15-8-1885-இல் பிறந்தார். இவர்தம் தந்தை மரியதாசு. இரத்தினசாமி கடலூர் புனித சூசையப்பர் பள்ளியிலும், திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் கல்லூரியிலும், ஐதராபாத்து நிசாம் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். பின்னர் இவர் குடும்பத்தினர் இவரை உயர் கல்விக்காக இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பினர். அங்கு இவர் கேம்பிரிட்சு (Cambridge) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தவுனிங்கு கல்லூரியில் (Downing College) வரலாற்றையும், கிரேசு விடுதி (Gray's Inn) என்னும் சட்டக் கல்லூரியில் சட்ட அறிஞர் (Barrister) பட்டத்தையும் பெற்றார்.

சட்டமேதையாக இந்தியாவுக்குத் திரும்பிய இரத்தினசாமி தலைசிறந்த கல்வியாளராக மாறிக் கல்வித் துறையில் பல செயற்கரிய செயல்களைச் செய்தார். இவர் 1918-1927-ஆண்டுகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார். பின்னர் 1928 முதல் 1930 வரை இவர் சென்னைச் சட்டக் கல்லூரியின் முதல்வரானார்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக1942 முதல் 1948 வரை பணியாற்றிப் பெரும் புகழ்பெற்றார்.

கல்வியாளராகப் பணியாற்றிய காலத்தில் இவர் தலைமையில் இயங்கிய கல்வி நிறுவனங்கள் உயர்ந்த



இரத்தினசாமி, எம்.

தரத்திற்கும் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் அரும்பணிக்கும் எடுத்துக்காட்டுகளாய் விளங்கின. தேர்வினை அடிப்படையாகக் கொண்டு விளங்கிய கல்வியை இவர் ஆதரிக்கவில்லை. உயர் கல்வி கற்றலின் (Learning) வழி நிற்க வேண்டுமேயன்றிக் கற்பித்தலின் (Teaching) வழிநிற்கலாகாது என்பது இவரின் கோட்பாடாகும்.

இரத்தினசாமி இடையறாது நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிக்கவர். நூல்களைத் திரட்டுவதிலும் இவருக்கு மிகுந்த நாட்டமிருந்தது. இவரிடம் 17,000 புத்தகங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவர் எழுதிய நூல்களுள் ஒன்று 'காந்தியடிகளின் அரசியல் தத்துவம்' (The Political Philosophy of Mr. Gandhi) என்பது. அரசியல் கலை தொடர்பான பல நூல்களை இவர் எழுதியுள்ளார். 'அரசின் உருவாக்கம்' (The Making of the State) என்பது அவற்றுள் ஒன்று. வரலாறு, பண்பாடு, சமூகவியல் போன்ற துறைகளிலும் இவர் பல நூல்களை எழுதியுள்ளார். 'வன்முறை காரணமும் அதனை நீக்கும் வழியும், (Violence-cause and Cure) என்பது இவர் எழுதிய பிறிதொருநூலாகும். பன்னாட்டு அரசியல் கொள்கைகளைப்பற்றி இவர் 'அயல்நாட்டுக் கொள்கையின் கோட்பாடுகளும் செயற்பாடுகளும்' (Principles and Practice of Foreign Policy) என்னும் நூலை எழுதியுள்ளார்.

பேராசிரியர் இரத்தினசாமி 'மக்களாட்சி'

(Democracy), 'தமிழ்நாடு', 'தொண்டன்' போன்ற இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் சிறந்த அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார்; அரசியலில் முற்போக்குக் கருத்துகளிலும், நாடாளுமன்ற மக்களாட்சி முறையிலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். தொடக்கத்தில் இவர் நீதிக் கட்சியின் உறுப்பினராகத் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கினார். எனினும், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்றவற்றுடன் இவருக்குத் தொடர்பு ஏற்படவில்லை. பின்னர், இவர் மூதறிஞர் இராசாசியுடன் இணைந்து சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். காங்கிரசுக் கட்சியை எதிர்க்க அக்கட்சி பயன்படும் என்று இவர் நம்பினார்.

பாராளுமன்ற மக்களாட்சி (Parliamentary Democracy) முறையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இவர் கடையடைப்பு, மறியல், சூழ்ந்து கொண்டு பணியைத் தடுத்தல் (தர்ணா) போன்றவற்றிற்கு ஆதரவு கொடுத்தால் இவ்வகை ஆட்சி அழிந்துவிடும் என்று கருதினார்.

இரத்தினசாமிக்கு இந்திய ஒருமைப்பாட்டில் பற்றுண்டு. மலையாளிகள், பஞ்சாபிகள், இந்துசுத்தானியர் போன்றவர்களிலிருந்து இந்தியர்களை உருவாக்க வேண்டுமென்பது இவரது தணியாத ஆசை. அப்போதுதான் இந்தியாவின் சுதந்திரம் காக்கப்படும் என்று இவர் நம்பினார். இந்திய ஒருமைப்பாடு அன்பினால்தான் உருவாகும் என்பதும், நாட்டுப் பற்றே அதற்கு வழிவகுக்கும் என்பதும், சமயம் அல்லது அரசியல் நாட்டு மக்களை இணைக்கமாட்டா என்பதும் இவரது சீரிய கோட்பாடாகும்.

இவருக்குச் சமூகப் பணியிலும் நாட்டமிருந்தது; ஈகைக் குணமும் இவரிடம் மிகுதியாக விளங்கியது. ஞாயிற்றுக் கிழமைகளில் கிறித்தவத் திருச்சபைக்குத் தவறாது சென்று வழிபட்டுப் பல சமூகப் பணிகளிலும் ஈடுபடுவது இவரது வழக்கம். இந்தியக் கத்தோலிக்கக் கழகத்தின் தலைவராகவும், இந்தியக் கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவராகவும் இரத்தினசாமி தொண்டாற்றினார். இவர்தம் தொண்டினைப் பாராட்டிப் போப்பாண்டவர் இவருக்குப் 'புனித கிரிகரி இயக்கப் பெரும் வீரர், (Knight Commander of the Order of St. Gregory) என்ற விருதினையும் வழங்கினார். இவர் மனைவியார் பெயர் செபமாலை மேரி.

இவர் 1925-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தலைவராக இருந்தார். இவர் நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினராக இருமுறை (1962-74) பதவி வகித்தார். இந்திய அரசு இவருடைய தொண்டுகளைப் பாராட்டி இவருக்கு 1968-ஆம் ஆண்டில் 'பத்ம பூசன்' (Padma Bhushan) என்னும் விருதினை வழங்கியது. பொது வாழ்வில் பல சிறப்புகளைப் பெற்றுவாழ்ந்த இரத்தினசாமி 1-6-1977-இல் காலமானார்.

**இரத்தினத்தீவம்** மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள தீவுகளுள் ஒன்று. இது காவிரிப் பூம்பட்டினத்திற்குத் தெற்கில் முப்பது யோசனைத் தொலைவில் உள்ள மணிபல்லவம் என்னும் தீவிற்குப் பக்கத்திலுள்ளது. இத்தீவில் சாதுசக்கரனென்னும் முனிவன் புத்ததேவரின் தரும சக்கரத்தை விளங்கச் செய்தான். இங்குள்ள மலை உச்சியில் புத்தரின் திருவடிச் சுவடுகள் பொருந்தியுள்ளன. தீவதிலகையென்பவள் இங்குச் சிறிதுகாலம் தங்கி இத்திருவடிச் சுவடுகளை வணங்கியுள்ளாள். இந்த மலையின் பெயர் சமந்தம் என்பதாகும். இதற்குச் சமனொளி என்ற வேறுபெயரும் உண்டு. மணிமேகலையில், 'இலங்கா தீவத்துச் சமனொளி யென்னுஞ், சிலம்பினையெய்தி' (மணி. 28- 107-8) என்று சீத்தலைச்சாத்தனார் கூறுவதனால், இலங்கைத் தீவினுள் 'சமனொளி' என்னும் பெயர் கொண்ட மலையுண்டென்பதும், அது புத்த சமயத் தலங்களுள் ஒன்றாக விளங்கியது என்பதும் புலனாகின்றன. மேலும் இலங்கைத் தீவின் தென்கீழ்ப் பகுதியில் இரத்தினபுரி என்னும் இடமும், சமந்த கூடமென்றும் சமனொளி என்றும் சொல்லப்படும் மலையொன்றும் உள்ளனவென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அதனால் சமந்தம் என்பதும் சமனொளி என்பதும் இலங்கையிலுள்ள ஒரு மலையாகும் என்பது ஏற்புடையதாகும். மிகப்பழங்காலத்திலிருந்தே இலங்கையிலுள்ள இரத்தினபுரியில் இரத்தினக் கற்கள் கிடைக்கின்றன என்று அந்நாட்டு வரலாறு கூறுவதாலும் இவ்வுண்மை புலப்படுகிறது. சமனொளி மலை என்பதே சிவனொளி பாத மலையென்று மருவி வழங்கியிருக்கக்கூடும். இம்மலையை ஆடம்சுபீக்கு என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டு வழங்குகின்றனர். இது இந்துக்கள், கிறித்தவர்கள் புத்தசமயத்தவர்கள், இசுலாமியர்கள் ஆகியோர்களுக்குப் புனித இடமாகக் கருதப்படுகிறது.

**இரத்தினம்பிள்ளை, டி.சான்** கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலமும் தமிழும் வல்ல புலவர். ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலத்தில் மக்கள் ஆங்கிலமும் தமிழும் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. ஆங்கிலேயரின் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களுக்குப் பயன்படும் வகையில், தமிழ் - ஆங்கில, ஆங்கில - தமிழ் அகராதிகளின் தேவை வளர்ந்தது. அவ்வகையில் அவ்வலுவலர்களுக்குப் பயன்படும் வகையில், 'தமிழ் ஆங்கிலச் சொற்றொகுதி' என்னும் நூலினை இரத்தினம்

பிள்ளை உருவாக்கினார். இந்நூலில் ஆங்கிலத் தமிழ்ப் பழமொழிகளும் அவற்றிற்கான குறிப்புரை களும் இடம் பெற்றுள்ளன.

**இரத்தினவேலு முதலியார்** கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சென்னையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரை அடுத்துள்ள ஈக்காடு இவரது ஊராகும். தந்தையார் பெயர் அரங்கசாமி முதலியார். இரத்தினவேலு முதலியார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

சிறப்புப் பெயரகராதி என்னும் ஓர் அகராதியினை இவர் உருவாக்கி 1908-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இது அபிதான கோசம், அபிதான சிந்தாமணி ஆகியவற்றின் அமைப்பில் நூல்கள், நூலாசிரியர்கள் பற்றிய செய்திகளை அகரவரிசையில் தொகுத்து வழங்கும் அகராதியாகும். இவர் 'தனலக்குமிக்கும் தைரியலக்குமிக்கும் தருக்கம்' முதலிய பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார். காசிகாண்ட உரை, பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், காசி காண்டம், பார்க்கவ புராணம், விநாயக புராணம் முதலிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். சிவாகம புராணம், சிவபராக்கிரமம், பசுமகாத்மியம் முதலிய நூல்களை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துள்ளார்.

**இரத்துச் செய்தல்:** நொடிப்புச் (திவால்) சட்டத்தின் கீழ் ஒருவரை நொடித்தவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவது நொடிப்புத் தீர்ப்பளிப்பாகும். இத்தீர்ப்பளிப்பு ஆணையை நீக்கிவிடுவது தான் 'இரத்துச் செய்தல்' (Annulment) என்பதாகும். இரத்துச் செய்த ஆணை, அதிகார முறையில் அரசாங்க வெளியீட்டில் வெளியிடப்படல் வேண்டும். கீழ்க்காணும் நிலைகளில் நீதிமன்றம் தீர்ப்பு ஆணையை நீக்கிவிடலாம்.

(1) ஒரு கடனாளியை நொடித்தவராகமுடிவு கட்டக் கூடாது என்று நீதிமன்றம் கருதினால் தீர்ப்பு ஆணையை அது நீக்கிவிடலாம். அதாவது, உரிய வயதடையாத இளையவர், இறந்தவர் ஆகியோரின் நொடிப்பு, அதிகார எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிறைவேறிய தீர்ப்பு போன்றவை இவற்றில் அடங்கும். எந்நிலையிலும் தவறு உணரப்பட்டால் தீர்ப்பளிப்பு ஆணை நீக்கப் படும்.

(2) கடனாளிதம் கடன்களை முழுவதும்கொடுத்து விட்டார் என்பது மெய்ப்பிக்கப்பட்டாலும் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(3) நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் தீர்ப்பளிப்பு ஏற்பட்டிருப்பினும் நீதிமன்றம் அத் தீர்ப்பை நீக்குதல் செய்யும்.

(4) வேறு ஒரு நீதிமன்றத்தில் இதே நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடுக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படாமலிருந்தாலும், கடனாளியின் சொத்துகளை நீதிமன்றம் எளிதாகப் பிரித்துக் கொடுக்கும் நிலையிலிருந்தாலும் தீர்ப்பு ஆணை நீக்கம் செய்யப்படும்.

(5) கடனாளியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் அவரது கடன் ரூ. 500 அல்லது அதற்கு மேற்படாமலிருந்தால் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(6) நொடித்தவரின் வழக்கினை விசாரிக்கும் போது அவர் வாராமலிருந்தாலும், குறிப்பிட்ட தவணைத் தேதிக்குள் தீர்த்தலுக்காக விண்ணப்பம் போடாமலிருந்தாலும் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(7) உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வையில் மாநில நொடிப்புச் சட்டத்தின் கீழ் நொடிப்பு வழக்கு முழுமை பெறாமல் ஒரு நீதிமன்றத்தில் இருந்தாலும் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(8) அமைதி ஒப்பந்தம் அல்லது அதற்கான திட்டம் ஏற்பட்டு, அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டாலும் தீர்ப்பு ஆணை நீக்கம் செய்யப்படும். ஒரு கடனாளி தனக்குக் கடனீந்தோருடன் தன் சிக்கல்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அத்தகைய தீர்வு நொடிப்பிற்கு முன்னரோ பின்னரோ எழலாம். இவ் ஒப்பந்தம் நொடிப்பாவதற்கு முன்னர் ஏற்பட்டால் கடனாளி நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டிய தேவையில்லை. நொடிப்பானதற்குப் பின்னர் ஏற்படும் ஒப்பந்தத்தைப் பொறுத்தமட்டில் நீதிமன்றத்தின் அனுமதியின்றிக் கடனாளி தானாக எதையும் செய்ய முடியாது. இங்குத் தீர்வு என்பது கடன்களின் பகிர்வு (Composition of Debts), ஏற்பாட்டாவணம் (Scheme of-Arrangement) என இருவகைப்படும். முதலிற் கூறிய திட்டத்தில் கடனீந்தோர் தாம் பெற வேண்டிய கடனில் ஒரு சிறு தொகையைப் பெற்று, முழுக் கடனையும் பெற்றுவிட்டதாக ஒப்புவர். அவ்வாறன்றி, கடன் தொகையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக் கொள்ள இரு சாராரும் ஒத்துக் கொள்வது 'ஏற்பாட்டாவணம்' எனப்படும். இவ் வேற்பாட்டின்கீழ்க் கடனாளியின் எல்லாச்

சொத்துகளையும் விற்க வேண்டிய தேவை ஏற்படாது.

இத்தகைய திட்டங்கள் நீதிமன்றத்தின் மூலம் முறையாகச் செயற்படவேண்டும். இவற்றை மறுத்திடவும் நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. கடனீந்தோருள் பெரும்பான்மையோர் அதாவது, மெய்ப்பிக்கப்பட்ட கடன் தொகையை ஈந்தவர்களுள் முக்கால் பகுதியினர் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் இத்திட்டம் நீதிமன்றத்தின் ஏற்புக்காக அனுப்பப்படும். நீதிமன்றம், கடனாளிகள், கடனீந்தோர், அதிகார முறையில் அமர்த்தப்பட்ட சொத்துரிமையாளர் ஆகியவர்களுக்கு அறிவித்து, இத்திட்டம் நியாயமானதாகவும், தகுந்த காரணம் கொண்டதாகவும் இருக்கிறதா என்பதனை ஆராயும். நொடித்தவரின் நடத்தை நன்னடத்தையாக இருந்தால்தான் நீதிமன்றம் இத்திட்டத்தை ஏற்கும். கடனீந்தோரின் கூட்டத்தில் இத்திட்டம் மாற்றி அமைக்கப்படலாம். நீதிமன்றம் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தீர்ப்பளிப்பு ஆணை நீக்கம் செய்யப்படும். கடனாளி தன் சொத்துகளைத் தானே பயன்படுத்தலாம்.

ஒப்பந்த ஆணைப்படி கடனீந்தோருக்குப் பணம் செலுத்தாவிட்டாலும் அல்லது பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டாலும், திட்டம் நீதிக்குப் புறம்பாகத் தோன்றினாலும், மோசடி மூலம் ஏற்பு (Acceptance) ஏற்பட்டிருந்தாலும், இத்திட்டம் நீக்கம் செய்யப்பட்டுக் கடனாளி மறுபடியும் நொடித்தவராகத் தீர்ப்பளிக்கப்படுவார். ஆனால், நல்லெண்ணத்துடன் முன்பே செய்த செயல்கள் செல்லுபடியாகும். கடனீந்தோர் தமது உண்மையான கடனை மெய்ப்பிக்க வேண்டுமேயொழிய கடன் பகிர்வுத் திட்டத்தில் காணப்படும் கடனை மெய்ப்பிக்கக் கூடாது. பகிர்விற்காக ஏதாவது பிணையம் இருந்தால் அதை நிறைவேற்ற வேண்டும்.

திட்டக் குறிக்கோள்களின் கட்டுப்பாடுகள் சரியில்லாத போதும், கடனீந்தோர்க்குப் பயன்படாத போதும், அரசாங்கக் கடன் போன்றவைகளுக்கு முன் சலுகை தாராமல் கடனைத் தீர்க்கும் கட்டுப்பாடுகள் காணப்பட்டபோதும், மேற்கூறிய திட்டங்களுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்காது. மேலும், நீதிமன்றம் மறுத்தே ஆக வேண்டும் என்ற நிலைமையிலும், கடனாளியின் தீர்வைத் தள்ளிப் போட வேண்டும் என்ற நிலைமையிலும் நீதிமன்றம் அனுமதி வழங்காது. சொத்தின் மீது மெய்ப்பிக்கப்பட்ட கடன் தொகையில் உருபாய்க்கு 25 காசுகளுக்குத் தகுந்த பிணையம் இருந்தால் நீதிமன்றம் அனுமதி வழங்கும். மாநில நொடிப்புச் சட்டத்தின் கீழ் இது உருபாய்க்கு 37 காசுகளாக இருக்க வேண்டும்.

கே.என்.இரா.

துணை நூல்

**Kandasamy, P.S.**, The Essence of Mercantile Law, Sahaya Achagam, Tiruchirappalli, 1971.

**இரதி** மன்மதனின் மனைவி. பிரமனின் மனத்திலிருந்து தோன்றியவன் மன்மதன். மக்களின் மனத்தைக் குழப்புகிறவனாதலால் அப்பெயர் பெற்றான். சந்தியா என்ற கன்னியைக் கண்டு காதலுற்ற தக்கனின் வியர்வைத் துளிகளிலிருந்து தோன்றியவள் இரதி. அவ்வழகியைத் தக்கன் மன்மதனின் மனைவியாக்கினான். சிவன் யோக நிலையில் ஆழ்ந்து தவமியற்றிக் கொண்டிருக்கும் போது, இமவான் மகளான பார்வதிஅவரைக் கணவனாக அடைய விரும்பி, மலர்களை ஏந்தி வழிபட வந்தாள். இச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு வசந்தனும் இரதியும் உடன் வந்து துணை செய்ய, மன்மதன் சிவன் மீது மலர்க் கணைகளைத் தொடுத்தான். சினமுற்ற சிவன் மன்மதனை நெற்றிக்கண்ணினின்று தோன்றிய



இரதி

தீயால் சாம்பலாக்கினார். இரதி 'உம் இதயத்தில் என்னைக் கொலு வைத்திருப்பதாகச் சொல்வீரே, நீர் சாம்பலான பின்னர் நான் எப்படி உயிர் வாழ் வேன்?' என்று பலவாறாகப் புலம்பியழுதாள். இச் செய்தியைக் காளிதாசன் வடமொழியிலமைந்துள்ள குமார சம்பவத்தில் உருக்கமாக வருணித்துள்ளான்.

இரதி மன்மதன் வரலாறு பல புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. மன்மதன் எரிந்த பின்னர், இரதி சிவனிடம் அருள் வேண்டி நிற்க, சிவபெருமான் மறு பிறவியில் மன்மதன் அவள் பிள்ளையாக அமை வான் என்று வரமளித்தார். இரதியும் மறுபிறவியில் மாயாவதி என்ற பெயரில் சம்பராசுரனிடம் பணிபுரிந் தாள். மன்மதனும் கிருட்டிணன் மனைவியான உருக்கு மணிக்கு மைந்தனாகப் பிறந்தான். சம்பரன் இல்லத் தில் சேர்க்கப்பட்ட அவன், மாயாவதியால் வளர்க்கப் பட்டான். முற்பிறவியில் இருவரும் கணவன் மனைவி யாக இருந்ததை நாரதர் வாயிலாக அறிந்த இரு வரும் மீண்டும் கணவன் மனைவி ஆயினர். இரு வரும் துவாரகை சென்றனர். அங்கே மன்மதன் பிரத்தியும்னன் என்ற பெயர் தாங்கி இரதியுடன் வாழ்ந்தான்.

இரதி பாற்கடலில் தோன்றியவளாகவும் கூறப் பட்டுள்ளாள். தன் கணவன் சாம்பலான பின்னர் இவள் சிவனை வேண்டி இருந்தபோது, 'உன் கணவன் உனக்கு மட்டும் உருவமுடையவனாகவும் மற்றவர் களுக்கு உருவமற்றவனாகவும் சில காலம் இருந்து, பிறகு அவன் கிருட்டிணனிடம் பிறக்கும்போது உரு வத்துடன் உன்னோடு இருப்பான்' என்று அச்சிவ பெருமானால் வரமருளப் பெற்றாள் என்றும் கூறப் படுகிறது. பெ.தி.

**இரதி பாவம்:** தொல்காப்பியர் கூறும் எட்டு வகை மெய்ப்பாடுகளுள் உவகை என்பது ஒன்று. அதன் ஒரு பிரிவாகிய புணர்வு என்பதை ஒத்தது பரதர், நாட்டிய சாத்திரத்தில் கூறும் எட்டு வகை இரசங்களுள் ஒன்றாகிய சிருங்காரம் என்ற இரசம். எல்லா மனிதர்களுக்கும் உவகை, பெருமிதம் போன்ற அடிப்படை உணர்வுகள் (ஸ்தாயி பாவங்கள்) சில உண்டு. அவற்றுள் ஒன்று ஓர் ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் கொள்கின்ற காதல் உணர்வு. இதுவே இரதி எனப்படும்.


இரசிகனான ஒருவனிடம் இரதி என்ற அடிப் படை உணர்வு சிறந்த ஒரு கவியின் சொற்களாலும், நடிகனின் நடிப்பாலும், ஆடை அணிகளாலும், ஆடல் பாடல்களாலும், பிற தக்க சூழல்களாலும் கிளர்ச்சி யுற்று, சிருங்காரம் என்னும் காவிய இரசமாகக் கனிகிறது. இவ்வானந்த இரசானுபவ நிலை பிரமா னந்தப் பேரின்ப நிலையை ஒருவாறு ஒத்தது என்பர். கூடல் (சம்போகம்), பிரிதல் (விப்பிரலம்பம்) என்ற இருவகையாக இச்சுவை கூறப்படுகிறது. இரண்டிற் குமே அடிப்படை இரதி என்னும் இன்ப உணர்வு. இது இரசம் என்னும் நிலையை அடைவதற்குத் தேவையான காப்பியத் தலைவனும் தலைவியும், அடிப்படைக் காரணமான 'ஆலம்பன விபாவம்' எனப் படுவர். கவிஞனால் வருணிக்கப்படும் தென்றல், பூங்கா, மாலைமதியம் முதலான சுற்றுச் சூழல்கள் இவ்வுணர்வை மிகுவிக்கும் 'உத்தீபன விபாவம்' எனப் படும். காதலர்களுக்கு ஏற்படும் மெய்சிலிர்த்தல், நாத்தழுதழுத்தல் போல்வன இரதியின் விளைவாகிய 'அனுபவம்' எனப்படும். நாணம், துடிப்பு, ஆவல் போன்ற அவ்வப்போது தோன்றி மறையும் உணர்வு களான 'சஞ்சாரிபாவங்கள்', இரதி என்னும் அடிப் படை உணர்விற்கு ஊட்டம் கொடுக்கின்றன. இவ் வகையில் இம்மூன்றின் கூட்டினால் உலகியல் இன் பத்திற்கு அப்பாற்பட்ட சிருங்காரம் எனப்படும் மேலான இன்பநிலையை இரசிகன் அனுபவிக்கிறான். இம்மூன்றும் தனித்தனி இயல்பைக் கொண்டன என் றாலும் வெல்லம், ஏலம், ஓடதி ஆகிய வெவ் வேறு சுவையுள்ள பொருள்கள் ஒன்று சேரும்போது எப்படி ஒரு தனிப்பட்ட சுவை தோன்றுகிறதோ, அப்படி இம்மூன்றின் கூட்டினால் ஒரு மேலான சுவை பெறப்படுகிறது என்று பரதர் நாட்டிய சாத்திரத் தில் கூறுகிறார். இத்தகைய சிருங்கார இரசானு பவத்திற்கு அடித்தளமாக அமைவது அனைவரிடத் தும் வாசனையாக இருக்கும் இந்த இரதிபாவமே யாகும்.

**இரமணர்:** இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டு திசம் பர்த் திங்கள் 31-ஆம் நாள் மதுரைக்கு அருகிலுள்ள திருச்சுழியில் சுந்தரம் அய்யர், அழகம்மாள் ஆகியோ ருக்கு இரண்டாம் மகனாகப் பிறந்தார். இவர் இள மைக் காலத்தில் கல்வியில் அக்கறை காட்டவில்லை.

ஒரு நாள் இவர் தனிமையில் இருக்கும்பொழுது, எல்லா உணர்ச்சிகளும் அடங்கிய அமைதியான நிலை இவருக்கு ஏற்பட்டது. இவர் ஒரு பெரியவர் மூலம் திருவண்ணாமலையிற் கோயில் கொண்டிருக் கும் அருணாசலப் பெருமானைப் பற்றி அறிந்து அங்குச் சென்றார்; அங்கு ஒரு குகையிலமர்ந்து தியா னம் செய்தார். இவர் தம் தொடைகளைப் பூச்சி கள் துளைத்துச் சீழ் வெளிப்பட்டபோதும், எவ்வித அசைவுமின்றித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார், பிறகு அங்கு ஓர் ஆசிரமம் அமைத்து, 'நானே பிரமம்' என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

பகவான் இரமணர் 14-4-1950-இல் சமாதி நிலை எய்தினார்.

அருள் உரைகள்: ஆன்மா வேறு, இறைவன் வேறு என்று கூறுவது அறியாமை. உலகம் ஒரு



இரமணர்

பொய்த் தோற்றம்; 'நான்தான் பிரமம்' என்ற அத்துவிதக் கொள்கையே உண்மையானது என இரமணர் கூறினார். சூரியன் நன்றாக ஒளி வீசினாலும் ஆந்தையின் கண்களுக்குத் தெரிவதில்லை. இது ஆந்தையின் குற்றம்; சூரியனின் குற்றமன்று. அது போன்றே இறைவனின் உண்மை நிலை நமக்குத் தெரியாததன் காரணம் நம்மைப் பற்றியிருக்கும் அறியாமை என்னும் இருளே.

உண்மையான குரு அசைவில்லாமல் இருக்க வேண்டும்; எல்லோரையும் சமமாகப் பார்க்கும் மன நிலை அடைந்திருக்க வேண்டும்; எல்லாச் சூழ்நிலைகளிலும் அஞ்சாமையுடையவராக இருக்க வேண்டும்.

நேர்மையான மாணவன் துன்பங்களை அகற்றுவதில் அளவற்ற ஆசை கொண்டவனாக இருக்க வேண்டும். உண்மை இன்பம் எது? என்பதை அறிய ஆவல் கொண்டவனாக இருக்க வேண்டும். மேலும், அவன் உலக இன்பங்களில் நாட்டமில்லாதவனாக இருக்க வேண்டும்.

மனம் என்பது பெயரளவில் உள்ளது. நன்கு ஆராய்ந்தால் மனம் என்பது இல்லை. ஆனால் எண்ணங்கள் உண்டு. அவை 'நான்' என்ற வித்திலிருந்து எழுந்து, அவ்வித்திலேயே மறைகின்றன.

கர்மத்தைச் செயல் என்று கூறலாம். பலன் கருதாமல் பணி செய்தலே கருமத்திலிருந்து விடுபடுதற்கு வழி. மேலும், நான் செய்கிறேன் என்ற எண்ணம் ஒழிந்து, எல்லாம் இறைவனால் செய்யப்படுகின்றன என்ற எண்ணம் மேலோங்கி நிற்க வேண்டும். இதனை விளக்குதற்குப் பகவான் இரமணர், வங்கியில் வேலை செய்யும் கணக்கரைக் குறிப்பிடுகிறார். கணக்கர் கையாளுகிற பணம் அவருடையதன்று. அப்பணத்தைச் செலவு செய்ய அவருக்கு அதிகாரமுமில்லை. எனவே எவ்வகைப் பற்றுமில்லாமல் அவர் அப்பணத்தினைக் கையாளுகிறார்.

ஆன்மிகப் பாதையில் செல்வோர்க்கு நல்ல கட்டுப்பாடு தேவை. தொடக்கக் கால ஆன்மிகப் பயிற்சியாளர்க்கு எடுத்துக்காட்டாக வளரும்சிறு செடியை இரமணர் குறிப்பிடுகிறார். அச்செடியைத் தின்பதற்காகப் பல விலங்குகள் வரும். எனவே அதனைச் சுற்றி நன்கு வேலி அமைத்துக் காக்க வேண்டும். அது வளர்ந்து மரமானபின் வேலி தேவையில்லை. மேலும், தன்னை அணுகும் விலங்குகளுக்கு அது தழை கொடுத்தும் உதவும். அது போலவே ஆன்மிகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடக்கத்தில் நல்ல கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். அத்துறையில் வல்லவர்களாகி விட்டால், அவர்களை எவ்வகைத் தீய ஆற்றல்களும் ஒன்றும் செய்ய மாட்டா. அவர்களை நாடிவருவோரும் நன்மையடைவர்.

முத்துக் குளிக்கிறவன் கண்களை மூடி வாய் பேசாமல், மூச்சையடக்கிக் கொண்டு நீரில் மூழ்கி நல்ல முத்துகளை எடுக்கிறான். அது போன்று கண்களை மூடிக் கொண்டு, வாய் பேசாமல், பிராணாயாம முறைப்படி மூச்சையடக்கி, எண்ணங்களை வெளியே செலுத்தாமல் அவைகளை எழுந்த இடத்திலேயே அடக்கி விட்டால் உயரிய நிலையை அடையலாம் என்பதில் ஐயமில்லை.

உப்பினால் செய்த பொம்மையைக் கடலில் முழ்கடித்தால் சிறிது நேரத்தில் அது கரைந்துவிடுவதுபோல், எண்ணங்களை எழுந்த இடத்திலேயே மீண்டும் செலுத்தி விட்டால் அவை மறைந்துவிடும்.

பகவான் இரமணர் ஆன்ம ஞானத்திற்குக் கீழ்க்காணும் வழிமுறைகளைக் கூறுகிறார். 1. இறைவனை நினைத்து உருகி அவர் பற்றிய பாடல்களைப் பாட வேண்டும். 2. இறைவன் நாமங்களை வாயார, மனமாரப் பலமுறை உருப்போட வேண்டும். 3. எப்பொழுதும் இறைவனையே எண்ண வேண்டும். மனத்திற்குப் பிடித்த உருவத்தை மனக்கண்முன் நிறுத்தி வைக்க வேண்டும். இம்முறை தியானம் எனப்படும். மனத்தையும் மூச்சையும் அடக்கிப் பழகுவதே யோகம். 4. மனத்தை ஆன்மாவில் அடக்கி எண்ணங்களை இல்லாமல் ஆக்குவதே ஞானம். இவை அனைத்தும் மனத்தின் முயற்சியால் செய்யப்படுவன. மனத்தின் முயற்சி அடங்கிய நிலையில் ஏற்படும் தியான நிலை சமாதி எனப்படும்.

உண்மை ஞானி எந்த இடையூறு பற்றியும் கவலை கொள்ளான். இடையூறுகளைப் பற்றி எண்ணுவதே பெரிய இடையூறு. ஞானி பிறருக்குச் செயற்படுவது போலத் தோன்றினாலும், உண்மையில் செயலற்றே இருக்கிறான்.

சித்தர்கள் மாயா சக்தியால் செய்யும் அற்புதங்கள் உண்மையல்ல. மனத்தை ஆன்மாவில் அடங்கச் செய்வதே மேலான சித்தி.

உண்மை அறிவிலும் அமைதியிலும் ஆழ்ந்து உறங்குவது போன்று அனைத்துச் செயல்களும் அடங்கிய நிலையிலேயே உண்மையான இன்பம் ஏற்படுகிறது. இவ்வாறு பகவான் இரமணர் அறிவுறுத்துகிறார். சகு

**இரயில் கட்டணத் தீர்ப்பாயம்**: ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி போக்குவரத்து வசதிகளையும் சார்ந்து அமையும். பெரும்பாலான நாடுகளில் இரயில் அமைப்புகள், முற்றுரிமை மிக்க அமைப்புகளாகவே (Monopolistic Organisations) செயற்படுகின்றன. இம்முற்றுரிமை மிக்க இரயில் அமைப்புகள் கட்டணங்களை உறுதி செய்வதில் உரிமை பெற்றுள்ளன.இவ்வுரிமையைஇரயில் அமைப்புகள் தவறாகப் பயன்படுத்துமேயானால், அதனால் பெரிதும் அஞ்சத்தக்க விளைவுகள் ஏற்படும். எனவே, இவ்வுரிமையைக் கட்டுப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. ஒவ்வொரு நாட்டிலும் இரயில் கட்டணங்கள் தனியொரு அமைப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இந்தியாவை ஆட்சி புரிந்த ஆங்கிலேய நிருவாகம் நெடுங்காலமாக இவ்வகை அமைப்புக்கு வழி கோலவில்லை. அக் காலத்தில் தனியார் இரயில் நிறுவனங்கள் வாங்கிய கட்டணங்கள் முறையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் பொது மக்களுக்கும், இரயில் நிருவாகங்களுக்குமிடையில் கட்டணங்களைச் சார்ந்தெழுந்த வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டுக் 'கட்டணத் தீர்ப்பாயம்' (Rates Tribunal) ஒன்றை அமைக்க வேண்டுமென ஆக்வொர்த்துக் குழு வற்புறுத்திப் பரிந்துரை செய்தது. அப்பரிந்துரையை ஆதாரமாகக் கொண்டு இந்திய அரசு 1926–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் முதல் நாள் 'இரயில் கட்டண அறிவுரைக் குழு'வை (Railway Rates Advisory Committee)ஏற்படுத்தியது. அரசு பொது மக்களின் கருத்துக்கிணங்கவே இக்குழுவை அமைத்தது. ஆனால் அது முழு மனத்துடன் அதன் பணிகளில் ஈடுபடவில்லை. எனவே, இக்குழுவின் செயல் முறைகளில் மக்களுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. பொதுமக்கள் முழு அதிகாரத்துடனும் பொறுப்புடனும் செயற்படக் கூடிய 'இரயில் கட்டணத் தீர்ப்பாயத்தை' (Railway Rates Tribunal) அமைக்க வேண்டுமென வேண்டினர். பொது மக்களின் தொடர்ந்த இவ்வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டு 1949–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 4–ஆம் நாள் 'இரயில் கட்டணத் தீர்ப்பாயம்' அமைக்கப்பட்டது. இத் தீர்ப்பாயமும் பொதுமக்களின் எண்ணங்களைச் செயலாக்கவில்லை. இதைத் தொடர்ந்து, பொதுமக்கள் மிகுதியான அதிகாரங்களுடன் கூடிய தீர்ப்பாயம் ஒன்றை அமைக்க வேண்டுமென மீண்டும் வேண்டுகோள் விடுத்தனர். இச்சிக்கல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடனும், தீர்ப்பாயத்தைத் திறம்படச் செயற்படுத்தும் எண்ணத்துடனும் இந்திய அரசு 1957–ஆம் ஆண்டு 'இரயில் கட்டண அமைப்பு ஆய்வுக் குழுவை' நிறுவியது. அக் குழுவின் கருத்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக 1957–ஆம் ஆண்டு 'இந்திய இரயில்வே சட்டம்' (Indian Railways Act, 1957) நடைமுறைப்படுத்தப்பட்டுப் புதிய இரயில் கட்டணத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

இப் புதிய தீர்ப்பாயம் ஒரு தலைவரையும் இரு உறுப்பினர்களையும் கொண்டது. இவர்கள் மத்திய அரசால் அமர்த்தப்படுவர். தலைவர் உச்ச நீதி மன்றம் அல்லது தலைமை நீதிமன்றத்தில் நீதிபதிப் பொறுப்பு வகித்தவராக இருப்பார். உறுப்பினிருவரும் வணிகம், பொருளியல், தொழில்துறை, இரயில் அமைப்புகளின் செயற்பாடு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவராக இருக்கவேண்டும். இவர்கள் பொறுப்பு வகிக்கும் காலம் அரசால் முடிவு செய்யப்படும்.

தீர்ப்பாயத்தின் அதிகாரங்களாவன: 1) தடயங்கள், சாட்சிகள், கோப்புகள் ஆகியவற்றைத் தடையின்றிப் பெறுவது போன்ற நீதிமன்றமொன்றின் அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது. 2) நியாயத்துக்குப் புறம்பான கட்டணங்கள்(Unreasonable Rates) தொடர்பான முறையீடுகளை ஆராய்ந்து முடிவெடுப்பது. 3) இரண்டு இரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரத்திற்குப் புதிய கட்டணமொன்றை வரையறுப்பது. 4) சில வரம்புகட்குட்பட்டுப் பொருளொன்றை மறு பாகுபாடு (Re-Classification) செய்வது. 5) போக்குவரத்துத் தொடர்ந்து செம்மையாக நடைபெறத் தேவையான அதிகாரங்களை மேற்கொள்வது.

மேற்சொன்ன அதிகாரங்களைத் தீர்ப்பாயம் சில வரையறைகளுக்குட்பட்டே கைக்கொள்ள முடியும். அவ்வரையறைகளாவன: 1) பாகுபடுத்தப்பட்ட இரயில் கட்டணங்களைத் (Classified Railway Rates) திருத்தி அமைக்க இயலாது. 2) அரசின் வேண்டு

கோளில்லாமல் புதிய பொருளொன்றைப் பாகுபாடு செய்வதற்கோ மறு பாகுபாடு செய்வதற்கோ உரிமை கிடையாது. 3) தண்டக் கட்டணம் (Demurrage) விதிப்பதிலோ அது தொடர்பான விதிகளை முறைப்படுத்துவதிலோ எவ்வித அதிகாரமுமில்லை. 4) பயணிகள் கட்டணம், அவர்கள் தங்களுடன் கொண்டு செல்லும் சரக்குகளுக்கான கட்டணம் போன்றவற்றில் மாறுதல் செய்வதற்கு அதிகார மில்லை. 5) பாதுகாப்புப் போக்குவரத்து (Military Traffic), இரயில் சரக்குகள் (Railway Materials) போன்றவற்றிற்கான கட்டணங்களையும் மாற்றி அமைக்க அதிகாரமில்லை.

இரயில் கட்டணங்களை முறைப்படுத்தும் நோக்கோடு இந்தியாவில் முன்பு செயற்பட்ட அமைப்பு களோடு ஒப்பிடும்போது, புதிய இரயில் கட்டணத் தீர்ப்பாயம் மிகுந்த செயல் திறனோடுதான் பணி யாற்றுகிறது. ஆனால், மற்ற நாடுகளில் செயற்படும் இவ்வித அமைப்புகளோடு ஒப்பிடும்போது, இந்தியத் தீர்ப்பாயத்தின் செயல்திறன் சிறப்பாக அமைய வில்லை. எனவே, இத்தீர்ப்பாயத்தை வலிவு மிக்க தாக விளங்கச்செய்ய மேலும் பல தேவையான அதிகாரங்களை வழங்கி, மேற்சொன்ன வரையறை களை நீக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இரா. சி.

துணை நூல்கள்:

**JAIN**, J.K., Transport Economics, Chaitanya Publishing House, Allahabad, 1984.

**Srivatsava**, Transport Development in India, S. Chand & Co., New Delhi, 1974.

**இரயில்வண்டிக்கலம்:** இயக்குபொறி (Locomotive), பயணிப் பெட்டிகள் (Passenger Coaches), சரக்குப் பெட்டிகள் (Freight Cars) போன்றவையனைத்தும் இரயில் வண்டிக் கலம்( Railway Rolling Stock) எனப்படும். ஒரு நாட்டில் இரயில் வண்டிக் கலத்தின் வளர்ச்சியைக் கொண்டே அந்நாட்டு இரயில் போக்குவரத்து வளர்ச்சியினைக் கணக்கிட முடியும்.

பயணிப் பெட்டிகளையும் சரக்குப் பெட்டி களையும் இருப்புப் பாதையில் (Railroad) இழுத்துச் செல்வன இயக்குபொறிகளாகும். இயக்கும் ஆற்றலை (Motive power) ஆதாரமாகக் கொண்டு, இயக்குபொறிகளை நீராவி இயக்குபொறி (Steam Locomotive), 'தீசல்' இயக்குபொறி (Diesel Locomotive), மின் இயக்குபொறி (Electric Locomotive) என மூன்றாகப் பகுக்கலாம். நீராவிப் பொறியும், 'தீசல்' பொறியும் இயக்கும் ஆற்றலைத் தம்மகத்தே உருவாக்கிச் செயற்படுகின்றன. ஆனால், மின் பொறி இயக்கும் ஆற்றலை வெளியிலிருந்து பெற்றுச் செயற்படுகின்றது.

நீண்ட காலமாக இரயில் இயக்கு பொறிகளுக்கு நீராவி மட்டிலுமே இயக்கும் ஆற்றலாகப் பயன் பட்டு வந்தது. காலப்போக்கில் தேவைக்கேற்பப் பொறிகளின் வடிவமைப்பில் மாற்றம் பல செய்த தோடன்றி, வேறு சில இயக்கும் ஆற்றல்களையும் பயன்படுத்தத் தொடங்கினர். இப்போது அமெரிக்காவில் 'தீசல்' ஆற்றலின் துணையால் நீராவி ஆற்றல் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டது எனச் சொல்லலாம்.

நீராவி இயக்கு பொறிகள்: உலகில் இரயில் போக்குவரத்துத் தொடங்கப்பட்ட கி.பி. 1800-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம் உலகப் போர் முடிவடையும் வரை நீராவி இயக்குபொறிகளே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. 1950-ஆம் ஆண்டில் வழக்கத்திற்கு வந்த 'தீசல்', மின் இயக்குபொறிகள் ஆகியவை நீராவி இயக்கு பொறிகளின் இன்றியமையாமையைப் படிப்படியாகக் குறைத்தன. எனினும், இரயில் போக்குவரத்தில நீராவி இயக்குபொறிகளின் பங்கு உலகெங்கும் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லமுடியாது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் முழுமையாக வழக்கொழிந்த நீராவி இயக்குபொறிகள், இன்றும் ஆப்பிரிக்காவில் முதன்மை இயக்கு பொறிகளாகச் செயற்படுகின்றன.

இந்தியாவில் நீராவி இயக்கு பொறிகள், 'சித்தரஞ்சன் இயக்கு பொறிக் கூடத்தில்' (Chittranjan Locomotive Works) வடிவமைக்கப்பட்டன. இக் கூடம் 1950-51-இல் முதல் நீராவி இயக்கு பொறியை உருவாக்கியது. பின்னர், இக்கூடம் 1971-ஆம் ஆண்டோடு நீராவி இயக்கு பொறிகள் உற்பத்தியை நிறுத்திக் கொண்டது. இக் கூடம் 2351 நீராவிப் பொறிகளை இந்திய இரயில் அமைப்புக்கு வடிவமைத்துத் தந்துள்ளது. இப்போது இக்கூடம் 'தீசல்', மின் இயக்கு பொறிகளை உருவாக்குவதில் முனைந்துள்ளது.

மின் இயக்கு பொறிகள்: பயணிகளுக்கும் சரக்குப் போக்குவரத்துக்கும் மின் இயக்கு பொறிகள் சாலச் சிறந்தனவாகும். மின் இயக்குபொறிகளுக்கு இழுக்கும் வலிமை மிகுதியாகஇருப்பதால் செலவில் சிக்கனமேற்படுகிறது. மேலும், நீராவி இயக்கு பொறிகளோடு ஒப்பிடும்போது மின் இயக்கு பொறிகளின் வேகம் மிகுதி. மின் பொறிகளின் இச் சிறப்புக் கூறுகள் பயணிகளாலும், சரக்குகளை அனுப்புவோராலும் மிகவும் விரும்பப்படுகின்றன. சுரங்கங்களிலிருந்து கனிமங்களைக் கொண்டு வரவும், தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களை எடுத்

துச் செல்லவும், முடிவுற்ற பொருள்களை வெளிக் கொணரவும், குறைந்த வலிமை கொண்ட மின் இயக்கு பொறிகள் பெருமளவில் வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளில் பயன்படுத்தப்படுகின் றன. இந்தியாவில் சித்தரஞ்சன் இயக்கு பொறிக் கூடம் 1961-62-இல் முதல் மின் இயக்கு பொறியை வடிவமைத்தது. பின்னர் 1980வரை இக்கூடம் 759 மின் இயக்கு பொறிகளை உருவாக்கியுள்ளது.

'தீசல்' இயக்கு பொறிகள்: 'தீசல்' இயக்கு பொறிமின் சக்தியை உருவாக்கும் இயந்திரமொன் றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வியந்திரம் மின்ஆற்றலால் இரயில் சக்கரங்களைச் சுழலச் செய் கின்றது. அதாவது, இவ்வமைப்பில் 'தீசல்' இயக்கு பொறிக்கும், இரயில் சக்கரங்களுக்கும் நேரடித் தொடர்பில்லை. இடையிலுள்ள மின்ஆற்றலை உரு வாக்கும் இயந்திரம் செயலாக்கத்திற்கு வழி வகுக் கிறது. சித்தரஞ்சன் இயக்கு பொறிக் கூடம் முத லாம் 'தீசல்' இயக்கு பொறியை 1967-68-இல் உண் டாக்கியது. பின்னர் 1980 மார்ச்சு வரை இக் கூடம் 407 தீசல் இயக்கு பொறிகளை வடிவமைத்துள்ளது. இந்திய இரயில்வே அமைச்சகத்தின் நேரடி நிரு வாகத்தின் கீழ் வாரணாசியில் 'தீசல்'இயக்கு பொறிக் கூடம் ஒன்று செயற்படுகிறது. இக் கூடம் 1963-இல் அகலப் பாதைக்கான (Broad Guage) இயக்குபொறி உற்பத்தியைத் தொடங்கியது. இதுவே 1968-69- இலிருந்து மீட்டர் பாதைக்கான (Metre Guage) இயக்கு பொறிகளையும் உண்டாக்கத் தொடங் கியது. இந்திய அரசு 'தீசல்' இயக்கு பொறிகளை 1970-இலிருந்து இறக்குமதி செய்வதை முற்றிலும் நிறுத்தியது.

இருப்புப் பாதைப் பெட்டிகள் (Railroad cars/ coaches): இருப்புப் பாதைப் பெட்டிகளைப் பயணிப் பெட்டிகள், சரக்கேற்றும் பெட்டிகள், பணிப் பெட்டி களென மூவகைப்படுத்தலாம். இருக்கைப் பெட்டிகள் (Chair cars), உணவு உட்கொள்ளும் பெட்டிகள் (Dining cars), பொழுது போக்குவதற்கான பெட்டி கள் (Club Cars), பயணிகள் தங்களோடு கொண்டு செல்லும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் பெட்டிகள் (Baggage cars), கடிதங்களைப் பகுக்கும் பெட்டிகள் (Mail cars), பயணிகளுக்கு ஏனைய வசதிகளை வழங்கும் பெட்டிகள் ஆகியவை பயணிப் பெட்டி களுள் அடங்கும். இந்தியாவில் பயணிப் பெட்டிகள் பெரும்பாலும் பெரம்பூரிலுள்ள இணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலையில் (Integral Coach Fac- tory) செய்யப்படுகின்றன. இத் தொழிற்சாலை இந்திய இரயில்வே அமைச்சகத்தின் நேரடிப் பார்வை யிலுள்ளது.

தொடக்கக் காலத்தில் சரக்குகளை ஏற்றிச் செல்ல இரயில்கள் பயன்படுத்திய பெட்டிகள் மிக எளிமையானவை. பெரும்பாலான பெட்டிகள் மரச் சட்டங்களாற் செய்யப்பட்டிருந்தன. இக்காலத்தில் அளவில் செறிந்த சரக்குகளைப் பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்லப் பலதரப்பட்ட வசதி களுடன் பெட்டிகள் உலகெங்கும் வடிவமைக்கப்படு கின்றன. குளிர்சாதன வசதி கொண்ட பெட்டிகள், சாலை வாகனங்களை ஏற்றிச் செல்லும் பெட்டிகள், பெட்ரோலியப் பொருள்களை எடுத்துச் செல்லும் பெட்டிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இந்தியாவில் சரக்கேற்றும் பெட்டிகளைச் செய்வதில் பொதுத் துறை நிறுவனங்களும் தனியார் துறை நிறுவனங்களும் இணைந்து செயற்படுகின்றன.

இருப்புப் பாதைக் கட்டைகளையும் (Rail-bed) இருப்புப் பாதையையும் செம்மையாக வைத்திருக்கப் பயன்படும் கருவிகளைக் கொண்ட பெட்டிகள் பணிப் பெட்டிகளாகும். இப்பெட்டிகளால் நேரடி வருவாய் ஏதுமில்லை. இந்தியாவிலுள்ள மூன்று இரயில் பணிக் கூடங்கள் (Railways Work Shops) இவ்வகைப் பெட்டிகளையும் அதற்கான கருவிகளையும் வடிவ மைத்துத் தருகின்றன. இரா.சி.

**இரயில்வே நிருவாகம்**: உலகிலேயே முதன் முதலாக இங்கிலாந்தில் இருப்புப் பாதை அமைக்கப் பட்டு இரயில் வண்டித் தொடர் ஓடத் தொடங் கியது. கி.பி. 1825-இல் இரயில் வண்டித் தொடர் களை இயக்குவதால் பெரும் ஆதாயம் கிடைக்கும் என்பதனை உணர்ந்த பல ஆங்கிலேயச் செல்வர், இந்தியாவில் இரயில்வே நிறுவனங்களைத் தொடங் கத் திட்டமிட்டனர். இதற்காக அனுப்பப்பட்ட வல்லுநர் குழு, உற்பத்தி, வாணிகம், ஏற்றுமதி ஆகியவற்றை ஆய்ந்து பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று துறைமுகங்களைப் பொருள் உற்பத்தி யாகும் பிற மண்டலங்களுடன் இணைக்க மூன்று சிறிய இருப்புப் பாதைகளை அமைப்பது என்பத னைப் பரிந்துரைத்தது. இங்கிலாந்து அரசின் இசை வின்மேல் கி.பி. 1853-இல் பம்பாய்-தானா இருப்புப் பாதையும், பின்னர்க் கல்கத்தா, சென்னை இவற் றோடு உள்நாட்டுப் பகுதியை இணைக்கும் (நீளத்தில் சிறிய) பாதைகளும் அமைக்கப்பட்டன.

இரயில்வே நிறுவனங்களுக்கு இழப்பு ஏற்படாத வாறு காக்க அரசு ஒரு பொறுப்புறுதித் தொகையை ஆண்டுதோறும் அளிக்க ஒப்புக் கொண்டது. அதன் விளைவாகக் கி.பி. 1852-இல் சென்னை இரயில்வே நிறுவனம் செயற்படத் தொடங்கியது. ஒப்பந்தங் களின் நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 5 விழுக் காடு ஆதாயம் வரவேண்டும். ஆதாயம் அதற்குக்

குறைவாக இருந்தால் அரசு ஈடு செய்யும். இதனால், அரசுக்கு மிகுந்த செலவு ஏற்பட்டது. தவிர, அரசு இழப்பை ஈடு செய்யும் என்ற எண்ணத்தால் நிருவாகிகள் நிறுவனத்தைத் திறமையுடன் நடத்த முற்படவில்லை. தேவையற்ற பல செலவுகளில் பணத்தை வீணாக்க இது தூண்டுகோலாக அமைந்தது. இந்த பொறுப்புறுதித் திட்டத்திற்கு நாட்டில் பெரும் எதிர்ப்பு இருந்தது. கி.பி. 1860க்குப்பின் அரசு இம்முறையைக் கைவிட்டது. இரயில்வே நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடையாக அளிப்பது என்ற முடிவுக்கு வந்தது. இருப்புப் பாதைகளையும் இரயில் நிலையம் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகளையும் அமைக்கத் தேவைப்பட்ட நிலத்தைக் கொடையாக அளிக்கவும் அரசு முன் வந்தது.

இத்திட்டங்கள் முன்பிருந்த குறைகளை நீக்கித் திறமையான நிருவாகத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தன. எனினும், இரயில்வே நிறுவனங்களுக்கு இவை சாதகமாக இல்லை. புதிய இரயில்வேக்களை அமைக்கவும் இருப்பனவற்றை விரிவாக்கவும் இந் நிறுவனங்கள் ஊக்கம் காட்டவில்லை. புதிய பாதைகள் அமைக்க வேண்டிய தேவையால் உந்தப்பட்ட அரசு தானே முதலீடு செய்து, சில இருப்புப் பாதைகளை அமைத்தது. இக் கொள்கை கி.பி. 1869 முதல் 1880 வரை செயற்பட்டது. இந்தியாவில் அரசு பெருந் தொகைகளை இரயில்வே அமைப்புகளில் முதலீடு செய்ததால் இடையூறுகள் பல ஏற்பட்டன. எனவே, அரசு முதலீடு செய்யும் கொள்கை கைவிடப்பட்டது. கி.பி. 1880க்குப் பிறகு புதிய இரயில்வேக்கள் அமைப்பதும் பழையன விரிவாக்கப்படுவதும் விரைவில் முன்னேறத் தொடங்கின. கிளை இரயில்வேக்களும் வளர்ச்சி அடைந்தன. மயிலாடுதுறை-தரங்கம்பாடி, பேரளம்-காரைக்கால், நீலகிரி மலைஇரயில்வே ஆகியவை இக்காலத்தில் அமைக்கப்பட்டன. இதனால், இரயில்வேக்களின் பயன் சிதறிக் கிடக்கும் சிற்றூர்களுக்கும் கிடைக்கத் தொடங்கியது.

தனியார் துறையில் இரயில்வேக்கள் வளர்ச்சியடைவது நாட்டுக்கு நல்லதன்று என்ற உணர்வு தோன்றி வளரலாயிற்று. சரக்குகளை ஏற்றியனுப்புவதில் தனியார் நிறுவனங்கள் அளவுக்கு மீறிப் போட்டியிட்டன. நிருவாக முறைகளில் பல குறைகள் காணப்பட்டன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத இணையற்ற போக்குவரவுச் சாதனம் அரசின் கீழ் இயங்கினால் மட்டிலுமே நாடு நலம் பெறும் என்ற எண்ணம் மேலோங்கியது. இக் காரணங்களினால் தனியார்நிறுவனங்களின் ஒப்பந்தக் காலம் முடிவுற்றவுடன் அவற்றை அரசு தானேஎடுத்து நடத்தத் தொடங்கிற்று. கிழக்கிந்திய இரயில்வே 1925-இலும், சென்னை-தென் மராட்டா, தென்னிந்திய இரயில்வேக்கள் 1944-இலும் அரசுக்குச் சொந்தமாயின. 1947-இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு, தனி மன்னர்களின் மைசூர் இரயில்வே, நிசாம் அரசு இரயில்வே ஆகியவை இந்திய அரசுக்குச் சொந்தமாயின.

இவ்வாறு இந்திய அரசின்கீழ் வந்த இரயில்வேக்கள் அவை அமைக்கப்பட்ட வெவ்வேறு சூழ்நிலையின் காரணமாக நிருவாக முறை, அமைப்பு ஆகியவற்றில் வேறுபட்டிருந்தன. சில அளவில் மிகச் சிறிய இரயில்வேக்கள். வேறு சில பொருள்கள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து அங்காடி அல்லது துறைமுகத்துக்குச் செல்லும்போது பல இரயில்வேக்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. பயணிகளுக்கும் வணிகர்களுக்கும் பற்பல இடையூறுகள் இதனால் உண்டாயின. ஆகவே, இரயில்வே இணைப்புத் திட்டம் என்ற கொள்கை 1951-இல் செயற்படுத்தப்பட்டது. இதன்படி அரசினர் இந்திய இரயில்வேக்களை 8 மண்டல இரயில்வேக்களாகப் பிரித்தும் இணைத்தும் சீர்ப்படுத்தினர். சில ஆண்டுகளுக்குப் பின் வடகிழக்கு எல்லை இரயில்வே உருவாக்கப்பட்டதால், 9 மண்டல இரயில்வேக்கள் இன்று இந்திய அரசின் கீழ் இயங்குகின்றன.

ஒவ்வொரு மண்டல இரயில்வேக்கும் நிருவாக அலுவலகங்கள், பழுது பார்க்கும் தொழிற்சாலைகள் முதலியவை தேவைக்கு ஏற்ப அமைந்திருக்குமாறு இந்த இணைப்பின் மூலம் திட்டமிடப்பட்டது. மொழி, மாநிலம், மக்கள், வாழ்க்கைமுறை இவற்றையும் இயன்ற அளவு கருத்தில் கொண்டு இத்திட்டம் அமைக்கப்பட்டது. இந்திய நாட்டின் தேவைக்கேற்ற முறையில் இன்றைய மண்டல இரயில்வேக்கள் செயற்படுவதால், இவை நாட்டின் பொருளாதார வவர்ச்சிக்கு உரிய தொண்டினை ஆற்றும் திறமை பெற்றிருக்கின்றன. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு வரை இராணுவங்களை விரைவாகக் கொண்டு செல்வதும், ஆதாயம் பெறுவதும் நோக்கமாக அமைந்திருந்தன. அவற்றை நிறைவு செய்வதற்கு ஏற்றபடி நிருவாக முறைகள் அவ்வப்போது மாற்றம் அடைந்தன. இந்தியா விடுதலை பெற்ற பின், அரசின் நோக்கங்கள் அடிப்படையில் மாறிவிட்டதால் நிருவாக முறைகளும் மாறுதல்களை அடைந்தன. ஆதாயம் பெற வேண்டும் என்ற நோக்கம் இன்று இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியே தலைமையான நோக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை நிறைவேற்றும் அளவுக்குத் தேவையான மாறுதல்களை அடைந்து இன்று இந்திய இரயில்வேக்கள் இயங்குகின்றன.

இந்திய அரசு கி.பி. 1890-இல் இந்திய இரயில்வேச் சட்டத்தை இயற்றியது. அது, ஓர் இரயில்வேயை அமைக்கத் தேவைப்படும் நிலத்தை வாங்கும் முறை, மாநில அரசின் பங்கு, கடமைகள் ஆகிய வற்றை வறையறுத்தது. மேலும், பயணிகளின் உரிமைகள், பண்டங்களை ஏற்றி அனுப்புவோரின் உரிமைகள், இரயில்வேயின் கடமைகள் ஆகிய யாவும் தெளிவாக வரையறுக்கப்பட்டன. மக்கள் வந்து கூடும் இரயில் நிலையத்தில் அமைதி நிலவச் செய்யும் முறையும் இதன் வாயிலாகத் தெளிவாக்கப்பட்டது. அவ்வப்போது சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டாலும், இச்சட்டமே இன்று இரயில்வே, பொது மக்கள் ஆகிய இருசாரரையும் பாதிக்கும் எல்லாக் கூறுகளையும் வரையறுத்து, உரிமைகளையும் கடமைகளையும் நிலைநாட்டுகிறது.

தொடக்கக் காலத்தில் இரயில்வேக்களின் நிருவாகத்தைக் கண்காணிக்க அரசு சில அறிவுரை வழங்கும் பொறியாளர்களைப் (Consulting Engineers) பணியமர்த்தியது. இவர்கள் இரயில்வேக்களின் நிருவாகத்தைக் கண்காணிப்பதோடு, இந்திய இரயில்வேச் சட்டத்தின்கீழ்த் தணிக்கையாளர் நிறைவேற்ற வேண்டிய பணிகளையும் கண்காணித்தனர். இரயில்வேக்களின் வளர்ச்சி, தணிக்கை, சிக்கல்களை ஆய்ந்து தீர்த்தல் முதலியவற்றைக் கவனிக்க அரசின் அமைப்பில் தனியான ஒரு நிறுவனம் தேவைப்பட்டது. அரசு இரயில்வே இயக்குநரகம் (State Railway Directorate) கி.பி. 1874-இல் நிறுவப்பட்டது. பணி மிகுந்துவிட்டதால், கி.பி. 1877-இல் மூன்று மண்டல இயக்குநரகங்கள் அமைக்கப்பட்டன. கி.பி. 1880-இல் மைய அகத்தின் இயக்குநர் தலைமை இயக்குநராக உயர்த்தப்பட்டார். ஆயினும், இவை பற்றிய பல சிக்கல்களைப் பொதுப் பணித் துறையே கவனித்து வந்தது. இங்கிலாந்து அரசு 1901-ஆம் ஆண்டு அமர்த்திய ஒரு சிறப்பு அதிகாரியின் அறிவுரையின்மேல், இரயில்வேக்களின் பணியைக் கண்காணித்து நிருவகிக்கும் முறையை மாற்றி அமைக்க அரசு உறுதி கொண்டு, 1905-இல் இரயில்வே வாரியத்தை (Railway Board) நிறுவியது. இதிலிருந்து இந்திய இரயில்வேக்களின் நிருவாக வரலாற்றில் புதிய காலம் தொடங்கிற்று எனலாம்.

இரயில்வே வாரியம் நிறுவப்பட்ட காலத்தில், அதில் இரு உறுப்பினர்கள் ஒரு தலைவரின் கீழ்ப் பணியாற்றினார்கள். இரயில்வே தொடர்பான எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வு காணும் அதிகாரம் இம்மூன்று உயர் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டது. இரயில்வே வாரியம் இந்திய அரசின் வாணிகத் தொழில் துறையின் மேற்பார்வையில் பணிபுரிந்தது. இதை ஒரு சிறப்பான மாறுதல் எனலாம். வாரியத்தின் தலைவருக்கு 1908-இல் மேலும் சில அதிகாரங்களும் உயர்நிலையும் வழங்கப்பட்டன. மற்றத் துறைகளின் செயலர்களைப் போலவே வாரியத்தின் தலைவர், அரசப் பேராளருடன் (Viceroy) நேரே தொடர்பு கொள்ளும் நிலை தோன்றியது. வாணிகத் தொழில் துறையின் தலைவருக்கு இரயில்வே உறுப்பினர் என்ற பதவியும் வழங்கப்பட்டது. சில ஆண்டுகள் கழிந்த பின்னர், கணக்குத் துறையைக் கண்காணிக்க ஒரு தனி உறுப்பினர் பணி அமர்த்தப்பட்டார். அனுபவமுள்ள பொதுத் துறை, எந்திரப் பொறியாளர் இருவர் (Civil&Mechanical Engineering) வாரியத்திற்கு அந்தந்தத் துறையில் ஆய்வுரை கூறப் பணியமர்த்தப்பட்டனர். இத்துறைகளின் பணி மிகுதியாக வளர்ந்துவிட்டதால் காலப்போக்கில் அரசு இப்பதவிகளையும் உறுப்பினர் நிலைக்கு உயர்த்திவிட்டது. இவ்வாறு 1905-இல் ஆறு பிரிவுகளுடன் மிகச் சிறிய அளவில் தொடங்கிய இரயில்வே வாரியம் இன்று மிகப் பெரிய அமைப்பாக வளர்ந்து விட்டது.

இரயில்வேயின் நிருவாகத்துக்குப் பொறுப்பான அடித்தள அமைப்பு பகுதி (Division) எனப்படும். ஏறக்குறைய 750-1500 கிலோ மீட்டர் நீளமுள்ள இருப்புப்பாதைப் பகுதியின் வேலை அனைத்தையும் எல்லாத் துறைகளையும் சார்ந்த பணி முழுவதையும் கண்காணித்து, அந்தப் பகுதியில் இரயில் வண்டிகளை இயக்கி வருவதே பகுதி என்ற பிரிவின் கடமையாகும். பொதுத்துறை எந்திரப் பொறியாளர், கைகாட்டி (Signal), மின்துறை அலுவலர்கள், இயக்கத்துறை (Traffic Department) அலுவலர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து பணியைக் கண்காணிக்க இத்திட்டம் பெரிதும் உதவுகிறது. இப்பகுதி முறையில் பகுதி மேலாளர் என்ற உயர் அதிகாரி எல்லாத் துறைகளின் பணியையும் இணைத்துச் செயலாற்றுவதுடன், தமது பகுதியில் வண்டி இயக்கத்துக்கு அவர் முழுப் பொறுப்பையும் ஏற்கிறார். பகுதி மேலாளரின்கீழ்த் தொழிலாளர் நல அலுவலர், மருத்துவ அலுவலர், கணக்கு அலுவலர், பாதுகாப்பு அலுவலர், பொதுமக்கள் தொடர்பு அலுவலர் என்போரும் பணியாற்றுகின்றனர். வண்டிகளின் இயக்கத்தைத் தவிர, அப்பகுதியில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலம், இரயில்வேச்சொத்துகளின் பாதுகாப்பு, நாளேடுகள், பொதுமக்களுடன் தொடர்பு போன்ற பணிகளையும் பகுதி மேலாளரே கண்காணிப்பார்.

பகுதியின் தொழிலாளர்களுக்கு வேலை உயர்வு அளித்தல், குற்றம் செய்வோர், பணியை ஒழுங்காகச் செய்யாதோர் ஆகியோரைத் தண்டித்தல் ஆகியவற்றிற்குப் பகுதி மேலாளருக்கு விரிவான

அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. நான்காம் நிலைப் பணியாளர் அனைவருமே பகுதி மேலாளரின் முழு அதிகாரத்தின்கீழ்ப் பணியாற்றுவர். மூன்றாம் நிலைப் பணியாளர்களுள் உயர்ந்த இரண்டு தரங்களைத் தவிர்த்து, மற்றெல்லாரும் பகுதி மேலாளரின் முழு அதிகாரத்துக்கு உட்பட்டவர்களே. இந்தத் தரங்களுக்கு மேல் உள்ளவர்களின் பதவி உயர்வு, தண்டனை ஆகியவற்றைக் குறித்துப் பகுதி மேலாளரின் பரிந்துரை தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும். முடிவான தீர்வினை அங்குள்ள அலுவலர் செய்யவேண்டும். பகுதியில் வேலைசெய்யும் எல்லாத் தரத்தினருக்கும் உரிய ஆண்டு இறுதி மந்தண அறிக்கையினை (Confidential Report) அலுவலர் வழங்க வேண்டும். இக்குறிப்பு மேலாளரின் பார்வைக்கு அனுப்பப்படும். மேல்நிலை அலுவலர்களின் குறிப்பு மேலாளரின் கருத்துரையுடன் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும்.

தலைமை அலுவலகம் மண்டல இரயில்வேயின் பணிகளையும் பகுதிகளின் மேலாளர் ஆற்றும் பணியையும் கண்காணிக்கிறது. இரயில்வேயின் மிக்க உயர் அலுவலராகிய பொது மேலாளரும் (General Manager) பல துறைகளின் தலைமை அலுவலர்களும் உதவியாளர்களும் இத் தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகிறார்கள். பகுதி மேலாளர் பொது நிருவாக நோக்கில் பொது மேலாளரின்கீழ்ப் பணிபரிவார். அந்தந்தத் துறையின் தொழில்நுட்பத் தொடர்பான சிக்கல்களுக்கு அத்துறையின் தலைமை அலுவலர் தீர்வு காண்பார்.

எடுத்துக்காட்டாக, பகுதியில் பணிபுரியும் மின்துறை அலுவலர் நிருவாக நோக்கில் பகுதி மேலாளரின்கீழ் வேலை செய்வார். மின் துறையின் தொழில்நுட்பத் தொடர்பான சிக்கல்கள் எழும்போது, அவற்றுக்கு முடிவான தீர்வு காண்பது மின்துறையின் தலைமைப் பொறியாளரே. பகுதி மேலாளர் பொதுத்துறைப் பொறியாளராகவோ, இயக்கத் துறை அதிகாரியாகவோ இருக்கலாம். இவரால் மின்துறை நுட்பங்களைக் குறித்துத் தீர்வு காண முடியாது. பகுதி மேலாளர் மின்துறைப் பொறியாளராகவே இருந்தாலும், அவர் துறைத் தலைவரை விட அனுபவத்தில் குறைந்தவராகவே இருப்பார். எனவே, இந்நிலையிலும் அவர் துறைத் தலைவரிடம்தான் தொழில்நுட்பங் குறித்துக் கருத்துரை பெறவேண்டும். மின்துறைத் தலைமைப் பொறியாளரும் பிற துறைத் தலைவர்களும் பொது மேலாளரின் கீழ்ப் பணியாற்றுபவர்களே.

பகுதி என்ற அமைப்பின்கீழ்ச் செயற்படாத துறையும் ஒன்று உண்டு. அது இரயில்வேயின் பற்பல தேவைகளுக்காகப் பொருள்களை வாங்குவது, அவற்றை விழிப்புடன் காத்துச் சேமித்து வைப்பது, அவற்றைத் தேவைக்கு ஏற்றபடி வழங்குவது ஆகியவற்றைக் கண்காணிக்கும் துறையாகும். தவிர, இரயில்வே எந்திரங்கள் (Engines), வண்டிகள், கைக்காட்டிகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பெரிய பட்டறைகளும், பகுதி நிருவாகத்தின் கீழ் வாரா. இவற்றை அந்தந்தத் துறைத் தலைமை அலுவலர் சில தொழில்நுட்ப உதவியாளருடன் நேரடியாகக் கண்காணித்துக் கொள்வார்.

மண்டல இரயில்வேக்கள் எல்லாவற்றுக்கும் தலைமையகமாக இயங்குவது இரயில்வே வாரியம். வண்டிகளை இயக்கும் மண்டல இரயில்வேக்களைத் தவிர, இரயில்வே நிருவாகத்தின்கீழ் வருவன, சித்தரஞ்சனில் உள்ள இரயில் எஞ்சின்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், சென்னை பெரம்பூரில் உள்ள இணைப்புப் பெட்டித்தொழிற்சாலையும், வாரணாசியில் உள்ள தீசல் எஞ்சின் (Diesel Engine) தொழிற்சாலையும், பங்களூரில் உள்ள சக்கரம்,இருசு ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையுமாம். இரயில்வே இயக்கத்துக்கு இன்றியமையாத எந்திரப் பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பஞ்சாபு மாநிலத்தில் பாட்டியாலாவில் நிறுவப்படுகிறது. பஞ்சாபு மாநிலத்தில் வண்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் அமைக்கப்படஇருக்கிறது.

இவை தவிர, இரயில்வே அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பரோடாவில் ஒரு கல்லூரியும், இருப்புப் பாதையின் உயர்நுட்பங்களைக் கற்பிக்கப் புனே நகரத்தில் ஒரு நிறுவனமும், கைகாட்டி, மின்செய்திப் பரப்பு (Tele-Communication) ஆகியவற்றில் பயிற்சி அளிக்கச் சிக்கந்தராபாதில் ஒரு கல்லூரியும் இரயில்வே வாரியத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றன. இரயில்வேயின் இருப்புப்பாதை, எந்திரம், இயக்கம் ஆகியவை பற்றிய நுண்ணிய ஆராய்ச்சிகளை நடத்தவும், இவை எவ்வாறு இயக்கப்பட வேண்டும் என்ற அளவு, தரம் ஆகியவற்றை வரையறை செய்யவும், இலட்சுமணபுரியில் (Lucknow) ஆர்.டி.எசு.ஓ (Research Design & Standardisation Organisation R.D.S.O.)என்ற நிலையம் வாரியத்தின் நேர் கண்காணிப்பின்கீழ் இயங்கி வருகிறது.

இத்தகைய நிறுவனங்களின் பணியைக் கண்காணிப்பதுடன் வாரியத்தின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. மைய அரசின் இரயில்வே தொடர்பான எல்லாக் கொள்கைகளையும் நிறைவேற்றுவதும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இரயில்வேத் தொடர்பான எல்லா கேள்விகளுக்கும் விடையளித்து அவற்றின் தேவைகளை நிறைவேற்றுவதும் வாரியத்

தின் பொறுப்பாகும். மைய அமைச்சரகத்தின் ஒரு துறையாக இவ்வாரியம் செயற்படுகிறது.

மண்டல இரயில்வேக்களின் அன்றாட வேலைகளில் வாரியம் தலையிடாது. பொது மேலாளர்களுக்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால் பொது நிகழ்ச்சிகளைஎல்லாம் பொது மேலாளரே கண்காணித்து முடிவு செய்வார். பணியாளரின் சம்பளம், பணியாற்றும் நேரங்கள் ஆகியவை இந்தியா முழுவதற்கும் ஒரே வகையில் சீராக்கப்பட்டவை. ஆகையால்,இவற்றை மாற்றப் பொது மேலாளருக்கு அதிகாரம் இல்லை. இரயில்வேயில் விபத்து நேர்ந்தால் வண்டிகளின் இயக்கத்தை மீண்டும் தொடங்குதல், இருப்புப் பாதையைப் பழுதுபார்த்தல்,உடனடி வேலைகளுக்கு அன்றாடக் கூலியில் ஆட்களை அமர்த்தல், விபத்தில் அடிபட்டவர்க்கும் இறந்தவர் குடும்பத்தினர்க்கும் பண உதவி செய்தல் ஆகியவற்றிற்குப் பொது மேலாளர் மேலிடத்தின் ஆணையைப் பெற வேண்டுவதில்லை. பொருள்களை வாங்குவதில் உலக நாடுகள் முழுவதற்கும் ஒப்பந்தப்புள்ளி விவரங்களை (Tender Notice)வழங்கி, வரும் பதில்களைஆராய்ந்து முடிவு செய்வது வாரியத்தின் பொறுப்பாகும். மண்டல இரயில்வேயுடன் எழும் உறவு, கருத்து வேற்றுமை ஆகியவற்றில் வாரியத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

பொருள்களை ஏற்றிச் செல்ல இரயில்வேக்களுக்குத் திட்டமிட்ட கட்டண விகிதத்தைச் சில இடங்களில் மாற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதன்படி விதிக்கப்பட்ட கட்டண விகிதம் ஒரு நிறுவனத்திற்கு மிகவும் சார்பாக அமைந்துவிட்டது என்று வேறொரு நிறுவனம் கருதினால் ஆதாயம் பாதிக்கப்படலாம். இந்நிலையில் அரசு இந்நிறுவனத்தின் குறைகளைக் கவனிக்க, இரயில்வே கட்டண விகித மன்றம் என்ற ஒன்றினை இந்திய இரயில்வேச் சட்டத்தின்கீழ் நிறுவி நடத்தி வருகிறது.இது சென்னை அடையாற்றில் அமைக்கப்பட்டிருக்கிறது. கட்டண விகிதம் தொடர்பாக எந்தச் சிக்கல்களுக்கும் இம்மன்றத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

உலக இரயில்வேக்களின் பொதுவான சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணப் பன்னாட்டு இரயில்வே மாநாட்டுக் கழகம் (International Railway Conference Association) பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. அதில் இந்தியாவும் ஓர் உறுப்பு நாடாகும். அவ்வப்போது இந்நிறுவனம் கருத்தரங்குகளை நடத்துகிறது. வளரும் பிற நாடுகளிலிருந்து பல மாணவர்கள் இந்திய இரயில்வேக்கள் நடத்திவரும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அந்நாடுகள் இரயில்வே எந்திரம், வண்டிப் பெட்டிகள் ஆகியவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றன. இரயில்வே வாரியம் இந்திய இரயில்வேக்களின் பேராளராக (Repre sentative)அயல்நாட்டுத்தொடர்பான இரயில்வேப் பணிகளை மேற்கொள்கிறது.

இரயில்வேக்களின் வரவு செலவுகள் 1924-ஆம் ஆண்டு வரையில் மைய அரசின் வரவு செலவுகளின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. இரயில்வேக்களின் வரவு செலவுத் திட்டத்தை மைய அரசின் திட்டத்திலிருந்து பிரித்துத் தனியே நாடாளுமன்றத்துக்கு அளிக்கவேண்டும் என்ற கொள்கை 1924-இல் நிறைவேறியது. அன்று முதல் அவ்வாறே தனியாக அளிக்கப்பட்டு வருகிறது. இதனால், மையத் திட்டம் பாதிக்கப்படுவதில்லை. மைய அரசு இரயில்வேக்களில் முதலீடு செய்துள்ள பணத்திற்கு ஒரு வரையறுக்கப்பட்ட வட்டி கிடைக்கும் என்ற உறுதி ஏற்பட்டுள்ளது. இரயில்வேக்களைப் பழுது பார்க்கும் திட்டம், ஓய்வு ஊதியம் ஆகியவற்றிற்குத் தனித்தனியே நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆண்டின் செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவை மீறாமலும், வரவுகள் அந்த அளவுக்குக் குறையாமலும் இருக்கும்படி கண்காணிப்பது வாரியத்தின் இன்றியமையாத பொறுப்பாகும். கணக்கு ஆண்டு முடிந்தபின், வரவு செலவுகளைத் திட்டத்தின் பங்கீடுகளோடு ஒப்பிட்டுக் கூடியது, குறைந்தது ஆகியவற்றை ஆராய்ந்து, அவற்றிற்கான விளக்கக் குறிப்புகளை நாடாளுமன்றத்திற்கு நாட்டின் தலைமைத் தணிக்கையாளர் (Auditor General) அளிப்பார். வீண்செலவுகள் செய்யப்பட்டிருந்தாலும், வரவுகள் விடப்பட்டிருந்தாலும் தக்க நடவடிக்கை எடுப்பதும் இரயில்வே வாரியத்தின் பொறுப்பாகிறது. இவ்வாறாக, இரயில்வே வாரியம் மக்களின் எண்ணத்தை நடைமுறையில் செயலாற்றும் பொறுப்பான பெரும் பணியை ஆற்றி வருகிறது. அ.வெ.சு.

**இரயில்வே பாதுகாப்புப் படை**: இந்திய இரயில்வே அமைப்புக்குச் சொந்தமான சொத்துக்களைப் பராமரிப்பது 'இரயில்வே பாதுகாப்புப் படையின்' (Railway Protection Force) பொறுப்பாகும். இப்படையினை அமைப்பதற்காகவும் நெறிப்படுத்துவதற்காகவும் 1957-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டமே இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டம் (Railway Protection Force Act, 1957) ஆகும். இச்சட்டத்தின் கீழ் இரயில்வே நிருவாகத்திற்குச் சொந்தமானவையும், இரயில்வே நிருவாகப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட சொத்துகளும் 'இரயில்வே சொத்துகள்' (Railway Property) எனக் கருதப்படும்.

இப்படையில் உயர் பதவிகளனைத்தும் மத்திய அரசால் நிரப்பப்படுகின்றன. முதன்மை ஆய்வாளர் (Inspector-General), தலைமைப் பாதுகாப்பு அலுவலர்கள் (Chief Security Officers), பாதுகாப்பு அலுவலர்கள் (Security Officers), துணைப் பாதுகாப்பு அலுவலர்கள் (Assistant Security Officers) போன்ற பொறுப்புகளனைத்தும் மைய அரசால் நேரடியாக வழங்கப்படுகின்றன. இரயில்வே பாதுகாப்புப் படைச்சட்டம் மேற்கூறிய உயர் அதிகாரிகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கியுள்ளது. இவ்வதிகாரங்களின் துணைகொண்டு உயர் அதிகாரிகள் தங்களுக்குக் கீழ்ப் படையில் பணிபுரிவோரை நெறிப்படுத்துகின்றனர்.

இப்படையில் பணியாற்றும் மற்றவர்களை இடைநிலை அலுவலர்களென்றும் களப் பணியாளர்களென்றும் பகுக்கலாம். ஆய்வாளர் (Inspector), சார்-ஆய்வாளர் (Sub-Inspector), துணைச் சார் ஆய்வாளர் (Assistant Sub-Inspector) போன்றோர் இடைநிலை அலுவலர்களாவர். களப் பணியாளர்களைத் தலைமைப் பாதுகாவலர் (Head Rakshak), முதுநிலைப் பாதுகாவலர் (Senior Rakshak), பாதுகாவலர் (Rakshak) எனப் பிரிக்கலாம்.

சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டுத் தலைமைப் பாதுகாப்பு அலுவலர் தமது பொறுப்பின் கீழுள்ள பகுதிக்கான இடைநிலை அலுவலர்களையும் கள ஊழியர்களையும் பணியில் அமர்த்துகிறார். இரயில்வே பாதுகாப்புப் படையில் ஒருவர் பணியில் அமர்த்தப்படும்போது தலைமைப் பாதுகாப்பு அலுவலரிடமிருந்து சான்றிதழ் ஒன்றினைப் பெறுகிறார். சான்றிதழ் பெற்றதுமே அவர் படை உறுப்பினரொருவரின் அதிகாரங்களனைத்தையும் பெற்றவராகிறார். படையின் உறுப்பினர் பதவியை இழந்த ஒருவர் அச்சான்றிதழை உடனே மூத்த அதிகாரியிடம் ஒப்படைக்கக் கடமைப் பட்டவராகிறார்.

இரயில்வே பாதுகாப்புப் படை மைய அரசின் ஆளுமைக்குட்பட்டது. இப்படை முதன்மை ஆய்வாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்ச் செயற்படுகின்றது. முதன்மை ஆய்வாளர் இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டத்தின் விதிமுறைகட்குட்பட்டுச் செயலாற்றுகிறார். பாதுகாப்புப் படையின் செயற்பாட்டிற்காக இந்திய இரயில்வே அமைப்பு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு தலைமைப் பாதுகாப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளது. தலைமைப் பாதுகாப்பு அலுவலர் சட்டத்தின் விதி முறைகட்குட்பட்டும் இரயில்வே பொது மேலாளரின் (General Manager) விருப்பத்திற்கிணங்கவும் தமது ஆளுமையின் கீழுள்ள படையை நிருவாகம் செய்கிறார்.

இந்திய இரயில்வேச் சட்டம் 1890-இன்படி (Indian Railways Act, 1890) பாதுகாப்புப் படையில் பணிபுரிவோர் அனைவரும் இரயில்வேப் பணியாளர்களென்றே கருதப்படுகின்றனர். இரயில்வேச் சொத்துகளைத் திருடியவரையோ, பங்கம் விளைவித்தவரையோ, இவ்விதச் செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடும் என்ற ஐயத்திற்குள்ளானவரையோ, படையின் உயர்நிலை அதிகாரி அல்லது பணியாளர் நீதிமன்றத்தின் ஆணையில்லாமலே கைது செய்ய முடியும். ஐயத்திற்குள்ளானவரையும் அவர் உடைமைகளையும் சோதனையிடப் படையின் பணியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. படைப் பணியில் ஆழ்ந்த ஈடுபாடு இல்லாமல் செயற்படும் ஒருவரைக் கண்டிக்கக்கூடிய உரிமை மைய அரசுக்கும் உயர்நிலை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

படைப் பணியாளர்கள் தங்களது பணியில் ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் செயற்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் இவ்வகைக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இரா.சி

துணை நூல்:

Gyan Prakash & Sethi.R.B., The Indian Railways Act, Law Publishers, Allahabad, 1971.

**இரவிவர்மா** (1848-1906) கேரள நாட்டு அரச பரம்பரையில் தோன்றிய சிறந்த ஓவியக் கலைஞர் ஆவார். இவர் கி.பி. 1848 ஆம் ஆண்டு ஏப்பிரல் 29-ம் நாள் கிளிமானூர் அரண்மனையில் பிறந்தார். இரவிவர்மாவின் தாய் மாமன் இராசராச வர்மா என்பவர் இவருடைய கலை ஆர்வத்தை வளர்த்தார். இவர் ஐரோப்பிய ஓவியக்கலைஞர் சான்சனிடம் (Johnson) ஓவியக் கலை பயின்றார். இவர் கி.பி. 1873-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த கலைக் காட்சியில் 'நாயர் நங்கை' என்னும் ஓவியத்திற்குப் பரிசு பெற்றார். அப்படம் வியன்னா ஓவியக் காட்சியிலும் தங்கப்பதக்கம் பெற்றது. சென்னையில் 1874-ம் ஆண்டு நடந்த காட்சியில் 'தமிழ் நங்கை' என்னும்ஓவியத்திற்குப் பரிசு கிடைத்தது. இவருடைய புராண காவியச் சித்திரங்கள் எங்கும் புகழ் பெற்றன. இவர் தீட்டிய ஓவியங்களும் படங்களும் கி.பி. 1892-ஆம் ஆண்டு சிகாகோக் கலைக்காட்சியில் இரண்டு தங்கப் பதக்கம் பெற்றன. இந்திய ஓவியக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர் இவரே. இந்துமதக் கடவுளர் உருவங்களைக் கற்பனை செய்து அழகுறத் தீட்டிய பெருமை இரவிவர்மாவையே சாரும். தேவ மங்கையர்களின் உருவங்களையும், சாகுந்தலம் போன்ற காவியத் தலைவியரின் உருவங்களையும் கவின்பெறத் தீட்டிப் புகழ் பெற்றார். இவர் நெய் ஓவியங்கள்



இரவிவர்மா


தீட்டுவதில் திறன் மிக்கவராக இருந்தார். மேனாட்டு ஓவிய மரபைத் தழுவி நம்நாட்டுப் புராண ஓவியங்கள் தீட்டுவதில் சிறந்தவராயிருந்தது போலவே, உயிரோவியங்களையும் பண்போவியங்களையும் தீட்டுவதிலும் இரவிவர்மா சிறந்து விளங்கினார். இவர் 1906-ஆம் ஆண்டு அக்டோபர் 6-ஆம் நாள் காலமானார்.

**இரவீச மரபினர் காதை** என்பது இராமாயணம், பாரதம் ஆகிய இரு பேரிலக்கியங்களின் பொருள் பாடல்தோறும் இணைந்துவருமாறு சிலேடையாகப் பாடப்பட்ட ஒரு நூலாகும். தெலுங்கு மொழியில் 'இராகவ பாண்டவீயம்' என்னும் நூல் இராமாயணமகாபாரதப் பொருளைப்பாடல்தோறும் இணைத்துப் பாடப்பட்ட சிலேடைக் காவியம். இக்காவியம் தெலுங்கு மொழிக் கவிஞராகிய பிங்கல சூரன்னா என்பவரால் இயற்றப்பட்டது. விசய நகரப் பேரரசில் தானைத் தலைவராக விளங்கிய 'ஆகுவீட்டி பெதவேங்கடப்பிரபு' என்னும் குறுநில மன்னர் விருப்பத்திற்கிணங்க இந்நூல் இயற்றப்பட்டு, அவரது அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.

இந்த நூலினையே மே.மு. மாரய்யாச்சாரியார் என்பவர் தமிழில் 'இரவீச மரபினர் காதை' என்னும் பெயரில் சிலேடைக் காப்பியமாக மொழிபெயர்த்துள்ளார். இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் முனியாச்சாரியார், புட்டம்மை ஆவர். இவர் முன்னோர் மைசூர்ப் பகுதியிலுள்ள மேல்கோட்டையில் வாழ்ந்து பின்னர், சேலம் மாவட்டத்திலுள்ள இராசிபுரத்தில் குடியேறினர். இந்நூலாசிரியர்தெலுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழிகளில் புலமையும் கவிபாடும் திறமையும் பெற்றுத் திகழ்ந்தார். சேலம் மாவட்டத்தில் உள்ள நயினாமலை இறைவன்மீது 'வரதராசநகம்' என்னும் பெயரில் ஒரு தெலுங்கு இலக்கியம் இயற்றியுள்ளார். சிலைகளை வடிக்கும் சிற்பத் தொழில் வல்லவராய்ப் பணிபுரிந்த இவர், தம் தந்தைக்குப் பின்னர் அவர் புரிந்து வந்த புரோகிதத் தொழிலினை மேற்கொண்டார். தெலுங்கிலுள்ள இராகவ பாண்டவீயம் என்னும் நெடுங்காப்பியத்தைத் தமிழ் மொழியில் இயற்றுமாறு இறைவன் இவர் கனவில் தோன்றிக் கூறியதாகத் தம் நூலின் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முதற் பகுதி 1964-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. பாயிரம், நாட்டுச்சிறப்பு, நகரச் சிறப்பு, அரசியற் சிறப்பு, மாதிரவென்றி, வேட்டைஇயல் முதலான 25 பகுதிகளைக்கொண்ட இம் முதற் பகுதி 236 விருத்தப்பாக்களால் இயன்றுள்ளது. நூல் முழுவதும் 700 விருத்தப் பாக்களில் அமைந்ததாகும். பாடல் ஒவ்வொன்றும் இராமாயண பாரதப் பொருளைச் சிலேடையிற் கொண்டிருப்பதோடு, 'இரவீசர் மரபினர் காதை' என்னும் நூற்பெயரும் அவ்வகையில் சிலேடையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இரவீசர் என்பது இரவு + ஈசர் என நின்று சந்திரனையும், அதன்வழி சந்திர மரபினரான பாண்டவரையும், இரவி + ஈசர் என நின்றுஞாயிற்றையும் அதன்வழி ஞாயிற்று வழியினரான இராமன் மரபினரையும் சிலேடையால் குறிப்பிடுகிறது. இவ்வகையால் நூலின் தலைப்பே இராமாயண, பாரத இதிகாசங்களின் இணைப்பாக அமைந்து விளங்குகிறது. இந்நூலாசிரியர் 1942-ஆம் ஆண்டு காலமானார்.

**இரவீந்திரநாத தாகூர் (கி.பி. 1861-1941):** பாரத நாட்டின் அண்மைக் காலப் பெரியோர்களுள் சிறந்த ஒருவராக யாவராலும் போற்றப்படுபவர் – 'குருதேவர்' எனப்படும் கவி. இரவீந்திரநாத தாகூர் ஆவர். இலக்கியம், தத்துவம், கல்வி, கலை போன்ற பல்வேறு துறைகளில் இரவீந்திரர் ஆற்றிய பணி மிகப் பெரியது. நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. இரவீந்திரர் அன்றைய பிளவுபடா வங்காள மாநிலத்தின் கல்கத்தா நகரில், கி.பி. 1861 மே திங்கள் 7-ஆம் நாளில் வசதி மிகுந்த தாகூர் குடும்பத்தில், தேவேந்திரநாத தாகூரின் கடைசிக் குழந்தையாகப் பிறந்தார். இரவீந்திரரது பாட்டனார் துவாரகநாத தாகூர் தமது காலத்தில் வங்க மக்களிடையே பெரும்புகழ் பெற்று வாழ்ந்தவர்; வங்காளச் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டவர். இரவீந்திரரது தந்தை தேவேந்திரநாத தாகூர் அறிவு, ஆற்றல், பண்பு, ஒழுக்கம் ஆகிய யாவற்றிலும் உயர்ந்து விளங்கி, மக்களால் 'மகரிசி' என மதிக்கப்பட்டவர். இரவீந்திரரது மூத்த உடன்

பிறப்புக்களான துவிசேந்திரர், சத்தியேந்திரர், சியோதிரீந்திரர், சுவர்ணகுமார் ஆகியோரும் அறிவாற்றலும் திறனும் மிகுந்து விளங்கினர். இவர் பிறப்பு மரபும் குடும்பச் சூழ்நிலையும் இவரது உயர் ஆற்றல்கள் தழைத்து வளரக் கூடிய வாய்ப்புகளை நன்கு அமைத்துத் தந்தன.



இரவீந்திரநாததாகூர்

இரவீந்திரநாத தாகூர் பிற குழந்தைகளைப் போன்று இளம் பருவத்தில் முறைப்படி கல்வி கற்கப் பள்ளிக்கு அனுப்பப்படவில்லை. இல்லத்தை விட்டு வெளியே சென்று ஓடியாடும் வாய்ப்புகள் கூட இவருக்குத் தரப்பட வில்லை. பிற்காலத்தில், சுதந்திரமானதும் இயற்கையானதுமான வாழ்க்கையில் பேரார்வம் இவருக்கு எழுந்ததற்கு, மிகுந்த கட்டுப்பாடான இளமைக்கால வாழ்க்கை ஒரு காரணமாக அமைந்ததெனலாம். பள்ளி சென்று பயிலாவிடினும் தந்தையார் தேவேந்திரநாத தாகூர் இவருக்கு வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றைத் தாமே கற்பிக்கத் தொடங்கினார். தந்தையின் ‘சாந்தி நிகேதனம்’ என்ற ஆசிரமச் சூழலில் இவருக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. கல்வியறிவுடன் இயற்கை எழில்களை உணர்ந்து மகிழவும் இவ்வாய்ப்பு இவருக்கு உதவியது. மிக இளம் வயதிலேயே (ஏறக்குறைய 11-12 வயது) இவர் இலக்கிய ஆற்றலும் கவித் திறனும் வெளிப்படத் தொடங்கின. ‘பானுசிங்’ என்ற புனை பெயரில் இவர் அப்போதே பல கவிதைகளைத் தம் தாய் மொழியாம் வங்க மொழியில் இயற்றியது குறிப்பிடத்தக்கது. தம் மகன் பிற்காலத்தில் உயர் அரசு அலுவலராகவோ சிறந்த வழக்கறிஞராகவோ வரவேண்டுமென தேவேந்திரநாத தாகூர் விரும்பினார். எனவே, கி.பி.1878 ஆம் ஆண்டு இவர் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு, அங்கு இலண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் என்றி சேம்சு என்பாரிடம் கல்வி பயில ஒப்படைக்கப்பட்டார். ஆனால், கல்விக் காலம் முடியுமுன்னரே கி.பி. 1880-ஆம் ஆண்டில் இவர் இந்தியாவிற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1881-இல் சட்டம் பயில இங்கிலாந்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு அப்பயிற்சியிலும் சேராமல் திரும்பி வந்தார். பின்னர், இத்துறைகளை மறந்து, தம் முதற் காதலான இலக்கியத் துறையில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார். ‘சந்தியா கீதம்’ என்னும் தலைப்பில் கி.பி. 1882-இல் வெளியிடப்பட்ட இவரது கவிதைத் தொகுப்பு நூல், அன்று வங்க இலக்கிய வானில் ஒளி வீசித் திகழ்ந்த பங்கிம் சந்திரரது பாராட்டுதலைப் பெற்றது. அந்நாளிலிருந்து இவரது கவிதைப் பணி தொடர்ந்து பெருகியது. ‘பிரபாத் சங்கீத்’ என்ற மற்றொரு கவிதைத் தொகுப்பு கி.பி.1884-இல் வெளியாயிற்று. கவிதைகளுடன், குழந்தைக் கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், புதினங்கள் போன்ற பலவகை இலக்கியங்களையும் இவர் எழுதி வெளியிட்டார்.

இரவீந்திரர் மிருனாளினிதேவி என்பவரைத்திருமணம் செய்துகொண்டார். இலக்கியப் பணியுடன் தம் குடும்ப நிலங்களை மேற்பார்ப்பதிலும் ஈடுபட்டார். இவர் மனைவி 1902-இல் மறைந்தது, இவரது வாழ்வில் மிக்க துயரமான நிகழ்ச்சியாக அமைந்தது. தம் துயரத்திற்கு இலக்கிய வடிகாலாக ‘இசுமரண்’ அல்லது நினைவு என்னும் கவிதையினைத் தாகூர் எழுதியுள்ளார். இந்தக் காலக் கட்டத்தில் இரவீந்திரரது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளுள் முக்கியமானவை, இவர் ஆதி பிரம சமாசத்தின் உறுப்பினராகிச் செயற்பட்டதும், இந்தியத் தேசிய காங்கிரசின் கூட்டங்களிற் பங்கேற்றதும் ஆகும். இவர் இலக்கியப் படைப்புகளில் நாட்டுப் பற்றும், விடுதலை வேட்கையும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிர்ப்பும், சமூகச் சீர்திருத்தங்களில் ஆர்வமும் வெளிப்படத் தொடங்கின. இத்தகைய மனப்பாங்கின் விளைவாக, இரவீந்திரநாத தாகூர் கல்வித் துறையிலும் கவனம் செலுத்த முற்பட்டார். இரவீந்திரர் 1901-இல், சாந்திநிகேதனத்தில் ஒரு கல்விச் சங்கம் நிறுவி, குழந்தைகள் சுதந்திரமாகச் செயலாற்றித் தம் இயல்பான நற்பண்புகள் முழுமை பெற வாய்ப்பளிக்கத் தக்க கல்வி முறையினைத் தம் கல்விக் கூடத்தில் பின்பற்றலானார். இக் கல்விக் கூடம் விரைவாக வளர்ச்சி பெற்று, ‘விசுவபாரதி’ என்னும் பன்னாட்டுப் பல்கலைக் கழகமாக இன்று செயற்

படுகிறது. நாட்டில் 1905-ஆம் ஆண்டு எழுந்த வங்கப் பிரிவினைக்கு எதிரான தேசியக் கிளர்ச்சி தாகூரின் நாட்டுப்பற்றினைத் தூண்டி, தேசிய நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளச்செய்தது. இவரது நாட்டுப்பாடல்கள் மக்களிடையே நாட்டுப் பற்றினைப் பரப்பும் உணர்ச்சி மிகுந்த கருவியாக அமைந்தன. சுதந்திர பாரதத்தின் நாட்டுப் பாடலான 'ஜனகணமன' கீதம் இரவீந்திரரால் முதலில் 1911-ஆம் ஆண்டில் இயற்றப் பெற்றதாகும். இதனை அவரே ஆங்கில மொழியிலும் பெயர்த்துத் தந்துள்ளார்.

இரவீந்திரநாத தாகூருக்கு இலக்கியத்தில் நோபல்பரிசினைப் பெற்றுத் தந்த 'கீதாஞ்சலி' என்னும் கவிதைத் தொகுப்பு 1910–11 ஆண்டுகளில் அவரால் வெளியிடப்பட்டது. இப்பாடல்களின் இலக்கிய எழிலினால் கவரப்பட்ட ஆங்கிலக் கவிஞர் இயேட்சு (W.B. Yeates) இதன் ஆங்கில மொழி பெயர்ப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்தியதன் விளைவாக 1913-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு இரவீந்திரநாத தாகூருக்கு அளிக்கப்பட்டது. இதன் பின்னர் இவர் புகழ் உலகமெங்கும் பரவத் தொடங்கியது. பல்வேறு உலக நாடுகளின் அழைப்பின் பேரில் இவர் 1912-ஆம் ஆண்டு முதல் அந்நாடுகளுக்குச் சென்று இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். தம் கவிதைகளையும் கல்விக் கருத்துகளையும் சமயம் தத்துவம் போன்ற துறைகளைப் பற்றித் தாம் கொண்டிருந்த கருத்துகளையும் விளக்கினார். ஆங்கில அரசு 1915-ஆம் ஆண்டு இவருக்குச் 'சர்' பட்டத்தையளித்தது. இப்பட்டத்தினைப் பின்னர் மகாத்மா காந்தியடிகள் தொடங்கிய சத்தியாக்கிரக இயக்கத்திற்கு ஆதரவு காட்டும் வகையில் இவர் துறந்தார். காந்தியடிகளின் தொடர்பினையும் நட்பினையும் இவர் பெரிதும் மதித்தார். இப்பெரியோர்களது தொடர்பு 1915-ஆம் ஆண்டு தொடங்கியது. காந்தியடிகளை 'மகாத்மா' என முதலில் அழைத்தவர் இவரேயாவர்.

முன்னர்க் குறிப்பிட்டபடி, இரவீந்திரர் கல்விப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். 'விசுவ பாரதிப்பல்கலைக் கழகத்தை 1921, சூலைத் திங்களில் தொடங்கினார். நாட்டு வளர்ச்சிக்குக் கிராமங்கள் புத்துணர்ச்சி பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர் அவற்றின் சீரமைப்புப் பணிகளில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கச் சாந்திநிகேதனத்தின் ஒரு பிரிவாகச்'சிரீ நிகேதன்' என்னும் அமைப்பினைத் தோற்றுவித்தார். இவர் தொடர்ந்து பல நாடுகளில் சொற்பொழிவாற்றச் சென்று வந்தார். அவ்வாறு இவர் சென்ற நாடுகளின் பட்டியல் நீண்' ஒன்றாகும். 1912-ஆம்ஆண்டு முதல் அடுத்த 2( ளில் இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு, ர், ஐரோப்பிய நாடுகள், சீனா, தென் அமெரிக்கா, கனடா, சோவியத்து உருசியா போன்ற பல நாடுகளுக்குச் சென்று இந்திய நாட்டுப் பண்பாட்டின் பெருமையினையும் இலக்கியப் புகழையும் நிலை நாட்டினார். இப்பயணங்களில் இவர் உரோமெயின் ரோலண்டு, ஐன்சுடீன் போன்ற பல அறிஞர்களின் நட்பினைப் பெற்றார். தீனபந்து ஆண்டுரூசு எனப்பட்ட காந்தியடிகளின் ஆங்கிலத் தோழரது நட்பும் இவருக்குக் கிட்டியது. இப்பயணங்களின்போது இவர் மனிதனது சமயம் (The Religion of Man) என்ற தலைப்பில் இங்கிலாந்து ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சிறப்புச்சொற்பொழிவுகள் இவரது மனிதாபிமானத்தையும் (Humanism) பரந்த மனப்பான்மையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. தாகூரது புகழ் பரவப் பரவப்பல பல்கலைக் கழகங்கள் இவருக்கு இலக்கியத்தில் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தின. கல்கத்தா, தாக்கா போன்ற பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி, ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் போன்றவையும் இவ்வாறு தாகூரைக் கௌரவித்தன.

தம் எழுபதாம் ஆண்டில் புதிய துறையான ஓவியத் துறையில் ஈடுபட்டு அத்துறையில் மகத்தான வெற்றி பெற்றதுடன், புதிய ஓவியப் பாணி ஒன்றினையும் தோற்றுவித்த பெருமை படைத்தவர் இரவீந்திரநாத தாகூர். இவரது ஓவியங்களின் கண்காட்சி 1932-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுப் பாரிசு நகரத்தில் நடத்தப்பட்டுக் கலையுலக வல்லுநர்களது கவனத்தைக் கவர்ந்தது. இதனைத் தொடர்ந்து வேறு பல நாடுகளிலும் தாகூரின் ஓவியக் காட்சிகள் நடைபெற்றன. இவ்வாறு பல்வேறு துறைகளில் புகழ் பெற்றிருந்த இரவீந்திரநாத தாகூர் 1940-ஆம் ஆண்டின் இறுதியில் நோயுற்று, 1941-ஆம் ஆண்டு ஆகசுட்டு ஏழாம் நாள் இயற்கை எய்தினார். இவரது மறைவு உலக நாடுகளிலுள்ள மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது.

தம் காலத்தில் இரவீந்திரநாத தாகூர் படைத்த இலக்கியம், கவிதை நூல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை பெருமளவாகும். அவற்றுள் சிலவற்றை இவர் தாமே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர்தம்பல கவிதைத் தொகுப்புகள், புதினங்கள், சிறுகதைகள் ஆகியன இந்திய நாட்டின் பல்வேறு மொழிகளில் இன்று கிடைக்கின்றன; மேலை நாட்டு மொழிகளிலும் இவை பெயர்க்கப்பட்டுள்ளன. தாகூரது கவிதைகளுள் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவை பின்வருவனவாம்: 'கீதாஞ்சலி', 'கேயா', 'நைவேத்தியம்', 'பாலகா', 'க்ஷணிகா', 'சயனிகா'. இவர் சிறு கதைகள் உலகப் புகழ் பெற்ற ஆசிரியர் தம் சிறுகதைகளின்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

இவர் புதினங்களுள் புகழ்பெற்றனவாகக் 'கோரோ', 'நௌகாடுபி', 'துயிபோன்', 'ராசரிசி' போன்றவற்றைக் கூறலாம். இவர் நாடகங்களுள் 'சித்திராங்கதா' 'மாலினி', 'சந்நியாசி', 'சண்டாளிகா', 'டாக்கர்' போன்றன யாவராலும் விரும்பிப் படிக்கப்படுவனவாம். மற்றும் இவர் எழுதிய கட்டுரைத் தொகுப்புகளும் கடிதத் தொகுப்புகளும் வாழ்க்கைச் சரித நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவையாவும் தாகூரின் புகழினைத் தொடர்ந்து இலக்கிய உலகில் நிலை நாட்டி வருகின்றன.

இரவீந்திரநாத தாகூரின் இலக்கியப் பணியுடன் இணைந்த முறையில் இவர் தத்துவக் கல்விக் கருத்துகள் அமைந்துள்ளன. தாகூரின் தத்துவ நோக்கில் மனித-ஆன்மிகக் கூறுகள், கருத்துக் கொள்கைக் கூறுகள் (Idealism), இயற்கைக் கோட்பாட்டுக் கூறுகள் (Naturalism) போன்றவற்றின் இசைவான இணக்கத்தைக் காண முடிகிறது. உயர்ந்த பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட மகிழ்ச்சி பரவிய இலட்சிய வாழ்க்கை வாழ, மக்களுக்குக் கல்வி பயிற்றுதல் வேண்டும் என்று இவர் விளக்கியுள்ளார். பண்பாட்டில் மேலை நாடுகளின் சிறப்பு மிக்க கூறுகளும் பாரதநாட்டின் ஆன்மிக நெறிப்பட்ட கூறுகளும் இணைந்து இருத்தல் வேண்டும். கல்வி கற்றோரிடையே பரந்த உலக மனப்பான்மையைத் தோற்றுவிக்க வேண்டும். கல்வி முறைக்குத் தாய் மொழி அடிப்படையாகும். கல்வித் திட்டத்தில் நுண்கலைகளுக்கும் சிறப்பிடம் அளிக்கப்படுவதை இவர் வலியுறுத்தினார். மனிதக்குலத்தின் மேம்பாட்டிற்குதவும் கருவியாகக் கல்வி திகழ வேண்டும்; மனித இயல்புக்குள் அடங்கும் சிறப்புப் பண்புகளைக் கல்வியின் வழியே கற்போன் பெறுதல் வேண்டும். கற்றல் சூழ்நிலை, கற்போனது இயற்கைத் தேவைகள் நிறைவுறும் வகையிலும், மகிழ்ச்சியாகச் சுதந்திரத்துடன் செயலாற்றும் வகையிலும், இயற்கையின் எழில்களை வெளிப்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட வேண்டும் என்பதனையும் இவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றிற்கு நடைமுறையில் சிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் தாகூர் நிறுவிய 'விசுவ பாரதி' பல்கலைக் கழகமும் அதன் உட்பட்ட வேறு பகுதிகளும் விளங்குகின்றன.

இரவீந்திரநாத தாகூர் பல்வேறு துறைகளில் ஆற்றிய பணியைக் கருத்தில் கொள்ளும்போது சுதந்திர பாரதத்தின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைத்த பெரியோர்களுள் இவருக்கு நிலையான ஓர் இடம் என்றும் இருத்தல் தெளிவு. **எஸ். ச.**

**இராக்கதம்** என்பது மறையோர்களின் வேதத்தில் கூறப்பட்டுள்ள எட்டு வகையான மணங்களுள் ஒன்றாகும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன எண் வகை மணங்களாகும். இவை அறனிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள் வினை, இராக்கதம், பேய் நிலை என்று தமிழ்ப்படுத்திக் கூறப்படும். தொல்காப்பியர் களவியலில் அன்பொடு கூடிய ஐந்திணை மருங்கில் நிகழும் காமக் கூட்டத்தினை விளக்குங்கால், அது மறையோர் மணமுறையிலமைந்த கந்தருவத்தின் தன்மையதாகும் என்று குறிப்பிட்டுள்ளார். கந்தருவத்தைத் 'துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பு' என்றும், இக்கந்தருவம் உள்ளிட்ட மறையவர் மணங்களை 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு' என்றும் அவர் சுட்டியுள்ளார். அவ்வெண் வகை மணங்களுள் இரக்கதமாவது தலைமகளை அவளுடைய விருப்பின்படியோ அவள் பெற்றோர் இசைவின் படியோ பெறாமல் ஆடவன் வலிந்து பற்றிக் கொள்ளுதலாகும். 'மலி பொற்பைம் பூணாளை மாலுற்ற மைந்தர், வலிதிற் கொண்டு ஆள்வதே என்ப-வலிதில், பராக்கதம் செய்துழலும் பாழி நிமிர்தோள், இராக்கதத்தார் மன்றல் இயல்பு' என்னும் ஒரு வெண்பாவினை மேற்கோள் காட்டி, இராக்கத மணத்தின் இயல்பினை நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். தொல்காப்பியர் கூறிய 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு' என்னும் தொடருக்கு, 'மறையவர்களின் வேதத்தில் கூறப்பட்ட மணம் எட்டு' என்று இளம்பூரணரும், 'வேதம் ஓரிடத்தே கூறியுள்ள எட்டு மணங்கள்' என்று நச்சினார்க்கினியரும் உரை கூறியுள்ளனர்.

**இராக மாலிகை** இசை நிகழ்ச்சிகளில் பாடப்படும் சில உருப்படிகளின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு இராகத்தில் அமைந்திருக்கும். இத்தகைய உருப்படிகளுக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் உறுப்புகளின் சொற்களில், பாட்டின் பொருள் கெடாதவாறு இராகத்தின் பெயர் அழகுறப் பிணைக்கப்பட்டிருக்கும். இதற்கு இராகமுத்திரை என்று பெயர். சில இராகமாலிகைகளில் இராக முத்திரைகள் காணப்படமாட்டா. இத்தகைய உருப்படிகளில் ஒவ்வொரு உறுப்பின் இறுதிலும் சிட்டைச்சுரம் பாடப்படும். ஒவ்வொரு சிட்டைச்சுரத்தின் முடிவிலும் பல்லவி இராகத்திலுள்ள ஓர் அவர்த்தச்சிட்டைச்சுரத்தைப் பாடியபின் பல்லவி பாடப்படும். இப்பல்லவி இராகச்சிட்டைச் சுரத்திற்கு மகுடசுரம் என்பது பெயர். சில இராக மாலிகைகளின் இறுதியில் அவ்வுருப்படிகளில் பாடப்படும் எல்லா இராகங்களிலும் ஒராவர்த்தச்சிட்டைச் சுரங்கள் வரிசையாக அமைக்கப்பட்டிருக்கும். இவற்

றைப் பாடியபின் பல்லவி பாடத்தொடங்கும் பொழுது கேட்பதற்கு மிக இனிமையாக இருக்கும். சுரக்கோவைகளினால் மட்டுமே அமைக்கப்பட்டிருக்கும் இராகமாலிகைகளும் உள்ளன. விருத்தங்களையும் பக்திப்பாடல்களையும் பல்வேறு இராக வரிசையில் பாடுவதையும் இராகமாலிகை எனக் கூறலாம்.

**இராகவய்யங்கார்,மு. (கி.பி. 1878-1960)** கி.பி. 1878-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 26-ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரியக்குடியில் பிறந்தார். இவர் தந்தையார் சதாவதானம் முத்துசுவாமி அய்யங்கார். இளமையில் தந்தையாரை இழந்த இராகவய்யங்கார், பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத் தேவரின் ஆதரவால் தமிழ்ப் பயிற்சி பெற்றார். இவர் தம் மாமனார் சூரியங்குட்டம் கிருட்டிணமாச்சாரியாரிடம் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றறிந்தார். தமது 18-ஆம் வயதில் பாண்டித்துரைத் தேவரின் அவைக்களப் புலவரானார். தமிழிலக்கிய ஆராய்ச்சியில் 20-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார் இவர் தாய் மாமன் மகனாவார்.

மதுரையில் பாண்டித்துரைத்தேவர் 1901-இல் தமிழ்ச் சங்கத்தை நிறுவியபோது, அச்சங்கத்தைச் சார்ந்த கல்லூரியில் இவரைத் தமிழாசிரியராக நியமித்தார். பின்னர், இவர்தம் புலமைத் திறத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழுக்குத் துணையாசிரியராகவும் ஆக்கினார். அவ்விதழின் தலைமைப் பதிப்பாசிரியராகவும் இவர் பணி புரிந்துள்ளார்.

இவர் தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியத் தொண்டியற்றி ஓய்வு பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் 1912-இல் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) தயாரிக்க அரசு முனைந்தபோது, இராகவய்யங்கார் அவ்வலுவலகத்தின் தலைமைப் புலவராக நியமிக்கப் பெற்றார். சென்னையில் தமிழர் கல்விச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 'தமிழர் நேசன்' என்னும் திங்களிதழுக்குக் மதிப்பியல் ஆசிரியராக இவர் ஊதியமின்றிப் பணியாற்றினார். மேலும், இவர் சென்னையிலிருந்து வெளிவரும் 'கலைமகள்' என்னும் திங்களிதழுக்கும் மதிப்பியல் ஆசிரியர்களுள் ஒருவராகி, அவ்விதழிலும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக்குழு, தேர்வுக்குழு இரண்டிலும் பணியாற்றியுள்ளார். இவர் தாம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலவற்றை ஆங்கில மொழியாக்கஞ் செய்து ஆங்கில இதழ்களிலும் வெளியிடுமாறு செய்தார். சென்னையில் பேரகராதிப் பணி முடிவுற்ற பின், 1939-இல் இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி அரசாங்கத்தார் இவருக்கு 'இராவ் சாகிபு' என்ற பட்டத்தினை வழங்கினர்.

பின்னர், சென்னை இலயோலாக் கல்லூரியில் மதிப்பியல் தமிழ்ப் பேராசிரியராகவும் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் தொண்டாற்றினார். இராமநாதபுரம் சமத்தானத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமித் தேவரும் அவர் புதல்வரான பாண்டித்துரைத் தேவரும் சிறந்த தமிழ்க் கவிஞர்களாகவும் செந்தமிழ்ப் புரவலர்களாகவும் விளங்கியதை விளக்கும் வகையில், 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' என்னும் நூலினை நன்றிக் கடமையுடன் இயற்றினார்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் 1955-இல் இவரது தமிழ்த் தொண்டினைப் போற்றிக் கேடயம் வழங்கிப் பாராட்டினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரது பன்னூற் புலமையினையும் பதிப்பாசிரியர் அநுபவத்தினையும் பயன்படுத்திக் கொள்ள விரும்பி, இவரைக் கம்பராமாயணப் பதிப்பாசிரியர் குழுவில் சிறப்பிடம் பெறச் செய்தது. இவரது பேருதவியால் வெளிவந்த கம்பராமாயணச் சுந்தரகாண்டப் பதிப்பு அறிஞர்களால் இன்றும் சிறப்பாகப் போற்றப்படுகிறது. இவரது எண்பதாம் ஆண்டு நிறைவு விழா 1958-இல் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் இவர் எழுதிய 'வினைத் திரிபு விளக்கம்' வெளியிடப் பெற்றது. வரலாற்று ஆய்வு நோக்கில் இவர் எழுதிய வேளிர் வரலாறு, சேரன் செங்குட்டுவன், கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, ஆழ்வார்கள் காலநிலை, சேரவேந்தர் தாய வழக்கு, இலக்கியச் சாசன வழக்காறுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவர்தம் வரலாற்று ஆய்வினைப் போற்றும் வகையில் கொழும்பு வி.சே. தம்பிப்பிள்ளை 'வேளிர் வரலாறு' என்னும் நூலினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இவர் நல்ல கவிஞர்; இளமை முதல் முதுமை வரையில் அவ்வப்போது பாடிய கவிதைகள் பலவும் செந்தமிழ் முதலிய இதழ்களில் வெளியாகியுள்ளன. இவர் பதிப்பித்த நூல்களுள் அரிச்சந்திர வெண்பா, கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை, சந்திராலோகம், சிதம்பரப் பாட்டியல், திருக்கலம்பகம், திருச்சிராமலை அந்தாதி, திருவைகுந்தன் பிள்ளைத் தமிழ், நரிவிருத்தம், பெருந்தொகை, விக்கிரம சோழனுலா ஆகியவை சொந்தப் பதிப்புகளாகும். ஆராய்ச்சித் தொகுதி, இலக்கியக்கட்டுரைகள், கட்டுரைமணிகள், தெய்வப் புலவர் கம்பர் ஆகியவை இவர் மகன்வழி வெளிவந்த பதிப்புகளாகும். சேர வேந்தர் தாயவழக்கு, தொல்காப்பியப் பொருளதி

கார ஆராய்ச்சி, வேளிர் வரலாறு ஆகிய மூன்றும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்புகளாகும். ஆழ்வார்கள் காலநிலை, இலக்கியச் சாசன வழக்காறுகள், கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, செந்தமிழ் வளர்த்த தேவர்கள், சேரன் செங்குட்டுவன், திருக்குறள் பரிமேலழகருரை (ஆராய்ச்சிக்குறிப்புகளுடன்), திருவிடவெந்தை எம்பெருமான், நூற்பொருட் குறிப்பு (ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்) ஆகியவை பிற பதிப்புகளாகும். நிகண்டகராதியும் இவரால் செப்பஞ் செய்யப் பெற்றுள்ளது.

நல்லாசிரியராகவும், இதழாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், வரலாற்றாய்வாளராகவும், நாநல முடையவராகவும், கவிஞராகவும் தமிழ்த்தாய்க்குத் தொண்டாற்றிய இவர் 2-2-1960-இல் காலமானார். செ.வை

**இராகவய்யங்கார், ரா (கி.பி. 1870-1948)** இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள சரையக் கோட்டையில் கி.பி. 20-9-1870-இல் பிறந்தார். இவர் பெற்றோர் இராமாநுச அய்யங்காரும் பதுமாசினி அம்மையாரும் ஆவர்.



இராகவய்யங்கார், ரா.

இவர் இளமையில் ஆங்கிலப் பள்ளியில் 'மெட்ரிகுலேசன்' வரை பயின்றார்; பின், சேது மன்னரவைப் புலவரும் தம் தாய் மாமனுமாகிய சதாவதானம் முத்துச்சாமி அய்யங்காரிடம் தமிழும் வடமொழியும் கற்றார். ஆதலின் இவர் ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழியிலும் வல்லமை பெற்றார். இவர் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும், திருச்சி சேசையங்கார் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

இராமநாதபுர அரசர் பாசுகர சேதுபதி தம் அரசவைப் புலவருள் ஒருவராக இவரை நியமித்துச் சிறப்புச் செய்தார். இவர் தாய்மாமன் முத்துச்சாமி அய்யங்கார் மறைந்த பின், அவர் ஏற்றிருந்த அரசவைத் தலைமைப் புலவர் பதவி இவருக்குக் கிடைத்தது.

பாண்டித்துரைத் தேவர் 14-9-1901-இல் மதுரையில் நிறுவிய தமிழ்ச்சங்கத்தில் இவர் பாண்டித்துரைத் தேவருக்கு உறுதுணையாகவும், நூற்பதிப்பு, ஆராய்ச்சித் துறைகளின் தலைவராகவும் இருந்து பணியாற்றினார். சங்கத்தின் தனித் தமிழ்த் தேர்வுகளுக்குத் தேர்வாளராகவும் இருந்தார் இவர். தமிழ்ச் சங்கத்தின் செயல்முறைக் குழுவினருள் ஒருவராகத் தம் ஆயுட்காலம் முழுவதும் இருந்தார். தமிழ்ச் சங்கத்தின் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறையின் தலைவராகவும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வாளராகவும் பாடப் புத்தகக் குழுவினருள் ஒருவராகவும் இருந்தார்.

புவி எழுபது, தொழிற் சிறப்பு, திருவடி மாலை, பாரி காதை என்னும் நான்கு செய்யுள் நூல்களையும் சேதுநாடும் தமிழும், வஞ்சி மாநகர், நல்லிசைப் புலமை மெல்லியலார், அண்டகோள மெய்ப்பொருள், தமிழ் வரலாறு, தித்தன், கோசர் என்னும் உரைநடை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். மேலும், இவர் குறுந்தொகை விளக்கம், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், பட்டினப் பாலை ஆராய்ச்சியும் உரையும் என மூன்று நூல்களுக்கு உரைவிளக்கங்கள் இயற்றியுள்ளார். அபிஞ்ஞான சாகுந்தலம் என்னும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றும் இவர் செய்துள்ளார்.

இவர் இயற்றி அச்சிடப்படாத நிலையில் ஆத்திசூடி உரை, இராசராசேசுவர சேதுபதி ஒரு துறைக் கோவை, திருப்புல்லை யமக வந்தாதி (உரையுடன்), திருவேங்கடமாயோன் மாலை, பகவத் கீதைத் தாழிசை, பாரத நீதி வெண்பா, பல்லட சதகம் என்னும் நூல்கள் உள்ளன.

அகநானூறு (நித்திலக்கோவை), திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது (பழைய உரை), இனியவை நாற்பது (பழைய உரை), புலவர் ஆற்றுப்படை, திருநூற்றந்தாதி, முத்தொள்ளாயிரம், நான்மணிக் கடிகை (பழைய உரை) ஆகியவற்றை இவர் பதிப்பித்துள்ளார். மேலும், இவர் நேமிநாதம் (உரையுடன்), தொல்காப்பியம் செய்யுளியல் (நச்சினார்க்கினியர் உரை), பன்னிரு பாட்டியல் என்னும்

இலக்கண நூல்களையும், கனாநூல் ஒன்றினையும் பதிப்பித்துள்ளார்.

இவர் செந்தமிழ் இதழில் கட்டுரைகளும் பாடல் களும் எழுதியுள்ளார். இவையன்றிப் பத்துத் தொடர் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இவர் சேது நாட்டின் பெருமையும், சேதுபதிகளின் சிறப்பும் வெளிப்படும் வகையில் 'சேது நாடும்தமிழும்' என்னும் நூலை நன்றியுணர்வுடன் எழுதினார். சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி எது என ஆய்ந்து, 'வஞ்சி மாநகர்' என்னும் ஆராய்ச்சி நூலை எழுதினார். பாரிகாதை (753 வெண்பாக்கள்) இவர் இயற்றிய காப்பிய நூலாகும். பின்னர், இராகவய் யங்கார் எழுதிய உரையுடன் 1937-இல் அண்ணா மலைப் பல்கலைக் கழக வெளியீடாக இந்நூல் வெளி வந்துள்ளது. தமிழ் வரலாறு, குறுந்தொகை விளக் கம், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி, தித்தன், கோசர் ஆகிய நூல் களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல்களாக வெளிவந்தவையே. தாழிசை யாப்பில் பகவத் கீதையை மொழி பெயர்த்தார். வால்மீகி இராமாயணம், இரகுவம்சம் ஆகியவற்றில் சில சுலோகங்களை மொழி பெயர்த்துள்ளார். பாரதத் தில் உள்ள நீதிப்பகுதிகளை 203 பாடல்களில் பாரத நீதிவெண்பா என மொழி பெயர்த்தார். குறுந்தொ கைப் பாடல்கள் முழுமைக்கும் இவர் உரை எழுதியுள் ளார். எனினும், 111 பாடல்களே உரையுடன் 'குறுந் தொகை விளக்கம்' என்னும் பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளன; எஞ்சியவை கிடைக்கப் பெற வில்லை. பெரும்பாணாற்றுப் படையிலும் சில பகுதி களுக்குஇவர் எழுதியஉரை கிடைக்கப் பெறவில்லை.

இவர் தம் பட்டினப்பாலை ஆராய்ச்சியில் பொரு நராற்றுப்படைத் தலைவன் கரிகாலனும், பட்டினப் பாலைத் தலைவன் திருமாவளவனும் வேறுபட்டவர் கள் என இவர் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது; சிறந்த சொற்பொழிவாளர். இவர் திரு வல்லிக் கேணியில் 'ஸ்ரீ வேத வேதாந்த வர்த்தன மகாசபையில்' 'அண்டகோளத் தாரணுவாகி' எனத் தொடங்கும்நம்மாழ்வாரின் பாடலுக்குப் பொருளை விளக்கி விரிவுரையாற்றினார். இந்நூலை அச்சபையி னரே வெளிட்டுள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள வேளிர் கள் காசுமீரத்திலிருந்து வந்தவர்கள் என்பதனைக் கல்கணர் எழுதிய 'இராசநந்தினி' முதலிய நூல்களில் இருந்து சான்றுடன் நிறுவிய ஆராய்ச்சி உரை இப் போது காணப்பெறவில்லை.

இவர் தாம் பதிப்பித்தற் பொருட்டுத் திரட்டி வைத்திருந்த இளம்பூரணர் செய்யுளியல் உரை, நவ நீதப் பாட்டியல் உரை ஆகியவற்றை வையாபுரிப் பிள்ளைக்கும், கம்ப இராமாயண ஏட்டுச் சுவடிகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் கொடுத் துதவினார்.

இவர் சிறப்பு நோக்கி இவருக்குப் பல பெருமை கள் கிட்டின. மேலைச்சிவபுரிச் சன்மார்க்கச் சங்கத் தினர் உ.வே. சாமிநாதய்யரைக் கொண்டு இவருக்கு 'மகாவித்துவான்' என்னும் பட்டம் வழங்கினர். இவர்தம் வடமொழிப் புலமையைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் 'பாசாகவி சேகரர்' என்னும் பட்டமளித்தனர். செட்டிநாட்ட ரசர் அண்ணாமலைச் செட்டியார் பாரிகாதை அரங் கேற்றத்தின்போது தம் மைந்தர் முத்தையா செட்டி யார் அவர்களைக் கொண்டு ஆயிரம் வெண் பொற் காசு வழங்குவித்தார்.

ஆராய்ச்சியாளராகவும் உரையாசிரிய்ராகவும் பதிப்பாசிரியராகவும் சொற்பொழிவாளராகவும் தமிழ்த் தொண்டாற்றிய இவர் 11-7-1946-இல் காலமானார். செ.வை.

**இராகவர் பிள்ளைத்தமிழ்** தமிழில் அமைந் துள்ள பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வகை யினைச் சேர்ந்த நூல்களுள் ஒன்றாகும். இதன் ஆசிரி யர் குற்றாலம் குழந்தை முதலியார் ஆவார். இவர் பெயரிலமைந்துள்ள குற்றாலம் என்பது கொண்டு இவர்அவ்வூரைச் சேர்ந்தவராகலாம் என்பதும், இவர் முதலியார் மரபில் தோன்றியவர் என்பதும் தெரிகின் றன. இவ்வாசிரியர் பற்றி வேறெந்தச் செய்தியும் அறியக்கூடவில்லை.

இந்நூல் இராமபிரானைப் பற்றியதாதலின் இதன் தொடக்கத்தில் 'அனுமான் துதி' அமைந்திருப்பது புதுமையாகவும் பொருத்தமாகவும் உள்ளது. காப்புப் பருலத்தில் திருமால், சிவன் முதலியபிற கடவுளர், காப்பாகுமாறு வேண்டிப் பாடப்பட்டுள்ளனர். தாய் தந்தையர்க்கு மக்கள் செய்யும் அறமுறை, உடன்பிறந்தார் ஒருவருக்கொருவர் செய்யத் தக்க அறமுறை போன்றவைகளை உலகினர்க்கு அறிவுறுத்தவே இராமர் தோன்றினார் என்று இந் நூலாசிரியர் கூறியுள்ளார். பெண்ணாசையினை அறத் துறந்து விளங்கும் இறையன்பர்களின் இயல் பினைக் குறிப்பிடும்போது, மடவார் அழகில் மயங் கிக் கிடக்கும் ஆடவரின் தன்மையைச் சுட்டிக்காட்டு கிறார். அம்மயக்கில் உழலாது, இராமபிரானின் திரு வடிகளை நினைக்கும் அன்பர்களின் இதயம் என்னும் யானையினை மெய்ஞ்ஞான நன்னெறிக்கண் அப் பெருமான் செலுத்துவான் என்பதனை அழகுறக் காட்டியுள்ளார். இவரது நூலில் திருக்குறள்' நாலடி யார் போன்ற அறநூற் கருத்துகள் இடம் பெற்றுத் திகழ்கின்றன. தொடக்கத்தில் அமைந்துள்ள அனு

மான் துதி நீக்கி இந்நூலில் 99 செய்யுட்கள் உள்ளன. இறுதியிலுள்ள சிறுபறைப் பருவத்தில் ஒன்பது செய்யுட்களே உள்ளன.இந்நூல், அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகத்தார் வெளியிட்டுள்ள 'பிள்ளைத் தமிழ்க் கொத்து' என்னும் தொகுப்பு நூலில் மூன்றாவது நூலாக அமைந்துள்ளது.

**இராகவன், அ.** திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் என்னும் ஊரில் 1902-இல் பிறந்தார், இவருக்கு இளமையிலேயே கலையார்வம் இருந்தது. இவர் எளிய நடையில் கட்டுரைகள் எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் 25 ஆண்டுகள் ஈழத்தில் வாணிகம் செய்தார்.

இவரது தமிழ்ப் பற்றும் ஆராய்ச்சித் திறமையும் ஆய்வுக் கட்டுரைகள் எழுத இவரைத் தூண்டின. இவர் பழந்தமிழர் கலைகள், இசைக்கருவிகள், மரக்கலங்கள், அணிகலன்கள், பண்டங்கள் போன்றவற்றை இக்காலத்தவர்க்கு அறிமுகப்படுத்தும் வகையில் நூல்கள் இயற்றினார். இராகவனின் படைப்புகளுள் 'தமிழர் பண்பாட்டில் தாமரை', 'தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்', 'தமிழ்நாட்டுக் கப்பற்கலை', 'இசையும் யாழும்', 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' ஆகியன குறிப்பிடத்தக்கவை.

இவரது ஆற்றலைப் பாராட்டி இவருக்கு 'நுண்கலைச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் 1981-இல் காலமானார்.

**இராகவாச்சாரியார்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புலவருள் ஒருவர்; அந்தண மரபினர். இவர் சோமயாசி என்றும் அழைக்கப்பட்டார். தமிழும் வடமொழியும் வல்ல இவர் பிரகந்நாரதீய புராணம் என்னும் நூலைக் கி.பி. 1893-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இந்நூல் வடமொழியிலமைந்துள்ள பிரகந்நாரதீயம் எனப்படும் புராணத்தின் முற்பகுதியாகும். நாரத முனிவர் சனத்குமார முனிவருக்குச் சொல்லுவதாக அமைந்தது இந்நூல். இது உலகத் தோற்றம், மார்க்கண்டேயன் வரலாறு, கங்கையின் பெருமை முதலியவற்றை விளக்குகிறது.

இராகவாச்சாரியார் என்னும் பெயரில் வேறு இரு புலவர்கள் இருந்துள்ளமை தெரிகிறது. அவர்களுள் ஒருவர் நியாய வாதாயாச நிராகரணம் என்னும் மறுப்பு நூலையும், மற்றொருவர் சார சங்கிரக வியாக்யானம் என்னும் நூலையும் இயற்றியுள்ளனர்.

**இராகவேந்திர சுவாமி (கி.பி. 1578-1671)** காவிரியால் வளம்பெறும் சோழ நாட்டுக் குடந்தைப் பகுதியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றி விளங்கிய அருள் ஞானச் செல்வர்களுள் ஒருவர். இவர் வளமிக்க துங்கபத்திரை ஆற்றங்கரையில் 'மாஞ்சாலா' என்னும் சிற்றூரில், இராமர் திருவடி பட்டதாகக் கருதப்படும் கருங்கல்லினை அமைத்துப் புனிதமும் எழிலும் நிறைந்த 'மந்திராலயத்தினை' உருவாக்கி, எண்ணற்ற பக்தர்களின் இதயத்தில் விளங்கும் அனுபூதிமானாகத் திகழ்ந்தார்.

இவர் கி.பி. 1578-ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் திம்மண்ணபட்டரும் கோபிகாம்பாவும் ஆவார்கள். இவரது பிள்ளைத் திருநாமம் 'வேங்கடநாதன்' என்பதாகும். இவருக்குக் குருராசன் என்ற தமையனும் வேங்கடம்மா என்ற தமக்கையும் இருந்தனர்.

இவர் சரசுவதி எனப் பெயரிய பெண்ணை மணந்து ஆறு ஆண்டுகள் இல்லறம் நடத்தினார். அப்போது இவர்களுக்கு இலக்குமி நாராயணன் என்ற ஆண் மகவு பிறந்தது.

தம் இளமைக் காலத்திலேயே பெற்றோர்களை இழந்த இவர் இலக்கணம், இலக்கியம், மீமாம்சை முதலிய துறைகளில் நல்ல புலமையும், வைணவ சாத்திரங்களில் ஈடுபாடும் கொண்டு விளங்கினார். அக்காலத்தில் குடந்தையிலுள்ள வித்தியா பீட முதல்வர் சுதீந்திர தீர்த்தரின் ஆன்மிக வழிகாட்டலால் 'மத்துவ வைணவ' சித்தாந்த மரபுகளையும், வேதக் கலைகளையும் துறைபோகக் கற்றுணர்ந்தார்.

இவர்தம் இலக்கண, இலக்கிய, தத்துவ அறிவையும், வைதிக ஞானத்தையும், வைணவப் புலமையையும் நன்குணர்ந்த சுதீந்திரர் தமக்குப் பின்னர் மடத்தின் தலைமைப் பொறுப்பிற்கு இவரே தக்கவராவார் என்று முடிவு செய்தார். அதன் விளைவாக இவர் தஞ்சையிலிருந்த இரகுநாத பூபாலர் என்பார் திருமுன்பு துறவம் ஏற்றார். இவர் தம் இயற்பெயர் நீங்க, இராகவேந்திர தீர்த்தர் என்னும் துறவுப் பெயர் பெற்று அத்திருமடத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். குடந்தையிலுள்ள இரு பெருங்கோயில்களின் நிருவாகப் பொறுப்பும் இவரைச் சேர்ந்தது.

புனிதப் பயணம்: இவர் சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆன்ம விடுதலை நாட்டமிக்கவராய்ப் புனிதப் பயணம் மேற்கொண்டு, பல திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டார். தென்கன்னடம் அடைந்த இவர், அங்குள்ள உடுப்பி என்னும் திருப்பதியில் தங்கி, அங்குக் கோயில் கொண்டு திகழும் கண்ணபெருமானைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தின்புற்ற பின்னர், பண்டரிபுரம் சென்று பண்டரிநாதனை வழிபட்டார். அப்போது இந்து சமயக் காவலராகத்

திகழ்ந்த மாமன்னர் சத்திரபதி சிவாசியைக் கோலாப் பூரில் கண்டு உரையாடினார்.

இவர் பல திருத்தலங்களையும் வழிபட்டு இறுதியில் அதோணி வந்தடைந்தார். அதோணிக்கு அருகாமையிலுள்ள கண்டநதி என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்த ஏழை வெங்கண்ணாவின் தெய்வ ஈடுபாடு கண்டு, அவருக்கு அருள் பாலித்து அவரை ஏற்றுக் கொண்டார்.

இவர் 'மாஞ்சாலா' என்னும் சிற்றூரினை நவாபிடமிருந்து நன்கொடையாகப் பெற்றார். அங்கு இவர் 'மந்திராலயம்' ஒன்றினை அமைத்தார். அதனருகிலேயே பலிபீடம் இருந்த இடத்தில், இராமபிரானின் திருவடி பட்டதாகக் கருதப்படும் கருங்கல்லினை அமைத்து, எழில் மிகுந்த 'பிருந்தாவனம்' ஒன்றினை எழுப்பச் செய்தார். மத்துவாச்சாரிய சுவாமிகள் வழிபட்ட 'இராமர்' வடிவத்தை அங்கு வழிபாட்டு மூர்த்தமாக அமைத்தார். சுவாமிகளின் அருளாசியினால் நாட்டின் பலவிடங்களில் பிருந்தாவனங்களும் மந்திராலயங்களும் எழுப்பப்பெற்று, அவை இராகவேந்திரரின் அருள் ஒளி பெருக்கும் ஆன்மிக நிலையங்களாக இன்றும் திகழ்கின்றன.

மாஞ்சாலா என்னும் சிற்றூரையும் மந்திராலயத்தையும் இராகவேந்திரர் மடத்திற்கே உரிமை செய்துவிட்டார் என்று கி.பி. 19-ஆம் நூற்றாண்டைய சென்னைச் சிறப்பிதழ் (Gazette) கூறுகிறது.

இராகவேந்திரர் மத்துவ பாடியங்களுக்குப் பதவுரையும், பகவத் கீதைக்குத் தெளிவுரையும், பரிமளம் என்ற நியாய சுத்தத்துக்கு விளக்கவுரையும் வரைந்துள்ளார். இவருக்குப் பரிமளாச்சாரியார் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. தத்துவ மஞ்சரி, பட்ட சங்கிரகம் முதலிய 58 நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

'இராகவேந்திரர் தோத்திரம்' என்னும் வடமொழிப் புகழ்ப் பாமாலை இவர்மீது பாடப்பட்டுள்ளது. இவர்தம் பல்வேறு சிறப்புகளையும் எடுத்துக்கூறி, இந்நூல் இவரைப் போற்றுகிறது. ஜி. க.

**இராகுலன்** என்னும் பெயர் 'இராகூல' (Rahule) என்னும் வடமொழிப் பெயரின் தமிழ் வடிவமாகும். இவ்வகையிலேயே 'இராகு' என்னும் 'கோளின்' பெயர் அமைந்துள்ளது. இரகா என்னும் பெயரும் இதன் அடிப்படையிலமைந்து, 'சூரிய சந்திரர்களைப் பிடித்து விடுபவன் அல்லது குறுக்கே வருபவன்' என்னும் பொருளைத் தருவதாக உள்ளது.

'இராகூல' என்னும் சொல் வழக்கு பண்டுதொட்டுப் புத்த, சமண சமய நூல்களிலேயே காணப்படுகிறது. இதன் தமிழாக்கமாகிய 'இராகுலன்' என்னும் சொல்லும் புத்த சமய நூலாகிய 'மணிமேகலை' யில் இடம் பெற்றிருத்தல் எண்ணத்தக்கது. மணிமேகலையில் இடம் பெறுபவனுக்குப் புத்தரிடத்திலுள்ள பத்தியினால் 'இராகுலன்' என்று பெயர் வைத்திருக்கலாம் என்று டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் கருதுகிறார்.

'இராகுல' என்னும் பெயரில் பின்வரும் மூவர் குறிக்கத்தக்கவர் ஆவர்.

1. கௌதம புத்தரின் குரு
2. கௌதமபுத்தரின் மகன்
3. கௌதமபுத்தரின் பெருமை பாடும் மணிமேகலை நூலில் வருபவன்.

கௌதமபுத்தரின் குரு இராகுல என்னும் பெயருடைய ஞானியாவார். இதனால் புத்தர் காலத்திற்கு முன்பே இப்பெயர் வழக்கிலிருந்தது என்பது தெரிகிறது.

கௌதம புத்தரின் மகன் இராகுலன் எனப்படுவான். இவன் பிறப்பு வியப்புக்குரியது. இவன் தேவலோகத்திலிருந்து யசோதரை (புத்தர்மனைவி) வயிற்றில் கருக்கொண்டு, முற்பிறப்புவினை காரணமாக அவள் வயிற்றில் ஆறு ஆண்டுகள் இருந்து பிறந்தான் என்பது சொல்லப்படுகிறது யசோதரைக்கு மகன் பிறந்த செய்தி கேட்டதும் 'இராகுலன் பிறந்தான்; இராகுவாய்ப் பிறந்தான்; எனவே இளவரசு அப்பெயரையே பெறட்டும்' என்று புத்தர் கூறிய கூற்று, அவர் தன் மகனுக்குப் பெயரிட்ட காரணத்தை விளக்கி நிற்கிறது. மேலும், இப்பிள்ளை 'கிரகண' காலத்தில் பிறந்ததால் 'இராகுலன்' என்று பெயரிடப்பட்டிருக்கலாம் என்னும் கருத்தும் உண்டு. பல இடங்களில் யசோதரை 'இராகுலனின் தாய்' என்றே அழைக்கப்படுவது குறிக்கத்தக்கது.

மணிமேகலையில் இடம் பெறும் இராகுலன் காந்தார நாட்டில் இடவயம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிந்த 'அத்திபதி' என்னும் அரசனின் மகன். இவன் அறிவும் ஆண்மையும் வாய்க்கப் பெற்றவன்; மனைவியின் பெயர் இலக்குமி. இருவரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் இலக்குமி இராகுலனோடு பொழிலில் இருக்கும்பொழுது, இராகுலன் காமம்மிக்கு, இலக்குமியைக் கூட வேண்டினான். அச் சமயம் பௌத்த முனிவன் 'சாது சக்கரன்' அப்பொழிலுக்கு வந்தான். அதுகண்டு இராகுலன் சினமடைந்தான். இலக்குமி கணவனை இடித்துரைத்து முனிவனுக்கு விருந்தோம்பினாள்.

மற்றொருநாள் இவ்விருவரும் 'பிரம தருமர்'

என்னும் முனிவர் ஒருவருக்கு அமுது செய்விக்க எண்ணினர். இராகுலன் உணவு சமைப்பவனிடம் விரைவில் சிறந்த உணவுகளை ஆக்குமாறு கட்டளை இட்டான். யாது காரணத்தாலோ அவன் அப்பணியை ஒழுங்காய்ச் செய்யவில்லை. காலம் தாழ்த்து வந்த தால், அச்சத்தால் கால்தளர்ந்து வழுக்கி விழுந்தான். விழுந்தவன் மேல் இரக்கங் கொள்ளாமல், அவன் செய்த குற்றத்திற்காக அவனை இராகுலன் கொன் றான். அத்தீவினையின் பயனாய்ப் பாம்பொன்று கடிக்க இராகுலனும் மாண்டான்.

மறுபிறவியில் அந்த இராகுலன் கிள்ளிவளவ னுக்கு உதயகுமரன் எனப் பெயரிய மகனாகத் தோன்றினான். இலக்குமி மணிமேகலையாய்ப் பிறந் தாள். உதயகுமரன் இளைஞனாய் இனிது வாழ்ந் தான். ஒரு நாள் காஞ்சனன் என்னும் வித்தியா தரன் ஒருவன், உதயகுமரன் மனைவியை விரும்பி னான் என்று மாறுபாடாக எண்ணி வாளால் வெட்டி வீழ்த்தினான். உணவு சமைப்பவன் முன்பு அழிந்த வாறே இவனும் அழிந்தான். இராகுலனும் இலக்குமி யும் பல பிறவிகளில் கணவன் மனைவியாக இருந் தனர் என மணிமேகலை குறிப்பிடுகிறது. ந.க.

**இராங்கு ஆட்டோ** உளவியல், சமூகவியல் துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர்களுள் ஒருவரா வார். இவர் வியன்னாவில் யூதர் குடும்பத்தில் பிறந்தார். இராங்கு (Rank Otto) சிக்மண்டு பிராய்டுடன் நெருங்கிப் பழகியவர்களுள் ஒருவர். இவர் உருவாக்கிய 'பிறப்புக்கால உளத்தாக்குதல்' என்ற கோட்பாடு சிறப்பு வாய்ந்ததாகக் கருதப் படுகிறது.

பிராய்டு எழுதிய கட்டுரைகளைப் படித்ததாலும் ஆல்பிரடு ஆட்லரின் உரைகளைக் கேட்டதாலும் உளப்பகுப்பாய்வுத் துறையில் நாட்டம் கொண்ட இராங்கு, பிராய்டின் நெருங்கிய உதவியாளர்களுள் ஒருவரானார். பிராய்டின் கருத்துகளால் மிகுதியாக ஈர்க்கப்பட்டு அவருடன் இருபது ஆண்டுகள் சேர்ந்து செயற்பட்டார். இவர் 'கலைஞன்' (The Artist), 'வீரனின் பிறப்புக்கதை' (The Myth of the Birth of the Hero) போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

'இமாகோ' (Emago) என்ற உளப்பகுப்பாய்வுக் கால இதழுக்குத் (International Zeitschrift for Psychoanalyst) துணைப்பதிப்பாசிரியராக இவர் பொறுப்பேற்றார்.

இவர் பெரெனிசி (Ferenezi) என்பவருடன் இணைந்து, உளப்பகுப்பாய்வின் வளர்ச்சி (The Development of Psychoanalysis) என்ற நூலினை வெளியிட்டார். சில ஆண்டுகளுக்குப் பின் இவர் பிராய்டுடன் கொள்கை மாறுபாடு கொண்டார். அதன்பின் இவர் வெளியிட்ட 'பிறப்புக்கால உளத் தாக்குதல்' (Trauma of Birth) என்ற நூல் இவர் பிராய்டிடமிருந்து பிரிந்து செல்ல வழி வகுத்தது.

இவர் 1926-ஆம் ஆண்டுக்குப் பிறகு பாரிசில் மருத்துவப் பணியைத் தொடங்கினார். இதற்குப் பிறகே இவர் பல நூல்களை எழுதினார். இவரது உளம்சார் மருத்துவக் கருத்துகள் அமெரிக்காவில் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக, பென்சில் வேனியாப் பல்கலைக் கழகத்திலுள்ள சமூகப்பணிக் கல்லூரியில் இவரது கருத்துக்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்தது. இவர் பல ஆண்டுகளாகப் பிராய்டின் கோட்பாடுகளிலும் மருத்துவ முறைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்தார். அதன் விளைவாகவே பிறப்புக்கால உளத்தாக்குதல் என்ற கருதுகோள் உருவாக்கப்பட்டது. மேலும், 'உளப் பகுப்பாய்வு முறைகள்' (The Technique of Psycho-analysis), 'பரம்பரையியல் உளவியல்' (Outlines of a Genetic Psychology) போன்ற நூல்களை எழுதினார்.

பிராய்டு குறிப்பிட்ட தன்முனைப்பை (Ego) இராங்கு 'உளவிருப்பம்' (Will) என்று குறிப் பிட்டார். மனிதனின் உளவிருப்பம் அவனை நல் வழியில் நடத்திச்செல்லக் கூடியது; அவனுடைய அகவுணர்வுடன் இணைந்து ஆக்கச்செயல்களில் ஈடு படுத்தக்கூடியது. அவனுடைய உள்ளார்ந்த உந்து களைத் தடை செய்யவோ கட்டுப்படுத்தவோ உள விருப்பத்தினால் முடியும் என்று குறிப்பிடுகிறார். பிறப்புக்கால உளத்தாக்குதலின் காரணமாக உளக் கோளாறுகளும் (Neuroses), வாழ்க்கைச் சிக்கல் களினால் தவிப்பும் ஏற்படுகின்றன என்று இராங்கு கூறினார்.

உளக்கோளாறு நோயாளிக்கு (Neurotic) மருத்துவம் செய்யும் பொழுது நோயாளியின் மனிதத் தன்மை, உரிமை ஆகியவற்றை மதிக்கவேண்டும் என்றும், மருத்துவர் நோயாளியை ஊக்குவித்து அவனுடைய உளவிருப்பத்திற்கு அல்லது ஆக்கத் திறனுக்கு வலிமையூட்ட வேண்டும் என்றும் கூறினார். இதன் விளைவாக நோயாளிக்கும் உளமருத்து வருக்கும் இடையே உளநெருக்கம் ஏற்படும் என்றும் கூறினார். மனித நடத்தைகள் முரண்பாடு கொண்டவை என்றும், இருமுகப்போக்குடையவை என்றும் இராங்கு கருதினார்.

சமயத்தைப்போலக் கலைகளும் மனிதனின் அழிவிலா நிலையை எய்துவதற்கான விருப்பங்களின் கூறுகள் என்பதை இவர் வலியுறுத்திக் கூறுகிறார். கலை என்பது பண்டைய காலத்து மக்கள் அழிவற்ற

நிலை மீது கொண்ட நம்பிக்கையாகும் என்பது இவர் கருத்து.

இராங்கு இறப்பதற்கு முன்பு தம் இறுதிப்படைப் பாக 'உளவியலுக்கு அப்பால்' (Beyond Psychology) என்னும் நூலை இயற்றினார். இவருடைய கருத்துகள், அறிவுரை பகர்தல், சமூகப்பணி, இராசர்சின் ஆட்படுநர் மைய மருத்துவம் (Carl Roger's Client Centred Therapy), பெர்ல்சியனின் (Perlsian) முழுமை மருத்துவம் (Neo-gestalt) போன்ற மருத்துவ முறை களில் பின்பற்றப்படுகின்றன.

**இராங்கே, இலியோபோல்டு வான் (கி.பி. 1795-1886)** என்பார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த ஐரோப்பிய அறிஞர்; இக்கால வரலாற்று அறிவியலை நிலைநாட்டிய வரலாற்றுப் பேரறிஞர். இராங்கே (Rank) கி.பி. 1795-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21-ஆம் நாள் இன்றைய கிழக்குச் செருமனி நாட்டிலுள்ள வீகி (Wiehe) என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் முன்னோர்கள் உலூதர் தோற்றுவித்த சமயத்திற்குக் குருவாகவும் வழக் குரைஞர்களாகவும் பணியாற்றினார்கள். இவர் செரு மனியில் இசுல்ப் போர்ட்டா (Schulpforta) என்னும் ஊரில் புகழ்வாய்ந்த பொதுப் பள்ளிகளில் கற்றுப் பட் டம் பெற்றார். பின்னர் இவர் மொழி வரலாற்றை யும் சமயவியலையும் இலீப்சிகு (Leipzlg) பல்கலைக் கழகத்தில் பயின்றார். ஓடர் (Oder) ஆற்றங்கரை மாநகரான பிராங்பர்ட்டில் (Frankfurt) உள்ள பள்ளி ஒன்றில் கி.பி. 1818-ஆம் ஆண்டில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவருடைய முதல் நூலான 'கி.பி. 1494 முதல் 1514-ஆம் ஆண்டு வரை இலத்தீன் தியூ டானிய நாடுகளின் வரலாறு' (History of the Latin and Teutonic Nations, 1494-1514) என்னும் நூல் வெளியாயிற்று. இக்கால வரலாற்றின் தொடக்க நிலை முறைகளையும், மொழிவரலாற்று முறைக ளையும் ஆய்வு செய்யும் நோக்குடன் இந்நூலில் இவர் எழுதியுள்ளார். இந்நூலின் பிற்சேர்க்கையில் மரபுவழிச் செய்திகளை ஆய்வு செய்து, அவை எவ் வகையில் நம்பத் தகுந்தவையென்பதை விளக்கிய துடன், வரலாற்று நூல்கள் அனைத்தும் முதனிலைச் சான்றுகளின் அடிப்படையில் திறனாய்வு செய்யப் பட்டு, அவற்றின் உண்மைநிலை ஏற்கப்படும் முறை யில் எழுதப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந் தார்.

மேற்கூறிய நூல் வெளியானதும் இவர் கி.பி. 1825-ஆம் ஆண்டில் பெர்லின் பல்கலைக் கழகத்திற்கு அழைக்கப்பெற்று, அங்குப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். பிரசிய (Prussia) அரசு இவருக் குப் பயணக்கொடை (Travel grant) ஒன்றை வழங்கி இத்தாலியில் நான்காண்டுகள் தங்கி, வரலாற்றுக் கூறுகளை ஆயும்படி அனுமதித்தது. இவர் கி.பி. 1831-ஆம் ஆண்டில் பெர்லினுக்குத் திரும்பினார். அவ்வப்போது செருமானியம், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழி ஆய்வுக்காக ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்தார். பின்னர் தம்வாழ் நாளின் இறுதி நாட்களைப் பெர்லினிலேயே (Berlin) கழித்தார். வரலாற்றுக் கருத்தரங்குகளில் பங்கேற் கும் முறை இளம் வரலாற்றாசிரியர்களுக்கு உரிய கல்வி கற்பிக்க வல்லதே என்னும் நோக்குடன், கி.பி. 19-ஆம் நூற்றாண்டுச் செருமானிய வரலாற் றறிஞர்களை இவர் உருவாக்கினார். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபோதும், உலக வரலாற்றை எழுதுவதையே தம் வாழ்வின் இறுதி முயற்சியாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றினார். ஆயினும், உலக வர லாற்றை எழுதி முடிக்க இயலவில்லை. இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் நாள் கால மானார். பிரசிய அரசர் இவரைப் பெருமை மிக்க வர் எனப் பாராட்டினார். உலக நாடுகள் அனைத் திலுமுள்ள அறிஞர்கள் இவரைப் பாராட்டிப் புகழ்ந் துரைத்தார்கள். இக்கால உலகத்தின் தலைசிறந்த வரலாற்றறிஞர் என்று இவர் மதிக்கப்பெற்றார்.

இராங்கேயின் நூல்கள் 54 தொகுதிகளாக வெளி யிடப்பட்டன. இவற்றுள் போப்பாண்டவர்களைப் பற்றிய வரலாறும் (கி.பி. 1834-1836), செருமனியில் தோன்றிய சமயச் சீர்திருத்த வரலாறும் (1839-1847), பிரெஞ்சு வரலாறு பற்றிய நூல்களும் (1852), ஆங் கில வரலாறு பற்றிய நூல்களும் (1859-1869), பெர் சிய வரலாறு பற்றி இவர் எழுதிய 12 தொகுதிகளும் (1847-1848) மிகச் சிறந்தனவாகும். மேற்கூறிய நூல் கள் அனைத்தும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் வளர்ச்சியையே சுட்டுவனவாம். இக் காலவரலாற்றை அறிவியல் அடிப்படையில் கற்பதற் கான வாய்ப்பினை ஏற்படுத்தியதே இராங்கேயின் பெருஞ்சாதனையாகும்.

**இராச்சிய வர்த்தனர் (ஏ.580-605 கி.பி.)** வட இந்தியாவை ஆண்டு வந்த வர்த்தன வம்சத்து வேந்தர்களுள் இராச்சிய வர்த்தனரும் ஒருவர். இவர் மகா இராசாதிராசர் பிரபாகரவர்த்தனரின் மூத்த மகன் ஆவார். இவருக்கு அர்சவர்த்தனர் என்ற தம்பியும் இராச்சியகிரி என்ற தங்கையும் இருந்தனர்.

இவர் தம் தந்தையின் ஆட்சிக்காலத்தில் ஊணர்களை (Huns) ஒடுக்குவதற்கு அனுப்பப்பட் டார். இவர் தங்கையின் கணவனும் கன்னோசியின்

வேந்தனுமான கிரகவர்மன் என்பான் மாளவவேந்தனான தேவகுப்தனால் கொல்லப்பட்டான். இராச்சியகிரி சிறைவைக்கப்பட்டாள். இதனால், தம் தங்கையை மீட்பதும், தேவகுப்தனைப் பழிவாங்குவதும் இவரது தலையாய கடமையாயிற்று. எனவே, 10000 குதிரை வீரர்களுடன் இவர் மாளவத்தின் மீதுபடையெடுத்தார். இப்படையெழுச்சியின்போது இராச்சியவர்த்தனர் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டார்.

தந்தையின் இறப்பிற்குப் பின் அரியணையேறிய இவர் மிகக் குறுகிய காலத்தில் இறந்துபட்டதால், இவர்தம் தம்பியான அர்சவர்த்தனர் வர்த்தன வம்சத்தின் அரசரானார். இராச்சிய வர்த்தனரின் தலைநகரம் தானேசுவரம் ஆகும். இவர்கள் புசிய பூதியின் பரம்பரையினர் ஆவர். ம. இரா.

**இராசகட்டம்** இன்றைய வாரணாசி நகருக்கு மிக அருகில் வடக்காக உள்ளது. இராசகட்டம் (Rajghat) தொன்மையான சிறப்பும் பண்பாடும் பெற்ற நகரமாகும். இராசகட்டத்தில் 1940-ஆம் ஆண்டு இருப்புப் பாதை நிலையம் மாற்றி அமைக்க நிலம் தோண்டப்பட்ட பொழுது, பல தொன்மையான கட்டடங்களின் இடிபாடுகள் தற்செயலாக வெளிப்பட்டன. இவ்விடிபாடுகளில் சிறு சுடுமண் பொம்மைகளும், மட்பாண்டங்களும் களிமண்ணால் செய்யப்பட்ட முத்திரைகளும் கண்டெடுக்கப்பட்டன. இதனைக் கேள்வியுற்ற இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் இந்நகரைப் பார்வையிட்டு இதன் சிறப்பை ஆய்ந்தனர். இக்கட்டட இடிபாடுகளில் 12 தூண்கள் கொண்ட கோயிலின் மண்டபமும் அடங்கும். இவ்வூரின் தொன்மைச் சிறப்பை மேலும் அறியும்பொருட்டுக் காசி இந்துப் பல்கலைக் கழகம் (Banaras Hindu Uuiversity), 1957-58-ஆம் ஆண்டுகளில் டாக்டர் ஏ.கே.நாராயண்(A.K.Narain) தலைமையில் இங்கு அகழாய்வினை மேற்கொண்டது. இவ்வகழாய்வின்மூலம் இராசகட்டம்தொடர்ச்சியான ஆறு பண்பாட்டு நாகரிகத்தினைக் கொண்டிலங்கியது என்பது கண்டறியப்பட்டது.

முதல் பண்பாட்டுக் காலம் கி.மு. 800 முதல் கி.மு. 200 வரையாகும். இம்முதற்காலம் மேலும் மூன்று துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. முதற்பிரிவில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்களும் கருப்பு வண்ணந் தீட்டப்பட்ட சிவப்பு மட்பாண்டங்களும் சில நுண்கற்கருவிகளும் (Microliths) கிடைத்தன. இரண்டாம் பிரிவில் சுடுமண் பொம்மைகளும் மணிக்கல் வகைகளும் கிடைத்தன. மூன்றாம் பிரிவில் செப்பு நாணயங்கள் சில கிடைத்தன. முதற் பண்பாட்டுக் காலத்தில் மக்கள் களிமண்ணால் கட்டப்பட்ட வீடுகளில் வசித்தனர் என்பது அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. உறைக்கிணறுகள் பலவும் இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தொன்மையான பகுதி கங்கை யாற்றுக்கும் வராணா ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் இருப்பதால், முதல் பண்பாட்டுக்கால மக்கள் இவ்விரு ஆற்றையும் ஒரு கால்வாய் மூலம் இணைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. வடக்கத்திய பளபளப்பு மிக்க கருப்பு மட்கலன்கள் (NBP Ware) குறைந்த அளவே முதல் பண்பாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டன.

இரண்டாம் பண்பாட்டுக் கால மண்ணடுக்குகளில் குறைந்த அளவு வடக்கத்திய கருப்பு மட்கலன்களும் சாம்பல் நிறமட்கலன்களும் பெருமளவில் சிவப்பு மட்கலன்களும் கிடைத்தன. செப்பு நாணயங்களும் சுடுமண் முத்திரைகளும் இக்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. முத்திரைகளுள் பெரும்பாலானவை மிடா என்ற சொல்லுடன் முடிவுற்றுக் காணப்பட்டன. தொன்மையெழுத்தியலின் அடிப்படையில் இம்முத்திரைகளின் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு ஆகும். எலும்பினால் செய்யப்பட்ட கூர் முனைக்கருவிகளும் அம்பு முனைக்கருவிகளும் பெருமளவில் கிடைத்தன. இக்காலத்தில் வீடுகள், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன. ஒரு வீடு 2 அறைகளையும் குளியல் அறையையும் அடுப்பங்கரை, சாய்க்கடை போன்றவற்றையும் கொண்டு விளங்கியது. வீடுகள் உறைக் கிணறுகளைக் கொண்டிலங்கின. இரண்டாம் பண்பாட்டின் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டாகும்.

மூன்றாம் பண்பாடு கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதிக்காலம் முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரையாகும். இக்காலத்தில் சுடுமண் முத்திரைகள் பெருமளவில் கிடைத்தன. ஒரு முத்திரையில் காளையின் உருவமும் புட்கரணா (Pushkarana) என்ற சொல்லும் பொறிக்கப்பட்டுள்ளன. தொன்மையெழுத்தடிப்படையில் இதன் காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டாகும். இக்கால மண்ணடுக்கில் கிடைத்த சிவப்பு மட்பாண்டமொன்றில் திரிரத்தினங்கள், தர்ம சக்கரம் போன்ற அடையாளங்களும் சின்னங்களும் காணப்பட்டன. முத்திரைகளில் 'அரிசேனா' என்ற பெயர் பெருமளவில் காணப்படுகிறது. இக்காலத்தைச் சார்ந்த செப்பு நாணயங்கள், களிமண்ணால் செய்யப்பட்ட மணிகள், சுடுமண் சிற்றுருவங்கள், வளையல்கள் போன்றவை அகழாய்வில் கிடைத்தன.

நான்காம் பண்பாட்டுக்காலம் கி.பி. 300 முதல் கி.பி. 700 வரையாகும். இக்காலத்திலும் முத்திரை

களும் முத்திரையிடப்பட்ட பொருள்களும் கருப்பு மட்கலன்களும் சிவப்பு மட்கலன்களும் பெருமளவில் கிடைத்தன. இக்காலத்தைச் சார்ந்த புத்தரின் சுடு மண் பொம்மைகள் வனப்பு மிக்கவை. சமையலறை யொன்றில் உலை அடுப்பும் சாடிகள் பலவும் கண்டு பிடிக்கப்பட்டன. ஒரு குடுவையில் மனித எலும்புக் கூடும் தானியங்களும் சிப்பிகளும் காணப்பட்டன. எரித்த பின்னர்க் கிடைத்த எலும்புகளைச் சேகரித்து இக்குடுவையில் வைத்துப் புதைத்துள்ளனர்.

ஐந்தாம் பண்பாட்டுக்காலம் கி.பி. 700 முதல் கி.பி. 1200 வரையாகும். இக்காலத்தைச் சார்ந்த சில கோயில்களின் இடிபாடுகள் அகழாய்வில் கிடைத் தன.

ஆறாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 1200 முதல் கி.பி. 1700 வரையாகும். ஆறாம் பண்பாட்டுக்காலத் தில் சூர் மரபைச் சார்ந்த அரசர் இசுலாம் சா (கி.பி. 1545–54) வின் நாணயங்களும் அக்பரின் (கி.பி. 1556 – கி.பி.1605) நாணயங்களும் கிடைத்தன. இவையெல்லாம் இந்நகரத்தின் தொன்மைச் சிறப்பை விளக்குகின்றன.

**இராசகட்டம்[2]** தில்லி மாநகரில் காந்தியடிகளின் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ள இடம். காந்தி யடிகள் 1948–ஆம் ஆண்டு சனவரி மாதம் 30–ஆம் நாள் கொடியவன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட் டார். அவருடைய திருவுடல் அடுத்தநாள் இயமுனை ஆற்றங்கரையில் எரியூட்டப்பட்டது. அடிகளாரின் எரியூட்டப்பெற்ற இடத்திற்கு இராசகட்டம் (Rajg-hat) என்று பெயரிட்டுள்ளார்கள். செங்கோட்டைக்கு அண்மையில் உள்ள இராசகட்டம் காந்தியடிகளின் நினைவுப் பூங்கா போன்று அமைக்கப்பட்டுள்ளது. பெரும் நிலப்பரப்பில் காந்தியடிகளின் பூதவுடல் எரிக்கப்பட்ட இடத்தில் நாளும் ஒளியுடன் எரிந்து கொண்டிருக்கும் நந்தா விளக்கு போன்ற மின் சாத னம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இராச கட்டத் தில் காந்தியடிகளின் சமாதி பரந்த மேட்டில் அமைக்கப்பட்டு அதனைச் சுற்றிலும் அழகான புல் தரைகளும் மலர்த்தோட்டமும் உருவாக்கப்பட்டுள் ளன. தில்லி மாநகருக்குச் சுற்றுலாச் செல்வோர் தவறாது இராசகட்டம் சென்று இந்தியாவின் விடு தலைக்குப் பாடுபட்ட தேசத் தந்தைக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இராசகட்டத்தை அடுத்து சவகர்லால் நேருவை எரித்த இடத்தைச் சாந்தவனம் என்றும் அதனை அடுத்து இலால்பகதூர் சாத்திரியை எரியூட்டிய இடத்தை விசயக்கட்டம் என்றும் குறிப்பிடு கிறார்கள்.

இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக வாழ்ந்து இன் னுயிர் ஈந்த காந்தியடிகளுக்கு இராசகட்டம் அமைதி கொடுக்கும் அழகிய நினைவுச் சின்னம்.

**இராசகட்டம்[3]** மராத்திய வீரர் சத்திரபதி சிவாசியின் தலைநகரம். இது மேற்குத் தொடர்ச்சி மலையில் புனே நகரிலிருந்து ஏறத்தாழ 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இராசகட்டத்தை (Rajgad) அடைவது எளிதன்று. குறுகலான மலைப் பாதையின் வழியாகத்தான் இதனைச் சென்றடைய முடியும். மகது (Mahad) என்னும் நகரத்தின் வழி யாக இதனைச் சென்றடையலாம். சிவாசி அரண் மனையின் அழிவுச் சின்னங்களையும் அவருடைய தர்பார் மன்றத்தையும் இன்றும் இங்குக் காணலாம்.

இராசகட்டத்தின் அருகில் பெரும் ஏரியொன்று உள்ளது. இராசகட்டத்தில்தான் சிவாசி கி.பி. 1674–ஆம் ஆண்டு சூன் மாதம் -ஆம் நாள் சத்திரபதி யாக (முடிமன்னராக) முடிசூட்டிக் கொண்டார். சிவாசியின் கல்லறையும் இங்குத்தான் உள்ளது. மராத்தியர்களும் மற்றவர்களும் இந்நாளை இந்து சாம்ராச்சிய நாளாக இன்றும் கொண்டாடி வருகி றார்கள். பாலகங்காதர திலகர் இந்தியா அயலா ராட்சியில் சிக்கியிருந்தபோது இந்த நாளை எழுச்சி நாளாகக் கொண்டாடும்படி வேண்டினார்.

**இராசகிரி** பீகார் மாநிலத்தின் தலைநகரான பாட்னாவிற்குத் தென்கிழக்கே 100 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் வாய்ந்த தொன்மை யான நகரம். இது இராசகிருகம்(Rajagriha)என்றும் கூறப்படுகிறது. இதிகாசங்களில் ஒன்றான மாபார தம் இந்நகரைப் பாண்டவர்களின் பகைவரான சரா சந்தன்(Jarasandha) என்பவன் ஆட்சிபுரிந்து வந்தான் எனத் தெரிவிக்கிறது. கல்வெட்டுகளும் புத்தமத நூல் களும் மகதநாட்டின் தலைநகரமாக இராசகிரி (Rajgir)இருந்ததாகவும், பிம்பிசாரர் (கி.மு.543–491) அசாதசத்துரு (கி.மு. 491–459) போன்றோர் காலத் தில் புத்தர் அடிக்கடி இந்நகருக்குச் சென்றதாகவும் குறிப்பிடுகின்றன. புத்தர் இறந்தபின் புத்தமதத்தின் முதல் பேரவைக் கூட்டம் (First Buddhist Council) இங்குக் கூடியது. புத்தரைப் போலவே சமண மதத் தின் கடைசி தீர்த்தங்கரராக விளங்கிய மகாவீரரும் இந்நகருக்கு அடிக்கடி சென்றுள்ளார். இந்நகரம் சமண மதத்தின் இருபதாம் தீர்த்தங்கரரான முனி சவ்ரதா (Muni Suvrata) பிறந்த ஊராதலால் சம ணர்களின் புண்ணிய இடமாகக் கருதப்படுகிறது. இன்றும் இங்குச் சமணக் கோவில் ஒன்று உள்ளது.

இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் 1905-இல் இந்நகரில் அகழாய்வு மேற்கொண் டனர். இவ்வகழாய்வில் மலைகளுக்கிடையே சூழப்



மலைகளுக்கிடையேயுள்ள மதிற்சுவர் – இராசகிரி.

பட்ட 40 கி.மீ. சுற்றளவு கொண்ட சிறு கற்களால் எழுப்பப்பட்ட மதிற்சுவர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தவிர உயர்குடியினர் வசிக்கும் கோட்டைப்பகுதி (Citadel) ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. புதிய இராசகிருதம் (New Rajagriha) என்னும் கோட்டை ஒன்றும் இந்நகரில் உள்ளது. இது அசாத சத்துருவினால் கட்டப்பட்டது. பழைய கோட்டைக்குள் சதுர வடிவிலான கட்டடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் அசாதசத்துரு தன் தந்தையான பிம்பிசாரனைச் சிறைவைத்தான் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இரகுபீர் சிங்கு (Raghbir Singh) என்பவர் தலைமையில் அசாத சத்துருவால் கட்டப்பட்ட புதிய இராசகிருகத்தின் கோட்டைச் சுவர் அகழாய்வு செய்யப்பட்டது. இக்கோட்டைச் சுவர் முதலில் மண்சுவரால் கட்டப்பட்டுப் பின் செங்கல்லால் பிற்காலத்தில் உறுதி செய்யப்பட்டது. பின்னர், இதைச் செங்கற்களைக் கொண்டு மேலும் உயரமாக்கினர்.

புத்தரின் சிறந்த உறைவிடமாக விளங்கிய கிரிதரக்கூடக்குன்று (Gridhrakuta Hill) இந்நகரில் உள்ளது. இங்குத்தான் அசாதசத்துரு புத்தரைச் சந்தித்திருக்கக் கூடும். இந்தக் குன்றிற்குச் செல்லும் பாதையைப் பிம்பிசாரர் அமைத்தார் என்று சர் சான் மார்சல் கருதுகிறார். இதற்கருகில் உள்ள சீவகாம்ரவனம் (Jivakamravana) என்ற இடத்தில் பிம்பிசாரரின் அரசமருத்துவராக இருந்த சீலிகா என்பவர் புத்தர் தங்குவதற்காக எழுப்பிய நீள்வட்ட வடிவம் கொண்ட தங்கும் விடுதி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கருகில் தென்புறத்தில் கல்லினால் எழுப்பப்பட்ட சுவர் சுமகதா (Sumagadha) என்ற தொன்மையான ஏரியின் கரையாக இருந்திருக்க வேண்டும். இதைத் தவிர மணியார்–மத்து(Maniyar-math) என்று சொல்லப்படும் நீள் உருளை (Cylinderical) வடிவச் செங்கற் கட்டடம் ஒன்றும் உள்ளது. இதனைச் சுற்றிக் கல்லினாலானசுற்றுச் சுவர் உள்ளது. இக்கட்டடம் குப்தர் காலம் வரை பலமுறை விரிவுபடுத்தப்பட்டது. இதைச் சுற்றிலும் சுவர் மாடங்கள் உருவாக்கப்பட்டு இதில் சுதையிலான இந்துமதக் கடவுளின் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. 'மணி நாகம்' என்ற பெயர் பொறிப்புடன் கூடிய நாக வடிவம் கொண்ட சிற்பம், இச்சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இராசகிருகத்தில் ஒரு நாகத் தெய்வம் இருந்ததாக மாபாரதம் குறிப்பிடுகிறது.

வைபாரா (Vaibhara) என்ற குன்றின்மீது கல்லால் எழுப்பப்பட்ட மாசான் (Machan) அல்லது சராசந்நதா–கி–பாய்தக்கு என்று சொல்லப்படும் கட்டடம் உள்ளது. இது புத்தமத நூல்களில் காணப்படும் பிப்பலா (Pippala) என்பவரின் இருப்பிடமாகும். இதனருகில் சப்தபாரனி (Saptaparni) என்னும் குகைகள் காணப்படுகின்றன. இங்குத்தான் முதல் புத்தமதப் பேரவைக் கூட்டம் கூடியது. இக்குன்றின் வடபுறத்தில் வேணுவனம் (Venuvana) என்னும் இடத்தில் கரண்ட குளம் (Karanda tank) உள்ளது. இக்குளத்திற்கு அருகில் அகழாய்வில் எண்ணற்ற தூபிகளும் சிற்பங்களும் கிடைத்தன.

ஏ. கோசு (A. Gosh) என்பவர் இந்நகரில் அகழாய்வினை மேற்கொண்டு நான்கு பண்பாட்டுக் காலங்களைக் கொண்ட வாழ்விடத்தைக் கண்டுபிடித்தார். முதற் பண்பாட்டுக்கால மண் அடுக்குகளில் சிவப்பு நிற மட்பாண்டங்களும், இரண்டாம் பண்பாட்டுக் கால மண்ணடுக்குகளில் கி.மு. 6–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வடக்கத்திய பளபளப்பான கருப்புநிற (Northern Black Polished Ware) மட்பாண்டங்களும் கிடைத்தன. மூன்றாம் பண்பாட்டுக் காலம் கி.மு. 5–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2–ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலக்கட்டத்தினைச் சார்ந்ததாகவும், நான்காம் பண்பாட்டுக்காலம் கி.பி. 2–ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட வரலாற்றுக் காலத்தைச் சார்ந்ததாகவும் உள்ளன. இரண்டாம் பண்பாட்டுக் கால மக்கள் இறந்தவர்களை எரித்துப் பின் அவர்கள் சாம்பலைத் தாழியில்

இட்டுப் புதைக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந் தனர். கே.இரா.

**இராசகுரு (1908-31)** இருபதாம் நூற்றாண் டின் தொடக்கத்தில் இந்தியாவில் வாழ்ந்த புரட்சி வாதிகளுள் ஒருவர். இவர் பகத்சிங்கு, சுகதேவ் ஆகி யோருடன் இணைத்துப் பேசப்படுவார். சிவராம் அரி இராசகுரு (Shivaram Hari Rajguru) என்பது இவருடைய முழுப்பெயர்.

இராசகுரு மகாராட்டிர மாநிலம் புனே மாவட் டத்தில் கேது (Khed) என்னும் ஊரில் 1908-ஆம் ஆண்டு பிறந்தார். புனேயில் இவர் தம் சகோதர ருடன் தங்கியிருந்தார். இந்திய விடுதலைக்குப் போராடிய புரட்சிவாதிகளுக்கு வீட்டுச் சூழல் ஏற்பு டையதாக இருக்கவில்லை. சந்திரசேகர ஆசாது (Chandrasekafa Azad) போன்ற புரட்சிவாதிகளும் அத்தகைய சூழலில் வாழ்ந்தவர்களே.

இராசகுரு வடமொழியைக் கற்க வாரணாசி சென்றார். அங்குத் தருக்கசாத்திரத்தில் ‘மத்தியமா (Madyama) என்னும் தேர்வில் வெற்றிபெற்றார். இவருக்கு இளம்பருவத்திலேயே உடல் வலிமையைப் பெருக்கும் ஆர்வம் மிகுந்திருந்தது. விநாயக தாமோ தர சாவர்க்கரின் தமையனார் கணேச தாமோதர சாவர்க்கர் என்பார் அமராவதியில் உடற்பயிற்சிச் சாலை ஒன்றை நிறுவியிருந்தார். கணேச சாவர்க் கருக்குப் பாபாராவ் சாவர்க்கர் என்னும் பெயரு முண்டு. இராசகுரு அங்கு நடைபெற்ற உடற்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து திறமையாக அதனைக் கற்று முடித்தார்.

வாரணாசியில் கல்வி கற்றபோது இவருக்குச் சந் திரசேகர ஆசாதுடன் தொடர்பு ஏற்பட்டதால் இவரும் புரட்சி இயக்கக் கருத்துகளால் ஈர்க்கப்பட் டார். அக்காலத்தில் புரட்சிவாதிகளின் இயக்கமாயி ருந்த இந்துசுத்தான் சோசியலிசுட்டு மக்களாட்சிப் படை (Hindusthan Samajwadi Prajatantra Sena) என்னும் இயக்கத்தில் சேர இராசகுருவுக்கும் அனு மதி கிடைத்தது. உடனே புரட்சிப் பணியில் இவர் தீவிரமாக இறங்கினார். புரட்சி இயக்கத்தில் சேர்ந்துகொண்டதும் இவர் தம் பெயரை எம். இரகு நாது என்று மாற்றிக்கொண்டார். புரட்சிப் பணிக் காக இவர் தில்லி, இலாகூர் போன்ற இடங்களுக்குப் பயணம் செய்தார். இராசகுரு நாகபுரி, அமராவதி போன்ற ஊர்களில் தங்கியிருந்தபோது இவருக்கு ஆர்.எசு.எசு (R.S.S.) இயக்கத்தோடும் தொடர்பு ஏற்பட்டது. இலாகூரில் 1928-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளையொன் றில் இராசகுருவும் பங்கு பெற்றார்.

சாலியன்வாலாபாகு படுகொலையில் இலாலா இலசபதிராய் அடிபட்டுச் சில நாட்களுக்குப் பின்னர்க் காலமானார். இலசபதிராய் இறப்பிற்கு ஆங்கிலே யரே காரணம்எனக் கருதிய புரட்சிவாதிகள் பழிக்குப் பழி வாங்க உறுதிபூண்டனர். பகத்சிங்கு, சுகதேவ், இராசகுரு ஆகிய மூவரும் 1928-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 17-ஆம் நாள் இலாகூர் காவல் நிலையத்தின் எதிரில் சாண்டர்சு (Saunders) என்னும் வெள்ளைய னைக் கொல்லத் திட்டம் தீட்டினர். சாண்டர்சு கொலைக்கு இராசகுருவே காரணமாயிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. இவர் பிடிபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சாண்டர்சு கொலை வழக்கில் பகத்சிங்கு, சுகதேவ், இராசகுரு ஆகிய மூவருக்கும் தூக்குத் தண்டனை என்று நீதிமன்றத் தீர்ப்பு 1930-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் நாள் வெளி யாயிற்று. இம்மூவரும் 1931-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ஆம் நாள் இலாகூர் சிறையில் தூக்கிலிடப் பட்டனர்.

***இராசகேசரி***: இடைக்காலச் சோழப் பேர ரசில் விளங்கிய சோழமன்னர்கள் தம் பெயர்க்கு முன்னர்ச் சூட்டிக் கொண்ட பட்டப் பெயர்களுள் ஒன்று. இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங் களை இச்சோழ வேந்தர்களில் தந்தையும் மைந்த னும் மாறி மாறிச் சூட்டிக் கொண்டனர் எனத் தெரிகிறது. தந்தை இராசகேசரிப் பட்டம் புனைந்தால் மைந்தன் பரகேசரிப் பட்டம் புனை வது மரபு. ஒரே பெயருடைய சோழ அரசர்களின் காலத்தினை உறுதிப் படுத்துதற்கு இப்பட்டங்களும் ஓராற்றால் உதவியுள்ளன. இராசகேசரி என்னும் பெயர் அரசசிங்கம் எனப் பொருள்படும். ஆதித்த சோழனின் (கி.பி. 897) திருக்கழுக்குன்றக் கல்வெட்டு அம்மன்னனை இராசகேசரி பன்மன் என்று குறிப்பிடு கிறது. இப்பட்டங்களை முறையாகச் சூடிக் கொள்ளும் வழக்கம் கி.பி. 985-இல் முடிசூடிய முதலாம் இராசராசன் காலத்தில் தோன்றியதாகத் தெரிகிறது. தமிழக வேந்தர்களின் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி என்னும் பகுதியைத் தொடங்கியவன் இவ்விராசராசனே ஆவான். இவனுடைய கல் வெட்டுகள் மங்கல வாசகத்தை அடுத்து அமையும் மெய்க்கீர்த்தியின் இறுதிப் பகுதி ‘கோராசகேசரி பன்மரான இராசராச தேவர்க்கு யாண்டு’ என்று பொறிக்கப்பட்டுள்ளது. பரகேசரிப் பட்டம் புனைந் தோர்க்கு இப்பகுதி ‘கோப் பரகேசரி பன்மரான’ என்று அமைந்துள்ளது.

மாமன்னன் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் அரண்மனைப் பண்டாரத்தில் நெல் முதலியன அளக்கும் மரக்காலுக்கும் இராசகேசரி என்ற பெயர் இருந்து வந்துள்ளது. இம்மன்னன் கட்டிய தஞ்சைப்

பெரியகோயில் பண்டாரத்தில் அளப்பதற்குப் பயன் பட்ட மரக்கால் ஆடவல்லான் என வழங்கப்பட்டது என்றும், அது இராசகேசரி மரக்காலொடு ஒத்த அளவுடையது என்றும் கல்வெட்டுகளினால் அறிய முடிகிறது.

**இராசகேசரிநல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம்** முதலாம் இராசராசப் பெருமன்னனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.985-1014) அரசியல் அதிகாரியாகப் பணிபுரிந்தவன். இவன் அவ் வேந்தனது அவையில் திருமந்திர ஓலை எழுதும் அதி காரியாக இருந்தான். இவ்வதிகாரி அருமொழி தேவ வளநாட்டின் கண்ணுள்ள இங்கண் நாட்டிலுள்ள இராசகேசரி நல்லூரினன் என்பதனைக் கீழ்வரும் கல் வெட்டுச் செய்தியால் அறியலாம். 'சிரீஇராஜராஜ தேவர்க்குத் திருமந்திர ஓலையெழுதும் அருமொழி தேவ வளநாட்டு இங்கண் நாட்டு இராஜகேசரி நல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம்'. இவன் இராசகேசரி நல்லூருக்குத் தலைவன் என்பதும் அறி யப்படுகின்றது.

**இராசகோபால பிள்ளை, கோமளபுரம்**, கி.பி. 19-அம் நூற்றாண்டில் சென்னைக் கோமளீசுவரன் பேட்டையில் வாழ்ந்த தமிழ்ப் புல வர்; வடுகு யாதவ குலத்தவர்; அரசாங்கக் கல்லூரி களில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் வினோத ரச மஞ்சரி என்னும் நூலை ஆக்கிய அட் டாவதானம் அ. வீராசாமிச் செட்டியாரிடத்தும் அட்டாவதானம் சபாபதி முதலியாரிடத்தும் பயின் றவர். தொடக்கக் காலத்தில் இவர் பள்ளியில் தமிழ்ப் புலவராகப் பணி புரிந்தார். தொல்காப்பியச் சேனாவரையர் உரையினை முதன்முதல் அச்சுருவில் செம்மையுறக் கொண்டுவந்தவர் இவரே. இலக் கணச் சுருக்கம் என்னும் நூலை வெளியிட்டபோது (1876) இவர் மாநிலக் கல்லூரியில் தமிழ் ஆசிரிய ராகப் பணிபுரிந்து வந்துள்ளார். பின்னர்க் கி.பி. 1880-இல் வெளியிட்ட நன்னூற்காண்டிகை உரைப் பதிப்பினால் சைதை ஆசிரியர் கல்லூரி, மாநிலக் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை ஆகிய இடங்களில் பணிபுரிந்தமையினை உணரமுடிகிறது. மாணவர் நலங்கருதி அவர்களுக் குப் பயன்படும் வகையில் வினா விடை முறையில் பல நூல்களை இயற்றியுள்ளார்.

நாலடியார், நளவெண்பா, திருவாய்மொழி ஆகிய நூல்களுக்குச் சிறந்த உரையெழுதிப் பதிப் பித்துள்ளார். தென்திருப்பதிப் புராணம், திருநீல கண்டநாயனார் விலாசம், வில்லிபுத்தூரார் பாரதம், தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையர் உரை ஆகிய நூல்களை அழகுறப் பதிப்பித்துள்ளார். இவர்தம் நூல்கள் பின்னர், சி.வை. தாமோதரம் பிள்ளையாலும் மற்றுஞ்சிலராலும் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன. மகாவித்துவான் மயிலை சண்முகம்பிள்ளை இவர் தம் மாணாக்கராவார்.

**இராசகோபால முதலியார், பி.எஸ்.** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புல வர்களுள் ஒருவர்; தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்ற வர். இருவர் உரையாடுங்கால் பயன்படுத்தத்தக்க ஆயிரம் தமிழ்ச் சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத் துத் தொகுத்து உரோமன் எழுத்துகளில் இவர் வெளியிட்டுள்ளார். ஆங்கில ஆட்சி நிலவியபோது, ஆட்சியின் பொதுப்பணித்துறையில் ஈடுபட்டுள்ள தமிழினைத் தாய் மொழியாகக் கொண்டிராத அலுவலர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படத்தக்க தாக அமைந்திருந்தது. சொற்றொடர்களோடு தேர்ந்தெடுத்த 30 கதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு இந்நூலில் சேர்க்கப்பட்டிருந்தன. இக்கதைகள் கதாமஞ்சரி என்னும் நூலிலிருந்து எடுக் கப்பட்டன. இராசகோபால முதலியார் என்னும் பெயரில் புதுச்சேரியில் வாழ்ந்த வேறொரு புலவர் திருவேங்கடமாலை என்னும் நூலுக்கு உரை வரைந்து வெளியிட்டுள்ளார்.

**இராசகோபாலன், கு.ப. (1902-1944)** தமிழ்ச் சிறுகதைத் துறையின் முன்னோடிகளுள் ஒரு வர். இவர் கு.ப.ரா. என்னும் சுருக்கப் பெயரில் நன்கு அறிமுகமானவர். இவர் 1902-ஆம் ஆண்டு பிறந்தார்; தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்ட 'கர்ணகம்மா' என்னும் வகுப்பினைச் சேர்ந்த இவர்தம் முன்னோர் பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டையே தாயகமாகக் கொண்டு வாழ்ந்த வர்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொண்டையம் பேட்டையில் இவர் பள்ளிக் கல்வி பயின்றார். பின்னர்த் திருச்சி தேசியக் கல்லூரியி லும், கும்பகோணம் அரசுக் கல்லூரியிலும் முறையே 'இண்டர்மீடியட்', 'பி.ஏ.' வகுப்புகளில் பயின்று தேர்ச்சி பெற்றார். இவர் 1925-ஆம் ஆண்டு திரு மணம் செய்து கொண்டார். சில ஆண்டுக் காலம் மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டாட்சி (தாலுக்கா) அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந் தார். திரு.வ. இராமசாமி ஐயங்கார் (வ.ரா.) 1936-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'தமிழ்நாடு' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் கு.ப. ரா. சென்னை சென்று அவருடன் இணைந்து பணி யாற்றினார். அப்பத்திரிகை நின்று போனதும், நிலையான தொழிலும் போதிய வருவாயும் கிட்டாத நிலையில் பெரும் துன்பத்திற்கிடையே இவர் பல் வேறு இதழ்களுக்குச் சிறுகதைகள் எழுதி வந்தார்; எழுதுவதையே தம் வாழ்க்கைத் தொழிலாகவும்

கொண்டார். 'பாரத தேவி' என்னும் பத்திரிகையில் 1939-ஆம் ஆண்டிற்குப்பின் சில ஆண்டுகள் துணை யாசிரியர் பொறுப்பேற்றுப் பணி புரிந்தார். இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்தபோது சென்னையை விட்டு வெளியேறிக் கும்பகோணத்திற்கே திரும்பி வந்தார். அங்கு 'மறுமலர்ச்சி நிலையம்' என்னும் பெயரில் புத்தக விற்பனை நிலையம் ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். அ.வெ.ரா. கிருட்டிண சாமி ரெட்டியார், திருலோக சீத்தாராம் ஆகிய இருவரின் வேண்டுகோளுக்கு இணங்கி 1943-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் துறையூர் சென்று 'கிராம ஊழியன்' என்ற ஏட்டின் சிறப்பாசிரியர் பொறுப்பையும் நிருவாகப் பொறுப்பையும் ஏற்று, இலக்கியப் பணிக்கென்றே தம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டார். இளமையில் கண்படல நோயாலும் (Cataract), பின்னர் வறுமை, கடன் தொல்லை போன்ற சிக்கல்களாலும் மனம் துன்புற்று வருந்திய கு.ப. ரா. 1944-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 27-ஆம் நாள் காலமானார்.




இராசகோபாலன், கு.ப.

இவர்தம் நெருங்கிய நண்பராக விளங்கியவர் திரு.ந. பிச்சமூர்த்தி ஆவார். இவ்விருவரையும் 'இலக்கிய இரட்டையர்கள்' என்று அந்நாள்களில் அழைப்பது வழக்கம். இவர் கும்பகோணத்தில் வாழ்ந்த காலத்தில் தி. சானகிராமன், எம்.வி. வெங்கட்ராம், 'கரிச்சான் குஞ்சு' போன்ற இளந்தலை முறை எழுத்தாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவருடைய சிறுகதைகள் 'மணிக்கொடி', 'கலைமகள்', 'சங்கு', 'இந்துசுத்தான்', 'அனுமான்', 'சூறாவளி' போன்ற இலக்கிய இதழ்களில் வெளிவந்தன.

கு.ப.ரா. வின் சிறுகதைகள் நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'கனகாம்பரம்' (1944), 'புனர் சன்மம்' (1946), 'காணார்மலே காதல்' (1946), 'சிறிது வெளிச்சம்' (1965) ஆகிய தொகுதிகளில் 79 கதைகள் அடங்கியுள்ளன. இவர் எழுதியுள்ள ஓரங்க நாடகங்கள் சில 'அகல்யை' என்னும் பெயரில் ஒரு தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளன. அன்றியும் வங்காள மொழியிலிருந்து 'துர்கேச நந்தினி', 'தேவி சௌது ராணி' என்னும் புதினங்களைத் தமிழில் தந்துள்ளார்.

தமிழ் மொழியில் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தைச் செப்பம் செய்தமையிலும் செழுமைப் படுத்தியதிலும் கு.ப.ரா. விற்குப் பெரும் பங்கு உண்டு. இவர் எழுதியுள்ள 'விடியுமா?' என்னும் சிறுகதை திரும்பத் திரும்பப் பலராலும் நல்ல சிறுகதைக்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட கதையாகும். மா.இரா.

**இராசகோபாலாச்சாரி, சக்கரவர்த்தி (கி.பி. 1878-1975)** தமிழ்நாட்டின் மூதறிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1878-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாள் இன்றைய தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த தொரைப்பள்ளி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர்தம் தந்தையாரின் பெயர் சக்கரவர்த்தி வேங்கடராயர் என்பதாகும். தாயார் சிங்காரம்மா என்பவர். அவர் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கொப்பம் என்னும் ஊரினைச் சார்ந்தவர். அவர்களுக்கு இராசன் என்னும் இராச கோபாலாச்சாரி மூன்றாம் பிள்ளையாகப் பிறந்தார். இவர்தம் தொடக்கக் கல்வியைத் தொரைப்பள்ளியிலும், பள்ளிக்கல்வியை ஒசூரிலும் பெற்றார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரிக் கல்வி முடிந்ததும் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டம் பெற்று வழக்குரைஞர் ஆனார். இராசாசியின் துணைவியாரின் பெயர் அலர்மேலு மங்கம்மாள். இவருக்கு மூன்று ஆண்மக்களும் இரண்டு பெண்மக்களும் பிறந்தனர். அம்மூவர் கிருட்டிணசாமி, இராமசாமி, நரசிம்மன் ஆகியோராவர். நரசிம்மன் ஒருவர் மட்டும் இப்பொழுது உள்ளார். இராசாசியின் மூத்த மகள் இலட்சுமி, காந்தியடிகளின் மகன் தேவதாசு காந்தியை மணந்து கொண்டார். அக்காலத்திலேயே கலப்பு மணத்திற்கு இத்திருமணம் வழிகாட்டியது. இவர் சேலத்தில் 1900-ஆம் ஆண்டில் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டார்; இத்தொழிலை இவர் 1919-ஆம் ஆண்டு வரை செய்தார். அனைத்து இந்தியக் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து 1919-20-ஆம் ஆண்டுகளில் அக்கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார்.



இராசகோபாலாச்சாரி, சக்கரவர்த்தி

இவர் 1921-22-இல் காந்தியடிகளின் சத்தியா கிரக இயக்கத்திலும் ஒத்துழையாமை இயக்கத்தி லும் பங்குகொண்டார். இவர் 1922 முதல் 1954வரை காங்கிரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக இருந்தார். பின்னர் 1930-இல் இந்திய மதுவிலக்குக் குழுவின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியச் சட்டப்படி (1935) இந்தியாவில் 1937-இல் தேர்தல் நடைபெற்றது. அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் சார்பில் வெற்றிபெற்ற இவர், பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் தலைமை அமைச்சராகத் (Premier) தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவியை 1937 முதல் 1939 வரை இவர் திறமை யாக வகித்தார். இத்தருணத்தில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. இந்தியர்களைக் கலக்காமல் இரண் டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதைக் கண்டித்து அமைச்சர்கள் தம் பதவிகளை உதறி விட்டு வெளியேறினர். போருக்கு உதவ வேண்டு மென இராசாசி 1940-ஆம் ஆண்டில் அனைத்திந் தியக் காங்கிரசுக் குழுவை வேண்டினார். இந்தியச் சுதந்திரப் போராட்டம் தொடர்பாக 1921க்கும் 1947க்கும் இடைபட்ட காலத்தில், இராசாசி ஐந்து முறை சிறை சென்றார்.

முசுலிம் லீகின் தலைவரான சின்னா (Jinnah) வுடன் காந்தியடிகள் உரையாடல் நடத்தியபோது அவருக்கு இராசாசி உதவினார். பண்டித நேருவின் தலைமையில் உருவான இடைக்கால அரசில் 1946-47 -இல் அமைச்சரானார். இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம் நாள் சுதந்திரம் பெற்றது.

இராசாசி மேற்கு வங்காளத்தின் ஆளுநராக 1947 ஆகசுட்டு மாதத்திலிருந்து 1948 சூன் மாதம் வரை பதவி வகித்தார். இவர் 1947 நவம்பர் மாதத்தில் இந்தியாவின் இடைக்கால அரசப் பேராளராகப் (Acting Governer General) பதவியேற்றார். பின்னர் 1948 சூன் மாதத்திலிருந்து 1950 சனவரி 25-ஆம் நாள் வரைஅரசப் பேராளராகப் பொறுப்பேற்றார். இந்தியா 1950 சனவரி 26-ஆம் நாளன்று குடியரசு நாடாயிற்று. அப்போது இராசாசி துறைப் பொறுப் பிலா அமைச்சராக 1950 சூலை மாதம் முதல் திசம் பர் மாதம் வரை பதவியில் அமர்ந்தார். பின்னர் உள்துறை அமைச்சராக 1950-51-இல் பொறுப்பேற் றார். தேர்தலுக்குப் பின் பதவியிலிருந்து விலகிச் சென்னையில் ஓய்வு பெற்று வாழ்ந்த நிலையில், சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக 1952 முதல் 1954 வரை பதவி வகித்தார்.

இராசாசி காங்கிரசிலிருந்து பிரிந்து 1959-ஆம் ஆண்டில் சுதந்திராக் கட்சியை நிறுவினார். ஆங்கி லமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்னும் கொள்கை உடையவர் இராசாசி. இவர் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அணுக் குண்டு ஆய்வுகளைத் தடைசெய்ய வேண்டுகோள் விடுத்த காந்தி அமைதி நிறுவனத்தின் மூவர் அடங் கிய குழுவொன்றில் முக்கிய உறுப்பினராக இவர் அமர்த்தப்பெற்று அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் உரோமாபுரிக்கும் 1962-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்றுவந்தார்.

இராசாசி அவர்களின் பொதுத் தொண்டைப் பாராட்டும் வகையாக இந்திய அரசு இவருக்குப் 'பாரத ரத்தினா' என்னும் விருதினை 1955-இல் வழங்கியது. இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல எழுத்தாளர்; பல நூல்களின் ஆசிரியர். வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகன் ஆகிய இவர் நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இராசாசியின் சாதனைகள்: விடுதலைப் போரின் இறுதிக்கட்டத்திலே இராசாசி காந்தியடி களுடன் கருத்து வேறுபட்டார். தேசத்திற்குச் சுதந் திரம் பெறுவதற்கான அணுகுமுறையில் அம்மாபெ ரும் தலைவர்கள் இருவரும் மன வேற்றுமை கொண்டனர். அதன் காரணமாக இராசாசி காங் கிரசிலிருந்து விலகினார். பாகிசுத்தான் பிரிவினை அடிப்படையில் முசுலீம் லீகோடு உடன்பாடு பற்றிப் பேச வேண்டுமென்று இராசாசி கூறினார். ஆனால், பிரிவினைவாதத்தை ஏற்க மறுத்தது அனைத்திந் தியக் காங்கிரசு.

ஆகசுட்டுப் போராட்டம் ஓய்ந்து போன நேரத் திலே மருத்துவக் காரணத்திற்காகக் காந்தியடிகள் விடுதலையானார். அவரைச் சந்தித்து உடல்நலம் விசாரிக்க இராசாசி பூனாவிற்கு விரைந்தார். சிறிது

நேர உரையாடலுக்குப் பின் இருவருக்குமிடையே நிலவி வந்த மன வேற்றுமை மறைந்தது.

இராசாசியின் பாகிசுத்தான் பிரிவினைத் திட்டத்தைக் காந்தியடிகள் ஏற்றுக்கொண்டார். அதன் படி காந்தி–சின்னா சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்பின்போது இராசாசியும் பம்பாயில் தங்கிக் காந்தியடிகளுக்குத் துணைபுரிந்து வந்தார். அப்போது அந்தச் சந்திப்புப் பயன் தரவில்லை. ஆயினும், இராசாசி காந்தியடிகளிடம் கொடுத்த திட்டத்தின் அடிப்படையில்தான் நாடு பிரிக்கப்பட்டு, இந்தியத் துணைக் கண்டம் வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றது,

அப்போதைய சென்னை மாகாணச் சட்ட மன்றத்திலே வர்த்தகத் தொகுதிப் பேராளர்கள் இருந்தனர்; நிலக்கிழார் தொகுதிப் பேராளர்களும் இருந்தனர்; இசுலாமிய–கிறித்தவ வகுப்புவாரித் தொகுதிகளின் பேராளர்களும் தக்க அளவில் இடம் பெற்றிருந்தனர்; ஐரோப்பியத் தோட்ட முதலாளிகள் தொகுதிகள், ஐரோப்பிய வணிகர் தொகுதிகள் ஆகியவற்றிலிருந்தும் ஆங்கிலேயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டசபையில் அங்கம் வகித்தனர்; ஆங்கிலேய–இந்தியர் பேராளர்களும் இருந்தனர். இவர்கள் எல்லோரும் வெள்ளையர்களை விரும்புபவர்கள். சுதந்திரப் போருக்கு எதிராகச் செயற்பட்டே பழக்கப்பட்டவர்கள், இவர்களுடைய எதிர்ப்புகளையும் தாங்கி ஆட்சி நடத்த வேண்டிய பொறுப்பு இராசாசிக்கு இருந்தது.

நாடு சுதந்திரம் பெற்றபோது மவுண்டுபேட்டன் பிரபு அரசப் பேராளர் (Governor-General) பதவி வகித்த கடைசி ஆங்கிலேயராவார். அவருக்குப் பின் இராசாசிதான் முதல் இந்திய அரசப் பேராளராகப் பதவி ஏற்றவர். இந்திய அரசியல் அமைப்பு மன்றம் (Constituent Assembly) தயாரித்த அரசமைப்புச் சட்டத்திற்குத் தமது ஒப்புதலை அளித்து, அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்த பின்னரே இராசாசி பதவி விலகினார்.

இராசாசி தள்ளாத வயதிலும் தெளிவான சிந்தனை உடையவராயிருந்தார். இறுதிமூச்சு வரை தமது அறிவுநுட்பத்தால் உலகச் சிக்கல்கள் பற்றி எழுதியும் பேசியும் வந்தார். இவர் 1975–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 25–ஆம் நாள் சென்னையில் காலமானார். அடையாறு காந்தியடிகளின் நினைவுச் சின்னத்திற்கு அருகில் இராசாசியின் நினைவாலயம் அமைக்கப்பெற்றுள்ளது. மா.பொ.சி.

**இராசகோபாலையங்கார், வே.** தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திட்டாணிப் பகுதியில் வேங்கடேச ஐயங்காருக்கும் அரங்கநாயகி அம்மாளுக்கும் கி.பி. 3–9–1882–இல் பிறந்தார். வைணவ அந்தணராகிய இவர் சீவத்ச கோத்திரத்தவராவார். இவர் பள்ளி இறுதி வகுப்புவரை கும்பகோணம் உயர்நிலைப் பள்ளியிலும், தமிழ்க் கல்வியை நற்றிணை நாராயணசாமி ஐயரிடத்திலும் கற்றார். பிறகு இரண்டாண்டுகள் (1909,10) கும்பகோணம் நேட்டிவ் உயர்நிலைப் பள்ளியிலும் இரண்டாண்டுகள் நெல்லூர் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் 1912–ஆம் ஆண்டில் சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தார். அப்பணிக்காலத்தில் பள்ளிச் சிறுவர் படித்து மகிழுமாறு இனிமையாகவும் எளிமையாகவும் அமைந்த தமிழ்நடையில் பல சிறுகதைகள் எழுதி நூல்களாக வெளியிட்டார். மேலும், இவர் எழுதியுள்ள நூல்கள் ஐவன்கோ, கதைக்கொத்து, தங்கக்கிளி, பொன்னாடு, சண்பக மொட்டு, உத்தம சேவகன், மாம்பழ மங்கை, தங்க மோதிரம், மயில் நர்த்தனம், இராச வைத்தியன், செங்கை வளவன், சங்கச் சிந்தாமணி, சீலசம்பன்னன், மல்லிகா, கதாமணி மகுடம், தெனாலிராமன், அன்புவல்லி, தமிழ் இலக்கணம் (மூன்று பகுதிகள்) ஆகியனவாகும். நாலடியார்–பதுமனார் உரையினையும், நான்மணிக்கடிகை – பழைய உரையினையும், அகநானூற்றினையும் பதிப்பித்த இவர் 24.6.1935–இல் காலமானார்.

**இராச சிம்மன்** பல்லவ மன்னர்களுள் ஒருவர்; சிம்மவிட்டுணு மரபில் தோன்றியவர்; இவர் சிறந்த சிவபக்தர்; பல கல்வி நிலையங்களை நிறுவிக் கலை வளர்த்தவர். இவற்றுடன் இவர் பல கோயில்களைக் கட்டினார்.

இராசசிம்மனின் இயற்பெயர் இரண்டாம் நரசிம்மவர்மன் என்பதாகும். இவர் ஆட்சிக்காலம் தோராயமாகக் கி.பி. 680 முதல் 700 வரை என்பார் பேராசிரியர் சத்தியநாதையர். ஆனால், பேராசிரியர் நீலகண்ட சாத்திரி கி.பி. 700க்கும் 728க்கும் இடைப்பட்ட காலம் என்பார்.

இராசசிம்மன் காலத்திலும் பல போர்கள் நிகழ்ந்தன. சாளுக்கிய மன்னர் விசயாதித்தனும் கங்கரும் பிறரும் பல்லவருக்குத் தொல்லை தந்தனர். ஆனால் பல்லவரே வெற்றி கண்டனர். இவர் காலத்தில் போருடன் கடும் பஞ்சம் ஒன்றும் உண்டாயிற்று. எனினும் இவர் மக்களை நன்கு புரந்தார்.

பல்லவ மன்னர்கள் குடவரைக் கோயில்களைக் கட்டிப் பெயர் பெற்றவர்கள். இம்மன்னர்கள் மூவ


கைக் கலைப்பாணிகளைத் தமிழ்நாட்டுக்கு வழங்கியவர்கள். மகேந்திரவர்மன் குகைக் கோயில்களைச் செதுக்கியவர். இவற்றைக் குடவரைக் கோயில்கள் என்பர். மகேந்திரவர்மனின் மகனான நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் ஒற்றைக்கல்லினால் செதுக்கப் பட்ட இரதங்கள் சிறப்பாக அமைந்தன. ஆனால், இராசசிம்மன்தான் தமிழ் நாட்டிலேயே முதன்முதலாகக் கட்டுமானக் கோயில்களைக் கட்டியவர். இப் பல்லவ மன்னர் காலத்தில்தான் பல கட்டுமானக் கோயில்கள் எழுப்பப்பட்டன. அவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுவது கடற்கரைக் கோயிலாகும். இராசசிம்மனால் கட்டப்பட்ட முதல்கோயிலும், முதல் கட்டுமானக் கோயிலும் இதுதான். இக் கடற்கரைக் கோயில் அனைவரையும் கவர்ந்து இன்றும் குன்றாப் பொலிவுடன் திகழ்கிறது.

காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோயில் இந்திய அரசின் தொல்லியல் துறையினரால் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. கலைத்திறனுக்குப் பெயர் பெற்றது இக்கோயில். இக்கோயிலில் பல சிற்ப வேலைப் பாடுகளைக் காணலாம். அவை இராசசிம்ம பல்லவனுக்கு இசை, நடனம் போன்ற நுண்கலைகளிலிருந்த பேரார்வத்தை எடுத்து இயம்புவன. கயிலாயநாதர் கோயிலில் எண்ணற்ற கல்வெட்டுகளும் உள்ளன. பெரிய புராணத்தில் திருநின்றவூரில் பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயில் பற்றிய நிகழ்ச்சியில் காடவர்கோன் கட்டிய இக்கோயில் பற்றிய குறிப்பு வருகிறது. இராசசிம்மன் கயிலாயநாதர் கோயிலில் இறைவனைக் கோயில் கொள்ள நினைத்த நாளும் பூசலார் நாயனார் தாம் கட்டிய மனக்கோயிலில் இறைவனைக் கோயில் கொள்ள நினைத்த நாளும் ஒன்றாக அமையவே, வான்குரலில் (அசரீரி) இறைவன் அரசன் குறித்த நாளினை மாற்றி வைக்கச் சொன்னதாகப் பெரிய புராணம் கூறுகிறது.

இராசசிம்மன் வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவர். இவருக்கு நாடகக் கலையிலும் ஆர்வம் இருந்தது. எனவே வடமொழி, தமிழ் மொழிகளுடன் இசை, நடனம், நாடகம், சிற்பம் முதலிய கலைகளையும் இராசசிம்மன் நன்கு வளர்த்தார்.

**இராசசுத்தான்** இந்தியக் குடியரசின் மாநிலங்களுள் ஒன்று. இது இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பாகிசுத்தானையொட்டி அமைந்துள்ள மாநிலமாகும். இராசபுத்திர இனத்தைச் சார்ந்த இந்தியக் குடிமக்களைக் கொண்டது இராசசுத்தானம் (Rajasthan) ஆகும்.

எல்லைகள்: இராசசுத்தான் மாநிலத்தின் வடக்கிலும் வடகிழக்கிலும் அரியானா மாநிலமும் தில்லி




இராசசுத்தான்

யும் உத்தரப்பிரதேச மாநிலமும், தென்கிழக்கில் மத்தியபிரதேச மாநிலமும், தென்மேற்கில் குசராத்து மாநிலமும், மேற்கில் பாகிசுத்தான் நாடும் எல்லைகளாக உள்ளன.

பரப்பு: இம்மாநிலத்தின் பரப்பு 3,42,239 ச.கி.மீ. ஆகும்.

மக்கள் தொகை: இராசசுத்தான் மாநிலத்தின் மக்கள்தொகை 3,41,08,292 ஆகும் (1981). இம்மாநிலத்தில் பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கையே மிகுதி.

இராசசுத்தான் இயற்கை அமைப்பு: இயற்கையமைப்பின் அடிப்படையில் இராசசுத்தானின் ஒவ்வொரு பகுதியும் பிற பகுதிகளிலிருந்து வேறுபடுகிறது. இது இம்மாநிலத்தின் சிறப்புத் தன்மைகளுள் ஒன்றாகும். இம்மாறுபாட்டைத் தட்பவெப்பநிலை, மண்வளம், பயிர்பச்சைகள், கனிமச் செல்வங்கள் போன்றவற்றிலும் காணலாம். இராசசுத்தான் மாநிலத்தை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. மேற்கத்திய வறண்ட பகுதி, 2. பாதி வறண்ட பகுதி, 3. தென்கிழக்குப் பகுதி, 4. சம்பல் பள்ளத்தாக்கு, 5. ஆரவல்லி மலைப்பகுதி, 6. கிழக்குப் பகுதி என்பனவாம்.

மேற்கத்திய வறண்ட பகுதி, இராசசுத்தானின் செய்சல்மர் மாவட்டம், பார்மர், சோத்பூர் (Jodhpur) மாவட்டங்களின் வடமேற்குப் பகுதிகள், தென்கிழக்குப் பிகானீர், தென்மேற்கு சூரு, நாகரூரின் மேற்குப்

பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இது பெரும்பாலும் பாலைநிலப் பகுதியாகும். இதுவே இம்மாநிலத்தின் பரப்பில் மிகுந்த இயற்கைப் பிரிவாகும். இப்பகுதியில் பல்வகைப்பட்ட மணற்குன்றுகளும் ஆங்காங்கே மலைக் குன்றுகளும் மணல் அலைகளும் நிறைந்துள்ளன. இப்பகுதியில் ஆண்டிற்கு 10 செ.மீ. கூட மழை பொழிவதில்லை. எனவே, இது வறண்ட பகுதியாகும்.

பாதி வறண்ட பகுதி ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் அமைந்துள்ளது. சலோர், பாலி, தென்கிழக்குச் சோத்பூர், நாகரூர், சிக்கர், சுன்சுன்கு (Jhunjunhu), வட கிழக்குச் சூரு போன்ற பகுதிகள் இதனுள் அடங்கும். இப்பிரிவின் தென்பகுதியில் இலூனி (Luni) ஆறு பாய்கிறது. வடபகுதி நீர்ப்பாசன வசதி மிகக் குறைந்தது. இங்கு 25 முதல் 50 செ.மீ. வரை மழை பெய்கிறது. ஆனால், வெப்பம் மிகுந்துள்ளது. வடபகுதியில் பெருகிவரும் மழைநீர் பெரும் பள்ளங்களில் தேங்கியோ மணலில் ஊறியோ போய்விடுகிறது. வெப்பத்தால் நீர் ஆவியாகும் போது உப்பு, உவர்க்காரம் (Soda) போன்றவை படிந்து காணப்படும். நீர் தேங்கியுள்ள பள்ளங்கள் சில உப்பு ஏரிகளாக மாறியுள்ளன. எடுத்துக்காட்டாக, சம்பர், தேகனா, சூச்சமனா, தித்வா போன்றவை அவ்வண்ணம் மாறியுள்ளவை. சம்பர் ஏரி 25 கி.மீ. நீண்டும் 10 கி.மீ. அகன்றும் உள்ளது. இது உப்பு ஏரிகளிலேயே மிகப் பெரியது; ஆண்டொன்றுக்குத் தோராயமாக 2½ இலட்சம் கண்டி உப்பு எடுக்கப்படுகிறது.

இராசசுத்தான் கால்வாய் தென்கிழக்குப் பகுதியின் வடமேற்குப் பகுதியில் பாய்கிறது. இதன்மூலம் கங்காநகர் மாவட்டமும் பிகானீர் மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியும் நீர்ப்பாசன வசதி பெறுகின்றன.

ஆரவல்லி மலைப்பகுதி, உதயப்பூர் மாவட்டம் முழுவதையும், பாலி, சிரோகி மாவட்டத்தின் தென்கிழக்குப் பாகத்தையும், துங்கர்ப்பூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியில் ஆரவல்லி மலைத்தொடரும் அதனைத் தொடர்ந்துள்ள பிற குன்றுகளும் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. குருசிகரம் என்னும் மலையுச்சி இராசசுத்தானிலேயே மிக உயர்ந்தது. இம்மலையுச்சியின் உயரம் 1727 மீட்டர்களாகும். பருவக்காற்றுகள் வீசும்போது இப்பகுதியில் 50 முதல் 100 செ.மீ. வரை மழை பொழிகிறது. இப்பகுதியின் தென்மேற்கில் மவுண்டு ஆபு அமைந்துள்ளது. இது ஒரு சுகவாசத்தலமாகும். இப்பகுதியில் கனிமப் பொருள்களும் மிகுதி. சவாரில் துத்தநாகமும், பாரியில் பெரிலியமும் (Berryllium), காக்கைப்பொன், படிகாரம், வெளிமக்கன்மகி, சவர்க்காரக்கல் போன்றவை உதயப்பூர் மாவட்டத்திலும், மரகதக் கற்கள் தேவ்காரிலும் கிடைக்கின்றன.

கிழக்குப்பிரிவு செயப்பூர், ஆச்மீரம், சவாய் மாதோப்பூர், பில்வாரா, பண்டி, ஆள்வார், பரத்பூர் மாவட்டங்களையும்கோட்டாவின் வடமேற்குப் பகுதியையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இப்பகுதியில் பனாசு ஆறும் அதன் துணையாறும் பாய்கின்றன. இந்தப் பகுதியில்தான் பெரும்பாலான தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. குறிப்பாகச் செயப்பூர், ஆசுமீரம் கோட்டா, பில்வாரா, சாப்புரம் போன்ற ஊர்களில் தொழிற்சாலைகள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

தென்கிழக்குப் பகுதி, பன்சுவாரா, சிந்தூர்கர், சாலாவர், கோட்டா மாவட்டங்களை உள்ளிட்ட பகுதியாகும். கோட்டா-சாலாவர் பகுதியில் கற்கள் நிரம்பிய மேட்டுநிலங்கள் உள்ளன. கோட்டாவில் சம்பல் ஆறுஉள்ளது.அதன் துணையாறுகள், வண்டல் மண் வடிநிலத்தைக் கொண்டுள்ளன.

சம்பல் பள்ளத்தாக்குப் பகுதி சம்பல் ஆற்றுப் போக்கில் அமைந்துள்ளது. இந்த ஆறு இராசசுத்தானுக்கும் மத்திய பிரதேசத்திற்கும் எல்லையாக அமைகிறது. இராசசுத்தானத்தில் இப்பகுதி, குறுகிய வளையம் போன்று, 5 முதல் 20 கி.மீ. சவாய்-மாதோப்பூர், பரத்பூர் மாவட்டங்களைச் சார்ந்துள்ளது. இப்பள்ளத்தாக்கு மத்திய பிரதேசத்திலும், உத்தரப்பிரதேசத்திலும்-சம்பல்ஆறு இயமுனையுடன் கலக்கும் பகுதி வரை நீண்டுள்ளது. இப்பகுதியில் பருவக்காற்று மழை பொழிவதால் ஒரு பக்கம் மழை மிகுந்த பகுதியையும் மறுபக்கம் மழைநிழல் பகுதியையும் காணலாம். பருவ மழை மண்ணரிப்பை ஏற்படுத்துகிறது.

மாவட்டங்கள்: இராசசுத்தான் மாநிலத்தில் 27 மாவட்டங்கள் உள்ளன. அவை 1. ஆசுமீரம், 2. ஆல்வார், 3. பன்சுவாரா, 4. பார்மர், 5. பரத்பூர், 6. பில்வாரா, 7. பிகானீர், 8. பண்டி, 9. சித்தூர்கர், 10. குரு, 11. துங்கர்ப்பூர், 12. கங்காநகர், 13. செயப்பூர், 14. செய்சல்மர், 15. சாலோர், 16. சலாவர். 17. சுன்சுனுகு, 18. சோத்பூர், 19. கோட்டா, 20. நாகரூர், 21. பாலி, 22. சவாய் மாதாப்பூர், 23. சிக்கர், 24. சிரோகி, 25. தோங்கு(Tong), 26. உதயப்பூர், 27. தோல்பூர் என்பனவாம். தோல்பூர் மாவட்டம் 1982-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவற்றுள் பரப்பளவில் பெரியது செய்சல்மர் மாவட்டம்; மிகச் சிறியது தோல்பூர் மாவட்டம். மக்கள் தொகை

யில் பெரியது செயப்பூர். மிகச் சிறியது செய்சல்மர் மாவட்டமாகும்.

பெருநகரங்கள்: இராசசுத்தான் மாநிலத்தின் தலைநகரம் செயப்பூர் ஆகும். இதனை இளஞ்சிவப்பு மாநகரம்(Pink City) என்றும் குறிப்பிடுவர். செயப்பூரின் மக்கள் தொகை பத்து இலட்சத்திற்கும் மிகுதியாக உள்ளது.

சோத்பூர், ஆசுமீரம், கோட்டா, பிகானீர், உதயப்பூர், ஆல்வார், பில்வாரா, கங்காநகர். பரத்பூர், சிக்கர் ஏனைய நகரங்களாகும். இந்நகரங்கள் இலட்சத்திற்கும் மிகுதியான மக்கள் தொகை கொண்டவை.

பார்மர், பான்சுவாரா, சித்தோர்கர், சூரு, துங்காப்பூர், நகார், பாலி, சிரோகி, தோங்கு, தோல்பூர் முதலியன பிற நகரங்கள் ஆகும். இந்நகரங்களும் இம்மாநிலத்தில் அடுத்தநிலையில் மக்கட் பெருக்கம் கொண்டவையாகும்.

இராசசுத்தான் மாநிலத்தில் 203 வட்டங்களும், 33,305சிற்றூர்களும் உள்ளதாகக் கணக்கிட்டுள்ளனர்.

வேளாண்மை: இராசசுத்தான் மாநிலம் குறைவான மழைபெறும் மாநிலங்களுள் ஒன்று. தார் பாலை நிலத்தின் பெரும்பகுதி இம் மாநிலத்தில்தான் உள்ளது. எனினும் இங்கு வேளாண்மையே மக்களின் சிறப்பான தொழிலாகும். கோதுமை, சோளம், பாச்ரா (Bajra), மக்காச்சோளம், பார்லி, போன்றவை முதன்மையான உணவுப் பொருள்களாகும். இரபி, பயறுவகைகள், கரும்பு, எண்ணெய் விதைகள் பருத்தி போன்றவை ஏனைய விளைபொருள்களாகும்.

வேளாண்மைக்கு உறுதுணையாகக் கால்நடை வளர்ப்பு உதவுகிறது. பசுமாடுகள் ஆண்டொன்றுக்கு 920 கிலோ பால் கறப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.ஆடுகள் வளர்த்தல் இராசசுத்தானிகளுக்குச் செல்வ வளங்கொடுக்கின்றது. இந்தியாவின் மொத்த ஆடுகளின் எண்ணிக்கையில் 21 விழுக்காடு இம்மாநிலத்தில் காணப்படுகிறது. இந்தியாவின் ஆட்டு உரோம உற்பத்தியில் 45 விழுக்காடு இம்மாநிலத்திலிருந்து கிட்டுகிறது.

நீர்ப்பாசனம்: மொத்தத் தானியம் விளையும் பரப்பில் ஏறத்தாழ 20 விழுக்காடு நீர்ப்பாசன வசதி பெறுகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் நீர்ப்பாசன வசதி பெறும் விளைநிலத்தைப் பெருக்கி வளர்த்து வருகின்றன.

தொழில்கள்: இம்மாநிலத்தில் 1979-ஆம் ஆண்டு 5049 தொழிற்சாலைகள் இருந்தனவெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை தொழிற்சாலைச் சட்டத்திற்கு உட்பட்டவை. அதேயாண்டில் 31292 சிறு தொழிற்சாலைகள் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தின. 121 தொழிற் பேட்டைகள் உருவாக்கப்பட்டன. இத் தொழிற்பேட்டைகளில் பெரும் பொருள் முதலீடாகப் போடப்பட்டுள்ளது. பருத்தி நெசவாலைகள், சிமெண்டு உற்பத்தி, கண்ணாடி, சர்க்கரை போன்றவை சிறப்பான உற்பத்திப் பொருள்களாகும்.

பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள் போன்ற அனைத்துத் துறைகளும் இராசசுத்தான் மாநிலத்தில் செயற்படுகின்றன. இவற்றுடன் குடிசைக் கைத்தொழில்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

தொழிற்பேட்டைகள் செயப்பூர், ஆசுமீரம், பில்வாரா, உதயப்பூர், பாலி, சம்மர்புரம், சோத்பூர் பிகானீர், பரத்பூர், கங்காநகர், கோட்டா போன்ற நகரங்களில் நிலைநாட்டப்பட்டுள்ளன.

காடுகள்: இராசசுத்தான் மாநிலத்தின் மொத்தப் பரப்பில் 10 விழுக்காடு நிலத்தில் காடுகள் உள்ளன. தேக்கு மரக்காடுகள் இருந்தாலும், அங்கு உற்பத்தி செய்யப்படும் தேக்கு தரக்குறைவானது. சாயத்திற்குப் பயன்படும் மை, விறகு, மூங்கில், கோந்து புல் போன்றவை காடுகளிலிருந்து பெறப்படும் பொருள்களாகும்.

கனிமங்கள்: இரர்சசுத்தான் கனிமச் சுரங்கங்களுக்குப் பெயர்பெற்றது. அவற்றுள் பல இன்றும் கண்டுபிடிக்க முடியாமலே இருக்கின்றன. ஈயம், துத்தநாகம், மரகதம், மாணிக்கம் போன்றவை இம் மாநிலத்தில் சிறப்பாகக் கிடைக்கின்றன. சிப்சம் என்னும் களிக்கல் இந்திய உற்பத்தியில் 92 விழுக்காடும், வெள்ளி 90 விழுக்காடும் இராசசுத்தானில் கிடைக்கின்றன. கல்நார் 75 விழுக்காடும், காக்கைப் பொன் எனப்படும் மைக்கா 20 விழுக்காடும் கிடைக்கின்றன. சம்பரிலும் ஏனைய பகுதிகளிலும் உப்பு வெட்டியெடுக்கப்படுகிறது.

மின்சக்தி: அனல் மின்சாரத்திலிருந்தும், அணுச் சக்தியிலிருந்தும் மின்சக்தி போதுமான அளவு இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கிராமப்புறக் குடிநீர்த் திட்டம்: கிராமப்புறப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க முதலிடம் கொடுத்து வருகிறார்கள். உலக வங்கித் திட்டத்தின் மூலம் பெருந்தொகை கடனாகப் பெற்றுக் குடிநீர் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுற்றுலா: இராசசுத்தானில் சுற்றுலா மையங்கள் பல உள்ளன. பண்டைக்கால, இடைக்காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகப் பழம்பெரும் சின்னங்களை இன்றும் ஆபூமலை, ஆசுமீரம், ஆல்வார், பரத்பூர், பிகானீர், செயப்பூர், சோத்பூர், உதயப்பூர், பாலி போன்ற இடங்களில் காணலாம்.

வரலாறு: இராசசுத்தானில் விடுதலை பெறுவதற்கு முன் இருந்த பல சுதேச சமசுத்தானங்களை இணைத்து உருவாக்கப்பட்டது இம்மாநிலம். இன்றைய நிலைக்கு உருப்பெற இம்மாநிலத்திற்கு எட்டாண்டுகள் தேவைப்பட்டதெனலாம். ஆல்வார், பரத்பூர், தோல்பூர், கராலி ஆகிய நான்கு அரசாட்சிப் பகுதிகளையும் இணைத்து,1948-ஆம் ஆண்டு மார்ச்சு 17-ஆம் நாள் மத்திய ஒன்றியம் முதன் முதலில் உருவாக்கப் பெற்றது. இரண்டாம் நிலையாக பன்சுவாரா, பண்டி, பிரதாப்கர், சாப்புரம், துங்கர்ப்பூர், சாலாவர், கிசன்கர், கோட்டா, தோங்கு என்னும் ஒன்பது அரசுகளை இணைத்து அவற்றையும் இராசசுத்தானுடன் சேர்த்தார்கள். இவ்விணைப்பு 1948-ஆம் ஆண்டு மார்ச்சு 25-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. உதயப்பூர் அரசு இவ்விணைப்பில் 1948 ஏப்பிரல் 18-ஆம் நாள் இணைந்தது. இவ்வாறு இராசசுத்தான் ஐக்கிய அரசு உருவாயிற்று.

பின்னர் பிகானீர், செயப்பூர், செய்சல்மர், சோத்பூர் என்னும் நான்கு பெரும் அரசுகள் 1949-ஆம் ஆண்டு மார்ச்சு 30-ஆம் நாளும், மத்திய ஒன்றியம் 1949 ஏப்பிரல் 25-ஆம் நாளும் இராசசுத்தானுடன் இணைந்தன. இப்புதிய இணைப்பைப் பெரிய இராசசுத்தான் ஐக்கிய நாடு என்றனர். சிரோகி என்னும் அரசு 1950 சனவரி 24-ஆம் நாள் இதனுடன் இணைந்ததால் இராசசுத்தானின் பரப்பு மேலும் விரிவடைந்தது. ஆசுமீரம், ஆபு வட்டம், சுனெல் தப்பாப் பகுதி போன்றவை இணைந்த அகன்ற நிலப்பகுதி 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் இராசசுத்தான் என்னும் பெயரில் வழங்கலாயிற்று. இம்மாநிலம் 1956 இராச்சியப் புனரமைப்புச் சட்டப்படி இன்றைய நிலையைப் பெற்றுள்ளது.

**இராசசுத்தான் ஓவியங்கள்** இராசசுத்தானத்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியடைந்த சிற்றோவியங்கள் (Miniature Paintings) ஆகும். இவ்வோவியங்கள் இராசசுத்தானத்தை ஆட்சி புரிந்த இந்து அரசர்களின் பேராதரவைப் பெற்றவை. இராசசுத்தானி ஓவியங்களில் பிற்காலத்தில் மொகலாய ஓவியக் கலைக் கூறுபாடுகள் ஓரளவு கலந்தனவெனினும், இவ்வோவியங்கள் இந்து சமயத் தத்துவக் கருத்துகளையும் இதிகாசப் புராணக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டன. குறிப்பாக, கிருட்டிணன், இராதை, பலகிருட்டிணனின் விளையாடல்கள், இராசலீலை, நளன் தமயந்தி காதல், துர்க்கையின் வெற்றி, இயற்கைக் காட்சிகள், விலங்குகள், வசந்தமும் மழையும் போன்ற ஓவியங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வோவியங்கள் வரைபடங்களிலிருந்தே முதன்முதலாகத் தோற்றம் பெற்றன. இவ்வோவியங்கள் பெரும்பாலும் ஓவியப் படக்கோப்புகளாகவே (Album) தீட்டப்பட்டன. இவற்றை எளிதாகக் கைகளில் எடுத்துப் பார்க்க இயலும். இராசசுத்தானி ஓவியங்கள் உலகின் பல அருங்காட்சியகங்களிலும் இந்திய அருங்காட்சியசங்களிலும்இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இயற்கைக் காட்சிகளில் பறவைகள், மேகத்திலிருந்து மழை கொட்டுதல், ஆவினங்கள், செடி கொடிகள், அழகான ஓடைகள் போன்றவை காண்போரின் கருத்தைக் கவருவனவாம். இவ்வோவியங்களின் வளர்ச்சி பெற்ற நிலையைப் பகாரி(Bahari) ஓவியங்களிலும், பிகானீர், பண்டி (Bundi), செய்ப்பூர் (Jaipur), மேவார், சோதிபுரி (Jodhpur) நகரங்களிலுள்ள ஓவியங்களிலும் காணலாம்.

**இராசசுத்தான் கோயில்கள்**: இராசசுத்தான் மாநிலத்தில் பல நகரங்களும் சிற்றூர்களும் வரலாற்றுச் சிறப்புடையவை. கிராடு (Kiradu), கீகிண்டு (Kekind), ஓசியா (Osia), இராம்கர் (Ramgarh), கிருட்டிண விலாசம் (Krishnavilasa), ஆத்துரு (Atru), பரோலி (Baroli), சகாத்து (Jagat), ஆபு (Abu), சாங்கனேர் (Sanganer) போன்றவை இம்மாநிலத்தின் கோயில் நகரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இங்குள்ள கோயில்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்தவை. இக்கோயில்கள் இன்று அழிந்த நிலையில் காணப்பெறினும் கலைச் சிறப்பும் பெருமையும் மிக்கவை. இவை கூர்ச்சரப் பிரதிகார (Gurjara Pratihara) அரசர்களின் காலத்திலும் சோலங்கி அரசர்களின் காலத்திலும் கட்டப்பட்டவையாகும்.

சோத்பூரிலிருந்து (Jodhpur) 51 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஓசியா (Osia) என்னுமிடத்தில் உள்ள 12 கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. இங்குள்ள கோவில்களுள் பல திருமாலுக்குரியவை. இக்கோயில்கள் உயரமான மேடையின்மீது கட்டப்பட்டுள்ளன. இம்மேடைகள் பெரிய மாடிபோல் காணப்படுகின்றன. கோயில்கள் பொதுவாக ஐந்து தேர்களை உடையவை. சுவர் மாடங்களில் திருவுருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. சில கோயில்களின் சுவர் மூலைகளில் கணேசர், சூரியன், பார்வதி, பிரமன் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன.




ஓசியா கோயில்

கிருட்டிண லீலைக் காட்சிகளும் சில கோயில்களில் உள்ளன. கோயில்களின் சிகரங்கள் பொதுவாக 5-இலிருந்து 7 அடுக்குகளைக் கொண்டவை. சுற்று வழிப்பாதை பெரும்பாலான கோயில்களில் காணப் படவில்லை. கோயில்கள் பொதுவாகக் கருவறை திறந்த வெளிக்கூடம், முகமண்டபம் ஆகியவற்றைக் கொண்டு திகழ்கின்றன. மண்டபங்கள் நவரங்கம் எனப்படும் வகையைச் சார்ந்தனவாகும். மண்டபங் களின் வெளிப்பகுதியில் யானைத் தலை உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஓசியாவில் அரியரனுக்காது கோயில்கள் இரண்டும் சூரியன் கோயிலும் ஐந்ன தேர்க் கோயில் வகையைச் சார்ந்தவை. இங்குள்ள கோயில்களின் சுவர்களிலும் கருவறைக் கதவுகளிலும் அழகுற அமைக்கப்பட்ட அணிவரிசைகள் காணப்படு கின்றன. கருவறைக் கதவின் அணி வரிசையில் பாம்பின் வாலைக் கருடன் பற்றியிருப்பது அழகுடன் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மகாவீரர் கோயில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதெனி னும், கோயிலின் பெரும்பகுதி பிற்காலத்தில் விரிவு படுத்தப்பட்டது. இக்கோயிற் கல்வெட்டு கோயில் கி.பி. 950-இல் புதுப்பிக்கப்பட்டது என்றும் கி.பி. 1016-இல் அலங்காரத் தோரண வாயிலொன்று அமைக்கப்பட்டதென்றும் கூறுகிறது. ஓசியாவிலுள்ள கோயில்கள் பொதுவாக நாகரம் (Nagara) என் னும் கலைப்பாணியைச் சார்ந்தவை எனினும், மாடக்கோபுரப் (Bhadra or Pidha) பாணியில் அமைந்த உயர்விமானங்களைக் கொண்ட மண்டபங் களையும் கருவறைகளையும் பெற்றுள்ளன. கோயில் களின் அடிப்பகுதி சிறப்புற அமைக்கப்பட்டுள்ள முறை இராசசுத்தான் கோயில்களின் தனிச்சிறப்பா கும். சிகரத்தைச் சுற்றிச் சிறிய சிகரங்கள் (Anga Sikara) பல அமைந்துள்ளன. சிகரத்தில் ஆமலகம் (Amalakas) எனப்படும் உறுப்புகள் மிகுந்த எண்ணிக் கையில் காணப்படுகின்றன. மகாவீரர் கோயிலும், சச்சியமாதா, பிப்பிலதேவி ஆகியோரின் கோயில் களும் (கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டு) ஓசியாவில் குறிப்பிடத்தக்க கோயில்களாகும். இவற்றின் சிகரங் கள் வளர்ச்சியுற்றுக் காணப்படுகின்றன. தூண்கள், தோரண வாயில்களின் அமைப்புப் போன்றவை தொடக்கக் காலக் கோயில் தூண்களின் அமைப்பினின் றும் வேறுபட்டவை. (காண்க:ஓசியா).

இராசசுத்தானத்தில் சோத்பூரிலுள்ள நீலகண் டேசுவரன் கோயில், சோமேசுவரன் கோயில் ஆகி யவை ஓசியாக் கோயில்களின் வகையைச் சார்ந்தவை. பனாசுகாந்தா மாவட்டத்திலுள்ள கும்பாரியா என் னும் ஊரில் உள்ள சமணக் கோயில்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை. இவை ஆபுவி லுள்ள தில்வாராக் கோயில்களுக்கு எடுத்துக்காட் டாக விளங்கியவை. இக்கோயில்கள் சலவைக் கல் லால் கட்டப்பட்டவை; ஐந்து தேர்க் கருவறையைக் கொண்டவை. இவை முகமண்டபம், சபாமண்டபம் போன்றவற்றைக் கொண்டிலங்குகின்றன. மண்டபங் கள் அழகுற அணிவரிசைகளால் அலங்கரிக்கப்பட்டுள் ளன. எண்கோணங்களைக் கொண்ட தூண்கள், சபாமண்டபத்தில் காணப்படுகின்றன. கூரைகளில் மகாவீரரின் வாழ்க்கைக் காட்சிகள் செதுக்கப்பட் டுள்ளன. இங்குள்ள நேமிநாதர், பார்சுவநாதர் கோயில்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட் டவை.

ஆபுவில் உள்ள தில்லாராக் கோயில்கள் புகழ் வாய்ந்தவை. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விமலவாசகி, உலுன வாசகி என்னும் சமணக் கோயில்களின் சிற்பங்கள் வேலைப்பாடு மிக்கவை. (காண்க: ஆபு).

சோலங்கி மன்னர்களால் கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் இராசசுத்தானில் பல கோயில்கள் கட் டப்பட்டன. சித்தூர்களிலுள்ள கீர்த்திக் கோபுரம் இக்காலத்தைச் சார்ந்ததேயாகும். இது ஸ்பகு



சகத் கோயில்

அடுக்குகளை உடையது. இக்கோபுரத்தை இராணா கும்பா என்பவர் கட்டினார். பாலி மாவட்டத்தில் இராணக்பூர் என்னுமிடத்தில் கி.பி. 1438-இல் கட்டப்பட்ட 'சௌமுகா' என்னும் சமணக் கோயில் அழகிய சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது. இக்கோயில் சோலங்கிப் பாணிக் கோயிலாகும்.

இராசசுத்தானில் செய்ப்பூர் (Jaipur) மாவட்டத்திலுள்ள ஆபாநேரியிலுள்ள (காண்க: ஆபாநேரி) கூர்ச்சரப் பிரதிகார்களின் கோயில்களும், உதயப்பூர் மாவட்டத்தில் சகத்து (Jagat) என்னுமிடத்திலுள்ள கோயில்களும், கிராடு (Kiradu) என்னுமிடத்திலுள்ள கோயில்களும் இராசசுத்தான் கோயில் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**இராசசுத்தானிமொழி** இராசசுத்தான் என்ற தனிமாநிலம் 1948 மார்ச்சுத் திங்கள்தான் உருவாயிற்று. அதற்கு முன்னால் பல பகுதிகள் குறுநில மன்னர்கள் ஆட்சியிலும் சில பகுதிகள் ஆங்கிலேயர் ஆட்சியிலும் அமைந்திருந்தன. பொதுவாக மக்கள் தொகையின் விகிதம் குறைவாக உள்ளது. அதற்கு முக்கியக்காரணம் தார் பாலைவனம் அங்கு இருப்பதே.

இராசசுத்தான் வரலாறு மௌரியர் பேரரசுக்குப் பிறகு தெளிவாகக் கிடைக்கிறது. இராசசுத்தானி மொழியின் முதல் எழுத்துச் சான்று, கி.பி. 130-இலிருந்து கி.பி.150-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டே ஆகும்.

இராசசுத்தானி வட இந்தியாவில் வழங்கும் இந்தோ-ஆரிய-இலத்தீன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இம்மொழி ஐரோப்பாவில் பேசப்படும் கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, இருசியன் போன்ற மொழிகளோடு இனத்தொடர்பு உடையதால், பொதுவாக இந்தோ-ஐரோப்பியக் குடும்ப மொழி என்றும், இந்தியாவில் பேசப்படும் அந்த மொழிக் குடும்பத்தைச்சேர்ந்த மொழிகளை இந்தோ-ஆரிய மொழிகள் என்றும் வழங்குகிறார்கள். இந்தோ-ஆரிய மொழி வடமொழியை அடிப்படையாகக் கொண்டது.

இந்தோ-ஆரிய மொழிகளை அந்த மொழிகளுக்குள்ள வேறுபாட்டை ஒட்டி ஆறு உட்பிரிவாகப் (Sub-group) பிரிக்கிறார்கள். அவையாவன: 1) வடமேற்குப் பிரிவு மொழிகள், 2) தென் பிரிவு மொழிகள், 3) கீழைப்பிரிவு மொழிகள், 4) கீழை மத்திய (East-Central) அல்லது மத்திய (Mediate) பிரிவு மொழிகள், 5) நடுவண் பிரிவு (Central) மொழிகள் 6) வட பிரிவு மொழிகள். இவை பற்றி விரிவாக இந்திய மொழிகள் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

இராசசுத்தானி மொழி மத்திய பிரிவில் அடங்கும். அந்தப் பிரிவில் அடங்கும் மொழிகளாவன: இந்தி அதாவது, இன்று இந்திமொழி என்று சிறப்பாகப் பேசப்படும் மேலைப் பஞ்சாயி (Panchai), இந்தி, பஞ்சாபி சிறப்பாகக் கீழைப் பஞ்சாபி, இராசசுத்தானி-குசராத்திப் பிரிவு மொழிகள் அதாவது, இராசசுத்தானி குசராத்தி மொழியோடு நெருங்கிய தொடர்புடைய மொழிகள். இராசசுத்தானி மொழியினை ஏறக்குறைய ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மக்கள் பேசுகின்றனர்.

இராசசுத்தானி பல கிளைமொழிகளை உடையதாயினும் நான்கு கிளைமொழிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவைகளைத் திசைகளை ஒட்டி வடகிழக்கு, தெற்கு, மேற்கு, கீழ்மத்திய பகுதி (East Central) என்று பிரிக்கிறார்கள். வடகிழக்குக் கிளைமொழியான மேவாட்டிதான், மேலை இந்தியோடு நெருங்கிய தொடர்பு உடையது. இது இடைப்பட்ட மொழி (Transitional Dialect) யானதால் இந்தியோடு சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

தென் கிளைமொழி மால்வீ எனப் பெயர்பெறும். இது மால்வா பகுதியிலும் அதன் அண்டைப் பகுதியிலும் சேப்படுகிறது. இதன் கீழ்ப்பகுதி மொழி மேலை இந்தியோடும், மேலைப்பகுதி மொழி குசாரத்தியோடும் தொடர்புடையன. மேற்குக்கிளை மொழிக்கு மார்வாரி (Marwari) என்பது பெயர். இது

மார்வாரியிலும் அண்டை மாவட்டங்களிலும் பேசப் படுகிறது. இந்தக் கிளைமொழியே பிற கிளை மொழியை விட அதிகமான மக்களால் பேசப்படு கிறது. கீழ் மத்திய கிளை மொழி செய்ப்பூர் பகுதியில் பேசப்படுவதால் செய்ப்புரி என்று சொல்லப்படுகிறது. இது குசாரத்தியோடு தொடர்பு உடையது. ஆனால் மார்வாரிக் கிளைமொழி இந்தி மொழியோடு உறவு உடையது. இன்றைய இந்திய அரசியல் அமைப்பு இராசசுத்தானியின் எந்தக் கிளை மொழியையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது, அரசியல் அமைப்பில் எட்டாம் வெட்டுல்டு என்ற பகுதியில் குறிப்பிடும் மொழிகளில் இராசசுத்தானி இடம் பெற வில்லை. ஆயினும் இது இலக்கியம் உடையதாக இருக்கிறது என்பது அறிந்து கொள்ள வேண்டிய செய்தி.

செய்ப்புரிக்கிளைமொழியில் ஓரளவு இலக்கியமும் திங்கல் என்று சொல்லப்படும் பழைய மார்வாரியில் நிறைய இலக்கியங்களும் காணப்படுகின்றன.

இன்று மார்வாரிக் கிளை மொழியே சிறப்பாக இராசசுத்தானி என்று சொல்லப்படுகின்றது. அது தனிமொழி என்ற உணர்வு உடையவர்களும் காணப் படுகிறார்கள்.

வரலாற்று நோக்கில் பார்க்கும்போது குசராத்தி யும் மார்வாரியும் 16-ஆம் நூற்றாண்டு வரை ஒரு மொழியாக இருந்தன என்பது புலனாகிறது. ஆனாலும் இராசசுத்தானி மக்கள்முற்காலத்திலேயே பிரச்பக்கா (Braj bhaka) என்ற மேலை இந்தி வடிவத்தையே இலக்கிய மொழியாக ஏற்றுக் கொண்டு பயன்படுத்தியதால் இன்று, அவர்கள் இந்தி மொழியே தாய்மொழி என்று கூறிவருகிறார்கள். இதற்கு அரசியல் வரலாறே அடிப்படையாக இருந் திருக்கிறது. இராசசுத்தானை ஆண்ட அரசர்கள் முகமதியர்கள் தில்லியை ஆண்ட காலத்தில் அவர் களோடு நெருங்கிய உறவு கொண்டிருந்ததால், இந்தியை நன்கு அறிந்து பயன்படுத்த வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

ஆனாலும் இராசசுத்தானி இலக்கியத்தில் அனைத்து இந்தியப் புகழ் பெற்ற கவிஞர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மீராபாய் என்ற பெண் பாற் புலவரே. அவருடைய பக்தி இலக்கியம் தனிச் சிறப்பு வாய்ந்ததாக இன்றும் கருதப்படுகிறது. மேலும், இராசசுத்தானியில் கதைப்பாடல்களும் (Ballads) நீண்ட வருணனைப் பாடல்களும் நீதி இலக்கியங்களும் காணப்படுகின்றன. அதனால் இன்றும் சிலர் இராசசுத்தானிக் கிளை மொழியில் இலக்கியம் படைத்துக் கொண்டு வருகிறார்கள்.

மறைந்த தெசிதோரி (Tessitori) என்ற இத்தாலிய அறிஞர்தாம் இராசசுத்தானி மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பெரிய அளவில் உழைத்து அதனுடைய இலக்கிய வரலாற்றையும் மொழி வரலாற்றையும் வெளிப்படுத்தினார். அவை இந்த நூற்றாண்டின் இருபதுகளில் கல்கத்தாவிலிருந்து வெளிவந்துள்ளன. அதனால் மார்வாரிக் கிளை மொழியை ஒட்டிய இராசசுத்தானி மொழியில் இலக்கியம் படைத்து அதற்குத் தனி உயிர் கொடுக்க முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களால் அதிகம் வெற்றி பெற முடியவில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இராசசுத்தானி மொழியை இந்தியின் ஒரு கிளைமொழியாகவே பலரும் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இராசசுத்தானி மொழி அமைப்பைப் பொறுத்த வரையில் பிற இந்தோ-ஆரிய மொழிகளோடு ஒத்தே காணப்படுகிறது. ஆனாலும் ஒலிநிலையில் இரண்டு செய்திகள் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தன. அவை யாவன: 1) ஆகார ஒலியை ஔகாரமாகச் சில சமயங் களில் உச்சரித்தல். 2) மேலை இந்தியில் காணப் படாத ண, ட என்ற இரண்டு நாமடி ஒலிகள் (Retroflexes) உள்ளமை.

இராசசுத்தானி மொழியில் இந்தியைப்போலவே ஆண், பெண் என்ற இரண்டே பால் தான் உண்டு. மேலும், பெயரடையும் பெயரும் கூட பால் இயைபு (concord) உடையதாக உள்ளது. அதாவது, பெயரின் பாலுக்கு ஏற்பப் பெயரடையின் வடிவம் மாறும் தன்மை உடையது. செ.வை.ச.

**இராசசூயம்**: மன்னர்கள், மன்னர் மன்னர் (சம் ராட்) என்னும் பதவியைப் பெறுவதற்காகச் செய்யும் வேள்வி. கவுரவ குலத்தின் முன்னோனாகிய சந்திரன் முதன் முதல் இவ்வேள்வியை இயற்றியதாக மச்ச புராணம் கூறுகிறது. இட்சுவாகு குலத்தோன்றலான அரிச்சந்திரனும் இவ்வேள்வியைச் செய்தான் என்று மகாபாரதம் கூறும். சங்க காலத்தில் வாழ்ந்த சில தமிழ் மன்னர்களும் இவ்வேள்வியை இயற்றியுள்ளனர். சான்றாக, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னனை பாண்டரங்கண்ணனாரும் வடமவண்ணக்கன் பெருஞ் சாத்தனாரும் ஔவை யாரும் உலோச்சனாரும் (புறம். 16, 124, 367, 377) பாடியுள்ளார்.

மாபாரத காலத்தில் பாண்டவ குலத்தோன்ற லாகிய உதிட்டிரன் என்னும் தருமன் இவ்வேள் வியை இயற்றிய நிகழ்ச்சி சொல்லப்பட்டது. வீட்டு லகில் வாழும் பாண்டு மன்னன் தம் மகன் தருமன் இராசசூயம் இயற்ற வேண்டும் என்ற விருப்பத்தை

நாரதர் வாயிலாகத் தருமனுக்கு அறிவிக்க, அதனை ஏற்றுத் தருமன் இவ்வேள்வி முயற்சியைக் கண்ணன் துணையுடன் மேற்கொள்கிறான். அதனைத் தொடர்ந்து இவ்வேள்வி பற்றிய செய்திகள் பல பகுதிகளில் விவரிக்கப்படுகின்றன. அவற்றால், இவ் வேள்வி பற்றிக் கீழ்க்காணும் செய்திகளை அறிதல் கூடும்.

'இந்த வேள்வி இயற்றும் மன்னன் வருணனது சிறப்பை அடைகிறான். பிற மன்னரால் அரசர்க்க ரசன் என மதிக்கப்படுகிறான். இவ்வேள்வியில் நியம முள்ள 'இரித்விக்கு'களால் சாம வேத மந்திரங்க ளைச் சொல்லச் செய்து ஆறு அக்கினிகள் மூட்டப் படும். பலாச இலையால் ஓமம் செய்யும் 'தர்வி கோமம்' முதலான இராசசூய வேள்விச் சடங்குகள் நிறைவேறியபின், இராசசூய வேள்வி முடித்துப் புனித நீராடி அரசு கட்டில் ஏறும் மன்னவன், 'சர்வ சித் (அனைவரையும் வென்றவன்) என அழைக்கப் படுகிறான்.

இவ்வேள்வியைத் தொடங்கும் மன்னவன் முத லில் அனைத்துத் திசைகளிலும் உள்ள மன்னர்களை வெற்றி கொள்ளவேண்டும். அவர்களிடம் பெறும் காணிக்கைப் பொருள்களை வேள்வியில் செலவிட வேண்டும். வேள்வியின் தலைமைப் புரோகிதர் 'பிரும்மா' எனப்படுவார். 'சாமகானம்' செய்பவர் 'உத்காதர்' எனப்படுவார். இவர்தவிர 'அத்வர்யுக் குகள்' 'ஓதா' (Hota) என்போர்களும் இவர்களுடன் இணைந்து செயலாற்றுவர். இவர்கள் அனைவரும்கூடி வேள்விச் சாலைக்குப் 'புண்ணியாவாசனம்' செய் வித்து, வேள்வி 'சங்கற்பம்' செய்துகொண்டு, வேள்வி நிலத்திற்கு வழிபாடு செய்வர். பின் வேள்வி செய்யும் மன்னன் வேள்வித் தீட்சை செய்விக்கப்படுவான். கேட்டையும் மூலமும் சேர்ந்த அமாவாசையன்று மன்னன் உடலில் புள்ளிமான் தோல் போர்த்தி, உடல் முழுதும் வெண்ணெயைத் தடவிக்கொண்டு, தீட்சை மேற்கொண்டு அனைவரும் தொடர வேள் விச்சாலை புகுவான். வந்திருக்கும் அந்தணர்களுக் கும் அரசர்களுக்கும் சிறப்பான முறையில் உண்டி யும் உறையுளும் மன்னனால் வழங்கப்படும். அவர் களின் பொழுதுபோக்கிற்கு நாட்டியம், இசை முதலிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கும். ஆரம்பணீயம், சாத்திரம், திருதி, வியுசுடீ, திவிராத்திரம், தசபேயம் என்னும் ஆறு அக்கினி வளர்த்து வேள்வி நடத்தப்பெறும். அந்தணர் பாதம் விளக்கல், விருந்தோம்பல், இடத்தூய்மை, உணவு வகை ஏற்பாடு, அந்தணர்களை வரவேற்றல், இரத் தினப் பாதுகாப்பு, அந்தணர்களுக்குத் தட்சிணை வழங்கல், செலவுக் கணக்கு வைத்தல், பெண்களுக் குச் சிறப்புச் செய்தல் ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார் கள். அனைத்தையும் மேற்பார்வையிடத் தகுதியும் பட்டறிவும் வாய்ந்த பெரியோர்கள் நியமிக்கப்படு வர். இடா ஓமம், ஆசீய ஓமம் என்ற செயல்க ளால் தேவர்கள் நிறைவுறுத்தப்படுவார்கள். 'அபி டேகனீயம்' என்னும் இராசசூயத்திற்கு உறுப்பான 'சோமபாகம்' செய்யும் காலத்து, முனிவர்களும் அந்தணர்களும் அரசர்களும் 'அந்தர்வேதி' என் னும் வேள்விச் சாலையுள் செல்வார்கள். வேள் விக்கு வந்தோர் அனைவரும் மன்னனால் சிறப்பு வழிபாடு செய்யப்படுவர். அனைவரிலும் மிகச் சிறந்தவரான ஒருவர் மன்னனால் தேர்ந் தெடுக்கப்பெற்று, அக்கிரபூசை எனப்படும் முதல் வழிபாடு செய்யப்படுவார். தொடர்ந்து ஏனை யோரும் மன்னனால் சிறப்பிக்கப்படுவர். வேள்வி நிறைவுற்றபின் மன்னன் தான் ஈட்டிய பொருள்கள் அனைத்தையும் கொடையாக அனைவருக்கும் வழங் கிப் புனித நீராட்டுச் செய்து கொள்வான்.

'இந்த வேள்வி செய்யப்பட்டபின், அரசர்களும் உலகும் அழிவதற்குக் காரணமாகும் பெரும்போர் நிகழும் வாய்ப்புண்டு' என்று நாரதர் கூறியுள்ளார். இக்கூற்றுக்கேற்ப, அரசர்கள் அழிவிற்குப் பெரும் காரணமாய் அமைந்த பாரதப் போருக்கு, தருமன் நிகழ்த்திய இவ்வேள்வியும் ஒரு வலுவான காரண மாய் அமைந்தமையினைப் பாரத வரலாற்றினால் அறிய முடிகிறது. சீ.செள.

## இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி:

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சங்க காலச் சோழ வேந்தருள் காலத்தாற் பிற்பட்டவன். பல பேரரசர்களை வென்று பெருமை கொண்டவரே இரசாசூய வேள்வி செய்ய முடியும் என்பர். அத்த கைய வேள்வி செய்த மாவேந்தனாக விளங்கியவன் இப்பெருநற்கிள்ளி.

பாண்டரங் கண்ணனார் என்னும் புறநானூற்றுப் புலவர் இவ்வேந்தன் பகைவர் நாட்டையழித்த செய்தியைக் குறிப்பிடுகிறார். 'கரும்பல்லது காடறி யாப் பெருந்தண் பணை பாழாக' (புறம். 16) என, பெருநற்கிள்ளி மருத நிலங்களையும் பாழ்செய்த நிகழ்ச்சியைப் பாடிப் போரைக் கைவிடுமாறு மறை முகமாக வேந்தனுக்குப் பாண்டரங்கண்ணனார் உணர்த்தியுள்ளார்.

இவன் சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையை வெற்றிகொண்ட வரலாற்றை வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடல் கூறுகிறது. இப்பாடல் மூலம் அவ்வெற்றிக்குத் துணைநின்ற மலையமான் திருமுடிக்காரியை, ''வெலீஇயோன்

இவனென' (புறம். 125) பெருநற்கிள்ளி பாராட்டிய செய்தியும் பெறப்படுகிறது.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு சேர மான் மாவண்கோவும் பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது அவர்களைப் பாடி மகிழ்ந்திருக்கிறார் ஔவையார். தமிழ்வேந்தர் மூவரும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொள்வ தால் வடநாட்டார் இடையில் புகுந்து தமிழகத்து அரசியல், சமயம், மொழி ஆகியவற்றில் தமிழர் களுக்கே உரிய வாழ்க்கைக் கூறுகளை அழிக்க முயல் கின்றனர். எனவே ஔவையார் இன்றுபோல் என்றும் மூவேந்தரும் ஒருங்கிணைந்து, 'வானத்து வயங்கித் தோன்றும் மீனினும், இம்மென இயங்கும் மாமழை உறையினும், உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நும்நாளே' (புறம். 367) என்று வாழ்த்து கிறார்.

பெருநற்கிள்ளி சிறந்த ஆட்சித்திறமும் கொடைத் திறமும் வாய்ந்தவன். இவன் உலோச்சனார் என்ற புலவருக்குப் பெரும் பொருள் வழங்கியபோது அப் புலவர், 'நாடெனப் படுவது சோழன் நாடே; வேந் தெனப்படுவான் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியே' (புறம். 377) என்று வியந்து போற்றி யுள்ளார்.

ஆறு.அ.

**இராசசேகரா** கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மிகச் சிறந்த புலவரும் நாடகாசிரியரும் ஆவார். தக்காணத்தில் பிறந்த இவர் மகேந்திரபாலர் என்னும் அரசரின் அவையில் புலவராக விளங்கினார். பின்னர் காலச்சூரிய மரபினர் அரசவைக்குச் சென்று சிறிது காலம் அங் கிருந்தார். மீண்டும் கன்னோசிக்குத் திரும்பி வந்து முதலாம் மகிபாலரின் அவையில் இடம்பெற்றார். இவர் வடமொழியிலும் பிராகிருத மொழியிலும் பெரும் புலமை வாய்ந்தவர். இவர் எழுதிய 'பாலராமாயணமும்' 'பால பாரதமும்' இதிகாசங் களின் கூறுபாடுகளைக் கொண்டவை. இவர் எழுதிய 'வித்தசால-பஞ்சிகா' என்னும் நூலில் இடம்பெற்ற காவியத் தலைவி ஆண்கள் உடையில் வந்து பெருமகிழ்ச்சியூட்டும் பாத்திரப்படைப்பாக படைக்கப்பட்டுள்ளாள். இவர் இயற்றிய 'கற்பூர மஞ்சரி' மிகப்பெரும் படைப்பெனக் கருதப்படு கிறது. கற்பூரமஞ்சரி என்னும் கதாநாயகியை அடிப்படையாக வைத்து இது எழுதப்பட்டது. இந்திய இலக்கியங்களில் மிகச்சிறந்த இன்பியலாக இது கருதப்படுகிறது. முழுவதும் பிராகிருத மொழி யில் எழுதப்பட்ட ஒரே காவியம் இது ஒன்றுதான்; இன்றும் அழியாமல் நிலைத்துள்ளது. இவரது நாட கங்களில் பழமொழிகள் நிறைந்து காணப்படும். அக் கால மக்களின் பழக்க வழக்கங்களை இந்நூலில் அறி யலாம். வரலாற்றுச் செய்திகளையும் இவை செப்பு கின்றன. இராசசேகராவின் 'காவிய மிம்மிம்சம்' ஒரு கவிதை நூலாகும்; புவனகோசா என்னும் நூல் இவரால் அக்காலத்தில் இயற்றப்பட்ட முதல் புவியியல் நூலாகும். இந்நூல் சமூக வரலாற்றையும் குறிப்பிட்டுள்ளது.

**இராசதரங்கிணி** என்பது ஒரு வரலாற்றுநூல். இது வடமொழியில் கல்கணர் (Kalhana)என்பவரால் எழுதப்பட்டது. கல்கணர் இடைக்காலத்தில் வாழ்ந்த புகழ்மிக்க வரலாற்றாசிரியர். இவருடைய தந்தையார் காசுமீர மரபில் தோன்றிய அர்சர் (Harsha) என்னும் பெயர் கொண்ட மன்னரின் அமைச்சர்.

தாம் வாழ்ந்த நாட்டுப் பகுதியைப் பற்றியும், அதன் பொது வாழ்வைப் பற்றியும் கல்கணர் நன்கு அறிந்திருந்தார். நாட்டின் நிலநூலையும் நிலக் கிடைக்கையையும் தெரிந்துகொள்ளும் நல்வாய்ப் பினைப் பெற்றவர் இவர். இராசதரங்கிணி (Raja-tarangini) காசுமீரத்தின் இடைக்கால வரலாற்றை அறிய உதவும் வரலாற்று நூல். இதன் ஆசிரியர் தாம் வாழ்ந்த காலக் காசுமீரத்தின் நுட்பங்களைத் தெற்றென அறிந்திருந்தார். தொன்மைச் சின்னங் களில் இவருக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது.

பில்கணர் (Bilhana) எழுதிய 'விக்கிரமாங்கசரி தம்' (Vikramankacharita) என்னும் நூலையும், பாணர் எழுதிய 'அர்சசரிதத்தையும் (Bana's Har-shacharita) இவர் சுருக்கி எழுதினார். விரித்து எழு தப்பெற்றிருந்த எண்ணற்ற காசுமீரத்து வரலாற்றுக் குறிப்பேடுகளையும் கல்கணர் கற்றறிந்திருந்தார். அத்துடன் நில்லாமல், தொல்லியல் தொடர்பான நினைவுச் சின்னங்களையும் இக்கால ஆய்வுக் கண் ணோட்டத்துடன் உணர்ந்திருந்தார். அக்காலத்தில் தமக்குக் கிடைத்த கல்வெட்டுகளை இவர் படித்து அறிந்திருந்தார். காசுமீரத்துப் பழைய நாணயங் களைப் பற்றியும் இவர் ஆராய்ந்தார். மேற்கூறிய வற்றிலிருந்து கல்கணர் தலைசிறந்த வரலாற்றாசிரி யருக்குத் தேவையான அறிவைப் பெற்றிருந்தார் என்பதை அறியலாம். எனினும் இவருக்கு இக்காலத் திறனாய்வு முறை தெரிந்திருக்கவில்லை. இன்றைய வரலாற்று ஆய்வு முறையை இவர் அறிந்தாரில்லை. காசுமீர வரலாற்றைத் தொகுப்பதற்கு முன்னரே மேற்கூறிய செய்திகள் அனைத்தையும் கல்கணர் திரட்டியுள்ளார். இராசதரங்கிணியை இவர் கி.பி. 1148-ஆம் ஆண்டில் எழுதி முடித்தார். இந்நூல் காசுமீர அரசர்களின் மரபினைத் தொடர்ச்சியாகத் தருகிறது.

இந்த நூலில் குறைபாடுகளும் சில உள்ளன. காசிமீரத்தின் தொடக்கக் கால வரலாறு பொது மக்கள் கூறிய கதைகளின் அடிப்படையில் எழுதப் பட்டுள்ளது. இக்கதைகள் திறனாய்வு செய்யப்படா மலேயே கொடுக்கப்பட்டுள்ளன. காசுமீரத்தை ஆண்ட இராணாதித்தியர் 300 ஆண்டுகள் அரசாண் டார் என்று கூறுவது தவறானதேயாகும். இவற்றைத் தவிர நடக்க முடியாதவை, உயர்வு நவிற்சியானவை, மூடப்பழக்க வழக்கங்களின் அடிப்படையில் எழுந்த நம்பிக்கைகள் போன்றவையும் இந்நூலில் காணப் படும் குறைபாடுகளாகும். ஒரு சில கூற்றுகளில் கல் கணர் எதையும் நம்பக் கூடியவரோ என்னும் எண் ணத்தையும் உண்டாக்குகிறார். இவற்றிற்குக் கார ணம் தொடக்கக் கால வரலாற்றைக் கதைகளின் அடிப்படையில் எழுதியிருப்பதுதான். ஏழாம் நூற் றாண்டிலிருந்து கல்கணர் கூறும் கூற்றுகள் நம்பத் தக்கவையாம். இத்தகைய கூற்றுகளிலும் ஒருசில மிகைபடக் கூறியவை என்னும் குற்றத்திற்கு ஆளாக லாம். கல்கணரின் காலக் கணிப்பும் பொருத்தமுடைய தாய் அமைந்துள்ளது. இதையும் குறை கூறுவோ ருண்டு. இராசதரங்கிணியை முதன் முதலாக ஆங்கி லத்தில் மொழி பெயர்த்தவர் சர் ஏ. இசுட்டீன் (Sir A. Stein) என்பவராவர்.

இராசதரங்கிணி பல நிறைகளைக் கொண்ட நூல். இதில் கணக்கிடப்பட்டுள்ள சக ஆண்டு நம் பத் தகுந்ததாயுள்ளது. காசுமீர மன்னரான அவந்தி வர்மன் உத்பலா (Avantivarman Utpala) என்பார் அரியணையேறிய ஆண்டான கி.பி. 855-இலிருந்து பதவி வகித்த அரசர்கள் அரியணையேறிய ஆண்டு, மாதம், நாள், பதவி முடிவுற்ற ஆண்டு போன்ற அனைத்துச் செய்திகளையும் இராசதரங்கிணி கொடுத்துள்ளது இதன் சிறப்பாகும். கல்கணர் கால வரலாற்றை நேரடியாகக் கண்டறிந்தபடியால் அச்செய்திகள் நம்பத் தகுந்தவையாம். சுருங்கக் கூறின், அவர் நேர்மை தவறாது சுதந்திர நோக் குடனேயே தம் நூலை எழுதியுள்ளார்.

தம் காலத்து மன்னரான அர்சர் (Harsha) என் பவரைக் குறித்தும் கல்கணர் நடுநிலைமை தவறாது எழுதியுள்ளார். இவர் தம் நூலில் நடுநிலை பிறழ்ந்து வரலாற்றைக் கொடுக்கவில்லை. வரலாற்றைப் படைக்கக் காரணமாயிருந்த மன்னர்கள், அவர்களின் துணைவர்கள் போன்றோர்களின் நிறைகளையும் குறைகளையும் இவர் அழகாக எடுத்துக் காட்டியுள் ளார். இவருடைய நேர்மையை ஒருவரும் குறை கூற மூடியாது. ஏனெனில் இவர் எழுதியுள்ள வர லாற்றுக் குறிப்புகள் திருத்தமானவை.

இராசதரங்கிணி என்ற சொல்லுக்கு, 'அரசர்க ளின் வரலாறு' (River of Kings) என்பது பொருள். கல்கணர் காசுமீர அந்தணர். இராச தரங்கிணி வட மொழியில் எழுதப்பட்டுள்ள கவிதை நூலாகும். இந்நூலில் 7,826 செய்யுட்கள் உள்ளன. அவை எட் டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல் பகுதி காசுமீர மன்னர்களின் கற்பனைக் கதைகளை வீர காவியமாக இயம்புகிறது. கொணாந்தர் (Gonanda) என்பார் முதல் மன்னர் என்றும், அவர் கிருட்டிண ரின் சமகாலத்தவர் என்றும், கொணாந்தர் கிருட்டிணரின் பகைவர் என்றும் இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் கற்பனைக் கதைக ளுடன் அசோகர், சாலுகா (Jalauka), குசான மன் னர்களான குவிசுகர், வாசேசிகர், கனிசுகர் போன்ற வர்களும், ஊணர்களின் தலைவனான மிகிரகுல னும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று மக்களாவர். இரண்டாம் பகுதியில் பிரதாபாதித்யா (Pratapaditya I) தொடங்கி ஆரியராசர் (Aryaraja) வரையிலான புதியதோர் அரச மரபினைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. இவ்வரசர்களைப்பற் றிய குறிப்புகள் வேறு எந்தச் சான்றுகள் மூலமும் கிடைத்தில என்பது குறிப்பிடத் தக்கதாகும். மூன் றாம் பகுதி மேகவாகனன் (Meghavahana) என்னும் அரசரின் ஆட்சியுடன் தொடங்குகிறது. இவர் மீண் டும் கொணாந்தர் மரபினைத் தொடர்ந்தார் என்ப தையும், மாளவத்தை ஆண்ட அரசர் விக்கிரமாதித் திய அர்சர் (Vikramaditya Harsha) என்பாரின் சம காலத்தவரான மாத்ருகுப்தர் என்பாரின் குறுகிய கால ஆட்சி நடைபெற்றது என்பதையும் இப்பகுதி குறிப்பிட்டுள்ளது. இங்கும் வரலாற்றுச் செய்திக ளுடன் கதைகளின் கலப்பினைக் காணலாம். ஊணர் களின் தலைவரான தோரமாணர், மேகவானனின் மரபுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். துர்லபக இரண்டாம் பிரதாபாதித்தியர் என்பவரால் உருவாக்கப்பட்ட கார்கோட நாக (Karkota Naga) மரபுடன் இம்மூன் றாம் பகுதி நிறைவு பெறுகிறது. நான்காம் பகுதியி லிருந்துதான் இராசதரங்கிணி நம்பத் தகுந்த வர லாற்று விளக்கங்களைத் தருகிறது. கார்கோட மரபு முடிவுக்கு வந்ததையும், அவந்திவர்மன் அரசினைப் பறித்துக் கொண்டு கி.பி. 855-இல் உத்பல மரபின் ஆட்சியைத் தொடங்கியதையும் இப்பகுதி விளக்கி யுள்ளது. ஐந்து, ஆறாம் பகுதிகள், உத்பல மரபின் ஆட்சியைப் பற்றிய விவரங்களைக் கி.பி. 1003-ஆம் ஆண்டுவரை தொடருகின்றன. அந்த ஆண்டில் காசுமீரம் உலோகரர்களின் மரபாட்சிக்கு மாறியது. ஏழாம் பகுதி அர்ச மன்னரின் இறுதிக்காலமான கி.பி. 1101-ஆம் ஆண்டு வரை குறிப்பிடுகிறது. எட் டாம் பகுதி அர்சரின் இறப்பிற்கும் கல்கணரின் சம காலத்தவரான செயசிம்மரின் (Jeyasimha, 1128-49) ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற

கொடுமையான நிகழ்ச்சிகளுடன் முடிகிறது. இந் நிகழ்ச்சிகள் நம்பத்தகுந்த வரலாற்றுத் தொடர்பான விவரங்களைக் குறிப்பிடுகின்றன. முசுலிம், ஆங்கில ஆட்சிகளுக்கு முன்னர் வாழ்ந்த இந்தியர்களுக்கு வரலாற்று ஞானமே கிடையாது என்னும் குற்றச் சாட்டை இராசதரங்கிணி ஓரளவு மறுத்து நிற்கிறது.

துணை நூல்:

Sathianathier.R., History of India, Vol. 1, P. Viswanathan & Co., Madras, 1982.

**இராச நாயகம்** இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று; வரலாற்று அடிப்படையில் சின்ன சீறாவுக்கு அடுத்த நிலையில் தோன்றி, ஐந்தாம் இசுலாமியத் தமிழ்க் காப்பியம் என்ற பெருமைக்குரியது. வண்ணக் களஞ்சியப் புலவரால் இயற்றப்பட்ட இந்த நூல் கீழக்கரையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இக்காப்பியத்தை வண்ணக் களஞ்சியப் புலவர் கி.பி. 1807-இல் பாடிமுடித்துள்ளதாகச் செய்திகள் அறியக் கிடக்கின்றன. இக்காப்பியம் தன் தலைப்பிற்கேற்ப அரசர்க்கு அரசராய்த் திகழ்ந்த தனிப்பெரும் தலைவர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றினை விவரிக்கிறது. தாவூது நபி (அலை) என்பவரின் புதல்வரும் அனைத்துத் தீர்க்கதரிசிகளுள்ளும் அரசர்க்கரசராய்த் திகழ்ந்தவருமான சுலைமான் நபி (அலை) என்பவரே இக்காப்பியத்தின் தன்னேரில்லாத் தலைவராவார். சுலைமான் நபி சீரிய அறிவும் ஆற்றலும்வாய்க்கப் பெற்றவர்கள். வரலாற்றில் பல அதிசயமான நடு நிலைத் தீர்ப்புகளை வழங்கியவர் என்ற பெருமைக் குரியவர். அல்லாவிடமிருந்து பல அரும்பேறுகளை கொடையாகப் பெற்றவர். இத்தகு தனிப்பெரும் சிறப்புகள் கொண்ட சுலைமான் நபி அவர்களின் வாழ்க்கை வரலாறே இக்காப்பியத்தின் பாடுபொருளாகும்.

பொதுவாக இசுலாமியச் சமய நூல்களில் சுலைமான் நபி அவர்கள் மன்னர் சாலமன் என்ற பெயரிலேயே குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இக்காவியத்தின் காவியத் தலைவியான பல்கீசு நாயகியின் சிறப்பும், ஏற்றமும் முதன்மை பெற்றுள்ளன. இக் காவியம் 46 படலங்களும், 2240 திருவிருத்தங்களும் கொண்டதாகும். காவியக் கட்டுக் கோப்புச் சிறப்புற அமைந்திருக்கும் இசுலாமியக் காப்பியங்களுள் இராச நாயகம் முதன்மை நிலை பெறுகிறது எனலாம். இக்காப்பியத்தில் சிரியா நாட்டின் வளம் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. வருணனைகள் யாவும் சிறப்புற அமைந்துள்ளன. வண்ணக் களஞ்சியப் புலவரின் படைப்புகளுள் இராச நாயகமே தலைசிறந்து விளங்குகிறது.

**இராச நாயகம், செ.** கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிலுயிம் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலம் வல்ல தமிழறிஞர். இவருடைய ஊர் யாழ்ப்பாணத் திலைச சார்ந்த நவாலியூராகும். தந்தையார் பெயர் செல்லையாபிள்ளை. இவர் கொழும்பிலுள்ள புனித தோமையார் கல்லூரியில் பயின்றார். இலங்கை அரசுப் பணியில் கி.பி. 1889-ஆம் ஆண்டில் எழுத்தராகச் சேர்ந்த இவர் பின்னர், நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராய்ப் பணிபுரிந்தார். இவர் 1920-இல் பணி உயர்வு பெற்று உயர்நீதிமன்ற மூன்றாம் துணைப்பதிவாளராக நியமனம் பெற்றார். பின்னர், இலங்கை நாட்டாசிச் சேவைப் பதவிக்கு உயர்த்தப் பெற்றார்.

இவர் பணிக்காலத்தில் தமிழில் அதுகாறும் வெளிவந்த நூல்களின் ஆசிரியர், அவற்றை வெளியிட்டோர், அச்சிட்டோர், வெளிவந்த ஆண்டு, நூற்பெயர் முதலிய விவரங்களடங்கிய நூற்பட்டியலை உருவாக்கி முறைப்படுத்தினார் என்று தெரிகிறது. அவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்திற்கு மேலிருக்கும் என்றும், அப்பட்டியலைச் சென்னை நூல் நிலையக் கழகத்தார் விரும்பியவாறு அவர்களுக்கு அனுப்பி வைத்தார் என்றும், அது இதுகாறும் வெளியிடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இவர் யாழ்ப்பாண வரலாறு, ஆங்கிலேயர் கால யாழ்ப்பாண வரலாறு, பழங்கால யாழ்ப்பாணம், கதிர்காமம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் இயற்றியுள்ளார்.

**இராசப்பக் கவிராயர்** திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய புலவர். திரிகூட ராசப்பக் கவியரசர் என்று வழங்கப்படுவார். காண்க: திரிகூட ராசப்பக் கவிராயர்.

**இராசப்ப நாவலர்** கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் இராசப்பக் கவிராயர் என்றும், இராசப்ப உபாத்தியாயர் என்றும் வழங்கப்பெற்றார். இவருக்கு வழங்கப்பட்ட பட்டங்களைக் கொண்டு இவர் கவிஞராகவும், நல்ல பேச்சாளராகவும், ஆசிரியராகவும் விளங்கிய தன்மை புலனாகிறது. இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தவர். எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணத்திலும் நல்ல புலமையுடையவர். அதனால் 'பஞ்சலட்சண சரபம்' என்று சிறப்பிக்கப்பட்டார்.

திருநாவலூர்ப் புராணம், விந்தைக் கலம்பகம், சித்தி நகரத் தந்தாதி, மநுநீதி சதகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். தலபுராணம் பாடியதோடு, கலம்பகம், அந்தாதி, சதகம் போன்ற சிற்றிலக்கிய வகைகளையும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. திருநாவலூர்ப் புராணம் சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த தலமாகிய திருநாவலூர்ச் சிறப்பினைக் கூறுகிறது.

**இராச பவித்திரப் பல்லவதரையன்** கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் இலக்கண உரையாசிரியர். அவிநயம் என்னும் இலக்கண நூலுக்கு உரை வரைந்துள்ளார். இவர் ஊர் தண்டலம் என்பதாகும். இவர் தம் பெயரை நோக்குங்கால், இவர் பல்லவ மன்னர் மரபில் வந்தவராதல் வேண்டும் என்றோ, இப்பெயர் சோழமன்னன் ஒருவனால் வழங்கப்பட்டபட்டப் பெயராதல் வேண்டுமென்றோ கருதக் கூடும். அவிநய நூலும், அதற்கு இவர் இயற்றிய உரையும் இன்று கிடைக்காமையால் இவரைப் பற்றி விளக்கமாக அறிந்து கொள்ள இயலவில்லை. மயிலைநாதர் தாமியற்றிய நன்னூல் உரையில் ஓரிடத்தே இவரது கருத்தினை மேற்கொண்டு விளக்குங்கால் இவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'இந்தப் பத்து எச்சமும் புவிபுகழ் புலமை அவிநயநூலுள், தண்டலங்கிழமை தகைபெறுநேமி, எண்டிசை நிறைபெயர் 'இராசபவித்திரப் பல்லவதரையன் பகர்ச்சி என்றறிக' என்பது அக்குறிப்பாகும். இக்குறிப்பு இவர் பெயர், உரை எழுதிய நூற்பெயர் ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறுகிறது,

**இராசம், எஸ்.** ஒரு சிறந்த வணிக நிறுவனத் தலைவரும் தமிழ் நூற்பதிப்பாசிரியரும் ஆவார். இவர் திருத்துறைப் பூண்டிக்கு 6 கல் தொலைவிலுள்ள துளசாபுரம் என வழங்கும் சாக்கை என்னும் ஊரில் கோபாலய்யங்கார், கோமளத்தம்மாள் ஆகியோருக்கு மகனாக 22.11.1904-இல் தோன்றினார். இவர் இளமையில் நன்கு கற்றுக் கணக்குத் தணிக்கைக்குரிய படிப்பில் G.D.A. வெற்றி பெற்றார்; மேலும் சட்டத்துறையில் பயிற்சியும் பட்டறிவும் பெற்றுச் சிறந்து விளங்கினார்.

சென்னையில் 'மர்ரே கம்பெனி' (Murray and Company) என்னும் பெயரில் ஆங்கிலேய ஏல நிறுவனம் ஒன்று நன்கு செயற்பட்டு வந்தது. ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறியபோது மர்ரே நிறுவனத்தாரும் சென்றுவிட்டனர். அந்நிலையில் வி. சீனிவாசய்யங்கார் அறிவுரைப்படி, இராசம் தம் தமையனார் வேதாந்தம் அய்யங்காருடன் மர்ரே நிறுவனம் என்ற பெயரிலேயே அந்த ஏலத் தொழிலைச் சிறப்புற நடந்தி வந்தார். தமையனாரின் முதுமைக் காலத்தில் இவர் அந்நிறுவனப் பொறுப்பினை ஏற்றுத் திறமையாக நடத்தினார்.

இராசம் சிறந்த அற நோக்காளர். இவர் தம் ஊரில் இலவச மருத்துவமனை, மகப்பேறு விடுதி, கல்வி கற்க வசதி போல்வன செய்து கொடுத்தார். பின்னர், ஓர் அயல் நாட்டார் தமிழைத் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழ் நூல்களை வரிசைப் படுத்தி 'தமிழிலக்கியச் செல்வம்' என்னும் தொடரில் பல தமிழிலக்கியங்களை வெளியிட்டார். அவ்வரிசையில் நாலாயிரத் திவ்வியபிரபந்தம், திருவாசகம், சிலப்பதிகாரம், மணிமேகலை, அட்டப்பிரந்தம், கல்லாடம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பாட்டும் தொகையும், கம்பராமாயணம், தொல்காப்பியம், பதினெண்கீழ்க்கணக்கு, வில்லிபாரதம் ஆகியன தொடர்ந்து வெளியிடப்பட்டன. ஒரு நூல் ஓர் உருபாய் விலை கொண்டதாக 35 நூல்களை நல்ல தாளில் சிறப்புற அச்சிட்டு வெளியிட்டார். ஊதிய நோக்கமில்லாமல் தியாக உணர்வுடன் எளிதில் படிக்குமாறு, பதம் பிரித்துத் திருத்தமுற நூல்களை வெளியிட்ட இவரது தொண்டு, தமிழ் மக்களால் போற்றுதற்குரியது. மேலும், இவர் பேரிலக்கியங்களையேயன்றி சிற்றிலக்கியங்களையும் அளிக்க விரும்பி, முதன்மையான சில சிற்றிலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொன்றும் நான்கணா விலையில் அழகுற அச்சிட்டு வெளியிட்டார். மேலை நாட்டினர் தொடர்பால் தமிழ் பெற்ற நிறுத்தற் குறிகளை ஒழுங்குபடுத்தி, மேற்கொள்வதற்காக அந்நெறி முறைகளை விளக்கிச் 'சந்திக் குறியீட்டு விளக்கம்' என்னும் அரிய கையேடு ஒன்றினையும் இவர் உருவாக்கி வெளியிட்டார்.

இவர் முதுமையில் தம் நிறுவனத்தைத் தம் தமையனார் மருமகனிடம் ஒப்படைத்து, அவரிடமிருந்து பெற்றுவந்த பணத்தையும் பொது நலன் கருதிச் சில அறக் கட்டளைகள் நிறுவி, அவ்வறங்கள் தொடர்ந்து பலன் அளித்தற்குச் செலவிட்டார். இலக்கிய வெளியீட்டிற்குச் 'சாந்தி சதனா' என்று ஒரு கட்டளையை ஏற்படுத்தியுள்ளார். ஏழை மக்கள் இறுதிக்கடன் ஆற்றவும் வழியற்றுத் துன்புறக் கூடாது எனக் கருதி, அதற்குத் துணை செய்யும் வகையில் 'கிரியாசதனா' என ஓர் அறக்கட்டளையை நிறுவினார். குழந்தைகள் படிப்பு, நலமேம்பாட்டுக்கு என்று 'சேவா சதனா' என ஒரு கட்டளையை நிறுவினார். சில சிறு நிறுவனங்கள் மக்களுக்குச் சேவை செய்ய நன்கு செயற்படும் நிலையிலிருந்தும் பணமுட்டுப்பாடு காரணமாக நலிந்துவிடக் கூடாது என்று கருதி, அவைகளுக்கு ஊக்கமளித்து நன்கு செயற்பாடு உண்டாக்க உதவுவதற்காகப் பெசந்து ராசன் அறக்கட்டளையை (P. & R. Trust) நிறுவினார். நூலகமாக

தம் இல்லத்தில் என்றும் இறைமணம் கமழும் வகையில் அங்குத் திருமால் வழிபாடு தொடர்ந்து நடைபெற ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

தமது பெரிய இல்லத்தையும் சொத்து முழுவதையும் இவ்வறங்களுக்கு ஒப்படைக்க இராசத்திற்கு உறுதுணையாக விளங்கியவர், இவர்தம் வாழ்கைத் துணைவியார் தங்கம் அம்மையார்.

இராசம் புகழை விரும்பாதவர்; மேற்கொள்ளும் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கும் திறமுடையவர். தம் தொண்டுகளுக்குப் பிறரிடம் பொருள் உதவியை என்றும் எதிர்பாராதவர். உலகம் தம் தொண்டைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தையே கொண்டிருந்தவர். இவர் 13.3.1986-இல் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

இரா.ச.

**இராசம், டி.எஸ்.** டி.வி. சுந்தரம் அய்யங்கார், இலட்சுமி அம்மாள் ஆகிய தம்பதியருக்குப் புதல்வராக 1-1-1902-இல் பிறந்தார். இராசம் தம் பள்ளிப்படிப்பைச் சென்னை பி.எஸ். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரிப் படிப்பை மதுரைக் கல்லூரியிலும் செம்மையுறப் பயின்று தேறினார். பதினெட்டாம் வயதில் தந்தையாருடைய தொழில்துறை அமைப்புகளில் பொறுப்பேற்றார். அத்துணை அமைப்புகளிலும் கீழ் நிலையிலிருந்து உயர்நிலை வரை நேரடியாகப் பணியாற்றித் திறமை பெற்றார். இந்திய நகரங்கள் அனைத்திற்கும் வணிக விரிவாக்கத்திற்காகப் பலமுறை சென்று வந்தார். இவரது சோர்விலா உழைப்பும் தன்னிகரில்லா வணிகத்திறமும் பல நகரங்களுக்கும் நேரில் சென்று பணியாற்றிய நிலையும் தம் தந்தையார் உருவாக்கிய தொழில் நிறுவனத்திற்குப் பெரும் பயன் விளைத்தன; தென்னிந்தியா முழுமைக்கான வாணிக விரிவாக்கத்திற்கும் கால்கோளிட்டன; சங்கிலித் தொடராய் விற்பனை அமைப்புகள் உருவாக உறுதுணை புரிந்தன.

இளம் வயதிலேயே தொழில் துறையில் புக நேரிட்டதால் கல்லூரிப் படிப்பில் பெரிதும் ஈடுபட இயலவில்லை. ஆனால், புற உலகில் இவர் கற்ற பாடம் பெரிது. வெளி நாடுகளைச் சுற்றிப் பார்த்தும், பாரதம் முழுமையும் பன்முறை சுற்றி வந்தும் இவர் கற்ற பாடங்கள் அளப்பரியன. இத்தகைய அறிவுத் திறனால்தான் தென்னகத்தின் மிகச் சிறந்த தொழிலமைப்பை நேரிய முறையில் வழிநடத்திச் செல்ல இவரால் இயன்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், கீழ்த்திசை நாடுகள் ஆகியவற்றிற்குப் பலமுறை சென்று வந்ததனால் மோட்டார் தொழில் நுணுக்கங்களையும், வாணிக நுட்பங்களையும், விற்பனைத் தேவைகளையும் இவரால் நன்கு அறிய முடிந்தது. டி.வி.எஸ். நிறுவனத்தின் நிருவாக இயக்குநராகப் பல்லாண்டுகள் பணியாற்றியபின், நிறுவனத்தின் தலைவராக உயர்ந்து இறுதி மூச்சு வரை பணியாற்றினார்.



இராசம், டி.எஸ்.

தலைமைப் பண்பு இவர் பிறவியிலேயே அமைந்தது. இவர் கட்டுப்பாடு, கடமையுணர்வு, காலத்தின் பெருமையுணர்ந்து செயற்படும் பாங்கு ஆகிய பண்புகளை உயிரெனக் கொண்டார். ஒன்றினைப் பெற வேண்டுமெனில் அதற்குரிய உழைப்பினைச் செலுத்தியாக வேண்டும் என்பதில் இவர் கண்டிப்புடன் செயற்பட்டார். இவர் எதையும் வீணாக்குவதை அனுமதிப்பதில்லை; உழைப்பில் நம்பிக்கை உடையவர். உண்மையான தேவைகளை அறிந்து உதவி புரிவதில் இவர் தயங்கியதே இல்லை. ஆரவாரமின்றி

அறம் செய்வதில் ஆர்வம் மிக்கவராய் டி.வி.எஸ். அறக்கட்டளை நிறுவனங்களின் தலைவராக இருந்து ஆற்றிய அறங்கள் மிகப் பல. விளம்பரம் வேண்டாமல் செய்து மகிழ்ந்த பணிகள் எண்ணிலடங்கா. கல்வி நிறுவனங்களை உருவாக்குவதிலும், இலவச மருத்துவ மனைகளை அமைப்பதிலும், சிதைவுபட்ட கோவில் களைப் புதுப்பிப்பதிலும் இவருக்குப் பெரும் நாட்டம் இருந்தது. குறிப்பாகக் கோயில் திருப்பணியில் இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

கல்வி நிறுவனங்களில் இவராற்றிய பணி மிகப் பெரியது. இவர் மதுரைக் கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவராகவும், மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராகவும், கருநாடக மண்டலப் பொறியியல் கல்லூரி ஆளுநர் குழுவில் உறுப்பினராகவும், இலட்சுமி வித்தியாசங்கத் தலை வராகவும், கல்விப் பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றிவந்தார்.

மேலும், மதுரை இராமநாதபுரம் வாணிகக் கழ கத்தின் தலைவராகவும், சவகர்லால் நேரு நினைவு நிதிக் குழுவின் தலைவராகவும், சென்னை 'சங்கீத அகடாமியின்' தலைவராகவும், புதுதில்லி அனைத்து வர்த்தகச் சங்கங்களின் கூட்டமைப்பின் நிருவாக உறுப்பினராகவும், பாரதீய வித்தியா பவன் தொடக் கக் கால முதல் துணைத் தலைவராகவும், அனைத் துலகச் சுழற்குழு 320-ஆம் மாவட்டத்தின் ஆளு நராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

எத்துறையாக இருப்பினும் இவர் அதனை முழு மையாக அறிந்திருந்தார். விமானப் போக்குவரத்து, சாலைப்போக்குவரத்து, வேளாண்மை, மின் உற்பத்தி, பருவநிலை போன்றவற்றில் இவருக்குக் கூரிய நுண் ணறிவு இருந்ததை நெருங்கிப் பழகியவர்கள் அறிந்து வியப்படைந்துள்ளனர். இவர் அணுகுமுறை அறிவி யல் அடிப்படையில் அமைந்திருந்தது. இவர் தம் 82-ஆம் வயதில் 1984-ஆம் ஆண்டு காமானார்.

வி.பி.ஆர்.க.

**இராசம் ஐயர், பி. ஆர்.** மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு என்னும் ஊரில் 25-1-1872-இல் பிறந் தார். இவரது இயற்பெயர் சிவசுப்பிரமணியம் என்ப தாகும். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் எம்.ஏ. பட்டமும், சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டமும் பெற்றார்.

இராசம் ஐயர் இளமையில் கடவுள் நம்பிக்கை இல்லாதவராய் இருந்தார். ஒழுக்கம் என்னும் உயர் பண்பு மட்டுமே மனிதனுக்குத் தேவை என்று பேசி வந்தார். தத்துவ நூல்களைக் கற்பதிலும் சமயத் தொடர்பான கருத்துகளை ஆராய்வதிலும் ஈடுபாடு கொண்டார். 'கைவல்ய நவநீதம்' என்னும் தத்துவ நூல் இவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. எழுதவேண்டும் என்னும் துடிப்பும் வேகமும் இவ ருக்கு இளமையிலேயே இருந்து வந்தன.

இராசம் ஐயர் அம்மையார் ஒருவரிடம் முன்னரே உபதேசம் பெற்றிருந்தாலும், மற்றொரு குருவை நாடி முறையாகத் தீட்சை பெற எண்ணினார். அந் நாளில் சென்னையில் மெய்யன்பர்கள் வட்டத்தில் சிரீமது சத்குரு சாந்தானந்த சுவாமிகள் என்பார் பலரது போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரியவ ராக விளங்கினார். அவரிடம் நெருங்கிப் பழகும் அவா வினராக இருந்தும், இராசம் ஐயர் அவரை அணுக இயலா நிலையில் இருந்தார். 'பிரம்மவாதினி' இதழில் இவர் எழுதிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்த சாந்தானந்தர், இராசம் ஐயரைக் காண விழைந்து ஆள் அனுப்பினார். அதன்பின் இருவருக்கும் உறவு வலுப்பட்டது. இராசம் ஐயர் இவரையே தம் குரு வாகக் கருதி ஒழுகினார். பக்தி நெறியை மட்டுமே அதுவரை அறிந்திருந்த இவருக்கு ஞானநெறியின் ஒட்பத்தைச் சாந்தானந்தர் உபதேசித்தருளினார்.

விவேகானந்தர் அமெரிக்கா செல்வதற்கு முன் சென்னை நகருக்கு ஒருமுறை வந்தார். மயிலாப் பூரில் வாழ்ந்த பெருங்குடி மக்கள் சிலர் இராசம் ஐயரை விவேகாநந்தருக்கு அறிமுகம் செய்து வைத் தனர். 'பிரபுத்த பாரதம்' என்னும் பெயரில் ஓர் ஆன்மிக இதழை நடத்தும் பொறுப்பை விவேகானந் தர் இவரிடம் ஒப்படைத்தார். விவேகானந்தரின் ஆணையைத் தலைமேற்கொண்டு பெருங்குடி மக்கள் சிலரின் பேராதரவோடு பத்திரிக்கையைக் கொண்டு வருவதற்கு இவர் ஆர்வத்தோடு அல்லும் பகலும் உழைத்தார். முதல் இதழ் வெளிவரும் முன்னரே ஆயிரத்து ஐந்நூற்றுவர் அவ்விதழுக்கு உறுப்பினர் கட்டணம் செலுத்தினர். இதழ் வெளிவரத் தொடங்கி ஓராண்டு முற்றுப் பெற்ற நிலையில் உறுப்பினரின் எண்ணிக்கை நாலாயிரத்து ஐந்நூறாக உயர்ந்தது. பிரபுத்த பாரதத்தில் இராசம் ஐயரின் வேதாந்த விளக்கங்கள் தொடர்ந்து வெளி வந்தன. நான்காண்டுக் காலம் அவ்விதழ் தடை யின்றி வெளிவந்தது.

வேதாந்தத்தில் மட்டுமன்றிப் படைப்புத் துறை யிலும் இளமை முதற்கொண்டே இவருக்குப் பேரார் வம் இருந்தது. 'விவேக சிந்தாமணி' என்னும் இத ழில் இவர் 'கமலாம்பாள் சரித்திரம் அல்லது ஆபத் துக்கிடமான அபவாதம்' என்னும் பெயரிய புதி னத்தை எழுதிவந்தார். தொடர்கதையாகக் கி.பி. 1893 முதல் 1895வரை வெளிவந்த அது 1896-ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்றது. தமிழில் வெளிவந்த

முதல் புதினம் இதுவேயாம். இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ஆம் நாள் காலமானார்.

மா.இரா.

**இராசமணிமாலை** என்னும் இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியம் சோதரக் குடியைச் சார்ந்த பக்கீறு மதாறுப் புலவரால் இயற்றப்பட்டது. இந்நூலினை 1933-ஆம் ஆண்டில் ஏ. அரங்கசாமி முதலியார் சென்னை பூமகள் விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பித்துள்ளார்.

இராசமணி மாலையின் உள்ளடக்கச் செய்திகள் இசுலாமிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற பெரியோர்களின் வரலாற்றினை எடுத்துரைப்பனவாகும். இந்நூல் குறிப்பாகப் பெருமானார் நபி (சல்) அவர்கள் வாழ்வுப் பெருமைகளைச் சிறப்புறச் சித்திரிக்கிறது. பெருமானார் நபி அவர்களுக்குப் பின் இசுலாமிய நெறியில் ஆட்சிபுரிந்த பேராளர்கள் 'கலீபத்து இரசூலல்லா' என்றழைக்கப்பட்டனர். இவர்களைக் கலீபா என்றழைப்பது மரபு. இசுலாமிய வரலாற்றில் முதல் கலீபாவாகப் பதவியேற்றவர் அபூபக்கர் (ரலி) ஆவார். பின்னர், முறையே உமர் (ரலி), உதுமான் (ரலி), அலி (ரலி) ஆகியோர் நம் கலீபாக்களாக நல்லாட்சி புரிந்தனர். இந்நான்கு கலீபாக்களின் வரலாறும் இராசமணி மாலையில் விரித்துரைக்கப்படுகிறது. மேலும், இமாம் குசைகூர் காஸிம் அலியக்பெர், முகமது அனிபா சையினால் ஆபிதினவர்கள் முதலான இறை நேசர்களின் வரலாறும் இடம்பெற்றுள்ளது. எழுசீர் விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட இவ்விலக்கியம் 1922-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சி.ந.

**இராசமன்னார், பி.வி.:** பாரத நாடு விடுதலையடைந்த பிறகு, பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தில் நீதித்துறையின் தலையாய சிற்பியாக விளங்கியவர் டாக்டர் பி.வி. இராசமன்னார். இவர் 10.5. 1901 இல் பிறந்தார். இவர் தந்தையார் வேங்கடரமணராவ். இராசமன்னார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் பயின்றார். இவர் பி.ஏ. பட்டப்படிப்புத் தேர்வில் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்வு பெற்று, 'கார்டோசா', 'மில்லர்' பரிசுகளைப் (Gardosa and Miller Prizes) பெற்றார். சட்டக் கல்லூரியில் படித்தபோதே ஆங்கிலம், சமசுகிருதம், தெலுங்கு மொழி இலக்கியங்களில் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

இராசமன்னார் 1924-இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து, சென்னை உயர்நீதி மன்றத்தின் மேன்முறையீட்டுத் துறையிலும் (Appellate Side) அசல் வழக்குத் துறையிலும் (Original Side) வழக்கறிஞர் தொழிலைச் செவ்வனே நடத்தினார். இவரது திறமையைப் பாராட்டி, அரசு 1944-இல் இவரைச் சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசுத் தலைமை வழக்கறிஞராக (Advocate General) நியமித்தது. பின்னர், இவர் 25.7.1946-இல் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்றார். இராசமன்னார் சென்னையில் தலைமை நீதிபதியாக 1961 மே திங்கள் வரை பணிபுரிந்தார். மேலும், இவர் 1957-58-இல் சென்னை மாநிலத்தின் இடைக்கால ஆளுநராகவும் பணிபுரிந்துள்ளார்.

இராசமன்னார் தெலுங்கில் பல நாடகங்களும் கவிதைகளும் எழுதியுள்ளார். இவர் கருநாடக இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளைப் பற்றிய விளக்கங்களையும் இவர் நன்கு அறிந்திருந்ததோடு, நல்ல பேச்சாளராகவும் விளங்கினார். ஆந்திரா, சென்னை, அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்கள் இவருக்கு மதிப்புக்குரிய டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. சங்கீத நாடக மன்றம் (Academy), ஆந்திரப் பிரதேச சாகித்திய மன்றம், தென்னிந்திய மொழிக் காப்பகம் ஆகியவற்றுடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் இராசமன்னார் மிகவும் சுறுசுறுப்பாகத் தம் வாழ்நாளைக் கழித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைச் சட்டமன்ற மேலவையிலும் உறுப்பினராக இருந்தார். இவர் 1.10.1979 இல் காலமானார்.

இரா.மா.

**இராசமாணிக்கம் பிள்ளை** 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வயலின் (Violin) வித்துவான்களுள் ஒருவர். இவரது ஊர் கும்பகோணம். இவர் மூன்றாம் வகுப்பு வரை படித்தார். இவர் இளமையிலேயே இசையில் நாட்டம் கொண்டு கந்தசாமிப் பிள்ளை, பல்லவி நாராயணசாமி ஆகியோரிடம் முறையாக இசை கற்றார். பின்னர்த் திருக்கோடிகாவல் கிருட்டிண அய்யர், திருக்கோடிகாவல் இராமசாமி அய்யர், நாகராசராவ், சாமிநாதய்யர் போன்றோரிடம் வயலின் இசைத்தலையும், பிற இசை நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

இராசமாணிக்கம் பிள்ளை குஞ்சம்மாளை 1916 இல் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு இரண்டு பெண்மக்கள் பிறந்தனர்.

இவர் ஆலங்குடி நடேச பாகவதருடன் கச்சேரியில் வயலின் வாசித்துப் பாராட்டும் தங்கப் பதக்கமும் பெற்றார். மைசூர் மன்னர் இவரது திறமை

யைப் பாராட்டிப் பட்டாடைகளை அளித்துச் சிறப்புச் செய்தார். இவர் திருவிதாங்கூர், எட்டயபுரம் அரசுகளில் அரசவை வயலின் வித்துவானாக அமர்த்தப் பெற்றார். சென்னை சங்கீத சபையினர் 1948-இல் நடத்திய சங்கீத மாநாட்டுக்கு இவர் தலைமையேற்றார். அச்சபையோர் இவருக்குக் 'கலாநிதி' என்ற பட்டம் அளித்தனர். இவரது இசைப் புலமையைப் பாராட்டித் திருவிதாங்கூர் மன்னர் யானையொன்றைப் பரிசளித்தார். இவர் அந்த யானையைக் கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இவர் தனி இசையரங்கு (Solo) செய்வதிலும், பக்கவாத்தியமாக அமைந்து இசைப்பதிலும் வல்லுநராக விளங்கினார். இவர் 150-க்கு மேற்பட்ட தனி அரங்குகளை நிகழ்த்தியிருந்தபோதிலும், பக்கவாத்தியம் வாசிப்பதில்தான் இவருக்குப் பெரும்புகழ் உண்டானது. இசைக்கலை நன்கு வளர வேண்டும் என்பதில் ஆர்வமுடைய இவர் பல மாணவர்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுத்து இசைப் பயிற்சி அளித்தார்.

இவர் கும்பகோணம் நகரக் காங்கிரசுத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் கோயில் வழிபாடு செய்வதில் ஆர்வமுடையவர். கும்பகோணத்தில் உள்ள நாகேசுவரர் அம்மன் கோயிலில் இவர் சர விளக்குகள் அமைத்துள்ளார். அந்நகரிலுள்ள துர்க்கை அம்மன் கோயில் திருப்பணி இவரால் செய்யப்பட்டது. மேலும், இவர் அக்கோயிலுக்கு விளக்குகளும் வழங்கியுள்ளார்.

**இராசமாணிக்கனார், மா.** (1907-1967) இவர் 12.3.1907-இல் பிறந்தார். தந்தையார் மாணிக்கம்; தாயார் தாயாரம்மாள். இவர் தந்தை ஆந்திர மாநிலம் கர்நூலில் அரசு அலுவலராகப் பணிபுரிந்தார். அதனால் இவருக்குத் தெலுங்கு மொழி அறிவும் கிடைத்தது. தந்தையார் மறைவுக்குப்பின் இவர் தஞ்சையில் தங்கினார். இவர் தமையனார் இவரைத் தையல் தொழிலில் ஈடுபடுத்தினார். கல்வி வேட்கை மிக்க இவர், சான்றோர்சிலர் உதவியினால் பள்ளியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். இவர் தம் ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர் கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம்பிள்ளை ஆவார். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இவர், தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்க ஆவல் கொண்டு, வித்துவான் பட்டமும் பெற்றார்.

இவர் 1928-இல் தமிழாசிரியராகப் பணி புரியத் தொடங்கினார். பாட நூல்கள் எழுதுவதில் இவருக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டது. சென்னையில் (1936-1947) முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பதவி ஏற்றார். அப்போது பி.ஓ.எல்.,



இராச மாணிக்கனார், மா.

எல்.டி. ஆகிய பட்டங்களைப் பெற்றார். பின்னர்ப் 'பெரிய புராண ஆராய்ச்சி' என்பது பற்றி ஆய்வு செய்து எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். இவருக்கு இலக்கியப் புலமையோடு வரலாற்று அறிவும் மிக்கு இருந்தது. பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு (சங்க காலம்) முதலிய பல நூல்களை எழுதினார். 'சைவ சமய வளர்ச்சி' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 1951-இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

இவர் வரலாற்றுச் சிறப்புமிக்க பல்வேறு இடங்களுக்கும் நேரிற் சென்று கலை, பண்பாடு பற்றிய கல்வெட்டுகளை ஆராய்ந்து நூல் எழுதுவதில் வல்லவர்.

இவர் முற்போக்குக் கருத்துகள் கொண்டவர்; சாதியொழிப்பு, சமுதாயச் சீர்திருத்தம் முதலியவற்றில் நம்பிக்கை உள்ளவர். இவர் மனைவி கண்ணம்மாள். திருமணத்திற்குப் பின் தம்

மனைவியையும் வித்துவான் பட்டம் பெறச் செய்தார்.

சென்னை வாழ்க்கைக்குப்பின் 1953 முதல் 1959 வரை மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். அப்போது திருவள்ளுவர் காலம், தமிழக வரலாறு முதலிய நூல்களை வெளியிட்டார். இவர் மீண்டும் சென்னை திரும்பி (1959-1967) சென்னைப் பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியராகப் பதவியேற்று, 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற சிறந்த ஆராய்ச்சி நூலை எழுதி வெளியிட்டார்.

திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குச், 'சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தையும், மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம், 'ஆராய்ச்சிக் கலைஞர்' என்ற பட்டத்தையும் , சைவ சித்தாந்த சமாசம், 'சைவ நெறிக் காவலர்' என்ற பட்டத்தையும், தருமபுர ஆதீனம், 'சைவ இலக்கியப் பேரறிஞர்' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தன.

ஏறத்தாழ 40 ஆண்டுகள் (1928-1968) தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் சிறந்த தொண்டாற்றிய இவர், 26.5.1967-இல் காலமானார். இரா.அ.

# பொருளடைவு



அக்பர் 253, 610, 611
அக்பரி மகால் 253
அச்சுத் தொழிலுக்கான தேசிய விருது 195
அசந்தாக்குகை 292
அசாம் நாடகங்கள் 456
அசுமத்து 924
அட்சன் 483
அடிப்படை உரிமைகள் 167–169
அடிமை மரபு 232, 603
அடையாறு பிரம்ம ஞான சங்கம் 416
அண்ணா வீரப்பதக்கம் 197
அதாலா மசூதி 241
அதினா மசூதி 239
அந்தாதி 844
அபிநயங்கள் 903
அபினைன் மலைகள் 132
அபுல்பசல் 611
அம்பேத்கர் 705
அமைச்சரவை 186
அமைப்புக்கடன் சந்தை 471
அய்னி அக்பரி 611
அயல்நாட்டு வாணிகம் 556
அயற்செலாவணி 537
அர்சர் 602
அரசப் பேராளர்கள் ஆட்சி 625
அரசாங்கக் கணக்கு எழுதும் முறை 372
அரசாங்கப் பணிகள் 224
அரசியல் கட்சி வகைகள் 47, 49
அரசியல் சட்டப்படியான தீர்வுகள் 170
அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 165
அரசின் வங்கி 536
அரசுத் தொழிலாளர் ஆணையம் 406
அரசுரிமைப் போர் 879
அரப்பா 592
அரப்பா பண்பாடு 885
அரிசுடாட்டில் 864
அரிசுடாட்டிலியர் 83
அருச்சுன விருது 193
அருண் – அல் – ரசீது 339
அருணாசலக் கவிராயர் 815
அலாவுதீன் கில்சி 604, 605
அவுரங்கசீப் 259, 612, 613
அளவையியல் அணுக்கொள்கை 887
அளவையியல் அமைப்பு நியதி 887
அளவையியல் கோட்பாடுகள் 212, 213
அளவையியல் பகுப்பாய்வுக் கோட்பாடு 887
அறக்கட்டளை ஏற்படுத்தும் முறைகள் 680
அறிமுக அறிவு 889
அன்னி பெசண்டு 702
அனுபவம் 213
அனுமன் 658
அனுமானம் 214
அனுமான வகைகள் 214
அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் 406
அனைந்திந்திய மேலாண்மைக் கழகம் 531
ஆக்டேவியன் இயூம் 416
ஆக்ரா 253, 256, 257
ஆங்கில வணிகக் குழுவினர் 618
ஆங்கிலேய ஆட்சியில் கல்வி 306
ஆச்சாரிய கிருபளானி 419
ஆசியச் சங்கம் 198
ஆசிரியர் கல்வி, இந்தியாவில் 303
ஆசிரியர்களுக்கான தேசிய விருது 195
ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர் 646
ஆசுதிரிக்கு மொழிகள் 483, 485, 538
ஆட்சிப்பணி அலுவலர் சேர்ப்பு முறை 221
ஆட்சிமொழி 198
ஆடன், ஏ.சி. 272
ஆண்டுத் திட்டங்கள் 563
ஆதாயம் 62
ஆதாரக் கல்வி 307
ஆதிக்குடிகளிடையே இரகசியச் சங்கங்கள் 872–876
ஆதிச்சநல்லூர் 592
ஆதிபகவன் 59
ஆப்பூலியா 132
ஆர்மீனியர் 281, 282
ஆரவல்லி மலைத் தொடர் 471, 572
ஆரிய சமாசம் 701
ஆரியபட்டர் 601
ஆரியர்கள் 349, 593–595
ஆல்காட்டு 702
ஆல்பிரடு வீபர் 37
ஆல்பினோ – தைனாரிக்கு இனம் 282
ஆல்பீனியர் 281, 282
ஆல்புகர்க்கு 652
ஆலன் ஆக்டேவியன் இயூம் 630
ஆவியுலகக் கோட்பாடு 796
ஆளுநரின் அதிகாரங்கள் 217
ஆறுகள், இந்தியானா 654
ஆறுமுக நாவலர் 708
இக்னேசியசு இலயோலா 859
இசுலாமியக் கல்வி முறை 482
இசுலாமிய மதரசாக்கள் 474

இசுவான்பெருக்கு 109
இசை இணைவுக் கொள்கை 16
இசைக் கணிப்பொறி 1
இசைக் கல்வி 1
இசைக் கல்வி முறைகள் 2
இசைக்கவை 3
இசைச்சன் 3
இசைஞானியார் 3
இசைத்தமிழ் 4
இசைத்திறன் சோதனை 10
இசை நாடகம் 11
இசை நாடக வரலாறு 11
இசை நுணுக்கம் 12
இசைப் பேருரை 13
இசை மரபு 13
இசையியல் பிரிவுகள் 4
இசையிலக்கண நூல்கள் 5, 6
இசையின் நரம்பு வகைகள் 5
இசைவழி உளவியல் 14
இசைவிணைவு உண்மைக் கோட்பாடு 14
இசைவில் தவறு 16
இசைவு 18
இசைவுத் தீர்ப்புச் சட்டங்கள் 20, 21
இசைவுத் தீர்ப்பு முறை 20
இஞ்சு வில்லியம் இரால்பு 23
இட்சிங்கு 23
இட்சுவாகு 24
இட்சுவாகு மரபு 25
இட்டகி 25
இட்டலிங்க அகவல் 26
இட்டலிங்கக் கைத்தலமாலை 26
இட்டாநகர் 26
இட்டார்சி 27
இட்டார்பு சாக்குவிசு இக்னேசு 27
இட்டிசு மொழி 27
இட்டூரியா 29
இட்டைட்டு அரசர்கள் 30, 31
இட்டைட்டுகள் 29
இட்டைட்டு நாகரிகம் 31, 32
இட்ரிசி 32
இட்லர், அடால்பு 33
இட அமைப்புக் கோட்பாடு 35
இடக்கை 38
இடக்கைப் பழக்கம் 38
இடங்கழி நாயனார் 40
இடங்கைச் சாதிகள் 40
இடங்கை வலங்கை 40
இடத்திறன் சோதனை 44
இடத்தொடர்புச் சோதனை 47
இடதுசாரிகள் 47
இட-நேரக் கோட்பாடு 49
இடப் பெயர்கள் 50
இடப்பெயர்வு 54
இடப்பெயர்வுக் காரணிகள் 55
இடப்பெயர்வுத் தேர்வு 56
இடப்பெயர்வு வகைகள் 56, 57
இடபதீர்த்தங்கரர் 59
இடபம் 59
இடபம்[2] 60
இடபாந்திக மூர்த்தி 60
இடபாருட மூர்த்தி 61
இடம்பெயரும் ஊரகச் சமுதாயம் 288
இடம்பெயரும் வேளாண்மை ஊரகம் 288
இடர்தாங்கு பொருளியல் 61
இடர்தாங்கும் முதல் அடிப்படைத் திட்டம் 402
இடவெந்தை 63
இடவைப் போர் 63
இடாகோ பால்சு 64
இடால்கேர் 64
இடால்கோ[2] 64
இடீசா 64
இடுக்கி 65
இடுகாடு 65
இடும்பன் 70
இடும்பன்[2] 70
இடும்பன்[3] 71
இடும்பன்[4] 71
இடும்பாவனம் 71
இடும்பி 71
இடைக்கருவி 71
இடைக்கழி நாட்டு நலலூர் நத்தத்தனார் 71
இடைக்கழி நாடு 71
இடைக்கற்காலக் கருவிகள் 72, 73
இடைக்கற்காலம் 71
இடைக்கற்கால வாழ்க்கை 73
இடைக்காட்டுச் சித்தர் 73, 74
இடைக்காடர் 74
இடைக்காடர்[2] 75
இடைக்காடர்[3] 75
இடைக்கால அரசாங்கம் 75
இடைக்கால அரசியல் 90
இடைக்கால ஏற்பாடுகள் 77
இடைக்காலச் சமயம் 90
இடைக்காலச் சமுதாயம் 91
இடைக்காலத் தணிக்கை 78
இடைக்காலத் தத்துவம் 79
இடைக்காலப் பொருளியற் சிந்தனைகள் 85
இடைக்காலம் 89

இடைக்கால வணிகக் குழுக்கள் 86
இடைக்குன்றூர்கிழார் 91
இடைச்சங்கம் 92
இடைச்சுரம் 92
இடைச்செருகல் 92
இடைச்சொல் 93
இடைச்சொற் பாகுபாடு 94
இடைசுருங்கு பறை 95
இடைத்தேர்தல் 95
இடைத்தேர்தல் முறைகள் 95, 96
இடைநிலை நிருவாக அதிகாரிகள் 99
இடைநிலை மயக்கம் 96
இடைநிலை மேலாண்மை 98
இடைநிலை மேலாண்மையின் பணிகள் 99, 100
இடைப் பழங்கற்காலம் 586
இடைப்பாத்திய வழக்கு 100
இடைமருதூர் 100
இடைமெய் இணை 101
இடையன் நெடுங்கீரனார் 102
இடையன் வேந்தன் கொற்றனார் 102
இடையார்ப்பாக்கம் 102
இடையாற்று நாடு 102
இடையாற்றுப்பாக்கம் 102
இடையாறு 103
இடையாறு² 103
இடையெழு வள்ளல்கள் 103
இடைவினை 103
இடைவினை ஆய்வு முறை 104
இண்டன்பர்கு 106
இண்டன்பர்கு நடவடிக்கைகள் 107
இண்டால் 109
இண்டிகா 109
இணக்க ஏற்பாடு 113
இணக்கம் 115
இணங்காதார் 116
இணுவையந்தாதி 117
இணை உச்சரிப்பு 117
இணைக்குறளாசிரியப்பா 119
இணைத்தமைத்தல் 120
இணைத்தற் சோதனைகள் 122
இணைதல் 122
இணைதல் முறைகள் 122-124
இணைப்படி மலர்ச்சி 126
இணைப்பு 127
இணைப்பு விளைவுகள் 129
இணைமணிமாலை 129
இணையுறவுக்கெழு 129
இணையொலி 110
இத்-உல்-பிதிர் 138
இத்தாலி 130
இத்தாலி நாட்டில் கல்வி 139
இத்தாலிய அரசியலமைப்பு 141
இத்தாலிய அரசியற் கட்சிகள் 141-144
இத்தாலிய இலக்கியம் 151-153
இத்தாலியக் கலைகள் 134
இத்தாலியக் கிளைமொழிகள் 151
இத்தாலியக் குடியரசு 139
இத்தாலியக் குடியரசுக் கட்சி 143
இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக் கட்சி 143
இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி 145
இத்தாலியத் தத்துவம் 146
இத்தாலியத் தாராளக் கட்சி 148
இத்தாலியத் தொழிற் கட்சி 149
இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி 150
இத்தாலிய மொழி 151, 152
இத்தாலிய மொழியும் இலக்கியமும் 151
இத்தாலியில் ஆசிரியர் பயிற்சி 141
இதயதுல்லா, சர் குலாம் உசேன் 154
இதாக்கா 154
இதாக்கா² 154
இதாகோ 154
இதிகாசங்கள் 157
இதிகாச பாகவதம் 159
இதிமத்-உத்-தௌலா 160
இதோபதேசம் 161
இந்தளூர் 161
இந்தாப்பூர் போர் 161
இந்திமொழி 162
இந்திமொழிச் சட்டநூல் விருது 193
இந்தி மொழிப் பகுதி 162
இந்திமொழி பேசாத மாநிலங்களின் இந்தி எழுத்தாளர்களுக்கு விருது 194
இந்திமொழி வளர்ச்சி 162
இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி 626
இந்திய அரசியலமைப்புச் சட்டம் 164
இந்திய அரசுப் பரப்பாய்வு 198
இந்திய அரசு விருதுகள் 193
இந்திய அருங்காட்சியகப் பிரிவுகள் 199, 200
இந்திய அருங்காட்சியகம் 198
இந்திய அலுவலகம் 201
இந்திய அழகியல் 203
இந்திய அழகியல் 205, 206
இந்திய அளவையியல் 206
இந்திய அளவையியலின் தோற்றம் 206
இந்திய அறிவாராய்ச்சியியல் 213
இந்திய அறிவியற் கழகம் 216
இந்திய ஆகாய விமானம் 508

இந்திய ஆட்சிச் சட்டம் 216
இந்திய ஆட்சிப்பணி 219
இந்திய ஆட்சிமுறை 222
இந்திய ஆட்சி முறையின் அடித்தளங்கள் 222
இந்திய ஆடலாசிரியர்கள் 226
இந்திய – ஆப்கானியர் 279
இந்திய – ஆரிய மொழிகள் 538, 540
இந்திய – ஆரியர் 279, 282
இந்திய – இசுலாமியக் கட்டடக்கலை 231
இந்திய இணையங்கள் 260
இந்திய இரயில்வேக்கள் 264
இந்திய இரயில்வேக்களின் தோற்றம் 264, 265
இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி 268
இந்திய இரயில்வே சட்டம் 933
இந்திய இராணுவத்தின் கட்டளைகள் 270
இந்திய இராணுவத்தின் பிரிவுகள் 270
இந்திய இராணுவம் 270
இந்திய இராணுவ விருதுகள் 271
இந்திய இருப்புப்பாதைச் சட்டம் 272
இந்திய இனங்கள் 278
இந்திய உச்ச நீதிமன்றம் 283
இந்திய உதவி நீதிமன்றம் 285
இந்திய உளநல நரம்பியல் நிறுவனம் 287
இந்திய உளநோய் நீக்கு உளவியலார் சங்கம் 287
இந்திய ஊரகங்கள் 287
இந்திய ஊழியர் சங்கக் கொள்கைகள் 290
இந்திய ஊழியர் சங்கப் பணிகள் 291
இந்திய ஊழியர் சங்கம் 290
இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி 291
இந்திய ஓவியக்கலை 292
இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம் 299
இந்தியக் கல்வி அமைப்பு 299
இந்தியக் கல்விக்குழு 304
இந்தியக் கல்வியறிவு 516
இந்தியக் கல்வியின் மகாசாசனம் 306
இந்தியக் கல்வி வரலாறு 305
இந்தியக் கலங்கரை விளக்கச் சட்டம் 309
இந்தியக் கலை 206
இந்தியக் காசியல் 310
இந்தியக் காடுகள் சட்டம் 315
இந்தியக் கால்நடைச் செல்வம் 316
இந்தியக் காவல் பணித்துறை 321
இந்தியக் கிராமிய நடனங்கள் 323
இந்தியக் கிலாபத்துத் தூதுக்குழு 327
இந்தியக் கிளர்ச்சி 328
இந்தியக் கிளர்ச்சிக்கான காரணங்கள் 329
இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டம் 330
இந்தியக் குடிமுறைப் பதிவு 333
இந்தியக் குடியரசு 334
இந்தியக் குடியேற்றங்கள் 335
இந்தியக் கூட்டுக் குடும்ப அமைப்பு 340
இந்தியக் கூட்டுறவு இயக்கம் 341
இந்தியச் சசானியர் நாணயங்கள் 346
இந்தியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனம் 347
இத்தியச் சமூகச் சுகாதார நிறுவனம் 348
இந்தியச் சாதிமுறை 348
இந்தியச் சான்றுச் சட்டம், கி.பி. 1872 354
இந்தியச் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகள் 362, 363
இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 361
இந்தியச் செலாவணி 363
இந்தியச் செலாவணிச் சட்டம் 364
இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பகுதிகள் 368, 369
இந்தியத் தண்டனைச் சட்டம் 366
இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 369
இந்தியத் தத்துவம் 374
இந்தியத் தந்திச் சட்டம் 382
இந்தியத் தர நிர்ணயச் சட்டம் 384
இந்தியத் தர வரையறை நிலையம் 384
இந்தியத் தாராளக் கூட்டமைப்பு 385
இந்தியத் திட்டங்கள் 500
இந்தியத் திட்ட நேரம் 386
இந்தியத் திருமண விலக்குச் சட்டம் 387
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை 390
இந்தியத் தொழில்கள் 393
இந்தியத் தொழில் நிதிக் கழகம் 401
இந்தியத் தொழில் மறுசீரமைப்புக் கழகம் 402
இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி 403
இந்தியத் தொழிலாளர் 404
இந்தியத் தொழிற்கடன், முதலீட்டுக் கழகம் 407
இந்தியத் தொழிற் சங்கங்கள் 409
இந்தியத் தொழிற்சங்கச் சட்டம் 410
இந்திய தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் 411
இந்திய தேசிய இராணுவம் 412
இந்திய தேசிய காங்கிரசின் மாநாடுகள் 416, 418
இந்திய தேசிய காங்கிரசு 415
இந்திய தேசிய காங்கிரசு 420, 421
இந்திய தேசிய கீதம் 420
இந்திய தேசிய கொடி 421
இத்திய தேசிய நூலகம் 422
இந்திய நகர்ப்புறக் குடும்பம் 424
இந்திய நடனக் கலை 424
இந்திய நடனத்தின் பிரிவுகள் 427
இந்திய நாடகக் கலை 438
இந்திய நாடகக் குழுக்கள் 458-463
இந்திய நிலப் பயன்பாடு 463
இந்திய நில வளங்கள் 463
இந்திய நூலகச் சங்கம் 464

இந்தியப் படைத் துறைப் பதவி நிரல் 271
இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள் 467
இந்தியப் பண்பாடு 468
இந்தியப் பண அங்காடி 470
இந்தியப் பல்கலைக் கழகங்கள் 473
இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம் 477
இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம் 1904 478
இத்தியப் பழங்கல்வி முறைகள் 479
இந்தியப் பழங்குடி மொழிகள் 483
இந்தியப் பித்தர் சட்டம் 488
இந்தியப் பிறப்புப்படி – வீதங்கள் 514
இந்தியப் புதையல் சட்டம் 490
இந்தியப் பெருங்கடல் 492
இந்தியப் பேரிணையம் 493
இந்தியப் பொருளியல் 498
இந்தியப் போக்குவரத்து 505
இந்திய – பாகிசுத்தான் உறவுகள் 509
இந்திய மக்கள் தொகை 512
இந்திய மக்கள் தொகை நெருக்கம் 515
இந்திய மக்கள் பெருக்கம் 505
இந்திய மருத்துவ மன்றச் சட்டம் 519
இந்திய மாதர் சங்கம் 521
இந்திய மாநிலங்கள் 192, 335
இந்திய மானிடவியல் கழகம் 521
இந்திய மானிடவியல் மதிப்பாய்வு 522
இந்திய மின்சாரச் சட்டம் 525
இந்திய மேலாண்மை 532
இந்திய மேலாண்மைக் கழகம் 531
இந்திய மைய இருப்பு வங்கி 532
இந்திய மைய இருப்பு வங்கி 403
இந்திய மொழிகள் 538
இந்திய மொழி நூல்கள் விருது 194
இந்திய மொழியியல் ஆய்வு 483
இந்திய மொழியின் எழுத்துகள் 542
இந்திய வயதுரிமைச் சட்டம் 542
இந்திய வயதுவந்தோர் கல்விக் கழகம் 543
இந்திய வரலாற்றுக் கழகம் 543
இந்திய வரலாறு, வேதகாலம் முதல் கி.பி. 1206 வரை 593
இந்திய வரலாறு, கி.பி. 1206–1526 603
இந்திய வரலாறு, கி.பி. 1526–1858 607
இந்திய வரலாறு, கி.பி. 1858–1950 624
இந்திய விடுதலைக் கழகம் 412
இந்திய விடுதலைச் சட்டம் 546
இந்திய விடுதலைப் போராட்டம் 630
இந்திய விலங்கியல் மதிப்பாய்வு 522
இந்திய வெடிபொருள் சட்டம் 549
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு 551
இந்திய வேளாண்மைத் துறை 501
இந்திய வேளாண்மை வளர்ச்சி 554
இந்தியா 568
இந்தியா பங்களாதேச எல்லை ஒப்பந்தம், 1974 641
இந்தியா பெயர்க்காரணம் 581
இந்தியாவில் ஆண்–பெண் விகிதம் 517
இந்தியாவில் ஐரோப்பிய வணிகக் குழுக்கள் 618
இத்தியாவில் தச்சுக்காரர் 642
இந்தியாவில் தேனியர் 643
இந்தியாவில் பண்பாட்டு ஒருமைப்பாடு 583
இந்தியாவில் பிரெஞ்சுக்காரர் 646
இந்தியாவில் போர்த்துகீசியர் 651
இந்தியாவில் மழையளவு 579
இந்தியாவில் யூதர் 653
இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாடு 582
இந்தியாவின் எல்லைகள் 569
இந்தியாவின் சமய ஒருமைப்பாடு 583
இந்தியாவின் தொன்மைப் பல்கலைக்கழகம் 473
இந்தியாவின் நிலவியல் ஒருமைப்பாடு 582
இந்தியாவின் மண்ணியல் அமைப்பு 570
இந்தியாவின் வருவாயில் வேளாண்மையின் பங்கு 556
இந்தியானா 654
இந்தியானா பாலிசு 656
இந்திர காளி 656
இந்திர காளியம் 657
இந்திர காளியர் 657
இந்திரசித்தன் 658
இந்திரத்துய்மன் 659
இந்திர நீல பருப்பதம் 659
இந்திரப் பிரத்தம் 660
இந்திர விழா 660
இந்திரன் 661
இந்திரன் (தொல்லியல்) 662
இந்திரா, முதலாம் 663
இந்திரா, இரண்டாம் 663
இந்திரா, மூன்றாம் 663
இந்திரா, நான்காம் 664
இந்திரா காந்தி 664
இந்திராகாந்தி தேசிய கலை மையம் 667
இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக்கழகம் 667
இந்திராசி பவன்லால் 668
இந்திரா சைலேந்திரர் 668
இந்திராணி 668
இந்திராயன் படைப்போர் 669
இந்திராவதி ஆறு 669
இந்திரியங்கள் 669
இந்திரியான்மவாதி 670
இந்து உரிமை இறக்கச் சட்டம் 716

இந்து உரிமை வயது அடையாமை காப்புச் சட்டம், 1956. 670
இந்துக்கள் 673
இந்துக்களின் மரபுரிமை 675
இந்துகுசு மலைத்தொடர் 674
இந்துகூட்டுக் குடும்பம் 674
இந்துச் சட்டம் 677
இந்துசமய அறக்கட்டளைச் சட்டம் 679
இந்து தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் 682
இந்து தத்தெடுப்பு, வாழ்க்கை பராமரிப்புச் சட்டம் 694, 695
இந்து திருமணச் சட்டம் 687
இந்து திருமணச் சட்டம் 10, 693
இந்துப்பூர் 693
இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டம், 1937. 714
இந்துப் பெண்களின் நலம் பேணும் சட்டங்கள் 693
இந்துமகாசபை 696
இந்து மதம் 697
இந்து மறுமலர்ச்சி 699
இந்து மறுமலர்ச்சி சங்கங்கள் 704, 706
இந்து முசுலீம் ஒப்பந்தம் 709
இந்துலூரி அன்னய தேவா 710
இந்துலூரி கண்ணய்யா 710
இந்து வாரிசுரிமைக் குறைபாடுகள் நீக்கச்சட்டம் 713
இந்து வாரிசுரிமைச் சட்டம் 710
இந்து வாரிசுரிமைச் சட்டம் 693. 694
இந்து வாரிசுரிமைத் திருத்தச் சட்டம், 1929. 714
இந்து விதவைகள் மறுமணச் சட்டம் 715
இந்து விதவைகள் மறுமணச்சட்டம் 693
இந்தூர் 717
இந்தோ-ஆரிய மொழிகள் 716
இந்தோ-ஆரிய மொழிகள் 483
இந்தோ-ஆரிய மொழிகள் காலம் 716
இந்தோ-ஆரியர் 719
இந்தோ-இரானிய மொழிகள் 719
இந்தோ ஐரோப்பிய மொழிகள் 723
இந்தோ-கிரேக்க நாணயங்கள் 721
இந்தோ சீன அரசியல் நிலை 724
இந்தோசீனா 726
இந்தோ-பாக்டீரியக் காசுகள் 313
இந்தோலா மகால் 247
இந்தோனேசிய எழுத்துமுறைகள் 735
இந்தோனேசியக் குடியரசு 729
இந்தோ னேசியக் குடியாட்சிக் கட்சி 731
இந்தோனேசியப் பொதுவுடைமைக் கட்சி 733
இந்தோனேசிய மொழி 732
இந்தோனேசியா 736
இந்தோனேசியாவில் கல்வி 745
இப்சன், என்றிக்கு 747
இப்சுவிச்சு 747
இப்சுவிச்சு² 747
இப்சுவிச்சு³ 747
இப்பாகிரேட்டசு 748
இப்பார்கசு 748
இப்பாலசு 748
இப்ராகிம் உசேன் குவாசா 748
இப்ராகிம் உருக்னுதீன் 749
இப்ராகிம் ஏதில்சா, முதலாம் 749
இப்ராகிம் ஏதில்சா, இரண்டாம் 749
இப்ராகிம் கர்டி 750
இப்ராகிம் நிசாம்சா 750
இப்ராகிம்-பின்-அரிரி 750
இப்ராகிம் லோடி 750
இபதத் கானா 752
இபன் ஆகல் 754
இபன் கால் தூன் 755
இபன் குதைபா 755
இபன் கோர்டாட் சுபே 755
இபன் சாதிக்கு சோசபு பென் சேக்கபு 756
இபன் பதூதா 756
இபாடான் 757
இபாமினாண்டசு 758
இபான் 758
இபின் பாச்சா 759
இபுகாவு 760
இபுலீசு நாமா 761
இபுனியன் படைப்போர் 761
இம்கோடெப்பு 762
இம்பால் 762
இம்பிரியல் பள்ளததாக்கு 762
இம்மடி நரசிம்மர் 762
இம்மத்சாகி அரசர்கள் 763
இம்மத்து நகர் 763
இம்மென்கீரனார் 764
இம்ராகுவன் 764
இம்லர், ஐன்றிக்கு 765
இமயமலை 765
இமயமலை 571
இமயமலை, அசாம் 767
இமயமலை ஆறுகள் 573
இமயமலை, குமான் 767
இமயமலைத்தொடர் 766
இமயமலை, நேபாள 757
இமயமலை, பஞ்சாபு 766
இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் 767
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 768
இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம் 769

இமாசலப் பிரதேசம் 769
இமாம் 773
இமானுவேல் காண்ட்டு 50
இமிலிபிராண்டே 773
இயக்கக் குறையுடைமை 774
இயக்கத்திறன் சோதனை 775
இயக்கர் 775
இயக்குநர் 776
இயக்குவினை 778
இயக்கூர்திச் சட்டம் 779
இயங்குகால மொழியியல் 782
இயங்குநிலை ஆய்வு 783
இயங்கு நூலகம் 786
இயங்கும் ஆய்வகம் 788
இயங்கு முறை ஆய்வு 785
இயட்சகானம் 913
இயந்திர மொழிபெயர்ப்பு 789
இயல்சாரா உளவியல் கருத்துகள் 791
இயல்திட்டவாதம் 791
இயல்நிலை கடந்த ஆற்றலும் சமய குருமார்களும் 792
இயல்பிறந்த ஆற்றல் பெற்றவர்கள் 796
இயல்பிறந்த இயற்கை 794
இயல்பு உரிமைகள் 797
இயல்பு சீராய்வு 799
இயல்பு பொருளியல் 802
இயல்பூக்கம் 805
இயலிசை நாடகம 808
இயலிசைப் புலவர்கள் 814
இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு 823
இயற்கைக் கோட்பாட்டினர் 824
இயற்கைக் கோட்பாடு 825
இயற்கைச் சட்டக் கோட்பாடு 840
இயற்கைச் சூழமைவு 827
இயற்கைத் தேர்வின் வகைகள் 835
இயற்கைத் தேர்வு 832
இயற்கை நிலை 835
இயற்கை நீதி 838
இயற்கை நெறி 840
இயற்கைப் பிரிவுகள், இத்தாலியின் 131. 132
இயற்கைப் பிரிவுகள், இதாகோ 155
இயற்கைப் பிரிவுகள், இமாசலப் பிரதேச 770
இயற்கை முதற் கொள்கையும் கல்வியும் 841
இயற்கையமைப்பு, இந்தியாவின் 571
இயற்கையமைப்பு, இராசசுத்தான் 960
இயற்கை வளங்கள் 842
இயற்கை வளங்கள், இந்திய 576, 577
இயற்பகை நாயனார் 843
இயற்பா 844
இயற்பெயர் 845
இயற்றமிழ் 846
இயன் மொழி வாழ்த்து 850
இயா 850
இயா கோபு சாமுவேல் 850
இயூகநாட்டுகள் 850
இயூரன் ஏரி 852
இயேசு காவியம் 853
இயேசு சங்கம் 859
இயேசுவின் போதனைகள் 858
இயைபு 860
இயைபுடன்பாட்டு உண்மைக்கொள்கை 863
இயைவித்தல் 865
இயோன்திரபசு 867
இர்கட்சுக்கு 868
இர்மா 868
இர்விங் வாசிங்டன் 868
இர்வின் பிரபு 869
இர்வின், வில்லியம் 871
இரகசியச் சங்கங்கள் 871
இரகசியச் சங்கங்கள்2 872
இரகுநாத சேதுபதி 876
இரகுநாத சேதுபதி ஒருதுறைக் கோவை 878
இரகுநாத நாயக்கர் 878
இரகுநாதராவ் 881
இரகுமான் முசிபுர் 882
இரகுவம்சம் 882
இரங்கப்பிள்ளை கவிராயர் 883
இரங்கற்பா 883
இரங்கூன் 884
இரங்பூர் 885
இரசல், பெர்டிராண்டு 886
இரசலின் மொழிக் கொள்கை 887
இரசவாகினி 890
இரசவாதம் 890
இரசுபுட்டின் 892
இரசை வடமலையப்பப்பிள்ளை 892
இரஞ்சித் சிங்கு 893
இரஞ்சிதம், அ. 894
இரட்சணியக் குறள், 895
இரட்சணியச் சிந்து 905
இரட்சணிய மனோகரம் 896
இரட்சணிய யாத்திரிகம் 896
இரட்டிப்பு 897
இரட்டை அமைப்புக் குடியேற்ற நகரங்கள் 36
இரட்டைக் கணக்கு முறை 897
இரட்டைக் காப்பியங்கள் 891
இரட்டைக் குடியுரிமை 901

இரட்டைக்கை இணையாவினைக்கை 902
இரட்டைப் பதிவுமுறை 905
இரட்டைப் பதிவு முறை 898
இரட்டைப் பிணைவு 907
இரட்டைப் புலவர் 907
இரட்டை மணிமாலை 908
இரட்டை யொலிப்பு 909
இரட்டில்டு. இராபர்ட்டு 909
இரண்டாம் இராசசிம்ம பாண்டியன் 910
இரண்டாம் உலகப் போர் 35
இரண்டாம் சடையவர்மன் குலசேகர பண்டியன் 911
இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 911
இரண்டாம் சடையவர்மன்வீர பாண்டியன் 912
இரண்டாம் நரசிம்மன் 912
இரண்டாம் பெரும் பிடுகு முத்தரையன் 912
இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 914
இரண்டாம் வரகுண பாண்டியன் 914
இரண்ணவதி 916
இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் 916
இரணியவதைப்பரணி 167
இரணியன் 917
இரணியாக்கன் 917
இரத்தக்காணி 918
இரத்தத்தானம் 918
இரத்தம் சிந்தும் சண்டைகள் 921
இரத்தினக் கவிராயர் 925
இரத்தினக் கவிராயர்[2] 925
இரத்தினகிரி 925
இரத்தினகிரி உலா 926
இரத்தினசாமி, எம். 927
இரத்தினத் தீவம் 928
இரத்தினம்பிள்ளை. டி. சான் 928
இரத்தினவேலு முதலியார் 929
இரத்துச் செய்தல் 929
இரத யாத்திரை நடனம் 326
இரதி 930
இரதிபாவம் 931
இரமணர் 931
இரயில் கட்டணத் தீர்ப்பாயம் 933
இரயில் வண்டிக்கலம் 934
இரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்புக் கழகம் 269
இரயில்வே கட்டுமானத் தொழிலகம் 269
இரயில்வே குழு 264
இரயில்வே தீர்ப்பு மன்றம் 274
இரயில்வே நிருவாகம் 935
இரயில்வே பணியாளர் கல்லூரி 269
இரயில்வே பாதுகாப்புப் படை 939
இரயில்வே பாதுகாப்புப் படைச்சட்டம் 939
இரயில்வே மண்டலங்கள் 265
இரவிவர்மா 940
இரவீச மரபினர் காதை 941
இரவீந்திரநாத தாகூர் 941
இரவீந்திரநாத தாகூர் 420, 437, 708
இரவுலத்து சட்டம் 417
இராக்கதம் 944
இராகமாலிகை 944
இராகவய்யங்கார், மு. 945
இராகவய்யங்கார், ரா. 946
இராகவர் பிள்ளைத்தமிழ் 947
இராகவன், அ. 948
இராகவாச்சாரியார் 948
இராகவேந்திர சுவாமி 948
இராகுலன் 949
இராங்கு ஆட்டோ 950
இராங்கே. இலியோபோல்டுவான் 951
இராச்சிய வர்த்தனர் 951
இராசக்கட்டம் 952
இராசக்கட்டம்[2] 953
இராசக்கட்டம்[3] 953
இராசகிரி 953
இராசகுரு 955
இராசகேசரி 955
இராசகேசரி நல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம் 956
இராசகோபால பிள்ளை. கோமளபுரம் 956
இராசகோபால முதலியார். பி. எஸ். 956
இராசகோபாலன், கு.ப. 956
இராசகோபாலாச்சாரி 626, 705
இராசகோபாலாச்சாரி, சக்கரவர்த்தி 957
இராசகோபாலையங்கார். வே. 959
இராசசிம்மன் 959
இராசசுத்தான் 960
இராசசுத்தான் ஓவியங்கள் 963
இராசசுத்தான் கோயில்கள் 963
இராசசுத்தான் நடனங்கள் 326
இராசசுத்தானி மொழி 965
இராசசூயம் 966
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி 967
இராசசேகரா 968
இராசதரங்கிணி 968
இராச நாயகம் 970
இராசநாயகம், செ. 970
இராசப்பக் கவிராயர் 970
இராசப்ப நாவலர் 970
இராச பவித்திரப் பல்லவதரையன் 971
இராசபுத்திர ஓவியங்கள் 298
இராசம், எஸ். 971

இராசம், டி.எஸ். 972
இராசம் ஐயர். பி.ஆர். 973
இராசமணிமாலை 974
இராசமன்னார், பி.வி. 974
இராசமாணிக்கம் பிள்ளை 974
இராசமாணிக்கனார், மா. 975
இராசாராம் மோகன்ராய் 700, 707
இராசுட்ரிய மனாவ் சங்கராலயா 525
இராசேந்திரப் பிரசாத்து 633
இராட்கிளிப்புத் தீர்ப்பு 642
இராதாகிருட்டிணன் குழு 308
இராபர்ட்டு கிளைவு 619
இராபர்ட்டு புரூசு புட்டு 585
இராமகிருட்டிண இயக்கம் 701
இராமகிருட்டிண பரமஅம்சர் 701
இராமசாமி, ஈ.வே. 705
இராமலிங்க அடிகள் 708
இராமாயணம் 157, 158, 323, 583
இராமானுச நூற்றந்தாதி 845
இராமானுசர் 382
இராமையாப் பிள்ளை 230
இராவணன் 658
இரானிய மொழி 719, 720
இரிச்சர்டு பாக்சுட்டர் 86
இரிச்சர்டு வாக்னர் 11
இரிப்பன் பிரபு 625
இரீகுக் குழு 407
இருட்டறை நிகழ்ச்சி 619
இருண்ட காலம் 134
இருத்தல் கொள்கை 149
இருப்புப்பாதைச் சட்ட வகைகள் 272, 279
இருப்புப்பாதை நிருவாகம் 275, 279
இரும்பு கனரகத்தொழில் 395
இரெய்சிலி 278, 277
இரைசுலி, எசு.எச். 716
இல்டன்யங்குக் குழு 365
இலக்கிய வரலாறு 207
இலக்னோ ஒப்பந்தம் 709, 710
இலங்கை 338
இலட்சுமணசாமி கல்விக்குழு 308
இலெனாயிர் 646
இறுதிக் கடன் ஈவோன் 535
இறைமூவொருமைக் கோட்பாட்டாளர் 858
இன்பியல் இசை நாடகம் 11, 12
இனவிருத்திக் கால்நடைகள் 317
ஈசுவர சந்திர வித்தியாசாகர் 707
ஈரானிய-இசுகைத்தியர் 282
ஈரொற்று உடனிலை 98
உச்சநீதிமன்ற அதிகாரங்கள் 283, 284
உச்சநீதிமன்றம் 183
உடன்கட்டையேறுதல் 702
உடு அறிக்கை 306
உண்டியல் சந்தை 471
உண்மையின் கட்டளை விதி 15
உணவு உற்பத்தித் திட்டங்கள் 566
உதயசங்கர் 430
உதயன் பண்டித விருது 197
உப்புச் சத்தியாக்கிரகம் 631
உபநிடதங்கள் 375,376
உமாயூன் 252, 607, 608
உயர்கல்வி, இத்தாலியில் 141
உயர்கல்வி, இந்தியாவில் 303
உயர்கல்வி, இந்தோனேசியாவில் 746
உயர்கல்வி, பண்டைய இந்தியாவில் 473
உயர்கல்வி, பண்டைய தமிழகத்தில் 481
உயர்நிலைப் பள்ளிக் கல்வி, இந்தியாவில் 301, 302
உயிரியம் 796
உரிமை ஆவணச் சட்டம் 367
உருசியப் புரட்சி 406
உலக மொழிகள் 723
உலகாயதர்கள் 208
உலோகக் கலைஞர் தேசிய விருது 196
உலோடி மரபு 237, 607
உவமானம் 215
உள்நாட்டு அரசாங்கம் 218
உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து 507
உள்ளாட்சி அரசாங்கங்கள் 225
ஊரகச் சமுதாயம் 287, 288
ஊரகமயமாதல் 499
ஊரக வங்கி ஆய்வுக் குழு 345
எட்சகானம் 449
எட்டு தாயி பாவங்கள் 440
எட்வர்டு மெக்லகான் அறிக்கை 343, 344
எமனோ 488
எர்சல் குழு 364
எவரசுட்டு 571
எழுத்தறிவின்மை 289
என்றி தேவின்சர் 361
ஏதுப்போலிகள் 211
ஏழு அரசர் கல்லறை 249
ஏற்றுமதிப் பொருள்கள் 557
ஐதர் அலி 621
ஐந்தாண்டுத் திட்டங்கள் 640
ஐந்தாண்டுத் திட்டங்களும் தொழிலாளர்களும் 408, 409
ஐந்தாண்டுத் திட்டங்களும் போக்குவரத்தும் 266, 267
ஐந்தாண்டுத் திட்டம், முதலாம் 500

ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாம் 562
ஐந்தாண்டுத்திட்டம், மூன்றாம் 562
ஐந்தாண்டுத் திட்டம், நான்காம் 563
ஐந்தாண்டுத் திட்டம் ஐந்தாம் 564
ஐந்தாண்டுத் திட்டம், ஆறாம் 564
ஐந்தாண்டுத் திட்டம், ஏழாம் 501
ஒடிசி 435
ஒத்துழையாமை இயக்கம் 631
ஒய்சாளர் ஓவியக்கலை 296
ஒரியா நாடகம் 457
ஒற்றைக்கை அபிநயம் 903
ஒன்றிய பொதுப்பணிக் கழகம் 322
ஓட்டந்துள்ளல் 324
ஓட்டுநர் உரிம முறைகள் 780
ஓல்கார் மரபு 717
ஓவிய நூல்கள் 292
கங்கை 574
கட்டடக் கலைக் கூறுகள் 231
கட்டாயக் கல்வி மசோதா 307
கடன் கட்டுப்பாடுகள் 535
கண்ணகி 900, 901
கண்ணதாசன் 709, 854
கண்ணாடித் தொழில் 398
கணக்குப் பதிவியலின் இலக்கணம் 905
கணக்குப் பதிவியலின் குறிக்கோள்கள் 906
கதகளி 433, 442
கந்தியார் பாடல் 93
கப்பல் போக்குவரத்து 507
கபீர் 821
கம்போடியா 337
கயத்தா பண்பாடு 591
கரகம் 325
கரிகாற் சோழன் 41
கரிபால்டி 137, 141
கருத்துலகம் 81
கருவூல உண்டியல்கள் 472
கல்கத்தாப் பல்கலைக் கழகக் குழு 475
கல்திட்டை 67
கல்யாண சுந்தரனார், திரு வி. 708
கல்லறை வகைகள் 67, 68
கலங்கரை விளக்க அதிகாரக் குழு 309
கலைமாமணி விருது 197
கலையும் அழகும் 204
கலைவாணர் 459
கற்காலக் கருவிகள் 586, 588
கற்பதுக்கை 67
கன்னட நாடகம் 458
கனிசுகர் 598
காங்கிரசு இயக்கத்தின் பிளவு 420
காசுபெரி 143
காசுமீரம் 255
காண்டலளவை 200
காதல் காப்பிய காலம் 169
காந்தி-இர்வின் ஒப்பந்தம் 418, 625, 871
காந்தியடிகள் 307, 327, 386, 417, 630, 704
காந்தேசம் 250
காப்பிய இலக்கியம் 848
காமா அம்மையார் 421
கால்டுவெல் 488, 708
கால்நடை அறிவியலும் ஆராய்ச்சிகளும் 553
காலிங்கராய பிள்ளை 644
காலின்சு 39
காவிரிப்பூம்பட்டினம் 660
காவேரி 574
காளிதாசர் 601
கிராமசேவகர் விருது 196
கிராமசேவகியர் விருது 196
கிராமிய நாடகக்கலை வடிவங்கள் 442
கிரிப்சு தூதுக்குழு 419
கிரிமியப் போர் 137
கிருசி பண்டித விருது 195
கிருட்டிண ஆட்டம் 442
கிருட்டிணமூர்த்தி, சே. 374
கிருட்டிணன், என்.எசு. 459
கிருட்டிணா நதி 574
கில்சி மரபு 234, 604
கிலாபத்து இயக்கம் 327
கிழக்கிந்தியப் புதிய கற்காலம் 589
கிழக்கிந்திய வாணிகக் கழகம் 201
கிழக்குத் தொடர்ச்சி மலை 571, 573
கீதாஞ்சலி 943
கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூலகம் 43
குகா, பி.எசு. 278, 280, 522
குசராத்து 241
குசராத்து மாநில நடனங்கள் 325
குசானர்கள் 598
குசானர்கால ஓவியங்கள் 293
குசானர் நாணயங்கள் 312
குஞ்சன் நம்பியார் 324
குடியரசுத் தலைவர் அதிகாரங்கள் 178, 180
குடியரசுத் தலைவர் தேர்வு முறை 175
குடியிருப்பு முன்னேற்ற நிதிக் கழகம் 410
குதுப்மினார் 233
குப்தப் பேரரசு 600
குப்தர் 313
குப்தர்கால ஓவியங்கள் 293, 294
குப்தர்கால நாணயங்கள் 313
கும்பமேளா 573

குர்ரே, சி.எசு. 350
குருகுல ஆசிரியர்கள் 479
குருகுலக் கல்வி 471
குருகுலப் பள்ளிகள் 480
குருதேவர் 941
குல்பர்க்கா கட்டடங்கள் 248
குலோத்துங்க சோழன், மூன்றாம் 42
குவிதல் படிமலர்ச்சி 126, 127
குழந்தைக் கொலைத் தடுப்பு 703
குழந்தைத் திருமணத் தடை 703
குழந்தைத் தொழிலாளர் 405
குறவஞ்சி நாடகம் 808, 809
குறியான் உய்த்துணர்தல் 210
குறியீட்டு இடைவினைக் கோட்பாடு 103
கூச்சுப்புடி 811, 812
கூட்டாட்சி நீதிமன்றம் 218, 219
கூட்டுயிர் 119
கூட்டுறவுச் சட்டங்கள் 344
கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி 345
கூட்டுக்கம் 806
கூடியாட்டம் 813, 814
கூத்தம்பலம் 442
கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் 901
கெமர் மக்கள் 725, 727
கேம்பநெல்லா 147
கேரோன் 646
கைவினைஞர்களுக்கான தேசிய விருது 195
கொடகு 648
கொரியா 339
கொன்யாக்கு நாகர் 923
கோண்டுப் பழங்குடி 326
கோத்தாரிக் கல்வி அறிக்கை 303, 308
கோதாவரி 574
கோதிக்கலை 206
கோபால் இரத்தின விருது 194
கோபால கிருட்டிண கோகலே 704
கோபால கிருட்டிணபாரதி 817
கோயில் கல்லூரிகள் 474
கோயில்களின் பேரரசன் 25
கோல்கொண்டா கட்டடங்கள் 249
கோவலன் 900, 901
கௌடில்யர் 596
சகாங்கீர் 255
சங்க இலக்கியம் 848
சங்கரர் 382
சங்கீத இரத்தினாகரம் 10
சசானிய நாணயங்கள் 347
சட்டமியற்றுதல் 188
சணலாலைத் தொழில் 396
சத்தியாக்கிரக இயக்கம் 417
சத்திரியர் 349
சதம் மொழிகள் 722, 723
சதிர் நாட்டியம் 226
சந்தா சாகிபு 647
சந்திரகுப்தர் 596, 597
சப்தா 215
சப்பான் 339, 413
சப்பிந்தா உறவு 690
சம்சயம் 215
சம்பா 337
சமசுகிருதம் 718
சமணக் கல்வி 482
சமணத் தத்துவம் 377
சமணர்கள் 215
சமுத்திர குப்தர் 600
சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் 782
சமூக இடைவினை வகைகள் 104, 105
சயாம் 336
சர்க்கார், எசு.எசு. 278, 282
சர் தாமசு இராலே 478
சரசுவதி மகால் 297
சரெய்யாக் குழு 344
சவகர்லால் நேரு 418, 512, 581
சாகிவால் 318
சாங்கியத் தத்துவம் 380, 381
சாசகான் 256, 258, 298
சாட்லர்குழு அறிக்கை 307
சாணக்கியர் 596
சாத்துரா நாடகம் 447
சாத்புரா மலை 571
சாதவாகனர் 292, 294, 313, 599, 601
சாதிக் குறைபாடு நீக்கச் சட்டம் 713
சாபெரல்லா 147
சாமி மசூதி 258
சார்சு கேம்ப்பெல் 484
சார்டீனியா 132
சார்பொலி 118
சார்மினார் 250
சாருவாகத் தத்துவம் 377
சால்பை உடன்படிக்கை 621, 622
சாலைப் போக்குவரத்து 506
சாவாத் தீவு 335, 470
சான் இலாக்கு 837
சான்சி இராணி 624
சான்பூர் 240
சிசரோ 838
சிசிலி 132
சித்தர்கள் 818

சிதம்பரனார், வ. உ. 417
சிந்து 574
சிந்து நதி ஒப்பந்தம் 510
சிந்துவெளி நாகரிகம் 328, 624
சிப்பாய்க் கலகம் 592
சிம்லா ஒப்பந்தம் 512
சியாமா சாத்திரி 817
சியார்சு சிம்மல் 105
சிரீநாராயண குரு 767
சில்லாங்குப் பீடபூமி 706
சிலப்பதிகாரம் 5, 6, 899
சிவப்பு நிற மட்பாண்டப் பண்பாடு 592
சிவபெருமான் 425
சிவாசி 613
சிவாலிக்குக் குன்றுகள் 766
சிற்றிலக்கியம் 849
சிறப்பு ஏற்றுமதியாளர் விருது 193
சிறிய சுந்தாத் தீவுகள் 740
சீதங்கள் துள்ளல் 324
சீவன் இரட்சைப் பதக்கம் 195
சீனா 338
சீனோ-திபேத்திய மொழிகள் 538, 539
சுதந்திர பாரதத்தின் கொடி 422
சுதேச அரசுகள் 216
சுப்பிரமணிய பாரதியார் 709
சுப்புலட்சுமி 706
சும்மா மகூதி 242, 246
சுமத்திராத் தீவு 335, 740
சுமிருதிகள் 677
சுயராச்சியக் கட்சி 418
சுல்தான் காரிக் கல்லறை 233
சுவரன் மாறன் 913
சூத்திரர் 349
சூனியம் 796
சூனியவாதக் குழாம் 378
செங்கோட்டை 258
செஞ்சிலுவைச் சங்கங்களின் பன்னாட்டு அமைப்பு 361
செம்பு உலோகக் காலம் 590
செயலுறுத்தும் நீதிப் பேராணை 171
செர்சா 608
செர்சா காலக் கட்டடங்கள் 251
செலாவணிக் கூடை 366
செவ்வியல் நாடகம் 439
செலிபீசு 740
சென்றம் மொழிகள் 721, 723
சென்னை இந்து இருதுணைமணத் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டம் 695, 696
சேக் முசிபுர் இரகுமான் 512
சேக் முபாரக்கு 753
சேம்பர்லின் குழு 364
சைமன் குழு 386
சையது மரபினர் 237
சையது மரபு 606
சைலேந்திரப் பேரரசு 337
சைவசித்தாந்தத் தத்துவம் 382
சைன சமயம் 596
சொக்கலிங்கப் பிள்ளை 228
சோட்டா சோனா மகூதி 240
சோர்வே பண்பாடு 591
சோழர்கால ஓவியங்கள் 296
சோழர்கால நாணயங்கள் 314
சௌத்தாந்திரக் குழாம் 378
சௌ நாடகம் 448
ஞானக்கோவை 73
ஞானசுநானம் 856
தக்கர்கள் 704
தக்க விலை 87
தக்காண ஆறுகள் 573, 574
தக்காணம் 248
தகாநிலை வற்புறுத்தல் 17
தகாவட்டி 88
தகுதி முறை வினவும் நீதிப்பேராணை 172
தஞ்சை நாயக்கர் 879
தஞ்சை நால்வர் 226
தட்ப வெப்ப நிலை, இந்திய 579
தடையுறுத்தும் நீதிப்பேராணை 171
தண்டிப் பயணம் 481
தணிக்கை 373
தத்து எடுத்தல் 682, 683
தமாசா நடனம் 446
தமிழ்ச்சங்கம் 92, 474
தமிழ் நாடகம் 459
தமிழக வேளாண்மை வளர்ச்சி 565
தமிழிலக்கியத்தில் அளவையியல் 208
தயானந்த சரசுவதி சுவாமிகள் 701
தரங்கம்பாடி 644
தருக்கம் 215
தருமச் சக்கரம் 422
தல்கவுசிப் பிரபு 623
தலைமைத் தணிக்கை அதிகாரியின் பணிகள் 372
தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் 782
தனிமனிதன் இயல்பூக்கங்கள் 806
தனியொலிகள் 117
தாசியாட்டம் 437
தாசுகண்டு ஒப்பந்தம் 511
தாசுமகால் 257
தாமசு அக்கினாசு 84, 85, 87, 146

தாமசு ஆப்சு 836, 837
தார் பாலைவனம் 575
தார்வின் 834
தார்வின் புதுக்கொள்கை 834
தாளவியல் 4
திண்ணைப் பள்ளிகள் 483
திபேத்து 338
திபேத்திய-பர்மிய மொழிகள் 483
தியாகராசர் 816
திராவிட மொழிகள் 483, 487, 538, 541
திராவிடர் 278, 277
திரித்துக் காட்டல் 19
திரிபிடகத் தொகுப்பு 24
திருப்புறம்பியப் போர் 915
திருமலை நாயக்கர் 876
திருமலை நாயக்கர் அரண்மனை 260
திருவந்தாதி 844
திருவாளப்புத்தூர்ச் சாமிநாதப் பிள்ளை 228
திருவிருத்தம் 844
திரைப்பட விருது 197
திறனறி சோதனைகள் 44
தீர்ப்பாயங்கள் 190
தீர்வகம் 537
தீன்-தர்வாசா 244
தீனபந்து மித்திரர் 707
துக்காராம் 820
துக்ளக்கு மரபு 235, 605
துக்ளகாபாத்து 235
துணைக் கடன் சந்தை 472
துணைக் குடியரசுத் தலைவர் 181
துணைப்படைத் திட்டம் 621, 622
துப்ராய் 295
துபே, எசு.சி. 288
துமாசு 646
துள்ளல் நடனம் 324
தூப்ளே 646
தெய்வத்திரு நகரம் 80
தெய்விக இன்பியல் 146
தெருக்கூத்து 323, 449
தெலுங்கு நாடகம் 459
தென் ஆசியநாடுகளின் மண்டலக் கூட்டுறவுச் சங்கம் 639
தென்னக இசையியல் 6-8
தென்னிந்தியக் கல்லறைகள் 66, 67
தேசியத் திட்டங்கள் 553
தேசியத் திரைப்பட விருது 195
தேசிய நூலகப் பிரிவுகள் 423
தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கூடம் 553
தேயிலைத் தொழில் 397
தேர்தல் ஆணைக்குழு 192
தேர்வாணைக்குழு 183
தேவதாசிகள் 430
தேவர்கள் ஆடிய கூத்துகள் 425
தைலர், இ.பி. 795
தொடக்கக் கல்வி, இந்தியாவில் 301
தொடர்ச்சித் தணிக்கை 78
தொப்பிக்கல் 68
தொல்காப்பியம் 6
தொல் நடுக்கடல் இனத்தவர் 280
தொல்லியல் பரப்பாய்வுத்துறை 391
தொழிலாளர் சட்டங்கள் 405
தொழிற்கல்வி, இந்தியாவில் 302
தொழிற்பயிற்சிச் சட்டம் 405
தொன்மை ஆசுத்திரேலிய இனம் 280, 282
தொன்மை ஆசுத்திரேலியர் 280
தோகூர்ப் போர் 879
தோசோ 413
தோற்பாவை நிழற்கூத்து 452, 453
நடிப்பு வகைகள் 429
நடுக்கடல் இனத்தவர் 280
நடுவண் ஆட்சியமைப்பு 223
நர்மாலாக் கோட்டை 763
நவாப்புகளின் கூட்டங்கள் 259
நறுமணப் பொருள் தீவுகள் 643
நாட்டச் சோதனைகள் 44
நாட்டிய இயல் 429
நாடக ஆசிரியர்கள் 439, 455
நாடக வகைகள் 454
நாடாளுமன்றம் 182
நாதர்சா 619, 617
நாலந்தாப் பல்கலைக்கழகம் 473, 602
நான்டெசு கட்டளைகள் 851
நிக்கலசு ஓர்சுமி 85, 88, 89
நிதிமானியம் 497
நியாயக் கொள்கை 215
நியாயத் தத்துவம் 378, 379
நியூகினி 740
நில ஆக்கத்திறன் 585
நில ஈட்டல் சட்டம் 316
நில எடுப்புச் சட்டம் 526
நிலச் சீர்திருத்தச் சட்டம் 566
நிலப்பிரிவுகள், இந்தியானா 654
நிலமானிய முறை 91
நிலையான பொருளாதாரம் 783
நீதி இலக்கியம் 848
நீதித்துறை 218
நீதிப் பேராணைகள் 170 172
நீராவி இயக்கு பொறிகள் 934

நீல நீர்க்கொள்கை 651
நுண்ணிய கற்காலம் 587. 588
நூயர் பழங்குடி 924
நூல்கள் ஒப்படைப்புச் சட்டம் 423
நூலகச் சங்கங்கள் 465, 466
நெப்போலியன் 137
நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை 172
நேதாசி சுபாசு சந்திர போசு 413
நௌடங்கி 445
பக்திக் காப்பிய காலம் 163
பகதுூர்சா 624
பகவத்கீதை 159, 376
பங்கிம் சந்திர சட்டர்சி 707
பசுமைப் புரட்சி 561
பஞ்சமரபு 6, 425
பஞ்சாபி நடனங்கள் 326
பஞ்சேந்திரியங்கள் 669
பண்டைக்காலத் தமிழர்களின் ஆடல்கள் 427
பண்ணியல் 4, 9
பண்பாட்டு மேம்பாடு 352
பத்திமை இலக்கியம் 848
பத்மசிரீ விருது 196
பத்மபூசன் விருது 196
பத்ம விபூசன் விருது 196
பம்பாய் இந்துக்களின் மணவிலக்குச் சட்டம் 695
பயிர்ச்சாகுபடி முறைகள் 552
பர்மா 337
பர்ரோ 486
பர்னட்டு 339
பரத நாட்டியம் 431, 435, 436
பரமவீர சக்கரம் 196
பரலோகக் கோட்பாடு 81
பருத்தித் தொழில் 394
பருவக் காற்றுகள், இந்தியாவில் 580
பருவங்கள், இந்தியாவில் 579
பல்கலைக் கழகக் குழு 475
பல்கலைக் கழகச் சட்டம் 307
பல்கலைக் கழகச் சட்ட முன்வரைவு 475
பல்லவர்கால ஓவியங்கள் 295
பல்லவர்கால நாணயங்கள் 315
பவணந்தி முனிவர் 480
பவாய் 444
பழங்கற்காலம் 584
பழங்குடியினரின் இரத்தச் சண்டைகள் 921, 923
பழமைச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம் 392
பறயந்துள்ளல் 324
பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் 406
பன்னாட்டுப் பணவாக்க நிதி 406
பாகவதம் 13, 323
பாகவத மேளா 450, 808, 810
பாட்காய் உலூாசாய் குன்றுகள் 767
பாடத்திட்டம், இந்தோனேசியாவில் 746
பாடலிபுத்திரம் 110, 111
பாணினி 311
பாபர் 607
பாபிங்டன் இசுமித்துக்குழு 364
பார்ப்பனர் 349, 351
பார்வார்டு பிளாக்கு 413
பாரத இரத்தின விருது 194
பாரதக் கூத்து 449
பாரதிதாசன் 709
பால்கே விருது 196
பால்டி மக்கள் 282
பால்பன் 604
பால்பன் கல்லறை 234
பாலித் தீவு 336, 738, 739
பாலுணர்வூக்கம் 806
பாவைக் கூத்துகள் 452, 454
பானர்சி, டபிள்யூ, சி. 416
பானாசு ஆற்றுப் பண்பாடு 591
பானிப்பட்டுப்போர், முதலாம் 607
பானிப்பட்டுப்போர், இரண்டாம் 608, 609
பானிப்பட்டுப்போர், மூன்றாம் 601
பிக்கோ 146
பிசினோ 146
பிசுதோ மொழி 727
பிரமகிரிக் கல்லறைகள் 68
பிரம சமாசம் 709
பிரமஞான சபை 700
பிரமபுத்திரா 574
பிராகிருதம் 718
பிராட்லி 50
பிரார்த்தனை சமாசம் 700
பிரான்சாயி மார்ட்டின் 646
பிரிட்டன் போர் 35
பிரெஞ்சுப் புரட்சி 137
பிரெஞ்சு வணிகக் குழுவினர் 618
பிரோசா 237
பிளாசிப்போர் 620
பிளாவாட்சுகி அம்மையார் 702
பிளேட்டோ 49, 81, 863
பிற்பழங்கற்காலம் 587
பீடார் கட்டடங்கள் 249
புத்த சமயம் 596
புத்த பிட்சுகள் 481, 482
புதிய இந்திய நாடகம் 461
புதிய இலக்கியங்களுக்கான விருது 196
புதிய கற்காலம் 588

புதிய பிளேட்டோ கொள்கை 23, 79, 80
புது இந்திய மொழிக் காலம் 540
புதுமைப்பித்தன் 709
புதைக்கும் முறைகள் 65, 66
புரந்தரதாசர் 819
புருனோ 147
புலமைத்துவம் 83
புலனறிவு 213
பூணான் 337
பூதேவ முகோபாத்தியாயர் 707
பெத்லேகேம் 854
பெர்ட்டிராண்டு ரசல் 866
பெர்சிய மொழி 720
பெர்னார்டினோ தெலிசியோ 147
பெரிய சுந்தாத் தீவுகள் 739
பெருங்கற்காலம் 592
பேரரசரின் பெரும்போர் 105
பேரரசு தாலர் தொகுப்பு 363
பொதுக்கணக்குக் குழு 372
பொதுமைக் கருத்து 82
பொம்பொனாசி 147
பொம்மலாட்டம் 324, 325
பொய்க்கால் குதிரையாட்டம் 325
பொருளாதாரம், இத்தாலிய 134
பொருளாதாரம் – இதாகோ 156
பொருளாதாரம் – இந்தியானா 655
பொருளாதாரம், இந்தோனேசியா 741
பொருளாதார வளர்ச்சிப் பணிகள் 537
பொன்மாற்றுத்திட்டம் 364
போப்பாண்டவர் கிரிகரி 339
போர்க் குழு 333
போர்னியோத் தீவு 336, 739
பௌத்தக் கல்வி முறை 481
பௌத்தக்கல்வி மையங்கள் 473
பௌத்தத் தத்துவம் 378
பௌலர் குழு 364
மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 95
மகளிர் சொத்துரிமை 715
மகாசைரசு 596
மகாநதி 574
மகாபாரதம் 158, 323, 583
மங்கோலியர் 279, 280
மண்டலப் பாணிக் கட்டடங்கள் 238
மண், நீர்வள ஆராய்ச்சி 552
மணவிலக்கு 387
மணவிலக்கு உரிமைகள் 691, 692
மணிப்புரி நடனம் 436
மணிப்புரி நாடகம் 456
மணிமேகலை 900, 901
மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் 184
மத்திய ஆசியா 338
மத்தியப் பள்ளிகள் 300, 302
மத்திய, மாநில உறவு முறைகள் 188
மத்துவர் 382
மதுசூதன தத்தா 707
மதுரை 92
மதுரை நாயக்கர் 879
மரபுவழி நம்பிக்கைகள் 289
மராத்தி நாடகம் 457
மராத்தியரின் எழுச்சி 613
மலாய் – பாலினீசிய மொழிகள் 734
மலாய் மொழி 734
மலாயா 336
மலினோசுக்கி, பி. 796
மலையாள நாடகம் 458
மவுண்ட்டுபேட்டன் பிரபு 510, 548
மறைஞானம் 23
மன்மதன் 930, 931
மாக்கியவல்லி 147
மாகாண அரசாங்கங்கள் 217
மாகாணச் சட்ட சபைகள் 217
மாட்சிமையுள்ள அருங்காட்சியகம் 198
மாத்யாமிகா வாதக்குழாம் 378
மாதிரி நூலகச் சட்டம் 466
மாநில அரசாங்கங்கள் 225
மாநிலங்களுக்கிடையே நல்லுறவு 189
மாநிலங்களிடை வணிகத் தொடர்புகள் 189
மார்க்சியக் கொள்கை 148
மாரிமுத்தாப்பிள்ளை 815
மாரெட்டு, ஆர்.ஆர். 796
மாவட்டங்கள், இராசசுத்தான் 961
மாளவப் பண்பாடு 591
மாளவம் 245
மின் இயக்கு பொறிகள் 934
மின் வழங்கல் முறை 530
மீமாம்சைக் கொள்கையினர் 215
மீமாம்சைத் தத்துவம் 381
மீரா 820
மீனாட்சி சுந்தரம்பிள்ளை 226, 708
முகமது கோரி 603
முகமதுபின் துக்ளக்கு 236, 606
முசோலினி 138
முத்திரையிட்ட காசுகள் 310, 311
முத்துக் குமாரப் பிள்ளை 226
முத்துத்தாண்டவர் 814
முத்துலட்சுமி 706
முதல் இசை நாடகம் 11
முதல் உலகப் போர் 33, 35

முதியோர் கல்வி, இந்தியாவில் 303
முதுமக்கள் தாழி 68
மும்மொழித் திட்டம் 637
முழுச்சடலப் புதைப்பு 66
முற்பழங்கற்காலம் 585
முன்தொடக்கக் கல்வி, இந்தியாவில் 300
முன்னோர் வழிபாடு 793
மூன்றாம் கல்விக் குழு 300
மெக்காலே 219, 305, 367
மெக்ரண்டல் 109
மெகசுதனிசு 109
மெய்ம்மயக்கங்கள் 96,98
மேலாண்மைத் தகவல் மையம் 532
மைய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் 193, 335
மைய இருப்பு வங்கியின் பணிகள் 534
மையக் குறிப்பு நூலகம் 424
மையத் தொல்லியல் ஆலோசனைக் குழு 392
மொகஞ்சோதாரோ 592
மொகலாயப் பேரரசு 616
மொழிக் கல்வி, இந்தோனேசியாவில் 746
மொழிக் குடும்பங்கள் 162
மொழிகளிடையே பொதுத்தன்மை 542
மொழிவழிக் கொள்கை 212
மோகினி ஆட்டம் 437
மோசார்ட்டு 821, 822
மௌலானா முகமது அலி 328
யமுனை 574
யுவான் சுவாங்கு 473, 602
யோகத் தத்துவம் 381
வங்கமொழி நாடகம் 457
வங்கிகளின் வங்கி 535
வட அட்லாண்டிக்கு இராணுவ ஒப்பந்தக் கூட்டமைப்பு 149
வடமொழி இசையியல் 7
வடமொழி நாடகங்கள் 439, 441
வணிக இணையங்கள் 120, 121
வயதுவந்தோர் கல்வி, இத்தாலியில் 140
வயதுவந்தோர் கல்வி, இந்தோனேசியாவில் 746
வரலாற்றுக் கருத்தியல் 148
வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்கள் 590
வரலாறு, இத்தாலி 235
வரலாறு, இதாகோ 157
வரலாறு, இந்தியத் தத்துவத்தின் 374, 375
வரலாறு, இந்திய தேசிய இராணுவத்தின் 413, 414
வரலாறு, இந்தியானா 656
வரலாறு, இந்தோனேசிய 742
வரலாறு, இமாசலப் பிரதேச 770
வருண அமைப்பும் சாதிமுறையும் 349
வலக்கைப் பழக்கம் 38, 39
வலங்கைச் சாதிகள் 40
வலது சாரிகள் 48
வழிகாட்டி மக்களாட்சி 731
வாகாடகர்கள் 294
வாயுதூத்து 508
வார்டன் பள்ளி 531
வார்தாத் திட்டம் 307
வாரிசுகள், முதல் வகுப்பு 711
வாரிசுகள், இரண்டாம் வகுப்பு 711, 712
வாரிசுரிமைக் கோட்பாடுகள் 710, 711
வாரிசுரிமைச் சட்டம் 710, 711
வால்மீகி 157
விக்கோ 147
விகித அளவு இருப்பு முறை 535
விசயநகரகால ஓவியம் 296
விசாகப்பட்டினம் 508
விதவைத் திருமணம் 703, 716
விந்திய மலை 571, 572
விபரியாயா 215
விமானப் போக்குவரத்து 508
வியாசர் 160
வியாத்தி 210
வியாப்தி 215
விரியும் படிமலர்ச்சி 126, 127
விவேகாநந்தர் 702
விளக்கவுரை அறிவு 889
வீதிபாகவதம் 812
வீரகாப்பியக் காலம் 163
வீரமாமுனிவர் 860
வீரேசலிங்கம் பந்துலு 608
வெள்ளை அறிக்கை 531
வெள்ளையனே வெளியேறு இயக்கம் 419, 626, 639
வேங்கடரமணய்யர் 816
வேதகாலக் கல்வி 479
வேதகால வருண அமைப்பு 349
வேதங்கள் 158, 375, 438
வேதாந்தத் தத்துவம் 382
வேளாண்மை அறிவியல் மையங்கள் 554
வேளாண்மை அறிவியலார் தேர்வுக் குழு 553
வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வித் துறை 551
வேளாண்மைக் கல்வி 554
வேளாண்மை நிதிக் கழகங்கள் 344, 566
வேளாண் வளர்ச்சியில் பொதுக் காரணிகள் 560
வைசியர் 349
வைசேடிகத் தத்துவம் 379
வைபாடிகக் குழாம் 378

# கலைச்சொற் பட்டியல்

## தமிழ் — ஆங்கிலம்

அகக்கட்டுமானம் — Infrastructure
அகவியல் மாற்றம் — Endogenous Change
அடிப்படை நிகழ்ச்சிப் பதிப்பு — Civil Registration
அண்ட அமைப்பியல் — Cosmography
அணுக்கொள்கை — Atomism
அதிகப்பற்று — Overdraft
அமைப்பொற்றுமைப் படிமலர்ச்சி — Homologous Evolution
அயற்செலாவணி — Foreign Exchange
அரசிதழ் — Gazetteer
அரசியலமைப்பு — Constitution
அரசுவேண்டாக் கொள்கை — Anarchism
அலகு — Unit
அழகியல் — Aesthetics
அளவையியல் — Logic
அளவையியல் அணுக்கொள்கை — Logical Atomism
அளவையியல் நேர்காட்சிவாதம் — Logical Positivism
அறச்சொத்து — Debutter Property
அறிவாராய்ச்சியியல் — Epistemology
ஆக்க அறிவியல் — Positive Science
ஆட்சியற்ற நிலை — Anarchy
ஆட்டத்தந்திரக் கோட்பாடு — Game Theory
ஆண்டுத் தொகை — Annuity
ஆண்வழி உறவினர் — Agnates
ஆவணம் — Archive
ஆவியுலகக் கோட்பாடு — Animism
ஆன்ம அனுபவம்/மறைஞானம் — Mysticism
இசைவழி மருத்துவம் — Music Therapy
இசைவிணைவுக் கொள்கை — Coherence Therory
இசைவுத் தீர்ப்பு — Arbitration
இடஅமைப்புக் கோட்பாடு — Location Theory
இடக்கிடப்பியல் — Topography
இடத்தொடர்பு — Spatial Relation
இடப்பெயர்ச்சி — Migration
இடப்பெயரியல் — Toponomy
இடர்தாங்கு பொருளியல் — Risk Economics
இடைக்காட்சி இசை — Interlude
இடைத்தாயி — Baritone
இடைமெய் இணை (மொழியியல்) — Interlude
இடைவரலாற்றுக்காலம் — Proto-historic Period
இடைவினை — Inter-action

இடைவினை ஆய்வுமுறை — Ethnomethodology
இணை உச்சரிப்பு — Co-articulation
இணைப் படிமலர்ச்சி — Parallel Evolution
இணைப்புக் கெழு — Correlation Co-efficient
இணைப்புப் பணி — Liaison Work
இணையம் — Corporation
இயக்கக் குறையுடைமை — Motor Retardation
இயக்கக் கோட்பாடு — Dynamic Theory
இயக்கத்திறன் சோதனை — Motor Co-ordination Test
இயக்குவினை — Causative verb
இயங்குநிலை ஆய்வு — Dynamic Analysis
இயல்திட்டவாதம் — Teleological Argument
இயல்பிறந்த இயற்கை — Supernature
இயல்பிறழ்வு — Abnormality
இயல்பு அறிவியல் — Normative Science
இயல்பூக்கம் — Instinct
இயற்கைக் கோட்பாடு — Naturalism
இயற்கைச் சூழமைவு — Nature Nurture
இயற்கைத் தேர்வு — Natural Selection
இயற்பியல் சூழ்நிலை — Physical Environment
இயைபு — Concord
இரட்டை ஆட்சிமுறை — Dyarchy
இரட்டை உலோக நாணய முறை — Bimetalism
இரத்துச் செய்தல் — Annulment
இருத்தல் கொள்கை — Existentialism
இருதார மணம் — Bigamy
இருப்புப் பட்டியல் — Balance-Sheet
இருமுனைத் தொடர்பு — Diadic Relation
இறைமூவொருமைக் கோட்பாட்டாளர் — Trinitarian
இறைமை — Sovereignty
இறையியல் — Theology
இனக்குழு ஒப்பாய்வியல் — Ethnology
ஈட்டுறுதி — Indemnity
ஈமப்பேழை — Sarcophagus
ஈரப்பதம் — Humidity
உடல்சார் மானிடவியல் — Physical Anthropology
உடனடி மாற்றம் — Mutation
உண்டியல் — Bill
உண்டியல் சந்தை — Bill Market
உண்மைக் கோட்பாடு — Realism
உயிர்சார் மானிடவியல் — Bio-Anthropology
உயிரி — Organism
உயிரியம் — Animatism
உருச்சின்னங்கள் — Archetypes

உருவமைப்பு — Phenotype
உள்ளீடு - வெளியீடு ஆய்வு — Input - Output Analysis
உள்ளுணர்வு — Intuition
உளத்தாக்குதல் — Trauma
உளநோய் நீக்கு உளவியல் — Clinical Psychology
உறவுமுறை — Kinship
உறைவிந்து — Frozen Semen
ஊக்க ஊதியம் — Bonus
ஊரகமயமாதல் — Ruralization
ஊழி — Epoch
எஞ்சுரிமை — Survivorship
ஒட்டிகள் — Clitics
ஒட்டுகள் — Affixes
ஒப்பு நாணயம் — Token Coin
ஒருகற்கோயில் — Monolithic Temple
ஒருதார மணம் — Monogamy
ஒருமைக் கோட்பாட்டாளர் — Unitarian
ஒருவழி உறவு — Half Blood
ஒலிக்குறிகள் — Diacritics
ஒலிக்குறிப்புச் சொற்கள் — Onomatopoeia Words
ஒலிமாற்றம் — Phonetic Change
ஒலியியல் — Phonetics
ஒலியூக்கம் — Resonance
ஒற்றைவகை அரசு — Unitary State
கட்டணத் தீர்ப்பாயம் — Rates Tribunal
கடவுட்கொள்கையர் — Theologician
கணிப்பொறி — Computer
கதைப்பாடல் — Ballad
கருத்தியற் கொள்கை — Idealism
கருமுட்டை — Zygote
கருவளத்தன்மை — Fertility
கல்திட்டை — Dolmen
கல்வெட்டியல் — Epigraphy
கற்பதுக்கை — Cist
காப்பீடு — Insurance
காப்புமனை — Asylum
கிளைமொழி — Dialect
கீழ்த்தாயி — Bass
குடிபெயர்ந்தோன் — Emigrant
குடியமர்ந்தோன் — Immigrant
குடியரசு மையமாக்கம் — Democratic Centralism
குடியுரிமைச் சட்டம் — Civil Law
குடியேற்றக் கொள்கை — Colonialism
குடிவாரம் — Tenancy

| | |
|---|---|
| குவியும் படிமலர்ச்சி | — Convergent Evolution |
| குழு இயங்கியல் | — Group Dynamics |
| குழு உண்டியல் | — Council Bill |
| குற்றவியல் நீதி | — Criminal Justice |
| குறியீட்டு இடைவினை | — Symbolic Interaction |
| கூட்டாட்சி அரசியலமைப்பு | — Federal Constitution |
| கூட்டாட்சி முறை | — Federalism |
| கூட்டாண்மை | — Collectivism |
| சட்ட முன்வரைவு | — Act Preamble |
| சமநிலை | — Equilibrium |
| சமநிலைச் சமுதாயக் கொள்கை | — Socialism |
| சமநோக்காளர் | — Stoic |
| சமயச் சார்பின்மை | — Laicism |
| சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் | — Linguistic Phylogeny |
| சிக்கனங்கள் | — Economics |
| சில்லுக் கருவிகள் | — Flake Tools |
| சுரண்டல் | — Exploitation |
| சூரிய வட்டப்பாதை | — Zodiac |
| சூழிடப் பரப்பு | — Econiche |
| சூனியம் | — Witchcraft |
| சூனிய மருத்துவர் | — Witch-doctor |
| செலாவணி | — Currency |
| சொற்களஞ்சிய மாற்றம் | — Lexical Change |
| சொற்பொருளியல் | — Semantics |
| தக்க விலை/தகுவிலை | — Just Price |
| தகவமைந்த மலர்ச்சி | — Adaptive Radiation |
| தகாவட்டி | — Usuary |
| தகுதியன பிழைத்தல் | — Survival of the Fittest |
| தசம நாணயம் | — Decimal Coin |
| தடைப்படல் | — Estoppel |
| தலைவேட்டை | — Head Hunting |
| தன்முனைப்பு | — Ego |
| தன்னாட்சி உரிமைத் தகுதி | — Dominion Status |
| தன்னுரிமை | — Autonomy |
| தனி ஆள் வருவாய் | — Per capita income |
| தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் | — Linguistic Ontogeny |
| தாராளக் கொள்கை | — Liberalism |
| திறனறி சோதனை | — Ability Test |
| தீர்ப்பு மன்றங்கள் | — Claims Tribunal |
| தீர்வகம் | — Clearing House |
| தீவிரக் கொள்கை | — Radicalism |
| தூய்மைக் கொள்கையர் | — Puritan |
| தொழில்முனைவோர் | — Entrepreneur |
| தொழிற்பகுப்பு | — Division of Labour |

தொன்மைப் பொருளியல் — Classical Economics
நகரியமாக்கம் — Urbanization
நாட்டச் சோதனை — Aptitude Test
நிதியியல் கொள்கை — Fiscal Policy
நிலமானிய முறை — Feudal System
நிலுவை — Dues
நிலையான நாணயம் — Standard coin
நிலையான பொருளியல் — Static Economics
நிறக்கோல் — Chromosome
நிறைவற்ற சமநிலை — Partial Equilibrium
நீதிப்பேராணை — Writ
நுண்கற்காலம் — Microlithic Period
நுண்ணினப் பொருளியல் — Micro Economics
பகைமுகக் கூட்டுறவு — Antagonistic Co-operation
பங்காதாயம் — Dividend
படத்தொகுப்பியல் — Cinematography
படிநிலை — Stratification
படிமலர்ச்சி — Evolution
பண்பாட்டுக் கலப்பு — Cultural Fusion
பண்பாட்டுப் பன்மை — Cultural Pluralism
பண்பாட்டுப்பேறு — Acculturation
பண்பாட்டு மண்டலம் — Cultural Zone
பண்பாட்டு வடிவுருவம் — Cultural Profile
பண்பாட்டு வழக்கு — Cultural Tradition
பணவியல் கைக்கோள் முறை — Monetary Policy
பணவீக்கம் — Inflation
பணிக்கொடை — Gratuity
பருமஇடப்பெயர்வு — Mass Migration
பல்லியம்/இணைப்பிசை — Symphony
பலகணவர் மணம் — Polyandry
பலதார மணம் — Polygamy
பழங்கற்காலம் — Palaeolithic Period
பழங்குடி — Tribe
பற்றுச்சீட்டு — Voucher
பனியாற்றுக் காலம் — Glacial Period
பிணையம்/பிணையாவணம் — Security
பில்லிசூனியம் — Voodoo
பிழைப்பூதிய நிலை — Subsistence level
பிழையிலா ஆணை — Infallibility Decree
பிறப்புப் பங்குரிமை — Coparcenary
பிறன்மனை புணர்தல் — Adultery
புதிய கற்காலம் — Neolithic Period
புதைவடிவம் — Fossil
புலமைத்துவம் — Scholasticism
புலன்கடந்த மெய்ப்பொருளியல் — Metaphysics

பெண்வழி உறவினர் — Cognates
பேரூழி — Era
பொதுவுடைமைக் கொள்கை — Communism
பொருள் மாற்றம் — Semantic Change
பொருள் வழிபாடு — Fetishism
மசோதா — Bill
மண்ணடுக்காய்வு — Stratigraphy
மதிப்புக் குறைப்பு — Devaluation
மரபணு — Gene
மரபணு அடுக்குநிகழ்வு — Gene Frequency
மரபணுச் சேர்மம் — Gene Pool
மரபமைப்பு — Genotype
மரபியல் வங்கி — Indigenous Bank
மறுப்புரையாளர் இயக்கம் — Protestant Movement
மறைமுக வேலையின்மை — Disguised Unemployment
மாகாணத் தன்னாட்சி — Provincial Autonomy
மாற்ற இயலும் பத்திரங்கள் சட்டம் — Negotiable Instruments Act
மாறி — Variable
மானிட உடலளவையியல் — Anthropometry
மின்விசை — Voltage
முக்கூற்று முடிவு — Syllogism
முத்திரைக்கட்டணம் — Stamp Duty
முதலாளித்துவம் — Capitalism
மும்முனைத் தொடர்பு — Triadic Relation
முரண்கோட்பாட்டாளர் — Heretic
முழு உறவு — Full Blood
முழுமைநிலை விளைவு — Gestalt Effect
முற்றுரிமை — Monopoly
முறையியல் — Methodology
மூலக்கூறு — Molecule
மூலதன அங்காடி — Capital Market
மேல்தாயி — Tenor
மேலாண்மையியல் — Management
மொத்த ஒத்திசைவு — Ensemble
மொழியியல் பரப்பு — Linguistic Area
வரலாற்று மொழியியல் — Historical Linguistics
வழிகாட்டி மக்களாட்சி — Guided Democracy
வளர்சிதைக் கோளாறு — Metabolic Disorder
விந்தணு — Sperm
வியப்பிடைச்சொல் — Interjection
விரியும் படிமலர்ச்சி — Divergent Evolution
வைப்புகள் — Deposits

# கலைச்சொற் பட்டியல்

## ஆங்கிலம் — தமிழ்

| | |
|---|---|
| Ability Test | — திறனறி சோதனை |
| Abnormality | — இயல்பிறழ்வு |
| Acculturation | — பண்பாட்டுப்பேறு |
| Act Preamble | — சட்ட முன்வரைவு |
| Adaptive Radiation | — தகவமைந்த மலர்ச்சி |
| Adultery | — பிறன்மனை புணர்தல் |
| Aesthetics | — அழகியல் |
| Affixes | — ஒட்டுகள் |
| Agnates | — ஆண்வழி உறவினர் |
| Anarchism | — அரசு வேண்டாக் கொள்கை |
| Anarchy | — ஆட்சியற்ற நிலை |
| Animatism | — உயிரியம் |
| Animism | — ஆவியுலகக் கோட்பாடு |
| Annuity | — ஆண்டுத் தொகை |
| Annulment | — இரத்துச் செய்தல் |
| Antagonistic Co-operation | — பகைமுகக் கூட்டுறவு |
| Anthropometry | — மானிட உடலளவையியல் |
| Aptitude Test | — நாட்டச் சோதனை |
| Arbitration | — இசைவுத் தீர்ப்பு |
| Archetypes | — உருச்சின்னங்கள் |
| Archive | — ஆவணம் |
| Asylum | — காப்புமனை |
| Atomism | — அணுக்கொள்கை |
| Autonomy | — தன்னுரிமை |
| Balance Sheet | — இருப்புப் பட்டியல் |
| Ballad | — கதைப்பாடல் |
| Baritone | — இடைத்தாயி |
| Bass | — கீழ்த்தாயி |
| Bigamy | — இருதாரமணம் |
| Bill | — உண்டியல்/மசோதா |
| Bill Market | — உண்டியல் சந்தை |
| Bimetalism | — இரட்டை உலோக நாணய முறை |
| Bio-Anthropology | — உயிர்சார் மானிடவியல் |
| Bonus | — ஊக்க ஊதியம் |
| Capitalism | — முதலாளித்துவம் |
| Capital market | — மூலதன அங்காடி |
| Causative verb | — இயக்குவினை |
| Chromosome | — நிறக்கோல் |
| Cinematography | — படத்தொகுப்பியல் |

Cist — கற்பதுக்கை
Civil Law — குடியுரிமைச் சட்டம்
Civil Registration — அடிப்படை நிகழ்ச்சிப் பதிப்பு
Claims Tribunal — தீர்ப்பு மன்றங்கள்
Classical Economics — தொன்மைப் பொருளியல்
Clearing House — தீர்வகம்
Clinical Psychology — உளநோய் நீக்கு உளவியல்
Clitics — ஒட்டிகள்
Co-articulation — இணை உச்சரிப்பு
Cognates — பெண்வழி உறவினர்
Coherence Theory — இசைவிணைவுக் கொள்கை
Collectivism — கூட்டாண்மை
Colonialism — குடியேற்றக் கொள்கை
Communism — பொதுவுடைமைக் கொள்கை
Computer — கணிப்பொறி
Concord — இயைபு
Constitution — அரசியலமைப்பு
Convergent Evolution — குவியும் படிமலர்ச்சி
Coparcenary — பிறப்புப் பங்குரிமை
Corporation — இணையம்
Correlation co-efficient — இணைப்புக்கெழு
Cosmography — அண்ட அமைப்பியல்
Council Bill — குழு உண்டியல்
Criminal Justice — குற்றவியல் நீதி
Cultural Fusion — பண்பாட்டுக் கலப்பு
Cultural Pluralism — பண்பாட்டுப் பன்மை
Cultural Profile — பண்பாட்டு வடிவுருவம்
Cultural Tradition — பண்பாட்டு வழக்கு
Cultural Zone — பண்பாட்டு மண்டலம்
Currency — செலாவணி
Debutter Property — அறச்சொத்து
Decimal Coin — தசம நாணயம்
Democratic Centralism — குடியரசு மையமாக்கம்
Deposits — வைப்புகள்
Devaluation — மதிப்புக் குறைப்பு
Diacritics — ஒலிக்குறிகள்
Diadic Relation — இருமுனைத் தொடர்பு
Dialect — கிளைமொழி
Disguised Unemployment — மறைமுக வேலையின்மை
Divergent Evolution — விரியும் படிமலர்ச்சி
Dividend — பங்காதாயம்
Division of Labour — தொழிற்பகுப்பு
Dolmen — கல்திட்டை
Dominion Status — தன்னாட்சி உரிமைத் தகுதி

| | |
|---|---|
| Dues | — நிலுவை |
| Dyarchy | — இரட்டை ஆட்சிமுறை |
| Dynamic Analysis | — இயங்குநிலை ஆய்வு |
| Dynamic Theory | — இயக்கக் கோட்பாடு |
| Econiche | — சூழிடப்பரப்பு |
| Economics | — சிக்கனங்கள் |
| Ego | — தன்முனைப்பு |
| Emigrant | — குடிபெயர்ந்தோன் |
| Endogenous Change | — அகவியல் மாற்றம் |
| Ensemble | — மொத்த ஒத்திசைவு |
| Entrepreneur | — தொழில் முனைவோர் |
| Epigraphy | — கல்வெட்டியல் |
| Epistemology | — அறிவாராய்ச்சியியல் |
| Epoch | — ஊழி |
| Equilibrium | — சமநிலை |
| Era | — பேரூழி |
| Estoppel | — தடைப்படல் |
| Ethnology | — இனக்குழு ஒப்பாய்வியல் |
| Ethnomethodology | — இடைவினை ஆய்வுமுறை |
| Evolution | — படிமலர்ச்சி |
| Existentialism | — இருத்தல் கொள்கை |
| Exploitation | — சுரண்டல் |
| Federal Constitution | — கூட்டாட்சி அரசியலமைப்பு |
| Federalism | — கூட்டாட்சிமுறை |
| Fertility | — கருவளத்தன்மை |
| Fetishism | — பொருள் வழிபாடு |
| Feudal System | — நிலமானிய முறை |
| Fiscal Policy | — நிதியியல் கொள்கை |
| Flake Tools | — சில்லுக் கருவிகள் |
| Foreign Exchange | — அயற் செலாவணி |
| Fossil | — புதைபடிவம் |
| Frozen Semen | — உறைவிந்து |
| Full Blood | — முழு உறவு |
| Game Theory | — ஆட்டத்தந்திரக் கோட்பாடு |
| Gazetteer | — அரசிதழ் |
| Gene | — மரபணு |
| Gene Frequency | — மரபணு அடுக்குநிகழ்வு |
| Gene Pool | — மரபணுச் சேர்மம் |
| Genotype | — மரபமைப்பு |
| Gestalt Effect | — முழுமைநிலை விளைவு |
| Glacial Period | — பனியாற்றுக் காலம் |
| Gratuity | — பணிக்கொடை |
| Group Dynamics | — குழு இயங்கியல் |
| Guided Democracy | — வழிகாட்டி மக்களாட்சி |

| | | |
|---|---|---|
| Half Blood | — | ஒருவழி உறவு |
| Head Hunting | — | தலைவேட்டை |
| Heretic | — | முரண்கோட்பாட்டாளர் |
| Historical Linguistics | — | வரலாற்று மொழியியல் |
| Homologous Evolution | — | அமைப்பொற்றுமைப் படிமலர்ச்சி |
| Humidity | — | ஈரப்பதம் |
| Idealism | — | கருத்தியற் கொள்கை |
| Immigrant | — | குடியமர்ந்தோன் |
| Indemnity | — | ஈட்டுறுதி |
| Indigenous Bank | — | மரபியல் வங்கி |
| Infallibility Decree | — | பிழையிலா ஆணை |
| Inflation | — | பணவீக்கம் |
| Infrastructure | — | அகக்கட்டுமானம் |
| Input-Output Analysis | — | உள்ளீடு-வெளியீடு ஆய்வு |
| Instinct | — | இயல்பூக்கம் |
| Insurance | — | காப்பீடு |
| Inter-action | — | இடைவினை |
| Interjection | — | வியப்பிடைச்சொல் |
| Interlude | — | இடைக்காட்சி இசை,இடைமெய்யிணை |
| Intuition | — | உள்ளுணர்வு |
| Just Price | — | தக்கவிலை |
| Kinship | — | உறவுமுறை |
| Laicism | — | சமயச்சார்பின்மை |
| Lexical Change | — | சொற்களஞ்சிய மாற்றம் |
| Liaison Work | — | இணைப்புப் பணி |
| Liberalism | — | தாராளக் கொள்கை |
| Linguistic Area | — | மொழியியல் பரப்பு |
| Linguistic Ontogeny | — | தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் |
| Linguistic Phylogeny | — | சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் |
| Location Theory | — | இடஅமைப்புக் கோட்பாடு |
| Logic | — | அளவையியல் |
| Logical Atomism | — | அளவையியல் அணுக்கொள்கை |
| Logical Positivism | — | அளவியல் நேர்காட்சிவாதம் |
| Management | — | மேலாண்மையியல் |
| Mass Migration | — | பருமம இடப்பெயர்வு |
| Metabolic Disorder | — | வளர்சிதைக் கோளாறு |
| Metaphysics | — | புலன்கடந்த மெய்ப்பொருளியல் |
| Methodology | — | முறையியல் |
| Micro Economics | — | நுண்ணினப் பொருளியல் |
| Microlithic Period | — | நுண்கற்காலம் |
| Migration | — | இடப்பெயர்ச்சி |
| Molecule | — | மூலக்கூறு |
| Monetary Policy | — | பணவியல் கைக்கோள் முறை |
| Monogamy | — | ஒருதார மணம் |

Monolithic Temple — ஒருகற்கோயில்
Monopoly — முற்றுரிமை
Motor co-ordination Test — இயக்கத்திறன் சோதனை
Motor Retardation — இயக்கக் குறையுடைமை
Music Therapy — இசைவழி மருத்துவம்
Mutation — உடனடி மாற்றம்
Mysticism — ஆன்ம அனுபவம்/மறைஞானம்
Naturalism — இயற்கைக் கோட்பாடு
Natural Selection — இயற்கைத் தேர்வு
Nature Nurture — இயற்கைச் சூழமைவு
Negotiable Instruments Act — மாற்ற இயலும் பத்திரங்கள் சட்டம்
Neolithic Period — புதிய கற்காலம்
Normative Science — இயல்பு அறிவியல்
Onomatopoeia Words — ஒலிக்குறிப்புச் சொற்கள்
Organism — உயிரி
Overdraft — அதிகப்பற்று
Palaeolithic Period — பழங்கற்காலம்
Parallel Evolution — இணைப்படிமலர்ச்சி
Partial Equilibrium — நிறைவற்ற சமநிலை
Per Capita Income — தனி ஆள் வருவாய்
Phenotype — உருவமைப்பு
Phonetic Change — ஒலிமாற்றம்
Phonetics — ஒலியியல்
Physical Anthropology — உடல்சார் மானிடவியல்
Physical Environment — இயற்பியல் சூழ்நிலை
Polyandry — பலகணவர் மணம்
Polygamy — பலதார மணம்
Positive Science — ஆக்க அறிவியல்
Protestant Movement — மறுப்புரையாளர் இயக்கம்
Proto-historic period — இடைவரலாற்றுக் காலம்
Provincial Autonomy — மாகாணத் தன்னாட்சி
Puritan — தூய்மைக் கொள்கையர்
Radicalism — தீவிரக் கொள்கை
Rates Tribunal — கட்டணத் தீர்ப்பாயம்
Realism — உண்மைக் கோட்பாடு
Resonance — ஒலியூக்கம்
Risk Economics — இடர்தாங்கு பொருளியல்
Ruralization — ஊரகமயமாதல்
Sarcophagus — ஈமப்பேழை
Scholasticism — புலமைத்துவம்
Security — பிணையம்/பிணையாவணம்
Semantic Change — பொருள்மாற்றம்
Semantics — சொற்பொருளியல்
Socialism — சமநிலைச் சமுதாயக் கொள்கை

| | | |
|---|---|---|
| Sovereignty | — | இறைமை |
| Spatial Relation | — | இடத்தொடர்பு |
| Sperm | — | விந்தணு |
| Stamp Duty | — | முத்திரைக் கட்டணம் |
| Standard Coin | — | நிலையான நாணயம் |
| Static Economics | — | நிலையான பொருளியல் |
| Stoic | — | சமநோக்காளர் |
| Stratification | — | படிநிலை |
| Stratigraphy | — | மண்ணடுக்காய்வு |
| Subsistence Level | — | பிழைப்பூதிய நிலை |
| Supernature | — | இயல்பிறந்த இயற்கை |
| Survival of the Fittest | — | தகுதியன பிழைத்தல் |
| Survivorship | — | எஞ்சுரிமை |
| Syllogism | — | முக்கூற்று முடிவு |
| Symbolic Interaction | — | குறியீட்டு இடைவினை |
| Symphony | — | பல்லியம்/இணைப்பிசை |
| Teleological Argument | — | இயல்திட்டவாதம் |
| Tenancy | — | குடிவாரம் |
| Tenor | — | மேல்தாயி |
| Theologician | — | கடவுட்கொள்கையர் |
| Theology | — | இறையியல் |
| Token Coin | — | ஒப்பு நாணயம் |
| Topography | — | இடக்கிடப்பியல் |
| Toponomy | — | இடப்பெயரியல் |
| Trauma | — | உளத்தாக்குதல் |
| Triadic Relation | — | மும்முனைத் தொடர்பு |
| Tribe | — | பழங்குடி |
| Trinitarian | — | இறைமூவொருமைக் கோட்பாட்டாளர் |
| Unit | — | அலகு |
| Unitarian | — | ஒருமைக் கோட்பாட்டாளர் |
| Unitary State | — | ஒற்றைவகை அரசு |
| Urbanization | — | நகரியமாக்கம் |
| Usuary | — | தகாவட்டி |
| Variable | — | மாறி |
| Voltage | — | மின்விசை |
| Voodoo | — | பில்லிசூனியம் |
| Voucher | — | பற்றுச்சீட்டு |
| Witchcraft | — | சூனியம் |
| Witch - doctor | — | சூனிய மருத்துவர் |
| Writ | — | நீதிப்பேராணை |
| Zodiac | — | சூரியவட்டப்பாதை |
| Zygote | — | கருமுட்டை |

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
தமிழ்நாடு
அச்சகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்